IN MEMORY

OF THE

CORONATION

OF THEIR

MOST GRACIOUS AND IMPERIAL MAJESTIES

King-Emperor George V.

AND

Queen-Empress Mary

AT DELHI

12th December, 1911.

THE CORONATION

TAMIL DICTIONARY

A GUIDE

INDISPENSABLE

TO

TAMIL PROFESSORS & SCHOLARS

SIXTH EDITION

Revised and Enlarged to suit up to date requirements.

PRINTED AND PUBLISHED

BY

P. V. NAMASIVAYA MUDALIAR

N. V. PRESS, CHOOLAI.

MADRAS.

1928

INTRODUCTION.

My friend, Mr. Kanchi Nagalinga Mudaliar, having requested me to write an-introduction to this volume, I do so with much pleasure. It is wellknown that there are very many lexicons in Tamil, and some of them very old, but they are all in verse. The credit of being the pioneer in lexicons on the European model is due to the famous Father Beschi, otherwise known as Viramamunivari, who laboured long and well in Southern India. He was the first to introduce a knowledge of Tamil into the West. He was an Italian Jesuit, and was appointed to the South Indian Missions in 1700, and died at Manaparai in 1742. He lived at Avur near Trichinopoly (the Easter festival is known as Avur Tirunal in Trichinopoly District), assuming the dress, and conforming to the habits of a Hindu Guru. He studied Tamil, Telugu, Sanskrit, Hindustani and Persian; and from 1736 to 1740, he was Dewan or Chief Minister to Chanda Sahib. His contributions to Tamil literature were numerous. His greatest works was the Thembavani, an epic in Tamil verse, summarising the Gospel History, and there are some very fine passages in it. The best of his prose works are, his Vediar Olukkam and the wellknown story of Paramartha Guru. He wrote several Grammars, and the Latin translation of the sacred Kural is also ascribed to him. And his work 'சதுரகராதி' is the first lexicon of its kind in Tamil. This was the basis on which the subsequent lexicons have been worked in Southern India. Several such works were brought out in Jaffna by European and Indian Scholars. The First edition of the present work was brought out by my old friend N. KADIRVELU PILLAI

of Melaipuloli, Jaffna, and was the best of the lexicons up to that time. He had added considerably to the vocabulary and added many biographical notes. He was a scholar of rare intelligence and earnestness, and spent the best years of his life in Southern India, in teaching and lecturing. He has published several works in prose and verse, some of which are Sivakshetra Mahima Vilakkam and on the Holy Ashes and Karuvur Puranam and Buddha Madha Khandanam. His premature death has caused a vacancy in the rank of Tamil Pandits, which is hard to be filled up. The popularity of his lexicon can be imagined by the fact that two editions have already been exhausted, and the publishers are bringing out this third edition. The improvement in the present edition is due to my friend Mr. *Kanchi Nagalinga Mudaliar*, a devoted pupil of the famous *Siddanta Sarabham Ashtavadanam Puvai Kalyanasundara Mudaliar Avargal*, who, barring one exception, occupies the premier position among Tamil Scholars in Madras. Owing to his researches in Tamil Siddhanta works, the present Editor has added considerably to the work from the Siddhanta Literature, which will be of the highest value to modern day Tamil students, when a great awakening in the study of Tamil Religion and Philosophy is clearly perceivable. I wish the publication every success which it richly deserves. The work will appeal to all, all the more, as it is issued as a Memorial Edition in honour of the Coronation of our Sovereign Lord *The King-Emperor, George V.*

GUNTUR
12—12—1911   J. M. NALLASAMI PILLAI.

உ

பரமபதிதுணை.

தமிழ்மொழியகராதி.

யாழ்ப்பாணம்

ஆறுமுகநாவலர் மாணாக்கரின் மாணாக்கராகிய

மேலைப்புலோலி வித்வான்

நா-கதிரைவேற் பிள்ளையவர்கள்

சேர்த்த சொற்களோடு

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

மாணவரும்

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவருமாகிய

வண்ணைக்களஞ்சியம்

காஞ்சி-நாகலிங்க முதலியாரவர்கள்

ஆயிரக்கணக்கான சொற்களைச் சேர்த்த பிரதிக்கிணங்க

பிருங்கிமாநகரம்

வேம்புலி முதலியாரவர்கள் குமாரர்

நமசிவாய முதலியாரவர்களால்

தமது

நிரஞ்சன விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஆறும் பதிப்பு.

நெ. 88, அவதானம் பாபையர் வீதி, சூளை சென்னை.

1928.

உ

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் அக்கிராசனாதிபதியும்
பாலவநத்தம் ஜமீன்தாருமாகிய
ஸ்ரீமான்

பொ. பாண்டித்துரைத்தேவரவர்களியற்றியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இருந்தமிழ் மொழியின் பொருளினை யுலகோ ரெளிதினிற் றெளிதர லின்றி
வருந்துத லொழிய வோரக ராதி மாண்புற வமைத்தனன் வளங்கள்
பொருந்தியாழ்ப் பாண மாநகர்க் கதிர்வேற் புலவனங் கதனையச் சியற்றி
மருந்தென வளித்தான் சென்னைவாழ் நமச்சி வாயனு மாமதி யவனே. (1)

அப்பதத்துடனே பலமொழி சேர்த்தங் கச்சிட வேண்டுமென் றன்பால், எப்பொருட் கிறைவன் றிருவருள் பெற்றோழ் னிருந்தமி ழினிதுகற் றுணர்ந் தோன், செப்பருங் குணத்தான் காஞ்சிநா கலிங்கச் செந்தமிழ்த் தொண்டை மண் டலத்தான், தப்புற வில்லா தாயிரக் கணக்காய்த் தமிழ்ப்பதஞ் சேர்த்து நன் குதவ. (2)

சென்னைவாழ் நமச்சி வாயனென் பவன்றன் சிறந்துயர் நிரஞ்சன விலாசத்
தன்னதொப் பில்லா வதனிலச் சியற்றித் தமிழ்வல்லோர் தமக்குப கார
மின்னதே யன்றி வேறிலை யென்ன யாவரு மகிழ்ந்தினி தேற்ப
மன்னுல கதனி லளித்தன னிதற்கு மாறிலை வேறினி மன்னே. (3)

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்
ஸ்ரீமத்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றியது.

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மன்னியபற் பலதுடவை செறிந்திலகும் பிருங்கிமலை வதிந்து வாழ்ந்த
வண்மையுள வேம்புலிக்கோ மான்றவத்தின் பயனாக வந்து தித்த
துன்னியபே ரீகைதயை சாந்தகுண மிகுகல்வி தூயசெல்வந்
துன்னியசீர்ப் புகழ்படைத்த நமச்சிவாயப் பெயராற் றுலங்கு சீலன்
முன்னமச் சிட்டவிரண் டாம்பதிப்பி னகராதி முற்றுஞ் சூழ்ந்து
மொழிகளா யிரமாயி ரம்மாயி ரஞ்சேர்த்து முற்று வித்தான்
என்னருமைக் கண்மணிநேர் மாணவகன் காஞ்சிநக ரெழில்விற் பன்னன்
இரும்வண்ணக் களஞ்சியநன் னாகலிங்க நாவலனு மெழினமை யோனே.

சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கோ. வடிவேலுசெட்டியாரவர்களியற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

நித்த னிருமல னிராமயன் பூரணன்
சுத்த ஞோதி சுயம்பிர காசன்
காரண காரிய கற்பனை கடந்தவன்
ஆரணம் போற்று மாநந்த வுருவினன்
அன்புசெய் யடியார்க் கவனியில் வந்தவர்க்
கின்புரு வீயு மீசன் சங்கரன்
அடிமல ருளத்துவைத் தார்வமா யன்பரைப்
படிமிசை வந்த பரனெனத் துதிக்கும்
வேளாள மரபு வேம்புலி முதலியார்
கேளான விரத்தினக் கிழத்தியோ டுற்றுச்
செய்ய தவத்தைச் சிறப்புட னுகச்
செய்ய வந்த சீர்பஞ் சாக்கரப்
பேரான் பிருங்கிப் பெருநக ரூரான்
ஈரான் பதமே நெஞ்சிற் கொள்வான்
அல்லவர் பரவு நமச்சி வாயன்
னல்லன கண்டு நலமுற மக்கள்
வழிமுறை யாக வருமா ரூத்தமிழ்
மொழியக ராதி முன்னுள நூலோ
டொத்துறப் புலவரா னுைப்புநோக் கச்செய்
தித்தரை தன்னி னேருற வகுத்து
நிச்சய மானதன் னிரஞ்சக விலாச
அச்சி யந்திர சாலையி லச்சு
வாகன மேற்றி வந்திடப் புரிந்து
மாகன கீர்த்தி மருவலுற் றனனே.

சென்னை வேப்பேரி

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கா. நமச்சிவாயமுதலியாரவர்களியற்றியது.

விருத்தம்.

வலம்பரவும் வரிவடிவின் தமிழ்மொழிக்கிங் காமொழிகள் மன்ன வாய்ந்து
புலம்பரவும் கவிஞர்பல ருதவவக ராதியெனப் பொருந்தக் கோத்து
நிலம்பரவு புகழுடைய நமச்சிவா யக்குரிசில் நெடிது ழைத்தே
தலம்பரவத் தந்தனனு லிவன்கீர்த்தி யெக்காலும் தழைக மாதோ.

பெரியகுளம் டவுன் விக்டோரியா
மெமோரியல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
கீழ்மங்கலம்
ஸ்ரீமத். கே. எஸ்ஂ சுப்பராயவையரவர்களியற்றியது.

தரவுகொச்சகக்கலிப்பா.

எண்ணியவெவ் வளமுமலி யாழ்ப்பாணத் திசைவளரும்
புண்ணியமே லிடுமேலைப் புலோலிநகர் வாழ்புனிதன்
கண்ணியமா மனமுடையோன் கதிரைவேற் பிள்ளையெனுந்
திண்ணியனிச் செகம்புகழுந் திவ்யகுண மாமேரு. (க)

மகராதி வருகடல்சூழ் மண்ணுலகின் மாட்சிமைசேர்
நகராதி காரரெல்லா நாடிவரு நட்புடையோன்
சுகராதி களும்புகழுஞ் சுகுணன்பதிப் பித்தநற்பேர்
அகராதி நனிசிறப்ப வகத்தன்னி யெமதன்பன். (உ)

கண்டிருக்குங் கனிமொழியுங் கணையிருக்குங் கருவிழியுங்
கொண்டிருக்குங் கொடியையிடங் கொண்டிருக்குங் குணக்கடலை
வண்டிருக்கு மலர்கொண்டு வழிபட்டு வளரறஞ்செய்
செண்டிருக்குஞ் செங்கையினன் றிருக்காஞ்சித் தென்பதியான். (ட)

குன்றிருக்கும் புயமுடையான் குறிப்பறிவி னயமுடையான்
நன்றிருக்குஞ் செயலுடையா னகலிங்கப் பெயருடையான்
மன்றிருக்குங் கடவுளடி மனமிருக்கு மாண்பினர்கள்
சென்றிருக்குந் திருமனையான் றிரண்டெழுந்த வரமனையான். (சா)

வங்கத்தான் வருவதொடு வண்டிவரு வளமுஞ்சேர்
துங்கத்தார் புனைபாண்டித் துரைசாமித் தேவரவர்
தங்கத்தா மரைமதுரைத் தலத்திற்று பித்ததமிழ்ச்
சங்கத்தா ரினுமொருவன் றாப்பன்மொழி சேர்த்ததனை. (ரு)

பிருங்கிநகர்ப் பெருந்தகைவேம் புலிமுதலி யாரளித்த
வருங்குமா னகத்தியனு மமலவிலக் கணமறிந்தோன்
சுருங்கவிலாப் பொருளுடையோன் சொன்னமொழி மாறுதோன்
அருங்கலைகள் யாவுமுண ரறிவுடையோ னழகுடையோன். (சா)

தாரொன்று தடந்தோளான் றண்ணளியான் சற்குணத்தான்
சீரொன்று சென்னைநகர் சேர்நமச்சி வாயவள்ளல்
நேரொன்று மில்லாத்தன் னிரஞ்சனவி லாசமெனும்
பேரொன்று சாலைதனிற் பிழையறவச் சிட்டனனே. (எ)

சிவகங்கை ராஜா ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கணபதியாபிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீரோங்கித் திருமலியுஞ் சிறப்போங்கிச் செல்வமெலாந் தினமு மோங்கிக்
காரோங்கி யுறைமாடங் களியோங்கிக் கவிப்பிரசங் கங்க ளோங்கி
ஏரோங்கி மறைபயிலு மிடமோங்கி யெக்கியங்க ளெல்லா மோங்கிப் [ன்.
பாரோங்கி வளர்மேலைப் புலோலியெனும் பதியோங்கிப் பண்பின் வாழ்வோ

அத்துவித சித்தாந்த மதோத்தாரணப் பெயரை யடைந்தோ னன்ற
பத்திநெறி யுடையவனென் பாலதிக நேயமுளான் பாவு சீர்த்தி
வித்தையிற்றே ராறுமுக நாவலனிடம் பயில்வி வேகன் விஞ்சு
புத்தியிலப் புதனேர்வான் கதிரைவேற் பிள்ளையெனும் புலவ னம்மா. (௨)

அன்னவனு லியற்றியபே ரகராதி தனைவிரிப்ப வகத்தி லுன்னி
மன்னுவண்ணக் களஞ்சியமா மதுரைநகரத் தமிழ்ச்சங்க வாணன் வாய்ந்த
பொன்னகர்நேர் காஞ்சிபுர நாகலிங்கப் புலவன்மனப் பொருத்த மாகப்
பன்னுமா யிரக்கணக்காம் பதங்கடர வாங்கியுடன் பயிலச் சேர்த்தே. (௩)

கந்தன்மலர்க் கழலிணையைக் கருதுகருத் தினன்றருநேர் கையான்கல்விச்
சந்தமிகு வேம்புலிசெய் தவப்பயனு வுற்பவித்த தனையன் சார்ந்த
பந்தமிகு நமச்சிவாயப் பெயர்கொள் சுகுணனிந்தப் பாரின் மீதே
விந்தைபெற நிரஞ்சனவி லாசமதிற் பதித்திசையே மேவி னனல். (௪)

புளியங்குளம் மதுரகவி

ஸ்ரீமத். முத்துமாணிக்ககவிராயரவர்களியற்றியது.

ஆசிரியச்செய்யுள்.

பூமேவு செந்தமி ழிலக்கண விலக்கியப் பொற்குன்ற மென்விளங்கிப்
புதியகற் பனைரசப் பொருளிலற் புதமிகப் புகழ்மிகக் கவிநடாத்திப்
போற்றிய புராண கமங்கள் சைவாகம புராணபண் டிதவகண்ட
புண்ணிய மகத்துவத் தால்வந்த வித்வகுல புனிதசான் றோர்க்குறித்தாம்
நாமேவு மக்காம கன்மகட் கினியகுக நாதநாமம் புனைந்தென்
னுளம்நிலை நின்றகதிர் வேல்மன்னவன் முன்னம் நல்குமகராதியுடனே
நன்மைதரு மதுரைத் தமிச்சங்க சிங்கம்வண் ணக்களஞ்சியம் காஞ்சிவாழ்
நாகலிங்கக் கல்விமா னுயரும்வித் துவசனர்க்கு மறிஞர்க் குதவியாய்ப்
பாமேவு செஞ்சொலின் பொருண்மேவி வந்திலகு பதபதார்த் தமதனைத்தும்
பரவிவந்துதெரிக் ததில்மறைந் தவையெனும் பண்ணி னுட்பந்தெரிந்து
பழுதிலா ததிகவிற் பனவிலா சமதியாற் பகருதற் கரியதையெலாம் [கத்
பளமைக் கிரட்டிப்பிர பலமேன்மை யானபற்பலவா யிஞ்சொல்சேர்க்
தாமே தமக்கிணை யெனச்சொல் வேம்புலி முதலிதரு நமச்சிவாயவள்ளல்
சங்கமிகு சென்னையில் நிரஞ்சன தமதச்யந்திர சாலையிலியற்றி யதுவே
தரைமுற்று முயர்வுற்ற பெயர்பெற்ற தமிழ்கற்ற சகலர்க்கு மிருநேத்திர
தானபிர தானகுரு தானவுப மானமென் றுலியான் சொலவல்லனே.

திரிசிரபுரம். எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும் செந்தமிழ்ச்செல்வம் பத்திராதிபருமான
அமிர்தம்

ஸ்ரீமத். சுந்தரநாதபிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நதியணிந்த முடியானு நறுங்கடப்பந் தாரானு நயந்து தந்த
முதியதமிழ்ப் பெருங்கடலை யுண்டினிமை கண்டுவலி முறையே கொண்டு
பொதியமலை மிசையேறிப் புகழ்விரித்த குறுமுனியும் புகழ்ந்து கூறப்
புதியதொரு தமிழ்நிறைந்த வகராதி பிறந்துளது புவியி னம்மா. (௧)
மதியணிந்த பெருமானு மயின்மிசையே வருவானு மகிழ்ந்து கேட்டுத்
துதிபெறுநந் தமிழணங்கு துயரறவே செயலுற்றாள் சொல்லுற் றாளால்
இதினினிமை யெங்குண்டா லெனக்களிக்க வகராதி யெழுந்த தம்மா
புதியவிது பரவவென வச்சியற்றிப் புகழுற்றோன் புவியில் வாழி. (௨)
பண்கொண்ட தமிழ்க்கவிஞன் கதிரைவேற் பிள்ளைமுன்னாள் பரவை ஞாலத்
தெண்கொண்ட தமிழ்பயில்வோர்க் குதவவென வகராதி யென்னு நூலை
எண்கொண்ட மொழிகூட்டி மிகவோங்க வச்சியற்றி விளங்கத் தந்தான்
திண்கொண்ட வந்நூலி லுள்ளதுபோ தாதென்றே தெளிந்து மன்னோ. (௩)
செய்யதிருக் காஞ்சிநகர் செய்நோன்பால் வந்துதித்துத் திகழு மேலோன்
பொய்யணுகா மொழிபுகலும் புனிதவள்ளல் புலவர்கள் போற்றுஞ்சிங்கம்
தையலொரு பாகத்தான் றாண்மறவாக் குணசீலன் தமிழர் கோமான்
துய்யவண்ணக் களஞ்சியமென் றோதுமொரு நாகலிங்கத் தோன்றல்பின்னும்.
ஆழ்ந்துபரந் தோங்குதமிழ்க் கடல்கடந்த வறிவாலே வழகார் சொற்கள்
வீழ்ந்துபடா திருக்கவென வாயிரவா யிரமாக மேவக் கூட்டிச் [தான்
சூழ்ந்துகடல் விளங்குலகிற் சுவைமணக்குந் தமிழ்மணக்கத் தோன்றச்செய்
வாழ்ந்திருந்த புலவரில் யார்பெற்றா ரிவன்பெற்ற வளப்ப மம்மா. (௫)
இலகுமணி மிடற்றான்முன் கடலின்க ணாய்ந்ததமிழ் குழுமிக் க ரும்
புலவரர்க்கும் மற்றோர்க்கும் வைப்பெனுமிவ் வகராதி புவிக்க ணெங்கும்
நிலவவென வச்சிரத மேற்றியெங்கு முலவுவித்து நிலவி நிற்கும்
உலகுபுகழ் குணனெவனென் றேவினவி னுளங்களிக்க வுரைப்பன் கேண்மோ.
காசினியிற் சிறந்தொளிரும் பிருங்கிநகர் செய்நோன்பாற் கல்வி வல்ல
தேசினிய வேம்புலிவேள் தவத்துதித்தோன் முத்தமிழ்தேர் சிறப்பின்மிக்கான்
வீசியெண் டோ ணின்றசைய மணிமன்று ணிர்த்தமிடு விமலன் றன்றாள்
பேசியுளங் களித்தோங்கு முயர்நமச்சி வாயனெனும் பெரியோன் றானே. (௭)

வள்ளிமண வாளனுமே மதிக்குமிந்த வகராதி வாழி வாழி
வெள்ளிமலை யிறையடியே பாடுமிந்த நூற்றலைவன் விளங்க வாழி
கொள்ளவச்சிட் டுதவுநிரஞ் சனவிலா சச்சாலை குலவ வாழி
தெள்ளிநட மிடுபதஞ்சொல் நமச்சிவாயத் தலைவனுமே தோன்றவாழி. (௮)

சிவமயம்.

பதிப்புரை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நதிகாட்டுந் திருமுடியு நடங்காட்டும் பதமலரு நஞ்ச மின்று
துதிகாட்டுந் திருமிடறுந் துணைகாட்டும் பரசிவையுந் துஞ்ச வில்லா
விதிகாட்டுந் திருவாயும் விடைகாட்டு மீச்சுரனார் விழைவி னேத்தப்
பதிகாட்டுந் திருக்குடிலைப் பதங்காட்டுந் தணிகைவரைப் பகவன் வாழி.

அநாதி மலமுத்த பதியாகிய சிவபெருமானிடத்துத் தோன்றி, சங்கப் பலகையிற் கிடந்து, தவத்திற்சதித்த அகத்தியனாராதிய செந்நாப்புலவரொனுஞ் செவிலிகளாற் போற்றப்பட்டு, வையை யேட்டிலே தவழ்ந்து, பூவுலகெங்கனும் பொலிவுறநடந்து. பொருளணியாதிய விலக்கணங்கள் பொருந்தவளர்ந்து, முதிரா நிலைமையினென்றுங் கன்னியாகின்று, புலவர் நாவினை மணந்து, அறம்பொருளின்பம் வீடென்னு மரும்பொரு ணான்கையும் பயந்து நிலவா நிற்பது அமுதினுமாற்ற வினிய தமிழேயாம்.

இனிமைப்பொருள் கொடுக்குந் தமிழ், என்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய், அதனையுடைய சொல்லையுணர்த்தி நிற்கும் என்ப. இங்ஙனமன்றி இமிழ் குமிழ், சிமிழ் என்பனபோலத் தமிழ் என்னுஞ் சொல்லையும், தமிழ்பகுதி எழுத்துப்பேறு எனக்கொண்டு, தனிமையானமொழி எனப் பொருள்கொள்வதுமாம். இவற்றுனே செந்தமிழ் மொழித்தேவ நங்கையானவள், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் என்னுந் தற்சூழ்ந்த அயன்மொழி மாதர்களினும், ஏனைய அநாரிய பாஷைப்பேதையர்களினுஞ் சிறந்தவள் என்பதும், சிவபெருமானும், முருகப்பெருமானும், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும் இவருள்ளிட்ட ஏனைய பொய்யடிமையில்லாப் புலவர்களுஞ் சங்கமிருந்து வளர்த்தமையானும், அநேக அற்புதங்களை விளைத்தமையானும், இறைவன் தன்பெயரைநாட்டி யகப்பொருளியலை யளிக்கப்பெற்றமையானும், எழுது மறையாகிய தேவார திருவாசகங்களை யுடைமையானும், முற்பட்டுத் தோன்றியதாய் இயலிசை நாடகமென்னும் முத்தமிழியலு மொருங்குணர்த்து மகத்துவமுடைய அகத்திய முதனூலிலக்கணத்தையும் அதன் வழித்தாய் தொல்காப்பிய முதலிய வேனையவழிசார்புநூல் இலக்கணங்களையு முடைமையானும் உத்தரவேதம் என்னும் வித்தக உத்தரீயம் விளங்கப்பெறுதலானும், வடமொழிக்கணில்லாத புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம் புறமென்னும் பொருட்பாகு பாடுகளும், குறிஞ்சி, வெட்சி, உழிஞை, முல்லை, வாகை, தும்பை, முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பாமுதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்னவைகளை

யுந் தனக்கே சுதந்தரமாகப்பெற்று விளங்கலானும், தன்னுடன் ஞேன்றி விளங்கும் ஆரிய முதியாளினு முயர்வுடையளென்பதும் விளங்கும் பெற்றிய தாம். இங்ஙனமாகவுஞ் சம்ஸ்கிருத மொழியினின்றுந் தமிழ்மொழி பிறந்த தென்று முழங்குவாருஞ் சிலர் உளர். மூஞ்சிமுதலாவியலுறுப்பும், வாயிசையும் கானடமும்பெற்று, சொற்பொருண் மலிந்து இனிமைவிளங்கும் பலவளனு நீஇ, முக்கட்கடவுளும் முருகப்பெருமானாதியருந் தந்திருவாயாற் புகழவும், சிற்றம்பலமுடையார் தந்திருக்கரத்தாற்றீண்டவும் பெற்றதெய்வம் வாயில்லா வடமொழியான் வயினின்றும் வந்தலவுவளென்பதுசாலவும் வியக்கத்தக்கதே.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்னுஞ் சிலப்பதி காரச் செய்யுட்கண் "முதலூழி யிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச் சங்கத்து" என்று அடியார்க்குநல்லார் உரைத்ததனுலும், அகத்தியத்தை யிலக்கணமாக்கொண்டாராய்ந்த முதற்சங்கமிருந்தகாலம், ஆதிகற்பத்திற் கிருத யுகத்துப் பிற்பகுதியென்க. அகத்தியம், தொல்காப்பியமென்னு மிரண்டனையு மிலக்கணமாகவுடைய இடைச்சங்கமிருந்தகாலம் ஆதிகற்பத்தில் திரேதயுகத்து முதற்பகுதியென்க. என்னை! "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்து இடைச்சங்கத்து" என்று அடியார்க்குநல்லார் உரைத்ததனுலும், இச் சங்க விலக்கணங்களுள் ஒன்றாய தொல்காப்பியம் வாதராயண முனிவர் தோன்றி வேதந்துறைசெய்த காலத்திற்கு முன்னரேயே செய்யப்பட்டுள்ளது என்பது போதரத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர வுரைக்கண் "இவர் இந்நூல்செய்த பின்னர் வேதவியாசர் சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார்" என்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்தமையானும், வேதவியாசர் கூறுசெய்தகாலம் ஆதிகற்பத்துத் துவாபரயுகமென்பது கந்தபுராணத்தார் கருத்தாகலானும், அதுவே நம் செந்தமிழ்மண்டலப் புலவர்களுக்குந் துணிபாகலானுமாம் தமிழ்த்தோன்றியகாலத்தைப் பவரும் பலவகையாகக்கூறுப. அவை விரிப்பிற்பெருகும், ஆயினும் இவற்றானும், சிவஞானயோகிகளாதிய ஆசிரியர் கட்டுரைகளானும், தமிழ்மொழி அநாதியே இறைவனுல் அருளப்பட்டதொன்றென்பது தெற்றெனவுணர்க.

இன்னன சிறப்புவாய்ந்த தமிழ் மொழிக்கணுள்ள நூல்களோ அளவிறந் தனவாய்க் கிடைத்தலின் சொல்லினளவுஞ் சொல்லுந்தன்மைத்தோ! அந்நூல் களையும் அவற்றினுள்ளசொற்களையும் அவற்றிற்குள்ள பொருள்களையும் ஒவ்வொருவரும் எளிதில் உணர்தல் அருமையாகலின் அவற்றுள் தம்மறிவிற் கெட்டியவளவினவற்றையெல்லாம் ஒருங்குசேர்த்து உதவநினைந்து, ௧௮௪௨-ஆண்டிலே, யாழ்ப்பாணம் சரவணமுத்துப்புலவர், சந்திரசேகர பண்டிதர் முதலாய செந்தமிழ் விநோதச் செல்வர்கள். பலர்சேர்ந்து, அகரவெழுத்தை ஆதியாகவரித்துச் சொற்களையெல்லாஞ் சேர்த்துப் பொருள்களையுங்காட்டி, ஓர் அகராதியை முதலில் வெளிப்படுத்தினர். அவற்றைப் பிரகடனஞ்செய்ய விரும்பின பின்னோர்சிலர்சிலவடமொழிகளையுஞ்சேர்த்து வெளிப்படுத்தினர். இங்ஙனமே

சிற்சில அகராதிகள் காலந்தோறும் அவ்வவரால் வெளியிடப்பட்டன. அவைகளெல்லாம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்களினும், வேதாந்த சித்தாந்த நூல்களினுமுள்ள அகப்பொருள் புறப்பொருட் பாகுபாடுகள், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகள், வெண்பா முதலிய பாவகை, பாவினம், அலங்காரவகை, பரதராகதாளப்பகுதி, அங்கக்கிரியை, உடலவருத்தனை, அவிநயம், நிலை, கூத்துவகற்பம், வங்கியமுதலிய கருவியிலக்கணம், பண், வண்ணப்பகுதி, வரிப்பகுதி, தத்துவம், முப்பொருளிலக்கணம் என்றின்னோரன்ன முக்கிய விடங்களாகிய சொற்பொருட்டொகைகளைக் கொள்ளாதனவாயிருத்தலை யுணர்ந்த சில நண்பர்கள் அவைகளெல்லாமமைய ஒரு அகராதியொன்று தருகவென்று பன்னாளும் பன்முறையுந் தூண்ட அதற்கிசைந்து யாழ்ப்பாணம் மேலைப்புலோலி வித்வான் நா - கதிரைவேற்பிள்ளை அவர்களைக்கொண்டு பரத சேனாபதீயம், இசைநுணுக்கம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, அன்பிணைந்திணை, கல்லாடம், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை பத்துப்பாட்டு, இலக்கணவிளக்கம், வீரசோழியம், புராணங்கள், இதிகாசங்கள், சூளாமணி, புறப்பொருள்வெண்பாமாலை, சித்தாந்தசாத்திரம், பிங்கலந்தை, திவாகரம் முதலிய அரியபெரிய நூல்களினின்றுஞ் சொற்களையும் தொகைப்பொருள்களையும் செந்தமிழ்நாட்டு வழக்கமொழிகள் பலவற்றையுஞ் சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தினேன்.

இந்நான்காம்பதிப்பைத் திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தராகிய சிவஞானயோகிகள் மாணாக்கரின் மாணாக்கருள் ஒருவராகிய, பிரதாபம்-சரவணப்பெருமாள் முதலியார் அவர்கள் குமாரரும், சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியார் அவர்கள் மாணவரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும், மெய்கண்டசாத்திரப் பிரசாரகரும் ஆகிய வண்ணக்களஞ்சியம் காஞ்சி - நாகலிங்க முதலியார் அவர்கள் ஆயிரக்கணக்கான பதங்களைத் தாம் பதிப்பித்துவரும் மெய்கண்டசாத்திரம் பண்டாரசாத்திரம் முதலிய பற்பல ஞானநூல்களிலிருந்து திரட்டிக்கொடுக்க, அவர்கள் கட்டளையின்படி தமிழ்மொழியகராதி என்னும் பெயரால் அப்பதங்களை இடையிடையேசேர்த்து முந்திய பதிப்பின்படி நன்குகப் பார்வையிட்டு அச்சிப்பதிப்பித்தேன். இதிற் குற்றமுளதாயின் உலகம் பொறுக்க.

இத்தமிழ்மொழியகராதி என்னும்அரிய பெரிய நூலை 1911௵ டிசம்பர்௴ 12உ டில்லிமாநகரில் நடைபெறும் மகா மாக்ஷிமை தங்கிய இந்திய சக்கரவர்த்தியவர்கள் முடிசூட்டுத் திருவிழா ஞாபகச்சின்னமாக அர்ப்பணம் செய்கிறேன். சுபம்! சுபம்!!

சென்னை
1-11-18

இங்ஙனம்,
பி. வே. நமசிவாயன்.

உ

கடவுள் துணை.

தமிழ்மொழியகராதி

எவனாலே முத்தமி ழென்றும் துலங்கும்
அவனாகும் இன்னாற் கரண்.

அ - தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் முதல் எழுத்து, உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறந்த அளவிலே ஒலிக்கும் ஒருகுற்றுயிர், அஃறிணைப் பன்மையீறு, அஃறிணைப் பன்மை வினைமுற்று, ஆறுவதன் பன்மையுருபு, இன்மை, எதிர்மறை, குறைவு, சம்மதி, சாரியை, அந்த, சுட்டு, தடை, பிறிது, வியப்பு. இவற்றைக் காட்டும் ஒருபசருக்கம், எட்டென்னும் எண்ணின்குறி, ஓரெழுத்து, சுக்கு, திப்பிலி, பெயரெச்ச வினையெச்சவிகுதிகள், சிவன், விஷ்ணு, பிரமன்.

அஆ - அதிசய விரக்கக் குறிப்பிலே வரும் ஒரு கூட்டிடைச்சொல், விட்டிசை.

அஃக - குறைய, சுருங்க, நுண்மையாக.

அஃகம் - விலைப்பொருள், தானியம், ஊற்றுநீர், முறைமை.

அஃகரம் - வெள்ளெருக்கு, கிரியை.

அஃகல் - குறைதல், சுருங்கல்.

அஃகாமை - குறையாமை, சுருங்காமை.

அஃகான் - அ என்னும் முதலெழுத்து.

அஃகியஇ - குற்றியலிகரம்.

இஃகியஉ - குற்றியலுகரம்.

அஃகியஐ - ஐகாரக்குறுக்கம்.

அஃகியஔ - ஔகாரக்குறுக்கம்.

அஃகியதனிநிலை - ஆய்தக்குறுக்கம்.

அஃகியமஃகான் - மகரக்குறுக்கம்.

அஃகியவறிவு - கூர்மை, நுண்ணறிவு, விவேகம், சூக்குமபுத்தி.

அஃகு - அஃகென்னு முன்னிலையேவல், தெரிநிலைவினைப்பகுதி, பெயரெச்சத்தொகை.

அஃகுதல் - சுருங்குதல், அளவிற்குறைதல், கழிந்துபோதல், குவிதல், நுண்மையாதல், நீர்வற்றுதல்.

அஃகுல்லி - உக்காரி என்னும் சிற்றுண்டி, பிட்டு.

அஃகுள் - அக்குள், கக்கம்.

அஃகேனம் - நெடுங்கணக்கிலே உயிர் வருக்கத்திறுதியில் வரும் ஆய்த எழுத்து, முள்ளில்லாப்பன்றி.

அஃதான்று - அஃதல்லாமல்.

அஃதி - அஃதை.

அஃது - அது, ஒரு சுட்டுப்பெயர்.

அஃதை - ஆதரவற்றவன், ஆதாவற்றவள்.

அஃபோதம் - நிலாமுகிப்புள்.

அஃறிணை - இழிதிணை, உயர்திணை அல்லாதசாதி.

அகக்கடவுள் - ஆன்மா, உயிர்க்குள்ளிருக்கும் இறைவன், மனம்.

அகக்கணு - உள்ளிருக்குங் கணு.

அகக்கண் - மனக்கண், ஞானக்கண்.

அகக்கமலம் - இதயதாமரை.

அகக்கரணம் - அந்தக்கரணம்.

அகக்கருவி - உட்கருவி, தேகசம்பந்தமாகிய ஆன்மாவினது உட்கருவி.

அகக்காழன - உள்வைர மரங்கள்.

அகக்காழ் - ஆண்மரம் - உள்வயிரம், வச்சிரக்கல்.

அகக்கூத்து - ஞானக்கூத்து, அகச்சுவையாகியகுணத்தின்வழி நிகழுங்கூத்து.

அகக்கூத்துக்கை - அகக்கூத்தில் காட்டும் கை.

அகங்கரம் - அகங்காரம்.

அகங்கரித்தல் - ஆங்காரங் கொள்ளுதல்,
கர்வங் கொள்ளல். [த்தல்.

அகங்கரிப்பு - மனவெறுப்பு, அகங்கரி

அகங்களித்தல் - மனமகிழ்தல், மனமத
ர்த்தல். [உள்ளின்பம்.

அகங்களிப்பு - மநமகிழ்வு, உட்களிப்பு,

அகங்காரக்கிரந்தி-சமுசாரபந்தம், ஆண
வமறைப்பு, மாயாபாசம், மும்மலத்
தொடர்ச்சு.

அகங்காரசைதன்னியவாதி - விஷயவி
யாபாரமாயிருக்கும் பிராணதிவாயுக்
களை ஆன்மாவென்னும்ஞானத்தினு
லேஅதனையறிந்துஅத்தத்துவமடை
தலே மோக்ஷமென்னும் மதத்தன்.

அகங்காரதத்துவம் - முப்பத்தாறு தத்து
வங்களில் ஒன்று.

அகங்காரத்திரயம் - முக்கியஅகங்காரம்,
அமுக்கிய அகங்காரம், முக்கியாமுக்
கிய அகங்காரம் என மூன்று.

அகங்காரம்-அகந்தை, உட்கரணம் நான்
கினுென்று, கர்வம், பிரவிக்குமூலம்
அல்லது வித்து. [வாதிப்பவன்.

அகங்காரவாதி-மனமே ஆன்மா என்று

அகங்காரவிர்த்தி - நானென்னும் வடிவு
ஞானம்.

அகங்காரான்ம ஞானம் - அகங்காரமே
ஆன்மாவெனக்கொள்ளும் அறிவு.

அகங்காரான்மவாதி - அகங்காரதத்துவ
மே ஆன்மாவென்று வாதிக்கும் வை
சேடிகன்.

அகங்காரி - செருக்குடையவன், கர்வி,

அகங்காழ் - அகக்காழ்.

அகங்கிரகத்தியானம் - சொரூபத்தைத்
தனக் கபேதமாகச் சிந்தித்தல்.

அகங்கிரகோபாசனை - தானே தெய்வ
மென்றுபாவித்துச்செய்யுமுபாசனை.

அகங்கிருதன் - அகங்காரமுடையவன்,
கொர்வ முடையவன்.

அகங்கிருதி - அகவிவகாரம், அகங்கார
தத்துவம், கெருவம், செருக்கு.

அகங்கை - உள்ளங்கை.

அகசன் - கேது.

அகசியக்காரன் - விதூஷகன்.

அகசியக்கூத்து - பகடிக்கூத்து.

அகசியம் - ஆசியம், வேடிக்கை.

அகசு - பகல், பொழுது.

அகசை - பார்வதி, மலையிற்பிறந்தவள்.

அகச்சத்தாநுவித்தசமாதி - ஆறு சமா
திகளில் ஒன்று.

அகச்சத்தானுவேதம் - அகச்சத்தானு
வித்தசமாதி, அது சமாதிகள் ஆறி
லொன்று. [ம்.

அகச்சமயம் - சைவசமயத்தி னுட்சமய

அகச்சுட்டு-சொல்லகத்து முதனிலையா
யமைந்து நிற்குஞ் சுட்டு. [னம்.

அகச்சுவை - நாடகரசத்தொன்று, ஞா

அகடச்சக்கரம் - உதரபந்தனம் என்னு
மணி. [லாங்கு.

அகடம் - அநீதி, சித்தியாகாமை, பொல்

அகடவிகடம் - அபாயம், இரண்டகம்,
தட்டுமாற்று, வஞ்சகம், குறும்பு.

அகடனம் - கேடு, செய்யப்படாதது.

அகடன் - துஷ்டன், நீதியில்லாதவன்.

அகடிதகடநா - மாயாகாரியஞ்செய்தல்.

அகடிதகடநாசமர்த்தன் - செய்தற்கரிய
தைச் செய்ய வல்லவன்.

அகடிதம் - நிறைவேற்றற்கரியது.

அகடியம் - அநீதி.

அகடு - உள், சீர், நடுப்பக்கம், பொல்லா
ங்கு, மேடு, வயிறு. [மை.

அகடூரம் - கொடுமையின்மை, கோணு

அகடேரி - பாம்பு.

அகட்டுத்தே - விநாயகன்.

அகணம் - கணியாதது, இலகு.

அகணி - உள், கடுக்காய், சக்கிரப்புரணி
நஞ்சு, தெங்கு, பனை, முதலியவற்
றின் நார், நஞ்சு, மருதநிலம், வயல்.

அகணித பஞ்சாங்கம் - அலகிடாது
சொல்லும் பஞ்சாங்கம்.

அகணிதபஞ்சாங்கி - கணியாத பஞ்சாங்
கஞ்சொல்வோன். [ணிதம்.

அகணிதம் - கணிக்கப்படாதது, மனக்க

அகண் - அருகு.

அகண்டகம் - முள்ளில்லாதது.

அகண்டசுருதி - விரிவாய்ப்பொருளு
ணர்த்தும் வேதம்.

அகண்டஞானம் - பரிபூரணஞானம்.

அகண்டத்துவம் - எதனாலும்பின்னப்
படாதிருக்குந்தன்மை.

அகண்டபதம்-பிரம்மபதம், பகாபதம்.

அகண்டபரிபூரணம் } எங்கும் நிறைந்
அகண்டபூரணம் } திருத்தல்.

அகண்டம் - அபின்னம், எல்லாம், கண்
டிக்கப்படாதது, சால தேகவஸ்துவி

றும்வேறுபடுத்தப்படாதது, மண் விளக்கு.
அகண்டவடிவம் - நீக்கமற்றசொரூபம்.
அகண்டவாக்கியம் - விட்டும் விடாத விலக்கணை.
அகண்டன் - அருகன், கடவுள், கூறுபடாதவன், சிவன், பூரணன், விட்டுணு
அகண்டாகண்டன்-பரப்பிரமம், கடவுள்
அகண்டாகாரஞானம்-பரிபூரணஞானம்.
அகண்டாகாரம்-விசாலம், அளவுபடாத வடிவம்.
அகண்டாகாரவிருத்தி - அஞ்ஞானம் நீக்கிச் சிவசாட்சியைத் தோற்றுவிப்பது. எல்லைபடாத வடிவு.
அகண்டாகாரவிர்த்திஞானம்-பேரறிவு.
அகண்டி - ஒருவாச்சியம்.
அகண்டிதமூர்த்தி - கண்டிக்கப்படாத வடிவுடையோன்.
அகண்டிதம் - ஏற்றுக்கொள்ளல், கண்டிப்பில்லாதது, கூறுபடாமை, முழுதும்.
அகண்டித பூர்த்தி - கப்படிக்கப்படாத வடிவுடையோன்.
அகண்டிதன் - எங்கும் நிறைந்தவன்.
அகண்டிதாகாரம் - கண்டிக்கப்படாத வுருவம்.
அகதங்காரன் - வைத்தியன்.
அகதம் - ஒருகுளிகை, சுகம், மருந்து.
அகதன் - நோயிலி.
அகதி - திக்கற்றவன், தில்லைமரம், போக்கற்றவன், வறியவன், வேலமரம். [றவன்.
அகதிகன் - ஆதரவற்றவன், உதவியற்
அகதிதம் - உரைக்கப்படாதது.
அகதீதம் - வூடுசெல்லற்கரியது.
அகதேசி - உள்ளூரவன்.
அகதேசு - பிணியில்லாதவன்.
அகத்தடியாள் - மனையாள்.
அகத்தன் - இடத்தினன், கர்த்தா அல்லாதவன்.
அகத்தார் - உள்ளிடத்துள்ளார், இல் வாழ்வார். சுற்றத்தார்.
அகத்தி - அகத்திய முனிவன், உள்ளிருக்கிறவன், ஒருமரம், இது சாழையகத்தி, சிற்றகத்தி, செவ்வகத்தி என மூவகைப்படும்.
அகத்திடல் - மனத்தினுள்வைத்தல்.
அகத்திணை - உள்ளத்தே நிகழ்கின்ற இன்பவொழுக்கம். அது கைக்கிளை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, பெருந்திணை என, எழுவகைப்படும்.
அகத்திணைப்புறம் - கைக்கிளையும் பெருந்திணையும்.
அகத்திணையியல் - இன்பமாகிய ஒழுக்கத்தின திலக்கணம்.
அகத்தியம் - அகத்தியராற்செய்யப்பட்ட இலக்கணநூல், அவசியம், சொல்லத்தகாதது. [லப்பட்டஒருமருந்து.
அகத்தியர்குழம்பு - அகத்தியரால்சொல்
அகத்தியவாசம் - பொதியமலை, குறுமுனி வுறைவிடம்.
அகத்தியன் - ஒருமுனி சிரேஷ்டன், இவன் பேரகத்தியம் சிற்றகத்தியம் எனப் பெரிய இலக்கணநூலுக்கும் சோதிஷம் வைத்தியமுதலிய இலக்கியநூலுக்கும் ஆசிரியன்.
அகத்தியா - ஆழம், எட்டாமை, கடல்.
அகத்தியாச்சிரமம் - அகத்திய முனிவர் பர்ணசாலை. அகத்தியான் பள்ளி என்னும் ஊர்.
அகத்தியான் - அகத்தியமுனிவன்.
அகத்தியான்பள்ளி - வேதாரணியத்துக்குச் சமீபமாயுள்ள ஒருதலம்.
அகத்திருசியாறுவித்தம் - ஆறு சமாதிகளில் ஒன்று. அது மனத்தின்கண் உள்ள இராகத்துவேஷாதி விடயங்களுக்குத் தானே சாட்சியென்று சிந்திப்பது.
அகத்தினள்-மனைவி, இல்லறக்கிழத்தி.
அகத்திசாறு - அகத்தியேசாறு, அது சிற்றறுகம்புல், பேரறுகம்புல் என இருவகைப்படும்.
அகத்தீடு - உள்ளிடுதல், கழுவுதல், கைக்குள்ளே விட்டணைத்தல்.
அகத்துவம்-கர்ப்பக்கிரகத்தன்மை, வீட்டுத்தன்மை.
அகத்துறுப்பு - உள்ளவயவம், மனத்திற்குறுப்புப்போல்வதாகியகுணம்.
அகத்தை - தாய்.
அகநகர் - நகருள்.
அகநகை - இகழ்ச்சிநகை.
அகநகைத்தல்-இகழ்ச்சி நகைசெய்தல்.
அகநம்-பாரமின்மை, பெருமையின்மை

அகநாடகம் - அகக்கூத்து.

அகநாடகவுரு-அகக்கூத்தின் வண்ணம், அவை கந்தமுதல்பிரபந்தமீறாக இருபத்தெட்டாகும்.

அகநாடு - உள்நாடு.

அகநிட்டம் - சமானமல்லாதது, சிரேஷ்டமானது, மூத்தது.

அகநிட்டலோகம் - பிரமலோகம் இருபதினுள்ளே பதினாறும் உலோகம்.

அகநிட்டன்-கனிட்டன் அல்லாதவன், கௌதமபுத்தன்.

அகநிருவிகற்பசமாதி-ஆறுசமாதிகளுள் ஒன்று. அது திருசியாநுவேதம், சத்தாநுவேதம்என்னும்இரண்டும்நீங்கி மனங்கரைந்து நிச்சலமாய் நிற்றல்.

அகநிர்ணயம் - ஆசௌசவிதிகளைக் கூறும் ஒரு சம்ஸ்கிருத நூல்.

அகநிலை - உள்நிலை, ஊர், கடவுள்.

அகநிலைக்குறிஞ்சி - ஒருபண்.

அகநிலைச்செயப்படுபொருள் - வினைச்சொல்லின் அகத்தே செயப்படுவதாக நிற்குந் தொழில்.

அகநிலைச்செவ்வழி - ஒருபண்.

அகநிலைப்பசாசக்கை - மூவகைப் பசாசக்கைகளிலொன்று, அது சுட்டுவிரனுனியிற் பெருவிரலகப்படவளைப்பது.

அகநிலைப்பாலை - ஒருபண்.

அகநிலைமருதம்-ஒருபண், அது உழைகுரலாய கோடிப்பாலை.

அகந்தை - ஆங்காரம், செருக்கு.

அகப்பகை - உட்பகை.

அகப்பக்கம் - அநுமானிக்கப் படும் பொருள், உட்பக்கம்.

அகப்படல் - அகப்படுதல்.

அகப்படுதல் - உட்படுதல், கிடைத்தல். பிடிக்கப்படுதல், சிக்கிக்கொள்ளுதல், வசப்படுதல்.

அகப்படுத்தல் - பிடித்தல், உட்படுத்தல்.

அகப்பட்டி - சுருங்கியபட்டி.

அகப்பட்டியாவார் - இஷ்டம்போன்று நடப்பவர்.

அகப்பணி - மனத்தொழில், வீட்டுவேலை.

அகப்பத்தியம் - மனோவிரதம்.

அகப்பரம் - திண்ணை, வேதிகை.

அகப்பற்று - நான் என்னும் உட்பற்று, மனவிருப்பு.

அகப்பா-அகழி,மதிலுண்மேடை,மதில்

அகப்பாடு - அகப்படுதல், உள்ளேநிகழ்ச்சியானது.

அகப்பாட்டு - அகநானூறென்னும் நூல், அகப்பொருள் பற்றிவரும் பாட்டு.

அகப்பாட்டுவண்ணம் - வண்ணச்செய்யுள்வகையிலொன்று. அதுமுடியாது போன்று முடிவது.

அகப்பாட்டுறுப்பு-அகத்திணையின் பன்னிரண் டுறுப்புக்கள். அவை : இயல்பகத்திணை, வகையகத்திணை, பொதுவகத்திணை, சிறப்பகத்திணை, உவமவகத்திணை, புறநிலையகத்திணை, எதிர்நிலையகத்திணை, காரணம் அல்லது கருவியகத்திணை, காரியவகத்திணை, காரகவகத்திணை, முன்னவை யகத்திணை, பின்னவை யகத்திணை எனப்படும்.

அகப்பு - ஆழம், தாழ்வு.

அகப்புறக்கைக்கிளை - காமஞ்சாலாவிளமைத் தன்மையுடைய தலைமகள் பக்கத்துத்தலைமகன் குறிப்பினையறியாது சென்றவளோடு மேன்மேலுங் கூறுவது.

அகப்புறச்சமயம் - வேதாகமோக்தச்சைவ சித்தாந்தத்தைப் பிரமாணமாகக்கொண்டும் அவற்றுக்குவிலக்கான கொள்கையைச் சாதிக்குஞ் சமயம், அது பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கியவாதசைவம் என்று ஆறுவகைப்படும்.

அகப்புறத்திணை - அகனாகிய ஐந்திணைக்கும் புறனாகிய ஒழுக்கம். அது கைக்கிளையும் பெருந்திணையுமென இருவகைப்படும்.

அகப்புறப்பாட்டு-மடலேறுதல் முதலாகத் தபுதாரநிலை யீறாகச் சொல்லப்பட்டவியற்பெயர்க்கோடாமையாம்.

அகப்புறப் பெருந்திணை - அகன்றழிக்கலங்கன்முதலாகத் தலைவியுந்தானும் வனமடைந்துநோற்றலீறாகச்சொல்லப்பட்டனவும் பிறவுங்கூறுதலாம்.

அகப்புறப்பொருள்-அகப்புறத்திணை.

அகப்புறமுழவு - எழுவகை முழவுகளுளொன்று,அது தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலாகப் பலவகைப்படும்.

அகப்புறம்-கைக்கிளையும் பெருந்திணையும், அவைகாந்தள்,வள்ளி,சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை,குறுங்கலி, இல்லாண்முல்லை, பாசறை முல்லை என்னும் பத்தருபவங்கள்.

அகப்பூ-இதயகமலம்.

அகப்பேய்ச்சித்தன் - பதினெண் சித்தரில் ஒரு சித்தபுருஷன்.

அகப்பை-சட்டுவம்; இது தட்டகப்பை, சாந்தகப்பை,சிற்றகப்பை என மூன்றுவகைப்படும்.

அகப்பொருட்கைக்கிளை - ஒருதலைக்காமம்.அதாவது காமம் நுகர்தற்கமைந்த இளமையை யுடைய தலைமகளிடத்துண்டாகிய குறிப்பினைத் தானறியுமளவும் தலைமகன் அவளைச் சாராது நின்று நெஞ்சொடு கூறல்.

அகப்பொருட்கோவை -ஒருபிரபந்தம்.

அகப்பொருட்டுறை - அகப்பாட்டுறுப்புக்கள் பன்னிரண்டனுள் ஒன்று. அது உரைப்போருங் கேட்போருமின்றிக் கவிக்கூற்றுக்ச் சொல்லப்படுவது.

அகப்பொருட்பெருந்திணை - அகத்தின்கண் உள்ள இன்பத்தைச் சிலநாள் நுகர்ந்த தலைவனுந் தலைவியும் பின் இடைக் காலத்து நுகராமைக்கான இடையூற்றுக் கூற்றுக்களைக் கூறுவது.

அகப்பொருள் - ஓரிலக்கணம். அஃது உண்ணிகழ்ச்சியான சிற்றின்பத்திற்குரிய எழுதிணையைக்கூறும், வீட்டினுள்ளபொருள், உட்பொருள், சிற்றின்பம், பொருளிலக்கண வகையில் இரண்டனுள் ஒன்று.

அகமகிழ்ச்சி- ஆனந்தம், மனமகிழ்ச்சி.

அகமகம்-அடையாமை,நடவாமை, புணராமை, செல்லாமை.

அகமமரம் - வெள்வேலமரம்.

அகமம் - மரப்பொது, மலை.

அகமருடணதீர்த்தம் - அகமருடணஸ்நாநத்துக்குரிய நீர்.

அகமருடணஸ்நாநம் - அகமருடணத்தோடுகூடிய ஸ்நானம்.

அகமருடணம் - நீருக்குள்ளே நின்று செபித்துப் பாவத்தைப் போக்கச்செய்யும் ஒரு மந்திரசெபம்.

அகமருடம் - அகமருடணஸ்நாநம், அகமருடண மந்திரம்.

அகமலர்ச்சி-அகமகிழ்ச்சி,மனமகிழ்ச்சி.

அகமாட்சி-இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகள்.

அகமார்க்கடம்-மெய்த்தொழிலாற்செய்யுங்கூத்து.

அகமார்க்கம் - அருமையிற்பாடல், உள்வழி, மந்திரக்கிரமம்.

அகமான்மா-தானே ஆன்மா என்று பிரஹ்மத்தின் வேறாகத் தன்னைக் காண்போன்.

அகமிதம் - நான் இது என்பது.

அகமுகம் - உண்முகம், அந்தர்முகம்.

அகமுடையாள் - வீட்டுக்குடையவள்.

அகமுடையான் - வீட்டுக்காரன்.

அகமுழவு - எழுவகைமுழவுகளுள் ஒன்று. அது உத்தம கருவியான இடக்கை. கரடிகை, குடமுழா, சல்லிகை, படகம், பேரிகை, மத்தளம் எனப் பலவகைப்படும்.

அகம் - அகக்கூத்து, அகங்காரம், அதுகாணுறென்னும் நூல், ஆசௌசம், இருப்பிடம், சரீரம், சீவன், ஆகாயம், ஆழம், ஆன்மா, இடம், பத்திரவம், உள், உள்ளிடம், எழுனுருபு, ஒருமரம், துக்கம், நாள். பகல், மருதம், மார்பு, பள்ளம், பாம்பு, பாவம், பூமி, மரப்பொது, மலை, மனம், வீடு.

அகம்படித்தொண்டு - அந்தர்முகமாக நின்றுசெய்யுந் தொண்டு.

அகம்படிமை - உட்டொண்டு.

அகம்படியார் - உள்வேலைக்காரர், ஒரு சாதியார்.

அகம்பதவாச்சியம்-அகமென்னும் பதத்தாற் சொல்லப்பட்ட பொருளாகிய ஆன்மா.

அகம்பன் - அசைக்கப்படாதவன்.

அகம்பாவம் - உட்செருக்கு, நானென்னும் எண்ணம்.

அகம்பிரதமர் - தன்னை முதலாகவுடையவர்.

அகம்பிரதமிகா-பெருமைபாராட்டுகை, முந்திக் கொள்ள வேண்டுமென்றேடுகை.

அகம்பிரமமெனல்-சிவமேநான்,நானே சிவம் எனல்.

அகம்பிரமம் - ஆங்காரம், நானே பிரமம் எனல்.
அகம்பிரமவாதி - நானே பிரமமென்று வாதிக்கிறவன்.
அகப்பிரமாஸ்மி - யசுர்வேதமகாவாக்கியம் நான்கில் ஒன்று.
அகம்மதி - அறியாமை. தற்பிரியம்.
அகம்மியம் - ஒரெண், கோடி, கோடாகோடி, பத்திலட்சங்கோடி, அணுகக்கூடாதது, அறியக்கூடாதது.
அகம்மியர் - அகம்மியை.
அகம்மியாகமனம் - இழிகுலப் பெண்ணோடு புணர்தல்.
அகம்மியை - பொதுமகள், புணர்ச்சிக்குத் தகுதியற்ற பெண்.
அகரம் - அ என்னும் எழுத்து, இறையின்மை, கையின்மை, செயலின்மை, ஊர், இரசம், எழுத்தின் சாரியை, பார்ப்பனச்சேரி, மருதநிலத்தூர், வீடு
அகராதி - நெடுங்கணக்கிலுள்ளபடி அகர முதலிய எழுத்துக்களால் தொடங்கும் சொற்கோவை.
அகரிடணம் } வெறுப்பு.
அகரிடம் } கிராகை.
அகருஷணம் } துன்பம்.
அகரு - அகில்.
அகருதம் - வீற்றிருத்தல்.
அகருமகம் - செயப்படுபொருளில்லாத வினை.
அகர் - பகல்.
அகர்ணம் - செவிடு, பாம்பு.
அகர்த்தத்துவம் - அழிக்குந்தத்துவம்.
அகர்த்தவ்வியம் - சுதந்தரமற்ற செய்
அகர்த்தனன் - குள்ளன். [கை
அகர்த்தன் - கர்த்தத்துவமில்லாதவன், . செய்கையற்றவன்.
அகர்த்தா - செய்கையற்றவன், பஞ்சகோசங்கட்கன்னியன்.
அகர்த்தியம் - கிருத்துவம்.
அகர்த்திருத்துவம் - கடவுளுடைய பிரபத்துவச்சாமர்த்திய குணங்கள் மூன்றனுள் ஒன்று. அது ர்த்திருத்துவம் நீங்கிநிற்றல்.
அகர்த்திருவாதம் - சிருட்டிகர்த்தா இல்லையென்று வாதித்தல்.
அகர்நாதன் } சூரியன்.
அகர்ப்பதி } சூரியன்.

அகர்மகர்த்தரிப் பிரயோகம். } இது பெருக்கமடைதல். செயப்படுபொருள் குன்றியவினை முதல் வாக்கியம்.
அகர்மகர்த்துருப் பிரயோகம் } இது பெருக்கமடைதல். செயப்படுபொருள் குன்றியவினை முதல் வாக்கியம்.
அகர்மணி - விண்மணி, சூரியன்.
அகர்மம் - செயலில்லாமை, தகாத
அகர்மி - கர்மமில்லாதவன். [செயல்.
அகர்முகம் உதயகாலம்,
அகர்ம்மணி சூரியன்.
அகர்ம்முகம் வைகறை.
அகலக்கட்டை - அகலமற்றது.
அகலக்கவி - வித்தாரக்கவி. அது தொடர்நிலைச் செய்யுளாலும் அடிபலவாய் நடக்கும் முத்தகச்செய்யுளாலும் பாடப்படுவது, வித்தாரகவி பாடும்
அகலப்பா - அகலக்கவி. [புலவன்.
அகலம் - மார்பு, விசாலம், விரிவு, உழாது விடப்பட்டநிலம்.
அகலர் - கலைநீங்கினவர், சண்டாளர்.
அகலல் - நீங்கல், விரிதல், ஒழிதல்.
அகலவுரை - விரித்துரை, அஃது இலக்கணமும் இலக்கியமுமெடுத்துக் காட்டியபொருள். விரித்துரைக்கும் விரித்துரை.
அகலறை - பாசறை, மலைப்பக்கம்.
அகலன் - ஏழை, கடவுள், கொடியவனல்லாதவன், பெருத்தவன், பெருமை
அகலி - அகலியை. [யுடையவன்.
அகலிகை - கௌதமமுனிவர்பத்தினி.
அகலிடம் - பூமி.
அகலிது - விசாலமுடையது.
அகலியமாமிசம் } தன்னால் அல்லது தன்னிமித்தமாகக் கொடுக்கப்பட்ட பிராணியின் மாமிசம்.
அகற்பியமாமிசம் } தன்னால் அல்லது தன்னிமித்தமாகக் கொடுக்கப்பட்ட பிராணியின் மாமிசம்.
அகலியம் - ஒருமரம், ஆயத்தமில்லாதது, இணங்காதது, சாமர்த்திய மில்லாதது, மரப்பொது.
அகலியாசாரன் - தேவேந்திரன்.
அகலியாநந்தனன் - சதாநந்தன்.
அகலியை - பஞ்சகன்னிகைகளிலொரு
அகலுகை - நீங்குதல். [த்தி.
அகலுஷிதம் } கலங்காதது.
அகலுடிதம் } கலங்காதது.
அகலுதல் - அகன்றுபோதல், நீங்குதல், விரிதல். [பூமி.
அகலுள் - அகலம், ஊர், நாடு, பெருமை,

அகல் - அகலுதல், ஓரளவு, அல்குல், சட்டி, தகழி, நீங்கல், நீங்கென்னேவல், பிரிதல், பெருமரம், விசாலித்தல், வெள்வேலமரம்.
அகல்கதை } வைரமின்மை
அகல்கத்துவம் }
அகல்கை - அகலல்.
அகல்வு - அகலம், நீங்குகை.
அகல்வோர் - சனர், விலகியிருப்பவர்.
அகவ - ஒலியாகிற்க.
அகவடி - உள்ளங்கால்.
அகவர் - அழைத்துப்புகழ்வோர், சூதர்.
அகவலிசை- - அகவலோசை.
அகவலுரிச்சீர்-ஈரசைச்சீர். [வோசை.
அகவலோசை - ஆசிரியப்பாவிற்குரிய
அகவல் - அழைத்தல், ஆசிரியப்பா, ஆடல், ஒருசந்தம், மயிர்குரல்.
அகவற்சீர் - அகவலுரிச்சீர்.
அகவற்சுரிதகம்-ஆசிரியச்சுரிதகம்.
அகவற்பா -ஐந்துபாவினொன்று. அது நாற்சீரான் வருமளபடியாயும் இயற்சீர்பயின்று மயற்சீர்விரவியு மதன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும் கருவிளங்கனி கூவிளங்கனிஎன்னும் இருசீர் கலவாது மூன்று முதலிய பலவடிகொண்டு முடிவது.
அகவற்றாழிசை - ஆசிரியப்பா வினத்தொன்று. அது எவ்வகைச் சீரானும் தளையானும் ஒத்த மூவடியாகத் தனித்தாவது ஒரு பொருண்மேல் மூன்றடுக்கியாவது வருவது.
அகவற்றுள்ளல்-வெண்டளையும் கலித்தளையும் விரவிவருவது.
அகவற்றுறை - ஆசிரியப்பா வினத்தொன்று. அது நான்கடி பெற்றீற்றயலடி குறைந்தும், நான்கடி பெற்றீற் றயலடிகுறைந் திடைமடக்காயும், நான்கடிபெற் றிடையிடை குறைந்தும்,நான்கடிபெற்றிடையிடை குறைந் திடைமடக்காயும் வருவது.
அகவற்றூங்கல் - ஒன்றாத வஞ்சித்தளையான் வருவது.
அகவாட்டி-மனையாள்,இல்லறக்கிழத்தி
அகவாயுக்கள் - உட்கரணங்களைச் சிவனோடுகூடி நின்றசைப்பிக்கின்றனவாகச் சொல்லப்படும் அந்தரியாமி, பிரபஞ்சனன், மகாப்பிராணன், முக்கியன், வைரம்பன் என்னும் ஐந்து வாயுக்கள்.
அகவாளன் - மனையாளன்.
அகவிடன் - அகப்பொருளுக்குரிய சட்டக முதலாகிய இருபத்தேழு உரைகளுள் ஒன்றாகிய இடத்தின் வகையிரண்டனுள் ஒன்று; அது ஒருசெய்யுள் மனையும் வளாகமும் பற்றி வருவது.
அகவிதழ் - உள்ளிதழ்.
அகவிலை - தானியவிலை. [தல்.
அகவு - அமுக்கிரா, ஆடுதல், கூத்தாடு
அகவுதல் - அழைத்தல், ஆடல்.
அகவேற்றம் - தானியவிலையேற்றம்.
அகவை - உட்பொருள், வயது.
அகழல் } தோண்டல்.
அகழுதல் } அகழ்தல்.
அகழாவெடுத்தல் - தோண்டுதல், எலிகளைப்போல வளையுண்டாக்கி மணலைப் புறம்பே தள்ளுதல்.
அகழான் - ஒருவகைப் பேரொலி, வயலெலி.
அகழி - அகழ், கோட்டை, மதில்சூழ் கிடங்கு.
அகழெலி - அகழான்.
அகழ் - அகழி - தொண்டென்னேவல்.
அகழ்தல் - உழுதல், தோண்டல்.
அகளங்கமூர்த்தி - கடவுள், புத்தன்.
அகளங்கம் - சிதாங்கபாஷாணம், சுத்தமுடைமை.
அகளங்கன் - ஒருசேமான், கடவுள், புத்தன், மாசிலான்.
அகளம் - தாழி, நீர்ச்சால், மிடா, சாடி, நிட்களம், களங்கரகிதம், யாழின் பத்தர், சூட்சமரூபம்.
அகளர் - நிஷ்களர்.
அகளி - தாழி, மிடா, பாத்திரம்.
அகறல்-அகலல், அகலுதல், கடத்தல்.
அகற்சி - அகலம், நீங்குதல், பிரிவு.
அகற்பசெபம் - விதியின்றிச்செய்யும் செபம்.
அகற்பம் - ஒரு பிராணயாம யோகம். அது வாக்கினாலே மந்திரஞ் செபியாமலும் மனத்தினாலே சிவனைத் தியானியாமலுஞ் செய்யப்படுவது.
அகற்பனை - உவமனில்லாதது, மனதிற் கமையாதகற்பனை.

அகற்பிதமரணம் - விதியின்றி நிகழு மரணம்.
அகற்றுதல் - அகலப்பண்ணுதல், தூரத் துதல், விரித்தல்.
அகனம் - கனமில்லாதது, பெருமை யின்மை.
அகன் - அகன்ற என்னும் பெயரெச் சம், அகாசுரன், உள், வினைமுதற் பொருளில்வரும் விகுதி (உம்-) நாய கன்.
அகன்பணை - அகன்ற மருதநிலம்.
அகன்மகதாது - செயப்படு பொருளில் வந்த வினைப்பகுதி. (உ-ம்) நட.
அகன்மகம் - செயப்படுபொருள் குன் றியவினை.
அகன்மகர்த்தரிப்பிரயோகம் - செயப் படு பொருளில்லாதவினை (உ-ம்) நடந்தான்.
அகன்மணி-தெய்வமணி, அகன்ற இரத் தினம்.
அகஸ்மாத்து - தற்செயல், காரணமில் லாமை.
அகன்றவறிவு - அகண்டாகாரவிருத்தி யாகிய பேரறிவு.
அகன்றில் - ஆணன்றில்.
அகன்னம் - செவிடு.
அகாசம் - ஆசௌசதினம்.
அகாசரம் - அறியாமை.
அகாடி - குதிரை முன்னங்கால் கட் டுங்கயிறு, முன். [திற்பிறந்தது.
அகாண்டசாதம் - காலமல்லாதகாலத்
அகாண்டபாதசாதம் - காலமல்லாத கா லத்திலே பிறந்து உடனே அழிதல்
அகாண்டபாதம் - காலமல்லாதகாலசம் பவம். [கிராப்பிரகாரம்.
அகாண்டம் - காலமல்லாதகாலம், காத்
அகாதத்துவம் - ஆழம். [சமயம்.
அகாதப்படுஞ்சமயம் - பிரமாத மாகுஞ்
அகாதம் - ஆழம், தொளை, நீந்துபுனல், நீர், பள்ளம், முந்து, வஞ்சகம்.
அகாதன் - வஞ்சகன்.
அகாதிதம் - பட்சித்தல்.
அகாத்தியம் - பொல்லாங்கு, வஞ்சனை, உண்ணத்தகாதது. [னமின்மை.
அகாத்திரம் - இன்றியமையாதது, கவ
அகாத்துமசை - பார்ப்பதி. [யின்மை.
அகாமம் - காமமில்லாதவினை, இச்சை

அகாமவினை-நிஷ்காமவினை, அது தெய் வீகத்தாலும், மோகத்தாலும், வியாதி யாலும் சோரபய முதலியவற்றாலும் அபுத்திபூர்வமாகச்செய்யுஞ்செயல்.
அகாயம் - தேகமற்றது, பரப்பிரமம்.
அகாயு - கத்தி, காகம், பாம்பு, பாவி.
அகாரணம்-காரணமின்மை,தற்செயல்.
அகாரணன் ஏதுவில்லான், கடவுள்.
அகாரத்திரயவித்தை - அகர எழுத்தை முதலிலுடைய ஆகருடணம், அதி ருச்சியம், அஞ்சனம் என்னும் பத ங்களாற் கருதப்பட்ட மந்திரவித் தைகள்.
அகாரம் - அ என்னும் எழுத்து, வீடு, செயலின்மை.
அகாரி-இடி, இந்திரன், கடவுள். [கை.
அகாரியம் - காரியமற்றது, தீச்செய்
அகாருண்ணியம் - அன்பின்மை.
அகாலமரணம் - யுத்த வயதல்லாத காலத்திற் சம்பவிக்கும் மரணம்.
அகாலமிருத்து - அநியாயமரணம்.
அகாலம் - அவகாலம், நியமமல்லாத காலம், பஞ்சகாலம்.
அகி-ஆவணி, மேகம், இராகு, இரும்பு, ஈயம், ஒருவகைமரம், ஒருவான்மீன், சூரியன், பாதகன், வஞ்சகன், பாம்பு, பிரயாணி, வச்சிராயுதம், விருத்திரா சுரன்.
அகிகாந்தம் - காற்று.
அகிகை - இலவமரம், திருவ நக்ஷத்தி ரம், பட்டுப்பருத்தி.
அகிஞன் } தரித்திரன், மிக வறிய
அகிஞ்சன் } வன்.
அகிஞ்சகன் - ஜீவ இம்சை செய்யாத வன்.
அகிஞ்சத்யா யதனலோகம் - இருபது பிரம லோகத்தினுள்ளே பத்தொன் பதாம் உலோகம்.
அகிஞ்சனன்-தரித்திரன், பரமலோபி.
அகிஞ்சை - கொல்லாமை, கெடுதிசெய் யாமை, துன்பஞ்செய்யாமை, தீமை செய்யாமை.
அகிதமிட்டிரன் - ஒரு விராக்கதன்.
அகிதம் - இதமின்மை, உரிமை யின் மை, தியானம், தீமை, பகை, நோயா ளிகளுக்கு கொடுக்கத்தகாத போச னம்.

அகிதர் - பகைவர்.
அகிதலம் பாதாளம். [தி.
அகிதன்-இதஞ்செய்யாதவன், விரோ
அகிதுண்டிகள்-பிடாரன், பாம்புபிடித்
தாட்டுபவன்.
அகிபதி-ஆதிசேடன், வாசுகி, பெரும்
பாம்பு.
அகிபுக்கு - கருடன், கீரி, மயில்.
அகிபுஜம் - கலுழன், மயில்.
அகிபேசம் - அகின், பாம்பின் விஷம்
அகிப்பிரத்தினதேவதை - உத்திரட்
டாதி நக்ஷத்திர அதிதெய்வம்.
அகிப்பிரத்தினம் - இரவிலே நிகழும்
மூன்று முகூர்த்தமாகிய உத்திரட்
டாதி நக்ஷத்திரம்.
அகிப்பிரத்தினன்-ஒருருத்திரன், சிவ
பெருமான்.
அகிமரால் - வெள்வேலமரம்.
அகிம்சை, அஹிம்சை } கொல்லாமை, மனோவாக்குக்காயங்களால் தீங்கு செய்யாமை.
அகிரச்சுகாமியம் - பாம்புக்கும் கயிற்று
க்கும் உள்ள ஒப்புமை. கயிற்றரவு.
அகிரன் - சூரியன், தீ, பதினொரு ருத்
திரரில் ஒருவன்.
அகிரிபு - தேவேந்திரன், கருடன்,
கிருட்டினன், கீரி, மயில்.
அகிருத - இருநூற்றிருபத்து நான்கு
புவனங்களில் ஒன்று.
அகிருதகம் - செய்யப்படாதது.
அகிருதஜ்ஞதை - செய்ந்நன்றிமறத்தல்
அகிருதஜ்ஞன் - செய்ந்நன்றி மறந்
தோன். [டாதது.
அகிருதம் - முற்றுவேலை, செய்யப்ப
அகிருதர் - கிரியைசெய்யாதவர்.
அகிருதித்துவம் - அந்தக்கேடு.
அகிருத்தியம் - அக்கிரமம், தப்பான
செய்கை.
அகிர் - அசர், தலைச்சுண்டு,
அகிர்த்தருமவிஷம்-பாம்புமுதலியசரப்
பொருள்களிலும் மாமுதலிய அச
ரப் பொருள்களிலு முள்ள விஷம்.
அகிர்ப்புத்திகி - இரவில்நிகழும்மூன்று
முகூர்த்தமாகிய உத்திரட்டாதி, உத்
திரட்டாதி நட்சத்திரம்.
அகிலகாரணன் - உலோக காரணன்,
பரசிவன்.

அகிலகாரணி - உலகமாதா, பரசிவை.
அகிலநாயகன் - சிவன், கடவுள்.
அகிலபோகம் - சகலவனுபவம், உலக
வாழ்வு.
அகிலம் - சருவலோகம், பிரபஞ்சம்,
எல்லாம், பூமி.
அகிலரூபன் - சிவன், எல்லா வடிவமு
மானோன், கடவுள்.
அகிலலோகம் - எல்லாவுலகம்.
அகிலாங்கம் - சதுரவடிவம்.
அகிலாண்டம்-சகலஅண்டம், பிருதிவி
அண்டம்.
அகிலாண்டவல்லி - உமாதேவி.
அகிலேசர் - விசுவேசர்.
அகில் - அகில்வாசம், அகரு, ஒருமரம்,
பஞ்சவிரையில் ஒன்று.
அகிவைரி - கருடன், மயில்.
அகிற்குடம் - அகிற்புகைக்கும்பம்.
அகிற்குறடு - அகிற்கட்டை.
அகிற்கூட்டு - ஏலம், கருப்பூரம், எரி
காசு, சந்தனம், தேன் என்னும் ஐந்
தின் கூட்டு.
அகிற்புகை - அகிற்கட்டையிலிருந்து
ண்டான தூமம்.
அகீசன் - ஆதிசேடன், அகிபதி.
அகீர்த்தி - துர்க்கீர்த்தி, அபகீர்த்தி.
அகீனகு - சூரியவமிசத்தில் ஸ்ரீராமனு
க்குப்பின்னிருந்த ஓரரசன்.
அகீனம் - குறைவின்மை, பலநாளாக
ச்செய்யப்படும் ஓர் யாகம்.
அகீனன் - பெரியோன்.
அகுசலம் - அதிட்டவீனம், துக்கம்,
சாமர்த்தியமின்மை.
அகுசலவேதனை - துக்கவறிவு, இது
பஞ்ச கந்தங்களுள் ஒன்றாகிய வேத
னையின்பகுதி மூன்றனுள் ஒன்று.
அகுடம் - கடுகுரோகிணிப்பூண்டு.
அகுட்டம் , மிளகு.
அகுணதை - அகுணத்துவம்.
அகுணத்துவம் - குணமின்மை.
அகுணம் - இலட்சணமின்மை, குண
மின்மை, குறைவு, துர்க்குணம்.
அகுணன் - குணமில்லாதவன்.
அகுணாத்துமா - அவ்வியத்தம், குண
மில்லாத ஆத்துமா.
அகுணி - குணமில்லாதது, குணமில்லா
தவன், மூடவன்.

அகுதம் - அழைக்கப்படாமை, ஐவகை யாகத்துள் ஒன்றாகிய தியானம்: அது மனமானது சதாசிவாதி விக்கிரகங்களில் ஒன்றை அன்பினாலே நினைந்து அத்தியானத்திலே இடைவிடாது கலந்துநிற்றல், யாகஞ்செய்யப்படாமை, வேதமோதல்.
அகுதி - அகதி.
அகுப்பியம் - பொன், வெள்ளி.
அகும்பை - கவிழ்தும்பைப்பூண்டு.
அகுரு - வெற்றிவேர், அகிலமரம்,இலகுவானது, ஈனமில்லாதது, குருவல்லாதவன்.
அகுருத்துவம்-கனமின்மை.
அகுலி - நறுவிலிமரம்.
அகுலீனம் - குலவீனம்.
அகுலீனன் - இழிகுலத்தவன்.
அகுவைக்கட்டி - அரையாப்புக்கட்டி.
அகுளிதநாதர் - நிஷேதகர்ம சாத்திரங்கள் செய்த நவநாத சித்தர்களில் ஒருவர்.
அகுளிதி - வேப்பமரம்.
அகூடகந்தம் - பெருங்காயம்.
அகூபாரம் - ஆமை, கடல், கன்மலை.
அகூபாரன் - ஆதிகூர்மம், சூரியன்.
அகேசன் - மொட்டையன்.
அகேது - முகாந்தரமின்மை.
அகை - அகையென்னேவலும் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும், எரிதல், கூறுபாடு.
அகைதல் - எரிதல், ஒடித்தல், தளிர்த்தல், முறித்தல், வருந்தல், எழுதல்.
அகைத்தல் - அடித்தல், அறுத்தல், எழுப்புதல், ஓட்டுதல்,செலுத்துதல், தழைத்தல், முறித்தல், வருத்தல்.
அகைப்பு-அடித்தல், அறுத்தல், எழுப்புதல்,ஒடித்தல்,முறித்தல்,வருத்தல்.
அகைப்புவண்ணம் - இருபதுவண்ணங்களில் ஒன்று, அது அறுத்தறுத்தொழுகும் சந்தமுடையது.
அகைமம் - குருவிச்சை, புல்லுருவி.
அகையகாதரம் - திருத்தேசகரம்.
அகையம் - விராமம், அனுச்ருதம்.
அகோ - அதிசயச்சொல், இது இகழ்ச்சி, துக்கம், இரக்கம், ஐயம், அழைப்பு, ஆச்சரியம், புகழ்ச்சி, சம்மதம், பொருமை முதலிய பொருள்களுள் ஒன்றை உள்ளிட்ட ஒரு குறிப்புமொழி.
அகோசரம் - அறியொணுமை, புலன்களால் காணப்படாமை.
அகோடம் - கமுகமரம்.
அகோதாரை - மிகப்பொழிதல்.
அகோத்திரம் - கோத்திரமின்மை.
அகோபிலம் - கடப்பை என்னும் ஊரிலுள்ள ஒரு விஷ்ணுதலம்.
அகோரகலை - சிவபூசைசெய்யும்போது சிவலிங்கத்தைச் சதாசிவனுகப் பாவித்து அவரது ஐந்துமுகத்திலும், நிற்பனவாகக் கொள்ளப்படுங் கலைகளுள் அகோரமுகத்தில் நிற்குங் கலைகள், அவை தமம், மோகம், சாயை, நிட்டை, மிருத்து, மாயை, உருத்திரபயம்,சவரம் என எட்டாமென்றும், அவற்றிற்குத் தானங்கள் இருதயம், கண்டம், வலத்தோள், இடத்தோள், நாபி,வயிறு, முதுகு, மார்பு என எட்டாமென்றும் சொல்வர்.
அகோரகைவல்லியப்பிரதம் - தணிகாசலம் என்னும் தணிகைமலை.
அகோரசிவாசாரியர் - பதினெண் பத்ததிக்காரருள் ஒருவர்.
அகோரதந்திரம்-உபாகமங்களில்ஒன்று
அகோரப்பிரமம் - அகங்காரம், சட்சு, பாதம், ரூபம், அக்கினி என்பவற்றிற் கதிட்டான தேவதையாகிய உருத்திரர்.
அகோரமுகம் - சதாசிவனுடைய ஐந்து முகங்களில் ஒன்று.
அகோரம் - உக்கிரம், அகோரமுகம், அச்சம் விளைக்கத்தக்கது, அச்சம் விளையாதது, பஞ்ச மந்திரங்களுள் ஒன்று, கொடுமை, நரி.
அகோரலிங்கம் - பஞ்ச லிங்கங்களில் ஒன்று.
அகோரவுரை - அகோரமந்திரம்.
அகோரன் - மங்களகரமானவன், பரசிவன்.
அகோராத்திரம் - அகோரம் அத்திரம் என்னும் மந்திரங்கள், அல்லும் பகலும்.
அகோரை-இரண்டரை நாழிகைக்காலம், ஒருமணிநேரம், உட்டணநாள்.
அக்ககன்னம் - பதனகேந்திரம்.
அக்கசாலை - அணிகலன் செய்யுமிடம், கம்பட்டசாலை, கம்மாலை.

அக்கசாலையர்-கம்மாளர், தட்டார்.

அக்கட - அவ்விடம்.

அக்கடி - அலைவு, இடைஞ்சல், வருத்தம்.

அக்கணம் - அத்தட்சணம், பொரிகாரம், வெங்காரம்.

அக்கணை - தான்றிமரம்.

அக்கண்டே - அக்காளே.

அக்கதம் - அட்சதை, பங்கப்படாதது, பழுதின்மை, பொரித்ததானியம்.

அக்கதயோனி - கன்னி.

அக்கதாரி - பரமசிவன், சிவனடியான்.

அக்கதூர்த்தன்-சூதாடுகிற தீயன், அத்தொசஞ்செய்வோன்.

அக்கதேவி - சோனைப்புல்லு, சூதுவிளையாடுவோன்.

அக்கதை - அட்சதை, மங்களகரமான அரிசி.

அக்கந்தம் - தான்றிமரம்.

அக்கந்து - நெற்குவைப்புறத்து விலக்கியபதர், புறக்கந்து.

அக்கபாடகன் - நியாயாதிபதி.

அக்கபாடம் - மற்போர்க்களம், திரைப்புடைவை.

அக்கபாதன் - நையாயிகன், நியாயசூத்திரஞ்செய்த கௌதமமுனிவன்.

அக்கப்பாடு - நிலைபழிவு, மரக்கலச்சேதம், மோசம்.

அக்கப்பிரம் - மாமரம்.

அக்கமணி - உருத்திராக்ஷம்.

அக்கமம்-பொறுமை.

அக்கமாலிகாபரணன் - கபாலமூர்த்தி.

அக்கமாலை - அருந்ததி, ஜபமாலை, உருத்திராக்ஷமாலை.

அக்கமுன்றி - கண்.

அக்கமை - வலிவின்மை, பொறுமையின்மை, பொறுமை, இயலாமை.

அக்கம் - அருகு, ஆன்மா, உருத்திராக்ஷம். ஒருமரம், கடலுப்பு, கண், கயிறு, சூதாடுகருவி, ஞானேந்திரியம், தராசுக்கோல், தானியம், தான்றிமரம், துரிசு, தேர், தேருருள், தேருருப்பு பக்கம், பண்டியச்சு, ஒருநிறை, பாம்பு, பூகோளாட்சம், பெறும்விலை, பொன், வழக்கு.

அக்கயத்துவம்
அக்கயம் } அழிவின்மை.

அக்கரச்சுதகம் - இருபதுவகைச்சித்திரக்கவிகளுள் ஒன்று.

அக்கரத்தான் - தான்றி.

அக்கரப்பிரஞ்சம்-எழுத்து மாறுபட்டம்.

அக்கரம்-அசரம், அசை, அழியாதது, ஆகாயம், உயிரெழுத்து, எழுத்து, வரையப்பட்டவாசகம், பிரணவமந்திரம், சலம், சொல், நித்தியானந்தம், நோயினொன்று, பிரமம், மந்திரவெழுத்து, மாமரம், வெள்ளெருக்கு.

அக்கரம்மா - வெள்ளெருக்கு.

அக்கரவர்த்தனம் - அக்ஷரமாதல், இருபது வகைச் சித்திரக் கவிகளுள் ஒன்று, அஃது ஓரெழுத்தா லொருமொழியாய்ப் பொருட்பயந்து ஓரெழுத்தேற்றப் பிறிதொரு மொழியாய்ப் பொருட்பயந்து அவ்வாறு முறையானே ஏற்றநவேற்ற வேறுவேறு மொழியாய்ப் பொருட்பயந்து வரப் பாடுவது.

அக்கரவிலக்கணம்-எழுத்தியல்பு, கலைஞானம் அறுபத்து நான்கினுள் ஒன்று.

அக்கரன்-ஈச்சுரர்மூவரில் ஒருவனாகிய அந்தரியாமி, கூடஸ்தன், திருமால், பிரமம்.

அக்கரா - அழியாதது, விகாரமடையாதது.

அக்கராகாரம்-ஒருபூண்டு.

அக்கராந்தம்-எழுத்தொலி.

அக்காரம்பம் - எழுத்துப் பயில்வித்தல்.

அக்கருத்திரம் உருத்திராக்ஷக்கோவை.

அக்கரை - அப்பாற்கரை, குற்றம்.

அக்கர்-உருத்திராக்ஷமுடையவர், பெரியோர், கண்ணுடையவர்.

அக்கவடம் - உருத்திராக்கமாலை.

அக்கவாடம்-சூதாடுமிடம், மற்களரி.

அக்களித்தல்-மனமகிழ்தல்.

அக்களிப்பு - மனமகிழ்ச்சி.

அக்கறை-கவனம், காரியம், தொடர்பு.

அக்கன் - இராவணன் மக்களுள் ஒருவன், குருடன், குருடன், உருத்திராக்கமுடையவன், நாய்.

அக்கா-தாய், முன்பிறந்தாள்.

அக்காக்கிரம்-பண்டியச்சு, பண்டியின் முற்பக்கம்.

அக்காதேவி-மூதேவி.

அக்காத்தான்-தாண்றிமரம்.

அக்காரக்கனிநச்சுமனார் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவர்.

அக்காரடலை - சர்க்கரை சேர்த்தடப்பட்ட சோறு.

அக்காரம்-கருப்புக்கட்டி, கரும்பு, சருக்கரை, சீலை, மாமரம்.

அக்காளன்-வனப்புல்.

அக்காள்-தமக்கை.

அக்கி - அக்கினிகரப்பான், ஒருநோய், அக்கினிதேவன், ஆனைக் கரப்பானோய், உஷ்ணம், ஓர்பூச்சி, கண்.

அக்கிக்கல் - ஓரிரத்தினம்.

அக்கிச்சூர் - நேத்திரரோகம்.

அக்கிதாரை - கண்மணி.

அக்கிநாயி - திரேதாயுகம், அக்கினிதேவன்மனைவியாகிய சுவாகாதேவி.

அக்கிபடலம்-கண்ணோயுள் ஒன்று.

அக்கியம் - பகலிற் பதினொன்காவதாக நிகழு முத்தரமென்னு முகூர்த்தம்.

அக்கியாதம் - மறைவு.

அக்கியாதவாசம் - மறைந்திருத்தல்.

அக்கியாதி - அர்க்கீர்த்தி, நனிக்கை.

அக்கியானம் - அறிவின்மை, ஞானமின்மை.

அக்கியானி - அறிவீனன், ஞானமில்லாதவன்.

அக்கிரகண்ணியன் - சபையில் முதல்வனாக மதிக்கப்படத்தக்கவன்.

அக்கிரகத்தம் - முதன்மை, கைந்நுதி, யானைக்கைந்நுதி, வலக்கை.

அக்கிரகம் - முன்னர்ப்போதல்.

அக்கிரகரம் - நுனிக்கை. வலக்கை.

அக்கிரகன்-சிரேட்டமானவன், முதன்மையையுடையவன், முன்னுக்குப் போகிறவன்.

அக்கிரகாரம் - தலைச்சேரி, பிராமணவீதி.

அக்கிரசங்கை-முன்றெருடை அதாவது ஒரு கூட்டத்தாரில் தலைவனுக்குச் செய்யும் மரியாதை.

அக்கிரசந்தானி - நமன்கணக்கு.

அக்கிரசம்பாவனை - முதல்மரியாதை.

அக்கிரசரம், அக்கிரசரை } முற்செல்லுதல்.

அக்கிரசர்மம் - நுனித்தோல்.

அக்கிரசன் - தமையன், பிராமணன், மூத்தோன்.

அக்கிரசன்மன் - அண்ணன், பிரமன், பிராமணன்.

அக்கிரசாதகன், அக்கிரசாதி } பார்ப்பான்.

அக்கிரசை - தமக்கை, மூத்தாள்.

அக்கிரச்சா, அக்கிரச்சிலை } கிரகங்கிழக்குமேற்கு வீதியகறலில் வருஞ் சா.

அக்கிரணி - தலைவன்.

அக்கிரதாம்பூலம் - முதற்றாம்பூலம்.

அக்கிரநிருபணம் - முன்னிருபித்தது.

அக்கிரபாகம் - நுனி, முதற்பங்கு,முன்பக்கம்.

அக்கிரபாணி - கைந்நுனி, வலக்கை.

அக்கிரபூசனை - பிரயோசனகாலத்திற் கடவுளுக்குச்செய்யும் பூசை.

அக்கிரபூசை - முதன்மைப்பூசை, மேலான மதிப்பு.

அக்கிரபூமி - இலக்குக் குறிக்கப்பட்ட தானம், அடையக்கருதிய பொருள்.

அக்கிரமம் - அநீதம், ஒழுங்கின்மை, கொடுமை.

அக்கிரமாமிசம் - இரத்தாசயம்.

அக்கிரமி - கொடியவன்.

அக்கிரம் - அதிகம், இலாபம், எதிர், சமீபம், கிரகங் கீழ் மேல் வீதி யகறல், நுனி, இலகு, உச்சி, திரள், தொடக்கம், முதலாவது, முதற்பாகம், மேற்பாகம்.

அக்கிரவருணம் - உயர்ந்தசாதி.

அக்கிரன் - முதல்வன், தமையன்.

அக்கிராகரம், அக்கிராகாரம் } தோஷஹரத்திரவியம், இது வடஆபிரிக்கா தேசத்தில் உற்பத்தியாம்.

அக்கிராசியம் - தள்ளத்தக்கது, தீர்க்கப்பட்டது, கிரகிக்கப்படாதது, சம்மதிபெறுதது.

அக்கிராதம் - கோபமின்மை.

அக்கிராத்தம் - கைந்நுனி, வலக்கை.

அக்கிராந்தம் - கடக்கப்படாதது, வெல்லப்படாதது, சேம்பு.

அக்கிராரம்-தலைமையான இடம், விளைநிலம்.

அக்கிரியம் - ஆதியிலுண்டானது, ன்மைப்பட்டது, தொழிலற்றது.

அக்கிரியன் - சிரேட்டன், கிரியைவிட்டவன், தமையன்.
அக்கிரு - விரல்.
அக்கிருதன் - யோகாட்டகரில்ஒருவன்.
அக்கிரேவணம் - காட்டோரம்.
அக்கிலீபதை - வீரத்தன்மை.
அக்கிலு - நெருஞ்சில்.
அக்கிள் - கைக்குழி.
அக்கினி - அக்கினிதேவன், அக்கினிபுராணம், உதராக்கினி, ஓமாக்கினி, செங்கொடிவேலி, நவச்சாரம், நெருப்பு, பித்தம், பொன், மூத்திரம், மூலாக்கினி, வெடியுப்பு.
அக்கினிகணம் - தீப்பொறி, நிரைநேர்நிரைக்கணம்.
அக்கினிகண்டம் - நாற்பத்து முக்கோண சக்கரத்திலே எண்கோணமும் இரண்டு பத்துக்கோணமும் ஆகிய கண்டம், மூலம், சுவாதிட்டானம் என்னும் இரண்டாதாரங்களில் இடம் ஆகிய கண்டம்.
அக்கினிகயல் - கடல்நுரை.
அக்கினிகருப்பம் - கடல்நுரை, சூரியகாந்தம், பொறி.
அக்கினிகருப்பன் - குமாரக்கடவுள்.
அக்கினிகர்ப்பம் - நெருப்பைத் தன்னுள் அடக்கியவஸ்து, சூரியகாந்தக்கல், தீக்கடைக்கோல்.
அக்கினிகர்ப்பை - சாமைப்பயிர், பூமி.
அக்கினிகலை - சுவாசம்.
அக்கினிகாதலன் - துருபதன் குமாரனை திட்டத்துய்மன்.
அக்கினிகாரியம் - குண்டம்வெட்டி ஓமாக்கினி வளர்த்துக் செய்யப்படும் கிரியை.
அக்கினிகிரியை - பிரேதத்தை நெருப்பினாற் சுடப்படுங் கிரியை.
அக்கினிகீடம் - புழுவகையில் ஒன்று, அஃதிருபத்துநான்கு பேதப்படும்.
அக்கினிகுமாரன் - கந்தசுவாமி.
அக்கினிகுமாரி - அக்கினியிற் பிறந்த துரோபதை.
அக்கினிகேது - தூமம்.
அக்கினிகோணம் - தென்கீழ்த்திசை.
அக்கினிஹோத்திரம் } அக்கினிகோத்திரம் } தீ, நெய் யாகமிருபத்தொன்றில் ஒன்று.
அக்கினிஹோத்திரி } அக்கினிகோத்திரி } யாகாக்கினி நித்தியம் வளர்த்திருப்போன்.
அக்கினிகோத்திரிவிபூதி - யாகத்தினுலுண்டாக்கப்பட்ட விபூதி.
அக்கினிக்கட்டு - அக்கினித்தம்பனம்.
அக்கினிக்கண்ணன் - நெருப்புக் கண்ணை யுடையவன், பரமசிவன், கோரரூபன்.
அக்கினிக்கபம் - கடல்நுரை.
அக்கினிக்கர்ப்பம் - அக்கினிக்கருப்பம்.
அக்கினிக்குமாரம் - குளிர்மை, மந்தமுதலாகிய நோய்கட்குக் கொடுக்கப்படு மருந்து.
அக்கினிக்குமரன் - ஒருவகை மாத்திரை, சுப்பிரமணியக்கடவுள்.
அக்கினிசகன் - காற்று.
அக்கினிசகாயன் - காற்று.
அடர்ந்தேற்றம் - கொடுமை, நெருக்கிடை.
அடர்ந்தேற்றி - இட்டேற்றம், நெருக்கம்.
அடர்பு - செறிவு, நெருக்கம், வினையெச்சம்.
அடர்ப்பம் - நெருக்கம்.
அடர்ப்பு - நெருக்கம், போர்.
அடர்வு - அடர்பு.
அடலம் - மாறுமை, விசாரமடையாமை.
அடலார் - பகைவர், போர்வீரர்.
அடலி - வெள்ளாட்டி.
அடலை - சாம்பல், பற்பம், விபூதி, போர்க்களம், மாறுமை.
அடலைமுடலை - வீண்வார்த்தை.
அடல் - கொல்லுதல், சமைத்தல், பொருதல், வலி, வியங்கோண்முற்று, வெற்றி.
அடவாதி - பிடிவாதக்காரன்.
அடவி - காடு, கூட்டம், சோலை.
அடவிகன் - வனவாசி.
அடவிக்கச்சோலம் - ஒருசரக்கு.
அடவிசரர் - வேடர்.
அடவிச்சொல் - கோரோசனை.
அடவியீ - ஒருவகைக்கீடம்.
அடனம் - அலைந்துதிரிதல், போகுதல்.
அடா - ஓரதிசயக்கிளவி, கீழ்மகனை விளிக்கும் ஒருசொல்.
அடாசனி - ஆரை, புளியாரை.
அடாசு - மட்கிச்செத்தது.
அடாசுதல் - திணித்தல், விலகுதல்.
அடாணா - ஓரிராகம்.
அடாதது - தகாதது.
அடாத்தியம் - அடாதது.
அடாத்து - தகாதது, பொருந்தாதது, முறைகேடானது.

அடார் - புலிமுதலியவைகளை அகப்படுத்தும் பொறியாகிய கல்லடார்.
அடாவந்தி - அநியாயம், இட்டேற்றம், துன்பம்.
அடி - அடியென்னேவல், அடியோர், ஆதி, ஓரளவு, கடவுள், கால், காற்சுவடு, கீழ்மகளை விளிக்குஞ்சொல், செய்யுளுறுப்பினொன்று, தாது, முன், மூலம், வமிசமூலம்.
அடிகண்மார் - சமணருள் ஆசிரியராய் நின்றவர்களைக் குறிக்கும் ஒரு சிறப்புப்பெயர்.
அடிகள் - கடவுள், குரு, தலைவன், தலைவி, முனிவர், மூத்தோன்.
அடிகாற்று - பெருங்காற்று.
அடிகொள்ளல் - தொடங்கல்.
அடிகோலல் - அஸ்திவாரம்போடல், முயலல்.
அடிக்கடி - அடிபெயர்க்குந்தோறும்.
அடிக்கணை - கணைக்கால்.
அடிக்கீழ்ப்படுத்தல் - அடக்கி நடத்தல், ஆண்டுகொள்ளல்.
அடிக்குடி - அடிச்சேரி.
அடிக்குடில் - அடிச்சேரி, வேடரிருக்குமூர், வைகுந்தம்.
அடிக்குள் - உடனே.
அடிக்கொள்ளுதல் - தொடக்கம்பண்ணுதல்.
அடிக்கோலுதல் - இடம்பிடித்தல்.
அடிசில் - சோறு.
அடிச்சால் - உழவின்முதற்சால்.
அடிச்சி - அடியாள்.
அடிச்சியர் - குற்றேவல்செய்யும் பெண்கள்.
அடிச்சுவடு - காற்சுவடு.
அடிச்சூடு - காலடியிற்சுடுதல்.
அடிச்சேரி - அடிக்குடில், கிராமம்.
அடிஞானம் - சிவஞானம்.
அடிதலை - அடிமுடி, ஆதியந்தம், வரலாறு.
அடிதலைதடுமாற்றம் - ஆதியந்தந்தெரியாது தடுமாறுதல்.
அடிதல் - அடிபடுதல்.
அடித்தலம் - அத்திவாரம், கால்.
அடித்தல் - அதுக்கல், அறைதல்.
அடித்தழும்பு - காற்சுவடு.
அடித்தளம் - அத்திவாரம், வீட்டினிற்பரப்பு.
அடித்திகம் - அசுவகந்தி.
அடிநா - நாவினடி.
அடிநிலம் - அடிப்பக்கம், அடியிடம்.
அடிபடல் } அடிக்கப்படுதல்.
அடிபடுதல் }
அடிபணிதல் - நமஸ்காரஞ்செய்தல்.
அடிபார்த்தல் - எதுபார்த்தல்.
அடிபிடி - சண்டை.
அடிபிடித்தல் - எதுப்பிடித்தல், கறிமுதலியசுண்டல், முதற்பிடித்தல்.
அடிபெயர்தல் - விலகுதல்.
அடிப்படல் - கீழ்ப்படிதல், கீழ்ப்படையிலிருத்தல், பாதத்தின்கீழ்ப்படுதல்.
அடிப்படுதல் - அமைதல்.
அடிப்படுத்தல் - கீழ்ப்படுத்தல்.
அடிப்படுத்துதல் - கீழமைத்தல்.
அடிப்படை - ஆதாரமாக அடியிற்கிடப்பது, பிரதானசேனை.
அடிப்பட்டகாந்தி - தீமுறுகற் பாஷாணம்.
அடிப்பட்டசாந்தி - மகாசாந்தம்.
அடிபட்டசான்றோர் - பாரம்பரைப்பெரியோர், இது சைவபரிபாஷை.
அடிப்பட்டவன் - பழகினவன்.
அடிப்பதறல் - நிலைகுலைதல், கானடுங்கல்.
அடிப்பந்தி - முதற்பந்தி.
அடிப்பலம் - முதற்பலன், மூலபலம்.
அடிப்பற்றல் - அடிப்பற்றுதல்.
அடிப்பற்று - சோறுமுதலிய பாண்டத்திற் பற்றுகை, பாறையுப்பு.
அடிப்பற்றுதல் - கறிமுதலிய பாண்டத்திற் சுண்டுதல்.
அடிப்பாடு - பழக்கம், வழி.
அடிப்பாய்தல் - ஒருவிளையாட்டு, தாண்டுதல்.
அடிப்பார்த்தல் - நிழலளந்து பொழுது குறித்தல், யோசித்தல்.
அடிப்பிடித்தல் - அடிப்பற்றுதல்.
அடிப்பிணை - வங்கமணல், வங்கம்.
அடிப்போடல் } இடம்பண்ணுதல்.
அடிப்போடுதல் } தொடங்குதல்.
அடிமடக்கு - சித்திரக்கவியில் ஒன்று, பாதமடக்கு.
அடிமடி - உண்மடி.

அடிமடை - உள்மடை.
அடிமயக்கு - பாதமயக்கு.
அடிமறி - எண்வகைப்பொருள் கோளி லொன்றாகிய அடிமறிமாற்று.
அடிமறிமண்டிலம் - அகவற்பாக்களுள் ஒன்று.
அடிமறிமண்டிலவாசிரியப்பா - அகவற் பாவினுள் ஒன்று, அஃது எல்லா வடியும் அளவொத்து எவ்வடியை முதல் நடு இறுதி ஆகக் கொள்ளி னும், ஓசையும்பொருளும் வழுவாத திற்பது, ஒருவகையாசிரியப்பா.
அடிமறிமண்டிலவாசிரியம் - அடிமறி மண்டிலமென்னும் வகைப்பட்ட ஆசி ரியப்பா.
அடிமறிமாற்று - பொருள்கோள் எட்டி னுள் ஒன்று.
அடிமறிமாற்றுப்பொருள்கோள் - பொ ருள்கோள் எட்டினுள் ஒன்று. அது யாதானும் ஓரடியை இறுதி நடுமுதல் களில் வேண்டிய விடத்துக்குக் கூட் டிப் பொருளிசை மாட்சி மாறாது பொருள்கொள்வது (உ-ம்) "அலைப் பான் பிறிதுயிரையாக்கலுங் குற்றம். விலைப்பாலிற்கொண் டூன்மிசைதலு ங்குற்றஞ்,சொலற்பாலவல்லாதசொ ல்லலுங்குற்றங், கொலற்பாலுங்குற் றமேயாம்" இதனை மாறிக்காண்க.
அடிமறிமொழிமாற்றுப் பொருள் கோள் - பொருள்கோள் எட்டினுள் ஒன்று. அஃது அடிகளையேற்புழிக் கூட்டிப் பொருள் கொள்வது (உ-ம்) "படுபயன் வெஃகிப் பழிபடுவ செய் யார் நடுவன்மை நாணுபவர்" என் பதனுள் நடுவன்மை நாணுபவர் படு பயன் வெஃகிப் பழிபடுவசெய்யார் எனக்கூட்டிக்காண்க.
அடிமுகனை - துவக்கம்.
அடிமுடி - ஆதியந்தம், காலுந்தலையும், கீழ்மேல், வரலாறு.
அடிமுதன்மடக்கு - ஆதி மடக்கென் னுஞ் சொல்லலங்காரம்.
அடிமுரண்டொடை - அடிதோறு முத றகட் சொல்லேனும் பொருளேனும் மறுதலைப்பட்டு வருவது. (உ-ம்) " இருள்பரந்தன்னமா நீர்மருங்கி- லொளிலவுகுவித்தன்ன வெண்மண லொருசிறை - இரும்பினன்னகருங் கோட்டுப்புன்னை - பொன்னினன் னநுண்டாதுறைக்குந - சிறு குடிப் பரதவர்மடமகள் - பெருமதர் மழைக் கணுமுடையவாலணங்கே."
அடிமை - சிறை, தொண்டானவன், தொண்டு.
அடிமைகொள்ளல் - அடிமையாக்கல்.
அடிமைபூணல் - அடிமையாதல்.
அடிமைப்படல் - தொண்டுபூணுதல்.
அடிமைப்படுத்தல் - அடிமையாக்குதல்.
அடிமைப்பத்திரம் - தொண்டுச்சீட்டு.
அடிமையோலை - அடிமைப்பத்திரம்.
அடிமோனைத்தொடை - அடிகடோறு முதலெழுத்தொன்றி வருவது.
அடிம்பு - சிவதை.
அடியடியாக - தலைமுறை தலைமுறை யாக.
அடியநாதி - தொன்றுதொட்டுள்ள கா லம்.
அடியந்தாதி - நின்றபாட்டினீற்றடிவரு ம்பாட்டின்முதலடியாகப்பாடல்.
அடியர் - தொண்டுசெய்வோர்.
அடியல் - சொரிதல் (உ-ம்) கதிரடித்த து, தொடர்.
அடியவர் - தொண்டர்.
அடியவன் - அடிமையானவன்.
அடியளபெடைத்தொடை-அடிதோறு முதன் மொழிக்கண் அளபெடுத்து வருவது.
அடியறுக்கி - மட்கலமறுக்குங் கருவி.
அடியனாதி - தொன்றுதொட் டுள்ளது.
அடியார் - அடிமைகள், தொண்டர்.
அடியாள் - அடிமைபூண்டவள்.
அடியாறு - தொன்றுதொட்ட வர லாறு.
அடியான் - ஏவலாளன்.
அடியிடுதல் - தொடங்குதல்.
அடியியைபுத்தொடை - அடியினிறுதி தோறுநின்ற எழுத்தேனுஞ் சொல் லேனும் ஒன்றிவருவது.
அடியீடு - ஆரம்பம்.
அடியீரல் - மண்ணீரல்.
அடியுண்ணல் - அடிபடுதல், திரிதல்.
அடியுரம் - அடிப்பலம், அத்திபாரம்.
அடியுறை - பாதகாணிக்கை.

அடியெதுகைத்தொடை - அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவருவது.
அடியேன் - தொண்டனாகிய நான்.
அடியொட்டி - நிலத்திலே நட்டுவைக்கப்படுகிற ஒருவகையூசி.
அடியோட்டி - யுத்தகருவியில் ஒன்று.
அடியோர்-பிறர்க்குக் குற்றேவல் செய்வோர்.
அடிலவோடாகம் - ஒருசெடி.
அடிவயிறு - கீழ்வயிறு.
அடிவரலாறு - காரணம், தொடக்கம், வமிசவரலாறு.
அடிவருடல் - கால்பிடித்தல்.
அடிவரையறை - அடியாறு.
அடிவாரம் - மலைச்சாரல்.
அடிவாறு - அடியாறு.
அடிவானம் - திகாந்தம்.
அடிவிடுதல் - பாண்டங்களின் அடிப்பொருத்துவிடுதல்.
அடிவிரிதல் } அடிவிடுதல்.
அடிவிள்ளல் }
அடிவீழ்ச்சி - வணங்குதல்.
அடிவீழ்தல் - வணக்கம்.
அடிவெண்குருத்து - முருக்கு.
அடிவைத்தல் - ஆரம்பித்தல், தலையிடல், நடக்கத் தொடங்கல்.
அடுகலம் - பாகஞ்செய்யும் பாத்திரம்.
அடுகளம - போர்க்களம்.
அடுகனலவன் - சங்காரத் தொழிற்செய்யுங் காலாக்கினி ருத்திரன்.
அடுகிடை - எழும்பாதகிடை, பிரியாதடுத்துக்கொள்ளுதல்.
அடுகுறல் - கொல்லுதல்.
அடுகை - கொல்லுதல், பாகஞ்செய்தல்.
அடுகைமனை - மடைப்பள்ளி.
அடுக்கணி - அலங்காரம், அது சொல்லும்பொருளும் அடுக்கிவருவது.
அடுக்கம் - பக்கமலை, மலைப்பக்கம்.
அடுக்கலிடல் - நெல்லை இரண்டாமுறை குற்றல்.
அடுக்கல் - ஒன்றன்மே லொன்றுவைத்தல், குவித்தல், தொடுத்தல், மலை, வியங்கோண்முற்று.
அடுக்களை - மடைப்பள்ளி.
அடுக்காலாத்தி - அடுக்குத்தீபம்.
அடுக்கானகன்னி - சரியானவள், பவளப்புற்றுப்பாஷாணம்.
அடுக்கியல் - வண்ணக வொத்தாழிசைக்கலிப்பாவின் உறுப்புக்களுள் ஒன்றாகிய வராகம்.
அடுக்கு - அடுக்கப்பட்டது, அணியம், ஒழுங்கு, சிரேணி, சோமானம், பத்தி, பலவின்கூட்டம்.
அடுக்குகை - அடுக்குதல்.
அடுக்குச்செவ்வரத்தை - அடுக்காக மலருள்ள செவ்வரத்தை.
அடுக்குதல் - ஒன்றன்மேலொன்று வைத்தல்.
அடுக்குத்தீபம் - அடுக்குவிளக்கு.
அடுக்குத்தொடர் - ஒரு மொழியே பலமுறை அடுக்கிவருவது, அஃது அசைநிலையினும், பொருணிலையினும் இசைநிறையினும், இரண்டு முதல் நான்களவும் அடுக்கிவரும் (உ-ம்) அன்றேயன்றே அசைநிலை, தீதீதீ பொருணிலை, வருகவருகவருகவருக இசைநிறை.
அடுக்குப்பண்ணல் - ஆயத்தஞ்செய்தல்.
அடுக்குப்பார்த்தல் - ஒத்திக்கை பார்த்தல்.
அடுக்குமல்லிகை - ஒருமல்லிகை.
அடுக்குமுள்ளி - ஒருபூண்டு, முள்ளி.
அடுக்கூமத்தை - ஒருவகையூமத்தை.
அடுங்குன்றம் - யானை.
அடுசிலைக்காரம் - செங்காயுருவி.
அடுதல் - உண்டுபண்ணுதல், கொல்லல், சமைத்தல், மேறகொள்ளல்.
அடுத்த - சரியான, நெருங்கின.
அடுத்தல் - கிட்டல், சம்பவித்தல், சார்தல், சேர்த்தல்.
அடுத்தார் - சேர்ந்தார்.
அடுத்தி - வட்டி, வாசி.
அடுத்து - மெனமேல்.
அடுத்துவரல் - அடிக்கடிவருதல், நெருங்கிவருதல்.
அடுநை-கொல்வாய் என்னு முன்னிலைவினை.
அடுப்பங்கரை - அடுப்பின்பக்கம்.
அடுப்பு - அச்சம, சேர்க்கை, நிவாய்த்தானம், பரணிநாள்.
அடும்பு - அடப்பங்கொடி.
அடுவல் - வரகும் நெல்லுங் கலப்பு.

அடை - அடுத்தல், அடைகவநாயம், அடைகிடத்தல், அடையென்னேவல், அப்பவருக்கம், இலை, உவமை, கனம், கொறுவை, சேரென்னேவல், தோசை, கிலவிறை, முளை, வினைமுற்று.

அடைகட்டி - அடைமண்.

அடைகலம் - சேமக்கலம்.

அடைகல் - கம்மப்பட்டடை, மதகடைக்குங்கல்,

அடைகாத்தல் - அடைகிடத்தல்.

அடைகாய் - ஊறுகாய், வெற்றிலைப்பாக்கு.

அடைகிடத்தல் - குஞ்சு பிறப்பிக்கமுட்டையைக்காத்தல், நீங்காதிருத்தல்.

அடைகுதல் - அடைதல்.

அடைகுளம் - வாய்க்காலில்லாக்குளம்.

அடைகுறடு - கம்மப்பட்டடை.

அடைகை - நெருங்குகை, பெறுகை.

அடைகொடுத்தல் - கிலவிளைவில் ஒரு பங்கை அரசனுக்குக்கொடுத்தல்.

அடைகொளி - அடைமொழியைக் கொள்ளுதலுடையது, விசேடியம்.

அடைகோட்டை - வெளிப்போகப் பெறாத தடையையுடைய கோட்டை.

அடைகோழி - அவயக்கோழி.

அடைக்கத்து - அடைகிடக்குங் கோழியிடுஞ்சத்தம்.

அடைக்கலக்குருவி - ஊர்க்குருவி.

அடைக்கலங்காத்தல் - அடைக்கலப் பொருளைக் காத்தல், அடைக்கலம் புகுந்தவனைக் காத்தல்.

அடைக்கலங்குருவி - ஊர்க்குருவி.

அடைக்கலப்பொருள் - அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள்.

அடைக்கலம் - அடைக்கலப்பொருள், அபயம், சரண்புகல், புகலிடம்.

அடைக்கலம்புகுதல் - சரண்புகுதல்.

அடைக்கலாங்குருவி - ஊர்க்குருவி.

அடைக்காய் - தாம்பூலம், வெற்றிலை, பாக்கு.

அடைசல் - அடைசுதல், நெருக்கம்.

அடைசிலை - காரச்சிலை, பாழ்ச்சிலை.

அடைசுதல் - ஒதுக்குதல், கதுப்புக்குள் வைத்துக்கொள்ளுதல், செருகுதல், நெருக்குதல், நெருங்குதல்.

அடைசுபலகை - செருகி வெளியடைக்கும் பலகை.

அடைசுவலை - ஒருவித வலை.

அடைசொல் - அடைமொழி, விசேடணமொழி.

அடைச்சல் - பொத்துதல்.

அடைச்சி - உடுத்து.

அடைச்சிட்டு - இஸ்திரசிது.

அடைச்சுதல் - மலர்சூட்டல்.

அடைதல் - அடங்குதல், ஒதுங்குதல், கூடுதல், சேருதல், பெறுதல்.

அடைதூண் - கடைதறி.

அடைத்தசு - இட்டகட்டளை.

அடைத்தல் - காப்புச்செய்தல், சேர்த்தல், தடுத்தல், பூட்டல், மழைவிடாது பெய்தல், மறியற் படுத்தல், வெளியைமறைத்தல், வேலியடைத்தல்.

அடைந்தார் - அடைக்கலம் புகுந்தோர், மித்திரர்.

அடைந்தோர் - உறவோர்.

அடைப்பம் - அம்பட்டனாயுதவுறை, சாமான்பை, வெற்றிலைப்பை.

அடைப்பன் - ஒருவியாதி, மாடுகளுக்குத் தொண்டையில் உண்டாவது.

அடைப்பு - அடைக்கப்பட்டது, அடைத்தற்றன்மை, அடைத்தறொழில், கதவு, சாளிமுதலியவற்றின் அடைப்பு, வேலி.

அடைப்பை - வெற்றிலைப்பை.

அடைப்பைக்காரன் - பிளவு சுருளெடுத்துக்கொடுப்போன்.

அடைமண் - கலப்பையி லடைந்தமண்.

அடைமழை - விடாமழை.

அடைமாங்காய் - மாங்காயூறுகாய்.

அடைமானம் - உவமை, ஈடு, பிரதி, வழிவகை.

அடைமொழி - விசேடணமொழி.

அடைய - எல்லாம் சேர.

அடையடிமை - தனம் வாங்குதன்முதலியவற்றால் அடையப்பட்ட அடிமை.

அடையடுத்தவாகுபெயர் - ஒருபொருளதன் புறத்துப் பண்பாய் நின்ற அடையோடுகூடி ஆகுபெயராய் வழங்குவது (உ-ம்) புன்கையில் கட்டினான்.

அடையலர்
அடையலவர்
அடையலார் } பகைவர்.
அடையல் - அடைகுதல், அடைந்து வருவது, எல்லாம், வியங்கோள் முற்று.
அடையாதவர்
அடையாதார்
அடையார் } பகைவர்.
அடையாளம் - அறிகுறி, குறிப்பு, சின்னம், மாதிரி.
அடைவிகச்சோலம் - கஸ்தூரிமஞ்சள்.
அடைவு - ஈடு, உபமானம், எல்லாம், முறை, விதம்.
அட்சகன்னம் - நேர் முக்கோணத்தினெடுவரி.
அட்சகுலே - ஒருவியாதி.
அட்சதை - மங்கலவரிசி, பொரியரிசி.
அட்சபாகை - நேர் முக்கோணத்தினளவு.
அட்சபாடனம் - திரைப்படல்.
அட்சபாதன் - கௌதமரிஷி, நியாயவழியோன்.
அட்சமணி - அக்கமணி, உருத்திராக்ஷம்.
அட்சமாலாதரன் - அட்சமாலை தரித்தவன்.
அட்சமாலிகை - இருக்குவேத உபநிடதங்களு ளொன்று, உருத்திராக்ஷமாலை.
அட்சமாலை - அக்கமாலை.
அட்சம் - அக்கம், உத்திராக்ஷம், கண், தான்றிக்காய், வெங்காயம்.
அட்சய - அறுபதுவருடத்தில் கடைசி வருடம்.
அட்சயதிருதியா - வைகாசி மாதத்துச் சுக்கிலபக்கத்தில் வரும் மூன்றாந் திதி.
அட்சயதூணி - அருச்சன னம்புக்கூடு.
அட்சயபாத்திரம் - பாண்டவர்க்குச் சூரியன்கொடுத்த பாத்திரம், வைணவர்கள் ஐயமேற்கும் பாத்திரம்.
அட்சயம் - கேடின்மை.
அட்சயா - சாந்திரமாதத்தில் ஞாயிற்றுக்கிழமையில் அல்லது திங்கட்கிழமையில் வரும் ஏழாம்நாள்.

அட்சரகணிதம் - பீசகணிதம்.
அட்சரசஞ்சன்
அட்சரசணன் } எழுத்துக்காரன்.
அட்சரசனனி - இலேகனி.
அட்சரசனன்
அட்சரசிவகன்
அட்சரசிவி } எழுத்துக்காரன்.
அட்சரசுதகம் - அக்கரசுதகம்.
அட்சரசுத்தி - உச்சரிப்புத்திருத்தம், எழுத்துத் திருத்தம்.
அட்சரச்சுதகம் - அக்கரச்சுதகம்.
அட்சரதாபனம் - மந்திர எழுத்துக்களை யந்திரத்திலடைத்தல்.
அட்சரதூலிகை - இலேகனி.
அட்சரபாவனை - மகேச்சுரியபாவனை.
அட்சரப்புல் - பீனசப்புல்.
அட்சரமுகன் - மாணாக்கன்.
அட்சரம் - எழுத்து, ஒருநோய், தர்மம், தவம், பிரகிருதி, பிரணவம், முத்தி, வேதப்பொருள்.
அட்சரலட்சணம் - அக்கர விலக்கணம்.
அட்சரவின்யாசம் - எழுத்து, எழுதப்பட்ட பத்திரிகை, வேதம்.
அட்சரன் - அக்கரன், அந்தரியாமி.
அட்சராத்துமகசத்தம் - எழுத்தாலாகிய ஒலி.
அட்சராரம்பம் - அக்கராரம்பம்.
அட்சன் - அக்கன்.
அட்சி - கண், சேரென்னுமளவை.
அட்சியம் - யசுர்வேத உபநிடதங்களுள் ஒன்று.
அட்சீபம் - ஒருவகைமாமரம், முருங்கை மரம்.
அட்சௌகிணி - அக்குரோணி.
அட்டகசம் - அட்டகுல யானை, ஆடாதோடை.
அட்டகணம் - செய்யுட்குரிய எண் கணம். அவை ஆகாயம், இயமானன், சூரியன், தீ, நிலம், நீர், மதி, வாயு, இவற்றுள் முன்னைய நான்கும் நீக்கி மற்றைய நன்று.
அட்டகணிதம் - எண்கணிதம். அவை கனமூலம், கனம், குணம், சங்கலிதம், பாகாரம், வருக்கமூலம், வருக்கம், விபகலிதம் என்பன.

அட்டகந்தம் - எண்வகை வாசனைப் பொருள். அவை சந்தனம், அகரு, கஸ்தூரி, கருப்பூரம், பச்சிலை, குங்குமம், இலாமிச்சை, கோட்டம் என்பன.

அட்டகம் - அயமலாதி எட்டின் கூட்டம், வசம்பு, வடமொழியிலோர் பிரபந்தம்.

அட்டகருமம் - ஆகருடணம், உச்சாடனம், தம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேடணமாகிய எண்வித்தை.

அட்டகர்ணன் - பிரமா.

அட்டகவர்க்கம் - அட்டவருக்கம்.

அட்டகவுடலம் - புரியட்டகம்.

அட்டகாசம் - ஒரு சிவஸ்தலம், பெருநகை.

அட்டகாசன் - இருபத்தெண்கலியுகத்தொன்றில் மறைவிரிப்போன்.

அட்டகாசி - சிவன், பெருநகைசெய்வோன்.

அட்டகிரி - அட்டகுலமலை. அவை இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கைலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம் என்பன.

அட்டகீடம் - எட்டுவகைக் கீடமாகிய பிராணிகள். அவை-நண்டு, தவளை, அடவியீ, வீட்டுப்பல்லி, காட்டுமசகம், மகூிகா, மலைப்பீலிகை, சிலந்தி என்பன.

அட்டகுட்டம் - எண்வகைக் குட்டநோய்கள். அவை கருங்குட்டம், இரணகுட்டம், வெண்குட்டம், செங்குட்டம், கிருமிக்குட்டம், நீர்க்குட்டம், விரல்குறைகுட்டம், சொறிகுட்டம் என்பன.

அட்டகுணச்செல்வம் - அணிமாதி குணங்களையுடைய அட்ட ஐசுவரியங்கள்.

அட்டகுணபூதன் - அருகன்.

அட்டகுணம் - கடவுட்குரிய எண்குணம். அவை இயல்பாகவே பாசங்களினீங்குதல், இயற்கையுணர்வினனாதல், தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, முற்றுமுணர்தல், வரம்பிலின்பமுடைமை எனபன,

அட்டகுரவர் - எட்டுவகையாசிரியர்கள். அவர்கள் போதககுரு, வேதககுரு, நிஷிதகுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விஹிதகுரு என்பவர்கள். இவர்களுள் போதககுரு சாத்திரார்த்தம் போதிப்பவன். வேதககுரு தத்துவதரிசகன், நிஷிதகுரு வசியாகருஷணாதிகளால் இகலோகத்தில் சுகமும் பரலோகத்தில் துக்கமுங் கொடுப்பவன், காமியகுரு சுகர்மோபதேசத்தால் இகபரங்களில் சுகமெய்தப்பண்ணுபவன். சூசககுரு விவேகமுகத்தால் சமாதி சட்குணங்களையும் ஒருங்கேவரப் பண்ணுபவன். வாசககுரு விஷயங்கள் பொய்யென வெறுத்து ஆன்மவிருப்பமுண்டாகச் செய்பவன். காரககுரு சிவசீவர் ஐக்கிய ஞானத்தை வரச்செய்பவன். விஹிதகுரு சந்தேகம் நீங்கி மோட்சமடையச்செய்பவன்.

அட்டகுலபருவதம் - அட்டகிரி.

அட்டகுலயானை - அட்டதிக்கயம்.

அட்டகுலவெற்பு - அட்டகிரி.

அட்டகுற்றம் - மலசகிதர்க்குரிய குணமெட்டு. அவை - அந்தராயம், ஆயு, கோத்திரம், ஞானவரணீயம், தரிசனாவரணீயம், நாமம், மோகனீயம், வேதநீயம் என்பன.

அட்டகுன்மம் - எண்வகைக் குன்மநோய். அவை-எரி, சத்தி, சன்னி, சிலேத்துமம், சூலை, பித்தம், வலி, வாதம் எனப்படும்.

அட்டகை - அட்டமி, பிதிர்வணக்கம், யாகமிருபத்தொன்றிலொன்று.

அட்டகைச்சிராத்தம் - பிதிர்களையுபாசித்தற்குரியனவாய் மார்கழி, தை, மாசி என்னும் மாதங்களின் அபரபக்கங்களில் வரும் சத்தமி, அஷ்டமி, நவமி என்னும் மூன்று திதிகளில் செய்யப்படும், சிராத்தம்.

அட்டகோணம் - எட்டுக்கோணம்,

அட்டங்கால் - அட்டணைக்கால்.
அட்டசத்திகள் - ஆரணி, ஜனனி, உரோதயித்திரி என்னும் மூன்று பரிக்கிரகசத்திகளும், ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்னும் பஞ்சசத்திகளுமாகிய அட்டசத்திகள். சயை, விசயை, சயந்தி, அபராசிதை, சித்தை, இரத்தை, அலம்புசை, உற்பலை என்னும் எட்டுச் சத்திகள். சிவனுடைய கிரியாசத்தியினது உள்ளுருவும் பிறவுருவுமாகிய உருவுகளெட்டு. அவை ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி, ஆரணி, உரோதயித்திரி, ஜனனி என்னும் எட்டுச் சத்திகள். வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகரணி, பெலப்பிரதமனி, சர்வபூததமனி என்னும் எட்டுச்சத்திகள்.
அட்டசித்தி - யோகசித்தர்க்குரிய எண் சித்தி. அவை - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனப்படும்.
அட்டசிரவணன் - பிரமன்.
அட்டசுபம்-எண்வகைமங்கலம். அவை இணைக்கயல், கண்ணடி, சாமரம், கொடி, தோட்டி, நிறைகுடம்,முரசு, விளக்கு என்பன.
அட்டணை - குறுக்கே.
அட்டணைக்கால் - மடித்தக்கால்.
அட்டதந்திரவாதம் - வாயுவினல் வரும் ஒருவகைரோகம்.
அட்டதயாவிருத்தி-பிறரையக்கிர்த்தல், தீமைக்கஞ்சல், பிறர் துயர்க்கிரங்கல், நன்மைகடைப்பிடித்தல், பிறர் கருமத்திற்குடன்படல், பிறர் கருமமுடிக்கவிரைதல், பிறர்க்குப் பொருள் வரவை யுவத்தல், பிறர் செல்வம் பொறுத்தல் என்பனவாம்.
அட்டதருமம் - எண்வகைத் தருமம்: அவை யாகம், வேதமோதுதல், தானம், தபம், சத்தியம், திடம், பொறுமை, லோபமின்மை என்பன.
அட்டதளசக்கரம் - எண்வகை யிதழுடைய சக்கரம். அவை சோத்திரத்துவாரம் இரண்டு, நேத்திரத் துவாரம் இரண்டு, ஆக்கிராணத்துவாரம் இரண்டு, தவக்குத் துவாரம் ஒன்று, சிங்குவைத்துவாரம் ஒன்றுஎன்பன.
அட்டதளம் - எட்டிதழ்த்தாமரை.
அட்டதனம் - எட்டுப் பிரயோசனம். அவை குணம், சம்பத்து, தனம், நல்ல குலம், ரூபம், வித்தை, விவேகம், வயது என்பன.
அட்டதா - எட்டுப்பிரிவு, எண்மடங்கு.
அட்டதாது-எண்வகைலோகம். அவை பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா. வங்கம், துத்தநாகம் எனப்படும்.
அட்டதானபரீட்சை - வைத்தியரறிகுறியெட்டு. அவை நாடி, முகம், மலம், அமுரி, கண், நா, சரீரம், தொனி என்பனவாம்.
அட்டதிக்கயம் - அட்டகுலயானை: அவை கிழக்காதிமுறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் எனப்படும்.
அட்டதிக்கரிணி- அட்டதிக்கயங்களின் பிடிகள். அவை அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரகரிணி, சுப்பிரதந்தி, அங்கனை, அஞ்சனவதி என்பன. இவை ஐராவத முதலிய வற்றிற்கு முறையே பெண்களாம்.
அட்டதிக்காளர்- எண்டிசைகாப்பாளர்.
அட்டதிக்கு - எட்டுத்திசை. அவை கிழக்கு, தென்கீழ், தெற்கு, தென்மேல், மேற்கு, வடமேல், வடக்கு, வடகீழ் என்பன.
அட்டதிக்குப்பாலகர் - திக்குக்காவலர். அவர் கிழக்காதி முறையே இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு. குபேரன், ஈசானன் எனப்படுவர்.
அட்டதிசம் - எருக்கு.
அட்டதிசையானை - அட்டதிக்கயம்.
அட்டதேறல்-காய்ச்சியமது, சாராயம்.
அட்டநாகபந்தம் - சித்திரகவிவகைகளுளொன்று. அது நான்காமெழுத்து நாற்பத்தோராமெழுத்தாகவும், ஆறுமெழுத்து நாற்பத்தைந்தா மெழுத்தாகவும், எட்டாமெழுத்து இருபதாமெழுத்தாகவும், பன்னிரண்டாமெழுத்துப் பதினெட்டா மெழுத்தாக

வும், இருபத்திரண்டாமெழுத்து நாற்பத்தேழா மெழுத்தாகவும், இருபத்து நான்கா மெழுத்து முப்பத்தொன்பதாமெழுத்தாகவும், முப்பத்துமூன்றுமெழுத் தைம்பத்தோரா மெழுத்தாகவும், முப்பத்தேழா மெழுத்து நாற்பத்தொன்பதா மெழுத்தாகவும் வர ஒருசெய்யுட் செய்துகிரமப்படி எட்டுப் பாம்பு வரைந்து அதன்கண் அடைத்துக்கொள்ளப்படுவது.

அட்டநாகம்-எண்வகை நாகம் : அவை அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பனவாம்.

அட்டநிக்கிரகங்கள்-தர்க்கநூலிற்கூறிய எட்டுத்தோல்வித்தானங்கள். அவை நியூனம், அதிகம், அவசித்தாந்தம், அசித்தம், விருத்தம், அனைகாந்திகம், பிரகரண சமம், காலாத்தியாபதிட்டம் என்பன.

அட்டபந்தனம் - நிக்குக்கட்டு, கருங்குங்கிலியம் வெள்ளைக்குங்கிலியம், சுக்காங்கல், தேன் மெழுகு, செம்பஞ்சு, மைசாட்சி, கொம்பரக்கு, காவிக்கல், வெண்ணெய், இவ்வெட்டையும் இடைப்படிசேர்த்து முறைப்படி அரைத்துச் செய்வது.

அட்டபரிசம் - எண்வகையூறு : அவை ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல் என்பன. [பூச்சி.

அட்டபாதம் - எண்காற்புள் சிலந்திப்

அட்டபாலகர் - அட்டதிக்குப்பாலகர்.

அட்டபாலகர்குறி - திக்குப்பாலகர் அடையாளம். அவை இந்திராதி முறையே இடி, புகை, சியம், ஞாளி, இடபம், கழுதை, யானை, காகம் என்பன.

அட்டபுட்பம் - எட்டுவகை பூக்கள். அவை புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை என்பன. பூப்போல விரும்பத்தக்க எட்டுக்குணங்கள் - அவை கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன.

அட்டபுயம் - காஞ்சிபுரத்திலுள்ள விட்டுணுவாலயங்கள் எட்டனுள் ஒன்று. அது விட்டுணு எட்டுப் புயங்களோடிருந்திலக்குமியை விவாகஞ்செய்த கோலத்தைக்காட்டுவது.

அட்டபைரவர் - அட்டவைரவர்.

அட்டபோகம் - எண்போகம். அவை அணிகலன், ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசனம் என்பனவாம்.

அட்டப்பிரகரணம் - எட்டும்பிரகரணங்கள். அவை தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத் திரயநிருணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷநிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம்.

அட்டப்பிரணவம் - எட்டுப் பிரணவம்.

அட்டப்பிரமாணம் - அளவையெட்டு. அவை அனுமானம், அபாவம், அருத்தாபத்தி, ஆகமம், உவமானம், ஐதிகம், சம்பவம், பிரத்தியட்சம்என்பன.

அட்டமக - எட்டாவது.

அட்டமகாலிகன் - வானப்பிரஸ்தருள் ஒருவன். இவன் மூன்றுநா ளுணவின்றி யிருந்து நான்காநாட் பிற்பகலிலுண்போன்.

அட்டமங்கலம் - அட்டசுபம், ஒரு பிரபந்தம்.

அட்டமச்சனி - உதயலக்கினத்திற்கு எட்டாமிடத்தில் நிற்குஞ் சனி.

அட்டமணம்-எண்வகைமணம். அவை ஆசுரம், ஆரிடம், இராக்கதம், காந்தருவம், தெய்வம், பிரசாபத்தியம், பிரமம், பைசாசம் எனப்படும்.

அட்டமதம் - குலம், ரூபம், யௌவனம், வித்தை, தனம், பிரபுத்துவம், சகாயம், சகசம் என்னும் எட்டினாலும் உண்டாகுஞ் செருக்கு.

அட்டமம் - எட்டாவது.

அட்டமாசித்தி - எட்டுவிதசித்தி.

அட்டமாநாகம் - அட்டநாகம்.

அட்டமாந்தம் - கணமாந்தம், சுழிமாந்தம், செரியாமாந்தம், பெருமாந்தம், போர்மாந்தம், மலடிமாந்தம், வலிமாந்தம், வாதமாந்தம் என எண்வகைப்படும்.

அட்டமி - எட்டாந்திதி.
அட்டமிகை - அரைப்பலம்.
அட்டமூர்த்தம் - ஈசுரன் வடிவம் எட்டு: அவை இயமானன், காற்று, சந்திரன், சூரியன், தீ, நிலம், நீர், வெளி எனப்படும்.
அட்டமூர்த்தி - சிவபெருமான்.
அட்டமூர்த்திகள் - எட்டுமூர்த்திகள்: அவர்கள் பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், உக்கிரன், மாதேவன், உருத்திரன் என்பவர்கள்.
அட்டமூர்த்திதரன் - பிருதிவி முதலிய அஷ்டமூர்த்தங்களுக்கும அதிபர், சிவன்.
அட்டமூலம் - எட்டுவகை வேர்கள்: அவை அரத்தை, கண்டுபாரங்கி, காஞ்சொறிவேர், கோரைக்கிழங்கு, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், நன்னாரிவேர் என்பன.
அட்டமெய்ப்பரிசம் - அட்டபரிசம்.
அட்டம் } அஷ்டம் } அண்ணம், அருகிடம், எட்டு, சாதிக்காய், மேல் வீடு, வினைமுற்று, நேர், ராசமனை.
அட்டம்பாரித்தல் - பக்கவில் விசாலித்தல்.
அட்டயோகம் - அஷ்டாங்கயோகம்.
அட்டயோசம் - அரைபொடி.
அட்டரக்கு - உருகியவரக்கு.
அட்டலக்குமி - அஷ்டலட்சுமி: தனலட்சுமி, தானிய லட்சுமி, தைரியலட்சுமி, சௌரிய லட்சுமி, வித்தியா லட்சுமி, விசயலட்சுமி, கீர்த்திலட்சுமி, இராச்சிய லட்சுமி என்னும் எட்டு லட்சுமிகள்.
அட்டலட்சணம் - அட்டகுணம்.
அட்டலோகபற்பம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், நாகம் என்னும் எட்டு லோகங்களாலுஞ் செய்யப்பட்ட ஒரு மருந்து.
அட்டலோகம் - அட்டதாது.
அட்டல் - அழித்தல், அன்னுதல், கொல்லல், நெருப்பிற் காய்ச்சுதல்.
அட்டவசுக்கள் - எண்வகை வசுக்கள். அவர் அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்பவராம்.
அட்டவணிக்குணம் - வணிகர் குணமெட்டு. அவை இடனறிந்தொழுதல், இறுவஞ்சாமை, ஈட்டல், உறுவதுதெரிதல், தனிமையாற்றல், பகுத்தல், பொழுதொடுபுணர்தல், முனிவிலனுதல் என்பன.
அட்டவணை - சேர்க்கப்பட்டது, சொல்லப்பட்ட காரியத்தினொழுங்கு, வரிசைக்குறிப்பு.
அட்டவருக்கம் } அட்டவர்க்கம் } இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், சுக்கு, திப்பிலி, பெருங்காயம், மிளகு கூடிய எட்டு மருந்துச் சரக்குகள்.
அட்டவன் - அழித்தவன்.
அட்டவாதம் - எட்டுவகை வாதங்கள். அவை சிவசமவாதம், ஐக்கியவாதம், சங்கராந்தவாதம், பிரவாகேஸ்வரவாதம், கபாலிகவாதம், அநிகாரவாதம், பேதாபேதவாதம், அநேகேச்சுரவாதம் என்பன.
அட்டவிகாரம் - மனிதர்க்குரிய எட்டு விகாரம். அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அசூயை, இடும்பை என்பன.
அட்டவிஞ்சதி - இருபத்தெட்டு.
அட்டவிஞ்சதியோகாசாரியர் - அவர் சுவேதர், சதாசிவர், தமனர், சகோத்திரர், கங்கர், லோகாட்சர், ஜனிஷர், ததித்தியவந்தர், விஷயர், உக்கிரர், அத்திரி, சுபாலகர், கௌதமர், வேதசிரர், கோகர்ணர், குகாவாசர், சிகண்டி, சடமாலி, அட்டகாசர், தாருகர், லாங்குலி, மகாகாயர், சூலி, டிண்டி, முண்டி, சயிஷ்ணு, சோமசர்மர், இலகுளீசுவரர் என்னும் இருபத்தெட்டு யோகாசாரியர்.
அட்டவிததாடனம் - எட்டுவகைத் தாடனம். அவை சங்கோசம், பக்கத்தம், பிரசரிதம், முட்டி, கீலம், கர்த்தரிகை, சந்தங்கிசம், வித்தை என்பன.
அட்டவித்தியேசார் - எட்டுவகை வித்தியேசுரராகிய விஞ்ஞானகலர். அவர் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், ஸ்ரீகண்டர், சிகண்டி என்பவர்.

அட்டஆறு - எண்வகை ஆறு. அவை சருச்சரை, சீர்மை, தண்மை, திண்மை, நொய்மை, மென்மை, வண்மை, வெம்மை என்பன.

அட்டவெற்றி - எண்வகை வெற்றி, அவை பகைவரைக் கவர்தல், பகைவர் கவர்நிரை மீட்டல், பகைமேற் செல்லல், பகைமுன்னெதிருன்றல், தன்னரண்காத்தல், பகைவரரண் வளைத்தல், பொருதல், போர்வெல்லல் என்பனவாம். இவற்றிற்கு முறையே மாலை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை எனப்படும்.

அட்டவைசுவரியம் - எண்வகைச்செல்வம். அவை அடிமை, இராசாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம் என்பன.

அட்டவைரவர் - எட்டு வைரவர்கள். அவர் மகாவைரவர், உக்கிரவைரவர், சண்டாளவைரவர், குரோதவைரவர், உன்மத்தவைரவர், கபாலவைரவர், பீஷணவைரவர், சாகரவைரவர். இவர் சிவலோகத்திற் சோதிமயமான கோட்டையில் எட்டுவாசல்களிலுங் காவல்செய்துகொண்டிருப்பவர்.

அட்டனம - சக்கராயுதம்.

அட்டாங்கசீலம் - பௌத்தமதத்தின் நல்லொழுக்கமாகிய சீலத்தின் எட்டுறுப்புக்கள். அவை கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய்கூறாமை, கள்ளுண்ணாமை என்னும் பஞ்சசீலத்துடன் இல்லறத்தார்களில் கிட்டாபரர்களைப் போகியாமை, தரையிற்படுத்தல், பாய்மேற்படுத்தல் என்பன.

அட்டாங்கநமஸ்காரம்-மோவாய், செவிகள் இரண்டு, தலை, புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோய நமஸ்கரித்தல்.

அட்டாங்கமார்க்கம் - பழுதிலாவாழ்க்கையெனப்படும் எட்டங்கங்களை யுடைய அக்கதிவாரண மார்க்கம் அவை நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல் வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பன.

அட்டாங்கயோகம் - யோகமுறை எட்டு. அவை ஆதனம், இயமம், சமாதி, தாரணை, தியானம், நியமம், பிரத்தியாகாரம், பிராணாயாமம் என்பன.

அட்டாங்குலசிகாச்சேதம் - குடுமியை எட்டங்குலம்விட்டறுத்தல்.

அட்டாட்சரம் - விட்டுணுமந்திரம்.

அட்டாட்சரி - அட்டாட்சரம்.

அட்டாதசகணம் - பதினெண் கணங்கள். அக்கணங்களாவார் தேவர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர் என்பவர்களாம்.

அட்டாதசகுணம் - யாக்கைக் குறு பதினெண்குற்றம். அவை அதிசயம், இன்பம், உவகை, உறக்கம், கேதம், கையறவு, நறை, நினைப்பு, நீர்வேட்டல், நோய், பசி, பயம், பிறப்பு, மதம், மரணம், வியர்த்தல், வெகுளி, வேண்டல் என்பன.

அட்டாதசதருமசாத்திரம் - தரும நூல் பதினெட்டு. அவை மனு, அத்திரி, ஹாரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரசம், இயமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பாராசரம், வியாசம், சங்கலிதம், தர்க்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம் என்பனவாம்.

அட்டாதசபாடை - பதினெட்டுப் பாடை: அவை அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் என்பன.

அட்டாதசபுராணம்-பதினெட்டுப் புராணம். அவை சைவம், பவிடியம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிரமம், பதுமம், காருடம், நாரதீயம், விண்டு, பாகவதம், ஆக்கிநேயம், பிரமகைவர்த்தம் என்பன.

அட்டாதசமூலம் - பதினெண் வகை வேர். அவை எருக்கு, கண்டங்கத்திரி, கரந்தை, கறிமுள்ளி, குமிழ், கொடிவேலி, சங்கங்குப்பி, சிற்றுமல்லி, தழுதாழை, தூதுளை, நன்னாரி, நொச்சி, பாதிரி, பேராமல்லி, மாவிலிங்கம், முருங்கை, வில்வம், வேர்க்கொம்பு என்பன.
அட்டாதசம் - பதினெட்டு.
அட்டாதசவித்தை-பதினெண்வித்தைகள். அவை ஆறு வேதாங்கங்கள், நான்குவேதங்கள், மீமாஞ்சை, நியாயம், ஸ்மிருதி, புராணம் என்னும் பதினான்கும் ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் என்பனவுமாம்.
அட்டாதசவியவகாரபதம் - வழக்குக்குரியபதினெண்விடயங்கள்: அவை கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையானல்லான் விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ள மொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதராடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூதென்பனவுமொழிந்த பலவுமாம்.
அட்டாதசவிவாதபதம் - அட்டாதசவியவகாரபதம்.
அட்டாதசோபபுராணம் - பதினெட்டு உபபுராணம். அவை காரசிங்கம், சனற்குமாரம், நாரதீயம், சிவதன்மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மானவம், வாசிட்டலைங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம் என்பன.
அட்டாதுட்டம் - அதிகநீங்கு.
அட்டாதுட்டி - அதிகதுட்டத்தனம்.
அட்டாபதபத்திரம், பொற்றகடு.
அட்டாபதம் - எண்காற்புள், கதவின்முன், பொன், வன்னப்புடவை.
அட்டாலகம் - கோபுரம், மேல்வீடு.
அட்டாலம் - அட்டாலை, மேன்மாடம்.
அட்டாலிகாகாரன் - கற்சிற்பன். சிற்பி.
அட்டாலிகை - அரசர்மனை, மேல்வீடு.
அட்டாலை - அட்டாளை, மன்னர்மனை, மேல்மாளிகை.
அட்டாலைமண்டபம் - மேல் வீடாகக் கட்டப்பட்ட மண்டபம்.
அட்டாலைமரம் - ஒருமரம்.
அட்டாவதானம்- ஒரேசமயத்தில் எட்டுக்காரியத்தைச் சிந்தித்தல்.
அட்டாளகம், அட்டாளம் - மேல்மாடி
அட்டாளிகை - மேன்மாடம்.
அட்டாளை - ஒருமரம், சிறும்பி.
அட்டி - அதிமதுரம், இட்டு, இருப்பை, எட்டி, செஞ்சந்தனம், தடை, பருப்பு, மிகவிட்டு.
அட்டிகம் - சாதிக்காய்.
அட்டிகை-உட்கட்டு, ஓராபரணம், ஒருவகைக் கழுத்தணி.
அட்டிமதுரம் - அதிமதுரம்.
அட்டிமை - ஓமம், சீரகம்.
அட்டியல் - அட்டிகை.
அட்டில் - அடுக்களை.
அட்டினம் - சீரகம்.
அட்டு-அணை, சமைக்கப்பட்டது, செய்தது, பனாட்டு, மதிப்பு, வியங்கோள் விகுதி, வினையெச்சம்.
அட்டுதல் - வார்த்தல்.
அட்டுப்பு - காய்ச்சியவுப்பு.
அட்டை - செருப்படி, நீரில்வாழும் ஒரு செந்து, செவ்வட்டை, நீரட்டை, மரவட்டை என மூன்றுவிதம், வினைமுற்று.
அட்டோலகம் - ஆடம்பரம், ஒட்டோலகம்.
அட்டோலிங்கம் - ஆடம்பரம், ஆரவாரம், மகிழ்ச்சி.
அணகதாரம் - சுத்தவிஷாதம்.
அணங்கம். இலட்சணம்.
அணங்கயர்தல் - விழாக்கொண்டாடுதல்.
அணங்கல் - அணங்குதல்.
அணங்காடல், அணங்காடுதல் - வெறியாடுதல்.
அணங்காட்டு - சன்னதம், வெறியாட்டு.
அணங்கார் - பெண்கள்.
அணங்கிய - அழகிய, பின்னிவளர்ந்த.
அணங்கினர் - தேவப்பெண்கள்.
அணங்கு - அச்சம், அணங்கென்னேவல், அழகு, பராசத்தி, ஆசை,

கொலை, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க்காடுங் கூத்து, நோய், பெண்மகள், பேய்மகள், ரோகம், வருத்தம், வருத்துந்தெய்வம்.
அணங்குசார்ந்தாள் - படிமத்தாள்.
அணங்குதல் - அஞ்சல், கொல்லுதல், வருந்துதல், விரும்புதல்.
அணங்குதாக்கு - காமநெறியால் உயிர் கொள்ளுந் தெய்வமகள் தீண்டல்.
அணத்தல் - தலையெடுத்தல், மேல் நோக்கிநிற்றல்.
அணந்த - மேனோக்கிநின்று வருந்தின
அணம் / அணரி } கீழ்வாய்ப்புறம், மேல்வாய்.
அணர்ச்செவி - எடுத்தசெவி.
அணல் - கீழ்வாய், மிடறு, கழுத்து, தாடி.
அணவல் - கிட்டல், பொருந்தல்.
அணவன் - பொருந்தினவன்.
அணவு - அணவென்னேவல், நடு, பொருந்துதல்.
அணவுதல் - கிட்டல், இணைதல், புணர்ச்சி.
அணாப்பல் - அணாப்புதல்.
அணாப்பி - எய்ப்பவள்.
அணாப்பித்து - எய்த்து.
அணாப்பு - எய்க்கை.
அணாப்புதல் - எய்த்தல்.
அணார் - கழுத்து.
அணாவல் / அணாவுதல் } அணவுதல்.
அணி - அடுக்கு, அணியென்னேவல், கூட்டம், சம்பாரம், சமீபம், அச்சாணி, அலங்காரம், அழகு, ஆபரணம், எல்லை, ஏர்ச்சீர், ஒழுங்கு, ஓரிலக்கணம், நன்மை, நிரை, படைவகுப்பு, பெருமை, பூமாலை, நுணா.
அணிகம் - ஆபரணச்செப்பு, சிவிகை.
அணிகலச்செப்பு - ஆபரணப்பெட்டி.
அணிகலம் - ஆபரணம், கம்மாளர் கருவி, பணிமுட்டு.
அணிகலன் - ஆபரணம்.
அணிச்சை - நாகமல்லிகை.
அணிஞ்சில் - அழிஞ்சில், கொடிவேலி, சிற்றுமுட்டி, நொச்சி, முள்ளி.
அணிதல் - அணிந்துநிற்றல், அலங்கரித்தல், படைவகுத்தல், பூணல்.
அணித்து - சமீபித்து.
அணிநுணா - சித்தா என்னும் மரம்.
அணிந்தம் - கோபுரவாயிலின் மேடை.
அணிந்தவை திருத்தல் - மெய்ப்பாடுகளுள் ஒன்று. அது ஒருபெண் தாணணிந்திருக்குங் கடிசூத்திர முதலியன திருத்துதல்.
அணிந்து - அழகுபெற்று, தரித்தென்னும் வினையெச்சம்.
அணிந்துரை - பாயிரம்.
அணிபெறுத்தல் - அலங்காரம் பெறச் செய்தல், புனைதல்.
அணிப்படுத்தல் - அணிப்படுத்துதல், சிங்காரித்தல்.
அணிமா - அட்ட சித்தியி லொன்று. அஃது அணுப்போலாதல்.
அணிமுலை - பூசுணைக்கொடி.
அணிமை - சமீபம், நட்பம்.
அணியம் - கப்பலின்முற்பக்கம், படைவகுப்பு.
அணியல் - அணிதல், ஆயத்தம், தளபாடம், படவின் முன்பக்கம், மாலை.
அணியன் - அணியுடையவன், கிட்டினவன்.
அணியிலக்கணம் - பஞ்ச இலக்கணத்தொன்று.
அணியெண் - முப்பத்தைந்து.
அணிலன் - அட்டவசுக்களில் ஒருவன்
அணில் - அணிற்பிள்ளை, அன்றில்.
அணில்வரியன் - ஒருசிறப்பசு, ஒருவகைப்பட்டு, ஒருவகைப் பலாப்பழம், ஒருவகை வெள்ளரி.
அணில்வாற்றினை - ஒருவகைத்தினை.
அணிவகுத்தல் - படைவகுத்தல்.
அணிவகுப்பு - படைவகுப்பு.
அணிவடம் - மாதர்கழுத்தணியில் ஒன்று.
அணிவியூகம் - படைவகுப்பு.
அணிவிரல் - மோதிரவிரல்.
அணிவு - அணிதல்.
அணிவேர் - வெட்டிவேர், குருவேர்.
அணு - இனம், உயிர், சிறுமை, நுண்மை, ஒருவகைத்தானியம், சூக்கும சத்திரூபம், சூக்குமசீதகம், பரமாணு.
அணுக - கிட்ட.
அணுகம் - சிறியது.
அணுகலர் - அயலார், பகைவர்.
அணுகல் - கிட்டல்.
அணுகன் - சமர்த்தன்.

அணுகாரணவாதம் - பரமாணுக்க டாமே பிரபஞ்சமாகத்தோன்றி நின்று அழியுமென்று சொல்லுதல்.
அணுகார் - பகைவர்.
அணுகுதல் - அணிகல்.
அணுகுபு - அண்ணிதாகின்று.
அணுக்கத்தொண்டர் - சமீபமாயுள்ள சேடர்.
அணுக்கம் - சந்தனம்.
அணுக்கர் - சிநேகர்.
அணுக்கன் - அந்தரங்கன், சமீபத்தன், சிநேகிதன்.
அணுக்கன்றிருவாயில் - தன்னையடைந்தாரைச் சிவன் சமீபமாகச்செய்யும் வாயில்.
அணுக்கு - சமீபம்.
அணுசதாசிவர் - சதாசிவ தத்துவத்தில் சதாசிவமூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண்டிருந்து போகங்களைப் புசிக்கும் பரமுத்தர், இவர்கள் பிரணவர், சாதாக்கியர், தீர்த்தர், காரணர், சுசீலர், ஈசர், சூக்குமர், காலர், தேகேசுவரர், அங்குச எனப்பதின்மராவர்.
அணுசைவம்-ஒருவகைச்சைவம். அது சிவனை யுள்ளும் புறமும் பஞ்சகிருத்தியஞ் செய்வனென்றறிந்து நிகம பரவேடங்கள்பூண்டு சன்மார்க்கலக்கணத்தோடு கூடிக் குருலிங்க வேடம் பொருளாய்ச் சிவன் செய்யுந் தொழில்களை அனுபவத்திற் பார்த்தானந்தம்பொங்கி அதன்கண் மனோலயமாவதே மோக்ஷமென்று சொல்லுவதாம்.
அணுச்சைவம் - சைவம் பதினாறில் ஒன்று.
அணுத்துவம் - அணுத்தன்மை.
அணுபட்சநவபேதம் - சத்தியலோக முதற்புவனாதிபதிகளாய் வாஸ்தவ பேததேகிகளாயிருக்கும்பிரமாமுதற் சிவமூர்த்தி பரியந்தம் ஒன்பதின்மராகியபேதமாம்.
அணுபட்சம் - ஆன்மபட்சம்.
அணுபரசிவன் - அணுபட்சத்துப் பரசிவன்.
அணுபேதம் - ஆன்மபட்சபேதம்.
அணுபை - மின்னல்.
அணுப்பிரமன் - ஆன்மபட்சப்பிரமன்.
அணுமூர்த்தி - ஆன்மமூர்த்தி.
அணுமை - அணிமை, சமீபம்.
அணுருபம்-அணுவகை, மிகச்சிற்றுரு.
அணுரூபி - ஆன்மா, கடவுள்.
அணுரேணு - சிறுதுகள்.
அணுவங்கபதிகள் - விஞ்ஞானகலரிற் பரிபக்குவம் வந்தவர்களில் தீவிரபக்குவம் வந்துள்ளோர்களாய்ச் சூக்கும சிவாபிவியத்தில் விளங்கிச் சர்திநத்துவத்தும் சிவதத்துவத்தும் இருப்பவர்கள்.
அணுவலி - ஆன்மசத்தி.
அணுவெழுத்து - இனவெழுத்து.
அணை - அணையென்னேவல், உதவி, கரைப்பொது, ஆசனம், முட்டு, செய்கரை, படுக்கை, புணர்ச்சி, மெத்தை, வரம்பு.
அணைகட்டல் - வரம்புகட்டல்.
அணைகயிறு - எணைக்கயிறு, பால்கறக்கக் கட்டுங்கயிறு.
அணைக்கட்டு - வரம்புகட்டு.
அணைக்கை - அணைத்தல்.
அணைசல், அணைசுதல் - ஒதுங்கல், விலகல்.
அணைசொல் - அசைச்சொல், துணைச்சொல்.
அணைதல் - அடைதல், உண்டாதல், அவிதல், சேர்தல், புணர்தல்.
அணைதறி - யானைகட்டுங்கயிறு.
அணைதுகில் - எணையாடை.
அணைத்தல், அணைப்பு - அடுத்துக்கொள்ளுதல், அவித்தல், சேர்த்தல், தழுவுதல்.
அணையாடை - எணைத்துகில், சாணைச்சீலை.
அணையார் - பகைவர்.
அணைவு - அணைக்கப்பட்டது, அணைத்தல்.
அணோக்கம் - அநோக்கம், மரப்பொது, மரம், மேனோக்கம்.
அண் - அண்ணென்னேவல், தடியில் வெட்டியவரை, மேல், வேட்டைநாயின் உருவுகயிறு.
அண்டகடம், அண்டகடாகம், அண்டகபாலம் - அண்டகோளவோடு

அண்டகம் - குப்பைமேனி, சிறு முட்டை, பீசகோசம்.
அண்டகன் . அண்ணகன்.
அண்டகை - அப்பவருக்கம்.
அண்டகோசம் - அண்டசொரூப சாத்திரம், எல்லை, பழத்தோல், பழம், பீசப்பை.
அண்டகோளகை - அண்டகடாகம், கூடம்.
அண்டகோளம் - அண்டவுண்டை.
அண்டங்காகம் / அண்டங்காக்கை } ஒருவகைக் காகம். அது கழுத்தில் வெண்மையுடைய மற்றைக் காகங்களைப்போலாது உடன்முழுவதுங் கருமையையுடையது.
அண்டசம் - முட்டையிற் பிறப்பன. அவை அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணன், தவளை, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை முதலியன.
அண்டசன் - பிரமா.
அண்டசை - கத்தூரி.
அண்டச்சுவர் பித்திகை.
அண்டதன் - சிவன்.
அண்டநாயகி - உமாதேவி.
அண்டபகிரண்டம் - திருவசக்கரத்துட்பட்ட உலககோளமும் அதற்குப்புறத்திலுள்ள கோளமும்.
அண்டபிண்டம் - பிரமாண்டமுந் தேகமும்.
அண்டப்பார்த்தல் - பொருந்தப்பார்த்தல்.
அண்டப்புத்தேள்-விராட்புருடன்
அண்டமீன்றவன் - பிரமா.
அண்டமுகடு - அண்டத்தினுச்சி.
அண்டமூர்த்தி - அண்டரூபி.
அண்டம் - ஆகாயம், உலகம், தலையோடு, பீசம், முட்டை, விதை.
அண்டயோனி - முட்டையிற்றோற்றுவது, சூரியன்.
அண்டரசம் - சுத்தரசம்.
அண்டரண்டப்பட்சி - பெரும்பறவை.
அண்டரண்டம் - தேவரண்டம்.
அண்டர்-இடையர், பகைவர், வானோர்.
அண்டர்கிலை - பொன்னாங்காணி.
அண்டர்பிரான் - சிவபெருமான்.
அண்டலர் / அண்டலார் } பகைவர்.

அண்டல்-அண்டுதல், அழுந்தல், கிட்டுதல், சேர்தல்.
அண்டவாணர்-ஆகாயவாசிகள், தேவர்.
அண்டவாணன் - தேவன்.
அண்டவாதம் - அந்திரவாயு, வளி, விரைவாதம்.
அண்டவாயு-அண்டவாதம், ஒருநோய்.
அண்டன் - கர்த்தா, சிவன்.
அண்டா - பெருஞ்சட்டி, பெரும் பாத்திரம்.
அண்டாகாரம் - முட்டைவடிவம்.
அண்டாதவன் - பகைவன்.
அண்டாதிநாதர் - சிவலோகத்திலே தக்கணதிசையோலக்கஞ்சேவிக்கும் பதினொண் முக்கிய கணேசரிலே ஒருவன்.
அண்டார் - பகைவர்.
அண்டிகம் - செந்நாய், நாய்.
அண்டிகா - மட்பானை.
அண்டிரன் - ஆடவன், ஆ என்னும் வள்ளல்.
அண்டில் - மாடு முதலியவற்றின் கண்ணிற்பற்றும் ஒருபூச்சி.
அண்டீரன் - ஆடவன், சமர்த்தன்.
அண்டுகை / அண்டுதல் } நெருங்கல்.
அண்டை-அயல், அருகிடம், ஒட்டு, பீறலடைக்குந்துண்டு, முட்டு, வரம்பு.
அண்டைபோடல் . ஒட்டுப்போடுதல்.
அண்டையர் - அயலார்.
அண்டைவீடு . பக்கத்துமனை.
அண்ணகன் . பீசம் வாங்கப்பட்டவன்.
அண்ணணித்து - மிகக்கிட்டியது.
அண்ணந்தாள் . அண்ணாந்தாள்.
அண்ணம் - உண்ணா, மேல்வாய்.
அண்ணலார் - சிவபெருமான்.
அண்ணல் - அரசன், அருகன், சார்தல், சிவன், தமையன், தலைமை, புத்தன், பெருமை, பெருமையிற்சிறந்தோன், முல்லைநிலத்தலைவன்.
அண்ணன் - முன்பிறந்தான்.
அண்ணா - அருணாசலம், உண்ணாக்கு.
அண்ணாக்கு - உண்ணாக்கு.
அண்ணாத்தல் - அங்காத்தல், மேனோக்கல்.
அண்ணாந்தாள் - அண்ணந்தாள், தண்டனைக்கயிறு.

அண்ணாமலை - அருணாசலம்.
அண்ணார் - பகைவர்.
அண்ணாவி - உவாத்தி, புலவன், மூத்தோன்.
அண்ணி - தமையன் மனைவி.
அண்ணிசு - அணுமை.
அண்ணிடல் - பொருந்தல்.
அண்ணிது - அணிமை.
அண்ணித்தல் - பொருந்துதல், மதுரித்தல்.
அண்ணிப்பான் - மதுரிப்பான்.
அண்ணியது - கிட்டியது.
அண்ணியன் - சமீபமானவன்.
அண்ணுதல் - சார்தல், அணுகுதல், பொருந்துதல்.
அண்ணெரிஞ்சான் பூண்டு - அன்னெரிந்தான் பூண்டு.
அண்பல் - மேல்வாய்ப்பல்.
அண்மல், அண்முதல் } கிட்டுதல்.
அண்மை-அடையுந்தன்மை, அணுமை.
அண்மைச் சுட்டு - சமீபத்தி லிருக்கும் பொருளைச் சுட்டிக்காட்டல்.
அண்மைவிளி - சமீபத்திலிருப்பவரை அழைத்தல்.
அதகடி - அதட்டு.
அதகணம் - நாசகணம்.
அதகம் - சுக்கு, பெருமருந்துக்கொடி, மருந்து.
அதகன் - வைத்தியன்.
அதக்குதல் - இளக்குதல், கசக்குதல், குதப்புதல்.
அதங்கம் - ஈயம்.
அதங்கோட்டாசான் - அகத்தியமுனிவனிடங்கற்ற தொல்காப்பியன் முதலிய பன்னிரு மாணவர்களுள் ஒருவன்.
அதசம்-ஆன்மா, காற்று, மரவுரி.
அதசி - சணல்.
அதசிரசு - பரிதானம் வாங்குவோர் புகும் நரகம்.
அதசிரோதோபவம் - இருவகைச் சைவாகமங்களுளொன்று.
அதசு - கேள்வி, நாசம்.
அதடம் - மலைமுதலியவற்றின் சரிவில்லாத இறக்கம், செங்குத்து.
அதட்டம் - அரவுயிர்ப்பு, அரவினச்சுப்பல்.
அதட்டல்-உரப்புதல், உறுக்குதல்.
அதட்டு-அதட்டென்னேவல், உறுக்கு.
அதட்டுதல் - அதட்டல்.
அதத்குணாலங்காரம் - பிறிதின் குணப்பேறின்மையணி.
அதத்தம் - அபலக்கொடை.
அதத்தன் - குபேரன்.
அதத்துவாவிருத்தி - சரீரமுதலியவைகளை யுத்தியால் நேதிகளைந்து எஞ்சிநின்ற ஆன்மாவைத் தெரிவித்தல்.
அதத்துவியாவிருத்தம் - மற்றைப் பொருளிலிருந்து நீங்கி இலக்கியத்திலிருக்கும் இலக்கணம்.
அதபலோகம்-பௌத்தமதத்தின் பிரமலோகம் இருபதனுட் பதின்மூன்றாவது லோகம்.
அதப்பியம் - அசப்பியம்.
அதமசரீரம் - பரலோக இகலோக புத்திகள் இல்லாதிருக்கிற சீவனைக்கொண்ட சரீரம், கற்பகத்தரு, பாரிசாதம் முதலாயின அதமசரீரம்.
அதமசிருட்டி -ஐவகைச் சிருட்டிகளில் ஒன்று. இச்சிருஷ்டிகாலத்திலே குணநிலயப் பிரமவிட்டுணுக்களும், பிரமாண்ட நிலயப் பிரமவிட்டுணுக்களும் குணநிபிருதிவியந்த புவனங்களிலேபோக்கியப்பொருள்களையுந், தூலதேகங்களையும், தேவர் முதலிய தேகிகளையும் படைத்துக் காப்பர்.
அதமதமப்பிராரத்தம் - அதமதரப் பிராரத்தத்திலும் அதிகப்பட்ட பிராரத்தம். அது இட்டப்படி நடத்தல் புசித்தல் முதலிய பிரமாதங்களுக்கேதுவானது.
அதமதரப்பிராரத்தம் - கனிட்டப்பிராரத்தத்திலும் அதிகப்பட்ட அதமமான பிராரத்தம். அது முதலில் நிவர்த்திக்கும் பின் பிரவர்த்திக்குங் காரணமானது.
அதமதானம் - கடைப்படுதானம். அது ஆசை, புகழ், அச்சம், கைம்மாறு, கண்ணோட்டம், கடப்பாடு முதலிய காரணம் பற்றி கொடுக்கப்படும் கொடையாம்.
அதமத்தோற்கருவி -முழவேழு வகையுளொன்று. அது கணப்பறைமுதலான புறமுழவும் செய்தப்பறை முதலான புறப்புறமுழவுமாம்.

அதமபட்சம் - மிகக்குறைந்தபடி.
அதமபிருகதன் - சமைகாரன்.
அதமம் - கடைத்தரம், நீதித்தப்பு.
அதமர் - கடையாயர், கடைத்தரமானவர்.
அதமர்ணிகன் - கடன்வாங்கினவன்.
அதமவாசான் - மூவகைக் குரவருட் கடைத்தரமானவன், இவன் வைசியர்க்குஞ் சூத்திரர்க்குங் குரு.
அதமவிஞ்சதி - பிரபவமுதலிய அறுபதுவருடங்களிலே நீதாக விளங்குங் காலமாகிய கடையிருபது வருடம்.
அதமவிமிசதி - அதம வருடமிருபஃது.
அதமன் - கடையானவன், நாணமில்லாக் காமி.
அதமாகல் - அழிதல்.
அதமாக்கல் - அழித்தல்.
அதமாங்கம் - கால்.
அதமாதமன் - மிகக்கீழ்மையானவன்.
அதம் - அத்தி, சங்காரம், தாழ்வு, கீழ், தொலை, பள்ளம், பின்பு.
அதம்பம் - கற்பரிபாஷாணம்.
அதம்பல், அதம்புதல் - அதட்டல்.
அதரபானம், அதரமதம், அதரமது - இதழூறல்.
அதரம் - உதடு, கீழுதடு, நிதம்பம்.
அதராமிர்தம் - அதரபானநீர்.
அதராவலேபம் - இதழறுக்கல்.
அதரிகொள்ளுதல் - கடாவிடுதல்.
அதரிசனம் - காணப்படாமை, குருடு, மறைதல்.
அதரிசனன், அதரிசி - கடவுள், குருடன்.
அதரிதிரித்தல் - கடாவிடல்.
அத்ரித்திரன் - கன்னன், தரித்திரமில்லான்.
அதருமம் - அநீதச்சொல், பாவமான செய்கை.
அதருமாத்திகாயம் - யாதனாசரீரம்.
அதருவணம் - அதர்வணவேதம்.
அதர் - ஆட்டின்கழுத்திலே தொங்கும் குழல், முறைமை, நீளக்கிடங்கு, நுண்மணல், புழுதி, வழி, விலங்கு செல்வழி.
அதர்கொளல் - வழிப்பறித்தல்.
அதர்கோள் - வழிப்பறி.
அதர்க்கம் - குதர்க்கம்.
அதர்க்கன் - குதர்க்கி.
அதர்பறித்தல் - குழிவெட்டல்.
அதர்மசாரி - அதர்மவழியிற் செல்லுவோன்.
அதர்மம் - தருமமல்லாதது, அது வேதத்தன் விதிக்கப்பட்டன செய்யாமையும் விலக்கப்பட்டன செய்தலுமாம்.
அதர்மன் - சதருத்திரருள்ளே இயமதிசையிலிருக்கும் தச ருத்திரருள் ஒருவன்.
அதர்மாசரரி - துராசாரி.
அதர்மாத்திகாயம் - காரணகாயத்தொன்று.
அதர்வசிகை, அதர்வசிரசு, அதர்வசிரம் - அதர்வணவேத உபநிடதத்தொன்று.
அதர்வச்சிரம் - உபநிடதம் முப்பத்திரண்டினொன்று.
அதர்வணம் - நான்காம்வேதம்.
அதர்வணவேதோபநிடதங்கள் - அதர்வணவேதத்துக்குரிய உபநிடதங்கள். அவை காருடம், தத்தாத்திரேயம், அயக்கிரீவம், கிருஷ்ணம், கோபாலதபனம், பிரச்சினம், திரிபாத்வீய மகாநாராயணம், இராமரகசியம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, கணபதி, மகாவாக்கியம், பசுமசாபாலம், பாவனை, தேவி, திரிபுராதபினி, பரப்பிரமம், பாசுபதம், ஆத்மம், சூரியன், அன்னபூரணை, பிருகச்சாபாலம், நரசிம்மதாபனி, நாரதபரிவிராசகம், சீதை, இராமதாபனி, சரபம், சாண்டில்வியம், பரமஹம்சபரிவிராசகம் என்னு முப்பத்தொன்று.
அதர்வணன் - சிவன்.
அதர்வணி - அதர்வண வேதத்திலே நற்பயிற்சியுடைய பிராமணன்.
அதர்வம் - நான்காம்வேதம்.
அதலகுதலம் - கலகம்.
அதலமூலி - ஆடுதின்னாப்பாளை.
அதலம் - கீழேழுலகினொன்று.
அதலன் - சிவபெருமான்.
அதவம் - அத்திமரம், பள்ளம், பின்பு.
அதவா - அல்லாமல்.

அதவாபட்சம் - அல்லாதபட்சம்.
அதவிடம் - அதிவிடயமூலிகை.
அதவு - அத்தி, கெய், பள்ளம்.
அதவுதல் - சொல்லுதல்.
அதழ் - பூவிதழ்.
அதளி - அமளி.
அதளை - அடைகிலப்பீர்க்கு, புளியதளை, வயல், வெளியிலிடும்காவற்குடிசை.
அதள் - களகம்பளம், தோல், பட்டை.
அதள்புனையரணம் - தோற்கைத்தள மென்னுங் கருவி.
அதறுதல் - உதிர்ததல், பதறுதல்.
அதனப்பிரசங்கி - அகங்காரி.
அதனம், அதனு } மிகுதி.
அதன்மசாதனம்-தருமமல்லாத செயல்.
அதன்மம் - பாவம், நீதிக்கேடு.
அதன்மாத்திகாயம் - சமண மதத்திற் சொல்லிய அசீவ பதார்த்தத்தினது நான்குவகையுள் ஒன்றாய்த் தீமை பயப்பதோ ரத்தியாயம்.
அதாசலம் - காட்டுமல்லிகை.
அதாதா - உலோபி.
அதாநிமக்தம் - அதாதிமந்த ரோகம். அது அதிமந்தரோகம் ஐவகைகளுள் ஒன்று.
அதாதிமந்தரோகம்-கண்களில் விரணத்தைப் பிறப்பித்துப் பார்வையைக் கெடுக்கும் ஒருவகைகோய்.
அதாதிரு - உலோபி, கன்னிகையை விவாகம் பண்ணிக் கொடாதவன்.
அதாது - தாதுவல்லாதது.
அதாயன் - தாயத்துக் குரிமையில்லாதவன்.
அதாரன் - விவாகஞ்செய்யாதவன்.
அதாலத்து - நியாயஸ்தானம்.
அதி - அதிதி, மிகுதிப்பொருளைக் காட்டு மசைச்சொல்.
அதிகசிதம் - பெருநகை.
அதிகடம் - யானை.
அதிகண்டம்-நித்தியயோகத்தொன்று: அது சந்திரனைப்பற்றியது. மாறு வஸ்தை.
அதிகதம்-அடையப்பட்டது, அறியப்பட்டது, சென்றது, படிக்கப்பட்டது.
அதிகதை - பயனில்பேச்சு.
அதிகநாரி - கொடிவேலி.

அதிகந்தம் - ஒருவாசனைப்புல், கெந்தகம், சண்பகப்பூ.
அதிகப்பற்று - பெரும்பான்மை, வரவேண்டியதற்கு மேற்பற்றுதல்.
அதிகப்பிரசங்கம் - அதிகப்படப்பேசுதல், தன் மேம்பாட்டுரை.
அதிகப்பிரசங்கி - மட்டுக்குமிஞ்சிப் பேசுவோன்.
அதிகமாதம் - ஆறுவருஷத்துக் கொருதரம் ஒருவருஷத்தில் அதிகமாகு மாதம். [கீர்த்தி.
அதிகமாதாபவாதம் - அதிகமாசதோஷ
அதிகம் - அடையாளம், இலாபம், ஏற்றம், ஓலங்காரம், குருக்கத்திமரம், சேனை, மேன்மை, உதாரணங்களைப் பலவாறுகப் பிரயோகித்தல், தோல் வித்தான மிருபத்திரண்டி லொன்று, படை, பொலிவு, மிகுதி.
அதிகாணத்துவம் - அதிகாரணமாயிருக்குந் தன்மை.
அதிகாரணம் - இடம், உரித்து, ஏழனுருபு கேள்வி, மேன்மை, தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கணையப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிவும், இயைபு மென்று மிவற்றினது நிலைக்களம்.
அதிகரிக்கை, அதிகரித்தல், அதிகரிப்பு } அதிகப்படுதல், விசேடித்தல்.
அதிகர் - மேலானவர்.
அதிகர்த்தம - இருபத்து நான்குவகை அக்கினிக்கிடங்களுள் ஒன்று.
அதிகல் - காட்டுமல்லிகை.
அதிகவுச்சம் - அத்துச்சம்.
அதிகற்குதி - கொடிவேலி.
அதிகன் - ஆதிக்கன், ஒருவள்ளல். இவன் தனக்குக்கிடைத்த அமிழ்தவிளையுங் கருநெல்லிக்கனியைத் தானுண்டு உடம்புபெறாதே ஔவைக்குக்கொடுத்தோன், சிவன்.
அதிகாங்கிசை - பேராசை.
அதிகாசம் - பெருநகை. [வழகு.
அதிகாந்தம்-ஒருகல், செவ்வானம், மிகு
அதிகாயன் - இராவணன் மக்களில் ஒருவன், மிகப்பெருஞ்சரீர முடையவன்.

அதிகாரசத்தி-சிருட்டியாதி அதிகாரஞ் செய்யுஞ் சாமர்த்தியம்,சிவன், இலயம், போகம், அதிகாரம் என்பவைகளுள் அதிகாரவவத்தையிலிருக்கும்போது அவரோடு நிற்குஞ்சத்தி.

அதிகாரசத்திகள். பிரமாவை அதிட்டித்துச் சிருஷ்டிசெய்யும் வாமையும், விட்டுணுவை அதிட்டித்துத் திதிசெய்யுஞ்சேட்டையும், காலருத்திரனைஅதிட்டித்துச்சங்காரஞ்செய்யும்ரௌதயித்திரியுமாகிய சத்திகள்.

அதிகாரசிவன் - மகேசர். இவர் சுத்தமாயையிலே உற்பன்ன காரியத்தைச் செய்வதனால் அதிகார சிவனெனப்படுவர்.

அதிகாரதத்துவம் - ஈசுரதத்துவம்.

அதிகாரத்தலைவன் - அதிகாரி.

அதிகாரத்திரயம் - கருமகாண்டி, பத்திகாண்டி, ஞானகாண்டி என்னு மூவகை அதிகாரிகள். இவருள் தேககிருத்தியாதிகளிற் கிரமத்தில் யானெனதென்னும் அகந்தையுள்ளவன் கருமகாண்டி, சகல கிரியைகளையுமீசுரார்ப்பணஞ்செய்வோன் பத்திகாண்டி, சகல கருமத்துக்குந் தான் சாட்சிகனென்போன் ஞானகாண்டி.

அதிகாரபஞ்சகம் - கருமி, முமூட்சு, அப்பியாசி, அநுபவி, ஆரூடன் என்னும் அதிகாரரைவர். அவருள் மூடத்தனத்தால் தன்சாதி கருமமாத்திரம் பிடித்துச் சதசென்மத்தில் முத்தனாகிறவன் கருமி, சகம் அசத்தென்று தெளிந்தாத்கரும கிட்டனாய் மூன்று சென்மத்தில் முத்தனாகிறவன் முமூட்சு, சொப்பனம்போலப் பிரபஞ்சம் மித்தையென்றறிந் தப்பியாசத்தில் நியானுதிகருமயுக்தனா யிரண்டு சென்மத்தில்முத்தனாகிறவன் அப்பியாசி, விவகாரபேட்சைவிட்டு விவேகதற்பரனாகி ஏகசென்மத்தில் முத்தனாகிறவன் அநுபவி, விசுவவிகிருதி தோன்றாமல் ஆத்மஞானத்தாற் சத்தியோமுத்தி யடையவன் ஆரூடன்.

அதிகாரப்புறனடை - அதிகாரத்துள் எஞ்சியதற்கோர் விதியாய் நிற்பது.

அதிகாரமலம் - மலபரிபாகமாந்தியமுடையரான விஞ்ஞானகலரைச் சுத்தாத்துமாக்களில் அதிகாரமுடையராக நிறுத்தும் பெலமுடையமலம்.

அதிகாரமுத்தி - ஆன்மா சுத்ததத்துவத்தில் அதிகாரமலத்தோடு மாத்திரமிருப்பதாகிய முத்தி.

அதிகாரமுறைமை-ஒருத்தி; அது முன்னின்ற சூத்திரப்பொருண்மை பின்வருஞ் சூத்திரத்துக்கும் பெறற்பாலனப் பெறவைத்தல்.

அதிகாரம் - அதிகரித்தல், உத்தியோகம், உரித்து, ஒழுங்கு, சிலாக்கியம், தத்துவம், நூலுரை பதினொன்றின் ஒன்று, நூற்கூறுபாடு, பண்பு.

அதிகாரர் - நூலபஞ்சகிருத்தியத்திலே உன்முகமாயிருந்த கிரியாசத்திக்குப் பின் இதுஇப்படியாகக்கடவதென்று சங்கற்பத்தைப்பண்ணுஞ் சங்கற்ப இச்சாசத்திரூபமாயிருந்த ஈசர்.

அதிகாரவுரை - நூலுரை பதினொன்றி னொன்று.

அதிகாரன் - மகேசுரன், மேல்விசாரணை செய்வோன்.

அதிகாரி - அதிபதி, நூல்கேட்டற்குரியோன், நூல்செய்வித்தோன், பாட்டுடைத்தலைவன்.

அதிகாரித்துவம் - உடையனாந்தன்மை.

அதிகாரியர் - அதிகாரமுடையோர்.

அதிகாரை - சாதிகாரதீட்சை.

அதிகாலங்காரம் - பெருமையணி.

அதிகாலம், அதிகாலை } விடியற்காலம்.

அதிகிரமம் - அசட்டை, அதிகப்படல், எதிர்மீறுதல்.

அதிகிருச்சிரம் - ஒருவிரதம். அது ஆறுநாள் ஒவ்வோர்பிடி அன்னமுண்டு மேன்மூன்றுநாள் உபவாசித்திருப்பதாம்.

அதிகிருதர் - அதிகரித்தவர்.

அதிகிருதன் - அத்தியட்சன், பிராட்டு விவாகன், வரவுசெலவுக் கணக்கதிகாரி.

அதிகிருதி -ஒரு கவிச்சந்தம். அது அடியொன்றிற்கு இருபத்தைந் தசையுடைய நான்கடிகொண்டதாய் வருவதாகும்.

அதிகிருதை - அதிகாரமுடையவன்.
அதிகுணம் - நற்குணம்.
அதிகுணன்-கடவுள், அருகன், சிவன், நற்குணன்.
அதிகும்பை - பொற்றலைக் கையாந்தகரை, பொற்றாது.
அதிகுய்யாஷ்டகர் - தேயுதத்துவத்திலிருக்கும் அரிச்சந்திரன், ஸ்ரீசைலன், கல்பமானன், மாதகேச்சுவரன், மகாகாளன், மத்திமன், கேதாரன், வயிரவன் என்னும் எண்மர்.
அதிகுரு - அதிகபாரம்.
அதிகை - அதிகமானது, நடுநாட்டிலே உள்ள ஒரு சிவஸ்தலம்.
அதிகைவீரட்டனார் - அதிகைவீரட்டமெனுந் தலமுடையோர்.
அதிகோரம் - தொகைநரகங்கள் இருபத்தெட்டினுள் மூன்றாநரகம்.
அதிகோலம் - அழிஞ்சின்மரம்.
அதிகோவம் - அதிகோபம், அழிஞ்சில்.
அதிக்கம் - மேன்மை.
அதிக்கிரமம் - அக்கிரமம்.
அதிக்கிரமித்தல் - அசட்டைசெய்தல், இல்லாதுபோதல், கடத்தல், கழித்தல், குறுக்கேபோதல், தப்பிப்போதல், நீக்குதல், போகவிடுதல், மேற்படுதல், விடுதல், விலகுதல்.
அதிக்கிராந்தபிந்து - ஈசுரன் நவபேதத்தில் ஒன்றாகிய ஆண்தத்துவம், ஒரேரூபமான பெரியோர்.
அதிக்கிராந்தம் - அவமதிக்கப்பட்டது, எல்லைகடந்தது, கடந்தது, சென்றது, போனது, மட்டற்றது, மிகுந்தது, வெறுக்கப்பட்டது.
அதிக்கிராந்தவிந்துக பரசிவம் - அதிக்கிராந்த விந்துகபரசிவன்.
அதிக்கிராந்தவிந்துக பரசிவன் - சிவஞானமாக்களுடையஅறிவுக்குப்புலப்படும் பொருட்டுத் தனது சிற்சத்தி சந்நிதி மாத்திரத்தில் தோற்றுவித்த சிவபேதம் ஒன்பதனுள் முதலாவதாகிய நிட்களசிவம். இவர் விந்துவைநீங்கிய இலயராதலால் அதிக்கிராந்தவிந்துக பரசிவன் எனப்பட்டார்.
அதிக்கிராந்தவிந்துக பராசத்தி - சுத்தமாயையாகிய விந்துவுக்கு மேற்பட்ட விந்துவை அதிட்டிப்பவளாய் அதிக்கிராந்தவிந்துகபரசிவத்துக்குச்சத்தியாக நிற்பவள், இந்தச் சத்தியை அதிக்கிராந்தவிந்துக பரசிவந்தோற்றுவித்தது.
அதிக்கிராமகன் - கிரமந்தவறி நடப்பவன்.
அதிக்குதி - ஒவ்வாத நடை, கொடுமையான நடை.
அதிங்கம் - அதிமதுரம்.
அதிசதி - ஒருகவிச்சந்தம். அது அடியொன்றிற்குப் பதின்மூன்றசையுடைய நான்கடியாய் வருவது.
அதிசக்கரி-ஒருகவிச்சந்தம். அது அடியொன்றிற்குப் பதினைந்தசையுடைய நாலடிகொண்டதாய் வருவது.
அதிசக்குவரி - அதிசக்கரி.
அதிசத்தி - நெருங்கிய வொற்றுமை, பெரியவல்லமை.
அதிசங்கலிதம் - சங்கலிதசங்கலிதம்.
அதிசஞ்சயம் - திரவியக்குவியல்.
அதிசத்திரகம்
அதிசத்திரம் } காளான்.
அதிசந்தானம் - பொய், ஏய்த்தல்.
அதிசயச்சொல் - வியப்புமொழி.
அதிசயம் - அதிரேகம், அற்புதம், ஓரலங்காரம், நூதனம், புதுமை, மாயை, யாக்கைக்குரிய பதினெண் குற்றத்தொன்று.
அதிசயவிரக்கச்சொல் - இரக்கத்தோடுகூடிய வியப்புமொழி.
அதிசயவுவமை-உவமையலங்காரவகைகளுள் ஒன்று. அது உபமான உபமேயமென்னுமிரண்டிற்கும் சார்பிடத்தாலின்றி ஒப்புமைக்குரிய குணத்தினால் தம்முள்ளே பேதமில்லையென அதிசயந்தோன்றச் சொல்லப்படுவது.
அதிசயன் - அருகன்.
அதிசயித்தல் - அதிசயங்கொள்ளல்.
அதிசயோக்தி - உயர்வுநவிற்சியணி, அஃது ஒருபொருளானது தன் சொல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விப்பதும் இஃது அஃது தன்றென்று தெரிந்தும் தன்னிச்சையா லாமென்று கொள்ளப்படுவதுமாகிய ஆரோபநிச்சயத்திற்கு விடயமாகுதல், மிகப்பேசுதல்.

அதிசயோத்தி - மிகக்கூறல்.

அதிசரணயோனிரோகம் - பெண்களுடைய யோனியில் வரும் ஒருவகை ரோகம்.

அதிசரம்-நெட்டுயிர்ப்பு, நிலைபெற்றது.

அதிசரன்-அப்பாற்போகிறவன், வழிகாட்டி.

அதிசரித்தல் - தூரமாய்ப்போதல், மிகுகதியாய் நடத்தல்.

அதிசருச்சனம்-கொடுத்தல், கொடை, கொலை.

அதிசனி - கொடிவேலி.

அதிசாக்கிரதை - மிகுவிழிப்பு.

அதிசாந்திரன் - சந்திரன்.

அதிசாமியை - வெண்குன்றிச்செடி.

அதிசாரசிலேட்டுமரோகம் - சிலேட்டுமரோகங்களுள் ஒருவகை. அது சிவந்தபேதி, வயிற்றிலிரைச்சல், குத்தல், விலாவிற் சூலை, பொருமல், மார்பிலும் நெஞ்சிலும் நோய், வாய்வறளல், இருமல், சுவாசம், தாகம், எரிச்சல் என்னுங்குணங்களையுடையது.

அதிசாரணம் - மாவிலிங்கு.

அதிசாரத்திரவியங்கள் - அதிசாரநோயைத் தீர்க்கும் மருந்துக்குச் சேர்க்கப்படும் சரக்குகள். அவை : அதிவிடயம், ஆவிரை, இருவேலி, இலவம்பிசின், ஓமம், கஞ்சா, கருங்காலிப்பிசின், கருவேல், காட்டாத்திப்பூ, கிராம்பு, கீழ்க்காய்நெல்லி, குங்கிலியம், சாதிக்காய், சிறுகாஞ்சொறி, நீர்முள்ளி விதை, சுக்கு, திப்பிலி, தென்னம்பாளை, தேன், புளியங்கொட்டைத்தோல், புளியம்வேர், மாதுளம்பிஞ்சு, மாவிரை, முத்தக்காசு, வட்டத்திருப்பி, வறட்சுண்டி, வாழை, வெட்பாலையரிசி, வெள்ளிலோத்திரம் என்பனவாம்.

அதிசாரம்-ஒருபேதிநோய், சுரத்தோடுகூடிய ஒருவகைப்பேதி. அது சிலேத்துமம், திரிதோஷம், பித்தம், வாதம் என நான்கு பிரகநடை.

அதிசாரவக்கிரம் - கிரகவக்கிரத்தொன்று.

அதிசிகுவை - நாக்கில்வரும் ஒருவகை ரோகம். அது அடிநாவின் கீழ்நுனிநாவைப்போலத்தடித்து வீங்குவது.

அதிசித்திரம் - மார்க்கசடப் பிரமாணத்தொன்று. அது கால்மாத்திரை ஒருகலையாகக்கொண்டது.

அதிசீக்கிரம் - மிகுசுறுக்கு.

அதிசீதம் - இருபத்தெட்டுத்தொகை நரகங்களுள் முதலாவதாகிய கோரத்துக்குள்ள ஐந்துநாயக நரகங்களுள் ஒன்று.

அதிசீரணம் - மிகுந்தசீரணம்.

அதிசுட்கம்-ஒருநோய். அது சரீரத்தை வறட்டுவது.

அதிசுத்தம் - மிகுசுத்தம்.

அதிசூக்குமசித்து - அலசித்துப்போலாது மிக நுண்ணியதான சித்துப்பொருள்.

அதிசூக்குமத்துவம் - மிகு நுண்மைத்தன்மை.

அதிசூக்குமம் - மிகநுண்மை.

அதிசூக்குமவாக்கு - மிகச் சூக்குமமான சொல்.

அதிசூக்குமிப்பித்தல் - மிகநுண்மையாக்கல்.

அதிசூக்குமை - ஒருசத்திகலை.

அதிசூரன் - சிங்கமுகாசூரனுடைய ஒருமகன், மிக்கவீரன்.

அதிசோபனை - உமாதேவி.

அதிசௌரபம் - தேமாமரம், பரிமளத்திரவியம்.

அதிச்சத்திரகம்
அதிச்சத்திரம் } கள்ளான்-

அதிட்சேபம் -அனுப்புதல் நிந்தைப்படுத்தல்.

அதிட்டகன்மம் - அதிருட்டகன்மம்.

அதிட்டக்காரன் - அதிருட்டவான்.

அதிட்டச்செல்வி - இந்திரபாஷாணம்.

அதிட்டம் - நல்லனுபோகம், நல்வினைப்பயன், மிளகு.

அதிட்டவலி - அதிட்டபெலம்.

அதிட்டாகாரர் - அறியக்கூடாத உருவமுடையவர்.

அதிட்டாதா - அதிட்டிக்கிறவன், ஆளுமதிபதி.

அதிட்டாத்திரி - அதிட்டிக்கிறவள், ஆளுபவள்.

அதிட்டாயகன் - அதிட்டிப்பவன்.

அதிட்டானசேதனன் - கடவுள்தன்.

அதிட்டானசைதன்னியம் - பிரமம்.

அதிட்டானபூதம்-அதிட்டிக்கும்வஸ்து.

அதிட்டானபூதை - அதிட்டிக்குமவன்.

அதிட்டானம் - இடம், காரியத்திற்குக் காரணம், சில்லு, நிலை, பட்டினம்.

அதிட்டானன் - பரப்பிரமம்.

அதிட்டானுமானம் - கருதலனுமானம். அது ஒருவன் சொன்ன வார்த்தையைக்கொண்டே அவனுக்கிவ்வளவு ஞானமுண்டாயிருந்ததென்றறிதல்.

அதிட்டிதம் -தாபிக்கப்பட்டது, நியமிக்கப்பட்டது. நிலைப்படுத்தப்பட்டது, பிரேரேபிக்கப்பட்டது, மேல்விசாரணை செய்யப்பட்டது.

அதிட்டித்தல்-நிலைப்படுத்தல்,விதித்தல்

அதிட்டேயத்தானம் - அதிட்டித்தற்கு யோக்கியமான பொருள்களின் பேதம்.

அதிட்டேயம் - அதிட்டிக்கப்பட்டபொருள்.

அதிட்டேயரூபிணி - அதிட்டிக்கப்படுதற்கு யோக்கியமான ரூபமுடையவள்.

அதிதந்தம் - குட்டிப்பல்.

அதிதந்தரோகம் - பல்லில் வருமோர்நோய். அது பற்களின் சந்திற் குட்டிப்பல் முளைப்பதினால் வரும் உபத்திரவம்.

அதிதபனக்கிருச்சிரம்-கிருச்சிரவிரதவகையுளொன்று. அது இருபத்தொருநாளைக்குமூன்றுபலம்பசும்பாலுண்டு செய்யும் விரதம்.

அதிதபனம் - அதிதபனகிருச்சிரம்.

அதிதமம் - முதலாந்தொகைநரகமாகிய கோரமென்பதற்குள்ள ஐந்து நாயகநரகங்களுள் ஒன்று.

அதிதலசிலேட்டுமம்-ஒருவகை சிலேட்டுமநோய்.

அதிதவளம் - மிகுவெண்மை.

அதிதனு - பொன்.

அதிதாதா - பெருங்கொடையாளன்.

அதிதாதிரு - ஈகையாளன்.

அதிதாபகவாதம் - சரீரத்தைத் தபிக்கப்பண்ணும் ஒருவகைவாதம்.

அதிதாரம் . இலந்தை.

அதிதானம் - கொடை.

அதிதி - காசிபப்பிரம்மாவின் மனைவிகளிலொருத்தி. சத்தபிதிர்களிலொருவர், சிராத்தத்திற்கொவ்வாததிதி. தேவரையீன்றாள், பரதேசி, புதியவன், பூமி, விருந்தன்.

அதிதிகிரியை - விருந்தோம்பல்.

அதிதிசேவை - விருந்துபசாரம்.

அதிதிநாள் -புநர்பூசநாள்.

அதிதிபூசனம்
அதிதிபூசை } பரதேசிக் கன்னமிடல்.

அதிதிப்பம் - பசியின்மை.

அதிதியர் - சூரியர், விருந்தினர்.

அதிதீரன் - அதிகவீரன்.

அதிதீவிரம் - மிகக்கடுமை.

அதிதும்மற்பீனசம்-அதிகதும்மலையுண்டாக்கும் ஒருவகைப் பீனசரோகம்.

அதிதுர்ப்பலம் - மிகுந்ததுர்ப்பலம்.

அதிதூதர் - அதிகப்பிரதான விசேடங்களை அறிவிக்க உலகத்துக் கனுப்பப்படுவோர்.

அதிதூலரோகம் - சரீரத்தைப் பருக்கச்செய்யும் ஒருவகை ரோகம்.

அதிதெய்வம் - அதிட்டிக்குந்தெய்வம், ஆளுந்தெய்வம், மேலானதெய்வம்.

அதிதேசம் - ஒப்புமைகாட்டியுணர்த்துவது.

அதிதேசவாக்கியம்-ஒருபொருளை யறியாதவனுக்கு அதுபோன்ற வேறொரு பொருளைக்காட்டி அறிவிக்கும் வாக்கியம்.

அதிதேவன் - கடவுள்.

அதிதைவம் - அதிட்டிக்குந் தெய்வம், ஆளுந்தெய்வம்.

அதிநிந்திதம் - அதிகநிந்திக்கப்பட்டது.

அதிநுட்பம் - அதிகநுட்பமுடையது, அதிக நுண்மை.

அதிபசமி - கொன்றை.

அதிபதி-இராசா, சண்பகம், தலைவன்.

அதிபதிச்சங்கம் - வாலுழுவையரிசி.

அதிபதுங்கி - கொடிவேலி.

அதிபத்தர் - அறுபத்துமூன்று நாயன்மார்களி லொருவர்.

அதிபத்தினி - ஆளுகைசெய்கிறவள், எசமாட்டி, பெருமாட்டி.

அதிபரமாப்தர்-சதாசிவர், இவர்தம்மின் மேலாகிய ஆப்தர் பிறரின்மையின் இப்பெயர்பெற்றனர்.

அதிபான் - சத்துருவை வென்றவன்.
அதிபர் - முதல்வர்.
அதிபல - சிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப் புவனங்களு ளொன்று.
அதிபலம் - சேர்வாளம், மிகுபெலம்.
அதிபலன் - சதருத்திரருள் வருணதிக்கிலிருக்கும் பதினன்கு ருத்திரரில் ஒருவன்.
அதிபலை - பேராமுட்டி.
அதிபதிச்சம் - வாலுழுவையரிசி.
அதிபன் - இராசன், எசமானன், எப்பொருட்கு மிறைவன்.
அதிபாதகம் - மிகுபாதகம். இது சிவபெருமானுக்கும் சிவனடியாருக்கும், சிவனைப் பூசிக்கும் குருவுக்கும் விரோதஞ்செய்தலாம்.
அதிபாதகர் - மிகுந்தபாதகமுடையவர்.
அதிபாதர் - எதிரிடை, மீறுதல்.
அதிபாரகம் - கோவேறுகழுதை.
அதிபாரகன் - மிகுநிபுணன்.
அதிபாரம் - மிகுபாரம்.
அதிபாவம் - பெருங்குற்றம்.
அதிபானம் - மதுபானம்.
அதிபீடிதம - அதிகமாக விறுக்குதல்.
அதிபூச்சியர் - அதிகம் பூசிக்கப்படத் [தக்கவர்.
அதிபூதம் - பிரகிருதிமாயை.
அதிபெலம் - அதிபெலம் என்னும் புவனம்.
அதிமதுரம் - ஒருசாக்கு, குன்றிவேர், மிகுமதுரம், வெண்குன்றி.
அதிமந்தம்-சருவநேத்திரரோகம் மூன்றுவகையுளொன்று. அது வாதாதிமந்தம், பித்தாதிமந்தம், சிலேட்டுமாதிமந்தம், இரத்தாதிமந்தம், அதாதிமந்தம் என ஐந்தாக விரியும்.
அதிமலம் - மாவிலிங்கைமரம்.
அதிமாதம் - அதிகமாதம்.
அதிமாத்திரம் - உயர்வு, மிகுதி.
அதிமாமிசகம்-ஒருவகைத்தந்தரோகம்.
அதிமாமிசம் - கண்ணில் வரும் ஒருவகைத் தசைச்சுரப்பு நோய்.
அதிமாமிசரோகம்-பற்களில்வரும் ஒருவகை நோய். அது பல்லின் வேர் சந்துகளிலே ஆணியை யொத்த கட்டிகளைப் பிறப்பித்துக் காதுகளிலுந் தாடைகளிலும் நோயுண்டாக்கும்.

அதிமாமிசார்மரோகம் - கண்ணில்வரும் ஒரு நோய், அது வெள்ளை விழியாலே அதிகமாமிசம் வளர்வது.
அதிமாயம் - மாயையின்மை.
அதிமார்க்கநூல் - பரசமயங்களுக் கப்பாற்பட்டு உட்சமயமாய்ச் சித்தாந்தமல்லாததாயுள்ள ஞானத்தைப் போதிக்குஞ் சாத்திரம். அது பாசுபதம், கபாலம், மகா விரதம் என மூன்று வகைப்படும்.
அதிமார்க்கம் - பரசமயங்களுக்கப்பாற்பட்ட சமயமாய்ச் சித்தாந்தமல்லாததாயுள்ள சமயம்.
அதிமானம் - மிக்க அபிமானம்.
அதிமானுடம் - தெய்வத்தன்மை, மனுடனுக்கு மேற்பட்டது.
அதிமானுடன் - உத்தமபுருடன், சிரஞ்சீவி.
அதிமிதம்-அளவின்மிக்கது, ஈரமில்லாதது, காய்ந்தது.
அதிமிதி - அதிக்குதி.
அதிமித்திரன் - கணவன், மிகுநேசன்.
அதிமிருத்தியாதிமாத்திரை - கோரோசனை மாத்திரை.
அதிமுத்தம் - குருக்கத்தி, தேகம் நீங்கியடையும் முத்தி.
அதிமுத்தி - சாயுச்சியமுத்தி.
அதிமூர்க்கம் - கடுங்கோபம்.
அதிமூர்க்கன் - கடுங்கோபி.
அதிமோகம் - அனேகம், ஒருதலைக் காமம்.
அதிமோட்சம் - அதிமூர்த்தி.
அதியட்சன் - கண்காணி.
அதியட்டி - அடியொன்றிற்குப்பதினேழு அசையுடையதாய் நான்கடியால் வருமொரு கவிச்சந்தம்.
அதியம் - அதிகம், ஒருமருந்து.
அதியாதரம் - மிகுவிருப்பம்.
அதியாமம் - அறுகம்புல், முயற்புல்.
அதியுக்கிரகண்டன் - ஒருயமதூதன்.
அதியுட்டணம் - மிகுவெப்பம்.
அதியோகம் - சென்மலக்கினத்துக்காவது சந்திரலக்கினத்துக்காவது ஆறு மேழாமெட்டாமிடங்களிற் சுபக்கிரகம் இருக்கும்நிலை. இது ஞானம், கீர்த்தி, மன்னர்பிரிய முதலிய சுபகாரியங்களைக் கொடுக்கும் யோகம்.

அதிரசம் - இரசம், உப்பு, ஒரு பண்ணிகாரம், ஒரு பானம்.

அதிரதம் - ஒரு பண்ணிகாரம், ஒருபானம், நால்வகைத்தேரினொன்று.

அதிரதர் - முழுத்தேரரசர்.

அதிரதன்-சத்தியகருமன்மகன்,இவன் கங்கைக்கரையில்வந்தடைந்த குந்திமகனாகிய கன்னனை எடுத்து வளர்த்தவன், இவன்மனைவி விராதை,முழுத்தேராசன், இவர்தேரினின் றமர்புரிந்து தனதுசேனையையும்தேரையும் காவல்பண்ணிக்கொண்டு சத்துருவைச் செயிக்குமரசன்.

அதிரதி - அதிரதன்.

அதிரத்தம் - மிகுசிவப்பு.

அதிரல் - அதிர்தல், புனலிப்பூ, மோசிமல்லிகை, விரிதூறு.

அதிராகம் - கந்தகம்.

அதிராசன் - அரசனுக்குமேற்பட்டவன், சிரேட்டராசன்.

அதிராத்திரம் - யாக மிருபத்தொன்றினொன்று, இது சோதிட்டோமயாகத்தொருபகுதி.

அதிராம்பை - பொற்றலைத்தகரை.

அதிராயம் - அதிசயம்.

அதிரிசம் - கடவுள், காணப்படாததன்மை, குருடு.

அதிரிசயம் - கலைஞானம் அறுபத்துநான்கில் ஒன்று.

அதிரிசனம் - அதரிசனம்.

அதிரிசன் - கடவுள், குருடன்.

அதிரிசியம் - அதிரிசம்.

அதிரித்தம் - மிகுதி.

அதிருக்கு - குருடு.

அதிருசம் - அதிருசியம்.

அதிருசன் - குருடன்.

அதிருசியந்தி . அருந்ததி.

அதிருசியம் - அறுபத்துநான்குகலைஞானங்களுள் ஒன்று. காட்சிக்கு விடயமாகாதது, காணப்பட யோக்கியமில்லாதது, தாமதகுண சித்திகளில் ஒன்று. அது காணப்படும்பொருளைக்காணமற்போகச்செய்வது.

அதிருசியன் - கடவுள், பரசிவன்.

அதிருச்சியம் - காணப்படும் பொருளைக் காணமற்போகச்செய்வது.

அதிருட்டகன்மம் - மறுமையிலே சுவர்க்க நரகங்களை அனுபவித்தற்குக் காரணமாயிருக்கும் இம்மையிற் செய்யப்பட்ட கருமம்.

அதிருட்டபோக்கியம் - ஒருவர் செய்த கருமந் தேகாந்தத்திற் சுவர்க்கத்திலாதல் நரகத்திலாதல் மற்றொரு பிறப்பிலாதல் பலிப்பது.

அதிருஷ்டம் . பார்வைக்கெட்டாதது.

அதிருட்டம்-இந்திரியங்களாற் காணப்படாதது. பார்வைக் கெட்டாதது, பாவபுண்ணியத்தொழிலினாற் புத்திதத்துவத்திற் சமவாயசம்பந்தியாய் வைக்கப்பட்டுப் பலபரியந்தமிருக்குஞ் சம்ஸ்காரமாகிய சூக்கும கன்மம். இதுசுவர்க்க நரக பூமிகளுக்கு ஆன்மாவுடன் சூக்குமதேகத்திலிருந்து போதலும் வருதலும் உடையதென்பர்.

அதிருட்டானுமானம் - அதிட்டானுமானம்.

அதிருட்டிபூதனை - ஒரு குருட்டுப் பெண்பேய், அது குழந்தைகளை வருத்தும் ஏழு பெண்பேய்களுள் ஒன்றென்று சொல்லுவர்.

அதிருட்டிபூதனைகிரகதோஷம் - அதிருட்டிபூதனை என்னும் பெண்பேயினாற்குழந்தைகளுக்கு வருந்தோஷம் அது அற்பப்பார்வை, வாந்தி, சுரம், இருமல், மலபேதம், தேக நிற மாறுதல், தேகத்திற் றுர்க்குந்தக் கவிச்சுவீசுதல், அல்லது அசங்கியநாற்றம், இளைத்தல். சொற்பநித்திரை, உதடு நோவு, தினவு, விக்கல், பயம், முலைப்பாலி லசங்கியம், ஈனத்தொனி, நடுக்கமுதலிய குணங்களை யுண்டாக்கும்.

அதிருத்தி - திருத்தியின்மை.

அதிரூபம் - மிகச்சிறந்தவடிவம்.

அதிரேகமாயை - பெரிதாகியமயக்கம்.

அதிரேகம் - அதிசயம், மிகுதி, மேற்பட்டது.

அதிரோகணி - ஏணி.

அதிரோகம் - ஒருகாசம்.

அதிரோகிணி - ஏணி.

அதிரோகிதபாவம் - மறைக்கப்படாதிருத்தல்.

அதிரோகிதல் - அடுத்திருத்தல்.

அதிரோபிதம் - மேலாக உயர்த்தப்பட்டது, மேலாக வைக்கப்பட்டது.
அதிர் - அதிரொன்னேவல், ஒலி, நடுக்கம், பயம்.
அதிர்ச்சி - அதிகப்படுதல், ஆரவாரம், குமுறல், பயம்.
அதிர்ச்சியம் - காணப்பட யோக்கியமாகாதது.
அதிர்தல் - குமுறுதல், நடுங்கல்.
அதிர்த்தல் - அதட்டல், குமுறல், சொல்லுதல்.
அதிர்ப்பு - அச்சம், அதிரல், ஆரவாரம், நடுக்கம்.
அதிர்வு - யாழ்நரம்பைச் சிதறவுந்தல்.
அதிர்வெடி
அதிர்வேட்டு } ஒருவெடி.
அதிலவோடாகம் - அடிலவோடாகம், ஒருபூண்டு.
அதிலுத்தன் - பிறர் பொருள்களில் மிக்க ஆசையுடையோன்.
அதிலோகம் - உலகம், இரசகர்ப்பூரம்.
அதிலோபம் - தன் பொருளைப் பிறர்க்குக் கொடுக்க விரும்பாமை, மிக்க பொருளாசை.
அதிவசனம் - பேர்.
அதிவருணர்-அதிவருணச்சிரமத்தோர்
அதிவர்ணச்சிரமி - வருணச்சிரமங்களைக்கடந்து வேதாந்தமகாவாக்கியக் கேள்வியினால் கடவுளையும் தன்னையும் அறிந்த ஐக்கியாத்மஞாணி.
அதிவன்னச்சிரமி-அதிவருணச்சிரமி.
அதிவாசம் - அயல், இடம், உபவாசத்திற்கு முதனாள், கிரியை ஆரம்பச்சடங்கினென்று, மிகுமணம், வீடு.
அதிவாசனம் - வாசனுபிஷேகம்.
அதிவாதம் - பெருங்காற்று.
அதிவாதி - பிறமதங்களெல்லாவற்றையுங் கண்டித்துத் தன்மதந் தாபிப்பவன்.
அதிவாலகன் - குழந்தை.
அதிவிகடம் - துஷ்டத் தன்மையான யானை.
அதிவிகடன் - மிக்ககோபி.
அதிவிசித்திரம் - மிகுந்த வாச்சரியம்.
அதிவிடம் - அதிவிடயம்.
அதிவிடயம் - அத்தம், அவிருகம், ஒருமருந்து.
அதிவிடை - அதிவிடயம்.
அதிவித்தாரம் - அதிகவிஸ்தாரம்.
அதிவியதை - மிகுவேதனை.
அதிவியப்பு - அதிகவாச்சரியம்.
அதிவியயம் - அதிகச்செலவு.
அதிவியயி - பெருஞ்செலவாளி.
அதிவியாத்தி - அருத்தாபத்தி, மிகக்கூறல், மிகவியாபித்தல்.
அதிவிரகன் - அதிக உபாயமுள்ளவன்.
அதிவிருட்டி
அதிவிருஷ்டி } பெருமழை.
அதிவினயம் - அதிகக் கீழ்ப்படிவு, மாரீசாசாரம்.
அதிவின்னை - தன்கணவன் வேறொருத்தியைமணஞ்செய்தற்குக்காரணமாயிருந்த முதன்மனைவி.
அதிவெப்பம்-இருபத்தெட்டுத்தொகை நரகங்களிலே முதலாவதாகிய கோரத்துக்குள்ள ஐந்துநாயக நரகங்களில் ஒன்று.
அதிவெள்ளைச்சிந்தூரம் - சவ்வீரம், பறங்கிப்பாஷாணம்.
அதிவேகம் - மிகுகதி.
அதிவேதனம் - மனைவியைவிட வேறொருத்தியை விவாகம்பண்ணுதல், மிகக்கூலி.
அதீக்கிதர்
அதீக்கையோர் } தீட்சையில்லாதவர்.
அதீசன் - எசமான்.
அதீசாரம் - அதிசாரம்.
அதீச்சன்-மிகவிச்சையையுடையவன்
அதீச்சுரபதவி - நவவிலாச சபைக்குரிய அதிகாரம்.
அதீச்சுரன்
அதீச்சுவரன் } அரசன், கடவுள்.
அதீட்சணதை - மழுங்கல்.
அதீட்சணன் - கூர்மையில்லான்.
அதீதகலை-ஐந்துகலைகளுளொன்றாகிய சாந்தியதீதகலை, அது விகற்பஞானஞ் சாந்தமான மென்கிற நினைவுங் கழன்று பரமாகாசரூபமாய் நிற்பது.
அதீதகாலம் - இறந்தகாலம்.
அதீதப்பிரமம் - கடவுள்.
அதீதம் - எட்டாதது, கடந்தது, குரல் முன்னுந் தாளம் பின்னுமாய் வருவது, பொன், மேற்பட்டது.
அதீதர்-வானோர், முனிவர், மேலோர்

அதிதன்-எட்டாதவன், கடந்தவன், பாசத்தினின்று விடுவிக்கப்பட்டவன்.
அதீதாவஸ்தை - கீழாலவத்தை ஐந்தனுள் ஒன்று. அது கருவிகளெல்லாம் நீங்கி யொன்றும் அறியாமற் கிடக்கும் அவத்தை.
அதீதியம் - ஆசையின்மை.
அதீந்திரியம் - காணப்படாதது, புலனுக்கெட்டாதது.
அதீரம்-கரையின்மை, தைரியமின்மை.
அதீரை - அமையாதவள், மின்னல்.
அதீனதை - அடிமைத்தன்மை, கீழ்ப்படிதல், சார்ந்திருத்தல்.
அதீனத்துவம் - இட்டம்.
அதீனம் - உரித்து.
அது-அஃது, ஆறுவதொருமையுருபு.
அதுக்ககரம் - துக்கமில்லாமையைச் செய்வது.
அதுக்கம் - அடிப்பு, ஒதுக்கம், குழிவு.
அதுக்கல் - அடித்தல், அடைசுதல்.
அதுங்கல் - ஒதுங்கல், குழிதல்.
அதுட்டி - திக்கம்.
அதுநா - இப்பொழுது.
அதுநாதனம்-இப்பொழுதைக்குரியது.
அதுநாபாவம் - இப்பொழுதுள்ளது.
அதுலம் - உவமையின்மை, ஒரெண்.
அதுலன் - ஒப்பிலி, கடவுள்.
அதுலிதம் - அசைவின்மை.
அதுல்லியம் - ஒப்பின்மை.
அதூரம் - சமீபம்.
அதூவபத்தம் - சமணமதத்திற் கூறியபடி விட்டுவிட்டுப் பந்திக்குஞ் சொரூபத்தது.
அதெந்து - பயப்படாதே எனப் பொருள்படும் ஒரு பொன்மொழி.
அதேகி - தேகமில்லாதவன்.
அதேயதானம் - கொடுக்கத்தகாததைக் கொடுத்தல்.
அதேயம் - கொடுக்கத்தகாதது.
அதைத்தல்-தாக்கிமீளல், வீங்கல்.
அதைப்பு - தாக்கியெழுதல், வீக்கம்.
அதைரியம் - தைரியமின்மை.
அதொன்மையம் - நூதனம்.
அதோகததோஷம் - நவலோக சம்பந்தமான ஐவகைத் தோஷங்களு ளொன்று. அது நாபித்தானத்தின் கீழ் வாயுவைச்சஞ்சரிக்கச்செய்து அடிக்கடிமலம் நழுகல் வாயுலர்தலென்னுங் குணங்களையுண்டாக்கும் ஒருநோய்.
அதோகதி - இறங்குதல், நரகம், பள்ளம், பாதலம்.
அதோங்கம் - குதம், யோனி.
அதோசாதி - கீழ்சாதி.
அதோட்சசன் - விட்டுணு.
அதோபாகம் - கீழ்ப்பக்கம்.
அதோபுடம் - கீழ்ப்புறம்.
அதோபுவனம் - கீழுலகம்.
அதோமாயை - ஒருமாயை.
அதோமார்க்கம் - கீழ்மார்க்கமாகிய சரியை முதலியன.
அதோமுகக்கட்டு-வயிற்றிலேனும் இடுப்பிலேனுங் கருகிறத்துடன் பருமனாக எழும்பி அதிக உபத்திரவத்தையும் வியர்வையையுங் கொடுக்கும் ஒருவகைக்கட்டு.
அதோமுகம் - ஆற்றுநீர்க்கழிமுகம், கீழ்நோக்கிய முகம்.
அதோமுகரத்தபித்தம் - இரத்தபித்தரோகத்தில் ஒருவகை. அது சலத்துவாரம் மலத்துவாரம், உரோமத்துவாரம் என்னும் மூவகைத்துவாரங்களினாலும் இரத்தம் போகச்செய்யும் ஒருவகைநோய்.
அதோமுகராசி - ஆதித்தியனின்றவிராசி.
அதோமுகவாதம் - மார்பிலும் வயிற்றிலுங் கீழ்வயிற்றிலுங் கவுட்டியிலுங் கீழேயிறங்கி வேதனைசெய்யும் ஒருவகைநோய்.
அதோமுகா - ஆற்றுநீர்க்கழிமுகம்.
அதோமுகி - கவிழ்தும்பை.
அதோமுகியான் - கன்றீன்றுகொண்டிருக்கும் பசு.
அதோரணர் - யானைப்பாகர்.
அதோலம்பம் - செங்குத்து, தூங்குதல், நிறுத்திவிட்டவரி.
அதோலோகம் - கீழுலகம்.
அதோவகனம்-அதோமுகம்.
அதோவாயு - அபானவாயு.
அதோனி - அவிடம்.
அதோனியமிகாசத்தி - ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியை விளைவிக்கும் ஆணவ மலசத்தி.

அத் - ஒன்று, பாதி.
அத்தகடகம் - கைவளை.
அத்தகண்டாதனம் - ஒரு கான் மேல் நீட்டி, ஒருகைகொண்டு நீட்டின காலைக் கட்டி மற்றைக்கையை நிலத்தூன்றி இருப்பது.
அத்தகம் - ஆமணக்கு, கருஞ்சீரகம்.
அத்தகிரி - சூரியன் அத்தமிக்குமிடமாகச் சொல்லப்படும் மேற்குமலை.
அத்தகோரம் - கெல்லி.
அத்தகோளம் - கோளத்தின்பாதி.
அத்தக்குன்று - சூரியன் அஸ்தமானஞ் செய்யுமலை.
அத்தசகாயம் - பொருளுதவி.
அத்தசதம் - ஐம்பது, நூறுண்டு.
அத்தசந்திரன் - பாதிசந்திரன், பாலசந்திரன்.
அத்தசாமப்பூசை - நடுராத்திரியிற் செய்யும்பூசை.
அத்தசாமம் - நடுச்சாமம்.
அத்தசித்திரம்-மார்க்கண்ட பிரமாணத்தொன்று. அஃது அரைமாத்திரையோர் கலையாகக்கொண்டது.
அத்தடி - அடிக்கெடுதல், அந்தரிப்பு.
அத்தத்தாவெனல்- அத்தா அத்தாவெனக் கூறுதல்.
அத்தநாசம் - பொருளழிவு.
அத்தநாரீசர் - அத்தநாரீசுரர்.
அத்தநாரீசன் - தனதுடலிற் பாதி பெண்வடிவான சிவன்.
அத்தநாரீசுரன்-சிவன், பாதிஸ்திரீயாகவிருப்பவன்.
அத்தநாரீசுவரன் - அத்தநாரீசன்.
அத்தநாள் - பதின்மூன்றுநட்சத்திரநோள்.
அத்தபள்ளம் - ஏழாமிராசி.
அத்தபாதம் - பாதி, பொருட்பாகம்.
அத்தப்பிரசுரம் - நாலேகால்நாழிகைகொண்டது.
அத்தப்பிரசுரன் -சரந்துறைகோள்களினொன்று.
அத்தப்புனருத்தம் - ஒரு சித்திரகத்தானம். அது முன்சொன்ன பொருளைப் பின்னுஞ் சொல்லுதல்.
அத்தப்பொருந்தி - ஒருபூடு.
அத்தமண்டபம் - கருப்பக்கிரக மண்டபம், கோவிலின் நடுமண்டபம்.
அத்தமத்தகரையோகம் -கையான் மத்தகத்திற் றடவுதல்.
அஸ்தமம், அத்தமம் } அஸ்தமிக்கை, அத்தகிரி.
அத்தமயம், அத்தமயனம் } சூரியன் முதலியனபடுதல்.
அத்தமலை - சூரியன் அத்தமிக்கும்மலை.
அஸ்தமனம், அத்தமனம் } அத்தமனகாலம், அத்தமித்தல்.
அத்தமானம் - ஆமணக்கு.
அத்தமானியம்-கண்டதிற்பாதி இறைதருதல்.
அஸ்தமிக்கை, அத்தமிக்கை } படுகை.
அத்தமித்தல் - அற்றுப்போதல், உட்குதல், படுதல், மறைதல்.
அத்தமிப்பு - படுகை.
அத்தமேற்காலாதனம் - இருகாலுமேலுரமடக்கி அக்கா லிரண்டையுங் கையாற்பற்றிக்கிடப்பது.
அஸ்தம் - அஸ்தமிக்கை, அத்தகிரி, ஒரு நட்சத்திரம், கை.
அத்தம் - அதிவிடயம் அருநெறி, ஆண்டு, ஒரு நட்சத்திரம், ஒரு நாள், ஒருமலை, கண்ணாடி, காடு, குக்கில், கை, சொற்பொருள், பாதி, பொன், முகில், வழி.
அத்தயாமம் - ஒருதினத்திற் பதினாறிலொன்றுகொண்ட நேரம்.
அத்தரசிதம் - மடல்துத்தம்.
அத்தர் - சிவன், முனிவர், தேவர், வனவாசர், வாசனைப்பண்டம்.
அத்தலைப்பொருந்தி - ஒருபூடு.
அத்தவசனம் - நினைந்த பொருளைச் சொல்லும் சொல்.
அத்தவரை - அஸ்தகிரி.
அத்தவர் - ஆடையுடையோர்.
அத்தவாகனன் - சிவன்.
அத்தவாரணம் - போதுமெனல்.
அத்தவாளம் - உல்லாசம், காடு, போர்வை, வடகம்.
அத்தவுதயம் - அருத்தோதயம்.
அத்தவேடனை - பொருளிச்சை.
அத்தனை - அவ்வளவு.
அத்தன்-அருகன், வைரவன், கடவுள், கடுக்காய், குரு, உயர்ந்தோன், சிவன், பிதா, மூத்தோன், வெள்ளியம்.
அத்தன்மை - அம்மாதிரி.
அத்தா-தமக்கை, தாய், பெண்கொடுத்தமாமி, மெய்யாய், வெளிப்படையாய்.

அத்தாட்சி - ஒப்பனை, திட்டாந்தம்.

அத்தாணி - அரசிருக்கை, சபைகூடும் இடம்.

அத்தாணிமண்டபம் - அரசிருக்கைமண்டபம், சபைகூடுமண்டபம்.

அத்தாதிகம் - பாதிக்கதிகப்பட்டது.

அத்தாதிகாரம்- பொக்கிஷாதிகாரியின் அதிகாரத்தனம்.

அத்தாதுரம் . பொருளாசை.

அத்தாந்தரம் - எதிரார்த்தம், புதுக்காரியம், வேதாந்தம், வேதநிமித்தம்.

அத்தாபித்தல் - உரப்பிநெருக்கல்.

அத்தாப்பித்தல் - உறுத்தி வெளிப்படையாய் தட்டிப்பேசல்.

அத்தாயம் - அந்தரம், கடைச்சற்சக்கரத்தின் மிதிதடி.

அத்தார்ச்சனம் - திரவியந்தேடுதல்.

அத்தார்ச்சனை - திரவியசம்பாத்தியம்.

அத்தார்த்தம் - ஆண்டிற்பாதி, பொருணிமித்தம்.

அத்தார்ந்தம் - அரைவருடம், பொருணிமித்தம்.

அத்தாவரம் - அசைவுள்ளபொருள்.

அத்தானம் - சரியற்ற இடம், கோயின் முதலியவற்றின் வாயில், மிகுந்த ஆழம்.

அத்தானி } சபைகூடுமிடம்.
அத்தானிமண்டபம் }

அத்தான் - அக்காள்கணவன், மைத்துனன்.

அத்தி - அக்காள், அத்தினபுரி, ஆனைவணங்கி, அதவு, அத்தன்மையன், உண்மை, எலும்பு, என்பு, ஒருமரம், கடல், கண்ணினீர்க்குமோர் நரம்பு, கருவிளை, கொலை, திப்பிலி, பாதி, செய்யென்னேவல், பிடியன்யானை, மலை, யானை, வெருகமரம், கல்லத்தி, காட்டத்தி, கொடியத்தி, பேயத்தி, மலையத்தி, விழலத்தி, சந்திரவமிசத்துள்ள பரதன்குலத்திற் பிறந்த ஓரரசன், தேவசேனை.

அத்திகபம் - கடனுரை, கணவாய்மீனெலும்பு.

அத்திகம் - வருடந்தோறும் வருவது.

அத்திகா - அத்திகை.

அத்திகாயம் - தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயம் என அசிவபதார்த்தங்களோடு கூட்டி வழங்கப்படும் ஒரு வாய்பாடு.

அத்திகிரி - காஞ்சிபுரத்துள்ளவிட்டுணு தலங்கள் எட்டனுள் ஒன்று. அது வெள்ளையானை தன்னமிசமொன்றினாலே விட்டுணுவைத் தாங்கப்பெற்ற காரணத்தாலேவந்த பெயரென்பர். இக்கோயிலைச் சுற்றிய மாடவீதி முதலிய சிறியபாகங்களுக்கு முற்காலத்தில் வழங்கிவந்த பெயர் அத்தியூர் என்பதாம்.

அத்திகை - அக்காள், அத்தன்மையளது கை.

அத்திகோசத்தான் - ஒருகுழூஉப்பெயர். அது இளந்துணைமகார்தம்மிற் கூடிவிளையாடல் குறித்தபொழுதைக்குத் தாமே படைத்திட்டுக்கொண்டது.

அத்திகோபம் - ஒரு நயனரோகம்.

அத்திகோலம் - அழிஞ்சில்.

அத்திக்கன்னி - கரசிலாங்கண்ணி, வெருகமரம்.

அத்திசஞ்சயம் - இறந்தவரின் உடம்பைத் தகனஞ்செய்தபின் எலும்புகளைக் கங்கை முதலிய தீர்த்தங்கள் ஒன்றில் இடும்படியெடுத்துத் திரட்டல்.

அத்திசமர்ப்பணம் - இறந்ததேகத்தினெலும்பைக் கங்கைமுதலிய தீர்த்தங்களி லெறிதல்.

அத்திசம்-நீர்முள்ளி. சங்கு, சந்திரன்.

அத்திசயனன் } பாற்கடற்றுயின்றோன், விட்டுணு.
அத்திசயன் }

அத்திசாரம் - எலும்புத் தானங்களில் உள்ள எண்ணெய்ப்பற்றின ஊன்-

அத்திசுரம் - எலும்பைப்பற்றின சுரம், ஒருநோய். [கொம்பு.

அத்திதந்தம் - முள்ளங்கி, யானைக்

அத்திதாரணம்-எலும்புமாலை தரித்தல்.

அத்திதி - கிலையின்மை, மரியாதையின்மை.

அத்தித்தல் - பாதிசெய்தல்.

அத்தித்திப்பிலி - யானைத்திப்பிலி.

அத்திநந்தனி - பார்வதி.

அத்திநவநீதகம் - சந்திரன்.

அத்திநாத்தி - உண்டு இல்லை எனவும் உள்ளதும் இல்லதும் எனவுஞ் சங்

தேஹிக்க கின்றதெனவும் பலவேறு பொருள்களைத்தரும் ஒருவடமொழி அவ்வியயம்.
அத்திகாத்திவாதம் - உண்டில்லை என்னும் வாதம்.
அத்திபங்கம் - எலும்புமுறிதல்.
அத்திபஞ்சரம் - என்புக்கூடு, முழுவென்பு.
அத்திபாதிப்பிரியம் - சச்சிதானந்தம்.
அஸ்திபாரம்
அத்திபாரம் } அடிப்படை.
அத்திபுரசாதனி - அவுரிப்பூண்டு.
அத்திபெருக்கல் - அத்திசஞ்சயம்.
அத்திபேதம் - ஒருநரகம்.
அத்திபேதி - ஒருமருந்து.
அத்திப்பதி - அஸ்தினபுரம்.
அத்திப்பிரக்ஷேபம் - இறந்தவனுடைய எலும்பைக் கங்கைமுதலிய தீர்த்தங்களில் இடுதல்.
அத்திமண்டுகி - முத்துச்சிப்பி.
அத்திமாலி - சிவன்.
அத்தியக்கம் - தலைமை, பிரத்தியக்கம், மேல்விசாரணை.
அத்தியக்கினி - சீதனம், வடவாமுகாக்கினி.
அத்தியக்கினிட்டோமம் - யாகம் இருபத்தொன்றனுள் ஒன்று.
அத்தியசனம் - ஏகோத்திட்டவூண்.
அத்தியஸ்மி - மிகவும் ஐக்கியம்.
அத்தியட்சரம் - பிரணவம்.
அத்தியட்சன் - மேல்விசாரணை செய்வோன், அதிகாரி.
அத்தியந்தகோபம் - மிகுகோபம்.
அத்தியந்தகோபனம் - அதிகக்கோபம்.
அத்தியந்தபாவம் - முழுதுமின்மை.
அத்தியந்தப்பிரளயம் - ஐவகைப்பிரளயங்களுள் ஒன்று, அது முத்தி, இந்த அவத்தையில் அஞ்ஞானஞ் சிறிதுமில்லை.
அத்தியந்தம் - ஓரெண், மட்டற்றது, மிகுதி.
அத்தியந்தாதிசயோக்தி யலங்காரம் - மிகையுயர்வுநவிற்சியணி.
அத்தியந்தாபாவம் - அபாவப்பிரமாணவகைகளுள் ஒன்று. அஃதொன்றுமில்லாமை.
அத்தியயகம் - வேதமோதல், படித்தல்.
அத்தியயம் - அத்தியாயம், அழிவு, ஆக்கினை, இக்கட்டு, ஒருபொருளின்பேதத்தை ஐயத்துடனறிதல், குற்றம், சட்டம், பொல்லாங்கு, மரணம், மீறுதல்.
அத்தியயனம்-படித்தல், வேதமோதல்.
அத்தியவசம் - மிகவும் அவசமாதல்.
அத்தியவசயித்தல் - ஒருபொருளின்கண் இயல்பாய் நிகழுந் தன்மையையொழித்துத் தானெடுத்தபொருண்மேலேற்றிச் சொல்லல், தற்குறிப்புச் செய்தல்.
அத்தியவசாயம்
அத்தியவசாயிதம் } தானெடுத்துக் கொண்டது, முயற்சி.
அத்தியவசாயினி-விஷய நிச்சயஞ் செய்யுமது.
அத்தியற்பம்-மிகவும் அற்பம்.
அத்தியர்புதம் - மிக்க ஆச்சரியம்.
அத்தியாகரணம் - தொக்குநின்றதை நிரப்புதல், வாதுபேசுகை, வேதமோதல்.
அத்தியாகாரம் - அவமானம், குற்றம், மிகுபோசனம், வருவித்தசொல்.
அத்தியாகாரி - மிகப்புசிக்கிறவன்.
அத்தியாகாரியம் - ஒருவாக்கியத்தில் ஒருசொல் அங்ஙனம் வெளிப்படையாயிராத மற்றொருசொல்லை அவாவி நிற்றல்.
அத்தியாசசதுட்டயம் - ஒன்றனை மற்றொன்றாகக் கொள்ளுதலாகிய நால்வகை அத்தியாசங்கள், அவை மித்தியாத்தியாசம், இதராத்தியாசம், இதரேதராத்தியாசம், சத்தியாத்தியாசம் என்பன. அவற்றுள் மித்தியாத்தியாசமாவது நித்தியமான ஆன்மா நெருப்பின் சம்பந்தத்தால் நீரினிடத்துச் சூடுவந்ததுபோல் அநித்தியமானதேகசம்பந்தத்தால் தன்னிடத்து வந்த சரித்தன் முதலிய தொழில்களைத் தன்னுடையதாகப் பாவித்தலெனவும் இதராத்தியாசமாவது தனக்கு வேறான இந்திரியங்களின் றொழில்களைத் தன்னுடையனவாகக் காண்டலெனவும், இதரேதராத்தியாசமாவது மனமுதலியன யானென்னதெனச் சங்கற்பிப்பதைத் தனதாகப் பாவித்தலெனவும், சத்தியாத்தியாச

மாவது தானல்லாததைத் தானாகக் கருது மகங்காரத்தைத் தானாகவறித லெனவும் வேதாந்திகள் கூறுவர்.
அத்தியாசகம் - ஏகோத்திட்டம்.
அத்தியாசம் - காட்டுதல், வித்தியாசம், வீற்றிருத்தல்.
அத்தியாசவாதம் - விபரீதவாதம்.
அத்தியாசனம் - அபரக்கிரியையினோர் பகுதி, ஏகோத்திட்டம்.
அத்தியாசாரம் - விதிக்கப்பட்ட ஆசாரங்களைக்கடந்து நடத்தல்.
அத்தியாசாரி - அத்தியாசாரமாய் நடப்பவன்.
அத்தியாசிரம பாவனை - பிராமியபாவனை.
அத்தியாசிரம யோகசன்னியாசி - பாரமேசுவரி பாவனையில் நிற்பவன்.
அத்தியாசை - அதிக ஆசை.
அத்தியாசோபாதி - மூன்றுவகைச் சீவ உபாதிகளுள் ஒன்று. அது அந்தக்கரண சம்பந்தமாகிய சுகதுக்கங்கள் முழுவதும் ஆத்துமா அனுபவிப்பது போல முயற்சிப்பது.
அத்தியாச்சியம் - விடப்படக்கூடாதது.
அத்தியாச்சிரமம் - ஆச்சிரமங்களைக் கடந்தநிலை.
அத்தியாச்சிரம யோகசன்னியாசி-பாரமேசுவரி பாவனையில் நிற்பவன்.
அத்தியாச்சிரமயோகி - மூவகை யோகிகளுள் ஒருவன்.
அத்தியாதானம் - கிரமத்தினின்று மாறுபடுதல்.
அத்தியாத்துமஞானம் - பரமான்மாவை அறியும் அறிவு.
அத்தியாத்தும தத்துவநூல்-அத்தியாத்துமஞான சாத்திரம்.
அத்தியாத்துமம் - யசுர்வேத உபநிடதங்களுள் ஒன்று.
அத்தியாத்துமா - சீவான்மா, பரமான்மா.
அத்தியாத்துமிக நூல் - அத்தியான்மிக நூல்.
அத்தியாத்துமிகம் - கடவுட் கடுத்தது தன்னால்வருந் துன்பம்.
அத்தியாபகன் - வேத மோதுவிப்போன், உபாத்தியாயன்.

அத்தியாபகம் } ஓதுவித்தல், வேத
அத்தியாபனம் } மோதுவித்தல்.
அத்தியாபிதம் - படிக்கப்பட்டது.
அத்தியாயகம் - அத்தியயகம்.
அத்தியாயம் - இலக்கிய செய்யுட்பகுதி காண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம், வேதநூலைவிரித்த இலக்கியத்தின் கூறுபாடு, வேதம்.
அத்தியாரூடம் - மிகவும உயர்ந்தநிலை, மிகுந்த வளர்ச்சி.
அத்தியாரோகணம் } ஏறுதல்.
அத்தியாரோகம் }
அத்தியாரோபணம் } ஒன்றையொன்
அத்தியாரோபம் } றிலேற்றல்.
அத்தியாரோபனம் - ஒன்றையொன்றி லேற்றுதல், கயிற்றைச் சர்ப்பமாக விளக்குதல்போல ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக விளக்குதல்.
அத்தியாவசியகம் - மிகுந்த அவசியம்.
அத்தியாவாகனிகம் - சீதனம்.
அத்தியானம் - தியானபாவம்.
அத்தியான்ம ராமாயணம் - விசுவாமித்திரரால் செய்யப்பட்ட ஓர் உபதேச நூல்.
அத்தியான்மா - அண்டபிண்டம் இரண்டிலும் வியாபாரமாயுள்ள பதின்மூன்று வாயுக்கள்.
அத்தியான்மிகசடாகமம் - பிறன் படிக்கும் ஆகமவாக்குச் செவியினாற் கேட்கப்பட்டு உணரோசையாகிய மத்தியவாக்குரூபமா யிருதயத்திற்றோன்றி நிற்பது.
அத்தியான்மிகநூல் - பதிநூல், அது சாங்கியம், பதஞ்சலியம், வேதாந்தம் எனப்படும்.
அத்தியான்மிகம் - அத்தியாத்துமிகம்.
அத்தியான்மீகநூல் - மூவகைச் சாத்திரம்.
அத்தியுத்தி - அதியுத்தி அலங்காரம், பெருமைப்படுத்திப் பேசுதல், வர்ணித்துப்பேசுதல்.
அத்தியுத்தி யலங்காரம் - மிகுதிகவிற்சியணி.
அத்தியூடன் - சிவபெருமான்.
அத்தியேதா - படிக்கிற மாணாக்கன்.
அத்திரசத்திரம் - அம்பும் வாளும்.
அத்திரசந்தானம்-அம்பின் தொடர்ச்சி.

அத்திரசாஸ்திரம் - வில்வித்தை.
அத்திரசிகிற்சகன் - சத்திர வைத்தியஞ் செய்வோன்.
அத்திரசிகிற்சை - சத்திரவைத்தியம்.
அத்திரதர் - காற்றோராசர்.
அத்திரதேவர் - ஆயுததேவர்.
அத்திரத்தாமன் - அசுவத்தாமன்.
அத்திரபரிட்சை - கலைஞானமறுபத்து நான்கினுள் ஒன்று, வில்வித்தை கற்கை.
அத்திரப்பிரயோகம் - அம்புசெலுத்தல்
அத்திரம் - அம்பு, இலந்தை, கடுக்காய்ப்பூ, கழுதை, குதிரை, கைவிடு படை, நிலையின்மை, மலை, முன் விடும்பு.
அத்திரயூகம் - ஒருவகைப்படைவகுப்பு-
அத்திரலாகவம் - அத்திரப்பிரயோக வன்மை.
அத்திரவர்-விசுவதேவர்களிலொருவர்.
அத்திரா - அரசு.
அத்திராகாரம் - ஆயுதசாலை.
அத்திராசம் - பயமின்மை.
அத்திராதரம் } அம்புக்கூடு அம்புறை
அத்திராதாரம் } தூணி.
அத்திரி - உலைத்துருத்தி, ஒட்டகம், ஓரிருடி, அவர் அத்திரிமாமுனிவர், கணை, கழுதை, குதிரை, சூரியன், தருமநூல் பதினெட்டினொன்று, மலை, விண்.
அத்திரிகிலை - பூமி.
அத்திரிகை - ஓரப்சரப்பெண்.
அத்திரிசாதன்-சந்திரன்முதன்மூன்று வருணத்தாருள் ஒருவன்.
அத்திரிசாரம் - இரும்பு.
அத்திரிசிருங்கம், சிகரம்.
அத்திரிசை } பார்வதிதேவி.
அத்திரிகந்தினி }
அத்திரீசன் - இமையம், சிவன்.
அத்திரு - அரசமரம்.
அத்திரோகம் - மெத்தெனவு.
அத்திலை - செருப்படை.
அத்திவாரம் - அடி, அடிமரம்.
அஸ்தினபுரம் } அத்தினபுரம் அஸ்தி
அத்தினபுரம் } னபுரி, இது வங்காள வடமேற்கு மாகாணங்களில் மீரட்டு என்னும் ஊர் மகா பாரதத்திற் சிறந்த சந்திரவமிசத்தரசர்களாகிய பாண்டவர்களின் இராஜதானிப் பட்டினம்.
அஸ்தினபுரம் } அத்தினபுரம்.
அத்தினபுரி }
அத்தினி - நால்வகைப்பெண்களிலே ஒருத்தி, பெண்யானை.
அஸ்து - அப்படியாக.
அத்து - அசைச்சொல், அரைஞாண், அரைப்பட்டிகை, இசைப்பு, காரியை, சிவப்பு, செவ்வை, தைப்பு.
அத்து } தெலுங்கில், எல்லை.
ஹத்து }
அத்துகமானி - அரசமரம்.
அத்துகம் - ஆமணக்கு.
அத்துச்சம்-கிரகங்களின் அதிகவுச்சம்.
அத்துணை - அவ்வளவு.
அத்துதல் - அடைதல், அரத்தைப் பூண்டு, இசைத்தல், பொருத்தல்.
அத்துமம் - அரத்தை.
அத்துமானி - அரசமரம்.
அத்துருக்கம் - அகழ்சூழ்ந்தகோட்டை.
அத்துரோகம் - துரோகமின்மை.
அத்துலாக்கி - சருஞ்சீரகம்.
அத்துவகமனம் - பிரயாணம்பண்ணல்.
அத்துவகன் - தீர்த்தயாத்திரைக்குவெளிப்பட்டு வழிநடப்போனும் உண்டியின் பொருட்டு வந்த யாசகன்.
அத்துவசுத்தி - ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட் டிருக்கின்ற போகங்களெல்லாவற்றையும் ஏககாலத்திலே புசித்துத் தொலைப்பித்து மோட்சங் கொடுத்தல். [ய்தல்.
அத்துவசோதனை - பிரமசோதனை செ
அத்துவந்திரயம் - அத்துவாக்கள் மூன்று. அவை சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என்பன.
அத்துவரிட்டம் - வழியிலிருப்பது.
அத்துவம் - இரண்டொன்றுயிருத்தல், ஒன்றிப்பு, சிவப்பு, வழி.
அத்துவயதாரகம் - யசுர்வேத உபநிடதங்களுளொன்று.
அத்துவயம் - இரண்டன்மை, பிரமமும் பிரபஞ்சமும் ஒருபொருளான தன்மை.
அத்துவயவாதி - பிரமமும் பிரபஞ்சமுமொன்றெனச் சாதிப்போன், பௌத்தன்.

அத்துவயன் - பௌத்தன்.

அத்துவரியு-யசுர்வேதம், யாகபுரோகிதன்.

அத்துவரியுவேதம் - யசுர்வேதம்.

அத்துவர் - பிரமஞானிகள்.

அத்துவர்க்கயம் - கருஞ்சீரகம்.

அத்துவர்க்காயம் - கருஞ்சீரகம், சீரகம்.

அத்துவலிங்கம் - ஆன்மதத்துவம் அடிப்பாகமும் வித்தியாதத்துவம் நடுப்பாகமுஞ் சிவதத்துவங் கடைப்பாகமுமாக அமைந்த சிவலிங்கம்.

அத்துவா-ஆன்மாக்களைப் பரகதியடைவிக்கை காரணமாகிய வழி, அது மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என ஆறு.

அத்துவாகாயாரோணம் - ஒருதீட்சை.

அத்துவாக்காயம் - கருஞ்சீரகம்.

அத்துவாசங்கற்பவாதி - அத்துவாவடிவாகச் சிவனைப்பாவிப்போன்.

அத்துவாசுத்தி - ஆத்துமாக்களினுஞ் சஞ்சிதமாயிருந்த கன்மங்களையெல்லாம் நசிப்பித்தல்.

அத்துவாசுத்திபண்ணல் - அத்துவாக்களிற் சனனங்களுக்கு ஏதுவான கன்மங்களை எல்லாஞ் சுத்திகரித்தல்.

அத்துவாசைவம் - ஒரு சைவம். அது சத்திநிபாதம் வரப்பெற்ற சைவன் சிவனை வழிபடும் நெறி.

அத்துவாந்தம் - காலைமாலை வெளிச்சம்.

அத்துவாமூர்த்தி - பிரபஞ்சத்திற் கலந்து நின்று சேட்டிப்போன்.

அத்துவானம் - காடு, செவ்வானம், பாழ்ங்காடு.

அத்துவிதநிலை - சிவமு மான்மாவுந் தம்முள் வேறுபடாத ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

அத்துவிதபாஷியம் - வியாசசூத்திரத்திற்குச் சங்கராச்சாரியர் செய்த பாஷியம். இதுபரமான்மா ஐக்கியமான அத்துவித சுவரூபத்தைக் கூறுவது.

அத்துவிதம்-இரண்டல்லாதது, அத்துவிதம் அத்துவிதம், பாணினீயம். ஆறுவது அத்தியாயம் மூன்றுவது பதம், எழுபத்துமூன்றுவது “நலோபோநஞ:” என்னும் சூத்திர விதியால் நகாரம் அகாரமாயிற்று பேதப்பொரு ளிரண்டு தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம் அஃதாவது பொருளிரண்டா யிருந்தும் வேறறக்கலந்து நிற்குந்தன்மை.

அத்துவிதர் - சிவத்தோடு இரண்டறக் கலந்தவர்.

அத்துவிதானந்தம் - எண்வகையானந்தங்களிலொன்று. அது சீவன் வேறு, பிரமம் வேறெனக்கொள்ளுந் துவித ஞானம் நீங்கியவிடத் துண்டான ஆநந்தம்.

அத்துவிதியம் - ஒன்றிப்பு.

அத்துவிதியன் - ஒன்றானவன்.

அத்துவை - கோழையினது முழையினதுங் கலப்பு, தெரு நேரம்.

அத்துவைதம் - பரமாத்துமாவும் சீவாத்துமாவும் ஒன்றென்கை.

அத்துவைதவாதி - அத்துவிதமே மெய்யென்று சாதிப்போன். இவன் சிற்சத்தியே சகத்துக்கு உபாதான காரணமென்பன்.

அத்துவைதி - அத்துவிதக்கொள்கையுடையோன்.

அத்துராம் - மரமஞ்சள்.

அத்தேயம் - களவுசெய்ய நினையாமை, களவு செய்யாமை.

அத்தை-அக்காள், குரு, தலைவி, மாதா, மாமி, முன்னிலை அசைச்சொல்.

அத்தையர் - மாமிமார்.

அத்தோ - ஓர் அதிசய இரக்கச்சொல், இரக்கச்சொல்.

அத்தோதயம் - அருத்தோதயம், ஒரு விசேடநாள். இது அறுபதுவருஷத்துக்கொருதரம் தைமாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் சூரியன் மகரத்திலும் சந்திரன் விதிபாதயோகங்கூடின திருவோண நட்சத்திரத்திலும் இருந் தொன்றாக உதயமாதல், இந்நாளில் ஸ்நாநம் தருமம் முதலியன செய்தால் விசேடமென்பது திண்ணம்.

அத்தோர்யாமம் - ஒரு யாகம், அது சோதிட்டோமயாகத்தின் இறுவாயாகிய ஏழாம் பகுதி.

அநங்காரம் - அகங்காரமின்மை.

அநகம் - பாவமின்மை, மாசின்மை.

அநகர் - அழகுடைய ஆடவர், அழகுள்ளவர், பாவமற்றவர், மறுவற்றவர், மேன்மக்கள்.
அநகன் - அருகன், கடவுள், சிவன், விஷ்ணு, பாவமில்லாதவன்.
அநக்கம் - குருடு.
அநக்கரம் - சொல்லத்தகாதது, நிந்தை.
அநக்கரன்-ஊமை, கல்வியில்லாதவன், சொல்லத்தகாதன சொல்லுவோன்.
அநக்கினி-அக்கினியல்லாத வஸ்து. அக்கினி யில்லாமை, உதராக்கினியின் சேட்டையற்றவன், விவாகம் பண்ணாதவன்.
அநங்கம் - ஆகாயம், வாயு, இருவாட்சி, உடலின்மை, மல்லிகை.
அநங்கர் - மதனெனப்படுவார் பலர்.
அநங்கலீலை - மதனால் வழியாடும் விளையாட்டு.
அநங்கன் - உடலிலான், கடவுள், மன்மதன்.
அநங்கு - மன்மதன்.
அநசூயை - அழுக்காறின்மை, அத்திரி முனியின் மனைவி.
அநச்சரசத்தம் - எழுத்தொலி யல்லாதவொலி.
அநச்சராத்மகம் - எழுத்தல்லாததனலாய வோசை.
அநச்சுவம் - குதிரையல்லாதது.
அநதிகதம் - அறியப்படாதது, படிக்காதது.
அநதிகதார்த்தந்திரு - ஒருக்காலு மறியாதவஸ்துவை அறிவிப்பது.
அநதிகதார்த்தம் - அறியப்படாதவஸ்து
அநதிகாரம் - அதிகாரமின்மை.
அநதிகாரி - அதிகாரமில்லாதது, அதிகாரமில்லாதவன்.
அநதிக்கிரமம் - அதிக்கிரமமின்மை.
அநதிக்கிராந்தம் - கடவாதது.
அநதிக்கிராந்தவிந்துகபாசிவம் - விந்துவை நீங்காத நிலையர்- இவர் மகாமாயையினது பரநாதப் பிரதேசத்தை அதிட்டிப்பவர்.
அநதிக்கிராந்தவிந்துகபாசத்தி - சிவனுடைய நவபேதத்து ளொன்று. அது பரவிந்துவை அதிட்டிக்குஞ் சிவசத்தி.
அநதிசயம் - அதிசயமின்மை.
அநதிதேசம்-அதிதேசமின்றி புணர்த்துவது.
அநதிரோகம் - அதிரோகமின்மை.
அநத்தம் - பயனற்றது.
அநத்தியயனம் - ஓதுத லொழிந்திருக்க வேண்டியகாலம்.
அநத்தியவசாயாத்துமா - பாவம். அது கிராககவாத்துமாவுடைய சுபாவம்.
அநத்தியாயம் - அநத்தியயனம்.
அநநுபாடனம் - தோல்வித்தானம் இருபத்திரண்டனு ளொன்று. அது பிறன்கூறிய பொருளை அனுவதிக்க மாட்டாமை.
அநந்த - நிவிர்த்திகலையிற்பிரிதிவிதத்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களுள் ஒன்று, வித்தியாகலையிலே இராகதத்துவத்திலுள்ள ஐந்துபுவனங்களுள் ஒன்று.
அநந்தகீர்த்தி - அளவிறந்தகீர்த்தியுடையோர்.
அநந்தகோடி - எண்ணத்தொலையாதன.
அநந்தசதுட்டயம் - ஆருகமதத்திற்சொல்லப்பட்ட மோட்சத்திற் பெறும் பயனாகிய அனந்தஞானம், அனந்ததரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம் என்னும் நான்குவகை.
அநந்தசதுர்த்தசி - புரட்டாசிமாதத்துச் சுக்கிலபக்கச் சதுர்த்தசி திதி. இது விட்டுணுவைப்பூசிக்குமொருவிசேஷதினம்.
அநந்தசத்தி - அளவிலாற்ற லுடைமை. இது கடவுளுடைய அறு குணங்களுள் ஒன்று, கடவுள்.
அநந்தசயனம் - சர்ப்பசயனம், மலையாளதேசத்துள்ள ஒரு விட்டுணுதலம்.
அநந்தசயனன் - சேடசயனன், விட்டுணு.
அநந்தசாயி - விட்டுணு.
அநந்தசீரிடை - வாசுகியின் மனைவி.
அநந்தசுகம் - வரம்பிலா இன்பம்.
அநந்தசொரூபி - கடவுள்.
அநந்தஞானம் - வரம்பிலாஅறிவு.
அநந்தஞானி - கடவுள், பார்ப்பதி, பிரமன்.
அநந்ததரிசனம் - வரம்பிலாக்காட்சி.
அநந்ததிட்டி - இந்திரன், சிவன்.

அநந்ததிருதியை - புரட்டாசி மார்கழி வைகாசி என்னும்மாதங்களில் வரும் சுக்கிலபக்கத்திருதியை.

அநந்ததீர்த்தகிருத்து - பதினன்காஞ் சமணதீர்த்தகன்.

அநந்ததீர்த்தம் - சிதம்பரத்திலே திருக் கோயிலுக்குமேற்கே திருவனந்தேச் சுரத்துக்கு முன்னுள்ள ஒருதீர்த்தம்.

அநந்ததேவன் - அநந்தேசுவரன், ஆதி சேடன், சேடசயனத்திற் றுயில் கொள்ளுகிறவிட்டுணு.

அநந்ததை - நித்தியம்.

அநந்தத்துவம் - அனந்தமாயிருக்குந் தன்மை.

அநந்தநாதன் - சருவேசன்.

அநந்தநான்மை - அனந்தசதுட்டயம்.

அநந்தமயன் - அந்தரியாமி.

அநந்தம் - அளவின்மை, ஆகாயம், ஒரெண், கோளகபாஷாணம், குப்பைமேனி, சிறுகாஞ்சோறி, பொன்.

அநந்தரம் - மேல்.

அநந்தரூபன் - அளவிறந்த ரூபங்களைக் கொண்டவன், சிவன், விட்டுணு.

அநந்தர் - சுத்ததத்துவங்களுள் ஒன்றாகிய ஈசுரதத்துவத்திலிருக்கும் அட்டவித்தியேசுரர்களுக்குள்ளே தலைமை பெற்றவராகிய சுத்தாத்துவ சருத்தாவாயிருப்பவர்.

அநந்தலோசநன் - கடவுள், புத்தன்.

அநந்தவாதம் - ஒருவகை வாதரோகம் அது முகமுங்கழுத்துஞ் சோரும்படி செய்வது.

அநந்தவிபவை - பார்வதி.

அநந்தவியம் - சுவாயம்புதவாகமத்திலே சொல்லப்படும் ஒருமண்டலம், பஞ்சபாண்டவருள் தலைவனான தருமனுடைய ஓர் சங்கு.

அநந்தவிரதம் - புரட்டாசிமாதச் சுக்கில சதுர்த்தசியில் விட்டுணுசமயத்தார் அனுட்டிக்கும் ஒருவிரதம்.

அநந்தவீரம்
அநந்தவீரியம் } அளவில்லாதவீரம்.

அநந்தவீரியன் - சைனமதத்திற்சொல்லப்பட்ட இருபத்துமூன்றாந் தீர்த்தகரன்.

அநந்தன் - அருகன், கடவுள், சிவன், சேடன், சோரபாஷாணம், திருமால், பலபத்திரன்.

அநந்தாசனம் - பஞ்சாசனங்களுள் ஒன்று. அது சர்ப்பாசனம்.

அநந்தானந்தம் - வரம்பிலாவானந்தம்.

அநந்நியம் - அளவற்றிருக்கை, எண் கூற்றிருக்கை, நித்தியம்.

அநந்தீச்சுரம் - சிதம்பரத்திலே பதஞ்சலி முனிவராலே தாபிக்கப்பட்ட கோவில்.

அநந்தேசுரர் - அநந்தேசுவரர்.

அநந்தேசுவரர் - ஈசுவரதத்துவத்தி லுள்ள எட்டுப்புவனங்களுள் ஒன்று. சுத்தாசுத்தாத்துமாவிற்குக் கருத்தராகிய அனந்தர். இவர் ஈசுவரதத்துவத்தைத் தமதிருப்பாகக்கொண்டு அத்தத்துவத்திற் சுபிமான தேவதையாயிருப்பவர்.

அநந்தை - பார்வதி, அழிவில்லாதவள், ஒருசத்தி, பூமி.

அநங்கியசன் - மன்மதன்.

அநந்நியம் - அன்னியமல்லாதது, ஒற்றுமை.

அநந்நியை - அபின்னசத்தி.

அநந்வயாலங்காரம் - இயைபின்மையணி

அநபக்கிரியை - கடனிறுக்காமை, நோப்படுத்தாமை, பழிக்குப்பழி வாங்காமை.

அநபத்தியம் - பிள்ளையின்மை.

அநபரன் - பிரமன்.

அநபாயம் - அழிவின்மை, குறைவின்மை, தேய்வின்மை.

அநபாயன் - அநபாயனென்னுஞ் சோழச்சக்கரவர்த்தி, அழிவில்லாதவன், சிவன், நிலையாயிருப்பவன்.

அநபாயோகம் - சந்திரனுக்குப் பனிரண்டாம் இடத்திற் சுபக்கிரகங்கள் நிற்குநிலை.

அநபிகிதகருத்தன் - அநபிகித கருத்தா.

அநபிகிதகருத்தா - தன்செயலையுணர்த்தும் வினைக்கு எழுவாயாகாது மூன்றாம் வேற்றுமையிலே அல்லது நான்காம்வேற்றுமையிலேநிற்குங்கருத்தா "மகன் றந்தையாலடிக்கப்பட்டான்!' என்னும்வாக்கியத்திலேஅடித்தலைச் செய்த தந்தை மூன்றாம் வேற்றுமையி னிற்பதும் அவர்க்குச் செய்யத்தகும் "அக்காரியம்" என்னும் வாக்கியத்திலே செய்தற்கருத்

தாவாகிய "அவர்" நான்காம் வேற்றுமையிலே நிற்பதும் போல்வது.
அநபிகிதகருமம் - செய்வினைக்கெழுவாயாகாது. உ-ஆம், ௩-ஆம் ச-ஆம், ௬-ஆம் வேற்றுமைகளுள் ஒன்றனதுருபமாகவருஞ் செயப்படுபொருள். அது "மரத்தை தக்குறைத்தான்" "ஆலத்தினை லமுதாக்கிய கோன்" "அவட்குக்கொள்ளுமிவ்வணிகலம்" "குடும்பத்தினது குற்றமறைப்பான்" என்பவற்றிற்போலவருவது.
அநபிகிதம் - சொல்லப்படாதில்லை, தெரியாதில்லை.
அநபிமதம் - சம்மதமின்மை.
அநபிவியத்தம்-வெளிப்படையாகாதது.
அநபிவியத்தி - வெளிப்படையாகாமை.
அநபேட்சன் - ஆசையில்லாதவன்.
அநபை - அநபாயோகம்.
அநப்பியாசம் - அப்பியாசமின்மை.
அநம் - சோறு.
அநம்பு - சாதகப்புள், நீரில்லாதது.
அநயம் - அதிட்டவீனம், தீங்கு, வருத்தம்.
அநரண்ணியன் - சூரியவமிசத்திற்பிறந்த பாணனென்பவனுடைய மகன்.
அநரவன் - பஞ்சபட்சிபாஷாணம், வெங்தோன்றி.
அநருகம் - தகுதியற்றவர்.
அநர்க்களம் - தடையின்மை.
அநர்த்தகம் - பிரயோசனமின்மை.
அநர்த்தம் - பயனிலாச்சொல்.
அநலக்கிரி - அண்ணாமலை.
அநலசனபட்சி - தழல்விழுங்கிப்பறவை
அநலநட்சத்திரம் - செவ்வாய்நின்றநாளுக்கேழாநாள், பதினொன்காநாள், பதினெருநாள், இருபத்தைந்தாம் நாளாய்வந்து தோஷமடைந்தநாள்.
அநலபித்தம் - உண்பதைச் சீரணிக்கச் செய்யும உதராக்கினி.
அநலம் - அக்கினி, அநலநட்சத்திரம், உட்டணம், சித்திரைமூலம், சிவாகமம் இருபத்தெட்டினுள் ஒன்று, திருத்தியற்றது, பித்தம்.
அநலர் - அக்கினியுடையவர்.
அநலல் - கனலுதல், வெப்பமாயிருத்தல்.
அநலன் - அக்கினிதேவன், அட்டவசுக்களிலொருவன்.
அநலாடி - சிவன்.
அநலி - சூரியன், நெருப்பு.
அநலுதல் - கனலுதல்.
அநலேறு - இடியேறு.
அநலோடுவேந்தன் - கார்முகிற் பாஷாணம்.
அநல்-அக்கினி, உட்டணம், கொடிவேலி,பித்தம்,மூலாக்கினி,வன்னியிலை.
அநல்காலி - சூரியகாந்தக்கல்.
அநல்வென்றி - தங்கம்.
அநவசரம்-அகாலம்,ஓய்வுநேரமின்மை.
அநவச்சின்னத்துவம் - அனவச்சின்னமாயிருக்குந்தன்மை.
அநவச்சின்னம் - எல்லைப்படாதது.
அநவதானம் - அவதானமின்மை.
அநவத்தாதோஷம் - முடிபுகாணமையாகியதோஷம்.
அநவத்தானம்-தவறுனநடை, தவறுனநிலை, நிலையின்மை, வாயு.
அநவத்திதம் - நிலையற்றது.
அநவத்தை - அநவத்தாதோஷம்.
அநவத்தைப்படுதல் - முடிபுகாணுது முட்டுப்படுதல்.
அநவபாசம்-தோற்றமை,வெளிப்படாமை.
அநவரதம் - எப்பொழுதும்.
அநவலோபம் - இச்சித்தபண்டங்களைத் தந்து திருத்திசெய்தல்.
அநவலோபனம் - கருப்பந்தரித்த மூன்றுமாதத்திற் செய்யப்படுங் கருப்பக்கிரியை.
அநவ்வியயகிருத்து - அவ்வியயமல்லாதகிருத்து.
அநற்கல் - சிக்கிக்கல்.
அநற்புதம் - அற்புதமின்மை.
அநற்றல் - எரித்தல், கனலச்செய்தல், சுடுதல்.
அநற்பிரான் - சோதிரூபி.
அநற்றுதல் - எரித்தல், சுடுதல்.
அநாகதசிவமூர்த்தி - அனுகத சிவமூர்த்தங்கொண்டது.
அநாகதசிவன் - பரமசிவத்திலிருந்து தோன்றினவருஞ் சதாசிவத்தைத் தோற்றுவித்தவருஞ் சகளநிட்களபோகருமான சிவன், இவர் வியாபினிக்குமேல் நாலங்குல அளவிலிருக்கின்ற வியோம என்னுஞ் சமனையின் தானத்தை வியாபித்தவர்.

அநாகதநாதம் - பராசத்தி.
அநாகதம் - அடிக்கப்படாமை, அறியப்படாதது, சம்பாதித்துக் கொள்ளப்படாதது, சொல்லப்படாதது, நோய்படுத்தப்படாமை. வெளுக்கப்படாததும் புதிதுமானசீலை, மானுடசரீரத்திலுள்ளவாகச் சொல்லப்படு மாறுதாரங்களின் நான்காவது. அது மணிபூரகத்துக்குப் பத்துவிரற் பிரமாணத்திற்குமேல் இருதயகமலத்தின் முக்கோணவடிவினதாய்ப் பன்னிரண்டிதழுடையதா யிருக்கும், வந்தடையாமை, வருங்காலம்.
அநாகந்துகம் - அனுதியாயுள்ளது, இடையில்வந்த தல்லாதது.
அநாகாமி - பௌத்தமதத்தின் தியானங்க ளைந்தனுள் மூன்றுவது.
அநாகாரம்-உணவின்மை, வடிவின்மை.
அநாகாலபிருதன் - பஞ்சகாலத்திலே தன்னைக் காத்துக்கொள்ளும்படி ஒருவனுக் கடிமையானவன்.
அநாகாலம் - பஞ்சகாலம்.
அநாகுலன் - இடைச்சங்கத்தார் காலத்திருந்த தெய்வப்பாண்டியன்.
அநாசத்தன் - விருப்பமில்லாதவன்.
அநாசரணம் - ஒழுக்கந்தவறின நடை, துன்னடை.
அநாசரித்தல் - துராசாரமாய் நடத்தல்.
அநாசாரம்-உபசாரமின்மை, உலகநடைக்கு மாறு, சீலயுடாமை, நல்லொழுக்கமின்மை, கிருவாணம், மரியாதையின்மை. [ன்.
அநாசாரன் - நல்லொழுக்கமில்லாதவ
அநாசிகன் - மூக்கில்லாதவன்.
அநாசிரயம் - சார்பின்மை, பற்றுக்கோடாதலின்மை.
அநாசிரிதம் - சார்பில்லாதது, பற்றுக்கோடாகாதது.
அநாசிரிதர் - அநாசிரிதையைப்பொருந்தினவர், ஒன்றைப்பற்றுக்கோடாகக் கொண்டு பொருந்தாதவர்.
அநாசிரிதன் - அபேட்சியாதவன்.
அநாசிரிதை - சாந்தியாதீதகலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப் புவனங்களுளொன்று. சோடசகலைப்பிராசாதத்திற்பதினுன்காவதுகலை. இது வியாபினிகலைக் கப்பாலுஞ் சமனைகலைக் கிப்பாலும் நடுவிலிருக்கின்ற நான்குகலைகளுள் நான்காவதும் அந்தநான்கி லொன்றுன அனுதைகலைக்குமே லோரங்குலத்தில் துவாசாந்தத்து ளிருப்பதுமான அதன்வடிவு வட்டமென்று சொல்வர்.
அநாசிரியர் - ஆசிரியரல்லாதவர்.
அநாதகி - சந்நியாசி.
அநாதபம் - குளிர்மை, நிழல், வெயிலின்மை.
அநாதம் - அந்தரித்தது, ஆதரவற்றது.
அநாதரட்சகர் - கடவுள்.
அநாதரம் - மதியாமை.
அநாதரித்தல் - பற்றிக்கொள்ளாது விடுதல்.
அநாதர் - ஆதரிப்போரில்லாதவர்.
அநாதன் - ஆதரவில்லாதவன்.
அநாதி - கடவுள், சிவன், புராதனம்.
அநாதிகரம்பு - நெடுநாளாகப் பாழாய்க்கிடந்தநிலம்.
அநாதிகாரணம்-பிரபஞ்சத்தினது முதற்காரணமாகிய மாயை.
அநாதிசடிலன் - சிவன்.
அநாதிசித்தபதி-அநாதியாய்ச் சித்தித்த பதித்துவமுடையவர்.
அநாதிசித்தன் - அருகக்கடவுள்.
அநாதிசைவம்-பதினறுவகைச் சைவத்துளொன்று. அது பதி பசு பாசம் என்னும் மூன்றும் அநாதிசித்தமாய் வியாத்தமாய் இருக்கின்றன என்றும் பதிப்பொருளாகிய சிவனை முக்குண விகற்ப மில்லாதவனுய்க் கண்டு விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் குருலிங்கவேடம் பொருளாய்க் கொண்டு சிவபூசைசெய்து பாசம் நீக்கி ஆன்மாவானது சிவனுடன் சேர்ந்தவனைக் கும்பிட்டிருத்தல், பரமுத்தியென்றுஞ் சொல்லும்.
அநாதிசைவன் - சதாசிவமூர்த்தி.
அநாதிதரிசு - நெடுநாளாகப் பாழாய்க்கிடந்தநிலம். [தியத்தன்மை.
அநாதித்துவம் - தொடக்கமில்லாத நித்
அநாதிநாதர் - கௌளயாமளாதிகளைக் கற்பித்த நவநாத சித்தர்களில் ஒருவர்.
அநாதிநின்மலன் - அநாதியாகவே மலரகிதமாயிருப்பவன்.

அநாதிபஞ்சர் - நெடுநாளாய்ப் பாழாகக் கிடந்த நிலம்.
அநாதிபந்தம் - அநாதியாயுள்ள பந்தம்.
அநாதிபீடு - நெடுநாளாய்ப் பாழாகக் கிடந்த நிலம்.
அநாதிபெத்தசித்து-அநாதியே ஆணவ மலத்திலேகட்டுண்டுகிடந்த ஆன்மா.
அநாதிபெத்தன் - அநாதியே மலத்திற் கட்டுண்டவன்.
அநாதிபோதம் - இயல்பாகவே ஞான முடைமை, இக்குண மலரகிதமான ஆன்மாவுக்குரியதாகலால் இதனை அநாதிமுத்தத்தன்மையில் அடக்குவர். [வனுன கடவுள்.
அநாதிபோதன்-நித்திய ஞானமுடைய
அநாதிமலமுத்தர்-இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர்.
அநாதிமான்-அநாதியுள்ளதா யிருப்பது.
அநாதிமுத்தசித்து - இயல்பாகவே பாசங்களின் நீங்கினவனுன கடவுள்.
அநாதிமுத்தசிவன்-அநாதியே மலபந்த மின்றியிருக்குஞ் சிவன்.
அநாதிமுத்தத்துவம் - இறைவன து குணங்களுள் ஒன்று. அது இயல்பாகவே பாசங்களில் நீங்கியிருக்குந் தனிமையாம்.
அநாதிமுத்தன் - அநாதியே மலத்தாற் பந்திக்கப்படாத கடவுள்.
அநாதியமலன் - அநாதியே மலமில்லாத நிட்கள சிவன்.
அநாதியன் - அநாதியாயுள்ள கடவுள்.
அநாதியுருத்திரர் - ஈசுர தத்துவத்திலிருக்கிற பதினெட்டு ருத்திரர்களுள் ஒருவர்.
அநாதிரேக்கியம் - மிகுதியின்மை.
அநாதிநவம் - ஆதீனமின்மை, சுத்தம்.
அநாதுரம் - அறிவின்மை, சிரமமடையாமை, தைரியம், நோயின்மை.
அநாதேயம் - ஆதேயமற்றது.
அநாதை - ஒருசத்தி, அது ஞானசொரூபமாய் ஞானசத்தியாயிருக்கும் சாந்தியாதீதகலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப்புவனங்களுள் ஒன்று. சோடசகலைப் பிரசாதத்திற் பதின்மூன்ருவது கலை. அது வியாபினிகலைக்கப்பாலுஞ் சமனைகலைக் கிப்பாலும் நடுவிலிருக்கின்ற நான்குகலைகளின் மூன்ருவதும் அந்த நான்கிலொன்ருன அநந்தைகலைக்கு மேலோரங்குலத்திற் றுவாதசாந்தத்திருக்கின்றதுமானது.
அநாத்தன் - ஆத்தனல்லாதவன்.
அநாத்துமலட்சணம் - ஆத்துமாவல்லாததனிலட்சணம் அவ்விலட்சணங்கள் அசத்து, சடம் என்பன.
அநாத்துமா - ஆத்துமாவல்லாத பதார்த்தம், தன்னையடக்கி ஆண்டுகொள்ளாமை.
அநாத்தை - அவசங்கை, நிலையின்மை.
அநாந்தம் - இறுதியல்லாதது.
அநாமயம் - நோயின்மை.
அநாமயன் - கடவுள், நோயில்லாதவன்.
அநாமிகை - ஆழிவிரல், பெயரில்லது.
அநாமை - அநாமிகை.
அநாயகம் - அரசாட்சியின்மை, முதன்மையின்மை.
அநாயதம் - தடையினில்லாதது, நீளமில்லாதது, பிரிவின்றி நெருங்கிய தொடராயிருப்பது.
அநாயம் - அநியாயம்.
அநாயாசகவாதம் - ஒருவகை வாதம். அது வேகமான வோட்டம், மலசலமுதலிய பதினுன்கு வேகத்தை அடக்கிவிடுதல், சீதளவஸ்து கூயபோசனம் இவைகளினுற் பிறந்து சகல தாதுக்களிலும் வியாபித்துச் சரீரத்தில் மதத்தல், குத்தல், கனத்தல் முதலிய நாஞவித வருத்தங்களை யுண்டாக்கும்.
அநாயாசம் - அலைவில்லாதது, இலகு, சோம்பின்மை.
அநாயு - தக்கன் மக்களுள் ஒருத்தி. அவள் விருத்திராசுரன்-முதலிய நாற்பது பிள்ளைகளுக்குந் தாய்.
அநாரதம் - எப்போழுதும்.
அநாரபதம்-ஆரம்பஞ்செய்யப்படாதது.
அநாரம்பம் - தொடக்கமின்மை.
அநாரியதித்தம் - நிலவேம்பு.
அநாரியர்-ஆரியரல்லாதவர், மிலேச்சர்.
அநாரோக்கியம் - நோய்.
அநார்ச்சவம் - மனக்கோட்டம், மனநேர்மையின்மை, வளைவு, வியாதி.
அநாவிருஷ்டி } மழைக்குறைவு.
அநாவிருட்டி } மழைக்குறைவு.

அநாவிருதம் - தடையின்மை, மறைக்கப்படாதது.

அநாவிருத்தி - திரும்பிவாராமை, மறுதரம் பிறவாமை, பாசமுத்தி.

அநாவிலம் - கலங்கலின்மை, தெளிவு.

அநாவிலன் - சுக்கிரன்.

அநான்ம - ஆன்மாவல்லாதது.

அநான்மபுத்தி - ஆத்துமாவல்லாத தேகாதிப்பிரபஞ்சத்தை உண்மையாகத் தானென்றுகொள்ளுதல்.

அநான்மவாதி - ஆன்மாவென் றொருபொருளில்லை என்று சொல்லுவோன்.

அநான்மா - ஆன்மாவல்லாதது, ஆன்மாவல்லாததேகாதிப்பிரபஞ்சம். தேக [ம்.

அநி - நெற்பொரி.

அநிகம்-சங்கம் மூன்று கொண்டபடை.

அநிகர் - சேனையாளோர்.

அநிகேதன் - நிலையான வாசஸ்தானமில்லாதவன்.

அநிக்கிரகம் } கட்டுப்பாடின்மை,
அநிக்கிரகித்தல் } காத்தல்.

அநிசம் - நித்தியம்.

அநிச்சகன் - விருப்பமில்லாதவன்.

அநிச்சாப்பிராரத்தம் - ஒருவருக்குப் பிரியமில்லாதிருந்தும் வலாற்காரத்தினால் அவரைப் பயனனுபவிக்கச் செய்யும் முன்னைவினை.

அநிச்சிதம் - நிச்சயிக்கக்கூடாதது.

அநிச்சை - இச்சையின்மை. [ழிதல்.

அநிட்டநிவிர்த்தி - வேண்டாதன வொ

அநிட்டப்பிரசங்கம் - தருக்கப் பாஷையிற்சொல்லப்படும் எட்டாம் பதார்த்தமாகிய தருக்கம். அது சித்தமான வியாத்தியையுடைய தருமங்களுள் வியாப்பிய அங்கீகாரத்தால் வியாபகத்தின் வரவு.

அநிட்டம் - இட்டமல்லாதது, விரும்பப்படாதது.

அநிட்டை } உறுதியின்மை.
அநிஷ்டை }

அநிதம் - அநித்தியம்.

அநிதானம் - அனுதாரம்.

அநித்தம் - அநித்தியம்.

அநித்தியகாலம் - முடிவுகாலம்.

அநித்தியசமம்-உதாரணத்தால் ஞாயம் பேசல்.

அநித்தியசமாசம் - நித்தியசமாசமில்லாத சமாசம்.

அநித்தியதை - அநித்தியத்துவம்.

அநித்தியத்துவப்பிரசங்கம் - அநித்தியத்துவஞ்சாதித்தல்.

அநித்தியத்துவம் - நித்தியத்துவமல்லா

அநித்தியம்-நிலையின்மை,பொய். [மை.

அநித்தியலிங்கம் - வடமொழியில் விசேடணமாகி வரும்பதம் ஒரு லிங்கத்தில் நின்றது விசேடியமாகிவரும் பதத்திற்கொத்ததாக மற்றொன்றாக வரும் லிங்கம்.

அநித்திரைச்சுரம் - அறுபத்துநான்கு வகைச்சுரரோகங்களுள்ஒன்று. அது நித்திரையின்மை, தேகவெரிச்சல், தாகம், மயக்கம், தலைத்திருப்பல், நாவும் வாயுமுலரல், மேற்சுவாசம், சிதளம் அதிகரித்தல்,மிகுகூச்சல்,அடித்தொடைச்சதையு முழங்காற் சதையும்நோவு, ஈனத்தொனியான வார்த்தை, சதாவிருமல், மூர்ச்சை என்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.

அநிந்திதை-உமாதேவியுடையதோழிப் பெண்களுள் ஒருத்தி, நிந்திக்கப்படா [தவள்.

அநிமாவினம் - சாவு.

அநிமிடம் - இமைவெட்டாமை, மற்சம்.

அநிமிடன் - கண்ணிமைக்காதிருப்பவன், தேவன், விட்டுணு.

அநிமீலனம் - இறவாமை.

அநிமேடம் - பிசாசு, மீன்.

அநிமேடன் - இமையாது கண்ணூன்றிப்பார்ப்போன், கடவுள்.

அநியதகன்மம் - ஈட்டியமுறையில் வாராமற் பக்குவம்வந்துழிப் புசிக்கவருங் கன்மம். அது அசுவமேதமும் பிரமஹத்தியும் ஒருகாலத்திற் செய்யப்பட்டுப் பக்குவம் வந்துழி ஒருங்கே இரண்டும் புசிக்கப்படாமையிற் கருத்தால் இன்னகாலத்தில் இதுவென்றறுத்திப் புசிக்குமதுபோல்வது.

அநியதகாலம் - நியமமல்லாதகாலம்.

அநியதகாலோபபோக்கியம் - இன்னவேளை புசிக்கப்படுமென் றறியப்படாத கன்மம்.

அநியதம் - அழிவுள்ளது, விலக்கியது.

அநியமச்சிலேடை - சிலேடையணியில் ஒன்று.

அநியமம் - தேகம், குன்னடை, விலக்கியது.

அநியமவுவமை - நியமித்தவுவமையை விலக்கிப் பிறிதொரு பொருளைக் கூட்டி உவமிப்பது (உ-ம்) "மதிவாள் முகமே நின்வா யொப்பதன்றி-யது போல்வதுண்டெனினுமாம்".

அநியம் - அன்னியம்.

அநியாயசம் - அநியாயத்தா லுண்டாயிருப்பது.

அநியாயம் - நியாயமின்மை.

அநிரதம் - சத்துருபத்துக்கன்னியமாகு மாயை.

அநிராகருத்தா - அநிராகருத்திருசம்பிரதானம்.

அநிராகருத்திரு சம்பிரதானம் - கோளாதேற்றலில் "முக்கண் மூர்த்திக்குப் பூவிட்டான்" என்பதிற்போல் வருநான்காம்வேற்றுமை.

அநிருதம் - உள்ளதல்லாதது, பொய்.

அநிருதவாதி - பொய்பேசுவோன்.

அநிருத்தபதம் - ஆகாயம்.

அநிருத்தபாவினி - அநிருத்தன் மனைவியான உஷை.

அநிருத்தம்-தடையின்மை, நன்குவிளக்காமை.

அநிருத்தன் - அடங்காதவன், கிருட்டினன் பௌத்திரன், மன்மதன் மகன்.

அநிருமலம் - அழுக்கு.

அநிருவசனம் - சொல்லொண்ணாதது.

அநிர்தம் - ஒன்றுமில்லாதிருத்தல், மாயை.

அநிர்வசனம் - வசனித்தற்கியலாத இல்பொருள்.

அநிர்வசனியம் - வசனிக்கப்படக் கூடாதது.

அநிர்வாகம் - இயைபின்மை, உணவுக்கு வழியின்மை, ஒவ்வாமை, பூரணமின்மை.

அநிலசகன் - நெருப்பு.

அநிலசம் - செம்முகக்குரங்கு.

அநிலச்சூலை - வாதசூலை.

அநிலநாள் - சோதிநாள், விசாகநாள்.

அநிலம் - காற்று, வாதரோகம், பிறப்பு.

அநிலன் - அட்டவசுக்களில் ஒருவன், ஓரவுணன், வாயு.

அநிலாசனம் - உபவாசம்.

அநிலாத்துமகன் - அனுமான், வீமன்.

அநிலாமயம் - வாதநோய்.

அநிலி - சோதிநாள்.

அநிவாரிதம் - தடுக்கப்படாதது.

அநீகம் - அநிகம், ஒருபடைத்தொகை.

அநீகிதம் - விரும்பப்படாதது, கவனமின்மை, போர்.

அநீகினி-சேனை, தாமரை, படைத்தொகைகளுளொன்று. அது இரண்டாயிரத்து நூற்றெண்பத்தேழு ஆனைகளும் அவ்வளவு தேர்களும் ஆறாயிரத்தைந்நூற்றறுபத்தேழு குதிரைகளும் பதினாயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தைந்து காலாட்களுங் கொண்டது, இஃதக்குரோணியின் பத்தில் ஒருபங்கு.

அநீசம் - மரியாதை.

அநீசன்-சாமர்த்தியமில்லாதவன், தலைவனில்லாதவன், நீசனல்லாதவன்.

அநீசுரவாதி, அநீசவாதன் - கடவுள் இல்லை என்னும் மதஸ்தன்.

அநீச்சுரத்துவம் - ஈச்சுரனில்லையென்னும் பாவம்.

அநீச்சுரவாதி, அநீச்சுவாதன் - கடவுளில்லையென்பவன்.

அநீதம் - நீதியின்மை.

அநீதர் - கீழ்மக்கள், நீதியற்றோர்.

அநீதி - நீதிக்கேடு.

அநீதிமான் - நீதியில்லாதவன்.

அநீதியர் - நீதியின்மையர்.

அநு - அணு, கதுப்பு, தொடர்ச்சி.

அநுகதம் - சம்பாஷணை.

அநுகதம் - ஈட்டப்பட்டது, தொடர்பு, நிச்சயிக்கப்பட்டது.

அநுகதன் - பின்றொடர்வோன்.

அநுகதி, அநுகதிகம் - பின்போதல்.

அநுகமம், அநுகமனம் - கூடப்போதல், தனது நாயகனோடு உடன் கட்டையேறுதல், பின்போதல்.

அநுகம் - செஞ்சந்தனம்.

அநுகம்பம், அநுகம்பனம் - இரக்கம், கிருபை.

அநுகம்பை - அநுக்கிரகம், இரக்கம்.

அநுகரணம் - ஒப்பாதல், வேறொன்று செய்வதுபோலச் செய்தல்.

அநுகரணவோசை - ஒலிக்குறிப்பு.

அநுகரி - யானையின்மேல்,

அநுகருடணம்-ஆகருஷணம். அது மந்திரத்தினால் அழைத்தல், இழுத்தல்.
அநுகவீனன் - இடையன்.
அநுகற்பம்-உபவிதி, பிரதமகற்பமாகிய உரியபொருள் கிடையாதகாலத்துக் கொள்ளப்படும் இரண்டாம்பொருள் பிரதிவிதி, மூவகை விபூதிகளிலொன்று. அது காட்டிலுலர்ந்து கிடந்த கோமயத்தை எடுத்திடித்துத் தூளாக்கி மந்திரத்தோடு கோசலம்விட்டுப் பிசைந்து உண்டையாக்கி அக்கினியில் வைத்தெடுக்கப்படுவது.
அநுகன் - கணவன், காமவிச்சையுடையோன், பின்றொடர்வோன், யசமானன், வேலைக்காரன். [ன்.
அநுகாமி - கூடச்செல்வோன், தோழ
அநுகாரம் - ஒப்புமை, வேறொன்று செய்தல்போலச் செய்தல்.
அநுகிருதி-அநுகரணம்,ஒத்தசெய்கை.
அநுகிலாதன் - இரணியனது மக்களுளொருவன்.
அநுகீர்த்தனம் - பிரசித்தஞ்செய்தல்.
அநுகுணம்-ஏற்றது, அனுகூலமானது.
அநுகுணாலங்காரம் - தன் குணமிகையணி. அது மற்றொரு சார்பினால் தனதியற்கைக்குண மிகுதல்.
அநுகூலசாத்திரம் - ஆத்தவாக்கியமாகிய விம்சைக்குரியவைகளையும் பரோட்சார்த்தங்களையுங் குற்றமறவுணர்த்திச் சுருதியின் முதன்மையை விளங்கப்போதிக்கின்ற வழிநூல்.
அநுகூலம் - காரியசித்தி, விக்கினமின்மை.
அநுகூலர் - அனுகூலமுடையவர்.
அநுகூலன் - உபகாரி, சிங்கார நாயகர், நால்வருளொருவன், சிநேகன்.
அநுகூலி - சகாயஞ்செய்வோன்.
அநுகூலித்தல் - அநுகூலமுடைய தாதல்.
அநுகோதம் - மூளையின் பிற்பக்கத்திற் கீழ்ப்பிரிவாகிய சிறிய மூளை.
அநுக்கம் - சந்தனம், சோம்பு, பயம், பாம்பு, வருத்தம்.
அநுக்காட்டல் - சாடைக்காண்பித்தல்.
அநுக்காரம் - ஒப்புமை.
அநுக்கிரககர்த்தா - அனுக்கிரக கிருத்தியம் செய்யுங் கடவுள்.

அநுக்கிரகபரை - அனுக்கிரகத்தை முக்கியமாக உடையது, பராசத்தி.
அநுக்கிரகம் - சிவனுடைய பஞ்சகிருத்தியங்களுளொன்று. அது பசுவாகிய ஆன்மாவின் மலநீக்கிச் சிவத்துவம் வருவித்தல், தீட்சைசெய்தல், தீமையைநீக்கி நன்மையை அதிகப்படுத்தலாகிய தயவு.
அநுக்கிரகாங்குரம் - அநுக்கிரகமுண்டாதல்.
அநுக்கிரகித்தல் } அநுக்கிரகஞ் செய்
அநுக்கிரகிப்பு } தல்.
அநுக்கிரமணம் - கிரமமாக நடத்துதல், பின்போதல்.
அநுக்கிரமணி } நூலினிடத் தடங்
அநுக்கிரமணிகை } கிய விஷயங்களிவை எனச் சுருக்கிச் சொல்லும் பாகம்.
அநுக்கிரமம் - கிரமப்படி நிகழ்தல்.
அநுக்கிராககன் } அனுக்கிரகஞ் செய்
அநுக்கிராகி } பவன்.
அநுக்கிராகம் - அநுக்கிரகஞ்செய்தல்.
அநுக்கிராகிணி - அனுக்கிரகஞ் செய்பவள்.
அநுக்கிராகியத்துவம்- அனுக்கிரகிக்கப்பட யோக்கியமாயிருத்தல்.
அநுக்கிராகியம் - அனுக்கிரகிக்கப்பட யோக்கியமானது.
அநுக்கிராகியர் - அனுக்கிரகிக்கப்படுதற்கு யோக்கியமானது.
அநுக்கிராகியன் - அனுக்கிரகிக்கப்படுதற்கு யோக்கியமுள்ளவன்.
அநுக்கிராகியானுக்கிராகக சம்பந்தம் - அனுக்கிரகிக்கப்படுவதும் அனுக்கிரகிப்பதுமாகிய சம்பந்தம்.
அநுக்குரோசம் - இரக்கம்.
அநுசங்கம் - அதிகாரத்தால் வருவித்து முடிப்பது, இரக்கம், காரணகாரியத் தொடர்ச்சி, விருப்பம்.
அநுசங்கிதம் - காரியமாகத் தொடர்ந்தது, கூடநிகழ்வது, சம்பந்தப்பட்டது.
அநுசந்தாத்திரு-அனுசந்தானஞ் செய்வோன், கூடஸ்தன்.
அநுசந்தானம்-ஆயத்தப்படுதல், இடையறாது சிந்தித்தல், இலக்குப்பார்த்

அநுபந்தை - தாகம், விக்கல்.
அநுபபத்தி - சத்தியத்தைச் சாதிக்க வல்லதல்லாதது, சித்தாந்தமாகாத நியாயம், சித்தியாகாமை, தகுதியின்மை, நிறைவேறுமை, பிரயோகிக்கப்படாமை, பொருத்தமின்மை, யுத்தியில்லாமை.
அநுபபத்திப்பிரசங்கம் - முற்றுப்பெறுதறாதல்.
அநுபபத்தியேது - சாத்தியத்தைச் சாதிக்கவல்லாதவேது, சித்தாந்தமாகாத நியாயம்.
அநுபமம் - தனக்குநிகரில்லாதது, மிகச்சிரேட்டமானது.
அநுபமன் - தனக்குநிகரில்லாதவன், மிகச்சிரேட்டன்.
அநுபமை - உவமையின்மை, தென்மேற்றிசையானைக்குப் பெண்யானை மிகச் சிரேட்டமானது.
அநுபம் - சேற்றுநிலம், மிகுதியும் நீர்ப்பாங்கான நிலம்.
அநுபயம் - இரண்டுமல்லாதது.
அநுபயோகம் - உபயோகமில்லாதது.
அநுபலத்தம் - அடையாமை, காணப்படாதது.
அநுபலத்தி - அநுபலத்தி அலங்காரம், உண்டென்று ஞானத்தினின்மை.
அநுபலத்தியலங்காரம் - நகர்ச்சியின்மையணி.
அநுபலத்தியேது - மூன் றேதுக்களுளொன்று. அது சீதமின்மை, பனியின்மையைக் காட்டல்போலப் பிறிதொன்றின் இல்லாமையைக் காட்டும் ஒன்றனது இல்லாமை யாகிய ஏது.
அநுபலத்திவேத்தியம் - இல்லாமையைக்கொண்டறியப்படுவது.
அநுபல்லவம் - நனித்தளிரை யடுத்திருக்கும் கீழ்த்தளிர்.
அநுபல்லவி - பதமென்று வழங்குஞ் செய்யுளின் இரண்டாமுறுப்பு.
அநுபவபூமி-இருவகை ஞானபூமிகளுளொன்று, அது சத்துவாபத்தி, அசஞ்சத்தி, பதார்த்தாபாவனை, துரியகாமி என நான்குவகைப்படும்.
அநுபவப்படல் - உற்றறிதல்.
அநுபவம் - அநுபோகம், காரியம், கைவல்லியம், சுகபோகம், தானே கண்டறியுமறிவு, நினைவிற்கு வேறாகிய உணர்வு, வாசனையாற் றோன்றும் அறிவு.
அநுபவாரூடம்-அநுபவத்திலேறினது.
அநுபவி - உலக விவகாரங்களை நினையாமல் ஆத்தமவிவேகத்தை அடைந்து ஒரு சனனத்தில் சீவமுத்தனாகுவோன்.
அநுபவித்தல் - துய்த்தல்.
அநுபவிப்பு - அநுபோகம்.
அநுபவியம் - அநுபவிக்கப்படுவது.
அநுபவை - பார்ப்பதி.
அநுபவைகவேத்தியம் - அனுபவமொன்றாலே அறியத்தக்கது.
அநுபவைகவேத்தியன் - அனுபவமொன்றாலே அறியத்தக்கவன்.
அநுபாகம் - அலகுக்குரிய பாகம்.
அநுபாடணம் - கண்டிக்கும்பொருட்டாக ஒரு பிரதிஞ்ஞையைத் திரும்ப எடுத்துச் சொல்லுதல், சொன்னதைப் பின்னுஞ்சொல்லுதல்.
அநுபாடித்தல் - அநுவதித்தல், ஒருவர் சொன்னதை எடுத்துச் சொல்லல், சொல்லுதல்.
அநுபாதகம் - மகாபாதகதுல்லியம்.
அநுபாதம் - சரணங்களிலொன்று, சங்கலிதம், நிரயராசிகம், பின்றொடர்தல்.
அநுபாதேயன் - அங்கீகரிக்கப்படக்கூடாதவன்.
அநுபாலனம் - கீழ்ப்படிதல், பாதுகாத்தல்.
அநுபாவம் - கண்காட்டுக் கைகாட்டு முதலிய அங்கசேட்டைகளினால் மனக்கருத்தை விளக்குங் குறி, இடமானவெண்ணம், தேசசு, நிச்சயம், மகத்துவம்.
அநுபாவியம் - அனுபவிக்கத்தக்கது.
அநுபானம் - மருந்தை யுட்புகுத்தற்குக் கொள்ளும் பானம், மருந்துடனருந்தும் பதார்த்தம், மருந்துடன் குடிக்கும் பானம்.
அநுபூதம் - அறிந்துகொள்ளப்பட்டது, காரியமாக வந்தது.

அநுபூதி - தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான அறிவு, வினைவிற் கயலாகி வேறுகிய உணர்வு.

அநுபூதிகம் - அநுபவிக்கத்தக்கது.

அநுபூதியநுரூதம் - அநுபவசித்தி.

அநுபூதியர் - அநுபூதியுடையோர்.

அநுபோகம் - அனுபவம், கைவல்லியம்.

அநுபோகி - அனுபோகங்கொள்ளுவோன்.

அநுபோகித்தல் - அநுபவித்தல்.

அநுப்பிரமாணம் - அளவானது, இசைவானது.

அநுப்பிரவிட்டம் - உட்புகுதல்.

அநுப்பிரவிட்டன் - உட்புகுந்திருப்பவன்.

அநுப்பிரவேசம் - அநுக்கிரகம். அநுபோகவாசனையை நீக்கித் தெளிவித்தல், உட்புகுந்திருத்தல், ஒருவர்கருத்துக்குத் தன்னை இசைவாக்கல்.

அநுப்பிரவேசி - உமாதேவி.

அநுப்பிராசம் - அனுராகம், வழியெதுகை. அது ஒருசெய்யுளடியில் வரும் பலசீர்களில் இரண்டா மெழுத்து முதலியன ஒன்றிவருதல்.

அநுமகுண்டம் - சேதுவிலுள்ள ஒரு புண்ணியதீர்த்தம்.

அநுமக்கொடியோன் - அருச்சுனன்.

அநுமசக்கரம் - விதிப்படி யனுமமந்திர மெழுதப்பட்ட யந்திரம்.

அநுமசந்தேசம் - அனுமார் தூது, ஒரு நூல்.

அநுமதம் - அங்கீகரிப்பு, அன்பு, சம்மதி, பிரியம்.

அநுமதி - சம்மதி, பௌர்ணை.

அநுமந்தன் - அனுமான்.

அநுமந்தா - சம்மதித்தவன்போலிருப்பவன்.

அநுமந்திரு - இணங்குதல்.

அநுமந்திருசம்பிரதானம் - சம்மதமாயேற்ற பொருளில் வரும் நான்காம் வேற்றுமையுருபு.

அநுமரணம் - இறந்தவனோடு உடன் கட்டையேறி மரித்தல்.

அநுமாகம் - ஒருபிரமாணம், சந்தேகம்.

அநுமாபகம் - அனுமிக்கப்பண்ணுவது.

அநுமானசாமக்கிரி - அனுமானத்திற்கு வேண்டுமுறுப்புக்கள்.

அநுமானப்பிரமாணலங்காரம் - அனுமானப்பிரமாணவணி.

அநுமானப்போலி - சாதகம் பட்சத்திவிருக்கையின்மை, சபட்சத்திவிருக்கையின்மை, விபட்சத்தினீக்கமின்மைஎன்னுங்குற்றங்களோடுகூடியுஞ் சிலருபயோகத்தால் அனுமானம் போலத்தோற்றும் போலிநியாயம்.

அநுமானம் - ஐயத்தோ டெண்ணுதல், ஐயம், தருக்கசாத்திரத்திற் சொல்லப்பட்ட பிரமாணங்களு ளொன்றுகிய கருதலளவை. அது நேரே யறியப்படாது சாந்த்துப் பெறற் பாலதாய் மறைந்துநின்ற பொருளை அதனைவிட்டு நீங்காது யாண்டுமுளனாய் நிகழும் ஏதுவைக்கொண்டுணர்வதாகிய ஆன்மாவின் ஞானசத்தி. அது புகையைக்கண்டு காணப்படாத நெருப்பை யுண்டென்று உணர்தல் போல்வது.

அநுமானவாக்கியம் - அனுமானப் பிரமாணத்தா லொருவ னறிந்ததைப் பிறனறியும்படி புணர்த்தும் வாக்கியம், இவ்வாக்கியத்திற்குப் பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்பன அவயவங்கள்.

அநுமானுகம்மியம் - அனுமானத்தால் அறியப்படாதது.

அநுமானுநுமானம் - கருதலனுமானம்.

அநுமானுபாசம் - அனுமானப்போலி.

அநுமானிதம் - குதிரைக்கனைப்பு.

அநுமானித்தல் - அனுமானப் பிரமாணத்தாலறிதல், ஐயத்தோ டெண்ணுதல், குதிரைகனைத்தல்.

அநுமானோத்தி - அனுமானித் துப் பேசுதல்.

அநுமான் - அஞ்சனையென்னும் பெண்ணினுடைய மகன்.

அநுமிதி - அநுமானத்தினுற் றேன்று மறிவு.

அநுமித்தல் - அனுமானப் பிரமாணத்தினுலறிதல்.

அநுமேயம் - அனுமானப்பிரமாணத்தாலறியப்பட்டது, அறியத்தக்கது.

அநுமை - அனுமானத்தினுல் வரும் அறிவு, கண்ணிமையினடி.

அநுமோதனம் - அங்கீகரிப்பு, ஒத்து மகிழ்தல், சம்மதம்.

அரங்கொழி செய்யுள்-புறநாடக உருக்களுள் இறுதியுறு.
அரசங்கம்-அமைச்சு, அரண்,குடி,கூழ் நட்பு, படை ஆகிய அரச அங்கம்.
அரசச்சின்னம்-இராசரீகஅடையாளம்
அரசண்மை-பகையரசன் அணித்தாக இருக்கை. அஃது நீதிகள் ஆறனுள் ஒன்று.
அரசநீதி-அரசுநடத்துமுறைநமை கூறுநூல்.
அரசபரி-இராசகுதிரை.
அரசபரியினிலக்கணம்-அரசபரியினதிலட்சணம் அது பெண்களது மனம்போல மிக்க மனத்தாய் வாழைமடலைப்போலச் செவியுளதாய் நான்குகாலும் பிடரும் முகமும் முதுகும் முன்புரமும் வெண்ணிறவாய் எண்பத்திரண்டு விரலுயர்ந்த இலக்கணத்தையுடையது.
அரசம் - சாரமில்லாதது, சுவையில்லாதது, மூலரோகம்.
அரசரறுதொழில்-ஈதல், உலகோம்பல், ஓதல், படைபயிற்றல், பொருதல், வேட்டல் என்பன.
அரசரியல்பு-அரசர்க் கெப்பொழுதுமிருக்கவேண்டிய தன்மைகள். அவை அஞ்சாமை, அறிவு, ஈகை, ஊக்கம் என்பன.
அரசரொளி-குடியோம்பல், கொடை, செங்கோல். தலையணியாகிய அரசர்க்குரிய மகிமை என்பனவாம்.
அரசர்குணம்-மூவிதக்குணங்கள்அவை தூங்காமை, கல்வி, துணிவு என்பன.
அரசர்க்குக்குழு-அரசரைச் சூழுவோர், அவர்சேனாபதி, தூதர், புரோகிதர், மந்திரி, வேதியர் என்பவர்.
அரசர்க்குத்துணைவர்- அரசர்க்குப்போர்த்துணைவர்.
அரசர்க்குறுதிச்சுற்றம் - இராசாக்களுக்குஉயிர்த்துணைவர் அவர்அந்தணர்,நட்பானர் நியமித்திகப்புலவர்மடைத்தொழிலர், மருத்துவக் கலைஞர் என்பவர்.
அரசர்க்கெண்பெயராயம்- அரசர்க்குத்துணைசெய்புமெண்மர். அவர்இவுளிமறவர், கடைகாப்பாளர், கருமவிதிகாரர்சுற்றம்,நகரமாக்கள்,படைத்தலைதலைவர், மந்திரியர், யானைவீரர் என்பவர்.
அரசர்க்கைம் பெருங்குழு-அரசரோடு கூடித் தொழில்நடாத்துமைவர்அவர்

மந்திரியர், புரோகிதர், சேனாபதியர் தூதுவர், ஒற்றர் என்பவர்.
அரசர்பா-அகவற்பா.
அரசர்பின்னோர்-வணிகர்.
அரசர்மன்னன்-துரியோதனன்.
அரசவனம்-திருவாவடுதுறை என்னும் ஒருசிவஸ்தலம்.
அரசளித்தல்-ஆளல்.
அரசாணை-இராசகட்டளை.
அரசநீதி-அரசாகிய காவலை நடாத்துமுறை.
அரசனுயிர்காத்தோன்-காண்டாமிருகம்.
அரசன்-இராசன், எப்பொருட்குமிறைவன், எழுத்துத்தானம் ஐந்தினொன்று, கார்முகிற்பாஷாணம், துருசு, பாணகெந்தகம் முக்குவர்தலைவன், வியாழன்.
அரசன்விருத்தம்-ஒருபிரபந்தம்.
அரசன்விரோதி-கோவை, பூப்பருத்தி, பூவரசு.
அரசாட்சி-இராசரிகம், இராசாவினாளுகை.
அரசாணி-விவாகமண்டபத்திலே அரசங்கால்நாட்டுமேடை, இராசாத்தி.
அரசாணிக்கால் - விவாக மண்டபத்திலே அரசாணியிலே முருக்குடன்நாட்டப்படும் அரசங்கொம்பு.
அரசாளல்-இராச்சியமாளல்.
அரசாளுகை-இராச்சியஞ்செய்கை.
அரசாளுதல்-அரசுசெய்தல்.
அரசானம்-அரசமரம், அரத்தைப் பூண்டு.
அரசி-இராசாத்தி, தலைவி.
அரசிகம்-இரசமின்மை, சுவையில்லாமை.
அரசியலாறு - அரசர்க்குரிய இயலாறு அவை அமைச்சு. அரண், குடி, கூழ், நட்பு, படை என்பன.
அரசியல்-இராசரிகமுறை.
அரசியானை-அரசுவா.
அரசிருக்கை-சிம்மாசனத்திருக்கை.
அரசிருத்தல்-இராசாவாகவீற்றிருத்தல்
அரசிருப்பு-அரசிருக்குமிடம்.
அரசிலியை-ஒருசிவஸ்தலம்.
அரசிலை-அரசமரத்தினிலை, மிருகங்களுக்கிடும் அரசிலைக்குறி.
அரசிலைத்தூக்கம் - அரசிலை போலுந் தொங்கல்.
அரசிறை-கப்பம்.
அரசு-இராசா இராச்சியபாரம்ஒருமரம் துவர்பத்தினொன்று, நாடு, வியாழன்.
அரசுகட்டில்-சிங்காசனம்.
அரசுகீழிருந்தோன்-புத்தன்.
அரசுவா-பட்டத்தியானை.
அரசுவாவினிலக்கணம் - அரசியானையினிலட்சணம், அது நான்குகாலும் துதிக்கையும் கோசமும் வாலுமாகிய எழுறுப்பும் நிலத்திற் றோய்வதாய்ப் பாலையுஞ் சங்கையும் ஒத்த வெண்ணிறமான கானக முடையதாய்க் கால்களாலுந் துதிக்கையாலுஞ் சரீரத்தாலும் வாலாலும் கொம்பாலுங் கொல்லவல்லதாய் எழுமுழ முயர்ந்து ஒன்பதுமுழநீண்டு பதின்மூன்றுமுழஞ்சுற்றுடைத்ததாய்ச்சிறியகண்களையுஞ்சிவந்தபுள்ளிகளையும் உடையதாய்முன்புயர்ந்து பின்பு தாழ்ந்திருக்கும் இலக்கணத்தையுடையது.
அரட்டம்-பாலைநிலம்.
அரட்டர்-குறுநிலமன்னர், குறும்பர்.
அரட்டன்-குறும்பன்.
அரட்டி-அச்சம்.
அரட்டுகம் } தசநாடகத்தொன்று.
அரட்டுசம் }
அரணம்-அழகு, கதவு, கருஞ்சீரகம், கவசம், காவல், காவற்காடு, காவற்சாலை, கோட்டை, தொடுதோல், மஞ்சம், மதில், வேலி.
அரணசவிக்னை-அசுரக்குறி.
அரணம்பரம்-மதில், வேலி.
அரணி-அரணியென்னேவல், ஒரு பூடு கவசம், காடு, சூரியன், தீக்கடைக்கோல், தீத்தட்டிக்கல், நெருப்புறு காடு, மதில்.
அரணித்தபரு-கட்டி.
அரணித்தல்-காவல்செய்தல், ஊத்தல், சிறப்பித்தல், முறைத்தல்.
அரணிப்பு-அடைப்பு, அழகு, காவல், சிறப்பிக்கை, முறைப்பு, வைரிப்பு.
அரணிய-அரணையுடைய.
அரணியகதலி-காட்டுவாழை.
அரணியசடகம்-காட்டுக்கஸ்தூரி.
அரணியசாரணை-காட்டிஞ்சி.
அரணியம்-காடு.
அரணியவரணி-பெருங்காடு.

அரணியன் - காட்டிலிருப்பவன்.
அரணியா - காட்டுக்கருணை.
அரணியானி - பெருங்காடு.
அரணிருக்கை - கோட்டை.
அரணை - ஒரு செந்து.
அரண் - அழகு, காவல், கவற்காடு, கோட்டை, மதில்.
அரண்மனை - உண்மனை, கோட்டை, மன்னர்வியில்லம்.
அரதனம் - இரத்தினம், அகன்மணி, சிலம்பணி, கவமணிப்பொது, மிருதபாஷாணம்.
அரதனாகரம்-இரத்தினமெடுக்குஞ் சுரங்கம், சமுத்திரம்.
அரதி - வெறுப்பு.
அரதிகோபம்-திருத்தியின்மை, வருத்தம்.
அரதேகி - அகதேகி.
அரதைப்பெரும்பாழி - ஒருதலம்.
அரத்தகம் - செம்பஞ்சு.
அரத்தம்-அரக்கு, இரத்தம், குங்குமப்பூ சிவப்பு, செங்கடம்பு, செங்கழுநீர், செங்குவளை, செம்பஞ்சு, செம்பரத்தம், செம்பருத்து, செம்மெழுகு, செம்மை, பவளம், பொன்.
அரத்தனம் - இரத்தினம்.
அரத்தன் - செவ்வாய்.
அரத்தாங்கம் - செவ்வா யென்னுங்கிரகம், பவளம், மூட்டை.
அரத்தி - செவ்வல்லி.
அரத்தினி-சிறிவிரனீட்டிய பிடிமுழம் முழங்கை.
அரத்துறை - ஒரு சிவஸ்தலம்.
அரத்தை - ஒருமருந்து முடக்கொற்றன்.
அரத்தோற்பலம் - செங்கழுநீர், செங்குவளை.
அரதி - ஓரிட்ட தேவதை.
அரந்தை - துன்பம், மனக்கவர்ச்சி.
அரபி - கடுக்காய், காடு.
அரபீசம் - பாதரசம்.
அரப்பள்ளியான்-சர்ப்பசயனனாகிய விட்டுணு.
அரப்பிரியை - உமாதேவி.
அரப்பொடி - இரும்புத்தூள்.
அரமகளிர் } தெய்வப்பெண் பொது.
அரமகள் }
அரமங்கை } தெய்வப்பெண்.
அரமடந்தை }
அரமனை - இராசமனை.
அரமாதர் - தெய்வப்பெண்.

அரமாரவம் - நாயுருவி.
அரமி - கடுக்காய்.
அரமியம் - அரண்மனை, நிலாமுற்றம், பிரமிப்பூண்டு, வீட்டின் மேனுலாவும் வெளி.
அரமுறி - இரும்புமுறிச்செடி.
அரம் - உதை, ஒருகருவி, கதவு, குகை, பாதலம்.
அரம்பிலம் - பர்தாளம்.
அரம்பு - குறும்பு, சிராதனம்.
அரம்பை-அசமதாகம், தெய்வப்பெண், வாழை.
அரயன் - அரசன்.
அரரம் - கதவு, மறைவு.
அரரி - கதவு.
அரரு - சத்துரு.
அரலை - கடல், கழலை, குற்றம், தொடும்பு, கோட்டை, மரல், விதை.
அரவக்கணத்தோன் } சிவன்.
அரவக்கரையன் }
அரவக்கிரி - வேங்கடமலை.
அரவக்கொடியோன் - துரியோதனன்.
அரவச்சுடிகை - சர்ப்பத்தின் தலையிலிருக்குஞ்சூட்டு.
அரவணிந்த மூர்த்தி }
அரவணிந்தார் } சிவன்.
அரவணிந்தோன் }
அரவனை - அகந்தன்.
அரவணைச்செல்வன் - விட்டுணு.
அரவணைத்தல்-ஆதரித்தல், சேர்த்துக்கொள்ளுதல், தழுவிக்கொள்ளல்.
அரவணையான் - விட்டுணு.
அரவதுவசன் - துரியோதனன்.
அரவப்பகை - கருடன்.
அரவமணி - உருத்திராக்கமணி, நாகரத்தினம்.
அரவமின் - நாகலோகப்பெண்.
அரவம் - ஆயிலியநாள், ஒலி, சிலம்பு, பதஞ்சலி முனிவர், மனக்கலக்கம், பாம்பு, பேரொலி.
அரவரசோன் - பதஞ்சலிமுனிவன்.
அரவன் } சிவன்.
அரவாபரணன் }
அரவாய்க்கடிப்பகை - வேப்பிலை.
அரவான்-அருச்சுனனுக்கு நாககன்னியினிடம் பிறந்தவன்.
அரவிசிட்டம் - சிவசம்பந்தம்,

அரவித்தல் - ஒலித்தல்.
அரவிந்தம் - தாமரை, நாரைப்பறவை, செம்பு, மன்மதன் கணையின்றென்று.
அரவிந்தலோசனன் - விட்டுணு.
அரவிந்தன் - பிரமன்.
அரவிந்தாக்கன் - விட்டுணு.
அரவிந்தை - இலக்குமி.
அரவினன் - அரவுநாள்.
அரவீசம் - பாதரசம்.
அரவு-ஆயிலியம், பதஞ்சலி முனிவர், வைக்கோற்பழுதை, பாம்பு.
அரவுநாள் - ஆயிலியநாள்.
அரவுயர்த்தவன் } துரியோதனன்.
அரவுயர்த்தோன் }
அரவுயிர்ப்பு - பாம்பின்சத்தம்.
அரவெறுந்துதி - கருமசாந்தி.
அரவொலி - ஹரஎன்று சிவனைநோக்கிச் சொல்லும் சத்தம்.
அரவோன் - பதஞ்சலிமுனிவன்.
அரளல் - பிரமித்தல்.
அரளி - நாறிமரம், பீநாறி, ஒருவகைப்பூச்செடி, பெருமரம்.
அரளித்தொக்கு - பீநாறிப்பட்டை.
அரளுதல் - பிரமித்தல், மிகவஞ்சுதல்.
அரற்றல் - அரற்றுதல், யாழ்நரம்போசை.
அரற்று-ஒலி, குறிஞ்சியாழ்த் திறவகை பலவுஞ் சொல்லியழுது தன் குறை உறுதல்.
அரற்றுதல் - அழுதல், ஒலித்தல்.
அரனிடத்தவள் - பார்ப்பதி.
அரனெறி - ஒரு சிவாலயம்.
அரன்-எப்பொருட்குமிறைவன், சிவன் பதினோருருத்திரரி லொருவன், மஞ்சள்.
அரன்மகன்-குமரன், விநாயகன், வீரபத்திரன்.
அரன்வெற்பு - கயிலைமலை.
அரன்றோழன் - குபேரன்.
அரா-அராவென்னேவல், ஆயிலியநாள் நாகமல்லி, பாம்பு.
அராகதத்துவம் - வித்தியாதத்துவமேழினொன்று, அது வித்தையி லிருக்கு தோற்றிப் போகத்திலே ஆசையை யெழுப்புவது.
அராகபகவான் - புருஷதத்துவத்திற்கும் அராக தத்துவத்திற்கும், அபிமான தேவதை.
அராகம் - அடங்காமை, அவா, ஒரு பண், சிவப்பு, பாதவுறுப்புளொன்று பாலையாழ்த்திறம், பொன், முடுகியல், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவி லோருறுப்பு.
அராகவொத்தாழிசைக்கலிப்பா - வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா.
அராக்கோன் - இராகு கேது.
அராதி - சத்துரு.
அராதிபங்கம் - முறியடித்தல்.
அராத்தல் - அராத்துதல், கினைப்பூட்டுதல், தேய்த்தல்.
அராத்திரி - கைலாசமலை.
அராத்துதல் - அராத்தல்.
அராநட்பு-பிடிகொடாத கொண்டாட்டம், வேண்டா வெறுப்பு.
அராபதம் - போர், வண்டு.
அராமம் - சோலை, பயிர்.
அராமி - கெட்டவன், கெட்டவன்.
அராமுனி - பதஞ்சலிமுனி.
அராமை - கீழ்மகள்.
அராலம்-கொடுவாள், மதயானை, வளைந்தது.
அராலை - நாட்டியப்பெண், வேசி.
அராவணம் - புலம்பாமை.
அராவணல் - ஆதிசேடன்.
அராவணை - அரவணை.
அராவல்-அழுத்தல், உராஞ்சல், மிண்டல்.
அராவவெங்கொடியோன் - துரியோதனன்.
அராவாரம் - திராட்சைப்பழம்.
அராவுதல் - அராத்துதல்.
அராவைரி - கருடன், கீரி, மயில்.
அராளகடகாமுகம் - கிருத்தக்கைமுப்பதனுளொன்று.
அராளம்-இருவாட்சி, குங்கிலியம், வெள்ளைக்குங்கிலியம்.
அரி - அடர்பு, அரிசி, அரிப்பிடி, அரியென்னேவல், அழகு, ஆயுதப்பொது, ஈர்வாள், உட்டுளைப் பொருள், ஐம்படிவு, ஒளி, ஒருகண்டம், கடல் கட்டில், கண்வரி, கள், காற்று, கிரணம், கிளி, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, கொடுவேலி, சக்கரம், சத்துரு, சந்திரன், சிங்கம், சிங்கவிராசி, சிலம்பின்பருக்கைக்கல், சிலம்

பு, சில்லு, சிவன், சூரியன், செம்மறியாட்டுக்கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நித்திரை, நிறம், நெருக்கம், நெல், நெற்கதிர், பகை, பச்சை, படுக்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மழை, மழைத்தூவல், மாலை, மூங்கில், மென்மை, வண்டு, வரி, வலி, வில், விட்டுணு, வெற்றி.

அரிகண்டபுலவர் - காளமேகப் புலவர்.

அரிகண்டம் - ஒருவிரத வேடம். அது கழுத்தி லிருப்புத்தகடுகள் இணைத்துச்செய்த ஒருசட்டத்தை யணிந்து செய்வது, தொந்தரை, நவகண்டத்திலொன்று.

அரிகண்டம்பாடுதல் - கழுத்தில் கத்தி கட்டிக்கொண்டு எதிரி கொடுக்குஞ் சமிசைக்கிணங்கப்பாடுவது எதாவது தவறினுவக்கத்தியால் வெட்டுண்ண வேண்டிவரும்.

அரிகயிறு - அரிதூற்பொறி.

அரிகாகுமரன் } ஐயனார்.
அரிகாபுத்திரன் }

அரிகரப்பன் } வாதக்கரப்பான்.
அரிகரப்பான் }

அரிகரி - அத்திக்கொழுந்து.

அரிகல் - மகாமேரு.

அரிகளவம் - நதி.

அரிகள் - பகைவர்.

அரிகறையான் - செல்லு, தொந்தரை செய்வோன்.

அரிகாந்தி - விஷ்ணுக்கிராந்தி.

அரிகாம்போதி - இருபத்தெட்டாவது மேளகர்த்தா.

அரிகிணை - மரவயிரத்தாற் செய்யப்பட்ட ஒரு மருதநிலவாத்தியம்.

அரிகுரல் - கரகரத்தல்.

அரிகூடம் - கோபுரவாயில், கோபுரவாயின்மண்டபம்.

அரிகேசம் - சூரியனுடைய கதிர்களின் ஒன்று.

அரிகோதினி - ஓரிட்டதேவதை.

அரிக்க - நினைவுபிடிக்க.

அரிக்கட்டு - அரிவிக்கட்டு.

அரிக்கண்சட்டி - அரிசியரிக்கிறசட்டி.

அரிக்கரியார் - சிவன்.

அரிக்காந்தி - விட்டுணுகாந்திப் பூண்டு.

அரிக்குதல் - அரித்துப்போடுதல், பேச்சினல் வருத்துதல்.

அரிசட்டுவர்க்கம் - உலோபம், காமம், குரோதம், மோகம், மதம், மற்சரம் என்னும் ஆறுபகையின்கூட்டம்.

அரிசந்தனம் - ஐந்தருவிலொன்று, ஒருவகைச் சந்தனமரம், தாமரைப்பூந்தாது, நிலவு, மஞ்சள்.

அரிசம் - அமாவாசையதிகமும், பிரதமைகுறைவுமாகக் கூடியிற்குந்தினம், மகிழ்ச்சி, மிளகு.

அரிசயம் - எலுமிச்சை, கொன்றைமரம்.

அரிசரன் - சிவன்.

அரிசலம் - எலுமிச்சை, கொன்றைமரம்.

அரிசனம் - மஞ்சள்.

அரிசா - பெருங்குமிழிமரம்.

அரிசி - ஒருதானியம், தண்டுலம், வீயம்.

அரிசிச்சாதம் - அரிசிச்சோறு.

அரிசில் - ஒருநதி.

அரிசு - தேன், மிளகு.

அரிசொல் - கும்பகோணத்துள்ள ஒருநதி.

அரிசோபகந்தரவிரணம் - மூலபகந்தரம்.

அரிசோரோகம் - ஆண் குறியில் வருமொருவகையுரோகம், அது வாதபித்தகபங்கள் இரத்தமாமிசங்களை அனுசரிக்கும்போது பிறப்பதும் அப்போதாண்குறியினுள்ளிலாவது வெளியிலாவதுகமைச்சல்அவ்விடங்களின் மூலரோக முளைகளைப்போலுஞ் சிறுசிறுகானான் முளைகளைப்போலும் மாமிசம்எழும்புதல் அவைகளின் மிகவியர்வைகசிதல் இரத்தம் வடிதல்என்னும் இக்குணங்க ளுண்டாவதுமானது.

அரிசோவர்த்தமரோகம் - கண்ணிமையில்வரு மொருவகைரோகம். அது இமைச்சந்திகளிலே துர்மாமிசம் வளரக் கண்களின் மரத்தல், மினுமினுப்பு, எரிச்சல், சிவப்பென்னுங் குணங்களுண்டாதல்.

அரிச்சந்தனம் - ஐந்தருவிலொன்று, சந்தனம்.

அரிச்சந்திர } பிரதிட்டைலயிலே
அரிச்சந்திரம் } தேயுதத்துவத்திலே உள்ள எட்டுப்புவனங்களிலொன்று.

வேந்திரு - ஏழாந்தலைமுறையிற்பிதா.
வேந்தோன்றி - காந்தாள், கார்த்திகைக் கிழங்கு.
வேபனம் - பயம்.
வேப்பத்தூர் - ஒரூர். இவ்வூர் கலியுகம் பதினான்குவ தாண்டாகியஜயவருடத்திலே சந்திரகுலசேகரபாண்டியன் அயோத்தியிலிருந்து இரண்டாயிரத்தெண்மர் பிராமணரைக் கொண்டுவந்து குடியேற்றி தானஞ்செய்த வூர்களுள் ஒன்று, இது பாண்டிநாட்டில் இன்றும் பெரியதோர் அக்ராஹாரமாக விளங்குகின்றது.
வேப்பம்பாகி-ஒரு நீர்ப்பூடு.
வேப்பாலை - ஒருசெடி.
வேமம் - நெய்வார்கருவியின் ஒன்று.
வேமநன்-இவர் சற்றேறக்குறைய மூன்னூற்றுப்பத்து வருடங்களுக்கு முன்னே விஜயநகரத்திலேயிருந்த ஒரு ஆந்த்ரகவி, இவர் மஹாஞானி, வேதாந்த சாஸ்த்ரங்களின் ஆராய்ச்சியில் மிகச் சிறந்தவர், இவராற்செய்யப்பட்ட நூல் அத்யத்புதமானது, இந்த நூல்தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது, அதன் பெயர் வேமநவெண்பா.
வேம்பனம் - கள்.
வே[illegible]ம்பன் - பாண்டியன்.
வேம்பாணி - கிருணி.
வேம்பின்றுரோன்-பாண்டியன்.
வேம்பு - வேப்பமரம்.
வேயர் - வேவுகாரர்.
வேயல் - மூங்கில், வேய்தல்.
வேயாம் - இலங்கை.
வேயுள் - மாடம், வீடு.
வேய்-உட்டுளைப்பொருள், ஒற்று, மூங்கில், வே[illegible]யென்னேவல்.
வே[illegible]யகள் - வேவுகாரர்.
வேய்ங்குழல் - மூங்கிற்குழல்.
வேய்தல் - அணிதல், அலங்கரித்தல், சூடுதல், மாடம், மூடுதல், வீடு.
வே[illegible]ல் - ஏய்த்தல்.
வேப்வு - ஏய்ப்பு, மூடுதல்.
வேரகம் - கருப்பூரம்.
வேர[illegible] - இலந்தைப்பழம்.
வே[illegible]ன் - நீசன்.
வேரம்-சரீரம், சலஞ்சாதித்தல், செம்பு, மஞ்சள், முகில்.
வேரல் - மூங்கில்.
வேரறுத்தல் - அடிகெடுத்தல்.
வேரி - கள், வாசனை, வெட்டிவேர்.
வேரிபீதகம் - இருவேலி.
வேரூன்றல் - வேர்பதிதல்.
வேரோடுதல் - தூர்விடுதல்.
வேர்-காரணம், கோபம், திப்பிலிமூலம், மூலம், வேரென்னேவல், வேர்வை.
வேர்க்கடலை - ஒருபருப்பு.
வேர்க்குச்சு - ஒருகுச்சுப்புல்.
வேர்க்குரு - வெகுர்.
வேர்க்குறி - சினக்குறிப்பு.
வேர்க்கொம்பு - இஞ்சி, சுக்கு.
வேர்க்கொள்ளல்-வேரூன்றல்.
வேர்த்தல் - கோபித்தல், வியர்த்தல்.
வேர்ப்படலம் - கண்ணோயுள் ஒன்று.
வேர்ப்பு - கோபம், வியர்வு.
வேர்வு- மாயையாக்கை பதினெண்குற்றத்தொன்று.
வேர்வை - வியர்வை.
வேலமரம் - ஒருமரம்.
வேலம் - தோட்டம்.
வேலம்பாசி - ஓர்பூடு.
வேலனுடல் - தேவர்க்காடுங்கூத்து.
வேலன்-முருகன், வெறியாட்டாளன்.
வேலாமூலம் - கடற்கரை.
வேலாயுதம் - வேல்.
வேலாயுதன்-ஞானசத்திதரன், முருகக்கடவுள், வேலாவது சத்தியின் கூட்டம், அது மூன்று சதுஷ்கோணங்களாற் குறிக்கப்படும், இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி என்னும் மூன்றன் பரசொரூபம் முக்கோணமாகவும், அவற்றின அபரசொரூபம் அந்த முக்கோணத்தின் பாதகோணமிரண்டையும் ஆதாரமாகக்கொண்டு முக்கோணமாகவும் விரிந்து இரண்டுங்கூடி நாற்கோணமாகும்.

அந்தஅதோமுகமுக்கோணத்தின் நுனியினினறம பின்னும் அந்தச் சத்திகள் தம்முள்மாறி, இச்சையிற் கிரியை, கிரியையில்ஞானம், ஞானத்திலிச்சை எனக்கூடித்திரிகோணமாகும், அந்தத் திரிகோண பாதத்திலிருந்து அபர சொரூபமாகிய முக்

கோண முதிக்கும், அவையிரண்டுங் கூடி மத்ய சதுஷ்கோணமாகும். அதன் அதோமுக கோணத்தினின்றம் மீளவும் அந்தச் சக்திகள் தம்முள் மாறிக்கூடி முக்கோணமாகும், அதினின்றும் பின்னு முக்கோணமாகக் கூடிச் சதுஷ்கோணமாகும், இந்த மூன்று நாற்கோணங்களுமே வேலாயுதமாம்.

முதற்சதுஷ்கோணத்தில், இச்சாசக்தியும், மத்ய சதுஷ்கோணத்தில் ஞானசக்தியும், பாதசதுஷ்கோணத்தில் கிரியாசக்தியும், உதித்து நிற்கும் இந்தச் சக்திகளை யெல்லாம் ஆயுதமாகக்கொண்ட கடவுள் என்பதே வேலாயுதன் என்னுஞ்சொற்குப் பொருளாம், அற்றேல், வள்ளிதெய்வயானைகளைச் சக்திகளென்பதென்னெனின், அது உண்மையே, ஞானமே வடிவாகவுள்ள சுப்பிரமணியக்கடவுளுக்கு இச்சாசக்தியும் கிரியாசக்தியும், உபசக்திகளாம், ஞானசக்தியைவிட்டு அவையிரண்டும் நீங்காவாதலால் தேவிகளாகப் பாவிக்கப்பட்டன.

ஞானமே சுப்பிரமணியக் கடவுளுக்கு வடிவமென்பதற்கு "ஞானந்தானுருவாகிய" என்னுங் கந்தபுராணச்செய்யுள் பிரமாணமாம், அற்றேல், ஆறுமுகங்களால் குறிக்கப்படுவன யாவையோவெனின் அவை சிவன், சதாசிவன், மகேசுவரன் உருத்திரன், விஷ்ணு, பிரமா என்னும் அறுவரது தொகுதி ரூபங்களேயாம், அதுபற்றியே அறுவர்க்குமுறிய தொழில்களெல்லாம் முருகக்கடவுளிடத்திலேயுளவாகப் புராணங்கள் கூறுவது என்றறிக.

வேலாவலயம்-கடல், பூமி.
வேலி-ஊர், ஐந்துகாணிநிலம், காவல், நிலத்தளவையிலொன்று.
வேலிமூங்கில் - ஒருபூண்டு.
வேலிகசால் கதிகால், வேலியருகு.
வேலிப்பருத்தி - உத்தாமணி.
வேலிப்பாகல் - தொல்லாப்பாகல்.
வேலிமூங்கில் - ஒருபூண்டு.
வேலிறை - குமரக்கடவுள்.
வேலை - அவமிருத்து, இளைப்பாற்றி, எல்லை, கடல், கடற்கரை, கரை, காலம், செய்பொருள், தொழில், நிகழ்காலம், நோய், பனி, புனறநிரை, பொழுது. மேருபுத்ரி, சமுத்ராராஜன் மனைவி.
வேலைப்பரிட்சை - வேலைப்பழக்கம்.
வேலுயிற்றுயின்றோன் - விட்டுணு.
வேல் - ஆயுதப்பொது, ஒருமரம், கைவேல், சூலம், மூங்கில்.
வேல்லஜம் - மிளகு.
வேல்வி - கொடி.
வேல்விதம் - நடை.
வேவாள் - வேவுகாரன்.
வேவித்தல் - வேகச்செய்தல். [வன்னே
வேவு -ஒற்று, வேதல், வேவென்
வேழம்-கரும்பு, கொறுக்கை, நாணல் மூங்கில், யானை.
வேழம்பர் - கழைக்கூத்தர்.
வேளன் - வேளான்.
வேளா - ஒருமீன்.
வேளாட்டி - வெள்ளாட்டி.
வேளாண்குலர் - குயவர்.
வேளாண்மரபியல் - ஒருநூல்.
வேளாண்மை - ஈகை, உபகாரம், கொடை, பூவைசியம், நெய்.
வேளாண்மை மாந்தரியல்பு - அழிந்தோரை நிறுத்தல் ஆணைவழிநிற்றல் ஒக்கல் போற்றல் ஒற்றுமைகோடல் ஒவாமுயற்சி கசிவகத்துண்மை கைக்கடனாற்றல் திருந்திய ஒழுக்கம் மன்னிறைதருதல் விருந்து புறந்தருதல் ஆகப் பத்துக்குணம்.
வேளாண்மையாந்தர் - வேளாளர்.
வேளாவளி - ஓரிராகம். [திரர்.
வேளாளர்-ஈகையாளர், பூவைசியர் சூத்
வேளான்-குயவன், வேளாளரி லோர் பகுதியான்.
வேளிர் - குறுநிலத்தரசர்.
வேளை - ஒருபூடு, காலம், நேர்ந்துகட்டுகிற விளை.
வேளைபூணல் - மன்றுடுதல்.
வேளைப்பிழை - அரிட்டம்.
வேள்-ஆசை, ஆண்மகன், உபகாரம், குமரன், மண், மன்மதன்.
வேள்புலவரசர் - சாளுவர்.

வேள்வி - ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், மகநாள், யாகம்.
வேள்விக்குண்டம் - ஓமகுண்டம்.
வேள்வித்தறி - யாகத்தம்பம்.
வேள்விநாயகன் - இந்திரன்.
வேள்விப்பசு - யாகபசு.
வேள்விப்பயன் - யாகபலன்.
வேள்வியாளர் - ஈகையாளர், பார்ப்பார்.
வே வு - அரும்பண்டம், மணவரிசைப்பண்டம்.
வேள்வெடுத்தல் - பலபண்டந் தேடிக்கொண்டு போதல்.
வேறல் - வெல்லுதல், வெற்றிகொள்ளல்
வேறுதல் - பிரிதல்.
வேறிடம் - ஏகாந்தம்.
வேறு - மற்றது, வேற்றுமையுடையது.
வேறுபடுதல் - பிரிதல்.
வேறுபடுத்தல் - பிரித்தல்.
வேறுபாடு - விகற்பம், வேறுபடல்.
வேறுபாட்டொழிப்பு - அபநுதியலங்காரத்தொன்று அது அன்னியத்திலாரோபித்தற் பொருட்டு அவனிய தருமத்தை யொழித்தல், (உ-ம்) தெரியுமது திங்களன்றரிவைமுகமே திங்களாம்.
வேற்கண்ணியம்மை - திருவேற்காட்டிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வேற்காட்டீசுரர் - திருவேற்காட்டிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வேற்கோட்டம் - முருகவேணிற்குங் [கோயில்.
வேற்றலம் - காற்று.
வேற்றுக்குரல் - மாறுகுரல்.
வேற்றுநிலைமயக்கு - கசதப வொழிந்த மெய்கள் ஒன்றோடொன்று மயங்கி வருவது.
வேற்றுப்பொருள்வைப்ப - ஓரலங்காரம் அது முன்னொரு பொருட்டிறந் தொடங்கிப்பின்னதனை முடித்தற்கு வலிதுடைப் பிறிதொரு பொருளை யுலகறிபெற்றி யான்வைத்துமொழிவது, இது முழுவதுஞ்சேறல் ஒருவழிச்சேறல் முரணிற்றோன்றல் சிலேடையின் முடித்தல் கூடாவியற்கை கூடுமியற்கை இருமையியற்கை விபரீதம் என எண்வகைப்படும்.
வேற்றுமனுளன் - பரபுருடன்.
வேற்றுமை - பதங்கள்புணரும்இருவகைச் சந்தியுளொன்று அது எழுவாய் முதலிய உருபுகள் பெறநிற்பது, வேறுபடல், வேற்றுமையணி. [டல்.
வேற்றுமைகாட்டுதல் வித்தியாசங்காட்
வேற்றுமைத்தொகை - வேற்றுமை யுருபுகள் தொக்குநிற்பது.
வேற்றுமைப்புணர்ச்சி - பேரும் வினியுமல்லாத வாறுருபும் விரிந்தேனுந் தொக்கேனும் புணர்வது.
வேற்றுமைபொருள்விலக்கு - ஓரலங்காரம் அது ஒப்புடையவாயிருக்கு மிருபொருளையொருங்குவைத்துக்காட்டியொன்றை விலக்கி வேற்றுமைப்படுத்திச் சொல்லுதல்.
வேற்றுமைமயக்கு - வேற்றுமையுருபுகளில் ஒன்று பிறிதொன்றற்காக மயங்கி நிற்பது.
வேற்றுமையணி - ஓரலங்காரம் அது உபமானோப மேயங்களு ளொன்றை விசேடமுடைத்தாய்ச் சொல்லுதல்.
வேற்றுமையுருபு - தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது அது ஐ, ஆல், கு, இன், அது, கண்.
வேற்றுமையுருவகம் - ஓரலங்காரம் அது குணப்பொருளையு முக்கியப் பொருளையு மொருபண்புடைத்தெனக் காட்டி முக்கியப் பொருட்கோர் வேற்றுமை யுடைத்தெனக் கூறுவது.
வேற்றுமைவிரி - வேற்றுமையுருபு விரிந்து நிற்பது.
வேற்றுரு - மாறுரு.
வேற்றொலிவெண்டுறை - பல ஓசைத்தாய் வரும் வெண்டுறை.
வேனல் - கானல்.
வேனன் - சுவாயம்புவமநுவின் வமிசத்தில் அங்கன்மகன், பிருதுசக்ரவர்த்தி தந்தை, வேனன் புதல்வரின்றி யிறக்க, அவன் தொடையெலும்பையெடுத்துக் கடைந்தபோது இந்த பிருது சக்கரவர்த்தி பிறந்தான்.
வேனிலாளி } மன்மதன்.
வேனிலான் }
வேனில் - கோடை.
வேனில்மாலை - ஒரு பிரபந்தம்.
வேனில்வேள் - வசந்தகால மன்மதன்.

வேனிற்காலம் - கோடைகாலம்.

வேனின்மாலை - ஒருபிரபந்தம் அது இருவேனிலையுஞ் சிறப்பித்துப்பாடுவது.

வேனெடுங்கண்ணியம்மை - திருவெண்டுறையிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

வேன் - வியன்.

வை

வை - ஒரெழுத்து, கூர்மை, புல், வைக்கோல். வையகம், வையென்னேவல்.

வைதடசம் - உத்தரியம்.

வைகடிகன் - இரத்தினங்கள் சாணை தீர்ப்போன்.

வைகரி - அகங்காரம் மூன்றினொன்று, திட்டம், வாக்கு நான்கினொன்று.

வைகரியாங்காரம் - மூவாங்காரத்தொன்று.

வைகர்மன் - ஒருமுனி.

வைகல் - கழிவுநாள், தங்கல், நாள், விடியல்.

வைகல்லியம் - கலக்கம், குறைவு, குனியம், தகுதியின்மை.

வைகறை - விடியல்முதற்பத்துநாழிகையளவு, காலம், விடியற்காலம்.

வைகற்பிகம் - ஐயம்.

வைகாசம் - ஒருமாதம், விசாகம், விடியற்காலம், வைணவாகமமிரண்டில் ஒன்று.

வைகாசி - ஒருமாதம், விசாகம்.

வைகாசிவசந்தன் - வைகாசி மாதத்திற் பாயுங் காவிரியாறு.

வைகாநசம் - வைணவாகமத்தொன்று.

வைகாநசன் - வனவாசி.

வைகாலம் - சாயங்காலம்.

வைகானசம் - வைகாநசம், வைணவாகமம்.

வைகிராந்தம் - ஓரித்நம்.

வைகிருதம்
வைகிருத்தியம் } வெறுப்பு.

வைகுண்டம் - திருமாநகரம்.

வைகுண்டன் - திருமால்.

வைகுண்ணியம் - ஒவ்வாமை, குணமின்மை, குறை.

வைகுதல் - இராத்தங்கல், இருத்தல், ஏசுதல்

வைகுந்தநாதன் - திருமால்.

வைகுந்தம் - வைகுண்டம்.

வைகுந்தன் - வைகுண்டன்.

வைகுல்லியம் - எதிரிடை.

வைகுறு - வைகறை.

வைகூலியம் - வைகுல்லியம்.

வைகை - காஞ்சிநதி, பம்பாநதி, இது கச்சியிலுள்ளது அம்மையார் பூசித்தபோது உண்டாயநதி, மதுரையாறு வேகவதிநதி, இதுபாண்டிநாட்டிலுள்ளது, இதன் கரையில் மதுராபுரமாநகரம் என்றொரு பெரிய பட்டணமுண்டு, இந்த வைகைநதிக்கு வேகவதியென்றபெயர், வேகமுடையதாதலால் உண்டான பெயர்.

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு கரைகடந்து பெருகிய இந்த நதியின் கரையின் ஒரு கூற்றைச் சிவபெருமான் செம்மனச்செல்வி யென்னும் பிட்டுவாணிச்சிக்குக் கூலியாளாகி, மண் சுமந்து அடைப்பார் போன்று திருநடம்புரிந்தார், இச்செய்தி முழுதும் திருவாதவூரடிகள் புராணத்திலும், திருவிளையாடற் புராண முதலிய பல நூல்களிலும் விரிவாய்க் காணலாம்.

வைகைத்துறைவன் - பாண்டியன்.

வைக்கல் - வைக்குதல், வைக்கோல்.

வைக்கிராந்தம் - ஒரு பாஷாணம்.

வைக்குதல் - வைத்தல்.

வைக்கோல் - வைக்கல்.

வைக்கோல்வாரி - ஒருகம்பு.

வைக்கோற்கந்து - வைக்கோற்திரள்.

வைக்கோற்பழுதை - வைக்கோற்புரி.

வைக்கோற்பாம்பு - வேஷம்.

வைக்கோற்புரி - வைக்கோல்முறுக்கு.

வைங்கியாரம் - பகை.

வைசத்தியம் - உண்மை, சுத்தம்.

வைசத்திரம் - அரசாட்சி.

வைசம்பாயநன் - விசம்பன் என்னும் ரிஷிபுத்திரன், இவன் வேதவியாசனுடைய மாணவர் நால்வர்களுளொருவர், வேதவியாச பகவானாற் செய்யப்பட்ட வியாசபாரத மென்னும் நூலை ஜநமேஜயனுக்கு விஸ் ... துச் சொன்னவனும் இவனே

வைசயந்தம் - இந்திரனுப்பரிகை, இந்திரன் கொடி, இந்திரன் மாளிகை.
வைசயந்தி - திருமான்மாலிகை, தகிற்கொடி.
வைசயந்திகன் - கொடிக்காரன்.
வைசயந்திகை - தகிற்கொடி.
வைசனனம் - பிள்ளைப்பெருமாதம்.
வைகாசம் - வைகாசிமாதம், விசாகம்.
வைசாகி - வைகாசி.
வைசாரிணம் - மீன்.
வைசிகம் - உடலுயிரைப் பிரித்தரிதல், தளிர், முகாந்தரம், வேசித்தனம்.
வைசித்ரியம் - விசித்திரம்.
வைசியக்கிரியை - வேளாண்மை, வியாபாரம்.
வைசியர் - மூன்றுவது சாதியார் அவர் தனவைசியர். அல்லது வணிகர் பூவைசியர் அல்லது உழவர் கோவைசியர் அல்லது இடையர் என மூன்றுவகுப்பினர். இவர்க்கு ஓதல், வேட்டல், உழவு, நிரையோம்பல். வாணிகம் என்பனவும் பூணூலும் உரியவை.
வைசியர்தொழில் - பொருளீட்டல்பயிர் செய்தல் ஆன்காத்தல் என மூன்று தொழில்.
வைசியவிருத்தி - வைசியர்தொழில்
வைசிரவணன் - வைச்சிரவணன், விச்சிரவன் குமாரனாகிய குபேரன், இவனுக்கு தனபதி தநதன்புட்பகவூர்தி முதலிய பல பெயர்களுமுண்டு, இவன் பட்டணத்தின் பெயர் அளகாபுரி, இவனின் மேற்பட்ட செல்வர் எவ்வுலகத்திலுமில்லை. இவன் சிவபெருமானுக்கு உயிர்த்தோழன் இவன் கின்னரருக்கு அரசன்.
வைசுவதேவம் - ஓமப்பலி, பிதிர்பூசை. போஜனார்த்தமாக வேனும் சீவஹிம்சையால் வந்த பாப நிவ்ருத்தியின் பொருட்டாக வேனும் பிராமணர் தினந்தோறும் செய்கிற நற்கருமம்.
வைசுவாநரன் - அங்கிரசன் வமிசத்தானாகிய அக்கினி, தநுபுத்திரன், இவனுக்கு ஹயசிரை காலகை, உபதாநவி புலோமை என்னும் நான்கு புத்திரிகள் பிறந்தார்கள், அவர்களுள் உபதாநவி ஹிரண்யாக்ஷனையும் ஹயசிரை கிருதுவையும், காலகையும், புலோமையும் காசிபனையும் மணம் புணர்ந்தார்கள்.
வைசூரி - வசூரி.
வைசேஷிகம் } வைசேடிகம் } சாத்திரமாறில்ஒன்று. தரிசனங்கள் ஆறனுளொன்று இது கணாதமத மெனப்படும் கௌதமமதம் திரவியம் பதினொறென இஃது ஏழென்பது இதுதர்க்க சாஸ்திரம் எனவும் படும் இது பொருணிச்சயம் பண்ணுதற்குபகாரமாயுளதாதலால் மக்களெல்லாரும் ஓதற்பாலதாகிய ஒருசாஸ்திரம், இது சமயநூலாராய்ச்சிக்கும் பெருந்துணையாம்.
வைச்சிரம் - வச்சிரம்.
வைச்சிரவணன் - குபேரன்.
வைச்சிரவணாலயம் - ஆலமரம்.
வைச்சிராயிணன் - குபேரன்.
வைடம்மியம் } வைஷம்மியம் } பகை அது சத்த விசனத்தொன்று.
வைடாலக்கிரதிகன் - மாயக்காரன்.
வைடாலம் - பூனை, மாயசாலம்.
வைடாலவிரதிகன் - மாயசாலன்.
வைடூரியம் - நவமணியில் ஒன்று. ஒருமலை இது நருமதை தபதி என்னுமிரண்டு நதிகளுக்கிடையேயுள்ளது.
வைணவம் } வைஷ்ணவம் } ஒரு சமயம், பதினெண்புராணத்தொன்று, மூங்கிலரிசி, வேய்ங்குழல்.
வைணவர் - நாராயணசமயத்தோர்.
வைணவாகமம் - வைஷ்ணவ சமயநூல் அது பஞ்சராத்திரம் வைகாநசம் என இரண்டு.
வைணவி - சத்தமாதர்களில் ஒருத்தி, மூங்கிற்குழல்.
வைணவிகம் - மூங்கிற்கூட்டம்.
வைணவிகன் - வீணைவாசிப்போன், வேய்க்குழலூதவோன்.
வைணிகன் - வீணைவாசிப்போன்.
வைணுகம் - கழிகோல், யானைத்தோட்டி.
வைதநிகை - இரத்தினங்களைத் தொளைக்குங்கருவி.
வைதரணி - யமபுரத்திலுள்ள ஒருநதி, இந்த நதியை எளிதிற் கடக்கும்பொருட்டு கோதானம் செய்யப்படுவது, மரணகாலம் நேரிட்டபிறகும் உயிர் சரீரத்தைவிட்டு எளிதிற்பிரிய ஒட்

டாமல் அதனைத்தடுத்து நிற்பதாகிய வாசனைக் கெல்லையே வைதரணி யென்றுருவகித்துக் கூறப்பட்டது போலும், பிதிர்களுக்குச் சுதையிடத் திப்பிறந்தபுத்திரி, கலிங்கதேசத்திற் பிரவகிக்குமோர்நதி, இந்நதி சகல யாகங்களுக்குமேற்றவிடமாகக் கூறப் பட்டுள்ளது.

வைதருக்கம் - தந்திரப்பேச்சு.

வைதருப்பம் - வஞ்சகத்தருக்கம் அது கௌடத்திற் கெதிர்.

வைதருப்பி, வைதர்ப்பி } தமையந்தி

வைதலம் - பாத்திரம்.

வைதல் - ஏசல், திட்டல்.

வைதவ்வியம் - கைம்மைத்தன்மை

வைதனிகம் - அற்றைக்கூலி.

வைதனிகன் - கூலிக்காரன்.

வைதாத்திரன் - சனற்குமரன்.

வைதாளிகன் - துயிலெடைபாடுவோன்.

வைதானம், வைதானிகம் } ஓமப்பலி.

வைதானிகன் - பள்ளியெழுச்சி பாடுவோன்.

வைதாஞெபசரணை - அந்திசந்தி செலுத்துங் கடவுட்பலி.

வைதிகம் - வேதமார்க்கம்.

வைதிகர் - வைதிகசைவத்தோர்.

வைதிகன் - வேதமுணர்ந்தபிராமணன்.

வைதிகாசாரம் - வேதவொழுக்கம்.

வைதிருதி நித்தியயோகத்தொன்று.

வைதீகம் - வைதிகம்.

வைதூரியம், வைதூர்யம் } ஒரிரத்தினம்.

வைதேகன் - பார்ப்பனத்திக்கும் வைசியனுக்கும் பிறந்து திதித்துய்வோன், வியாபாரி.

வைதேகி - சீதை, திப்பிலி.

வைதேயம் - அறிவின்மை.

வைதேயன் - அறிவீனன்.

வைத்தல் - வைக்குதல்.

வைத்தியகம் - வைத்தியசாஸ்திரம்.

வைத்தியசாத்திரம் - கலைஞான மறுபத்து நான்கில் ஒன்று, அது வாகடநூல்.

வைத்தியநாதநாவலர் - இற்றைக்கு இருநூற்றெழுபது வருடங்களுக்கு முன்னே திருவாரூரிலே அபிஷேகத்தார் மரபிலே அவதரித்துத் தமிழ்க்கடல் குடித்துத் தமிழ்மாரிபொழிந்து விளங்கிய பண்டித சிகாமணி இவர் ஐந்திலக்கணங்களும் மமைந்த இலக்கணவிளக்கம் என்னும் நூலும் அதற்குரையும் செய்தவர், தொல்காப்பியத்துக்குப் பின்னே தோன்றிய இலக்கணநூல்களுள்ளே இந்த நூல் மிகச் சிறப்புற்றது, இது குட்டித் தொல்காப்பியம் என்று வழங்கப்படும், வைத்தியநாத நாவலர்க்கு தொண்டைமண்டல சதகம்பாடிய படிக்காசுப்புலவர் மாணாக்கராவர்.

ஒரு துறைக்கோவை பாடிய அமிர்தகவிராயர் என்பவர் இவர்க்குச் சமகாலத்தவர். வைத்யநாத நாவலரைச் சுவாமிநாத தேசிகரென்கிற இலக்கணக் கொத்தாசிரியரே, "தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன்" என்று புகழ்வரென்றால் இவரது கல்விப்பெருமைக்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ.

வைத்தியநாதன் - சிவபிரான்.

வைத்தியம் - பரிகாரம்.

வைத்தியன் - பண்டிதன், பரிகாரி, வேதாப்பியாசி.

வைத்தூறு - வைக்கோற்போர்.

வைநதேயன் - கருடன்.

வைநம் - பிரிவு.

வைநாசிகம் - ஒருயோகம்.

வைநாசிகன் - அடிமை, சிலம்பி.

வைநாயிதன் - புத்தன்.

வைநாயிகை - சதுர்த்தி திதி.

வைநிகம் - புராதன சாஸ்திரகேள்வி.

வைநியன் - இவன் வேநன்வாமபாகத்திற்பிறந்தவன்.

வைநீதகம் - ஈரிணை மூவிணை எருதேனுங்குதிரையேனும் கட்டியபண்டி.

வைந்தவம் - குதிரை.

வைபரீத்தியம் - எதிரிடை.

வைபவம் - வரலாறு, விபவம்.

வைபாடிகன் - மஞ்சளும் சுண்ணம்பும் கூடியவிடத்து செந்நிறந்தோன்றுதல்போல இந்திரியங்கள் கூடியவிடத்துப் பிரபஞ்சம் தோன்றும் என்று வாதிக்கிற ஒருசமயி.

அரிச்சந்திரன்-அறுவகைச் சக்கிரவர்த்திகளிலொருவன், அவன் சத்தியத்திற்குப்பேர்போனவன், இடையெழுவள்ளலிலொருவன்.
அரிச்சனை - பூசனை.
அரிச்சிகன் - சந்திரன்.
அரிச்சுவடி - அரிவரியேடு.
அரிச்சுனம் - எருக்கு, மருதமரம்.
அரிடணம் - நித்தியயோகத்தொன்று.
அரிஷம் - உரோமப்புளகம்.
அரிடம் - கடுகுரோகிணி, வேம்பு.
அரிடிகம் - சிற்பநூன்முப்பத்திரண்டினொன்று.
அரிட்சி - பயம்.
அரிட்டசூதனன் - விட்டுணு.
அரிட்டநேமி-சூரியனுடைய துவாதசசாரதிகளுளொருவன்.
அரிஷ்டம் } அரிட்டம் } அதிட்டம், அந்தர்ப்புரம், அமங்கலம், உற்பாதம், கள், காக்கை, கேடு, சுபம், சென்மதோஷம், தாமிரம், பங்கம், பிரசவிக்கும்வீடு, புள்ளி, மங்கலம், மரணக்குறி, முட்டை, மோர், வம்பு, வெள்வெங்காயம், வேம்பு.
அரிட்டன் - ஓர் அசுரன்.
அரிட்டானகம் - அபசயம், பயங்கரம்.
அரிட்டித்தல் - கொல்லல்.
அரிட்டை-கடுகுரோகிணி, கந்தருவராயிரவர்தாய்.
அரிணம்-கடல், சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.
அரிணவம் - கடல்.
அரிணன்-சிவன், சூரியன், விட்டுணு.
அரிணங்கன் - சந்திரன்.
அரிணி - பெண்மான், வஞ்சிக்கொடி.
அரிணை - கள்.
அரிதகி - கடுக்காய்மரம்.
அரிதகிக்காய் - பச்சைக்கடுக்காய்.
அரிதம் - திக்கு, இருண்டநீலநிறம், பசும்புள்ளிலம், பச்சை, பொன்னிறம் [மஞ்சள்.
அரிதல் - அழுத்தல்.
அரிதவெலி - மஞ்சணிறமுள்ள ஒருவகையெலி, அதுகடித்தாலக்கினிமந்தமுங் கொட்டாவியும்மயிர்க்கூச்செறிவும் உண்டாகுமென்பர்.
அரிதனம் - பொன்னரிதாரம்.
அரிதாரம் - அரித்திராபம், இலக்குமி, ஒருமருந்து.
அரிதாரவகை-அரிதாரத்தினது வகை, அவை கட்டியரிதாரம், காட்டரிதாரம், கனத்தியரிதாரம், தகட்டரிதாரம், தாளகம், பொன்னரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம் என்பன.
அரிதாலம் - அரிதாரம்.
அரிதாலிகை - புரட்டாசிமாதச் சுக்கிலபக்கச்சதுர்த்தி.
அரிதாளம் - நவதாளத்தொன்று, பொன்னரிதாரம்.
அரிதாள் - ஒட்டு, கதிரறுத்தாள்.
அரிதினம் - ஏகாதசி.
அரிதின்வயச்சி - திருநாமப்பாலை, நன்னாரி.
அரிது - அரியது, பச்சை.
அரிதேவம் - திருவோணநட்சத்திரம்.
அரிதை - பகைமை, வன்மம்.
அரிதொடர் - துவக்கும், சங்கிலிகளுள் ஒருவகை.
அரித்தல்-அணில், எலிமுதலியவறுத்தல், புன்முதலியவற்றைத் தூசுகளைநீக்கியெடுத்தல், மாமுதலியவற்றைப் பிரித்தொழுக்குதல்.
அரித்தவிசு - சிங்காசநம்.
அரித்திரம் - கந்தம், சுக்கான், மஞ்சள்.
அரித்திரா-மஞ்சட்கிழங்கின்மாமஞ்சள்
அரித்திராசுரம் - ஒருவகைச் சுரநோய். அது சர்வாங்கத்திலும் மஞ்சள்வன்னத்துடன் தடிப்பு, சயித்தியம், சடத்துவம், முகத்தில் எண்ணெய்தடவினதுபோலப் பிசுபிசுத்தல் நகங்களிலுங் கண்களிலும்நோவு, கீல்களில்வீக்கம், எப்பம், கொட்டாவி, விக்கல், கைகால் குளிர்ச்சி, சிரோபாரம், தலைத்திருப்பல், நாவுகசத்தல், தாகம் நெஞ்சுலர்தல், மார்பெரிச்சல், அக்கினிமந்தம், மலபந்தம், பலவீனம் அரோசகம், வாயினுரைவீழ்தல், அதிகப்பேச்சு என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.
அரித்திராபம் - பொன்னிறம்.
அரித்திராப்பிரமேகரோகம் - ஒருவகைப்பிரமேகரோகம். அது மஞ்சணிறமானவெள்ளைக்காணல், சூடாகநீரிறங்கல், நெருப்பைக்கொளுத்தினபோலளரிச்சலுடன்கூடியகடுப்பு, விருவிருப்பு, அதிகவுட்டணம், முகத்தின் மஞ்சணிறம்நாவிற்கசப்பு மனந்திடுக்

ஹே

ஹேதி - சிருட்டிகாலத்தில் பிரமனால் படைக்கப்பட்ட ராக்ஷஸராஜன், இவன் மனைவி காலாக்நி யென்னும் பயை, புத்திரன் வித்யுத்கேசன், இவன் மாலியவந்தன் முதலாகிய ராக்ஷஸவம்ஸத்துக்கு மூலபுருஷன்.

ஹேமசந்திரன் - விசாலன் புத்திரன், சாலிவாகநசகாப்தம் ஆயிரத்தூறு வருஷத்திலிருந்த ஒரு ஸம்ஸ்க்ருத கவி, இவர் தம் பெயரால் ஒரு நிகண்டு செய்தவர், அது ஹேமசந்திர கோசம் எனப்படும்.

ஹேமன்-ஜயத்திரதன்புத்திரன், பலிக்குப்பாட்டன்.

ஹேமாத்திரி - மேருமலை.

ஹேமாங்கன்-வசுதேவனுக்கு யோசனையிடத்துப்பிறந்த புத்திரன்.

ஹேமை - ஒரு அப்சரஸ்திரீ.

ஹேமவடம் -மேருவுக்குத் தென்றிசைதனியிலேயுள்ள மலைகளுளொன்று.

ஹேஹயன்-சதஜித்து மூன்றாம் புத்திரன்.

ஹை

ஹைரம்பம்-ஒருமலை, இது மணிபுரத்தருகேகபிலநதிக்கு உத்பத்திஸ்தாநமாயுள்ளது.

ஹைஹயம் - கார்த்தவீரியார்ஜுநன் அரசாண்டதேசம் இது நர்மதாநதி தீரத்திலுள்ளது.

எல்லாஞ் செயற்கு மிடமாகு மென்னெஞ்சே
கல்லாரன் வெற்பன் கழல்.

தமிழ்மொழியகராதி முற்றியது.

திருவருட்சகாயம்.

கிடல் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.
அரித்திராமேகம்-போகத்தால் விளைந்த பித்தவெட்டை.
அரித்திரான்னம்-மஞ்சட்சாதம்.
அரித்து - அரித்தலைச் செய்யென்னச்சம், பச்சை.
அரித்துவசம்-சிங்கக்கொடி.
அரித்துவசன்-சிங்கக்கொடியை யுடையோன், வீமன்.
அரித்துவஞ்சத்துவம் - இருபத்தைந்து சிவமூர்த்தத்தொன்று, அது யமனைச்சங்கரித்தமூர்த்தம்.
அரித்துவம்-பகைமை.
அரித்துவாரம் - கங்காநதியுற்பத்தி, மாயாபுரி.
அரித்தை - கிலேசம், துன்பம், வினைமுற்று.
அரிகர்-அறுப்பார்.
அரிநாதம் - அரைகூவுதல், சிங்கநாதம்.
அரிநி - சித்தினிச்சாதிப்பெண்
அரிநிம்பம்-மலைவேம்பு.
அரிநூற்பொறி - நகரத்தின் மதிலில் வைக்கப்படும் பொறிகளிலொன்று.
அரிநெல்லி-ஒருமரம்.
அரிந்தமன்-விட்டுணு, வெற்றியாளன்.
அரிபாகர்-அரியர்த்தர்.
அரிபாலுகம் - தக்கோலச்செடி, தக்கோலம் விதை.
அரிபிராணன்-சிவன்.
அரிபிளவை-ஒருசிலந்தி.
அரிபிறப்பு - பத்துவிட்டுணுவின்பிறப்பு.
அரிபீடிகை - சமஸ்கிருத பாஷையிலுள்ள ஒருவியாகரணநூல்.
அரிபுதை-இரவு.
அரிபுரம்-சத்திருப்பட்டணம்.
அரிபுழு-அரிக்கும்புழு.
அரிபெட்டி - சல்லடை, மாமுதலியவற்றைஅரிக்கும்பெட்.
அரிப்பதாகன்-வீமன்.
அரிப்பர்-அரிதப்பொருடேடுவோர்.
அரிப்பன், அரிப்பாளன், அரிப்பான் - அரிப்புக்காரன்.
அரிப்பிணை-பெண்சிங்கம்.
அரிப்பிரத்தம்-இந்திரப்பிரத்தம்.
அரிப்பிரியம்-கடம்பு, சங்கு.
அரிப்பிரியை-இலக்குமி.
அரிப்பு-அரித்தல், குற்றம், நினைவு.
அரிப்புக்காரன் - பொன் முதலியவற்றைத் தெரிக்கிறவன்.
அரிப்புக்கூடை-அரிப்பெட்டி.
அரிப்புழுக்கல்-சோறு.
அரிப்பெட்டி-அரிபெட்டி.
அரிமகன்-வாயுவின் மகனாகிய வீமன்.
அரிமஞ்சரி-குப்பைமேனி.
அரிமணல்-நுண்மணல்.
அரிமணி-மரகதரத்தினம்.
அரிமந்திரம்-சிங்கத்தின்குகை.
அரிமருகன்-முருகன், விநாயகன்.
அரிமருத்தனன், அரிமர்த்தனன் - மாணிக்கவாசகப் பெருமான்காலத்திருந்த ஒருபாண்டியன், சத்துருவைச் சங்கரிப்போன்.
அரிமல்-மாவிலிங்கு.
அரிமா-ஆண்சிங்கம், சிங்கவிராசி, சிங்கவேறு.
அரிமாநோக்கம் - சிங்கத்தின் பார்வை, அது முன்னும்பின்னும் பார்த்தல்.
அரிமாநோக்கு-செய்யுணினை சூத்திரநிலையினொன்று.
அரிமான்-ஆண்சிங்கம்.
அரிமுகச்சிவிகை-சிங்கத் தலைச்சிவிகை அது சமயவாதிகளைவென்ற ஆசிரியர்களேறுவது.
அரிமுகவம்பி-சிங்கமுகவோடம்.
அரிமுகன்-சிங்கமுகாசுரன்.
அரிமைதா-வெள்வேலமரம்.
அரிய-அருமையான.
அரியகம் - காற்சரியென்னுமாபரணம் கொன்றைமரம்.
அரியகொள்கை-தாபதர்க்குரிய அறியவியல்பு, அவைபலதாமு நீரின்மூழ்கல், நிலத்திற்கிடத்தல், தோலுடுத்தல், அக்கினியோம்பல், ஊரடையாமை, சடைதரித்தல், காட்டிலுணவு, கடவுட்பூசை என எட்டு.
அரியசம்-கொன்றை.
அரியசாரணை-மாவிலிங்குமரம்.
அரியணை-சிங்காசனம்.
அரியணைச்செல்வன்-அருகன்.
அரியது-அருமையானது.
அரியபச்சை-வங்காளப்பச்சை.
அரியமன்-துவாதசாத்தரி லொருவன்

அரியமா-ஒருபிதிர்தேவதை, சூரியன்.
அரியமான் - அதிதியின் புத்திரராகிய சூரியர் பன்னிருவரிலொருவன், பிதிரர்களுட்டலைவனாகிய வரியமன்.
அரியம்-வாச்சியம்.
அரியயற்கரியார் } சிவபெருமான்.
அரியயற்கரியோன் }
அரியரபுத்திரன்-அரிகரபுத்திரன்.
அரியர்-கிடைத்தற்கருமையானவர்.
அரியல்-அரிதல், கள், வியங்கோண் முற்று.
அரியன்-அருமையானவன்சிரேட்டன் மேலானவன், வைசியகுலத்தோன்.
அரியாசனம்-சிங்காசனம்.
அரியாணி-வைசியஜாதிப்பெண்.
அரியாயோகம்-கருவிலக்காகப் புனைந்த வரைப்பட்டிகை.
அரியார்பலம்-பத்து.
அரியுண்மூலம்-கோரைக்கிழங்கு.
அரியேறி-தார்க்கை.
அரியேறு-ஆண்சிங்கத்தினது சாயலாகச்செய்யப்பட்டவடிவம், ஆண்சிங்கம்
அரில் குற்றம், சிறுதூறு, பகை, பிணக்கு, மூங்கில்.
அரிவட்டம்-கழுத்திலே மாட்டும் அரிகண்டம்.
அரிவரி-அரிச்சுவடி, எழுத்துவருக்கம்.
அரிவருடம் - சலகண்டத்தொன்று. அது எமகிரிக்கும் நிடதகிரிக்கும் இடையேயுள்ளது.
அரிவாட்கள்ளன் - கூன்வாள்பிடிக்குங் கைப்பரண்டையில் வருநோய்.
அரிவாட்கொண்டன் - கடலிற்றிரியும் ஒருகொக்கு.
அரிவாட்டயர் - அறுபத்துமூன்றுநாயன்மாருளொருவர்.
அரிவாண்மணை-அரிவாண்மனைப் பூண்டு, காய்முதலிய கறிபதார்த்தங்களை அரியுங்கருவிசெறிக்கப்பட்டபலகை
அரிவாண்மணைப் பூண்டு - ஒருவகைப் பூண்டு.
அரிவான்மூக்கன்-ஒருகொக்கு.
அரிவாள்-கூன்வாள்.
அரிவாள்மணை-ஒருபூண்டு, கறிகுறைக்குங்கருவி.
அரிவி-அரிகதிர்.
அரிவிகொய்தல்-அறுத்தல்.

அரிவிக்கள்ளன்-அரிவிபிடிக்குங் கைப்பிடிப்பு, கைப்பரண்டையில் வரும் நோய்.
அரிவை-இருபத்தைந்துவயதுப்பெண், தேவப்பெண், பெண்பொது.
அரிவைபங்காளன்-சிவன்.
அரின்-பயம்.
அரீடம்-கடுகு, கடுகுரோகிணி.
அரு-அணு, அறிவு, மாயை, காயம், உருவமற்றது, கடவுள்.
அருக-நெருக்கமாக.
அருககனி-பேரேலப்பூண்டு.
அருகஞ்சி-சிந்திற்கொடி.
அருகணி-பிரண்டைக்கொடி.
அருகணைத்தல்-தழுவல்.
அருகத்து - பௌத்தமதத்தினதுநியானங்கள் ஐந்தனுள் நான்காவது.
அருகந்தர்-அருகசமயத்தோர்.
அருகந்தன் - அருகசமயத்தோன், சைனமதத்திற் சொல்லப்படும் இருபத்துநான்குதீர்த்தகருளொருவன்.
அருகம்-சமணமதம், தகுதி, யோக்கியம்.
அருகர்-அனுசரிதர், சமணர், சமீபத்திலுள்ளவர், தோழர்.
அருகல்-அணைதல், ஒழுகல், கிட்டுதல், குறைதல், சாதல், சுருங்குதல், வியங்கோண்முற்று.
அருகனைமுடிதரித்தான் - தர்மதேவதை.
அருகன்-சங்காத்தி, சயினர்களின்தேவகுரு, பக்குவன்.
அருகன்குடை-பொற்குடை, முத்துக்குடை, இரத்தினக்குடை என முறையே சொல்லப்படும் சகலபாசனம், சந்திராதித்தியம், நித்தியவிநோதமாகிய அருகதேவனுக் குரியவாகிய முக்குடைகள்.
அருகன் குணம் - அருக தேவனுக்குடையனவாகச் சமணநூலிற் சொல்லப்படுநற்குணங்கள், அவை அநந்தசுகம், அநந்தஞானம், அநந்த தரிசனம், அநந்தவீரியம், நிர்க்கோத்திரம், நிர்நாமம், நிராயுஷியம், அழிவின்மை என எட்டாம்.
அருகன்சிறப்பு-அருக தேவனுக்குடையமங்கலப்பொருள்கள், அவைதூபதீபக்காட்சி, தேவதுந்துபி, தெய்வத்துவனி, சிங்காதனம், பிண்டி, வெண்

சாமரை, புட்பமாரி, மும்மைக்குடை என எட்டாம்.

அருகன்ஞானம்-அருகனுக்குரிய ஐந்துவகை ஞானங்கள் அவை மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியயஞானம், கேவலஞானம் என்பன. அவற்றுண் மதிஞானம் சுபாவபுத்தி, சுருதஞானம் நூலுணர்ச்சி. அவதிஞானம் தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு, மனப்பரியயஞானம் தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையுமறியுமறிவு, கேவலஞானம் திரிகாலவுணர்ச்சி.

அருகன்மதில் - உதயதரம், கலியாணதரம், பிரீதிதரம், எனச் சொல்லப்படும் அருதகனுடைய மும்மதில்கள்.

அருகன்விட்டகுணம் - அருகதேவனுக்குடையனவல்லவாகச் சமணநூலிற் சொல்லப்படுந்தீக்குணங்கள். அவை ஞானவருணியம், தரிசனவருணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியம், கோத்திரம், நாமம், அந்தராயம் என எட்டாம்.

அருகா-கெடாத.

அருகி-கன், கொஞ்சங்கொஞ்சமாய் பக்குவி, வினையெச்சம்.

அருகித்தோன்றல் - அரிதாகத் தோன்றல், சுருங்கித் தோன்றல்.

அருகியரத்தம்-பூனைக்காலி.

அருகியகுறிஞ்சி, அருகியற்செவ்வழி, அருகியற்பாலை } ஒருபண்.

அருகியன்மருதம்-குரல்குரலாய செம்பாலை.

அருகில்-சமீபத்தில்.

அருகு-அருகென்னேவல், சமீபம், நிவர்த்தி, பக்கம்.

அருகுதல்-அருகல்.

அருகுறல்-கிட்டல்.

அருகே-கிட்ட.

அருக்கசர்-அச்சுவினி தேவராகிய தேவவைத்தியர்.

அருக்கசன், அருக்கனு } கன்னன், சனி, சுக்கிரீவன், யமன்.

அருக்கசோதரம்-இந்திரன்யானை.

அருக்கதானம்-பொற்காணிக்கை.

அருக்கத்தி-வருத்தம்.

அருக்கந்தன்-சிவன், பௌத்தன்.

அருக்கபாதவம்-கிம்பம்.

அருக்கபுத்தி-சூரியகதி.

அருக்கமண்டலம்-சூரியமண்டலம்.

அருக்கம்-எருக்கு, குறைவு, சூரியன், தாமிரம், திரவியம், துன்னிமித்தம், நீர்க்காக்கை, நெருப்பு, படிக்கல்.

அருக்கர்-சூரியர்.

அருக்கலம்-அலை, தடை.

அருக்கல்-அச்சம், அருக்காணி பண்ணல், அருமைப்படுத்துதல், அழுக்காறடைதல், சுருக்கல்.

அருக்கவிக்கேபம், அருக்கவிட்சேபம் } சூரியாட்சம்.

அருக்களித்தல் - அருவருத்தல், பயப்படுதல்.

அருக்களிப்பு-அருவருப்பு, பயம்.

அருக்களிலை-காணுக் கோளிரண்டின் நிலை, சூரியநிலை.

அருக்கன் - இந்திரன், காணுக்கிரகங்களிரண்டு, சுக்கு, சூரியன், ஞாயிற்றுக்கிழமை, மூத்தகுமாரன்.

அருக்கன்வீதி - கிராந்தி மண்டலத்தை நான்கிராசிகொண்ட மூன்றுபாகமாகக்கொண்டு சூரியன் செல்லும்வீதி.

அருக்காணி-அருக்கிறவன், அருக்குதல் அருமை, அழுத்தம்.

அருக்காணிகாட்டல், அருக்காணிபண்ணல் } பிரிய வினங்காட்டிப்பின்னிற்றல்.

அருக்கியத்திரவியங்கள்-அட்சதை, எள் சம்பாநெல், சலம், தருப்பை, நனி, பால், யவம், வெண்கடுகு என அருக்கியத்திற்கு உபயோகமாகும் எட்டுத்திரவியங்கள்.

அருக்கியம்-பூசனை முறையுளொன்று, அது படையற்போடுதல், மந்திரநீரிறைத்தல்.

அருக்கினம்-ஆரோக்கியம், நோவின்மை.

அருக்கீசம் - இருதயமுதற் கண்டமட்டாக எழுங்குலம் வியாபித்து நிற்கும் ஒரு கலை.

அருக்கீசன் - தேவர்யாவர்க்கும் மிகப் பூசிக்கப்படத்தக்க மகாதேவன்.

அருக்கு - அஞ்சுகை, அருக்காணி, அருக்கென்னேவல், அருமை, எருக்கு.

அருக்குதல்-அருமைசெய்தல், ஒடுக்குதல், குறைத்தல், சுருக்குதல், செய்யப்பின்னிற்றல்.
அருக்கு-தடங்கல்.
அருக்கேந்துசங்கமம்-அமாவாசியை.
அருக்கை-தமக்கை.
அருக்கோபலம்-சூரியகாந்தம், பளிங்கு.
அருங்கலச்செப்பு - ஒரு நூல், மணிக்கலம்பெய்த பணிப்பெட்டகம்.
அருங்கலச்செவ்விதழ்-பொற்றாமரை.
அருங்கலம்-அரசர்க்குரியபொருள்.
அருங்கலைநாயகன்-புத்தன்.
அருங்கிடை-பட்டினி.
அருங்குரைத்து - அருமைத் தெனப்பொருள்படுமொருகுறிப்புவினை.
அருங்கேடன் - அழியாதவன், பொறுமைக்காரன்.
அருங்கேடு-கேடில்லாமை.
அருங்கொடைத்தானம்-உத்தமதானம்.
அருங்கோடை - அதியுஷ்ணம், மழையின்மை.
அருசாவிரா-பெருங்குமிழமரம்.
அருசி-சுவையின்மை, பசியின்மை, அறப்பு, அரோசிகம்.
அருச்சகன்-சம்பாத்தியகாரன்.
அருச்சியம் - அருச்சனை, அருச்சிக்கத்தக்கது.
அருச்சயோகம்-பூசை.
அருச்சனம்-சம்பாத்தியம், வணக்கம்.
அருச்சனை-பூசனை.
அருச்சி-அருச்சியென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும், பூசை.
அருச்சிகன்-கோவிற்பட்டன்.
அருச்சிக்கை-அருச்சித்தல்.
அருச்சிதம்-தேட்டம், வணக்கம்.
அருச்சிதன்-பூசிக்கப்படுவோன்.
அருச்சித்தல் - புண்ணிய மொன்பதில் ஒன்று, அது பூசித்தல்.
அருச்சிப்பு-அருச்சனை.
அருச்சியப்பிரபுத்துவம் - அருச்சிக்கப்படத்தக்க முதன்மை, தேவநவவிலாச சபைக்குரிய முதன்மை.
அருச்சியம்-உவப்பில்லாதது, வணக்கம்.
அருச்சுநம் - எருக்கஞ்செடி, ஒருவகை நேத்திரரோகம். அதுவெள்விழிமேற்கடப்பம்பூ நிறமான படலத்தைப் பிறப்பிக்கும், களங்கமின்மை, புல்லு பொன், மயிற்பரவை மருதமரம் வெண்மை.
அருச்சுநவட்டம்-திருவிடைமருதூர்.
அருச்சுனன்-கார்த்தவீரியன், தாய்க்கு ஒரேபிள்ளை, பாண்டுபுத்திரர் ஐவரிலொருவனான விசயன், வெண்ணிறமுள்ளவன்.
அருச்சுநி-பசு.
அருச்சுனம்-எருக்கு, தரும்பு, நேத்திரரோகம், பொன், மயில், மருந்து, வெண்மை.
அருச்சுனன்-அருச்சுநன், விஜயன்.
அருச்சை-பூசிக்கப்படுந்தெய்வம்பூசை.
அருஞ்சயன் - சிவகனுடைய தாயாகிய விசையை என்பவளுக்குப் பாட்டனான ஒருவன்.
அருஞ்சிறை-கடுஞ்சிறை, நரகம்.
அருடணன் - வைசிய விராத்தியனும் வைசியப் பெண்ணும் சோரத்திற் புணர்ந்து பெற்றபிள்ளை.
அருடம் கோபமின்மை, திருத்தி.
அருட்கண்-கிருபைநோக்கு.
அருட்குடையோன்-அருகன், கடவுள்.
அருட்குறி-சிவலிங்கம்.
அருட்கேவலம்-தத்துவசுத்தியின் பின்னர்ப்படுங்கேவலம்.
அருட்கொடியோன் } அருகதேவன்
அருட்கொடிவேந்தன் } அருகதேவன்
அருட்கொடையோன்-கடவுள்.
அருட்சத்தி-இரசம், பராசத்தி.
அருட்சி-அருளுதல்.
அருட்சித்தி-பாதரசம்.
அருட்சித்து - அனுக்கிரகத்திற் குரிய சித்து.
அருட்செல்வம்-கடவுள்கடாட்சம்.
அருட்சோதிகடவுள்-கவுரிபாஷாணம்.
அருட்டம்-கடுரோகிணி, மிளகு, வேம்பு.
அருட்டல்-அருட்டுதல்.
அருட்டி-அச்சம், நடுக்கம்.
அருட்டு-எச்சரிப்பு.
அருட்டுதல் - எழுப்புதல், ஏவிவிடுதல், சாக்கிரதையாகப்பண்ணுதல், நித்திரைதெளிவித்தல்.
அருட்டெரிசனம்- சூரியோதயத்திலே இருளும்நட்சத்திரமுமின்றிச் சூரியபிரகாசமாத்திரங் கண்டகண்போல

அருடோற்றிய காலத்துத் தேவலவி ருளுங் கருவிக்கூட்டங்களுந் தோன் றாது அருளைமாத்திரம் ஆன்மாக் கண்டுகொண்டிருப்பது.

அருட்டை - கடுரோகணி, தக்கனது புத்திரிகளிலொருத்தி.

அருட்பாக்கள் - கடவுளருள்பெற்றோர் எனப்பட்டார் செய்தபாக்கள்.

அருட்புரி - குறிஞ்சியாழ்த்திறவகையி னொன்று.

அருணகிரணகலம் - சித்தாந்தத்திற்பி ராசாதகலைகள் பன்னிரண்டில் எட் டாவதாகியநாதாந்தம் அதுவலப்புற த்தின்மாத்திரம்விந்துவையுடைய க லப்பை வடிவுள்ளதாக நாதகலைக்கு மேற்பிரமரந்திரமட்டாக மூன்றங் குலம் வியாபித்து நிற்குங்கலை.

அருணகிரி - அருணாசலம்.

அருணகிரிநாதர் - திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த கௌமாரபரமா சாரியசுவாமிகள்.

அருணகிரியந்தாதி - ஒருபுத்தகம்.

அருணசாரதி - சூரியன்.

அருணபூதரம் - அருணாசலம்.

அருணமணி - மாணிக்கம்.

அருணம்-ஆடு, எலுமிச்சு, கருமைகலந் தசிவப்பு, செவ்வானம், தாமிரம். தேயமைம்பத்தாறி னொன்று. பதி னெண்பாடையினொன்று. பொன், மான், மிகுசிவப்பு, யானை, விடியல்.

அருணர் - சான்மலித்தீவிலரசர்.

அருணலோசனம் - புறா.

அருணவசம் - கடலிற்பிறந்தது.

அருணவமத்திரன் - வருணன்.

அருணவம் - கடல்.

அருணவூரி - இந்திரகோபம்.

அருணவெலி - ஒருவகையெலி.

அருணன் - சூரியன், சூரியன் சாரதி, புதன், வருணன்.

அருணாக்கிரசன் - கருடன்.

அருணாசலக்கவிராயன் - இராமநாடகஞ் செய்த ஒரு சிறந்தவித்துவான்.

அருணாசலபுராணம் - ஒருசைவபுரா ணம்.

அருணாசலம் - திருவண்ணாமலை.

அருணாத்துமசன் - இராமாயணத்திலே சொல்லப்படுஞ் சடாயுஎன்னும் பற வை, கன்னராசன், சனி, சாவர்ண மனு, சுக்கிரீவன், யமன்.

அருணினம்-திருநாமப்பாலை, நன்னாரி.

அருணிலைவு - நற்குணம்பத்திலுள்ளே ஒன்று.

அருணெறிசுரக்குஞ்செல்வன்-புத்தன்.

அருணை - அருணாசலம்.

அருணோதம்-மேருமலையின்கீழ்த்திசை யிலுள்ள ஒருகுளம்.

அருணோதயம் - சூரியோதயம், வைக றைப்பொழுது.

அருணோபலம் - பதுமராகம்.

அருதா - சதாப்புப்பூண்டினிலை.

அருத்தகங்கை - காவிரியாறு.

அருத்தகாமம் - பொருளாசை.

அருத்தகோளம் - பாதிக்கோளம்.

அருத்தசந்திரகுண்டம்-ஒன்பது பங்கா கச்செய்யப்பட்டநாற்கோணக்ஷேத்தி ரத்தினடியிலுங்கடையிலும்ஒவ்வொ ருபங்கு தள்ளிவிட்டு நடுவிலிருக்கும் எழுபாகத்தைச் சமருத்திரத்தினாற் சுற்றவரும் அர்த்தசந்திராகாரமான குண்டம்.

அருத்தசந்திரபாணம் - பிறைமுகாத் திறம்.

அருத்தசந்திரம் - மயிர்ரேகைக்கண்.

அருத்தசந்திரன் - அட்டமியச் சந்திர ன், இளம்பிறை.

அருத்தசாத்திரம்-அருத்தவேதம். அது பொருடேடுதற்குபயோகமான பார் க்கஸ்பத்தியம், ஔசனமுதலிய நூல் களைக்கருதும்.

அருத்தசாமம் - சாமத்திற்பாதி. நடுரா.

அருத்தசானவி - காவேரிநதி.

அருத்தசிரி-விளைவிற்பாதிவாரமா யெ டுக்கப்பொருந்தி புழுது பயிரிடுஞ் செய்கைக்காரன்.

அருத்தஞ்ஞன்-சொல்லி னருத்தங்கள் பலவற்றையும் அறிந்தவன்.

அருத்தநம்-இடுக்கண்செய்தல், நிந்தித் தல்.

அருத்தநாரீசன் / அருத்தநாரீசுரன் / அருத்தநாரீசுவரன் } பாதி பெண் வடிவமான சிவன்.

அருத்தநான் - பாதிநாள்.

அருத்தநிசா - அர்த்தசாமம்.

அருத்தபதி - அரசன், குபேரன்.

அருத்தபாகம் - பாதிப்பங்கு.

அருத்தபாதை - வேதநூற்பொருள்.
அருத்தப்பிரயோகம் - திரவியங்களை எடுத்துப்பாவித்தல்.
அருத்தப்பிராத்தி - சம்பத்தடைதல்.
அருத்தம்-கருத்து, சொற்பயன், பாதி, பிரயோசனம், பொருள், பொன்.
அருத்தயாமம்-அரையாமம். அது மூன்றேமுக்காலுழிகை,இரவின்முன்னிகழும் மூன்றேமுக்காலுழிகையையும்பின்னிகழும் மூன்றேமுக்காலுழிகையையும்விட்டு இரவில் திரியாமாவென மூன்றியாமங் கொள்ளப்படுவதின் நடுநிகழும் யாமம்.
அருத்தராத்திரம் - நடுராத்திரி.
அருத்தரேசிதம்-நிருத்தக்கை முப்பதிலொன்று.
அருத்தலக்கணை - விட்டும் விடாதலக்கணை.
அருத்தலாபம் - திரவியசம்பாத்தியம்.
அருத்தலோபம் - சத்தவிசனத்தொன்று, அஃதிகொடாமை.
அருத்தல் - உண்பித்தல்.
அருத்தவத்து - அருத்தமுடையது.
அருத்தவாதம் - அபிப்பிராயத்தைக் கூறுதல்,சிரவணத்திற்குரிய சடுவிதலிங்கங்களில் ஆறுவதானது அதுகூடத்தனதுசொரூபமாகியபிரமத்திற்குப்பஞ்ச கிருத்தி கர்த்திருத்துவஞ் சொல்லுதல், துதித்தல், புகழ்தல், பொருளைவிளக்கும் வாக்கியம். அது சாத்திரவிதியை வழங்குவிக்கும்பொருட்டு விதிப்படி நடத்தலால்வரும் நன்மைகளையும் நடவாமையால் வருந்தீமைகளையும் விவரமாகக்கூறி விதிவிடயத்தைப் புகழ்தலும், விலக்குவிடயத்தை இகழ்தலும், பிறர்செய்கைகாட்டலும், பழையநிகழ்ச்சி கூறலுமுடையது.
அருத்தவிற்பத்தி-தெளிவாக வருத்தஞ்சொல்லுந்திறமை, பயன்சொல்லல்.
அருத்தவேதம் - உபவேதம் நான்கின் [ஒன்று.
அருத்தனம் - நிந்தை.
அருத்தனை - பிச்சைகேட்டல்.
அருத்தன் - கடவுள்.
அருத்தாங்கீகாரம் - அரைமனம்.
அருத்தாதிகாரன் } உக்கிராணக்காரன்.
அருத்தாதிகாரி }
அருத்தாகம் - தோத்திரஞ்செய்தல்.
அருத்தாக்தரநியாசம் - எதிர்க் கருத்து, வேற்றுப்பொருள் வைப்பணி.
அருத்தாந்தரம் - கருத்துப்பிரிவு.
அருத்தாந்தரன்னியாசம் - அருத்தாந்தரநியாசம்.
அருத்தாபத்தி-ஆறளவைகளிலொன்று. அது பகலுண்ணுப் பருத்திருப்பானொருவன் இரவிலுண்டானென்பதிற்போல அனுமித்தல்.
அருத்தாபத்திப்பிரமாணம் - அருத்தாபத்தி.
அருத்தார்த்தி - திரவியந்தேடப் பிரயாசைப்படுவோன்.
அருத்தானம் - தோத்திரஞ்செய்தல்.
அருத்தி - இரந்துகேட்போன்,செல்வமுடையவன், வேலைக்காரர், ஆசை, உண்பித்தென்னுமெச்சம், கூத்து பாதம் பாதிசெய்யென்னேவல்.
அருத்திதம் - இரந்துகேட்டல், விரும்பல், பிட்சைத்திரவியம்.
அருத்தித்தல் - பாதிசெய்தல்.
அருத்தியன்-விருப்பமுடையவன், வேண்டியவன்.
அருத்திரம் - மரமஞ்சள்.
அருத்து - அருத்தென்னேவலுந்தெரிநிலைவினைப் பகுதியும்பெயரெச்சத்தொகையும், பொருள்.
அருத்துதல் - உண்பித்தல்.
அருத்துரு - ஆராய்வு, நுணுக்கம்.
அருத்துமமம் - வெண்வேலமரம்.
அருத்தேந்து - அர்த்தசந்திரன்.
அருத்தோதயம் - அர்த்தோதயம், குரு அத்தமிக்கச் சூரியனுதிக்கு முகூர்த்தம்.
அருத்தோபார்ச்சனம்-பொருளிட்டல்.
அருநரகம் - பாழ்நரகம்.
அருநிலை-கடந்துசெல்லற்கரிய ஆற்றுநிலம், யுத்தநிலை.
அருநெல்லி - ஒருமரம்.
அருநெறி-சுருங்கியவழி, நரகம், பாலைநிலம், வாயில்.
அருந்ததர் - அருந்ததிப்புதல்வர்.
அருந்ததி-ஒருநட்சத்திரம், வசிட்டன் மனைவி, அவள் கற்பிற்சிறந்தவள்.
அருந்ததிகாட்டல் - கற்பில் அருந்ததிபோலிருக்கக் கலியாணத்தில் மணப்

பெண்ணுக்கு அருந்ததி நட்சத்திரங் காட்டல்.
அருந்ததிபதி - வசிஷ்டமுனிவன்.
அருந்தமிழ் - நல்லதமிழ்.
அருந்தல் - அருமையாதல், அனுபவித்தல், புசித்தல்.
அருந்தவர் - முனிவர்.
அருந்திடல் - உண்ணுதல்.
அருந்து - அருந்தென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும்.
அருந்துதல் - அனுபவித்தல், உண்ணுதல், குடித்தல், விழுங்குதல்.
அருந்துதன் - வேதனை செய்வோன்.
அருந்துதி - அருந்ததி.
அருந்துவோன் - உண்போன்.
அருந்துதன் - வேதனை செய்வோன்.
அருப்பகம் - அற்பமானது, குழந்தைத் தன்மையானது, பெலமில்லாதது, விலங்கின்பிள்ளை யல்லது குட்டி.
அருப்பகன் - இலக்கை, பைத்தியக்காரன், மூடன்.
அருப்பம் - அரண், அரிது, உரோமக்கிளர்ச்சி, ஊர், கள், காடு, கொலை, கோட்டை, அக்கம், தொடரிப்பூண்டு, நோய், பனி, பிட்டு, பிள்ளை, மருதநிலத்தூர், மா, மீசை முளைக்க அரும்புவிடல், முகரோகம், மோர், வழுக்கு நிலம்.
அருப்பலம் - அனிச்சமரம்.
அருப்பு - தயிர், அரும்பு, கிளைத்தல், கொலை, அச்சம்.
அருப்புத்துருப்பு - அருந்தேட்டம், அருமை.

அருமதானம் - நவதானத்தொன்று.
அருமந்த - அரியமருந்தன்ன.
அருமந்தன்ன - அரியமருந்து போன்ற எனப் பொருள்படும் ஒரு விகாரமொழி.

அருமருந்து - அமிர்தம்.
அருமலதி - ஒருபண்.
அருமறை - மேலானவேதம்.
அருமறைக்கொடியோன் - துரோணசாரி.

அருமேதகம் - அக்கினிக்கிடங்கள் இருபத்தேழினுள் ஒன்று.
அருமேனி - கலைகளுடன் கூடாத நிட்களமான திருமேனி. அது உருவாதீதயான சரீரம்.
அருமை - அரியதன்மை, எளிதாய்க்கிடையாதது, சிறப்பு, மேன்மை.
அரும்பண்டம் - கிடைக்காத சாமான், விசேஷமானது.
அரும்பர் - அரும்பு.
அரும்பல் - முகைத்தல், முளைத்தல்.
அரும்பாலை - ஓரிசை.
அரும்பி - குங்குமபாஷாணம்.
அரும்பிணி - தீராதவியாதி.
அரும்பித்தல் - தோன்றுதல், முகிழ்த்தல்.
அரும்பு - அரும்பென்னேவல், பூவரும்பு, பொன் முதலியவற்றாற் செய்தவரும்பு, முகை, மெல்லிய மயிர்.
அரும்புதல் தோன்றுதல், புன்னகைத்தல், பொடித்தல், முகைத்தல், முளைத்தல், வளரல்.
அரும்புமணி பொன்னாற்செய்யப்பட்ட அரும்புகளையுடைய ஒருகழுத்தணி.
அரும்பூட்டு - இணக்கக்கூடாமை, ஒட்டு, தொடர்ச்சியின்மை, போக்கும் போதாதிருப்பது, மோசத்திலகப்படுகை.
அரும்பூதுகை - ஊதிப் பொன்மணி செய்கை.
அரும்பெறல் - பெறற்கருமை.
அரும்பொருவினை - எண்வகைமணத்துளொன்று.
அரும்பொருள் - அரியகருத்து, பெறுதற்கரிய பொருள்.
அருவசாட்சாத்காரம் - அறிவினின்று குருவானுணர்த்தியது.
அருவசிவசமயாதி - ஆன்மசித்துஞ் சிவசித்தும் ஒத்து வேறாய் நிற்குமென்று சொல்லுமதஸ்தன்.
அருவத்திருமேனி - சிவன் நடிக்கும் நவபேதத்திலே அருவவடிவமாகக்கற்பிக்கப்படுஞ்சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு மேனிகள்.
அருவம் - அருந்தல், உருவமில்லாதது.
அருவருத்தல் - வெறுத்தல்.
அருவருப்பு - அரோசிகம், வெறுப்பு.
அருவல் - சருவுதல், சற்றுச்சற்றாய்ப் போதல்.

அருவன் - உருவிலி.
அருவா - கொடுந்தமிழ்நாட்டு பன்னிரண்டினொன்று.
அருவாணம் - தாவம்.
அருவாவசு - சூரியன் கதிர்களுள்வியாழனை விளங்கச்செய்யுங்கதிர், சூரியசமுகத்தினின்று பாட்டயர்வோருள் ஒருவன்.
அருவாவடக்கு - கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுளொன்று.
அருவாவடதலை - கொடுந்தமிழ்நாட்டினொன்று.
அருவாளர் - அருவாளநாட்டிலரசர்.
அருவி - அருகதிர், கழிமுகம், திணைத்தாள், மலையின்வீழாறு.
அருவிபாய்தல் - மலையில் அருவிபாய்தல்போலக் கண்ணீர் பாய்தல்.
அருவினை - விசேஷபாவம்.
அருவுடம்பு - பத்துவகை இந்திரிய வுணவோடும் ஐவகைவாயுக்களோடுங் காமவினை விளைவுகளோடுங் கூடிய மனம். அது நுண்ணுடம்பு எனவும்படும்.
அருவுதல் - அருவிமுதலியன பாய்தல், கண்கரித்தல், குறைதல், சருவுதல்.
அருவுரு - சகளநிட்களத்திருமேனி.
அருவுருவத்திருமேனி-சிவன் நடிக்கும் நவபேதத்திலே அருவுருவவடிவமாகக் கற்பிக்கப்படுஞ் சதாசிவமாகிய திருமேனி.
அருளகம் - வெள்ளெருக்கு.
அருளரிசி - குடசப்பாலை, வெட்பாலை.
அருளல்-அசைதல், உத்தரவுபண்ணல், காத்தல், கிருபைசெய்தல், கொடுத்தல், சிருட்டித்தல், சொல்லல், நித்திரை விழித்தல்.
அருளவம் - அழிஞ்சில், பெருமரம்.
அருளரம்பூண்டோன் - புத்தன்.
அருளாதி - குடசப்பாலை.
அருளாபு - சாரணைப்பூண்டு.
அருளாமை - அருள் செய்யாமை.
அருளாழிவேந்தன்-அருகன், கடவுள்.
அருளாளன் - கிருபையை விசேடமாகவுடையவன்.
அருளிகேட்டல்-ஒருவர் சொன்னதை அருள்பண்ணிக்கேட்டல், தயவோடு செவிகொடுத்துக்கேட்டல்.
அருளிச்செய்தல் - அனுக்கிரகித்தல் கிருபைசெய்தல்.
அருளிப்பாடு - அருளப்பட்ட உத்தரவு.
அருளிலி - தயவில்லாதவன்.
அருளுடைமை-தொடர்புபற்றா தியல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்லுவதாகிய கருணையுடைமை.
அருளுதல் - அருளல்.
அருளுவம் - அருளவம்.
அருளுறுதி - வேம்பு.
அருள் - ஈயென்னேவல், உமை, கொடை, சத்தி, சாத்துவிகக் குணத்தொன்று அஃது கிருபை.
அருள்செய்தல் - கிருபையோடு சொல்லுதல்.
அருள்புரிபத்திரம் - அரசனொருவன் சேவகம் சௌரிய முதலியவைகளை வியந்து கொண்டாடி அவனுக்குக்கிராமமுதலியவற்றைக் கொடுத்தற்குச்சாதனமாக எழுதிக்கொடுக்கும் பத்திரம்.
அருள்மரம் - முதிர்ந்தமாதுளை மரம்.
அருள்விருட்சம் - பஞ்சதாரு.
அரூபகம் - உருவமின்மை.
அரூபதை - அவலட்சணம்.
அரூபம்-ஆகாயம், உருவமற்றது, குறைவு, வெறுமை.
அரூபி - உருவிலி, கடவுள், கருப்பூரம், சிவன்.
அரூபினரூபின் - எண்பத்தொருபதங்களிலொன்று.
அரூபை-அவலட்சணமுள்ளவள், உருவமில்லாதவள், ஒப்பில்லாதவள்.
அரேசகண்டு - கருணைக்கிழங்கு.
அரேசிகம் - வாழைமரம்.
அரேணுகம் - கடுக்காய்வேர், கவுந்தி, காட்டுமிளகு, வால்மிளகு.
அரேணுகை - காட்டுமிளகு.
அரை-அரையென்னேவல், இடை, பாதிக்கொடி, ஒருமரம், உடம்பின் நடுவிடம், வயிறு.
அரைகல் - அம்மி.
அரைக்கச்சு, அரைக்கச்சை - இடைக்கச்சு.
அரைக்கல் - அரைத்தல்.
அரைக்காணி- நூற்றறுபதில் ஒருபாகம்.
அரைக்கால் - எட்டிலொன்று.
அரைக்குளகம் - ஒறுபடி, அரைமரக்கால்.

அரைங்கரம்-நாஞழி.
அரைசபாரம்-அரசுநடத்துங் கடமை.
அரைசர்-அரசுசெய்வோர்.
அரைசன்-அரசன்.
அரைசி-இராசாத்தி, இராணி, பட்டம [கிஷி.
அரைசிலை-அம்மி.
அரைசு-அரசு.
அரைச்சதங்கை-ஓரிடையணி.
அரைச்சல்லடம்-அரைச்சட்டி.
அரைஞாண்-ஆண்மக்கள் அரையிற்கட்டும் கயிறு, அரைவடம்.
அரைஞாண்மணி-அரையிற்கட்டுஞ் சதங்கை, கிங்கிணி,
அரைதல்-அரைப்படல், உரோஞ்சல், தேய்தல் .
அரைத்தல்-அரக்குதல், அரைக்குதல், அழித்தல், உரிஞ்சல், தேய்த்தல், நசுக்கல், வியாதியிலழுந்துதல்.
அரைத்துகில் - உடம்பினரையி லணியப்படுஞ்சீலை.
அரைத்தொடர் - அரையிற்கட்டுஞ் சங்கிலி.
அரைநலம் - விதைநருங்காது குறையாயிருக்குநலம்.
அரைநலவன்-விதை செம்மையாஅடிக் [காதமாடு.
அரைநா-முதலை.
அரைநாண்-இடுப்பில்கட்டுங் கயிறு.
அரைநாவை - ஒருபாற்கோடிய மண்வெட்டிநுனி.
அரைநாள்-நடுநாள், நாளிற்பாதி, பாதிநாள்.
அரைநூல்-அரைச்சதங்கை, அரைஞாண், நூலிற்பாதி.
அரைநெக்கல் - அரைத்திட்டம் பழுத்தது.
அரைப்பட்டிகை - மாத ரிடையணியிலொன்று.
அரைப்பணம்-அல்குல், ஒருபணத்திற்பாதி.
அரைப்பு-அரைத்தல், இருப்பைப்பிண் [கு.
ணாக்கு.
அரைப்புக்கட்டி-இருப்பைப் பிண்ணாக்
அரைப்பூட்டு-இடைக்கட்டு இடுப்பின் பொருத்து.
அரைமா-நாற்பதிலோர்பாகம்.
அரைமூடி - சிறு பெண்பிள்ளைகள் அரையிற்றரிக்கும் ஒருபணி.

அரையலன்-சோம்பன்.
அரையவிடுகை-தேய்த்தல்.
அரையல் - அரைக்கப்பட்டது, சோம்பல், துவையல்.
அரையனுடுதல் } அரைத்துத் துளாக்கல்.
அரையனிடுதல் }
அரையன்-அரசன், துகளிதம்.
அரையாப்பு-அரையிலுண்டாகும் ஒருகட்டி, மேகநோயால் இடையிலுண்டாகும்பரு.
அரையிரவு } அர்த்தராத்திரி, இரவிற் பாதி.
அரையிருள் }
அரைவடம்-அரைஞாண்பனையேற்றுக்காரர் அரையிற்கட்டும் ஒருகயிறு.
அரைவட்டம்-அரைமூடி,பாதிவட்டம்.
அரைவயிரக்கண்-கம்மாளர் கருவியின் ஒன்று.
அரைவயிறவன் } அரையரிசிநெல், கருக்காய்.
அரைவயிறன் }
அரைவாசி-பாதி.
அரைவாய் - தேய்ந்தவாய், பாதிவாய் கொண்டது.
அரைவெறி-சிறிதுவெறி.
அரோ-ஓரசைச்சொல்.
அரோகம்-சுகம்.
அரோகி-சுகமுடையவன், நோயில்லாதவன்.
அரோகிதை-சுகமுடைமை, நோயின்மை.
அரோகை - தைத்தியகாமத்திலே கோயில்கொண்ட உமை.
அரோசகம் } அருவருப்பு, சமியாக்குணம்,பசி, யின்மை, பிரயாசமின்மை, வெறுப்பு.
அரோசம் }
அரோசனம்-அருவருப்பு, பிரியவீனம்.
அரோசிகம்-அசுத்தம், அருவருப்பு, ஓக்காளம். [மை.
அரோசிகை - அருவருத்தல், பசியின்
அரோசித்தல் - அருவருத்தல், வெறுத்தல்.
அரோசிப்பு-அருவருப்பு.
அரோதனம்-அழுகையின்மை,சூழ்தல், தடை, படைவளைப்பு.
அரோருட்டுமா-ஒருகிழங்கின்மா. அது ஆள்வள்ளிக்கிழங்கென்பர்.
அர் -ஒருபகுதிப் பொருள்விகுதி,பெயர்வினைகளில் உயர்திணைப்பன்மை

அவ்வியயீபாவம்-அழிவுறாமை, இடைச்சொற்சமாசம் அது நாமபூர்வபதம். அவ்வியயபூர்வபதம்என இருவகைப்படும். பெயர்க்குப்பின்வருமிடைச்சொல்நாமபூர்வபதம் (உ-ம்) வாண்மன்பெயர்க்கு முன்வருமிடைச் சொல் அவ்விய பூர்வபதம் (உ-ம்) மற்றையாடை.
அவ்வியவகிதம்-அடுத்திருத்தல், கிட்டினது.
அவ்வியவச்சின்னம் - தடுக்கப்படாதது.
அவ்வியவத்தை-அபத்தமானவறிவு, கிரமமல்லாதது விதிதவறுதல்.
அவ்வியவாகனன் - அக்கினிதேவன்.

அவ்வியன் - ஒன்பதாமனுவின் காலத்தின்ள எழுமுனிவருளொருவன்.
அவ்வியாகிருதம் - பிரமத்தோடு பிரிவற்றது, மாயை.
அவ்வியாகிருதன் - செகத்காரண சாட்சியானவன்.
அவ்வியாசம் - திரார்த்தம்.
அவ்வியாத்தம் - எங்குஞ் செறிந்திராமை, வியாத்தமின்மை.
அவ்வியாத்தி-அடைதல், இன்மை, இலக்கணத்தைக் கெடுக்குந் தோஷங்கண் மூன்றனுளொன்று, எங்குமிருத்தலின்மை.
அவ்வியாபகம் - வியாபகம், இன்மை.
அவ்வியாபி-சர்வவியாபகம் இல்லாதது சர்வவியாபகம் இல்லாதவன், சர்வவியாபகம் இல்லாதவன்.
அவ்வியாபித்துவம்-அவ்வியாபியாயிருக்குந்தன்மை.
அவ்வியாப்பியம் பெரும்பாலான வற்றிற்செறிந்திராமை, முழுதிலுஞ்செறிந்திராமை, வியாப்பியமின்மை.
அவ்வுதல்-அவாவிவிழுதல், அழுந்துதல்
அவ்வேயன்-பதின்மூன்றாமனுவின்காலத்துள்ளஎழுமுனிவருளொருவன்.
அவ்வை-ஔவையார், தவப்பெண், தாய்.
அவ்வோன் - அவன்.
அழகர்-அழகுடையவர், வெள்ளெருக்கு
அழகர்மலை-சுப்பிரமணியர் தலம் ஆறினொன்று நூற்றெட்டுத் திருப்பதிகளினொன்று.
அழகவேதம் - அதிவிடயவேர்.
அழகன் - அழகானவன், விட்டுணு.
அழகாரம் - பேச்சுச்சித்திரம், மதுரம், வீண்புகழ்ச்சியாகப் பேசுதல்.
அழகி - அழகுடையவள்.
அழகிது - நன்றாயிருந்தது.
அழகிய - அழகுடைய.
அழகியர் - அழகுடையோர்.
அழகியவாணன் - ஒருநெல்.
அழகியார் - அழகையுடையவர்.
அழகு-ஒழுங்கு, சருக்கரை, நூலின்பத்தழகு பதினறுபேரிளென்று யௌவனம்.
அழகுகாட்டல்-சரசஞ்செய்தல்
அழகுகாட்டுதல் உடை முதலியவற்றுடைய சிறப்பினைக்காண்பித்தல், சரசஞ்செய்தல்.
அழகுகாமாலை - காமாலைவகைகள் பதின்மூன்றனுளொன்று. அது சரீரம் வாட்டமில்லாமல் வெப்பத்துடன் மினுமினுத்தல்.
அழகுநரைப்பெண்-இந்திர பாஷாணம்.
அழகுதேமல்-அழகாகத்தோன்றும் ஒருவகைத்தேமல்.
அழகுத்தேமல்-படர்தாமரையினொன்று.
அழகுவனப்பு-செய்யுள் வனப்பெட்டினொன்று. அதுசெய்யுட் சொல்லாகிய திரிசொற்களினு லோசைபெறப் பாடுவது.
அழக்கு - ஆழாக்கு.
அழத்தியன்- சோமனதிப்பெருங்காயம்
அழம் - பிணம்.
அழவல் - அழலுதல்.
அழலவன்-அக்கினி, சூரியன், செவ்வாய்.
அழலாடி - சிவன்.
அழலிக்கை-பொறாமை, மனமெரிதல்.
அழலுதல் - எரிதல், கனன்றல், கோபித்தல், வெப்பங்கொள்ளல்.
அழலேந்தி - சிவன்.
அழலோம்பல் - அக்கினிகாரியஞ்செய்தல்.
அழலோன் - சூரியன், செவ்வாய், தீ.
அழல் , அழலென்னேவல், உட்டணம், எருக்கு, கள்ளி, கேட்டைநாள், கொடுவேலி, செவ்வாய், தீ, நரகம், வெப்பம்.
அழல்வணன் }
அழல்வண்ணன் } சிவபெருமான்.
அழல்விரியன் - எரிவிரியன் பாம்பு.
அழல்விரை - நேர்வாளம்.
அழற்கடவுள் - அக்கினித்தேவன்.
அழற்கண்ணன் - உருத்திரன், சிவன்.
அழற்கண்வந்தோன்-முருகன், வீரபத்திரன்.
அழற்கதிர் - சூரியன்.
அழற்கருமம் - அக்கினிகாரியம்.
அழற்காய் - மிளகு.
அழற்குத்துதல் - வேகமான நாற்றம் வீசுதல்.
அழற்சி-அழுக்காறு, வெப்பம், உறைப்பு எரிதல்.
அழற்பால் - எருக்கு.
அழற்பித்தம் - ஒரு பித்தரோகம்.
அழற்பிரபை- எழுநரகவட்டத்தொன்று. அஃது நிரகு.

அழற்புற்று - ஒருவகைப்புற்றுரோகம்.
அழற்றி - அழற்சி, எரிவு.
அழற்று - அழற்றென்னேவல், தெரி நிலை வினைப்பகுதி, பெயரெச்சத் தொகை.
அழற்றுதல் - எரிதல், சுடுதல்.
அழனம் - தீ, பிணம்.
அழளகம் - ஒருவகை விஷட்டாம்பு.
அழன் - பிணம்.
அழன்ற - வெம்மைசெய்த.
அழாக்கு - ஆழாக்கு.
அழால் - அழுதல்.
அழி - அழியென்னேவல், அழிவு, இரக்கம், தெரிநிலை, வினைப்பகுதி, பெயரெச்சத்தொகை, வைக்கோல்.
அழிகட்டு-சாட்டு, தடை, மாற்று, வீண்போக்கு.
அழிகரு - அழிப்புக்காரன், சிதைந்துபோகிற கருப்பம்.
அழிகருப்பம்-வயிற்றில் உருவங்கொள்ளாத இளங்கருவா யிருக்கும்போது கருப்பங் கரைந்துவிழுதல்.
அழிகவுள் - மதம் இடைவிடா தொழுகுதலாலே தனதியற்கை அழிந்த கன்னம்.
அழிகுட்டி - வயிற்றில்மரித்தகுட்டி.
அழிகை - அழிவு, சிதைவு.
அழிக்கல் - அழித்தல்.
அழிச்சாட்டியக்காரன் - தொந்தரவுக்காரன்.
அழிச்சாட்டியம் - அலைவு.
அழிஞ்சில் ஒருமரம், கிராணிதிரவியம்.
அழிஞ்சு - அழிஞ்சில்வேர்.
அழிதகன் - அழிக்கப்படத்தக்கவன், தகுதிகெட்டவன்.
அழிதகை - தகுதிக்கேடு.
அழிதகையவள் - கற்பழிந்தவள், தகையழிந்தவள்.
அழிதகையவன் - தகுதிகெட்டவன்.
அழிதகையாள் - கற்பழிந்தவள், தகையழிந்தவள்.
அழிதகையான் - தகையழிந்தவன்.
அழிதரவு - அழிதல்.
அழிதலை - தலைபோடு.
அழிதல் - இரங்குதல், கலங்குதல், குலைதல், சிதறுதல், தோல்வியடைதல், நிலைகெடுதல், பெருகுதல், மனங்கலங்கல், உருக்குதல், கெடுதல், தவறல்,

அழிதன்மாலை - அழியுந்தன்மை யுடையன.
அழிதுளி - மிக்கத்துளி.
அழிது - அலி.
அழித்தல்-கண்டித்தல், குலைத்தல், கெடுத்தல், முத்தொழிலிலொன்று. அஃது சங்கரித்தல்.
அழிந்தோரைநிறுத்தல் - அறத்துறுப் பெட்டினுளொன்று.
அழிபசி - மிக்கபசி.
அழிபடல் - வருந்தல்.
அழிபுண் - ஆறாதபுண்.
அழிப்பாளி - அழிப்புக்காரன்.
அழிப்பு - அழிக்கை, தொலைப்பு.
அழிமதி - கெடும்பு, மிஞ்சினசெலவு.
அழிமுதல் - முலவழிவு.
அழிம்பன் - வேதாரி, புரட்டன்.
அழிம்பு - அழிவு, சேதம், நட்டம்.
அழியாதபத்தினி - திரௌபதி.
அழியாமுதல்-நிலமுதலிய அசைவற்ற பொருள், கடவுள்.
அழியாமை - அழிவின்மை.
அழியுநர் - தோற்பவர்.
அழிவழக்கு-கள்ளநியாயம், புரட்டுநியாயம்.
அழிவி - கழிமுகம்.
அழிவிலான் - கடவுள்.
அழிவிலூர் - சிதம்பரம்.
அழிவு - கழிமுகம் - குற்றம், கேடு.
அழிவுகாலம் - யுகமுடிவு.
அழிவுபாட்டபாவம் - அபாவப்பிரமாணவகையுளொன்று. அது ஒருபொருளழிவதனாற் பின்னில்லை என்னும் அபாவம்.
அழு - அழுவென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி, பெயரெச்சத்தொகை
அழுகண்ணி - ஒருபூடு.
அழுகல் - அழிதல், அழுகினது.
அழுகள்ளன்-பொய்யாயழுகிறவன்.
அழுகு-அழுகென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி, பெயரெச்சத்தொகை
அழுகுசப்பாணி - அழுகுசார்ப்பம், ஒரு விஷநோய்.
அழுகுசர்ப்பம் - ஒரு விஷச்செந்து.
அழுகுணி-அழுபிள்ளை, ஒருகரப்பன்.
அழுகுதல்-அருவருக்கப்படுந் தன்மையாதல், பதனழிதல்.
அழுகை-அழுதல்
அழுக்ககற்றி-சாம்பற்சாரநீர்.

அழுக்கடித்தல்-அழுக்கொழிக்கச் சிலையடித்தல்.

அழுக்கணவன் - ஒருபுழு, புழுக்கூடு.

அழுக்கம் - கவலை.

அழுக்கறல்-அழுக்காறடைதல், அழுக்கு நீங்கல்.

அழுக்கறுத்தல்-பொறாமைகொள்ளல்.

அழுக்கறுப்பான் - அழுக்கறு என்னும் வினையடியாற்பிறந்து உயர்திணையாண்பாலில்வரும் ஓர் எதிர்காலவினைமுற்று, பொறாமைகொள்பவன்.

அழுக்கற்ற - அழுக்காறடைந்த அழுக்குநீங்கிய.

அழுக்கற்று - அழுக்கறுவென்றும் வினையடியாற்பிறந்த ஓரிறந்தகால வினையெச்சம், அழுக்குநீங்கி.

அழுக்காமை - ஒருவகையாமை.

அழுக்காறுமை - பொறாமை யடையாமை.

அழுக்காறு-அசுத்தநெறி, பொய், பொறாமை.

அழுக்கு - அசுத்தம், ஆமை, மைத்தை, பொறாமை, மலம், மாசு.

அழுங்கல்-அச்சம், அலையல், அழுதல்; அழுந்தல், ஆரவாரித்தல், இரங்கல், ஒலித்தல், ஒளிமழுங்கல், கெடுதல், சோம்பல், துன்பம், நோய், வருத்தம்.

அழுங்கள்ளம் - கள்ளமாயழுதல்.

அழுங்கள்ளர் - கள்ளமாயழுவோர்.

அழுங்கள்ளன் - கள்ளமா யழுவோன்.

அழுங்காமை - அஞ்சாமை, அலையாமை அழாமை, அழுந்தாமை, ஆரவாரியாமை, இரங்காமை, ஒலியாமை, ஒலிமழுங்காமை, கெடாமை, சோம்பாமை, வருத்தப்படாமை.

அழுங்கு-அழுங்கென்னேவல், ஆமை, ஒரு மிருகம்.

அழுங்குதல் - அழுங்கல்.

அழுங்குப்பிடி- நெகிழாதபிடித்தபிடி.

அழுங்குவித்தல் - துன்பம் உறப்பண்ணல்.

அழுதல் - இரங்கல், கத்தல், பதனழிதல், புலம்பல்.

அழுத்தக்காரன் - அடக்கமானவன், இறுக்கமுடையவன்.

அழுத்தங்கோல் - ஒருவகை யெழுதுகோல், மைதீட்டுங்கோல்.

அழுத்தம்-அடக்கம், உலோபத்தனம், உறுதி, ஒப்பம், கடினம்.

அழுத்தல் - அழுந்தச்செய்தல், பதித்தல், பாராட்டுதல்.

அழுத்தி-அழுந்தச்செய்கிறவன், அழுந்தச்செய்கிறவன்.

அழுத்து-அழுத்துகை, அழுத்தென்னுமேவல், தெரிநிலைவினைப்பகுதி, பதித்தல், பெயரெச்சத்தொகை.

அழுத்துகை }
அழுத்துதல் } அழுந்தச்செய்தல், பதித்தல், பாராட்டுதல்.

அழுந்தக்கட்டல் - இறுக்கக்கட்டல்.

அழுந்தல் - அழுந்துதல், உத்தரித்தல், பதிதல், வருந்தல்.

அழுந்து-அழுந்தென்னேவல், நீராழம், வெற்றிலைநடும் வரம்பு.

அழுந்துதல் - அழுந்தல்.

அழுந்துபட்டிருத்தல்-நெடுங்கால மடிப்பட்டிருத்தல்.

அழுந்தூர் }
அழுந்தை } ஓரூர்.

அழுப்பு - சோறு.

அழுப்புநம் - தேவலோகம்.

அழும்பில்- வானவிறல் வேளென்னுங் குறுநிலமன்னனூர்.

அழுவம்-அப்பவருக்கம், அழுக்குநிலம், ஆழம், கடல், குழி, நடுக்கம், நாடு, பரப்பு, பெருமை, மலைமேற்கோட்டை, முரசு, வழுக்குநிலம்.

அழை - அழையென்னேவல்.

அழைக்கை - கூவுகை.

அழைத்தல் - கூவுதல், வாவெனல்.

அழைப்பு - அழைத்தல்.

அள - அளவென்னேவல், தெரிநிலை, வினைப்பகுதி.

அளகத்தி - அளகமுடையவள்.

அளகநந்தை - ஒருதீர்த்தம்.

அளகநாதர் - சைனமதத்தின் தீர்த்தகருளொருவர்.

அளகபந்தி - கேசபாரம், மகளிர் கூந்தலின்பந்தி.

அளகபாரம் - கூந்தற்பாரம்.

அளகம் - கீர், பனிச்சை, பன்றிமுள், பெண்மயிர் மயிர்க்குழற்சி, வெள்ளெருக்கு.

அளகளப்பு - அளவளப்பு, ஐக்கம்.

அளகாதிபதி
அளகாதிபன் } குபேரன்.
அளகாபதி
அளகாபுரி - குபேரனுடையநகரம்.
அளகாரம் - சித்திரமாய்ப்பேசுகை, வீண் புகழ்ச்சியாய்ப் பேசுகை.
அளகு - அன்னப்பெடை, கார்த்திகை நாள், கோழி கூகை மயில் இவற்றின்பெண்சேவல்.
அளகேசன் - குபேரன்.
அளகை-எட்டுவயசுக்கும் பத்து வயசுக்கும் இடைப்பட்டபெண், குபேரன் நகர்.
அளகைக்கோன் - குபேரன்.
அளகைமன்சகா - சிவன்.
அளகையாளி
அளகையான் } குபேரன்.
அளகையையாளி
அளகையோர் - செட்டிகள்.
அளக்கர் - உப்பமைப்போர்.
அளக்கர் - உப்பளம், கடல், கார்த்திகை நாள், குழைசேறு, நீளவழி, பூமி.
அளக்கல்-அளவிடல், எண்ணல், பிரமாணித்தல், மதித்தல், வரையறுத்தல்.
அளக்கிய - அளந்து காட்டும்படி எனக்கருதும் ஒரு வினையெச்சம்.
அளக்குதல்
அளக்கை } அளவிடல், எண்ணல், பிரமாணித்தல், மதித்தல், வரையறுத்தல்.
அளத்தல்
அளத்தி - நெய்தநிலப்பெண்.
அளத்தியர் - உப்பமைப்போர் பெண்கள்.
அளத்துநிலம் - களர்நிலம்.
அளத்துப்பச்சை- மருக்கொழுந்துச்சக்களத்தி.
அளத்துப்புல் - மூயிற்றுப்புல்.
அளத்துப்பூனை - ஒருசெடி.
அளந்திடல் - அளத்தல்.
அளபு - அளபெடை, அளவு, ஓரலங்காரம், அஃது அளபெடையாய் வருவது.
அளபெடுத்தல் - எழுத்தின் மாத்திரையை எழுப்புதல்.
அளபெடை - எழுத்துக்கள் தத்தமாத்திரையில் நீண்டொலித்தல்.
அளபெடையனுகரணம்- அளபெடைப்போலி.
அளபெடைவண்ணம் - அளபெடை பயின்றுவருவது.
அளப்பம் - அளப்பு, அலக்கை, ஊழ்.
அளப்பளத்தல் - பிதற்றல்.
அளப்பன் - வீணைகப்பேசுவோன்.
அளப்பு - அலப்பு, அளத்தல், ஊழ்.
அளப்புக்கு - முடக்கொத்தான்.
அளப்புதல் - அலப்புதல், குழப்புதல்.
அளமரல் - அலமரல்.
அளமிளாதல் - அளவளாவுதல்.
அளம் - உப்பளம் - கூர்மை, நெய்தல், நிலம், நெருக்கம்.
அளர்க்கம் - தூதுளம்.
அளவடி - நாற்சீரான்வருமடி.
அளவடிவிருத்தம் - நாற்சீரோரடியாய் வரும் விருத்தம்.
அளவர்-அளப்போர்,உப்பமைப்போர்
அளவல் - எட்டுதல், கலத்தல்.
அளவழிச்சந்தம் - தனித்தனியே நான்கெழுத்துச் சிறுமையும் இருபத்தாறெழுத்துபெருமையும்பெற்று எழுத்தளவொத்தனவாய்க்குருவும் இலகுவும் ஒவ்வாத அடிகளால் வருவது.
அளவழித்தாண்டகம் - எழுத்தலகும் எழுத்து மொவ்வாது வருமோர் பிரபந்தம்.
அளவளத்தல்
அளவளாதல் } கலத்தல்.
அளவளாய் - அளவளாவி எனப் பொருள்படும் ஒரு வினையெச்சம்.
அளவளாவல் - அளவளாவுதல்.
அளவளாவு - அளவளாவென் னேவல், கொண்டாட்டம், தெரிநிலைவினைப் பகுதி, நெஞ்சுகலத்தல், பெயரெச்சத்தொகை.
அளவளாவுதல் - கலத்தல்.
அளவறுத்தல் - வரையறுத்தல்.
அளவன் - அளக்கிறவன், உப்பமைப்போன், கோரபாஷாணம்.
அளவி - அளவு.
அளவிடுதல் - மதித்தல்.
அளவிடை - அளவு, திருவாசகம், நிறை, மட்டறிதல்.
அளவியற்சந்தம் - தனித்தனிநான்கெழுத்துச் சிறுமையும் இருபத்தாறெழுத்துப் பெருமையும்பெற்று எழுத்தளவொத்துக்குருவும் இலகுவும்ஒத்தடிகளால் வருவது.
அளவியற்றாண்டகம் - இருபத்தேழெழுத்துமுதலாகவுயர்ந்த எழுத்தடியி

னவா எழுத்தங்குருவும் இலகுவும் ஒத்தவரும் ஒருபிரபந்தம்.
அளவிறத்தல்-எல்லைக்கடத்தல், மீறல்.
அளவின்மை - அபரிமிதம்.
அளவு-எண்ணன் முதலிய நான்களவு, தாளவகையுளொன்று, பிரமாணம், வரையறை.
அளவுகோல் - நிலமளக்குந்தண்டு.
அளவுதல் - கவத்தல்.
அளவுநாழி - அளக்குங்கொத்து.
அளவுப்பண்புத்தொகை - அளவுப்பண்புருபு தொக்கு நிற்பது (உ-ம்) நாற்பொருள்.
அளவும் - மட்டும், வரைக்கும்.
அளவெடுத்தல் - ஒன்றனது நீளமகல முதலிய அளவைக்குறித்தல்.
அளவெண் - அளவடி, ஓரடியாக நான்கடி வருவது.
அளவை - அளவு, அறிதல், அனுமானம், ஆகமம், பிரத்தியட்சம், எனுமூவளவை,எடுத்தல்,எண்ணல், முகத்தல்,நீட்டல், எனும் நான்களவை எல்லை, ஓர்நூல், தன்மை, நாள், பிரமாணம்.
அளவையாகுபெயர் - எடுத்தல், எண்ணல், நீட்டல்முகத்தல்என்னும்அளவைப்பெயர்தனை அடைந்தபொருட்காவது.
அளவைவிளக்கம் - பிரமாணங்களைவிளக்கும் ஒரு நூல்.
அளறல் - அளறுதல்.
அளறு - குழைசேறு, நரகம்.
அளறுதல் - சிதறுதல், பிளத்தல்.
அளாய - அளாவின, கலந்த.
அளாயின - அளாவியவை எனப் பொருள்படும்ஒருவினைமுற்றுப் பலவின்பாற்பெயர்.
அளாவல் - கலத்தல், சேர்ந்து பற்றல், துழாவியாற்றல்.
அளாவு-அளவென்னேவல், தெரிநிலை வினைப்குபதி,பெயரெச்சத்தொகை
அளாவுதல்-கலத்தல், சேர்ந்துபற்றல், துழாவியாற்றல்.
அளி-அளியென்னேவல், அன்பு, கள், காய், குளிர்ச்சி, கொடை, [illegible] தேன்,பாணம், மது, வண்.
அளிகம் - கட்டழகு, நெற்றி, பொய்.
அளிகுலம் - தேனீக்கூட்டம், வண்டுக்கூட்டம்.
அளிக்கிய - கொடுக்கும்படி.
அளிக்குலம்-தேனீக்கூட்டம், வண்டுக்கூட்டம்.
அளிதல்-உருகுதல், கனிதல், வார்தல்.
அளிது - அளிக்கத்தக்கது, இரங்கத்தக்கது.
அளித்தல்-காத்தல், கொடுத்தல், நெருங்கல், பாதுகு.
அளிந்தம்-கோபுரவாயிற்றிண்ணை முற்றம்.
அளிப்பு - சிருட்டிப்பு.
அளியர் - அன்புள்ளோர், எளியோர்.
அளியன் - அளிக்கத்தக்கவன்.
அளிகை - பொய்மை.
அளீகம் நெற்றி, பிரியக்கேடு, பொய்.
அளுக்கல் - அச்சக்குறிப்பு.
அளுக்கு - அழுக்கென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி, பெயரெச்சத்தொகை.
அளுக்குதல் - அஞ்சுவித்தல்.
அளுங்கு - அழுங்கு.
அளேசுவெப்பம் } அதிவிடயம்.
அளேசுவெப்பு }
அளேருகம் - தூதுளங்கொடி.
அளை-எழாம் வேற்றுமையுருபு, குழையென்னேவல், தயிர், புற்று, மலைக்குகை, முழை, முழைஞ்சு, மோர், வளை, வெண்ணெய்.
அளைஇ - கலந்து.
அளைகுதல் - கலக்குதல்.
அளைக்கள்வன் - விட்டுணு.
அளைதல் - அளைவு, கலக்குதல், குறைதல்.
அளைமறிபாப்பு - அளைமறிபாப்புப்பொருள்கோள்.
அளைமறியாப்புப்பொருள்கோள் -பொருள்கோளெட்டினொன்றுஅதுசெய்யுளிறுதிமொழியாவது அடியாவது அச்செய்யுளின் முதலினும் நடுவினும் பொருள் கொண்டு வருவது (உ-ம்) ''தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளவார் தாமுஞ்சூழ்ந்தவினையாக்கை சுடவிழிந்து [illegible] சுழல்வார்தாமு-மூழ்ந்தபிணிகலியமுன்செய்த வினை

யென்றேமுனிவார் தாமும்-வாழ்ந்த பொழுதினைவாளெய்துநெறிமுன் னிமுயலாதாரே" எனவரும்.

அளையெடுத்தல்-புரைவைத்தல், வளை செய்தல்.

அளைவு - கலப்பு, குழைவு.

அளைவைத்தல் - அளையெடுத்தல்.

அள்-அள்ளென்னேவல், உயர்திணைப் பெண்பாற் படர்க்கை யொருமை விகுதி, கன்னம், காது கூர்மை, நெருக்கம், பற்றிரும்பு.

அள்வழுப்பு - காதுக்குறும்பி.

அள்ளத்தி - ஒருமீன்.

அள்ளல்-அள்ளுதல்,குழைசேறு, சத்த நரகங்களிலொன்று.

அள்ளாத்தி - ஒருமீன்.

அள்ளி - வெண்ணெய்.

அள்ளிருள் - மிகுவிருட்டு.

அள்ளு - அளவுகூலித்தானியம், அள்.

அள்ளுகொள்ளை - பெருங்கொள்ளை.

அள்ளுக்கட்டல் - பலப்படுத்தல், பற்றிரும்புகட்டல்.

அள்ளுதல் - அள்ளல், நெருங்கல்.

அள்ளுமாந்தம் -ஒருவகைமாந்தரோகம் அது விலாவைத் தாக்கிக் கொள்ளுதல்.

அள்ளுறல் - வாயூறல்.

அள்ளை - பிசாசம்.

அற - அறும்படி, மிக, முற்ற.

அறக்கடவுள் - இயமன், விதுரன்.

அறக்கடை - பாவம்.

அறக்கம்பிளப்பி - திருநாமப் பாலை பூண்டு.

அறக்கற்பு - மறந்தவிகற்பு.

அறக்காடு - சுடுகாடு.

அறக்குளாமீன் - சூரைமீன்.

அறக்கொடி - உமையம்மை.

அறக்கொடிபாகர் }
அறக்கொடிபாகன் } சிவபெருமான்.

அறக்கொடியோன் - கடவுள்.

அறங்கடை - பாவம்.

அறங்கூறவையம் - அறங்களைக்கூறுந் தருமாசனத்தார்.

அறங்கை - அகங்கை.

அறச்சாலை - தருமசத்திரம்.

அறச்செல்வி-தருமதேவதை,பார்ப்பதி

அறணை - காட்டுக்கருணை.

அறத்தவிசு - நியாயப்பீடம்.

அறத்தளி - அந்தப்புரம்.

அறத்தார் - புண்ணியமுள்ளவர்.

அறத்தின்சேய் - பஞ்சபாண்டவருள் ஒருவனாகிய தருமன்.

அறத்தின்மூர்த்தி - தருமதேவதை.

அறத்தின்மைந்தன் - தருமபுத்திரன்.

அறத்துப்பால் - புருஷார்த்தங்களிலே தருமநெறியைக் கூறும்பாகம்.

அறத்துறத்தல்- உலகப்பற்றைமுற்றாய் விடல்.

அறத்துறந்தோன்-உலகப்பற்றை முற்றுயொழித்தவன், சன்னியாசி.

அறத்துறுப்பு - அறத்தினது அங்கம்.

அறத்துறுப்பெட்டு - அறத்திற்கங்கமாக எண்ணப்படுங்குணங்களெட்டு. அதுஅழிந்தோரைநிறுத்தல், அறம் விளக்கல், ஐயப்படாமை, பழியை நீக்கல், பேரன்புடைமை, மயக்கமின்மை,விருப்பின்மை, வெறுப்பின்மை என்பன.

அறத்துறை - புண்ணியவழி.

அறத்தைக்காப்போன் - அரிகரபுத்திரனாகிய ஐயன்.

அறத்தொடுநிலை-அறத்தொடு நிற்றல்.

அறத்தொடுநிற்றல் - ஐயுறு தோழி கண்ணீர்துடைத்துழிக்கலுழ்தற்காரணங் கூறன் முதலாகக் கிளையிருவன் வரக் கண்டமை கூறல் ஈறாகிய வேழும்.

அறநிலை - தருமம், பிரமமணம்.

அறநிலைப்பொருள் - நெறிவழி நின்று தத்தம்நிலையினால் முயன்று பெறு பொருள்.

அறநிலையறம்-தத்தம்வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல்.

அறநிலையின்பம்-ஒழுக்கமும் குணமும் குலமும் பருவமும் ஒத்த கன்னியைத் தீவேட்டில்லத்திருத்தல்.

அறநெறி - தருமவழி.

அறப்பாடல் - அறம்பாடல்.

அறப்பால் - அறத்துப்பகுதி.

அறப்புறம் - அறச்சாலை.

அறமுடியப்பார்த்தல் - முற்ற முடியப் பார்த்தல்.

அறமூர்த்தி - தருமமேவடிவாகவுடையவன்.

அறம் - கையறம், தருமம், நீர்மை. நூற்பயன் நான்கினுென்று, பெரியோரியல்பினுென்று.
அறம்பகர்ந்தோன் - புத்தன்.
அறம்பாடல் - கையறம்பாடுதல்.
அறம்புறம் - அகம்புறம், அடிதலை, உட்புறம், தடுமாற்றம்.
அறம்விளக்கல் - அறத்தைப் பிரபலப்படுத்தல்.
அறல்-அறுதல், கடற்றிரை, கருமணல், சிறுதூறு, நாசம், நீர், விழவு.
அறவரி - அறவிடுதல்.
அறவர் - பெரியோர், முனிவர்.
அறவன் - புத்தன்.
அறவாக்கல் - அறவிடுதல்.
அறவாணர் - சிவன்.
அறவாழி-தருமக்கடல், தருமச்சக்கரம்.
அறவாழியந்தணன்-அரன, அரி, அருகன், கடவுள்.
அறவாழியான்வோன் - புத்தன்.
அறவாழிவேந்தன் - அருகன், கடவுள்.
அறவாளன் - அறச்செயலுடையவன்.
அறவான் - அறவு.
அறவி - அறமுடையது அறவழி நின்றோன்.
அறவிடுதல்-அறவாக்குதல், தண்டுதல்.
அறவிய - அறத்தோடுகூடிய.
அறவியங்கிழவோன் - புத்தன்.
அறவியான் - அறத்தினிற்போன்.
அறவிருத்தம் - தருமவிரோதம்.
அறவிலைவாணிகன் - பொருளை விலையாகக்கொடுத்தது அதற்குத் தருமங்கொள்ளும் வியாபாரி.
அறவு-அறுபட்டவிடம், ஒடிவு, தடவை.
அறவுபதை - உபதைநான்கனுளொன்று அது மந்திரிமுதலியோரைப் பரிசோதிக்குமிடத்து அவரிடம்புரோகிதரையும் அறவோரையும்விட்டு அவரைக்கொண்டிவ்வரசன் அறவோனன்மையின் அவனைப்போக்கி அறனுமுரிமையுமுடையாெருவனை வைத்தற்கெண்ணினம் இதுதான் இயாவர்க்கும்இயைந்ததுநின் கருத்தென்னையெனச் சூழ்ச்சியோடு சொல்லுவித்தல்.
அறவுளி - முடிவு, வியாதிஸ்தனுக்கு மந்திரித்தல்.

அறவுளிபார்த்தல்-தீர்ப்புப்பண்ணுதல் மூற்றுங்கொடுத்தல்.
அறவூதல் - புடமிடல்.
அறவை-உதவியற்றது, உதவியற்றவள், உதவியற்றவன்.
அறவைச்சோறு - அநாதருக்கன்னங்கொடுத்தல்.
அறவைத்தல் - புடமிடுதல்.
அறவைத்தூரியம் - அநாதருக்குப் புடவை கொடுத்தல்.
அறவைப்பிணஞ்சுடுதல் - அநாதப்பிரேதத்திற் கிமக்கடன்செய்தல்.
அறவையேன் - அநாதையேன்.
அறவோர்-அறவோர், பார்ப்பார். முனிவர்.
அறவோர்பள்ளி-அருகர்பள்ளி, புத்தர் பள்ளி.
அறவோன் - அருகன், தருமநெறியோன், பார்ப்பான், முனிவன்.
அறளை - அரிகண்டம், ஒரு வியாதி.
அறனழித்தல்-அறமென்ப தொன்றில்லையெனவழித்துச் சொல்லுதல்.
அறனளித்துரைத்தல் - அறக்கிழவனை அன்புசெய்தல்.
அறனிலாளன்-கருமமில்லாமை உடையவன்.
அறனோம்படை - தருமம் போநிக்குமிடம்.
அறன் - அறக்கடவுள்.
அறன்கடை - பாவம்.
அறன்மகன் } தருமன்.
அறன்மைந்தன் }
அறாத - அறுந்துபோகாத, நீங்காத.
அறாமை - கவிழ்தும்பை.
அறாவிலை - கடுவிலை.
அறாவிலைக்காலம் - கருப்புக்காலம்.
அறி-அறியென்னேவல், அறிவு, தெரிகிலை, வினைப்பகுதி, பெயரெச்சத்தொகை.
அறிகருவி - ஞானேந்திரியம்.
அறிகிலார்தார்- அறியவன்மையில்லாதவர்.
அறிகுதல் - அறிதல்.
அறிகுறி - அடையாளம்.
அறிகை - அறிதல், உணர்வு.
அறிகொன்று - அறிவையழித்து, அஃதாவது அறிந்து சொல்லியாது

அறிவை ஏற்றுக்கொள்ளாது இகழ்ந்து கூறி.
அறிக்கை-அறிவித்தல், அறிவு, கட்டுப்பாடு, விளம்பரம்.
அறிக்கைபண்ணுதல்-அறிவித்தல், கட்டுப்படுத்தல்.
அறிக்கைப்பத்திரம், அறிக்கைபத்திரிகை - அறிவித்தல்காவற்பத்திரம்.
அறிக்கையிடல் - அறிக்கைபண்ணல்.
அறிஞர்-அறிவுடையோர், புலவர்முனிவர்.
அறிஞன்-அறிவுள்ளோன், புதன், புத்தன், புலவன், முனிவன்.
அறிதல் - தெரிதல்.
அறிதுயிலமர்ந்தமூர்த்தி, அறிதுயிலமர்வோன் - விட்டுணு.
அறிதுயில்-அறிவுகுன்றாதுசெய்யு நித்திரை, யோகநித்திரை.
அறிநன் - அறியவல்லவன்.
அறிபொருள்-அறியப்பட்ட பொருள்.
அறிபொருள்வினா - தன்னாலறியப்பட்டபொருளையே அறிவு ஒப்புக் காண்டல் முதலிய பயனோக்கி ஒருவன் வினவுவது.
அறிப்பலம் - திப்பிலி.
அறிப்பு - அறிவிப்பு.
அறிமடம் - அறிந்தும‌றியார்போன்றிருத்தல்.
அறிமுகம் - கண்டபழக்கம்.
அறியக்கொடுத்தல்-அறிக்கைசெய்தல், குற்றஞ்சாட்டுதல்.
அறியபலம் - திப்பிலி.
அறியலுறவு - அறியவிரும்பியது.
அறியல் - அறிதல்.
அறியாதடம்படல் - தந்திர யுத்திகண் முப்பத்திரண்டினுள் ஒன்று. அது தானோதிய இலக்கணத்தின் வேறுபடவருவன தானறிந்திலனெனக் கூறி அதன் புறத்துச் செய்வதோர்புறனடை.
அறியாமை-அறிவீனம், முத்தவிக்கினமூன்றினொன்று.
அறியாவறிவு-அறிதற்கரிதாகிய வறிவு.
அறியாவினா, அறியான்வினா - தானறியாத தொன்றை அறிதற்குவினவும் வினா.
அறியான்வினவல் - பஞ்ச வினவில் ஒன்று.

அறியுநர் - அறிபவர்கள்.
அறியொணா - அறியப்படக்கூடாத.
அறியொணாமை, அறியொண்ணாமை - தெரிந்து கொள்ளக்கூடாமை.
அறிவரன் - அருகன்.
அறிவர் - அறிஞர், கம்மாளர்.
அறிவர்சிறப்பு - இறைவர்பூசனை.
அறிவழி - கள், பிசாசம்.
அறிவழிதல் - புத்திகெடல்.
அறிவறை-அறிவற்றதன்மை, அறிவற்றது, அறிவற்றவள், அறிவற்றவன்.
அறிவனார் - பஞ்சமரபு, நூலாசிரியர்.
அறிவனாள் - உத்திரட்டாதி.
அறிவன்-அருகன், அறிவுடையோன், உத்திரட்டாதி, கடவுள், கம்மாளன், சிவன், செவ்வாய், புதன், விட்டுணு.
அறிவாகரன் - கல்விநிறைந்தவன்.
அறிவாளன், அறிவாளி - புத்திமான்.
அறிவித்தல், அறிவிப்பு - அறியச்செய்தல்பிரசித்தம்.
அறிவிலர், அறிவிலார் - மூடர்.
அறிவிலான், அறிவிலி, அறிவில்லான் - மூடன்.
அறிவிற்பரிந்தான் - தோழன்.
அறிவினா-அறுவகைவினாக்களுள் ஒன்று அது ஒருவன் தான் அறிந்த பொருளைக் குறித்து வினவுதல்.
அறிவின்மை - அசேதனம்.
அறிவீனம் - அஞ்ஞானம், அறியாமை.
அறிவீனன் - மூடன்.
அறிவு-அறிதல், ஆடூஉக்குணம் நான்கினொன்று, உணர்வு, கல்வி, புத்தி, போதனை.
அறிவுகொடுத்தல், அறிவுகொளுத்தல் - கற்றுக் கொடுத்தல் தெளிவித்தல்.
அறிவுகேடு - வினைத்திருக்கத் தக்கதாகச் செய்ததீமை.
அறிவுசொல்லல் - புத்திசொல்லல்.
அறிவுடைமை-உண்மையறிவுடையனாதல்.
அறிவுணர்த்தல் - அறிவுபயிற்றல்.
அறிவுதித்தல் - அறிவுபிறத்தல்.
அறிவுபயிற்சி - படிப்பு.

அறிவுமடம் - தான்கூறுகின்றவற்றை யுணரும் அறிவிலாதார்மாட்டுத்தா னறியாமைப்பட்டிருப்பது.
அறிவுமயக்கம் - சிவவறிவு தொழிற் படாதொடுங்கி யிருத்தல், புத்தி தடுமாற்றம்.
அறிவுமயங்கல் - புத்திதடுமாறல்.
அறிவுவரம்பிகந்தோன்-அருகன், வரம்புகடந்த அறிவினையுடையோன்.
அறிவுறல் } அறிவுபயிற்றல்.
அறிவுறுத்தல் }
அறிவொப்புக்காண்டல் - பஞ்சவினாவி னொன்று.
அறு - அற்றது, ஆறு, ஒழி.
அறுகரிசி - அட்சதை.
அறுகழி - நீரற்றகழி.
அறுகால் -.தேனீ, வண்டு.
அறுகாற்பீடம்-சேஷசயனம், மதுரை மீனாட்சியம்மன் பீடம்.
அறுகீரை - அறைக்கீரை. [ளி,யானை.
அறுகு - ஆண்புலி, ஒருபுல், சிங்கம், யா
அறுகுணன் - கடவுள், ஆறுகுணங்களுள்ளவன் அவை ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன.
அறுகுதாசு - சிறுதாசு.
அறுகுறை - கவந்தம்.
அறுகை-அறுகம்புல்,அறுதல், ஒருகுறு நிலமன்னன்.
அறுகோணம் - ஆறுமூலைகளுள்ள வடி
அறுக்கை - அறுத்தல். [வு.
அறுசமயத்தோர்க் குண்டி - முப்பத்திரண்டுதருமங்களுள் ஒன்று.
அறுசரம் - ஓசையாழ்.
அறுசீர்க்கழிநெடிலடி - ஆறுசீர்கொண்ட கழிநெடிலடி.
அறுசுவை - ஆறுவிதவுருசி, அவை உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு என்பன.
அறுதலி - மங்கலியமிழந்தவள்.
அறுதல் - அறப்பட்டது, அறல், கைம்பெண், தோசி.
அறுதி - இல்லாமை, சாவு, சொந்தம், தீர்ப்பு, விலை, முடிவு, நாசம், விக்கிரயச்சீட்டு.
அறுதிக்கரை - நிலத்தை நியாயமாகப் பங்கிடல்.

அறுதிச்சாதனம் - அறுதிச்சீட்டு.
அறுதிச்சொல் - உறுதியாகச் சொல்லுஞ்சொல்.
அறுதியிடல்-நான்குறித்தல், நிர்ணயித்தல்.
அறுதியுறுதி - அறுதிச்சீட்டு.
அறுதொழிலோர்-ஈதல், ஏற்றல்,ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தலென்னும் அறுதொழிலை யுடையோராகிய பார்ப்பார்.
அறுதொழில் - அறுவகைத்தொழில், அவை ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், அந்தணர், அறுதொழிலென்றும், ஈதல் உலகோம்பல், ஓதல், படைபயிறல், பொருதல், வேட்டல்,அரசரதுதொழிலென்றும், ஈதல், ஏருழல், ஓதல், பசுக்காத்தல், பொருளீட்டல், வேட்டல்,வைசியர் அறுதொழிலென்றும் உழுதல், காருகவினைகளாக்கல்,குயிலுவத் தொழில்செய்தல், பசுக்காத்தல், பொருளீட்டல்,முதன்மூவருக் கேவல்செய்தல், சூத்திரர் அறுதொழிலென்றுஞ்சொல்லப்படும். இவற்றுள் காருக வினைகளாவன பட்டு நூலையும் பருத்திநூலையுங்கொண்டு ஆடையாக்கலுஞ் சமத்தறு முழத்தலுமாம், குயிலுவத் தொழில்களாவனதோற்கருவிகளைக் கொட்டலுந் துளைக் கருவிகளை யூதலுமாம்.
அறுத்தல் - அரிதல், அறச்செய்தல்.
அறுநூறு - ஆறுநூறு.
அறுந்தருணம் - தற்சமயம்.
அறுந்தறுவாய் - உறுந்தறுவாய், தற்சமயம்.
அறுந்தொகை-மிச்சமில்லாததொகை.
அறுபகை - ஆறுபகையான உட்பகைகள்,அவைகாமம்,குரோதம்,லோபம், மோகம், மதம், மாச்சரியம்என்பன.
அறுபதம் - கையாந்தகரை, வண்டு.
அறுபது - ஓரெண்.
அறுபத்துநாலடிச்சிந்து - சிந்துகவியுள் ஒன்று. அது அறுபத்துநாலடியுடையது.
அறுபருவம்-ஆறுபருவம், அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, முதுவேனில், இளவேனில் என்பன.

அறுபான் - அறுபது.

அறுபுள்ளிவண்டு - ஒருவகை வண்டு, அது கடித்தாற் சர்வாங்கத்திலுஞ் சிலநாள்சென்றபின்பு வட்டம் வட்டமான தடிப்புக்கள் உண்டாகும் என்பர்.

அறுபொருள் - ஐயமற்றபொருள்.

அறுப்பு-அரிகை, அறுத்ததண்டு, ஆட்சேபிக்கை, மங்கலியமிழத்தல்.

அறுப்புக்காலம்-அரிவி வெட்டுங்காலம்.

அறுமனை - அரிவாண்மனை, ஊத்தை, நாறி.

அறுமர் - எண்ணெய்வாணிபர்.

அறுமீன்-கார்த்திகைநாள், கார்த்திகை மாதம்.

அறுமீன்காதலன்
அறுமுகவன்
அறுமுகம் } குமரக்கடவுள்.

அறும்பன் - துஷ்டன்.

அறும்பு - கொடுமை, பஞ்சகாலம்.

அறுவகைப்படை - அதகாட்டுப்படை, கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை, பகைப்படை, மூலப்படை என்று பெயர்பெறும்.

அறுவகைப்புறச்சமயம்-ஆருகதம், உவகாயதம், பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், பௌத்தம், மீமாஞ்சம் எனச் சைவத்திற்குப்புறமான ஆறுவகைச் சமயம்.

அறுவகைப்பொருள் - வினைச் சொற்கள் கொள்பொருளாறு. அவை கருவி, காலம், செயப்படுபொருள், செயல், செய்பவன், நிலம் என்பன.

அறுவகைப்போகப்பூமி - ஆதியரிவஞ்சம், இரணவஞ்சம், உத்தரகுருவம், எமதவஞ்சம், தேவகுருவம், நல்லரிவஞ்சம் என்னும் அறுவகைப் போகப்பூமிகளாம்.

அறுவகையுட்சமயம்-காளாமுசம், சைவம், பாசுபதம், மகாவிரதம், சாமம், வைரவம், எனச் சைவத்திற்குட்பட்ட சமயங்களாறு.

அறுவகைவழக்கு - பௌத்தமதத்திற் சொல்லப்பட்ட தொகை யின்மை வழக்கு, தொகையுண்மை வழக்கு. தொடர்ச்சியின்மை வழக்கு, தொடர்ச்சியுண்மைவழக்கு, மிகுத்துரையின்மை வழக்கு, மிகுத்துரையுண்மை வழக்கு எனப்படும். அறுவகை வழக்குகள். வேறுமொருவகையாய் இல்வழக்கு, உள்வழக்கு, உள்ளதுவார்ந்த இல்வழக்கு உள்ளதுசார்ந்த உள்வழக்கு, இன்மைசார்ந்த இல்வழக்கு, இன்மைசார்ந்த உள்வழக்கென ஆறுவழக்குள்ளன.

அறுவடை - நென்முதலியவறுத்தல்.

அறுவரி - குறித்தகாலத்திற் கொடுக்க வேண்டிய வரி.

அறுவர்-ஆறுபேர், கார்த்திகை மாதர்களாகிய ஆறுபேர்.

அறுவாய்-கார்த்திகைநாள், வெட்டுவாய்.

அறுவான் - அரவு.

அறுவிகாரம் - செய்யுள் விகாரமாறு. அவை குறுக்கல், தொகுத்தல், நீட்டல், மெலித்தல், வலித்தல், விரித்தல் என்பனவாம்.

அறுவிதி - தீர்மானம்.

அறுவு - அறுதி.

அறுவை-உடை, சித்திரைநாள், சீலை, துகில், பலகையறுத்தல்.

அறுவையர் - ஆடையுடையவர், சீலை நெய்வார்.

அறை-அடி, அரங்கு, அறுந்தது, எழுத்திலேனைச்சொல், கண்ணறை, குறை, சிற்றில், சொல், திரை·தூக்கங்கள், பறையடித்தல், பறையறையென்னேவல், பாத்தி, பாறை, மலையுச்சி, முழைஞ்சு.

அறைகுதல் - அடித்தல், கொல்லுதல்.

அறைகுறை - முடியாமை, வருத்தம்.

அறைகுறைபார்த்தல்-பழுதுபார்த்தல்.

அறைகூவல் - பொரவழைத்தல்.

அறைக்கீரை - ஒருகீரை.

அறைசெய்தல் - அறுத்துத்துண்டமாக்குதல்.

அறைதல்-அடித்தல், கடாவல், சொல்லல், பறையடித்தல், மோதல்.

அறைத்தொழிலார்-கீழறுக்குந் தொழிலுடையோர்.

அறைநர் - அறைப்பவர்.

அறைபோக்கு - அற்றுப்போதல்.

அறைபோதல் - கீழறுத்தல்.

அறைப்படுத்தல்-கீழறுத்துத் திறப்பித்தல்.

அறைமாரி - அலமாரி, மரப்பேழை.
அறைமுறையிடல் - இல்லாமை சொல்லி முறையிடுதல்.
அறையல் - சொல்லல். [க்கப்படுதல்.
அறையுண்ணல் - அடிக்கப்படுதல் அறு
அறையுற்று - வெட்டுதலுற்று.
அறைவித்தல் - பறையடிப்பித்தல்.
அர்கம் - அலரி, குன்றி, தும்பை, துளசி, நந்தியாவர்த்தம், முருக்கு, வன்னி, வெண்டுளசி, வெள்ளெருக்கஞ்செடி, வேம்பு, காணிக்கை, திரவியம், விலை.
அற்கல்-அறிவுடைமை, நிலைபெறுதல்.
அர்களநாதர் - ஒருசமணமுனிவர்.
அர்கன் - அருக்கன்.
அற்கா - நிலையாத.
அற்காதிபன் - திரவியாதிபன்.
அற்காமை - அறிவின்மை, நிலையாமை.
அர்கி - ஓரிலைத்தாமரை.
அற்கியம் - அருக்கியம்.
அர்குதல் - தங்கல், நிலைபெறுதல்.
அற்சனம் - அருச்சனம்.
அற்சனை - அருச்சனை.
அர்சி - சுவாலை.
அற்சிகன் - கோவிற்பட்டன்.
அற்சித்தல் - அருச்சித்தல்.
அற்சியம் - அருச்சிரம்.
அற்பகந்தம் - செந்தாமரை.
அற்பகம் - குழந்தைப்பருவம்.
அற்பகன் - குழந்தை மூடன்.
அர்பகேசி - வசம்பு.
அர்பக்கியன் - சிற்றறிவுடையவன்.
அற்பசங்கை - பூணூல்தாரிகள் சலோபாந்த கழித்தல்.
அர்பசுருதி - கருமகாண்டம்.
அற்பசோபாட்சிபாகரோகம் - கண்களில்வரும் ஒருவகைச்சங்கரரோகம். அது கண்களில் அற்ப வீக்கமாய்ச் சோபாட்சிபாக ரோகத்தின் குணங்களையெல்லாம் உண்டாக்குவது.
அற்பச்சுருதிவாக்கியம் - கருமானுஷ்டானக்கருமங்களைச் சொல்லும் வேதவாக்கியம்.
அற்பணம் - காணிக்கை செலுத்துகை.
அற்பதனம்-திரவியக் குறைவுடைமை.
அற்பதை - இழிவுத்தன்மை.
அற்பத்தனம் - இழிவு.

அற்பதமம் - செந்தாமரை.
அற்பபத்திரம் - ஒருவகைத்துளசி.
அற்பபுத்தி - புத்தியீனம்.
அற்பப்பிராணன்-சிறுமூச்சு, சிறுமூச்சுடனுச்சரிக்கப்படும் எழுத்துக்கள் அவை சம்ஸ்கிருத பாஷையிலே கவர்க்கம்முதலியஐவருக்கங்களினும் முதலாம் மூன்றும் ஐந்தாம் எழுத்துக்களும் ய ர ல என்பவைகளுமா
அற்பமாய் - இழிவாய். [ம்.
அற்பமாரிசம்
அர்பமாரிடம் } சிறுகிரை.
அற்பமூர்த்தி - அருகன், கடவுள்.
அற்பம் - அணு, இலேசு, இழிவு, சிறுமை, நாய், பஞ்சு, பனி, பின்ளை, புகை.
அற்பரம் - மக்கட்படுக்கை.
அர்பருத்தம் - வாழை.
அர்பர் - கீழ்மக்கள்.
அற்பன் - நீசன்.
அற்பாசமனம் - அர்பசங்கை.
அற்பாசி-ஆருதாரங்களுள் ஒன்றாகிய விசுத்தியினது பதினாறு பதுமதளங்களுள் ஒன்றிலிருக்கும்அதிதேவதை.
அற்பாயு - அற்பவயசு, அர்பவயசுடையவன், குட்டி.
அர்பாலங்காரம்-சிறுமையணி, அஃது அற்பமான ஆதேயத்தைப் பார்க்கினும் ஆதாரத்தை அற்பமாகக் கூறுவது.
அர்பிதம் - காணிக்கை, பலி.
அர்பீயம் - மிகஅற்புதம்.
அர்பு - அறிவு, அர்பம், அன்பு.
அர்புதசயா - சூரத்துக்கடுக்காய்.
அர்பமூர்த்தி - கடவுள்.
அர்புதம்-அதிசயம், அழகு, ஓரலங்காரம், ஓரெண், அது ஆயிரங்கோடி ஞானம், பாவக்குணம், ஒன்பதில் ஒன்று.
அர்புதர் - கம்மாளர், ஞானிகள்.
அர்புதவாதம் - ஒருவாதநோய்.
அர்புதவுருவகம்-ஓரலங்காரம் அஃது உவமைக் கியல்பல்லாதவற்றை உள்ளதாயெடுத்துருவகப்படுத்துவது.
அர்புதவுவமை - ஓரலங்காரம். அஃது பொருட்குள்ள இயல்பை எடுத்துக் காட்டி இவ்வியல்புகளெல்லாங் கு

றித்த உவமைக் குளவேவெலாப்பாம் எனக் கூறுவது.

அற்புதன் - கடவுள், சிவன், விட்டுணு.

அற்புதாகமம்-இரகசியங்களை விளக்குங் கிரந்தம்.

அற்புதாகிரகம் - ஒருவகைநோய். அது குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாளிலாவது பன்னிரண்டாம் மாதத்திலாவது பன்னிரண்டாம் வருடத்திலாவது குழந்தைக்கு அல்லது தாய்க்கு வருவது.

அற்புதை - பார்வதி.

அற்புத்தளை - நேசபந்தம்.

அற்போருரு - நேசத்திரட்சி.

அற்ற - அறுவென்னும் வினையடியாற் பிறந்த ஒரிறந்தகாலப் பெயரெச்சவினை.

அற்றடி - அடிகேடு.

அற்றடிப்படுதல் - அடிகெடுதல்.

அற்றம் - அச்சம், அவமானம், அழிவு, உண்மை, குறைவு, சோர்வு, துன்பம், மறைவு, மெலிவு.

அற்றவர் - பொருளற்றவர்.

அற்றறுதி - முட்டமுடிவு, முழுநாசம்.

அற்றார் - இறந்தோர், முனிவர், தரித்திரர்.

அற்றான்-இறந்தோன், தரித்திரன், முனிவன்.

அற்று - அத்தன்மைத்து, சாரியை, (உ-ம்) பலவற்றுக்கோடு.

அற்றுப்போதல் - இல்லாமற் போதல்.

அற்றுவிடல் - கழலுதல்.

அற்றை - அன்று, சிறுமை.

அற்றைக்காரியம்-அற்பகாரியம், அன்றையிற் காரியம்.

அற்றைக்கூலி-அந்தந்தநாளிற் பெறுங் கூலி, அற்பக்கூலி.

அற்றைநாள் - அந்நாள்.

அற்றைப்பரிசம் - விலைமாதர் ஆடவரிடம் அன்றன்று வாங்கும் விலை.

அற்றைவாக்கியம்-சோதிட நூலில்நிகழ்கின்ற பஞ்சாங்க வாக்கிய காலமாகிய இருநூற்று நாற்பத்தெட்டுத் தினங்களில் எடுத்துக்கொண்ட தினமாகிய அன்றையத்தினத்திற்காகிய வாக்கியம்.

அன - ஒப்பான.

அனகங்காரம் - பெருமையின்மை.

அனகம்-கீழானது, பாவமின்மை, புல்லுருவி, மாசின்மை.

அனகன் - அருகன், கடவுள்.

அனங்கதிலகை - ஒருவப்ஸரஸ்திரீ.

அனங்கமாதா - அரக்கு, செம்பஞ்சு.

அனங்கம் - அறிவு, ஆகாயம், இருவாட்சி, உடலின்மை, மல்லிகை.

அனங்கன் - உடலிலான், கடவுள், மன்மதன்.

அனசனம் - உபவாசம்.

அனசூயம் - எரிச்சலின்மை.

அனஞ்சனம் - ஆகாயம்.

அனட்சம் - குருடு.

அனதிகாரி - உரித்தற்றவன்.

அனத்தம் - நாசம், பயனில்லாமை.

அனந்தசயனம் - சர்ப்பசயனம், திருவனந்தபுரம்.

அனந்தசயனன் - விட்டுணு.

அனந்தஞானி - கடவுள், பார்வதி, பிரமன்.

அனந்தமுடிச்சு - மாதர்களணியுமோராபரணம்.

அனந்தம் - அந்தங்கெட்டது, அளவின்மை, அறுகு, ஆகாயம், ஒரெண், அது பத்துக்கோடி, கோடாகோடி குப்பைமேனி, கோளகபாஷாணம், சிறுகாஞ்சொறி, பொன்னரி, பொன், முடிவிலாமை.

அனந்தரம்-நிதம், பிரிவின்மை, பின்பு, மேல், வேலிப்பருத்தி.

அனந்தர்-கள்ளின்செருக்கு, நித்திரை பருத்தி, பித்து, மயக்கம், மயிர்ச்சூட்டு.

அனந்தலோசனன் - கடவுள், புத்தன்.

அனந்தல் - நித்திரை, மதம்.

அனந்தவாதம் - ஒருநோய்.

அனந்தவிசயம் - தருமராசன் சங்கு.

அனந்தவிரதம் - ஒருவிரதம்.

அனந்தர்பத்தி - சூரியவெப்பந் தெரியாமலிருக்கும் பச்சிலைக் கொடிப்பந்தர்.

அனந்தன் - அட்டநாகத்தொன்று, அரன், அரி, அருகன், ஆதிசேடன், கடவுள், பலதேவன், பிரமன், புத்தன்.

அனந்தை-கொத்தான்கொடி, பார்வதி, பூமி.

அனபரன் - பிரமன்.

அனபாயம் - நிரபாயம்.
அனபிகிதகருத்தன் - மூன்றனுருபின் கருத்தன்.
அனப்பியாசம் - அப்பியாசமின்மை.
அனம் - அன்னம்.
அனம்பு - சாதகப்புள், நீரில்லாதது.
அனரவன் - வேந்தோன்றி.
அனர்க்கலம் - தடையற்றது. [கு.
அனர்த்தம் - பயனின்மை, பொல்லாங்
அனலம் - உட்டணம், சித்திரமூலம், சிவாகமம் இருபத்தெட்டினொன்று, வடவாக்கினி.
அனலல் - எரிதல், கனலல்.
அனலன் - அக்கினி, அஷ்டவசுக்களில் ஒருவன், விபீஷணன்மந்திரி.
அனலாசனப்பட்சி - தழல் விழுங்கிப் பட்சி.
அனலி - சூரியன், நெருப்பு.
அனலேறு - இடி.
அனலோடுவேந்தன் - கார்முகிற் பாஷாணம்.
அனல் - அக்கினி, அனலென்னேவல், இடி, உட்டணம், உணர்வு, உயிர்வேதனையினொன்று, கொடிவேலி.
அனல்தாவி - சூரியகாந்தக்கல்.
அனல்வென்றி - தங்கம்.
அனவசரம் - விடுதலின்மை.
அனவதானம் - அவதானக்கேடு.
அனவஸ்தானம் - உறுதியின்மை, தன்னடை.
அனவரதம் - எப்பொழுதும்.
அனற்கல் - சக்கிக்கல்.
அனற்றல் - கனலல், சுடல், புலம்பல்.
அனற்று - அனற்றென்னேவல், திருணம்.
அனன்னியசன் - மன்மதன்.
அனன்னியன் - விட்டுணு.
அனாகதம் - அறிவுக்கதீதமானது, ஆறாதாரத்தொன்று. அது இதயத்தானம், நூதனவஸ்திரம், வரப்போகிறது.
அனாகலன் - ஓரிழிகுலத்தான்.
அனாகாரம் - உறுப்பின்மை, பசியினால் வருந்தல்.
அனாகாலம் - பஞ்சகாலம்.
அனாசரணம் - தன்னடை.
அனாசரத்தல் - ஆசரிப்பின்மை.

அனாசாரம் - ஆசாரமின்மை.
அனாசிகன் - மூக்கறை.
அனாசிப்பூ - ஒருபூ.
அனாசிரயம் - பற்றின்மை.
அனாதகி - சந்நியாசி, யதி.
அனாதபம் - கூதிர், நிழல்.
அனாதம் - அந்தரித்தது, ஆதாரவற்றது.
அனாதரம் - அவசங்கை, அவமானம், ஆதரவின்மை, விருப்பமின்மை.
அனாதரவு - அலட்சியம், உதவியின்மை.
அனாதி - ஆதியின்மை, கடவுள், சிவன், விட்டுணு.
அனாதிசடிலன் - சிவன்.
அனாதிசைவம் - சைவம், பதினாறில் ஒன்று.
அனாதித்துவம் - நித்தியம்.
அனாதிநாதர் - நவநாதசித்தரிலொருவர்.
அனாதிமுத்தன் - அநித்தியமில்லா ஞானி, கடவுள்.
அனாதிரேகம் - வியப்பின்மை.
அனாதீனவம் - நிராதீனம்.
அனாதாரம் - வெறுப்பு.
அனாதேயம் - ஆதேயமற்றது, ஏற்றுக் கொள்ளத்தகாதது.
அனாஸ்தை - அவசங்கை, நிலையின்மை.
அனாந்தம் - அழகின்மை.
அனாமத்து - சேமிப்பு, பொது.
அனாமயம் - நோயின்மை.
அனாமயன் - நோயில்லான்.
அனாமிட்டன் - தேவன்.
அனாயதம் - சமீபித்தது; நீளமற்றது.
அனாயதித்தம் - நிலவேம்பு.
அனாயாசம் - இலகு, சோம்பின்மை.
அனாரதம் - எப்பொழுதும்.
அனாரம்பம் - தொடக்கமின்மை.
அனாரியதித்தம் - நிலவேம்பு.
அனாரோக்கியம் - நோய்.
அனார் - அவர்கள், ஒத்தவர்கள்.
அனார்ச்சபம் - வளைவு, வியாதி.
அனாவிருஷ்டி } மழையில்லாமை, வரட்சி.
அனாவிருட்டி }
அனாவிலன் - சுக்கிரன்.
அனாள் - அன்னாள்.
அனான் - அன்னான்.
அனிகம் - அனீகம்.
அனிசம் - மிகுதி, எப்போதும்.
அனிச்சம் - அருப்பலம், விருப்பின்மை

அனிச்சை-அனிச்சப்பூ, ஒருபூடு, ஒரு மரம், நாகமல்லி, விருப்பின்மை.
அனிஷ்டம், அனிட்டம் - பிரியவீனம்.
அனிமிடம் - மீன்.
அனிமிடன் - தேவன்.
அனிமேடன்- நன்குயாலோசிப்பவன்.
அனியமச்சிலேடை- நியமத்தின்மேலு மோர்நியமிச்சிலேடை (உ-ம்) சிறை படுவபுட்குலமே நிம்புனலுமன்ன.
அனிருத்தன்-தடையற்றவன், தூதன்.
அனிலசகன் - தீ.
அனிலசம் - செம்முகக்குரங்கு.
அனிலநாள் - சோதிநாள், விசாகநாள்.
அனிலம் - காற்று, பிறப்பு.
அனிவன்-அட்டவசுக்களி லொருவன், ஓரிராக்கதன், வாயுபகவான்.
அனிலாமயம் - வாதநோய்.
அனீகம் - அனீகினி, கவலையின்மை, படை, யுத்தம்.
அனீகிதம் - அசந்தோஷம்.
அனீகினி - சேனை, தாமரை, படையி லோர்தொகை. அஃது இரண்டாயி ரத்து நூ(ற்றெ)ண்பத்தேழுயானையும் அவ்வளவு இரதமுமாம் ஆறுயிரத் தைஞ்ஞூற்றறுபத்தேழுகுதிரையும் பதினாயிரத்துத் தொளாயிரத்தமுப் பத்தைந்து காலாளுங்கொண்டது.
அனீசன் - தலைவனில்லாதவன், விட் டுணு.
அனீச - நட்சத்திரசிரகம்,பெருஞ்சீரகம்.
அனீசுவரவாதி-தேவனில்லை யென்ப வன், நாத்திகன்.
அனு - அடையாளம், அற்பம், ஒழுங்கு, கதுப்பு, கீழ், கூட, சமீபம், தனி மை, பங்கு, பின்மோனை;இவற்றை க்காட்டுமோர் உபசருக்கம்.
அனுகதம்-கட்டப்பட்டது, கூடிப்போ தல், பின்வருவது.
அனுகதனம் - சம்பாஷணை.
அனுகமனம் - கூடப்போதல்.
அனுகம் - செஞ்சந்தனம்.
அனுகம்பை - உருக்கம்.
அனுகரணம்-உவமை, செயல்விளங்கி நிற்பது.
அனுகருஷணம்-அழைத்தல், கவர்தல்.
அனுகவீனன் - இடையன்.
அனுகற்பம் - பதில்.
அனுகன் - கணவன்.
அனுகாமி - தோழன்.
அனுகுணம்-ஓரலங்காரம், தகுதி.
அனுகூலம்-காரியசித்தி, கிருபை, சம் மதம், பட்சம், விக்கினமின்மை.
அனுகூலன் - உபகாரி, சிங்காரநாயகர் நால்வரில் ஒருவன்.
அனுகோதம்-சின்னமூளை,அணைமூளை
அனுக்கம்-அனுங்குதல், செஞ்சந்தனக் கட்டை, சோம்பல், பயம், பாம்பு, புலம்புதல், வருத்தம், வாட்டம்.
அனுக்கல்-ஒன்றோடொன்று முட்டச் செய்தல், கெடுத்தல், வருத்தம்.
அனுக்காட்டல்-சாடைகாட்டல், சிறிது தோன்றல்.
அனுக்காட்டுதல் - சாடைகாட்டுதல்.
அனுக்கியடித்தல் - ஒருவிளையாட்டு.
அனுக்கிரகம் - கிருபை.
அனுக்கிரகாங்குசம் - கிருபையுண்டா தல்.
அனுக்கிரகித்தல் - கிருபைசெய்தல்.
அனுக்கிரமணம் - தொடர்ந்துபோதல்.
அனுக்கிரமணிகை-பொருளட்டவணை.
அனுக்கிரமம் - ஒழுங்கு.
அனுக்கு - அனுக்கென்னேவல், தெரி நிலை, வினைப்பகுதி, பெயரெச்சத் தொகை.
அனுக்குதல் - அனுக்கல்.
அனுக்குரோசம் - தயை.
அனுக்கை - விடை.
அனுங்கல் - அனுங்குதல், முட்டுதல், வருந்தல், வாடல்.
அனுங்கியடித்தல் - ஒருவிளையாட்டு.
அனுங்கு - அனுங்கென்னேவல்,தெரி நிலை, வினைப்பகுதி, பெயரெச்சத் தொகை.
அனுங்குதல் - அரைதல், சிணுங்குதல் புரளுதல், புலம்பல், வருந்தல்.
அனுசங்கம் - உருக்கம், புணர்ச்சி.
அனுசந்தானம்-ஆராய்வு, விடயோகம்.
அனுசந்தானம்பண்ணல் - வில்லிலம்பு பூட்டல்.
அனுசந்தித்தல்-அம்பிடைவிடாமல்பிர யோகித்தல், விடாதுதியானித்தல்.
அனுசயம்-பற்று,மனஸ்தாபம், வன்மம்.

அனுசரணம் }
அனுசரணை } இணக்கம், உபசாரம், போதல், வழக்கம்.

அனுசரன் - தோழன், வேலைக்காரன்.

அனுசரிக்கை - அனுசரிப்பு.

அனுசரித்தல் - சார்ந்துநடத்தல், மேற்கொண்டு நடத்தல், வழிபடுதல்.

அனுசரிப்பு-கொண்டாடல், பின்பற்றல்.

அனுசன் - தம்பி.

அனுசாசகன் - ஆள்பவன்.

அனுசாசனம் }
அனுசாஸ்தி } கட்டளை.

அனுசாதன் - தம்பி.

அனுசாதை - தங்கை.

அனுசாரம்-அடுத்துநடத்தல், ஆசரிப்பு கிரகவக்கிரகம், சுபாவம், தத்துவம், தொடர்தல். நடபடி பலன்வழக்கம்.

அனுசாரி உதவிக்காரன், சார்ந்து நடப்பவன், வழிபடுகிறவன்.

அனுசிதம் - அசுத்தம், தகுதியின்மை, பொய்.

அனுசிந்தை - தியானித்தல்.

அனுசேவகன் }
அனுசேவி } சேவகன்.

அனுசை - தங்கை.

அனுசோகம் }
அனுசோசனம் } துக்கம்.

அனுச்சிட்டம் - சுத்தம்.

அனுச்சுவரம்-முதனிலையாய் நின்றொலிதரும் விந்தெழுத்து.

அனுஷம் }
அனுடம் } ஒருநாள்.

அனுட்டணம்-சத்தவிசனத் தொன்று அஃது, சோம்பு, வெப்பமின்மை.

அனுஷ்டானம் }
அனுட்டானம் } அனுட்டிப்பு, தகுதி தவக்கம், நிலைநிறுத்தல்.

அனுட்டித்தல் - ஆசரித்தல்.

அனுட்டிப்பு - ஆசரிப்பு.

அனுஷ்டுக் }
அனுஷ்டுப் } எட்டாவது சந்தஸ்ஸு.

அனுதமம் - சிரேட்டமானது.

அனுதரம்-ஏற்றுமதிக் கூலி, படகேறுதல், மெலிவு.

அனுதரிசனம் - பானபாத்திரம்.

அனுதரித்தல்-அணைத்தல், படிமேலேற்றல், மெலிதல்.

அனுதாத்தம் - படுத்தலோசை, வேதஸ்வரத்தினொன்று.

அனுதாபம் - ஒன்றிற்கிரங்கல்.

அனுதாயம் - மனந்திரும்புதல்.

அனுதாரம் - இல்லொழுக்கம், பிசனித்தனம்.

அனுதாவனம் - பின்றொடர்தல்.

அனுதினம் - எப்போழ்தும்.

அனுத்தமம் - அதமம்.

அனுத்தம் - பொய்.

அனுத்தரம் - ஒவ்வாமறுமொழி.

அனுத்தரன் - உத்தமன், ஒவ்வாமறுமொழி புகலுவோன்.

அனுத்தானம்-முகக்குப்புறக் கிடத்தல்.

அனுத்தியோகம் - முயர்ச்சியின்மை.

அனுத்துவாகம்-பிரமசரியச் சன்னியாசம்.

அனுத்தேகம் - விருப்பின்மை.

அனுநயம் - விருந்தோம்பல்.

அனுநாசிகை - மெல்லினம்.

அனுநாதம் - எதிரொலி.

அனுபதிதம் - இறங்குதல், போதல்.

அனுபஸ்தானம் }
அனுபஸ்திதி } இன்மை.

அனுபஸ்தியேது-ஒரளவை, அது குளிரின்மை பிணியின்மையைக் காட்டுதல் போலும்.

அனுபந்தசதுஷ்டயம் - அனுபந்தம்.

அனுபந்தம் - ஒற்றுமை, ஒன்றிப்புகாரணகாரக சம்பந்தம், கூடுதல், சிசுதொடர்ச்சி, பாவம், முகவுரை.

அனுபந்தன் - குழந்தை, மாணாக்கன்.

அனுபந்தி - தாகம், விக்கல்.

அனுபபத்தி }
அனுபபத்தியேது } முடிவுபெறுத தருக்கம்.

அனுபமம் - ஒப்பின்மை.

அனுபமன் - அழகன், சாமனரகிதன்.

அனுபமை - உவமையின்மை, தென்மேற்றிசையானையின் பெண்யானை, மேன்மை.

அனுபம்-மிகுதியுநீர்ப்பாங்கான நிலம்.

அனுபயோகம் - பிரயோசனமற்றது.

அனுபலத்தி-ஓரலங்காரம், அது காரியமின்மை காரணமின்மையைக் காட்டல்.

அனுபல்லவி - பல்லவிக்கயற் பல்லவி.

அனுபல்லவம்-பதத்தின் முதற்சிற்றடி.

அனுபவப்படல் - உற்றறிதல்.
அனுபவம் - அனுபோகம், சுகபோகம், தோற்றுதல், பிறத்தல்.
அனுபவித்தல் - துய்த்தல்.
அனுபவிப்பு - அனுபோகம்.
அனுபாகம் - அலவருக்குரியபாகம்.
அனுபாதகம் - பெருங்குற்றம்.
அனுபாவம்-அபிநயம், மனோநிச்சயம்.
அனுபானம் - உடன்பருகுவது, மருந்திற் சேர்த்துண்பது.
அனுபூதி - சிந்தனை, பிரமாணங்களைக் கொண்டறிந்த அறிவு.
அனுபோகம் - அனுபவப்படுவது.
அனுபோகித்தல் - அனுபவித்தல்.
அனுப்பல்-அனுப்புதல்.
அனுப்பிராசம்-அனுராகம், வழியெதுகை விரதம்.
அனுப்பிவிடல் - போகவிடல்.
அனுப்பினுட்சுவை - உப்பு.
அனுப்பு - அனுப்புவது. அனுப்பென்னேவல்.
அனுப்புதல் - போகவிடுதல்.
அனுப்பிவித்துக்கொள்ளல்-போக உத்தரவுகொடுத்தல்.
அனுமக்கொடியோன் - அருச்சுனன்.
அனுமதி - ஒழுங்கு, கட்டளை, சதுர்த்தசி, சம்மதி.
அனுமதை - ஒருவகைப்புல்.
அனுமதோட்டி-எட்டாவது மேராகர்த்தா.
அனுமந்தன்-அனுமான், ஆஞ்சநேயன்.
அனுமரணம் - அடுத்திறத்தல், உடன் கட்டையேறுதல்.
அனுமன் - அனுமந்தன்.
அனுமாசாக்கா - பொன்னுங்கண்ணி.
அனுமானப் பிரமாணம் - ஓரளவை, அஃது அனுமானத்தால் அனுமேயத்தை அறிதல்.
அனுமானம்-ஒருபிரமாணம், அஃது உரைத்தவற்றை பிரமாணமாகக் கொண்டு உறையாபிபொருளை அறிதல்.
அனுமானுபாசம்-சந்தேகப்பிரமாணம்.
அனுமானுனுமானம் - கருதனுமானம்.
அனுமானிதம் - குதிரைக்கனைப்பு.
அனுமானித்தல்-ஆர்த்தல், ஐயப்படல், குதிரைகனைத்தல்.
அனுமானோத்தி - நியாயசாஸ்திரம்.
அனுமான் - அஞ்சனை, குமாரன், சிற்பநூல் முப்பத்திரண்டியென்று.
அனுமிதி - அனுமானம்.
அனுமித்தல் - அனுமானித்தல், காரியத்தால் காரணமறிதல்.
அனுமேயம் - ஓரளவை, அஃது அனுமானித் தறியப்படுபொருள்.
அனுமை - அருத்தாபத்தி, கண்ணின் புறவருகு.
அனுமோதனம் - இன்பம் உவகை.
அனுயோகம் - கண்டனை கேள்வி, தியானம், மன்றுடுதல்.
அனுயோசனம் - கேள்வி.
அனுரகசம் - ஏகாந்தம்.
அனுரஞ்சகம் - திருத்தியாதல்.
அனுரஞ்சனம் - அன்பு, உருக்கங் காட்டுதல்.
அனுரதம் - பற்று, விருப்பம்.
அனுரதி - அன்பு.
அனுராகபோகம் - காமானுபவம்.
அனுராகமாலை - ஒரு பிரபந்தம்.
அனுராகம் - காமம்.
அனுரூபம் - இணக்கம், தடை, மத்தியட்சம்.
அனுரோதகம் - சம்மதித்தல்.
அனுரோதம் - பிறர்கருமமுடித்தல்.
அனுலாபம் - கூறியதுகூறல்.
அனுலேபகம் }
அனுலேபம் } அபிடேகம்.
அனுலேபனம்-அபிஷேகம் பண்ணல், பூசுதல், வாசனையூட்டல்.
அனுலோமசன் }
அனுலோமன் } உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத்தாய்க்கும் பிறந்த பிள்ளை.
அனுவசனம் - ஒத்தவாக்கியம்.
அனுவதித்தல் - சொன்ன நியாயத்தையே திரும்பச் சொல்லல்.
அனுவர்த்தனம் - கடமைப் படுத்தல், பலன்.
அனுவழி - புதன்.
அனுவாகம்-ருக் யசுஸ் ஸாம சமுதாயங்கள்.
அனுவாகாரியம் - பிதிர்கருமம்.
அனுவாக்கியை - வேதமந்திரம்.
அனுவாசம் }
அனுவாசனம் } அன்பு, கூடியிருத்தல், வாசனை யூட்டல், வேலைச்சாலை.

அனுவாசிதம் - வாசனையூட்டப்பட்டது.
அனுவாதம் - சம்மதம், நிந்தை, முற்குறித்த பொருளைப்பற்றித் திரும்பச் சொல்லும் நியாயம்.
அனுவாதி - காலவோலன்.
அனுவாதேயன் - அடையப்படாதவன்.
அனுவாரோகணம் - உடன்கட்டையேறுதல்.
அனுவிரசனம் - வழிவிட்டனுப்பல்.
அனுவிருத்தம் - இயற்கைப்பார்வை.
அனுவிருத்தி - உபசாரணை, புறனடை.
அனுற்பத்தி - தவறு, பிறப்பின்மை.
அனூகம் - ஆமோதித்தல், சாதனம், நன்னடை, வமிசம், வில்.
அனூகன் - பிறப்பில்லாதவன்.
அனூடன் - விவாகம்பண்ணுதவன்.
அனூரகன் - பூரணன்.
அனூபகம் - இஞ்சி.
அனூபம் - ஈரம்.
அனூரு - அருணன்; புதன், முடவன்.
அனூர்த்துவாஸ்தி - மேல்தாடை யெலும்பு.
அனூனம் - முழுமை.
அனே - அன்னையே.
அனேகபம் - யானை.
அனேகம் - ஒன்றக்குமேற்பட்டது.
அனேகாகாரம் - பலமாதிரி.
அனேகாங்கவுருவகம் - ஓரலங்காரம். அஃது ஒன்றினங்கம்பலவற்றையும் உருவகஞ்செய்துரைப்பது.
அனேகாந்திகபேதம், அனேகாந்திகம் - அனைக்காந்திகம்.
அனேடமூகம் - அறுப்பு, செவிடும், ஊமையும்.
அனேடன் - அறிவில்லாதவன்.
அனை - அத்தன்மை, ஒருமீன், தாய்.
அனைகாந்திகம் - ஏதுப்போலி மூன்றனுளொன்று. அஃது காரணகாரியம் ஒன்றற்கொன்று மாறுபடகூறுவது.
அனைக்கியம் - அன்னியோன்னிய விரோதம், பன்மை.
அனைக்குமம் - ஐக்கக்குறைவு, பன்மை.
அனைசவரியம் - வறுமை.
அனைச்சொல் - ஐக்கியபதம்.
அனைத்து - அவ்வளவு, எல்லாம்.
அனைமார் - தாய்மார்.
அனைய - உவமையுருபு.

அனையது - அத்தன்மை, அத்தன்மையது, அவ்வளவு, ஒத்தது.
அனையம் - அத்தன்மையினேம் எனப்பொருள்படும் ஒருகுறிப்புவினை முற்று, ஒத்தனேமெனப் பொருள்படும் ஒருகுறிப்பு வினைமுற்று.
அனையர், அனையவர் - அத்தன்மையர் அவர்கள் ஒத்தவர்.
அனையவள் - அத்தன்மையள், அவள், ஒத்தவள்.
அனையவன் - அத்தன்மையன், அவன், ஒத்தவன்.
அனையவை - அத்தன்மையுடையவை, அவை, ஒப்பானவை.
அனையவள் - அத்தன்மையள், அவள் ஒத்தவள்.
அனையன - அத்தன்மையன், அவை, ஒத்தவை.
அனையன - அத்தன்மையன், அவன் ஒத்தவன்.
அனையார் - அத்தன்மையுடையவர். அவர்கள் ஒத்தவர்.
அனையாள் - அத்தன்மையவள், அவள் ஒத்தவள்.
அனையான் - அத்தன்மையானவன், அவன், ஒத்தவன்.
அனையிர், அனையீர் - ஒத்தீர்.
அனையெம், அனையேம் - ஒத்தேம்.
அனையேன் - ஒத்தேன்.
அனையை - ஒத்தாய்.
அனையோம் - ஒத்தோம்.
அனையோர் - அத்தன்மையோர், அவர்கள், ஒப்பானவர்.
அனைவரும் - எல்லாரும்.
அனைவிரும், அனைவீரும் - நீங்களெல்லீரும்.
அனைவோரும் - எல்லாரும்.
அனோர் - அன்னோர்.
அன் - இன்மைஎதிர்மறைபிரிது இவைகளைக் காட்டுமோருபசருக்கம். உயர்திணையாண்பாற் படர்க்கை யொருமைவிகுதி, சாரியை.
அன்பகம், அன்பகர் - சமுத்திரசோகிப் பூண்டு.
அன்பகன் - நல்ல விருதயமுள்ளவன்.

அன்பன்-தோழன், நாயகன், பத்தன்.

அன்பு - ஆசை, தயை, நேசம், பெரியோரியல்பினென்று.

அன்புடைமை - காதலுடைமை.

அன்புறல் - நேசத்திலழுந்தல்.

அன்புறுத்தல் - நேசமுண்டாக்கல்.

அன்மயம் - சந்தேகம்.

அன்மை - அல்லாமை, தீமை.

அன்மொழி - அல்லாதமொழி, பிறமொழி.

அன்மொழித்தொகை - உம்மை, உவமை, பண்பு, வினை, வேற்றுமை என்னுந் தொகைநிலைத்தொடர் மொழிகளின் புறத்துத்தொக்கு நிற்பன. (உ-ம்) பொற்றொடி.

அன்வயம் - அன்னுவயம்.

அன்றன்று - நாளுக்குநாள்.

அன்றாடம் - இனோதினம்.

அன்றி - அல்லது, அல்லாமல்.

அன்றியனைத்தும் - அவனைத்தும்.

அன்றியில் - அல்லாததன்மையில், அல்லாததில்.

அன்றில் - ஒருபுள், கிரௌஞ்சம், மூலநாள்.

அன்றித்தீவு - கிரவுஞ்சத்தீவு.

அன்றினர் - பகைவர்.

அன்று-அசைச்சொல், அந்நாள், அல்ல.

அன்றுதல் - மாறுபடுதல்.

அன்றெரிந்தான் - அண்ணெரிஞ்சான்பூண்டு, சிறுபுள்ளடி.

அன்றே - அன்றைத்தினம்.

அன்றேல் - அல்லதேல்.

அன்றை - அந்நாள்.

அன்றைக்கன்று - அந்தந்தநாளுக்கு.

அன்றைத்தினம் - அன்றையத்தினம்.

அன்றோ - தெளிவுப் பொருளும் பிறபொருளும் உணர்த்தும் ஓரிடைச் சொற்றொடர்.

அன்ன - ஒருவமையுருபு.

அன்னகந்தி - வயிற்றுளைவு.

அன்னகாலம் - போசனக்காலம்.

அன்னகோட்டகம் - களஞ்சியம்.

அன்னகோட்டகன்-சூரியன், விட்டுணு.

அன்னகோட்டம் - பண்டாரம்.

அன்னக்களை - பசிக்களை.

அன்னக்காவடி-யாசகர்பொருட்டு வீடுகடோறும் யாசித்துவாங்கி அன்னங்கொண்டுபோகுங்காவடி, விக்கிரகத்திற்கு நைவேதிக்கும்படி அன்னங்கொண்டுபோகுங் காவடி.

அன்னக்கொடி-சத்திரத்தில்;தருமச்சாப்பாடுபோடுவதைக் காட்டுங்கொடி, பிரமனது அன்னப்புட்கொடி.

அன்னக்கொடியோன் - பிரமன்.

அன்னக்கொடை - அன்னதானம்.

அன்னக்கொப்பு - அன்னப்புட் செதுக்கின மகளிர்காதணி.

அன்னசத்திரம் - அன்னசாலை.

அன்னசலம் - தாபரம்.

அன்னசாரம் - கஞ்சி.

அன்னசாலை - சாப்பாடுமோடுமிடம்.

அன்னசுத்தி - நெய்.

அன்னணம் - அந்தப்பிரகாரம்.

அன்னதன்
அன்னதாதா
அன்னதாதிரு } அன்னங்கொடுக்கிறவன்.

அன்னதாழை - அன்னாசி.

அன்னதானம் - அன்னக்கொடை.

அன்னது-அதுவென்னுஞ் சுட்டுப்பொருட்டாய ஒருபெயர் அத்தன்மைத்தெனப்பொருள்படும் ஒரு குறிப்பு வினைமுற்று, ஒத்தது சுட்டுப்பொருளில் வரும் ஒரு குறிப்பு வினையால் அணையும்பெயர்.

அன்னத்தவன் - பிரமா.

அன்னத்துவி-பஞ்சசயனத் தொன்று. அஃது அன்னச்சிறை.

அன்னபம் - ஆல்.

அன்னபானம் - சாதமுந்தண்ணீரும்.

அன்னபானாதிகள் - சாதந் தண்ணீர் முதலியன.

அன்னபானோற்காரம் - சோற்றையும் நீரையும் வாந்திசெய்தல்.

அன்னபூமி - சோற்றுக்கும்பம்.

அன்னபூரணி
அன்னபூரணை } துர்க்கை.

அன்னபேதி - ஒருமருந்து.

அன்னப்பாகு
அன்னப்பால் } கஞ்சி.

அன்னப்பிராசனம் - சோறூட்டல்.

அன்னமயகோசம்-பஞ்ச கோசத்தொன்று, அஃது அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனப்படும்.

அன்னமயம்-அன்னமயகோசம் சரீரம், போசனத்தாலாகாது.
அன்னமலம் - கஞ்சி.
அன்னமுரசு - சோறிடவிடும்பறை.
அன்னமூர்த்தி - பிரமா.
அன்னம்-ஒருபுள், கவரிமா, சோறு தயாவிருத்திபதினொன்றினொன்று, அஃது உணவுகொடுத்தல், தானியம்.
அன்னம்பாறல் - புலம்பல்.
அன்னயம் - உடல், போசனமுள்ள ஐ.
அன்னரசம் - உணக்களிற்றேகத்திற்செருஞ்சாரம், கஞ்சி.
அன்னரேகை - ஒருவகைவரை.
அன்னர் - அத்தன்மையர்.
அன்னவரர் - பெண்கள்.
அன்னவஸ்திரம் - சாப்பாடும், வஸ்திரமும்.
அன்னவம் - கடல்.
அன்னவர்-அத்தன்மையானவர், அவர்கள், ஒப்பானவர்.
அன்னவள்-அத்தன்மையானவள், அவள், ஒத்தவள்.
அன்னவன்-அத்தன்மையானவன், அவன், ஒத்தவன்.
அன்னவாகனன்-அன்னத்தை வாகனமாகவுடையவன், பிரமதேவன்.
அன்னவாகன் - அன்னவாகனன்.
அன்னவாகிஉரோதம்- கண்டத்தினின்று உணவை அன்ன சயத்தக்குக் கொண்டுசெல்லுங் கால்வாய்.
அன்னவாசயம் - உணவுசிக்குமிடம்.
அன்னவிகாரம் - இந்திரியக்கழிவு.
அன்னவூர்தி - அன்னவாகனம், சரச்சுவதி, பிரமன்.
அன்னவூறல் - அன்னரசம்.
அன்னவேதி - ஒருபூடு.
அன்னவேறு - ஆணன்னம்.
அன்னவை - அத்தன்மைகள், அவை, ஒப்பானவை.
அன்னவள்-அத்தன்மையள், அவள் ஒப்பானவள்.
அன்னன்-அத்தன்மையன், அவன் ஒத்தவன்.
அன்னகாரம் - சோற்றுணர்வு.
அன்னசயம் - வயிற்றனுணவுபோய்த்தங்குமிடம்.
அன்னசி }
அன்னசு } பரங்கித்தாழை.
அன்னதாரம்-சோறு புசித்தலில் உண்டாகும் விருப்பம்.
அன்னதன் - வளர்ப்புப்பிள்ளை.
அன்னபிஷேகம் }
அன்னபிடேகம் } அன்னத்தினுல்செய்யும் ஒரு அபிஷேகம்.
அன்னய்-அன்னையே, ஒத்தவளோ ஓரசைநிலை.
அன்னர் - அவ்வார்.
அன்னவத்தி-விக்கிரகங்களுக்கு முன்னும்மணவாளனுக்கு முன்னுங் கண்ணூறு கழித்தற்குச்செய்யுஞ் சோற்றுலாத்தி.
அன்னவாத்தி-திருஷ்டிகழிக்குஞ் சாதவாலாத்தி.
அன்னள்-அத்தன்மையள், அவள் ஒப்பானவள்.
அன்னன் - அத்தன்மையன், அவன், ஒத்தவன்.
அன்னியகாமி-பரதாரகமனஞ் செய்பவன், பரபுருஷனிடம் போகிறவள் வியபிசாரி.
அன்னியகுணசகனம் - தயாவிருத்திபதினொன்றினொன்றுஅஃதுபிறர்க்குணத்தழுக்காறின்றிப் பொறுத்தல்.
அன்னியகுலம்-வேற்றுக்குலம்.
அன்னியசென்மம் - மறுபிறப்பு.
அன்னியசாகன் - மார்க்கபதிதன்.
அன்னியதர-இரண்டனுளொன்று மற்றையது.
அன்னியதரசன்மசம்- இரண்டிலொன்றன் கன்மத்தாற் பிறந்தது.
அன்னியதா-தவருய், திருத்தமில்லாததாய், வேறுவிதமாய், வேறொருபொழுது.
அன்னியதார்த்தத்துவம் - ஒன்றையொன்றுக்குத் தத்துவம்.
அன்னியதாசித்தி-அன்னிய காரணங்கொண்டு சயகாரணத்தானய காரியத்தை மறுத்தல்.
அன்னியதாஞானம்-ஒன்றை வேறொன்றுயறிதல்.
அன்னியதாப்பிரதிபத்தி-போலி. அது ஒன்ற கின்றவிடத்து அதுபோன்ற வேறொன்று வந்தடைதல்.
அன்னியதோவாதரோகம்-சர்வநேத்திரரோக பேதத்தொன்றாகிய சங்

கரரோக வெழுவகையி னொன்று, அது கண், நெற்றி, வாதநரம்பு, மற்றைய நரம்பாகிய இந்த இடங்களில் வாயுதங்கிச்சஞ்சரிக்கும்போது பிறந்தசன்களிற்சிவப்பு, வீக்கம், அதிகநோவு, நீர்க்கம்மலென்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

அன்னியநாத்தி - வேறன்மை.

அன்னியபாவம் - வேறாயிருக்கை.

அன்னியபிருதம் - குயில்.

அன்னியபிருத்து - காசம்.

அன்னியகுட்டம் - குயில்.

அன்னியமகஸ்கம்-கவனம் வேறாயிருத்தல்.

அன்னியமபுபுட்சு - நியமமின்றிப் புசிக்க விரும்புவோன்.

அன்னியமம் - நியமில்லாதது.

அன்னியம்-குயில், வித்தியாசம் வேறு.

அன்னியயோகவியவச்சேதம் - பிறிதினியைபு, நீக்கல்.

அன்னியர் - சனர், பிறசாதியர்.

அன்னியவாதி-ஒவ்வாமற்பேசுவோன், புரட்டிப்பேசுவோன்.

அன்னிய வோடாலிகாகிரகம்-பலரைத்தொடருகின்ற பன்னிரண்டுபெண்கிரகங்களுளொன்று, அது குழந்தைபிறந்த எட்டாநாளிலாவது, எட்டாமாதத்திலாவது, எட்டாம் வருடத்திலாவது சிசுவை அல்லது தாயைப் பிடிக்கும், அப்போது அன்னத்துவேஷம், அடிக்கடி நாவைநீட்டுதல், இளைத்தல், நோவு, சதாவழுகை, கண்மூடல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

அன்னியன் - பிறன்.

அன்னியாதீனன்-பிறருக்குக் கீழ்ப்பட்டிருப்பவன், பிறரைச் சார்ந்திருப்பவன்.

அன்னியாமம் - அநீதி.

அன்னையூர் - ஒரு சிவஸ்தலம்.

அன்னியேத்துகவாத ரோகம் - வாதரோதவகையுளொன்று, அது உப்புவஸ்து, உட்டணபதார்த்தம் சிலேட்டுமசீதளபதார்த்தம், இலைக்கறி என்னும் இவைகளினாற்பிறந்து தோள், முதுகு, கழுத்து, சிரசு, விலா என்னும் இடங்களில்வேகமாக வியாபித்துப்பித்தத்துடன்கூடி ஒன்றைவிட்டொருநாளில் மிருவேதனை செய்வது.

அன்னியை - பின்னைசத்தி.

அன்னியோன்னியகலகம் - பகை.

அன்னியோன்னியபாவம் - ஒன்றற்கொன்றாதாரமில்லாதது.

அன்னியோன்னியம்-ஐக்கியம் ஒன்றற்கொன்றிருக்கிற சம்பந்தம்.

அன்னியோன்னிய வத்தியாசம்-இந்த வத்துவின் தருமம் அந்த வத்துவினிடத்தும் அந்த வத்துவின்தருமம் இந்தவத்துவினிடத்துமாகத் தோற்றப்பட்டது.

அன்னியோன்னிய விருத்தம்-அன்னியோன்னிய விரோதம்.

அன்னியோன்னியவிரதம் - பகை.

அன்னியோன்னியாச்சிரய தோஷம் - இருபொருள்கள் ஒன்றற்கொன்று பற்றுக்கோடா யிருக்கு மென்னுந் தோஷம்அது இருவினைகளுடலின் காரியமாயும் உடலிலிருவினையின் காரியமாயும் இருக்குமென்று சொல்லுதல்போல்வது.

அன்னியோன்னி யாச்சிரமம் - இருபொருள்களொன்றுக்கொன்று பற்றுக்கோடாயிருத்தல்.

அன்னியோன்னியாபாவம் - ஒன்றில் ஒன்றில்லாதிருக்கை.

அன்னியோன்னியாலங்காரம் - ஒன்றுக்கொன்றுதவியணி. அது ஒன்றற்கொன்றுபகரித்தலைச் சொல்லுதல்.

அன்னுபாஷாணம்வாதிசொன்னபொருளை அறிந்து அனுவதியாதிருத்தல்.

அன்னுவயச்சொல் - பார்த்தானுமானமென்று சொல்லப்பட்ட சொல்லினுருவகை. அதுதிருட்டாந்த பூர்வமாகப் போதிக்கு முடம்பாட்டுச் சொல்.

அன்னுவயம்-காரண காரிய சம்பந்தம். சேர்ந்திருக்கை வமிசம்.

அன்னுவயலக்கணம் - பொருத்தமான பதங்களையெடுத்துக் கோத்துச்சொல்லப்படும் வாக்கியத்திற்குரிய இலக்கணங்கள், அவைகருத்தா, கருமம், கிரியை, விசேடணம், விசேடியம் என்பன.

அன்னுவயவியதிரேகி - பரார்த்ததானுமானவகையுளொன்றுஅது அன்னு

வயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுடையது. யாண்டுப்புகை, ஆண்டுத்தீ, எங்ஙன மட்டிலி லென்பது அன்னுவயவியாத்தி. யாண்டுந் தீயில்லை, ஆண்டுப்புகையுமில்லைஎங்ஙனமடுவிலென்பதுவியதிரேகவியாத்திஇப்படிஇருவகை வியாத்தியினுலுமலைக்குத் தீயுண்மை சாதிக்கப்படக் கிடந்ததனுல் இந்த நியாயம் அன்னுவயவியதிரேகி.

அன்னுவயவியதிரேகியனுமானம் - உபநயம், ஏது, திருட்டாந்தம்,நிகமனம், பிரதிஞ்ஞை என்னும் ரூபங்களைந்தினுல் அன்னுவயவியதிரேக வியாத்திகளைக்கொண்டு சொல்லப்படும் அனுமானம்.

அன்னுவயவியாத்தி - யாண்டுப்புகை, ஆண்டுத்தீயென்பதிற்போலஅன்னுவயவுண்மை அது காட்சியைச் சொல்லுமுடனிகழ்ச்சி நியாயம்.

அன்னுவயவிலக்கணம் - கருத்தா கருமம் கிரியை விசேடணம் விசேடியம் இவற்றின் சம்பந்தம்.

அன்னுவாகாரியபசனம்-தக்ஷிணுக்கினி

அன்னுவாகாரியம்-இறந்த பெற்றூருக்கு முதல் வருடத்தின் மாசந்தோறுஞ் செய்யப்படு மாசிகசிரார்த்தம், மாசந்தோறும் வரும் அமாவாசித்தினத்திற் பிதிருக்குச் செய்யுஞ்சிரார்த்தம். அது புதிதாயும் நாற்றமில்லாததாயு மிருக்கிற மாமிசத்தாற் செய்யத்தக்கது.

அன்னுவாசனம் - அனுவாசனம்.

அன்னுவாதேயம் - கணவன் வழியார் கொடுத்த நன்கொடை.

அன்னுவாரோகணம் - அனுவாரோகணம்.

அன்னுழி - அப்பொழுது.

அன்னே-தாயே தாயையொத்தவளே.

அன்னை - அக்காள், தாய், தோழி.

அன்றே - அதிசயச்சொல், இரக்கச்சொல்.

அன்னோர் - அவர்கள்.

அன்னோன் - அத்தன்மையன்.

அன்னோன்றி - பெலனற்றவன்.

ஆ

ஆ - தமிழ்மொழியின் நெடுங் கணக்கில் வரும் முதல் எழுத்து, உயிர்முயற்சியால்பிறக்கும்எழுத்துக்களுள்வாயைத் திறந்த அளவிலே ஒலிக்கும் ஒருநெட்டுயிர். அஃறிணைப்பன்மை எதிர்மறைப் பலவின் விகுதி. ஆக என்பதின்குறுக்கம், ஆச்சாமரம் ஆதலைச் செய்யென்னேவல், இசை, இரக்கம், இரண்டாமுயிரெழுத்து, எதிர்மறை ஒரு வினையெச்சவிகுதி, சொல்லிசை, பசு, பெண்மரை,பெண்ணெருமை,சிவஞானம், வியப்பு, விலங்கின் பெண்பொது, வினு அந்தம் இணைப்பு உருக்கம் குறைவு பிரிப்பு இவற்றைக் காட்டும் ஒருபசருக்கம்.

ஆஅ-அதிசயச்சொல், அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

ஆஆ - அதிசயவிரக்கச்சொல்.

ஆக - ஆகட்டும், உவமையுருபு முழுவதும்.

ஆகசம்-உடலிலிருந்துண்டானது.

ஆகஸ்மீகம் - சடிதி.

ஆகடியஞ்செய்தல் - அநியாயம் பண்ணல், கொடுமைசெய்தல், பரிகாசம் பண்ணல்.

ஆகடியம் - அநியாயம், கொடுமை, பரிகாசம்.

ஆகணைக்கிளை-சாதாரண காந்தாரம்.

ஆகணதாரம் - கைசிகநிஷாதம்.

ஆகண்டலன் - இந்திரன்.

ஆகதம்-அடிக்கப்பட்டது, அறியப்பட்டது, வந்தது, வாத்தியம், கந்தைப்புடவை, புதுப்புடவை.

ஆகந்துகசுரம் - ஒருவகைச்சுரம். அது அருந்துகின்ற அறுசுவைவருக்கங்களின் காரணமில்லாமல் வருவது.

ஆகந்துகமசூரிகை-ஆகந்துகமசூரிகைரோகம்.

ஆகந்துகமசூரிகைரோகம் - ஒருவகை மசூரிகைரோகம். அது திரிதோஷமசூரிகைக் கொப்பளங்களைப் போலிருக்கினும் அதைப்போல் ஒரேகாலத்திற் பிறக்காமல் முதல் முதல் அவயவத்திற் பிறந்து உடனேசரீர முற்றிலும் வியாபிப்பது.

ஆகந்தசம் - இடையில் வந்தது.
ஆகந்தவிரணம் - ஒருவகை விரண நோய், அது காயத்தினாற் பிறப்பது, சத்தியோவிரணம்.
ஆகமசாத்திரம் } பதினெண்ஸ்மிருதிகள்.
ஆகமநூல் }
ஆகமந்தம் - உடற்சோர்வு, சுறுசுறுப்பின்மை.
ஆகமபதி - கடவுள்.
ஆகமப்பிரமாணம் - மூவளவையிலொன்று, அது உபதேசகலை, தந்திரகலை, மந்திரகலை எனப்படும்.
ஆகமமலைவு - தருமநூல் சொல்லியவாறே சொல்லாது பிறழக்கூறுவது.
ஆகமம் - அகமம், ஆகமநூல், உறுதிச்சடுதாசி, ஒரு சாத்திரம், கல்வி, சேருதல், ஞானம், தருமநூல், தோன்றல், விகாரம், மரப்பொது, மிருத்தல், முதல்வன்வாக்கு.
ஆகமர்க்கேர்ன் - விநாயகன்.
ஆகமனகாலம் - சங்கிராந்தி, பிரசவகாலம்.
ஆகமனம் - வந்து சேருதல்.
ஆகமனித்தல் - வருதல்.
ஆகமன் - சிவன்.
ஆகமிலி - மன்மதன்.
ஆகம் - உடல், சுரை, பறை, மார்பு.
ஆகம்பிதமுகம் - சினத்தாலுஞ் சம்மதியாலும் மேல்கீழ்த் தலையாட்டல்.
ஆகம்பிதம்-சம்மதக் குறிகாட்டு முகம், நடுக்கம்.
ஆகரணம் - ஏவுதல், பிடித்தல்.
ஆகரணன் - ஏவலன்.
ஆகரம்-உறைவிடம், குற்றுடைவாள். சாலரங்கபாஷாணம், சுரங்கம், திரள், மண்வெட்டி, மேலானது, வீடு.
ஆகரன் - கள்வன், குடியிருப்போன்.
ஆகரி - ஓரிராகம், திப்பிலி.
ஆகருஷணத்தம்பனவாதம் - ஒருவகை வாதரோகம் அது சரீரத்தை வில்லைப்போலிழுத்திழுத்து வளைத்துச் சற்றுநேர நிமிரவொட்டாமல் ஸ்தம்பிக்கச் செய்வதோடு இமையாட்டாதிருத்தல். தாழ்வாய்க் கட்டை பிடிப்பு, விலாவெலும்புச் சந்துக்களிற்றளர்ச்சி, வாயிற் கோழையுடனிர்சுரத்தல், வாந்தி பலவீற் சுரம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆகருஷணம் } அட்டகருமத் தொன்று அழைத்தல்.
ஆகருடணம் }
ஆகருடணை }
ஆகருடணை } இழுத்தல், கலைஞானம் அறுபத்து நான்கினொன்று.
ஆகருஷித்தல் }
ஆகருடித்தல் }
ஆகருணனம் - கேட்குதல்.
ஆகலநம்-எண்ணுதல், பிடித்தல், விருப்பம்.
ஆகல் - ஆகுதல்.
ஆகவகளம் } போர்க்களம் போர்.
ஆகவபூமி }
ஆகவம் - சிலை, போர்.
ஆகவனம் - பலி.
ஆகவனீயம் - வேதாக்கினி, மூன்றில் ஒன்று.
ஆகவே - ஆகையால்.
ஆகளாசம் - அபின்.
ஆகற்பகம்-இருள், பச்சாத்தாபம், மதிகெடல், முடிச்சு.
ஆகற்பம்-அதிகப்படுத்தல், அலங்காரம், நோய்.
ஆகனம் - கன்னக்குருவி, பாறை.
ஆகனிகம் - எலி, பன்றி, மண்ணகழ் கருவி.
ஆகனிகன் - ஒட்டன், கள்வன்.
ஆகன் - விநாயகன்.
ஆகன்னம் - காதுபரியந்தம்.
ஆகா - எதிர்மறைப் பன்மைப் படர்க்கை வினைமுற்று, ஒரு காந்தருவன் வியப்புச்சொல்.
ஆகாங்கருமம் - ஒருகாலத்து முடியாத செய்கை, தகாதசெய்கை.
ஆகாங்களங்கு-மிருதாருசிங்கி, அஃது முப்பத்திரண்டு பாஷாணத்தில் ஒன்று.
ஆகாக்காரியம் - நடைபெறாத காரியம் தகுதியற்றகாரியம்.
ஆகாங்கிசை } அவாய்நிலை, மிகு விருப்பு.
ஆகாங்கியை }
ஆகாசகபாலம் - புரளித்தனம்.
ஆகாசகபாலி - புரளிக்காரன் மிகவல்லவன்.
ஆகாசகமனம் - ஆகாயகமனம்.
ஆகாசகமனி - அந்தர மார்க்கமாய்ச் செல்லுவோன்.
ஆகாசகருடன்-கொல்லன்கோவை, சீந்தில், பேயத்தி.

ஆகாசகரை - மனோராச்சியம்.
ஆகாசகாமி - அந்தரமார்க்கமாய்ப் போகுங் குதிரை.
ஆகாசகாமியர் - அந்தர மார்க்கமாய்ப் போகுங் குதிரையையுடையவர்.
ஆகாசக்கத்தரி - ஒருகத்தரி.
ஆகாசக்கரைக்கட்டு - ஆகாசகரை.
ஆகாசக்கல் - சூரியகிரணத்தனு.
ஆகாசக்குணம்-ஆகாயத்தினது ஐவகைக்குணங்கள். அவை ஆங்காரம், உலோபம், மதம், மானம், வெகுளியென்பன.
ஆகாசசம் - அந்தரத்திற்பிறந்தது.
ஆகாசச்சொல்-மூவகைச்சொல்லினுள் ஒன்று, அது தானே கூறுதல்.
ஆகாசதீபம் - தீபாவளித்தீபம்.
ஆகாசத்தாமரை-அந்தரத்தாமரை, ஒருதிலப்பூண்டு, கொட்டைப்பாசி, பொய்.
ஆகாசபட்சி - சாதசப்புள்.
ஆகாசபதி - இந்திரன்.
ஆகாசபாலம் - ஆகாசகரை.
ஆகாசப்பட்சி - ஆகாசபட்சி.
ஆகாசப்புளு - பெரும்பொய்.
ஆகாசப்புளுகன் - பெரும்பொய்யன்.
ஆகாசப்பொய் - பெரும்பொய்.
ஆகாசப் பொய்யன் - பெரும்பொய் சொல்பவன்.
ஆகாசமண்டலம் - பரதவுறுப்புகளில் ஒன்று, வானமண்டலம்.
ஆகாசமயம் - சூனியம்.
ஆகாசமார்க்கம் - அந்தரவழி.
ஆகாசமார்க்கன் - அந்தரவழியாகச்செல்லுவோன், ஆகாயகமனி.
ஆகாசம்-அந்தரம், ஆகாயம், இடம், ஒருபூதியம், வான், வெளி.
ஆகாசயானம் - அந்தரக மனரதம்.
ஆகாசவல்லி - ஒருகொடி, சீந்தில்.
ஆகாசவாசிகள்-அந்தரசஞ்சாரிகள், பதினெண்கணத்தொருவர்.
ஆகாசவாணி - அசரீரிவார்த்தை.
ஆகாசி - சீந்தில்.
ஆகாசேசன் - இந்திரன்.
ஆகாச்செயல் - செய்யத்தகாதசெயல். நிந்திக்கத்தக்ககாரியம், முடியாத கிரியை.
ஆகாடம்-எல்லை, செக்காயுருவி வெண்ணாயுருவி.

ஆகாதம்-அடி, குளம், கொலை, கொலைக்களம்.
ஆகாதன - முடியாதன.
ஆகாதனம் - கொலைக்களம், கொலை.
ஆகாத்தியக்காரன் - எதிரிடை செய்பவன், பொல்லாங்குபுரிவோன்.
ஆகாத்தியம்-எதிரிடை, பொல்லாங்கு.
ஆகாத்தியன் - ஆகாத்தியக்காரன்.
ஆகாமி - வருதல்.
ஆகாமியகருமம், ஆகாமியகர்மம், ஆகாமியகன்மம் - மூவகைக் கன்மங்களுள்ஒன்று. அது வருத்தமான சனனத்திற் செய்யப்பட்டு மறுசனனத்திற் கேதுவானகன்மம்.
ஆகாமியம் - அக்கிரமம், முற்சன்மத்தினொன்று. அது வருங்கன்மம்.
ஆகாயகணம் - நிரையசை இரண்டும் நேரசை ஒன்றுமாக வருவது (உ-ம்) நிரையெதிர்.
ஆகாயகமனம் - அந்தரமார்க்கமாய்ப் போதல், கலைஞானம் அறுபத்து நான்கில் ஒன்று.
ஆகாயகமனி-அந்தரமார்க்கமாகச் செல்லுவோன்.
ஆகாயகருடன்-ஆகாசகருடன், சீந்தில்.
ஆகாயகாமி - ஆகாசகாமி.
ஆகாயகாமியர் - அந்தர மார்க்கமாய்ப் போகுங் குதிரையையுடையவர்.
ஆகாயக்கத்தரி - ஆகாசக்கத்தரி.
ஆகாயக்குணம் - ஆகாசக்குணம்.
ஆகாயசம் - அந்தரத்திற்பிறந்தது.
ஆகாயச்சொல்-மூவகைச்சொல்லினுள் ஒன்று. அது தானே கூறுதல்.
ஆகாயத்தின்குணம் - ஆகாயக்குணம்.
ஆகாயத்தின்கூறுபாடு-இராகம், இலச்சை, துவேஷம், பயம், மோகம் என்பன.
ஆகாயத்தான் - ஒட்டடை.
ஆகாயபதவி - திரிசங்குபதவி.
ஆகாயபதி - இந்திரன்.
ஆகாயப்பிரவேசம் - அந்தரத்துட் புகுதல், கலைஞானம் அறுபத்து நான்கினொன்று.
ஆகாயமஞ்சி, ஆகாயமாஞ்சி - சிறுசடாமாஞ்சி.
ஆகாயம்-அட்டமூர்த்தத்தொன்று. பஞ்சபூதத்தொன்று, வான்.

ஆகாயவழுதலை - ஒரு வழுதிணை.
ஆகாயவாசியர் - அந்தரத்தில்வசிப்பவர் தேவர், பதினெண்கணத்தொ ளொருவர்.
ஆகாயவாணி - ஆகாசவாணி.
ஆகாயவீதி - நட்சத்திரவீதி.
ஆகாருத்தி - மாசாலம்.
ஆகாரசம்பவம் - கிணம்.
ஆகாரணம் - அழைத்தல்.
ஆகாரதாகம் - வீடுகடுதல்.
ஆகாரம் - அடையாளம், கொண்டுபோதல், கொண்டுவருதல், புரோட்சித்தல், உடல்,ஒரெழுத்து, நெய், போசனம், மனைப்பொது, வடிவு.
ஆகாரி - உயிர், பூனை.
ஆகாவம் - நீர்த்தொட்டி, யுத்தம்.
ஆகிஞ்சனம் - தரித்திரம்.
ஆகிஞ்சனன் - வறியன்.
ஆகிரதம் - வணங்கல்.
ஆகிரந்தம் - புன்குமரம்.
ஆகிரம் - விரிவு.
ஆகிருதி-அக்கம், அடிதோறுமிருபத்திரண்டசைகொண்டுநான்கடியாய் மூடியும்பாட்டு, உடல், மாநிரி, வடிவு.
ஆகிருதனந்தம் - புன்குமரம்.
ஆகீசன் - விநாயகன்.
ஆகு-எலி,கள்வன்,கொப்பூழ், தாமரை, பன்றி, பெருச்சாளி.
ஆகுகன் - கணபதி.
ஆகுஞ்சனம் - அடக்குதல், குவித்தல், விளைத்தல்.
ஆகுண்டிதம் - கோழை.
ஆகுதம் - உயிர்க்குறுதிசெய்தல்.
ஆகுதல் - ஆகல்.
ஆகுதி-ஓமாக்கினிநெய்விடுதல், பலி.
ஆகுபதி-பெருச்சாளிவாகனத்திற் கதிபதியாகிய விநாயகர்.
ஆகுபாஷாணம் - எலிப் பாஷாணம், வெள்ளைப்பாஷாணம்.
ஆகுபு - செய்பு என்னும் வாய்ப்பாட்டான் வந்த ஆகியென்னும் பொருட்டும் ஓரிறந்தகால வினையெச்சம்.
ஆகுபுகு - பூனை.
ஆகுபெயர்-சம்பந்தமான ஒன்றின்பெயர் மற்றொன்றிற்கு வழங்குவது.
ஆகுரதன் - கணபதி.
ஆகுலத்துவம் - கலக்கம்.
ஆகுலம்-ஆரவாரம், ஒலி, கலக்கம், துன்பம், மாறுபாடு, வருத்தம்.
ஆகுலி-ஆவிரை,கலக்கம், சிற்றரத்தை.
ஆகுலித்தல் - அழுதல், ஆரவாரித்தல் வருந்துதல்.
ஆகுவது - ஆவது.
ஆகுவன - ஆவன.
ஆகுவாகனன் - விநாயகன்.
ஆகுளி - சிறுபறை.
ஆகுனி - வாதமெண்பதிலொன்று.
ஆகூதம்-அழைப்பு, கருத்து,விருப்பம்.
ஆகூர்தி - கணபதி.
ஆகேடகம் - வேட்டை.
ஆகேறு - கொன்றைமரம்.
ஆகை - சம்பவிக்கை, உயருதல்.
ஆகோடிபம் - தடை, மறியல்.
ஆக்கச்சொல் - ஆக்கம்பெற்று வருஞ்சொல்.
ஆக்கஞ்செப்பல்-பத்தவத்தையிலொன்று. அது தன் மன வருத்தத்தைப் பிறர்க்குரைத்தல்.
ஆக்கதம் - முதலை.
ஆக்கப்பெயர் - இடுகுறிப்பெயர்.
ஆக்கப்பொருள்-ஆகுபெயர்ப்பொருள்.
ஆக்கமன் - ஆக்கப்பொருளைக் காட்டும் அன்னென்னும் ஓரிடைச்சொல்,அது பண்டுகாடுமன்னென்பதின்று வயலாயிற்றென்பது செல்வத்தையுடையவரசன்.
ஆக்கம்-ஆகுதல், இலக்குமி, இலாபம், எழுச்சி, கொடிப்படை, செல்வம், படைவகுப்பு - பெருக்கம், பொன்.
ஆக்கல்-சமைத்தல், செய்தல், படைத்தல்.
ஆக்கவினை - ஆக்கத்தால்வரும் வினைச்சொல்.
ஆக்கவினைக்குறிப்பு-ஆக்கச்சொல் விரிந்தேனும் தொக்கேனுமிற்பது (உ-ம்) பெரியன்.
ஆக்கவும்மை-ஆக்கத்தைக்காட்டு மிடைச்சொல். (உ-ம்) பாலுமாம் மருந்துமாம்.
ஆக்கி-சமைத்தென்னும் பொருட்டும் இறந்தகால வினையெச்சம் சமைப்பவன்.
ஆக்கிரேயம்-தென்கீழ்த்திசை பதினெண்புராணத்தொன், விபூதி.

ஆக்கியம் —
ஆக்கியா — எழுவாய் காமம்.
ஆக்கியாதம் - சொல்லல், பயனிலை.
ஆக்கியாபித்தல் - கட்டளையிடல்.
ஆக்கியானம் - கட்டுக்கதை.
ஆக்கியோன் - செய்தோன், படைத்தோன்.
ஆக்கிரகம் - அங்காரம், கடுங்கோபம், சூரம்; தத்துவம், தாபரிப்பு, பொல்லாங்கு, மேற்கொள்ளுதல்.
ஆக்கிரகாயணி-மிருகசிரிடம், யாகங்குபத்தொன்றினொன்று.
ஆக்கிரகித்தல் - உக்கரித்தல், தாபரித்தல், பலவந்தமாயெடுத்தல், வலிமைகாட்டல், வெல்லல்.
ஆக்கிரந்திதம் - ஆஸ்கந்திதம், குதிரையின் விரைவுநடை.
ஆக்கிரமம்-அடைதல், எதிர்த்தல், கடத்தல், சுமத்தல், பரப்பல், விரித்தல்.
ஆக்கிரமித்தல் - அங்காரம்பண்ணுதல்.
ஆக்கிரயணம் - யாக மிருபத்தொன்றினொன்று.
ஆக்கிராணம்-திருத்தி, மணத்தல், மூக்கு பொடி.
ஆக்கிராணவிந்திரியகாட்சி - ஓரளவைந்து கந்தமறிதல்.
ஆக்கிராணவிந்திரியம் - மூக்கு.
ஆக்ராணித்தல் - மணத்தல், மூக்கிற்றுனிடுதல்.
ஆக்கிராந்தி - கடந்துபோதல், மேற்கொள்ளுதல். [ல்.
ஆக்கிராயணம் - விளைவு, காவல்செய்த
ஆக்கிரிடம் —
ஆக்கிரீஷம் — கோபம்.
ஆக்கிரீடம் —
ஆக்கிரீஷம் — ஆராமம், பொழுதுபோக்கு.
ஆக்கிரோசகம் —
ஆக்கிரோசம் — ஆனை சாபம், தர்பாவனை.
ஆக்கிரோசனம் - சாபம்.
ஆக்கிஞகரணம் - கீழ்ப்படிதல்.
ஆக்கிஞகரன் - ஏவல்செய்வோன்.
ஆக்கிஞசக்கரம்-ஆணை, செங்கோன்முறைமை.
ஆக்கிஞதானம் - இலாடத்தானம்.
ஆக்கிஞைபங்கம் - கீழ்ப்படியாமை.
ஆக்கிஞைபங்கன் - கீழ்ப்படியாதவன், வணங்காதவன்.

ஆக்கிஞைபத்திரம் - கட்டளைச்சட்டம்.
ஆக்கிஞைபயதி - ஆணவேதி.
ஆக்கினிஸ்நானம்-எழுவகை ஸ்நானத்தொன்று. அது விபூதி யுத்தூளனமாய்ப் பூசுதல்.
ஆக்னீயம் - ஆனிமாதம்.
ஆக்கினேயம் - ஒரஸ்திரம், பதினெண்புராணத்தொன்று. அஃது அக்கினி புராணம்.
ஆக்கினை-ஆறுதாரத்தொன்று. அஃது இலாடத்தானம். கட்டளை, தண்டனை முன்னிலையொருமை வினைமுற்று.
ஆக்கினைச்சட்டம் - ஆக்கினைப் பத்திரம், கட்டளை, தண்டனைச்சட்டம்.
ஆக்கு - ஆக்கென்னு முன்னிலையேவலொருமை, பெயரெச்சத்தொகை.
ஆக்குகை —
ஆக்குதல் — ஆகச்செய்தல், குணமாக்குதல், கைதூக்கிவிடல், சமைத்தல்.
ஆக்குரோசம் - கோபம், மூர்க்கமான சத்தம், வைதல்.
ஆக்குரோசனம் - வைதல்.
ஆக்குரோசன் - வசவோன், கோபமுடையோன் மூர்க்கமாயவையமிடுவோ [ன்.
ஆக்குரோடம் - மார்பு.
ஆக்குவயம் - நாகம்.
ஆககுவித்தல்-ஆகச்செய்வித்தல், குணமாக்குவித்தல், கைதூக்கிவிடுவித்தல், சமைப்பித்தல், சிருட்டிப்பித்தல்.
ஆக்சூர் - ஒரூர்.
ஆக்கேபம் - ஆட்சேபம்.
ஆக்கேபிக்கை - ஆட்சேபிக்கை.
ஆக்கேபித்தல் - ஆட்சேபித்தல்.
ஆக்கேபிப்பு - ஆட்சேபிப்பு.
ஆக்கை - உடம்பு.
ஆக்கையிலான் —
ஆக்கையிலி —
ஆக்கையில்லான் — மன்மதன்.
ஆக்கொத்தமம் - கொன்றை.
ஆக்கொல்லு - ஒருபுழு.
ஆங்க - ஓரசைச்சொல்.
ஆங்கண் - அவ்விடம், ஊர்.
ஆங்கரிக்கை —
ஆங்கரித்தல் — ஆங்கரிக்குதல்.
ஆங்கரிப்பு - ஆங்காரிப்பு.
ஆங்காரம் - இறுமாப்பு, செருவம்.

ஆங்காரன் - செருவமுடையவன், செருக்குடையோன்.
ஆங்காரி - செருக்கன்.
ஆங்காரித்தல்-செருக்குதல், காட்டுதல்.
ஆங்காரிப்பு - இறுமாப்பு, செருவம்,செருக்கு.
ஆங்காரியம் - செய்துமுடிக்கக் கூடிய காரியம் செய்யத்தகுங்காரியம்.
ஆங்காலம் - ஆகுங்காலம், நற்காலம்.
ஆங்கிரசம் - ஆங்கீரசம்.
ஆங்கீரசன் - ஆங்கிரசன், இவன் வடமொழி வைத்திய சாத்திரங்களில் மிகவும் பேர்போன ஒரிருடி.
ஆங்கிரம் - அட்டாதச வுபபுராணத்தொன்று.
ஆங்கிரன் } ஆங்கிரசன்.
ஆங்கிரா }
ஆங்ஆாச - ஒருவருடம்.
ஆங்கீரசம் - தருமநூல் பதினெட்டில் ஒன்று.
ஆங்கீரசன்-சத்தவிருடிகளிலொருவன்
ஆங்கு - அக்காலத்தே, அசைச்சொல். (உ - ம்) விருந்தொக்கருனென்றுங்கு நவ்விடம் உவமைச்சொல். (உ-ம்) மதர்கண்டதாய் மறந்தாங்கு.
ஆங்கனம் - அங்கனம்.
ஆசகவம்-சிவபெருமானுடைய வில்லு.
ஆசகாரம் - திரிபுரசம்மாரகாலத்திலே சிவனேறிய இடபம்.
ஆசங்கம் - அடர்த்தி, கட்டம்,சேர்ந்திருக்கை.
ஆசங்கித்தல் - ஐயங்கொள்ளல்.
ஆசங்கிப்பு - சந்தேகம்.
ஆசங்கை - ஐயம், பயம், விசாரணை.
ஆசட்சு - கண், பண்டிதன்.
ஆசத்தன் - விருப்புடையவன். [தம்.
ஆசத்தி - சம்பாத்தியம், சமவாயசம்பந்விருப்பம், ஆசை.
ஆசந்தன் - விட்டுணு.
ஆசந்தி - பாடை.
ஆசமனகம் - அப்பத்தானாஞ்சி.
ஆசமனம் - உட்கொள்ளல், சிறுகநீருட்கொள்ளல்.
ஆசமனித்தல் உட்கொள்ளுதல், குடித்தல்.
ஆசமனிப்பு - உட்கொள்ளுகை, நீருருந்துகை.

ஆசமனியம் - ஆசமனஞ் செய்தற்குத் தகுதியான நீர்.
ஆசமனீயதிரவியம் - ஆசமனியத்திற்குரிய பொருள்கள். அது ஏலம், கிராம்பு சாதிக்காய், சண்பகப்பூமொட்டு, பச்சைக்கருப்பூரம், பூலாக் கிழங்கு என்பனவாம்.
ஆசமனீயம் - ஆசமனியம்.
ஆசமித்தல் - குடித்தல், நீர்முதலியவற்றை நச்சிறுகவுட்கொள்ளல்,விழுங்கல்.
ஆசமிப்பு - குடிப்பு, உட்கொள்வது.
ஆசம் - இருக்கை, உரைகல், சிரிப்பு, நெய், வில்லு.
ஆசயம் - அதிட்டம், ஆதனம்,இட்டம், இரைக்குடர், உறைவிடம், குணம், சுபாவம்,தங்குமிடம்புகலிடம், மனம்.
ஆசரணம் } ஆசரிப்பு, வழிபாடு.
ஆசரணை }
ஆசரிக்கை - அனுட்டிப்பு, கைக்கொள்ளுதல், கொண்டாடல், வணங்குதல், வழிபடுதல்.
ஆசரித்தல்-அனுட்டித்தல், கைக்கொள்ளுதல், கொண்டாடுதல், வழிபடுதல்.
ஆசரிப்பு கொண்டாட்டம், வழிபாடு.
ஆசரிப்புக்கூடாரம் - வழிபாட்டுப்படாம், வீடு.
ஆசவத்திரு - பனைமரம்.
ஆசவபாண்டேசுரன் - காசியிலிருக்குமோர் அற்பதேவதை, அதை யுபாசித்துவந்த சான்றனுக்கும் அவன் மனைவிக்கும் அதுசட்குடத்திற்றேன்றி அனுக்கிரகஞ் செய்ததென்பதோ ரைதீகம்.
ஆசவம் - கள், விரைவு.
ஆசவுசம் - ஆசூசம்.
ஆசறுதி - குற்றமின்மை, முடிவு.
ஆசனபேதம்-ஆசனத்தினது பகுப்பு. அது சித்தாசனம், சிங்காசனம், சுவத்திகாசனம், சவ்வியாசனம், குலாசனம், சுகாசனம், சர்வதோபத்திராசனம், கோமுகாசனம், கருடாசனம், மயூராசனம், மச்சேந்திராசனம், மற்சாசனம்,முற்காசனம், மண்டூகாசனம், மிருகாசனம், நாகாசனம், குக்குடாசனம், குஞ்சராசனம்,கூர்மாசனம்,காஷ்டாசனம், கிரவுஞ்சாசனம் கடகாசனம்,காமதகனாசனம், வியாக்

கிராசனம், வைனிகாசனம், வத்திராசனம், வாரவாசனம், வீராசனம், வராகாசனம், பரியங்காசனம், பதுமாசனம், பதாசனம், பச்சிமத்தாஞசனம், திரிபதாசனம், அத்தாசனம், அயிம்மாசனம், அர்த்தாசனம் என்பனவாம்.
ஆசனமேற்றல் - உட்காருவித்தல்.
ஆசனம்-இராசசின்னத்தொன்று, இருப்பு, இடம்.
ஆசனவாயில் - மலவாயில்.
ஆசனாகாலம்-பின்னேரம், மரணவேளை.
ஆசனனம்-பின்பொழுது.
ஆசனன் - சுக்கிரன்.
ஆசஞத்தம் - கிலேக்கண்ணடி.
ஆசன் - சிரிப்புண்டாக்குவோன், நகையாடுவோன்.
ஆசன்னப்பிரசவம்-ஒருவகைப் பிரசவநோய்.
ஆசன்னப்பிரசவரோகம்-ஒருவகைப்பிரசவநோய். அது வயிற்றிற் கருப்ப நிறைந்த இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்குங் காலத்தில் ஆயாசம், வயிறுதளர்தல், கண்கள் குழிவிழுதல், பலவீத இளைப்பு, சோகை, கீழ்வயிறு கனத்தல், அரோசகம், வாய்நீரூறல், அடிக்கடி நீரிறங்கல், தொடை வயிறு முதுகு இடுப்பு மார்பு,கீழ்வயிறு அபானமென்னும் இவ்விடங்களில் நோதல், அல்குல் விரிதல், அவ்வல்குலிலதிரல், வேதனை, சிலவேளைகளில் ஊசியாற் குத்தல் போற் குற்றல், சலம்பெருகுதல் முதலிய குணங்களை உண்டாக்கும்.
ஆசானி - சீந்திற்கொடி.
ஆசாடம் } ஆஷாடம் } ஆடிமாதம், பொதியமலை மரக்கொம்பு முருக்கு.
ஆசாட்டம்-அழுகை,அற்பமான தோற்றம்.
ஆசாதனம் - வஸ்திரம்.
ஆசாதிதம் - பெறுபேறு.
ஆசாபங்கம் - நம்பிமோசம்போதல்.
ஆசாபங்கன்-நம்பி மோசம்போனவன், முற்றுந் துறந்தவன், விருப்பமற்றவன்.
ஆசாபந்தம் - சிலம்பிநூல், நம்பிக்கை.
ஆசாபாசம் - ஆசைமயக்கம், ஆசையாகிய கட்டு.
ஆசாமி - இடமுள்ளவன், நபர்.
ஆசாரகாண்டம் - நான்குவருணத்தாருக்குமுரிய தருமங்களும் பிற ஆசாரங்களுஞ்சொல்லப்படுமோர் காண்டம்.அது விஞ்ஞானமென்னுந்தரும சாத்திரத்திலோர் காண்டம்.
ஆசாரக்கள்ளன் - மாயக்காரன், முகத்துதிசெய்பவன்.
ஆசாரக்கள்ளி - மாயக்காரி, முகத்துதி செய்பவள்.
ஆசாரச்சாவடி-ஆசாரவாயில்,பொதுச்சாவடி.
ஆசாரபோசன்-பெருந்தேகி.
ஆசாரப்பிழை-அசுத்தம்,ஒழுங்கின்மை.
ஆசாரம் - அரசிருக்கை, அனுட்டானம், ஒழுக்கம், கட்டளை, சீலை, சுத்தம், படைவளைப்பு, பிரதிஷ்டைபண்ணல், பெருமழை, முப்பொருளிலொன்று. அஃது அறப்பொருள், வழக்கம், வழிபாடு என்பனவாம்.
ஆசாரவாசல் } ஆசாரவாயில் } தலைவாசல், வெளிவாயில்.
ஆசாரவிதம் - ஆசாரத்திற்குரியவிதம், அது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.
ஆசாரன் - ஒழுக்கமுடையவன்.
ஆசாரி - உபாத்தி, ஒழுக்கமுள்ளவன். கம்மாளருக்கு ஒரு பட்டப்பெயர், குரு, பணிக்கன்.
ஆசாரியதண்டி - தமிழில்தண்டியலங்காரம் என்னும் நூலியற்றிய வித்துவான், வடமொழியிற் காவியதரிசமென்னும் அலங்காரசாத்திரம் இயற்றிய தண்டி யென்னு மியற்பெயரையுடைய ஓராசிரியன்.
ஆசாரியபிஷேகம் - ஆசாரியபிடேகம் ஸ்நானத்தோடு கூடிய சைவதீகை.
ஆசாரியபுருஷன் - ஆசாரியன்.
ஆசாரியவிருத்தனம் - ஆசாரியாதிகாரம்.
ஆசாரியன் - ஆசாரி, துரோணன்.
ஆசான் - குருவின்றேவி, தலைவி.
ஆசானுபாகு } ஆசானுவாகு } உத்தமபுருடன், முழந்தாளளவு நீண்டகையுடையோன்.
ஆசான் - அருகன், உபாத்தி, குமரன், குரு, சுக்கிரன், தலைவன், பணிக்கன்,பாலையாழ்த்திறம், மூத்தோன், வியாழன்.

ஆசான்சாதி - ஆசானென்னும் பண்ணியலாகியசாதி. அது அகச்சாதி, புறச்சாதி, அருகுசாதி, பெருகுசாதி என நான்குவகைப்படும். அவற்றுள் அகச்சாதி காந்தாரமெனவும், புறச்சாதி செண்டியெனவும், அருகுசாதி தசாக்கரியெனவும், பெருகுசாதி சுத்தகாந்தாரமெனவுங் கொள்ளப்படும்.

ஆசி - ஆசியென்னேவல், சமதிலம், திங்கை, பாம்பின்பல், பிரார்த்தனை வேண்டல், போதல், யுத்தம், வாழ்த்து.

ஆசிகரோகம் - ஒருவகைரோகம். அது இரத்தத்தாற் கருவிழியில் ஆட்டின் புழுக்கையைப்போ லுயர்ந்தும் பளபளத்தும் இருக்கின்ற விரணக்கொப்பளத்தை யுண்டாக்கிச் சுற்றிலுஞ் சிறுசிறு கொப்பளங்க ளிறையக் கண்ணில் அதிக நோயையு முதிரம் போற்சிவந்த சலவொழுக்கையுமிருவிக்கும்.

ஆசிகன் - வாட்காரன்.

ஆசிகூறல் - ஆசீர்வதித்தல்.

ஆசிக்கல் - காகச்சிலை.

ஆசிடல் - ஆசிடை யிட்டுக்கொள்ளல், பொன் பற்றவைத்தல்.

ஆசிடை - ஆசாக இடையிட்டுக்கொண்டசொல், கூட்டம், சிலை, வாழ்த்து.

ஆசிடையிட்டெதுகை - பதத்தின் முதலெழுத்திற்கும் இரண்டா மெழுத்திற்கும் இடையே பிறிதோர் மெய் பெற்றுவழங்குமெதுகை. (உ-ம்) ஆவேறு பால்வேறு.

ஆசிடைவெண்பா - ஆசிடையிட்ட வெண்பா.

ஆசிட்டநெடிலெதுகை - செய்யுட்களினடிகளிலுள்ள முதலெழுத்திற்கும் நெடிலாய விரண்டாமெழுத்திற்கும் இடையி லொன்றே இரண்டோ மெய்பெற்று வழங்கு மெதுகை. (உ-ம்) ஆய்ந்தாய்ந்து தான் சாந்துயரம்.

ஆசிதசுதன் - சகரசக்கரவர்த்தி.

ஆசிதம் - ஆசனம், நகரம், பத்துப்பறைகொண்டது, வசிக்குமிடம்.

ஆசிதையன் - காவிதன்.

ஆசித்தல் - விரும்பல்.

ஆசிப்பு - ஆசை.

ஆசியகதகரான்னவிலக்கணம் - விஷங்கலந்த அன்னத்தை வாயிற்போட்டுமிழ்ந்தோர்க்குண்டாகுங்குணம், அது வாயில் நீர்வடிதல், அதரமும், நாவும் மதர்த்தல், விருவிருத்தல், தந்தங்கள் சிலுசிலுத்தல், அருசுவையுமுருசிமாறுதல் முதலியனவாம்.

ஆசியக்காரன் - சிரிப்புண்டாக்குவோன் நகையாடுவோன்.

ஆசியக்காரி - சிரிப்பவள், சிரிப்புண்டாக்குபவள்.

ஆசியக்குவாதவாதம் - ஒருவகை வாதரோகம். அஃது ஆசியவாதங்களை யுண்டாக்குதற்குரியவத்துக்களினுற்பிறந்து வாயிலிருந்துகொண்டு பத்திரவத்தைச்செய்யும். அக்காலத்தில் வாயிலொருவத்துவையும் போடக்கூடாமல் இரணம்போ லிருப்பதுமன்றி நாவில் மேடு பள்ளமுமாதல் மார்புநோதல், கண்டத்திற்குறுகுறுவென்னுந் தொனி கேட்டலாகிய இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆசியபத்திரம் - தாமரை.

ஆசியபாகபித்தம் - ஒருவகைபித்தநோய். அது வாயிற் கொப்பளங்களெழும்பிப் பழுத்துடைதல், மார்பில்நெருப்பிட்டதுபோலெரிதல், சகலவத்துவுமரோசித்தல், மலம்பந்தித்தல், பலவீனமாதல், எப்பம், சுரம், சீதளம், மந்தாக்கினி, தாக்கந்தம், தொடைநோவு, கோபம், கொட்டாவி, விக்கல், சூலை, அற்பவுணவாகிய இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆசியபாகவாதம் - ஆசியக்குவாத வாதரோகம்.

ஆசியம் - அவமதிச்சிரிப்பு, அவ்விடம், கருஞ்சீரகம்; முகம், வாய்.

ஆசியாசவம் - உமிழ்நீர்.

ஆசியாட்சேபவாதம் - ஒருவகை வாதநோய். அது கிழங்கு, இலை, கீரை, வேர், கனி, காய், எண்ணெய், மாமிசமுதலியவைகளை யுட்கொள்ளுவதினுற் பிறந்துகாது, நாசி, தாடை, வாய்முதலிய இடங்களிற் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். அக்காலத்தில் நாக்குதம்பித்தல், தழுதழுத்துப் பேசுதல், பற்கடித்தல் சிரசு முகம்,

பாத முதலியன தடித்தல், பிரமித்தல், கழுத்தில் நோதல், நரம்புகள் வலித்தல், இரத்தங்கக்கல், பார்வை சிதறல், மறத்தல், சரீரமதர்த்தல், நாசியில்நோதல், பீனசம் வடிதலாகிய குணங்களை யுண்டாக்கும்.

ஆசிரயபத்தன்-மூலநட்சத்திரத்திற் பிறந்தவன்.

ஆசிரயம் - மூலநட்சத்திரம்.

ஆசிரமம் - ஆச்சிரமம், பன்னகசாலை.

ஆசிரம் - இடம், நீ.

ஆசிரயம் - இடம், இருத்தல், கொள், கொம்பு, சமீபம், புகலிடம், வழக்கு, வாசம்.

ஆசிரயவிகீனன்-உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது இந்த எது சாத்தியங்களுக்கு ஆகாயத்திற் பூப்போல என்கிற திருட்டாந்தம் பொருந்தாமையினால் என்பது.

ஆசிரயவீனன் - உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது இந்த எதுவுக்குத்தானே ஆகாயத்திற் பூப்போலஎன்கிற திருட்டாந்தமாயிருக்கிற ஆகாயபுட்பமில்லாதபடியினால் என்பது.

ஆசிரயன் - சமீபத்திலுள்ளவன், தற்காப்போன்.

ஆசிரயிகர் - தொண்ணூற்றொருசாதியிலொருசாதியார்.

ஆசிரயித்தல் - அனுட்டித்தல், கைக்கொள்ளல், விரும்பல்.

ஆசிரவம் } இணக்கம், உடன்படிக்
ஆசிராவம் } கைஉபத்திரவம்.

ஆசிரிதம் - ஆசிரயமானது.

ஆசிரிதர் - பொருந்ினவர்.

ஆசிரிதன் - திவ்யபத்தன் பௌத்திரன் இவனுக்குப் பாண்டியன், சோழன், கேரளன் என மூவர்புத்திரர். இவர் மூவரும் தனித்தனி வமிசத்தராய்ப் பின்னர் பிரகாசிக்குமாறு தத்தம் பெயரால் ஜனபதங்களை யுண்டாக்கினர், பற்றுகிறவன்.

ஆசிரியச்சீர் - ஆசிரியப்பாவிற் குரியதலை அது மா நாள் என்னும் வாய்ப்பாடுகளின் பின்னேரசையும் விளமலர்என்னும் வாய்பாடுகளின் பின்னிரையசையும் வருவது.

ஆசிரியச்சுரிதகம்-கலிப்பாவி னுறுப்புகளாதலுள் தனிச்சொற்குப்பின்னர் மூன்றடியிற் குறையாதபலவடியாலாகிவரும் ஆசிரியப்பா.

ஆசிரியத்தளை - ஆரியச்சீர்.

ஆசிரியத்தாழிசை - அகவற்பாவினத்தின் ஒன்று. அஃது எனைத்துச்சீராலுந் தம்முள்ளொத்து மூன்றடியாய்த் தனித்தேனும் ஒருபொருண்மேல் மூன்றடுக்கியேனும் வருவது.

ஆசிரியத்துள்ளல் - துள்ளலோசைமூவகையுள் ஒன்று. அது வெண்டளையுங் கலித்தளையுங்கலந்துவருதலாற் பிறக்குமோசை.

ஆசிரியத்துறை - அகவற்பாவினத்தின் ஒன்று. அஃது எனைத்துச் சீராலும் வருமடி நான்குடைத்தாய் ஈற்றயலடி குறைந்தேனும் இடைமடங்கியேனு முதலடியும் மூன்றாமடியுங் குறைந்தேனும் வரும்.

ஆசிரியத்தூங்கல் - தூங்கலோசை மூவகையுளொன்று. அது ஒன்றாத வஞ்சித்தளையாற் பிறக்குமோசை.

ஆசிரியநிகண்டு - ஆசிரியப்பாக்களாற் செய்யப்பட்ட ஒரு நிகண்டு.

ஆசிரியநிலைவிருத்தம் - அடிமறியாதே வருவது.

ஆசிரியப்பா-ஐந்துபாவினுளொன்று அஃது அகவல்.

ஆசிரியமண்டலவிருத்தம் -அடிமறியாக வருவது.

ஆசிரியமதம் - ஆசிரியர்க்குரியமதங்கள் அவை பிறர்மதத்திற் குடன்படுதல், பிறர்மதத்தை மறுத்தல், பிறர்மதத்திற்குடன்பட்டுப் பின்பு மறுத்தல் தானொரு பொருளை யெடுத்துநாட்டி அதனை வருமிடந்தோறு நிறுத்தல் இருவரால் விரோதமாகக்கொள்ளப்பட்ட இரண்டனுளொன்ற னிடத்துத் துணிதல், பிறர் நூலிலுள்ள குற்றத்தை யெடுத்துக்காட்டல் பிறர் மதத்திற்குடன்படாதுதனித் தன்மதத்தைக்கொள்ளல் என்பனவாம்.

ஆசிரியம் - ஆசிரியப்பா, இருத்தல், கொள்கொம்பு.

ஆசிரியரிலக்கணம் - ஆசிரியரது இலட்சணம். அது உயர்குடிப்பிறப்பு, சீவகாருண்யம், கடவுள்வழிபாடு இவைகளாலாகிய மேன்மையும், பல நூல்

களிர்பழகிய தேற்றமும், நூற்பொருளை மாணுக்கனெளிதி லுணரும்படி கொடுத்துச்சொல்லும் வன்மையும், நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் பூவையும் ஒத்த குணங்களும் இவைபோல்வன பிறவுமாம்.

ஆசிரியர் - உபாத்தியாயர், குரு, நூலாசிரியர்.

ஆசிரியர்நல்லந்துவனர் - கடைச்சங்கப் புலவருளொருவர், இவர் கலித்தொகை என்னு நூல் செய்தவர்.

ஆசிரியர்மதம் - ஆசிரியமதம்.

ஆசிரியவசனம் - குருவாக்கியம், பதினன்குரையி லோருரை.

ஆசிரியவிசை - அகவ லோசை (உ-ம்) அகவலிசையனவகவன்மற்றவை ஏ ஓ ஈ ஆய் என் ஐ யென்றிறுமே.

ஆசிரியவிருத்தம் - அகவற்பா வினத்தொன்று. அது அளபொத்த கழிநெடிலடி நான்கினுன் வருவது, ஒரு கவி.

ஆசிரியவுரிச்சீர் - அகவற்குரியசீர்.

ஆசிரியவோசை - ஆசிரியப்பாவிற்குரிய சத்தம். அது நேரொன் றாசிரியத் தளையாற் பிறப்பது எந்திசையகவலெனவும், நிரையொன் றாசிரியத் தளையாற்பிறப்பது தூங்கிசையகவலெனவும் அவ்விருதளைகளின் கலப்பாற்பிறப்பது ஒழுகிசையகவலெனவுஞ் சொல்லப்படும்.

ஆசிரியன் - உபாத்தி, குரு நூலாசிரியன்.

ஆசிலேடம் - ஆலிங்கனம்.

ஆச்லேடித்தல் - ஆலிங்கனம் பண்ணல்.

ஆசினி - ஆகாயம், ஈரப்பலா, மரவயிரம், மரவுரி.

ஆசியம் - கருஞ்சீரகம்.

ஆசீர்வசனம்
ஆசீர்வதித்தல்
ஆசீர்வதிப்பு
ஆசீர்வாதம் } ஆசிகூறல், வாழ்த்து.

ஆசீவகப்பள்ளி - சமணமுனிவர்மடம்.

ஆசீவகர் - சமணமுனிவர்.

ஆசீவம்
ஆசீவனம் } சீவனம்.

ஆசு - அற்பம், ஆசுமணி, இரு குறணேரிசை வெண்பா, இடையிற் றனிச்சொற்குமுன்னிற்பது, இலக்கு, கவசம், குற்றம், கைக்கவசம், கைக்கருவி, சடுதி, சயிலை, நாற்கவியிலொன்று, நூலிழைக்குங் கருவிகளிலொன்று, தூசி, பற்றுசு, முப்பத்திரண்டு பாஷாணத்தொன்று.

ஆசுகம் - அம்பு, காற்று, பறவை.

ஆசுகவி - ஆசுகவிபாடும் புலவன், நாற்கவியி லொன்று. அது பொருளடி பாவணி முதலியன கொடுத்து மற்றொருவன் பாடுவெனப் பாடுங்கவி.

ஆசுசன் - காற்று, வாயுதேவன்.

ஆசுகி - பறவைப்பொது.

ஆசுணம் - அசோகு, அரசு.

ஆசுபத்திரி - ஒருமரம்.

ஆசுமனை - நூல்சுற்றுங்கருவி.

ஆசுமேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டிலொன்று.

ஆசுரதம் - சம்மதித்தல்.

ஆசுரம் - அசுரமணம். அது பெண்ணுக்குஞ் சுற்றத்துக்கும் வேண்டுவன கொடுத்துக்கொள்ளுமணம், இஞ்சி.

ஆசுரவைத்தியம் - இரணவைத்தியம்.

ஆசுரி - இரணவைத்தியன்.

ஆசுவயம் - விரைவு, வேதநுட்பம்.

ஆசுவயுசி - யாக மிருபத் தொன்றில் ஒன்று.

ஆசுவலாயநீயம் - உபநிடத முப்பத்திரண்டிலொன்று.

ஆசுவலாயனசூத்திரம் - உபநிடத முப்பத்திரண்டினுளொன்று. அது ஆசுவலாயனனென்னும்மகாவிருடியால் இருக்குவேதவிகிதகருமங்களைக்குறித்தெழுதப்பட்ட ஒரு சூத்திரநூல்.

ஆசுவலாயனன் - ஒருமகாவிருடி, அவன் இருக்குவேத விகிதகருமங்களைக் குறித்துச் சூத்திரஞ் செய்தவன்.

ஆசுவினம்
ஆசுவின்
ஆசுவீசம் } ஐப்பசிமாதம்.

ஆசூசம் - சூதகம்.

ஆசூடனம் - உரினுதல்.

ஆசூரம் - வெள்வெங்காயம்.

ஆசெடை - ஆசெடுத்தல்.

ஆசெதுகை - ஆசிடை யிட்டெதுகை.

ஆசேசனம் - தெளித்தல்.

ஆசை - அன்பு, திசை, நீளம், பதினெண் குற்றத்தொன்று, பொன்

மனதிக்குண மூன்றினொன்று, மாயை, யாக்கை, விருப்பம்.
ஆசைப்பெருக்கம் - அவா, பேராசை.
ஆசையறுத்தல்-மனதின்சற்குணம், நான்கினொன்றுஅஃதுவிருப்பகற்றல்.
ஆசோதை - இளைப்பாறல்.
ஆசோத்தியம் - ஆயாசமின்மை.
ஆசௌசம் - அசுத்தம், அசுசம்,தீட்டு.
ஆஸ்கந்திதம் - ஆக்கிரந்திதம்.
ஆச்சந்திரகாலம்-சந்திரனுள்ளமட்டும்.
ஆச்சந்திரார்க்கம்- சூரியசந்திரனுள்ள மட்டும்.
ஆச்சமரம் - மூஷைப்புல்.
ஆச்சரியம் - அதிசயம்.
ஆச்சல் - அசைத்தல், பாச்சல்.
ஆச்சா - ஒருமரம்.
ஆச்சாட்டு - சிற்றீரம்.
ஆச்சாதகபலை - பருத்தி.
ஆச்சாதம் } உறை, புடவை, மூடி,
ஆச்சாதனம் } மேலங்கி.
ஆச்சாபுரம் - ஒரு சிவஸ்தலம்.
ஆச்சி - தாய்.
ஆச்சிபூச்சி - ஒருவிளையாட்டு.
ஆச்சியகந்தமேகம் -ஒருவகைமேகரோகம், அது மூத்திரமானது நெய்யையொத்துத் துணியிற் றோய்த்துக் கொளுத்தினல்எரிவதும் நாளொன் றுக்குநான்குபடி அளவாக இறங்குவதுமாம்.
ஆச்சியசுத்தி - தக்கிருதசுத்தி, நெய்யினைற் சுத்திசெய்தல்.
ஆச்சியம் - நெய்.
ஆச்சிரமத்தான் - ஆச்சிரமத்தையுடையவன்.
ஆச்சிரமம் - இளைப்பாறுமிடம், சங்கம், நிலை, பன்னசாலை.
ஆச்சிரமி-ஆச்சிரமத்தையுடையோன்.
ஆச்சிரயம்-ஒருவனையடுத்திருத்தல் பாதுகாப்பு.
ஆச்சிரயவிகினன்-உவமைப்போலிபதினெட்டனுளொன்று. அதுஆசிம்ரய விகினன்.
சிரயவீனன் - உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது ஆசிரய வீனன்.
ஆச்சிராமம் - ஆளுகை செல்லு மிடம், ஒரூர்.
ஆச்சிலை - கோமேதகம்.
ஆச்சு - ஆயிற்று.
ஆச்சுரிதகம் - அட்டகாசம், குதிரைக் கனைப்பு, நொடித்தல்.
ஆச்சுவரி - அரசு.
ஆச்சேதம் } கருக்குதல், வெட்
ஆச்சோதனம் } டுதல்.
ஆச்சோதனம் - வேட்டை.
ஆஸ்பதம் - சத்து, புகலிடம்.
ஆஞா } தகப்பன்.
ஆஞி }
ஆஞ்சனேயன் - அனுமான்.
ஆஞ்ஞான் - அந்தரிப்பா யசைவதுகட்டிச்சாம்புங் கயிறு. சிறிய தனிக் கொப்பு,திறக்குங்கருவிகளின்கயிறு, மரக்கலப்பாய் கட்டுங்கயிறு.
ஆஞ்சான்பற்றி - மரக்கலப்பாய் கட்டும் ஸ்தம்பம்.
ஆஞ்சி-அலையல், எலம், கூத்து, சோம்பல், சோம்பு, விளையாடல்.
ஆஞ்சில் - ஒருவிதப்பூடு, சங்கஞ்செடி.
ஆஞ்செலகை - கப்பல், தெப்பம்.
ஆஞ்ஞாபித்தல் - கட்டளையிடல்.
ஆஞ்ஞை-அஞ்ஞை, ஆணை, ஆறுதாரத் தொன்று, அஃது நெற்றித்தானம்.
ஆடகத்தி - குங்குமபாஷாணம்.
ஆடகமாடம்-இரவிபுரம் இது மலைநாட்டிற் கன்னியா குமரிக்கு வடமேற் செல்லேயி லேழுநாழிகைவழித் தூரத்திலுள்ளது, திருவனந்தபுரம்.
ஆடகம் - கூத்தாடுமிடம், சிறுநாகப்பூ, துவரை, நால்வகைப் பொன்களுள் ஒன்று, பொன்.
ஆடகாங்கிதானம் - வடமொழியிற் சிறந்த ஓர்வைத்தியநூல்.
ஆடகி - துவரைச்செடி.
ஆடகூடம் - செப்புமலை.
ஆடகேசுரர் - பாதலத்தைக் காக்கின்ற கோடியுருயுத்திரருட்டலைவர்.
ஆடகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டினொன்று.
ஆடம் - ஆமணக்கு, இருபதுகொத்துக் கொண்ட ஓரளவு.
ஆடம்பரம் - இடம்பம், கண்மடல், கோபம்,சந்தோஷம்,துலக்கம்,பெருமை, போர்ப்பறை, யானை பிளிறொலி, வேடிக்கை.

ஆடரி - சுப்பிரமணியக்கடவுள்.
ஆடலை - பூவில்லாமரம், பூவிளா.
ஆடல் - அசைதல், குளிர்த்தல், கூத்தாடல், கூத்து, செய்தல், கொல்லல், ஸ்நானஞ் செய்தல், நயச்சொல், புணர்தல், பொருதல், வெற்றி, நட்புரை, வீரம், வார்த்தை, விசயம், விளையாடல்.
ஆடவர் - ஆண்மக்கள் இளையோர் பிராயமுப்பத்திரண்டிற்கும் நாற்பத்தெட்டிற்கும் இடைப்பட்டவர். இவர்மன்னரெனவும்படுவர், புருடர்.
ஆடவிருத்தம் - வயது நாற்பத்தெட்டிற்கும் அறுபதுக்கு மூடான பருவமுள்ளவர். இவர் மூத்தோ ரெனவும்படுவர்.
ஆடவள் - பெண், மங்கைப் பருவம், விருத்தை.
ஆடவன் - புருடன், வயது, முப்பத்தின் மேனாற்பத்தெட்டுக் குட்பட்டவன்.
ஆடவை - ஏவல், நிருத்தசபை, பெண், மிதுனவிராசி.
ஆடற்கூத்தியர் - அசைக்கூத்தாடுவோர்.
ஆடற்கூறுபாடு - கூத்தினதுபகுப்பு. அது தாண்டவம், நாட்டியம், நிருத்தம என மூவகைப்படும்.
ஆடற்பேதம் - கூத்தினதுவேற்றுமை. அது நின்றாடல், வீழ்ந்தாடலென இருவகைப்படும்.
ஆடாதொடை }
ஆடாதோடை } பாவட்டை.
ஆடி - அளைந்து, உத்திராடநாள், கண்ணாடி, கர்க்கடகமாதம், காற்று, கூத்தாடி, ஓரசுரன்.
ஆடிக்கரு - கர்ப்போடகமேகம்.
ஆடிப்பட்டம் - ஆடிப்பருவத்திற் பயிரிட உத்தேசிக்கு நாட்கள்.
ஆடிய - அளைந்த.
ஆடு - அசம், ஆடென்னேவல், கூத்து, கூர்மை, மறியாடு, மேடவிராசி, வெற்றி.
ஆடுகால் - தவாகிற்குமரம்.
ஆடுதல் - ஆடல்.
ஆடுதின்னாப்பாலை } ஒருமருந்துப் பூ
ஆடுதின்னாப்பாளை } டுபுழுக்கொல்லி.
ஆடுதுறை - ஓரூர்.
ஆடுதொடை - தொடையின் கீழ்ப்புறம்.

ஆடுபந்தர் - நடைப்பந்தர்.
ஆடுமாலை - ஓரிடத்துந் தரித்திராதவன், யௌவனஸ்திரீ.
ஆடுவான் - ஆடப்பட்டவன், நடேசன்.
ஆடூஉ - ஆண்மகன்.
ஆடூஉவறிசொல் - ஆண்பான் மொழி,
ஆடை - சித்திரைநாள், சீலை, நேத்திரப்படலம், பனங்கிழங்கினுட்டோல், பால், முதலியவற்றினேடு, போர்வை.
ஆடையொட்டி - ஒட்டுப்புல், சீலைப்பேன்.
ஆடோபம் - பெருமை, வாயு, பாக்கை, வீங்குகை,
ஆடோபம் - பெருமைக்காரன்.
ஆடோபி - பெருமைக்காரி.
ஆட்காட்டி - ஆள்காட்டுகின்றவன். ஆள் காட்டுகின்றவள், ஒருபுள், சுட்டு விரல்.
ஆட்கொல்லி - கொலைகாரன், கொலைகாரி, பணம்.
ஆட்கொள்ளுதல் - அடிமைகொள்ளுதல் உருக்கொள்ளுதல்.
ஆட்சபணம் - உபவாசம்.
ஆட்சபாதிகன் - நியாயாதிபதி.
ஆட்சபாதன் - ஒரு தருக்கசாத்திரி.
ஆட்சாரணம் - குற்றச்சாட்டு. நிந்தனை.
ஆட்சாரம் - குற்றச்சாட்டு.
ஆட்சி - ஆண்மை, ஆளுகை, உரிமைநிலையிலொன்று, நன்னிமித்தம், பழக்கம், முயற்சி.
ஆட்சிபடல் - தற்கிழமையாதல்.
ஆட்சேபகம் - குற்றச்சாட்டு, நோய், வலி.
ஆட்சேபம் - தடைபண்ணுதல், நியாயத்தைத் திரும்பத்திரும்பக் கொடுத்தல் வழக்குரைத்துத்தள்ளுதல்.
ஆட்சேபவணி - ஓரலங்காரம், அது உள்ளபொருளை மறுத்தலாற் கருதிய பொருளுக்குச் சிறப்புண்டாக வருவித்துரைப்பது.
ஆட்சேபனம் - எதிர்நியாயம்.
ஆட்சேபனை - மறுப்பு.
ஆட்சேபலங்காரம் - முரணணி அல்ல தெதிர் மறையணி.
ஆட்சேபித்தல் - தடைசெய்தல் மறுத்தல்.
ஆட்சேபிப்பு - தடை, மறுப்பு.
ஆட்டமடித்தல் - ஒருவிளையாட்டு அது புள்ளைக்கிட்டியாலடித்தல்.

ஆட்டம் - அசைவு, அலைவு, உவமையுருபு, கூத்து, சூதாடுதல், சூது முதலியவற்றினோர்முறை விளையாட்டு, தன்மை, முயற்சி.

ஆட்டல் - அசைத்தல், கூத்தாட்டுதல், நடப்பித்தல், ஸ்நானம்பண்ணுவித்தல்.

ஆட்டாங்கள்ளி - திருகுகள்ளி.

ஆட்டாங்கோரை - ஒருகோரை.

ஆட்டாம்புழுக்கை - ஆட்டுமலம்.

ஆட்டி - ஆட்டுவோன், தலைவி, பெண்.

ஆட்டியவாதம் - ஒருவகை வாதநோய். அது இனிப்புவஸ்து, எண்ணெய் வஸ்து, மச்சம், மாமிசம், மந்தரசம், தயிர், பால் இவைகளை மிகவும் புசித்தேக்காலத்து நடக்காமல் நித்திரை செய்வதினாற் பிறந்து சந்த தாதுக்களில் இருக்கின்ற வாத மார்க்கங்களையுஞ் சிலேஷ்ம மார்க்கங்களையும் அடைத்துச் சிலேஷ்மத்தோடுகூடி உபத்திரவத்தைச் செய்வது. அதனால்தேகத்தில் திமிர், கனம், நோய், உறக்கம், இளைப்பு, வீக்கம், மலமூத்திரச்சிக்கல், பிரமை, தாழ் வாய்நோவு முதலிய குணங்கள் உண்டாகும்.

ஆட்டு - அலைப்பு, ஆடுந்தன்மை, ஆட்டுந்தன்மை, ஆட்டெனேவல், கூத்து, தந்திரம், வல்லமை.

ஆட்டுக்கடா - ஆணாடு.

ஆட்டுக்கல் - அமுத பாஷாணத்தினொன்று, அரைக்குங்கல்.

ஆட்டுக்கால் - அடம்பென்னுங் கொடி, ஆட்டினது கால்கள்.

ஆட்டுக்காற்கல் - கொக்கைக்கல்.

ஆட்டுக்கிடை - ஆட்டுத்தொழுவம்.

ஆட்டுக்கோன் - சிவன்.

ஆட்டுசம் - ஆடாதோடை.

ஆட்டுச்செவிப்பதம் - தேங்காய் வழுக்கைப்பருவம்.

ஆட்டுதல் - அரைத்தல், அலைத்தல், ஆடச்செய்தல்.

ஆட்டுவாகனன் - அக்கினிதேவன்.

ஆட்டுவாணிபன் - கசாப்புக்காரன்.

ஆட்டை - ஆண்டு.

ஆட்டைக்கருமம் / ஆட்டைத்திதி / ஆட்டைத்திவசம் } இறந்தவன் விஷயமாக முதல் வருடமுடிவிலே அவனிறந்த திதியிலே செய்யப்படும் சிரார்த்தக்கிரியை, முதல் திவசம்.

ஆட்படல் - தொண்டனாதல்.

ஆட்படுதல் - அடிமைப்படுதல், தலைப்படுதல்.

ஆணகம் - சுரை.

ஆணங்காய் - ஆண்பனையின்காய்.

ஆணட்சத்திரம் - புருட நட்சத்திரம். அது அத்தம், புனர்பூசம், பூசம், திருவோணம், அபிசித்து, அனுஷம், உத்திரட்டாதி, பூரட்டாதி, அசுவதி முதலியன.

ஆணம் - அன்பு, ஆணவம், குழம்பு, கொள்கலம்.

ஆணரி - ஓரி.

ஆணர் - நன்மை, பாணர், வளமை.

ஆணவப்பிணிப்பு - ஆணவமலபந்தம்.

ஆணவமலகாரியம் - ஆணவமலத்தினது காரியம். அது விகற்பம், கற்பம், குரோதம், மோகம், நகை, கொலை, அஞர், மதம் என்பன.

ஆணவமலம் - அறியாமை, சுபாவமயக்கம், மும்மலத்தொன்று, மூலமலம். அது உடம்பை யானென்றிருக்கை.

ஆணவமறைப்பு - மூலமலத்தடை.

ஆணவம் - ஆங்காரம், கோணதாரநாணம், நான் பெரியவன் என்கிறகுணம், மூலமலம்.

ஆணவேதி - ஆக்கினேயபதி.

ஆணைப்பிறந்தோன் - ஆவாரை, கழுக்காணி, புருடனாக அவதாரஞ் செய்தவன்.

ஆணுர் - ஆண்டன்மையுடைய பெருநான்.

ஆணி - உரையாணி, எழுத்தாணி, எல்லை, காயாணி, தைத்திறவாணி, முதன்மை, மேன்மை, வாளலகு.

ஆணிக்குருகு - அடிக்குருகு.

ஆணிக்குருத்து - பனை, தெங்கு, முதலியவற்றி னடுக்குருத்து.

ஆணிக்கோவை - உரையாணிக்கொத்து.

ஆணிச்சிதல் - பருவின்முளை.

ஆணிச்சி - மூலச்சிதல்.

ஆணிச்செருக்கம் - இலவணபாஷாணம்.

ஆணித்தங்கம் - உயர்ந்தபொன்.

ஆணித்தரம் - உறுதி, முதற்றரம்.

ஆணிப்பூ / ஆணிப்பூடு } ஒருநோய், கண்வியாதி.

ஆணிப்பொன் - உயர்ந்தபொன்.

ஆணிமாண்டவியர் - மாண்டவியன்.

ஆணிமுத்து - வயிரமுத்து.

ஆணிரோகம் - ஒருவகைரோகம். அது பருக்கைக் கற்களின்மேனடத்தலாலும் முட்கள் தைத்தொடிதலாலும் பாதத்தில் அரத்தைப்போலிருக்கின்ற முடிச்சுகளையுண்டாக்குவது.

ஆணிவேர் - உச்சிவேர்.

ஆணு - இனிமை, நன்மை.

ஆணெழுத்து - குற்றெழுத்து.

ஆணை - அடையாளம், ஆக்கினை, ஏவல், சத்தியம், சபதம், தடுத்தல், திண்ணயம், மெய், வெற்றி.

ஆணைச்சக்கரம் - அரசாட்சித் தத்துவம், செங்கோல்.

ஆணையாசக்கரம் } அாசாட்சித் தத்துவம்.
ஆணையாசக்கிரம் }

ஆணையிடுதல் - சத்தியம்பண்ணல்.

ஆணைவழிநிற்றல் - அரசன் கட்டளைப்படி நடத்தல்.

ஆண் - ஆண்பாற்பொது, ஆண்மகன், க[லைமை.

ஆண்குமஞ்சான் - குங்குலியம்.

ஆண்குறி - ஆடவக்குறி.

ஆண்கை - ஆறுவகைக்கையு ளொன்று. அஃது ஆறுவகையதென்பது பின்னே காட்டப்படும் சத்தானந்தப்பிரகாசச் செய்யுளான் விளங்கும் (உ-ம்) "முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம்-விட்ட சிலந்தி மிருகசி-ஒட்டுஞ் - சதுரம் பதாகந் தருதிரிப தாக - மதிகமுறு - மாண்கை நவமாம்.

ஆண்கோள் - ஆண்கிரகம், அங்காரகன், குரு, சூரியன்.

ஆண்டகை - ஆண்டன்மை, இராசா சிறந்தோன், வீரன்.

ஆண்டகைமை - ஆண்டன்மை, வீரம்.

ஆண்டண்டு - காதிற்புறவருகு.

ஆண்டருளுமுறை - ஆண்டருளுகின்ற வொழுங்கு. அது மார்க்கடசம்பந்தம் மார்க்கசார சம்பந்தமென இருவகைப்படும்.

ஆண்டலை - கோழி, படைத்தலைவன், பூவில்லாமரம்.

ஆண்டலைக்கொடி - குமரக்கடவுள்கொடி, பேய் முதலியன பலியை நுகரமற் கட்டப்படுங்கொடி. அது தலை ஆண்மகன்றலையாகவும் உடல் புள்ளின் வடிவமாகவும் எழுதினது.

ஆண்டலைக்கொடியுயர்த்தோன் } குமரன்.
ஆண்டலைக்கொடியோன் }

ஆண்டவன் - அரசன், ஆளுகை செய்கிறவன், எசமான், கடவுள்.

ஆண்டளக்குமையன் - ஆதனூரிற் கோயில்கொண்ட விட்டுணு.

ஆண்டளப்போன் - வியாழன்.

ஆண்டாள் - ஆள்வோன், எசமான், கட[வுள்.

ஆண்டி - தவசி, பண்டாரம், யாசகி.

ஆண்டிச்சி - பண்டாரத்தி.

ஆண்டு - அவ்விடம், வருடம்.

ஆண்டை - அவ்விடம், எசமான், தேட்[கொடுக்கி.

ஆண்டையர் - மனிதர்.

ஆண்டொழில் - பராக்கிரமவேலை.

ஆண்டொழின்மைந்தன் - அருச்சுனன்.

ஆண்பட்சிதோஷம் - ஒருவகைதோஷம் அது தாகம், பேதி, சரீரவுலர்ச்சி, கண்களிற்குழி ஆகிய இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆண்பாடு - ஆண்குணம், மனிதன்செய[ல்.

ஆண்பாலெழுத்து - ஆண்பாலிற்குரிய எழுத்துக்கள் அது அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்பன இதன்றி ஒரு சாரார் உயிர் குற்றெழுத்தும் உயிர்மெய்க்குற்றெழுத்தும் என்பர்.

ஆண்பால் - ஆண்பகுதி, ஆண்டன்மை, புல்லிங்கம்.

ஆண்பாற்பிள்ளைக்கவி - காப்பு முதற் சிறுதேரீருய்ச் சொல்லப்படும் பத்துறுப்புக்களும் பப்பத்து விருத்தத்தான் முடியப் பாடுவது.

ஆண்பிள்ளை ஆண்குழந்தை, கெட்டிக்காரன், தலைவன், மனிதன்.

ஆண்பிள்ளைச்சிங்கம் - வீரன்.

ஆண்மகன் - ஆணிற்சிறந்தோன், கணவன், மகன், மனிதன்.

ஆண்மரம் - அகவயிரமுள்ளமரம், அழிஞ்சில், செம்மரம்.

ஆண்மலடு - புருடர்களுக்கேற்படும் ஒருவகை மலட்டுரோகம்; அது விந்துதித்திப்பற்றுச் சலத்தில் விட்டாற் கரைந்து மிதப்பதும், உயிர்ப்பில்லாததும் மூத்திரத்தில் றரைகட்டுவதுமான தன்மையை யுண்டாக்கும்.

ஆண்மாரி - மூர்க்கமுடையான்.

ஆண்மை-ஆண்டன்மை, திடன், மனமுயற்சி, மெய், வலி.

ஆண்மைச்சினைப்பெயர் - ஆண்பாலையே விளக்கி நிற்குஞ் சினைப்பெயர் (உ-ம்) மூடவன்.

ஆண்மைச்சினைமுதற்பெயர் - ஆண்பாலையே விளக்குஞ் சினைமுதற்பெயர் (உ-ம்) முடக்கொற்றன்.

ஆண்மைமுதற்பெயர் - ஆண்பாலையே விளக்கிநிற்கு முதற்பெயர் (உ-ம்) சாத்தன்.

ஆண்மைமுறைப்பெயர் - ஆண்பாலையே விளக்கிவருமுறைப்பெயர்(உ-ம்) தந்தை.

ஆண்வழி-ஆண்சந்ததி, தந்தைவழி.

ஆதங்கம்-ஆபத்து, உபத்திரவம், கலம், காய்ச்சல், தீங்கு, நோய், பறையொலி, புயம்.

ஆதஞ்சனம்-அழித்தல், உபத்திரவம், உறையிடல், நிவிரம், பஸ்பமாக்கல்.

ஆதண் - நோய், வருத்தம்.

ஆதண்டை - காற்றோட்டி.

ஆத்தாயி - கொல்லவொருப்பட்டு நிற்கிறவன்.

ஆதபசுரம்-ஒருவகைச் சுரநோய். அது சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆகிய மாதங்களி லுதயமுதல் இரண்டு சாமம்வரையிலும் நிற்காமல் வெயிற்பட்டதினாற் பிறந்து எரிவு, வேதனை, பன்னோய், தாகம், சோர்வு, தலைவலி, தலைச்சுழல்வு, வாயுலர்வு, பேதி, அடிக்கடி நித்திரை, பிரமை, மாரடைப்பு, கால்கைகடுக்கம், கண்களில் நீரொழுக்கு ஆகிய இக்குணங்களையுண்டாக்கும்.

ஆதபத்திரம்-குடை, வெண்குடை.

ஆதபநீயம் - ஒருவகைநெல்.

ஆதபம் - ஒளி, குடை, வெயில்.

ஆதபவாரணம் - குடை, ஆதபத்திரம்.

ஆதபன் - சூரியன், பார்ப்பான்.

ஆதப்பியேசுவரம்-சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டினொன்று.

ஆதயிலி - ஆதரவில்லாதவன்.

ஆதம் - ஆதாவு, கூந்தற்பனை, விருப்பு.

ஆதம்பாதயில்லாதவன் - ஆதரவில்லாதவன்.

ஆதம்பேதி-செப்பு நெருஞ்சிற்பூண்டு.

ஆதரம்-அன்பு, ஆசை, ஊர், கேள்வு, சங்கிப்பு, சங்கை, சிலம்பு, தவக்கம்.

ஆதரவு-அன்பு, ஆதாரம், உதவி, தாவரம், விருப்பம்.

ஆதரவுசெய்தல் - அன்பு பண்ணுதல், தாங்குதல்.

ஆதரிசம்-உரை, கையெழுத்துப்பிரதி, பளிங்கு, மூலம், வியாத்தி.

ஆதரிசனம் - கண்ணாடி, வெளிப்படையாக்கல்.

ஆதரித்தல்-அன்புவைத்தல், உதவிசெய்தல், சங்கித்தல், தாபரித்தல்.

ஆதலை - உதவி, தாபரிப்பு.

ஆதல் - ஆகுதல், கல்விநூல், கூத்து, தெரிதல், நுணுக்கம்.

ஆதவம்-ஆதபம், ஒளி, குடை, கொன்றைப்பூ, வெயில்.

ஆதவன் - சூரியன், பார்ப்பான்.

ஆதளை - ஆமணக்கு, ஆயாசம், எலிபாமணக்கு, மாதளை.

ஆதளைமாதளை-வருத்தம், மனக்கலக்கம்.

ஆதனமூர்த்தி - சிவலிங்கம்.

ஆதனம்-ஆசனம், சிலை, நிலைமை, சீருதல், பார்வை, விலாசம்.

ஆதனூர் - நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று.

ஆதன் - அருகன், அறிவிலான், உயிர், குரு, குருடன்.

ஆதாயம் - இலாபம், நன்மை.

ஆதாரகாரகம் - தானப்பொருளைக்காட்டு முருப்புடைப்பெயர்.

ஆதாரதண்டம் - முதுகெலும்பு.

ஆதாரதலம்-ஆதாரமாநிற்கும் உரியதானங்கள் அவை திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்பன.

ஆதாரதேவதை-ஆதார தானத்திற்குரிய தெய்வங்கள், அவர் விநாயகர், பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்பனவாம்.

ஆதாரதோற்றம் - ஆதார தானத்திற்றோற்றுந்தோற்றங்கள். அவை பந்தம், விளக்கு, மின்னல், மின்மினி, சூரியன், சந்திரன் என்பன.

ஆதாரம்-அடி, அத்திபாரம், ஈடு, உடல், காக்குதல், தாபரம், தானம், நிலை, பாத்தி, மழை, வாய்க்கால்.

ஆதாயுயேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டினொன்று.

ஆதாளி-இரைச்சல், கலக்கடி, சத்தம், படாடோபம், புரட்டல், வீம்புபேசல்

ஆதாளிக்கல்-இரைதல், உடலை, அங்கு மிங்கும் புரட்டியருளல், கலக்கடி பண்ணல், சத்தமிடல், படாடோபம் பண்ணல், வீம்புபேசல்.

ஆதாளிக்காரன் - படாடோபக்காரன்.

ஆதாளிக்குதல் - ஆதாளிக்கல்.

ஆதாளித்தல் - ஆயாசப்படுதல்.

ஆதாளிமன்னன் - ஆதாளி பண்ணுவ திற் றலைமைபெற்றவன், கரடி.

ஆதானம்-ஈடு, ஏற்றுக்கொள்ளுதல், சங் கற்பித்தல், ஸ்தாபனம் பெறுதல்.

ஆதானிகம் - கருப்பாதானம்.

ஆதி-அதிசயம், அருகன், இடம், இறைவன், ஈடு, எப்பொருட்குமிறைவன், எழுவாய், ஒருதாளம், கடவுள், காய்ச் சற் பாஷாணம், குதிரைக் கதியுள் ஒன்று, சூத்திரம், சூரியன், தொன்மை, நேரோடல், பரமசிவம், பழமை, பிரதானம், பிரமன், புத்தன், மண்டலமாயோடல், மனவிருப்பம், மிருதபாஷாணம், முதல், வனப்பு, அது பழங்கதைகூறுதல், விட்டுணு, வேர்.

அதிகடுஞ்சனி - முதன்மையான கொடிய சனிரோகம், மகம்.

ஆதிகம் - சிறுகுறிஞ்சா.

ஆதிகரன் - பிரமன்.

ஆதிகவி-பழமையானபுலவன், வால்மீக மஹாருஷி.

ஆதிகாரணகாரியம்-முதற் காரியத்தாற் காரியப்படுவது.

ஆதிகாரணம் - முதற்காரணம்.

ஆதிகாரணவகத்திணை - முதற்காரண வகத்திணை (உ-ம்) மண்ணாலாயகுடம்.

ஆதிகேசவன் - விட்டுணு.

ஆதிக்கடுஞ்சாரி - கவச்சாரம்.

ஆதிக்கமேகம் - ஒருவகை மேகரோகம். அது மூத்திரத்தைச் சும்மா வைத்திருந்தாலுங் காய்ச்சினாலும் இளநீர்ச் சலம்போனிறமும் வாசனையு முண்டாகச்செய்வது. அதனால் தாகமும் தேகவாட்டமும் உண்டாகும்.

ஆதிக்கம்-உயர்ச்சி, உரிமை, முதன்மை.

ஆதிக்கல்நாதம் } ஆதிக்கல்பேதம் } அன்னபேதி.

ஆதிக்கன்-பெரியவன், மேன்மகன்.

ஆதிக்குடி - சவர்க்காரம், முதன்மை பெற்றகுடி.

ஆதிக்குரு-முப்பூ, அது பஞ்சலோகங் களைப்பேதிக்கச்செய்வது, பூவழலை, பூநீறு, முதன்மைபெற்ற குரு.

ஆதிசாரம் - சிற்பநூல்கள் முப்பத்தி ரண்டினொன்று.

ஆதிசேஷன் } ஆதிசேடன் } பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்று சொல்லப்படும் அனந்தன் என்னும் பாம்பு.

ஆதிசைவம்-சைவம்பதினாறினொன்று

ஆதிசைவன் - பதினாறு சைவர்களுள் ஒருவன்.

ஆதிச்சரக்கு - சூதம்.

ஆதிச்சனி - மகநாள்.

ஆதிஷ்டம் } ஆதிட்டம் } உண்டசேடம், சேடம்.

ஆதிஷ்டி } ஆதிட்டி } பிரமசாரி.

ஆதிதாரணம் - ஈடு.

ஆதிதேயம்-அன்னபானாதிகள் கொடுத்து அதிதியைப் பூசித்தல்.

ஆதிதேயர்-அதிதிவமிசத்தார் அவர்கள் தேவர்கள்.

ஆதிதேயன் - தேவன், விருந்தினரை உபசரிப்போன்.

ஆதிதேவன்-சிவபெருமான், சூரியன், முதற்கடவுள், நாராயணன்.

ஆதித்தசூனு - எமன், கன்னன், காளிந்தி, சனி, சுக்ரீவன், தத்தியன், நாதன், மனு.

ஆதித்ததேவர் - திருவிசைப்பாபாடிய கண்டராதித்தர்.

ஆதித்தபுத்தி - அருக்கபுத்தி.

ஆதித்தபுத்திரர்-சூரியனது மக்கள்கள். அவர் கன்னன், காளிந்தி, சனி, சுக்கிரீவன், தத்தியமகன், நாதன், மனு என்பவராம்.

ஆதித்தமணி - சூரியன், முத்து.

ஆதித்தமண்டலம் - சூரியமண்டலம், மும்மண்டலத்தொன்று. அஃதிதயகமலமுதற்கண்டத்தானமளவும்.

ஆதித்தம் - காவிக்கல், அருசு.

ஆதித்தர் - வானோர்.
ஆதித்தல் - ஆதியாகத் தொடுத்தல்.
ஆதித்தன் - ஆதிக்குரு, சூரியன், சோ நாட்டிலிருந்த ஓரரசன். இவன், சிதம்பரத்துக் கனகசபையின் முகட்டைக் கொங்கிற் செம்பொன்னினால் செய்தவன்.
ஆதித்தன்கூர்மை-இலவணபாஷாணம்
ஆதித்தன்மத்திமச்சா - ஆதித்தனுக்குக் கர்க்கடகமுதல் ஆறிராசியிற்கண்டசா.
ஆதித்தன்வெள்ளை-ஆதித்தன்கூர்மை.
ஆதித்தன்றேவி - உஷை, சாயை.
ஆதித்யசா- ஆதித்தனுடைய சாவாக்கியம்.
ஆதித்தியம் - அதிதிபூசைக்குரிய பொருள், உபசரணை, கவனித்தல்.
ஆதித்தியர் - அதிதியிடத்திற் காசிபப்பிரசாபதிக்குப் பிறந்த புத்திரர் பன்னிருவர் அவர் அம்சுமந்தன், அரியமன், இந்திரன், சவிதா, தாதா, துவஷ்டா, பகவன், பூஷன், மித்திரன், வருணன், விசுவந்தன், விஷ்ணு என்பவராம். இவருள் இந்திரன் விஷ்ணு என இருவரும் வைவசுவத மனுவந்தரத்தில் ஆதித்தியராகவிருந்து சட்சுர் மனுவந்தரத்தில் துஷிதராயினர். கற்பாரம்பத்தில் பிரமாவினாற் சிருஷ்டிக்கப்பட்ட ஜயரென்றும் இவரைச் சொல்வார்கள். இப்பன்னிருவரும் சிருஷ்டியில் இச்சையில்லாதவராய் பிரமாவினது ஆஞ்ஞைக் குட்படாராயினர். அதனால் மனுவந்தரங்கடோறும் பிறக்குமாறு சபிக்கப்பட்டார்கள்.
ஆதித்தியவிருதயம் - ஒருதோத்திரம் இதை ஓதிவந்தால் சூரியானுக்கிரகமுண்டாம், இராவணனைக் கொல்லச்சென்ற இராமருக்கு அகஸ்தியரால் உபதேசிக்கப்பட்டது.
ஆதித்தியன் - சூரியன், தேவன்.
ஆதித்தியை - சரச்சுவதி.
ஆதிநாதப்பெருமாள் - திருக்குருகூரிற் கோயில்கொண்ட விட்டுணு.
ஆதிநாதர் - நவநாதசித்தரி லொருவர்.
ஆதிநாதவல்லி - திருக்குருகூரிற் கோயிற்கொண்ட இலக்குமி.
ஆதிநாதன் - ஒரு சைனகுரு.
ஆதிநாராயணன்-வச்சிரக்கல்விட்டுணு.
ஆதிநூல் - முதனூல், வேதம்.
ஆதிபகவன் } கடவுள், சிவன்.
ஆதிபகவான் }
ஆதிபதி - அதிபதி, எப்பொருட்குமிறைவன், கடவுள்.
ஆதிபத்தியம் - அதிகாரம், சுதந்திரம், தத்துவம், தலைமை, மகத்துவம்.
ஆதிபரம் - சாதிக்காய், பரப்பிரமம்.
ஆதிபரன் - இராசா, எப்பொருட்கும் இறையவன், கடவுள்.
ஆதிபராபரன் - கடவுள்.
ஆதிபலம் - சாதிக்காய்.
ஆதிபன் - அரசன், எசமானன்.
ஆதிபிட்சு - சிவன்.
ஆதிபுங்கவன் - அருகன், கடவுள்.
ஆதிபூதம் - அதிட்டானபூதம்.
ஆதிபோகம் - ஈடுவைத்ததைப் பாலித்தல், முதற்போகம்.
ஆதிமகாகுரு - அரிசு.
ஆதிமகாகாதம் - உலோகமணல்.
ஆதிமடக்கு-ஓரலங்காரம், அது வரிக்கு முதலில் ஒரே சொல்வரப்பாடுவது.
ஆதிமத்தியாந்தம் - முதலிடைகடை.
ஆதிமத்தியாந்தரகிதன் } கடவுள், சிவன்.
ஆதிமத்தியாந்தன் }
ஆதிமருந்து - சுக்கு, மிளகு, திப்பிலி, முதன்மையான ஒருமருந்து.
ஆதிமலடு-ஒருவகை மலட்டுநோய் அது வயிற்றின் மூன்றுமடிப்பு விழுந்து இடுப்புப் பருத்துத் தேகம் ஸ்தூலிப்பதாற் கருத்தரியாது போவதாம்.
ஆதிமுதல்-எல்லாவற்றிற்குமுன், கடவுள், முதன்முதல்.
ஆதிமூர்த்தி - கடவுள், ஆதிமூலம்.
ஆதியங்கடவுள் - அருகன், கடவுள்.
ஆதியந்தபதிச்சா - சித்திரவுச்சம், மகரச்சா.
ஆதியந்தமில்லாதவன்-கடவுள், சிவன்.
ஆதியந்தம்-அடிமுடி, முதற்றொடங்கி முடியுமட்டும்.
ஆதியரிவஞ்சம்-போகபூமியாறிலே ஒ [ன்று.
ஆதியாமம் - மூவகைப்புல்.
ஆதியாசை - கரப்படையாலுணரக்கப்பட்டவிசை, அதுபதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொருவகைப்படும்.

ஆதியெழுத்து - முதலெழுத்து. அது உயிர்பன்னிரண்டும்மெய் பதினெட்டும்.
ஆதியோடிடைமடக்கு - ஓரலங்காரம், அது நான்கடிகளு ளடியின் முதலினும் இடையினு மடக்கு வருவது.
ஆதியோடுகடைமடக்கு - ஓரலங்காரம். அது அடிகளுள் முதலுங்கடையு மடங்கிவருவது.
ஆதிரம் - நெய்.
ஆதிரவிச்சிலை - காவிக்கல்.
ஆதிரன் - பெரியோன்.
ஆதிராச்சியம் - ஏகாதிபத்தியம்.
ஆதிரை- சாதுவன் மனைவி, திருவாதி
ஆதிரௌத்திரம் - சௌவீரம். [ரை.
ஆதிவராகன் - விட்டுணு.
ஆதிவருணம் - பார்ப்பாரச்சாதி.
ஆதிவருணர் - முதல் வருணத்தார், அவர் பார்ப்பார்.
ஆதிவருணன் - பார்ப்பான்.
ஆதிவாயிலார்- பரதசேனாபதிய நூலாசிரியர்.
ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை.
ஆதிவிந்து - கிலப்பாஷாணம், மழை, கார்முகிற் பாஷாணம்.
ஆதிவிராகன் -அருகன், சிவன், சோரபாஷாணம். [ணம்.
ஆதிவிராட்டியம் - வெள்ளைப்பாஷா
ஆதிவிருத்திசந்தி-மொழிக்கு முதனின்ற இ-ஈ-ஏ ஐயாகவும், உ-ஊ-ஓ ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும் இரு ஆராகவுந் திரிவது.
அதீண்டுகுற்றி-தருமமாய்ப் பசுமுதலியன சொறிந்துகொள்ள நாட்டியிருக்குங்கல்.
ஆதீபனம் - கோலஞ்செய்தல்.
ஆதீனம்-ஆஸ்தி, ஆளுகை, உடமை, உரிமை, வமிசம்.
ஆதீனவம் - கீழ்ப்படியாமை, மீறுதல்.
ஆது - ஆட்டுருபு, தெப்பம், யானையைப் பாகரதட்டுமோசை.
ஆதுரம் - அவா, நோய். [ன்.
ஆதுரன்-ஆசையுற்றோன்நோயுற்றோ
ஆதுலம் - தரித்திரம்.
ஆதுலர் - தரித்திரர்.
ஆதுலர்க்குச்சாலையளித்தல் - அறமுப்பத்திரண்டிலொன்று.

ஆதுலன் - தரித்திரன்.
ஆதுவம் - கள்.
ஆதுர்த்தரசன்-கசனது மூன்றாம் புத்திரன். இவன் தருமாரணியத்தை யுண்டாக்கினவன். இவனது மகன் இராஜவிருடியாகிய கயன்.
ஆதெரிசம் - கண்ணாடி.
ஆதேசம் - ஆதாயம். ஒழுங்கு, கிரகசாரம், திரிபு, பதில், புத்தி.
ஆதேயம் - ஆதாயம், தாங்கப்படுவது.
ஆதொண்டை - காத்தோட்டி, சாத்தோட்டி.
ஆதோரணர் - தாத்துகிறவர்கள், யானைப்பாகர்.
ஆத்தன்-அருகன், கடவுள், கூட்டாளி, சங்காத்தி, சத்தியஆடையவன், சிவன், சிநேகிதன், தோழன், பெரியவன்.
ஆத்தா - அணிநுணாமரம்.
ஆத்தாடியுள்ளான் - ஒரு குருவி.
ஆத்தாள் - தாய், பார்ப்பதி.
ஆஸ்தானக்கோழை - சபைக்கோழை.
ஆஸ்தானசந்தோஷம் - கோணங்கித் தன்மை, விகடக்கூத்து.
ஆஸ்தானசந்தோஷி - விகடக்கூத்தன், விகடக்கூத்தி.
ஆஸ்தானமண்டபம்-தருமசபை கூடுமிடம், கொலுமண்டபம்.
ஆஸ்தானமேறல், விவகாரந்தீரும்பொருட்டுத் தருமசபையேறுதல்.
ஆஸ்தாகம் } ஆபத்ரு, கொலு, கோ
ஆஸ்தானம் } புரவாயில், நீதித்தலம்,
ஆத்தானம் } தருமசபை, மண்டபம்.
ஆஸ்தி-ஆதனம், சம்பத்து, பாக்கியம்.
ஆத்தி - ஒரு மரம்.
ஆஸ்திகன் - ஏகேச்சுவரவாதி.
ஆத்திகேடு-ஆற்றாண்மை, சத்துருக்கேடு.
ஆத்திக்கனி - வெருகு.
ஆஸ்திக்காரன் - சம்பத்துடையவன்.
ஆஸ்திக்காரி - சம்பத்துடையவள்.
ஆத்திசூடி - ஔவைசெய்த ஒரு நூல், சிவன்.
ஆத்திஷ்டி } நீர்ஆள்ளி.
ஆத்திட்டி }
ஆத்தியன் - சிவன்.
ஆத்திய - ஆவத்து.

ஆத்தியேபாந்தம் - ஆதியந்தம்.
ஆத்திரக்காரன் - அவசரமுடையவன்.
ஆத்திரக்காரி - அவசரமுடையவள்.
ஆத்திரதம் - இஞ்சி.
ஆத்திரமூலம் - ஒருவித மூலரோகம், இது இரத்தத்தினாலும் பித்தத்தினாலும்பிறந் தெப்பொழுதும் இரத்தக் கசிவை யுண்டாக்கும்.

ஆத்திரம்
ஆத்திரவம்
ஆத்திரியம் } அவசரம், ஆவத்து, கோபவிரைவு.

ஆத்திரேயர்-வடமொழியில் வைத்திய அகராதி கண்டுசெய்த பேர்போன ஒரு பண்டிதர்.
ஆத்திரேயன்-சந்திரன், தத்தாத்திரேய முனி.
ஆத்திரையன் - ஒரு தமிழ்ப்போசிரியன்.
ஆத்துமகத்தியை - தற்கொலை.
ஆத்துமகம் - பிறத்தல்.

ஆத்துமகன்னம்
ஆத்துமகாந்தன் } தற்கொலை.

ஆத்துமகோஷம்
ஆத்துமகோடம் } காகம்.

ஆத்துமசந்தேகம் - உள்ளையம்.
ஆத்துமசன் - மகன்.
ஆத்துமசிநேகம் - நெருங்கியவுறவு.
ஆத்துமசிநேகன் - நெருங்கிய உறவை யுடையோன்.
ஆத்துமசிநேகி - நெருங்கிய உறவை யுடையவள்.
ஆத்துமசத்தி - பஞ்சசத்தியினொன்று.
ஆத்துமசை - மகள்.
ஆத்துமஞானம்-ஆத்துமாவை, அறியும் அறிவு.
ஆத்துமஞ்ஞன்-தன்னையுந் தலைவனையு மறிபவன்.
ஆத்துமதரிசகம் - கண்ணாடி.
ஆத்துமதரிசம் - பளிங்கு.
ஆத்துமதரிசனம்-ஆத்தும நிலையறிதல்.
ஆத்துமதெரிசனை - ஆத்துமாவினிலையைத் தெரிசித்தல்.
ஆத்துமபுத்தர் - பூனைக்காலி.
ஆத்துமபுத்தி - சிவகாட்சி, சுயவறிவு, தன்னறிவு.
ஆத்துமபூ-சிவன், பிரமன், மன்மதன், விட்டுணு.
ஆத்துமபோதம் - ஆத்துமஞானம்.
ஆத்துமமோனி - காமன், சிவன், பிரமன், விட்டுணு.
ஆத்துமம் - அதர்வண வேதோபநிடதமுப்பத்தொன்றி னொன்று. அரத்தைத, பிராணன், மனம்.

ஆத்துமலக்கணம்
ஆத்துமலட்சணம் } ஆத்துமாவின் சுபாவக் குணம்,

அஃது ஆனந்தம், சத்து, சித்து.
ஆத்துமவசம் - தன்னடக்கம்.
ஆத்துமவாதி - ஆத்துமாவே தெய்வமென்று வாதிப்போன். [விசாரம்.
ஆத்துமவிசாரம்-ஆத்துமாவை யறியும்
ஆத்துமவிசாரணை-ஆத்துமாவை யறியும்பொருட்டு விசாரிக்கும் விசாரிப்பு.
ஆத்துமா-அறிவு, ஆன்மா, உடல், உறுதி, காடிக்குட்டி, காற்று, சீவன், சுபாவம், சூரியன், தீ, பிரமன், பிராணன், புத்தி, மகன்.
ஆத்துமார்த்தம் - ஆத்தும லாபத்திற்குரியது, தற்பிரயோசனம்.
ஆத்துமானவாதம்-ஒருவகை வாதரோகம், அது சீதளம், மலபந்த வஸ்து, சிலேஷ்மவஸ்து, புளிப்புவஸ்து, மாப்பண்டம், பனிக்காற்றிவைகளினாற்பிறந்து அடிவயிற்றிற்றங்கி வேதனைசெய்யும். அக்காலங்களில் குடலின் துவாரத்தில் வலித்தல், மலஜலங் கட்டுப்படல், வயிற்றிலிரைச்சல், வயிறுப்பல், வாதசரக்குறியாகிய இக்குணங்களுண்டாகும்.
ஆத்துமீகம் - ஆத்துமசம்பந்தம்.
ஆஸ்தை - நிலை.
ஆத்தை - அதிசயவிரக்கச்சொல், ஈன்றாள்.
ஆநகதுந்துபி-இரணபேரி,வசுதேவன்
ஆநகம் - தேவதாரு.
ஆநந்த-நாற்பத்தெட்டாவதுவருடம்.
ஆநந்தசர்ப்பன்-ஒருவகைச் சர்ப்பானாய், அது சர்வாங்கத்திலுஞ் சாரைப்பாம்பின் றோலையொத்துத் தினவு, சொறி, சலக்கசிவு முதலியன உண்டாவதோடு கண்டத்தில் வெடித்து நீரொழுக விகாரரூபம், தாதுநஷ்ட முதலிய குணங்களை யுண்டாக்கும்.
ஆநந்தகாநகம் - ஆநந்தத்தை யுண்டாக்குங் காடு, காசிநகரம்.

ஆநந்தகிரி - சாலிவாகனசகாப்தமெண் ணூற்றின் மேலிருந்த வோர் சமஸ் கிருத வித்துவான் இவனைச் சங்கர திக்குவிசயம் என்னும் நூல்செய்தா னென்றொரு சாராரும் சங்கராச்சா ரியருக்குச் சீடனென்றொரு சாரா ருங் கூறுவர்.
ஆநந்ததம் - யோனி.
ஆநந்ததீர்த்தர்-மத்துவாச்சாரியர்கள்.
ஆநந்தத்தாண்டவம் - சந்தோஷக்கூத் து, சிவன்கூத்து.
ஆநந்தத்தாண்டவன் - நடேசன்.
ஆநந்தநாயகி - திருநெல்வாயிலிற் கோ யில்கொண்டிருக்குந் தேவியார்.
ஆநந்தரி - பிரமன் பட்டணம்.
ஆநந்தநித்திரை-யோகநித்திரை.
ஆநந்தபடம் - கூறைப்புடவை.
ஆநந்தபரவசம் - ஆநந்தக்களிப்பு.
ஆநந்தபாஷ்பம், ஆநந்தபாட்பம் - சந்தோஷத்தினால் உண்டாகுங் கண்ணீர்.
ஆநந்தப்பிரபவம் - இந்திரியம்.
ஆநந்தமயகோசம் - பஞ்சகோசத் தொ ன்று, அது அவித்தை.
ஆநந்தமயம் - கடவுள் கோசமைந்தில் ஒன்று, தன்வசமற்றிருத்தல்.
ஆநந்தமயன் - கடவுள்.
ஆநந்தமூலி - கஞ்சா.
ஆநந்தம் - அரத்தை, கடவுள், சந்தோ ஷம், பாக்குற்றங்களிலொருவகை. பேரின்பம்.
ஆநந்தரூபன் - சந்தோஷத்தோற்றமு டையவன்.
ஆநந்தரூபி-சந்தோஷத்தோற்றமுடை யவள்.
ஆநந்தலட்சணம்-பரமாத்மா சகல பதா ர்த்தத்தைக் காட்டியுந் தன்னிடத் தப் பிரமை நீங்காதிருப்பது.
ஆநந்தவருவி - ஆநந்தக்கண்ணீர்ப்பெ ருக்கு.
ஆநந்தவல்லி-சந்தோஷத்தையுடையவ ள், உமாதேவிகோழித்தலைக் கந்தகம்.
ஆநந்தவாதி - கௌரிபாஷாணம்.
ஆநந்தனம்-இன்பங்கொடுப்பது, உபச ரணை, சந்தோஷித்தல்.
ஆநந்தன் - கடவுள், சந்தோஷத்தை யு டையவன்.

ஆநந்தாத்மா - பிரமன்.
ஆநந்தாலயம் - சந்திரனுலகு.
ஆநந்தி - அரத்தைப்பூண்டு, ஆனந்தமு டையவள், மகிழ்ச்சி, பார்வதி.
ஆநந்தித்தல் - சந்தோஷித்தல்.
ஆநந்தியம்-அழிவின்மை,முடிவின்மை.
ஆநந்தை-கொட்டைக்கரந்தை,பார்வதி
ஆநாகசுரம்-ஒருவகைச் சுரநோய். அது மலபந்தம், மலத்துவாரத்திற் சூலை, அக்கினிமந்தம், சீதளம், சிரோபா ரம், நெற்றியெரிவு, தாகம், நெஞ்சு லர்வு, தர்ப்பலம், தேககனம், தேக கிரபேதம், கண்சிவப்பு, உரோமச் சிலிர்ப்பு, அடிக்கடி நீரொழுக்குமுத லிய குணங்களை யுண்டாக்குவதோடு நாடியையலைவுற்றுச் சூட்சமமாகவும் வேகமாகவும் நடக்கச்செய்யும்.
ஆநாகரோகபேதம் - ஆநாகநோயினது விகற்பம், அது அஷ்டிலாரோகம், பிரதியஷ்டிலாரோகம், துனிரோ கம், பிரதிதுனிரோகம் என நான்கு வகைப்படும்.
ஆநாகரோகம்-வயிற்றை யிழுத்துப்பி டிக்கும் ஒருவகைநோய்.
ஆநாகரோகலட்சணம்-ஆநாக நோயின திலக்கணம், அது குதஸ்தானத்தில் அபானவாயுவும் இதய ஸ்தானத்தி லுதானவாயுவும் தமக்குரிய தொழி லைவிட் டொன்றுகச்சேர்ந்து வயிற் றையிழுத்துவலித்துக்கொள்ளும். அ க்காலத்தில் வயிற்றிலிரைச்சல், மல ச்சிக்கல், சுரம், சுவாசமுதலிய உபத் திரவங்களுண்டாகும்.
ஆநாத்தம் - ஆடாங்கு, ஒருதேயம், க டல், சண்டை, தோல்.
ஆநாயகலை - வலைபோன்றவத்திரம்.
ஆநாயம் - வலை, வாயுக்கண்ணறை.
ஆநி-கழித்தல், குறைவு, கேடு, விடுதல், நஷ்டம்.
ஆநிரை - பசுக்கூட்டம்.
ஆநிரைகாத்தோன் - கிருட்டினன்.
ஆநிலன் - அனுமான், வீமன்.
ஆநிலை - பசுக்கொட்டில்.
ஆநின்று - நிகழ்காலவிடைநிலை (உ-ம்) நடவாநின்றார்.
ஆநீர் - கோசலம்.

ஆநுபூர்வி } கிரமம், வரிசை.
ஆநுபூர்விகம் }
ஆநெய் - பசுநெய்.
ஆந்தகம்-குருடர்கூட்டம், பாதாளம்.
ஆந்தகர் - பாதாளலோகத்தர்.
ஆந்தம் - இறுதி, முடிவு.
ஆந்தரங்கம் - இரகசியம், உச்சிதம்.
ஆந்தரங்கன்-அதிகநேசிக்கப்பட்டவன் அருமையானவன், இரகசியங்களைக் கேட்டு வைத்திருப்பவன், உற்றநண்பன், விஷயங்களை நம்பத்தக்கவன்.
ஆந்தரதேசம்-ஒருதேசம். இது கோதாவிரி கிருஷ்ணா நதிகளுக்கு மத்தியில் உள்ளது. இதைத் தெலுங்கு தேசம் எனப்படும். திரிலிங்க தேசமென்பது வடமொழி வழக்கு.
ஆந்தரபிருத்தியர் - சூத்திரன் வமிசத்தாரான மகததேச வரசர். இவர்கள் சாலிவாகன சகாப்தமுதல் நானூறு வருடம் இராச்சியம் புரிந்தோர்.
ஆந்தரம்-ஆந்தரதேசபாஷை. இதுவே தெலுங்கு என்றும் தெலிங்கு என்றும் வழங்குவது. இது கண்ணுவ மகாவிருடியாற் பிரவிருத்தி செய்யப்பட்ட தென்பர்.
ஆந்தரர் - ஆந்தரதேசத்தர், பஞ்ச திராவிடருள் ஒருவகையார்.
ஆந்தனையும் - ஆமளவும்.
ஆந்திகை - அக்காள்.
ஆந்திரதேசம் - ஆந்தரதேசம்.
ஆந்திரபித்தவாதம் - ஒருவகைப் பித்தவாதரோகம். அது வாதவஸ்து, சீதவஸ்து, மச்சம், மாமிசம், வெல்லம், பிண்ணாக்கு, தயிர், காந்தியவன்னம், இவைகளை அதிகமாகப் புசித்தலினாற்பிறந்து பெருங்குடலின் துவாரத்தில் வியாபித்து வயிற்றிற் கலக்குவதுபோலு மறுக்குதல்போலும்இருப்பதோடு உப்பல், நோவு, மலமூத்திரக் கட்டுப்பாடு, மிகுவார்த்தை, வாந்தி, வெப்பம், மூர்ச்சை, பிரமம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.
ஆந்திரம்-ஒருபாடை, குடல்சாதி நான்கினொன்று, தேயமைம்பத்தாறில் ஒன்று, மரணம்.
ஆந்திரர் - ஆந்தரர்.
ஆந்திரீகம் - குருடர்.

ஆந்தை - ஒரு பறவை, பஞ்சபட்சியில் ஒன்று, புறமுட்டி, பேராமுட்டி.
ஆந்தைக்காதல் - ஆந்தைக்கூவுகை, ஆந்தைநூல்.
ஆங்தோளி ஒரிராகம், ஒருவகைச் சிவிகை.
ஆபகம் } ஆறு.
ஆபகை }
ஆபச்சைவன்-அட்டவசுக்களி லொருவன்.
ஆபணம் - நடை, கடைவீதி.
ஆபணியம் } கடைவீதி, கடைச்சரக்கு
ஆபணீயம் }
ஆபதம் - ஆபத்து.
ஆபதோத்தாரணன் - வயிரவன்.
ஆபத்சகாயர் திருப்பழனத்திற் கோயில்கொண்டிருக்குஞ்சுவாமி சுணிநாசலத்தில் எழுந்தருளிய விநாயகர்.
ஆபத்சகாயேசுவரர்-குரங்காடு துறையிற் கோயில்கொண்டிருக்குந்தெய்வம்.
ஆபத்சன்னியாசம் - மரிக்குங்காற் பெருந்துறவு.
ஆபத்தம் - பிரதிட்டை.
ஆபஸ்தம்பசூத்திரம் - யசுர்வேத விதிதகருமங்களைக் குறித்து ஆபஸ்தம்பரென்பவராற் சூத்திரமாகச் செய்யப்பட்ட ஒருநூல்.
ஆபத்தம்பம்-தருமநூல் பதினெட்டில் ஒன்று.
ஆபஸ்தம்பர் - வடமொழி வைத்தியசாஸ்திரங்களிற் பேர்போன ஒரு பண்டிதர்.
ஆபஸ்தம்பன் } ஒரு மகா விருடி இவர் யசுர்வேதவிதித கருமங்களைக் குறித்துச் சூத்திரங்கள் செய்தவர். அஃது ஆபஸ்தம்பசூத்திரம் எனப்படும்.
ஆபத்தம்பன் }
ஆபத்தி - தோஷம், பொருத்துதல்.
ஆபத்து - அவசரம், பெரியதேவை, மிகு வருத்தம்.
ஆபந்தம்-அலங்காரம், உருக்கம், கட்டு, நகம்.
ஆபந்நம் - விபத்து
ஆபந்நன் - விபத்தையடைந்தவன்.
ஆபந்நாகரன் - விபத்திற் குறைவிடமானவன்.
ஆபம் - நீர், நீர்ச்செறிவு.
ஆபரணக்கடைப்புணர்வு பின்கொக்கி.
ஆபரணச்செப்பு - ஆபரணங்கள்வைக்கும் ஒருவகைச் செப்பு.
ஆபரணம் - சத்தாவத்தையி னொன்று. அது இருபத்தைந்து தத்துவங்களை

யும் ஒன்றற்கொன்று பேதந்தெரிய வொட்டாமல் மறைத்திருப்பது, சிலை, பூரணம்.

ஆபற்சந்நியாசம் - ஆபத்துக் காலத்திற் பெறுந்துறவு.

ஆபனம் - மிளகு.

ஆபனிகன் - வேடன்.

ஆபன் - அட்டவசுக்களிலொருவன்.

ஆபாகம்-அடுப்பு, குயக்கலஞ்சுடுஞ்சூளை.

ஆபாசம் - அபிப்பிராயம், ஒளி, கெடுதல், பயங்கரரூபம், பிரதிபிம்பம், பொய்த்தோற்றம், மிகுவிருப்பு.

ஆபாஷணம், ஆபாடணம் - சுற்றத்தாரிடத்தும் சிநேகரிடத்தும் பேசும் பேச்சு.

ஆபாஷம், ஆபாடம் - பாயிரம்.

ஆபாதசூஷம், ஆபாதசூடம், ஆபாதமஸ்தகம், ஆபாதமத்தகம், ஆபாதமஸ்தம், ஆபாதமத்தம் - உச்சிதொடங்கியுள்ளங்கால் மட்டும், பாதாதி கேசம்.

ஆபாவி - பேன்.

ஆபானம் - மதுக்கடை.

ஆபிலவனம்-நீர்தெளித்தல்,முழுகுதல்.

ஆபீஷம், ஆபீடம் - சிகையிற்சுற்றின பூமாலை.

ஆபீரம் - இடையர்சேரி, சிந்துநதிக்கு மேற்காரியாவர்த்தத்தோடு சேர்ந்த ஒருதேசம்.

ஆபீரர் - இடையர்.

ஆபீரன் - இடையன். [று.

ஆபீலம்-சங்கடம் - நவரசங்களிலொன்று.

ஆபீனம்-கிணறு, கொழுப்பு, சிற்பர்வீதி, பசுவின்மடி.

ஆபூஷம், ஆபூடம் - தத்தநாகம்.

ஆபூபிகம்-மாவினாற்செய்த பலகாரசமுதாயம்.

ஆபூப்பியம் - மா.

ஆபோகம் - அநுபவம்,பாம்பின்படம், பூரணம், முயற்சி, தேவுறப்புள் ஒன்று.

ஆபோசனம்-போசனம், விழுங்குகை.

ஆபோதனம் - அறிவு, போதித்தல்.

ஆப்தம் - ஆண்டு, நேசம்.

ஆப்தர் - நேசர்.

ஆப்தன்-உள்ளதுகூறுவோன். [விராசி.

ஆப்பம் - ஒருவகைப் பலகாரம், கும்ப

ஆப்பனூர்க்காரனார் - திருவாப்பனூரிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

ஆப்பி - பசுச்சாணி.

ஆப்பிநீர்-கரைத்த பசுவின்சாணி, பசுவின் மூத்திரமுஞ் சாணியும்.

ஆப்பியந்தரம் - உள்.

ஆப்பியாயகம் - உரவினாது சேர்க்கை, சந்தோஷம், திருப்தி.

ஆப்பிரச்சனம் - வழியுபசாரம்.

ஆப்பு - எட்டி, மரம்பிளக்குங்கருவி.

ஆப்புளண்டம் - கையாந்தகரை.

ஆப்பேறல் - ஆப்பேறினபிரிவு.

ஆப்பை - அகப்பை.

ஆமகணம்-குழந்தைகட்குச் சேதவழும்பு விழுகிற ஒரு நோய்.

ஆமதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டி லொன்று.

ஆமக்கணம் - ஒருவகைக் கணரோகம். அது வாதகாடி மற்றகாடிகளிற் பின்னிக்கொண்டு நடத்தல், புளிப்புத்துவர்ப்பு வஸ்துக்களை வெறுத்தல், அன்னத்தி லிச்சையறல், நாபியில் நோதல், தேகத்தினுள்ளிற் காய்தல் முதலியவைகளை அதிகரிக்கச் செய்து எரிகுன்மக் குணம், பித்தவெட்டை, தாதுநஷ்டம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆமசிராத்தம்-பச்சைப்படி கொடுக்கிற சிராத்தம்.

ஆமசூலை - வயிற்றுவலி.

ஆமசூலைரோகம்-ஒருவகைச் சூலைநோய் அது மிகு சலபானம்.அகாலபோசனம், மலசலபந்தம், அசீரணவஸ்துக்களைப் புசித்தல் முதலியவற்றால் ஆமமாகிய வசீகரணம் விருத்தியடைந்து சூலையை அதிகரிக்கச்செய்யும். அதனால் மார்பு விலா வயிறுமுதலிய இடங்களில் ஈட்டியாற் குற்றல் போற் குற்றலுண்டாகும்.

ஆமோதம், ஆமடம் - உத்தேசம், பலன், மதிப்பு.

ஆமடி - காஞ்சிரம்.

ஆமணக்கெய்-ஆமணக்கென்னு மரத்தின் விதையால் உண்டாக்கப்படும் ஒருவகை நெய். [டை.

ஆமணக்கமுத்து - ஆமணக்கங் கொட்

ஆமணக்கு-ஒருசெடி, அது எலியாமணக்கு, கடலாமணக்கு, காட்டாமணக்கு, சிற்றாமணக்கு, செவ்வாமணக்கு, பறங்கியாமணக்கு, புல்லாமணக்கு, பேராமணக்கு, மலையாமணக்கு, சூரியகாந்தவாமணக்கு, எரிக்கரை காட்டாமணக்கு, மணியாமணக்கு, படுக்கையாமணக்கு, அறுபதாங் கொட்டையெனப் பலவகைப்படும்.
ஆமணத்தி - கோரோசனை.
ஆமண்டம்-ஆமணக்கு, சிற்றாமணக்கு.
ஆமதோஷம்-ஒருவகை தோஷரோகம்.
ஆமந்திரிகை-இடக்கையென்னும் வாச்சியம்.
ஆமபித்தம் - ஒருவகைப் பித்தரோகம். அது பித்தமதிகரித்து ஆமத்திற்சேர்ந்து அதையு மதிகரிக்கச் செய்து பற்பல உபத்திரவங்களை யுண்டாக்கும்; அக்காலங்களிற் றேகங் கறுப்போடு வியர்வை, மூர்ச்சை, தாகம், கோழை, வாந்தி, தலைநோவு, வயிறு, மார்பு, கண்டம் முதலிய விடங்களிலெரிவு ஆகிய குணங்களுண்டாகும்.
ஆமம் - ஒருநோய், கடலை, சீதம், துவரை, பச்சை, மலவரட்சி.
ஆமயம் - பசுச்சாணி, நோய்.
ஆமயன் - நோயாளி.
ஆமயாவித்துவம் - அசீரணம்.
ஆமரகோளா - கடுக்காய்ப்பூ.
ஆமரபலம் - எட்டிக்கனி.
ஆமரம் - எட்டி.
ஆமரி - வசனம்.
ஆமரிகபலம் - நெல்லிக்கனி.
ஆமரிகம் - நெல்லி.
ஆமருவியப்பன்-திருவழுந்தூரிற் கோயில்கொண்ட விஷ்ணு.
ஆமலகபலம் - நெல்லிப்பழம்.
ஆமலகமலம் - ஆகாசத்தாமரை.
ஆமலகம் - நெல்லிமரம், பளிங்கு.
ஆமலகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டி லொன்று.
ஆமல் - மூங்கில், விஷமூங்கில்.
ஆமளவும் - கூடியவரையில்.
ஆமா - காட்டுப்பசு, நெல்லிக்கனி.
ஆமாகோளம் } கடுக்காய்ப்பூ.
ஆமாகோளா }
ஆமாங்கு - ஆம்பசு, தகுதி, விபரீதம்.

ஆமாசயகதகாரன்ன லட்சணம்-விஷங்கலந்த அன்னத்தைப் புசித்தலினாலுண்டாகுங்குணம். அது தேகத்தில் புகை, வியர்வை, மூர்ச்சை, மதம், பிரமை, உரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம், கண்ணோவு, மார்நோவு, முதலியவையாம்.
ஆமாசயம் - இரைக்குடர், சமித்தல்.
ஆமாசீரணம்-ஒருவகை அசீரணநோய். அது கண்ணிலுந் தாடைகளிலுமதைப்பு, சாப்பிடாதகாலத்துஞ் சாப்பிட்டதுபோ லேப்பம், வாயில் நீர்பெருக்கு, வயிற்றில் வருத்தம், சரீரத்தில் வேதனை வீக்கமுதலிய குணங்களை யுண்டாக்கும்.
ஆமாதிசாரம் - வயிற்றுளைவு.
ஆமாத்தியர் } ஆலோசனைக்காரர், குரு
ஆமாத்திரர் } தந்திரிகள், வைத்தியர்.
ஆமாத்தூர் -ஒரு சிவஸ்தலம்.
ஆமாவசகம்-ஒருவகைநோய், அது பிரமாணந்தப்பி மிகப்புசித்தலினால் அவ்வன்னம் வாந்திபேதிசீரணமாகாமல் ஆமமாகிய சிலேட்டுமத்திற் சேர்ந்து மிகு வேதனையை யுண்டாக்குவது.
ஆமாறு - ஆகுமுறை.
ஆமானவன் - சிறந்தவன்.
ஆமிசம்-அனுபவம், இச்சித்தல், கைக்கூலி, போசனம், மாமிசம், விருப்பம்.
ஆமிஷம் - ஆமிடம், ஆமஷம்.
ஆமிடம் உத்தேசம், பலன், மதிப்பு.
ஆமிரம் - மாமரம், புளிப்பு.
ஆமிரேஷணம் } கூறியது கூறல்.
ஆமிரேடணம் }
ஆமிலபித்தம் - ஒருவகைப்பித்தநோய். அது மஞ்சளைக் கரைத்தாற்போறு புளித்த வாந்தி, சூலை, அக்கினிமந்தம், நடுக்கம், மாறுருபம், இருமல், சோம்பல், தாகம், அர்ப்பலம், வியர்வை, சித்திராபங்கம், துக்க முதலிய குணங்களை யுண்டாக்குவது.
ஆமிலபித்தரோகலட்சணம்-ஆமில பித்தரோகத்தினது குணம். அது ஆமத்தை விருத்தியாகிய பித்தமானது சிலவேளை அதை மிகவுங் குறைத்து அவ்வாறேதானுங்குறைந்து மிகவும் உபத்திரவத்தை யுண்டாக்கும். அது றுற் சரீரத்தில் வளையாகாரமான

புடைகளும், பல நிறங்களைப்பெற்ற கொப்புளங்களும் எழும்பி மாறாத்தினவு, புளிப்புங் காரமுமான வாந்தி, மார்பெரிவு, அதிர்வு, தேகப்பாரிப்பு, சூடு, அரோசகம், மூர்ச்சை, சோர்வு, பிரமை, புலப்பம், இளைப்பு, தாக்கம், வாய்நோவு, கண்ணிலிருட்சி முதலிய குணங்களை யுண்டாக்கும்.

ஆமிலம் - புளிப்பு, புளியமரம்.

ஆமிலவிதத்தம் - ஒருவகைநோய். அது மிகவும் புளிப்புள்ள வஸ்துவைப் புசித்தலினால் இரத்தத்தோடுகூடிய திரிதோஷம் கண்களில் பார்வையைச் சேர்ந்து பிறந்து உபத்திரவத்தைச் செய்யும், அதனால் விழிகளில் வீக்கமுஞ் சிவப்புந் தினவு முண்டாகும்.

ஆமிலிகை - புளிப்பு, புளியமரம்.

ஆமிலோஷிதம் - ஒருவகைநோய். அது பித்தாத்த முதலிய வாதாதிதோஷ அசிரணவஸ்துக்களைக்கூட்டிப் புசிக்கப்பட்ட அன்னசாரங்களை வயிற்றிற்குட் புளிக்கவைத்து அந்தநீரைக் கண்களுக்காதாரமாயிருக்கின்ற நரம்புகளின் துவாரத்தின்வழியாக நேத்திரங்களிற்செலுத்தி நிரப்பிப்பதாற் பிறந்து அக்கண்களி லிருட்சி சிவப்பு, வீக்கம், நீரொழுக்கு, கல்க்கம், பார்வைக்கேடு முதலிய குணங்களை யுண்டாக்கும்.

ஆமுகம் - துவக்கம், முகளை.

ஆமுகர் - நந்திதேவர்.

ஆமுத்தி - மோக்கம்.

ஆமுத்து - ஆவின்பல்லிற் பிறந்தமுத்து.

ஆமுகாயம் - பாரம்பரை, வேதம்.

ஆமூர் - நல்லியக்கோடனூர்.

ஆமூலாக்கிரம் வேர்முதற் கிளைபரியந்தம்.

ஆமேர்பல்லூரி - கோரோசனை.

ஆமேற்புல்லூரி - கடுக்காய்ப்பூ.

ஆமை - இராசசின்னத்தொன்று, ஒருநோய், கூர்மம், வாசனை.

ஆமைக்கல் - தளவரிசைக்கான ஆறுமூலைக்கல்.

ஆமைச்சுரம் - சிறுபிள்ளைகளுக்குவரும் ஒரு சுரம்.

ஆமைப்பூட்டு - ஒருவகைப்பூட்டு.

ஆமைமடி - சிறுமடி.

ஆமையம் - சாணம், நோய்.

ஆமையன் - நோயுள்ளோன்.

ஆமையவதாரி - விட்டுணு.

ஆமையாழ் - செவ்வழியாழ்த்திறம்.

ஆமையோட்டுக்கட்டி - ஒருவகை கட்டிநோய். அது குழி விழுந்தும், மினுமினுத்தும், நோவைத்தருவதும் ஒருக்கால் தராதரமாய் எவ்விதச் சிகிச்சைக்குங் குணப்படாமல் ஆமையோட்டைக் கவிழ்த்ததுபோலிருக்கும்.

ஆமோசனம் - காலுதல், பிரகாசித்தல்.

ஆமோசித்தல் - ஒளிர்தல்.

ஆமோதம் - உவகை, மிகுமணம்.

ஆமோதித்தல் - ஒருவர் சொல்லுவதற்குடன்பட்டுச் சொல்லுதல்.

ஆமோதிப்பு - உடன்பாடு.

ஆமோதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

ஆம் - ஆமெனல், இடைச்சொல், ஈரம், உவமையுருபு, நீர், அசைச்சொல். (உ-ம்) பணியுமாம், தன்மை முன்னிலை யுளப்பாட்டுப் பன்மைவினைவிகுதி (உ-ம்) சொல்வாம்.

ஆம்படையான் - அகமுடையான், கணவன்.

ஆம்பலரி - சூரியன், முதலை.

ஆம்பலா - புளிபாரைப்பூண்டு.

ஆம்பலானனன் - விநாயகன்.

ஆம்பல் - அடைவு, அல்லி, இசைக்குழல், ஊதுகொம்பு, ஒழுங்கு, ஓரெண், கள், குமுதம், சந்திரன், துன்பம், நெல்லி, பண், புளியாரை, மூங்கில், யானை.

ஆம்பற்குழல் - வெண்கலத்தாற் குமுதவடிவாக அலைசுபண்ணிச் செறித்த குழல்.

ஆம்பி - இறைகூடை, ஒலி, காளான், குடைக்காளான், பன்றிப் பத்தல், அது நீரிறைக்குங் கருவி.

ஆம்பிகேயன் - குமரன், திருதராட்டிரன்.

ஆம்பியம் - இரதம்.

ஆம்பிரம் - புளிப்பு, புளிமா, மாமரம்.

ஆம்பிரவனேசர் - திருமாந்துறையிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

ஆம்பிராதகேசுவரம், ஆம்பிரேசுவரம் - சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டனுளொன்று.

ஆம்பிலக்கனி - புளியம்பழம்.
ஆம்பிலம் - கள், புளிப்பு, புளியமரம்.
ஆம்பு - காஞ்சொறி.
ஆம்புலம் } குதிரை.
ஆம்புவம்
ஆம்பூறு
ஆம்பிரம் - ஒருபலம்.
ஆம்மிலம் - புளி.
ஆம்மிலை - புளியாரை.
ஆயக்கசுரம் - முறைக்காய்ச்சல்.
ஆயக்கட்டு - ஒரு மாகாணத்திலுள்ள பூமியின் முழுவிஸ்திரணம், மோசகடியான பேச்சு.
ஆயக்கல் - காரக்கல்.
ஆயக்காரன் - சுங்கம் வாங்குவோன்.
ஆயக்காரி - சுங்கம் வாங்குபவள்.
ஆயக்கால் } குத்துக்கால் சிவிகைமுதலியன தாங்குதல்.
ஆயக்கோல்
ஆயசம் - ஆயுதம், இரும்பு.
ஆயசூரி - கடுகுப்பூண்டு.
ஆயதம் - அகலம், நீளம், முட்டை வடிவம்.
ஆயதனம்-ஆலயம், விட்டுக்குரிய நிலம், பலிபீடம், வாசம், வீட்டினுட்டளம்.
ஆயதி - எதிர்காலம், தாதா, மனைவி, நீளம், பொருத்து, மகத்துவம், மனக்கட்டு, மிருகண்டன்தாய், மேருபுத்திரி.
ஆயத்தப்படல் - எத்தனப்படுதல்.
ஆயத்தம் - எத்தனம்.
ஆயத்தலம் - ஆயத்துறை.
ஆயத்தன்-ஒருவனுக்குட்பட்டவன், கூர்மையுள்ளவன், தள்ளப்பட்டவன்.
ஆயத்தி-உருக்கம், எல்லை, நன்னடை, நாள், நீளம், பெலன். [ம்.
ஆயத்துக்கருத்தன்-அஞ்சன பாஷாணம்.
ஆயத்துக்குள்ளேமாயம் - சிறிது வியாபாரத்தில் சிறுலாபம்.
ஆயத்துறை - தீர்வைத்துறை.
ஆயப்பாலை - நால்வகைப் பாலையுள் ஒன்று.
ஆயமானம் - இரகசியம், உயிர்நிலை.
ஆயமுற்காவலன் - குபேரன்.
ஆயம்-ஆதாயம், கடமை, சுங்கம், சூதாடுகருவி, சூது, தாயம், தாய், திரள், தோழி, காணி, நீளம், மகளிர்கூட்டம், மல்லரி, வரவு, வழக்கம்.

ஆயர் - இடையர்.
ஆயர்குலம் - இடைச்சாதி.
ஆயர்பாடி - இடையரூர், கிருஷ்ணன் ஒளிக்கப்பட்டு வளர்ந்தவூர்.
ஆயர்பிரான் - கிருட்டினன்.
ஆயல்-ஆராயல், களைந்துவிடல், நியானித்தல், தெரிதல், தெளிதல், அண்மை, பறித்தல்.
ஆயனம்-ஆண்டிற்பாதி. வருடம்.
ஆயனர் - திருக்கோவலூரிற் கோயில்கொண்ட விட்டுணு.
ஆயன் - இடையன், கிருஷ்ணன்.
ஆயாசம்-இளைப்பு, சோர்வு, துக்கம், தைரியக்கேடு, மனவருத்தம், முயற்சி.
ஆயாசவர்த்தவாதம் - ஒருவகை வாதரோகம். அது பிரமாணந்தப்பிப் புசிக்கும் பித்தகபவஸ்துவினுற் பிறந்து பித்தத்தோடுகூடிச் சத்ததாதுக்களிலுஞ் சேர்ந்து ஆயாசத்தைப் பிறப்பித்து வேதனைசெய்யும். அதனுற் சர்வாங்கநோவுங் குற்றலும் பிரமையுமுண்டாகும்.
ஆயாதி - உத்தானபாதி.
ஆயாமம் - அகலம், நீளம்.
ஆயாள் - தாயைப்பெற்றவள், தாய், வளர்க்குந் தாய்.
ஆயானம் - சுபாவகுணம்.
ஆயி - தாய்.
ஆயிரக்காலி-அட்டைப்பம், மரவட்டை.
ஆயிரங்கண்ணன் - இந்திரன்.
ஆயிரங்கதிரோன் - ஆதித்தன்.
ஆயிரங்காய்ச்சி - அதிகமாய்க்காய்க்கிறதென்னமரம் அல்லது பலாமரம்.
ஆயிரங்கிரணன் } சூரியன்.
ஆயிரஞ்சோதி
ஆயிரஞ்சோதியுள்ளோன்
ஆயிரநாமன் - சிவன், திருமால்.
ஆயிரம் - பத்துநூறு, சகஸ்ரம்.
ஆயிலி - தாயற்றவன், தாயற்றவள்.
ஆயிலியம் - ஒருநாள்.
ஆயிலியன் - ஆயிலிய நட்சத்திரத்திற் பிறந்தவன்.
ஆயில் - ஆயிலியநாள், ஒருமரம்.
ஆயிழை - அரிவாணுனி, பெண், விசேஷ வாபரணம்.
ஆயினே - கொடுவாட்டலை.
ஆயினி - ஆசினி.

ஆயினிமேனி - பச்சைக்கல்.
ஆயினும் - ஆனாலும்.
ஆயின் - ஆனால்.
ஆயின்மேனி - ஆயினிமேனி.
ஆயு-புரூரவன்மகன், இவன் நகுஷன். க்ஷத்திரவிருத்தன், இரஜி, இரம்பன், அநேநசெனன் என ஐந்து புத்திரரைப்பெற்றவன், வயது.
ஆயுகம் - வயது.
ஆயுகாரன் - சனி.
ஆயுசு - வயது.
ஆயுசுவிருத்தி-உலோகமணல், வயது விருத்தி.
ஆயுஷியம் - வாழ்நாள்.
ஆயுஷ்மந்தன் - பிரகலாதன் புத்திரருளொருவன்.
ஆயுஷ்மான் - தீர்க்காயுசுடையவன்.
ஆயுஷ்யம்-அருகன்வென்றவினை நான்கனுளொன்று.
ஆயுட்டானம் ஆயுத்தானம் பிறந்தகாலத்தில் சந்திரனிருந்த இடத்திற் கெட்டாமிடம்.
ஆயுண்மான்-நித்தியயோகத்தொன்று.
ஆயுதபரிட்சை - படைக்கலப்பயிற்சி.
ஆயுதபாணி-படைக்கலந்தரித்தவன்.
ஆயுதபூசை - படைக்கலப்பூசை. இது புரட்டாசிமாதம் சுக்கிலபட்சம் பிரதமை முதற்கொண்டு இலட்சுமி, சரச்சுவதி, துர்க்கையைக் குறித்து ஒவ்வொன்றுக்கு மூன்று நாளாக ஒன்பதுநாள் ஆயுதங்கள், படைக்கலங்கள் புத்தகங்கள்வைத்துச் செய்யும் பூசை. இப்போது சாதாரணமாய்க் கடைசிநாளாகிய நவமியில் கொண்டாடப்படுகிறது.
ஆயுதம் - உபகரணம், கருவி, கூத்துப்பயிலிடம், படைக்கலப்பொது.
ஆயுதாகரம் - ஆயுதசாலை.
ஆயுதிகன் } ஆயுதங்களைக்கொண்டுபி
ஆயுதீகன் } ழைப்பவன்.
ஆயுதீயன் }
ஆயுதேந்திரம் - விஷ்ணுசக்கரம்.
ஆயுத்தானம்-ஆயுளினதானம். அது பிறந்தகாலத்திற் சந்திரனிருந்த இடத்திற் கெட்டாமிடம்.
ஆயும்யாழ்முனி - நாரதர்.
ஆயுரு - பரிகாரவித்தை.
ஆயுருவேதம் - ஆயுள்வேதம்.
ஆயுருவேதர் } வைத்தியர்.
ஆயுருவேதியர் }
ஆயுர்வர்த்தனை - ஆயுசுவிருத்தி.
ஆயுர்வேதம் - ஆயுள்வேதம்.
ஆயுர்வேதர் - வைத்தியர்.
ஆயுர்வேதாக்கினி-மருந்து செய்வதில் உபயோகமாகுமக்கினி.
ஆயுர்வேதாக்கினித்திரயம் - மருந்து செய்வதிலுபயோகமாகுமூவகை அக்கினிகள். அவை தமலாக்கினி, காடாக்கினி, தீபாக்கினி என்பன.
ஆயுர்வேதியர் - வைத்தியர்.
ஆயுவின்மை-ஈச்சுரனெண்குணத்தொன்று. அது செனனமரணமின்மை.
ஆயுள் - ஆயுசு, வைத்தியன்.
ஆயுள்வேதம் - வைத்தியசாஸ்திரம்.
ஆயுள்வேதர் } வைத்தியர்.
ஆயுள்வேதியர் }
ஆயே - ஒரு வியப்புச்சொல்.
ஆயோகம் - கரை, பூசனை.
ஆயோசனம் - படித்தல், முயற்சி.
ஆயோதம் - சேனை, போர்.
ஆயோதனப்பிரவீணன்-தவிசராச குலோத்துங்கனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன். இவன் காலம் துவாபரயுகத்தந்திரம்.
ஆயோதனம் - ஆயோதம்.
ஆய்-ஆயெனேவல், இடையர்க் குரியது. ஏவல்விகுதி (உ-ம்) கேளாய், ஒருவள்ளல். இவன் தனக்குப் பாம்பு கொடுத்த நிலக்கலிங்கத்தை ஆலின்கீழிருந்த இறைவனுக்குக் கொடுத்தோன், தாய், நுட்பம், முன்னிலை யொருமை முற்றுவினைவிகுதி (உ-ம்) சென்றாய், வருத்தம், வினையுருபு (உ-ம்) நின்றாய்.
ஆய்க்குழல்-இடையருதுங்குழல். அது கொன்றையங் குழல், முல்லையங்குழல், வேய்ங்குழல்.
ஆய்ச்சல் - ஆச்சல், பறிப்பு, முறை.
ஆயச்சாதி - இடைச்சாதி.
ஆய்ச்சி - இடைச்சி, தாய்.
ஆய்ச்சியர் - இடைச்சியர்.
ஆய்தக்குறுக்கம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்குமாய்தம்.

ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம் } ஆய்தத்தொடர்க்குற்றுகரம் } ஆய்த மொழிக்கீற்றயலாக நிற்க ஈற்றில் வரும் வல்லெழுத்துக்க ளாறனு ளொன்றன்மேலூர்ந்து தன் மாத்திரையிற் குறைந்தொலிக்கு முகரம்.

ஆயுதப்புள்ளி - புள்ளிவடிவாகிய ஆய்தம்.

ஆய்தம்-அஃகேனம்,சிறுமை,நண்மை

ஆய்தல்-ஆராய்தல், களைந்துவிடல், தியானித்தல், தெரிதல், தேர்தல், நுண்மை, பறித்தல்.

ஆய்த்தல் - ஆய்ச்சுப்பார்த்தல்.

ஆய்ந்தோர் - அறிவுடையோர், பார்ப்பார், புலவர்.

ஆய்பு-செய்யென்னும் வாய்ப்பாட்டான் வந்த வாய்ந்தெ ன்று யிறந்தகால வினையெச்சம்.

ஆய்ப்பாடி - ஆயர்பாடி, இடையரூர்.

ஆய்ப்பு - அசைப்பு, வீச்சு.

ஆய்மகள்-இடைச்சாதியிற் பிறந்தவள்.

ஆய்மகன்-இடைச்சாதியிற்பிறந்தவன்.

ஆய்மதி - விசேஷ புத்தி.

ஆய்மயில் - அழகான மயில்.

ஆய்மலர் - தாமரை, தெரிந்தெடுத்த புஷ்பம்.

ஆய்வு-அகலம், அழகு, ஆராய்தல், நுட்பம், வருத்தம்.

ஆரகட்டம்-ஆழமாகிய கிணறு.

ஆரகம்-ஆரம், இரத்தம், ஈயுமெண்.

ஆரகுவதம் - கொன்றை.

ஆரகூடம் } ஆரகூலம் } பித்தளை.

ஆரகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

ஆரகோம் - வாகுவலயம்.

ஆரகோரம் - கொன்றை.

ஆரக்கம் - அகில், சந்தனம்.

ஆரக்குவதம் - கொன்றைமரம்.

ஆரசகம் - அகில்.

ஆரஞர் - அருந்துயர், துக்கம்.

ஆரஞ்சோதி - அருந்ததி.

ஆரட்சகன்-இடையன், சேகண்டக்காவற்காரன்.

ஆரணம் - மங்கலச்சொல்லி னொன்று, வேதத்தின் ஞானபாகை, வேதம்.

ஆரணவாணர் - பிராமணர்.

ஆரணன்-சிவன், பார்ப்பான், பிரமன், விட்டுணு.

ஆரணி - காளி, சுழல்காற்று, பார்வதி.

ஆரணியம் } ஆரண்ணியம் } காடு, பற்றை, சிவந்திருத்தல்.

ஆரதக்கறி - மரக்கறிபதார்த்தம்.

ஆரதம் - சுத்தபோசனநிலை.

ஆரதி - ஆலாத்தி, சோடச வுபசாரத் தொன்று, விட்டுவிடுதல்.

ஆரத்தியம் - ஒளி.

ஆரத்திரகம் } ஆரத்திராசகம் } இஞ்சி.

ஆரநாலகம் } ஆரநாலரம் } காடி.

ஆரநாளம் - காடிச்சலம்.

ஆரபடி - விலக்குறுப்பு பதினான்கனுள் ஒன்றாகிய விருத்திவகைநான்கனுள் ஒன்று. அது பொருள் பொருளாக வீராகிய மானிடர் தலைவராக வருவது.

ஆரப்தம் - தொடங்கப்பட்டது.

ஆரமாலையன் - ஆத்திமாலை யணிந்த சோழன்.

ஆரம்-அஞ்சனபாஷாணம், ஆட்டதள், ஆத்திமரம், ஆபரணம், ஒருபாணம், கடம்பு, காளிதம், கீச்சுக்கிட்டம், கீழ்வாயிலக்கம், கோடகசாலை, கோணம், சந்தனமரம், சந்தனம், சனி, செவ்வாய்,நந்தனவனம்,நுனி,படப்பொறி, பட்சிகளுடைய கனவரி,பதக்கம், பித்தளை, பூமாலை, மாதாணிவடம், முத்து முத்துமாலை.

ஆரம்பசூரன் - தொடக்கத்தில் வீரனாயிருப்போன், வீம்பு பேசுவோன்.

ஆரம்பம்-ஒலி, கொலை, துவக்கம், பாயிரம், பெருமை, பேரொலி, முயற்சி.

ஆரம்பித்தல் - ஒலித்தல், தொடங்கல்.

ஆரருள் - மிகுவருள்.

ஆரலம் - பகை.

ஆரல் - அக்கினி, ஒரு பூடு, ஒரு மீன், கார்த்திகைநாள், செவ்வாய், நிறைதல், நெருப்பு, பித்தம், மதில்.

ஆரவடம் - முத்துவடம்.

ஆரவம் - ஒலி.

ஆரவலர் - சாட்டாத்திப்பூ.

ஆரவாரம்-ஆடம்பரம், ஒலி, கிளர்ச்சி, கொண்டாட்டம், பேரொலி.

ஆரவாரித்தல் - மிகவொலித்தல்.
ஆராகரியம் } அரசு.
ஆராகவரியம் }
ஆராட்டல் - தாலாட்டல்.
ஆராட்டு - தாலாட்டு.
ஆராட்டுதல் - தாலாட்டல்.
ஆராதனம் - சமைத்தல், சம்பாத்தியம், நிறைவேற்றம், வணங்கல்.
ஆராதனித்தல் - நிறைவேற்றல்.
ஆராதனை - பூசனை, வணக்கம்.
ஆராதி - சத்துரு.
ஆராதித்தல் - பூசித்தல்.
ஆராதியம் - சமீபம்.
ஆராதூரி - அழிப்புக்காரன், அழிவு, ஊதாரிக்குணம், துட்டத்தனம்.
ஆராதூரித்தனம் - அழிக்கிறகுணம்.
ஆராத்தியர் - ஆராத்திரியர்.
ஆராத்திரவியம் - அரசர்பொக்கசம்.
ஆராத்திரிகம் - ஆலாத்திவிளக்கு.
ஆராத்திரியர் - பார்ப்பார், வீரசைவர்.
ஆராப்பத்தியம்-அரும்பத்தியம் அற்பம்.
ஆராமம் - சோலை, பூந்தோட்டம்.
ஆராய்ச்சி-ஆராய்வு, விசாரிப்புக்காரன்.
ஆராய்ச்சிமணி - இராசவாசலிலே கட்டிய அசையாமணி.
ஆராய்தல் - தெரிதல், தேடல்.
ஆராய்வு - நண்ணறிவு, விசாரிப்பு.
ஆராலிகன் - பாகஞ்செய்வோன், பாக
ஆரால் - ஆரால்மீன். [தாரி.
ஆராவமுது - உண்ணுந்தோறும் இன்னும் உண்ணவேண்டும் என்னும் விருப்பத்தைக்கொடுக்கும் அமுது.
ஆரரவம் - ஆரவம், ஒலி.
ஆரி - சோழன், துர்க்கை, பார்ப்பனி. பார்வதி-மாலை, மேன்மை.
ஆரிஷம் } ஆகமம், இருஷிகள் வாக்கு
ஆரிடம் } ஒன்றிரண்டுபசுமெருதும் வாங்கிக் கன்னியைத் தீ முன்னர்க் கொடுக்குமணம்நூல்,பூசை,வழுக்கு
ஆரிடர் - சமணர், முனிவர். [கிலம்.
ஆரிதம் - தருமநூல்.
ஆரிதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
ஆரியகம் - சிறுகுறிஞ்சா.
ஆரியக்கூத்து - பாவைக்கூத்து.
ஆரியபடன் } சாலிவாகன சகாப்த
ஆரியபட்டன் } மிருநூற்றின்மேலிருந்த ஒரு மகாசோதிடர். இவர்செய்த சோதிட சித்தாந்தத்திற் பூமிகோளவடிவினதென்றும்பூமிதன்னாராசத்திலே தினந்தோறுஞ் சுழன்றுவருகின்றதென்றுங் கூறப்பட்டுள்ளது.
ஆரியபுத்திரன்-கணவன்'குருபுத்திரன்
ஆரியப்பாவை - சித்திரப்பாவை.
ஆரியப்பூமாலை-அடங்காப்பெண், காத்தவராயன் மனைவி.
ஆரியமொழி - வடமொழி.
ஆரியம்-அழகு, இமயமலைக்கும் பொதியமலைக்கு நடுத்தேசம், செல்வம், பண்டம், வடமொழி.
ஆரியரூபன் - எத்தன்.
ஆரியர் - ஆசிரியர், ஆரியதேசத்தவர், குருமார், பார்ப்பாரிலோர் பேதத்தோர், புலவர், மிலேச்சர், வைத்தியர்.
ஆரியவராடி - ஒருபெண்.
ஆரியவாசியம் - ஓமம்.
ஆரியவேளா கொல்லி-கொல்லித்திறத்தினொன்று.
ஆரியன்-அதிவிடயம், அறிவுடையோன், ஐயன், குரு, சூரியன், தொம்பன், புலவன், மிலேச்சன், வைத்தி
ஆரியாங்கனை - ஓரியக்கி. [யன்.
ஆரியாவர்த்தம் - இமயத்திற்கும் விந்தியத்திற்கு மத்தியிலுள்ள ஒரு தேசம் அது ஆரியர்களுடையது. பூர்வத்தித் பரதகண்ட ராஜாக்களியாவரும் இதிலேயே வசித்தார்கள்.
ஆரியை - உமாதேவி, காளி, துர்க்கை.
ஆரியைதநயன் - குமரன், வயிரவன், விநாயகன், வீரபத்திரன்.
ஆரீசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
ஆரீதர் - வடமொழி வைத்தியங்களிற் கைதேர்ந்த ஒரு பண்டிதர்.
ஆரீரம் - சிற்றீரம்.
ஆரு - குடம், நண்டு, பன்றி.
ஆருகதம்-அருகசமயம், நாவன்மரம்.
ஆருகதன் - அருகசமயத்தவன், ஞானாவரணீய முதலிய பதினெண்குணத்தைபுமரசிக முதலிய ஆறு குணத்தையும் விடுத்து முன்னைக் கன்மம் புசித்துத் தொலைந்தவிடமே வீட்டின்பமென்பவன்.

ஆருணி - அயோதன், உபநிடத முப்பத்திரண்டினொன்று.
ஆருதல் - ஆர்தல்.
ஆருத்திரை - திருவாதிரை.
ஆருபதம் - பித்தளை.
ஆருப்பியம் - வங்கமணல்.
ஆருயிர் - அரியவுயிர்.
ஆருவம் - நீர்.
ஆருடம் - ஏறுதல், முன்னறிக்கை.
ஆருடன்-ஞானத்திற்தேறினவன்,பஞ்சாதிகாரிகளுக்கு ளொருவன்.
ஆருபம்-அருமையானவை, நீங்காமை.
ஆருரையாண்டவன்-வீதிவிடங்கப் பெருமான், வன்மீகநாதசுவாமி.
ஆரூர் - திருவாரூர்.
ஆரூர்மன்னன் - வன்மீகநாதன்.
ஆரே - ஆத்திமரம்.
ஆரேவதம் - சரக்கொன்றை.
ஆரை - ஒரு பூடு, நீராரை, புற்பாய், மதில்.
ஆரைக்காலி - தாமழைக்கோரை.
ஆரைக்கீரை - ஒருவகையிலைக்கறி.
ஆரைப்பற்றி - உடும்பு.
ஆரோகணம் - எழும்புதல், ஏணி, ஏறுதல், கற்படி, தாழ்வாரம்.
ஆரோகணித்தல்-எழும்புதல், ஏறுதல்.
ஆரோகம் - அளவு, ஏறுதல், சகனம், நீளம், பாரம், மாதரிடை.
ஆரோக்கியசிந்தாமணி - ஒரு வடமொழி, வைத்தியநூல்.
ஆரோக்கியஸ்நானம்-நோய் தீர்ந்தபின்பு செய்யப்படும் ஸ்நானம்.
ஆரோக்கியம் - சுகம், சௌக்கியம்.
ஆரோபணம்-ஏறுதல், உயர்த்தல், ஒப்புவித்தல், நாட்டுதல், வில்வளைத்தல்.
ஆரோபம் - ஏறுதல், ஒன்றை வேறொன்றாயறிதல், சுட்டுதல், வைத்தல்.
ஆரோபிதம்-உண்டாக்கினது, நிறுத்தினது, வைத்தது.
ஆரோபித்தல் - தாபித்தல்.
ஆர்-அருமை, ஆத்தி, ஆரென்னேவல், உயர்திணைப் பன்மைப் படர்க்கைவிகுதி, ஐந்திருவாணி, கூர், கொன்றைசோதி, தேர்ப்பண்டியகவாய், நிறைவு, நுண்மை, பாகு, பூமி, யாரென்வினா, வண்டியிலை.
ஆர்கதம் - ஆருகதம்.
ஆர்கதன் - அருக சமயத்தான்.
ஆர்கதி - திப்பிலி.
ஆர்கலி - கடல், மழை, வெள்ளம்.
ஆர்கலிவாரணம் - வெள்ளையானை.
ஆர்கோதம் - கொன்றை.
ஆர்க்கங்கோடன்-கொல்லன்கோவை.
ஆர்க்கண்ணியன் - ஆரமாலையன்.
ஆர்க்கம் - இரத்தம், பெறுபேறு.
ஆர்க்கு - எருக்கு, ஒருமீன்.
ஆர்க்குவதம் - கொன்றைமரம்.
ஆர்க்கை - கட்டு, அரும்பு, வரிச்சு.
ஆர்ச்சவம் - உண்மை, நேர்மை.
ஆர்ச்சனம் } ஆர்ச்சனை } சம்பாத்தியம், பாதுகாத்தல், வழியுபசாரம், விருந்தோம்பல்.
ஆர்ச்சிதக்காரன் - சம்பாத்தியக்காரன்
ஆர்ச்சிதம் - ஆர்ச்சனம்.
ஆர்ச்சித்தல் - சம்பாதித்தல்.
ஆர்தல் - அனுபவித்தல், இணைத்தல், உடைத்தாயிருக்குதல், குடித்தல், தங்குதல், நிறைதல், புசித்தல், பொருந்தல்.
ஆர்துபம் - ஆாத்தை.
ஆர்த்தநாதம் - புலம்பல்.
ஆர்த்தபம் - மகளிர்சூதகம்.
ஆர்த்தர்-எளியவர், அபகுறுவோர், பெரியோர், யோகிகள்.
ஆர்த்தல் - அணிதல், ஊட்டல், ஒளித்தல், ஒளிவீசி மின்னுதல், பொருதல், பொருத்தல்.
ஆர்த்தவம் - புட்பம்.
ஆர்த்தார்க்கோன் - ஆரமாலையன்.
ஆர்த்தி - அனுபவம், ஒப்பில் வழியாற்பொருள்செய்பவை, கொடுத்து அன்பம் பஞ்சசிவசத்திகளி னொன்று, மகிழ்ச்சி, விருப்பம், வின்னுதி.
ஆர்த்திகை - துன்பம்.
ஆர்த்தியம் - காட்டுத்தேன்.
ஆர்த்திரகம் } ஆர்த்திரசாகம் } இஞ்சி.
ஆர்த்திரை - ஆருத்திரை.
ஆர்த்துதல் - நிறைத்தல், நிறைவேற்றுதல், புசிப்பித்தல்.
ஆர்த்துவம் - புசர்விக்கும்.
ஆர்பதம் - நீழல், வண்டு.
ஆர்ப்பதம் - ;சாரம், பச்செனவு.
ஆர்ப்பரவம் - இரைச்சல்.

ஆர்ப்பரித்தல்-ஆரம்பித்தல், ஆரவாரித்தல், கர்ச்சித்தல்.
ஆர்ப்பரிப்பு - ஆரம்பம்.
ஆர்ப்பு - கட்டு, சிரிப்பு, நண்ணியன, பேரொலி, போர், முண் முதலிய முதிர்ந்தகள், யாழ்க்குற்றம் நான்கினொன்று. அது மாத்திரையிறந்த சுருதி ஒங்கியிசைத்தல்.
ஆர்மதி - கர்க்கடகவிராசி, நண்டு.
ஆர்மை - கூர்மை, மதில்.
ஆர்யர் - மதிக்கத்தக்கவர்.
ஆர்வக்கோழி - கோழிக்காரகமூன்றனுளொன்று. அது கொடுப்பானுங் கொள்வானும் ஆர்வத்தோடு கொடுத்தலுங் கொள்ளுதலுமாம்.
ஆர்வத்தன் - ஆசையுடையவன்.
ஆர்வமொழி - ஓரலங்காரம்.
ஆர்வம் - அன்பு, ஆசை, ஒலி, கடைப்படுதான மேழினொன்று, அஃது அன்பு முதலியவற்ற னளித்தல், கருதிய பொருள்கள்மேற் றோன்றின பற்றுள்ளம், சீலை, நரகம்.
ஆர்வலன்-அன்புடையோன், நாயகன், மித்திரன்.
ஆர்வு-ஆராய்தல், உண்டல், குடித்தல், நிறைவு.
ஆர்வை - கோரைப்பாய்.
ஆலகண்டன் - சிவன், வாசுகி.
ஆலசம் - சோம்பு, நெல்லி.
ஆலகாலம் - நஞ்சு, நிலவாகை, விடம்.
ஆலகிரீடை - அலரி.
ஆலக்கச்சி - அரிதாரம்.
ஆலக்கட்டி - அருசு.
ஆலங்காடு - ஒரு சிவத்தலம்.
ஆலங்குடிவங்கனார் - கடைச்சங்கப் புலவர்களு ளொருவர்.
ஆலசியம் - சோம்பு, தாமதம்.
ஆலத்தி - அட்டமங்கலத்தொன்று, நீராஞ்சனம்.
ஆலந்தரித்தவீசுவரர் - திருப்புள்ளமங்கையில் திருக்கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
ஆலமர்கடவுள் } சிவன், தக்ஷிணாமூர்த்தி.
ஆலமர்ந்தமூர்த்தி }
ஆலமுடையோன் - அரிசி.
ஆலமுண்டோன் - சிவன்.
ஆலம்-அய்புக்கூடு, ஈயம், ஒருமரம், கலப்பை, நஞ்சு, நீர், பாம்பினஞ்சு, புன்கு மலர்ந்தபூ, மழு, மழை, மஞ்சளுஞ் சுண்ணம்பு கலந்தநீர், மாவிலங்கு.
ஆலம்பம் - ஆதாரம், தூங்கல், நிறுத்திட்டவரி, பற்றுக்கோடு, புகலிடம்.
ஆலம்பன் - ஆதாரமானவன், புகலிடமானவன்.
ஆலயம் - தங்குமிடம், தேவர்கோயில், யானைக்கூடம், வீடு.
ஆலலம் - கூறை.
ஆலல் - ஆடல், ஒலித்தல், சேருதல், மயிற்குரல்.
ஆலவட்டம் காற்செய்வட்டம், விசிறி.
ஆலவணியம் - அவலட்சணம்.
ஆலவாட்டு-வெய்யலில் வாட்டுகை.
ஆலவாய் - மதுரைநகர், பாம்பு.
ஆலவாய்ச்சுந்தரன் } மதுரையிற்கோயில்கொண்ட பரமசிவக்கடவுள்.
ஆலவாய்நாதன் }
ஆலவாய்நாயகி - மதுரைமீனாட்சியம்மை.
ஆலவாலம் - பாத்தி, வயல்.
ஆலவிருக்கை } ஆதொண்டை, ஆலமரம், பெரியமரம்.
ஆலவிருட்சம் }
ஆலனந்தலன் - திருமால்.
ஆலா - ஒருபட்சி.
ஆலாங்கட்டி - மழைக்கட்டி.
ஆலாட்டு - ஆலவாட்டு.
ஆலாதம் - நெருப்புக்கொள்ளி.
ஆலாத்தி - ஆலத்தி.
ஆலாத்து-அம்மாறு, ஒரு புள், கப்பல் வௌவாற் கொடிமுடியுங்கயிறு.
ஆலாபம் } அலப்பு, சம்பாஷணை.
ஆலாபனம் }
ஆலாபித்தல் - அலப்புதல், சம்பாஷித்தல்.
ஆலாபினி - ஒருவகைவீணை.
ஆலாபு - சுரை.
ஆலாபிப்பு-அலப்புகை, சம்பாஷிக்கை.
ஆலாலசுந்தரர் - ஆதிகாலத்திற் சிவன் தமது திருவுருவத்தைக் கண்ணாடியிற் பார்த்தருளலும் அத்திருப்பிரதிவிம்பம் அதி சுந்தரவடிவுகொண்டொருமூர்த்தியாயிற்று. அம்மூர்த்தியே இவர், இவர் பின்னர் ஒரு காரணத்தாற் சுந்தரமூர்த்தி நாயனாராக அவதாரஞ் செய்தவர்.
ஆலாலம் - விடம், வௌவால்.

ஆலாவர்த்ததம் - ஆலவட்டம்.
ஆலானம் - கட்டுகை, கயிறு, யானைகட்டுங்கயிறு, யானைகட்டுந்தறி.
ஆலி-அமுதம், ஆலாங்கட்டி, களியென்னேவல், கள், காற்று, மழை, மழைத்துளி, தேள், தேனீ, தோழி, வயிசம், வரம்பு, வரி, விடமுள்ளன.
ஆலிங்கனம் - தழுவல், புணர்ச்சி.
ஆலிங்கியம் - மார்பில் வைத்துக்கொட்டும் வாத்தியம்.
ஆலிஞ்சரம் - நீர்ச்சாடி.
ஆலித்தல் - களித்தல், நூறல்.
ஆலிந்தகி - அணில்.
ஆலிந்தம் - திண்ணை, முற்றம்.
ஆலியகம் - சிறுகுறிஞ்சா.
ஆலீடம் - வலக்கால் மண்டலித்திடக்கால் முந்துறநிலை.
ஆலீனகம் - அத்தகாகம்.
ஆலீனம் - புதையல்.
ஆலு - நீர்க்குடம்.
ஆலுதல் - ஆலல், தொங்குதல்.
ஆலூகம் - வில்வம்.
ஆலேகனம் - எழுதுகை.
ஆலேகனி - எழுத்தாணி, வரைகோல்.
ஆலேபம் } ஆலேபனம் } ஒரு சுந்தத்தயிலம்.
ஆலை-கரும்பாலை, கரும்பு, கள், கிட்டி.
ஆலைபாய்தல் - மனச்சுழற்சி.
ஆலையம் - தங்குமிடம், தேவர்கோயில், நகரம், பிராமணவீடு, யானைக்கூடம், வீடு.
ஆலைவாய் - மதுரை.
ஆலோகம் } ஆலோகனம் } பார்வை பிரபை, முகமன்.
ஆலோகன் - தெளிந்தபுத்திமான்.
ஆலோசகபித்தம் - ஒருவகைப் பித்தம். அது கண்களில் வாசம் பண்ணிக்கொண்டு எல்லாப் பொருள்களையும் நன்குறத் தெரிவிக்கும்.
ஆலோசகம் - அறிவிப்பது.
ஆலோசனை - காட்சி, சிந்திப்பு, புத்தி, யோசனை.
ஆலோசித்தல்-சிந்தித்தல், யோசித்தல்.
ஆலோடனம் - கலக்குதல், கலப்பு.
ஆலோலம் - கலக்குதல், கிளிரோலி, புள்ளோச்சு மொலி.
ஆலோலிதமுகம் - ஆசையான் மலர்ந்த முகமா யொருவனை அழைத்தல்.
ஆலோலிதம் - சந்தோஷம், விருப்பம்.
ஆலோன் - சந்திரன்.
ஆல் - அசைச்சொல், ஆமெனல், ஆலமரம், ஆலென்னேவல், கார்த்திகைமீன், தவர்பத்திலொன்று, மூன்றனுருபு.
ஆல்வாடல் } ஆல்வாடுதல் } சிறகசைத்தல்.
ஆல்வாட்டு - உலர்ச்சி.
ஆல்வாட்டுதல் - சிறிதுகாயச்செய்தல்.
ஆல்வு - அகலமானது.
ஆவகம்-சத்தவாயுவிலொன்று, சமக்குமது.
ஆவகை - யாறு.
ஆவசதம் - ஓமாக்கினி வளர்க்குமிடம், வீடு.
ஆவசம் - சத்தமுகிலிலொன்று.
ஆவசிபகம் - அவசரம்.
ஆவஞ்சி-ஒருவகைத்தோற்கருவி, இது ஆவினுடைய வஞ்சித்தோலைப்போர்த்தலால் இப்பெயர் பெற்றது.
ஆவடுதுறை - திருவாவடுதுறை.
ஆவட்டங்கொட்டல் - ஆவாய்க் கத்துதல்.
ஆவட்டே சுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டு ளொன்று.
ஆவட்டை - ஒருபூண்டு.
ஆவணம் - அடையாளம், உரிமை, உரிமைப்பத்திரம், கடை, கடைவீதி, கரை, தெரு, தேர்மொட்டுப் பொருந்தியபீடம், புகர்பூசம்.
ஆவணி - அவிட்டநாள், ஐந்தாம்மாசம்.
ஆவணியம் - கடை, கடைவீதி.
ஆவணியவிட்டம் - ஆவணிமாதத்திலே வரும் அவிட்ட நக்ஷத்திரம்.
ஆவணியம் - கடைவீதி.
ஆவத்தம் - ஆபத்துக்காலத்துக் கென்றுவைத்த திரவியம், சத்தமுகிலில் ஒன்று.
ஆவதம் - ஆவர்த்தம்.
ஆவது-ஆகுவது, விகற்பப்பொருளைத் தருமோரிடைச்சொல்.
ஆவத்து - ஆபத்து, இக்கட்டு, உபத்திரவம்.
ஆவத்துவம் - நீர்ச்சுழி.
ஆவகாழி - அம்புக்கூடு.
ஆவபகம் - தோணி, தொம்பைக்கூடு.
ஆவம்-அம்புக்கூடு, குங்குமமரம், நாணி.

ஆவரசம் - திரைச்சீலை, மூடி.
ஆவரணசத்தி - பசு பதி பாசம் மூன்றையும் பேதந்தெரியாது மறைக்கும் ஒரு சத்தி.
ஆவரணம் - ஆணவமலம், ஈட்டி, கேடகம், கோட்டை, சீலை, பரிசை, மதில், மறைவு, மூடி, மேற்புடவை, [வேலி.
ஆவரணித்தல் - மறைத்தல்.
ஆவரணியம் - மறைந்திருக்கை.
ஆவரி - அம்பு.
ஆவரை - ஆவரை, நிலவாகைப்பூண்டு.
ஆவர்த்தகம் - சுழலுதல், சுழற்காற்று பிடருரோமம், மயிர்முடி, மனக்கலக்கம்.
ஆவர்த்தம் - சத்தமேகத்தொன்று. அஃது நீரைப்பொழிவது, சுழல்காற்று சுழி, மயிர்முடி.
ஆவர்த்தனம் - உருக்குதல், கடைதல், கலக்குதல், சுழற்றுதல், பழக்கம்.
ஆவர்த்தேசுவரம் - சிவத்தலக்காயிரத்தெட்டனுளொன்று.
ஆவலங்கொட்டல் - வாயாலார்த்தாடல்.
ஆவலம் - தொல்லை, வாயாலார்த்தல்.
ஆவலர் - காதலர், நாயகர்.
ஆவலாதி - அங்கலாய்ப்பு, ஆசை, தூற்றுதல்.
ஆவலி - இரேகை, ஒழுங்கு, தொடர்ச்சி, வமிசம்.
ஆவலித்தல் - ஆசைப்படுதல், கொட்டாவிடுதல், புலம்பல்.
ஆவலிப்பு, ஆவல் - ஆசை, பேராசை, வலைவு
ஆவல் - சிந்தில்.
ஆவளி - இரேகை, ஒழுங்கு.
ஆவளித்தல் - ஆவலித்தல்.
ஆவளிப்பு - ஆசை, வலைவு.
ஆவறி - அங்கலாய்ப்பு, அவா.
ஆவா - அதிசயக்குறிப்பு, இரக்கக்குறிப்பு.
ஆவாகனமுத்திரை - அத்திராதி முத்திரை இருபத்தாறனுளொன்று.
ஆவாகனம் - அக்கினிக்குப் பலி செலுத்தல், அழைத்தல், தாபனம்.
ஆவாகித்தல் - தாபித்தல்.
ஆவாகை - நிலவாகைப்பூண்டு.
ஆவாசம் - புகலிடம், வசிக்குமிடம், மருதநிலத்தூர், வீடு.

ஆவாபகம், ஆவாபம் - கைவளை, கூத்தினோர்விகற்பம், பாத்தி, விரைதானியம்.
ஆவாபனம் - நெய்வோர்தறி, வடிக்கயிறு
ஆவாயகம் - விலையுடைப்பொருள்.
ஆவாய்க்கத்துதல் - இல்லையென்று சொல்லித்திரிதல்.
ஆவாரை - ஆவரை, நிலவாகை.
ஆவாலம் - பாத்தி, வெளவால்.
ஆவி - அருபி, ஆன்மா, உயிரெழுத்து, உயிர், உயிர்ப்பு, குளம், தெவதிரீத்துவத்தினொன்று, நீராவி, பிட்டு, புகை, புகையிலை, வாசனை, வெப்பம்.
ஆவிசிவாளம் - யாவச்சிவம்.
ஆவிடை - சத்திரூபம்.
ஆவிடையார் - ஆவுடையார்.
ஆவிதம் - துறப்பணம், திருகூசி.
ஆவித்தல் - கொட்டாவிவிடுதல், புகைத்தல், பெருமூச்செறிதல்.
ஆவிபதம் - புறமுட்டை, பேராமுட்டி
ஆவிபத்தம் - பேராமுட்டி.
ஆவிபத்திரம் - புகையிலை.
ஆவிபறிதல் - ஆவியெழும்புதல், சாதல்.
ஆவிபோதல் - சாதல்.
ஆவிப்பதங்கம் - வைப்புச்சரக்கு.
ஆவிப்பு - கொட்டாவி.
ஆவியம் - உயிர், சரீரபலம்.
ஆவியர் - வேடர், வேளாளர்.
ஆவியேகல் - இறத்தல்.
ஆவியேற்றம் - பெருமூச்சு.
ஆவிரங்காய் - ஆவாரைக்காய்.
ஆவிரம் - இடையரூர்.
ஆவிரம்பு - ஆவாரம்பூ.
ஆவிருஷ்டி, ஆவிருட்டி - மழை.
ஆவிருதம் - மறைக்கப்பட்டது, வஸ்திர முதலியவற்றாற்சுற்றப்பட்டதேகம்.
ஆவிருதவாதம் - ஒருவகை வாதநோய்.
ஆவிருதி - ஆணவமலம், கிரமம், சடங்கு, மறைப்பு, விதம்.
ஆவிருத்தி - சுற்றுதல், மாறிப்பிறத்தல், முழுவட்டம், வழக்கம்.
ஆவிரை - ஆவாரை, ஒருமரம்.
ஆவிலம் - அழுங்கு, கலங்கனீர்.
ஆவிலன் - அழுக்கன், கருமை, நிறத்தோன்.

ஆவிவாங்குதல் - உயிர்வாங்குதல் சுவாசத்தை யுள்வாங்குதல், வருத்துதல்.
ஆவிவிடல் - உயிர்விடல்.
ஆவினன்குடி - சுப்பிரமணிய மூர்த்திக்குரிய ஆறுதலங்களிலொன்று.
ஆவின் - புல்லுருவி.
ஆவீதம் - முப்புரிநூல்.
ஆவு - குன்றி.
ஆவுகன் - தகப்பன்.
ஆவுடைநாயகர் - திருமுருகன்பூண்டியிலே திருக்கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
ஆவுடைநாயகி - திருமுருகன் பூண்டியிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
ஆவுடையார் - சத்திரூபமாகிய பீடம்.
ஆவுதி - ஆகுதி.
ஆவுத்தன் - தமக்கைபுருடன்.
ஆவுரிஞ்சி } ஆதீண்டுகுற்றி.
ஆவுரிஞ்சுதறி }
ஆவுளி - ஆதரவின்மை, ஒழுங்கீனம்.
ஆவுளிப்பேச்சு - ஆதரவற்ற பேச்சு, ஒழுங்கற்ற பேச்சு.
ஆவெனல்-இரக்கக்குறிப்பு, வாய்திறத்தல்.
ஆவேசம்-சீக்கிரம், தமொற்றம்.
ஆவேகி - ஆடுதின்னுப்பாளை.
ஆவேசம்-ஆவி, சன்னதம், பெருமை, மனம், பற்றுதல், வாயில், வெறி, வேடம்.
ஆவேசனம்-கம்மாலை, கோபம், சித்திரக்காரர்வீதி, சூரியமண்டலம், வாயில்.
ஆவேசிகன் - விருந்தன்.
ஆவேஷம் } ஆவேசம்.
ஆவேடம் }
ஆவேட்டகம் - வேலி.
ஆவேட்டனம் - சுற்றுதல்.
ஆவேஷ்டன் } யாகத்தி லுபதேசஞ் சொல்லுவோன்.
ஆவேட்டன் }
ஆவேதகன் - வழக்காளி.
ஆவேலம் - தம்பலம்.
ஆவேலி - தொழுவம்.
ஆவோ - அதிசயவிரக்கச்சொல்.
ஆழமுடைமை-நூழலகுபத்தனுள் ஒன்று, அது பார்க்கப்பார்க்க ஆழ்ந்தகருத்திருத்தல்.
ஆழம்-அறிதற்கரியது, ஆழ்ந்தகருத்து, கடல், தாழ்வு.
ஆழல் - கறையான், தாழ்தல்.
ஆழாக்கு - அரைக்காற்படி.
ஆழி - கடல், கரைப்பொது, சக்கரம், தேருருளை, மோதிரம், யானைக்கை, நுனி, வட்டம், வண்டி.
ஆழிக்கொடி - பவளம்.
ஆழித்தல் - ஆழமாகத்தோண்டல்.
ஆழிமுரசோன் - மன்மதன்.
ஆழியளித்தோன் - விஷ்ணுவுக்குச் சக்கரம் கொடுத்தோன், சிவன்.
ஆழியன் } விஷ்ணு, வஞ்சகன், வருணன்.
ஆழியான் }
ஆழிவிட்டோன் - சிவன், விட்டுணு.
ஆழிவித்து - முத்து.
ஆழிவிரல் - பவுத்திரமோதிரம்.
ஆழிவிரை - ஒருபயிர், ஒருவிரை.
ஆழிவெம்முரசோன் - மன்மதன்.
ஆழுதல் } அழுந்தல், தாழ்தல்.
ஆழ்தல் }
ஆழ்த்தல் - கட்டல், தாழ்த்தல்.
ஆழ்ந்தகருத்து - உட்கருத்து.
ஆழ்ந்தவறிவு - மகா அறிவு.
ஆழ்வார் - கருடன், விட்டுணுபத்தர்.
ஆழ்வார்திருநகரி-நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்று.
ஆளகம் - சுரைக்கொடி.
ஆளரி - சிங்கவேறு, நாரசிங்கமாகிய விஷ்ணு.
ஆளல் - ஆளுதல்.
ஆளவந்தார் - ஆழ்வார்களு ளொருவர்.
ஆளன் - எசமான்.
ஆளாமை-கட்டுத்தறி, கலப்பை, யானைகட்டுந்தறி.
ஆளி ஆலி. ஆள்வோன், ஒழுங்கு, ஒருவிரை, கரைப்பொது, சிளிஞ்சில்போன்றசிப்பி, சிங்கம், சிங்கவிராசி, செய்கரை, மட்டி, யாளி, யானை.
ஆளியூர்தி - காளி, துர்க்கை.
ஆளிவிரை - ஒருவிரை.
ஆளுகை-ஆட்சி, ஆளுந்தன்மை, இராச்சியப்பொது.
ஆளுடைநாயகியம்மை - திருப்பரங்குன்றத்திற் கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
ஆளுதல்-அடிமைகொள்ளுதல், ஆட்சிபண்ணல், காவற்கூடு.
ஆளொட்டி } காவற்கூடு, மறைவு.
ஆளொதுக்கி }

ஆளோட்டி - ஆளை வேலைகொள்வோன்.
ஆளோலை - அடிமைச்சீட்டு.
ஆள்-அடிமை, ஆண்டவன், ஆண்மகன், ஆளென்னேவல், உயர்திணைப் பெண்பாற்படர்க்கை யொருமைவிகுதி.
ஆள்மாகாணம் - கூலியாட்கள் வேலை செய்யுமிடம்.
ஆள்வணங்கி - அரசமரம், வேப்பமரம், தொட்டால்வாடி.
ஆள்வள்ளி - மலைச்சக்கரவள்ளி.
ஆள்விழுங்கி - நீளவங்கி.
ஆள்வினை - உற்சாகம், முயற்சி, ஆள்வினை.
ஆரகோரம் - கொன்றை.
ஆறங்கம் - வேதாங்கத்தின் பொருளாறம்.
ஆறடிவிருத்தம் - கலிவிருத்தம், தரவு, கொச்சகம்.
ஆறதீகம் - ஆறு, கல்நார்.
ஆறலை - வழிப்பறிக்குந்தன்மை,
ஆறலைத்தல் - வழிப்பறித்தல்.
ஆறலைப்பு - வழிப்பறிக்கை.
ஆறல் - அலைதல், ஆறுதல்.
ஆறாக்காரியம் - தேற்றம்.
ஆறாடி - தூர்த்தன்.
ஆறாட்டம் - நோயுற்றோர்கலக்கம்.
ஆறாதாரச்சூத்திரம்-எற்றச்சித்தரென்பவரால் செய்யப்பட்ட ஒரு வைத்திய நூல்.
ஆறாதாரம் - சடாதாரம், அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பனவாம்.
ஆறாதூறு - அவதூறு, அழிப்பு.
ஆறாத்துயர் - நீங்காதகவலை, மாறாத்துக்கம்.
ஆறாப்புண் - குலைநோயா லுண்டாகும் ஒருவித விரணம்.
ஆறாமீனறவோட்டு - மாலுமிகள் பெரும் புசலடித்துப்போகிறதைத் தெரிந்துகொள்ளும் ஒரு வானக்குறி.
ஆறாமீன் - கார்த்திகைநாள்.
ஆறு-ஆறென்னேவல், ஒழுக்கம், ஒரு எண், நதி, வழி.
ஆறுகட்டி - பண்டாரங்களணியும் ஒரு காதணி.
ஆறுகாடு - ஆற்காடு, சடாரணியம்
ஆறுகாட்டி - மாலுமி, வழிகாட்டி.
ஆறுதல்-ஆறியிருத்தல், இளைப்பாறல், ஓய்தல், சூடுகுளிர்தல், சொஸ்தமாதல், தணிதல்.
ஆறுமுகன் } முருகன், குமரக்கடவுள்.
ஆறுமுகவன் }
ஆறெறிபறை - வழிபறித்துக்கொட்டும் பறை.
ஆறை - ஆற்றூர்.
ஆற்காடு - ஓரூர்.
ஆற்பதம் - சாரம்.
ஆற்பலம் - சாரம், பலம்.
ஆற்ற - மிகுதியாய்.
ஆற்றலரி-சுடலைப்பூச்செடி, செங்கோட்டை.
ஆற்றலுடைமை - வலியுடைமை.
ஆற்றல் - அதிகம், சகித்தல், செய்தல், ஞானம், தணித்தல், நிலையுடைமை, பரித்தல், பொறை, மிகுதி, முயற்சி, வலி.
ஆற்றல்கேடு-வலியழிவு.
ஆற்றாக்கேடு - மிகுதரித்திரம், மிகுதேவை.
ஆற்றாக்கொலை - ஆற்றாப்பட்சம்.
ஆற்றாச்சண்டி-திருத்தியடையாதவன், மானமற்றவன், விடாதஇரப்போன்.
ஆற்றாத்தனம் - திருத்தியடையாமை.
ஆற்றாப்பட்சம்-ஆற்றாமை, தரிக்கக்கூடாமை.
ஆற்றாமை-சகிக்கக்கூடாமை, திருத்தியின்மை, பொறாமை.
ஆற்றார் - தரித்திரர், தோற்றோர், பகைவர், வருந்தினர்.
ஆற்றி - ஆறுதல்.
ஆற்றிடைக்குறை - அரங்கம், ஆற்றினுடுக்கமான விடம், ஆற்றுக்கிடையே யுயர்ந்ததிடர்.
ஆற்றிடைப்படல் - வழியிலிருத்தல், வழியெதிர்ப்படல்.
ஆற்றித்தேற்றல் - தணித்துத் திடன் சொல்லல்.
ஆற்றிப்போற்றிக்கொள்ளல் - ஆற்றல், அன்புற்றோரைக் காத்தல், விருந்தினரை யுபசரித்தல்.
ஆற்றின்வித்து - கர்ப்பூரசிலாசத்து.
ஆற்று-ஆற்றென்னேவல், தலைக்கடை.
ஆற்றுக்காலாட்டியர்-உழத்தியர், மருதநிலப்பெண்கள்.

ஆற்றுக்கால் - ஆற்றிலிருந்து பாயும் வாய்க்கால்.
ஆற்றுச்சிப்பி - ஆற்றுக்கிளிஞ்சில்.
ஆற்றுச்சுழி - ஆற்றுநீர்ச்சுழி.
ஆற்றுச்செருப்படி } ஒருபூண்டு.
ஆற்றுச்செருப்படை }
ஆற்றுணா - கட்டுச்சோறு, வழியுணவு.
ஆற்றுதல் - தணித்தல், துயர்தீர்த்தல்.
ஆற்றுத்தும்மட்டி - பேய்க்கொம்மட்டி.
ஆற்றுநத்தை - ஒருவிதநத்தை.
ஆற்றுநீர் - ஆற்றுச்சலம்.
ஆற்றுநீர்ப்பொருள்கோள் - பொருள்கோளெட்டினொன்று.
ஆற்றுநெட்டி - நீர்ச்சுண்டி.
ஆற்றுப்பச்சை - நாகப்பச்சை, பச்சைக்கல்.
ஆற்றுப்படுத்தல் - சன்மார்க்கத்தி லுட்படுத்தல், வழிநடத்துதல்.
ஆற்றுப்படை - ஒரு பிரபந்தம், வழிப்படுத்தல்.
ஆற்றுப்பாசி - ஒருபூண்டி.
ஆற்றுப்பித்தல் - ஆற்றோரம்.
ஆற்றுப்பூத்தான் - பூனைக்காலி.
ஆற்றுப்பூவரசு - ஒருமரம்.
ஆற்றுப்பெருக்கு - வெள்ளம்.
ஆற்றுமடை - வாய்க்கால்முகம்.
ஆற்றுமம் - ஆற்றுமா, பிராணன்.
ஆற்றுமரி - நீருமரி.
ஆற்றுமல்லிகை - ஒருமல்லிகை.
ஆற்றுமா - ஆன்மா, பிராணன்.
ஆற்றுமுள்ளி - கண்டங்கத்திரி.
ஆற்றுமேலழகி - ஒருபூடு.
ஆற்றுவரி - இசைப்பாவகையுளொன்று.
ஆற்றுவாளை - ஒருமீன்.
ஆற்றுவித்தல் - ஆறுபாய்முகம், உறுதி செய்தல், தயிரியப்படுத்தல், வலி தருதல்.
ஆற்றெதிர்ப்படல் - வழி யெதிர்ப்படல்.
ஆற்றொழுக்கு - ஆற்றுநீரோட்டம், சூத்திரநிலை செய்யுணிலைகளிலொன்று.
ஆனகதுந்துபி - போர்ப்பறை, வசுதேவன்.
ஆனகம் - இடி, காதினுட்சவ்வு, சுரை, தம்பட்டம், துந்துமி, தேவதரு, போர்ப்பறை, மத்தளம், முகில், மேளம்.
ஆனகன் - வசுதேவன், தம்பி.
ஆனகொந்தி - இருஷியமுகபர்வத சமீபத்திலுள்ள ஒருநகர்.

ஆனதம் - வணங்கியிருப்பது.
ஆனத்தேர் - விடத்தேர்ச்செடி.
ஆனந்த - நாற்பத்தெட்டாவதுவருடம்.
ஆனந்தகானனம் - காசிப்பட்டினம்.
ஆனந்ததம் - யோனி.
ஆனந்தது - சந்தோஷம்.
ஆனந்தநி - பிரமன்பட்டணம்.
ஆனந்தநித்திரை - யோகநித்திரை.
ஆனந்தபடம் - கூறைப்புடவை.
ஆனந்தபரவசம் - ஆனந்தக்களிப்பு.
ஆனந்தபாஷ்பம் } பேரின்பக் கண்ணீர்.
ஆனந்தபாட்பம் }
ஆனந்தபிரபவம் - இந்திரியம்.
ஆனந்தபைரவி - ஒருபண்.
ஆனந்தமயகோசம் - பஞ்சகோசத்துள் ஒன்று.
ஆனந்தமயம் - கடவுள், கோசமைந்தில் ஒன்று, தன்வசமற்றிருத்தல்.
ஆனந்தமயன் - கடவுள், தன்வசமற்றிருப்போன்.
ஆனந்தமூலி - கஞ்சா.
ஆனந்தம் - அரத்தை, கடவுள், சந்தோஷம், பாக்குத்தரங்களி னோர்வகை, பேரின்பம்.
ஆனந்தரூபன் - பஞ்சகோச சன்மபந்த சன்மமாறுதலியற்ற வடிவன்.
ஆனந்தலட்சணம் - பரமாத்மா சகலபதார்த்தத்தைக் காட்டியுந் தன்னிடத்திற் பிரமை நீங்காதிருப்பது.
ஆனந்தவருவி - ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கு.
ஆனந்தவல்லி - பார்ப்பதி.
ஆனந்தவாதி - சௌரிபாஷாணம்.
ஆனந்தனம் - இன்பங்கொடுப்பது, உபசரணை, சந்தோஷித்தல்.
ஆனந்தன் - அருகன், கடவுள், களிப்புடையோன், சிவன்.
ஆனந்தாத்துமா - பிரமன்.
ஆனந்தாலயம் - சந்திரனுலகு.
ஆனந்தி - களிப்புடையாள், பார்வதி.
ஆனந்தித்தல் - சந்தோஷித்தல்.
ஆனந்திப்பித்தல் - சந்தோஷப்படுத்துதல்.
ஆனந்திப்பு - சந்தோஷம்.
ஆனந்தியம் - அழிவின்மை, முடிவின்மை.
ஆனந்தை - கொட்டைக்கரந்தை, பார்வதி.

ஆனமானம் - சிறப்பு.
ஆனமானவன் - சிறந்தவன்.
ஆனம் - கள், பூரகவாயு, மஸ்தள்ள பானம்.
ஆனயம் } உபநயம், கொண்டு வ
ஆனயனம் } ருகை.
ஆனர்த்தம்-களரி, நீர், யவனசமுத்திரத்தில் துவாரகைக்குச் சமீபத்திலுள்ள நாடு. இதிற் சரியாதிமகன் ஆனர்த்தன் குசஸ்தலி என்னும் நகரத்தை நியமித்தான். அதனால் அதனையுள்ளிட்டநாடெல்லாம் அவன் பெயர்பெற்றது, யுத்தம்.
ஆனர்த்தன் - சரியாதிமகன், இவனுடைய மகன், ரைவதன்.
ஆனல் - நீங்கல்.
ஆனனம் - ஆநநம், முகம்.
ஆனாகம் - சலவடைப்பு, நீனம், பொருமல்.
ஆனாது - கெடாது.
ஆனாத்நியம் - காாகபத்தியத்தில் இருந்தெடுத்துத் தக்ஷிணாக்கினியிற் சேர்க்கு நெருப்பு.
ஆனாமை - அமையாமை, உத்திராடம், கெடாமை, நீங்காமை.
ஆனாயகலை - வலைபோன்றவத்திரம்.
ஆனாயம் - வலை.
ஆனாயர் - அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்.
ஆனி - உத்திராடநாள், எல்லை, ஒருமாதம், கேடு, கேட்டை, பொருந்தநதி, மூலநாள், வானலகு, வெட்டுக் குருத்து
ஆனியம் - நாள், பகல், பருவம், பொழுது, மூலநாள்.
ஆனிரை - பசுக்கூட்டம்.
ஆனிரைகாத்தோன் - கிருட்டினன்.
ஆனிலன் - அனுமான், வீமன்.
ஆனிலை - பசுக்கொட்டில்.
ஆனீகன் - வசுதேவன் தம்பி, இவன் இரண்டா மைந்தனும் இப்பெயர் பெறுவன்.
ஆனும் - இனிமை, நன்மை.
ஆனுதல் - நீங்குதல்.
ஆனுலகு - தேவலோகம்.
ஆனெய் - பசுவினெய்.
ஆனேறு - எருது.

ஆனை - அத்திமரம், யானை.
ஆனைக்கண் - ஆனைக்காய், முதிர்ந்தகாயிற்படும் புள்ளி.
ஆனைக்கண்படுதல் - புள்ளிபடுதல்.
ஆனைக்கதப்பு - யானையின்கன்னமதம்.
ஆனைக்கரப்பன் - அக்கியென்னும் ஒருவகைநோய்.
ஆனைக்கள்ளிமுளையான் - ஒரு பூடு.
ஆனைக்கற்றலை - ஒருமீன். [ட்டி.
ஆனைக்கன்று - அத்திமரம், யானைக்கு
ஆனைக்காயம் - யானைக்குக் கொடுக்கும் ஒருவிதப் பெருங்காயம்.
ஆனைக்கால் - தண்ணீர்க்குழாய், யானையினதுகால், வாதக்கால். [ய்.
ஆனைக்கால்வாதம்-ஒருவகை வாதநோ
ஆனைக்கூடம்-ஆனைக்கட்டுமிடம். [ய்.
ஆனைக்கொம்பன் - ஆனைவாழை, ஒருவகைநெல்.
ஆனைக்கோடன்சுரை ஒருவகைச்சுரை
ஆனைக்கோடு - ஆனைக்கொம்பு.
ஆனைசேனை - மிகுதி.
ஆனைச்சப்பரம் - அம்பாரி.
ஆனைச்சீரகம் - ஒருபூடு.
ஆனைச்செவியடி - ஒருபூண்டு.
ஆனைத்தடிச்சல்-புளிநடலை, புளிநரளை,
ஆனைத்தடிப்பு - ஒருபூடு. [புளியரணை.
ஆனைத்திசை - வடக்கு.
ஆனைத்தும்பை - பெருந்தும்பை.
ஆனைத்தோட்டி - அங்குசம்.
ஆனைநெருஞ்சில் - ஆனைக்கால்வணங்கி புளியரணை, பெருநெருஞ்சில்.
ஆனைப்படுவன் - விலங்கினோர்நோய்.
ஆனைப்பந்தி - ஆனைக்கூட்டம்.
ஆனைப்பாகன் - யானைப்பணிக்கன்.
ஆனைப்பிச்சான் - ஒருபூண்டு.
ஆனைப்பேன்-ஒருபேன், கத்திரிச்செடியிலுண்டாகும் ஒருபூச்சி.
ஆனைமஞ்சள் - ஒருபூடு.
ஆனைமத்தகம் - கும்பம்.
ஆனைமயிர்க்காப்பு - யானை வால்மயிராற்செய்த கைவளை.
ஆனைமலை-மதுரைக்குச் சமீபத்திலுள்ள ஒருமலை.
ஆனைமீன் - ஒரு பெருமீன்.
ஆனைமுகத்தோன் - விநாயகன்.
ஆனைமுகன் } கசமுகாசுரன், விநா
ஆனைமுகவன் } யகன்.

ஆனையணைதறி - ஆனைகட்டுந்தறி.
ஆனையறுகு - ஒருவகையறுகு.
ஆனையறையும்புள் - ஆனையுண்குருகு.
ஆனையானனன் - விநாயகன்.
ஆனையிலத்தி - ஆனைச்சாணம்.
ஆனையிருஞ்சிப்புள் } யானையை விழுங்கும் பட்சி.
ஆனையுண்குருகு }
ஆனையூர்தி - இந்திரன், ஐயன்.
ஆனையேற்றம் - ஆனையேறும்பரிட்சை, யானையை மரக்கலத்தேற்றுதல்.
ஆனைவணங்கி - தேட்கொடுக்கி.
ஆனைவாழை - ஒருவாழை.
ஆனைவிழுங்குமீன் - திமிங்கிலம்.
ஆனைவீரர் - அரசரெண்வகைத் துணைவரில் ஒருவகையார்.
ஆன் - ஆனென்னேவல், இடபவிராசி, உயர்திணை யொருமை யாண்பாற் படர்க்கை விகுதி, சாரியை, பசு, பசுப்பொது, பெண்மரை, மூன்றனுருபு.
ஆன்கன்று - கன்றுக்குட்டி.
ஆன்கொட்டில் - ஆனிலை.
ஆன்பொருந்தநதி - சூதநதி.
ஆன்பொருத்தம் - புண்ணிய தீர்த்தம் ஐம்பத்து மூன்றனுளொன்று.
ஆன்மசரீரத்திரயம் - மூவகையான்மசரீரம். அவை தூலசரீரம், சூக்கும சரீரம், காரணசரீரம் என்பன.
ஆன்மதத்துவம் - ஆத்துமத்திற்குரியதத்துவம். அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம், குணம் என்பன.
ஆன்மதரிசினை - ஆத்தும நிலையறிதல்.
ஆன்மத்திரயம் - மூவகை யான்மாக்கள். அவர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படுவார்.
ஆன்மபோதம் - ஆத்துமஞானம்.
ஆன்மவறிவு - ஆத்துமத்திற்குரிய உணர்ச்சி. அவை சுவையுணர்வு, ஒளியுணர்வு, ஊறுவுணர்வு, ஓசையுணர்வு, கந்தவறிவு, பகுத்தறிவுஎன்பனவாம்.
ஆன்மாவென்பன - உயிர், சிவனட்டமூர்த்தத்தொன்று, பசு.
ஆன்மீச்சணம் - தேடல்.
ஆன்மெழுக்கு - பசுஞ்சாணம்.
ஆன்வலர் } இடையர்.
ஆன்வல்லோர் }
ஆன்வீட்சகம் - தருக்கசாத்திரம்.
ஆன்ற - மாட்சிமைப்பட்ட, விசாலமான.
ஆன்றல் - அபலம், மாட்சிமை, மிகுதி.
ஆன்றவர் } அறிவுடையோர், சன்மார்க்கர், புலவர், பெரியோர்.
ஆன்றார் }
ஆன்றிரள் - பசுமந்தை.
ஆன்றோர் - ஆன்றவர்.

இ

இ - தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் மூன்றாம் எழுத்து, உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள் அண்பல்லடியை நாவிளிம்பு பொருந்த ஒலிக்கும் ஒரு குற்றுயிர், அன்பு, ஆச்சரியம், இகழ்ச்சி, ஓரெழுத்து, ஒரு சுட்டு, முப்பாலொருமை முன்னிலை வினைவிகுதி (உ-ம்) உண்டி, முப்பாலொருமை, முன்னிலையேவல்விகுதி (உ-ம்) கேட்டி உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்விகு (உ-ம்) குறத்தி, உயர்திணையாண்பாற் படர்க்கையொருமைப்பெயர்விகுதி (உ-ம்) வில்லி, அஃறிணைப்படர்க்கையொருமைப்பெயர் விகுதி (உ-ம்) ஊருணி விரவுத்திணை யொருமைப் பெயர் விகுதி (உ-ம்) செவியிலி, வினையெச்சவிகுதி (உ-ம்) எண்ணி.
இஃது - இது.
இக - இகவென்னேவல், முன்னிலை அசைச்சொல்.
இகசுக்கு - நீர்முள்ளிப்பூண்டு.
இகத்தல் - கடத்தல், நடத்தல், பழித்தல், புறப்படுதல், பொறுத்தல், போதல், மீறுதல், விட்டு விடுதல்.
இகந்துபடுதல் - கடந்துபோதல், நிராகரிக்கப்படுதல், பிறழுதல், தவறுதல்.
இகபரசாதனம் - இம்மை மறுமைக்கடுத்த கடமைகளை நடப்பித்தல்.

இகபரபுத்திரார்த்தபரபோகவிராகம்-இகத்திலுள்ள பெண்டுபிள்ளை முதலியனவும் பரத்திலுள்ள தேவாமிர்தபோகங்களும் வெறுத்துவிடல்.

இகபரம் - இம்மை, மறுமை, அஃது பூலோக பரலோக அனுபவம்.

இகம்-இம்மை, இவ்விடம்,உலகம்,பூமி.

இகரக்குறுக்கம் - குற்றியலிகரம்.

இகரம்-சந்தம், மூன்றாமுயிரெழுத்து, [அது, இ.

இகல - உவமைச்சொல்.

இகலல்-எதிர்த்தல், பகைத்தல், பொருதல், வாக்குவாதஞ் செய்யல்.

இகலன் - ஓரி, நரி, பகைவன்.

இகலாடல் - போராடல், முரணுதல்.

இகலாட்டம்-போராட்டம், முரணுகை.

இகலார் - பகைவர்.

இகலி - ஒருவினையெச்சம், சபதம், பெ [ருமருந்து.

இகலுதல் - இகலல்.

இகலோகம் - இவ்வுலகம்.

இகலோர் - பகைவர்.

இகல்-இகலென்னேவல்,ஒப்பு, பெருங்காப்பியவுறுப்புளொன்று. அது மறுநிலை, பகை, போர், வலி.

இகல்வு - எதிரிடை, இகலுதல்.

இகவு - இகழ்ச்சி.

இகழாவிகழ்ச்சி - ஓரலங்காரம், அஃது புகழ்வதுபோ லிகழ்வது.

இகழுநர் - இகழ்ந்திருப்போர்.

இகழ் - இகழென்னேவல், கிந்தை.

இகழ்ச்சி - ஈனம், ஓரலங்காரம், கிந்தை, மறதி.

இகழ்ச்சிக்குறிப்பு - இகழ்ச்சியைக்காட்டவருஞ்சொற்கள். அவை இளி, எல், எவன், எற்று, என், என்னே, ஏயே, சிச்சி, சை என்பன.

இகழ்ச்சிச்சொல் - அங்கதச்சொல், இழிமொழி.

இகழ்ச்சிபுகழ்ச்சி-புகழ்மொழியால் இகழ்தல் (உ-ம்) பேகானி.

இகழ்ச்சியில்புகழ்ச்சி - ஓரணி. அஃது இகழ்ச்சியின்றிப் புகழ்தல் (உ-ம்) சத்தியத்தில் அரிச்சந்திரன்.

இகழ்ச்சியுட்புகழ்ச்சி - ஓரணி. அஃது இகழ்ச்சியும் புகழ்ச்சியுங் கலந்து கூறல்(உ-ம்)இவர் சத்தே வாசித்தவர்.

இகழ்ச்சிவிலக்கு - ஓரலங்காரம். அஃது ஏதுவையிகழ்ந்து விலக்குவது.

இகழ்தல் - கிந்தித்தல்.

இகழ்வார் - கிந்திப்பவர்.

இகழ்வு - கிந்தை.

இகளி - இடி.

இகளை - வெண்ணெய்.

இகனி - வெற்றிலை.

இகாசம் - பழிகூறல்.

இகிதம் - இன்பம்.

இகுசு - மூங்கில்.

இகுடி - ஆதொண்டை, காத்தொட்டி.

இகுதரல் - தாழ்ந்து விழுதல்.

இகுத்தல் - அழித்தல், அழைத்தல், இரித்தல், ஈதல், எரிதல்,குழைத்தல், கொல்லல், தாண்டல், தாழ்த்துதல், துடைத்தத, புடைத்தல், புறங்காட்டப்பண்ணல், மறித்தல், வருந்துவித்தல், வீழ்த்தல்.

இகுப்பம் - திரட்சி.

இகுப்பு - வாசிப்பு.

இகும் - அசைச்சொல்.

இகுளி - இடியேறு, கொன்றை.

இகுளை - சுற்றம், தோழி, நட்பு.

இகுன் - ஆரல்மீன், இடி, கார்த்திகை நாள்.

இகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.

இகைத்தல் - கொடுத்தல், நடத்தல்.

இக்கட்டு - இடநெருக்கம், தடை, தரித்திரம், துன்பம், வெல்லக்கட்டி.

இக்கணம் - இப்போழ்து.

இக்கலை - இந்தக்கலை, இந்துப்பு.

இக்கவம் - கரும்பு.

இக்கணி - இப்போது.

இக்காசிலேஷ்மம்-ஒருவகைச் சிலேஷ்மரோகம். அதுவிக்கல், கொட்டாவி, சிரோபாரம், சர்வாங்கவேதனை, மார்பிற்குத்து, சீதளம், துர்ப்பலம், இளைப்பு, தொண்டைக்கம்மல், வயிறுகற்போலிருத்தல், நோதல், கண்ணீர்வடிதல், வாயு நாவும் புளித்தல், நெஞ்சிலெரிவு என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இக்காபித்தம் - ஒருவகைப்பித்தநோய். அது நியாக் கொட்டாவி சர்வாங்கத்திலும் வியர்வை, அருக்கற்போற்சுரசுரத்தல், கொப்பளமெழும்பல், சீதள மதிகரித்தல், உரோமஞ்சிலித்

தல், நடுமாரபி வெரிச்சல், சுரம், சோகை, நடுக்கம், அதிகசூலை, சிரோபாரம், நித்திராபங்கம், கண்ணீரொழுக்கு என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.
இக்கா - கொட்டாவி.
இக்கிடைஞல் - இக்கட்டு.
இக்கியந்திரம் - கரும்பாட்டுமாலை.
இக்கிரசம் - கருப்பஞ்சாறு.
இக்கிரி - ஒரு முட்செடி.
இக்கு - ஆபத்து, கரும்பு, கள், தடை.
இக்குக்கந்தை - வெளுத்த விருளிச்செடி, நாணல், நீர்முள்ளி, நெருஞ்சில்.
இக்குதம் - கருப்பஞ்சாற்றுக்கடல்.
இக்குரம் - நீர்முள்ளி.
இக்குவாகு - ஒருசூரியவமிசத்தரசன், பேய்ச்சுரை.
இக்குவிகாரம் - சருக்கரை.
இக்குவில்லி, இக்குவில்லோன் - மன்மதன்.
இக்குறி - அங்கியகான், இச்செலவு, இம்முறை, இவ்வடையாளம்.
இக்கூறு - அன்னியகரார், செலவு இப்பங்கு, இப்பிரகாரம்.
இக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.
இக்கோ - அதிசயவிரக்கச்சொல்.
இக்ஷி - கஸ்தூரிமஞ்சள்.
இங்கஞ்செடி - முத்தாபலச்செடி.
இங்கண் - இவ்விடம்.
இங்கம் - அறிவு, ஊர்ந்து திரியும்பிராணிசயிக்கை, நோக்கம்.
இங்கரி - கஸ்தூரி.
இங்காலம் - கரி.
இங்கிசை - கொலை, சங்கை, யீனம்.
இங்கிதகவி - இனிப்பைத்தருங்கவி, பாடுவோன், இன்பந்தருங்கவி, பாட்டுடைத்தலைவன் கருத்தை விளக்குங்கவி.
இங்கிதக்காரன் - இன்சொற் சொல்வோன்.
இங்கிதக்காரி - இனியமொழி பேசுபவள்.
இங்கிதமாலை - திருவருட் பிரகாசவள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பாவினுள் ஒரு பகுதி.
இங்கிதம் - அடையாளம், இங்கம், இனிமை, எண்ணக்குறிப்பு, எண்ணம், கருத்து, நினைவு.
இங்கிரி - கஸ்தூரி.
இங்கு - இவ்விடம், பெருங்காயம்.
இங்குசுக்காண்டான் - நீர்முள்ளி, நெருஞ்சில், பெருங்கரும்பு.
இங்குடீமம் - பெருங்காயம்.
இங்குணம் - ஒருமரம்.
இங்குநாதி - பீதரோகிணி.
இங்குநாரி - பேரோசனை.
இங்குநாழி - பீதரோகிணி.
இங்குதி - ஒருமரம்.
இங்குமம் - இங்கு.
இங்குராமம் - பெருங்காயம்.
இங்குலிகம் - சாதிலிங்கம், சிவப்பு.
இங்குளம், இங்குளி - பெருங்காயம்.
இங்ஙனம், இங்ஙன் - இங்கே இத்தன்மை இப்படி இவ்விடம்.
இசகுபிசகு, இசக்குப்பிசக்கு - குழப்பம்.
இசங்கு - சங்கஞ்செடி, சங்கங்குப்பி.
இசடு - அசடு, பொருக்கு.
இசப்கோல்விரை - இஸ்கோல்விரை.
இசமான் - எசமான்.
இசருகம் - வெள்ளைத்தும்பை.
இசலல் - இசலுதல்.
இசலாடல் - வாதாடுதல்.
இசலாட்டம் - இகலாட்டம்.
இசலி - கபதம்.
இசலுதல் - வாதாடல்.
இசவில் - கொன்றை.
இசி-இசியென்னேவல், இளுக்குதல், சிரிப்பு.
இசிகர் - கடுகு.
இசிதல் - இளுங்கப்படுதல், இழுபடுதல், நீளுதல்.
இசித்தல் - இளுங்கல், இழுத்தல், ஒடித்தல், சிரிக்குதல், நரம்பிழுத்தல்.
இசிபலம் - பேய்ப்புடோல்.
இசிப்பு - இளுக்குகை, நரம்புச்சுருக்கு, வயிற்றுவலி, இசிவு, ஈர்ப்பு, சிரிப்பு.
இசிவு - இழுப்பு, உரிவு.
இசின் - இறந்தகாலவிடைநிலை (உ-ம்) என்றிசினோரே.
இசுதாரு - கடப்பமரம்.
இசை - இசைப்பாட்டு, இசைப்பு, இசையென்னேவல், இணக்கம், இனிமை,

ஒலி, கூடிநிற்றல், கொடை, சங்கீதம், சொல், பண்பு, பாட்டிசை, புகழ், பொன், முத்தமிழிலொன்று.
இசைகேடு - அவகீர்த்தி, சத்துக்கேடு, சுரபேதம்.
இசைகொள்ளல் - கீர்த்திபெறல்.
இசைகோள் - தானம்.
இசைக்கரணம் - இசைக்குரிய கரணங்கள், அவைபண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறம்போக்கு என்பன.
இசைக்கருவி-இசைக்குரிய கருவிகள். அவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி என்பன.
இசைக்கழல்-தேர்நூறுகுதிரை,ஆயிரம் யானை, நூறு காலாள் பதினாயிரம், போரின் மடியவென்ற வெற்றிபெற்ற வேந்தர் இடக்காலிலணியும் வீரவெண்டயம்.
இசைக்கிரியை - இசைக்குரிய செயல்கள் அவை எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டி, தாக்கு என்பன.
இசைக்குதல் - சொல்லுதல்.
இசைக்குழலிலக்கணம் - இசைக்குழலினிலக்கணம். அது மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என்னும் இவற்றால் உண்டாக்கப்படுவதாம்.
இசைக்குழல் - வங்குழல்.
இசைக்குழற்பிண்டி யிலக்கணம்-இசைக்குழலினது பிண்டிக்குரிய இலட்சணம். அது இருபதுவிரல் நீளமும் காலரைவிரற் சுற்றளவும் ஆகத்துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஓர்பாதி மாளிறுத்திக் கடைந்து வெண்கலத்தால் அணைசுபண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகத்தை வெளியாக விடப்படுவது.
இசைக்குழற்றுளை யிலக்கணம்-இசைக்குழலினது துளைக்குரிய இலக்கணம் அது இருபது விரலளவாகத் தூயமுகத்தினிரண்டுநீக்கி முதல் வாய்விட்டு அம்முதல்வாய்க்குஎழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலினும் எட்டுத் துளையிடப்படுவது இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கிநின்ற ஏழினை ஏழுவிரல்வைத்தூதப்படும். இத்துளைகளின் இடைப்பிறப்பு ஒருவிரலகலமாம்.
இசைச்சுவை-இசைக்குரிய சுவைகள். அவை பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி என்பனவாம்.
இசைஞானியார் - சடைய நாயனாது மனைவியார். இவர் சுந்தரமூர்த்திநாயனாருக்குத் தாயார்.
இசைதல்-இராகஓசையொல்லல், சம்மதித்தல், சரிப்படல், பொருந்தல்.
இசைத்தமிழ்-சங்கீதத்தமிழ் அது முத்தமிழிலொன்று.
இசைத்தல்-இணக்குதல், ஈதல், ஒலித்தல், கட்டல், பாடல், பேசுதல்,பொருந்தப்பண்ணுதல். [டு.
இசைத்திரிபு-இசையறுப்பு, வேறுபா
இசைத்தேவர்-இசைக்குரியதேவர்கள் அவர் விஸ்வாமித்திரன், எமன், அக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன் என்பவராம்.
இசைநாள்-உத்திரட்டாதி, பூரட்டாதி.
இசைநிறை - ஓசைநிறைத்து நிற்பது.
இசைநிறைச்சொல் - இசைநிறைபொருளைத் தருமொழிகள். அவை ஒடு, தெய்ய என்பன.
இசைநிறையசைச்சொல்-இசையை நிறைத்தற்பொருட்டு வருமசைச்சொற்கள். அவை ஏ - ஒ-உம்-அம்ம-அரோகுரை என்பன. [ம்.
இசைநிறையேகாரம்-ஈற்றசை யேகார
இசைநுணுக்கம்-சாரகுமாரன் பொருட்டுச் சிகண்டிசெய்த இசைத்தமிழ் நூல்.
இசைநூபுரம்-யானையைக் கொன்ற சுத்தவீரன் வலக்காலிலணியும் வீரச் [சிலம்பு.
இசைநூல்-சங்கீதசாத்திரம்.
இசைந்தவேளை - தற்சமயம்.
இசைபுனை-ஆயிரம்பேரைவென்றவன் இடக்காலிலணியும் வீரச்சங்கிலி.
இசைப்பா - இசைக்குரியபாக்கள். அவைசெந்துறை,வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி,முத்த

கம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைப்போகு மண்டிலம், சிந்து, திரிபதை, சவலை, சமபாகவிருத்தம், சாதிக்கிரியைச் செந்துறை, சாதிக்கிரியை வண்டுறை, சாதிக்கிரியைப் பெருந்தேவபாணி, சாதிக்கிரியைச் சிறுதேவபாணி என்பனவாம்.

இசைப்பாச்சாதியோசை - இசைப்பாவிற்குரிய சாதியோசைகள். அவை சுத்தம், சாளகம், தமிழ் என்பன.

இசைப்பாட்டு - இராகம்.

இசைப்பாமுசகிலை - சொச்சகம்.

இசைப்பிறப்பிடம் - இசையுதிக்குந்தானங்கள். அவை நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை என்பன.

இசைப்பு - இணக்கம், கூடிநிற்றல், சொல்லல், பொருத்து.

இசைப்புள் - அன்றிற்பறவை, குயில்.

இசைப்பெருந்தானம் - இசை பிறக்குமிடம்.

இசைமடந்தை - சரச்சுவதி.

இசைமணி - பதினாயிரப்பேரை வென்ற வேந்தர் வலக்காலிலணியும் பொன்னாற்செய்த வீரகண்டை.

இசைமாத்திரை - இசைக்குரியமாத்திரைகள், அவை குரலிற்கு நான்கும், துத்தத்திற்கு நான்கும், கைக்கிளைக்கு மூன்றும், உழைக்கு இரண்டும், இளிக்கு நான்கும், விளரிக்கு ஒன்றும், தாரத்திற் கிரண்டுமாம்.

இசைமுடி - சிலந்திநாயகம்.

இசைமுட்டி - செருந்தி.

இசையந்தாதி - ஓரலங்காரம், அது ஒரு வசனத்திறுமற்றொரு வசனத்தாதியாகவருவது.

இசையாசிரிய ரிலக்கணம் - இசையாசிரியனுக்குரிய இலட்சணம் அது யாழ்ப்பாடலும், வங்கியப் பாடலும், இருவகைத் தாளக்கூறுபாடல்களும்மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சாரத்தினையுடைய தண்ணுமையும், அகம்புறம் பதினோராடலென்னுங் கூத்துக்களினும் வல்லனாய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரசம்பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களும் பொருளான இயக்கநான்கினையும் அமைத்துத் தேசாந்தரங்களின் கண்ணுள்ள பாஷைகளையும் அறிந்து அந்தப் பாஷைகளிசை பூணும்படியும் இயற்புலவனினைவும், நாடகப்புலவனிடும். வரவுகளும் இவற்றிற்கடுத்த பாடல்களுந் தம்மிற் சந்திப்பிக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல்வழக்கால் விரிக்கவும் வகுக்கவும் திறமுளனாதலாம்.

இசையிலக்கணம் - இசைக்குரிய இலட்சணம். அவை ஆடல், பாடல், ஆதியிசை, முத்தமிழ், பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம் என்பன.

இசையுந்தொழிலர் - சூத்திரர்.

இசையுரிச்சொல் - ஓசையாலறியப்படுங் குணச்சொல் (உ-ம்) கலிசடல்.

இசையுள்ளான் - சிறந்தவன்.

இசையெச்சம் - ஒழிந்ததிற்குஞ் சொற்கொண்டு கருத்து முடிவது.

இசையெஞ்சணி - இசையெச்சம்.

இசையெடுத்தல் - இராகமாரம்பித்தல்.

இசையெழுத்து - இசைக்குரிய எழுத்துக்கள். அவை ச ரி க ம ப த நி.

இசையோசை - இசைக்குரியவோசைகள் அவை வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், தேனு, ஆடென்பன.

இசைவலன் } சங்கீதம் பாடுவதின்
இசைவலான் } மிக்கான்.

இசைவல்லோர் - கந்தருவர், சங்கீத பாடகர்.

இசைவளை - குதிரை நூறு போர்க்களத்திற்பொருதுவென்றமல்யுத்தர் காற்பெருவிரலிலணியும் வளை.

இசைவாணர் - இசைவல்லோர்.

இசைவிரும்பி - அசுணம்.

இசைவு - இணக்கம், சம்மதி, பொருத்து.

இசைவுபிசகு - இணக்கமின்மை, இசகுபிசகு.

இச்சகம் - முகமன்.

இச்சயம் - ஆசை.

இச்சலம் - நீர்க்கடம்பு.

இச்சாசத்தி - பஞ்சசத்தியி லொன்று, அது பஞ்சபூதமாகின்ற உயிர்க்கருணை செய்வது.

இச்சாநாசம் - நிராசை, விரக்தி.

இச்சாபத்தியம்-புறப்பத்தியம், மைதுன முதலிய நீங்கல், விடுபத்தியம்.
இச்சாபோகம் - இச்சித்த வநுபவம்.
இச்சாப்மியகம் - நானிச்சிக்கிறேன்.
இச்சாவசு - குபேரன்.
இச்சாவதி-சந்தனபுஷ்பாதிகளில் மிக்க விருப்பமுள்ளவள்.
இச்சானுவிருத்தி - ஆசையடக்கம்.
இச்சி - இத்திமரம்.
இச்சித்தல் - காமுறல், விரும்புதல்.
இச்சியல் - கடுகுரோகணி.
இச்சியால் - இத்தி, இச்சி, கல்லிச்சி.
இச்சு - ஓரிடைநிலை, விரும்புதல்.
இச்சை - அஞ்ஞானம், ஆசை, இடித்தல், இட்டம், உறுதிச்சொல், பேராசை பொய், விருப்பம்.
இஞ்சம் - வெங்தோன்றிக்கிழங்கு.
இஞ்சல் - இறுகல், சுவறல்.
இஞ்சாகம் - இறால்மீன்.
இஞ்சி - இஞ்சிக்கிழங்கு, ஒருமருந்துப்பூடு, கேடகம், கொத்தான், மதில், வாவி.
இஞ்சிச்சாறு-இஞ்சியிலிருந்தெடுக்குஞ்சாறு.
இஞ்சித்தேறு - இஞ்சித்துண்டு.
இஞ்சச்சார் - வெல்லம்.
இடகலை - சந்திரகலை.
இடக்கயம் - இடக்கியம்.
இடக்கரடக்கல்-சொல்லத்தகாத வார்த்தையை மறைத்துச்சொல்வது.
இடக்கர் - குடம், தாறுமாறுசெய்பவர், தூர்த்தர், நெருங்கல், மறைத்துசொல்.
இடக்கன் - தாறுமாறுசெய்பவன்.
இடக்கியம் - தேர்க்கொடி.
இடக்கு - இழிசொல், எதிரிடை, ஏறுமாறு, குதர்க்கம், சேஷ்டை, தடை, முரட்டுத்தனம்.
இடக்குமடக்கு-குதர்க்கம், தொந்தரை.
இடக்கை - இடதுகரம், ஒரு வாச்சியம், தம்பட்டம், தாறுமாறு, மருதநிலத்தூர்.
இடக்கையான் - அஞ்சாவீரன்.
இடங்கணம்-பொரிகாரம், வெங்காரம்.
இடங்கணி - ஆக்கை, உளி, சங்கிலி.
இடங்கம் - கல்வெட்டியின் உளி, காசு, கொடுவாள்.
இடங்கரம் - மகளிர் குதகம்.
இடங்கர் - குடம், சிறுவழி, தூர்த்தர், நீர்ச்சால், முதலை.
இடங்கழி - ஓராவு, நெருங்கல்.
இடங்கழிநாயனர் - கோனாட்டின்கண்ணுள்ள கொடும்பாளூரிற் சிவனடியார்க் கன்பராயிருந்து அரசியற்றிய சூராசர்.
இடங்கழிமை - ஓராவு, நெருங்கல்.
இடங்கழியர் - காமுகர், தூர்த்தர்.
இடங்காரம்-மத்தினிடப்பக்கம், ஆச்சரியம், கீர்த்தி.
இடங்கெட்டபாவி - ஆதரவற்றவன்.
இடங்கேடு - தரித்திரம், வெறுமை.
இடசாரி - இடச்சுற்று.
இடதந்தம் - இராசயானை.
இடதானன் - கன்னன்.
இடது - இடப்புறம்.
இடத்தல் - அகலப்பண்ணுதல், கிழித்தல், தோண்டல், பிரித்தல், விரிந்து சிற்றல்.
இடத்தாலணையும்பேர் - குறிஞ்சி முதலிய ஐந்திணையைப்பற்றியும், வான் அகம் புறம்முதலிய இடங்களைப் பற்றியும்வரும்பெயர் (உ-ம்) வெற்பன், மறவன், ஆயன், ஊரன், சேர்ப்பன், வானத்தான், அகத்தான், புறத்தான் முதலியன.
இடத்திடல் - சொலித்தல்.
இடத்தையச்சொல்-இடத்தை ஐயப்படுத்துஞ் சொற்கள், அவை யாங்கு, யாண்டு யாங்ஙனம் முதலியன.
இடநாகம் - அடையிருக்கும் பாம்பு.
இடந்தலைப்படல் - கூடல்.
இடந்தலைப்படுத்தல் - கூட்டுதல்.
இடந்தலைப்பாடு-களவுப் புணர்ச்சி நான்கினொன்று. அஃது இடந் தலைப் படுதல்.
இடபக்கொடியோன் - சிவபெருமான்.
இடபப்பிரியை - அறுபத்திரண்டாவது மேளகர்த்தா.
இடபம்-இராச்சின்னத்தொன்று. எருது, ஓரிராசி, சிவன்கொடி, மேற்றிசைப்பாலன்குறி.
இடபவாகனன்-எருமைநாக்கி, சிவன்.
இடபவீதி - சூரியன், மூவகைவீதியி னடுவீதி.
இடபாரூடன் - சிவன்.

இடப்பகுபதம் - ஒரு பகுபதம்.

இடப்பிறிதின்கிழமை - இடம் பற்றிய பிறிதின்கிழமை (உ-ம்) அரசனது மாளிகை.

இடப்பு - இடக்கப்பட்டது, மண்கட்டு, கான் முதலியவற்றை அகலவிடுதல்.

இடப்பொருளிடைச் சொல் - இடப்பொருளைக்காட்டும் இடைச்சொற்கள். அவை கண், கால், கடை, இடை முதலியன.

இடப்பொருள் - ஏழாம் வேற்றுமைப் பொருள்.

இடமரம் - தேசோபத்திரவம்.

இடமலைவு-அலங்காரவழு. அஃது ஓரிடத்துள்ள பொருள் மற்றோரிடத்துளவாகக் கூறுவது.

இடமன் - இடப்புறம்.

இடமாரம் - ஒரு பெரும்பறை.

இடமானம் - மேன்மையான விடம், விசாலமான இடம்.

இடமிடுதல் - பருத்தல்.

இடமிடைஞ்சல் } இடங்கழிமை, ஒடுக்கம், நெருக்கம்.
இடமுடக்கு }

இடமை - பூமி, இடப்பக்கம், இடையினம்.

இடம் - அகலம், ஆகாயம், இடப்பக்கம், இடம்பாடு, இராகத்தகுதிநான்கி ளொன்று. அஃதுஐந்திணையைப்பற்றியது இளக்காரம், ஏது, ஏழாம் வேற்றுமையுருபு (உ-ம்) என்னிடம் ஐப்பசி, சமயம், செல்வம், தலம், தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னு மூவிடம், தூரம், படுத்தல், பெருமை, வலி, விசாலம், வீடு.

இடம்பக்கம் - திரவிய முதலிய வுதவி.

இடம்பம் - பெருமை மேற்பாடு.

இடம்பரம் - இடப்பக்கம், வழிவகை.

இடம்பல் - இடம்புதல்.

இடம்பாடு - செல்வம், பருமை, விரிவு.

இடம்புதல் - விலகுதல், வெறுத்தவிடுதல்.

இடம்புரி - இடைக்கயிறு, இடம்புரிச் சங்கு, சங்கு.

இடம்மானம் - ஒரு பறை.

இடர்-ஆபத்து, இடைஞ்சல், துன்பம்.

இடர்ப்பில்லம் - ஒருவகைப் பில்வரோகம். அது இமையினடியிலும் புருவ மத்தியிலு மிருக்கின்ற நரம்புகளை மஞ்சணிறமாக்கித் தடிக்கப் பண்ணுவது.

இடலம் - அகலம், விசாலம்.

இடலித்தல் - விசாலித்தல்.

இடலிப்பு - அகலம்.

இடலை - துக்கம், துன்பம்.

இடல் - எரிதல், கொடுத்தல்.

இடவகம் - இலவங்கம், பனம்பிசின், மாம்பிசின்.

இடவகை - வீடு.

இடவம் - பூமி.

இடவழு-தன்மைமுன்னிலை படர்க்கை மூவிடத்தைப் பிறழக்கூறல், ஐந்திணைக்குரியவற்றுள் ஒன்றற்குரியவற்றை மற்றொன்றற்குக் கூறுவதுமாம்.

இடவன்-இடக்கப்பட்டது, எதிரிமாடு, மண்கட்டி.

இடவாகுபெயர்-இடத்தினுளத்தை அதனிடத்த பொருட்கு வழங்குவது (உ-ம்) அகம்.

இடவியது - அகலமுள்ளது.

இடவை - வழி.

இடவோட்டு-இடப்புறச்செலவு, இராகு கேதுவின் நடை.

இடறல் - தடைபண்ணல், கிந்தித்தல்.

இடறி - யானை.

இடறு - ஆபத்து, இடரென்னேவல், தடை.

இடறுகட்டை - தடைகாரன்.

இடறுதல்-காலினலெற்றுதல், தடுக்குதல், தட்டுதல்.

இடற்சம் - குக்கில்.

இடனறிந்தொழுகல் - வணிப ரெண்குணத்தொன்று.

இடன் - அகம், இடம்.

இடா - இறைகூடை, ஒரு பொறி.

இடாகினி-காளியேவல் செய்வோன், பிணந்தின்னும் பேய்.

இடாகு - புள்ளி.

இடாசல் } அலைவிற்குதல், அடித்தல், அவமதித்தல், தள்ளல், நெருக்கல், மேற்படல்.
இடாசுதல் }

இடாடிமம் - தாதுமாதுளை.

இடாப்பித்தல் - காலை யகலப் பண்ணி நிற்றல்.

இடாப்பு - அட்டவணை, சவாதுபண்ணினது, பார்த்தெழுதும்பிரதி, பெயர் விலாசம்.

இடாமுடாங்கு - எதிரிடை, ஏறுமாறு, ஒழுங்கின்மை.
இடாம்பீகன் - இடம்பன்.
இடாயர்-இறைகூடை, உலுத்தர், எலி முதலியன பிடிக்கும் பொறி.
இடி-அசனி,இடியென்னேவல், இந்திரன்கொடி, உறுதிச்சொல், ஒலி, சிற்றுண்டி, சுண்ணம், தகரம், திணைநென்முதலியவற்றின்மா, துடிப்பு, மயிர்ச்சாந்து.
இடிகம் - பெருமருந்து.
இடிகரை - அழிந்தகரை.
இடிகைபூமி - யானைவிழி.
இடிக்கொடியன் - இந்திரன்.
இடிசாமம் - கெடுகாலம், கிந்தை.
இடிஞ்சில் - அகல்.
இடிதல் - உடைதல், ஒடிதல், சரிதல், நொறுங்கல்.
இடித்தல் - இடிக்குதல், இடிவிழுதல், உறுதிச்சொல், ஒலித்தல்.
இடித்துரை - உறுதிச்சொல்.
இடிபடல் - இடியுண்ணல், நொறுங்குதல்.
இடிப்பு - ஒலி.
இடிமம் - விக்கணவணி.
இடிமரம் - உலக்கை.
இடியப்பத்தட்டு இடியப்பஞ்சுடுந்தட்டு, இடியப்பம் விற்குந்தட்டு.
இடியப்பம் - ஒரு சிற்றுண்டி.
இடியப்பவுரல் - இடியப்பம் பிழியும் பாத்திரம்.
இடியேறு - இடி.
இடிவு-இடிந்திருப்பது, இழிவு, ஒடிவு.
இடீகை - வியாக்கியானம்.
இடீக்கு-இடம்பம், பிரபலியம், மேன்மை.
இடு - கொடுவென்னேவல்.
இடுகடை - தருமமீயும்வாயில்.
இடுகறல் - விறகு.
இடுகாடு - சுடுகாடு.
இடுகால் - பீர்க்கு.
இடுகிடை - இடுக்கண், நெருக்கம்.
இடுகு - ஒடுக்கம்.
இடுகுதல்-ஒடுங்குதல்,சுருங்குதல், நோ
இடுகுறி - நியமித்த மாத்திரைப்பேர்.
இடுகுறிச்சிறப்புப்பெயர் - இடுகுறியானன்றிக்கேவருஞ்சிறப்புப்பெயர்.
இடுகுறிப்பெயர் - ஒரு காரணமும் பற்றாமல் ஒருபொருளுக்குக் கடவுளாலும் அறிவுடையோராலும் இட்ட குறியாகிய பெயர்.
இடுகுறிப்பொதுப்பெயர்-இடுகுறியாற் பலவற்றிற்குப் பொதுவாய் வரும் பெயர்.
இடுகை - ஈகை.
இடுக்கணி - இடுக்கு.
இடுக்கண்-இக்கட்டு,துன்பம், வறுமை.
இடுக்கப்படல் - ஒடுக்கப்படல், துன்பப்படல்.
இடுக்கப்படுத்தல் - துன்பப்படுத்தல், நெருக்கல்.
இடுக்கம்-ஒடுக்கம், துன்பம், நெருக்கம், வறுமை.
இடுக்கி-இடுக்குவது, உலோபி, குறடு. கொடிறு, சரவணம்.
இடுக்கிடை . நெருக்கம்.
இடுக்கு-இடைஞ்சல், ஒடுக்கம், கொடுக்குகொடுவென்னேவல், சந்து, துன்பம், நெருக்கமான விடம்.
இடுக்குதல் - அணைத்தல், நெருக்கல்.
இடுக்குத்தடி - கிட்டித்தடி.
இடுக்குப்பனை - கள்ளும்பதநீரும் உண்டாக்கும்பனை.
இடுக்குப்பிள்ளை - கைக்குழந்தை.
இடுக்குமரம் - எண்ணெ யூற்றுமரம், கடம்புமரம்.
இடுக்கு-முடுக்குசங்கடம்,மூலை முடுக்கு.
இடுதங்கம் - மாற்றுயர்ந்ததங்கம்.
இடுதண்டம் - பம்பல், வந்தி.
இடுதண்டல் - பம்பல்.
இடுதல் - அணிதல், ஈதல், எறிதல், சொரிதல், நீசமித்தல், வைத்தல்.
இடுதி - அம்புக்கூடு.
இடுதிரை - திரைச்சீலை.
இடுதெண்டம்-தண்டனை, வாராவந்தி.
இடுதேளிடுதல் - தேளிடப்படுவர்காணுமேதேளல்லாதகொன்றை மறையக் கொடுவந்து மேலேயிட்டு அவரைக் கலங்கப் பண்ணுதல், பாய்ச்சுத்தேளுமாம்.
இடுப்பு - இடை, பக்கம்.
இடுமருந்து - கைமயக்கு மருந்து.
இடுமுடுக்கு - நெருக்கமானவிடம்.
இடுமோலி - மலையாளக்கரையில் உற்பத்தியாகிற ஒருமரம்.
இடும்பர் - ஒருவகைஇராக்கதர், செருக்கர் துயர்செய்வோர்.

இடம்பன் - ஓரரக்கன், குமரனேவல் செய்வோன்.
இடம்பி - இடம்பன்தங்கை, ஓரிராக்ஷசி, செருக்குடையாள்.
இடம்பிகேள்வன் } வீமன்.
இடம்பிகொழுநன் }
இடம்பில் - ஓரூர்.
இடம்பு - அகந்தை, அவமதி, அன்பம், தோகோபத்திரவம்.
இடம்பை - அச்சம், ஆபத்து, தரித்திரம், தவறு, துன்பம், பொல்லாங்கு, விகாரமெட்டியென்று.
இடவி - பெண்ணுறை.
இடவந்தி-அதீதம், நெருக்கிடை, வாராவந்தி.
இடவேற்றி - இடைத்தட்டு.
இடை - அளவு, இடமூக்கினிற்கும் நரம்பு, இடம், இடையர்க்குரியது, இடைச்சொல், இடையென்னேவல், எழனுருபு, சமயம், சுவாசத்திற் சந்திரகலை, சுற்றுடல், தசநாடியிலொன்று, நடு, நிறை, முசுப்பு, பக்கம், பௌரணை, மருங்குல், யானை.
இடைகடை - மத்தியாந்தம்.
இடைகலை-இடைமூக்கால்வருஞ் சுவாசம், இடமூக்கினிற்கும் நரம்பு.
இடைகழி - வாயில்.
இடைக்கச்சு } அரைக்கச்சை.
இடைக்கட்டு }
இடைக்கணம் -இடையினவெழுத்துக்கள் அவை ய ர ல வ ழ ள என்பன.
இடைக்கருவி - சல்லி.
இடைக்காடன் - ஒரு சித்தன்.
இடைக்கிடை-ஊடையூடை, ஒன்றை விட்டொன்று, நிறைக்கு நிறை.
இடைக்குலநாதன் - விட்டுணு.
இடைக்குலம் - இடையரது குலம்.
இடைக்குறை-இடையிற் குறைந்துநிற்கு மொழி.
இடைக்குன்றூர்கிழார் - நெடுஞ்செழியனது போர்த்திறம் பாடிய புலவர்.
இடைக்கொள்ளை - அவமிருத்தாய்ச் சாதல், இடையிலே வாருதல்.
இடைசுருங்குபறை - உடுக்கை.
இடைசுரி - அழுப்பு வளையம்.
இடைச்சங்கப்புலவர்-அகத்தியன் முதலிய ஐம்பத்தொன்பதின்மர்.
இடைச்சங்கம் - மதுரையில் இரண்டாவதாயிருந்த சங்கம்.
இடைச்சனி - பூரநாள். [ன்.
இடைச்சன்-இரண்டாம்பேறு, நடுமக
இடைச்சி - முல்லைநிலப்பெண், இடையை யுடையவள்.
இடைச்சீலை - திரைச்சீலை.
இடைச்சுரநாதர்- திருவிடைச்சுரத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
இடைச்சேரி - இடையரூர்.
இடைச்சொல்-பெயர்வினைகளோடே சார்ந்து வழங்குஞ்சொல்.
இடைச்சொற்பகாப்பதம் - ஒரு பகாப்பதம்.
இடைச்சொற்பொருள்கோள் - தெரிநிலை முதலிய இருபத்தொன்பதுவிதப் பொருள்கோள்.
இடைச்சோழகம்-மதுகாற்றுக்கிடையிலே வீசுந் தென்றல்.
இடைஞ்சல் - இக்கட்டு, நெருக்கிடை, வருத்தம்.
இடைதரம் - இடைத்தரம்.
இடைதல் - சிலை, தோற்குதல், பின்வாங்குதல், வசங்கெடுதல்.
இடைத்தட்டு - இடையிலே காரியம் பார்த்தல், சஞ்சாயம்.
இடைத்தரம் - நடுத்தரம்.
இடைத்திரிசொல்-இயற்சொற்போற் றம்பொருள் விளக்காது அரிதுணர் பொருளனவாய் நிற்கும் இடைச்சொல் (உ-ம்) சேறும்.
இடைத்தொடர்க்குற்றியலுகரம்- மொழிக்கீற்றியலில் வல்லெழுத்துக்களோடு தொடராக வகர நீங்கலாகவுள்ள இடையெழுத்துக்கள் ஐந்தனுள்ளே ஏதேனும் ஒன்று தொடரீற்றிலுள்ள வல்லின மெய்களின் மேலூர்ந்து தன் மாத்திரையிற் குறைந்தொலிக்கும் உகரம்.
இடைத்தொடர்க்குற்றுகரம் - ஒரு குற்றுகரம்.
இடைநடு - ஊடை.
இடைநரை-இடைக்கிடையே நரைமயிரிருப்பது.
இடைநிலை - இடையிற்படுத்தாவு, பகுபதக்களி னிடையே நிற்பது.

இடைநிலைத்தீபகம்-ஒரலங்காரம், அஃது தீபகம் சொல்லிடையினிற்பது.
இடைநிலைப்பாட்டு - தாழிசை.
இடைநிலைமயக்கு - மெய்யொடு மெய்யேனும் உயிரொடு மெய்யேனுமொழிக்கிடை மயங்கி வருதல்.
இடைநிலையெழுத்து - சொற்களுக்கிடையே மயங்கி வாத்தகு மெழுத்துக்கள்.
இடைநீரினிற்றல் - நீரினீந்திநிற்றல்.
இடைப்பக்கம் - ஒக்கல்.
இடைப்படல் - இடையிலுண்டாதல்.
இடைப்படுதல் - வழியிற் சந்தித்தல்.
இடைப்படுதானம்-மூவிதத் தானங்களிலொன்று. அது ஆதுலர், புருடர், மாதர் முதற் பிறர் சிறுமையைப் பற்றி மனமிரங்கி யீவது. [ம்.
இடைப்பழம் இடையிடை பழுத்தபழ
இடைப்பழுப்பு-பச்சைகலந்த பழுப்பு, முற்றும் பழாதது.
இடைப்பானிலம் - குழிதோண்டிய விடத்து மண்மிகாமலும் குறையாமலும் இருக்கு நிலம்.
இடைப்பிறவரல் - எழுவாய் முதலிய தொன்றினுள் இடையிலேற்ற பிற சொல்வரல்.
இடைப்புணரளபெடை - நடு விருசீர்க்கண்ணும் அளபெடை வருவது.
இடைப்புணரியைபு - நடுவிரு சீர்க்கண்ணு மியைபு வருவது.
இடைப்புணரெதுகை - நடு விருசீர்க்கண்ணும் எதுகை வருவது.
இடைப்புணர்முரண் - நடுவிருசீர்க்கண்ணு முரண் வரத் தொடுப்பது.
இடைப்புணர்மோனை-நடுவிருசீர்க்கண்ணு மோனைவரத் தொடுப்பது.
இடைப்புழுதி - ஈரங்கலந்த புழுதி.
இடைப்புள்ளி - இடைவரி.
இடைப்பூட்டு - அரைப்பூட்டு.
இடைப்போகம்-இடையிற் புன்செய்ப் பயிர் விளைவு.
இடைமடக்கு - இடக்குமடக்கான பேச்சு இடையிற் றடுக்கை, ஓரலங்காரம். அஃது இடைமுற்று மடக்கி வருவது.
இடைமுள்-இடைப்பரு, ஒருசாப்பன்.
இடைமேடு - நடுத்தரமான மேடு.

இடைமை-இடையின வெழுத்துக்கள்.
இடையர் - முல்லை நிலமாக்கள்.
இடையல் - ஒதுங்கல், தாழல், நல்லாடை, பின்னிடல், மெலிதல்.
இடையறல்-நடுவே முடிந்து போதல்.
இடையறுவன்பு - முடியாவன்பு.
இடையன்கால்வெள்ளி-ஒருவிண்மீன்.
இடையாகெதுகை-அடிதோறு மிடையிலே யாகு மெதுகை.
இடையாந்தரம் - நடு.
இடையாபரணம் - அரைப்பட்டிகை.
இடையாமர் - மத்திமர்.
இடையிடல் - நடுவிற்றோன்றல்.
இடையிடுதல் - ஊடேசம்பவித்தல்.
இடையிடை - இடைக்கிடை.
இடையிட்டுவண்ணம் - எதுகைத்தாது.
இடையிட்டெதுகை-அடிகளொன்றைவிட்டொன்றெதுகையொன்றி வருவது.
இடையியற்சொல்-செந்தமிழ் நிலத்து மொழிகளாய்ச் செய்யுளினும் வழக்கினுகின்ற தம்பொருளை இயல்பாய் விளக்கு மிடைச்சொல்.
இடையினமோனை - இடையெழுத்துக்களொன்றிற்கொன்று மோனையாய் வருவது.
இடையினம் - இடையெழுத்துக்கள்.
இடையீடு - இடையிட்டுக்கொண்டது, ஊறுபாடு, தடை.
இடையூறின்மை-தடையின்மைஅஃது ஈச்சரனெண்குணத்தொன்று.
இடையூறு - இடர், ஊறுபாடு, தடை.
இடையெண்-சிந்தடி, ஓரடியாக எட்டு
இடையெழுஞ்சனி-பூரநாள். [வருவது.
இடையெழுத்து - வல்லோசை மெல்லோசை இரண்டிற்கும் இடைநிலைமையா யுச்சரிக்கு மெழுத்து.
இடையொடு கடைமடக்கு - ஓரலங்காரம்-அஃது அடிகளினிடையுங்கடையும் அடக்கி வருவது.
இடைவழக்கு - எதிரிக்கும் வழக்காளிக்கும் இடையிலே யேறொருவன் தொடர்தல், கிளைவழக்கு.
இடைவழி - பாதிவழி. [எழுவர்.
இடைவள்ளல்-கேட்டன கொடுப்போர்
இடைவிடல் - விட்டுவிட்டுத் தொடங்க
இடைவிடாமல் - ஓயாமல். [ல்.

இடைவிடாமழை - ஓயாமழை.
இடைவு - தோல்வி, நீக்கம், வெளி.
இடைவெட்டு-இடையிலே பெறுதல்.
இடைவெட்டுப்பணம்-பொறுக்கி யெடுத்தபணம், மாறுமுத்திரை விழுந்த பணம்.
இடைவெட்டுப்பேச்சு - நிந்தனை.
இடைவெளி - ஊடுவெளி, நடுவெளி.
இடோலி - ஒருவகைச்சிவிகை.
இடோல் - ஒருபறை.
இஷ்டகந்தம் } வாசனை.
இட்டகந்தம்
இஷ்டகாபதம் - வெள்வெட்டிவேர்.
இஷ்டகாமியம் } இச்சித்தபொருளை நினைத்தபடிபெறுதல்.
இட்டகாமியம்
இட்டங்கட்டல்-இராசிநிலை வரைதல்.
இஷ்டசட்டம் } யதேச்சை.
இட்டசட்டம்
இஷ்டசித்தி } அழகர் மலையின்கண்ணுள்ளஒருபொய்கை.
இட்டசித்தி
வினைத்தகாரியம் முடிவு பெறுதல்.
இட்டடை-இட்டிடை,கடைச்சல்மரம்.
இஷ்டதேவதை } குலதேவதை,தான் வழிபடுதெய்வம்.
இட்டதேவதை
இஷ்டபோகம் } தன்னிடம் விரும்பிய போகம்.
இட்டபோகம்
இஷ்டப்பிரசாதம் } கைம்மாறு வேண்டாக் கொடை.
இட்டப்பிரசாதம்
தேவகிருபை, தொடர்ந்த வன்பு, யாகசேடம்.
இஷ்டம்-ஆயணக்கு, இட்டம், சடங்கு, யாதபலி, யாகம், விடுதலை.
இட்டம் - அடிமைவிடுதலை, அன்பு, இச்சைப்படி, கிரக நிலையாலாகும் பலாபலன்.
இஷ்டம்வைத்தல் } இட்டங்கட்டல்.
இட்டம்வைத்தல்
இட்டலி - ஒரு பண்ணிகாரம்.
இட்டலிடைஞ்சல்-இடையூறு, தரித்திரம், துன்பம்.
இட்டளம் - உவாதி, தளர்வு, துன்பம்.
இட்டறுதி - நியமித்தவெல்லை, முட்டு, வறுமை.
இஷ்டி - யாகம்.
இட்டி - இஷ்டி, ஈட்டி, செங்கல், விருப்பம்.
இட்டிகை - இடுக்குவழி, கூட்டு மெழுகு, செங்கல்.
இட்டிடை-அற்பம், கடைச்சற்கருவியினொருறுப்பு, சிறுமை, தரித்திரம்.
இட்டிடைஞ்சல் - இட்டறுதி, முட்டு.
இட்டியம் - பாகம்.
இட்டிவனம் - ஒருசடங்கு.
இஷ்டு - விருப்பம்.
இட்டு-அசைச்சொல், அற்பம், இஷ்டு, நுண்மை.
இட்டுக்கட்டிக்கொள்ளல் - குறைவாய் மதித்தல்.
இட்டுக்கட்டிப்பேசுதல் - இல்லாததை நியமித்துப் பேசுதல்.
இட்டுப்புகுதல் - தேசக்காலிருபத்து நான்கனுளொன்று.
இட்டுவரம்-விரையடித்த எருது. [ம்.
இட்டுறுதி - ஆபத்காலவுதவி, கண்டித
இட்டேற்றம் - அநீதம், முழுப்பொய்.
இட்டொருசட்டு - இட்டம்.
இட்டோடல் - நீங்கல்.
இட்டோடு - பிரிவு.
இட்டோடுதல் - பிரிதல்.
இட்டோட்டல் - அலைக்கழித்தல், தொந்தரை பண்ணல். [ரை.
இட்டோட்டு - அலைக்கழிவு, தொந்த
இட்டோட்டுதல்-அலைக்கழித்தல்,தொந்தரைபண்ணல்.
இஷ்வாசம் - வில்.
இணக்கம் - இசைவு, சம்மதம், சேர்மானம், திருத்தம்.
இணக்கல் - உடன்படுத்தல்.
இணக்கு-இணக்கென்னேவல், இயைவு, சம்மதி.
இணக்குதல் - உடன்படுத்தல்.
இணக்கோலை-உடன்படிக்கைப் பத்திரம், பொருத்தோலை.
இணங்கலர் - பகைவர்.
இணங்கல் - உடன்படுதல்.
இணங்கன் - வெடியுப்பு.
இணங்கார் - பகைவர்.
இணங்கி - தோழி. [சம்.
இணங்கு - இணங்கென்னேவல், பிசா
இணங்குதல் - சம்மதித்தல், பொருந்துதல்.
இணபம் - யாக்கைக்குற்றம், பதினெட்டில் ஒன்று.

இணைஎரி - பலசுடருள்ள நெருப்பு.
இணர் - இணரென்னேவல், கிச்சிலி மரம், குலை, தளிர், பூங்கொத்து, பூந்தாது, பூமலர், மாமரம்.
இணறு - பூ.
இறைட்டு - ஓலைத்தளிர், ஓலைத்தண்டு, குறைட்டு, மீன்செவுள்.
இறைப்பல் - எய்த்தல்.
இறைப்பு - எய்ப்பு.
இறைப்புதல் - எய்த்தல்.
இணி - எல்லை, எணி, கண்ணறு.
இணுக்கு - இரண்டோலைகளினிடை, இணுக்கப்பட்டது, கிளை முதலியவைகளின் இடைச்சந்து குலையினெட்டு, கைப்பிடியளவினுக் ககப்பட்டது, வளார், வெளி.
இணுக்குதல் - இசித்தல்.
இணுங்கல் - ஒடித்தெடுத்தல்.
இணுங்குதல் - இணுக்குதல்.
இணை - இசைவு, இச்சை, இரண்டு உவமை, கூந்தல், சகாயம், சோடு, துணைபிணையென்னேவல், வதில்.
இணைக்கயல் - அட்டமங்கலத்தொன்று இராசசின்னத்தொன்று.
இணைக்கல்லை-பரிமாறின இரட்டையிலை.
இணைக்குப்போதல் - இணையாகப்போதல்.
இணைக்குறளாசிரியப்பா - அகவற்பாவுளொன்று. அஃது ஈற்றடியும் முதலடியு மளவொத்து நடுவடிகளுள் ஒன்றும் பலவும் ஒருசீரும் பலசீருங் குறைந்து வருவது.
இணைதல்-இசைதல், சேர்தல், சையோகஞ் செய்யல், பொருந்தல்.
இணைத்தல்-உவமித்தல், சேர்தல், தொடுத்தல்.
இணைப்பு-இசைப்பு, சேர்ப்பு.
இணைமணிமாலை-ஒரு பிரபந்தம். அஃது வெண்பாவும் அகவலும் வெண்பாவுங்கலித்துறையுமா யிரண்டிரண்டாக இணைத்து வெண்பா அகவலிணைமணிமாலை எனவும் வெண்பாக்கலித்துறை யிணைமணிமாலை எனவும் நூறு நூறு அந்தாதித்தொடை நான்காலும் பாடுவது.
இணைமுரண், இணைமுரண்டொடை - முதலடிசீர்க்கண்ணு முரண்வருவது.

இணைமோனை, இணைமோனைத்தொடை - முதலிருசீர்க்கண்ணு மோனை வருவது.
இணையசை - நிரையசை.
இணையடி - உபயபாதம், ஓரலங்காரம், அஃது இருசிரொன்றாய் வருதல்.
இணையணை - பலவானவணை.
இணையல் - இணைதல்.
இணையளபெடை, இணையளபெடைத்தொடை - முதலிருசீர்க்கண்ணும் அளபெடை வருவது.
இணையாவினைக்கை - ஒற்றைக்கை.
இணையியைபு - அடிகளினீற்றசை யிரண்டுமொத்து வருவது.
இணையெதுகை, இணையெதுகைத்தொடை - முதலிருசீர்க்கண்ணு மெதுகை வருவது.
இணையெழுத்து - போலியெழுத்து.
இணைவிழைச்சு-கற்பின்மையாய்க்கொள்ளுமிச்சை, காமம், ஸ்திரீ புருஷர் இருவருக்கு மொத்த வின்பம்.
இணைவு - ஒன்றிப்பு, கலப்பு, சேர்மானம், புணர்ச்சி.
இண்டஞ்செடி-இண்டு, அது செவ்விண்டு வெள்ளிண்டென இருவகை.
இண்டர்-இடையர், சினேகர், சுற்றம்.
இண்டு ஈகைக்கொடி, சிக்கிலிச்செடி.
இண்டை - ஈகைக்கொடி, தாமரை, மாலை, முல்லை, புலிதொடக்கி.
இதக்குதல் - இதாகிதம், கவ்வுசுவ்வு.
இதணம், இதண் - அட்டாலை, காவற்பரண், பரண்.
இதமாகாரவிர்த்தி-இஃதெனும் வடிவஞானம்.
இதமித்தல் - ஒன்றித்தல்.
இதமிப்பு - ஒன்றிப்பு.
இதமியம் - இதப்படுதல், இனிமை, திருத்தி.
இதம்-இனிமை, உரிமை, சொல், நன்மை.
இதம்பண்ணல் - இன்பஞ்செய்யல்.
இதயம் - மனம்.
இதரபதார்த்தம் - வேறு வஸ்துக்கள்.
இதரபதார்த்தானவச் சின்னவான்மா-தேகப் பிணிப்பில்லாத ஆத்துமா, மறுமைக்கடுத்த வாத்துமா.
இதரமதம் - புறசமயம்.

இதரம்-அழிவு, அன்னியம், ஈனம்,ஒரு மருந்து, கீழ்மை, தீங்கு, பாதரசம், வித்தியாசம்.
இதரயோகவிவச்சேதம் - பிரிகிலே.
இதரர் - அந்நியர், கீழ்மக்கள்.
இதரவிதரம்-அன்னியோன்னியம், இதரேதர வுவமை.
இதரன் - அற்பன், அந்நியன், நீசன்.
இதரேதரக்கிரியை-தடுமாறுதொழில்.
இதரேதரம்-அன்னியோன்னியம், இதரேதர வுவமை.
இதரேதரவுவமை-ஓரலங்காரம், அஃது பொருளொருக்கால் உவமையாய் உவமை யொருக்கால் பொருளாய் ஒரு தொடர்க்கண் வருவது.
இதலே - கொப்பூழ்.
இதல் - கவுதாரி, காடை, சிவல்.
இதவு - இதம், முகமன்.
இதழவிழ்தல் - மலரல்.
இதழி - கொன்றை.
இதழ்-இலே, உதடு, கண்ணிமை, கதவினிலே, பனையேடு, பாளை, பூவிதழ்.
இதழ்குவிதல் - உதட்டைக் குவித்தல், கண்மூடுதல், மலர்மூடிக்கொள்ளல்.
இதழ்விள்ளல் - பேசல், மலரல், வாய் திறத்தல்.
இதன் - இரதம், சிறுதூறு.
இதாகிதம் - நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு.
இதார்த்தம் - எதார்த்தம்.
இதி-அத்தாட்சி, இப்படி, உறுதி, காரணம், பிரகாசம்.
இதிகாசப்பிரியர் - நைமிசாரணியர், வேதவியாசர்.
இதிகாசம்-அறிவு, கலைஞானமறுபத்துநான்கினுென்று, பழங்கதை, மேற்கோள்.
இதிகாசன் - சூதமாமுனி,வேதவியாசன்.
இதிகை-பரம்பரையாய்வந்தவுபதேசம்.
இதியாசம்-அறிவு, உதாரணம், கலைஞானமறுபத்து நான்கினுென்று, பழங்கதை.
இது-இஃது, சுட்டுச்சொல்.
இதை-கலப்பை, காராமணி, புதுக்கொல்லே, மரக்கலப்பாய்.
இதைப்புனம் - புதுக்கொல்லே.
இத்தி-இச்சிமரம், கல்லால், அவர்பத்தினுென்று.
இத்திகடையம் - நத்தை.
இத்தியாதி - இதுமுதலானவை.
இத்து-காவட்டம்புல்.
இத்துமம் - சமித்து.
இத்துமா - விக்கல்.
இத்துமாபித்தம்-ஒருவகைப் பித்தநோய். அது மாருவிக்கல், சோகை,வெப்பம், மூர்ச்சை, வியர்வை, உள்ளங்கால், உள்ளங்கை ஆகியவைகளிற் கொப்பளம், சாசரப்பு, இருமல், சுவாசம், தலைநோவு, சுரம், தேகச் சிலிர்ப்பு, புத்திப்பிரமை ஆகிய இக்குணங்களை உண்டாக்கும்.
இத்தாா - காவட்டம்புல்.
இத்தரு-ஈயமணல், காவட்டம்புல், வங்கமணல்.
இத்துவரம் - எருது.
இத்துவரன் - நீச்சன்.
இத்துவரி - வியபிசாரி.
இத்துவாகன்-அகத்தியன்பௌத்திரன்
இத்தை - முன்னிலையசைச்சொல்.
இந்தம் - புளியமரம்.
இந்தம்பரம் - நீலோற்பலம்.
இந்தரி - இராகு.
இந்தளம் - ஒருபண், தூபக்கால்.
இந்தளூர் தூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்று.
இந்தனம் - காடு, சுவாலே, நறும்புகை, மேல், விறகு.
இந்தஞேடை - உத்தரீயம்.
இந்தா-இங்கேவா,இதைவாங்கிக்கொள்
இந்தி - இலக்குமி, பூனே.
இந்திகோபம் - ஈயம்.
இந்திந்திரம் - வண்டு.
இந்தியம் - இந்திரியம், புலன்கள்.
இந்திரகணம் - மூன்று நேரசைகூடிய சீர். அஃது இயமானகணமெனவும் படும்.
இந்திரகம்-சங்கமண்டபம்.
இந்திரகாளியம் - யாமளேந்திர முனிவர் செய்த இசைநூல்.
இந்திரகிரி - ஒருமலே. அது தூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றுகிய திருப்பேர் நகரிலுள்ளது.
இந்திரகீலம் - மந்தரமலே.
இந்திரகுஞ்சரம் - இந்திரன்யானே.
இந்திரகுதிரை - உச்சைச்சிரவம்.
இந்திரகொடி - இடி.

இந்திரகோ - காமதேனு.
இந்திரகோபம் - தம்பலப்பூச்சி.
இந்திரசத்தி - இந்திராணி.
இந்திரசாபம் - வானவில்.
இந்திரசாலம் - அற்புதங்களைக் காட்டும் வித்தை, எத்து, ஒருநூல், கலைஞான மறுபத்திநான்கினென்று.
இந்திரசாலி - அழிஞ்சில், இந்திரசால வித்தைக்காரன்.
இந்திரசித்து-இந்திரனைச் சயித்தவன், இராவணன்மகன், கருடன், கிருஷ்ணன்.
இந்திரசிற்பம் - சிற்பநூலிலொன்று.
இந்திரசுகந்தம் - நன்னாரி.
இந்திரசுதன்-அருச்சுனன், சயந்தன், வாலி.
இந்திரசுரசம் - நொச்சில்.
இந்திரசேனன்-நளன்மகன், தருமன், சாரதி, சூரியன் மகன்.
இந்திரசேனை - மெத்கல்லியர்பாரி, அரோபதை, நளன்மகள்.
இந்திரதனு - வானவில்.
இந்திரதாமேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இந்திரதிசை - கிழக்கு.
இந்திரதிரு - மருதமரம்.
இந்திரதீர்த்தம் - நூற்றெட்டுத்திருப்பதிகளு ளொன்றாகிய திருப்பேர் நகரிலுள்ள ஒரு புண்ணியதீர்த்தம்.
இந்திரதுவசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இந்திரத்துயுமனம்-ஒருவாவி, இது இந்திரத்துயுமன னென்னுமரசன் தானஞ்செய்த ஆடுமாடுகளின்று பள்ளமாகியதால் வாவியாயிற்று.
இந்திரத்துயுமனன் - இருஷபன்பௌத்திரன், பரதன்புத்திரன், இவன் அகத்தியர் சாபத்தால் யானையாகி முதலைவாயிற் சிக்குண்ட சமயத்தில் விஷ்ணுவா லிரட்சிக்கப்பட்டான்.
இந்திரநகரி - தணிகைமார்க்கம்.
இந்திரநான் - கேட்டை.
இந்திரநீலம் - ஒரிரத்தினம்.
இந்திரபடை - வச்சிராயுதம்.
இந்திரபண்டாரம் - சுதனனு.
இந்திரபதம் } தேவலோகம்.
இந்திரபதி }

இந்திரபம் - பாலை- வெட்பாலை.
இந்திரபாஷாணம்-வைப்புப் பாஷாண முப்பத்திரண்டினொன்று.
இந்திரபிரக்கணம்-இடியேறு, ததிசியின் முதுகெலும்பினலாய வச்சிராயு [தம்.
இந்திரபுசிப்பி-வெங்தோன்றி.
இந்திரபுஷ்கரிணி - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய மணிமாடக் கோயிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம், மேற்படி திருப்பதிகளுளொன்றாகிய சீரீவரமங்கையிலுள்ள தீர்த் [தம்.
இந்திரபுஷ்பம்-வெங்தோன்றி.
இந்திரபூதம் - ஒருவகைப்பூதம்.
இந்திரப்பிரஸ்தம் - பாண்டவர் நகரம். அது பழய டில்லி நகரம்.
இந்திரப்பிரமிதி-வியாசசிஷனாகிய பயிலவன் சிஷன். இவன் இருக்குவேத சங்கிதையை நான்கு பாகமாக்கி பாஷ்கலன், போத்தியன், யாஞ்ஞவற்கியன், பராசரன், மாண்டுகேயன், அக்கினிமதி என்பவர்களுக்கு பதேசஞ் செய்தவன்.
இந்திரப்பிரியம் - பொதியமலையிலுண்டான மஞ்சணிறமுள்ள சந்தனம்.
இந்திரமண்டபம் - சயந்தம்.
இந்திரமாசாலம் } இந்திரசாலம்.
இந்திரமாஜாலம் }
இந்திரமாளிகை - வசந்தம்.
இந்திரம் - ஆத்துமா, இந்திரியம், இராகடப்பமரம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று, நவகண்டத்தொன்று, மாயம், மேன்மை, வண்டு.
இந்திரயவம் - வெட்பாலை யரிசி.
இந்திரயாணி - இந்திராணி.
இந்திரர் - தேவர்.
இந்திரலோகேசன் - இந்திரன்.
இந்திரவணி - சங்கநிதி, பதுமநிதி.
இந்திரவதி - கோதாவிரியுடன் கலக்கும் ஒருபநதி.
இந்திரவம் - சருக்குவளை.
இந்திரவல்லி-கொற்றான், முடக்கொற்றான், பிரண்டை.
இந்திரவாகனம் - மேகம்.
இந்திரவாகனன் - கருத்தன்.
இந்திரவாசம் } நெய்தல்.
இந்திரவாமம் }
இந்திரவாருணி - பேய்த்தும்மட்டி.

இந்திரவிகூடல் } அமாவாசி.
இந்திரவிகூட்டல் }
இந்திரவியாகரணம் - இந்திரன்செய்த ஒரு ஸம்ஸ்கிருத இலக்கணம்.
இந்திரவில் - வானவில்.
இந்திரனூர் - தேவலோகம், பொன்னாங்காணி.
இந்திரன்-அதிதியிடத்திற் காசிபப் பிரசாபதிக்குப் பிறந்த பன்னிரு புத்திரர்களு ளொருவனாகிய தேவேந்திரன், கடவுள், தலைவன், மிருகசீரிடம், வாசவன்.
இந்திரன்மைந்தன்-அருச்சுனன், சயந்தன்.
இந்திராட்சி - பார்வதி.
இந்திராணி-இந்திரன்மனைவி, நொச்சி
இந்திராணிகை - நொச்சிமரம். [ல்.
இந்திராணிப்பூ-கையணியி னொருறுப்பு.
இந்திராபரசன் - உபேந்திரன்.
இந்திராயுதம்-சருங்கட்குதிரை, வச்சிராயுதம், வானவில்.
இந்திராரயர் - அசுரர்.
இந்திராரி - இராக்கதன்
இந்திராவரசன் } விட்டுணு.
இந்திரானுசன் }
இந்திரி - காந்தம், கிழக்கு, நன்னாரி.
இந்திரியகிராமம்-பஞ்சேந்திரியக் கூட்டம்.
இந்திரியகோசரம்-புலனுக்கெட்டியது.
இந்திரியக்காட்சி - பண் முதலிய புலனால் அறிதல்.
இந்திரியஸ்கலிதம்-இந்திரியம் வெளிப்படுகை.
இந்திரியத்துவாரம் - பொறிவாயில்.
இந்திரியநிக்கிரகம்-இந்திரியமடக்கல்.
இந்திரியநுகர்ச்சி } ஐம்புலனுகர்ச்சி.
இந்திரியபோகம் }
இந்திரியப் பிரத்தியட்சம்-பஞ்சேந்திரியக்காட்சி.
இந்திரியம் - சுக்கிலம், தாது, பஞ்சவிந்திரியம், பொறி.
இந்திரியவம் - வெட்பாலை.
இந்திரியவருக்கம்-பஞ்சேந்திரியம். [சி.
இந்திரியவிப்பிரதிபத்தி - திரிப்புக்காட்
இந்திரியாசங்கம்-அனுபவவெறுப்பு.
இந்திரியாபதனம் - உடல்.
இந்திரேகம் - வெட்பாலை.
இந்திரேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
இந்திரேபம் - வெட்பாலை.
இந்திரேயம் - வெட்பாவட்டை.
இந்திரை - அரிதாரம், இலச்சுமி.
இந்திரகேள்வன் - திருமால்.
இந்திரைக்குமூத்தாள் - மூதேவி.
இந்தீவரம்-கருங்குவளை, கருநெய்தல்.
இந்தீவரம் - விஷ்ணு.
இந்தீவராக்ஷசன் - நளநாபனென்னுங் கந்தருவராசன்மகன், வருதினி தம்பி; இவன் கபடோபாயத்தினாலோரிருடியை அடைந்து ஆயுள்வேதத்தை முற்றக்கற்ற பின்னர் இக்குருவை இகழ்ந்ததனால் இராக்ஷசரூபம் பெறுமாறு சபிக்கப்பட்டுப் பின்னர் ஈசுவரரோசியினால் அச்சாபவிமோசனம் பெற்றவன்.
இந்தீவரீ - தண்ணீர் முட்டான்.
இந்து - இந்துப்பு, எட்டி, காடி, சரி, கௌரிபாஷாணம், சந்திரன், சிந்துநதி, பச்சைக்கருப்பூரம்.
இந்துகமலம் - வெண்டாமரை.
இந்துகாந்தம் - சந்திரகாந்தக்கல்.
இந்துசனகம் - சமுத்திரம்.
இந்துசேகரன் - சிவன்.
இந்துதலம் - சந்திரன்கலை.
இந்துதேசம் - சிந்துதேசம்.
இந்துஸ்தானம் } ஒரு பாடை.
இந்துஸ்தானி }
இந்துபம் - மிருகசீரிடம்.
இந்துபுஷ்கரிணி-நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய இந்தளூரிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம்.
இந்துபுத்திரன் - புதன்.
இந்துப்பு - ஒரு மருந்துச்சரக்கு.
இந்துமதி-விதர்ப்பராஜன் குமாரி, அஜன்மனைவி, தசரதன்தாய், பூரணை.
இந்துரத்தினம் - முத்து.
இந்துரம் - எலி.
இந்துரவிகூட்டம் - அமாவாசியை.
இந்துரு - பெருச்சாளி.
இந்துரேகை } சந்திரன்கலை.
இந்துலேகை }
இந்துலோகம் - வெள்ளி.
இந்துவவரீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இந்துவாரி-தண்ணீர்மிட்டான், சாத்தாவரி.
இந்துழி - பெருங்காயம்.
இந்துளம் - கடப்பமரம், நெல்லி.
இந்துளி - நெல்லி, பெருங்காயம்.
இந்துள் - நெல்லி.
இந்துறு - இலந்தை.
இந்தோளம் - ஊசல், ஓரிராகம்.
இந்நாள் - அந்நியநாள், இன்று.
இபங்கம் - புளிமா.
இபபாலகன் - யானைப்பாகன்.
இபம் - மரக்கோடு, யானை.
இபவ - விபவ.
இபியன் - தனவான்.
இபேரகம் - பதினன்கு வயதுள்ள யானை.
இப்பக்தி-உலோபி, பலவீனன், பேடி, வகை தெரியாதவன்.
இப்பந்தியாடு - ஒருவகையாடு.
இப்பர்-இடையர், உழவர், செட்டிகள், வைசியர், பொது.
இப்பவம் - இப்பிறப்பு.
இப்பால் - இந்தப்பக்கம், இனிமேல்.
இப்பி - சங்கு, சிப்பி.
இமகரன் - சந்திரன்.
இமகிரி - இமாசலம்.
இமசானு - இமயமலை, இமயமலையின் மேற்பரப்பு.
இமபடி - சூரியன்.
இமப்பிரவை-எழ்நரகவட்டத்தொன்று, அஃது குளிர்நிலம்.
இமம் - உறைந்தபனி, குளிர், சீதளம், பொன்.
இமயகிரி - இமாலயமலை. இது பாரதவருஷத்துக்கு வடக்கெல்லையாகவுள்ளது பூவுலகத்துள்ள மலைகளுளுயர்ந்து வளஞ்சிறந்ததாதலின் இம்மலை பருவதராஜனெனவும் பெயர்பெறும், இம்மலையரசன் இமவானெனப் படுவன். இம்மலையில் மகா விருடிகளும் யோகிகளும் சித்தர்களும் வசிப்பார்கள்.
இமயமடக்கொடி - திரு இடைச்சுரத்திற் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
இமயம்-இமயமலை, பொன்மலை.
இமயவல்லி - பார்வதி.
இமயவில்லி - சிவன்.
இமலம் - மரமஞ்சள்.
இமவாலுகை - பச்சைக்கருப்பூரம்.
இமவான் - மலையரசன்.
இமாசலம் }
இமாலயம் } இமயமலை.
இமிசை - எளிமை, கொல்லுதல், சங்கையீனம், வருத்தம்.
இமிர்தல்-ஒலித்தல், முரிதல், மொய்த்தல்.
இமில்-எருத்திநேரி,குட்டேறு.
இமிழல் - ஒலித்தல்.
இமிழ் - இனிமை, இழியென்னேவல், ஒலிபறை.
இமிழ்தல் - இனிதாதல், ஒலித்தல், கக்குதல்.
இமிழ்த்தல்-ஒலித்தல், கட்டல், கொப்பளித்தல்.
இமேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இமை - அற்பம், இமைப்பொழுது, இமையென்னேவல், கண்ணிதழ், கரடி, மயில்.
இமைகொட்டல்-இமைத்தல்.
இமைக்குழிவு - கண்ணில் ஒருவித குத்தல் நோய்.
இமைத்தல் - ஒளிசெய்தல், கண்ணிமைத்தல்.
இமைப்பு-இமைத்தல், இமைப்பொழுது, விளக்கம்.
இமைப்பொழுது - கணப்பொழுது.
இமையம் - இமயம்.
இமையவரம்பன் - நூற்றெட்டுத்திருப்பதிகளு ளொன்ருகிய திருச்செங்குன்ஆரிற் கோயிற்கொண்ட விட்டுணு.
இமையவர் - வானேர்.
இமையவர்கோன் }
இமையவர்வேந்தன் } இந்திரன்.
இமையில் - கருடன்.
இமையோர் - இமையவர்.
இமைவரி - ஒருவகைக் கண்ணேய்.
இம்பர் - இவ்விடம், இவ்வுலகம்.
இம்பி - கருந்தினை.
இம்பூறல்-ஒருசாயவேர். இது இராமேச்சுரத்தில் அதிகமாய் விளைகிறது ஆதலின் இராமேச்சுர வேரென்றும் பேர்.
இம்பூறற்சக்களத்தி - ஒருபூடு.
இம்மடி - யானை.
இம்மி-அற்பம், ஒருகணக்கு. அதுபத்து லட்சத்தெழுபத்தையாயிரத்து இருநூற்றில் ஒருபாகம், நுண்மை,புலம், பொன்மை, மத்தங்காய்ப் புல்லரிசி.

இம்மியளவு - தேர்த்துகள் எட்டுக் கொண்ட ஓரளவு.
இம்மெனல் - அனுகரணவோசை, விரைவின் குறிப்பு.
இம்மை - இப்பிறப்பு.
இயக்கதுவமம் - வாசனைத்திரவியம்.
இயக்கதூபம் - குங்கிலியப்புகை.
இயக்கமாதர் - கந்தருவஸ்திரீகள்.
இயக்கம்-அசைதல், இயங்குதல், செய்குதல், நடமாடுதல், பலம், பாக்கியம், பிரகாசம், பெருமை, போதல், மிகுதி, வடதிசை, வழி.
இயக்கராஜன் - குபேரன்.
இயக்கர் - கந்தருவர்.
இயக்கர்கோமான் } குபேரன்.
இயக்கர்கோன் }
இயக்கல் உழத்தல், நடத்தல், மின்னல்.
இயக்கன் - கந்தருவன், குபேரன், நாய், பூதப்பாண்டியன், தோழன்.
இயக்கி - ஒலிப்பித்து, கந்தருவஸ்திரீ, தருமதேவதை.
இயக்கினி - கண்டங்கத்திரி.
இயக்கு - இயக்கென்னேவல், செலவு, நடை.
இயக்குதல் - உழத்தல், ஒளிசெய்தல், செலுத்தல், தங்கல், நடத்தல்.
இயக்குமை - க்ஷயரோகம்.
இயக்குரோதம் - ஆல்.
இயக்கேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
இயங்கல் - இளைத்தல், உலாவல், தரித்தல், நடத்தல், மின்னல்.
இயங்காத்திசை - சூனியதிசை.
இயங்காத்திணை - நடையில்லது.
இயங்கு-இசங்கு, இயங்கென்னேவல், ஒரு முட்செடி.
இயங்குதல்-இளைத்தல், உலாவல், ஒளிசெய்யல், தங்கல், நடத்தல்.
இயங்குதிசை - பூரணதிசை.
இயங்குதிணை - நடையுள்ளது.
இயங்குநர் - வழிபோவார்.
இயசவடகம் - வீரகண்டை.
இயசு } இரண்டாம் வேதம்.
இயசுரு }
இயஷ்டிமதுகம் - அதிமதுரம்.
இயதாசாதன் } ஒன்றுந் தெரியாதவன்.
இயதாஜாதன் }

இயதி - சந்நியாசி.
இயத்தனம் - கருவி, பாத்திரம்.
இயத்தினம்-ஆயத்தம், கருவி, முயற்சி.
இயந்திரம் - ஆலை, சக்கரம், சூத்திரம், தேர்மதிலுறுப்பு.
இயந்திரி - இத்தி.
இயந்தை - மருதயாழ்த்திறம்.
இயமகொடி - சிங்கம்.
இயமதூதர் - எமபடர்.
இயமதூதி - பாம்பினச்சுப்பல்லினொன்று.
இயமபடர் இயமதூதர்.
இயமபடை - தண்டு.
இயமமந்திரி - காலன்.
இயமம்-அட்டயோகத்தொன்று, அஃது இச்சை, களவு கொலை, பொய், இவற்றினீங்கிப் புலனடக்கி யிருத்தல்.
இயமவாகனம் - எருமை.
இயமன்-அரவினச்சுப்பல்லினொன்று, கூற்றுவன்.
இயமாவியமகம் - சித்திரக் கவியினோர் பேதம், அது ஒரேசொல்லால் நான்கடியு மடக்கிவருவது.
இயமானகணம் - கோரசைமூன்றடுத்து வருவது.
இயமானன் - உயிர், காரியத்தலைவன், யாகஞ் செய்விப்போன்.
இயமாணி - எசமாட்டி.
இயமான் - எசமான்.
இயம்-ஈ, ஒலி, சொல், மிருதாருசிங்கி, வாச்யம்.
இயம்பல் - எவ்வகை வாச்சியமு முழக்கல், ஒலித்தல், சொல்லல், பழமொழி.
இயம்புதல் சொல்லுதல், வேட்கையுவமை, ஓரலங்காரம், அஃதுபொருளை யின்ன தொன்றென்று சொல்ல வேட்கின்ற தென்னுள்ளம் எனக் கூறுவது.
இயலடி - இயற்சீரான் வருமடி.
இயலல்-இசைதல், எறுதல், கூடியதாயிருத்தல், பொருந்தல், விதிக்கப்படல்.
இயலாமை - கூடாமை.
இயலி - உலாவி.
இயலுவமம் - அதிதம்போலுஞ் சாக்காடெனவருவது, பண்புவமை.
இயல் - ஆகமம், இயற்கை, இசை, இயலென்னேவல், இயற்றமிழ், இலக்கணம், ஒழுக்கு, ஒத்து, குணம், சாயல், நடை, டகுதி.

இயல்பகத்திணை - அவ்வவ் வியல்பைக் கொண்டு பொருளைக் காட்டுவது.
இயல்பாவை-நால்வரிலொருவன் கள்வனெனில் மற்றையர் கள்வரல்லர் என்றுணர்தல்.
இயல்பு - ஒழுக்கம், குணம், சுபாவம், தகுதி, பெலன்.
இயல்புகேடு - பலவீனம். [ற.
இயல்புக்காட்சி - காட்சிபேதத் தொன்
இயல்புப்புணர்ச்சி - எழுத்து விகாரமில்லாத புணர்ச்சி.
இயல்புவழக்கு - எப்பொருட்கெப்பெயர் இயல்பிலமைந்ததோ அப்பெயராலேயே அப்பொருளைக்கூறுவது.
இயல்பூ - வில்வம்.
இயல்பூதி-நாய்வேளை, வெல்லம்.
இயல்பூபதி - வில்வமரம்.
இயல்பேது-ஓரளவை, அது பலபொருள்குறித்தவொருசொல்லாயினும் இயல்பையுங் காரணத்தையுங்கொண்டு ஒருபொருளைக் கருதுவது (உ-ம்) மா.
இயவகம் - காராமணி.
இயவகியம் - தானியம் விளைநிலம்.
இயவசம் - புல்.
இயவட்சாரம் - யவசாரம்.
இயவபலம் - மூங்கில்.
இயவம் - ஒரு தானியம், நெல்.
இயவர்-கீழ்மக்கள், சண்டாளர், தோற்கருவியாளர்,வாச்சியக்காரர்.
இயவனர் - கம்மாளர், சித்திரக்காரர்,
இயவனிகை - திரை. [சோனகர்.
இயவாகு - கஞ்சி.
இயவாக்கிரசம் - யவசாரம்.
இயவாசம் - சிறுகாஞ்சொறி.
இயவானி - ஓமம்.
இயவியம்-தானியம், விளைநிலம்.
இயவீயன் - தம்பி.
இயவு-ஊர், காடு, புகழ், வழி. [ளன்.
இயவுள் - தலைவன், தெய்வம், புகழா
இயவை-அவரை, தோரை, நெல்,வழி.
இயறல் - போதல், முத்தி.
இயற்கை - எது, குணம், சுபாவம், தகுதி, தட்டு, முட்டு, திராணி, பாக்கியம், முறைமை, வரிக்கம்.
இயற்கைக்குணம் - சுபாவகுணம்.
இயற்கைஞானம் - சுபாவஞானம்.
இயற்கைப்புகழ்ச்சியணி - இயற்கையையே யுவமையாகக்கூறல் (உ-ம்) கன்னன் கொடையேகொடை.
இயற்கைப்புணர்ச்சி - களவுப்புணர்ச்சியிலொன்று அது தலைவனுந் தலைவியுமுயற்சியின் றிக்கூடுதல். [ள்.
இயற்கைப்பொருள் - இயல்புப்பொரு
இயற்கையறிவு - சுயவறிவு.
இயற்கையுணர்வுடைமை - கடவுளெண்குணத்தொன்று, அது பூருவஞானம்.
இயற்கைவினைக்குறிப்பு - ஆக்கச்சொல் வேண்டா தியற்கைச்சொல்லாய் நிற்கும் வினைக்குறிப்பு.
இயற்சீர் - ஆசிரியவுரிச்சீர்.]
இயற்சீர்வெண்டளை - ஆசிரியவுரிச்சீர்நிற்றசைவருஞ்சீர் முதலசையோடொன்றுவ தி்றபது. [ல்.
இயற்சொல்-இயற்றமிழ், வழக்கச்சொ
இயற்பகைநாயனர் - அறுபத்துமூன்று நாயன்மாருளொருவர், இவர் காவிரிப்பூம்பட்டினத்திலே வணிகர்குலத்திற் பிறந்தவர்.
இயற்படுத்துரைத்தல் - வழிபடுத்திச் சொல்லல். [பெயர்.
இயற்பெயர் - காரணமின்றி வழங்கும்
இயற்றமிழ்-செந்தமிழ், வழக்கத்தமிழ்.
இயற்றல் - எவுதல், செய்தல்.
இயற்றளை - ஆசிரியத்தளை.
இயற்றனம் - கருவி, பாத்திரம்.
இயற்றி - முயற்சி. [ம்.
இயற்று-இயற்றென்னேவல், பாத்திர
இயற்றுதல் - செய்தல், நடத்தல், விதித்தல். [தா.
இயற்றுதற்கருத்தா-வினைமுதற் கருத்
இயற்றும்வினை-தன்வினை. [ருத்தா.
இயற்றும்வினைமுதல் - செய்வினைக் க
இயனம்-மரமேறிகளின் கருவியுறை.
இயனிலையுருவகம் - உருவக அலங்காரத்தொன்று; அஃது ஒன்றனங்கம் பலவற்றையு முருவகித்து முருவகியாது முறைத்தங்கியை வருவித்துரைப்பது.
இயன்மொழிவாழ்த்து-ஒரு பிரபந்தம்.
இயாகதம் - சிற்றகத்தி. [ள்வி.
இயாகம் - கொன்றை, பாத்திரம், வே
இயாகாதிபதி - இந்திரன்.

இயாசகம் - இரப்பு.
இயாசகன் / இயாசனகன் } இரப்போன்.
இயாசனே - கேட்குதல். [பொருள்.
இயாசிதம்-கேட்பதினு லடையப்பட்ட
இயாதகம் - துதி.
இயாதசாம்பதி - வருணன்.
இயாதம் - தோட்டியால் யானையைச் செலுத்துகை, யானைத்தோட்டியின் பிடர்.
இயாதபதி - சமுத்திரம்.
இயாதனே - வேதனை.
இயாதாம்சி - சகல செக்ஷக்கள்.
இயாத்திரை - பிரயாணம்போகுதல்.
இயாமம் - யாமம்.
இயாமுனம் - சவீராஞ்சனம்.
இயாயசூசன்-அடிக்கடி யாகஞ்செய்கிறவன்.
இயாலகம் - காராமணி.
இயாவசம் - பசுத்தின்னும்புல்.
இயாவஷ்டிகம்-யஷ்டித்தடியை ஆயுதமாக வுடையவன்.
இயாவம் - சுக்கு.
இயாவனம்-துலுக்குதேசத்திய வஸ்து.
இயாவீயதானம் - பல்லக்கு.
இயாழ்-ஒரிசைக்கருவி. [முன்பக்கம்.
இயானமுகம்-தேர் முதலியவைகளின்
இயுசாவியம் - கொன்றை.
இயை-இசைப்பு, இயையென்னேவல் புகழ்.
இயைதல் - இணங்கல், பொருந்தல்.
இயைத்தல் - விணங்கல், பொருத்தல், முறைப்படுத்தல்.
இயைபணி / இயைபலங்காரம் } ஓரலங்காரம்.
இயைபிசையணி-பற்பல வசனத்திற்று மொழிகள், தமதுருபி னெப்புமையானியையக்கூறுதல்.
இயைபினுருவகம்-ஓரலங்காரம். அஃது பல பொருளேயுக் தம்முளொன்றேடொன் றியையாம லுருவகஞ்செய்வது.
இயைபின்மையணி-ஓரலங்காரம், அஃது ஒருபொருளேயே யுபமானமாகவும் உபயோகமாகவுஞ் சொல்வது. (உ-ம்) சேயிழையாள் செவ்வியினுற் ருனேயுவமை தனக்கு.
இயைபு இசைப்பு, இணக்கம், செய்யுளிறுதிப்பு, பொருத்தம்.
இயைபுத்தொடை - அடிகளி னிறுதிதோறுமோரெழுத்தேவருந்தொடை.
இயைபுருவகம் - ஓரலங்காரம், அஃது பலபொருளேயு முருவகஞ்செய்புழி அவை தம்முளொன்றேடொன்றியை யுடையவாக வைத்து உருவகஞ் செய்வது.
இயைபுவண்ணம் - இடையெழுத்து மிக்குவருவது.
இயைபுவனப்பு செய்யுள்வனப் பெட்டினென்று. அஃது இடைமெலியி னெவொற்றீற்றிற் பயின்று வருவது.
இயைபுளன் - புகழாளன்.
இயைமே - வாழை.
இயைய-உவமையுருபு (உ-ம்) என்று இயைய.
இயைவு-இசைவு, இணக்கம், பொருத்தம்.
இரகசியத்தானம் மூலத்தானம். [தம்.
இரகசியம் - அந்தரங்கம், பெண்குறி, மறைவு.
இரகம் - சூரியகாந்தம்.
இரகிதம் - இட்டம், கைவிடுதல், நீக்கியிருத்தல், விடுதல்.
இரகு - இராம னிரண்டாம்பாட்டன்.
இரகுநாதசேதுபதி-இருநூற்று முப்பதுவருடங்களுக்குமுன்னர் இராமநாதபுரத்தி லரசபுரிந்த சேதுமன்னர். இவர் அமிர்த கவிராயராற் பாடிய ஒரு துறைக்கோவை என்னும் பிரபந்தத்தையேற்றுப் புகழ்பெற்றவர்.
இரகுநாததீர்த்தர் - மத்வாச்சாரியர்களிலொருவர்.
இரகுநாதன் - இராமன்.
இரகுப்பிரியா - நாற்பத்திரண்டாவது மேளகர்த்தா.
இரகுவமிசம்-இரவின் வமிசாவழி, காளிதாசன் செய்த ஒரு காப்பியம்.
இரகுவரன் - இராமன.
இரகுவரியதீர்த்தர் - மத்வாச்சாரியர்களொருவர்.
இரக்கச்சொல் - பரிதாபமொழி.
இரக்கம்-உணர்வு, உருக்கம், ஒளி, கிருபை, துன்பம், பிச்சை, மனவுருக்கம்.
இரங்கல் - அழுதல், உருகல், ஒலித்தல், துன்பப்படல், பரிதபித்தல்.

இரங்கல்விலக்கு - ஓரலங்காரம், அஃது இரக்கந்தோன்றக்கூறி விலக்குவது.
இரசகந்தபாஷாணம் - சாதிலிங்கம்.
இரசகபுவம் - கடைச்சரக்கு.
இரசகம் - இரேசகம்.
இரசகற்பூரம் - ஒருமருந்து, கிண்ணிச் கற்பூரம்.
இரசகன் - வண்ணான்.
இரசகுளிகை-இரும்பைப் பொன்னாக்கு மருந்து.
இரசகேசரம் - சருப்பூரம்.
இரசக்கட்டு - சூதக்கட்டு.
இரசசானு - இருதயம், முகில்.
இரசசிந்தூரம் - ஒரு செந்தூரம்.
இரசதம் - அரைப்பட்டிகை, இரத்தம், கழுத்தணி, பொன், யானைத்தந்தம், வெண்மை, வெள்ளி.
இரசதாது - இரதம்.
இரசதாளி - ஒரு வாழைமரம்.
இரசநீசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
இரசநாதம் - இரதம்.
இரசநாயகன் - சிவன்.
இரசபஸ்பம் - ஒரு மருந்து.
இரசபலம் - தென்னமரம்.
இரசபற்பம் ஒரு மருந்து.
இரசபுட்பம் - இரசபஸ்பம்.
இரசமணி - இரசத்தாற்கட்டியமணி.
இரசமாதா - ஒரு பாஷாணம்.
இரசமாத்திரை - இரசகுளிகை.
இரசம்-சாறு, சக்திலம், சுவை, சூதம், ஆனி, நஞ்சுநீர், பாதரசம், பூந்தாது, மதம், மா, மிளகுநீர்.
இரசலிங்கம் - சாதிலிங்கம்.
இரசவதி - இரசமானவள், பாகசாலை, மடைப்பள்ளி.
இரசவாதம்-இரும்பைப் பொன்னாக்கு தல், கலைஞான மறுபத்துநான்கில் ஒன்று.
இரசவாதி - இரும்பைப் பொன்னாக்கு வோன்.
இரசவாழை - பேயன்வாழை.
இரசனம் - ஒருபொறி, பல், சுவை, தொனி, வன்னம்.
இரசனு - அரத்தை.
இரசனி - அவுரி, இராத்திரி, பயின் மஞ்சள்.

இரசனிகான் } சந்திரன்.
இரசனிகரன் }
இரசனிசலம் - பனி.
இரசனிமுகம் - சாயுங்காலம்.
இரசனை-அணிவகுப்பு, அலங்கரித்தல், இரசிப்பு, சாறு, சுவை, நா, மயிர் சேர்தல், மாதரிடையணி, மாலைகோ த்தல், வாசகவிளைப்பு.
இரசாஞ்சனம் - காசறுத்தம்.
இரசாதலம் - கீழேழுலகிலொன்று.
இரசாதிபன்-இரசவஸ்துக்கட்கதிகாரி.
இரசாபாசம் - அழிவு, இரசமின்மை.
இரசாயனம்-இரசவாதம், ஒருமருந்து, காயசித்திமருந்து, நஞ்சு, மோர்.
இரசாயன்னி - கருடன்.
இரசாலம்-கரும்பு, பலாமரம், மாமரம், கோதும்பை.
இரசாலவெலி-நாமக் கரும்பைப்போ ன்ற ஒருவகை எலி, இது கடிக்கில் பிரமையோடு மிகு வேதனையை யு ண்டாக்கும்; இதன விஷம் தேகத்தி லடங்கியிருந்து மழைக் காலங்களி லெழும்பும்.
இரசிகப்பிரியை - எழுபத்திரண்டாவ து மேளகர்த்தா.
இரசிகம் - குதிரை, தூர்த்தத்தனம், யானை.
இரசிகன் - தூர்த்தன்.
இரசிகை-தூர்த்தி, நா, மாதரிடையணி.
இரசிதசுத்தி - ஈயம்.
இரசிதநாள் - சுக்கிரவாரம்.
இரசிதம்-இடை,ஒலி,வெள்ளி, வைப்பு ப்பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.
இரசித்தல் - உருசித்தல்.
இரசிப்பு - இனிமை, உருசி.
இரசுவம் - அற்பம்.
இரசுவரோகம்-ஒருவகைக் கண்ணோய். அது பித்தத்தினாற் பிறந்து கண்க ளின் பார்வையை மறைக்கும்.
இரசுனம் - உள்ளி.
இரசேந்திரம் - இரசம், பரிசனவேதி.
இரசேந்திரியம் - நாக்கு.
இரசோகரன் - வண்ணான்.
இரசோபலம் - இருள், முத்து.
இரசோரசம் - இருள்.
இரசோனகம் - வெள்ளைப்பூண்டு.
இரச்சு - கயிறு, சடை, முடிச்சு.

இரச்சுவம் - கவண்.
இரச்சுவம் - குற்றெழுத்து.
இரச்சை - கயிறு.
இரஞ்சகபித்தம் - ஒருவகைப் பித்தம், இது ஆமாசய தானத்திலிருந்து இரசதாதுவைப் போஷிப்பது.
இரஞ்சகம்-பிரியம், திரிவாய்ப்பெட்டி, போஷிப்பு.
இரஞ்சகன் - செய்பவன், பிரியவான், வன்னக்காரன், விளக்குவோன்.
இரஞ்சனம் - செஞ்சந்தனம், திரிவாய் மருந்து, பிரியம்.
இரஞ்சிதம்-இன்பம், பிரியம், விளக்கம்.
இரஞ்சிதவஞ்சி - மனதைக் கவரும்படியான அழகுள்ள ஸ்திரீ.
இரட்சகத்தா-காவற்கடவுள், விஷ்ணு.
இரட்சகம் - இரட்சணை.
இரட்சகன்-காக்கிறவன், மீட்புச்செய்பவன்.
இரட்சணம் - இரட்சிக்குதல்.
இரட்சணை - காவல், மீட்பு.
இரட்சண்ணியம்-இரட்சிப்பு, காத்தல்.
இரட்சண்ணியன் - இரட்சகன்.
இரட்சபேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இரட்சம் - இரட்சை.
இரட்சாபந்தம் - அட்சர வியந்திரம், காப்பு.
இரட்சிதம் - காப்பாற்றல்.
இரட்சித்தல் - காத்தல், மீட்குதல்.
இரட்சிப்பு - காவல், மீட்பு.
இரட்சகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இரட்சை - காவல், மீட்பு.
இரட்டர் - வைசியர்.
இரட்டல் - அசைத்தல், இரட்டித்தல், ஒலித்தல், பண்மாறுதல்.
இரட்டாங்காலி - இரட்டைமரம், ஓரடியினிற்கு மிருமரம்.
இரட்டி-இரட்டியென்னேவல், கொட்டி, இரண்டுபங்கு, ஒருசாதி.
இரட்டித்தல் - இரட்டைப்பட வெண்ணல், இரண்டாமுறை யுழுதல்,இரண்டுபங்காதல், இரண்டுபடுதல், ஒவ்வாமை.
இரட்டிப்பு - இரட்டித்தல்.
இரட்டியர் - இடையர், வைசியர்.
இரட்டு - இரட்டென்னேவல், இரட்டை, இரட்டைநூற்புடவை, ஒலி, ஒருசாதி.
இரட்டுதல் - இரட்டித்தல், ஒலித்தல், வீசுதல்.
இரட்டுமி - ஒரு வாத்தியம்.
இரட்டுறமொழிதல் - இரண்டருத்தம் விளையச்சொல்வது.
இரட்டை-இரண்டொன்றுனது, சோடு, பாடுவிச்சி, மிதுனவிராசி.
இரட்டைக்கிளவி - இருசொல் லடுக்கிவரல் (உ-ம்) கலகல.
இரட்டைக்குலம் - உபசாதி.
இரட்டைக்கை-இணைக்கை, அது அஞ்சலி, புஷ்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கர்க்கடகம், சுவத்திகம், கடாகவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வர்த்தமானம் எனப் பதினைந்து வகைப்படும்.
இரட்டைத்தொடை-அடிமுழுதும் வந்தமொழியே வருவது.
இரட்டைநாகபந்தம் - சித்திரக்கவிகளு ளொன்று, அது இரண்டு பாம்பிணைந்து மறிந்து தலையெடுத்து நிற்பதாய்ச் சொரூபம் வரைந்து இவற்றின் சந்தி யனைத்தோறும் முன் வந்த எழுத்தே பின்னும் அமைந்து வரத் தக்கதாய்ப் பாடுவது.
இரட்டைமணிமாலை - ஒரு பிரபந்தம், அஃது வெண்பாவுங் கலித்துறையுமிருபஃது தந்தாதித் தொடையான் வருவது.
இரட்டையர்-இரட்டைப்பேறுகப் பிறந்துசிறப்படைந்த கவிராயர்இருவர்.
இரணகளம் - போர்க்களம்.
இரணகாவர்க்கேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இரணகாளம் - போர்கிறுத்த ஆதங்காளம்.
இரணக்கொடி - போர்க்கொடி.
இரணங்கொல்லி - ஒருபூடு, தும்பை.
இரணசங்கம்-போர்வென்றூதுஞ்சங்கு
இரணசின்னம் - படைக்கலம், படைச்சனம்.
இரணசக்கிரன்-கண்ணேயுளொன்று.
இரணசூரன் - யுத்தவீரன்.

இரணதாரை-போர்புரிய ஆதந்தாரை.
இரணதூரியம் - போர்ப்பறை.
இரணதோரணம்-பகைவரை வெட்டி அவர்கள் தலையை தோரணங்கட்டிப் பிடித்தல்.
இரணத்துருவம் - சிரகபுடத்திற் கழிக்கப்படுவது.
இரணத்தொடை - செய்யுட்டொடையிலொன்று, அது சொல்லாலேனும் பொருளாலேனு மறுதலைப் படத்தொடுப்பது.
இரணபரீட்சை - சத்திரபரீட்சை.
இரணபாதகம் - கொலை, நம்பிக்கைத்துரோகம்.
இரணபாதகன் - கொலைபாதகன்.
இரணபேரி } போர்ப்பறை.
இரணபேரிகை }
இரணமத்தம் - யானை.
இரணமாலை-பகைவர்குடலை மாலையாக அணிதல்.
இரணமுடி-பகைவரைவென்றுபோர்க்களத்திற்பூவைத்தலையிலேமுடித்தல்.
இரணமுழக்கு - உதிர முடலெங்குந் தோயும்படி போர்செய்தல்.
இரணமோசனம்-அழிவு.
இரணம் - அரவம், இரை, உணவு, உப்பளம், ஒலி, கடன், சதுப்புநிலம், பகை, பல், புண், பொன், போர், வனந்தரம், வேட்டை.
இரணரங்கம் - போர்க்களம், யானைக்கொம்பினடு.
இரணவிரணம் - இரணத்தழும்பு, கொதுகு, அக்கம்.
இரணவீரம் - தன் வேந்தர் தடுத்து மஞ்சாது போர்புரியுஞ் சௌரியம்.
இரணவீரன் - யுத்தவீரன்.
இரணவைத்தியம்-சத்திரவைத்தியம்.
இரணவைத்தியன்-சத்திரவைத்தியஞ் செய்வோன்.
இரணங்கணம் } போர்க்களம்.
இரணசிரம் }
இரணுபியோகம் - படையெழுச்சி.
இரணியகசிபன் - காசிபனுக்குத் திதிவயிற்றிற்பிறந்த புத்திரரிருவருளொருவன், இவன் நரசிங்காவதாரமெடுத்த விஷ்ணுவாற் சங்கரிக்கப்பட்டவன்.
இரணியகருப்பன் - பிரமா.

இரணியதானம் - சொர்ணதானம்.
இரணியநாபன்-யாஞ்ஞவற்கிய முனிவரிடத்து யோகம்பெற்றவொருவன்.
இரணியநேரம் - இரணியனைக் கொல்லப்பட்டவேளை அது மாலைநேரம்.
இரண்யம் - பொன்.
இரணியன்-ஓரசுரன், இவன் பிரகலாதாழ்வான் தந்தை; சூரபத்மன் புத்திரர்களுளொருவன், துவாதசாதித்தரிலொருவன்.
இரணியாக்கன் - இரணியன் தமயன்; இவன் பூமியைப் பாயாகச்சுருட்டிச் சமுத்திரத்திலொளித்தபோது வராகமாகிய விஷ்ணுவாற் கொல்லப்பட்டவன், ஓரசுரன்.
இரணேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
இரணை - இரட்டை.
இரண்டகம் - இருமனம், நம்பிக்கைத்துரோகம்.
இரண்டகவாதி - நம்பிக்கைத்துரோகி.
இரண்டடியெதுகை - முதலிரண்டடி நேரெதுகையாய் மற்றையடிகளொரெதுகையாயேனும் பலவெதுகையாயேனும் வருவது.
இரண்டன் - தூர்க்குணன்.
இரண்டக்கியம் - இரண்டவம்.
இரண்டாந்தரம் - இரண்டாம் முறை, நடுத்தரம்.
இரண்டாம்பாட்டன் - முதாதை.
இரண்டிகை - இரண்டை.
இரண்டு - உபயம், புரளித்தனம்.
இரண்டுக்குற்றது - இதுவோ வதுவோவென்கை, சாத்தியமோ அசாத்தியமோவென்பது.
இரண்டுபடுதல்-ஐயுறல், வேறுபடுதல்.
இரண்டுபண்ணுதல் - புரளித்தனம் பண்ணுதல், வேற்றுமைபண்ணுதல்.
இரண்ணியேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
இரதகசதுரகபதாதி-இரதம் யானைகுதிரை காலாள்சேர்ந்த சைன்னியம்.
இரதகம் - இத்தி.
இரதகாரன் - தச்சன்.
இரதகீலம் - நாய்.
இரதகுண்டகன் - தூர்த்தன்.

இரதகுப்தி-தேரைப் பாதுகாக்கும்பொருட்டு மூடின புலித்தோல், தேரிவிருப்பவனுக் காதரவாக அத்தேரிவிருக்கு மறைவிடம்.

இரதகுரு - கணவன்.

இரதகூசிதம் - புணர்ச்சிவெறுப்பு.

இரதசந்தியாகம் - செந்தாமரை.

இரதசாரதி - தேர்ப்பாகன்.

இரதசாரி - தேரோற்றம், வேசி.

இரததன்மாத்திரை - உருசியறிவு.

இரததாரி - காமாதுரன்.

இரதநாரீசம் - காமம், நாய், வேசி.

இரதபதம் - புறவு.

இரதபந்தம் } சித்திரகவிகளில்
இரதபந்தனம் } ஒன்று.

இரதபரீட்சை - ஒரு வித்தை, கலைஞானமறுபத்து நான்கிலொன்று.

இரதபாதம் - தேருருள்.

இரதம் - அரைஞாண், அவயவம், இரசம், இனிமை, உடல், குணம், சத்ததாதுவிலொன்று, அஃது உமிழ்நீர், சாத்தியம், சுவை, சூதம், தேர், பண்டி, பல், பாதம், புணர்ச்சி, மாமரம், வாகனம்.

இரதயோனி - விப்சாரி.

இரதவாழை - ஒருவாழை.

இரதவிரணம் - நாய்.

இரதனம்-அரைஞாண், கிண்கிணி, பல்.

இரதன் - கண், கிளி,

இரதாங்கபாணி - விட்டுணு.

இரதாங்கம் - சக்கரம், சில்.

இரதாயனி - வேசி.

இரதி - ஆசைப்பெருக்கம், இரத்தல், இலந்தைமரம், உருசி, காந்தள், காமம், கார்த்திகைப்பூ, கிறக்கும் படிக்கல், பித்தளை, புணர்ச்சி, பெண், பெண்யானை, மதன்றேவி, வேண்டல்.

இரதிகன் - தேரிலிருப்பவன்.

இரதிகாதலன் - மன்மதன்.

இரதிகாந்தன் - தாமரை, மன்மதன்.

இரதிகுகாம் - யோனி.

இரதிகூசிதம் - தலைவனுந் தலைவியும் புணருமிடத்து நிகழும்பேச்சு.

இரதிகேள்வன - மன்மதன்.

இரதிக்கிரகம் - யோனி.

இரதிக்கிரியை } சுரதலீலை, புணர்ச்சி.
இரதிக்கிரீடை }

இரதிதேவேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரதித்தல் - அடக்குதல், இடுக்கண்படுதல், இழுக்குதல், உருசித்தல், மூடுதல், விரும்பல்.

இரதிபதி }
இரதிபிரியன் } காமன்.
இரதிப்பிரியன் }

இரதிமந்திரம் - யோனி.

இரதியம் - தேரிழுக்குங்குதிரை.

இரதியாளர் - யாசகர்.

இரதியை-தேர்க்கூட்டம், தெரு, வீதி.

இரதிரமணன் - காமன்.

இரதிரன் - தேரிலிருப்போன்.

இரதீ - தேரையுடையவன், தேரிலிருப்போன்.

இரதீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரத்தகதசுரம் - இரத்தத்தை முறிக்கும்படியான சுரம்.

இரத்தகம் - செவ்வாடை, திலதம்.

இரத்தகர்ணசூலை-ஒருவகைச்சூலைரோகம் இது வாதகர்ண சூலைக்குரியசில குணங்களையும் பித்தகர்ண சூலையின் உபத்திரவத்தையுமுண்டாக்கும்.

இரத்தகாசநேத்திரரோகம் - ஒருவகைக்கண்ணோய், இது கண்களைச் சிவப்பு அல்லது கறுப்புநிறமாகச் செய்வதன்றிப் பார்வையையும் அவ்வாறே செய்விக்கும்.

இரத்தகாசம்-இரத்தங் கக்கும்படியான இருமல் நோய்.

இரத்தகாசரோகம் - ஒருவகைக் காசரோகம்-இது யுத்தம், சேவகாவிருத்தி, சிலம்ப முதலிய சாதகங்களான் மெலிந்தவர்களுக்குச் சரீரத்திலுள்ள சுபாவபலத்தை யொடுக்கிய வாயுவானது மார்புக்குட்சேர்ந்து பித்தத்துடன் கலந்து பலத்திருந்துகொண்டு வேதனையை யுண்டாக்கி மஞ்சள் வருணமாகவு முலர்ந்ததாகவும் உண்டையுண்டையாகவும் கபத்தை வாந்திபண்ணச் செய்வதோடு சிலவேளை சுத்தவிரத்தத்தையும்சிலவேளை ஊசியாற் குத்தல்போல் மார்பிற்

குத்திச் சுத்த இரத்தத்தையும் வாந்திபண்ணச்செய்யும். அதனுல் சுரம், சுவாசம், தாகம், ஈனத்தொனி, நடுக்கம், பக்கநோவென்னும் இக்குணங்களுண்டாகும்.
இரத்தகுடல்விருத்தி-ஒருவகைக்குடல்நோய், இது இரத்தமானது குடலில் நிறைந்து அதைப்பருக்கப்பண்ணி அக்குடலிருக்குந்தானத்தை நிதானித்துப்பார்க்கிற் சிறு சிறு கொப்புளங்களிருப்பதாகத் தெரியச் செய்வதோடு பித்தக்குடல் விருத்திக்குள்ள குணத்தையு முண்டாக்கும்.
இரத்தகுந்தம் ஒருவகைக் குந்தநோய்.
இரத்தகுமுதம் - செந்தாமரை, செவ்வாம்பல்.
இரத்தகுன்மம்-ஒருவகைக் குன்மரோகம், அது இரத்தவாத குன்மம், இரத்தவாதபித்த குன்மமென இருவகைப்படும்.
இரத்தகேசுவரம் -சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இரத்தகைரவம் - செந்தாமரை, செவ்வாம்பல்.
இரத்தகோகனகம் - செந்தாமரை.
இரத்தக்கண்ணன் - கோபக்கண்ணன்.
இரத்தக்கலப்பு - உற்றவுறவு.
இரத்தக்கவிச்சு - இரத்தவெடில்.
இரத்தக்கழலை-மூவகைக் கழலைநோய்களுளொன்று, அது இமைக்கு மேற்புறத்தி லிரத்தநிறக்கட்டியை யெழுப்புவது.
இரத்தக்கழிச்சல் - ஒருவகைக் கிராணிநோய், அது இரத்தபேதியை மாருதுண்டாக்குவது.
இரத்தக்கனப்பு - இரத்தமிகுகை, கருவம்.
இரத்தக்கிரந்தி- ஒருவகைக்கிரந்திநோய். அது திரிதோஷங்களினுல் இரத்தமானது கெடுதியை யடைந்து மிகவும் கொதித்துண்டாகிற நுரைகளினுல் சனித்த கிருமிகள் தமது மூக்கினுற் கிண்டுங்காலத்திற்பிறந்து உதிரத்தை வடியச்செய்வது.
இரத்தக்கிராணி - ஒருவகை யிரத்தபேதி.
இரத்தக்கிருமி-ஒருவகைக் கிருமிரோகம், அது அணுக்கிருமி, வட்டக்கிருமி, மிருதுசூடிமக்கிருமி, காலில்லாக்கிருமி, செங்கிருமி, தோற்றுக்கிருமி என அறுவகைப்படும்.
இரத்தக்கிலிஷ்டம் - ஒருவகை நோய்.
இரத்தக்குமிளம் - ஒருவகைக் குமிளரோகம், இது வெள்விழியிற் செங்குன்றியைப்போல சிவந்த கொப்பளத்தை யுண்டாக்குவது.
இரத்தக்குலை - ஒருநோய்.
இரத்தக்குவை- ஒருவகைக்கண்ணோய், இது கடைக்கண்ணிலிரத்த நிறமான நுண்ணியதசையை யுண்டாக்கும்.
இரத்தக்கொழுப்பு - இரத்தபுஷ்டி, கருவம்.
இரத்தக்கோமாரி - மாட்டுக்கு வருமோர்நோய்.
இரத்தசந்தனம் - செஞ்சந்தனம்.
இரத்தசந்தியகம் செங்கழுநீர்ப்புட்பம்.
இரத்தசந்தியாகம் } செந்தாமரை.
இரத்தசரோருகம்
இரத்தசாகம் - செங்கீரை.
இரத்தசிருவம் - சிங்கம்.
இரத்தசிரஸ்தாபம்-ஒருவகைவாதத் தலைவலிரோகம். இது வாதாதிக்கத்தினுல் நெறிகளிற் கடவாத்தியம்வாசிப்பதுபோல திரல்கண்ணும்புருவமு நெற்றியு மிற்றுவிழுவதுபோற் றெறித்தல், வெளிச்சத்தைப்பார்க்கக்கூடாமை, தலைசுழற்றலுடன் நோதல், காதிரைச்சல், நரம்புகள் புடைத்தப்புதல், நாசியிற் சலம்வடிதல், என்னு மிக்குணங்களை யுண்டாக்கும்.
இரத்தசிராவகரோகம் - ஒருவகைநோய்அது இமைச்சந்திமார்க்கத்தி லொட்டியிருக்கின்ற நரம்புகளி லிரத்தமானது வியாபிக்கும்போது பிறந்து கண்களினின்றும் சுத்தவுதிரத்தைப்போல் உஷ்ணஜலத்தைச் சிவந்தும் அதிகரித்தும் குறைந்தும் ஒழுகப்பண்ணும்.
இரத்தசிராவம் - ஒருவகைநோய். அது இரத்தமானது வெளுத்தோ அல்லது சிவந்தோ அல்குல் மார்க்கமாய் விழுவது.
இரத்தசிலேஷ்மதுஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது வெளுத்துஞ் சிவந்து மிருக்கும். அதினின்றுஞ் சீழு மிரத்தமுமொழுகும்.

இரத்தசிலேஷ்மபித்ததுஷ்டவிரணம் - ஒருவகைவிரணநோய். அது இரத்தகபத்திற்கும் இரத்த பித்தத்திற்குமுள்ள குறிகளோடிருக்கும்.

இரத்தசிலேஷ்மம்-ஒருவகைச் சிலேஷ்மநோய். அது பிரதிதினமும்இரத்த வாந்தியோடு அவ்வாந்தியில் துர்க்கந்தமான கோழைவீழ்தல், பலமுங்காந்தியுங்கெடல், அவயவங்கள்சுருங்கல், சுரம், எரிச்சல், அதிகசுவாசம், வேதனை, உள்ளங்கை உள்ளங்கால் எரிவு, மார்பிலுந் தலையிலுங் குத்து, வயிற்றுப்பிசம், வாந்தி, தேகத்திமிர், சிரோபாரம், காதிரைவு, சோஷை, மூர்ச்சை, கண்சுழற்சி, மயக்கம் என்னும் இக்குணங்களை அதிகரிக்கச்செய்வதுந்தவிர முழங்கால், முழங்கை, முதுகு, விலா, கணுக்கை, கீல் என்னும் இவ்விடங்களிற் கடினமான வீக்கம், குடைச்சல், சளி, இருமல், நாவறட்சி, நாவில் தித்திப்பாகிய இவைகளையு முண்டாக்கும்.

இரத்தசூலை - சூதகவாய்வு.

இரத்தசெந்துகம் - நாக்கூழ்.

இரத்தச்சிலந்தி-ஒருவகைச் சிலந்தி. அது தேகத்தி வெங்காவதுபடில் பட்டவிடஞ் சிவந்து தடித்துச் சுற்றிலுஞ் சிறிய கொப்பளங்க ளெழும்ப அதில் ஓயாது இரத்தமுஞ் சீழும் வடிந்துகொண்டே யிருக்கும்.

இரத்தச்சுரப்பு-இரத்தங்கன்றுதல், சரீரக் கொழுப்பு.

இரத்தஞ்சிந்துதல் - கொல்லுதல்.

இரத்தஞ்சுண்டுதல் - இரத்தம் வற்றுதல், கொழுப்பேறுதல்.

இரத்தட்சயம் - இரத்தகாசம்.

இரத்ததாது - செம்பு, செவ்வரிதாரம்.

இரத்ததாதுகதசுரம் - ஒருவகைச் சுரநோய். அது உமிழ்நீரி லிரத்தம் வீழ்தல், தாகம், உடம்பெங்கும் சிவந்த தடிப்பு, எரிச்சல், தேகச்சிலப்பு, பிரமை, மதம், பிரலாபம், இருநெறியுமிடித்தல். கீல்களெல்லா நோதல், வியர்த்தல், சரீர நோவோடு கன்றுத மூர்ச்சை. நாக்கு,வழுவழுப்பு,நாக்கு மஞ்சணிறமா யிருத்தல், நெஞ்சிற்கபாதிக்கம், நித்திரை. மலபந்தம்என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்ததிமிரம்-ஒருவகைக் கண்ணோய். அது கண்களைச் சிவப்பாக்குவதுமன்றிப் பார்வையிலும் அவ்வாறே தோற்றுவிக்கும்.

இரத்ததிரிதோஷ துஷ்டவிரணம்-ஒருவகை விரணநோய். அது இரத்தவாத துஷ்டவிரண முதலிய மூன்று விரணக்குறிகளை பெற்றிருப்பது.

இரத்ததுஷ்டவிரணம்-ஒருவகைவிரணநோய். அது பவளமல்லது இரத்தத்தைப்போன்ற நிறத்தைப் பெற்றுப் பித்தத்துஷ்டவிரணக்குறிகளையெல்லாம் பெற்றிருப்பதோடு குதிரை கட்டுமிடத்தில் வீசுகின்ற வாசனையைப்போல வாசனையும் வீசும்.

இரத்தத்தண்டம் - கிளி.

இரத்தத்தொடர்வு- இரத்த சம்பந்தம்.

இரத்தநரம்பு - உதிரநரம்பு.

இரத்தபடலம்-ஒருவகைக் கண்ணோய். அது கண்மணியிற் கரித்தல், குழுறல், காந்தல், கன்றுதல், பீளைசாரல், எரிதல், இரத்தங்கட்டல், நெறிக்குங்கீழ்புருவம் நெற்றி பிடரி உச்சி ஆகிய இடங்களிற் குத்தலாகிய குணங்களை யுண்டாக்கும்.

இரத்தபதுமம்-ஒருவகைக் கண்ணோய், அது இமையிற் சிவந்த நிறத்தையும் இரத்தநீரையு முண்டாக்கும்.

இரத்தபலி - இரத்தஞ்சிந்தும்பலி, கொலை.

இரத்தபலை - கோவப்பழம்.

இரத்தபழம் - ஆலமரம்.

இரத்தபாஷாணம் - வைப்புப்பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.

இரத்தபாண்டுச்சிலந்தி- ஒருவகைச்சிலந்தி, அது பட்டவிடத்தில் வெளுத்துத் தடித்துச் சிவந்து இரத்தம் வடியும்.

இரத்தபாதம் - கிளி.

இரத்தபாரதம் - சாதிலிங்கம்.

இரத்தபானம் - மூசாம்பரம்.

இரத்தபானம் - இரத்தம் பருகல்.

இரத்தபிண்டம் - சினமல்லிகை.

இரத்தபித்தசூலை-இரத்த வாந்திநோய்.

இரத்தபித்ததுஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது உதிரநிறம் அல்லது மஞ்சணிறமா யிருக்கும். அதி

னின்றுங் கோமூத்திரம்போலுமிரத்தம்போலுஞ் சலமொழுகும். அதனாலெரிச்சலும் விருவிருப்பும் உண்டாகும்.

இரத்தபித்தம் - இரத்தவாந்திநோய்.

இரத்தபித்தரோகம்-ஒருவகைப் பித்தரோகம். அதுஇரத்தவாந்தி, வயிறுப்பல், வியர்வை, துர்ப்பலம், குளிர், சுரம், சுதாசீதனம், கால் கை நேத்திரம் இவ்விடங்களி லெரிச்சல், இளைப்பு, சோகை, கொட்டாவி, விக்கல், தலைதிருப்பல், மந்தாக்கினி, அரோசகம், சிறக்குறைவு, சரீரவேதனை, வயிற்றுநோவு, நாவுலர்ச்சி, அருசி, அசீரணம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தபீனசம்-ஒருவகைப் பீனிசநோய். அது நாசிக்குள் கமைச்சலோடு திமிர், சிவந்தசளியு மிரத்தமுமொழுகல், கண்ணிலுங் காதிலுந் தினவு, கண்ணுமுரோமமுஞ்சிவத்தல், அருசிஎன்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தபுட்பிகா-மூக்கிரட்டை.

இரத்தபை - அட்டை.

இரத்தப்பசப்பு } இரத்தப்புஷ்டி.
இரத்தப்பசுமை }

இரத்தப்பலி-இரத்தப்பிச்சை, இரத்தவுணவு.

இரத்தப்பழி - கொலைப்பழி.

இரத்தப்பிரமியம்-மூத்திரத்தோ டிரத்தம்விழுகிற ஒரு மேகநோய்.

இரத்தப்பிரமேகம்-ஒருவகைப் பிரமேகரோகம். அது தயக்கம், தலைதிருப்பல், சரீரம் பஞ்சைப்போல் மெதுவுதல், முயலிரத்தம்போலுஞ் சிவந்து சுருக்குடன் அடிக்கடி வேதனை யுண்டாகும்படி நீரிறங்கலாகிய இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தப்பிரவாகம் - இரத்தப்பெருக்கு.

இரத்தப்பிரவை-எழ்நரக வட்டத்தொன்று. அஃது-இரத்த நிலம்.

இரத்தப்பீனசம் மூக்கின்வழியா யிரத்தம்விழுகிற ஒரு கபாலநோய்.

இரத்தப்புடையன்-கடித்தவுடன் கண் மூக்கு வாய் வழியா யிரத்தம்வரச் செய்கிற ஒரு பாம்பு.

இரத்தப்பேதி - ஒருவிதப் பேதிநோய்.

இரத்தமசூரிகை - ஒருவகை மசூரிகையுரோகம். அது மேலெங்கும் இரத்தநிறமான கொப்புளங்களு மெரிச்சலு முண்டாக்கும்.

இரத்தமண்டலம் - செந்தாமரை.

இரத்தமண்டலி-கடித்தவுடன் துவாரங்கள் வழியா யிரத்தம்வரச் செய்கிற ஒரு விஷப்பாம்பு.

இரத்தமதம்-ஒருவகை மதரோகம். அது தேகமுங் கண்ணுமதர்த்தலோடு பித்த மதரோகக் குணங்களையு முண்டாக்கும்.

இரத்தமாரணம் - காவிக்கல்.

இரத்தமுகபாகம்-ஒருவகைநோய். அது பித்தத்தைக் கொண்டு வாய்க்குள் நெற்பானை ஆவியைப்போற் புகையை யெழுப்புவதோடு வாய்க்குள் இரத்தம் போன்ற செந்நிறத்தைத் தோற்றுவிக்கும்.

இரத்தமூலம் - இரத்தம் விழுகிற ஒரு மூலநோய்.

இரத்தமேகம் - ஒருவகைமேகரோகம். அது மூத்திரமானது இரத்த நிறத்தையு மிலவணத்தையுந் தார்க்கந்தத்தையும் பெற்று உஷ்ணரம்பமாய் அனலை வீசிக்கொண்டு முயலிரத்தம் போன்று இரண்டுபடி அளவாக இறங்கும். அதைக் காய்ச்சிப் பரீக்ஷித்தாற் புலானாற்றம் வீசும். அதனால் கோசமும் பீசமுங் கடுக்கும்.

இரத்தம் - உதிரம், குங்குமப்பூ, சாதிலிங்கம், சிவப்பு, செம்பு, பவளம்.

இரத்தயோனி-ஒருவகை யோனிரோகம். அது சிதம் ஸ்தானத்திற் சகிக்கக்கூடாத வுபத்திரவத்தையு மிகுந்த விரத்தவொழுக்கையு முண்டாக்கும்.

இரத்தரோகம் - ஒருநோய் கண்ணோயுளொன்று.

இரத்தலிங்கநாசம் - ஒருவகைக் கண்ணோய். அது பாவையை இரத்தமாக்குவதோடு அப்பாவையையுங் கண்களி னொளியையுமழிக்கும்.

இரத்தல் - பிச்சைகேட்டல், வேண்டுதல்.

இரத்தவடி - வைசூரிக்குரு.

இரத்தவரி-ஒருவகைக் கண்ணோய். அது கண்களிற் செந்நிறவரியைப் பிறப்பிக்கும்.

இரத்தவலிப்பு - இரத்தாதிக்கத்தால் வரும் இசிவு.

இரத்தவள்ளி - செவ்வள்ளிக்கிழங்கு.

இரத்தவற்கனம் - செம்பு.

இரத்தவாதகுன்மம்-ஒருவகைக் குன்மநோய். அது இரத்தகுன்மத்தினோர் பேதம்.

இரத்தவாதசிலேஷ்மதுஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது இரத்தவாதத்திற்கும் இரத்த கபத்திற்கும் உள்ள குறிகளுடனிருக்கும்.

இரத்தவாததுஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது பவளமல்லது கரியைப்போன் றிருப்பதோடு அதினின்று மிரத்தம்போலுந் தயிர்ச்சலம் போலுஞ் சீழ்த்தண்ணீ ரொழுகும். அதனால் குத்தலும் வாந்தியு முண்டாகும்.

இரத்தவாதபித்தகுன்மம் - ஒருவகைக் குன்மநோய், அது இரத்த குன்மத்தினோர் பேதம்.

இரத்தவாதபித்தத்துஷ்டவிரணம்-ஒருவகை விரணநோய். அது இரத்த வாதத்திற்கு மிரத்த பித்தத்திற்கு முள்ள குறிகளுடனிருக்கும்.

இரத்தவாரி - சுதப்பெருக்கம்.

இரத்தவித்திரதிக்கட்டி - ஒருவகைக் கட்டிநோய். அது கறுத்தும் ஒருவேளை வெளுத்துச் சிறுசிறு கொப்பளங்களோடு பிறந்து அதிகத்தாகம், நோவு, பித்த வித்திரதிக்கட்டியிற் காணுங்குணமாகிய இவைகளை யுண்டாக்கும். அது புருஷர்களுக்கு வெளிப்புறத்திலும் மாதர்களுக்கு உட்புறத்திலும் தோற்றும்.

இரத்தவிந்து - இரத்தினத்திலுள்ள பொரிவு, மாணிக்கத்தின் மூன்றுவது சாதி.

இரத்தவிரியன் - ஒரு விஷப்பாம்பு.

இரத்தவீசன் - மாதுளை.

இரத்தவெடில் - இரத்தமணம்.

இரத்தவெறி - ஆங்காரம், இரத்தங்குடித்தவெறி.

இரத்தாக்கம் - எருமைக்கடா, புறவம்.

இரத்தாக்கன் - குரூரன்.

இரத்தாசயம் - இரத்தந் தங்குமிடம்.

இரத்தாட்சி-ஐம்பத்தெட்டாவது வருடம்.

இரத்தாதாரம் - தோல்.

இரத்தாதிசாரம் - பிராந்தி நோய்.

இரத்தாதிமந்தம் - ஒருவகை மந்தரோகம். அது கண்கள் சிவத்தல், சிலவேளை செம்பரத்தம்பூப்போல மிகவுஞ் சிவத்தல், திறக்கும்போதுந் தொடும்போதும் நோதல், கருவிழியானது இரத்தத்தில் மூழ்கினது போற்றோற்றல், நெறி தந்தம் தாடை மண்டை ஆகியஇவ்விடங்களில் வேதனைஎன்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தாபிஷந்தம் - ஒருவகைக் கண்ணோய். அது கண்கள் கோவப்பழம் போற் சிவந்து அதினின்று மிரத்த நிறத்தை யொத்தசலமும் பீளையுமொழுகுதல், கருவிழிவெளிறலென்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தாம்பரம் - சிவப்புப்புடவை.

இரத்தாம்புதகிரந்தி - ஒருவகைக் கிரந்திநோய்.

இரத்தார்ப்புதம் - ஒருவகைநோய். அது ஆண்குறி முற்றிலும் இரத்தத்தினாற் கருமை செம்மையுள்ள கொப்பளங்களைப் பிறப்பித்து அளவற்ற வேதனையை யுண்டாக்கும்.

இரத்தி - இத்தி, இலந்தை.

இரத்திரி - இத்திமரம்.

இரத்தினகபுவை - பூமி.

இரத்தினகருப்பம் - சமுத்திரம்.

இரத்தினகர்ப்பேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இரத்தினக்கம்பளம் } உயர்ந்த சித்திரக்கம்பளம்.
இரத்தினக்கம்பளி }

இரத்தினசானு - மகாமேரு.

இரத்தினச்சுருக்கம்-ஒருவைத்தியநூல் புகழேந்திப்புலவர் செய்த ஒரு உறுப்புவமை நூல்.

இரத்தினபரீட்சை-கலைஞான மறுபத்து நான்கினொன்று.

இரத்தினபூவேஷசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இரத்தினமாத்திரை - ஒருகுளிகை.

இரத்தினம் - மாமணிப்பொது.

இரத்தினாகரம் - கடல், மகோததி.

இரத்தினாங்கி-இரண்டாம்மேளகர்த்தா'

இரத்தினி - பிடி, முழம், முன்கைப் பேரெலும்பு.

இரத்தினேசுவரம் - சிவத்தலங்க ளாயி ரத்தெட்டனு ளொன்று.

இரஸ்து - படைகளுடைய போசனச் சாமான், வாழைப்பழம்.

இரத்துதல் - பேசலாலெழுமொலி.

இரத்தோஷ்டம்-ஒருவகை அதரரோகம் அது உதடுகளி லிரத்தத்தைப் போன்ற நிறத்தை யுண்டாக்கும்.

இரத்தோற்பலம் - செங்குவளை, செந்தாமரை.

இரந்திரம் - குழி, சென்மலக்கினம், துவாரம்.

இரந்துணி
இரந்துண்ணி
இரப்பன்
இரப்பாணன் } யாசகன்.
இரப்பாண்டி
இரப்பாளன்

இரப்பு - தரித்திரம், பிச்சை, மன்றுட்டு, யாசிப்பு.

இரப்புக்கோழி - கோழிக்காரக விலக்கண மூன்றனு ளொன்று. அது கொள்வோன் வேண்டக் கொடுப்போன் கொடுப்பதாம். (உ-ம்) அந்தணர்க்குப் பொன் கொடுத்தானரசன்.

இரப்புணி - இரப்போன்.

இரமடம் - பெருங்காயம்.

இரமணம்-இரம்மியம், காமச்சேட்டை சுரதவிளையாட்டு, புணர்ச்சி.

இரமணன் - காந்தன், தலைவன், நாயகன்.

இரமணியம் - இரம்மியம்.

இரமணீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

இரமதி - காகம், காமன், காலம், தூர்த்தன், மோட்சம்.

இரமம் - ஆசை.

இரமன் - காமன், நாயகன்.

இரமாபதி - திருமால்.

இரமாப்பிரியம் - தாமரை.

இரமித்தல் - சந்தோஷித்தல்.

இரமியம்-திருப்தி, பூரணசந்தோஷம்.

இரமை - இலக்குமி. செல்வம், மனையாட்டி.

இரம்பக்கல் - குருந்தக்கல்.

இரம்பம் - ஈர்வாள், கத்தூரிமிருகம்.

இரம்பிவம் - மிளகு.

இரம்பை - இரம்பம், தேவலோகதாசி.

இரம்மியம் - பூரணசந்தோஷம்.

இரம்மியேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

இரயன் - வேகமாய் நடப்போன்.

இராமேசுவரம் - இராமச்சந்திரனல் உண்டாக்கப்பட்ட ஒரு சிவஸ்தலம்.

இரலை - அச்சுவினிநாள், ஊதுகொம்பு, கருமான், தலைமான், புல்வாய்.

இரவச்சம் - இரத்தலினு லுண்டாகும் பயமுங் கூச்சமும்.

இரவணம்-ஒட்டகம், குயில், பரிகாசம் பண்ணுதல், வெண்கலம், வெப்பம்.

இரவணன் - ஒட்டகம், கூப்பிடுஞ் சுபாவமுடையவன்.

இரவதம் - குயில்.

இரவருமதி - இராத்தோறும்வருஞ் சந்திரன்.

இரவலர் - ஏற்போர்.

இரவலன் - ஏற்பதில் வல்லோன்.

இரவலாளர் - யாசகர்.

இரவல் - மீண்டுந் தருவதாகக் கொள்கை, முகமாற்று,சொந்தமில்லாதது.

இரவறிவான் - கோழிச்சேவல்.

இரவாக்கல் - ஒரிரத்தினம்.

இரவி - சூரியன், மலை, மூக்கின்வலத் துவாரம், வாணிகத்தொழில்.

இரவிகன்னம்-பூமிக்குஞ் சூரியனுக்கு முள்ள தூரம்.

இரவிகாந்தம் - சூரியகாந்தக்கல்.

இரவிகுலம் - சூரியவமிசம்.

இரவிக்கை - முலைக்கச்சு.

இரவிதேவி-உஷாதேவி, சாயாதேவி.

இரவிநாள் - இரேவதி.

இரவிநமணி-சாதுரங்க பதுமராகம்.

இரவிபுடபுத்தி - சூரியனது உத்தமபுடம்.

இரவிபுரம் - மலைநாட்டின்கண்ணுள்ள ஓரூர்.

இரவிமது - வெள்ளி.

இரவிமைந்தன்-எமன்,கன்னன், சனி, சுக்கிரீவன்.

இரவிவிக்கேபம்-கிரகணத்திற் சூரியன் கிராந்திமார்க்கத்திற் சாய்ந்திருக்கை.

இரவு - இரத்தல், இராத்திரி, மஞ்சள், பிச்சை, வறுமை.
இரவுக்குறி-களவுப்புணர்ச்சியில் இராக் காலஞ்சந்திக்க நியமிக்குமிடம்.
இரவுக்கை - மார்க்கட்டுசெட்டை-முலைக் கச்சு.
இரவுத்திரம் - இரௌத்திரம்.
இரவுரவம் - இரௌரவம்.
இரவெரிமரம் - ஒருமரம், சோதி, விருட்சம்.
இரவை - அணு, அற்பம், துப்பாக்கியி லிடும் ஈயச்சன்னம், பண்படாது, வச்சிரம்.
இரவோர் - யாசகர்.
இரவோன் - சந்திரன், யாசகன், வறியவன்.
இரனி - கொன்றை.
இரற்றல்-ஒலித்தல்.
இரற்று - இரற்றென்னேவல், ஒலி.
இரற்றுதல் - ஒலித்தல்.
இரா - இரவு, இருத்தலைச் செய்யா வென்னும் அஃறிணைப் பன்மை முற்று இருந்தேனெனச்சம்.
இராகசூத்திரம் - தராசுக்கயிறு, பட்டு நூல்.
இராகமெடுக்க-இராகமாலாபிக்க.
இராகம் - அன்பு, ஆசை, கீதம், சடத்தியினொன்று, சிவப்பு, நிறம், மோகம், வித்தியாதத்துவமேழினொன்று.
இராகவர்த்தனி - முப்பத்திரண்டாவது மேளகர்த்தா.
இராகவன் - இரகுவம்சத்திற் பிறந்தவன், இராமன்.
இராகவி - பெருநெருஞ்சில்.
இராகவிண்ணுடகம் - கொன்றை.
இராகவிராகம் - விருப்புவெறுப்பு.
இராகவேந்திரதீர்த்தர் - மத்வாச்சாரியர்களுள் ஒருவர்.
இராகாந்தநிலையர் - ஸ்ரீ கண்டமூர்த்தி.
இராகி - குரக்கன், கேழ்வரகு.
இராகு - கரும்பாம்பு, கோமேதகம்.
இராகுகாலம் - இராகுவின்காலம்.
இராகுக்கிராசம் - சந்திரகிரகணம்.
இராகூச்சிட்டம் - உள்ளி.
இராகேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
இராகை - குட்டம், பருவமுடையாள், பூரணை.
இராக்கசி - அரக்கி, கருங்கச் சோலம்.
இராக்கதம் - பெண்ணுஞ் சுற்றமும் உடன்படாது வலுவிற் கொள்ளுமணம்.
இராக்கதர் - இராட்சதர்.
இராக்கதிர் - சந்திரன்.
இராக்காச்சல் - இரவில் காயுஞ்சுரம்.
இராக்கினி - இராசாத்தி.
இராசகம் - இராசகூட்டம்.
இராசகயம் - இராசயானை.
இராசகரம் - இறை.
இராசகலகம் - கொடுங்கோன்மை, படைக்குழப்பம்.
இராசகனி - எலுமிச்சைக்கனி.
இராசகாரியம் - அரசியல்.
இராசகிரி - வெள்ளைக்கிரி.
இராசகுஞ்சரன்-பராராஜகுஞ்சர பாண்டியன்.
இராசகுதிரை - அரசுபரி.
இராசகெம்பீர பாண்டியன் - இராசேச பாண்டியனுக்குப்பின், அரசு செய்த பாண்டியன்.
இராசகோலம் - இராசவேஷம்.
இராசகோழை - இராசபயம், ஒரு கபநோய்.
இராசசங்கம் - இராசசபை.
இராசசதனம் - அரசன்வீடு.
இராசசம் - இராசப்பிறப்பு.
இராசசாரம் - மயில்.
இராசசார்த்தூலன் - இராஜ சூடாமணிக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
இராசசிருங்கம் - குடை.
இராசசின்னம் - அரசர்க்குள்ள முடி முதலிய வரிசை இராசதத்துவம்.
இராசசூடாமணி - இராஜமார்த்தாண்டனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
இராசசூயம் - அரசர்கள் செய்யும் வேள்வி, தாமரை, மலை.
இராசசேகரபாண்டியன் - கரிகாற்சோழன் காலத்துள்ள ஒரு பாண்டியன்.
இராசசேர்வை - இராசாக்களின் சேர்மானம்.
இராசஸ்ரீ - கீர்த்திபெற்ற மதிப்பான.
இராசதந்தம் - முன்வாய்ப்பல்.
இராசதம் - ஒருகாலம், முக்குணத்தினொன்று. அஃது ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி என்னும் எழுகுண முடையது.

இராசதரிசனம் - இராசாவைக்காணல்.
இராசதருமம் - அரசராறதொழில், இராசநீதி, செங்கோன்மை.
இராசதாலம் - கமுகு.
இராசதானம் / இராசதானி } தலைப்பட்டினம், வேந்திருக்கை.
இராசதுரோகம் - இராசாக்களுக்குச் செய்யும் வஞ்சகம்.
இராசதுரோகி - அரசர்களுக்கு வஞ்சகஞ் செய்யப்பட்டவன்.
இராசதெரு - இராசமனைத்தெரு, பெருந்தெரு.
இராசத்திரவியம் - அரசர் செல்வம்.
இராசத்துவம் - அரசியல்பு, இராசதத்துவம், இராசாங்கம்.
இராசநாகம் - நாகப்பாம்பினோர்சாதி.
இராசநிட்டூரம் - கொடுங்கோன்மை.
இராசநீதி - இராச தருமம்.
இராசநோக்காடு - பிரசவவேதனை.
இராசநோக்கு - இராசகிருபை, இராச பார்வை.
இராசபஞ்சகம் - அரசாட்சியினிடைஞ்சல், இராசபயம்.
இராசபட்டம் - இராசாதிகாரம், முடிசூட்டு.
இராசபட்டினம் - இராசநகரம்.
இராசபத்திரம் - இராசகட்டளை.
இராசபத்தினி - இராசன்தேவி.
இராசபம் - கழுதை.
இராசபயங்கரன் - பராராச குஞ்சரனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
இராசபரி - பரியரசு.
இராசபலை - முதியார் கூந்தல்.
இராசபாட்டை / இராசபாதை } இராசமார்க்கம்.
இராசபிளவை - முதுகி லுண்டாகும் ஒரு சிலந்தி.
இராசபுரி - இராசநகர், வெல்லம்.
இராசபுள் - எண்காற்புள், சரபம்.
இராசமண்டலம் - இராசசங்கம்.
இராசமந்தசர்ப்பம் - ஒருவகை நாகம். அது மந்தநடையும், தலைஉடல்வயிறு முதலிய இடங்களில் மினுமினுப்பும் சித்திரவன்னத்தை யொத்த புள்ளிகளையும் பெற்றிருப்பது.
இராசமன்னார்கோவில் - காவிரியின் தெற்கேயுள்ள ஒரு வைஷ்ணவஸ்தலம்.

இராசமாநகரி - இராசபட்டினம்.
இராசமாநாகம் / இராசமாமந்தம் } கருவழலை.
இராசமாபுரம் - ஜீவகன் இராஜதானி, இது ஏமாங்கத தேசத்திலுள்ளது.
இராசமார்த்தாண்டன் - சித்திர விக்கிரம பாண்டியனுக்குப் பின் அரசு செய்த பாண்டியன்.
இராசமாளிகை - அரசரரண்மனை, இராச நகரம்.
இராசமான்னியம் - இராச பொறுப்பாய் நடப்பது.
இராசயானை - எழுமுழ முயர்வும் ஒன்பதுமுழநீளமும் பதின்மூன்றுமுழச் சுற்றளவுமுடைய யானை.
இராசயுகம் - பாலை.
இராசயோகம் - உருத்தமயோகம்.
இராசராகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இராசராசபாண்டியன் - பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய திருவிளையாடல் கண்ட பாண்டியன.
இராசராசன் - இராதாதிராஜன், குபேரன், சக்கரவர்த்தி, துரியோதனன்.
இராசராசேசுவரம் - தஞ்சைப்பெருங்கோயில்.
இராசராசேசுவரி - துர்க்கை, பார்வதி.
இராசரிகம் - இராசதத்துவம்.
இராசலட்சுமி - அட்டலட்சுமியில் ஒன்று.
இராசலேகம் - திருமுகம்.
இராசவசித்துவம் / இராசவசியம் / இராசவசீகரம் } இராசாவைத் தன்வசமாக்குதல்.
இராசவட்டம் - பொதுவான சந்தி.
இராசவதி - அரண்மனை, சிங்காசனம்.
இராசவரிசை - இராசசிறப்பு.
இராசவர்க்கம் - இராசசந்ததி, வெண்மையுங் கருப்புங் கலந்தநிறம்.
இராசவன்னி - ஒரு கொடி.
இராசவாகனம் - சிவிகை, கோவேறு கழுதை.
இராசவாகியம் - அரசனேறும் பட்டத்தியானை.
இராசவாயில் - இராசவாசல்.
இராசவிட்டூரம் - கொடுங்கோல்.
இராசவிராசன் - இராசாதிராசன், குபேரன், துரியோதனன்.

இராசவிருட்சம் - கொன்றைமரம்.
இராசவீதி - இராசதெரு.
இராசனியகம் - அரசர்களினது கூட்டம்.
இராசனியன் - பட்டத்தரசன்.
இராசனை - வெள்ளைப்பூண்டு.
இராசன் - அரசன், இந்திரன், சந்திரன்.
இராசா - இராசன்.
இராசாக்கினை - இராசகட்டளை, இராசதண்டனை.
இராசாங்கம் - அட்டவைசுவரியத்தொன்று, இராசசின்னம், இராசத்துவம், இராசவாளுகை.
இராசாசனம் - சிங்காசனம்.
இராசாணி - இராணி.
இராசாதநம் - பழமுன்னிப்பாலை, முராஞ்செடி.
இராசாதிகாரம் - இராசதத்துவம்.
இராசாதிபதி } இராசராசன்.
இராசாதிபன் }
இராசாதிராசபாண்டியன் - வாருணபாண்டியனுக்குப் பின், அரசு செய்த ஒரு பாண்டியன்.
இராசாதிராசன் - திறைவாங்குமரசன்.
இராசாத்தி - அரசன்மனைவி, அரசி.
இராசாவர்த்தம் - இரத்தினம்.
இராசாளி - ஒரு பறவை.
இராசான்னம் - மூக்குங்காலுஞ்சிவந்து வெண்ணிறமாயிருக்குமன்னம், உத்தமசாதி யன்னம்.
இராசி - இணக்கம், ஒழுங்கு, ஓரை, குவிதல், கூட்டம், மத்தியானம், மேடை, முதலிய வீடு.
இராசிகம் - அட்சரகணிதம், அமிசம், அரசனால் வருவது, ஓரிராசி, குவியல், நரம்பு வரி.
இராசிகாரோகம் - ஒருவகை நோய், அது வெயிலாதியிறுக்கத்தால் வருகின்ற வியர்வையைக்கொண்டு சரீரதிறம்போலவே சிறுத்தம்பருத்தும் அணுக்களை யொத்தும் வட்டவடிவாய் நெருக்கிய வியர்க்குருவையுண்டாக்குவது.
இராசிகை - வயல், வரி.
இராசிக்காரன் - இராசிமண்டலம்.
இராசிசக்கரம் - இராசிமண்டலம்.
இராசித்தலைவர் - பொருத்தம், மணப்பொருத்தம் பத்திலொன்று.

இராசிநாதன் - அவ்வவ்விராசியினின்று ஆளுகை செய்யுங் கிரகம்.
இராசிபாகம் - பின்னம்.
இராசிபுடம் - இராசிகளிற் கிரக நிற்குநிலை.
இராசிப்பொருத்தம் - இராசியிணக்கம், மணப்பொருத்தம் பத்திலொன்று.
இராசிமண்டலம் - இராசிவட்டடை, ஒரை.
இராசியத்தானம் - குறி, கெற்பக்கிருகம், மறைவு.
இராசியம் - அந்தப்புறம், சா, தாமரைப்பூ, பெண்குறி, மறைவு.
இராசிலம் - இருதலைப்பாம்பு, சாரைப்பாம்பு, நீர்ப்பாம்பு.
இராசிவக்கிரம் - இராசிப்பிரிவிலொன்று.
இராசிவசியம் - இராசிகளினது வசியம் அது மேடத்திற்குச் சிங்கமும் விருச்சிகமும், இடபத்திற்குக் கடகமுந்துலாமும், மிதுனத்திற்குக் கன்னியும், கடகத்திற்கு விருச்சிகமுந்தனுசும், சிங்கத்திற்கு மகரமும், கன்னிக்கு இடபமும் மீனமும், துலாத்திற்கு மகரமும், விருச்சிகத்திற்குக் கடகமுங் கன்னியும், தனுசிற்குமீனமும், மகரத்திற்குக் கும்பமும், கும்பத்திற்கு மீனமும், மீனத்திற்குமகரமுமாம்.
இராசிவட்டம் - இராசிச்சக்கரம்.
இராசிகதெய்வீகம் - அரசனாலுந் தெய்வத்தாலும் வருவது.
இராசீகம் - அரசனால்வருவது.
இராசீகரம் - அரசாட்சிக்குரியது, அரசாளுகை.
இராசீலம் - இராசிலம்.
இராசீவம் - தாமரைப்பூ.
இராசுவை - சிற்றரத்தை.
இராசேசபாண்டியன் - இராசேந்திரபாண்டியனுக்கும்பின் அரசுசெய்த பாண்டியன்.
இராசேந்திரபாண்டியன் - இரசவாதஞ்செய்த திருவிளையாடல் கண்ட பாண்டியன்.
இராச்சியக்காரர் - இராச்சியம் பண்ணுவோர்.
இராச்சியபரிபாலனம் - இராச்சியப்பாதுகாப்பு.
இராச்சியபாரம் - இராச்சியப்பொறுப்பு.

இராச்சியம் - அரசுசெல்லுமிடம்,ஆளுகை உலகு, நாடு.
இராச்சியதி - இராச்சியக்காரி.
இராடம் - ஒரு தேயம், கழுதை, பெருங்காயம், வெங்காயம்.
இராட்சதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இராட்சசன் - இராக்கதன்.
இராட்சத - காற்பத்தொன்பதாவது வருடம்.
இராட்சயன் - இராட்சசன்.
இராஷ்டிரம் - இராஜதானியைச்சேர்ந்தவூர்.
இராஷ்டிரிகை - அரிசி சிறுவழுதுணை.
இராஷ்டிரியன்-அரசன் மைத்துனன்.
இராட்டினத்தொட்டி - இராட்டினம் போலச் சுழல் தொட்டி.
இராட்டினம் - நூல்னூர்க்குங்கருவி.
இராட்டினவாழை - ஒருதண்டில் நடுவிட்டுமேலுங்கீழுஞ்சிப்பிடும்வாழை.
இராட்டினவூசல் } இராட்டினம்
இராட்டினவூஞ்சல் } போற் சுற்றமூஞ்சல்.
இராட்டு - இராசா.
இராணம் - இலை, மயிற்றோகை.
இராணி - இராஜஸ்திரீ.
இராணிவாசம் - அந்தப்புரம்.
இராணுவம் - படை, யுததமுகம்.
இராதங்கம் - கால், கோரம்.
இராதம் - கடைக்கொள்ளி, வைகாசி மாதம்.
இராதாங்கம் - கலப்பை, மழைத்துளி,
இராதாந்தரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
இராதிதரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
இராதை - கிருட்டினன் மனைவி, மின்னல், விசாகம்.
இராதைகாந்தன் - கிருட்டினன்.
இராத்திரகம் - பஞ்சராத்திரம்.
இராத்திரம் - இரவு.
இராத்திரி - இரவு, மஞ்சள்.
இராத்திரிகாசம் - வெண்டாமரை.
இராத்திரிசரன் - அரக்கன், கள்வன், சேகண்டிக்காரன், பைசாசம்.
இராத்திரிவேதம் - கோழி.
இராகவேதசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இராந்து - இடுப்பு, தொடைச்சந்து.
இராந்துண்டு - இலந்தை.
இராபம்-விருத்தத்திற்பிடிக்குமூங்கில்.
இராப்போசனம் - இராச்சாப்பாடு, நற்கருணை.
இராமகலி - ஓரிராகம், அது மத்தியானத்தில் பாடுவது.
இராமகுரு - வசிஷ்டர்.
இராமக்கம் - ஒரு வைஞூரி.
இராமக்கிரியம் } ஓரிராகம்.
இராமக்கிரியை } ஓரிராகம்.
இராமசகன் - சுக்கிரீவன்.
இராமச்சந்திரதீர்த்தர் -மத்வாச்சாரியர்களுளொருவர்.
இராமச்சந்திரன் - இராமன்.
இராமடம் } பெருங்காயம்.
இராமடை } பெருங்காயம்.
இராமதூதன் - அனுமான்.
இராமதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இராமநாதர் - இராமேச்சுரத்திற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி, இவ்விலிங்கம் இராமசுவாமியால் தாபிக்கப்பட்டது.
இராமபத்திரி - ஒரு மருந்து.
இராமபத்தினி - சீதை.
இராமபாணம் - இராமரம்பு, ஒரு புழு ஒரு மருந்து.
இராமபுத்திரர் - குசலவர்.
இராமப்பிரியை - ஐம்பத்திரண்டாவது மேளகர்த்தா.
இராமமரம் - அனி நுணா.
இராமம் - அழகு, ஆசை.
இராமன் - சந்திரன், தசரதமகாராசருடைய புத்திரன், வருணன்.
இராமன்றேவி - சீதை.
இராமாநுசன் - இலக்குவன்,விட்டுனு சமயாசாரியகிலொருவர்.
இராமாயணம் - இதிகாசத்தொன்று இராமசரிதை.
இராமாலை - சருகுமாலை.
இராமானம் - இராமநாழிகை.
இராமிலன் - கணவன், காமன்.
இராமேசுவரம் - இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலுள்ள ஒரு சிவஸ்தலத் தீவு.

இராசயம் - எழுத்துக்காரியம், சம்பிரதித்தொழில்.
இராயசன் - சம்பிரதி.
இராயணி } இராசஸ்திரீ.
இராயனி }
இராயன் - அரசன்.
இராவடம்-அசோகு,அராவுந்தொழில்.
இராவடி - ஏலம், பேரேலம்.
இராவணம் - அழுதல், ஆரவாரித்தல், விளக்கு.
இராவணன் - இலங்கைவேந்தன்.
இராவணன்மீசை - ஒரு புல்.
இராவணஹஸ்தம் } ஒரு வீணை.
இராவணாத்தம் }
இராவணாரி - இராமன்.
இராவணி - இந்திரசித்து.
இராவணியம் - இராகங்களைச் சாமவேதத்திற் பொருத்திப்பாடு முறையை அறிவிக்கு நூல்.
இராவணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இராவதம்-சூரியன்குதிரை, மேகலோகம்.
இராவதி-ஒருகொடி, ஒருநதி, யமபுரம்.
இராவல் - அராவுதல்.
இராவிரேக்கு-அரசிலைச்சுட்டி, அரைமூடி, குழந்தைகள் நெற்றி மயிரில் தொங்குகிற அணியுளொன்று.
இராவுதல் - அராவுதல்.
இராவுத்தம் - குதிரைச்சேவகம்.
இராவுத்தன்-குதிரைச்சேவகன், குதிரைப்பாகன்.
இராவுத்தாங்கம் - திருவிழாக் காலங்களில், மனிதர்களாவது, ஸ்திரீகளாவது வேஷம்போட்டுக்கொண்டு குதிரைச்சவாரிசெய்கிறஒருவேடிக்கை.
இரிகம்-இரத்தாசயம், இருதயம், நியாயப்பிரமாணம், மனம், வழக்கு.
இரிகு - சத்துரு.
இரிக்கணம்-ஒருபுள், தவறிவிழுதல்.
இரிசல்-இரிதல், புலனைவேறொன்றிற் செலுத்தல், மனமுறிதல்.
இரிசியா - பூனைக்காலி.
இரிஞர் - அச்சமுன்னோர், பகைவர்.
இரிஞ்சி - மகிழ்.
இரிஷ்டம் - பேரகத்தி.
இரிணம்-உழமண்பூமி, பாழடைந்தது.

இரிதல் - அஞ்சுதல், ஓடல், கெடுதல், சாய்தல், தோற்றுடல்.
இரித்தகம் - பாழடைந்த வீடு.
இரித்தம் - தனம், பணம்.
இரித்தல்-அச்சுறுத்தல், அழித்தல்,ஒட்டுதல், கெடுத்தல், முறியடித்தல்.
இரிபு-அச்சம், ஓடுதல், சத்துரு, நோல்வி, பகை, வெறுப்பு.
இரிபேரம் - வெட்டிவேர்.
இரிப்பு - அச்சுறுத்தல், முறியடிக்கை.
இரியல்-இரிதல், கெடுதல், கல்லாடை பறத்தல்.
இரீஇ - இருத்தி, இருந்து.
இரீடை - அவமானம்.
இரீட்டம் - குறுகல்.
இரீணம் - பெருகின தண்ணீர்.
இரீதி-ஒழுங்கு,பித்தளை,இரும்புக்கரை, எல்லை, கிட்டம், தேசவழக்கம்.
இரீதிகவுளம் - ஓரிராகம்.
இரீதிப்புஷ்பம் - குசுமாஞ்சனம், ஈயச்செந்தூரம்.
இரு - பெரிய அதிதியின் நாமாந்தரம். இரண்டு.
இருகந்தம் - இருமணம்.
இருகன்-விஜயன் புத்திரன், விருகன் தந்தை.
இருகால்-அரை, இரண்டுதாள், இரண்டுமுறை.
இருகாழி - இரண்டு கொட்டையுள்ள காய்.
இருகுரங்கின்கை - முசுமுசுக்கை.
இருகுறணேரிசைவெண்பா - நேரிசை வெண்பாவி லொன்று.
இருக்கால்-இரண்டுமுறை, சுவற்றிற்றுயத்துளொன்று. [து.
இருக்காழி - இரண்டு கொட்டையுள்ளது.
இருக்கு உபநிடத முப்பத்திரண்டிலொன்று,மந்திரம்,முதல்வேதம்,வேதம்.
இருக்கை - ஆசனம், இருத்தல், ஊர்ப்பொது, குடியிருப்பு, வீடு.
இருங்கடல் - பெரிய சமுத்திரம்.
இருங்கீர்த்தி - பெருப்புகழ்.
இருங்குணம் - பெருமையான குணம்,
இருசகம் - மாதுளை.
இருசங்கன் - பேருசங்கன்.
இருசட் - பன்னிரண்டு.
இருசமயவிளக்கம் - ஒருநூல்.

இருசி-இருதுவாகுந் தன்மையில்லாப் பெண், ஒரு பெண்பசாசு.

இருசிகன்-ஔர்வன் மகன், விசுவாமித்திரன் றங்கை, சத்தியவதி கணவன், ஜமதக்கினி தந்தை.

இருசியசிம்மகுஷ்டம் - ஒருவகைக் குஷ்டரோகம். அது முட்களைப்போல் மெல்லியதாய்நீண்டு பிசுபிசுத்துச் சரசரத்து உள்ளிற்கறுத்து நுனியிற் சிவந்து நெருக்கமாகக் கொப்பளங்களெழும்பும். அவைகளிற் புழுக்களுநோவும் எரிச்சலும் உண்டாகும்.

இருசியம் - ஒருவகை மிருகம்.

இருசீரகம் - சீரகம், கருஞ்சீரகம்.

இருசு-உரித்து, செவ்வை, பண்டியுளிரும்பு, மூங்கில்.

இருசுடர் - ஆதித்தன், சந்திரன்.

இருசுடர்த்தோற்றம் - பெருங்காப்பிய வுறுப்புளொன்று.

இருசுபகந்தாவிரணம்-ஒருவகை விரணநோய். அது வாதபித்தத்தினாற் பிறந்து குதவளையத்தை யொட்டி யொழுங்கான துவாரங்களை யுண்டாக்கிச் சீழை யொழுகுவிக்கும்.

இருசுவரோமா-சுவர்ணரோமா மகன்.

இருஞ்சிறை - காவல், நரகம், மதில்.

இருஷபத்துவசன் - சிவபெருமான்.

இருஷபம் - இடபம், காதிற்றுளை.

இருஷி - இருடி, பிரபை, வேதம்.

இருடி - ஆக்ஞை, இருதுடையா திருப்பவள், முனிவன்.

இருடிகருமன் - துரியோதனன் றம்பியருள் ஒருவன்.

இருஷிகேசன்
இருடிகேசன் } திருமால்.

இருடிபத்தினி
இருடிபன்னி } முனிவன் மனைவி.

இருஷியஞ்ஞம் - வேதாப்பியாசம்.

இருஷியமுகம் - கிட்கிந்தை.

இருட்சதே - அந்தகாரம்.

இருட்சம் - மானவதேசத் தருகேயுள்ள ஒருமலை.

இருட்சன் - அசமீடன் மூன்றுமகன். இவன் பௌத்திரன் குரு, புருஜயன் மகன், பரிமியாசுவன் றந்தை, தேவாதிதிமகன்.

இருட்சி - இருள், மயக்கம்.

இருட்டல் - இருளாதல்.

இருட்டு-அறியாமை, இருள், மயக்கம்.

இருட்டுதல் - இருளடைதல்.

இருணபாதகம் - கடன்தீர்க்காமல் மோசஞ்செய்தல்.

இருணபாதகன் - கடன்தீர்க்காதவன்.

இருணம் - உப்பளம், உவர்த்தரை, கடன், கழிக்கப்படுமெண்.

இருணிலம் - நரகம்.

இருண்டி - சிறுசண்பகம்.

இருண்மை - இருளுடைமை.

இருததாமன் - வசுதேவன்தம்பி. ஆனகன்மகன், தேவேந்திரர் பதினொன்கு பேர்களுளொருவன்.

இருதத்துவஜன் - பிரதத்தன்.

இருதம் - நீர், மெய்.

இருதயகமலம் - உள்ளம்.

இருதயம் - இரத்தாசயம், உயிர்நிலை, உள்ளம், கருத்துரை, மனம்.

இருதலைக்கபடம் - விலாங்குமீன்.

இருதலைக்கொள்ளி - இருதலையுந் தீப்பற்றிய கொள்ளி.

இருதலைஞாங்கர் - குமரன்வேல்.

இருதலைப்பட்சி - ஒரு பறவை.

இருதலைப்பாம்பு-மண்ணுணிப்பாம்பு.

இருதலைப்பூச்சி - ஒரு பூச்சி.

இருதலைமணியன்-இருதலைப்பாம்பு.

இருதலைமாணிக்கம் - ஒரு மந்திரம்.

இருதவாக்கு - இவன் தனக்கு ரேவதி நக்ஷத்திரத்து, நாலாம்பாதத்திற் பிறந்த புத்திரன், துஷ்டனாகிய, நிமித்தம் ரேவதியைப் பூமியில் விழுமாறு சபித்தான்.

இருதன் - விஜயன் மகன்.

இருதாரைக்கத்தி - இரண்டுபக்கம் கூர்மையுள்ள கத்தி.

இருதி-இரண்டெழுத்தாலாகிய அசை.

இருதிணை - அஃறிணை உயர்திணை.

இருதிராசம் - வேனில்.

இருது-இரண்டுமாதபருவம், ஒருமாதம், கடவுளின் முத்தொழில், பிரபை, மகளிர்சூதகம், மகளிர் முதற்பூப்பு.

இருதுகாலம் -கருப்பந்தரிக்கத்தகுநாள்; அது பூப்படைந்து பதினாறுநாள் மட்டும்.

இருதுக்காட்சி - அகப்பொருட்டுறையினொன்று.

இருதுசந்தி-பருவச்சங்கிரமம்.
இருதுசாந்தி - ஒருசடங்கு, சோபன கலியாணம்.
இருதுபர்ணன் - அயோத்தியாபுரி யரசன். இவன் அயுதாயுவன் மகனும் சர்வகாமன் தந்தையுமாவன். இவ்வரசன், நளனைத் தனக்குத் தேர்ப்பாகனாக்கி அந்நளனுக்கு அக்ஷய ஹிருதயத்தை யுபதேசித்து அவனிடத்திருந்து தான் அசுவ ஹிருதயத்தைப் பெற்றான்.
இருதுவாதல் - பூத்தல்.
இருதுவிருத்தி - வருடம்.
இருதொண்டு - பதினெட்டு.
இருதோத்தி - சத்தியவசனம்.
இருதோற்றம் - சரமசரம்.
இருத்தகுதம் - ஒருவகைநோய். அது நாபியில் மலத்தை அடக்கி அடக்கி விடுதலால் அபானவாயுவு குதத்தை நன்றா யனுசரித்து அத்துவாரவலையத்தின் அடியையும் நுனியையுஞ் சுருங்கச் செய்வதாற் பிறந்து மலவிசர்ச்சனத்திற்கு உபத்திரவத்தை யுண்டாக்குவது. அதனால் ஆசனத்தில் வெடிப்புண்டாகிப் பச்சைப் புண்போல் நோகும்.
இருத்தம் - பிராகாரம்.
இருத்தல் - இருத்துதல், சீவித்தல், தங்கல், தாழ்தல்.
இருத்தாகசன்னிபாதசுரம் - ஒருவகைச்சுரநோய். அது அவயவங்களிலிருந்த வேதனை, உடம்பெரிவு, காங்கை, கழுத்துக்குள் நோவொடு தினவு, பிரமை, சோர்வு, பிரலாப வார்த்தை, தாகம், அதிகபேதி அல்லது சொற்பபேதி என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.
இருத்தி - இருத்தலைச் செய்தென்னெச்சம், இருப்பாயென்னுமுற்று, இருவென்னேவல், சித்தி, மேன்மை.
இருத்தினர் - வேள்வியில் குருவுக்கு ஒத்தாசை செய்பவர்.
இருத்து - அஸ்தக்கிரியை.
இருத்துதல் - அழுத்தல், உட்காரச் செய்யல், தாமதிக்கச்செய்யல், நிலைபெறச்செய்யல்.
இருத்தை - இருபத்துநாலு நிமிஷங்கொண்ட ஒருநாழிகை. சந்திரனுக்காம் பக்கம், ஒன்பதாம் பக்கம் பதினொன்காம் பக்கம், சேங்கொட்டை, நாழிகை வட்டில்.
இருநா - உடம்பு, பாம்பு.
இருநிதிக்கிழவன் - குபேரன்.
இருநிலம் - பூமி.
இருநினை - இருமனம்.
இருந்தநம்பி - தூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருக்குறுங்குடியிற் கோயில்கொண்ட விட்டுணு.
இருந்தமிழ் - சிறந்த தமிழ்.
இருந்து - அசைச்சொல் (உ-ம்) எழுந்திருந்தோன், கரி.
இருந்தை கரி.
இருந்தையூர்க்கருங்கோழி மோசியார் - இடைச்சங்கப் புலவரு ளொருவர்.
இருபஃது } இரண்டு பத்து.
இருபது }
இருபவம் - தேவதைகள்.
இருபன்-பிரம்மானச புத்திரருள் ஒருவன்.
இருபன்னியம் - சேங்கொட்டை.
இருபாவிருபது-ஒரு பிரபந்தம். அஃது பத்து வெண்பாவும் பத்தகவலும்அந்தாதித்தொடையால் இருபதினைந்து வருவது.
இருபிறப்பாளர் - உபநயனத்திற்கு முன்ன மொருபிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையு முடையவர், பார்ப்பார்.
இருபிறப்பு - இருசனனம், சந்திரன், சிறகு, பல், பார்ப்பார், முட்டையிற் பிறப்பன.
இருபுட்சன் - இந்திரன்.
இருபுறவசை-இருமரபி னிகழ்வுகூறல்.
இருபுறவாழ்த்து - இருமரபின் புகழ் கூறல்.
இருபெயரெட்டு - இருசொல் லொருசொல்லாக நிற்பது (உ-ம்) பாம்பு பாம்பு.
இருபெயரொட்டுப் பண்புத்தொகை - ஆகிய வென்னுமுருபு தொக்குநிற்ப ஒரு பொருட்கே பொதுவுஞ் சிறப்புமாக இரு பெயர்வருவன (உ-ம்) ஆயன் சாத்தான்.

இருபொருள் - கல்வியும் செல்வமும்.

இருபொருள்வேற்றுமைச்சமயம் - ஓரலங்காரம். அது உபமான வுபமேயங்களிரண்டையு மொற்றுமைப் படுத்துவது.

இருபோகம் - இரண்டுதரம் விளைவு.

இருப்பவல் - ஒரு பூண்டு.

இருப்பாணி - இரும்பாணி.

இருப்பாயுதம் - ஆயுதப்பொது.

இருப்பிடம் - ஆசனம், இருக்குமிடம்.

இருப்பு - இருக்கத்தக்கவிடம், இருக்குந்தன்மை, இருக்கை, குதம், பீடம், மீந்திருப்பவை.

இருப்புக்காய்வேளை - ஒருசெடி.

இருப்புக்கிட்டம் - கிச்சக்கிட்டம்.

இருப்புக்கொல்லி - சிவனார்வேம்பு.

இருப்புச்சலாகை-இரணவைத்தியவாயுதத்தொன்று. இருப்புநாராசம், அப்பாக்கிச்சலாகை.

இருப்புச்சிரா } இருப்புச்சட்டை.
இருப்புச்சுவடு }

இருப்புத்தட்டுமுட்டு - இரும்புமலை.

இருப்புநெஞ்சு - இரக்கமில்லாத நெஞ்சுகல்நெஞ்சு.

இருப்புப்பாரை } குழிகல்லுங்கருவி.
இருப்புமுளை }

இருப்புமுன் - குற்றுக்கோல்.

இருப்புமுறி - ஒருசெடி.

இருப்புலக்கை - ஓராயுதம்.

இருப்புலி - துவரை.

இருப்பூரல் - இரும்புக்கறை.

இருப்பூரற்பணம்-கெட்டுப்போன வெள்ளிப்பணம்.

இருப்பை - இருப்பாயென்னு முற்று, இலுப்பை.

இருமடங்கு } இரண்டுபங்கு.
இருமடி }

இருமடியாகுபெயர் - ஒன்றற்காகுபெயராயிருப்பது அதனாலாய மற்றொன்றற்கும் பெயராய்வழங்குவது (உ-ம்) கார்காலம்.

இருமடியேவல் - ஈரேவல்.

இருமரபு - தந்தைவழி, தாய்வழி.

இருமலர்க்கண்ணம்மை - திருச்சாத்தமங்கையிற் கோயில் கொண்டிருக்குந் தேவியார்.

இருமல் - கக்கல், கக்கல்நோய்.

இருமல்லி - சிறுமல்லி, பெருமல்லி.

இருமனம் - சந்தேகம்.

இருமு-இரண்டரையாலாகிய மொழி.

இருமுதல் - கக்குதல்.

இருமுரடன் - முரட்டுக்குணன்.

இருமை - இம்மைமறுமை, இரண்டு, இருதன்மை, கருமை, துக்கம், பெருமை, மகிமை.

இருமையியற்கை - ஓரலங்காரம் அஃது கூடுவதையும் கூடாவதனையுங் கூடக் கூறுவது.

இரும்பலி - இரும்பிலி.

இரும்பன் - காரெலி.

இரும்பிடர்த்தலையார்-கரிகாற் சோழன் மாதுலனார். இவர் அச்சோழனுக்கமைச்சராகவும்புலவராகவுமிருந்தவர்

இரும்பிலி - நீருரி, ஒரு செடி.

இரும்பு - ஆயுதப்பொது, சத்தலோகத்தொன்று. அஃது கரும்பொன்.

இரும்புக்காய்வேளை - காய்வேளை.

இரும்புத்துப்பு - துரு, மண்டூரம்.

இரும்புலி - ஒருசெடி, துவரை.

இரும்புளி - ஒருமரம்.

இரும்பை - குடம், பாம்பு.

இருவர்மாறுகோ ளொருதலைதுணிவு - எழுவகை மதத்தினொன்று.

இருவல்நொருவல் } இடிந்துமிடியாதது.
இருவல்நொறுவல் }

இருவனருவல் - குறுணல், துளும்பருபருக்கையுமானது.

இருவாச்சி } கருமுகைச்செடி, ஒருமரம்.
இருவாட்சி }

இருவாட்டித்தரை - மணலுங் களியும் உள்ளதரை.

இருவாய்க்குருவி - ஒருபுள்.

இருவாய்ச்சி - இருவாட்சி.

இருவாளிப்பு - இருமனம்.

இருவி - ஒருநாபி, திரைத்தாள்.

இருவிக்காந்தம் - ஒரு நச்சுமூலிகை.

இருவினை - நல்வினை தீவினை.

இருவேலி - வெட்டிவேர்.

இருவேளை - தைவேளை, நல்வேளை, இராப்பகல்.

இருளர் - ஒருசாதியார், வேடர்.

இருளல் - இருளுதல்.

இருளன் - ஒருபிசாசம், மலையில்வாழுமோர் சாதியான்.

இருளி - இருசி, கருஞ்சீரகம், பன்றி மோத்தை, முலையிலி, வெட்கம்.
இருளிச்செவி - அமுக்கிராஞ்செடி.
இருளுதல்-ஒளிமழுங்கல், மங்கலாதல்.
இருளை - நாணம்.
இருள் - இருட்டு, உன்மத்தம், கறுப்பு, நரகம், மயக்கம், யானை.
இருள்முகா - நாவி.
இருள்வலி - சூரியன்.
இரூமிமஸ்தகி - ஒருமருந்து.
இரெட்டி - ஒருசாதி.
இரெப்பை - கண்மடல்.
இரேகபிராணன்- தேகத்தோடைக்கிய மான சீவன், மிருசினேகம்.
இரேகம் - தேகம்.
இரேகாத்திரயம் - அபயஞ்செய்தல்.
இரேகி - அதிட்டவான், கீழ்மகன்.
இரேகித்தல் - ஒன்றித்தல், சேருதல், [பழகுதல்.
இரேகு - ஆயம்.
இரேகுத்தி - ஓரிராகம்.
இரேகை - எழுத்து, சித்திரம், வரி வரை.
இரேக்கு-ஒருவகைச்சல்லா, தத்துவம், பூவிதழ், பொற்றகடு.
இரேசகம் - பிராணவாயுவை விடுதல், பேதிமருந்து.
இரேசகி - கடுக்காய், சீந்தில்.
இரேசக்குணு - சுடுகு.
இரேசந்திரம் - இரதம்.
இரேசம் - இரசம்.
இரேசலம் - நவமணிக் குற்றத்தொன்று, நெல்லினிறம்.
இரேசனம் - பிராணயாமத்தில் வாயுவை விடல், விரேசனம்.
இரேசன் - அரசன், வருணன், விட்டுணு, வெள்ளுள்ளி.
இரேசிதம் - குதிரைவட்டமாயோடல், பரதவுறுப்புளொன்று, வெறுமை.
இரேசித்தல்-அந்தித்தல், மூச்சுவிடுதல்.
இரேசுதல் - அசீரணம், அந்திப்பு.
இரேணு - அணு, அழகு.
இரேணுகம்-அரேணுகம், ஒரு மருந்து.
இரேதசு } விந்து.
இரேதஸ் }
இரேதஸ்கலிதம்-விந்து ஒழுகிவிடல்.
இரேபதம் - கண்டம், தருமநூல் பதினெட்டினொன்று,

இரேயம் - கள்.
இரேவதம்-இரேபதம், இரேவதிநாள்.
இரேவதன் - பலதேவன் மாமன்.
இரேவதி-கடைநாள், பலதேவன்மனை
இரேவதிகொண்கன்-பலதேவன். [வி.
இரேவு -ஆயத்துறை, இறங்குந்துறை:
இரை - இருப்பு, இரையென்னேவல், இலக்குமி, உணவு, ஒலி, நீர், பூமி, பேச்சு.
இரைகொள்ளி - இரைப்பெட்டி, பெருந்தீனியாள்.
இரைக்குடர் - இரைப்பை
இரைச்சல்-ஆரம்பம், ஒலி, வீக்கம்.
இரைதல் - ஒலித்தல், வீங்குதல்.
இரைத்து - இண்டு, உப்பிலி, புலிதொடக்கி, வெண்கலம்.
இரைநீர் - கடல். [தது.
இரைப்பற்று - இரைப்பிடி, செரியா
இரைப்பு-இரைதல், ஒருநோய்,வீக்கம்.
இரைப்புமாந்தம் - ஒருவகை மாந்த நோய்.
இரைப்பெட்டி - இரைதங்கும் பை.
இரைப்பெலி-ஒரெலி, இது கடித்தால் இரைப்பு நோயுண்டாகும்.
இரைப்பை - இரைதங்கும் பை.
இரைமீட்குதல் - அசை வெட்டுதல், இரையெடுத்தல்.
இரையெடுத்தல்-இரைமீட்டல், புசித்தல்.
இரெளத்தம்-குதிரைச்சேவகம். [கர்.
இரெளத்தர்-குதிரைச்சேவகர், சோன
இரௌத்திரம் } சுபாவக்குணம் ஒன்
இரெளத்திரவம் } பதினொன்று. அஃது பெருங்கோபம்.
இரௌத்திரி-ஐம்பத்துநாலாவது வருடம்.
இரௌரவம் - ஒரு நரகம், சிவாகமம், இருபத்தெட்டினொன்று.
இலகடம் - யானைமேற் றவிசு.
இலகம் - ஊமத்தை.
இலகரி - ஒருநூல், பெருந்திரை, மஸ்து, மிகுபுகழ்ச்சி, வெறி.
இலகல் - இலகுதல்.
இலகான் - கடிவாளம்.
இலகிமா - அட்டசித்தியி னொன்று, அஃது பஞ்சினொய்தாதல், கனமின்மையாகுகை.

இலகிரி - அபின், கஞ்சா, சாதிக்காய், சாதிபத்திரி.

இலகு-அகில், இலகென்னேவல், ஒரு மரம், கனமின்மை, காலநசப் பிரமாணத்தொன்று. அஃது துரிதமிரண்டுகொண்டது, குறிலெழுத்து, சீதேவி, மெய்மை, வானோர்வரம் நான்கினொன்று. அதுகனமின்மை.

இலகுசம் - ஈரப்பலா, இலாமிச்சு.

இலகுதல் - ஒளிசெய்தல்.

இலகுத்துவம்- அட்டசித்தியினொன்று. அஃது இலகுவாதல்.

இலகுமா - இலகிமா.

இலக்கணக்கொத்து - ஒரு அரிய விலக்கண நூல்.

இலக்கணச்சிதைவு-வழூவாய் வழங்குஞ்சொல்.

இலக்கணச்சுழி - நல்லங்கச்சுழி.

இலக்கணச்சொல் - இலக்கணவழியால் வருஞ்சொல்.

இலக்கணநூல் - எழுத்து சொல் பொருள் யாப்பு அணி இவையைத் தெரிவிக்கு நூல்.

இலக்கணப்போலி - இலக்கணமுடையதுபோல் வருஞ்சொல்.

இலக்கணம் - அடையாளம், அழகு, இயல், இலக்கணநூல், ஒழுங்கு, பேர், போதப்பிரகார மூன்றி னொன்று, அஃது தான்விவரிக்கும்பொருளின் சிறப்புத்தன்மைகூறல், முறைமை.

இலக்கணவழக்கு - இலக்கணநடை.

இலக்கணவழு - இலக்கணப்பிழை.

இலக்கணவிளக்கச்சூறாவளி -இலக்கணவிளக்கத்திற் சிலபாகத்தை மறுத்து சிவஞானமுனிவர் செய்த ஒருநூல்.

இலக்கணவிளக்கம்-வைத்தியநாத தேசிகரால் செய்யப்பட்ட ஓர் அரிய இலக்கணநூல். அது பஞ்ச லக்கணங்களையும் அறிவிப்பது.

இலக்கணி - இலக்கணமறிந்தவன்.

இலக்கணீயம் - இலக்கணத்தை யுடையது.

இலக்கணை-உரிய பொருளைவிட்டு அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது.

இலக்கமிடல் - இலக்கமெழுதல், கணக்குப்பார்த்தல்.

இலக்கம் - இலட்சம், எண், ஒளி, குறிப்புநிலக்கம்.

இலக்கர் - கந்தை, சீலை.

இலக்காந்தரம் - இடையிலக்கம்.

இலக்காரம் - சீலை.

இலக்கியம் - இலக்கண நூற்படி முன்னோர் தந்த செய்யுள், உதாரணம், குறி.

இலக்கியாளம் - இலயபிடி.

இலக்கினசட்டுவருக்கம் -இராசிக்குரிய வாறு காரியம்.

இலக்கினபுடம் - இராசியைப்பற்றி வருஞ் சத்தபுடம்.

இலக்கினம்-இராசிகளிலுதயம், முகூர்த்தம்.

இலக்கு-எண்ணம்,எதிர், எது, ஓட்டம், ஒப்பு, குறிப்பு, சமயம், சுவடு, நேர்.

இலக்குப்பார்த்தல்-குறிப்புப் பார்த்தல்.

இலக்குமணேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இலக்குமணை - சாரசபட்சியின் பேடு.

இலக்குமன் - இலட்சுமணன்.

இலக்குமி-அதிட்டம், அழகு, சீதேவி, செல்வம், முத்து.

இலக்குமிபதி - விட்டுணு.

இலக்குமீசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இலக்குவன் - இராமன் தம்பி.

இலக்குவைத்தல் - குறிப்புவைத்தல்.

இலங்கம் - எறும்பு, களரி, கூட்டம், மூடம்.

இலங்கல் - பிரகாசித்தல்.

இலங்களம்-கடத்தல், தாண்டுகை, பட்டினி.

இலங்காசிகை - நாகப்பூ.

இலங்கிசார்-அலைக்கழிவு, இடைஞ்சல்.

இலங்கு - குளம்.

இலங்குதல் - ஒளிசெய்தல்.

இலங்குபொழுது - அத்தமிக்கும்போதிருக்குஞ் சூரியவொளி.

இலங்கேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இலங்கை - ஆற்றிடைக்குறை, இராவணன் நகரமாகிய இலங்காபுரி, ஈழமண்டலம், தூங்குவது.

இலங்கோசிகை - நாகப்பூ.

இலங்கோடு - கீழுடை.

இலசுணம் - வெள்வெங்காயம், வெள்ளைப்பூண்டு.
இலசுனம் - மணியின்குற்றத்தொன்று, வெள்வெங்காயம்.
இலச்சாசீலம் - வெட்கப்படுந்தன்மை.
இலச்சாசீலன் - வெட்கப்படுந்தன்மையுடையோன்.
இலச்சிதம் - வெட்கமடைந்தது.
இலச்சிதன் - வெட்கமடைந்தவன்.
இலச்சினை-குறி, முத்திரைமோதிரம்.
இலச்சை - அவமதிப்பு, கூச்சம்,தொந்தரவு, வெட்கம்.
இலச்சைகெட்டமரம் - கற்றேக்கு.
இலஞ்சம் - பரிதானம்.
இலஞ்சி - ஏரி, கீழ், குணம், குளம், கொப்பூழ், சாரைப்பாம்பு, புனம், புன்குமரம் மகிழமரம், மடு, மதில்.
இலஞ்சியம் - கீழாநெல்லி.
இலட்சணம் - இடம், இலக்கணம்,குறி பார்வை, பேர்.
இலட்சம் -அடையாளம், இலக்கம், எத்து, நூறுயிரம்.
இலட்சயம் - எண்ணத்தக்கது.
இலட்சாதிபதி - இலட்சப்பிரபு.
இலட்சியம் - அடையாளம், எதிர், எத்து, நூறுயிரம், மதிப்பு.
இலட்சுமணம் - ஓர்மரம், தாளி.
இலட்சுமணன் - இராமன்றம்பி.
இலட்டு } அப்பவருக்கம்,தோசை
இலட்டுகம் } பொரிமாத்திரை.
இலனை - அரசமரம்.
இலண்டம் - ஆனையிலத்தி.
இலண்டன் - முருடன்.
இலண்டு - முருட்டுத்தனம்.
இலதாங்கி - அறுபத்து மூன்றுவது மேளகர்த்தா.
இலதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
இலதை - இலந்தை, கொடி, கோற்கொடி, தக்கோலம், படர்கொடி.
இலதைக்கை - பிண்டிக்கை முப்பத்துமூன்றனுளொன்று. அது கடுவிரலுஞ்சுட்டுவிரலுக்கூடிநிமிரப்பெருவிரலவற்றின்கீழ் வரைசேர ஒழிந்தவிரண்டுவிரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது.
இலதைவன்னி - கொடிவேலி.
இலத்தி-குதிரைப்பீ, யானைக்கூட்டம்.
இலந்தை - ஒருமரம், குளம்.
இலந்தைத்தம்பலம் - இலந்தைமரப்பட்டையில் பூச்சிகளால் செய்யப்படுந்திவை.
இலபனம் - முகம், வாய். [திவை.
இலபி - பேறு, விதி.
இலபிதம் - சம்பவிப்பது, பட்சித்தல், பேச்சு, பேறு, விதி.
இலபித்தம் - பேறு.
இலபித்தல் - சிந்தித்தல்,பேறு கிடைத்
இலபிப்பு - சித்திப்பு. [தல்.
இலப்தம் - கிடைத்தது, பாசிதம்.
இலம் - இல்லாமை, வீடு.
இலம்பகம் - அத்தியாயம், நுதலணிமாலை, மாலை.
இலம்பகோணம் - ஒருவகைக் கையிரேகை. அது அக்கன்னத்திற் கெதிராயது.
இலம்படை - இடுக்கண், தரித்திரம்.
இலம்பமானம்-கழுத்திற்றொங்குந் தாழ்வடம்.
இலம்பம் } உச்சத்திற்கும் துருவத்
இலம்பனம் } திற்கு முள்ள தூரம், கைக்கூலி, தொங்குவது,கிறுத்திட்டவரி, மாலை.
இலம்பாடி - ஒரு சாதி, வறியவன்.
இலம்பாடு - தரித்திரம், வறுமை.
இலம்பாட்டார் - தரித்திரர்.
இலம்பாட்டோன் - தரித்திரன்.
இலம்பிகை - அண்ணாக்கு.
இலம்பிதச்சா-சூரியன்மேவிராசியின் மேலேறும் பாகவளவு.
இலம்பிதமதி - சந்திரபுடத்தைச் சூரியபாதையிற் சேர்க்குமோரளவு.
இலம்பிதம் - அசைவு, உயர்ச்சி, சந்திரபுடத்தைச் சூரியபாதையிற் சேர்க்குமோரளவு, தொங்கல்.
இலம்பை - இடுக்கண், தரித்திரம், அயரமான கிலை.
இலம்போதரன் - விநாயகன்.
இலயகாலம் - அழிவுகாலம், உலோகாந்தரம்.
இலயக்கியானம் - சங்கீதசுரக்கியானம்.
இலயஞானம் - நால்வகைக் கேள்வியில் ஒன்று.
இலயஸ்தானம் - ஒடுங்குமிடம்.
இலயபிடி - இலயஸ்தானம், ஒடுக்கம்.

இலயம் - அடங்குகை, அழிவு, இலயபிடி, உருக்கல், ஒடுக்கம், ஒளிப்பு. கூத்தின் விகர்பம், கூத்து, சாவு.
இலயித்தல் - அழிதல், ஒடுங்குதல், சேர்ந்தொன்றித்தல்.
இலயிப்பு - அறிவு, ஒடுக்கம்.
இலயை - இலயகாலம்,தாளப்பிரமாணம் பத்தினொன்று.
இலயைக்கியானம் - இலயக்கியானம்.
இலலந்திகை - சுட்டி, முகப்பட்டை.
இலலனை - பெண், வேடிக்கைக்காரி.
இலலாடம் - நெற்றி.
இலலாடைரேகை - நுதற்குறி,நெற்றி
இலலாடலிபி - தலையெழுத்து. [வரி.
இலலாடிகை - நுதற்றிலகம், நெற்றிச்சுட்டி.
இலலாமகம் - நெற்றியிற்செருக்கும் ஆரணம், முன்மயிர்.
இலலாமம் - அடையாளம், அரச சின்னம்,கொடி, கொம்பு, திலகம், வால்.
இலலாவம் - ஆபரணம், இரேகை,குதிரை, நெற்றிமறை, பிடர்மயிர், மகத்துவம்.
இலலிதபஞ்சகம் - ஓரிராகம்.
இலலிதம் - அழகு, அபிநயம், உபசாரம் ஒரிராகவிகற்பம், காமக்குறி, பரிகாசம், மகளிர், விளையாட்டு, மாதுரியம்.
இலலிதை - இராக முப்பத்திரண்டில் ஒன்று, பார்வதி, பெண், மான்மதம்.
இலவங்கப்பட்டை - ஒரு வாசனைப்பட்டை.
இலவங்கப்பத்திரி - இலவங்க இலை.
இலவங்கப்பூ - இலவங்கம்.
இலவங்கம் - ஒருவாசனைமரம். அஃது பஞ்சவாசத்தொன்றுமாம், கராம்பு.
இலவசம் - விலையின்றிப் பெறுகை.
இலவணபஞ்சாட்சரம் - ஒரு மந்திரம், ஒரு மாந்திரிநூல்.
இலவணபாஷாணம் - வைப்புப் பாஷாண முப்பத்திரண்டினொன்று.
இலவணம் - உப்பு, உவர்த்தல்.
இலவணவித்தை - ஒரு தந்திரவித்தை.
இலவணோதம் - உப்புச்சமுத்திரம்.
இலவந்திகை - எந்திரவாவி, தண்ணீரிறைக்கு மியந்திரம், நீராவியைச்சூழ்ந்த வசந்தச்சோலை.
இலவம் - அழிவு, அற்பம், ஒருதீவு,ஒருபஞ்சமரம், கராப்பு, காலதசப்பிரமாணத்தொன்று. அஃது கணமெட்டுக்கொண்டது, சாதிக்காய், பிழை நீக்கல், பூசை, மயிர்.
இலவம்பஞ்சு - இலவமரத்தின் பஞ்சு.
இலவம்பிசின் - இலவமரத்தி லுண்டாகும் பிசின்.
இலவம்பொதுமணி - செளந்திகப் பதுமராகமணி.
இலவலேசம் - மிகச்சிறிது.
இலவனம்-மயிர்முதலானவற்றையறுத்தல்.
இலவன்-இராமன் மக்களிலொருவன்.
இலவித்திரம் - அரிவாள்.
இலவியஞ்செய்தல் - மொய்யளித்தல்.
இலவியப்பணம் - மொய்யளித்ததிற்கிடைத்தபணம்.
இலவியம் - இலவசம்.
இலவு - ஒரு பஞ்சுமரம், தேற்று.
இலவுகீகம் - இலெளகீகம்.
இலளிதபஞ்சகம் - ஓரிசைவிகற்பம்.
இலளிதம் - அழகு, உபசாரம், ஓரிராகவிகற்பம், சிவாகம மிருபத்தெட்டில் ஒன்று, பரிகாசம், மாதுரியம்.
இலளிதை - பார்வதி.
இலாகரி - மஸ்து, வெறி.
இலாகவம் இலகு,சாமர்த்தியம்,தாபரம்.
இலாகன் - ஒருமீன்.
இலாகிரி - இலாகரி.
இலாகு - இலாவகம்.
இலாகை - மாதிரி.
இலாக்கிரி - செம்மெழுகு.
இலாக்கை - ஈர்.
இலாங்கலதம்பம் - ஏர்க்கால்.
இலாங்கலம் } ஆண்குறி,கலப்பை,செ
இலாங்கலி } ங்காந்தள்,தென்னமரம், பனை முதலியன.
இலாங்கூலம் - வால்.
இலாசடி } தொந்தரை.
இலாசடை }
இலாசமஸ்தகம் - ஓமம்.
இலாசம் - பொரி.
இலாசிகை - ஆடுபவள்.
இலாசியம் - நடனம்.
இலாசை - பொரி.

இலாகுணி-புஷ்கரிணி - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருவாலியென்னுந் தலத்திலுள்ள ஒருபுண்ணியதீர்த்தம்.
இலாச்சம்-ஒரு நிலஅளவை, மரக்கால்.
இலாக்ஷை - அரக்கு, செம்பஞ்சு.
இலாஞ்சனம் - அடையாளம், கீர்த்தி, புள்ளி, பெயர், முத்திரை.
இலாஞ்சனை - இலாஞ்சனம், அலைவு.
இலாஞ்சி } ஏலம்.
இலாஞ்சிலி }
இலாடசங்கிலி-ஒருசங்கிலி, கடுத்தம்.
இலாடசிந்தூரம் - குதிரை லாடத்தாற்செய்த செந்தூரம்.
இலாடம் - ஒருபாஷை, குதிரையின் கார்ப்பறளை, குற்றம், தேயமைம்பத்தாறி னொன்று, நெற்றி, புடவை, புளியமரம், புளி.
இலாடர் - இலாடதேசத்தார்.
இலாடவி - அகில்.
இலாடன்பருத்தி-ஒரு பருத்திச்செடி.
இலாதார் - சஞ்சாயம்.
இலாந்துதல் - மச்சுச்சாந்திடுதல்.
இலாபதி - அரசன், புதன்.
இலாபம் - ஆதாயம், நயம்.
இலாபாதேவி - இலாவாதேவி.
இலாமச்சை } ஒரு வாசனைப்புல் விழல்.
இலாமிச்சை }
இலாயம் - லாயம், குதிரைப்பந்தி.
இலாலசை-பேராசை.
இலாலனம் } அன்புவைத்தல், கெஞ்சுதல், சீராட்டு, தாலாட்டு, நயஞ்செய்கை.
இலாலனை }
இலாலி-ஒருவாழ்த்து, கற்பழிப்போன், துதிநயஞ்செய்கை, மங்கலப்பாடல்.
இலாவணம் - உப்பு, சம்பாஷணை, பெயாப்பதிப்பு.
இலாவணியம் } பேரழகு.
இலாவண்ணியம் }
இலாவந்தன்-அருச்சுனனுக்கு உலூபியிடம் பிறந்த புத்திரன்.
இலாவம் - ஒருவகைக் குருவி.
இலாவாதேவி - கொடுக்கல்வாங்கல்.
இலாவிருதம்-நவகண்டத்தி னொன்று.
இலாளனை - இலாலனை.
இலி - இல்லாதவன், எலி.
இலிகம் - எலி.
இலிகி - எழுதுகை, எழுத்து.
இலிகிதம் - எழுதியபுத்தகம், எழுத்து, கலைஞானமறுபத்திநான்கினொன்று.
இலிகிதன் - எழுத்துக்காரன்.
இலிகித்தல் - எழுதுதல்.
இலிகுசம் - எலுமிச்சை.
இலிங்கங்கட்டி - இலிங்கதாரி.
இலிங்கசுத்தி - பஞ்சசுத்தியினொன்று.
இலிங்கருலை - ஆண்குறியில்வரும் ஒரு மேகநோய்.
இலிங்கதாரி - இலிங்கங்கட்டிக்கொண்ணுகிற வீரசைவர்.
இலிங்கபாஷாணம் - விளைவுபாஷாணமுப்பத்திரண்டினொன்று.
இலிங்கபுராணம் - அட்டாதசபுராணத்தொன்று.
இலிங்கப்புடோல்-ஐவிரலி, கொவ்வை.
இலிங்கப்புற்று - ஒரு மேகநோய்.
இலிங்கம் - அடையாளம், அருத்தாபத்தி, ஆத்மலிங்கம், ஆண்குறி, இக்குலிகம், இஷ்டலிங்கம், உபகிடதருப்பத்திரண்டினொன்று, சிவலிங்கம், பிரமசரிய நிலையினொன்று.
இலிங்கர் - இலிங்கிகள்.
இலிங்கவிருத்தி - வீண் வேஷத்தாற்பிழைப்பவன்.
இலிங்கி - ஒரு சைவ சந்நியாசி.
இலிங்கிகள் - தபசிகள், முனிவர்.
இலிதை - குறிப்பிசை, பூமி.
இலித்தகம் - கருங்குவளை.
இலிபி - இலக்கம், எழுத்து, மெழுகுதல், விதி.
இலிபிகான் } எழுதுவோன், கணக்கன்.
இலிபிகாரன் }
இலிபித்தல் - அனுகூலமாதல், எழுதுதல், நியமித்தல், விதித்தல்.
இலிர்த்தல் - சிலிர்த்தல், தளிர்த்தல், பொடித்தல்.
இலிற்றும்-துளிக்கும்.
இலீக்கை - ஈர், நமடு.
இலீலாவதி-ஒரு கதைப்புத்தகம், மோகமுடையவள், விரகதாபமுள்ளவள்.
இலீலாவிநோதம்-காதவிளையாட்டு.
இலீலாவிநோதன்-எப்பொழுதும் காதவிளையாட்டிலிருப்பவன்.
இலீலை-கதை, சரசம், பரிகாசம், பாவனைகாட்டுகை, புணர்ச்சி, மகளிர் விளையாட்டு.

இலுதை - அணில்.
இலுப்பெண்ணெய்- இலுப்பைக்கொட்டையிலிருந்தெடுக்கும் எண்ணெய்.
இலுப்பை - இலுப்பைமரம்.
இலுப்பைக்கடுகு - இலுப்பைப்பருப்பு, இலுப்பையெண்ணெயினடியிற் படியும் வண்டல்.
இலுப்பைக்கட்டி - இலுப்பைப் பிண்ணாக்கு.
இலேககன் - எழுத்துக்காரன், கணக்கன், சித்திரிக்கிறவன்.
இலேகம் - எழுத்து, ஒருவித மருந்து, திருமுகம்.
இலேகர் - வானோர்.
இலேகனம்-எழுத்து,நாவழித்தல்,பனையோலை.
இலேகனி } எழுதுகோல், எழுத்தாணி தூவல்.
இலேகினி }
இலேகியம் - நக்கல், பாகாகக் கிண்டிய ஒரு மருந்து.
இலேகினி - எழுதுகோல், எழுத்தாணி, தூவல்.
இலேகைஎழுத்து-சித்திரம்,வரி,வரை.
இலேசம் - அற்பம், இலேசு, ஒரலங்காரம், அஃது அகத்துக் கருதியவற்றைப் புறத்துக்குறிகளால் உணர்த்துவது, காலவிரைவு, நொய்மை.
இலேசு - அற்பம், கனமின்மை, நொய்மை.
இலேசுணம் - அரிதாரம்.
இலேந்து - கல்லுப்பு.
இலேபகன் - சுண்ணாம்புவேலைக்காரன்.
இலேபம் - வால்மிளகு.
இலேபனம் - தாதுவலுவிற்கும் பூசுமருந்து, புணர்ச்சி, பூச்சு, வாசனைத்தைலம்.
இலேபி - இலபி, பூச்சு.
இலேபிதம் - தடவல்.
இலேம்புகம் - சீலக்கடம்பு.
இலேலிகானம் - பாம்பு.
இலேவனம் - மெழுகுதல்.
இலேவுந்து - கல்லுப்பு.
இலை - இலைக்கறி, உலோபம், ஏடு, தழை, பத்திரம், வெற்றிலை.
இலைகிள்ளல் - கைச்சித்திர மைந்தில் ஒன்று.
இலைக்கதவு - ஒருவகைக்கதவு.
இலைக்கலம் - சாப்பிடுவதற்குத் தைத்த இலை.
இலைக்கள்ளி - ஒருவகைக்கள்ளி.
இலைக்கறி - கீரை.
இலைக்கிளி - தத்துக்கிளி.
இலைக்குட்டி - பலங்கெட்ட வாழைக்குட்டி.
இலைக்குறடு - நீண்டகுறடு.
இலைக்கொடி - வெற்றிலைக்கொடி.
இலைக்கொழுக்கட்டை - ஒருவகைக் கொழுக்கட்டை.
இலைங்கம்-இலிங்கம், பதினெண் புராணத்தொன்று.
இலைச்சுருளி - ஒருபூண்டு.
இலைத்தல்-சாரமின்மை, சுவை, குறைதல், பச்சைநிறமாதல், வாய் அரோசித்தல்.
இலைத்திரி - காதில்வைக்கு மோரிலைச் சுருள்.
இலைநிறம் - பச்சைநிறம்.
இலைப்பசளி - பெரும்பசளி.
இலைப்பணிகாரம் - ஒருவிதப்பணிகாரம்.
இலைப்பாசி - ஒருபூண்டு.
இலைப்பொல்லம் - இலைதைக்கை, வாழையிலைத்துண்டு.
இலைமூக்கரிகத்தி - இலை காம்பரியுங் கருவி.
இலையம்-கூத்தின்விகற்பம், கூத்து.
இலையாகிருதி - இலையாகாரம்.
இலையாடுபொலிசை-கடும்பொலிசை.
இலையான் - ஈ.
இலையிலைத்தல்-சுவைகெடுதல், பச்சைநிறமாதல்.
இலையுதிர்வு-இலைசொரிவு, முதுகாடு.
இலைவாணிகம் } இலை வியாபாரம்,
இலைவாணிபம் } வெற்றிலை முதலிய விளைப்பயிர் வேளாண்மை.
இலைவாணிபர் - வெற்றிலைவிற்போர்.
இலௌகீகதருமம் - உலகாசாரம்.
இலௌகீகப்பிரக்கிரியை-இருவகை வழக்கினுளொன்று அது உலகவழக்கு.
இலௌகீகம்-உலகசம்பந்தம், சிற்றின்பம், பிரபஞ்சம், மாமிசசிக்கை.
இல்-இடம், இராசி, இல்லையெனல், உவமையுருபு (உ-ம்) அழலிற்பிறழ்மணி, எதிர்மறையிடைநிலை (உ-ம்)செய்திலன், ஏழாம்வேற்றுமையுருபு (உ-ம்)

ஊரிலிருந்தான், ஐந்தாம்வேற்றுமையுருபு(உ-ம்)மலையின்வீழருவி, சாவு, தலைவி, மனைவி, வீடு.

இல்புலப்பயன்றற்குறிப்பு-ஓரலங்காரம் அஃது இயல்பாயில்லாத பயனையுள்ளதாகத்தற்குறிப்புச்செய்தல் (உ-ம்) வனத்தினின் றுஞற்று தவத்தினால் வின்சேரடிக் கிணையாயது கமலம்.

இல்புலவேதுத்தற் குறிப்பு - ஓரலங்காரம். அஃதுஇல்லாதவேதுவையெடுத்துத் தற்குறிப்புச்செய்தல். (உ-ம்) முகவொளியைப் பாவாய் பெறற்கு முண்டகத்தோடிகலுமதியையமிலை.

இல்பொருளுவமம்-இல்லுவமை.

இல்பொருள் - இல்லாதபொருள்.

இல்லடை-அடைக்கலம், இல்லுவமம், பண்டகசாலை.

இல்லடைக்கலம் - அடைக்கலமடைந்தவன், அடைக்கலம், பண்டகசாலை.

இல்லதாரம் . இல்லாச்சிரமம்.

இல்லம்-இல்வாழ்க்கை,தேற்றுன்மரம், மனைவி, வீடு.

இல்லல்-கடத்தல்,நடத்தல், போகுதல்.

இல்லவள் - மனைவி.

இல்லவன் - கணவன், தலைவன்.

இல்லவை - இல்லாப்பொருள், மனைப்பொருள்.

இல்லறம் - இல்லாச்சிரமம்.

இல்லாச்சிரமம் - இல்லொழுக்கத்திருத்தல்.

இல்லாண்முல்லை முல்லைப்புறம், அது தலைமகன் பாசறைக்கண் மாதலையுள்ளல்.

இல்லாதபொய் - முழுப்பொய்.

இல்லாத்தனம் - வறுமை.

இல்லாப்புளுகு - பெரும்பொய்.

இல்லாமல் - இல்லாமற்போனல்.

இல்லாமை - இன்மை. தரித்திரம்.

இல்லார் - தரித்திரர்.

இல்லாள்-எசமாட்டி,தரித்திரி,மனைவி.

இல்லான்-கணவன், கிரகஸ்தன், தரித்திரன் தலைவன்.

இல்லி-சில்லி, தேற்று, பெண்ணுறுப்பிற் குறைவுள்ளாள், வால்மிளகு.

இல்லிக்குடம் - சில்லியுள்ளகுடம்.

இல்லிடம் - அகலம், வீடு.

இல்லுநர் - மேவினர்.

இல்லுவமம் } உபமாலங்காரத்தினென்று அது இல்லாததற்குவமை (உ-ம்) ககனரவிந்தம்போலும்.
இல்லுவமை }

இல்லெலி - ஆகு.

இல்லெனல்-இரத்தல், இல்லையெனல், சாதல்.

இல்லை - இன்மை, சாதல்.

இல்லொழுக்கம் - இல்லாளோடில்லத்திருந்தறஞ்செய்தல்.

இல்லோர் - தரித்திரர்.

இல்லோன் - கணவன், கிருகஸ்தன், தரித்திரன், தலைவன்.

இல்வலன் - ஓரசுரன்.

இல்வலை - மிருகசீரிடத்தின் றலையிலிருக்கும் நக்ஷத்திரம்.

இல்வழக்கு - கூடாவழக்கு.

இல்வாழ்க்கை - மனைவாழ்க்கை. அது கிழவோன்மகிழ்ச்சி முதலாகச் செவிலிமகிழ்ச்சியீருயவாம்.

இல்வாழ்க்கைவிரி - தலைவன் தலைவி முன் பாங்கியைப்புகழ்தல் முதலாக அன்னவர் காதலறிவித்தல் ஈருகச் சொல்லப்பட்ட பத்தும்.

இல்வாழ்பேய் - துஷ்டமனைவி.

இல்வாழ்வான்-இல்லாச்சிரமத்தோன்.

இல்வாழ்வு - இல்வாழ்க்கை.

இவக்காண் - இப்பொழுது, இவ்விடம்.

இவணம் - இங்கே.

இவண் - இவ்விடம்.

இவநட்டம் - மிளகு

இவரும் - உலாவும்.

இவர்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், எழுச்சி,ஏறுதல்,செல்லல்,செறிவு, சேறல், கடத்தல், படர்தல், பரத்தல், விரும்பல்.

இவவு - இழிவு.

இவறல் - ஆசை, ஆசைப் பெருக்கம் உலோபகுணம், மறதி.

இவறன்மை - அசட்டை, ஆசை, உலோபக்குணம்.

இவறுதல் - ஆசைகூறல், உலோபஞ்செய்யல், மறத்தல்.

இவுளி - குதிரை.

இவுளிமறவன் - அரசர்க்குத் துணைவரிலொருவன், குதிரைவீரன்.

இவை - அஃறிணைப்பன்மை.

இவ் - இவை.

இவ்விரண்டு - இரண்டிரண்டு.
இழத்தல் - இழந்துபோதல்.
இழப்பு - இழத்தல், கீழ்மை, நட்டம்.
இழப்புணி - இழந்தவர்.
இழவு - இழத்தல், சாவு.
இழவுகாத்தல் - சாக்கருமம் முடிக்கும் வரையில் வீட்டிலே யிருத்தல்.
இழவுகாரன் - சாவுக்குரியவன்.
இழவுகொடுத்தல் } மாரடித்தல்,வீணிலே வருந்தல்.
இழவுக்கடித்தல் }
இழவுவிழுதல் - சாதல்.
இழவுவினவல்-இழவுகொண்டாடல்.
இழவுவீடு - சாவீடு.
இழவோலை - சாவோலை.
இழி-இகழ்வு, இழியென்னேவல், கீழ்மை.
இழிகடை - அறக்கீழானது.
இழிகட்பெருங்கண்ணனார் - ஒருபுலவர். இவர் கடைச்சங்கத்திருந்தவர்.
இழிகண் - இழியற்கண்.
இழிகுலம் - தாழ்ந்தகுலம்.
இழிங்கு - ஈனம், வடு.
இழிசனர் - அறிவீனர், கீழ்மக்கள்.
இழிசொல் - அசப்பியம், சிறுசொல், நிந்தைவார்த்தை.
இழிச்சல் - நிந்தித்தல்.
இழிச்சல்வாய் - நிறந்தவாய்.
இழிச்சுதல்-இகழ்தல்,இறக்குதல்,கீழ்ப்படுத்துதல்.
இழிச்சொல் - பழிச்சொல்.
இழிஞர் - சண்டாளர்.
இழிதகவு - இழிவு, எளிமை.
இழிதல் - அவகீர்த்திப்படுதல், இறங்குதல், குறைதல், தாழ்தல்.
இழிதிணை - அஃறிணை, அசுதேவர், நரகர், மனிதரல்லாதன.
இழித்தல் - இறக்குதல், கீழ்ப்படுத்தல் கெஞ்சுதல்.
இழிந்தார் } ஈனர்.
இழிந்தோர் }
இழிபு - இழிவு லக்கணம், அஃது இழிபதோன்றக்கூறலது, கீழ்மை,தாழ்வு, பள்ளம்.
இழிப்பு - அவகீர்த்தி இகழ்வு, கீழ்ப்பட்டதன்மை, நிந்தை.
இழியற்கண் - இமைதிறந்தகண்.
இழிவு - ஈனம், குற்றம், கேடு, தாழ்வு, நிந்தை, பள்ளம்.
இழிவுசிறப்பு - ஒன்றிற்கேயுள்ள இழிவைக்காட்டியது.
இழிவுசிறப்பும்மை-இழிவைச் சிறப்பிக்குமும்மை(உ-ம்)பூனையும் புலாற்றின்னுது.
இழிவுபடல்-ஈனப்படல்.
இழிவுபடுத்தல் - தாழ்வுபடுத்தல்.
இழிவுபண்ணல் - நிந்தைசெய்யல்.
இழுகுணி - சோம்பன், பிசுனன்.
இழுகுதல்-தாமதித்தல், பிசுனித்தனம் பண்ணுதல், பின்போதல்.
இழுக்கடித்தல்-தாமதஞ்செய்தல்.
இழுக்கம் - குறை, தப்பிதம், தளர்வு, தவறு, தாமதம், பின்வாங்குதல், வசை, வழிவிலகுதல்.
இழுக்கல்-கெடல், தவறுதல், பிறழல், வழுவல், வழக்குநிலம்.
இழுக்கு-ஆபரணத்தினொருறுப்பு,இழுக்கென்னேவல், ஈனம், கேடு, தளர்தல், தவறு, தாழ்வு, நிந்தை, பொய், மறதி, வருத்தம், வழுக்குநிலம்.
இழுக்குச்சொல்-ஈனமானவார்த்தை.
இழுக்குடையான் - கீழானவன்.
இழுக்குதல்-இழுத்தல், தவறுதல், பின்வாங்குதல், வசமாக்கல்.
இழுது - தித்திப்பு, நிணம், நெய்.
இழுதல் - கொழுத்தல், நெய்த்தல்.
இழுதை-அறிவிலான், பேய், பொய்.
இழுத்தல் - இழுக்குதல், உறிஞ்சல், சுரம்பாடுதல், தாமதித்தல், பின்வாங்குதல், வசமாக்கல், வலித்தல்.
இழுத்துக்கொண்டுவல்-நாள்தள்ளுதல்.
இழுத்துப்பேசல்-கெட்டியாகப்பேசல்.
இழுபறி - தொந்தரை, வாது.
இழுபறிப்படுதல்-தொந்தரைப்படுதல்.
இழுப்பறை - ஒரு பெட்டியி லிருக்கும்படியான சின்னவறை.
இழுப்பாட்டம் } தாமதம்.
இழுப்பாட்டியம் }
இழுப்பாணி - கலப்பையினோருறுப்பு, தாமதக்காரன்.
இழுப்பாளி - தாமதக்காரன்.
இழுப்பு-இசைப்பு, இசைக்குதல், சத்தத்தை நீட்டிவழங்கல், தாமதம்.
இழுப்புண்ணுதல்-இழுக்கப்படுதல், சிக்கிக்கொள்ளல்.
இழுப்புப்பறிப்புப்படல்-அலதிப்படல், போராட்டப்படல்.

இழுப்புமாந்தம் - ஒருவகைமாந்தநோய்.
இழுமு - சந்தோஷம், தித்தப்பு.
இழுமெனல் - அனுகரணவோசை, இனிமை, சீர்மை.
இழும் - இனிமை, சந்தோஷம்.
இழுவல்-இழுப்பாட்டியம், சயகாரியந் துறந்துபிறர்காரியம்கடத்துகிறவன்.
இழுவை - இழுக்கப்படுவது, இழுத்தசுவடு, இழுப்பு, ஒரு முட்செடி.
இழுவைக்கயிறு - இழுக்குங்கயிறு, நெடுங்கயிறு.
இழை - ஆபரணம், இழையென்னேவல், எண் வனப்பிலொன்று, கலத்தலைச் செய்யென்னேவல், காப்பு, கூட்டம், பஞ்சிநூல்.
இழைகட்டுதல் - காப்புக்கட்டுதல்.
இழைகூடு - இழைப்புளி.
இழைக்கயிறு - நூற்கயிறு, மெல்லியகயிறு.
இழைக்குளிர்த்தி புடவையின் மிருது.
இழைக்கை - கலங்குதல், செய்தல்.
இழைதல் - உட்குழைதல், உரோஞ்சுதல், கலத்தல், பிணைதல்.
இழைத்தநாள் - நியமித்தநாள், முடிவுநாள்.
இழைத்தல் - அழுந்துதல், ஆராய்தல், கலப்பித்தல், சீவல், செய்தல், மணிபதித்தல், முடைதல், விதித்தல்.
இழைத்து - எழுதி.
இழைநெருக்கம் - இழைக்குளிர்த்தி.
இழைபிடித்தல் -காயங்கைத்தல்.
இழைபு - வனப்பெட்டிலொன்று அது வல்லொற்றின்றிவருஞ்செய்யுள்.
இழைபோடல் - பொருந்துதல்.
இழைப்பிடித்தல் - காயங்கட்டல்.
இழைப்புடைவை - நல்லாடை.
இழைப்புளி - சீவுளி.
இழைப்போடல் } புடைவைபொருந்துதல்.
இழைப்போடுதல் }
இழையிடல் - இழைபோடல்.
இழையூசி - மெல்லியவூசி.
இழையோடுதல் - நூலோடுதல்.
இழைவாங்கி - இழையூசி.
இளகல் - அசைந்தவிழுதல்.
இளகாதவன் - திடசித்தன்.
இளகினபொன் - சுத்தமானபொன்.

இளகுதல் - ஈரித்தல், சமைதல், குழைதல், தணிதல், தளர்தல், நகைதல், நெகிழ்தல், மிருதுவாதல்.
இளக்கம் - இளகிய தன்மை, தணிவு, நகைவு.
இளக்கரம் - இளக்கம்.
இளக்கரித்தல்-அஞ்சுதல், இளகிப்பின்னிடுதல், தளர்தல், தாழ்தல்.
இளக்கல் - இளக்குதல்.
இளக்காரம் - இளக்கம்.
இளக்குதல் - இளகச்செய்தல், நகைத்தல்.
இளக்கும் - அசைக்கும்.
இளங்கதிர் - இளஞ்சூல், காலையிற்றோன்றுஞ் சூரியகிரகணம், வாலாதித்தன்.
இளங்கலியான் - ஒரு நெல்.
இளங்கற்றி - இளங்கன்றுப்பசு.
இளங்கன்று - எருமை பசு முதலியவற்றின் சிறுகன்று, மரக்கன்று.
இளங்காய் - பழுப்படையாதகாய்.
இளங்கார் - ஒரு நெல்.
இளங்கால் - இளங்கொழுந்து, வெற்றிலை யிளங்கொடி.
இளங்காற்று -மெல்லியகாற்று.
இளங்குடர் - கடைக்குடல்.
இளந்தமையன்-குமரன்தம்பி.
இளங்குரல் - பயிர், இளங்கதிர், மிருதுவான குரல்.
இளங்குழந்தை - முதுமை யில்லாத குருத்து.
இளங்கொடி - சிறுகொடி, கஞ்சக்கொடி, பெண்.
இளங்கொம்பம்மை-திருப்பற்றிய லூரிலுந் திருக்கருப் பறியலூரிலுங்கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
இளங்கொம்பு - வளார்.
இளங்கொற்றி - இளங்கன்று, இளங்கன்றுடைப்பசு.
இளங்கோக்கேள் - வைசியர் பொது.
இளங்கோசர்-கொங்குமண்டலத்தரசர்.
இளங்கோவடிகள் - துறவுகொண்டிருந்தவோராசர், இவர் சிலப்பதிகாரஞ் செய்தோர்.
இளசாட்சசம் - கொன்றை.
இளச - இளவல்.
இளஞ்சந்திரன் - இளம்பிறை.
இளஞ்சாயம் - வெண்சாயம்.

இளஞ்சார்வு - குருத்தோலை.
இளஞ்சி - ஈளைக்கத்திரி.
இளஞ்சூடு - சிறுசூடு.
இளஞ்சூல் - பயிரின் இளங்கதிர், முதிராப்பிண்டம்.
இளஞ்செழியன் - கொற்கைநகரத் திருந்த வெற்றிவேற்செழியன்.
இளஞ்சென்னி - பாண்டியர்களு ளொருவன்.
இளத்தல் - இறந்துவிடுதல்.
இளநாக்கடித்தல் - உறுதியற்ற சொற்சொல்லல்.
இளநிறம் - வெளிறினநிறம்.
இளநீர்-தெங்கினிளங்காய், தேங்காய்த்தண்ணீர்,மணிகளில்,வெள்ளொளி.
இளநீர்க்குழம்பு - ஒரு கண்மருந்து.
இளநீலம் - வெளிறினநீலம்.
இளநெஞ்சன் - இரங்கின மனதுடையவன், கோழை மனதுடையவன்.
இளநெஞ்சு - இரங்கினமனம், கோழைமனம்.
இளந்தண்டு - முளைக்கீரை.
இளந்தலை - இளக்கம், இளைப்பு, இளமைப்பருவம், எளிமை.
இளந்தலைக்கைம்பெண்சாதி - பாலியவிதவை.
இளந்தாரி - வாலிபன்.
இளந்திரையன் - தொண்டைமான்.
இளந்தென்றல் - சிறுதென்றல்.
இளந்தை-இளவயசு,இளைது,குழந்தை.
இளந்தோயல் - ஆயுதங்களி னிளகிய தோய்ச்சல், தயிரினிளந்தோயல்.
இளப்பம்-கீழ்மையானது-திடமின்மை
இளமட்டம் - குறுங்குதிரை, வாலிபமுடையது.
இளமண் - மணற்கொண்டதரை.
இளமண்டை - நொய்யதலை.
இளமத்தியானம் - மத்தியானத்தின் முன்பொழுது.
இளமரம் - கன்று.
இளமழை - சிறுமழை.
இளமுலையம்மை - திருவோத்தூரிற் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
இளமை - உன்மத்தம், பாலப்பருவம், வாலைப்பருவம்.
இளமைநாயனார்குளம் - சிதம்பரத்தின் கண்ணுள்ள ஒரு தீர்த்தம்.

இளம்பசி - காலப்பசி, சிறுபசி. [து·
இளம்பதம் - இளம்பாகம், பக்குவமற்ற
இளம்பருவம்- இளவயசுமெல்லியபதம்.
இளம்பறியல் - இளசாய்ப்பறித்தது.
இளம்பனை - போந்தை.
இளம்பாடு - இளமையிற் படும் பாடு, இளம்பதம்.
இளம்பிடி - சிறியபெண்யானை, பெண்.
இளம்பிராயம் - இளம்பருவம்.
இளம்பிள்ளை - குழந்தை.
இளம்பிள்ளைவாதம்-சிறுபிள்ளைவாதம்.
இளம்பிறை-வளர்பக்கச்சந்திரன்,வாலசந்திரன்.
இளம்பிறைக்கை-பிண்டிக்கை முப்பத்து மூன்றனுளொன்று, அது சுட்டுவிரலும் நடுவிரலும் பவுத்திரவிரலுஞ் சிறுவிரலுஞ் சேர்ந்துள்வளையப் பெருவிரல் அவற்றை விட்டு நீங்கி வேறாயிருப்பது.
இளம்புல்-அறுகு, முதிராதபுல்.
இளம்பூரணர் - தொல்காப்பியத்திற் குரைசெய்தாரு ளொருவர், இவர் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர்என்பவர்க்குமுற்பட்டவர்,தொல்காப்பியத்திற்கு முதல்முதல்இவரே உரை எழுதியதனா லிவர்க்கு உரையாசிரியர் என்னும் பெயர் வழங்கப்பட்டது.
இளம்பெண் - கற்றாழை, சிறுபருவப்பெண்.
இளவடி - இளம்பதத்தில் வடிப்பு.
இளவரசு - இராஜகுமாரன், வாலபதி.
இளவல்-இளையோன், குழந்தை,தம்பி, முதிராதது.
இளவழிபாடு - சிறுபிள்ளைக் கல்வி.
இளவன் - சோரபாஷாணம்.
இளவாடை - சிறுவாடைக்காற்று.
இளவாதித்தன் - வாலசூரியன்.
இளவாலிப்பு, இளவாளிப்பு } இளகுதல்,ஈரமாகுதல்
இளவிளவேனில் துளிர்காலம்.
இளவுச்சம் - மத்தியானத்துக்குமுன்.
இளவுறை - இளந்தயிர்.
இளவெந்நீர் - சிறு சூடானநீர்.
இளவெயில் - காலைவெய்யில்.
இளவெலும்பு - முதிராவெலும்பு.
இளவெழுத்து - திருந்தாவெழுத்து.

இளவேட்டனார் - கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரி லொருவர்.

இளவேந்து - இளவரசு.

இளவேனிலுரிமை - தென்றல் வீசலும், வண்டு கிளி பூவை அன்றில் குயில், இவை மகிழ்தலும், மாங்கனி யுதிர்தலும், புன்னைமகிழ்தாழை சண்பகம் இவை மலர்தலும், இந்திரகோபம் கேகய முதலிய மெலிதலுமாம்.

இளவேனில் - சித்திரை வைகாசியின் பருவம், வெப்பம்.

இளாவிருதம் - நவகண்டத்தொன்று.

இளாவிருத வருஷம் - நவ வருஷங்களுள்ஒன்று, இது நன்னீர்ச் சமுத்திரஞ் சூழ்ந்தது.

இளாவிலை - திரணவிந்துக்கு அலம்பகையிடம் பிறந்த புத்திரி, இவள் விச்சிரவசனுக்குப் பாரியும் குபேரனுக்குத் தாயுமாவாள்.

இளி - அவமதிச்சிரிப்பு, இகழ்ச்சிக் குறிப்பு, இணக்கம், இளியென்னேவல், சிரிப்பு தெற்றியிற் பிறக்குமிசை யாழிலோர் நரம்பு.

இளிச்சற்கண் - பீளைக்கண்.

இளிதல் - இழிதல்.

இளித்தல் - அவமதித்தல், சிரித்தல், பரிகாசஞ்செய்யல் பல்லைக்காண்பித்தல்.

இளித்தவாய்ப்பட்டம் - இளிச்சவாயன் எனப்படுகை.

இளிபிளி - தசரதன்மகன்.

இளிபுரிதல் - இகழ்ச்சிசெய்யல்.

இளிப்பு - இழிவு, இளித்தல், நிந்தை.

இளிவு - அருவருப்பு, இளிவரவு, இழிவு.

இளை - இலக்குமி, இளமை, இளையென்னேவல், காவற்காடு, பிரதானகாவல், புதன்மனைவி, மேகம், கோழை, பகை, [வேலி.

இளைசு - இளையது.

இளைஞர் - இளையோர்.

இளைஞன் - சிறுவன்.

இளைது - இளையது.

இளைத்தமண் - சத்துக்குறைந்தமண்.

இளைத்தல் - சத்திக்குறைதல், தளரல், தோய்ந்துபோதல், தோற்றுப்போதல், மெலிதல், வளங்குறைதல்.

இளைப்பம் - சொற்பம், நிமை.

இளைப்பறுதி - ஆயாசந்தீர்தல், பலப்படுத்துதல்.

இளைப்பாறல் / இளைப்பாறுதல் } ஆற்றிக் கொள்ளுதல், வேலைவிட்டிருத்தல்.

இளைப்பாறுமண்டபம் - வசந்த மண்டபம்.

இளைப்பாற்றி - ஓய்ந்திருத்தல்.

இளைப்பு - தொய்வு, மெலிவு.

இளைமை - இளையதன்மை, பாலியம்.

இளையவர் - பெண்கள்.

இளையவள் - இலக்குமி, பின்பிறந்தாள்.

இளையவன் - இளையோன்.

இளையள் - இலக்குமி, தங்கை, பின்பிறந்தாள், பெண்.

இளையனார்வேலூர் - காஞ்சிபுரத்திற்கு நேர் தென் கிழக்கில் எட்டுநாழிகை வழி தூரத்தில் சேயாற்றுக்கு வடகரையில் திருப்புகழ்பெற்ற ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரம்.

இளையாள் - இளையவள்.

இளையான்குடிமாற நாயனார் - அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர்.

இளையோன் - இலட்சுமணன், இளஞ்சேட்சென்னி, இவன் கரிகாற்பெருவளவன் தந்தை, குமரன், தம்பி.

இளைவலி - கரிக்காடு.

இற - இறவென்னேவல், இறல், இறக்குபடி.

இறகடிமுள் - முருங்கு.

இறகான்மூடி - இறகால்மூடுதல், சேவலைப்போல் மிதித்தல்.

இறகர் / இறகு } சிறகு, சிறை, பறவையிறகு.

இறக்கம் - இறங்குதுறை, இறங்குந்தன்மை, சரிவு, போகிறவழி, மிருகங்கள் செல்வழி, வீக்க முதலிய விறங்குதல்.

இறக்கல் - தாழ்த்தல், தைலமுதலியன வடித்தல்.

இறக்காறு - செய்தி, பெயர்த்துச்சொல்லல், மாளாறு.

இறக்கு - இறக்குகை.

இறக்குதல் - இறக்கச்செய்தல், கவலையொழித்தல், கீழ்ப்படுத்தல், சாதல், தாழ்த்தல், தயில முதலியன வடித்தல்.

இறக்குதுறை - இறங்குதுறை.

இறக்குமதி - இறக்குஞ்சரக்கு.

இறங்கண்டம் - ஒருவகை அண்டநோய்.

இறங்கமாட்டான் } ஒருவகைக்கார்
இறங்கவொட்டான் } நெல்.

இறங்கர் - குடம்.

இறங்கல்-அதோசெதியாதல், இறங்கப் படுவது, இறங்குதுறை.

இறங்கு கீற்று-மெய்யெழுத்துக்களோ டுகூடிய உகாரவுயிர்க்குற்றெழுத்தை அம்மெய்யிலிறங்க எழுதுமோர்குறி.

இறங்குகீற்றுக்கீழ்விலங்கு மெய்யெழுத்துக்களோடு கூடிய ஊகார உயிர் நெட்டெழுத்தைக்காட்ட அம் மெய்யெழுத்துக்களோடு சேர்த்தெழுதப் படுமோர் குறி.

இறங்குதல்-அமிழ்தல், கீழ்நோக்குதல், கீழ்ப்படுதல், சரிதல், தாழ்வடைதல்.

இறங்குதுறை - இறங்குந்துறை, காரியத்தின்போக்கு.

இறங்குபொழுது - சாயங்காலம்.

இறங்குமட்டான்-இறங்கமாட்டான்.

இறங்குமிராசி கடகமுதல் தனுவீறான விராசி.

இறங்குமுட்டான் } ஒருநெல்.
இறங்குமேட்டான் }

இறஞ்சி - அவுரி.

இறடி - கருந்தினை.

இறத்தல் - அழிதல், கடத்தல், சாதல், நடத்தல், மிகுதி.

இறந்தகாலம் - செல்காலம்.

இறந்தகாலவிடைநிலை - கழிந்த காலத்தைக்காட்டும் இடைச்சொற்கள்.

இறந்தகாலவினைத்தொகை - செல்கால வினைதொக்குநிற்பது (உ-ம்) கோல் களிறு.

இறந்தகாலவினையெச்சம்-உ இயபு ஆ ஊ என என்னும் எழு விகுதிகளை யும் பெற்று இடைநிலை பெற்றும் பெறாதும் வருந் தெரிநிலைவினை யெச்சம்.

இறந்ததழீஇயவெச்சவும்மை- செல் கால நிகழ்ச்சியை விளக்கிநிற்குமும் மை (உ-ம்) சாத்தனும் வந்தான்.

இறந்ததுவிலக்கல் - தந்திரவுத்திகளில் ஒன்று.

இறந்திரி - இத்தி.

இறந்துபடுதல் - சாதல்.

இறந்தோர் - மரித்தோர்.

இறந்தோர்சேர்வனம் - மசானம்.

இறப்பு - அழிகை, கடத்தல், கெடுதல், சாவு, போக்கு, மிகுதி, வீட்டிறப்பு.

இறலி-இத்திமரம், கொன்றை, சத்தநீ விகென்று, மருது.

இறல் - கிளிஞ்சல், கேடு, நரம்பு, முறி தல், விசை.

இறவாணம் - ஒரு வாச்சியம்.

இறவானம் - தாழ்வாரம்.

இறவு-அழிவு, இறக்கை, இறால், உற்ற சமயம், எல்லை, செல்கை, மிகுதி, வீட்டிறப்பு.

இறா - இறால்.

இறாஞ்சுதல்-உராஞ்சுதல்,தட்டியெடுத் தல்,பட்சியறைதல்,பருந்திறாஞ்சல்.

இறாட்டணம் - இராட்டினம்.

இறாட்டாணியம் - இடுக்கண்.

இறாட்டுதல் - உரோஞ்சுதல், பகைத் தல், முரண்டுதல்.

இறாட்டுப்பிறாட்டு - எதகை, சச்சரவு.

இறாத்தல்-ஆறுபலங்கொண்ட நிறை, மீன் நீர்வைத்துறை.

இறாத்து-வருத்தமுறக் கட்டியகுண்டு.

இறாத்துக்கட்டுதல் - கட்டித்தூக்குதல்.

இறால் - இடபவிராசி, இறவு, எருது, கார்த்திகைநாள், தேன்கூடு.

இறாவுதல் - வக்கிமயிர்போகச்சீவுதல்.

இறுகக்கட்டல் - அழுந்தக்கட்டல்.

இறுகங்கியான் - கையாந்தகரை.

இறுகத்தழுவல் - இறுகவணைத்தல்.

இறுகினகை - ஈயாதகை.

இறுகுதல்-அழுந்துதல், கடினமாதல், கட்டியாதல், நெருங்கல், முரணுதல்.

இறுக்கம்-அழுத்தம், உருமம், ஒடுக்கம், கடினம், கையழுத்தம், நெருக்கம், பிசினித்தனம், வயிரிப்பு.

இறுக்கர் - பாலைநிலமாக்கள்.

இறுக்கல் - இறுகச்செய்தல், உடுத்தல் உறுக்கல், ஒடுக்கல், கடிந்துகொள் ளல்.

இறுக்கன் - உலுத்தன்.

இறுக்கு - இறுக்கியமுடிச்சு, உறுக்கு கை, ஒடுக்குகை.

இறுங்கு-சோளம், காக்காச்சோளம்.

இறுதல் - அறுதல், ஒடிதல், கெடுதல், முடிதல், முரிதல்.

இறுதி - மகா சங்காரம், எல்லை, சாவு, முடிவு.

இறுதிக்காலம் - முடிவுக்காலம்.
இறுதிநிலைத்தீபகம்
இறுதிநிலைத்திவகம்
இறுதிநிலைவிளக்கம்
இறுதிவிளக்கு } தீபகச்சொற்கடையி னிற்பது.
இறுத்தல் - இறையிறுத்தல், ஒடித்தல், கடன்செலுத்தல், சேர்தல், சொல்லுதல், தங்கல், தெளித்தல், முடித்தல், முரித்தல், வடித்தல், வெட்டல்.
இறுநாகம் - இலாமிச்சை.
இறுப்ப - கிடக்க.
இறுப்பு - ஆவணவோலை, இறுத்தல், கடன்செலுத்துகை, குடியிறை.
இறுமளவும் - இறுவரையும்.
இறுமாத்தல் - அகங்கரித்தல், ஏமாத்தல், கிமிர்ந்திருத்தல், மிகமகிழ்தல்.
இறுமாப்பு - அகந்தை, ஏமாப்பு, கிமிர்ச்சி, மிகுமகிழ்ச்சி.
இறுமுறை - முடியுமுறை, வருந்துந்தன்மை.
இறும்பல் - அதிசயம்.
இறும்பி - எறும்பு.
இறும்பு - இளமரக்காடு, காந்தல், கார்த்திகைப்பூ, குறுங்காடு, சிறுமலை, தாமரைப்பூ, தூறு, மலை, வண்டு.
இறும்பூது - அதிசயம், அற்புதம், காந்தள், சிறுதூறு, தளிர், தாமரைப்பூ, தீபம், பித்திகை, பெருமை, மலை, வண்டு.
இறுவதஞ்சாமை - வணிகரெண்குணத்தொன்று, அஃது நட்டத்துக்கஞ்சாமை.
இறுவரை - முடிவு.
இறுவரையம் - எல்லை, தற்சமயம்.
இறுவரையும் - சாமளவும்.
இறுவாய் - முடிவு.
இறை - அணு, அரசன், அற்பம், இறகு, இறப்பு, இறையென்னேவல், உயர்ச்சி, உயர்ந்தோன், ஊழித்தீ, எப்பொருட்கு மிறைவன், கடமை, கடவுள், கடன், காவலிறைவு, குடியிறை, கையிறை, சிவன், சிறுமை, தங்கல், தங்குமிடம், தலை, துட்பம், நோய், பிரமன், பெருமை, மறுமொழி, மாமரம், மூத்தோன், வருத்தம், விடை, விட்டுணு, வீட்டிறப்பு.
இறைகுத்தல் - அளவுபார்த்தல், கிதானம் பண்ணுதல்.
இறைகூடி - அரசாண்டு.
இறைகூடை - சேலாப்பூட்டை, நீரிறைக்குங்கூடை, பூட்டை.
இறைகொண்ட - தங்குதல் கொண்ட.
இறைகொள்ளல் - திறைகொள்ளல்.
இறைக்கள்ளன் - இறைப்பிளவை.
இறைக்குத்தல் - கண்புரட்சியற்று நிற்றல்.
இறைக்குத்து - சாகுந்தருணத்தில் கண்குழிவிழுதல்.
இறைச்சி - கேயம், மாமிசம்.
இறைச்சிப்பொருள் - தருக்க சாத்திரத்தொன்று, தெய்வமுதலாகியபொருளின்கண்ணே யிறத்தல், புறத்துச்சொல்லுங் குறிப்புப்பொருள்.
இறைஞ்சலர் - சத்துருக்கள்.
இறைஞ்சல் - குனிதல், வணங்கல்.
இறைஞ்சார் - பகைவர்.
இறைஞ்சி - மரவுரி.
இறைஞ்சுதல் - குனிதல், வணக்குதல்.
இறைதல் - சிதறுதல், சிந்தல்.
இறைதிரியல் - அரசநீதி திறம்பல்.
இறைத்தல் - அள்ளிச்சொரிதல், சொரிதல், நீரிறைத்தல்.
இறைபயப்பது - இருவகைவிடையினொன்று, அது வினவெதிர் வினவல், உடன்படல், உறுவதுகூறல், உற்றதுரைத்தல், ஏவல், சொற்றொகுத்திருத்தல், மறுத்தல்.
இறைபுரிதல் - அரசாட்சிசெய்தல், நீதிசெலுத்தல்.
இறைப்பிளவை - கைவரைச்சிலந்தி.
இறைப்பு - இறைக்குந்தன்மை, சொரிதல்.
இறைமகள் - இராஜபுத்திரி.
இறைமகன் - அரசபுத்திரன், குமரன், விநாயகன்.
இறைமரம் - நீரிறைக்குமரப்பத்தல், ஏற்றமரம்.
இறைமாட்சி - அரசியல், அரசாட்சிக்குரிய மகுத்துவம்.
இறைமாண்டார் - அரசர்.
இறைமை - இராச்சியமுறை, தலைமை, தெய்வத்தன்மை.
இறைமையாட்டி - அரசி, தலைவி.
இறைவன் - இறையோன்.
இறையனுரகப்பொருள் - ஒருபொருளிலக்கணம்.

இறையனார்-தலைச்சங்கப் புலவருளொருவர்.
இறையார்வளையம்மை - குறங்கணின் மாடத்திற் கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
இறையால் - ஈழதேசத்தில் வழங்கின பன்னிரண்டணாவுள்ள ஒருவகை நாணயம்.
இறையிலி இறைகொடுக்காதவன்.
இறையோன் - அரசன், சிவன், தலைவன், கடவுள்.
இறைவனிம்பம் - சிவனார்வேம்பு.
இறைவன் - அரசன், கடவுள், குரு, சிவனார்வேம்பு, சிவன், தலைவன், பிதா, பிரமன், மூத்தவன், எப்பொருளினுந் தங்குவோன்.
இறைவன்வேம்பு - சிவனார்வேம்பு.
இறைவன்றொழில்-இறைவனதுகிருத்தியங்கள், அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம்.
இறைவி - அன்னை, இராஜாத்தி, குருவின்மனைவி, தலைவி, மனைவி.
இறைவை - இறைகூடை, ஏணி, தூற்றுக்கூடை, நீரிறைக்குமரப்பந்தல்.
இற்செறிப்பு / இற்செறிவுறுத்தல் } கன்னியை வீட்டிருத்திக்காத்தல்.
இற்பிறப்பு - குடிப்பிறப்பு.
இற்புலி - பூனை.
இற்று - இஃது, இத்தன்மைத்து, சாரியை (உ-ம்) பதிற்றுப்பத்து.
இற்றுப்போதல்-அழுகிப்போதல், முரிந்துபோதல்.
இற்றுவிழல் - முரிந்துவிழல்.
இற்றை - இன்று.
இனக்கட்டு-இனக்கூட்டம், உறவின்முறை, பந்துக்கட்டு.
இனங்காக்கும்யானை - திரட்குத்தலையானை.
இனஞ்சனம் / இனத்தார் } சுற்றத்தார்.
இனமொழிவிடை - இனத்தச்சொல் விடை (உ-ம்) மற்றையசெய்வோன்.
இனமோனை-இனவெழுத்துக்களொன்றற்கொன்று மோனையாய் வருவது.
இனம்-குலம், கூட்டம், சம்பந்தம், சுற்றம், திரள், பசுக்கூட்டம், மந்திரிகள் வருக்கம்.

இனவழி - வமிசபரம்பரை.
இனவெதுகை - இனவெழுத்துக்களாலாமெதுகை.
இனன் - அரசன், சந்திரன், சூரியன்.
இனா - நகைச்சொல்.
இனி-இப்பால்,இப்பொழுது,பின்னால்.
இனிச்சபண்டம் - இனித்தபண்டம்.
இனிது - இனிமையுடையது.
இனித்தல் - இதப்படுதல், தித்தித்தல்.
இனிப்பு-இனிமை,சிநேகம்,தித்திப்பு.
இனிமை-இனிப்பு,சந்தோஷம், மேன்மை.
இனியசொல் - இன்சொல்.
இனியவைகூறல்-வாக்கின் நற்குணம் நான்கினொன்று, அஃதுநயச்சொல்.
இனியவைநாற்பது-நன்மையைவிவரிக்கும் நாற்பது பாட்டுள்ள ஒருநூல்.
இனைதல் - இரங்குதல், வருந்தல்.
இனைத்தல் - ஒலித்தல், வருத்தல்.
இனைத்து - இத்தன்மைத்து.
இனையவர் - இத்தன்மையானவர்.
இனையள்-இனைதலையுடையவள், இத்தன்மையள்.
இனையன் - இத்தன்மையானவன்.
இன்-இனிமை, ஐந்தனுருபு(உ-ம்) மலையின் வீழருவி, சாரியை(உ-ம்)பூவின் மணம்.
இன்கண் - பிரியம்.
இன்சபை - இராசசபை.
இன்சொல் - நயச்சொல்.
இன்சொல்லுவமை-ஓரலங்காரம், அது பொருளில் உவமைக்கொரு விகுதி தோன்றக்கூறி இன்னமிகுதியுடைத்தெனினு மொப்பதன்றிச் சிறந்த தன்றென்பது.
இன்பம்-அகமகிழ்ச்சி,இனிமை, ஓரலங்காரம், அஃது சொல்லானாயினும் பொருளானாயினுஞ் சுவைபடத்தொடுப்பது. சுகம், நாற்பயனுள் ஒன்று, பெரியோரியல்பினொன்று.
இன்பன் - கணவன்.
இன்பு - இன்பம்.
இன்புறல் - மகிழ்ச்சிபொருந்தல்.
இன்பூறல் - சாயவேர்.
இன்மை - இல்லாமை, துக்கம்.
இன்மைநவிற்சியணி - ஓரலங்காரம், அது யாதேனு மொன்றின்மையால் உபமேயத்திற்கு உயர்வேனுந் தாழ்வேனுந் தோன்றச்சொல்லுதல்.

இன்றி - இல்லாமல்.
இன்றியமையாமை - இல்லாத விறையாமை.
இன்று - அசைச்சொல், இந்தநாள்.
இன்றேல் - இல்லாமற் போனால், வேண்டுமானால்.
இன்ன - இத்தன்மைய, உவமையுருபு.
இன்னதல்லதிதுவெனமொழிதல் - ஒரு யுத்தி.
இன்னமும் } அதிகம், இதுவரையும்,
இன்னம் } மறுபடியும், மேலும்.
இன்னலம் - இனியநலம்.
இன்னல் - தீமை, துன்பம்.
இன்னா - ஆகாமை, இகழ்ச்சி, கீழ்மையானதீமை, துன்பம், வெறுப்பு.
இன்னாங்கு - தீமை, துன்பம்.
இன்னாச்சொல் - இழிச்சொல், கடுஞ்சொல், நகைச்சொல்.
இன்னாதார் - பகைவர்.
இன்னாது - தீது.
இன்னாநாற்பது - கெடுதியைவிவரிக்கும் நாற்பது பாட்டுள்ள ஒருநூல்.
இன்னாமுகம் - சந்தோஷமில்லாதமுகம்.
இன்னாமை - ஆகாமை, தவறு, தீமை, துயரம், வேண்டாமை.
இன்னாரினியார் - பகைவரும், சிநேகரும்
இன்னார் - இத்தன்மையர், பகைவர்.
இன்னாலை - இலைக்கள்ளிமரம்.
இன்னிசை - இராகம், ஏழுநரம்புள்ள வீணை.
இன்னிசைக்கலிப்பா - கலிப்பாவுள் ஒன்று.
இன்னிசைக்காரர் - பாணர்.
இன்னிசைச்சிந்தியல் - வெண்பா, இன்னிசைவெண்பாப்போனடந்துமூன்றடியான் முடிவது.
இன்னிசைவெண்பா - வெண்பாவுளொன்று.
இன்னியம் - இன்பமான வாத்தியம்.
இன்னியர் - பாடுவோர்.
இன்னினி - இப்பொழுது.
இன்னும் - மேலும்.
இன்னே - இத்தன்மையவாய், இப்பொழுதே.
இன்னோசை - இனியவோசை.

ஈ

ஈ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் நான்காம் எழுத்து, அங்காப்போடு மேற்பல்லை அடிநாவின்விளிம்பு, பொருந்தப்பிறக்கும் ஒருநெட்டுயிர், அம்பு, அரைநாண், இந்திரவில், இலக்குமி, ஈயென்னேவல், ஓரெழுத்தொருமொழி, கொசுகு, சரசுவதி, தாமரையிதழ், பாம்பு, பார்வதி, முன்னிலையசைச்சொல்(உ-ம்) சின்றீபெருங் களித்தேனீ, வண்டு.
ஈகம் - இச்சை, சந்தனமரம்.
ஈகாமிருகம் - செந்நாய்.
ஈகை - இண்டங்கொடி, கற்பகம், கொடை, பொன், மேகம்.
ஈகையன் } கொடையாளன்.
ஈகையாளன் }
ஈக்க - தருக.
ஈக்கணம் - கண், பார்க்குதல்.
ஈக்கணிகை - சபாசுபக்குறி, சொல்லுபவள்.
ஈக்கை - புலிதொடக்கி.
ஈங்கிசை } இம்சை, கொலை, நிந்தை,
ஈங்கிஷை } வடு, வருத்தல்.
ஈங்கு - ஈண்டங்கொடி, இவ்விடம், சந்தனம்.
ஈங்கை - இண்டங்கொடி.
ஈங்கைத்துவக்கு - ஒரு மரப்பட்டை.
ஈசசகன் - குபேரன்.
ஈசதேசாத்தி - பெருமருந்து.
ஈசத்துவம் - அட்டசித்தியி லொன்று, அஃது யாவர்க்குந் தேவனாகுதல்.
ஈசல் - ஈசெல், கீழ்க்கை.
ஈசற்போடல் - ஈசைகொட்டல்.
ஈசனன் - ஆதிரைநாள்.
ஈசன் - அரசன், எப்பொருட்கு மிறைவன், கடவுள், குரு, கௌரி பாஷாணம், சிவன், பிரமன், மூத்தோன், விட்டுணு.
ஈசன்மைந்தன் - முருகன், விநாயகன், வீரபத்திரன்.
ஈசன்வில் - மகாமேரு.
ஈசன்றூர் - கொன்றைமரம், கொன்றைமாலை.
ஈசாநி - பார்வதி.

ஈசாவாசியோபநிடதம் - உபநிடத முப்பத்திரண்டனு ளொன்று.
ஈசானதிசை - வடகீழ்த்திசை.
ஈசானமேரு - சிவன்வசிக்கும்வெள்ளிமலை.
ஈசானம் - சிவனைம்முகத்தொன்று, வடகீழ்த்திசை.
ஈசானர் - வடகீழ்த்திசைப் பாலகர்.
ஈசானன் - கடவுள், சிவன், வடகீழ்த்திசைப்பாலகன்.
ஈசானி - சிவன், பஞ்சசத்தியிலொன்று.
ஈசானியதேசிகர் - இயற்றமிழாசிரியர்.
ஈசானியம் - ஈசானம்.
ஈசானியன் - ஈசானன்.
ஈசானேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
ஈசி - பார்வதி.
ஈசிகை - சித்திரமெழுதும் தூரிக்கோல், யானைவிழி.
ஈசிதன் - ஆள்பவன்.
ஈசுரபூதம் - ஒருவகைப்பூதம், அது விகாரமில்லாதநேத்திரம், பித்தமுகத்தேச்சு, சதாசிவசரித்திரங்களைச்சொல்லல், கெம்பீரமான கண்டத்தொனி இக்குணங்களை யுண்டாக்கும்.
ஈசுரமூலி - தராசுக்கொடி, பெருங்கிழங்கு, பெருமருந்துக்கொடி.
ஈசுரவிந்து - பாதரசம்.
ஈசுரவேர் - தராசுக்கொடி.
ஈசுரன் - ஈசன், ஈச்சுவரன், கடவுள், சிவன்.
ஈசுவரதரு - கடம்பு.
ஈசுவரன் - ஈச்சுரன்.
ஈசுவரி - பார்வதி.
ஈசுவரிநாதம் } ஈசுவரிபிந்து } கெந்தகம்.
ஈசுவை - பொறுமை.
ஈசெல் - சிறுகுள்ள கறையான்.
ஈசை - ஏர்க்கால் கலப்பை.
ஈச்சத்தோல் - ஈயினெச்சம் பிடித்த தோல்.
ஈச்சப்பி - உலோபி.
ஈச்சிதகருமம் } ஈச்சிதகர்மம் } ஈச்சிதகன்மம் } கருத்தன் வழிச்செயப்படுபொருள் (உ-ம்) பாயைநெய்தான். சோற்றை உண்டானென்பன.
ஈச்சு - ஈச்சமரம்.

ஈச்சுக்கொட்டல் - சீழ்க்கை விடுதல்.
ஈச்சுர - பதினோராவது வருடம்.
ஈச்சுரமூலி - பெருமருந்து.
ஈச்சுரம் - சிவதத்துவ மைந்தினொன்று; அஃது ஞானங்குன்றிக்கிரியையுயர்ந்தது.
ஈச்சுரன் - அனுபவந்தருகிறவன், கடவுள், சிவன், தலைவன்.
ஈச்சுவரன் - கடவுள், தலைவன்.
ஈச்சுவரை - பார்வதி.
ஈச்சோப்பி - ஈப்பிணி ஈயோட்டி.
ஈஞ்சு - ஈச்சமரம்.
ஈஞ்சை - இகழ்ச்சி, கொலை, நிந்தை.
ஈடணம் - புகழ்.
ஈடணாத்திரயம் - மூவகைப் பொருள்களின் விருப்பம்; அப்பொருள்களாவன புத்திரன், பொன், மனைவி.
ஈஷணை } ஈடணை } புத்திரன் மனைவி பொன் இவற்றில் விருப்புறுகை விருப்பம்.
ஈடழிதல் - பெருமைகுன்றல்.
ஈடழிவு - சீர்கேடு.
ஈடன் - திராணிவான், பணக்காரன், பலசாலி, பெருமையுடையோன்.
ஈடாடுதல் - கொளகொளத்தல், தளர்தல், நேர்நிற்றல்.
ஈடாட்டம் - ஊசாட்டம், கொடுக்கல், வாங்கல், தளதளப்பு, திராணி, விசாலம்.
ஈஷிகை } ஈடிகை } எழுதுகோல் தூரிக்கை.
ஈடிதம் - துதித்தல்.
ஈடு - உவமை, ஒரு மருந்து, கடன்கோடற்குவைத்த அடகு, குழைவு, சரியொத்தது, பெருமை, பதில், வலி.
ஈடுகட்டல் - ஈடுசெய்யல், பிணை கொடுத்தல்.
ஈடுசெலுத்தல் - பதிலளித்தல்.
ஈடுபாடு - ஒப்பு, நயநஷ்டம்.
ஈடேறுதல் - உய்யப்பெறுதல், கடைத்தேறுதல், வாழ்வடைதல்.
ஈடேற்றம் - இரட்சிப்பு, உய்வு, கடைத்தேற்றம்.
ஈடை - ஈகை, புகழ்ச்சி.
ஈட்சணம் - நோக்கம், பார்வை.
ஈட்டம் - கூட்டம், திரள், தேட்டம்.
ஈட்டல் - சம்பாதித்தல், தொகுத்தல், வணிகரெண்குணத்தொன்று.

ஈட்டி - குந்தம், சவளம்.
ஈட்டியது - சஞ்சிதவினை, தேடியது.
ஈட்டுக்கீடு - சரிக்குச்சரி.
ஈணை - அகணி.
ஈண்டல்-கூட்டல், கூட்டம், நெருக்கம், நெருங்கல்.
ஈண்டு-இவ்வண்ணம், இவ்விடம், ஈண்டெனேவல், சீக்கிரம், புலிதொடக்கி.
ஈண்டுதல் - ஈண்டல்.
ஈண்டை - இவ்விடம்.
ஈண்டையான் - இவ்விடத்தவன்.
ஈதல்-அந்தணர், அரசர், வணிகர்க்குரிய அறுதொழிலினொன்று, கொடுத்தல், சொரிதல்.
ஈதி - அதிவ்ருஷ்டி முதலானவற்றுளொன்றாகு முபத்திரவம், குட்டி, பயணம்.
ஈத்வரி - வியபிசாரி.
ஈந்தி } நஞ்சு, கர்ச்சூரம்.
ஈந்து }
ஈப்ஸை - இச்சை.
ஈப்பி - இலையானெச்சம், ஈர்.
ஈப்பிணி - உலோபி.
ஈப்புலி - ஈயைக்கொல்லும்பூச்சி.
ஈமகாவலன் - சுடுகாடுகாப்போன்.
ஈமக்கடுமை - சுடுகாட்டின்வெப்பம்.
ஈமத்தாடி - சிவன்.
ஈமப்பறவை-கழுகு, காகம், பருந்து.
ஈமம் - சுடுகாடு, பாதிரிமரம், விறகு.
ஈமவனம் - மயானம்.
ஈமவாரி - வசம்பு.
ஈமுக்கடுமை - ஈமக்கடுமை.
ஈம் - சுடுகாடு.
ஈயக்களங்கு - வங்கவெட்டை.
ஈயக்கிட்டம் - ஈயமுருக்கியெடுத்த கிட்டம்.
ஈயக்குழவி - நீலப்பாஷாணம்.
ஈயக்கொடி - இண்டங்கொடி.
ஈயச்சிந்தூரம் - வங்கசிந்தூரம்.
ஈயச்சுரதம் - இண்டஞ்சாறு.
ஈயத்தின்பிள்ளை - நீலபாஷாணம்.
ஈயமலை - ஒருமலை.
ஈயம்-பஞ்சலோகத்தொன்று, பாதிரி, மிருதாரசிங்கி.
ஈயல்-ஈதல், சிறகுமுளைத்தகறையான், தம்பலப்பூச்சி.
ஈயவரி - பெருமருந்து.
ஈயவெள்ளை-மரமுதலியவற்றிற்குப் பூசும் ஒருவருணம்.
ஈயுவன் - இராவணன்.
ஈயை - இஞ்சி, சிங்கிலி.
ஈயோட்டி - ஈச்சோப்பி.
ஈரக்கல்-ஒருமருந்துக்கல், குருந்தக்கல்.
ஈரங்கொல்லி - வண்ணான்.
ஈரங்கொல்லியர் - வண்ணார்.
ஈரசைச்சீர்-இரண்டசைச்சீர், அது தேமா புளிமா கருவிளம் கூவிளமெனும் வாய்ப்பாட்டான் வருவது.
ஈரஞ்சுவறுதல் - ஈரமுலர்தல், ஈரமுறுதல்.
ஈரடி-இணையடி, ஈரொட்டு, கவர், சந்தேகம்.
ஈரடிப்பயன்-உபயார்த்தம், கபடம், சந்தேகம், விகற்பம்.
ஈரடிப்பா - குறள்வஞ்சிப்பாச்சிறுமை.
ஈரடிமடக்கு-அடிகளு ளிரண்டடி மடங்கி வருவது.
ஈரடிவருக்கம் ஈரொட்டு, உபயார்த்தம், சந்தேகம், சித்திக்கவியினொன்று.
ஈரடிவெண்பா - குறள்வெண்பா.
ஈரடுக்கொடி - உபயவோசை.
ஈரணம் - வெறுநிலம், களர்நிலம்.
ஈரநாவு - பழிகூறுகிற நாக்கு.
ஈரந்துவட்டல் - ஈரமெடுத்தல்.
ஈரப்பசுமை - ஈரப்பற்று.
ஈரப்பசையுள்ளவன் - இரக்கமுள்ளவன், செல்வமுடையோன்.
ஈரப்பச்சை - ஈரப்பசுமை.
ஈரப்பலா - ஆசினிப்பலா.
ஈரப்பற்று-ஈரப்பிடி, சம்பத்து, நன்றி.
ஈரமதி - குளிர்ந்த சந்திரன்.
ஈரம் - அழகு, அறிவு, அன்பு, கரும்பு, கிருபை, குங்குமப்பூ, குங்குமம், குளிர்ச்சி, நனைவு, பகுதி, பண்பு.
ஈரலித்தல் - ஈரமாதல்.
ஈரலிப்பு - ஈரம்.
ஈரல் - ஈருள், பித்திருக்குந்தானம்.
ஈரல்கருகல்-நாணுதல், பயப்படுதல்.
ஈரல்பதறல் - பயப்படுதல்.
ஈரவன் - ஈரம், சந்திரன்.
ஈரவிதைப்பு-ஈரநிலத்தின் விதைக்கை, புழுதிவிதை.
ஈரவுள்ளி } ஈருள்ளி.
ஈரவெண்காயம் }

ஈரறம் - இல்லறம், துறவறம்.
ஈரறிவுயிர் - பரிசமுஞ் சுவையுமறியும் நந்துமுதலிய செந்து.
ஈரற்கருகுதல் - ஈரல்வாடுதல், மிகவும் பயப்படுதல்.
ஈரற்கொலை - ஈரற்கொத்து.
ஈரற்குழி-ஈரலுறுதானம்,நெஞ்சிற்சுழி.
ஈரற்பித்து - பித்தக்குமிரல்.
ஈரற்றீய்தல் - ஈரற்கருகுதல்.
ஈராசிடைவெண்பா - இரண்டாசிடையிட்டுவரும் வெண்பா.
ஈராடி-ஈரம், காற்றினமைவு, நிலையின்மை, மழைக்குணம்.
ஈராட்டி - இரண்டுமனைவி, ஈராடி.
ஈரி-கந்தைப்புடவை, கொக்கான் விளையாட்டி லிவ்விரண்டாகப் பிரிக்குந் தன்மை, பலாக்காய்த்தும்பு.
ஈரிச்சல் - குளிர்தல்.
ஈரிணம்-பாழடைந்தநிலம்,உழமண்பூமி.
ஈரிதம் - தள்ளப்பட்டது.
ஈரித்தல் - ஈரமாதல்.
ஈரிம்பு - ஈரம், குளிர்மை.
ஈரியது - ஈரமுள்ளது.
ஈரியநெஞ்சம் - அன்புள்ளமனது.
ஈரிலைப்பயிர் - இரண்டிலை வெளியில் வந்த இளம்பயிர்.
ஈரிழை - இரட்டையிழைகொண்டது.
ஈரீற்று - இரண்டாமீற்றுப்பசு.
ஈருடல் - இரு தன்மைத்தான வுடல் (உ-ம்) நாரசிம்மன்.
ஈருயிர்க்காரி - கெர்ப்பிணி.
ஈருள் - ஈரல்.
ஈருள்ளி - ஈரவெங்காயம்.
ஈரெச்சம் - பெயரெச்சம், வினையெச்[சம்.
ஈரொட்டு-இரண்டுக்குற்றது,சந்தேகம்.
ஈரொற்றுவாரம் - இரண்டு மாத்திரை பெற்று வருஞ்செய்யுள்.
ஈர்-இரண்டு, ஈரென்னேவல், கரும்பு, பேன்முட்டை, முள்ளிலைப்பன்மை விகுதி.
ஈர்கொல்லி-ஈருருவுங்கருவி, உப்பிலிக்[கொடி.
ஈர்கோலி - ஈர்வாரி.
ஈர்க்கில் } அம்பிரகு, ஓலையீர்க்கு.
ஈர்க்கு }
ஈர்க்குச்சம்பா - ஒரு நெல்.
ஈர்க்குமல்லிகை - ஒருமல்லிகை.
ஈர்ங்கதிர் - குளிர்ந்தகதிர், சந்திரன்.
ஈர்ங்கதிர்த்திங்கள்-குளிர்ந்த கதிர்ச்சந்திரன்.
ஈர்ங்கை - உண்டுகழுவியகை.
ஈர்வைது - பொறுமை.
ஈர்தல் - அறிதல், பிளத்தல்.
ஈர்த்தல் - அறுத்தல், இழுத்தல், ஈரித்தல், உரித்தல், குளிர்மையாதல், பிளத்தல், வெட்டல்.
ஈர்ந்தமிழ்-குளிர்ந்ததமிழ், தண்டமிழ்.
ஈர்பட்டு - ஈர்வாணி.
ஈர்ப்பி - ஈர்.
ஈர்ப்பு - இசிவு, இழுப்பு, ஈர்த்தல், உரிப்பு, காயமாறுங்காலத்திலுண்டாகும் [ஈர்வலி.
ஈர்மை - குளிர்ச்சி.
ஈர்வடம் - ஈர்வாணி.
ஈர்வலி - ஈருருவுங்கருவி.
ஈர்வலித்தல் - ஈர்வாரல்.
ஈர்வாணி - ஈர்க்குக்கயிறு.
ஈர்வாரி - ஈருருவுங்கருவி.
ஈர்வாள் - மரமரியும்வாள்.
ஈர்வெட்டு - ஈர்பட்டு.
ஈலி - கைவாள், சுரிகை.
ஈவிரக்கம் - கொடையுமிரக்கமும்.
ஈவு-கொடுக்கப்பட்டது, கொடை, பிரித்துக்கண்டபேறு, வரம்.
ஈவுகணக்கு } பாகாரம், பிரிவு கணக்கு.
ஈவுக்கணக்கு }
ஈவுசோர்வு-கொடையுமிளக்காரமும்.
ஈழக்குலச்சான்றார் - அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவரான ஏனாதிநாயனார், சாணார்.
ஈழத்தலரி - ஓரலரி, பெருங்கள்ளி.
ஈழமண்டலம் - இலங்கை.
ஈழம் - இலங்கை, உலோகக்கட்டி, கள், கள்ளி, சிங்களதேசம், பொன்.
ஈழவர் } ஒருவகைச்சாதியார், சாணார்.
ஈழுவர் }
ஈளை-காசநோய், கோழை, தொய்வு.
ஈளைக்கொல்லி - தாளகம்.
ஈளை - கோழை.
ஈளைக்காரன் - கோழைநோயாளி.
ஈறல் - துக்கம், நெருக்கம், பின்னல்.
ஈறற்பற்றை - நெருக்கமான தூறு.
ஈறுந்தம் } ஆகமுடிவு.
ஈறுந்தாம் }
ஈறிலான் } கடவுள்.
ஈறிலி }

ஈறு - உப்பளம், எல்லை, பல்லிடையின் முரசு, மரணம், முடிவு.
ஈறுகடை - ஈறுந்தம்.
ஈறுகட்டி - இரசகருப்பூரம்.
ஈறுகெடுதல் - ஈரழிதல். [லை.
ஈற்றசை-பாட்டிறுதியினிற்கு மசைசி
ஈற்றசையேகாரம்-ஈற்றசையாக வரும் ஏகார விடைச்சொல்.
ஈற்றசையோகாரம் - ஈற்றசையாக வரும் ஓகார விடைச்சொல்.
ஈற்றயல் - சொல்லினிறுதியெழுத்துக் கயலெழுத்து.
ஈற்றுளைதல் - ஈனவருந்துதல்.
ஈற்றெலும்பு - கடையில்காம்பு, கடையெலும்பு.
ஈற்றெழுத்து - உயிர்பன்னிரண்டும் ஞ் ண் ந் ம் ய் ர் ல் வ் ழ் ள் ன் என்னும் எழுத்துக்களும்.
ஈற்றெழுத்துக்கவி - மூற்பாட்டினந்தத்தெழுத்தேனுஞ்சொல்லேனும் வரும்பாட்டிற் காதியாய்வருவது.
ஈனசாதி - எளியசாதி.
ஈனத்தார் - கொன்றை.
ஈனத்தொனிச்சுரம் - ஒருவகைச் சுரநோய், அது ஈனத்தொனி,சோர்வு, பிரலாபம், வியர்வை, உளைவு, நடுக்கம், கருமம், சூலை, வாயிற் கசப்பு, மயக்கம் ஆகிய இக்குணங்களை யுண்டாக்கும்.
ஈனமிலணங்கு-தெய்வப்பெண்.
ஈனம் - அழிவு, இழிவு, கள்ளி, குறைபாடு, கேடு, தள்ளல்.
ஈனல் - ஈனுதல், கதிர்.
ஈனறல் - ஈனல், உண்டாதல்.
ஈனனம் - வெள்ளி.
ஈனாக்கடாரி - குட்டிபோடாத பசுக்கன் அல்லது எருமைக்களிறு.
ஈனாக்குமரி - பிள்ளைபெறாத பாலியஸ்திரீ.
ஈனாமலடு-ஒருமுறையும் பெறாதமலடு, மலட்டுப்பசு, மலட்டெருமை.
ஈனாமாடு-மலட்டுப்பசுஅல்லது எருமை.
ஈனாயம் - சங்கையீனம், நிந்தை.
ஈனாவரக்கி - இரத்தமில்லாதவள்.
ஈனுதல்-கதிர்முதலியன சக்குதல், காய்த்தல், பெறுதல்.
ஈனுமணிமை - சூதகம், புனிறு.

ஈனை - இலைகாம்பு, ஒருவியாதி, சித்திரக்குறிப்பு, பருமட்டம்.
ஈன்றணிமை } ஈனுமணிமை.
ஈன்றணுமை }
ஈன்றவணிமை-இளங்கொற்றியின் பச்சுடம்பு, கன்றிளமை.
ஈன்றவள் - தாய், பார்வதி.
ஈன்றவன் - பிதா, பிரமன்.
ஈன்றார் - தந்தைதாயர்.
ஈன்றாள் - தாய், பார்வதி.
ஈன்றான் - தந்தை, பிரமன்.

உ

உ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் ஐந்தாம் எழுத்து, அங்காப்போடுஇதழ்குவித்து உச்சரித்த அளவிலே ஒலிக்கும் ஒரு குற்றுயிர், இரண்டென்னு மெண்ணின் குறி, உருக்கம் கட்டளை கோபம் சம்மதி யிவற்றைக் காட்டுமோருபசருக்கம், ஓரெழுத்து ஒருசுட்டு, ஒருவினையெச்சவிகுதி (உ-ம்) செய்து, தன்மையொருமை வினைவிகுதி (உ-ம்) உண்கு, சாரியை, சிவன், பிரமன்.
உஃது - ஒன்றன்படர்க்கைச் சுட்டுப்பெயர்.
உககனல் } வடவைத்தீ.
உகக்கனல் }
உகசந்தி - உகத்தின்சந்திப்பு.
உகசூரியர் - பன்னிருசூரியர்.
உகட்டல் - உகட்டுதல்.
உகட்டு - உவட்டு.
உகட்டுதல் - தேக்கெடுத்தல், புரளுதல்.
உகண்டேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உகத்தல்-உயர்தல், எழும்பல், சந்தோஷித்தல், திருத்தி யடைதல், மகிழ்வோடுகொள்ளல், விரும்பல்.
உகந்தசெய்தி-நல்லசமாச்சாரம். [து.
உகந்தது - அங்கீகரிக்கும்படியான வஸ்
உகந்தமலை - இலங்கையில் திரிகோணமலைக்குச் சமீபத்திலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம்.

உகந்தவள் - பிரியமானவள்.

உகந்தவன் - இணக்கமானவன், தகுந்தவன், பிரியமானவன்.

உகப்பாட்டு - தலைப்பாட்டு, இது கூட்டக் கூத்தியற்குரியபா.

உகப்பிரளயம் - யுகமுடிவு.

உகப்பு - உயர்ச்சி, சந்தோஷம், மகிழ்ச்சி.

உகமாருதம் - ஊழிக்காற்று.

உகமுடிவு - யுகத்தினது இறுதியானகாலம்.

உகம் - இரண்டு, நாள், பாம்பு, பூமி, முடிவு, யுகம், தலைப்பாட்டு.

உகரக்குறுக்கம் - குற்றியலுகரம்.

உகரக்கேடு - நிலைமொழியினிறுதியில்நின்ற உகரம் வருமொழி புணருமிடத்துக் கெடுதல்.

உகரம் - ஓரெழுத்து.

உகருத்திரர் - பன்னிருருத்திரர்.

உகல் - உதிரல், கழலல், சிந்தல், சொரிதல்.

உகவல்லி - நாகமல்லி.

உகவை - சந்தோஷம், மகிழ்ச்சி.

உகளம் - இஷ்டம், இரண்டு.

உகளல் - கடத்தல், குதித்தல், பாய்தல்.

உகளித்தல் - குதித்தல், பாய்தல்.

உகளுதல் - உகளல்.

உகா - ஒருமரம்.

உகாதி - அருகன், யுகாதி.

உகாந்தகாலம் - பூமியினது முடிவுகாலம்.

உகாந்தகாலன், உகாந்தநாதன் - சிவன், விட்டுணு.

உகாந்தம் - யுகப்பிரளயம், யுகமுடிவு.

உகாரம் - உகரவெழுத்து.

உகாரி - உருத்திரமூர்த்தி.

உகிரம் - இலாமிச்சை.

உகிர் - நகம்.

உகிர்ச்சுற்று - நகச்சுற்று, ஒருநோய், அது நகத்தைச்சுற்றி வருவது.

உகிர்நிலைப்பசாசக்கை - பிண்டிக்கைமுப்பத்து மூன்றனுளொன்று. அது சுட்டுவிரலும் பெருவிரலு முகிர்நுனியைக் கௌவிநிற்பது.

உகினம் - புளிமா.

உகினரேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உகின் - புளிமா.

உகுணம் - மூகட்டுப்பூச்சி.

உகுதல் - உதிரல், கழலல், சிந்தல், சொரிதல், பொடியாதல், விடுதல்.

உகுத்தல் - உதிர்த்தல், ஊற்றுதல், சிந்தல், சொரிதல், விடுத்தல்.

உகை - பானை.

உகைதல் - எழுதல், செல்லுதல்.

உகைத்தல் - எழுப்புதல், ஏறுதல், செலுத்தல்.

உகைப்பு - எழுப்புகை, செலுத்துகை.

உக்கம் - ஆலவட்டம், இடபம், இடைகோழி, தீ, தூக்குக்கயிறு, பசு, பந்து.

உக்கரித்தல் - உக்காரம்போடல், வாந்திபண்ணுதல்.

உக்கலை - ஒக்கலை, மருங்கின்பக்கம்.

உக்கல் - உக்கினது, உக்குதல், உளுத்தது, பக்கம், பதனழிவு.

உக்களம் - இராக்காவல், தலைக்காவல், பானையஞ்சூழ்கழி.

உக்களவர் - இராக்காவலர்.

உக்கா - கஞ்சாக்குடுக்கை, கள்.

உக்காக்கம் - அரைநாண்.

உக்காரம் - சத்திபண்ணல், தொனுப்போடுதல்.

உக்காரி - பிட்டு.

உக்கிடர் - சிலந்திபூச்சி.

உக்கிரகந்தம், உக்கிரகந்தி - கரும்பு, பெருங்காயம், வசம்பு, வெள்ளுள்ளி, வேம்பு.

உக்கிரகந்தை - ஓமம், வசம்பு.

உக்கிரகெந்தம், உக்கிரகெந்தை - உக்கிரகெந்தம்.

உக்கிரசர்மன், உக்கிரசன்மன் - ஒரு பாண்டியன், இவன்மேகத்தை சிறைசெய்தவனும் வேலெறிந்து கடலை வற்றுவித்தவனுமாவன்.

உக்கிரசாயி - துரியோதனன் றம்பியருள் ஒருவன்.

உக்கிரசிரவசன், உக்கிரசிரவன் - உரோமகருஷணன் புத்திரன். சூதகுலஜன், இவன் சௌனகாதி இருஷிகளுக்குச் சகலபுராணேதிகாசங்களும் உபதேசித்தவன்.

உக்கிரசேனபாண்டியன் - ஒரு பாண்டியன், இவன் இராஜபயங்கரபாண்டியனுக்குப்பின் அரசுசெய்தவன். இவன்காலம் கடைச்சங்ககாலம்.

உக்கிரசேனன்-மதுராபுரியாசன், தேவகன்தமையன், அபிமன்னியன் மகன் மகன், ஜயமேஜயன் தம்பி, கிருஷ்ணன் வயிசத்தனை சவாகுமரன்.
உக்கிரச்சா - காத்தொட்டி.
உக்கிரச்சுரவரர் - ஆதொண்டை.
உக்கிரபாண்டியன் - ஒரு பாண்டியன், இவன்சோமசுந்தரபாண்டியன்மகன் கடல் சுவற வேல்விட்ட திருவிளையாடல்கண்டவனும்இவனேயாவன்.
உக்கிரப்பெருவழுதி - சோமசுந்தரபாண்டியர் குமாரர். இவர் கடைச்சங்க காலத்துள்ளோர்.
உக்கிரமது-வைராக்கியமான குணம்.
உக்கிரமம் - மூர்க்கம்.
உக்கிரம் - உத்திரம், உறைப்பு, கடுமை, குரூரம், கொடுமை, கோபம், தலைக்காவல், பயங்கரம், பரணி, பாத்திரபதம், மகம், முருங்கை, மூர்க்கம், வெப்பம், வேகம், தேவுறுப்பினுள் ஒன்று.
உக்கிரவருமன்-ஒரு பாண்டியன். இவன் உக்கிரகுமார னெனவுஞ் சொல்லப்படுவான். இவன் மனைவி, காந்திமதி இவன் மாமன் சூரியகுலத்துச் சோமசேகரன்.
உக்கிரன்-க்ஷத்திரியனுக்குஞ் சூத்திரிக்கும் பிறந்து வேட்டைத் தொழில் செய்வோன், சிவன், துருவாசன், விசுவாமித்திரன், வீரபத்திரன்.
உக்கிராக்கிரகவாதம் - ஒருவகை வாதநோய். அது தயிர், பால், இலைக்கறி, துவரை, கருணைக்கிழங்கு, மாமிசம், அகாலபோசனம், பகல் நித்திரை, சீதளவிடம், சீதளப்பாய் ஆகிய இவைகளிற் படுக்கை, மிகு மைதுனம் முதலியவைகளாற் பிறந்து மார்பு, சிரசு, கண்டம், கீழ்வயிறு, மர்மஸ்தானம் ஆகிய இவ்விடங்களிற் சஞ்சரிக்கும் அப்போது தேகத்தில் நோவு, இளைப்பு, திமிர், கனம், எரிவு, குத்தல், குடைவு முதலிய குணங்களை யுண்டாக்கும்.
உக்கிராக்ஷன் - சிவன்.
உக்கிராணம்-களஞ்சியம் பண்டகசாலை.
உக்கிராயுதன்-கிருதிமைந்தன், சந்தனு இறந்தபின் அவன் மனைவியாகிய சத்தியவதியை அபகரிக்க எத்தனித்துவீஷ்மராற்கொல்லப்பட்டவன்.
உக்கிரி - திர்க்கை, வசம்பு.
உக்கிருஷ்டம் / உக்கிருட்டம் - உற்கிருஷ்டம், மிகுதி மேன்மை.
உக்கிரேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உக்கிரை - கருவசம்பு.
உக்கு - இலவங்கம்.
உக்குதல்-இற்றுப்போதல், பயப்படல்.
உக்குளான் - சருகுமுயல்.
உக்குறமை - உகரக்குறுக்கும்.
உக்கை - எருது.
உங்கரித்தல்-அதட்டுதல், உரப்புதல்.
உங்காரம்-அதட்டுகை, உம்மென்னுரப்பல், வண்டிஞெலி.
உங்காரித்தல் - உங்கரித்தல்.
உங்கு / உங்கே - உவ்விடம்.
உங்கை - உன்மாதா, உன்றங்கை.
உங்ஙனம் - அத்தன்மை, இத்தன்மை, இவ்விடம், உவ்விடம்.
உசகம் - ஆமணக்கஞ்செடி.
உஷ்ணம் - மினகு.
உஷதி - அமங்கலவாக்கு.
உசத்தியேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உஷபுதன் - அக்கினி.
உஷம் - விடியற்காலம்.
உசரிதம் - நெருஞ்சில்.
உசரு / உயிர் - உயிர்.
உசலம் / உசல் - உசிலம்.
உசற்காலம் - உஷற்காலம், சூரியோதயம்.
உசனம்-உபபுராணம் பதினெட்டில் ஒன்று, தருமநூல் பதினெட்டினுளொன்று.
உசனன் - சுக்கிரன்.
உசனேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உசா - ஆராய்வு, ஆலோசனை, உசாவென்னேவல், உஷாதேவி, ஒற்றர்.
உஷாகாலம்-சூரியோதயத்துக்கு நான்குகடிகை முற்பட்டகாலம்.
உசாக்கேட்டல்-ஆலோசனை கேட்டல்.
உசாதேவி / உஷாதேவி - சூரியன்மனைவி.

உசாத்துணை - உசாவுதுணை.
உஷாபதி - அநிருத்தன்.
உசாவல்-ஆராய்தல், எண்ணல், யோசனைகேட்டல்.
உசாவு - ஆராய்வு, ஒற்றர்.
உசாவுதல் - உசாவல்.
உசாவுதுணை-ஆலோசனைத்துணைவன்.
உசி - கூர்மை, விருப்பம்.
உசிதசமயம் - அவதரம்.
உசிதம்-அழகு, உத்தமம், தகுதி, மேன்மை, யோக்கியம்.
உஷிதம் - கொளுத்தப்பட்டது.
உசிதன் - பாண்டியன்.
உசிப்பல், உசிப்புதல் } உசுக்கல்.
உசிரம் - இடபம், இலாமிச்சைவேர், கிரணம், செவ்வியம், மிளகு.
உசிர் - உயிர்.
உசிலம், உசிலை, உசில் } சிக்கிரிமரம்.
உசீநான்-மகாமநுவின் மூத்தபுதல்வன் சிபிதந்தை, இவன்தேசம் உசீநகரம்.
உசீரபீசம்-அவிக்ஷித்து, மகனாகிய மருத்துமகாராஜன் யாகஞ்செய்தவிடம்.
உசீரம்-இலாமிச்சைவேர்,வெட்டிவேர்
உசு - உளு.
உசுக்கல், உசுப்பல், உசுப்புதல் } எழுப்பல், ஏவுதல்.
உசும்புதல் - இயங்குதல்.
உசுவாசம்-உச்சுவாசம், சுவாசமுள்வேயிழுத்தல்.
உசேகசு - வேதசிரசு மகன்.
உஷை-இரவு,காலை,மாலை, வாணாசுரன் மகள்.
உச்சக்கிரகம்-சுபக்கிரகநிலை.
உச்சங்கவர்த்தமம்-ஒருவகைநோய்அது பாலர்களின் கண்ணிமைக்குள் சிவப்புக் கறுப்புநிறங்களான கொப்பளங்களைப் பிறப்பித்து மீளவும் அவைகளைச்சுற்றி அங்கிறங்களுள்ள அனந்தங்கொப்பளங்களை யுண்டாக்குவது.
உச்சசருங்கவிமாநம் - நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்றாகிய அரிமேய விண்ணகரத்திலுள்ள விமாநம்.
உச்சடை - கொடிக்கொம்பு, கோபம், வழக்கம்.

உச்சட்டம் - இலக்கு, நேர்.
உச்சதரு - தென்னமரம்.
உச்சதேவன் - கிருட்டினன்.
உச்சத்தனம் - உச்சக்கிரகம்.
உச்சந்தம் - அதிகப்படுதல், ஒடுக்கம், தணிவு, விலையுயர்ச்சி.
உச்சந்தலை - உச்சிச்சிரசு.
உச்சந்திரம் - கடைச்சாமம்.
உச்சபாஷாணம் - பலக்கப்பேசல்.
உச்சமானவன் - நெட்டையானவன்.
உச்சம்-உயர்ச்சி, கிரகவுச்சம், தலைக்கு நேரிடம், திதி, மத்தியானம், வல்லிசை.
உச்சயனி, உச்சயினி } உச்சினிநகரம். அது விக்கிரமாதித்தனுக்கு இராஜதானியா யிருந்தது.
உச்சரித்தல் - சொல்லுதல்.
உச்சரிப்பு-எழுத்தினோசை மந்திரோச்சாரணை.
உச்சலம் - அறிவு, மனம்.
உச்சல் - உச்சுதல்.
உச்சவம் - உற்சவம்.
உச்சவீடு - உதயத்துக்கேழாமிடம்.
உச்சற்கம் - அபானம்.
உச்சன் - இலக்குக்கெறியும்பொருள்.
உச்சாகம் - முயற்சி.
உச்சாசனம் - கொலை.
உச்சாயம் - உச்சாகம்.
உச்சாடனம் - அகற்றல், ஏவுதல், கலைஞானமறுபத்து நான்கினொன்று.
உச்சாட்டியம் - ஓட்டல்.
உச்சாணி - உச்சி, உயர்ப்பு.
உச்சாரணஞ்ஞன்-பராபரைக்காரன்.
உச்சாரணம், உச்சாரணை } உச்சரித்தல்-உச்சாடனம்.
உச்சாரம் - உச்சரிப்பு, உயர்ச்சி, மிகவுயர்ச்சி, மலம்.
உச்சாரிதம் - உச்சரிக்கப்பட்டது.
உச்சாவசம்-நாநாவிதமான சித்திரவன்னம்.
உச்சி-ஆண்மயிர், தலை, நடு, நடுத்தலை, நாய்,நுனி, மத்தியானம், மயிர்முடி.
உச்சிகாட்டல் - உச்சுக்காட்டல்.
உச்சிக்காண்டி - குழந்தைக ளுச்சியில் எண்ணெய்விடுஞ் சிறுகாண்டி.
உச்சிக்கலயம் - அடுக்கின் மேலிருக்கும் மட்பாத்திரம், சிறிய மட்பானை.
உச்சிக்கிழான் - சூரியன்.

உச்சிக்குடிமி - உச்சிசிகை.
உச்சிக்குழி-உச்சித்துவாரம், தலைநடு.
உச்சிக்கொண்டை-உச்சியின் மயிர்முடி
உச்சிக்கொம்பன்-உச்சியிற் கொம்புள்ள மாடு, காண்டாமிருகம்.
உச்சிச்சமயம் - மத்தியானம்.
உச்சிச்சுட்டி - ஓராபரணம்.
உச்சிச்செடி - புல்லுருவி.
உச்சிட்டசாங்கரியம்-எச்சிற் பாத்திரத் தினுண்ணல்.
உச்சிட்டமோதனம் - மெழுகு.
உச்சிஷ்டம் } எச்சில்.
உச்சிட்டம் }
உச்சிதம்-அரியது, அழகு, உசிதம், உயர்ச்சி, கொடை, தகுதி, நெருஞ்சில் மேன்மை.
உச்சித்திலகம் - ஒரு பூஞ்செடி.
உச்சிப்பிளவை-உச்சந்தலையிற் சிலந்தி.
உச்சிப்பின்னல் - உச்சிச்சடை.
உச்சிப்பொழுது - நடுப்பகல்.
உச்சிமலை - செங்குத்தானமலை.
உச்சிமல்லிகை - ஊசிமல்லிகை.
உச்சிமோத்தல்-உச்சிச்சிரசைமுகத்தல்
உச்சிரட்டம் - தள்ளப்பட்டது.
உச்சிரதம் - பிரண்டை.
உச்சிரதன் - பிறந்தவன்.
உச்சிரயம் - உயரம், முக்கோணத்தினின்று திட்டவரி.
உச்சிரயோகன் - கணவான்.
உச்சிராயம் - உயரம்.
உச்சிருதி - உயரம், முக்கோணத்தினின்று திட்டவரி.
உச்சிலிங்கத்தேன் - ஒருவகைத்தேன். அதுபகற்காலங்களிற்கொட்டும். அவ்விடத்தினால் வீக்கம், நரம்புகளில் வேதனை, உரோமச்சிலிர்ப்பு, அதிகசீதமாகிய இக்குணங்களுண்டாகும்.
உச்சிவரதநாயகர் - திருக்கற்குடியிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
உச்சிவிடுதி-மத்தியானநேரத்தில்மழைவிடுகை. மத்தியான விடுதலை.
உச்சிவேர் - மூலவேர்.
உச்சினி-விக்கிரமாதித்த னிருந்தவூர்.
உச்சினிமாகாளி-உச்சினி, ஒருகாளி.
உச்சின்னம் - சமப்படுதல்.
உச்சுக்காட்டல் } தூண்டிவிடுதல்.
உச்சுக்காட்டுதல் }
உச்சுச்செனல் - நாயைக் கூப்பிடுதல்.
உச்சுதல்-இலக்குக்கெறிதல்,தள்ளுதல், பிறர்பொருளைக்கவரல்,வெல்லுதல்.
உச்சுவலம் - ஆசை, பொன்.
உச்சுவாசம் சுவாசம் விடுதல், நாளினுட் பிரிவு.
உச்குடை - கொடிக்கம்ப நுனி.
உச்குனம் - கொழுப்பு.
உச்செருதம் - உயர்ந்தவஸ்து.
உச்சேசனம் - மிச்சம், வறள்தல்.
உச்சேதம் - அழித்தல், வெட்டல்.
உச்சேயம் - மலையினுயரம்.
உச்சைச்சிரவம்-இந்திரன் குதிரை.
உச்சைனி-மாளவதேச ராஜதானியாகிய உச்சியென்னுநகரம். இது விக்கிரமார்க்கன் முதலியோர் அரசுசெய்த இடம்.
உஷ்ட்ரகம் - ஒட்டகம்.
உஞற்றல் - உஞற்றுதல்.
உஞற்று-உஞற்றென்னேவல், ஊக்கம், முயற்சி, வழக்கம், வழக்கோதல்.
உஞற்றுதல்-ஏவிவிடுதல், செய்தல்,தவறிப்போதல், முயற்சிபண்ணுதல்.
உஞ்சட்டை-ஒஞ்சட்டை, மெலிவு.
உஞ்சம் - உரலருகிலும் வயலிலும் ஒவ்வொரு தானியமாய்ப்பொறுக்குதல்.
உஞ்சல்-ஊஞ்ஞல்.
உஞ்சி-நாயையேவிடுங்குறிப்புச்சொல்.
உஞ்சுக்காட்டல் } நாயை யேவிவிடுதல்.
உஞ்சுக்காட்டுதல் }
உஞ்சை - அவந்திநகர்.
உடக்கு-திருகாணிச்சுரையினுட்புரி.
உடங்கு - உருங்கு, ஒன்றிப்பு கூடிநிற்றல்.
உடசத்தோல்-குடசப்பாலைப் பட்டை.
உடசம் - சிறுகுடில், பன்னசாலை.
உடந்தை-உரித்து, கூட்டு,சேர்மானம்.
உடந்தைப்படல் } ஒருமித்தல்.
உடைந்தையாதல் }
உடப்பு - தொட்டுமுள்மரம்.
உடமுள் - வேலமரமுள்.
உடம் - உடன்.
உடம்படல் - சம்மதப்படல்.
உடம்படிக்கை - சம்மதம், பொருத்தச்சீட்டு, பொருத்தம்.
உடம்படுதல் - சம்மதப்படுதல்.
உடம்படுமெய் - உயிருமுயிரும் புணர்விடை வருஞ்சந்தியொற்று.

உடம்படுவிலக்கு-ஓரலங்காரம், அஃது உடம்பட்டார்போலக் கூறிவிலக்கு வது.
உடம்பாடு - ஒருமிப்பு, சம்மதம்.
உடம்பிடி - வேல்.
உடம்பிடிக்கை - உடம்படிக்கை.
உடம்பு - உடல், உயிருக்கிருப்பிடம், மெய்யெழுத்து.
உடம்புபுரட்டுதல்- சரீரத்திலிருந்து அழுக்கைத் திரட்டியெடுத்தல், பின்ளைப்பருவச் செயலினொன்று.
உடம்பெடுத்தல்-உடம்புதேறல், பிறத்தல்.
உடம்பை - கலங்கனீர்.
உடலம் - சரீரம்.
உடலல்-சினக்குறிப்பு, சினத்தல்,பகைத்தல், பிரகாசித்தல்,பெருங்கோபம், பொருதல்.
உடலிரண் டுயிரொன்று - கிளிஞ்சல், சிநேகம்.
உடலிலான் - காமன்.
உடலுதல் - உடல்.
உடலுருக்கி - ஒருவகைநோய்.
உடலெடுத்தல் - சரீரந்தேறுதல், சனித்தல்.
உடலெழுத்து - மெய்யெழுத்து.
உடல்-உடலென்னேவல், ஒற்றெழுத்து, சரீரம், பொருள், பொன், முப்பகையினொன்று.
உடல்வாசகம்-நெட்டெழுத்துவாசகம்.
உடல்வேலை - பருவேலை.
உடறல் } உடலல்.
உடறுதல் }
உடற்குறை - தலையற்றவுடல்.
உடற்கூறு - உடலினிலக்கணம், உடலின் சுபாவம்.
உடற்கூற்றுத்தத்துவம்-சரீரத்தினிலக்கண நூல்.
உடற்கூற்றுவண்ணம் - பட்டினத்தடிகள்செய்த ஒரு நூல்.
உடற்கொழுப்பு-குடற்கொழுப்பேறுதல், அஃது நீனை மறப்பிக்கும் ஒரு நோய்.
உடற்றல்-அழித்தல், உலைத்தல், சிதறவடித்தல், சினக்குறிப்பு, தாக்தல், பகை கொள்ளல், பிரயோகித்தல், பெருங்கோபம், பொருதல், வருத்துதல்.
உடற்றழும்பு - உடன்மறு.
உடற்றுதல் - உடற்றல்.
உடனாளி-கூட்டாளி,சொத்துள்ளவன்
உடனிகழ்ச்சி - ஒருங்கு சம்பவித்தல், மூன்றும் வேற்றுமைப் பொருள் களினொன்று.
உடனிகழ்ச்சியணி - ஓரலங்காரம், அது புணர்நிலை.
உடனிகழ்தல் } உடனிகழ்ச்சி.
உடனிகழ்வு }
உடநிலை - கூடநிற்றல், தன்னோடு தானிற்றல்.
உடனிலைமயக்கம் } ஒரொற்றே
உடனிலைமெய்ம்மயக்கம் } தன்னோடு தான் மயங்குதல்.
உடனுக்குடனே - உடனேக்குடனே.
உடனுற்றவன்-ஒரேவகுப்புவேலையாள்
உடனே } சம்பவித்ததும்.
உடனேக்குடனே }
உடனொத்தபங்காளி - சரிப்பங்குடையவன்.
உடனொத்தவன் } சமானமான வன்.
உடனொத்தோன் }
உடன்-அந்நேரம், கூட, மூன்றும்வேற்றுமையின் சொல்லுருபு.
உடன்கட்டையேறுதல்-நாயகனுடனே மனைவி தீயேறுதல், பிரியேனென்று நிற்றல்.
உடன்கூட்டு - ஒன்றுகூட்டு.
உடன்கை - உடனே.
உடன்பங்காளி - கூடிய பங்குக்காரன்.
உடன்பங்கு - கூட்டுபங்கு, சரிப்பங்கு.
உடன்படல்-இசைதல், உடம்படிக்கை செய்யல்,எழுவகைமதத்திலொன்று சம்மதிப்படல், சேரல், பொருந்தல்.
உடன்படல்விடை-வினயதற்குடன்பாடு காட்டுமொழி (உ - ம்) செய்வோன்.
உடன்படிக்கை-உறுதிப்பாடு, சம்மதிப்பத்திரம்.
உடன்படுதல் - சம்மதித்தல்.
உடன்படுத்தல் } இணக்குதல், சம்மதித்தல்.
உடன்படுத்துதல் }
உடன்படுமெய் - உடம்படுமெய்.
உடன்படுவிடை - உடன்படல்விடை.
உடன்படுவிலக்கு - ஓரலங்காரம்.
உடன்பாடு - சம்மதம்.

உடன்பாட்டுவினை - விதிவினை.
உடன்பிடிக்கை - உடன்படிக்கை.
உடன்பிறந்தார் - சகோதரர்.
உடன்பிறந்தாள் - சகோதரி.
உடன்பிறந்தான் - சகோதரன்.
உடன்பிறப்பு - கூடப்பிறக்கை, சகோதரம்.
உடன்போக்கிடையீடு-போக்கறிவுறுத்தன்முதல் இறக்கமீருகிய நான்குமரம்.
உடன்போக்கு - போக்கறிவுறுத்தன்முதலாகத் தோற்றலீருகிய வெட்டும்.
உடன்போக்குவிரி-பாங்கி தலைவற்குடன்போக்குணர்த்தன் முதலாகத்தலைவன் றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தவீருகிய பதினெட்டும்.
உடன்மகரம்-நடுப்புடவையிற் பற்றுவிக்குமரம்.
உடன்றல் - கோபம், சினக்குறிப்பு, பொருதல்.
உடு - அகழி, அம்பிறகு, அம்பு, அம்புத்தலை, ஆடு, உடுவென்னேவல், ஓடக்கோல், சேக்கிரிமரம், விண்மீன்.
உடுகாட்டி - பொன்னுங்காணி.
உடுகூறை - ஸ்திரீகள் ஆடை.
உடுக்கு - இடைசுருங்குபறை, ஒருகட்பறை, சீலை.
உடுக்கை-இடைசுருங்கியபறை,ஒரு கட்பறை, சீலை.
உடுண்டுகம் - வாகைமரம்.
உடுத்தல் - ஆடைசாத்தல், சோலைமுதலிய சூழப்பெறுதல், தரித்தல்.
உடுத்தவாடை } சிற்றுடை.
உடுத்தாடை }
உடுத்துதல் - ஆடை அணிதல்.
உடுநீர் - அகழ்.
உடுபதம் - ஆகாயம்.
உடுபதி - சந்திரன், மரமஞ்சள்.
உடுபம் - தெப்பம்.
உடுபன் - சந்திரன்.
உடுபாதகம் - பனி.
உடுபாவனை - உடுப்பின் சாயல், உடுப்பின்சோடு, சுத்தஉடுப்பு.
உடுபுடவை - சாதாரண உடை.
உடுபுஷ்பம் } செவ்வரத்தை.
உடுபுட்பம் }
உடுப்பகை - சூரியன்.
உடுப்பு - உடுத்தல், உடம்பு, புடவை; உடை.
உடுப்பை-உடுப்பாயென்னுமூற்று, சேக்கிரிமரம், மத்துவாசாரியர் வசிக்குமிடம்.
உடுமானம் - அந்தஸ்திற்குத்தகுந்த உடை.
உடும்பு-இரண்டுநாக்குள்ள ஒருசெந்து.
உடும்புநாக்கன் - பொய்யன்.
உடும்புமுத்து - உடும்பிற்பிறந்தமுத்து.
உடுவின்காந்தன் } சந்திரன்.
உடுவின்வேந்தன் }
உடுவை - அகழ்.
உடை-உடைமை,உடையென்னேவல், உள், கலினை, கால், சீலை, செல்வம், வஸ்திரம், வேலமரம்.
உடைகுளம் உடைவுபடும் ஏரி பூராடநாள்.
உடைகொல் - வேலமரம்.
உடைதல் - கெடுதல், சாய்தல், தகருதல், தளர்வு.
உடைத்தல்-இரித்தல்,கெடுத்தல்,தகர்த்தல், தளர்த்தல்.
உடைத்தானவன் - சொந்தக்காரன், பொருளுள்ளவன்.
உடைத்து - உண்டாயிருத்தல்.
உடைப்பு-உடைந்தரவு, தகர்ப்பு, தளர்வு.
உடைமானம்-உடை, புடைவை.
உடைமை-ஆபரணம், உடையதன்மை, உரிமை,பணதி,பாக்கியம், பொருள்.
உடைய - ஆறும்வேற்றுமையி னேர் சொல்லுருபு.
உடையல் - உடைக்குதல், உடைந்தது, கெடல், முறியல்.
உடையவன்-உரிமைக்காரன்,எசமான், கடவுள், சொந்தக்காரன்.
உடையார்-ஒருத்தியோகஸ்தர், ஒருசாதியின் பட்டப்பெயர், செல்வர்.
உடையார்பாளயம் - ஓரூர்.
உடையான் - உடையவன்.
உடைவாரம் - முழுவிளைவு.
உடைவாள் - உடையிற்கட்டும் வாள்.
உடைவு - இரிவு, கேடு, தகர்வு, தளர்வு, மனநெகிழ்ச்சி.
உடைவேல் - குடைவேல்.
உட்கட்டு - உள்ளூரம், மாதர் கழுத்திற்கட்டும் ஒரு மணிவடம், வீட்டினுட்கட்டு.
உட்காரணம் - அந்தக்கரணம்.

உட்சரிவசம் - அதிசயம், விளிம்பு.

உட்கருத்து உட்பொருள், கருத்துரை, மனக்கருத்து.

உட்கல்-அச்சக்குறிப்புக்காட்டல், அஞ்சல், மடிதல், வெட்கல்.

உட்களவு - உள்வஞ்சகம்.

உட்கள்ளம்-உள்வஞ்சகம், கட்டியினுள் விஷயம்.

உட்காங்கை - உட்சூடு.

உட்காத்தல் - இருத்தல்.

உட்காந்தல் - உள்வெப்பம்.

உட்காய்ச்சல்-உள்ளுக்குக்காய்தல், ஒரு நோய்.

உட்காரம்-மனப்பயம், மனவைராக்கியம்.

உட்காரல் } உட்காத்தல்.
உட்காருதல் }

உட்கிராந்தல் - உள்வெப்பத்தினால் இளைத்துப்போதல்.

உட்கு-உட்கென்னேவல், பயம், வெட்கம்.

உட்குதல்-காணுதல், பயப்படல், பயப்படுத்துதல், மடித்தல்.

உட்குத்துப்புரவீச்சு - இசிவுஉண்டாகிறகுலையைப்பற்றிய ஒருநோய்.

உட்குயிர் - உள்ளுயிர்.

உட்குறிப்பு - மனக்குறிப்பு.

உட்குற்றம் உட்பகை, அவை காமமுதலியன.

உட்கூதல் - தோன்றாத குளிர்சுரம்.

உட்கூதிர் - உட்குளிர்.

உட்கை - இடைக்கைசுற்று, உட்கல், உட்பக்கம், உளவு, உள்ளங்கை, உள்ளுளவு.

உட்கைச்சுற்று - இடக்கைச்சுற்று.

உட்கொள்ளல் } அருந்துதல், உட்கருதல், திருவுளங்கொள்ளுதல், மனசிலேவைத்தல், விழுங்கல்.
உட்கொள்ளுதல் }

உட்கோபம் - வெளியிலே தோன்றாக் கோபம்.

உட்கோள்-உட்கருத்து, கோட்பாடு.

உட்சங்கம் - அகச்சங்கம்.

உட்சமயம்-அகச்சமயம் அவை, சைவமுதலியவறுசமயம்.

உட்சாடை-உட்கருத்து, குழூஉக்குறி.

உட்சுரம் - ஒருவகைச் சுரநோய். அது சிலேஷ்மமும் பித்தமுங்கொதித்து நிற்கையில் வாதமானதுவயிற்றிலடங்குவதால் பிறந்து வயிற்றில் அதிக வருத்தம், மலபந்த முதலிய விகாரங்கள் தோன்ற பின்னர்ச் சுரக்குணங்களெல்லாவற்றையுமுண்டாக்குவது.

உட்சூத்திரம்-இலேசானவகை, உட்குறிப்பு, உள்ளுபாயம், நுட்பமானவகை, மூலகாரணம், மூலசூத்திரம்.

உட்செல்லல் - உட்போதல்.

உட்சேபணம் - எழும்புதல், எரிதல், விசிறி.

உட்சொல்-நெஞ்சொடு கூறல், சொல்விலக்கணம் நான்கனுளொன்று.

உட்சொல்லல் - அந்தரங்கக் கருத்தைக் வெளியிட்டுக்கூறுதல்.

உட்டணகாசம் வெப்பகாசம், கண்ணோயுளொன்று.

உட்டணகாரகன் - சூரியன்.

உட்டணசஞ்சீவி-நீர்பிரண்டைக்கொடி

உட்டணசயித்தியம்-வெம்மை அல்லது காரமுடையதாயிருந்து குளிர்மையைக் கொடுக்குந்தன்மை.

உட்டணசிகை-குசன் சனிபானுகின்றகால்.

உஷ்ணம் } அகோரம், காப்பு உறைப்பு, வெய்யில், மிளகு, வெப்பம்.
உட்டணம் }

உட்டணவாயு உட்டணங்கண்டு உடலிற் கிளரும்வாயு.

உட்டணசகம் - குளிர்காலம்.

உட்டணநிக்கம் - அதிகவுட்டணம்.

உட்டணித்தல் - உருமித்தல், வெப்பங்கொள்ளல்.

உட்டணோதகம் - வெந்நீர்.

உட்டணோபகமம் - வேனிற்காலம்.

உட்டிணீடம் - தலைப்பாகை, முடி.

உட்டிரம் - களர்நிலம், தேட்கொடுக்கி, நீர், முட்செவ்வந்தி.

உட்டினம் - பாய்தல்.

உட்டுளை - குழாய், புரை.

உட்டெளிவு - உள்வைரம், உள்ளத்தெளிவு, பழுதுதிருத்தியெடுத்துக்கொண்டது, பேரறிவு, வடித்தசாறு.

உட்டேட்டம் - உட்சம்பத்து, மனநாட்டம்.

உஷ்ணநிக்கம் - அதிகவெப்பம்.

உஷ்ணோதகம் - வெந்நீர்.

உட்பகை - காம முதலிய அறுபகை.

உட்படல் - உட்படுதல்.

உட்படி-படிக்கற்குவாடிய இடையறிய இடும்படிக்கல்.

உட்படுதல் உடன்படல், உள்ளேபோதல், எல்லைக்குக் கீழ்ப்படிதல், ஏற்படுதல்.

உட்படுத்தல் - உடன்படுத்தல், உட்செலுத்தல், உள்ளேசேர்த்தல், சிக்கப்படல், மதத்துக்குள்ளாக்கல்.

உட்பத்தியம் - மருந்துண்ணுங் காலத்திலே பெண்போகமின்றியிருத்தல்.

உட்பந்தி - அகப்பந்தி.

உட்பலம் - சேனுபலம். திரவியபலம், துணைவர்பலம், தேகபலம்.

உட்பற்று - அகப்பற்று.

உட்பாசம்-உள்ளன்பு, மனிப்பற்று.

உட்பிரவேசம்-உட்செல்லுகை. [கல்.

உட்பிரவேசித்தல் - உட்படுதல், உட்பு

உட்புகல் - உள்ளேபோதல்.

உட்புரை - அந்தரங்கம், உட்டுவாரம், உள்மடிப்பு.

உட்புறம் - உட்பக்கம்.

உட்பூசை-இருதயத்திலே தியானமார்க்கமாகச் செய்யும் பூசை.

உட்பொருள்-உட்கருத்து, உட்பயன்.

உட்போடல் } உட்போடுதல் } சாயச்செய்தல், வாட்டுதல்.

உணக்கம் - உலர்ந்ததன்மை, வாட்டம்.

உணக்கல்-உலர்த்தல், காய்ச்சுதல், துக்கப்படுத்துதல், வாட்டுதல்.

உணக்குதல் - உரைக்கல்.

உணங்கல் - உலர்தல், ஒசிதல், காய்தல், துக்கப்படுதல், மெலிவான துவாடல்.

உணத்தல் } உணத்துதல் } காயச்செய்தல், வாட்டுதல்.

உணரல் - உணருதல்.

உணராமை-அறியாமை, மயக்கம்.

உணருதல்-அறிதல், ஊடறீர்தல்,எண்ணல், கற்றறிதல், காய்தல், தெளிதல், நினைத்தல், பகுத்தறிதல், பரிசித்தல் வாடல்.

உணர்-உணரென்னேவல், உணர்வு.

உணர்ச்சி-அறிவு, கல்வி, சுவரணை, நினைவு, புத்தி, மனச்சாட்சி.

உணர்தல் - அறிதல், உணருதல், காய்தல்.

உணர்த்தல்-ஊடறீர்த்தல், துயிலெழுப்புதல்,அறிவித்தல்,கற்பித்தல்,போதித்தல்.

உணர்த்தி-அறிவு, உணர்ச்சி. [தித்தல்.

உணர்ந்ததையுணர்தல்-ஒரளவை, அது முன் குளிர்வந்தற்றகாலத்து நெருப்பு மருந்தென்றறிந்தான் பின்பு மது மருந்தென வுள்ளங்கோடல்.

உணர்ந்தோர் - அறிவுடையோர்.

உணர்வு - அறிவு, ஊடலுந்துயிலு நீங்கல், தெளிவு, நீங்கல், புலன்.

உணர்வுகேடு-அறிவுகேடு, சுவரணைகே

உணர்வோர் - அறிவுடையோர். [டு.

உணவு - ஆகாரம், சோறு, போசனம்.

உணவுதல் - தெரித்தல்.

உணு - சோறு, உணவு.

உணி-அனுபவிப்பான், அனுபவிப்பான், அனுபவிப்பது என்னும் பொருள்பட கிற்கும் ஒருமைப்படர்க்கை விகுதி, உண்ணியென்பதின் குறுக்கம் ஒரு செந்து.

உனை-உனையென்னேவல், மெலிவு.

உனைதல் - உரைமெலிதல்.

உண்கலம் - போசனபாத்திரம்.

உண்கு - உண்கென்னேவல், உண்பேனென்னுந்தன்மையொருமைவினைமு

உண்டல்-உட்கொள்ளல்,புசித்தல்[ற்று.

உண்டாகல் } உண்டாகுதல் } உண்டுபடுதல், தலைப்படுதல், வளர்தல்.

உண்டாக்கல் } உண்டாக்குதல் } உண்டுபடுதல், வளர்க்குதல்.

உண்டாட்டு - பெருங்காப்பிய வுறுப்பொன்று. அது மது முதலிய உண்ணுஞ் சிறப்புக்கூறுதல்,மகளிர் விளையாட்டு, மதுபானக் கொண்டாட்டு, விளையாட்டு.

உண்டாதல் - உண்டாகுதல்.

உண்டாத்தா - கள்ளிமரம்.

உண்டாயிருத்தல் - உளதாயிருத்தல்.

உண்டி-இரை, உணவு, உண்டாயென்னுமுற்று, உண்டி யென்னேவல், சோறு, நால்வகையுணவிடுனென்று, அஃது, உண்பன, பதவையுணவு, பொக்கிசப்பெட்டி.

உண்டிகை-உண்டியற்சிட்டு பொக்கிசப்பெட்டி.

உண்டிகைச்சிட்டு-உண்டிப்பத்திரம்.

உண்டிச்சிட்டு - உண்டியற்சிட்டு.

உண்டிப்பொருத்தம் - பொருத்த வகை
பத்தனுளொன்று. அது அ உ எ க ச
த ந ப ம என்னுமெழுத்துக்களை மு
தலில் வைத்துப் பாடுவது.
உண்டியல் - உண்டியற்சீட்டு, கோயிற்
குக் கொடுக்கும்பணம், பொக்கிஷம்.
உண்டியற்சீட்டு - உண்டிப்பத்திரம்.
உண்டில்லாதது-கோள், தேவையான
உண்டு - உள்ளது. [து.
உண்டுகம் - பெருவாகைமரம்.
உண்டுபடல் } உண்டாதல், தோனு
உண்டுபடுதல் } தல், முளைத்தல்.
உண்டுபடுதல் }
உண்டுபடுத்துதல் } உண்டாக்குதல்.
உண்டுபண்ணுதல் }
உண்டுறையணங்கி - நீருண்ணுந்துறை
யிலுள்ள தெய்வம்.
உண்டை - உண்டாயென்னும் முற்று,
உருண்டை, குளிகை, சிற்றுண்டி,
தார்நூல், திரளை, படைவகுப்பு.
உண்ணம் - ஓடைமரம், மேன்மை.
உண்ணல் - அனுபவித்தல், புசித்தல்,
விழுங்கல்.
உண்ண-அண்ணம், உண்ணவென்னு
ம் எதிர்மறைப் பலவின்பால் வினை
முற்று செய்யானென்னும் வாய்ப்
பாட்டு வினையெச்சம்.
உண்ணாக்கு - மேல்நாக்கு.
உண்ணாட்டம்-உண்ணோக்கம். [ப்பதி.
உண்ணாமுலை-பாலுண்ணாதமுலை, பார்
உண்ணி-ஒருசெந்து, பாலுண்ணி.
உண்ணிக்கொக்கு-ஒருவகைக் கொக்கு.
உண்ணீரம் - உள்ளீரம்.
உண்ணீர் - குடிக்குநீர்.
உண்ணுகை } அருந்துதல், அனுபவி
உண்ணுதல் } த்தல், புசித்தல், வி
ழுங்கல்.
உண்ணோக்கல் - சிந்தித்தல், தியானித்
உண்பித்தல்-உண்ணச்செய்தல். [தல்.
உண்மடை - உள்வாய்க்கால், துஷ்ட
தேவதைகளுக்கிடும் பலி.
உண்மாசு - உபமலம், மனக்கறை.
உண்மிடறு - அணல்.
உண்முடிச்சு - உட்கள்ளம்.
உண்மை - அறிவு, இயல்பு, உள்ளது,
சத்தியம், நேர்மை, மெய், யதார்த்
தம்.

உண்மைத்தவறு - தப்பிதம்.
உண்மைத்தாழ்ச்சி-உண்மைக்குறைவு.
உண்மைத்தாற்பரியம் - யதார்த்தமான
கருத்து.
உண்மைத்துரோகம் - நம்பிக்கைத் து
ரோகம், பொய்.
உண்மைநெறிவிளக்கம் - மெய்கண்ட
சித்தாந்த ஞானசாத்திரம் பதினன்
கனுள் ஒன்று.
உண்மைப்படல் } மெய்ப்படுதல், வி
உண்மைப்படுதல் } சுவாசம் பொ
ருந்தல்.
உண்மைப்படுத்தல் - மெய்ப்பித்தல்.
உண்மைப்பாதகம் - உண்மைத் துரோ
கம்.
உண்மைப்பிடி-ஒன்றின்உண்மையைத்
தெரிந்து உறுதியாகப் பிடித்தல்.
உண்மைப்பேதகம் - உண்மைப்புறட்டு
நம்பிக்கைத்துரோகம்.
உண்மைப்பொருள் - உவமேயப்பொ
ருள், உள்ளபொருள், மெய்ப்பொ
ருள்.
உண்மையதிகாரம் - சிவஞானபோதமு
தலிய நூல்களிலே இறைவனுடைய
சொரூபலக்கண மெனப்படும் சிறப்
பியல்பைக்கூறும் பகுதி.
உண்மையளவை - மெய்ம்மையினாற் பி
ரமாணித்தல்.
உண்மையறிவு - உள்புரானகியவறிவு.
உண்மையுவமம் - ஓரலங்காரம், அஃது
உண்மையைக்கூறி மறுத்துப் பொ
ருளையேகூறி முடிப்பது.
உண்மையுவமை - உண்மையைக்கூறி
மறுத்துப் பொருளையேகூறி முடிக்
குமோ ரலங்காரம்.
உண்மைவசை - மெய்வசை.
உண்மைவாழ்த்து - மெய்வாழ்த்து.
உண்மைவிளக்கம் - மெய்கண்ட சித்தா
ந்த ஞானசாத்திரம் பதினன்கனுள்
ஒன்று.
உதககிரியை - நீர்க்கடன்.
உதகசுத்தி - தேற்றான்கொட்டை.
உதகதானம் - தாராதத்தம்.
உதகமூலம் - தண்ணீர்விட்டான் கிழங்
கு, பச்சைவேர்.
உதகம்-நீர், பூமி, மழை, மழைத்துளி,
உதகவன் - கொடுவேலி, தீ.

உதகாதாரம் - நீர்நிலை.
உதகாரம் - முகில்.
உதகு - புன்குமரம்.
உதகும்பம் } நீர்ச்சாடி.
உதகோஞ்சனம் }
உதகோதரம் - முகில்.
உதக்கிரமன் - கலவன்.
உதக்கிரம் - நீட்சி.
உதக்கிரியை - நீர்க்கடன்.
உதக்கு - பின்னானது, மேலானது, வடக்கு.
உதக்குசேனன் - விசுவக்குசேனன் குமாரன்.
உதங்கன் - பைலவவிருடி சீடராகிய ஓரிருடி. இவர் குருபத்தினிக்காகப் பௌஷிய மகாராஜாவின் மனைவியிடம் குண்டலம் பெற்றுக்கொண்டு போகும் வழியில் அதைத் தக்ஷகன் என்னும், நாகராஜன், அபகரிக்க அதனை அதிகப் பிரயாசத்தோடு மீட்டுக் கொண்டுபோய்க் குருபத்தினிக்குக்கொடுத்தவர். தக்ஷகனைக்கொல்ல நினைந்து ஜனமேஜயனைச் சர்ப்பயாகஞ் செய்ய ஏவியவரும் இவரே.
உதசம்-சாபம், பசுமடி, நீரிற்பிறப்பது.
உதசுதை - இலட்சுமி.
உதஞ்சனம் - இறைகூடைஎழும்புதல், ஏறுதல், மூடி.
உதடன் - அதட்டுக்காரன்,பருத்த அதரங்களை யுடையவன்.
உதடு - அதரம், விளிம்பு, வெட்டுவாய்.
உதடுபிதுக்கி - ஒருபுறத்திற் பிதுங்கி விழு முதடுள்ளவன்.
உதடுமடித்தல் - கோபத்தினால் உதட்டைக் கடித்தல்.
உதட்டடி - அதரடி, வாய்வெருட்டு.
உதட்டுரோகம் - ஒருவகைநோய். அது உதட்டில் கண்டோஷ்ட முதலாக சலார்ப்பு தோஷ்டமீறாகப் பதினொரு வகைப்படும்.
உதட்டைப்பிதுக்கல் - கித்தனை அல்லது இல்லை என்பதைக்காட்டுமோர்குறி.
உதணம் - மொட்டம்பு.
உததி - கடல், நீர்க்குடம், முகில்.
உததிமேகலை - பூமி.
உததியானுசன் - வியாழம்.
உததிரம் - தகரம்.

உதத்தியன் - அங்கிரசன்மகன், பிருகஸ்பதி சகோதரன்; இவன் மாரி மமதை. மகன் தீர்க்கதமன்.
உதந்தம் - சமாசாரம், சரித்திரம்.
உதந்தன் - சாது.
உதபாரம் - முகில்.
உதபானம் - கிணறு.
உதப்பல் - உதப்புதல்.
உதப்பி - சால், சிரணிக்காத இரை, பேசுகையிற் றெறிக்கும் வாய்நீர்.
உதப்பிவாயன் - எச்சில்தெறிக்கும்படி பேசுகிறவன்.
உதப்புதல் - இகத்தல், கடிந்து சொன்னல், குதப்புதல்.
உதமேகம் - முகில்.
உதம் - அழைத்தல், கேட்டல், நீர்.
உதம்பரம் - அத்திமரம்.
உதம்பல் } அதட்டுதல், கடிந்து கொள்ளல்.
உதம்புதல் }
உதயகாலம் } சூரியோதயம்.
உதயகாலை }
உதயகிரி - உதயமலை, இருஷகிரி.
உதயசுரம் - ஒருவகைச் சுரநோய்; அது உதயகாலத்திற்பிறந்து தாகம், சரீர வலி, தொட்டாவி, ஏப்பம், அக்கினிமந்தம், நாக்கசப்பு, பிரலாபம், மிகு பேச்சு, கைகால்களிற் சீதள முதலிய குணங்களை யுண்டாக்குவது.
உதயணன் - சகஸ்திராநீகன் மகன், ஜெனமேஜயன் பௌத்திரன்; இவன் நகரம் கௌசாம்பி.
உதயணன்கதை - பைசாச பாடையில் குணாட்டியர் என்னு மகாபண்டிதரொருவரால் முற்காலத்துச் செய்யப்பட்டுள்ள பிருகக்கதையின் மொழி பெயர்ப்பாகவுள்ள ஒரு நூல்.
உதயபருவதம் } உதயமலை.
உதயமனகிரி }
உதயமனம் - உதயகாலம், உதயமலை, உதயம்.
உதயம் - அதிட்டம்,இலாபம்,உதயகிரி, உதயவிராசி, உதித்தல், உலகு, சிருஷ்டிப்பு, கிரகத்தோற்றம், சீர்பேறு, பிறப்பு, விடியல், வெளிச்சம்.
உதயலக்கினம் - ஜென்மலக்கினம், தற்காலத் துதிக்கு மிராசி.
உதயனம் - உதித்தல்.

உதயன் - சூரியன்.
உதயாசுவன் - அஜாதசத்துருபௌத்திரன், சைசுநாகர்களுளொருவனாகிய மகததேச விராஜன். இவன் குசுமபுரமென்னும் பாடலிபுத்திர நகரை நிருமித்தவன்.
உதயாதி - விடியல்.
உதயாதிபன் - ஜென்மராசியிலிருக்கும் கிரகம்.
உதயாஸ்தமனம், உதயாத்தமனம், உதயாத்தம் - அத்தமன உதயமனங்கள், அந்திசந்தி.
உதரகோமதம் - பாலடைப்பூண்டு.
உதரக்கனல் - தீபனக்கினி.
உதரக்கொதி - பசி.
உதரதி - சமுத்திரம், சூரியன்.
உதரத்தீ - உயிர் முத்தீயினென்று.
உதரத்துடிப்பு - உதரக்கொதி.
உதரகாடி - இரத்தநாம்பு.
உதரசியித்தந்திரிதல் - தினசீவனத்திற்காக வேலையைத் தேடித்திரிதல்.
உதரபந்தனம் - அரைப்பட்டிகை, ஒட்டியாணம்.
உதரப்பிரிவு-தங்குடித்தமர்.
உதரம் - கருப்பை, கீழ்வயிறு, யுத்தம், வயிறு.
உதரம்பரி - தன்வயிறு நிறைத்துக்கொள்வோன்.
உதரவணி, உதரவாணி - கண்டங்கத்திரி.
உதராக்கினி - பசித்தீ.
உதராமயம் - கிராணி, வயிற்றுவலி.
உதராவர்த்தம்-கொப்பூழ், தீட்டுக்கட்டு.
உதராவி - மரமஞ்சள்.
உதர்க்கம் - எதிர்காலம், வரப்போகிறகாலம்.
உதர்ச்சி - அக்கினி, ஒரு தெய்வம், மிக்க வொளியுள்ளவன்.
உதவகன் - தீ.
உதவசிதம் - வீடு.
உதவச்சிரம் - சமுத்திரத்தி லிருந்து திரண்டெழுந்து மேலே போகும் நீர்த்தம்பம்.
உதவாக்கெட்டது, உதவாங்கெட்டது - மிகவுமிழிந்தது.
உதவல் - ஈதல், காரியத்திற் சாதல், தகுதியாயிருத்தல், துணைசெய்தல்.
உதவாகனம் - முகில்.
உதவாசம் - நீர்க்கரையிலுள்ள வீடு.
உதவாசனம் - முகில்.
உதவி - ஒத்தாசை, கொடை, சகாயம், துணை.
உதவிந்து - நீர்த்துளி.
உதவுதல் - உதவல்.
உதன் - ஆடு, ஆட்டுக்கடா, மேடவிராசி.
உதறல் - உதறுதல்.
உதறிமுறிப்பான் - விஷ்ணுகரந்தை.
உதறுகாலி - உதறுகாற்பெண், எறிகாற்பசு.
உதறுசன்னி - ஒருவகைச் சன்னிரோகம்.
உதறுதல் - இடங்கொடாமற்றள்ளுதல் குலைவுகொண்டு நடுங்குதல், சிதறஅசைத்து வீசுதல், விதிர்த்தல்.
உதறுவாதம் - ஒருவகை வாதரோகம்.
உதன - சிவன்.
உதன்னியம் - நீர்த்தாகம்.
உதாகரணம் - அத்தாட்சி, உதாரணம், இலக்கிய மெடுத்துக்காட்டல்.
உதாகலம் - உரல்.
உதாகாரம் - உதாரணம்.
உதாசனம் - எண்ணமை, தூஷணம்.
உதாசனன் - அக்கினிதேவன், கண்குத்திப்பாம்பு, கொடுவேலி, தீ.
உதாசனித்தல் - இகழ்தல்.
உதாசனிப்பு - இகழ்ச்சி.
உதாசினபாவம் - கீந்தனைக்குற்றம்.
உதாசினம்-உதாசனம், விருப்புவெறுப்பின்மை.
உதாசீனம் - விக்கை.
உதாசீனன் - இருவகைக்கிறிஸ்தவருள் ஒருவன் விருப்புவெறுப்பின்றிபொதுமையாயிருப்பவன், பிறத்தியான்.
உதாத்தம் - இச்சை, ஓரலங்காரம், வேதஸ்வரத்திலொன்று.
உதாத்தன் - சிறந்தவன், புருஷார்த்தசிந்தையுள்ளவன், வள்ளல்.
உதாமகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உதாரகுணம் - உதாரத்துவம்.
உதாரணம் - இலக்கியமெடுத்துக்காட்டல், உதாகரணம், எதிர்நியாயம், ஒப்பனை, துணைக்காரணம்.
உதாரத்தம் - ஓரலங்காரம், அஃதுசெல்வம் முதலியவற்றின் மிகுதிதோன்றக் கூறுவது.

உதாரத்துவம் பெருங்கொடைத்தனம்.
உதாரம் - உத்தண்டம், ஓரலங்காரம். அஃது பொருளின்றிக் குறிப்பா லொரு கெதிப்பட கிரப்புங்கவி, கொடை, தாராளம், வீரம்.
உதாரன் } கொடையாளி, பேச்சுத்
உதாரி } திறமுள்ளவன், வீரன்.
உதாரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
உதார்த்தம் - உருபகத்திலொன்று.
உதார்வதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
உதாவசு - ஜனகன்மகன்.
உதாவனி - கண்டங்காலி.
உதாவர்த்தம் - ஒருவகைநோய், தடைப் பட்டுவரும் பூப்பு.
உதாவர்த்தயோனி - ஒருவகை யோனி ரோகம்; அது அல்குல் ஸ்தானத் தில் மிக்க நோவையும் நரைத்த விரத்தவொழுக்கையு முண்டாக்கும்.
உதாவர்த்தவாதம் - ஒருவகை வாத நோய்; அது வேகத்துடன்வரும் மல மூத்திரா திகளை அடக்கல்மந்தவஸ்து மலபந்த வஸ்துக்களைப் புசித்தல் ஆகியவற்றாற் பிறந்து கீழ்வயிற்றில் கிலைத்து அவ்விடத்தில் கனம், நோ வு, உப்பல், மலஜலக், கட்டாகிய இக்குணங்களை யுண்டாக்கும். அ தோங்கத்திலிருக்கும் நரம்புகளையும் மலமூத்திரங்களையும் மேலாகவிழுத் துப் பிடித்துச் சுழல்வதால் இதற் கிப்பெயர் வந்தது.
உதானபிராணவா விருதவாதம் - ஒரு வகைவாதநோய், அதுஉதானவாய்வு பிராணவாயுவை ஆவரணமாய்ச் சூ ழும் போதுபிறந்துதேகதிறத்தையும் ஒளிவையும்பலத்தையுங்குறைக்கும்.
உதானம் - கண்மடல், கொப்பூழ், காபி யில் கிற்கும் வாயு.
உதானன் - காபியில் கிற்கும் வாயு.
உதி - உதியென்னேவல், உலைத் துருத்தி, ஒதியமரம், வித்தை.
உதிட்டிரன் - தருமன் இவன் பாண்டு வின் முதற்புத்திரன்.
உதிதம் - உயர்ந்தது, சொல்லப்பட்டது தோற்றப்பட்டது, விரிந்தது.
உதித்தல் - அவதரித்தல், உதயமாதல், தோன்றுதல், பருத்தல், பிறத்தல்.
உதிப்பு - தோற்றம், பிறப்பு.
உதியன் - சேரன், பாண்டியன், வித் துவான், பண்டிதன்.
உதிரக்கட்டு - இரத்தக்கட்டு, பூப்புப் படாமை.
உதிரக்கலப்பு - உரவு.
உதிரக்கிரகி - அட்டை, காடி.
உதிரக்குடோரி - கருடன் கிழங்கு.
உதிரகுலை - இரத்தகுலை.
உதிரத்தலைவலி-ஒருவகைத் தலைநோய், அது பித்தசிர ஸ்தாபகரோக குணங் களைப் பார்க்கினும் அதிக தீர்க் குணங்களைப் பிறப்பித்து வேதனை யை யுண்டாக்குவது.
உதிரத்துடிப்பு - இரத்தத்துடிப்பு.
உதிரபந்தம் - மாதுளை.
உதிரபாசம் - இரத்தவுறவு.
உதிரமுறிப்பான் - விஷ்ணுகிராந்தி.
உதிரம் - இரத்தம்.
உதிரவாதம் ஒருவகை வாதநோய்,அது உஷ்ண வஸ்துக்கள், காந்திய வன ஸம், உலர்ந்தபதார்த்தமாகிய இவை களைப் புசித்தலினாலும், பகல் நித்தி ரை,மிகுசையோகம் ஆகிய செய்கை களினாலும் இயல்பாகவே நரம்புத் துவாரங்களி லோடப்பட்ட உதிரமா னது மறிபடுவதினாலும் பிறந்து கை கால் முதலியவற்றின் பொருத்துக ளில் தங்கி அவ்விடங்களில் வீக்கம், குத்து, நோவு, தினவு,சரீரத்திற்கரு மை,சீதளம்,சிரசில் உபத்திரவமென னும் இக்குணங்களையுண்டாக்குவது.
உதிரவாயு - சூதகவாயு.
உதிரவீரியன் - ஒருவகைப் பாம்பு.
உதிரவேங்கை - ஒரு வேங்கைமரம்.
உதிரன் - செவ்வாய்.
உதிரி - உதிர்ந்தது, ஒருவகைவாழை, சிறுகீரை,தளசிவசூரியிலோர்வகை.
உதிரிக்குத்து - வசூரியினு லுண்டா கும் ஒருவகைக்குத்து.
உதிரித்தழும்பு - அம்மைவடு.
உதிரோற்காரி - சத்தமுகிலிலொன்று, அஃது இரத்தம் பொழிவது.
உதிர் - துகள், முத்தக்காசு.
உதிர்காய் - சொரிகாய்.

உதிர்காலம் - இலையுதிர்காலம்.
உதிர்க்குக்கிடாரி - கருடன் கிழங்கு.
உதிர்தல் - சாதல், சிந்தல், சொரிதல்.
உதிர்த்தல் - உகுத்தல், கண்ணீருகுத்தல், சொரிவித்தல், பொடியாக்கல்.
உதிர்ப்பு-உகுக்கை, உதிர்வு.
உதிர்யன் - பண்டிதன்.
உதிர்வு - உகுகை, உதிர்கை.
உதீசம் - குறுவேர்.
உதீசி - வடக்கு.
உதீசியம் - சராவநதிக்கு, வடமேற்குத் தேசம்.
உதீசினம் - வடக்கிலுண்டான வஸ்து.
உதீர்ணன் - புருஷார்த்த சிந்தையுள்ளவன்.
உது - உஃது.
உதும்பரம்-அத்திமரம், எருக்கு, செம்பு, செவ்வகத்தி, நெற்களம், வாயிற்படி.
உதும்பரேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
உதூகலம் - உரல்.
உதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
உதை - உதைத்தல், உதையென்னேவல், காலாலுழுத்துகை, முட்டு.
உதைகால் - மிண்டுக்கால்.
உதைகாற்பசு - உதநுகாற்பசு.
உதைகொடுத்தல் - உதைத்தல், மிண்டு கொடுத்தல்.
உதைசுவர் - அணைசுவர்.
உதைதல் - உதைத்தல், செலுத்தல்.
உதைத்தல் - அதைத்தல், அலட்சியம் பண்ணல், காலாலெறிதல், செலுத்தல், தாக்கல், பிரயோகித்தல்.
உதைப்பு-உதைக்கை, தாக்குகை, பயம்.
உதைமானம் - உதைகால்.
உதையுண்ணல் - உதைபடல்.
உதோன்முகம் - மேன்முகம்.
உத்கடம் - இலவங்கம், மேலிட்டது.
உத்கடன்-மத்தியபானாதிகளான் மெய்மறந்தவன்.
உத்கதம் - ஒன்றைப் பிளந்துகொண்டு புறப்பட்டது.
உத்கமம் - பிறப்பு, வியாபாரம்.
உத்கமனீயம் - நனைத்த இரட்டை வஸ்திரம்.
உத்கரம்-தானிய முதலியவற்றின் குவியல்.
[கை.
உத்கலநம் - விவாஹமுதலான வேடிக்
உத்கலிகை - இஷ்டசித்தி யாகாமற் றவித்தல்.
உத்கன் - இச்சித்தபொருள் கிடைப்பதெப்போதென் றவசரப்படுபவன்.
உத்காரசிலேஷ்மம் - ஒருவகைச் சிலேஷ்ம நோய், அது மாறுவேப்பம், மிகு வாந்தி, தலைவலி, அதிகோழை, மலபந்தம், அக்கினிமந்தம், வயிறு கற்போன்றிருத்தல், சூலை, பொருமல், எரிவு, ஈனத்தொனி, கண்ணொழுக்கு, அசிரணம், சரீரவேதனை, ஆலசியம், தாக முதலிய குணங்களை யுண்டாக்குவது.
உத்காரம் - ஏப்பம், தானியந்தூற்றல், கூட்டல் முதலியன.
உத்காரிகை - சிறுகொழுக்கட்டை முதலானவை.
உத்கிரகம் - கீறல்.
உத்கிருஷ்ணம் - மேன்மை.
உத்கீதம் - ஓங்காரம், சாமவேதத்தின் இரண்டாம்பாகம் சாமவேதம் பாடுதல், மேகம்.
உத்கீதன் - சந்திரன்.
உத்குரோசம் - அழுமன்றிற் பறவை.
உத்கோசம் - காணிக்கை, குரோதம், பரிதாநம்.
உத்கோடரோகம் - எச்சிற்றழும்பு,
உத்சஜனவனம்-தானம். [தேமல்.
உத்சவம் - உற்சவம்.
உத்சாகம் - உற்சாகம்.
உத்சாதனம் - நலங்கு.
உத்சிரேஷ்டன் - விடப்பட்டது.
உத்சுகன் - விடப்பட்ட பொருளில் முயற்சியுடையோன்.
உத்சேதம் - சரீரம், உயரம்.
உத்தண்டமணி - பொன்மணியாலாகிய கழுத்தாபரணம்.
உத்தண்டம்-அதிகாரம், உக்கிரம், கொடை, தயிரியம், துணிவு, மகத்துவம், வலிமை, வாக்குவல்லமை வீரம்.
உத்தண்டால் - உத்தண்டமணி.
உத்ததி - மேட்டிமை.
உத்தப்தம் - உலர்ந்ததசை.
உத்தமசத்து - அவுபலபாஷாணம்.

உத்தமசரீரம் - கருடகத்திருவர் முதலியோருடம்பு.
உத்தமசீடன் - முதற்றரமாணக்கன்.
உத்தமதாளி - வேலிப்பருத்தி.
உத்தமதானம்-நல்லோர்க்கீதல். பாக்கு வெற்றிலைக்கொடை, பிளவிலை.
உத்தமபட்சம்-நற்பட்சம், முதற்றரம்.
உத்தமபரி-கொத்தமல்லி, இலை, சிரேஷ்டமான குதிரை.
உத்தமபலம் - முந்திரிகைப்பழம்.
உத்தமபாத்திரம் - சற்பாத்திரமான மேலோர்.
உத்தமபுருடன்-உத்தம லக்கணமுடையவன், சன்மார்க்கன் தன்மை.
உத்தமமேகம் - ஒருவகை மேகநோய். அது மூத்திரமானது காய்ச்சினாலும் நல்ல சலம்போ லிருப்பதுந் தவிர ஒவ்வொருவேளையும் அளவுக் கதிகமாயிருக்கும்.
உத்தமம் உண்மை, சொல்லல், நன்மை, முதன்மை.
உத்தமர்கோயில்-நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்று. இது கரம்பனூர்.
உத்தமவிமிசதி - வருடமறுபதில் முதலிருபது.
உத்தமன்-சற்குணன், பெரியவன், மிகு நண்பன், மூன்றுமனு, விட்டுணு.
உத்தமாகாணி - உத்தமதாளி, வேலிப் பருத்தி.
உத்தமாங்கம்-ஆண்குறி, கருடன்வீடு, தலை, பெண்குறி.
உத்தமாங்கன் - அழகான முகமுள்ளவன், தகுதியுள்ளவன்.
உத்தமி } சற்குணமுள்ளவன், பார்
உத்தமை } வதி.
உத்தமோஜன்-துருபதன்மகன், திட்டத்தியுமனன்றம்பி; இவன் பாரத யுத்தத்திற் பதினெட்டாநாளிரவு அசுவத்தாமனால் நித்திரையிற் கொல்லப்பட்டவன்.
உத்தமோத்தமம் - அதிசவுத்தமம்.
உத்தம்-ஓரலங்காரம். அஃது காரணத்திற் கேற்றகாரியம் நிகழ்வது கொட்டை முந்திரிகை.
உத்தம்ஸம்-ஸ்திரீ புருஷர்கள் சிரத்திலும் செவிநுனியிலும் செருகும் தளிர் மலர் முதலானவை.
உத்தம்பரி - உத்தமபரி.
உத்தம்பலம் - உத்தம்பலம்.
உத்தரகாலம் - அடுத்தகாலம், சாந்திரிமாதம்; அது பூரணைதுவக்கி மற்றப் பூரணையளவும் வருங்காலம்.
உத்தரகிராந்தம் - மேற்செல்லுகை.
உத்தரகிரியை - அசுபக்கிரியை.
உத்தரகீதை - பாரதத்தின் ஒருபாகம்.
உத்தரகுமாரன் - விராடன்மகன்.
உத்தரகுரு } போகபூமியாறினொன்று. அஃது சன்
உத்தரகுருவம் } மார்க்கரிருக்கும் நல்லனுபவ பூமி.
உத்தரகோசமங்கை - இராமநாதபுரத்திற்கு சமீபத்திலுள்ள ஒரு திவ்விய சிவஸ்தலம்.
உத்தரகோசலை - அயோத்திநகரம்.
உத்தரகோளம் - உத்தரகுரு.
உத்தரகௌத்தன்-வாரணசிநகரத்தரசன்.
உத்தரக்கிரியை-அசுபக்கிரியை.
உத்தரசமூலம்-ஒருவகை மூலரோகம்; அது அதிக உஷ்ணத்தாற் பிறந்த சீதளம், அழலை, கிரந்தி, சகிக்கக்கூடாத வுஷ்ணம், மிருகைசயோகம், கோபத்தைச் சகித்தல், அதிக உப்பு வஸ்து, காரவஸ்து,தனநஷ்டமிவைகளாற் பிறந்து பலவித முளைகளைத் தோற்றச்செய்து உபத்திரவங்களையுண்டாக்குவது.
உத்தரசாட்சி-பிரதிவாதியின்சாட்சி.
உத்தரணம் - முற்றத்தாத்தல்.
உத்தரணி - சுருவை, பஞ்சபாத்திரக்கரண்டி.
உத்தரதிசை - வடதிசை.
உத்தரதுருவம் - வடமுனை.
உத்தரதேசம் - உத்தரபூமி.
உத்தரபட்சம்-அத்தாட்சி, அபரபக்கம், ஞாய முத்தரித்துக் கண்ட தீர்ப்பு, மறுமொழி.
உத்தரபதம் - பிரத்தியபதம்.
உத்தரபாதம் - மறுமொழி.
உத்தரபாத்திரபதம் - இரேவதி, உத்திரட்டாதி.
உத்தரபாற்குனி - உத்திரம்.
உத்தரபுருடன்-படர்க்கையிடத்தவன்.
உத்தரபூமி - வடபூமி.
உத்தரபோசனம் - புசித்துக் கையலம்பின பின்னுண்கை.

உத்தரமத்திமபூம்-சீதோஷ்ண சமத்துவபூமி, துருவ சக்கரத்திற்குங் கற்கிச் சக்கரத்திற்கும் நடு.
உத்தரமந்தோச்சம் - சூரியனுக்குங்கிரகத்திற்குமுள்ள தூரம்.
உத்தரமீமாஞ்சை - ஆறுசாத்திரத்தொன்று.
உத்தரம்-உயர்ச்சி, ஊழித்தீ, சேடம், பலம், பின், மறுமொழி. வடக்கு.
உத்தரவாதம் - உத்தரிப்பு, ஈடுவகை சொல்லுந்தன்மை.
உத்தரவாதி - எதிரி, பிணையாளி.
உத்தரவாருணி - ஒருகொடி.
உத்தரவு - கட்டளை, மறுமொழி, விடுதலை, விடை.
உத்தரவுச்சீட்டு-அதிகாரப் பத்திரிகை, விடுதலைப்பத்திரிகை.
உத்தரன்-சிவன், விட்டுணு, விராடன் மகன்.
உத்தராசங்கம் - உத்தரீயம்.
உத்தராசாடம், உத்தராஷாடம் } உத்திராடம்.
உத்தராசாபதி - குபேரன்.
உத்தராசை - வடக்கு. [கம்.
உத்தராட்சம் - பூகோளத்தின் வடபா
உத்தராதலம் உயர்வு, தாழ்வு, மேல்கீழ்.
உத்தராதி - வடக்கு.
உத்தராதிகாரம் - சுதந்தரம்.
உத்தரார்த்தகோளம் பூமியின் வடபாதியுண்டை.
உத்தராபதம் - வடக்கு.
உத்தராபாசம் - பொய் மறுமொழி.
உத்தராபோசனம்-இரண்டாம் முறை புசிக்குமுணவு.
உத்தராயணம் - சூரியன் வடக்கிற் சஞ்சரிக்கும் தை மாசி பங்குனி சித்திரை வைகாசி ஆனி என்னும் ஆறு மாசகாலம்.
உத்தரி - குதிரை.
உத்தரிஷணம் - புளகப் பொடிப்பு.
உத்தரித்தல்-அழுந்தல், அனுபவித்தல், ஈடுசெய்யல்,கடன் செலுத்தல், சகித்தல், சம்மதித்தல், சாதித்தல், சருக்கித்தல், பொறுப்புச்சரிக்கட்டுதல், மறுமொழி சொல்லுதல்.
உத்தரிப்பு - சகிப்பு, வருத்தல்.
உத்தரியம், உத்தரீகம், உத்தரீயம் } ஏகாசர், மேற்போர்வை.
உத்தரை-விராடன் மகள், அபிமன்னியு பாரி.
உத்தரோத்தரம்-எதிர்மறுமொழி, மிகுதி, மேலும் மேலும்.
உத்தரோத்தரித்தல்-எதிர் மறுமொழி கொடுத்தல்.
உத்தவம் - ஓமாக்கினி, திருவிழா.
உத்தவன் - கிருஷ்ணன் மந்திரி.
உத்தவாணி - கண்டங்காலி.
உத்தளம் - உத்துளிதம்.
உத்தாபம்-உபத்திரவம், தவிப்பு, மிகுவெப்பம், முயற்சி.
உத்தாபலம் - இசங்கு.
உத்தாபனம்-எழுப்புதல், பதில் வைத்தல்.
உத்தாபனி - தசைநரம்பு. [தல்.
உத்தாமணி - உத்தமாகாணி.
உத்தாமர் - ஓரிகுடி.
உத்தாரகன் - உபமன்னியு.
உத்தாரசங்கம் - உத்தரீயம்.
உத்தாரணம் - உயர்த்துதல், கிலேகிறுத்துகை, பிரித்தல்.
உத்தாரம்-அடைப்பு, உத்தரவு, உயர்ச்சி, உவாந்தித்தல், கடன், கட்டளை, பங்கு, மறுமொழி, விடை.
உத்தாரவிபாகம் - பங்கிடுதல்.
உத்தாரித்தல் - உத்தரவிடல், கட்டளையிடல், மறுமொழி கொடுத்தல்.
உத்தாலகம் - ஒருவகைச்சோளம், ஒரு மணி.
உத்தாலகன் - ஒரு முனிவன்.
உத்தாலகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உத்தாலம் - நறுவிலிமரம்.
உத்தானசயை - முலைப்பால் குடிக்குங் குழந்தை.
உத்தானபாதன் - சுவாயம்புவமனுவின் மகன்.
உத்தானம்-அடுப்பு, அத்தநாள், ஆழமின்மை, இசைப்பு,இடை, உள்ளளவு, ஊழித்தீ, எல்லை, எழும்புதல், எறினது, சங்கிரமம், சந்தோஷம், சேனை, துணைக்காரணம், நிமிர்ந்துகிடத்தல்,பலிபீடம், புடைப்பு, புத்தகம், மலங்கழித்தல், மனித தத்து

வம், முத்தானம், முயற்சி, முற்றம், யுத்தம்.

உத்தானவாத சோணிதம் - ஒருவகை நோய்; அது வாதசோணித ரோகத் தாற்பிறந்து நமைச்சல் குத்தல் முத லியகுணங்கள் முதன்முதல் மாமிசத் தாதுவினின் றுண்டாகி அம்மாமிசத் தாதுவைக்கடந்து கீழ்முகமா யாழா மல் வெளிமுகமாய்ச் சருமமுற்றிலு ம் வியாபிப்பது. அதனுல் அச்சரு மங் கறுத்துஞ் சிவந்துந் தாம்பிர நிற த்தைப் பெற்றும் அக்கினிச் சுவாலை யைப்போல அதிக வெப்பத்தைத் தரும்.

உத்தானவாதம்-ஒருவகை வாதநோய், அது வாயுவைப் பிறப்பிக்கும் வஸ் துக்களினுற் பிறந்து ஆதியில் ஊர் த்துவாங்கம், அதோங்கம், சர்வாங்க மாகிய இடங்களி லோரிடத்திலிருக் கின்ற தோலைப்பற்றித் துன்பத்தை விளைவிக்கும். அப்போது சர்வாங்க த்திலும் வேதனை, திமிர், கைகால் முடக்கம், வாந்தி, மூர்ச்சை என் னும் இக்குணங்க ளுண்டாகும்.

உத்தானி - ஒருநரம்பு.

உத்தி - அனுமானம், அறிவு, சேர்தல், அபின், இசைவு, இணக்கம், செல்வ ம், சொல், தந்திரவுத்தி, திருவுருப்பு, நாக்கங்கள், தேமல், படப்பொறி.

உத்திட்டம்-உத்தேசிக்கப்பட்டது, சொ ல்லப்பட்டது, விசேடிக்கப்பட்டது.

உத்திதம் - கட்டப்பட்டது.

உத்திதாங்குலி - அபயாஸ்தம்.

உத்தித்தல்-அத்தாட்சிபடுத்தல், தெளி வித்தல்.

உத்தியதம் - அத்தியாயம், விடாமுயற் சியோடு பிரயாசப்படுதல்.

உத்தியமம் - உத்தியோகம்.

உத்தியம் - உத்தியோகம், யாகமிருபத் தொன்றினென்று.

உத்தியாபனம் - முடிவு, விரத முதலிய முடித்தல்.

உத்தியாவனம் - பூந்தோட்டம்.

உத்தியானபாலன் - தோட்டக்காரன், பூந்தோட்டக் காவற்காரன்.

உத்தியானம்
உத்தியானவனம் } பூந்தோட்டம்.

உத்தியுத்தர்-உருபாருபர், சகளநிட்களர்.

உத்தியோகபர்வம்-மகாபாரதத்தில் பா ண்டவர்களும் கௌரவர்களும் சண் டைசெய்தற்கு வேண்டிய பிரயத் தனம் முதலிய கருமங்களைக் குறிக் கும் பாகம்.

உத்தியோகம்- அதிகாரத்தோடுங்கூடிய தொழில், உள்ள மிகுதி, முயற்சி, தொழில், நிலைபெறுவதுந்தொழில்.

உத்திரட்டாங்கம்-தசநாடகத்தொன்று.

உத்திரட்டாதி - ஒருநாள்.

உத்திரதம் - அச்சுருவாணி.

உத்திரம்-சிறுவலை,சூரியநாள்,விட்டம்.

உத்திரவகுலி - அருந்ததி.

உத்திராசாடம்
உத்திராடம் } ஒரு நட்சத்திரம்.

உத்திரிபம் - பேரொலி.

உத்திராபன்னி - சனல்.

உத்திரி-அருச்சனை, தியானம்,பருத்தி, மந்திரம்.

உத்திரிப்பொருள்-மந்திரம், அருச்சனை யோகம்.

உத்திரேகம் - அவக்கம், அதிகரித்தல், மிகுதி.

உத்தினம் - உத்தியானம்.

உத்திபகம்-ஒளிவிடல்,சுவாலித்தல்,மன வகாரமெழுப்புதல், மலையெறும்பு.

உத்திபனம் - தீபமேற்றல், விகாரமூட் டல், தகனஞ்செய்தல்.

உத்து - அத்தாட்சி, தெளிவு.

உத்துங்கம்-உயர்ச்சி, மகத்துவம், மிரு து மேன்மை.

உத்துதமுகம்
உத்துதம் } உத்துவாகிதமுகம்.

உத்தும்பரம்- செம்பு.

உத்துவந்தனம் - தூக்கல்.

உத்துவருத்தனம்-அரைத்தல், ஏறுதல், தேய்த்தல்; மூளைத்தல், வாசனையூட் டல், மிகவளர்ச்சி.

உத்துவாகம் - கலியாணம்.

உத்துவாகனம்-உழுதிரட்டித்தல், கலி யாணம்.

உத்துவாகனித்தல் - விவாகமுடித்தல்.

உத்துவாகிதமுகம் - தலைநிமிர்ந்துபார்த் தல்.

உத்துவாசனம் - அகற்றுதல், கொலை, மிகவளர்ச்சி.

உத்துவேகம் - அச்சம், துக்கம், பாக்கு.
உத்துவேட்டணம் - அடைக்கப்பட்ட இடம், சூழ்தல்.
உத்தூஷணம்-விவாஹ முதலான உத்ஸவம்.
உத்தூளனம் } உத்தூளிதம் } விபூதியை நீரிற்குழையாது தூளாகப் பூசுதல்.
உத்தேகம்-மதிப்பு, விருப்பம்.
உத்தேகித்தல் - மதித்தல்.
உத்தேசம்-ஒப்பந்தம், சொல்லல், நோக்கம், போதப்பிரகாரம்,மூன்றிலொன்று; அஃது தான் விவரிக்கும்பெயர் மாத்திரங்கூறல், மதிப்பு, விசாரணை, விபரம்.
உத்தேசனம்-அனுப்பல், சாணைபிடித்தல், விளக்கம்.
உத்தேசி - மதிப்பிடுவோன்.
உத்தேசித்தல் - கருதல், திருட்டாந்தப்படுத்தல், நிர்மாணித்தல்.
உத்தேரிதம் - குதிரைநடை ஐந்திலொன்று.
உத்பக்தி - தோற்றிய பிராணிகள்.
உத்பதிவிஷ்ணு } உத்பதிதன் } எழும்பிவிழுஞ்சுபாவமுடையவன்.
உத்பம் - மலையூற்று.
உத்பலம் - நெய்தன்மலர், கீழாநெல்லி.
உத்பலவிமானம் - திருக்கண்ணங்குடியிலுள்ள விமானம்.
உத்பலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
உத்பவம் - உற்பத்தி.
உத்பாதம் - குறைக்கொள்ளி.
உத்பிஜ்ஜம்-நிலத்தைப் பிளந்துகொண்டு முளைக்குஞ் செடி, முதலானவை, முளை.
உத்பிரமம் - ஒன்றின்மேற் பாதத்தை அசைத்தல், சமர்த்து.
உத்பிரேட்சை-தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம்.
உத்புல்லம் - மலர்ந்த பூக்களையுடைய மரம்.
உத்பூதம் - ஆரம்பம், பிறந்தது.
உத்மாளம் - அடுப்பு.
உத்ராவம் - ஓடுதல்.
உத்வகனம் - விவாகம்.
உத்வதுவனம் - நலங்கு.
உத்வாகம் - கலியாணம்.

உத்வாசநம் } உத்வாசனம் } சொல்லுதல்.
உத்வாநம் - அடுப்பு.
உத்வாந்தம் - மதமில்லாத யானை.
உத்வேகம்-ஒருபொருளின் மேற்பாகத்தை அசைத்தல்,கொட்டைப்பாக்கு, சமத்காரம்.
உந்தரம் - எலி, வழி.
உந்தல் - உயர்ச்சி, ஏறுகை.
உந்தி - ஆன்கூட்டம், உயர்ச்சி, கடல், கொப்பூழ், தேருருளை, தேர்த்தட்டு, தொழில், நடு, நீர்ச்சுழி, பாப்பு, மகளிர் விளையாட்டிலொன்று, யாழினுறுப்பு, யாறு.
உந்திக்கமலம் - தாமரைமலரையொத்த கொப்பூழ்.
உந்திச்சுழி - கொப்பூழ், நீர்ச்சுழி.
உந்திபூத்தோன் - விட்டுணு.
உந்தியார் - வேதாந்தசாரநூல்.
உந்து-உந்தென்னேவல், கச்சோலம், பெற்ற மழைக்கும் ஒரு குறிப்புச் சொல்.
உந்துதல்-உயர்ச்சி, எழும்பல், ஏறுதல், செலுத்துதல், தள்ளுதல்.
உந்நெரிசல்-ஒருவகைக் கண்ணோய்; அது கண்ணில் கெட்ட தசையை எழுப்புவது.
உந்நரம் - எலி.
உந்துரு - எலி, பெருச்சாளி.
உந்நெழுச்சி - ஒருவகைக் கண்ணோய். அது பருத்திக்காயைப்போற் கெட்டதசையை எழப்பண்ணுவது.
உந்நதை - உன்றந்தை.
உந்மத்தகி - சிறுகுறிஞ்சா.
உந்மத்தம் - ஊமத்தை.
உந்மத்தன் - பித்தன், முசுகுந்தனென்னுமரசன்.
உந்மாதம்-அடித்தல், கொல்லல், சித்தப்பிரமை, புலி முதலானவைகளைப் பிடிக்கும் யந்திரம், மன்மதவிகாரம்.
உன்மாதவான் - சித்தப்பிரமை கொண்டவன்.
உன்மாநம்-எடைக்குண்டுமுதலானவை
உந்மானன்-இச்சித்தபொருள்கிடைப்பதெப்போதென் றவசரப்படுவோன்.
உந்முகன்-மேற்பார்வையுள்ளவன்.
உந்மூலநம் - வேரோடுபேர்த்தல்.

உந்மேஷம்-கண்ணிமைகளை விரித்தல்
உப - அதிசயம், அலங்காரம், இரண்டு உவமை, கட்டளை, கண்டனை, கீழ்மை, கொலை, சமீபம், துணை, மிகுதி, முயற்சி, விருப்பம், இவற்றைக்காட்டும் ஒருபசருக்கம்.
உபகசிதம் - சிரிப்பு.
உபகண்டம்-கழுத்தடி, குதிரைநடை, சமீபம்.
உபகதம் - அங்கீகரிக்கப்பட்டது.
உபகதை - கிளைக்கதை, பழங்கதை.
உபகந்தம் - வாசனை.
உபகமம்-கொள்கை, சமீபம், பொருத்தம்.
உபகரணம் - அரசசின்னம், உணவிடுதல், உதவி, உபயோகம், எத்தினங்கள், கருவி, காணிக்கை, கொடுத்தல், சேவனம்.
உபகரித்தல் உதவிசெய்தல், உபகாரஞ்செய்தல், கொடுத்தல், சங்கித்தல்.
உபகரிப்பு உதவி செய்கை, உபகாரஞ்செய்கை, கொடை, சங்கிப்பு.
உபகாசம் - அவமதிச்சிரிப்பு.
உபகாதம் - சருவுதல், நோய், பற்றுசு.
உபகாரகன் - உபகாரஞ்செய்வோன்.
உபகாரணம்-உபநயனஞ்செய்து வேதமோதுதல்.
உபகாரணன் } உபகாரி.
உபகாரபரன் }
உபகாரன் } ஈகையாளன், துணைசெய்வோன், நன்மைசெய்வோன்.
உபகாரி }
உபகாரிகை - எசமாட்டி, சத்திரம்.
உபகாரிப்பு - ஆதரிப்பு, ஈகை, உதவி, சகாயம், தயவு, தொங்கல், மலர்ந்தபுட்பம்.
உபகிரகன்-சிறைச்சாலையிலிருப்பவன்
உபகிரஷ்டம்-முன்விரைத்துப் பின்பு உழுதபூமி.
உபகிரமம் - இது இப்படியாகுமென்று பாயத்தெரிந்து செய்தல்.
உபகிராகியம் - அரசனைக் காணக் கொண்டுபோகு முபகாரப்பொருள்.
உபகிருசம் - ஒருவகைநோய். அது இரத்தபித்தங்கள் பல்லின் வேரிற்சேர்ந்து அங்குள்ள மாமிசத்தைச் சுடுகையாக்கும்போது பிறந்து அவ்விடத்தில் நமைச்சலுடன் இரத்தத்தைக் கக்கும். அவ்விரத்தம் வெளியில்வராமல் உள்ளி லடங்கி நின்றால் ஈறு வீங்குதல், பல்லசைதல், வாயில் துர்க்கந்தம் வீசல் என்னும் இக்குணங்களுண்டாகும்.
உபகிருதம் } உதவி.
உபகிருதி }
உபகு - சத்தியரதன்மகன்.
உபகுஞ்சிகை - கருஞ்சீரகம், ஏலம்.
உபகுப்தன் - உபகுமகன்.
உபகுரோகம் - நிந்தை.
உபகுலியம் } திப்பிலி.
உபுகுலியை }
உபகுல்லம் - சுக்கு.
உபகுல்லியை - அகழ், திப்பிலி.
உபகூகனம் - அதிசயம், ஆலிங்கனம், மறைத்தல்.
உபகேசி - பார்ப்பதி.
உபக்கிரகணம் - பிடித்தல், வேதாப்பியாசம்.
உபக்கிரகம் உதவி, உற்பாதம், கிரகாதிபன், தருப்பைக் கட்டுப்பிடித்தல்.
உபக்கிரகன் - மறியற்காரன்.
உபக்கிரமம் - காரிய முயற்சி செய்தல், சோதித்தல், அவக்கம், தைரியம், வைத்தியம்.
உபக்கிரமித்தல் - ஆரம்பித்தல்.
உபக்குரோசம் - நிந்தனை.
உபக்குரோசித்தல் - நிந்தித்தல்.
உபசங்காரம் - அழிக்கை, ஆட்சேபம், எதிர்ச்சங்காரம், மாற்று, விலக்குதல்.
உபசங்காரித்தல் - அழித்தல், ஆட்சேபித்தல், எதிர்ச்சங்காரித்தல், மாற்றுதல், விலக்குதல்.
உபசகனம் - முக்கியமற்றது.
உபசதனம் - அயல்வீடு, சீடனுக் குருவையடைதல்.
உபசத்தி - உதவி, ஊழியம், ஐக்கம் சந்திப்பு, நன்கொடை.
உபசந்நன் - தன்னையடுத்தவன்.
உபசமந்நம்-யாகத்திற் கொல்லப்பட்டபசு.
உபசமம் - சமாதானம்.
உபசமனம் - அடங்கியிருத்தல், சமாதானம்.
உபசம்பன்னம்-தறியமுது முதலியன, கோட்டை.

உபசயம் - உயர்ச்சி, குவியல், திரட்சி, மிகுதி, முதலா மிராசியிலிருந்து மூன்றும் ஆறும் பத்தாம் பதினோராம் பகைகள்.
உபசரணை - உபசாரம், வழிபாடு.
உபசரம் - பசுக்கள் கருக்கொள்ளுங்காலம்.
உபசரிதம் - உபசரணை.
உபசரித்தல் - சங்கித்தல், மரியாதை பண்ணுதல், வழிபடுதல்.
உபசருக்கம் - ஆரியமொழிகளின் அடையுருபு, இடையூறு, உற்பாதம், சார்க்குறி, சிவப்பு, சொன்மூலம், தளிர், மாரி முதலான நோய், மாறுதல்
உபசருச்சனம் - கிரணம்.
உபசர்க்கதாகம் - ஒருவகைத் தாகரோகம். அது தித்திப்பு உப்பு முதலிய வஸ்துக்களைப் பிரமாணந்தப்பியருந்திய காலத்தும், களைத்த காலத்தும், சோர்வடையுங்காலத்தும், தாபச்சுரகாலத்தும், சரீரத்தில் நெடுநாளாகப் பற்றிய நோய்களின் விஷமகாலத்தும் பிறந்து வேதனை செய்வது.
உபசர்க்கம், உபசர்க்கை - உபசருக்கம்.
உபசல்லியம் - பறையர்சேரி.
உபசல்லியானம் - அரைவேட்டி.
உபசாதி - இரட்டைக்குலம்.
உபசாந்தம், உபசாந்தி - அமரிக்கை, ஒழிவு, சமாதானம், தயை, விருப்பு, வெறுப்பின்மை.
உபசாபகன் - கோட்காரன்.
உபசாபம்-காவற்காரரா யிருப்பவர்கள் மாற்றிப் படுக்குதல், சதியோசனை, அரோகம், பிரிவினை.
உபசாயம் - சாமக்காவல்.
உபசாரகரணம், உபசாரகருமம் - விருந்தோம்பல்.
உபசாரகன் - உபசரணைக்காரன்.
உபசாரகிரியை - உபசாரகரணம்.
உபசாரம்-அருத்தாபத்தி, ஆசாரம், உபகாரம், உபசரணை, ஊழியம், சங்கித்தல், தொழில், மருந்து செய்தல், மன்றாட்டு, வழிபாடு, வாழ்த்து.
உபசாரன், உபசாரி - உபசரிப்போன்.
உபசிக்வா-ஒருவகைரோய். அது உண்ணாக்கில்வீக்கத்தை யுண்டாக்குவது
உபசிதம் - அளவிலுயர்ந்தது.
உபசித்திரை - ஆல், எலி.
உபசிரதம் - சம்மதப்படல்.
உபசிருட்டம் - புணர்ச்சி.
உபசிருதம் - அங்கீகரிக்கப்பட்டது.
உபசீரிஷம் - ஒருவகை நோய். அது கபாலவாயுவைக்கொண்டு கருப்பஸ்திரீகளினது சிரசில் வீக்கத்தையுண்டாக்குவது அவ்வாறே வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு முண்டாகும்.
உபசீவனம் - ஒருசீவனம்.
உபசுரதன் - ஒரிராக்கதன்.
உபசுருதி-ஒருவன் தான் விரும்பின ஒரு காரியத்தைச் சிந்தித்திருக்கும்போது கேட்கப்படுகின்ற திவ்விய வாக்கு, அசரீரி, ஆகாயவாணி.
உபசுருத்தியதிதேவதை - உபசுருதிக்கு அதிதேவதை, வாணி.
உபசேனம் - ஊழியம்.
உபஸ்மிருதிகள் - அறநூல்கள்; அவை கண்ணவம், கபிலம், லோகிதம், தேவலம், காத்தியாயனம், லோகாக்ஷி, புதஸ்மிருதி, சாதாதபம், அதிஸ்மிருதி, பிரசேதசம், தக்ஷம், விஷ்ணு, விருத்தவிஷ்ணு, விருத்தமனு, தௌமியம், நாரதம், பௌலஸ்தியம், உத்திராங்கிரம்எனப் பதினெட்டு.
உபஞ்சரோகம் - மேகவிரணம்.
உபஞ்ஞை - வாலஞானம்.
உபட்சேபம் - செய்யுட்போக்கு.
உபதஞ்சம்- சோறுண்ணும்போதாவது கட்குடிக்கும் போதாவது கடித்துக் கொள்ளு மூறுகாய் முதலியன.
உபதப்தை - தவிக்கச்செய்யும் வியாதி முதலியன.
உபதரிசகன் - துவாரபாலன்.
உபதாகம் - பனைமரம்.
உபதாது - கலப்பானலோகம்.
உபதாதை-தானங்கிடைக்கச் செய்பவன்.
உபதாபனநாடி-சுவாசக்குழல்நாடி.
உபதாபனம் - சீக்கிரம், நோய், வருத்தம், வெப்பம்.
உபதானகம் - உபதை.
உபதானம்-அத்திபாரம், கடமை, தலையணை, அணைக்காரணம், நஞ்சு, பட்சம்.
உபதானவி-இரணியாக்ஷன்பாரி, வைசுவாநரன்மகள்.

உபதி - அச்சம் - அனுப்பு, கை, சில், தேருருள், பயம்.
உபதிகை - மலையின் வீழருவி.
உபதிசன் - எத்தன்.
உபதியம் - கிரமந்தப்புதல்.
உபதியாயம்-தப்புதல், விட்டுப்போதல்.
உபநுவஷிதன் - நிந்திக்கப்பட்டவன்,மரணம் சமீபித்திருப்பவன்.
உபதேசகலே - ஓரளவை; அது கடவுட்டன்மையை யறிவித்தல்.
உபதேசகன் - உபதேசி.
உபதேசம் } சமயபோதகம்தீட்சை
உபதேசனம் } புத்தி, போதனை.
உபதேசி - போதகன்.
உபதேசித்தல் - போதித்தல்.
உபதேந்திரியம்-ஆண்குறி,பெண்குறி.
உபதேவி - தேவகன் மகள், இவள் மக்கள் கற்பவிருஷ்டி முதலிய பதின்மர்.
உபதை - காணிக்கை, சோதனை, மாய்மாலம்.
உபஸ்தம் } கருமேந்திரியம் ஐந்தில்
உபத்தம் } ஒன்று. அஃது குறி. தொடை, பெண்குறி.
உபத்தாயம் - அபத்தம், உபத்திரவம், உபாயம், கபடம்.
உபத்தானம் - அயல், கூட்டம்,சமீபம்.
உபஸ்திதன் - துவாரபாலகன்.
உபத்திரம் } திக்கட்டு,கொடுங்கோ
உபத்திரவம் } ன்மை, துன்பம், வ
உபத்திரியம் } ருத்தம்,வரலோற்கா [ரம்.
உபத்தை - உலுப்பை.
உபநந்தன் - வசுதேவனுக்கு மதிரையிடத்துப் பிறந்த மகன், நந்தன் சகோதரன்.
உபநயம் - அடைதல், உபநயனக்கிரியை கொண்டுவருதல்.
உபநயனம் - பூணூல் தரிக்கும் கிரியை, மூக்குக்கண்ணாடி, வழி நடத்தல்.
உபநயித்தல் - பூணூற்சடங்குசெய்தல்.
உபநளகம் - முன்காற் சிற்றெலும்பு.
உபநாகம் - இரணந்தீர்க்குமருந்து.
உபநாகரோகம் - ஒருவகைநோய். அது கபத்தினுல் வெள்விழிச் சந்தியில் தாமரைக்கொடியின் அடித்தண்டைப்போற் கட்டியை எழுப்புவது. அது வெளுத்து அடியிற் கெட்டிப்பட்டு முனை யுயர்ந்து மிருதுவுடன் நோவில்லாமற் பருத்து நீர்க்குமிழியை யொத்து உப்புக்கரிப்பதும், நமைச்சலோடு பிசுபிசுப்பைத் தருவதும், அசைவதுமாயிருப்பது,அதனுல் வீக்கமும் வேதனையு முண்டாகும்.
உபநாகனம் - அதவேஷகம், பூசுதல், மருந்து வைத்துக் கட்டுதல்.
உபநாயம் - உபநாகம்,துவைத்துக்கட்டு மருந்து முப்புரிநூலணிதல்.
உபநிஷதம் } வேதசாரசாத்திரம், வே
உபநிடதம் } தத்தினுட்பொருள்.
உபநிஷத் - இரகசியம்,தருமத்திெனொரு பாகம், வேதத்தி னொருபாகம்.
உபநிட்காரம் - தெரு, பெருந்தெரு.
உபநிட்கிரமணம் - இராசவீதி, பிள்ளை பிறந்த நான்காமாசம் அப்பிள்ளையை வெளியே கொண்டுவந்து சந்திரதரிசனை பண்ணுவித்தல், பெருந்தெரு.
உபநிட்டானம் - உபநிட்கிரமணம்.
உபநிதனம் - ஈடு.
உபநிதி - ஈடு, கணக்கிடாமல்முத்திரை செய்து ஒளித்துவைக்கக் கொடுத்து வைத்த பொருள்.
உபநியாசம் - ஈடு, சொல்லியவைகட்கு விடைகூற அவைகளையுட்கொள்ளுகை, பிரமாணம், முகவுரை, விவரம்.
உபநியாசன் - பிரசங்கி.
உபநியாயம் - உதவி நியாயம், திரும்ப நியாய மெடுத்துக்காட்டல்.
உபந்நியாசம் - பிரசங்கம்.
உபந்நியாசன் - பிரசங்கி.
உபபகுவம் - தலையாரி.
உபபட்டணம் - பேட்டை.
உபபதம் - அற்பம், பகுதி.
உபபதி - இரண்டாமதிகாரி, சோரநாயகன்.
உபபத்தி - கூட்டம், சம்பந்தம், சேவகம், ஏது, ஒழிபு, தகுதி, சாதனம், தியானம், பிரதிபாதித்தல், பிறப்பு, முகாந்திரம், முடிவு.
உபபலம் - உதவி, தாவரம், துணை.
உபபாதகம் - மகாபாதகம்.
உபபீடனம் - உபாதி.
உபபுரம் - புறநகரம்.

உபபுராணம் - பதினெண்புராணங்களி லிருந்தெடுத்துச் சொல்லப்பட்ட பதினெண்சார்புப் புராணங்கள்.
உபபுலுதயோனி - ஒருவகை யோனி ரோகம்; அது அல்குல் தானத்தை வெண்மையாக்கி அச்சரூபத்தை நையப்பண்ணுவது. அதனால் அவ்விட மலர்ந்து பஞ்சடித்தளம்போற் றிரைந்திருக்கும்.
உபபோகம் - அனுபவம், இன்பம், மைதுனம்.
உபப்பிரதாநம் - காணிக்கை.
உபப்பிசத் - சுருக்குவகை.
உபப்பாவியம் - பாண்டவர்கள் பாரத யுத்தத்திற் காயமைத்த பாசறை.
உபமம் - உவமை, பாவனை.
உபமலம் - மனமாசு.
உபமன்னியன் - வியாக்கிரபாத முனிவருடைய புத்திரர்.
உபமாதீபகம்-உபகாலங்காரத்தொன்று.
உபமானம் - உவமை, ஒரளவை.
உபமானரகிதம் - ஈடில்லாதது.
உபமானரகிதன் - கடவுள்.
உபமானோத்தரபதகருமதாரயசமாசம் - இலக்கணப்போலியாய் வரும் ஒரலங்காரம்; அது முன்னிற்கவேண்டிய உபமானப் பொருள் முன்னில்லாது பின்னிற்பினு முவமைத் தொகையாகக் கொள்வது (உ - ம்) மங்கையொருத்தி-மலர்கொய்வாள் வாண்முகத்தைப், பங்கயமென்றெண்ணிப் படிவண்டைச், செங்கையாற் - காத்தாளக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே வேத்தானைக் காணென்றன் வேந்து.
உபமிதம் - ஒப்பிடப்பட்டது.
உபமிதி - ஒப்பு.
உபமேயம் - உவமிக்கப்படும்பொருள்.
உபமேயோபமானம் - உபமேயத்தை யுவமானமாகவும் உவமானத்தை யுபமேயமாகவுஞ் சொல்வது.
உபமை - உவமை.
உபயகுலம் - இருமரபு.
உபயோகமுகி - கன்றின் முகமாத்திரந் தோற்றவீன்று நிற்கும் பசு.
உபயசம்பவம்-இருதலைநியாயமும் பொருந்தி யொருவழிவருவது.
உபயத்தம் - சிலேடை.
உபயநிஷ்டம் - இரண்டிலுமிருத்தல்.
உபயமம் - கலியாணம்.
உபயமாதம்-மிதுனம் கன்னி தனு மீனமாகிய நான்கு இராசிகளில் சூரியனிருக்கிற நான்கு மத்திமமாதங்கள்.
உபயமுகரத்தபித்தரோகம்-ஒருவகைப் பித்தநோய்; அது ஊர்த்துவ முகத்திலும் அதோ முகத்திலும் ஒரே காலத்தில் இரத்தத்தைவெளிப்படுத்துவது.
உபயமுகிதானம் - ஆவீனும்போது கன்று சிரசுதயமானபின் அப்பசுவைத் தானம்பண்ணல்.
உபயமம் - இரண்டு, உபகாரம்,கோயிற் காணிக்கை, மகிமை.
உபயராசி-மிதுனம் கன்னிதனு மீனம்.
உபயவாதி-இருபுறத்து நியாயமும் பேசுபவன், எதிரி, வாதி, பிரதிவாதி.
உபயவேரசை - ஈரடிக்கொலி.
உபயாங்கன் - சதாசிவன்.
உபயாசன் - கங்காதீரத்தில் வானப்பிரஸ்தாச்சிரமத்தை அனுஷ்டித்த ஒரு பிராமணன், யாசனுடனிவன் துருபதனுடைய யாகத்தை நிறைவேற்றினவன்.
உபயாத்தம் - உபயார்த்தம்.
உபயாமம் - கலியாணம்.
உபயார்த்தம் - இருபொருள், இருவினைக்கருத்து.
உபயானம் - அரசருக்காவது தெய்வங்களுக்காவது தரிசனசிமித்தங் கொண்டுபோகும் பழ முதலியன.
உபயோகம்-உதவி, கருவி, காரியத்திற் கேற்றிருப்பது, சமீபம், நன்னடை, பாவிப்பு, பிரயோகம்,பிரயோசனம், மருந்து செய்தல்.
உபயோகி - அனுகூலி, ஒத்தாசையாயிருப்பவன்.
உபயோகித்தல் - காரியத்திற் சேர்பித்தல், சாதனமாயிருத்தல்.
உபாக்தர் - இராகுவினாற் பிடிபட்ட சந்திர சூரியர் தெய்வகதியால் அல்லது மனிதராற் சரீரபீடையடைந்தவன்.
உபரசம் - கடனுரை, நூற்றிருபத்தெண் சரக்கு.
உபரசன் - தம்பி.

உபாசிதம் - உபசரிப்பு, குருவைக்காத்தல்.
உபரட்சணம்-தண்டுகளின் காவலுக்காகச் சுற்றிலும் வைத்திருக்குஞ்சுவர்.
உபரட்சணன் - கடைகாப்போன்.
உபரதி - வெறுத்துத்தள்ளுதல்.
உபரதித்தல் - உபாதிப்படுத்துதல்.
உபரமணம் - முற்றத்துறத்தல்.
உபரமம் - விட்டுவிடுதல்.
உபராகம்-இராகு, ஒருபுண்ணியகாலம், சிவப்பு, உபத்திரவம், கிரகணம், துன்னடை, நிந்தை, நீதிக்கேடு.
உபராசன்-அரசனுக்கு இரண்டாவதான அதிபதி, இளவரசன்.
உபராசிதம் - சிற்றகத்தி.
உபராமம் - சந்நியாசம், மரணம், வெறுத்தல், விடுதல்.
உபரால் - உதவி.
உபராவம் - ஒளி.
உபரி - அதிகம், ஒருமீன், மேல்.
உபரிசுரதம்-ஒருவகைப்புணர்ச்சி, அது நாயகன்செய்த கலவித்தொழில் யாவையும் நாயகியும்செய்து புணர்தல்.
உபரியாவி - கோஷ்டம்.
உபரிலீலை - உபரிசுரதம்.
உபரை - நூற்கதிர்.
உபரோதகம் - உள்ளறை.
உபரோதம் - கட்டுதல், சூழ்தல், தடை, தற்காப்பு.
உபலங்கம் - அனுபவித்தல்.
உபலத்தி - அறிவு, சம்பாத்தியம்.
உபலநாடி } எருமுட்டை,கல், சிறுகல்
உபலம் } பூசித்தல்.
உபலப்தி - புத்தி.
உபலாலனை - குதூகலம்பண்ணுதல், சீராட்டு.
உபலாலிகை - தாகம்.
உபலானனம் - ஆய்தாக்கல்.
உபலிங்கம் - உற்பாதம்.
உபலேபம் } கோமயத்தால் மெழு
உபலேபனம் } குதல்.
உபலோத்திரம் - வினாம்பிசின்.
உபவசித்தல் - உபவாசித்தல்.
உபவதனம் - ஜனபதசமூக முடைய தேசம்.
உபவஸ்தம் - ஒரு விரதத்தைக்குறித்து ஆகாரமில்லாதிருத்தல்.
உபவம் - சிந்தில்.
உபவருத்தனம் - இராச்சியம், குடியில்லாவூர்.
உபவனம் - காஞ்சொறி, பூங்கா.
உபவாசம்-உணவொழிதல், ஓமபீடம், நோன்பு.
உபவாசவிரதம் - உணவொழிந்திருக்கு நோன்பு.
உபவாசி - விரதமிருக்கிறவன்.
உபவாடிகை - மந்திரி வீட்டுத்தோட்டம், வேசி வீட்டுத்தோட்டம்.
உபவிடை - அதிவிடையம்.
உபவிஷ்டக்கருப்பம் - மூவகைக் கருப்பத்திலொன்று.
உபவிஷ்டன் - உபவிட்டன், உட்கார்ந்திருப்பவன்.
உபவீதம் - பூணூல்.
உபவேசம் - ஆசனம், இருத்தல், மலங்கழித்தல்.
உபவேசனம் - உட்காருகை,மலங்கழிக்கை.
உபற்பவம் - இராகு, கிரகணம்.
உபன்னியாசகம் - பிரசங்கம்.
உபன்னியாசகன் - பிரசங்கஞ் செய்பவன்.
உபயாங்கவாச்சியம் - ஒருவகை வாத்தியம். அது கீத கிருத்தம் என்னும் இரண்டிற்கும் வாசிப்பது.
உபன்னியாசம் - ஈடு, ஒற்றுமை, கட்டளை, பாயிரம், பிரசங்கம்.
உபன்னியாசி - பிரசங்கஞ் செய்வோன்.
உபன்னியாசித்தல்-பிரசங்கஞ்செய்தல்
உபாகமம் - பொருத்தம் மூலாகமப்படி செய்யுஞ் சார்பாகமம்.
உபாகரணம் - ஆயத்தக்கிரிகை.
உபாகருமம் - பிதிர்தருப்பணம், வேதமோதற்கு முன் செய்யுஞ்சடங்கு.
உபாகிதம் - உற்கை.
உபாகிதை - விண்வீழ்க்கொள்ளி.
உபாகிருதம் - உத்பாதம், பலி.
உபாக்கியானம்-இதிகாசம், இலக்கியப்போதனை.
உபாங்கம்-அணியப்பட்டது, நெற்றியிலிடுஞ் சமய அடையாளம், பாதவுறுப்புளொன்று. புறவங்கம், ஒருவகைத் தோற்கருவி.
உபாசங்கம் - அம்பறாத்தூணி.

உபாசயம் - நித்திரை.
உபாசனம்-உபாசனை, வில்வித்தை.
உபாசனை - ஆசாரனை, வழிபாடு.
உபாசிதம் - வணக்கம்.
உபாசித்தல்-ஆசரணைபண்ணுதல், வழிபடுதல்.
உபாசிப்பு - ஆசரனை, வழிபாடு.
உபாசிரயம் - அடைக்கலம்.
உபாஞ்சனம் - கோமயத்தில் மெழுகு [தல்
உபாஞ்சு - ஏகாந்தம்.
உபாதானகாரணம் - துணைக்காரணம்.
உபாதானம் - உபயார்த்தம், ஈவு, எண்ணம், ஐம்புலனடைக்குகை, துணைக்காரணம், பிச்சை, முதற்காரணம், விலக்கல்.
உபாதி-காரியம், தடை, தியானம்,தேக சம்பந்தங்களிலே ஐயம்வந்தால் அவற்றுண் மனஞ்செல்லாமனிறுத்தல், பாதை, மாரீசம், வருத்தம், வியாதி.
உபாதித்தல் - உபத்திரவஞ்செய்யல்.
உபாத்தி } ஆசிரியன், புரோகிதன்.
உபாத்தியாயன் }
உபாத்தியாயி } தானே வித்தைகற்றுக்கொண்டவள்.
உபாத்தியாயை }
உபாத்தியம் - ஈற்றயல், ஒன்றுவிட்டயல் கடைக்கண்.
உபாயதந்திரம் - தந்திரபுத்தி.
உபாயம் உபசாரச்சொல், சளுவு,சூழ்ச்சி, சொற்பம், தந்திரம், வகை.
உபாயம்பண்ணல் - தந்திரஞ்செய்யல்.
உபாயவிலக்கு - ஓரலங்காரம், அஃதுஒருபாயங்காரணமாக விலக்குவது.
உபாயனம் - உபகாரம்.
உபாயி - சளுவுபுத்திக்காரன், தந்திரமுள்ளவன்.
உபாவிருதம்-அடிக்கடி பூமியிற் புரளுகிற குதிரை.
உபானம் } கோபுரத்தின் கீழ்ச் சித்திரவரி.
உபானவரி }
உபுக்கல் - பெருகல், பொங்குதல்.
உபேட்சித்தல் - அலட்சியம்பண்ணல், கைவிடல், வெறுத்துவிடுதல்.
உபேட்சை-அசட்டை, அருவருப்பு, உபாயம், நிந்தை, பிரியவீனம், பொறுமை, மாயம், விடுதல்.
உபேந்திரன் - விட்டுணு.

உபோதகம் }
உபோதகி } பேய்ப்பசளை.
உபோதகை }
உபோதம் }
உபோத்காதம் - ஆரம்பம், உதாஹரணம், முன்முகம்.
உப்பக்கம் - முதுகு.
உப்பங்கழி - உப்புக்கழி, உப்புப்போடும்பாண்டம்.
உப்பசம் - சுவாசகாசம்.
உப்பட்டி - கதிர்த்திரட்சேர்வை.
உப்பமைத்தல் - உப்புவிளைத்தல்.
உப்பமைப்போர் - உப்புச் செய்வோர், நெய்தனிலமாக்கள்.
உப்பம்பருத்தி - ஒருவகைப்பருத்தி.
உப்பரவர்-ஒருஜாதியார், குள முதலிய வகழ்வோர்.
உப்பரிகை - மேல்மாடம்.
உப்பல் - உப்புதல்.
உப்பளம்-உப்புவிளைநிலம், கழிக்கரை.
உப்புளவர் - நெய்தனிலமாக்கள்.
உப்பறுகு உப்புநிலத்தில்முளையும்அறுகம்பல்.
உப்பாரக்காரன் - சுண்ணம்புபூசும் வேலைசெய்பவன்.
உப்பால் - மேல்.
உப்பிசம்-பொருமுதல் முட்டுத்தொய்வு
உப்பிலி - இண்டங்கொடி,ஈர்கொல்லிக்கொடி, உப்பில்லாதது, ஓரூர்.
உப்பிலியப்பன்-நாற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருவிண்ணகரிற் கோயில்கொண்ட விட்டுணு.
உப்பீண்டுவரி - உப்புநிறைந்த கடல்.
உப்பு - அராகம், இலவணம், இனிமை, உரிசி, உவர்த்தல், எல்லை, கடல், மகளிர் விளையாட்டு.
உப்புகரித்தல் - உவர்த்தல்.
உப்புகை - உப்புதல்.
உப்புக்கசனை - உப்பூரணி.
உப்புக்கட்டி - சிறுகட்டுக்கொடி.
உப்புக்கண்டம் - ஆசியாக்கண்டம், உப்புச்சேர்த்துக் காயவைத்த இறைச்சித் துண்டம்.
உப்புக்கரித்தல் - உப்புமிகுத்தல், உப்புவர்த்தல்.
உப்புக்கீரை - ஒருகீரை, முக்குளி.
உப்புக்குத்தி - ஒருகுருவி.

உப்புக்கூர்த்தல் - உப்புக்கரித்தல்.
உப்புக்கொள்ளல் } ஒரு விளையாட்டு.
உப்புக்கொள்ளுதல் }
உப்புசம் - வயிற்றுவீக்கம்.
உப்புடாலி - ஒருசெடி.
உப்புதல்-ஊறுதல், பொருமுதல், வீங்குதல்.
உப்புத்தரவை - உவர்நிலம்.
உப்புத்திராவகம் - ஒரு திராவகநீர்.
உப்புத்திரி - மலங்கழிக்க ஏற்றுந்திரி.
உப்புப்படல் } உப்புவிளைதல்.
உப்புப்படுதல் }
உப்புப்பற்றல் } உப்புப்பிடித்தல்.
உப்புப்பற்றுதல் }
உப்புப்பால் - ஈன்றணிமைப்பால்.
உப்புப்புல்லு - உவர்த்தரையில் முளைக்கும் புல்.
உப்புப்பூத்தல் - உப்புப்பற்றுதல்.
உப்புமாந்தம் - ஒருவகை மாந்தநோய் அது எப்போதும் வயிற்றை யுப்பச்செய்வது.
உப்புமாறுதல் - உப்புவிற்றல்.
உப்புரிகை } உப்பரிகை.
உப்புரிசை }
உப்புவாணிகர் - உப்பமைப்போர், உப்புவிற்போர்.
உப்புவிந்து - ஆண்சரக்கு.
உப்புறைத்தல் - உப்புக்கரித்தல்.
உப்பூரிகுடிகிழார்-உருத்திரசன்மர் தந்தை.
உப்பூறணி - உவர்பூமி.
உப்பை - ஔவை சகோதரிகளில் ஒரு [த்தி.
உமணத்தியர் - உப்புவிற்றிடுமகளிர்.
உமணர் - உப்பமைப்போர்.
உமதகி - சணல்.
உமது - உம்முடையது.
உமம் - இறங்குதுறை, நகரம்.
உமரி - ஒருபூடு, நத்தை.
உமரிக்காசு - துரி.
உமலகம் - அரிதாரம்.
உமலோத்திரம்-விளாம்பிசின். [ப்பை.
உமல் - மீன்பிடிக்கிறவர்களின் ஓலை
உமற்கடம் - குசைப்புல், தருப்பைப் [புல்.
உமா - குன்றி.
உமாகடம் - சணற்கொத்து.
உமாகட்கம் - தருப்பை.
உமாகுரு - இமையம்.
உமாக்குருவி - உமாபட்சி.
உமாசகிதன் - சிவன்.
உமாசுதன் - உமைமகன், கணேசன், குமரன், வீரபத்திரன்.
உமாதசி - சணல்.
உமாதம் - அறிவின்மை.
உமாதன் - அறிவில்லான்.
உமாதி - அறிவில்லான்.
உமாதேவி - ஞானமுமருளுமாகிய சிவ
உமாபட்சி - ஒருபுள். [சத்தி.
உமாபதி - இருநூற்றிருபத்துநான்கு புவனங்களுளொன்று, சிவன்.
உமாபதிசிவாசாரியர் - சந்தானகுரவருளொருவர். இவர் தில்லைவாழந்தணருள் ஒருவரெனவும் மறைஞானசம்பந்த நாயனுருடைய சீடரெனவும் சிவப்பிரகாசம் முதலிய நூல்களுக்கு ஆசிரியரெனவும் கொற்றவன் குடிவாசரெனவும் சொல்லப்படுவர்.
உமாமகேசமூர்த்தி-அநாதேச ரூபமாய் இருபத்தைந்து விக்கிரகபேதமாகிக் கிருத்தியபேதத்தைச்செய்யும்உமையோடுகூடிய மூர்த்தி.
உமி - உமியென்னேவல், தானியங்களின் றோல்.
உமிக்கரப்பன் - ஒருவகைக் கரப்பன், குழந்தைகட்குவருஞ் சிரங்கு.
உமிக்கரி - கரியாக வெரிந்தவுமி.
உமிக்காந்தல் -உமியெரிந்ததுகள்.
உமிச்சிரங்கு - சிறுசிரங்கு.
உமிதல் - கொப்பளித்தல், நாவினுற் சாரம்வாங்கல்.
உமித்தல்-இற்றுப்போதல்,பதனழிதல்.
உமித்தவிடு - சுணைத்தவிடு.
உமிநகம் - மிகமெல்லியநகம்.
உமிநீர் - வாய்நீர்.
உமியம் - காசாநெல்விளையும் பூமி.
உமியல் - வசம்பு.
உமியுண்ணி - ஒருவகையுண்ணி.
உமிரி-உமிரிப்பூண்டு.
உமிழ்தல்-கொப்பளித்தல், சத்திசெய்தல், சொரிதல், தெவிட்டல்.
உமிழ்நீர் - உமிநீர், அப்பல்.
உமிழ்வு - உமிழ்நீர், அப்புகை.
உமேசன் - சிவன்.
உமேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டினு ளொன்று.

உமை-அமைதி, காரகத்தி, கீர்த்தி, துர்க்கை, பார்வதி, பிரகாசம், மஞ்சள்.
உமைகாந்தி - கங்கை.
உமைமகன் - முருகன், விநாயகன், வீரபத்திரன்.
உமையவள் - பார்வதி.
உமையாள் - சவுக்காரம், பார்வதி, மயிவிறகு.
உம் - இடைச்சொல், ஆக்கப்பொருள் (உ-ம்) வலியனுமாயினான் எச்சப்பொருள் (உ-ம்) பாடவும் வேண்டும். எண்பொருள் (உ-ம்) நீயுமவனும் எதிர்மறைப்பொருள், (உ-ம்) வரவுங் கூடும் ஐயப்பொருள், (உ-ம்) வரினும் வருவான், சிறப்புப்பொருள், (உ-ம்) அந்தணனுங் கள்ளுண்டான், தெரிநிலைப்பொருள் (உ-ம்) ஆணுமன்று பெண்ணுமன்று, முற்றுப்பொருள். (உ-ம்) எங்குமில்லை. தன்மை முன்னிலைப் படர்க்கையுளப்பாட்டு வினைவிகுதி (உ-ம்) வருதும், முன்னிலையேவற்பன்மைவிகுதி (உ-ம்) வாரும், பெயரெச்சவினைவிகுதி (உ-ம்) வருங்காலம், சம்மதியைக்காட்டும் குறி.
உம்பரான்-உயர்ந்தோன், காமதேநு.
உம்பருலகு - தேவலோகம்.
உம்பரூர் - தேவலோகம், பொன்னுங்காணி.
உம்பர் - ஆகாயம், உயர்ச்சி, உவ்விடம், பார்ப்பார், மேல், வானோர்.
உம்பல் - ஆட்டினேறு, ஆண்யானை, எருது எருமைக்கடா, எழுச்சி, குலம், கோத்திரம், மகன், முறைமை, யானை, வலி, வழித்தோன்றல், விலங்கேற்றின் பொது.
உம்பளம்-உபகாரம்-கொடை, வெகுமானம்.
உம்பி - உன்றம்பி.
உம்பளிக்கை-இராஜாவாற் கொடுக்கப்பட்ட நிலம், இலவசப்பொருள், மானியம்.
உம்மங்காய் - கொட்டையில்லாப் பனங்காய்.
உம்மாண்டி - வெருட்டுஞ்சொல்.
உம்மியம்-பாஷாணம் விளையும் பூமி
உம்மெனல்-சம்மதத்தைக் காட்டுங்குறி.
உம்மை - உங்களை, உம்மென்னுமிடைச்சொல், கழிபிறப்பு, வருபிறப்பு.
உம்மைத்தொகை-உம்மென்னுஞ் சொல் தொக்குநிற்பது (உ-ம்) செல்கதி.
உம்மையெஞ்சணி - ஓரலங்காரம்.
உம்வரம் - மேல்வாயிற்படி.
உயக்கம் - உபத்திரவம், துக்கம், வருத்தம், வாட்டம்.
உயக்கல் } வருத்தல்.
உயக்குதல் }
உயக்குநரகு - பாழ்நரகு.
உயங்கல் } மனந்தளர்தல், வருந்தல், வாடுதல்.
உயங்குதல் }
உயத்தி - வெள்ளைப்பாஷாணம்.
உயரம் - உயர்ச்சி, மிகுதி, மேல்.
உயரி - உயரமானது.
உயர்-உயரென்னேவல், குன்றிச்செடி, வருத்தம்.
உயர்குலம் - மேலானகுலம்.
உயர்ச்சி - உயர்ப்பு, மேல், மேன்மை.
உயர்தல் - அதிகப்படல், இறுமாப்படைதல், உன்னதப்படல், ஏறுதல், கிமிர்தல், மேற்படல், மேன்மையுறல், வளர்தல்.
உயர்திணை - உயர்ந்தகுலம்; அஃது மாநுடர், தேவர், நரகர்.
உயர்தினம் - சுபநாள், திருவிழா.
உயர்த்தல் - உயர்த்துதல்.
உயர்த்து - உயர்ச்சி.
உயர்த்துதல் . அதிகப்படுத்தல், கிளர்த்தல், சுமையெடுத்தல்.
உயர்நிலத்தவர் } வானோர்.
உயர்நிலத்தோர் }
உயர்நிலம் - உப்பரிகை, தேவலோகம், மேடு.
உயர்நிலை-தேவலோகம், மேன்மாடம்.
உயர்ந்தகுளச்சி-பவளப்புற்றுப் பாஷாணம்.
உயர்ந்தோர்-அறிஞர், பார்ப்பார், முனிவர், வானோர்.
உயர்பு - உயரம், மேன்மை, விர்த்தி.
உயர்ப்பு அதிகப்பாடு, கிமிர்ச்சி, வளர்ச்சி
உயர்விழிப்புகழ்ச்சியுவமை - ஓரலங்காரம்.
உயர்வு-அதிகப்படல், உயரம், மேன்மை.
உயர்வுசிறப்பு - ஒன்றற்கேயுரிய வுயர்வைக்காட்டி நிற்குஞ்சொல்.
உயர்வுசிறப்பும்மை - உயர்வைச் சிறப்பிக்கு மும்மை (உ-ம்) குறவரு மருளுங் குன்றம்.

உயர்வுநவிற்சியணி - ஓரலங்காரம். அஃது ஒரு பொருள் தன் சொல்லாற் சொல்லப்படாமற் கேட்போரை மகிழ்விப்பதும் இஃதஃதன்றெனத்தெரிக்கும் தன்னிச்சையால் அஃதாமெனக்கொள்வதுமாம்.
உயல் - உயிர்வாழ்தல், உய்யல்.
உயவர் - வருந்தினர்.
உயவல், உயவு - துன்பம், கினைப்பு, வருத்தம்.
உயவை - காக்கணக்கொடி, துன்பம், முகில்.
உயா - உயங்கல், வினை.
உயாவல் - சாவல்.
உயிரளபு, உயிரளபெடை - உயிரெழுத்துக்களுள் அளபு நீண்டிசைக்குமெழுத்து.
உயிரிலுள்ளதி-உயிர் முத்தியென்றது.
உயிரினம் - உயிரெழுத்துகள்.
உயிரீற்றுப்புணர்ச்சி - இயல்பாகவேனும் விதியினலேனும் உயிரெழுத்துக்களை யிறுதியாகவுடைய நிலைமொழியினது ஈற்றில் உயிரையேனு மெய்யையேனுமுதலாகவுடைய வருமொழிவந்து புணருவது.
உயிரெழுத்து - அகரவரியினெழுத்துக்கள்.
உயிரொழிதல் - சாதல்.
உயிரொழித்தல் - கொல்லல்.
உயிரொளித்தல்-உயிர் போனதுபோற்காட்டல்.
உயிரோம்பல் - உயிர்காத்தல்.
உயிர்-ஆன்மா, உயிரெழுத்து, காற்று, சீவன்.
உயிர்குடித்தல் - கொல்லல்.
உயிர்கொள்ளல் - உயிர்வாங்கல்.
உயிர்க்கட்டை - உடம்பு.
உயிர்க்கணம் - உயிரெழுத்துகள்.
உயிர்க்கருணைசம் - இச்சாசத்தி.
உயிர்க்குதல்-உயிர்த்தெழும்புதல், பின்னைபெறுதல்.
உயிர்க்கொலை - சீவவதை.
உயிர்தருமருந்து - மிருதசஞ்சீவினி.
உயிர்த்தல் - உயிரடைதல், ஈனுதல், மகப்பெறுதல், மூச்சுவிடல், வாய்விடல்,விடுத்தல்.
உயிர்த்தறுவாய் - பிராணவத்தை.
உயிர்த்தானம் - உயிர்நிலை, சென்மத்தானம்.
உயிர்த்துணை - ஆபத்திலுதவுவோன், கணவன், கடவுள், பிராணசினேகன், மனைவி.
உயிர்த்துணைவன்-உயிர்த்தோழன், நாயகன்.
உயிர்த்துணைவி உயிர்த்தோழி, சரச்சுவதி, மனைவி.
உயிர்த்தெழுதல்-மரித்தவனுயிர்பெற்றெழுதல்.
உயிர்த்தொடர்க்குற்றுகரம் - ஒரு குற்றுகரம்.
உயிர்த்தோழன் - பிராணசினேகன்.
உயிர்த்தோழி - உயிர்ப்பாங்கி.
உயிர்நிலை, உயிர்நிலையகம் - உடல், உட்கருத்து,பிராணனிற்குமிடம்.
உயிர்நிலைவிழிக்குறி-விடத்தினலுயிரடங்கியகாலத்திற் கண்கள் மேனோக்கி நிலைக்கண் பட்டிருக்கையில் உயிரானது ஊர்த்துவகாயமான மேற்புறத்திலடங்கியிருக்குமென்றறிவது.
உயிர்ப்பரீக்ஷைநிதானம் - விடத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்பாலடித்தால் தடித்தாலும் அல்லது வெதும்பலோடுசிவந்தாலும்சலத்தைக்குளத்திற்போட்டமுத்தினலும் சுத்தஜலத்தை மேலேசொரியிற் குளிர்கண்டு உரோமஞ் சிலிர்த்தாலும் கைவிரல் கால்விரல்கள் மடக்கில் மடங்கினலும் குடோரியிடில் அதன் வழியாகச் சிவந்த இரத்த மொழுகினலும் தாதுக்களி லொன்றுவது சொற்பநடையாக நடந்தாலும் உயிரடங்கியிருக்கின்றதென்று நிதானித்தல்.
உயிர்ப்பழி - கொலைப்பாதகம், பிரமகத்தி.
உயிர்ப்பன - சுவாசமுடையன.
உயிர்ப்பனவு - உயிரின்தன்மை, செழிப்பு, பச்செனவு.
உயிர்ப்பாங்கி - தன்னைவிட்டு நீங்காதசினேகி.
உயிர்ப்பித்தல்-உயிரடையச் செய்தல், பிழைப்பித்தல்.
உயிர்ப்பிராணி - சீவனுள்ளது.
உயிர்ப்பு - உயிர்க்கை, காற்று, சுகந்தம், மூச்சு.

உயிர்ப்புவீங்கல் - நெட்டுயிர்த்தல்.
உயிர்மருந்து - மிருதசஞ்சீவினி.
உயிர்மாற்றல் - கொலைசெய்தல், தற்கொலை.
உயிர்மெய் - ககாமுதல் னௌகாரமீறாய்க்கிடந்த இருநூற்றுப் பதினெழுத்தும்.
உயிர்வாங்கல் - உயிரெடுத்தல்.
உயிர்வாதனை - உயிர்க்குறும் வேதனை; அஃது அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவருரை முதலியன.
உயிர்வாழ்தல்-உயிரோடு கூடிவாழ்தல்.
உயிர்வேதனை - சிவவருத்தம்.
உயில் - சாதனப்பத்திரிகை.
உயிறு - இலாமிச்சம்புல்.
உயுத்தம் - யுத்தம்.
உய்கதியால் } உண்டாகுந்தடி.
உய்தடி
உய்தல்-ஈடேறுதல், உண்டுபடுதல், தப்புதல், தாழ்தல், பிழைத்தல்.
உய்தி - ஈடேற்றம், உயிர்வாழ்தல்.
உய்த்தலில்பொருண்மை-ஓரலங்காரம்; அஃது கருதிய பொருள் மொழிக்கண்ணே தோன்றத் தொடுப்பது.
உய்த்தல்-செலுத்தல், சேர்த்தல், வைத்தல்.
உய்த்துணரவைப்பு - முப்பத்திரண்டு தந்திரயுத்தியினொன்று அது ஆராய்ந்தறியவைக்கை.
உய்த்துணர்தல்-ஆராய்ந்தறிதல், நுட்பமாய்த்தெரிதல்.
உய்ப்பு - உய்க்கை.
உய்மணல் - கருமணல்.
உய்யக்கொண்டான்-எருமை, முல்லை, கொய்யாமரம், திருக்கற்குடி.
உய்யவந்ததேவநாயனார் - திருவியலூரிலவதாரஞ்செய்து சைவசித்தாந்தசாத்திரம் பதினன்கனு ளொன்றாகிய திருவுந்தியார் என்னும் நூலியற்றினவர்.
உய்யவந்ததேவநாயனார் - திருக்கடவூரில் அவதாரஞ்செய்து சைவசித்தாந்தசாத்திரம் பதினன்கினுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியார் செய்தருளியவர்.
உய்யவந்தபெருமாள் - நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்றாகிய வித்துவகோட்டியிற் கோயில்கொண்ட விட்டுணு.
உய்யானம் } சிங்காரவனம், சோலை, பூந்தோட்டம்.
உய்யானவனம்
உய்வனவு-ஈடேற்றம், சீவனம், தழைவு, வாழ்வு.
உய்வித்தல்-ஈடேற்றுதல், பிழைப்பித்தல், வாழ்வித்தல்.
உய்விப்பு - ஈடேற்றம், பிழைப்பிப்பு, வாழ்விப்பு.
உய்வு - ஈடேற்றம், பிழைப்பு.
உரகடல் - பெருங்கடல்.
உரககன்னி - நாககன்னி.
உரகபந்தம் } நாகபந்தம், மிறைக்கவி.
உரகபந்தனம்
உரகமல்லி - நாகமல்லி.
உரகம் - நாகமல்லிகை, பாம்புமல்லிகை.
உரகர் - சமணர், நாகர்.
உரகவல்லி - வெற்றிலைக்கொடி.
உரகன் - ஆதிசேடன்.
உரகாசனன் - கருடன், விட்டுணு.
உரகாதிபன் - ஆதிசேடன்.
உரகாரி - கருடன், மயிற்பறவை.
உரகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உரகேந்திரன்-ஆதிசேடன், வாசுகி.
உரக்க - கெட்டியாக, வலிதாக.
உரக்கம் - வசத்திலிருப்பு.
உரங்கமம் } பாம்பு.
உரங்கம்
உரங்குத்தல் - புலப்பித்தல்.
உரங்கொள்ளல் - கடினமுறல், பலங்கொள்ளல், வலியுண்டாக்கல்.
உரங்கொள்ளுதல் - கெட்டியாதல், பலமாதல்.
உரசல் - உரிஞ்சல், தேய்த்தல்.
உரசன் - நெஞ்சரப்புள்ளவன்.
உரசி - நெஞ்சம்.
உரசிதம் } முலை.
உரசிருகம்
உரசிலன் - நல்ல மார்புடையவன்.
உரசுதல் - உரசல்.
உரசுவானு-நல்ல மார்புடையவன்.
உரசூதிகை - முத்துத்தாவடம்.
உரச்சதம் - கவசம்.
உரஞ்சுதல் - தடைத்தல், தேய்த்தல்.

உரஞ்செய்தல் - உரங்குத்தல், திரப்படுத்தல்.
உரஞ்சொல்லுதல் - உரஞ்செய்தல்.
உரணம் - ஆட்டுக்கடா, முகில்.
உரணச்சம் } தகரை.
உரணச்சியம் }
உரண்டம் } காக்கை.
உரண்டை }
உரத்தல் - பலத்தல், வலியுறல்.
உரத்திதம் - விருத்தி.
உரத்திதன் - விருத்தியானவன்.
உரக்தை - துன்பம்.
உரபடி } உரப்பு.
உரபிடி }
உரப்பம் - பெருங்காயம்.
உரப்பல் - அதட்டல்.
உரப்பித்தல் - பலப்பித்தல்.
உரப்பிரு - செம்மறியாடு.
உரப்பு - அதட்டுகை, உரப்பென்னேவல், திண்மை, பலப்பு, வலி.
உரப்புதல் - வாயால்தட்டல்.
உரமிடல் - எருப்போடுதல்.
உரமுண்டாக்கல்-தைரியமுண்டாக்கல்.
உரம் - உள்ளமிகுதி, ஊக்கம், ஞானம், திண்ணியவறிவு, மதில், மார்பு, வயிரம், வலி, வேகம்.
உரம்போடுதல் - உரப்பித்தல், எருப்போடல்.
உரம்விழுதல்-பன்னிரண்டு மாதத்துக்குட்பட்ட கைக்குழக்தைகள் தரையில் புரளுவதினால் உண்டாகும் ஒரு பிடிப்புநோய்.
உரரீகிருதம் - அங்கீகரிக்கப்பட்டது.
உரலாணி - உரலடிக்கிடும் மரவாணி, உலக்கை.
உரல் - இடியப்பவுரல், நெல் முதலிய குத்து முரல்.
உரவரிசவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
உரவர்-அறிவுடையோர்,சமணர்,நாகர்.
உரவல் - உலாவல்.
உரவன் - அருகன், அறிவுடையோன், பலமுடையோன்.
உரவு - அறிவு, வலி.
உரவுநீர் - உலாவுநீர், உவர்நீர், பலத்த சமுத்திரம்.
உரவோர் - அறிஞர், மூத்தோர், வலி[யோர்.
உரவோன்-வலிவில்லாதோன், வலியவன்.
உரறல் - பெருங்கோபம்.
உரற்கட்டை-உரலுக்கான மரத்துண்டு, மரவுரல்.
உரற்றல் - ஒலித்தல், பேரொலி.
உரற்று - உரற்றென்னேவல், ஒலி.
உரற்றுதல் - உரற்றல்.
உரனுறுதல் - பலனடைதல்.
உரன் - அறிவு, உள்ளமிகுதி, ஊக்கம், பலம், மார்பு, வெற்றி.
உராட்சல் - உரிஞ்சுதல், உரைதல்.
உராதரம் - முலை.
உராய் உராயென்னேவல், தேய்த்தல்.
உராய்ஞ்சல் - உரைதல்.
உராய்தல் - உரிஞ்சல்.
உராய்போதல் - உரைதல்.
உராவல் - உலாவல்.
உரி - அரைப்படி, உரிச்சொல், உரிய, உரியென்னேவல், கொத்துமல்லி, தோல், மரப்பட்டை.
உரிசை - நிஞ்சுவை.
உரிச்சீர் - மூவசையான் வருஞ்சீர்கள்; அவற்றுள், நேரசையாயிறுவது வெண்பாவுரிச்சீர், நிரையசையாயிறுவது வஞ்சியுரிச்சீர்.
உரிச்சொல்-பொருள்களின் பலவகைக் குணங்களை யுணர்த்துஞ்சொல்.
உரிஞுதல் }
உரிஞ்சல் } தேய்த்தல், வழுந்தல்.
உரிஞ்சுதல் }
உரிதல்-கழலல், கழற்றல், முளைத்தல்.
உரித்தல்-உரிக்குதல், களைதல், வழுந்துதல்.
உரித்தாளி } இனமானவன், சுதந்திரன்.
உரித்தானவன் }
உரித்திரம் - மஞ்சள், மரமஞ்சள், ஒரு நக்ஷத்திரம்.
உரித்து - உரிமை, உரியது, கடமை, பட்சம்.
உரிப்பகாப்பதம் - பகுக்கப்படாதரிச்சொல்லாய் கிற்பன.
உரிப்பொருள்-அகத்திணை முப்பொருளினொன்று, அது புணர்தல், புணர்தனிமித்தம் ஊடல், ஊடனிமித்தம் இரங்கல்.

உரிமை - ஆட்சி, இஷ்டம், இனம், உரித்து, ஒவ்வொன்றிற்குத் தகுவது, கடமை, குணம், சிநேகம், சுதந்தரம், மனைவி.
உரிமைகொண்டாடல்-உரிமை பாராட்டல்.
உரிமைக்கஞ்சி-சாகுந்தறுவாயில் வார்க்குங்கஞ்சி, சாவீட்டிற் சுற்றத்தார்க்கு வார்க்குங்கஞ்சி.
உரிமைக்கடன்-சேர்ந்திருந்த உரித்துக்குச் செய்யுங் கடன், பிரேதத்திற்குரியவர்கள் செய்யுங்கடமை.
உரிமைக்கட்டு - இனக்கட்டுப்பாடு.
உரிமைக்காணி - உரிமை வழியிற்காணி.
உரிமைக்காரர்-உரியவர்கள்,சுதந்திரர்.
உரிமைசெய்யல்-கடமைசெய்யல், கருமாதி செய்யல்.
உரிமைச்சொல் - உரித்துக்கொண்ட பேச்சு.
உரிமைத்தத்துவம் - உரித்தெடுக்கும் அதிகாரவுறுதி, பாத்தியம்.
உரிமைபாராட்டுதல் - உரித்துக்கொண்டாடல், சம்பந்தங்கொண்டாடல்.
உரிமைபேசல்-உரிமைகாட்டிப்பேசல்.
உரிமைபங்கு - உரிமை வழியாய் வரும் பங்கு.
உரிமைப்பாடு - உரித்து.
உரிமைப்பிள்ளை-உரித்துக் குடல்தைப் பிள்ளை, சுவீகாரபுத்திரன்.
உரிமைப்பெண் - விவாகத்துக்குரிலைமயான பெண்.
உரிமைமண் - சவக்குழியி லுரிமைக்காரர் போடுமண்.
உரிமையாட்சி-உரிமையால்வந்தஆட்சி.
உரிமையாளி - சொந்தக்காரன்.
உரிமையின்மை - சொந்தமற்றது.
உரிமைவழி - உரித்துக் காரணமாய் வருவது, சம்பந்தமுறை.
உரியடி - உரிச்சிரான்வருமடிஒரு வைணவத் திருவிழா.
உரியது - உடையது, சுதந்தரமானது, தக்கது.
உரியபொருள் உரிய அர்த்தம், சுதந்திரமான திரவியம்.
உரியர் - உரியோர்.
உரியவள்-உரித்தானவள் மனைவி.
உரியவன்-இனத்தான் உரித்தானவன் கணவன், தச்சவன்.
உரியன் - உரியவன்.
உரியார்-அறிஞர், தாயத்தார்,உரியோர்.
உரியாழாக்கு-அரையேஅரைக்கால்படி
உரியாள் - உரியவள், மனைவி.
உரியோன் - கணவன், சுதந்தரி.
உரிவை-தோல், மரவுரி, வினைமுற்று.
உரீகாரம்-வாக்குத்தத்தம், அங்கீகாரம்.
உரீகிருதம் - அங்கீகரிக்கப்பட்டது.
உரு-அதிகமான,அட்டை,அழகு,உடல் உருத்தலைசெய்யென்னேவல், உள், எலுமிச்சை, கரு, கலை, கோபம், சன்னதம், செபத்தினுரு,தோற்றம், திறம், நோய், படிமை, பருமை, பெரிய, மரக்கலம், வடிவு, விலையுயர்ந்தது, வெப்பம், வேற்றுக்குறி முதலிய வெண்வகையிடைச்சொற்குறி,வைக்கோற்புரி.
உருகம் - பிறப்பு.
உருகல் - இரங்குதல், கரைதல், நீராமாதல், மனங்கரைதல்.
உருகாயேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
உருகுதல் - உருகல்.
உருகை - புல்லூரி, அறுகம்புல்.
உருக்கம்-அன்பு, இரக்கம், உருகுந்தன்மை, தொடை.
உருக்கல் - உருக்குதல்.
உருக்கனடித்தல் } ஒரு நோய் சடைவு.
உருக்கன் }
உருக்காரம் - வெண்காரம்.
உருக்கினம் - அஞ்சனபாஷாணம்.
உருக்கு-உருக்கென்னேவல், எஃகு, எருக்கு.
உருக்குக்காரம்-உருக்குச்சாக்கு, வெங்காரம்.
உருக்குதல்-உருகச்செய்தல்,கெடுத்தல் தீயிற்கரைத்தல், வருத்தல், வாட்டல்.
உருக்குப்பிரமியம் - இரத்தப்பிரமியம், சலக்கழிச்சல், நீரிழிவு.
உருக்குமகாரன் - தட்டான்.
உருக்குமணல் - அயமண்.
உருக்குமணி - ஒருகாதணி, கிருட்டிணன்தேவி.
உருக்குமண் - உருக்குமணல்.
உருக்குமம் - பொன்.
உருக்குலைதல் - வடிவங்கெடல்.
உருக்குவளை - மெழுகாணி.

உருக்கொள்ளல் - ஆவேசங்கொள்ளல்' கருக்கொள்ளல், வடிவமெடுத்தல்.
உருக்கொள்ளுதல் - உறுப்படைதல், சன்னதங்கொள்ளுதல்.
உருசகம் - ஒருவித உப்பு, ஆமணக்கு, கொம்மட்டி, புண்ணுக்கு வைக்குங் காரம், மாதளை.
உருசதி - அசுபவார்த்தை.
உருசம் - மனோகரமானது.
உருசி, உருசிகரம் } இன்பம், சுவை, மதுரம்.
உருசிகாட்டல் - ஆசை, பதங்காட்டல், இனிப்புக்காட்டல்.
உருசிகாணல் - உருசி அறிதல்.
உருசிதட்டுதல் - உருசிப்படுத்தல், சுவைதோன்றல்.
உருசிதம் - விரும்பப்பட்டது.
உருசித்தல் - அனுபவித்தல், சுவைத்தல், சுவைப்படுதல்.
உருசியசிம்மகுட்டம் - ஒருவகை குஷ்டநோய். அது கொம்புளங்கள் முட்களைப்போல் மெல்லியதாய் நீண்டும் பிசுபிசுத்தும், சுரசுரத்தும், உள்ளிற் கறுத்தும், முனையிற்சிவந்தும் நெருக்கமாக வெழும்பி இரணங்களாவது. அவைகளில் புழுக்கள் நெளிதலும், நோதலும், எரிச்சலுமுண்டாகும், சிலவேளை நோவுமாத்திரமிருந்தாலுமிருக்கும்.
உருசியம் - கடமையென்னு மோர்மிருகம்.
உருசிரம் - மனோகரமானது.
உருசிரவன் - சத்தியசுவன்மகன்.
உருசு - அத்தாட்சி, திருஷ்டாந்தம்.
உருசுபகந்தவிரணம் - ஒருவகைவிரணநோய். அது வாதபித்தத்தினாற் பிறந்து குதவளையங்களை யொட்டி ஒழுங்கான துவாரங்களை யுண்டாக்கிச் சீழை யொழுகுவிப்பது.
உருசுப்படுத்தல், உருசுவாக்கல் } மெய்ப்பித்தல்.
உருசை - ஆசை, இன்சுவை, விருப்பம் உருசி.
உருஷங்கி - துரியோதனன் றம்பியருள் ஒருவன்.
உருடி - முனி.
உருட்சி - உருளுதல்.
உருட்டல்-உருகச்செய்தல், கவணெறிதல், திரட்டல், புரட்டல், மத்தனம், விரைவாயடித்தல், வெல்லல்.
உருட்டிப்பார்த்தல்-கோபமாய்ப் பார்த்தல்.
உருட்டிப்போடல்-அழித்துப்போடல், புரட்டிவிடல்.
உருட்டு - உருட்டென்னேவல், உருளுதல், திரட்சி, புரட்டு, வெருட்டு.
உருட்டுக்காரன் - புரட்டன்.
உருட்டுதல் - உருட்டல்.
உருட்டுவண்ணம் - அராகந்தொடர்ந்து வருவது, துரிதமுள்ளவண்ணம்.
உருணி - உருளுந்தன்மையுடையது.
உருண்டை - உண்டை, திரட்சி.
உருதம் - மிருகபட்சிகளின் சத்தம்.
உருத்தகம் - ஒரு சன்னிநோய்.
உருத்தகுதம் - ஒருவகைக்குதநோய். அது நாடோறு மலத்தை அடக்கியடக்கி விடுதலால் அபானவாயுவு குதத்தை நன்றாயனுசரித்து அத்துவாரவளையத்தி னடியையும் நுனியையுஞ் சுருங்கச்செய்யுங் காலத்திற் பிறப்பது. அந்தச் சுருக்கத்தால் மலமானது பிரயாசையின்மேல் வெளிப்படும். இப்படி வெளிப்படுந்தோறும் ஆசனத்தில் வெடிப்புண்டாகிப் பச்சைப் புண்போல உபாதி நேரிடும்.
உருத்தம் - தடுக்கப்பட்டது.
உருத்தரித்தல் - வடிவங்கொள்ளல்.
உருத்தல் - கோபம், கோபித்தல், சினேகக்குறிப்பு, தோற்றுதல், மிகுதி, முளைத்தல்.
உருத்தாகசன்னிபாதசுரம் - ஒருவகைச்சுரநோய். அது அவயவங்களின் மிகுநோவு, உடம்பெரிவு, கால்கை கழுத்துக்குள் நோவொடு, தினவு, பிரமை, சோர்வு, பிரலாபப்பேச்சு, தாகம், அதிக பேதி அல்லது சொற்பபேதியென்னும் இக்குணங்களையுண்டாக்குவது.
உருத்தாகசன்னிவாதசுரம் - ஒருவகைசுரநோய். அது இரைப்பு, இருமல், உடம்புசுற்றல், கழுத்தினரம்பு இழுத்தலோடு வேதனை, தாழ்வாய்க் கீல்கள் பிடித்தலோடுநோவு, சர்வாங்கத்திலும் குத்தலுடன் நடுக்கம் கழுத்

திலு நெற்றியிலும் வியர்வை, பிதற்றல், தவித்தல், தயக்கம், கண்டவரோடு முறையிடல், கிடைபொருட்தாமதப்புரளல், உதடு உலர்தலென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
உருத்திரம் - அழுகை, உரியபொருள், தொழிலின்லாபம், வளர்தல்.
உருத்திரகணம் - சிவகணம்.
உருத்திரகணிகை - உயர்குலத்துப் பெண் தேவதாசி.
உருத்திரகணிகையர் - வேசியர்களுக்கு வேருய் கற்புநிலை வழுவா திருந்து பூஜாகாலத்தில் சுத்த நிருத்தஞ்செய்யும் மகளிர்.
உருத்திரகணேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருத்திரகிரி - கயிலாயமலை.
உருத்திரகோடீசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று திருக்கழுக்குன்றம்.
உருத்திரங்கண்ணனர் - சங்கப் புலவருள் ஒருவர். இவர் பத்துப்பாட்டின் ஒன்ருகிய பெரும்பாணாற்றுப்படை செய்தவர்.
உருத்திரசடை - சிவதுளசி. மஞ்சிலிக்கான்.
உருத்திரசம் - பாதரசம்.
உருத்திரசன்மகண்ணர் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். இவர் திருவள்ளுவமாலைச் செய்யுளிலொன்று செய்தவர்.
உருத்திரசன்மர் } உருத்திரசன்மனர் } கடைச்சங்கப் புலவருளொருவர். இவர் உப்பூரிகுடிகிழார் குமாரர், இவரைக் குமாரக்கடவுளம்சமென்பர், அகநானூறு தொகுத்தவர் இவரே, இறையனராகப்பொருளுரை செய்த நாற்பத்தொன்பதின்மர் உரையையுமாங்கிற்கேட்டு நக்கீரருரையையே மெச்சின ஐயாண்டுகிரம்பா மூங்கைப்பிள்ளையாகியவரு மிவரே.
உருத்திரசாவர்ணி - பன்னிரண்டாவது மனு.
உருத்திரணீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருத்திரபசுபதிநாயனர் - அறுபத்துமூன்றுநாயன்மார்களில்ஒருவர் இவர் தலையூரிற்பிறந்து இரவும்பகலும் தண்ணீரில்நின்று உருத்திரஞ்சொல்லிச் சிவபத்தி பண்ணியவர்.
உருத்திரபஞ்சமம் - ஒருபண்.
உருத்திரபூ - மயானம்.
உருத்திரபூஷணம் - பாம்பு.
உருத்திரபூமி - மயானம்.
உருத்திரம் - ஓரலங்காரம், அஃது வெகுளிதோன்றக் கூறுவது, பெருங்கோபம், மஞ்சள்.
உருத்திரரோகம் - மாரடைப்பு.
உருத்திரவீணை - ஒருவீணை.
உருத்திரலோகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருத்திரன் - ஏகாதசவுருத்திரரி லொருவன், சிவன், பெருங்கோபி.
உருத்திராக்கம் } உருத்திராட்சம் } உருத்திரமணி.
உருத்திராக்கேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருத்திராணி - பார்வதி.
உருத்திராபிஷேகம்-உருத்திர மந்திரஞ்செபித்துச் செய்யும் அபிஷேகம்.
உருத்திராரி மன்மதன்.
உருத்திராவாசம் - காசி.
உருத்திரி - ஒருவீணை.
உருத்திரேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருத்திரை - உருத்திராணி.
உருத்திரோற்காரி - ஐம்பத்தேழாவது வருடம்.
உருத்துவம் - பருப்பம்.
உருத்துவிசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உருநாட்டு - சித்திரம், விக்கிரகம்.
உருந்திரம் - விசாலமானது.
உருபகதீவகம் - ஓரலங்காரம்.
உருபகம் - உருவகம்.
உருபு - உருவம் வேற்றுமையுருபு. முதலிய விடைச்சொல்.
உருபுகம் - ஆமணக்கு.
உருபுத்தொகை உவமையுருபு, தொக்குநிற்பது (உ-ம்) புயற்கருங்குழல்.
உருபுப்புணர்ச்சி - வேற்றுமையுருபு, புணர்ந்துவருவது.
உருபுமயக்கம்-ஒருவேற்றுமையுருபுநிற்கவேண்டுமிடத்துப் பிறிதொன்று,

தன்பொருள்படாது அதன் பொருள் படநிற்றல்.

உருபுவமானத்தொகை - உருபுமுபமானமுந் தொக்குநிற்பது (உ-ம்) வாயநயச்சிவப்புள தொன்றில்லை.

உருபுவமைத்தொகை-உருபுவமைதொக்குநிற்பது (உ-ம்) சேல்விழி.

உருபூகம் - ஆமணக்குச்செடி. [த்தி.

உருப்பசி - தெய்வப்பெண்களி லொரு

உருப்படல் }
உருப்படுதல் } உருவாதல்,உருவேறல் சன்னதங்கொள்ளல் சீர்ப்படுத்தல்.

உருப்படுத்தல் - உருவேறப்பண்ணுதல் சித்திரித்தல்.

உருப்பம் - உட்டணம், கோபம், திணைமா, மிகுதி.

உருப்பிரமம் - ஆட்டுக்கொம்பு.

உருப்பு - பூரணம், மிகுதி, வெப்பம்.

உருப்போடல் }
உருப்போடுதல் } பாடம்பண்ணல்,மந்திரஞ்செபித்தல்.

உருமணி - கருவிழி.

உருமம் - உட்டணம், மத்தியானம்.

உருமலைவாரி - உலோகமணல்.

உருமாறல் }
உருமாறுதல் } கோலமாறுதல், சரீரம் வேறுபடல்,வேற்றுருக்கொள்ளல்.

உருமித்தல் - உட்டணித்தல்,மனவெப்பமடைதல்.

உருமிப்பு - உட்டணம், மனவெப்பம்.

உருமிளை - யமன்மனைவி.

உருமு - அச்சம், இடி.

உருமுக்குரல் - இடியோசை.

உருமுதல் - உறுமுதல்.

உருமேறு - உருமு.

உருமை - சுக்கிரீவனதுமனைவி, உப்புவிளையும் பூமி.

உரும் - அச்சம், இடி, விடுதல்.

உரும்பரம் - சர்ப்பம்,செம்பு,பெருங்கா [யம்

உருகு - கறுப்புக்கலைமான்.

உருவகப்படுத்தல்-அலங்காரப்படுத்திச் சொல்லல்.

உருவகம் }
உருவகவணி } ஓரலங்காரம். அஃது உவமையைப் பொருளாயும் பொருளை யுவமையாயுங் கூறுவது.

உருவகவிரி - ஓரலங்காரம். அது பண்புருபு விரிந்து நிற்பது.

உருவகவுயர்வு நவிற்சியணிஓரலங்காரம் அஃது உபமேயத்தைச் சொல்லாற் சொல்லாமல் உபமானச் சொல்லால் இலக்கணையாய்ச் சொல்லுதல் (உ-ம்) வில்லுவக்கா யிரண்டுகொண்ட வல்லி.

உருவகவுருவகம் - ஓரலங்காரம். அது உருவகத்தையே பெயர்த்தும் பிறிதொன்றாக வுருவகஞ் செய்வது.

உருவகன் - வசுதேவனுக்கிளையிடம் பிறந்த மகன்.

உருவகித்தல் - உபமேயத்திலுவமானத்தைப் பேதமின்றி யேற்றிச் சொல்லுதல்.

உருவக்கொடியோர் -கொடியுருவினோ [ர்.

உருவங்காட்டி - கண்ணாடி.

உருவசாத்திரம் - கலைஞான மறுபத்துநான்கினொன்று.

உருவசி - உருப்பசி.

உருவமெடுத்தல் - வடிவமெடுத்தல்.

உருவம் - அழகு, உடலுறுப்பு, உடல், காணக்கூடியது, சொரூபம், நிறம், வடிவம், விக்கிரகம்.

உருவல் - உருவுதல்,சாதனியினொன்று

உருவழிதல் - உருக்கெடுதல்.

உருவாக்கல் }
உருவாக்குதல் } உண்டுபண்ணுதல், சீர்ப்படுத்தல், படைத்தல், பொருளாக்குதல்.

உருவாணி - தேய்ந்துபோனது, மெலிந்தவுடல்.

உருவாணிபற்றுதல் - தேய்ந்துபோதல்.

உருவாதல் - உருவமெடுத்தல், உருபமடைதல், பொருளாதல்.

உருவாரச்சம்மட்டி - வீழி.

உருவாரம் - பிரதிமை, வெள்ளரி.

உருவி - செம்முள்ளி, நாயுருவி, புல்லுருவி, முள்ளி.

உருவித்தல் - உருவகப்படுத்தல்.

உருவியுப்பு - நாயுருவி யுப்பு.

உருவில் - உருவில்லாதவன்,மன்மதன்.

உருவிழத்தல் - வடிவமிழத்தல்.

உருவு - அச்சம், உருவம், உருவன்னேவல், வடிவம்.

உருவுசடம் - சுருக்குக்கயறு.

உருவுதல் - இலைமுதலியன வுருவுதல், உறுப்பு, உறைகழித்தல்,புதைக்தோடல்.

உருவுவம் - உருவவுபமானம், அஃது மனுவடிவம்போலுங் குருவடிவென வருவது.
உருவுள்ளு - கொள்.
உருவெடுத்தல் - உருக்கொள்ளுதல்.
உருவெளி
உருவெளிக்காட்சி
உருவெளித்தோற்றம் } மனதிலுள்ள பொருளின்மருட்சித்தோற்றம்.
உருவெளிப்படல்
உருவெளிப்படுதல் } மனதிலெண்ணியது தோன்று மனத்தோற்றம்.
உருவெளிப்பாடு - உருவெளிக்காட்சி.
உருவேறல்-அதிகப்படுதல், ஆவேசமேறல், உருப்படுதல்.
உருவேற்படல் - உருவமுண்டாதல்.
உருவேற்றல்
உருவேற்றுதல் } ஆவேசமேற்றல், துர்ப்போதனைசெய்யல் மந்திரத்தை அதிகமாய்ச்செபித்தல்.
உருவை - குறை, முன்னி.
உருவொளி-கண்ணடி முதலியவற்றிற் காணும் நிழல்.
உருளரிசி - கொத்துமல்லி.
உருளல் - உருளுதல்.
உருளி - உரோகிணிநாள், தேருருளை, பொருத்து, வட்டம்.
உருளிபேர்தல் - பொருத்து விலகுதல்.
உருளியெடுத்தல் - பொருத்துப் புரட்சியெடுத்தல்.
உருளுதல் - அழிதல், புரளுதல்.
உருளை - உருண்டை, உரோகிணிநாள், தேர் முதலியவற்றினுருள், பண்டி, முட்டை, வட்டம், வெள்ளைப்பாஷாணம்.
உருளைக்கல் - பரற்கற்கள்.
உருளைக்காந்தம்-ஒருவகைக் காந்தகல்.
உருள்-உருளென்னேவல், உரோகிணி நாள், தேருருளை, பண்டி, வட்டம்.
உரூடபதம் - இடுகுறிமாத்திரப்பெயர், பகாப்பதம்.
உரூடம் - இடுகுறி, பகாப்பதம், பிரசித்தம்.
உரூடி - இடுகுறி, பிரசித்தமானது.
உரூடிகம்
உரூஷிதம் } தூளியினன்மறைபட்டது.
உரூடியார்த்தம் - இயற்சொல்.
உருட்சை - வாழைக்கிழங்கு.
உரூதி - ஆயில்பட்டை.
உரூபகம் - அத்தாட்சி, ஒரு செய்யுள், உருவக அலங்காரம், சத்த தாளத்தொன்று.
உரூபகாரம் - அத்தாட்சி.
உரூபகாலங்காரம் - உருவகவணி.
உரூபதன்மாத்திரை - பஞ்சதன்மாத்திரையிலொன்று.
உரூபம்-உருவம், கிரிகாமாலைபண்ணல், சாயை, சுபம், நிலை, நிறம், மந்தை.
உரூபாணம் - சிவிகை.
உரூபாய்-பதினறு அணுகொண்ட வெள்ளிநாணயம்.
உரூபாரூபம்-நவபேதத்தொன்று. அஃது சதாசிவம்.
உரூபாவதி - அழகுடையவள், பன்னிரண்டாவது மேளகர்த்தா.
உரூபி - உருபமுள்ளது.
உரூபிகாரம் - உருபம், உரூபிகரிக்கை.
உரூபிகரித்தல்-உருப்படுத்தல், கருவிலுருப்படல்.
உரூபிகாரப்படுத்தல்-உரூபிகரித்தல்.
உரூபிகாரம் - உரூபம்.
உரூபிகை - வெள்ளெருக்கு.
உரூபித்தல்-அத்தாட்சிப்படுத்தல், மெய்ப்பித்தல், ஆராய்தல், சிந்தித்தல்.
உரூபு - உரூபம், சாயல்.
உரூப்பியம்-அழகானது, பொன், வெள்ளி நகை, வெள்ளி, வெள்ளை.
உரேந்திரன் - வீரன்.
உரை - ஆகமப்பிரமாணம்புகழ்வியாக்கியாபனம், உயர்ச்சி, உரையென்னேவல், ஒலிசொல், சொற்பயன், தேய்மானம் தேய்வு, பேச்சு, பொன், மாற்றறியுமுறை, வேதமொழி.
உரைகட்டல்
உரைகட்டுதல் } உரைபண்ணுதல்
உரைகல்-பொன் வெள்ளி புரைக்குங்கல், கட்டளைக்கல்.
உரைகாரர்-உரையாசிரியர், வண்ணார்.
உரைக்கோள் - உலைகாரன்கருத்து.
உரைசல்
உரைசுதல் } உரைசுல், சிக்கல், தேய்த்தல்.
உரைசெய்யல்-பேசல், வியாக்கியானம் பண்ணல்.
உரைஞ்சல் - தேய்த்தல், சிக்கல்.
உரைதல் - தேய்தல்.

உரைத்தல்-ஒலித்தல், கற்பித்தல், சொல்லுதல், தேய்த்தல்.
உரைத்தாமென்றல் / உரைத்துமென்றல் - உத்தியில் ஒன்று.
உரைநூல் - உரையுள்ள நூல்.
உரைப்பு - உரைக்கை, சொல்லுகை, தேய்ப்பு.
உரையல் - உரைதல்.
உரையாசிரியன் - உரைசெய்வோன்.
உரையாடல் - சொல்லல், பேசல்.
உரையாணி - மாற்றறியுமாணி.
உரையிடல் - உரைத்தல்.
உரையிலக்கணம்-நூலுரைக்கு வேண்டுமிலக்கணம்; அது பாடம் கருத்து சொல்வகை சொற்பொருள் தொகுத்துரை உதாரணம் வினு விடை விசேடம் விரிவு அதிகாரம் துணிவு பயன் ஆசிரியவசனம்.
உரையிற்கோடல் - உத்தியில் ஒன்று.
உரைவன்மை-சாதுரியப்பேச்சு, சொற்றிட்பம்.
உரைவு - உரைதல்.
உரொக்கக்காரன்-பணமிருப்புள்ளவன்
உரொக்கம் - கையிருப்புப்பணம்.
உரொட்டி - உறட்டி, அப்பம்.
உரோக்கம் - சிவனடிபாதம்; இது இலங்கைத்தீவிலுள்ள ஒருமலை.
உரோக்கினம் - மருந்து.
உரோகசாந்தகன் - வைத்தியன்.
உரோகசிரேட்டம் - சுரம்.
உரோகணி - ஒரு நட்சத்திரம், பலதேவன்றாய்.
உரோகணிதனயன் - பலபத்திரன்.
உரோகணிசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உரோகதி - நாய்.
உரோகஸ்தன் - உரோகி.
உரோகம்-இறங்குதல், உயர்தல், எழும்புதல், தளிர், ஏறுதல், ஒளியின்மை, நோய், பூவரும்பு.
உரோகராம் - கயரோகம்.
உரோகாதம்-நெஞ்சிடித்தல், மாரடித்தல்.
உரோகி - நோயாளி.
உரோகிணி - உரோகிணிநாள், ஒன்பானண்டுப்பெண், கடுக்காய், கடுகுரோகணி, பலராமன்றாய், பீதரோகணி.
உரோகிணிதனயன் - பலபத்திரன்.
உரோகிதகம் - செம்மரம்.
உரோகிதம் - இந்திரதனு, சிவப்பு.
உரோகிதாசுவம் - அக்கினி.
உரோகீ - செம்மரம்.
உரோகீஷம் - கலைமான்.
உரோங்கல் - உலக்கை.
உரோசங்கெட்டவன் - மானவீனன்.
உரேசப்படல் / உரேசப்படுதல் - சுவரணைகொள்ளல், காணப்படல்.
உரோசம்-மானம், முலை, வெட்கம்.
உரோசல் - உரைஞ்சல்.
உரோசனகம் - எலுமிச்சை.
உரோசனம் - முள்ளிலவு.
உரோசனி-கடுகு, கோரோசனை, செந்தாமரை.
உரோசனை-கடுகு, கோரோசனை, செந்தாமரை, மகிடரோசனை முதலிய ரோசனை.
உரோசி - சூரியகாந்தி.
உரோசித்தல் - உரோசப்படுதல்.
உரோசுதல் - உரோசல்.
உரோஞ்சுதல் - உரைஞ்சுதல்.
உரோணி - உரோகிணிநாள்.
உரோதசி - ஆகாயமும் பூமியு மேகோபித்திருத்தல்.
உரோதம் - தடை, நதிதீரம்.
உரோதனம் - அழுதல், கண்ணீர்.
உரோதனி - சிறுகாஞ்சொறி.
உரோதோவக்கிரை - நதி.
உரோபணம் - இரங்குதல்.
உரோபம் - அம்பு, பாணம்.
உரோமகசுவணம்-மயிர்க்கூச்சிடுதல்.
உரோமகுச்சகம் / உரோமகுச்சம் - சாமரம்.
உரோமகூபம் - மயிர்க்குச்சு.
உரோமகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உரோமக்கட்டு - கிறைமயிர்.
உரோமக்கால் - மயிர்த்துவாரம்.
உரோமக்கிழங்கு - வசம்பு.
உரோமசங்காரி - அம்பட்டன், உரோமத்தைப்போக்கும் ஒரு மருந்து.
உரோமசன் - உரோமரிஷி.
உரோமத்துவாரம் - மயிர்த்துவாரம்.
உரோமங்கேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
உரோமபூமி - தோல்.

உரோமப்புளகம்
உரோமப்புளகிதம் } மயிர்ச்சிலிர்க்கை.
உரோமப்பொடிப்பு
உரோமமுனி - பதினெண் சித்தரில் ஒருவர்.
உரோமம்-புறமயிர், மயிர், மயிர்ப்பரப்பு.
உரோமாஞ்சம் - மயிர்க்கூச்சிடுதல்.
உரோமராசி - மயிரொழுங்கு.
உரோமரேகை-உரோமத்தினொழுங்கு.
உரோமலம்பம் - வண்டு.
உரோமாஞ்சம்
உரோமாஞ்சலி } உரோமம் பொடிப்பு, குதுகலிப்பு.
உரோமாஞ்சிதம்
உரோமாம்பரம் - கம்பளம், சால்வை.
உரோமாரிஷம் - மயிர்ப்புளகம்.
உரோமாவலி - உரோமரேகை.
உரோமி - மயிர்ச்சிகைப்பூடு.
உரோருகம் - முலை.
உரோவேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
உர்வசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
உலகங்காத்தான் - அவுரிச்செடி, அரி.
உலகசஞ்சாரம் - உலகவாழ்வு.
உலகசயன் - புத்தன்.
உலகத்தோற்றம் - புராணவிலக்கணங்களைந்தனுளொன்று. அது உலகத்தினுற்பத்தியைக் கூறுவது.
உலகநடை - உலகவியற்கை, உலகாசாரம்.
உலகநாதன்-அரசன், கடவுள், பிரமன்.
உலகநாயகி - பாவநாசப்பதியிற் கோயில்கொண்டிருக்குந் தேவி.
உலகநீதி-இயல்பானநீதி, உலகநடை, தேசவியற்கைநீதி, நன்னெறி, ஒருநூல்.
உலகநேத்திரன் - சூரியன்.
உலகபாந்தவன் - சூரியன், விட்டுணு.
உலகபாரணன் - விட்டுணு.
உலகப்பற்று - உலகபந்தம்.
உலகப்புரட்டன்-மிகு புரளிக்காரன்.
உலகமலையாமை - நூலழகினொன்று.
உலகமலைவு-ஓரலங்காரம்; அஃது உலகொழுக்கிறப்பக் கூறுவது, கற்றோர்க்கும் மயங்கவைத்தல்.
உலகமாதா-இலக்குமி, சரச்சுவதி, செம்மணத்தக்காளி, பார்ப்பதி.

உலகமீன்றாள் - பார்ப்பதி.
உலகமுண்டோன் - விட்டுணு.
உலகம் - ஆகாயம், உயர்ந்தோர், உலகத்தார், உலகு, குணம், சனம், சிருட்டிப் பொருள்கள், திசை, நாடு, பதவி, பிரபஞ்சம், பூமி, மங்கலச்சொல், இருபத்திரண்டினொன்று.
உலகரட்சகன்-உலகத்தைக்காப்போன்.
உலகரட்சணியம் } உலகத்தாரையீடேற்றுகை.
உலகரட்சை
உலகர் - உலகத்தார்.
உலகவழக்கம் } இயல்பாய் வழங்குவது உலகொழுக்கு.
உலகவழக்கு
உலகவாஞ்சை - உலகவிருப்பம்.
உலகவிருட்சகன்-கடவுள், மனுடரையீடேற்றுபவன்.
உலகவொடுக்கம்-ஒவ்வொரு காரியதத்துவங்களும் அதனதன் காரியத்தில் ஒடுங்குதல்.
உலகளந்தோன் - விட்டுணு.
உலகாசாரம் - உலகவொழுக்கம்.
உலகாயதம்-புறச்சமயம் ஆறினொன்று; அது சார்வாகன் கோட்பாட்டின்படி உலக இன்பமே சிரேஷ்டமென்னும் ஒரு நிரீச்சுரவாத சமயம்.
உலகாயதன்-உலகாயத சமயத்தோன்.
உலகாயிதம்-உலகாயதம், சடமாயாவாதம்.
உலகாளல்
உலகாளுதல் } உலகோம்பல்.
உலகாள்வோன் - உலகாதிபன்.
உலகியல் - உலகநடை.
உலகு - ஆகாயம், உயர்ந்தோர், ஒழுக்கம், திசை, நாடு, நிலம், பூமி, மக்கள், முப்பகையினொன்று.
உலகுலவம் - திப்பிலி, திரிபாலை.
உலகோம்பல் } அரசாறுதொழிலின் ஒன்று; அஃது உலகுகாத்தல்.
உலகோம்புதல்
உலக்கை - இருப்புத்தண்டு, ஒழிக்கை, குத்து முலக்கை, கேடு, சாவு, திருவோணம், மெருகன்கிழங்கு.
உலக்கைக்கணை-உலக்கையின் திரண்டதலை, திரண்டதலையுள்ள உலக்கை.
உலக்கைக்கொழுந்து - முசலகிசலம்.
உலக்கைசார்த்தல் - கெடுத்தல்.
உலக்கைத்திங்கள் - ஆவணிமாதம்.

உலக்கைப்பாட்டு - வள்ளைப்பாட்டு.
உலக்கைப்பிடங்கு - உலக்கைக் கணை.
உலக்கையாணி - பூட்டினடுவாணி.
உலங்கலம் - கற்பாத்திரம்.
உலங்காரணை - அயிரி.
உலங்கு - கொசுகு, திரண்டகல்.
உலண்டம் / உலண்டு } கோற்புழு.
உலத்தல் - ஒழிதல், கெடுதல், சாதல்.
உலத்திசூலை - ஒருவிதச்சூலை.
உலபம் - நெருங்கிப் படர்ந்த கொடித்திரள்.
உலப்பல் - உலப்புதல்.
உலப்பு - ஒழிவு, கேடு, சாவு.
உலப்புதல் - அலப்புதல், ஆர்த்தல்.
உலமரல் / உலமருதல் } அச்சக்குறிப்பு, அஞ்சல், துன்பம், துன்புறல்.
உலம் - கற்றிரள், திரண்டகல்.
உலம்பல் / உலம்புதல் } ஒட்சித்தல், ஒலித்தல்.
உலால் - உலர்தல்.
உலருதல் - காய்தல், வாடல்.
உலர்ச்சி - காய்வு, வாட்டம்.
உலர்தல் - காய்தல், வாடல்.
உலர்த்தல் - உலர்த்துதல்.
உலர்த்தி - சூலை, ஒருநோய்.
உலர்த்தசூலை-ஒருவகைச் சூலைநோய்; அது பித்தவுஷ்ணம், அக்கினி, வறட்சி, குடல்வாதம், குன்ம முதலிய வற்றாற் பிறந்து சரீரத்தி னுட்புறத்தில் உலர்த்தலுடன் குத்தல், வெளிப்புறத்தில் வீங்கித்தடித்தல், சர்வாங்கமும் நோதல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.
உலர்த்துதல் - காய்ச்சுதல்.
உலர்ந்ததேங்காய் - கொப்பறை.
உலர்மரம் - வானம்.
உலர்வு - உலர்ச்சி.
உலவக்காரன் - உலோபக்காரன், பிறனில்லிற் கொஞ்சமாயுண்பவன்.
உலவமரம் - இலவமரம்.
உலவம் - உலோபம்.
உலவல் - உலவுதல்.
உலவாக்கிழி - எடுக்க வெடுக்கப் பொருள் குறையாக்கிழிக்கட்டு.
உலவித்தல் - உலோபமா யிருத்தல், ஒறுத்தல், கூசியொழுகல்.
உலவுதல் - உலாவுதல், ஒழிதல், கூசிக் குறைத்தல்.
உலவை-ஊர், ஒடைமரம், காற்று, சிறுகிலுப்பை, குடி, குலம், தழை, மரக்கொம்பு, மரப்பொந்து, முல்லைநிலக்கான்யாறு. வள்ளி, விலங்கின் கொம்பு
உலவைகாசி - திப்பிலி.
உலறல் - காய்தல், சினக்குறிப்பு.
உலறுதல்-காய்தல், சிலம்புதல், சினக்குறிப்புக் காண்பித்தல்.
உலா-உலாவென்னேவல், ஒரு பிரபந்தம்; அஃது பாட்டுடைத்தலைவன் உலாவந்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற்கூறி அவனது குலமுதலிய மகிமையை விளக்குவது, பவனிவருதல்.
உலாகுயம் / உலாகுளம் / உலாங்கம் } மனோசிலை.
உலாங்கிலிங் / உலாங்கு / உலாங்குலி / உலாஞ்சல் } காவட்டம்புல்.
உலாஞ்சுதல் - சிறுகிறுத்தல், தள்ளாடுதல்.
எண்குணன் - அருகன், கடவுள், சிவன்.
எண்கூட்டிப்பெருக்கல் - உழலல்.
எண்சாத்திரம் - கணிதம்.
எண்சிறப்புள்ளோன் - அருகன்.
எண்சுவடி - கணக்கேடு.
எண்செய்யுள் - எண்ணுற் பெயர்பெறும் பிரபந்தம்.
எண்டிக்கு எண்டிசை. [ம் பிரபந்தம்.
எண்டிசை - எட்டுத்திக்கு.
எண்டிசைப்பாலர் - அஷ்டதிக்குப் பாலகர்கள், அவர் இந்திரன், அக்கினி, இயமன், கிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்.
எண்டிசையானை - அட்டகயங்கள், அவை ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பன.
எண்டிசையோனி - அட்டதிக்கு யோனிகள், அவைகொடி, புகை சிங்கம், நாம், இடபம், கழுதை, காகம், மான் என்பன.

எண்டோளன் - சிவன்.
எண்டோளி - காளி, துர்க்கை.
எண்ணக்குறிப்பு - நினைவு.
எண்ணத்தப்பு - நினைவுமயக்கம், மதிகேடு, மதியாமை.
எண்ணப்படுதல் - கணிக்கப்படுதல், நினைவிற்றோற்றல், மதிக்கப்படுதல்.
எண்ணம் - ஆலோசனை, இறுமாப்பு கருத்து, கனம், இலேசம், குறிப்பு, நம்பிக்கை, நினைவு, நோக்கம், மதிப்பு, விசாரம்.
எண்ணர் - கணிதர், மந்திரிகள்.
எண்ணலர் - பகைவர், பிறரை மதியாதோர்.
எண்ணளவு - இலக்கத்தாலெண்ணு மளவு.
எண்ணலளவையாகுபெயர் - எண்ணுக்குரிய பெயரை அதற்குரிய பொருட்குவழங்குவது (உ-ம்) ஒன்றுவந்தது.
எண்ணலும்மைத்தொகை - எண்ணலும்மை தொக்குநிற்பது (உ-ம்) அறம், பொருள், இன்பம், வீடு.
எண்ணல் - ஆலோசித்தல், இறுமாத்தல், உத்தேசித்தல், எண்ணுதல், கணிதம், கவலைப்படல், குறித்தல், தேர்ச்சி, நினைத்தல், மதித்தல், யோசித்தல்.
எண்ணுதகண்டன் } துணிவுள்ளவன்.
எண்ணுதநெஞ்சன் }
எண்ணுதவன் - துணிந்தவன்.
எண்ணுமை - மதியாமை.
எண்ணுயிரவர் - ஸ்மார்த்தப்பிராமணரில் ஒரு வகுப்பினர், சமணரிலொரு கூட்டத்தார்.
எண்ணுர் - பகைவர்.
எண்ணிக்கை - எச்சரிக்கை, எண், கணிப்பு, சங்கை, மதிப்பு.
எண்ணிடல் - கணக்கிடல்
எண்ணில்கண்ணுடையோன் - புத்தன், கடவுள்.
எண்ணில்காலம் - அளவில்லாதகாலம்.
எண்ணுதல் - எண்ணல்.
எண்ணும்மை - எண்ணுக்கு நிற்குமும்மென்னு மிடைச்சொல் (உ-ம்) நீயுமவனும்.
எண்ணும்மைத்தொகை - எண்ணும்மைத்தொகை (உ-ம்) அற்பகல்.
எண்ணுவண்ணம் - எண்பயின்று வருவது.
எண்ணுவமம் - ஒருவமானம் (உ-ம்) ஒருவனுக் கன்னமிடுவது ஆயிரக்கோதான மீக்தற்கொப்பு.
எண்ணுறுத்தல் - உறுதிப்படுத்தல்.
எண்ணெயூற்றல் - எண்ணெய்வடித்தல்.
எண்ணெய் - தைலம்.
எண்ணெய்க்காப்பு - எண்ணெயபிஷேகம்.
எண்ணெய்க்காரன் - எண்ணெய்வாணியன்.
எண்ணெய்ச்சாணை - ஒருவிதமான சாணைக்கல்.
எண்ணெய்தொட்டுப் பொட்டுவைத்தல் - தலையில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதற்குமுன் சிரஞ்சீவியா எழுவரைநினைத்து எழுதுளி வைத்தல், அதனால் ஆயுள் விருத்தியாகுமென்றெண்ணம்.
எண்ணெய்ப்புல்விடுதல் - நெசவு பாவுக்கெண்ணெயிடுதல்.
எண்ணெய்மணி - வெள்மட்டமணி.
எண்ணெய்வாணிபன் - எண்ணெய்விற்போன்.
எண்ணேகாரம் - எண்ணைக்காட்டு மேகாரம் (உ-ம்) நிலனே நீரே தீயே.
எண்ணோகாரம் - எண்ணைக்காட்டுமோகாரம்(உ-ம்)மூத்தனென்கோ முதன்மூர்த்தி யென்கோ.
எண்படுதல் - அகப்படுதல்.
எண்பது - எட்டுமுறை பத்து.
எண்பித்தல் - அத்தாட்சிபண்ணல்.
எண்மடங்கு - எட்டுத்தடவை.
எண்மர் - எட்டுப்பேர் கணிதர்.
எண்மை - இலேசு, எளிமை, கணிசம் பரிதாபநிலை.
எண்மையவன் - இலேசானவன், எளியவன்.
எண்வகுப்பு - ஒன்றுமுதல் முப்பத்தாறு தானம்வரை வருவது.
எண்வகைக்கணவகை - அறம் பொருள் இன்பம் வீடென்றுசொல்லப்பட்ட இவற்றினது பாகுபாடமைய ஒருநூலைச் சொல்லுங்காலத்து நீர் நிலம் தேயு வாயு அந்தரம்இயமானன் சூரியன் சந்திரனென்று சொல்லப்பட்ட எண்வகைக்கணங்களு முதற்செய்யுளின் முதலி லமையக் கூறுவது.

எண்வகைத்துணைவர் - அரசருக்குரிய எட்டுத்துணைவர். அவர் மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

எண்வகைமாலை - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, என்பன.

எதாஸ்து - அப்படியாகட்டும்.

எதாப்பிரகாரம் - அந்தப்பிரகாரம், இருந்தபடியே.

எதார்த்தம் - உண்மை, யதார்த்தம்.

எதிர் - உவமைச்சொல்.

எதிரதுதழீஇயவெச்சவும்மை - எஞ்சியசெயலைவிளக்கி யெதிர்காலத்தைத் தழுவிநிற்கு மும்மை (உ-ம்) இனிக்கொற்றனும் வருவான்.

எதிரதுநோக்கிய வெச்சவும்மை - எதிர்மறைச் சொல்லைக்காட்டி நிற்கு மும்மை.

எதிரதுபோற்றல் - ஒருவகையுத்தி.

எதிரல் - எதிர்த்தல், எதிர்ப்படல், தோன்றல்.

எதிராக - முன்.

எதிரார்த்தம் - சற்ற, கிதார்த்தம். [ப்பு.

எதிராப்பு - கழலாதபடி வைக்கிற ஆ

எதிராளி - எதிர்வழக்காளி, சமமாயிருப்பவன் பகைஞன், எதிரி.

எதிரி - எதிர்கிற்கிறவன், பகைவன், பிரதிவாதி.

எதிரிடல் - எதிர்த்தல், எதிர்ப்படல்.

எதிரிடை - எதிர்த்தனம், எதிர்க்கை, சமமாயிருப்பது, பகை.

எதிரிடைகட்டல் - எதிர்த்தல், விரோதித்தல். [வோன்.

எதிரிடைகாரன் - விரோதஞ் செய்

எதிரிடைமுறி - எதிரிடைச்சீட்டு.

எதிருக்கெடுத்தல் - எப்பமெடுத்தல், வாந்தித்தல்.

எதிருத்தரம் - மறுமொழி.

எதிருரை - எதிரிடைப் பேசு, மறுமொழி.

எதிருன்றல் - உறுதியாய்நிற்றல், எதிர்தல், எதிர்த்தல்.

எதிரெடுத்தல் - உண்டது மேலுக்கு வருதல், எவரையெடுத்தல், தேக்கெடுத்தல், வாந்தித்தல்.

எதிரேற்றல் - எதிரேவல், எதிர்த்தல், தடுத்தல், பிறன்மேல் வருவதைத் தாஙேற்றல்.

எதிரேற்று - எதிரேவல், தனக்கெதிரே வந்ததைத் திருப்பிவிடுதல்.

எதிரொலி - அதிர்ந்துகேட்கிறசத்தம், பிரதித்தொனி. [லைல்.

எதிரொலித்தல் - பிரதிதொனிகா

எதிர் - எதிரிடை, எதிரொன்னேவல், ஒப்பு, முரண், முன், வருங்காலம்.

எதிர்சட்சி - முன்பக்கம்.

எதிர்காலம் - வருகாலம்.

எதிர்காலவினைத்தொகை - வரும்காலவினைத்தொக்கு நிற்பது (உ-ம்.) இனிக்கொல்களிறு.

எதிர்காலவினையெச்சம் - இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான், பாக்கு என்னும் விகுதிகளைக்கொண்டு இடைநிலைபெற்றும்பெறாதுந் தாமே எதிர்காலங்காட்டிநிற்கும் வினை

எதிர்காற்று - நேர்காற்று. [யெச்சம்.

எதிர்கொள்பாடி - சோழநாட்டிற் காவிரிக்கு வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

எதிர்கொள்ளுதல் - நயபுண்ணியத்தொன்று. அஃதுவந்தவர்க்குமுன்சென்றளவளாதல்.

எதிர்கோள் - எதிர்கொள்ளல்.

எதிர்க்கை - எதிர்மரம், விரோதிக்கை.

எதிர்ச்சீட்டு - எதிர்முறி

எதிர்ச்செட்டு - இரண்டாம்செட்டு, எதிரிடைச்செட்டு, ஒருவன்விற்பதற்கு மாறாகவிற்கை.

எதிர்தல் - சந்தித்தல், தோன்றல், மலைதல், மாறுபடுதல்.

எதிர்த்தல்-அலைத்தல், எதிர்பார்த்தல், சந்தித்தல், தடுத்தல், நோதல், மாறுபடுதல், முற்படுதல். [வன்.

எதிர்த்தவன் - ஒருபாஷாணம், பகை

எதிர்கிரணிறை } நேரின்றி மாறிவரும் கிரணிறை.
எதிர்கிரைகிறை }

எதிர்நிலை - எதிர்நிற்றல், கண்ணாடி.

எதிர்நிலையகத்திணை - அகப்பொருளுறுப்பினொன்று. அதுஒன்றனைவிளக்க அதனை மறித்து எதிர்நிற்கும் பொருளைக்காட்டல் (உ-ம்.) முட்டருடாடிய நட்புக்கடை யூடாடியகால்.

எதிர்நிலையணி - உபமானத்திற் குறைவு தோன்றச் சொல்லல் (உ-ம்) அணங்கு முகம்போன் மதியுஞ் செயுமே மகிழ், அன்றியும் அன்னியத்தையுபமேயமாகக் காட்டி அன்னியத்தை யிகழ்தலுமாம் (உ-ம்) முகமே மதிமுனையொக்கும்.
எதிர்நிற்றல் - போர்செய்யல், மாறுபட்டு நிற்றல், முன்னிற்றல்.
எதிர்நோக்கு நட்சத்திரம் - எதிர்நாள், பக்கநாள்.
எதிர்ந்தோர் - பகைவர்.
எதிர்படுதல்-எதிர்தல், சந்தித்தல், சம்பவித்தல், தோன்றல், நேரிடுதல்.
எதிர்படுத்தல் - எதிராக்கல், பகையாக்கல்.
எதிர்பாடு - நேரிடுதல்.
எதிர்ப்பாச்சல்-நேரிட்டபாச்சலுக் கெதிர்த்துப்பாய்தல்.
எதிர்ப்பார்த்தல் - காத்திருத்தல், வரவு பார்த்தல்.
எதிர்ப்பு-அலைப்பு, இலக்கு, எதிர்த்தல், எதிர்மொழி, சண்டிவாதம், தடுப்பு, வருங்காலம்.
எதிர்ப்பை - கைம்மாறு.
எதிர்மறுப்பு } உடன்பாட்டிற்கு மாறுய்ச் சொல்லுதல்.
எதிர்மறை }
எதிர்மறையணி - ஒரு அலங்காரம். அஃது ஒழிப்பணிக்கு வேறுகியுங் கேட்போரை மகிழ்விப்பதாயும் இருக்கின்ற மறுப்பைச் சொல்லுதல்.
எதிர்மறையும்மை - எதிர்மறுத்துச்சொல்லுமும்மை (உ-ம்) சாத்தன் வருதற்கு முனியன்.
எதிர்மறையெச்சம் - எதிர்மறுப்பைக் காட்டுமெச்சம் (உ-ம்) அவனே கொண்டான். [சவலங்காரம்.
எதிர்மறையெஞ்சணி - எதிர்மறையெச்
எதிர்மறை யேகாரம் - எதிர்மறுக்குமேகாரம் (உ-ம்) நூற்றுதே நூலிடல்.
எதிர்மறை யோகாரம் - எதிர்மறுக்குமோகாரம் (உ-ம்) நானே கொண்டேன்.
எதிர்மறைவிகுதி - வினையை எதிர்மறுக்கும் இல்-அல்-ஆ என்னு மூன்றுமாம் (உ-ம்) உண்டிலன், உண்ணலன், உண்ணுன்.
எதிர்மறைவிடைவினவெதிர் - மறுத்துத்தாங்கூறல் (உ-ம்) செய்யேனெனல்.
எதிர்மறைவினை - எதிர்மறுப்புள்ள வினை. அஃது இல், அல், ஆ எனும் விகுதிகள் புணர்ந்தவினைச் சொல்.
எதிர்மீன்-நீர்ப்பாய்ச்சலுக் கெதிர்வருமீன்.
எதிர்முகம் - சந்நிதி, நேர்முகம், முன்.
எதிர்முறி - கள்ளச்சீட்டு.
எதிர்மொழி - எதிர்வார்த்தை, மறுமொழி.
எதிர்வரல் - விரோதமாகவரல்.
எதிர்வழக்கு - எதிர்வியாச்சியம்.
எதிர்வாதம் - பிரதிவாதம்.
எதிர்வாதி - பிரதிவாதி.
எதிர்வினை-எதிர்மறைவினை, வருவினை.
எதிர்வினைவிலக்கு - ஓரலங்காரம். அஃது வருகால விடையூற்றைக்காட்டி மறுப்பது.
எதிர்வு எதிர்காலம், எதிர்த்தல், எதிர்ப்படுகை, சம்பவிக்கை, வருவது.
எதிர்வைத்தல் - சரிவைத்தல்.
எது - யாது.
எதுகை-செய்யுட்டொடை; அஃது இரண்டாமெழுத் தொன்றி வருவது.
எதுகைத்தொடை - செய்யுட்டொடையினோர்வகை. அஃது அடிகளின் முதற்சீரினிரண்டா மெழுத்தொன்றி வரினடியெதுகை அடிகளின் முதலிரு சீர்களிரண்டா மெழுத்தொன்றிவரி னிணையெதுகை.
எதேச்சை - சுவேச்சை, நிருத்தி.
எதேஷ்டம் } யதேஷ்டம்.
எதேட்டம் }
எத்தல் - நறுக்குதல். [ம்.
எத்தனம்-ஆயத்தம், கருவி, பிரயத்தனம்.
எத்தனித்தல் - ஆயத்தமாக்கல், நோக்கமாயிருத்தல்.
எத்தனை - எவ்வளவு.
எத்தன் - அணைப்புக்காரன்.
எத்தினம் - எத்தனம்.
எத்து - அணைப்பு, எற்று, எத்தென்னேவல், வஞ்சகம்.
எத்துணை - எவ்வளவு.
எத்துதல் - அணைப்புதல், இதஞ்சொல்லல், வஞ்சித்தல்.
எத்துவாதம் - அகடவிகடம்.

எத்தேசகாலமும் - எப்போழ்தும்.
எந்திரகாரன் - சூத்திரக்காரன்.
எந்திரம் - ஆலை, இயந்திரம், சூத்திரம், திரிகை, தேர், பண்டி, மதிலுறுப்பு.
எந்திரவாவி - இலவந்திகை, சூத்திரவாவி.
எந்திரன் - சூத்திரி, தேர்.
எந்தை - எமதுசுவாமி, என்றந்தை.
எப்படி - எவ்விதம்.
எப்பிறப்பு - எம்மை.
எப்பொருட்குமிறைவன் - எல்லாவற்றிற்கு மதிபன், கடவுள்.
எப்பொழுதும் - எக்காலமும்.
எப்போ, எப்போது } எப்பொழுது.
எப்போதும், எப்போழ்தும் } எப்பொழுதும்.
எமகணம் - நமன்றூதர், யமகணம்.
எமகிங்கிரர் - நமன்றூதர்.
எமது - எம்முடையது.
எமதூதன், எமதூதி } நாகப்பாம்பின் நச்சுப்பல் லிலொன்று.
எமநாகம் - அசமதாகம், ஓமத்தை.
எமநாமம் - ஓமத்தை.
எமர் - எமதுசுற்றத்தார், எம்முடையவர்.
எமன் - எம்முடையவன்.
எமன் - இயமன், நம்முடையவன், நாகப்பாம்பினது நச்சுப்பல்லிலொன்று.
எமாஸ்திரம் - நமனுயுதங்கள்; அவை கணிச்சி, தண்டு, பாசம்.
எமார் - எமர்.
எம் - எம்முடைய, தன்மைப்படர்க்கையுளப்பாட்டுப் பன்மை விகுதி (உ-ம்) உண்டனெம்.
எம்பர் - எவ்விடம்.
எம்பி - என்றம்பி.
எம்பிராட்டி - எங்கள் தலைவி.
எம்பிரான் - எங்கள் தலைவன், எங்கள் தேவன்.
எம்புகம் - நிலக்கடம்பு.
எம்பெருமாட்டி - எங்கள் தலைவி.
எம்பெருமான் - எம்பிரான்.
எம்மட்டு - எவ்வளவு.
எமர் - எம்முடையோர்.
எம்மனோர் - எம்மோடொத்தவர்.
எம்மாத்திரம் - எவ்வளவு.
எம்மான் - எமது தெய்வம், எம்பிரான்.
எம்மை - எங்களை, எப்பிறப்பும்.
எம்மையும் - எங்களையும், எப்பிறப்பும்.
எம்மோர் - எம்முடையவர்.
எயினூர் - பாண்டிநாட்டகத்தோரூர்.
எயில் - ஊர்ப்பொது, நாகம், மதில்.
எயிறலைப்பு - பற்கடிப்பு.
எயிறிலி - சூரியன்.
எயிறு - பல், பன்றிக்கொம்பு, யானைக்கொம்பு, வக்கிரதந்தம்.
எயிறுதின்றல் - பற்கடித்தல்.
எயிற்றியர் - பாலைநிலப்பெண்கள், வேடுவப்பெண்கள்.
எயினர் - பாலைநிலமாக்கள், வேடர்.
எயின் - வேடசாதி, வேடருக்குரியன்.
எய் - எய்யென்னேவல், முட்பன்றி.
எய்தல்-அடைதல், நால்வகை யூறுபாட்டிலொன்று. அஃது எய்யல்.
எய்துதல்-அடைதல், சம்பவித்தல், சேருதல், பெறுதல்.
எய்த்தல்-அறிதல், இளைத்தல், தரித்திரமடைதல், மெலிதல்.
எய்ப்பன்றி - முட்பன்றி.
எய்ப்பாடி - வேடரூர்.
எய்ப்பில்வைப்பு-தான் தளர்ந்தும் பிறரைத் தாங்கல்.
எய்ப்பு - இளைப்பு, பலவீனம்.
எய்யாமை - அறியாமை.
எரல் - சமுத்திரகண்டி.
எரி - எரியென்னேவல், கந்தம், கேட்டை நாள், தீ, நரகம், நெல்லிச்சாய்க் கந்தகம், பிரபை, புனர்பூசம்.
எரிகரும்பு - விறகு.
எரிகாசு - அகிற்கட்டைகளிலொன்று. அஃது காசுக்கட்டி.
எரிகுஞ்சி - செம்மயிர்.
எரிகுடலன் - மிகு பசியுள்ளவன்.
எரிகுன்மம் - ஒருநோய்.
எரிகொள்ளி - கொள்ளிக்கட்டை.
எரிகலக்காம்போதி - ஓரிராகம்.
எரிசனம் - நரகத்திருப்போர்.
எரிசினம் - கடுங்கோபம்.
எரிசுடர் - அக்கினி, செவ்வொளி, விளக்கு.
எரிச்சல்-அழற்றல், உறைப்பு, எரிதல், கோபம், பொறாமை.
எரிச்சல்விஷபாகம்-ஒருவகை விஷபாகநோய்; அதுவாயிலுலிரத்தம்வீழ்தல்.

எரிச்சல், கோழை, சுவாசம், மார்பி லடைப்பு, விரணம், விரணத்தில் மா மிசவளர்ச்சி, குற்றல், கட்டிபோல் நெஞ்சிற்புரளல், பேதி, வீக்கமென் னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

எரிதயிலம் - எரித்தெடுக்குந் தயிலம்.

எரிதல் - அழற்றல், அனற்றல், நீச்சு வாலித்தல், பிரகாசித்தல், வெந்தற் றுப் போதல்.

எரித்தல் - எரியச்செய்தல்.

எரித்திங்கள் - ஆவணிமாதம்.

எரிநாகம் - ஒருநாகம்.

எரிநாள் - கார்த்திகைநாள்.

எரிபடுவன் - ஒருநோய், பிளவை.

எரிபந்தம் - எரிவந்தம், தீவர்த்தி.

எரிபிடாரி - எரிச்சற்காரன், ஒரு தே வதை.

எரிபித்தம் - ஒருவகைப் பித்தநோய். அது அடித்தொடை, பாதம், கண், உள்ளங்கால், உள்ளங்கையாகிய இவ் விடங்களி லெரிச்சல், காறுமுதவா கிய இவ்விடங்களில் வறவறப்பு, மு ழங்கை முழங்காலாகிய இவ்விடங்க ளில் விருவிருப்பு, சீதள ஸ்தானத்தி லுங் குளிர்ந்தகாற்றிலும் விருப்பமா கிய இக்குணங்களை யுண்டாக்குவது.

எரிபுழு, எரிபூச்சி } கரியமயிர்க்குட்டி.

எரிபொழுது - இலக்குபொழுது, செவ் வானப்பொழுது.

எரிப்பு - எரித்தல், பொருமை.

எரிப்புரம் - நரகம்.

எரிமணி - பிரகாசமுள்ள மணி.

எரிமருந்து - சுடுமருந்து.

எரிமுகம் - கோலத்தோற்றமுள்ள முகம்.

எரிமுகி - சேங்கொட்டைமரம்.

எரிமுட்டைப்பீநாறி - வெதுப்படக்கி.

எரியல் - எரிதல், எரிந்தது, பிரகாசித்தல்.

எரியவிட்டமருந்து - நீற்றினபஸ்பம்.

எரியவிழித்தல் - கோபத்தோடு பார்த்தல்.

எரியிடுதல் - எரியவைத்தல்.

எரிவட்டம் - நாகவட்டத்தொன்று.

எரிவண்டு - கண்ணிலடிக்கும் வண்டு, பட்டவிட மெரிகிறவண்டு.

எரிவந்தம் - எரிச்சல், மிகவெறிக்கும் ஒருநோய்.

எரிவரியன் - ஒருபாம்பு.

எரிவனம் - சுடுகாடு.

எரிவிழித்தல் - கோபித்துப்பார்த்தல்.

எரிவு - அழற்சி, எரிதல், கோபம், பொ றாமை.

எரு - சாணி, வயலுக்கிடுமெரு.

எருக்கட்டல் - கிடைவைத்தல்.

எருக்கட்டு - கிடைவைக்கை, கிடைவை த்தகொல்லை.

எருக்கட்டுதல் - கிடைவைக்குதல்.

எருக்கம், எருக்கலை } எருக்கு.

எருக்கல் - கொல்லல், சமத்தல், வெட் டல்.

எருக்கனம்-ஆனிலை, எருவிருக்குமிடம்.

எருக்கு - எருக்கலை, எருக்கென்னேவல்.

எருக்குதல் - எருக்கல்.

எருச்சாட்டி - எருப்பட்டநிலம்.

எருதடித்தல் - உழுதல், போரடித்தல்.

எருது - இடபம், இடபவிராசி.

எருதுமறித்தல் - பசுவுடனே எருது புணர்தல்.

எருதுரப்பல் - எருதைப்போற் சத்தித் தல், எருதை யதட்டியோட்டல்.

எருத்தங்கோட்டல் - தலைகவிழ்தல்.

எருத்தடி - ஈற்றயலடி.

எருத்தம் - தாவு, பிடர்.

எருத்து - ஈற்றயல், பிடர்.

எருத்துக்காரணம் - எருகாரணம்.

எருத்துக்காளை - இளவெருது.

எருத்துத்திமில் - விடைமுரிப்பு.

எருத்துப்பூட்டு - ஏர்ப்பூட்டு.

எருத்துமாடு - எருது.

எருத்துவாலன் - ஒருகுருவி.

எருந்தி - இப்பி, எராமுட்டி.

எருந்து - உரல், கிளிஞ்சில்.

எருமணம்-சாணிநாற்றம், செங்குவளை.

எருமுட்டை - எருவரட்டி.

எருமுட்டைப்பீநாறி - வெதுப்படக்கி.

எருமை - காரா.

எருமைக்கடா - பகடு.

எருமைக்கற்றாழை - ஒரு கற்றாழை.

எருமைக்காஞ்சொறி-ஒரு காஞ்சொறி.

எருமைக்கொற்றன் - ஒருகொடி.

எருமைச்சுறா - ஒருமீன்.

எருமைத்தக்காளி - ஒருசெடி.

எருமைநாகு - எருமைப் பெண்கன்று.

எருமைநாக்கள்ளி - ஒருகள்ளி.

எருமைநாக்கி - ஒருமீன், சாணக்கி.
எருமைநாக்கு - ஒருமீன்.
எருமைநாத்தொட்டி - வைப்புப் பாஷாண முப்பத்திரண்டினென்று.
எருமைப்பாச்சோற்றி - ஒருபூண்டு.
எருமைப்பால்குடித்தவன் - மந்தன்.
எருமைமுல்லை - ஒருமுல்லை.
எருமைமுல்லைத்தீவு - யாழ்ப்பாணத்தில் பூர்வீகப்பேர்.
எருமைமுன்னை - ஒருவகை முன்னைமரம்.
எருமையூர்தி - யமன்.
எருவடைத்தல் - எருப்பெய்தல்.
எருவராட்டி - காய்ந்த எரு.
எருவாரம் - எருச்செய்கைப்பங்கு.
எருவிடுவாசல் - குதம்.
எருவை - உதிரம், ஒருபூடு, சழுகு, கழுதை, கொறுக்கை, கோரை, கோரைக்கிழங்கு, செம்பு, நாணல், யானை.
எலி - கள்ளிமரம், பூரநாள், மூடிகம்.
எலிசுக்கிலவிஷநிதானம் - ஒருவகை நோய். அது எலிகள் புணருங்காலத்தில் அச்சுக்கிலம் யார்மீதாவது சிதறில் அவ்விடத்தில் கிரந்தி, வீக்கம், மச்சங்களெழும்பல், பிரமை, அரோசகம், குளிர்காய்ச்சல், கீல்நோவு, நடுக்கம், உரோமச்சிலிர்ப்பு, மூர்ச்சை, சிலேஷ்மாதிக்கம், வாந்தி, தாக முதலிய குணங்களை யுண்டாக்குவது.
எலிச்செவி } சவரியார் கூந்தல்.
எலிச்செவித்தந்தி }
எலித்திசை - வடமேற்றிசை.
எலித்துருமம் - தான்றி.
எலிப்பகை - பூனை.
எலிப்பனை - எலிப்புற்று.
எலிப்பாகம் }
எலிப்பாஷாணம் } காட்டாமணக்கு.
எலிப்பாலை }
எலிப்பிடுக்கன் - ஒருபூடு.
எலிப்புலி - பூனை.
எலிப்புற்று - எலிவளை.
எலிப்பேதம் - எலிகளினது பேதம்; அது பதினெண்வகைப்படும். அவை இலாலசம், சபளம், புண்டரம், அரிதம், சிகுரம், அசிதம், கஷாயதந்தம், குணகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம், கபோதம், உந்துரு, பலினி, இரசாலம் என்பன.
எலிப்பொறி - எலிப்பிடிக்குஞ்சூத்திரம்.
எலிமயிர் - புடவைநெய்தற் கருவியாயுள்ளது.
எலியாமணக்கு - ஒருமரம்.
எலியொட்டி - ஒட்டொட்டி.
எலியோடி - உருட்டுமரம், முகட்டுப் பாய்ச்சு.
எலியோட்டி - குருக்குப்பூடு.
எலிவளை - எலிப்புற்று.
எலு - கரடி, தோழமை.
எலுநன் - சோழன்.
எலுமிச்சை - எலுமிச்சை.
எலும்பன் - எலும்பு புறப்பட்டவன்.
எலும்பி - ஒருமரம்.
எலும்பிலி - ஒருமரம், புழு.
எலும்பு - என்பு.
எலும்புக்கூடு - எலும்புக்கோவை, கங்காளம்.
எலும்புக்கோறை - எலும்புத்துவாரம்.
எலும்புச்சீப்பு - தந்தச்சீப்பு, விலாவெலும்பு.
எலும்புருக்கி - ஒருநோய், ஒருபூடு, ஒருமரம்.
எலும்பூறல் - ஒடிந்தவெலும்பு கூடல்.
எலுவன் - தோழன்.
எல் - இகழ்ச்சிக்குறிப்பு, இரவு, ஒளி, சூரியன், நாள், பகல், வெயில்.
எல்லப்பநாவலர் - ஒரு தமிழ்ப்புலவர்.
எல்லம் - இஞ்சி.
எல்லரி - சைமணி.
எல்லவர் - எல்லாரும்.
எல்லவன் - சந்திரன், சூரியன்.
எல்லன் - ஒருபுகழாளன், இவன் குன்றத்தூரிலிருந்த ஆற்றூர்ப் பரமேசுரன் மகன். இவன் தமிழ் வல்லோர்க்குப் பெருநிதி வழங்கியும், தன்மீது பட்சமுடையவனாயிருந்த பாண னிறந்தபோது அவனுடலைச் சுமக்கப் புகுந்தும் பெரும்புகழ்படைத்துத் தொண்டைநாட்டில் விளங்கினவன்.
எல்லாம் - முழுவதும்.
எல்லாரும் - சகலரும்.
எல்லி - இராத்திரி, சூரியன்.
எல்லிநாதன் } சந்திரன்.
எல்லிநாயகன் }
எல்லிப்பகை - சூரியன்.
எல்லிமலை - தாமரை.

எல்லிமன் - எல்லிநாதன்.
எல்லியறிவான் - கோழிச்சேவல்.
எல்லீரும் / எல்லீர் - நீவிர்யாவரும்.
எல்லு - சூரியன், நாள்.
எல்லேமும் / எல்லேம் - நாமெல்லோரும்.
எல்லை - அவதி, அளவு, கூப்பிடுதூரம், சூரியன்,நாள்,பகற்பொழுது,முடிவு.
எல்லைக்கட்டுதல்-தீர்த்தல், முடிவுகட்டுதல்,வரம்புவைத்தல்,வரையறுத்தல்.
எல்லைகுறித்தல் - அவதிகுறித்தல் எல்லைகட்டுதல்.
எல்லைகட்டு - இறைக்கட்டு, எல்லைமானம், கட்டுப்பாடு, வரம்பு.
எல்லைக்கல் / எல்லைக்கால் - எல்லையறிய நிறுத்துங்கல்.
எல்லைக்காவல் - எல்லைமானக்காவல்.
எல்லைக்குறிப்பு - எல்லையடையாளம்.
எல்லைகெட்டநேரம் - ஒவ்வாதநேரம்.
எல்லைக்கேடு-சமயமொவ்வாமை, ஸ்தானமொவ்வாமை.
எல்லைச்சேரி - ஒவ்வாமை.
எல்லைத்தீ - ஊழித்தீ.
எல்லைப்படுத்தல் - அளவுபடுத்தல், எல்லைக்கட்டுதல், தீர்த்தல்.
எல்லைப்பிடாரி - ஒருதேவதை, சந்திப்பிடாரி.
எல்லைப்பொருள் - ஒரு பொருளினதுநிசையளவைக் குறிப்பதற்கு எல்லையாய் நிற்கும்பொருள் (உ-ம்) உத்தரார்த்த கோளத்திற்குத் தெற்சமரேகை.
எல்லைமானம் - அளவு, எல்லை.
எல்லையிலான் / எல்லையிலி / எல்லையில்லான் - கடவுள், கற்பனுநிதன்.
எல்லையின்மை - அளவின்மை.
எல்லையோடல்-எல்லையைச்சுற்றிவரல்
எல்லோ - அதிசயவிரக்கச்சொல்.
எல்லோமும் / எல்லோம் - நாமெல்லாரும்.
எல்லோரும் - சகலரும்.
எல்லோன் - சூரியன்.
எல்வை - காலம், நாள்.
எவட்சாரம் - வெடியுப்பு.
எவண் - எவ்விடம்.

எவரும் - எல்லாரும்.
எவற்று - எது.
எவன்-என்னை,யாது,யாவன்,யாவை.
எவையும் - யாவையும்.
எவ் - எவை.
எவ்வது - எது, எவ்வண்ணம்.
எவ்வநோய் - தீராதநோய.
எவ்வம் - இகழ்ச்சி, குற்றம், தனிமை, தீராநோய், துக்கம், துன்பம்.
எவ்வரும் - எவரும்.
எவ்வளவு - எத்துணை.
எவ்வனம் - இளமை, மதர்த்தல்.
எவ்வாறு - எவ்வழி.
எவ்விடம் - எந்தவிடம்.
எழல் - எழும்பல், துக்கம்.
எழாலும்-மயிரொழிந்தபறவையினுண்.
எழால்-ஒருபட்சி, மிடற்றோசை, யாழ், யாழ்நரம்பினோசை.
எழிலறிதல் - அசுகைமட்டுக் கட்டுதல், குறிப்பறிதல்.
எழிலி - கடையெழுவள்ளலிலொருவன், மேகம்.
எழில்-அசுகை, அழகு, இளமை, வண்ணம், வலி.
எழிற்கை - அழகுபெறக் காட்டுங்கை.
எழினி - இடைச்சீலை, திரைச்சீலை.
எழினிஅதிகமான்-ஒருவள்ளல், இவன் குதிரை மலையைத் தன்னகத்தேயுடைய ஒரு சிறுநாட்டுக் கதிபனுயிருந்தவன்.
எழு - உருக்கு, உழலைமரம், எழுவென்னேவல், எழு, ஒருமரம், கம்பம், வலைதடி.
எழுகடல்-எழுவகைக்கடல். அது உப்பு, தேன், கருப்பஞ்சாறு, தயிர், நெய், பால், சுத்தோதகமென்பன.
எழுகூற்றிருக்கை-ஒருபிரபந்தம்; அது எழரைத்தட்டு விளையாட்டுச் சிறப்புக்கூறுவது.
எழுகை - எழுதல்.
எழுச்சி-இறுமாப்பு, எழும்புதல், எறிச்செல்லல்,கண்ணேபிஞென்று,காதிலெழும்பு மோர்புண், மனமுயற்சி.
எழுச்சிக்கொடி - கண்ணினிற் படரும் ஒருநோய்.
எழுச்சிபாடுவோன்-தேவராசர் முதலியோர்க்குப்பள்ளியெழுச்சிபாடுவோன்.

எழுச்சிரமுரசம் - தேவர்ரசரிவர்களை வைகறையிலெழுப்பமுழக்குமுரசம்.
எழுச்சியிலை - கண்ணோய் மருந்திலை, பலவனிலை. [யாதி.
எழுஞாயிறு - உதயாதித்தன், ஒரு வி
எழுதகம் - எழுதப்பட்ட ருபு, சித்திரக்கம்பி, சித்திரசொரூபம். [தல்.
எழுதல் - எழுதல், எழும்புதல், கிளர்
எழுதாக்கிளவி } வேதம்.
எழுதாமறை
எழுதாவெழுத்து - அச்செழுத்து.
எழுநிலை எழுவகைத்நிலைகள்; அவை நாவல், இடலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்கரமென்பன.
எழுதுகோல் - எழுதுங்கோல், தூரியக்
எழுதுதல் - எழுதல். [கோல்.
எழுதுபடம் - கிழி.
எழுதுவரிக்கோல் - பத்திக்கற்று.
எழுதுவோன் - இலேசகன்.
எழுத்தடைத்தல் - எழுத்துக்களை யறைவருத்தடைத்தல்.
எழுத்ததிகாரம் - எழுத்திலக்கணம்.
எழுத்தந்தாதி - ஈற்றெழுத்தாதியாகப் பாடல், ஓரந்தாதி.
எழுத்தலங்காரம் - எழுத்திலோரியல்பு.
எழுத்தறப்படித்தல் - தீர்க்கமாய் வாசிக்கப் பயிலல்.
எழுத்தறிந்தநாதர் - திருவொற்றியூர் தியாகராயப்பெருமான்.
எழுத்தாணி - ஓலையிலெழுதுங்கருவி.
எழுத்தாணிப்பூடு - கூத்தன் குதம்பை எனும் பூடு.
எழுத்தாளர் - அறிஞர், எழுத்துக்காரர்.
எழுத்தானந்தம் - பாடற்குவிலக்கப்பட்டவெழுத்து. [தொன்று.
எழுத்திலக்கணம் - பஞ்ச விலக்கணத்
எழுத்திலாவோசை - எழுத்தொலிகாட்டாதஅசை. அது இரைச்சல் முதலியன.
எழுத்திலேன்சை - அக்கரம் விளங்கிநிற்குந்தொனி.
எழுத்து - அக்கரம் அட்டவணை, இலக்கணம், இலிகிதம், உடன்படிக்கைச் சீட்டு, சித்திரம், தலையெழுத்து.
எழுத்துக்காரன் - எழுதுகிறவன், புடவை முதலியவற்றிற் சித்திரந்தீட்டுவோன்.
எழுத்துகாரியஸ்தன் - எழுத்துக்காரன்.
எழுத்துக்கிறுக்கு - உடன்படிக்கை யெழுதுகை.
எழுத்துக்குற்றம் - எழுத்திலக்கணவழு, நச்செழுத்து முதலியன வருதல்.
எழுத்துக்கூட்டுதல் - எழுத்துக்களைப் புணர்த்தி வாசித்தல்.
எழுத்துச்சந்தி - எழுத்துக்களின் புணர்ச்சி.
எழுத்துச்சாரியை - ஒரெழுத்தான் வருஞ்சாரியை.
எழுத்துச்சுருக்கம் - ஓரணி; அது எழுத்துக்களை யிடைவிட்டெழுதி வாசிப் [பது.
எழுத்துநடை - எழுத்துவாசனை-
எழுத்துப்புடவை - சித்திரவஸ்திரம்.
எழுத்துப்பொருத்தம் - பாலன் முதலிய வெழுத்துத்தானப்பொருத்தம். பிறந்த நட்சத்திரத்திற்குப் பொருந்தப் பெயரிடுகை.
எழுத்துமடக்கு - ஓரணி. அது ஒரேயெழுத்து மடங்கிவரப் பாடுவது.
எழுத்துவர்த்தனம் - சித்திரக் கவியில் ஒன்று. அஃது எழுத்தெழுத்தாய்ப் பிரிக்கப் பொருள்பயப்பது.
எழுத்துவாசனை - எழுத்துநடை.
எழுத்துவேலை எழுதுந்தொழில், சிலையின் மீதெழுகை.
எழுநரகம் எழுவகை நரகங்கள். அவை கூடசாலம், கும்பிபாகம், அள்ளல், அதோகதி, ஆர்வம், பூதி, செந்தென்பன.
எழுநா - அக்கினி, கொடுவேலி.
எழுநாயித்திரன் - வாயு.
எழுந்தபடி - கிளைத்தபடி, நேரிட்டபடி.
எழுந்தமானம் - யோசனை பண்ணாமை.
எழுந்தருளிவிக்கிரகம் - வெளி கொண்டுவருகிற விக்கிரகம்.
எழுந்தருளுதல் - தோன்றல், பெரியோரெழுதல்.
எழுந்தருளுநாயகர் - உச்சவ விக்கிரகம்.
எழுந்திருத்தல் - எழுந்தருளுதல்.
எழுந்தேற்றம் - உற்சவம், எழுந்தமானம், எழுந்தருளல், துணிவு, பெருமை.
எழுபவம் - உயர்பிறப்பு, எழுபிறப்பு.
எழுபிறப்பு எழுவகைப்பிறப்பு, அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன.

எழுப்பம் - உயர்ச்சி, எழுச்சி, நடமாட்டம், வளர்ச்சி.
எழுப்பல் - எழுப்புதல்.
எழுப்பில் - எற்றல்.
எழுப்பிவிடுதல் - எழும்பப் பண்ணுதல், முயற்சியுண்டாக்குதல்.
எழுப்பு - எழுப்புதல், எழுப்பென்னேவல்.
எழுப்புதல் - எழுப்பிவிடுதல், கிளப்பிவிடல், சண்டைமூட்டல்.
எழுமதம் - எழுவகைமதங்கள். அவை பிறர்மதத்திற்குத் தானுடன்படுதல், பிறர்மதத்தைத்தான்மறுத்தல், பிறர் மதத்திற்குடன்பட்டுப் பின்பு மறுத்தல், தானே யொருபொருளை யெடுத்துநாட்டி அதனை வருமிடந்தோறு நிறுத்துதல், இருவரால் விரோதமாகச் சொன்னப்பட்ட இரண்டனுளொன்றனிடத்துத் துணிதல், பிறர் நூலிலுள்ள, குற்றத்தை யெடுத்துக் காட்டுதல், பிறர் மதத்திற் குடன்படானுகித் தன் மதத்தையே கொள்ளுதல் என்பனவாம்.
எழுமலை - எழுவகை மலைகள். அவை கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன.
எழுமான்
எழுமான்புலி } ஒருபூடு.
எழுமுகனை - துவக்கம், முதல்.
எழுமேகம்-எழுவகைமேகங்கள். அவை சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணமென்பன.
எழுமை - உயர்ச்சி, ஏழு, ஏழ்பிறப்பு.
எழும்பல் - எழும்புதல், கைத்தோம்பு.
எழுவரைக்கூடி - சவ்வீரபாஷாணம்.
எழுவாயுருபு-பெயர்வேற்றுமையுருபு.
எழுவாயெழுஞ்சனி - மகநாள்.
எழுவாய் - ஆதி, முதல் வேற்றுமை.
எழுவாய்வேற்றுமை - முதலாம் வேற்றுமை.
எழுவான் - கிழக்கு.
எளிசு-அருமையற்றது, இலேசானது, எளியது.
எளிஞர் - எளியவர்.
எளிதரவு - எளிமைத்தனம்.
எளிது - எளிசு.

எளிமை - தரித்திரம், தளர்வு, தனிமை [தாழ்வு.
எளியது - எளிமையானது.
எளியர்
எளியவர் } ஈனர், தரித்திரர், திராணியற்றவர்.
எளியவிலை - அற்பவிலை.
எளிவரல் - எளிதாகவரல்.
என் - என்னு, என்னென்னேவல்.
என்கல்
என்குதல் } இகழ்தல்.
என்ன - உவமைச்சொல்.
என்னல் - அவமதிச்சிரிப்பு, இழிவாகப் பேசல், தள்ளல், நகைத்தல், நிந்தை.
என்னற்பாடு - இகழ்ச்சி.
என்னிடை - என்னளவு.
என்னுச்செவி - ஒருபூண்டு.
என்னுண்டை - ஒரு சிற்றுண்டி.
என்னுதல் - இகழ்தல், தள்ளுதல்.
என்னுருண்டை - ஒரு சிற்றுண்டி.
என்னோரை - என்னுச்சாதம்.
எறி-எறிகை, குறிப்பாகச்சொல்லுகை.
எறிகாலி - காலாலெறியும் பசு.
எறிகால் - பெருங்காற்று.
எறிசக்கரம் - எறியுஞ்சக்கரம்.
எறிச்சலூர்மலாடனுர்-ஒருபுலவர்; இவர் கடைச்சங்கக்காலத்துள்ளோர்.
எறிதல் - அடித்தல், உதைத்தல், குத்தல், நால்வகையூறிலொன்று, வீசல், வெட்டல்.
எறித்தல் - ஒளிவீசல், வெயில்காய்தல்.
எறிபடை - கையிடுபடை.
எறிபத்தநாயனுர் - சிவனடியார்களுளொருவர். இவர் சிவகாமியாண்டார் சுவாமிக்குச்சாத்தக் கொண்டு சென்ற புஷ்பங்களை புகழ்ச்சோழ நாயனுருடைய யானையானது பறித்துச் சிந்தியது கண்டு ஓடி அதன் துதிக்கையை வாளினுல் வெட்டினவர். அது கண்ட புகழ்ச்சோழநாயனுர் தமது யானைசெய்த குற்றத்திற்காகத் தம்மையும் வெட்டுகவென்று தமது வாளைக்கொடுக்க எறிபத்தர்வாங்கித் தமதுகட்டியை அரிய வெத்தனித்தனர். அப்பொழுது பரமசிவனது திருவருளா லோர் அசரீரி யுண்டாக யானையு முயிர் பெற்றெழ இருவரும் சுவாமியைத் துதித்துப் போயினர். இவர்க்கு ஊர் கருவூர்.

எறிப்பு ஒளிசெய்தல், கோடை, பிரசம், விம்பித்தல், வெயிலெறிக்கை.
எறிமணி - சேமக்கலம்.
எறிமுத்து - வசூரிநோயி லிடையிடை போட்ட முத்து.
எறியாயுதம் - வேல்முதலிய படை.
எறியால் - ஒருமீன்.
எறியீட்டி - எறியும் வல்லயம்.
எறிவலயம் - எறிவளையம்.
எறிவளையம் - சக்கராயுதம்.
எறிவு - எறிதல்.
எறும்பி - யானை.
எறும்பு - பிபீலிகை.
எறுழி - காட்டுப்பன்றி, பன்றி.
எறுழ் - தடி, தண்டு, தூண், வலி.
எற்பாடு-மாலைப்பொழுதுக்கு முன்பத்து நாழிகைநேரம்.
எற்றல் - அடித்தல், அறுத்தல், இறைமரம், எதிர்த்தல், மறிதல், எற்றுதல், குத்தல், கொல்லல், தட்டப்படுதல், வெட்டல்.
எற்றல்மரம் - நீர் இறைமரம்
எற்றற்கொட்டு - இறைமரக்கொட்டு.
எற்றற்பட்டை - சீலாப்பட்டை.
எற்றித்தல் - இரங்கல்.
எற்று-இரக்கக்குறிப்பு, எத்தன்மைத்து, எறிதல், எற்றென்னேவல், எத்தல்
எற்றுதல் - அடித்தல், எறிதல், எத்தல், கொல்லல், நீர் முதலியவற்றையெற்றல், புடைத்தல், வெட்டல்.
எற்றநூல் - மரக்கோட்டம்பார்க்குநூல்.
எற்றே - இரக்கச்சொல்.
எற்றை - என்று.
எற்றோ - அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், எத்தன்மைத்தோ.
எற்றோகரம் - சூரியோதயம்.
என-என்க, என்னுடையது, ஒருவகையுருபு, ஓரெச்சச்சொல் (உ-ம்) ஒல்லென வொலித்தது, எண்ணிடைச்சொல் (உ-ம்) பழக பாவம் அச்சம் பழியென நான்கு.
எனது - என்னுடையது.
எனல் - என்றல்.
எனவெஞ்சணி - எனவென்னெச்சம்.
எனா - எண்ணிடைச்சொல் (உ-ம்) சாத்தனெனா கொற்றனெனா.
எனாது - எனது.
எனில் - என்று சொல்லில்.
எனை - எத்தன்மைத்து, எவ்வளவு.
எனைத்து - எத்தன்மைத்து, எவ்வளவு.
எனைத்துணை - எவ்வளவு.
எனையவன் - எத்தன்மையன், எவன்.
எனைவரும் - யாவரும்.
எனைவீர் - எல்லாநீர்.
எனவேமும்
எனைவேம்
எனைவோமும்
எனைவோம் } எல்லோம்.
எனைவோரும் - யாவரும்.
என்-இகழ்ச்சிக்குறிப்பு, இடைச்சொல், என்ன, யாவை, ஐயக்கிளவி, சொல்லுகை, தன்மையொருமைச்சொல்.
என்கு
என்கும் } என்று சொல்லும்.
என்பாபரணன் - சிவன்.
என்பித்தல் - அத்தாட்சிப் படுத்தல், என்று சொல்வித்தல்.
என்பிலி - புழு.
என்பு - எலும்பு, புலி.
என்புதின்றி - கழுதைக்குடத்தி.
என்புருக்கி - எலும்புருக்கி, ஒருபூடு.
என்மர்
என்மனார் } என்று சொல்லுவார்.
என்றவன் - சூரியன்.
என்றா - எண்ணிடைச்சொல்.
என்றிசினோர் - என்றுசொல்லுவார்.
என்று - எந்நாள், சூரியன்.
என்றும்
என்றூழி } எப்போழ்தும்.
என்றூழ் - கோடை, சூரியன், வெயில்.
என்ன-உவமைச்சொல், எத்தன்மைய, என்றுசொல்க, யாவை.
என்னல் - என்றுசொல்லல்.
என்னே - அதிசயவிரக்கச்சொல்.
என்னை - என்றந்தை, என்ன, விரவுத்திணையொருமைத் தன்மைச் செயப்படுபொருள்.
என்னைப்பெற்றதாயார் - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருநின்றவூரிற்கோயில்கொண்ட இலக்குமி.
என்னோ-அதிசயவிரக்கச்சொல், இகழ்ச்சிக்குறிப்பு, இரக்கச்சொல், ஐயக்கிளவி.

—

ஏ

ஏ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் ஏ எனும் எட்டாம் எழுத்து, உயிர் முயிர்ச்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறத்தலோடு அடிநாவின் விளிம்பு அண்பல்லினை உறப்பிப்பதும் அகர இகரக் கூறுகள் சந்தித்துப் பிறப்பதுமான ஒருநெட்டுயிர், சிவன், செலுத்துதல், விஷ்ணு, அடே, அம்பு, இகழ்ச்சிக்குறி, இசைநிறை, ஈற்றசை, எண்ணின்குறிப்பு (உ-ம்) நிலனேநீரே, எதிர்மறை(உ-ம்)பொய்யேஒரிடைச்சொல் ஒரெழுத்து, தேற்றக்குறிப்பு (உ-ம்) நானே வந்தது, பிரிவின் குறிப்பு (உ-ம்) இவற்றுள்ஒன்றேநன்றவினவுக்குறிப்பு (உ-ம்) நாவேவந்தது.

ஏஏ - இகழ்ச்சிக்குறிப்பு.

ஏககாயனி - ஒரு வருடத்துக் கடாரி.

ஏககுண்டலன் - குபேரன், ஆதிசேடன், பலராமன்.

ஏககுரு - உடன்கற்றோன்.

ஏககோசம் - மொத்தப்பட்டயம்.

ஏகசகடு - ஒ ரொ ட் டு, சரிசரிவிலை, மொத்தம்.

ஏகசக்கரபுரம் - இது, பாண்டவர்களும் குந்தியும் அரக்குமாளிகை ஆபத்துக்குத்தப்பிப் பிராமண வேடம்பூண்டு போய்ச்சேர்ந்த அக்கிரகாரம்.

ஏகசக்கிரம் - தனியரசாட்சி, ஒருபுரம்.

ஏகசக்கிரவர்த்தி - சுயாதிபதி, கடவுள்.

ஏகசக்கிரவனம்-பாண்டவர்கள் வாசஞ்செய்த ஒருவனம்.

ஏகசக்கிரன்-தனுபுத்திரருளொருவன்.

ஏகசக்கிராதிபதி - ஏகசக்கிரவர்த்தி.

ஏகசமன் - ஒருசரி.

ஏகசரம் - காண்டாமிருகம்.

ஏகசர்மகுஷ்டம் - ஒருவகைக் குஷ்டநோய். அதுசரீரத்தினதுசருமமெல்லாம் யானைத் துதிக்கையினது சருமம்போற்றடித்துப் பலமாய் வலுவுடன் சுரசுரத்துப் பார்வைக்கு விகாரமாயிருப்பது, அதனோடு வியர்வும், கைகால்களிலுள்ள விரல்கள் குறைதலுமுண்டாகும்.

ஏகசாதர் - சகோதரர்.

ஏகசாதி - சூத்திரன், ஒரு பிறப்புடையோன், ஒரேசாதியான்.

ஏகசித்தை - ஒருமனம், ஒன்றிப்பு.

ஏகசிருங்கம் - காண்டாமிருகம், ஒரே கொம்பையுடையது.

ஏகசிருங்கன் - கிருஷ்ணன்.

ஏகசுபாவம்-ஒரேதன்மை, சமமானதன்மை.

ஏகசூத்ரம் - உடுக்கை, ஒருவகை வைடூரியம்.

ஏகசூனு - ஒரேபெறுனபிள்ளை.

ஏகதந்தன் - விநாயகன். இவன்தன் ஒரு கொம்பை ஒடித்தெடுத்துக்கொண்டு கயமுகாசுரனைக் கொன்றான், விநாயகன், கயமுகாசுரன்.

ஏகதமன் - அநேகருள் ஒருவன்.

ஏகதரன் - இருவருள் ஒருவன்.

ஏகதனன் - ஒரேமனதாயிருப்பவன்.

ஏகதன் - பிரமமானசபுத்திரருள் ஒருவன்.

ஏகதானன் - ஒரேமனமுள்ளவன்.

ஏகதாளம் - சத்ததாளத்தொன்று. அது ஒரொத்துடையது.

ஏகதிரீயத்துவம் - ஒன்றில் மூன்றுதத்துவங் கொண்டிருத்தல்.

ஏகதிருஷ்டி } காக்கை.
ஏகதிருட்டி }

ஏகதரன் - ஒரு குருவினிடத்தில் வேதமுதலியவற்றைக் கற்றுக்கொண்டவன்.

ஏகதுராவகம் - வண்டியிலாவது கலப்பையிலாவது ஒன்றைச் சுமக்கின்ற வெருது.

ஏகதுரீனன் - ஏகதுரன்.

ஏகதேகம் - ஒருடம்பாக்கப் பட்டது, சிறப்பாகச் செய்யப்பட்டது, புதனென்னும் கிரகம், யௌவனம்.

ஏகதேசக்காரன் - மாறுபாடுள்ளவன்.

ஏகதேசம் - அரிது, அலங்காரத்தொன்று, ஒட்டுக்கு, ஓரிடம், சந்தேகம், பங்கு, முன்பின்னுகல், வேற்றுமை, வித்தியாசம்.

ஏகதேசவுருபகம் } ஓரலங்காரம். அஃது ஒரே யங்கத்தை யுருவகஞ் செய்வது.
ஏகதேசவுருவகம் }

ஏகதேவன் - கடவுள், சிவன், புத்தன்.
ஏகதொகை - முழுத்தொகை.
ஏகத்துவம் - ஒரு பொருளாயிருக்குந் தன்மை.
ஏகநாதன் }
ஏகநாயகன் } கடவுள், சயாதிபதி.
ஏகபதம் - ஒற்றைவழி.
ஏகபதி - வழி.
ஏகப்பத்திரிகை - வெண்டுளசி.
ஏகப்பத்தினி - ஒரேமனைவி, பதிவிரதை.
ஏகபந்தனம் - ஒரேகூட்டமாய்க் கூடுதல், ஒன்றிப்பு.
ஏகபாதம் - நான்கடியுமோரடியாய் வருங் கவி, ஒரிருக்கை.
ஏகபாதவாதனம் - விசேஷபத்தி நிலையிலொன்று,
ஏகபாதன் - சிவன்.
ஏகபாவம் - ஒரேதன்மை.
ஏகபாவனை - ஒருமைப்பாவனை.
ஏகபிங்கலன் }
ஏகபிங்கன் } குபேரன்.
ஏகபிண்டன் - நெருங்கியவுறவன்.
ஏகபிராணன் - ஒரேபிராணன்.
ஏகபுத்திரன் - ஒரேபுதல்வன்.
ஏகபோகம் - இட்டம், இருவருமொத்த போகம், ஒருதன்மைத்தானவின்பம், சுகதுக்கங்களைச் சமமாக நினைக்கை. மனநின்படி யனுபவிக்கை.
ஏகபிழை - முற்றம்பிழை.
ஏகப்பெருவெள்ளம் - ஒருமிக்க மூடிய பெருவெள்ளம்.
ஏகமாய் - ஒன்றாய்.
ஏகம் உடன்பாடு, ஒப்பில்லாதது, ஒன்றி, தனிமை, திப்பிலி, முழுவதும்.
ஏகம்பட்சசாரம் - ஒருவகையுலோகம்.
ஏகம்பவாணன் - ஆற்றூரில் விளங்கிய ஒரு வேளாண் பிரபு.
ஏகம்பன் - கச்சிப்பதீசன்.
ஏகராத்ரன் - ஒருநாளிற் செய்து முடிக்கும் யாகம், மருகன்.
ஏகரூபன் - கடவுள்.
ஏகலவன் }
ஏகலவ்வியன் } துரோணருடைய உருவத்தின் முன்னர் வில்வித்தைபயின்றவோர் கிராதன். துரோணர் இவனுக்கு வில்வித்தைக் கற்றுக்கொடுக்க உடன்படாததாலிவ்வாறு செய்தான்.
ஏகலன் - வசுதேவன்றம்பி, தேவசிரவசன்மகன்.
ஏகலிங்கன் - குபேரன்.
ஏகலைவன் - பாண்டவரிருந்த காலத்துள்ள ஒரு வேடன்.
ஏகல் - உயர்ச்சி, நடத்தல், போகல்.
ஏகவசனம் - ஒருமைச்சொல், ஒரேமொழி, மெய்.
ஏகவத்தவாதனம் ஏகபாதவாதனமாகக் கிடந்து கையை நீட்டியிருப்பது.
ஏகவஸ்து - கடவுள்.
ஏகவாசம் - ஆலமரம், கூடியிருத்தல், தனியிருப்பு.
ஏகவாரி - சிறுசுரிகை.
ஏகவிப்பிரன் - ஒற்றைப் பிராமணன்.
ஏகவீரம் - ஒருவகைமரம், மான்.
ஏகவீரன் - அருச்சுனன், ஒப்பற்றவீரன், கர்ணன், ஸ்ரீராமன்.
ஏகவெளி - மறைவிலாவெளி.
ஏகவேணி - ஒற்றைச்சடை, ஒற்றைச் சடையாள், மூதேவி.
ஏகன் - ஒருவன், கடவுள், சிவன்.
ஏகாகாரம் - ஒரேரூபம்.
ஏகாகி - தனித்திருப்பவன்.
ஏகாக்கம் - காக்கை.
ஏகாக்காரம் - ஒற்றையெழுத்து.
ஏகாக்ஷி - ஒற்றைக்கண்ணன், குபேரன்.
ஏகாக்கிரம் }
ஏகாகிருதை } ஒரேநோக்கம்.
ஏகாங்கம் - சந்தனம், தனிமை, புதன்.
ஏகாங்கவாதம் - ஒருவகைவாதநோய்.
ஏகாங்கவுருவகம் - ஓரலங்காரம். அஃது ஒன்றனங்கம் பலவற்றையும் வாளாகூறியோரங்கத்தையேயுருவகிப்பது
ஏகாங்கி - சந்நியாசி, தனிமையாயிருப்பவன், பிரமசாரி.
ஏகாங்குலம் - மூத்திரம்.
ஏகாசம் - உத்தரீயம், போர்வை.
ஏகாட்சரி - பிரணவம், புவனைசத்தி, மிறைக்கவியிலொன்று. அஃது ஒருவரியெழுத்தானோர்கவி முடிவது.
ஏகாட்சரிகக்கிஷம் }
ஏகாட்சரிகட்சம் } ஒரு மாந்திரிக நூல்.
ஏகாட்சி - ஒற்றைக்கண்ணன், காக்கை, சுக்கிரன்.
ஏகாண்டம் - ஆகாயம், பூர்ணம், வெளி.
ஏகாதசம் - பதினொன்று.

ஏகாதசருத்திரர்கள் - பதினோருருத்தி [ரர்.
ஏகாதசி - பதினொன்றாந்திதி.
ஏகாதசிப்புராணம் - ஒருபுராணம்.
ஏகாதிபதி - தனியாட்சிபண்ணுபவன்.
ஏகாதிபத்தியம் - தனியரசாட்சி.
ஏகாத்தியம் - தனிச்செங்கோன்மை.
ஏகாந்தசேவை - தனிச்சேவை, தனித்துக் குருவைப்பணிகை.
ஏகாந்தஸ்தலம் - தனித்தவிடம்.
ஏகாந்தமண்டபம் - கொலுமண்டபம், தனியிருக்குமண்டபம்.
ஏகாந்தம் - சந்தனம், தனித்திருக்குமிடம், தனித்து யோகஞ்செய்கை, தனிமை, புதன்.
ஏகாந்தவாழ்வு - ஒப்பற்றவாழ்வு, தனிவாழ்வு, துறவியின்வாழ்க்கை.
ஏகாபை - ஒருவருடத்துக்கடாரி.
ஏகாம்பரநாதர் - திருவேகம்பத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
ஏகாம்பரன் - சிவன்.
ஏகாயநகதன் - ஒரேமனதாயிருப்பவன்.
ஏகாயநன் - அசையா மனமுள்ளவன், ஏகாயநமதப் பிரவர்த்தகன்.
ஏகாரம் - ஒரெழுத்து, பொன்.
ஏகாரவல்லி - பலா, பாகல்.
ஏகார்க்களம் - ஏர்பூட்ட நாட்பார்க்கை.
ஏகார்த்தம் - ஒரேநோக்கம், ஒரேயர்த்தம், ஒன்றனை.
ஏகாலி - சவுக்காரம், வண்ணான்.
ஏகாலியர் - வண்ணார்கள்.
ஏகாவலி - ஓரலங்காரம், ஒருசரமுள்ள முத்துமாலை.
ஏகி - கைம்பெண்.
ஏகீபவித்தல் - ஒன்றித்தல், சேருதல்.
ஏகீபாவம் - ஒருமைப்பாவனை.
ஏகீயன் - தோழன்.
ஏகுதல் - கழிதல், போகுதல்.
ஏகை - இரேகை.
ஏகேந்திரியம் - வைராக்கியம் நான்கனுளொன்று. அது இந்திரியங்களையடக்குதலாகிய தவம்.
ஏகோதகம் - நதிசங்கமம்.
ஏகோதிஷ்டம்
ஏகோதிட்டம்
ஏகோத்திட்டம் } அபரக்கிரியையி லொன்று. இது இறந்தவன் நற்கதியடையும் பொருட்டுப் பிள்ளைகளாற் கருமாந்தரகாலத்திற் செய்யும் முக்கியகிரியை. இதிலுட்காரும் பிராமணன் இறந்தவனாகப் பாவிக்கப்பட்டு அவனுக்கு ஒரு வருஷத்துக்குப் போதுமான சாமக்கிரியை கொடுத்து வருஷாப்திகம் வரையில் எதிர்ப்படாமலிருக்கவேண்டும்.
ஏகோநவிம்சதி - பத்தொன்பது.
ஏகோபித்தல் ஒருமனப்படுத்தல், ஒன்றுதல், சேர்தல். [ராசை.
ஏக்கம் - ஏங்குகை, கவலை, பயம், பே
ஏக்கரவு - ஏக்கம்.
ஏக்கழுத்தம் - இறுமாப்பு, மேன்மை.
ஏக்கறல் - ஏக்கறுதல்.
ஏக்கறவு - ஏற்றுக்கொள்ளுதல், வணங்கல்.
ஏக்கறுத்தல் - அங்கலாய்த்தல், அவமானித்தல், தாழ்ந்துநிற்றல்.
ஏக்கிபோக்கி - எளியோர்.
ஏக்குறல் - அங்கலாய்த்தல், பயமுறுதல், வியசனப்படல்.
ஏக்கை - இகழ்ச்சி.
ஏங்கல் - அஞ்சல், அழுதல், இரங்கல், ஒலித்தல், ஒரிழுப்பு, மயிற்குரல்.
ஏங்குதல் - அஞ்சுதல், அழுதல், இரங்குதல், ஒலிக்குதல்.
ஏங்குறல் - விசனப்படல்.
ஏசம் - வெண்கலம்.
ஏசல் - ஒருவகைப்பாடல், பழிமொழி, வைதல்.
ஏசறவு - துக்கம்.
ஏசறுதல் - துக்கித்தல்.
ஏசனம் - கலக்குதல்.
ஏசாதவர் - குற்றமில்லாதவர், நல்லோர், தேவர்.
ஏசி - கிளி.
ஏசிடாவகம் - அதிமதுரம்.
ஏசு - இகழ்ச்சி, ஏசென்னேவல், குற்றம்.
ஏசுகை
ஏசுதல் } ஏசல்.
ஏசுமதநிராகரணம் - துறைமங்கலஞ் சிவப்பிரகாச சுவாமிகள்செய்த கிறிஸ்துமத கண்டன நூல்.
ஏச்சு - இகழ்ச்சி, உதாசினம், வைதல்.
ஏடன் - தோழன்முன்னிலை.
ஏடணி - ஓலையீர்க்கு.
ஏடகம் - ஆட்டுக்கடா, சீலை, தென்னமரம், பலகை, பனைமரம், பூவிதழ்,

மதுரைக் கருகிலுள்ள திருவேடகம் என்னும் ஒரு சிவஸ்தலம்.

ஏஷணை } ஏடணை } விருப்பம்.

ஏடமூகம் - பாணம், செவிட்டூமன்.

ஏடமூகன் - தைரியமில்லாதவன்.

ஏடலகம் - அதிமதுரம்.

ஏடல் - கருத்து.

ஏடன் - செவிடன், தோழன்.

ஏடா - தோழன்முன்னிலை.

ஏடார்குடம் } ஏடாகூடம் } ஏறுமேடு, ஒழுங்கின்மை. [டை.

ஏடாகோடம் - ஏற்றத்தாழ்ச்சியான ந

ஏடாசிரியர் - குருவில்லா தேடு மாத்திரத்திற் கற்றோர்.

ஏடி - தோழி, முன்னிலை.

ஏடு - கண்ணிலை, பனையேடு, பாலாடை, பூவிதழ்.

ஏடுகம் - பிரேதக்கல்லறை.

ஏடுவாரல் - ஓலைவாருதல்.

ஏட்டிக்குப்போட்டி - எதிருக்கெதிர், ஒவ்வாமை.

ஏட்டிற்கல்வி - குருவில்லாக்கல்வி.

ஏட்டை - ஆசை, தளர்வு, துன்பம். வறுமை.

ஏட்டைப்பருவம் - வாலிபப்பருவம்.

ஏணகம் - மான்.

ஏணம் - எலும்பு, நிலைபெறுதல், மான், மான்றோல், வலி.

ஏணல் - வளைவு.

ஏணாசினம் - மான்றோல்.

ஏணாப்பு - இறுமாப்பு.

ஏணி - அடுக்கு, இறைமை, எல்லை, நாடு, மான்கன்று.

ஏணிச்சீகு - ஒருபுல்.

ஏணிப்பந்தம் - ஏணிபோலிருக்கும் ஒருவகைத் தீவர்த்தி.

ஏணிலையுடைமை - கண்ணோட்டம்.

ஏணை - ஆடு, புடவைத்தொட்டில், மஞ்சம்.

ஏண் - நிலையுடைமை, பெருமை, வலி, வளைவு.

ஏண்கோண் - ஒழுங்கின்மை, திருக்கு, நேரின்மை.

ஏண்டாப்பு - இருமாப்பு.

ஏதசன் - பிராமணன்.

ஏதடை - எதிரிடை, விரோதம்.

ஏதண்டை - சிறும்பி, நீர்த்துறையிதணம், பலகைத்தூக்கு.

ஏதம் - குற்றம், கேடு, துன்பம், பலவன்னம், மான்.

ஏதர் - கெட்டவர்கள்.

ஏதவிடுதல் - பொறுமையாய்ப்பேசல்.

ஏதனம் - சுவாசம்விடல்.

ஏதி - ஆயுதப்பொது, துண்டு, வாள்.

ஏதிதம் - விருத்தியடைந்திருப்பது.

ஏதியம் - கிரணம்.

ஏதிலன் - அயலான்.

ஏதிலார் - அயலோர், அன்னியர், தரித்திரர், பகைவர்.

ஏதில் - அயல், அன்னியர்.

ஏதின்மை - பகைமை, பிரியவீனம், வெறுமை.

ஏது - உபகாரணம், எத்தனம், என், ஓரலங்காரம்; அஃது இன்னகாரணத்தானின்னதாமெனக்கூறுவது. காரணம், திராணி, நிமித்தம், மூலம், யாது.

ஏதுகரம் - வழிவகை.

ஏதுக்கெட்டவன் - இடமற்றவன், வீண

ஏதுத்தற்குறிப்பு - ஓரலங்காரம். [ன்.

ஏதும் - சிறிதும், யாதொன்றும்.

ஏதுவலங்காரம் - ஓரலங்காரம்; அது யாதாயினுமொரு பொருளின்ன காரணத்தாலிவ்வாறாயதெனச் சிறப்பாய்க் கூறுதல் (உ - ம்) "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில."

ஏதுவனுமானம் - ஓரளவை; அதுபுகையைக்கண்டு நெருப்புண்டென வறிதல்.

ஏதுவானவன் - இடமுள்ளவன், பிராப்தியுள்ளவன்.

ஏதுவிலக்கு - ஓரலங்காரம் அஃது இன்னதினாலின்னகாரணமின்றெனக் கூறுவது.

ஏதுவின்முடித்தல் - ஒருயுத்தி. அது காரணம் காட்டி முடித்தல்.

ஏதுவுருவகம் - ஓரலங்காரம். அஃதுகாரணத்தைக்காட்டியுருவகப்படுத்துவது.

ஏதுவுவமை - காரணங்களை யெடுத்துக் காட்டி யுவமையைப்பொருட் கொப்பிட்டுக்கூறுவது (உ - ம்) மரமணியும் பாசிலையும் இளம்பிறையுங்கூடி பிரபையால் வானவிற்போன்றது.

ஏதை - பேதை, வறியன்.
ஏத்தல் - துதித்தல், வணங்கல்.
ஏத்திரி - சாதிப்பத்திரி.
ஏத்து - ஏத்தென்னேவல். அதி.
ஏத்துதல் - துதிக்குதல், வணங்குதல்.
ஏத்துவந்தரம் - தோல்வித்தான மிருபத்திரண்டனுளொன்று. அது தன்னாற்சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையானது பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி வேறோரேதுவினைக் கூறுதல்.
ஏத்துவம் - பின்பு.
ஏத்துவாபாசம் - தூஷணை.
ஏந்தல் - அரசன், உயர்ச்சி, ஏந்துதல், பெருமை, பெருமையிற்சிறந்தோன், மலை, மேடு.
ஏந்தல்வண்ணம் - ஒருசந்தம், சொல்லியது சிறந்துவருவது.
ஏந்தானம் - ஏந்துதல், சிறும்பி.
ஏந்தி - ஏந்துபவன், தரித்திரன்.
ஏந்திசை - இராகத்தகுதியுளொன்று.
ஏந்திசைச்செப்பல் - வெண்சீர்வெண்டளையான் வருவது.
ஏந்திசைத்துள்ளல் - கலித்தளை யிசைந்துவருவது.
ஏந்திசையகவல் - நேரொன்றாசிரியத்தளையான் வருவது.
ஏந்திரம் - எந்திரம், திரிகை.
ஏந்திரவச்சு - பண்டியச்சு.
ஏந்திழை - பெண்.
ஏந்திழையார் - பெண்கள்.
ஏந்துகொம்பு - தாங்குகொம்பு, மேல்வளைவான யானைக்கொம்பு.
ஏந்துதல் - தாங்கல்.
ஏந்தெழில் - மிக்க அழகு.
ஏப்பச்சுரம் - ஒருவகைச்சுரநோய்; அது ஏப்பம், வாந்தி, மார்பெரிச்சல், தலைவலி, தாகம், நெஞ்சுலர்தல், தேகத்தைத் திருப்பல்போலிருத்தல், பிரமை, தலை நமைச்சலுடன் நடுக்கல், மந்தாக்கினி, மலபந்தம், தலைக்குத்தல், கண்களினேவுட னீர்வடிதலால் ஆகிய இக்குணங்களை யுண்டாக்குவது.
ஏப்பம் - ஏவறை, தேக்கெறிவு.
ஏமகண்டன் - ஓரிராக்கதன்.
ஏமகூடம் - அட்டமலையிற்பொன்மலை.
ஏமசிங்கி - மிருதாரசிங்கி.

ஏமதவஞ்சம் - போகபூமியாறினொன்று.
ஏமத்தி - பொற்றெருட்டிப் பாஷாணம்.
ஏமத்தூரி - பொன்னூமத்தை.
ஏமபத்திரம் - மலையத்தி.
ஏமபுட்பம் - அசோகைமரம், செண்பகமரம், பொன்முல்லை.
ஏமபேதி - கற்கடகபாஷாணம்.
ஏமமணல் - பொன்மணல்.
ஏமம் - இரா, இன்பம், உன்மத்தம், கலக்கம், களிப்பு, காவல், சேமம், திரைச்சீலை, புதையல், பொன், மயக்கம், விபூதி, வைத்தியம்.
ஏமரல் / ஏமருதல் } கலங்குதல், காக்கப்படுதல், திகைத்தல், மிகுகளிப்புறல், மூர்க்கமுறல்.
ஏமல் - முநிரை.
ஏமவஞ்சம் - போகபூமி யாறினொன்று.
ஏமவதி - ஐம்பத்தெட்டாவது மேளகர்த்தா, கடுக்காய், வசம்பு.
ஏமாங்கதம் - சீவகன்தேசம்.
ஏமாத்தல் - அவாவுறல், களித்தல்.
ஏமாந்தகொங்கை - விம்மியமுலை.
ஏமாப்பிரகம் - பொன்னப்பிரகம்.
ஏமாப்பு - கருத்து, காவல், செருக்கு, மிகுகளிப்பு, வலியாதல்.
ஏமாறல் / ஏமாறுதல் } அலமருதல், தடுமாறல், மோசம்போதல்.
ஏமாற்றல் / ஏமாற்றுதல் } வஞ்சித்தல்.
ஏமி - உடனிகழ்வான்.
ஏமிலாந்தல் - திகைத்துப் பார்த்தல், நினைவுசிதறல்.
ஏமிலாந்தி - அலமந்துபார்ப்போன், மதிகேடன், மயக்கமுடையவன்.
ஏமிலாப்பு - அலமாப்பு.
ஏமின்கோலா - ஒருவகைமீன்.
ஏமுறல் / ஏமுறுதல் } இறுமாப்புறல், களிப்புறல், மயங்குதல்.
ஏம் - தன்மைப்பன்மைவிகுதி.
ஏம்பலித்தல் - அங்கலாய்த்தல்.
ஏம்பலிப்பு - அங்கலாய்ப்பு.
ஏம்பல் - ஏம்புதல்.
ஏம்புதல் - ஏம்பலித்தல், களித்தல்.
ஏயர்கோன் கலிக்காமநாயனார் - திருப்பெருமங்கலத்திற் பிறந்த வேளாளராகிய இவர் சூலைநோயால் வருந்துகையிற் பரமசிவனிவருக்குக்கனவிற் றோன்றி இது சுந்தரமூர்த்தியாற்

தீருமென்றருளிச் சுந்தரரையுமேவிப்போக, சுவாமியைப் பரவையிடத்திற்றூதுசெல்லக்கேட்ட சுந்தரனல் இந்நோயைப் போக்குவதிலும் நானே அந்நோயைப் போக்குவேனெனச்சொல்லி வாளையெடுத்து வயிற்றைப்போழ்ந் துயிர்துறந்த வைராக்கியபத்தர் பின்னர்ச் சுவாமியருளாலுயிர்பெற்றுச் சுந்தரரோடு நட்புக்கொண்டவர்.

ஏய்தல் - இசையல், ஒப்பாதல், சேரல், பொருந்தல்.

ஏய்த்தல் - அனுப்புதல், இசையப்பண்ணுதல், உவமித்தல், சமானித்தல்.

ஏய்ப்ப - உவமைச்சொல் (உ - ம்) முத்தேய்ப்ப.

ஏய்ப்பிலேவட்டன் - எத்துக்குட்படுபவன், சணிசமற்றவன், வஞ்சகம்.

ஏரகம் - ஆடு, சுப்பிரமணியத்தலம் ஆறனுள் ஒன்று. இது இக்காலத்தில் சுவாமிமலை எனப்படும் "ஏரகவெற்பெனுமற்புதமிக்கசுவாமிமலைப்பதி" என்பர் திருப்புகழுடையார்.

ஏரகை - பெண்ணாடு.

ஏரக்கம் - ஒருவகைமீன்.

ஏரடித்தல் - ஏருழல்.

ஏரண்டத்தைலம் - ஆமணக்க முத்து முதலியவற்றாற் செய்யப்படும் ஒரு தைலம்.

ஏரண்டம் - ஆமணக்கு.

ஏரண்டை - திப்பிலி.

ஏரத்தை - பிடரிக்காம்பு.

ஏரம்பமூர்த்தி - விநாயகர்சகஸ்திரநாமங்களுளொன்று. உருத்திரருக்குப்பக்கத்திலிருப்பவன்.

ஏரம்பன் - விநாயகன்.

ஏரல் - கிளிஞ்சில், சமுத்திரச்சண்டி.

ஏரா - நீராளம், மரக்கலத்தினடிமரம்.

ஏராண்மை - உழவு.

ஏராதது - ஏலாதது.

ஏராளம் - மிகுதி.

ஏராளர் - உழுநர்.

ஏரி - இமில், குளம், புநர்பூசம், புரைகப்பா.

ஏரிசா - கடற் கொந்தளிப்பு, புரளித்தனம்.

ஏரின்வாழ்நர் - பூவைசியர்.

ஏருழல் வைசியரறுதொழிலினொன்று.

ஏருழவர் - உழவுதொழிலாளர்.

ஏருழுநர் - உழவர்.

ஏரெழுபது-ஏர்முதலியவற்றினைச் சிறப்பித்துக் கம்பர்கூறிய எழுபதுசெய்யுட்களானுயதோர் நூல்.

ஏர்-அழகு, உழவுக்கிசைந்த தளபாடம், உழவுத்தொழில், உழுபடை, உழுமாடு.

ஏர்க்கால் - கலப்பையினொருறுப்பு, வண்டியினொருறுப்பு.

ஏர்ச்சீர் - உழவுக்கிசைந்த தளபாடம், வேலைக்கிசைந்த பணிமுட்டு.

ஏர்த்தாயம் - காலத்திலுழுகை.

ஏர்த்தொழிலர் - பூவைசியர்.

ஏர்த்தொழில் - உழவுத்தொழில்.

ஏர்நாழி - கலப்பையினொருறுப்பு.

ஏர்பு - எழுச்சி, கிரககதி.

ஏர்ப்பண் - ஏர்ச்சீர், பூட்டாங்கயிறு.

ஏர்ப்பு - ஈர்ப்பு.

ஏர்ப்பூட்டு - ஏர்தொடுத்தல்.

ஏர்மங்கலப்பாட்டு - ஏரைப்பாடுவது.

ஏர்வாரம் - கமவாரம்.

ஏல - இயல, முன்னம்பொருந்த, மிக.

ஏலக்காய் - ஒரு வாசனைச்சரக்கு.

ஏலக்குழல்-வாசனையூட்டப்பட்ட மயிர்ச்சிகை.

ஏலக்கோலம் - ஆயத்தம்.

ஏலபிலன் - குபேரன்.

ஏலப்பாட்டு - இழுக்குநர் சொல்லும் பாட்டு.

ஏலம்-ஆஞ்சி, இபங்கு, ஒருமரம், பஞ்சவாசத்தொன்று, மயிர்ச்சாந்து, முதிரை, வாசனைப்பண்டம், விலைகூறுகை.

ஏலரிசி
ஏலவரிசி } ஏலக்கொட்டை.

ஏலவார்குழலியம்மை - திருக்காஞ்சியிற், கோயில்கொண்ட அம்மையார்.

ஏலவாலுகம் - பரிமளத்திரவியம்.

ஏலவே - முன்னே.

ஏலா - ஏலம், தோழிமுன்னிலை, பேரேலம்.

ஏலான் - ஏலா.

ஏலாத்து - இயலாதது, பொருந்தாதது.

ஏலாதார் - இயலாதார், பகைவர்.

ஏலாதி - ஒருநூல்.

ஏலாதிகடுகம் - ஒருமருந்து.

ஏலாபத்திரம் - தக்கோலம்.
ஏலாபரணி - பறங்கிச்சக்கை.
ஏலாப்பு - துன்பம்.
ஏலாமை - இணங்காமை, கூடாமை, துன்பம்.
ஏலாவாலுகம் - ஒருவித ஏலம், வால்மிளகு.
ஏலி - கள்.
ஏலு - சங்கஞ்செடி.
ஏலுதல்-இயலுதல்,கூடல்,பொருந்தல்.
ஏலுநன் - சோழன்.
ஏலேலசிங்கர் - திருவள்ளுவநாயனார்காலத்தில் அப்பெருமானிடத்தி லிகத்தவில்லா அன்புவைத் தொழுகியவர் தமதுமகளை அவருக்கில்லறநடாத்திவிக்கும்படி மனைவியாகக்கொடுத்த ஒரு வேளாளப்பிரபு.
ஏலை - ஏலம்.
ஏல் - எதிர்மறையேவலொருமைவிகுதி (உ-ம்) நடவேல், ஏலென்னேவல், ஒப்பு, கிளிஞ்சில், முன்னிலை, யொருமை, வியங்கோள்விகுதி, வினையெச்சவிகுதி (உ-ம்) வருமேல்.
ஏல்விலன் - குபேரன்.
ஏல்வை-காலம், குளம், நாள், பொழுது.
ஏவங்கேட்டல் - ஒருவருக்காக ஏவிவிடப்பட்டுப்போய் அதட்டல்.
ஏவம் - ஒருவருக்காக ஏவிவிடப்பட்டு அதட்டும்படி வருகை, நீக்கம், இகழ்ச்சி, குற்றம்.
ஏவலாள் - வேலைக்காரன்.
ஏவல்-ஆணைசெலுத்துதல், ஏவல்வினைமுற்று, ஏவுதல், தூண்டுகை, நடத்துகை, பணிவிடை, பிசாசை, யேவிவிடுகை.
ஏவல்கொள்ளுதல் - தொண்டுசெய்வித்தல்.
ஏவல்சிலதியார் - மடைப்பள்ளியாரடியார்.
ஏவல்செய்தல் - தொண்டுசெய்தல்.
ஏவல்மேவல் - ஏவற்றொழிலும் உள்வேலையும்.
ஏவல்வாய்பாடு - ஏவற்சொல்.
ஏவல்விகுதி-ஏவலில்வரும்விகுதி; அது ஆய், மின், உம், முதலியவை.
ஏவல்விடை - வினவையெதிர்மறுத்தேவும் வினை (உ - ம்) உண்டாயோவென்ற வழி நீயுண்ணென்பது.
ஏவல்வினை - ஏவும்வினை (உ - ம்) எழுகிறாயா.
ஏவல்வினை - ஏவலைச்செய்யும்வினை.
ஏவறை - எதிருக்கெடுத்தல், ஏப்பம்.
ஏவற்காரன் - பணிவிடைக்காரன்.
ஏவற்பணி - ஏவற்றொழில்.
ஏவற்பேய் - ஏவிவிட்டபேய்.
ஏவாங்கம் } அசமதாகம்.
ஏவாங்கனம் }
ஏவிவிடுதல் - ஏவுதல்.
ஏவிளம்பி - முப்பத்தோராவதுவருடம்.
ஏவு-அம்பு, அனுப்புந்தன்மை, ஏவென்னேவல், வருத்தம்.
ஏவுதல் - அனுப்புதல், எய்யல், எழுப்பிவிடுதல், கட்டளையிடல், கற்பித்தல், செலுத்துதல், தூண்டிவிடுதல்.
ஏவுதற்கருத்தா-இயற்றுதற்கருத்தாவையேவுவோன்.
ஏவும்விடை - ஏவல்விடை.
ஏவும்வினை - தொழிற்பாற்படுத்தும் வினைச்சொல்.
ஏவும்வினைமுதல் - ஏவுதற்கருத்தா.
ஏவுவான் - ஏவுகிறவன்.
ஏழகம் - ஆடு, செம்மறிக்கடா, துருவாட்டேறு.
ஏழத்துனை - ஏழுமடங்கு.
ஏழரை } எளிமைத்தனம், ஏழைத்தனம்.
ஏழைமைத்தனம் }
ஏழனுருபு - ஏழாம்வேற்றுமை யுருபு, அஃது கண் முதலியன.
ஏழாங்கால் - கலியாணத்துக்கு ஏழுநாளைக்குமுன் நடும் பந்தக்கால்.
ஏழிசை - ஏழுவித இராகங்கள். அவை இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், கிடாதமென்பன.
ஏழிலம்பாலை } ஒருமரம். அஃது மகவிரான்மலர் மரம்
ஏழிலைம்பாலை }
பத்திரென்று. அதன் வாசனை யானைகளுக்காகாதாம்.
ஏழு - ஓரெண்.
ஏழுநிலைக்கோபுரம் - ஏழு நிலையுள்ள கோபுரம்.
ஏழுநிலைமாடம் - ஏழடுக்குமாடம்.
ஏழுபாலை - ஏழுவிதப்பாலைகள்; அவை செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, கரும்கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என்பன.

ஏழுபுரம்-சத்தபுரி அஃது அயோத்தி, அவந்தி, காசி, காஞ்சி, துவாரகை, மதுரை, மாயை.
ஏழேழு - எவ்வேழு - ஏழுக்கேழு.
ஏழேழுதலைமுறை - ஏழ்தலைமுறையும் புத்திர பாரம்பரையாய் வருமேழ்தலைமுறை.
ஏழை-அறிவிலான், தரித்திரன், பெண், பேதை.
ஏழைக்குறும்பு - வறுமையைக் காட்டி மோசஞ்செய்கை.
ஏழைத்தனம் - எளிமை.
ஏழைமை-அறியாமை, பேதைமை, வறுமை.
ஏழ்ச்சி - எழுச்சி.
ஏழ்பரியோன் - சூரியன்.
ஏழ்பவம் - ஏழ்பிறப்பு.
ஏழ்பிறப்பு - எழுபிறப்பு; அஃது ஊர்வன, தாவரம், தேவர், நீர்வாழ்வன, பறவை, மக்கள், விலங்கு.
ஏளனம் - அவமதிச்சிரிப்பு, சரசம், நீக்சல், பரிகாசம்.
ஏளிதம் - இகழ்ச்சி, எளிமை.
ஏற - அதிகமாக, உயர.
ஏறக்கட்டுதல் - இறைந்ததானியத்தைக் கூட்டிச் சேர்த்தல், கட்டியுயர்த்துதல், பலப்படுத்துதல்.
ஏறக்குறைய - முன்பின்னாக.
ஏறங்கோட்பறை - முல்லைப்பறை.
ஏறண்டம் - ஒருவகை அண்டநோய்.
ஏறத்தாழ-கூடக்குறைய, முன்பின்னாக.
ஏறல் - ஏறுதல், கிளிஞ்சல்.
ஏறவாங்கல் - நயமாகவாங்கல்.
ஏறவிடுதல் - மரக்கலத்தைக் கரைக்குத் தூரமாய்விடுதல், மேலேவிடுதல்.
ஏறவிறங்கப்பார்த்தல் - கேசாதிபாதமீருகப்பார்த்தல்.
ஏறுங்கடைசி - அறமுடிவு.
ஏறுமேடு - உயர்ந்தமேடு, சரிப்படுத்தக்கூடாதகாரியம், நீரேறாதமேடு.
ஏறுளர் - படைவீரர்.
ஏறிடுதல்-அடைதல், ஏறவிடுதல், சுமையாப்பித்தல்.
ஏறிட்டுப்பார்த்தல் - உற்றுப்பார்த்தல்.
ஏறியவீரி - சவவீரபாஷாணம்.
ஏறு-அசபதி, இடபவிராசி, இடி, அயர்ச்சி, எருது, எருமை, கவரி, சங்கு, சிங்கம், சுறா, பசு, பன்றி, புல்வாய், மரை, மான் இவற்றினாண், ஏறென்னேவல், தழும்பு, விலங்கேற்றின் பொது.
ஏறுகடை - முடிவானகடை.
ஏறுகுதிரை - ஏறுங்குதிரை.
ஏறுக்குமாறு - குழப்பம்.
ஏறுசலாகை - கைமரங்கோக்குஞ்சலாகை.
ஏறுசேவகன் - எவரினுமுயர்ந்தவீரன். ஏற்றையுடைய வீரன்.
ஏறுதல்-அதிகப்படுதல், இவர்தல், உட்போதல், உயருதல், மேற்போதல்.
ஏறுதழுவல் - மணமுடிக்கும்பொருட்டு இடபத்தைப் பிடித்தல்.
ஏறுதுறை - துறைமுகம்.
ஏறுநெற்றி - அகன்றநெற்றி.
ஏறுபடி - அதிகப்படி, தாழ்வாரம்.
ஏறுபெட்டி - கருப்பநீர்ப்பெட்டி.
ஏறுபொழுது - இளநேரம்.
ஏறுமாறு - குழப்பம்.
ஏறுமிராசி-மகரமுதல் மிதுன மீறான இராசிகள்.
ஏறுவட்டம் - எறினவட்டம்.
ஏறுவால் - நீண்டவால்.
ஏறுவிடுதல் - மணமுடிக்கவருபவன் பிடிக்கும்பொருட்டு இடபம்விடுதல்.
ஏறுவெயில்-முன்பொழுதின்வெய்யில்
ஏறுழவர் - படைவீரர்.
ஏறூர்ந்தோன் - சிவன்.
ஏற்றெடுத்தல் - உயர்த்துதல், மேலெடுத்தல்.
ஏற்க-இசைவாயிருக்க, இணங்க, உவப்பாக, எதிர்க்க, பிச்சைவாங்க, முன்.
ஏற்கன - முன்.
ஏற்குதல்-இணங்கல், இரத்தல், எதிர்த்தல், ஒப்புக்கொள்ளல், பிச்சைவாங்குதல், பொருந்தல், வாங்கல்.
ஏற்குமட்கலம் - கடிஞை.
ஏற்கென - முன்னே.
ஏற்கை - அங்கீகாரம், இணங்குகை, வாங்குந்தன்மை.
ஏற்படுதல்-உடன்படுதல், தலைப்படுதல்.
ஏற்படுத்தல்-இணக்கம்பண்ணுதல், நிச்சயித்தல், நிருமித்தல்.
ஏற்பாடு - உடன்பாடு, நியமம், பிரமாணம், பொருத்தம், முறை.
ஏற்பு - இரப்பு, ஈர்ப்பு, பொருத்தம்.

ஏற்புழிக்கோடல்-ஒருவகையுக்தி. அது ஏற்றவிடத்திற் பாவித்தல்.

ஏற்புறவணிதல் - தகவணிதல், மணமகளை யலங்கரித்தல்.

ஏற்போர் - இரப்போர்.

ஏற்ற - தகுதியான, பக்குவமான.

ஏற்றக்கால் - தூண், துலாவைத் தாங்குங்கால்.

ஏற்றக்குறைச்சல் - ஏற்றத்தாழ்ச்சி.

ஏற்றக்கோல்-ஏற்றக்கழி, துலாக்கொடி.

ஏற்றக்கால் - நீர்மொள்ளும் பாத்திரம்.

ஏற்றது - இயன்றது, பொருந்தியது.

ஏற்றத்தாழ்ச்சி - ஒவ்வாமை, முன்பின்னாக, வேற்றுமை.

ஏற்றபடி - இசைந்தபடி.

ஏற்றமடல் - காமத்தோருருமடல், துலாவாடுந் தூண்.

ஏற்றமரம் - துலா.

ஏற்றமாலை - ஒரு பிரபந்தம்.

ஏற்றமொழி - புகழ்மொழி.

ஏற்றம்-அதிகம், உயர்ச்சி, எழும்புதல், ஏற்றுகை, துலா, நீரேற்றம், புகழ், பெருக்கம், மிகுதி, மேன்மை.

ஏற்றம்வற்றல் - பெருக்குங்குறையும்.

ஏற்றரவு - முகனை.

ஏற்றல் - அங்கீகரித்தல், அடுக்குதல், இணங்கல், நடத்தல், பொருந்தச் செய்தல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழுப்பல், எறிதல், ஏற்றுதல், கொள்ளல், தகுதி.

ஏற்றார் - பகைவர்.

ஏற்றியல் - ஏறுதலினியல்பு.

ஏற்று - ஏற்றுதல், ஏற்றென்னேவல், மரத்தின்மேற்செய்த ஏதண்டை.

ஏற்றுக்கொள்ளுதல் - ஒப்புக்கொள்ளுதல், பெற்றுக்கொள்ளுதல்

ஏற்றுதல்-அதிகப்படுத்தல், உணர்த்தல், உள்ளேற்றுதல், எழுப்பல், உயரப் பண்ணுதல், ஏறப்பண்ணுதல்.

ஏற்றுத்துறை - ஏற்றிவிடுந்துறை, துறைமுகம்.

ஏற்றுப்பனை - ஆண்பனை.

ஏற்றுமதி - தோணியிலே ஏற்றப்படுஞ் சரக்கு.

ஏற்றுவாகனன் - சிவன்.

ஏன - ஏனைய.

ஏனக்கோடு - பன்றிக்கொம்பு, வெதுப்படக்கி.

ஏனப்படம் - பன்றிமுகக்கடகு.

ஏனமுத்து - பன்றிக்கோட்டிற்பிறந்த பச்சைநிற முத்து.

ஏனம் - எழுத்தின்சாரியை, ஓலைக்குடை, கருவி, காட்டுப்பன்றி, தப்பிதம், பன்றி, பாத்திரம், பாவம்.

ஏனல்-கதிர், செந்தினை, தினைப்புனம், பைந்தினை.

ஏனவாயன் - தப்பிதக்காரன், பேதை.

ஏனவும் - ஒழிந்தவும்.

ஏனாதி - ஓரிலேகியம், தந்திரி, தளகர்த்தன், நாவிதன், மந்திரி, மறவன்.

ஏனாதிதிருக்கிள்ளி - ஏனாதிப் பட்டம் பெற்று விளங்கிய ஒரு வள்ளல். இவன் சிறப்புப் புறநானூற்றிற் கூறப்பட்டுள்ளது.

ஏனாதிநாயனார் - சிவனடியா ரறுபத்து மூவரி லொருவர்.

ஏனும் - ஒரு வினையெச்சவிகுதி.

ஏனை - ஒழிந்த, மலங்குமீன், மற்று.

ஏனைய - ஒழிந்தன.

ஏன் - இரக்கப்பொருளைத் தருமிடைச்சொல், என்னை, தன்மை யொருமை விகுதி.

ஏன்றல் - இயலல், குறித்தல், பொருந்தல்.

ஐ

ஐ - தமிழ் மொழியின் ஐ நெடுங்கணக்கில்வரும் ஒன்பதாம் எழுத்து, உயிர் முப்பதியாற் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத்திறந்தும் முன்பல்லை அடிநாவினது விளிப்புப் பொருந்தியும்உச்சரிக்கப்படுவது. அரசன், அழகு, ஆசான், கடுகு, சர்க்கரை, சன்னி, தும்மை, தூர்க்கை, நுண்மை, மருந்து, பெருவியாதி, இரண்டனுருப, இருமல், எசமானன், ஓரிடைச்சொல், ஓரெழுத்து, கடவுள், குரு, கோ

ழை, சாரியை(உ-ம்)ஒற்றினேடேற்
றை, சவ்வீரம், சிலேஷ்மம், சிவன்,
சுவாமி,பிதா, யானையைப்பாகனதட்
டுமோசை, முன்னிலை யொருமை
வினைவிகுதி (உ-ம்) வந்தனை,தொழி
ற்பெயர்விகுதி (உ-ம்) நடை, பண்பு
ப்பெயர்விகுதி (உ-ம்) தொல்லை, வி
னைமுதற்பொருள் விகுதி, (உ-ம்)
பறவை செயப்படுபொருள் விகுதி,
(உ-ம்) தொடை, கருவிப்பொருள்
விகுதி (உ-ம்) பார்வை.
ஐக - மல்லிகைமொக்குகள்.
ஐகாக்காரிகன் - திருடன்.
ஐகாக்கிரன் - ஒரே சித்தமுடையவன்.
ஐகாரக்குறுக்கம் - தன் மாத்திரையிற்
சுருங்கிய ஐகாரம்.
ஐகாரம்
ஐகான் } ஐகாரவெழுத்து.
ஐக்கம்
ஐக்கியம் } ஒன்றிப்பு.
ஐக்கியவாதி - சமயிகளிலொருவன்.
ஐக்குரம் - கருப்பஞ்சாற்றாற் செய்யப்
பட்ட கருந்தேன்.
ஐங்கணை - மன்மதனது பஞ்சகணைகள்.
அவை தாமரை, மாம்பூ, அசோகம்,
முல்லை, நீலோற்பலம் என்பன.
ஐங்கணைக்கிழவன் - மன்மதன்.
ஐங்கணைச்செயல் - மன்மதனது பஞ்ச
கணைகளாலு மேற்படுஞ் செயல்கள்,
அவை பெருமயக்கு, சிந்தாகுலம்,
புணர்ச்சிக் கிணங்குதல், மோகனம்,
சந்தாபனம், வசிகரணம், என்பன.
ஐங்கணையவத்தை - மன்மதனது பஞ்ச
கணைகளாலுமுண்டாகுமவத்தைகள்;
அவை சுப்பிரயோகம், விப்பிரயோ
கம், சோகம், மோகம், மரணம்
என்பன.
ஐங்கதி - குதிரைகளின் பஞ்சகதிகள்.
அவை மல்லகதி, மயூரகதி, வானர
கதி, இடபகதி, மனோகதி என்பன.
ஐங்கரற்கிளையோன் - முருகன்,வீரபத்
திரன்.
ஐங்கரன் - விநாயகன்.
ஐங்கலை-பஞ்சகலைகள். அவைவித்தியா
கலை, நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை,
சாந்திகலை,சாந்தியதீதகலைஎன்பன.
ஐங்காயதயிலம் - பிண்டதயிலம்.
ஐங்காயம்-ஐந்துகாயம். அஃது உள்ளி,
கடுகு, சுக்கு, பெருங்காயம், மிளகு,
தலைப்பிள்ளைக்கரு.
ஐங்காவியம் - பஞ்சகாவியங்கள். அவை
சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணி
மேகலை, வளையாபதி, குண்டலகேசி
என்பன.
ஐங்குரவர்-பஞ்சகுருக்கள், அவர் இரா
சா, குரு, தமையன், பிதா, உபாத்தி
யாயன்.
ஐங்குழு-அரசர்க்குரியபஞ்சகுழு,அவர்
சாரணர், சேனாபதியர், தூதர், புரோ
கிதர், மந்திரியர்.
ஐங்கோசம்-பஞ்சகோசம்; அவை அன்
னமயகோசம், பிராணமய கோசம்,
மனோமயகோசம்,விஞ்ஞானமயகோ
சம், ஆநந்தமயகோசம் எனப்படும்.
ஐங்கோல் - பஞ்சபாணம்.
ஐசானம் - ஈசானம்.
ஐசானி - வடகீழ்த்திசையானை.
ஐசானியன் - ஈசானன்.
ஐசிலம் - சிறுநாகம்.
ஐசுவரியம் - செல்வம், பாக்கியம்.
ஐஞ்சத்தி-பஞ்சசத்திகள்; அவை ஆதி
சத்தி,பராசத்தி, இச்சாசத்தி, ஞான
சத்தி என்பன.
ஐஞ்சாத்தகம் - பஞ்சபொறிகளை அடக்
கித் தியானித்திருத்தல்.
ஐஞ்ஞூறு - ஒரெண்.
ஐட்டிகம் - ஓமச்சடங்கு.
ஐணம் - ஏணம்.
ஐணேயம் - பெண்மானினது தோல்
தசை முதலானவை.
ஐதி
ஐதிகம் } ஓரளவை; அஃது தொன்று தொட்டுவருங் கேள்வியை
நம்புவது.
ஐதியளவை - வழங்குங் கேள்விப்படி
மெய்யென்றுணர்தல்.
ஐது - அடர்த்தியற்றது, அழகானது,
அற்பம்.
ஐத்திரேயன் - ஜனமேஜயனுக்குப்பட்
டாபிஷேகஞ்செய்த குரு.
ஐந்தக்கல்-பஞ்சேந்திரியங்களையொடுக்குதல்.
ஐந்தக்கினி - பஞ்சாக்கினி.
ஐந்தங்கம் - பஞ்சாங்கம்; அவை வாரம்,
திதி, கரணம், யோகம், நட்சத்திரம்,
என்பன.

ஐந்தடிவிருத்தம் - கலிவிருத்தம், தரவு கொச்சகம்.
ஐந்தரம் - அழகுள்ளது, நெருக்கமின்மை, பனை, மந்தம்.
ஐந்தரு - பஞ்சதரு. அஃது அரிச்சந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.
ஐந்தருநாதன் - இந்திரன்.
ஐந்தலைநாகம் - ஒருபாம்பு.
ஐந்தவத்தை-பஞ்சாவத்தைகள்; அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன.
ஐந்தவம் - மிருகசீரிடம்.
ஐந்தவர் - கசியபகோத்திரத்தானாகிய இந்துவென்னு மந்தணன் கலைதேர் புலவர்பதினெண்மரைத்தருகவென்று சிவன்பால் வரங் கிடந்துபெற்ற புத்திரர். இவர் பதினெண்மரும் பிரமபதம்பெற்றுச் சிருட்டிசெய்தவர்.
ஐந்தவி - சரச்சுவதி.
ஐந்தவித்தல் - ஐம்புலனடக்கல்.
ஐந்தனுருபு - இன்வேற்றுமை.
ஐந்தாங்கால் - கலியாணத்துக்கு ஐந்து நாளைக்கு முன்னிடும் பந்தற்கால்.
ஐந்தாம்பக்கம் - சுக்கிலபக்கத்து ஐந்து பத்து பதினைந்தாம் நாட்கள்.
ஐந்தார் - பனை.
ஐந்தானம் - மிருகசீரிடம்.
ஐந்திணை - அன்புடைக்காமம், ஐவகை நிலம்.
ஐந்திணைச்செய்யுள் - ஒரு பிரபந்தம். அஃது புணர்தன் முதலிய ஐந்துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய ஐந்திணையினையுங் கூறுவது.
ஐந்திணைத்தெய்வம் - பஞ்சதிணைகளுக்குமுரிய தேவர்கள். அவர் முருகன், துர்க்கை, திருமால், இந்திரன், வருணன் என்பவராம்.
ஐந்திந்திரியம் - பஞ்சேந்திரியங்கள். அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.
ஐந்திரசாலிகன் - மாயைசெய்வோன்.
கத்ருவை - கசியபன் பாரியருளொருத்தி. தக்ஷன்மகள், இவளால் நாககுலமுண்டாயிற்று. ஆதிசேஷன், கார்க்கோடகன் முதலியோர்தாய். இவளுடைய சகளத்தி விநதையுமிவளும் பாற்கடற் கரையிலே உச்சைச்சிரவமென்னுங் குதிரையைக்கண்டு அதிசயித்துப் பேசும்போது இவள் விளையாட்டாக அக்குதிரைக்கு வால் கறுப்பென்றான். மற்றவள் ஆதியந்தம் வெள்ளையென்றாள். கத்ருவை அதுகரியதானால் நீயெனக் கடிமையாதல் வேண்டுமென்றாள். விநதை அது வெண்மையானால் நீயெனக் கங்ஙனமென்றாள். இச்சமயத்தில் அஸ்தமயமானது. கத்ருவை உடனே தன்மகன் ஆதிசேஷனிடம் போய்த் தனது கருத்தைச் சொல்ல அவனுடன்படாது மறுத்தான். அப்பால் கோடகனிடஞ் சொல்ல, அவன் அவ்விரவே போய் அக்குதிரையின் வாலை நஞ்சூட்டிக் கறுப்பாக்கி மீண்டான். விடிதலும் விநதைசென்று பார்த்து மறுபேச்சின்றிக் கூறியபடி தாசியானாள். அதுகண்ட ஆதிசேஷன் அவளைவிட்டு நீங்க கோடகனொழிந்த மற்றெல்லோரையுஞ் சர்ப்பயாகத்தின் மடிந்தொழிக வென்று தாய் சபித்தாள்.

கத்தூரி } ஒருமிருகம், கானம், மான்
கஸ்தூரி } மதம்.

கத்தூரிநாரத்தை - ஒருநாரத்தை.

கத்தூரிநாவி - ஒருமிருகம்.

கத்தூரிப்பிள்ளை } நாவி.
கத்தூரிப்பூனை }

கத்தூரிமஞ்சள் - ஒருமஞ்சள்.

கத்தூரிமான் - ஒருவகையானமான், நாவி.

கத்தூரிமிருகம் - நாவி.

கத்தூரியெலுமிச்சை - ஒரெலுமிச்சை.

கஸ்தேசுவரம் - சிவஸ்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கத்தை - கழுதை, கற்றை.

கத்தோயம் - கள்.

கநகரசம் - அரிதாரம்.

கநகாசலம் - மேருமலை.

கநகாட்சி - பெண்ணுந்தை.

கநகாபகை - காவிரிநதி.

கநநம் - புதைத்தல்.

கநிட்டன் - இளையவன், தம்பி.

கநீயசம் - தாமிரம்.

கநீயசி - செடி.

கந்தகட்பலம் - தான்றி.

கந்தகத்திராவகம் - கந்தகச்செயநீர்.

கந்தகபாஷாணம் - கந்தகம்.

கந்தகபூமி - தாங்கையானதேசம்.

கந்தகம் - அவல்பாஷாணம், உன்னி, கெந்தகம், மூருங்கை.

கந்தகரசாயனம் - ஒருமருந்து.

கந்தகவுப்பு - ஒருப்பு.

கந்தகாரி - வறட்சுண்டி.

கந்தகாலோத்தரம் - ஒருநூல்.

கந்தகிரகதோஷம் - ஒருவகைத்தோஷநோய். அது ஒருகண்ணில் நீர்க்கமமல், அடிக்கடி தலையாட்டல், அடிபட்டதுபோல் ஒருபக்கமாகவேகிடத்தல், கழுத்தில் வியர்வை, தலையைத் தூக்கித் தூக்கிப்பார்த்தல், பற்கடித்தல், பாலுண்ணுமை, பயந்துபயந்து ஈனசுரமாக வுருதல், ஒருபக்கங்கோட்டுவாய்ச்சலம்வடிதல், மேற்பார்வை, இரத்த நாற்றமாய் வாய்நீருறல், உளறல், இரண்டு கையையுமூஷ்டிப்பந்தமாகப் பிடித்தல், மலபந்தம், ஒருபக்கத்துப் புருவமுங்கண்ணுந் தாழ்வாய்க் கட்டையுங்குடித்தல், இரண்டு கண்களுஞ் சிவத்தலாகிய இக்குணங்களையுண்டாக்குவது.

கந்தகுடி - ஒருவகை வாசனை.

கந்தகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கந்தசட்சகம் - தமரத்தை.

கந்தசட்டி } ஐப்பசிமாதத்தினமாவாசி தொடங்கிக் கந்தன்
கந்தசஷ்டி } விரதத்துக்குரிய ஆறுநாள்.

கந்தசாரம் - இந்திரனந்தனம், சந்தனம்.

கந்தசுக்கிலம் - அதிவிடயம்.

கந்தடம் - வெண்குவளை.

கந்ததன்மாத்திரை - மணத்தையறியுமறிவு.

கந்ததாரம் - மது.

கந்தாளி - ஒருவகை நோய்.

கந்தநாகுலி - செவ்வியம், மிளகு.

கந்தநாகுலியம் - அரத்தை.

கந்தபத்திரம் - வெண்டுழாய்.

கந்தபத்திரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்தபாடானம் - கந்தகம்.
கந்தபுஷ்கரிணி-நூற்றெட்டுத்திருப்பதிகளு ளொன்றாகிய திருவெள்ளறையென்னுந் தலத்திலுள்ள ஒரு புண்ணியத் தீர்த்தம், திருச்செந்தூரிலுள்ள முக்கிய தீர்த்தம்.
கந்தபுஷ்பி - மெருகன்கிழங்கு.
கந்தபுட்பை - அவுரி.
கந்தபுராணம் - காந்த புராணத்தின் பகுதியான ஒரு புண்ணிய சரிதை.
கந்தபூதியம் - நாய்வேளை.
கந்தப்பேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்தப்பொடி - வாசனைப்பொடி.
கந்தமாதனம் - இராமேசுரத்திலுள்ள ஒருமலை, குலகிரி எட்டினென்று.
கந்தமாதனன் - சுக்ரீவன் சேனையிலுள்ள ஒருவன், இவன் குபேரன் புத்திரன், அக்குரூரன் நம்பிகளு ளொருவன்.
கந்தமாதிரு - பூமி.
கந்தமாதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்தமூஷி - மூஞ்சூறு.
கந்தமூஷிகம் - கத்தூரிமிருகம்.
கந்தமூலம் - கிழங்கு.
கந்தமூலி - சிறு இண்டஞ்செடி.
கந்தம் - அணுத்திரள், இந்திரியம், உள்ளி, ஐம்புலனினென்று, கருணை, கழுத்தடி, கிழங்கு, சந்தனக்குழம்பு, பகுதி, பங்கு, பஞ்சகந்தம், பாதரசம், பொதியமலை, முருங்கை, வாசனை, வாசனை வேர்.
கந்தரக்காட்டம் - வெள்ளைப் பாஷாணம், மேகம்.
கந்தரசம் - போளம்.
கந்தரசு - சாம்பிராணி.
கந்தரம் - கடற்பாசி, கழுத்து, கற்கடக பாஷாணம், நீமுருகற் பாஷாணம், புனல்முருங்கை, மலைக்குகை, மேகம்.
கந்தரன் - சம்பாதி வமிசத்துக் கங்கன் தம்பி.
கந்தராகரம் - மலை.
கந்தராசனம் - சந்தம்.
கந்தராபம் - ஒருவகைமரம்.
கந்தருப்பன் - காமன்.
கந்தருவம் - இசை, இசைப்பாட்டு, எண்வகை மணத்துளொன்று. அஃது கன்னியுந் தலைமகனு மொருப்பட்டுக் கலப்பது, குதிரை, தேகம்விட்ட ஆத்துமா, தேவசாதியிலோர் வகை.
கந்தருவர்-தேவசாதியிலோர்வகையார்.
கந்தரை - குகை.
கந்தர்ப்பன் - மன்மதன்.
கந்தர்வேசுரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்தலம் - கிரணம், மூளை.
கந்தலோகம் - சுப்பிரமணியபதம்.
கந்தல் - கெடுதல், கெட்டது, பீறல்.
கந்தவகம்-காற்று,மூக்கு,வாசனையுறல்.
கந்தவகன் - காற்று.
கந்தவடி - வாசனைத்தயிலம்.
கந்தவதி - வாயுவுக்கு இராசதானி, வியாசர் தாயாகிய சத்தியவதி.
கந்தவருக்கம் - சுகந்தம், வாசனைத் திரவியங்கள்.
கந்தவாகம் - வாயு.
கந்தவாகன் - காற்று.
கந்தவாகை - மூக்கு.
கந்தவாரம் - அந்தப்புரம், அரசன்தேவியில்லம்.
கந்தவானடக்கி - வாதமடக்கி.
கந்தவிஷபாகம் - ஒருவகைநோய். அது சரீரத்திற் பிணநாற்றம் வீசல், சுரம், மயக்கம், சோம்பல், சர்வாங்கமுங் கனம், மூர்ச்சை, தலைவலி, சிலேட்டுமாதிக்கம், தாகம், அதிகவார்த்தை குளிர், வயிற்றிற் குத்தல், கிரகணி யென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கந்தவிஷம் - சங்கோசகம் காவீர முதலிய கிழங்குகள்.
கந்தவரு - அசக்கூத்திற்குரிய வுருவாயடிவரையறை யுடைத்தா யொருதாளத்தாற் புணர்ப்பது.
கந்தவெற்பு - தேவர்கள் குமாரக்கடவுளைப் பூசித்த மலை.
கந்தளம் - கருப்பு, கவசம், தளிர், பொன், யுத்தம்.
கந்தறுவா - ஆமணக்கு.
கந்தற்பகூபம் - யோனி.
கந்தற்பசுவரம் - காமம்.

கந்தனேந்திரர் - ஒருசித்தர்.
கந்தனை - சிற்றரத்தை.
கந்தன் - அருகன், ஒருபிதிர், காமன், குமரன், சேர்ப்பந்தபாஷாணம், சூதபாஷாணம்.
கந்தாத்திரி - நெல்லி.
கந்தாயம் - பங்குவருஷத்தின் மூன்றத்தொருகூறு, விளைவுகாலம்.
கந்தாயு - துரியோதனன் றம்பியருள் ஒருவன்.
கந்தித்தல் - நாறுதல்.
கந்தாரம் - காந்தாரம்.
கந்தி - கந்தகபாஷாணம், கந்தகம், கந்தியென்னேவல், கமுகு, தவப்பெண், வாசம்.
கந்திதம் - அழுகை.
கந்தித்தம் - சீலை.
கந்தித்தல் - மணத்தல்.
கந்தியுப்பு - கந்தகவுப்பு.
கந்திரி - காகூரில் துலுக்கருக்கு விசேஷித்த பண்டிகை, பண்டி.
கந்திரேஸ்வரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்திலம் - ஒருவகைமுருக்கை, தூதுவளை
கந்திவாருணி - பேய்த்தும்மட்டி.
கந்து - கம்பம், அருகு, கட்டுத்தறி, கந்தென்னேவல், கழுத்தடி, சந்து, தூண், தூற்றின் மணியருகு, பண்டி, பண்டியுள்ளிரும்பு, பற்றுக்கோடு, பனங்கூடல், மாடு பிணக்குங்கயிறு, யாக்கையின் மூட்டு, யானையணைதறி, வைக்கோற்றிரள்.
கந்துகட்டுதல் - நீர் முதலிய தொதித்து வரைகட்டல், வைக்கோற்றிரட்டி வளைத்து விடுதல்.
கந்துகம் - குதிரை, குருகிலமன்னர், குதிரை, பந்து.
கந்துகன் - தான்றி.
கந்துகி - அந்தப்புரக் காவற்காரன்.
கந்துகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
சந்துதல் - கெடுதல்.
கந்துமாறுதல் - இணைத்ததை மாற்றி விடுதல்.
கந்துவான் - பிணைகயிறு.
கந்துளம் - பெருச்சாளி.
கந்துள் - கரி.

கந்தேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கந்தேறு - கோடகசாலை.
கந்தை - கரணை, சீலை, நல்லாடை, பீறற்புடவை.
கந்தோடம் - கருங்குவளை, வெண்குவளை
கந்தோதம் - தாமரை.
கந்தோத்தமை - கள்.
கந்தோலி - வெட்டுவலியன்.
சுங்கன் - கிருட்டினன்.
கபகலிஷ்டம் - ஒருவகைநோய். அது சிலேட்டுமதோஷ மிகைகளி லதிகமாகச் சேருங்காலத்திற்பிறந்து அவ்விடங்களில் நீர்க்கம்மல், ஒருவேளைமரத்தல், எரிச்சலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கபசிராவம் - ஒருவகைநோய். அதுநாசிப்புகளிற் சிலேட்டுமம் வியாபிக்கும் போது பிறந்து கண்களிலிருந்து வெண்மையாயும் பிசுபிசுத்த குழம்பாயும் விஸ்தாரமாயுஞ் சலத்தை யொழுகப் பண்ணுவது.
கபடஸ்தன் - கபடன்.
கபடநாடகசூத்திரன் - வஞ்சனைத்தொழிலன், விட்டுணு.
கபடநாடகம் - மகா தந்திரமான செய்கை, வஞ்சகநடிப்பு
கபடநாடகன் - திருமால்.
கபடம் - தந்திரம், வஞ்சகம்.
கபடவித்தை - கபடநாடகம்.
கபடன் - வஞ்சகன்.
கபடாதி - புளிவசலை.
கபடி - கபடன்.
கபடு - கபடம்.
கபட்டுப்படிக்கல் - இடைகுறைவான படிக்கல்.
கபத்தலைவலி - ஒருவகைச் சிரநோய். அது சிரோபாரம், குத்தல், சரீரமுழுதுங்கடுத்தல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, கண்களுப்பலோடு நோதல், காதுக்குள் நமைச்சலாகிய இக்குணங்களை யுண்டாக்குவது.
கபஸ்தி - சூரியகிரணம்.
கபஸ்தீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கபநாசம் - கண்டங்கத்திரி.
கபநாசனி - தேற்றான்வித்து.

கபந்தம் - உடற்குறை, கவந்தம், நீர்.
கபந்ீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கபம் - கோழை, சிலேட்டுமம்.
கபம்பம் - வாலுழுவை.
கபரி - பெருங்காயமரம்.
கபர்த்தம் - சிவன்சடை.
கபவிரோதி - சிற்றரத்தை.
கபாடக்கட்டி - வசம்பு.
கபாடபுரம் - இடைச்சங்கமிருந்தவூர்.
கபாடம் - கதவு, காவல்.
கபாய் - நிலையங்கி.
கபாலகுஷ்டம் - ஒருவகைக் குஷ்டவியாதி. அது இரணக் கொப்பளங்கள் சிறிது சிறிதாகக் கபாலத்தினது காந்தியைப் பெற்றுத் தடித்துக் கறுத்துஞ் சிவந்துஞ் சரசுரத்து முகங்கள் வாடியு மொன்றை யொன்று சுற்றி அநேக கொப்பளங்க ளெழும்பி இரணங்களாவது அவைகளிற் பெரிய பெரிய குழிகள் விழுவதுஞ் சீத்தண்ணீ ரொழுகுவதும் உரோமங்கள் முளைப்பதும் நோவுந்தினவு மதிகப்படுவதுமான குணங்க ளுண்டாகும். கபாலம்போல் வெளுத்த நிறத்தைப் பெற்றிருப்பதா லிப்பெயர் பெற்றது.
கபாலக்காரன் - ஒருநோய்.
கபாலக்குத்து - தலைமண்டைக்குத்து.
கபாலசன்னி - ஒருசன்னி.
கபாலசாந்தி - ஆவிரை.
கபாலதரன் - சிவன், வயிரவன்.
கபாலபாணி - சிவன்.
கபாலபித்தம் - ஒருவகைப் பித்தநோய்.
கபாலமலை - ஒருமலை.
கபாலமோனம் - ஒரு புண்ணிய க்ஷேத்திரம். இராமராற் கொலையுண்ட மகோதரனது கபால என்புத்துண்டமொரு இருடிகாலிற் றைக்க அவ்வேதனையா லவ்விருடி சக்கிரன் தபஞ்செய்த விடத்திற்குப் போனார். அஃதங்கே வீழ்ந்தமையா லவ்விடங் கபாலமோசன மென்னப்பட்டது.
கபாலமோசனேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கபாலம் - இரப்போர்கலம், தலையோடு.
கபாலரோகம் - ஒருவகை நோய்.
கபாலவாசல் - உச்சித்துவாரம்.
கபாலன் - சிவன், சேர்பந்தபாஷாணம்.
கபாலி - உமை, சிவன், வயிரவன்.
கபாலினி - துர்க்கை.
கபாலீசர் - திருமயிலையிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கபாலீச்சுரன் - சிவன்.
கபாலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கபி - கயிறிழுக்குங்கருவி, குரங்கு.
கபிகந்துகம் - தலையெலும்பு.
கபிசம் - ஒருவகை யன்னம்.
கபிஞ்சலம்-ஆந்தை, காடை, சாதகபுள்.
கபிஞ்சலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கபிஞ்சலை - ஒருநதி.
கபிதம் - கருஞ்சீரகம்.
கபித்தம்-கொட்டிக்கிழங்கு,விளாமரம்.
கபித்துவசன் - அருச்சுனன்.
கபிரதன் - சீராமன்.
கபிலபுரம் - கலிங்கநாட்டிலுள்ளவொரு தேசம்.
கபிலம் - உபபுராணம் பதினெட்டில் ஒன்று, கருமைகலந்த பொன்மை.
கபிலவெலி-ஒருவகை எலி; அது கபில நிறமுள்ளது. கடித்தா லவ்விடத்திற் பல கட்டிகளுண்டாய் விரணமாகும். அதனாற் சுரம், வாந்தி, பிரமையாகிய குணங்களுண்டாகும்.
கபிலன் - ஓரறிஞன், திருவள்ளுவர் சகோதரன்.
கபிலாசிலந்தி-ஒருவகைச்சிலந்தி. அது கண்களினாற்பார்க்கில் தேகமுற்றுஞ் சிவந்த தடிப்பும், வாய் நீரூறலும், மயிர்க்கால்களி லெரிச்சலும், தலைப் பாரமு முண்டாகும்.
கபிலாசிரமம் - கங்காசங்கம சமுத்திரப் பிரதேசத்திலுள்ள சகரத்தீவி லுள்ளது, பாதலத்தி லுள்ளதென்றுஞ் சொல்லுவர்.
கபிலாசுவன் - குவலயாசுவன் மகன், துந்துமாரன் மகனாகிய திருடாசுவன்.
கபிலை - கருமைகலந்த பொன்மை, காராம்பசு, தென்கீழ்த்திசை யானைக்குப் பெண்யானை, தேவபசு, பசு, நீரிறைக்குஞ் சூத்திரத்தொன்று.
கபீடம் - நீர்.

கபீதனம் - வாகை.
கபீரம் - ஆழம்.
கபுரம் - கமுகு.
கபோணி - முழங்கை.
கபோதகம் - சித்திரக்கம்பி.
கபோதபாலிகை - மெத்தையின் தகொடுங்கையிற் பட்சிகளிருக்குந் துவாரம்.
கபோதம் - கரும்புறு, சுவர்த்தலங்களின் சித்திரக்கம்பி, புறா.
கபோதலோமன் - விலோமன் மகன்.
கபோதி - குருடன்.
கபோதேஸ்வரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கபோலம் - கதுப்பு.
கபோலேஸ்வரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கப்பச்சு - கம்மாளர் கருவியினென்று.
கப்படம் - சீலை.
கப்படா - அரை.
கப்படி - ஒருமரம்.
கப்பணம் - இருப்பு நெருஞ்சின்முள், ஓராபரணம், கழுத்திடு மிரும்புத்தகடு, கைவேல்.
கப்பம் - அரசிறை.
கப்பரை - இரப்போர்கலன், கடாரம்.
கப்பலோட்டு - கடல்யாத்திரை.
கப்பல் - மரக்கலம்.
கப்பல்வாணம் - ஒருவாணம்.
கப்பல்வாழை - ஒருவாழை.
கப்பறை - குதிரேனுர்தாயம்.
கப்பற்கடலை - ஒருகடலை.
கப்பற்கதலி - ஒருவாழை.
கப்பற்காரன் - கப்பற்றலைவன்.
கப்பற்சண்டை - கப்பலிலிருந்து செய்யும் போர்.
கப்பற்பாட்டு - ஏலப்பாட்டு, ஒருபாடல்.
கப்பி - ஒருகருவி, கயிறிழுக்குங் கருவி, கழிகடை, குறணல், தானியம், தெள்ளி நீக்கியது.
கப்பித்தல் - கிளைவிடல், முகையரும்பல்.
கப்பிப்பிஞ்சு - கழிகடைப்பிஞ்சு.
கப்பியல் - கப்பி.
கப்பு - கவர்கொம்பு, கிளை, சிறுதூண், மயிர்க்கூட்டுஞ்சாயம்.
கப்புக்கால் - குறுங்கால்.
கப்புச்சாயம் - ஒருவகைச்சாயம்.
கப்புதல் - உண்ணல், கம்முதல், மூடிக்கொள்ளல்.
கப்புத்தோள் - வலத்தோளு மிடத்தோளுமாகக் காவுதல்.
கப்புநாமம் - இருகவர்நாமம்.
கப்புவிடுதல் - கவர்வைத்தல், கிளைவிடுதல்.
கம - நிறைவு.
கமகமத்தல் - மிகமணத்தல்.
கமகமெனல் - வாசனைக்குறிப்பு.
கமகன் - அரும்பொருளைச் செம்பொருணடையாய்க் காட்டிப் பாடுவோன்.
கமக்காரன் - கமத்திலெசமான், வேளாளன்.
கமங்கட்டுதல் - கமமுண்டு பண்ணல், வேளாண்மைக்கணிகோலுதல்.
கமசுகட்டுதல் - மூபன்று நிற்றல்.
கமடத்தரு - சிவதாரு.
கமடம் - ஆமை.
கமடி - பெண்ணாமை.
கமடேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கமண்டலம் - தெண்டிகை, சுரைக்கடுகு; இஃது தவத்தோர் பஞ்சமுத்திரையினொன்று.
கமத்தொழில் - உழவுதொழில்.
கமநம் - நடை.
கமபாரைத - ஒருபயில்.
கமம் - நிறைவு, விளைநிலம், மேகம்.
கமாதம் - மணித்தக்காளி.
கமரி - ஒருவகைப்புல்.
கமருதல் - அழுதல்.
கமர் - வெடிப்பு.
கமலகுண்டலமாய்விழுதல் - கீழ்மேலாய் விழுதல், தலைகீழாய்விழல்.
கமலக்கண்ணன் - விண்டு.
கமலதிருத்தம் - கூத்திஞேர் விகற்பம்.
கமலநிறமணி - சாதுரங்கப்பதுமராகம்.
கமலபவன் - பிரமா.
கமலபாலிகை - இடிம்பை.
கமலம் - ஒருவகைத்தட்டு, தாமரை, நீர், வைரத்தரிப்பு.
கமலயோனி - பிரமன்.
கமலராகம் - பதுமராகம்.
கமலவல்லித்தாயார் - திருப்பேர்நகரிற் கோயில்கொண்ட விலக்குமி.
கமலவூர்தி - அருகன், பிரமன்.

கமலாகாரம் - தாமரைவடிவம்.
கமலாக்ஷன் — தாரகாசுரன் புத்திரன், தாரகாக்ஷன், வித்தியுன்மாலி.
கமலாக்கினி - மட்டானதீ. அது இரண்டு விரற்கனமுள்ள இரண்டு விறகால் எரிப்பது.
கமலாசனன் - அருகன், பிரமன்.
கமலாசனி } இலக்குமி.
கமலாசனை }
கமலாயம் - திருவாரூர்.
கமலாலயை - இலக்குமி, திருவாரூர்.
கமலி - குங்குமபாஷாணம்.
கமலிப்பட்டு - ஒருபட்டு.
கமலினி - உமை சேடிகளிலொருத்தி.
கமலை - இலக்குமி, திருவாரூர்.
கமலோத்தரம் - குசும்பாவன்னம்.
கமல் - குடசப்பாலை, வெட்பாலை.
கமவாரம் - அணிப்பங்கு.
கமவேலை - உழவுத்தொழில்.
கமழ்தல் - மணத்தல், தோற்றுதல்.
கமலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கமறல் } அலறுதல், அழல், குமிறுதல், மிகக்காய்தல்.
கமறுதல் }
கமனகுளிகை - இரசகுளிகை, நினைத்தவிடத்துக்குப் போகப்பண்ணனும் மருந்து.
கமனசித்தி - கமனம்பண்ணும்வல்லபம்.
கமனப்பிரியை - ஐம்பத்து மூன்றுவது மேளகர்த்தா.
கமனம் - கதி, போதல்.
கமனம்பண்ணுதல் - கவனமாய்ச் செல்லல், பெண்ணிடத்திற்சேர்தல், போதல்.
கமனி—ஆகாயமார்க்கமாய்ச்செல்பவன்.
கமனித்தல் – கமனம்பண்ணல்போதல்.
கமாஸ் – ஓரிராகம்.
கமாரிடுதல் – சத்தம்பண்ணல், வெடித்தல்.
கமாரெனல் - சத்தம்பண்ணுதல்.
கமார் - வெடிப்பு.
கமி - மிளகு.
கமிகை - கடிவாளம்.
கமிச்சு - கம்பியச்சு.
கமித்தல் - க்ஷமித்தல், பொறுத்தல்.
கமிப்பு - க்ஷமிப்பு, பொறுமை.
கமுகந்தீவு - சத்ததீவிலொன்று.
கமுகமுத்து - கமுகுமுத்தம்.
கமுகம்பூச்சம்பா - ஒருநெல்.
கமுகு - பாக்குமரம்.
கமுகுமுத்தம் - கமுகிற் பிறந்த பச்சைநிறமுத்து.
கமுக்கட்டு - அக்குல், கைக்குழி.
கமுக்கம் - அடக்கம், அமைந்திருத்தல்.
கமுக்குக்கமுக்கெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
கமை-க்ஷமை, பொறுமை; அஃது சத்தபுண்ணியத்தொன்று.
கம் - அறிவு, ஆகாயம், ஆட்டுக்கடா, இந்திரியம், கம்மியர்தொழில், காற்று, சந்தோஷம், செயல், தலை, நீர், பிரமன், முத்தி, மேகம், விந்து, வெண்மை.
கம்சன் - உக்கிரசேனன் மகன், மதுராபுரத்தரசன், கிருஷ்ணன் மாதுலன். இவன்பூருவஜென்மத்திற்காலநேமியென்னு மிராக்ஷசன், அந்தவாசனையால் தேவர்களைத் துன்பப்படுத்திவந்தான். தனது தங்கையான தேவகியை வசுதேவனுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்து இரதத்தி லேற்றிக்கொண்டு வனம்பார்க்கப் போகையில் "உன்றங்கைபுத்திரனாற் கொல்லப்படுவாய்" என்றோர் அசரீரி பிறந்தது. அது கேட்டவுடன் திரும்பிவந்து இருவரையுஞ் சிறைச்சாலையிலிட்டுப் பிள்ளைகள் பிறக்குந்தோறுங் கொன்றுவந்தான். முடிவிற் கிருஷ்ணன் பிறந்து தனது யோகமாயையால்நந்தன்சேரிபோய்ச்சேர்ந்தான். அஃதறிந்த கம்சன் அவனைக்கொல்லப் பல உபாயங்கள் தேடியும் பலியாது ஈற்றிற் கிருஷ்ணனாற் கொல்லப்பட்டான். உக்கிரசேனன்மனைவி தோழிகளோடு காட்டிற் சென்றபோது அங்கே தோழிகளைப்பிரிந்து வழிதடுமாறித் தனிக்க அச்சமயமோராக்கன்கண்டு மோகித்து அவளைக்கூடிப்பெற்ற புத்திரன் இக்கம்சன்.
கம்சாராதி - கிருட்டினன்.
கம்சை - உக்கிரசேனனதுமூத்தமகள்.
கம்பக்கணை-அசையாதவன், அசையாத்தம்பம், தழுக்குணி.
கம்பக்கூத்து - தொம்பர்கூத்து.

கம்பக்கோரை - ஒருவிதப்புல்.
கம்பச்சுரம் - ஒருவகைச்சுரநோய். அது நடுக்கம், சர்வாங்கசீதளம், வியர்வை, கொட்டாவி, தலைப்பாரம், அருசி, கண்ணிற் சலப்பெருக்கம், தாகம், சோர்வு, தலைப்புரட்டு, சுவாசம், அதிகவேதனை, திர்ப்பலம், கூச்சம், வாயிலும் நாவிலுங் கொப்பளம், சித்திரா பங்கம், பேதி, ஏப்பம், புளித்தவாந்தி, சடத்துவம், கீல்களில் நோவு, நாடி சூட்சுமமாகவும் வேகமாகவும் நடக்கையாகிய இக்குணங்களை யுண்டாக்குவது.
கம்பட்டக்காரன் - காசடிப்போன்.
கம்பட்டசாலை - காசு முதலியன அடிக்குஞ்சாலை.
கம்பட்டமடித்தல் - காசடித்தல்.
கம்பட்டமுளை - காசடிக்கும் முத்திரை.
கம்பட்டம் - காசு.
கம்பத்தம் - வேளாண்மை.
கம்பத்தன் - இராவணன்.
கம்பத்து - தோணியின் வெடிப்பு.
கம்பநன் - சலநசுபாவமுள்ளவன்.
கம்பந்தாளி - ஒருதாளி.
கம்பந்திராய் - ஒருதிராய்.
கம்பபம் - கம்பளம்.
கம்பபீவாகியம் - பாரவண்டி.
கம்பம் - அலசவு, கர்பரி பாஷாணம், சாலரங்க பாஷாணம், தாலம்பப் பாஷாணம், தூண், நடுக்கம், பாய்மரம், விளக்குத்தண்டு, வெள்ளைப் பாஷாணம்.
கம்பரம் - சஞ்சலம்.
கம்பர்காஞ்சி - காஞ்சிபுரம், ஓர் ஊர்.
கம்பளம் - கம்பளி, செவ்வாடை, மேற்கட்டி.
கம்பலை - அச்சம், ஒலி, சண்டை, துன்பம், நடுக்கம், மருதநிலம், வயல், வருத்தம்.
கம்பலைக்கட்டுதல் } கம்பலைப்படல் } சண்டைபிடித்தல், பேச்சு வார்த்தைப்படல்.
கம்பலைமாரி - ஒருபெண்தேவதை, கம்பலைப்படுகிறவன்.
கம்பவம் - சிலைப்பேன்.
கம்பவாணம் - ஒருவாணம்.
கம்பவாதம் - உதறுவாதம், நடுக்குவாதம்.
கம்பளத்தார் - ஒருசாதியார்.
கம்பனபருகிஷன் - அந்தகன் மகன்.
கம்பளம் - ஒருநாடு, கம்பளி, செம்மறிக்கடா, செவ்வாடை, திருவாட்டேறு.
கம்பளர் - மருதநிலமாக்கள்.
கம்பளி - ஒருமரம், ஒருவகைச்சீலை, ஒருவகையாடு.
கம்பளிக்கொண்டான் - ஒருமரம்.
கம்பற்று - தோணியிற்சில்லி.
கம்பனம் - அசைவு, அதிர்தல்.
கம்பன் - ஒரிராக்கதன், ஒருபுலவன்.
கம்பாகம் - அமாற்கயிறு.
கம்பாநதி - காஞ்சிபுரத்திலுள்ளஓராறு.
கம்பாயம் - ஒருபுடவை.
கம்பாரி - குமிழஞ்செடி.
கம்பாணம் } கம்பான் } அமாற்கயிறு.
கம்பி - இரும்பு முதலியவற்றின் கம்பி, கம்பியென்னேவல், காசு, காதணி, சித்திரக்கம்பி, வெடியுப்பு.
கம்பிகட்டுதல் - புடவைமுதலியவற்றிற்குக் கம்பிசேறுதல்.
கம்பிகை - ஒருவாத்தியம்.
கம்பிக்கடுக்கன் - ஒருவகைக்கடுக்கன்.
கம்பிக்களம் - கம்பிக்குறியுள்ளபுடவை.
கம்பிக்குறி - கம்பிபோன்றகுறி.
கம்பிதம் - அசைவு, நடுக்கம்.
கம்பித்தல் - அசைதல், நடுங்கல்.
கம்பிமணி - ஒருவகைமணி.
கம்பியச்சு - கம்மாளரோர்கருவி, சித்திரக்கம்பி.
கம்பியுப்பு - ஒருப்பு.
கம்பிரம் - அசையுந்தன்மையுடைய அரசிலை முதலியன.
கம்பிவாங்கல் } கம்பிவாங்குதல் } நெடுகிவிடுதல்.
கம்பிவிதசு - ஒருவாணம்.
கம்பினி - கம்பளி.
கம்பீரசன்னி - ஒருநோய்.
கம்பீரம் - ஆர்ப்பரிப்பு, ஆழம், செருக்கு.
கம்பீரரோகம் - ஒருவகை நோய்; அது இலிங்கநாத நோய்களினின்று மதிகரித்த வாயுவின் விருத்தியாற் கண்களின் நரம்புகள் முடங்கிப் பார்வைக்கு ஒருவியாழ்க்குவிடும்போது பிறந்து கொஞ்சமேனும் பார்வையைத் தெரிய வொட்டாதபடி செய்வது.

கம்பீரவாதசோணிதம்-ஒருவகைநோய். அது மாமிசத்தையுஞ் சருமத்தையும்பற்றிய நமைச்சல்முதலிய துர்க்குணங்கள் சிலநாள் பொறுத்துள்ளிலாழப் பாய்ந்து சத்த தாதுக்களிலும் வியாபித்து மிக்க வுபத்திரவத்தையுண்டாக்குவது. இது முற்றினாலுடம்பில் முழுவதும் வீக்கங்காணும்.

கம்பீரவாதம் - ஒருவகை வாதநோய். அது வாயுவை யுண்டாக்கும். வஸ்துக்களினாற் பிறந்து முதல் முதலூர்த்து வாங்கத்திலாவது அதோங்கத்திலாவது சர்வாங்கத்திலாவது இருக்கின்ற தாதுவைப்பற்றி ஒவ்வொரு தாதுக்களாகத் தாண்டிக்கொண்டே யுள்ளிலாழ்ந்து அஸ்திரத் தாதுக்குள்ளிருக்கு மச்சதாதுவை அனுசரித்துத் துன்பத்தைச் செய்வது. அப்போது சரீர முழுவதும் வேதனை, திமிர், கைகால் முடக்கம், வாந்தி, மூர்ச்சையென்னு மிக்குணங்களுண்டாகும்.

கம்பீரவிக்கல் - ஒருவகைவிக்கல்நோய். அது பக்குவாசயத் தானத்திலாவது நாபி ஸ்தானத்திலாவது மகா விக்கல் ரோகக் குணங்களைப் பெற்று அடிக்கடி கொட்டாவி, தேகமுறுக்கு, அதிக சத்தத்தோடு நீண்டுவருகின்ற விக்கலாகிய குணங்களை யுண்டாக்குவது.

கம்பீரன் - வீரசெற்சிதமுள்ளவன்.

கம்பீரித்தல் - ஆர்ப்பரித்தல், வீராவேசப்படுதல்.

கம்பீர் - கத்தைக் காம்புபோன்ற ஒரு சரக்கு.

கம்பு - ஒருபயிர், சங்கு, சிறுதடி, செந்நினை, மரக்கொம்பு.

கம்புக்கிரீவம் - மூன்றிரேகைகளுள்ள கழுத்து.

கம்புள் - சங்கு, சம்பங்கோழி, வானம்பாடி.

கம்பை - எல்லை, கதவு முதலியவற்றின் கம்பை, காஞ்சிபுரத்திலுள்ள ஒருநதி, பொறுப்பு.

கம்பைக்கல் - ஒருமணி.

கம்போசம் - ஒருவகைச்சங்கு, ஒருதேசம்.

கம்போத்தம் - குவளை.

கம்மக்கை - வேலைநெருக்கம்.

கம்மஞ்செய்மாக்கள் - கைத்தொழிலாளர்.

கம்மம் - கம்மியம், வேலை.

கம்மல் - இருமல், ஒருவகைக் கடுக்கன், காதோலை, குரலடைப்பு, மங்கல், மந்தாரம், மாசு.

கம்மவார் - ஒருசாதியார், கமக்காரர்.

கம்மாலை - கம்மத்தொழில் செய்யுந்தலம்.

கம்மாளர் - கம்மியர், அவர்கள் கன்னார், கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார்.

கம்மாறர் - கரையார்.

கம்மிடுதல் - வாசனைக்குறிப்பு.

கம்மியமானக்கிரியை - குறிப்புவினை.

கம்மியமானம் - குறிப்பு.

கம்மியம் - கைத்தொழில், பேறு.

கம்மியர்-கம்மாளர், தொழில்செய்வோர்.

கம்முதல்-அதட்டியுரப்பல், இருமுதல், குறல்குன்றல், மூடுதல்.

கம்மெனல் - வாசனைக்குறிப்பு.

கம்மை - சிறுகீரை.

கயக்கம் - கயங்கப்படுதல்.

கயக்கல் - நசுக்கல், முறுக்கல், மெலித்தல், கலக்கல்.

கயக்கு - கயக்கென்னேவல், கைக்குதல், சோர்வு.

கயக்குதல் - நசுக்குதல், முறுக்குதல், மெலிவித்தல்.

கயங்கல் - குழைதல், சோர்தல், மெலிதல், விலகிவிடல்.

கயங்கு - கம்பு, கயங்கென்னேவல்.

கயங்குதல் - குழைவு, சோர்தல், நொந்துமெலிதல், விலகிவிடுதல்.

கயடேரிகம் - அகில்.

கயத்தம் - துளசி.

கயத்தி - கெட்டவள்.

கயத்தலை - மணத்தியர், யானைக்கன்று, வாவி.

கயப்பினை - வங்கமணல்.

கயமதம் - யானைமதம்.

கயமலர் - பெரியமலர்.

கயமுகம் - கயாசுரன்.

கயமுகன் - ஓரசுரன், விநாயகன்.

கயமுகாரி - விநாயகன்.

கயமுனி - யானைக்கன்று.

கயமை - கீழ்மை, சண்டாளத்தனம், குணவீனம்.

கயம் - சீராருதமடு, அகழி, அழிவு, ஆழம், இளமை, ஒருநோய், கீழ்மை, குளம், கேடு, தேய்வு, நீர், பெருமை, மேன்மை, யானை, கருமை.
கயரோகம் - க்ஷயரோகம்.
கயர்-கசர், கயரென்னேவல், துவர்ப்பு.
கயல் - கெண்டைமீன்.
கயவஞ்சி - உலோபன்.
கயவஞ்சித்தனம் - உலோபத்தனம்.
கயவர் - கீழ்மக்கள்.
கயவாகு-சிலப்பதிகாரத்திற்கூறப்பட்ட இலங்கையரசன். இவனே முதன் முதல் கண்ணகிக்கு இலங்கையிற் கோவில் கட்டுவித்து உற்சவங் கொண்டாடியவன்.
கயவாய் - கரிக்குருவி, கழிமுகம், பிளந்தவாய், புகார்முகம்.
கயவாளகம் - கீழுலகம்.
கயவு - உயரம், கழிமுகம், களவு, பெருமை, மிருதி, மேன்மை.
கயற்கூடு - இணைக்கயல்.
கயனை - கசனை.
கயன் - உன்முகன்புத்திரன், அங்கதன் றம்பி, ஒரு சக்கரவர்த்தி. இவன் பிரியவிரதன் வமிசத்து நக்தனுடைய மகனும் ஐந்நூறு அசுவமேதயாகஞ் செய்து இந்திரபதம் பெற்றவனுமாவன், அதூர்த்தராஜன் மகன், இவன் யக்கியங்கள் பலசெய்தது இராஜவிருடியானவன். இவன் யக்கியங்கள் செய்தவிடமே கயையெனப் பெயர் பெற்றது.
கயாகரம் - ஒரு நிகண்டு.
கயாரி - சிங்கம்.
கயானனன்-கயமுகாசுரன், விநாயகன்.
கயிங்கரன் - ஏவல்செய்வோன்.
கயிங்கரியம் - வேலை.
கயிங்கிதம் - ஆகாயத்திற் சுருபமறிதல்.
கயிப்பு - இலாகிரி.
கயிமவாதி - வசம்பு.
கயிரம் - அலரி.
கயிரவம்-செவ்வாம்பல்,வெள்ளாம்பல்.
கயிரிகம் - ஒருமண், காவிக்கல்.
கயிரை - சுற்றம்.
கயிர் - தவறு.
கயிலாச நாயகியம்மை - திருக்காருயவிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
கயிலாசப்பருவதம் - வெள்ளிமலை.
கயிலாசம் / கயிலாயம் - ஒருமலை, சிவபதவி.
கயிலாயன் - சிவன்.
கயிலி - பலவன்ன வரிப்புடவை.
கயிலை - கயிலாசம்.
கயிலைமலை - வெள்ளிமலை.
கயிலையாளி - சிவன்.
கயிலையிற்கடுங்காரி - மாமிசபேதி.
கயில் - ஆபரணக்கடைப்புணர்வு, தேங்காய்ப்பாதி, பிடர்.
கயிறடித்தல் - நூல்போடுதல்.
கயிறு - வடம்.
கயிறுகட்டுதல் - கெடுகவிடுதல்.
கயிறுசாத்துதல் - சாத்திரம்பார்க்க ஏட்டிலே கயிறிடுதல்.
கயிறுதடி - நெய்வோர்க்கருவியிலொன்று.
கயிறுபிடித்தல் - நூல்பிடித்து ஒழுங்குபடுத்தல்.
கயிறுமாலைப்படுத்தல் - தொந்தரைப்படுத்தல், வருத்தப்படுத்தல்.
கயிறுமுறுக்குதல் - கயிறு திரித்தல், வருத்தப்படுத்தல்.
கயிற்றுக்கொடி - கயிற்றுலாய கட்டுக்கொடி.
கயிற்றுக்கோலாட்டம் - ஒரு விளையாட்டு.
கயிற்றுக்கோல் - ஒருதராசு, வெள்ளிக்கோல்.
கயிற்றுப்பொருத்தம் - மணப்பொருத்தம் பத்திலொன்று.
கயிற்றேணி - நூலேணி.
கயினி - அத்தநாள், கைம்பெண்.
கயேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கயை - ஓர் ஆறு, வடதேசத்திலுள்ள ஒரு புண்ணியக்ஷேத்திரம்.
கர - இருபத்தைந்தாவது வருடம், கரவென்னேவல்.
கரகண்டகம் - நகம்.
கரகந்தேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கரகம்-ஆலாங்கட்டி, கமண்டலம்,கெண்டிகை, தாதுமாதளை, வட்டில்.
கரகாணம் - பாதவுறுப்புளொன்று.
கரகாத்தல்-அரிகண்டப்படுத்தல், ஒலிக்குறிப்பு, பரிசக்குறிப்பு.

கரகரப்பிரியை - இருபத்திரண்டாவது மேளகர்த்தா.

கரகரப்பு-அலைக்கழிப்பு, கார்ப்பு, சருக்கரையூறு, தினவு,

கரகரெனல் - கரகரத்தல்.

கரகவசம் - போரில்கைக்கிடும் இருப்பு

கரகாடம் - செங்கழுநீர்க்கிழங்கு. [றை.

கரகை - ஆலங்கட்டி, மழை.

கரக்கிரகணம் } விவாகம்.
கரக்கிரகம் }

கரசம் - புலிதொடக்கி, யானை, யானைக்கரணம்.

கரசரணதி - கைகால் முதலியசாங்கம்.

கரசல் - புன்செய், வைத்தியநூல்.

கரசாகை - கைவிரல்.

கரசிக்கிருட்டி - ஒருபறவை.

கரசீகரம் - துதிக்கையுமிழ்நீர்.

கரசூகம் - நகம்.

கரசை - கரசம், நாஞூறுமரக்காலளவு.

கரஞ்சகம் } புங்கமரம்.
கரஞ்சம் }

கரடகபாஷாணம் - ஒருமருந்து.

கரடகம் } தந்திரம், வஞ்சகம்.
கரடகமபம் }

கரடகன் - ஒரு வஞ்சகமுள்ளநரி, தந்திரி, வஞ்சகன்.

கரடம்-காங்கை, மதம்பாய்சுவடு, யானை மதம்.

கரடி - ஐவாய்மிருகம், சிலம்பம்.

கரடிகை - ஒருபறை.

கரடிப்பறை - தட்டை.

கரடிப்புண் - அதமப்புணர்ச்சியினாற் பீசத்திலுண்டாகும் ஒருவிதவிரணம்.

கரடிவித்தை - ஆயுதபரிட்சை.

கரடு - ஒருபுல், கணு, கற்பாடு, சருச்சரை, முரடு, வஞ்சகம்,

கரடுமுரடு -செம்மையற்றது, வயிரமுங் கணுவுங்கொண்டது.

கரட்டரிதாரம் - ஒருமருந்து.

கரட்டான் - ஓரோணன்.

கரட்டுக்கரட்டெனல் - ஒலிக்குறிப்பு.

கரட்டுத்தானகம்-விளைவுபாஷாண முப்பத்திரண்டினொன்று.

கரட்டுநிலம் - வன்றரை.

கரட்டோணன் - ஓரோந்தி.

கரணக்கூத்து - படிந்தவாடல்.

கரணசன் - நீண்டசந்திருக்குமூக்கன்.

கரணத்திராணம் - மஸ்தகம்.

கரணம் - அந்தரிந்தியம், அறுநிச்சேட்டு, உபகரணம், எண்ணிக்கை, ஏது, ஐம்பொறி, கணிதம், கலவி, காரணம், கூத்திஞேர் விகற்பம், கூத்து, செய்கை, நற்செய்கை, பஞ்சாங்கத்தில் ஒன்று, விருப்பம்.

கரணவணி - பிரகரணம்.

கரணவேதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று. [ன்.

கரணி - சஞ்சீவி, செய்குதல், செய்பவ

கரணிதம் - அந்தக்கரணம். அஃது ஆங்காரம்-சித்தம் - புத்தி-மனம்-கலவி - கூட்டம்-கூத்தின் விகற்பம்.

கரணியமேனிக்கல் - கரும்புள்ளிக்கல்.

கரணியாசம் - கைக்கிரியை.

கரணியம் - காரியம், செய்யத்தக்கது.

கரணை-ஒருசெடி, ஒருநூறு, ஒருவகைக்கட்டு, கொல்லறு, மூளி, வீணைத்தண்டு.

கரணைப்பலா - வெருகு.

கரணைப்பாவட்டை - ஒருபாவட்டை.

கரண்டகம் - ஒருசெப்பு.

கரண்டம் - கமண்டலம், கரண்டகம், நீர்க்காக்கை.

கரண்டி - சிற்றகப்பை.

கரண்டை - குண்டிகை, முனிவர்வாசம்.

கரதம் - காக்கை.

கரதலம் - கைத்தலம்.

கரதாலம் - ஒருவாத்தியம்.

கரதாளம் - பணை, கைக்கொட்டு.

கரதோயம்-வங்கதேயத்திலுள்ள வோர் நதி. இது கௌரி விவாககாலத்திற் சிவன் கரங்களினின்று பெருகினமையாற் கரதோயமெனப் பெயர் பெற்றது.

கரதோயை - ஒருநதி.

கரத்தல் - ஒளித்தல், கொடாமை, திருடல், மறைத்தல்.

கரந்தமன் - யயாதிபுத்திரனுகிய துர்வாசன்பௌத்திரன் புத்திரன். இவன் பலாசுவன் எனவும்படுவான். இவன் பலபராக்கிரமமுடையனு யரசுசெய்தபோது பொறுமையால் ஏனையவரசர்கள் திரண்டு இவனை வளைய அது கண்டு அஞ்சிச் சிறிதுநேரம் ஏகாந்தமாயிருந்து சிந்தித்துப் பின் வெளி

யேசென்று யாவரையுஞ் செயித்தவன். இவன் மகன் அவீக்ஷித்து.

காந்தவரவெழினி - மேற்கட்டுத்திரையாகவும் செயற்பாட்டுடனே வகுக்கப்படுவது.

காந்துவரவெழினியினிலக்கணம் - காந்துவரவெழினியினது இலட்சணம்; அது ஒரு முகவெழினி பொருமுகவெழினியினுஞ் சிறப்புடைத்தாய் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரென்று சொல்லப்பட்ட வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்ததேசுவரனென்னு நால்வகைவருணப்பூதர்களையுஞ் சித்திரத்தாலமைக்கப்பட்டு அரங்கிற் றூங்கவிடுவது.

காந்துறைகோள் - காருணக்கிரகம்.

காந்துறைச்செய்யுள் - மிறைக்கவியில் ஒன்று.

கரந்தை - ஒருபூடு; அஃது அட்டாதசமூலத்தொன்று, கல்லாரை, பகைவரோட்டின நிரைமீட்டவர்க்குமாலை, நாறுகரந்தை.

கரந்தையரவம்-கரந்தைத்திணைத்துறை பதின்மூன்றனுளொன்று. அது பசு நிரையைக் கைப்பற்றினமை கேட்டுச்செய்யாநின்ற காரியந்தவிரக் கடுகினராகித் திரளுங் கூறுபாட்டைச் சொல்லுவது.

கரபத்திரம் - ஈர்வாள், கைவாள்.

கரபத்திரிகை - சலக்கிரீடை.

கரபம் - கழுதை.

கரபரிசம் - கையினுற்றொடுகை.

கரபர்ணம் - செவ்வாமணக்கு.

கரபல்லவம் - கைவிரல்.

கரபல்லபம் - வினாமரம்.

காபாத்திரமெடுத்தல் } கையிலன்னம்
காபாத்திரம் } வாங்கிப் புசித்துத் திரிதல்.

கரபாலம் - முப்பது அங்குலத்துக்கு மேற்பட்ட கத்தி.

கரபி - யானை.

கரபீரம் - சிங்கம்.

கரபூடணம் } கங்கணம்.
கரபூஷணம் }

கரப்பன் - கரப்பான், கிரந்திப்புண்.

கரப்பன்பூச்சி - ஒருபூச்சி.

கரப்பன்பூடு - ஒருபூண்டு.

கரப்பான் - ஒருபுண்.

கரப்பான்பித்தம் - ஒருவகைப்பித்தநோய். அதுசர்வாங்கத்திலுஞ்சொறி, உபத்திரவத்தோடுகட்டி, குழம்பானபேதி, இரைச்சலுடன் பொருமல், இசிவு, கால்களில் விலவிலப்பு, இடுப்புநோவு, நியிரோடு சரீரத்திற் காந்தல், நிறைக்குறைவென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

கரப்பான்பிரமேகம்-ஒருவகைப் பிரமேகநோய். அதுவயிற்றிலுளைச்சல், சிதளம்வீழல், நீர் உஷ்ணமாகவும், கடுப்பாகவுமிறங்கல், சிலவேளை அந்த வாரத்தைப் புண்ணாக்கிச் சுண்ணம் புக்கலைக் கரைத்தசலம்போற் குத்தலோடிறங்கல், அழலையாய் வாட்டத்துடன் கைகாலோய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ்சொறியென்னு மிக்குணங்களை புடையது.

கரப்பிரசாரம் - பரதவுறுப்புளொன்று.

கரப்பு-ஒளிப்பு, களவு, மத்து, மீன்கூடு.

கரப்புக்குடில் - சிறுகுடில்.

கரப்பொடி-குடிலைத்தண்டேற்றிவைத்தல், குரங்குபிடிக்கும் ஒருபொறி.

கரமஞ்சரி - நாயுருவி.

கரமார்த்திகை - திராட்சைக்கொடி.

கரமாலம் - புகை.

கரமுகவம்பி - யானைமுகவோடம்.

கரமுகன் - விநாயகன்.

கரமுத்தம் - ஒருபாணம்.

கரமை - உல்லாப்பியம்.

கரம்-அழிவுள்ளது, எழுத்தின்சாரியை (உ-ம்) அகரம், ஓலைக்குவியல், கழுதை, கிரணம், குடியிறை, கை, நஞ்சு, முழம், யானைத்துதிக்கை.

கரம்பம் - பொடிமா.

கரம்பனூர்-நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்று. இது உத்தியோக விமானமமைந்ததும் சோழநாட்டிலுள்ளதுமாம். இதற்கு உத்தமர் கோயிலென மறுபெயருமுண்டு.

கரம்பி - சகுனிமகன், குந்தி.

கரம்பு - பாழ்நிலம்.

கரம்பை - ஒருபூடு, களிமண், சிறுகளா, பாழ்நிலம்.

கரயந்திரம் - வில்லின் கைப்பிடி.

கருகம் - நகக்கண், நகம்.

காவடம் - களவு, வஞ்சகம்.
காவடர் } திருடர், வஞ்சகர்.
காவர்
காவாகம் - காக்கை.
காவாதி - சுரிகைக்கத்தி.
காவாபிகை - சிறுவாள்.
காவாலம் - நகம்.
காவாளம் } கைவாள், பட்டா.
காவாள்
காவிந்தை - ளாச்செடி.
காவீரம் - அலரிச்செடி.
காவீரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
காவீரேசுவரர் - திருக்காவீரத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
காவு-உலோபம், ஒளித்தல், களவு, வஞ்சகம்.
காவுவெளிப்படுமணி - ஒருவாது மறைத்தசெய்கையைத் தன்செய்கையால் வெளிப்படுத்தல் (உ-ம்) செடிமனைக்குக் காலைவரு காவலர்குத் அஞ்சும்படிவிரித்தாள் ஓரணங்குபாய்.
காவை - கம்மாளர் கருவியிலொன்று.
காவோர் - காவர்.
காளம் - காஞ்சிரமம், நஞ்சு.
காளை - வளர்தலின்மை.
கான் - அழிவுடையோன், ஓாக்கன்.
கா-அழியாதது, ஆண்முதலை, முதலை.
காகண்டிதம் - சரியாய்ப்பேசுகை,தெளிவு.
காகரி - தேவதாரமரம்.
காக்கி - விலைக்குறைவு.
காக்ஷேபகவாதம் - ஒருவகைவாத நோய்; அது அதிக வாதவஸ்துக்களை மிகவும் புசித்தலினுற்பிறந்து சர்வாங்கத்திலும் வியாபித்து பின்னர்க் கைகளை யனுசரிப்பது. அப்போது கிரேதவாகவே கைகளுக்கு சுழற்றலுண்டாவதோடு அசைக்கவும் நீட்டவுமுடக்கவுங் கூடாமலிருக்கும்.
காசலம் - யானை.
காசனம் - புலி.
காடம் - மருக்காரை.
காமம் - வெண்கடம்பு.
காமுத்து - முதலையிற் பிறந்த வெண்ணிறமுத்து.
காம் - முதலைவிசேடம், ஆண்முதலை, முதலை.

காம்பு - ஒருசரக்கு.
காலகம் - கருந்துளசி.
காளகேசரி - மூர்க்கமான சிங்கம்.
காளம் - தீக்குணம்.
காளவதனம் - பயங்காமுகம்.
காளி - தீக்குணம்.
காளை - வளராதவன்.
கரி - இருந்தை, கரியென்னேவல், கருமை, சாட்சி, திருட்டாந்தம், நஞ்சு, யானை, வயிரம்.
கரிகரம் - கலவி விளையாட்டிலொன்று.
கரிகறுத்தல் - கவலையான் முகங்கருகல், மிகக்கறுத்தல்.
கரிகன்னி - வெருகு.
கரிகாடு - கரிந்தகாடு,யானைதிரியுங்காடு.
கரிகாலன் - ஒருசோழன்.
கரிகாற்சோழன் - காவிரிப்பூம்பட்டினத்தில் இளஞ்சேட்சென்னியனென்னுஞ் சோழனுக்குப் புத்திரனாக அவதரித்து உத்தரதேசத்திற் படைகொண்டு அநேக நாடுகளைத் தன் வசப்படுத்திப் பகைஞரையடக்கி மனுநெறி வழாது செங்கோல் செலுத்தினவனும் கடியலூர் உருத்திரங்கண்ணனொன்னும் புலவர்பட்டினப்பாலையென்னும் பிரபந்தத்திற் புகழ்ந்து பாடப்பட்டவனும் அப்புலவர்க்குஅப்பிரபந்தத்திற்காகப் பதினறிலக்கம் பொன் பரிசளித்தவனுமாகிய சோழன். சாரமா முனிவரிட்ட சாபத்தால் உறையூர் மண்மாரியாலழிய அதில் அரசு செய்திருந்த பராந்தகசோழனு மனைவியும் அம்மண்மாரிக்குத் தப்பியோடிக் காவிரிநதியைக் கடந்து செல்லும்போது பராந்தகன் குதிரையினின்றுந் தவறிக் காவிரியில் வீழ்ந்திறக்க அவன் மனைவி அக்கரைப்பட்டு ஒருவனத்தையடைந்தாள். பராந்தகனிறக்கும்போது கருப்பத்திலிருந்த இக்கரிகாற்சோழன் சிலநாளிற் பிரமபாநதி முனிவராச்சிரமத்திற்பிறந்து அம்முனிவராற் சகல கலைகளுமோதியுணர்ந்துவருங்காலத்தில் அரசிழந்த சோழநாட்டிற் கோாாசனைத் தேடுமாறு விடப்பட்ட யானையானது சென்று அச்சிறுவனைத் தூக்க வெத்தனித்தும் போதுமான வலி

யின்மையாற் றிகைத்து நிற்க அப்போது அப்பிரமமாநந்த முனிவர் அப்புத்திரன்காலில் ஒரு கரிக்கட்டியால் வரைசெய்துவிட அவ்வளவில் அப்புத்திரனை யானை தூக்கிச் சென்று முடிசூட்டுவித்தது. இக்காரணத்தாலேயே இவன் கரிகாற் சோழனெனப் பெயர்பெற்றான். எனவே இப்பெயருடையார் இருவரென்பதாயிற்று.

கரிக்கண்டு - கரிசலாங்கண்ணி.

கரிக்காந்தல் - தூட்கரி.

கரிக்குடர் - மடக்குடர், மலக்குடர்.

கரிக்குருவி - ஒருபுள், கஞ்சனம்.

கரிக்கை - கரிசலாங்கண்ணி, யானைத்துதிக்கை.

கரிக்கொடி - மூவகைக் கொடியினொன்று.

கரிக்கொள்ளி - குறைக்கொள்ளி.

கரிக்கோடிடுதல் - சிறுவர்களுக்கு மூக்கு வாய்க்கட்டை முதலிய இடங்களில் மயிர் புறப்படுதல்.

கரிக்கோலம் - அழிஞ்சில்.

கரிசங்கு - தென்னோலைமூடு.

கரிசம் - பஞ்சம்.

கரிசலாங்கண்ணி - கையாந்தகரை.

கரிசலை - பொற்றலைக் கையாந்தகரை.

கரிசல் - கருமை, முதிர்ந்தவிலை.

கரிசற்காடு - அடர்ந்தகாடு, கருமண்ணிலம்.

கரிசனம் - அன்பு, இழுத்தல், உழுதல், பரிவு, பொற்றலைக் கையாந்தகரை, யானைக்கோடு.

கரிசனை - அன்பு, பரிவு.

கரிசன்னி - வெண்காக்கணம்.

கரிசாமகம் - யானைக்கன்று.

கரிசாலை - கையாந்தகரை.

கரிசி - இருநூறுபறைகொண்ட அளவு, குறைவு, குற்றம், தவறு.

கரிசை - காசை.

கரிச்சாங்கிழங்கு - ஒருபூண்டு.

கரிச்சால் - கரிசலாங்கண்ணி.

கரிச்சான் - கரிச்சால், கருங்குருவி.

கரிஷ்டம் - மிகவும் பளுவானது.

கரிணி - பெண்யானை, யானை.

கரிணிகம் - ஒரு காதணி.

கரிதம் - அச்சம்.

கரிதல் - கருகுதல், காந்தல், தீதல், பெருங்கோபம்.

கரிதன் - அச்சமுள்ளோன்.

கரிதாரகம் - சிங்கம்.

கரிதிப்பிலி - ஆனைத்திப்பிலி.

கரித்தல்-உறைத்தல், எரிதல், கார்த்தல்.

கரிநாள் - கருநாள்.

கரிபதம் - ஒருவகைப் புணர்ச்சி.

கரிபத்திரம் - தாளிசபத்திரி.

கரிபந்தம் - யானைகட்டுந்தறி.

கரிபிப்பிலி - யானைத்திப்பிலி.

கரிப்பான் - கரிசலாங்கண்ணி.

கரிப்பு - அச்சம், கரித்தல்.

கரிப்புறத்திணை - புறத்திணையினொன்று; அது சான்றோர் சொற்றவற்றைச் சாட்சியாகக் காட்டல்.

கரிப்பூசுதல் - வசைவைத்தல்.

கரிப்போதகம் - யானைக்குட்டி.

கரிமரநாய் - கறுப்பு முறப்புக் கேடுமானது.

கரிமருந்து - வெடிமருந்து.

கரிமா-அட்டசித்தியினொன்று. அஃது இருப்புமலையினுங் கனத்தல்.

கரிமாசலம் - சிங்கம்.

கரிமுகன் - விநாயகன்.

கரிமுண்டம் - அறக்கறுவல், கோரரூபி, மிகக்கறுத்தவன்.

கரிமுரடு - அவிந்த கொள்ளிக்கட்டை.

கரியது - கருகிமுர்ளது.

கரியபிலை - கருவேப்பிலை.

கரியபோளம் - கறுப்புக் குங்கிலியம், நறும்பிசின், மூஷாம்பரம்.

கரியமணி - ஒரு கண்மணி, கரியபாசி.

கரியமால் - காய்ச்சற் பாஷாணம், விட்டுணு.

கரியலாங்கண்ணி - கரிசலாங்கண்ணி.

கரியல் - கருகல், வளாரமரம்.

கரியல்கடலி - பனங்கருக்கு.

கரியவன் - இந்திரன், கடவுள், கண்ணன், கள்வன், கறுப்பன், கறுவல், சனி, சிவன், நமன், விட்டுணு.

கரியான் - கரியவன்.

கரில் - கார்ப்பு, குற்றம், கொடுமை.

கரில்லகம் - பாகல்.

கரிவங்கம் - காரீயம்.

கரிவரி - வெள்ளைப்பாஷாணம்.

கரிவாகனன் - இந்திரன், ஐயன்.

கரிவு - தீவு.

கரீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கரிஷம் - உலர்ந்தசாணம்.
கரிந்திரேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
கரிரம் - அகத்தி, கருவேல், குடம், கும் பவிராசி, மிடா, மூங்கிற்போத்து, யானை, யானைப்பல்லடி.
கரிரி / கரிரிகை / கரிரை } யானைப்பல்லடி.
கரு - அட்டகருமக்கரு, ஆயுதத்தின்பல், ஓரூர், கம்மக்கரு, கருப்பம், கருப் பொருள், காரணம், நடு, நிறம், பிள் ளை, பெருமை, முட்டை, மேடு, மேன் மை, யோசனை.
கருகருத்தல் - அரிகண்டப்படுத்தல்.
கருகல் - கருகினது, கருகுதல், தீதல், பொருண்மலைறவு, மாலைநேரம்.
கருகுதல் - கரிதல், கறுத்தல், தீதல், பொருண்மறைதல்.
கருகுமாலை - மசண்டை, மாலைநேரம்.
கருகூலம் - கருப்புக் கட்டி, புதையல், பொக்கசம்.
கருக்கட்டுதல் - மழைக்குணமா யிருத் தல், யோசனைபண்ணல், வார்ப்பு வேலைக்குக் கருப்பிடித்தல்.
கருக்கரிவாள் - கூன்வாள்.
கருக்கரைதல் - கருப்பமழிதல்.
கருக்கல் - இருள், கருகினது, கருப் பாக்கல், காய்ந்தபயிர், சப்பட்டை, மப்பு, மனதை நோவச்செய்தல், மா லைநேரம்.
கருக்கழிய - கூர்மழுங்க.
கருக்காக்குதல் - கூராக்குதல்.
கருக்காய் - இளங்காய், பதர்.
கருக்கானவன் - கபடன்.
கருக்கிடல் / கருக்கிடுதல் } கூராக்குதல்.
கருக்கிடை - யோசனை.
கருக்கு - இரேகித்தசித்திரம், ஈர்வாட் பல், கருகல், கருக்கென்னேவல், கூர், பனைமட்டை, இலை முதலிய வற்றின் கருக்கு.
கருக்குச்சுருட்டு - கபடம்.
கருக்குடி - சவுக்காரம்.
கருக்குதல் - கருகப்பண்ணுதல், இட் டல்.
கருக்குப்பீர்க்கு - ஒரு பீர்க்குக்கொடி.

கருக்குவாச்சி / கருக்குவாளி } ஒருமரம்.
கருக்குவேலை - சித்திரவேலை.
கருக்குழி - கருப்பாசயம்.
கருக்கூடு - கருப்பை.
கருக்கூட்டல் / கருக்கூட்டுதல் } கருத்து விசாரித்தல், சினைத்தல், நியாயந் தேடுதல், மழைக்குணங் கொள்ளு தல், யோசனை செய்யல்.
கருக்கொள்ளுதல் - கருப்பற்றுதல்.
கருங்கடல்வண்ணன் - ஐயன், விண்டு.
கருங்கண்ணி - ஒருமீன்.
கருங்கந்து - அகக்கந்தின் புறக்கந்து.
கருங்கரப்பன் - கருங்கிரந்தி.
கருங்கரப்பன் - ஒருவகைக் கரப்பான் நோய். அது சர்வாங்கத்திலும் பா ரப்பானவூரல், கருநிறத்தோடு சா ரையின்றோலை யொத்த சொறி, அதிற் சிவந்த சலங்கசிதல், கண்டத் தில் விஷக்கடி ரோகம்போல் வெ டித்துச் சலம் வடிதல், விகாரரூபம், தாது நஷ்டம் என்னு மிக்குணங் களை யுண்டாக்குவது.
கருங்கலம் - சமைத்தற்குரிய மண்பாத் திரம்.
கருங்கல் - ஒருசாதிக்கல், சிகிமுகி.
கருங்கழல் - வீரக்கழல்.
கருங்கற்றலை - ஒருமீன்.
கருங்காக்கணம் - ஒரு காக்கணம்கொடி.
கருங்காய் - செங்காய்.
கருங்காலி - ஒருமரம்.
கருங்காவி - கருங்குவளை.
கருங்கிரந்தி - ஒருவகைக்கிரந்திநோய். அது சர்வாங்க மல்லது முழங்கால் முழங்கைகளிற் கறுத்தல், வெளிச் சுரம், முலையுண்ணுமை அல்லது வ லதுமுலையுண்ணுமை, நாவுவறளல், உடலிலாவது தோளிலாவதுசுடுகை, மலர விழித்து விழித்துப் பார்த்தல், மேன்மூச்சு, மாறுகுணம், அலறல், இருமல், குரல்கம்மல், வயிற்றில் வேதனை யென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கருங்கிளி - ஒருகிளி.
கருங்குங்கிலியம் - ஒருமருந்து.
கருங்குதிரையாளி - வயிரவன்.
கருங்குந்தம் - கண்ணேயுளென்று.

கருங்குமுதம் - ஒருவகைநோய். அது கருவிழியிற் கருங்குவளைப் பூவைப் போல் விரணத்தை யுண்டாக்கிப் பார்வையி விருள் கம்மியதைப்போல செய்வது.
கருங்குரங்கு - கருகிறமந்தி.
கருங்குருவி - ஒருபறவை.
கருங்குவளை - நீலோற்பலம்.
கருங்குருவை - ஒருநெல்.
கருங்குன்றி - ஒருகுன்றி.
கருங்கேசம் - கருமயிர், வெண்கலம்.
கருங்கை - அரியவேலை.
கருங்கொடி - ஒருபூடு.
கருங்கொட்டி - ஒருகொட்டி.
கருங்கொண்டல் - தென்கீழ்க்காற்று.
கருங்கொல் - இரும்பு.
கருங்கொல்லர் - இரும்புவேலை செய்வோர்.
கருங்கொள் - ஒருகொள்.
கருங்கோழி - ஒருகோழி.
கருங்கோள் - இராகு.
கருசம் - தேயமைம்பத்தாறினொன்று.
கருச்சிதம் - முழக்கம், வீராவேசம்.
கருச்சித்தல் - கர்ச்சித்தல்.
கருஞ்சனம் - முருங்கை.
கருஞ்சாதி - கீழ்மக்கள்.
கருஞ்சாந்து - சேறு.
கருஞ்சாரை - ஒரு பாம்பு.
கருஞ்சார் - அரைப்பூட்டு.
கருஞ்சிலை - கருங்கல்.
கருஞ்சீரகம் - ஒருசரக்கு.
கருஞ்சுக்கான் - ஒருகல்.
கருஞ்சுக்கிரன் - ஒருவகைக்கண்ணோய். அது விழியைச்சுற்றி யுழுந்துபோல் துவாரங்களை யுண்டாக்குவது.
கருஞ்சுரை - ஒருசுரை.
கருஞ்சூரை - ஒரு முட்செடி, செங்கத்தாரி.
கருஞ்செம்பை - ஒருசெடி.
கருஞ்சேர-ஒருவகைப்பூச்சி;அதுகடித்தால் தேகத்திற் கருமையான தடிப்புகளுண்டாகும்.
கருடகேதனன் - விட்டுணு.
கருடக்கல் - ஒருகல்.
கருடக்கொடி - கருடத்துவசம், குறிஞ்சா, பெருமருந்து.
கருடக்கொடியோன் - விட்டுணு.
கருடக்கொவ்வை - காக்கணம், கொவ்வை.
கருடசாரம் - உப்பு, சிந்துலவணம்.
கருடணம் - அரைத்தல், தேய்த்தல்.
கருடணை - சேர்த்திக்கை.
கருடதிசை - கிழக்கு.
கருடதியானம் - ஒரு மந்திரம்.
கருடத்துவசன் - விட்டுணு.
கருடத்தொண்டை - காக்கணஞ்செடி, கொவ்வை.
கருடநதி - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருவயிந்திர புரத்தி லுள்ள ஒரு புண்ணியதீர்த்தம்.
கருடபச்சை - ஒரு மருந்துக்கல், மரகதம்; அது சிவனிந்திரியத்தைக் கருடன் கவ்விக் கடல்விட அதனாற் பிறந்தது.
கருடபஞ்சமி - ஆவணிமாதத்தில் சுக்கிலபட்சத்தில் வரும் பஞ்சமி. இது சுமங்கலிகட் குரிய விரததினங்களு ளொன்று.
கருடபஞ்சாக்கரம் - ஒரு மந்திரம்.
கருடபாஷாணம் - ஒரு கல்.
கருடப்பார்வை - இராஜபார்வை, மாறு பார்வை, விடந்தீர்க்கும் பார்வையி னொன்று.
கருடர் - பதினெண்கணத்தொருவர்.
கருடல் - விரும்பல்.
கருடவாகனன் - விட்டுணு.
கருடவித்தை - ஒருவித்தை.
கருடவிமானம் - நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்றாகிய திருவழுந்தூரி லுள்ள விமானம்.
கருடற்கண்ணன் - புதன்.
கருடன் - செம்பருந்து, விட்டுணு வாகனம்.
கருடன்கிழங்கு - ஒருமருந்துச்சரக்கு.
கருடன்தாய் - விநதை.
கருடாஞ்சனன் - கருடபச்சைக்கல், விஷந்தீர்க்கத் தண்ணீர்விடுமருந்து.
கருடாருடன் - விட்டுணு.
கருடி-சிலம்பம்,சூழ்தல்,படைவளைதல்.
கருடித்தல் } இழுத்துக் கொள்ளு
கருஷித்தல் } தல்.
கருடுதல் - விரும்புதல்.
கருடேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கருணமல்லி - முல்லை.
கருணம் - எலுமிச்சமரம்.

கருணன் - கன்னன்.
கருணை - ஒருவாச்சியம்.
கருணைகடாட்சம் - கிருபைப் பார்வை, தயவு.
கருணாகரப்பெருமான் - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய காகதிற் கோயில்கொண்ட விட்டுணு.
கருணாகரம் - கருணைக்கிருப்பிடம்.
கருணாகரன் - கிருபாமூர்த்தி.
கருணாக்கிரகன் - கிருபையில்லான்.
கருணாநிதி - கடவுள், காருண்ணியன்.
கருணாபரன் - தயையுள்ளவன்.
கருணாப்பள்ளி - திருவாங்கூரில் ஒரு நகரம்.
கருணாமூர்த்தி - கடவுள், கிருபாரூபி.
கருணாலயம் - கருணாகரம்.
கருணாலயன் - கடவுள்.
கருணி-குசை, பிடியன்யானை, வெற்பு.
கருணிகாரகவனம் - ஒருவனம். இது மேருவுக்குச் சமீபத்திலுள்ளது.
கருணிகை - ஆனகன்பாரி, ஓரப்சரசு, பூவினிற்கொட்டை.
கருணிதன் - கிருபையுடையோன்.
கருணிகன் - கணக்கன்.
கருணேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கருணை - ஒருசெடி, கிருபை; இஃது சுபாவகுணமொன்பதிலொன்று,பட்சம், பெருங்கிழங்கு, பொரிக்கறி.
கருணைநாயகி - திருமாற்பேற்றிற் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
கருணோதயன் - கடவுள்.
கருதலர் - பகைவர்.
கருதலனுமானம் - ஓரளவை; அது உரையால் அறிவினளவையறிதல்.
கருதல் - எண்ணல், சிந்தித்தல், நிதானித்தல்,நினைத்தல், மதித்தல்,விரும்பல்.
கருதார் - கருதலர்.
கருதுதல் - எண்ணுதல், சிந்தித்தல், நிதானித்தல், நினைத்தல், மதித்தல், விரும்பல்.
கருத்தங்கல் - கருப்பந்தரித்தல்.
கருத்தபம் - கழுதை.
கருத்தமம் - சேறு, பாவம், மாமிசம்.
கருத்தமன் - வருணன் றந்தை.
கருத்தவ்வியம் - செய்யத்தக்கது, தத்துவம்.
கருத்தனாகுபெயர் - கருத்தாவாகுபெயர். [நடப்பிப்போன்.
கருத்தன் - அரன், அருகன், கடவுள்,
கருத்தா - அருகன், கடவுள், சிவன், செய்பவன்.
கருத்தாக்காரகம் - வினைமுதற் பொருளைக்காட்டு முருபுடைப்பெயர்.
கருத்தாவாகுபெயர் - கருத்தாவின் பெயரைக்காரியத்திற்குவழங்கல் (உ-ம்) திருவள்ளுவர்.
கருத்தாளி - ஒருமரம், குறிப்பறிவான், விவேகி.
கருத்திருகாரகம் - எழுவாய்.
கருத்து-அபிப்பிராயம்,ஆழமானபயன், எண்ணம், கவனம், குறிப்பு, சித்தம், சிந்தனை, சொற்பொருள், தாற்பரியம், நினைப்பு, பலன், விருப்பு, விவேகம்.
கருத்துக்கொள்ளல் - மனம்வைத்தல்.
கருத்துடையடை கோளியணி - ஓரலங்காரம். அஃது அபிப்பிராயத்துக்குரிய விசேடணத்தைச் சொல்லுதல்.
கருத்துடையடையணி - அபிப்பிராயத் தோடுகூடிய விசேடணத்தைச் சொல்லுதல்.
கருத்துப்பொருள் - மனக்காட்சிப் பொருள்.
கருத்துரை - பாட்டின் கருத்துரைக்குமுறை.
கருத்தொட்டுதல் - யோசித்தல்.
கருநடம் - கன்னடதேயம், கன்னடபாடை.
கருநந்து - நத்தை.
கருநாகம் - இராகு, ஒருமரம், கரும்பாம்[பு.
கருநாசம் - சித்திரமூலம்.
கருநாடகம் - ஒருதேசம், கன்னடதேசத்தாரின் விசேடம், நாகரிகம்.
கருநாடகவித்தை - நாகரிககல்வி.
கருநாபிக்கிழங்கு - ஒருகிழங்கு.
கருநாரை - ஒருகொக்கு.
கருநாவி - கருப்புநாவி.
கருநாள் - ஆகாதநாள்.
கருநிமிளை - நீலாஞ்சனம்.
கருநிலம் - நீரின்மலையின்வனத்திற் பயன்படா யிருநிலம்.
கருநூல் - ஒரு மாந்திரிகநூல்.
கருநெய்தல் - கருங்குவளை.

கருநெய்தனிறமணி - சாதாரங்கப்பதிம ராகம்.
கருநெல்லி - ஒருநெல்லி.
கருநெறி - தீ.
கருநொச்சி-ஒருநொச்சி, சுரோணிதநீர்.
கருந்தகரை - ஒருதகரை.
கருந்தடங்கண்ணி - நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்ருகிய தொல்லைவில்லிமங்கலத்திற்கோயில்கொண்ட இலக்குமி.
கருந்தனம் - செல்வம், பொன்.
கருந்தாது - இரும்பு.
கருந்தாரை - காரொளி.
கருந்திடர் - மேடு.
கருந்தினை - ஒருதினை.
கருந்துகிலோன் - பலபத்திரன்.
கருந்துவரை - ஒருதுவரை.
கருந்துளசி - ஒருதுளசி.
கருந்தோளி - அவுரி.
கருப்பகாசம் - ஒருவகைக் காசநோய். அது கருவிழியிற்சுத்த கருநிறத்தைக் காண்பிப்பது.
கருப்பகோசம் - கருப்பப்பை.
கருப்பகோளகை - கருப்பாசயப்பை.
கருப்பக்கிரகணம் - கருப்பந்தரித்தல்.
கருப்பக்கிரகணி - ஒருவகைக் கிரகணி ரோகம்; அது பேதி, கடுப்பு, கைகால் வற்றுதலோ டோய்தல், கண்ணில் பஞ்சணிறம், பலவிதக்கழிச்சல், அதிகதாகம், சாப்பிட்டால் வாந்தியாதலென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
கருப்பக்கிரகம் - மூலஸ்தானம்.
கருப்பங்கொள்ளுதல் - கருப்பந் தரித்தல்.
கருப்பசர்ப்பவிஷம் - கருப்பமுற்றபாம்புகள்கடிப்பதனுலுண்டாகும் விஷம். அது சிரசு, உதடு, வயிறு, தொடையாகிய இடங்களிலேறுதல், நாக்கறுத்தல், உண்ணாக்கு, வளருதலென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
கருப்பசன்னி - பெண்களுக்கு பிரசவகாலங்களி லுண்டாகும் ஒருவகைச் சன்னிநோய்.
கருப்பசிலேட்டுமம் - கருப்பத்திற் கிடையூரு யுண்டாகு மோர் வகை நோய்.
கருப்பசூலை - ஒருவகைச் சூலைநோய். அது இடமருந்து,வஞ்சனை,சூனியம், பெருங்காயச்சூடு, பிரசவித்தகாலத் திற்றங்கிய அழுக்காகிய இவைகளினுற் பிறந்து கீழ்வயிற்றி லிரத்தமுறைந்து கருப்பத்தைப்போல் திரண்டு புரண்டுகொண்டு அடிவயிற்றிலதிகச்சூலையை யுண்டாக்குவது.
கருப்பஞ்சாறு - கரும்பிரசம்.
கருப்பஞ்சாற்றுக்கடல் - சத்தசமுத்திரத்தொன்று.
கருப்படம் - கந்தைப்புடவை.
கருப்பட்டி - கற்கண்டு, பனங்கட்டி.
கருப்பதாரணம் - கருப்பந்தரித்தல்.
கருப்பநாடி - கொப்பூழ்க்கொடி.
கருப்பநாள் - பிறந்தநாளுக்கு ஒன்பதாநாள்.
கருப்பநீர்-கருப்பஞ்சாறு, பதநீர், பனைமுதலியவற்றினீர்.
கருப்பபாதகம் - செம்முருங்கை.
கருப்பபாதனம் - கருப்பம்விழுதல்.
கருப்பப்பரிகம் - கருப்பந்தரித்தல்.
கருப்பப்பை - கருப்பகோளகை.
கருப்பமழிதல் - கருக்கரைதல்.
கருப்பம் - அரண்மனை, உபநிடத முப்பத்திரண்டினென்று, உள், சினை.
கருப்பம்பாகு - சருக்கரை.
கருப்பரம் - அத்தி, இருப்புப்பாண்டம், தலையோடு.
கருப்பவதி - கருப்பந்தரித்தவள்.
கருப்பவாதை - கருப்பவேதனை.
கருப்பவாயு - ஒருவாயு, பிரசூதவாயு.
கருப்பவேதை - கருப்பவேதனை.
கருப்பற்று - கருப்பந்தரிப்பு.
கருப்பாகாரம் - கெற்பக்கிரகம்.
கருப்பாசயப்பை - கருப்பப்பை.
கருப்பாசயம் - கருவிருக்குமிடம்.
கருப்பாதானம் - ஒருசடங்கு.
கருப்பிடித்தல் - யோசனை மட்டுக்கட்டுதல்.
கருப்பிணி - கருப்பஸ்த்ரீ.
கருப்பிணியவேட்சணம்-பிரசூதி வைத்தியம்.
கருப்பு - அரிது, குறைவிலே.
கருப்புக்கட்டி - கற்கண்டு, பனங்கட்டி, வெல்லக்கட்டி.
கருப்புப்பு - திருவஞ்சனலவணம்.

கருப்புரம்-ஒருநெல்,நீர்,பாவம்,பொன்.
கருப்புவில் - மதன்வில்.
கருப்புவில்லி - காமன்.
கருப்பூரசலாசத்து - ஒருமருந்து.
கருப்பூரசுந்தரன் - மதுரையிலமர்ந்த சோமசுந்தரக்கடவுள்.
கருப்பூரதீபம் - கருப்பூரவினக்கு.
கருப்பூரத்தயிலம் - ஒருமருந்து.
கருப்பூரத்துளசி - ஒருதுளசி.
கருப்பூரநீர் - ஒருமருந்து.
கருப்பூரப்புல் - ஒரு வாசனைப்புல்.
கருப்பூரமரம் - ஒருமரம்.
கருப்பூரம் - சூடன், பஞ்சவாசத்தொன்று, பொன், பொன்னரிதாரம்.
கருப்பூரவல்லி } ஒருசெடி.
கருப்பூரவள்ளி } ஒருசெடி.
கருப்பூரவில்வம் - ஒருவில்வம்.
கருப்பூரவெற்றிலை - ஒருவெற்றிலை.
கருப்பூர் - ஒரூர்.
கருப்பூர்வழக்கு - அழிவழக்கு.
கருப்பெட்டி - கருப்பை.
கருப்பை - எலி, உட்கொண்டது, கருப்பாசயப்பை, கரும்பனங்காய்ப்பனை, காரெலி.
கருப்பொருள் - அவ்வந்நிலத்தி லுற்பத்திப்பொருள்; அஃது - உணா - ஊர்-குடி - தலைவர் - தெய்வம் - தொழில்-நீர் - பண்மறை - புள் - மரம் - மலர்-யாழ் - விலங்கு என்பன.
கருமகன் - நமன், வேலைக்காரன்.
கருமகர்த்தா-கருமஞ்செய்பவன், காரியகர்த்தர்.
கருமகன் - காக்கை.
கருமகாண்டம் - கன்மநிவிர்த்தி முதலியவற்றைச் சொல்லும் நூல்.
கருமகாண்டிகர் - மூவகைப் பக்குவரிலொருவர்.
கருமகாரன் - கம்மாளன், வேலையாள்.
கருமகிலகன் - வண்ணான்.
கருமக்கத்தா - கிரியை நடத்துவோன், செய்வோன்.
கருமக்கழிபலம் - பாவத்தைக்கழிக்கும் புண்ணியம்.
கருமக்காரகம் - வினையைப் பொருளில் புலப்படுத்து முருபுடைப்பெயர்.
கருமக்கியானம் - கரும அறிவு.
கருமங்கட்டுப்படல் - பாவஞ் செய்தல், வினை தீராது நிற்றல்.
கருமசண்டாளன் - துரோகி.
கருமசம் - அரசமரம், கலியுகம், களங்கம், சத்து, தீவினை.
கருமசாங்கரியம் - ஐக்கம்.
கருமசுத்தி - கிரியையிற்குற்றத்தீர்ப்பு, பாவப்பிராயச்சித்தம்.
கருமஞ்சரி - நாயுருவி.
கருமணி - கண்மணி, நீலமணி.
கருமத்தலைவர் - வருங்காரியஞ் சொல்வோர்.
கருமத்தலைவன் - அரசர்க்குத் துணைவன், கருமாதிகாரி.
கருமத்துரோகம் - வினைப்பலம்.
கருமநிட்டன் - பிராமணன்.
கருமநிவிர்த்தி - பாவத்தீர்ப்பு.
கருமபந்தம் - செய்வினைத்தொடர்.
கருமபந்தனம் - பழவினைத் தொடர்பு.
கருமபாகை - வேதநூற்பொருளி லொன்று.
கருமபாவம் - கிரியாபாவம்.
கருமபூமி - இருவினை யியற்றற்குரிய வுலகம், சுடுகாடு.
கருமபூமிக்குரிமை-உழவு, சிற்பம், தொழில், வரைவு, வாணிபம், வித்தை என ஆறுவிதம்.
கருமப்பழி - துரோகம்.
கருமப்பிறப்பு - பாவச்சென்மம்.
கருமமுடித்தல் - செய்தொழில் முடித்தல், நியமநிட்டை முடித்தல்.
கருமமூலம் - கருப்பை.
கருமம் - இயற்கைச்சொல் உட்டணம், கடமை, காரியம், கிரியை, செயப்படுபொருள், செய்கை, முன்வினை, வெப்பம், வேனிற்காலம்.
கருமயிர் - காடி.
கருமயுகம் - கலியுகம்.
கருமர் - கருமார்.
கருமலை - இரும்புச்சுரங்கமலை.
கருமவிபாகம் - ஊழ்வினைப்பயன்.
கருமவியாதி - மருந்தினாலாறாத நோய்.
கருமவிருத்தி - சுத்தநடக்கை.
கருமவுவமம் - செயலுவமம்.
கருமவேதனை - மிக்கவருத்தம்.
கருமா - பன்றி, யானை.
கருமாதி-அந்தியேட்டிமுதலியசடங்கு.
கருமாதிகாரம் - கருமங்கள் செய்துமுடிக்குமதிகாரம், கிரியைக்கதிகாரம்.

கருமாதிகாரன் - அரசர்க்குத் துணைவரி லொருவன், காரியத்தலைவன், நிமித் தகாரன்.
கருமாதிக்காரர் - கருமத்தி லாதிக்கம் பெற்றோர், காரியத்தலைவர்.
கருமாதிசெய்தல் - ஈமக்கடன் முதலிய செய்தல்.
கருமாத்துமா - கன்மஞ்செய்தவன்.
கருமாநுட்டானம் - நியமநிட்டை.
கருமாந்தம் - கருமாந்தரம், கார்காலம்.
கருமாந்தரம் - கருமாதி, பாவம்.
கருமாந்தியம் - அந்தியேட்டி.
கருமாந்திரம் - கருமாதி, பாவம்.
கருமாயம் - அதிகவிலை, அருமையான [து.
கருமாரன் - கொல்லன்.
கருமாரி - ஒருமரம், பிரசூதவேதனை.
கருமார் - கொல்லர்.
கருமானம் - கரியவானம், கருவித்தை.
கருமானுபவம் - செய்வினைப்போகம்.
கருமான்-கலைமான்,கொல்லன், பன்றி.
கருமி - தீவினையுடையோன், நித்திய கருமம் வழுவாது செய்வோன், பா வி, பூசைசெய்பவன்.
கருமிசம் - வினை.
கருமுகில் - நீருண்டமேகம், வைப்புப் பாஷாண முப்பத்திரண்டினொன்று.
கருமுகில்வண்ணம் - நீமுரகற் பாஷா ணம்.
கருமுகிற்சிலை - காந்தக்கல்.
கருமுகிற்பாஷாணம் - கார்முகிற் பா ஷாணம்.
கருமுகை-இருவாட்சி, சிறுசெண்பகம்.
கருமுடித்தல் - அட்டகருமக் கருவுண் டாக்கல், வேதைக்கருமுடித்தல்.
கருமுதல் - ஒருமீன்.
கருமூடன் - கீழ்ப்படியாதவன்.
கருமூரல் - ஒருமீன்.
கருமேகம் - கானமேகம்.
கருமேந்திரியம் - கன்மேந்திரியம்.
கருமை - கறுப்பு, நஞ்சு, பெருமை, வலி, வெள்ளாடு, கொடுமை.
கரும்படுசொன்னயகி-திருப்புறம்பயத் திற் கோயில்கொண்டிருக்குந்தேவி.
கரும்பணசை - கருவழலைப்பாம்பு.
கரும்பனூர் - ஒரூர்.
கரும்பனூர்கிழான் - ஒருவேளாளப்பிர பு; இவன் வேங்கடநாட்டில் விளங்கிய கரும்பனூரன் மகனும் புறத்திணை நன்னாகரால் பாடப்பட்டவனு மாவ [ன்.
கரும்பனையன் - ஒருபாம்பு.
கரும்பன் - ஓரீகையாளன். இவன் தன் தோட்டத்திலிருந்த கரும்பையெல் லா மெவரு நாணுதவந்து தின்னுக வென்று யாவரையு மழைத்தபோது சிலர் மறுக்க அவர்க்குக் கூலிகொடுத் தழைத் தருத்தின தொண்டைநாட் டு வேளாளன். கரும்பு தின்னக் கைக்கூலியென்ற பழமொழி இவ னால் வந்தது.
கரும்பாம்பு - இராகு, கருவழலை.
கரும்பாலை - ஒருமரம், கரும்பாட்டுஞ் செக்கு.
கரும்பித்தம் - ஒருநோய், ஒருபித்தம்.
கரும்பிள்ளை - காக்கை.
கரும்பிறை - கருஞ்சுக்கான்.
கரும்பு - கன்னல், புனர்பூசம்.
கரும்புக்கட்டி - கருப்பங்கட்டி.
கரும்புசம் - வண்டு.
கரும்புமுத்து - கரும்பிற் பிறந்த மஞ்ச ணிறமுத்து.
கரும்புலி - ஒருபுலி.
கரும்புல் - பனைமரம்.
கரும்புவில்லி - மன்மதன்.
கரும்புளித்தல் - கெட்டுப்போதல்,செம் பிற் களிம்பூறுதல்.
கரும்புள் - கரிக்குருவி, காகம், பெண் வண்டு, வண்டு.
கரும்புள்ளிக்கல் - கானகக்கல்.
கரும்புள்ளிதிட்டல் - ஒரு கோலந் திட் [டல்.
கரும்புறம் - பனை.
கரும்புறவு, கரும்புறா } ஒருபுறவு.
கரும்பூ - நீலோற்பலம்.
கரும்பூமத்தை - கரியவூமத்தை.
கரும்பேன் - புடவையிற்பற்றுங் கரும் புள்ளி.
கரும்பொன் - இரும்பு.
கருவகம் - கருத்தரிக்குந்தானம்.
கருவங்கம் - காரீயம்.
கருவடம் - தலைமையானவூர், மலையும் ஆறுஞ் சூழ்ந்தவூர்.
கருவண்டு - கறுத்தவண்டு.
கருவண்ணம் - கறுப்புநிறம்.
கருவதை - சிசுவதை.

கருவம் - அகங்காரம், ஒரெண், சினை.
கருவரி - இருள், கருவிழியின் ரேகை.
கருவரை - வலியமலை.
கருவல் - கருப்பானது.
கருவழலை - ஒருபாம்பு.
கருவழலைச்சர்ப்பவிஷம் - ஒருவகை விஷம்; அது சரீரத்திற் காங்கையோடு அதிக வியர்வையும், உள்ளங்கால் உள்ளங்கைகளிற் சிவப்பும், கோழையால் மார்பிலடைப்பும் பிறக்கும்படி செய்வது. அதனு லனந்தம்வேதனை யுண்டாகும்.
கருவழித்தல் - சிசுவதை.
கருவளைச்சுக்கான் - கருஞ்சுக்கான்கல்.
கருவறிதல் - கருத்தறிதல்.
கருவறுத்தல் - நாளுக்குநாட் கவர்தல்.
கருவா - இலவங்கமரம்.
கருவாடு - காய்ந்தமீன்.
கருவாட்டுவாலி - எருத்துவாலன் குருவி, வலியான்.
கருவாய்ப்பட்டை - இலவங்கப்பட்டை.
கருவாமுப்பு - ஒருப்பு.
கருவாலி - ஒருமரம், ஒருகுருவி.
கருவாழை - ஒருவாழை.
கருவாளி - கருத்துடையோன்.
கருவானம் - கருயானம்.
கருவி - ஆயுதப்பொது, உபகாரணம், கவசம், காரணம், குதிரைக்கல்லணை, கூட்டம், தொடர்பு, கட்பு, மெய்வாய் முதலிய கருவி, மேகம், யாழ், வாச்சியம், வீணை.
கருவிகரணம் - பொறியும் அந்தக்கரணமும்.
கருவிகழலுதல் - பெலன்கெடல்.
கருவிகாண்டம் - வாசிக்கப்பழகும் புத்தகம்.
கருவிக்காரகம் - கருவிப்பொருளைக் காட்டு முருபுடைப்பெயர்.
கருவிக்குயிலுவர் - தோற்கருவி வாசிப்போர்.
கருவிநூல் - கருவிகாண்டம்.
கருவிப்புட்டில் - படையுறை.
கருவிப்பை - ஆயுதவுறை.
கருவிமாக்கள் - யாழ்ப்பாணர்.
கருவியாகுபெயர் - கருவியாகுநிய பெயர் (உ-ம்) நாழி.

கருவிரலூகம் - கரிய விரலையுடைய குரங்குபோ லிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் யந்திரம்.
கருவிலி - ஒருபாம்பு.
கருவிழி - கண்மணி.
கருவிளங்கனி - மூன்றுநிரை யசையாய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளங்காய் - நிரை நிரை நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறுநிழல் - நாலு நிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறும்பூ - நிரை நிரை நிரை நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்ணிழல் - நிரைநிரை நேர் நிரையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்பூ - நிரை நிரை நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளம் - இரண்டு நிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு, ஒருமரம், காக்கணஞ்செடி.
கருவிளா - ஒருமரம்.
கருவிளை - காக்கணஞ்செடி.
கருவுயிர்த்தல் - ஈனல்.
கருவுளமைப்பு - சென்மத்தி னியமம்.
கருவூமத்தை - ஒருமத்தை.
கருவூர் - கோயம்புத்தூர் ஜில்லாவில் ஒரூர், வஞ்சி; இந்நகர் சேரருக்குரிய இராஜதானி, சேரனை ரென்று சோழருமிங் கரசியற்றினர்.
கருவூலம் - பொக்கசம்.
கருவெடுத்தல் - உடம்பெடுத்தல்.
கருவேப்பிலை - கருவேம்பினிலை.
கருவேம்பு - ஒருமரம்.
கருவேல் - ஒருமரம்.
கருவை - ஒரூர், வாகுவைக்கோல்.
கருவெளவால் - ஒருமீன்.
கருளை - கரளை.
கருள் - இருள், கறுப்பு, நல்லாடை.
கருனிகசன்னி - ஒருசன்னி.
கருனை - பொரிக்கறி.
கரூசன் - வைவசுவத மனுவினுடைய புத்திரரு ளொருவன், இட்சுவாகு தம்பி, காரூசர் இவன் வமிசத்தவர் இவன் தேசம் கரூசம்.
கரேசுரம் - குத்துச்சண்டை, முழங்கை மடிப்பு.

கரேசவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கரேடம் – நகம்.
கரேணு - பெண்யானை, யானை.
கரை - அருகு, எல்லை, கரையென்னேவல், கானல், முடிவு, வார்த்தை.
கரைகடத்தல் - எல்லைக்குமேற்படல்.
கரைகண்டவன் - மிகத்தேர்ந்தவன்.
கரைகலம் – ஆபரணச்செப்பு.
கரைகன்று – அழிகன்று.
கரைகாணல் – எல்லைகாணுதல்.
கரைகாணுப்பேரொளி – கடவுள்.
கரைக்கல்லோலம் - கடற்பாசி.
கரைக்காற்று - கடலோரத்தி லடிக்குங் காற்று.
கரைசிலை - இந்துப்பு.
கரைச்சல் - உருக்கம்.
கரைஞ்சான் – அகில்.
கரைதல் - அழுதல், அழைத்தல், அறப்பழக்குதல், ஆரவாரம், இரங்கல், இளைத்தல், உருவழிதல், ஒலித்தல், சொல்லுதல், பதனழிதல், பேரொலி, வருந்துதல்.
கரைதுறை - துறைமுகப், முடிவு.
கரைத்தல் - உருக்குதல், எழுத்திலாவோசை, கரைக்குதல், சொல்லாலெழுமொலி.
கரைபிடித்தல் - கரையடைதல்.
கரைபுரட்டுதல் } கரைமூடிப்பாய்தல்.
கரைபுரளுதல் }
கரைப்படுதல் – கரையேறுதல்.
கரைப்படுத்தல் - கரைக்குக் கிட்டவைத்தல்.
கரைப்பாதை – கரையோரமானவழி.
கரைப்போக்கு – இழிவானது, கரையோரம், கரைவழி, போலிமணி.
கரைப்போர் - கரையிலிருந்து பண்ணுஞ்சண்டை.
கரையடுத்தது - கரையைக் கிட்டினது.
கரையல் - கரைந்தது, கரைந்து போவது, கணிதல்.
கரையார் - ஒருசாதி, வலைஞர்.
கரையேறல் – கரையையடைதல், நற்கதியடைதல், வருத்தத்தினின்று நீங்கல், வாழ்வடைதல்.
கறிக்காளை - ஒருசெடி.
கறிக்காய் - மிளகு.
கறிச்சுரை - ஒருவகைச்சுரை.
கறித்தல் - கடித்தல், புசித்தல்.
கறித்தும்பை - ஒருவிதத்தும்பை.
கறிப்பாலை - ஒருபாலை.
கறிப்புடல் - ஒருபுடோல், ஒருவண்டு.
கறிமசாலை - கறிச்சரக்கு.
கறிமுள்ளி - ஒருமுள்ளி.
கறியாமணக்கு - பறங்கியாமணக்கு.
கறியுப்பு - இலவணம்.
கறிவடகம் - வற்றல்.
கறு - கோபம்.
கறுகாய்ஞ்சொறி - ஒருசெடி.
கறுக்காய் - இளநீர்க்கயர், ஒருமரம்.
கறுக்கை - கோபித்தல்.
கறுத்தகாக்கட்டான் - ஒருகொடி.
கறுத்தப்பாசி - கரியமணி.
கறுத்தப்பூ - கருங்காக்கணம்செடி.
கறுத்தல் - கறுப்பாதல், கோபித்தல், மனக் குறைப்படுதல்.
கறுத்தவன்-கரியன், பகைவன், விரோதி.
கறுத்தவுப்பு - காருப்பு.
கறுநாகம் - காரீயம்.
கறுப்பன்-ஒருதேவதை, கரியன், காரிநெல், தொண்டைநாட்டில்மாவையம்பதியில்விளங்கிய ஒரு பிரபு. இவன் தன்னைபெயர்கஸ்தூரி தமிழ்நாவலர்களுக்குப் பொன்மாரி பொழிந்து பெரும்புகழ் படைத்தவன். தொண்

டமண்டல சதகத்தைப் படிக்காசு ப்புலவரால் பாடுவித்தவனுமிவனே.

கறுப்பி - எவக்ஷாரம், கரியவன், கருவண்டு, காகங்கினை, மீனம்பர்.

கருப்பு - கருநிறம், கறை, கோபம், சினக்குறிப்பு, மனக்குறை.

கறுப்புக்கட்டல் } பயிர் கறுத்தண்டாதல், மழைக்கோலங்கொள்ளல்.
கறுப்புக்கட்டுதல் }

கறுப்புக்காய்ஞ்சொறி - ஒருசெடி.

கறுப்புக்கொள்ளல் - கோபங் கொள்ளல்.

கறுப்புச்சிலந்தி - ஒருவகைச் சிலந்தி. அது பட்டவிடத்தில் கறுத்தவீக்கமுண்டாய் இரணம்பிறக்கும். அதில் அர்க்கந்தத்துடன் நிறம் பேதமான இரத்தமுஞ் சீழும் வடிந்துக்கொண்டிருக்கும்.

கறுப்பெறிதல் - கறுத்தல்.

கறுமுதல் - சினக்குறிப்புக்காட்டல், சினத்தல்.

கறுமுறுத்தல் - சினத்தல்.

கறுமுறெனல் - ஒலிக்குறிப்பு, குறைசொல்லல்.

கறுமொறுத்தல் - மொறு மொறுத்தல்.

கறுமொறெனல் - கறுமுறெனல்.

கறுவம் - ஆங்காரம், சினம்.

கறுவல் - கரியவன், கருநிறம், சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு, சினக்குறிப்புக்காட்டல்.

கறுவா - இலவங்கமரம்.

கறுவாப்பட்டை - இலவங்கப்பட்டை.

கறுவித்தல் - சலஞ்சாதித்தல், ஆங்காரங்கொள்ளுதல்.

கறுவியம் - கறுவித்தல், வைராக்கியம்.

கறுவிருளை - கருங்காக்கணம்.

கறுவு - கறுவென்னேவல், சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு, சினம், தணியாத கோபம்.

கறுவுதல் - சலஞ்சாதித்தல்.

கறுழ் } கடிவாளம்.
கறுள் }

கறேரெனல் - ஒலிக்குறிப்பு, கருமை, நிறக்குறிப்பு, விரைவின் குறிப்பு.

கறை - இருள், உதிரம், உரல், கருங்காலிமரம், கறள், கறுப்பு, குடியிறை, குற்றம், நஞ்சு, நிறம், மாசு, கடமை.

கறைக்கட்டுதல் - கறன்பிடித்தல்.

கறைச்சூலை - ஒருவகைச்சூலை. அது உதிரம் வாங்கித் தோலைப் பற்றுவதனாலும், பற்றியது. நரம்பின் துவாரத்தில் தடைப்பட்டுத் தங்குவதனாலும் பிறந்து கீழ்முதுகை அனுசரித்து நின்று அவ்விடத்தில் மிக்கவலி, கைகால் உளைவு, அறிவுந் தேஜசுமழுங்கல் என்னுமிக்குணங்களை யுண்டாக்கும்.

கறைபிடித்தல் - கறன்பிடித்தல்.

கறைபோக்கி - சவுக்காரம், உவர்மண்.

கறைப்படல் } குற்றப்படுதல்.
கறைப்படுதல் }

கறைப்போக்கன் - கீழ்மகன், இழிந்தகுலத்தவன்.

கறைப்போக்கு - கீழ்மை.

கறைமிடற்றிறை } சிவபெருமான்.
கறைமிடற்றோன் }

கறையடி - யானை.

கறையான் - சிதல்.

கறையான்புற்று - வன்மீகம், செல்.

கறையான்மேய்தல் - கறையான் கட்டுதல், செல்பிடித்தல்.

கர்க்கசகாரன் - கடினமுள்ளோன், சுறுக்கினகாதவன்.

கர்க்கசம் - உத்தாமணி, கடினம், குரூரம், பிசுனம், பிரயாசம்.

கர்க்கசர் - உலோபிகள், கடினர், கீழ்மக்கள், அற்பர்.

கர்க்கடகசாம் - தேள், நண்டுவாய்க்காலி.

கர்க்கடகக்கை - கூத்திஞர், வகைக்கை, அது தெரிநிலைக்கை யிரண்டு மங்குலிபிணைந்து வருவது.

கர்க்கடகசிங்கி - கடுக்காய்ப்பூ.

கர்க்கடகபாஷாணம் - விளைவு பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.

கர்க்கடகம் - ஓர்ராசி, தாமரைநூல், நண்டு.

கர்க்கடகவரி - குரக்கு.

கர்க்கடி - ஒரு அரக்கி.

கர்க்கண்டம் - கற்பார்.

கர்க்கண்டு - கறுப்புக்கட்டி.

கர்க்கபலம் - மாதுளை.

கர்க்கம் - இலுப்பைப்பூ, ஒருசாக்கு, தாமரை, கிட்டை, பலவகை கூடிய மருந்து, பாதம், மருந்தின்பொது.

கர்க்கரம் - மத்து.

கர்க்கரி - காகம், தயிர்கடைதாழி, மத்து.

கற்சரிகை - சதங்கை.

கற்கருசிலை - ஒருபூடு.

கற்கனல் - கல்மதம்.

கற்கா - கொடுந்தமிழ்நாட்டி லொன்று.

கற்காணம் - கருஞ்சீரகம், கற்செக்கு.

கற்காண்டல் - பொதுவியற்றிணைத்துறைபன்னிரண்டனுளொன்று. அது அமையாத வெற்றியையுடைய பூசலிற் பட்டோற்குக் காட்டில் நீண்ட விடத்துக் கல்லைக்கண்டது.

கற்காமி - கன்மதம்.

கற்காரம் - கல்லக்காரம், காரக்கல்.

கற்காரு - அகில்மரம், கற்காரம்.

கற்காவி - காரக்கல்.

கற்கி-குதிரை, திருமாலவதாரத்தொன்று, தேவர்கோயில், கோட்டம்.

கற்கிச்சா - சாவாக்கியங்களிலொன்று.

கற்கிணறு - கல்லுக்கிணறு.

கற்கிமண்டலம் - உத்தரவீதிக்கடை.

கற்கியவதாரம்-விஷ்ணுவினது தசாவதாரங்களுட் கடையவதாரம், இது கலியுகாந்தத்திற் சம்பள கிராமத்தில் விஷ்ணு அம்சமாயுள்ள ஒரு பிராமணனுக்கு விஷ்ணுபுத்திரராகப் பிறந்து கற்கி என்னும் பெயருடையராய் வழுவிய தருமங்களை நிலைநிறுத்துவது.

கற்கு - கற்கடகவிராசி.

கற்குடல்-ஒருவிதநோய்க்குடல், மந்தக்குடல், வலியகுடல்.

கற்குளித்தல் - இரத்தினங்குளித்தெடுத்தல்.

கற்கொத்தி கற்பொறுக்கிப்புள்.

கற்கோடன் - கார்க்கோடன்.

கற்கோணநிலை-பொதுவியற்றிணைத்துறைபன்னிரண்டனுளொன்று, அது பூமியயங்கப் பறையொலிப்பச் சுவர்க்கத்திலே பொருந்தினவனுக்குக் கல்லினைக்கொண்டது.

கற்கோவை - கருடன்கிழங்கு.

கற்சத்து - கல்நார்.

கற்சம் - யானைபிளிறொலி.

கற்சரீரம் - வயிரச்சரீரம்.

கற்சவளை - கற்சத்து.

கற்சனம்-கோபம், தொனி, முழக்கம், யுத்தம், சண்டை.

கற்சாகம் - மரகதம்.

கற்சாடி - கல்லினாற்செய்த பாத்திரம்.

கற்சிறை - கல்லாற் கட்டினகரை.

கற்சிற்பன் - சிற்பன்.

கற்சுண்ணம்பு - கன்னீறு.

கற்சுவர் - செங்கல் காட்டுக்கல் இவற்றால் செய்யப்பட்ட சுவர்.

கற்சூரம் - கழற்கொடி, பேரீந்து.

கற்சூலை - ஒரு சூலைநோய்.

கற்பகக்கரம் - கோழித்தலைக்கெந்தகம்.

கற்பகச்சோலை-இந்திரன் நந்தவனம்.

கற்பகத்திணை - அகப்பொருட் டுறையிலொன்று.

கற்பகத்தீசுவரர் - திருவலஞ் சுழியிற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.

கற்பகம் - ஐந்தருவிலொன்று. அஃது வேண்டிற்றெல்லாந் தருமரம், புளியாரை, விநாயகன், தாலமரம்.

கற்பகவல்லித்தாயார் - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருக்கடித் தானத்திற் கோயில்கொண்ட இலக்குமி.

கற்பகவல்லியம்மை - திருமயிலையில் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.

கற்பகன் - சௌனகன்.

கற்பகேசுவரர் - திருக்கடிக் குளத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

கற்பகோளகை - கருப்பப்பை.

கற்பஞ்சாதித்தல் - காயசித்திக்கு மருந்துசாதித்தல்.

கற்படி - ஏறும்படி.

கற்படுத்தல் - செங்கற்பதித்தல்.

கற்படை - கற்படுத்தநிலம், கோட்டையிற் கள்ளவழி.

கற்பதரு - கற்பகவிருட்சம்.

கற்பதித்தல்-இரத்தினமழுத்தல், கல்லழுத்தல்.

கற்பதுருமம்-கற்பதாரு, ஒரு சம்ஸ்கிருதநூல்.

கற்பநிதி-குபேர னவநிதியி லொன்று.

கற்பபாதபம் - கற்பகவிருட்சம்.

கற்பம்-அற்பம், ஆயிரங்கோடி, இராண்டிரவுமொருபகலுங்கொண்டது, உலகமுடியுங்காலம், கஞ்சா, கருப்பம், சித்தர்கள்மருந்து, தேவலோகம், நவநிதியிலொன்று, நிண்ணயம்பிரமனாயு, பிரமனோர்நாள், புளியாரை, மந்திரசாத்திரம், மூப்புவராமற்செய்யுமருந்து, வேதாங்கமாறிலொன்று.

கர்பரன் - வெள்ளைப்பாஷாணம். [து.
கர்பரிபாஷாணம் - அதம்பம், ஒருமருந்
கற்பலகை - எழுதும்பலகை.
கற்பழிதல் - கற்புக்கெடுதல்.
கற்பழியாதபெண் - கன்னிகை.
கற்பற்று - கிட்டக்கல்.
கற்பனை - இல்லதை யுள்ளதாயுண்டு பண்ணல், கடிப்பு, கட்டளை, கல்வி, கற்பிப்பு, சாதுரியம், நிருணயம், பாவனை, புனைந்துரை, விதிப்பு.
கற்பனைகடந்தோன் - கடவுள், மஹாதேவன்.
கற்பாசி - ஒருமருந்து.
கற்பாஷாணம் - ஒருமருந்து.
கற்பாடு - கல்லுள்ளவிடம்.
கற்பாட்டி - கற்புடையாள்.
கற்பாந்தம் - உறுதியாயிருப்பது, கற்ப முடிவு.
கற்பாரியம்-சிற்பநூன் முப்பத்திரண்டி லொன்று.
கற்பார்-கல்லுப்பார், சிற்பநூன்முப்பத்திரண்டிலொன்று.
கற்பார் - கல்லுப்பார், கல்விகற்போர்.
கற்பாலவணம் - சிந்தலவணம்.
கற்பாவுதல் - கற்படுத்தல்.
கற்பாழி - மலைக்குகை.
கற்பாளி - கல்லலை.
கற்பாறை - கன்னிலம், கல்லுப்பாளம்.
கற்பிதம்-அலங்கரிப்பு,கட்டளை,நியமம், பாவனை, போர்யானை, விதிப்பு.
கற்பித்தசொல் - ஆக்கச்சொல், நியமிக்குஞ் சொல்.
கற்பித்தல் - உண்டாக்கல், கட்டளையிடல், நியமித்தல், படிப்பித்தல், விதித்தல், ஏற்படுத்தல்.
கற்பியல் - கற்பொழுக்கம்.
கற்பிரம் - கல்லாரை.
கற்பிலக்கணம்-கற்புநடை, அது உள்ள மகிழ்ச்சியு மூடலு மூடலுணர்த்தலும் பிரிவும் பிறவுமாம்.
கற்பிற்கிளவித்தொகை-பரத்தையிற் பிரிவு முதலாகப் பொருள்வயிற் பிரிவீறும்.
கற்பு-கல்வி,கற்பனை, நீதிநெறி, மகளிர் நிறை,மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி, முறைமை, விதி.
கற்புடைமகளிரத்தியாயம் - காசிகாண்ட மென்னும் நூலில் ஒருபாகம்.
கற்புடைமை - ஒருமையுடைமை.
கற்புப்பலித்தல் - கற்புச்சித்தித்தல்.
கற்புமுல்லை - பொதுவியற் றிணைத்துறை பனிரண்டனு ளொன்று. அது பொன்போலிலங்கு சுணங்கினையும் பொலிந்த கண்ணினையுமுடைய மடந்தை நன்மையறியுங் கொழுநனுடைய நன்மையைப் பெருகச்சொல்லுவதும், பொருந்துதலமைந்தகொழுநன் நீங்கத் தன்னிடத்துக் காவலைச் சொல்லுவதும், செல்வம் பெருகும் அழகியமாளிகையிலேசேர்ந்த கணவன் றன்பெரிய செல்வத்தை வாழ்த்துவதுமாம்.
கற்புரம் - பொன்.
கற்புழை-கல்வலை, கோட்டையிற் கள்ளவழி.
கற்பூ - கல்லாரை, கற்றாமரை.
கர்பூசரம் - நாகமலை, செங்கோடு.
கற்பூமி - கல்லுநிலம்.
கர்பூரசத்து - கருப்பூரச்சிலை.
கர்பூரபாண்டியன் - குங்கும பாண்டியனுக்குப்பின்முடிதரித்தபாண்டியன்
கர்பூரம்-கருப்பூரம், பொன்னாங்காணி.
கருப்பூரவல்லி }
கர்பூரவள்ளி } ஒருபூண்டு.
கர்பேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கற்பை - படிக்கல்லுப்பை.
கற்பொடி - அன்னபேதி.
கற்பொறுக்கி - ஒருபுள்.
கற்போன் - மாணாக்கன்.
கற்றதை - வாடாத்ததை.
கற்றச்சன் - கற்சிற்பன்.
கற்றடிவிரியன் - ஒருபாம்பு.
கற்றலைமீன் - ஒருமீன்.
கற்றல் - படித்தல், பழகுதல்.
கற்றவர் - புலவர், அறிவுடையார்.
கற்றறிமூடன் - கற்றும் மதியீனனாயிருப்பவன்.
கற்றறிவு - படிப்பினால்வருமறிவு.
கற்று - இளக்கன்றுப்பசு.
கற்றாமரை - ஒருதாமரை.
கற்றார் - அறிஞர், படித்தோர்.
கற்றாழை - ஒருசெடி.
கற்றூனை - காவிப்புடவை.
கற்றீட்டு - கன்மதம்.
கற்றுக்குட்டி - படிக்கும்பிள்ளை.

கற்றுச்சொல்லி-சிறுகவிஞன், துணைச் சொல்லுச் சொல்வோன்.
கற்றாண் - கல்லாலாயதூண்.
கற்றேக்கு - ஒருமரம்.
கற்றை-கதிர்த்தொகுதி, மயிர்த்தொகுதிபோல்வன, கூட்டம்தென்னோலை முதலியவற்றின் முடையுங்கற்றை.
கற்றொட்டி - கல்லினாற்செய்த நீர்த் தொட்டி.
கற்றோர் - அறிஞர், கலைஞர், புலவர்.
கற்றோர்நவிற்சியணி-மிகுதிக்குக் காரணமாகாததை அதற்குக் காரணமாகச் சொல்லுவது.
கனஅப்கேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கனகக்கொடியோன் - கன்னன்.
கனகசடம் - ஐந்தவர் பிறந்தவூர்.
கனகசபை - பஞ்ச சபையி னொன்று பொன்னம்பலம், அது சிதம்பரம்.
கனகதண்டிகை - பொற்சிவிகை.
கனகதப்பட்டை - ஒரு வாச்சியம்.
கனகதம் - ஒட்டகம்.
கனகதர் - சண்டாளர், புலைஞர்.
கனகத்துவசன்-துரியோதனன் றம்பியருளொருவன்.
கனகபரிட்சை - கலைஞான மறுபத்திநான்கினொன்று.
கனகமாலை - சீவகன் மனைவியருளொருத்தி.
கனகமிளகு - வால்மிளகு.
கனகம் - பொன்.
கனகரசம் - அரிதாரம்.
கனகலம் - ஒருதலம்.
கனகவிசயர்-ஆசிரிய மன்னனாகிய பாலகுமாரன் புதல்வர். இவர்செங்குட்டுவனால் வெல்லப்பட்டவர்.
கனகனசங்கிலிதம் - கனமாகிய வீரெண்ணின் பெருக்கம்.
கனகன் - இரணியன், பொன்னிறமுடையோன்.
கனகாகுவயம் - ஊமத்தை.
கனகாங்கி - முதல் மேளகர்த்தா.
கனகாசம் - கண்ணிமேனோர் நோய்.
கனகாசலம் - மகாமேரு, பொன்மலை.
கனகாசனம் - பொன்னாசனம்.
கனகாபிஷேகம் - பொன்னபிஷேகம்.
கனகாமிரதம் - வெள்ளி.
கனகாரியம் - ஊமத்தை.

கனகாலுகை - பொற்கண்டி, பொன்னாரம்.
கனகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.
கனகோஷேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கனங்காய் - ஒருமரம்.
கனசங்கலிதம்-சமமாகிய மூவெண் பெருக்கத்தைக் கூட்டியது.
கனகரசம் - இரசம், நீர்.
கனசாரம் - கருப்பூரம்.
கனசாரி - மிகுதி.
கனசியாமன் - விட்டுணு.
கனட்டி } சிறுவயல்.
கனட்டு }
கனதண்டி - கனமுள்ளது.
கனதி-இறுமாப்பு, கனம், பாரம், பெருமை.
கனதிக்காரன்-பெருமைக்காரன்.
கனத்தநாள் - தாக்குக்கொண்டநாள்.
கனத்தல் - நெருங்கல், பாரங்கொள்ளுதல்.
கனத்தி - வைப்பரிதாரம்.
கனநயதேசியங்கள் - இராகபேதம்.
கனபலம்-அகலம், கனம், நீளம், மூன்றையும் பெருக்கிவருவது.
கனபுடம் - நூறெருப்புடம்.
கனப்பு - அழுத்தம், இறுமாப்பு,கொழுப்பு, தடிப்பு, பாரம், விறைப்பு.
கனப்புக்காட்டல் - கனத்தல்.
கனமதுவாய் - பலவாக.
கனமழை } பெருமழை.
கனமாரி }
கனமூலம் - கனத்தொகையினின்று அதின் மூலமாகிய ஒரு கோணமறிதல்.
கனம்-அகலம், இசைவிகற்பம், இரசம், ஈயம், கூட்டம், சோளைக்கிழங்கு, சங்கை, சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், சீர்மை, செறிவு, நிறைவு, பருமை, பாரம், பெருமை, பொன், மிகுதி,மேகம்,வட்டம்,வன்மை.
கனம்பண்ணல் } சங்கித்தல்.
கனம்பண்ணுதல் }
கனம்பாடல் } சுரம் பாடுதலிலொன்று.
கனம்பாடுதல் }
கனரசம் - ஒருமழை.
கனருசி - மின்னல்.
கனலல் - எரிதல், காய்தல், குடுமேயளுதல்.

கனலி - கள்ளி, கொடுவேலி சூரியன், நெருப்பு, பன்றி.

கனலுதல்-எரிதல், காய்தல், சூடுகொள்ளுதல்.

கனலொழுங்கு - தித்திரன்.

கனல்-உட்டணம், கனலென்னேவல், நெருப்பு, பிரபை.

கனல்கிறக்கல் - செம்புக்கல்.

கனல்கிறம் - மாணிக்கம்.

கனல்பேதி - சாத்திரபேதி.

கனல்மரம் - சோதிமரம்.

கனவட்டம்-குதிரை, பாண்டியன் குதிரை.

கனயான்-தனிகவான், மதிப்புடையோன்.

கனவிரதம் - நீர்.

கனவிளாறற்றல் - கைக்கிளைத் திணைத்துறைப் பெண்பாற்கூற்று பத்தனுளொன்று. அது ஒள்ளியவளையினையுடைய தலைவி அஞ்சுதல் பொருந்திய இரவுப்பொழுதிடத்துக்கண்ட தலைவன் ஒளிப்பக் கனவின் கண் வாய்விட்டுப் புலம்பியதையும், இட்டவளையினையுடையாள் தலைவனோடு விரும்பிய இரவுப்பொழுதவரிற் பிழைப்பேனெனச் சொல்வதையுங் கூறுவது.

கனவினம் - பாரக்குறைவு, மகிமைக்குறைவு.

கனவு - கனு, நித்திரை, மயக்கம்.

கனவுநூல் - கனுவின்பலனறியும்நூல்.

கனவுமூலி - மூங்கில்.

கனறல் - கடுப்பு, கனற்றுதல், சினக்குறிப்பு.

கனற்கூர்மை - வளையலுப்பு.

கனற்சி - சினம், வெப்பம், கோபம்.

கனற்சிலை - மந்தாரச்சிலை.

கனற்சுக்கிரன்-ஒருவகைக் கண்ணோய், அது விழியில் நோவையுமுள்ளிலனர்போற் காந்தலையுமுண்டாக்குவது.

கனற்பு - அடுப்பு.

கனற்றல் } எரிதல், காயப்பண்ணல்.
கனற்றுதல் }

கனனத்தம்பம் - கலைஞான மறுபத்துநான்கினொன்று.

கனனம் - கிண்டல், புதைத்தல், விழுதல்.

கனன்றல் - கனலுதல், சினக்குறிப்பு.

கனு - கனவு.

கனுகாம் - கார்காலம்.

கனுசிரயம் - ஆகாயம்.

கனி - கனியென்னேவல், தித்திப்பு, கிரசவஸ்துக்கள் பிறக்குமிடம், பழம், முதிர்ந்தபழம்.

கனிகரம் - அன்பு.

கனிகை - கனிதல்.

கனிக்காய் - உதாயக்காய்.

கனிஷ்டம் } அழகு, கடைவிரல், சிறுமை.
கனிட்டம் }

கனிட்டர்-கீழ்மக்கள், பின்பிறந்தோர்.

கனிட்டன் - கீழ்மகன், பின்னோன்.

கனிட்டிகை . கடைவிரல்.

கனிட்டி-கடைவிரல், பின் பிறந்தாள்.

கனிதல் - இரங்கல், உருகல், கரைதல், கோபித்தல், சினக்குறிப்பு, நைதல், பழுத்தல், புதைத்தல், பெருங்கோபம், மனங்களித்தல்.

கனித்திரம் - மண்வெட்டி.

கனித்திரன் - பிரஜானன் புத்திரன். சுபன் தந்தை, விவிம்சன்பாட்டன். இவன் தம்பிகள் இவனைக் கொல்லுமாறு ஒரு யாகத்தினின்று மோர் பூதத்தை யெழுப்பிவிட அஃது அவனைக் கொல்ல வியலாது திரும்பி வந்தவவிரேனைரயேகொன்றது. விவிம்சன்புத்திரன், இவன்மகன் காந்தமன்

கனிந்தசொல் - இனியசொல்.

கனியாமணக்கு - ஓராமணக்கு, பப்பாமரம்.

கனிவாய் மொழியம்மை - திருவெண்பாக்கத்திற் கோயில்கொண்டிருக்குந்தேவியார்.

கனிவு - அன்பு, இரக்குகை, முதிர்வு.

கனீயசம் - செம்பு.

கனீனிகை - கண்ணின் கருவிழி.

கனுகுபினுகெனல் - மனங்களிந் தின்புற்றிருத்தல்.

கனுக்கு-கனுக்கென்னேவல், சந்தத்தினசைப்பு.

கனுக்குதல் - குறைத்தல், சந்தத்திலசைத்தல், சிதைத்தல்.

கனுக்குப்பினுக்கு - அதிக பரிமளிப்பு, ஒலிக்குறிப்பு.

கலே-ஒலி, கலேயென்னேவல், செறிவு, சிறைவு, நெருக்கம்.

கனைகதிர்ச்செல்வன் - சூரியன்.

கனைக்கல், கனைக்குதல் } ஆரவாரம், ஒலித்தல்.

கனைதல் - கூடுதல், நெருங்கல்.

கனைத்தல் - ஆரவாரித்தல், ஒலித்தல், குதிரை முதலிய வனுமானித்தல், கொக்கரித்தல், சிரித்தல்.

கனைப்பு - கனைத்தல்.

கனையிருள் - அதிகவிருள், முற்றிருள்.

கனைவரிவண்டு - ஒருவண்டு.

கனைவு - நெருக்கம்.

கனோபலம் - ஆலாங்கட்டி.

கன்-கல், சிறுதராசுத்தட்டு, வெண்கலவேலை.

கன்கலேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கன்பாயாகாடு - ஓரூர்.

கன்மகாண்டம் - ஒரு வைத்தியநூல், கன்மநிவர்த்தி சொல்லும் நூல்.

கன்மசண்டாளன் - மாபாதகன்.

கன்மசாதாக்கியம் - சிவசாதாக்கிய தத்துவமைந்தினொன்று.

கன்மசாக்ஷி - கன்மநிவர்த்தி.

கன்மஷம், கன்மடம் } அழுக்கு, ஈயம், கறள், பாவம்.

கன்மடி - காய்மடி.

கன்மதம் - கல்மதம்.

கன்மதான்மியம்-சரீரத்தி லகங்காரங்கலத்தல்.

கன்மத்துரோகி - சண்டாளன்.

கன்மநிவர்த்தி - பாபப்பிராயச்சித்தம்.

கன்மபரிபாகம் - கன்மத்தொலைவு, சத்திநிபாதமலம்.

கன்மபூமி - கருமபூமி.

கன்மம்-இருவினை,செய்தொழில், தீவினை, பாவம்.

கன்மரோகம்-சென்மாந்திர நோய், தீராநோய்.

கன்மலி - ஏலம்.

கன்மவலை - இலவுகிக மயக்கு.

கன்மவியாதி-முற்பட்ட சென்மநோய் தீராநோய்.

கன்மழை - கல்லாகவருஷிக்குமழை.

கன்மாடபாதன்-மித்திரசகன். இவன் வேட்டையாடச்சென்றபோது ஒரிராக்கதனைக் கொன்று சென்றான். அதற்குப் பழிவாங்கு நிமித்தம் அவ்விராக்கதன் தம்பி பரிசாரக வேடந்தரித்து இம்மித்திரசகனிடம்போய் இவன் மடைப்பள்ளிக் கதிபனானான். ஒருநாள் வசிஷ்டர் இவ்வரசன் மனைக்கு விருந்தினராய்ப்போக அப்பரிசாரகன் ஒரு நரனைக்கொன்று அம்மாமிசத்தைப் பாகஞ்செய்து முனிவர்க்கிட முனிவர் அதுகண்டு சினந்து அரசனைராக்ஷசனாகவென்று சபித்தார். அரசன் தன்மீது குற்றமில்லாதிருக்கச் சபித்தவருக்குப்பிரதிசாபமிடத்துணிந்து கையி னீரையெடுக்க மனைவி கண்டு தடுத்தாள். அப்படித் தடுத்தலும் அந்நீரைத் தனது பாதத்தில்விட கன்மாஷபாதனாயினன். அதுகண்ட வசிஷ்டர் உண்மையுணர்ந்து ஈராண்டிற் சாபவிமோசனமாகவென் றனுக்கிரகித்தார்.

கன்மாதி-தென்புலத்தோர் கடன், நித்தியகன்மம்.

கன்மாதிகன் - கடன்செய்வோன்.

கன்மாந்திரம் - நிக்கடன் முதலியன, பாவம்.

கன்மி - கிரியைக்காரன், பாவி.

கன்முதிரை - ஒரு முதிரைமரம்.

கன்முரிசு - ஒருமரம்.

கன்முறைபழிச்சல்பொதுவியற்றிணைத்துறை பன்னிரண்டனுளொன்று. அது நிழல்விடும் அழகிய மணிப்பூணினையும் வீரக்கழலையுமுடைய போர் விருப்பத்தோனுடைய கல்லினையேத்துவன்.

கன்மேந்திரியம்-கிரியைக்குறியபொறி அவை உபத்தம், பாணி, பாதம், பாயுரு, வாக்கு என்பன.

கன்மொந்தன் - ஒருவாழை.

கன்றமராயம்-கன்றுகள் மேவிய பிடித்திரள்.

கன்றல்-கோபித்தல், கடுப்பு, கன்றினது கன்றுதல், சினக்குறிப்பு.

கன்றீனல் - கன்றுபோடல்.

கன்று-அற்பம், இளமரம், எருமை ஒட்டை, கடமை, கவரி, காட்ட, குதிரை, பசு, மரை, மான், யானை, யிவற்றின்குட்டி, கன்றென்னேவல், கைவளை, மரக்கன்று.

கன்றுகாலி - மாடு கன்று முதலியன.

கன்றுகொல்லி - பசுநோயிலொன்று.
கன்றுதல்-இரங்கல், கன்றல், கோபித்தல், கைதல், பதனழிதல், விசனப்படல்.
கன்றுத்தாய்ச்சி - கன்றுண்டான பசு, சூற்பசு.
கன்றுபடல் - சினைப்படல்.
கன்றுபுக்கான் - ஒருபூடு.
கன்னகடூரம் - காதால் கேட்கப்படாத கொடிய வார்த்தை.
கன்னகண்டு - காதசுருணி.
கன்னகம் - கன்னக்கோல்.
கன்னகூதம் - குறும்பி.
கன்னக்காரன் - கள்வன், கன்னமிடுகிறவன், திருடன்.
கன்னக்கிரந்தி-கன்னத்தில்வரும் ஒருவகை நோய்.
கன்னக்கோல் - சுவரகழ்கருவி.
கன்னங்கரியது - மிகக்கரியது.
கன்னங்கதேரெனல்-மிகுகறுப்பின் குறிப்பு.
கன்னசூலை - ஒருநோய்.
கன்னடகவுளம் } ஒருபண்.
கன்னடகௌளம் }
கன்னடம் - ஒருகூத்து, ஓரிராகம், ஒருபாஷை, சாதிகரன்கிலொன்று, தேயமைம்பத்தாறிலொன்று.
கன்னடியம் - ஒருதேசம், ஒருபாஷை.
கன்னடியர் - ஒருசாதியார்.
கன்னடுதல் - பொது வியற்றிணைத்துறை பன்னிரண்டனு ளொன்று. அது வீரன் காமத்தைக் கல்லிலே யெழுதி அழகுபெறக்கல்லை நட்டதைக் கூறுவதாம்.
கன்னத்தட்டு - தராசுத்தட்டு.
கன்னபரம்பரை - கன்னபாரம்பரை.
கன்னபாகம் - காது.
கன்னபாரம்பரியம் } வாக்கு மூலமாய் வழங்குவது.
கன்னபாரம்பரை }
கன்னபூஷணம் - காதணி.
கன்னபூரம் - அசோகு, காதணியிலொன்று, காது, நீலோற்பலம்.
கன்னப்பரிசை - கிழலகு.
கன்னப்பிளவை - ஒருசிலந்தி.
கன்னப்புற்று - கன்னக்கிரந்தி.
கன்னப்பூ - ஒரு காதணி.
கன்னப்பொறி-காதினருகான பொறி, கேள்விமூலம்.
கன்னமதம்-காதில்வடியும் நீர், யானைமதத்திலொன்று.
கன்னமலம் - குறும்பி.
கன்னமிடல் } களவெடுத்தல், சுவரகழ்தல், திருடுதல்.
கன்னமிடுதல் }
கன்னமீசை - கன்னத்தின்மீசை.
கன்னமூலம் - காதினடி, காது.
கன்னம்-அறுகு,கதுப்பு,கன்னக்கோல், காது, கிரகமார்க்கவளவு, தராசு,தராசுத்தட்டு, நரம்பு, பொற்கொல்லன், யானைச்செவி.
கன்னர்-செங்குட்டுவனுக்கு நட்பினராகிய ஆரியவரசர். இவர் நூற்றுவர்.
கன்னல்-கரகம், கரும்பு, சருக்கரை, நரம்பு, நாழிகை, நாழிகைவட்டில்.
கன்னவகம் - சிறுகீரை.
கன்னவேதம் } காதுகுத்துதல்.
கன்னவேதனம் }
கன்னவேதை }
கன்னற்கட்டி - கற்கண்டு.
கன்னன்-அங்கராசன். இவன் சூரியனுக்கும் குந்திதேவிக்கும் பிறந்தவன், இடையெழுவள்ளலிலொருவன்.
கன்னு - ஒருவாச்சியம்.
கன்னுடம்-ஒருபாஷை, தேயமைம்பத்தாறிலொன்று.
கன்னுதம் - அன்னபேதி.
கன்னுபின்னுவெனல் - உருத்தெரியாமற்சொல்லல், குற்றல்.
கன்னுர்-ஒருசாதி, ஒருமருந்து.
கன்னுவதங்கம் - காதிற்பூ.
கன்னி-அத்தநாள், அழிவில்லாள், அழிவின்மை, இளமை, ஓரிராசி, ஓராறு, கரந்தை, கற்புக்கெடாமை, கற்றாழை, காக்கணஞ்செடி, காவிரி, குமரி, தவப்பெண், துர்க்கை, தெய்வப்பெண், பார்வதி, பெண்.
கன்னிகம் - மணத்தக்காளி.
கன்னிகாசலம் - மேரு.
கன்னிகாதானம் - கன்னியை மணமுடித்துக் கொடுத்தல்.
கன்னிகாபதி - மருமகன்.
கன்னிகாரம் - கோங்கு.
கன்னிகை - கல்வியறியாதவள், குமரி, தாமரைக்கொட்டை, துர்க்கை, பூவரும்பு.

கன்னிக்கால் - கன்னி மூலையிற் கப்பு முதல் நாட்டுந் தம்பம்.
கன்னிக்கிழங்கு - கிட்டிக்கிழங்கு.
கன்னிக்குட்டி - முதலீன்றகுட்டி.
கன்னிக்கோழி-முட்டையிடாதகோழி.
கன்னித்திங்கள் - கன்னிமாதம்.
கன்னித்திட்டு - இருதுத்திட்டு.
கன்னித்துவம் - கன்னிப்பருவம்.
கன்னித்தேங்காய்-தென்னமரம் முதற் காய்த்த காய்.
கன்னிநாகு - ஈனுதநாகு.
கன்னிபுரம் - மதுரைமாநகர்.
கன்னிபுரேசன் - மதுரையி லெமர்ந்த சோமசுந்தரமூர்த்தி.
கன்னிபுரேசுபுரி - மதுரைமீனாக்ஷி.
கன்னிப்பழி - கன்னிகையைக் கற்பழித்த பாவம்.
கன்னிமணி - ஆடு மான் முதலியவற் றின்மறி.
கன்னிமாதம் - புரட்டாதிமாதம்.
கன்னிமார் - வாலைப்பெண்கள்.
கன்னிமுத்திரை - கன்னித்தன்மை.
கன்னிமை - கன்னிப்பருவம்.
கன்னியழிதல் - கன்னிமுத்திரை யழிதல்.
கன்னியாகரணம்-கன்னியை யபகரித்தல்.
கன்னியாகுப்சம் - ஒருதேசம், இது குசநாபன் புத்திரிகள் நூற்றுவரையும் வாயு பகவான் பூப்பின்றி யிருக்குமாறு சபிக்கப் பிருகதத்தன் அச்சாபத்தை நீக்கி மணம்புரிந்து வாழ்ந்த இடம்.
கன்னியாகுமரி - இந்தியாவின் தென் கோடிமுனை, ஓர்யாறு.
கன்னியாக்கிரணம் - கலியாணம்.
கன்னியாஸ்திரி-கன்னிப்பெண்குமரி.
கன்னியாதானம்-அறம் முப்பத்திரண்டிளொன்று. அஃது கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது.
கன்னியாதூஷகன் - கன்னித்துரோகி.
கன்னியாதோஷம்-கன்னிகாபகீர்த்தி.
கன்னியாபுத்திரன் - கானீனன்.
கன்னியாப்பிரதானம் - கன்னிகாதானம்.
கன்னியாவேதி - மருமகன்.
கன்னியீற்று - தலையீற்று.

கன்னியுமைமாது - திருக்கச்சூராலயத்தில் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
கன்னியேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கன்னியை-விதர்ப்பன்மனைவி, இவளைச்சியாமகன் றனக்கென்று கொண்டு போய்த் தன் மகன் விதர்ப்பனுக்கு மனைவியாக்கினன்.
கன்னிறம் - இசங்கு.
கன்னீகம் - ஒரு சன்னிநோய்.
கன்னீர்ப்படுத்தல்-பொது வியற்றிணைத்துறை பன்னிரண்டனுளொன்று. அது சுரும்பு சூழுமாலை பக்கத்திலே அசைந்துவரப் பார்த்துக் கைக்கொண்ட கல்லினைப் புனலிலே யிட்டதைக் கூறுவது.
கன்னுவர் - கன்னர்.
கன்னுறுகம் - சிறுகீரை.
கன்னெஞ்சன் - வன்னெஞ்சன்.
கன்னெஞ்சி - அவுரி, வன்னெஞ்சி.
கன்னை - கட்சி, பக்கம்.
கன்னைக்கொற்றி-இருகட்சிக்கு முதலி செய்வோன்.
கன்னைக்கோல் - நெய்வார் கருவியில் ஒன்று.
கன்னைமாறி - அங்கிடுதத்தி.

கா

கா-அசைச்சொல் (உ-ம்) வேளிவட்காண்டிகா, ஓரெழுத்து, காத்தல், காவடி, காவென்னேவல், சோலை, துலை, தோட்சுமை, பூந்தோட்டம், வருத்தம், வலி.
காகுடம் - எள்.
காகக்கரிப்பான் - கருங் காசலாங்கண்ணி.
காகங்கரைதல் - காகங்கூவல்.
காகசகுஷ்டம்-ஒருவகைக் குட்டநோய் அது கொப்பளங்கள் பிறக்கும்போது சிவந்த நிறத்துடன் பிறந்து பின்னர்க் கறுப்பாய்க் கிராம்புமொக்கினுருவத்தைப் பெற்றடைந்து இரணங்களாவது அக்கொப்பளங்களிலதிக எரிவும், நோவுமுண்டாவதோடு சமஸ்த குஷ்ட குணங்களும் பலநிறங்களு முண்டாகும். இது காச்

ஷையின் பிறப்பைப்போல் முதலிற்
சிவந்து பிறகு கறுப்பதால் இப்பெ
காகசிஞ்சி [யர் பெற்றது.
காகசிஞ்சி } குன்றிக்கொடி.
காகசிஞ்சை
காகச்சிலந்தி - ஒருவகைப்பூச்சி. அது
பட்டவிடத்து வெளுத்துஞ் சிவந்து
ம் ஒருவிதக் காயினது விதையைப்
போற் கொப்பளமெழும்புவது. அத
னலதிகவேதனை, விக்கல்,இரைப்பு,
மிகுந்த தாகம், மூர்ச்சை, நித்திரா
பங்கம், சதா மார்கோ வென்று மிக்
குணங்களுண்டாகும்.
காகச்சிலை - கருமுகிற்சிலை.
காகர்சக்கான் - கருமணர்சக்கான்.
காகதாலியநியாயம் } காகம் பனம்பழத்
காகதாலியம் தின்மேல் உட்
கார பழம்விழுதல்;தற்செயல்,பொ
காகதிந்துகம் - கருந்தும்பை. [ருத்தம்.
காகதுண்டம் - அகில்.
காகதுண்டி-ஒருசெடி, ஒருவகைப் பித்
காகதேரி - மணித்தக்காளி. [தளை.
காகத்துரத்தி - ஆதொண்டை.
காகத்துவசத்தாள் - மூதேவி.
காகத்துவசம் - வடவைத்தீ.
காகநதி-காவிரிப்பூம்பட்டினம்,காவேரி
காகநாசி - பாற்சோற்றி.
காகநாசிகை - சிறுகோவை.
காகநிம்பிலை - கருநிம்பிலை.
காகபட்சம் - சிறுகுடிமி, பக்ககுடிமி.
காகபதம்-காலதசப் பிரமாணத்தொன்
று.அஃது குரு இரண்டுகொண்டது.
காகபலம் - எலிமிச்சமரம்.
காகபலி - காகத்துக்கிடுமுணவு.
காகபாஷாணம் - ஒருமருந்து.
காகபீலி - குன்றிக்கொடி.
காகபுச்சம் } குயில்.
காகபுட்டம்
காகப்பீருதம் - கருந்தும்பை.
காகப்புள் - அவிட்டநாள், காக்கை.
காகமலடு - ஒருவகை மலட்டுரோகம்.
அது முதல்முதல்இரண்டுபிள்ளையை
ப்பெற்றுப் பின்னர்க் கருப்பமில்லா
காகமாசி - கருந்தக்காளி. [திருப்பது.
காகம் - அவிட்டம், காக்கை, ஈயு, வடகி
ழ்த்திசைப்பாலன் குறி, வைப்புப்பா
ஷாண முப்பத்திரண்டி லொன்று.

காகயவம் - பதர்.
காகரி - திப்பிலி.
காகருகம் - எட்செடி.
காகருகன் - வறியன்.
காகருடி - பன்றி.
காகலி - மதுரமான வார்த்தை.
காகலிகிஷாதம் - அமலைதாரம்.
காகலிரவம் - குயில்.
காகலூகம் - ஆந்தை.
காகலூகன் - பயந்தவன், வறியவன்.
காகவாகனன் - சனி.
காகாங்கி-எக்காளம், புள்ளோசை, ஒரு
வாத்யம்.
காகாங்கி-ஒருவகைக் கோவைக்கொடி.
காகாபிசாசு-இரத்தமுண்ணும் வாவற்
பறவை, ஒருபேய்.
காகாரி - ஆந்தை.
காகி - விளாமரம்.
காகிதம் - கடுதாசி, திருமுகம்.
காகித்தம் } குறிஞ்சா.
காகித்திரம்
காகு - இசையறுப்பு.
காகுசம் - கபோலம்.
காகுத்தன்-இராமன், ஓராசன், பாஞ்ச
யன், விட்டுணு.
காகுகாசி - புடோல்.
காகுளி - இசை, தவிசு, மந்தவிசை,
மிடற்றெழுமோசை, மெத்தை.
காகூவெனல் - ஒலிக்குறிப்பு.
காகெந்து - கருந்தும்பை.
காகேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெ
ட்டனு ளொன்று.
காகொடி - எட்டிமரம்.
காகோடகி - வாலுளுவை.
காகோடியர் - நாடகர்.
காகோதரம் - பாம்பு.
காகோதும்பரிகை-பேயத்திமரம். [ம்.
காகோலம் - அண்டங்காகம், மகா விஷ
காகோளி - அசோகமரம், கொடியாசு-
தேட்கொடுக்கி.
காகட்டான் - காக்கணம்.
காக்கணங்கொவ்வை - காக்குறட்டை.
காக்கணம் - கருவிளை.
காக்கம்-காக்குரட்டைச் செடிகோவை.
காக்கன்போக்கன் - துன்மார்க்கன்.
காக்காச்சி - ஒருமச்சி.
காக்காய் - அவிட்டம், காகம்.

காக்காய்க்கொல்லி-ஒருசெடி,தூர்விதை.
காக்காய்ச்சோளம் - ஒருசோளம்.
காக்காய்ப்பாலை - ஒருபாலை.
காக்காய்ப்பூ - ஒருபூடு.
காக்காய்ப்பொன் - பொன்னிறப்பிசின்
போலிப்பொன்.
காக்காய்மீன் - ஒருமீன். [சாதி.
காக்காய்மூக்கன் - மனுஷரி லோர்வித
காக்காய்மூக்கி } ஒரு மூகிற்பாஷா
காக்காய்மூக்கு } ணம்.
காக்காய்வலி - ஒருநோய்.
காக்காரர் - தோட்சுமைக்காரர்.
காக்காவெனல் - ஒரொலிக்குறிப்பு.
காக்குத்துவான் - ஒருபுள்.
காக்குராட்டை } காக்கொரட்டை.
காக்குரேட்டை }
காக்கை - அவிட்டநாள், காகம், காக்கு
தல், பஞ்சபட்சியிலொன்று.
காக்கைக்கொடியாள் - மூதேவி. [ம்.
காக்கைபாடினியம் - ஓரியாப்பிலக்கண
காக்கைபாடினியார் - தொல்காப்பியரு
டன் தமிழ்கற்ற ஒரு தமிழ்ப்புலவர்.
காக்கைபாடினியார் நச்செள்ளையார் -
நாடுகோட்பாடு சேரலாதனைப் பாடி
ஒன்பது காப்பொன்னும் நூறாயிரங்
காணமும் பரிசாகப்பெற்ற புலவர்.
காக்கைமுகர் - ஒருவகை மானிடர்.
காக்கைவலி - ஒருநோய்.
காக்கைவேர் - காக்கணன்வேர்.
காக்கைவேலி - உத்தாமணி.
காக்கொரொட்டை - கருங்காக்கணம்.
காங்கவீநம் - தினைவிளையும்நிலம்.
காங்கிசை } விருப்பம்.
காங்கிஷை }
காங்கு-ஒருநீலப்புடவை, பெரும்பானை.
காங்கூலக்கை - கூத்திற்காட்டு மோர்வ
கைக்கை, அது சுட்டுவிரல்,நடுவிரல்,
பெருவிரலாகிய மூன்றுஞ் சேர்ந்து
குவியப் பவித்திரவிரல்வளைந்து சிறு
விரல் நிமிர்ந்த பெற்றியதாம்.
காங்கேசன் - காங்கேயன்.
காங்கேயபூஷணி-முப்பத்து மூன்றுவ
து மேளகர்த்தா.
காங்கேயம் - பொன்.
காங்கேயன் - குமரன், வீட்டுமசாரி.
காங்கேருகி - ஒருமரம்.
காங்கை - வெப்பம்.

காங்கையன் - வைப்புநலப் பாஷாணம்.
காங்ஷை - ஆசை.
காச்சிலேட்டுமம்-ஒருவகைநோய். அது
இருமல், சீதளம், தேகபாரிப்போடு
கனம், நாடி அதிகவேகத்திற் சிலே
ட்டுமகதியாக நடத்தல், வாயு வற
ளல், அதிகவுஷ்ணம்,மூக்காந்தண்டி
னடியிற் கனத்தல், தினவாகிய இக்
குணங்களை யுண்டாக்குவது.
காச்சுவாசம் - ஒருநோய்.
காச்சுவாசம்-ஒருவகைச்சுரநோய். அது
எப்பொழுது மிருமல் சிவந்தும் வெ
ளுத்தும் நுரைத்தும் காணுவிதமான
கோழைவிழல், தாகம், மூர்ச்சை, வி
யர்வை, சிரமை, பிரமை, ஏப்பம்,
வாந்தி, தலைதிருப்பல், நடுக்கல், தூர்
ப்பலம், ஈனத்தொனி,தலை கண்களி
லெரிவு, வயிற்றுநோய், பேதி, கொ
ட்டாவி, விக்கல் என்னு மிக்குணங்
களை யுண்டாக்குவது.
காசமர்த்தகம் - பெரும்புல்.
காசம்-ஈளைநோய், கண்வியாதி, கற்பா
ஷாணம், கோழை, சிலேட்டுமம்,
தேயமைம்பத்தாறினொன்று,பொன்
காசரம் - காட்டெருமை.
காசறை-கத்தூரிமிருகம், மணி, மயிர்ச்
சாந்து.
காசனம் - கொலை.
காசனன் - கொலைசெய்வோன்.
காசன் - சுகோத்திரன் மகன்.
காசா - எருமை, காயாச்செடி,நாணல்.
காசாண்டி - ஒருவகைச்செம்பு.
காசாம்பாரை - ஒருமீன்.
காசாம்பூமேனியன் - விட்டுணு.
காசாம்புவண்ணன் - கச்சாலம், காய்ச்
சற்பாஷாணம், அரிசி, விட்டுணு.
காசாரம் - ஓடை.
காசாவில்லை - சந்தனக்கூட்டு.
காசி-ஒருபட்டணம், சம்ஸ்கிருதசங்கமி
ருந்தவிடமுமிதே, சிரகம்.
காசிகாண்டம்-ஒரு புராணப்பகுதிநூல்.
காசிக்கல் - காசச்சிலை.
காச்சிசிருட்டி - ஒருபுள்.
காசிக்குப்பி-ஒருவகை மெல்லியகுப்பி.
காசிச்சாரம் - இருப்பு.
காசிதம் - உறியில் வைக்கப்பட்டது.
காசிதும்பை - ஒருதும்பை.

காசிபப்பிரமா - காசிபன். [று.
காசிபம்-தருமநூல் பதினெட்டினொன்
காசிபன்-ஓரிருடி. இவர் மரீசிமகாரிஷியின்பிள்ளை, அதிதி என்பவளால் தேவர்களுக்கும் திதி என்பவளால் அசுரர்களுக்கும் தந்தை. [று.
காசிமீரம் - தேயமைம்பத்தாறி னொன்
காசியபன் - பாம்பு மந்திரத்தில் வல்ல ஒரு பிராமணன். இவன் பரீக்ஷித்து மகாராஜன் விடத்தினு லிறப்பானென்பதுணர்ந்து அவனிடஞ் சென்ற போது வழியிலே தக்ஷகன்கண்டு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து அவனை அங்குச் செல்லாமற் றடுத்தான்.
காசியபி - அருணன்.
காசியபீ - பூமி.
காசியபேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
காசியன்-சேனசித்துமகன்; ஆயுபௌத்திரனாகிய சுகோத்திரன் மகன்.
காசியாரண்ணியேசுவரர் - திருஇரும்பூளையிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
காசிராசா - அம்பிகை, அம்பாலிகை என்பவரின் றந்தை.
காசிரோர்த்தம்-ஆடுதின்னுப்பாளை, வறட்சுவண்டி.
காசிலவணம் - காசிச்சாரம்.
காசிலிங்கம்-ஒரு சிவலிங்கம், விசுவநாதலிங்கம்.
காசிவாசசி - காசிநகரத்தான்.
காசினி - பூமி.
காசீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காசு - காசுக்கட்டி, குற்றம், கோழை, நாணயம், பொன், மணிப்பொது, மாதரணிவடம், வெண்பாவிறுதிச் சீருளொன்று.
காசுகட்டுதல் - ஒரு விளையாட்டு.
காசுக்கடை - பொன்விற்கிறகடை.
காசுக்கட்டி - ஒருமருந்து.
காசுக்காரன் - பணக்காரன்.
காசுமண் - ஒருமண்.
காஜுலவம் - விளையலுப்பு.
காசை-சயரோகம், காயா, நாணற்புல்.
காச்சக்கிரை - காச்சுரை.
காச்சல் - சுவரம்.
காச்சரக்கு } காச்சுரை.
காச்சிரக்கு }
காச்சுப்பு - கவட்டுப்பு.
காச்சுரை - புளிச்சக்கீரை.
காஸ்மீரம் - குங்குமப்பூ, தேயமைம்பத்தாறினொன்று.
காஞா - காயா.
காஞ்சம் - நீலாஞ்சனக்கல்.
காஞ்சனத்தூள் - பொன்மணல்.
காஞ்சனமாலை - மலயத்துவச பாண்டியன் மனைவி.
காஞ்சனம் - புன்கமரம், பொன்.
காஞ்சனன்-புரூரவன் புத்திரனாகிய அமவசுவினது பௌத்திரன், உதயகுமாரனை வாளாற் கொன்றவன்.
காஞ்சனகுவயம் - செண்பகம்.
காஞ்சனி - மஞ்சள்.
காஞ்சா - கஞ்சா.
காஞ்சான்சட்டுதல் } செற்றலாதல்.
காஞ்சான்பற்றுதல் }
காஞ்சி-எண்கோவைமணி, ஒருபண், ஒருமரம், காஞ்சிபுரம், காத்தாங்கி, நிலையின்மை, புறப்பொருட்டிணை பன்னிரண்டனு ளொன்று. இது அங்ஙனம் போர்செய்வதற்குவந்த பகைவர்க்கு எதிர்சென்று ஊன்றுதல், இதற்குக் காஞ்சிமாலை சூடுதல் உரித்து, இது காஞ்சியெதிர்வு முதலிய இருபத்தொரு துறைகளையுடையது. அது வஞ்சித்திணைக்கு மறுதலைத்திணை.
காஞ்சிகம் - கழிநீர், காடி.
காஞ்சிகா - எட்டிமரம்.
காஞ்சிமாலை-ஒரு பிரபந்தம், படைமுன்னெதிருன்றுஞ் சேவகர்க்குமாலை.
காஞ்சியம் - வெண்கலம்.
காஞ்சியெதிர்வு - காஞ்சித்திணைத்துறை யிருபத்தொன்றனு ளொன்று. அது எதிரூன்றுஞ் சேனை மேலிடுதலைப்போற்றாத வேற்றெழிலைவல்ல வீரனுடைய வெற்றியை யிகுத்துச் சொல்லியது.
காஞ்சிரம் } எட்டிமரம்.
காஞ்சிரை }
காஞ்சினி - மஞ்சிட்டி.

காஞ்சிபுரம் - தொண்டைமண்டலத்தின்கணுள்ள ஒரு திவ்யஸ்தலம். பதினெண்ணாயிரம் கோயில்களைக்கொண்டது. இது சோழருக்கு இராஜதானியாயிருந்தது. இங்கே கோயில்கொண்டிருக்கும் சிவபெருமான் திருவேகம்பனார் என்றும், அம்மையார் காமாக்ஷிதேவி என்றும் பெயர்பெறுவர். விஷ்ணு ஆலயத்திலெழுந்தருளியிருக்கும் சுவாமிபெயர் வரதராஜர். இத்தலம் கச்சியெனவும்படும். திருக்குறளுக்குச் சிறந்த வுரையெழுதிய பரிமேலழகருக்கும், கந்தபுராணம் தமிழிலே பாடியருளிய கச்சியப்பருக்கும் இதுவே ஜனனபூமி சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர் முதலிய பாஷியகாரரும் வித்தியாவாதங்கள் புரிந்தவிடமு மிஃதே.

காஞ்சுகம், காஞ்சுகி } சட்டை.

காஞ்சொறி, காஞ்சோன்றி } ஒருசெடி.

காடகம் - சீலை.

காடகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

காடவிளக்கு - ஒருவகை விளக்கு.

காடன் - ஒருமீன்.

காடாக்கினி - பெருந்தீ.

காடாந்தகாரம் - பேரிருள்.

காஷாயப்புடவை - காவிப்புடவை.

காஷாயம் - ஒருமருந்து, காவி, கூழ், பலமருந் தொன்றாயூறியது.

காடாரம்பற்று - காட்டுப்புறம்.

காடாற்று - ஈமக்கிரியையிலொன்று.

காடாற்றுதல் - பிரேதத்தின் தீயைத் தணித்தல்.

காடி - ஊறுகாய், ஒருமருந்து, ஒருவகை வண்டி, கஞ்சி, கள், தோண்டுகால், நெய், புளித்தநீர், மூளை.

காடிகம் - சீலை.

காடிக்காரம் - ஆயக்கல், நெருப்புக்கல்.

காடினியம், காடின்னியம் } அதிக கடினம்.

காடு - ஆரணியம், இடம், ஊர், எல்லை, ஒருவிகுதி (உ-ம்) கோக்காடு, சுடுகாடு, செத்தை, நெருக்கம், பரணிநாள், விகுதி, வனம்.

காடுகலைத்தல் - வேட்டைக்காரர் மிருகங்களைக் கலைத்தல்.

காடுகாட்டுதல் - கொல்லல், வெறிநாய் [விடுதல்.

காடுநாள்-வடுநெகன்றாய், காளி.

காடுபடுதிரவியம் - காட்டி லுண்டாகுந் திரவியம். அஃது அரக்கு, கருந்தினை, தேன், நாவி, மயிற்பீலி.

காடுபலியூட்டுதல் - காட்டில்வாழுந் தேவர்களுக்குப் பலியிடல், குறவர், வேடர் செய்யுமோராராதனை.

காடுபிறாண்டி - காடுவாரி.

காடுமேய்தல் - வீணாய்த்திரிதல்.

காடுவசாதி - காடுவாழ்சாதி.

காடுவாரி - ஓராயுதம், காடுபிராண்டி, சேர்ப்பவன்.

காடுவாழ்சாதி - சரீரத்தைப் பேணாது திரிவோர்.

காடுவாழ்த்து - பொதுவியற்றிணைத்துறைப் பன்னிரண்டனு ளொன்று. அது பலர்க்கும் இசைக்கும் பெரிதாக வொலிக்கும் சாப்பறை அனுகரண சுத்தமுடைத்தாகக் கறங்கும் சுடுகாட்டை வாழ்த்தியது. வனதேவதைகளை வாழ்த்திச்சொல்லுமோர் பிரபந்தம்.

காடுவெட்டி - சிறு மண்வெட்டி, மரம் வெட்டுகிறவன், முரடன், மூடன்.

காடேறி - ஒரு பிசாசம்.

காடை - ஒருபுள்.

காடைக்கண்ணி - ஒருதினை.

காடைக்கழுத்தன் - ஒருநெல்.

காடைப்புடம் - மூவெருப்புடம்.

காட்கரையப்பன் - தாற்பெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருக்காட்கரையிற்கோயில்கொண்ட விட்டுணு.

காட்சம் - சோழங்க பாஷாணம்.

காட்சி - அறிவு, அற்புதம், ஓளவை, தரிசனம், தோற்றம், பத்தவத்தையிலொன்று. அது தலைமகளைத் தலைமகன் தனியிடங்காண்டல், பார்வை பிரத்தியட்சபிரமாணம், வேடிக்கை.

காட்சிகொடுத்தல் - தரிசனங்கொடுதல்.

காட்சிப்பொருள் - உருவப் பொருள், காணப்படுபொருள்.

காட்சியணி - ஓரலங்காரம். அஃது உபமானோப மேயங்களின் காட்சியை ஆரோபித்தல்.

காட்சியர்
காட்சியவர் } அறிஞர்.
காட்சியார்
காட்சிவரி - தன் வருத்தத்தைப் பலருங் காணும்படி நடித்தல்.
காட்டகத்தி - வீழி.
காஷ்டகுத்தாலம் - மரக்குந்தாலி.
காட்டணம் - பெருங்குமிழ்.
காட்டத்தி - பேயத்தி.
காஷ்டம் - விறகு, வெண்கலம்.
காட்டம்-அடித்தட்டை, விறகு, வெண்கலம்.
காட்டல் - காண்பித்தல்.
காட்டவரை - ஒருவரை.
காட்டழல் - காட்டக்கினி.
காட்டா - காட்டுப்பசு.
காட்டாக்கினி - காட்டுத்தீ.
காட்டாத்தி - ஒராத்தி.
காட்டாமணக்கு - ஓராமணக்கு.
காஷ்டாம்புவாகினி - தோணி.
காட்டாளத்தி - அச்சடனிகழ்வது.
காட்டாள் - நாகரீகமில்லாதவன்.
காட்டான் - காட்டுப்பசு, பிறன்.
காட்டிக்கழித்தல்-காட்டிமறைத்தல்.
காட்டிக்கொடுத்தல் - குற்றத்தி லேற்படுத்தல், சுட்டிக்காட்டல்.
காட்டிஞ்சி - சாரணை.
காட்டிலம் - வாழை.
காட்டிலுமிழி - நாகரவண்டு.
காட்டிலேபோதல்-வீணிலே போதல்.
காட்டில் - உவமையுருபு (உ-ம்) அவனைக்காட்டில்.
காட்டீருள்ளி - நரிவெங்காயம்.
காஷ்டீலை - வாழை.
காட்டு-உதாரணம், காட்டென்னேவல், காண்பித்தல்.
காட்டுக்கடலை - ஒருகடலை.
காட்டுக்கதலி - ஒருவாழை.
காட்டுக்கத்தூரி - பெட்டகத்துத்தி.
காட்டுக்கரணை - ஒருசெடி.
காட்டுக்கல் - வெள்ளைக்கல்.
காட்டுக்காய்ச்சுரை - ஒருசுரை.
காட்டுக்காய்வள்ளி-ஒரு வள்ளிக்கொடி.
காட்டுக்காணுவாழை - ஒருவாழை.
காட்டுக்கிட்டம் - மகாகிட்டம்.
காட்டுக்கிராம்பு - ஒருகிராம்பு.
காட்டுக்கிரியை - ஈமக்கிரியை.
காட்டுக்கீரை - ஒருகீரை.
காட்டுக்குணம் - மிருகக்குணம்.
காட்டுக்குருந்து - காட்டெலுமிச்சை.
காட்டுக்குளவஞ்சி - ஒருகொடி.
காட்டுக்கூந்தல் - ஒருபுல்.
காட்டுக்கொசு - ஒருவகைமசகம். அது சடித்தால் அவ்விடத்தில் நமைச்சலும் அற்ப வீக்கமும் வேதனையுமுண்டாகும்.
காட்டுக்கொஞ்சி - ஒருமரம்.
காட்டுக்கொட்டை - காட்டாமணக்கு.
காட்டுக்கொளஞ்சி - கொளஞ்சியிலோர் பேதம்.
காட்டுக்கொள் - ஒருகொள்.
காட்டுக்கோரை - ஒருகோரை.
காட்டுக்கோழி - ஒருகோழி.
காட்டுச்சீரகம் - ஒருபூண்டு.
காட்டுச்சீரகவள்ளி - ஒருவள்ளி.
காட்டுதல்-அத்தாட்சிபண்ணுதல், உருபித்தல், காண்பித்தல், நினைப்பூட்டுதல், வெளிப்படுத்துதல்.
காட்டுத்தகரை - ஒருதகரை.
காட்டுத்தனம் - பேதைமைக்குணம்.
காட்டுத்தாரா - ஒருதாரா.
காட்டுத்தாளி - ஒருதாளி.
காட்டுத்தினை - ஒருதினை.
காட்டுத்துத்தி - ஒருதுத்தி.
காட்டுத்துவரை - ஒருதுவரை.
காட்டுத்துளசி - ஒருதுளசி.
காட்டுநாரத்தை - பெருங்குருந்து.
காட்டுநெல்லி - ஒருநெல்லி.
காட்டுப்பயிர் - தன்னிலே யுண்டாகும் பயிர்.
காட்டுப்பன்றி - ஒருபன்றி.
காட்டுப்பாகல் - பழுபாகல்.
காட்டுப்பிள்ளை-ஆருமற்றபிள்ளை, கண்டெடுக்கப்பட்ட பிள்ளை.
காட்டுப்புத்தி - திருந்தாதபுத்தி.
காட்டுப்புளிச்சை - ஒருசுரை,ஒருமரம்.
காட்டுப்புறா - கபோதம்.
காட்டுப்பூனை - ஒருபூனை.
காட்டுமச்சம் - ஒருவகைக்கொசு. அது சடித்தால் அவ்விடத்தில் தினவும், அற்ப வீக்கமும், வேதனையுமுண்டாகும்.
காட்டுமந்தாரை - காட்டாத்தி.
காட்டுமரி - ஒருபூடு.

காட்டுமல்லிகை - மல்லிகையிலோர் பேதம்.
காட்டுமா - ஒருமா.
காட்டுமாவிரை - சாரப்பருப்பு.
காட்டுமிருகம்-கானக்குதிரை, வனமிருகம்.
காட்டுமிருகாண்டி, காட்டுமிருண்டி } காட்டில் வாழ்வோன், பாக்கு பாவனை யறியாதவன்.
காட்டுமூக்கிரிகை - ஒருகொடி.
காட்டுமுருங்கை-மாவிலிங்கை, வனமுருங்கை.
காட்டுமூரி - நாகரவண்டு.
காட்டுவாகை - ஒருவாகை.
காட்டுவெள்ளரி - பேய்க்கொம்மட்டி.
காட்டெருமை - எருக்கு, ஓரெருமை, கூகை, நீறு, சதுரக்கள்ளி.
காட்டெருமைப்பால் - அங்குசரோசனம், எருக்கம்பால், கள்ளிப்பால், கூகை, நீறு.
காட்டெலுமிச்சை - ஓரெலுமிச்சை.
காட்டேன் - ஓரேன்.
காட்டேரி - ஒரு துட்டதேவதை.
காட்டை-எல்லை, காலதசப்பிரமாணத்தொன்று. அஃது இலவமெட்டுக்கொண்டது, காலம், திசை, நுனி, விரகு.
காட்டைப்புடம் - சிறுபுடம்.
காட்டொலிவம் - ஒருமரம்.
காணரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
காணதாரேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காணதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
காணப்படுதல் - தோற்றப்படுதல், வெளிப்படுதல்.
காணம்-ஓரளவு, கொள், செக்கு, பொற்காசு, பொன்.
காணல்-குறித்தல், தோற்றல், நினைத்தல், பெறுதல், வணங்கல்.
காணன் - ஒற்றைக்கண்ணன்.
காணுக்கடி - காணுது விஷத்தீண்டல்.
காணுக்காட்சி - அற்புதக்காட்சி, அற்காட்சி.
ணுக்கிரகம், ணுக்கோன் } கரந்துறைகோள்.
காணுத்தலம் - ஆண்குறி, பெண்குறி, மறைவிடம்.
காணுபதியம்-கணபதியினது மதம்.
காணுப்புள்தோஷம் - ஒருவகைத் தோஷநோய், அது உச்சி, கண்ணுகிய விடங்களிற் குழி விழுதல், முலையுண்ணுமை, பச்சைநிறமாய்ப் பேதியாதல், பறவைக்குரலைபோற் சிறிச்சிறியழுதல், தாகமென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
காணுமாணிக்கங்காட்டல்-விடுப்புக் காட்டல்.
காணுர் - பகைவர்.
காணி-உரிமை, ஓரெண், அது ஒன்றிலெண்பது கொண்டது, நிலம், பொன்னுங்காணி, மனையிருபத்துநான்குகொண்ட ஒரு நிலவளவு.
காணிகியம் - வேலைசக்கூட்டம்.
காணிக்கை - தட்சிணை, வெகுமானம்.
காணித்தாயம் - நிலவுரிமை.
காணியம் - ஆஹாதம்.
காணியாட்சிக்காரன் - காணியாளன்.
காணுகம் - காகம்.
காணுதல்-அறிதல், காண்டல், சந்தித்தல், செய்தல், நினைத்தல், பெறுதல், வணங்குதல்.
காணேயம் - எண்ணிக்கையிடத் தக்கது.
காண் - அழகு, ஓரிடைச்சொல் (உ-ம்) கூறினர்காண், காணென்னேவல்.
காண்டகடுகம் - பாகல்.
காண்டகம் - ஊர், காடு, காண்டாமிருகக்கொம்பு, கெண்டிகை, சரகாண்டபாஷாணம், நிலவேம்பு, நோய்.
காண்டகுண்டம் - ஒருவகைக் கோரைப்புல்.
காண்டபுடம் - திரைச்சீலை.
காண்டப்பிரஷ்டன் - ஆயுதம் பிடித்துச் சேவகஞ்செய்பவன்.
காண்டம்-அம்பு, ஆபரணச்செப்பு, ஆயுதம், ஊன்றுகோல், எல்லை, கமண்டலம், காடு, குதிரை, கூட்டம், கோல், சமயம், சரகாண்ட பாஷாணம், சிந்தில், சிலை, தாள், திரைச்சீலை, தீர்த்தம், நிலவேம்பு, நீர், நீர்க்காக்கை, நூற்கூறு பாட்டினென்று, படைக்கலம், பூந்தாள், மலை, முடிவு, வாச்சியம்.

காண்டல்-காணுதல், கைக்கிளைத்திணைத்துறைப் பெண்பாற்கூத்து பத்தினுளொன்று. அது மதப்பொழியு மாலையினையுடைய தலைவனை அழகிய நுதலினையும் மூங்கில்போன்ற தோளினையுமுடையாள் நோக்கி மெலிந்ததைக் கூறுவது, தோற்றுவித்தல், பெறுதல், வணங்கல்.

காண்டல்-வலித்தல் கைக்கிளைத்திணைத்துறைப் பெண்பாற்கூற்றுபத்தினுளொன்று. அது மேகத்தைப்பொருந்தின மலைநாடனை மடவாள் இரண்டாவதும் கையில்வளை சோர்கையாலே காணவேண்டுமென்றலை நிச்சயித்தலைக் கூறுவது.

காண்டவதகனன் - அருச்சுனன்.

காண்டவம் - காண்டாவனம்.

காண்டவானு - அம்புகளை ஆயுதமாக வுடையவன்.

காண்டவான் - வில்லாளி.

காண்டாமிருகம் - ஒருமிருகம்.

காண்டாமிருகரத்தம்-வேங்கைப்பிசின்.

காண்டாவன மெரித்தோன்-அருச்சுனன்.

காண்டாவனம் - இந்திரவனம்.

காண்டாவனன் - இந்திரன்.

காண்டாவனரி - அருச்சுனன்.

காண்டிகன்-மணியடித்துப் பூசைசெய்பவன்.

காண்டிகை } கருத்துப்பதப்பொருள் உதாரணமென்னும் மூன்றோடும் வருமுறை.
காண்டிகையுரை }

காண்டிக்கியன் - கிமிவமிசோற்பவனுகிய தருமத்துவஜன்,ஜனகமகாராஜன் பௌத்திரன், மித்துவசன்புத்திரன். இவன் தன் சிறியதந்தையாகிய கிருதத்துவசனது புத்திரனாகிய கேசித்துவசனோடு முரணிக்காடுசென்றவன்.

காண்டிபம்-அருச்சுனன்வில், சாகாண்ட பாஷாணம்.

காண்டியகாலம் - காங்கைக்காலம்.

காண்டியயம் - காங்கை.

காண்டில் - இரசதபாஷாணம்.

காண்டீபம் - அருச்சுனன்வில், தனுவிராசி, வில்.

காண்டீபன் - அருச்சுனன்.

காண்டீரம் - யானைத்திப்பிலி.

காண்டீரன் - அம்புகளை ஆயுதமாகவுடையவன்.

காண்டீவம் - காண்டீபம்.

காண்டீவன் - காண்டீபன்.

காண்டு - கூப்பிடுதூரம்.

காண்டுமதம் - வருத்தம்.

காண்டை - ஒருசெடி.

காண்பித்தல் - காட்டல்.

காண்பு - காண்டல்.

காண்வரி-ஒருவகைக்கூத்து, அது பாகைப்பொதிந்த பவளத்தைத்திறந்து ஒளியைத்தருகின்ற முத்தையொத்த நகை நலத்தைக்காட்டி வருகென வந்து வந்தபின் மனமகிழ்வுறுவன தந்து போகெனப்போதல்.

காதகம் - கொலை, பிறரைப் பீடித்தல்.

காதகன் - கொலையாளி.

காதடைத்தல் - இளைப்பு முதலியவற்றால் செவிப்புலன்கலங்கல், காதுமந்தித்தல், செவிடுபடல்.

காதட்டி - ஆதொண்டை.

காதணி - கன்னபூஷணம், குண்டலம்.

காதணிவகை - கடிப்பிணை, கம்பி, கன்னப்பூ, கன்னவதங்கம், குணுக்கு, குண்டலம்,குழை,கொட்டை, செவிமலர், தாடங்கம், தூக்கம், தொங்கல், தோடு, மஞ்சிகை, வல்லிகை, வேடம்.

காதம் - கள், காவதம், அது நாலு கூப்பிடு கொண்டதூரம், கொலை, நாற்சதுரத்துறவு.

காதம்பகம் - பாணம்.

காதம்பம் - இனிதாகப்படும் அன்னம், கானங்கோழி.

காதம்பரம்-தயிர்மேலேடு,வாத்தியம் விசேஷம்.

காதம்பரி - ஒரு சம்ஸ்கிருத நாடகம், கள், குயிற்பேடை, சரஸ்வதி, நாகணவாய்ப்புட்பேடை.

காதம்பனி - மேகவரிசை.

காதம்பிநி - மேகசமூகம்.

காதரம் } அச்சம், அமைவு,இக்கட்டும் தீவினைத்தொடர்பு, விருப்பம்.
காதரவு }

காதரன்-அச்சமுள்ளோன்.

காதரி - ஒருநதி, மஞ்சள், வேலைக்காரி.

காதர்முகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

காதலம் - ஒருமீன்.
காதலன் - அன்பன், கணவன், சிநேகிதன், தலைவன், தோழன், மகன்.
காதலி - காதலியென்னேவல், தலைவி, தோழி, மகள், மனைவி, வாழைமரம்.
காதலித்தல் - அன்புகூரல், ஆசைப்பெருக்கம், விரும்பல்.
காதலித்தோர்-ஆசையுற்றோர், இனத்தவர், சினேகிதர்.
காதலிப்பு - விருப்பம்.
காதலிற்களித்தல் - பெருந்திணைத் துறைகளுளொன்று. அது மேகம்பொருந்தின மலைநாடனுடைய மார்பிடத்தேமேவி நீங்குதலறியாத அன்பினால் மகிழ்வது.
காதல்-அன்பு,ஆசை, ஆக்கை, கௌளி முதலியவைகளின் ஒலி, ஆவல், ஒருபாடல், கொலை, கொல்லல், தறித்தல், மகன், முறித்தல், விரகம்.
காதவடி - கன்னமூலம்.
காதவம் - ஆலமரம், வான்கோழி.
காதறுதல் - பகைகொள்ளல்.
காதறுப்பான்-காதைச்சுற்றிவரும்இரண [ம்.
காதறை - காதறுந்தது, கெட்டது.
காதறைச்சி - சண்டைக்காரி.
காதற்பரத்தை - சேரிப்பரத்தை.
காதன் - கொலையாளன்.
காதன்மை - அன்பு, உருக்கம்.
காதாங்கி - பாற்சோற்றி.
காதி-ஒருமுனிவன்,ஒருவகைக்கன்மம், மிரதபாஷாணம், விசுவாமித்திரன் தந்தை.
காதிமைந்தன் - விசுவாமித்திரன்.
காதியம் - மென்று தின்னும்படியான மருந்து.
காதிலி - செவிடன்.
காதிவென்றோன் - அருகன்.
காது - ஊசி, நறுக்கு, மடக்குக்கத்தி முதலியவற்றின் துவாரப்பக்கம், காதென்னேவல், கொலை, செவி, திரி வாய்ப்பெட்டி.
காதுகன் - கொலையாளி. [தல்.
காதுகுற்றுதல்-கன்னவேதனஞ் செய்
காதுகொடுத்தல் - உற்றுக்கேட்டல்.
காதுக்குறும்பி - காதழுக்கு.
காதுதல் - கூறுசெய்தல், கொல்லல், தறித்தல்.

காதுப்பூ - கன்னப்பூ.
காதுப்பூச்சி - செவிப்பாம்பு.
காதுமடல் - காதினிதழ்.
காதுமம் - நிருத்தம்.
காதுவெட்டல்-நறுக்கின் துவாரத்தருகுவெட்டல்.
காதெழுச்சி - ஒருவகைநோய்.
காதை-கதை, கொலை, செய்தி, சொல், சொல்லல்.
காதைகரப்பு - மிறைக்கவியி னொன்று அஃது ஒரு கவிமுடியவெழுதி அதினீற்றின்மொழிக்கு முதலாமெழுத்துத் தொடங்கி யொன்றிடை யிட்டெழுதப் பிறிதோர்செய்யுளாவது.
காதோலை - தோடு, கம்மல்.
காத்தஈசுவரர்-திருவாமாத்தூரிற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
காத்தடி - காவடித்தண்டு, காவுதடி.
காத்தட்டி - ஆதொண்டை.
காத்தல்-அரசாளுதல்,அளித்தல், எதிர்பார்த்தல், காப்பாற்றல், பாதுகாத்தல்,முத்தொழிலினொன்று. அஃது காவல்செய்தல், வளர்க்குதல்.
காத்தவராயன் - ஒருதேவதை.
காத்தான் - காத்தவராயன்.
காத்தியாயனம் - உபநிடத முட்பத்திரண்டினொன்று, தருமநூல் பதினெட்டினொன்று.
காத்தியாயனன் - ஒருமுனிவன், யாஞ்ஞவற்கியன், வருரசிமுனி.
காத்தியாயனி-காஷாயவஸ்திரந் தரித்தவள், துர்க்கை, பார்வதி.
காத்தியாயனேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காத்தியாயனி - துர்க்கை.
காத்திரம் - உடல்,உறப்பு, கனம், கீரி, கூத்து, கோபம், பருமம், முக்கியம், யானையின் முன்கால்.
காத்திரவேயம் }
காத்திரவேயன் } பாம்பு.
காத்திரன் - பருத்தவன், வலியோன்.
காத்திராந்தலேபனி - வாசனை சேர்ந்த சந்தனம்.
காத்திரி - கீரி, படைக்கலம்.
காத்திருக்குதல் - வரவு பார்த்திருத்தல், வழி பார்த்திருக்குதல்.
காத்திரை - ஆயுதம்.

காத்தொட்டி } ஆதொண்டை.
காத்தோட்டி }
காந்தஅயசு - அயச்சிலை.
காந்தக்கல் - ஊசிக்காந்தம், சந்திரகாந்தம், சூரியக்காந்தம், தீக்கல்.
காந்தசத்துரு - நவசாரம், வெடியுப்பு.
காந்தபட்சி - மயில்.
காந்தபஸ்பம் } ஒரு மருந்து.
காந்தபற்பம் }
காந்தபாஷாணம் - ஒருபாஷாணம்.
காந்தப்பெட்டி - திசையறிகருவி.
காந்தமணி - காந்தக்கல்.
காந்தமண் - செம்மண்.
காந்தமலை - ஒருமலை.
காந்தமேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
காந்தம் - அழகு, ஊசிக்காந்தம், குணவலங்காரம் அஃது உலகொழுக்கிறப்பப் புகழ்ந்துசொல்வது, பதினெண்புராணத்தொன்று, பிரகாசம்,
காந்தருவசுரம் - ஒருவகைச் சுரநோய். அது சர்வாங்கமுஞ் சுருங்கல், புணர்வீனம், அற்பகுலை, கண்களில் மஞ்சள் நிறத்தோடு சலம்வடிதல், பரியாசம் பண்ணல், பாடல், தலைவலி, சடத்துவம், சர்வசந்துஸ்தானங்களு மசைசயக்கூடாமை, எழுந்தாற் சுற்றுதல், ஆலசியம், மதிப்பிரவம், கோபம், பசியில்லாமை, பெருமூச்சு, சயித்தியம், அடிக்கடிமூர்ச்சை, சர்வாங்கவீக்கம், கனவில் விந்துநஷ்டம், வெப்பம், விக்கல், அடிக்கடி நீரிறங்கலென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
காந்தருவபூதம் - ஒருவகைநோய். அது மிகுந்த ஆசாரவொழுக்கம், நீங்காத சந்தோஷம், சரீரத்திற் சுகந்தபரிமளம், அற்பவார்த்தை, பூஞ்சோலையிலும் ஆற்றுமணலிலுஞ் சிவந்த புஷ்பத்திலுமிச்சை, அடிக்கடி நகைப்பு, கேளிவிலாசம், சங்கீதம், பாடலென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
காந்தருவபுணர்ச்சி - கன்னியுந் தலைமகனும் கலியாணத்தின்முன் புணருதல்.
காந்தருவமணம் - கன்னியுந் தலைமகனும் தங்களிற் கூடுமணம்.
காந்தருவம் - இருநூற்றிருபத்து நான்கு புவனங்களி லொன்று. காந்தருவமணம்.
காந்தருவர் - கந்தருவர்.
காந்தருவவாதம் - கலைஞான மறுபத்துநான்கி லொன்று.
காந்தருவவேதம் - உபவேதத்தொன்று, அது கீதசாஸ்திரம்.
காந்தல் - உட்டணித்தல், உமி ஓலைமுதலியவற்றின் காத்தல், சினக்குறிப்பு, பல்லினாற் காந்துதல், முதிரவேதல், வெம்மையினாலுரிஞ்சுதல்.
காந்தவம் - அப்பவர்க்கம், பலகாரம்.
காந்தவிகன் - பலகாரம் சமைப்பவன்.
காந்தள் - உழிஞைத்திணைத்துறையிருபத்தெட்டனுளொன்று. அது கறுத்தகடலிடத்துச் சூரபன்மாவைக் கொன்றவனுடைய காந்தட்பூவின் மிகுதியைச் சொல்லுவது, கார்த்திகைப்பூ, குறிஞ்சிப்புறம். அது காமிகள்மடன் மாவேறுதல், சவக்காரம்.
காந்தன் - அரசன், எப்பொருட்குமிறைவன், கணவன், தலைவன், நாயகன்.
காந்தாயசம் - அயக்காந்தம்.
காந்தாரகம் - ஒருவகைக்கரும்பு.
காந்தாரபஞ்சமம் - பாலைப்பண்ணின் திறமைந்தனுளொன்று.
காந்தாரம் - இசை, இசைப்பாட்டு, ஒருபண், காடு, குறிஞ்சி யாழ்த்திறம், தேசமைம்பத்தாறினொன்று.
காந்தாரன் - யயாதிமகன், துருகியனுடைய பௌத்திர பௌத்திரன். இவனே காந்தாரதேசஸ்தாபகன், இத்தக் குலத்தவர்கள் குதிரை யேற்றத்தில் மகாசதுரார்.
காந்தாரி - ஓரலங்காரம், ஒருபண், கொடியவன், சத்தி, சாரம், சிவனார்வேம்பு, திரிதராட்டிரன்மனைவி, நாபியிற்றோன்றிச் சுரமேழுக்கு மேழு நாடியாய்க் கண்டத்துறு நரம்பு.
காந்தாரிமைந்தன் - துரியோதனன்.
காந்தாளம் - எரிச்சல், கோபம்.
காந்தாளிகம் - சின்னிமரம்.
காந்தி - அழகு, உட்டணம், ஒளி, ஓரிராகம். அது தமிழிற்பல கூறுபாடுபெற்றுப் புகழ்ச்சியினும் வார்த்தையினுமுலகிறந்த நற்பொருட் பொலிவி

னும் வரப்பாடல், காணம், காவிக்கல் கிரணம், சிலாசத்து, சூரியகாந்தி, வைடூரியம்.
காந்திகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
காந்திகை - பாணிகை.
காந்திசீகன் - பயந்தோடுவோன்.
காந்திதம் - பித்தம்.
காந்திதாயகம் - ஒருவகைமரம்.
காந்திமதி - குபேரன்பட்டணம்.
காந்திமதியம்மை - திருமூக்கீச்சரத்திற் கோயில்கொண்டிருக்குந் தேவியார், திருநெல்வேலியிற் கோயில்கொண்டிருக்கும் தேவியார்.
காந்தியதிகமேனி - காவிக்கல்.
காந்தியோனி - சிலாமாதம்.
காந்தியோன் - கருப்பூரச்சிலை.
காந்திரசம் - குங்குமம்.
காந்தினி-அக்குரூரன்தாய், சுவபற்கன் மனைவி.
காந்தீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காந்துகம் - வெண்காந்தள்.
காந்துகன் - பலகாரஞ் சமைப்பவன்.
காந்துதல்-உட்டணித்தல், எரிதல், ஒளிசெய்தல், கருகிப்போதல், காருதல், சுடல், பல்லினுற்கோதல், பிரகாசித்தல், பொறாமைகொள்ளல், மனம் வேகுதல், வெம்மையினு லுறிஞ்சுதல்.
காலந்தேலகம் - படுகாலணை.
காந்தை-நாயகி, காதலி, பெண், மனைவி.
காந்தோரகம் - ஒருவிதக் கரும்பு.
காபந்து - காவந்து.
காபடிகன்-இந்திரஜாலஞ்செய்கிறவன் சீடன்.
காபாதம் - தீநெறி.
காபாலம் - சிவனிருத்தம், ஒருமதம்.
காபாலம் - சிவன், சிர்பந்தபாஷாணம்.
காபாலி-சிவன், திருசூதாரி, பன்னொருத்திரரி லொருவன்.
காபாலிகம் - அதிமார்க்கமூன்றனுளொன்று. மூன்றாவன பாசுபதம், மகாவிரதம், காபாலிகம் என்பன. கபாலிகம்-கபாலத்தில் பிக்ஷை யேற்றுண்ணலைக் கைக்கொண் டொழுகுந்துறவினை வற்புறுத்தும். இம்மதத்திற்குக் கடவுள் காலருத்திரர். இம்மதம் நெடுங்காலத்திற்கு முன்னர் அருகிவிட்டது.
காபி - ஓரிராகம்.
காபிசம்
காபிசாயனம் } கள்.
காபிலகாலயூபம் - சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று.
காபிலம் - சாங்கியசாஸ்திரம், அது கபில முனிவராற் செய்யப்பட்டது.
காபினி - நவச்சாரம்.
காபேயம் - குரங்குக்கூட்டம்.
காபோதம் - புறாக்கூட்டம்.
காப்பரிசி - அட்சதை.
காப்பாற்றல்
காப்பாற்றுதல் } இரட்சித்தல், தற்காத்தல்.
காப்பியக்குடி - சோழநாட்டிலே சீகாழிக்கு வடபாலிலேயுள்ள ஓரூர். இங்கேயே தேவந்தியின் கணவனாகிய சாத்தன் வளர்ந்தது.
காப்பியம் - பொருட்டொடர் நிலைச்செய்யுள். அஃது பெருங்காப்பிய வுறுப்புட் சில குறைந்து வருவது.
காப்பியன் - சுக்கிரன்.
காப்பிரிசல்லாத்து - ஒருபூடு.
காப்பு - ஆடை, இரட்சாபந்தனம், இரட்சிப்பு, ஒரு பிரபந்தம், கதவு, காவல், கையணியி லொன்று, திருநீறு, நூல்களில் தெய்வவணக்கச் செய்யுள் மதில், மூங்கில், விபூதி.
காப்புக்கடவுள் - காப்பாளுன் முகத்துரைக்கப்படுங் கடவுளாகிய திருமால்.
காப்புச்சொல்லல்-காரியந் தொடங்கல் தேவவணக்கஞ் சொல்லல், படித்தநூல் நிறைவேற்றுதல், புராணுரம்பஞ் செய்தல்.
காப்புமாலை-ஒருபிரபந்தம். அஃது தெய்வங்காத்தலாக மூன்று ஐந்து எழு செய்யுளாற் பாடுவது.
காமகமனம் - காமத்தின்வழியே நடக்கிற நடக்கை.
காமகாண்டம்-காமன்வில், இன்பநூல்.
காமகாரம் - பொறாமை.
காமகேளி - புணர்ச்சி.
காமக்கவலை
காமக்காய்ச்சல் } காமநோய்.
காமக்கிழத்தி - வேசை.
காமக்கோட்டாத்தி - பார்வதி.

காமக்கோட்டம் - காஞ்சிபுரம், காமாக்ஷி தேவியார் கோயில்.
காமக்கோட்டி - பார்வதி.
காமசகம் - வசந்தகாலம்.
காமசரம் - மாமரம்.
காமசன் - மன்மதன்.
காமசாரி - காமுகன், குருவி.
காமசுதன் - அநிருத்தன்.
காமசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காமச்சுரம் - ஒருவகைநோய். அது நித்திரை, புத்தி, நுட்பம் ஆகிய இவைகளைக்கெடுத்து மோகம், எரிவு, அருசி அதி சுரமென்னு மிக்குணங்களையுண்டாக்குவது, அப்போது வாதமாத்திர மதிகரித்திருக்கும். ஆண்குறி,தொப்புளின்கீழ்த்தானம், தனங்களின் கீழ்த்தானம், புருவம், நெற்றியாகிய இவ்விடங்களி லெரிவு, சையோகத்தி லிச்சை, நாட்டியஞ்செய்ய வெண்ணம், காம்பீரம், சரீரபலம், அதிதாகம், கண்சிவப்பு, அடிக்கடி அசனத்தில் விருப்பம், புன்சிரிப்பு, நித்திராபங்கமென்னு மிக்குணங்களை யுண்டாக்கும்.
காமணி - நவச்சாரம்.
காமதகனன் - சிவன்.
காமதாலம் - குயில்.
காமதானசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
காமதேனு - தெய்வப்பசு.
காமதை, காமத்து, காமத்துகை } காமதேநு.
காமத்துப்பாலர் - தூர்த்தர்.
காமத்துப்பால்-திருவள்ளுவர் குறளில் அகப்பொருட்பால்.
காமத்துரோகி - காமங்கடிந்தோன்.
காமத்தேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
காமநாசன் - சிவன்.
காமநிகை - கட்பாவை.
காமநீர் - இரதம்.
காமநூல் - மதனநூல்.
காமநோய் - மதனநோய்.
காமந்தகம் - இராஜநீதியைக் குறித்துக் கூறும் ஒரு நூல்.
காமபாலன் - பலதேவன்.
காமபூதம் - ஒருவகைநோய். அது தானே யடித்துக்கொள்ளல், பலவிதத்தொனியாகப் பேசல், கம்மிய வார்த்தை, அடிக்கடி நாவைநீட்டல்,செபம்பண்ணல், அசைவறத் திக்குகளைப் பார்த்தல், சுகியென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
காமபோகி - குன்றி.
காமப்பயித்தியம் - காமக்கலை.
காமப்பற்று-மனத்தீக்குணம் மூன்றில் ஒன்று.
காமப்பால் - காமத்துப்பால், முலைப்பால்.
காமப்பூ - மதனகாமியப்பூ.
காமப்பேய் - காமாதுரன்.
காமமரம் - ஒருமரம்.
காமம்-அன்பு, ஆசை, இந்திரியம், உட்பகை யாறினொன்று, ஊர், காமநோய், காமப்பூ, காமமரம், கிராமம்,குடி, சடத்தியி னொன்று, சத்தவிசனத்தொன்று, தாமத குணத்தொன்று, பனை, மதனம், முக்குணத்தொன்று, விகாரமெட்டினொன்று, வீரியம்.
காமரசி - நெருஞ்சில்.
காமரம்-அகில்,அடுப்பு, அத்தகாள், ஒரு பண், ஆலமரம், இசை,இசைப்பொது, காத்தடி, சோலை, வண்டு.
காமரி - புளிநறளை.
காமரீசம் - புல்லூரி.
காமரூபி - பச்சோந்தி, வேண்டிய உருவங்கொள்பவன்.
காமரேகை - வேசை.
காமர்-அலங்காரம்,அழகு, ஆசை, ஒளி, பேரழகு.
காமலதை - ஆண்குறி.
காமலம் - காணல், வசந்தகாலம்.
காமலன் - காமுகன்.
காமவதி - மரமஞ்சள்.
காமவர்த்தனி-ஐம்பத்தோராவது மேளகர்த்தா.
காமவல்லபம் - மாமரம்.
காமவல்லபை - நிலவு.
காமவல்லி - கற்பகத்திற் படர்கொடி.
காமவவிநயம்-ஒருவகை அவிநயம். அது சுத்தமாகிய அலங்காரமுள்ள வடிவுத் தொழிலும் காரிகையை நோக்குங் கடைக்கண்ணும் பற்களும் நகையுஞ்

சந்திரனும் நிலவும்போலத் தோன்றுதலும் மலர்ந்தமுகமு மிரந்த பெருமையாகிய சொற்களுமுடையது.
காமவிகாரம் - காமநோய்.
காமவெறி - காமப்பயித்தியம்.
காமற்காய்ந்தோன் அருகன், சிவன்.
காமனன்-காமுகன், கோரிக்கையுள்ளவன்.
காமனுடல் - பேடு.
காமனுள் - இளவேனில்.
காமனை - சிறுகிழங்கு.
காமன் - திப்பிலி, மன்மதன், வண்டு.
காமன்மைத்துனன் - விநாயகன்.
காமன்றிருநாள் - காமன்பண்டிகை, மதன்விழாச் செய்யுநாள்.
காமாக்ஷி - காஞ்சிபுரத்திற் கோயில்கொண்டிருக்கும் உமாதேவியார், கலைமகளையும் மலர்மகளையும் கண்ணாகவுடைய மாதா.
காமாக்கினி - காமநோய்.
காமாங்குசம் - ஆண்குறி, நகம்.
காமாட்சிப்புல் - காவட்டம்புல்.
காமாட்டி-மண்வெட்டுவோன், மூடன், வேர்கல்லி.
காமாட்டியர் - கூலிக்காரர், நாடோடிகள்.
காமாதிதேவதை - திரயோதசி, திதி.
காமாதுரம் - காமவாசை.
காமாதுரன் - காமி.
காமாந்தகன் - காமமிக்குடையோன், சிவன்.
காமாந்தம் - குயில்.
காமாபலகை - மரக்கலப் பலகையின் ஒன்று.
காமாயு - கருடன்.
காமாயுதம் - காமபாணம்.
காமாரி - சிவன்.
காமாலை } ஒருநோய்.
காமாளை }
காமி-உவர்மண், காமதூர்த்தன், பொன்னிமிளை.
காமிகம் - சிவாகம மிருபத்தெட்டின் ஒன்று, வாஞ்சாவிரகம்.
காமித்தல் - இச்சித்தல், மோகமுறல், விரும்பல்.
காமியகம் - ஒருவனம். இதுபாண்டவர்கள் ஆரணியவாசகாலத்து வசித்தது. இது குருஜாங்கலத்தைச் சார்ந்துள்ளது.
காமியகன்மம்-பயனை விரும்பிச் செய்யுங் கிரியை.
காமியக்கல் - கோமேதகம்.
காமியதாநம் - விரும்பினதைக் கொடுத்தல்.
காமியதானம்-ஒன்றைக்குறித்ததானம்.
காமியத்தவம் - ஒருவகைத் தவம். அது இச்சிக்கப்படும் பொருளைக் கருதிச் செய்வது.
காமியமரணம் - தற்கொலை.
காமியமலம் - மும்மலத்தொன்று.
காமியம்-இச்சிக்கும்பொருள், ஒன்றை வேண்டிச்செய்யும் பூசை, கன்மமலம், வில்.
காமியன் - காமி.
காமுகப்பிரியம் - கஸ்தூரிமஞ்சள்.
காமுகம் - அசோகமரம். பூங்குள்றிக்கொடி.
காமுகர் - தூர்த்தர், நரகப்பதிவாழ்நர், நாகரீகர்.
காமுகன் - தூர்த்தன், நாகரீகன்.
காமுகி } ஆசையுள்ளவன், மோகமுடையவள்.
காமுகை }
காமுருகி - ஒத்தி, கொடியபெண்.
காமுறல் } ஆசைப்படல், மோகமுறல், விரும்பல்.
காமுறுதல் }
காமூச்சு - முக்கால்நாழிகைவழி.
காமோதகம் - காமசலம்.
காம்பவம் - சங்கோசை.
காம்பவிகன் - செம்பினால் வளையல் செய்து விற்பவன்.
காம்பளம் - கம்பளியினால் மூடிய தேர்.
காம்பன்னதோளி - திருப்பந்தணைநல்லூரிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
காம்பாய்தல் - காம்பு கின்னல்.
காம்பு - இறைகூடை, சலசூத்திரம்.
காம்பிரம் - முருக்கு.
காம்பிலி - ஒரு தேயம்.
காம்பிலியம் - பாஞ்சாலதேசத் தொருபாகம், துருபதன் தேசம்.
காம்பிலியன் - பர்மியாசுவன் மகன்.
காம்பீசவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.

காம்பீரம் } ஆழம், கெம்பீரம், முக்
காம்பீரியம் } கியம்.
காம்பு - இலை முதலியவற்றின் காம்பு, கருவிகளின் காம்பு, கைப்பிடி, பட்டுச்சீலை, பூசுணி, பூந்தாள், மலர்க்கொம்பு, மலர்த்தாள், மூங்கில்.
காம்புக்கிண்ணம் - அகப்பை.
காம்புச்சத்தகம் - ஓலை வாருகிற சிறுகத்தி.
காம்போகி - குன்றி.
காம்போசம் - ஒருமரம், தேசமைம்பத்தாறினொன்று. பதினெண்பாடையினொன்று.
காம்போசி - குதிரைவாலி.
காம்போதி - ஒருபண்.
காயகப்பிரியை-பதின்மூன்றாவது மேளகர்த்தா.
காயகம் - ஒருமருந்து, காமப்பிராந்தி, பாடுதல், மருட்டுவித்தை, மோகமயக்கு.
காயகற்பம் - சரீரத்தைப் பலப்பிக்கும் மருந்து.
காயகன் - பாடுவோன், மயக்குவோன்.
காயக்கம் - மருட்டுவித்தை.
காயங்கட்டுதல்-இரணவைத்தியஞ் செய்தல்.
காயசலம் - மூத்திரம்.
காயசன் - மன்மதன்.
காயசித்தி - காயம் மருந்துகளினாற் பலத்தல், கருப்பூரசிலாசத்து, சுண்ணம், பொன்னாங்கண்ணி.
காயசித்திக்கடியான் - காந்தம்.
காயசித்திசுண்ணம் - கருப்பூரசிலாசத்து.
கிருட்டிணுவாசம் - அரசமரம்.
கிருட்டிணி - காக்கணஞ்செடி.
கிருட்டிணை, கிருஷ்ணை - ஓர்யாறு, கடுகு, கருவட்டை, அருபதி, முந்திரிகை, வால்மிளகு.
கிருஷ்ணகர்ணமிருதம்-ஒருநூல். இது ஸ்ரீலீலாசுகாரற் செய்யப்பட்டது.
கிருஷ்ணகுட்டம் - ஒருவகை குட்டநோய். அது சர்வாங்கமுங்கறுத்தல், சருமத்தில் திமிருடன் நாற்றம் வீசுதல், நோதல், சத்தத்தாதுக்களுமுஷ்ணமாயிருத்தல், அரையிலும் புறங்காலிலுங் கொஞ்சமாகவும் சிரசிலதிகமாகவு மிரணங்காணுதல், புத்திச்சஞ்சல முறுதலென்னு மிச்குணங்களை யுண்டாக்குவது.
கிருஷ்ணஜயந்தி - ஆவணிக் கிருஷ்ணபக்ஷத்தஷ்டமி. இது கிஷ்ணன் பிறந்த தினமாதலின் விரததினமாகக் கொள்ளப்படும்.
கிருஷ்ணசர்ப்பம் - ஒருவகைக் கருநாகம்.
கிருஷ்ணசாரம் - கறுப்புமான்.

கிருஷ்ணதேவி - கிருஷ்ணாநதி.
கிருஷ்ணத்தவைபாயனன் - வேதவியாசன்.
கிருஷ்ணபாலே - ஒருவகைக்கொடி.
கிருஷ்ணபாகபலம்- பெருங்களாச் செடி.
கிருஷ்ணபேதி - கடுகுரோகிணி.
கிருஷ்ணமண்டலம் - ஒருவகைச் கண்ணோய். அது இதர வஸ்துக்களைத் தெரியவொட்டாமல் திரைபோட்டதுபோல் மறைத்தல், கறுத்தல், சிவத்தல், உப்புதல், குழிவிழுதலென்னு மிவ்வைங்குணங்களையுங் கருவிழியி லுண்டாக்குவது.
கிருஷ்ணம் - கறுப்புநிறம்.
கிருஷ்ணராயன் - ஒரு சிற்றரசன். இவன் சமூகத்தில் விகடக்கூத்தர்கள் வேளாண்மகளிரைப்போல் வேடம் பூண்டு கூத்தாடினார்கள். அப்போது தொண்டைமண்டலத்து வேளாளர்கள் நம்மைக் கிருஷ்ணராயன் அவமதித்தானென்று சினந்து அவனுயிரை மாய்த்தார்கள்.
கிருஷ்ணலோகிதம் - கறுத்த சிவப்பு.
கிருஷ்ணவிருந்தை - பாதிரிமரம்.
கிருஷ்ணவெலி - கருநிறத்தையுடைய ஒருவகை வலி. அது கடித்தால்தினந்தோறு மிரத்தவாந்தியும், மழைக்காலத்தி லதிசவிரத்தம் விழ்தலும் உண்டாகும்.
கிருஷ்ணங்கனை - நைருதன் இராஜதானி.
கிருஷ்ணவேணி - ஒருநதி.
கிருஷ்ணிகை - கறுத்த கடுகு.
கிருஷ்ணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கிருதகபடம் - வஞ்சம்.
கிருதகன் - வசுதேவன் மகன்.
கிருதகாலம் - நியமகாள்.
கிருதகிருத்தியம்-செய்யவேண்டுவதையே செய்தல்.
கிருதகிருத்தியன்-திரிகருப்தன் மகன். இவன் விரக்தனு யிறந்தவன்.
கிருதகிருமி - செய்யாலுண்டாகும்புழு.
கிருதகுளபாளித போசனம் - கிருத்திபோசனம், நெய்,சருக்கரைமுதலிய கூடிய இனிய போசனம்.
கிருதகோகேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கிருதசங்கேதம் - இணக்கம்.
கிருதசந்நிதானம் - முன்னிலை.
கிருதசாபத்திரிகை-கணவன் மறுவிவாகஞ் செய்தபின்னும் அவனோடு வாழுமனைவி.
கிருதசிரவணன்-பரசுராமன் அநுசரன்
கிருதசூடன்.உச்சிக்கை வைக்கப்பட்டவன்.
கிருதசோபம் - அலங்காரம், பிரகாசம்.
கிருதசௌசம்-விபசாரப் பெண்களைச் சுத்தஞ்செய்தல்,இதொருமதாசாரம்.
கிருததாசன் - வேலையாள்.
கிருததாரன் - விவாகஞ்செய்தோன்.
கிருதத்துயுதி-அங்கராஜபுத்திரி, சித்திரகேதன் மூத்தபாரி.
கிருதநாசனம் - நன்றியீனம்.
கிருதநிருசேனன்-பாவநிவர்த்தி செய்தோன்.
கிருதபலம் - செய்பலம்.
கிருதபுத்திகள் - ஞானிகள்.
கிருதமந்தன் - யமீநரன் மகனுகிய திருதிமந்தன்.
கிருதமாலே - மலேய பர்வதத்தி லுற்பத்தியாகும் ஒரு புண்ணியநதி.
கிருதம்-செம்முருங்கைசெய்கை, செய்யப்பட்டது,நெய்,முதல்யுகம், முன்.
கிருதயுகம் - யுகங்களுன்கினு ளொன்று. இது பதினேழிலக்ஷத் திருபத்தெண்ணுயிரம் வருஷங் கொண்ட காலவட்டம். அதருமஞ் சிறிதுமின்றித் தருமமே யோங்கி நடந்தகாலமிதுவே. அதுபற்றி இந்தயுகம்புண்ணியயுகமென்றுஞ் சத்தியயுகமென்றுங் கூறப்படும். வர்ணுச்சிரமத்துக்குரிய கன்மங்களெல்லா முறைப்படியொரு சிறிதுமிழுக்கமின்றிச் செய்யப்பட்ட யுகமாதலிற் கிருதயுகமெனப்பட்டது. இந்தயுகத்தில்தேவர், கந்தருவர், தானவர், யக்ஷர், கிந்நரர், நாகர் என்போர் யாருமில்லை.கொள்ளல், விற்றல்களில்லை. மனிதருக்கு ஒருவகை யுழைப்புக் துன்பமுமில்லை. மரங்களும், பயிர்வர்க்கங்களும் மனுஷர்மையால் நீரும், எருவும்,உழவும், காவலுங் கொள்ளாது தாமே பயன் தருவனவாயின. கினைத்தமாத்திரத்தே எல்லாப் போகங்களும் வந்துகூடும்.

பிணியும், மெலிவும், பகைவும், பெருமையும், வஞ்சமும், அச்சமும், கொடுமையும், நலிவும், பொருமையும் இந்தயுகத்திற்குரியவனல்ல. சத்தியமே அரசுபுரிந்தது. தருவே விரும்பப்படுவதாயிற்று, பரப்பிரசும் யாவர்க்கும் சாக்ஷாத்தியமாயிருந்தது. நாராயணன் சுவேதரூபியா யிருந்தான். எல்லா மாந்தருக்கு நெறியுமொன்றே, செயலுமொன்றே, மனமுமொன்றே, கடவுளுமொன்றே, மந்திரமுமொன்றே, வேதமுமொன்றே.

கிருதரன் - முகத்திடைநின்று தும்மலும், சினமும், வெம்மையும், விளைக்கும் ஒருவிதவாயு.

கிருதாரதன் - மகாநிருதிபுத்திரன்.

கிருதாலட்சணம் - நல்லிலக்கணம்.

கிருதவர்மன் - ஹிருதிகன்மகன். தேவமீடன் தம்பி. பாரதயுத்தத்தில் அசுவத்தாமனுக்குச் சகாயமா யிருந்தவன் கிருதவீரியன் தம்பி.

கிருதவீரியன் - தனிகன் புத்திரன். கார்த்த வீரியார்ச்சுனன் தந்தை.

கிருதவுஜசு }
கிருதவுஜன் } கிருதவீரியன் தம்பி.

கிருதவேசம் - அலங்கரித்தல்.

கிருவேதன் - கூலியாள்.

கிருபன் - சம்பிரன்மகன். இவன் வமிசத்தவர்கள் பிராமணராயினர்கள். கிருட்டிணன்மாமன், பலராமன் தம்பி பிஷக்கன். விதர்ப்பன் இரண்டாம் புத்திரன்.

கிருதாகிருதம் - செய்துகுறைவேலை.

கிருதாக்கினி - கிருதவீரியன் தம்பி.

கிருதாசி - ஓரரம்பை.

கிருதாசுவன் - பர்கிஞசுவன் மூத்தகுமாரன் இவன்மகன் இரண்டாம்யவனசுவன்.

கிருதாஞ்சலி - கைக்கூப்பிக் கும்பிடல்.

கிருதாந்தசனகன் - சூரியன்.

கிருதாந்தம்-இலிங், தருக்கித்து முடித்தீர்மானம்.

கிருதார்தன் - நமன். [

கிருதாயு - அரிஷ்டநேமிமகன்.

கிருதார்த்தம் - காரியசுத்தி, பேறு.

கிருதார்த்தர்-கருமமுடித்தோர், பேறுபெற்றோர், மகிழ்ச்சிபெற்றோர், விருத்தியடைந்தார்.

கிருதி - உபாதி, சந்நதமந்தன்மகன். இவன் இரணிய நாபனால் யோகமார்க்க முணர்ந்து சாமசங்கிதையைக் கீழைத்தேசங்களிற் சென்றுபதேசித்தவன், சியவனன் மகன், செய்கை நடுக்கம், வருணாசுவன் மகன், விபுமகன். [வோன்.

கிருதிகரன்-இராவணன் வேதனைசெய்

கிருது - அங்கதன் நம்பி, உன்முகன்குசால், கோமனம், செருக்கு, நெய், பிரமமானசபுத்திரருளொருவன். இவனுக்குத் தக்ஷப்பிரசாபதி மகளாகிய சந்நதியிடத்து அங்குஷ்டப்பிரமாணமாக அறுபதினாயிரம் மகாவிருடிகள் பிறந்தார்கள். இவர்கள்பெயர் வாலகில்லிய விருடிகள்.

கிருதோபகாரம் - உதவிசெய்தல்.

கிருதோபநயனன்-பூணூற்றரித்தோன்

கிருத்நிமதன் - சுத்திர விருத்தன் பௌத்திரன்சுகோத்திரன்புத்திரன் சுனகன் தந்தை. [தோல், மான்றோல்

கிருத்தி அறிவு ஒரு தேவதை கிருத்திகை

கிருத்திகாருதன் }
கிருத்திகாசூனு } முருகக்கடவுள்.

கிருத்திகை-மூன்றாம் நக்ஷத்திரமாகிய கார்த்திகை, இது ஆறு நக்ஷத்திரங்களின் கூட்டம். ஒருசமயம் அக்கினிதேவன் சப்தவிருடிகளது பாரிகளைப்பார்த்து மோகித்தான். அதுகண்ட அவன் பாரிசுவாகாதேவி தனதுநாயகன் அந்த இருஷிகள் பாரியரால்சபிக்கப்படுவானென்றஞ்சி அருந்ததியொழிந்த ஏனைய ஆறுபாரியாருடைய உருவந்தாங்கி ஆறுபாரியாகி நாயகனைக் கூடினாள். இவ்வாறுவரே கிருத்திகையாயினார். இவர்களால் வளர்க்கப்பட்டமையின் குமாரக்கடவுள் கார்த்திகேய ரெனப்படுவர். அயன சலனத்தால் ஒவ்வொருகாலத்திற் கொவ்வொரு நக்ஷத்திரம்முதலாகவரும், திருஞானசம்பந்தமூர்த்திகள்காலத்தில் இதுமுதல்நக்ஷத்திரமாக எண்ணப்பட்டது.

கிருத்திதம் - சேர்க்கப்பட்ட புஷ்பம்.

கிருத்திமம்-கடமை, செய்கை, தோல், பூதகணம், பொய், மாயை, வஞ்சனை, வைதீகநடை.

கிருத்தியகருத்தா - கருமாதிபன்.
கிருத்தியப்பிழை - செய்கைப்பிழை.
கிருத்தியம்-கடமை, கிரியைமுறை, சடங்கு, தொழில், நடக்கை, நித்தியகருமம், பிதிர்கடன்.
கிருத்தியை-ஒரு தேவதை.
கிருத்திரசிவாதம்-ஒருவகைவாதநோய். அது எப்பொழுதும் நடையின்றி யிருத்தல், பகல்நித்திரை, பதினான்குவேகத்தை மறித்தலாகிய செய்கைகளாலும், கடற்கரை, மாமிசம், மாப்பண்டம், தயிர், பால், வெல்லம், கள், புண்ணாக்கு, மதுரவஸ்து, மந்தவஸ்து, இலவணவஸ்து, அதிக சீதளவஸ்து, எண்ணெய்வஸ்து, கந்தமூலபலாதியாகிய இவைகளை மிதமின்றிப்புசித்தலினாலும் பிறந்து தொடைகளின்நரம்பை அனுசரித்துப் பாதவிரல்முதலடி முதுகுவரைக்கு மிருக்கின்றநரம்புகளின் றுவாரத்திற்சேர்ந்துகொள்ளுவது. அதனால் தேகத்திற்குத்தல், கனத்தல், நோவு, வேதனையென்னு மிக்குணங்க ளுண்டாகும்.
கிருத்திரமம் - பொய், வஞ்சனை.
கிருத்திரமவிஷம்-நாபி முதலிய விஷப்பூண்டுகளையாவது பாம்பு முதலிய பிராணிகளின் விஷங்களையாவது மற்றொரு வஸ்துவிற் கலந்து கொடுப்பதாற் பிறக்கும் விஷம்.
கிருத்திரமபுத்திரன்-வளர்ப்புப் பிள்ளை.
கிருத்திரிமம் - பொய், வஞ்சனை.
கிருத்திவாசன் - சிவபெருமான்.
கிருத்திவாசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கிருத்துவம் - அசாத்தியம், குரூரம், செய்தல், செருக்கு.
கிருபணத்துவம் - உலோபத்துவம்.
கிருபணம் - உலோபம்.
கிருபணன் - உலோபன்.
கிருபன்-ஒரு வில்லாசிரியன், குருகுலத்தவரின் பஞ்சாசாரிகளிலொருவன்.
கிருபாகடாட்சம்-கிருபைப்பார்வை.
கிருபாகணம் - வாள்.
கிருபாகரன் - கிருபையுடையோன்.
கிருபாசனம்-அருள்செய்யும்படி யிருக்கு மாசனம்.
கிருபாசாரியன் - கிருபன்.
கிருபாணம் - கிருபாகணம்.
கிருபாணி, கிருபாணிகை } கத்தி.
கிருபாணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கிருபாநாயகி-திருக்கருவூரிலே கோயில்கொண்டிருக்குந் தேவியார் பெயர்.
கிருபாமூர்த்தி - கடவுள், கிருபாரூபி, கிருபையாலவதரித்தோன்.
கிருபாலு, கிருபாளு } கிருபையுடையோன்.
கிருபி - சத்தியதிருதி புத்திரி, துரோணன் மனைவி.
கிருபிபுத்திரன் - அசுவத்தாமன்.
கிருபீடஜன்மன்-உலகத்திலே பிறந்தவன், சந்திரன், அக்கினி.
கிருபீடபாலம் - சமுத்திரம்.
கிருபீடயோனி-சந்திரன், அக்கினி.
கிருபேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கிருபை - அருள், இரக்கம்.
கிருபைகூர்தல் - கருணைகொண்டிருத் [தல்.
கிருபைக்கண்-அருட்பார்வை.
கிருமி - அரிபுண், உசீநரன், நான்காம் புத்திரன், புழு.
கிருமிக்கிரந்தி - ஒருநோய்.
கிருமிக்குன்றம் - வாலுளுவை.
கிருமிசத்து - ஒருமருந்து.
கிருமிசத்துரு - புரசம்விரை.
கிருமிஜம்மை - அகில்.
கிருமிசிரோரோகம் - ஒருவகைத் தலைநோய். அது சங்கிரணபோசனத்தினால் திரிதோஷத்தை அதிகரிக்கச் செய்து சிரசிலிருக்கு மிரத்தமாமிசத்தைக் கரைத்துக் கிருமிகளைப் பிறப்பிப்பது. அக்கிருமி உதிரத்தைப்பானம்பண்ணும்போது அச்சிரசிற்கோரமான வேதனையுண்டாகும். அதனால் மண்டைவறனல், மதர்த்தல், வீக்கம், பிளந்து போவதுபோலிருத்தல், மிகவு மெரிதல், துர்க்கந்தம், நாசியிற் சலம்வடிதல், தாடையிற் சிவந்த நிறத்தோடு நமைச்சலுண்டாகிப் பின்வெளுத்த வீக்கமாயெழும்புதல், காதிரைச்சல், சுரம், இருமல், துர்ப்பலம், மனக்கலக்க முதலிய குணங்களுண்டாகும்.

கிருமிசத்தி - மட்டி.
கிருமிச்சுரம் - ஒருவகைச்சுரம்.
கிருமிச்சூலை - கிருமிநோய்.
கிருமிச்சைவம் - சுறையான்புற்று.
கிருமிநாசம்-ஓமம், குராசானியோமம், பங்கம்பாலை, பலாசம்விரை, பேய்ப்பீர்க்கு, வேப்பீர்க்கு.
கிருமிநாசி - கிலவாகை.
கிருமிபித்தம்-ஒருவகைப் பித்தநோய். அது மலத்திற்கிருமிவிழுதல், வயிற்றைப் புரட்டிப் புரட்டி வலித்தல், சர்வாங்கத்திலுந்தினவு, நோவு, மலமுஞ்சலமும் வறளல், கைகால் வாழைத் தண்டைப்போற் சில்லிட்டுக்கனத்துக் கடுக்கல், தேகத்திலொருவித நாற்றம்வீசுத லென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கிருமிமார்புரோகம்-ஒருவகைநோய். அது சிலேட்டுமாதிக்க வஸ்துக்களினாலுங் கருணை சேம்பு முதலிய கிழங்குகளினாலும், ஆமாசயத்தானத்திற் பெரும்பூ நாகத்தைப்போலும் நீர்ப்பாம்பைப்போலும் பெரிதாகவுஞ் சிறிதாகவும் பூச்சிக ளுற்பத்தியாகிச் சாதாரணமாகப் பூமியிற் சஞ்சரிப்பதுபோ லுள்ளே குடலிலொட்டிப் பின்னிக்கொண்டு இருதயத்தானத்திற்கு மேலுமெதிர்த் தேறுவதால் மார்பில் அடித்தலோடு அதிரல், வீக்கம், அதிக கமைச்சல், ஒருவேளைமார்புதெறித்து விழுவதுபோலும் வாளா லறுபடுவதுபோலு மிருத்தல், கண்கள் கறுப்பாகத் தோற்றல், சிலவேளை யிருட்டிக்கொள்ளல், வாயிற்கோழை விழுதலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கிருடியம் - மாமிசம்.
கிருமியரி - வாய்விளங்கம்.
கிருமிலாபுரம்-ஒருபட்டணம். இது கிருமியால் கிருமிக்கப்பட்டது.
கிருமிவாந்தி - ஒருவகை வாந்திநோய். அது வாதாதி திரிதோஷங்களினாற் கிருமிகளுற்பத்தியாகி நெளிவதால் வயிற்றுநோய், சரீரநடுக்கம் மார்பில் அடிப்பதோடிருந்த நோவென்னு மிக்குணங்களுண்டாகி வாந்திவரும். அவ்வாந்தியிற் கிருமிகளும் விழும்.

கிருமுகம் - கமுகு.
கிருமேளகம் - ஒட்டகம்.
கிரேதம் - கிரேதாயுகம்.
கிரேதா - விலைகொண்டவன்.
கிரேதாயுகம் } கிரேதை } முதல்யுகம். அது பதினேழுலட்சத்து இருபத்தெண்ணாயிரம் வருஷம் கொண்டதாகும்.
கிரேஸ்தன் } கிரேத்தன் } கிரகஸ்தன், சங்கைமான் நாணயவான்.
கிரேந்தி - கச்சோலம்.
கிரேனிடல் - அஞ்சியொடுங்கல்.
கிரேனிடுதல் - அஞ்சுதல்.
கிரேன்கிரேனெனல்-அச்சக்குறிப்பு.
கிரௌஞ்சன் - மைநாகன்புத்திரன் இவன் அரசிருந்தமலை கிரௌஞ்சமெனப்படும். இவனை அம்மலையோடு சுப்பிரமணியக்கடவுள் பிளந்தமையின் கிரௌஞ்சதாரக னெனப்படுவர்.
கிலஷ்டன் - தரித்திரம் பிடித்தவன்.
கிலம் - அழிவு, சிறுமை.
கிலாசம் - தேமல்.
கிலாசி - தேமலுடையோன்.
கிலி - பயம்.
கிலிகம்பரை - அலுசிலும்பல், கலாதி.
கிலிகை - சிற்றொலி.
கிலிகோலம் - சீர்கேடு.
கிலிஞ்சகம் - பாய்.
கிலிஷ்டவர்த்தமம் - ஒருவகை நோய். அது கபத்தினாற் பிறந்து இமைச்சந்துகளிற் சிவந்த வீக்கத்தை யுண்டாக்குவது. அவ்வீக்கங் கட்டிகளாகத் தோன்றித் தினவையு முபத்திரவத்தையுங் கொடுக்கும்.
கிலிமண்டல் - அஞ்சுதல்.
கிலியம்பறை - கிலிகோலம்.
கிலீசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கிலீபம் - பேடு.
கிலீபலிங்கம் - அலிக்குறி.
கிலீபன் - பேடி.
கிலுகிலுத்தல் } கிலுகிலுப்பு } ஒலிக்குறிப்பு.
கிலுகிலுப்பை-ஒருசெடி, ஒருவிளையாட்டுக்கருவி.
கிலுகிலெனல் - ஒலிக்குறிப்பு, குரங்குபண்ணுமொலி.

கிலுக்குதல் - கிலுக்கச்செய்தல்.
கிலுக்கி - கிலுகிலுப்பை.
கிலுங்குதல் - கிலுகிலுத்தல்.
கிலுசிதம் - வறுமை, தரித்திரம்.
கிலுட்டம் - கிறைதல்.
கிலுத்தம் - மணிக்கட்டு.
கிலுமொலுத்தல் } ஒலிக்குறிப்பு.
கிலுமொலெனல் }
கிலேசம் - அச்சம், கவலை, துன்பம், நோய், வருத்தம்.
கிலேசித்தல் - விசாரப்படல்.
கிலேசு - கீழ்.
கிலேதகசிலேட்டுமம் - ஆமாசயத்தானத்திலிருந்துகொண்டு உண்ணப்பட்ட அன்னபானாதிகளை மிருதுவாக்கும் ஒருவகைச் சிலேட்டுமம்.
கிலேதகம் - ஈரம்.
கில்லம் - கழுத்து.
கிழக்கதை - பழங்கதை, பூராயக்கதை, வீண்கதை.
கிழக்கன் }
கிழக்கா } ஒருவகை மீன்.
கிழக்கி }
கிழக்கு - கீழ்த்திசை.
கிழக்குவெளித்தல் - கீழ்த்திசை வெளித்துவிடுதல்.
கிழக்கோலம் - கிழவடிவு.
கிழங்கன் } ஒருவித மீன்.
கிழங்கான் }
கிழங்கு - கந்தம்.
கிழங்குக்கொடி - ஒருவகைப்பயிர்க்கொடி.
கிழடன் - கிழவன்.
கிழடு - முதிர்வயதுள்ளது.
கிழண்டுதல் - வயதாற்றளர்தல்.
கிழத்தனம் - கிழத்தன்மை.
கிழத்தி - உரியவள், தலைவி, மருதத்தலைவி, மனைவி.
கிழத்து - ஒருமீன்.
கிழமை - உரிமை, கடமை, குணம், சம்பந்தம், மாட்சிமை, மூப்பு, வாரம்.
கிழமைவட்டம் - ஏழுவாரம்.
கிழமைவிரதம் - வாரவிரதம்.
கிழம் - கிழத்தன்மை.
கிழலை - சுற்றுப்புறம், திசை, மரக்கலத்தின் சாய்வுப் பக்கம்.
கிழவர் - உரியோர், மூப்புடையோர்.
கிழவன் - உரியோன், கணவன், தலைவன், பாணிநாள், மருதநிலத்தலைவன், மூப்புடையோன்.
கிழவி - உரியவள், தலைவி, தாய்க்கிழங்கு, முருங்கை, மூப்புடையாள்.
கிழவு - கிழவுத்தன்மை.
கிழாத்தி - ஒருபுள், ஒருமீன்.
கிழாநெல்லி - ஒருபூடு, சஞ்சீவி.
கிழார் - இறைகூடை, உரியோர், சலசூத்திரம், தோட்டம்.
கிழாலை - களர்நிலம்.
கிழான் - உரியோன், கைக்கிளையிசையின் சுவையுடைமை, சூரியன், தயிர், வேளாளர் பட்டப்பெயர்.
கிழி - எழுதுபடம், கிழிந்ததுண்டு, கிழியென்னேவல், கீழை, கீற்று, நிதி, பொதி, பொட்டணி.
கிழிகடை - அறவிளப்பமானது.
கிழிக்கட்டு - சிறுபொதி, பொட்டணி.
கிழிதல் - பிளத்தல், பீறுதல், வீணுதல்.
கிழித்தல் - கிழிக்குதல், கீறல்.
கிழிப்பு - கிழிக்கை, பிளவு, வெடிப்பு.
கிழிமுறி - கிழித்த துண்டுச்சீலை, செல்லாச்சீட்டு.
கிழியல் - அறவிளப்பமானது, கிழிந்த சீலை, இழிவு, பயனற்றவன்.
கிழிவு - காரியக்கேடு, கிழிதல், கீற்று, வாய்க்காமை.
கிளக்கல் - சொல்லல்.
கிளத்தல் - எழுப்பல், சொல்லுதல்.
கிளத்தி - நாமகள்.
கிளத்து - சொல்.
கிளப்பம் - எழுப்பம், வளர்ச்சி.
கிளப்பல் - உயர்த்தல், எழுப்பல், கிண்டுதல், மிதற்றல், முயற்றல்.
கிளப்பு - கிளப்பென்னேவல், கிளம்பச்செய்தல், சொல், மொழிகை.
கிளம்பல் - அதிகரித்தல், எழும்பல், வளருதல்.
கிளருதல் - கிளர்தல்.
கிளர் - ஒளி, கிளரென்னேவல், பூந்தாது.
கிளர்ச்சி - இறுமாப்பு, எழுச்சி, நிறைவு, மேலோங்குகை, விருத்தி.
கிளர்தல் - உயர்தல், எழுதல், கிண்டல், நிறைதல், பிரகாசித்தல், வளர்தல்.
கிளர்த்தல் - எழுப்பல், ஒளிசெய்தல்.
கிளர்வரி - கடுகின்று திருவருக்குஞ்சந்து சொல்லக்கேட்டு நிற்பது.

கிளர்வு-எழுச்சி, பெருக்கம், வளர்ச்சி.
கிளவரி-தண்ணீர்விட்டான்கிழங்கு.
கிளவி-அகப்பொருட்டுறை, சொல்.
கிளறல் } கலத்தல், கிண்டுதல், கிள
கிளறுதல் } ப்புதல், வெளியாக்கல்.
கிளா - களா, கிளாய், கோதி.
கிளாலை - களாலை.
கிளி - ஒருமீன், கிள்ளை.
கிளிகடிகருவி } ஒருவிதக்கருவி.
கிளிகடிகோல் }
கிளிகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கிளிச்சிறை - நால்வகைப் பொன்னில் ஒன்று.
கிளிஞ்சிலாறு - கிளியாறு.
கிளிஞ்சில் - ஏறல்.
கிளிதம் - புசிக்கப்பட்ட அன்னம்.
கிளித்தட்டு - ஒரு விளையாட்டு.
கிளிப்பிள்ளை - கிளி.
கிளிப்பூச்சி - வெட்டுக்கிளி.
கிளிமீன் - ஒருவகைமீன்.
கிளிமூக்கான் - காற்றாழை.
கிளிமூக்குக்கிழங்கு - ஆகாசகருடன் கிழங்கு.
கிளிமூக்கெழுத்தாணி - ஒருவகையெழுத்தாணி.
கிளியாறு-புதுச்சேரிக்கு தெற்கிலுள்ள ஒருநதி.
கிளிவெட்டுப்பாக்கு - இடையிடையே தோலுரித்தபாக்கு.
கிளுகிளுத்தல் } ஒலிக்குறிப்பு.
கிளுகிளெனல் }
கிளுவை - ஒருபறவை, ஒருமரம், ஒரு மீன்.
கிளை - உறவு-ஒளி,ஒருபண்,கிளையென் னேவல், கூட்டம், கைக்கிளையென் னுமிசை, தளிர், மங்கை, மரக்கிளை, மூங்கில், வீணையினோர் நரம்பு.[தல்.
கிளைகூட்டல் - ஆங்கைகள் கூச்சலிடு
கிளைக்கதை - ஒன்றிலிரு[illegible] பலகதை தோன்றுங்கதை.
கிளைஞர் உறவோர், தோழர், மருதநில மாக்கள்.
கிளைதல்-கழுவல்,களைதல்,தெரித்தல்.
கிளைத்தல் - கிண்டல், கிளைவைத்தல், கிறைதல், நெருங்கல், பெருகல்.
கிளைப்பெயர் - சுற்றப்பெயர்.

கிளைமை - உறவு, சினேகம்.
கிளையார் - சிநேகர்.
கிளைவழி - கொடிவழி, வமிசம்.
கிளைவிடுதல் } கப்புவைத்தல்.
கிளைவைத்தல் }
கிள்ளல் - கிள்ளுதல்.
கிள்ளாக்கு } உண்டியபற்சீட்டு.
கிள்ளாங்கை }
கிள்ளாப்பிறாண்டு-அலட்சியம், ஒரு விளையாட்டு, கிள்ளையெடுத்தல்.
கிள்ளி-சோழவம்சத்தார், சோழன்.
கிள்ளிக்காட்டுதல் - அருட்டி அறிவித் தல். [கை.
கிள்ளு - கிள்ளப்பட்டதுண்டு, துணிக்
கிள்ளுக்கீரையா யெண்ணல்-அற்பமா யெண்ணல்.
கிள்ளுதல் - துள்ளுதல்.
கிள்ளுப்பிறாண்டு - ஒரு விளையாட்டு.
கிள்ளை-கருங்கிளி, கிளி, குதிரை, பத் திரிசாதி.
கிள்ளைவிடுதூது-ஒரு பிரபந்தம்.
கிறுக்கி - அருமை, ஒறுப்பு.
கிறுணி - ஒருவியாதி.
கிறுப்பிறாண்டு - ஒரு விளையாட்டு.
கிறும்புதல் - மெல்லச்செதுக்கல்.
கிறுய் - பச்சைநிறக்களிமண்.
கிறுவல் } ஒலிக்குறிப்பு.
கிறுவுதல் }
கிறி - பொய், வழி.
கிறிசு - குற்றுவான்.
கிறிச்சான்-ஒலிக்காட்டுமோர்கருவி.
கிறிச்சிடல் } ஒலிக்குறிப்பு.
கிறிச்சிடுதல் }
கிறீச்சனம் - ஒருநோய்.
கிறீச்சுக்கிறீச்செனல்-ஒலிக்குறிப்பு.
கிறீஸ்துவம் - கிறிஸ்துமார்க்கம்.
கிறு-கீழ்காலவிடை, கீலச்சொல்.
கிறுகிறுத்தல் - அஞ்சுதல், தலைசுழற்று தல், விரைவுக்குறிப்பு.
கிறுகிறுப்பு - செருக்கு, தலைசுழற்சி.
கிறுகிறெனல்-சுழலல்விரைவுக்குறிப்பு
கிறுக்கல் - எழுதல், கீறித்தள்ளல்.
கிறுக்கன் - எழுதல், கீறித்தள்ளல்.
கிறுக்கு-அகம்பிரமம், எழுத்து, பைத் தியம்.
கிறுக்குதல் - கிறுக்கல்.
கிறுக்குப்பிடித்தல்-பைத்தியமாதல்

கிறுங்கல் } அசைதல்.
கிறுங்குதல் }
கிறுசன் - குங்குமப்பூ, மஞ்சள்.
கிறுது - கிருதி, குறும்பு.
கிறுதுவேதன் - பீர்க்கு.
கிறுத்துவம் - அகில், மருத்துவம்.
கிர்ப்பு - அடிமைத்தனம், கட்டுப்பாடு, செய்கை.
கிர்புறல் } எழுதுதல், எழும்புதல், கட்டுப்படுதல்.
கிர்புறுதல் }
கிற்றல் - கட்டுப்படுத்தல், செய்தல்.
கிளி - பீடை.
கிளிபிடித்தல் - நோய்பிடித்தல்.
கிளை - கவசம், வினா.
கின்று-நிகழ்காலவிடை, நிலைச்சொல்.
கின்னம்-கிளி,உபத்திரவம், கீழ்மை, துக்கம்.
கின்னரச்சுரை - ஒருசுரை.
கின்னரம்-ஆந்தை, கின்னரப்பட்சி,நீர்வாழ்பறவை, வீணை, கிளி.
கின்னரர்-தேவருள் ஒரு பாலார். இவர் அசுவமுகமும் நரசரீரமுமுடையவராவர்.
கின்னரர்பிரான் - குபேரன்.
கின்னரன் - புலகன் புத்திரன்.
கின்னரி - ஆந்தை, வீணை.
கின்னரேசன் - குபேரன்.
கின்னரேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கின்னி - மழைக்கிளி.
கின்னிக்கோழி - ஒருகோழி.

கீ

கீ - ஓரெழுத்து, கிளிக்குரல்.
கீகசம்-எலும்பு, மிகச்சிறிய புழுச்சாதி.
கீக்கீயெனல்-கிளிக்குரல்காட்டல், பறவை பார்ப்பின் குரல்.
கீசகசித்து - வீமன்.
கீசகம் - குரங்கு, தலைச்சிரா, மூங்கில்.
கீசகர் - விராடன்பாரியாகிய சுதேஷ்ணையோடுபிறந்தநூற்றுவர். இவருள் மூத்த கீசகன் பாண்டவர் விராடதேயத்திருந்த காலத்தில் துரோபதையை யிழுக்க அதுகண்ட வீமன் கீசகர் நூற்றுவரையுங்கொன்றான்.
கீசகன் - ஓரரசன்.
கீசகாராதி } வீமன்.
கீசகாரி }
கீசபர்ணம் } நாயுருவி.
கீசபர்ணி }
கீசம் - குரங்கு, குருவி, திசையெட்டுக்குட்பட்ட பிரதேசம், நிருவாணம்.
கீசம்பறை - ஒழுங்கீனம்.
கீசரன் - சரக்கொன்றை.
கீசவன்னி - கீசபர்ணம்.
கீசறை } இதிளையசேடு.
கீசறைநாடகம் }
கீசன் - சூரியன், போர்வல்லோன்.
கீசா - பொய்.
கீச்சான் - ஒப்புள், ஒருமீன், ஒருவிளையாட்டு, குழந்தை.
கீச்சி - சிறுமணிக்கோவை, பாசிமணி.
கீச்சிடல் } கத்துதல்.
கீச்சிடுதல் }
கீச்சு - கீச்சழுகை, புள்ளொலி.
கீச்சுக்கிட்டம் - இருப்புக்கறள்.
கீச்சுகீச்சுத்தம்பலம்-ஒரு விளையாட்டு.
கீச்சுக்கீச்செனல் - ஒலிக்குறிப்பு.
கீச்சுக்குரல் - குருவிக் குரல்போன்றகுரல், மெல்லியகுரல்.
கீச்சுத்தாரா - ஒருவகைத்தாரா.
கீடக்கிரம் - கெந்தகம்.
கீடதந்தம்-விஷப்பற்களையுடைய ஒருவகைச்செந்து. அது கடித்தால்மலைக்கோங்குப் பூவைப்போல் மஞ்சள் நிறமாகவும் நாலுவித நிறங்களாகவும் கடித்தவிடந் தோற்றும்.
கீடப்பகை - வாய்விளங்கம்.
கீடமணி - மின்மினிப்பூச்சி.
கீடயாரி - சிறுபுள்ளடிப்பூடு.
கீடம் - கோற்புழு, புழு, வண்டு.
கீடராஜம் - குலாலகீடகம்.
கீணம் } குறைபாடு, கேடு, சிதைவு.
க்ஷீணம் }
கீணர் } அற்பர், எளியர், கீழோர்.
க்ஷீணர் }
கீண்டல் } கிண்டுதல், கிருத்தல், கிளைத்தல்.
கீண்டுதல் }
கீதசாத்திரம் - சங்கீதசாத்திரம்.
கீதஞானம் - நால்வகைக் கேள்வியில் ஒன்று.

கீதம் - இசை, இசைப்பாட்டு, மூங்கில், மூன்றாம் வேதம், வண்டு.
கீதகம் - ஊமத்தை.
கீதவாத்தியம் - இசைக்கருவி.
கீதவேதம் - சாமவேதம்.
கீதாங்கம்-வாச்சியக்கூறிலு ளொன்று. அது கீதத்திற்கு வாசிப்பது.
கீதாரி - இடையன்.
கீதி-கருங்காலி, கீதம், கீதம்பாடுவோன்.
கீதை-பாட்டு, பூர்வசரித்திர மெடுத்துக் காட்டல். இஃது அவதூதகீதை, ரிபுகீதை, உத்திரகீதை, சிவகீதை, பகவற்கீதை. பிரமகீதை யென்னப் பலவகைப்படும்.
கீயக்கணக்கு - வடமொழியின் கூட் டெழுத்துக்கள்.
கிரணம் - விழுங்கல்.
கீரங்கையார் - கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.
கீரம் - கருங்கிளி, கிளி, பால்.
கீரவாணி - இருபத்தேழாவது மேள கர்த்தா.
கீரன்-மதுரைச்சங்கப் புலவரி னொருவனான நக்கீரன்.
கீரி - கள்ளி, நகுலம். கீரிப்பிள்ளை.
கீரிப்பல் - சிறுகூர்ப்பல்.
கீரிப்பாம்பு - ஒருபாம்பு, வயிற்றிலுள்ள ஒருவகைப்புழு.
கீரிப்பிள்ளை - கீரி.
கீரிப்பூச்சி - கீரிப்பாம்பு.
கீரிப்பூடு - ஒருபூடு.
கீரிமரம் - ஒருமரம்.
கீரியுள்ளல் - ஒருள்ளல்.
கீரை - இலைக்கறிப்பொது.
கீரைக்காய் - வெள்ளரிக்காய்.
கீரைக்குத்தண்ணீரிறைத்தல் - குழந் தைகளின் கால்கைகளைச்சேர்த்துப் பிடித்துத் தொங்கவிட்டு ஊசலாட் டும் ஒரு விளையாட்டு.
கீரைநார்ப்பட்டு - ஒரு பட்டுச்சீலை.
கீரைப்பாம்பு } வயிற்றிலுண்டாகிற
கீரைப்பூச்சி } பூச்சி.
கீரோதகம் - க்ஷீரம்.
கீரோமரோ - ஒலிக்குறிப்பு.
கீர் - ஒலிக்குறிப்பு-வார்த்தை, சொல்.
கீர்க்கீரெனல் - உபயவொலிக்குறிப்பு.
கீர்த்தனம் - தோத்திரம், துதி, புகழ்.
கீர்த்தனேசுவரம்-சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
கீர்த்தனை - தோத்திரம், துதி, புகழ்.
கீர்த்தித்தல் - புகழ்தல்.
கீர்த்திபூஷணன்-இடைச்சங்ககாலத்தி றுதிக்கண் அரசுசெய்த பாண்டியன் இவன் அதுல கீர்த்தி பாண்டியனு டைய மகன் இப்பாண்டியன் காலத் திலேயே ஒரு பிரளயம் வந்து அ நேகநாடுகளை உருத்தெரியாமலழித் து அந்நாடுகளிலுள்ள சராசரங்களை யெல்லாம் கடல்வாய்ப்படுத்தி நிர் மூலம்பண்ணுவதாயிற்று. இதுவே த்வாபர கலியுகசந்தியிலுண்டாகிய பிரளயம். இப்பிரளயத்திலேயே கு மரியாற்றையும் அதனைச்சார்ந்த நா ற்பத்தொன்பது நாடுகளையும் கடல் கரைகடந்து பொங்கியெழுந்து தன் வயிற்றிலடக்கி யழித்தது. இவ்வுண் மை திருவிளையாடற் செய்யுட்களா லும், சிலப்பதிகாரவுரையாலும், நச் சினார்க்கினியர் உரையாலுங் காணப் படும்.
கீர்த்திப்பிரதாபம் - கீர்த்தி பிரபலியம், மிகுகீர்த்தி.
கீர்த்திமதி-அனுகன்பாரி, சகுனிமகள்.
கீர்த்திமாலினி-சந்திராங்கதன், மகள்.
கீர்த்திமான் - புகழுடையோன்.
கீர்த்திரதன் - பிரதிரதகன்மகன்.
கீர்த்திராதன் - மகாப்பிரகன் மகன்.
கீர்மகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கீர்வாணம் - சமஸ்கிருத பாஷையின் [ஒருபகுதி.
கீலக-சொற்பம், கீல், ஒட்டுதல், சாவி, நாற்பத்தெட்டாவது வருடம்.
கீலகம் - அளுப்பு, ஆணி, தந்திரம், பொருத்து.
கீலகவெட்டை கீலகவருஷத்துப் பஞ்சம், மிகுகாங்கை.
கீலகன் - கொழு முதலியவைகளினுற் பந்திக்கப்பட்டவன்.
கீலகை - கீழ்.
கீலம்-ஆணி, கிழிவு, கீல், கீற்று, சுவாலை, பிசின், பொல்லம், வெட்டு.
கீலல் - கீலுதல்.
கீலாபலன் - அரக்கன்.
கீலாலம் - உதிரம், காடி, நீர்.

கீழூதல் - கிண்டுதல், கிழித்தல், பிளத்தல்.

கீல்-தவின்கில், கிசில், கிலெனேவல், சந்து, நுண்மை, பிணையல், பொருத்து.

கிழடி-மதுரைக்குக்கிழக்கே சுமார் ஏழு நாழிகைவழித் தூரத்துள்ள ஒரு சிவத்தலம். இத்தலத்திலுள்ள சிவலிங்கத்தை அர்ச்சுனலிங்க மென்றும் ஆதியில் அர்ச்சுனனுற் பூசிக்கப்பட்டகாரணத்தாலிப்பெயர் வந்ததெனவுங்கூறுவர்.

கீழண்டை-கிழக்குப்புறம்.

கிழறுத்தல்-சத்துருவுக்கஞ்சிக் கீழறையாற்போதல், சுரங்கமறுத்தல்.

கீழறை - கீழ்வீடு, மூஞ்சு.

கீழாதல் - தளர்தல், தாழ்வடைதல்.

கீழாநெல்லி - கீழ்க்காய்நெல்லி.

கீழாறு - கீழூற்று.

கீழாநெடுத்தல் - தோன்றுமற் சிதைதல்.

கீழுடை-கௌபீனத்தோ டிசைந்துள்ள ஒருடை.

கீழுதடு - கீழ்தாம்.

கீழுலகம் }
கீழுலகு } நரகம், பாதலம்.

கீழேபோதல்-வளர்ச்சி படிப்பு முதலியன வரவரக்குறைதல்.

கீழைத்திசை - கீழ்த்திசை.

கீழைப்புறம் - கிழக்குப்புறம்.

கீழோங்கி - கரையானிலோர்வகை.

கீழோர் - கீழ்மக்கள், சண்டாளர்.

கீழ்-ஆதி, இடம், ஈனம், ஏழனுருபு, கடிவாளம், கீழெனேவல், கிழக்கு, கீழிடம், கீழோர், கோவணத்தோடு சேர்த்து நெய்தவரைநூண், பள்ளம், பூமி, மறதி.

கீழ்காய்நெல்லி - ஒருபூடு.

கீழ்காற்று - கொண்டல்.

கீழ்மை-ஈனக்குலத்தார்பகுதி, கிழக்கு, புறம், பதிவு

கீழ்கணக்கு - கீழ்வாயெண்.

கீழ்கண்-கண்ணின் கீழ்ப்பக்கம், கீழ்ப்பார்வை.

கீழ்க்கதி-கீழ்நோக்கினசெலவு, தாழ்ந்தபதம், நரகம்.

கீழ்க்கதுவாயளபெடை -கடையயலொழிந்த மற்றெல்லாவற்றின் கண்ணுமளபெடைவரத்தொடுப்பது.

கீழ்க்கதுவாயிணைபு-முதலைய லொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணியைபு வரத்தொடுப்பது.

கீழ்கதுவாயெதுகை-கடையயற் சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணுமெதுகைவரத்தொடுப்பது.

கீழ்க்கதுவாய்முரண்-கடையயற் சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணுமெதுகைவரத்தொடுப்பது.

கீழ்க்கதுவாய்மோனை-கடையயற் சீர்க்கணன்றி யொழிந்த சீர்க்கண்மோனைவரத் தொடுப்பது.

கீழ்க்குரல் - கீழோசை, மந்தவொலி.

கீழ்சாதி }
கீழ்ச்சாதி } ஈனசாதி, தாழ்ந்தசாதி.

கீழ்தாம் - இழிந்ததாம்.

கீழ்தல்-அழித்தல் கிழித்தல், பிளத்தல்.

கீழ்த்திசை - கிழக்கு.

கீழ்த்திசைப்பாலன் - இந்திரன்.

கீழ்நோக்கம் - கீழ்ப்பார்வை.

கீழ்நோக்கி - நேர்வாளம்.

கீழ்நோக்கு - கீழ்நோக்கம்.

கீழ்நோக்குதல் - கீழேபார்த்தல், கீழேபோதல்.

கீழ்படிவு - அமைவு, கீழ்ப்பணிவு,

கீழ்பால் - கிழக்கு.

கீழ்பால்விதேகம் - நவகண்டத்தொன்று.

கீழ்பூமி - பாதலம்.

கீழ்படிதல் - அடங்கிநடத்தல்.

கீழ்ப்படுதல் அடங்குதல், இழிவுபடல்.

கீழ்ப்படுத்துதல் - அடக்குதல், ஈனப்படுத்தல், தாழ்வுபடுத்தல்.

கீழ்ப்பயிர் - பெரும்பயிருக்கு ணிற்குஞ் சிறுபயிர்.

கீழ்ப்பாடு - அடக்கம், கீழ்ப்பக்கம்.

கீழ்ப்பறை-கீழறை, கீழிருக்கும்பாறை.

கீழ்ப்பிள்ளை-முதுமரங்களின் கீழ்நாட்டுக்தெங்கு முதலியவற்றின் கன்று.

கீழ்ப்பிறை - மெய்யெழுத்துக்களோடு கூடியவாகாரவுயிர் நெட்டெழுத்தைக்காட்ட அம்மெய்யெழுத்தின் பின்னிடப்படுங்குறி.

கீழ்ப்புறம் - கீழ்ப்பக்கம்.

கீழ்ப்போக்கிப்பேசுதல்-தூஷணம்பேசுதல்.

கீழ்மகன் - ஈனன், சனி.

கீழ்மக்கள் - சண்டாளர்.

கீழ்மடி - அடிமடி.

கீழ்மடை - கடைமடை.
கீழ்மாரி - அடிவானத்திற் கருகிக்கொண்டு பெய்யுமழை.
கீழ்முகம் - கீழ்நோக்குமுகம்.
கீழ்மேலாதல் - தலைகீழாதல், தலைதடுமாற்றமாதல்.
கீழ்மை - ஈனம், தாழ்மை.
கீழ்வயிறு - அடிவயிறு.
கீழ்வாடை - வாடைக்கொண்டல்.
கீழ்வாய் - சிற்றெண், தாடி.
கீழ்வாரி - கீழ்மாரி.
கீழ்விதேகம் - கீழ்பால்விதேகம்.
கீழ்விலங்கு - மெய்யெழுத்துக்களோடு கூடிய வுகரவுயிர்க் குற்றெழுத்தைக் காட்ட அம்மெய்யெழுத்தின் கீழிடப்படுங்குறி.
கீழ்விழுதல் - காரியத்துக்காகத் தாழ்தல்.
கீழ்வீடு - கீழ்கட்டுமனை.
கீளல் - கிழித்தல்.
கீளி - ஒரு சிறுமீன்.
கீளுதல் - கிண்டல், கிழித்தல்.
கீறல் - எழுதல், கிழித்தல், கீறுதல், பொன்முதலிய வுரைத்தல்.
கீறு - அடையாளம் எழுத்து, கீற்று தென்னோலை அல்லது பனங்கிழங்கின் பாதிபிளவு, வரி.
கீறுதல் - கிறுக்குதல், குறிப்புக்காட்டுதல், தேய்த்தல், பிளக்குதல்.
கீற்றடித்தல் - கயிறடித்தல்.
கீற்றன் - ஒருபுடவை.
கீற்று - அரதனக்குற்றம், கிடுகு, கீறல், பிளவு, வரி.
கீற்றுமதி - மூன்றாம்பிறைச்சந்திரன்.
கீனம் - அபாவம், இழிவு, குறைபாடு.
கீனர் - அற்பர்.
கீனன் - குலமில்லான், குறைவானவன்.
கீன்றல் - கிழித்தல்.

கு

கு - இருதிணைப்பாலொருமைத்தன்மைவினைவிகுதி (உ-ம்) உண்கு, இன்மைக்கும் எதிர்மறைக்கும் வருமோருபசர்க்கம், ஓரெழுத்து, குற்றம், சாரியை (உ-ம்) வருகுதி, சிறுமை, தடை, தொனி, நான்காமுருபு, நிந்தை, பண்புப்பெயர் விகுதி (உ-ம்) நன்கு, பாவம்பிரவினைவிகுதி (உ-ம்) போக்குபூமி.
குகம் - அங்கிகரித்தல், அணிதல், கதியுள்ளகுதிரை குகை, குருத்துவம், நட்பம், மலைக்குகை, மறைவு.
குகரம் - ஓரெழுத்து, குடவறை, மலைக்குகை.
குகலிதம் - ஒலி, குயில், குரல்.
குகவிமானம் - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருக்கச்சியிலுள்ள விமானம்.
குகனன் - எலி, பாம்பு.
குகன் - இராமர்வனவாசஞ்செய்யப்போகும்பொழுது சிநேகம்பூண்ட ஒரு செம்படவர் தலைவன். குமரன், குரு சிருங்கிபேரபுரத்துக்குப் பிரபுவாகிய ஒரு கிராதராஜன்.
குகியகர் - இரகசியத்தை வெளியிடாதவர்கள், குபேரனுடைய நவநிதிகளைக் காப்பவர்கள்.
குகிலம் - பருவதம்.
குகு - அமாவாசை, குய்யம் பற்றியிருக்கும் நரம்பு, கூகையொலி.
குகுதன் - தசநாடியிலொன்று.
குகுதேவி - பிரமபாரியருளொருவர்.
குகுரம் - ஒருதேசம்.
குகுரன் - அந்தகன்மகன், நாய்.
குகுலா - கடுகுரோகிணி, தேனீ.
குகூகண்டம், குகூரம் } குயில்.
குகூபாலன் - ஆதிகூர்மன்.
குகூமுகம் - குயில்.
குகூனவர்த்தமம் - ஒருவகை நோய். அது சிசுக்களுக்குக் கபத்தினாலும், பித்தத்தினாலும் இரத்தத்தினாலும் பிறந்து கண்களில் வீக்கம், சிவப்பு, குத்து, நீர்க்கம்மலோடு பார்ப்பதற்குப் பிரயாசை, காது, கண், மூக்காகிய இவைகளைத் தேய்த்துக்கொள்ளுகை என்னு முக்குணங்களை யுண்டாக்குவது.
குகை - அளை, சமாதியறை, பஞ்சலோகங்களை யுருக்கும்பாத்திரம், மலைமுழை, முனிவர் வாசம்.

குசைக்காமன் - கன்னன்.
குலைச்சி - புற்றுஞ்சோறு.
குசைப்புடம் - ஒருவகைப்புடம்.
குசைமனோதத்தி - சொன்னபேறி.
குக்கல் - இருமல், குக்கன்.
குக்கன் - நாய்.
குக்கி } இக்ஷுவாகுமகன், வயிறு விகு
குக்ஷி } க்ஷிதந்தை.
குக்கிலம் - அதிவிடயம்.
குக்கில் - குங்கிலியம், செம்போத்து.
குக்குடசருப்பம் - பறவைநாகம்.
குக்குடச்சூட்டு - கோழித் தலைக்கந்தம், கோழிப்புடம்.
குக்குடதரன் } முருகவேள்.
குக்குடத்துவசன் }
குக்குடப்புடம் - கோழிப்புடம்.
குக்குடமண்டபம் - முத்திமண்டபம்.
குக்குடம் - கோழி.
குக்குடாதிவடகம் - ஒருமருந்து.
குக்குடி - இலவமரம், பெட்டைக்கோழி.
குக்குதல் - இருமுதல், குந்துதல்.
குக்குரம் - கோடகசாலை.
குக்குரன் - நாய்.
குக்குலி - செம்போத்து.
குக்குலிகுத்தல் - செம்போத்து கூவுதல்.
குக்குலு - குங்கிலியம்.
குக்குறுப்பான் } ஒருவகைக் குருவி.
குக்குறுவான் }
குங்கல் - குறைதல்.
குங்கிலிகம் - குங்கிலியம், வாலுளுவை.
குங்கிலியக்கலைநாயனார் } அறுபத்து
குங்கிலியக்கலையர் }
மூன்று நாயன்மார்களு ளொருவர். இவர் திருக்கடவூரிலே பிராமணகுலத் தவதரித்துச் சுவாமிக்குக் குங்கிலியத் தூபமிடுதலையே பெரும்பணியாகக்கொண்டு தம்மிடத்துள்ள வெல்லாம் அதன்பொருட்டுச் செலவு செய்து வறுமையுற்றவர் உணவுக்கு நெல்வாங்கிவரக் கொண்டுபோனதாலியை ஒருபொதி குங்கிலிய மெதிரேவரக்கண்டு அத்தாலியைகொடுத்து அதனை வாங்கிப்போய் கோயிலிலேவைத்துத் தூபமிட்டுக்கொண்டு நின்று தமது மனைவிமக்கள் பட்டினியை மறந்துவிட அவ்வுறுதிகண்டு சிவபிரான் அவர் வீடெல்லாம் நெல் முதலிய நிதிகளால் நிறையச்செய்யப்பெற்றவர்.
குங்கிலியம் - குக்குலியம்.
குங்குதல் - குறைதல்.
குங்குமக்காவி - செங்காவி.
குங்குமச்சம்பா - ஒருவகைநெல்.
குங்குமபாஷாணம் - அஞ்சற்குளச்சி.
குங்குமபாண்டியன் - சுரதமார பாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
குங்குமப்பூ - ஒருசரக்கு.
குங்குமம் - ஒருமரம், குங்குமநிறம், குங்குமப்பூ, செஞ்சாந்து.
குங்குமவர்ணக்கல் - மஞ்சட்கல்.
குங்குமவர்ணி - அரிதாரம், மஞ்சட்கல்.
குங்குமவர்ணிச்சி - தாளகம்.
குங்குமவலரி - செவ்வலரி.
குங்குமேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
குங்குலியக்கலைநாயனார் } அறுபான்மும்மை
குங்குலியக்கலையர் }
நாயன்மாருள் ஒருவர்.
குங்குலியம் - குக்குலு.
குங்குலு - குங்கிலியம்.
குசக்கணக்கு - வழுவானகணக்கு.
குசக்கலம் - ஓடு, மட்கலம், கப்பரை.
குசக்கிரந்திமணி - தருப்பை, முடிச்சு.
குசதீர்த்தம் - நூற்றெட்டுத் திருப்பதிகளொன்றாகிய திருவெள்ளறையென்னுந் தலத்திலுள்ள ஒருபுண்ணிய தீர்த்தம்.
குசஸ்தலி - ரைவத தருக்கத்திலுள்ள ஒருபட்டணம். இது மதுராபுரத்தை ஜராசந்தன் எரியூட்டிய பின்னர்க் கிருஷ்ணனுக்கு ராஜதானியா யிருந்தது. இது விந்தியகிரி முகத்திலேயுள்ளது.
குசத்தனம் - மூடத்தனம், அறிவற்றசெய்கை.
குசத்தி - ஓடு, குசப்பெண், பூகீறு, பூவமூலை.
குசத்திகிரி - குலாலசக்கரம்.
குசத்துவஜன் - ஜனகன் தம்பி, தசரதன் சம்பந்தி, பரதசத்துருக்கரின்மாமன்.
குசநாபன் - குசன்மகன். இவன் புத்திரிகள் நூறுபேரும்வாயுசாபத்தாற்பெண்மை யிழந்தார்கள். பிரமதத்தன் என்னுமோர் இருடி இவர்களை மணத்திற் பெற்றுத் தமது தபோபலத்

தால் அவர்களுக்கு அக்குப்ஜத்து வத்தைப் போக்கினர்.
குசந்தனம் - செஞ்சந்தனம்.
குசபலம் - மாதுளைமரம்.
குசப்பிரியம் - பவளம்.
குசப்புத்தி - மடமை, அறிவீனம்.
குசமசக்கு - பொய், வீண்மயக்கு.
குசமணி - தண்டசக்கிரம்.
குசம்-தருப்பைப்புல், நீர், மரப்பொது, முலை, வெறும்புறங்கூறல்.
குசம்பன்-தாரகயுத்தத்தில் வருணனாற்கொல்லப்பட்ட இராக்கதன், வத்சந்திரனாலே கொல்லப்பட்ட அரசன்.
குசரம் - பிறருடைய தோஷத்தைச் சொல்லுவோன்.
குசலக்காரன் - தந்திரக்காரன், மந்திரவித்தைக்காரன், வஞ்சகன், பொய்யன்.
குசலப்புத்தி-தந்திரப்புத்தி.
குசலம்-சாமர்த்தியம், சுகம், தந்திரம், மந்திரவித்தை, மிக்ககல்வி.
குசலர் - அறிஞர், மிகவல்லோர்.
குசலவர் - இராமன் மக்கள்.
குசலவித்தை - மந்திரவித்தை.
குசலவேதனை-இன்பமான உணர்ச்சி.
குசலாகுசலவேதனை-இன்பமும் துன்பமுமான உணர்ச்சி.
குசலீசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.
குசலை - தடை, கட்டு.
குசவர் - குயவர்.
குசவாரம் - செவ்வாய்க்கிழமை.
குசனை - தடை, கட்டு.
குசன் } இராமன்மக்களி லொருவன்
குஜன் } செவ்வாய்.
குசாக்கிரபுத்தி-நுட்பமான அறிவு,அறிநுண்ணியபுத்தி.
குசாக்கிரம் - தருப்பைநுனி.
குசாக்கிரன்-பிருகத்திரதன்மகன், ஜராசந்தன் தம்பி.
குசாங்குலியம் - பௌத்திரம்.
குசாட்சம் - குரங்கு.
குசாம்பன்-குசன்மகன் இவன் மந்திரன் சாதி.
குசாலிங்கனம்-ஒருவகையாலிங்கனம்.
குசால்-சந்தோஷம், சமானம், மனோற்சாகம், வேடிக்கை.
குசாவதி-குசன் ராஜதானி. இது உத்தரகோசலத்துள்ளது.
குசிகன் - விசுவாமித்திரன் பாட்டன் றந்தை, பலாகாசுவன் மகன்.
குசிருதம் - பொல்லாங்கு.
குசிரேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
குசினி - சிறியது, சிறுபயிர்.
குசிலவன் - மைத்திரேயன் தந்தை.
குசிலன் - திட்டன், போக்கிரி.
குசு - அதோவாயு.
குசுகுசுத்தல் - இரகசியம் பேசுதல்.
குசுகுசுப்பு - இரகசியம்.
குசுகுசெனல் - இரகசிய ஒலிக்குறிப்பு.
குசுமபுரம் - பாடலிபுரம்.
குசுமம் - காயா, பூ.
குசுமாகரம் - பூந்தோட்டம், வேனிற்காலம்.
குசுமாசவம் - பொல்லாங்கு.
குசுமேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
குசுமேஷுன் - மன்மதன், அநங்கன்.
குசும்பம் - ஒருபூ, ஒருமரம்.
குசும்பன் - உபரிசரவசுமகன்.
குசும்பா-ஒருபானம்,ஒருபுடவை, செந்நிருக்கம்பூ, வெண்மைகலந்தசிவப்பு.
குசும்பை - ஒருவிதமரம்.
குசும்பைமலர்மணி - கோவாங்கப்பதமராகம்.
குசுலம் - அஸ்வம், குதிரை.
குசேசயகரன் - சூரியன்.
குசேசயம் - தாமரைப்பூ.
குசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
குசேலன் - கிருஷ்ணன் சிநேகனாகிய ஓர் ந்தணன்.
குசை-கடிவாளம்,குதிரைகட்டுங்கயிறு, குதிரையின் பிடர்மயிர், தருப்பை.
குசைத்தீவு - சத்ததீவிலொன்று.
குசைப்புல் - தருப்பைப்புல்.
குசையன் - வீரவேகி.
குசோதகம் - தருப்பைநீர்.
குசோத்தியம் - தந்திரம், பரிகாசம்.
குச்சத்தினபாதி - சிறுபுள்ளடி.
குச்சம் - ஒருவகையலங்காரத்தூக்கு,குன்றி, கொத்து, நாணற்புல், நூ

முதலியவற்றின்கொத்து, நெற்குஞ்சம், பற்பாடகம், வெறும்புறங்கூறல்.
குச்சரம் - ஒருதேயம்.
குச்சரர் - குச்சலியர்.
குச்சரி - ஒருபண்.
குச்சரியர்
குச்சலியர் } குச்சரர்.
குச்சி - கூர்ச்சு, மயிர்ச்சிகைப்பூட்டு.
குச்சிதம் - குற்சிதம்.
குச்சிலியர் - குச்சரர்.
குச்சில் - சிறுகூரைவீடு, சிறுகுடில்.
குச்சு-அடைப்பு,குஞ்சம்,குடில்,குற்றி, கூர், சிறுகம்பு, சிற்றில், நுதி, பாவாற்றி, மயிர் வேர் முதலிய முடிச்சு.
குச்சுக்காரி - வேசி, விபசாரி.
குச்சுச்சார்த்துதல்-விக்கிரகங்களி னழுக்கெடுத்தல்.
குச்சுப்புல்-அழுக்கெடுக்கக் கட்டியபுல், ஒருவகைப்புல்.
குச்சுவாங்குதல்-இரத்தினங்களை யொப்பஞ்செய்தல்.
குச்சை - வெளிய்யகம்.
குஞ்சம்-ஈயோட்டி, குச்சு, குச்சுப்புல், குறள், குறுணியிலெட்டிலோர் பங்கு, குன்றிக்கொடி, கூன், கொத்து, கோட்சொல்லல், சிதாங்கபாஷாணம்,தந்தம், நாழியென்னுமளவை, நூற்றிருபதிழை தொடுத்திருக்கப்பட்டது,புளிநறளை, பூங்கொத்து, மருள் வீசுங்குஞ்சம்.
குஞ்சரக்கன்று - யானைக்குட்டி.
குஞ்சரக்கோடு - யானைக்கொம்பு.
குஞ்சரம்-உச்சிதம், கருங்குவளைமருள், யானை.
குஞ்சரன் - ஒருவானரன், அஞ்சனை தந்தை, அனுமான் பாட்டன்.
குஞ்சராசனம் - அரசமரம்.
குஞ்சராராதி - சரபம், சிங்கம்.
குஞ்சரி - பெண்யானை.
குஞ்சனம் - வளைவு.
குஞ்சன்-குள்ளன், குட்டையன், குறளன்.
குஞ்சாயி - குஞ்சியாயி.
குஞ்சி-ஆண்மயிர், குஞ்சியென்னேவல், குடுமி, குன்றிக்கொடி, சிறியதாய், சிற்றப்பன், பறவைக்குஞ்சு, மயிர்ப்பொது.
குஞ்சிக்கடகம் - சிறுகடகம்.
குஞ்சிச்சடை - சிறுசடை.
குஞ்சிதகிருத்தம் - ஒருகாறூக்கியாடல்.
குஞ்சிதம்-ஒரு காற்றூக்கிநிற்றல், படங்குந்திநிற்றல், வளைவு.
குஞ்சிதாதனம்-காற்பெரு விரலையூன்றிநிற்பது.
குஞ்சித்தல் - படங்குந்திநிற்றல்.
குஞ்சிப்பெட்டி - சிறுகடகம்.
குஞ்சியப்பன்-சிறியபிதா, சிற்றப்பன்.
குஞ்சியாச்சி
குஞ்சியாயி } சிறியதாய்.
குஞ்சிரிப்பு - குறுநகை.
குஞ்சு-அணில் முதலியவற்றின்பிள்ளை ஆண்குறி, எலி, பறவைக்குஞ்சு.
குஞ்சுக்கடகம் - குஞ்சிக்கடகம்.
குஞ்சுபொறித்தல்-குஞ்சுபிறப்பித்தல்.
குஞ்சுரம் - குன்றி.
குஞ்சுறை - பறவைக்கூடு,
குடகம்-ஒருமலை, தேசமைம்பத்தாறில் ஒன்று மேற்கு.
குடகரம் - உத்தாமணி.
குடகவரை - காவிரிதோன்றுமலை.
குடகன் - சேரன்.
குடகு - ஒருதேசம்.
குடகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
குடகோளார்த்தம் - பச்சிமகண்டம்.
குடாகடம் - வளைவு.
குடக்கால் - குடத்தண்டு.
குடக்கி - வளைவானது.
குடக்கியன் - வளைவானவன்.
குடக்கினி - கருங்காலி.
குடக்கு-மேற்கு.
குடக்குழி - நீர்க்குண்டு.
குடக்கூத்து - விநோதக்கூத்தாறினுள் ஒன்று.
குடக்கூலி - குடிக்கூலி, வாடகை.
குடக்கோ - சேரன்.
குடக்கோடுவான் - சூரியன்.
குடக்கோன் - சேரன்.
குடங்கட்டுதல்-குடம்போற்றிரட்டிவிடுதல்.
குடங்கரை - தண்ணீர்க்குடம் வைக்குமிடம்.
குடங்கர்-குடம், குடிசை, கும்பவிராசி.
குடங்கல்
குடங்குதல் } வளைவு.

குடங்கை - உள்ளங்கை.
குடசப்பாலை - கறிப்பாலை, கொடிப்பாலை, வெட்பாலை.
குடசம்-மலைமல்லிகை, வெட்பாலை.
குடச்செவி - கும்பகன்னம்.
குடஞ்சுட்டு - பசப்பொது.
குடதிசை - மேற்குத்திசை.
குடத்தி - ஒருமிருகம், முல்லைநிலப்பெண்.
குடத்திமர் - இடைச்சியர்.
குடநாடு - மேல்நாடு.
குடநாடுதிருப்புலியூர் - மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
குடநாதன் - சேரன்.
குடந்தம் - குடம், கும்பகோணம் நிரட்சிகால்விரன் முடக்கிப் பெருவிரனிறுத்தி நெஞ்சிடை வைத்துநிற்றல்.
குடந்தை - கும்பகோணம்.
குடபலை - மணத்தக்காளி.
குடபன் - ஒரு மஹாருஷி.
குடப்பம் - இருப்பை.
குடப்பாறு - ஒருகுடம்.
குடப்பாலை - ஒருமரம்.
குடமணம் - கருஞ்சீரகம்.
குடமண் - வெண்மணல்.
குடமலை-மேற்றிசைக் கண்ணுள்ள ஓர் மலை. அது சையகிரியெனவும்படும்.
குடமல்லிகை - ஒருவகை மல்லிகை.
குடமாடல் - மாயோனாடல்,
குடமாடுகூத்தர்-நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய அரிமேய விண்ணகரிற் கோயில்கொண்டவிட்டுணு.
குடமுருட்டி-காவிரிநதியின் ஒருகிளை.
குடமுருட்டிநதி-ஒருநதி, இது நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய உறையூரிலுள்ளது.
குடமுழா-ஒருவாத்தியம், ஒருமுழவு.
குடமூக்கு - கும்பகோணம்.
குடமூதுதல் - குடத்தினுள்ளூதி ஒலி பிறப்பித்தல்.
குடம்-ஊர்ப்பொது, கும்பம், கும்பவிராசி, கைகொட்டிக்குவித்தல், கொடுந்தமிழ் நாட்டிலொன்று, சதுரக்கள்ளி, சருக்கரை, திரட்சி, பசு, பட்டினம், பூசம், மருதநிலத்தூர், மாயோனாடல்.
குடம்பை-உடம்பு, நீர், நிலை, பறவைக்கூடு, முட்டை.

குடம்வைத்தல் - ஒரு விளையாட்டு.
குடாம் - மத்தநத்தி.
குடாஜம் - ஒருவகைப்பூரான்.
குடாரி - குடாரி, கோடாலி.
குடர் - குடல்.
குடலண்டம் - ஒருவகை அண்டவியாதி, அது அண்டமானது வீக்கமில்லாமற் பருத்துச் சிலவேளைகளிலதிக வேதனையைச் செய்வது.
குடலண்டவிருத்தி - ஒருவகை அண்டவியாதி. அது வாதாதிக்க வுணவுகளையருந்துதல், அதிகசீதளவாவியில் தினமும் ஸ்நானஞ்செய்வது மல்லாமற்குதித்தல், பதினன்குவேகத்தையுமடக்கல், யுத்தஞ்செய்தல், மிகுசுமை எடுத்தல், வெகு நடைநடத்தல், மேடுபள்ளத் தானத்திற் படுத்துப்புரளல், எழும்பிஎழும்பிக்குதித்தல், யானைமுதலியவாகனங்களிலேறி அதிவிரைவாகச் செல்லுதலாகிய இச்செய்கைகளினூற் குடலசைந்து கலங்கி கலங்க. அதிலிருந்தவாயு கலங்க முன்னிருந்ததினு மிரட்டிப்பாகிப் பலத்துக்கொண்டு குடலை அவ்விடத்தைவிட்டுமதோமுகமாகமுகச்செய்து தொடைக் கவட்டுகளிலிறங்கி அவ்விடங்களில் வீக்கத்தைப் பிறப்பிப்பதோடு பீசக்குழிக்குள் வந்து வந்து மோதுவதுபோல் மோதிவிருவருப்பான நோயையுண்டாக்குவது.
குடலேறுதல்-குடல்பிசகிமேலிடுதல்.
குடலேற்றம் - குடலேறுதல்.
குடலை-தொக்கட்டி, பூக்கூடை முதலியன, பொத்தி.
குடலைப்பூச்சி - ஒருவகைப்பூச்சி.
குடல் - குடர்.
குடல்திருகுதல் - குடர்ப்பிசகுதல்.
குடல்வலி - ஒருவிதநோய்.
குடல்வாதம் - ஒருவகைநோய்.
குடல்விருத்தி-ஒருவகை நோய். அது தனது சுபாவமார்க்க மடைபடும்படியெழுந்த ஒரு வாயுவானது அதோமுக மார்க்கமாய் அண்டங்களுக்குள் சஞ்சரித்து அவ்விடத்தில் வீக்கத்தையுங் குலையையும் பிறப்பித்துப் பின்பு நாபியின் நரம்புவழியாய்ச்சென்று ஆண்குறியிலனுசரித்துஅதிலி

ருக்கும் நரம்புகளுக்கு மண்டத்தி லிருக்கும் நரம்புகளுக்கு முபத்திர வத்தைச் செய்வது.
குடவப்பருவதம் - ஒருமலை.
குடவம் - பித்தளை.
குடவர் - கோக்குவர், இடையர்.
குடவல் - வளைதல்.
குடவளப்பம் - இருப்பை.
குடவறை - குகை, சிற்றறை.
குடவன்-ஒருகொட்டையுள்ளது, கோட்டம் கோணலான வுருவுள்ளது, பித்தளை.
குடவிளக்கு - திருமணத்தீபம்.
குடவு-குகை, குடவென்னேவல்,குமாரனுடல், வளைவு.
குடவுண்ணி - ஒரு உண்ணி.
குடவுதல் - வளைதல்.
குடவுளுந்தன்-ஒரு புலவன். [த்தாணி.
குடவெழுத்தாணி-குடங்கட்டிய வெழு
குடற்கொழுப்பு - கெய்ப்பு.
குடற்பற்றுப்பிஞ்சு - இளம்பிஞ்சு.
குடற்பிடுங்கி - அருசி.
குடற்பிரிவு - குடற்பிசகு.
குடற்புறை - குடற்றுவாரம்.
குடற்பை - குடற்போர்வை.
குடற்போர்வைத்தோற்றம் - நால்வகைத்தோற்றத்தி லொன்று. அஃது தோற்காதுள்ளன.
குடா - குடைவு, கோணம், மூலை.
குடாக்கடல் - மூலைவிழுந்தகடல்.
குடாக்கை - வயலின்மூலை.
குடாசகன் - கோட்காரன், வஞ்சகன்.
குடாசம் - ஏய்ப்பு, கபடம், கோள், துர்ப்போதனை.
குடாசல் - தந்திரஞ்செய்யல், தந்திரம்.
குடாசாரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.
குடாசுதல் - தந்திரம்.
குடாது - மேற்கிலுள்ளது.
குடாங்கம் - சர்க்கரைப்பொங்கல்.
குடாபாகம் - சங்கீதத்தி னோர்சுவை, செய்யுட் சுவையி லொன்று.
குடாப்பு - கூடு.
குடாரம் - கோடாலி, தயிர்கடைதறி, தயிர்கடைதாழி.
குடாரி - கோடாலி, திப்பிலி, யானைத்தோட்டி.
குடாரு - தயிர்கடைதாழி.
குடாரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
குடாத்தகோளம் - பூமியின் மேற்குப்பாதியுண்டை.
குடாவடி - கரடி.
குடாவு - குடா.
குடான் - செம்முள்ளி.
குடி - உடம்பு, ஊர்ப்பொது, குடியானவன், குடியென்னேவல்,குலம்,கோத்திரம், சமுசாரம், நெற்றிப்புருவம், பட்டினம், மருதநிலத்தூர், மனைவி, வீடு.
குடிகாரன் - குடியன், சுராபானி.
குடிகெடுத்தல் - குடிகளை நட்டம்படுத் [தல்.
குடிகேடன் - துட்டன்.
குடிகேடி - விபசாரி, துட்டை.
குடிகேடு - குடியழிவு.
குடிகை - ஏலரிசி.
குடிகொள்ளல் } வசமாயிருத்தல்.
குடிகொள்ளுதல }
குடிக்காடு - ஊர்ப்பொது, மருதநிலத் [தூர்.
குடிக்கூலி - வாடகை.
குடிசரம் - நீர்ப்பன்றி.
குடிசனம் - அரசாட்சிக்குள் ளடங்கிய சனம்.
குடிசெயல்வகை - தன் குடும்பத்தை யுயர்த்தும் வகை.
குடிசை - சிறுவீடு, குடில்.
குடிஞை-ஆறு, கூகை,சிற்றில்,பதி,பறவைப்பொது, மருதநிலத்தூர், வீடு, பேராந்தை.
குடித்தல் - பருகுதல்.
குடித்தனக்காரன்-இல்லாச்சிரமி,பயிரிடுவோன்.
குடித்தனப்படுதல்-விவாகம் பண்ணல்.
குடித்தனம் - இல்வாழ்க்கை.
குடிநாசம் - குடியழிவு.
குடிநிலம் - குடியிருக்கத்தக்கநிலம்.
குடிநிலை-காஞ்சைத் திணைத்துறை பதின்மூன்றனு ளொன்று. அது மண் செறிந்த பூமியிடத்து பழமையும் தறுகண்மையு முட்கொண்டு பிறரறியும் குடியின் வரலாற்றினைச் சொல்லுவது.
குடிநீர் - ஒருவகைக்கஷாயம்.
குடிபடை - குடிசனம்.

குடிபுகல், குடிபுகுதல் - கிரகப்பிரவேசம், புதுவீட்டிற்சேர்தல்.

குடிபோதல்-குடிபுகுதல், குடியெழும்பல்.

குடிப்பழுது - வசை.

குடிப்பிறப்பு-ஒழுக்கமுடைய குடியிற் பிறத்தல்.

குடிப்பு - பானம்.

குடிப்பெண்-மேற் குலப்பெண், குலஸ்திரீ.

குடிப்பெயர் - குலத்தால்வந்தபெயர்.

குடிமகன்-அம்பட்டன், மூக்குலத்தோர்க்கு மேவல்செய்வோன்.

குடிமக்கள் - பணிசெய்யும் பதினெண் வகைச் சாதியார். அவர் இலைவாணிகன், உப்புவாணிகன், எண்ணெய் வாணிகன், ஓச்சன், கற்றச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோயிற் குடியான், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன் என்பவர்.

குடிமதிப்பு குடிக்கணக்கு, குடியிறை.

குடிமார்க்கம்-முறைப்படி விவாகம் முடித்திருத்தல்.

குடியரசு - குடியாட்சி.

குடியர் - கள்முதலிய குடிப்போர்.

குடியறிதல் - குடிகெடுதல்.

குடியழித்தல் - குடிகெடுத்தல்.

குடியழிவு - குடிநாசம்.

குடியன் - குடிகாரன்.

குடியாட்சி-தன்குடும்பத்தை நடத்தல்.

குடியாட்டம் - குடிவாழ்க்கை.

குடியானவர் - பள்ளிகள், குடிசனம்.

குடியியல்பு - குடிமுறை.

குடியிருத்தல் - குடியாயிருத்தல், குடிவைத்தல்.

குடியிருப்பு - குடிநிலம், குறிச்சி.

குடியிறங்கல், குடியிறக்குதல் - மறுதேசத்திற் சனங்கள் வந்து குடியேறுதல்.

குடியிறை - குடிவீதம் வைத்தவரி.

குடியெழுப்புதல் - குடிகலைத்தல்.

குடியெழும்புதல்-இருந்தவீட்டை விட்டுப் போகுதல்.

குடியேறல், குடியேறுதல் - சனங்கள் குடியாய்வந்து சேர்ந்திருத்தல்.

குடியேற்றம்-நகுரூர், குடியேறுந்தன்மை

குடியேற்றல், குடியேற்றுதல் - குடியிருக்கச் செய்தல்.

குடியோட்டிப்பூண்டு - குருக்கு.

குடிரம் - காரை.

குடிலகதி - வளைந்துபோதல்.

குடிலச்சி - கருவண்டு.

குடிலம் - ஆகாயம், குராமரம், சடை, வஞ்சகம், வட்டம், வளைவு.

குடிலை - பிரணவம்.

குடிலைப்பொருள் - பிரணவத்தினுட் பொருள்.

குடில் - ஆகாயம், குடிசை, சிற்றில்.

குடிவருதல் - குடிபுகுதல்.

குடிவாங்கல், குடிவாங்குதல் - குடியெழும்பிப் போதல்.

குடிவாழ்க்கை - இல்வாழ்க்கை, மருதநிலத்தார்.

குடிவெறி - மதுபானவஸ்து.

குடிவைத்தல்-குடியிருத்தல், வாழ்வித்தல்.

குடிசகம் - கழுதை.

குடிசகன் - ஒருபதி, துன்மார்க்கன்.

குடு - கள்.

குடுகு - குடுக்கை.

குடுகுடா, குடுகுடி - கஞ்சாக்குடுக்கை.

குடுகுடு - ஒலிக்குறிப்பு.

குடுகுடுகிழவன்-கூனற்கிழவன், தளர்ந்தவயதோன்.

குடுகுடுக்கை - காய்ந்தொலிக்குந் தேங்காய்.

குடுகுடுத்தல் - துரிதமாயோடித்திரிதல்.

குடுகுடுத்தான்-சுறுக்கான், பரபரப்பாயோடித்திரிவோன்.

குடுகுடுப்பு - துரிதச்செலவு.

குடுகுடுப்பை - அறக்காய்ந்து வற்றலானது, கஞ்சாக்குடுகு, சிற்றுடுக்கை, மாமணி.

குடுகுடெனல் - விரைவின் குறிப்பு.

குடுக்குக்குடுக்கெனல் - ஒலிக்குறிப்பு.

குடுக்கை - கமண்டலம், தேங்காய் முதலியவற்றின் குடுக்கை.

குடுப்பம் - நான்குபலம்.

குடுமி-ஆண்மயிர், உச்சி, கதவிற்குடுமி, சிகை, நுதி, பாம்புபிடிப்பவன், மயிர்முடி, மலையுச்சி, வில்லு, வெற்றி.

குடுமிகளைந்தபுகழ்சாற்றுநிலை - பாடாண்டிணைத்துறை நாற்பத் தேழனு

றொன்று. அதுநீண்ட அரணினை யழித்துநிறைத்த மாலையினையுடைய வேந்தன் குடுமிகளைந்தமிகுதியைச் சொல்வது.
குடுமிக்கதவு - சுழியாணிக்கதவு.
குடுமிதட்டுதல்-தானிய அளவிற் றலைவழித்தல்.
குடுமிப்பருந்து } ஒரு பருந்து.
குடுமியன் }
குடுமிவைத்தல் வேதத்திற்குரிய வருணத்தாரின் பிள்ளைகட்குச் செய்யுமோர் சடங்கு.
குடும்பக்கோடாலி-குடிகளையழிவு பண்ணுகிறவன்.
குடும்பத்தானம் - களத்திரத்தானம்.
குடும்பப்பிரதிட்டை - குடிவைத்தல்.
குடும்பம் - உறவு, ஒரு குடியிலுள்ளார், மனைவி, வீடு.
குடும்பன் - பள்ளரிற்றலைவன்.
குடும்பி - சமுசாரி, பள்ளிகளிற்றலைவி.
குடும்பினி - மனைவி.
குடும்பு - சுற்றம், பூங்கொத்து.
குடுவை-கமண்டலம், குண்டான், சிறுபானை.
குடுவையாறு - ஒருநதி.
குடேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
குடோரம் - அக்கினி, அரசி.
குடோஜம் - வெண்டுளசி.
குடை-இராசசின்னத்தொன்று,உடைவேல், உட்டுளைப்பொருள், கவிகை, குடையென்னேவல், குமரனுடல், மிதியடி முதலியவற்றின் குமிழ்.
குடைகரி-பஞ்சலோகங்களை யுருக்கும்படி குடையப்பட்ட கரி.
குடைகவித்தல் - குடைநிழற்றல்.
குடைக்காரன் - குடைபிடிப்போன்.
குடைக்காளான் - ஒருகாளான்.
குடைக்கிழங்கு - சிற்றரத்தை.
குடைக்கூத்து - குமரனுடல்.
குடைக்கொள்ளுதல் - குடைபோலெழும்புதல், குமிழிகொள்ளுதல்.
குடைச்சல் - குடைவு, வருத்தம்.
குடைச்செலவு-காஞ்சித் திணைத்துறை இருபத்தொன்றனுளொன்று. அது பழங்குடிக் கொடுவினையாளர் முன்னே குழ்ந்துபோக அழலும் நெருப்பையும் போன்ற வேலினையுடையவன் குடையைப் புறவீடு விடுப்பது.
குடைச்செவி - உள்வளைந்தசெவி.
குடைச்செவிக்கொள்ளல் } மிகுங்கோபத்தினாலே செவியை நிமிர்த்தல்.
குடைச்செவியிடுதல் }
குடைச்செவியெடுத்தல் }
குடைதல் - அரித்தல், கடைதல், கவிதல், துளைத்தல், தோண்டல்,நீரோடுதல், நோவுபடுத்தல், மனதை வருத்தல்.
குடைநாட்கோள் - உழிஞைத் திணைத்துறை யிருபத்தெட்டனுளொன்று. அது செறுத்துக் கூடாதாருடைய அரணைக்கொள்ள நினைந்த வெற்றி மன்னவன் குடையைப் புறவீடுவிடுவது.
குடைநிலை-வஞ்சித்திணைத்துறை இருபதினுளொன்று. அது தன்மேலிட்ட மாலையிலே வண்டுகளொலிப்ப மிக்க அறிவினையுடையோர் கீர்த்தியைச் சொல்லக் கற்றுக்கையால்மட்டஞ்செய்த மாலையினையுடையவேந்தன் குடையைப் புறவீடு விடுவது.
குடைநிழற்றல்-உலகத்தைப் பாதுகாத்தல், குடையானிழல் செய்தல்.
குடைப்பனை - தாலபத்திரப்பனை.
குடைப்புல் - ஒருவகைப்புல்.
குடைமங்கலம்-பாடாண்டிணைத்துறை நாற்பத்தேழனு ளொன்று. அது நான்குதிக்கும் கீர்த்திமிக வீற்றிருந்த அரசன் குடையைப் புகழுவது.
குடைமுல்லை - வாகைத்திணைத்துறை முப்பத்திரண்டனு ளொன்று. அது பூசலைத்தடுத்த மிக்க உரத்தாலுயர்ந்த தோளினையுடைய மட்டஞ்செய்தமாலையான் குடையைப் புகழ்வது.
குடையல் - குடைதல்.
குடையன்பருவதம் - பித்தளை.
குடையாடல் - சந்தநாயகன் சூரபன்மனது மாயைகளைத் தொலைத்தல்காரணமாகத் தமது குடையைத் தூக்கிச் சுழற்றியாடிய ஒருகூத்து.
குடையாணி - குடைபோல் தலையுள்ள ஆணி.
குடைவண்டு - ஒருவண்டு.
குடைவு - குகை, குவிதல், வளைவு.

குடைவேல் - ஒருவகைமரம்.
குடோரம் - கடோரம்.
குடோரி - கீறி மருந்துபதித்தல், கீறுதல், குடாசகம், சுதைமண், வங்கமணல், வெண்காரம், வெள்ளைப்பாஷாணம்.
குடோரிபண்ணல் } குடோரியாடல் } குடோரியிடுதல் } கள்ளிக்கு விஷத்துக்குக் குடோரிவைத்தல்.
குடோரிவைத்தல் - கீறி மருந்துவைத்தல்.
குட்டக்கரப்பன் - ஒரு கரப்பன்.
குட்டக்குறடு - சிறுகுறடு.
குட்டநாசனம் - வெண்கடுகு.
குட்டகி - மலை.
குஷ்டம் } குட்டம் } ஆழம், குட்டநோய், குளம், கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று, கோஷ்டம்.
குட்டல்-அபகரித்தல், குட்டுதல், தகாத்தல்.
குட்டனம் - தட்டல்.
குட்டனி-வேசிக்கும் விடனுக்குங் கூட்டுறவு பண்ணுவோன்.
குட்டன்-ஆட்டுக்குட்டி, குட்டரோகி, குழந்தை, மகன்.
குட்டாரம் - கம்பளம், பர்வதம்.
குட்டாரி - கந்தகம்.
குட்டான் - சிறு ஓலைப்பெட்டி.
குட்டி-ஆடு, கழுதை, கீரி, குதிரை, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி, பூனை, மான், முதலை, முயல், யானை இவற்றின் குட்டி, ஆதாயம் குரங்கு முதல் மரக்கோட்டின் வாழ்விலங்கின் பிள்ளை, குழந்தை, சிறுபெண், வாழைக்கன்று.
குட்டிக்காய்-அடுத்திருக்குஞ் சிறுகாய், கண்பிடிக்காய்.
குட்டிக்கொக்கான்-கொக்கானி லோர்வகை.
குட்டிச்சாத்தான் - ஒருபேய்.
குட்டிச்சுவராய்ப் போதல் - கெட்டுப்போதல்.
குட்டிச்சுவர் - சிறுசுவர், மடையன்.
குட்டித்தக்காளி - சிறுதக்காளி.
குட்டித்தாய்ச்சி- குட்டியுண்டாயிருக்கும் விலங்கின் பெண்.
குட்டிபடுதல்-ஆடுமுதலிய சினைகொள்ளல்.
குட்டிபோடல் } குட்டிபோடுதல் } ஒன்றுகூடப் போடல் குட்டியீனுதல்.
குட்டிப்பலா - ஒருசெடி.
குட்டிப்பல் - பல்லோடடுத்து முளைக்கும் பல்.
குட்டிப்பை - சிறுபை.
குட்டிமம் - கற்படுத்த இடம்.
குட்டியப்பன் - சிறியதகப்பன்.
குட்டியம் - சுவர்.
குட்டியிடுக்கி - கோடைக்கிழங்கு, கோட்டம், சிற்றரத்தை, பயிருடன் முளைக்கு மோர்புல்.
குட்டியிடுதல்-பாம்பு முதலிய குட்டியீனுதல்.
குட்டிவிரல் - விரலோடடுத்து முளைக்குஞ் சிறுவிரல்.
குட்டிவிளா - ஒரு விளாமரம்.
குட்டிவைத்தல் கொக்கானி லோர்செய்கை.
குட்டினம் - கருஞ்சீரகம்.
குட்டினி - சக்கம்வாங்குபவள், வசவி.
குட்டிரம் - பர்வதம்.
குட்டு - குட்டுதல், குட்டென்னேவல், மானம்.
குட்டுணி - குட்டுப்படுகிறவன் சுணைகெட்டவன்.
குட்டுண்ணல் - குட்டுப்படல்.
குட்டுதல்-அனுப்புதல், தலையிலே கொட்டுதல்.
குட்டுமம் } குட்டுமலம் } பூவரும்பு.
குட்டுவன் - சேரன்.
குட்டை - ஒருவியாதி, கடையாயிருப்பது, குள்ளம், கைத்தண்டு, சிறுகுளம், தொழுமரம்.
குட்டையன் - கட்டையன், குட்டை, நோயுள்ளோன்.
குணகண்டி - சிவதை.
குணகம் - பெருக்குந்தொகை.
குணகர் - கணக்கர்.
குணகல் - வளைதல்.
குணசாங்கியம் - ஒரு ஆரியநூல்.
குணகாரம் - பெருக்குக்கணக்கு.
குணகி - குணமுள்ளவன்.
குணகு - குணகென்னேவல், பிசாசம்.
குணகுதல் - சோம்புதல், தளருதல், வளைதல்.

குணக்கல் - வளைத்தல்.
குணக்கு-எதிரிடை, கிழக்கு, கோணல்.
குணக்குதல்-பின்னிற்றல், வளைத்தல்.
குணக்குறைவிசேடம் - குணக்குறையி னால் மேன்மை தோன்ற நிற்பது (உ-ம்) கோட்டந் திருப்புவனங் கொள்ளாதவர் செங்கோல்.
குணக்குன்று-கடவுள், பெருங்குணம், குணமுள்ளவன்.
குணக்கெடுத்தல் - குணத்தைக் கெடுத் தல், வளையெடுத்தல்.
குணக்கேடு - குணமின்மை.
குணக்ஞன் - சற்குணமுள்ளவன்.
குணங்கர் - பிசாசம்.
குணங்கல் - சுணங்கல், வளைதல்.
குணங்கு-குணங்கென்னேவல், பிசாசம்.
குணங்குதல் - வளைதல்.
குணங்குறி-அடையாளமுஞ்சுபாவமும்
குணசந்தி-நிலைமொழி யீற்றிநின்ற அகர ஆகாரமும், வருமொழி முதலி னின்ற இகர இகாரமுங்கெட ஏகார மும் நிலைமொழி ஈறகர ஆகாரமும் அவற்றோடு புணரவந்த உகர ஊகா ரமுங்கெட ஓகாரமுந் தோன்றுவது (உ-ம்) சுரேந்திரன், வரோதயன்.
குணசாலி - நற்குணமுள்ளவன்.
குணசைவம் - ஒருசைவம்.
குணட்டல் - குணட்டுதல்.
குணட்டு - கதிரின்குலை.
குணட்டுதல் - செல்லங்கொஞ்சுதல், துள்ளிவிளையாடுதல், மயக்கிப்பேசு தல்.
குணஷ்டை-குணதோஷம், தொந்தரை
குணதிசை - கிழக்கு.
குணத்தன்மையலங்காரம்-ஓரலங்காரம்.
குணத்தாலணையும்பெயர்-அளவு, அறி வு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, குடி, சாதி, சிறப்பு முதலியவற்றான் வ ரும்பெயர்.
குணத்திரயம்-முக்குணம். அஃது இரா சதம், சாத்துவிகம், தாமதம்.
குணத்தொகை - பண்புத்தொகை.
குணத்தொனி - நாணியின்சத்தம்.
குணநிதி-கடவுள், குணமுள்ளோன்.
குணநூல் - சிவசூத்திரங்கள் தவிர மற் றெல்லா மிறந்தொழிந்த ஒரு நாட கத் தமிழ்நூல், இது சகலநூல்.

குணபத்திரன் - அருகன், கடவுள், நி கண்டு செய்த மண்டலவனின் குரு.
குணபம் - பிசாசம், பிணம்.
குணபலம் - அதிவிடயம்.
குணபவுணர் - இராக்கதர்.
குணபாகி, குணபாசி - பிசாசம்.
குணபாடல் - குணவாகடம்.
குணபிரதி - குணம்.
குணபேதம்-ஆங்காரம், குணமாறுதல்.
குணப்படல், குணப்படுதல் - சுகமடைதல், நற்குண மடைதல்.
குணப்படுத்தல் - சீர்திருத்தல், மனந்தி ரும்பச்செய்யல்.
குணப்பண்பு - குணத்தாலாயபண்பு.
குணப்பிழை - துற்குணம்.
குணப்பெயர் - பண்புப்பெயர்.
குணமாதல் - சீர்ப்படுதல், சுகமாதல்.
குணம்-இராசதமுதலியகுணம், இலட் சணம், கயிறு, குடம், சத்து, சுகம், சீர்மை, தத்துவம், தன்மை, நாணி, நிறம், பண்பு, மேன்மை.
குணலி - சீந்தில்.
குணலை - ஒருகூத்து, வீராவேசத்தாற் கொக்கரித்தல்.
குணலையிடுதல்-கைதட்டிக்கூவுதல்.
குணவந்தன் - குணமுள்ளவன்.
குணவவுதி - ஓரலங்காரம்.
குணவாகடம்-குணங்களறிவிக்கும் வை த்திய சாஸ்திரம்.
குணவாகுபெயர் - பண்புப் பெயரைப் பண்பிக்குறைத்தல் (உ-ம்) நீலம்.
குணவாயில்-திருக்குணவாயி லென்னு மோரூர், இது வஞ்சிநகரத்துக் கீழ்த் திசைக்கண்ணுள்ளது. இளங்கோ வடிகள் துறவுபூண்டிருந்த வூருமிது வே.
குணவான் - நற்குணன்.
குணவிலக்கு - ஓரலங்காரம். அது கு ணத்தை மறுத்துச்சொல்வது.
குணவீரபண்டிதன்-தமிழிலே நிகண்டு செய்த ஒரு சமணவித்துவான்.
குணவுவமம்-பண்புவமம் (உ-ம்) பான் மொழி.
குணனம்-கணக்குப்பெருக்கல், விவரம்.
குணனீயம்-பெருக்கப்படுந்தொகை.
குணன் - சற்குணன்.

குணாகுணம்-சாத்தியாசாத்தியம், குணமுங் குணனமும்.
குணாட்டியன்-உருத்திரன் சாபத்தாலே பூலோகத்தில் உற்பத்தியானமாலியவந்தன்.
குணாதீதம் - குணங்கடந்தது.
குணாதீதன்-கடவுள், சீவன்முத்தன்.
குணாம்பு - ஞோமாளம்.
குணாம்புதல் - ஈளினம்பண்ணுதல், பகிடிபேசல்.
குணார்த்தகோளம்-கிழக்குப் பாதியுண்டை.
குணாலம் - ஒருதேசம், ஓர்புள்.
குணாலயன் - கடவுள்.
குணாலை - குணாலைக்கூத்து.
குணாவநுதி - குணத்தினுயர்வு தோன்றக்கூறு மலங்காரம்.
குணி-ஊமை, குணியென்னேவல், பண்பி, முடவன், யுகந்தரன் றந்தை, வில்.
குணிக்கரித்தல்-கணக்குப் பெருக்குதல்.
குணிக்காரம்-கணக்குப் பெருக்குந்தன்மை.
குணிதம் - பெருக்கிக்கண்டபேறு, மடங்கு.
குணித்தல்-எண்பெருக்கல், மதித்தல்.
குணிப்பு - மதிப்பு.
குணிப்பெயர்-குணத்தையுடைய பொருட்பெயர்.
குணில்-ஒருவகைப்பறை, கவண், குறுந்தடி, பறையடிக்குந்தடி.
குணு - புழு.
குணுகல் - சிணுக்குதல்.
குணுகுணுதல், குணுகுதல் - சிணுங்குதல், மூக்காற் சத்தம்வரப் பேசல்.
குணுகுணெனல்-குணுகுணுத்தல்.
குணுக்கம் - அணுக்கம்.
குணுக்கல் - நுணுக்கல், வளைத்தல்.
குணுக்கன்-மூக்காற்சத்தம்வரப் பேசுகிறவன்.
குணுக்கு - குதம்பை, மாதர்காதணியிலொன்று, வலையின் முடிந்திருக்குமீயம், வெள்ளி.
குணுங்கர் - குயிலுவர், சண்டாளர், தோற்கருவியாளர், பிசாசர்.
குணுங்கல் - அணுங்கால்.
குணுங்கு - பிசாசம்.
குணுங்குதல் - அணுங்குதல்.
குணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
குண்டகன்-தலைவனைப் பிழைத்தீன்ற சோரபுத்திரன்.
குண்டக்கம் - கூடாசகம்.
குண்டக்கிரியம், குண்டக்கிரியை - ஓரிராகம், ஒருபண்.
குண்டசன் - துரியோதனன் றம்பியருள் ஒருவன்.
குண்டடியன் - ஆண்சிவிங்கி.
குண்டணி - பின்புறணி.
குண்டபேதி-துரியோதனன் தம்பியருளொருவன்.
குண்டம்-ஓமக்கிடங்கு, கிடங்கு, கிணறு, குடுவை, குண்டான், குழி, குளம், குட்டை, பானை.
குண்டலகேசி-பஞ்ச காவியத்தொன்று ஓரிலக்கியநூல்.
குண்டலம் - ஆகாயம், காதணியிலொன்று, தவத்தோர்காதணி, வட்டம், வாணம்.
குண்டலன் - பலராமன்.
குண்டலி-இசங்கு, ஒருவாயு, காளி, சீந்தில், தாளகம், பாம்பு, மயில், மான், மூலாதாரம்.
குண்டலிசத்தி - வல்லபசத்தி.
குண்டலை - விந்தியவந்தன்பாரி இவள் நாயகன் சம்பாசுரனாற்கொல்லப்பட்டவன். இவள் தானினைத்தவிடமெல்லாம்போகுஞ்சத்தியுடையவள்.
குண்டலவண்டன், குண்டலவண்டியன் - குண்டலவண்டியுள்ளது.
குண்டனம் - வளைதல்.
குண்டனி-குதலை, வசவி.
குண்டன்-அடிமை, குண்டகன், குண்டனிசொல்வோன், துரியோதனன் தம்பி, வளைந்தது.
குண்டாணிக்கொடி-ஒருகொடி.
குண்டலரோகம் - குழந்தைகளுக்கு உடம்பெங்கும் காணுகிற சிவந்த கட்டிகள்.
குண்டான் - பெருஞ்சட்டி.
குண்டி-ஆசனபக்கம், இருதயம், ஈரல், சகனம், பழத்தின் கீழ்ப்புறம், மீன், சினை.
குண்டிகம் - எருவராட்டி, தூகள்.
குண்டிகை - கமண்டலம், குடம்.

குண்டிக்காய் - ஈரல்.
குண்டிதம் - நகன். [தனை.
குண்டியம் - பழிச்சொல், பொய், கிந்
குண்டில்-ஒருசெடி, சிறுநெய், முதுகு.
குண்டினபுரம் } தமையந்தி பிறந்த
குண்டினம் } ஊர்.
குண்டினன் - ஒரு முனிவன்.
குளிர்காய்தல் - கூதிர்காய்தல்.
குளிர்காலம் - கூதல்காலம்.
குளிர்காற்று - குளிரானகாற்று.
குளிர்குளிர்தல்
குளிர்கொள்ளல் } சீதளமடைதல், தோஷமேறுதல், விறைத்தல்.
குளிர்சுரம் - சீதசுரம்.
குளிர்ச்சி - குளிர்மை, திருத்திகரம். [ல்.
குளிர்தல் குளிருதல், சாதல், விறைத்த
குளிர்த்தி-ஓராராதனை, குளிர்மை. [ல்.
குளிர்த்திபண்ணுதல்-குளிர்மை செய்த
குளிர்த்திபோடுதல்-சீதளா தேவிக்குச் செய்யுமோராராதனை.
குளிர்த்தகுரல் - இனியவோசை.
குளிர்ந்தநிறம் - நன்னிறம்.
குளிர்ந்தநீர் - இளவெந்நீர், மணியினல்லொளி.
குளிர்ந்தபரிமளம்-சீதாங்க பாஷாணம்.
குளிர்ந்தபாட்டு - செவிக்கினிய பாட்டு.
குளிர்ந்தபார்வை - தயைநோக்கு.
குளிர்ந்தபேச்சு - மதுரவசனம்.
குளிர்ந்தமணம் - நறுநாற்றம்.
குளிர்ந்தமனம் - நல்லவிருதயம்.
குளிர்ந்தமுகம் - அலங்காரமுகம், நன்முகம்.
குளிர்ந்தமொழி - இனியவசனம்.
குளிர்ந்தவாசனை - நறுமணம்.
குளிர்ந்தவாயு - வாதவாயு.
குளிர்ந்தவேளை - சாயந்திரம், சமயம்.
குளிர்ந்தவொளி மணிகளினல்லொளி.
குளிர்ந்தகொல்லி - கொவ்வைக்கொடி, வஞ்சகன்.
குளிர்ந்துபரறுதல் - வாயுவிடமுதலிய பற்றியேறுதல்.
குளிர்ந்துபோதல் - இறத்தல்.
குளிர்ந்தேறுதல் - குளிர்ந்துபற்றுதல்.
குளிர்ப்பித்தல் - குளிர்ச்சிசெய்தல்.
குளிர்ப்பு - குளிர்மை.
குளிர்மை - அன்பு, சீதளம்.
குளிர்மைக்கட்டு - கூகைக்கட்டு.
குளிறல் - எழுத்திலாவோசை, ஒலித்தல், பேசலாவெழுமொலி.
குளிறு - ஒலி, குளிறன்னேவல், பேரொலி.
குளிறுதல் - அலறுதல், சத்தமிடுதல்.
குளீரம் - நண்டு.

குளுகுளுத்தல் ஒலிக்குறிப்பு, காமாலைகொள்ளுதல், செவ்வியழிதல், மெதுமெதுத்தல்.
குளுகுளுப்பை - காமாலை.
குளுகுளெனல் - ஒலிக்குறிப்பு.
குளுத்தி - குளிர்மை.
குளுப்பை -குளுகுளுப்பை.
குளுமை - குளிர்மை.
குளுவன் - கோழிக்காரரிற்றலைவன்.
குளைச்சு - காற்பங்கு, குழைச்சு.
குளைமான் - ஒருவிதமான்.
குள்ளக்கெண்டை - ஒருமீன்.
குள்ளத்தாரா - குள்ளவாத்து.

குள்ளநரி - ஒருநரி.
குள்ளம் - குறுமை, கொடுமை, வஞ்சகம்.
குள்ளன் - கட்டையன், வஞ்சகன்.
குள்ளி - கட்டைச்சி, குள்ளன்.
குறங்கு - கொளுவி, தொடை.
குறங்குசெறி - தொடையாபரணம்.
குறங்கொட்டி - தலாவோடே யடுக்கும் மரம்.
குறங்கொள்ளி - குறைக்கொள்ளி.
குறஞ்சனம் - வெண்காரம்.
குறஞ்சால் - உழுதுகுறைந்த நிலம்.
குறஞ்சி - செம்முள்ளி.
குறடு - அடைதல், ஒட்டுத்திண்ணை, ஒருகருவி, செருப்பினுறுப்பு, திண்ணை, நண்டு, பலகை, புடைப்பு, மரத்துண்டு, மிதியடி.
குறட்டாரியம் - குறைகூறுதல்.
குறட்டாழிசை - ஈற்சீரின் மிக்கபல சீரான் வருமடியிரண்டாம் ஈற்றடி குறைந்துவருவதும் விழுமியபொருளும் ஒழுகிய வோசையுமின்றிக்குறள் வெண்செந்துறையிற்சிதைந்து வருவதும் வேற்றுத்தளை விரவிய குறள் வெண்பாவாய் வருவதுமாகிய விம் மூன்று வகையுமாம்.
குறட்டுச்செருப்பு - ஒருசெருப்பு.
குறட்டுப்பாக்குவெட்டி - ஒரு பாக்கு வெட்டி.
குறட்டுவாதம் - ஒரு வலிப்பு.
குறட்டை - காக்கணங்கொவ்வை, குறுகுறுப்பு.
குறண்டல் - குறண்டுதல், சுருண்டது, சுருண்டு வளைந்தது.
குறண்டல்வாதம் - வலிவாதம்.
குறண்டவாங்குதல் சுருட்டி யிழுத்தல்
குறண்டி - ஒருபண், ஒரு முட்செடி.
குறண்டுதல் - சுருண்டு கூனுதல்.
குறத்தி - குறிஞ்சி நிலப்பெண், நிலப் பனை.
குறத்திப்பாட்டு ஒரு பிரபந்தம், அஃது தலைவன் பவனிவரக்கண்ட தலைவி மயங்கித் திங்கள் முதலிய உலாவும் பனைப்பட்டுக் குறிகேட்டல் முதலிய அகப்பொருளுமடங்க அகவல் முதலிய செய்யுளிடையிடை விரவிவரச் சிந்து முதலிய நாடகத்தமிழ் பாடுவது.

குறம் - ஒருசாதி, குறி.
குறம்பார்த்தல் - குறிபார்த்தல்.
குறம்பிடித்தல் - குறட்டு சொல்லுதல்.
குறவஞ்சி - ஒருபிரபந்தம், குறத்தலைவி.
குறவணவன் - ஒருபுழு.
குறவர் - குறிஞ்சிநிலமாக்கள், வேடர்.
குறவன் - இரதம், ஒரு சாதியான்.
குறவை - ஒருமீன்.
குறளடி - இருசீரடி.
குறளடிவஞ்சிப்பா இருசீரடியான்வரும்வஞ்சி.
குறளன் - குள்ளன்.
குறளி - ஒருபிசாசு, வசவி.
குறளிக்கூத்து - பேய்த்தனம்.
குறளிவிடுதல் - கோளாறுபண்ணல்.
குறளை - குன்னம் கோட்சொல்லல்.
குறள் - இருசீரடி, உறுப்புக்குறைவெட்டிஞென்று, ஒருவகைப்பா, குறுமை, சிறுமை, திருவள்ளுவர்செய்த ஒரு தருமநூல், பூதகணம்.
குறள்வெண்செந்துறை - விழுமியபொருளும் ஒழுகிய வோசையு முடைத்தாய் எனைத்துச்சீராலும் அளவொத்த இரண்டடியாய்வருவது.
குறள்வெண்பா - இரண்டடியா யொருவிகற்பத்தானேனு மிருவிகற்பத்தானேனும் வருவது.
குறுசாணி - ஒருமருந்து.
குறுவுதல் - ஒடுங்குதல், மெலிதல்.
குறுள் - மறிக்குட்டி.
குறி - அடையாளம், ஆண்பெண்குறி, எண்ணைஒருவகைச்சாத்திரஞ்சொல்லுதல், குணம், குறிப்பு, குறியென்னேவல், சகுனம், தோற்றம், நன்னடத்தை, நிமித்தம், பயில், புடவை, மாடு முதலியவற்றினிடங் குறி, முறை.
குறிகாணல் / குறிகாணுதல் } அடையாளந் தோன்றல்.
குறிக்கொள்வோர் - கருமமுடிக்குந் துணிவுள்ளோர், பராயணர்.
குறிக்கொள் - ஒற்றுமை, கணித்தல், கருமமுடிக்குந்துணிவு.
குறிசொல்லுதல் - குறியிடம்பார்த்துச் சாத்திரஞ்சொல்லல்.
குறிச்சி - கிராமம், குறிஞ்சி நிலத்தூர், சிற்றூர்.

குறிச்சூத்திரம் - பெயரீடுசூத்திரம்.
குறிஞ்சா - ஒருகொடி.
குறிஞ்சி - ஈந்து, ஐந்நிலத்தொன்று. அது மலைச்சார்பு, ஒருகொடி, ஒருசிமிள், ஒருபண், குறிஞ்சி, நிலத்திராகம், குறிஞ்சிமரம், செம்முள்ளி, மருதயாழ்த்திறம், மருதோன்றிமரம்.
குறிஞ்சிக்கருப்பொருள் - குறிஞ்சிநிலத்துற்பத்திப் பொருள், அவை சேய்முதற் சுனையாடலீறுயவாம்.
குறிஞ்சித்தலைவன் - கானகநாடன்.
குறிஞ்சித்திணை - குறிஞ்சிநிலத்திற்குரியன. அவை மலை, கூதிர், முன்பனி, இருள், ஐவனம், தினை, வெதிர், களவுப்புணர்ச்சி, சிலம்பன், வெற்பன், பொருப்பன், சேய், கானவர், குறவர், தேன், வெறி, சிறுகுடி, குறிச்சி, அருவி, சுனை, யானை, வேங்கை, மயில்.
குறிஞ்சித்திணைப்பொருள் - குறிஞ்சிக்கருப்பொருள்.
குறிஞ்சித்தெய்வம் - சுப்பிரமணியன்.
குறிஞ்சிப்பறை - துடி, தொண்டகம்.
குறிஞ்சிப்பொருள் - குறிஞ்சி நிலத்திற்குரிய பொருள்.
குறிஞ்சிமுதற்பொருள் - வரையும்வரை சார்ந்த விடமுமென்னு நிலப்பொருளும், கூதிர், யாமம், முன்பனியென்னும் பொழுதுஞ் சிறுபொழுதகளுமாம்.
குறிஞ்சியாழ் - குறிஞ்சி நிலத்தியாழ்.
குறிஞ்சிலைக்கல் - ஈரற்கல்.
குறிஞ்சில் - தொட்டிபாஷாணம்.
குறிஞ்சிவேந்தன் - குமரக்கடவுள்.
குறிது - குறிமையுடையது
குறித்தகள்வன் - பெயர்போனகள்வன்.
குறித்தபொருள் - நினைத்தபொருள்.
குறித்தல் - அடையாளப்படுத்தல், கருதல், சுட்டுதல், நியமித்தல், மதித்தல், வரைதல்.
குறிநிலையணி - புகழ்பொருளை புணர்த்துஞ் சொற்களாற் குறித்தறிதற்குத் தகுதியாய் பொருளைச்சொல்லுதல்.
குறிபார்த்தல் - சகுனம் பார்த்தல், சாமுத்திரிகா லக்கணம் பார்த்தல்.
குறிப்பறிதல் - குறிப்பினாலறிதல்.
குறிப்பாளி - குறிப்பறிவோன்.
குறிப்பானவன் - கணிசவான், மதிக்கத்தக்கவன்.
குறிப்பிசை - எழுத்திலாவோசை.
குறிப்பிடம் - சுருக்கம்.
குறிப்பு - அடையாளம், எழுத்துப்பழக்கு குறிப்பு, ஒருமை, கருத்து, சைகை, நினைப்புக்கெழுதின வெழுத்து, பிறந்தநா ளெழுதி வைக்குமோலை, விருப்பம்.
குறிப்புக்காரணவகத்திணை - குறிப்புக்காட்டல் (உ-ம்) பேருலகானையான் பிறந்ததாயின் பாருலகிழிநலம் பற்றி நக்கவோ.
குறிப்புச்செயல் - செஞ்செயலினுமாகச் செயலினுமின்று அவைக்குவேறாய பொருளை புணர்த்தது.
குறிப்புச்சொல் - குறிப்பினாற் பொருளுணர்த்துஞ் சொல்.
குறிப்புநவிற்சியணி - ஒரு பொருளைக் குறித்துச் சொல்லவேண்டியதற்கு மற்றொரு பொருளைக் குறித்துச் சொல்லுதலாம்.
குறிப்புப்பண்பு - மனதாற் குறித்துணரப்படும் பண்பு.
குறிப்புப்பொருள் - குறிப்புச்சொல்லாலுணர்த்தப்படு பொருள்.
குறிப்புமறிநிலை - ஓரலங்காரம். அது சொல் வேருணர்ந்த குறிப்பு வேறுகத்தோன்ற வுரைத்தல்.
குறிப்புரிச்சொல் - மனத்தாற் குறித்தறியப்படு முரிச்சொல் (உ-ம்) நுண்மை.
குறிப்புவினை - பொருளிடங்காலஞ் சினைகுணந் தொழிலடியாகத் தோற்றிக் கருத்தாவை மாத்திரம் விளக்குஞ் சொல்.
குறிப்புவினைப்பகுபதம் - பொருளாதியாறுங் காரணமாகக் கருத்தா வொன்றையே விளக்கி நிற்பது.
குறிப்பெஞ்சணி - ஓரணி, அது குறிப்பெச்சம்.
குறிப்போலை - காரியங் குறித்திருக்குமோலை, சாதகவோலை.
குறியர் - குள்ளர்.
குறியானவன் - நிதார்த்தன்.
குறியிடம் - அடையாளம், அடையாளமுமிடமும்.

குறியிடையீடு - குறியிடத்தொழுகாது தடைப்படல்.
குறியீடு - நாமதாரணை.
குறில் - குற்றெழுத்து, நீட்டற்றது.
குறுகலர் - பகைவர்.
குறுகல் - அணுகல், குறைதல்.
குறுகித்தல்-கோபமுதலியவற்றாற் பார்க்குங் குறும்பார்வை.
குறுகுதல்-கிட்டுதல், குறுத்தல், குறைதல், சுருங்குதல்.
குறுத்துதாளி - சிறுதாளி.
குறுகுறுத்தல் - ஒலிக்குறிப்பு.
குறுகுறுப்பு குரட்டை அது யாக்கைக் குற்ற வைமந்தினென்று, சினக்குறிப்பு.
குறுகுறுப்பை - குறட்டை.
குறுகுறெனல் - ஒலிக்குறிப்பு. [ழி.
குறுக்கடி - குறுக்குவழியாயம், குறுக்குவ
குறுக்கம் - குறுக்கினது, கௌரிபாஷாணம், சுருக்கம்.
குறுக்கல் - குறைத்தல்.
குறுக்கல்விகாரம் - நெடில் குறிலாதல்.
குறுக்களவு - நடுஅளவு.
குறுக்கிடுதல் - இடையேசெல்லல்,கிட்டுதல்.
குறுக்கு - ஊடு, குறுக்கென்னேவல், குறுமை, சுருக்கம், தடை, விட்டத்தளவு.
குறுக்குக்கட்டு - மார்க்கட்டு.
குறுக்குக்கேள்வி - மடிப்பான கேள்வி.
குறுக்குக்குட்டம் - குறுக்குவளை.
குறுக்குச்சார் - குறுஞ்சார்.
குறுக்குச்சூத்திரம் - சுருக்கமாயறியுஞ் சூத்திரம்.
குறுக்குதல் - குறுகப்பண்ணுதல்.
குறுக்குநோய் - சந்துப்பிடிப்பு.
குறுக்குப்பாடு - குறுக்குவிட்ட அளவு.
குறுக்குப்பாதை - குறுக்குவழி [தி.
குறுக்குப்புத்தி-எண்ணிக்கையற்ற புத்
குறுக்குமறுக்கு - இடைக்கிடை, தாறுமாறு.
குறுக்குவிட்டம் - கைவிட்டம்.
குறுக்குவிழுதல் - ஊடுவிழுதல்.
குறுக்குவெட்டி - குறுக்குவழி.
குறுக்கையர் - ஒரு வேளாளர், திருநாவுக்கரசு நாயனார்.
குறுங்கணக்கு-தனியட்சரங்கள்.
குறுங்கண் - பலகணி.
குறுங்கயிறு - சிறுகயிறு.
குறுங்கலி - ஒருபிரபந்தம், பாலையாழ்த்திறம், பெருந்திணைத் துறைகளுள் ஒன்று. அது நறுநாற்றங் கமழும் பெரிய குழலினையுடைய மடைவாரை விரும்ப விகற்பித்த காதலைக்கெடச் சொல்லுவது,மருதப்புறம் தலைமகன் முன்னின்று மாதர்பழிகூறல்.
குறுங்கற்றலை - ஒருவிதமீன்.
குறுங்காசு - ஒருகாசு.
குறுங்காடு - சிறுகாடு.
குறுங்கால் - குள்ளங்கால்.
குறுங்கிண்ணி - வெண்கலம்.
குறுங்குடியாள் - தாளகம்.
குறுங்குடிவல்லி - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருக்குறுங்குடியிற் கோயில்கொண்ட இலக்குமி.
குறுங்கோல் - இரண்டுமுழத்தடி.
குறுஞ்சாலி - இளமரம்.
குறுஞ்சிறிப்பு - புன்னகை.
குறுஞ்சீர்வண்ணம் - குற்றெழுத்துப் பயின்று வருவது.
குறுஞ்சுனை - சிறுபொய்கை.
குறுணல் - சிறியது.
குறுணி - ஒரளவு, சிறியது.
குறுணை - குறுநொய்.
குறுதல் - குத்தல், தறித்தல்.
குறுத்தல் - குறுகுதல்.
குறுத்தாள் - சிற்றடி.
குறுநகை - புன்சிரிப்பு.
குறுநடை - தளர்நடை.
குறுநகர் - பறிப்பார்.
குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ.
குறுநிலமன்னர் - சிற்றரசர், குறும்பர்.
குறுநெளிப்பு - ஆங்காரம், இறுமாப்பான அசைப்பு.
குறுநொய் - குறுணை, சிறுநொய்.
குறுந்தடி - குதிரைசெலுத்துங் கருவியினென்று குறுத்ததடி, பறைமுதலிய வடிக்குந்தடி.
குறுந்தறி - குறுந்தடி, சுவர்த்தறி, போதிகை.
குறுந்தாட்டு-குறுகியதாளையுடையது.
குறுந்தாள் - சிற்றடி.
குறுந்துணி - சீலைத்துணி.
குறுந்துளசி - சிறுதுளசி.

குறுந்தெரு - சிறுதெரு.
குறுந்தொகை - பாரதம் பாடிய பெருந்தேவனார் முதலிய இருநூற்றறுவரால் பாடப்பட்ட அகப்பொருட்பகுதியைப் பொருளாகவுடைய ஒருநூல் இதற் குரைசெய்தவர்கள் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.
குறுந்தொட்டி - காஞ்சொறி, சிற்றமட்டி, தோட்டி.
குறுப்பி - பொன்னிமிளை.
குறுமணல் - இரசத்மணல்.
குறுமாக்கள் - சிறுவர், பிள்ளைகள்.
குறுமீன் - ஒருவகைமீன். [ம்.
குறுமுட்டு - கிட்டுமானம், முட்டுத்தன
குறுமுழி-குறுவிழி, வெறித்தபார்வை.
குறுமுனி - அகத்தியன்.
குறுமை-அழகு, சிறுமை, சுருக்கம், பா
குறும்பச்சி - இடைச்சி. [வம்.
குறும்பயிர் - இளம்பயிர்.
குறும்பர் - குறுநிலமன்னர், துர்சனர்.
குறும்பலாநாதர் - திருக்குற்றாலத்திற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
குறும்பன் - துர்சனன்.
குறும்பாடு - பள்ளையாடு.
குறும்பாட்டம் - குறும்புத்தனம்.
குறும்பார்வை-குறுகித்தபார்வை, கொடிய பார்வை.
குறும்பி - காதழுக்கு.
குறும்பிடி - உடைவாள், முட்டுப்பிடி.
குறும்பிடையர் - பள்ளையாட்டிடையர்.
குறும்வாங்கி - காதழுக்குவாருங் கருவி.
குறும்பு - அரணிருக்கை, குறும்பர்சாதி, சிறுமை, பாலைநிலத்தூர், பொல்லாங்கு, போர்.
குறும்புத்தனம் - துட்டத்தனம்.
குறும்புவன்னி - ஒரு புட்சாதி.
குறும்புவன்னியன் - பள்ளிகளில் ஒரு சாதியான்.
குறும்புள் } காடை.
குறும்பூழ் }
குறும்பொறி - உதாபந்தம்.
குறும்பொறை-காடு, குறிஞ்சிநிலத்தூர், சிறுமலை, மலை.
குறும்பொறைநாடன் - முல்லைநிலத் தலைவன்.
குறுவஞ்சி - வஞ்சித்திணைத்துறை யிருபதினொன்று, அது மண்டி எதிர்த்த வீரத்தையுடைய மன்னர்க்குத் திறையைக் கொடுத்து நாடுடைய அரசன் குடிக்குத் தண்ணளிபண்ணிக்காப்பது.
குறுவாழ்க்கை - அற்பவாழ்வு, வறுமை.
குறுவாள் - சிறுவாள்.
குறுவிசாரம் - கவலை.
குறுவித்தல் - குறுகித்தல்.
குறுவித்துப்பார்த்தல் - குரூரமாயுற்றுப்பார்த்தல்.
குறுவிலை - அகவிலை, ஒறுப்பு.
குறுவிழி - கோபத்தாற் பயத்தாலுற்றுப்பார்த்தல்.
குறுவிழிக்கொள்ளுதல் } வெறித்துப் பார்த்தல்.
குறுவிழிவிழித்தல் }
குறுவேர்வை-அச்சத்தால் வேர்த்தல், சிறுவேர்வை.
குறுணுத்தகடு } மலாம்பூசினதகடு.
குறுணுபேட்டை }
குறூரம் - குரூரம்.
குறை-அரசிறை, காரியம், குறைந்திருப்பது, குறையென்னேவல், குற்றம், சேடம், தரித்திரம், தவறு, நிறைவற்றது, மன்றாட்டு, மிச்சம், வெறுப்பு.
குறைகூறல் - குறைசொல்லல்.
குறைகோள் - இரத்தல்.
குறைக்கண்ணுக்குறங்கல் - அரைக்கண்ணுக்கு நித்திரை செய்தல்.
குறைக்குதல் - குறைத்தல்
குறைச்சல் - ஒறுப்பு, தாழ்ச்சி.
குறைஞ்சால் - உழுதகுறை.
குறைதல் - கெடுதல், சிறுகல்.
குறைத்தலைப்பிணம் - கவந்தம்.
குறைத்தல் - குறுகுதல், சங்கரித்தல், சுருக்குதல், வெட்டுதல்.
குறைநிறை-ஏற்றதாழ்ச்சி, குறைச்சல், நிறைச்சல்.
குறைபாடு - ஈனம், குறைவு, குற்றத்தினால் வந்தபாடு, தரித்திரம்.
குறைப்பிராணன் - குற்றுயிர்.
குறைப்பு - குறைத்தல்.
குறையாற்றல் - குறைதீர்த்தல்.
குறையிரத்தல்-பின்சென்று கேட்டல்.
குறையுடல் - தலையற்றவுடல்.
குறையுயிர் - குற்றுயிர்.
குறையொட்டி - உறையொட்டி.

குறையொற்றுமையுருவகம்- உருவகத் தோர் குறைதோன்றச் சொல்வது (உ-ம்) நெற்றிவிழியில்லாச்சங்கரன்.
குறைவயிறு - குறைப்பசி.
குறைவிலி - கடவுள், குறைவில்லாதவ [ன்.
குறை-ஈனம், வறுமை.
குரோட்டை - காக்கணம், பீச்சு, விளா [த்தி.
குற்குலு - குங்கிலியம்.
குற்சிலை - அவுரி.
குற்சனம் - இகழ்ச்சி.
குற்சன் - குத்சன்.
குற்சிதம் - அசுத்தம், அருவருப்பு.
குற்சித்தல் - அருவருத்தல்.
குற்சிப்பு - அருவருப்பு.
குற்சை-இகழ்ச்சி, சுபாவகுணமொன்ப தினொன்று. அது அருவருப்பு.
குற்பகம் - நாணல்.
குற்பம் - பரடு.
குற்றமில்லான்-அருகன், கடவுள், மாசி லான்.
குற்றம்-அபராதம், குறை, தவறு, நோ ய், பழுது, பிழை.
குற்றம்பிடித்தல் - பிழைகாட்டல்.
குற்றம்பொறுத்தநாதர் - திருக்கருப்ப றியலூரிலே கோயில் கொண்டிருக் குஞ் சுவாமி.
குற்றல்-இடித்தல்,நெரித்தல், பறித்தல்
குற்றவாகந்தம் - செய்யுள்செய்யுமிடத் து எழுத்து சொல் பொருள் யாப்பு அணியாகிய இவ்வைந்தின் குற்றமு மிவற்றினனந்தமும்.
குற்றவாளி - குற்றமுள்ளோன்.
குற்றிகரம்-மாத்திரை குறுகினவிகரம்.
குற்றிசை-குறஞ்சந்தம், பெருந்திணைத் துறைகளுளொன்று. அது அழகிய மாலைமார்பைப்பொருந்திய அரிவை யர்க்கு அற்றறுதிப்பட்டு நடவாது அறத்தைக் கண் மறுப்பது.
குற்றியலிகரம் - மாத்திரை குறுகின விகாரம்.
குற்றியலுகரம் } மாத்திரை குறுகின
குற்றுகரம் } வுகரம்.
குற்றுடைவாள் - சிறவுடைவாள்.
குற்றுதல் - குற்றல்.
குற்றுயிர் - குறைப்பிராணன், குற்றுயி ரெழுத்து.
குற்றுவாய்-ஒருமீன், கடிவாய்.

குற்றுழிஞை- உழிஞைத்திணைத்துறை யிருபத்தெட்டனு ளொன்று. அது பகைவராணுகிய அழிவில்லாத தன் மேல் தான் ஒருவனுமேயாகி மாறு பாட்டினைப் பெருக்குவது.
குற்றெழுத்து - ஒருமாத்திரையா யுச்ச ரிக்கப்படுமெழுத்து.
குற்றேவல் - அடித்தொண்டு.
குற்றொற்று-குற்றெழுத்தின் கீழொற் [று.
குற்றோன் - கெடுத்தோன்.
குனடி - நேபாளக் கடைச்சரக்கு.
குனட்டம் - அதிவிடையம்.
குனட்டு - சேட்டை.
குனட்டை } தடுக்கு, கோணல்.
குனவ்டை }
குனசகம் - சிறுகாஞ்சொறி.
குனசம் - குன்றி.
குனபி - சுழிக்காற்று.
குனி - குனியென்னேவல், சிதத்துவ ஜன்புத்திரன், வில்.
குனிங்கேசவரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
குனிதல் - இரங்குதல், தலைதாழ்த்தல், துக்கப்படுதல், வளைதல்.
குனித்தல்-அசைத்தல், ஆடல்,வளைத் தல்.
னி ப்பு - ஆடல், கூத்தின்விகற்பம், வ [ளைப்பு.
குனிவு - வளைவு.
குனுகல் } சிணுங்கிப்பேசல்.
குனுகுதல் }
குனுக்கம் - குணுக்கம்.
குனை - கூர்ப்பக்கம்.

குன்மகாமாலை - ஒருவகைநோய். அது அன்னசீரண காலத்தில் அடிவயிறு வலித்தல், வாந்தி, கண்களில் மஞ்ச ளிறம், குழம்பியமூத்திரம், வாய்வெ ளிறல், மனதிற்கொன்றுந்தோன்று மை, இருமல், இரைப்பு, மயிலுறக் கம்போலுறக்கம், படுக்கையாகக் கி டக்கையிலும் புளலென்னு மிக்கு ணக்களை யுண்டாக்குவது.

குன்மக்கிரகணி - ஒருவகைக் கிரகணியு ரோகம். அது வயிற்றில்குத்தல், அ திகவுறக்கம், வியர்வை, தலைநடுக்மம், தேகவெரிச்சல், உழலை, வயிறுபொ

குமி யிரைந்து பேதியாகுதல், சில வேளை யொருபக்கத்தி லிரைச்சலென்னு மிக்குணங்களை யுண்டாக்கும்.
குன்மகுலை - ஒருநோய்.
குன்மப்புரட்டு - ஒருநோய்.
குன்மம்-ஒருநோய், குலுமம், அது சேனுமுகம் மூன்றுகொண்டது, தூறு.
குன்மவலி - ஒருநோய்.
குன்மவாயு - ஒருநோய்.
குன்மவியாதி - குன்மநோய், வயற்று வலி.
குன்றக்கூறல் - நூல்வழுவிலொன்று.
குன்றதாத்தம் - மலைவழி.
குன்றத்துச்சித்தி-தாலம்ப பாஷாணம்.
குன்றத்தூர்-சேக்கிழார்நாயனுர் பிறந்த ஊர். இது தொண்டைநாட்டிலுள்ளது.
குன்றம் - மலை.
குன்றல் குலைதல், குறைதல், கெடுதல்.
குன்றவர் } குன்றவாணர் } குறிஞ்சி நிலமாக்கள், வேடர்.
குன்றவில்லி - சிவன், திருசி.
குன்றுவாடை - வடகீழ்க்காற்று.
குன்றுவாழ்வு - குறையாதசெல்வம்.
குன்றி - ஒருகொடி, மஞ்சிலை.
குன்றிகிறக்கண்ணன் - காட்டுப்பன்றி.
குன்றிகிறமணி-குருவிந்தப்பதுமராகம்.
குன்றிமணி - குன்றிக்கொட்டை.
குன்றியலுகரம் - குற்றியலுகரம்.
குன்றிவேர் - அதிமதுரம்.
குன்று-குன்றென்னேவல், சதயநாள், சிறுமலை, மலை.
குன்றுகூப்பிடுதல்-எதிரொலி யெழக் கூப்பிடுதல்.
குன்றுதல்-குறைதல், கெடுதல், மெலிதல், வாடல்.
குன்றுவாடை - வடமேல்காற்று.
குன்றெடுத்தோன் - கிருஷ்ணன்.
குன்றெறிந்தோன் - குமரன்.
குன்றேந்தி - கிருஷ்ணன்.
குன்றை எல்லப்பன்-தொண்டை நாட்டிற் குன்றத்தூரிலே தமிழ்ப்புலவர்களுக்குக் கைசலியாமற் பொன்மாரி பொழிந்து புகழ் படைத்தவனுகிய ஒரு வேளாண்பிரபு.

கூ

கூ-ஓரெழுத்து;கூவென்னேவல்,பூமி, மலங்கழித்தல்.
கூகமானம் - மறைவு.
கூகம்-ஆந்தை, கூகை, மறைத்தசொல்.
கூகனம் - மாய்மாலம்.
கூகலம்-அசம்பியவார்த்தை, மறைத்த சொல்.
கூகாகம் - கழுகு.
கூகாரி - காகம்.
கூகு - எட்டுவயதுப்பெண்.
கூகுதன்-நல்லபாத்திரத்திற் கன்னிகா தானஞ் செய்பவன்.
கூகூ - அச்சப்பொருட்கு மோரிடைச் சொல்.
கூகை - ஒருபருந்து, கோட்டான்.
கூகைக்கட்டி } கூகைநீர்க்கட்டி } பொன்னுக்குவீங்கி
கூகைநீறு-ஒருமருந்து, காட்டெருமைப்பால்.
கூகைவீக்கம் - கூகைக்கட்டி.
கூக்குரல் - கூப்பிடுமொலி, முறையீடு.
கூசம் - முலை.
கூசல்-அச்சக்குறிப்பு, அச்சம், கூக்குரல், கூசுதல், நாணுதல்.
கூசனம்-உதாசினம், மறைத்தசொல்.
கூசி } கூசிகை } எழுதுகோல்.
கூசிதம் - புட்குரல்.
கூசுதல்-கண் பல் முதலிய கூசுதல், நாணுதல், பயப்படல்.
கூசுமாண்டபூதம்-ஒருவகைப்பூதம். அது முகத்தைப் பார்க்கப் பயங்காந் தோற்றல், அதிக கோபம், தாமத வார்த்தை அல்லது மிருவார்த்தை, நடந்தாலிரண்டு பீசங்களுங் கனத்துத் தளர்ந்து தொங்குதலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கூசுமாண்டம் - பூசினி.
கூச்சக்காரன் - சங்கோசமுள்ளவன்.
கூச்சத்தம் - கூக்குரல்.
கூச்சந்தெளிதல் - சங்கோசந்தீர்தல்.
கூச்சம்-அச்சம், கண் பல் முதலியவற்றின் கூச்சம், நாணம், வெட்கம்.

கூச்சலிடல்-இரைதல், கூக்குரலிடுதல்.
கூச்சல் - இரைச்சல், கூச்சல்.
கூச்சில் - சவரிலோத்திரம்.
கூச்சிதம், கூச்சிரம் } கடம்பு.
கூச்சு - கூர்ச்சு.
கூட - ஒருங்கு, சேர, தானும் (உ-ம்) எனக்குக் கூடப்பயம்.
கூடகம் - கொழு, வஞ்சனை.
கூடகாரகன், கூடகாரன் } கள்வன், பொய்யன், வஞ்சகன்.
கூடகிருதன் - சிவன்.
கூடசதுக்கம்-ஒரு பிரபந்தம், மிறைக்கவியினொன்று. அது ஈற்றடி ஏனை மூன்றடியுள்ளுஞ் சொற்புகாவெழுத்துக்கரந்து நிற்கப்பாடுவது.
கூடசன் - சோரபுத்திரன்.
கூடசாசனம் - கள்ளத்தீர்வை.
கூடசாட்சி - பொய்ச்சாட்சி.
கூடசாரன், கூடசாரி } அந்தரங்கத்தூதன்.
கூடசாலம் - ஒருநாகு.
கூடசான்மலி - பட்டுநூல்மரம்.
கூடசுவணம் - கலப்புப்பொன்.
கூடனை - மயிற்றோகைக்கண்.
கூடஸ்தம் - ஒரேருபமாய் யெக்கால மிருக்கும்பொருள்.
கூடத்தர் - ஆன்மாகத்தாவுடன் அயிக்கப்படுதல்.
கூடத்தன், கூடஸ்தன் } நிருவிகார சைதந்நியன் முதன்மையானவன்.
கூடபதம் - பாம்புப்புத்தி.
கூடபலகம் - குலை, யானைநோய்.
கூடபாஷிதம்-அந்தரங்க சம்பாஷனை.
கூடபாதம் - பாம்பு.
கூடபுருஷர் - ஒற்றர், சோரநாயகர்.
கூடபூர்வம் - ஹஸ்திசுரம்.
கூடமார்க்கம் - கள்ளவழி.
கூடமைதுனம் - காகம்.
கூடம்-அண்டம், அறை, இந்திரசாலம், இரகசியம், உறையதி, கருவி, எள், ஏகாந்தம், கலப்பை, கூட்டம், கொழு, தானியக்குவியல், கொல்லன் சம்மட்டி, கோனகபாஷாணம், திக்கு, புதையல், பொய்மலையினுச்சி, மறைவு, மாயம், யாழ்க்குற்றம் நான்கினொன்று. அது இசை நிரவாதது. தன் பகையாகிய ஆருநரம்பி னிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கல், யானைப்பந்தி, வஞ்சகம், வீடு.
கூடம்பில் - சுரை.
கூடயந்திரம் - பொறி, வலை.
கூடலர் - பகைவர்.
கூடலூர்-நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்று. இது சோழநாட்டி லுள்ளது.
கூடல்-அடுத்தல், இயலல், ஒருவிளையாட்டு, கழிமுகம், கூடுதல், சேர்தல், புணர்தல், மதுரை, மர முதலியவற்றின் செறிவு.
கூடல்வளைத்தல் - மகளிர் விளையாட்டில் ஒன்று.
கூடல்வாய் - ஒடுங்கிய கால்வாய்.
கூடவர்சை - தவளை.
கூடற்குறி-தலைமகன் பிரிந்துழித் தலைவி பார்க்குங்குறி.
கூடற்கோ - பாண்டியன்.
கூடற்பற்றை - காடு, வனம்.
கூடனாயகன்-மதுரையிலெழுந்த சோமசுந்தரக்கடவுள்.
கூடனாயகி-மதுரை மீனாட்சி.
கூடாகாரம் - மேல்வீடு.
கூடாக்கு - புகையிலை.
கூடாங்கம் - ஆமை.
கூடாதகூட்டம் - தீயோர்கூட்டு.
கூடாதது-இயலாதது, தகாதது, பொருந்தாதது.
கூடாமை-இயலாமை, பொருந்தாமை.
கூடாமையணி - ஓரலங்காரம். அது ஒரு காரியம் பெறத் தலையருமையுடையதாய்ச்சொல்லுதல்.
கூடாரக்கட்டில் - மூடுகட்டில்.
கூடாரப்பல்லக்கு - மூடுசிவிகை.
கூடாரமடித்தல்-கூடாரம்போடுதல்.
கூடாரம் - படாம்வீடு, பெருங்காயம், வண்டி, கௌசனை.
கூடாரவண்டில்-மேல்மூடிய வண்டில்.
கூடார் - பகைவர்.
கூடார்த்தபாஷிதம் - கட்டுக்கதை.
கூடாவியற்கை - ஓரலங்காரம்.
கூடாவியற்கைவிலக்கு - ஓரலங்காரம். அது கூடாததனைக் கூடுவதாகக்கூறி விலக்கல் (உ-ம்) சீதசந்தனந் தீக்காலும்.

கூடாவுவமை-ஒருபொருட்கு இயல்பாயில்லாதவற்றை யுள்ளதாகச் சொல்லியதனை ஒன்றற் குவமையாக்கியுரைப்பது (உ-ம்) காமுகர்க்குத் தண்மதியந் தீக்கால்வபோலும்.

கூடாவொழுக்கம் - ஒழுங்கற்ற செய்கை, கள்ளவேடம்.

கூடியது-இயன்றது, ஏற்றது, கிடைத்தது, சேர்ந்தது.

கூடிலி-தசைதின்போன், மன்மதன்.

கூடு-அடைப்பு, உடம்பு, உறை, கூடென்னேவல், பறவைக்கூடு.

கூடுங்கழுந்தும் - துளையுங்கழுந்தும்.

கூடுதல் - இயலுதல், ஏற்றிருத்தல், கிடைத்தல், சேருதல், புணர்தல்.

கூடுமியற்கை - ஓரலங்காரம்.

கூடுமியற்கைவிலக்கு-ஓரலங்காரம். அது கூடுவதனைக் கூடுவதாகக் கூறி விலக்குவது (உ-ம்) கைவளைசோர்ந்தாவி கரைந்துருகுவர், மெய்வெதும்பப் பூத்தகையுஞ் செங்காந்தள்போக்கொலிநீர் ஞாலத்துத் தீத்தகையார்க் கீதேசெயல்.

கூடுவிட்டுக்கூடுபாய்தல்-பரகாயப் பிரவேசம், ஒருடம்பைவிட் டான்மாமற்றேருடம்பிற் புகுதல்.

கூடுவிழுதல்-ஆணிச்சிவிழுதல், சாதல், வியாதியின் வேர்கழலுதல்.

கூடுவைத்தல் - சிலந்தியிணிச்சிதல், காய்ந்துசவ்வுபற்றல், பட்சிகள் கூடுகட்டுதல், வியாதி வேர்வைத்துப்பலத்தல்.

கூடை - கூத்தின்விகற்பம், கோரியை, பூக்கூடை முதலியன.

கூடைப்பாடல்-சொற்செறிவும் இசைச்செறிவுமுடையது, இயக்கம்நான்கி [னுளொன்று.

கூடையன்-பருத்தவன்

கூடோற்பன்னன் - சோரபுத்திரன்.

கூட்டத்துக்குழைதல் - பெருந்திணைத்துறைகளுளொன்று. அது இட்டமாலையினையுடைய அகலத்தை நீங்குதல் பொறுதபறித்தழையாற் சிறந்த அல்குலினை யுடையாள் புணர்ச்சியிடத்து நெகிழ்வது.

கூட்டம் - இனம், சங்கம், சிநேகம், திரள், தொகுதி, பிண்ணாக்கு, புணர்ச்சி, போர், மிகுதி, மேவினர்.

கூஷ்டாரம் - வண்டில்.

கூட்டரவு - கூட்டம்.

கூட்டரிசி - கறிக்கரைக்குமரிசி.

கூட்டல்-அதிகப்படுத்தல், சேர்த்தல்.

கூட்டவணி-ஓரலங்காரம். அது பகையில்லாமையானொருகாலத்துக் கூடத்தக்க பொருளுக்குக் கூட்டத்தைச்சொல்லுதல், பல காரணங்கள் கூடுதலாலோர்காரியம் பிறத்தலுமாம்.

கூட்டற்றவன் - ஆசாரங் குலைந்தவன் கூடாதவன்.

கூட்டாகுழப்பம் - தாறுமாறு.

கூட்டாளி-கூடிநடக்கிறவன், தோழன், பங்காளி, சிநேகிதன்.

கூட்டிமுடித்தல்- தெய்வங்கூட்டிநிறைவேற்றல்

கூட்டியம் - சுவர்.

கூட்டு-உறவு, கலப்பு, கறிக்கூட்டு, கூட்டென்னேவல், சம்பந்தம், சேர்மானம்.

கூட்டுக்கச்சவடம்-கூட்டுவியாபாரம்.

கூட்டுகணக்கு - எண்கூட்டுதல்.

கூட்டுக்கறி-கூட்டமுது, குழம்புக்கறி.

கூட்டுக்கால் - இருகாலையு மோரடியில் மிதித்துநிற்றல்.

கூட்டுணல் - கூட்டியுண்ணல்.

கூட்டுதல் - அதிகப்படுதல், சேர்த்தல், சேர்த்துண்டு பண்ணல், பலவினத்தை யொன்றாக்கல்.

கூட்டுத்தட்டு - ஒரு பாத்திரம்.

கூட்டுத்தொழில்-கூடித்தொழி னடத்துதல், வசியவித்தை.

கூட்டுப்பயிர் - கூடிப்பயிரிடுதல்.

கூட்டுப்பல்லக்கு - ஒருவிதப் பல்லக்கு.

கூட்டுமூட்டு - ஒன்றுபடுத்தல், கோள், சேர்மானமாக்கல்.

கூட்டுமொழி - கூட்டுச்சொல்.

கூட்டுவர்த்தகம் - கூட்டுவியாபாரம்.

கூட்டுறவு - இணைந்தவுறவு.

கூட்டெழுத்து தொடரெழுத்து, பலவெழுத்தொலி யொன்றாயிருப்பது.

கூஷ்மாண்டம்
கூஸ்மாண்டம் } நீற்றுப்பூசணி.

கூணி - கூனி.

கூணிகை - வீணையினொருறுப்பு.

கூண்டுகூடு - பறவைக்கூடு.

கூண்டுதல் - கூடுதல்.

கூன்மாண்டம் - நீற்றுப்பூசினி.
கூதம் - குதம்.
கூதரன் - தூரஸ்திரீ முயங்கிப் பெற்ற பிள்ளை.
கூதலோடுதல் - குளிர்தல்.
கூதல் - குளிர்.
கூதல்விரைத்தல் - கூதலோடுதல்.
கூதளம் - கூதாளிச்செடி, தூதுளை வெள்ளரி.
கூதறை - இழிந்தது, கிழியல், கூட்டற்றது.
கூதறகாய்தல் - குளிர்காய்தல்.
கூதனம் - மறைத்தசொல்.
கூதாரி - வெள்ளரி.
கூதாளம் } கூதளம்.
கூதாளி }
கூதிர் - ஐப்பசி கார்த்திகையின் பருவம், காற்று, கூதல், பனிக்காற்று.
கூதிர்காலம் - குளிர்காலம்.
கூதிர்காலவுரிமை - கூதிர்காற்று வீசலும், குருகு அன்னம் கொக்குசகோரம் சங்கு நண்டுநத்தை இவை மகிழ்தலும், நீர்தெளிதலும், மீனினஞ்செனித்தலும், மேகஞ்சூல் கொள்ளலும், பாரிசாதம் சிறுசண்பகம் செம்பரத்தை சந்தனம் நாணல் இவை மலர்தலும், பல பறவை விலங்குமக்கள் வருந்தலுமாம்.
கூதிர்காற்று - குளிர்காற்று.
கூதிர்ப்பருவம் - குளிர்காலம்.
கூதிர்ப்பாசறை - வாகைத் திணைத்துறைகளுளொன்று. அது கூற்றையொத்தவனுடைய அகன்றபாசறையிடத்துக் கூதிர்க்காலத்து மேகமுறையைக் கொடுப்பப் பிரியவாற்றுமை மேன்மேன் மிகவுங் கூரிய எஃகினை யுடையான் கருணையையொழிவது.
கூதை - காற்று, குளிர்காற்று.
கூத்தநூல் - ஒரு நாடகத்தமிழ்நூல்.
கூத்தராற்றுப்படை - பாடாண்டிணைத்துறைகளுளொன்று. அது தலைவனைக்கண்டுதுதித்து மீண்ட விரப்பாளன் கூத்தாடுமவரை வழியிற்செலுத்துவது.
கூத்தரிசி - குத்திவிற்குமரிசி.
கூத்தர் - நாடகர்.
கூத்தன் - உயிர், கடவுள், சிவன், திருசி நாடகன் ஒருபுலவன்.
கூத்தன்குதம்பை - மூக்கொற்றிப் பூண்டு.
கூத்தாடி - கூத்தாடுவோன்.
கூத்தாடுதல் - தோரத்தமாடுதல், நடனம்பண்ணுதல், பெருமைகாட்டல்.
கூத்தாட்டு - தோரத்தம், நடனம்.
கூத்தி } நாடகக்கணிகை, வேசி, வைப்பாட்டி.
கூத்திச்சி }
கூத்து - ஆடம்பரம், நடனம், நாடகம், விளையாட்டு.
கூத்துகந்தோன் - சிவன்.
கூத்துக்களரி - நடனசாலை.
கூத்துப்பாட்டு - நாடகக்கவி.
கூத்துவிடுதல் - ஏவிவிடுதல், கூத்தாடுவோனைக் களரியில்விடல்.
கூந்தலறுகு - ஓரறுகு.
கூந்தலாற்றுதல் - மயிராற்றுதல்.
கூந்தல் - கமுகோலை, குதிரைமயிர், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, கூந்தற்றெங்கு, பனையோலை, பெண்மயிர், மயிர், மயிற்றோகை, யானைக்கழுத்தடிமயிர்.
கூந்தற்கமுகு - ஒருகமுகு.
கூந்தற்பனை - ஒருமரம்.
கூந்தற்பாசி - ஒரு நீர்ப்பூடு.
கூந்தற்பூகம் - கூந்தற்கமுகு.
கூந்தாலம் } குந்தாலி.
கூந்தாலி }
கூபகம் - எண்ணெய்த்துருத்தி, கிணறு, சிற்றூற்றுக்குழி, பாடை, பாய்மரம்.
கூபம் - கிணறு.
கூபாங்கம் - உரோமப்பொடிப்பு.
கூபரம் - முழங்கை.
கூபரி - தேர்.
கூபாரம் - கடல்.
கூபிகை - நீரிடைப்பட்ட மலை முதலியன.
கூப்பரம் - முழங்கை.
கூப்பல் - கூப்புதல்.
கூப்பாடு - கூப்பிடு.
கூப்பிடல் } அழைத்தல்.
கூப்பிடுதல் }
கூப்பீடு - குரோசம், கூப்பிடல்.
கூப்பீடுதூரம் - கூப்பிட்டசத்தங் கேட்குமெல்லை.
கூப்புதல் - குவியச்செய்தல், சுருக்குதல்.
கூமம் - நீர்நிலை.
கூமரை - கோங்குமரம்.

கூமா - ஒரு மரம்.
கூம்பல்-ஒடுக்கல், குமிழமரம், குவிதல்.
கூம்பு - கூம்பென்னேவல், சேறு, தேர்க் கொடிஞ்சி, பாய்மரம்.
கூம்புதல் - குவிதல், குறுவுதல், சுருங்குதல்.
கூரணம் - உத்தியோகம், கொடுமை, கோடகசாலை, பாகல், பொறுமை.
கூரம் - கொடுமை, கோடகசாலை, பாகல், பொறுமை, முயற்சி.
கூரரம் - முழங்கை.
கூரல்-ஒருமீன்,புள்ளிறகு,பெண்மயிர்.
கூரன் - கூர்நெல், நாய்.
கூராம்பாய்ச்சி } சலாகைப்பாரை.
கூராம்பிளாச்சு }
கூரான் - ஒருபூடு, குல்லான்.
கூரியது - கூர்மையுள்ளது.
கூரியம் - கூர்மை.
கூரிலவணம் - அமரியுப்பு.
கூரை - சிற்றில், வீட்டின் மேற்புறம்.
கூரைதட்டல் - ஆண்பிள்ளைப் பிறப்புக்குச் செய்யும் ஒரு மகிழ்ச்சிக்கு.
கூர் - இலைக்காம்பு, காரம், கூரென்னேவல், கூர்மை, நனி, மிகுதி.
கூர்கேவு - வெண்கடுகு.
கூர்க்கதிர் - ஒரு கருவி.
கூர்கறுப்பன் - ஒரு நெல்.
கூர்ங்கோடு - கூரியகொம்பு.
கூர்ச்சகம் - தந்ததாவனக்குச்சி.
கூர்ச்சகன் - தையற்காரன்.
கூர்ச்சசேகரம் - தெங்கு.
கூர்ச்சம் - எத்து, தருப்பை, தலை, தாடி, புருவமத்தி, மாய்மாலம், வயிர்ப்பு, வீண் புகழ்ச்சி.
கூர்ச்சரம் - தேயமைம்பத்தாறினொன்று, இது மேலைச் சமுத்திரத்திலுள்ளது.
கூர்ச்சரர்-பஞ்சதிராவிடருளொருவர்.
கூர்ச்சரி - ஓரிராகம்.
கூர்ச்சிகை - ஊசி, எழுதுகோல், பூவரும்பு.
கூர்ச்சு - கூருள்ளதடி.
கூர்ச்சை-ஆசநம்,குலஸ்திரி, தருப்பை.
கூர்தல் - ஆராய்தல், கூருதல், நனுகுதல், மிகுதல்.
கூர்த்தம்-விளையாட்டு.
கூர்த்தல் - உவர்த்தல், மிகுத்தல்.
கூர்த்தவி-சித்திரைமாதபௌர்ணிமை.
கூர்த்தனம் - பொழுதுபோக்கு.
கூர்த்திகை - ஆயுதப்பொது.
கூர்ந்தயுத்தி - உரியவிவேகம்.
கூர்ப்பது - உள்ளது, சிறத்தல், உறைப்பு, கூர்மை, மிகுதி.
கூர்ப்பம் - புருவமத்தி.
கூர்ப்பரம் - முழங்கை.
கூர்ப்பருவம் - முழங்கை, முழந்தாள்.
கூர்ப்பாசகம் - முலைக்கச்சு.
கூர்ப்பாசம் - இரவிக்கை.
கூர்மபிரிட்டகம் } ஆமையோடு.
கூர்மபிரிட்டம் }
கூர்மம் - ஆமை, திருமாலவதாரத்தொன்று, பதினெண்புராணத்தொன்று அது கூர்மரூபம்பெற்ற இந்திரத்யுமனனுக்குச் சொன்னது. அது ஆறாயிரக்கிரந்தமுடையது வர்ணாச்சிர தர்மங்கள் சிவமகாத்மியம் முதலியன விரித்துரைப்பது.
கூர்மராசன் - ஆதிகூர்மன்.
கூர்மன் - உரோமம் புளகிப்பித்திமைப்பிக்கும் வாயு.
கூர்மாண்டர் - ஒருருத்திரர்.
கூர்மவதாரம்-அமிர்தமதனத்தின் பொருட்டு மந்தர மலையைத் தாங்குமாறு விஷ்ணுவெடுத்த ஆமைவடிவு.
கூர்முள் - கூரியதோட்டி.
கூர்மை-அறிவு,கல்லுப்பு,கூர்,நன்மை, நனி.
கூர்மைக்கரிவான் - சவுக்காரம்.
கூர்மைபார்த்தல் - நன்மைபார்த்தல்.
கூலகம் - கறையான்புற்று, குவியல்.
கூலங்கஷம் - கடல்.
கூலங்கஷை - நதி.
கூலம் - அதிட்டம், ஆற்றங்கரை, கடற்கரை, கடைவீதி, கரை, காராமணி, குவியல், சிறுவரும்பு, நீர்நிலை, பசு, படையணி, பலபண்டம், பாகல், மந்தி, மரைமுசு, விலங்கின்வால்.
கூலவதி - யாறு.
கூலி - சம்பளம், வேலைகண்டு கொடுப்பது.
கூலிக்காரன் - வேலையாள்.
கூலிப்பாடு - கூலிப்பிழைப்பு.
கூவத்துநாரணன் - தொண்டைநாட்டிலுள்ள கூவமென்னுமூரில் விளங்கிய ஒரு தட்டான். இவன் பெருங்கொடையாளனாதலின் அவனூரா

கிய கூவமும்தியாகசமுத்திரமெனப் பெயர்பெற்றது.ஒருஏழை வலைஞன் அவ்வூர்ச்சிற்றேரியில் தூண்டிலிட்டு மீன்பிடித்துக் காலக்கழிவு செய்து வந்தான். அவன் வறுமை நோயைத் தீர்க்கவெண்ணிய நாராயணன் பொன்னினாலொரு மீன்செய்து அதனைக் கொண்டுபோய் அவ்வேரியிலிட்டு வலைஞன் தூண்டிலி லகப்படும்படி செய்தான்.இவன் தமிழ்ப்புலவர்களுக்குஞ் சலியாது கொடுத்த பிரபு.

கூவனூல் - கீழ்நீர்க்குறியறி சாத்திரம்.

கூவம் - கிணறு, கூவைநீறு,சிவத்தலங் [களிலொன்று.

கூவரம் - ஏர்க்கால்.

கூவரன் - கூனன்.

கூவரி - பண்டி.

கூவலம் - பலநிறமுள்ள ஆம்பற்பூ.

கூவலர் - கூவனூல்வல்லோர்.

கூவல் - அழைத்தல், கிணறு, கொல் லூதல், பள்ளம்.

கூவியர் - மடையர், அப்பவாணிகர்.

கூவிரம் - தேரிடக்கியம், தேர், தேர்க் கொடிஞ்சி, வில்வமரம்.

கூவிரி - தேர்.

கூவிளங்கனி - நேர்நிரை நிரையசைச் சீர்க்கு வாய்பாடு, வில்வப்பழம்.

கூவிளங்காய் - நேர்நிரை நேரசைச்சீர்க்கு வாய்பாடு.

கூவிளநறுநிழல்-நேர்நிரை நிரை நிரையசைச் சீர்க்கு வாய்பாடு.

கூவிளநறும்பூ-நேர்நிரைநிரை நேரசைச்சீர்க்கு வாய்பாடு.

கூவிளந்தண்ணிழல் - நேர்நிரை நேர் நிரையசைச்சீர்க்கு வாய்பாடு.

கூவிளந்தண்பூ - நேர் நிரை நேர் நேரசைச் சீர்க்கு வாய்பாடு-

கூவிளம் - கோளக பாஷாணம், நேர் நிரை யசைச்சீர்க்கு வாய்பாடு, வில் [வம்.

கூவிளி - அழைப்பு.

கூவிளித்தல் - சாப்பிடல். [மரம்.

கூவிளை - கோளகபாஷாணம், வில்வ

கூவுதல் - அழைத்தல், சேவல் முத

கூவுவான் - சேவல். [லிய கூவுதல்.

கூவெனல் - அழைத்தல், ஆரம்பித்தல், கூவென்குதல்.

கூவை - கூகை, ஒருகிழங்கு.

கூழக்கை - குறட்கை, குறைந்தகை.

கூழம் - எள்ளு.

கூழங்கைத்தம்பிரான் - ஒரு பெரும் [புலவன்.

கூழன் ஒரு பலா.

கூழா - நறுவிலிமரம்.

கூழாங்கல் - ஒரு கல்.

கூழாமட்டி - அறிவீனர், மந்தையன்.

கூழாமணி - கூழ்முன்னை.

கூழாம்பாணி - கரையல்.

கூழான் - கண்டகிக்கல்.

கூழுக்குப்பாடி - அங்கிடுதத்தி,ஔவை.

கூழை - இறகு, கடையின்மை,கவியுறுப்பினொன்று, சேறு, நடு, நீளங்குறைந்தது, படைவகுப்பு, பாம்பு, பிற்படை, பெண்மயிர், பொன், மந்தம், மயிற்றோகை.

கூழைக்கடா - ஒருகொக்கு. [ப்பு.

கூழைத்தொடை - செய்யுளிறுதியொரு

கூழைமுரண் - கடைச்சீரொழிந்த மற்றெல்லாச்சீர்க்கண்ணும் முரண்வரத் தொடுப்பது.

கூழையளபெடை - கடைச்சொல்லொழிந்த மற்றெல்லாவற்றின்கண்ணும் அளபெடைவரத் தொடுப்பது.

கூழையன் - மடயசாம்பிராணி.

கூழையியைபு - முதற்சீரொழிந்த மற்றைச் சீர்க்கணியைபுவரத் தொடுப்பது.

கூழையெதுகை - கடைச்சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணு மெதுகை வரத்தொடுப்பது.

கூழ் - உணவு, கஷாயம், சோறு, நறுவிலி, பயிர், பொன்.

கூழ்முட்டை - கருக்கெட்டமுட்டை.

கூழ்முன்னை - ஒருகீரை.

கூழ்வரகு - கேழ்வரகு.

கூளம் - கஞ்சல், குப்பை, திப்பிலி.

கூளி - உறவு, எருது, குறள், குற்றம், சுற்றம், தொகுதி, பூதம், பெருங்கழுகு, பேய், பொலியெருது, வலிமை.

கூளியர் - படைவீரர், வேடர்.

கூறல் - கூறுதல், நாகபாஷாணம்.

கூறியதுகூறல் - நூற்குற்றம்பத்தில்

கூறியான்-சிவியார் தலைவன். [ஒன்று.

கூறு - அறிவிக்கை, எள்ளு, காரணம், கூறென்னேவல், தன்மை, பங்கு, பிரிவு, பாதி, வகை.

கூறுகொள்ளுதல் - அமர்த்துதல்.

கூறுதல்-சொல்லுதல், விளக்கிச்சொல்லுதல், விற்றல்.
கூறுபாடு - கூறு, பகுதி, பிரிவு.
கூறை-சீலை, மணவாட்டியுடுக்கும் புதப்புடவை.
கூறைப்பாய் - தோணிப்பாய்.
கூறோலை - கூற்றோலை.
கூற்சரம் - கூர்ச்சரம், தன்மை.
கூற்றம் கொடியசத்துரு, சொல், நமன்.
கூற்றன் - கொடியசத்துரு, நமன்.
கூற்று - காலன், சொல், நமன்.
கூற்றுதைத்தோன் - சிவன்.
கூற்றுவநாயனார் - களந்தை யென்னுமூரிலே குறுநிலமன்னர் குலத்தில் விளங்கிய ஒரு சிவபக்தர். இவர் பஞ்சாக்ஷரத்தை விதிப்படி ஜபித்துப் பெருஞ்செல்வமும், பராக்கிரமமும் பெற்றவர்.
கூற்றுவன்-கொடியசத்துரு, நமன்.
கூற்றோலை-பக்குபிரித்தெழுதின ஓலை.
கூனல்-கோணன், சங்கு, நத்தை, பிறைச்சந்திரன், வளைதல், வளைவு.
கூனன்-ஆமை, கூனுள்ளோன், சங்கு, நத்தை.
கூனன்முதுகு - ஆமையோடு.
கூனி-குசினி, கூனுள்ளோன், கோணியது, சிற்றால், மந்தரை, மாதவிதோழி, வசவி.
கூனிகுயம், கூனிரும்பு - அரிவாள்.
கூனுதல்-ஒடுங்குதல், வளைதல்.
கூனை - கருப்பஞ்சாறடுகூன், கொடிப்பட்டை, வேள்விக்குண்டம்.
கூன்-ஆந்தை, உறாம்புக்குறையெட்டினொன்று, கூனன், கூனென்னேவல், நத்தை, வளைவு, வெண்பாமுதலிய செய்யுட்களின் முதலடியினொரேவிடத்துப் பொருள்படத் தனித்து நிற்பது.
கூன்கிடை - யாக்கைக் குற்றமைந்தினொன்று. அது வளைந்துகொண்டு கிடத்தல்.
கூன்பாண்டியன்-ஒருபாண்டியராசன். இவன் சத்துரு சாதன பாண்டியன் மகன். இவன் சமணசமயப் பிரவேசஞ்செய்து அச்சமயத்தையே வளர்த்து வருநாளில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அங்கெழுந்தருள அங்கிருந்த சமணாசாரியர்கள் அவர்மேலருளையுடையவர்களாகி அவரெழுந்தருளியிருந்த மடத்தில் நெருப்பிட நாயனார் அத்தீயை அரசன்மேலே விட அது கொடிய சுரமாகிச் சென்று அவன் தேகத்தை வருத்திற்று. சமணாசாரியர்கள் தாமறிந்த மந்திர சாமர்த்தியத்தைக்கொண்டு அந்நோயைத்தீர்க்க வெத்தனித்தபோது அது தணியாதுமேன்மேலோங்கி அதிகரித்தது. அதுகண்ட பாண்டியன் நாயனாரை அழைத்து அவரால் தன் நோய் நீரப்பெற்றுச் சைவ சமயப் பிரவேசஞ்செய்தான். இப்பாண்டியன் காலத்திலேயே சமணசமயம் பாண்டிநாட்டை விட்டுக் குடிபோயது. இரண்டாயிரத் தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னிருந்த சங்கராசாரியர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரைத் துதித்தலால் இவன் காலம் ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதாதல் வேண்டும்.
கூன்முதுகு - ஆமையோடு.

கெ

கெகராசி - பூலா.
கெக்கட்டம் - அட்டகாசம், மிகச்சிரித்தல்.
கெக்கரித்தல்-கடினிப்பு, கொக்கரித்தல்.
கெக்கலி - மகிழ்வு.
கெக்கலித்தல் - மகிழ்தல்.
கெக்களம் - கெக்கட்டம்.
கெக்களித்தல்-தோல்விகாட்டல், நெளிதல், வளைதல்.
கெக்களிப்பு - நெளிவு.
கெசகன்னம்-யானை செவியையசைப்பதுபோற் காதையசைக்கும்வித்தை.
கெசகன்னி - வெருகு.
கெசமாமுட்டி - எட்டி.
கெசம்-இரண்டுமுழ அளவு, யானை.
கெசாசனை - அரசு.
கெசாசைகா - கையாந்தகரை.

கெசானனேசுவரம்-சிவத்தலங்க ளாயி ரத்தெட்டனு ளொன்று.
கெச்சங்கெட்டவன்-நாணமில்லோன்.
கெச்சம் - சிறுசதங்கை, முல்லை.
கெச்சிதநடை - உல்லாசநடை
கெச்சிதம் - கெற்சிதம்.
கெச்சுக்கெச்செனல்-ஒலிக்குறிப்பு, வருத்தல்.
கெச்சை - சிறுசதங்கை.
கெச்சைநடை }
கெச்சைமிதி } உச்சாகமானநடை.
கெஞ்சுதல் - மன்றாடுதல்.
கெடலணங்கு - மூதேவி.
கெடவரல் - மகளிர்விளையாட்டு.
கெடாரம் - கடாரம், கடியாரம்.
கெடி-அதிபத்தியம்,ஊர், கீர்த்தி,கெடி யென்னேவல், அருக்கம், பயம்.
கெடிஸ்தலம்-அதிகாரவிசாரணை கதித் தவிடம், இராஜதானி.
கெடித்தல் - பயப்படல்.
கெடிமண்டுதல் - அஞ்சுதல்.
கெடியன்-அஞ்சப்பண்ணுவோன்,அஞ் சாதவன்,சமர்த்தன்,சுறுக்கன்,வீரன்.
கெடிலம் - ஆழமான இடை, ஒடுங்கிய பாதை, குகை, கூடலூருக் கருகி லோடும் நதி.
கெடு - கெடுவென்னேவல், கேடு, தவ ணை, தறுவாய்.
கெடுகுறி - கெடுதலையான சமுசாரம்.
கெடுதலை - அழிவு, இழிவு, கேடு.
கெடுதல்-சாதல், சாய்தல், பதனழிதல், பழுதாதல்.
கெடுதல்விகாரம் - எழுத்துக்கெடும் வி காரம்.
கெடுதி-அழிவு, ஆபத்து, கெட்டுப்போ னபொருள், கேடு, நட்டம்.
கெடுத்தல்-அழித்தல், கெடச்செய்தல்.
கெடுநினைவு }
கெடுபுத்தி } கெடத்தக்கபுத்தி.
கெடுப்பினை - வங்கமணல்.
கெடுமதி - கேடானபுத்தி.
கெடும்பு - அருந்தல், கெடுதலை.
கெடுவைத்தல்-கெடுக்கச் சொல்லுதல்.
கெட்டகேடு - அதிகக்கேடு.
கெட்டம் - தாடி.
கெட்டாகெட்டி }
கெட்டாரகெட்டி } மகாகெட்டி,சாமா ர்த்தியம், பல வான்.
கெட்டி-உச்சிதம், உலோபகுணம், உறு தி, கெட்டியென்னேவல், சாமர்த் தியம், கேர்த்தி.
கெட்டிக்காரன் - சமர்த்தன்.
கெட்டித்தல் - கெட்டிபண்ணுதல்.
கெட்டித்தனம் - சமர்த்து, திறம், திராணி.
கெட்டிபண்ணுதல்-பலப்படுத்தல்.
கெட்டிபத்திரம் - சாக்கிரதையான வி சாரணை.
கெட்டு - பக்கக்கிளை.
கெட்டுவிடுதல் }
கெட்டுவைத்தல் } கவர்விடுதல்.
கெணம் - சமூலம்.
கெண்டம் - கண்டம்.
கெண்டன் - மிண்டன்.
கெண்டி:கெண்டிகை, கெண்டியென் னேவல், தறித்தல், தறிவாய்.
கெண்டிகை - கமண்டலம்.
கெண்டித்தல் - கண்டித்தல்.
கெண்டு - கெண்டை.
கெண்டூரம் - ஒருமருந்து.
கெண்டை-கயல், சரிகைத்தலைப்பு, சே ல் முழந்தாளின் கீழ்க்கால்.
கெண்டைக்கட்டி - ஒருவகைநோய்.
கெண்டைக்கால் - முழந்தாளின்கீழ்.
கெண்டைப்பீலி - மாதர் காலணியில் ஒன்று.
கெண்டையேறல் }
கெண்டைவாதம் } ஒருவித வாயு நோய்.
கெதம் - கதம்.
கெதி - கதி.
கெத்திடல் }
கெத்திடுதல் } சில்லபொல்லமாய்வெ ட்டல்.
கெத்து - உபாயம், பலகொத்து.
கெத்துகெத்தெனல் - அச்சக்குறிப்பு, பலகத்துக்கத்துதல்.
கெத்துதல் - கண்டம்போடுதல்.
கெத்துவம் பக்கல், போதல்.
கெந்தகபூமி - காங்கையானபூமி.
கெந்தகம் - கந்தகம், கேரகண்டபாஷா ணம், நாய்வேளை.
கெந்தகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கெந்தபந்தம் - கௌரிபாஷாணம்.
கெந்தம் - கந்தம்.
கெந்தனம் - கோடகசாலை.
கெந்தி - கந்தகம், பொன்னரிமிளை.

கெந்திகம் - பாம்புக்கொல்லி.
கெந்திபரம் - ஆடுதின்னாப்பாலை.
கெந்தியுப்பு - கெந்தகலவணம்.
கெந்திவாருணி - பேய்த்துமிட்டி.
கெந்துதல் - புழு முதலிய நெளிதல்.
கெபத்தம் - கிரணம்.
கெபி - குகை, குழி, வளை.
கெப்பிதம் - கிந்தை.
கெமனம் - கமனம்.
கெமிளித்தல் - கெம்பளித்தல்.
கெமிளிப்பு - சந்தோஷம்.
கெம்பத்து - இடம்பம்.
கெம்பரை - கூடை, கெற்கூடை.
கெம்பல் - ஆரவாரம், எழும்பல்.
கெம்பளித்தல் - சந்தோஷித்தல்.
கெம்பளிப்பு - ஆடம்பரம், சந்தோஷம்.
கெம்பீரம் - ஆழம், பரிமளிப்பு, மேன்
மை, வீரம்.
கெம்பீரித்தல் - வீரங்காட்டுதல்.
கெம்பு - ஒரிரத்தினக்கல், கெம்பென்
னேவல்.
கெம்புதல் - கிளர்தல், கொந்தளித்தல்.
கெய் - ஒருமீன்.
கெரடி - சிலம்பம்.
கெரிட்டம் - கோவம்.
கெரித்தல் - கரித்தல்.
கெருடன் - கருடன்.
கெருடி - கருடி.
கெருமத்தம் - பரவை.
கெர்வம் - கர்வம், அகங்காரம்.
கெலத்தம் - பட்சித்தல்.
கெலி } ஆசை, கெலியென்னேவல்,
கெலிசு } பயம், பெருவயிறு.
கெலிகெட்டவன் - அங்கலாய்த்தவன்.
கெலித்தல் - அஞ்சுதல், ஆசைப்படல்,
வெல்லல்.
கெலிப்பு - அச்சம், ஆசை, வெற்றி.
கெல்லிக்கம்பு - கூராம்பாய்ச்சி.
கெல்லுதல் - கிண்டல், தோண்டல்.
கெவரி - வெள்ளைக்காக்கணம்.
கெவுடு - அட்சரக்கூடு.
கெவுரா - அளசி. [சம்.
கெவுரிசங்கம் - இரட்டையுருத்திராட்
கெவுரிபாஷாணம் - ஒரு மருந்து.
கெவுளி - சிவந்தசங்கு, சிவந்தமுகிழுள்
ள தேங்காய், பல்லி. [கு.
கெவுளிச்செவ்விளை - ஒருவகைத் தெங்
கெவுனி - பட்டணவாசல்.
கெவ்வியம் - நாய்வேளை.
கெழீஇய - பொருந்திய.
கெழு - இடைச்சொல், (உ-ம்) வேல்கெ
ழுதடக்கை, சேர்த்திகை, நிறம், பிர
கெழுதகை } உரிமை. [காசம்.
கெழுதகைமை }
கெழுதல் - கெழுமுதல்.
கெழுமல் - அமைதல், கற்றல், நிறைதல்,
மூளைத்தல்.
கெழுமுதல் - கற்றல், கூடுதல், நிறைதல்
பொருந்துதல், மூளைத்தல்.
கெழுமை - கெழுமுதல், நிறம், பிரகா
சம், வளமை.
கெழுவல் - நிறைதல்.
கெழுவுதல் - நிறைதல், பெற்றுக்கொள்
ளுதல், பொருந்தல்.
கெளிசு - காமாலை, வீக்கம்.
கெளிசுபற்றுதல் - பருவயிறுபற்றல்.
கெளிதம் - கீழ்விழல், பட்சித்தல், பெரு
கெளித்தல் - நெளிதல். [கல்.
கெளிப்பு - நெளிவு.
கெளிர்ச்சல்லியம் - மீனெலும்பு.
கெளிறு - ஒருமீன்.
கெறு } ஆங்காரம்.
கெறுவம் }
கெறுவி - ஆங்காரி, கெட்டிக்காரன்.
கெறுவித்தல் - கறுவித்தல்.
கெற்சிதம் - உக்கிராரம்பம், முழக்கம்.
கெற்சித்தல் - உக்கிரமாயார்த்தல்.
கெர்ச்சிப்பு - முழக்கம்.
கெர்ப்பக்குவளை - கருப்பை.
கெர்ப்பத்தலைவன் - வீரம்.
கெர்ப்பத்தி - சாலக்கிராமம்.
கெர்ப்பம் - கருப்பம். [ண்ணும் வாயு.
கெர்ப்பவாயு - கருப்ப முண்டாகாமற் ப
கெர்ப்பவிப்புருதி - ஒருவிப்புருதி.
கெர்ப்பனி - கருப்பந்தரித்தவள்.
கெர்ப்பாதானம் - கருப்பந்தரித்த நாலா
மாதஞ்செய்யும் ஒரு சடங்கு.
கெர்ப்பித்தல் - கருப்பந்தரித்தல்.
கெர்ப்பிரித்தல் - சுவாலித்தல்.
கெர்ப்பு - தத்துவம், திராணி.
கெர்ப்போட்டம் - மார்கழிமாதத்தில் அவ்
வம்மாதத்தைப்பற்றி முகிலோடுதல்.

கே

கேகடன் - சங்கடன் புத்திரன்.
கேகம் - மயிற்குரல், வீடு.
கேகயம் - கெவுரிபாஷாணம், கேகயப்புள், தேசமைம்பத்தாறி னொன்று. இது சிபிபுத்திரனாகிய, கேகயனது தேசமாதலின் கேகய மெனப்பட்டது. இது விபாசநதிக்கு வாயுதிக்கிலுள்ளது. கிரிவிரசம் இதனிராசதானி, மயில்.
கேகயன் - கைகேயன்.
கேகயி-தசரதன்மனைவி, சிபிசக்கரவர்த்தி புத்திரர் நால்வரி லொருவன்.
கேகரம் - கடைக்கண்பார்வை.
கேகரன் - ஒரக்கண்ணன்.
கேகலன் - கூத்தாடி, நாடரி.
கேகா - மயிற்குரல்.
கேகாபலம் - மயில்.
கேகி - மயில்.
கேகுந்தகம், கேகுந்தம் - கொழுக்கட்டை.
கேகை - மயிற்குரல்.
கேகையி - கைகேயி.
கேசகலாபம் - மயிர்முடி.
கேசகன் - நாவிதன்.
கேசகாரம்-ஒருவகைக்கரும்பு, குதிரைதேய்க்குமோரிரும்புக்கருவி.
கேசசிதன் - நாவிதன்.
கேசதம் - கையாந்தகரை.
கேசபத்தி - மயிர்வகிர்.
கேசபந்தம் - பூமுடித்தகொண்டை.
கேசபங்கி - மயிரொழுங்கு, மயிர்முடி.
கேசபாசி - குடுமி.
கேசபாரம் - பெண்மயிர்.
கேசமார்ச்சகம், கேசமார்ச்சனம் - சீப்பு.
கேசமுட்டி - வேம்பு.
கேசம் - குதிரைமயிர், துவக்கம், மயிர்பொது.
கேசரம் - அப்பிரகம், சிங்கம், பூங்கூந்தல், பூந்தாது, பெருங்காயம், மகிழமரம், மயிர், வண்டு.
கேசரர் வித்தியாதரர்.
கேசரம் - வரசகுங்குமம்.
கேசரி - அங்கயோகாதனத்தொன்று; அது பீசத்தின்கீழ்ச் சிவனியிடத்துப்பரட்டைவைத்திட முழங்கையை முழந்தாளில்வைத் தங்குலி விரித்து நாசியைப் பார்த்திருத்தல், ஆகாயகமனம், ஒரு வானரன். இவன் அஞ்சனைக்கு நாயகனும் அனுமந்தனுக்குத் தந்தையும் பிரபாசதீர்த்திலே இருஷிகளுக்குத் துன்பஞ்செய்து வந்த யானையைக் கொன்றவனுமாவன். குதிரை, சிங்கம்,பெருங்காயம்.
கேசரிகம் - நாயுருவி.
கேசரிஜன் - அநுமான்.
கேசரியாதனம்-பீசத்தின்கீழ்ச் சிவனியிடத்துப் பரட்டைவைத்திட முழங்கையை முழந்தாளில்வைத் தங்குலி விரித்து நாசியைப் பார்த்திருத்தல்.
கேசரியோகம் - உதயத்துக்கு நாலில் ஏழிற் சந்திரன் கிற்பது வியாழனுஞ் சந்திரனுங் கூடியிற்பது.
கேசரீகம் - நாயுருவி.
கேசனை - பருத்திச்செடி.
கேசவம்-அட்டாதசதருமநூலிலொன்று நறுமணம், கிறைமயிர், பெண்வண்டு, பைசாசம், வண்டு.
கேசற்குத்தோழன், கேசவற்றோழன் - அருச்சுனன்.
கேசவன்-சோழன், கிறைமயிருள்ளோன் விட்டுணு.
கேசவேசம் - கொண்டை.
கேசாசினதரேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கேசாதிபாதமாலை-ஒரு பிரபந்தம். அது கலிவெண்பாவால் கேசமுதற் பாதமீறாக வர்ணித்துப் பாடுவது.
கேசாதிபாதம்-ஒரு பிரபந்தம். அஃது கலிவெண்பாவான் முடிமுதல் அடியளவுங் கூறுவது, சருவாங்கம்.
கேசாந்தம்-மயிர்களைந்து செய்யும் ஒரு சடங்கு.
கேசாரசம் - ஒரு நாரத்தை.
கேசாவாதனம் - இரண்டு முழந்தாளும் மாறி முடித்தூன்றி யிருமுழங்கையு முழங்காலிற்படக் கைகட்டி யிருப்பது.
கேசி-அயருபதாணுய்ச்சென்று கிருஷ்ணனை எதிர்த்து யுத்தஞ்செய்தபோ

து மாண்ட அசுரன், ஒரு தானவன்; இவன் தேவசேனையைப் பிடித்துச் சென்றபோது தேவேந்திரனல்ஜெயிக்கப்பட்டவன், கிருட்டிணன், சிங்கம், நிறைமயிருள்ளோன், வசுதேவனுக்குப் பத்திரையிடத்துப் பிறந்த மகன்.
கேசிகன் - நிறைமயிருள்ளோன்.
கேசிகை - திருமால்.
கேசிசூதநன் } கண்ணன்.
கேசிசூதனன் }
கேசித்துவஜன்-நிமிவமிசத்தனாகிய ஒரு அரசன்.
கேசினி - நிறைகுழலுள்ளவள்.
கேசிசூதநன் - விட்டுணு.
கேசியா - தாழை.
கேசினி-சங்கக்குப்பி, தமயந்திபாங்கி.
கேசி - நல்ல தலைமயிருள்ளவள்.
கேசுகம் - ஒரு கிழங்கு.
கேஞ்சலிகை - ஒரு கிழங்கு.
கேடகம் - ஒரு யாறு, ஒருவகை ஊர்தி, பரிசை, பாசறை, புறமுட்டி, மலைசெறிந்தவூர்.
கேடகம்-கிளியாறு, மலைசெறிந்தவூர்.
கேடயம் - பரிசை.
கேடிக்கை - கேளிக்கை, கச்சேரி.
கேடிலுவகை - மோட்சம்.
கேடு - அந்தக்கேடு, அழிவு, குறைவு, கெடுதல், சிதைவு, பொல்லாங்கு.
கேடுகாலம் - கெடுகாலம்.
கேடுபாடு - அழிவு, துன்பம், நட்டம்.
கேடையம் - கேடயம்.
கேட்குதல்-ஆராய்தல், கேட்டல், நாச்சொல்லுதல், வினவல்.
கேட்கும்விடை-வினவும்விடை (உ-ம்) என்னலாகுமோ.
கேட்கை - கேள்வி.
கேட்டல்-இரத்தல், செவிகொடுத்தல், வினவல், வேண்டுதல், செய்தல்.
கேட்டவாய்க்கேட்டல் - பலராலுங்கேட்டல்.
கேட்டி - மிலாறு.
கேட்டை - ஒருநாள், மூதேவி.
கேட்பு - கேள்வி.
கேணம் - செழிப்பு.
கேணி - அகழி, கிணறு, குளம், ஆவு.
கேண்டு } பந்து.
கேண்டுகம் }

கேண்மை-உறவு, கண்ணோட்டம், நட்பு.
கேதகம் - தாழை.
கேதகாரியம் - இழவு.
கேதகி } தாழை.
கேதகை }
கேதந்தி - அகிருத்தன்.
கேதம்-குற்றம், துக்கம், துன்பம், வீடு.
கேதல் - அழைத்தல்.
கேதனம்-இடம், படர்கொடி, பெருங்கொடி, விருதுக்கொடி, வீடு, வேலை.
கேதனன் - அபிநவதண்டியென்னும் பட்டம்பெற்ற ஆந்தரகவி.
கேதாரகவுளம் - ஒருபண்.
கேதாரம்-இமாலயபர்வதத்திலுள்ள சிவக்ஷேத்திரம், ஒருநகரம், மயில், மலை.
கேதாரவிரதம் - ஒரு விரதம்.
கேதாரன் - சிவன்.
கேதாரேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கேதாரேசுவரர் - திருக்கேதாரத்திலே கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கேதாரேசுவரவிரதம்-இது ஐப்பசி மாதத்துக்குக் கிருஷ்ணபக்ஷத்துச் சதுர்த்தசியில் சுமங்கலிகளால் அனுஷ்டிக்கத்தக்க விரதம்.
கேதீச்சுவரர் - திருக்கேதீச்சரத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கேது-அடையாளம், ஒருகோள் இவன் விப்பிரசித்திக்குச் சிங்கையிடத்துப் பிறந்த புத்திரன். இவன் அக்கினிக்கு விகேசியிடத்துப் பிறந்தவன் என்றுஞ் சொல்லப்படுவன். நோய், விருதுக்கொடி, வெளிச்சம்.
கேதுச்சிலாங்கணம் - புருடராகம்.
கேதுதாம் - வாவு.
கேதுதான் - கொடிபிடிப்போன்.
கேதுதல் - அழைத்தல்.
கேதுதாரை - வால்வெள்ளி.
கேதுபம் - மேகம்,
கேதுப்பிரியம் - வைடூரியம்.
கேதுமதி - ஒரு கந்தருவஸ்திரீ சுமாலியென்னு மிராக்ஷசன் மனைவி.
கேதுமாலம் - நவகண்டத்தொன்று.
கேதுமாலன் - அக்கினிரன்புதல்வரில் ஒருவன்.
கேதுமாலேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கேதுரன் - கேதுமந்தன் மகன், பகீரதன் தந்தை.
கேதாரத்திகம் - வைடூரியம்.
கேதரு - ஒரு வாசனை மரம்.
கேதுவசனம் - கொடி.
கேத்திரபாலன் - வயிரவன்.
கேத்திரம் - கெடித்தலம், க்ஷேத்திரம், பூமி, விளைநிலம்.
கேநாரம் - ஒருநரகம், கவுள், சந்தி.
கேகிபாதகம், கேகிபாதகம், கேகிபாதம் - நாய்த்தடுப்பு.
கேந்தகம் - கோடகசாலை.
கேந்திரம் - உதயம், ஏழாமிடம், நான்காமிடம், பத்தாமிடம், வட்டத்தின் மத்தி.
கேந்திரித்தல் - கேந்திரம்பெற்றுநிற்றல்.
கேந்துகம் - ஒருமரம், தவளை.
கேந்துமூறியம் - நாய்வேளை.
கேபம் - அசைவு.
கேப்பை - குரக்கன், கேழ்வரகு.
கேமாச்சி - வெண்காக்கணம்.
கேயம் - அகழ், இசைப்பாட்டு.
கேயன் - பாடுவோன்.
கேயிகம் - செக்கல்.
கேயூரம் - தோளணி.
கேரண்டம் - காகம்.
கேரலம் - கேரளம்.
கேரலி - ஒருநெல், வானசாத்திரம்.
கேரளம் - ஒரு யாவைந சோதிடசாத்திரத்திலொன்று. தேசமைம்பத்தாறிலொன்று. இது தக்ஷணமலையாளம், வாய்விளங்கம்.
கேரளன் - ஆசிரியதன்மகன், சேரன், அவந்யந்தன் தம்பியாகிய திவ்யந்தன் பௌத்திரன்.
கேரளை - இசைப்பாட்டு.
கேருதல் - குரல்கம்முதல், கோழிசத்துதல், பயப்படுதல்.
கேலகன் - கூத்தாடி, வாள்மேல் நடனஞ்செய்வோன்.
கேலம் - மகளிர்விளையாட்டு, விளையாட்டு.
கேலனம் கேளி.
கேலாசம் - பளிங்கு.
கேலி - இகழ்ச்சி, பரிகாசம், விகடம்.
கேலிகம் - அசோகமரம், கேளி.
கேலிகலை - சரச்சுவதி கையில் வீணை, பகிடிப்பேச்சு.
கேலிக்கிரகம் - வசந்தமண்டபம்.
கேலிசீலன் - பரியாசக்காரன்.
கேலிமாலி - கேலி.
கேலிமுகம் - பரிஹாசம்.
கேலிவிருட்சம் - ஒரு கடம்பு.
கேலை - நெருப்புச்சுவாலைமுழங்கையிடி.
கேவணம் - மணிபதிக்குங்குழி.
கேவர்த்தன் - கரையான்.
கேவலதிரவியம் - மிளகு.
கேவலப்படுதல் - இளைத்தல், மயங்கல், மெலிதல்.
கேவலமானது - பெலனற்றது.
கேவலம் - அற்பம், இட்டம், இன்மை, உறுதி, ஒழுங்கு, ஓரவத்தை. தனிமை, துன்பம், பெருக்கம், மரணத்தறுவாய், முடிவிடம், மெலிவு, மோக்கம், விடுதல்.
கேவலன் - தரித்திரியன்.
கேவலான்னுவயானுமானம் - உபநயம் ஏது, திருட்டாந்தம், நிகமனம், பட்சம் என ஐந்து.
கேவலி - வள்ளிக்கொடி.
கேவு - வெண்கடுகு.
கேவுதல் - மூச்சுத்திணறல்.
கேவேடன் - மீன்வலைஞன்.
கேழல் - பன்றி.
கேழ் - உவமை, ஒளி, நிறம்.
கேழ்வரகு - குரக்கன்.
கேளன் - தோழன்.
கேளா - அமைதி, விருதா.
கேளாதகேள்வி - நிந்தை, வசை.
கேளாமை - கீழ்ப்படியாமை.
கேளார் - பகைவர்.
கேளி - தெங்கு, மகளிர்விளையாட்டு.
கேளிர் - கணவர், சிநேகிதர். சுற்றம்.
கேளிவிலாசம் - விளையாடிப் பொழுதுசழித்தல், விநோதம்.
கேள் - அன்பு, உறவு, கேளென்னேவல், சிநேகம், சுற்றம், மதிப்பு.
கேள்மை - கேண்மை.
கேள்வன் - தலைவன்.
கேள்வி - கல்வி, இராசதகுணத்தொன்றாகாது, பாரம்பரியம், பேச்சு.
கேள்விகொடுத்தல் - செவிகொடுத்தல்.

கேள்விக்காரன் - வழக்கில் மன்றாடிக் கேட்போன், விலைகேட்பவன்.
கேள்விச்செவியன் - கேட்டதை நம்புவோன்.
கேள்விப்படுதல் - கேள்வியறிதல்.
கேள்விப்பத்திரம்-மன்றாட்டுக்கடுதாசி.
கேள்விமூலம் - காதடி, செவி.
கேள்வு - கூலி, தோணிக்கூலி.
கேள்வுத்தோணி - கூலிக்குப் பொருந்தின தோணி.
கேணிபாதகம் - ஒடுங்கிள்ளுந் தடுப்பு.

கை

கை - இடம், உடனே, ஒப்பனை, ஒழுக்கம், ஒரெழுத்து, ஒருவிகுதி (உ-ம்) நடுக்கை, கரம், கைகொண்டளவு, கையென்னேவல், சாமர்த்தியம், சிறுமை, தங்கை, தொனி, பக்கம், பங்கு, படைவகுப்பு, யானைத்துதிக்கை, வரிசை.
கைகசி - சுமாலிமகள், விச்சிரவசுவின் இரண்டாம்பாரி, இவள் ராவணன், கும்பகர்ணன், சூர்ப்பநகையென்னு மூவரையும் பெற்றவள்.
கைகடத்தல் - கையை விட்டுப்போதல்.
கைகடன்-ஈடுறுதியில்லாக்கடன்.
கைகட்டுதல் - மரியாதையாகக் கைகட்டிநிற்றல்.
கைகண்டசாரம்-கைகண்டபலன், நலசாரம்.
கைகண்டது-சித்தியுள்ளது தேறினது.
கைகம் - வக்கிராந்தி பாஷாணம்.
கைகலத்தல்-ஒன்றாய்க்கூடுதல், யுத்தங்கலத்தல்.
கைகழுவுதல் - குற்றத்துக்கு விலகும் ஒரு குறிப்பு, நீர்த்துத்தள்ளல்.
கைகாட்டு-கையினு லபிநயங்காட்டல், சைகைகாட்டல்.
கைகாட்டுதல் - அபிநயங்காட்டல், கையாற் குறிப்புக்காட்டல்.
கைகாணுதல் - அத்தாட்சிப்படுதல், நம்பிக்கையாயறிதல், கிறைவேறுதல்.
கைகாவல் - கையுதவி.
கைகீழ் - கையமைச்சல்.
கைகுவித்தல் - கும்பிடல், கொம்மைகொட்டல், வணங்கல்.
கைகுவிர்தல் - திருத்தியாதல்.
கைகுறண்டுதல் - கைமுடங்கல்.
கைகூடுதல் - சித்தியாதல்.
கைகூப்பல்-கும்பிடல், கொம்மைகொட்டல், வணங்கல்.
கைகூப்பு - ஐந்துமுழங்கொண்ட வாளை, கைகுவிப்பு.
கைகூப்புதல் - கும்பிடல்.
கைகூம்புதல் - கைகுவிதல்.
கைகேசி-தசரதன்மனைவியிலொருத்தி, பரதன்றாய்.
கைகேயன் - கேகயநாட்டரசன்.
கைகேயி-கைகேசி. இவள் கேகயதேசராஜபுத்திரி, தசரதன் மூன்றாம்பாரி பரதன்றாய், தசரதன் இராமருக்குப் பட்டாபிஷேகத்துக்கு முகூர்த்தம் வைத்து அதற்கு வேண்டுவனவெல்லாஞ்செய்து எத்தனப்பட்டிருக்கும் போது மந்தரையென்னுங் கொடிய கிழப்பாங்கியினது ஏவலால் இக்கைகேயி தனக்குத் தசரதன் முன்னொரு காலீந்த வரங்களிரண்டையும் தருமாறு அவனைக்கேட்க அவன் இவளுடைய அபிப்பிராயத்தை யென்னதென்று கேட்க இவள் தன் மகன் பரதன் பட்டம்பெறவும் இராமர் பதினான்குவருடம் காடுகொள்ளவும் அருளுகவென்றாள். கொடுத்ததை மறுத்தல் அரசர்க்கியல்பன்றாதலின் அவன் மறுக்க வியலாதுடன்பட்டு மனக்கவற்சிகாரணமாகச் சிலகாலில் உயிர்விட்டான்.
கைகொடுத்தல் - உதவிசெய்தல், எதிர்கொண்டுபோய்க் கைபிடித்தழைத்தல், கைகூடுதல், வாக்குப்பண்ணல்.
கைகொட்டல் - கொம்மைகொட்டல்.
கைகொட்டிக்குவித்தல்-குடந்தம்.
கைகோத்தல்-கூடிக்கொள்ளுதல், கையோடு கைபிடித்தல்.
கைகோத்தாடல் - குரவையாடல்.
கைகோவை-பொற்கொல்லர் தொழிலினொன்று.
கைகோளன் - செங்குந்தசாதியான்.
கைகோள் - ஒழுக்கத்தின் றன்மை.

கைக்கடனாற்றல் - உறுதியின்றி நம்பிக் கைக்குக்கொடுத்தல், அதுவேளாண் மை மாந்தரியல்பு ளொன்று.
கைகட்டி - ஓராபரணம், கைக்கவசம்.
கைகட்டு - ஓராபரணம்.
கைகணக்கு-ஒறுறுதி.
கைக்கனிசம் - கைமநியம்.
கைக்கத்தி - ஓராயுதம்.
கைக்கரணை - ஒரு சிலந்தி.
கைக்கவசம் - கைச்சட்டை.
கைக்காணிக்கை - வெளிப்பாடு.
கைக்காய்ச்சல் - கைக்காந்தி.
கைக்காரன் - உதிவியுள்ளவன், பணக் காரன்.
கைக்கிரியை - கையினாற்செய்யுங் கிரி
கைக்கிளவர் - செங்குந்தர். [யை.
கைக்கிளை - எழிசையினொன்று. அது அண்ணத்தாற் பிறக்குமிசை, ஒரு தலைக்காமம், ஒரு பிரபந்தம். அது ஒருதலைக்காமத்தினை ஐந்து விருத் தத்தாற் கூறுவது. வெண்பா மூப் பத்திரண்டாற் கூறலுமாம், யாழி னோர் நரம்பு.
கைக்கிளைமணம் - ஆசுரம் இராக்கதம் பைசாச மூன்றும்.
கைக்கீறல் } கையெழுத்தின் குறிப்பு.
கைக்கீறு }
கைக்குடை - சிறுகுடை.
கைக்குட்டை-கையிற்பிடிக்கும் புடை வைத்துண்டு.
கைக்குத்து-கைபொத்திக்குத்தல்.
கைக்குநீர்க்கொள்ளுதல்-சிறுநீர்விடுதல்
கைக்குழந்தை - இடுக்குப்பிள்ளை.
கைக்குழலூதல் - கையிலே குழலூதல்.
கைக்குழி - கமுக்கட்டு.
கைக்குழித்தாமரை-ஒரு வியாதி.
கைக்குளர் - செங்குந்தர்.
கைக்குள் - உடனே, சடுதி.
கைக்குறி-கைவரைபார்க்குஞ்சாத்திரம்
கைக்குற்றம் - கைமோசம்.
கைக்குன்று - யானை.
கைக்கூச்சம் - கைகூசுதல்.
கைக்கூலி - பரிதானம்.
கைக்கெளியது - இலேசானது, இழ மைச்சலானது.
கைக்கை - கசப்பு.
கைக்கொடுத்தல் - கைக்குதவி செய்தல்.
கைக்கொட்டை - கையணை.
கைக்கொளவர் - செங்குந்தர்.
கைக்கொள்ளுதல்-அங்கீகரித்தல், ஒப்பு க்கொள்ளுதல், பேணிக்கொள்ளுதல்.
கைக்கோடாலி - சிறுகோடாலி.
கைக்கோரணி - கைச்சித்திரம்.
கைக்கோல் - ஊன்றுகோல்.
கைக்கோளன்-செங்குந்தன், உபசுப்பி ரமணியர், மரபினன், கௌரிகோத் திரன், சிவருத்திரன்.
கைங்கரன் - அடிமை.
கைங்கரியம் } தருமப்பணிவிடை.
கைங்கிரியம் }
கைசருவுதல்-எதிர்த்தல், கைகலத்தல், கைச்சரசம்.
கைசலித்தல் - கைதளர்தல், தொய்ந்து போதல்.
கைசிகநிஷாதம் - பன்னிரு சுரங்களுள் சட்சுருதிதைவதமென்னுமோர் சுரம்.
கைசிகம் - இச்சை, ஓரிராகம், மயிர்க்க ணம், விகாரம்.
கைசிகர் - பார்ப்பார்
கைசியம் - தேசம்.
கைசெய்தல்-அலங்கரித்தல், கைவேலை செய்தல், பயிர்செய்தல்.
கைசோரம் - பாலியம்.
கைச்சங்கம் - நர்கரவண்டு.
கைச்சட்டப்-சம்பளை, கைவிட்டம்.
கைச்சட்டம் - கையிலிடுங்கவசம்.
கைச்சரசம்-இலீலைவிளையாட்டு, கைச் சேட்டை.
கைச்சரி - கைவளை.
கைச்சல்-கைப்பானது, கைப்பு, வெறுப்
கைச்சற்றேடை - புளிநாரத்தை. [பு.
கைச்சாத்து-கையெழுத்துத்துண்டு நி லவிறையிறுத்ததுண்டு.
கைச்சாம்பிரதாயம் - கைச்சித்திரம்.
கைச்சார்த்து - கைச்சித்திரம்.
கைச்சார்பு - சார்மானம்.
கைச்சி - வைமற்பாதி, கமுகு, சிரட்டை.
கைச்சித்தி - கைவாசி.
கைச்சித்திரம் - கைவிற்பன்னம்.
கைச்சிமிட்டு கைச்சித்திரம், செப்படி வித்தை, தந்திரம்.
கைச்சிவிருத்தி-காமம் பொருளாகக் கா முகர் தலைவராக வருவது.
கைச்சிட்டு - கைநறுக்கு.

கைச்சிப்பு - தோல்பட்டை.
கைச்சுழி - விதைக்கிரவிதை கூடிவிழுதல்.
கைச்சுருக்கு - கைவிரைவு.
கைச்சூடு - கைநிறைந்த அரிக்கட்டு.
கைச்செட்டு - அன்றன்று கொண்டு விற்றல்.
கைச்செட்டை - கைமூட்டு, தோட்பட்டை.
கைச்சேட்டை - கைச்சரசம்.
கைச்சைகை - கைச்சாடை.
கைடபி } துர்க்கை, காளி.
கைடபை }
கைடவசிதன் - விட்டுணு.
கைடவன் - ஓரரக்கன். இவன், கற்பாந்தத்தில் விஷ்ணு யோக நித்திரையிலிருந்தபோது விஷ்ணுவினது இருசெவித் துவாரங்களினின்றும் மதுவென்பவனோடு பிறந்தான். இவ்விருவர்களுக்கும் அப்போதுண்டாயிருந்தமகாப்பிரளயம்முழந்தாள்வரைச் சலமாயிருந்த தென்றால் இவர்கள் உபரஞ் சொல்லவேண்டிய தன்று. இச்சமயம் பிரமாவும் விஷ்ணு நாபிக் கமலத்திற்பிறந்தார், அவரைக்கண்டு இவ்வசுரர்கள் கொல்ல வெழுந்தார்கள். விஷ்ணு இவர்களைச் சமாதானஞ் செய்து உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்களென்ன உன்னிடத்தில் யாம் பெற்றுக்கொள்ளக் கூடியவரம் யாதுமில்லை. உனக்கு வேண்டியதைக்கேள், யாம் தருவேமென்றஇவர்களைப்பார்த்து என்கையால் நீங்கள் மடியும்வரம்தரவேண்டுமென்று கூறி இருவரையுங் கொன்றார். அதுகாரணமாகவிஷ்ணுவுக்குக் கைடவாரி, மதுவைரி என்னும் பெயர்கள் பலித்தன.
கைடவாரி - விட்டுணு.
கைடவை - துர்க்கை, காளி.
கைடிகம் - மலையெலுமிச்சை.
கைதகம் - தாழம்பூ.
கைதட்டல் - கையொடு கைதட்டல், கைவிடுதல், தப்புதல்.
கைதப்புதல் - தவறுதல், நீங்கல்.
கைதருதல் - இடங்கொடுத்தல், உதவுதல், கைகூடுதல்.
கைதவம் - சூது, அன்பம், பந்தயம், பொய், வஞ்சனை.

கைதவன் - பாண்டியன்.
கைதளர்தல்-கைநெகிழ்தல், சோர்தல், தொய்தல்.
கைதாங்கி - கைபிடி. நாற்காலியினோருறுப்பு.
கைதாரகம் - வயல்வெளி.
கைதாரம் - செந்நெல்.
கைதாரிகம் - வயல்வெளி.
கைதூக்கல் -இரட்சித்தல், விடுதலையாக்கல்.
கைதூவாமை - ஒழியாவொழுக்கம்.
கைதை - தாழை, வயல்.
கைதைச்சுரிகையன் - மன்மதன்.
கைதொடல் - உண்ணல், கலியாணம், தொடங்கல்.
கைதொழல் - கையினால் கும்பிடல்.
கைத்தசோடரம் - எட்டி.
கைத்தலம் - கை.
கைத்தல் - அலங்கரித்தல், அலைத்தல், கசத்தல், கோபித்தல், வெறுத்தல்.
கைத்தளை - கைவிலங்கு.
கைத்தா - காட்டாமணக்கு.
கைத்தாக்கு - கைக்குக்கனம், கைக்குத்து, கைவேகம்.
கைத்தாய் - வளர்க்குந்தாய்.
கைத்தாளம் - கைமணி.
கைத்திட்டம் - கைமதியம்.
கைத்திவத்தி-கையிற்பிடிக்குந்திவட்டி.
கைத்தின் - கையில்வைத்துக் கொடுக்குந்தின்.
கைத்து - பொன், வெறுப்பு.
கைத்துடையான்-கையிற் பொருளுள்ளவன்.
கைத்துப்பாக்கி - கைத்துவக்கு.
கைத்துருவுமணை - பிரயாணத் துருவுமணை.
கைத்துவக்கு - சிறுதுவக்கு.
கைத்தூக்கு - கைப்பற்றும்,கையாற்றூக்கத்தக்க பாரம்.
கைத்தேங்காய்-போரடிக்குந்தேங்காய்.
கைத்தொண்டு - குற்றேவல்.
கைத்தொழில் - கைவேலை.
கைத்தொழும்பு - கைத்தொண்டு.
கைநாட்டு-கைக்கீறல்.
கைந்நடுக்கம் - ஒருவியாதி, கைபிறக்காமை.
கைந்நட்டம் - முதல்கூடநட்டப்படுதல்.
கைந்நலப்பால் - கன்றின்றிக் கைவல்லபத்தாற் கறக்கும்பால்.

கைக்நலம்-கைப்பயன், கைவிசேஷம்.
கைக்நறுக்கு - கையுறுதி.
கைக்நனைத்தல் - கைகழுவல்.
கைக்நன்றி - செய்க்நன்றி.
கைக்நாடிபார்த்தல் - நாடி யோட்டம் பார்த்தல்.
கைக்நீட்டுதல்-அடிக்கமுந்துதல், இரவு வினவுதல், கனவெடுத்தல்.
கைக்நீளுதல்-அதிகமாய்க் கொடுத்தல், ஒன்றைச்செய்ய முந்துதல்.
கைக்நெகிழ்தல் - விட்டுவிடுதல்.
கைக்நொடி - மாத்திரைப்பொழுது.
கைக்நொடித்தல் - விரலைநொடித்தல்.
கைக்நொடுநொடித்தல் - கண்டதெல் லாந் தொடுதல்.
கைபடிதல் - கைதிருந்துதல்.
கைபதறுதல் - கைக்நடுங்குதல்.
கைபரிமாறுதல் - அடிபிடிப்படுதல்.
கைபழகுதல்-கைப்பழக்கம், பழகுதல்.
கைபறிதல் - கைவிட்டுப்போதல்.
கைபாகம் - கைப்பழக்கம்.
கைபார்த்தல்-கைக்குறிபார்த்தல், சோதித்தல், நாடிபார்த்தல், மட்டறிதல்.
கைபிடி-இரம்மியம், உறுதி, கைபிடிக் கவைத்திருப்பது, கைப்பொருள், கைவிடாமை, நம்பிக்கை, நாடியோட்டமறிதல்.
கைபிடித்தல்-கலியாணமுடித்தல், நாடியறிதல்.
கைபிடிபத்திரம் - உத்தரசிநேகம், கைவிடாமற் பத்திரமாயிருத்தல்.
கைபிடியானவன்-உற்ற சிநேகிதன்.
கைபிழைபாடு - கைமோசம்.
கைபுகுந்தவழக்கு-கையில் வந்துவிட்டதென் றுடையவனுக்கு மில்லையென்பது.

கைபுனை } அலங்கரித்தல், பூத்
கைபுனைதல் } தொடுத்தல்.

கைபோடுதல்-கையிடுதல், வாக்குப்பண்ணல்.
கைப்பட்டை - கைப்பலகை, சிறுபட்டை, தோட்படை.
கைப்பணம்-கைம்மேற்பணம், கையில் இருக்கும் பணம்.
கைப்பணி-கற்சிற்பர் கருவியிலொன்று, கைத்தொண்டு, மணியாசிப்பலகை.
கைப்பண்டம் - கைப்பொருள்.
கைப்பதட்டம் - கள்ளம், விரைவு.
கைப்பந்தம் - பந்தவிளக்கு.
கைப்பயில் - கைச்சயிக்கினை.
கைப்பழக்கம் - கைபரிட்சை.
கைப்பழக்கம்-கைப்பிடி, கைவாகு.
கைப்பற்றல் - கலியாணம், கைவசத்திலெடுக்கல், வாங்குதல்.
கைப்பற்று-கைத்தூக்கு, கைப்பற்றென்னேவல், வாங்குதல். [லே.
கைப்பாடு கைநஷ்டம் கைவசம்கைவே
கைப்பாதி - இரண்டாய்ப் பிளப்பதிற் சிறுபாதி.
கைப்பாத்திரம் - கரபாத்திரம்.
கைப்பிசகு - கைமோசம்.
கைப்பிடி-உலக்கை, கலியாணம், கைபிடித்த பிடி.
கைப்பிடித்தல் - கலியாணமுடித்தல்.
கைப்பிடிவாள் - கைவாள்.
கைப்பிரட்டு-அஸ்தலாகவவித்தை.
கைப்பு - அறுசுவையிலொன்று. அது கசப்பு, ஆடுதின்னாப்பாலை, ஒருசரக்கு, வெறுப்பு.
கைப்புடை - கைக்கவசம்.
கைப்புட்டில் - விரலுறை.
கைப்புலி - யானை.
கைப்பூட்டு-கைப்பொருத்தையிறுற் பூட்டும் பூட்டு.

கைப்பெட்டகம் } சிறுபெட்டகம்.
கைப்பெட்டி }

கைப்பொருள் - கைவசத்திலிருக்கும் பொருள்.
கைப்பொலி-கையாலளளும்பொலி.
கைப்பொல்லம் - சிறுதுண்டு.
கைப்பொறுப்பு - தன்பொறுப்பு.
கைமடிப்பு - அனுப்பு.

கைமை } அமங்கலி, விதவை.
கைம்பெண் }

கைம்பெண்வஸ்திரம் - அமங்கலியுடுக்கத்தக்க புடவை.
கைம்மடல் - கைச்சிப்பு.

கைம்மட்டம் } கைமதியம்.
கைம்மட்டு }

கைம்மணி-கைத்தாளம், கையாலசைக்குஞ் சிறுமணி, சேயக்கலம்.
கைம்மண்டை - கையாகிய பாத்திரம்.
கைம்மதியம் - கைம்மட்டு.

கைம்மபக்கு - ஒரு வசியமருந்து.
கைம்மரம் வீட்டின் பாய்ச்சுரமரம்
கைம்மருந்து - வைத்தியனின்றித் தாமே செய்துகொடுக்கு மருந்து.
கைம்மலை - யானை.
கைம்மறதி - அயர்த்தி.
கைம்மறித்தல் - தடுத்தல்.
கைம்மறுத்தல் - கொடுப்போருங் கொடாதுவிடல்.
கைம்மறை - உடன்மறை.
கைம்மா - யானை.
கைம்மாச்சி - கைவிலங்கு.
கைம்மாயம் - கைம்மயக்கு.
கைம்மாறு - பிரதியுபகாரம்.
கைம்மாறுதல் - விற்றல்.
கைம்மாற்று - உடன்மாற்று.
கைம்மிகல் } அதிகப்படல், கைகடத்தல்.
கைம்மிகுதல் }
கைம்மிடிப்பு - கையிலொன்று மில்லாமை.
கைம்மீன் - அத்தநாள்.
கைம்முடக்கம் பொருள்முட்டு வினைக்கேடு.
கைம்முடிப்பு - முடிப்புப்பணம்.
கைம்முட்டிசெய்தல்-கையைப் பொத்துதல்.
கைம்முட்டு - கைம்மிடிப்பு.
கைம்முறை - கைம்மாறும்முறை, அநுபவம்.
கைம்முட்டு - தோட் பொருத்து.
கைம்மூலம்-அக்குள், கன்றுசெத்தபின் சுரக்கும்பால், கையினடி, முகாந்திரம்.
கைம்மெய்க்காட்டல்-அபிநயங்காட்டல்
கைம்மேலே - உடனே.
கைம்மேற்பணம்-உடனே கையிற்கொடுக்கும் பணம்.
கைம்மை - அமங்கலி, கைம்பெண்.
கைம்மோசம் - செய்கைப்பிழை.
கையகப்படுதல் - கைக்குட்சேருதல்.
கையகப்படுத்தல் - ஒப்புக்கொடுத்தல், சிக்கப்பண்ணுதல், பிடித்தல்.
கையடக்கம் - கைக்கு இலேசானது.
கையடம் - ஒருநூல்.
கையடர் - ஒரு நூலாசிரியர்.
கையடிப்படுதல் - கைக்குட்படுதல்.
கையடிப்படுத்துதல்-ஆட்சிக் குட்படுத்துதல்.

கையடை - அடைக்கலம்.
கையமர்த்தல் } அபயார்த்தஞ் செய்தல், அமைந்திருக்கக் குறிப்புக்காட்டல்.
கையமைத்தல் }
கையம்பு - உறுதி, நம்பிக்கை.
கையயர்தல் - கைசோர்தல்.
கையரிக்கொள்ளல் - சேர்த்துக்கொள்ளல், தேடல்.
கையரியம் - இரும்பு.
கையர்-கீழ்மக்கள், சண்டாளர், திருடர்.
கையலுத்தல் - கைசலித்தல்.
கையளித்தல்-ஒப்புக்கொடுத்தல், கொடுத்தல்.
கையறம் - கெடும்படி யாடும்பாட்டு, வசைக்கவி.
கையறல்-ஒழுக்கமின்மை, செயலறல்.
கையறல்விலக்கு - ஓரலங்காரம். அது கையறுதலைக்காட்டி விலக்குவது.
கையறிவு - உதவியின்மை, செயலறுதல்.
கையறிதல் - பழகுதல்.
கையறுதல்-அந்தரிக்குதல், சாதல், செயலறல்.
கையறுதி-கையுறுதியிலே விற்கப்பட்டவறுதி.
கையறுநிலை-ஒரு பிரபந்தம். அது கணவனோடு மனைவி கழிந்துழியவர்கட் பட்ட அழிவுப்பொரு ளெல்லாவற்றையும பிறர்க்கறிவுறுத்தி யிறந்துபடாதொழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலையைக் கூறுவது.
கையறை - ஒழுக்கமின்மை, செயலின்மை.
கையாடுதல் - எடுத்துவழங்குதல், கைதண்டது.
கையாந்தகரை - ஒருபூடு.
கையாயிரத்தன் - வாணாசுரன்.
கையாளி - திட்டன், மாய்மாலன்.
கையாளித்தல் - ஒப்படைத்தல்.
கையாளுதல் - எடுத்துவழங்குதல்.
கையாள் - குற்றேவலாள்.
கையாறு-ஒழுக்கம் சரித்திரம் துன்பம்.
கையாறுதல் - இளைப்பாறுதல்.
கையாற்றி - ஆறுதல், உதவி.
கையாற்றுதல்-அடையல், மாற்றுதல், இளைப்பாற்றுதல்.

கையான் - கையாந்தகரை.
கையிகத்தல் - அகன்றுகிற்றல், இழத்தல், ஒழுங்குதப்புதல், கடத்தல்.
கையிடுதல் - தலையிட்டுக் கொள்ளுதல், நேர்ப்படுதல்.
கையிணக்கம்-கூத்திவைக்குதல், போர் செய்கை.
கையிருப்பு - கையுரொக்கம்.
கையில் - தேங்காய்ப்பாதி.
கையிழத்தல் - காணுமற்போதல்.
கையிளகுதல் - கைநெகிழ்தல், கொடுக்கச் சம்மதித்தல்.
கையிளைத்தல் - கைசலித்தல்.
கையிறக்கம் - கையை விட்டிறங்குதல், கொடை.
கையிறக்குதல் - கையிலிருந் திறங்கச் செய்தல்.
கையிறங்காமை உலோபத்தன்மை, பிசுனித்தனம்.
கையிறங்குதல்-கொடுக்க விணங்குதல்.
கையிறுக்கம் - கையிறங்காமை.
கையிறை - கைரேகை.
கையுங்கணக்கும் இருந்ததுஞ் சென்றதும்.
கையுடனே - உடனே.
கையுடை - கைக்கவசம்.
கையுதவி - ஆளுதவி.
கையுபகாரம்-ஒத்தாசை, கைக்கூலி.
கையும்மெய்யும் அத்தாட்சி, உறுதி.
கையுரொக்கம் - கைவசத்தி லிருக்கும் பணம்.
கையுழைப்பு - வேலை.
கையுறுதி-அட்டவணை, சேர்க்கப்படாதவுறுதி.
கையுறை-கைக்கவசம், தலைமகன் தலைவிக்குத் தரும் பொருள்.
கையூழ் - இசைக்கரண மெட்டனுள் ஒன்று. அதுவண்ணத்திற்செய்தபாடலெல்லாம் இன்பமாகப் பாடுவது.
கையெடுத்தல்-கும்பிடல், சத்தியம்பண்ணல், சம்மதித்தற் குறியாய்க் கையுயர்த்தல்.
கையெழுத்து - கையாலெழுதுமெழுத்து, கைரேகை, தன் பேரெழுத்து.
கையேந்தல்
கையேந்துதல் } இரந்து வாங்குதல்.
கையேறல் - நடுத்தரமான முத்து.
கையேறுதல்-ஜெயமெடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல்.
கையேற்பு - கைப்பிச்சை.
கையை - தங்கை.
கையொப்பம் - கையெழுத்து.
கையொலி
கையொலியல் } ஐந்துமுழப்புடைவை.
கையொழியாமை-ஒழியா வொழுக்கம்.
கையொழியாமை - ஒழுக்கம்.
கையொறுப்பு குறைத்துச் செலவழித்தல்.
கையொற்றி - கையுறுதியில் வைக்கப்பட்ட காணியீடு.
கையோங்குதல் - கைநீட்டுதல், செழித்தோங்குதல்.
கையோடே - உடனே, கைவிடாமல்.
கையோலை - கையுறுதி.
கைரம் - மலை.
கைரவம் - குமுதம், வஞ்சகம், வெள்ளாம்பல்.
கைரவி - சந்திரன், நிலவு, வெந்தயம்.
கைராதம் - நிலவேம்பு.
கைரிகம் - காவிக்கல், பொன்.
கைரியம் - கரி, பொன்.
கைரேது - சலாசத்து.
கைரேயம் - மலை.
கைலஞ்சம் - கைக்கூலி.
கைலம் - சேடி.
கைலாகு
கைலாகை } கைகொடுத்தல்.
கைலாசநாதன் - குபேரன்.
கைலாசநிகேதனன் - சிவன்.
கைலாசபர்வதம்-இமயத்தின் பின்பாகத்தின்ன வெள்ளிமயமானமலை. இது சிவன் விரும்பி யுறையுந்தலம். கைலாசபதி காமம் சிவனுக்கு இதுபற்றி வந்தது. நவரத்தினங்களாற்புனையப்பட்ட நாலுவித சிகரங்களையுடைய இம்மலை நடுவேயுள்ள செம்பொற் கோயிலிலே இருஷிகணங்களுந் தேவகணங்களுஞ் சூழ்ந்து அதிக்கச் சிவன் வீற்றிருப்பார்.
கைலாசமந்திரன் - சிவன்.
கைலாசம்
கைலாயம்
கைலை } கயிலைமலை.
கைலையாளி - சிவன்.

கைவசம்-கைக்குட்படல், வசமாதல்.
கைவண்டில் - சிறுவண்டில்.
கைவரல் - கைப்பழக்கம்.
கைவரை - கையிறை.
கைவலம் - கைந்நலம், மோக்கம்.
கைவலிப்பு - கைக்கடிப்பு.
கைவல்லபம் - கைச்சாமர்த்தியம்.
கைவல்லியம் - உபநிடத முப்பத்திரண்டிலொன்று, சித்தி, தனிமை, மோட்சம்.
கைவல்லோர்-கைப்பழக்க முள்ளோர்.
கைவழக்கம் - இழவுக்குக் கொடுக்கும் பணம், கைவழங்குதல்.
கைவழங்குதல்-இழவுக்குக் கொடுத்தல், கையேவுதல்.
கைவழம் - வழங்குங் கைப்பக்கம்.
கைவளச்சம்பா - ஒருவகைநெல். [ம்.
கைவளம்-கைப்பொருள், கைவிசேஷ
கைவளை-கடகம், சிறுவளை, மருதாணி.
கைவாக்கு - கைவழக்கம்.
கைவாசி - கைசித்தி.
கைவாட்சம்பா - ஒருவிதநெல்.
கைவாய்க்கால் - சிறுவாய்க்கால்.
கைவாய்ச்சி - சிறுவாய்ச்சி.
கைவாரம்-செய்கைப்பங்கு, வாழ்த்து.
கைவாளை - ஒரு புடைவை.
கைவாள் - சிறுவாள்.
கைவாறு-கைக்கும்வாய்ப்பு, கைதூக்கு.
கைவிசேஷம் - கைவாசி.
கைவிசை - கைக்கதி, கைம்முறை.
கைவிடல் - நீங்கல்.
கைவிடாப்படை - சத்திரம்.
கைவிடுதல்-கைவிட்டுவிடுதல், தள்ளிப்போடுதல்.
கைவிடுபடை - அத்திரம்.
கைவிட்டம் - குறுக்குவிட்டம்.
கைவிதை - வெந்தயச்செடி.
கைவிஸ்தாரம் - கைவிற்பன்னம்.
கைவிரித்தல் - கொடுத்தல், மறுத்தல்.
கைவிலக்கம்-மாதவிடாய், மகளிர்சூதகம்.
கைவிலக்கு - கைம்மறைப்பு.
கைவிலக்குவைத்துப்பார்த்தல் - கிரணத்தைக்கையால்மறைத்துப்பார்த்தல்.
கைவிலங்கு- கைக்கிடும் விலங்கு, யானை.
கைவிலை-கைப்பணத்துக்கு விற்றல்.
கைவிளக்கு - ஒருவிளக்கு.
கைவினை - கைத்தொழில்.
கைவினைஞர் - கம்மாளர், செய்கைவல்லோர்.
கைவீச்சன் - ஒரு பணிகாரம்.
கைவீச்சு-அடி, கையின்வீச்சு, மிகுகொடை. [டை.
கைவேகம் - கைவிசை.
கைவேலை - கைச்செய்கை.
கைவேல் - கைவிடாவேல், வேல்.
கைஸவத்தல் - ஏற்படுதல், தொடுதல்.
கைனி - அத்தநாள், கைம்பெண், விதவை.

கொ

கொ - ஒலிக்குறிப்பு.
கொக்கட்டி - ஒருவிதச்செடி, குறண்டற்பனங்கிழங்கு.
கொக்கரித்தல் கெர்சித்தல், கோழிமுதலிய பறவை கத்தல்.
கொக்கரிப்பு-கெர்சிப்பு, பறவைகொக்கெக்கென வொலித்தல்.
கொக்கரை-கொக்கறை, சங்கு, பாம்பு, வலம்புரிசங்கு, வலை, வில்.
கொக்கலகு - கொக்குமூக்கு.
கொக்கறை-பனை தெங்கு முதலியவற்றின் பின்னமடல்.
கொக்கறையுடும்பு - ஒருடும்பு.
கொக்காட்டால் - கோதாட்டு.
கொக்காம்பாளை-ஒருவகைச்செடி.
கொக்கான்-ஒருமரம், ஒரு விளையாட்டு.
கொக்கான்வெட்டுதல் - கொக்கான் விளையாடுதல்.
கொக்கி
கொக்கில் } கொழுவி.
கொக்கிரகுமந்தாரை-ஒரு பூமரம்.
கொக்கு - ஒருபுள், குதிரை, செந்நாய், மாமரம், மூலநாள்.
கொக்குக்கல் - மாந்தளிர்க்கல்.
கொக்குமட்டி - ஒரு இப்பி.
கொக்குமந்தாரை - காட்டாத்திமரம்.
கொக்குமீன் - ஒருமீன்.
கொக்குமுத்து-கொக்கிற்பிறந்த வெள்ளை நிறமுத்து. [ரம்.
கொக்குவம்-கொக்கோகம், காமசாத்தி
கொக்கேறி - ஒருபூண்டு, கெட்டிப்புல்.
கொக்கை-கொழுவி, கொழுவுதடி.

கொக்கைச்சத்தகம் - ஒரு சிறுகத்தி.
கொக்கைச்சால் - வளைந்த உழவுசால்.
கொக்கோகம் - ஒரு காமநூல்.
கொங்கணம் - தேச மைம்பத்தாறிலொன்று. இது மேலைச்சமுத்திரதீரத்திலேகேரளதேசசத்துக்குத்தரத்திலேயுள்ளது. பதினெண் பாடையிலொன்று.
கொங்கணன் - ஒரு சித்தன்.
கொங்கணி - ஒரு தென்னோலைக்கூடு, கம்பங்கூடு.
கொங்கணியர் - கொங்கண தேசத்தார்.
கொங்கணியான் - ஒருமீன்.
கொங்கம்-ஒருநாடு, கோளகபாஷாணம்.
கொங்கரிசி - ஏலரிசி.
கொங்கர் - கொங்கதேசத்தார்.
கொங்கன் - சேரன்.
கொங்காணி - கொங்கணி.
கொங்கரால் - குங்குமமரம்.
கொங்காளம் - பதினெண் பாடையிலொன்று.
கொங்கு கருஞ்சுரை, கள், சருக்கரை, தேன், பூந்தாது, மலையாளக்கரையில் சேராசனுண்டதேசம், வாசனை.
கொங்கு வெள்ளாளர் - கொங்குதேசவெள்ளாளர்.
கொங்கை-கம்புமி, மாக்கனு, முலை.
கொசமசக்கு - குழப்பம்.
கொசு கொசுகு, கொடுக்கு, தாறு.
கொசுகாந்தேன - கொசுகள் வைக்குந்தேன்.
கொசுகு ஈ, தேனிலையான், நுளம்பு.
கொசுக்கட்டை - நுண்ணிச்சிறை.
கொசுவம் - கொய்சுவனம்.
கொசுறு - பிசுக்கு.
கொச்சகக்கலிப்பா } ஒருகவி.
கொச்சகம் }
கொச்சாளை - ஒருமீன்.
கொச்சி-ஒருதேசம், சவரிலோத்திரம், நெருப்பு, மிளகாய்ச்செடி.
கொச்சிக்காய் - கொச்சிமிளகாய்.
கொச்சிக்குழந்தை - வைப்பரிதாரம்.
கொச்சித்தமரத்தை - ஒரு தமரத்தை.
கொச்சிமஞ்சள் - ஒரு மஞ்சள்.
கொச்சியேலம் - ஓரேலம்.
கொச்சிலித்தி - ஒருபுல்.

கொச்சை-ஆட்டின்பொது, இளப்பம், இளைத்தல், கீழ்மை, திருந்தாதபேச்சு, வெள்ளாடு.
கொச்சைத்தனம் } கீழ்மையானபரிட்சை.
கொச்சைப்பழக்கம் }
கொச்சைப்பேச்சு } திருந்தாத சொல்.
கொச்சைமொழி }
கொச்சைவார்த்தை
கொஞ்சத்தனம்-அற்பபுத்தி, சின்னத்தனம்.
கொஞ்சப்படுத்தல்-சின்னத்தனப்படுத்தல்.
கொஞ்சம்-அற்பம், எளிமை, சிறுஅளவு.
கொஞ்சல்-கொஞ்சுதல், செல்வமாய்ப்பேசுதல், மழலைச்சொல்.
கொஞ்சி - ஒருசெடி, கிஞ்ஞா.
கொஞ்சுகிளி - குதலைபேசுங்கிளி.
கொஞ்சுதல் - மழலைபேசுதல், முத்தமிடல்.
கொடாலகம் - வெந்தோன்றி.
கொடி-அவிட்டநாள், உச்சம், கண்வரி, கயிறு, காக்கை, காற்றாடிப்பட்டம், கீழ்த்திசைப் பாலன்குறி, குமரனுடல், தகிற்கொடி, இரு அட்டமங்கலத்தொன்று இராசசின்னத்தொன்று, நீளம், படர்கொடி, புடைவையசைவு.
கொடிகட்டிநிற்றல் - அவசரப்படுதல்.
கொடிகட்டுதல்-யாதொன்றை விடாமல் முயன்றுநிற்றல், சயக்குறிப்பு.
கொடிக்கம்பம் - கொடித்தம்பம்.
கொடிக்கழல் } கழற்சிக்கொடி.
கொடிக்கழற்சி }
கொடிக்கள்ளி - ஒருகள்ளி.
கொடிக்கால் - வெற்றிலைக்கொடி.
கொடிக்கையான் - கையாந்தகரை.
கொடிக்கொற்றான் - ஒருகொடி.
கொடிசை - கன்னம்.
கொடிச்சண்பகம் - ஒரு செண்பகம்.
கொடிச்சி - இடைச்சி, காவட்டம்புல், சித்திரமூலம், புற்றாஞ்சோறு.
கொடிச்சியர்-குறிஞ்சிநிலப் பெண்கள்.
கொடிச்சிவாலி - வெள்ளைவால் பசு.
கொடிச்சிவால் - வெள்ளைவால்.
கொடிச்சீலை - சித்திரப்படாம், தகிற்கொடி.
கொடிச்சுரை - ஒருசுரை.

கொடிஞாழன்மணிப்பூதனார் - கடைச்சங்கப் புலவர்களு ளொருவர்.
கொடிஞ்சி - தேர், தேர்மொட்டு.
கொடிது - கொடியது.
கொடித்தக்காளி - ஒரு தக்காளி.
கொடித்தடக்கி - ஒருமரம், நாயின்கால் மேல்விரல்.
கொடித்தம்பம் - கொடிகட்டுக்தறி.
கொடித்தாம் - அஷ்டமிச்சந்திரன்.
கொடித்திருப்பாடகம் - ஒருகாலணி.
கொடித்தி - சித்திரமூலம்.
கொடித்துத்தி - ஒரு துத்தி.
கொடித்தூக்குதல் - துவசங்கட்டுதல்.
கொடிநாய் - தோல்நாய்.
கொடிநாவல் - ஒருநாவல்.
கொடிநிலை-பாடாண்டிணைத்துறை நாற்பத்தேழனுளொன்று. அது அரி அயன் அரனென்னும் மூவர் கொடியுள்ளும் ஒன்றோடு உவமித்துப் பலரும் பொருந்துதல்வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்வது.
கொடிநெட்டி - நீர்ச்சுண்டி.
கொடிப்பசளை - ஒருபசளை.
கொடிப்படை - முற்படை.
கொடிப்பவுந்திரம்-பவுந்திரநோயினோர் பேதம்.
கொடிப்பாசி - ஒருபாசி.
கொடிப்பாலை - ஓரிசை, ஒருசெடி.
கொடிப்பிணை - வங்கமணல்.
கொடிப்பிள்ளை - காக்கைக்குஞ்சு, பள்ளையாடு.
கொடிப்புலி - ஒருவகைப்புலி.
கொடிப்பூ நால்வகைப் பூவினொன்று.
கொடிப்போடுதல் - யாதொன்றைத் தனக்காக்க வழிபண்ணல், வெற்றி முதலியவற்றைக் குறித்துக் கொடி தூக்குதல்.
கொடிமரம் - கொடிக்கம்பம்.
கொடிமல்லிகை - ஒரு மல்லிகை.
கொடிமாடு - கோஞ்சியான மாடு.
கொடிமாதளை - ஒருமாதளை.
கொடிமுடி - ஒருசெடி.
கொடிமுடியன் - ஒருபாம்பு.
கொடிமுந்திரிகை - திராட்சக்கொடி.
கொடியது - கொடுமையானது.
கொடியத்தி - ஒரு அத்தி, நீரத்தி.
கொடியபீசம் - சிதாங்க பாஷாணம்.
கொடியமன்னன்-கோடாசொரிபாஷாணம்.
கொடியரசு - அவரை, ஓரரசமரம்.
கொடியராகு - கோமேதகம்.
கொடியவீரன் - கோடாசொரி பாஷாணம்.
கொடியன் - கேது, துட்டன்.
கொடியாடு-வெள்ளாட்டினோர்பேதம்.
கொடியாடை - கொடிச்சீலை.
கொடியாந்தரம் - கொடுமை.
கொடியால்-ஓரால்.
கொடியாளன் - கோடாசொரி பாஷாணம்.
கொடியாள்கூந்தல்-அம்மையார்கூந்தல்.
கொடியிடையம்மை - திருமுல்லைவாயிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
கொடியிலந்தை - ஓரிலந்தை.
கொடியிறக்கம்-துவசமிறக்குதல், முடிவுபண்ணுதல்.
கொடியெலுமிச்சை - ஒரெலுமிச்சை.
கொடியேற்றம் - திருவிழாத் தொடக்கம், துவசாரோகணம்.
கொடியேற்றுதல் - துவசாரோகணம் பண்ணல், படங்களைப் பறக்கவுயர்த்துதல்.
கொடியோன் - துஷ்டன், கற்றூழை, குருரன்.
கொடிவசலை - ஒரு வசலைக்கொடி.
கொடிவழித்தீர்த்தம் - வேங்கடமலையிலுள்ள ஒரு தீர்த்தம்.
கொடிவழுதலை - ஒரு வழுதுணை.
கொடிவாகனன் - நளி.
கொடிவிட்டுச்சரிதல் - நிரையே நெடுகப்போதல்.
கொடிவேம்பு - ஒருவேம்பு.
கொடிவேலி - கொடுவேலி.
கொடிறு-கதுப்பு, குறடு, பூசநாள், யானைக்கதுப்பு.
கொடு-கொடுமை, கொடென்னேவல், வளைவு.
கொடுகடி - மிகுகூதல்.
கொடுகல்-கூசுதல், கூதலாலொடுங்குதல்.
கொடுகொடுத்தல்-மிகக்குளிர்தல்.
கொடுகொடெனல்-கூதிர் நடுக்கக்குறி.
கொடுகொட்டி - குமாருடல், சிவன் கூத்து.

கொடுக்கன் / கொடுக்கான் } ஒரு விஷசெந்து, கொடுக்குள்ள செந்து.
கொடுக்கி - ஒருபூடு, கதவின்கொடுக்கி, பணிப்பூட்டு.
கொடுக்கு-கவர், கவைத்தாள், பின்கோவணம்.
கொடுக்குதல் - கொடுத்தல்.
கொடுக்குமதி - கொடுக்கவேண்டியது.
கொடுங்கண் - கொடுமை, கொடும்பார்வை.
கொடுங்கரி - பொய்ச்சாட்சி.
கொடுங்காலம் - கொடுமையான காலம்.
கொடுங்கால் - உள்வளைந்தகால்.
கொடுங்கீறு - கிழித்த சிறுகீற்று.
கொடுங்குதல் - கொடுகுதல்.
கொடுங்குழை - வளைந்த காதணி.
கொடுங்குன்றேசுரர்-திருக்கொடுங்குன்றத்திலே கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கொடுங்கூற்று - கொடிய நமன்.
கொடுங்கை - உள்வளைந்தகை, கொடுமை, தேர்க்கொடுங்கை, வீட்டின் வெளிப்பக்கம்.
கொடுங்கோபிச்சிலை - மஞ்சட்கல்.
கொடுங்கோல் - அநீதி,கொடுமையான வாளுகை.
கொடுங்கோளூர் - சேரநாட்டுள்ளதோரூர், திருவஞ்சைக்களம்.
கொடுங்கோள் - பின்புறணி, புறம்பேவசைகூறல்.
கொடுங்கோன்மை-கொடுங்கோல் செலுத்தல்.
கொடுஞூரி / கொடுஞ்சூரி } கொடியவள்.
கொடுஞ்சொல் - வன்சொல்.
கொடுதலைமடிப்பு / கொடுதலைமுடிச்சு / கொடுதலைவிற்பூட்டு } பிரியாதபடி யிசைத்தல்.
கொடுதி-மடிப்புத்தொழில், மர ஆணி.
கொடுத்தல்-அணைவித்தல், ஈதல், உண்டாக்கல்.
கொடுநுகம் - மகநாள்.
கொடுந்தமிழ் - செந்தமிழல்லாதது.
கொடுந்தலை - வளைந்ததலை.
கொடுந்தாள் - கோடியிருந்ததாள்.
கொடுப்பனவு / கொடுப்பனை / கொடுப்பினை } கொடுக்குந் தன்மை, பெண்ணை விவாகம் பண்ணிக்கொடுத்தல்.
கொடுப்பு - கதுப்பு.
கொடுப்புப்பீறி - ஒரு சிலந்தி.
கொடுப்பை - பொன்னாங்காணி.
கொடுமரம் - தனுவிராசி, வில்.
கொடுமுடி - கோவில்முதலியவற்றின் சிகரம், மலையினுச்சி.
கொடுமுடிச்சு-காரியங்களை கட்டுச்சுற்றாய் முடித்தல், படுமுடிச்சு.
கொடுமுடிநாதர்-திருப்பாண்டிக் கொடுமுடியிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
கொடுமை - கொடுங்கோன்மை, பொல்லாங்கு,முரடு,வக்கிராந்தபாஷாணம்.
கொடும்பாடு - கொடுமைப்பாடு.
கொடும்பாதகம் - அநீதம், கொடிய துரோகம்.
கொடும்பாவி - அநீதன், மழையில்லாத காலத்திற் கட்டியிழுக்குமோருரு.
கொடும்புரி - கடும்புரி.
கொடும்புலி - சிங்கம், சிங்கவிராசி.
கொடும்பை-ஒருபச்சிலை, ஒருபூடு, குளம், கொடும்பாளூர் இது பாண்டிநாட்டுள்ளது, மதகு, மலையருவி.
கொடுவரல் - கொணர்தல்.
கொடுவரி - புலி.
கொடுவாட்கத்தி - வளைந்தகத்தி.
கொடுவாய்-ஒருமிருகம், ஒருமீன், வெறம் புறங்கூறல்.
கொடுவாளை - ஒருமீன்.
கொடுவாள் - அரிவாள், வளைந்தவாள்.
கொடுவிஷம்-வெள்ளைப்பாஷாணம்.
கொடுவில் - கோட்டியவில்.
கொடுவினை-கொடியவினை, பொல்லாங்கு.
கொடுவேலி - ஒரு செடி.
கொடூரம் - கடுமை, குரூரம்
கொடை-ஈகை, அது புண்ணியத்தோற்றம் நான்கினுமொன்று, வெட்சித்திணைத்துறை பத்தொன்பதனுளொன்று. அது இரண்ட பசுநிரையொன்றும் தப்பாமே தம்மை வேண்டினவர்களுக்குப் பிரியப்பட்டுக் கொடுப்பது.
கொடைசாலி - ஈகையாளன்.
கொடைத்தம்பம் - ஈவோர் விருத்தந் தம்பம்.
கொடைப்பொருள் - கொடுக்கப்படுபொருள்.

கொடைமடம்-வரையாதுகொடுத்தல்.
கொடையாளன் - ஈகையாளன்.
கொடையாளி - உதாரி.
கொடைவஞ்சி - வஞ்சித்திணைத்துறையிருபதினுளொன்று. அது உச்சமாகவும் மந்தமாகவும் அதன்மேற் சமமாகவும் இசைய அளந்து பாடின அறிஞர்க்குப் பரிசிலைக்கொடுப்பது.
கொடைவினை-கொடுக்கும்வினை (உ-ம்) வேண்டுமா.
கொடைவீரம்-மிகு கொடையினலுண்டாம் வீரம்.
கொட்குதல்-சுழலல் வளைதல், வெளிப்படல்.
கொட்டகச்சி - கொட்டாங்கச்சி.
கொட்டகம் - கொட்டில்.
கொட்டகை - கொட்டகம்.
கொட்டைக்காரன்-தப்பிலி,பொல்லாங்கன்.
கொட்டங்கச்சி-கொட்டாங்கச்சி.
கொட்டங்காய்-ஒருமரக்காய்,தேங்காய்.
கொட்டடி-சாமானறை நெல்லுக்கொட்டி விற்கிற இடம்.
கொட்டணை - ஒருபூடு.
கொட்டத்திரட்சி - திராமலை
கொட்டம்-ஒருமருந்து, தவறு, தொழுவம், பொல்லாங்கு, மூங்கிற்கொட்டு.
கொட்டல் - அடித்தல், அப்புதல்.
கொட்டறை - கொட்டடி.
கொட்டன் - ஒருமரம், குறும்பொல், கொட்டாப்புளி, தேங்காய், பருத்த சரீரமுள்ளவன்.
கொட்டன்பொல்லு - குறும்பொல்லு.
கொட்டாகை - கொட்டகம்.
கொட்டாங்கச்சி - தேங்காயோடு.
கொட்டாங்கரந்தை - ஒருபூடு.
கொட்டாப்பிடி - மரச்சுத்தியல்.
கொட்டாப்பித்தல் - உண்ணல்.
கொட்டாப்புளி - கொட்டாப்பிடி.
கொட்டாமட்டை - தும்புமட்டை.
கொட்டாய் - கொட்டகம்.
கொட்டாரம்-முதல்வாசல், யானைப்பந்தி.
கொட்டாவி - யாக்கைக்குற்றம் ஐந்தினொன்று, இது வாயால்விடும் நெடுஞ்சுவாசம்.
கொட்டாவிச்சுரம் - ஒருவகைச்சுரம். அது மிகுகொட்டாவி, விக்கல், சீதளம், வயிறுப்பல், அக்கினிமந்தம், சர்வாங்கத்திலுஞ் சவித்தியவியர்வை கசப்புப்புளிப்பான வாந்தி, தலையிலுங் காதிலும் கோவோ டிரைச்சல், இருந்திருந்து சரீரம் நடுங்கல், அதிதாகம், நித்திரைப்பங்கம், பல்நோவு, தேகந்தடித்தல், ஈனவார்த்தை, தலைசுழலல், நெஞ்சிற்கபாதிக்கமென்று மிக்குணங்களை யுண்டாக்குவது.
கொட்டாவிப்பித்தம்-ஒருவகைப் பித்தநோய். அது ஓயாதகொட்டாவி, சர்வாங்கத்திலும் வியர்வை, அருக்கற்போற் சுரசுரப்பு, கொப்பளம், சீதளம், உரோமச்சிலிர்ப்பு, சுரம், சோர்வை, நடுக்கம், அதிகதூலை, நடுமார்பெரிவு, சிரோபாரம்,நித்திராபங்கம், கண்ணீர் வடிதலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கொட்டாவிவிட்டிருக்கி - நாயுருவி.
கொட்டான் - கொட்டன்.
கொட்டி - ஒரு கிழங்குப்பூடு, கோவில்வாசல்,பார்க்குங்குறி,வார்த்தைசொல்லல்.
கொட்டிக்கோரை - ஒருகோரை.
கொட்டித்தலைத்தல் - சிற்றடித்தல்.
கொட்டியம் - எருது.
கொட்டில் - ஒதுக்கிடம், கொட்டகை, பசுக்கொட்டில்.
கொட்டு - அடிஉட்டுளையானமரத்துண்டு, கொட்டகை, கொட்டென்னேவல், சரீரம்,சிலவிதநடி, துளையுடைப்பொருள்,பணத்துண்டு,மண்வெட்டி.
கொட்டிக்கன்னார்-கொட்டுவேலை செய்யுங் கன்னார்.
கொட்டுக்கிணறு - சங்கிலைக்கிணறு.
கொட்டுக்கூடை-ஒருகூடை, ஒரு பாத்திரம்.
கொட்டுச்செத்தல்-அறக்காய்ந்த தேங்காய்.
கொட்டுண்ணல்-சிந்துண்குதல்.
கொட்டுதல்-அடித்தல், அப்பல், குட்டல், குவித்தல், கையொடுகைதட்டல், சிந்துதல், தேள் முதலிய கடித்தல், பறையடித்தல், பூசுதல்.
கொட்டுப்பனை-தறிபட்ட பனையினடி.
கொட்டுப்பித்தளை-கொட்டுவேலைசெய்யும் பித்தளை.
கொட்டுமுழக்கு - மேளதாள முதலியவாச்சியம்.

கொட்டுமுறி - உயர்ந்த பித்தளை.
கொட்டுமேளம் - நட்டுவமேளம்.
கொட்டுவாய்-சிறு செந்துக்கள் குற்றி
ன குற்றுவாய்.
கொட்டுவான் - கொட்டாப்புளி, தேள்
முதலிய செந்து. [லை.
கொட்டுவேலை - கொட்டிச்செய்த வே
கொட்டை-ஒருகாதணி, ஒருமரம், கும்
மாடு, தலையணை, கொட்டைக் கரந்
தை, நூர்குங்கொட்டை, பாதக்குறட்
டின் குமிழ், வித்து.
கொட்டைகட்டுதல் - ஒரு விளையாட்டு.
கொட்டைக்கரந்தை - ஒரு கரந்தை.
கொட்டைக்காய் - தசையற்றகாய்.
கொட்டைக்கச்சி } சிரட்டைக்கயில்.
கொட்டைக்கையில் }
கொட்டைச்செத்தல் - அறச்செத்தல்,
கொட்டைத்தேங்காய்.
கொட்டைத்தேங்காய் - கொப்பருத்
தேங்காய்
கொட்டைநூற்றல்-கொஞ்சங் கொஞ்ச
மாய்க் கவர்தல், நூல்நூற்றல்.
கொட்டைபற்றுதல் - பிஞ்சுகளுக்குக்
கொட்டைபிடித்தல்.
கொட்டைபோடுதல்-சாதல், பலாமரம்,
பிஞ்சுபிடித்தல்.
கொட்டைப்பாக்கு - காய்ந்தபாக்கு.
கொட்டைப்பாக்குத்தலைப்பா - குஞ்சுத்
தலைப்பா [ளி.
கொட்டைப்புளி-கொட்டையெடாத பு
கொட்டைப்பெட்டி - பஞ்சுப்பெட்டி.
மடிப்பெட்டி,
கொட்டைமுதல்-கைமுதல் விதைமுத
கொட்டைமுத்து-ஆமணக்குமுத்து [ல்
கொட்டைமுந்திரி } ஒருமரம்.
கொட்டைமுந்திரிகை }
கொட்டையாடுதல் } பஞ்சுசுகிர்தல்
கொட்டையிடுதல் }
கொட்டையிலாந்தை - ஓரிலந்தை.
கொட்டையூர் - ஒரு சிவஸ்தலம்.
கொட்பு-சுழற்சி, திரிபு, வளைவு.
கொணர்தல் - கொண்டுவரல்.
கொணு-கோணுவென்னேவல்.
கொண்கன்-கணவன், தலைவன், நெய்த
னிலத்தலைவன்.
கொண்டகம்புகுதல் - பெருந்திணைத்து
றைகளுளொன்று, அது அன்புமிகக்
கொழுநனைக்கண்டு மாலையாற்கட்டி
அகத்திலேகொண்டுபுக்கது.
கொண்டகுளம் - எட்டிமரம். [தி.
கொண்டக்காரர் - கரையாரிலோர் பகு
கொண்டைக்கிரி - ஒருபண்.
கொண்டச்சானி - நஞ்சறுப்பான்.
கொண்டபாரம்-நிறைபாரம், பொறுக்
கும்பாரம்.
கொண்டம் - குறிஞ்சா.
கொண்டலடித்தல் - மகளிர்விளையாட்
டில் ஒன்று.
கொண்டலாத்தி - கொண்டக்கிளாறு.
கொண்டல் - ஒருவிளையாட்டு, கிழக்கு,
கீழ்காற்று, முன்பனிப்பருவத்தின்
காற்று, மேகம்.
கொண்டல்மிதித்தல் - தீமிதித்தல்.
கொண்டல்வண்ணன் - திருமால்.
கொண்டவன்-மணஞ்செய்த கணவன்.
கொண்டற்கல் - மந்தாரச்சிலை.
கொண்டற்பகை - வாயு.
கொண்டாடல் - மெச்சுதல்.
கொண்டாடுதல் - ஆசரித்தல், சீராட்டு
தல், பாராட்டுதல்.
கொண்டாட்டம் - சங்காத்தம், சந்தோ
ஷம், சீராட்டு, பொழுதுபோக்கு.
கொண்டாட்டு-கொள்கை, சீராட்டு.
கொண்டானடித்தல் - கொண்டலடித்
தல். [ன்.
கொண்டான்-ஒருவிளையாட்டு, கணவ
கொண்டி-கதவிற்குடுமி, கொழுமாட்டு
மிரும்பு, கொள்ளை.
கொண்டிமாடு - பட்டிமாடு.
கொண்டியம் - வெறும்புறங்கூறல்.
கொண்டியாரம்-இறுமாப்பு, சிறப்பு, நிந்
தை, பிறர்காரியத்திற் கையிடுகை.
கொண்டிலாத்தி - கொண்டலாத்தி.
கொண்டிலான் - கொண்டைக்கிளாறு.
கொண்டுகூட்டு - பொருள்கோளெட்டி
னொன்று. அது கவிகருதியபொருள்
வசனங்களைத் தெரிந்தெடுத்துப் பய
ன்படுத்துவது.
கொண்டுணி - கோட்சொல்வோன்.
கொண்டுவிற்றல் - எதிர்ச்செட்டு.
கொண்டேசன் - சுக்கு.
கொண்டை-ஆணி முதலியவற்றின் த
லை, இலந்தைக்கனி, ஐம்பாலினொ

ன்று. அது பக்கன் முடித்தல், பட்சியின் சிகை, மயிர்முடி.
கொண்டைக்கட்டி - ஒரு வேளாளன், தொண்டைமண்டல முதலியார்.
கொண்டைக்கரிச்சான் - கரிக்குருவி.
கொண்டைக்காரன்-செருக்கன், மயிர்முடியுள்ளோன், மேன்மையுடையவன்.
கொண்டைக்கிருட்டி-கொண்டலாத்தி.
கொண்டைக்கிளாறு - ஒரு குருவி.
கொண்டைக்குச்சு - கொண்டையிற்செருகு ஒருபணி.
கொண்டைசாணிக்கிழங்கு - நஞ்சறுப்பான்.
கொண்டைச்சன் }
கொண்டைச்சான் } ஒரு குருவி.
கொண்டைச்சி - கொண்டைக்கிளாறு.
கொண்டைசத்தியல் - ஒரு சத்தியல்.
கொண்டைத்தலை - மயிர்முடித்தலை.
கொண்டைத்துலா - தலைத்துலா.
கொண்டைமுசு }
கொண்டைமுசுறு } ஒரு உரங்கு.
கொண்டையன் - ஒரு பருந்து.
கொண்டையாணி - சடையாணி.
கொண்டையூசி - குண்டூசி.
கொண்டைலாத்தி - கொண்டலாத்தி.
கொண்டோடி - துலாவையுங் கொடியையும் பிணைக்குங்கயிறு.
கொண்டோன் - நாயகன், கணவன்.
கொண்மூ - ஆகாயம், முகில், மேகம்.
கொண்மூமுத்து - மேகத்திற் பிறந்த சூரியனிறமுத்து.
கொதி - காய்ச்சல், கொதித்தல், கொதியென்னேவல், கோபம், சூடு, துக்கம், வெப்பம்.
கொதிகுடல் - பசிதாங்காவயிறு.
கொதிகொள்ளுதல் - வெப்புக்கொள்ளுதல்.
கொதித்தல் - கடுக்கல், கோபித்தல், நீர்முதலிய பொங்குதல், வெப்பித்தல்.
கொதிநீர் - சூடுள்ளநீர், வெந்நீர்.
கொதிப்பித்தல்-சிறபோசனஞ்சமைத்தல், சுடச்செய்தல்.
கொதிப்பு - காய்ச்சல், சூடு, துடிப்பு, பொங்கு மூர்க்கம்.
கொதிமந்தம் - வெப்புமந்தம்.
கொதியல் - கொதிப்பு.

கொதியிறங்குதல் }
கொதியெடுக்குதல் } ஆங்காரங்குன்றுதல்.
கொதியெண்ணி போசனத்துக்காத்திருப்போன்.
கொதியெண்ணெய் - கொதிப்பிக்கும் மருந்தெண்ணெய்.
கொதுகு - கொசுகு.
கொதுகுலம் - மழலைகொஞ்சுதல்.
கொதுகுலித்தல் - குழைந்துருகுதல்.
கொதுகொதுத்தல் }
கொதுகொதுப்பு } ஒலிக் குறிப்பு, கொதித் தெழும்புதல்.
கொதுகொதெனல் }
கொத்தடிமை - பரவணியான அடிமை பழவடிமை.
கொத்தணி - குண்டுணி.
கொத்தமல்லி - ஒருசரக்கு.
கொத்தமல்லிகைசூரி - கொப்புளிப்பான்.
கொத்தம் - எல்லை.
கொத்தரித்தல் - கொத்திடுதல்.
கொத்தலரி - ஓரலரி.
கொத்தல் - கொத்துதல்.
கொத்தவரை - ஓரவரை.
கொத்தவால் - சந்தை விசாரணைக்காரன்.
கொத்தழிதல் - நிர்மூலமாதல்,
கொத்தளம் - மதிற்புறம்.
கொத்தளி - ஒருபாய்.
கொத்தளை - ஒருமீன்.
கொத்தான் - ஒருசெடி.
கொத்தியரித்தல் - நாசமாக்குதல்.
கொத்து - உணவு, குடும்பம், கொத்திடல், கொத்துதல், கொத்தென்னேவல், திரள், நாழி என்னுமளவை, வர்க்கம்.
கொத்துக்கட்டி - இடமண்.
கொத்துக்கத்தரி - ஒருகத்தரி.
கொத்துக்குறடு - நண்டு.
கொத்துச்சரப்பணி }
கொத்துச்சரப்பளி } ஓராபரணம்.
கொத்துதல்-இரைகொத்தியெடுத்தல், தறித்தல், மண்வெட்டுதல், வெட்டுதல்.
கொத்துத்தாழ்வடம் - சிறு ருத்திராமணிக்கோவை, பலவற்றைப் பிணைத்திருப்பது.
கொத்துத்தூர்வை - கொத்தினுலுண்டாம் மிருது.
கொத்துப்பசலை - ஒருகீரை.

கொத்துப்படல் - ஒருபுடல்.
கொத்துமல்லி - கொத்தமல்லி.
கொத்துமேகம், கொத்துவானம் - கொத்துக் கொத்தாயிருக்கும் முகில்.
கொத்துவேலை - கொத்திச் செய்யுஞ் சித்திரவேலை.
கொத்தை - இசடு, சொத்தை, பழுது.
கொந்தல் - அணில் முதலியவற்றாற் கொந்தப்பட்டது, ஊனப்பட்டது, கொந்துதல், சினக்குறிப்பு, பெருங்கோபம்.
கொந்தழல் - தீத்திரள்.
கொந்தளம்-காண்டாமிருகம், கூத்தின் விகற்பம், சமுத்திராப்பழம், பெண்மயிர், மயிர்க்குழற்சி.
கொந்தளித்தல் - கிளம்பல், மும்முரங்கொள்ளுதல்.
கொந்தளிப்பு - கெற்சிதம், மும்முரம்.
கொந்தாலி -கல்லுவெட்டு மோர்கருவி.
கொந்தாழம் - ஒருமரம், ஒருமருந்து.
கொந்தாழை - ஒரு கடற்றாழை.
கொந்தாளம் - ஒருமருந்து.
கொந்தாளித்தல் - கொந்தளித்தல்.
கொந்து - கொந்தென்னேவல், நெய்வோர். கதிர், பூங்கொத்து.
கொந்துதல் - பறவைகளலகினுற் கொத்துதல், மூர்க்கங்கொள்ளுதல்.
கொப்பம் - யானை படுகுழி.
கொப்பரம் - அதட்டுதல், மல்யுத்தத்திலொன்று.
கொப்பரி, கொப்பரை - கடாரம், குடம்,
கொப்பளம் - கொப்புளம்.
கொப்பளித்தல் - கக்குதல், கொப்பளமாதல், சொரிதல்.
கொப்பரு, கொப்பறைத்தேங்காய் - அறக்காய்ந்த தேங்காய்.
கொப்பாட்டன் - மூன்றும்பாட்டன்.
கொப்பாந்தேன் - கோற்றேன்.
கொப்பி - கொம்மை.
கொப்பிகொட்டல் - கொம்மைகொட்டல்.
கொப்பு - கொண்டை, மயிர்முடி, மரக்கொம்பு, மாதர்காதணியிலொன்று.
கொப்புவாளி-மாதர்காதணியிலொன்று.
கொப்புளம் - குமிழ்ப்பு, சிப்பொடி.
கொப்புளித்தல் - குமிழ்த்தல், கொப்புளமாதல், நீர் முதலிய குதித்தல், வாயால் நீரை யலசிக்கக்கல்.
கொப்புளிப்பான் - ஒரு சிறுவகுரி.
கொப்புள் - நாபி, குமிழ், கொப்புளம், கொப்பூழ்.
கொப்பூழ் - நாபி, உந்தி.
கொப்பூழ்க்கொடி - நஞ்சுக்கொடி.
கொப்பெனல் - விரைவின்குறிப்பு.
கொம்படித்தல் - கடா முதலிய போர்செய்தல், முதன்மைசெலுத்தல்.
கொம்பரக்கு - பொன்மெழுகு.
கொம்பர்-மரக்கொம்பு, விலங்கின்கொம்பு.
கொம்பன் - ஆண்யானை, ஒருநோய், ஒருமீன், கொம்புள்ளது.
கொம்பாபிள்ளை - அதிகார குடிப்பிறந்தோன்.
கொம்பிலிளங்கோதைநாயகி - திருவைகல்மாடத்திற் கோயில்கொண்டிருக்குந் தேவியார்.
கொம்பு - ஊறிடுகொம்பு, எரிக்கோடி, கோல், நந்து, மரக்கொம்பு, மேன்மை, விலங்கின்கொம்பு.
கொம்புகாவி - சிவியான்.
கொம்புக்குமண்ணெடுத்தல் - யானை முதலிய களிப்புக்கொண்டு கொம்பினல் மண்ணெடுத்தல்.
கொம்புதல் முயலுதல், மூர்க்கங்கொள்ளல்.
கொம்புத்தேன் கொம்பாந்தேன்.
கொம்புபயறு - ஒருபயறு.
கொம்புப்பாகல் - ஒருபாகல்.
கொம்பேறிமூக்கன், கொம்பேறிமூர்க்கன் - ஒருபாம்பு.
கொம்மடி, கொம்மட்டி - ஒருகொடி, நீர்மொலாம் பழம்.
கொம்மட்டிக்கீரை - ஒருகீரை.
கொம்மட்டிச்சுரை ஒரு சுரைக்கொடி.
கொம்மட்டிமாதளை - சிதளை.
கொம்மெனல் - அனுகரண வோசை, ஒலிக்குறிப்பு.
கொம்மை - அக்கை விரித்துக் கொட்டல், அழகு, இளமை, கொந்தளம், கொம்மட்டி, திரட்சி, முலை, வட்டம், வலி.
கொய்-ஒருமீன், கொய்யென்னேவல்.
கொய்கை-அறுத்தல், கொய்தல், பறித்தல்.
கொய்சகம், கொய்சுவம், கொய்சுவனம் - விடுத்தலைப்பு.

கொய்ச்சாலை - ஒருமீன்.
கொய்தல் - அறுத்தல், ஆய்தல், எஃகி வாங்குதல், கத்தரித்தல், சுருக்குதல், தெரிதல். [தல்.
கொய்துகட்டுதல் - கொசிபிடித்துக்கட்டு
கொய்துவாங்குதல் - எஃகிவாங்குதல்.
கொய்யகச்சட்டி - ஒருசட்டி.
கொய்யகம் - கொய்சகம்.
கொய்யடி - ஒருநாரை.
கொய்யா - ஒருமரம், நெய்வார் கருவியில் ஒன்று.
கொய்யாக்கயிறு - நெய்வார் கருவியில் ஒன்று.
கொய்யாக்குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.
கொய்யான் - பரணி. [யிர்.
கொய்யுளை - குதிரை, குதிரைப்பிடர்ம
கொய்யோ - சயக்குறிப்புச்சொல்.
கொய்யோர்க்கூறல் - வெற்றிகூறல்.
கொய்வு - கொய்தல்.
கொரவேஷுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கொராசானிஓமம் - குராசானிஓமம்.
கொரிக்கம் - எழுத்தாணிப்பூண்டு.
கொருடன் - கொவ்வை.
கொலு-இராசசமுகம், உல்லாசம், உல்லாசவீற்றிருப்பு, சேவை, கிமிர்ச்சி.
கொலுகொலுத்தல் - அசைதல், ஈடாடுதல்.
கொலுகொலுப்பு - ஈடாட்டம், உல்லாசம், சந்தோஷம்.
கொலுக்கூடம் - கொலுமண்டபம்.
கொலுசு - காலணியிலொன்று.
கொலுச்சாவடி } உல்லாச வீற்றிருப்பு மண்டபம்.
கொலுமண்டபம் }
கொலுவிருத்தல் - வீற்றிருத்தல்.
கொலுவிருப்பு - வீற்றிருப்பு.
கொலே - கொல்லுதல் அதுகாயத்தீக்குணம் மூன்றினொன்று, தாமதகுணத்து மொன்று, பஞ்சபாதகத்தும் ஒன்று.
கொலேகாரன் -கொலேசெய்வோன்.
கொலேக்களம் - கொல்லப்படுமிடம்.
கொலேசெய்தல் - கொல்லுதல்.
கொலேஞர் - கொலேபாதகர், சண்டாளர், வேடர்.
கொலேதல் - குலேதல்.

கொலேநினேக்கை-மனத்தீக்குண மூன்றினொன்று.
கொலேபாதகம் - பஞ்சபாதகத்தொன்று.
கொலேபாதகன் - கொலேத்துரோகி.
கொலேமறுத்தல் - ஒருநூல், ஜீவகாருணியம், கொலேவிலக்கல்.
கொலேயிச்சைக்கிரகம்-ஒருவகைக்கிரகநோய். அது நாசியுயரல், நாக்கைச் சடித்தல், வெறிக்கவெறிக்கப் பார்த்தல், சிலவேளை தலேயைத்தூக்கிப் பார்த்தல், கண்களில் நீர்வடிதல், மாறுரூபம், முகவிகாரம்,சரீரத்தில்மெலிவோடு துர்க்கந்தம், மலமூத்திரத்தைப் பிசைதல், மார்பிலடித்துக் கொள்ளுதல்,எதிரில்வருவாரையடித்தல், கத்திகள் தடிகள் முதலியவைகளா லெறிதல் அக்கினி குளம் கிணறுகியவைகளில் விழுதற்கேயோடுதல்முதலியதுர்ச்செய்கைகளையுண்டாக்குவதோடு தாகம், வயிற்றிலெரிவு, ஞாபகபங்கம், சலதாரைக் கும்பி, நாற்றவாந்தி, நவத்துவாரங்களிலுமிரத்த வீழ்ச்சியென்னுமிக்குணங்களை யுண்டாக்கும்.
கொலேயுண்ணல் - கொலேப்படுதல்.
கொல் - அசைச்சொல் (உ-ம்) வருவர்கொல், ஐயக்கிளவி (உ-ம்) இவ்வருக்குற்றி கொல்மகன்கொல், கொல்லென்னேவல்,பஞ்சலோகம், வருத்தம்.
கொல்லச்சேவகர் - பொக்கிஷ காவற்
கொல்லத்து - சிற்பம். [காரர்.
கொல்லத்துவேலே-சிற்பவேலே கட்டடவேலே.
கொல்லம் - தேய மைம்பத்தாறினொன்
கொல்லர் - கம்மாளர், கருமார். [று.
கொல்லல் - கொல்லுதல்.
கொல்லறு - காலே.
கொல்லன்கோவை - ஆகாச கருடன், காக்கணங்கொடி.
கொல்லன்பகை - அஞ்சனபாஷாணம்.
கொல்லாமற்கொல்லல்-நன்மை செய்கிறதாகத் தீமைசெய்தல்.
கொல்லாமை - இயமத்துறையைந்தினொன்று, அது கொலேசெய்யாமை.
கொல்லாவிரதம் - அருகசமய நெறியினொன்று. அது கொலேபண்ணுவிரதம்.

கொல்லாவிரதியர் - அருக சமயத்தார், கொல்லாவிரதம் பூண்டவர்.
கொல்லாவேதம் - சமணவேதம்.
கொல்லாவேதன் - அருகன்.
கொல்லி - ஒருபண், ஒருமலை, கொல்வோன், நெருப்பு, வில்.
கொல்லிச்சி - கொல்லத்தி.
கொல்லிடம் - கொள்ளிடம், ஒருநதி.
கொல்லிமழவன்-சம்பந்தரால் முயலகன் என்னும் நோய் நீரப்பெற்ற கன்னிகையினது தந்தை.
கொல்லியர் - வண்ணார்.
கொல்லியவராடி - வராடித் திறத்தில் ஒன்று.
கொல்லிவெற்பன் - சேரன்.
கொல்லுதல் - அலட்டல், சங்கரித்தல்.
கொல்லுலை - கம்மாளருலைமுகம்.
கொல்லெனல் - ஒலிக்குறிப்பு.
கொல்லை - குச்சு, சோலை, தோட்டம், புறக்கடை, பூந்தோட்டம்.
கொல்லைப்பல்லி - ஒருபூடு.
கொலிந்தம் - செம்முள்ளி.
கொவின் - ஒருமரம்.
கொவ்வை - ஒருகொடி.
கொவ்வைக்கனிமணி கோவரங்கப் பதுமராகம்.
கொழிஞ்சி குளவஞ்சி, ஒரு நாரத்தை, பூவாது காய்க்குமரம்.
கொடிதமிழ் - வடிதமிழ்.
கொழித்தல் - ஒதுக்குதல், தெரித்தல், வாருதல்.
கொழிப்பு - குற்றம், கொழித்தல்.
கொழிப்பூண்டு - குப்பைமேனி.
கொழியல் - கொழிப்பு, தவிடெடுபடா தவரிசி.
கொழிற்பூண்டு - குப்பைமேனி
கொழு - காறு, கொழுவென்னேவல், மழு.
கொழுகொம்பு கொடியேறு, கொம்பு, தஞ்சம், நடுக்கொம்பு.
கொழுக்கட்டை - ஒரு பண்ணிகாரம், மோதகவல்லிமரம்.
கொழுங்கண் - கிருபைக்கண்.
கொழுங்கிரி - மல்லிகை.
கொழுச்சிராய் கொழுவடுக்குஞ்சிராய்.
கொழுஞ்சி-கொழுய்ச்சை, கொள்ளுக்காய் வேளை.

கொழுத - கோத.
கொழுதல் - கோதல்.
கொழுத்தல்- சரீரந்தெளிந்துபருத்தல், மதத்தல். [டு.
கொழுத்தாடுபிடித்தல்-ஒரு விளையாட்
கொழுநனை - மலரும் பருவத்தரும்பு.
கொழுநன்-எப்பொருட்கு மிறைவன், தலைவன், நாயகன், கணவன்.
கொழுநீர் - வியர்வை.
கொழுந்தன்-மணவாளனுடைய சகோதரன்.
கொழுந்தி - மணவாளியின் சகோதரி.
கொழுந்து - இளங்கிளை, நீச்சுவாலை, மரக்கொழுந்து, வெற்றிலைக்கொடி.
கொழுந்தின்கால்-கொழுந்தின் கொளுகொம்பு.
கொழுந்துதல் - சுவாலித்தல், வெய்யிலிற் கருகுதல்.
கொழுந்துவிடுதல் - சுவாலை விடுதல், தளிர்விடுதல்.
கொழுந்தொட்டி - ஒருபூடு.
கொழுப்பு-செழுமை, நிணம், மதர்ப்பு.
கொழுமரம் - செம்மரம்.
கொழுமிச்சை - கொழுஞ்சி.
கொழுமுறி - இளந்தளிர்.
கொழுமை-கொழுப்பு, செழுமைநிறம், வளமை.
கொழும்புகை - நறும்புகை.
கொழும்புவேர் - ஒருவேர்.
கொழுவு - கொழுகொழுப்பு.
கொளகொளத்தல் - ஈடாடுதல், தளர்தல், திரமற்றுப்போதல்.
கொளகொளெனல் ஈரடுக்கொலிக்குறிப்பு.
கொளஞ்சி - குளஞ்சிமரம். [ப்பு.
கொளல் - கொள்ளல்.
கொளல்வினா - கொள்ளும்வினா (உ-ம்) பயறுண்டோவணிகீர்.
கொளுகொம்பு - ஆதாரகோல்.
கொளுகொளுத்தல் கொளகொளத்தல்
கொளுகி - கொளுவி.
கொளுசு - குளைச்சு.
கொளுச்சொல் - கருத்து.
கொளுத்து - கொளுத்தென்னேவல், சந்து, மூட்டு.
கொளுத்துதல் - கலைகற்பித் தழுத்தல், நெருட்டுதல், பற்றவைத்தல், மூட்டுதல், வீணை முதலிய வாசித்தல்.

கொளுந்தல் - பற்றுதல்.
கொளுமிதி-இறைகொடுத்து மிஞ்சின தானியம்.
கொளுமுதல் - கொளுமிதி, செழிப்பு.
கொளுவம் - கோவைத் துறைவசனம்.
கொளுவல் - கொளுவுதல்.
கொளுவி - கொக்கை.
கொளுவுதல் - அகப்படுதல், அகப்படுத்துதல், கூட்டிக்கொள்ளுதல், கொளுவிவிடுதல், தொடுத்துக்கொள்ளல், மிதியடி முதலிய தொடுதல்.
கொளை - இசைப்பாட்டு.
கொள் - ஒருதானியம், குடைவேல், கொள்ளென்னேவல்.
கொள்கலம் - அணி, ஆடை, சாந்து முதலிய பெய்கலம், பாத்திரம், பிழா.
கொள்கை-அறிவு, குணம், கோட்பாடு, சினேகம், செய்கை.
கொள்வன }
கொள்வனவு } கொள்ளப்படுவது, கொள்ளுதல், சிநேகம், விவாகசம்பந்தம்.
கொள்வினை - கொள்வனவு.
கொள்விலை - தொண்டவிலை.
கொள்வோன் - கற்போன், விலைக்கு வாங்குகிறவன்.
கொள்ள - நிகழ்கால விடைச்சொல் (உ-ம்.) அவன் வரக்கொள்ள.
கொள்ளட்டு - ஒருபூண்டு.
கொள்ளம் - குழைசேறு.
கொள்ளல்- பாத்திரமுதலியவற்றினுள்ளே யடக்குதல், மனதிலே பிடித்தல், வாருதல்.
கொள்ளாகொள்ளை }
கொள்ளாக்கொள்ளை } மிகுதி.
கொள்ளாமை-அடங்காமை, மனதிலே பிடியாமை.
கொள்ளார் - பகைவர்.
கொள்ளி - எருமைநாக்கி, நெருப்புறு விறகு.
கொள்ளிக்கட்டை - கொடியவன், நெருப்புக்கொள்ளி.
கொள்ளிக்கண்ணன் - கண்ணூறுகாரன்கொடியவன், கோபக்கண்ணுள்ள
கொள்ளிக்கரப்பன்-ஒருகரப்பன். [து.
கொள்ளிக்காற்குதிரை-ஒருகால் வெள்ளையான குதிரை.

கொள்ளிக்கொட்டான் - கொள்ளிவாயெறும்ப.
கொள்ளிசெருகுதல் - தீமையையுட்படுத்துதல்.
கொள்ளிடம்-கொள்ளடம், ஒருயாறு.
கொள்ளித்தேள் - ஒருதேள்.
கொள்ளியம்-உமிரி, புன்குமரம். [ம்பு.
கொள்ளியெறும்பு - கொள்ளிவாயெறு
கொள்ளிவட்டம் - கொள்ளி சுழற்றும் வட்டம்.
கொள்ளிவாய்ச்சர்ப்பம் - கொள்ளிவாய் விரியன்.
கொள்ளிவாய்ப்பிசாசம் }
கொள்ளிவாய்ப்பேய் } நெருப்புக் காலுமாவி.
கொள்ளிவாய்விரியன் - ஒருபாம்பு.
கொள்ளிவாலி-கருப்புடலும் வெள்ளை வாலு முள்ளது.
கொள்ளிவாலெறும்பு ஒரெறும்பு.
கொள்ளிவைத்தல் - தீங்குசெய்தல், பிணஞ்சுடல். [ல்.
கொள்ளு-கொள், கொள்ளென்னேவ
கொள்ளுக்காய்வேளை - ஒருகாய்வேளை.
கொள்ளுதல் - உள்ளே கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், கொண்டிருத்தல், சொல்லல், பற்றுதல், பெறுதல், மனதுக்கேற்றல், விலைக்குவாங்கல்.
கொள்ளை - ஒருநோய், கொள்ளையிட்ட பொருள், கொள்ளையெடுத்தல், மிகுதி.
கொள்ளைக்காய்ச்சல் - ஒருநோய்.
கொள்ளைக்காரர் - பரிசாரர்.
கொள்ளைசாற்றி - கொள்ளையூட்டி.
கொள்ளைநோய் - கோதாரி.
கொள்ளையடித்தல் }
கொள்ளையள்ளுதல் }
கொள்ளையாடுதல் } திருடுதல், பறித்தல்.
கொள்ளையிடுதல் }
கொள்ளையெடுத்தல் }
கொறகொறெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
கொறடா - சவுக்கு.
கொறட்டை - ஒருசெடி.
கொறி - ஆடு, கொறியென்னேவல், செம்மறியாடு, மேடவிராசி.
கொறிக்குதல்-பல்முதலியவற்றாற்கோதுதல், பாம்பு முதலிய பலனரும்பல், பொறிதல்.

கொறிதலை - நிலவேம்பு.
கொறித்தல் }
கொறிப்பு } கொறிக்குதல்.
கொறு - கன்றுபாலூட்டாதபடி முகத்திற் கட்டுமியற்று.
கொறுகொறுத்தல் - கருகருத்தல், குறட்டைவிடுதல்.
கொறுகொறுப்பு - அலட்டு, குறட்டை.
கொறுகொறெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
கொறுக்கச்சி - எருவை, நாணல்.
கொறுக்காய் - ஒருமரம்.
கொறுகாயப்புளி - ஒருபுளி.
கொறுக்கை - உயிர்ப்பு, ஒருமீன், குறட்டை, நாணல், வலி.
கொறுக்கச்சி - கொறுக்கைப்புல்.
கொற்கை - மதுரைக்கருகில்ஒரூர். இது பாண்டியர்களின் பழைய இராசதானிகளுளொன்று சிலப்பதிகார கதாநாயகன் காலத்திலே இந்நகரத்திருந்த அரசன் வெற்றிவேற் செழியனென்பவன். இது இப்பொழுது மிகச் சிறிய வூராக விருக்கின்றது இச்செழியனே வெற்றிவேற்கையென்னும் அறநூலியற்றினோன். இவன் நல்லொழுக்கஞ் சிறந்தவன்.
கொற்கைவேந்தன் - பாண்டியன்.
கொற்றம் - அரசியல், கொத்தம், வலி, வெற்றி.
கொற்றவஞ்சி - வஞ்சித் திணைத்துறையிருபதினுளொன்று. அது உலகத்தன்னா ரெல்லாருந்தொழ வாளாலே வெட்டினனெனச் சொல்லிப் பண்ணின வீரக்கழலினை யுடைய அரசனது நன்மையைப் பெருக்கச் சொல்லுவது.
கொற்றவள்ளை - பகைவர், நாடழித்தல், வஞ்சித் திணைத்துறை யிருபதினுளொன்று. அது அரசன்கீர்த்தியைச் சொல்லிப் பகைவர் தேசம் கெடுவதற்கு வருந்துவது.
கொற்றவன் - அரசன். முடக்கொத்தான்.
கொற்றவுழிஞை - உழிஞைத் திணைத்துறையிருபத்தெட்டனுளொன்று. அது பகைவர் தங்காமற் பதியைக் கைக்கொள்வான் வேண்டிச் சேனையோடு கைவளர்ந்து சென்றது.

கொற்றவை - துர்க்கை, வெற்றி சிறந்தோன்.
கொற்றவைநிலை - வஞ்சித்திணைத்துறையிருபதினுளொன்று. அது நீண்ட தோளினையுடையவன் வெற்றிபெறுவானாக வெனச்சொல்லி நல்ல பொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாக வெடுத்து அரசனுடைய பகைவரை முதுபுறங்காணும் துர்க்காதேவி நிலைமையைச் சொல்லுவது வெட்சித்திணைத்துறை பத்தொன்பதனுளொன்று. அது விளக்கத்தினின்றும் ஒழியாத வெற்றியான்மிக்க ஆயுதத்தை யுடையோளது இரக்கத்தினின்றும் ஒழியாத கருணையைச் சொல்லுவது.
கொற்றன் - கற்சிற்பன், வெற்றியாளன்.
கொற்றான் - ஒருகொடி.
கொற்றி - இளங்கன்றப்பசு, ஒருபிசாசம், துர்க்கை, பசுவிளங்கன்றுவடுகி.
கொற்றியார் - பிரசவத்துக்குரிய தேவதை.
கொற்று - கொல்லத்துவேலை, கொற்றர், கொற்றெனவேவல்.
கொற்றுதல் - கொத்தல், கோதுதல்.
கொற்றை - இழிவான்.
கொனை - குனை.
கொன் - அச்சம், காலம், பயனின்மை, பெருமை.
கொன்றல் - கொல்லுதல்.
கொன்றை - கடுக்கைமரம்.
கொன்றைக்குழல் - ஊதுகுழலி னொன்று.
கொன்றைசூடி - சிவன்.
கொன்றைவேந்தன் - ஔவையார் செய்த நீதி சாத்திரம்.
கொன்னளர் - பாவிகள்.
கொன்னித்தல் - பேசநாத் திரும்பாதிருத்தல்.
கொன்னுதல் - கொன்னித்தல்.
கொன்னெச்சன் - மாட்டிலையான்.
கொன்னே - விகற்பமற.
கொன்னை - திருத்தமற்றபேச்சு, பேசநாத்திரும்பாமை.

கோ

கோ - அம்பு, அரசன், ஆகாயம், ஆண்மகன், இடியேறு, இரக்கக் குறிப்பு, இலந்தை, உரோமம், எருது, ஓரெழுத்து, கண், கிரணம், கோவென்னேவல், சந்திரன், சூரியன், திசை, கோமேதயாகம், தேவலோகம், நீர், பசு, பசுப்பொது, பூமி, பொறிமலை, மாதா, மேன்மை, வச்சிராயுதம், வாணி, வெளிச்சம்.

கோகடம் - ஒருவகை முசல்.

கோகண்டகம், கோகண்டம் - நெருஞ்சில்.

கோகதேயம் - புறா.

கோகத்தி, கோகத்தியை - பசுக்கொலை.

கோகநகம் - கோகநதம், தாமரைமலர்.

கோகநகை - சலசை.

கோகநதச்சவி - சிவப்பு.

கோகநதம் - செந்தாமரை, செவ்வாம்பல்.

கோகநதன் - சிவன்.

கோகநதை - கோகநகை.

கோகநதம் - கந்தபாஷாணம்.

கோகபந்து - சூரியன்.

கோகம் - உலர்ந்தபூ, சக்கரவாகப்புள், செந்நாய், தவளை, பல்லி, துணி, பேரீச்சமரம், மலைப்புளிச்சை.

கோகர்ணம் - ஒருவித்தை.

கோகயம் - தாமரை.

கோகருணம் - கோகன்னம்.

கோகருனை - பெருங்குரும்பை.

கோகர்ணநாயகி - திருக்கோகர்ணத்திலே கோயில்கொண்டிருக்குந் தேவியார்.

கோகர்ணம் - கோகன்னம். இது துளுவநாட்டிலுள்ள ஒரு பெரிய சிவக்ஷேத்திரம். இராவணன் தபசுசெய்து பிரமாவிடத்திலே வரம் வாங்கினவிடம்.

கோகர்ணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கோகலி - கடம்பு.

கோகழி - குறுந்தமரம், திருவாவடுதுறை.

கோகனகச்சிலை - பதுமராகக்கல்.

கோகனத்தி - இலக்குமி, கலைமகள்.

கோகனகம் - செந்தாமரை.

கோகனகை, கோகனதை - இலக்குமி.

கோகனம் - கரிசாலை, செந்தாமரை, மலையாளக்கரையில் சிறந்த ஒரு சிவஸ்தலம், நிலக்கடம்பு, நிலவேம்பு.

கோகனுசனி - கோகனகத்தி.

கோகன்னம் - ஒருவித்தை.

கோகன்னவாதனம் - பசுவின்செவிபோலிரண்டு கையையுமடித்துச் சுகாதனமாய்ச் செவி கண் மூக்கு எல்லாம் புதைத்திருப்பது.

கோகானம் - வேய்ங்குழலோசை.

கோகிதம் - குதிகால்.

கோகிரகம் - அரசரில்லம், ஆன்கொட்டில் போர்வென்றார் கவர்ந்ததிரவியம்.

கோகிரந்தி - ஆண்கொட்டி, எருவராட்டி.

கோகிராசம் - பசுவிற்கு வாயுறைகொடுத்துச் செய்யுமோர் சடங்கு.

கோகிருட்டி - ஓரீற்றுப்பசு.

கோக்கிருதம் - ஆப்பி, பசுநெய், மழை.

கோகிலம் - இலந்தை, கரி, உலக்கை, கலப்பை, கிளி, குயில், குரங்கு, சிறுகுறிஞ்சா, பல்லி.

கோகிலவெலி - ஒருவகை யெலி. அது குயில்போற் புள்ளிகளைப் பெற்றிருப்பது, கடித்தால் கடிபட்டவருக்குக் கிரந்தியும் உக்கிரமான சுரமுந் தாகமுமுண்டாகும்.

கோகிலாட்சம் - கொம்மட்டிமாதளை, நீர்முள்ளி.

கோகிலாநந்தம், கோகிலர்வாசம் - மாமரம்.

கோகிலேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

கோகிலோற்சவம் - மாமரம்.

கோகு - கழுதை, புயம்.

கோகுடி - ஒருவகைப்பூ.

கோகுத்தம் - மல்லிகை.

கோகுலம் - ஆண்கொட்டில், இடையருர், காலிவருக்கம், குயில், குரங்கு, துளையுடைப்பொருள், பல்லி, யமுனைநதி தீரத்திலே பிருந்தாவனத்துக்குச் சமீபத்திலுள்ள இடைச்சேரி, இது கிருஷ்ணன் வளர்ந்த இடம்.

கோகுலிகன் - பசுக்காத்தவன்.
கோகோசனம் - கோரோசனை.
கோகோட்டம் - பசுமடம், தொழுவம், ஆன்கொட்டில், ஆன்தொட்டில்.
கோகோயுகம் - ஒருசோடு எருது.
கோகோவெனல் - இரக்கக்குறிப்பு.
கோக்கள் - அரசர், சிறந்தோர், பசுக்கள், பெரியோர்.
கோக்குஞ்சம் - அம்பறாத்தூணி.
கோங்கணம் - ஒருதேசம், ஒருபட்சி, ஒரு மீன்.
கோங்கணசுதன் - பரசிராமன்.
கோங்கணை - பரசிராமன்றாய்.
கோங்கம் - ஒருபுட்பம், நடு, நெல்லி.
கோங்கினம் - ஒருதேசம்.
கோங்கிலவு, கோங்கு - ஒருமரம், கன்னிகாரம்.
கோசகம் - குறி, முட்டை.
கோசகாரகம் - ஒருவிதக்கரும்பு.
கோசகாரம் - கரும்பு, தென்னமரம், பட்டுநூற்பூச்சி.
கோசக்கம் - குழப்பம்.
கோசக்கிரகம் - உள்வீடு.
கோசங்கம் - வைகறை.
கோசங்கியன் - இடையன்.
கோசநாசி - அலி.
கோசமம் - பெரும்பீர்க்கு.
கோசமம் - பீர்க்கு.
கோசம் - ஆண்குறி, உறை, கருகூலம், கருப்பை, கர்பாஷாணம், சத்திரம், சாதிக்காய், செல்வம், தெரு, பண்டாரம், புத்தகம், பொக்கிஷசாலை, மதிலுறுப்பு, முகை, முட்டை, மேற்போர்வை, கருவூலம்.
கோசரபலன் - கிருகபலனிலொன்று.
கோசரம்-அடங்கல், அறியத்தக்கது, இராசி, ஊர், மகிழமரம், விடயம்.
கோசரன் - அதவி, சந்நியாசி.
கோசர் - கொங்குமண்டலத்தரசர், இவர் தங்கள் நாட்டில் கண்ணகிக்குத் திருவிழாச் செய்தவர்.
கோசலம்-தேசமைம்பத்தாறினொன்று அது அயோத்தியாதேசம். இத்தேசம் இக்ஷுவாகு வமிசத்தரசர்க்குரியது. இது ராமருக்குப் பின்னுள்ள காலத்திலே விந்திய பருவதத்துக்குச் சமீபத்தில் இன்னுமொரு கோசலமெனப்படுவதாயிற்று. பின்னைய கோசலத்துக்கு ராஜதானியாக ராமர் மகன் குசன் குசஸ்தலியென ஒரு பட்டணத்தை நிருமித்தான். பின்னையது தக்ஷிணகோசலம், நெருப்பு, பஞ்சகௌவியத்தொன்று, அது பசுமூத்திரம், பதினெண் பாடையிலொன்று.
கோசலிகம் - கைக்கூலி.
கோசலை.இராமன்றாய்,கோசலதேசம்.
கோசவதி - பீர்க்கு.
கோசவம் - கோமேதகம்.
கோசனை - கோரோசனை, பேரொலி.
கோசன் - சீர்பந்தபாஷாணம், வலைஞனுக்கும் புலைசிக்கும் பிறந்த புத்திரன்.
கோசாங்கம் - நாணற்புல்.
கோசாதகம் - பசுக்கொலை, மயிர்.
கோசாமி-ஒருதுறவி,திருவாணதவத்தி.
கோசாரம் - இராசி.
கோசாரி - பீர்க்கு.
கோசாலம் - அகங்கை, பசுமந்தை, ஆன்கூட்டம்.
கோசாலை - பசுமடம், ஆன்கோட்டம்.
கோசிகம்-சாமவேதம்,சீலை,பட்டுச்சீலை.
கோசிகன் - காதிமகாராசன் புத்திரனாகிய விசுவாமித்திரன். [கொடி.
கோசிகை - பிட்சாபாத்ரம், மல்லிகைக்
கோசு - இரண்டுகாதநூரம்,கப்பலினோர் பக்கம், காரியம், தாமான்கயிறு, தெரு. தோல்வி, முறை.
கோசுகால்-பருமையின்றி நெடுகவளர்ந்தது.
கோசுபோதல் - தாழ்ச்சியாதல், தோல்விபோதல்.
கோச்செங்கட்சோழர் - சிவனடியார்களுளொருவர். இவர் சுபதேவன் என்னும் சோழராஜன் கமலவதியிடத்துப் பெற்ற புத்திரனார். கமலவதி இவரைப் பிரசவிக்கும் சமயத்தில் அங்கேசென்று கூடியிருந்த சோதிடர்கள் இப்பிள்ளை ஒருநாழிகை கழித்துப் பிறக்குமாகில் முப்புவனங்களையுமரசாளும் என்று சொல்லக்கேட்டு அப்பிள்ளையை அச்சமயம் பிறக்கவொட்டாமல் அடக்கி யிருந்து ஒருநாழிகை கழித்தபின் பெற்றாள். உரியகாலத்திற் பிறவாது உதரத்திற் கிடந்தமையால் அப்பிள்ளையினது

கண்கள் சிவந்திருந்தன. கமலவதி அப்பிள்ளையை நோக்கி "என் கோச்செங்கண்ணனோ" என்று சொல்லிக்கொண்டு உடனே இறந்துவிட்டாள். அதுகாரணமாகவே கோச்செங்கட் சோழனெனப் பெயர்கொண்டார். இவர் பூர்வஜன்மத்திலே ஜம்புகேஸ்வரத்திலிருக்கும் சிவலிங்கத்துக்கு மேற்கட்டியிட்ட சிலந்தியென்னும் பெரியபுராணங் கூறும். இவர் சோழநாட்டிலே அநேக சிவாலயத் திருப்பணிகளும் சிதம்பரத்திலே தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகளும் அமைப்பித்த சிவபக்தர். இவர் கோச்செங்கட் சோழநாயனாரெனப்படுவர். இவர் பாரதயுத்தமுடியும் வரையும் பாண்டவர்களுக்குத் துணையாயிருந்த தென்னாட்டரசர்களுள்ளே யொருவனாகிய சோழனுக்குப்பின்னே சமீபகாலத்திலே முடிசூடி அரசுபுரிந்தவரென்பது கலிங்கத்துப்பரணியால் நிச்சயிக்கப்படும். அதுவுமன்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது தேவாரத்திலே இவர் எடுத்துக்கூறப்படுதலாலும் இவர்காலம் நாலாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னுள்ளதாதல் வேண்டும். களவழி நாற்பதிலே பொய்கையாராற் பாடப்பட்டவரு மிவரே.

கோடகசாலை - ஒருபூடு.

கோடகம் - குண்டிகை, குதிரை, நாற்சந்தி, புதுமை, முடியுறுப்பினொன்று.

கோடகன் - கூரையிடுவோன், வீடுவேய்வோன்.

கோடங்கி - வருங்காரியஞ் சொல்வோன்.

கோடங்கிழங்கு - கோடைக்கிழங்கு.

கோஷணை, கோடணை - ஒலி, கொடுமை, பேரொலி, வாச்சியப்பொது.

கோதரம் - நாமம், சுக்கு.

கோஷ்டம், கோடம் - இரைச்சல், எல்லை, குடில், குதிரை, கோசம், கோட்டை, சங்கபாஷாணம், செங்கருங்காலி, செல்வம், தவளை, மாமரம், வளைவு.

கோடரம் - எட்டிமரம், குதிரை, குரங்கு, சோலைதேர்மொட்டு, மயிர்ச்சாந்து, மரக்கொம்பு, மரப்பொது, மரப்பொந்து.

கோடரி - கோடாலி, துர்க்கை, திருவாணி.

கோடரோகம் - ஒருவகைநோய். அது உத்கோட ரோகத்திலுள்ள நமைச்சல், முதலிய குணங்களைப் பெற்று விசேஷமாய்ப் படருகின்ற பலவிதத் தேமல்களை யுண்டாக்குவது.

கோடல் - கொள்ளல், மனங்குன்றல், வளைதல், வெண்காந்தள்.

கோடவதி - வீணை.

கோடவி - துர்க்கை, திருவாணி.

கோடன் - கால்நொண்டி.

கோடா - அரக்குமண்டி, சாராயவண்டல்.

கோடாகுளிகை - ஒருமருந்து.

கோடாகோடி - அளவின்மை, பதுமம், மகாகோடி.

கோடாங்கி - கோடங்கி, வரிப்புடைவை, வேஷக்கூத்து.

கோடாசுழி, கோடாசூரி - கோடகசாலை.

கோடாசொரி - ஒரு பாஷாணம்.

கோடாநீர் - தடிப்பில்லாதநீர்.

கோஷாபகரணம் - செல்வங்களை யபகரித்தல்.

கோடாய் - செவிலித்தாய்.

கோடாரி, கோடாலி - நவியம்.

கோஷ்டி - மாமரம்.

கோடி - இருபதுகொண்டது, இளமை, கொன்றி, கோடியென்னேவல், சீலை, நூறுலட்சம், புதுச்சீலை, புதுமை, முடியுறுப்பு, முனை, மூலை, வான்விளை, விற்குதை வீட்டின்பின்பக்கம்.

கோடிகம் - அணிகலச்செப்பு, இந்திரகோபம், கெண்டிகை, சீலை, பூந்தட்டு.

கோடிகாண்பித்தல் - சுருங்கச்சொல்லிவிளக்குதல்.

கோடிக்கரை - வேதாரணியத்துக்குசமீபத்திலுள்ள ஒரு கடற்றுறையூர்.

கோடிக்கல் - மூலைக்கல்.

கோடிசம் - மண்ணாங்கட்டி யுடைக்குந்தடி முதலியன.

கோடிஜித் - காளிதாசன்.

கோடிகூரேசுவரர் - திருக்கோடி காவிலேகோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

கோடிதீர்த்தம் - இராமேசுரத்திலுள்ள தீர்த்தங்களில் ஒரு பிரதான தீர்த்தம், தனுக்கோடி.

கோடிதூங்கி-வீட்டுக்கு வீடுபோயிருக்கிறவன்.

கோடித்தரை-புதுச்செய்கை பூண்டதரை.

கோஷித்தல் } கோஷமிடல், அலங்கரித்தல். ஒலித்தல், பிரார்த்தித்தல், புதுப்பித்தல்.
கோடித்தல் }

கோடிப்பருவம்-வாலைப்பருவம்.

கோடிமுத்தல்-ஒரு விளையாட்டு.

கோடியர் - சிவிகை முன்கொம்பின் முன்னும் பின்கொம்பின் பின்னும் நிற்போர், நாடகர்.

கோடியுடம்பு-இளையாவுடம்பு.

கோடிரம்-கிரி.

கோடிரவம்-சதுரக்கள்ளி.

கோடிலம்-கோட்டம்.

கோடிவயது-வாலைப்பருவம்.

கோடிவர்ஷம்-வாணன்பட்டணம்.

கோடிவற்சம்-வாணபுரம்.

கோடீசம் - மண்ணாங்கட்டி யுடைக்குந்தடி முதலியன.

கோடீரம்-இந்திரகோபம், கிரி, சடை, இந்திரன்வில், கிரீடம், இந்திரன்.

கோடீவர்ஷம்-கோடிவர்ஷம்.

கோடு-அரனிருக்கை, அறை, ஊதிடு கொம்பு, கூட்டம், கோடென்னேவல், சங்கு, சுழி, திரள், நத்தை, நீர்க்கரை, பக்கம், மரக்கொம்பு, மலையினுச்சி, வஞ்சனை, வட்டம், வரம்பு, வரி, வரிசூழ்ந்தவிடம், வளைவு, விலங்கின்கொம்பு.

கோடுகடைத்தொழில் - யானைக்கோடு முதலியவற்றைக் கடையுந்தொழில்.

கோடுதல்-எரிதல், குருவுதல், நெறிதப்புதல், வளைதல்.

கோடுமுத்தம்-சங்கிற் பிறந்த வெள்ளைநிறமுத்து.

கோடேந்துமுலையம்மை - திருஇலம்பயங் கோட்டூரிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.

கோஷை-சத்தம், சம்பாஷணை.

கோடை-ஒளி, ஒரு கிழங்குப்பூடு, காற்று, குதிரை, செங்காந்தள், முதிர்வேனிற் பருவத்தின்காற்று, மேல்காற்று, வெண்காந்தள், வெயில், வேனிற்காலம்.

கோடைக்காற்று - முதிர்வேனிற் பருவத்தின் காற்று, மேல்காற்று.

கோடைக்கிழங்கு-சிற்றரத்தை.

கோடைக்குவாடன்-ஆவிரை.

கோடைப்போகம் - கோடைப் பிரயோசனம்.

கோடையடிபடுதல்-வெய்யிலி லடிபடுதல்.

கோடைவாகனி-சிறுசெருப்படை.

கோட்காரன்-கோட்சொல்வோன்.

கோட்கூறு-இராசியை முப்பதாகப் பகிருதல்.

கோட்சொல்லல் - குண்டணி சொல்லல், அது வாக்கின் தீக்குணம் நான்கில் ஒன்று.

கோஷ்டகம் - சொந்தம், நீர்த்தொட்டி, பண்டகசாலை பொக்கிஷம்.

கோட்டகம் குளம், கோயில்.

கோஷ்டபாலன் - பொக்கிஷக்காரன், பொக்கிஷக் காவற்காரன்.

கோஷ்டம்-ஆரவாரம், பசுமடம், பசுத்தொழுவம், ஆன்கொட்டில், ஒரு மருந்துப்பூடு, கூட்டம், கோயில் பசுக்கூட்டம், தேவலோகம், வாசனைப்பண்டம், வீணை.

கோட்டம் - அகீதம், அழுக்காறு, ஆன்கொட்டில், இடம், ஒருமருந்து அது பஞ்ச விரையிலொன்று, கடற்கொந்தளிப்பு, குராமரம், குளம், கூட்டம், கோணல், கோயில், சுடுகாடு, தேவலோகம், பசுமடம், தொழுவம், நாடு பசுக்கூட்டம், மருதநிலத்தூர். மாவினாலிடுங்கோலம், வயல், வளைவு, வாசனைப்பண்டம், வாட்டரவு, வீணை.

கோட்டரம்-குரக்கு, கொல்லை, நீர்சிலை.

கோட்டரவு-குருவுதல், அக்கம், வாட்டம்.

கோட்டல்-எழுதல், வளைத்தல்.

கோட்டவீபுரம்-வாணசுரன்நகரம்.

கோஷ்டாகாரம்-பொக்கிஷசாலை.

கோட்டாக்கினி-மூலாக்கினி.

கோட்டாரம்-கிணறு, நாற்சதுரத்துரவு. தாமரைத்தடம், மரம்.

கோட்டாரி-கல்லாரை.

கோட்டாலை-உலை, கஸ்தி, கிரியை, துன்பம்.

கோட்டான்-ஒருபுள், கூகை.

கோஷ்டி - கூட்டம், கோபுரவாயில், சபை, கிந்தை, பகிடி.
கோட்டி-அழகு, உலைவு, கூட்டம், கோட்டாலை, கோபுரவாயில், சம்பாஷணை, சவை, துன்பம், கிந்தை, பரிகாரம்.
கோட்டியம்-வியப்பு, அதிசயம்.
கோட்டியாழ்-நால்வகையாழிலொன்று
கோட்டில்வாழ் விலங்கு-அணில் குரங்கு முதலியன.
கோட்டுதல்-கொட்டல்.
கோட்டுநீறு-கிளிஞ்சில்நீறு.
கோட்டுப்பூ-நால்வகைப் பூவிலொன்று.
கோட்டுமண்கொளுத்தல்-யானை முதலியன களிப்படைந்து கோட்டினால் மண் கிண்டல்.
கோட்டுமலை-யானை, வெண்கல்மலை.
கோட்டுமா-பன்றி, யானை, கிடா.
கோட்டுமுத்து-யானைக்கோடு முதலிய கோட்டில் உண்டாகும் முத்து.
கோட்டுவான்-ஒருகீர்ப்புள், கோட்டான்.
கோட்டை-அரண், இருபத்துநாலு மரக்கால் கொண்ட ஓரளவை, நெல்வைலோர் தொகை, பரிவேடம், பூட்டிலொருறுப்பு.
கோட்டைகட்டுதல் - கோலிகை கட்டுதல்.
கோட்டைக்கட்டு - அணிவகுப்பில் ஒன்று.
கோட்டைபிடித்தல் - இராச்சியம் பிடித்தல்.
கோட்டைபோர்-வைக்கோற்பட்டை.
கோட்படுதல் - கொள்ளப்படுதல், கோளாறடைதல், பிடிக்கப்படுதல்-
கொட்படுத்தல்-கோளாறடையச் செய்தல்.
கோட்பதம் - குளம்பின்சுவடு, மாட்டுக்குளம்.
கோட்பறை-நெய்தற்பறை.
கோட்பாடு-அனுசரிப்பு, கொண்டிருக்குந் தன்மை, நிலைமை-
கோட்பு-கொள்ளுதல்.
கோட்புலிநாயனார் - சிவனடியார்களுள் ஒருவர், இவர் சோழநாட்டிலே நாட்டியத்தான் குடியிலே வேளாளர் குலத்தில் திருவவதாரஞ் செய்து சேனாதிபதியாகிய அரசன் கொடுக்கும் வேதரத்னதக் கொண்டு சிவாலய பூசைக்கு நெல்வாங்கிக் கட்டி வைத்துவிட்டு அரசனேவலினாற் போர் முனையிற் சென்றிருந்தபோது அந்நெல்லை ஆணைகடந்து எடுத்துண்ட சுற்றத்தாரையெல்லாம் மீண்டுவந்து தமது வாளினாலே துணித்துத் திடபக்தியை காட்டிச் சிவானுக்கிரகம் பெற்றவர்.
கோணங்கி விஷ்ணுவின் கூத்து, கோமாளி, ஒருநாடகம்.
கோணங்கித்தாசரி-கோணங்கிதாதன்
கோணங்கியம்மை-ஒருநோய்,
கோணபம்-கிருதி.
கோணமலை-திரிகோணமலை.
கோணம் - இயந்திரத்தண்டுறுப்பில் ஒன்று, குணில், குதிரை, சனி, செவ்வாய், திசை, தூரம், மூலைக்குத்தெரு, மூக்கு, மூலை, யானைத்தோட்டி, வளைந்தவாள், வளைவு, வீணையியக்கும் வில்.
கோணலயம்-அறிவாள்.
கோணல்-கூன், மாறுபாடு, வளைவு.
கோணன்-கூனன்.
கோணக்கிணக்கி-சிற்றரத்தை.
கோணசுவன்-யமன்.
கோணமலை-திரிகோணமலை.
கோணமுகல்-கழியிருக்கை,
கோணாய்-ஆணரி, ஓனாய்.
கோணி-அத்தி, இருதுணி என்னும் ஓரளவை, ஒருசரக்கு, கந்தை, பதினாயிரங் கோடாகோடி, பன்றி.
கோணிகை } பை.
கோணியல் }
கோணேசுவரர் - திருக்கோணமாமலையிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
கோணுதல்-வாட்டமடைதல், வளைதல்.
கோணேசுவரர் - திருக்குடவாயிலிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கோணை-வலிமை, அழிவின்மை, கொடுமை, பீடை.
கோணைக்களிறு - பலமுள்ள இளம் யானை.
கோணைமாதம்-மார்கழிமாதம்.
கோண்-கரகங்கெண்டி முதலியவற்றின் மூக்கு, கொடுங்கோன்மை, கோணெனேவல், நேரின்மை, மாறுபாடு, வளைவு-
கோண்டம்-குறிஞ்சா, தூக்கு, நெருஞ்சில்.

கோண்டன்-கீழ்மகன், கொப்புழன்.
கோண்டை-இலந்தை, இலந்தைக்கனி, கமுகு.
கோதண்டபாணி-இராமச்சந்திரன்,
கோதண்டம்-கண்ணிமை, பள்ளிச்சிறுவர் கண்டனையிலொன்று, வில்.
கோதந்தி-கதப்பு, தாடை.
கோதமந்தி-கோதாவரி.
கோதமம்-ஒருதிவு.
கோதமனார்-ஒருபுலவர்; இவர் கடைச்சங்கத்திருந்தவர், கௌதமமஹருஷி.
கோதமன்-கௌதமன்.
கோதம்-சீதாங்கபாஷாணம்.
கோதல்-கொந்தல், கோதுதல்.
கோதனம்-பசுக்கூட்டம், பசுமடி, பசுவின் கன்று.
கோதன்னம்-பசுவின் கன்று.
கோதா-உடும்பு.
கோதாட்டம்-கோட்டி.
கோதாட்டு-சீராட்டு.
கோதாட்டுதல்-ஆராட்டுதல், கோட்டி பண்ணுதல்.
கோதாரணம்-கலப்பை, மண்வெட்டி.
கோதாரி-பெருவாரிநோய்.
கோதாவரி-ஓர்யாறு. அது சத்த நதிகளில் ஒன்று, விருத்த கங்கை.
கோதாவரீசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
கோதாவிரி-கோதாவரி.
கோதானம்-பசுத்தானம்.
கோதி-கோதுமை, நெற்றி, முதலே.
கோதிகை-உடும்பு, முதலே.
கோதிமுடித்தல்-மயிர்ச்சிவிக்கட்டுதல்.
கோதீசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கோது-ஓடு, குற்றம், கோதென்னேவல், சக்கை.
கோதுகுலம்-சீராட்டு.
கோதுதல்-கோதல், துளைத்தல், மயிர்வகிர்தல்.
கோதுமம்-கோதுமை, தேன்தொடை.
கோதுமை }
கோதும்பை } ஒரு தானியம்.
கோதேரன்-காவற்காரன்.
கோதேனு-பாற்பசு.
கோதை-ஒழுங்கு, ஒருகட்பறை, காற்று, கௌதமநதி, சந்திசாரணே, சேரன், நெற்சுமை, பூமாலே, பெண், பெண்மயிர், முன்கைத்தோற்கட்டு.
கோதைமாதவி - மாலேபோலப் பூக்குங் குருக்கத்தி.
கோத்தந்தம்-மாட்டுக்கொம்பு.
கோத்தல்-கதைகட்டுதல், போக்குதல். தொடுத்தல்.
கோத்தனம்-நாற்பது சரமுள்ள முத்துமாலே.
கோத்தனி }
கோத்தனிகை } திராட்சப்பழம், முந்திரிகைக்கொடி.
கோத்தானம் - பசுமடம், மாட்டுத்தொழுவம்.
கோத்திரங்கள் - மரபுக்கள் இவைகள் அநேகம். அவற்றுட் சேஷபரம்பரையையும் சில புத்திர பரம்பரையையும் தெரிவிக்கும். இவைகளே இவ்வனவென்று கணிக்க வேலாது. ஆயினுமவற்றுள் முக்கியமாகியவை ஐம்பது அவையாவன—காசிப, பாரத்துவாக, அரித, கவுண்டியனிகவுசிக, வசிஷ்ட, கவுதம, காக்கேய, ஸ்ரீவத்ச, ஆத்திரேய, முத்கல, சடமருஷணுதிகள். அவற்றுள் ஒவ்வொன்றில் உட்பிரிவு அநேகம், இன்னுமவைகள் ஏகாறிஷேயம், துவயாரி ஷேயம், திரயாரிஷேயம், பஞ்சாரிஷேயமாகவு மிருக்கும்.
கோத்திரமின்மை - கடவுளின் எண்குணத்தொன்று.
கோத்திரம் - காடு, குடை, குலம். இது கடவுட்குத் தகாத வெண்குற்றத்தொன்று, செல்வம், தெரு, தொட்டிப்பாஷாணம், நெட்டிப்புல், பூமி, மலே, வரகு, வர்க்கம், விருத்தி.
கோத்திரவம் - கோசலம், வரகு.
கோத்திரி }
கோத்திரிகை } முந்திரிகைக்கொடி.
கோத்திரை - பூமி, மலே.
கோத்தை - அந்தகன், குருடன், பிளேடையன்.
கோநகம் - ஒருபாம்பு.
கோநாதன் - இடபம், இருஷ்ணன். இ
கோநாய் - ஆணரி, தோண்டான்.
கோநிலயம் - அரசமனே.
கோந்தளங்காள்-குறுதேங்காய், சமுத்திராப்பழம்.
கோந்தனே - பேய்க்கொம்மட்டி.

கோந்தி - குரங்கு.
கோந்து - பிசின்.
கோந்துரு-குடாசகம், கோளாறு, பாட்டனது பாட்டன்.
கோபகன் - கோபன்.
கோபகன்னிகை - இடைச்சி.
கோபகுண்டம் - எட்டிமரம்.
கோபக்காரன் } கோபி.
கோபக்கிரமன் }
கோபங்கம் - சரகாண்ட பாஷாணம்.
கோபச்சுரம்-ஒருவகைச்சுரநோய். அது தலைநோவு, அதிகசுரம், சரீரப்பதைப்பாகிய இக்குணங்களை யுண்டாக்குவது, அக்காலங்களிற் பித்தமதிகரித்திருக்கும்.
கோபச்சுவாலிதம் - பெருங்கோபம்.
கோபணை - கவண்.
கோபதாபம் - பெருங்கோபம்.
கோபதி - அங்கிரசன் வமிசத்தனாகிய ஓரக்கினி, இடபம், இந்திரன், சிவன், சூரியன்.
கோபதீத்தம் - பெருங்கோபம்.
கோபத்திரம் - தாமரைநூல்.
கோபகிரமணி - சாதுரங்கப்பதுமராகம்.
கோபம் - காத்தல், சடத்தீயினென்று. அஃது சினம், தம்பலப்பூச்சி, அத்தபாஷாணம், பாவனைசெய்தல், வெறுப்பு.
கோபராஷ்டிரம் - கொங்கணத்துக்குத் தெற்கிலுள்ள தேசம்.
கோபர் - கிருஷ்ணன் வளர்ந்தசேரியிலுள்ள இடையர்கள்.
கோபவல்லி - ஒரு கொடி.
கோபனம்-இரகசியம், தற்காத்தல், நிந்தை, வெளிச்சம்.
கோபனீயம் - இரகசியம்.
கோபனை - கோபமுள்ளவள்.
கோபன் - அதிகாரி, இடையன், காப்போன்.
கோபாக்கினி - மகாகோபம்.
கோபாடவிகன் - இடையன்.
கோபாட்டமி - கார்த்திகைமாதத்துப் பூருவபக்கத் தட்டமி.
கோபாயகன் - காப்போன்.
கோபாயிதம் - காப்பாற்றல்.
கோபாலகன் - இடையன், கிருட்டிணன், சிவன், பசுக்காப்போன்.

கோபாலக்கிருஷ்ணன் - நூற்றெட்டுத்திருப்பதிகளு ளொன்றாகிய காவளம்பாடியிற் கோயில்கொண்ட வீட் [டுளு.
கோபாலர்-அரசர், இடையர்.
கோபாலன் - இடையன், கண்ணன்.
சஞ்சீவனம் - உயிர்ப்பித்தல்.
சஞ்சீவனி - ஒருமூலிகை, உயிர்தரு மருந்து.
சஞ்சீவினி - பூநாகம், மூர்ச்சை தீர்த்துயிர்தரு மருந்து.
சஞ்சீவன் - மாமரம்.
சஞ்சீவினி - சஞ்சீவினி.
சஞ்சு - ஆமணக்கு, சாயல், பறவை மூக்கு, வருணச்சிரமம்.
சஞ்சுகை - பறவைமூக்கு.
சஞ்சுபம், சஞ்சுவம் - மூஸ்திப்பு.
சஞ்சுவிருதம் - பறவை.
சஞ்சூரியமாணம் - பொல்லாங்கிற் கிசைந்திருத்தல்.
சஞ்சேபம் - அடையாளம், சுருக்கம், சோறு, தருக்கம்.
சஞ்சேபித்தல் - சுருக்குதல்.
சஞ்சேயம் ஈட்டியது.
சஞ்சை - பெருமழை, பேரொலி.
சடகம் - ஊர்க்குருவி, குடிக்கும் பாத்திரம், சாராயம், தேன், வட்டில்.
சடகை - ஊர்க்குருவிப்பேடு.
சடக்கடை - ஒன்பது.
சடக்குச்சடக்கெனல், சடக்குப்புடக்கெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
சடக்கெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
சடக்கோதன் - வசம்பு.
சடங்கப்படுதல் - கட்டுப்படுதல், சோலிக்குட்படல்.
சடங்கப்பூட்டு - மல்லருடைய பூட்டில் ஒன்று.
சடங்கம் - கிரியை, ஆறுசாத்திரம், ஆறு தூக்குக்கொண்ட ஒருநிறை, சோலி, பூட்டு, மூட்டைப்பை, வருத்தம்.
சடங்கு - கிரியை, செய்முறை.
சடசடப்பு, சடசடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு
சடசீதி - ஒருயோகம்.
சடதி - சிதைவு.
சடத்துவம் - சடத்தன்மை.
சடதிறம் - மாயிசச்சிலை.
சடபதார்த்தம் - அசித்துப்பொருள்.
சடபம் - அறுகு
சடபுடத்தல், சடபு டாவெனல், சடபுடெனல் - ஒலிக்குறிப்பு.
சடப்பால் - முலைப்பால்.
சடம் - அசிதப்பொருள், ஆறு, உடல், குங்குமம், கொடுமை, சடத்தீயென்று, நகரம், பொய், வஞ்சமனம், விருட்சமூலம்.
சடாச்சுவாலை - மூலாக்கினி.
சடாரம் - வயிறு.
சடாயாதனை - கருப்பவேதனை.
சடாராக்கினி - உதராக்கினி, மூலாக்கினி.
சடாராமயம் - ஒருநோய்.
சடரூபம் - அறிவற்றபொருள்.
சடர் - மூடர்.
சடலட்சணம் - மாயையாக்கையின் குணம், அதுதன்னையுந்தலைவனையுமறியாதிருத்தல்.
சடலபுடலம்-பருத்தது.
சடலம் - சரீரம், பருத்தவுடல்.
சடலை - பருத்தது.
சடவத்து, சடவஸ்து - அசித்துப் பொருள்.

சடவுப்பு - அமரியுப்பு, சமாதியுப்பு.
சடன் - மதியீனம், மூடன்.
சடாகம் - அருநெல்லி.
சடாகுடம் - சடாமுடி, சடை.
சடாங்கம் - உடலுறுப்பாறு.
சடாங்கன் - சிவன்.
சடாசுவாலம் - தீபம்.
சடாடவி - சடைத்திரள்.
சடாட்சரம் - ஷடாக்ஷரம், ஆறெழுத்து, குமரன் மந்திரம்.
சடாட்சரன் - முருகன்.
சடாட்சரி - உமை, சத்திமந்திரம்.
சடாதரம் - அருநெல்லி.
சடாதரன் - அருநெல்லி, சிவன், இருடி, [வீரபத்திரன்.
சடாதரி - சடாதாரி.
சடாதாரம் - ஆறாதாரம். அது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை.
சடாதாரி - கொடியார்கூந்தல், சடையுள்ளோன், சிவன், பார்வதி.
சடாபலம் - பனை.
சடாபாரம் - சடை.
சடாமகுடம் - சடாமுடி.
சடாமகுடன் - சிவன்.
சடாமாஞ்சி
சடாமாஞ்சில் } ஒரு மருந்து.
சடாமுடி - சடைமுடி.
சடாயு - அருணன்மக்களி லொருவன், ஒரு கழுகரசன்.
சடாய்த்தல் - அதட்டல், இடித்துரைத்தல், துவக்கில் மருந்திடல்.
சடாரட்டியென்னல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சடாரணியம் - ஆறுகாடு.
சடாரி - கவசம், நம்மாழ்வார்.
சடாரிடுதல்
சடாரெனல் } ஒலிக்குறிப்பு.
சடார்ப்புடாரெனல் - ஒலிக்குறிப்பு.
சடாலம் - ஆலமரம், தேன்கூடு, யாகத்தறியினிடும் வளையம்.
சடானனன் - ஆறுமுகன், குமரன்.
சடி - சடை, துப்பட்டி.
சடிதி - கச்சோலம், சீக்கிரம்.
சடிதிவு - கச்சோலம்.
சடிரை - ஒருவகைச்செடி.
சடிலம் - குதிரை, சடாமாஞ்சில், சடைசிங்கம், நெருக்கம்.

சடிலை - சடாமாஞ்சில்
சடினம் - சடைமரம், வசம்பு, வேர்.
சஷீசுவரம் - சிவஸ்தலங்களாயிரத் தெட்டனுளொன்று.
சடு - அழுதல், ஆறு, வயிறு.
சடுதி - சீக்கிரம்.
சடுத்தம் - வலாற்காரம், வில்லங்கம்.
சடுத்தம்பூட்டுதல் - வலாற்காரமாகப் பொறுப்பித்தல்.
சடுலம் - நடுக்கம்.
சடுலவோசை - தீக்கொழுந்துமுதலியவற்றினசைவா னெழுமொலி.
சடேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
சடை - அடைக்குந்தடி, ஆணியின்கொண்டை, இரேகை, கூட்டம், சடைச்சி, சடாமாஞ்சில், சடையென்னேவல், பிரபை, பின்னல்மயிர், வேர்.
சடைக்கஞ்சா
சடைக்கந்தசம் } முறுகுஞ்சா.
சடைக்கந்தகம் - வசம்பு.
சடைச்சி - சீரிப்பூடு, நெட்டி, பாசி, பார்வதி, பொன்னிமிளை, புளியாரை.
சடைச்சிவேர் - ஒருவகைப்பூடு.
சடைதல் - ஆணி முதலியவை தறைந்து அகர்றுதல், கிலேசப்படுதல், தயிரிய வீனமாதல், மனமடிதல், வளராது சிற்றல்.
சடைத்தல் - கிளைத்து நெருங்குதல்.
சடைநாகம் - ஓராபரணம், பாம்பு.
சடைநாய் - ஒருநாய்.
சடைப்பயறு - ஒருபயறு.
சடைப்பாசி - ஒருபாசி.
சடைப்பில்லை - ஒரு தலையாபரணம்,
சடைப்புல் - ஒருபுல். [இலாக்கடி.
சடைமுடி - சரக்கொன்றை.
சடைமுடியோர் - தபத்தர்மஹருஷிகள்.
சடையநாயனார் - சுந்தரமூர்த்தி நாயனாருடைய தந்தையார்.
சடையன் - சிவன், வீரபத்திரன்.
சடையாணி - குடுமியாணி.
சடையோன் - சிவன், வீரபத்திரன்.
சடைவு - ஆணி முதலியவற்றின் தறைவு, தடை, தயிரியவீனம், துக்கம்.
சட் - ஆறு.
சட்கருமம் - அந்தணர்தொழிலாறு. அது ஸ்நானம், ஓமம், சுவாத்தியாயம்,

செபம், தருப்பணம், பிதிர்பூசை, அன்றியும்; ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்.
சட்சணம் - பட்சணம்.
சட்ஜம் - பன்னிருசுரங்களுளொன்று.
சட்சரணம் - வண்டு.
சட்சன்னெனல் - ஒலிக்குறிப்பு.
சட்சு - கண்.
சட்சுதீட்சை - கண்ணினாற்செய்யுந்தீட்சை, சற்குருதீட்சையினொன்று.
சட்சுருதிதைவதம் - பன்னிரு சுரங்களுள் கைசிக நிஷாதமென்னும் ஒரு சுரம்.
சட்சுருதிரிஷபம் - பன்னிரு சுரங்களுள் சாதாரண காந்தாரமென்னும் ஒருசுரம்.
சட்சுவிந்திரியக்காட்சி ஓரளவை. அது உருவமறிதல்.
சட்சுவை - அறுசுவை.
சட்டகப்பை - தட்டகப்பை.
சட்டகம்-உடல், மக்கட்படுக்கை, வடிவு.
சஷ்டகல்வி, சட்டகல்வி } வீண்பேச்சு.
சட்டங்கட்டுதல் - ஒழுங்குபடுத்தல், கட்டளையுண்டாக்கல்.
சட்டதிட்டம், சட்டபட்டம் } ஒழுங்கு, கட்டளைச்சட்டம், பூரணம்.
சட்டப்பலகை - மட்டப்பலகை.
சட்டம் - எழுதுமோலை, கட்டளைத்திட்டம், கட்டில் முதலியவற்றின் சட்டம், திருத்தம், நாவிச்சட்டம், பூரணம்.
சட்டம்பி - உவாத்தி.
சட்டம்பிப்பிள்ளை, சட்டம்பிள்ளை } தலைவன்.
சட்டவட்டம் - சட்டதிட்டம்.
சட்டவலை - குறுக்குவலை.
சட்டவாள் - சட்டம்பூட்டிய ஈர்வாள்.
சட்டவிளக்கு - ஒருவகைநிலைவிளக்கு
சட்டாட்டம் - சண்டியாட்டம், வாதாட்டம்.
சட்டாம்பிள்ளை - சட்டம்பிள்ளை.
சட்டால் - வில்வம்.
சட்டி - ஆறுந்திதி, ஆறு, ஓர்பாண்டம், சட்டியென்னேவல், தாமரை.
சட்டி - ஆறுந்திதி, ஆறு.
சட்டித்தலை - பருந்தலை.
சட்டித்தலைப்பா - வட்டத்தலைப்பா.
சட்டித்தலைபுள்ளான் - ஒருகுருவி.
சட்டித்தல் - அழித்தல், கொல்லல்.
சட்டிபூர்த்திசாந்தி - அறுபதுவயதிற் செய்யுமோர் சடங்கு.
சட்டிப்பீரங்கி - அகன்றபீரங்கி.
சட்டிப்புல் - ஒருபுல்.
சட்டியாட்டுதல், சட்டியுருட்டுதல் } ஒருசூது.
சட்டிவட்டு - கப்பல்வள்ளிக்கிழங்கு.
சட்டிவிரதம் - ஒரு கந்தசஷ்டிவிரதம்.
சட்டு - அழிவு, ஆறு, சேதம்.
சட்டுவம் - அகப்பை.
சட்டுவருக்கம் - இலக்கினத்திலிருந்து பிரியுமாறு வருக்கம்.
சட்டென - விரைய.
சட்டை-அக்கி, கணிப்பு, சிறகு, தைவேலைப்பூண்டு, பாம்பின்றோல், பொதி.
சட்டைகழற்றல்-பாம்புதோல்கழற்றல்.
சட்டைக்காரர் - காற்சட்டைக்காரர்.
சட்டைச்சாம்பு - சட்டைக்குக் கூடிய புடைவை.
சட்டைநாதன் - சிவன், வயிரவன்.
சட்டைபண்ணல் - கனம்பண்ணல்.
சட்டைமுனி - ஒரு சித்தன்.
சட்டோலை - எழுதற்கான வோலை.
சட்பதம் - வண்டு.
சட்பதாதி - சண்பகம், மாமரம்.
சட்பம் - அறுகு, சிறுபயிர், பசும்புல், மயிர்.
சட்பிதாபுத்திரிகம் - பஞ்சதாளத்தொன்று.
சட்பிரஞ்ஞன் - ஆறு காரியமறிய மறிவுடையோன். அவை சன்மார்க்கம், தேவதன்மை, பாக்கியம், பிரபஞ்சவியல்பு, முத்திவிருப்பம்.
சட்புர்ளெனல் - கோபித்துப்பேசல்.
சணகம் - கடலை, புளியாரையிலை.
சணுத்திரம் - மீன்பிடிக்கும் வலை.
சணபுஷ்பிகை - கிலுகிலுப்பை.
சணப்பு - சணல்.
சணம் - கணம், வகசித்தம், கடலை, சணல்மரம், திருப்பை.
சணம்பு - ஒருபயிர், மருள்.
சணல் - ஒருபயிர்.
சணற்பஞர் - சணற்றும்பு.
சணுய்த்தல் - காமங்கொள்ளல், சணைத்தல்.
சணுவு - கையாந்தகரை.

சணைத்தல் - கொழுத்தல், விரிந்துண்டாதல்.
சணைப்பு - கிளைப்பு, செழிப்பு.
சண்டகன் - இலிங்கபாஷாணம்.
சண்டகௌசிகன் - கௌதம வமிசத்தில்வந்த ஒரு முனிவர். மகததேசத்தரசனாகிய பிருகத்திரதன். இக்கௌசிகர் அனுக்கிரகித்த ஒரு மாங்கனியால் ஜராசந்தன் என்னும் புத்திரனைப் பெற்றான்.
சண்டப்பிரசண்டம் - மிகுவேகம்.
சண்டப்பை - கருப்பை.
சண்டமாருதம் - பெருங்காற்று.
சண்டமாருதம் பொழிதல்-மிகுதியாய்ப் பொழிதல்.
சண்டமார்க்கன் - சுக்கிரன் புத்திரன், தைத்திய புரோகிதன்.
சண்டமுண்டர் - சும்பநிசும்பர் தோழர்.
சண்டம் - உறைப்பு, எருது, கருப்பம், கொடுமை, கோபம், சீக்கிரம், பேடு, வேகம்.
சண்டவேகம் - மிகுவேகம்.
சண்டன் - அசுரன், அலி, காலன், சிவன், சூரியன், நமன், புளியமரம், பேடி, வேகி.
சண்டாதகம் - சல்லிடம்.
சண்டாதம் - அவுரி.
சண்டாலிகை - பறைக்கின்னரம்.
சண்டாளநீர் - நீசர்பரிசனநீர்.
சண்டாளப்பிராயச்சித்தம் - சண்டாளரால் வந்த குற்றத்திற்குப் பண்ணும் நிவிர்த்தி.
சண்டாளம் - துரோகம்,புலைத்தன்மை.
சண்டாளன் - துரோகி, பார்ப்பனத்தியிடத்திற் சூத்திரனுக்குப் பிறந்த புத்திரன், புலையன்.
சண்டாளி - துரோகி, புலைச்சி.
சண்டி - உரோசமற்றவன், ஒருமரம், சண்டேசுரநாயனார், துர்க்கை.
சண்டிகை - காளி, துர்க்கை.
சண்டிக்கார் - ஒருநெல்.
சண்டிக்கீரை - ஒருகீரை. [கேடு.
சண்டித்தனம் - பிடிவாதம், நாணயக்
சண்டியின் - ஒரு முனிவன், சிவன், நாவிதன்.
சண்டிவாளம் - முன்தீர்த்த வினையை அழிக்கும்படி கொடுக்கிறபணம்.

சண்டீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
சண்டு - ஒருவண்டு, பதர்.
சண்டேசுரநாயனார் - ஒரு சிவபக்தர், இவர் சேஞலூரிலே பிராமண குலத்திலே எச்சதத்தன் மகனாகப் பிறந்து வேத விற்பன்னராகி அக்கிரகாரத்துப்பசுக்களை மேய்த்துவரப்பொருந்திக்கொண்டுபோய்மண்ணியாற்றின் கரையிலே விடுத்து மணலைச் சிவலிங்கமாக்கிப் பசுக்களின்பாலைக்கறந்து அபிஷேகம் பண்ணிப் பூசைபுரிந்து வருவதை யுணர்ந்த தந்தை ஒருநாட்சென்று மணலினாலமைத்த சிவலிங்கத்தைக் காலாற் சிதைக்க அது கண்டு பொறாராகி வாளினாலவர்காலைச் சிதைத்தவர், இவருடைய பக்திவலிமையைக்கண்டு சிவபிரான் சண்டேசுரபதத்தை யீந்தருளினர். இவர் காலம் நாலாயிரத் தைஞ்ஞூறு வருடங்களுக்கு முன்னுள்ளது.
சண்டேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
சண்டை - யுத்தம், பிணக்கு, போர்.
சண்ணுதல் - செய்தல், வைதல்.
சண்பகசுந்தரன் - மதுரையிற் கோயில்கொண்ட சிவன்.
சண்பகம் - செண்பகம்.
சண்பகாரணியேசுவரர் - திருநாகேச்சரத்திலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
சண்பனி - காளி, யோகினி.
சண்பு - சண்பங்கோரை.
சண்பை - சீகாழிநகர்.
சண்பையர்கோன் - சம்பந்தன்மூர்த்தி.
சண்மதம்-அறுவகைச்சமயம்,சட்சமயம்.
சண்முகன்-அறுமுகக்கடவுள், குமரன்.
சதகண்டம் - நூறுபாகம், பொன்.
சதகம் - தான்றிமரம், நூறுசெய்யுட்கொண்ட பிரபந்தம்.
சதகுப்பி } ஒருபூடு.
சதகுப்பை }
சதகுப்பை - ஒரு மலை; இது பொன் விளைவது.
சதகோடி - இடி, நூறுகொடி, வச்சிராயுதம்.
சதக்கல் - சேறு.

சதக்கிரதம் - மின்னல்.
சதக்காது } தேவேந்திரன்.
சதக்கிருது }
சதக்கினி - நூற்றுவரைக் கொல்வதாகிய பொறி.
சதக்கினிரோகம்-ஒருவகைநோய். அது கண்டத்திற் குட்புறத்தில் விருத்தியடைந்து தூர்மாமிசத்தைக்கொண்டு பலாமுள்ளுகளையொத்த முள்ளுகள் நிறையப்பட்ட பெரியஇருப்புத்தண்டத்தைப்போல் கழுத்தை வீங்கப் பண்ணுவது. அதனால் மிக்க உபத்திரவமும் தாகமும் சுரமும் தலைநோவுமுண்டாகும்.
சதங்கை - காலணி, சலங்கை.
சதங்கைப்பூரம் } ஒருவகைப்பூரான்.
சதங்கைப்பூரான் }
சதசதத்தல் - நொதுநொதுத்தல்.
சதசதப்பு - நொதுநொதுப்பு. [து.
சதசத்து-ஆத்துமா, சத்துமசத்துமாயா
சதசித்து - பசுமானன் புத்திரன். இவனுக்குப் புத்திரர் நூற்றுவர். அவருள் மூத்தோன் விஷுவசோதி, சகஸ்திராஜித்து புத்திரன், இவன் புத்திரர் மகாஹயன், வேணுஹயன் என்போர்.
சதகிருக்கம் - மேருமலையின் ஒருபாகம்; ஒருமலை, இது துர்வாசர் உபதேசித்தமந்திரத்தால் குந்தி பாண்டவரைப் பெற்றவிடம்.
சதசு - சபை, பிராமணசபை.
சதசுலோபி - பண்டிதன்.
சதசுவன் - சமரன்புத்திரன்.
சதசேதனன் - கிருஷ்ணன் வமிசத்து உக்கிரசேனன் மகன்.
சதச்சதம் - தச்சன்குருவி.
சதஞ்சீவி - நூறுவயதிற்கிருப்பவன்.
சததம் - சதாகாலம், எப்போழ்தும்.
சததனம் - தாமரை.
சததன்வன் - ஹிருதிகன் புத்திரன், தேவமீடன் தம்பி; இவன் சத்தியபாமையைத் தான் பெறக் கருதிச் சத்திராசித்தவை நித்திரை போம்போது கொன்றவன். அது காரணமாகக் கிருஷ்ணனாற் கொல்லப்பட்டவன்.
சததாமன் - விட்டுணு.
சததாரை - இடி.
சதத்திருதி - இந்திரன், பிரமன், பிராசின பருகிபாரி.
சதத்துரு-ஒருநதி. இது இமாலயத்துக்கு வடபாலிலுற்பத்தியாகிச் சிந்து நதியிற் கூடுவது.
சதத்துவசன் - ஊர்வஜன் புதல்வன்.
சதத்துவம் - சுபாவம்.
சதபதி - சாணிப்பூரான், மரவட்டை.
சதபதுமம் - தாமரை.
சதபத்திரகம் - தச்சன் குருவி.
சதபத்திரம் - கிளி, தச்சன் குருவி, தாமரை, மயில், வெண்ணுரை.
சதபத்திரி - தாமரை, தாமலரயிலை, புழுக்கொல்லி.
சதபருவை - சுக்கிரன்பாரி.
சதபுட்பம் - சதகுப்பி.
சதபோனகபகந்தரவிரணம் - ஒருவகை விரணநோய். அது பகந்தரக்கட்டிகள்பழுத்துடைந்து ஒன்றோடொன்றாய்க் கலக்கும் காலத்திற்பிறப்பது. அதனாற் புற்றைப்போற் சிறு சிறு துவாரங்களுள்ள விரணங்கள் விருத்தியாகும். அவ்விரணங்களிற் கெட்ட நாற்றத்தைக்கொண்ட சீழிரத்தம் வடிவதோடு சிலவேளை நுரையையுடைய சுத்தசலமும் வடியும்.
சதபோனகம் - ஒருவகை நோய். அது ஆண்குறி முற்றிலுஞ் சிறுசிறு துவாரங்களை யுண்டாக்குவது. அதனால் மூத்திரம் வரும்போதெல்லாம் எரிச்சலதிகரிக்கும்.
சதப்பிராசம் - அலரி.
சதமகன் } தேவேந்திரன்.
சதமன்னியு }
சதமுனை - வச்சிராயுதம்.
சதமூலம் - தண்ணீர்விட்டான்கிழங்கு.
சதமூலி - ஒருபூடு.
சதமூலை - தண்ணீர்விட்டான்கிழங்கு.
சதம்-அறுபடுபயிர், இடி, இலை, இறகு, எல்லாம், தமாலமரம், தாழ்தல், நித்தியம், நிலைமை, நூறு, போதல்.
சதயஷ்டி-நூறுசாமுள்ள முத்துமாலை.
சதயம் - ஒருநட்சத்திரம். [ளிவன்.
சதயாபன-கேகயவமிசத்து ஒரிராஜமு
சதருத்திரீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

சதரூபை - சுவாயம்புபாரி. இவள் பிரமாவினால் முதன்முதல் சிருஷ்டிக்கப்பட்ட பெண்.

சதர்க்கேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

சதவலி - சுக்கிரீவன் சேனாதிபதிகளு ளொருவன்; சீதையை வடதிசையிற் றேடிப்போன தூதன்.

சதவல் - சதுப்புநிலம்.

சதவீரியம் - வெள்ளறுகு.

சதவீரு - ஒருமல்லிகை.

சதளம் - கூட்டம்.

சதனம்-இலை, இறகு, உறை, நீர், வீடு.

சதனரோகம் - ஒருவகை நோய். அது சிறுவர்களுக்கு வயிற்றிற் புளித்தமலஞ் சேர்வதாலும், அதிசாரரோகத்தாலும் பிறப்பது. அப்போது குதஸ்தானத்திற் சிவந்த சிலேஷ்மமொத்தையைப்போல் சிவந்த நிறமுடையவிரணமும் உள்ளே அதிக நமைச்சலு மிருந்த உபத்திரவமு முண்டாகும்.

சதா-எப்பொழுதும், மரக்கலம், மாத்திஹுட்பழுது.

சதாகதி - ஓயாநடை, காற்று, நிர்வாணம், பேரலை.

சதாகாநந்தை - பாரிபத்திர பர்வதத்திலுற்பத்தியாகும் நதிகள்.

சதாகாலம் - எப்பொழுதும்.

சதாக்ஷி - துர்க்கை, காளி.

சதாக்கினி - தேள்.

சதாங்கம் - பாண்டில் பூண்டவூர்தி.

சதாசாரம்-சாதுக்களாலாசரிக்கப்பட்ட நன்னடை.

சதாசிவதேசிகர் - குட்டித்தொல்காப்பியம் என்னும் இலக்கண விளக்கஞ் செய்த வைத்தியநாத நாவலர் குமாரர்.

சதாசிவம்-சதாசிவன், முடியாநன்மை.

சதாசிவன் - பஞ்சகர்த்தாக்களி லொருவர்; இவர் விந்து ரூபமும், வியோம வடிவும், படிகநிறமும், பிறைமுடியும், ஐந்து திருமுகமும், பத்துக் கரமும், மூன்று நேத்திரமும், உமையொருபாகமும், சௌமியமுமுடையவர். இம்மூர்த்திக்குப் பீஜாக்ஷரம் ஹாகாரம்.

சதாதநன் - அழியாதவன், விட்டுணு.

சதாதாநம் - இந்திரன்யானை.

சதாஸ்தி - எப்போதுமிருத்தல்.

சதாநந்தன் - பிரமா, கௌதமர் அகலியையிடத்துப் பெற்ற புத்திரன். இவன் ஜனகராஜா குலகுரு.

சதாநீகன் - எப்போதுமில்லாமை.

சதாநீகன் - நகுலனுக்குத் துரோபதியிடத்துப் பிறந்த புத்திரன், ஜனமேஜயன்.

சதாநீரை - பாரிபத்திர பர்வதத்திலுற்பத்தியாகும் நதிகள்.

சதாபடம் - எருக்கு.

சதாபதி - நித்தியம், மரவட்டை.

சதாபலம் - அத்திமரம், எலுமிச்சை, தெங்கு, வில்வமரம்.

சதாபுசம் - வண்டு.

சதாபுட்பம் - முல்லை, வெள்ளெருக்கு.

சதாபுட்பி - எருக்கு, செவ்வெருக்கு.

சதாபுயம் - வண்டு.

சதாபூடம் - சதாபடம்.

சதாப்பு - ஒருபூண்டு.

சதாமதுராம்பிகை - திருத்தருமபுரத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்.

சதாமூர்க்கம் - பாம்புகொல்லி.

சதாமூலம் - நீர்மீட்டான்.

சதாயு - சிராயு.

சதாரம் - இடி.

சதாருகுட்டம்-ஒருவகைக்குட்டநோய். அது சிவந்துங் கருத்து மடியகன்றுமனேக கொப்பளங்களெழும்பிச் சர்வாங்கத்திலும் பரவாநிற்கு மிரணங்களாகும். அதில் எரிச்சலு நோவும் கிரிமியு மதிகரிக்கும். அதனு லிருந்த துக்கமுண்டாகும்.

சதாவரி - தண்ணீர்விட்டான்கிழங்கு.

சதாவர்த்தன் - விட்டுணு.

சதாவேரி - நீர்மீட்டான்.

சதானகம் - சுடுகாடு, இடுகாடு.

சதானந்தம்-கடவுள், கௌதமன், சதாநந்தரிஷி, நீங்காமகிழ்ச்சியுள்ளவன், பிரமன், விட்டுணு.

சதானீகன் - ஓரரசன், விருத்தன்.

சதி-அழிவு, அனுமரணம், உரோகிணி, கற்புடையாள், சீக்கிரம், சோறு, தாழ்வாரம், தாளவொத்து, பார்வதி, மனைவி, வஞ்சனை, வட்டம்.

சதிகாரன் - வஞ்சகன்.
சதிகாரி - துரோகி, வஞ்சகி.
சதித்தல் - சதிசெய்தல்.
சதித்துவம் - கற்புடைமை.
சதிபதி - சிவன்.
சதிபுருஷநியாயம் - ஸ்திரீ புருஷருக்குள்ள உரிமை.
சதிமகள் - இந்திராணி.
சதிமானம் - அபகடம்.
சதிமோசம் - மடிப்பு.
சதியோசனை - அபகடம்.
சதிரம் - ஒருசக்கரி.
சதிரிசம் - உவமை.
சதிர் - இலகு, எல்லை, குறைந்தவிலை, நாட்டியசபை.
சதிரக்கிராமம் - ஊரின் தலைக்கிராமம்.
சதீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
சதீபதி - சிவன்.
சதீபுத்திரன் - விநாயகன்.
சதீலம் - காற்று, மூங்கில்.
சதீனகம், சதீனம் } பயறு.
சது - நான்கு.
சதுகம் - பெருங்காயம்.
சதுக்கம்-சதுரம்,சத்திரம்,தலையுறுமால், திண்ணை, நாற்தெருக் கூடுமிடம்.
சதுக்கல் - வழுக்கல்.
சதுங்கம் - பறவை.
சதுச்சமம்-நால்வகைச்சாந்தின்கலவை
சதுச்சுருதிதைவதம் - பன்னிருசுரங்களுள் சுத்தநிஷாத மென்னும் ஒரு சுரம்.
சதுச்சுருதிரிஷபம் - பன்னிருசுரங்களுள் சுத்தகாந்தாரமென்னும் ஒருசுரம்.
சதுஷ்கம், சதுட்கம் } நான்கு.
சதுஷ்டயம், சதுட்டயம் } நான்மடங்கு கொண்டது.
சதுட்பதம், சதுஷ்பாதம், சதுட்பாதம் } சதுர்ப்பதம், நாய், நாற்காலுள்ளது, நாற்றெருக் கூடுமிடம், நான்கடி கொண்ட பாட்டு.
சதுப்பு - சதசதப்பான நிலம்.
சதுமணி - கழலை.
சதுமுகன் - அருகன், நான்முகன்.
சதும்பை - பேய்மருட்டி.

சதுரகிரி-திருவனந்தபுரத்தருகிலுள்ள ஒரு மலை. இது ஒரு சிவஸ்தலம்.
சதுரக்கள்ளி - ஒருகள்ளி.
சதுரக்கை - ஒருவகைக்கூத்துக்கை. அது சுட்டுவிரலும் நடுவிரலுந் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம் வரவைத்துச் சிறுவிரல் பின்னே நிமிர்ந்துநிற்பது.
சதுரங்ககோலவிமானம் - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருவல்லவாழிலுள்ள விமானம்.
சதுரங்கசேனை - காலாள் தேர் பரி யானையாகிய நால்வகைச்சேனை.
சதுரங்கதாரணை-கவதாரணையிலொன்று
சதுரங்கதானை - சதுரங்கசேனை.
சதுரங்கபட்டினம் - ஒரு கடற்றுறைப் பட்டினம்.
சதுரங்கபந்தம் - சித்திரகவியிலொன்று.
சதுரங்கபலம் - நால்வகைத்தானை.
சதுரங்கம் - ஒரு விளையாட்டு, நால்வகைத்தானை, நாற்கோணம்.
சதுரங்கன் - உரோமபாதன் மகன்.
சதுரசாலை - நாற்சார்வீடு.
சதுரந்தயானம் - சிவிகை, பல்லாக்கு.
சதுரப்பாடு - சதுரம், விவேகம்.
சதுரப்பாலை - நால்வகைப் பாலையுள் ஒன்று.
சதுரம்-அகலநீளமொத்தநாற்கோணம், சதுரக்கள்ளி, சமர்த்து, நாகரீகம், யானைப்பந்தி, விரைவு, விவேகம்.
சதுரர் - அறிஞர், திறமுடையோர், நகரப்பதியோர், நாகரிகர்.
சதுரன் - கற்றவன், நாகரிகன், பேராசைக்காரன்.
சதுரானனன் - பிரமன்.
சதுரித்தல் - சதுரமாக்கல்.
சதுரியுகம் - நாலுசமுங்கூடியபெருகம்.
சதுரை - சதுரங்கபட்டினம்.
சதுர் - சபைக்கூடிச் செய்யு நடனம், றம், நான்கு, புத்தி.
சதுர்கூலி - ஆவிரை.
சதுர்க்கதி - ஆமை.
சதுர்க்குணன்-ஓர்ப்பு கடைப்பிடி குறிக்கோள் தோற்றம் எனு நாற்குணமுடையான்.
சதுர்க்குணி - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனு நாற்குணமுடையாள்

சதுர்த்தசபுவனம் - பதினாலுலகம்.
சதுர்த்தசம் - பதினான்கு.
சதுர்த்தசி - பதினான்காந்திதி.
சதுர்த்ததந்தம் - இந்திரன்யானை.
சதுர்த்தபலம் - நாலாவதாகவந்த பேறு.
சதுர்த்தம் - நான்காவது.
சதுர்த்தாங்கியம் - நாலிலொன்று.
சதுர்த்தர் - சமர்த்தர், சூத்திரர், வேளாளர்.
சதுர்த்தல் - அப்புதல்.
சதுர்த்தி-கவிபாடக்கொடுத்த வோரடி, நான்காந்திதி.
சதுர்ப்பதம் - கரணம், பதினொன்றில் ஒன்று; அது நாய்க்கரணம்.
சதுர்ப்பலம் - நான்குபலம்.
சதுர்ப்பாகம் - நாலம்பங்கு.
சதுர்ப்பாடு - சதுரப்பாடு.
சதுர்ப்பாதை - நாற்றெருக் கூடுமிடம்.
சதுர்ப்புயன் - சிவன், விட்டுணு.
சதுர்முகன் - சதுமுகன்.
சதுர்யுகம் - சதுரியுகம்.
சதுர்வேதம் - நாலுவேதம்; அது இருக்கு எசுர் சாமம் அதர்வணம்.
சதுலம் - வைத்தல்.
சதுனி - வெளவால்.
சதூகை - இண்டஞ்செடி, கச்சோலம், வெளவால்.
சதேசரு - இலவங்கப்பட்டை.
சதேசன் - நூறுகிராமத்துக்குத் தலைவன்.
சதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
சதேரன் - பகைவன்.
சதை - ஜோடு, தசை, பாலைமரம், முன்னைமரம்.
சதைக்கழலை-ஒருவகைக் கழலைநோய்.
சதைக்குந்தம்-ஒருவகைக் குந்தநோய்.
சதைக்குவை - ஒருவகைக் கண்ணோய். அது கடைக்கண்ணிற் கருங்குன்றியைப்போற் றசையைப் புடைப்பிப்பது.
சதைதல் - நசுங்குதல்.
சதைத்தல் - தசைபிடிகொள்ளுதல், நசுக்குதல்.
சதைப்படாத்தி-ஒருவகைக்கண்ணோய் அது வெள்விழியில் இருதவான தசையைத் தடிக்கும்படி செய்வது.
சதைப்பதுமம்-ஒருவகைக் கண்ணோய். அது இமைக்குள் அர்மாமிசத்தை வளர்ப்பிப்பது.
சதைப்புற்று - ஒருவகைக் கண்ணோய்; அது வெள்விழியில் இரத்தத்தினற் சிவந்த தசையை வளர்ப்பிப்பது.
சதைப்பொருத்தி - ஒரு சீர்ப்பூடு.
சதையம் - ஒரு நக்ஷத்திரம்.
சதையொட்டி - ஒருபூடு.
சதோகநாதர்-நவநாதசித்தரிலொருவர்.
சதோகரு } இலவங்கப்பட்டை.
சதோகுரு }
சதோடம் - தோஷ சம்பந்தமுள்ளது, மரகதத்தின் குணம். அது சுகராட விலக்கணம்.
சத்தகம் - எழுகூடியது, ஒருசத்தி, ஒரு மரணகன்மம்.
சத்தகன்னிகை-அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வராகி என்னும் எழுமாதர்கள்.
சத்தகுலாசலம் - இமயம், ஏமகூடம், கைலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தியம் எனும் எழுமலை.
சத்தசமுத்திரம் - உவர்நீர், கருப்பஞ்சாறு, தயிர், தேன், நன்னீர், நெய், பால் எனும் எழுகடல்.
சத்தசாகரம்-எழுசமுத்திரம், சத்தசமுத்திரம்.
சத்தசாத்திரம் - சொல்லிலக்கணம்.
சத்தசிப்பி - கிளிஞ்சில்.
சத்தசியம் - கிரந்தச்சொல் விலக்கண விரிவு.
சத்தசுரம் - எழுசுரம்.
சத்தசுராக்கரம் - எழ்சுரத்திற்குரியவக்கரம்; அவை ச-ரி-க-ம-ப-த-நி.
சத்ததன்மாத்திரை - ஒலிப்பிரகிருதி.
சத்ததாது-உடல், இரசம், இரத்தம், சுக்கிலம், மூளை, சதை, எலும்பு, தோல் எனும் எழ்தாது.
சத்ததாரணை - ஒன்பது தாரணையினொன்று.
சத்ததாளம் - எழ்விததாளம்; அவை துருவம், மட்டியம், உருபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம்.
சத்ததானம் - வெடியுப்பு.
சத்ததீர்த்தம் - கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி எனும் எழ் விசேஷதீர்த்தம்.
சத்தபர்ணி - எழிலைப்பாலை.
சத்தபுரி - அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை என்னும் எழுதலம்.

சத்தப்படுதல் - ஒலிப்படுதல்.
சத்தப்பிரதி – சத்தவுணர்வு.
சத்தப்பிரமம் - எழுத்தொலியே தெய்வமென்னும் நூல், கலைஞான மறுபத்துநான்கில் ஒன்று.
சத்தப்பிரமவாதம் - ஒரு சமயம்.
சத்தப்பிரமவாதி - ஒரு சமயி.
சத்தமண்டலம்-வாயு, வருணன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, திரிசங்கு என்னும் எழுமண்டலம்.
சத்தமி - எழாந்திதி.
சத்தமுகில், சத்தமேகம் - ஆவர்த்தம், சம்வர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என எழுமேகம்.
சத்தம் - இசை, எழு, ஒலி; அது பஞ்சவிடயத்தொன்று, குரல், வாடகை வார்த்தை.
சத்தயோனி – சொன்மூலம்.
சத்தரிஷிகள் - அத்திரி, ஆங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன், அன்றியும் அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், அன்றியும் மரீசி, ஆங்கிரசன், புலவகன், வசிட்டன், அத்திரி, புலத்தியன், கிரது, அன்றியும் காசிபன், அத்திரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கௌதமன், சமதக்கினி, வசிட்டன்.
சத்தவருக்கம்-எழ்வகைமருந்து. அவை இலவங்கம், ஏலம், குருவேர், சடாமாஞ்சி, திராட்சம், நெல்லிக்காய், வெட்டிவேர்.
சத்தவிதம் - தோத்திரஞ்செய்தல்.
சத்தவெடி - இலக்கங்குறியாது வைக்கும் வெடி.
சத்தன் - சிவன்.
சத்தாபாசம் - அசத்து.
சத்தார் - மூலேயோட்டம்.
சத்தார்த்தம் – சொற்பிரயோசனம்.
சத்தாவத்தை - அஞ்ஞானம், அபரோட்சம், சோகநிவர்த்தி, ஆனந்தம், என எழவத்தை.
சத்தி - இந்துப்பு, உபாயவழி, கக்கல், கந்தகம், குடை, குமட்டிக்கொடி, கைவேல், சத்திசாரணை, சத்திசாரம், சத்தியென்னேவல், சவுக்காரம், சிவதத்துவமைந்தில் ஒன்று. அது கிரியை நாடல், சுரோணிதம், சூலம், தேரிடக்கியம், திமிலை, நீர்முள்ளி, நெல்லிக்காய்க் கந்தகம், பார்வதி, பெண், பெண்கலை, பெலம், பேய்ப்புடல், பொன்னிமிளை, மறியரி, மறியல், மூன்று வலிமை, விருதுக்கொடி, வெண்குடை, வேம்பு.
சத்திகம் – குதிரை.
சத்திகர் - சத்துவகர்.
சத்திகீலம் - வீணைமுறுக்காணி.
சத்திகுருநாதன் - கஞ்சா.
சத்திகுன்மம் - கக்குகிற ஒருநோய்.
சத்திக்கூற்றோன் - நவசாரம்.
சத்திக்கொடி - குமட்டிக்கொடி.
சத்திசாரணை – ஒருபூடு, மூக்கிரட்டை.
சத்திசாரம் - ஒருப்பு.
சத்திதத்துவம் – சிவதத்துவம் ஐந்தில் ஒன்று; அது கிரியையாயிருப்பது.
சத்தித்தல் - உவாந்தித்தல், ஒலித்தல்.
சத்திநாதம் - எமாப்பிரகம், பொன்னிமிளை, பொன்னிறம்.
சத்திநாயனர் - ஒரு சிவபத்தர். இவர் சோழநாட்டிலே வேளாளர் மரபிற்றோன்றிச் சிவனடியார்களை நிந்தை செய்பவர்களது நாக்கையரிதலே தமது திருத்தொண்டாகக் கொண்டு விளங்கினவர்.
சத்திநிபாதம் – சத்திபதிதல்.
சத்திநிபாதர் - மனதையடக்கித்தெய்வ வழிபடுவோர்.
சத்திப்பு – உவாந்தி.
சத்திமுற்றப்புலவர் - சத்திமுற்றமென்னு மூரிலே செங்குந்தர் குலத்திலே விளங்கிய ஒரு தமிழ்ப்புலவர். இவர் தமது வறுமைநோயாற் பாண்டிநாட்டையடைந்து பாண்டியனைத் தரிசிக்கும்பொருட்டுச் சமயம் பார்த்திருக்கும் பொழுது ஓரிரவு பெருமழையி லகப்பட்டுப் போர்த்துக் கொள்ளவும் வஸ்திர மில்லாது குளிரால் மெலிந்து மாத்தின் கீழிருந்து தமது மனைவிமக்களை நினைந்து

தம் விதியை நொந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஆகாயத்திலே தெற்கிருந்து வடக்குநோக்கிச் சத்தமிட்டுக்கொண்டு பறந்துபோகின்ற ஒரு நாரையைக்கண்டு "நாராய் நாராய் செங்கானாராய்" என்றதொடக்கத்துச் செய்யுளிலே தமது மனைமக்களது நிலைமையையும் தமது நிலைமையையும் எடுத்தமைத்துப் பாடினார். அச்சமயத்தில் நகர்சோதனையின் பொருட்டு அவ்வழியேசென்ற பாண்டியன் அதனைக்கேட்டு இரக்கமுடையனாகித் தான் தரித்திருந்த போர்வையை இவர்மீது வீசிப்போயினான். விடிந்தபின் அரசன் தன் சேவகரையழைத்துத் தனது போர்வை முன்னிரவிற் களவுபோயிற்றென்று கூறி அக்கள்வனைத் தேடிக் கண்டு வருத்தாது கொண்டுவருகவென்று ஆஞ்ஞை செய்ய அவ்வாறவர்கள்புலவரைக்கொணர்ந்தரசன் முன் விடுப்ப அரசன் அவருக்குத் தக்கவாறு பரிசளித்து அவரை அனுப்பிவிட்டான்.

சத்தியகர்மன் - திருடவிருதன்.

சத்தியகன்-இரண்டாம் சினிபுத்திரன், சாத்தியகி தந்தை; யாதவர்களுள் விருஷ்ணி வமிசத்தவன்.

சத்தியஹிதன் - உபரிசரவசுவினது வமிசத்தன்.

சத்தியகீர்த்தி - அரிச்சந்திரன் மந்திரி.

சத்தியகேது - சுகேதன் பௌத்திரன்; விபுவினது தந்தை.

சத்தியக்காரன்-உண்மைசொல்பவன்.

சத்தியசந்ததீர்த்தர் - மத்வாச் சாரியார்களுள் ஒருவர்.

சத்தியசக்தனன் - இராமன், ஜநமேஜயன் பாதன்.

சத்தியசந்தை - திரௌபதி.

சத்தியஜித்து - வசுதேவன் தம்பியாகியகங்கன் இரண்டாம் புத்திரன், துருபதன் தமயன்.

சத்தியசிரவன் - இருக்கு வேதாத்தியாபகனாகிய ஓரிருடி, வீதிகோத்திரன புத்திரன்.

சத்தியசேனன் - கர்ணன் புத்திரன்.

சத்தியதர்மதீர்த்தர் - மத்வாச் சாரியர்களில் ஒருவர்.

சத்தியதிருதி - சாத்துவந்தன்; சதானந்தன் புத்திரன். இவன் தநுர்வேத நிபுணன். ஒருநாள் வனத்தில் ஊர்வசியைக்கண்டு சுக்கிலஸ்கலித முண்டாகப்பெற்று அதனை ஒருநாணலின் மேல்விட அதிலே ஒரு பெண்மகவும் ஆண்மகவும் உற்பத்தியாயின. சந்தநு அவ்வழியே வேட்டைமேற்சென்றபோது அச்சிசுக்களையெடுத்துப்போய் வளர்த்தான். பெண்மகவாகிய கிருபி துரோணனுக்கு மனைவியாயினாள். ஆண்மகன் கிருபனெனப் பெயர்கொண்டான், கிருதிமந்தன்புத்திரன்; மகாவீரியன் புத்திரன்.

சத்தியநாததீர்த்தர் - மத்வாச்சாரியர்களுளொருவர்.

சத்தியநாதர் - நவநாதசித்தரில் ஒருவர்.

சத்தியநிதிதீர்த்தர் - மத்வாச்சாரியர்களுளொருவர்.

சத்தியநிருவாணம்-சைவதீட்சைகளிற் சிரேட்டதீட்சை பிறவியறுத்தல்.

சத்தியபாமை - கிருட்டிணன் மனைவிகளிலொருத்தி. இவள் சத்திராஜித்து மகள். இவள்பொருட்டுக் கிருஷ்ணன்பாரிசாதவிருக்ஷத்தையும்தேவலோகத்திருந்து பெயர்த்துக்கொணர்ந்தான்.

சத்தியபாரதன்-வேதவியாசன்

சத்தியபோத தீர்த்தர் - மத்வாச்சாரியர்களிலொருவர்.

சத்தியப்பிரமாணம் - உண்மைப் பிரமாணம்.

சத்தியப்பிரியதீர்த்தர் - மத்வாச்சாரியர்களில் ஒருவர்.

சத்தியம்-ஆணை,குறிஞ்சா,சபதம்,மெய்ம்மொழி.

சத்தியயுகம் - கிரேதாயுகம்.

சத்தியபாதன் - பௌமரதன் மகன்.

சத்தியலோகம் - பிரமலோகம்; அது மேலேழுலகிலொன்று.

சத்தியவசனம்-உண்மைமொழி, மெய்

சத்தியவதி - கௌசிகி; இவள் காதிராஜன்மகள். இருசிகன்பாரி. ஜமதக்கினிமுனிவர் இவள்புத்திரர். இவள்நாயகனோடு அக்கினிப்பிரவேசஞ்செய்து கௌசிகி நதியாயினவள், சந்தனுபாரி; இவள் வயிற்றிலே சந்தனுவுத்

குப் பிறந்த புத்திரர் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்போர். ஒருசா பத்தினால் யமுனையிலே மீனுருக் கொண்டு கிடந்த அத்திரிகையென் னும்அப்சரசு உபரிசரவசுஎன்பவன் விட்டவீரியத்தைஉட்கொண்டுபெற் றபுத்திரி. இவள் மிகுந்த ரூபமுடைய வளாயினும்மீன்வயிற்றிற்பிறந்தமை யால் மற்சியகந்தம் அவள் தேகத்தில் வீச அதுகாரணமாகமற்சியகந்திஎன் று பெயர்பெற்றிருந்த இவள் பராச ரைக்கூடி வியாசரையீன்றபோது ப ராசர் அனுக்கிரகத்தால் யோசனை கந்தி பரிமளகந்தி என்னும் காரணப் பெயர்களைப் பெற்றாள். தாசராசன் எடுத்துவளர்த்த புத்திரி, நாரதன் ம னைவி, வேதவியாசன் தாய்.

சத்தியவாததீர்த்தர் - மத்வாச்சாரியர்க ளுளொருவர்.

சத்தியவரதீர்த்தர் - மத்வாச்சரியர்களு ளொருவர்.

சத்தியவாகீசர்-திருவன்பிலாலந்துறை யிலே கோயில் கொண்டிருக்குஞ் சு [வாமி.

சத்தியவாசகம்-மெய்ம்மொழி.

சத்தியவாசகன் -பேச்சுத்தவறாதோன்.

சத்தியவாதி - மெய்யன், சத்தியபுத்தி யுடையோன்.

சத்தியவான் - மத்திரதேசத்தரசனான தியுமத்சேனன்புத்திரன்; இவன்சித் திராசுவன்எனவும்படுவன். இவனே சாவித்திரி நாயகன், மெய்யன்.

சத்தியவிஜயதீர்த்தர் - மத்வாச்சாரியர் களுளொருவர்.

சத்தியவிரதன் - உண்மையினிலைநிற் போன், ஒருமனு, தருமன், திரிசங்கு வினது பூர்வநாமம். [நூல்.

சத்தியவேதம் - மெய்வேதம், விவிலிய

சத்தியன் - பஞ்சகோச வுற்பத்திக்கு முன்னும் அவை அழிந்த பின்னும் ஒருபடித்தாகவிருக்கு மான்மாவையு டையவன்.

சத்தியாகிருதி - முனி.

சத்தியாக்கிகி - அகத்தியமுனிவன்.

சத்தியாநிதிதீர்த்தர் - மத்வாச்சாரி யர்களுளொருவர்.

சத்தியாகிருதம் } வர்த்தகஞ்செய்தல்.
சத்தியாபனம் }

சத்தியேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று. [று.

சத்தியோசாதம்-சிவனைம்முகத்தொன்

சத்தியோசாதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

சத்தியோவிரணம் - ஒருவகைப்புண். அது கல் தடி முதலியவைகள் தேகத் திலடிபடுவதாலுடனே பிறப்பது.

சத்திரகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

சத்திரக்கத்தி - இரண வயித்தியத்துக் கு வழங்குங்கத்தி.

சத்திரம் - சமானமான பொருள்.

சத்திரசாலை-அன்னசத்திரம், ஆயுதசா [லை

சத்திரட்சம்-சமானமானபொருள்.

சத்திரபாதி - தனிக்குடைநிழற்றி அர சுபுரிவோன்.

சத்திரப்பிரயோகம்-இரணவைத்தியம்.

சத்திரமிடுதல் - கத்திவைத்தறுத்தல்.

சத்திரம் - அன்னசாலை, இரணவைத்தி யம், கத்தி, கவிழ்த்தும்பை, குடை, கைவிடாப்படை, கைவேல், தும்பை, பாணம், மடம், பாகம், வெண்குடை.

சத்திரம்வைத்தல்-கத்திவைத்தறுப்பது.

சத்திரயாகம் - ஒருயாகம்.

சத்திரவிதி } இரணவைத்திய
சத்திரவித்தை } சாத்திரம்.

சத்திரவைத்தியம் - இரணவைத்தியம்.

சத்திராஜித்து - யாதவருள் விருஷ்ணி வமிசத்து நிம்முனன் புத்திரன், சத் தியபாமை தந்தை.

சத்திராட்சி - அரத்தை.

சத்திராப்பை - இருப்புச்சட்டி.

சத்திரி - யானை.

சத்திரித்தல் - சத்திரம்வைத்தல்.

சத்திரியநாபி - சிவப்புநாபி.

சத்திரியர் - க்ஷத்திரியர், இரண்டாம் வருணத்தோர், அவர் அரசர்.

சத்திரீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

சத்திலி - கருப்பூரம்.

சத்து - அவுபலபாஷாணம், அறிவு, உண்மை, கற்பூர சிலாசத்து, சாரம், நன்மை, பிரமம், பெரியோர், பெ லன், மாவு என்று முள்ளது.

சத்துச்சாரணை - ஒருபூடு.

சத்துராதி } பகைவன்.
சத்துரு }

சத்துருக்கினன் - தசரதன் கடைமகன்; தாய் சுமித்திரை. குசத்துவஜன் மகள் சுருதகீர்த்தி இவனுக்குப் பாரி.

சத்துருசகம் - பொறுமை.

சத்துருசாதனபாண்டியன் - கூன்பாண்டியன் தந்தை, காருண்ணியபாண்டியன் மகன்.

சத்துருசத்து - பிராதர்த்தனன்.

சத்துருஞ்சயன் - உக்கிரசேன பாண்டியன் மகன்.

சத்துருதை - பகை.

சத்துருத்தனம் - பகைக்குணம்.

சத்துருத்தானம் - சென்மத்துக்காறாமிடம்.

சத்துருநாமத்தி - ஏகம்பபாஷாணம்.

சத்துருபாஷாணம் - கீர்விஷம்.

சத்துவகர் - கடவுளருளா லற்புதஞ்செய்வோர்.

சத்துவக்குறிவிளக்கம் - பாவனுவுருவகம்.

சத்துவக்கேடு - பலவீனம்.

சத்துவம் - சாத்துவிகக்குணம், சுபாவம், வலி, விளக்குறம்பினுளொன்று.

சத்துவரம் - விரைவு, வேதிகை.

சத்துவாங்கல் - பாஷாணங்களின் சத்தெடுத்தல்.

சத்துவாங்குதல் - தத்துவத்தைக்குறைத்தல்.

சத்துவாரி - சாலேசரம்.

சத்துவாலம் - ஓமகுண்டம், சருப்பம், தருப்பைப்புல்.

சத்துவேது - காரணகாரியவேது.

சத்தெடுத்தல் - சத்துவாங்கல்.

சத்தை - இருக்கை, சாரம், நன்மை.

சத்மலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

சநகன் } பிரமமானசபுத்திரர்; இவர்கள் சனந்தனர் சனற்குமாரரோடு சிவபிரானை யடைந்து தமக்கு மனமடங்க வில்லையென்றும் மனமடங்க வருள் புரியவேண்டுமென்றும் பிரார்த்திக்க அவர்யோகசமாதியிலிருந்து சின்முத்திரைகாட்டி யுண்மை யுபதேசிக்கப்பெற்றவர்கள்.
சநந்தனன் }

சநபதம் - கிராமக்கூட்டம்.

சநாதநதமன் - விட்டுணு.

சநாதனன் - அழியாதவன், சிவன், பிரமன், விட்டுணு.

சநாதநி - இலக்குமி, சரச்சுவதி, துர்க்கை.

சநிசுவரன் - சூரியன் புத்திரன், நவக்கிரகங்களுளொருவன், யமன் தம்பி.

சநீர்மேகம் - ஒருவகைநோய். அது மூத்திரங் கொஞ்சங் கொஞ்சமாக மிருதுவைப் பெற்றிறங்குவது.

சந்தகபுட்பம் - காரம்பு.

சந்தகம் - ஆவியில் வேகும் இடியப்பம் முதலியன சந்தோஷம்.

சந்தகன் - சந்திரன்.

சந்தகை - இடியப்பவுரல்.

சந்தசு - ஆரியயாப்பிலக்கணம்.

சந்தடி - இரைச்சல், சனக்கூட்டத்தாலாகுந் தொந்தரை.

சந்தணி - அகரு, சந்தனம், செஞ்சந்தனம்.

சந்தனுகி - பாம்பு.

சந்ததசுரம் - ஒருவகைசுரம். அது சீதகத்தி லன்னரசத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும்நரம்புகள் அந்தரசசேஷ சமீபத்தில் வாயைத் திறந்திருப்பதால் முன்பு பரிசுத்தப்படாம லொளித்திருக்குஞ் சுரமானது சர்வாங்கத்திலும் வியாபித்துள்ளேகாயும். இது உள்ளில் மாறாது காய்வதாற் சந்ததசுரமெனப் பெயர்பெற்றது.

சந்ததம் - எப்பொழுதும், பலகாற்கெட்டல்.

சந்ததி - கோத்திரம், சந்தானம், பிள்ளை, மகன், வித்தாரம், வமிசம்.

சந்ததியன் - நல்லகுலத்திற் பிறந்தவன்.

சந்தத்தம் - தவிக்கப்பட்டது.

சந்தப்பா - இருபத்தாறெழுத்து நான்கடியாய் வரும்பாட்டு.

சந்தப்பாணம் - ஒரு மருந்துச்சேர்வை.

சந்தமகம் - இருள்.

சந்தம் - அழகு, ஆசை, கவியின்வண்ணம், கர்ப்பிபாஷாணம், குணம், சந்தனம், நிறம், வடிவு.

சந்தயம் - சந்தேகம்.

சந்தரி - துளசி.

சந்தர்ப்பம் - காலம், தருணம்.

சந்தவாக்கு - இளந்தகுணம், சுயகுணம்.

சந்தவிருத்தம் - இன்னோசையான விருத்தப்பா.

சந்தனக்காப்பு - சந்தனத்தாலிடும் சட்டை, சந்தனபிஷேகம்.

சந்தனக்குடம் - நாகூரில்நடக்கும் துலுக்கரின் ஒரு திருவிழா.

சந்தனக்குழம்பு - இழைத்தசந்தனம், கலவைச்சாந்து.
சந்தனக்கூட்டு - அகில் முதலிய பஞ்ச வாசம்.
சந்தனக்கோரை - ஒருபுல்.
சந்தனத்திரி - சந்தனத்தாற் செய்யுந் திரி.
சந்தனமிழைத்தல் - சந்தன மரைத்தல், சந்தனஞ்சேர்த்தல்.
சந்தனம் - இரதம், ஒருமரம்; அது பஞ்சவிரையினொன்று.
சந்தனுதலம் - பொதியமலை.
சந்தனுதி - வேங்கை.
சந்தனுத்திரி - பொதியமலை.
சந்தனு-வீடுமன் றந்தை, இவன் சந்திர வமிசத்து இருபத்தோராவது அரசன். இவன் பிரதிபனுக்குச் சுநந்தையிடத்துப் பிறந்த புத்திரன். இவனுக்கு முதற்பாரி கங்காதேவி. இவளிடத்திலே வீஷ்டுமரைப் பெற்றான், இரண்டாவதுபாரி பராசருக்குவியாசரைப்பெற்ற சத்தியவதி இவளிடத்திலே சந்தனுவுக்குப் பிறந்த புத்திரர் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என இருவர், விசித்திரவீரியன் சந்ததியின்றியிறந்தான். அதுகண்ட சத்தியவதி தனது மூத்தமகனாகிய வியாசனை அழைத்து நியோக நியாயத்தால் விசித்திர வீரியன் மனைவியரிருவரிடத்தும் திருதராஷ்டிரனையும் பாண்டுவையும் பிறப்பித்தான். வியாசரும் வீஷ்டுமரும் விவாகம்புரிய வுடன்படாது பாலியத்திலேயே துறந்தார். சித்திராங்கதன் பாலியத்திலிறந்தான்.
சந்தனுமைந்தன் - வீடுமன்.
சந்தனை - அங்கதேசத்து வழியேபோகின்ற ஒருநதி.
சந்தாதிகம் - சந்திவிக்கிரகம்.
சந்தாத்திரி - பொதியமலை.
சந்தாநம் - அம்பு.
சந்தாநிகி - பசுமடம், தொழுவம், பசுக்கொட்டில்.
சந்தாபம் - துன்பம், மன்மதன்கணையில் ஒன்று, வெப்பம்.
சந்தாபிதம் - அக்கினியில் மரித்தல்.
சந்தாமப்பம் - எருக்கு.
சந்தாயம் - சஞ்சாயம்.

சந்தானகரணி - அறுகு, பெருமருந்து முரிந்த வுறுப்புகளைச் சந்துசெய் மருந்து.
சந்தானகுரவர்-சைவ சித்தாந்தசாரியார்.
சந்தானகுரு - பாரம்பரியகுரு.
சந்தானக்கூர்மை - பிடாலவணம்.
சந்தானசருவோர்த்தம் - சிவாகம மிருபத்தெட்டில் ஒன்று.
சந்தானதீபிகை - ஒரு சோதிடநூல்.
சந்தானந்தழைத்தல்-வமிசம் வாழ்தல்.
சந்தானபரம்பரை - தொன்றுதொட்டு வருங் குலமுறை.
சந்தானம் - ஐந்தருவில் ஒன்று, கூடல், கோத்திரம், சந்ததி, சம்பந்தம், தொடர்பு, வமிசம்.
சந்தானவிரதம் - ஒருவிரதம்.
சந்தானவிருத்தி - வமிச விர்த்திப்பு.
சந்தானவுவமை - சிலேடையுவமை; அது ஒராச்சரியங்காட்டிப்பொருளையுமுவமையு மொப்புமைசெய்தல் (உ-ம்) மரைமலரும் முகமுந்தடத்துளுந்தலைவி யிடத்து மிருப்பதொன்றேயன்றி மற்றொரு வேற்றுமையின்று.
சந்தானி - வெண்காரம்.
சந்தானிகச்சிலந்தி-ஒருவகைச் சிலந்தி, இது பட்டவிடத்திற் சகிக்கக்கூடாத குத்தலும் விரணமுமுண்டாகும்.
சந்தானிகை - பாலேடு.
சந்தி - இசைப்பு,எழுத்துச் சொற்களின்புணர்ச்சி, காலை, காலநியமம், கீல், சந்தியென்னேவல், சுரங்கம், தருவாய், பகுபதவுறுப்பிலொன்று, பலவழி கூடுமிடம், பொருத்து, மாலைநேரம், மூங்கில்.
சந்திகசந்நிபாதசுரம் - ஒருவகைச் சுரநோய். அது கீல்களெல்லாம் நோதல், வாயில் நீங்காத கபம், இருமல், வயிற்றுவலி, ஆயாசம், அவயவங்களெரிவு, தாகம், சிறு பிரமையாகிய குணங்களை யுண்டாக்குவது.
சந்திகசந்நிபாதம் - ஒருவகை நோய். அது நெற்றியிற் குத்தல், வீக்கம், வாதமதிகரித்தல், மிகுவேதனை, வியர்வை, அர்ப்பலம் இரவில் நித்திரையின்மை,தேகம் பாரித்தல், சீதளம், எரிச்சல், ஆலசியமென்னுமிக் குணங்களை யுண்டாக்குவது.

சந்திகசிலேஷ்மம்-ஒருவகைச்சிலேட்டுமநோய். அது கீல்களில் வாசம்பண்ணிக்கொண்டு சுபாவமாகச் சகல கீல்களையுந் தளரச்செய்துகொண்டிருப்பது. சகல கீல்களையுந் தளரச்செய்யுங் காரணத்தாற் சந்திக சிலேஷ்மம் என்னும் பெயர் பெற்றது.

சந்திரதோஷம் - ஒருவகைத் தோஷநோய். அது சகல கீல்களிலும் வாயுவைச் சஞ்சரிக்கச்செய்து சுரமாகிய ஒரு ரூபத்தைமாத்திர முண்டாக்குவது.

சந்திகம் - ஒருநோய்.

சந்திகாரகன் - கள்வன்.

சந்திரகாவலன் - ஒரு தேவதை.

சந்திதம் - கோக்கப்பட்டது.

சந்தித்தல் - எதிர்த்தல், கூடல், பொருந்துதல்.

சந்திபண்ணுதல் - நியம நிட்டை முடித்தல்.

சந்திபந்தனம் - நரம்பு.

சந்திப்பாடு - சந்திப்பித்றேவதைகளால் வரும் பிணி.

சந்திப்பு-எதிர்தல், பலவழி கூடுமிடம், பொருத்து, பொருத்தல், வெளிப்பாடு.

சந்திமான்-இடையெழுவள்ளலிலேயொருவன்.

சந்திமிதித்தல் - பிறந்த ஆருமாதத்திற் செய்யும் ஒரு சடங்கு.

சந்திமுடித்தல்-நியமநிட்டைமுடித்தல்.

சந்தியக்கரம் - ஈரெழுத்து, ஏ, ஐ, ஒ, ஔ, என்னு நெட்டெழுத்துக்களாகிய வுயிர்கள்.

சந்தியாகாலம் - சாயங்காலம்.

சந்தியாவந்தனை - திரிகாலதருமம்.

சந்தியை - இணக்கம், எல்லை, காலைமாலையின் வெளிச்சம், சாலகடங்கடை தாய், தியானம், மல்லிகை.

சந்தியோகம் - மழைபெய்தல்.

சந்திரகம் - செந்திருக்கம், நகம்,பொன்வண்டு, மயிற்றோகைக்கண், மிளகு.

சந்திரகலை-இடகலை, ஒருபறை, சந்திரகூறு.

சந்திரகாசம் - கத்தி.

சந்திரஹாசன்-தக்ஷிணத்திலே அர்ச்சுனன் காலத்திலே யிருந்தரசியற்றிய வோரரசன். இவன் பாலியத்திலே தந்தை தாயாரை யிழந்து வருந்திப் பின்னுளிலே அரசு கொண்டவன்.

கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் நண்பினன்.

சந்திரகாந்தி - ஒரு பூச்செடி.

சந்திரகாந்தை - இரவு.

சந்திரகாம்புயம் - வெண்டாமரை.

சந்திரகாவி - ஒருசீலை, ஒருநிறம், ஒருவகைப்புடவை, செங்காவிமண்.

சந்திரகி - மயில்.

சந்திரகிரி - நரசபூபாலன் ராஜதானி. இது தெலுங்கராஜாக்களுக்கு நெடுங்காலம் ராஜதானியாக விருந்தது.

சந்திரகுத்தன் - ஓரரசன்,யமன் கணக்கரில் ஒருவன்.

சந்திரகுப்தன் - நந்தர்களுக்குப்பின்மகததேசத்தையாண்டமௌரிய ராஜர்களுள் முதல் அரசன், இவன் தாய் முரையென்னும் பெயருடையவள். அதுபற்றி அந்த வமிசத்தர் மௌரியரெனப்படுவர். இவன்காலம்இற்றைக்கு 2206 வருஷங்களுக்குமுன்னரென நிச்சயிக்கப் படுகின்றது. அதாவது கலி இரண்டாயிரத்தெழுநூற்றிருபதில் முடிதரித்தவன்.

சந்திரகும்பம் - வருணகலசம்.

சந்திரகுலம் - சந்திரவமிசம்.

சந்திரசேஸ்வரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுள் ஒன்று.

சந்திரகேதன் - ஸ்ரீராமருடைய தம்பி லக்ஷமணன் புத்திரருள்ளே இரண்டாம் புதல்வன்.

சந்திரசம்பவன் - புதன்.

சந்திரசர்மன்-விஷ்ணுசர்மன் புத்திரன் விக்கிரமார்க்கன் தந்தை. இவன் நான்குவருணத்தும் நால்வர் பாரிகளை மணம்புரிந்து பார்ப்பனப் பெண்ணிடத்து வரருசியையும், க்ஷத்திரியப் பெண்ணிடத்து விக்கிரமார்க்கனையும், வைசியப்பெண் வயிற்றில் பட்டியையும், சூத்திரப் பெண்ணிடத்து பார்த்தருகரியையும் பெற்றவன். விக்கிரமார்க்கன் அரசனானபோது பட்டி மந்திரியானான்.

சந்திரசாபவிமோசவல்லி - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய இந்தளூரில்கோயிற்கொண்ட இலக்குமி.

சந்திசாலிகை } நிலாமுற்றம், மெத்தைவீடு.
சந்திரசாலை }

சந்திரசாலோக்கியம் - சந்திர லோகமடைதல்.
சந்திரஹாவனம் - குதிரைப்பற் பாஷாணம்.
சந்திரசூடன் - சிவபெருமான்.
சந்திரசூடேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
சந்திரசேகரன் - சிவன்.
சந்திரசேகரி-உமை,சிவன்,விநாயகன்,
சந்திரசேகரேசுவரர் - திரு இலம்பயங்கோட்டூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி.
சந்திரசைலம் - ஒருமலை.
சந்திரஞானம் - சிவாகம மிருபத்தெட்டில் ஒன்று.
சந்திரதரிசனம் - பிறைதொழுதல்.
சந்திரதிலகம் - சந்தனப்பொட்டு, சந்தனம்.
சந்திரநாகம் - இராகு, ஒருசரக்கு.
சந்திரபாகை - ஓர்யாறு; இது சிந்துநதிக்குபநதி, சந்திரன்பக்கு.
சந்திரபாலை - ஏலம்.
சந்திரபீசம் - இந்திர கோபப்பூச்சி.
சந்திரபுஷ்கரிணி - திருவரங்கத்திலுள்ள புண்ணியதீர்த்தம்.
சந்திரபூரம் - பச்சைக்கர்ப்பூரம்.
சந்திரமணி - சந்திரகாந்தம்.
சந்திரமண்டலம் - இலாடத்தானம், இது மும்மண்டலத்தொன்று, நிலாமண்டலம்.
சந்திரமதி - அரிச்சந்திரன் மனைவி; இவள் பிறக்கும்பொழுதே மங்கிலியசூத்திரத்தோடு பிறந்தவள். பதிவிரதாதன்மத்திலும் நற்குண நற்செய்கைகளிலும் அழகிலுஞ் சிறந்தவள்.
சந்திரமந்தோச்சம்-சந்திரன் சூரியனுக்குத் தூரமாய்ப்போகத்தக்க முனை.
சந்திரமானம்- சந்திரன்சஞ்சரிக்கு மளவு.
சந்திரமுத்து - ஒருமுத்து.
சந்திரமோலி } சிவபெருமான்.
சந்திரமௌலி }
சந்திரம் - கருப்பூரம், நீர், பொன், மயிற்றோகைக்கண்.
சந்திரரேகை - ஓரப்சரப்பெண், சந்திரகலை.
சந்திரரோகம் - ஒரு குட்டநோய்.
சந்திரலவணம் - இந்துப்பு.
சந்திரலோகம் - சந்திரமண்டலம்,வெளி.
சந்திரவக்கிரன் - சந்திரகேது.
சந்திரவட்டம் - அருகன் முக்குடையில் ஒன்று, தவளச்சத்திரம்.
சந்திரவதி - அரிச்சந்திரன் மனைவி.
சந்திரவமிசம் - சத்திரியாது முக்குலத்தொன்று.
சந்திரவர்த்தம் - ஒருவகைநோய்.
சந்திரவலயம் } ஒரு விளையாட்டுக்கருவி.
சந்திரவளையம் }
சந்திரவாதம் - ஒருசமயம்.
சந்திரவாலை - பேரேலம்.
சந்திரவிமானம் - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய தலைச்சங்க நாண்மதியத்திலுள்ள விமானம்.
சந்திரவிரதம் - ஒருவிரதம்.
சந்திரனுள் - திங்கட்கிழமை, திதி.
சந்திரன் - அத்திரிக்கு அநசூயையிடத்தப்பிறந்த புத்திரனாகிய சந்திரபகவான். அது அட்டமூர்த்தத்தொன்று; இச்சந்திரனுக்குத் தக்ஷப்பிரஜாபதி தன் புத்திரிகளாகிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணமுடித்துக் கொடுத்தான். இருபத்தெழுவருள் ரோகிணி பிரியநாயகி பிருஹஸ்பதி பாரியாகிய தாரையைச் சந்திரன் சோரமார்க்கமாகக் கூடிப்பெற்ற புத்திரன் புதன். இதுபற்றிப் புதன்மதிமகனெனப்படுவன். மற்றொருகாலத்திலே சமுத்திர மதனத்துக்குக்கண் திருப்பாற்கடலிலே இச்சந்திரன்பிறந்தான். தக்ஷகன் தன்குமாரத்திகள் இருபத்தேழு பெயர்களுள் ரோகிணியிடத்து அதிப் பிரீதியும் மற்றையரிடத்து அற்பபிரீதியும் வைத்தொழுகும்சந்திரன்மீதுகோபமுடையனாகி க்ஷயரோகத்தால் வருந்துகவென்று சந்திரனைச் சபித்தான்.
சந்திரன்சிப்பி - முத்துச்சிப்பி.
சந்திராங்கதன் - ஓரரசன்.
சந்திராசாரியர்-ஒரு சமஸ்கிருத பண்டிதர், இவர் காஸ்மீரத்திலே ஆயிரத்தெண்ணூற்று ஐம்பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னே அபிமன்னியன் காலத்திலே அவனுடைய சமஸ்தான வியாகரண வித்துவானும்ப் பதஞ்சலி செய்த மகா பாஷியத்தை அந்நாட்டில் முதன்முதல் கற்பித்து [சிவன்.

விளங்கியவர். பாரதத்திலே கூறப் பட்ட அபிமன்னியன் வேறு இவன் வேறு.
சந்திராசவன் - தண்டாசுவன்.
சந்திராதபம் - சந்திரகிரணம்.
சந்திராதம் - தாளகம்.
சந்திராந்தம் - பெயரெச்சம்.
சந்திராபீடன் - சிவன்.
சந்திராயணம் - சந்திரன் தோட்டம்.
சந்திராயணவிரதம் - சந்திரனது கலை தேயத்தேய வுணவி லொவ்வொரு கவளமாகக் குறைத்துண்டு அது வளரவளர ஒவ்வொன்று யுயர்த்தி யுண்பதோர் விரதம்.
சந்திராலோகம் - ஓரலங்காரசாஸ்திரம், இது காளிதாசன் செய்தது.
சந்திராலம் - ஓடிப்போதல்.
சந்திரிகம் - செந்துருக்கம்.
சந்திரிகாபாயி - சகோரப்புள்.
சந்திரிகாம்புயம் - வெண்டாமரை.
சந்திரிகை - சந்திரகிரணம், பேரேலம்.
சந்திரீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
சந்திரேகம் - கார்போகவரிசி.
சந்திரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
சந்திரோதயம் - நிலவுதயம்.
சந்திரோபலம் - சந்திரகாந்தக்கல்.
சந்திரோபாலம் - சந்திரனல்வருங் காம [நோய்.
சந்தில் - சனி.
சந்திவந்தனை - நியமநிட்டை.
சந்திவழு - எழுத்திலக்கணத்திற்கு வழு வாய்த் தொடுப்பது.
சந்திவிக்கிரகம் - சத்துருசிநேகம்.
சந்திவிசட்சணன் - சமாதானஞ் செய் தூதன்.
சந்தினி - பொலியும் நிமித்தம் எருதி னாற் பிடிக்கப்பட்ட பசு.
சந்து - இடுப்பு, சந்தனமரம், சமயம், தூதன், தூது, தொடைச்சந்து, பல வழிகூடுமிடம், பிளப்பு, பொருத்து, மூடுக்குத்தெரு.
சந்துசெய்தல் - பொருத்தல்.
சந்துட்டம் }
சந்துஷ்டம் } மகிழ்ச்சி, சந்தோஷம்.
சந்துட்டி }
சந்துஷ்டி }
சந்துஷ்டியம் - சொல்லல்.
சந்துநயத்தான் - தூதுவோன்.
சந்துமந்து } குழப்பம், காறுமாறு, மூ
சந்துமூந்து } டுக்கு.
சந்துயிர் - எலும்பு.
சந்துவாதம் - ஒருநோய்.
சந்துவாய் - பொருத்து.
சந்துவிப்புருதி - ஒருசிலந்தி.
சந்தேகநிவாரணம் - ஐயந்தீர்த்தல். அது தயாவிருத்திபதினன்கினுளொன்று.
சந்தேகம் - அசாத்தியம், ஐயம், நிலை யாமை.
சந்தேகாலங்காரம் - ஐயவணி.
சந்தேகித்தல் - பயப்படல்.
சந்தேசகரன் - தூதன்.
சந்தேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
சந்தை - கூட்டம், கடைவீதி, வேத மோதுமிடம்.
சந்தையம் - சந்தேகம்.
சந்தோஷம் } பிரியம், பூரிப்பு, மன
சந்தோடம் } மகிழ்ச்சி.
சந்தோபிசிதம் } வேதாங்க மாறில்
சந்தோபிசிதி } ஒன்று.
சந்தோவிசிதி வேதத்தில் உக்தை முத லியசந்தோபேதங்களுக்கு அக்ஷரசங் கியைகற்பிப்பதாகிய வேதாங்கமால்.
சந்நயந்தன் - நாலாஞ்சுமதி புத்திரன். திருதி தந்தை.
சந்நதி - அலர்கன் புத்திரன், சுநீதன் தந் தை, கிருதுவின்பாரி, தக்ஷப்பிரசாப தி மகள், வாலகில்லியர் தாய்.
சந்நதீஸ்வரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
சந்நத்தம் - போரிதுயத்தம்.
சந்நத்தன் - போருக்காயத்தமானோன்.
சந்நிகருஷணம் - சமூகம்.
சந்நிதானம் } அண்மை, சமூகம், மூ
சந்நிதி } லஸ்தானம்.
சந்நிதியப்பேசுவரர் - திருச்சேறையி லேகோயில்கொண்டிருக்குஞ்சுவாமி.
சந்நிபம் - உவமை,
சந்நிபாதசிர்க்கரம் - ஒருவகைநோய். அது மாதர்கட்கு அல்குல் மார்க்கத்தில் வாதபித்த சிலேட்டுமமென்னு மூன் றுஅசிர்க்கரரோகங்களாகவும், மல மூத்திரகிரமும், காற்றமு முன்னதா

கவுமிருக்கின்ற இரத்தத்தையுஞ் சரீரத்திற் சுரத்தையு மூர்ச்சையையு முண்டாக்குவது.

சந்நிபாதசிலேட்டுமம் - ஒருவகைச் சிலேட்டுமநோய். அது நாக்கறுத்தலோடு வறளல், சுரம், எரிவு, சர்வாங்கத்திலும்வலி, அசதி, மறதி, கன்னம்காது புருவம் நாசிசிரசு உச்சியாகிய இவைகளிற் படபடப்பான துடிப்பென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

சந்நிபாதசுரம் - ஒருவகைச் சுரநோய்; அது வாதாதிதொந்தங்களின் சேர்க்கையாற் பிறந்து அடிக்கடித் தேக எரிவு, பகல்நித்திரை, இரவில் நித்திரையின்மை, வியர்வை, ஆயாசம், நகைப்பு முதலிய குணங்களை யுண்டாக்குவது.

சந்நிபாதமதம் - ஒருவகைநோய்; அது வாத முதலான மூன்று மதநோய்களுக்குள்ள குணங்களை யெல்லாமேககாலத்தி லுண்டாக்கி விருத்திசெய்வது.

சந்நிபாதயோனி ஒருவகைநோய். அது அல்குல் தானத்திலும், கருப்பத்தானத்திலும் திரிதோஷத்தைச் சஞ்சரிக்கச்செய்து அவ்விடங்களி லனந்த நோய்களையும் மகா விரணங்களையும் பிறப்பிப்பது இந்நோயை அனுபவிக்கின்ற மாதர்களுக்கு இரத்தசிராவம், மூலம், இரத்தகுன்மம், அதிதூலமென்னு மிந்நான்குநோய்களு மொருமித்தாவது தனித்தாவது உண்டாகாதிருக்கில் அரோகதிடகாத்திரமும் நல்ல கருப்டமு முண்டாகும்.

சந்நிபாதவரோசகம் ஒருவகையரோசகநோய்; அதுவாயையும், வாயில்வைக்கும் பதார்த்தங்களையும் வாயிலூறுஞ் சலத்தையும் நானாவித வுரிசைகளாகவும், ஒருவேளை அவ்வுரிசைகளொன்றுந்தெரியாமையாகவும், அவ்வாறே ஒக்காளம் வருவதுபோலவுஞ் செய்வது.

சந்நிபாதவிஷபாகம் - ஒருவகைவியாதி. அது சேறுபோற்பேதி, குத்தல், விரணத்துட னிரத்தங்கசிதல், சுவாசசுரம், மயக்கம், காந்திய கொள்ளின் மணம்போல் சரீரவாசனை, முகவீக்கம், வியர்வை, அசதி, பிதற்றல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

சந்நிபாதோஷ்டம்-ஒருவகைநோய்; அது உதடுகளில் வெடிப்பு, அதிகநோவு, மரத்தல், நானாவிதக் கொப்பளங்கள் அக்கொப்பளங்களிற் சலம்வடிதல், தூர்க்கம், ஒருவேளை வாடுதல், ஒருவேளை யுப்புதல், வறளலென்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

சந்நிமாந்தம் - ஒருவகை மாந்தநோய்; அது சந்நிபாதக்குறிகள் அதிகரித்திருப்பது.

சந்நியம் - போர்.

சந்நியாசம் - சன்னியாசம்.

சந்நியாசவாதம் - ஒருவகை வாதநோய். அது தேகத்தில் மகா சீதளச்சேர்க்கையினாலும் சீதளவஸ்துக்களை தினம் புசிப்பதினாலும், சதா சீதளத்தானத்தில் நடப்பதினாலும், பிறந்து சத்ததாதுக்களிலுஞ் சகல கீல்களிலு மனுசரித்துச் சரீர வியாபாரத்தை நீக்கிச் சர்வாங்கத்திலும் பரவுவது. அதனால் அசையக்கூடாமை, தேகம் மாரதுக் கட்டுப்பட்டதுபோ லசைவற்றுக்கிடத்தல், சர்வாங்க நோவென்னு மிக்குணங்களுண்டாகும்.

சந்நியாசிரோகம்-ஒருவகைநோய். அது வாத பித்த சிலேஷ்மங்களானவை பிராண ஸ்தானங்களி லதி பராக்கிரமத்தோடு சேர்ந்து அதிகரித்துச் சந்நிபாதமாகி மனம், வாக்கு, காயமென்னுந் திரிகரணங்களின் செய்கைகளை யடக்கிவிட்டுப் பின்பு தாகமுமடக்கிப் பிறப்பது.

சந்நிரோதகம் - நன்றாய்த்தடுத்தல்.

சபக்கம் - ஒத்தபட்சம்.

சபடம் - விரித்தகை.

சபட்சம் - சபக்கம்.

சபதமொட்டுதல் - சபதங்கூறல்.

சபதம் - ஆணை, ஒட்டம், சபிப்பு, சாபம், பிரதிக்கினை, மெய், வாக்கு கிண்ணயம்.

சபதரித்தல் - ஆதரித்தல்.

சபதி - விரைவு.

சபஸ்தன்-முதல்யுவனாசவன்புத்திரன் பிரகதசுவன்தந்தை. இவன் கௌட

தேசத்திலே சாபத்தியென்னும் பட்டணம் சிருமித்தவன்.
சபத்திரிகை - சுமங்கிலி.
சபத்துவம் - செபித்தல். [வீழ்.
சபம் - பிணம், சவம், செபம், மூங்கில்,
சபரணை - ஆதரவு, ஆயத்தம், பூரணம்.
சபரம் - கெண்டைமீன்.
சப்ராலயம் - வேடச்சேரி.
சபரி - பம்பாநதிதீரத்திலே மதங்காசிரமத்திலிருந்த ராமபத்தராகிய மதங்கர் சிஷ்ய, தன்ளுகெண்டை, பூசை.
சபர் - கடல் யாத்திரை, பிரயாணம்.
சபர்யை - பூசை.
சபலத்துவம் - அனுகூலம்.
சபலம் - இரசம், இலாபம், நடுக்கம், திறைவேறல், மின்னல்.
சபலவெலி - ஒருவகை எலி.
சபலா - திப்பிலி.
சபலி - மாலை வெளிச்சம்.
சபலை - இலக்குமி, திப்பிலி, நா, மஸ்தன்னது, மின்னல், வேசி.
சபலவெலி - ஒருவகை எலி. அது பல நிறங்களை யுடையது, கடித்தால் திரிதோஷ குணத்துடன் வாந்தி மிகு மூர்ச்சை, அதி தாகமென்னு மிக்குணங்களுண்டாகும்.
சபனதம் - சபதம்.
சபனம் ஆணை,
சபாகம்பம் - சபைக்கோழை.
சபாசனம் - சங்கம், சக்தோஷித்தல், மரியாதை.
சபாஸ்தாரர் - சபையிலிருப்பவர்.
சபாநலன் - யயாதி பௌத்திரன், அனுமூத்த புத்திரன்.
சபாநாதன் } சபைக்கிறைவன்,
சபாநாயகன் } சிவன்.
சபாபதி - நடேசர், சிவன்பஞ்சகிருத்தியங்களின் பொருட்டுக் கொண்டருளிய ஆனந்தத்தாண்டவமாடிய வடி
சபாமண்டபம் - சபைமண்டபம். [வம்.
சபாரஞ்சிதம் - சபைக்கிதமான தன்மை, சபையாருக்குண்டான கொள்கை.
சபிகன் - சூதாடுவிப்போன்.
சபிண்டர் - பிதிர்கள்.
சபிண்டி - பிதிர், பிதிர்பிண்ட மூன்றோடு பிரேதபிண்டத்தைக் கூட்டல்.
சபிண்டிகரணம் - பிதிர்பூசை.
சபிண்டிலேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.
சபிண்டீகரணம் - பிதிரர்பூசை.
சபித்தல் - சாபமிடல், திட்டுதல்.
சபிப்பு - சாபம், திட்டு.
சபியன் - சபையிலிருப்பவன், நல்லகுலத்திற் பிறந்தவன்.
சபினம் - வசம்பு.
சபீகன் - சபிகன்.
சபீதி - கூடக்குடித்தல்.
சபீனம் - வசம்பு.
சபேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.
சபேடம் - விரித்தகரம், உள்ளங்கை.
சபை - சங்கம், சபைமண்டலம், திருச்சபை. அது சிற்சபை, கனகசபையென விரண்டு. அவை புண்டரீகவீடாகியஇருதயகமலத்தினதுகுறிப்பாக வுள்ள சிதம்பர ஸ்தலத்திலேயுள்ளன. அச்சிற் சபையிலுள்ள ஐந்து படிகளும் பஞ்சாக்ஷரத்தின் குறிப்பு. அதிலுள்ள இருபத்தெட்டு ஸ்தம்பங்களும் இருபத்தெட்டாகமங்களையுங் குறிக்கும். இத்தம்பத்தளம் பிரமபீடம், தொண்ணூற்றாறு கலாசுதியும் தொண்ணூற்றாறு தத்துவங்களின் பாவனை. இது விஷ்ணுபீடம் உருத்திரபீடத்துள்ள ஐந்து ஸ்தம்பங்களும்பஞ்சபூதங்களைக் காட்டுவன. ஈசுரபீடத்துத் தம்பமாறும் சாஸ்திரங்கள் ஆறையும் விளக்கும். சதாசிவபீடத்துத் தம்பம் நான்கும் வேதம் நான்கையும் குறித்துநிற்கும். திரை மகாமாயையின் குறிப்பு, தரிசனஸ்பரிசனவேதிகைகளிரண்டும் மந்திரஸ்தானங்கள். மகாப்பிரணவம் இரகசியமாக விருக்கின்றது. கைமரங்கள் அறுபத்து நான்கும், கலைஞானம் அறுபத்து நான்கையுங் குறிப்பன. பலகை யிருபத்து நான்கில் புவனங்கள் இருபத்தோராயிரத் தறுநூறு தாமிரவோடுகள் உச்சுவாக நிச்சுவாசங்கள். ஆணிகள் எழுபத்திராயிரமும் நரம்புரூபம் ஒன்பது கலச முடிகளும் நவசத்திகளது ரூபம். இனிச் சிவன் வெளிப்படப் பஞ்சகிருத்தியத்தின்பொருட்டு ஆனந்தத்தாண்ட

வஞ் செய்யும் கனகசபை திருவருள் வடிவினது. இதனிடத்துள்ள பதினெட்டு ஸ்தம்பமும் பதினெண்புராணங்களையுங் குறிக்கும். கலசமுடியொன்பதும் நவசத்திகளைக் குறிக்கும். இச்சபைகளைத் தேவசிருமாணமென்ப. இவற்றின் விரிவு மகாசைவ தந்திர முதலிய நூல்களிற் காணலாம், புலவர் கூட்டம்.

சபைச்சேகரத்தார் - சபையார்.

சபைநாயகன் – சங்கத்தலைவன்.

சபையார் – கூட்டத்தார், சங்கத்தார்.

சபையுள்ளார் – கூத்தாடிகட் குதவியாய்ப் படிப்போர்.

சபையேறுதல்-கூட்டத்தி லறியப்படுத

சபையேற்றுதல்–அரங்கேற்றுதல். [ல்.

சபைவண்மை } சபையதிகாரம்.
சபைவளமை

சபோசிதன் - பண்டிதன்.

சப்ஜா - செந்திருக்கம், விதை.

சப்தகுலாசலம் - சப்தகுலபர்வதங்கள், இவை மகேந்திரம், மலயம், சையம், சுகதிமந்தம், இருக்ஷபர்வதம், விந்தியம், பாரியாத்திரமென்பன, இவ்விதமன்றி வேறுவகையாகவுங் கூறுப.

சப்தசமுத்திரம்-எழுவகைச் சமுத்திரங்கள். அவை உவர்நீர்ச் சமுத்திரம், நன்னீர்ச் சமுத்திரம், பாற்சமுத்திரம், தயிர்ச்சமுத்திரம், நெய்ச்சமுத்திரம், கருப்பஞ்சாற்றுச்சமுத்திரம், தேன்சமுத்திர மென்பனவாம்.

சப்தசாரசுவதம் - ஒரு புண்ணியக்ஷேத்திரம். இது வசிஷ்டாதியர் செய்த யாகத்திலே சாசுவதிநதி சம்பிரபை கனகாக்ஷி, விசாலை, சுரதநவை, அமோகை, மாவா, சுவேணி, விமலோதகை என்னும் பெயர்களை யுடைய பெண்களாக வடிவங்கொண்டு இருஷிகளுக்கும் தேவர்களுக்கும் ஏவல் செய்து பேறு பெற்றது.

சப்ததீவுகள் ஏழுவித தீவுகள்;அவை ஜம்பு, பிலக்ஷ,குச, கிரௌஞ்ச, சாக சான்மல, புஷ்கரமென்பன, பிரியவிரதன் தன் புத்திரராகிய ஆக்கினித்தரனுக்குச் சம்பத்துவீபத்தையும், மேதாதிக்குப் பிலக்ஷத்து வீபத்தையும், வபுஷ் மந்தனுக்குச் சான்மலத்துவீபத்தையும், ஜியோதிஷ் மந்தனுக்குக் குசத்துவீபத்தையும், தியுதிமந்தனுக்குக் கிரௌஞ்சத்து வீபத்தையும், பவியனுக்கு சாகத்து வீபத்தையும், சவனனுக்குப் புஷ்கரத்துவீபத்தையும் கொடுத்து முடிசூட்டினன். இவர்களே சுவாயம்புவ மனுவந்தரத்திலே அவ்வுத் தீவுகளில் முதன் முதல் அரசு புரிந்தவர்கள். ஒவ்வொரு தீவும் ஒவ்வொருசமுத்திரத்தாற் சூழப்பட்டுள்ளன. இத்தீவுகள் ஏழும் காலாந்தரத்திலே பூர்வரூபம் திரிந்தன.

சப்தலோகம் – ஏழுவித உலோகங்கள்; அவை பூலோகம், புவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகமென்பன. இவ்வேழு மேலுலகங்கள். இவ்வேழுலோகத்துமுள்ள சீவர்கள் தத்தங்கர்மப் பயனாக அவ்வவ்வுலகத்தை யடைவார்கள், பூலோகத்தில் மனுஷரும், புவர்லோகத்தில் யக்ஷராக்ஷச கந்தருவ கின்னர கிம்புருஷர்களும், சுவர்க்கத்திலே தேவர்களும் வசிப்பர். அதல, விதல, சுதல தராதல, ரசாதல, மகாதல, பாதல மென்னும் ஏழும் கீழுலக மென்பனவாம்.

சப்தவிருஷிகள் – முனி சிரேஷ்டர்கள் எழுவர், அவர் மரீசி, அங்கிரசன், புலகன், வசிஷ்டன், அத்திரி, புலஸ்தியன், கிருதுஎன்போர். ஒருசாரார், கசியபன், அத்ரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கௌதமன், ஜமதக்கினி, வசிஷ்டன் என்போரையும் சப்தவிருஷிகளென்பர். சப்த விருஷிகளென்னும் பெயரால் ஒரு நக்ஷத்திர கணமுள்ளது. அக்கணத்தில் அகஸ்தியர் பெயரு மொன்றும். [றவன்.

சப்பங்கி – ஒருதேயம், ஒருமரம், வீரமற்

சப்பட்டை – தட்டையானது, சிறகு, தோட்பட்டை, பதர், மடையன்.

சப்பணங்கூட்டுதல் } அட்டணைக் காலிடுதல்.
சப்பணங்கோலுதல்

சப்பணம் – அட்டணைக்கால்.

சப்பரமஞ்சம் – சப்பிரமஞ்சம்.

சப்பரம் – ஒருவகைச் சித்திரவிருக்கை, யானைமேற் றவிசு.

சப்பல் - சப்பப்பட்டது, சப்புதல்.
சப்பனாத்தி - சமர்த்தற்றவன், பருத்த வுடலன்.
சப்பளிதல் - சழிதல்.
சப்பளியல் } சப்பையாய்ச் சழிந்திருப்பது.
சப்பளியன் }
சப்பன்னம் - ஐம்பத்தாறு.
சப்பாணி - கைகொட்டல், நடக்கக் கூடாதவன்.
சப்பாணிகொட்டுதல் - கால்மடித்திருத்தல், கைகொட்டல்.
சப்பாணிமாடன் - நொண்டிப்பிசாசம்.
சப்பாத்து - நாகதாளி, ஒருசெடி, ஒருதொடுதோல்.
சப்பி - சப்புகிறவன், சாவி.
சப்பியம் - சபைக்கேற்ற வார்த்தை.
சப்பியன் - சபைக்கேற்றவன்.
சப்பிரமஞ்சம் - அலங்கரித்த கட்டில், தோரணக்கட்டில்.
சப்பிரமை - வாஞ்சை.
சப்பிரம் - சப்பரம்.
சப்பிநேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
சப்புச்சப்பெனல் - ஒலிக்குறிப்பு.
சப்புச்சவர் - கழிகடை, கழிசிலம், சவர்கிலம்.
சப்புதல் - குதப்புதல், பல்லானருக்கல்.
சப்பெனல் - அசுவைக்குறிப்பு, ஒலிக்குறிப்பு, விரைவின்குறிப்பு.
சப்பை - ஆட்டின்முன்றொடை, சக்கு, தட்டை, வலியின்மை, விபசாரி.
சமகட்சி - சரிவந்தபக்கம்.
சமகம் - சமாதானம்.
சமகன் - சமாதானஞ்செய்வோன்.
சமகன்னி - பக்குவமான பெண்.
சமகாலம் - தற்சமயம்.
சமகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
சமகை - பூரணம்.
சமகோலம் - பாம்பு.
சமக்கிரம் - எல்லாம்.
சமக்கிராமம் - ஒத்தகிராமம், சமவருமான கிராமம்.
சமக்கிருதம்-சம்ஸ்கிருதம், ஆரியமொழி.
சமங்கை - ஆடுதின்னைப்பாலை, தொட்டால்வாடி, வறட்சுண்டி.
சமசக்கிரம் - சமரேகை.

சமசந்தி - இணக்கம்.
சமசந்திரன் - கிரகணமத்திய காலத்திக்குச் சந்திரபுடம்.
சமஜம் - வனம்.
சமசரோததாரணேசுவரம்-சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.
சமசனம் - அடக்குதல்.
சமசி - கவியரசு, பூரணம்.
சமசு - கலதக்கூட்டம்.
சமசை - கவியரசு, பூரணம்.
சமசோற்பேதம் - ஒருதீர்த்தம்.
சமஸ்காரம் - அறிந்ததை ஞாபகப்படுத்தல், கிலைபெறுதல், மந்திரத்தினலே சுத்தம்பண்ணுகிற கிரியை.
சமஸ்கிருதம் - ஆரியமொழி.
சமஞ்சனம் - தகுதி, நன்முறை.
சமடன் - ஒரு இருடி. இவர் தருமராசனோடு தீர்த்தயாத்திரை செய்தவர்.
சமட்சம் - சமூகம், சுருக்கம்.
சமட்டல் - காலாலேதுகைத்தல்.
சமஷ்டி - சமூகம், சுருக்கம்.
சமட்டி - எல்லாம்.
சமட்டியுருபம் - சூக்குமமாயடக்கிய ருபம்.
சமஸ்டிலை - பெருங்கரணை.
சமட்டிவிச்சாபுரம் - மதுரை.
சமணகன் - சமணன்.
சமணம் - புறச்சமயமாறினொன்று.
சமணர் - அமணர். இவர் அருகனைவழிபடுஞ் சமயத்தோர், ஆருகதர், இவர்கள் ஆன்மாவு மூலகமு மநாதி நித்தியமென்றும் உலகத்திற்குக் காரணராகிய ஒரு கடவுளில்லையென்றும், முற்றத்துறந்த ஜினனுதலே முத்தியென்றுங் கூறுபவர்கள். அருகன் சமணருக்கு ஆதி குருமூர்த்தி, மகாவீரன், பார்சுவன் முதலியோர் தீர்த்தங்காருட் பிரசித்தி பெற்றோர். இவருக்கு முன்னிருந்த தீர்த்தங்கரர் இருபதின் மேற்பட்டோர். மகாவீரரென்னுஞ் சமணாசாரியர் கௌதமபுத்தர் காலத்தவர். பார்சுவர் இரண்டாயிரத் தருநூறுவருஷங்களுக்கு முன்னுள்ளவர். இவர்களுக்கு முதனூல் நான்குமூலசூத்திரங்களும் நாற்பத்தைந்து ஆகமங்களுமாம், வழிநூல் கற்ப சூத்திரம். அது பத்திரவாணனுர்செய்தது. இச்சமயத்தோர்

மைசூர் கூச்சர முதலிய நாடுகளி லுளர். திருஞான சம்பந்தமூர்த்திநா யனார் நாளில் இச்சமய மிக்க பெருக்க முற்றிருந்தது.
சமணி - இலவமரம்.
சமண் - சமண்மதம்.
சமண்டலை - சவண்டலை.
சமண்மை - குறை. [தை.
சமதக்கினி - ஒரிருடி, பரசுராமன் தந்
சமதக்கினியேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.
சமதம் - பொறுமை.
சமதரிசனம் - அத்தாட்சி.
சமதரிசி - சமாதிமான்.
சமதலை - அடிமுன்றுளை, ஈருங்கடை.
சமதளம் - ஒத்ததரை, கூட்டம்.
சமதனம் - மருக்காறை, முள்ளம்பன்றி.
சமதன் - சங்காத்தி.
சமதாளம் - நவதாளத்தொன்று.
சமதி - யுந்தம்.
சமதிதப்பிரயோசனம் - பொதுநயம்.
சமதிதம் - ஐக்கம்.
சமதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனுள் ஒன்று.
சமதை - ஒப்பு, நான்கடியு மெழுத்துத் தொடுத்துவரும்பா.
சமத்தம் / சமஸ்தம் } ஆதாரம், எல்லை, சரி.
சமத்தவம் - நெடுநாட் கூடியிருத்தல்.
சமத்தன் - வல்லவன்.
சமத்தாவம் - யாகதோத்திரம்.
சமத்தானம் / சமஸ்தானம் } அரசசவை, நகரம், பிரதானவிடம்.
சமத்து - சமர்த், சாமர்த்தியம், வீரம்.
சமத்துக்காரம் - திராணி, சாமார்த்தியம்.
சமத்துவம் - சமநிலை, சமமானதத்துவம்.
சமநிலை - குணவலங்காரத்தொன்று, அது மூவினவெழுத்தும் விரவத் தொடுப்பது சமநிலை.
சமநிலைச்செய்யுள் - ஒருபிரபந்தம். அது மூவினவெழுத்தும்வரத்தொடுப்பது
சமநிலைவெண்பா - சவலைவெண்பா.
சமந்தகமணி - சூரியனால் சத்திராஜித்துவுக்குக் கொடுக்கப்பட்ட மணி.
சமந்தபஞ்சகம் - குருக்ஷேத்திரம். திரேதா துவாபரயுகசந்தியிலே பரசுராமர் கருவங்கொண்ட க்ஷத்திரியரையெல் லாங்கொன்று அவர்க ளிரத்தத்தை ஐந்து தடாகங்களில் நிறைத்து அதனாற் பிதிர் தர்ப்பணஞ் செய்தார். ஆதலின் அவ்விடம் ஆதியிற் சமந்த பஞ்சகமென வாயிற்று. அந்தத்தானம் பின்னர்க் கௌரவரும் பாண்டவரும் நின்று யுத்தஞ்செய்தமையாற் குருக்ஷேத்திரமெனப் பெயர் பெறுவதாயிற்று.
சமந்தபத்திரன் - புத்ததேவன்.
சமந்தம் - சமஸ்தம், பலவிதம்.
சமபதம் - இரண்டு காலையும் சமமாய் வைத்து நிற்றல்.
சமபந்தி - ஒத்தவர்களிருக்கும் போசன பந்தி, சரியிடம்.
சமபலம் - சரியொத்தபலன்.
சமபாகம் - சரிப்பங்கு.
சமபூமி - ஒப்பரவானநிலம், யுத்தகளம்.
சமபோகம் இருவருக்குமொத்தபோகம்
சமப்பால் - நெய்தநிலம், முல்லைநிலம்.
சமமுகம் - தலையசையாதிருத்தல்.
சமம் - அறுவகைச் சமாதிகளில் ஒன்று. அது அந்தக்கரணத்தைத் தண்டித்தல், இந்திரியநிவர்த்தி, உவமை, எல்லாம், ஒப்பம், சரி, தாளப்பிரமாணத் தொன்று. அது மூவகைத்து: ஞானுத் தானமுமொத்தது. நடு, நியாயம், பொறுமை, போர், மனோலயம், மோக்கம்.
சமயகருமம் - சமயசடங்கு.
சமயக்கட்டு - சமயமுறை.
சமயசாத்திரம் - சமயநூல்.
சமயதீட்சை - சைவதீட்சை வகையில் ஒன்று. அது சமயானுசரிப்பின் முதலுபதேசம்.
சமயத்தறுவாய் - உற்றசமயம்.
சமயநிலை - சமயவொழுங்கு.
சமயநூல் - சமயசாத்திரம்.
சமயபேதம் - காலவிகற்பம், மதவிகற்பம்.
சமயபேதி - புறச்சமயத்தான்.
சமயமானம் - சமயப்பற்று.
சமயம் - அடையாளம், உடம்படிக்கை, எல்லை, காலம், சமயமதம், தருணம், நியாயத்தீர்ப்பு, மார்க்கம்.
சமயம்பார்த்தல் - தருணம்பார்த்தல்.
சமயவாதி - மதானுசாரி.
சமயாசமயம் - காலாகாலம், சமயத்தறு
சமயாசாரம் - சமயவொழுக்கம். [வாய்.

சமயாதீதன் - சமயங்கடந்த கடவுள்.
சமயி - சமயவாதி.
சமயுத்தம் - ஒத்தபோர்.
சமயை - ஏற்றகாலம், சமீபம், நடு.
சமரகோலாகலன் - விக்கிரம கஞ்சுக பாண்டியன் மகன்.
சமரசம் - ஒன்றிப்பு, சமாதானம், தொகைநிலை, வித்தியாசமின்மை.
சமரசர் - ஒன்றிப்புடையோர்.
சமரதர் - ஒருவகைத் தேர்வீரர்.
சமரம் - யுத்தம், போர்.
சமரவி - கிரகண மத்திய காலத்துக்குச் சூரியபுடம்.
சமரன் - நீபன் சேஷ்டபுத்திரன். இவன் காம்பிலியதேசத் தரசனானவன். இவனுக்குப் பாரன், சுபாரன், சதசுவனென மூவர் புத்திரர்.
சமராதனை - பிராமண போஜனத்தாற் சாந்தி கழித்தல்.
சமராத்திரம்-கிரகவீதிவரியும் பூமியின் நடுரேகையு மொன்றிக்குமிடம்.
சமரி - தீர்க்கை, பாம்பு.
சமரிகம் - மலையகத்தி.
சமரேகை - மையவரி.
சமர் - போர், முட்பன்றி.
சமர்ச்சனம் - துடைத்தல்.
சமர்த்தகம் - உபகாரம்.
சமர்த்தம் - சரிநிலம்.
சமர்த்தனம் - சமப்படுத்தல், தியானம்.
சமர்த்தன் - சாமார்த்தியன், வல்லபன்.
சமர்த்தி - சமசி, சமர்த்துள்ளவன், சமுத்தி. [த்தி.
சமர்த்தித்தல் - பூரணப்படுத்தல்.
சமர்த்து - சமத்து, பலம், வீரம்.
சமர்ப்பகம், சமர்ப்பணம், சமர்ப்பனை } உயர்ந்தோர்க்குக் கொடுத்தல், கொடை.
சமர்ப்பிதம்-ஒப்புக்கொடுத்தல், பூரணம்.
சமர்ப்பித்தல் - உயர்ந்தோர்க்குக் கொடுத்தல், ஒப்புக்கொடுத்தல்.
சமர்ப்பிப்பு - உயர்ந்தோர்க்குக் கொடுக்குங் கொடை.
சமலம் - அழுக்கு, மும்மலம்.
சமலாம்பம் - பூசுதல்.
சமலை - அழுக்கு.
சமவணி - ஓரலங்காரம் (உ-ம்) தந்தையொக்குமகன்.
சமவற்சி - நமன்.
சமவாசம் - சகவாசம்.
சமவாசி - நடுத்தரம், பூரணம்.
சமவாதம் - சமாதானதருக்கம், தர்க்கம்.
சமவாயம் - கூட்டம், தற்கிழமை.
சமவிருஷ்டி, சமவிருட்டி } மத்திமமழை.
சமவுவமம் - சமவணி.
சமழ்த்தல்-தாழ்த்தல், நாணுதல், வருத்தம், வெட்கம்.
சமழ்ப்பு - நாணம், வருத்தம்.
சமழ்மை - தாழ்வு.
சமற்காரம், சமற்காரம் } அதிசயம், ஆடம்பரம், திருவிழா, நற்காட்சி.
சமற்கிருதம் - அதிசயப்படத்தக்கது.
சமற்கிருதி - நற்காட்சி.
சமற்சனம் - வணக்கம்.
சமற்பகம், சமற்பனை, சமர்பித்தல் } கொடுத்தல், செலுத்தல்.
சமர்பிப்பு - கொடை, செலுத்துகை.
சமனசுவசை - யமுனைநதி.
சமனம் - அடுதினனுப்பாலை, புழுக்கொல்லி, போசனம், வசம்பு.
சமனுதகம் - உவர்மண்.
சமனுர்த்தகம், சமனுர்த்தபதம் } ஒருபொருட்சொல்.
சமனிக்கை - சவனிக்கை.
சமனிசை - ஒரிசை. [ருந்து.
சமனியகரணி - இரணத்தழும்பாற்றும
சமனிலை - மூவினவெழுத்தும் விரவத்தொடுப்பது.
சமனை-சந்திரகலைபதினாறனுள் ஒன்று.
சமன் - ஒப்பு, காலன், சமம், தருமனுக்குச் சிரத்தையிடத்துப்பிறந்த மூத்தமகன், காமனும், ஹர்ஷனும் இவன் தம்பியர். சமபிரீதி இவன் மனைவி, துரியோதனன் றம்பியருள் ஒருவன், நடு, நமன்.
சமன்சங்கலிதம்-ஒருகணிதம். அது இரட்டைகிர யிலக்கங்களைக் கூட்டல்.
சமன்சமன்சங்கலிதம் - ஒருகணிதம்; அது இரட்டைத்தானத்திரட்டைகிரைகூட்டல்.
சமன்வியன்சங்கலிதம் - ஒருகணிதம்; அது இரட்டைத்தானத்தொற்றைகிரைகூட்டல். [பசு.
சமா-வருஷத்திற்கொரு கன்றுபோடும்

சமாகதம் - ஒன்றிப்பு, சமீபம்.
சமாகயம் - கோழிப்பந்தி.
சமாகாதம் - போர், வதை.
சமாகாரம் - எழுத்துப்புணர்ச்சி, கூட்டம், சொற்புணர்ச்சி.
சமாகிதம் - அங்கீகரிக்கப்பட்டது.
சமாகிருதி - அனேக விடங்களிலிருக்கும் அர்த்தத்தை யொன்றாய்ச் சேர்த்தல்.
சமாசம்-இலிங்கபாஷாணம், தொகைப்பட்டு நிற்பது.
சமாசாரம் - சுகசெய்தி, செய்தி, நன்னடை.
சமாஜிகர் - சபையி லிருப்பவர்.
சமாசினேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
சமாசோக்தி யலங்காரம் - சுருக்கச்சொல்லணி.
சமாச்சாரம்-சுகசெய்தி, செய்தி, நன்னடை.
சமாதானகரணி - காயத்தானெகிழ்ந்த வுறுப்புகளைக் கூட்டுமருந்து.
சமாதானம் - அறுவகைச் சமாதிகளுள் ஒன்று. அது உள்ளமானது வேதாந்த சிரவணார்த்தங்களைப் பிரியமாய்ச் சிந்திக்கும்படி யினிய தன்மையாகச் செய்தல், இணக்கணம், உபாதி நீக்கி யுள்ளொளிகருதல், முற்றத் துறந்திருத்தல்.
சமாதானவுருவகம் - யாதொன்று நீங்குசெயனு மத்தீங்கதிலுள்ள தன்றெனக் கூறுமுருவகம்.
சமாதானி - சமாதானமுடையோன்.
சமாதி - அட்டயோகத்தொன்று. அது இந்திரிய முதலிய தத்துவசேட்டைகட் கேதுவாய் யாக்கையுணின்றவற்றோடுகூடினு மவற்றிற் பற்றின்றி யிருக்கு மான்மாவாகித் தன்னைத் தான் காண்டல், அமைதி, ஓரலங்காரம். அது முக்கியப் பொருண்மேலேற்றிக் கூறுவது, சமப்படுத்தல், சாவு, பிரேதக்குழி.
சமாதிக்குழி - பிரேதக்குழி.
சமாதிசட்கசம்பத்தி-உபரதி, சமம், சமாதானம், சிரத்தை, தமம், திதீட்சை.
சமாதிபண்ணுதல் - அடக்கஞ்செய்தல், சமாதியிருத்தல், யோகாப்பியாசஞ்செய்தல்.
சமாதிமான் - தியானநிட்டைசெய்வோன்.
சமாதியலங்காரம் - எளிதின் முடிபணி.
சமாதியில்வைத்தல் - பிரேதமடக்கல்.
சமாதிவைத்தல் - யோகிக ளிருக்கு முறையாய்ப் பிரேதத்தைவைத்தல்.
சமாது - ஊமத்தை, சமாதி.
சமாபிரகாரம் - கூறியது கூறல்.
சமாப்தம், சமாப்தி - முடிவு, முற்று.
சமாயிதம் - சம்மதித்தல், முயல்வுறுந் தொழிற்பயன், பிறிதொன்றான் முடிந்ததாகக் கூறுமலங்காரம்.
சமாயுதம் - ஓரலங்காரம்.
சமாயோகம் - ஏது, ஐக்கம், கூட்டம்.
சமாராதனை - திருத்தி, பிராமணபோஜனம்.
சமார்ச்சனம் - ஆர்த்தல்.
சமாலங்காரம் - தகுதியணி.
சமாலம் - பீலிக்குஞ்சம்.
சமாலம்பநம், சமாலம்பம் - பூசுதல்.
சமாலி - பூஞ்செண்டு.
சமாலித்தல் - சமாளித்தல்.
சமாலுகம் - குறிஞ்சா.
சமாலேபனம் - மெழுகல்.
சமாவருத்தனம், சமாவருத்தனை - சமுசாரத்துக் குட்படுகை, வைதீககருமத்தொன்று.
சமாவிருத்தன்-பிரமசரிய முடித்தவன்.
சமாளம் - சந்தோஷம்.
சமாளித்தல் - சந்தோஷித்தல், சரிக்கட்டி நடத்துதல்.
சமாளிப்பு - சந்தோஷம், சரிக்கட்டி நடத்தல்.
சமானகட்சி - வாதிகளிருத்தபுறம்.
சமானகரணி - இரணத்தழும்பு தீர்க்கு மருந்து.
சமானஸ்தர் - சரிவந்தவர்கள்.
சமானம் - உவமை, சபம், சன்மார்க்கம்.
சமானாகிதம் - ஒப்பின்மை.
சமானன்-தசவாய்வில் ஒன்று. அதுகந்தாக்குழியிற் சந்திடைநிற்கு ம்வாயு.
சமானி - சரியொத்தவன்.
சமானித்தல் - ஒப்பாதல், ஒப்பிடுதல்.
சமானியம் - பொது.
சமானோதகர் - பிதிர்களுக்கு நீர்விடுதற்குரியோர்.
சமி-அருகன், சமியென்னேவல், தணக்குமரம், வன்னிமரம், வாழைமரம்.

சமிக்கை - சங்கேதப்பெயர், சமிக்கை, சிரணிக்கை.
சமிஞ்ஞாதேவி - பிரபாவதி, இவள் சூரியன் மனைவி.
சமிஞ்ஞை - குறி.
சமிட்சேபம் - சுருக்கம்.
சமிட்சேபித்தல் - சுருக்குதல்.
சமிதம் - அமைதி, தீ, போர்.
சமிதர் - பூதங்கள்.
சமிதன் - அக்கினி தேவன், ஆசை முதலியவற்றை யடக்கினவன். [பு.
சமிதாக்கினி - சமித்தினூலாகித்த நெருப்
சமிதி - உயுத்தம், சண்டை, வித்துவான்களின் சபை.
சமிதை - ஓமவிறகு. அவை அத்தி, அரசு, ஆல், இத்தி, கருங்காலி, நாயுருவி, பலாசு, மா, வன்னி என ஒன்பதுவிதம் கூடியன விறகு.
சமித்தம் - ஓமமண்டபம், தயை.
சமித்தல் - அடக்கல், ஏங்கிப் போதல், சகித்தல், சிரணித்தல், பதனழிதல்.
சமித்திராவருணீசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.
சமித்து - சமிதை, கஞ்சா.
சமிந்தனம் - விறகு.
சமிபாடு-சிரணிக்கும்நேரம்,சிரணித்தல்.
சமிப்பாகம் - கொன்றைமரம்.
சமிப்பு - சிரணிப்பு, பொறுத்தல்.
சமியம் - விசாரித்தல்.
சமியன் - அருகன்.
சமியாகம் - கொன்றை.
சமியாமை - அசிரணம், சகியாமை.
சமியை - நகத்தடி.
சமிரட்சணை - தற்காத்தல்.
சமிரம் - சிறுவன்னிமரம்.
சமிருடன் } நிறைந்த சம்பத்துடையவன்.
சமிருடி }
சமிருஷ்டம் - ஆய்ந்தது.
சமிர்த்து - ஓமவிறகு.
சமிலாகி - திப்பிலி.
சமீகம் - அம்பு, கோல், போர்.
சமீகரணம் - சமமாக செய்தல்.
சமீகன் - சிருங்கிமுனிவர்தந்தை, போஜவமிசத்தோரரசன்.
சமீகிரணம் - சமதை.
சமீசி - ஒப்பசரப்பெண்.
சமீசிநம் - உண்மை, உள்ளபடி.
சமீட்சணம் - ஆராய்வு.
சமீக்ஷியகாரி - விசாரியாமற் காரியஞ் செய்பவன்.
சமீபம் - அருகு, கிட்டுமானம்.
சமீபித்தல் - கிட்டுதல்.
சமீரணம்-எறிதல்,கிடாரைமரம்,வீசல்.
சமீரணன்-காற்று, வாயுதேவன், வாயுபுத்திரன்.
சமீரம் - காற்று, போர்.
சமீரன் - சமீரணன்.
சமீனம் - வருடாந்தம்.
சமீனிகை - ஆட்டைக்கற்று.
சமீனை - வருஷத்துக் கொரு கன்று போடும் பசு.
சமின் - நிலம், பூமி.
சமு - சமுகம், படை, படையிலோர் தொகை. அது எழுநூற்றிருபத்தொன்பது தேரும் அவ்வளவு யானையும் இரண்டாயிரத்து நூற்றெண்பத்தேழு குதிரையும் மூவாயிரத்து அறுநூற்றெண்பத்தைந்து காலாளுங் கொண்டது.
சமுகசேவை - சமுகஞ்சேவித்தல்.
சமுகத்தார் - சங்கத்தார்.
சமுகம் - கூட்டம், சந்நிதி, முன்னிலை.
சமுகவிலாசம் - சமுகத்திற்கூறு மோர் வகைப் புகழ்ச்சி.
சமுக்கா - காந்தப்பெட்டி, தூரதிருஷ்டிக்கண்ணாடி.
சமுக்காரம் - சடங்கு நிறைவேற்றம்.
சமுக்காளகோட்டுப்புலி - ஒருபுலி.
சமுக்காளம் - விரிப்பு, நூற்கம்பளம்.
சமுசயம் - அச்சம், சந்தேகம்.
சமுசாரக்கட்டு - சமுசாரமுறை.[வன்.
சமுசாரக்காரன் - இல்லறம் பொறுத்த
சமுசாரசன்னியாசம் - இல்லறத்தை விடுதல்.
சமுசாரபந்தம் - அபிமானம், குடித்தனமுறை.
சமுசாரப்பொறுப்பு - இல்லறச்சுமை.
சமுசாரமார்க்கம் - இல்லறநெறி.
சமுசாரம் - இல்வாழ்க்கை, உலகப்பற்று, குடும்பம், மனைவி.
சமுசாரவிருத்தி - சமுசாரவிர்த்திப்பு.
சமுசாரி - இல்லறச்சிரமத்துக்குட்பட்டனுள், கற்புடையாள்.
சமுசு - கலகக்கூட்டம்.

சமுஸ்காரம் - சடங்குநிறைவேற்றல், சமஸ்காரம்.
சமஸ்கிருதம் - சம்ஸ்கிருதம்.
சமுச்சயம் - கூட்டம், சந்தேகம், சிதறியதைக் கூட்டல்,
சமுச்சயவுவமை-இதனுனேயன்றி மற்றிதனுனுமொக்குமெனக்கூறுவது.
சமுச்சயாலங்காரம் - கூட்டவணி.
சமுச்சரணம் - பின்ளைப்பிறப்பு.
சமுச்சேபனம் - விரிவைக்குறக்கல்.
சமுடதன் - செருக்குமுள்ளவன், வினையமில்லாதவன்.
சமுதயம் - இலக்கிநம், கூட்டம், நாள், பிறப்பு, போர்.
சமுதாடு - ஓராயுதம்.
சமுதாயக்கிராமம் - பொதுக்கிராமம்.
சமுதாயம் - கூட்டம், சங்கம், பின்னணி, பொது, போர்.
சமுதாய்த்தல் - சமாதானப்படுத்தல், சமாளித்தல்.
சமுதாளி - ஒருவகைக் கத்தி.
சமுதிதம் } பொது.
சமுதீதம் }
சமுத்தானம்-செய்துமுற்றல்,வளர்ச்சி.
சமுத்தி - நிறைவு, பாடுபடும்படி எதிர்கொடுக்கு முன்னுறை வசனம்.
சமுத்திகட்டுதல் - பாட்டுக்கடி தொடுத்தல்.
சமுத்திரகபம் - கடல்நுரை.
சமுத்திரகாந்தை - நதி.
சமுத்திரகாமினி - சமுத்திர சங்கமநதி.
சமுத்திரகோஷம் - கடற்குமிறல்.
சமுத்திரகோஷ்டம் - கடலிறைச்சல்,
சமுத்திரசுண்டி - எசல். [கடனுரை.
சமுத்திரசோகி - வட்டத்திருப்பி.
சமுத்திரதயிதை - நதி. [ர்முன்.
சமுத்திரதோயம் - கடனீர், முடக்கொ
சமுத்திரநவநீதகம் } அமிர்தம், சந்திரன்.
சமுத்திரநவநீதம் }
சமுத்திரபகவான் - வருணன்.
சமுத்திரப்பச்சை - ஒருபூண்டு.
சமுத்திரப்பாலை - கடம்புமரம்.
சமுத்திரமேகலை - பூமி.
சமுத்திரம் - ஒரெண், கடல், படையினேர்தொகை. அது பிரளயம் மூன்று கொண்டது, பத்துலட்சக்கோடாகோடி, மிகுதி, முடக்கறுத்தான், செடி.

சமுத்திரயம் - கடலிலுண்டான பொருள்.
சமுத்திரயானம் - கடல்யாத்திரை, மரக்கலம்.
சமுத்திரராசன் - வருணன்.
சமுத்திரவருணச்சிலை - ஒருகல்.
சமுத்திரவன்னச்சிலை - ஒருபட்டு.
சமுத்திரவன்னி - வடவைத்தீ.
சமுத்திரவேலை - கடற்றிரை.
சமுத்திரன் - சகரன்.
சமுத்திராதேவி - வருணன்தேவி.
சமுத்திராந்தம் - சாதிக்காய், சிறுகாஞ்சொறி, பருத்திச்செடி.
சமுத்திராப்பச்சை - ஒருசெடி.
சமுத்திராப்பழம் - குந்தழங்காய், கொந்தனப்பழம்.
சமுத்திராம்பரை - பூமி.
சமுப்பவம் - தைவேளை.
சமுருதம் - அதிகம்.
சமுன் - சவண்டிலை.
சமுற்கம் - ஒரு மிறைக்கவி.
சமுற்பத்தி } பிறப்பு.
சமுற்பன்னம் }
சமுனேயம் - ஈரம்.
சமுன்னதி - அகந்தை.
சமு - சமுகம்.
சமூகம் - கூட்டம், சடை, முன்னிலை.
சமூகனி - துடைப்பம்.
சமூசரன் - படைவீரன்.
சமூபதி - சேனுதிபதி.
சமூர்ச்சனம் - பரம்புதல். [ருக.
சமூலம் - அனைத்தும்,வேர் முதலிலையீ
சமேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுள் ஒன்று.
சமேதம் - கூடியிருத்தல்.
சமேதர் - கூடியொன்று யிருப்பவர்.
சமை - அமாவாசி,சமையென்னேவல், சேர்த்தல், படை, பொறுமை, வருடம்.
சமைகடை - ஈறு. [டம்.
சமைக்கிறவன் - சிருஷ்டிகன், பாகஞ்செய்கிறவன்.
சமைதலை } புடவையில் நெய்துமுடிந்த தலைப்பு.
சமைதலைப்பு }
சமைதல் - இருதுவாதல், உண்டு பண்ணப்படல், எத்தனமாதல், ஒழியல், பாகமாதல்.
சமைதார் - பன்னிரண்டுபேடைச் சனத்திக்குத் தலைவன்,

சமைத்தல் - உணவுசமைத்தல், உண்டாக்கல், ஒழிவித்தல்.
சமைந்தவன் - பக்குவமானவன்.
சமையம் - சமயம், காலம்.
சமையல் - சமைக்கப்படுதல், செய்கை.
சமையல்வீடு - அடுக்களை.
சமையற்காரன்-மடைத்தொழிலாளன்.
சமோதிதம் - பொதுவானது.
சம் - அழகு, அன்பு, கலக்கம், கூட, சீக்கிரம், சுகம்,சுத்தம்,நன்மை, பிறப்பு, பூரணம், வெற்றி.
சம்ஹதாசுவன் - பரிகிஞசுவன்.
சம்ஹாரதி - சுமாலிபுத்திரன்.
சம்ஹலாதன் - பிரகலாதன் தம்பி.
சம்சப்தகர்கள் - திரிசர்த்தாதீசுரனாகிய சசர்மன்தம்பியர். சத்தியரதன், சத்தியசேனன், சத்தியகர்மன், சத்தியவர்மன் முதலியோர்.
சம்சயம் - சந்தேகம்.
சம்சிருஷ்டியலங்காரம்-சேர்வையணி.
சம்சிருதன் - மிதிலைவமிசத் தரசரில் ஒருவன்.
சம்ஸ்காரம்-அநுபவத்தின் காரியமாயும் நினைப்பிற் கேதுவாயு மிருப்பது.
சம்ஸ்கிருதம்-சுத்திபண்ணப்பட்ட பூரணபாஷை என்பது இதன் தாத்பரியம், தேவபாஷை, வடமொழி, ஆரியம், ஆதிபாஷை, கீர்வாணம் என்பன இதன் பரியாயப்பெயர்கள்.
சம்க்ஷேபம் - சஞ்சேபம்.
சம்பகம் - சண்பகம், செண்பகம்.
சம்பகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுள் ஒன்று.
சம்பங்கி - சாலங்கபாஷாணம், செண்பகம், வாசனைத்திரவியம். [லம்.
சம்பங்கியெண்ணெய் - வாசனைத் தைலம்.
சம்பங்கூடு } சம்பம் புல்லாற்செய்
சம்பங்கூடை } தகூடு.
சம்பங்கோரை - ஒருவிதப்புல்.
சம்பங்கோழி - ஒருவிதக்கோழி.
சம்படம் - சீலை, சோம்பல்.
சம்பதி - பாக்கியம்.
சம்பத்தி - சம்பத்து.
சம்பத்து-செல்வம்,தாளபாடம். [ன்று.
சம்பத்துவேட்டம் - பஞ்சதாளத்தொன்று.
சம்பந்தக்குடியார் - சம்பந்தங் கலந்தவர்கள்.
சம்பந்தங் கலத்தல் - விவாக வழியாற் கலத்தல்.
சம்பந்தசரணாலயர் - கந்தபுராணச் சுருக்கம் என்னும் தமிழ் நூலாசிரியர், அடை சொல்லினால் வீணாக அலங்கரித்தலின்றி எவ்விஷயத்தையுஞ் சுருக்கி நயம்பெறப் பாடுஞ் சக்தி பெரிது முடையவர் என்பது கந்தபுராணச் சுருக்கத்தால் நன்கு புலப்படும். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது அடித்தொண்டர்களது பரம்பரையிலுள்ளவர், இவர்காலம் சலி 1656.
சம்பந்தப்பொருள் - ஆறும் வேற்றுமைப் பொருள்.
சம்பந்தமூர்த்தி - சண்பையர்கோன்.
சம்பந்தம் - இணக்கம், விவாகம். [தல்.
சம்பந்தம்பண்ணுதல் - விவாகஞ்செய்
சம்பந்தர் - சமயாசாரியருள் ஒருவர். இவர் சீகாழியிலே பிராமண குலத்திலே சிவபாத விருதயருக்குப் பகவதியாரிடத்திலே புத்திரராக அவதரித்தவர். மூன்றாண்டு கிரம்பியபோது உமாதேவியாரால்ஞானப்பாலூட்டப்பட்டவர். அன்றுமுதல் வேதத்துண்மைப் பொருளை யெல்லாம் திருவாய் மலர்ந்தருளும் பொருட்டு அற்புதமயமாகிய தேவாரங்களைப் பாடத் தொடங்கினவர். இவர்காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதாக நிச்சயிக்கப்படும்.
சம்பந்தவெதிரேகம் - இணக்கம், எதிர்.
சம்பந்தி - ஒற்றுமையானவன், மாப்பிள்ளை பெண்பிள்ளையின் பிதா.
சம்பந்தித்தல் - கலத்தல், சம்பந்தம் பண்ணல்.
சம்பபேதி - தேவேந்திரன்.
சம்பம் - அங்கதேயம், இடி, இரண்டாமுழவு, எலுமிச்சை, தண்ணீர், மரவயிரம், மேட்டிமை, வச்சிராயுதம், வயிரமணி.
சம்பல் - ஒருவகைப்புல்.
சமாருதனன் - காமன்.
சம்பரம் - எண்காற்புள், சீலை, செல்வம், நீர் வரம்பு.
சம்பரன் - ஓரசுரன். இவன் கிருஷ்ணனுக்கு ருக்குமணியிடத்துப் பிரத்தியு

மனன் பிறந்தவுடனே அச்சிசுவைத் திருடிப்போய்ச் சமுத்திரத்திலிட்டவன். இட்டவுடனே அச்சிசுவை ஒரு மகரமெடுத்து விழுங்கியது. அம்மகரம் சில தினத்திலே ஒரு வலைஞன் கையி லகப்பட்டது. அம்மகரத்தை வலைஞன் கொண்டுபோய்ச் சம்பரனிடம் கொடுக்க அவனதை யேற்றுத் தன் மனைவி மாயாவதியிடங் கொடுத்தான். அவள் அதனைக் கறி செய்யுமாறு வகிர்ந்தபோது அதிரூபமுடைய ஒரு சிசு அதனுள்ளேயிருப்பக்கண்டெடுத்து வளர்த்தாள். வளர்த்தபின்னர்ச் சம்பரன்தான் தன்னைக் கடலிலிட்டவனென வுணர்ந்து அவனைக் கொன்று மாயாவதியோடு தந்தையோடு சேர்ந்தான். பிரத்தியுமனன் மன்மத அம்சமாதலின் மன்மதனுக்கு மிவனுக்கும் சம்பராரி யென்னும் பெயருண்டாவதாயிற்று.

சம்பராயகம் } யுத்தம்.
சம்பராயிகம் }

சம்பராரி - இந்திரன், காமன்.

சம்பரி - நேர்வளம்.

சம்பவம் - எலுமிச்சை.

சம்பலவனம் - இருந்தது.

சம்பவப்பிரமாணம்-ஒரளவை. அது ஒரு கல் இரும்பையீர்க்குமென்றுழி அது காந்தமெனக்கோடல்.

சம்பகம் - அழிவு, இணக்கம், ஒன்றின் காரணம், ஒரளவை, கலப்பு, சம்பவிப்பு, பிறப்பு.

சம்பவாசுவன் - பரிஇணைசுவன்.

சம்பவித்தல் - நடந்தேறுதல்.

சம்பளம் - எலுமிச்சை, கரை, கஞ்சியம், கூன், செம்மறிக்கடா, பொருமை, வழிச்சேறற்கு வேண்டும்பொருள், வழியுணவு.

சம்பளி - அடப்பை, சாமான்பை.

சம்பற்கம் - கூட்டரவு.

சம்பற்கார்த்தம்-இராகுதேகஞ் சசிதேகமிவற்றின்சேர்கை.

சம்பன் - அரிதன்புத்திரன், சுதேவன் தந்தை, புருதலாக்ஷன் புத்திரன். இவன் பம்பாநகரத்தைகிருமித்தவன்.

சம்பன்னகாணி-இரணந்தீர்க்குமருந்து

சம்பன்னகிரகஸ்தன்-பேர்பெற்றவன்.

சம்பன்னம் - குறைவில்லாமை, பாக்கியம்.

சம்பன்னன் - நிறையுள்ளவன்.

சம்பா - ஒருவகைநெல், ஒருவிளையாட்டு, நால் விரலளவை.

சம்பாகம் - நன்றாய்ச்சமைத்தது, நாடு.

சம்பாகிருதம் - இரண்டுசாலுழுத பூமி.

சம்பாஷணம் }
சம்பாஷணை } கூடிப்பேசல்.
சம்பாடணை }
சம்பாஷித்தல் }

சம்பாதனை - தேட்டம்.

சம்பாதி - அருணன் மகன், சம்பாதியென்னேவல், மாலிபுத்திரன், விபீஷணன் மந்திரி.

சம்பாதித்தம் - சம்பாதனை.

சம்பாதித்தல் - தேடல்.

சம்பாதிபன் - கன்னன்.

சம்பாதியம் - தேட்டம்.

சம்பாத்தியம் ஒன்றை முடித்தல், தேட்டம்.

சம்பாநகரம் - அங்கதேசத்தரசனாகிய சம்பனால்நிருமிக்கப்பட்ட அங்கதேசராஜதானி.

சம்பாரமிடுதல் - சம்பாரம் போடல்.

சம்பாரம் - கைமரந்தாங்கி, சாமான்.

சம்பாரி - அக்கினி, இந்திரன்.

சம்பார்த்தனை - சம்பாதனை.

சம்பாலம் - ஆட்டுக்கடா.

சம்பால் - ஒருவகைப் பச்சடி.

சம்பாவனம் - சங்கை, மதிப்பு, வெகுமானம்.

சம்பாவனாலங்காரம் - உய்த்துணர்வணி.

சம்பாவனை - சங்கை, மதிப்பு, வெகுமா[னம்.

சம்பாவிதம்-சம்பவிக்கக்கூடியது.

சம்பாளம் - சேறு.

சம்பானோட்டி - படகோட்டுவோன்.

சம்பான் - படகு.

சம்பான்காரர் - படகுகாரர்.

சம்பிரகாசம் - மகிழ்ச்சிநகை.

சம்பிரகாரம் - யுத்தம்.

சம்பிரசாதம் - நம்பிக்கை.

சம்பிரதம்-கலம்பகவுறுப்பினுளொன்று.

சம்பிரதாயம் - உபாயம், குலாசாரம், சாதுரியம், சாமர்த்தியம், பாரம்பரியவாக்கு, விசித்திரம்.

சம்பிரதாயவிளக்கம் - ஒருநூல்.

சம்பரதாரணை - தீர்ப்பு.
சம்பிரதானம்-நான்கனுருபு, வெகுமதி
சம்பிரதி - ஒரு பிரதான வெழுத்துக் கணக்கன்.
சம்பிரமம் - இடம்பம், கலியாணம், சந்தோஷம், செல்விக்கை, தீவிரம், பறங்கிப்பாஷாணம்.
சம்பிரம் - உடலசைத்தல், எலுமிச்சை செல்விக்கை.
சம்பிரீதி - சமன்பாரி.
சம்பிருதி - சம்பிரதி.
சம்பிரேட்சியம் - ஆராய்ந்தறிந்தது.
சம்பிளி - சம்பளி.
சம்பீரம் - எலுமிச்சை.
சம்பு-அருகன், ஆதித்தன், எலுமிச்சை, ஒருதீவு, ஒருநதி, ஒருபுல், கடவுள், சிவன், சீர்பந்தபாஷாணம், தட்டை, திருவன்மனைவி, நரி, நாவல்மரம், பிதா, பிரமன், புத்தன், விட்டுணு.
சம்புகம் - சம்பூகம், வருணன்.
சம்புகா - நத்தையோடு.
சம்புகாவர்த்தபசந்தரவிரணம் - ஒருவகை விரணநோய்; அது திரிதோஷத்தாற் பிறந்து ஆசனஸ்தானத்தில் நத்தையோட்டுச் சுழியைப் போல் துவாரங்களை யுண்டாக்குவது. அப்போது நடக்கில் அவ்விரண மறுபடுவதுபோலிருக்கும்.
சம்புகேசுவரர் - திருவானைக்காவிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
சம்புகேச்சுவரம் - திருவானைக்கா.
சம்புச்சயனம் - ஆலமரம், பாம்பு.
சம்புடகம் - சிமிழ்.
சம்புடம் - செப்பு.
சம்புத்தி - அழைத்தல், நற்புத்தி.
சம்புத்தீவு - சத்ததீவுகளில் ஒன்று; அது நாவலந்தீவு.
சம்புநாவல் - ஒருநாவல்.
சம்புரோட்சணம் } ஆலயப் பிரதிஷ்
சம்புரோட்சணை } டை.
சம்புல்லம் - மலர்ந்த புஷ்பத்தையுடைய மரம்.
சம்புனம் - அல்லீசம்.
சம்பூ - நாவற்பழம்.
சம்பூகசிரிஷயாதம்-ஒருவகைவாதநோய்; அது வெகு சீதளகாலத்திற்சிலேட்டுமவஸ்துக்கள், பிண்ணாக்கு, வாயுவுள்ள வற்றல், முதலியவைகளைத் தனித்தனியாவது கலந்தாவது புசித்தாலும், அதிகநடை, பகல்நித்திரை, மிகு மைதுனம் முதலியவைகளாலும் பிறந்து முழங்கால்களின் கீல்களில் தங்குவது. அதனால் முழங்காலில் வீக்கம், தடிப்பு, திமிர், நோவு, குத்து, மலபந்தம், நித்திரையின்னுமிக்குணங்க ளுண்டாகும்.
சம்பூகம் - சங்கு, நத்தை, நரி, நாவல்.
சம்பூகை - கிளிஞ்சில்.
சம்பூதம் - பிறப்பு. [ப்பு.
சம்பூதி - சுமனசன், திருதன்வன், பிற
சம்பூயகாரி - உடன்வேலையாள்.
சம்பூரணம் - திருத்தி, நிறைவு, போதுமான அளவு.
சம்பூலமாளிகை - புதுமணப் பெண்ணுக்கும் மணவாளனுக்கும் பெண்ணின் தோழிக ளெழுதும் விநோதவெழுத்து.
சம்பேசன் - கன்னன்.
சம்பேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுள் ஒன்று.
சம்பேதம் - யாற்றுப்பொருத்து.
சம்பை - இளைத்தது, ஒரிராகம், ஒருநகரம், சத்ததாளத்தொன்று, சம்பக்கோரை, செழிப்பு, மின்னல், மீன்பொது.
சம்போகம் - அனுபவம், புணர்ச்சி.
சம்போக்கு - கப்பற்கூட்டம்.
சம்போதனை - விளிவேற்றுமை.
சம்மட்டி - ஒருபூடு, குதிரையோட்டுங்கருவியில் ஒன்று, கூடம்.
சம்மணம் - அட்டணைக்கால்.
சம்மதம் - அங்கீகாரம், இணக்கம், உடன்பாடு, உத்தரவு, கோட்பாடு.
சம்மதி - சம்மதம், சம்மதியென்னே
சம்மதித்தல் - இணங்குதல். [வல்.
சம்மந்தம் - சம்பந்தம்.
சம்பந்தவாட்டி - குமாரன் குமாரத்திகளுக்குக் கலியாண முடித்துச் சம்பந்தஞ் செய்தவள்.
சம்மனசு - தேவதூதன், நன்மனசு.
சம்மாணம் } அட்டணைக்கால்.
சம்மாணி }
சம்மாதம் - மாற்றுவரி கொடுத்தல்.
சம்மாதரன்-கற்புடையாள் புத்திரன்.

சம்மாரம் - அழிவு.
சம்மார்ஜநீ - துடைப்பம்.
சம்மார்ச்சனம் - மூடல்.
சம்மானம் - உபசரிப்பு, சருவமானியம், சிறுதோணி.
சம்மான் - சிறுதோணி.
சம்மியஞானம் - பேரறிவு.
சம்மியத்துவம் - சம்பூரணம்.
சம்மியம் - கூத்தினோர்விகற்பம்.
சம்மியன் - யாகத்திலேமுதல் அவிர்ப்பாகத்துக் குரியவனாகிய அக்கினி; இவன்பிருகஸ்பதிபுத்திரன். இவன் பாரி சத்தியை.
சம்மியாகம் - கொன்றை.
சம்மேளனம் - கண்ணாடி.
சம்மேளனம் - கூடுதல்.
சம்மோகம் - பேராசை.
சம்மோதிதம் - தகுதியானகூலி.
சம்யாத்திரிகன் - ஓடவியாபாரி, கப்பல்வியாபாரி.
சம்யமனி - யமன் ராஜதானி.
சம்யாதி - நகுஷன் புத்திரன், யயாதி தம்பி, சரியாதி.
சம்யாமம் - விசாரித்தல்.
சம்யானம் - மத்தியஞ் செய்தல்.
சம்யுக்தாக்ஷரம்-இணைந்துவரு மெழுத்து.
சம்யோகம் - புணர்ச்சி.
சம்ரட்சணை-சமிரட்சணை,பரிபாலனம்
சம்வருணன் - அஜமீடன் புத்திரருள் ஒருவன்; இவன் சூரியன் மகளாகிய தபதியை மணம் புரிந்து குருவைப் பெற்றவன், இருக்ஷன் புத்திரன்.
சம்வர்த்தம் - சத்தமேகத்தொன்று. அது மணி பொழிவது, தருமநூல் பதினெட்டில் ஒன்று.
சம்வர்த்தன் - அங்கிரசன் புத்திரன். பிருகஸ்பதி தம்பி. இவன் உதத்தியனெனவும் படுவன்.
சம்வற்சரம் - வருடம்.
சம்வல்லனம் - வசீகரித்தல்.
சம்வாகம் - [illegible]ர், மலையூர்.
சம்வாதம் - தர்க்கம்.
சம்வாயிகாரணம் - முதற்காரணம்.
சம்வியூடம்-ஒருவகைநோய்; அது ஆண்குறியின்மீது புன்னாக்குழலைப்பிடிக்கும் விரல்களைப்போற் குறுக்காகத் தடித்த விரணத்தைப் புண்டாக்குவது.
சம்விருதாசியவாதம் - ஒருவகை வாதநோய். அது மச்சமாமிசம், மந்தாரசம், அகாலபோசனம், தயிர், அதிகலவணம், சதா நித்திரை, வெகு நடையாகிய இவைகளினாற் பிறந்து விவுர்தாசியவாதம்போல் நரம்புகளிலனுசரித்துக் கபத்திற்கூடித் தன்பத்தை விளைப்பது. அதனால் மூடினவாயைத் திறக்கக் கூடாமலும், அவ்வாயில் மரத்தலும், தடித்தலும், நோவுமுண்டாகும்.
சம்வேதம் - அனுபவித்தல்.
சய-இருபத்தெட்டாவது வருஷம்போற்றி.
சயகண்டை - பரந்தவட்டிகை.
சயகம் - பூவரும்பு.
சயசய - போற்றி போற்றி.
சயதாளம் - நவதாளத்தொன்று.
சயத்தம்பம் - வெற்றித்தம்பம்.
சயத்திரதன் - ஓரரசன்.
சயந்தமாலை - ஒரு சோதிட நூல்.
சயந்தம் - ஒரு நாடகத்தமிழ்நூல். இது அடியார்க்கு நல்லார் காலத்தி லிறந்தொழிந்தது.
சயந்தனம் - தேர்.
சயந்தன் - இந்திர குமாரன், சந்திரன், சிவன், துரியோதனன் தம்பி.
சயந்தி-இந்திரன்மகள்,கருஞ்செம்பை, அகிற்கொடி, துர்க்கை, வாதமடக்கி.
சயந்தேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
சயபத்திரம் - வெற்றிச்சீட்டு.
சயபாலன்-அரசன்,திருமால், பிரமன்.
சயபானம் - தேர்வானம்.
சயபித்தம் - கயநோய்.
சயமகள் - துர்க்கை, மிதுனவிராசி, விந்தை.
சயமங்களம் - இராசயானை.
சயமடந்தை - துர்க்கை, இலட்சுமி.
சயமரம் - சுவயம்வரம்.
சயம் - ஆம்பல், ஒருவியாதி, கூட்டம், கெடுதல், கை, சருக்கரை, சாரம், சிதைவு, சூரியன், நட்டம், படுக்கை, மாலை, வெற்றி.
சயம்பு - அருகன், சிவன், சயம்பு.
சயம்புனைதல் - வெற்றிபுனைதல்.

சயரோகம் - ஒருவியாதி. [றை.
சயனகிருகம் - பள்ளியறை, படுக்கைய
சயனம்-நித்திரை, படுக்கை, புணர்ச்சி.
சயனார்த்தம் - படுக்கை. [வல்.
சயனி-சயனிப்போர்,சயனியென்னே
சயனித்தல் - நித்திரைசெய்தல், படுத்தல், புணர்தல்.
சயனிப்பு - நித்திரை, புணர்ச்சி.
சயன் - சயந்தன்.
சயா - கடுக்காய், வாதமடக்கி.
சயாபாகம் - வெற்றி.
சயாலு - நித்திரைச்சோம்பன்.
சயாளு - நித்திரைசெய்யுஞ் சுபாவமுடையவன்.
சயிகை - சைகை.
சயிக்கச்சீலை - மெல்லியபுடவை.
சயிக்கம் - மென்மை.
சயிக்கா - அரசமரம்.
சயிக்கினை } சாடை.
சயிக்கை
சயிதன் - தூங்குவோன்.
சயித்தகம் - சிற்பநூன் முப்பத்திரண்டில் ஒன்று.
சயித்தல் - சகித்தல், வெல்லுதல்.
சயித்தி - அரசமரம்.
சயித்தியம் - குளிர்.
சயித்திரம் - சித்திரைமாதம்.
சயித்திரியம் - அனுபவசித்திரம், நாணவிக்கை, மாய்கை.
சயிந்தலவணம் - இந்துப்பு.
சயிந்தவம் - உப்பு,சைந்தவம்,குதிரை.
சயிந்தவி - ஓரிராகம்.
சயிந்தனம் - இந்துப்பு.
சயிப்பு - பொறுமை, வெற்றி.
சயிரேகம் - மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம்.
சயிலங்கமலை-இருவேர், வெட்டிவேர்.
சயிலம் - சைலம்.
சயினி - திப்புலி.
சயு - பெரும்பாம்பு.
சயை - சந்திரன் மூன்றும் எட்டாம் பதின்மூன்றும்பக்கங்கள், பார்ப்பதி.
சயோத்தியம் - சுகம், நண்பு.
சய்யோகம் - சையோகம்; புணர்ச்சி.
சரகம் - தேசப்பிரிவு, தேனீ, வண்டு.
சரகாண்டபாஷாணம் - பாஷாணமுப்பத்திரண்டில் ஒன்று.
சரகாண்டம் - அம்புக்கூடு, ஒருபாஷாணம்.
சரகுண்ணி - ஒருவகைச்செந்து. இது கடித்தால் வீக்கமுண்டாகும்.
சரகூடம் - அத்திரத்தாற் செறுக்கும் பின்னற்செறிவு.
சரக்கு-கறிச்சரக்கு,சாராயம்,பொருள், மருந்துச்சரக்கு,வியாபாரப்பொருள்.
சரக்குச்சுண்ணம் - சவ்வீரம்.
சரக்குப்புரக்கு - ஒலிக்குறிப்பு,கோலாகலம்.
சரக்கொன்றை - ஒருகொன்றை.
சரங்கட்டல் - தனித்தனிப் பூ வா ன் மாலை கட்டல்.
சரங்கம் - சாரங்கபாஷாணம், பறவை.
சரசபிகாரோகம் - ஒருவகை நோய். அது சிலேட்டுமத்தினா லாண்குறியினுள்ளிலாவது வெளியிலாவது கடுகைப்போல அனேகக் கொப்பளங்களை உண்டாக்குவது.
சரபிகைரோகம் - ஒருவகைநோய்.
சரசம்-இனியகுணம், தடாகம், தேக்குமரம், பரிகாசம், வெண்ணெய்.
சரசரப்பு - சரசரத்தல், முரமுரப்பு.
சரசரெனல் - ஈரடுக் கொலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சரசவித்தை - இன்பசேட்டைப்பயிற்சி, பரிகாசம்.
சரசன் - மகன், குமரன்.
சரசாங்கி - ஒருநாடகம், இருபத்தேழாவது மேளகர்த்தா.
சரசாத்திரம் - சு வா ச க் கு றி அறியுமோர் சாத்திரம்.
சரசி - இனியகுணி, பரிகாசக்காரன்.
சரசிஜம் - தாமரை.
சரசித்தல் - சரசம்பண்ணுதல்.
சரசீருகம் - தாமரை.
சரசு - குளம்.
சரசுவதி-அக்கினிசாரன்பாரி,ஒருநதி,கன்னிகை, குணவ,திபிரமன்றேவி,மனோ
சரசுவதிநெய் - ஒருமருந்து. [சிலை.
சரசுவதிபீடம் - சங்கரர்ஸ்தாபித்தஒரு பிரதான கல்விச்சங்க வாகனம்.
சரசுவதிமாலை - ஒருநூல்.
சரசுவதியாறு - ஒருயாறு.
சரச்வதிவாக்கு - கற்றறியாதவருங் கல்வி வல்லபம்.

சரசுவதேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
சரச்சிறு - குறிஞ்சா.
சரஷபம் - கடுகு.
சரடம் - ஓந்தி, கடமை, குரூரம், பல்லி, பழையது.
சரடு-கிறைபடவிருப்பது,நூல்,பொன் முதலியவற்றாற்செய்யுங் கொடி.
சரட்டுத்தாலி - கொடித்தாலி.
சரணக்கிரந்தி - கணுக்கால்.
சரணம்-அபயம், அரசு, கால், சிந்துமுதலிய செய்யுளடி, பாதம், புகலிடம், பெருங்காயம், மயில், மயிற்றோகை, மருதகிலத்தூர், வணக்கம், வீடு.
சரணம்புகுதல் - அடைக்கலம்புகுதல்.
சரணவாதம் - ஒருநோய்.
சரணாகதம் } அடைக்கலம்.
சரணாகதி }
சரணாபரணம் - காலணி.
சரணாமிருதம் - பாதப்பிரட்சாளனநீர்.
சரணாயுதம் - கோழி.
சரணாரவிந்தம் - பாதபங்கயம்.
சரணார்த்தி - அடைக்கலந்தேடல்.
சரணி - பாதை, கால்வழி.
சரணியம் - அடைக்கலம், வீடு.
சரணோதகம் - சரணாமிருதம்.
சரண் - அடைக்கலம், சால், புகல்.
சரண்டம்-பல்லி,பழையது,புட்பொது
சரண்புகல் - அடைக்கலம்புகல்.
சரதம் - சத்தியம், உண்மை.
சரதலம் - இரககதி, யறிகைக்குறி.
சரதிகம் - கோடைகாலம்.
சரத்துவந்தன் - சதானந்தன் புத்திரனாகிய சத்தியதிருதி.
சரநட்சத்திரம் - இயங்குநட்சத்திரம்.
சரநூல் - சராசாத்திரம்.
சரந்தம் - எருது.
சரபங்கன் - தண்டகாரணியத் திருந்த ஒரு மகா விருடி; இந்திராதி தேவர்கள் தாமே தண்டகாரணியத்துக்கு வந் துபசரித்துச் சுவர்க்கத்துக்குக் கொண்டுபோகப்பட்டவர். ஸ்ரீராமர் தண்டகாரணியஞ் சென்றபோது இவரைத் தரிசித்தனர்.
சரபடி - வமிசம், வழி, வாடிக்கை.
சரபத்திரம் - அம்புக்குப்பி.
சரபம் - எண்காற்புள், ஒட்டகம்,குறும்பாடு, தத்துக்கிளி, யானைக்கன்று, வரையாடு.
சரபலம் - அம்பலகு.
சரபன் - சுக்கிரிவன் சேனாநாயகருள் ஒருவன். இவ்வாநரன் பர்ச்சன்னியனுக்குப் பிறந்தவன்.
சரபாதஸ்தானம் - எய்த அம்பு விழுந் தூரம்.
சரபுங்கை - அம்பிறகு.
சரபோஜி - தஞ்சாவூரிலே அரசுசெய் திருந்த மகாராஷ்டிர அரசருள் ஒருவன்.
சரப்பணி - ஓராபரணம்.
சரப்பம் - மயிர்.
சரப்பளி - ஓராபரணம்.
சரமகவி-இறந்தவர் பேரிற் பாடுங்கவி.
சரமசரம் - சராசரம்.
சரமணி - அரைப்பட்டிகை.
சரமண் - சுதைமண்.
சரமண்டலம் - ஒருவாச்சியம்.
சரமம் - முடிவு.
சரமாதம்-ஆடி, ஐப்பசி, சித்திரை, தை.
சரணமாலை - தோரணமாலை, பூமாலை.
சரமுல்லை - பல்லு.
சரமை - பெண்ணாய்.
சரமோடல் - மூச்சோடல்.
சரமை - விபீஷணன்பாரி, இவள்சைலூஷன் என்னும்கந்தருவன்புத்திரி, இவள் மகள் திரிசடை, இச்சரமையே ராவண ராமயுத்தத்திலேநிகழ்ந் தவைகளையெல்லாம் அவ்வப்போது சீதைக்கு அறிவுறுத்தி வந்தவள்.
சரம் - அசைவு, அம்பு, இருவகைத் தோற்றத்தினொன்று. அது மூச்சுள்ளது; ஐந்து, கொறுக்கை, சரராசி, சுவாசநடை, சுவாசம், திப்பிலி, நடை, நாணல், நீர், நோவு, பாலேடு, மணிவடம், மாலை.
சரம்பரம் - சரகாண்டபாஷாணம்.
சரம்பார்த்தல் - சுவாசநடைபார்த்தல்.
சரயு - அயோத்தியிலோர்யாறு, காற்று.
சரராசி - கற்கடகம், துலாம், மகரம், மேடம்.
சரராமமுதலி- சடையப்பமுதலிதம்பி, இவரும் கம்பரால் இராமாயணத்திற் புகழ்ந்துபாடப்பட்டவர். இவர் மகா அன்னதாதாவும் தமிழ்க்கலைவிநோதருமாக விளங்கியவர்.

சரலகம் - நீர்.
சரலம் - அறுகு, ஒருவகைத் தேவதாரி மரம், பதினெட்டுவயதுள்ள யானை.
சரவடி - வழிசவரிசை.
சரவட்டை - அற்பம், பிரயோசனமற்றது.
சரவணபவன் - கந்தன்.
சரவணம் - இமயமலைக்கருகில் கங்கை நதிபாயும் ஒருதடாகம், கொறுக்கை, தாமரை, நாணல்.
சரவணோற்பவன் - கந்தக்கடவுள்.
சரவருடம் - அம்புமாரி.
சரவழி } குதிரைப்பற்பாஷாணம்.
சரவாசி
சரவாச்சம் - கறியுப்பு.
சரவாளி - அம்பெய்வோன்.
சரவியம் - இலக்கு.
சரவீணை - கருவண்டு.
சரவை-அற்பம்,எழுத்துப்பிழை,ஒத்திடாதபிரதி, குறை, பரும்படி, மாலை.
சரளத்திருவம் - ஒரு மரப்பிசின்.
சரளம் - ஒழுங்கு,சிவதை,தகுதி,தடையின்மை, நேர்மை.
சரளன்-குடிலமில்லாத மனமுடையவன்.
சரளி-கோழை, சப்தசுரப்பயிற்சி.
சரளிக்கட்டு } சளிக்கட்டு.
சரளிக்கூடு
சரளிபாடுதல் - சத்தசுரங்களையும் பாடிப் பயிலல்.
சரளியலங்காரம் - சரளிபாடுதல்.
சரற்காலம் - மாரிகாலம்.
சரன் - தூதன்.
சராகம் - தடையின்மை, நேர்வழி, போர், வண்டு.
சராகை - வட்டில்.
சராங்கம் - உறுதி, தடையின்மை.
சராசந்தன் - மகதநாட்டிறைசன்.
சராசரம் - அவுபலபாஷாணம், ஆகாயம், நடையுள்ளதுமில்லதும், பிரபஞ்சம், முத்தி.
சராசரி - சரிப்பங்கு.
சராசரிக்கணக்கு - வீதக்கணக்கு.
சராசனம் - அரசமரம், வில்.
சராடி - ஒருவிதப்புள்.
சராதுரம் - துற்பலம்.
சராத்திரியம் - அம்புக்கூடு.
சராப்பியாசம் - சரந்தொடுக்கப் பயிலுதல், சுவாசநடை யறியப்பழகுதல்.

சராயணி - சராசந்தன்.
சராயு - கருப்பாசயம்.
சராயுசம் - கருப்பையிற் பிறப்பன.
சராரோபம் - வில்.
சராவம் - அகன்மணி, சலாகை, மூடி.
சராளம் - சராகம்.
சராளித்தல் - பிராந்தித்தல், பேதியாதல்.
சரி - ஒப்பு, கூட்டம், கைவளை, சமன், சரியென்னேவல், நிதானம், பசு, பிசகின்மை, மலைச்சாரல், வழி.
சரிகமபதநி - சத்தசுரங்களி னட்சரம்.
சரிகாணுதல்-அத்தாட்சிகாணுதல், ஒப்புக்காணுதல், சரிக்கட்டுதல், முடிவு காணுதல்.
சரிகை - பொன்முதலியவற்றின் நூல்.
சரிகைப்பட்டை - சரியைத்தலைப்பு.
சரிகைமலை - பித்தளைமலை.
சரிக்கட்டுதல் - ஒப்பிடுதல், குறைதீர்த்தல், சரிவரப்பண்ணுதல், திருத்தல், நேர்பிடித்தல், பதிற்சாதித்தல்.
சரிக்குச்சரிகட்டல்-பதிற்செலுத்தல்.
சரிசமானம் - ஏற்றத்தாழ்ச்சியின்மை.
சரிசாமம் - நடுச்சாமம்.
சரிசு - ஓராபரணம், வளை.
சரிதம் - சரித்திரம், சுபாவம், நடைவாசம்.
சரிதர் - சஞ்சரிப்போர்.
சரிதல்-சாய்தல், நழுவுதல், பட்சி முதலியன கூடிப்போதல், பின்னிடல்.
சரிதாப்பிரசங்கன் - புராணிகன்.
சரிதாம்பதி - கடல்.
சரிதாம்பரை - கங்காநதி.
சரிதை - ஒழுக்கம், கதை, நான்கு பாதத்திலொன்று, பிச்சை, வரலாறு.
சரித்தல் - சஞ்சரித்தல், சரியச்செய்தல், நடத்தல்.
சரித்திரம் - இயல்பு, ஒழுக்கம், கதை, நடக்கை.
சரித்திரை - புளியமரம்.
சரித்து - கங்கை.
சரிபங்கு - அரைவாசி.
சரிபம் - அசோகு.
சரிபாதி - சரிபங்கு.
சரிபொழுது - பின்பொழுது.
சரிபோதல் - இணக்கமாதல்.
சரிப்படுதல் - கைகூடுதல்,சம்மதித்தல், சரிபோதல், திருத்தமடைதல்.

சரிப்படுத்தல் - இணக்கமாக்கல், ஒப்பனைசெய்தல், நேர்ப்படுத்தல்.
சரிப்பிடித்தல் - கடன்தீர்த்தல், கேடுவருவித்தல், கொல்லல், சரிக்கட்டுதல், நேர்படுதல், முடித்தல்.
சரிப்பு - சரித்தல், சாய்ப்பு.
சரிப்போருதல் - இணங்கல், சம்மதித்தல்.
சரியம் - சிறுநன்னாரி.
சரியன் - நரிஷியந்தன்வமிசத்தோரரசன்
சரியாருதல் - சமனுருதல், முற்றுதல்.
சரியாக்குதல் - சமனாக்குதல், செய்துமுடித்தல், நிறைவேற்றுதல்.
சரியாதி - வைவசுவதமனு புத்திரரு ளொருவன். இவன் இக்ஷுவாகு தம்பி. இவனுக்கு உத்தானபருகி, ஆனர்த்தன், பூரிசேனன் என மூவர் புத்திரரும் சுகன்னிகையென ஒரு புத்திரியும் பிறந்தார்கள், சய்யாதி.
சரியிடுதல் - ஒப்பிடுதல்.
சரியை - சைவ சாதனத்தொன்று ஒழுக்கம், பிச்சை.
சரியொத்தல் - ஒப்பாயிருத்தல்.
சரிலம் - தண்ணீர்.
சரிவயது - ஒத்தவயது, நடுவயது.
சரிவருதல் - இணங்குதல், ஒத்து வருதல், சமனுதல், நேர்வருதல்.
சரிவு - சாய்வு.
சரிவைக்குதல் - ஒப்பிடுதல்.
சரிஷப்பா - வெண்கடுகு.
சரிற்பதி - சமுத்திரம்.
சரிற்புதல்வன் - வீடுமன்.
சரீசிருபம் - மலைப்பாம்பு.
சரீரகம் - சுகதேகம்.
சரீரகோடணம் - மெலிவு.
சரீரக்கட்டு - இறுகியசரீரம்.
சரீரக்கனப்பு - சரீரக்கொழுப்பு, திமிர்க்குணம்.
சரீரக்கூறு } சரீரவியல்பு.
சரீரக்கூறுபாடு }
சரீரசஞ்சலம் - சரீராபலம்.
சரீரசமிரட்சணை - சரீரத்தைப்பேணல்.
சரீரசுகம் - தேகசவுக்கியம்.
சரீரசுத்தி - சரீரபுனிதம்.
சரீரத்திரயம் - முத்தேகம், அவை தூலம், சூக்குமம், காரணம்.
சரீரஸ்மரணை - சரீரவுணர்ச்சி.
சரீரப்போக்கு } உடம்பின்றன்மை.
சரீரப்போங்கு }

சரீரம் - உடல்.
சரீராவச்சின்னவான்மா - சீவியத்துக்கடுத்தவான்மா.
சரீராவரணம் - தோல்.
சரீரி - சரீரமுள்ளது.
சரு - சோரு, தேவருணவு.
சருகட்டை - மரவட்டை.
சருகாமை - ஓராமை.
சருகு - உலர்ந்த இலை.
சருகுசன்னியம் - இருப்புக்கவசம்.
சருகுசாதனம் - ஓலையுருதி.
சருகுண்ணி - ஒருண்ணி, சருகுநுகர்வோன்.
சருகுதிரி - ஒரு திரிநோய்.
சருகுபித்தளை - உயர்ந்தபித்தளை.
சருகுபுலி - ஒரு சிறுபுலி.
சருகுமடைப்பளி - மடைப்பளியாரில் ஒருபேதம்.
சருகுமுசல் - உக்குளான்.
சருகொட்டி - ஒருபுள்.
சருக்கம் - இலக்கியச்செய்யுட் கூறுபாடு, படலம்.
சருக்கரார்ப்புதம் - ஒருவகைநோய் அது பருத்த பெரிய கட்டிகளை யுண்டாக்குவது, அதில் கெட்ட நாற்றத்தோடு, சீழ்வடியும்.
சருக்கரை - கன்னிலம், சர்க்கரை, துண்டு.
சருக்கரைகொம்மட்டி - ஒருகொம்மட்டி.
சருக்கரைநாரத்தை - ஒருநாரத்தை.
சருக்கரையமுது - சித்திரான்னதொன்று.
சருக்கரைவள்ளி - ஒருவள்ளிக்கிழங்கு.
சருசபம் - கடுகு.
சருசுரபணம் - நெய் பால் கூட்டித் தெளித்தல்.
சருச்சரை - எண்வகை யூறிதொன்று. அது ஒப்பரவின்மை.
சருச்சை - இகழ்ச்சி.
சருத்தி - தேரிடக்கியம், விருதுக்கொடி.
சருப்பகங்கணி - காளி, பார்ப்பதி.
சருப்பகணை - நாகாஸ்திரம்.
சருப்பகுண்டலன் - சிவபெருமான்.
சருப்பசாத்திரம் - விஷவித்தை.
சருப்பசாந்தி - நாகசாபநிவர்த்தி.
சருப்பதானம் - உலோகங்களாற் சருப்பம்போலச்செய்துபண்ணுந்தானம்.
சருப்பதோபத்திரம் - மிறைக்கவியில் ஒன்று; அது ஒருகிளவியே எவ்வெட்டாக அறுபத்து நான்கறை கீறி ஒரு

செய்யுளை எட்டெட்டெழுத் தோ ரடியாக நான்கடிபாடி அதை மே னின்று கீழிழிய நான்கடியுமெழுதி அதனைக் கீழ்நின்று மேலேற நான் கடியு மெழுதி மேனின்று கீழிழிய வும் கீழ்நின்று மேலேறவும் முதற் றொடங்கி இறுதி வரவும் இறுதி தொடங்கி முதல்வரவும் மாலைமாற் றாக நான்குமுகத்தானும் வாசிக்க அச்செய்யுளேயாவது.
சருப்பம் - பாம்பு.
சருப்பயாகம் - நாகத்லைதத் தலைகீழாகக் கட்டித் தீவளர்த்துச் சத்துருவைக் கொல்லுதற்குச் செய்யும் யாகம்.
சருப்பராசி - நாணல்.
சருப்பராச்சி, சருப்பராச்சியம் } சங்கங்குப்பி.
சருப்பாத்திரம் - நாகாஸ்திரம்.
சருப்பாபரணன் - சிவபெருமான்.
சருப்பாபரணி - காளி, பார்ப்பதி.
சருமகரணன் - செம்மான்.
சருமகாரகன், சருமகாரன் } சக்கிலியன்.
சருமகீலம் - ஒருவகைநோய். அது வியானவாயு சிலேட்டுமத்தை யுள்ளிழுத்துக்கொண்டு குதஸ்தானத்தைச் சுற்றிலு மிருக்கின்ற சருமத்தின்மேல் வசியைப்போலுறுவாகவுஞ் சுரசுரப்பாகவுஞ் சிறு சிறு ஆணிகளைப் போன்ற முளைகளைப் பிறப்பிப்பது.
சருமக்கருவி - தோற்கருவி.
சருமசம் - இரத்தம், மயிர்.
சருமணி - தோலிடம்.
சருமதண்டம் - சவுக்கு.
சருமதாதுத்தசுரம் - ஒருவகைச் சுரநோய்; அது சரீரத்தின்மேல் காய்தல், நாடி குடிலப்பட்டு மந்தமாக நடத்தல், தலைநோவு, சலத்தில் விருப்போடு தாகம், தேகம் வெளிறல், எரிதல், பிரமையாகப் பேசல், வாய் நீரூறல், மயக்கமென்று மிக்குணங்களை யுண்டாக்குவது.
சருமநாசிகை - சவுக்கு.
சருமபந்தம் - மிளகு.
சருமம் - தோல், தோற்பாய், பரிசை, புளியம், புறணி.
சருமபட்டி - சவுக்கு.
சருமர் - சக்கிலியர்.
சருமன் - சக்கிலியன், சற்குணம்.
சருவகத்திருத்துவம் - சருவஅதிகாரம்.
சருவகம் - ஆகாயம், நீர், மனம்.
சருவகருத்தா-பிரமன், சிவன், விஷ்ணு.
சருவகர்த்தருத்துவம்-சர்வஅதிகாரம்.
சருவகாரணன் - கடவுள்.
சருவகாருண்ணியம் - சகலத்திற்குங் கிருபையா யிருப்பது.
சருவக்கியத்துவம் - சருவஞ்ஞத்துவம்.
சருவக்கியன் - சருவஞ்ஞன்.
சருவக்கியானம் - எல்லாமறிகிற அறிவு.
சருவக்கியானி - சருவாவத்தைகளையு மறிகின்ற ஞானி.
சருவசங்கபரித்தியாகம் - முற்றத் துறத்தல்.
சருவசங்காதனம் - சுகாதாணமாகக் காலைப்போட்டுக் கையிரண்டையுங் காலுக்குட்செருகிக் காலிரண்டையும் பிடித்து முழங்கை யிரண்டும் வயிற் றிற்படக் குழிந்திருப்பது.
சருவசங்காரம் - உருத்திர சங்காரம், முற்று மழிதல்.
சருவசங்காரகாலம் - யுகமுடிவுகாலம்.
சருவசங்காரமூர்த்தி, சருவசங்காரு } உருத்திரன்.
சருவசந்தித்துவம் - சருவ வல்லமை பொருந்தல்.
சருவசனவசீகரம் - சமஸ்த சனங்களையும் வசமாக்கும் வித்தை.
சருவசாட்சி - கடவுள், சூரியன்.
சருவசாதகம் - வேக்கைமரம்.
சருவசித்தி - சகலவித சித்தி. [ம்.
சருவசித்து - இருபத்தோராவதுவருட
சருவசிரேட்டன் - சகலத்துக்கும் அதிகாரி.
சருவசீவதயாபரன் - கடவுள், சிவன், திருமால்.
சருவச்சிரேட்டன் - சகலத்துக்கும் அதி
சருவஞானம் - எல்லாமறிதல். [காரி.
சருவஞானி - கடவுள்.
சருவஞ்ஞத்துவம் - எல்லாவற்றையுமறியுந் தத்துவம்.
சருவஞ்ஞன் - கடவுள்.
சருவணம் - உண்ணல், சினேகன்வீடு, பானபாத்திரம், வாய்.
சருவதப்பறை - முற்றுந்தவறு.

சருவதா - எப்போழ்தும்.
சருவதாரி - இருபத்திரண்டாவது வருடம்.
சருவத்தியாகம் - முற்றத்துறத்தல்.
சருவத்திரம் - எல்லாம்.
சருவத்திரவித்நியேகம் - எங்கும்.
சருவஙியந்திருத்துவம் - சருவத்லையுமேவவல்லவனுதல்.
சருவப்பிரகாசம் - சொப்பனுவத்தை.
சருவமானியம் - ஊர்ப்பொதுவாய்க்கொடுக்கப்பட்டது.
சருவம் - எல்லாம், பித்தளை முதலியவுலோகங்களாற்செய்யும் பாத்திரம், வெண்கலம்.
சருவரசம் - கறியுப்பு.
சருவரி - இருள்,இரவு,பெண்,மஞ்சள்.
சருவல் - கொஞ்சுதல், சருவுதல்.
சருவவல்லபம் } எல்லாஞ் செய்ய
சருவவல்லமை } வல்லபம்.
சருவவியாபகம்-எல்லாவற்றினு மிருத்தல், சாக்கிராவத்தை.
சருவவியாபி - கடவுள்.
சருவாங்கதகனம் - முற்றுஞ்சுடுதல்.
சருவாங்கம் - முழுச்சரீரம்.
சருவாணி - பார்வதி.
சருவாதாரன் - எல்லாவற்றிற்கு மாதாரன்.
சருவாதிட்டானம் - காரிய மியாவற்றிற்குங் காரணமா யிருப்பது.
சருவாந்தரியாமி - கடவுள்.
சருவாந்தரியாமித்துவம் - சருவத்திலும் வியாபித்திருத்தல்.
சருவாலங்காரம் - வத்திராபரண முதலிய பூஷணம்.
சருவானுகூலம் - சருவசித்தி.
சருவிதம் - பட்சித்தல்.
சருவத்திரவிதேயம் - எவ்விடத்தும்.
சருவு - கிட்டுகை, சருகு.
சருவுதல் - இலீலைபாராட்டல், கிட்டுதல், கொழுவிப்போதல், பொருதல், மருவுதல்.
சருவேசுரன் } கடவுள்.
சருவேசுவரன் }
சருவேச்சுரத்துவம்-எல்லாவற்றிற்கும் மேலாயிருக்குந் தத்துவம்.
சருவேச்சுவரன் - கடவுள்.
சருபம் - ஒப்பு.

சரேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுள் ஒன்று.
சரேந்திரன் - வில்வல்லவன்.
சரேரிடுதல் }
சரேரெனல் } ஒலிக்குறிப்பு.
சரேலெனல் }
சரை-இரண்டு துண்டுகளாய்ப் பிறந்தவற்றை ஒன்ருக்கிச் சராசந்தன் எனப் பேர்வகிக்கச்செய்த ஓரரக்கி, கிழத்தன்மை,சருகினுற்கட்டும், கவசம், நரைமுதிர்வயது, பார்வதி, வைக்கோல் முதலியவற்ருற் செய்யும் பொருள்.
சரையாப்பித்தல்-உள்ளே செலுத்தல்.
சரையு - சரையுநதி.
சரோசம் - தாமரை.
சரோசனி - தாமரையோடை.
சரோஜீ - பிரமன்.
சரோஜினி - தாமரை.
சரோருகசரம் - தாமரைமாலை.
சரோருகம் - தாமரை.
சரோவரம் - தடாகம், மடு.
சர்க்கம் - சருக்கம், சிருஷ்டிப்பு.
சர்க்கராசூலை - ஒருவகைச்சூலைநோய். அது இடுப்பு, முதுகு, விலாப்பக்கம், அடித்தொப்புள், குதஸ்தானம், கீழ்வயிருகியவிடங்களிற்குத்தலுண்டாகுவதுஅதனுல்மூத்திரமிரத்தத்தோடுகூடிக் கிரிச்சரோகக் குணத்தைப்பெற்றுநீர்த்துவாரத்திற் சுருக்குச்சுருக்கென்று ஊசியாற் குத்துதல்போல் வேதனையைப் பிறப்பிக்கும்.
சர்க்கராசஸ்மரி-ஒருவகைநோய். அது விந்துவை வாயுவானது அணுவணுவாகப்பொடித்து, மணல்,சிறுபயறு, கடுகு, கடலை, சுண்டக்காய், இலந்தைக்காய்,பேரீச்சங்காயிவைகளின் பிரமாணங்களை யொத்துக் கல்லுகளாகத் திரட்டி நீரோடு சேர்த்து நாளத்தின்வழியாக வெளியில் தள்ளுவது.
சர்க்கராரோகம்-ஒருவகைநோய். அது அஸ்திநரம்பு, மாமிசநரம்பு, மற்றை நரம்பாகிய வைகளில் அனுசரித்த தாதுவினுலும் வாதசிலேட்டு மத்தினுலும் சரீரமுற்றிலுஞ் சுக்கான்கற்களைப்போற் கிரந்திகளையுண்டாக்கு

வது, அவைகள் பழுத்துடைந்தால் தேன்,நெய், கொழுப்பென்னுமிவை களைப்போற் சீழ்வடியும்; சிலவேளை அது வாதாதிக்கத்தால் மணலைப்போ லு முமியைப்போலு முண்டையுண் டையாக விழுந்தாலும் விழும்.

சர்க்கரை – கரும்பின்கட்டி.

சர்க்கரைக்கொம்மட்டி – ஒருகொம்மட் [டி.

சர்க்கரைப்பூசணி – ஒருவகைப் பூசணி.

சர்க்கரைவள்ளி – ஒருவள்ளி.

சர்க்கரைவர்த்தி – ஒருபூடு.

சர்க்கரைப்பொங்கல் - சித்திரான்னத் தொன்று.

சர்க்கார் - தாழ்வாரம்.

சர்ச்சரை - காடுமுரடு, சச்சரவு.

சர்ச்சரை – சருச்சை.

சர்த்திகுன்மம்-ஒருவகைக்குன்மநோய். அது வாந்தி, அரோசகம், ஈரலுக்கு ளெரிதல், ஏக்கம், தயக்கம், மயக்கம், வயிறுப்பல், அற்பவலி, பலவீனம், மலபந்தம், மந்தாக்கினி, நடை குறை தல், சிறு நரம்புக ளுப்பல், தேகத் தில் திமிரென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

சர்ப்பதிஷ்டம் - பாம்புக்கொடி.

சர்ப்பபுரேசர் – திருப்பாதா ளீச்சரத்தி லேகோயில்கொண்டிருக்குஞ்சுவாமி.

சர்ப்பம் - பாம்பு.

சர்ப்பராசி – சருப்பராசி.

சர்ப்பராச்சி – சருப்பராச்சி.

சர்ப்பனை - வஞ்சகம்.

சர்ப்பராஜன் – வாசுகி.

சர்ப்பாட்சம் - உருத்திராட்சம்.

சர்ப்பாராதி } கருடன், கிரி, மயில்.
சர்ப்பாரி

சர்ப்பேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனுள் ஒன்று.

சர்மணவதி – விந்திய பர்வதத்தி லுற் பத்தியாகி உத்தரஞ்சென்று யமுனை யிற் கலக்கு நதி.

சர்மகுட்டம் – ஒருவகைக் குட்டநோய். அது தோல் மஞ்சள் நிறமாகவுஞ் சிவந்தநிறமாகவு மீன்களின் செதிளை யொத்துச் சுரசுரத்துத் தடித்துக் கி ள்ளினு லுபத்திரவமில்லாமலுங் கா யம்பட்டால் தெரியாமலுமிருப்பது, அதனல் அடிக்கடி சர்வாங்கத்திலும் வியர்வையுண்டாகும்.

சர்மதலகுட்டம் – ஒருவகைக் குட்ட நோய். அது கொப்பளங்கள் பிறக்குந் தானங்களிற் சிவந்தநிறமு மதிகதி னவும், தொடக்கூடாத நோவுமுண் டாகிப் பின்பு கொப்புளங்க ளுண் டாகும். அவைகளிற் குத்தலுமெரிச் சலு முண்டாகும்.

சர்மம் - கருமம், தோல்.

சர்மிஷ்டை – யயாதி இரண்டாம்பாரி, விருஷபர்வன் மகள்.

சர்வகாமன் – இருதுபர்னன் புத்திரன், சுதாசன் தந்தை.

சர்வங்கஷம் - மாகவியாக்கியானம்.

சர்வகாமச்சப் பிரதேசுவரம் – சிவத்த லங்க ளாயிரத்தெட்டனுள் ஒன்று.

சர்வசாதகம் – சருவசாதகம்.

சர்வசாதரோணவிக்கல் – ஒருவகைவிக் கல்நோய். அது இடைவிடாம லடிக் கடி அலையடிப்பதுபோல் விக்கலுண் டாக்குவது.

சர்வசித்து - அறுபதுவருஷத்தில் ஒரு வருஷம்.

சர்வதா - எப்போதும்.

சர்வதாரி - ஒரு வருஷப்பெயர்.

சர்வதேஜசு – வியுஷ்டி புத்திரன்; இவ ன்தாய் புஷ்கரிணி. ஆகூதி இவனுக் குப் பாரி. சக்ஷுர்மனு இவனுக்குப் புத்திரன்.

சர்வபதி - பட்டி காவியத்துக்கு மல்லி நாதர்செய்த வியாக்கியானம்.

சர்வதேபூசுவரம் – சிவத்தலங்க ளாயி ரத் தெட்டனுள் ஒன்று.

சர்வம் - சருவம்.

சர்வசங்கபரித்தியாயம் – சகல பந்தங்க ளையும் விடுதல்.

சர்வஞ்ஞத்துவம் – பேரறிவு.

சர்வர்த்தி – வற்சரன்பாரி, புஷ்பார ணன் தாய்.

சர்வன் - அஷ்டமூர்த்திகளுள்ஒருவன், சிவபெருமான்.

சர்வாங்கவாதம் - ஒருவகை வாதநோய்; அது அதிசீத வீரியவஸ்து, மலபந்த வஸ்து, மந்தவுஷ்ணவஸ்து, விரோத வுண்டி, அகாலவுண்டி, துரிதமாக வரு மலசலத்தை அடக்கல், அதி

நடை, இரவில் நித்திரையின்மை, பகல் நித்திரை, பாரமான சுமைகளைச் சுமத்தல், நித்திய மையோகஞ் செய்தலாகிய இவைகளாற் பிறந்து சர்வாங்கத்திலும் பரவி மேலில் வேதனையைச் செய்து உள்ளிற் கீல்களைத் தளரப்பண்ணி எலும்புகளி லலையடிப்பதுபோ லடித்துக்கொண்டேயிருப்பது. அதனால் வெப்பம், மிகுவாந்தி, வயிற்றுநோவு, பேதி, பிரமை, வாயிலனல் வீசல், விஷமாக்கினி, மூர்ச்சை, இரைப்பு, ஆயாசம், சரீரநோவு, அசதியாக நடித்தலென்னு மிக்குணங்க ளுண்டாகும்.

சர்வாணி - சருவாணி.

சர்வாத்தினேசுவரம்-சிவத்தலங்களாயிரத் தெட்டனுள் ஒன்று.

சர்விகற்பம் - விகற்பத்தையுடையது.

சலகண்டகம் - ஒரு நீர்ப்பூடு, முதலை.

சலகண்டம் - மிகுவேர்வை.

சலகந்தி - சகத்திரபேதி.

சலகம் - சங்கு, நீராடல், நீருள்வீடு, பொட்டுப்பூச்சி.

சலகற்பம் - சேறு.

சலகன் - ஒருபன்றி.

சலகன்னம் - பூமிக்குக் கிரகத்திற்கு முள்ள தூரம்.

சலகாங்கம்-சங்கு, தாமரை, திரை, தேங்காய்.

சலகாங்கிஷம் - நீர்வேட்பு.

சலகாந்தாரன் - வருணன்.

சலகாமி - நீர்மேனடக்குங்குதிரை.

சலகிராகம் - முதலை.

சலகு - சப்பாத்து, விதையடித்தல்.

சலகுந்தலம் - நீர்ப்பூடு.

சலகுபிடித்தல் - சப்பாத்துப்பண்ணுதல்.

சலகை - ஒரு தானிய அளவு, தெப்பம், மரக்கலம், வெளிப்பாடு.

சலக்கடுப்பு - நீர்க்கடுப்பு.

சலக்கமலை - மலசலங்கழிக்குமிடம்.

சலக்கமாடுதல் - நீராடுதல்.

சலக்கம் - நீராட்டு.

சலக்கரணை - சகாயம், நயம், விடுதல்.

சலக்கழிச்சல் - சலரோகம்.

சலக்கிரீடை - நீர்விளையாட்டு.

சலக்கு - நவாச்சாரம்.

சலக்குடர், சலக்குடல் } சலப்பை.

சலக்கூர்மம் - ஒருவகை நோய். அது சிலேஷ்மாதிக்கமான சீதள வஸ்துக்களினாலும், நீங்காத நிழலையுடைத்தாய் விளக்கெண்ணெய்போல் தடித்திருக்குஞ் சுனைத்தண்ணீரினாலும் சிலேட்டுமமானது வயிற்றிற் சேர்ந்துகொண்டே வந்து வாயுவினுப் பலத்தைக்கொண்டு மீளவும் நன்றாக விருத்தியடைந்து தடித்துக் கெட்டிப்பட்டு நீண்டு ஆமையினுருவத்தையொத்த கட்டியாகி நோவில்லாமலுஞ் சிகிச்சைக் கிடங்கொடாமலும், வலப்பக்கத்திலேனு மிடப்பக்கத்திலேனு மொருவேளை யசைந்து மசையாம லிருப்பது. அதனால் தொடைகளுக்குத் துர்ப்பலமுஞ் சரீரத்திற்கு வெளுப்பு முண்டாகும்.

சலக்கூர்மை - அமுரியுப்பு.

சலக்கோர்வை - நீர்க்கோவை, விஷநீரேற்றம்.

சலங்கு - கட்டுப்படவு.

சலங்கை - சதங்கை.

சலங்கைக்கொதி - கடுங்கோதி.

சலங்கைச்செடி - ஒருபூடு.

சலவந்தவம் - சலசந்துக்கள்.

சலசந்தி - என்புப்பொருத்து, துரியோதனன் தம்பி.

சலசம் - தாமரை.

சலசயனன், சலசயன் } திருமால்.

சலசரக்குழி - சலதாமரை.

சலசரம் - மீனவிராசி மீன்.

சலசர்ப்பிணி - அட்டை.

சலசலத்தல், சலசலப்பு, சலசலெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு.

சலசலோசனன் - தாமரைக்கண்ணன், விட்டுணு.

சலசற்பிணி - நீரட்டை.

சலசன்மம் - தாமரை.

சலசாதி - நீர்வாழ்வன.

சலசாயி - திருமால்.

சலசாலை - நீர்க்கால்.

சலசிராவம் - ஒருவகை நோய். அது இமைச்சந்தி மார்க்கத்தி லொட்டியிருக்குஞ் சன்னநரம்புகளில் வாய்வு வியாபித்தும் பின்பு கண்களுக்குச்

சலத்தைத் தாங்கி யிருக்கும் நரம்புகளிற் சேரும்போது பிறப்பது. அதனால் வெள்விழிக்குச் சந்திஸ்தானமாகிய கருவிழியிலிருந்து கொஞ்சஞ்சிவந்த நிறமுள்ள சலமொழுகுதல், கண்ணோவுடன் சிவத்தல், வீக்கம், நீர்க்கம்மலென்னு மிக்குணங்களுண்டாக்குவது.

சலசிலேட்டுமம்-ஒருவகைச் சிலேட்டும நோய். அது அதிகதாகம்,சிக்கலாய்த் தடிப்பா யடிக்கடி நீரிறங்கல், அழலல், குரற்கம்மல், கோழையாகிய சிலேட்டுமம் விழுதலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

சலசூகரம் - கடற்பன்றி, முதலை.

சலசூசி – நீரட்டை.

சலசூத்திரம் – நீரிறைக்குஞ் சூத்திரம்.

சலசெந்து – சலப்பூச்சி, மீன்.

சலசை - இலக்குமி.

சஞ்சலம் – சங்கு, வலம்புரி யாயிரஞ் சூழ்ந்த சங்கு.

சலஞ்சாதித்தல் - பகைசாதித்தல்.

சலணி - வால்மிளகு.

சலசங்கதி - மந்தாரம்.

சலதம் - முகில்.

சலதரம் - குளம், சமுத்திரம், முகில்.

சலதரன் - கங்காதரன், சிவன்.

சலதளம் – அரசமரம்.

சலதாகமம் – மழைக்காலம்.

சலதாரை-நீரோட்டம், நீர்க்கால், மதகு.

சலதி-சமுத்திரம்,பொய்சொல்வோன்

சலதோஷம் - சலுப்பு, நீர்த்தோஷம்.

சலத்தம்பம்
சலஸ்தம்பம்
சலத்தம்பனம் } கலைஞான மறுபத்துநான்கி லொன்று. அது நீரி னியல்பைத் தடுத்தல்.

சலஸ்தம்போதரம் - ஒருவகை நோய்.

சலஸ்தானம் – ஏரி.

சலத்திரம் – ஓலைக்குடை.

சலத்துவாரம் – சலவாயில்.

சலகாட்டை – முப்பத்தாறுவது மேளகர்த்தா.

சலநிதி – கடவுள், சமுத்திரம்.

சலநிர்க்கமம் – வாய்க்கால்.

சலநீலி – வேலம்பாசி.

சலந்தரன்
ஜலந்தரன் } ஒரு அசுரன்,இவன்மனைவி மிக்க ரூபவதி. அவளைச் சேரவேண்டுமென்று சமயம்பார்த்திருந்த விஷ்ணு சலந்தரன் இறந்தவிட அவன் சரீரத்திலே பிரவேசித்து அவளைப் பலநாள் புணர்ந்து பின்பு அவளுக்கது புலனாயபோது அவளாலே சபிக்கப்பட்டு வருந்தினார். சலந்தரன் கங்கைவயிற்றிற் சமுத்திரராஜனுக்குப் பிறந்த புத்திரன். இவன் சைசவப் பருவத்திலேயேதன் கைக்ககப்பட்ட பிரமாவைக் கழுத்திற்பிடித்து வருத்திப் பின்விடுத்த பராக்கிரமசாலி. விஷ்ணு முதலிய தேவரெல்லோரும் தோற்றோடிவிடச் சிவனாற் சங்கரிக்கப்பட்டவன். மனைவி பெயர் பிருந்தை, இவளைத் தகனஞ்செய்த விடம் பிருந்தாவன மெனப்படும். அது விஷ்ணு ஸ்தலங்களுள் ஒன்று.

சலந்தன் - துரியோதனன் தம்பியருள் ஒருவன்.

சலந்திரட்டி – கொற்றான்.

சலந்தேசுவரம் – சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுள் ஒன்று.

சலபடலம் - மேகம்.

சலப்தி - சமுத்திரம், வருணன்.

சலபத்திரம் - அரசமரம்.

சலபந்தகம் – நீர்க்கால்.

சலபம் - விட்டிற்பறவை.

சலபாதை – சிறுநீர்க்கழித்தல்.

சலபாராவதம் - நீர்ப்புறா.

சலபானம் – நீரருந்தல்.

சலபித்தம் – தீ.

சலபிப்பிலி – நீர்த்திப்பிலி.

சலபுஷ்பம் – மீன்.

சலபரிசம் - நீராட்டு.

சலப்பிரமேகம் - ஒருவகை நோய்.

சலப்பிரவாகம் – நீர்ப்பெருக்கு.

சலப்பிரளயம் - உலகத்தைச் சமுத்திரம் மூடல்.

சலப்பிராயம் – நீர்சூழ்ந்த காடு.

சலப்பிரியம் - ஒருபுள், பன்றி, மீன்.

சலப்பிலாவனம் - நீர்ப்பெருக்கு.

சலப்பை - சலக்குடர்.

சலமடைப்பு - சிறுநீரடைபடல்.

சலமலம் – நீர்ப்பஞ்சு.

சலமறிப்பு - சிறுநீரடைபடல்.

சலமார்ஜாரம் – நீர்ப்பூனை.

சலமானம் – போதல்.
சலமூர்த்தி – சிவன்.
சலமூர்த்திகை – ஆலாங்கட்டி.
சலமேகம் - ஒருவகைநோய். அது மூத்திரஞ் சுத்தசலம்போல் தெளிந்தும், வெளுத்தும், மிகுந்தும், குளிர்ச்சியோடு யாதொரு தர்க்கந்தமு மில்லாமல் மினுமினுத்துக் கொஞ்சங் கொஞ்சமாக இறங்குவது.
சலமை – குளிர்மை, சன்னி.
சலம்-அசைவு, ஒருவாசனை, குளிர், சலஞ்சாதித்தல், தணியாக்கோபம், நீர், பன்றிமுள், பொய், வைராக்கியம்.
சலம்பிடித்தல் – சீழ்கொள்ளல், பிடிவாதம் செய்தல்.
சலம்புரி – சங்கு.
சலயந்திரம் – சலசூத்திரம்.
சலரசம் - உப்பு.
சலராகம் – வெண்சிவப்பு.
சலராசி – கடல்.
சலருகம் – தாமரை.
சலரோகம் – ஒருநோய், நீரிழிவு.
சலக்காரன் - ஒரு பிராமணமுனி. இவன் கத்துருவை மகளாகிய சலர்க்காரையை மணம்புரிந்தவன்.
சலர்க்காரை – கத்துருவை மகள், தக்கன் முதலிய நாகராஜரின் சகோதரி, சலர்க்காரன் மனைவி.

சலலம்
சலலி } முட்பன்றிமுள்.

சலலியம் – முட்பன்றி.
சலவகு - இலவம்பிசின்.
சலவர்-நெய்தனிலமாக்கள், வஞ்சர்.
சலவன் - சலகன், பரதவன், பெருதுலன்னது.
சலவாசயம் - சலக்குடர்.
சலவாண்டம் – கொப்புளம்.
சலவாதி - கோபி, சிறுநீர்விடுதல், மரணவோலைகொண்டு செல்வோன், முட்பன்றிமுள், முரண்டன்.
சலவாதை - சிறுநீர்விடுதல்.
சலவாயசம் - நீர்க்காகம்.
சலவாயில் - சலங்கழியுமிடம்.
சலவாசலம் - விந்தமலை.
சலவாலிகை – மின்னல்.
சலவாழைக்காய் - மீன்.
சலவிசுவம் - ஐப்பசிதொடங்கிப் பங்குனிமட்டுஞ் சூரியனிற்குமிடம்.
சலவிந்து – நீர்த்துளி.
சலவியாளம் - நீர்ப்பாம்பு.
சலவு - ஆண்குறி.
சலவை-எண்குறித்திடுமுறை, சீதளம், பிசுக்கு, புடவை முதலியவற்றை வெண்மையாக்கல்,விதையெடுத்தல்.
சலவைக்கல் - ஒருவகைக்கருங்கல்.
சலவைமண் - சவுதைமண்.
சலனகாலம் - உபத்திரவகாலம், பஞ்சகாலம்.
சலனப்படுதல்-அசைதல்,தத்தளித்தல்.
சலனம்-அசைவு,கலக்கம், கால், காற்று, சஞ்சலம், போதல், மான், முடிவு.
சலனன் – காற்று.
சலன் – பரீக்ஷித்துவுக்குச் சுசோபையிடத்துப்பிறந்த புத்திரன். இவன் வாமதேவ விருடியினது குதிரையைக் கவர்ந்துகொண்டு அவர் கேட்டவிடத்துங் கொடாது மறுத்தமையால் அவர் கோபாவேசராகி இவனையும் இவன் தம்பி தலனையும் கொன்றொழித்தார், பலன்புத்திரன்.
சலாகம் - நீரட்டை.
சலாகரம் - நன்னீர்க்கடல்.

சலாகு
சலாகை } அகன்மணி, அம்பு, ஈட்டி, ஊசிக்காந்தம், சலாகு, சூதாடுகருவி, நாராசம், முட்பன்றிமுள்.

சலாகைபாணி - தையலாணி.
சலாக்கியம் – செல்வம், மேன்மை.
சலாங்கம் – ஒருநாரை.
சலாங்கு - பொய்யாப்புள்.
சலாசத்து - சிலாசத்து.
சலாசம் – உப்பு.
சலாசயம் - சலவாசயம், நீர்நிலை.
சலாசலம் - காகம், நிலையின்மை, பசு.
சலாசிரயம் - நீர்மண்டபம்.
சலாஞ்சலி – தத்தனீர்.
சலாஞ்செய்தல் - வணங்கல்.
சலாடு - காய்கறிகள்.
சலாதங்கன் – வாதரோகி.
சலாதாரம் – ஏரி.
சலாத்தி - திரைச்சீலை.
சலாத்தியம் - நீர்ப்பிடியானது.
சலாபக்குளி - முத்துக்குளித்தல், வருமானமுள்ளது.

சலாபத்து - தாராளம்.
சலாபம் - முத்துக்குளித்தல்.
சலாபாகாரம் - கடல், நீரூற்று, நீர்நிலை.
சலாம் - வணக்கம்.
சலாரம் - நீர்க்குதிரை.
சலாலோகை - நீரட்டை.
சலாற்புதோஷ்டம் - ஒருவகை நோய். அது உதடுகளில் வாத சிலேட்டுமங்களினால் நீர்க்குமிழியைப்போல மாமிசத்தை வளரப் பண்ணுவது. அதனால் சலமுஞ் சீழுங் கசிந்தாலுங் கசியும்.
சலிகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுள் ஒன்று.
சலிகை - அதிகாரம், செல்வாக்கு, தத்துவம், நீரட்டை, பெருமை.
சலிகைக்கிராமம் - தலைக்கிராமம்.
சலிதம் - உதறப்பட்டது.
சலித்தல் - அசைவுகொள்ளுதல், இளைத்தோய்த்தல், ஒலித்தல், சலனமுறுதல், துக்கப்படுதல்.
சலிப்பு - அசைவு, இளைப்பு, துக்கம்.
சலியாமை-அசைவின்மை,இளையாமை
சலிலக்கிரியை - பிரேதத்தைக் குளிப்பாட்டல்.
சலிலகம் - தாமரை.
சலிலம் - நீர்.
சலினி - திப்பிலி.
சலீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
சலு - சிரங்கைநீர்.
சலுகை - அட்டை.
சலுப்பு - சலதோஷம், சிறு செலுப்பு, தண்டு, நனிக்கிளை.
சலூகை - அட்டை.
சலேசாம் - நீர்ப்புள், மீன்.
சலேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.
சலேந்திரியம் - அடக்கமின்மை.
சலேந்திரன் - வருணன்.
சலோகசம், சலோகை } நீரட்டை.
சலோதரம்-ஒருவகைநோய். அது நெய்யையாவது எண்ணெயையாவது மிதமில்லாமற் குடித்தடனே சீதளசலத்தைக் குடிப்பதனால் மேலுஞ் சலபானம் பண்ணும்போது சமாக்கினிமந்தப்பட்டுத் தேக மிகவு மிளைத்து அதனாலுண்டாகும்.
சலோபாதை - சலவாதை.
சலோர்க்கம், சலோர்ச்சம் } குங்கிலியம்.
சல்லகண்டம் - புறு.
சல்லகம் - கைத்தாளம், நார்.
சல்லகி - அத்திமரம்,இலவு,கருவாப்பட்டை, குந்துரு, கொசுகு, தளிர்.
சல்லக்கடுப்பு - சரீரநோ.
சல்லடம் - குறுங்காற்சட்டை.
சல்லடை - தானிய முதலியவற்றைச் சல்லுங்கருவி, அவாரம்.
சல்லடைக்கண் - அரிப்பெட்டிக்கண்.
சல்லடைக்கொப்பு - ஒரு காதணி.
சல்லபம் - முட்பன்றி.
சல்லம் - நார், பன்றிமுள்.
சல்லரி - ஒருவகைமணி,கைதாளம், சல்லரியென்னேவல்,பம்பை, மேளம்.
சல்லரிதல் - துண்டுதுண்டாய் வெட்டல்.
சல்லா - ஒருவகைச்சீலை.
சல்லாபம் - கூடிப்பேசுகை, சம்பாஷணை, நாடகவகைப் பத்திலொன்று, வினவும் விடையுங்கூடியசொல்.
சல்லாரி-அபாத்திரன்,அலசற்சீலை,ஒருமரம், கைத்தாளம், வேஷக்காரன்.
சல்லி - கலவோடு, தகட்டுக்கல், ஆக்கங்கள், பொய், மூன்று சின்னங்கொண்ட காசு.
சல்லிகை - ஒருவகைத் தோற்கருவி.
சல்லிக்கல் - சிறு தகட்டுக்கல்.
சல்லித்தல் - துண்டாக்கல்.
சல்லியகண்டம் - முட்பன்றி.
சல்லியகரணி - வேல்தைத்த இரணமாற்று மருந்து.
சல்லியகரு-சல்லியவித்தைக்குரிய கரு.
சல்லியநாடிவிரணம் - ஒருவகை விரணநோய்.
சல்லியம் - அம்பு, ஆயுதநுனி, இக்கட்டு, இருப்புத்தாள், ஈட்டி, எலும்பு, ஒருநூல், கலக்கம், சச்சரவு, செஞ்சந்தனம், நஞ்சு, பாணம், மாயவித்தை, முட்பன்றி, முள்.
சல்லியர் - ஒருசாதியார்.
சல்லியவித்தை-சல்லியத்தொழில்.
சல்லியன் - சுக்கிரன், நகுல சகாதேவருக்கு அம்மானாகிய ஓரரசன். இவன்

மத்திரதேசத்தரசன். மாத்திரிசகோதரன். பகையரசர்க்குச் சல்லியம் போன்றாதலின் சல்லியனெனப் பெற்றான். இவன் பாரத யுத்தத்திலே கன்னனுக்குச் சாரதியாயிருந்து தருமராசனாற் கொல்லப்பட்டவன், சோமதத்தன் புத்திரன், விப்பிரசித்தி புத்திரன்.
சல்லியாதேவி - ஒரு தேவதை.
சல்லுதல் - அரித்தல், நீர்தெளித்தல்.
சவகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுள் ஒன்று.
சவக்கம் - சோப்பம்.
சவக்களித்தல் - சவர்க்களித்தல்.
சவக்காடு - இடுகாடு, சுடலை.
சவக்காமியம் - நாய்.
சவக்காரம் - சவுக்காரம்.
சவுக்காலை - இடுகாடு, பிரேதம் புதைக்குமிடம்.
சவக்கிரியை - பிரேதக்கிரியை.
சவக்குழி - பிரேதக்குழி.
சவங்கல் - மழுங்கல்.
சவங்குதல் - உடல்மெலிதல், சோம்புதல், மனமெலிதல்.
சவசாதனம் - பிரேதாலங்காரம்.
சவச்சேமம் - பிணமடக்கல்.
சவடி - ஓராபரணம், ஒருபாம்பு, காறையெலும்பு.
சவடிக்கோவை - ஓராபரணம்.
சவடிக்கதிர் } சவடியின்னுக்கருவி.
சவடிமுள் }
சவடியெலும்பு - பூணாரவெலும்பு.
சவடு - உவட்டுமண், நெறிவு, வண்டல்.
சவட்டு - அதிகப்படச்செய்தல், அருத்தல், துவட்டல், மிதித்தல், மெல்லல், வளைத்தல், விழுங்கல்.
சவட்டுக்கூர்மை - சவட்டுப்பு.
சவட்டுதல் - சவட்டல்.
சவட்டுப்பு - இருப்பு.
சவண்டலை } ஒருமரம்.
சவண்டிலை }
சவதம் - சபதம், விலைக்குறைவு.
சவதரித்தல் - சம்பாதித்தல்.
சவதலை - பின்முந்தானை.
சவதாகம் - பிரேததகனம்.
சவப்பெட்டி-பிரேதம்வைக்கும்பெட்டி
சவம்-சீக்கிரம், நீர், பிசாசம், பிணம்.

சவரகன் - சௌளகன்.
சவரட்சணைசெய்தல் - காப்பாற்றல்.
சவரணை - ஆயத்தம், நேர்த்தி.
சவரம் - ஒரு பொற்காசு, சாமரம், கௌரம், நீர், மயில், வால்மயிர்.
சிலுகு - சண்டை, சிலுகென்னேவல், தடை, தப்பிதம், துன்பம்.
சிலுகுதல் - சண்டைபிடித்தல், துன்பப்படுதல்.
சிலுக்கு - இரும்புமோதிரம், சண்டை, சிலும்பு, பலது, வாட்டல், வெட்டிய சிறுதுண்டு.
சிலுசிலுத்தல் - அலட்டுதல், ஒலிக்குறிப்பு, குளிர்விறைதல்.
சிலுசிலுப்பான் - ஒருவகை வைசூரி.
சிலுசிலுப்பு - அலட்டு, ஒலிக்குறிப்பு, குளிர்க்குறிப்பு.
சிலுசிலெனல் - ஒலிக்குறிப்பு, குளிர்தல்.
சிலுசிலுத்தம் - அறக்கரைதல், கோபித்தல், விள்ளுதல்.
சிலுநீர் - இலையிற்றங்கிவிழும் மழைத்துளி.
சிலுசிலுப்பு - அசைப்பு, சிலிப்பென்னேவல், நடுக்கம்.
சிலுப்புதல் - அசைத்தல்.
சிலும்பாடுதல் - சிலுப்பலாதல்.
சிலும்பலி - அவலட்சணமுள்ளவன்.
சிலும்பல் - அசைத்தல், ஒலித்தல், சிராய் முதலிய சிலும்புதல், பீற்றல்.
சிலும்பு - களிம்பு, மரச்செதும்பு.
சிலும்புதல் - சிலும்பல்.
சிலுவட்டை - சிறியது.
சிலுவலி - சிலும்பலி.
சிலுவல் - அலுசிலும்பல், அவலட்சணம், கந்தை, சுசியிலி, மரியாதையற்றது.
சிலுவை - கொல்லப்படுபவர்களை அறையும் ஒரு மரம்.
சிலேடம் - அக்கரு.
சிலேடாதீபகம் - ஒரு அலங்காரம், அது சிலேடையிடத்துத் தீபகமாய் நின்று பயன்றருவது.
சிலேடித்தல் - உபயார்த்தம்படச் சொல்லல்.
சிலேஷை, சிலேடை - ஓரலங்காரம், அது உபயார்த்த முள்ளது.
சிலேடையின் முடித்தவிலக்கு - ஓரலங்காரம், அது முன்னர்வைத்த பொருளையும் பின்னர்வைத்த பொருளையுமொருசொற் றொடராற் சிலேடித்

துக் கூறியோர் காரியத்தை விலக்கல், (உ-ம்) கொடியோர்க்கு முண்டோ குணம்.

சிலேடையுருவகம் - உவமையையும் பொருளையு மொரு சொற்றொடையாற் சிலேடித் துருவகஞ்செய்வது, (உ-ம்.) கண்ணெகிழ்ந்து காதல் கரையிறப்ப வைகுமால் வண்ணமதனும் புயம்.

சிலேடையுவமை - சிலேடையு முவமையு மொருங்கு வருதல்.

சிலேடைவிலக்கு - ஓரலங்காரம், அது இருபொருளை ஒன்றுபோற் சிலேடித்துக் கூறிக் காரியத்திற்கின்னது வேண்டா வென ஒன்றை விலக்கல்.

சிலேட்டர் } செட்டிகள்.
சிலேட்டியர் }

சிலேட்டுமகாசம் - ஒருநோய்.

சிலேட்டுமகிரந்தி - கிரந்திநோயினொன் [று.

சிலேட்டுமகுன்மம் - ஒருநோய்.

சிலேட்டுமசூலை - ஒருசூலை.

சிலேட்டுமபித்தசூலை - ஒருநோய்.

சிலேட்டுமம் - சிலேற்பனம்.

சிலேதம் - செம்முருங்கை.

சிலேபியர் - செட்டிகள்.

சிலேயம் - மலையிலுண்டாவன.

சிலேற்பனநாடி - சேடநாடி.

சிலேற்பனம் - கோழை.

சிலை - ஒலி, ஒருமரம், கல், சிலையென்னேவல், சூதபாஷாணம், தனுவிராசி, மலை, மனோசிலை, மூலநாள், விக்கிரகசி, வில்.

சிலைக்கல் - ஈரக்கல், சிலாநாகக்கல்.

சிலைக்காறி - அஞ்சனபாஷாணம்.

சிலைக்கெந்தி - சாத்திரவேதி.

சிலைச்சாதனம் - சிலாசாதனம்.

சிலைச்சோணிதம் - கன்மதம்.

சிலைத்தல் - ஒலித்தல்.

சிலைத்தாசி - சாளக்கிராமம்.

சிலுத்தாசி - சாளக்கிராமம்.

சிலுத்தாலு - சிலாமதபாஷாணம்.

சிலைத்தீட்டு } கன்மதம்.
சிலைத்தூமம் }

சிலைநஞ்சு - சிலையிரத்தம்.

சிலைநாகம் - சூடாலைக்கல்,

சிலைநார் - கல்நார்,

சிலைநிறக்கல் - மாமிசச்சிலை.

சிலைமா - மாக்கல்லு.

சிலையாவி - சிலைவிந்து.

சிலையிரத்தம் - கன்மதம்.

சிலையிராசன் - வயிரம்.

சிலையுருக்குக்கல் - செங்கல்.

சிலையொழுக்கு - கன்மதம்.

சிலையோடல் - எதிரொலித்தல், புரையோடல்.

சிலைரத்தம் - கல்மதம்.

சிலைவங்கம் - அஞ்சனபாஷாணம்.

சிலைவயிரம் - வயிரக்கல்.

சிலைவிந்து - கல்நார்.

சிலோச்சயம் - மலை.

சிலோத்பவம் - ஒருவகைச்சந்தனம், மலையிற் பிறப்பன.

சில் - அற்பம், ஆரவாரம், ஒலிக்குறிப்பு, தலைப்பணி, தேர், பண்டி முதலியவற்றினுருள், மூக்குக்கண்ணாடி, வடம்.

சில்லங்கெடுதல் - சிதறுண்ணல்.

சில்லத்து - சிறுசட்டை.

சில்லந்தட்டல் - வெறுத்தல்.

சில்லக்தட்டிப்போதல் - தரித்திரத்துக்குட்படல்.

சில்லபொல்லம் - சிதறுதல், பலதுண்டா யுடைந்தது.

சில்லம் - அவதி, எட்டி, துண்டு, தேற்றுமரம்.

சில்லம்பாய் - சீலம்பாய்.

சில்லரி - சிலம்பின்பருக்கைக்கல்.

சில்லர் - வேடர்.

சில்லறை - அற்பகாரியம், உபத்திரவம், ஒருவகைக்காதணிகள், சிதறினதொகை, சொச்சம்.

சில்லா - ஒரு நியாயாதிபதிக்குள்ளடங்கிய விடம்.

சில்லாடை - பன்னாடை.

சில்லாட்டு - சில்லறை, சிறுகாரியம்.

சில்லாடை - பன்னாடை.

சில்லான் - ஓந்தி, ஒருவிளையாட்டு.

சில்லி - கண்ணறை, சிள்வண்டு, சிறுகீரை, செளவு, தேருருள், வட்டம்.

சில்லிகை - சிள்வண்டு, சீலை, சூரிய கிரகணம், நல்லாடை.

சில்லிடுதல் - ஒலிக்குறிப்பு, பயப்படல், விம்முதல்.

சில்லியடை - சல்லடை,

சில்லிரத்தினம்-விம்மிப்பொரியு மிரத்தம்.
சில்லிவாயன் - வெளிவாயன்.
சில்லு - ஓடு, ஒருமரம், சில்.
சில்லுண்டி - சிறுவட்டை.
சில்லூறு - ஒருபூச்சி.
சில்லை - இழிவு, கிலுகிலுப்பை, சிவல், சின்வண்டு, தூர்த்தை.
சில்லொண்டி - சில்லுண்டு.
சில்வண்டு - ஒருவண்டு.
சில்வாய் - கடைவாய்.
சில்வானம் - கொச்சம்.
சில்லிடம், சில்விஷம் - சிலவிஷ செந்து, சிறுவிஷம்.
சிவகங்கை - கைலாயத்திலுள்ளஒருநதி, சிதம்பரத்திலுள்ள ஒரு தீர்த்தம். இதில் இரணியவன்மன் மூழ்கித் தனதுடற் குற்றம் நீங்கப் பெற்று அரசனானன்.
சிவகணம் - சிவசேவைப்பரிவாரர்.
சிவகதி - மோட்சம்.
சிவகதியிறைவன் - அருகன், சிவன்.
சிவகம் - சாதிக்காய், நாய்ச்சீரகம்.
சிவகரந்தை - ஒருபூடு.
சிவகலை - பட்டினத்துப் பிள்ளையின் மனைவி.
சிவகளை - தெய்வசோலை.
சிவகன்மகன் - செவ்வாய்.
சிவகாஞ்சி - ஒருதலம்.
சிவகாமி-பார்வதி. சிதம்பரத்திலெழுந்தருளியிருக்குஞ்சிவசத்தியின்பெயர்.
சிவகாமித்தாயம்மை - திருப்புத்தூரிலே திருக்கோயில்கொண்டிருக்குந்தேவியார் பெயர்.
சிவகெங்கரன்-சுபமுண்டாக்குவோன்.
சிவகீர்த்தனம் - திருமால்.
சிவகெங்கை - சிதம்பரத்தில் ஒரு தீர்த்தம், மதுரைக்கருகிலுள்ள ஓரூர்.
சிவகோசரியார் - கண்ணப்ப நாயனர் காலத்திலே திருக்காளத்தியிலிருந்த அருச்சகர்.
சிவசங்கற்பம் - உபநிடதம் முப்பத்திரண்டிலொன்று.
சிவசத்தி-உமை,சிற்சத்தி முதலிய பஞ்சசத்தி, தருசு.
சிவசதுர்த்தசி - ஒருவிரதம்.
சிவசமயம் - சைவசமயம்.
சிவசன் - சுக்கிரன்.

சிவசன்மா - வடமதுரையிலிருந்த வோரந்தணன். இவனை விஷ்ணு கணநாதர்கள் உபசரித்து அழைத்துப்போய்ச் சந்திரலோக முதலியவற்றைக் காட்டினார்கள்.
சிவசாத்திரம் - பதிநூல்.
சிவசேகரம் - சந்திரன்.
சிவசேத்திரம் - சிவத்தலம்.
சிவச்சி - சாதிக்காய்.
சிவஞானசித்தியார் - ஒரு சைவசித்தாந்தசாத்திரம். இதுமெய்கண்ட சாத்திரம் பதினன்கனுள்ளும் விரிவானதும் மிகச் சிறந்தது மென்பது— "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே-ஓர் விருத்தப் பாதி போதும்" என்னும் சிவபோகசார நூலுடையார் திருவாக் கானும்,— "தொகுசித்தியாராறந் - தண்டமிழின்மேலாந்தரம்-" என்னும் உமாபதிசிவாசாரியர் திருவாக்கானும் இனிது விளக்கும் இச்சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என இரண்டு பிரிவினையுடையது. அவற்றுள் முந்திய பரபக்கத்திலே உலகாயதன்முதல் பஞ்சராத்திரி ஈறாகிய பரசமயிகளுடைய கோட்பாடுகளை எடுத்துக் காட்டிச் சித்தாந்தப் பார்வையால் மறுப்புச்செய்யப்படும். பிந்திய சுபக்கத்திலே தம்மை யொழித்தொழிந்த எத்திறத்துச் சமயவாதிகளாலும் விடுக்கப்படும் ஆட்சேபங்களுக் கெல்லாம் பரபக்கப்பார்வையால் சமாதானஞ்செய்து சுவமதம் நாட்டுதல்செய்யப்படும். இச்சுபக்கத்திலே அமைந்த பன்னிரண்டு சூத்திரத்துள்முதல் இரண்டு மூன்று என்னும் மூன்றையும் பிரமாண வியலெனவைத்து முதற் சூத்திரத்தால் உலகிற்கு நிமித்த காரணமாகிய பதியுண்மைக்குப் பிரமாணமும், இரண்டாஞ் சூத்திரத்தாற் பாசவுண்மைக்குப் பிரமாணமும், மூன்றாஞ் சூத்திரத்தாற் பசுவுண்மைக்குப் பிரமாணமும், நான்கு ஐந்து ஆறு என்னும் மூன்றையும் இலக்கண வியலெனவைத்து நான்காஞ் சூத்திரத்தாற் பசு லக்கணமும், ஐந்தாஞ் சூத்திரத்தாற் பாசலக்கண

மும், ஆறாஞ் சூத்திரத்தாற் பதிலக்கணமும், ஏழு எட்டு ஒன்பது என்னும் மூன்றையும் சாதனவியலென வைத்து ஏழாஞ் சூத்திரத்தாற் சாதித்துப்பெறுதற்குரிய அதிகாரமுடையது இதுவென்பதும், எட்டாஞ்சூத்திரத்தாற் சிறந்த கருவியெனப்படும். சாதனம் இதுவென்பதும் ஒன்பதாஞ் சூத்திரத்தாற்சாதனஞ் செய்யுமாறு இதுவென்பதும் பத்துப் பதினொன்று பன்னிரண்டு என்னும் மூன்றையும் பயனியலென வைத்துப் பத்தாஞ் சூத்திரத்தாற்பெத்த நீக்கப்பயனும் பதினொன்றாஞ் சூத்திரத்தால் முத்திப்பயனும், பன்னிரண்டாஞ் சூத்திரத்தாற் பெத்தநீக்கமும் முத்தியும் பெற்றவர்க்குச் சீவன்முத்தி நிலைக்கணிகழுமியல்பும், வகுத்துக்கூறப்படும். இந்நூலுக்கு மறைஞானதேசிகர், சிவாக்கியயோகிகள் ஞானப் பிரகாசமுனிவர் நிரம்பவழகியதேசிகர் திராவிட மாபாடிய கர்த்தா முதலியோராலே உரைகள்செய்யப்பட்டிருக்கின்றன.

சிவஞானபோதம் - ஒரு அரிய பெரிய சிவசூத்திரம். இது சீவர்கள் தம்முடைய சிற்றறிவினால் நிச்சயித்தற்கு ஏலாத சொரூப அருட்குணங்களுடையரான முழுமுதற் கடவுளிருப்பினையும், அக்கடவுள் சிறப்புவகையால் சிவன் என்னும் திருநாமமும் மான் மழு சதுர்ப்புயம் காளகண்டம் திரிநேத்திரம் உமாசகாயம் முதலிய அருளடையாளங்களும் உடையராய் அன்பருடைய ஞானக் கண்ணிற்குக் கோசரமாய்த் தோன்றி அனுக்கிரகிக்கும் அவரது அருட்டிருநெறியினை வியக்குவது, இதனையும், உலகம் இனிதறிந்துய்தற் பொருட்டுத் தோன்றி அம்முறையினை அற்புத விசேட நெறியான் விளக்கியருளிய சைவசமயாசாரியர் நால்வர். இனிச் சீவர்கள் அங்ஙனம் அற்புத நெறியால் பதிப்பொருள் நிச்சயம் பெற்ற பின்னையும், அதனை மேலும் வலிபெற நாட்டுவித்தற்கு இன்றியமையாது வேண்டப்படுந் தருக்கமுறையினானும், அவ்வரும் பெருண்மையினை நிறுவிவிளக்குதற் பொருட்டுத் தோன்றிய சைவ சந்தானாசிரியர் நால்வர், சைவசமயாசிரியர் நால்வருட் தலைநின்ற ஞான சம்பந்த பெருமானைபோல், சந்தானாசிரியருட் தலைநின்ற மெய்கண்ட தேவரும் குழவிப்பருவத்தே போதிவுமுற்றப் பேறுடையராய்ச் சிவஞானபோதச் செம்பொருணூல் அருளிச்செய்து ஞானநெறி விளக்கினாராகலின் அவரருமைச் சரிதம் ஈண்டொரு சிறிது விளக்கி எழுதுவாம்.

சந்தானாசிரியருள் நாலாமவரான கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் தமது சங்கர்ப நிராகரணம் என்னும் நூலைச் சிதம்பரத்தில் அரங்கேற்றிய காலம் தாமதற்கெழுதிய பாயிரச்செய்யுளிலே நன்கெடுத்துக் குறித்திட்டார்.

‘எழஞ் சிருது றெடுத்த வாயிரம்
வாழுஞ் சகன மருவாநிற்ப''

என்பதனால் அந்நூல் சாலிவாகனசகம் ௧௨௩௬- ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டதென்பதறியப் படுகின்றது. எனவே, உமாபதிசிவாசாரியர் காலம் இற்றைக்கு ஐந்நூற்றுத் தொண்ணூற்று மூன்றுவருடங்கட்குமுற்பட்டதென்பது நன்குபெறப்படும்.

இனி உமாபதி சிவாசாரியர்க்கு ஞானாசிரியரான மறைஞான சம்பந்ததேசிகர் அவர்க்குமுன்னும் இருபத்தைந்து வருடங்களிருந்தாரென்று கொண்டு இவர்-௬௧௮, வருடங்களுக்கு முன்பிருந்தாரென்று கோடல் இழுக்காது.

இனி மறைஞான சம்பந்தர்க்கு ஞானாசிரியரான அருணந்தி சிவாசாரியர் அவர்க்குமுன்னும் அவ்வாறே இருபத்தைந்து வருடங்களிருந்தாரென்று கொள்ளப்படும். ஆதலின் இவர்காலம் இன்றைக்கு ௬௪௩-வருடங்கட்கு முற்பட்டதென்பது நிறுவப்படும்.

இனி அருணந்தி சிவாசிரியர்க்கு ஞானாசிரியரான மெய்கண்ட தேவர் தம் மாணாக்கர் சிவசாயுச்சியம் எய்து

தற்குமுன்னும் ஒருஎழுவருடம் இருந்தாரென்பது சொல்லப்படுமாதலின், ஆசிரியர் மெய்கண்டதேவர் இற்றைக்கு ௬௫௦-வருடங்கட்கு முற்பட்டவரென்பது இனிதுபோதரும். இதனால் ஆசிரியர் காலம் சாலிவாகனசகம் ௧௧௭௮-ஆம் ஆண்டின் கண்ணதாமென்பதூஉம், சருவதரிசன சங்கிரகம் இயற்றிய மாத்துவாசிரியர் காலம் சாலிவாகனசகம் ௧௨௫௪-ஆம் ஆண்டின் கட்படுதலின் இவர் அவர்க்கு எழுபது வருடங்கட்குப் பிற்பட்டவராவரென்பதூஉம், விளைவுகூறற்பாலனவாம், இஃதுணரமாட்டாதார் அருணந்திதேவர். தாம் சிவஞானசித்தியார் பரபக்கத்திலே வகுத்துக்கூறிய சமயங்களெல்லாம் மாத்துவாசிரியர் இயற்றிய சருவதரிசன சங்கிரகத்தைப் பார்த்துக் கூறினாரென்று பெரிதும் முரணுறக் கூறுவர், மாத்துவாசிரியர் அருணந்திதேவர்க்குப் பின் பலவருடங்கழியத் தோன்றினாரென்பது மேலே குறிப்பிட்ட சரித்திரமுறையால் இனிது பெறப்படுதலின் அங்ஙனம் உரைப்பாருரை வழக்குரையாமென்றொழிக அது கிடக்க.

திருப்பெண்ணாடகம் என்னும் ஊரிற் சைவவேளாளர்குலத்துதித்த எல்லாநற்குண நற்செய்கைகளும் ஒருங்கு வாய்ப்பப் பெற்ற அச்சுதகளப்பாலர் என்பார் ஒருவரிருந்தனர். அவர் சிவாலய வழிபாட்டின் கட்டளைநின்று சிவபத்தி சிவனடியார் பத்தியுட்சிறப்புற்றவர். அவர் தமக்கு நீண்ட நாளாய் மகப்பேறின்மை குறித்து நிரம்ப மனம் வருந்தி, ஒருநாள் தமதாசிரியர் விதித்தபடி திருஞான சம்பந்தமூர்த்திகள் தேவாரத் திருமுறையிற் கயிறுசாத்த, "பேயடையாபிரிவெய்தும்" என்னும் திருப்பாசுரம் துணிபொருப்பாடு வருவித்தற்கு புலனாயிற்று, அத்திருப்பாசுரத்தின்கட் "பிள்ளையினோடுள்ள நினைவாயினவேவரம்பெறுவர் வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார்" என்று போந்த வாக்கியத்தைக் கடைப்பிடித்து, நெறிவழாது அம்முக்குளநீரிற்றோய்ந்து சிவபெருமானை வழிபட்டு வருவாராயினர். அங்ஙனம் அவர் ஒழுகுகையில், ஒருநாள் அவருக்குச் சொப்பனத்திலே சிவபிரான் தோன்றி, "உனக்குத் திருஞானசம்பந்தப்பிள்ளை என்றே கொள்ளும்படி தமிழ் நாடுய்யும் வண்ணம் தமிழ்வேதத்துப்பொருளை உள்ளடக்கிய சுத்தாத்துவ சித்தாந்தத்தை வெளிப்படுத்தத் தகுந்த ஆசிரியனாக ஒரு புத்திரன் அவதரிப்பன்" எனக் கூறி மறைந்தருளினர். அவ்வாறே அவருக்கு ஓர் அருமைத்திருமகவு தோன்றிற்று. அம்மகவுக்கு அங்குள்ள சிவபெருமான் திருப்பெயரான சுவேதவனப்பெருமான் என்பதனையே பெயராகச் சூட்டினர்.

பின் அச்சுதர்களப்பாளர் மனைவியார்க்கு ஓர் அருமைச் சகோதரர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்தனர். அவர் தம்முடைய சகோதரியார் நெடுநாண் மகப்பேறின்றி வருந்த மிக வரிதிற் பெற்ற அவ்வாண்மகவைப் பன்முறையும் வந்து கண்டு அதன்அருமைத்திருவுருவத்தைக் காணக்காண அதன்பாற் பேரன்புடையரானார். அக்குழவிக்கு மூன்றாமாண்டு நடைபெறுகையில் அதனைத் தாமெடுத்துப்போய்வளர்க்கக்கருதித் தங்கருத்தைத் தம் மைத்துனர்க்கும் சகோதரியார்க்கும் அறிவிப்ப அவர் அதற்கு மிகவரிதிலிணங்கினர். அவரும் பேருவகையுடையராய்ச் சுவேதவனப் பிள்ளையாரைத் திருவெண்ணெய் நல்லூரில் தம்மனைக்கெடுத்துச்சென்று தாமும் தம் மனைவியாரும் பொன்னேபோல் மகம்போற்று வளர்ப்பாராயினர்.

இனிப் பிள்ளையார் தெருவேவாயின் முற்றத்தில்மணலைச் சிவலிங்கவடிவாய்க் குவித்து அதனை அருச்சித்தவாறே விளையாடுவர். ஒருநாட் பிள்ளையார் இங்ஙனம் விளையாட்டயர்கையில், அவ்வழியே சென்ற திருக்கைலாய பரம்பரை அகச்சர்தானகுர

வருள் ஒருவராகிய பரஞ்சோதிமகா
முனிவர் உள்ளம் அப்பிள்ளை பால்
இழுக்கபபடுதல் ஓர்ந்து அதனருகே
போய் அதனருமைத்திருவுருவும்அரி
யசெய்கையுங்கண்டுஅதன்பெருமை
நன்குணர்ந்தனராய், அதன் அதி தீ
விர பக்குவ முதிர்ச்சியின் நோக்கி
மகிழ்ந்து தமது ஞானதிருட்டியால்
அதற்குச் சிவதீக்கை புரிந்து மந்திர
வுறைளயான பிரணவசொரூப இய
லை அதற்குணர்த்தி அப்பிரணவவிரி
வாயுள்ள மவஞானபோதப் பன்னி
ரண்டு சூத்திரங்களையும் அவற்றின்
உட்பொருளையும் உபதேசித்தனர்.
உபதேசித்து "தமிழுலகமுந் தற்
பொருட்டு இந்த ஞானநூற்பொரு
ளைப் பக்குவான் மாக்கட்டு விரித்து
ணர்த்துக" என்றருளிச்செய்து,மெ
ய்கண்ட தேவர் எனத் தீட்சநாமஞ்
சாத்திப் போயினர்.

இனி மெய்கண்டார் திருவெண்
ணெய் நல்லூரில் திருக்கோயில்கொ
ண்டெழுந்தருளி யிருக்கும் பொல்
லாப் பிள்ளையார் பால் மெய் பத்தி
வழிபாடுடையராய் ஒழுகுகையில்
அச்சுவாமிகள் அவர்க்குச் சிவஞான
போத உள்ளுறைச் செம்பொருண்
முழுவதூஉம் வேதசிவாகமங்கள் ஒரு
பொட்டுரைக்கும் ஞானபாத முடி
பொருட்டுறை யெல்லாம் தன்கட்
டு சுறித்துக்கொண்டு விளங்கும்அந்த
ரங்கமுறை இனிது புலனும் வண்
ணம் தெருட்டியருளி அவ்வச்சூத்தி
ரப்பொருள் நனிவிளக்கும் சூரிணி
கை என்னும் கருத்துரையுஞ் செய்
து தந்தருளினர்.

அவற்றை யெல்லாங் கொண்டு
சுவேதவனப் பிள்ளையார் அப்பன்
னிரு சூத்திரங்கட்கு வார்த்திகப்
பொழிப்புரையும், அவ்வுரைப் பொ
ருளைத் தருக்கித்து நிலைபெறவிக்குந்
திருவெண்பாக்களும் இயற்றி அவற்
றின் மெய்ப்பொருளைப் பக்குவமு
டைய நற்சீடர்க்குபதேச.வாயிலான்
விளக்குவாராயினர். வேதாகம சூத்
திரத்திற் குறைவிரித்த நீலகண்டர்,
சங்கரர், இராமாநுசர்,மாத்துவர்முத
லான உரைகார ரெல்லாம் மெய்ப்
பொருள் காணாது மயங்கிய அத்து
விதம் என்னுஞ் சொல்லுக்குமெய்ப்
பொருள் நன்குரை நிறுத்தினர்.

இனிப்பிள்ளையார்மிகச்சிறுபருவ
மான ஐந்துவயதிலே பேரறிவு மூற்
றுப் பெறுதலுடையராய், மிகவரிய
ஞான வமிழ்தத்தை எல்லார்க்கும்
ஊட்டிவருதல் தமிழ்நாடெங்கும் பர
வத் தலைப்பட்டது. ஆங்காங்குத் தத்
துவஞானந் தலைப்படுதல்வேண்டிய
பெரியோர் பல்லாயிரக்கணக்காய்ப்
பலநாடுகளினின்றும் போந்து மெய்
கண்டாரைச் சூழ்ந்து அவர் மலர் வா
ய்ப்பிலிற்றும் உபதேச வமிழ்தத்தி
னைப் பருகி களித்துப் பேரின்பத்தி
ன்நிலைபெற்றூர் பிள்ளையார் அருமை
ச்சீர் யாண்டும் பரவவே. திருத்து
றையூரிற் சகலாகமப்பொருளும்முற்
றொருங் குணர்ந்து சிவநிட்டாபரா
ய்ச் சிவோபதேசஞ் செய்து சீடர்
தம்மை நன்னெறிக்குய்க்கும் சகலா
கமபண்டிதர் என்னும், பிராமணைத்
தமர்செய்விக்கும் அவ்வற்புதச்செய்
தியெட்டியது அவரது சீடர் குழாம்
மெய்கண்டதேவப்பிள்ளையாரதுஉப
தேசங்கேட்கும் விழைவுபெரிதுடை
யராய்த் தம்மாசிரியர்பால் விடைபெ
ற்றேகிப்பிள்ளையாருபதேசப்பொரு
ள்கேட்டுத் தமக்குத் தம்முன்னையா
சிரியரான சகலாகம பண்டிதரானும்
விளக்கப்படாது கிடந்த ஐயந்திரிபு
களெல்லாம் விலகப்பெற்று ஞானந்
தரும்பும் பேரறிவுற்றுப் பிள்ளையா
ரது உபதேச சிவநிட்டையின் கண்
அழுந்திஅவரைப்பிரியாதிருந்தனர்.
சகலாகமபண்டிதர் தம்பால் விடை
பெற்றுச்சென்ற தஞ்சீடர் பலர் நெ
டுநாள் வராமைகண்டு வரலாறறிதற்
பொருட்டுத் திருவெண்ணெய் நல்
லூரினுக்குவந்து பிள்ளையார் பிரபா
வங்கண் முழுதுங்கேட்டுப் பொறு
மைமிகுந்தநேரேபோய்ப்பிள்ளையா
ரைத் தலைகவிழச்செய்வோமென்று
செருக்கிப் பிள்ளையார் திருமுன்பு
சென்றார்.அப்போதுமெய்கண்டதே

தற்குமுன்னும் ஒருஎழுவருடம் இருந்தாரென்பது கொள்ளப்படும் ஆதலின், ஆசிரியர் மெய்கண்டதேவர் இற்றைக்கு ௫௱-வருடங்கட்கு முற்பட்டவரென்பது இனிதுபோதரும். இதனால் ஆசிரியர் காலம் சாலிவாகனசகம் ௧௧௭௮-ஆம் ஆண்டின் கண்ணதாமென்பதூஉம், சருவதரிசன சங்கிரகம் இயற்றிய மாத்துவாசிரியர் காலம் சாலிவாகனசகம் ௧௨௫௪-ஆம் ஆண்டின் கட்படுதலின் இவர் அவர்க்கு எழுபது வருடங்கட்குப் பிற்பட்டவராவரென்பதூஉம், வினைவுகூரற்பாலனவாம், இஃதுணரமாட்டாதார் அருணந்திதேவர். தாம் சிவஞானசித்தியார் பரபக்கத்திலே வகுத்துக்கூறிய சமயங்களெல்லாம் மாத்துவாசிரியர் இயற்றிய சருவதரிசன சங்கிரகத்தைப் பார்த்துக் கூறினாரென்று பெரிதும் முரணுறக் கூறுவர், மாத்துவா சிரியர் அருணந்திதேவர்க்குப் பின் பலவருடங்கழியத் தோன்றினாரென்பது மேலே குறிப்பிட்ட சரித்திரமுறையால் இனிது பெறப்படுதலின் அங்ஙனம் உரைப்பாருரை வழக்குரையாமென்றொழிக அது கிடக்க.

திருப்பெண்ணாடகம் என்னும் ஊரிற் சைவவேளாளர்குலத்துதித்த எல்லாநற்குண நற்செய்கைகளுள் ஒருங்கு வாய்ப்பப் பெற்ற அச்சுதகளப்பாலர் என்பார் ஒருவரிருந்தனர். அவர் சிவாலய வழிபாட்டின் கட்டளைகின்று சிவபத்தி சிவனடியார் பத்தியுட்சிறப்புற்றவர். அவர்தமக்கு நீண்ட நாளாய் மகப்பேறின்மை குறித்து கிரம்ப மனம் வருந்தி, ஒருநாள் தமதாசிரியர் விதித்தபடி திருஞான சம்பந்தமூர்த்திகள் தேவாரத் திருமுறையிற் கயிறுசாத்த, "பேயடையாபிரிவெய்தும்" என்னும் திருப்பாசுரம் துணிபொருப்பாடு வருவித்தற்கு புலனாயிற்று, அத்திருப்பாசுரத்தின்கட் "பிள்ளையினோடுள்ள நினைவாயினவேவரம் பெறுவர் வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார்" என்று போந்த வாக்கியத்தைக் கடைப்பிடித்து, நெறிவழாது அம்முக்குளநீரிற்றோய்ந்து சிவபெருமானை வழிபட்டு வருவாராயினர். அங்ஙனம் அவர் ஒழுகுகையில், ஒருநாள் அவருக்குச் சொப்பனத்திலேசிவபிரான் தோன்றி, "உனக்குத் திருஞானசம்பந்தப்பிள்ளை என்றே சொல்லும்படி தமிழ் நாடுய்யும் வண்ணம் தமிழ்வேதத்துப்பொருளை உள்ளடக்கிய சுத்தாத்துவ சித்தாந்தத்தை வெளிப்படுத்தத் தகுந்த ஆசிரியனாக ஒரு புத்திரன் அவதரிப்பன்" எனக் கூறி மறைந்தருளினர். அவ்வாறே அவருக்கு ஓர் அருமைத்திருமகவு தோன்றிற்று. அம்மகவுக்கு அங்குள்ள சிவபெருமான் திருப்பெயரான சுவேதவலிப்பெருமான் என்பதனையே பெயராகச் சூட்டினர்.

பின் அச்சுதர்களப்பாளர் மனைவியார்க்கு ஓர் அருமைச் சகோதரர் திருவெண்ணெய் நல்லூரி லிருந்தனர். அவர் தம்முடைய சகோதரியார் நெடுநாண் மகப்பேறின்றி வருந்த மிக வரிதிற் பெற்ற அவ்வாண்மகவைப் பன்முறையும் வந்து கண்டு அதன் அருமைத்திருவுருவத்தைக் காணக்காண அதன்பாற் பேரன்புடையரானார். அக்குழவிக்கு மூன்றுமாண்டு நடை பெறுகையில் அதனைத் தாமெடுத்துப்போய்வளர்க்கக்கருதித் தங்கருத்தைத் தம் மைத்துனர்க்கும் சகோதரியார்க்கும் அறிவிப்ப அவர் அதற்கு மிகவரிதிலிணங்கினர். அவரும் பேருவகையுடையராய்ச் சுவேதவனப் பிள்ளையாரைத் திருவெண்ணெய் நல்லூரில் தம்மனைக் கெடுத்துச்சென்று தாமும் தம் மனைவியாரும் பொன்னேபோல் மகம்போற்று வளர்ப்பாராயினர்.

இனிப் பிள்ளையார் தெருவேவாயின்முற்றத்தில்மணலைச் சிவலிங்கவடிவாய்க் குவித்து அதனை அருச்சித்தவாறே விளையாடுவர். ஒருநாட் பிள்ளையார் இங்ஙனம் விளையாட்டயர்கையில், அவ்வழியே சென்ற திருக்கைலாய பரம்பரை அகச்சர்தானகுர

வருள் ஒருவராகிய பரஞ்சோதிமகா முனிவர் உள்ளம் அப்பிள்ளை பால் இழுக்கபபடுதல் ஓர்ந்து அதனருகே போய் அதனருமைத்திருவுருவும்அரி யசெய்கையுங்கண்டுஅதன்பெருமை நன்குணர்ந்தனராய், அதன் அதி தீவிர பக்குவ முதிர்ச்சியின் நோக்கி மகிழ்ந்து தமது ஞானதிருட்டியால் அதற்குச் சிவதீக்கை புரிந்து மந்திர வுறைஎயான பிரணவசொருப இயலை அதற்குணர்த்தி அப்பிரணவவிரி வாயுள்ள மவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் அவற்றின் உட்பொருளையும் உபதேசித்தனர். உபதேசித்து "தமிழுலகமுந் தற்பொருட்டு இந்த ஞானநூற்பொருளைப் பக்குவான் மாக்கட்டு விரித்துணர்த்துக" என்றருளிச்செய்து, மெய்கண்ட தேவர் எனத் தீட்சநாமஞ் சாத்திப் போயினர்.

இனி மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் பொல்லாப் பிள்ளையார் பால் மெய் பத்தி வழிபாடுடையராய் ஒழுகுகையில் அச்சுவாமிகள் அவர்க்குச் சிவஞான போத உள்ளுறைச் செம்பொருண் முழுவதூஉம் வேதசிவாகமங்கள் ஒருபொட்டுரைக்கும் ஞானபாத முடிபொருட்டுறை யெல்லாம் தன்கட்டு சறித்துக்கொண்டு விளங்கும்அந்தரங்கமுறை இனிது புலனும் வண்ணம் தெருட்டியருளி அவ்வச்சூத்திரப்பொருள் நனிவிளக்கும் சூரிணிகை என்னும் கருத்துரையுஞ் செய்து தந்தருளினர்.

அவற்றை யெல்லாங் கொண்டு சுவேதவனப் பிள்ளையார் அப்பன்னிரு சூத்திரங்கட்கு வார்த்திகப் பொழிப்புரையும், அவ்வுரைப் பொருளைத் தருக்கித்து நிலைபெறவிக்குந் திருவெண்பாக்களும் இயற்றி அவற்றின் மெய்ப்பொருளைப் பக்குவமுடைய நற்சீடர்க்குபதேச.வாயிலான விளக்குவாராயினர். வேதாகம சூத்திரத்திற் குறைவிரித்த நீலகண்டர், சங்கரர், இராமாநுசர்,மாத்துவர்முதலான உரைகார ரெல்லாம் மெய்ப்பொருள் காணாது மயங்கிய அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்குமெய்ப்பொருள் நண்குரை நிறுத்தினர்.

இனிப்பிள்ளையார்மிகச்சிறுபருவமான ஐந்துவயதிலே பேரறிவு றூற்றுப் பெறுதலுடையராய், மிகவரிய ஞான வமிழ்தத்தை எல்லார்க்கும் ஊட்டிவருதல் தமிழ்நாடெங்கும் பரவத் தலைப்பட்டது. ஆங்காங்குத் தத்துவஞானந் தலைப்படுதல்வேண்டிய பெரியோர் பல்லாயிரக்கணக்காய்ப் பலநாடுகளினின்றும் போந்து மெய்கண்டாரைச் சூழ்ந்து அவர் மலர் வாய்ப்பிலிற்றும் உபதேச வமிழ்தத்தினைப் பருகி களித்துப் பேரின்பத்தின்நிலைபெற்றார் பிள்ளையார் அருமைச்சீர் யாண்டும் பரவவே. திருத்துறையூரிற் சகலாகமப்பொருளும்முற்றொருங் குணர்ந்து சிவகிட்டாபராய்ச் சிவோபதேசஞ் செய்து சீடர் தம்மை நன்னெறிக்குய்க்கும் சகலாகமபண்டிதர் என்னும், பிராமணோத்தமர்செய்விக்கும் அவ்வற்புதச்செய்தியெட்டியது அவரது சீடர் குழாம் மெய்கண்டதேவப்பிள்ளையாரதுஉபதேசங்கேட்கும் விழைவுபெரிதுடையராய்த் தம்மாசிரியர்பால் விடைபெற்றேறிப்பிள்ளையாருபதேசப்பொருள்கேட்டுத் தமக்குத் தம்முன்னையாசிரியரான சகலாகம பண்டிதராலும் விளக்கப்படாது கிடந்த ஐயந்திரிபுகளெல்லாம் விலகப்பெற்று ஞானந்தரும்பும் பேரறிவுற்றுப் பிள்ளையாரது உபதேச சிவகிட்டையின் கண் அழுந்திஅவரைப்பிரியாதிருந்தனர். சகலாகமபண்டிதர் தம்பால் விடைபெற்றுச்சென்ற தஞ்சீடர் பலர் நெடுநாள் வராமைகண்டு வரலாறறிதற் பொருட்டுத் திருவெண்ணெய் நல்லூரினுக்குவந்து பிள்ளையார் பிரபாவங்கண் முழுதுங்கேட்டுப் பொறாமைமிகுந்தநேரேபோய்ப்பிள்ளையாரைத் தலைகவிழச்செய்வோமென்று செருக்கிப் பிள்ளையார் திருமுன்பு சென்றார்.அப்போதுமெய்கண்டதே

வர் தம்மைப் புடைசூழ்ந்த சித்திரப் பாவைபோல ஞானத்தின்கண் திருட்டியுடையராயிருக்கும் பல்லாயிரஞ் சீடர்கட்கும் பதிபசுபாச விலக்கணங்களை விரித்தருளிச் செய்துகொண்டிருந்தார். அப்போது அங்குச்சென்ற சகலாகம பண்டிதர் குலத்தினாலும் வயதினாலும்பிள்ளையார் தமக்குத் தாழ்ந்தவர்தாமே யென்று மதியாவுள்ளத்தோடும் பிள்ளையாரை நோக்கி "ஆணவமல சொரூபத்தைத் தரிசித்தல் யாங்ஙனம்" எனக் கடாயினர். அதுகேட்ட பிள்ளையார் அவரைக் கடைக்கண்ணாற் குறித்து நோக்கி அவர் அதிதீவிரபக்குவ நுண்ணறிவு வாய்க்கப்பெற்றும் ஆணவமல சேட்டை சிறிதுடையராதல் பற்றிமிசவிரகித் தமது திருநயனத்தால் பண்டிதரை முடிமுதல் அடிகாறும் ஒருமுறைநோக்கிவாளாவிருந்தனர். அக்குறிப்பினை ஆசிரியர் திருவருள்விசேடத்தாலுணர்ந்த பண்டிதர்சிவஞானமுதிர்ச்சியுற்றுத்தாம் அங்ஙனம்வினாயதே ஆணவமல சொரூபமென்றும் அவ்வியல்பினராய் வினாவிய தம்மை ஆசிரியர் ஒருமுறை தம்மை நோக்கித் திரும்பவும் வாளாதிருத்தல்போலத் தாமும் புரப்பற்று அகப்பற்றினைக்கெடுத்து உண்ணோக்கி தியானிக்கற்பாலதென்றும் நன்றித்து ஆசிரியர் மெய்கண்டதேவர் திருவடியில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து "கடையேனை யுய்விக்க வெழுந்த செல்வமே, ஞானத்திருவுருவே, நாயேன் பிழைப்பினைபொறுத்தருளித் தொழும்புகொள்ளல்வேண்டும்" என வேண்டினார். பிள்ளையாரும் மனமிகவுவந்து சிவஞானபோதவருணூற்செம்பொருளை அவர்க்குபதேசித்து அதனை இன்னும் விரித்து அதற்கு வழிநூலாக சிவஞானசித்தியென்றொருநூல் செய்க வென்று கட்டளையிட்டு அவர்க்கே தமதுபதேச வுரிமைகளையு மீந்து தாம் சிவவீட்டையி லமர்ந்தருளினார்.

சிவஞானமுனிவர் - பாண்டிவள நாட்டிலே, பொதியமலைச்சாரலிலே பாபநாசமென்னும் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே, அருந்தவக்கொள்கை அகத்திய முனிவரிடத்தே எழுதலைமுறையளவும்பிறைமதிபோல முறையேவளர்ந்து அருட்புலமை நிரம்புவண்ணம் உரம்பெற்ற பரம்பரைச்சைவவேளாளர்குலத்திலே சிவபத்தியிற் சிறந்த ஆனந்தக்கூத்தர் என்பவருக்கும் அவர் மனைவியராகிய கற்பினிற் சிறந்த மயிலம்மையாருக்கும் புத்திரராகத் திருவவதாரஞ் செய்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று ஒழுக்க முதலிய நற்குணங்களுடன் வளர்ந்து ஐந்து பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுப் படித்து வளர்கையில் அக்காலத்திலவ்விடம் யாத்திரையாகவந்த துறைசையாதீனத்துச் சில முனிவர்கள் ஆண்டினிளையரும், அறிவின் முதியருமாகிய முக்களாலிங்கரைக் கண்டு அவர் வழிபாட்டிற் கிரங்கி அவர் வீட்டில் திருவமுது செய்து வீற்றிருக்க அவரம் முனிவர்களோடு தாஞ் செல்ல வேண்டுமென்னுங் குறிப்பினைத் தந்தைக்குணர்த்தி விடைபெற்று அம்முனிவர்களுடன் வழிக்கொண்டுதிருவாவடுதுறையையடைந்து ஆதீனபரம முதற்குருவாகிய நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்துத திருவருணோக்கம் பெற்றுக் கொண்டு அப்பொழுது சின்னபட்டத்திலெழுந்தருளியிருந்த ஞானாசிரியராகியபின் வேலப்ப தேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்து மிச்சைவந்நியாசமும் சிவதீக்ஷையும் சிவஞானயோகிகள் என்னுந் தீக்ஷாநாமமும் பெற்று மெய்கண்டசாத்திர பண்டாரசாத்திரங்களைக் கேட்டருளினார். சிவஞானயோகிகள் செந்தமிழ்ப் பேராசிரியரான அகத்திய மகாமுனிவர் வரத்தால் அவதரித்தருளியவராகலின் எளிதிலே வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் முற்றொருங்குணர்ந்து மெய்யுணர் வின்பமுற்றுப் பேறுடையராய் அமர்ந்தருளினார்.

சிவஞான யோகிகள் நிரணதுமாக்கினிமுனிவர் அருளிச்செய்த தொல்காப்பியத்திற்கு இளம் பூரணம், சேனவரையம் நச்சினார்க்கினியம் எனவேற்பட்டுள்ள மூன்றுநூல்களினுமுள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும் பொருட்டு அத்தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற்சூத்திரத்திற்கும் சூத்திரவிருத்தியெனப் பெயர் பெற்ற பாஷ்யமும் வடமொழித் தருக்கசங்கிரக அன்னபட்டியங்களின் மொழிபெயர்ப்பும் நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த புத்துரையாகிய விருத்தியுரைத் திருத்தமும் செய்தருளினர்.

அன்றியும் சர்வாத்ம சம்புசிவாசாரியர் அருளிச்செய்த சத்தியரூபசித்தாந்தப் பிரகாசிகையை மொழிபெயர்த்தருளினர். மெய்கண்ட தேவர் மொழிப்பெயர்த்தருளிய வார்த்திகப் பொழிப்பாகிய சிவஞான போதத்திற்கு ஆசிரியர் அமைத்தருளிய மெய்ப்பொருள் விளங்கும்வண்ணம் திராவிட மகாபாஷ்யமெனப் பெயர் பெற்ற விருத்தியுரையும், இலகுவியாக்கியானமாகிய சிற்றுரையும், அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த சிவஞான சித்தியார் சுபக்ஷத்திற்குப் பொழிப்புரையும்.

ஆசாரிய சரணராகிய அரதத்த சிவாசாரியர் நெருப்பிலே பழுக்கக் காய்ச்சிய இருப்புமுக்காலிலே எழுந்தருளியிருந்து சிவபெருமானே பரம்பொருளென்ன இருபத்திரண்டு ■ துக்களாலே காட்டியருளிய சுலோக பஞ்சகத்தின்மொழிபெயர்ப்பும், அப்பதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேக மூலமொழிபெயர்ப்புஞ் செய்தருளினர்.

அன்றியும் பெரும்பாலும் உண்மைநாயன்மார் சரிதமுதலியவற்றைத் தழுவிப் பூருவார்த்தமும் அதற்கு எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவநாயனார் திருக்குறள் உத்தரார்த்தமுமாகக்கொண்டு குளத்தூர் சோமேசர் மீது முதுமொழிவெண்பா, யமகரூபமான திருவேகம்பத்தந்தாதி, திருக்ரூபமான திருமுல்லை வாயிலந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி, இலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கச்சியானந்தருத்திரேசர்பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகைபிள்ளைத் தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம் மார்கழிமாதத் திருவாதிரை யுற்சவத்திலே தேவார முதலிய திருக்காப்பிடப் பட்டுத் திருவெம்பாவை என்னும் திருவாசகத் தருப்பதிகம் ஒன்றே ஆன்மார்த்தபாரார்த்தசிவபூஜாகாலங்களில் ஓதப் பெற்றுவருஞ் சாம்பிரதாயத்தால் கித்தகியம மந்திரமாகநி திருத்தொண்டர் திருநாமத்தை ஒருபுய்யவேண்டுவோர் கருத்தத்தடையுறு வண்ணம் திருத்தொண்டர் திருநாமக்கோவை, ஆதிபரமாசாரியாராகிய நமச்சிவாயமூர்த்திகள் மீது மாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

அன்றியும் மரபட்டவணையெனப் பெயர் பெற்ற துறைசை யாதீன சாம்பிரதாய கட்டளையைத் தருமையாதீனத்தார் மறுத்தெழுதியதற்குச் சித்தாந்த மரபுகண்டன் கண்டனம், செய்தருளி யாழ்ப்பாணம் ஞானப் பிரகாச முனிவர் சிவஞான சித்தித் திருவிருத்தங்களை மனம் போனவாறெல்லாம் அலைத்து இடர்ப்படுத்துதற்குச் சிவசமவாதபரமாக எழுதியவுரையினை, சித்தாந்த சாத்திரங்களை முறையாற் கற்றுணரு மதுகையின்றிச் சித்தாந்தவுபதேச மாத்திரங்கேட்டுச் சிந்தித்துக் கொண்டிருக்கும் மந்தபுத்தியுடையார் கண்டு மயங்காது சுத்தாத்துவித சித்தாந்தசைவநெறிதலை நின்றனுட்டித்து வீட்டின் பயனுறுதிகூடுமாறு அதற்கோர்மறுப்பாகச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒரு நியாயகண்டனமுஞ் செய்தருளினர், திருவண்ணாமலை ஆதீனத்தார். தம்மாதீனத்து ஞானப்பிரகாச முனிவர். இயற்றியசிவசமவாதவுரை

யின் உயர்வுதொனிக்கும் வண்ணம்
மாதவச் சிவஞானயோகிகளிடத்தே
எடுத்து, என்னுஞ் சொல்லுக்குப்
பொருள் என்னை என்று வினவியித்
தபோது எடுத்து, என்னுஞ் சொல்
லுக்குச் சிவசமவாதவுரைமறுப்பு எ
ன ஒன்றும், அதன்மேற்பிரதிகண்ட
னமுண்டாயவழி மேன்மறுத்த மறு
ப்பு குதர்க்க வுரையாராற் போழ் ப
டாதவாறு, எத்து என்னும் சொல்
லுக் கிட்டவைரக்குப்பாயம் என ஒ
ன்றும், அன்றியும் காஞ்சிமான்மி
யம் தமிழ்மொழி பெயர்த்தியற்றி அ
ரங்கேற்றுழி அதன் சொற் பொரு
ண் மாட்சி கண்டு பொறாராய். மற்
றது கம்பராமாயணமாமோ, வென
த்தருக்குக் கலாய்த்த பாஞ்சராத்தி
ரிகளை அதன்முதற் செய்யுளான
நாடிய, வென்பதன் சொற்பொருள்
பற்றிப் பலவாறு சங்கிக்க அவர்கள்
அவ்வாசங்கைகட்குத்தர மளிக்கலா
ற்றாது தருக்கற்று வணங்கித் துதி
த்தவழி 'சங்கோத்தர விருத்தி, இ
யற்றியவர்களை யுவப்பித் தருளினர்.
இலக்கணவிளக்கத்தில் உள்ள பற்
பல வழுக்களை வெளியிடக் கருதி
இலக்கண விளக்கசூறாவளி யொன்
று செய்தருளினர்.

இங்ஙனம் செந்தமிழ்வரம்பு கிலை
யிட்ட திராவிட மாபாடிய முனிவ
ரான ஆசிரியர் சிவஞான யோகிகள்
உலோகோபகாரமாக பல வுரைகளை
யும், பலநூல்களையும்; பலகண்டன
ங்களையும் செய்து பல நன்மாணாக்கர்
கட்குப்போதித்து வடமொழியினுந்
தென்மொழி சிறந்ததென்னும் படி
அபிவிருத்தி, செய்து தவமே திரு
வுருக்கொண்டாற் போலும் விளங்
கிச் சிவப்பேற்றிற்குக் காரணமா
கிய கிட்டையில் வீற்றிருந்தருளித்
திருவாவடுதுறையில் சித்திரைமதி
ஆயிலியக் கிஷத்திரத்திலே சிவபரி
பூரணத்தை யடைந்தனர்.

சிவதத்தம் - சிவனால் கொடுக்கப்பட்ட
சக்கரம், விஷ்ணுவின் சக்கரம்.

சிவஞானம்-தெய்வஞானம், பதிஞான
[ம்.

சிவண - உவமைச்சொல்.

சிவணல் } கலத்தல், கிட்டல், பொ
சிவணிதல் } ருதல், பொருந்தல்.

சிவதடி - வெள்ளரி.

சிவதத்துவம்-தொண்ணூற்றாறு தத்து
வத்திற் கடவுட்பகுதியான ஐந்து
தத்துவம், அவை-ஈச்சுரம் சத்தி சா
தாக்கியம் சிவம் சுத்தவித்தை.

சிவதம் - இருக்குவேதம். [வன்.

சிவதரிசி - தாமேபரமெனத் தெளிந்த

சிவதருமம் உபபுராணங்களுள் ஒன்று.

சிவதருமோத்தரம்-மறைஞான சம்பந்
தர் செய்த நூல், இது பரமதருமா
தியியல், சிவஞானதானவியல், ஐவ
கையாசமவியல், பலவிசிட்ட காரண
வியல், சிவதருமவியல், பாவவியல்,
சுவர்க்கநரகவியல், சநநமரணவியல்,
சுவர்க்கநரக சேடவியல், ஞான
போகவியல், பரிகாரவியல், கோபுர
வியல் என்னும் பன்னிரண்டியல்க
ளையுடையது.

சிவதலம் - சிவசேத்திரம்.

சிவதன்மம் - அட்டாதசவுப புராணத்
தொன்று, தெய்வபுண்ணியம்.

சிவதன்மோத்தரம் - உபாகம பேதத்
தொன்று,சைவசாத்திரத்தொன்று.

சிவதாதி - சுபமுண்டாக்குவோன்.

சிவதாது - இரதம், ஒருகல்.

சிவதாரம் - தேவதாரம்.

சிவதுளசி - ஒருபூடு.

சிவதூதி - துர்க்கை.

சிவதை - ஒருகொடி.

சிவத்தொண்டர் - சிவனடியார்.

சிவத்தொண்டு - சிவபணிவிடை.

சிவத்தம் - செம்முருங்கை.

சிவத்தல் - கோபம், சிவக்குதல், சினக்
குறிப்பு. [தி.

சிவத்தாட்சி-செம்பரத்தை, செம்பருத்

சிவத்தாபனம் - சிவலிங்கபிரதிட்டை.

சிவத்தானம் - சிவத்தலம்.

சிவத்திருவம் - வில்வமரம்.

சிவத்துரோகம் சிவபுண்ணியத்துக் கிடை
யூறு செய்தல்.

சிவதிசி - சிவராத்திரி.

சிவநேசர் - மயிலாப்பூரிலிருந்த ஒரு சி
வபத்தர், இவர் பாம்பு கடித்திறந்த
தம்புதல்வியின் எலும்பை ஒருகுடத்
திலிட்டுவைத்திருந்து, திருஞான

சம்பந்தர் அங்கெழுந்தருளின காலத்தில் அவர் முன்னேவைக்க, அவர் கருணையால் அவ்வெலும்புபெண்ணுருவம் பெற்றெழுந் திருக்கக் கண்டு களிகூர்ந்தவர்.
சிவந்தநாயுருவி - செந்நாயுருவி.
சிவந்தலோகமண் - செம்புமணல்.
சிவந்தவேசை - செம்பரத்தைப்பூடு.
சிவந்தி - கொடிப்பாலே, செவ்வந்தி.
சிவத்திரம் - பிரதிபலன். [க்கம்.
சிவபத்தி சிவநேசம்,சைவசமயவொழு
சிவபாவம் - சிவனிடத்துள்ளகுணம்.
சிவபீசம் - பாதரசம்.
சிவபுரம் }
சிவபுரி } காசி.
சிவராஜதானி }
சிவபுராணம் - பதினெண் புராணத்தொன்று.
சிவபுராணம் - சிவனது மகிமையைக் கூறும்புராணம், அது இலிங்கம், காந்தம், கூர்மம், சைவம், பிரமாண்டம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம்.
சிவபுரி - ஒருதலம், காசி, கைலாசபுரி.
சிவபூசை - சிவார்ச்சனே.
சிவபோகம் - ஆனந்தம்.
சிவப்பம்மான்பச்சரிசி - ஒருபூடு.
சிவப்பவரை - ஒருகொடி.
சிவப்பானவெள்ளேச்சி - புற்றும்பழம்.
சிவப்பி - சிவப்புத்தேங்காய்.
சிவப்பிரகாசட-ஒருசைவசித்தாந்தநூல்
சிவப்பிரகாசசுவாமிகள் - பிரபுலிங்கலீலே, திருக்கூவப்புராணம், சித்தாந்தசிகாமணி, வேதாந்தசூடாமணி, சிவப்பிரகாச வியாசம், சிவநாமமகிமை, தர்க்கபரிபாஷை, கோணசைலமாலே, நன்னெறி, நால்வர், நான்மணிமாலே, வெங்கையுலா, வெங்கைக் கோவை, முதலிய நூல்கள் செய்தவர் காஞ்சிபுரத்திலே பிறந்து சிந்தபூந்துறையிலே வெள்ளியம்பலத் தம்பிரானிடம்பாடங்கேட்டவர்.இலக்கணஇலக்கியங்களில் மகாசதுரர். கற்பனேக்களஞ்சியம்,சமயத்தில்வீரசைவர். இவர்இற்றைக்கு இருநூற்றிருபதுவருஷங்களுக்கு முன்னர் விளங்கியவர்.
சிவப்பிரியம் - உருத்திராக்கம்.
சிவப்பிரியை - பார்வதி.
சிவப்பிரீதி - சிவாராதனே.
சிவப்பு - இலிங்கம், சினக்குறிப்பு,செம்மை நிறம்.
சிவப்புக்கந்தி - கோழித்தலேக்கந்தகம்.
சிவப்புக்கல் - சாறகல்.
சிவப்புக்கொடப்பசளே - ஒருபூடு.
சிவப்புமந்தாரை - ஒருமரம்.
சிவமது - சிவகிருபை, சிறுபுள்ளடி.
சிவமயம் - சிவத்தின் றன்மை,மங்களாகரம்.
சிவமரம் - ஒருமரம்.
சிவமலே - கொங்குநாட்டின்கணுள்ள ஒரு சுப்பிரமணியஸ்தலம்.
சிவமல்லி - கொங்குமந்தாரை.
சிவம் - மங்கலம், உப்பு, உயர்வு, ஒரு குளிகை, ஒரு செய்கையுப்பு, ஒரு வாசனேகடலுப்பு, கடவுள், குறணி, சந்தோஷம் சிவதத்துவ மைந்தினென்று. அது ஞானமொன்றல், சிவலிங்கம், தண்ணீர், நன்முகூர்த்தம், நன்மை, நித்தியயோகத்தொன்று, பசுவணேதறி, பாதரசம், முத்தி, முற்றத்துறத்தல், வெண்காரம், வேதம்.
சிவயோகநாயகி- திருக்கானூரிலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர், திருநாமம்.
சிவரசம் - மூன்றுநாளுறியகஞ்சி.
சிவராத்திரி - மாசிமாசத்திலே அபரபக்ஷசதுர்த்தசியோடு கூடிய அர்த்தராத்ரி காலமாகிய புண்ணிய முகூர்த்தம் அது லிங்கோற்பவருக்குப் பிரிய முகூர்த்தம்.
சிவராத்திரிவிரதம் - மாசிமாசத்துக்கிருஷ்ணபக்ஷசதுர்த்தசியிலே சிவபெருமானேக் குறித்து அநுஷ்டிக்கும் விரதம். அத்தினத்திலே உபவாசஞ்செய்து நான்குயாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர் நித்திரையின்றி ஸ்ரீபஞ்சாக்ஷரசெபமும்சிவபுராணசிரவணமும் சிவாலய தரிசனமுஞ் செய்தல் வேண்டும். இது சைவசமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுஷ்டிக்கத்தக்கது.
சிவலிங்கப்பெருமான் - சிவலிங்கத்திற் கோயில் கொண்ட சுவாமி.
சிவலிங்கம் - சிவபூசைத்திருவுரு.

சிவலை - சிவப்பு நிறமுள்ளது, செந்நிறமுள்ளோன்.

சிவலோகச்சேவகன் - நந்திபெருமான், காந்தம்.

சிவலோகநாயகர் - திருப்புன்கூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

சிவலோகம் - சைலலோகம், மோக்கம்.

சிவல் - கவுதாரி, பகன்றை.

சிவவல்லபம் - எருக்கு, ஒருவகைநாவல், செவந்திச்செடி.

சிவவல்லபன் - சிவபத்தன்.

சிவவல்லபை - பார்வதி.

சிவவல்லி - ஒருவகைக் கோவைச்செடி.

சிவவாகனம் - எருது.

சிவவாக்கியம் - ஒருநூல்.

சிவவிந்து } இரதம்.
சிவவீசம் }

சிவவேடம் - சைவவேடம்.

சிவனார்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு.

சிவனார்பாகல் - ஐவேலி, கொவ்வை.

சிவனார்வேம்பு - ஒருசெடி.

சிவனி - கழுதை.

சிவனிப்பால் - கழுதைப்பால்.

சிவனுன்மலை - அயச்சிலை.

சிவனேக்கிவன்னி - காந்தம்.

சிவன் - கடவுள், சங்கரன், வைடூரியம். திரிமூர்த்திகளுளொருவரென்று விஷ்ணுபுராணங்களும், அம்மூவரையும் அதிஷ்டித்து நிற்கும் பரப்பிரமமென்று சைவபுராணங்களும் கூறும். சிவன் என்னுஞ்சொல்லுக்கு மங்களரூபி என்பது பொருள். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் சைவரெனப்படுவர். அவர்கள் சமயம் சைவசமயமெனப்படும். பதினெண் புராணங்களுள்ளே சிவபரமாகவுள்ள புராணங்கள் பத்து, சிவனை வழிபடுவோர்க்கு ஆதாரமாகியநூல்கள் சிவாகமங்களாம். அவை இருபத்தெட்டு. சிவன் ரூபமும் அரூபமும் ரூபாரூபமும் ஆகிய மூன்று திருமேனிகளுடையர், அரூபத்திருமேனியோடு கூடியவிடத்துச் சிவனென்றும், ரூபாரூபத் திருமேனியில் சதாசிவமூர்த்தியென்றும், ரூபத்திருமேனியில் மகேசுவரரென்றும் சொல்லப்படுவர். பிரமனை சிருஷ்டிகர்த்தாவென்றும் விஷ்ணுவை ரக்ஷகர்த்தாவென்றும் சிவனை சங்காரகர்த்தாவென்றும் வைதிகர்யாவரும் கூறுவர். சங்காரகிருத்தியம் சிருஷ்டிஸ்திதிகளுக்கு ஏதுவாகச் செய்யப்படுவதல்லது நாஸ்தியாக்கும் பொருட்டன்று. ஆதலால் சங்கார கிருத்தியத்தில் மற்றை இரண்டு கிருத்தியங்களும் அடங்கும். அடங்கவே சங்காரகர்த்தாவே மற்றை இருவரையும் அதிஷ்டித்து நின்றுநடாத்தும் முழுமுதற் கடவுளென்பார்கள். விருஷபத்துவசன், உமாபதி, சர்மவாசன், நந்திவாகனன், சூரி, கபாலமாலாதரன், சர்ப்பகுண்டலன், காலகாலன், நீலகண்டன், கங்காதரன், திரிநேத்திரன், சந்திரசேகரன், திரிபுராந்தகன் முதலிய அநந்த நாமங்கள் பெறுவர். லோககண்டகராகிய திரிபுராசுரரைச் சங்காரஞ்செய்தருளினமையால் திரிபுராந்தகன் எனப்படுவர். திரிபுரதகனஞ்செய்யப்பட்டபோது பூமியை இரதமாகவும் சூரியசந்திரர்களை இரதசக்கிரங்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மேருமலையை வில்லாகவும், சாகரத்தை அம்புக்கூடாகவும், விஷ்ணுவை பாணமாகவும் கொண்டு சென்றார். இவ்விஷயத்திலே அத்தியற்புத தத்துவார்த்தம் அடங்கியிருக்கின்றது. அதனை ஈண்டு விரிப்பிற் பெருகும். பிரமவிஷ்ணுக்களது கபாலத்தை மகா கற்பாந்தரங்களிலே தரித்து தனித்துநின்று ஆநந்தத் தாண்டவஞ் செய்தலால் கபாலமாலாதரன் என்னும் நாமம்பெறுவர். சிவன் மூன்றுகண்கள் உடையார், ஒன்று நெற்றியிலுள்ளது, அதனால் கண்ணுதல் எனப்படுவர். இந்தக் கண்ணினாலே காமதகனஞ்செய்தாராதலின் காமநாசன் காமாரி முதலிய நாமம்பெறுவர். பகீரதன் தன் பிதிரரை சுவர்க்கஞ்சேர்க்கும் பொருட்டுப் பெற்ற கங்கையின் பிரவாகவேகத்தைச் சடைக்கொழுந்து ஒன்றினால் அடக்கினமையால் கங்கா

தரன்கங்கைவேணியன் முதலியநாமங்களைப் பெறுவர். திருப்பாற் கடல் கடைந்தகாலத்தில் அதில் தோன்றினவிஷத்தைக்கண்டத்தில் அடக்கித் தேவரைக் காத்தருளினமையால் நீலகண்டன், காளகண்டன் முதலிய நாமங்களைப் பெறுவர். அந்தக்காலத்திற்றானே உண்டான சந்திரனைச் சடையில் தரித்தமையால் சந்திரசேகரன், சந்திரமௌலி முதலிய நாமங்களைப் பெறுவர். மார்க்கண்டனைகாக்கும்பொருட்டு யமனை உதைத்தருளினமையாலும் காலவரையறைக்கப்படாத அநாதி நித்தியராதலினாலும் காலகாலன் காலாந்தகன் முதலிய நாமங்களைப்பெறுவர். இந்தச் சிவபிரானை மகாலிங்கம் அர்த்தநாரீசுவரர், நடேசர் முதலிய இருபத்தைந்து மூர்த்தத்திலே தியானித்து வழிபடுவர். இவருக்குச் சத்தி உமாதேவியார் எனப்படுவர்.

இருபத்தைந்து மூர்த்திகளாவார், லிங்கமூர்த்தி, சுகாசனமூர்த்தி, உமாசகமூர்த்தி, கல்யாணசுந்தரமூர்த்தி, அர்த்தநாரீசுவரமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, சக்கரப்பிரதானமூர்த்தி, திரிமூர்த்தி, அர்த்தாங்கவிஷ்ணுமூர்த்தி, தக்ஷிணமூர்த்தி, பிக்ஷாடனமூர்த்தி, கங்காளமூர்த்தி, காமசம்ஹாரமூர்த்தி, காலாரி, ஜலந்தராரி, திரிபுரசம்ஹாரமூர்த்தி, சரபமூர்த்தி, ஏகபாதமூர்த்தி, வைரவமூர்த்தி, விருஷபாரூடமூர்த்தி, நடராஜமூர்த்தி, கங்காதரமூர்த்தி, அக்குரூரன் தம்பி.

சிவன்வேம்பு - சிவனார்வேம்பு.

சிவன்றேகம் - காசிமீர்ப்படிகம்.

சிவா-கடுக்காய், கீழ்காய்நெல்லி, நெல்லி, பங்கம்பாளை, வன்னிமரம், வெறுமை.

சிவாகமம் - பதிநூல்.

சிவாக்கிரயோகி-இவர்தஞ்சாவூரிலே சரபோஜி மகாராஜாவுடைய சபையிலே மணவாளமுனியென்னும் வைஷ்ணவ சிரேஷ்டரோடு பதினேழுநாள்வரையில் அவர்கடாவியவினாக்களுக்கெல்லாம் ஏற்றவாறு விடையளித்துச் சிவபரத்துவம் நாட்டி வரும்போது பதினேழாநாளிரவு சிவாக்கிரயோகி எழுந்தருளியிருந்தமடத்திற் றீக்கொளுவினார்கள். அம்மடம்முழுதுஞ் சாம்பராகியும் சிவாக்கிரயோகி சிறிதும் வருந்தாது நிஷ்டையிலிருந்தனர், அதனைக் கேள்வியுற்ற சரபோஜி அம்மடத்திற்குத் தீயிட்டவர்களையெல்லாம் அக்கினிக்கிரையாக்கினார். சிவாக்கிரயோகிகள் செய்த நூல்கள் சிவஞானபோதபாஷியம், சித்தாந்ததீபிகை, தத்துவதரிசனம், பாஞ்சராத்தரசபேடிகை என்பவைகளாம்.

சிவாட்சம்-உருத்திராக்கம்.

சிவாதாரம் - மரக்கொம்பு.

சிவாதி - நாய்.

சிவாருகம் - ஆலமரம்.

சிவார்ச்சனை - சிவாற்சனை.

சிவாலயமுனிவர்-சபாநாதர் அருளால் அகஸ்தியரையடைந்து அகஸ்தியத்திரட்டு என்னும் தேவாரப்பதிகம் இருபத்தைந்து பெற்று அவற்றைக் கிரமமாகப் பாராயணம் பண்ணித் திருவருள் பெற்றவர்.

சிவாலயம்-சிவன்கோயில், செந்துளசி.

சிவாலு - நரி.

சிவாலையம் - சிவாலயம்.

சிவாற்சனை - சிவபூசை.

சிவானந்தவல்லியம்மை - திருக்கோவலூர் குரட்டத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் திருநாமம்.

சிவானந்தலகரி-சங்கராசாரிய சுவாமிகள்செய்த ஒருநூல்.

சிவானீ - பார்வதி, சிவசத்தி.

சிவானி - துர்க்கை.

சிவானுபவம் - சிவபோகம்.

சிவிரம் - சாதிக்காய்.

சிவிகை - தண்டிகை, பாண்டில் பூண்டவூர்தி.

சிவிங்கி-ஒருபட்சி, ஒருமிருகம் ஒருமீன்.

சிவிடு-சிறிசு, முந்நூற்றறுபது நெல்லுக்கொண்டது.

சிவியார் - ஒருசாதியார்.

சிவிரதம் - சிவிகை.

சிவிரம் - அரசிருக்கை, படை.

சிவிறி-நீர்வீசுந்துருத்தி, பெருந்துருத்தி, விசிறி.

சிவுகம் - தாடை.

சிவேதன்-கனகவிஜயற்கு நண்பன்.
சிவேதை-சிவதை, சேந்திற்கொடி, தெகு, பகன்றை.
சிவேரெனல் - சிவப்புநிறக்குறிப்பு.
சிவை - ஆணரி, உலை, உலைத்துருத்தி, ஓரவு, அர்க்கை, நரி, நெல்லிக்காய், பார்வதி, புத்தன்ருய், மூக்கு, வேர், அங்கிரசன்பாரி.
சிவைகத்துவம்-சிவனுஞ் சீவனுமொன்ருயிருப்பது.
சிவைக்கியம்-சிவனுஞ்சீவனு மைக்கமாயிருத்தல்.
சிவைபாகன்-பார்வதியை யிடபாகத்திலுள்ளவன்.
சில்வல் - கடற்பாசி.
சிளுசிளுத்தல், சிளுசிளுப்பு, சிளுசிளெனல் - ஒலிக்குறிப்பு, பதனழிவு.
சிளுபிளுத்தல் - ஒலிக்குறிப்பு, நொதுநொதுத்தல்.
சிள்வண்டு, சிள்வீடு, சிள்ளீடு - சில்வண்டு.
சின்ளுபின்ளு - கம்பலை.
சிறகடி - சிறகடித்தல்.
சிறகர் - இறகு.
சிறகாற்றல் - சிறகடித்தல்.
சிறகாற்றுதல்-சிறகு, விரித்துலர்த்தல், புன்னெழச் சிறகுவிரித்தல்.
சிறலி - ஒரு நீர்வாழ்பறவை, ஒருமீன்.
சிறகு-இறகு, பக்கம், பனைமடலிற்பாதி.
சிறகுகதவு-இருபுறத்து நிலையினுமிடுங்கதவு.
சிறகுகுடில் - சிறகோலையில் வேய்ந்தசிற்றில்.
சிறகுகோதுதல், சிறகுதெரித்தல், சிறகுலர்த்தல் - சிறகையலகால்வகிர்தல், சிறகையுலர்த்தல்.
சிறகை - ஒருபுள்.
சிறகொதுக்குதல்-சிறகைச்சுருக்குதல்.
சிறக்கணித்தல் - உபேட்சைசெய்யல், கடைக்கண்ணுற் பார்த்தல், குறைத்தல், சிறுமையாகவெண்ணுதல், சுருக்குதல்.
சிறக்கணிப்பு, சிறங்கணிப்பு - கடைக்கண்பார்வை, குறைகை, சுருங்குகை.
சிறங்கித்தல் - கணிசக் குறைவுபண்ணல், கைகிறையவள்ளுதல்.
சிறங்கை - கைநிறைந்தவளவு.
சிறத்தல்-அருமை, சிறப்பாதல், சிறப்பு, திறப்படல், மிகுதல், மேன்மைப்படல்.
சிறந்தகற்பம் - நாகபாஷாணம்.
சிறந்தோர்-அழகுள்ளோர், உறவோர், துறந்தோர், பெருமையிற்சிறந்தோர்.
சிறப்பகத்திணை - அகத்திணை வகையினென்று, பொருள்களைச் சிறப்பித்துச் சொல்லுதல்.
சிறப்பாங்கல் - குருந்தக்கல்.
சிறப்பித்தல்-அலங்கரித்தல், கனப்படுத்தல், புகழ்தல்.
சிறப்பிலாதாள் - மூதேவி.
சிறப்பில்சீர் - வகையுளியுள்ளசீர்.
சிறப்பில்லாதாள், சிறப்பில்லாள் - மூதேவி.
சிறப்பு - அருமை, அலங்காரம், அழகு, உயர்ச்சி, ஒன்றற்கேயுரியது, சுபம், மகிமை, மிகுதி, மேன்மை, வரிசை, விசேடம், வேடிக்கை.
சிறப்புச்சூத்திரம்-ஒன்றிற் குரித்தாய்ச் சொல்லுஞ் சூத்திரம்.
சிறப்புடைச்சீர்-வகையுளியில்லாச் சீர்.
சிறப்புப்பாயிரம் - நூற்பெயருங்காரணமும் ஆக்கியோன்பெயரும் அளவும் பயனு முரைப்பது.
சிறப்புப்பேர் - ஒன்றற்கே யுரித்தாய் வரும் பெயர்.
சிறப்பும்மை-உயர்வுப் பொருடரு மும்மை, (உ-ம்) அரசனும் பொய்சொன்ஞன்.
சிறப்புருவகம் -உருவகவலங்காரத்தொன்று; அது ஒரு பொருளை யெடுத்ததற்குச் சிறந்த வடைகளை யுருபித்தவற்ருனுருவகமாக்கி யுரைப்பது.
சிறப்புலிநாயஞர் - சிவனடியார்களைச் சிவனெனக்கொண்டுஅவர்களை அன்போடு திருவமுது செய்வித்து அவர்களுக்குவேண்டுந்திரவியங்கொடுத்து வழிபட்டுவந்த திருவாக்கூர்ப் பிராமணராகிய பக்தர்.
சிறப்புவிதி - ஒன்றற்குரிய முறை.
சிறப்பெழுத்து - அவ்வவ்பாஷைக்குமாத்திரமுரியதாய் வழங்குமெழுத்து.
சிறப்பை - மரமணி.

சிறப்போகாரம் - சிறப்புப் பொருட்டு மோகாரம் (உ-ம்) ஒஒ பெரியன்.
சிறும்பி - அட்டாலே.
சிறும்பு - சிருய், சிறம்பென்னேவல்.
சிறும்புதல்-உராய்ஞ்சல், தழும்புபடுத்தல்.
சிறுய்த்தல் - சீத்தல்.
சிறுய்த்தக்குச்சி - ஒருபூடு.
சிறுர் . சிறுவர்.
சிறிசு - கொஞ்சம், சிறியது.
சிறிட்டம் - வெள்ளிலோத்திரம்.
சிறிது - சிறிசு.
சிறியசிக்தையர் - அற்பமானமுடையவர் கீழ்மக்கள்.
சிறியதகப்பன் - தந்தையின்னேன்.
சிறியதாய் - தாயின் றங்கை.
சிறியபிதா - தந்தையின்னேன்.
சிறியத்தினி - உத்தாமணி.
சிறியமாதா - தாயின் றங்கை.
சிறியமாத்தி - சிற்றகத்தி.
சிறியர் - அற்பர், கீழ்மக்கள், குறள்வடிவோர்.
சிறியாணங்கை - ஒருசெடி.
சிறியின்புட்பம் - வெண்டாமரை.
சிறியோர் - கீழ்மக்கள், குள்ளர்.
சிறிவில் - அகிலமரம்.
சிறீ-ஒரிராகம், திரு, தெய்வத்தன்மை, பெண்.
சிறீகண்டன் - சிவன்.
சிறீகரம் - இலட்சுமீகரம்.
சிறீகாந்தன் - விட்டுணு.
சிறீசைந்தி - விட்டுணுவின்திருநாளில் ஒன்று.
சிறீதரன் - சீதரன்.
சிறீநிவாசன் - திருமால்.
சிறீபதி - விட்டுணு.
சிறீபலம் - வில்வம்.
சிறீமது - இலட்சுமீகரமான, தெய்வீகமான.
சிறீமான் - செல்வவான், திருமால்.
சிறீமுக - சீமுக.
சிறீராகம் - ஒரிராகம்.
சிறீலிங்கம் - பெண்குறி, பெண்பால்.
சிறீவச்சம் - திருமால், மார்பின்மறு.
சிறீவதி - பாக்கியவதி.
சிறு - அற்பமான.
சிறுஉமரி - சிற்றுமரி.
சிறுக - அற்பமாய்.
சிறுகடலாடி - நாயுருவி.
சிறுகடுகு - ஒருகடுகு.
சிறுகண்ணுகம் - ஒருநாகம்.
சிறுகம்மான்பச்சரிசி-சிற்றிலைப் பாலாவி.
சிறுகல் - சிறுகுதல்.
சிறுகல்லூரி - ஒருமருந்து.
சிறுகளா - ஒருமரம்.
சிறுகளி - ஒருசெடி.
சிறுகாஞ்சொறி } ஒருகொடி.
சிறுகாஞ்சோன்றி } ஒருகொடி.
சிறுகாடு - தூற்றுக்காடு.
சிறுகாப்பியம் - பெருங்காப்பியம் போன்றிருந்துஞ் சிலகுறைபாடுள்ளபொருட்டொடர் நிலைச்செய்யுள்.
சிறுகாய் } சாதிக்காய்.
சிறுகாரிடம் } சாதிக்காய்.
சிறுகாலே - சிறுவயது, பிராதக்காலம்.
சிறுகால் - காவட்டம்புல், தென்றல்.
சிறுகாற்று - மிருதுவாக வீசுங்காற்று.
சிறுகாஞவாழை - ஒருபூடு.
சிறுகிடைச்சி - ஒருசிடைச்சி.
சிறுசிண்ணம் - சிறுவட்டில்.
சிறுகிராமம்-குடிநூறுகொண்ட குறிச்சி.
சிறுகிழங்கு - ஒருகிழங்கு.
சிறுகீறை - அறைக்கீறை, ஒருகீரை.
சிறுகு - இடைஞ்சல், சிறுகென்னேவல், துன்பம்.
சிறுகுடி - குறிஞ்சிநிலத்தூர், சிறுகுடும்பம், சிற்றில்.
சிறுகுடில் - சிற்றில்.
சிறுகுதல் - குறைதல், சினத்தல்.
சிறுகுரங்கு - ஒருகுரங்கு.
சிறுகுரு - உவர்மண்.
சிறுகுரும்பை - ஒருநெல்.
சிறுகுழி - சிறுகோனீளமகலங்கொண்டது.
சிறுகுறடு - ஒருகுறடு.
சிறுகுறட்டை - ஒருபூடு.
சிறுகுறிஞ்சா - ஒருகுறிஞ்சா.
சிறுகுறிஞ்சி - கோர்வானம், புளியாரை.
சிறுகொடி - ஒரு கிழங்குக்கொடி, ஒருதவசம்.
சிறுகொட்டைக்காந்தை - அட்டாதசமூலத்தொன்று.
சிறுகொம்மட்டி - ஒருகொம்மட்டி.
சிறுகொன்றை - ஒருகொன்றை.
சிறுகோல்-நாலுமுழங்கொண்டகோல்.
சிறுக்கன் - வாலிபன்.
சிறுக்கி-வாலிபஸ்திரீ,வேலைக்காரப்பெண்.
சிறுக்குதல் - கோபித்தல், சிறிதாக்கல்.

சிறுசண்பகம் - ஒருமரம்.
சிறுசின்னம் - ஒருகுழல்.
சிறுசின்னி - ஒருசெடி.
சிறுசெய் - பாத்தி.
சிறுசெருப்படி - ஒருபூடு.
சிறுசொல் - பழிச்சொல்.
சிறுசோறு - பிள்ளைகள் விளையாட்டுக்குச் சமைக்குஞ்சோறு.
சிறுச்செய் - பாத்தி.
சிறுதக்காளி - மணித்தக்காளி.
சிறுதாரை - நீர்விசுங் கருத்தி.
சிறுதாளி - ஒருசெடி.
சிறுதானியம் - புன்றானியம்.
சிறுதிப்பிலி - ஒருதிப்பிலி.
சிறுதுடி - ஒருபறை.
சிறுதுத்தி - ஒருபூடு.
சிறுதுருமம் - வெடியுப்பு.
சிறுதுளசி - ஒருதுளசி.
சிறுதூறு - சிறுசெடி, தூற்றுக்காடு.
சிறுதென்றல் - இளஞ்சோழகம்.
சிறுதேக்கு - ஒருமரம்.
சிறுதேங்காய் - சமுத்திராப்பழம்.
சிறுதேர் - பிள்ளைக்கவியிலோர் பகுதி, விளையாட்டுத்தேர்.
சிறுதேவபாணி - இசைப்பா வகையுளொன்று.
சிறுதேன் - கொசுகாந்தேன்.
சிறுத்தல்-சிறிதாதல், சிறிப்பனவாதல், சினத்தல்.
சிறுத்தி - ஒருதுத்தி.
சிறுத்தை - சிறுபுலி.
சிறுத்தொண்டநாயனார் பாஞ்சோதியார் } சிவபிரான் வைரவவேடங்கொண்டு சென்றுநம்மைஅமுதுசெய்விப்பீரோ வென்று கேட்க, செய்விப்பேனென்றுகூறி வைரவர் கேட்டபடி தமதுஒரேபிள்ளையாகிய சீராளனை வெட்டிக் கறியாகப்பாகம் பண்ணி விருந்திடத் துணிந்தபோது வைரவர் உமது புத்திரனை அழையுமென இப்போது உதவான் எனச் செப்பியும்கேளார் வைரவரைத்திருப்தி செய்யும்படி வாளாவழைக்க, அப்புத்திரன் உண்மையாகவே வரப்பெற்ற பக்தர். இவர் திருச்செங்காட்டங்குடியில்விளங்கிய பிராமணர். மனைவிபெயர் திருவெண்காட்டுநங்கை, சிறுத்தொண்டர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தவர் என்பது பெரிய புராணத்தாற் றுணியப்படும். 4000 வருஷங்களுக்குமுற்பட்டவர்.
சிறுநாளை - ஒருபூடு.
சிறுநன்னாரி - ஒருபூடு.
சிறுநாகப்பூ - ஒருசரக்கு.
சிறுநாகம் - ஒருமரம்.
சிறுநாரை - இசைநாடகநூல்.
சிறுநார் - கன்னார்.
சிறுநாவல் ஒருசெடி.
சிறுநிம்பம் - மலைவேம்பு.
சிறுநீர் - மூத்திரம்.
சிறுநெருஞ்சி - ஒருபூடு.
சிறுபகன்றை - ஒருபூடு.
சிறுபசளை - ஒருபசளை.
சிறுபசி - இளம்பசி, காலப்பசி.
சிறுபஞ்சமூலம் - ஒருநூல், கண்டங்கத்தரி, சிறுமல்லி, சிறுவழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி.
சிறுபண்டாரங்கனார்-இடைச்சங்கப் புலவருளொருவர்.
சிறுபதம் - சிறுவழி.
சிறுபதி - சிறுகிராமம்.
சிறுபயறு - ஒருபயறு.
சிறுபயர் - இளம்பயிர், புன்பயிர்.
சிறுபறை - ஒருபறை, பிள்ளைக்கவியிலோர் பகுதி.
சிறுபாணாற்றுப்படை-இது கடைச்சங்க நூல்களில் ஒன்றாகிய பத்துப்பாட்டுளொன்று. பத்துப்பாட்டுள் மூன்றாவது பிரபந்தமாகிய இது ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் மீது கடைச்சங்கப்புலவரில் ஒருவராகிய நல்லூர் நத்தத்தனார் பாடியது, தன்யாழ்வன்மைகாட்டிப் பரிசுபெற விரும்பிய பாணனை நல்லியக்கோடன் மாட்டுச் செலவிடுத்தமையின் ஆற்றுப்படையாயிற்று.
சிறுபாலடை - ஒருபூடு.
சிறுபாலி - கள்ளி.
சிறுபான்மை - சிறுவழக்கு.
சிறுபிராயம் - இளம்பிராயம்.
சிறுபிள்ளை - இளம்பிள்ளை.
சிறுபுலியூர்-காவிரியின் தென்கரையில் உள்ள விஷ்ணுஸ்தலம்.
சிறுபுள்ளடி - ஒருபூடு.
சிறுபுறம் - பிடரி.

சிறுபூளை - ஒருபூடு.
சிறுபெண் - இளம்பெண்.
சிறுபொழுது - ஐந்திணைக்குரிய முதற்பொருளினொன்று. அது மாலை - யாமம்-வைகறை-எற்பாடு - காலை - நண்பகல், இவையன்றி எற்பாடுவிலக்கி யைம்பொழுதாய்க் கூறுவாருமுளர், பத்து நாழிகை கொண்ட நேரம் - அது - காலை உச்சி யாமம் அத்தசாமம் வைகறை.
சிறுபோகம் - புன்மயிர்போகம்.
சிறுப்பம் - சிறுபிராயம்.
சிறுப்பனே - எளிமை, குறைவு.
சிறுப்பித்தல் - கணிசக்குறைவுபடுத்தல், சிறுகப்பண்ணுதல்.
சிறுமட்டம் - இளமட்டம், குள்ளம், சிற்றளவு.
சிறுமணி-சிர்நெல், சதங்கை.
சிறுமணுக்கொட்டுவான் - ஒருநீர்ப்புள்.
சிறுமலை - குன்று, பாண்டியநாட்டுள்ள தோர் மலை.
சிறுமல் - நீர்மீட்டான்.
சிறுமல்லி - பஞ்சமூலத்தொன்று, தசமூலத்து மொன்று.
சிறுமாரோடம் - செங்கருங்காலி.
சிறுமி - புத்திரி, பெண்.
சிறுமியம் - சேறு.
சிறுமுட்டியல் - சுத்தியல்.
சிறுமுதுக்குறைவி - சிறிய பருவத்தே பெரிய அறிவினையுடையாள்.
சிறுமுள்ளி - ஒருமுள்ளி.
சிறுமூலகம் } ஒருகிழங்கு, திப்பிலி.
சிறுமூலம் }
சிறுமேதாவியர் - இவர் கடைச்சங்கப்புலவர்களில் ஒருவர்.
சிறுமை-அற்பம், இடைஞ்சல், இளமை, எளிமை, கீழ்மை, குறைவு, தரித்திரம், துன்பம், நோய், அவித்தை.
சிறுமைத்தனம் - இடைஞ்சல், எளிமை, தரித்திரம்.
சிறுமைப்படுதல் - இடைஞ்சற்படுதல், எளிமைப்படுதல், தரித்திரப்படுதல்.
சிறுமையர் - கீழ்மக்கள்.
சிறுவம் } இளம்பிராயம்.
சிறுவயது }
சிறுவரல் - பாத்தி.
சிறுவரை - அற்பம், காலவிரைவு, சிறுபொழுது.
சிறுவர் - மக்கள்.
சிறுவல் - இளம்பிராயமானது, இளம்பிராயம், குழந்தை.
சிறுவழுதுணை - ஒருசெடி, அது, தசமூலத்தொன்று, சிறுபஞ்சமூலத்து ஒன்று.
சிறுவள்ளி - ஒருபூடு.
சிறுவன் - இளையோன், மகன்.
சிறுவாடு - சொற்பதேட்டம்.
சிறுவி - பெண், மகள்.
சிறுவிதி - தக்கன்.
சிறுவிதிமகஞ்சிதைத்தோன் - வீரபத்திரன்.
சிறுவிரல் - கனிட்டிகவிரல்.
சிறுவிலை - குறுவிலை, பஞ்சம்.
சிறுவீடு - சிற்றில்.
சிறுவுமரி - சிற்றுமரி.
சிறுவெள்ளரி - ஒருவெள்ளரி.
சிறை-அடிமை, அழகுள்ளவன், இடம், இறகு, கட்டுப்பாடு, காமம், சிறைச்சாலை, தடை, நீர்க்கரை, பக்கம், மதில், விபசாரி.
சிறைக்கணித்தல் - கடைக்கண்ணுற்பார்த்தல், புறக்கணித்தல்.
சிறைக்களம் } சிறைச்சாலை.
சிறைக்கூடம் }
சிறைசெய்தல் - அடிமைப்படுதல், கட்டுப்படுத்தல்.
சிறைச்சாலை - மயில், வீடு.
சிறைச்சோறு - காவலிலகப்பட்டவர்களுக் கன்னங்கொடுத்தல், அது அறம் முப்பத்திரண்டிலொன்று.
சிறைநீக்குதல் - சிறைமீட்குதல்.
சிறைபிடித்தல் - அடிமையாகப் பிடித்தல்.
சிறைப்படுதல் - அடிமைப்படுதல், தடைப்படுதல்.
சிறைப்படுத்தல் - அடிமைப்படுத்தல், காவலுக்குட்படுதல், தடைப்படுத்தல்.
சிறைப்பாடு - அடிமைத்தனம், கட்டுப்பாடு, தடை.
சிறைமீட்குதல் - இட்டமாக்குதல்.
சிறைமீளுதல் - இட்டமாக்கல், இட்டமாதல்.
சிறையிருப்பு - அடிமைத்தனம்.
சிறையெடுத்தல் - சிறைமீட்டல், பெண்கொள்ளல்.
சிறைவிடுதல் } சிறையிருப்பை நீக்குதல்.
சிறைவிடுத்தல் }

சிறைவைத்தல் - அடிமைப்படுத்தல், காவலில் வைத்தல்.
சிற்குணம் - பரிசுத்தகுணம்.
சிற்குணன் - கடவுள்.
சிற்குஞலயம் - உபகிடதத்தொன்று.
சிற்சத்தி - பஞ்சசத்தியினொன்று, அது உயிர்க்கொளியாய் கிற்பது.
சிற்சபை - ஞானசபை.
சிற்சிலிர்ப்பான் - ஒரு வைசூரிநோய்.
சிற்சோமான் - சிரபத்தபாஷாணம்.
சிற்பசாத்திரம் - கோயில்முதலியனகட்டுஞ்சாத்திரம், அது கலைஞான மறுறுபத்து நான்கினொன்று.
சிற்பசாலை - சிற்பவேலைவீடு.
சிற்பத்தொழில் - இல்லமெடுத்தல் முதலிய கற்சிற்பவேலை.
சிற்பம் - அறுதொழிலினொன்று, அற்பம், சிறிசு, சிற்பநூல், நண்மை.
சிற்பாகம் - சிற்பனை.
சிற்பாக்கூர்மை - கந்தகவுப்பு.
சிற்பரம் - கடவுள், பிரமம்.
சிற்பரவுப்பு - கெந்தகலவணம், சிந்துலவணம்.
சிற்பரன் - கடவுள், சிவன்.
சிற்பரி - பொன்னிமிளை, வெண்காரம்.
சிற்பரை - சவுக்காரம், சிமிளை, பராசத்தி.
சிற்பர் - சித்திரகாரர், சிற்பாசாரியர்.
சிற்பாசாரி - கற்சிற்பன்.
சிற்பியர் - கம்மாளர், சிற்பர்.
சிற்பொருள் - சித்துப்பொருள்.
சிற்றகத்தி - ஒருமரம்.
சிற்றகப்பை - ஒரு அகப்பை.
சிற்றடி - சிறுகாரசுவடு, சிறுகால்.
சிற்றடிப்பாடு - சிறுவழி.
சிற்றடியார் - குற்றேவல்செய்வோர்.
சிற்றணி - சிறுபாத்தி.
சிற்றண்டம் - இருவகை யண்டத்தன் ஒன்று, அது உலாம்பு, கோழிமுட்டை.
சிற்றப்பன் - தந்தைக்கிளையோன்.
சிற்றமட்டி } ஒருசெடி.
சிற்றமுட்டி }
சிற்றம்பலம் - சிதம்பரம், சிதாகாசம்.
சிற்றம்மான்பச்சரிசி - சிற்றிலைப் பாலாவி.
சிற்றரத்தை - ஒருசெடி, ஒருமருந்து. [வி.
சிற்றருக்கன் - ஓரருக்கன்.
சிற்றவை - ஒருகோடி.
சிற்றறிவு - சொற்பவறிவு, புல்லறிவு.
சிற்றறுகு - ஓரறுகு.
சிற்றன்னை - சிறியதாய்.
சிற்றாடை - சிறுபிள்ளையுடுப்பு.
சிற்றாதாயம் - கள்ளச்சிறுதேட்டு.
சிற்றாத்தாள் - சிறியதாய்.
சிற்றாமணக்கு - ஓராமணக்கு.
சிற்றாமுடி - ஒருசெடி.
சிற்றாயி - சின்னாயி.
சிற்றாலவட்டம் - விசிறி.
சிற்றாள் - ஏவலாள்.
சிற்றி - சிறியதாய், பசரி.
சிற்றிணி - சிற்றணி.
சிற்றிதழ் - அகவிதழ்.
சிற்றிரு - கிலுகிலுப்பை.
சிற்றிரை - சாப்பாடு, சிறுவிலங்கினுணவு, சிற்றுண்டி.
சிற்றிலக்கம் - கீழ்வாயிலக்கம்.
சிற்றிலை - கடுமரம், குன்றி, செய்ச்சிட்டி.
சிற்றிலைப்பாலாவி - ஒருபூடு.
சிற்றில் - குடிசை, சிலை, பிள்ளைக்கவியினொர் பகுதி, பிள்ளை விளையாட்டினொன்று, அது சிற்றில் சிதைத்தலும் சிற்றில் புனைதலுமாம்.
சிற்றிளைப்பு - மெல்லிளைப்பு.
சிற்றினஞ்சேர்தல் - துன்மார்க்கருடன் கூடுதல்.
சிற்றினம் - ஆகாதகூட்டம்.
சிற்றினிப்பு - சுள்ளிட்டவினிப்பு.
சிற்றின்பம் - இலௌகீகவின்பம்.
சிற்றீரம் - அற்பவீரம்.
சிற்றுணவு - பலகாரவகை.
சிற்றுணர்வு - சிற்றறிவு.
சிற்றுண்டி - அப்பவருக்கம் ஒருபண்ணிகாரம், பலமூலசாகவுணு, பொரிக்க [றி.
சிற்றுமரி - ஒருபூடு.
சிற்றுமல் - கையுமல்.
சிற்றுமல்லிகை - ஒருமல்லிகை.
சிற்றுயிர் - அற்பசீவபிராணி.
சிற்றுரு - குறள், சிறுதோணி, சின்னவுருவு.
சிற்றுலாத்து - பதமயானநடை.
சிற்றுளி - சிறுவுளி.
சிற்றுள்ளான் - ஒருள்ளான்.
சிற்றூர் - குறிஞ்சிநிலத்தூர்.
சிற்றூறல் } சின்ன நீரூற்று.
சிற்றூற்று }

சிற்றெண் - சிழெண், குறளடிபதினொ ருன் வருவது.
சிற்றெள் - ஒரெள்.
சிற்றெறும்பு - ஒரெறும்பு.
சிற்றொழுங்கை - கையொழுங்கை.
சிற்றேலம் - ஒரேலம்.
சிற்றேலே - கவிக்லோர்பேதம்.
சினகரம் - கோவில்.
சினத்தல் - கோபித்தல். [ன்று.
சினத்திலெழுந்தி - உயிர்முத்தியினெ
சினந்தவிர்ந்தோன் - அருகன்.
சினப்பு - கோபம், பரு, விம்முதல்.
சினம் - கோபம், பரு, விம்முதல்.
சினவரன் - அருகன், புத்தன்.
சினவர் - பகைவர்.
சினவுதல் - கோபித்தல், சினக்குறிப்பு, பொருதல்.
சினன் - அருகன், சருவஞ்ஞன், திரு மால், புத்தன், விருத்தன்.
சினு - பங்கம்பாலே, வட்டத்திருப்பி.
சினுடி } மூக்கிரட்டை.
சினுடிகா }
சினுசு - செத்தல், மெலிவு
சினுவில் - திம்பை.
சினி - கர்கன்புத்திரன். கார்க்கியன் தந் தை, யுதாசித்துபுத்திரன், அசமித்தி ரன்புத்திரன், விரேதன்புத்திரன்.
சினீவாலி - அமாவாசிக்குமுதனுளிரா.
சினேகசத்துரு - சிநேகிதன்போல நட க்கும் சத்துரு.
சினேகம் - எண்ணெய்,நட்பு,அதுபுண் ணியமேழினென்று, பட்சம்.
சினேகி - சினேகிதன், சினேகிதி.
சினேகிதம் - நட்பு.
சினேகிதர் - மித்துருக்கள்.
சினேகிதி - அன்புள்ளவள்.
சினேகித்தல் - நட்பாயிருத்தல்.
சினேகிப்பு - சினேகம்.
சினேசதாரு - சாதிக்காய்மரம்.
சினேசம் - சாதிக்காய்.
சினேந்திரன் - அருகன், புத்தன்.
சினை - உறுப்பு, கருப்பம், கொழுப்பு, சினையென்னேவல், பூவரும்பு, மரக் கொம்பு, முட்டை, மூங்கில்.
சினைகொள்ளுதல் - அரும்புதல், கருக் கொள்ளல், கொழுக்குதல், புளகப் பொடிப்புக் கொள்ளுதல்.

சினைதல் } சினைகொள்ளல்.
சினைத்தல் }
சினைபருவம் - கருக்கொள்ளும் பருவம்.
சினைப்பகுபதம் - ஒருபகுபதம் (உ-ம்) கண்ணன்.
சினைப்படுதல் - கருக்கொள்ளுதல்.
சினைப்படுதல் - சினைபருவம். [குரு.
சினைப்பு - கொழுப்பு சினைத்தல்,வியர்க்
சினைப்பெயர் - உருப்புக்காரணமாய் வ ரும்பெயர், (உ-ம்) முடவன்.
சினைமுதற்பெயர் - சினையடுத்து வருமு தற்பெயர்,(உ-ம்) முடக்கொற்றன்.
சினையாகுபெயர் - சினையான்வந்த பெ யர் (உ-ம்) வெற்றிலைநட்டான்.
சினைவினை - உருப்புப்பொருளது தொ ழில், சினையின்றொழிலைக் காட்டி நிற்கும் வினைச்சொல்,(உ-ம்)காலொ டிந்தது.
சின் - அசைச்சொல் (உ-ம்) கண்ணும் படுமோ என்றிசின்யானே, ஞானம்.
சின்மதநூல் - சிவசிந்தாமணி.
சின்மந்திரன் - அறிவுவடிவன்.
சின்மயம் - ஞானமயம். [மை.
சின்மாத்திரம் - ஆன்மாவின் சுயதன்
சின்முத்திரை - ஞானமுத்திரை.
சின்மூர்த்தி - கடவுள்.
சின்மொழி - இழிவானசொல்.
சின்மை - சிறிசாந்தன்மை. [து.
சின்னக்காசு - ஒருகாசிலெட்டிலொன்
சின்னச்சலவாதை - சிறுநீர்கழித்தல்.
சின்னஞ்சிறியது - மிகச்சிறியது.
சின்னட்டி - ஒருபூடு, சின்னன்.
சின்னத்தனம் - எளியதன்மை.
சின்னபின்னம் - கண்டதுண்டம்.
சின்னப்படுதல் - துற்கீர்த்தியடைதல், பங்கப்படுதல்.
சின்னப்பன் - சிற்றப்பன்.
சின்னப்பூ - ஒருபிரபந்தம், அது நேரி சைவெண்பாவாற் றசாங்கம்வைத்து நூறு தொண்ணூறு எழுபதுஐம்பது முப்பது பாட்டுப் பாடுவது.
சின்னமுத்து - ஒரு குருநோய்.
சின்னமேளம் - மத்தளம்.
சின்னம் - அடையாளம், ஈனம், ஒருகா சு, காளம்,சங்கு,சிறுமை, தட்டு, துண் டு, பராகம், பெண்குறி, முறம், வி சித்திரம்.

சின்னம்மை - சின்னமுத்து.
சின்னயோகம் - அடையாளம்.
சின்னல் - வேடிக்கை.
சின்னவைசூரி - சின்னமுத்து.
சின்னன் - சிறியது.
சின்னன் - ஈனன், சிறிசம்பெரிசம்.
சின்னுனா - சிற்றப்பன்.
சின்னுபின்னம் - பொடிப்பொடியான[து.
சின்னுவி - சிறியதாய்.
சின்னுருகம் - சீந்தில்.
சின்னி - இலவுங்கம், ஒருசெடி.
சின்னிவிரல் - சிறுவிரல்.
சின்னீரவின்பம் - சிற்றின்பம்.
சின்னீர் - அற்பநீர்,சிறுநீர்,நிலையாமை.
சின்னே - ஒருமீன்.
சின்னோக்கு - சிறுபார்வை.
சின்னோய் - சிலநோய்.

சீ

சீ - அடக்கம், இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குமி, இலக்குமீகாரம், காந்தி, சம்பத்து, சரச்சுவதி, சீதல், சீயென்னேவல், நித்திரை, பார்வதி, பிரகாசம், பெண், விடம், விந்து.
சீகண்டன் - சிவன்.
சீகம் - தமரத்தை.
சீகரம் - இலக்குவீகாரம், கடற்றிரை, கரகம், கவரி, திவலை, புனற்றிரை, மழை, மழைத்துளி, மழைத்தூவல்.
சீகரி - நீர்த்திவலை.
சீகர், சீகா - பஞ்சலோகம்.
சீகாமம் - ஒருபண்.
சீகாழி - ஒருசிவஸ்தலம்.
சீகாளத்தி - இதுதொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலம். இது திருக்காளத்தி எனவும்படும். சிலந்தியும் பாம்பும் யானையும் பூசித்து முத்திபெற்ற தலமாதலின் இப்பெயர்பெற்றது. கண்ணப்பரும் நக்கீரரும் முத்திபெற்றதும் இத்தலத்திலேயே, இது வேங்கடகத்திற்கு கிழக்கேயுள்ளது.
சீகு - துடைப்பம், புல்.

சீக்கரம் - சீக்கிரம்.
சீக்கல் - சீழ்க்கை.
சீக்காச்சா - காய்ப்புடோல்.
சீக்காய் - ஈசற்கொட்டுகை, சீழ்க்கை, பழாதகாய்.
சீக்காய்நிறம் - வெளிறினநிறம்.
சீக்கிரகதி - மிகுவிரைவு.
சீக்கிரம் - வாயு, விரைதல்.
சீக்கிரகேந்திரம் - சூரியனுக்குங் கிரகத்திற்குமுள்ள தூரம்.
சீக்கிரசேதனம் - நாய்
சீக்கிரதை - சீக்கிரம்.
சீக்கிரபத்திரம் - முருங்கைமரம்.
சீக்கிரம் - அம்பு, காரம், குரூரம், கோபம், விரைவு.
சீக்கிரான், சீக்கிரி - உசிலமரம்.
சீக்கிரியம் - சீக்கிரம், பூனைச்சண்டை.
சீக்கிரியன் - சிவன், திருமால், விரைந்து செல்வோன்.
சீக்கிரியான் - உசிலமரம்.
சீக்கு - செத்தை.
சீக்குரு - முருக்கை.
சீக்கூட்டுதல் - சிதல்கொள்ளுதல்.
சீக்கை - ஒருநூல்.
சீசகம், சீசபத்திரம், சீசம் - ஈயம்.
சீசா - ஒருகுப்பி.
சீசீ, சீச்சி - இகழ்ச்சிக்குறிப்பு.
சீஷப்பிள்ளை - சீஷன்.
சீஷம் - அசுத்தம், இழிவு, சிக்கனம்.
சீஷர், சீடர் - மாணுக்கர்.
சீஷன், சீடன் - மாணுக்கன்.
சீடு - குஞ்சமெட்டுக்கொண்ட நூற்றடு.
சீடை - ஒருகாரம், சடைவு.
சீட்டி - எழுத்துப்புடவை.
சீட்டு - பத்திரிகை.
சீட்டுத்தெரிப்பு - கையுறுதி.
சீட்டுப்போடுதல் - பீலி போடுதல்.
சீட்டுவாங்குதல் - சாதலைக் காட்டுங்குறிப்புச்சொல், சீட்டுப்பெறுதல்.
சீட்டை, சீட்டைகதிர் - முதைக்கொல்லையில்விளைகதிர், விடுகதிர்.

சீணசந்திரன் - தேய்பிறை.
சீணம் - பதனழிவு.
சீணித்தல் - பதனழிதல்.
சீணிப்பு - பதனழிவு.
சீண்டல் - நாறல்.
சீண்டறம் - ஊழல், தொந்தரை.
சீண்டிரம் - ஈனவார்த்தை.
சீண்டுதல் - சருவுதல், தொடுதல்.
சீதகந்தம் - வெண்சந்தனம்.
சீதகம் - ஈயம், குளிர்ந்தகாலம், தரா, [தேன்.
சீதகரன் - சந்திரன்.
சீதகன் - சந்திரன், சுக்கிரன், சோம்பன்.
சீதகாத்திரம் - ஒரு சன்னி.
சீதகிரணன் - சந்திரன்.
சீதகிருச்சரம் - மூன்றுநாணீர் பருகியிருக்குமோர் விரதம்.
சீதகும்பம் - அலரி.
சீதக்கடுப்பு - வயிற்றுக்கடுப்பு.
சீதக்கட்டு - சீதப்பற்று.
சீதசம்பகம் - கண்ணாடி.
சீதசுரம் - குளிர்க்காய்ச்சல்.
சீதபானு - சந்திரன்.
சீதபீரு - மல்லிகைக்கொடி.
சீதபுஷ்பகம் - எருக்கு.
சீதபேதி - ஒருநோய்.
சீதப்பற்று - சீதப்பிடிப்பு.
சீதப்பிரபம் - கருப்பூரம்.
சீதமண்டலி - ஒருபாம்பு.
சீதமயூகம் - கர்ப்பூரம்.
சீதமயூகன், சீதமரீசி } சந்திரன்.
சீதம் - அகில், ஆமம், குளிர்ச்சி, அது உயிர்வேதனையி னொன்று, கொடுந்தமிழ் நாட்டினொன்று, சந்தனமரம், சீதாங்கபாஷாணம், சிரணித்தது, சோம்பு, நறவிலி, நீர், பற்பாடகம், மாரிகாலம், மேகம்.
சீதரன் - இலக்ஷ்மியை மார்பிலுடைய விஷ்ணு.
சீதவழும்பு - ஆமம்.
சீதவற்கம் - அத்திமரம்.
சீதவாதக்கடுப்பு - சலக்கடுப்பு.
சீதவாதம் - குளிர்நோய், சலரோகம், குளிர்ந்தகாற்று.
சீதவாதம் - உத்தாமணி.
சீதனகம் - வெள்ளாம்பல்.
சீதளகாலம் - மழைகாலம்.

சீதளங்காய் கொடிமாதளை.
சீதளப்பிரதம் - சந்தனம்.
சீதளம் - ஈரம், குளிர்ச்சி, கோடகசாலை, சந்தனம், தாமரை, அரிசு, பச்சைக்கருப்பூரம், முத்து.
சீதளாதேவி - ஒருசத்தி.
சீதளி - பொன்னாங்காணி.
சீதளை - ஒருநாரத்தை, கொடிமாதளை.
சீதனம் - மகட்குக்கொடுக்கும்பொருள்.
சீதனவோலை - சீதனவுறுதி.
சீதன் - சந்திரன், மந்தபுத்தியுள்ளவன்.
சீதாங்கபாஷாணம் - ஒரு பாஷாணம்.
சீதாங்கனி, சீதாங்கனை, சீதாதேவி } இராமன்றேவி.
சீதாத்திரி - இமயமலை.
சீதாபதி - இராமன்.
சீதாரு - கேதுருமரம், நகரி.
சீதாலபத்திரம், சீதாளபத்திரம் } தளப்பத்தோலை.
சீதாளம் - தாளிப்பனை.
சீதாளை - தளப்பத்தோலை.
சீதி - குளிர், பாவம், முற்றத்துறத்தல்.
சீதிகை - ஒருவகைப் பாலைமரம்.
சீதிபாவம் - குளிர்ச்சி, மோட்சம்.
சீது - ஈயம், கள், யானைக்கண்மதம்.
சீதுகந்தம் - மகிழமரம்.
சீதுனாய் - ஒருதூஷி.
சீதேவி - இலக்குமி.
சீதேவியார்செங்கழுநீர் - ஒருபூடு.
சீதை - ஜனகன் யாகஞ்செய்துபெற்ற புத்திரி, இராமன்றேவி, அவன்பஞ்சகன்னிகளிலொருத்தி, உவமை, உழுபடைச்சால், பொன்னாங்காணி, [மது.
சீதோதகம் - குளிர்நீர்.
சீதோத்தமம் - நீர்.
சீத்தலைச்சாத்தனார் - இவர்கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவரே மணிமேகலை யென்னும் நூல்செய்தார். இவர் பிறநூல்களிலே குற்றங்காணுந்தோறும் தமது தலையே குட்டிக்கொள்ளுத வியல்பாதலினாலே அது காரணமாக உண்டாகிய புண், ஆறப்பெறாத தலையையுடையவர். அது பற்றியே சீத்தலைச்சாத்தனார் என்னும் பெயர்கொண்டார். கண்ணகியால் மதுரையெரிந்து நிலைகெட்ட

போத இவர் பொருளீட்டும் பொருட்டுச், சேரராஜாவாகிய, செங்குட்டுவன் பாற்சென்று மதுரையினிகழ்ந்தது கூற, செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் அதனைச் சிலப்பதிகாரமென்னும் பெயராற் பாடினர்.
சீத்தல் சீக்குதல், சீவுதல், செப்பம்பண்ணல், தூய்தாக்கல், நீக்கல்.
சீத்தா - ஒருமரம்.
சீத்தி - இளப்பம்.
சீத்தியம் - தானியம்.
சீத்தியோணன் - ஒரு ஓணன்.
சீத்திரம் - குதம்.
சீத்துப்பூத்தெனல் - சடிந்துகொள்ளுதல், முறுமுறுத்தல்.
சீத்துவம் - சித்தம், செம்பை, திரம்.
சீத்தை - கீழ்மக்கள், சிதம்பல், சிட்டிச்சீலை, பதனழிவு, பீழை, பூரான்பீழை.
சீத்தைக்கண் - பீழைசாருங்கண்.
சீந்தல் - துளிமழை.
சீந்தில் - ஒரு படர்கொடி
சீந்துதல் - மூக்குசீறுதல், விரும்புதல்.
சீந்தை - சீத்தை.
சீபதி - அருகன், கடவுள், விட்டுணு.
சீபம் - சரகண்டபாஷாணம்.
சீபாதம் - குருவடி. திருப்பாதம்.
சீப்பக்கோரை - ஒருபுல்.
சீப்பாய்தல் - சீதல்வடிதல்.
சீப்பால் - ஈன்றணிமைப்பால்.
சீப்பிடுதல் - மயிர்சீவுதல்.
சீப்பு - எலும்புக்கோவை, கதவின்றாள், தோளெலும்பு, மயிர்சீவுஞ்சீப்பு, வாழைக்குலைச்சீப்பு, விலாவெலும்பும்.
சீப்புச்சாட்டை - ஒருவிதமீன்.
சீப்புப்பணிகாரம் - அப்பவருக்கத்தொன்று.
சீமாங்கலி - நாவிதன்.
சீமணல் . நாகமணல்.
சீமந்தகம் - சிந்தூரச்சாந்து.
சீமந்தபுத்திரன் - தலைமகன்.
சீமந்தம் - கருப்பந்தரித்து ஆறுமாதம் உச்சிவகிர்ந்து செய்யுமோர்சடங்கு, முதுகுசீரிடுகை.
சீமந்தரேகை - ஓரிரேகை.
சீமந்தனி / சீமந்தினி } ஒரு கற்புடைய பெண்.
சீமாட்டி - செல்வி, தலைவி.

சீமாலிங்கம் - எல்லையடையாளம்.
சீமாலிவாதம் - எல்லைவழக்கு.
சீமாள் - சீமாட்டி.
சீமான் - அருகன், செல்வமுள்ளவன், தலைவன்.
சீமுக - ஏழாவதாண்டு.
சீமுகம் - திருமுகம்.
சீமுதகூடம் - பர்வதம்.
சீமுதம் - நீருண்டமேகம், பிடியன்யானை, மலைமேகம்.
சீமூதவாகனன். இந்திரன், தர்மரத்நம் என்கிறஸம்ருதி சங்க்ரஹ நூலாசிரியன்.
சீமூதவாகி - புகை.
சீமூதன், இந்திரன் உழவன், ஓரசுரன். சிவன், தன்புறவோன், நாகாசுரன், சாரதி.
சீமூதை - இரவு, கொடிமுக்கிரிகை.
சீமை-அனுட்டிப்பு, எல்லை, கரை, தேசம், தோண்மேல், வயல்.
சீமைக்கரி - ஒருகரி.
சீமைச்சுண்ணம்பு - ஒரு சுண்ணம்பு.
சீமைத்தக்காளி - ஒரு தக்காளி.
சீமைநெல்லி - ஒருவித நெல்லிமரம்.
சீம்பால் - ஈன்றணிமைப்பால்.
சீயகங்கன் - ஓரரசன்.
சீயக்காய் / சீயங்காய் } சீயக்காய்.
சீயம் - எருக்கம்பால், சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப்பாலன் குறி.
சீயா - ஒருமரம்.
சீயாக்காய் - அரைப்புக்காய்.
சீயாள் - பாட்டி.
சீயான் - ஒருவகைப்பூரான், மூன்றாம்பாட்டன்.
சீயெனல் - இகழ்ச்சிக்குறிப்பு.
சீய்த்தல்-உரஞ்சுதல், சிறுய்த்தல், சீவுதல், செருக்குதல்.
சீரகக்கோரை - ஒருகோரை.
சீரகச்சம்பா - ஒருநெல்.
சீரகத்தாமர் - வணிகர்.
சீரகத்தாமன் / சீரகத்தாரோன் } குபேரன், வணிகன்.
சீரகம் - ஒருசரக்கு, ஒருபயிர், பன்றி.
சீரங்கம் - திரிசிராப்பள்ளியில் ஒருபட்டினம், விட்டுணுதலத்தொன்று.

சிரணம் - இழங்கு, சமித்தல், சிவாகமமி ருபத்தெட்டினென்று, பதனழிவு.
சிரணவாடிகை - இடிந்தவீடு.
சிரணன் - விருத்தன்.
சிரணி - ஓமச்செடி, காடு, கூத்திஞேர் பேதம், சிறந்தவழகு, சிரணியென் னேவல்.
சிரணித்தல் - சமித்தல், பதனழிதல்.
சிரணே - பழக்கம்.
சிரத்துவசன்-ஒருசந்திரவமிசத்தரசன்
சிரத்துவஜன் - ஜனகன்.
சிரந்தாதி - ஈற்றுச்சீராதியாகப்பாடல்.
சிரபாணி - பலபத்திரன்.
சிரமோடா - காட்டெருமைப்பால், நாரச்சீலை, விழுதி, வீதி.
சிரம்- இரேகை,இலாமிச்சை,எழுத்து, கலப்பை, காட்டெருமைப்பால், சிரை, சூரியன், மலைப்பாம்பு, மரவுரி, மாலை, பால்முடி.
சிரவட்டம் - ஈயம்.
சிரா - கவசம், பலாசு.
சிராங்கம் - கலப்பை, கொழு.
சிராட்டல் - கொண்டாடல், கோதுகுலம்பண்ணல், சிறப்புப்பண்ணுதல்.
சிராட்டு-கொண்டாட்டம்,கோதுகுலம், சிறப்பு, சிறப்புச்செய்தல், சிராட்டென்னேவல்.
சிராட்டுதல் - சிராட்டல்.
சிராபதிதநயை - இலக்குமி.
சிராளன் - சிறுத்தொண்டர்புத்திரன்.
சிரி - பலதேவன், புளியமரம், முக்காடு.
சிரிகை - ஒருவண்டு.
சிரிடம் - தலை, வாகை.
சிரிணப்பன்னம் - வேம்பு.
சிரிணன் - கற்ருேன்.
சிரித்தல் - பழகல்.
சிரிய - சிறப்பான.
சிரியர் - அறிஞர்,சிறந்தோர்,நல்லோர், புலவர்.
சிரிவிருக்கம் - புளியமரம்.
சிருகை - வண்டு.
சிருணம், சிருணி - செம்பு.
சிருத்திரம் - உபநிடதம் முப்பத்திரண்டில் ஒன்று.
சிருள் - ஈயம், செம்பு, செல்வம், பஞ்சலோகம்.
சிரை - சீலை, மரத்தோல், மரவுரி.
சீர் - அழகு,ஒலி,இரைச்சல்,ஒழுங்கு, காவுதடி, காற்றண்டை, சித்திரம், சிலம்பம், சிறப்பு,சுபாவம்,செல்வம், சொல், செய்யுளுறுப்பி னென்று, தண்டாயுதம், தாளவொத்து, துலாராசி, நடுத்தாம், நன்மை, நிலபாம், பாரம்,புகழ்,பொன்,முர்சை,வாழ்வு.
சீர்காரம் - எதிரொலி.
சீர்தலைதல் - ஒழுங்குகெடல்,பதனழிதல்.
சீர்கேடி - மூதேவி.
சீர்கேடு - கேடானநிலைமை, சிறப்பில்லாமை.
சீர்க்காரம், சீர்க்கிரதம் - எதிரொலி.
சீர்கோழி - நகைக்கொன்று.
சீர்கோள் - ஒருகோள்.
சீர்செய்தல் - சீராக்கல்.
சீர்ணபதிரம் - வேம்பு.
சீர்ணபர்ணம் - பேரீச்சமரம்,வேப்பமரம்.
சீர்ணபாதன் - யமன்.
சீர்ணம் - சிரகம், பழுத்தது, பேதம், வயோதிகம்.
சீர்ணவஸ்திரம் - பழந்துணி.
சீர்திருத்தல் - சீராக்கல்.
சீர்திருந்துதல் - சீராகுதல்.
சீர்திருத்தல் - செப்பமாதல்.
சீர்தூக்கல், சீர்தூக்குதல் - ஆராய்தல், ஒத்துப்பார்த்தல்.
சீர்த்தல் - சிறப்புக்கொள்ளுதல்.
சீர்த்தி - மிகுபுகழ்.
சீர்த்துழாய் - ஒருதுளசி.
சீர்சிருவாகம் - இயல்பு, நிலைபாம்.
சீர்பண்ணுதல் - ஆயத்தப்படுத்தல், ஒழுங்குபடுத்தல்.
சீர்பதி - கடவுள்.
சீர்பந்தபாஷாணம் - ஒருபாஷாணம்.
சீர்பத்தம் - விளைவுபாஷாண முப்பத்திரண்டி னென்று.
சீர்பாதம் - திருப்பாதம்.
சீர்படுதல் - ஒழுங்குப்படுதல், குணப்படுதல்.
சீர்ப்படுத்தல் - குணப்படுத்துதல்.
சீர்ப்பாடு - சிறப்புறல்.
சீர்ப்பிழை - ஒழுங்குத்தப்பு.
சீர்மடக்கு - சீரைமடக்கிப்பாடல்.
சீர்மரம் - நெய்வார்சருவியினென்று.

சீர்மை - எண்வகையூறிஞென்று, அது ஒப்பம், சங்கை, சிறப்பு, செம்மை, நன்னடை.
சீர்வண்டு - நெய்வார் கருவியினென்று.
சீலசம்பன்னன் - நற்குணன்.
சீலத்துவம் - குணம்.
சீலம் - அழகு, குணம், சரித்திரம், சிந்தில், சுபாவம், தருமம், நல்லறிவு, நல்லொழுக்கம்.
சீலம்பாய் - கிழியற்பாய்.
சீலவான் - நற்குணசாலி. [பாதோன்.
சீலவிருத்தன் - நல்லவொழுக்கிற் றிறம்
சீலனம் - சாத்திராப்பியாசம்.
சீலன் - நற்குணசாலி.
சீலா - இறைகூடை, இறைபட்டை, ஒருபறவை, ஒருமீன்.
சீலாப்பட்டை } இறைகூடை.
சீலாப்பூட்டை }
சீலி - நற்குணமுடையாள்.
சீலிதன் - கலைகற்றோன்.
சீலித்தல் - பழகல்.
சீலை - வத்திரம்.
சீலைப்பாம்பு - ஒரு விஷமுள்ள பாம்பு.
சீலைப்பிள்ளை - துணியாற் செய்யப்பட்ட ஒருவிதப் பொம்மை.
சீலைப்பேன் - சீலையிற்பற்றும் பேன்.
சீலைமண் - மருந்து எரியவைக்கும் பாத்திரங்களைச் செம்மும‌ண்சீலை.
சீவகம் - இலந்தைப்பிசின்.
சீவகர் - புத்ததவத்தோர்.
சீவகளை - இராகக்காட்சி, உயிர்ப்பு.
சீவகன் - அரசன், குறவன், சீவன்முத்தன், தருமம், வாங்கியுண்போன், புத்ததவத்தோன், வேலைக்காரன்.
சீவகாருண்ணியன் - கிருபையுள்ளோன்.
சீவசஞ்சீவி - சிந்தில்.
சீவசாட்சி - அறிவுக்காதாரமாயிருப்பது.
சீவசாதனம் - தானியம்.
சீவசிதாபாசர் - பிரமசைதந்நியர்.
சீவசெந்து - உயிருள்ளவைகள்.
சீவதம் - ஆமை, சன்மார்க்கம், சீவன், மயில், முகில்.
சீவதயை - சிவானுக்கிரகம்.
சீவதருமம் - சீவபுண்ணியம்.
சீவதனம் - சீவனுள்ள திரவியம்.
சீவதன் - சத்துரு, சன்மார்க்கன், நீண்ட ஆயுசுகாரன், ஸவத்தியம்.
சீவதாது - சீவவாயு சஞ்சரிக்கும் நாடி.
சீவதிசை - பிராணதிசை.
சீவதேகம் - ஆன்மாசீவிக்கும் வடிவம்.
சீவத்தறுவாய் - மரணத்தறுவாய்.
சீவத்துவம் - அநாதி.
சீவநாடி - பிராணவாயுவுலாவும் நரம்பு.
சீவநாயகன் - பிராணநாயகன்.
சீவநாள் - ஆயுள்.
சீவந்தம் - ஔஷதம், பிராணன்.
சீவந்தி - கடுமரம், சிந்திற்கொடி, பாலைமரம், புல்லூரி, வெட்பாலை.
சீவந்திகன் - பறவை வேட்டைக்காரன்.
சீவந்தில் - சிந்தில்.
சீவபிராணி - உயிர்ப்பிராணி.
சீவபுண்ணியம் - உயிர்கட்குச் செய்யும் புண்ணியம்.
சீவபேதம் - உயிர்ப்பேதம்.
சீவப்பிரியை - கடுக்காய் மரம்.
சீவமந்திரம் - உடல்.
சீவமூதம் - மேகம்.
சீவம் - சீவன்.
சீவரட்சை - ஈடேற்றம், சீவபரிபாலனம்
சீவரம் - நீலவண்ணப்புடைவை.
சீவர் - புத்தர்.
சீவர் - சீவனுள்ளோர்.
சீவலம் - ஒரு நீர்ப்பூடு.
சீவலோதகி - கையான்றகரை.
சீவல் - சீவப்பட்டது, சீவுதல், பெலமற்றது, மிருதுவானது.
சீவவிலயம் - மரணம்.
சீவனகம் - சோறு.
சீவனம் - அமுதம், உத்தியோகம், உயிர் வாழ்தல், தைத்தல், நீர், புசிப்பனவு, மூளை, வெண்ணெய்.
சீவனகாதம் - நஞ்சு.
சீவனனி - நீர், வெற்றிலை.
சீவனந்தம் - மரணம்.
சீவனார்த்தம் - உயிர்வாழ்தற்குரியது, சீவனமுகாந்தரம்.
சீவனவரசன் - வருணன்.
சீவனவுபதம் - உயிர்தருமருந்து.
சீவனி - உயிருடையான், உயிருள்ளோன்.
சீவனி - ஆடுதின்னாப்பாலை, சகனம், சஞ்சீவி, சீவநாடி, செவ்வள்ளி, பாலைமரம், மந்தாரச்சிலை, வெட்பாலை.
சீவனித்தல் - சீவனம்பண்ணுதல்.

சீவனிநாடி - சீவநாடி.
சீவனியம் } நீர்.
சீவனீயம் }
சீவனோபாயம் - சீவனத்துக்கடுத்தவுபாயம், சீவனார்த்தம்.
சீவனௌஷதம் - இறநிக்காலத்திலும் உயிரை கிறுத்து மருந்து, சீவனோபாயம்.
சீவன் - அனுபவிக்கப்படுதல், உயிர், உயிர்தருமருந்து, காந்தம், சிந்தில், சீவில், மூபற்சி, வியாழம், வைடூரியம்.
சீவன்கொடுத்தல் - உயிர் கொடுத்தல், திடப்படுத்தல்.
சீவன்முத்தன் - அறந்து ஞானமடைந்தோன்.
சீவன்முத்தி - ஞானமடைந்து பிறப்பறுத்திருத்தல்.
சீவா - பாலை.
சீவாதாரம் - உலகம்.
சீவாது - உயிர்ப்பிக்குமருந்து.
சீவாத்துமா - சரீரவச்சின்னவான்மா.
சீவாந்தகன்-கொலையாளி, வேட்டைக்காரன்.
சீவாந்தம் - சீவியமுடிவு.
சீவாவத்தை-ஆத்துமாவடக்குமவத்தை.
சீவாளம் - வீணையின் சீர்.
சீவி - அழிஞ்சில், உயிருடையான், உயிருடையோன்.
சீவிகா - சாதிக்காய்.
சீவிகை - சீவனம்.
சீவிதகாலம் - சீவிக்குங்காலம்.
சீவிதசமுசயம் - மரணபயம்.
சீவிதசாமி - கணவன்.
சீவிதஞ்ஞை - இரத்தாசயம்.
சீவிதம் - உயிர்வாழ்க்கை.
சீவிதேசன்-உயிர்தருமருந்து, கடவுள், கணவன், சந்திரன், சூரியன்.
சீவித்தல் - சீவியம்பண்ணுதல், மரித்தல், மோட்சஞ் சேருதல்.
சீவிப்பித்தல் - சாக்காட்டல்.
சீவிமுடித்தல் - கோதிக்கட்டல்.
சீவியகாலம் - ஆயுளன்.
சீவியங்கம் - கல்லுப்பு.
சீவியநாள் - ஆயுளன்.
சீவியம் - ஆயுள், உயிரோடிருக்கை, காலட்சயம், சீவனம், வாழ்நாள். [தல்.
சீவியம்பண்ணுதல் - சீவனம் பண்ணுத
சீவியர் - சீவிப்போர்.
சீவியன்-சீவன், சீவிப்போன், திருமால்.
சீவினி-சஞ்சீவி, செவ்வழிப்பண், யாழினோரோசை.
சீவீசுரப்பிராந்தி-சீவனைச் சிவனெனக்காண்டல்.
சீவீசுரம் } ஆன்மா.
சீவிச்சுரம் }
சீவு - ஒருபுல்.
சீவுதல் - செதுக்குதல், மயிர்கோதுதல், மெல்லியதாயரிதல்.
சீவுளி - ஒருகருவி.
சீவுளியாடுதல் - சீவுளிபோடுதல்.
சீவேசுவரம் - சீவீசுரம்.
சீவோபகாரம் - சீவதயை.
சீவோற்பத்தி-உயிர்த்தோற்றம், கருக்கொள்ளுங்காலம்.
சீழ் - ஒலிக்குறிப்பு, சிதல், சீழ்க்கைவிடுதல்.
சீழ்க்கை - வாயாலூதுமோர்வகைச்சத்தம்.
சீழ்க்கைக்கருவி சீழ்க்கைக்குழல். [தம்.
சீறடி - சிற்றடி.
சீறல் - அதட்டல், இரைதல், ஊர்த்தநிகரித்தல், கோவித்தல், சினக்குறிப்பு, பெருங்காயம், பெருங்கோபம், மூக்குச்சீறுதல், வேகம்.
சீறு - சீற்றம்.
சீறுதல் - சீறல்.
சீறுமுறெனல் - ஒலிக்குறிப்பு, சினக்குறிப்பு.
சீறுமாறு - கலகம், குழப்பம்.
சீறூர் - வேடரூர்.
சீற்காரம் - சீர்காரம்.
சீற்றம் - கோபம், சினம்.
சீனக்கண்ணாடி - மூக்குக்கண்ணாடி.
சீனக்காக்காய் - ஓரினக்காகம்.
சீனக்காரம் - படிகாரம்.
சீனக்கிழங்கு - ஒரு மருந்துக்கிழங்கு.
சீனக்குடை - கடுதாசிக்குடை.
சீனசம் - உடுக்கு.
சீனச்சட்டி - ஓரிரும்பு.
சீனட்டங்குருவி - ஒருகுருவி.
சீனட்டி - ஒருநெல்.
சீனபிட்டம் - செவ்வீயம்.
சீனப்பட்டை - பறங்கிப்பட்டை.
சீனப்பா - பறங்கிக்கிழங்கு.
சீனப்பாகு - ஒருமருந்து.

சீனப்பூ - ஒருபுட்பம்.
சீனமல்லிகை - ஒரு பூச்செடி.
சீனமிளகு - வால்மிளகு.
சீனமுத்து - ஒரு செய்கைமுத்து.
சீனம் - ஒருபுடவை, தேயமைம்பத்தாறினொன்று, நூல்பதினெண்பாடையினொன்று, மலைப்பாம்பு, மான்.
சீனவங்கம் - ஈயம்.
சீனவெடி - ஒருவெடி.
சீனன்-சீனதேயத்தான், மூர்க்கன், விருத்தன்.
சீனு - ஒருதேசம்.
சீனி - ஒருவகைச்சருக்கரை, சீனக்காரம், பித்தளைமணல், மரநக்கூரம்.
சீனிக்கிழங்கு - வத்தாளைக்கிழங்கு.
சீனிப்பாகு - அதிரசத்துதிர்பாகு.
சீனியதிரசம் -ஒரு பண்ணிகாரம்.
சீனை - வன்னிமரம்.

சு

சு - அதட்டுமோசை, ஒரெழுத்து, நன்மை, சுகம் முதலியவற்றைக் காட்டுமோருபசருக்கம், வியப்புக்குறிப்பு.
சுஃறெனல் - ஒலிக்குறிப்பு.
சுகஹீனம் - சௌக்கியவீனம்.
சுகசரீரம் - துன்பமற்ற சரீரம்.
சுகசரீரி - சவுக்கியதேகி.
சுகசன்னி ஒருசன்னி, ஸ்திரீதோஷம்.
சுகசிம்பி - பூனைக்காலி.
சுகசீவி - சுகவாழ்வுடையான், சுகவாழ்வுடையோன்.
சுகச்சாயை - சிருஷ்டி மனைவி.
சுகசெய்தி - நற்செய்தி.
சுகட்டான் - நாணற்புல்,முடக்கற்றான்.
சுகண்டி - ஒரிரத்தினம்.
சுகபேதம் - பேதம் மூன்றினொன்று. அது மாத்துத்திலையாய் முதலிய வித்தியாசம்
சுகதம் - சொந்தமானது.
சுகதர் - புத்தர்.
சுகதாதை - வியாசன்.
சுகதாரு - கடம்புமரம்.
சுகதுக்கம் - இன்பதுன்பம்.
சுகத்திரம் - வாகைமரம்.
சுகநயம் - சௌக்கிய நன்மைகள்.
சுகந்தம்-ஈரவெண்காயம், கந்தகத்தூள், தேன்தோடம்பழம்.
சுகந்தநாயகி - திருவேட்டக் குடியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் திருநாமம்.
சுகந்தபரிமளம் மிகுவாசனை, வாசனைப் பண்டம்.
சுகந்தமா-கஸ்தூரிமிருகம், கருப்பூரம்.
சுகந்தமூலி - வெட்டிவேர்.
சுகந்தம் - அரத்தை, ஈரவெண்காயம், கந்தகம், கிழங்கு, சந்தனம், சீரகம், நறுமணம், நீலோற்பலம், வாழை.
சுகந்தவருக்கம் / சுகந்தவற்கம் } வாசனைப்பண்டம்.
சுகந்தவனநாயகி - திருச்செம்பொன் பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
சுகந்தி - சுகந்திக்கல்.
சுகந்திகம் - ஒருநெல், கந்ததூபம், வெண்டாமரை.
சுகந்திக்கல் - ஒருரத்தினம்.
சுகந்திரம் - சுதந்திரம்.
சுகபலம் - எருக்கஞ்செடி.
சுகபலை - எருக்கு.
சுகபுச்சம் - கந்தநீறு.
சுகபேதி - சுகவிரேசனம்.
சுகபோகம் - சுகவனுபவம்.
சுகபோசனம் - நல்லூண்.
சுகப்படுதல் - சுகமடைதல்.
சுகப்பிரியை - சம்புநாவல்.
சுகப்பிழை - சௌக்கியவீனம்.
சுகம்-இராக்கதன், இன்பம், கிளி, சரீரம், சீக்கிரம், சுபம், தருமம், தலைப்பாகை, நன்மை, நீர், பாத்திரம், புடவை, புளிகரைத்த நீர்முத்தி, மூலைக்கண், வருத்தமின்மை.
சுகம்பல் - புளிநறளை.
சுகரம் - தருமம்.
சுகருமம் - நற்கருமம், நித்தியயோகத்தொன்று.
சுகர்மன்-ஜைமினி முனிவர் புத்திரனாகிய சுமந்தன் புத்திரன்.
சுகவல்லபம் - மாதளை.
சுகவாகன் - மகன்.

சுகவாஞ்சிநாயகர் - திருவாஞ்சியத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
சுகவாழ்வு - நல்வாழ்வு.
சுகவிருத்தி - சுகசெய்தி, சுகவாழ்வு.
சுகவிரேசனம் - சுகபேதி.
சுகவீனம் - துன்பம்.
சுகவேளை - சுகமானகாலம், நற்காலம்.
சுகன் - இவ்விருஷி வியாசருக்குக் கிருதாசி யென்னும் அப்சரஸ்திரியிடத்துப் பிறந்த புத்திரனார். கிளிரூபத்தோடிருந்த கிருதாசியிடத்தே பிறந்தமையான் இவர் சுகரெனப் பட்டார். இவர் பிறந்தவுடனே தத்துவ ஞானியாயினார். இவர் அரம்பையென்னும் தெய்வப்பெண் தன்னோடு சேருமாறு தன்னாலியன்றவாறெல்லாம் காதல் காட்டியும் சித்தஞ் சலியாத சுத்த வைராக்கிய முடையவர், முனிவருள் இவர் ஒருவரே பெண் போகத்திலே மயங்காதவர். இராவணன் சாரணர்களு ளொருவர்.
சுகன் - ஒரு கந்தருவன், சுரப்பிரமா, சுவர்க்கமுற்றோன், வியாசன்மகன்.
சுகன்மம் - சுகருமம்.
சுகன்றாதை - வியாசன்.
சுகாங்கி - இரதிதேவி.
சுகாசகம் } வெள்ளரி.
சுகாசம் }
சுகாசனம் - சுகாதனம்.
சுகாசுகம் - சுகதுக்கம்.
சுகாதனம் - சுகமுற்றிடனுமெவ்வாறிருக்கினெய்துமோ அவ்வாறிருத்தல், [மாதலை.
சுகாதாரம் - சுவர்க்கம்.
சுகாதிசயம் - சுகசெய்தி.
சுகாதீதம் - மேற்பட்டசுகம்.
சுகாந்தம் - ஈரவெண்காயம்.
சுகாந்திக்கல் - சுகந்திக்கல்.
சுகாய் - சொக்காய்.
சுகாந்தம் - மிகுவின்பம், மோட்சம்.
சுகானுபவம் - நல்லனுபவம்.
சுகி - காசிபன் மனைவி, சுகபோகி, சுகியென்னேவல், சுகானுபவம், செல்வன், சௌக்கியம், கோயிலான்.
சுகிதம் - பால்.
சுகித்தல் - இன்பமனுபவித்தல், செல்வங்களை யனுபவித்தல்.
சுகிப்பு - நல்லனுபவம்.
சுகியன் - சுகானுபோகி, போசனாதி சௌக்கியமுடையோன்.
சுகியாதி - நற்கீர்த்தி.
சுகிர் - உட்டுளை, உட்டுளைப்பொருள், சுகிரென்னேவல், சுகிர்வு.
சுகிர்தகுணம் - நற்குணம்.
சுகிர்தகுறள் - ஒருநூல்.
சுகிர்தநூல் - வேதநூல்.
சுகிர்தபுண்ணியம் - நற்புண்ணியம்.
சுகிர்தம் - அதிட்டம், அறம், இன்பம், சன்மார்க்கம், சுசி, தயவு, நன்மை, நெய், புண்ணியபலன்.
சுகிர்தலாபம் - சினேக சம்பாத்தியம்.
சுகிர்தல் - வகிர்தல்.
சுகிர்தவசனம் - சுத்தவசனம், மெய்வசனம்.
சுகிர்தி - பிருது புத்திரன்.
சுகிர்த்து - சினேகம்.
சுகிர்தலாபம் - நட்புப்பேறு.
சுகு - ஒருபாத்திரம்.
சுகுடம் - சேம்பு.
சுகுணபாண்டியன் - இராஜாதிராஜ பாண்டியனுக்குப் பின் அரசுசெய்தவன். இவன்காலத்திலேயே கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்த திருவிளையாடல் நடந்தது.
சுகுணசேகரபாண்டியன் - சுகுணபாண்டியனுக்குப் பின் அரசுசெய்தவன்.
சுகுணன் - பாண்டுபுத்திரனாகிய வீமசேனனுக்கு ஜலந்தரை யென்பவளிடத்துப்பிறந்தபுத்திரன். நற்குணமுடையோன்.
சுகுமாரநூல் - இலவமரம்.
சுகுமாரதை - ஓரலங்காரம், அது வல்லொற்று நீங்கியுள்ள சொற்களாலாக்கப்பட்டது.
சுகுமாரம் - ஒரு கரும்பு, ஒருதானியம், மிருது.
சுகுமாரன் - சவிபு புத்திரன். திருஷ்டகேதன் தந்தை.
சுகுர்தம் - சுகிர்தம்.
சுகுவது - தீ.
சுகேசன் - வித்தியுற்கேசன் புத்திரன். மாலியவந்தன் முதலியோர் தந்தை. இவன் பாரி தேவவதி.
சுகேசினி - சகரன் முதன்மனைவி. அசமஞ்சசகன் தாய்.

சுகேதனன் - தாடகை தந்தையாகிய ஒருயக்ஷன்.

சுகேதன் - மிதிலன் புத்திரனுக்குப் பௌத்திரன். க்ஷேமன் புத்திரன்.

சுகோச்சம் - மகாசுகம்.

சுகோததி - இன்பக்கடல்.

சுகோதரம் - தாளிசபத்திரி.

சுகோற்சவன் - கணவன்.

சுக்கங்காய் - மிதக்கங்காய்.

சுக்கங்கீரை - ஒருகீரை.

சுக்கச்சிலை - வங்கக்கல்.

சுக்கடித்தம் - அழுத்தமான புடைவை.

சுக்கம் - ஒருகொடி, களவு, பொதுக்கு.

சுக்கம்வைத்தல் - களவாயபகரித்தல்.

சுக்கல் - அற்பம், துண்டு.

சுக்காய் - சொக்காய்.

சுக்காரம் - செற்சிதம்.

சுக்காணி - கப்பலோட்டி.

சுக்காளிறு - சுண்ணாம்புக்கன்னிறு.

சுக்கான் - ஒருகல், கப்பலை நடத்துங் கருவி.

சுக்கான்கல் - சுண்ணாம்புக்கல்.

சுக்கான்கீரை - புளிக்கீரை.

சுக்கான்பருப்பதம் - வங்கக்கல்.

சுக்கிதை - புளியாரை.

சுக்கியானம் - பரமஞானம்.

சுக்கிரபடர் - அசுரர்.

சுக்கிரபகவான் - வெள்ளி.

சுக்கிரம் - ஆனிமாதம், கண்ணோய், கழுநீர், கள், நீர், புண்ணியம், பொன், வித்து, வெண்ணிறம்.

சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை.

சுக்கிரவாரவிரதம் - இது உமாதேவியாரைக் குறித்து அநுஷ்டிக்கப் படுவதும், விநாயகரைக் குறித்து அநுஷ்டிக்கப் படுவதும், சுப்பிரமணியரைக் குறித்து அநுஷ்டிக்கப் படுவதும் என மூன்றும். தேவியைக் குறித்து சித்திரைமாசத்துச் சுக்கிலபக்ஷத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கியும், விநாயகரைக் குறித்தது வைகாசி மாசத்துச் சுக்கில பக்ஷத்து முதற்சுக்கிரவாரந்தொடங்கியும், மற்றது ஐப்பசிமாசத்து முதற்சுக்கிரவாரந்தொடங்கியும் அனுஷ்டிக்கத்தக்கதாம்.

சுக்கிரனுளி - முத்து.

சுக்கிரன் - அசுரர்குரு, ஒருகண்ணுள்ளவன் கண்ணோயுமொன்று. தீ, வெள்ளி, பிரமமானச புத்திரருள் ஒருவனாகிய பிருகுவினது பௌத்திரன். இவன் அசுரகுரு. இவன்மகள்தெய்வயானை. இவன் தாய் தெய்வலோகத்திலே தவஞ் செய்திருந்தபோது விஷ்ணுவினாற் கொல்லப்பட்டாள். இவன் அசுரமந்திரிஎனவும்படுவன். இவன் மகாபலி சக்கிரவர்த்தி யிடத்திலே மந்திரியாக விருந்தகாலத்திலே விஷ்ணு வாமனவதாரமெடுத்து மகாபலியிடஞ்சென்று மூன்றடிமண் வேண்டியபோது சுக்கிரன் "இது விஷ்ணுவினது வஞ்சத்தூது நம்பாதொழி" என்று மகாபலியைத் தடுத்தகாரணத்தால் விஷ்ணு அச்சுக்கிரன் கண்களிலொன்றைக் கெடுத்தார். சுக்கிரன் இறந்த வுயிரை யெழுப்பும் வன்மையுடையவன். இவனிருக்கும் மண்டலம் அப்புமண்டலம். நவக்கிரகங்களிலொன்று. சுக்கிரன் சுபஸ்தானங்களில் நிற்கப் பிறப்போர் திரிகாலவுணர்ச்சியும் இராஜ யோகங்களுமுடையராய் விளங்குவர், சுக்கிரன் மழைக்கதிபதி யாதலின் மழைக்கோளெனப்படும்.

சுக்கிராக்கினை - கொடிய இம்சை.

சுக்கிராங்கம் - மயில்.

சுக்கிராசாரியன் - சுக்கிரன்.

சுக்கிரிகை - புளியாரை.

சுக்கிரீபன் } கிட்கிந்தையரசன், நாங்கிறை.
சுக்கிரீவன் }

சுக்கிரீவேசன் - இராமன்.

சுக்கிரீவன் - வாலி தம்பி. இருக்ஷவிருஜன் புத்திரன். இவன் மனைவி உருமை, இவன், வாலிதன்மனைவியையும் அரிசுரிமையையுங் கவர்ந்துகொண்டு தனக்குச்செய்த துன்பங்களையெல்லாம் இராமரிடத்திலே முறையிட்டு அத்துன்பத்தை நீக்கித்தந்தால் அவ்வுபகாரத்துக் கீடாக தானும் தன் சேனையும் சீதையைச் சிறைமீட்டற்கு வேண்டிய துணை செய்வதாகக் கூறி ராமரால் வாலியைக் கொல்வித்துடன் சென்று இலங்கையிற் சீதையைச் சிறைமீட்டவன்.

விஷ்ணு இராவண சங்காரத்தின் பொருட்டுத் தமதுலகத்தை விட்டுப்

புறப்படும்போது அத்தேவருட் சில
ரைத் தம்மோடுசென்றுபூமியிற் பிற
க்குமாறு பணித்தருளினார். அவருட்
சூரியனது அமிசமாகப் பிறந்தவன்
இச்சுக்கிரீவன். அவனைத் துணையா
கக் கொள்ளும்படி இராமருக்குச்
சூழ்ச்சி கூறியவன் கவந்தன். சுக்கிரீ
வனுடைய வாசஸ்தானம் பம்பைக்
கரையிலுள்ளது. இராமரது வில்வ
ன்மையைப் பரீக்ஷிக்கும்பொருட்டுச்
சர்ப்பகோணமாக மாறிமாறி நின்ற
ஏழு மராமரங்களையும் ஓரம்பாலே
துளை செய்யும்படி கேட்டு அவர் அ
து செய்தபின்னர் அவர்மீது நம்பி
க்கை வைத்தவன். இராமரால் அரசு
பெற்ற சுக்கிரீவன் குறித்த அவதியி
லே சேனையோடு புறப்படாது இரா
ஜபோகத்திலே மயங்கிக் கிடந்து,
இராமர் அச்சுறுத்தித் தூதுபோக்கி
ய பின்னர்ப் படைதிரட்டிக் கொண்
டுபோய் வணங்கித் தான்செய்த கு
றையைப் பொறுத்தருளுமாறு செ
ய்த விண்ணப்பம் மிக வியக்கர்பா
லது. சுக்கிரீவனும் இராவணனும்
செய்த கொடும்போரிலே சுக்கிரீவ
ன் ஒரு மலையைப் பெயர்த்து இரா
வணன் மார்பிலே மோத, அவன்
வெகுண்டு ஒரு கொடிய வேலைவிட்
டெறிந்தான். அவ்வேலை அனுமா
ன்பற்றி முழுந்தாளிற் பூட்டித் தகர்த்
தான். அதுகண்டு இராவணன் ஒரு
மலையை யிடந்து சுக்கிரீவன் சிரசில்
மோத அவன் வீழ்ந்து மூர்ச்சையா
னான். இராவணன் உடனே அவனை
த் தூக்கி யிடுக்கிக்கொண்டு செல்லச்
சிறிதுபோதிலே அவன் தெளிந்து
பல்லாலும் நகங்களாலும் அவனு
டைய விலாவைக் கடித்துக் கிழிக்க,
அவன் அத்துன்பத்தாற் கையை
நெகிழ்த்தான். உடனே சுக்கிரீவன்
குதித் தந்தரத்திலெழுந்து இராமர்
பக்கல் சார்ந்தான். இவ்வாறே சுக்கி
ரீவன், இராமர் இராவணனைக் கொ
ன்று சீதையை சிறைமீட்குங்காறும்
தன் வாக்குத்தவறுமல் மிக்க பத்தி
யோடு போர்புரிந்து அவருக்குப்பெ
ருந்துணை புரிந்தான்.

சுக்கிரீகன்-பார்ஹத்திரத வமிசத்தரி
புஞ்சயன் மந்திரி.
சுக்கிரை - புளியமரம்.
சுக்கில - மூன்றுவதாண்டு.
சுக்கிலகலிதம் - இந்திரியக்கலிப்பு.
சுக்கிலகுட்டம் - வெண்குட்டம்.
சுக்கிலத்தம்பம் - கலைஞான மறுபத்து
நான்கிலொன்று.
சுக்கிலத்துவம் - வெண்மை.
சுக்கிலபக்கம் } பூருவபக்கம்.
சுக்கிலபட்சம் }
சுக்கிலபம் - நாணம்.
சுக்கிலபுட்டா - குங்குமமரம்.
சுக்கிலப்பிரமியம் - ஒருநோய்.
சுக்கிலமண்டலம் - வெள்ளைவிழி.
சுக்கிலம்-இந்திரியம், ஒருயோகம், கண்
ணோயினொன்று, பாலைமரம், புளி,
வெண்ணெய், வெண்மை, வெள்ளி.
சுக்கிலாங்கம் - வெள்ளைத்தேகம்.
சுக்கிலாசயம் - இந்திரியகோசம்.
சுக்கிலாபாங்கம் - மயில்.
சுக்கிலை - புளியமரம்.
சுக்கு-சுக்கான்கல், சுண்டி, துண்டு, வே
ர்க்கொம்பு; அது திரிகடுகத்தொன்
று, பஞ்சமூலத்து மொன்று.
சுக்குச்செட்டுக்காரன் - உலுத்தன்.
சுக்குதல் - செய்தல், புணர்தல்.
சுக்குநாறிப்புல் - ஒருபுல்.
சுக்குப்பொடி - வேர்க்கொம்புச் சூரண
சுக்குமம் - சிற்றேலம். [ம்.
சுக்கை - சப்பற்கேழ்வு, நட்சத்திரம், மா
லை, மொசுமொசுக்கை.
சுக்ஞானம் - பரமஞானம்.
சுக்திமதி - கடகபுரிக்குச் சமீபத்திலே
யுள்ள ஒரு புண்ணியநதி.
சுங்கம் - ஆடுதின்றுப்பாலை, ஆயம்,
இறை, களவு, பொதுச்சு.
சுங்கன் - ஒருமீன், சுக்கிரன்.
சுங்கான் - புகைகுடிக்கிற குழல்.
சுங்கி - ஆலமரம், வன்னிமரம்.
சுங்கிதன் - ஈனன்.
சுங்கு - மடிப்பு. [ல்.
சுங்குத்தான்குழல்-உண்டை யெறிகுழ
சுசரித்திரன் - அறுபத்தேழாவதுமேன
கர்த்தா.
சுசர்மா } திரிகர்த்த தேசத்தாசன்
சுசர்மன் } புத்திரன், தன்பாரியைப்

பலாசுன் என்னு மிராக்ஷசன் அபக ரித்துப்போனபோது உத்தானபாத ன் மகனாகிய உத்தமன் கண்டு அவ னை மீட்டுக் கொடுக்கப்பெற்ற ஓரந்த ணன். கர்ணன் புத்திரன். நகுலனாற் கொல்லப்பட்டவன். மகததேசத்த ரசரான காண்வாயருள்ளேகடையா சன். ஆந்தரவிருத்திய னென்னுஞ் சூத்திரனாற் கொல்லப்பட்டவன்.

சுசலம் - சுத்தசலம்.
சுசனம் - காற்று.
சுசனன் - மல்லவன்.
சுசாதி - சுயசாதி, வேறுபடாதசாதி.
சுசாதிபலம் - சாதிக்காய்.
சுசாதிபேதம் - சுயசாதிக்குள்ளபேதம், அது மரத்துக்கு மறுமரம்.
சுசாந்தி - அஜமீடன் இரண்டாம் புத்தி ரனாகிய நீலன் பௌத்திரன்.
சுசி - ஆடிமாதம், இணக்கம், காமக்கவலை, கொடிவேலி, கோடைகாலம், சந்தி ரன், சிவன், சுக்கிரன், சுத்தம், சூரிய ன், தீர்த்தம், நெருப்பு, பாதரசம், பிரமன், மாசின்மை, மாணுக்கன்ற ன்மை, முலை, வெண்குடை, வெண் மை, மிதிலைவமிசத்து ஓரரசன். அந் தகன் புத்திரன் சுத்தன் புத்திரன்.
சுசிகம் - புளியாரை.
சுசிகரம் - சுத்தம், நேர்மை, மேன்மை.
சுசிதம் - பால்.
சுசித்துருமம் - அரசமரம்.
சுசிந்தனம் - தியானம்.
சுசிமணி - இரத்தினம்.
சுசிமிதம் - புன்னகை.
சுசிரம் - அக்கினி, ஊதுகுழல், துளை.
சுசிருவை, சுசிருஷை } பணிவிடை.
சுசிரோசி - சந்திரன்.
சுசிலம் - காற்று, நற்குணம், நேர்மை.
சுசிலன் - நற்குணன்.
சுசுகம் - முலைக்கண்.
சுசுந்தரி - கோபி, நாவி, மூஞ்சூறு.
சுசுமை - சுக்கிரன் மனைவி.
சுசுருதன் - (1) மிதிலாதி பதிகளுள் ஒருவன் ஜயன் தந்தை (2) காசிரா ஜன் புத்திரருளொருவர். இவர் சுசு ருதம் என்னும் பெயரால் சிறந்த வைத்திய நூலொன்று சம்ஸ்கிருதத் திலே செய்தவர்.
சுசுலம் - சிறுபண்டம்.
சுசூகம் - முலைக்கண்.
சுசூக்குமை - நான்குவாக்கிலொன்று.
சுசேலம் - புடைவை.
சுசை - சோகம்.
சுசோபை - சூரியவமிசத்துப் பரீக்ஷித்து பாரி. இவள் மண்டுகராஜன் மகள்.
சுஜன்மகிருது (பா) சோமகன்புத்திரன்.
சுஜாதை - அஷ்டவக்கிரன்தாய். ஏகோபா தன் பாரி.
சுச்சு - சுக்கு, சுண்டி, பறவைமூக்கு.
சுஞ்சமாரம் - காலணி, மிடற்றெலும்பு, முதலை.
சுஞ்ஞானம் - பரமஞானம்.
சுடகமாமிசம் - கருவாடு.
சுடகம் - காய்வு, சடை.
சுடரெண்ணெய் - சுட்டெண்ணெய், பந்தயிலம்.
சுடரோன் - சூரியன்.
சுடர் - அக்கினி, ஒளி, சந்திரன், சூரி யன், தளிர், தீச்சிகை, விளக்கு.
சுடர்க்கடை - மின்மினி.
சுடர்க்கொடி - ஆரதிகருப்பூரம், பெண்.
சுடர்க்கொழுந்தீசர் - திருத்தூங்கானை மாடத்தில் கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
சுடர்ச்செலவு - சட்டுவருக்கத்தொன்று. அது இராசியை யிரண்டாகப் பகிர்த ல்.
சுடர்தல் - ஒளிசெய்தல்.
சுடர்கிலை - தகழி, விளக்குத்தண்டு.
சுடர்மௌலியர் - வானோர்.
சுடர்விடுதல் - சுவாலித்தல்.
சுடர்விழியோன் - வீரபத்திரன்.
சுடர்விழுதல் - தீயிலிருந்து சுடரிழிதல், விளக்கு முதலியவற்றிலிருந்து தீச் சிகை விழுதல்.
சுடர்வு சுடர்தல்.
சுடலை - சவுக்காரம், சுடுகாடு.
சுடலைக்குருவி - ஒருகுருவி.
சுடலைஞானம் - மயானவைராக்கியம்.
சுடலைமாடன் - ஒருதேவதை.
சுடலையாடி - சவுக்காரம், சிவன்.
சுடலையினீறு - சவச்சாம்பல்.
சுடலையோன் - அரிசு.
சுடலைவயிரவன் - மயானவயிரவன்.

சுடாரி - கவசம்.
சுடிகை-உச்சி, கள், சடாமுடி, சூட்டு, நெறிச்சுட்டி, மயிர்முடி, முடி.
சுடீரியம் - வீரியம்.
சுடு - வெம்மையுறல்.
சுடுகண் - கொள்ளிக்கண்.
சுடுகலம் - குயக்கலம், செங்கல்.
சுடுகல் - சுட்டசெங்கல்.
சுடுகாடு - ஈமம்.
சுடுகாடுமீட்டான் - முடக்கற்றான்.
சுடுகாட்டுக்கோட்டம் - சக்கரவாளக்கோட்டம்.
சுடுகாட்டுமணிபொறுக்கி - ஒருபட்சி.
சுடுகோல் - சூட்டுக்கோல்.
சுடுசுடுத்தல் - தீவிரித்தல்.
சுடுசுடுப்பு - தீவிரம்.
சுடுசுடெனல்-தீவிரித்தல், வெடுவெடுத்தல்.
சுடுசுண்ணம் - சுட்டசாந்து.
சுடுதல்-உலோகங்களையொட்டுதல், சூடுகாணுதல், தகித்தல், நீற்றுதல், விசனமடைதல், விசனமடைவித்தல், வேகவைத்தல்.
சுடுதாரத்தம் - சித்திரப்பாலாவி.
சுடுதொரட்டி - ஒருசெடி.
சுடுநிலம் - சுடுகாடு.
சுடுநீர் - வெந்நீர்.
சுடுமண் - ஓடு.
சுடுமருந்து - எரிமருந்து.
சுடுவடு - இரத்தம்.
சுடுவனம் - இரத்தம், சுடுகாடு.
சுடுவன் - இரத்தம்.
சுடுவான்-படகிற்சமையல் பண்ணுமிடம்.
சுடுவு - சும்மாடு.
சுட்கதர்க்கம் - வீண்தர்க்கம்.
சுஷ்கம், சுட்கம் } வறட்சி.
சுட்டல், சுட்குதல் } வறளல்.
சுட்சுள்ளெனல்-முள்ளு, வாயு முதலிய குற்றக்குறிப்பு.
சுட்டல்-காட்டுதல், குறித்தல், சுடுதல், சுடல், மதித்தல்.
சுட்டாவிரல் - சுட்டுவிரல்.
சுட்டி, சுட்டிகை } உச்சிவெள்ளை, நுதலணி, நெற்றிச்சுட்டி.
சுட்டிக்காட்டுதல்-குறித்துக் காண்பித்தல்.
சுட்டித்தலை - குறும்புத்தனம் திரியாபுரம்.
சுட்டித்தலையன், சுட்டியன் } அட்டன், நெற்றிச்சுட்டியுள்ளது.
சுட்டு - எண்ணம், குறிப்பு, சுட்டென்னேவல்.
சுட்டுக்கோல் - உலையாணிக்கோல், நியோன்.
சுட்டுச்சொல்-ஒன்றைக்குறித்துக்காட்டுமொழி.
சுட்டுதல்-எண்ணுதல், கருதுதல், குறித்தல், மதித்தல்.
சுட்டுப்பொருள் - குறித்தபொருள்.
சுட்டுவிடை - சுட்டிக் காட்டும் விடை (உ-ம்) இது.
சுட்டுவிரல் - ஆள்காட்டிவிரல்.
சுட்டுவைத்தல் - இலக்குவைத்தல்.
சுட்டெழுத்து-அ, இ, உ என்னுமெழுத்துக்கள்.
சுணக்கம் - சோர்வு, தாமதம், பிணக்கம்.
சுணக்கன் - காயாட்டத்திரிகிறவன் நீசன்.
சுணக்குதல் - தாமதப்படுத்தல், மெலியச்செய்தல்.
சுணங்கத்திசை - தென்மேற்றிசை.
சுணங்கல் - சோர்தல், தாமதித்தல், மெலிவு.
சுணங்கன் - நாய்.
சுணங்கன்முத்திரை - நாயாகாரமானவோர் முத்திரை.
சுணங்கு-சுணங்கென்னேவல், தேமல், மெலிவு.
சுணங்குதல் - சோர்தல், தாமதித்தல்.
சுணை - அபிமானம், கூர்மை, சுரணை, சுனை, தினவு.
சுணைக்கோரை - ஒருபுல்.
சுணைத்தல் - சுனைத்தல்.
சுணைநெருஞ்சில் - ஒருபூடு.
சுணைவு - பேய்க்கடலை.
சுண்டகம் - மூங்கில்வில்.
சுண்டகன் - சாராயம் வடிப்போன்.
சுண்டக்கட்டுதல் - இறுகக்கட்டுதல்.
சுண்டக்காய்தல் - இறுகக்காய்தல்.
சுண்டங்காய் - சிறுகாய், சுண்டிக்காய்.
சுண்டப்பிடித்தல் - இறுகப்பிடித்தல்.
சுண்டம் - கள், யானைத்துதிக்கை.
சுண்டல்-இறுகல், எய்தல், சுண்டற்கறி, சுண்டுதல், தெறித்தல், வற்றுதல்.
சுண்டற்கறி - தீயற்கறி.

சுண்டன் - அறிவிலி, சதயநாள், மூஞ்சூறு. [ல்.
சுண்டாங்கி-அற்பம், குறைவு, துவையல்
சுண்டாரன் - சாராயம்வடிப்போன்.
சுண்டாலம் } யானை, யானைத்துதிக்கை.
சுண்டாலி }
சுண்டான் - கள் அளவு.
சுண்டி - கள், சுக்கு, சுண்டில், தொட்டால்வாடி, நீர்ச்சுண்டி.
சுண்டிகை - உண்ணாக்கு.
சுண்டிமூடிகை - மூஞ்சூறு.
சுண்டியம் - சுக்கு.
சுண்டியுண்டை - கொழுஞ்சி, சதுரக்கள்ளி, சீரகம்.
சுண்டில் - சுண்டிற்செடி.
சுண்டு-அடிப்பற்றியது,அற்பம்,ஒருசிறு அளவுபடி, சுண்டெலி
சுண்டுகட்டை-நெய்வார்கருவியில் ஒன் [று.
சுண்டுவிரல் - சின்னவிரல்.
சுண்டுவில்-கன்முதலியசெலுத்தும்வில்
சுண்டெலி - ஓசெலி.
சுண்டை - கள்,கிணறு, சுண்டைச்செடி, நீர்க்குண்டு.
சுண்ணக்கல் - சுக்கான்கல். [பொடி.
சுண்ணப்பொடி - பராகம், வாசனைப்
சுண்ணமிடித்தல் - ஓமக் கிரியையில் ஒன்று.
சுண்ணமொழிமாற்று - மொழிமாற்றுப் பொருள் கோள்களிலொன்று.
சுண்ணம் - சதயம், சுட்டசாந்து, சுண்ணப்பொடி, பராகம், புழுதி.
சுண்ணவாசி - முல்லை.
சுண்ணவிரோதி - சவ்வீரம்.
சுண்ணாம்படித்தல்-சுண்ணாம்புபூசுதல்.
சுண்ணாம்பு-குழைசாந்து,சிப்பிமுதலியவற்றின் சுண்ணம்.
சுண்ணாம்புக்காறை - சுண்ணாம்புச்சாந்திடுதல்.
சுண்ணாம்புத்தடிப்பு - சுண்ணாம்புத் தோண்டி.
சுண்ணித்தல் - நீற்றுதல், பூசுதல்.
சுதசனம் - சுதனம்.
சுதசித்தம் - தானாகவே ஏற்பட்டது.
சுதஸ்தம் - தோத்திரம்.
சுதந்தன் - கூத்தாடி.
சுதந்தி - வடமேற்றிசை யானைக்குப் பெண்யானை.
சுதந்திரம் - இட்டமானவாளுகை, உரி [மை.
சுதந்திரர் - உரிமைக்காரர்.
சுதந்திரவாளி - உரித்தாளி.
சுதந்திரி-இட்டமாய் நடத்துவோன், உரிமைக்காரன், உரிமையுடையாள்.
சுதந்திரித்தல் - இட்டமாய் நடத்தல், உரிமைபெற் றனுபவித்தல்.
சுதந்திரியம் - இட்டம். [தை.
சுதபன் -(அ) ஹமன் புத்திரன். பலிதந்
சுதமாரதை-ஓரலங்காரம்;அது வல்லொற்று நீங்கியுள்ள சொற்களா லாக்கப்பட்டு மெல்லினமாக விசைப்பது.
சுதம்-கேடு, நெருஞ்சில், மலத்துவாரம், முறைமை.
சுதரிசனம்-அழகு, கண்ணாடி, சக்கிரம், சம்புநாவல், தேவலோகம், மேருமலை, வலியான்.
சுதர்சனன் - (1) அங்கிரசனைப்பார்த்து சிரித்துச் சர்ப்பமாகச் சபிக்கப்பட்டு கிடந்து பின்னர்க் கிருஷ்ணன் திருவடி தீண்டப்பெற்றுத் தொல்லுருப் பெற்ற வித்தியாதரன். சுதர்சனை புத்திரன். இவன் தன் கிருகத்துக்குத் தருமதேவதை அதிதியாகிச் சென்று விருந்தருந்தப் பெற்றவன்.
சுதர்சனை - மநுவமிசத்துத் துரியோதநன்தருமதையிட த்துப்பெற்றபுத்திரி இவள் அக்கினிதேவனைக்கூடிச் சுதர்சனனென்னு மாசனைப் பெற்றவள்.
சுதருமம் - நற்கிரியை.
சுதர்ச்சி - சதுரக்கள்ளி.
சுதர்த்தனம் - குயில்.
சுதர்மம் - சுதருமம்.
சுதர்மன் - ஒருசாதி.
சுதலம் - கீழேழுலகிலொன்று. பச்சை வர்ணமுடையது.
சுதனபாரம் - ஆயுதவுறை.
சுதனம் - ஆயுதப்பொது.
சுதனுசு - குருபுத்திரரு ளொருவன்.
சுதனுவன்-விச்சுவகன்மா,வில்லாச்சிரமி.
சுதன் - இராசகுமாரன். [மி.
சுதன்மம் - இந்திரன் வசந்தமண்டபம், சுதருமம், தேவசபை.
சுதன்மை - சுதன்மம்.
சுதன்வன்-(1) லோகபாலகர் நால்வருளொருவன். (2) திரிகர்த்ததேசாதிசனாகிய ஓராசன். சுசர்மன் தந்தை.

சுதன்வானன் - (ய) வசுதேவனுக்கு ஸ்ரீதேவிடத்துதித்த புத்திரரு ளொருவன்.

சுதக்ஷிணன் - பௌண்டரக வாசுதேவன் புத்திரன். தந்தையைக் கிருஷ்ணன் கொன்ற காரணத்தால் அப்பழிவாங்க வேண்டிச் சிவனை நோக்கித் தவங்கிடந்து ஓரபிசாரவோமஞ் செய்து அதினின்றும் பெற்ற ஒரு பூதத்தைத் துவாரகைக் கனுப்பினன். கிருஷ்ணன் அதனைக்கொண்டே சுதக்ஷிணனைக் கொன்று அவன் நகரத்தையு மெரியூட்டு வித்தான்.

சுதக்ஷிணை - திலீபன்மனைவி. இவள் அதிரூபவதி. திலீபன் நெடுங்காலம் புத்திரப் பேறின்றி வருந்தி வசிஷ்டரையடைந்து விண்ணப்பஞ்செய்ய, அவர் நீயும் உன் மனைவியும் தேனுவைக் கிரமமாக வழிபடுவீர்களாயின் புத்திரப்பேறு சித்திக்குமென்றனர். அச்சொற்கொண்டு இவளும் திலீபனும் கிரமமாகத் தேனுவை வழிபட்டு ரகுவைப் பெற்றார்கள்.

சுதா - தாளுய்.

சுதாகரன் - கருடன், சந்திரன்.

சுதாகிருது - கருடன்.

சுதாங்கரன் - சந்திரன்.

சுதாசன் - (பா) மூன்ருஞ்சியவனன் புத்திரன், சஹாதேவன் தம்பியாகிய அதீகன்பாரி.

சுதாசூதி - சந்திரன், யாகம், வனசம்.

சுதாச்சி - சதுரக்கள்ளி.

சுதாதாரன் - சந்திரன்.

சுதாத்துமசன் - பேரப்பிள்ளை.

சுதாநிதி - சந்திரன்.

சுதாபிரீதி - சந்திரன், யாகம்.

சுதாமனு - மலை, முகில்.

சுதாரித்தல் - தைரியங்கொள்ளல், மேற்கொள்ளல், வாதித்தல்.

சுதாவாக / சுதாவிலே } தாளுய்.

சுதி - அறிஞன், குதத்துவாரம், சுருதி, பூருவபக்கம், பெண், யாழின்நரம்பு.

சுதிக்கியானம் - சுருதிவித்தை.

சுதினம் - நற்றினம்.

சுதீக்ஷிணன் - (ரி) அகஸ்தியரதுஆச்சிரமத்தைநாடிச்சென்றராமரைக்கண்டு உபசரித்து விருந்திட்ட முனிவர். இவருடைய ஆச்சிரமம் அகஸ்தியருடைய ஆச்சிரமத்துக்கு உத்தரதிசையிலே சிறிது தூரத்திலுள்ளது.

சுதுப்புகாங்காலை - ஓர்காலை.

சுதும்பு - ஒருமீன்.

சுதேசம் - சொந்ததேசம்.

சுதேவன் - (1) (ய) தேவகன் புத்திரன் (2) சம்பன்புத்திரன், விஜயன் தந்தை.

சுதேஷ்ணை / சுதேட்டிணை } (1) அநுவமிசத்துப் பலிபாரி. (2) விராடன் பாரி, கேகயராஜன் மகள். கீசகன் சகோதரி, பாண்டவர்கள் விராடனுடைய நகரத்திலிருந்தபோது திரௌபதி இச்சுதேஷ்ணையிடத்திலேவண்ணஞ்செய்யுந்தோழியாகவிருந்தாள். அக்காலத்திலேயே கீசகன் திரௌபதியைக்கண்டு காதல் கூர்ந்து அவளை வலிதிற்கூட வெத்தனித் துயிர் மாண்டது.

சுதை - அக்கினிதேவி, அமிழ்து, உதைகாற்பசு, கங்கை, சுண்ணச்சாந்து, சுண்ணாம்பு, சுவை, பால், பூந்தேன், பொருள், மகள், மருந்து, மின், வெண்மை.

சுதோற்பத்தி - பிள்ளைப்பேறு.

சுத்தசுழி - சுத்தமத்திமம்.

சுத்தகரணம் - பரதவுருப்பிளொன்று.

சுத்தகாந்தாரம் - அணிகைக்கிளை, ஆசானுடைய பெருகுஜாதி.

சுத்தகேவலம் - ஓரவத்தை.

சுத்தகௌடம் - பஞ்சகௌடத்தொன்று.

சுத்தகட்டி - கலப்பற்ற பொற்கட்டி.

சுத்தசத்தியம் - மகாவுண்மை.

சுத்தசலம் - தெளிநீர்.

சுத்தசாத்துவிகம் - சித்துருபசத்தி.

சுத்தசாந்தம் - ஆனந்தருபசத்தி.

சுத்தசாரி - பரதவுருப்பிளொன்று.

சுத்தசிவன் - குற்றமற்றபிராணி.

சுத்தசூனியம் - அறத்தீர்ந்தவெறுமை, முழுப்பாழ்.

சுத்தசைதன்னியம் - சுத்தருபஞானம்.

சுத்தசைவம் - ஒருசைவம்.

சுத்தசைவன் - ஆன்மாவுஞ்சிவமுங்கூடியவிடத்து, ஆன்மா சிவானுபவத்துக்கு உரியதாகாதென்று சொல்பவன். இவன் அகச்சமயிகளு ளொருவன்.

சுத்தஞானம் - மயக்கந்தீர்ந்தஞானம்.
சுத்தஞானி - பக்குவஞானி.
சுத்ததாமதம் - சுத்தரூபசத்தி.
சுத்ததினம் - சென்றநாள், புண்ணிய தினம், வருடத்தின் முதனுள்.
சுத்தநிஷாதம் - மணிகதாரம்.
சுத்தநீர்க்கடல் - புறவாழிக்கடல்.
சுத்தபத்தி - மாசற்றபத்தி.
சுத்தபுடம் - சுத்தப்புடம்.
சுத்தபோசனம் - ஆராதபோசனம்.
சுத்தப்பிரமம் - சருவசாட்சி.
சுத்தப்பிழை - முற்றும்பிழை.
சுத்தப்புடம் - உண்ணவிற்கனேந்தெடுத்தது.
சுத்தப்பொய் - முற்றும்பொய்.
சுத்தமதி - நன்மதியுள்ளோன்.
சுத்தமத்திமம் - சுத்தவழி.
சுத்தமனம் - வஞ்சகமற்றமனம்.
சுத்தமாயை - மகாமாயை.
சுத்தமார்க்கம் - சத்தியமார்க்கம், நன்னடை.
சுத்தம் - உண்மை, கலப்பற்றது, குற்றமற்றது, சுயம், சுசி, பவித்திரம், பொரிக்கறி.
சுத்தம்பண்ணுதல் - தூயதாக்கல்.
சுத்தரிஷபம் - பிந்ததுத்தம்.
சுத்தவாசனை - நறுமணம்.
சுத்தவாளர் - தெய்வபத்தர்.
சுத்தவாளி - சுத்தன்.
சுத்தவித்தை - சிவதத்துவ மைந்தில் ஒன்று; அது ஞானமேறிக் கிரியை குறைந்தது.
சுத்தவீரன் - மிகுவீரன்.
சுத்தவுபவாசம் - பட்டினி.
சுத்தன் - ஆயுபௌத்திரன். அநேநசன் புத்திரன். மூன்றும் சுசிதந்தை.
சுத்தன் - அருகன், சிவன், கடவுள், பரிசுத்தன், பிரமன், மெய்யன், வருணச்சிரமமில்லா ஞானி, விட்டுணு.
சுத்தாங்கம் - கலப்பற்றது, முற்றும்.
சுத்தாத்துமா - பரிசுத்தவான்.
சுத்தாந்தபாலகன் - அரண்மனை காவலன்.
சுத்தாந்தம் - அரசன்றேவியில்லம்.
சுத்தாந்தை - ராஜபத்தி.
சுத்தாவத்தை - பரிசுத்தவத்தை.
சுத்தி - அரைப்பலம், இரப்போர்கலம், கும்பிடுகிளிஞ்சில், சங்கு, சுத்தியல், நெய்க்குத்தி முதலிய பாத்திரம், பரிசுத்தம், பவித்திரம்.
சுத்திகரம் - சுத்திசெய்தல்.
சுத்திகரித்தல் - சுத்தமாக்குதல்.
சுத்திகரிப்பு - சுத்தம்பண்ணுதல்.
சுத்திகை - அகவல், இப்பி.
சுத்திசெய்தல், சுத்திபண்ணுதல் - பவித்திரஞ் செய்தல்.
சுத்தியடைதல் - சுத்தியாதல்.
சுத்தியல் - சம்மட்டி.
சுத்தியுமனன் - இவர் வைவசுதமனுவுக்கு யாகத்திலே முன்னர்பெண்ணாகத் தோன்றிப் பின்னர் வசிஷ்டர் பிரயத்தனத்தாற்புருஷரூபம்பெற்றவர். பெண்ரூபத்தோடிருந்த காலத்தில் இளையென்னும்பெயரோடு புதனைக்கூடிப் புரூரவனைப்பெற்றுப் பின்னர்ப் புருஷரூபம் பெற்றபோதுஉற்கலன், கயன், விநற்வலன் என மூவர் புத்திரரைப் பெற்றவர்.
சுத்தியுவு - (பு) சாருபுத்திரன்.
சுத்திராமன் - இந்திரன்.
சுத்துராம், சுத்துரு - கண்டங்காலி.
சுத்தோதகம் - சுத்தசலம்.
சுநகன் - (1) கிருற்சுனமதன் புத்திரன். தபோ நியமத்திற் சிறந்தவராகிய சௌநகர்தந்தை(2) (ரி)ருரன் பிரமத்துவரையிடத்துப் பெற்றபுத்திரன்.
சுநசை - பாரிபத்திரபர்வதத்திலேஉற்பத்தியாகிய ஒருநதி.
சுநச்சேபன் - ருசிகமுனி புத்திரன். இருசிகன் இரண்டாம் புத்திரன். இவனுக்குத் தேவராதனெனவு மொரு பெயருளது. அஜிகர்த்தன் மகனென்பாருமுளர். அரிச்சந்திரன் தன் புத்திரனாகிய ரோகிதனை வருணனுக்குத் தத்தஞ்செய்வதாக நியமஞ் செய்துவிட்டுப் பின்னர் அவனுக்கு ஈடாக இவ்வஜிகர்த்தன் புத்திரனாகிய சுநச்சேபனை விலக்குவாங்கித் தத்தஞ்செய்ய, அவன் வருணனையிரந்து தப்பிப்போய்த்தன் தந்தையிடஞ் செல்லாமல், விசுவாமித்திரனை யடைந்து அவனுக்குத் தத்தபுத்திரனானானென வுமொரு கதையுளது.
சுநந்தன் - விஷ்ணுபரிசாருள்ஒருவன்,

சுநந்தை - (1) துஷ்யந்தன் புத்திரனாகிய பரதன்பாரி. (2) இந்துமததோழிகளுளொருத்தி.

சுநயம் - நன்னடை.

சுநாபன் - (ய) கம்சன் தம்பி.

சுநாமன் - (ர) வச்சிரநாபன் தம்பி.

சுநாசிரன் - இந்திரன்.

சுநாரம் - அடைக்கலான்குருவி, நாய்ப்பால், பாம்பின்முட்டை.

சுநி - பெண்ணாய்.

சுநிதம் - சுநயம்.

சுநீதன் - (கா) சந்நதிபுத்திரன். அலர்க்கன் பௌத்திரன். க்ஷேமன் தந்தை. சிசுபாலன் சேனாபதி.

சுநீதி - உத்தானபாதன் பாரி.

சுநீதை - அங்கன்பாரி. மிருத்யு மூத்தபுத்திரி. வேனன்தாய்.

சுநுகி - சதுரக்கள்ளி.

சுன் - சுனி.

சுந்தரகுசாம்பிகை - திருவீழி மிழலையிலே கோயில்கொண்டிருக்குந்தேவியார் பெயர்.

சுந்தரநாயகியம்மை - திருமீயச்சூரிலே கோயில் கொண்டிருக்குந்தேவியார் பெயர்.

சுந்தரமூர்த்திநாயனார் - சைவசமயகுரவர் நால்வருள் ஒருவர். கைலாசத்திலே சிவபிரானது அடியார்களுள் ஒருவராய் ஆலாலசுந்தரரென்னும் பெயரோடிருந்து உமாதேவியாரது சேடியர்கள்மீது மோகித்த காரணத்தாற் பூலோகத்திலே திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சடையனாருக்கு இசை ஞானியார் வயிற்றிலே அவதரித்தவர். அச்சேடியாகளும் பரவையார் சங்கிலியார் என்னும் பெயரோடுமுறையே திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் அவதரித்தார்கள். ஆலாலசுந்தரர் கைலாசத்தை விட்டு நீங்குமுன் மனம் பரிதபித்தழக்கண்ட சிவபெருமான் கருணைகூர்ந்து, "பூலோகத்திலுன்னை வந்தாட்கொள்வோம்" என்றனுக்கிரகித்தபடியே சுந்தரமூர்த்திநாயனார் மணப்பருவத்தையடைந்து மணக்கோலத்துடன் மணப்பந்தரின் கீழிருக்குஞ் சமயத்தில், அச்சிவபிரானொரு கிழப்பிராமணவடிவங்கொண்டு ஒரு முறியோலையோடவ்விடத்தை யடைந்து நாயனாரைத் தமக்கு அடிமையென அச்சபையிலுள்ளோர் ஒப்புமாறு நாட்டி, மணம் புகவொட்டாமற் றடுத்து அழைத்துப்போய்த்தம்மை இன்னாரென்றுணருமாறு மறைந்தருளினர். அப்பொழுது நாயனார் பூர்வ வாசனையாற் சிவபத்திமேலிடப்பெற்று அன்றுமுதல் அன்புமயமான அற்புத பாடல்களைப்பாடி சிவஸ்தலங்கள் தோறுஞ்சென்று வணங்கி வருவாராயினர். தமது பிறவிக்குக் காரணமாகிய பெண்ணவாவின் பயன்வந்து கூடுங்காலம் வந்தடுக்க, திருவாரூரிலே சுவாமி தரிசனஞ்செய்து மீள்பவர் ஊழ்வலியாலேபரவையாரைக்கண்டு மயங்கி அவர்பாற்சிவபிரானைத் தூதுபோக்கி அவரை இசைவித்து அவர் மெய்ங்கல நுகர்ந்தங்கிருந்தார். பின்னர்த்திருவொற்றியூரிற்சென்றங்கு ஊழ்கூட்டச் சங்கிலியாரையுங்கூடி அவ்வூழையும்புசித்தனர். அச்சங்கிலியார் பொருட்டுச்செய்த பொய்ச்சத்தியத்தின் பயனாகப் பார்வையிழந்து சிலநாள் வருந்திப் பதிகம்பாடிப் பார்வை பெற்றார். சிவபிரானுக்குத் தோழர் என்னும் பெயர்பெற்றவராயிருந்தும் செய்தபிழையை அக்கடவுள் பொறுத்தருளாது அதற்காக சுந்தரமூர்த்தியைதண்டித்தலின் சிவபிரான நடுநிலைதவறாதநீதியுடையரென்பதும் எவ்வினையும் அனுபவித்தன்றித் தீராதென்பதும், க்ஷமித்துப் பாவங்களைத் தீர்க்கும் அதிகாரங் கடவுளுக்கில்லையென்பதும்பெறப்படும்.

சுந்தரமூர்த்தி நாயனாரது பெருமைகளையெல்லாம் கேள்வியுற்ற சேரராஜாவாகிய சேரமான்பெருமானாயனார் அவரையழைத்துப்போய்த் தமதரமனையிலே விருந்திட்டுபசரித்து வைத்திருந்து அவரிடத்திலே பேரன்பும் பெருநட்புமுடையரா யிருந்தார் சுந்தரமூர்த்திநாயனார் பதினெட்டாம்வயதிலே திருவாஞ்சைக் களத்திற் சுவாமி தரிசனஞ்செய்து மீண்டு கோபுரவாயிலை யடைந்தபோது

கைலாசகிரியினின்று சிவகணங்களோடு மொரு வெள்ளையானையானது சிவாஞ்ஞையினாலே அவர் முன்னேசென்று நின்று சிவாநுக்கிரகத்தையுணர்த்த, ஆனந்தபரவசராய் அதன் முதுகின்மேற்கொண்டு சென்றார். சேரமான்பெருமாளும், அதனையுணர்ந்து தமது குதிரைமேற் கொண்டு அதன்செவியிலே ஸ்ரீ பஞ்சாட்சரத்தையோத அது அந்தரத்தெழுந்து பாய்ந்துசென்று சுந்தரருடைய யானையை வலம்வந்து முன்னே சென்றது. இருவரும் கைலாசத்தை யடைந்து சிவ கணபதப்பேறு பெற்றார்கள். சுந்தரமூர்த்தி யிடத்திலேயே விளங்கிய அற்புதங்கள், முதலைவிழுங்கிய புதல்வனை அம்முதலையையழைத்துமிழச்செய்துபிழைப்பித்தது, நென்மலைபெற்றது, அம்மலையைப் பூதங்கள் வாரிப்போய் பரவையார் வீட்டிலும் திருவாரூரிலுள்ளார் வீடுகள்தோறும் குவைசெய்யப் பெற்றதும் தலைக்கணையாக அடுக்கிப் படுத்திருந்த செங்கற்கள் உதயத்திலே பொன்னாயிருக்கப் பெற்றது. மணிமுத்தா நதியிலேயிட்ட பொன்னைத் திருவாரூர்க்கமலாலயக் குளத்திலே யெடுத்தது முதலியனவாம்.

சுந்தரமூர்த்திநாயனார் பொன்னை ஆற்றிலிட்டுவந்துதிருவாரூரிலே பரவையார் முன்பாகக் குளத்திலே தேடியபோது பரவையார் அவரைப்பார்த்து ஆற்றிலேயிட்டுக் குளத்திலே தேடினால் அகப்படுமாவென்று அவருடைய ஆற்றலை உணராமற் பரிகசித்தவாக்கியம் இந்நாளிலும் "ஆற்றிலிட்டுக் குளத்திலே தேடல்" என்னும் பழமொழியாய் வழங்குவதாயிற்று.

சேரமான்பெருமாணாயனார்காலம் கடைச்சங்கத்திறுதிக்காலம் என்பது கல்லாடத்தாலும் திருவிளையாடல் முதலிய நூல்களாலும் நன்கு நிச்சயிக்கப்படும். இச்சேரமான் புறநானூற்றிலே சேரமான்மாவெண்கோ வெனப்படுவர். அந்நூலிலே தானே சேரமான்மாவெண்கோவும் உக்கிரப்பெருவழுதியும் நட்புடையாரெனப்படுவர். சுந்தரமூர்த்திநாயனார் புராணத்திலே சேரசோழபாண்டியர் மூவரும்சுந்தரரோடு மதுரையிலே ஒருசமயமொருங்கிருந்தார்களென்பது கூறப்பட்டிருத்தலால், அவர்கள் புறநானூற்றிலே ஒருங்கிருந்தாரெனக் கூறப்பட்ட சேரமான்மாவெண்கோவும் உக்கிரப்பெருவழுதியும் இராசசூயம்வேட்ட சோழன் பெருநற்கிள்ளியுமேயாவர். சேரமான்மாவெண்கோவெனப்படும் சேரமான் பெருமாணாயனாரை ஔவையார் பாடினாரென்பது புறநானூற்றால் மாத்திரமன்று. அவர் கைலாசத்திற்குக் குதிரைமேற்சென்றபோது ஔவையாரும் தாம் பூசித்துவந்த விநாயகர் அருளாலே குதிரைமேற் சென்றாரோடொக்கச் சென்றாரென்றொரு கதையும் "குதிரையுங் காதம் கிழவியுங்காதம்" என்ற பாடலுமுண்மையாலும்நிச்சயிக்கப்படும். படவே சேரமான் பெருமாணாயனாரும் கடைச்சங்கத்து இறுதிக்கண்ணிருந்த உக்கிரப்பெருவழுதியும் சுந்தரமூர்த்திநாயனாரும், அவருடைய தேவாரத்திலும்புராணத்திலுஞ் சுட்டப்பட்ட சோழனாகிய இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், கல்லாடர், கபிலர், பாணர் முதலியோரும் ஒரேகாலத்தவர்களென்பது சித்தாந்தமாம். ஆகவே அவருடைய காலம் ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னுள்ளதாம். கடைச்சங்ககால நிச்சயம் சம்பந்தர் வரலாற்றினுட் கூறினும். ஆண்டுக்காண்க.

சுந்தரத்தாது - இத்தபாஷாணம்.

சுந்தரபாண்டியன் - ஒரு நூல், ஒரு பாண்டியன்.

சுந்தரமூர்த்தி - அறுபத்துமூவரிலொருவன்.

சுந்தரம் - அழகு, நிறம்.

சுந்தரவல்லி - தெய்வயானை.

சுந்தரன் - அழகன், காமன், சுந்தரமூர்த்தி.

சுந்தரி - மாலியவந்தன்பாரி, நருமதையென்னும் கந்தர்வப் பெண்ணினது புத்திரி.

சுந்தரி - அழகுள்ளவள், இந்திராணி, சிறுசெருப்படை, துர்க்கை, பார்வதி, பெண், மூஞ்சூறு.
சுந்தரிசுட்டது - இந்துப்பு.
சுந்தரேசன் - சிவன்.
சுந்தன்–தாடகைமகன் மாரீசன் சுபாகு என்போர்க்குத் தந்தை.
சுந்தி - கோட்சொல்வோன்.
சுந்தோபசுந்தர்கள் - (நி) இரணியகசிபன் வமிசத்து நிசுந்தன் புத்திரர். இச்சகோதரரிருவரும் பெருந்தவங்கள் செய்து பிரமாவினிடத்திலே இச்சித்த ரூபம் பெறவும் இச்சித்த இடத்துக்குப் போகவும் அந்நியராற் கொல்லப்படாம லிருக்கவும் மாயா ஜாலங்களை யறியவும் வரம்பெற்று, ஜனங்களை மிகவருத்தி வருங்காலத்தில், விஷ்ணு விசுவகர்மாவினால் ஒரு கன்னிகையை அதிரூபவதியாகச் சிருஷ்டிப்பித்து, அவளை இவர்களிடத்தனுப்பிவிட்டார். அவளைக் கண்ட இருவரும் அதிமோகராய் அவளை நோக்கி நீ நம்மில் யாவருக்கு மனைவியாக விரும்புகின்றாயென்ன, அவள் நும் முள் யார் ஜயவீரனோ அவனுக்கே மனைவி யாவே னென்றாள். அதுகேட்டுப் போர்தொடுத்து ஒருவரை யொருவர் வெட்டி இருவரும் உயிர் துறந்தார்கள். இவர்கள் புத்திரர்கள் சும்ப நிசும்பர்கள்.
சுபகதி - சந்தோஷம், மோக்கம்.
சுபகரன் - ஈகையாளன்.
சுபகருமம், சுபகன்மம், சுபகாரியம் } மங்கலகாரியம்.
சுபகாலம் - நற்காலம்.
சுபகிரியை - மங்கலகாரியம்.
சுவகிருது - முப்பத்தாறாவது வருடம்.
சுபக்கம் - பொருளிருக்கும் பக்கம்.
சுபக்கிரகம் - சுபக்கோள்.
சுபங்கரன் - சுபமுண்டாக்குவோன்.
சுபங்கரி - பார்வதி.
சுபசகுனம் - நன்னிமித்தம்.
சுபசெய்தி - நற்செய்தி.
சுபசோபனம் - மங்கலம்.
சுபதந்தி - புஷ்பதந்தம் என்னும் திக்கியானையினது பெண்.

சுபபந்துவராளி - நாற்பத்தைந்தாவது மேளகர்த்தா.
சுபட்சம் - சித்தியாரி லோரத்தியாயம், சுபக்கம்.
சுபதம் - அரசமரம்.
சுபதினம் - நற்றினம்.
சுபத்தலம் - தேவாலயம்.
சுபத்திகாதனம் - தொடைக்கும் முழங்காற்கு நடுவே யிரண்டுள்ளங் காலையுஞ்செலுத்தி நிமிர்த்திருத்தல்.
சுபத்திரன்–(ய) வசுதேவன் புத்திரன். தாய் பௌரவி.
சுபத்திரேசன் - அருச்சுனன்.
சுபத்திரை - கிருஷ்ணன் தங்கை. அர்ச்சுனன் பாரி. அபிமன்னியன் தாய்.
சுபந்தன் - விக்கிரமார்க்கன் காலத்தில் விளங்கிய ஒரு சம்ஸ்கிருத கவி. வாசவதத்தை யென்னும் நூல் செய்தவரிவரே.
சுபமங்களம் - வாழ்த்து.
சுபமஸ்து - மங்கலச்சொல்.
சுபமிருத்து - நன்மரணம்.
சுபமுகூர்த்தம் - நன்முகூர்த்தம்.
சுபம் - காற்று, நன்மை, நித்தியயோகத்தொன்று, பரிசம், மங்களம், யுத்தம், வாழ்த்து.
சுபயோகம் - ஒருயோகம்.
சுபர்ணகேது - சுபன்னகேது.
சுபர்ணன் - சுபன்னன்.
சுபலன்-காந்தாரதேசத்தரசன். இவன் புத்திரன் சகுனி. புத்திரி காந்தாரி.
சுபவசனம் - மங்கலவசனம்.
சுபவாக்கு - வினவுதல்.
சுபவாசகம் - நல்வசனம்.
சுபவாதனை - ஆன்மாவானந்தத் தழுந்தல்.
சுபவாரம் - நற்கிரகவாரம்.
சுபன்னகேது - விட்டுணு.
சுபன்னன் - கருடன், சேவல்.
சுபாகு, சுவாகு-(1) சேதிதேசத்தரசனுகிய வீரவாகுவின் புத்திரன், சுநந்தை இவன் சகோதரி. (2) இராமன் தம்பியாகிய சத்துருக்கினன் மூத்த புத்திரன். (3) (ய) கிருஷ்ணன் வமிசத்துப் பிரதிவாகு புத்திரன். (4) (ரா) தாடகை புத்திரன். மாரீசன் தம்பி. இவன் விசுவாமித்திரர் யாககாலத்திலே ராமராற் கொல்லப்பட்டவன்.

சுபாங்கி - அழகுள்ளவள், இரதி, குபேரன் மனைவி.
சுபாசுபம் - இன்பதுன்பம், நன்மை தீமை.
சுபாதிசயம் - நற்செய்தி.
சுபாதிட்டானம் - சுவாதிட்டானம்.
சுபாபம் - சுபாவம்.
சுபாபாங்கை - அழகுடையாள்.
சுபாபாவிகம் - இயற்கையாயுள்ளது.
சுபார்சுவன்-(1) சம்பாதி புத்திரன். (2) (ரா) சுமாலி புத்திரன். (3) (பு) நலிமீடன் வமிசத்தனாகிய திருடநேமி புத்திரன். சுமதி தந்தை.
சுபாலம் - உபநிடதத்தொன்று.
சுபாலிகை - அடுப்பு.
சுபாவக்குணம் - இயற்கைக்குணம்.
சுபாவஞானம் - அதிட்டானமு மாரோபமு மற்றிருத்தல்.
சுபாவமுத்தி - சுத்தமுத்தி.
சுபாவம் - இயல்பு, உபநிடதத்தொன்று, கரடகமின்மை.
சுபாவவாதம் - ஒருநூல்.
சுபாவி - நற்குணன், மெய்யன்.
சுபாவீகம் - சுபாவக்குணம்.
சுபானு - பதினேழாவது வருடம்.
சுபானுபாவாதீதம் - பிரமம்.
சுபிக்ஷம் - மிகுதி.
சுபிட்சம் } செழிப்பு.
சுபிக்ஷம் }
சுபு - (ய) கஞ்சன் தம்பி.
சுபுகம் - மோவாய்க்கட்டை.
சுபுட்பம் - கராம்பு, பவளமரம்.
சுபுத்தி - நற்புத்தி.
சுபை - அரசாட்சி, தேவகூட்டம், நியாயஸ்தலம், மூங்கில்.
சுபையதார் - ஓரதிகாரி.
சுபோகம் - சுவானுபோகம்.
சுபாகி - சுவானுபோகி.
சுப்தக்கினன் - (ர) மாலிரவந்தன் புத்திரன்.
சுப்பல் } விறகுசுள்ளி.
சுப்பி }
சும்பியம் - வினாம்பட்டை, வெள்ளிலோத்திரம்.
சுப்பிரசுதை - காட்டெருமைப்பால்.
சுப்பிரதந்தி-வடமேற்றிசையானையின் பெண்யானை.
சுப்பிரதிஷ்டம் - அத்திமரம்.
சுப்பிரதீகம்-ஈசானதிக்குக் காவல்பூண்ட பெண் யானை.
சுப்ரதீகன்-தன் பிதாவினது திரவியங்களைத் தமையனை வஞ்சிக்கும் பொருட்டுக் கவர்ந்தமைக்காகத் தமையனால் யானையாகச் சபிக்கப்பட்ட பிராமணன்.
சுப்பிரதீகம் } மிக்கவொளி, வடகீழ்த் திசையானை.
சுப்பிரதீபம் }
சுப்பிரதீபன் - கீர்த்திபெற்றோன்.
சுப்பிரபேதகம் - சிவாகம மிருபத்தெட்டி னொன்று.
சுப்பிரபை-(1) முதல் நாபாகன் பாரி. இவள் ஜாதியில் வைசிய ஸ்திரி.
சுப்பிரமணி - வச்சிரம்.
சுப்பிரமணியர்பிரதானஸ்தலம் - திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருவாவினன்குடி, குன்றுதோறாடல் பழமுதிர்சோலை.
சுப்பிரமணியன் - குமரன்.
சுப்பிரமதுவா - கூடைநீறு.
சுப்பிரமன் - சும்ஹறன்.
சுப்பிரம்-ஒளி, கருடப்பச்சையின்குணம், சந்தனம், நித்தியயோகத்தொன்று, நீர், மிக்க வெண்மை, வெள்ளி.
சுப்பிரயோகம் - பஞ்ச பாணவத்தையினொன்று, அது சொல்லும், நினைவுமாயிருத்தல்.
சுப்பிரயோகை - சையகிரியி லுற்பத்தியாகித் தக்ஷிணவாகினியாகப் பாய்கின்ற ஒருநதி.
சுப்பிரலாபம் - சாதுரியம்.
சுப்பிராங்கி - இந்திரன்குதிரை.
சுப்பிரி - பிரமன்.
சுப்பெனல் - ஒலிக்குறிப்பு, நீர்வற்றல், விரைவின்குறிப்பு.
சுமங்கலம் - நன்மங்கலம்.
சுமங்கலி } உமை, மங்கிலியப் பெண்.
சுமங்கலை }
சுமங்கை - ஆடுதின்னாப்பாலை, வறட்சுண்டி.
சுமடர்-அறிவிலார், கீழ்மக்கள்.
சுமடி - அறிவிலான்.
சுமடு - அறிவின்மை, சுமை, சும்மாடு.
சுமதலை - பொறுப்பு.
சுமதன் - விசுவாமித்திரன் புத்திரன்.
சுமதி-நற்குணமுடையாள், நற்குணன், நன்மதி, பாரம், மிகுதி. (1) இக்ஷ-

வாகு, தம்பியாகிய கிருகன் புத்திரன். (2) இருஷபன் புத்திரனாகிய பரதன் புத்திரன். (3) (பு) மதிசாந்திரன் புத்திரன். ரைப்பியன் தந்தை. (5) சகல வேத சாஸ்திர பாரகனாகிய பாரன் புத்திரன். (6) அரிஷ்டநேமி புத்திரி. சகரன் பாரிகளு ளொருத்தி. இவளிடத்திலே பிறந்த அறுபதினாயிரம் புத்திரரும் கபிலரால் நீறாக்கப்பட்டார்கள்.

சுமத்தல் - தாங்குதல், பாரமேற்றல், பொறுத்தல்.

சுமத்திரை - பாண்டுவின் மனைவிகளு ளொருத்தி.

சுமத்து - சுமத்துதல், சுமத்தென்னேவல்.

சுமத்துதல் - ஏற்றுதல்.

சுமநசன் - (1) உன்முகன் புத்திரன். அங்கன் தம்பி. (2) (இ) சம்பூதி. இவன் தந்தை ஹரியசுவன். புத்திரன் திரிதன்வன்.

சுமந்தன் - (1) (ரி) வியாசர் சிஷ்யனாகிய அதர்வணவேதாத்தியாபனன். (2) (ரி) சாமவேதாத்தியாயராகிய ஜைமினி புத்திரன்.

சுமந்திரன் - (1) புரூரவன் வமிசத்து ஜனனுபுத்திரன். (2) தசரதன் சாரதியும் மந்திரியுமானவன்.

சுமப்பு - சுமைதி.

சுமம் - பூ.

சுமரணம், சுமரணை - சுவரணை.

சுமருதல் - சுமக்குதல்.

சுமலி - கள்.

சுமவாச்சுமை - சுமக்கொணுச் சுமை.

சுமசனம் - பூ.

சுமாரகம் - நினைப்பு.

சுமாலி - ஓரிராக்கதன், கள்.

சுமா - (1) (ர) சுகேசன் புத்திரன், மாலியவந்தன் தம்பி, ராவணன் மாதாமஹன். (2) கம்சன் தம்பி பலராமனுற் கொல்லப்பட்டவன்.

சுமானம் - நினைப்பு.

சுமித்திரன் - (1) (ய) பஜமானன் பௌத்திரன். விருஷ்ணி புத்திரன். (2) (ய) வசுதேவன் தம்பியாகிய அநீகன் புத்திரன். இவன் பாரதயுத்தத்திலே அபிமன்னியனுலே கொல்லப்பட்ட பிருகத்பலன் மரபிலே முப்பதாம் வழித்தோன்றலாகிய அரசன்.

சுமித்திரை - தசரதன் இரண்டாம்பாரி. லக்ஷ்மண சத்துருக்கினர்களுக்குத் தாய்.

சுமுகம் - நன்முகம்.

சுமுகன் - நன்முகமுள்ளவன்.

சுமித்திரை - சரிநிறை. சரியளவு, தசரதன் மனைவிகளுளொருத்தி, நன்மூத்திரை, நிதானம்.

சுமை - பாரம்.

சுமேரு - இது வடக்கின் கண்ணே துருவ நட்சத்திரத்தை நோக்கி நிற்கும் மேருவினது சிகரம். மேருவின் வாற்பக்கம் குமேருவெனப்படும். அது தெற்கேநோக்கியிருக்கும். அது வடவாமுக மெனவும்படும். மேருவானது பூமிக்கு நாராசம்போலத் தெற்கிருந்து வடக்கே யுருவியோடி நிற்பது. ஆரியர் பூகோளத்தை ஊர்த்துவகபாலம் அதக்கபாலம் என இருகூறாக்கி ஊர்த்துவ கபாலம் முழுதும் நிலமென்றும், அதக்கபால முழுதும் நீரென்றுங்கூறுவர். ஐரோப்பிய பண்டிதர் பூமியின் கர்ப்பத்திலே யிருக்கும் சருஷண சக்திக்கு அளவில்லையென்று கூறுவதுபோலப் புராணங்களும் இம்மேருவை அநேக தேவதாகணங்களுக்கு வாசஸ்தானமாகக் கூறும். சுமேரு இளாவிருத வருஷநடுவிலே யுள்ளது. இச்சுமேருவை மனுஷர் சென்றடைவதுகூடாதென்பது புராணக்கருத்து. அவ்விடத்தையடைதற்கு ஐரோப்பியர் பலர் பலவாறாகப் பலகாலத்திலும் பன்முறை முயன்றும் சித்தியுற்றார் ஒருவருமில்லை. அத்தேச வியற்கை மனுஷர் சஞ்சரித்தற் கொவ்வாததாதலின் அங்குச் செல்வது யார்க்கும் கூடாத கருமமாம். இதனால் இக்காலஐரோப்பியர் துருவியாராய்ந் தணராத துருவநாட்டைப் பூர்வ ஆரியர் துருவியாராய்ந்தவர்களென்பது நன்றாகப் புலப்படும்.

சுமைகாரன் - சுமைசுமப்பவன்.

சுமைகூலி - சுமையெடுத்தகூலி.

சுமைதாங்கி - சுமைதண்டை, பொறுப்பாளி.

செம்பசளை }
செம்பஞ்சி } சிவந்தபஞ்சு.
செம்பஞ்சு }
செம்பஞ்சுகிரமணி - சௌந்திகப் பதுமராகம்.
செம்பஞ்சூட்டுதல் செம்பஞ்சமுத்தல்.
செம்படத்தி - செம்படவப்பெண்.
செம்படவர்-மீன்பிடிகாரரிலோர்வகை
செம்படாம் - சிவப்புச்சீலை.
செம்படிகம் - காசிமீரப்படிகம்.
செம்படை - சிவந்தமயிர்.
செம்படைச்சி-சிவந்த மயிருடையாள், செம்பட்டத்தி.
செம்பட்டத்தி - செம்படத்தி.
செம்பட்டை - செம்படை.
செம்பண்ணை - காவற்பண்ணை.
செம்பரத்தை - சப்பாத்துச்செடி.
செம்பருத்தி - ஒருசெடி.
செம்பருந்து-கருடன், கலுழன்.
செம்பலகை - செங்கல்.
செம்பவளச்சம்பா - ஒருநெல்.
செம்பழம் - காய்ப்பழம்.
செம்பளை - ஒருபாம்பு.
செம்பன் - சிவலை.
செம்பாகம்-சரிபங்கு,செவ்வையானது நடுநிலை.
செம்பாடு - சிவந்தநிலம்.
செம்பாதி - சரிபாதி.
செம்பாம்பு - கேது.
செம்பாளை - ஒருகண்டு
செம்பாலை-மிடற்றிற்பிறந்து மிடற்றினின்றிசைக்குமிசை.
செம்பால் - இரத்தம்.
செம்பால்முடாங்கி - ஒருபூடு.
செம்பாளை - செந்நெல்.
செம்பாற்சிட்டி - ஒருகீரை.
செம்பி-கருவண்டு, சிவப்பு, மருதோன்றி.
செம்பிச்சி - செக்தோட்டி.
செம்பியன்-முதலெழு வள்ளலிலொருவன், சோழன்.
செம்பிரால் - ஒருமீன்.
செம்பில்வேதை - சோரபாஷாணம்.
செம்பிறை-கர்கிட்டம், கானற்கல், தேக்கல்.
செம்பினிறம் - மாந்தளிர்க்கல்.
செம்பின்பச்சை - நாகப்பச்சை.
செம்பு-தபலை, பஞ்சலோகத்தொன்று அது தாம்பிரம்.
செம்புகம் - செம்போத்து.
செம்புக்குள்வேதை - கற்பரி பாஷாணம்.
செம்புலம்-சுடுகாடு, செம்புமலை, பாலைநிலம், போர்க்களம்.
செம்புலி - ஒருபுலி.
செம்புளிச்சை - செம்மணத்தி.

செம்புரு - ஒருமீன்.
செம்புறைக்கல் - ஒரு சிவத்தகல்.
செம்புனல் – இரத்தம்.
செம்பூரம் } ஒருவகைப் பூரான்.
செம்பூரான் }
செம்பூறல் - செம்பிறக்ஷிம்பு.
செம்பை – ஒருமரம், சிற்றகத்தி.
செம்பொடி - செம்புமணல், செம்மணல், தேகக்கல்.
செம்பொருள் - கடவுள், செஞ்சொலா லுணர்த்தப்படும்பொருள், சொலலொடு பொருள்.
செம்பொன் - சுத்தபொன், பொன்.
செம்போத்து – செம்புகம்.
செம்மட்டி - ஒரு மட்டி, மரமஞ்சள்.
செம்மணத்தி - செம்புளிச்சை.
செம்மணல் - சிவந்தமணல்.
செம்மணி - கண்ணின்கருமணியைச் சூழ்ந்திருக்குஞ் சிவந்தமணி, குருந்தக்கல், குருவிந்தம், செம்பு, பதுமராகம், மாணிக்கம், மாயிசகந்தி.
செம்மண் – காவிமண், சிவந்தமண்.
செம்மண்சிலை - கற்காவி.
செம்மந்தாரை – ஒரு பூமரம்.
செம்மயிர்க்கொண்டை } ஒரு கொன்
செம்மயிர்க்கொன்றை } றை.
செம்மரம் – அழிஞ்சில், ஒருமரம்.
செம்மலை - ஆவிரை.
செம்மலைப்பார் - சிவந்தகற்பார்.
செம்மலைப்பாற் - செம்பாலை.
செம்மல்-அரசன், அருகன், ஈசன், எப்பொருட்கு மிறைவன், செம்முதல், தலைமகன், பழம்பூ, புதல்வன், பெருமையிற் சிறந்தோன்.
செம்மறி – ஆட்டின்பொது, ஒருவகை
செம்மறியாடு - ஒருவகையாடு. [யாடு.
செம்மாணி - ஒருவகைப் பாதாட்சை.
செம்மாத்தல் - அகந்தையாயிருத்தல், கிளிர்ச்சியாயிருத்தல், மிகக்களித்தல்.
செம்மாத்தி - சக்கிலிச்சி.
செம்மாப்பு - இறுமாப்பு.
செம்மார் - சக்கிலியர்.
செம்மாளி – பாவரிடும் பாதகுறடு.
செம்மானம் – செக்கர்மேகம்.
செம்மான் - சக்கிலியன்.
செம்மீன் - ஒருமீன்.
செம்மீன்வயிரம் - மீனம்பர்.

செம்முதல் – பொருமுதல், மூடுதல்.
செம்முருங்கை – ஒருமுருங்கை.
செம்முள்ளி - ஒருமுள்ளி.
செம்மூக்கன்-ஓரலி,ஒருவகைமுதலை.
செம்மேவுதல்-இணக்குதல், இணங்குதல், சரிப்படுதல்.
செம்மேனி - சிவந்தமேனி.
செம்மேனிநாயகர் - திருக்காளூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
செம்மை-அழகு, இணக்கம், கனம், சிவப்பு, செப்பம், செவ்வை, திரார்த்தம், மாணிக்கம்.
செம்மைகட்டுதல் - நேர்கட்டுதல்.
செம்மைக்கல் - கானக்கல்.
செம்மைபண்ணல் – அலங்கரித்தல், ஒழுங்கு படுத்தல்.
செம்மைப்படுத்தல் - நற்சீரடைதல்.
செம்மையாதல் - நேராதல்.
செம்மொழி-இயற்றமிழ்வசனம், நயவசனம்.
செம்மொழிச்சிலேடை - சிலேடையில் ஒருபேதம். அது மொழிப் பிரிப்பின்றி நிற்பச் சிலேடிப்பது.
செயகுறை-வென்றவாருங் கொள்ளை.
செயசெயவெனல் - போற்றுதல்.
செயசேதி - உப்பு.
செயத்தம்பம் – வெற்றித்தம்பம்.
செயநீர்க்கருத்தன் – நவட்சாரம்.
செயந்தி-திருச்செயந்தி,திருச்செந்தில்
செயபாம் - மரமஞ்சள்.
செயபரி - பட்டத்துக்குதிரை.
செயபீதம் - கெளரிபாஷாணம். [ள்.
செயப்படுபொருள் - காரியப்படுபொரு
செயப்பாட்டுவினை-பகுதி விகுதி புணர்ந்து முதனிலைகளை புடையவாய் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவைக்கொண்டு முடிவன.
செயமணி - வெற்றிபெற்றடிக்குமணி.
செயமன்னர் - போர்மன்னர்.
செயமுரசு - வெற்றிமுரசு.
செயம் - வெற்றி, சயம்.
செயலறல் - உதவியற்றுப்போதல், தத்துவமற்றுப்போதல்.
செயலறவு - கையறவு.
செயலறுதல் – செயலறல்.
செயலறுநிலை - கையறுநிலை,

செயலுவமம் - செயலையேயுவமானமாகக்கொண்டு வமிப்பது (உ-ம்) நனவிற்செயல்போலுங் கனவிற்செயல்.
செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனார் - இவர் கடைச்சங்கப்புலவர்களுள்ஒருவர்.
செயலை - அசோகமரம்.
செயல் - ஒழுக்கம், காவல், செய்கை, சேறு, தொழில்.
செயவானை - பட்டத்தியானை.
செயவீரர் - போர்வீரர்.
செயற்கை புணர்வு - செயற்கை யான் வந்த வுணர்வு.
செயித்தல் - சயித்தல்.
செயிரியர்-வீணைமுதலியவியக்குவோர்.
செயிர்-ஊனம், குற்றம், கோபம்,சினம், செயிரென்னேவல்,துன்பம், நோய்.
செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார் - இவர்கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்.
செயிர்த்தல்-சினத்தல்,கோபித்தல்
செயிர்ப்பு - சினப்பு.
செயிற்றியம் - செயிற்றியனார் செய்த ஒரு நாடகத் தமிழ்நூல்.
செய்-சிவப்பு,செய்யென்னேவல், வயலிலோரளவை, வயல்.
செய்கடன் - நித்தியகருமம், பிதிர்க கடன், முறைநமை.
செய்கரை - கட்டுக்கரை.
செய்காரியம் - செய்கருமம், செய்யவேண்டியபிரகாரமெல்லாஞ் செய்வது.
செய்கின்ற-நிகழ்காலப் பெயரெச்சவாய்பாடு.
செய்குதல் - உண்டாக்கல்.
செய்குறை - செய்கைத்தப்பிதம்.
செய்குற்றம்-செய்கைத்தப்பிதம், செய்கைக்குறை.
செய்குன்று - செய்கைமலை.
செய்கூலி - செய்தகூலி.
செய்கை - ஒழுக்கம், தொழில், பண்படுத்தவறு, வேளாண்மை.
செய்கைக்காரன்-செய்கையிட்டோன், வேலைக்காரன்.
செய்கைச்சரக்கு - வைப்புச்சரக்கு.
செய்கைச்சுட்டு - செய்கையொப்பம்.
செய்கைத்தரை - பண்படுத்தின நிலம்.
செய்கைத்தாழ்ச்சி - செய்கைப்பிழை.
செய்கைபூணுதல் - செய்கைபடுதல்.
செய்கைப்பங்கு - செய்கைக்கு வரும் பங்கு.

செய்கையாட்சி - செய்கையினால் வந்த வாட்சி.
செய்கையுப்பு - விளைவிக்குமுப்பு.
செய்த - செல்காலப்பெயரெச்ச வாய்பாடு.
செய்தல் - செய்குதல்.
செய்தவம் - செய்யப்பட்டதவம்.
செய்தி - ஒழுக்கம், காரியம், சமாசாரம், சரித்திரம், செய்கை,செய்வாயென்னுமுற்று.
செய்திகொன்றார் - நன்றியீனர்.
செய்து - வினையெச்சவாய்பாட்டிலொன்று.
செய்நன்றி - செய்தநன்றி.
செய்நீர்ச்சித்திரம் - நவசாரம்.
செய்பவன் - கருத்தா.
செய்பாகம் - செய்யும்பக்குவம்.
செய்பாட்டுவினை - படுவென்னும் விகுதி புணர்ந்த முன்னிலை யுடையனவாய் மூன்றாம்வேற்றுமைக்கருத்தாவைக்கொண்டுவரும் வினை.
செய்பு-வினையெச்சவாய்பாட்டிலொன்று.
செய்ய - அழகிய, சிவந்த,சிறந்தவென்னும் பொருள்படவரும் பெயரெச்சப்பண்புச் சொல், வினையெச்சவாய்பாட்டிலொன்று.
செய்யர் - நேர்மையுள்ளவர்.
செய்யல் - செய்தல், சேறு.
செய்யவர் - செய்யர்.
செய்யவன்-சிவந்தமேனியன்,சூரியன், செவ்வாய்.
செய்யவள்-இலக்குமி,சீதை.
செய்யன்-சிவலை,சிவன்,நோரளி.
செய்யா - வினையெச்சவாய்பாட்டிலொன்று.
செய்யார் - செய்யர்.
செய்யாள் - இலக்குமி.
செய்யான் - ஒருபூரான்.
செய்யிய-வினையெச்சவாய்பாட்டிலொன்று.
செய்யியர் - செய்யா.
செய்யிழை - பெண்.
செய்யுட்சொல் - உயர்ந்தசொல், திரிசொல்.
செய்யுட்பொருத்தம்-பாட்டுப் பொருத்தம் பத்து, அவை-உண்டி, எழுத்து, கணம், கதி, சொல், தானம், நாள், பால், மங்கலம், வருணம்.
செய்யுட்டாரணை-நவதாரணையில் ஒன்று.
செய்யுணடை - செய்யுள்வழக்கு.
செய்யும்-இருதிணைக்கு மைம்பாற்குமுரிய வருகாலவினைமுற்று, வருகாலப் பெயரெச்ச வாய்பாடு.

செய்யுளுறுப்பு செய்யுட்கு வேண்டுமுறுப்பு.
செய்யுள் - பாட்டு, விளைநிலம். [றுப்பு.
செய்யுள்வழக்கு - பாவின்வழக்கு.
செய்யுள்விகாரம்-மெலித்தல் வலித்தன் முதலிய ஒன்பது விகாரம். [ன்று.
செய்யூ-வினையெச்சவாய்பாட்டில் ஒன்
செய்யோன் - அருகன், செங்கிறமுள்ளோன், செம்மையுடையோன், செவ்வாய்.
செய்வித்தல் - செய்யப்பண்ணுதல்.
செய்வினை - சூனியம், செய்கை, செய் தொழில், நடவா முதலிய முதனிலைகளை யுடையன வாய்ப்படுவிகுதி புணராது எழுவாய்க் கருத்தாவைக் கொண்டு முடியும் வினைச்சொல்.
செரிகுடர் } உண்டது தங்காது கழியுமுடல்.
செரிகுடல் }
செரித்தல் - கோபத்தையடக்கல், சமித்தல், சீரணித்தல்.
செரியாக்குணம் - சமியாக்குணம்.
செரியாப்படுவன் - ஒருநோய்.
செரியாமை - சமியாமை.
செரு - சண்டை, போர், யுத்தம்.
செருகல் - அடைசுதல், சொருகுதல்.
செருகுகொண்டை - ஐம்பாலினொன்று; அது சுருள்.
செருகுபூ - இடையிடைவைக்கும்பூ.
செருக்கம் - மாதளை.
செருக்கல் - செருக்குதல்.
செருக்களம் - போர்க்களம்.
செருக்களவஞ்சி - ஒருபிரபந்தம்; அது பறந்தலைச் சிறப்புக்கூறுவது.
செருக்கன் - கெருவி, ஆங்காரி.
செருக்கு - ஆங்காரம், ஆணவம், களிப்பு, செருக்கென்னேவல், மயக்கம், மனோராச்சியம்.
செருக்குதல் - அகங்கரித்தல், களிக்குதல், மயக்கடியாக்குதல்.
செருத்தணி - இது சூரபன்மனோடு சுப்பிரமணியர் செய்த செருத்தணித்தவிடமாதலால் இப்பெயர்பெற்றது. இத்தலத்தில் காலையில் ஒரு பூவும், உச்சிக்காலத்தில் ஒரு பூவும் மாலையில் ஒரு பூவும் மலர்கின்ற செங்கழுநீர்க்கொடியை யுடைய ஒரு அற்புதமான சுனையுள்ளது. இது இந்திரனால் காணப்பட்டது.

செருத்தல் - எருமைபசுஇவற்றின்மடி.
செருத்தி - விருதுக்கொடி.
செருத்துணைநாயனார் - இவர் தஞ்சாவூரில் வேளாளர்குலத்திலே அவதரித்துத் திருவாரூரையடைந்து அங்கே சுவாமிக்குத் திருத்தொண்டு செய்துகொண்டிருக்கையில், புஷ்பமண்டபத்தின் பக்கத்திலே விழுந்திருந்தவொரு புஷ்பத்தை யெடுத்து மோந்த கழற்சிங்க நாயனருடைய மனைவியை மூக்கரிந்த சிவபத்தர்.
செருநர் - யுத்தவீரர், படைவீரர்.
செருந்தி - ஒருமரம், மணத்தக்காளி, வாட்டுக்கோரை.
செருப்படி }
செருப்படிநாயன் } ஒருபூண்டு.
செருப்படை }
செருப்பு - காறொடுதோல்.
செருமல் } அடைசுதல், இருமுதல்,
செருமுதல் } திணித்தல், நெருக்கல்.
செருனர் - போர்வீரர், செருநர்.
செலகம் - மல்லிகை.
செலக்கனல் - அக்கினிக்கட்டி.
செலக்குரு - நவசாரம்.
செலக்கூடம் - நண்டு.
செலக்கூர்மை - நவசாரம்.
செலம் - கோரைக்கிழங்கு.
செலந்தி - புண்.
செலப்பிரீதி - கருப்பூரச்சிலை.
செலமலம் - கடற்பாசி.
செலம் - இலாமிச்சு, சலம்.
செலல் - கழிதல், போதல்.
செலவயர்தல் - போதல்.
செலவழிதல் - செலவுபோதல்.
செலவழித்தல் - செலவிடுதல்.
செலவாளி - செலவுகாரன்.
செலவிடல் } அனுப்புதல், எறிதல்,
செலவிடுதல் } செலவழித்தல், விடுதல்.
செலவு - உத்தரவு, செலவிடுதல், செல்லும் பொருப்பு, பயணம், பெருங்காப்பியவுறுப்புளொன்று, போக்கு, போதல், முடிவு, வழி.
செலவுநடத்தல் - செலவு நடத்திவருதல், செலவு நடந்து வருதல்.
செலவோடுதல் - விசாலித்தல்.
செலியம் - இலாமிச்சை.

செலு-செத்தல்கறவிலிமரம் மீன்சிறை
செலுத்தல் } அனுப்புதல், கொடுத்தல், செருகுதல்,
செலுத்துதல் } நடத்துதல், விடுதல்.
செலுந்தி } செத்தல்.
செலுந்தில் }
செலுப்பு - சிறுதண்டு, சிவல்.
செலுமுரல் - ஒருமீன்.
செலுவல் - செத்தல்.
செலுவன் - செத்தவன்.
செல் - இடி, உண்டியற்சீட்டு, கறையான் கையொப்பம், சொல்லென்னேவல், மேகம், வேல்.
செல்காலம் - இறந்தகாலம், காரியஞ்சித்திக்குங்காலம்.
செல்லக்கட்டுதல்-இறுத்தல், சேர்த்தல்.
செல்லம் - செல்வம்.
செல்லல் - துன்பம், நடத்தல், போதல், வெறுப்பு.
செல்லன் - செல்லன்.
செல்லாக்காசு - மாற்றக்கூடாத காசு, வழங்காதகாசு.
செல்லாக்காலம் - நடப்பற்றகாலம்.
செல்லி - செல்வி.
செல்லியம் - கோழி.
செல்லு - செல்.
செல்லுதல் - கழிதல், காரியசித்தியாதல், சாதல், போதல், வழங்குதல்.
செல்லுமதி - செல்லவேண்டுவது.
சொல்லொளி - வைடூரியம்.
செல்வக்கடி - பருங்கடி.
செல்வச்சிரிப்பு - புன்முறுவல்.
செல்வத்தீன் - சிறுதீன்.
செல்வநடை - மிருதுநடை.
செல்வநரை - இடைநரை.
செல்வப்பிள்ளைக்காய்ச்சல்-ஒருகாய்ச்சல்.
செல்வப்பேச்சு - குதலைப்பேச்சு.
செல்வமடி - மிருகங்களுக்குச் சௌக்கியத்தினால் வளர்ந்திருக்கும் மடி.
செல்வமட்டி - ஒருகோடி.
செல்வம் - இன்பம், ஐசுவரியம், கல்வி, சீர், சுவர்க்கம், பாக்கியம்.
செல்வம்பொழிதல்-செல்வங்காட்டல்.
செல்வன் - அரசன், அருகன், கடவுள்.
செல்வமுன்னோன் - மகன்.
செல்வாக்கு - பெரும்பேச்சு.
செல்வி - இலக்குமி, ஐசுவரிய முடையாள், தலைவி, மகள்.
செல்விநாதன் - விட்டுணு.
செல்விக்கை - ஐசுவரியம், செல்வாக்கு.
செவத்தம் - ஒரு முருங்கைமரம்.
செவி - காது, அது பஞ்சபொறியினுள் ஒன்று, கேள்வி.
செவிகொடுத்தல் - உற்றுக்கேட்டல்.
செவிக்கெட்டுதல் } கேள்விப்படுதல்.
செவிக்கேறுதல் }
செவிசாய்த்தல் - செவிகொடுத்தல்.
செவிச்சொல் - கேள்விச்சொல்.
செவிடர் - செவிமந்தர்.
செவிடு - செவிப்புலனற்றது. அது உறுப்புக்குறையெட்டி னொன்று.
செவிட்டல் - அழித்தல்.
செவிட்டு - செவியடி.
செவிட்டுதல் - செவிட்டல்.
செவிதாழ்த்தல் - செவிகொடுத்தல்.
செவிதின்றல் - இரகசியம்பேசுதல்.
செவிபடுவாதம் - ஒருவாதம்.
செவிப்பாம்பு - ஒருசெந்து.
செவிப்புலன் - கேள்வி.
செவிப்புற்று - ஒருநோய்.
செவிமந்தம் - செவிடு.
செவியடி - கன்னம்.
செவியடித்தல் - செடியாட்டல்.
செவியம் - செவ்வியம்.
செவியறிவுறுத்தல் - செவி யுபதேசமாய்ச் சொல்லும்புத்தி.
செவியறிவுறுமருட்பா - வியப்பின்றி யுயர்ந்தோர்கண் நயந்தொழுகல் கடனென அரசர் முதலியவர்க்கு மருட்பாவானுரைப்பது.
செவியறிவுறூஉ-உபதேசம், ஒரு பிரபந்தம், அது அவையடக்கியற் பொருளைக்கூறுவது.
செவியறை - காதறை.
செவியிலி - பாம்பு, செவிடு.
செவிரம் - பாசி.
செவிலி - அக்காள், வளர்த்ததாய்.
செவுடு - செவிடு.
செவுள் - செகிள்.
செவை - செம்மை.
செவ் - சிவப்பு, செவ்வை.
செவ்வகத்தி - ஓரகத்தி.
செவ்வட்டை - ஓரட்டை.
செவ்வணி - தலைமகளையூடிய தலைமகன் அவன் விட்ட பெண்ணுக் கணியுஞ் செஞ்சிறவணி.

செவ்வண்-செங்குத்து, நேரேநிற்றல்.
செவ்வந்தி-சாமந்தி,ஒருபூச்செடி,செக்கர்மேகம்.
செவ்வந்திக்கல் - ஒருகல்.
செவ்வம்மான்பச்சரிசி - ஒருசெடி.
செவ்வரத்தமணி - குருவிந்தப் பதுமராகம்.
செவ்வரத்தை - செம்பரத்தை.
செவ்வலரி - ஓரலரி.
செவ்வல் - சிவந்தநிலம்.
செவ்வல்நார் } செவ்வாம்பல்.
செவ்வல்லி } செவ்வாம்பல்.
செவ்வவரை - ஓரவரை.
செவ்வழி-ஒருபண், அது நெய்தனிலத்திராகம்.
செவ்வழிப்பாலை - ஓரிராகம்.
செவ்வழியாழ்-நால்வகையாழில்ஒன்று.
செவ்வள்ளி - ஒருகொடி.
செவ்வனர் - செவ்வல்லி.
செவ்வனிறை - இருவகை விடையில் ஒன்று, அது வினவுக்கு நேர்விடை கூறுவது.
செவ்வன் - செவ்வை.
செவ்வாக்கு - நீண்டவளைவு.
செவ்வாப்பு - ஒருகட்டி.
செவ்வாமணக்கு - ஓராமணக்கு.
செவ்வாம்பல் - அரக்காம்பல்.
செவ்வாய்-ஒருகிரகம், ஒருநாள், சிவந்தவாய்.
செவ்வாரம் - செய்கைக்குங் காரத்துக்குமுள்ள சரிவாரம்.
செவ்வாரை - ஒரு ஆரை.
செவ்வாவிரை - ஓராவிரை.
செவ்வாழை - ஒருவாழை.
செவ்வானம் - செக்கர்மேகம்.
செவ்வி-அழகு, காலம், சித்திரைநாள், பருவம்.
செவ்விண்டு-ஒரு பூச்செடி.
செவ்விதிறம் - மாந்துளிக்கல்.
செவ்வியம் - ஒருமருந்து, அது பஞ்சமூலத்தொன்று, மிளகுக்கொடி.
செவ்வியருமை - சமயம்பெறுமருமை.
செவ்வியான் - கிரகஸ்தன்.
செவ்விளநி - சுழுதைவண்டு.
செவ்விளநீர்-சிவந்ததோலுள்ளவிளநீர்.
செவ்விளை - ஒருவகைத் தென்னமரம்.
செவ்விரதி - செவ்விளநி.
செவ்வு-சிவப்பு, செவ்வை, முத்தெண்கணக்கிலோர் சூத்திரம்.
செவ்வெண்-முறையே ஒற்றுமையான் வருமெண்.
செவ்வெண்ணெய்-வாலபுத்திரர்க் கிடுமெண்ணெய்.
செவ்வேள் - குமரக்கடவுள்.
செவ்வை - சுத்தம், செப்பம்.
செழிச்சி - செழிப்பு.
செழித்தல்-செழிக்குதல், பெருகுதல்.
செழிப்பம் - செழிப்பு.
செழிப்பு - ஐசுவரியம், செழுமை, பொலிவு, வளர்ச்சி.
செழியன் - பாண்டியன்.
செழுப்பம் - செழுமை.
செழுமறை - நெருப்பு.
செழுமை - அழகு, கொழுப்பு, சவுந்தரியம், நிறைவி, மாட்சிமை, வளமை.
செழும்பல் - செழிப்பு.
செளிம்பொன் - குணக்கேடன்.
செளிம்பு - களிம்பு.
செளிம்பூறல் - களிம்புப்பற்று.
செள்ளு - தெள்ளுப்பூச்சி.
செறல் - கொலை, கோபம், பகை.
செறி-செறியென்னேவல், நெருக்கம்.
செறிதல் - கலத்தல், குவித்தல், சேர்தல், நெருங்கல், பொருந்தல், மிகுதல்.
செறித்தல்-அழித்தல்,சொல்லல்,சேர்த்தல், நெரித்தல், பாதிடு, சூழ்தல்.
செறிப்பு - சேர்த்தல், நெருக்கம்.
செறிமை - நெருக்கம், மிகுதி.
செறிவு-குணவலங்காரம் பத்திலொன்று. அது நெகிழ்மையின்றிவரச்செய்யுட்டொடுப்பது, நிறைவு, நெருக்கம், மிகுதி.
செறு-சிறுவயல்,செறுவென்னேவல், வயல்.
செறுக்குதல் - செறுத்தல்.
செறுதல் - கொல்லல், கோபித்தல்.
செறுத்தல் - கொல்லல், கோபித்தல், தாக்குதல், நெருக்குதல், வெறுத்தல்.
செறுநர் - பகைவர்.
செறுப்பு - கொலை, செற்றல்.
செறும்பு-சலஞ்சாதித்தல்,சிறும்பு,வெறுப்பு.
செறுவு, கொலை, வயல்.
செற்றம் - கோபம், சலஞ்சாதித்தல், சினம்.
செற்றலர் - பகைவர்.

செற்றல்-கொல்லல், செறிதல், செறுத்தல், நெருக்கல், வெறுத்தல்.
செற்றார்-கொலைசெய்வோர், பகைவர்.
செற்று - செடி, நெருக்கம்.
செற்றுதல் - நெருக்குதல்.
செற்றை - செத்தை.
செனம் - சனம்.
செனனம் - பிறப்பு.
செனித்தல் - கருப்படுதல், பிறத்தல்.
செனிப்பித்தல் - பிறப்பித்தல்.
செனிப்பு - சனிப்பு.
சென்மசாபல்லியம் - செனன மெடுத்த பலன்.
சென்மபத்திரிகை - சாதகம்.
சென்மம், சென்மாந்திரம் } சன்மம்.
சென்மித்தல் - கருப்படுதல், பிறத்தல்.
சென்மிப்பு - பிறப்பு.
சென்றுதேய்ந்திறுதல்- நூற்குற்றம்பத்தினொன்று. அது வரவரச் சொன்னயம் பொருணயங் குறைதல்.
சென்னக்கூனி - கூனிப்பொடி.
சென்னம் - ஒருவகைப்புள், வடிவு.
சென்னல் - தேன்கொண்டை.
சென்னாக்கூனி - இறால்.
சென்னாக்கூனி - கன்னவோரா.
சென்னி - அச்சுவினிநாள், சோழன், தலை, பாணன், முடி.
சென்னிமலை - கொங்கு நாட்டிலுள்ள ஒரு சுப்பிரமணியஸ்தலம்.
சென்னியர் - பாணர்.
சென்னை - கறுப்பு, சென்னபட்டினம்.

சே

சே - அழிஞ்சில்மரம், இடபவிராசி, உயர்ந்த எதிர்மறை, எருது, ஒலிக்குறிப்பு, ஓரெழுத்து, சிவப்பு, சேரான் மரம், சேவென்னேவல், விலங்கேற்றின் பொது.
சேகண்டி - சேமக்கலம், தெருக்காவல்.
சேகம் - தெளித்தல்.
சேகபாத்திரம் - கப்பலில் நீரிறைக்கு மரத்தொட்டி.
சேகரத்தார் - கூட்டத்தார்.
சேகரம் - கூட்டம், சம்பாத்தியம், சேகரித்தல், தலை, தலையில் முடிக்கப்படுவன, மாமரம், முடி, முருங்கை.
சேகரி-சேகரியென்னேவல், நாயுருவி.
சேகரித்தல் - கூட்டுதல், சம்பாதித்தல்.
சேகரிப்பு - சேகரம்.
சேகன் - வேலையில் சமர்த்தன்.
சேகிலி - வாழை.
சேகு - தழும்பு, மரவயிரம், வயிரம்.
சேக்கரித்தல் - கொக்கரித்தல்.
சேக்கிழார் - தொண்டநாட்டிலே குன்றத்தூரிலே சேக்கிழார்மரபிலவதரித்த அருண்மொழித்தேவர், இவருக்குச் சேக்கிழார் என்பது அம்மரபை விளக்கினமையா லுண்டானபெயர், இவரது கல்வியறி வொழுக்கங்களை யறிந்த அநபாயச் சோழமகாராஜன் இவரை யழைப்பித்து தமக்கு மந்திரியா யமைத்து உத்தமசோழப்பல்லவர் என்னும் வரிசைப் பெயரையுங்கொடுத்தான், இவர்சைவசமயிகள்புறச்சமயக்காப்பியமாகிய சீவகசிந்தாமணியை சொற்சுவைபொருட்சுவைகளை மாத்திரம் விரும்பிக் கற்றுத்தமதுவாணாளை வீணாளாகக்கழிப்பது கண்டு மனங்கசிந்து இம்மைமறுமை யின்பங்களை யொருங்கே தரவல்ல பெரியபுராணம் என்னுஞ் சிவனடியார் சரித்திரத்தைப் பாடினர். இது சிதம்பரத்தில் சபாநாயகர் சந்நிதியில், திருவருளாலெழுந்த அசரீரி வாக்காகிய, "உலகெலா முணர்ந்தோதற்கரியவன்" என்னும் அடியை முதலாகக்கொண்டு பாடப்பட்டது. இது சபாநாயகர் சந்நிதியிலே அரங்கேற்றப்பட்டது, அநபாயச் சோழன் இவருக்குக்கநகாபிஷேகஞ் செய்து இவரையும் பெரியபுராணத்தையும்யானைமீதேற்றித்தானுமேறியிருந்து இவருக்குச் சாமரம் வீசிக்கொண்டு வீதிவலஞ் செய்வித்தான், பிறகு பெரிய புராணத்தைச் செப்பேட்டி லெழுதுவித்து அவ்வாலயத்திலே வைத்தான், சேக்கிழார் ஞானமுடிகுடி அத்தலத்திற்றானே யிருந்து சிலகாலங்கழிந்த பிறகு சிவபதமடைந்தார். அநபாயர்சோழன்காலம்

சாலிவாகனசகம் ஆயிரத்து நாற்பது வரையிலுள்ளது, ஆதலால் சேக்கிழார் காலம் எழுநூற்றெழுபதுக்கு முன்னுளதாதல் வேண்டும்.
சேக்கு - முலைப்பால்.
சேக்குதல் - சிவத்தல்.
சேக்கை-உடற்றழும்பு, கற்கடகவிராசி, சிவத்தல், செம்பளை, நண்டு, மக்கட்படுக்கை, முலை, விலங்கின்படுக்கை.
சேங்கன்று - நாம்பன்கன்று.
சேங்கொட்டை - சேரான்கொட்டை.
சேசநம் - பெண்ணுமை.
சேசனம் - நனைத்தல்.
சேசூரணம் - கௌரிபாஷாணம்.
சேசூனம் - தெளித்தல், புசித்தல்.
சேச்சை - பாலை, முல்லை.
சேடகம் - பரிசை.
சேடக்குடும்பியன் - திருவநந்தபுரத்துள்ளானோரந்தணன், இவன்தன்னிடத்தடைக்கலமாபிருந்தகண்ணகிக்கு நேர்ந்த துன்பங்களைக்கேட்டுத்தீயில் வீழ்ந்திறந்த மாதரி மறுமையில் இவனுக்கு மகளாயினள்.
சேடசாயி } விட்டுணு.
சேஷசாயி
சேடசுரம் - ஒருநோய்.
சேடநீர் - சிலேற்பனநீர்.
சேடபாகம் - மிச்சபப்பங்கு.
சேடம் } அழித்தல், எச்சில், சிலேற்பனம், மிச்சப்பொருள்.
சேஷம்
சேடர் - அடிமைக்காரர், ஏவல் செய்வோர்.
சேடல் உச்சிச்செலுந்திலென்னுமரம்.
சேடவட்டில் - உண்கலம்.
சேடன் } அடிமைக்காரன், அனந்தன், இளையோன், ஏவல் செய்வோன், ஒருசாதியான், கட்டிளமையோன், பலதேவன், பாங்கன்.
சேஷன்
சேடாத்திரி - திருச்செங்கோடு, திருவேங்கடமலை.
சேடார்த்தம் - குறைப்பொருள்.
சேடி-வித்தியாதருலகு, அடிமைக்காரி, அழகுள்ளவள், இடையர் வீதி, இளையாள், ஏவல்செய்வாள், சேடியென்னேவல், தோழி.
சேடிகை - ஊழியக்காரி.
சேடித்தல் - அலங்கரித்தல், குறைத்தல், மிஞ்சிநிற்றல்.
சேடியர்-அடிமைகளிற்சிறந்தோர்ஏவற்பெண்கள், பாங்கியர்.
சேடு - அழகு, இளமை, திரட்சி, நன்மை, பெருமை.
சேடை } மரக்காப்பு.
சேடை
சேடைநயரிசி - அழகரிசி.
சேட்சி - தூரம்.
சேட்செலவு - தூரமாய்ப்போதல்.
சேட்டகம் - அதிசத்தம்.
சேட்டபாரி - முதன்மனைவி.
சேட்டம் } அழகு, ஆனிமாதம், செழிப்பு, திறம், முதன்மை, மேன்மை.
சேஷ்டம்
சேட்டனம் - முயற்சி.
சேட்டன் } தமையன், மூத்தோன்.
சேஷ்டன்
சேட்டாதேவி - மூதேவி.
சேட்டி } அக்காள், பெருமையிற்சிறந்தாள்.
சேஷ்டி
சேட்டித்தல் } காரிபபடுதல், திறப்படல், நடத்தல்.
சேஷ்டித்தல்
சேட்டிப்பித்தல் - நடப்பித்தல்.
சேட்டுமம் - சிலேட்டுமம்.
சேட்டை } அக்காள், அசைகை, இயக்கம், குணங்கெட்டதொழில், கேட்டைநாள், செய்கை, தொந்தரவு, தொழில், மூறம், பெருமையிற் சிறந்தவள், மூதேவி, விசாகநாள்.
சேஷ்டை
சேட்படைகிலை-காதலன் றலைவியோடு சேராது தோழி தடுத்தல்.
சேணம் - கல்லணை, மெத்தை.
சேணவி - அறிவு.
சேணுடர் - வானோர்.
சேணுடு - சுவர்க்கம்.
சேணி - ஏணி, தாங்கல், முறை, வித்தியாதருலகு.
சேணிச்சி - ஒரு ஜாதியார்.
சேணியர் - நெய்வாரிலோர்பகுதி.
சேணுவணன்-ஆகாயக்கருடன்கிழங்கு.
சேணை - புத்தி.
சேண் - அகலம், ஆகாயம், உயர்ச்சி, தூரம், நீளம்.
சேண்டிரவர் - நெய்வார்.

சேதகம் - சிவப்பு, சேறு.
சேதகாம் - வெட்டுதல்.
சேதநகி - கடுக்காய்மரம்.
சேதநை - மனம்.
சேதபாதம் - நட்டம்.
சேதம் - அழிவு, இடையூறு, கெய்வாயி லக்கம், கேடு, துண்டு, நட்டம், பிரிவு.
சேதனம்-அறிவு,உணர்ச்சி,வெட்டுதல்.
சேதனன்-அறிவுடையோன்.ஆத்துமா அருஹியன் பௌத்திரன்.
சேதா - சிவப்புப்பசு, நற்பசு.
சேதாம்பல் - செவ்வாம்பல்.
சேதாரம் - அழிவு, கேடு, தேமாமரம், பொன்னுரை, வெட்சிமரம்.
சேதி - ஒருநாடு, புதினம். விதர்ப்பன் மூன்றாம்புத்திரனாகிய ரோமபாதன் வமிசத்தனாகிய உசிகன் புத்திரன், இவன் வமிசம் சேதிவமிசம், இவ னுடைய தேசம் சேதிதேசம்.
சேதிதம் - வெட்டப்பட்டது.
சேதித்தல் - அறுத்தல், வெட்டல்.
சேதிமம் - தேவர்கோயில்.
சேதிராஜன் - சிசுபாலன்.
சேதிராயர் - திருவிசைப்பாப் பாடின ஒன்பதின்மருள் ஒருவர்.
சேது - இராமேச்சுரம், ஒருகடல்தீர்த் தம்,சிவப்பு,செய்கரை,பாலம். ஸ்ரீரா மர் இராவணசங்காரஞ்செய்து மீண் டகாலத்தில் பிரமஹத்தி நீங்கும் பொருட்டு ஆடிய தீர்த்தத் துறை, இது சேதுபந்தனத்துக்கருகே இரா மேசுவரத்தைச் சார்ந்த கடலிலுள் ளது, இது சிறந்த தீர்த்த மென்று இமய முதலிய இடங்களினின்றும் ஆரியர் வருடந்தோறுஞ் சென்று மூழ்கப் பெறுவது.
சேதுநாதன் - இராமநாதன், இராமேச் சுரன்.
சேதுபதி - இராமநாதபுரவரசன்.
சேதுபந்தனம்-அணைக்கட்டு.திருவணை. இது பாண்டி நாட்டிலுள்ளது, இலங்கைக்குச்செல்லவேண்டி ஸ்ரீரா மரும் வானரசேனையும் கடலைத்தூர்த் திட்ட அணைப்பாதை.
சேதுபுராணம் - இராமேச்சுர தலபுரா ணம், இது நிரம்பவழகிய தேசிகரால் பாடப்பட்டது, இது மூர்த்தி தலம் தீர்த்தமென்னு மூன்றனையுஞ் சிறப் பித்துக் கூறுவது.
சேத்தல் - சிவத்தல்.
சேத்திரக்கோவை-சேத்திரநாமமாலை.
சேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ் - இது காஞ்சி, சிதம்பரமுனிவர்செய்த சுப்பிரமணியர் தோத்திரம்.
சேத்திரஞ்ஞன் - ஆன்மா, சரீரத்திர யத்தை யறிபவன்.
சேத்திரம் - உடம்பு, காற்று, சரீரத்திர யம், தலம், வயல்.
சேத்திரவாசம் - தலவாசம்.
சேத்து-உறுப்பு, ஐயம், ஒப்பு, கருத்து, சிவப்பு, நெருக்கம்,மிகுசிவப்பு,வயல்.
சேநாரு - படைத்தலைவன்.
சேந்தனார் - திவாகரம் கிகண்டுஇவைக ளைச்செய்வித்தவொரு சிற்றரசர்,இ வர் அருகசமயத்தவர், பட்டணத்துப் பிள்ளையார்க்கு மந்திரியாகவும் தோ ழருமாயிருந்த ஒரு வைசியர், திருவி விசைப் பாடினவரு ளொருவர்.
சேந்தன் - குமரன், திவாகரிகண்டு செய்வித்தோன்.
சேந்து-அசோகமரம்,சிவப்பு,நெருப்பு.
சேந்துதல் - சாம்புதல்.
சேந்துபந்தம் - அரக்கு.
சேந்தை - மேற்படாம்.
சேபம் - இலிங்கம்.
சேபனம் - சுவறுதல்.
சேபனர்த்தகம் - இறைத்தல்.
சேபாலம்கொட்டை } சேங் கொட்டை.
சேபாலம் }
சேபாலிகை - கருநொச்சிமரம்.
சேபிட்டம் - வேகம்.
சேபேது - உடைத்தல், போடல்.
சேப்பு - சிவப்பு.
சேமக்கலம் - எறிமணி.
சேமக்காரன் - சூதானக்காரன்,பொருட் பத்திரம் பண்ணுவோன்.
சேமங்கொள்ளுதல்-சேமம்பண்ணுதல்.
சேமணி - ஆமணி காமப்பகை, சேமக்க லம்.
சேமண்டன்-தந்தையற்றவன்.
சேமதருமம் - சுயதருமம்.
சேமத்தேர் - உதவித்தேர்.
சேமநம் - போசநம்.
சேமதி - புதையல்.
சேமந்தி - ஒருசாமந்தி, புடபம்.

சேமப்படைக்கலம் - தறுவாய்க்குவைத்திருக்கும் படை.
சேமப்பொருள் - அடைக்கலப் பொருள், சேமமாயிருக்கும்பொருள், புதையல்.
சேமம்-அடக்கம், அரண், இன்பம், காவல், காவல்வீடு, சவச்சேமம், புதையல்.
சேமம்பண்ணுதல்-சேமித்தல், பிரேதங்களை யடக்கம் பண்ணல்.
சேமரம் - அழிஞ்சில், சேரான்.
சேமறி - எருதும் பசுவும் புணர்தல்.
சேமனம் - சிவமணி.
சேமன் - தந்திரி.
சேமாசாரம் } சேமிக்குந்தண்டை.
சேமாதிசயம் }
சேமாளைச்சம்பா - ஒருவகை நெல்.
சேமித்தல் - காவல்பண்ணிவைத்தல், [புதைத்தல்.
சேமுஷி - புத்தி.
சேமை }
சேம்பு } ஒரு செடி.
சேம்பை }
சேயமம் - கௌரிபாஷாணம்.
சேயம் - ஒட்டம், கரை, கூறப்பட்டது, [வெற்றி.
சேயவன்-கந்தன், செவ்வாய்.
சேயன்-மகன், வெல்லத்தக்கபகைஞன்
சேயா - கடுக்காய்.
சேயார் - பகைவர், பிறர், மகன்.
சேயான் - சிவன், முருகன்.
சேயிலம் - இலுப்பை.
சேயிழை - ஆபரணம், பெண்.
சேயேபசம் - மரமஞ்சள்.
சேயோன் - கந்தன், சிவன்.
சேய்-இளமை, குமரன், குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், மகன், மலை, மூங்கில்.
சேய்த்து - தூரம், நீளம்.
சேய்நீர் - ஒருவித மருந்துநீர்.
சேய்மை - தூரம், நீளம்.
சேய்மைச்சுட்டு-தூரப்பொருளைச் சுட்டிக் காட்டல், (உ-ம்) அது.
சேர - ஒன்றாய்.
சேரக்கட்டுதல் -சேர்த்தல், சேர்த்துக் கட்டுதல்.
சேரங்கை - செரங்கை.
சேரமண்டலம்-சேரநாடு, அதுவடக்கில் பழனி, கிழக்கில் திருச்செங்கோடு, மேற்கில் கள்ளிக்கோட்டை, தெற்கில் சமுத்திரம், இந்தநாற்பாங்கெல்லைக்குட்பட்ட எண்ணூறுமயில் விஸ்தீரணமான பூமி.
சேரமான் - அறுபத்துமூவரிலொரு பெரியோர் சேரன்.
சேரமான்-கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன் - பரணரால் பாடப்பட்ட ஒரு சேரன்.
சேரமான்கடுங்கோவாழியாதன் - கபிலராலும் குண்டுகட்பாலியாதனாராலும் பாடப்பட்ட ஒருசேரன்.
சேரமான்கணைக்காலிரும்பொறை-கோச்செங்கட் சோழனாலே சிறைசெய்யப்பட்டுக் காராக்கிருஹத்திலே கிடந்து தாகத்தால்வருந்தியபோதும்தண்ணீர் பெறாம லுயிர்நீங்கினவன்.
சேரமான் - கருவூரேறிய வொள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறை- இவன் நரிவெரூஉத்தலையரால் புகழ்ந்து பாடப்பட்டவன்.
சேரமான்குட்டுவன்கோதை - சோணாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனாரால்பாடப்பட்டபெருங்கொடையாளன்.
சேரமான் -குடக்கோச்சேரலிரும்பொ[றை.
சேரமான் - குடக்கோவிளஞ் சேரலிரும்பொறை இவன் பெருங்குன்றூர்க்கிழாரால் பாடப்பட்ட சேரன், பதிற்றுப்பத்தினுள்ளே ஒன்பதாம்பத்திற்குத் தலைவனுமிவனே.
சேரமான்குடக்கோநெடுஞ்சேரலாதன் இவனும் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி யென்னும் சோழனும் போரிலிருந்த போது, கழாத் தலையராலும்பாணராலும் அச்சோழனோடு சேர்த்துப் பாடப்பட்டவன்.
சேரமான்கோக்கோதைமார்பன் -இவன் கோச்செங்கட் சோழன் காலத்துச் சேரன், இவன் பொய்கையாரால் பாடப்பட்டவன்.
சேரமான்- கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை - புறநானூற்றி லுள்ள ஒரு பாடலால் புலமை நிறைந்த சேரருளொருவனென விளங்கும்.
சேரமான்செல்வக்கடுங்கோவாழியாதன்-சிக்கற்பள்ளியிலிறந்த பெருங்கொடையாளனாகிய சேரன், இவன

குண்டுகட்பாலியாதனாற் பாடப்பட்டவன். கபிலரது கையைப் பற்றி நங்கைமெல்லியவென அவரார்பாடப்பட்ட சேரன். (புறநானூறு)

சேரமான் தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறை - தனது முரசுகட்டிலில் அறியாதேறி நித்திரைசெய்த மோசிகீரனாரைத் தண்டியாது அவர் துயிலொழிந்தெழுந்துணையும் கவரி வீசிநின்ற பெருந்தகையாகியசேரன், அவ்வரும் பெருஞ்செயல் புறநானூற்றினுள்ளேவரும் மோசிகீரனார் பாடலில் விரித்துப் புகழப்பட்டுள்ளது, பதிற்றுப்பத்தினுள் எட்டாம் பத்தாலே தன்னைப்பாடிய அரிசில் கிழாருக்கு ஒன்பது லக்ஷம் பொன் பரிசில் கொடுத்தோனும் தகடூரை வென்றவனும் இவனே.

சேரமான்மாமுளுரெறிந்த கெய்தலங்கானலிளஞ் சேட்சென்னி சேரமானுடைய மாமுளூரைவென்று கைக்கொண்டசோழன், இவன்ஊன்பொதிபசுங்குடையரால்பாடப்பட்டவன் ஒருநாள் ஊனைவாங்கிக்குடையினுள் மறைத்து சென்றமையால் அப்புலவர்க்கு இப்பெயர்வருவதாயிற்று.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ - இவன் கொடையாலும் வீரத்தாலும் புகழ்படைத்த ஒரு சேரன், பேய்மகன் இளவெயினியாற் பாடப்பட்டவன், பாட்டிலும் வல்லவன்.

சேரமான் பெருஞ்சேரலாதன்-இவன் கரிகாற் சோழனுக்குத்தோற்றுநாணி வடநாட்டிற் சென்றிருந்த சேரன், இவன் கழாத்தலையார் வெண்ணிக்குயத்தியாயர் என்னும்இருவராலும் பாடப்பட்டவன்.

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்-இவன்பாண்டவர்களும் கௌரவர்களும் செய்த யுத்தத்தில் அவர்கள் சேனைகளுக்கு யுத்தமுடியுமளவும் நல்லுணவளித்து பெருஞ்செல்வமாகியசேரன் இவன் இடைச்சங்கத்திலிருந்த முடிஞ்சியூர் முடிநாகராயரால் பாடப்பட்டவன்.

சேரமான்மாந்தரஞ் சேரலிரும் பொறை இவன் சோழன் ராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளியோடுபோர்செய்த சேரன், இவன் பொருந்தி விளங்கீரனாராலும் வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனாராலும்பாடப்பட்டவன்.

சேரமான்மாவெண்கோ - கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியும், சோழன் இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும் இச்சேரன்காலத்தவர்கள் சேரமான் பெருமாணயனார் என்பவரு மிவரே. இவர் ஔவையாரால் பாடப்பெற்றவர்.

சேரமான் யானைக்கட்சேரலிரும் பொறை - மாந்தரஞ்சேரலிரும் பொறைபாதுகாத்தநாடு தேவருலகத்தை நிகர்க்கும் என்றுலகத்தார் புகழ அரசாண்டசேரன், இவன் தன்னைப்பாடும் புலவர்க்கு பிறரிடத்தேசென்று பாடி யிறவாதபடி பெரும்பொருள் வழங்கும் பெருங்கொடை வள்ளல், இதனைப் பாடியபுலவர் குறுங்கோழியூர் கிழார், இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் சிறைப்படுத்தின காலத்தும் குறுங்கோழி, யூர் கிழார் தாம் முன்னே அவன்பாற்பெற்ற நன்றியை மறவாது போய்க்கண்டு அவன் புகழை மிக வெடுத்துப் பாடினர்.

சேரமான்வஞ்சன் - இவன் திருத்தாமனாரால் பாடப்பட்ட சேரன்.

சேரமான்பெருமாள் - ஆயிரத்தறுபது வருடங்களுக்குமுன்னேசேரநாட்டில் அரசுபுரிகையில், அருக்கரோடு போர்செய்து தோற்று அவர்களுடைய சமயத்திற் பிரவேசித்துத் அருக்கனாகிப் பின்னுஞ் சிலநாள் அரசாண்டு இறுதியில் தனது நாடுவிட்டோடித் அருக்கருடைய தெய்வஸ்தலமாகிய மக்கபுரியையடைந்து அங்கே யிறந்தவன். இவன் சமாதிஇன்றும் அங்குளது, இவன் இறந்தகாலம் அந்தச் சமாதிகல்லில் எழுதப்பட்டிருக்கின்றது.

சேரலர் - பகைவர்.

சேரலன் - சேரன், பகைவன்.

சேரலாதன்-செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் தந்தை.

சேரலார் - பகைவர்.

சேரல் - கிட்டல், கொழியலரிசி,

சேரவமிசாந்தக பாண்டியன் - சோழ வமிசாந்தக பாண்டியன் மகன்.

சேரன்-சேரநாட்டரசன், இவன் தமிழ் நாட்டு மூவேந்தருளொருவன், இவனது நாடு மலைநாடு, அது தற்காலம் மலையாளமெனப்படும். இந்நாட்டுத் துறை பொருநைத்துறை, இவன் மாலை பனைமாலை, இவன் மலைகொல்லி மலை.

சேரா - கள்.

சேராங்கொட்டை-சேரான்கொட்டை.

சேரார் - பகைவர்.

சேரான் - சேங்கொட்டைமரம், பகைவன்.

சேரி - ஊர், தெரு.

சேரிடுதல் - பிணைத்தல்.

சேரிப்பாத்தையர்-பொது ஸ்திரீகளில் ஒரு வகையார்.

சேருகம் - நாகணவாய்ப்புள்.

சேருதல் - சேர்தல்.

சேரும்பாடும் - அடிதலைமாறி.

சேரை - சிறங்கை.

சேர் - ஓரளவு, ஒரேர்மாடு, ஒருநிறை, சேரென்னேவல், தனை, தானியப்போர், பிணையல்.

சேர்க்கை - ஒன்றிப்பு, சேருமிடம், சேர்க்குதல், புணர்ச்சி.

சேர்தல்-அடுத்தல், அடைதல், இணங்குதல், ஒருமித்தல், கிட்டுதல், கூடுதல், புணர்தல்.

சேர்த்தல் - அடுத்தல், அணிதல், அறைத்தல், இணைத்தல், கலத்தல், கூட்டுதல், சமைத்தல், சேகரித்தல், சேரப்பண்ணுதல்.

சேர்த்தி
சேர்த்திகை } உறவு, சேர்மானம்.

சேர்த்துதல் - இணைத்தல், சேரப்பண்ணுதல்.

சேர்ந்தகைமை - சேரத்தகுந்தன்மை.

சேர்ந்தலை - உற்றசினேகம், ஒன்றிப்பு.

சேர்ந்தவன் - அடுத்தவன்.

சேர்ந்தார் - உற்றார்.

சேர்ந்தார்க்கொல்லி - நெருப்பு.

சேர்பந்து - கசை.

சேர்பு - சேர்மானம், வீடு.

சேர்ப்பன் - நெய்தனிலத்தலைவன்.

சேர்ப்பு - அனுபந்தம், இறங்குதுறை, கடற்றுறை, கலப்பு, சேர்க்கப்படுவது, சேர்ப்பூட்டு, சோடு.

சேர்மானம் - ஒன்றிப்பு, கலப்பு, கூட்டு.

சேர்விடம் - சேருமிடம், சேர்மானம், மனிதர் படுக்கை.

சேர்வு - ஐக்கம்கூட்டம், திரட்சி, மருதநிலத்தூர், வீடு.

சேர்வை - ஐக்கம், ஒருமருந்து, கலத்தல், கூட்டம், சேகரிப்பு, சேர்மானம், சேனை, பிராஸ்திரி.

சேர்வைக்காரன் - சேனைத் தலைவன், போர்ச்சேவகன்.

சேர்வைக்கால் - உண்கலமுதலியவைக் குந்தான்.

சேலகம் - முத்தக்காசு.

சேலப்பிரட்சாளகன் - வண்ணான்.

சேலம் - ஓரூர், புடைவை, பொருனை, மயிற்றோகைக்கண்.

சேலன் - அதமன்.

சேலி - வஸ்திரம்.

சேலியான் - இலாமிச்சை.

சேலுகன் - வேலைக்காரன்.

சேலேகம் - சந்தனம், சிந்தூரம்.

சேலை - அசோகு, சீலை.

சேலோதம் - சந்தனம்.

சேல் - கயல்மீன்.

சேவகம் - சேவகத்தொழில், சோம்பு, துயில், பேயுள்ளி, யானை துயிலிடம், வணக்கம், வீரம், வேலை.

சேவகனூர் - ஐயனூர்.

சேவகன் - ஐயன், சிற்றுமுட்டி, பணிவிடைகாரன், பேயுள்ளி, வீரன்.

சேவகன்பூடு - காந்தள், சிறுபுள்ளடி, சிற்றமுட்டி.

சேவடி - சிவந்தபாதம்.

சேவதி - குபேரன்றிரவியம்.

சேவம் - ஆண்குறி, உயரம், பாம்பு.

சேவலங்கொடியோன் - சேவற்கொடியோன், சுப்பிரமணியன்.

சேவலிநி - நதி.

சேவல்-காவல், கோழியினாண், சேமம், பறவையினாண், மயிலொழிந்த பறவையினாண்.

சேவற்கத்தி - காவற்போருக்குக் கட்டுங்கத்தி.

சேவற்கொடியோன்-ஐயன், கந்தன்.

சேவற்பண்ணை - ஒரு பூமரம்.

சேவனம் - சேவகம், தைத்தல்.

சேவனை - சேவிப்பு, வணக்கம்.

சேவனைகாரர் - ஊழியஞ் செய்வோர், வழிபடுவோர்.
சேவாலங்கொட்டை - நேர்வாளம்.
சேவாலிகம் - கருநொச்சி.
சேவிதம் - சேவகம்.
சேவிதன் - ஆச்சரியித்தோன்.
சேவித்தல்-ஊழியஞ் செய்தல், வணங்கல், வழிபடுதல்.
சேவியம் - வெள்ளை வெட்டிவேர்.
சேவுகம் - சேவகம்.
சேவை - ஊழியம், வழிபடுதல்.
சேவையூர் - சிதம்பரம்.
சேறல் - எழுச்சி, செல்லல், நடத்தல்.
சேறுடல் - சென்றாடுதல்.
சேறு-அளறு, இனிமை, கள், குறிப்பு, தெள்ளல், தித்திப்பு, திருவிழா.
சேழற்கண்ணி - மீனாக்ஷி, அரிதாரம்.
சேற்பம் - சிலேற்பனம்.
சேற்பனசுரம் - ஒரு காய்ச்சல்.
சேற்பனம் } சிலேட்டுமம்.
சேற்றுமம் }
சேனஜித்து-கிருதாசுவன் புத்திரனென்றும் இரண்டாம் யுவநாசுவன் தந்தை யென்றும் சொல்லப்படுவன்; விசுவஜித்து புத்திரன், ருசிராசுவன் த்ருடஹநு காசிபன், வற்சஹநு என்னும் நால்வரும் இவர் புத்திரரே.
சேஷன் - ஆதிசேடன்.
சேனம் - பருந்து.
சேனப்பாம்பு - ஒருமீன்.
சேனன்-பிறப்பிலே சிலாக்கிய முடையோன்.
சேனா - ஒருபூடு, விலாங்குமீன்.
சேனாங்கம் - படையுறுப்பு.
சேனாசமுத்திரம் - பெருஞ்சேனை.
சேனாதரசன் - படைவீரன்.
சேனாதிபதி - படைத்தலைவன்.
சேனாதிபன்-சுப்பிரமணியன், படைத்தலைவன்.
சேனாதிராயன் - கந்தன், சேனாதிபதி.
சேனாபதி - சேனாதிபன்.
சேனாபத்தியம் - தானாபத்தியம்.
சேனாமுகம் - படையினோர் தொகை. அது பதாதி மூன்று கொண்டது, முற்படை.
சேனாவதி - எழாவது மேளகர்த்தா.
சேனாவரையர்-தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையம் என்னும் உரைசெய்த ஆசிரியர், வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லவர். இவர் நச்சினார்க்கினியருக்கு முன்னிருந்தவர் என்பது நச்சினார்க்கினிய ரியற்றிய உரையில் ஒரேவிடத்துச் சேனாவரையர் மதத்தை மறுத்துத் தம்மதத்தை நாட்டலால் இனிது விளங்கும். இவருடைய ஜாமபூமி பாண்டி நாடென்றும் ஜாதியில் அந்தணர் என்றும் கூறுவர். இவர் இளம்பூரணர் உரையை இடையிடையே மறுத்தலால் இளம்பூரணர் இவர்க்கு முன்னிருந்தவராதல் வேண்டும். ஆதலால் சேனாவரையர் இற்றைக்கு ஆயிரத்திருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்தவரென்று துணியப்படும்.
சேனாவு - தகரை.
சேனானியன் - குமரன், படைத்தலைவன்.
சேனை - ஆயுதம், கடைவீதி, படை, மிகுதி.
சேனைத்தலைவர்-செங்குந்தர், உபசுப்பிரமணியர்.
சேனைத்தலைவன் - படைத்தலைவன்.

சை

சை - இகழ்ச்சிக்குறிப்பு, ஓரெழுத்து.
சைகதம் - ஆற்றங்கரை, மணல், மணற்கரை.
சைகதவுண்டை - மலை.
சைகன் - ஒழுக்கந்தவறின பார்ப்பனப் புத்திரன்.
சைகை } பயில்.
சைக்கினை }
சைங்கம் - சிங்கம்.
சைங்கிகேயம் - இராகு.
சைங்கியம் - சைங்கம்.
சைசவம் - இளமை பதினாறு வயதிற்குள்ளான பருவம்.
சைசுநாகர்-சிசுநாகன்வமிசத்தார், இவர்பதின்மர். பிரத்தியோதர்களுக்குப்

பின்னே மகததேசத்திலே மூந்நூற்றறுபத்திரண்டு வருஷம் அரசாண்டவர்.

சைசவப்பருவம் - குழந்தைப்பருவம்.

சைதவாகிகி - ஒருநதி.

சைதன்னியதரிசனம்-தானுந்தலைவனுமொன்றெனக் காண்டல்.

சைதன்னியம் - அறிவு, ஆத்துமா, கடவுள், தத்துவஞானம்.

சைதன்னியர் - இவர்கள் இலிங்கதாரிகளைப்போல வருணாச்சிரம தருமங்களை கிராகரித்திருப்பவர்கள், இவர்களுக்கு பத்தியே சிறந்தது. விஷ்ணுவைப் பூசிப்பவர்கள். இவர்கள் உத்தரத்திலே பெருக்கமுள்ளவர்கள்.

சைநிதம் - பிரம்பு.

சைநியமுகம் - கமண்டலம்.

சைத்தியம் - இறப்புக்கல்வெட்டு, குளிர்மை, பலிபீடம்.

சைத்தியர் - யாதவபேதம், விதரியன் புத்திரனாகிய ரோமபாதன் வம்சத்தனாகிய சேதிவழியிற்றோன்றியனவராதலால் இவர்களுக்கு இப்பெயர் வழங்கும்.

சைத்திரகம் - சித்திரைமாதம்.

சைத்திரம்-சித்திரவேலை, சித்திரைமாதம், வெற்றி.

சைத்திராதம் - குபேரன் உத்தியாநவநம்.

சைத்திராகன் - வீரன்.

சைத்திராவிலி - சித்திராபூரணை.

சைத்திரி-சித்திரைமாதம், யாகமிருபத்தொன்றினொன்று.

சைத்திரிகம் - சித்திரவேலை, சித்திரைமாதம்.

சைத்திரியஞானம் - சித்தஞானம், பேரறிவு.

சைத்திரியம் - தெளிவு.

சைத்துவம் - செய்தல்.

சைநிகன் - சேனைத்தலைவன்.

சைந்தவம் - இந்துப்பு, சிந்துநதி, குதிரை, தலை.

சைந்தவன் - ஜயத்திரதன், இவன் சிந்துதேசத்தரசன், துரியோதனன் தங்கையாகிய துர்ப்பலையை மணம்புரிந்தவன். இவன் தந்தை விருத்த க்ஷத்திரன். இவன் பாண்டவர் வனவாசகாலத்தில், ஒருநாள் தனியேயிருந்த துரோபதையைக் கவர்ந்துபோக, பாண்டவர்கள் இவனைத் தொடர்ந்துபோய்த் தடுத்து இவனைமாநபங்கஞ்செய்து துரோபதையை மீட்டுச்சென்றார்கள். இவன் பாரதயுத்தத்தில் அர்ஜுநனால் கொல்லப்பட்டான்.

சைந்தவி - சயிந்தவி.

சைந்யம் - சதுரங்கபலம்.

சைப்பியர் - உசிநரன் புத்திரனாகியசிபி வம்சத்தார்.

சைப்பியை-விதேகராஜபுத்திரி, இவள் மஹா பதிவிரதை, சியாமகன்பாரி, விதர்ப்பன்தாய்.

சைமானம் - வெகுமானம்.

சைமினி-உத்தரமீமாம்சநூலாசிரியன் ஒருமுனிவன், இயமலோகம்.

சைமிநகரோன் - நமன்.

சைமினிநகர் - இயமலோகம்.

சைம்மினி - இயமன்பட்டணம்.

சைகிரி - ஒருமலை.

சையம்-கல், குடகுமலை, செல்வம், மலை.

சையெனல் - இகழ்ச்சிக்குறிப்பு.

சையை - சைகை.

சையோகம் - கூட்டம், புணர்ச்சி.

சையோகித்தல் - கூடுதல்.

சையோகை-சத்தியினாற் சிவத்துக்குண்டாகுந் துன்பம்; மனைவி.

சையோத்தி
சையோத்திகம்
சையோத்தியம் } அயிக்கம்.

சைரந்திரி-அன்னியன்வீட்டிலிருப்பவள்.

சைரிகம்-உழவெருது, கலப்பு.

சைரிகம் - உழவன், ஏர்மாடு.

சைரிபம் - எருது, எருமை.

சைரியம் - பெருங்குறிஞ்சி.

சைரேயகம் - சவிரேகம்.

சைலகம் - மலையிருவேலி.

சைலசிருங்கம் - மலைமுடி.

சைலதரன் - கிருட்டிணன்.

சைலபதி - இமயமலை.

சைலபித்தி - கல்லுளி.

சைலம் - கல்லுள்ளது, சேலை, மலை.

சைலாந்திரம் - மலைக்குகை.

சைவகுரு - சைவாசாரியர்.

சைவசமயகுரவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்,

மாணிக்க வாசக நாயனார் என்னும் இந்நால்வரும் இப்பெயரால் வழங்கப்படுவர்.
சைவசமயம் - சிவசமயம்.
சைவசாத்திரம் - சிவாகமம்.
சைவசித்தாந்தம் - ஒருநூல், சைவசமயத் தெளிவுண்மை.
சைவநூல் - சிவாகமநூல்.
சைவபூடணம் - ஒருநூல்.
சைவம் - சிவசமயம், அது உட்சமயமாறினொன்று, பதினெண்புராணத்தொன்று, புலால்தின்னாமையிருக்கை. ஒருபுராணம், இது வாயுவினாற் கூறப்பட்டது, சைவதவராக கற்பசம்பந்தமாகிய சிவமான்மியங்களையெடுத்துரைப்பது. இது பன்னீராயிரம் கிரந்தமுடையது. சிவனை முதற்கடவுளாகக்கொண்ட சமயம். இச்சமயத்தோர் சைவர் எனப்படுவர்.
சைவர் - சிவசமயத்தார், விசேடதீட்சை பெற்றோர்.
சைவலம் - பாசி.
சைவாகமங்கள் - அவை காமியம் முதலியஇருபத்தெட்டு, இவைசிவபெருமானுடைய மேன்முகத்திற் பிறந்தன, இவை ஒவ்வொன்றும் கோடி கிரந்தமுடையன, சரியைகிரியை யோகஞானங்களை விரித்துரைப்பன.
சைவாசாரம் - சிவசமயவொழுக்கு.
சைவியம் - சைவத்திற்குரியது.
சைவை - அகிலன்பாரி.
சைனர் - சமணர், சினர்.
சைனன் - அருகசமயத்தவன், அருகன், புத்தன்.
சைனபத்தியம் - சேனபதித்துவம்.
சைனியம் } சேனை.
சைன்னியம் } சேனை.

சொ

சொகுசா - உயர்ந்தசெம்பு, தம்பாக்கு.
சொகுசு - அழகு, சௌக்கியம், நாகரீகம்.
சொக்கட்டான் - ஒருசூது
சொக்கட்டான்கவறு - பாச்சிகை.
சொக்கட்டான்காய் - சொக்கட்டானுடைவைக்குங்கருவி.
சொக்கட்டான்பந்தல் - சொக்கட்டான் மனைபோற் செய்தபந்தர்.
சொக்கட்டான்மனை - சொக்கட்டான் விளையாடுமறைப்பலகைமுதலியன.
சொக்கதேவன் - கூகை, கூகைக்கட்டு, பொன்னுக்கு வீங்கி.
சொக்கநாதர் - திருவாலவாயிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
சொக்கநாதன் - சிவன்.
சொக்கநாயகி - திருப்புன்கூரிலே கோயில்கொண்டிருக்கும்தேவியார்பெயர்.
சொக்கப்பனை - விளக்கீட்டிலெரிக்கும் ஒருசெய்கை விருட்சம்.
சொக்கப்பையன் - வேலைக்காரன்.
சொக்கம் - அழகு, கலப்பின்மை, களவுகெம்புக்கல், சிறப்பு, தூய்மை, நன்மை, மேன்மை, ஒருகூத்து.
சொக்கரை - குறை, சிறிய அடைப்பு, மதில் முதலியவற்றின் துவாரம்.
சொக்கலி - மூங்கிலிச்செடி.
சொக்கலிங்கம் - சொக்கநாதன்.
சொக்கறை - சொக்கரை.
சொக்கன் - சிவன், சொக்கப்பையன்.
சொக்கா - ஒருவகையங்கி.
சொக்காரன் - ஆஸ்திக்குப்பாத்தியஸ்தரானஅண்ணன்தம்பிமுதலியவர்கள்.
சொக்காலி } சிறுபூளைப்பூடு.
சொக்காளி } சிறுபூளைப்பூடு.
சொக்கிடுவித்தை, களவுபண்ண மயக்கும்வித்தை.
சொக்கு - அழகு, அறியாமை கண்தூக்கம், கதும்பு, சொக்கன், சொக்கென்னேவல், சோர்வு, பொன், மயக்கு.
சொக்குப்பொடி - அயர்ந்து நித்திரையாக்கும்படி மேலிற்போடும்பொடி.
சொக்குவித்தல் - மயக்குதல்.
சொக்குவித்தை - மயக்குவித்தை.
சொங்காரன் - சொக்காரன்.
சொச்சம் - குறை, பணவட்டி, மாசின்மை, மிச்சம்.
சொச்சோர் - சொற்சோர்.
சொடக்கு - கடுகு, இலுகிலுப்பை, சோம்பற்றன்மை, கெட்டி.
சொடித்தல் - குறைத்தல்.
சொடுகு - சொறி, பொடுகு.

சொடுதலை - போகணி.
சொட்டா - ஒருவகைப்பட்டயம்.
சொட்டல் - அணுப்பல், இடித்தல், குட்டல்.
சொட்டு - குட்டு, குற்றம், சொட்டென்னேவல், திவலை, துண்டு.
சொட்டுதல் - அணுப்புதல், இடித்தல், குட்டுதல்.
சொட்டுத்தண்டம் - இடுவந்தி.
சொட்டுப்போடுதல் - திவலைவிழுத்தல்
சொட்டை - ஓராயுதம், கோணல், நொன்னை, பரிகாசம், பள்ளம்.
சொட்டைத்தலை - வெண்டலை.
சொண்டறை - சொண்டலி.
சொண்டி - உத்தியோகம், கடனுறுதி வேர்க்கொம்பு.
சொண்டு - அற்பன், ஆயுதநுனி, உதடு, உத்தியோகம், கனத்தவிளிம்பு, தலையழுக்கு, கிந்தை, பறவைமூக்கு.
சொண்டுக்கதை - கோட்கதை, முகமன் கதை.
சொண்டுத்தீன் - உறசியானசிறுதீன்.
சொண்டுபண்ணல் - இகழ்ச்சிபண்ணல்.
சொதை - ஐசுவரியம்.
சொஸ்தகம் - சுகம்.
சொஸ்தம் } சுகம், சௌக்கியம்.
சொத்தம் }
சொத்தலி - பனங்காயின் பொய்க்கொட்டை.
சொஸ்தானம் - உயிர்த்தெழுதல், சரியிடம்.
சொத்தி - நொண்டி, முடம்.
சொத்தியன் - முடவன்.
சொத்திரி } குலஸ்திரி, மனைவி.
சொஸ்திரி }
சொத்து - உடைமை, குறை, பகை, பொருள்.
சொத்துவம் - உரிமை, சுயம்பு.
சொத்தை - கதுப்பு, சேர்க்கேடு, சூத்தை.
சொந்தம் - உரியது, சுயம்.
சொப்பனம் - இரண்டாமவத்தை, கனவு.
சொப்பனவத்தை - ஓரவத்தை.
சொம் - ஆஸ்தி, உடைமை, உரிமைப்பொருள்.
சொம்மாளி - உரிமைக்காரன்.
சொயம் } சுயம்.
சொயம்பு }
சொயாதீனம் - சுயாதீனம்.
சொரங்கம் - கச்சோலம்.
சொரசத்தோர்சி - இலங்கப்பட்டை, இலவங்கம்.

சொரடு - இரும்பு, கொடுக்கி, வலையற்றடி.
சொரணை - சொருணை.
சொரிகுரும்பை - ஒருநெல்.
சொரிதரல் - சுழலல், சொழிதல்.
சொரிதல் - உதிர்தல், பொழிதல், மிகவீழ்தல்.
சொரிவு - ஈவு, உதிர்வு, தாராளம், பொழிவு.
சொருகம்புல் - ஒருவகைப்புல்.
சொருகுதல் - செருகுதல்.
சொருணை - சுவரணை.
சொருணைகேடு - உணர்ச்சியின்மை.
சொரூபஞானம் - பரமஞானம்.
சொரூபம் - அழகு, உடம்பு, சாயல், பரம், வடிவு, விக்கிரகம்.
சொரூபன் - கடவுள்.
சொரூபானந்தம் - ஒருவேதாந்தநூல்.
சொரூபானந்தர் - ஒருயோகி.
சொரூபி - உரூபி, சுரூபி.
சொர்க்கம் - சுவர்க்கம்.
சொர்னபுரீசுவரர் - திருச்செம்பொன்பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
சொர்னபுரீசர் - திருப்பத்தூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
சொர்ணம் - கோடாசுழி, பொன்.
சொர்ப்பனம் - கனவு.
சொர்னமாக்கி - பவனபாஷாணம்.
சொர்னம் - சொர்ணம்.
சொர்னக்கல் - இராசாவர்த்தக்கல்.
சொர்னசீரம் - கரும்பு.
சொர்ன்னம் - சொர்ணம்.
சொலித்தல் } இடந்திடல், சுவாலித்தல், பிரகாசித்தல்.
சொலித்திடல் }
சொலிப்பித்தல் - சொலிக்கச்செய்தல்.
சொலிப்பு - சுவாலை, பிரகாசம்.
சொலியன் - முடக்கொத்தான்.
சொலுசொலுத்தல் - பொலுபொலுத்தல்.
சொலுசொலுப்பு - பொலுபொலுப்பு.
சொலுசொலெனல் - பொலுபொலெனல்.
சொல் - எழுத்திசைச்சொல், கட்டளை, கள், செந்நெல், செந்நெற்கதிர், சொல்லென்னேவல், நெல், புகழ், பேச்சு, மொழி, வாக்கியம்.
சொல்லணி - சொற்றொடைவகைச்சிறப்பு.
சொல்லலங்காரம் - சொல்லணி.
சொல்லல் - உரைத்தல், பாடல்.
சொல்லறிபுள் - கிளி.

சொல்லாகுபெயர் - ஓராகுபெயர்,அது சொல்லின் பெயர்தன் பொருட்கு வழங்குவது,(உ-ம்) உரைசெய்தான்.
சொல்லாதசொல் - அசப்பியம், இரகசியம், வசை.
சொல்லானந்தம் - சொற்குற்றம்.
சொல்லிக்கொள்ளுதல்-எடுத்துப்பேசுதல், பிணைநீற்றல், பொறுப்புச்சொல்லுதல்.
சொல்லிலக்கணம் - சொல்லினியல்பு.
சொல்லின்பம் - சொற்சுவை.
சொல்லின்முடிவினப் பொருண்முடித்தல்-ஒருயுத்தி.
சொல்லுதல் - புலமைபாடுதல், மொழிதல்.
சொல்லுதவி - வாயுதவி.
சொல்லுறை - சொற்பயன்.
சொல்லுவான்குறிப்பு - சொல்வோன் கருத்து.
சொல்லுறுதி - மெய்வார்த்தை.
சொல்லெச்சம்-சொல்லெஞ்சிநிற்பது.
சொல்லெஞ்சணி - ஓரணி, அது,சொல்லெச்சம்.
சொல்லேருழவர் - புலவர், மந்திரிகள்.
சொல்லொடுபொருள் - சொற்றோறும் பண்ணும்பயன்.
சொல்லொப்பணி-ஓரணி, அது சொல்லொத்துவருவது.
சொல்வகைநூலுரை பதினொன்றினொன்று.
சொல்வரை - சொற்பகுதி.
சொல்வளம்-சொற்சாதுரியம், சொன்னயம்.
சொல்வன்மை - சொல்லுறுதி, சொற்சாதுரியம், வாக்குவல்லபம்.
சொல்விலக்கு-ஓரலங்காரம், அது ஆராயாது சொன்னதை விலக்கல்.
சொல்விளம்பி - கள்.
சொளுசொளுத்தல்-நீர்ப்பிடிப்பா யிளிக் காட்டல்.
சொள்ளல் - குறைவு, வித்தை.
சொள்ளை - சொட்டு, பழுதுபட்டது,புழுவரித்தது.
சொறி - காஞ்சொறி, குட்டம், சொறியென்னேவல், தினவு.
சொறிகட்டை - ஆவுரிஞ்சுதறி.
சொறிக்கல் - சுக்கான்கல்,தவளைக்கல், மஞ்சட்கல்.
சொறிக்கிட்டம் - கீச்சுக்கிட்டம்.
சொறிதல் - அரித்தல், பிருண்டல்.
சொறிமண்டலி - ஒருபாம்பு.
சொறியன் - தவளை.
சொறிவு - தினவு.
சொற்கப்பனை - சொக்கப்பனை.
சொற்கம் - சுவர்க்கம்,மாணிக்கம்,முலை.
சொற்கருவி - உரைக்காரகவேது,அது உதடுநா, பல்.
சொற்கலகம் - வாக்குவாதம், விபரீதம்.
சொற்காத்தல் - சொற்றவறாமை.
சொற்குறி - குதபாஷாணம்.
சொற்குற்றம் - சொற்பிழை.
சொற்சந்தி - சொற்புணர்ச்சி.
சொற்சாதுரியம்-வாக்கு விற்பன்னம்.
சொற்சித்திரம் - கருவானபேச்சு.
சொற்சிமிட்டு - சொற்சாதுரியம்.
சொற்சீரடி - தளைகள் ஒன்றும் பலவுமடுத்து வருவது.
சொற்சுவை - சொல்லின்பம்.
சொற்சோர் - சொல்லிழுக்கு.
சொற்பம் - அற்பம், சிறியது.
சொற்பயன் - சொற்பொருள்.
சொற்பனம் - சொப்பனம்.
சொற்பின்வருநிலை - மொழிந்தசொல்லே மொழியினும் பொருள் வேறுபட்டு நிற்பது.
சொற்பொருட் பின்வருநிலை-சொல்லும்பொருளுமொன்றே மறித்து வருவது,(உ-ம்) வைகலும் வைகல்வரக்கண்டு.
சொற்பொருள் - சத்தார்த்தம்.
சொற்பொருள்விரித்தல்-ஒருயுத்தி, அது சொற்பொருள் விளங்க உருபுமுதலானவற்றை விரித்துச்சொல்லல்.
சொற்றல் - சொல்லல்.
சொற்றுணை - சொல்லுதவி.
சொற்றொடர்நிலைச்செய்யுள் - ஒருபிரபந்தம், அது சொல்லாற்றொடர்ந்து வருவது.
சொனகு - பெரும்புல்.
சொனுகம் - உத்தாமணி.
சொன்மாலை - ஏற்றமொழி.
சொன்மிக்கணி - ஓரலங்காரம்,அது வந்தசொல்லே மீண்டு மீண்டும் வரத்தொடுத்தல்.
சொன்றி - சக்கு, சோறு.
சொன்றிக்குழிசி - சோற்றுப்பானை.
சொன்னகாரர் - தட்டார்.
சொன்னசிரம் - கரும்பு.

சொன்னதானம் - இரணியதானம்.
சொன்னபுட்பம் - சுவர்ணபுட்பம்.
சொன்னபேதி - ஒருமருந்து.
சொன்னமயம் - பொன்னிறம்.
சொன்னமாக்கி - பவளபாஷாணம்.
சொன்னம் - பொன்.
சொன்னல் - இரும்பு, சோளம்.

சோ

சோ - அரண், உமை, ஒரெழுத்து, வியப்புச்சொல், வாணாசுரன் நகர்.
சோகநீக்கி - மாதவி.
சோகம் - உண்டை, ஒட்டகம், சோம்பல், சோர்வு, துன்பம், தொடை, பஞ்சபாணத் தவத்தையினொன்று, அது வெதுப்புந்துய்ப்பன தெவிட்டலுமா யிருத்தல்.
சோகரிகன் - வேட்டைக்காரன்.
சோகரியம் } சௌகரியம்.
சோகரீயம் }
சோகவிருத்தி - சத்தாவத்தையிலொன்று, அது சிவாவத்தையிற் சனனமரண துக்கந் தனக்கில்லை யென்று தள்ளி நிற்றல்.
சோகாக்கினி - மிருதயர்.
சோகாத்தல் - துக்கப்படுதல், வதங்குதல்.
சோகாபனோதன் - ஞானாசாரியன்.
சோகாப்பு - துயரம்.
சோகாரி - கடம்பு.
சோகி - பலகறை, பிடாரன், விடவைத்தியன்.
சோகித்தல் - அலசப்படல், துக்கப்படுதல்.
சோகு - பிசாசம்.
சோகை - அப்பிராணி, ஒருநோய்.
சோகையன் - காமாலையன்.
சோங்கம் - அகில்மரம், கிச்சிலிக்கிழங்கு.
சோங்கு - ஒரு மரக்கலம், குருகு, அப்பாக்கி முதலியவற்றினடி, மலையின் கண்சோலை, மறத்தல்.
சோங்குவெட்டு - குதிவெட்டு.
சோசகம் - மரப்பட்டை.
சோசக்காய் - தேங்காய்.
சோசனம் - உள்ளி.
சோசாக்கினி - மிருதயர்.
சோசியம் - சோதிடசாத்திரம்.
சோசியர் - சோதிடகாரர்.
சோச்சி - சோறு.
சோச்சியகன் - கீழ்மகன்.
சோடச்சைவம் - சைவபேதம் பதினாறு, பதினாறு பாதச்சைவம்.
சோடசமுத்திரை - சைவமுத்திரைபதினாறு.
சோடசம் - பதினாறு, மரப்பட்டை, நார்.
சோடசவுபசாரம் - பதினாறு வகை வழிபாடு, அது அடைகாய்தரல், அமுதமேந்தல், ஆசமனநீர்தரல், ஆடைசாத்தல், கருப்பூரதிபமேந்தல், கால்கழுநீர்தரல், கைகழுநீர்தரல், தவிசளித்தல், தேய்வைபூசல், நறும்புகைகாட்டல், நீராட்டல், மஞ்சளரிசிதூவல், மந்திரமலரானருச்சித்தல், மலர்சாத்தல், முப்புரிநூறரல், விளக்கிடல்.
சோடசாவதானம் - பதினாறுவித அவதானம்.
சோடசாவதானி - பதினாறுவித அவதானஞ் செய்வோன்.
சோடசி - யாகமிருபத்தொன்றி லொன்று.
சோடசோபசாரம் - சோடசவுபசாரம்.
சோடணம் - உமிந்துகுடித்தல், உலர்த்தல்.
சோடம் } சந்தோஷம், பொறுமை, மார்ச்சட்டை.
சோஷம் }
சோடன் - கீழ்மகன், சோம்பன், மூடன்.
சோடி - சிக்கிராந்துள்.
சோடித்தல் - அலங்கரித்தல்.
சோஷித்தல் - களைத்தல், வற்றுதல்.
சோடிப்பு } அலங்காரத்திற்கு வேண்டுவன.
சோடினை }
சோடு - இரண்டு, கவசம், சரியொப்பு.
சோடுகட்டுதல் - சரிவர விணைத்தல், குதாட்டத்தொன்று.
சோடுதோல் - பாதகுறடு.
சோடை - சடைந்தது, சடைவு.
சோஷை - சோர்வு, திரீவரட்சி.
சோட்டா - வளைதடி.
சோட்டை - ஆசை, பேராசை, சலம்.
சோணகிரி - இரத்தினமலை, அருணை.
சோணகிரிவள்ளல் - சிவன்.
சோணங்கி - ஒருநாய்.
சோணசைலம் - சோணகிரி.

சோணநதி - கங்கையின் ஒரு உபநதி.
சோணம் - இரத்தம், ஒருயாறு, கடல், சிவப்பு, செங்கரும்பு, செந்தூரம், தீ.
சோணகம் - பெருவாகை.
சோணசலம் - இரத்திரைசலம், அருணசலம்.
சோணடு - சோழநாடு.
சோணட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்-அந்தணர்க்குரிய அறுதொழிலும்சிரத்தையோடு செய்கிற ஒரு வேதியர். கொடையிற் சிறந்தவர். ஆவூர்மூலங்கிழாரால் பாடப்பட்டவர்.
சோணை - விருத்தம்.
சோணிதபுரம்-அசுரரிருக்கும் ஒரு பட்டினம்.
சோணிதம் - இரத்தம், சிவப்பு, சுரோணிதம், மஞ்சள்.
சோணேசன் - சிவன்.
சோணை-அருகு, அருணைமாநகர், காதினருகு, சோணசலம், சோணநதி, புகையிலை முதலியவற்றினடிப்புறம். மைநாகமலையி லுற்பத்தியாகிக் கங்கையிற் கலக்கும் ஒருநதி, சித்தா சிரமத்திலிருந்து மிதிலைக்குப் போகும் வழியில் இப்பெயர்கொண்ட நதியுமொன்றுண்டு, அது மகததேசத்திற் பாய்தலால் மாகதியெனவும் படும். இதிலிருந்தே சோணபத்திரவிநாயகமூர்த்தங்கள் எடுப்பார்கள்.
சோதகம் - கழிக்குந்தொகை, சுத்தி பண்ணல்.
சோதகர்-ஏழ்தலைமுறையளவு பிறந்த பிதிரர், ஏழ்தலைமுறையிற் புத்திரர்.
சோதகும்பம் - சுத்தோதககும்பம்.
சோதம் - ஒழுகல், சுத்தமானநீர்.
சோதரம் - சகோதரம்.
சோதரன் - சகோதரன்.
சோதரி - சகோதரி.
சோதனம் - சுத்தஞ்செய்தல், சோதித்தல், துரிசு, புடமிடுகை.
சோதனை - அளவு, ஆராய்வு, கட்டளை, சோதிப்பு, பிரமாணம், புடமிடுகை.
சோதி-அருகன், இடிவு, உணர்வு, ஒளி, கடவுள், கருப்பூரம், சாதிலிங்கம், சிவன், சுவாதிநாள், சூரியன், சோதியென்னேவல், தீ, பிரகாசம், பூநாகம், வான்மீன், விட்டுணு.
சோதிக்குட்சோதி - கடவுள்.
சோதிக்குண்மணி - முத்து.
சோதிசக்கரம் - துருவசக்கிரம்.
சோதிசொருபிணி - அறுபத்தெட்டாவது மேளகர்த்தா.
சோதிடகாரர் - சோசியர்.
சோதிடசாத்திரம் - கலைஞானமறுபத்துநான்கில் ஒன்று.
சோதிடநூலோர் - எண்கலைஞர்.
சோதிடநூல் - சோதிடசாத்திரம்.
சோதிடம் - சோதிடசாத்திரம், நன்னிமித்தம், சாத்திரங்களு ளொன்று.
சோதிடர் - சோசியர்.
சோதிடவாதம் - சோதிடவிசுவாசமார்க்கம்.
சோதிடவாதி-சோதிடமார்க்கி.
சோதிதம்-அறிவிக்கப்பட்டது, நியமிக்கப்பட்டது.
சோதித்தல் - ஆராய்தல், இலங்கல்.
சோதிநாயகன் - கடவுள்.
சோதிநீச்சடம் - முத்துச்சிப்பி.
சோதிப்பிழம்பு-ஒளிப்பிழம்பு, கடவுள்.
சோதிப்பு - ஆராய்வு.
சோதிமண்டலம் - வானசோதிகளின்மண்டலம்.
சோதிமயம்-ஒளியுருவம், மிக்கவொளி, வாலுளுவை.
சோதிமயவேதி - பூநாகம்.
சோதிமா - சோதிமரம்.
சோதியம் - வாலுளுவை.
சோதிராத்திரி - நடுராத்திரி.
சோதிரூபம் - ஒளிவடிவு.
சோதிவிருட்சம் - இரவெரி.
சோதிவிழல் - இடிதல்.
சோதினி - செத்தை, துடைப்பம்.
சோத்தம் - ஸ்தோத்திரம், இழிந்தார் செய்யும் அஞ்சலி.
சோத்தி-அத்தசாமம், சுழுத்தி, நித்திரை.
சோத்தியம் - அதிசயம், கழிக்கப்படுந்தொகை, சுத்தம், சோதிக்கப்படுவது, தவறுவினை.
சோத்திரம் - காது, கேள்வி.
சோத்திரியம் - தக்கோர்களித்தநிலம்.
சோத்திரியவிந்திரியக்காட்சி-சத்ததன்மாத்திரை.
சோநிசி - குகை.
சோந்தை - உடந்தை, தடை.
சோபகிருது - முப்பத்தேழாவதாண்டு.
சோபதானம் - சோபாதானம்.

சோபபிரகாசன்-எல்லாவற்றையு மறிவாலறிபவன்.
சோபன் - அழகு, ஆயாசம், இரக்கம், ஒளி, கள், சோம்பல், சோர்வு, நாமதருணத்தொன்று, பத்துக்கோடி, கோடாகோடி, பிரபை.
சோபலம் - சோம்பு.
சோபலாங்கி - சோம்பன்.
சோபனம்-அழகு, சந்தோஷம், சுபம், தாமரை, நித்தியயோகத் தொன்று அது நன்மை, முகூர்த்தம், வாழ்த்து.
சோபாதானம்-முதற்காரணமுள்ளது.
சோபாலிகை-அடம்பு, அடுப்பு, சுவாலையுள்ளது, விரிதுறு.
சோபானம்-கற்படி, தாழ்வாரம், நன்னிமித்தம், வசதி.
சோபிதம் - சௌந்தரியம், பிரபை.
சோபித்தல் - ஒளிசெய்தல், சோர்தல்.
சோபை - அழகு, ஒளி.
சோப்பம் - அயர்வு, சோர்வு.
சோப்பளாங்கி - சோம்பன்.
சோப்பறுதி - மிகுவாட்டம்.
சோப்பி - ஈச்சோப்பி.
சோப்பு-அடி, சோப்பென்னேவல்.
சோப்புதல் - அடித்தல், வாட்டுதல்.
சோமகர்ப்பன் - விட்டுணு.
சோமகன்-சகதேவன் புத்திரன், ஸூஜந்மகிருது தந்தை, விருஷதன் தந்தை தந்தை, ஜயிந்தன் தந்தையாகிய வோரிராஜரிஷி, பிரமன் தூங்கும் போது வேதங்களைத் திருடிப்போய்க் கடலிலொளித்திருந்த அசுரன், விஷ்ணு மச்சாவதாரஞ்செய்து அவனிடத்து வேதங்களைக் கைக்கொண்டுபோய் பிரமனுக் களித்தனர்.
சோமகுண்டம் - காவிரிநதி சங்கமுகத்திக்கு அருகேயுள்ள ஒரு தடாகம்.
சோமக்கொடி - ஒருவகையாகத்திற்கட்டுங் கொடி.
சோமசமஸ்தங்கள் - சுரௌதாக்கியிலே செய்யப்படுகிற யாகபேதங்கள், அவை அக்கிஷ்டோமம், அத்யக்கிஷ்டோமம், உக்தியம், ஷோடசி, அதிராத்ரம், அப்தோர் யாமம், வாஜபேயம் என வேழாம்.
சோமசம் - பால். [தன்.
சோமசித்தாந்தி-சோமசித்தாந்த மதஸ்
சோமசிந்து - விட்டுணு.
சோமசிரவசு - சுருதசிரவர் புத்திரன், ஜநமேஜயன் புரோஹிதன்.
சோமசிரவம்-பாஞ்சால தேசத்துக்குச் சமீபத்திலுள்ள புண்ணிய தீர்த்தம். இந்தத் தீர்த்தக்கரையிலேயே அங்காரவர்ணன் அர்ச்சுநனோடு யுத்தஞ் செய்து சாபவுடல் விட்டுப் பூர்வரூபமாகிய சித்திராதன் என்னும் பெயரோடு தன்னுலகஞ் சேர்ந்தன [ன்.
சோமசுதன் - புதன்.
சோமசுதை - நர்மதாநதி.
சோமசுந்தரபாண்டியன் - இவன் மலயத்துவச பாண்டியன் மருகன், தடாதகைப் பிராட்டிக்கு மணவாளன்.
சோமசுந்திரபாதசேகரன்-இவன்வங்கியபாத பாண்டியனுக்குப் பின்னே அரசுசெய்த பாண்டியன், சோமசுந்தரக் கடவுளருளால் சோழனை மடுவில் வீழ்த்தினவன் இவனே.
சோமசுந்தரன்-உமையோடு கூடியவழகன், ஒரு பாண்டியன், சிவன்.
சோமசூடாமணி - வமிசபூஷண பாண்டியனுக்குப் பின் அரசுசெய்த பாண்டியன்.
சோமசூரியவமிசம் - சந்திரகுல முஞ் சூரியகுலமுங் கலந்த வம்சம்.
சோமசேகரன்-ஒருபாண்டியன், சிவன்
சோமதத்தன்-சந்தனு சகோதரனாகிய பாஹ்லிகன் புத்திரன், இவன் பாரதப்போரிலிறந்தான், பூரி, பூரிசிரவன், சலன் என்னு மூவரும் இவன் புதல்வர்.
சோமதாரி-இந்துப்பு, சிவன். [புதல்வர்.
சோமதாரை - ஆகாயம்.
சோமதீர்த்தம் - பிரபாசதீர்த்தம், இது சோமநந்தபுரத்துக் கருகிலுள்ளது, சந்திரன் தக்கனது சாபத்தால் உண்டான கொடிய ரோகத்தை இந்தத் தீர்த்தஸ்நாநத்தினுல் ஒழித்துக் கொண்டதனுல் இதற்கு இப்பெயர் வழங்கும்.
சோமநாதம் - கூர்ச்சரதேசத்திலுள்ளவொரு சிவஸ்த்தலமும் நகரமுமாகும், சந்திரன் தவஞ்செய்து க்ஷயரோகம் நீக்கப்பெற்ற தலம்.
சோமநாதன் - சிவன்.
சோமநாதி - ஒரு பெருங்காயம்.

சோமபந்து - ஆம்பல், சூரியன், புதன்.
சோமபானம் – மதுபானம்.
சோமமணல் - வெள்ளிமணல்.
சோமமண்டலம் - சந்திரமண்டலம்.
சோமம் - ஆகாயம், ஒருபூடு, ஒருயாகம், கஞ்சி, கள்.
சோமயாகம் – பூரணுதினத்துச் செய்யும் ஒரு வேள்வி.
சோமயாகன் - சோமயாககர்த்தா.
சோமயோகி – ஒருவகைச்சந்தனம்.
சோமராகம்-இலைப்பண்ணின் றிறமைந்தனு ளொன்று.
சோமலிங்கன் - சோமாரணியேசுரன்.
சோமவல்லரி – பொன்னுங்காணி.
சோமவல்லி – சீந்தில்.
சோமவாரம் - திங்கட்கிழமை.
சோமவுலுக்கம் - தேக்கு, வணங்கல்.
சோமனுப்பு - இந்துப்பு, பச்சைக்கருப்பூரம்.

சோமன் - அத்திரிக்கு அநசூயையிடத்துப்பிறந்த சந்திரன், இவனே நிலவுலகிற் பிரகாசிப்பவன், கற்பபேதத்தால் இவன் அத்திரி புத்திரனென்றும் பாடற்கடலிற் பிறந்தவனென்றும் சிலபுராணங்கள் கூறும் சிவன், வசுக்களுளொருவன்,இவன் பிரஜாபதி புத்திரன் இவன் மனைவி மனோஹரை, புரோஜபன், வரியன் பிராணன் காணன், ரமனன் என ஐந்து புதல்வரையும் பிரதையென்னும் ஒரு புத்திரியையும் பெற்ருள் இந்தப் பிரதை பதின்மர் கந்தருவருக்குப் பொதுமனைவி, யமன், குபேரன்.
சோமன் - அட்டவசுக்களில் ஒருவன், அமுதம், ஒருவள்ளல், கருப்பூரம், காற்று, சந்திரன், சவக்காரம், சிவன், சிலை, தூசு, நமன், நீல பாஷாணம், பன்னிரண்டு முழமுள்ளபுடவை, புதன், மலை.

சோமன்சோடு - அங்கவஸ்திரமுமுடையும்.
சோமாக்கியம் - செவ்வல்லி.
சோமாசிமாறநாயனுர் - அந்தணர்குலத்திலே பிறந்து அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்தலே பெரிய சிவபுண்ணியமெனக் கொண்டு சுந்தரமூர்த்திநாயனுரை யடைந்து அவரேவலின்வழியே நின்று ஒழுக்கந்தவருது சிவபத்தி சாதித்தவர்.
சோமாரணியம் – ஒருவனம்.
சோமாறல், சோமாறுதல் } இரவல் வாங்குதல், ஒருத்தியைப்பலர் புணரல், சோர்மாறுதல், திருடல், பண்டமாற்றல்.
சோமாற்று - சோர்மாற்று.
சோமாஸ்கந்தர்-மஹேஸ்வரரூபம் இருபத்தைந்தனு ளொன்று, சிவனும் உமாதேவியாரும் முருகக்கடவுளைத் தழுவிய அவசரம்.
சோமி - ஆற்றூரிலேபிறந்துதமிழ்க்கல்வியிலே மிகுபுலமை யுடையளாய்த் தன்னை நோக்கிவரும் புலவர்களுக்குப் பொன்மாரி பொழிந்து, காளமேகப் புலவராலும் புகழ்ந்து பாடப்பட்ட ஒரு தாசி.
சோமிகாயகம் - சோமயாகம்.
சோமுகன் - ஓரசுரன்.
சோமேகரன் - சிவன்.
சோமோத்பவை - நர்மதாநதி.
சோம்பலம் - சோரான் கொட்டை.
சோம்பல்-அழுங்கல், சோம்புதல், மயக்கம், வகுரி.
சோம்பரை, சோம்பறை } சோம்பு.
சோம்பற்றழும்பு - அம்மைத்தழும்பு.
சோம்பன் - சோம்பறைகாரன்.
சோம்பாகி, சோம்பாயி } சமையற்காரன்.
சோம்பி - சோம்பன்.
சோம்பு - அழுங்கல்,சோம்பென்னேவல், தாமதகுணத்தொன்று, பெருஞ்சீரகம், மடி அது மாயயாக்கை பதினெண்குற்றத் தொன்று, மந்தம்.
சோம்புதல் - உறங்கல், தாமதித்தல், மடியாதல், வாட்டங்கொள்ளுதல்.
சோம்பேறி - சுவர்ணபேதி, சோம்பி.
சோய்வு - சோர்வு.
சோரசவி - ஒருவர்பாவையெடுத்துச் சிலமாற்றுதல் செய்து வேறொருவருக்குரைப்பவன்.
சோரகன் - கள்வன், திருடன்.
சோரக்கதண்டு - சுருவண்டு.
சோரசத்துரு – சவ்வீரம்.
சோரணம் - விடுதல்.

சோரத்திரவியம்-கொள்ளையிட்ட பொருள்.
சோரத்திரீ } விபசாரி, வேசி.
சோரஸ்திரீ }
சோரநாசம் } கள்வர் சேதம்.
சோரபஞ்சம் }
சோரபயம் - கள்வர்பயம்.
சோரபாஷாணம் - ஒருபாஷாணம்.
சோரபுத்திரன் - விபசாரபுத்திரன்.
சோரபுருஷன் - கள்ளப்புருஷன்.
சோரபேதி - அஞ்சனபாஷாணம்.
சோரப்போடுதல்-ஆறப்போதல், பின்போடுதல்.
சோரமார்க்கம் - தூர்த்தத்தனம்.
சோரமிடுதல் - களவெடுத்தல்.
சோரம் - களவு, வஞ்சனே, விபசாரம், வைப்புப்பாஷாணமுப்பத்திரண்டில் ஒன்று.
சோரம்போதல் - களவுபோதல், கற்பழிதல், தவறுதல்.
சோரர் - திருடர்.
சோரல் - சோருதல், தளர்தல்.
சோரவிடுதல் - இளகவிடுதல், காரியத்தைப் பின்போடுதல், தவறவிடுதல்.
சோரன்-ஆட்டுக்குட்டி ஒருவருடதேவதை, திருடன், ஒருவருடமொழிப் புலவன், இவனே பிலஹணன் என்றுங் கூறுவர்.
சோராவாரி - கொள்ளை.
சோரி - இரத்தம், மழை, சிறுசெருப்படை.
சோரிகை - களவு.
சோர் - சோரென்னேவல், சோர்வு.
சோர்ச்சி - அயர்ச்சி, சோகம், தளர்வு.
சோர்தல் - தவறுதல், தளர்தல், பொசிதல், வதங்குதல், வாடல், விழுதல்
சோர்த்தல் - கவர்தல்.
சோர்பு - சோர்வு.
சோர்மாறுதல் - நெகிழவிடுதல்.
சோர்மாற்று - நெகிழ்ச்சி.
சோர்வாதம் - அயர்ச்சி நோய்.
சோர்வு-அயர்ச்சி, களவு, தவறு, தளர்வு, நிறையழிவு, நெகிழ்வு, மறதி, மெலிவு, வதக்கம்.
சோலி-காரியம், தொந்தரை, தோணியிலொதுக்கிடம், மார்க்கச்சு.
சோலை - தோப்பு, மரச்செறிவு.
சோலைமலை - படைவீட்டில் ஒன்று, சுப்பிரமணியஸ்தலம், மதுரைக்கருகிலோர் விஷ்ணுதலம்.

சோவெனல் - ஒலிக்குறிப்பு.
சோவை - நீர்க்கோவை.
சோழக்கச்சான்-தென்மேற்றிசை, தென்மேற்றிசைக் காற்று.
சோழகம் - தெற்கு, தென்காற்று.
சோழங்கபாஷாணம் - ஒருபாஷாணம்.
சோழங்கன் - சோழன்.
சோழதேசம் சோழகுலத்தரசர்க்குரிய தேசம், இது காவிரியாறுபாயு நாடாதலால் இதனை நீர்மலிவானென்றும் புனனாடு என்றும் கூறுவர். இதில் தஞ்சை திருக்குடந்தை முதலிய மஹாநகரங்களும், அளவிறந்த, சிவாலய விஷ்ணுவாலயங்களு முண்டு. செல்வம் கல்வி அறிவு ஒழுக்கங்களாலுஞ் சிறந்தது.
சோழமண்டலம் } சோழதேயம், அது
சோழம் } தேயமைப்பத்தாறில் ஒன்று.
சோழவமிசாந்தக பாண்டியன்-ரிபுமர்த்தன பாண்டியனுக்குப் பின் அரசு செய்த பாண்டியன்.
சோழன்-தமிழ்நாட்டு மூவேந்தரில்ஒருவன், திஷ்யந்தனுக்குப் பவுத்திரனுகிய ஆசிரிதன் புத்திரன், இவனே சோரதேசஸ்தாபகன்.
சோழன்-இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி-சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையனைப் போரில் வென்றவன்.
சோழன் நலங்கிள்ளிசேட் சென்னி - இவன் இலந்திகைப் பள்ளியிலே பிறந்த சோழன், எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனால் பாடப்பட்டவன்.
சோழன் - உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி இவன் வீரத்தினுலும்கொடையாலுஞ் சிறந்தவன், கரிகாற்சோழன் தந்தை, பரணராலும்பெருகுன்றூர் கிழாராலும் பாடப்பட்டவன்.
சோழன்-கரிகாற்பெருவளத்தோன்.
சோழன் - கரிகாலன், இவன் உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி புதல்வன்.

சோழன் கிள்ளிவளவன் - கருவூரையழித்தவன், கோவூர் கிழார் இடைக்காடனார் முதலிய பல புலவராலும் பாடப்பட்டவன். உறையூரி லிருந்து அரசு புரிந்தவன்.

சோழன்பெருந்திருமாவளவன் - இவன் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாராலும் மருத்துவன் தாமோதரனாராலும் பாடப்பட்டவன்.

சோழன்செங்கணான் - ஒருசோழன், இவன் கல்வி வீரம் கொடை முதலியவற்றாற் சிறந்தவன்.

சோழன்நல்லுருத்திரன் - இவன் புலமை மிக்க ஒரு சோழன்.

சோழன்மாவளத்தான் - இவன் சோழன் நலங்கிள்ளி தம்பி, தாமப்பல்கண்ணனாரால் பாடப்பட்டவன்.

சோமன்நலங்கிள்ளி - சோழன் மாவளத்தான் தமையன், பாடும் புலமையுடையவன், உறையூர்முதுகண்ணன் சாத்தனார் கோவூர்கிழார் ஆத்தூர் கிழார் என்னு மூவராலும் பாடப்பட்டவன்.

சோழன்நெய்தலங் கானலிளஞ் சேட்சென்னி - இவன் ஊன்பொதிபசுங்குடையாரால்பாடப்பட்டவன். இளவரசாகி நெய்தலங்கான லென்னும் ஊரிலிருந்து உரியகாலத்தில் அரசு கொண்டவனாதலால் இப்பெயர்பெற்றான்.

சோழன்போர்வைக்கோப்பெருநற் கிள்ளி - தித்தன் என்னுஞ் சோழன் மகன், தந்தையைப் பகைத்து நாடிழந்து நல்குரவால் புல்லரிசி யுண்டு சிலகால மிருந்து பின்பு நாடு கைக்கொண் டரசுபுரிந்தவன்.

சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி - சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறைக்குப் பகைவன், உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரால் பாடப்பட்டவன்.

சோழன்வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி - சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனால் கொல்லப்பட்டவன், பரணராலும் கழாத்தலையாராலும் பாமாலை சூட்டப்பட்டவன்.

சோழநாட்டுப்பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன் - அரசர் பெண்கொள்ளுங் குடியிற் பிறந்தவன், மதுரை நக்கீரனாரால் பாடப்பட்டவன்.

சோழியக்கடகம், சோழியகூடை } சாட்டுக்கூடை மண்ணள்ளுங் கடகம்.

சோழியப்பை - இரப்போர்பை.

சோழியர் - ஒரு வேளாளசாதியார்.

சோழியவணம் - இருபதினாயிரம்வெற்றிலைபாக்கு கொண்டது.

சோழியவேளாளர் - சோழியர்.

சோழியவேனாதிதிருக்குட்டுவன் - பெருங் கொடையாளன், எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனாரால் பாடப்பட்டவன்.

சோழியன் - ஒருவேளாளன், மண்வெட்டி.

சோழியாவணம் - சோழியவணம்.

சோளகம் - செளளம்.

சோளம் - ஒருபயிர், சங்கஞ்செடி.

சோளனு - ஒருபை.

சோளன் - சோளம்.

சோளி, சோளிகை } ஒரு கூடை, பிச்சைக்காரர்பை.

சோறும் - அன்னம், கற்றாழஞ்சோற்றி முதலியன, பரணிநாள், பூஞ்சுண்ணம்.

சோறுகொல்லி - அன்னபேதி, பெருந்தீனிக்காரன்.

சோறூட்டு - அன்னப்பிராசனம்.

சோற்றாலாத்தி - ஓராலாத்தி.

சோற்றி - மரத்தினுட்சோறு, வயிரமற்றது.

சோற்றிலை - கற்றாழை.

சோற்றுக்கற்றலை - ஒருமீன்.

சோற்றுப்பதம் - காய்கள் பழுக்கத்தக்க பருவம்.

சோற்றுப்பாளையம் - ஸ்திரீசனம்.

சோற்றுப்பை - இரைப்பை.

சோனகம் - தேயமைம்பத்தாறி னொன்று, பதினெண்பாடையி லொன்று. ஆரிய தேசத்துக்கு மேற்கிலுள்ள ஒருதேசம்.

சோனகர் - துலுக்கர்.

சோனமாரி - சோனைவாரி.

சோனைமேகம் - பெருமழைபொழியு முகில்.

சோனைவாரி - பெருமழை, விடாமழை.

சோனை - சொரிதல், திருவோணநாள், விடாமழை. வச்சிரநாட்டைச்சார்ந்த வோராறு.

சோனைப்புல் - அக்கதேவி.

சோனைமழை - பெருமழை.
சோன்மதன் - பித்தன்.

சௌ

சௌகருத்திரன்-பள்ளியெழுச்சி பாடுவோன்.
சௌகதன் - சூனியவாதி, புத்தன்.
சௌகதிகம் - சந்தேகம்.
சௌகந்தம் - சுகந்தம்.
சௌகந்தி - கந்தபாஷாணம்.
சௌகந்திகம் - சௌகந்திக புஷ்பங்கள் நிறைந்துள்ள ஒரு தடாகம் இது குபேரன் நந்தநவநத்திலுள்ளது. இந்தச் சௌகந்திக புட்பமொன்றை வாயு பறித்துவீச அதுதுரோபதைக்கு முன்னே வந்து விழுந்தது, அதைக்கண்ட துரோபதை, அந்தப் புட்பமொன்று கொண்டுவந்து தரவேண்டுமென்று வீமனை வேண்ட அவன் அவ்வாறே கொண்டுவந்து கொடுத்தான்.
சௌகந்திகம் - கருங்குவளை, செங்குவளை, பதுமராகமணி, மாணிக்கத்தின் மூன்றாவது சாதி.
சௌகந்திகை - ஒருவகைத்தாமரை.
சௌகந்தியம் - சுகந்தம்.
சௌகம் - கிளி, துக்கம்.
சௌகரிகன் - வேடன்.
சௌகரியம் - சுகம், சோகரியம்.
சௌகாதிகம் - மகா யோகபீடம், மங்கல, சூத்திரம்.
சௌகாத்தியம்
சௌகார்த்தகம் } சினேகம்.
சௌகிருத்தியம்
சௌக்கியம் - சந்தோஷம், சுகம், வசதி.
சௌகுமாரியம் - இளமை, சுகுமாரம்.
சௌசம் - சுத்தஞ்செய்கை, சுத்தம்.
சௌசவிதி - சுத்தஞ்செய்விதி.
சௌசன்னியம் - அன்பு, இரக்கம், சினேகம், பட்சம்.
சௌசன்னியன் - பட்சமுடையோன்.
சௌசாசாரம்-ஆசவுசநிவர்த்திசெய்வி

சௌசி
சௌசிகன் } தையற்காரன்.
சௌசேயன் - வண்ணான்.
சௌடீரியம் - வீரம்.
சௌடு - சவுடு.
சௌண்டி - ஒருபிநிர், திப்பிலி.
சௌண்டிகரணம் - சிராத்தக்கிரியையி னொன்று.
சௌண்டிதர் - சாணர், கள்விற்போர்.
சௌதம் - அரண்மனை, சாலை, மலிவு, வெள்ளி.
சௌதாகிரி - குதிரை வியாபாரி.
சௌதாக்கிரிக்குதிரை-விலைக்குதிரை.
சௌதாசன் - இட்சுவாகு வமிசத்திற் பிறந்த ஓரரசன்.
சௌதாமனி - மின்.
சௌதாயம் - சீதனம், நன்கொடை, பந்தயப் பொருள்.
சௌதாயிகம் - சீதனம்.
சௌத்தி-சக்களத்தி, சகக்கிழத்தி, சகளத்தி, சதுர்த்தி.
சௌத்திரன் - சூத்திரன்.
சௌராந்திகம் - சவுத்திராந்திகம்.
சௌத்திராமணி - யாகவிருபத்தொன் றி னொன்று.
சௌனகன் - சுநகன் புத்திரன், சருதசிரமதன பௌத்திரன், இவன் தபோநியதியோடும் பிறந்தவன்.
சௌநந்தம் - பலராமனுலக்கை.
சௌநந்தி - பலதேவன்.
சௌநந்தை - மூதாவதி.
சௌந்தரநாயகி-சௌந்தரியவதி. திருப்பெரும்புலியூரில் கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
சௌந்தரநாயகியம்மை - திருக்கோணம் பத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
சௌந்தரபாண்டியன்-இவர் தடாதகைப்பிராட்டியார்க்கு மணவாளன்.
சௌந்தராமுகம் - பூரித்தமகிழ்ச்சியான் மலர்ந்தமுகம்.
சௌந்தரம் - அழகு.
சௌந்தரலகிரி - ஒருநூல்.
சௌந்தரன் - அழகன், சிவன்.
சௌந்தரி - அழகி, பார்வதி.
சௌந்தரிகம்
சௌந்தரியம் } சௌந்தரம்.

சௌந்தரியவதி - அழகுள்ளவள்.
சௌந்தரீகம் - பேரழகு.
சௌந்தரேசர்-திருநாரையூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
சௌந்தரேசன் - சிவன்.
சௌபஞ்சனம் - புனன்முருங்கை.
சௌபம் - அரிச்சந்திரன் பட்டணம்.
சௌபரி - ஒருமுனி மாந்தாதாவுக்குமருகனாகிய வோரிருடி, வேதமித்திரன் சீடன், சாகல்லியன் தந்தை, இவன் யமுனாநதி நீரினுள்ளே பன்னிரண்டு வருடம் தவங்கிடந்து பின்பு மாந்தாதாவினிடஞ் சென்று தனக்கொரு பெண் கொடுக்கும்படி வேண்ட அவன் என் பெண்களில் எவள் உன்னை விரும்புகிறளோ அவளை மணக்கக்கடவீரென்றுசொல்லித் தன் பெண்களெல்லாரையும்கன்னிமாடத்துக்கனுப்ப, இவ்விருடிமன்மதன்போலப்பேரழகான வுருவங்கொண்டு அங்கே செல்ல, அப்பெண்களெல்லாரும் இவனைக்கண்டு மோகிக்க, அவர்களையெல்லாம் மணம்புரிந்து கொண்டு சென்று நெடுங்காலம் காமவின்பம் நுகர்ந்தவன்.
சௌபன்னம் - சுக்கு, மரகதம்.
சௌபத்திரன் - சுபத்திரைமகன்.
சௌபத்திரேயன் - அபிமந்யன்.
சௌபநிகம் - இராப்போர், பாரதத்திலோர் பருவம். [தம்.
சௌபாக்கியசிந்தாமணி - ஒரு ஔஷ
சௌபாக்கியம் - சித்தியோகத்தொன்று, மிகுபாக்கியம்.
சௌபாக்கியவதி-மிகுபாக்கிய முடையவள்.
சௌபாஞ்சநம் - முருங்கைமரம்.
சௌபிகன்-இந்திரசாலிகன், மாந்திரி
சௌமநசை - சாதிபத்திரி. [கன்.
சௌமம் - சவும்.
சௌமனசியம் - பூரணம்
சௌமன் - புதன்.
சௌமாரம் - இளமை.
சௌமிகம் - சோமயாகம்.
சௌமித்திரன்
சௌமித்திரி } இலக்குமணன்.
சௌமித்திரை - சுமித்திரை.
சௌமிய-நாற்பத்து மூன்றுவதாண்டு.

சௌமியக்கிரகம் - சுபக்கிரகம்.
சௌமியதாது - கோழை.
சௌமியத்துவம் அழகு, சாந்தம், மனவொடுக்கம்.
சௌமியநாராயணன் - விஷ்ணு.
சௌமியம் - சௌமியத்துவம்.
சௌமியர் - சாந்தர், முனிவர்.
சௌமியன் - அருகன், சாந்தன், பன்னிருத்தரில் ஒருவன், புதன்.
சௌமேசகம்
சௌமேருகம் } பொன்.
சௌம்பகம்-சாளுவன் விமானம், சிவன் கட்டளையால் மயன்செய்து கொடுத்த இரதம்.
சௌரகன் - நாவிதன்.
சௌரசேனி-சூரசேநதேசத்துப் பிராக்ருதபாஷை.
சௌரபம் - குங்குமம், பரிமளம்.
சௌரபேயம் - எருது.
சௌரபேயி - ஒரு அப்சரஸ்த்ரீ.
சௌரப்பியம் - சுகந்தம்.
சௌரப்பியன் - குபேரன்.
சௌரமாதம்
சௌரமானம் } சூரியமாதம்.
சௌரம்-அட்டாதச வுபபுராணத்தொன்று, சூரம், சூரியமாதம், சௌளம், நான்.
சௌரவம் - வாசனை.
சௌரன் - சனி, சூரியன், சோரன்.
சௌராடி
சௌராட்டி } ஒருபண்.
சௌராஷ்டிரம்
சௌராட்டிரம் } ஓர்ராகம். ஒரு தேயம்.
சௌராஷ்டிரம்-சூராட்டு என்னும் நகரத்தையுடைய தேசம்.
சௌரி-க்ருஷ்ணன், சூரன் மகனாகிய வசுதேவன் புதல்வனாதலால் இப்பெயர் வந்தது. கருடன், கன்னன், சனி, தாருகன் மனைவி, திருமால், துர்க்கை, நமன்.
சௌரிகம் - மோக்ஷம்.
சௌரிகன்-சாணன், கள்விற்போன்.
சௌரிகை - சோரம்.
சௌரியப்பிரதாபம் - இராசமகிமை.
சௌரியம் - களவு, பலம், வீரம்.
சௌரியவான் - சூரன், பலசாலி, வீரவான்.

சௌரியன் - கன்னன், சூரபன்மன்' சூரியபுத்திரன், சௌரியவான்.
சௌரியார்ச்சிதம்-சோரத்திரவியம்.
சௌரிரத்நம் – நீலமணி.
சௌரு - சவர்.
சௌவம் - கட்டளை.
சௌவர்ணம் – சக்கு, மரகதம்.
சௌவஸ்திகன் – புரோஹிதன்.
சௌவிதன் - அண்ணகன், அந்தப்புரக் காவற்காரன்.
சௌவீரகம் - இலந்தைமரம்.
சௌவீரம்-இலந்தைக்கனி,ஒருமருந்து. சிபிபுத்திரனாகிய சுவ்வீரனால் நிருமிக்கப்பட்டதாகிய ஒரு பட்டணம்.
சௌளகருமம் - குடுமிச்சடங்கு.
சௌளகம் } மயிர்கழித்தல்.
சௌளம் }
சௌளாம்பரம் - பட்டாடை.
சௌனகன் - ஒருமுனிவன்.
சௌனகீயம் - உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று.
சௌனந்தி - பலராமன். [ன்.
சௌனிகன் - ஊன்விற்போன், புலைஞ
சௌன்னம் – பலிபுத்திரனாகிய சுந்தனால் நிருமிக்கப்பட்ட நகரம்.

ஜ

ஜ - ஒரு ஸம்ஸ்கிருத எழுத்து.
ஜகநாதபாண்டியன் - அரிமர்த்தனபாண்டியனுக்குப்பின் அரசுசெய்தவன்.
ஜகநாதம் - ஓட்டரதேசத்திலுள்ள விஷ்ணுஸ்தலம்.
ஜகராஜசேகரன் – ஈழநாட்டில் அரசு செய்திருந்த சோழகுலத்தரசன்.
ஜடபரதர் - நீர்பருகிக்கரையேறும்போது சிங்கநாதங்கேட்டஞ்சிக் கருவுயிர்த்த மான்கன்று கங்கையிலே மிதந்து செல்ல,அதனைக்கருணையாலெடுத்து வளர்த்து, இறக்கும்போது கண்ணெதிரே நின்ற ஊைந்தருகிய அக்கன்றின்மீதுவைத்த கருத்தோடு உயிர்விட்டமையால் மானாகப்பிறந்து எல்லாமுணர்ந்தும் ஒன்றுமுணராத ஜடன்போல நடித்திருந்த பரதராஜா, சவ்வீர ராஜாவுக்கு ஞானோபதேசம் பண்ணினவர்.
ஜடாபர்வதங்கள் - நீலநிஷத பர்வதங்களுக்கு நடுவேயுள்ள மலைகள்.
ஜடாமுனி - சடைதரித்தமுனி.
ஜம்பம் - இடம்பம்.
ஜலபாதை - சலபாதை.
ஜலம் - சலம்.
ஜலவாதி – சலபாதை.
ஜனம் – சனம்.

ஜா

ஜாக்கிரதை - சாக்கிரதை.
ஜாணத்தனம் - உபாயம்.
ஜாதகம் - சாதகம்.
ஜாதி - சாதி.
ஜாமம் - சாமம்.
ஜாலம் - சாலம்.

ஜீ

ஜீமூதவாகனன் - தன் தேகத்தை கருடனுக்கு ஆகாரமாகக்கொடுத்து ஒரு நாககுமாரனைக் காப்பாற்றின ஒரு வித்தியாதரன்.
ஜீமூதன் – வியோமன்மகன்.
ஜீவரேக்கு - சீவரேக்கு.
ஜீவலன் - ருதுபர்ணன்சாரதி.
ஜீவன் - சீவன்.
ஜீவானம் - சீவானம்.

ஜெ

ஜெகம் – செகம்.
ஜெந்து - செந்து.
ஜெபம் - செபம்.
ஜெயம் - செயம்.
ஜென்மம் – சென்மம்.

ஜை

ஜைமினி - வியாசமுனி சீடருளொருவர், இவர் சாமவேதாத்யாயி, மார்க்கண்டேயரையடைந்து தர்மபக்ஷிகள் மூலமாக உபதேசம் பெற்றவர், இந்தப்பட்சிகளா லுபதேசிக்கப்பட்டதே மார்க்கண்டேய புராணமாம்.
ஜைனர் - ஜைநமதர், இத்தமதம் புறச்சமய மாறனுளொன்று, இவர்கள்

வேதங்களை ஈசுவர ப்ரோக்தங்கள் என்றும் உண்மையென்றும் நம்பாதவர்கள். இவர்கள் கைக்கொண்ட நஷ்டிக்தஞ் சிறந்த ஒழுக்கமாவது ஜீவகோடிகளை ஹிம்ஸை செய்யாமையாகிய கொல்லாவிரதமாம். இவர்கள் பகலிலன்றி இரவிலுண்ணுதவர்கள். இவர் திகம்பரர் என்றும் சுவேதாம்பரர் என்றும் இருவகுப்பினர். இவர்க்குக் கடவுள் அருகதேவர்.

ஜோ

ஜோதி - சோதி.

ஸ்

ஸ் - ஒரு ஸம்ஸ்கிருத எழுத்து.
ஸ்கந்தம் - கந்தம்.
ஸ்கந்தன் - கந்தன்.
ஸ்கலனம், ஸ்கலிதம் } பெரும்பாடு, விந்து வீழ்கை, விழுகை.
ஸ்காந்தம் - கந்தபுராணம்.
ஸ்தம்பம் - தம்பம்.
ஸ்தம்பனம் - தம்பனம்.
ஸ்தலம் - தலம்.
ஸ்தவம் - தவம்.
ஸ்தனம் - முலை.
ஸ்தாணு - தாணு.
ஸ்தாபகம் - தாபகம்.
ஸ்தாபனம் - தாபனம்.
ஸ்தாபிதம் - நிலைநிறுத்தலை, புதைப்பொருள்.
ஸ்தாபித்தல் - நிலைநிறுத்துதல்.
ஸ்தாவரம் - தாவரம்.
ஸ்தானம் - இடம்.
ஸ்தானிகம் - கோயிற்றலைமை.
ஸ்தானிகர்கள், ஸ்தானிகாள் } கோயிலார்.
ஸ்தானியம் - நிலை.
ஸ்தானியாள் - ஸ்தானிகாள்.
ஸ்தானீகம் - தானீகம்.
ஸ்தானீகன் - பூசாரி.
ஸ்திதம் - நிற்பது.
ஸ்திதி - இருப்பு.
ஸ்திரம் - திரம்.
ஸ்திராங்கம் - அவிரி.
ஸ்திரீ - பெண்.
ஸ்துதி - துதி.
ஸ்துத்தியம் - துத்தியம்.
ஸ்துஸ்ருதிதைவதம் - மத்தியவிளரி.
ஸ்துஸ்ருதிரிஷபம் - மத்தியதுத்தம்.
ஸ்தூணம் - தூண்.
ஸ்தூபி - தூபி.
ஸ்தூலம் - தூலம்.
ஸ்தோத்திரம் - தோத்திரம்.
ஸ்தோமம் - சேனை.
ஸ்தௌத்தியம் - ஸ்தவம்.
ஸ்நானம் - முழுக்கு.
ஸ்நேகம் - சிநேகம்.
ஸ்பஷ்டம் - தீர்க்கம், வெட்டவெளிச்சம்.
ஸ்படிகம் - படிகம்.
ஸ்பரிசம் - ஊறு, பரிசம், மெய்யெழுத்து.
ஸ்பரிசனம் - தொடுதல்.
ஸ்போடகம் - கொப்புளம்.
ஸ்மார்த்தம் - சுமார்த்தம் ஸ்மிருதிசம்பந்தம்.
ஸ்மிருதி - தருமசாத்திரம், நினைவுகூர்கை.
ஸ்வகதம் - தன்கொள்கை.
ஸ்வகதன் - சந்தேகி, நாஸ்திகன்.
ஸ்வச்சம் - சுவச்சம்.
ஸ்வஸ்தம் - சுவஸ்தம்.
ஸ்வஸ்தி - சுவஸ்தி.
ஸ்வஸ்திகம் - சுவஸ்திகம்.
ஸ்வதந்திரம் - சுவதந்திரம்.
ஸ்வதர்மம் - கடன்.
ஸ்வதா - சுதா.
ஸ்வபாவம் - சுபாவம்.
ஸ்வபூ - ஸ்வயம்பு.
ஸ்வயங்கிருதம் - சுயமாயுண்டானது.
ஸ்வயம் - சுயம்.
ஸ்வயம்பு, ஸ்வயம்புவன் } முதல்மனு.
ஸ்வயம் - சுயம்வரம்.
ஸ்வரமண்டலம் - சுரமண்டலம்.
ஸ்வரம் - சுரம்.
ஸ்வரூபம் - சொரூபம்.
ஸ்வர்க்கம் - சுவர்க்கம்.
ஸ்வர்க்காதிபதி - இந்திரன்.
ஸ்வர்ணம், ஸ்வர்னம் } சுவர்ணம்.
ஸ்வல்பம் - சொற்பம்.
ஸ்வாகதம் - வாழ்த்து.
ஸ்வாகா - சுவாகா.
ஸ்வாஸ்தியம் - சுவாஸ்தியம்.
ஸ்வாதந்திரியம் - சுதந்தரம்.

ஸ்வாபாவிகம் - சுபாவம், சுபாவிகம்.
ஸ்வாமி - சுவாமி.
ஸ்வார்த்தம் - சுவார்த்தம்.
ஸ்வேச்சை - சுவேச்சை.
ஸ்வேதசம் - சுவேதசம்.
ஸ்மசானம் - சுடுகாடு, மசானம்.
ஸ்மசானவாசி - ஆதியந்தமில்லான், சிவன்.
ஸ்மரணம் - அவதானம்.
ஸ்மரித்தல் - நினைவுகூரல்.

ஸ்ரீ

ஸ்ரீ - இலட்சுமி, பாக்கியம்.
ஸ்ரீகண்டன் - சிவன்.
ஸ்ரீகரம் - இலட்சுமீகரம், பாக்கியம்.
ஸ்ரீகாந்தன் - விஷ்ணு.
ஸ்ரீகாரியம் - பரமகாரியம்.
ஸ்ரீஜயந்தி - சயந்தி.
ஸ்ரீதரன் - விஷ்ணு.
ஸ்ரீதானம் - தாளிப்பனையோலை.
ஸ்ரீநிவாசன் } விஷ்ணு.
ஸ்ரீபதி
ஸ்ரீநிவாசன் } சீமான்.
ஸ்ரீபதி
ஸ்ரீமுகம் - சீமுகன்.
ஸ்ரீமுகவருஷம் - சீமுகவருஷம்.
ஸ்ரீராமன் - இராமர்.
ஸ்ரீவச்சம் - விஷ்ணுவின் மார்பிலுள்ள ஒருவகைமறு.
ஸ்ரீவல்லி - வள்ளியம்மை.

ஷ

ஷடங்கம் - ஆறங்கம்.
ஷடத்துவா - ஆறத்துவா, அவைமந்திரம் புவன முதலியன.
ஷடாதாரம் - ஆதாரம்.
ஷட்கர்மம் } அறுதொழில்.
ஷட்கிரியை
ஷட்குணம் - இறைவனது அறுகுணம்.
ஷட்சமயம் - அறுசமயம்.
ஷட்சாஸ்திரம் - ஆறுசாஸ்திரம்.
ஷட்ஸ்ருதிதைவதம் - மங்கதவினரி.
ஷட்ஸ்ருதிரிஷபம் - மங்கத்அத்தம்.
ஷட்டி - முருகனுக்குரிய விரத்தினம், ஆறுந்திதி.
ஷட்பதம் - வண்டு.
ஷட்ரசம் - அறுசுவை.
ஷட்வர்க்கம் - காமமுதலிய அறுபகை.
ஷட்விதமார்கிணி - நாற்பத்தாறுவது மேளகர்த்தா.
ஷண்முகப்பிரியை - ஐம்பத்தாறுவது மேளகர்த்தா.
ஷண்முகம் - ஆறுமுகம்.
ஷண்முகன் - குமரன்.
ஷண்முகி - பஞ்ச முத்திரைகளிலொன்று.

க்ஷ

க்ஷ - ஒரு ஸம்ஸ்கிருத எழுத்து.
க்ஷணம் - கணம், சணம்.
க்ஷதை - உடைந்தது.
க்ஷத்திரியன் - சத்திரியன்.
க்ஷபணகன் - புத்தன்.
க்ஷபணமதம் - சமணமதம்.
க்ஷணிகாசலம் - தணிகாசலம், திருத்தணி.
க்ஷமித்தல் - பொறுத்தல்.
க்ஷமை - பொறுமை.
க்ஷயம் - ஒருநோய், சிதைவு.
க்ஷயித்தல் - கெடல்.

க்ஷா

க்ஷாத்திரம் - குரோதம்.
க்ஷாமம் - பஞ்சம்.
க்ஷாரம் - உப்பு.

க்ஷி

க்ஷிதி - நிதி.

க்ஷீ

க்ஷீணம் - ஈனம்.
க்ஷீணித்தல் - கெட்டுப்போதல்.
க்ஷீரசாகரம் - பாற்கடல்.
க்ஷீரநீரம் - நீரும்பாலுங்கலந்தது.
க்ஷீரம் - பால்.
க்ஷீராப்தி - பாற்கடல்.
க்ஷீராப்திதநயை - இலட்சுமி.
க்ஷீரான்னம் - பாற்சோறு.
க்ஷீரோதகம் - ஐக்கியம்.

க்ஷௌ

க்ஷௌத்திரம் - கொடுமை, சிறுமை.

க்ஷுத்து - பசி.
க்ஷுத்பாதை - பசிவருத்தம்.

க்ஷூ

க்ஷூ.குணதை - கெடுதி.

க்ஷே

க்ஷேத்திரக்கோவை - ஒரு நூல்.
க்ஷேத்திரக்ஞன் - ஆத்துமா.
க்ஷேத்திரம் - ஸ்தலம்.
க்ஷேபம் - காலங்கழித்தல்.
க்ஷேமம் - சுகம்.

க்ஷௌ

க்ஷௌரம் - சௌரம்.

ஞ

ஞகாரம் - ஞகரம்.
ஞண்டு - கற்கடகவிராசி, நண்டு
ஞமகண்டன் - காணுக்கிரகத்தொன்று.
ஞமலி - கள், நாய், மயில்.
ஞமன் - யமன்.
ஞயம் - நயம்.
ஞரலுதல் - ஒலித்தல்.
ஞரல்வு - ஒலி.
ஞலவல் - மின்மினிப் ச்சி.
ஞரு - மயிற்குரல்.

ஞா

ஞாங்கர் - இடம், இனி, பக்கம், முன்பு, மேல், வேல்.
ஞாஞ்சில் - கலப்பை, மதிலுறுப்பு.
ஞாட்பு-கூட்டம், படை, பாரம், போர், போர்க்களம், வலி.
ஞாணுதை - ஞாண்டெறிக்குமொலி.
ஞாண் - கயிறு, விண்ணாண்.
ஞாதசித்தாந்தம் - அறிவிற்றேற்றம்.
ஞாதசித்தாந்தன்-சோமசூரிய சித்தாந்தங்களை யறிந்தவன்.
ஞாதம் - அறியப்பட்டது.
ஞாதவியம் - அறிதற்குரியது.
ஞாதா - அறிவுடையோன்.
ஞாதி - சுற்றம், தந்தை, தாயத்தான்.
ஞாதிகருமம்-சுற்றத்தார்க்குச் செய்யுங் கருமாதி.
ஞாதிகள் - தாயத்தார், பங்காளி.
ஞாதுரு - அறிவு, காண்போன்.
ஞாதேயம் - பந்துத்துவம்.
ஞாத்தல் - கட்டுதல்.
ஞாபகக்கருவி - அறிவிற்குத் தாரகமாய காரணங்களும் பொறிகளும்.
ஞாபகசூத்திரம்-எளிதினியற்றற் பாலவாயதனையரிதாய்ப் பிறிதொருபொருளாலறிவிப்பது.
ஞாபகத்துணைக்கருவி -அறிவிற்குக்காரணமாயகருவி, அது கண், செவி, மூக்கு, மெய், வாய்.
ஞாபகநிமித்தகருவி - ஆத்துமா.
ஞாபகப்படுதல் - நினைவுகூருதல்.
ஞாபகப்படுத்தல் - அவதானப்படுத்தல், நினைப்பித்தல்.
ஞாபகமுதற்கருவி - சிவசாட்சி.
ஞாபகம் - அரும்பொருள், அறிவு, இலக்கியமெடுத்துக் காட்டுகினைவு, புறனடை.
ஞாபகவேது-அறிவிற்குக் காரணமாயது, கருவி முதலிய காரணமாறுமன்றிப் பிரகாரணத்தா னுய்த்துணரக்கூடுவது.
ஞாபகி - நினைப்பாளி.
ஞாபநம் - போதிப்பு.
ஞாபிதம் } அறிவித்தல்.
ஞாபிதை }
ஞாயம் - நியாயம்.
ஞாயில் - மதிலுறுப்பு.
ஞாயிறுஆதிவாரம் - சூரியன், ஒரூர்.
ஞாயிறு - திரும்பி, சூரியகாந்தம்.
ஞாயிறுவணங்கி - கொழுஞ்சி.
ஞாலமாது - ஊமத்தை, பூமிதேவி.
ஞாலமுண்டோன் - திருமால்.
ஞாலம் - ஊமத்தை, பூமி.
ஞாலம்படைத்தோன் - பிரமன்.
ஞாலல் } தொங்குதல்.
ஞாலுதல் }
ஞாழல்-குங்குமமரம், குங்குமம், கோங்குமரம், சங்குபுட்பம், பலினி,பொன்னாவிரை, மயிர்க்கொன்றை, வைரம்.
ஞாழி - வன்லைக்கொடி.
ஞாழல்மாது - ஊமத்தை.
ஞாளம் - படர்க்கொடி.
ஞாளி - கள், நாய்.

ஞானிகம் }
ஞானிதம் } வள்ளைக்கொடி.
ஞானியூர்தி - வயிரவன்.
ஞாற்சி - தொங்குதல்.
ஞானகாண்டிகர்-மூவகைப் பக்குவரில் ஒருவர்.
ஞானகுரு - காரணகுரு, பரமகுரு.
ஞானக்கண்-தேவஞானம், பிரத்தியட்சப்படாதவற்றையறியத்தகுமறிவு.
ஞானக்கலை - ஞானசாதனத்தாலுண்டாகுங்குறி.
ஞானக்காட்சி-சைதன்னிய தரிசனம்.
ஞானசத்தி - ஞானசத்தி.
ஞானசமாதி-ஞானநிட்டையில் ஒன்று.
ஞானசரிதர் - ஞானிகள்.
ஞானசாதனம் }
ஞானசாதனை } ஞானபயிற்சி.
ஞானசாத்திரம் - ஞானநூல்.
ஞானசுகம் - பேரின்பசந்தோஷம்.
ஞானசூட்சம் - பரமரகசியம்.
ஞானசைவம் - ஒருசைவம்.
ஞானதிசை - ஞானசாரத்தி னிற்குங் காலம்.
ஞானதிட்டி }
ஞானதிருட்டி } ஞானக்கண்.
ஞானதீட்சை - ஞானவுபதேசம்.
ஞானத்தகப்பன் - ஞானஸ்நானப்பிதா.
ஞானத்தாய் - ஞானஸ்நானத்தாய்.
ஞானஸ்தானம் }
ஞானஸ்நானம் } அகஸ்நானம், கிறீஸ்தமார்க்கத்தோர் சடங்கு.
ஞானத்தில்கிரியை }
ஞானத்தில்சரிதை }
ஞானத்தில்ஞானம் }
ஞானத்தில்யோகம் } சைவ நிலை பதினாறு பாதத்தன் ஒன்று.
ஞானநாயகன் - கடவுள், சிவன்.
ஞானநிட்டை - ஞானனுட்டிப்பு.
ஞானநிலை - ஞானமார்க்கம்.
ஞானநூல் - ஞானசாத்திரம்.
ஞானபரன் - கடவுள், ஞானகுரு.
ஞானபாகை-வேதநூற் பொருள்களில் ஒன்று.
ஞானபாதம் - நான்கு பாதத்தொன்று, அது சிவனுஞ் சீவனுமொன்றெனக் கண்டு நிற்கை.
ஞானபாரகன்-ஞானவறிவிலேதெளிந்தவன்.
ஞானபுத்திரன் - சீடன்.
ஞானபூசை - மனோபூசை.
ஞானபூரணி - பார்வதி.
ஞானபூருவம் - முன்னறிவு.
ஞானபூர்த்தி - மிகுஞானம்.
ஞானப்பிரகாசசுவாமிகள் - ஈழநாட்டிலே திருநெல்வேலியிலே வேளாளர் குலத்திலே பிறந்து பருவகாலத்திலே கௌட தேசஞ்சென்று வடமொழிபயின்று அதில் வல்லவராகி, மீண்டு திருவண்ணாமலைக்கு வந்து அத்தலமடாதிபதியிடத்தில் காஷாயம்பெற்று, அங்கிருந்து பௌஷ்கராகமத்துக்கு வடமொழியிலே சிறந்த வ்யாக்யாநமொன்றும், சித்தாந்த சிகாமணி ப்ரமாண தீபிகை முதலிய அநேக நூல்களுஞ்செய்து பிரசித்தியடைந்தவர், சிவஞான சித்தியாருக்குத் தமிழிலும் ஒருரையிட்டனர், இவர் முந்நூற்றிருபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.
ஞானப்பிராந்தி }
ஞானப்பயித்தியம் } ஞானமயல்.
ஞானப்பூங்கோதை - திருக்காளத்தியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் திருநாமம்.
ஞானமார்க்கம் - ஞானநிலை.
ஞானமுத்திரை - தேவதியான முத்திரை.
ஞானமூர்த்தி-கடவுள்சரச்சுவதிசியன்.
ஞானம்-அறிவு, இராசதகுணத்தொன்று, கல்வி, சாத்துவிக குணத்தொன்று, தெளிவு, நல்லொழுக்கம்.
ஞானரேகை - வரையில் ஒன்று.
ஞானவடிவம் - பஞ்சவிகாரங்களன்னிய ரூபம்.
ஞானவதி - ஞானமுள்ளவள்.
ஞானவஸ்து - பார்வதி.
ஞானவல்லியம்மை-திருச்சேறைப்பதியில் கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
ஞானவாசிட்டம்-வசிட்டர் வடமொழியிற் செய்த ஒரு ஞானநூல், இது இவரால் ஸ்ரீராமருக்கு உபதேசிக்கப்பட்டது, இதனைவீரை, ஆளவந்தார் என்னு முனிவர் தமிழில் மொழிபெயர்த்தார். இத்தமிழ் நூலுக்கு உரைகண்டவர்பிறைசை அருணசல சுவாமிகள். இராமனுக்குவசிட்டரால் கற்பிக்கப்பட்ட ஒரு வேதாந்த நூல்.

ஞானவான் - ஞானி.
ஞானவிரல் - ஆழிவிரல்.
ஞானன் - கடவுள், பிரமன்.
ஞானாகாயம் - பரவெளி.
ஞானாசத்தி-பஞ்சசத்தியிலொன்று அது ஐம்பொறியுணர்ச்சியாக நின்று கருமங்களை யறிந்தூட்டுவது.
ஞானாசாரம் - ஞானவொழுக்கம்.
ஞானாசாரியன் - ஞானபோதகன்.
ஞானாதிக்கம் - ஞானாதிகாரம்.
ஞானாதிக்கர்-கடவுளைக்குறித்த ஞானத்திலாதிக்கம் பெற்றோர்.
ஞானாதுரம் - ஞானவேட்கை.
ஞானாத்துமா - சுத்தாத்துமா.
ஞானவழி - சைவநிலை நான்குபாதத்தொன்று.
ஞானாமிர்தம்-வாகீசரால்செய்யப்பட்ட ஒரு சைவசமயசாத்திரம், இது இருபது அகவற்பாக்களா லியன்றது, பதிபசுபாசங்களைத் தர்க்கமுறையாக உணர்த்துவது. இதனை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் செவ்வனே உரையுடன் அச்சிட்டனர்.
ஞானார்த்தம் - உட்பொருள்.
ஞானாவரணியம் - அறிவுமறைப்பு.
ஞானானந்தம் - பேரின்பம்.
ஞானானந்தன் - கடவுள்.
ஞானானுட்டானம் - ஞானநிட்டை.
ஞானானுபவம் - ஞானபோகம்.
ஞானானுபானம்-திரவியம், திருவிருந்தவஸ்து.
ஞானி - அருகன், கோழி, பிரமன், பேரறிவுடையோன்.
ஞானேந்திரியம்-அறிகருவி அதுமெய், வாய், கண், மூக்கு, செவி.
ஞானோபதேசம் - ஞானபோதகம்.
ஞான்று-ஓரிடைச்சொல், காலம், நாள்.

ஞி

ஞிமிர் - ஒலி, ஞிமிரென்னேவல்.
ஞிமிர்தல் - ஒலித்தல், நிமிருதல்.
ஞிமிறு - வண்டு.

ஞெ

ஞெகிழம் - பொற்சிலம்பு.
ஞெகிழி - தொடுவேலி, சிலம்பணி, சிவப்பு, தீ, தீப்பொறி, நெருப்புக்கொள்ளி.
ஞெகிழ்தல் - அலையல். அவிழ்தல், வாடுதல்.
ஞெண்டு - கர்கடகவிராசி, நண்டு.
ஞெண்டுகம் - பெருவாகை.
ஞெப்தி - ஞாபகம்.
ஞெமிர்தல்-ஒடிதல், நெரிதல், பரத்தல்.
ஞெமிர்த்தல் - ஒடித்தல், நெரித்தல், பரப்புதல்.
ஞெமுக்கம் - அழுந்துகை.
ஞெமுங்கல் }
ஞெமுக்குதல் } அழுந்தல்.
ஞெரி - ஞெரியென்னேவல், நெரிவு.
ஞெரிதல் - நெரிதல்.
ஞெரித்தல் - நெரித்தல்.
ஞெரேலெனல்-அச்சக்குறிப்பு. அநுகரணவோசை, ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
ஞெலிகோல் - தீக்கடைகோல்.
ஞெலிதல் - கடைதல், குடைதல்.
ஞெலுவல் - செத்தல்.
ஞெலுவன் - தோழன், சிநேகன்.
ஞெளிர் - உள்ளோசை, ஒலி.
ஞெள்ளல்-உடன்படல், ஒலித்தல், சீக்கிரம், சோர்பு, தவறு, பள்ளம், மிகுதி, மேன்மை, வீதி.
ஞெள்ளெனல் - அநுகரணவோசை.

ஞே

ஞேயம் - அறியப்படுவது, நெய், நேயம்.
ஞேயர் - அறிவுடையோர், நேயர்.
ஞேபா - பெருமருந்து.

ஞை

ஞை - இகழ்ச்சிக்குறிப்பு.

ஞொ

ஞொள்கல் }
ஞொள்குதல் } அச்சக்குறிப்பு, அலைதல், இளைத்தல், சோம்பல்.

த

த - ஓரெழுத்து, குபேரன், பிரமன்.

தகசு - ஒருமிருகம்.

தகடு - அடர்பு, இலை, இலைதட்டு, ஐமை வடிவு, கம்மாறவெற்றிலை, மண்படை.

தகட்டரிதாரம் } ஒருமருந்து.
தகட்டுத்தாளம் }

தகதகெனல் - ஒலிக்குறிப்பு.

தகப்பன் - ஈன்றோன், பிதா.

தகுமை - தகைமை.

தகம் - உட்டணம், எரித்தல், சித்திரை, நீர், வேகம்.

தகாடி - சிதறவடிக்குமடி.

தகரப்பொடி - வாசனைப்பொடி.

தகரம் - இரும்பின் மேற்பூசும் ஒருலோகம், ஈயம், ஓரெழுத்து, தகரமரம், அது பஞ்சவிரையில் ஒன்று, மயிர்ச்சாந்து, வாசனைப்பண்டம், விலங்கின்பிள்ளை.

தகராறு - தடை.

தகரு - புன்முருக்கு.

தகரை - ஒரு சிறுசெடி.

தகர் - சுறவினாண், செம்மறிக்கடா, தகரென்னேவல், துண்டு, அருவாட்டேறு, பாரதம், பலாசு, பூமி, மேட்டிராசி, யாளி யானையிவற்றினாண்.

தகர்ச்சி - உடைவு.

தகர்தல் - உடைதல், நெரிதல், நொறுங்கல்.

தகர்த்தல் - அடித்தல், உடைத்தல், குட்டுதல்.

தகர்ப்பு - உடைப்பு, குட்டு.

தகர்வு - உடைவு.

தகல் - தகுதல், திராய்.

தகல்பாசி - எத்தன், மோசக்காரன்.

தகவல் - உதாரணம்.

தகவு - அறிவு, உரிமை, உவமை, ஒழுக்கம், கிருபை, குணம், தகுதி, தெளிவு, நன்மை, நீதி.

தகழி - அகல்.

தகழிகை - உண்கலம்.

தகழிச்சி - கருப்பூரம்.

தகலை - அகல், தகழி.

தகனசேதனம் - புகை.

தகனக்கிரியை - ஈமச்சடங்கு.

தகனபலி - தீயிலிடும்பலி.

தகனப்பிரியை - சுவாகாதேவி.

தகனம் - எரித்தல், சுடல்.

தகனன் - அக்கினிதேவன், அட்டன், நெருப்பு.

தகனாராதி - நீர்.

தகனித்தல் - தகனம்பண்ணுதல்.

தகனை - உலோகக்கட்டி.

தகனோபலம் - சூரியகாந்தம்.

தகன் - அக்கினி, திராய், பூரான்.

தகா - தந்திரம், தாகம், பேராசை, மோகம்.

தகாக்காட்டுதல் - ஆசைபதங் காட்டல்.

தகாதது - ஒழுங்கற்றது.

தகாதவன் - ஒழுக்கமில்லாதவன்.

தகாதா - வழக்கு.

தகாமை - ஒவ்வாமை, தகுதியின்மை.

தகித்தல் - சிரணித்தல், சுடுதல்.

தகிப்பு - சுடுகை, பட்சிப்பு.

தகிலன் - வஞ்சகன்.

தகிலாயம் - சினேகம், நன்றி.

தகிலித்தல் - உட்செலுத்தல், பலப்பித்தல், விதித்தல், வஞ்சித்தல்.

தகிலிப்பு - உட்செலுத்துகை, மதிப்பு.

தகிலிமா - சோரான்மரம்.

தகுணிச்சம் - ஒருவகைத்தோற்கருவி.

தகுணிதம் - வாச்சியப்பொது.

தகுதல் - இயலுதல், உரிமை, ஏற்குதல்.

தகுதி - அறிவு, உரிமை, ஒழுக்கம், குணம், சனக்கூட்டம், நடுநிலை, பொறுமை, பாத்திரம்.

தகுதிப்பொருள் - தக்கபொருள்.

தகுதியர் } அறிஞர், தமர், பெருமையிற சிறந்தோர், நடுவுநிலைமையோர்.
தகுதியோர் }

தகுந்தவர் - ஒழுக்கமுடையவர்.

தகுவ - இயன்றவை.

தகுவர் - அசுரர்.

தகுவல் - தகவல்.

தகுனம் - மகளிர்விளையாட்டு.

தகை - அழகு, அன்பு, இளைப்பு, கவசம், குணம், தகுதி, தகையென்னேவல், தளர்வு, தாகம், துண்டு, பெருமை, முகடு, மேன்மை.

தகைதல் - ஆணையிடல், இளைத்தல், தடுத்தல்.

தகைத்தல் - ஆணைசெய்தல், இளைத்தல், தடுத்தல், வாட்டுதல்.

தகைத்து - தன்மையுடையது.

தகைப்பு - இளைப்பு, தடுப்பு, மதிற்சுற்று.

தகைமை-அழகு, ஒழுங்கு, குணம்,தகுதி, தன்மை, பொறுமை.

தகையணங்குறுத்தல் - களவுப்புணர்ச்சி செய்த தலைவியைக் குறிப்பினாலச்சுறுதல்.

தகைவிலான் - அடைக்கலாங்குருவி.

தகைவு - தடை, தளர்ச்சி.

தக்ககன் - அட்டநாகத்தொன்று.

தக்கசங்காரன் - சிவபெருமான்.

தக்கடி-குதர்க்கம், ஆரோகம், மூர்க்கம், வஞ்சனை.

தக்கடை - தராசு.

தக்கணம் - தாளத்தின்மார்க்க சடப்பிரமாணத்தொன்று, அது எட்டுமாத்திரையோர்களையாகக் கொண்டது, தெற்கு, வலப்பக்கம்.

தக்கணாக்கினி }
தக்கணாக்கினியம் } வேதாக்கினிமூன்றினொன்று.

தக்கணாயணம் }
தக்கணாயனம் } தெட்சணாயனம்.

தக்கணை - தெட்சணை.

தக்கது - தகுதியானது.

தக்கம்-ஒருவிளையாட்டு, தருமநூல் பதினெட்டினொன்று.

தக்கராகம்-பாலைப்பண்ணின் றிறமைந்தனுள் ஒன்று.

தக்கர் - சாடி.

தக்கல் - தக்கை.

தக்கவர் - தகுதியுடையோர்.

தக்கலை - தக்கடி.

தக்கன்-அட்டநாகத்தொன்று, நவப்பிரமாவில் ஒருவன்.

தக்காரி - தழுதாழை, வாதமடக்கி.

தக்கார்-அறிஞர்,உறவோர்,தகுதியுடையோர், பெருமையிற் சிறந்தோர்.

தக்காளி - ஒரு செடி.

தக்காளிப்பிள்ளை - பிள்ளைப்பூச்சி.

தக்காளியம்மை-தக்கோலத்தில்கோயில் கொண்ட காளியம்மை. இக்கோயில் ஐயா இராமசாமி முதலியாரால் புதுக்கப்படுகிறது. இதுபிரபலஸ்தலமாகும்.

தக்கான் - சிறந்தவன்.

தக்கிஷராயன் - பொன்னம்பர்.

தக்கிணன்-தக்ஷிணமூர்த்தி, இவன் பாண்டிநாட்டுத் திருத்தங்காலிலிருந்த வார்த்திகன் என்னும் ஓரந்தணன் மகன்.

தக்கிரம் - மோர்.

தக்கிராடம் - மத்து.

தக்குதல் - அரக்குதல், ஆட்சிக்குட்படுதல், எல்லைகூட்டுதல்,தகுதியாயிருத்தல், நயப்படல், வசப்படுதல்.

தக்குத்தக்கெனல் }
தக்குபொக்கெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு.

தக்குவித்தல் - ஆட்சிக்குட்படுத்தல்.

தக்கெனல் - ஒலிக்குறிப்பு.

தக்கேசி - ஒருபண்.

தக்கை - காதிடுதக்கைகிடைச்சி,குதம், தப்பை, தெப்பம், பம்பைவாச்சியம், பலவகைப்பறை.

தக்கையுருவம் - சடவுருவம்.

தக்கோர் - மேலோர், அறிஞர்.

தக்கோலம்-ஒருசெடி,அதுபஞ்சவாசத்தொன்று, சிறுநாவற்பூ, வால்மிளகு, ஒரு பிரபல சைவக்ஷேத்திரம், இது தேவாரத்தில் திருவூறல் எனப்படும். இங்கே நந்திவாயில் சமுதாசலம் வந்துகொண்டிருக்கிறது, இத்தலபுராணம் அவ்வூர் ஐயா செல்லப் பநாசமணி முதலியார் குமாரர்கள் நன்முயற்சியால்நடைபெற்றுவருகின்றது.

தங்கக்காசு - ஒரு நாணயம்.

தங்கச்சி - தங்கை.

தங்கஞ்சலமாக்கி - சொன்னபேதி.

தங்கப்பட்டை - சேணங்கட்டுங்கச்சு.

தங்கம்பூச்சு - ஒரு மருந்துப்பூச்சு.

தங்கமலை - மேருமலை.

தங்கமழூத்தல் - தங்கமழுத்துதல்.

தங்கமிருதியாதி - தங்கசிந்தூரம்.

தங்கமிழைத்தல் - தங்கமழுத்துதல்.

தங்கமோரு - ஒருநாணயம்.

தங்கம் - உயர்ந்தபொன், சுத்தம், பயம்.

தங்கரேக்கு - பொன்னிற்செய்தவிதழ்.

தங்கல் - தங்குதல்,தங்குமிடம்,தாங்கல்.

தங்காள் - தங்கை.

தங்கான் - அரை.

தங்கு - தங்குதல், தங்கென்னேவல்.

தங்குடிச்சுற்றம் }
தங்குடித்தமர் } ஞாதியர்.

தங்குதல் - இருத்தல்,தடைபடல்,தரித்தல், தாமதித்தல், விடுதிவிடல்.

தங்குதுறை - தரிக்கத்தக்கவிடம்.

தங்குளம்வெட்டி - தங்கள்வமிசத்தைக் கெடுப்போன்.

தங்கை
தங்கைச்சி } இளையாள், குவளை.
தங்கையைக்கொல்லி - சிறியாநங்கை.
தசகண்டசித்து - இராமன்.
தசகண்டன் - இராவணன்.
தசகம் - பத்து.
தசகரம்-தசவியசம், அது,அபாவனே, காமம், சிற்றின்பக்கவி, சூது, நடனம், பகற்றுயில், மதுவூண், மாயம், விளையாட்டு, வேட்டம்.
தசகுணம் - பதின்மடங்கு.
தசகூலி - உழவுக்கூலி. [ஞர்.
தசக்கிராமம் - பத்துக்கிராமங்கொண்ட
தசக்கிராமினி - பத்துக்கிராமாதிகாரி.
தசக்கிரீவன்-இராவணன், இவன் புலஸ்தியன் மகனாகிய விசிரவசுவின் மகன், இவன் தாய் சுவாமிதனாகிய கைகசி, இவன் மனைவி மயன்மகளாகிய மண்டோதரி,இவன்சகோதரர்கள் கும்பகர்ணன் விபீஷணன், இவன் மக்கள் இந்திரஜித்து முதலானவர்கள், இவன் தலைகள் பத்தாதலால், தசகண்டன் முதலிய பெயர்களுண்டாயின, சீதை வியாஜமாக ஸ்ரீராமரால் இவன் கொல்லப்பட்டான.
தசதானம்-பத்துத்தானம், அவைஉப்பு, எள், நெய், நெல், பசு, பூமி,பொன், வத்திரம், வெல்லம், வெள்ளி.
தசநாடி-அத்தி, அலம்புடை, இடை,காந்தாரி, குகு, சங்கினி,சிருவை,சுழி, முனை, பிங்கலை, புருடன்.
தசபலன் - புத்தன். [வம்.
தசபிராதுர்ப்பாவம் - தசப்பிரா துற்ப
தசபூமிகன்
தசபூமீசன் } புத்தன்.
தசப்பிராதுற்பவம்-விஷ்ணுவின் பத்தவதாரங்களை விவரிக்கும் ஒரு பிரபந்தம்.
தசப்பொருத்தம் - செய்யுட் பொருத்தம், மணப்பொருத்தம்.
தசமபாகம் - பத்திலொருபங்கு.
தசமஸ்கந்தம்-பாகவதத்தில் பத்தாவதுபாகம்.
தசமம் - தசமஸ்கந்தம், பத்தினொன்று.
தசமி - பத்தாந்திதி, பத்தாவது.
தசமுகன் - இராவணன்.
தசமுகாந்தகன் - ஸ்ரீராமன்.
தசமூலம் - பத்துவகைமருந்துவேர், அவைகண்டங்கத்திரி,சிறுமல்லிகை,சிறுவழுதணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம்.
தசம் - சிவிகை, பத்து.
தசரதன் - இராமன்பிதா.
தசராத்திரம் - பத்துநாள்.
தசருபவிருத்தி - திருமால்.
தசலட்சம் - பத்துலட்சம்.
தசவவதாரம் - தசாவதாரம்.
தசவாஜி - சந்திரன்.
தசவாயு - தேகத்தினிற்கும் பத்துவாயு அவை அபானன், உதானன், கிருகரன், கூர்மன், சமானன், தனஞ்சயன் தேவதத்தன், நாகன், பிராணன், வியானன்.
தசனப்பொடி - பற்காவி.
தசனம்-பல், போர்க்கவசம், மலைமுடி.
தசனவாசம் - உதடு.
தசனுங்கம் - தந்தரேகை.
தசனேச்சிட்டம் - சும்பனம், தந்தவின் [மை.
தசாகம் - பத்துநாள்.
தசாகரிசம்
தசாகரிசி } விளக்கு. [தி.
தசாக்கரி - ஆசான்பண்ணின் அருகுசா
தசாங்கத்தயல்-ஒருபிரபந்தம். அது அரசன் றசாங்கத்தினை யாசிரிய விருத்தம் பத்தினுற் பாடுவது.
தசாங்கப்பத்து-ஒருபிரபந்தம். அது நேரிசை வெண்பாவா லரசர்க்குரிய தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.
தசாங்கம் - அரசர்க்குரிய பத்துறுப்பு, அவை ஊர்,கரி,கொடி,செங்கோல், நாடு, பரி, மலை,மாலை,முரசு,யாறு.
தசாசியன் - இராவணன்.
தசாசுபன் - சந்திரன்.
தசாட்சரி - ஒரிராகம், ஒருமந்திரம்.
தசாபலம் - பிராயத்திற் கடுத்தபலம்.
தசார்ஹன் - கிர்வருதிமகன்.
தசாரசன் - அருகன், புத்தன்.
தசாரணம் - காசிக்குத் தென்மேற்கிலுள்ள தேசம்.
தசார் - ஆயத்தம்.
தசாவதாரம் - திருமாலவதாரம் பத்து, அவை இராமன்,கண்ணன்,குதிரை,

கூர்மம், நரசிங்கம், பரசிராமன், பலபத்திரன், மச்சம், வராகம், வாமனம்.

தசானனன் } இராவணன்.
தசானன் }

தசியு-அசீதன், கள்வன், கீழ்மகன், சத்துரு

தசிரதேவதை-அச்சுவினிதேவதை[கு

தசிரம் - உட்டுளை, மறைத்தூறல்.

தசிரர் - தேவமருத்துவர்.

தசுகரம் - தஸ்கரம்.

தசுமம் - தீ.

தசுமன் - கள்வன், யாகஞ்செய்விப்போன்.

தசும்பர் - குடம்.

தசும்பு - குடம், கொப்பரி, பொன்.

தசேந்தனம் - விளக்கு.

தசேந்திரியம் - உடலுறுப்புப்பத்து, அவை ஆக்கிராணம், உபத்தம், சட்சு, சிங்குமை, சுரோத்திரம், தொக்கு, பாணி, பாதம், பாயுரு, வாக்கு.

தசை-ஊன், தாது, நிலைமை, புலால். [ல்.

தசைதல்-தசைபூரித்தல், தசைவைத்தல்.

தசைத்தல்-கொழுத்தல், தசைபிடிப்பாதல்.

தசைநார் - தசைநரம்பு.

தசைபிடி } மிகுதசைகொண்டிருத்தல்.
தசைப்பற்று }

தசைப்பு - கொழுப்பு, தசைபிடி.

தசைமுற்றுதல் - கொழுப்பேறுதல்.

தசையடைப்பு - சலத்துவாரநோயில் ஒன்று.

தசையூறுதல் - தசைவைத்தல்.

தஸ்கரம் - களவு.

தஸ்கரம் - திருடன்.

தச்சகன்-குடும்பத்தலைவன். [மாளன்.

தச்சன் - சித்திரைநாள், மரவேலைக்கம்மாளன்.

தச்சகன்குருவி - ஒருகுருவி.

தச்சிச்சி - தச்சப்பெண்.

தச்சு - தச்சன், தச்சன்றொழில்.

தச்சுவை - வஸ்திரம்.

தஞ்சக்கேடு - பலவீனம்.

தஞ்சம் - அடைக்கலம், எளிமை, தாழ்வு, துணை, பற்றுக்கோடு, பெருமை.

தஞ்சன்பொளி - அருசி.

தஞ்சை - தஞ்சாவூர்.

தஞ்சை } காவிரி யாற்றின்தென்
தஞ்சைமாணிக்கோயில் }
கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

தஞ்சனம் - தன்னையறிந்தவன்.

தஞ்ஞன் - அறிஞன்.

தடகம் - ஏரி.

தடக்கம் } தடை.
தடகம் }

தடக்குதல் - தடைபண்ணல், தட்டுதல்.

தடக்கை - விசாலமானகை.

தடங்கல் - அடைப்பு, தடை, தாமதம், வழிதிருக்கை.

தடங்கண் - பெரியகண்.

தடங்கண்ணி - பெரியகண்ணுள்ளவள்.

தடங்குதல் - தாமதப்படுதல்.

தடபிடத்தல் - நடுக்கத்தாற்றளம்பல், நாக்குத்தட்டல்.

தடதடப்பு - தள்ளாட்டம்.

தடதடெனல் - தள்ளாடுதல், நடுக்கக்குறிப்பு.

தடத்தம் } அருகு, இலௌகிக கவலை
தடஸ்தம் } விட்டிருத்தல், கரை.

தடஸ்தன்-ஞானி, பாரபட்சமற்றவன்.

தடந்தேடுதல் - கெடுக்கவகைபார்த்தல்.

தடபடத்தல் - தளம்பல்.

தடபடெனல் - தள்ளாட்டக்குறிப்பு.

தடபன் - சுதைமண்.

தடம் - ஓமகுண்டம், ஒருமரம், கண்ணி, கரை, குளம், தராசு, துலாராசி, பெருமை, மலை, மலைப்பக்கம், வரம்பு, வழி, வளையம், விசாலம், வெளி.

தடம்புரளுதல்-தடுமாறுதல், நிலைகெடுதல்.

தடயம் - பலபண்டம். [தல்.

தடல்-சிதள், பலாப்பழச்செதிள், வாழைநார்த்தன்மையானது, வாழைமடல்.

தடவரல் - தடவுதல், யாழ்வாசித்தல்.

தடவம்-அருமை, ஆறு, தடவுதல், இது மெய்ப்பரிசமெட்டிலொன்று, வீணைவாசித்தற்றொழிலுமொன்று.

தடவற்புலு - அறுபது.

தடவு - தடவென்னேவல், தூபக்கால், பெருமை, வளைவு. [து.

தடவுச்செவி - பெரியகாது, யானைக்காது.

தடவுதல்-பூசுதல், வருடல், வீணைவாசித்தல்.

தடவை-எல்லை, தரம், முறை.

தடறு - ஆயுதவுறை.

தடா - பானை, மிடா.

தடாகம் - குளம்.

தடாதகைப்பிராட்டியார் - உமாதேவியார் அமிசமாக மலயத்துவச பாண்டியனுக்கு மகளாகப்பிறந்து மதுரையையாண்டவள்.

தடாதடி - குழப்பம், மாறுபாடு.

தடாரம் - இரண்டொத்தடையதாளம்.
தடாரி-தடாரியென்னேவல், பம்பை, பேரிகை,மத்தளம்,வாச்சியப்பொது.
தடாரித்தல்-அடித்தல், ஊடுருவுதல்.
தடி-அளவுகோல், ஆற்றங்கரை,உடம்பு, உலக்கை, ஊன், சிறுவயல், தடியென்னேவல், தண்டு, பற்றுக்கோடு, பாத்தி, மின், வயல், வளைதடி,வில்.
தடிகை - மின்னல்.
தடிதல்-அறுத்தல், குறைத்தல், கொல்லல்,தறித்தல்,மின்னுதல்,வெட்டல்.
தடித்தல்-கனத்தல், காரியம் பலத்தல், புடைத்தல், மின்னுதல்.
தடித்த - மின்னல்.
தடித்துபதி - மேகம்.
தடிநி - நதி.
தடிப்பம் } கனப்பு,தழும்பு,பருமை
தடிப்பு } வீக்கம்.
தடிமம்-ஒருபூடு, சனி.
தடிமல் - சலதோஷம்.
தடிமன் - சலதோஷம், தடிப்பம்.
தடிமிண்டன்-முரடன்,வசையாதவன்.
தடிமூக்குள்ளான் - ஒருகுருவி.
தடியன்-முரடன், வசையாதவன்.
தடிவு - கொலை, வெட்டு.
தடினி - யாறு.
தடுக்கல் - தடை.
தடுக்கு - சிறுபாய், தவிசு.
தடுக்குதல் - தடைசெய்தல்.
தடுதல் - இசைதல். [கல்.
தடுத்தல் - தம்பித்தல், மறித்தல், விலக்
தடுத்தாளி - அவசரம்.
தடுத்தாளுதல் - மீட்டிரட்சித்தல்.
தடுபடை - மாற்றுப்படை.
தடுபொடுதாயம் - அவசரம். [குறிப்பு.
தடுபொடுத்தல் - அவசரப்படுதல்,ஒலிக்
தடுபொடெனல் - ஒலிக்குறிப்பு.
தடுபொறி - மிகுசுருக்கு.
தடுப்பு - தடுத்தல்.
தடுமன் - தடிமல்.
தடுமாறல் } கலங்குதல், குழம்புதல்.
தடுமாறுதல் }
தடுமாற்றம்-கலக்கம், மாறுபாட்டம்.
தடை-கவசம், தடக்கு, தடையம், மறி
தடைதல் } தடுத்தல். [யல்.
தடைத்தல் } [ட்டு.
தடையம்-கத்திப்பிடி, தடை, தட்டுமு

தட்சகன்றை - பார்ப்பதி.
தட்சகன் - அட்டநாகத்தொன்று, தக்ககன், தச்சகன், விசுவகர்மன்.
தட்சசங்காரன் - சிவன்.
தட்சஜாபதி - சந்திரன், சிவன்.
தட்சசை } தர்க்கை.
தட்சஜை }
தட்சணதுருவம் - தென்முனை.
தட்குதல் - தடுத்தல்.
தட்சணம் - உடனே,தெற்கு,நிதானம், வலப்பக்கம்.
தட்சணாக்கினி - வேதாக்கினி.
தட்சணாஸ்தம் - வலக்கை.
தட்சணாமூர்த்தம் - குருமூர்த்தம்.
தட்சணாமூர்த்தி - அகத்தியன், சிவன்.
தட்சணாயனம் - சூரியன் தெற்கில்சஞ்சரிக்கும் ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி என்னும் ஆறுமாதகாலம்.
தட்சணை-காணிக்கை, சிட்சை.
தட்சதம் - அடித்தட்டை.
தட்சப்பிரசாபதி - தக்கன்.
தட்சன்-இடபம், சிவன், சேவல், தக்கன், தீ, பராந்திரிகமனன், புலவன்.
தட்சாபன்னி - ஒருமனு.
தட்சாயம் - கருடன்.
தட்சாரி - வீரபத்திரன்.
தட்சிணஸ்தன்-தேர்ப்பாகன். [பக்கம்.
தட்சிணபதம் - தெட்சணவீதி, தென்
தட்சிணம்-தாராளம், தெற்கு, வலப்பக்கம், விவேகம்.
தட்சிணாக்கினி - தக்கணாக்கினி.
தட்சிணாசலம் - பொதியமலை.
தட்சிணாசாபதி - நமன்.
தட்சிணாசை - தெற்கு.
தட்சிணாதீசன் - யமன். [ல் ஒன்று.
தட்சிணாயனம் - சூரியன்மூவகைவீதியி
தட்சிணாவர்த்தம் - வலம்புரிச்சங்கு.
தட்சிணை - தட்சணை.
தட்சை - பூமி.
தட்டகப்பை - சட்டகப்பை.
தட்டத்தனி-யாதொரு துணையுமில்லாத தனிமை.
தட்டம்-அல்குல், உண்கலம், தட்டையானபாத்திரம்,தாடி,பல்,பாம்பினச்சப்பல், மக்கட்படுக்கை, நீர்நிலை, யானைசெல்புறவழி,வயல்,வெள்ளை.

தட்டல் - அடித்தல், அபகரித்தெடுத்தல், ஆணையிடல், ஐந்துகிட்டல், தடுத்தல், நறுக்குதல், மறுத்தல், மூட்டுதல், மெய்ப்பரிசமெட்டினொன்று, வீணைவாசித்தற்றொழிலினொன்று.

தட்டவைத்தல் - பொருக்கவிடுதல்.

தட்டழிதல் - நிலைகுலைதல்.

தட்டழிவு - நிலைகுலைவு.

தட்டற்புலு - ஐம்பது.

தட்டாத்தி - பொன்வினை மக்களின் பெண்.

தட்டாரப்பூச்சி - ஒருபூச்சி.

தட்டாரப்பொட்டு - வெளிவேஷம்.

தட்டானுப்பி - ஒருகொடி.

தட்டான் - ஒருபூச்சி, கோஷ்டம், புடோல், பொற்கொல்லன்.

தட்டான்கொட்டோசை - புடோல்.

தட்டி - காவல்கேடகம், கோட்டம், படல், பலகை, வெற்றிலைக்கட்டு.

தட்டிச்சிந்து - ஒருசிந்து.

தட்டிலம் - சதகுப்பி.

தட்டு - உட்கட்டு, கண்ணியேற்றுந்தட்டு, கம்பு முதலிய புன்பயிர்த்தாள், குறைகுற்றம், தகடு, தட்டென்னேவல், தந்திரம், தராசுமுதலியவற்றின் தட்டு, திரிகை, தேர்தடு, பரிசை, மரவட்டணை, முட்டு, முற்றம், வட்டம், வளைவு, விலக்கு.

தட்டுக்காரன் - தந்திரி.

தட்டுக்கிளிபாய்தல் - ஒரு விளையாட்டு.

தட்டுக்கெடுதல் - கலக்குதல், நிலைதளம்பல்.

தட்டுக்கேடு - இல்லாமை, நிலையழிதல், முட்டு.

தட்டுகொடி - ஒரு கடுதாசிப்படம்.

தட்டுக்கொட்டு - கொட்டுமுழக்கும் தந்திரம்.

தட்டுச்சுளகு - வட்டச்சுளகு.

தட்டுண்ணல் - குறைந்துபோதல், தவறிப்போதல்.

தட்டுதம் - அடித்தல், அபகரித்தெடுத்தல், ஏறுதல், தப்புதல், திருப்புதல், மறுத்தல், முட்டுதல்.

தட்டுப்பாடன் - தட்டுமிறுக்கின புடவை.

தட்டுப்பாய்தல் - ஒருவிளையாட்டு.

தட்டுமணி - உட்கட்டு.

தட்டுமாறுதல் - நிலைமாறுதல்.

தட்டுமுட்டு - தளபாடம்.

தட்டுருவுதல் - ஊடுருவுதல்.

தட்டுவாணி - சிறுகுதிரை, வேசி.

தட்டுவிக்கினம் - தட்டம், மேனிலை.

தட்டை - அரிதாள், கவண், கிளிகடிகோல், தினைத்தாள், நீ, பரந்தவடிவுள்ளது, மூங்கில், மொட்டை.

தட்டைக்காரை - ஒருவகைமீன்.

தட்டைச்சீட்டு - ஒருசீட்டு.

தட்டைத்திருப்பு - ஒருபணி.

தட்டையம்மை - ஒரு வைசூரி.

தட்டோடு - தட்டையோடு.

தட்பம் - குளிர்ச்சி.

தணக்கு - தணக்கமரம், நுணுமரம்.

தணத்தல் - நீங்கல், பிரிதல், போகல்.

தணப்பு - செலவு, பிரிவு.

தணலம் - எருக்கு.

தணல் - தழல்.

தணல்விழுங்கி - தீக்குருவி.

தணவம் - அரசமரம்.

தணிகை - தணிகாசலம், கூணிகாசலம், மூதண்டகிரி, திருத்தணி.

தணிசு - கவிசு, குறைவு, தாழ்ச்சி.

தணிதல் - ஆறுதல், இளகுதல், குளிர்தல், குறைதல், பருத்தல்.

தணித்தல் - அறிவித்தல், இளக்குதல், குறைத்தல்.

தணிப்பு - ஆற்றி, குறைப்பு.

தணியல் - கள், தணிதல்.

தணிவு - ஆறுதல், கீழ்மை, குறைவு.

தண் - குளிர்ச்சி.

தண்கதிர் - சந்திரன்.

தண்காண் - இழிந்தகாடு.

தண்சுடர் - சந்திரன்.

தண்டகநாடு - காஞ்சிபுரம்.

தண்டகமாலை - ஒருபிரபந்தம். அது வெண்பாவான் முந்நூறு செய்யுள் கூறுவது புணர்ச்சிமாலை.

தண்டகம் - ஆபரணம், கரிக்குருவி, ஒருவனம், குறுந்தறி, தொண்டைமண்டலம், நுரை, வடமொழியினோர் செய்யுள்.

தண்டகன் - ஓரரக்கன், ஓரரசன்.

தண்டகாகம் - செம்போத்து.

தண்டகாரணியம் - இக்ஷ்வாகு புத்திரனாகிய தண்டகன் என்பவன் தந்தைக்கு மாறுபொழுக தந்தையானவன் இவனை விந்தமலைச்சாரலிற் போயிரு

க்கும்படி யோட்டிவிட்டான். இவன் அங்கே மதுமந்த மென்னும் ஒரு பட்டணத்தை யுண்டாக்கி அங்கே சுக்ரனுக்குச் சீஷனானன், ஒருநாள் சுக்கிரன் மகளாகிய அரசையைக் கண்டு மோகித்து அவளை வலிதிற் புணர்ந்தான், அதுகேட்ட சுக்கிரன் அவனும் அவன் பட்டணமும் மண்மாரியால் அழிகவென்று சபித்தான், அவ்வாறழிந்த இடமும் அதற்குத் தெற்கிலுள்ள பூமியும் தண்டகாரணியம் எனப்படும். அதுவே தக்ஷிணதேசம்.

தண்டகாரணியம் - தண்டகவனம், திண்டிவனம்.

தண்டகிரகணம் - தண்டுதாங்கல்.

தண்டகை - தண்டகம், கஷ்டம்.

தண்டகம் - தொல்லுலை.

தண்டட்டி - தண்டொட்டி.

தண்டதரன் - அரசன், குயவன், தண்டேசன், தண்டேந்தி, நமன், வீமன்.

தண்டதாசன் - அடிமை.

தண்டதாமிரி - சலமுட்புகுதலினாழிகையறிவிக்கு மோர் பாத்திரம்.

தண்டதாரணம் - ஆக்கினை, தண்டுதரித்தல்.

தண்டநாயகன் - அரசன், சேனாபதி, நந்தி

தண்டநீதி - கட்டளைச்சட்டம்.

தண்டநீயத்துவம் - தண்டத்திற்குரிக்கல்.

தண்டபாசிகன் - கொலைகாரன்.

தண்டபாணி - காசியிலுள்ள ஒருதேவதை, பழனியாண்டி, யமன்.

தண்டபாணி - தண்டதரன், தண்டேசன் நமன், விஷ்ணு, பழனிக்கடவுள்.

தண்டபாலகம் - வாயிற்பால்.

தண்டபாலன் - துவாரபாலன்.

தண்டமானம் - தண்ணடைமானம்.

தண்டமிழ் - இனியதமிழ்.

தண்டம் - அரசன்கொடுக்கோன்மையாகிறையிறுத்தல், அறப்பான் மூன்றனுளொன்று. அது ஒழுக்கத்தினும் வழக்கத்தினும் திறம்பினோரை அவற்றினெறியே நிறுத்தத்தண்டித்தல், உபாயநான்கினொன்று, ஊன்றுகோல், ஒரு நாழிகைநேரம், ஒருகுடைப்பிரமாணக்கோல், கடைதறி, குடைக்காம்பு, தண்டிப்பு, தெண்டம், தேசம், காடு, படை, பண்டாரம், பற்றுக்கோடு, பெருமை, யானைசெல்வழி, யானைத் துதிக்கை, வணக்கம், வலைதடி.

தண்டயாமம் - தினம்.

தண்டயாமன் - அகத்தியன், இயமன்.

தண்டயாமி - அகத்தியன், இயமன், தினம்.

தண்டவர் - சத்துருக்கள்.

தண்டலை - ஒரூர், சோலை, பூந்தோட்டம்.

தண்டல் - அறவிடுதல், கெடுதல், சேகரிப்பு, தோணித்தலைவன்.

தண்டவாசி - துவாரபாலன்.

தண்டவாலதி - யானை.

தண்டவால் - தண்டமானம்.

தண்டவாளம் - உருக்கிரும்பு.

தண்டற்காரன் - அறவிடுவோன்.

தண்டனம், தண்டனை } ஆக்கினை.

தண்டன் - அரசன், குயவன், நமன், வணக்கல், இக்ஷ்வாகு புத்திரன் - தண்டகன் எனவும் படுவன், சுவாமிமகன்.

தண்டாகதம் - மோர்.

தண்டாகாரம் - கணிதவாக்கியம் வைத்துக் கணிக்கு முறையினொன்று.

தண்டாசுவன் - த்ருடாசுவன் துந்துமாரன்மகன், இவன்மகன் ஹரியசுவன்.

தண்டாச்சிறப்பினன் - சரச்சுவதி.

தண்டாமரைக்கோரை - ஒருபுல்.

தண்டாமை - நீங்காமை.

தண்டாயம் - கந்தாயம், காத்தண்டு.

தண்டாயுதபாணி சுப்பிரமணியர் பழனியாண்டி.

தண்டாயுதம் - தண்டம், வளைதடி.

தண்டாயுதன் - ஐயன், வயிரவன், வீமன்.

தண்டாரம் - குலாலசக்கிரம், மதயானை, யானம், வில்.

தண்டி - ஒரு புலவன், தண்டற்காரன், தண்டியன்னேவல், தண்டேசுரன், தரம், நமன், பருப்பம், வாயில்காப்போன், வானப்பிரத்தன். காளிதாசனுக்கு நண்பராகிய ஒருஸம்ஸ்க்ருதவித்வான், போஜராஜன் சபையில் விளங்கிய நவகவிரத்நங்களுள் ஒருவர் காவ்யாதர்சமும் தசகுமார சரித்ரமும் இவரால் செய்யப்பட்டனவே.

தண்டிகம் - ஒருமீன், மூத்திரச்சரம்.

தண்டிகை - ஒரு கழுத்தணி, சிவிகை.

தண்டிகைகுச்சு - தாழ்வாரந்தாங்கி.

தண்டிதரம் - திராணி.

தண்டித்தல்-தண்டனை பண்ணல், வெட்டுதல். [டல்.
தண்டிப்பு-தண்டனை, வருத்தம், வெட்
தண்டியடிகணாயனார்-பிறவிக் குருடராகப்பிறந்து சிவபத்தியிற் சிறந்ததிருவாரூர் திருக்குளத்து மண்ணைக்கல்லி கூடையி லெடுத்துக்கொண்டு தடவிக்கொண்டே போய்க் கரையிலே கொட்டுகிற திருத்தொண்டு செய்து வருநாளில், சமணர்கள் தடுத்து, கண்கெட்டவனே யென்று பழிக்க, சுவாமி சந்நிதியையடைந்து தமது வருத்தத்தை விண்ணப்பஞ்செய்து கண்பெற்று சமணர்கள் கண்ணிழந்து அவ்வூர்விட்டு நீங்கும்படி செய்து சோழராஜனால் அந்தச் சமணர்களுடைய பாழிகளைப் பறிப்பித்து அந்தக் கற்களைக்கொண்டு கமலாலயத்திருக்குளக்கரையைக் கட்டுவித்துத் திருவாரூரிலே வாழ்ந்திருந்த ஒரு சிவபத்தர்.
தண்டியலங்காரம்-தமிழிலேயுள்ள ஒரு அலங்காரநூல். இது வடமொழியிலுள்ள காவ்யாதரிசமென்னும் அலங்கார சாஸ்திரத்தின் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர் இன்னரென்ற புலப்படவில்லை. வடமொழியிற் செய்தவர், தண்டி.
தண்டியல் - தண்டிகை.
தண்டிலம் - மந்திரவேதிகை.
தண்டினம் - நீர்மேற் படர்கொடி.
தண்டீசர் - சண்டேசுரநாயனார்.
தண்டு ஆண்குறி, ஆயுதப்பொது,ஒத்தி, கீழ்க்காதுச்சோனை, சவளமரம்,சிவிகை, சேனை, தடி,தண்டாயுதம்,தண்டென்னேவல், தண்டேசன், தராசுக்கோல், துளையகைப்பொருள், பச்சோந்தி, படை, பூவிற்றண், மிதுனவிராசி, மூங்கில், வரம்பு, வளைதடி, வாழைத்தாறு, வில், வீணை.
தண்டுக்கீரை - ஒருகீரை.
தண்டுதல் - தண்டல், விலகுதல்.
தண்டுப்பிளவை - ஆண்குறியில் வருமோர் சிலந்தி.
தண்டுப்பற்று - ஆண்குறியிலோர்கோய்.
தண்டுமிண்டு - அடாதது.
தண்டுரீனம் - அரிசிக்கழுநீர்.
தண்டுலபலே - திப்பிலிச்செடி.
தண்டுலம் - அரிசி, வாயுவிளங்கம்.
தண்டுலம்பு - அரிசிக்கழுநீர்.
தண்டுலீகம் - ஒருசெடி, நெல் முதலியன வாயுவிளங்கம்.
தண்டுலேரம் - ஒருகீரை.
தண்டுலோகம் - தண்டுலாம்பு.
தண்டுலீயம் - சிறுகீரை.
தண்டெலும்பு - புதுகெண்பு.
தண்டேசன் } ஒருசிவதொண்டன்.
தண்டேசுரன் }
தண்டேறு - எலும்பு.
தண்டை - தொந்தரை, பிரப்பங்கேட்கம், மாதர்காதணியில் ஒன்று, வால்.
தண்டைக்காரன் - எத்தன்.
தண்டைமாரம் } வால் முறக்குதல்.
தண்டைமானம் }
தண்டொட்டி - காதணியிலொருறுப்பு.
தண்ணடை-நாடு, பச்சிலை, மருதநிலத்தூர்.
தண்ணம் - ஒருகட்பறை, காடு, குளிர், பறைப்பொது, மழு.
தண்ணவன் - சந்திரன்.
தண்ணளி - இரக்கம், கிருபை.
தண்ணனவு - தண்ணெனவு.
தண்ணியகுலம் - கீழ்ச்சாதி.
தண்ணியது - குளிர்ந்தது, தாழ்ந்தது.
தண்ணீர் - குளிர்ந்தநீர், நீர்.
தண்ணீர்கட்டுதல் - கொப் ளங் கொள்ளல், நீர் டித்தல்.
தண்ணீர்காட்டுதல் - ப்த்தல், கெடுத்தல், சேதப்படுத்தல்.
தண்ணீர்ச்சாலை - நீர்ச்சாலை.
தண்ணீர்மாறுதல் - நீர்ப்பாய்ச்சுதல்.
தண்ணீர்விட்டான் - சாத்தாவாரி.
தண்ணுமை - உடுக்கை, உறுமிமேளம், ஒரு கட்பறை, பேரிகை, மத்தளம்.
தண்ணெனல் குளிர்தல். சீதக்குறிப்பு.
தண்ணெனவு - குளிர்ச்சி.
தண்பதக்கொளுந்தலைநாள் - புதுப்புனல் விழவு கொண்டாடுந் தலைநாள்.
தண்பதப்பெருவழி - புதுப்புனலாடப்போம் பெரியவீதி.
தண்மை-இகழ்த்தருபொருள்,இன்பம், எளிமை, குளிர்ச்சி, அது எண்வகையூறில் ஒன்று, சாந்தம், தாழ்வு, புல்லறிவு.

ததகம் - வாயு, காற்று.
ததச்சதை - வாழைமரம்.
ததபத்திரி - வாழை.
ததம் - அகலம், பின்பு, விரிவு.
ததர்ப்பணம் - கொடுத்ததையபகரித்த
ததர்மூகம் - தொடக்கம். [ல்.
ததல் - நிலை.
ததனந்தரம் - அதன்பின்.
ததநம் - தாநம்.
ததா - அப்படி.
ததாகதன் - புத்தன்.
ததாகாரம்-அநந்தரூபம், விஸ்தாரம்.
ததாஸ்து - அப்படியாகட்டும்.
ததாமுகம் - ஆரம்பம்.
ததி-ஒருபிசின், கிரகம் தத்துவம், தயிர், நிறை, பருவம்.
ததிகூர்ச்சிகை - தயிரன்னம்.
ததிகேடு - பலக்குறைவு.
ததிசம் - வெண்ணெய்.
ததிசாரம் - தயிர்கடைதறி, வெண்ணெ
ததிசி - ததீசி. [ய்.
ததிசுவேதம் - மோர்
ததிசோணம் - செங்குரங்கு.
ததிபலம் - விளாமரம்.
ததிமண்டம் - மோர்.
ததிமண்டோதம் - தயிர்க்கடல்
ததிமுகன் - சுக்ரீவன் மாமன், மதுவனங்காவலன், சுக்ரீவன் மாதுலன்.
ததியை - திரிதிகை.
ததியோதனம் - தயிரன்னம்.
ததிரம்- யாகமிருபத்தொன்றிலொன்று.
ததிவாகநன் - அங்கன்மகன்.
ததீசி-ஒரிருடி இவர் தமது முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்து இதையுன் வச்சிராயுதத்துக்கு முனையாக்கிக்கொள்க வென்று அருள்செய்தவர்.
ததீசியஸ்தி - வச்சிராயுதம்.
ததுமல் - குழப்படி, சந்தடி.
ததும்பல் } அசைதல்,நிறைதல்,மூடி
ததும்புதல் } ப்பாய்தல், வழிதல்.
ததுனன் - இளைஞன், காற்று.
ததேகநிட்டை - அசைவறத் தியானித்திருத்தல்.
ததைதல் - நெருங்கல், மிடைதல், வெளிப்படாதிருத்தல்.
ததைத்தல்-கூடுதல், நெருக்கல்.

ததைவு - ததைதல்.
தத்தநன் - அதிலோபி.
தத்தம் - ஈதை, சு ீகாரம்.
தத்தரம் - நடுக்கம், மிகுவிரைவு.
தத்தல் - தவளை, தாண்டல், பாய்தல்.
தத்தளித்தல் - தடுமாறுதல், தடுக்கிடல், முட்டுப்படுதல்.
தத்தளிப்பு - தடுமாற்றம், முட்டுப்பாடு.
தத்தாங்கி - மகளிர்விளையாட்டு.
தத்தாத்ரேயன்-அத்திரிக்குஅனசூயையிடத்துப் பிறந்த புதல்வன், இவன் விஷ்ணு அமிசம் என்பர்.
தத்தாத்திரியன்-ருரிருடி, இவன் திருமால் பதினைந்தவதாரத்தொருவன்.
தத்தாபகாரம் - கொடுத்ததை யபகரித்
தத்தாபிகாரம் - பார்த்தல். [தல்.
தத்தி - கொடை, பலம்
தத்திகாரம் - பொய்
தத்திதம் - பகுபதம்.
தத்தியம் - மெய்
தத்தியன் - மெய்யன்.
தத்தியோதனம் - ததியோதனம்.
தத்திரம் - பதில்.
தத்தினம் - நடுநாள், நாடோறும்.
தத்து-அவமிருத்து,கண்டம், கிரகவொழுங்கு, சுவிகாரம், தப்பிச்சரித்தல், தத்தென்னேவல்,பாய்தல், மோசம்.
தத்துக்கிளி - விட்டில்.
தத்துதல் - கடத்தல், பாய்தல்.
தத்துப்புரட்சி - கிரகநடையினொர்விகா
தத்துப்பூச்சி - தத்துவண்டியன். [ரம்.
தத்துவக்கடுதாசி-ஒருவனுடைய தத்துத்தைப் பெற்றவுறுதி.
தத்துவக்கட்டளை - ஒருநூல்.
தத்துவசாத்திரம் - தத்துவபேதங்களையறிவிக்குநூல்.
தத்துவசாலி - அதிகாரம் பெற்றோன், பலசாலி.
தத்துவஞானம் - உண்மைஞானம், கடவுளையறியுமறிவு, தத்துவங்களையறியுஞானம்.
தத்துவஞானி - தத்துவங்களைப் பிரித்தறிந்தோன்.
தத்துவண்டியன் - ஒருபூச்சி.
தத்துவதரிசனம் - தத்துவக்காட்சி.
தத்துவதி - ஒருவகைக்கழு.

தத்துவத்திரயம் - மூவகைத் தத்துவம் அது ஆத்துமதத்துவம், சிவதத்துவம், வித்தியாதத்துவ மெனப்படும், ஒரு வைணவநூல்.

தத்துவநிரூபணம் - ஒரு ஞானநூல்.

தத்துவப்பிரகாசம் - ஒரு சைவநூல்.

தத்துவம்-அதிகாரம், உண்மை, சுபாவம், தத்துவத்திரயம், பலம், புத்தி, பூத்தியம், பூதியம்.

தத்துவம் - பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, மனம், அகங்காரம், புத்தி, குணம், பிரகிருதி இவை ஐந்து. ஆக தத்துவம் இருபத்தைந்தும் அசுத்தாத்துவா, இருபத்தாறந் தத்துவம் அராகம் அதற்குமேலே கலாதத்துவம், அதற்குமேலே ஙியதிதத்துவம், அதற்குமேலே காலதத்துவம், அராகம்முதல் காலதத்துவமீருகிய, ஐந்தும் மிச்சிராத்துவா, இவை முப்பதும் ஆன்மாக்களுக்குத் தனித்தனியே சூக்கும தேசங்களாம் அதற்குமேல் மாயாதத்துவம், அதற்குமேல் சுத்தவித்தியாதத்துவம், அதற்குமேல் ஈசுரதத்துவம், அதற்குமேல் சதாசிவதத்துவம், அதற்குமேல் சத்திதத்துவம், அதற்குமேல் சிவதத்துவம், இவைகளே முப்பத்தாறு தத்துவங்களெனப்படும், சிவதத்துவம் நாதம் என்றும் சத்திதத்துவம் விந்து என்றும் சொல்லப்படும், சொல்லொற்றுமை நோக்கிச் சிவதத்துவமும் பரமசிவமும் ஒன்றெனக்கொள்ளாதொழிக.

அந்தச் சிஷ்டிக்கிரமம் வருமாறு.

பிரமம்.

சிவதத்துவம்	(௩௬)
சத்திதத்துவம்	(௩௫)
சதாசிவதத்துவம்	(௩௪)
ஈசுரதத்துவம்	(௩௩)
சுத்தவித்தியாதத்துவம்	(௩௨)
மாயாதத்துவம்	
காலதத்துவம் - ஙியதிதத்துவம்	
௩0	௨௯
காலதத்துவம்.	௨௮
வித்தியாதத்துவம்	(௨௭)
ராகதத்துவம்	(௨௬)
புருஷதத்துவம், பிரகிருதி தத்துவம் சித்தம்	(௨௫)
குணதத்துவம்	(௨௪)
புத்திதத்துவம்	(௨௩)
அகங்காரதத்துவம்	(௨௨)
சாத்துவிகாங்காரம்.	
மனமும் ஞானேந்திரியமும்	(௫)
ராஜஸாகங்காரம்.	
கன்மேந்திரியம்	(௫)
தாமஸாகங்காரம்.	
தன்மாத்திரை பூதம்	(௫)

இது சிவாத்துவதீபிகையிலே கூறப்பட்ட தோற்றக்கிரமம். இனி அதிகார தேவர்கள் இருக்குமிடஞ் சொல்லுவோம்.

சுத்த வித்தியா தத்துவத்திலே, சப்தகோடி மஹாமந்திரர்களும், நந்திமுதலிய கணநாதர் எண்மரும், இந்திரன் முதலிய வுலகபாலரும், ஈசுரதத்துவத்தில், அநந்தர் முதலிய வித்தியேசுவரரும் இருப்பார், அநந்தர் மாயாதத்துவ புவனங்களை யுண்டாக்குவர். ஸ்ரீகண்டருத்திரர் குண தத்துவத்திலிருந்து ஒடுக்காக்காலத்தில் அராகத்திலிருப்பார், பிரகிருதி மத்தகத்திலே எட்டுருத்திரர் இருப்பார், பிரம விஷ்ணுக்கள் ஸ்ரீகண்ட ருத்திரரோடு குணதத்துவத்திலிருப்பார், பிரணவம் ஈசுரதத்துவத்திலிருக்கும் உருத்திர கணங்களுக்குச் சங்கையில்லை.

ஆகாயம் வாயிலாகி மற்றைப் பூதங்களுக்கிடங்கொடுக்கும். வாயுகலித்து மற்றைப் பூதங்களைத் திரட்டும், தேயு சுட்டு ஒன்றுவிக்கும், அப்பு குளிர்ந்து பதஞ்செய்யும் பிருதுவி வன்மையாகிய மற்றெல்லாவற்றையுந் தாங்கும் ஆகாயம் வட்ட வுருவினது, வாயு அறுகோணம், தேயு முக்கோணம், அப்பு பிறைவடிவினது, பிருதுவி சதுரம், ஹ - ய - ர - வ - ல ஆகாய முதலிய ஐந்திற்கும் முறையே அக்ஷரங்களாம், மாயையின் வேறுகியும் அதிற் கட்டுப்பட்டுக் கிடை

ந்த ஆன்மாவுக்குக் காலதத்துவம் மின்னற் கதிர்போல இருட்டைச் சிறிது விலக்கித் தெருட்ட, அக்கலையினின்றும் அறிவுக்கு உபகரணமாயுள்ள வித்தியா தத்துவமும் அதினின்றும் போகத்துக்குக் கருவியாகிய அராகமுந்தோன்றும். அந்த அவதாரத்திலே ஆன்மா போகாதிகாரத்தைப் பொருந்தும். அவ்வதிகாரியையேபுருஷன் என்றுமேலேசொன்னது. அது உள்ளபடியே தத்துவமாகாமையின் தத்துவங்களோடு சேர்த்தெண்ணப்படாததாயிற்று. ஆன்மாவுக்கும் போகியமாயுள்ளன;பிரகிருதிமுதல் நிலமீறாயுள்ள இருபத்தைந்துமாம். சித்தம் சேர்த்தெண்ணப்படாமைக்கு நியாயமும் இதுபோன்றதேயாம்.

சைவசித்தாந்திகள் சுத்தசிவமாகிய பிரமும் ஆன்மாவும் மாயையும் நித்தியப்பொருள்களென்பார்கள். சுத்தசிவத்துக்குச் சிவதத்துவமும். சக்தியும் சதாசிவமும் திருமேனியாகும், சிவதத்துவத்திலே சுத்த சிவகலைஸ்தூலமாக சத்திகலை சூக்குமமாக நிற்கும் சத்திதத்துவத்திலே சிவகலையாதியுமாயிருக்கும். அதிலே சதாசிவம் சூக்குமமாகும் சதாசிவத்திலே சிவகலைகாலும் சத்திகலை முக்காலுமாக விளக்கும். சிவதத்துவத்திலே ஆன்மாவும் சத்திதத்துவத்திலே மாயையும் அந்தர்க்கதமாய் நிற்கும். ஈசுரதத்துவத்திலே சிவகலை சைதந்யரூபமாகச் சத்திகலை மேம்பட்டு நிற்கும். சுத்தவித்தியா தத்துவத்திலே சைதந்யமும்மாயையும் சமப்பட்டுநிற்கச் சத்தியோங்கி நிற்கும். அந்தச் சுத்தவித்தையிலே அதோபாகத்திலுள்ள மாயையைச் சத்திநோக்கிநிற்க மாயை வேருநிப் பிரியும். சிவதத்துவமுதலிய ஐந்தும் பிரேரகமாக மாயைமுதலிய எழும் ஆன்மாவுக்குப்போகக்காண்டமாம். அவற்றின் கீழுள்ள இருபத்துநான்கும் போக்கியமாம். இவற்றின் உள்ளுறையெல்லாம் சிவதத்துவ விருத்தியிற்காண்க. [வை.

தத்துவயம் - குருணியென்னு மோரள

தத்துவராயர் - எண்ணூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னே வீரையென்னுந்தலத்திலே பிராமண குலத்தில் அவதரித்து, வடமொழி தென்மொழி இரண்டிலும்வல்லராய்ஞானகுருவைத்தேடித் தமது சகாத்யாயராகிய சொருபாநந்தரோடு வெளிப்பட்டவர். இருவரும் தம்முள் யார் முதலிலே குருவையடைவாரோ அவரே மற்றவர்க்குக் குருவாகக் கடவரென்றேற்பாடு செய்துகொண்டு ஒருவர் வடநாட்டிலும் ஒருவர் தென்னாட்டிலுஞ்சென்றனர். தெற்கிற்சென்ற சொருபாநந்தர் ஒரு குருவையடைந்து ஞானநூல்களையோதி மெய்யுணர்ந்தார். முன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படியே தத்துவராயர் சொருபாநந்தரைகுருவாகக்கொண்டு ஞானசாத்திரங்களைக் கேட்டுத் தமக்கியற்கையாயுள்ள கவன சத்தியால் லோகோபகாரமாகச் சசிவர்ணபோதம், பாடுதுறை, சிவப்பிரகாச வெண்பா, தத்வாமிர்தம், அமிர்தசாரவெண்பா, ஞானவிநோதன் கலம்பகம், தசாங்கம், நெஞ்சுவிடுதூது, கலிமடல், கலித்துறையந்தாதி, அஞ்ஞவதைப்பரணி முதலிய பல நூல்களைச் செந்தமிழாற்பாடியருளினர். அஞ்ஞவதைப் பரணிபாடின சாதுரியம் மிகவும்வியக்கத்தக்கது. இவர்மெய்ஞ்ஞானிகளுள் ஒருவரெனபது அவர் செய்த நூல்களாலும் கர்ணபரம்பரையாலும் நிச்சயிக்கப்படும்.

தத்துவவாதம் - ஒருசமயம்.

தத்துவவாதி - ஒருசமயி.

தத்துவவிளக்கம்-தத்துவபேத மறிவிக்கும் ஒரு நூல்.

தத்துவன்-அதிகாரி, அரசன்,அருகன், உண்மையுள்ளோன், உருத்திரன், கடவுள், பிரமன், விட்டுணு.

தத்துவாதி - ஒருவகைப் பார்ப்பான்.

தத்துவாதீதன் - கடவுள்.

தத்தவெடியன் - ஒருபூச்சி.

தத்தெறிதல்-அலையெறிதல், ஒருவிளையாட்டு.

தத்தேயன் - இந்திரன்.

தத்தை - ஜம்பன்மகள், ஹிரண்யகசிபன்பாரி
தத்தை-கிளி, முன்பிறந்தாள்.
தநம் - சந்தனம், மனம்.
தநுச்சாயை - சரீரநிழல்.
தநுத்திராணம் - கவசம்.
தநுத்துவசம், தநுத்துவசை } சிறுநெல்லிச்செடி.
தநுர்வேதம் - உபவேதம் நான்கிலுள் ஒன்று, அது யஜுர்வேதச்சார்புடையது.
தநுகபம் - நெய்.
தநூருகம் - உரோமம், குருவிமயிர்.
தந்தகரிசம், தந்தகரிசனம் } சுண்ணாம்பு.
தந்தகாட்டம் - தந்ததாவனக்குச்சு.
தந்தகாதகன் - அரிச்சந்திரனை மயக்குதற்காகவிசுவாமித்திரன்சிருஷ்டித்த ராக்ஷஸன்.
தந்தக்காரி - வாதமடக்கி.
தந்தக்குறி - பற்குறி.
தந்தக்கோரை - ஒருபுல்.
தந்தசடம்-எலுமிச்சமரம், எலுமிச்சை, விளாமரம்.
தந்தசடை - புளியாரை.
தந்தசம் - பல், யானை முதலியவற்றின் கொம்பு.
தந்தசிரம் - பன்முரசு.
தந்தசிரை - பல்லிறு.
தந்தசுத்தி - பல்விளக்கல்.
தந்தசூகம் - பாம்பு.
தந்தசூகன் - துட்டன்.
தந்தசூலை - ஒருநோய்.
தந்ததாவனம் - தந்தசுத்தி, பற்குச்சி.
தந்தத்தண்ணீர் - அத்திபேதி.
தந்தபத்திரம் - ஒருமல்லிகை.
தந்தபலம் - விளாமரம்.
தந்தபலை - திப்பிலி.
தந்தபாகம் - யானைமத்தகம்.
தந்தபீஜகம் - மாதுளை.
தந்தப்பூண் - கிம்புரி.
தந்தமலம் - பல்லழுக்கு.
தந்தமாமிசம் - பன்முரசு.
தந்தமுத்து - யானைத்தந்தமுத்து.
தந்தம் - தாடி, பல், மலைச்சாரல், மலைமுடி, யானைக்கொம்பு.
தந்தயாவனம் - கருங்காலி
தந்தரீணம் - அரிசிக்கழுநீர்.
தந்தரோகம் - ஒருநோய்.

தந்தவக்த்ரன்-விருத்த சர்மனுக்கு வசுதேவன் தங்கையாகிய சுருததேவியிடத்துப்பிறந்தபுத்திரன்; இவனும் சிசுபாலனும் சநக சநந்தனர் சாபம் பெற்ற ஜயவிஜயர்களுடைய அவதாரம்; இவன் கிருஷ்ணனாற் கொல்லப்பட்டவன்.
தந்தவக்கிரன்-இடையெழு வள்ளலில் ஒருவன், சிவன்.
தந்தவத்திரன் - சிவன்.
தந்தவஸ்திரம், தந்தவாசா } உதடு.
தந்தவேட்டம் - பன்முரசு.
தந்தாயுதம் - பன்றி.
தந்தாலிகை - கடிவாளம்.
தந்தாவளம் - யானை.
தந்தி - ஆண்யானை, கம்பி, நரம்பு, நெய்வோன், நேர்வாளம், பாம்பு, யாழ்நரம்பு, யானை.
தந்திகர்ணி - மெருகன்கிழங்கு.
தந்திபீசம் - நேர்வாளம்.
தந்திப்படல் - எரிச்சற்படல்.
தந்திமதம் - யானைமதம்.
தந்திமுகன் - விநாயகன்.
தந்தியம் - பல்லழுக்கு.
தந்தியுரியோன் - சிவன்.
தந்திரகம் - சீந்தில், தூதுகவஸ்திரம்.
தந்திரகலை - ஆகமத்திறெ்ர்பகுதி.
தந்திரபாலன் - படைத்தலைவன்.
தந்திரமணம் - மிருதநடை.
தந்திரமா - நரி.
தந்திரம்-அலங்கரிப்பு, உபாயம், ஒருகுளிகை, கல்வி நூல், கிரியை, கூட்டம், திருட்டாந்தம், நூல், படை, புலடைவை, மிகுகளிப்பு, முதனூல், யாழ்நரம்பு, வீடு, வேதத்திலோர் பகுதி.
தந்திரயுத்தி - நூலுத்தியா னமைக்கப்படுபொருள்.
தந்திரர் - கந்தருவர், தந்திரக்காரர், தந்திரியர்.
தந்திரவாதம் - ஒருசமயம்.
தந்திரவாயன் - சிலம்பி, நெய்வோன்.
தந்திரவிபன் - நெய்வோன்.
தந்திராகமம் - தந்திரகலை.
தந்திரி - தந்திரக்காரன், படைத்தலைவன், மந்திரி, யாழ்நரம்பிலோசை, யாழ்நரம்பு.

தந்திரிகாம் - செக்கோட்டியா மூறுப்பி னுள் ஒன்று.
தந்திரிபாலன் - அஞ்ஞாதவாசத்தில்சகா தேவன் கொண்ட பெயர்.
தந்தரிகை - கம்பி, சொம்பு.
தந்திரை - சோம்பல், நித்திரை.
தந்திவந்தகம் - சுதலலோகம்.
தந்திவீமுரியோன் - சிவன்.
தந்து - கல்விநூல், சந்ததி, தந்திரம், தந்தென்னெச்சம், நூல், பஞ்சிநூல், பலகாற்கேட்டல்.
தந்துகடம் - சிலம்பிப்பூச்சி.
தந்துகம் - கடுகு.
தந்துசி - நாடி.
தந்துகீடம் - சிலம்பிப்பூச்சி.
தந்துசாரம் - கமுகு.
தந்துசாலை - நெசவுவீடு.
தந்துநாபம்
தந்துபம் } கடுகு, பசுவின் கன்று.
தந்துமந்து - குழப்படி, சந்துமந்து.
தந்துமாரன் - சங்கவர்ணர் என்னும் நாகரிகரால் பாடப்பட்ட ஒரு பிரபு.
தந்துரம் - தாமரைக்கொடி.
தந்துரன் - உயர்பல்லன்.
தந்துலம் - தாமரைக்கொடி.
தந்துரை - பாயிரம்.
தந்துரைத்தல் - கொணர்ந்து புணர்த்திச் சொல்லல்.
தந்துவர் - நெய்வோர்.
தந்துவாபன்
தந்துவாயன் } சிலம்பி, நெய்வோன்.
தந்துவாயி - நெய்வோன்.
தந்துவிக்கிரியை - வாழை.
தந்தை - பிதா.
தபகிருஷன் - தபத்தி.
தபசம் - பறவை.
தபசன் - சந்திரன்.
தபசி - தவசி.
தபசியம் - பங்குனிமாதம், முல்லைப்பூ.
தபசியன் - அருச்சுனன்
தபசு - தவம்.
தபதாபிகாரம் - அக்கினியைப் பார்த்தல்.
தபதி - சம்வருணன்பாரி, குருவினது தாய், சூரியன் புத்திரி, சூரியன் மனைவி.
தபதியா - கம்மாளர், தச்சர்.
தபத்தர் - தபோதனர்.
தபத்தி - தவத்தி.
தபந்தகயை - யமுனையாறு, வன்னிமரம்.
தபநாத்துமசை
தபவி } கோதாவரி.
தபநேஷ்டம் - தாமிரம்.
தபம் - தவம், மாசிமாதம், வெப்பம், வெயிற்காலம்.
தபலை - சருவக்குடம்.
தபலோகம் - தபோலோகம்.
தபனகரம் - சூரியகிரணம்.
தபனமணி - சூரியகாந்தம்.
தபனம் - தாகம், மனத்துயர், வெப்பம், வெய்யிற்காலம்.
தபனக்கஞ்சி - மஞ்சள்.
தபனன் - அக்கினிதேவன், கொடுவேலி, சூரியன், நெருப்பு.
தபனீயகம்
தபனீயம் } பொன்.
தபன் - அங்கிரசன்சந்ததியாராகிய காசிபன், வசிட்டன், பிராணன், அங்கிரசன், சயவநன் என்னும் ஐவருக்கும் பிறந்தபாஞ்சஜந்யன்என்னும்அக்கி. சூரியன்.
தபாது - தப்பிதம்.
தபாத்தியம் - மாரிகாலம்.
தபித்தல் - தவித்தல்.
தபிலை - தபலை.
தபுதல் - கெடுதல், சாதல்.
தபுதாரநிலை
தபுதாரம் } கூடியதலைவியைத் தலைவன்காதலித்திருத்தல், மனைவிக்காகப் புலம்பல்.
தபோதனர் - முனிவர்.
தபோதினி - முனிவன்.
தபோதி - தவத்தி.
தபோதுக்கம் - உலகவெறுப்பு.
தபோநிதி - தபத்தி.
தபோபலம்
தபோபுண்ணியம் } தவப்பலன்.
தபோபுத்திரன் - தவத்தினாற்பெற்ற பிள்ளை.
தபோமகிமை - தவமேன்மை.
தபோமயம் - ஒருவனம், தவத்தின்றன்மை.
தபோராசி - தவத்தி.
தபோலோகம் - மேலேழுலகினொன்று.
தபோவனம் - தவவனம்.
தப்தசிலாசயனம் - காய்ந்த பாறையிற் படுத்தல்.
தப்தகும்பம் ஒருநரகம். இது நெருப்புருவாகக் காய்ச்சிய எண்ணெய்க்குடங்க

ளால் நிறைந்துள்ளது. பாவிகள் இக் குடங்களில் தலைகீழாக அமிழ்த்தி யெடுக்கப்படுவார்கள்.
தப்தாயபிண்டம் - காய்ந்த இரும்புருண்டை.
தப்பட்டை - ஒருபறை.
தப்பவைத்தல் - நீங்கினின்று விலக்கிக் காத்தல்.
தப்பளை - ஒருமீன், சளியல்; தவளை, பெருவயிறு.
தப்பறை - கபடம், கெட்டமொழி, தப்பு, பொய்.
தப்பிதம் - குற்றம், தப்பு.
தப்பிலி - தப்பில்லாதவன், தப்பில்லாதவன், போக்கிரி.
தப்பு - ஒருமேளம், கபடம், குற்றம், தப்புதல், தப்பென்னேவல், வழு.
தப்புதல் - சப்பளித்தல், சிலைதப்புதல், தவறுதல், பிழைத்தல், விலகுதல்.
தப்புத்தண்ணீர் - பரவுதண்ணீர்.
தப்புமேளம் - ஒருபறை.
தப்புவீணை - ஒருவீணை.
தப்பை - முறிந்தவென்புபொருந்தவைத் தக்கட்டுமட்டை, மூங்கிற்பற்றை.
தமகன் - கொல்லன்.
தமக்குதல் - தணித்தல், நிரப்புதல்.
தமக்கை - அக்காள்.
தமசம் - உருள், கிணறு, பட்டினம்.
தமசு - ஒருநரகம். இது அந்தகாரருபமாயுள்ளது.
தமசு - இருள், தாமசம்.
தமசை - ருக்ஷபர்வதத்திலுற்பத்தியாகு மொருநதி.
தமீலாயணி - வீதி.
தமதமெனல் - ஒலிக்குறிப்பு.
தமதை - ஒருநதி.
தமதம் - பஞ்சேந்திரியநிக்கிரகம், விருப்பம்.
தமதன் - விருப்புள்ளோன்.
தமது - தடி, தம்முடையது.
தமப்பன் - தகப்பன்.
தமப்பிரவை - ஏழ்நரகவட்டத் தொன்று, அது இருணிலம்.
தமம் - இராகு, இருள், கன்மேந்திரியங்களிற்போகாதுமனதைமறித்தல், கீழ்ப்படுதல், ஞானேந்திரியம், சேறு, தன்னையடக்கல், துக்கம், நிக்கிரகம், பஞ்சமாயையி லொன்று. அது சிவசைதன்னியத்தைமறைக்கைபாவம், யாகசாலை.
தமயந்தி - நளன்பாரி, விதர்ப்பராஜனுகிய வீமன் புதல்வி, மல்லிகையில் ஒருபேதம்.
தமயன் - மூத்தோன்.
தமரகம் - உடுக்கு, வங்கம்.
தமரகவாயு - நெஞ்சடைப்பு.
தமரகவொலி - கிலுகிலுப்பை.
தமரத்தை - ஒருமரம்.
தமரம் - அரக்கு, ஈயம், பேரொலி.
தமரல் - பெரிதொலித்தல்.
தமராசம் - ஒருவகைச் சர்க்கரை.
தமராணி - துளையாணி.
தமரிடுதல் - துளைத்தல்.
தமரித்தல் - ஆர்த்தல், விரும்பல்.
தமரிப்பு - ஆர்ப்பு, விருப்பம்.
தமருகம் - உடுக்கு
தமருதல் - ஒலித்தல்.
தமரூசி - துளையூசி.
தமரோசை - கிலுகிலுப்பை.
தமர் - உறவோர், துளை, மூடர்.
தமர்ப்படுத்தல் - இணங்கல், விரும்பல்.
தமலிப்தர் - கங்கைக்கு மேற்கேயுள்ள தேசவாசிகள்.
தமன் - தம்மவன்.
தமனகம் - மருக்கொழுந்து.
தமனகன் - ஒரு நரி.
தமனம் - தவனம், மருக்கொழுந்து.
தமனன் - பண்டிதன், வீரன்.
தமனி - வன்னிமரம்.
தமனிகை - மேனகைமகள், பக்ஷிவரன் பாரி, தார்க்ஷிதாய்.
தமனியம் - பொன்.
தமனியன் - இரணியன், சவரி, பிரமன்.
தமன் - இராகு, கடவுள், கிருட்டிணன், சந்திரன், தம்மவன்.
தமாசி - கேலி, பரிகாசம்.
தமார்க்கவம் - பீர்க்கு.
தமாலகிரி - கீழ்வாய்நெல்லி.
தமாலதளம் - பச்சிலை.
தமாலபத்திரம் - திலகமரம்.
தமாலம் - இலை, அதற்குறி, பச்சிலைமரம், பட்டயம், மூங்கிற்றோல்.
தமி - இரவு, அலம், ஒப்பின்மை, தவனம், தனிமை.
தமிசிரப்பக்கம் - அபரபக்கம்.
தமிசிரம் - குறைறவு.
தமிசு - வேங்கைமரம்.

தமிதம் - குருசிட்டி.
தமித்தல் - தனித்தல்.
தமியம் - கள்.
தமியன் - தனித்தவன், வறியவன்.
தமிழத்தி - தமிழப்பெண்.
தமிழர் - பாடைக்காரர்.
தமிழிச்சி - தமிழத்தி.
தமிழெல்லை - தமிழ்வழங்குமெல்லை.
தமிழோர் - தமிழ்ப்புலவர்.
தமிழ் - குணகடல்,குமரி,குடகம்,வேங்கடம் என்னும் நான்கெல்லைக் குட்பட்ட நாட்டிலே வழங்கிவருவதோர் பாஷை. இது திரமிளம் என்னும் வடசொற்சிதை வென்றுஞ் சில ஆசிரியர். தமிழ் என்னுஞ் சொல்லுக் குப்பொருள் இனிமை.
தமிழ்க்கூத்தர் - தமிழ்நாடகர்.
தமிழ்கடவை - தமிழ்வழங்கு மிடம்.
தமிழ்நாடன் - பாண்டியன்.
தமிழ்நாடு - பாண்டிதேசம்.
தமிழ்மலை - பொதியமலை.
தமிழ்முனி - அகத்தியன்.
தமிழ்வாணர், தமிழ்வாழ்நர் - தமிழ்ப்புலவர்.
தமிழ்வேதம் - திருவள்ளுவர் குறள், திருமந்திரம், திருவாசகம், தேவாரம், வேதாந்த சூத்திரம்.
தமுக்கம் - யானையைப் போருக்கனுப்புமிடம்.
தமுக்கு - ஒருபறை.
தமுஷ்டரி - சுக்கிரன்மகள், தைத்தியர் குரு.
தமை - புறக்கணதண்டர்.
தமையந்தி - நளன்தேவி.
தமையம் - அரிதாரம்.
தமையன் - அண்ணன்.
தமோகரன் - சந்திரன்.
தமோக்கினன் - அக்கினி, சந்திரன், சிவன், சூரியன், புத்தன், விட்டுணு.
தமோபகம் - வெளிச்சம்.
தமோபகன் - சந்திரன், சூரியன், புத்தன்.
தமோமனு - மின்மினி.
தமோவிகாரம் - நோய்.
தமோனுதன் - சந்திரன், சூரியன், விளக்கு.
தம் - அசைச்சொல்,கொடை,சாரியை தற்காத்தல், நன்முகூர்த்தம், பங்கிடுதல், புண்ணியம், மகாவாக்கிய காண்டிதென்று, மனையாட்டி.
தம்பட்டம் - ஒருபறை.
தம்பட்டை - ஓரவரை.
தம்பதி-ஸ்திரீபுருடர், வதூவரர்கள்.
தம்பயினுஷியம் - கிடைத்ததையுண்ணல்.
தம்பம் - வஞ்சனை, கவசம், கோபம், சங்கீதம், தூண், கிலை, பற்றுக்கோடு, பாவம், யானைத்தறி.
தம்பலடித்தல் - பயிருழவுழுதல்.
தம்பலப்பூச்சி - இந்திரகோபம்.
தம்பலம் - இந்திரகோபம், வெற்றிலைச்சாரம்.
தம்பலாடுதல் - சேறாக்குதல்.
தம்பலி - மருதமரம்.
தம்பலை - கிலவிந்தை,பரக்குவெட்டிமரம்.
தம்பல் - சேறு. தம்பலம், தம்புதல்.
தம்பனகம் - மண்வெட்டி,மாக்கொத்து.
தம்பனகாரன்-தம்பனவித்தைக்காரன்.
தம்பனம் - தம்பித்தல், அது அட்டகருமத்தொன்று, மண்வெட்டி, மாக்கொத்து.
தம்பாக்கு - சொகுசா.
தம்பி-தம்பியென்னேவல், பின்னோன்.
தம்பித்தல்-தடுத்தல்,திறத்தல்.
தம்பிராட்டி உடன்கட்டையேறுபவள். தலைவி.
தம்பிரான் - கடவுள்,கட்டளைப்படி நடத்துவோன், திருக்கூட்டத்தலைவன்.
தம்புதல் - கிட்டமாதல்.
தம்புரு - ஒருவீணை.
தம்போலி - வச்சிராயுதம்.
தம்மவன் - சுற்றத்தான்.
தம்மனை - தாய்.
தம்மிடுதல் - தடைப்படல், தணிதல்.
தம்மிலம் - மயிர்முடி.
தம்முன் - தமையன், முன்னோன்.
தம்மை - தாய்.
தயக்கம் - அசைவு, ஒளிதால், கலக்கம், பிரபை.
தயக்கல் - அசைதல், இளைத்தல், ஒளிசெய்தல், திகைத்தல்.
தயமணற்குன்றம் - சருமணல்.
தயவு, தயா - தயை.
தயாகரம் - இரக்கம்.
தயாகூர்ச்சன் - புத்தன்.
தயாசீலம் - தயையானகுணம்.
தயாபரன் - கடவுள் கிருபையுடையோன்.

தயாமூர்த்தி - கிருபாரூபி, கிருபைக் கடவுள்.
தயாலு - தயாளன்.
தயாலுத்துவம் - உருக்கம்.
தயாவம் - தயை.
தயாவிருத்தி - தயைசெய்தல்.
தயாளமலர்க்குழல்நாயகி - திருக்கடவூர் மயானத்திலே கோயில்கொண்டிருக்கும் அம்மன் பெயர்.
தயாளம் } கிருபை.
தயாளத்துவம் }
தயாளன் - கிருபையுடையோன்.
தயாளு - கிருபாளு.
தயிதம் - பிரியவஸ்து.
தயிதை - ஸ்திரீ, மனைவி.
தயிரியம் - தைரியம்.
தயிரேடு - பாலாடை.
தயிர் - உறைந்தபால், அது பஞ்ச கௌவியத் தொன்று.
தயிர்கடைதறி - மத்துப்பிடி.
தயிர்கடைதாழி - தயிர்கடை பாத்திரம், மத்து.
தயிர்க்கடல்-சத்தசமுத்திரத்தொன்று.
தயிர்ச்சாதம்-சித்திரான்னத்தொன்று.
தயிர்தோய்த்தல்-பாலுறையவைத்தல்.
தயிர்வளை } தைவேளைப்பூடு.
தயிர்வேளை }
தயிலகித்தம் - பிண்ணாக்கு.
தயிலசாதனம் - நாவிகெப்.
தயிலபாணிகம் - வெண்சந்தனம்.
தயிலபிபீலிகை - எறும்பு.
தயிலபீதம் - அத்திப்பிசின்.
தயிலமாடுதல் - எண்ணெய் பொருத்துதல்.
தயிலமாலி - எண்ணெய்த்திரி.
தயிலமிறக்குதல் } சத்து வாங்குதல்,
தயிலமெடுத்தல் } தயிலம் வடித்தல்.
தயிலமெரித்தல் - சுடர்த்தயில மிறக்குதல்.
தயிலம் - எண்ணெய்
தயிலம்வைத்தல் - அடக்குதல், எண்ணெய்ப் பொருத்துதல்.
தயிலகாதன் - எண்ணெய்க்காரன்.
தயினியம் - எளிமை.
தயை - கிருபை.
தயை - தாட்சண்ணியம், உருக்குமான விரக்கம்.
தயோமித்தம் - தசநாடகத்தொன்று.
தரகண்டிகை - யானைநெருஞ்சில்.

தரகன் - விற்பனவு கொள்வனவை பொருத்துவோன்.
தரகு - ஓரளவு, ஒருபுல், தரவு.
தரக்கு - புலி, புலிக்குடத்தி.
தரங்கம் } இக்கட்டு, கடல், கலக்கம்,
தரங்கர் } நீர்த்திரை.
தரங்கன்பாடி - ஒருபட்டினம், கடலைச் சார்ந்த ஊர்.
தரங்கிணி - யாறு.
தரங்கு - ஈட்டிநுனி, தங்கல், வழி.
தரசம் - மாமிசம்.
தரணம் - அரிசி, இமயமலை, சூரியன், தரித்தல், தாண்டல், பாவம், பூமி.
தரணி - சூரியன், நீர்ப்பெருக்கு, பூமி, மலை, மேனைபுத்திரிகளிலொருத்தி. பரசுராமன் மனைவி.
தரணிகீலகம் - மலை.
தரணிதரன் - அரசன், திருமால்.
தரணிரத்தினம் - மாணிக்கம்.
தரணிவாரிக்கல் - கானக்கல்.
தரணிசுதை - சீதை.
தரணிசுவரன் - அரசன், சிவன், மலையரசன்.
தரணிதாம் - ஆமை.
தரணிதரன் - அரசன், ஆமை, திருமால்.
தரணிபூரம் - சமுத்திரம்.
தரந்தம் - கடல், தவளை, விடாமழை.
தரபடி - நடுத்தரம்.
தரம் - அச்சம், அரக்கு, குண்டு, கூட்டம், சங்கு, சமானம், தரிக்கை, தலை, தெப்பம், பக்கை, வலி, வீதம்.
தரல் - தருதல், தாராயென்னுமுற்று.
தரவழி - நடுத்தரம்.
தரவாய் - சமயம்.
தரவிணைக்கொச்சகக்கலிப்பா - ஒருதரவு பெற்றுவருங் கொச்சகக்கலிப்பா.
தரவு - தண்டற்காரன், தலைவன் கட்டளையிடரி, வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க வொத்தாழிசை கலிப்பா கட்காறடியாயும் மற்றைக் கலிப்பாகட்கு மூன்றடி முதலிய பல வடிகளாயுந் தாழிசைக்கு இரண்டடி முதனான்கடி யளவாயும் வருவது, விற்பன கொள்வனவைப் பொருத்துதல்.
தரவுகொச்சகக்கலிப்பா - ஒருதரவுபெற்று வருவது.

தாவுவண்ணம்-சொற்சீரடித்தாய நூலு
டன் பயிலுவது.
தாவை-சாம்பு, கிளைமுடிய உவர்நிலம்.
தாளம் - அசைவு, திரட்சி, முத்து.
தாளை - கஞ்சி, கள்.
தான்-அனுமகள், இவன் அந்தகன்என
வும் படுவன். அட்டவசுக்களில் ஒரு
வன், தரித்தவன்.
தா-ஒருகசப்புக்கீரை சங்கு, பூசநாள்,
பூமி, பொன்னுதியேழுலகத்தொன் [ம.
தாகதம்பம் - கடம்பு.
தாங்கம் - மலை.
தாசம் - ஒளிசவித்தல்.
தாசு-சமானம், துலாராசி,நிறைகோல்,
பரணிநாள், வெள்ளெருக்கு.
தாசுகுண்டு - நிறைகல்.
தாசுக்கொடி-பெருமருந்து, முல்லை.
தாசுக்கோல் - தாசுத்துலா.
தாசுத்தட்டு - கன்னத்தட்டு.
தாசுநா - தாருசி.
தாசுப்படி - நிறைகல்.
தாசுமுள் - தாருசி.
தாதரம் - இனம், தாம், திறம், மலை.
தாதான் - திருமால்.
தாதலம்-கீழேழுலகிலொன்று, திறம்,
தாத்துமசன் - செவ்வாய். [பூமி.
தாபதி - இராகா.
தாமரன் - பூதேவன், பூதேவி.
தாலயம் - சவாசநம், பாடை.
தரி - தரிப்பு, தரியென்னேவல்.
தரிகபூரணமாசம் யாகமிருபத்தொன்றி
லொன்று.
தரிசயாமினி - அமாவாசியிரவு.
தரிசவிபத்து - சந்திரன்.
தரிசனபேதி-காட்சியிலிரும்பைப் பொ
ன்னுக்கு மருந்து.
தரிசனம்-அறிவு, கண், கண்ணாடி, கனு,
காட்சி, திறம், பளிங்கு, யாகம்.
தரிசனவேதி - தரிசனபேதி.
தரிசனுவரணியம்-எண்குற்றத் தொன்
று, அது காட்சி மறைப்பு.
தரிசனீயம் - அழகுள்ளது, காணப்படு
தரிசனை - கண்ணாடி, காட்சி [வது.
தரிசன்-தாதாவுக்குச் சினீவாலி யிடத்து
ப் பிறந்த புத்திரன்.
தரிசி-தரிசியென்னேவல், தரிசிப்பவன்
தரிசிதம் - அறியப்பட்டது, விடயம்.

தரிசித்தல் - காண்டல்.
தரிசியம் - தரிசனீயம்.
தரிசு - சரிசு, விரையாநிலம்.
தரிஞ்சகம் - அன்றில்.
தரிதம் - அச்சம், பீறல்.
தரிதன் - பயந்தவன்.
தரித்தல் - அணிதல், சகித்தல்; தங்கல்,
தாங்குதல்.
தரித்திரம் - வறுமை.
தரித்திரன் - வறியன்.
தரித்திராயகன் - எளியவன்.
தரித்திரி - பூமி, வறியவள்.
தரித்திரிதன் - எளியவன்.
தரித்திரியம் - வறுமை.
தரித்துவம் - தரித்தல்.
தரிப்பித்தல் - அணியச்செய்தல், தரிக்
கப்பண்ணல்.
தரிப்பு - இருப்பிடம், கைப்பணம், ஞா
பகம், தரித்தல், நிறுத்துமிடம்.
தரியலர் } பகைவர்.
தரியலார் }
தரு - ஒருசந்தம், ஒருவகைச்சுதிப் பிர
மாணம், தேவதாரம், மரம்.
தருகை - ஈகை.
தருக்கன் - தேட்கிறவன், தருக்கி, மன்
றாட்டக்காரன்.
தருக்கசாத்திரம் - நியாயநூல்.
தருக்கசிந்தாமணி - தர்க்கசாத்திரத்தில்
ஒன்று.
தருக்கம் - நியாயசல்லபம், வாது.
தருக்கல் அகங்கரித்தல், சிலாநாகக்கல்.
தருக்கவித்தியை - தருக்கசாத்திரம்.
தருக்கி - செருக்கன், தருக்கசாலி.
தருக்கித்தல் - தர்க்கித்தல்.
தருக்கு-அகங்காரம்,எழுச்சி, கதிர், களி
ப்பு, சௌரியம்,தருக்கென்னேவல்.
தருக்குதல் - அகங்கரித்தல், களித்தல்,
வீரங்கொள்ளுதல்.
தருசணம் அவசங்கை, கோபம், புணர்
தருசணி - வேசி. [ச்சி.
தருசம்-உஷ்ணம்,பெருமை, பொறாமை.
தருசாயி - பறவை.
தருசாரம் - கர்ப்பூரம்.
தருசிவகம் - மரமேவர்.
தருசு - இழையொத்திருக்கை.
தருச்சகன் - கலைஞன், வாயில்காப்
போன்.

தருச்சனம் - குற்றப்படுத்தல், கோபம், நிந்தைப்படுத்தல்.
தருச்சாரம் - கருப்பூரம்.
தருச்சிதம் - தாகம், விருப்பம்.
தருணதை - தருணி.
தருணநாரி - சிறநன்னரி.
தருணம் - ஆமணக்கு, இளமை, எண்ணம், சமயம், புதுமை, பெருஞ்சீரகம், மோட்சம்.
தருணர் - காளைப்பருவத்தோர்.
தருணன் - காளை, பாலியன், பிரமன்.
தருணாஸ்தி - கொழுப்பு.
தருணி - இளம்பெண், கற்றாழை, சூரியன், தெப்பம், பெண்பருவநான்கில் ஒன்று, அது பதினாறுவயது தொடங்கி முப்பது மட்டும்.
தருணீகணம் - இளம்பெண்கள் கூட்டம்.
தருதல் - உண்டாக்கல், கொடுத்தல்.
தருத்தமணி - மரமஞ்சள்.
தருத்தாம் - மலை.
தருநகம் - முள்.
தருநிறப்பஞ்சரம் - காந்தம்.
தருப்பகம் - தாழ்மை.
தருப்பகன் - காமன்.
தருப்பசயனம் - இராமர்சேதுபந்தனஞ்செய்யத்தங்கின ஒருதலம், தவத்தோர் தவசிறென்று.
தருப்படன் - ஊர்க்காவற்காரன்.
தருப்பணம் - ஓமவிறகு, ஒருசடங்கு, ஒருதாளம், கண்ணாடி, சுவாலை, திருத்தியாக்கல், மந்திர நீரிறைத்தல், மனத்திருத்தி.
தருப்பம் - நாவிச்சட்டம், பெருமை, வெப்பம்.
தருப்பன் - துட்சணன்.
தருப்பி - அகப்பை, சருப்படம்.
தருப்பித்தல் - கடவுளுக்குத் தன்னை யொப்பிவித்தல், தருப்பணஞ் செய்தல்.
தருப்பு - ஒருகல்.
தருப்பை - தெர்ப்பை.
தருமக்கட்டை - அநாதபிள்ளை, ஆவுரிஞ்சுதறி.
தருமக்கருத்தர் - நீதிநீர்க்குநடுவர்.
தருமக்கிழத்தி - தருமதேவதை.
தருமக்கிழவர் - தருமவான்கள், வைசியர், பொது.
தருமசங்கடம் - காரியமுட்டுப்பாடு.
தருமசங்கிதை - நீதிசாத்திரம்.
தருமசத்திரம் - அறச்சாலை.
தருமசபை - தருமச்சங்கம், நீதித்தலம்.
தருமசமஸ்காரம் - அனாதப் பிரேதஞ்சுடுதல்.
தருமசாதனம் - தருமங்கொடுத்த பொருளினுறுதி.
தருமசாது - நற்குணன்.
தருமசாத்திரம் - கலைஞான மறுபத்து நான்கில்ஒன்று. தருமநூல், ஸ்மிருதி.
தருமசாலி - தருமஞ்செய்வோன்.
தருமசாலை - தர்மசாத்திரம், நியாயஸ்தலம்.
தருமசாவன் - ஒருமனு.
தருமசிந்தனம் - தருமசிந்தை.
தருமசிவாசாரி - வைசியகுரு.
தருமசீலன் - தருமசாலி.
தருமசுதன் - உதிட்டிரன்.
தருமசேத்திரம் - பாரதர்பொருதவிடம்.
தருமச்சக்கிரம் - அருகனுடைய தருமசாதனச்சக்கிரம்.
தருமச்சங்கம் - அறச்செயற்கடுத்த கூட்டம்.
தருமச்செல்வி - தருமதேவதை.
தருமச்சேத்திரம் - குருக்ஷேத்திரம்.
தருமணர்சுக்கான் - கருமணர்சுக்கான்கல்.
தருமதேவதை - இயக்கிதேவி, உத்தமி, கங்கி.
தருமத்திரவி - கங்கை
தருமத்துவம் - சன்மார்க்கம், தேவபத்தி.
தருமநடை - புண்ணியவொழுக்கம்.
தருமநந்தனன் - தருமபுத்திரன்.
தருமநாள் - பரணிநாள்.
தருமநியாதம் } தருமமுறை.
தருமநீதி }
தருமநூல் - தருமசாத்திரம்.
தருமபத்தினி - இல்லொழுக்கத்தில் திறம்பா மனைவி.
தருமபாகினி - இல்லொழுக்கத்திற்குரிய மனைவி.
தருமபாடகன் - வேதபோதகன்.
தருமபிரவத்திரு - வேதவியாரத்திகாரன்
தருமபுத்திரன் - பாண்டவரின் மூத்தோன். முதனைமயில் தந்தையைப்போற்றவோன்.
தருமபுரம் - இயமலோகம், ஒருதலம்.
தருமபுருஷன் - தருமசீலன்.
தருமபுரீசர் - திருநள்ளாற்றிலே திருக்கோயில் கொண்டிருக்கும் சுவாமி திருநாமம்.
தருமம் - அம்பு, அறம், அதுஇராசதருணத்துளொன்று, இயல்பு, உபநிடதம்,

ஒப்பு, சுத்தம், தொழில், நல்லொழுக்கம், நியாயப்பிரமாணம், யாகாதிகருமம், வேதம்.
தருமராசன்-அருகன், குந்திமுதற்புதல்வன், நமன், பாலைமரம், புத்தன்.
தருமவாகனன் - சிவன்.
தருமவாசரம் - பூரணை.
தருமவாட்டி - தருமசீலி.
தருமவாளி } தருமசீலன்.
தருமவான் }
தருமவிலபவம் - நன்மார்க்கம்.
தருமன்-எமன், குந்திபுதல்வரில் ஒருவன் சன்மார்க்கன் பதினைந்தாம் புத்தன்.
தருமாசனம் - நீதாசனம்.
தருமாதிகரணம் - நியாயஸ்தலம்.
தருமாதிகாரி-நியாயவிசாரணைக்காரன்.
தருமாத்தி - தருமச்சங்கத்தலைவன்.
தருமாத்திகாயம் - புண்ணியவுடம்பு.
தருமாத்தியட்சன் - நீதியதிபன்.
தருமாத்துமா - சுத்தன்.
தருமாபேதம் - நியாயத்தவறு.
தருமி - தருமவாட்டி, தருமவான்.
தருமிட்டான் - நன்மைப்பிரியன்.
தருமிருகம் - குரங்கு.
தருமோபதேசகன் - குரு.
தருராகம் - தளிர்.
தருராஜம் - பனைமரம்.
தருவாய் - தறுவாய், சமயம்.
தருவாரி - கல்லுப்பு.
தருவி - சட்டுவம்.
தருவித்தல் - தரச்செய்யல்.
தருவிராசன் - பனைமரம்.
தருடம் - தாமரைப்புட்பம்.
தலை-ஆணித்தலை, கருப்பாசயம், நரம்பு, பூமிமுலை.
தலைப்பங்கு - நிலவாரம்.
தலைமட்டம் - நிலவொப்பரவு.
தலையிலாக்குருவி - ஒருகுருவி.
தலைவாரம் - தலைப்பங்கு.
தரோதரம் - சூது, பந்தயம்.
தரோதரன் - சூதாடுவோன்.
தர்க்கசங்கிரகம் - அன்னம்பட்டர் வடமொழியில் செய்த நியாயநூல், சிவஞானமுனிவர் அதனைத் தமிழிலே மொழி பெயர்த்து அதற்குத் தர்க்க சங்க்ரஹம் என்னும் பெயரையே சூட்டினர்.
தர்க்கம் - தருக்கம்.
தர்ச்சனி - சுட்டுவிரல்.
தர்ப்பகன் - தருப்பகன், மன்மதன்.
தர்ப்பணம் - தருப்பணம்.
தர்ப்பம் - கர்வம், கஸ்தூரி.
தர்மநேத்திரன் - ஹேஹயன் புத்திரன்.
தர்மபக்ஷிகள்-பிங்காக்ஷன், விபோதன், சுபுத்திரன், சுமுகி என்னும் நான்கு பக்ஷிகள். பூர்வகாலத்தில் விபுலன் என்னும் முனிக்குச் சுகுருசன், தும்புரன் என இரண்டு புத்திரர் பிறந்தார்கள். இந்திரன் பக்ஷிருபமெடுத்து சுகுருசனிடஞ் சென்று நரமாமிசம் தருகவென்று கேட்டான். சுகுருசன் தன் மைந்தர் நால்வரையும் நோக்கி, உங்களிலொருவன் இவருக்கு இரையாகுகவென்றான். அதற்கு ஒருவரும் உடன்படாதது கண்டு, நால்வரையும் பக்ஷிகளாகும்படி சபித்தான். அதனால் அவர்கள்பக்ஷிகளாகி ஜைமினி முனிவருக்குச் சந்தேகம் தீர்த்துச் சாபநிவர்த்தியடைந்தார்கள்.
தர்மம் - தருமம்.
தர்மநேத்ரன்-ஸ்ருஞ்ஜயன் இரண்டாம் புத்திரன்.
தர்மரதன் - சித்ரரதன் புத்ரன்.
தர்மராஜன்-பாண்டவர்களுள் மூத்தோன் தாய் குந்தி, இவன் யமப்ரஸாதத்தால் பிறந்தவன். யுதிஷ்டிரன் என்பது இவனதியற்பெயர். இவனுக்குத்ரௌபதியிடத்துப் பிறந்தபுத்திரன் ப்ரதிவிந்த்யன்.
தர்மவியாதன்-மிதிலாநகரத்திற் பிறந்த ஒரு குறவன். இவன் குருபத்தி முதலியநல்லொழுக்கமுள்ளவன். இவன் பூர்வத்திலே பிராமணனாயிருந்து சாபத்தால் இந்தச் சநநமெடுத்துக் கௌசிகனென்னும் பிராமணனால் ஞானோபதேசம் பெற்றவன்.
தர்மவிரதன் - தண்டகாரணியத்திலிருந்த வோரிருடி. இவர் ஸ்ரீராமருக்கு பஞ்சாப்ஸரஸினது வரலாறு கூறினவர்.
தர்மன்-பிரமகன் பெற்றவொரு தேவதை. இவனுக்கு சமன், காமன், ஹர்ஷன் என மூவர் குமாரர். பிருதசிரவன் மகன் தர்மராஜன்.

தர்மாரணியம் - இது குசன் மக்களுள் ஒருவனாகிய ஆர்த்தரஜன் என்பவனால் உண்டாக்கப்பட்ட நகரம்.
தலகபாடம் - இலைக்கதவு, முகை.
தலகம் - தடாகம்.
தலகாணி - தலையணை.
தலகிருதயம் - உள்ளங்கால்.
தலசுத்தி - தலபுனிதம்.
தலசூசி - முள்.
தலதரிசனம் - புண்ணிய க்ஷேத்திரக் கட்சி.
தலத்தாது - கிலப்பனை.
தலத்தார் - புண்ணியக்ஷேத்திரத்தார்.
தலபம் - சாத்திரம், பொன்.
தலபுஷ்பம் - தாழை.
தலபம் - மான்.
தலபுராணம் - தலவிசேட முரைக்குஞ் சரித்திரம்.
தலபோடகம் - ஆவிரை.
தலமகிமை - க்ஷேத்திரமகான்மியம்.
தலம் - ஆழம், இடம், இலை, உலகின் பொது, உள்ளங்கால், கருவியுறை, கலப்பு, காடு, கீழ் குவியல், கைகொட்டல், துவாரம், நிமித்தம், பனைமரம், பாதி, பிளப்பு, பூமி, விரித்தகை.
தலரூபகத்தாதி - ஆமணக்குவேர்.
தலவிசேஷம் - க்ஷேத்திரமுக்கியம்.
தலன் - தலம், சயன், தம்பி.
தலாகவம் - போர்க்களம்.
தலாகிகி - கிலநெல்லிச்செடி.
தலாடகம் - அகழ், காட்டெள், சுழல் காற்று, யானைச்செவி.
தலாடகன் - யானைப்பாகன்.
தலாடம் - அணில்.
தலாதலம்-கீழேழுலகத்தொன்று. ஒரு அதோலோகம் இதிற் பாற் கல்லுகளேயுள்ளன. இங்கே காலநேமி முதலிய அசுரர்கள் இராச்சியம் பண்ணுவார்கள்.
தலாதிபதி } அதிகாரி, இராசா.
தலாதிபன் }
தலாமலம் - தவனம், மருக்கொழுந்து.
தலிகம் - விறகு.
தலிதம் - பிளந்தது, மலர்ந்தது.
தலிநன் - பலவீநன்.
தலை - அதிகாரம், ஆகாயம், ஆதி, இடம், எழாம்வேற்றுமையுருபு, ஓரான், சிரசு, தலைவன், தலைமை, திலை, நுனி, பெருமை, முதல்.
தலைகட்டுதல் - மயிர்முடித்தல், முற்றச் செய்தல்.
தலைகவிழ்தல் - அதோமுகமாதல், நாணித்தல்.
தலைகாட்டுதல் - தன்னைக்காட்டுதல்.
தலைகாணி - தலையணை.
தலைகொடுத்தல் - காரியத்திலே முன்னிற்றல்.
தலைகொண்டு புரவியாடுதல் - வல்லபம் பண்ணி வருந்தல்.
தலைக்கடை } முதற் பிரதான வாயில்.
தலைக்கடைவாயில் }
தலைக்கண்விருத்தி - பதுமாசனம்.
தலைக்கல் - ஆட்டுக்கல், பிரதானகல்.
தலைக்கனப்பு - தலைப்பாரம்.
தலைக்காவல் - முக்கியகாவல்.
தலைக்கிறுகிறுப்பு - தலைநடுக்கம்.
தலைக்குடி - முதற்குடி.
தலைக்குத்தலைநாயகம் - ஆளுக்காட்டலைமை.
தலைக்குத்து - தலைஇடி.
தலைக்குலை - குலையின்றலை, முதற்குலை.
தலைக்குறை - கவந்தம், சொல்லின் முதல் குறைதல்.
தலைக்கூடுதல் - ஒன்றித்தல்.
தலைக்கூலி - தோணியிலாளேற்றுவோர் வாங்குங்கூலி.
தலைக்கொம்பு - சிவிகையின் முன்கொம்பு முதன்மையுள்ளவன்.
தலைக்கொள்ளுதல் - அதிகப்பட்டு மேலேறுதல், எற்றுக்கொள்ளுதல்.
தலைக்கோடை - முதற்கோடை.
தலைக்கோலம் - தலையணி.
தலைக்கோல் - கணிகையர் பெறும் சிறந்த பட்டம்.
தலைசாய்தல் } நாணித்தல், வணங்குதல்.
தலைசாய்த்தல் }
தலைசிவுதல் - மயிர்கோதுதல்.
தலைசுருளி } பெருமருந்துபூண்டு.
தலைசூடுவல்லி }
தலைச்சங்கநாண்மதியம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம்.
தலைச்சன் - முதற்பிள்ளை.
தலைச்சார்த்து - தலைப்பா, தலையிற்சிலை.
தலைச்சிரா - தலையணியுங்கவசம்.
தலைச்சுருணி } பெருமருந்து.
தலைச்சுருள்வள்ளி }
தலைச்சுழல் } ஒருநோய்.
தலைச்சுழற்சி }

தலைச்செங்காடு-சோழநாட்டுள்ளதொரூர். தலைச்செங்கானமெனவும் வழங்கும். இது மாடல னென்னும் அந்தணனூர். காவிரிப்பூம்பட்டினத் தருகிலுள்ளது.
தலைச்செய்தல் - பலன்படல், வாழ்ந்து தழைத்தல்.
தலைச்சேரி - ஒருபட்டினம்.
தலைச்சோடு - தலைச்சிரா.
தலைச்சோழகம் - முற்சோழகம்.
தலைதடவுதல் - கெடுத்தல்.
தலைதடுமாறுதல்-ஒழுங்குமாறுதல், கலக்கடி.
தலைதடுமாற்றம் - கலக்கம்.
தலைதட்டுதல் - பறைவெட்டுதல்.
தலைதல் - மழையோய்தல்
தலைதாழ்தல் - நாணித்தல், வணங்கல்.
தலைதாழ்த்தல் - வணங்கல்.
தலைதீதல் - அழிதல்.
தலைதொட்டபிள்ளை-சுவிகாரபுத்திரன்.
தலைதோஷம் - தலைவிறைப்பு.
தலைதோய்தல் - நீராடல்.
தலைத்தாது - இலப்பலை.
தலைத்திராணம் - தலைச்சிரா.
தலைத்திருப்பு - ஒருநோய்.
தலைத்தூக்கம் - அமைவு, தலைதாழ்தல், நாணித்தல்.
தலைநடுக்கம் - இறகிறுப்பு
தலைநாள் - அச்சுவினிநாள்.
தலைநிமிர்த்தல் - தலையுயர்த்தல்.
தலைநிம்பம் - சிவனார்வேம்பு.
தலைநீட்டுதல் - முன்னரிடுதல்.
தலைநோ - தலைக்குத்து.
தலைபோகுமண்டிலம்-இசைப் பாவகையில் ஒன்று.
தலைபோடல் - பொடுதலை

தலைப்படல், தலைப்பாகு, தலைப்படுதல் } எதிர்த்தல், தொடங்கல், வளர்தல், வாழ்தல்.

தலைப்படுதானம் - முத்தானத்தொன்று அது அறத்தாலீட்டியபொருளை முக்குற்ற மற்ற நற்றவத் தோரைக் கொள்கெனப்பணிந்து குறையிரந்து தம்முள்ள முவந்தீதல்.
தலைப்படுத்தல் - வளரச்செய்தல், வாழ்வித்தல்.
தலைப்பட்டை - தலைக்கிடும்பட்டை.
தலைப்பணி - முடி.
தலைப்பந்தி - பந்தியின் முதலிடம்.
தலைப்பற்று - தளப்பற்று.
தலைப்பனி - முன்பனி.

தலைப்பா, தலைப்பாகை } ஒருவித தலைச்சீலை.

தலைப்பாடு - கூடுதல், பொறுப்பு, வளர்ச்சி.
தலைப்பாரம் - தலைக்கனம், தலைச்சுமை.
தலைப்பாளை - தலைப்பாவினொருறுப்பு.
தலைப்பிரட்டு - தொந்தரை.
தலைப்பிரட்டை - கடற்றவளை.
தலைப்பிரிதல் - விட்டுப்பிரிதல்.
தலைப்பிள்ளை - முதற்பிள்ளை.
தலைப்பு - காரியமுடிவு, நுதி, விடுதலைப்பு.
தலைப்புக்கின்னுதல் - கொழுந்து நன்னுதல்.
தலைப்புச்சாய்த்தல் - தலைப்புவகுக்கி விடுதல். தலைப்பு, வெட்டல்.
தலைப்புரட்டு - தொந்தரை.
தலைப்புரட்டை - ஓரெறும்பு.
தலைப்புரளுதல் - மேன்மேல்மிகுதல்.
தலைப்புரம் - முப்புரம்.
தலைப்புற்று - ஒருநோய்.
தலைப்பெயல் - முதல்மழை.
தலைப்பெய்தல்-ஒன்றாய்க்கூடுதல்.
தலைப்போடுதல் - கையிட்டுச் சொன்னுதல்.
தலைப்போர் - முதவினை.
தலைமகள் - தலைவி, மனைவி, முதற்புத்திரி.
தலைமகன் - அதிகாரி, சாதிமான், நாயகன், பெருமையிற்சிறந்தோன், முதற்புத்திரன், வீரன்.
தலைமக்கள் - மேன்மக்கள்.
தலைமடக்கம் - அடக்கம்.
தலைமடக்கு - ஆதிமடக்கு.
தலைமடங்கல் - கீழ்ப்படிதல், தணிதல், வளைதல்.
தலைமடை - வாய்க்காற்றலை.
தலைமண்டை - தலையோடு.
தலைமயக்கம்-இடக்தடுமாற்றம், கலக்கம், தலைச்சுழற்சி, மதிமயக்கம்.
தலைமயங்குதல்-எங்கும்பொலிதல், கலத்தல், கூடுதல், தலைதடுமாற்றம்.
தலைமயிர் - சிரோருகம்.
தலைமாடு - தலைப்புறம்.
தலைமாணாக்கர் - முதன்மாணாக்கர்.
தலைமாலை - சிரமாலை.

தலைமுடி - சிகை.
தலைமுழுகுதல் - சருவாங்கஸ்நானம்பண்ணல், மூர்ருசகட்டப்படுதல்.
தலைமுழுக்கு - சருவாங்கஸ்நானம், மகளிர்சூதகம்.
தலைமுறை - ஒருவரிருந்து வாழுங்காலம்.
தலைமூச்சினை } நீராக்கலக்கம்.
தலைமூர்ச்சனை }
தலைமேற்கொள்ளுதல் - அதிகரித்தல், பயபத்தியாயேற்றுக்கொள்ளுதல்.
தலைமை - அதிகாரம், பெருந்தன்மை, முதன்மை.
தலைமைப்பொருள் - வினைகொண்டுமுடிகிற பொருளினுயர்புடையது
தலையடி } தலைக்கதிராடித்தல், தொந்தரை.
தலையடிப்பு }
தலையணை - உபாதானம்.
தலையணைதாங்கி - கட்டிலினொருறுப்.
தலையல் - நீந்துபுனல், புதுநீர்வரவு, மழைபெய்துவிடுதல், மிகுதி.
தலையழிதல் - கெடுதல்.
தலையளித்தல் - காத்தல்.
தலையனுமானம் - ஓரளவை, அது குன்முகில் கண்டு மழைபெய்யுமென்றறிதல்.
தலையாகுமோனை - ஓரடியின் முதற்சீர் மற்றையடியினுமுதற்சீராய்வருவது
தலையாகெதுகை - அடிகளின் முதன்மொழி முதலெழுத தொழிய ஒருபடித்தாய் வருவது.
தலையாடி - தலைப்புத்துண்டு.
தலையாயார் - பெரியோர்.
தலையாய்ச்சல் - முதலாய்ச்சல்.
தலையாரி - காவற்காரன்.
தலையாலங்கானம் - இது நெடுஞ்செழியன் பகையரசரைப் பெரும்போரில் வென்றவிடம்திருவாலங்காட்டோடு மயங்காவண்ணம் தலையாலங்கானமெனப்படுவதாயிற்று.
தலையிடி - தலைக்குத்து.
தலையிடுதல் - ஏற்படுதல்.
தலையிலெழுத்து - தலைவிதி.
தலையில்லாச்சேவகன் - நண்டு.
தலையிறக்கம் - தலைத்தூக்கம்.
தலையிற்சீலை - தலைசுற்றும் புடவை.
தலையீற்று - முதலீற்று.
தலையுலாஞ்சல் - தலைநடுக்கம்.
தலையுவா - அமாவாசி.
தலையெடுத்தல் - ஆட்படுதல், தலைநிமிர்தல்.
தலையெடுப்பு - அதிசப்படல், நிமிர்ச்சி.
தலையெழுத்து - தலைவிதி.
தலையேறுதண்டம் - வில்லங்கம்.
தலையோடு - தலைமண்டை.
தலைவடி - முதல்வடி.
தலைவணக்கம் - தலைவளைத்தல், மடக்கம், வணக்கம்.
தலைவணங்கல் - வணங்கல், வளைந்துசாய்தல்.
தலைவலி - தலைக்குத்து.
தலைவன் - அண்ணன், அரசன், எப்பொருட்கு மிறைவன், குரு, புருடன், மூத்தோன்.
தலைவாசகம் - தலையேட்டுவசனம்.
தலைவாசல் } முதல் வாய்தல், வாய்தன் மண்டபம்.
தலைவாயில் }
தலைவாய்தல் }
தலைவாரை } ஒருதலைப் பெட்டி.
தலைவாரைப்பட்டை }
தலைவார்தல் - மயிர்சீவுதல்.
தலைவி - எப்பொருட்குமிறைவி, மனைவி.
தலைவிதி - தலையெழுத்து, விதி.
தலைவிரிகோலம் - அலங்கோலம்.
தலைவிரிச்சான் - சாரணை, செருப்படை, தலைமயிர் முடியாதவன்.
தலைவிரிச்சான்கூட்டம் - ஸ்திரீசனம்.
தலைவிரித்தான் - சாரணை, செருப்பட்டி.
தலைவிரியன் - மூளிவாய்ப்பெட்டி.
தலைவிலை - முதல்விலை.
தலைவீச்சு - தலைச்சுழற்சி.
தலைவைத்தல் - தலைப்போடுதல், முன்னிடுதல்.
தலோதரி - மனையாட்டி.
தலோதை - நதி.
தல்லம் - குழி, நீர்க்குண்டு.
தல்லி - தாய்.
தல்லிகை - திறப்பு.
தல்லு - புணர்ச்சி.
தல்லுமெல்லு - இழுபறி.
தல்லை - இளம்பெண், தெப்பம்.
தவ - குன்றல், மிகுதி.
தவக்கம் - தடை, தாகம், தேவை, வாட்டம், விருப்பம்.
தவக்கை } தவளை.
தவக்களை }
தவங்கம் - துக்கம்.

தவங்குதல் - தக்கித்தல், வாடுதல்.
தவசம் - தானியம், பலபண்டம்.
தவசி - தவத்தோன், பண்டாரி.
தவசிப்பிள்ளை-குருவின்வேலைக்காரன்.
தவசு - தவம், விரதம்.
தவசுமுருங்கை - ஒருபூடு.
தவச்சாலை - தவம்பண்ணுமிடம்.
தவஞ்செய்தல் - தவசுபண்ணல்.
தவடை - தாடை.
தவணை-எல்லை, கெடுவு, நீந்துவோர்க்கிடு மிதவை.
தவணைச்சீட்டு - காலங்குறித்தெழுதுஞ்சீட்டு.
தவண் - தடை.
தவண்டை - ஒருவாத்தியம், தவிப்பு, அகளிதம்.
தவண்டையடித்தல் } தவித்தல், அளிதமாடுதல்.
தவண்டையாடுதல் }
தவண்மந்திரம் - தடைமந்திரம்.
தவத்தர் - முனிவர்.
தவத்தல் - தவற்றுதல்.
தவத்துதல் - தவத்தல்.
தவத்தி - தவசி.
தவநிலை - தவவேடம்.
தவந்து - தானியம்.
தவப்பற்று - தவவிருப்பு, அது மனதினற்குண மூன்றினொன்று.
தவப்பெண் - தவஞ்செய்பவள்
தவம்-காடு, காட்டாக்கினி, தவசு, அது இராசதகுணத்தொன்று, சாத்துவிதகுணத்துமொன்று, புண்ணியதோற்ற கான்கினுமொன்று, தீ, வெப்பம்.
தவராஜம் - வெள்ளைச்சர்க்கரை.
தவருதல் - சிந்துதல், தப்புதல், தொளைத்தல்.
தவர்-தவரென்னேவல், தொளை, முனிவர் வில்.
தவலபட்சம் - அன்னப்புள், சுக்கிலபட்சம்.
தவலபாடலி-வெண்பாதிரிமரம்.
தவலமிருத்திகை - வெள்ளைப்பாஷாணம், வெள்ளை மண்.
தவலம் - அவுபலபாஷாணம்.
தவலாங்கி - சாச்சுவதி.
தவலி எருது, ஒருமீன், வெண்ணிறம்.
தவலுதல் - முன்சறல், ஈதல்.
தவலை - தபலை.
தவலோகம் - தபோலோகம்.
தவலோத்பலம் - வெள்ளாம்பல்.
தவல் - குறைவு, கெடுதல்.
தவவேடம் - தவச்சொருபம்.
தவழவாங்குதல் - கூனவாங்குதல்.
தவழ்சாதி - தவழுயிர்வருக்கம்.
தவழ்தல் - நகருதல்.
தவழ்புனல் - ஆற்றுச்சலம்.
தவழ்வன - தவழ்சாதி.
தவளச்சத்திரம் - வெண்குடை.
தவளபக்கம் - சுக்கிலபக்கம், வெண்ணுரை.
தவளமிருத்திகை - சுண்ணம்பு.
தவளம் - கருப்பூரம், சங்கபாஷாணம், வெண்மிளகு, வெண்மை.
தவளாங்கம் - வெள்ளைமேனி.
தவளாம்பரம் - வெள்ளைவஸ்திரம்.
தவளிதம் - வெண்மை.
தவளை - தப்பளை.
தவளைக்கல் - சொறிக்கல்.
தவளைக்குறங்கு ஆபரணத்தினொர் பூட்டு.
தவளைப்பாச்சல் } குத்திர நிலைகான்கினொன்று, தவளைத்தத்து.
தவளைப்பாய்த்து }
தவளோற்பலம் - வெள்ளாம்பல்.
தவறல் - கடத்தல், குறைதல், சாதல், தப்புதல்.
தவறு குற்றம், தப்பு, தவறென்னேவல்.
தவறுதல் - அழிதல், சாதல், தப்புதல், வழுவுதல்.
தவற்றுதல் - விலக்கல்.
தவனகம் - மருக்கொழுந்து.
தவனம் - ஆசை, தாகம், வெப்பம்.
தவனன் - சூரியன், நெருப்பு.
தவன் - எதமன், தவத்தி, புருடன்.
தவாக்கினி - காடாக்கினி.
தவாதயம் - உபத்திரம், நிலைகலங்கல்.
தவாணகம் - காற்று.
தவாநிலை - வழுவாநிலை.
தவால் - அஞ்சல்.
தவாவினை-தவருச்செயல், மலை, முத்தி.
தவாளித்தல்-துவாளிப்பாய்த் தோண்டல்.
தவாளிப்பு-கண்ணறை, துவாளிப்பு.
தவிசம் - சமுத்திரம், மோட்சம்.
தவிசு - ஆசனம், தடுக்கு, திராவகம், தொட்டில், பாய், மெத்தை.
தவிசு - அரிசியின்றுகள்.
தவிட்டான் - ஒருமரம்.
தவிட்டுக்கிளி - ஒருதத்துக்கிளி.
தவிட்டுச்செடி - மலைக்கொய்யா.

தவிட்டுப்பார்சோற்றி - ஒருபூண்டு.
தவிட்டுப்புறா - ஒருபுறா.
தவிட்டுமேனி - சவட்டுப்பு.
தவிட்டை - ஒருமரம், தவிட்டுப்புறா.
தவித்தல் - இளைத்தல், தாகப்படல்.
தவித்திரம் - மான்றோலினாற்செய்த வி [சிறி.
தவிப்பு - இளைப்பு, தாகம்.
தவிப்புவைத்தல் - தகாவைத்தல்.
தவிர்தல்-ஒழிதல்,வற்றுதல், விலகுதல்,
வெறுத்துவிடுதல்.
தவிர்த்தல் - விட்டுவிடுதல், விலக்குதல்.
தவிர்ப்பு - ஒழிவு, தடை, விலக்கு.
தவிர்வு - ஒழிவு, விலக்கு.
தவிலை - ஒருபாத்திரம்.
தவில் - ஒருபறை.
தவிழ்தல் - தவிர்தல்.
தவீசம் - தவிசம்.
தவுக்கார் - சுண்ணச்சாந்து.
தவுசயம் - முருக்கு.
தவுசெலம் - முருங்கை.
தவுடு - தவிடு.
தவுட்டை - ஒருசெடி.
தவுதல் - குன்றல், கெடுதல், சாதல்.
தவுரிதகம் - தெளரிதகம்.
தவுரிதம் - தெளரிதம்.
தவ்வல் - இளைது, தவ்வுதல்.
தவ்வி - அகப்பை.
தவ்வு - சிதைவு, தவ்வென்னேவல், அளை, பாய்ச்சல்.
தவ்வுதல் - குந்திநடத்தல், கெடுதல்.
தவ்வெனல் - குறைதல்.
தவ்வை - அக்காள்,செவிலித்தாய் மூதேவி.
தழங்கல் } ஒலித்தல்.
தழங்குதல் }
தழம் - தயிலம், புறவுருபு.
தழலல் } அழலல்.
தழலுதல் }
தழலல் - கவண், கார்த்திகைநாள், கிளிகடிகோல், கொடுவேலி, தழலென்னேவல், தீ, வெப்பம்.
தழற்கல் - சுக்கான்கல்.
தழற்சி - அழற்சி.
தழர்பூமி - உவர்மண்.
தழனிறமணி - சாதிரங்கப் பதுமராகம்.
தழாத்தொடர்-உருபும்பயனிலையுந் தழுவாது புணரும் புணர்ச்சி.
தழால் - தழுவல்.

தழிஞ்சி சாய்ந்தோர் மேற் படாமை.
தழீந்தழீமெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
தழுதணை - படர்மேகத்தடிப்பு.
தழுதழுத்தல் } நாத்தடுமாறிப்பேசல்.
தழுதழுப்பு }
தழுதாழை - ஒருமரம், அது தசமூலத்தொன்று. [மறு.
தழும்பு - காயம், குற்றம், நாத்தழும்பு,
தழும்புபடுதல் - குற்றப்படுதல், மறுப்படுதல்.
தழுவணை - அணைக்குந்தலையணை, கட்டிலட்டை, சாய்மானமெத்தை.
தழுவல் - தழுவுதல்.
தழுவாவட்டை - கடலட்டை.
தழுவு - ஆலிங்கனம், கொடுங்கையளவு.
தழுவுதல் - ஏற்றுக்கொள்ளுதல், கட்டியணைத்தல், கலத்தல்.
தழுவுதொடர் - உருபும் பயனிலையும் விரிந்து புணரும் புணர்ச்சி.
தழுஉம் - தழுவுவிக்கும்.
தழை-இலை,தழையென்னேவல்,தளிர், பீலிக்குடை, மயிற்றோகை.
தழைக்கை - தழைத்தல்.
தழைதல் - செழித்தல், தளிர்த்தல், வாழ்தல்.
தழைத்தல் - தளிர்த்தல்,வளர்தல்,வாழ்ந்திருத்தல்.
தழைப்பு } செழிப்பு, தளிர்த்தல், பெருக்கம், மிகுதி, வாழ்வு.
தழைவு }
தளகர்த்தன் - சேனைத்தலைவன்.
தளதளத்தல் - இளகல், சோபித்தல்.
தளதளப்பு - இளக்கம், சோபை, முகமலர்ச்சி.
தளதளெனல் - இளகக்குறிப்பு, சோபைக்குறிப்பு.
தளநார் - தளர்நார்.
தளபதி - தளகர்த்தன்.
தளபாடம் - தட்டுமுட்டு.
தளப்படி - ஆயாசம்,கிலைதளம்பல்,முட்டுப்பாடு.
தளப்பம் - தளப்பற்றுமரம், தளர்வு.
தளப்பற்று - சிதாளியோலை.
தளப்பற்றுக்காரன் - தளப்பற்றுப்பிடிக்குங்கையாள்.
தளப்பற்றமீன் - ஒருமீன்.
தளமெடுத்தல் - படையெடுத்தல்.

தளம் - இலை, உப்பரிகை, கப்பலின் தட்டு, கூட்டம், சாடி, சாணைப்பிடியாத கெம்பு, சாந்து, தடிப்பு, நிலத்தின் றளம், படை, பறந்தவடிவு, பூவிதழ், வீட்டின் றளம்.
தளம்பல் - அசைதல், ததும்பல், நடுங்கல், நிலைகுலைதல், முட்டுப்படல்.
தளம்பு - மதகு.
தளம்புதல் - அசைதல், ததும்புதல் நடுங்குதல், நிலைகுலைதல், முட்டுப்படுதல்.
தளரவிடுதல் - தொய்யவிடுதல்.
தளருடை - அவைகந்தவுடை.
தளர் } சோம்பல், சோர்வு, தரித்
தளர்ச்சி } திரம், மெலிவு, வருத்தம்.
தளர்தல் - தளர்ச்சி, நுகைதல், விருதாப் பியமாதல். [தல்.
தளர்த்தல் - நுகைத்தல், பலவீனப்படுத்
தளர்நடை - தள்ளாட்டநடை, மிருதுவான நடை.
தளர்நார் - மரமேற்றக்காரர், காலுக் கிடு
தளர்பாடம் - தாராளமானபாடம். [நார்.
தளர்வு - சோர்வு, நுகைவு.
தளவம் - முல்லை முல்லைக்கொடி.
தளவரிசை - கற்படுக்கை, நிலத்திற் பாவுங்கல்.
தளவாடம் - தளபாடம்.
தளவாய் - ஆராய்ச்சி, படைத்தலைவன்
தளவாய்க்கோவை - ஒருகோவை.
தளவாய்த்துவம் - சேனாதிபத்துவம்.
தளவாளம் - தளபாடம்.
தளவிசை - தளவரிசை.
தளவு - முல்லை.
தளிகுளிர் - கோயில், நீர்த்துளி, மழைத்துளி, விளக்குத்தகழி, விளக்குத்தண்
தளிகை உண்கலம், புற்கைக்கட்டி. [டு.
தளிசை - புற்கைக்கட்டி.
தளிமம் - அழகு, கட்டில், திண்ணை, மக்கட்படுக்கை, மெத்தை, வாள், வீடு கட்டற் கெத்தனிக்கும் நிலம்.
தளிரடி } பெண்.
தளிரியல் }
தளிர் - தழை, தளிரென்னேவல்.
தளிர்த்தல் - துளிர்த்தல்.
தளிர்ப்பு - துளிர்ப்பு.
தளுகன் - புளுகன்.
தளுகு - புளுகு. [குதல்.
தளுக்கிடுதல் - அழுத்தமாகுதல், மினுக்
தளுக்கு - ஒளி, தளுக்கென்னேவல், மினுக்கம், மூக்குத்தி.
தளுக்குணி - உரோசமில்லாதவன்.
தளுக்குதல் - அப்புதல், ஒப்பரவுபண்ண
தளும்புதல் - தளம்புதல். [ல்.
தளை - ஆண்மயிர், கட்டு, கால்விலங்கு, காற்சிலம்பு, சிறை, தளையென்னேவல், யாப்புறுப்பெட்டினொன்று. அது நின்ற சீர்ற்றசையோடு வருஞ்சீர் முதலசை யொன்றியு மொன்றாதுங் கூடி நிற்பது, வரம்பு.
தளைதட்டு - தளைபிழைப்பு.
தளைதட்டுதல் - யாப்பிற்றளை பிழைத்தல்
தளைதம் - தளை.
தளைதல் - கட்டுண்ணல், கட்டுதல்.
தளைத்தல் பிணித்தல்.
தளைநார் - தடைநார்.
தளைபடுதல் } சிறைப்படல், கட்
தளைப்படுத்தல் } டுப்படுதல்.
தளைப்பு - கட்டு.
தளைப்பொருத்தம் - செய்யுட்டளையிணக்கம்.
தளையல் - கட்டுதல், மறியற்படுத்துதல்.
தளையவிழ்தல் - கட்டுவிட்டு விரிதல், பூமலருதல்.
தளையன - குயவர், சாணார், மறவர், இவர்களிற்றலைவன்.
தள்ளம்பாறுதல் - தத்தளித்தல், தள்ளாடுதல்.
தள்ளல் - தவறு, தள்ளுதல், பொய்.
தள்ளாடல் } அசைதல், தள்ளம்பா
தள்ளாடுதல் } றுதல்.
தள்ளாட்டம் - அசைவு, தடுமாற்றம்.
தள்ளாமை - இயலாமை, இல்லாமை,
தள்ளிச்சி - பூநீறு. [தளர்ச்சி.
தள்ளு - கழிவு, தள்ளென்னேவல்.
தள்ளுண்ணல் - தள்ளப்படுதல்.
தள்ளுதல் - இடங்கொடுத்தல், இயலுதல் ஒட்டுதல், கக்குதல், கழிக்குதல், தாக்குதல், நெருக்குதல், விட்டுவிடுதல்.
தள்ளுநாக்குப்படுதல் - இழுபறிப்படுதல்
தள்ளுபடி - குறைவு, நீக்கம், விலக்கு.
தள்ளுமட்டம் - யானையினிளங்கன்று.
தள்ளுமெள்ளு - இழுபறி.
தள்ளை - மாதா.
தறதறத்தல் } ஈரடுக் கொலிக்குறிப்பு
தறதறெனல் }

தறி - கட்டுத்தறி, கோடரி, தறியென்னேவல், தூண், நெய்வோர்தறி, முளைவெட்டு.
தறிகிடங்கு - ஆலைக்கிடங்கு.
தறிகை - உளி, கோடரிதறி, மழு.
தறிக்கால் - கொடிக்காற்வாய்.
தறிதல் - தறிபடல்.
தறித்தல் - வெட்டல்.
தறிப்பு - தறித்தல்.
தறியாணி - வெட்டிரும்பு.
தறுகணாளன் - குரூரன், படைவீரன்.
தறுகண் - அஞ்சாமை, குரூரம், மரம்.
தறுகண்ணன் - தறுகணாளன்.
தறுகண்மை - தறுகண்.
தறுகல், தறுகுதல் - தடைப்படல், தவறுதல்.
தறுகுறும்பன - அர்ச்சனன், வணக்கவில்லான்.
தறுகுறும்பு - தப்பிதம், திட்டத்தனம், வணக்கமின்மை.
தறுக்கணித்தல் - கர்போலாதல், கன்றுதல்.
தறுக்கணிப்பு-கன்றிப்பு.
தறுச - இழைச்சுளிர்த்தி.
தறுதலை - தறுகுறும்பு.
தறுதலையன், தறுதும்பன் - தறுகுறும்பன்.
தறுதும்பு - தறுதலை.
தறுப்பு - தருப்பு.
தறும்பு - சீரலை, வரம்பு.
தறுவாய் - உற்றசமயம்.
தறுவி - மருந்து முதலியன பூசுமோர்
தறுவுதல் - குறைதல். [சருவி.
தறை - ஆணியின் சடை, தரை, தறைதல், தறையென்னேவல்.
தறைதல் - ஆணிமுதலியவற்றை யிறுக்கல், சடைதல், தைத்தல்.
தறையாணி - கடையாணி.
தற்கம் - தருக்கம்.
தற்கரன் - கள்வன்.
தற்காத்தல் இரட்சித்தல், தன்னைக்காத்தல், பாதுகாத்தல்.
தற்காத்தர்க்கதோசி-அறிவித்தற்காகிதம்
தற்காப்பு - தற்காவல், பாதுகாப்பு.
தற்காலகிரகநிலை - குறித்த காலத்துக் கிரகநிற்கும் நிலை.
தற்காலசுத்தஸ்படம் - குறித்த காலத்துக் கிரகங்கணிற்கும் நிலையைச் சரியாயறியுஞ் சுத்த கணிதம்.
தற்காலமத்திமம் - குறித்த காலத்துக் கிரகங்கணிற்கும் நிலையைப் பொதுவாக வறியு மத்திமகணிதம்.
தற்காலம் - தற்சமயம். [கிரயம்.
தற்காலவிலை - தற்சமயவிலை, அக்காலக்
தற்காலித்தல் - தற்காலபுடம்வைத்தல்.
தற்காலிகம் - கிடைத்ததை யுண்ணல்.
தற்காவல் - தற்புகிறை, தற்காப்பு.
தற்கி - தருக்கம்பண்ணுபவன், தருக்கியென்னேவல்.
தற்கித்தல் - கியாயமுத்தரித்தல், வாக்குவாதம் பண்ணல்.
தற்கிப்பு - தருக்கம்.
தற்கிழமை - ஒற்றுமையாயுரியது.
தற்குணம் - சுயகுணம்.
தற்குளகம் - சத்தாகிவிடயம்.
தற்குறி - கைக்கீறு, தற்குறிப்பு.
தற்குறிப்பணி - அலங்காரம், அது ஒரு பொருளை மற்றொரு பொருளின் றரும்சம்பந்தத்திலல்லிஃதஃதென்றெனத் தெரிந்தும் அப்பொருளாகத் தற்குறிப்புச் செய்தல்.
தற்குறிப்பு - தானாய் நியமிப்பது.
தற்குறிப்பேற்றம் - அலங்காரம், அது ஒரு பொருளின்க ணியல்பாய் நிகழ்வது தவிரப் பிறிதொன்றை யேற்றிச்சொல்லுதல்.
தற்குறைச்சல் - குறைவு, தேய்வு.
தற்கொலை தன்னைத்தான்கொல்லுதல்.
தற்கோலம் தக்கோலம், ஒருசைவசூ
தற்சணம் - உடனே. [த்திரம்.
தற்சமயம் வடமொழிக்கும்பிறபாடைக்கும் பொதுச்சொல்.
தற்சமயம் - அச்சமயம், உற்றசமயம்.
தற்சனி - சுட்டுவிரல்.
தற்சாட்சி - பரமாத்துமா, மனச்சாட்சி.
தற்சிவம், தற்சிவன் - பரமேச்சுரன்.
தற்சினேகம் - தன்னைச் சினேகிக்குஞ் சினேகம்.
தற்சுட்டு - தற்குறிப்பு.
தற்சுதந்திரம் - தனக்குரியது.
தற்சுபாவம் - சுயகுணம்.
தற்சுரூபம் - சுயரூபம்.
தற்செயல் - தானாய்நிகழ்வது.
தற்செய்தல் - பலித்தல், வாய்த்தல்.
தற்செல்வம் - வலி.

தற்பகன் - தருப்பகன்.
தற்படீடம் - மூட்டைப்பூச்சி.
தற்பணம் - தருப்பணம், பளிங்கு, முது செலும்பு, யானைமுதுகு.
தற்பதம்-கடவுள், தனையுந் தலைவனை யுமறிதல்.
தற்பதி - கமுகு.
தற்பம் - அகங்கை, கஸ்தூரி, சில, பாவம், மக்கட்படுக்கை, மனைவி, மெத்தை, மேனிலை, வஞ்சனை.
தற்பரம் } கடவுள், சிவன்.
தற்பரன் }
தற்பறை - ஒருமாத்திரையில் முப்பத்தி லொன்று, சிவசத்தி
தற்பரம் - வெள்ளாம்பல்.
தற்பவம் - வடமொழித்திரிந்தசொல்.
தற்பாடி - வானம்பாடி.
தற்பி - இந்திரன், இந்திரன்கொடி., தற் பியென்னேவல்.
தர்பித்தல் - தருப்பித்தல்.
தற்பிரகாசம் - சுயம்பிரகாசம்.
தற்புகழ்ச்சி - தன்மேம்பாடுகூறல்.
தற்புணர்ச்சி - சுயபுணர்ச்சி.
தற்புருடம் - சிவனைம்முகத்தொன்று.
தற்பெருமைப்புகழ்ச்சி ஓரணி அது தன் பெருமையைக் காட்டிப் புகழ்தல்.
தற்பெருமையிகழ்ச்சி - ஓரணி அது புக ழுடையோர்தம்மைத்தாமேயிகழ்ந்து கூறல்.
தற்பொழிவு - தன்னியம்.
சற்பேதம் - தன்னறிவு, பிரஞானம்.
தனகரன் - கள்ளவன், குபேரன், சுதந் தரன்.
தனகு - உள்ளக்களிப்பு, தன கென்னே
தனகுதல் - களித்தல், சருவுதல் [வல்.
தனகேலிகன் - குபேரன்.
தனக்காரர் - ஒருசாதியார்.
தனசித்திரம் - பொற்பணி.
தனித்தியோதன் - திருதபிமகன், அபி ஜித்தன்.
தனஞ்சயன் } அருச்சுனன், உயிர்போ
தனஞ்செயன் } கினும் போகாதுடலை வீக்கித் தலைகிழித்தாலும் வாயு, தீ தனஞ்சயம் என்னும் திகண்டு செய்த சமஸ்கிருத கவி. மணவூரிலிருந்த ஒரு வணிகன். இவனேகடம்பவனத் திற் சொக்கலிங்க மூர்த்தியைக் கண்டுவந்து குலசேகரபாண்டியனுக் குத் தெரிவித்ததனை நகராக்குவதற் குக் காரண கர்த்தனுயிருந்தவன்.
தனதற்பம் - செல்வவிடம்பம்.
தனதன் - ஈகையாளன், குபேரன், சிவ ன்றோழன்.
தனதானுசன் - இராவணன்.
தனதிருட்சணம் - பொருளாசை.
தனது - சிநேகம், தன்னுடையது.
தனபதி - குபேரன்.
தனபதித்துவம் - உதாரகுணம்.
சனபாரம் - கொங்கை.
தனபோகம் - சையோகம்.
தனம் - எண்ணிலோரடையாளம், சம் பத்து, தன்மை, பசுக்கன்று, பொன்.
தனயன் - புத்திரன்.
தனயை - புத்திரி.
தனரேகை - கையிரேகையிலொன்று.
தனலக்குமி - அட்டலக்குமியிலொன்று.
தனவசியர் - தனவைசியர்.
தனவந்தன் - செல்வன்.
தனவனு - ஆச்சாமரம்.
தனவான் - செல்வன்.
தனவை - சிறுகாஞ்சொறி.
தனவைசியர் - மூவைசியரி லொருவர். அவர் வணிகர்.
தனவை - சிறுகாஞ்சொறி.
தனாட்டி - தனவாட்டி.
தனாட்குயன் - தனவான்.
தனாதிகிருதன் - பொக்கிஷகாரன்.
தனாதிபன் } குபேரன், பொக்கிஷ
தனாதியட்சன் } காரன்.
தனாது - தன்னுடையது.
தனாபாரம் - தனம்.
தனாயனம் - கிரகசுற்றோற்றவழி, நீண் டவழி.
தனாற்சனம் - திரவியார்ச்சிதம்.
தனி-ஒப்பின்மை, ஒற்றை, கலப்பில்லா தது, சுத்தம், தனிமை, தனியென் னேவல்.
தனிகம் - கொத்தமல்லி.
தனிகன் - அர்த்தமன் புத்திரன். கார்த் த வீரியார்ச்சுனன் பாட்டன். கடன் றியாகி, கணவன், தனவான்.
தனிகா - கொத்தமல்லி.
தனிகை - இளம்பெண், பதிவிரதை, பெண்.

தனிக்குடை - தனியரசாட்சி.
தனிக்குறில்-தனிநிற்குங்குற்றெழுத்து
தனிக்கோலான் - கடவுள், சுயாதிபதி.
தனிசு - கடன், மாதிரி.
தனிச்சபை - இராசசபை.
தனிச்சொல் - தனிமொழி.
தனிட்டை - அவிட்டநாள்.
தனிதம் - முழக்கம்.
தனித்தல் - உதவியற்றிருத்தல், தனியாதல்.
தனித்தியிலிடுகுறி-ஒன்றிற்கும் பலவற்றிற்கும் பொதுவாய் வழங்கு மிடுகுறிப்பெயர்.
தனித்திருத்தல் - ஒன்றியாயிருத்தல், தனிமையாயிருத்தல்.
தனிநிலை-ஆய்தவெழுத்து, தனித்தநிற்கை.
தனிப்பாடு - தனிமை, முத்தகம் அது ஒன்றன் பேரிற்சொன்ன ஒற்றைக்கவி.
தனிப்பால் - கலப்பில்லாதபால்.
தனிப்பு - தனிமை.
தனிப்புடம் - ஓரிருக்கை.
தனிப்புரத்தல் - தனியரசாளல்.
தனிப்புரம் - அரண்மனை.
தனிப்புறம் ஏகாந்தலம், மறைவிடம்.
தனிப்பெறுதல் - தனிப்படுதல்.
தனிப்போர் - தனிப்பாடை.
தனிமகவு - பட்டத்துப்பிள்ளை.
தனிமகன் - பட்டத்தரசி.
தனிமுதல் - கடவுள்.
தனிமை - உவமையின்மை, ஏகாந்தம், தனிப்பு, பிரிவு. [தொன்று.
தனிமையாற்றல் - வணிகரென்குணத்
தனிமொழி - தனியேநிற்குஞ்சொல்.
தனியரசாட்சி-ஏகாதிபத்தியம், சுயவரசாட்சி.
தனியன் - ஒன்றி, தனித்தது, தனிப்பாட்டு.
தனியா - கொத்தமல்லி.
தனியிசை - கேசிசை.
தனியிருத்தல் - தனியேயிருத்தல்.
தனியுப்பு - அமுரி.
தனியுவமம்-ஒருபொருளுவமம், (உ-ம்.) கல்லெனஞ்சு.
தனியெழுத்து-கூட்டாவற்றதனியொலியெழுத்து.

தனிவலிப்பெருமான்
தனிவல்லி } குப்பைமேனி.
தனிவழி - துணையற்ற பிரயாணம்.
தனிவீடு-தனிமையானவீடு, மோட்சம்.
தனு-அத்தி, உடல், ஓரிராசி, காசிபர் மனைவி, சிறுமை, தக்கன்மகள், தானவர்தாய், தோல், பெண், முக்காரம், வில், கசியபன்பாரி, தக்ஷப்பிரசாபதிமகள். இவள் வழி, வந்தோர் தானவரெனப்படுவர்.
தனுகரன் - வில்லாச்சிரமி.
தனுகாண்டன் - அம்பு, வில்.
தனுகூபம் - உரோமத்துவாரம் [ணி.
தனுக்கோடி - சேதுதீர்த்தம், வின்னு
தனுகஞ்சாரிணி - பத்துவயதுப்பெண்.
தனுசர் - அசுரர், மகார்.
தனுசணி
தனுசன் } மகன்.
தனுசாத்திரம் - வில்வித்தை.
தனுசாரி - இந்திரன், திருமால்.
தனுசு - தனுவிராசி, வில்.
தனுசூனு - அரசன்.
தனுசை - மகள்.
தனுதரன் - வில்லுடையோன்.
தனுத்தரன் - கனவிசயர்க்குநட்பானஒருகிய ஒரு அரசன்.
தனுத்திரம் - போர்க்கவசம்.
தனுத்திருமம் - மூங்கில்.
தனுநபம் - வெண்ணெய்.
தனுப்பச்சை - பச்சைக்கல்.
தனுப்பாஷாணம்-சரகண்டபாஷாணம்
தனுப்பீசம் - இந்திரகோபம்.
தனுமணி - வில்விற்கட்டியமணி. அது ஆயிரம்பேரை வில்லால் விசயம்பெற்ற வீரர் கைவில்லின் விருது.
தனுமேகசாய்கை - நீலக்கல்,
தனுரசம் - வியர்வை.
தனுரணம் - தனுவிரணம்.
தனுரத்தினம் - சூடாலைக்கல்.
தனுராகம் - மாணிக்கம்.
தனுருகம் - உரோமம்.
தனுரேகை - தனுவாகாரமானரேகை.
தனுர் - தனுசு.
தனுர்வாதம் - ஒருவாயு.
தனுர்வேதம்-உபவேதநான்கிலொன்று
தனுவாதம் - ஒருநாகம், ஒருநோய்.
தனுவாரம் - போர்க்கவசம்.

தனுவித்தை - வில்லாச்சிரமக்கல்வி.
தனுவிரணம் - சிரங்கு.
தனுவிருக்கம் - ஆச்சாமரம்.
தனுவேதம் - தனுர்வேதம்.
தனேசன் - குபேரன்.
தனை - அளவு, எண்.
தனையள் - தனயை.
தனையன் - தனயன்.
தனையை - தனயை.
தனோபசயம் - திரவியார்ச்சனம்.
தன் - ஒருசாரியையுருபு.
தன்காலம் - தனது தத்துவஞ் செல்லத்தக்க காலம்.
தன்கு - களிப்பு.
தன்குலம்வெட்டி - கோடரிக்காம்பு, தனது வமிசத்தைக்கெடுக்கிறவன்.
தன்படுவன் - விளைவுப்பு.
தன்பாடு - தன்காரியம்.
தன்பொருட்டனுமானம் - தன்னைப்பியாசத்தினு லனுமானித்தறிதல்.
தன்பொறுப்பு - தனமேற்பாரம்.
தன்மணி - தருமஞ்செய்வோன்.
தன்மாதா - நல்லுபகாரி.
தன்மதிப்பு - தன்மேம்பாடு.
தன்மம் - அறம், தருமம், நன்மை, நீதி.
தன்மயம் - தற்சுபாவம்.
தன்மராசா - உதிட்டிரன், பாலைமரம்.
தன்மலைக்காசி - சாலக்கிராமம்.
தன்மகன் - இயமன், தருமன், திப்பிலி, திப்பிலிமூலம்.
தன்மாதன்மியம் - புண்ணியபாவம்.
தன்மாத்திகாயம் - புண்ணிய தேகத்தொன்று.
தன்மாத்திரை - பூதங்களினுதி, பொறிகளின் மூலம்.
தன்மானி - எளிமை, நிற்பந்தன்.
தன்மூப்பு - இட்டம், இறுமாப்பு.
தன்மூலம் - திப்பிலிக்கட்டை.
தன்மேம்பாடு - தற்புகழ்ச்சி.
தன்மேம்பாட்டுரை - ஓரலங்காரம். அது தற்புகழ்ச்சி.
தன்மை - ஓரலங்காரம். அது யாதொரு பொருளை அதன் தன்மை விளங்கச் சொல்வது, குணம், சுபாவம், வியாபாரம், மரியாதை, மாதிரி, மூவிடத்தொன்று.
தன்மையெழுத்து - உணர்வெழுத்து.

தன்யாசி - தன்னியாசி, ஒரிராகம்.
தன்வசம் - தன்பொறுப்பு, தன்மாதிரி.
தன்வந்தரி - ஒரு வைத்திய சாஸ்திரி. அவன் திருப்பாற்கடல் கடையும் போதுண்டான தேவர் மருத்துவன், சிவன், சூரியன் தீர்க்கதன்மன், புத்திரன். பூர்வம் சமுத்திரமர்த்தன காலத்திற் பாற்கடலிற் பிறந்த தன்வந்தரியே ஆயுர்வேதத்தை வெளிப்படுத்தவேண்டி இத்தீர்க்கதமன் புத்திரனுக அவதரித்தார். ஆயிரத்துத்தொளாயிரத்தைம்பத்தேழு வருஷங்களுக்கு முன்னே விக்கிரமார்க்கன் சபையில் விளங்கியவன். தன்வந்தரி என்னும் பட்டங்கொண்டவன். இவனே தன்வந்தரி நிகண்டுசெய்தவன்.
தன்வயத்தாதல் - கடவுள் தெண்குணத்தொன்று.
தன்வழி - தன்வசம்.
தன்வழிப்படுதல் - தன்வசப்படுதல்.
தன்விருத்தி - தன்றொழில்.
தன்வினை - ஊழ்வினை, எழுவாய்க்கருத்தாவின் புடையெர்ச்சியாய் நிகழுந்தொழில், தன்னுவாயதொழில்.
தன்வேதனை - சுயபரீட்சை.
தன்வேதனைக்காட்சி - அராகாதியாலறிந்தாசைப்படுவது.
தன்வையாதம் - சிறுகாஞ்சொறி.
தன்னடக்கம் - தன்னைக்கட்டுப்படுபண்ணல்.
தன்னத்தனி - மிகுதனி.
தன்னமதி - பிறைச்சந்திரன்.
தன்னமை - இணக்கம், ஒத்தாசை, சிநேகம், தாழ்மை.
தன்னம் - அற்பம், பசுவின்கன்று, மான்கன்று, நூர்புத்தி, வழக்கமிகவெடுத்துரைத்தல்.
தன்னயம் - தன்பலம்.
தன்னரசு - இட்டமானவாளுகை.
தன்னரசுநாடு }
தன்னரசுபற்று } இராஜாவில்லாத தேசம்.
தன்னரண்காத்தல் - எண்வகை வெற்றியிலொன்று.
தன்னவன் - தன்னுடையவன்.
தன்னறிவு - சுயவறிவு, தனக்குரிய வுணர்ச்சி, பிரக்ஞை.
தன்னிச்சை }
தன்னிட்டம் } எதேச்சை, மனப்படி.

தன்னியத்துவம் - செல்வமுடைமை.
தன்னியம் - தனது திரவியம், முலைப் பால்.
தன்னியல்புப்புரமேயம் - ஓரளவை. அது மிகுதிகாரணமாய் ஒன்றற்கு வழங்கியும் பிறவுமுளவென வியல்பி னற்கோடல்(உ-ம்.)சேதுப்புராணம்
தன்னியன் - தனவான், தீவினை நீங்கி னோன்.
தன்னியாசி - ஒரு இராகம்.
தன்னியை - வளர்த்ததாய்.
தன்னிரைமீட்டல்-எண்வகை வெற்றி யிடென்று.
தன்னிலை-சமனுய்நிற்கை, சுபாவநிலை.
தன்னிறமாக்கி - குளவி, பொன்.
தன்னிறம்-சுபாவநிலை,மாந்தளிர்ச்சிலை.
தன்னினி - வேங்கைமரம்.
தன்னீக்கள் - தன்னிட்டம், தான்ற விர்வாதல்.
தன்னுணர்ச்சி- தன்னறிவு.
தன்னுதல் -சற்றுச்சற்றுய்க் கொண்டு போதல்.
தன்னுதோணி } சிறுவத்தை.
தன்னுவத்தை
தன்னெடுப்பு - அகங்காரத. தன்முயற்சி.
தன்னை - இரண்டாம் வேற்றுமையுருபு டைப்படர்க்கை யொருமை விரவுப் பெயர், தமக்கை, தாய், மூத்தோன்.
தன்னைக்கட்டுதல்-தன்னைக் காவல்செ ய்தல், மனதைக் கட்டுப்படுத்தல்.
தன்னைப்பருப்பித்தல் - தன்னைப் புகழ் தல், தன்னை யுயர்த்தல்.
தன்னையறிதல் - இருதுவாதல், தன் றன்மையுணர்தல்.
தன்னையொறுத்தல் தனக்குள்ள செல வைக்குறைத்தல், தன்னைக் கொல் லல், தன்னை வாட்டுதல்.
தன்னொழுக்கம் - தன்னிலைக்குத் தக்க பரிமாற்றம்.
தன்ஞெடொற்றுமைப்பொருள் - தற் கிழமைப்பொருள்(உ-ம்)முருகன்கை.
தன்ஞெடொற்றுமைப்பொருள்- உடா ங்கப்பொருள்(-உம்.) முருகன்வேல்.

தா

தா-அழிவு, ஓரெழுத்து, குற்றம், கேடு, கொடியன், தாண்டுதல், தாவென் னேவல், பகை, பாய்தல், பிரமன், வருத்தம், வலி, வியாழம்.
தாகசாந்தி - விடாய், தணித்தல்.
தாகசுரம் - ஒருவகைச்சுரம்.
தாகப்புளி - விடாய்ப்புளி.
தாகமடக்கி - புளியாரை.
தாகமெடுத்தல் - தாகங்கொள்ளுதல்.
தாகம் - ஆசை, உணவு, எரிவு, எருது, நாண், நீர்விடாய், அது உயிர்வேத னையிடென்று, மாயயாக்கை பதி னெண் குற்றத்துமொன்று.
தாகனம் - தகனம்.
தாகன் - கொடையாளன், யாகஞ்செய் விப்போன்.
தாகாரித்துவம் - ஆகாயசுருபமறிதல்-
தாகித்தல் - தாகங்கொள்ளுதல்.
தாக்கணங்கு - இலக்குமி.
தாக்கணித்தல் - அத்தாட்சிப்படுத்தல்.
தாக்கம் - அதைப்பு, கனப்பு, வீக்கம்.
தாக்கல் - தாக்குதல்.
தாக்காட்டுதல்-ஆதரவுபண்ணுதல், உத விசெய்தல்,எய்தல்,பராக்குகாட்டல்.
தாக்கிதை - கட்டளைப்பத்திரம்.
தாக்கியன் தார்க்கியன்-
தாக்கிது - தார்க்கிதை.
தாக்கு - அடி, அதிர்ச்சி, இடம், உரம், கனம், சாதிப்பு, தாக்கென்னேவல், நிலவறை, நெல்வயல், போர், வலி, வேகம்.
தாக்குதல்-அடித்தல், எண்கூட்டிப்பெ ருக்கல், எதிர்த்தல், கனத்தல், தள் ளுதல், தாழுதல், பாய்தல், முட்டுண் ணல்.
தாங்கல் - குளம், சுமத்தல், தாங்குதல், மனக்குறை, விதனம்.
தாங்கான்மட்டை - தூற்பாவைத்தாங்க வைக்கு மட்டை.
தாங்கி - ஆதாரம், பணிகளின் கடைப் பூட்டு, பூண்.
தாங்கு -ஈட்டிக்காம்பு, தாங்கல், தாங்கி,
தாங்குகோல் - மரக்கோல்.

தாங்குதல் - அணைத்தல், ஆதரித்தல், காத்தல், சகித்தல், சுமத்தல், தரித்தல், தோணிதள்ளல், பொறுத்தல், தனப்படுதல்.

தாசத்துவம் - அடிமைத்தனம்.

தாசநந்தினி - சத்தியவதி. அவள் வியாசன்றாய். [வன்.

தாசநம்பி - சாத்தானியன், சாத்தாத

தாசபாலனம்-தயாவிருத்தி பதினொன்கினொன்று, அது அடிமைகாத்தல்.

தாசபுரம்
தாசபூரம் } ஒரு புல்.

தாசரதன் - இராமன்.

தாசரதி - தசரதபுத்திரனான இராமன்.

தாசரி - தாதன், மலைப்பாம்பு.

தாசருகன் - விட்டுணு.

தாசர்-அடிமைகள், நெய்தனிலமாக்கள்.

தாசன் - அடிமை, ஊழியக்காரன், சூத்திரன், ஞானி, தாதன், நெய்தனிலத்தவன்.

தாசி
தாசிகை } அடிமை, நாடகக்கணிகை, பரணிநாள், மேகவண்ணப்பூவுள் மருதோன்றி மரம்.

தாசிக்கல - காக்கைக்கல்.

தாசிதம் - அழிந்தது.

தாசியப்பிருந்தம் - பசுக்கூட்டம்.

தாசியம் - அடிமைத்தனம்.

தாசினப்பொடி - பன்மிளுக்குதூள்.

தாசு - இரண்டரை நாழிகை கொண்ட நேரம், குதாடுசருவி, நாழிகைவட்டில்.

தாசுவம் - கொடை.

தாசுவன் - கொடையாளன்.

தாசூரன் - ஒருமுனிவன்.

தாசேயன் - வேலைக்காரன்.

தாசேரகம்
தாசேரம் } ஒட்டகம்.

தாசேரன் - வேலைகாரன்.

தாசோகம் - அடியேன், ஒட்டகம்.

தாச்சி - சோலைப்புல், தாய்ச்சி.

தாடகம் - நீர்முள்ளி, வீழி.

தாடகை - ஓராக்கி, மானங்கெட்டவள். மாரீசன் தாய். இவ்விராக்ஷசியைஇராமன் விஸ்வாமித்திரரோடு யாகங்காக்கச் சென்றபோது வழியிலே கொன்றொழித்தான். இவள் சுகேதனென்னும் யக்ஷன்மகள் ஆயிரம் யானைப்பலமுடையவள். இவள் ஒருகாலத்தில் அகஸ்தியர் ஆச்சிரமத்திற்சென்று அவரைப் பயமுறுத்த, அவர், சினந்து நீயும் உன் புத்திரரும் இராக்ஷசாமிசம் பெறுக வென்று சபிக்கப்பட்டவள்.

தாடங்கம் - காதணி, தோடு.

தாடபத்திரம் - ஒரு காதணி. [மலை.

தாடம் - டப்பட்டில், ஒலி, தண்டித்தல்,

தாடனம்-அடித்தல், தட்டுதல், தட்டல்.

தாடன் - தாசன்.

தாடாண்மை - முயற்சி.

தாடாளன் - முயற்சியுள்ளோன்.

தாடாற்றி - ஆறுதல், சகாயம்.

தாடி மாடு முதலியவற்றின் கழுத்தாரம், மோவாய், மோவாய்மயிர்.

தாடித்தம் - அமர்த்தல், இடித்தல், தட்டுதல்.

தாடிமஞ்சம் - சத்திக்கொடி. [டுதல்.

தாடிமபட்சணம்
தாடிமப்பிரியம் } கிளி.

தாடிபம்-சிற்றேலம், தாதுமாதளை. [பம்.

தாடை- சன்னம்தாடி பெரும்பல்விருப்

தாட்குற்றியீறுதல் - செந்தாளினல்.

தாட்கோரை - ஒருபுல்.

தாட்சகன் - தக்கன்வமிசம்.

தாட்சணம்
தாட்சணியம்
தாட்சணை
தாட்சண்ணியம் } இரக்கம், தாழ்மை.

தாட்சம் - கொடிமுந்திரிகை, முந்திரி

தாட்சயம் - விவேகம். [கை.

தாட்சன் - கருடன். [ம்.

தாட்சாயணம்-பொன், பொன்னுபரண

தாட்சாயணி - பார்ப்பதி, இருபத்தேழ் நட்சத்திரப் பொது, உரோகணி, தர்க்கை.

தாட்சாயணிபதி - சந்திரன்.

தாட்சாயணிபன் - சந்திரன், சிவன்.

தாக்ஷாயணி தக்ஷப்பிரஜாபதி மகளாகிய உமாதேவி, அதிதி.

தாட்சாயம் - வலியான்.

தாட்சிணியம்
தாட்சிணை
தாட்சிண்ணியம் } இணக்கம், இரக்கம், சமர்த்து, மரியாதை.

தாட்சிபுத்திரன்
தாட்சேயன் } பாணினிமுனி.

தாட்டன் - கடுவன்குரங்கு, தலைவன், பெருமைக்காரன்.

தாட்டாந்தகம்-திருட்டாந்தப்பட்டது.
தாட்டாந்தம்- திருஷ்டாந்தத்தைக்கொண்டது.
தாட்டாந்தரம்-அத்தாட்சிவேண்டியன.
தாட்டான் - கணவன், தலைவன்.
தாட்டி - ஆண்மாரி,கெட்டிக்காரி, சாமர்த்தியம், தடவை,தலைவி, தைரியம்.
தாட்டிகம் - அகந்தை, பலம்.
தாட்டுப்போடு, தாட்டுமேட்டு } குழப்பம்.
தாட்டோட்டம், தாட்டோட்டு } எத்து.
தாட்படை - கோழி.
தாட்பாள் - கதவடைக்குந்தாள், நுழையடைக்குந்தாள். [ரம்.
தாணி - தாணியென்னேவல், தான்றிம
தாணித்தல்-குற்றமேற்றல், கறைதல், தாளித்தல், துப்பாக்கியில் மருந்திடுதல், பலப்படுத்தல்.
தாணு - குறுந்தறி, சிவலிங்கம், சிவன், தாபரம், தூண், நிலை, நிலைபேறு, புகலிடம், மலை, வெற்றி.
தாணையம் - பந்தயம்.
தாண்டகம் - ஒருபிரபந்தம், அது இருபத்தாறெழுத்தின் மிக்க வெழுத்தானடிகொண்டுவரும் பா.
தாண்டல் - தாண்டுதல்.
தாண்டவதாலிகன் - நந்திதேவன்.
தாண்டவப்பிரியன் - சிவபெருமான்.
தாண்டவம்-கூத்து,சிவன்கூத்து.
தாண்டவராயன், தாண்டவன் } சிவன்.
தாண்டவராயசுவாமிகள்-சோழதேசத்திலே நன்னிலநகரிலே அந்தணர் குலத்திலே அவதரித்து விளங்கிய இவர், வேதாந்த சாஸ்திர வுண்மை நிலைகண்டு கைவல்லிய நவநீதம்.என்னும் நூல் செய்தவர்.
தாண்டு-நடனசாத்திரம்.
தாண்டு - கடத்தல், குதி, தாண்டென்னேவல், வெற்றி.
தாண்டுதல்-ஆடுதல், கடத்தல், பாய்தல், [வெல்லுதல்
தாதகி - ஆத்திரம்.
தாதக்கூத்து - ஒருகூத்து.
தாதச்சி - தவப்பெண்.
தாததுல்லியன் - பித்ருசமானன்.
தாதநம் - கரிக்குருவி.

தாதமம் - பட்சித்தல்.
தாதமார்க்கம் - சரியைநிலை.
தாதம் - அசையப்பட்டவை, கொடை.
தாதரூப்பியரூபகம் - ஓரலங்காரம்.
தாதர் - அடிமைக்காரர்,கொடையாளர், தொண்டர், வைணவர்களில் ஒருவகையார்.
தாதலம் - நோய், பாகம், மனத்திடம்.
தாதன்-அடிமைக்காரன், ஈகையாளன், தொண்டன், பிதா. [பிரமன்.
தாதா - ஈகையாளன், பாட்டன், பிதா,
தாதாத்மியம், தாதான்மியம் } ஒருமைப்பட்டிருக்கை பிறித்தற்கியலாதது.
தாதாத்மியாத்தியாசம் - ஒன்றென்னும் பிராந்தி.
தாதி-அடியவள்,செவிலித்தாய்,தோழி.
தாதிரி - கொடையான்.
தாரோதகம் - இந்திரியம்.
தாதிரு - திருமால், பிதா, பிரமன்.
தாது - காவிக்கல், சத்ததாது.அது இரதம் இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை, சொன்மூலம், தாதுமாதளை, துகள், நரம்பு, பஞ்சபூதம், பஞ்சவிடயம், பத்தாவதாண்டு, பூந்தாது, பொன்னுதியேழு,மண்ணுதியைந்து, பூவிதழ்.
தாதுகட்டுதல் - சுக்கிலத்தம்பனம்பண்ணுதல்.
தாதுகலித்தல் - தாதுகக்குதல்.
தாதுக்களையோன் - புட்பராகம்.
தாதுசேகரம் - துருசு.
தாதுநட்டம் - தாதுச்சிதைவு.
தாதுபார்த்தல் - கைநாடியறிதல்.
தாதுமாதளை - பூமாதளை.
தாதுமாரிணி - பொரிகாரம்.
தாதுமூலசிவன் - இரச கிரச வஸ்துக்களுஞ் சிவவஸ்துக்களும்.
தாதுராஜகம் - விந்து.
தாதுரோகம் - ஒருவியாதி.
தாதுவல்லபம் - பொரிகாரம்.
தாதுவாதம் - கலைஞானமறுபத்துநான்கிலொன்று.
தாதுவாதி - பொன்முதலிய வுலோகங்களைப் பரிசோதிப்போன்.
தாதுவிருத்தி - தாதுவிளைவு.
தாதுவைரி - ஏலம், கடுக்காய், கந்தகம்.

தாதை - பேய்க்கொம்மட்டி, தகப்பன், பாட்டன், பிரமன். இவனும் விதாதையும் சுவாயம்புவ மனுவுக்குத் துணைவர்களாய் பிரமாவினற் சிருஷ்டிக்கப் பட்டவர்கள். இவர்களோடு வருணன்பாரியாகிய ஜியேஷ்டாதேவியும் விஷ்ணுதேவியாய் இலக்ஷுமியும் சிருஷ்டிக்கப்பட்டார்கள். இது ஒருகற்பத்துவரலாறும். மற்றொரு கற்பகாலத்தில் பிருகுவுக்குக் கியாதியிடத்திலே தாதை விதாதை இலக்ஷுமி இம்மூவரும் பிறந்தார்களென்பது பாகவதக் கூற்று.

தாதைதன்றாதை
தாதைதாதை } பாட்டன்.

தாத்தாரி - நெல்லி.

தாத்திரம் - கூன்வாள், கோடாலி

தாத்திரி - ஆடுதின்னப்பாளை, நெல்லி, பூமி, மாதா.

தாத்திரிசை - திரௌபதியினது பரிசா

தாத்திரிபலம் - நெல்லிக்கனி. [ரகி

தாத்திரிபுத்திரன் - வளர்ப்புப்பிள்ளை

தாத்திரியம் - வறுமை.

தாத்திருவாதம்-எத்து, கபடம், பொய்.

தாத்துதல் - தாற்றுதல்.

தாத்திரு-இருவாதசாதித்தரில்ஒருவன்

தாத்துவன் - உபகாரி.

தானதம்
தானாகம் } கொத்துமல்லி.

தானி ஒருநதி, ஒருமரம், கொத்துமல்லி, ஸ்தானம், வாசஸ்தானம்.

தாந்தம் - குருசிட்டி.

தாந்தவம் - குருகிட்டி.

தாந்தவம் - ஆற்றல், நெய்குதல்.

தாந்தனம் - காற்று.

தாந்தன் - தவஞ்செய்தலி னுண்டாகும் துன்பத்தைச் சகிப்பவன்.

தாந்திமம் - பஞ்சேந்திரிய நிக்கிரகம்.

தாந்திரிகம்-ஒருநோய் தந்திரத்திற் கடுத்தது, தந்திரசியாயத்துக் குரியது.

தாந்திரிகன் - நூல்வல்லோன்.

தாபகம்-அக்கம், நிலை, நிறுத்தல், வெப்பம், வைத்தல்

தாபகன் - நிலைநிறுத்துபவன்.

தாபசபத்திரிகம் - தவனம்.

தாபசப்பிரியை - கொடிமுந்திரி.

தாபசம் - ஒருமரம், கொக்கு.

தாபசன் - தவசி.

தாபசுரம் - ஒருநோய்.

தாபசோபம் - தளப்பம், திருவாட்டம்.

தாபதிலை - கைம்மைவிரதம், தபவொழுக்கம் செய்தற்புறம் அது தலைமகனை நீங்கிய, மாதர்நிலை.

தாபதம் - முனிவர்வாசம்.

தாபதர் - சடைமுடியர், சமண்முனிவர், முனிவர்.

தாபத்தியர் - தபதிவமிசத்துப் பிறந்த கௌரவ பாண்டவர்கள்.

தாபநன் - சூரியன்.

தாபநி - இரவு, ஒருநதி, ஒருமந்திரம்.

தாபேசீயம் - உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று.

தாபந்தம்
தாபந்திரியம் } வேதனை.

தாபமாரி - தான்றி.

தாபம் - உட்டணம், காடு காட்டாக்கினி, தாகம், துக்கம், துன்பம், வெப்பம்.

தாபரசங்கம் - எழுவகைத் தோற்றத் தொன்று, அது மாமுதலியன.

தாபரம் - ஆதாரம், உடல், கோயில், தஞ்சம், துணை, நிலத்திணைப்பொருள்,

தாபரன் - கடவுள். [பூமி.

தாபரித்தல் - தாங்குதல்.

தாபனம் - சூரியகிரணம், தாபிப்பு, வெப்

தாபி - புத்தன், யமுனையாறு. [பம்.

தாபிஞ்சம் - ஆமணக்கு, பச்சிலைமரம்.

தாபிதம் - சூடு, தாபித்தல்.

தாபித்தல் - இருத்துதல், தாபனம்பண்ணுதல்.

தாபியம் - வைத்தல்.

தாப்பணியார் - கசை, கல்லினைக்கச்சை, தாம்புக்கயிறு.

தாப்பால் - தாழ்ப்பாள்.

தாப்பிசை
தாப்பிசைபொருள்கோள் } பொருள்கோளெட்டினொன்று, அது நடுவினுள்ள மொழியை யேனையிரிடத்துங் கூட்டிப் பொருள் கொள்வது.

தாப்பு - குறித்தநேரம்.

தாப்புக்கொள்ளுதல் - சமயம் பார்த்திருத்தல்.

தாமக்கிரந்தி - அஞ்ஞாதவாசத்திற் குதிரைப்பாகனாகவேஷம்பூண்டநகுலன்பெயர்.

தாமசபதார்த்தம் - வெறியூண்.
தாமசப்பிரகிருதி - தாமதகுணத்தின்மூலம்.
தாமசம் - இருள், தாமதம்.
தாசன் - நான்காம்மனு இவன்றந்தை சுராஷ்டிரன், தாய் உற்பலாவதி.
தாமணி - கயிறு, தாம்பு.
தாமதம் - தாமதித்தல், முக்குணத்தில் ஒன்று இது ஒழுக்கவழு, காமம், கொலை, கோபம், சோம்பு, நீதிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சக முதலியன.
தாமதவேளை - மூன்றேமுக்கா னாழிகை கொண்டு வருமோர் காலம்.
தாமதித்தல் - தடைபடல், தரித்தல்.
தாமதித்தர் - திருக்குறளுக்குரை செய்த பதின்மருள் ஒருவர்.
தாமநிதி - சூரியன்.
தாமம் - அஞ்சத்தக்கது, அணைகயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கயிறு, கிரணம், கீர்த்தி, கொன்றைமரம், சரீரம், சுகம், தாமணி, திக்கு, பட்டினம், பிரபை, பிறப்பு, புள்ளினதாரம், பூ, பெருமை, போர்க்களம், மகத்துவம், மணிவடம், மலை, மாலை, முடியுறப்பு, மூவாறு கோவைமணியுள்ள மாதரிடையணி, யானை, விருப்பம், வீடு.
தாமரசம் - செம்பு, தாமரை, பொன்.
தாமரம் - நீர், நெய்.
தாமலா - சமலம்.
தாமரைக்கண்ணன் - விட்டுணு.
தாமரைக்கொட்டை - பொருட்டு.
தாமரைச்சத்துரு - ஒரு பாஷாணம்.
தாமரைநண்பன் } சூரியன்.
தாமரைநாயகன் }
தாமரைநூல் - தாமரைவளையத்திநூல்.
தாமரைமணி - தாமரைக்கொட்டை.
தாமரையாசனன் - பிரமன்.
தாமரையாசனி } அரிதாரம், இலக்குமி.
தாமரையாள் }
தாமரையான் - பிரமன்.
தாமரைவாசி - தாமரையாள்.
தாமலகி - கிலநெல்லி.
தாமலகிதளம் - தாளிசபத்திரி.
தாமலை - புன்னை.
தாமனபருவம் - சித்திரை சுக்கிலபக்கச் சத்தமி.
தாமணி - தாம்பு.
தாமான் - கப்பற்பின்பக்கத்துக் கயிறு.
தாமிசிரம் - நாமம், பேரிருள்.
தாமிரகருணி - மேற்றிசை யானைக்குப் பெண்யானை.
தாமிரசிகி - கோழி.
தாமிரசிந்தூரம் - ஒருமருந்து.
தாமிரபட்டம் - செப்பேடு.
தாமிரபருணி - அஞ்சன் என்னும் திக்கியானையின் பெண், மலையமலையில் உண்டாகும் ஒருபுண்ணியநதி. இதில் முத்துச்சிப்பிகள் அகப்படும்.
தாமிரபல்லவம் - அசோகமரம்.
தாமிரபீசம் - கொள்.
தாமிரம் - செம்பு.
தாமிரலிப்தி - கங்காநதி சங்கமத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு நகரம்.
தாமிரன் - முராசுரன்மகன், கிருஷ்ணனாற் கொல்லப்பட்டவன்.
தாமிரவிருந்தம் - கொள்.
தாமிரிகை - குன்றிக்கொடி.
தாமிரை - செம்புதக்ஷப்பிரஜாபதிமகள். தாய் உற்பலாவதி.
தாமை - தாம்பு.
தாமோதரன் - ஆனை, விட்டுணு. அசோதையால் உதரத்தில் கயறுகொண்டு உரலோடுகட்டப்பட்டகிருஷ்ணன்.
தாம் - அசைச்சொல் (உ-ம்.) அவர்தாம், சாரியை (உ-ம்.) எல்லோர் தாமும், தானென்பதன் பன்மை.
தாம்பணி - தாம்புக்கயிறு.
தாம்பாளம் - ஒருவகைத்தட்டம்.
தாம்பிகம் - தூரத்தில்வருபவரைக் காணல்.
தாம்பிகன் - மாயக்காரன்.
தாம்பிரகம் - செம்பு.
தாம்பிரகருப்பம் - துருசி.
தாம்பிரகாரர் - கன்னார்.
தாம்பிரசூடம் - சேவல்.
தாம்பிரபத்திரம் - செப்புப்பட்டயம்.
தாம்பிரமிருகம் - செந்நிறமான்.
தாம்பிரம் - செம்பு.
தாம்பிரவன்னமன் - செம்புமணல்.
தாம்பிரவன்னம் - சிவப்பு.
தாம்பிரவனனி - ஓர்யாறு.
தாம்பிராட்சம் - குயில்.
தாம்பு - கயிறு, தாமணிக்கயிறு.
தாம்புலோவல்லி - மஞ்சாடி.
தாம்பூரவல்லம் - வாழை.

தாம்பூலதாங்கம் - வெற்றிலைப்பெட்டி.
தாம்பூலதன் - அடைப்பைக்காரன்.
தாப்பூலதாகியம் - வெற்றிலைச்சுருள்.
தாம்பூலபீடிகை - வெற்றிலைப்பெட்டி.
தாம்பூலம் - வெற்றிலை அது அட்ட போகத்தொன்று, வீடிகை.
தாம்பூலவல்லி - வெற்றிலை, வெற்றிலைக்கொடி.
தாம்பூலவாகன் - அடைப்பைக்காரன்.
தாம்பூலி - தாம்பூலவல்லி.
தாம்பூலிகன் - வெற்றிலைவாணியன்.
தாயகம் - ஈகையுடைமை.
தாயகன் - கொடையாளி, பாலகன்.
தாயக்கட்டை - சூதுகவறு.
தாயதி, தாயத்தனம் - உரிமைப்பங்கு, தாயாதித்தனம்.
தாயத்தார் - பங்காளிகள், ஞாதிகள்.
தாயபந்து - சகோதரன்.
தாயபாகம் - சுதந்திரம், பங்கு.
தாயம் உடைத்தல், உபகாரம், உரித்து, ஒரு சூது கொடை, சமயவாய்ப்பு, சுற்றம், சூது, கவறு, தந்தைவழிச்சுற்றம், துன்பம், நட்டம், பங்கு.
தாயம்பார்த்தல்-சமயவாய்ப்புப்பார்த்தல்
தாயம்போடுதல் - சூதாடுதல்.
தாயவிபாகம் - உரிமைப்பொருள் பிரித்தல்.
தாயாதன் - உரிமைப்பங்காளி, உறவன் மகன்.
தாயாதிகள் - ஞாதிகள், தாயத்தார்.
தாயாதித்தனம் - எதிரிடை, எரிச்சல்.
தாயாபவர்த்தனம் - பொருட்சேதம்.
தாயான் - ஒன்பது.
தாயான்புலு - தொண்ணூறு.
தாயித்து - அட்சரக்கூடு.
தாயுமானவர், தாயுமானார் - ஒரு ஞானி, செவ்வந்தியீசர்.
தாயுமானேச்சுரர் - திரிச்சிராப்பள்ளியிலே கோயில்கொண்டிருக்குஞ்சுவாமி திருநாமம்.
தாயுமானவர்-இற்றைக்கு இருநூற்றெழுபது வருஷங்களுக்குமுன்னே திரிச்சிராப்பள்ளியிலே அரசுசெய்தவிஜயரங்க சொக்கநாத நாயகர்க்குச் சம்பிரதியாக விருந்த கேடிலியப்ப பிள்ளைக்கு அருந்தவப்புதல்வராக அவதரித்த இவர், சிவயோகியாகி அற்புதபத்திரசங்கான் றெழுகுவதாகிய அநேக பாக்களைப் பாடியவர். அப்பாக்கள் தாயுமானவர் பாடலெனப்படும். அந்நூலிலே சம்ஸ்கிருதச்சொற்கள் மிக மலிந்த விடத்தலின் அவர் வடமொழியிலும்வல்லுநரென்பது நன்கு அறியப்படும்.
தாயேடு - பாடேடு.
தாயைச்சொல்லி குட்டியிடுக்கி, மரபாவி வாழை.
தாயைக்கொன்றான் - புல்லூரிவாழை.
தாயோலை - முதவோலை.
தாய்-அன்னை, அரசன்றேவி, ஊட்டுந்தாய், குருவின்றேவி, கைத்தாய், செவிலித்தாய், தன்றேவியையீன்றாள், நற்றாய், பாராட்டுந்தாய், மாதாவின் சகோதரி, முதல், முதற்றாரம், முதன்மை.
தாய்க்கண் - பருங்கண்.
தாய்க்கிழங்கு - கிழவிக்கிழங்கு.
தாய்ச்சி - கருப்பிணி, தாய், முக்கீடுகாரன்.
தாய்ச்சிற்றம்பலம் - ஒரு விளையாட்டு.
தாய்ச்சீட்டு - மூன்றுறுதி.
தாய்பெற்றமேனி - நிருவாணம்.
தாய்மாமன் - தாயின்சகோதரன்.
தாய்வழி, தாய்வழிச்சுற்றம் - மாதாவழிச் சுற்றம்.
தாரகசித்து - குமரன், குமாரக்கடவுள்.
தாரகத்தான் - பன்றிக்கொம்பு.
தாரகப்பிரமம் - ஒருமந்திரம்.
தாரகம் - ஆதாரம், உச்சவிசை, ஒருமந்திரம், கண், கண்மணி, பலண்டுருவபாஷாணம், பிரணவம், வெள்ளி.
தாரகருமம் - கல்யாணம்.
தாரகன்-கண்ணன், தேர்ச்சாரதி, குழந்தை, தாங்குவோன், தாபரிக்கிறவன், மகன். (தி) வச்சிராங்கனுக்கு வச்சிராங்கி வயிற்றிற் பிறந்த இராக்ஷசன், இவன் பிரமாவை நோக்கித் தவஞ்செய்து எவராலுஞ் சாகாத வரம்வேண்ட, பிரமா அவனுக்குப் பிரசன்னராகி எழுநாட்பிள்ளையன்றி மற்றெவருங் கொல்லாவரங்கொடுத்தார். தருபுத்திரன் இரணியாக்ஷன் மகன். இவன் காலநாபன் எனவும் படுவன். கசியபனுக்கு மாயையிடத்துப் பிறந்த புத்திரன். சூரபன்மன்

தம்பி, சுப்பிரமணியராற் கொல்லப் பட்டவன். கிருஷ்ணன் சாரதி.

தாரகாகணம் - விண்மீன் கூட்டம்.

தாரகாபதி - சந்திரன், வியாழம்.

தாரகாரி - குமரன்.

தாரகிகி - இரவு.

தாரகேதன் - பாதாளகேதன் தம்பி இவன் றமையினைக் குவல யாசுவன் கொன்றான். [ரம்.

தாரகை-கண்மணி, விண்மீன் நக்ஷத்தி

தாரகைமாலை-ஒரு பிரபந்தம், அது கற்பின் மகளிரியற்கை தோன்றக்கூறுவது.

தாரக்கம் - தாரகம், பத்தியம்.

தாரசங்கிரகம் - விவாகம்.

தாரசுத்திகாரம் - ஈயம்.

தாரண - பதினெட்டாவ தாண்டு.

தாரணகன் - சடஞ்ஞானி.

தாரணம் - ஒருபூடு, கடன், தாரணை, தெப்பம், நினைத்தமைத்தல்.

தாரணி - பூமி.

தாரணை - அட்டாங்கயோகத்தொன்று, அது இதயம் கண்டம் கபாலம் நாபி நெற்றி இவற்றொன்றிற் சிந்தை வைத்திருத்தல், அதிவாசம், உறுதி, கடன் கட்டளை, சரிநிலையினிற்றல், ஞாபகம், தரித்தல், நிலை, புலனடக்கல், வாயுவைக் கும்பித்தல்.

தாரதண்டுலம் - வெண்சோளம்.

தாரதம் - இரதம், கடல், சிந்தூரம்.

தாரதம்மியம் } உயர்வு, ஏற்றத்தாழ்ச்சி, ஒப்புவித்தியாசம்.
தாரதன்மியம் }

தாரநாசம் - பேரொலி.

தாரபரிகிரகம் - விவாகம்.

தாரம்-அரிதாரம், அரும்பண்டம், எல்லை, கடன், கல், சாதிலிங்கம், சிற்றரத்தை, தரா, தேவதாரம், நட்சத்திரம், நாரத்தைநீர், பச்சிலைப்பாம்பினஞ்சு, பனி, பாதரசம், பார்வை, பிரணவம், மழை, மழைத்துளி, மனைவி, முத்து, மூக்காற் பிறக்குமிசை, வல்லிசை, விவாகம், வீணை நரம்பிலொன்று, வெண்கலம், வெள்ளி.

தாரன் தாரதந்தை இவன் பிரகஸ்பதி குமாரன், இவன் வாநரருள்ளே மகா புத்திமான்.

தாரா - ஒருபுள், ஒருபெயரெச்சம், ஒருவினைமுற்று, ஒரு வினையெச்சம், குருகு, மனைவி, விண்மீன்.

தாராகணம் - நட்சத்திரக்கூட்டம்.

தாராகதம்பம் - கடம்பு.

தாராங்கம் - மழைத்துளி, வாள்.

தாராங்குரம் - ஆலங்கட்டி.

தாராசம்பாதம் - விடாமழை.

தாராசாரம் - பெருமழை.

தாராடம் - குதிரை, சாதகப்புள், மதயானை, மேகம்.

தாராட்டு - ஒருபாட்டு, தாலாட்டு.

தாராட்டுதல் - ஓராட்டுதல்.

தாராதத்தம்-நீரோடு தானஞ்செய்தல்.

தாராதரம் - மேகம், வாள்.

தாராதாரம் - மேகம்.

தாராதிபதி - சந்திரன்.

தாராதினன்-மனைவிக் கமைந்து நடப்போன்.

தாராபதம் - நட்சத்திரபதவி, வானம்.

தாராபதி - சந்திரன், வியாழம்.

தாராபீடன் - சந்திரன்.

தாராபுரம்-போஜன் ராசதானி, ஒரூர்.

தாராபூஷணம் - இரவு.

தாராப்பிரம் - கர்ப்பூரம்.

தாராமண்டலம் - நட்சத்திரமண்டலம்.

தாராமூக்கன் - ஒருபாம்பு.

தாராவணி - காற்று.

தாராவிஷம் - வாள்.

தாராளம் - இட்டம், உதாரம், கொடை, தெளிவு, தைரியம், பொலிவு, மிகுதி, விசாலம்.

தாரி-அரிதாரம், உடையோன், குணம், தரிப்பவர், வழி, விதம், விலைவாசி.

தாரிகம் - தீர்வை.

தாரிகாதானம் - கன்னிகாதானம்.

தாரிகை - பனஞ்சாறு.

தாரிசம் - இணக்கம், ஒப்பந்தம், சம்மதி.

தாரிணி - பட்டுப்பருத்தி, பூமி.

தாரிதம் - குதிரைநடை, பிழைத்தல்.

தாரித்தல் - தாங்குதல்.

தாரித்திரம் } தரித்திரம்.
தாரித்திரியம் }

தாரிபாரி - சமாசார மறிந்தவன், சுபாவம், நல்லவழி யறிந்தவன்.

தாரிஷி-கந்தாஹனுக்குத் தமனையிடத்தப் பிறந்தபெண், இவள் பக்ஷிரூப

முடையவள். வபுஸ்ஸ¬என்னும்அப்சரசை துர்வாசர்சாபத்தால் பக்ஷியாகித் தருமபக்ஷிகளுக்குத்தாயாயினள்.

தாரிக்ஷியன்-கசியபன், ஒரு ரிஷி, இவர் ஆச்சிரமத்தில் இவர்மகன் மான்ருேல் போர்த்திருந்தபோது அவரை மானென நினைந்து கைகயவமிசத்துத் துந்துமாரன் அம்பினுற்கொன்ருன். அறியாது செய்தானென்பதைப் பொறுத்துத் தமது தபோபலத்தால் மகனை உயிர்பெற் றெழும்புமாறு செய்தவர் கருடன். விஷ்ணுபரிசாரகருள் ஒருவன்.

தாரிஷ்டவமிசம்- வைவசுவதமனுபுத்திரனுகிய திருஷ்டனுல் வந்தவமிசம்.

தாரீடம்-சமுத்திரம், சுவர்க்கம்,பொன்.

தாரு-பித்தளை, மரக்கொம்பு, மரப்பொது,தேவதாரு.

தாருகசித்து - குமரன்.

தாருகதலி - கான்வாழை.

தாருகம் - சோலை, தேவதாருவனம்.

தாருகருப்பை - மரப்பாவை.

தாருகவனம் - தேவதாருவனம்காண்க.

தாருகவிநாசனி } காளியம்மை.
தாருகற்செற்ருள் }

தாருகற்செற்றோன் - குமரன்.

தாருகன் } காளியால்கொலையுண்டவசுரன், குமரனுல் கொல்லப்பட்ட அசுரன்.
தாருக சூரன் }

தாருகாரி - குமரன்.

தாருகாவனம் - ஒருவனம்.

தாருசம் - செம்புளிச்சை, மத்தளம்.

தாருணம் - அச்சம், கூச்சம்.

தாருணி - நத்தைச்சூரி, பூமி.

தாருண்ணியம் - இளம்பருவம்.

தாருபத்திரிகை - மரப்பாவை.

தாருபாத்திரம் - மரப்பாத்திரம்.

தாருமயம் - மரத்தாலாயது.

தாருவனம் - சோலை.

தாரை - அபிஷேகம், ஒப்பு, ஒழுங்கு, கண், கண்மணி, கானம், கீர்த்தி, குதிரைநடை, கூர்மை,கொடிப்படை,சக்கராயுதம்,சக்தி,சலதாரை,சிறசின்னம், சிலை, தத்தம்பண்ணுநீர்,திகிரி, திரள், நா, நேரோடல், பஞ்சகன்னியரி லொருத்தியான சாருருபன்னி, படையின்முன்னணி, பண்டியுருள், பாய்தல், பெருமழை, மலைச்சாரல், மழை, மனைவி, வலி, வழக்கம், வழி, விண்மீன், ஓரப்சரசை, பிருகஸ்பதி பாரி. இவள் சந்திரனை சோரமார்க்கத்திற்கூடிப் புதனைப் பெற்றவள். தாரன் புத்திரி, வாலிபாரி,அங்கதன் தாய். [தல்.

தாரைவார்த்தல்-தத்தம்பண்ணி நீர்விடு

தாரோபசங்கிரகம் - விவாகம்பண்ணல்.

தார் - கிண்கிணிமாலை, கொடிப்படை, தாறு, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.

தார்காணித்தல் - அத்தாட்சிப்படுத்தல்.

தார்க்கிகன் - ஒருமதக்காரன், தருக்கக்காரன்.

தார்க்கிகன்-வித்தியாகர்வனை,தோஷம், பிரவிருத்தி, சனனம், துக்கமென்பவைகளைத் தனித்தனிநீக்கிச்செல்ல முடிவினின்ன துக்கம் ஒழியுமென்றும், இதுவே முத்தியென்றுங் கூறும் சமயி.

தார்க்கியன் - கருடன்.

தார்க்குழல் - தார்நூல் சுற்றுகுழல்.

தார்த்தராஷ்டிரன் - துரியோதனன்.

தார்த்தியம் - கடுமை.

தார்மணி-கிண்கிணிமாலை, குதிரைக்கழுத்தின் கிண்கிணிமாலை.

தார்மபத்தநம் - மிளகு.

தார்மிகன் . புண்ணியவான்.

தார்மிகை - ஏகாதசிதிதி.

தார்யம் - தரிக்கத்தக்கது.

தார்வாதாடம் - தச்சன்கருவி.

தாலகி - கள்.

தாலகேதனன்-பலராமன், வீட்டுமாசாரி. [ரி.

தாலதவ்வியம் கெவன்னைகவாள்.

தாலத்துவசன் - பலதேவன்.

தாலபத்திரம் - பனையோலை.

தாலபத்திரி - மரமஞ்சள்.

தாலபோதம் - ஆவிரை.

தாலமூலி - நிலப்பனை. [ன்.

தாலமேழுடையோன் - அக்கினிதேவ

தாலம்-அகங்கை,உண்கலம்,கூந்தற்பனை தட்டம், தாலம்பபாஷாணம், தேன், நா, பனை பூமி, யானைச்செவி.

தாலம்பபாஷாணம் - ஒருமருந்து.

தாலவட்டம்-பூமி,யானைச்செவி,யானைவால், விசிறி.

தாலவிருத்தம் போாலவட்டம்,விசிறி.
தாலவ்வியம்-அண்ணத்தால் பிறப்பன.
தாலங்கன் - பலராமன், வீடுமன்.
தாலாங்கை - யமுனையாறு.
தாலாட்டு - ஒருவிளையாட்டு.
தாலாலம் - பழமொழி.
தாலி கீழ்காய்நெல்லி, மங்கலநாண்.
தாலிகட்டு - கலியாணம், மங்கிலியதாரணம்.
தாலிதம் - விரித்தகை.
தாலிக்காரி - சுமங்கலி.
தாலிக்கொடி - மங்கலநாண்.
தாலிக்கோவை - மங்கிலியங் கோக்கப்பட்ட ஒரு பணி.
தாலிசம் - மலை.
தாலிச்சரடு - தாலிக்கொடி.
தாலிபாகம் - தீட்சையிற் குருப்பகுக்கு மன்னம்.
தாலிப்பெட்டி பொன்னாத்துப் பெட்டி.
தாலிப்பொருத்தம்- மங்கிலியப்பொருத்தம்.
தாலியம் - பாதிரி.
தாலு - அண்ணம், நா.
தாலுசன்னி - வெள்ளைக்காக்கணம்.
தாலுகா - நீதித்தலம்.
தாலுகை - மேனு.
தாலூரம் - சுழல்காற்று.
தால் - தாலாட்டு, தாலு, பிள்ளைக்கவி யுறுப்பில் ஒன்று.
தாவசி - ஒரு சன்னியாசி.
தாவடம் - இருப்பிடம், உருத்திரமணி மாலை, கழுத்தணிமாலை.
தாவடி - பிரயாணம், போர்.
தாவட்டம் - ஒழுகல், சிற்பநூன் முப்பத்திரண்டில் ஒன்று.
தாவணி - கண்டங்கத்திரி, மாட்டைப் பிணிக்குங் தாம்பு.
தாவந்தம் - இக்கட்டு, நரகம்.
தாவம் - காடு, காட்டுத்தீ, மருதநிலத்தூர், வெப்பம்.
தாவரசங்கம் - நிலைத்திணைப்பொருள்.
தாவரம் - அசரம், இடம், இட்டம், உடல், உதவி, உறுதி, எழுபிறப்பில் ஒன்று, கிலை. பூமி,மரப்பொது,மலை, வின்னாண்.
தாவரன் - கடவுள்.
தாவரித்தல்-காப்பாற்றுதல், தாங்குதல்.
தாவல் - தாண்டல், பாத்தல்.
தாவளக்கட்டு - கூன்வாங்கிக்கட்டுதல்.
தாவளக்காரர்-தேசாந்தரவணிகர், பொதிக்காரர்.
தாவளமாடு - பொதிமாடு.
தாவளம் - இருப்பிடம், கடை,தாங்கல், பொதிகாரர், மருதநிலத்தூர்.
தாவளி - கம்பளி.
தாவனம்-அசைவு, சுத்திசெய்தல்,தாபனம்.
தாவாக்கினிவிபூதி - காட்டுத் தீச்சாம்பல்.
தாவாரம் - தாழ்வாரம்.
தாவானலம் - காட்டுத்தீ.
தாவிஷம் - சமுத்திரம், சுவர்க்கம்.
தாவிளை - சகாயம், நன்மை.
தாவு - இளைப்பாறுமிடம், உறைவிடம், ஒதுக்கிடம், குதிரைநடை, தாவென்னேவல், பகை, பற்றுக்கோடு,பாய்ச்சல், வருத்தம், வலி.
தாவுதல் - அழிதல், எட்டிப்பிடித்தல், தாண்டல், நீட்டல், பாத்தல்.
தாவுரி - இடபவிராசி.
தாழ்க்கோல் - தாழ்ப்பாள், திறப்பு.
தாழச்சங்கு - வாயகன்றசங்கு.
தாழாமை - இறுமாப்பு.
தாழி-அரிதாரம், குடம், சாடி,சிவதை, பரணிநாள்.
தாழிகை - ஒருசவி.
தாழுகை } தாழ்தல்.
தாழுதல் }
தாழை - தாழைமரம், தென்னைமரம்.
தாழ் - இரொவுக்கைக்கச்சு, சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழ்க்கோல், தாழென்னேவல், நீளம்.
தாழ்குழல்-பின்சாய்ந்தவளகம், பெண்.
தாழ்க்கோல் - தாட்பாள்.
தாழ்சடை - நீண்டசடை .
தாழ்ச்சி-குறைவு,தவறு,தாழ்மை,நட்டம்.
தாழ்ச்சிவளர்ச்சி-நன்மைபெருமை.
தாழ்தல்-அமிழ்ந்துதல், ஆசை,ஆசைப்பெருக்கம், குறைதல்,சரிதல்,தங்கல் தாமதித்தல், தாங்குதல்.
தாழ்த்தல்-அடக்கம்பண்ணுதல், இருத்தல், கீழ்ப்படுத்துதல், குறைத்தல், தாமதித்தல், புதைத்தல், மந்தப்படுதல்.
தாழ்த்துதல்-அடக்குதல்,அமிழ்த்துதல் கீழ்மைப்படுத்துதல், குறைத்தல், சாய்த்தல், தாமதித்தல், பணித்தல்.

தாழ்ப்பம் - ஆழம்.
தாழ்ப்பாள் - தாட்பாள்.
தாழ்ப்பு - தாழ்ச்சி, தாழ்த்துதல்.
தாழ்மை ஒடுக்கம், கீழ்மை, நீசத்துவம்.
தாழ்வடம்-முத்துக்கோவைமுதலியன.
தாழ்வயிறு - சரிந்தவயிறு.
தாழ்வாய், தாழ்வாய்க்கட்டை - தாடி.
தாழ்வாரம் - வீட்டிறப்பு.
தாழ்வு-கீழ்மைக்குறைவு, சாய்வு, தவறு, பள்ளம்.
தாளகம், தாளக்கம் - அரிதாரம்.
தாளஜங்கன் - கார்த்தவீரியார்ச்சுனன் பௌத்திரன், இவன் ராஜதானி மாகிஷ்மதிபுரம்.
தாளத்திரயம்-உலக்கைமூவிரலால் இடதுன்னங்கையிற் சலத்தை முத்திரந்தட்டல்.
தாளப்பிரமாணம் - சங்கீதசுருதிப்பிரமாணம். அது அங்கம், இலயை, கலைகாலம், கிரகம், கிரியை, சாதி, பிரத்தாரம், மார்க்கம், யதி.
தாளம் - ஒருவாச்சியம், கலைஞான மறுபத்துநான்கில் ஒன்று, சதி, பனை.
தாளம்போடுதல் - தாளங்கொட்டுதல்.
தாளவகையோத்து-பழைய தமிழ்நூல்களுள் ஒன்று, அதிற் கூறப்படும் பொருள் தாளவிலக்கணம். கடைச்சங்கத்தார் காலத்திற் செய்யப்பட்டது.
தாளன் - குழூக்குறியிற்கனவீனன்.
தாளாண்மை - ஊக்கம், முயற்சி.
தாளாளர் - ஊக்கமுள்ளோர், வைசியர் பொது.
தாளி - அனுடநாள், ஒருகொடி, தாளியென்னேவல், பனைமரம்.
தாளிக்கம் - தீளப் , திடன்.
தாளிசபத்திரி - ஒருமருத்திலை.
தாளிசம் - ஒருமரம்.
தாளிதம் - தாளிப்பு.
தாளித்தல் - மசித்தல்.
தாளிப்பனை - சீதாளம்.
தாளிப்பு - மசிப்பு, மதாப்பு.
தாளினி - சிவதை, நிலவாகை.
தாளுதல் - இயலுதல், பொறுத்தல்.
தாள்-அருவி, அலகு, ஆதி, ஒட்டு, ஒற்றைக்காகிதம், கதவுறுதாள், கால், தாளென்னேவல், திறவுகோல், பணிகளின் கடைப்பூட்டு, முயற்சி, விளக்குத்தண்டு, விற்குதை.
தாள்சமுவல்-பாதசுத்திபண்ணல் அது புண்ணிய மொன்பதில் ஒன்று.
தாறு - அங்குசம், அளவு, இருப்புமுள், ஐது, சமுகு வாழை முதலியவற்றின் குலை, நுழுழி, விற்குதை.
தாறுகன்னி - வெள்ளைக்காக்கணம்.
தாறுமாறு - குழப்பம், விரோதம்.
தார்கரியம் - களவு.
தாற்பரியம்-கருத்து, கொள்கை, விபரம்.
தாற்பரியம் பண்ணுதல் - பருப்பித்துப் பேசுதல்.
தாற்பரியவுரை - விபரவுரை.
தாற்று - கொழிப்பு.
தாற்றுக்கதிர் - கொத்தாய்க் காய்க்குங்கதிர்.
தாற்றுக்கோல் - துறட்டி, முட்கோல்.
தாற்றுதல் - தரித்தல், புடைத்தாற்றிக்கழித்தல்.
தாற்மட்பூ - கொத்துப் .
தானகம் - பாதவுறுப்பொன்று.
தானக்கை - உயிர்விலை, பொறுப்பிடம்.
தானங்கொடுத்தல் - காயத்தினற்குணமூன்றினென்று, சோதானமுதலியவீதல்.
தானசுத்தி - பஞ்சசுத்தியிலொன்று அது இருக்குந்தானத்தைச் சுத்திசெய்தல்.
தானசீலம் - கொடைக்குணம்.
தானஞ்செய்தல் - தானங்கொடுத்தல்.
தானத்தார் - கோயில் விசாரணைக் குரியோர்.
தானநிலை-வலிவுமெலிவுசமனென்பன.
தானபதி - கொடையாளன்.
தானபத்திரம், தானபத்திரிகை - நன்கொடையுறுதி.
தானப்பிரட்டன் -உத்தியோகமிழந்தவன்.
தானப்பிரதிபாலியம் - அடகு.
தானப்புழு - மலக்குடலிற்புழு.
தானம்-அடித்தல், இடம், ஈகை, அறுஅறு இராசதகுணத்தொன்று, உபாயநாலினொன்று, புண்ணியமேழினொன்று தரிசனப்படுவது, தண்டித்தல், தேவலோகம், தேன், சீராட்டு, யானைமதம், வலி.
தானவம் - மிருதி.
தானவர் - காசிபனுக்குத் தநுவினிடத்துப் பிறந்த புத்திரர், இந்தச் சந்ததி

யில் பெயர் படைத்தவர் அயோ
முகன் ஏகசக்ரன், புலோமகன், கபி
லன், அந்தகன் முதலானோர்.
தானவர் - அசுரர்.
தானவன் - அசுரன், சந்திரன்.
தானவாரி - இந்திரன், திருமால்.
தானவியத்தியாசம் - அதமதானம்.
தானவீரன் - மிகுகொடையாளன்.
தானுகுதல் - தானுயாதல்.
தானுட்டித்தனுதகிழத்தல் - எழுவகை
மதத்திஞென்று அது கர்பித்தற்கு
வியாயமுரைத்து நிறுத்தல்.
தானுதிபதி - படைத்தலைவன்.
தானுபதி - தூதன், படைத்தலைவன்.
தானுபதிச்சம் } தானுதிபதி யுத்தி
தானுபதித்தியம் } யோகம்.
தானுனமூவர் - சாலக்கிராமம்.
தானி-இருப்பிடம், தானத்திலுள்ளது,
பண்டசாலை.
தானிகம் - கொத்துமல்லி.
தானிகன் - பூசாரி.
தானிகை - கொத்துமல்லி.
தானிப்பு - தாணித்தல்.
தானியதற்பகம் - பதர்.
தானியகோட்டகம் - கோரியை, தானி
யக்களஞ்சியம்.
தானியசங்கிரகம் - தானியஞ் சேர்த்து
வைத்தல், பண்டசாலை.
தானியசாரம் - அரிசி தூற்றின பொலி.
தானியதவசம் - தானியசம்பத்து.
தானியப்பொட்டு - அந்துப்பூச்சி, பயிர்
நோயில் ஒன்று.
தானியமாயன் - தானியம் விற்போன்.
தானியமாலினி - இராவணனைக் கூடி
அதிகாயன் என்னும் புத்திரனைப்
பெற்ற அப்ஸரப்பெண்.
தானியம்-கொத்துமல்லி, நென்முதலிய
மணிகள்.
தானியராசன் - கோதுமை.
தானியவத்தனன்-பொலியைக்கொடுப்
போன்.
தானியவிலக்குமி - அட்டவிலக்குமியில்
ஒருத்தி.
தனியாகம் - கொத்துமல்லி.
தானியாகுபெயர் - தானத்திலிருக்கும்
பொருளாகுகும் பெயர் (உ-ம்.) வி
ளக்கு.
தானியாதிபன் - தானியக்துக்கதிபன்.
தானியாரி - பெருச்சாளி
தானியார்த்தம் - தானியசம்பத்து.
தானியோத்தபம் - அரிசி.
தானீயம் - கொடை.
தானீயோத்தமம் - செந்நெல்.
தானு-காற்று, கொடையாளன், வெற்றி
யாளன்.
தானெடுத்துமொழிதல் - ஒருயுத்தி.
தானை - ஆயுதப்பொது, தூசு, படை.
தானைத்தலைவன் - சேனுபதி.
தானைத்தறுகணுளர் - படைவீரர்.
தானைமாலை - ஒருபிரபந்தம் அது அக
வலோசை பிறழா தாசிரியப்பாவாற்
கொடிப்படையைச் சிறப்பித்துப்
பாடுவது.
தான் - அசைச்சொல் (உ-ம்.) நீதான்,
படர்க்கை யொருமைப்பெயர்,
முழுப்புடைவை.
தான்றி - ஒருமரம்.
தான்றிக்காய் - ஒரு மருத்துக்காய் அது
திரிபலையிஞென்று, அவர்ப்பத்தி
லுள் ஒன்று.
தான்றோன்றி - ஒருவராலுண்டாக்கப்
படாதது, வலியமுளைத்தது.

தி

திகசம் - அசமோதம் எனும் ஓமம்.
திகதி - தேதி.
திகந்தம் - திகாந்தம்.
திகந்தராளம் - ஆகாயம். [கியம்.
திகம் - அதிகம், புலித்தோல், வைராக்
திகம்பரம் - இருள், திருவாணம். [ன்.
திகம்பரர் - சமண்முனிவர், திருவாணிக
திகம்பரன் - அருகன், சிவன், திருவாணி.
திகம்பரி - அர்ச்சை, திருவாணி, பார்ப்ப
திகரடி - சோர்வு. [தி.
திகரம் - அவா, இளைப்பு, ஈளை, ஒரெ
ழுத்து, சோர்வு, முட்டுத்தொய்வு.
திகழல் - ஒளிசெய்தல்.
திகழ் - ஒளி, திகழென்னேவல்.
திகழ்ச்சி - ஒளி, தோற்றம், விளக்கம்.

திகழ்தல் - தோற்றல், பிரகாசித்தல், [ளங்கல்.
திகழ்வு - திகழ்ச்சி.
திகனு - கொடுவேலி.
திகாந்தம் - திக்கின் முடிவு.
திகாந்தரம் - ஆகாயம்.
திகிரி - உருளை, சக்கராயுதம், தண்டசக்கரம், திரிகை, தேர், பண்டி, மலை, மூங்கில், வட்டம், வண்டியுருளை.
திகிரிகை - சக்கரம்.
திகிரிக்கல் - ஆட்டுக்கல், கோரோசனை, சக்கிரவானகிரி.
திகில் - திடுக்காட்டம், பயம்.
திகிலிடுதல் } திக்கிடுதல், பயப்படுதல்.
திகிற்படுதல் }
திகு - தாளக்குறிப்பு.
திகுதிகெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
திகை - திகையென்னேவல், திசை, தேம
திகைத்தல் - பிரமித்தல், மயங்கல். [ல்.
திகைப்பு - திடுகாட்டம், மயக்கம்.
திகைப்பூடு - ஒருபூண்டு, ஒருசெந்து.
திகைமயக்கு - திக்குத்தடுமாற்றம்.
திக்கங்கம் - அட்டபாலர்குறி அது கிழக்காதிமுறையே கொடி புகை சீயம் நாய் இடபம் கழுதை யானை காகம்.
திக்கசம் - திக்குயானை.
திக்கடைப்பு - திக்கெல்லை.
திக்கம் - இளயானை.
திக்கயம் - அட்டயானை அவை கிழக்காதி முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம்.
திக்கஜங்கள் - அஷ்டதிக்கிலுள்ள யா
திக்கரன் - குமரன். [னைகள்.
திக்கரி - குமரி.
திக்கரித்தல் - நிந்தித்தல்.
திக்கற்றவன் - தாபரமற்றவன்.
திக்காதிக்கு - பலதிசையிலும்.
திக்காரம் - நிந்தை.
திக்காலுக்கு - திக்காதிக்கு.
திக்கிடுதல் - திணுக்குறல்.
திக்கு - ஆதரவு, கொடுவேலி, திக்கென்னேவல், திசை, பேச்சுத்தடக்கு.
திக்குக்கட்டு - திக்குத்தம்பனம்.
திக்குக்கெடுதல் - உதவியற்றுத்திரிதல், திக்குமயங்குதல்.
திக்குதல் - பலவழியாய்ச்சிதறல், பாடந்தடக்குதல், பேச்சுத்தடக்குதல், வழிதப்புதல்.
திக்குத்திகெனல் - அச்சக்குறிப்பு, ஒலிக்குறிப்பு, தாளக்குறிப்பு.
திக்குபதிக்கிரகம் - திசாபதிகள். இவர் கிழக்காதிமுறையே சூரியன் சுக்கிரன் செவ்வாய் இராகு சனி சந்திரன் புதன் வியாழம்.
திக்குபந்தனம் - திக்குக்கட்டு.
திக்குபாலகர் } அஷ்டதிக்குப்பாலகர்.
திக்குப்பாலகர் }
திக்குப்பூசை - அஷ்டபாலகர் பூசை.
திக்குமாறாட்டம் - திசைமாறுதல்.
திக்குமுக்கு - மூச்சுமுட்டு.
திக்குவாய் பேச்சுத்தடக்கும்வாய். [தல்.
திக்குவிசயகிரமம் - திக்குவிசயஞ்செய்
திக்குவிசயம் - அட்டதிக்கும்வெல்லல்.
திக்குவிபாகம் - திக்கின்பகுதி.
திக்குறு - புனமுருக்கை.
திங்கட்குடையோன் - காமன்.
திங்கணாள் - மிருகசீரிடம்.
திங்கள் - ஒருவாரம், சந்திரன், பன்னிரண்டு மாதம்.
திசாமுகம் - திக்குப்புறம்.
திசாமிதன் - ஆசையற்றவன்.
திசாயம் - குக்கில்.
திசாலம் - தேசகாலம்.
திசி - திசை, திசையையுடையது.
திசிலன் - இராக்கதன், சந்திரன்.
திசை - ஒவ்வொர்திக்குப்புறமரசாளுமதிகாரி, திக்கு, நிலை, நோக்கு.
திசைச்சொல் - அடுத்த புறங்களிலிருந்து வந்து வழங்குஞ் சொல்.
திசைசா - கொடுவேலி.
திசைபிலம் - மருக்காரை.
திசைமயக்கு } திக்குத்தடுமாறுதல்.
திசைமாறுதல் }
திசைமுகன் - பிரமன்.
திசைமொழி - திசைச்சொல்.
திசையடித்தல் - வாக்குச் சித்தி முதலிய வாய்த்தல்.
திசையுடையவர் - தேசாதிபதி.
திடங்கொள்ளுதல் - தயிரியமடைதல்.
திடசித்தம் - உறுதிப்பட்டமனம்.
திடசெய்தி - நிச்சயகாரியம்.
திடசாட்சி - உறுதியானசாட்சி.

திடஞ்சொல்லுதல் - உறுதிசொல்லுதல், தேற்றப்படுத்தல்.
திடஞானம் - மாறுதஞானம், கலக்கமற்ற ஞானம்.
திடத்துதல் - திடப்படுதல்.
திடத்துவம் - பெலன்.
திடபத்தி - உறுதியானபத்தி.
திடபரப்படுதல் - தைரியப்படுதல், திசப்படுதல்.
திடபாம் - உறுதி, மனவலி.
திடபிடி - பெலபிடி.
திடபுருடன் - தைரியவான்.
திடப்படுதல் - உறுதிப்படுதல், தைரியப்படுதல்.
திடப்படுத்துதல் - உறுதிப்படுத்துதல், தேற்றப்படுத்துதல்.
திடப்பிரஞ்ஞன் - சிவன் முத்தன்.
திடமனம் - சலனமடையாமனம்.
திடமை - வெள்ளெருக்கு.
திடம் - உறுதி, தைரியம், மெய், வலி.
திடரிடுதல் - மேடாதல்.
திடர் - மணற்குன்று, மலைமேடு.
திடர்ச்சுண்டி - வாட்சுண்டி.
திடல் - திடர்.
திடன் - திடம்.
திடாரி - தைரியவான்.
திடாரிக்கம் - திடம்
திடின்பொதிடுனல் - ஈரடுக் கொலிக்குறிப்பு.
திடீரிடுதல் } ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
திடீரெனல் }
திடீர்திடீரெனல் } ஈரடுக் கொலிக்குறிப்பு.
திடீர்பொதீரெனல் }
திடுகூறு - சடுதி.
திடுக்கம் - அச்சம், நடுக்கம்.
திடுக்காட்டம் - திடுக்கிடுதல்.
திடுக்கிடுதல் - அச்சத்தால் மனமசைதல், பயத்தாலுடல் கம்பித்தல்.
திடுக்கிடு - திடுக்கம்.
திடுக்குத்திடுக்கெனல் } அச்சக்குறிப்பு.
திடுக்கெனல் }
திடுதிடுத்தல் } ஈரடுக்கொலிக்குறிப்பு.
திடுதிடுப்பு }
திடுதிடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
திடுமலி - திண்மையுள்ளவள்.
திடுமல் - திண்மை.
திடுமனடித்தல் - திண்மைக்குணங்காட்டல்.
திடுமன் - திண்மை.

திட்கல் - அச்சக்குறிப்பு.
திட்கிடுதல் } அச்சக்குறிப்பு, திடுக்கிடுதல்.
திட்கெனல் }
திட்டபட்டம் - செவ்வை.
திஷ்டம் - காணப்படுவது.
திட்டம் - உறுதி, ஒப்புரவு, கட்டளை, கணிசம், சரி, செவ்வை, திறம், நிலைபரம், பூரணம்.
திட்டல் - சபித்தல்.
திட்டவட்டம் - திட்டபட்டம்.
திட்டனம் - இருப்பைமரம்.
திட்டாணி - மரத்தை வளைவிடுமேடை.
திட்டாந்தம் } அத்தாட்சி, உறுதி, கணிசம்.
திஷ்டாந்தம் }
திட்டாந்தரம் }
திஷ்டி - ஞானம், கண், கண்ணூறு, பார்வை.
திட்டி - ஞானம், கண், சந்தோஷம், தினை, தேவதச்சன், நுழைவாயில், பார்வை, மேடு.
திஷ்டிக்கல் } ஒரிரத்தினம்.
திட்டிக்கல் }
திட்டிதோஷம் - கண்ணேறு.
திட்டித்தம்பம் - கண்கட்டு, அறுபது கலைஞான மறுபத்து நான்கில் ஒன்று.
திஷ்டித்தல் } காண்டல்.
திட்டித்தல் }
திட்டிபடுதல் - கண்ணூறுபடுதல்.
திட்டிவாயில் - ஒடுக்கவாயில்.
திட்டிவிந்தை - ஒரு மருந்துவிதை.
திட்டினம் - இலுப்பை.
திட்டு - கவிணயச்சுவர், சபிப்பு, சிறுதிடர், திட்டென்னேவல், முட்டடைப்பு, வசை.
திட்டுதல் - சபித்தல்.
திட்டுமுட்டு - சபிப்பு, முட்டடைப்பு.
திட்டை - உரல், கண், திடர், திண்ணை, மலைமேடு, வெள்ளறுகு.
திட்டையிடுதல் - மேடாதல், வரைகட்டுதல்.
திட்பம் - காலநுட்பம், திண்மை, நிசம்.
திணறுதல் - மூச்சுத்தடுமாறுதல்.
திணி - திணியென்னேவல், திண்மை.
திணிகம் - போர்.
திணிதல் - திண்மையாயிருத்தல், நெருங்கல்.
திணித்தல் } அடைத்தல், நுறுத்தல்.
திணிப்பு }

திணியன் - திடமுள்ளவன், திண்ணியன், பருத்தவன், மந்தையன்.
திணிவு - காடின்னியம், நெருக்கம்.
திணுக்கம் - நெருக்கம்.
திணுங்கல் } நெருங்குதல்.
திணுக்குதல் }
திணை - இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்.
திணைப்பெயர் - குறிஞ்சி முதலிய நிலக் காரணமாய் வரும் பெயர்.
திணைமயக்கம் - திணை மயங்கி நிற்றல்.
திணைவழு - உயர்திணை யெழுவாய்க் கிழிதிணை விகுதியும் இழிதிணை யெழுவாய்க் குயர்திணை விகுதியு மேற்றிப் பேசுவது.
திண் - பலம், வலி.
திண்கல் - சுக்கான்கல்.
திண்டகம் - கிலுகிலுப்பை.
திண்டாடுதல் - அலைக்கழிதல், கலக்கப்படுதல், நெருக்கப்படல்.
திண்டாட்டம் - அலைக்கழிவு, கலக்கம், நெருக்கம்.
திண்டாட்டு - அலைக்கழிவு.
திண்டி - அரசு, ஓரசுரன், தம்பட்டம், பசலைக்கொடி, யானை.
திண்டிமம் - தம்பட்டம்.
திண்டிறல் - வல்லபம், அதிவீரம்.
திண்டு - வளைந்தமெத்தை.
திண்ணகம் - செம்மறிக்கடா, தட்டார் கருவியில் ஒன்று, அருவாட்டேறு.
திண்ணக்கம் - மனஉரம்.
திண்ணம் - மெய்ம்மை, சத்தியம், வலி.
திண்ணன் - கண்ணப்பன், வலியன்.
திண்ணியன் - வலியுடையோன்.
திண்ணெனல் - ஒலிக்குறிப்பு.
திண்ணை - வேதிகை.
திண்படுதல் - வலியுறுதல் [ல்.
திண்பொறுத்தல் - தாக்குப் பொறுத்த
திண்மை - உறுதி, எண்வகையூறினொன்று, விதானம், மெய்ம்மை, வலி.
திண்மைக்கவர்ச்சிமற்றொன்றைவலிக்கத் தக்க சத்தி.
திததாபகம் - நிலைப்படுத்தல்,
திதம் - அக்கினி, அசைபவை, உறுதி
திதலை - தேமல். [நிலை.
திதனம் - மாமரம்.
திதனி - தேமல்.

திதி - காசிபன் மூத்தமனைவி, தக்ஷன்மகள், இவள் வயிற்றிற் பிறந்தோர். தைத்தியர். இருப்பு, கனம், காசிப்பிரமாவின் மனைவிகளிலொருத்தி, காத்தல், சங்கை, சந்திரனுள், அது பஞ்சாங்க வுறுப்பினொன்று, சிராத்தம், திதியென்னேவல், தைத்தியர் தாய், நிலைபேறு, பாக்கியம், வாழ்வு.
திதிகத்தா - விட்டுணு.
திதிகை - இருத்தல்.
திதிசர் } அசுரர்.
திதிசுதர் }
திதிட்சயம் - அமாவாசி.
திதிஜன் - மகாமநுவினது இரண்டாம் புத்திரன்.
திதிட்சிதம் } பொறுமை.
திதிட்சை }
திதித்தல் - நிலைபெறுத்தல்.
திதித்தவில் - கட்டியவீடு. [திதி.
திதித்திரயம் - ஒருநாளில்வரும் மூன்று
திதித்துவயம் ஒருநாளில்வரு மிரண்டு திதி.
திதிநிச்சயம் - சிராத்தத்துக்கேற்ற திதியை நிச்சயித்தல்.
திதிநியதம் - திதிநிச்சயம்.
திதிபரன் - விட்டுணு.
திதிப்பிரகரணம் - காத்தல்.
திதிப்பிரணி - சந்திரன்.
திதிமைந்தர் - அசுரர்.
திதியம் - அழிவின்மை.
திதிவிரதம் - திதிக்குறித்தநோன்பு.
திதிக்கை } தநேகவிஷ்டை
திதிட்சை }
தித்தகம் - நிலவேம்பு, மலைவேம்பு.
தித்தகோசாதகி - பேய்ப்பீர்க்கு.
தித்தம் - அக்கினி, எண்ணெய், கசப்பு, கட்டுக்கழை, நச்சம்பு, நிலவேம்பு, மலைவேம்பு, வாசனை.
தித்தன் - சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியினது தந்தை. இவன் உறையூரிலிருந் தரசு புரிந்தவன். (அகநானூறு.)
தித்தா - பீதரோகிணி, வட்டத்திருப்பி, தாளக்குறிப்பு.
தித்தி - ஒருகுழல், ஒருபனை, குரவம், சதி, தித்திப்பு, தித்தியென்னேவல், திற்றி, வேள்விக்குண்டம்.

தித்திகம் - பேய்ப்புடோல்.
தித்திசாசம் - மாவிலிங்கு.
தித்தித்தல் - இனித்தல்.
தித்திப்பு - இனிப்பு.
தித்திமுளை - தித்திப்புப் பனங்கட்டி.
தித்தியரர் - அசுரர்.
தித்திரம் - அரத்தை.
தித்திரி - ஒருரிஷி, ஒருகௌதாரி, சிச்சிலிக்குருவி.
தித்திரு, தித்திருச்சி - நாணல்.
தித்துப்பாடு - திருத்தம்.
திந்திடம் - புளியமரம்.
திந்திடி - புளியமரம்.
திந்திடிகம் - புளி.
திந்திருணி - புளியமரம்.
திபதிசம், திபதிச்சம் - வாலுழுவை.
திபோதாசன் - திவோதாசன் காண்க.
திப்பி - கோது.
திப்பியம் - அசமதாகம், திவ்வியம், வீளக்கம்.
திப்பிலாட்டம் - தொந்தறை.
திப்பிலி - அலைவு, ஒருசரக்கு.
திப்பிலிக்கட்டை - கண்டதிப்பிலி.
திப்பிலிகொச்சிக்காய் - சிறுமிளகாய்.
திப்பிலிமூலம் - ஒருசரக்கு.
திப்பிலிபரிசி - திப்பிலிக்கொட்டை.
திப்பிலியாட்டம் - அலைவு, வஞ்சனை.
திப்பிலியாட்டல், திப்பிலியாடுதல் - அலைவுபண்ணல்.
திப்பை - மேடு.
திமி - குத்தல், சமுத்திரம், திமிங்கிலம்.
திமிகோடம் - கடல்.
திமிங்கிலகிலம் - திமிங்கிலத்தை விழுங்கும் மீன்.
திமிங்கிலம் - யானையை விழுங்கும் மீன்.
திமிசம், திமிசு - வேங்கைமரம்.
திமிதகுமுதம் - இரைச்சல், ஊதாரித்தனம், பம்பல், மகிழ்ச்சி, மிகுதி.
திமிதம் - ஈரம், உறுதி, ஒருகணக்கு, பேரொலி.
திமிதம்போடுதல் - குதியன் குத்துதல்.
திமிதிமி - யானையை விழுங்குமீன்.
திமிதியெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு, தாளக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
திமித்துவஜன் - தசரதனைத் துணைக்கொண்டு இந்திரனுற் கொல்லப்பட்ட அசுரன். அந்த யுத்தத்திலே தசரதன் மூர்ச்சையடைந்தபோது கைகேசி அவன் மூர்ச்சையைத் தீர்த்து அவனை ரக்ஷித்தாள். அது கண்டு தசரதன் மகிழ்ந்து அவளை நோக்கி யாதுவேண்டுமென்ன இவள் நான் இனிமேல் எக்காலத்திலாயினும் இரண்டுவரம்வேண்டுவேன் அப்போது அவைகளை மறுது தருதல்வேண்டுமென்ன, அங்ஙனமேயாருகவென்று அவளுக்குவாக்குத்தத்தஞ்செய்தான் அதனை வாய்ப்பாகக்கொண்டே கைகேயி இராமபட்டாபிஷேக காலத்திலே அவனைக் காடுகொள்ளவும் தன் மகன்பரதனை அரசுகொள்ளவும், இரு வரங்கள் தசரதன்பாற்பெற்றனள்.
திமிரகாசம் - கண்ணோயுளொன்று.
திமிரடைதல் - திமிர்குத்தல்.
திமிரம் - இருள், நரகம், பாரம், விறைப்பு.
திமிரரிபு - சூரியன்.
திமிரன் - விறைப்புள்ளவன்.
திமிராரி - சூரியன்.
திமிரி - திமிரன்.
திமிரேறுதல் - விறைப்புக்கொள்ளுதல்.
திமிர் - சன்னி, சோம்பு, திமிரென்னேவல், மயக்கம், விறைப்பு.
திமிர்ச்சி - திமிர்.
திமிர்தம் - ஒலி.
திமிர்தல் - பூசுதல், வளர்தல்.
திமிர்த்தல் - திமிர்கொள்ளுதல்.
திமிர்ப்பு - திமிர்ச்சி.
திமிர்ப்பூச்சி - வயிற்றுப்புழு.
திமிர்முரித்தல் - சோம்புமுரித்தல்.
திமிர்மொய்த்தல் - விறைப்புக்கொள்ளுதல்.
திமிர்வாதம் - ஒருநோய்.
திமிர்வாயு - திமிர்வாதம்.
திமிர்வு - பூச்சு.
திமிலகுமிலம் - திமிதகுமுதம்.
திமிலம் - பேரொலி, யானைமீன்.
திமிலர் - நெய்தனிலமாக்கள், மீன்காரர்.
திமிலிடுதல் - ஒலித்தல், நெருக்கல்.
திமிலை - பம்பைமேளம்.
திமில் - எருத்தினேரி, தோணி, மரக்கலம், வேங்கைமரம்.

நிமிறல் - அலக்குதல், தேய்த்தல், பறித்தல், மீறுதல், வளர்தல்.
நிமைத்தல் - இமைப்புதல்.
நிம் - நிச்கு.
நிம்மிலி - தடித்த சரீரக்காரி.
நிம்மன் - இகழுஞ்சொல், ஓராண்குரங்கு
நிம்மை - கருணை, பிரமை.
நியக்கடி - நியக்கம்.
நியக்கம் - அசைவு, கலக்கம், சஞ்சலம், சோர்வு, மயக்கம்.
நியக்கு - நியக்கம், நியக்கென்னேவல்.
நியத்தம் - தள்ளப்பட்டது.
நியங்குதல் - சோருதல்.
நியசம் - மரமஞ்சள்.
நியந்தி - நிராய்.
நியாடி - நிகாடி.
நியாகங்கூறுதல் - கொடையைப் பிரசித்தப்படுத்தல்.
நியாகம் - உபகரிப்பு, கைவிடல், கொடை, அறத்தல். [ன்.
நியாகராயன் - விடங்கப்பெருமான், சிவ
நியாகன் } உபகாரி, கொடையாளன்,
நியாகி } சிவன், தவத்தி.
நியாச்சியம் - ஒவ்வொருநாளிற் கழிவாகிய மூன்றே முக்காலுநாழிகை, விலக்குகை.
நியாத்துவம் - நியானம்.
நியாமம் - இருவேலி, நான்முகப்புல், முயற்புல்.
நியாம்பதி - ஆன்மா.
நியாலம் - நிசாலம்.
நியானசமாதி - யோகநிலையில் ஒன்று.
நியானம் - அட்டாங்கயோகத்தொன்று அது இம்புலனடக்கிச் சிவயோகஞ்செய்தல், அநுட்டானம், சிந்திப்பு, நினைவு. [ணல்.
நியானம்பார்த்தல் - அநுட்டானம்பண்
நியானவான் } நியானியென்னேவல்,
நியானி } யோகி.
நியானித்தல் - அநுட்டானம் பண்ணல், சிந்தித்தல்.
நியானிப்பு - நியானம்.
நியு - பகல், மோட்சம்.
நியுகணம் - தவனை.
நியுகம் - புள்.
நியுகாரி - காகம்.
நியுதம் - கிரணம்.

நியுதி - கிரணம், வெளிச்சம்.
நியுதிகரம் - அழகு, பிரபை.
நியுதிகரன் - துருவன்.
நியுசம்பந்தன் - சுவாயம்புவ மநுபுத்திருள் ஒருவன், கிரௌஞ்சத் தீவைத் தை மனுஇவனுக்குக் கொடுத்தான்.
நியுநிசம் - இராப்பகல்.
நியுபதி - இந்திரன், சூரியன்.
நியுமணி - சூரியன்.
நியுமத்சேனன் - சாளுவராஜன். சத்தியவந்தனுக்குத் தந்தை சாவித்திரிக்கு மாமன்.
நியுமந்தன் - நிவேதாசன்.
நியேசேயே - மரமஞ்சள்.
நியோதம் - பிரகாசம், வெயில்.
நிரசமூலகம் } முடக்கொத்தான்.
நிராசமூலம் }
நிரகம - கொன்றை.
நிரகஷமம் - செம்புளிச்சை.
நிரக்கத்தாரு - விலப்பனை.
நிரக்கம் - கொன்றை.
நிரக்கரித்தல் } நிந்தித்தல்.
நிரஸ்கரித்தல் }
நிரக்காரம் } நிந்தை
நிரஸ்காரம் }
நிரக்கிரசம் - கண்வலி.
நிரக்கிரணி - பிரண்டை.
நிரங்கம் - நகரம், மிளகு.
நிரங்கலம் - மிளகு.
நிரங்கல் - நிரைதல், மிளகு.
நிரங்குதல் - நிரைதல்.
நிரசரம் - தூர்க்கற்றால். [மூகம்.
நிரச்சினமூகம் - நாணத்தால் தலையாட்டு
நிரசதலயன் - புருஷத்சன் மகன். அநரண்ணியன் தந்தை. வசுதன் எனவும்படுவன்.
நிரடம் - வெண்ணொச்சிமரம்.
நிரட்கோரை - ஒருவகைப்புல்.
நிரட்சி - உண்டை, கூட்டம், திரண்டதன்மை, முத்து.
நிரட்டல் - கூட்டல்.
நிரட்டு - இருது, சேர்த்தொருக்கியிருப்பது, சேர்ப்பு, நிரட்டென்னேவல், திரண்டகைமரம், திரளை, முழுமை.
நிரட்டுக்கலியாணம் - இருதுக்கலியா
நிரட்டுக்கோவை - ஒருகோவை. [ணம்,

திரட்டுதல் உருட்டுதல், சங்கிரகித்தல், சேர்த்தல்.
திரட்டுப்பால் - திரளக் காய்ச்சும்பால், அது முப்பாலில் ஒன்று.
திரணச்சி - எவட்சாரம்.
திரணபதி - வாழை.
திரணப்பிராயம் - வெறுமை.
திரணம் - அற்பம், திருணம், புல்.
திரணராசன் - கிலப்பனை.
திரணாசனம் - தர்ப்பாசனம்.
திரணி - ஒருவகைச்செடி.
திரணிக்கல் - காக்கைக்கல்.
திரணை - கம்பி, திரண்டது, திரளை.
திரண்டகொடிச்சி - புற்றும்பழம்.
திரண்டபால் - திரைந்தபால்.
திரண்டவடிவு - உண்டை.
திரதயம் - பலகாற்கேட்டல்.
திரஸ்தம் - பயங்கரம்.
திரந்திகம் - திப்பிலிமூலம்.
திரபம் - வெட்கம்.
திரபாகன் - மிலேச்சன்.
திரபாண்டை - வேசி.
திரபாணிரத்தம் - வெட்கக்கேடு.
திரபுட்பம் } அத்தநாகம்.
திரபுலம் }
திரப்படுதல் - உறுதிப்படல்.
திரப்பியம் - பொருள்.
திரப்பியவணி - பொருட்டன்மை யலங்காரம்.
திரப்புசம் - கத்திரி.
திரமம் - சாதிலிங்கம்.
திரமாக்குதல் - அத்தாட்சியாக்கல், நிலைப்படுத்தல்.
திரமாதம் - வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி.
திரமிடம் - தமிழ், திராவிடம்.
திரம் - உரம், உறுதி, தகரைச்செடி, நிலை, பெலன், முத்தி.
திரயப்பிணிசடம் - நாலதேசம்.
திரயம் - மூன்று.
திரயாங்கம் - மூவங்கம், அது திதிவார நட்சத்திரங்கள்.
திரயாட்சரி - மூன்றுவரி யெழுத்தான் முடியுமோ ரலங்காரம்.
திரயாரணன் - சூரியாரணியன்.
திரயாருணி - ரிஷியன்மகன்.
திரயீதநு - சூரியன்.
திரயீதர்மம் - வேதவிஹிதமான தர்மம்.
திரயீமுகன் - பிராமணன்.
திரயோதசி - பதின்மூன்றாந்திதி.
திரராசி - இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.
திரராசிகம் - முத்தொகைவினா.
திரலடி - ஏலம்.
திரல் - காட்டாமணக்கு.
திரவணம் - திராவிரம், பாய்தல், போதல், வெப்பம்.
திரவதத்துவம் - ஈர்மை.
திரவந்தி - ஒருநதி, காட்டாமணக்கு.
திரவபோதம் - பூசினி.
திரவம் - திராவகம், பாய்தல், பொசிதல்.
திரவிடம் - திராவிடம் ஆந்திரகருநாடக தேசங்களுக்குத் தெற்கேயுள்ள தேசம். அது தமிழ் நாடென்பது.
திரவிடன் - க்ஷத்திரியகுலத்துக்கீழ்மகன்.
திரவிணம் - பாக்கியம், பெலன், பொன்.
திரவித்தல் - நீர் முதலிய பொசியப்பண்ணல்.
திரவியசம்பன்னன் - சம்பாத்தியகாரன்
திரவியசித்தி - பாக்கிய சம்பாத்தியம், பாக்கியத்தினால் வருஞ்செல்வாக்கு.
திரவியசுத்தி - பஞ்சசுத்தியிலொன்று.
திரவியம் - ஓர்மருந்து, சரக்குநிதி, பாக்கியம், பித்தளை, பொருள், பொன்.
திரவியலோபம் - பொருட்குறைவு.
திரவியவான் - செல்வன்.
திரவீகரணம் - உருக்குதல்.
திரளாரம் - கிலப்பனை.
திரளி - ஒருமீன்.
திரளுதல் - உருட்சியாதல், கூடுதல், திரட்சியாதல், தெருளுதல்.
திரளை - உருண்டை, கட்டி, திரட்டப்பட்டது.
திரள் - குழியம், கூட்டம், திரட்சி, திரளென்னேவல், திரளை, படை, மிகமுடுகிய நடையை யுடைய பாடல், இயக்கம் நான்கினு ளொன்று.
திரள்கோரை - கஞ்சாக்கோரை.
திரா - ஒருமரம், தரா.
திராகம் - உயர வெறிந்து பிடித்தல்.
திராகிட்டம் - மிகநீளம்.
திராகம் - அச்சம்.
திராட்சம் } கொடிமுந்திரிகை.
திராட்சை }

திராக்ஷாராமம் - 'இது' மகாராஷ்டிர கர்நாடாந்தரதேசங்களுக்கு மத்தியிலுள்ள பர்வதத்தின்கண்ணுள்ள சிவஸ்தலம்.
திராணதம் - இரட்சித்தல்.
திராணம் - உறை, இரக்ஷித்தல்.
திராணி } தகுதி, தத்துவம், பலம்.
திராணிக்கம் }
திராணிக்கை - திராணி.
திராபம் - ஆகாயம், சேறு, மூடன்.
திராபை - புத்தியற்றவன்.
திராமரம் - பவளமல்லிகை.
திராமிடம் - திராவிடம்.
திராமிலன் - ஒருமுனி.
திராய் - ஒரு கசப்பான கீரை.
திராலம் ஒருவகை வெள்ளரிச்செடி.
திராவகத்துக்கடுங்காரம் } அன்னபேதி.
திராவகத்துக்காதி }
திராவகநீறு - வெடியுப்புச்சுண்ணம்.
திராவகம்-காந்தக்கல்,செய்நீர்,மெழுகு.
திராவகன் - அறிஞன், கள்வன்.
திராவடி - ஏலம்.
திராவிடம் - ஓரெண், சாதிஞன்கில் ஒன்று, தமிழ், தேயமைம்பத் தாறினொன்று. தமிழ்நாடு பஞ்சதிராவிடர்ளுடை கூர்ச்சர மகாராஷ்டிர தைலங்கமென்பன. இவ்வைந்து நாட்டுப்பிராமணரும் திராவிட ரெனப்படுவர். தைலங்கம் திரிலிங்க மெனவும்படும்.
திராவிடாசாரியார் - வடமொழியிலே வேதாந்த சூத்திரத்திற்கு ஒரு பாஷியஞ்செய்தவர். இராமநுஜாசாரியர் செய்த பாஷியத்துள் இவர் மதமெடுத்துக்கூறப்படுதலின் இவர் இரண்டாயிரம்வருஷங்களுக்குமுன்னர் விளங்கினவராதல்வேண்டும்.தமிழ்நாட்டாராதலின் இப்பெயர்பெற்றார்.
திரி - காத்திரி, திரியென்னேவல், பெண், மூன்று, விளக்குத்திரி.
திரிகடம் - யானைநெருஞ்சில்.
திரிகடி - இந்திரன்சங்கு.
திரிகடுகம் } ஒருநூல், சுக்கு, திப்பிலி, மிளகு.
திரிகடுகு }
திரிகண்டகம் - ஒருவகைப்புல், நெருஞ்சில்.
திரிகண்டகி - நெருஞ்சில்.
திரிகண்டம் - நெருஞ்சில்.
திரிகதம் - மும்மடங்கு.
திரிகத்தம் - ஒருதேயம்.
திரிகர்த்தம் - ஆரியர்வர்த்தத்துக்குவாயுதிக்கிலுள்ள தேசம்.
திரிகம் - திரிகடுகம், முச்சந்தி, மூன்று கூடியது.
திரிகாயன் - புத்தன்.
திரிகாலசந்தி - காலை மாலை உச்சிகளிற் பண்ணுமலுட்டானம்.
திரிகாலஞானம் - முக்காலமறியு ஞானம்.
திரிகாலம் - முக்காலம், அவை உச்சி, காலை, மாலை, அன்றியும் இறப்பு, எதிர்வு, நிகழ்வு.
திரிகாலவர்த்தமானம் - முக்காலநிகழ்ச்சி.
திரிகாலோசிதம் - குசைப்புல்.
திரிகி - குயவன்சக்கிரம், திரிதல்.
திரிகுணம் - முக்குணம்.
திரிகூடம் - ஒருமலை.
திரிகூர்ச்சகம் - முக்கருவுள்ளது.
திரிகேது - கிளி.
திரிகை - இடக்கைமேளம், எந்திரம், குலாலசக்கிரம், திரிதல், முந்திரிகைமரம்.
திரிகோணசாத்திரம் - முக்கோணசாத்திரம்.
திரிகோணப்பாலை - நால்வகைப் பாலையுளொன்று.
திரிகோணமலை - திருக்கோணமலை. திருக்கோணமலை எனவுங் கூறுவர்.
திரிகோணம் - முக்கோணம்.
திரிசங்கசன் - அரிச்சந்திரன்.
திரிசங்கு - இக்ஷ்வாகு அரிச்சந்திரன் தந்தை. இத்திரிசங்குதான் தேகத்தோடுசுவர்க்கம் புகவேண்டித் தனது குலகுருவாகிய வசிஷ்டரையடைந்துபிரார்த்தித்தான். அது கூடாதென்றவர் மறுக்க, அவர் புத்திரரிடஞ் சென்றான். அவர்கள் குருவாக்கைத் தடுத்தனை யென்று நீசனுமாறு சபிக்க, அவன் விசுவாமித்திரரிடஞ் சென்றான். அவர் அவனுக்காக ஒரிந்தர சுவர்க்கத்தை யுண்டாக்கி அவனை அங்கே வைத்தார்.
திரிசங்குசன் - அரிச்சந்திரன்.
திரிசங்குமண்டலம் - ஒருநக்ஷத்திரமண்டலம்.
திரிசடை - விபீஷணன் புத்திரி. இவள் சீதாதேவியை ராவணன்சிறைவைத்தபோது அவருக்கு நற்றுணையாயிருந்தவள்.

திரிசனம் - வாஞ்சை.
திரிசவணம் - திரிகாலம்.
திரிசாகபத்திரம் - வில்வமரம்.
திரிசாரம் - எவட்சாரம், சத்திசாரம், நவச்சாரம்.
திரிசி - சமுசாரி.
திரிசிரம் - சிகரம், சூலம், வில்வமரம்.
திரிசிரன் - இராவணன் மகன்,
திரியம் - காணப்படுவது, தோற்றப் படத்தக்கது.
திரியாதிரியம் - தோற்றப்படத் தக் கவைகளுந் தோற்றப்படாதவைகளு [ம்.
திரிசிரபுரம் - திரிசிராப்பள்ளி.
திரிசிரன் - இப்பெயருடைய இராக்ஷசர்அநேகர்.விச்சிரவாவுபுத்திரன். இவன் ஜனஸ்தானத்திற் கரனேடி ருந்தவன். இராவணன் புத்திரன் அக்கினி.
திரிசிரா - ஒரு ராக்கதன்
திரிசிராப்பள்ளி - ஒருபட்டினம்.
திரிசிராமலை - ஒருமலை.
திரிசிருங்கம் - முக்கோணம், திரிகூட மைசலம்.
திரிசுடர் - முச்சுடர்.
திரிசுத்திரம் - உபவீதம், பூணூல்.
திரிசூலம் - இச்சை கிரியை ஞானம் என்னும் முத்தலைவேல்.
திரிசூலி - சிவன்.
திரிசொல் - செய்யுட்சொல்.
திரிச்சல் - திரிதல்.
திரிச்சிரம் - முக்காலகியமட்டை.
திரிஞ்சல் - தரிஞ்சில்.
திரிடி - கருப்புக்கஜ
திரிமரித்தல் - கிச்சயித்தல்.
திரிட்டை - காணப்படல்.
திரிணிகரம் - அற்பமாகவெண்ணல்.
திரிதசமஞ்சரி - துளசி.
திரிதசன் - கடவுள்.
திரிதசாசாரியன் - வியாழம்.
திரிதசாயுதம் - வச்சிராயுதம்.
திரிதசாரி - அசுரன்.
திரிதசாலயம் - சுவர்க்கம், மேருகிரி.
திரிதசாவாசம் - சுவர்க்கலோகம்.
திரிதசஹாரம் - அமிர்தம்.
திரிதசி - திரயோதசி.
திரிதண்டதாரணம் - முக்கோறரித்தல்
திரிதண்டம் - திரிதண்டு.
திரிதண்டி - காரணமூன்றுமடக்கினே ன், முக்கோற்பகவன்.
திரிதண்டு - முக்கோல்.
திரிதயம் - மூன்று.
திரிதரல் - சுழலல், திரிதல், மீளல்.
திரிதராட்டிரன் - துரியோதிரன்றந்தை
திரிதலை - ஒருபூடு.
திரிதல்-அலைதல், உலாவல், கெடுத்தல், சுழலல்,நடத்தல்,மாறுதல்,மீளல்.
திரிதல்விகாரம் - எழுத்துத்திரிபு விகா ரம்.
திரிதன் - பிரமன்மானசபுத்திரர்களுள் ஒருமன்.
திருதன்றுவன் - சுமனன் மகன். சூரி யாரண்ணியன் தந்தை.
திரிதாது - விநாயகன்.
திரிதினை - மூன்றுந்திதி.
திரிதியம் - செவ்வள்ளி.
திரிதியை - மூன்றுந்திதி.
திரிதிவம் - முத்தி.
திரிதிவேசன் - தேவன்.
திரிதிவை-பாரிபத்திர பர்வதத்திலுள் ள நதி.
திரிதீர்க்கம் - மணப்பொருத்தம்பத்தில் ஒன்று.
திரிதூளி - சில்லபொல்லம்.
திரிதேகம் - காரணதேகம் சூக்குமதே கம், தூலதேகம்.
திரிதோஷம் - ஒருநோய், முப்பிணி.
திரித்தல் - சுழற்றுதல், மாறுபடுத்தல், மாற்றுதல், முறுக்குதல்.
திரித்துவம் - மூன்றுதத்துவம்.
திரிநயனன் - சிவன்.
திரிநாயகம் - பெண்டலைமை.
திரிநேத்திரசூடாமணி - சந்திரன்.
திரிநேத்திரன் - சிவன்.
திரிபங்கி-மிறைக்கவியினென்று, அது ஒரு செய்யுளாய் நின்று மூன்றாய்ப் பிரித்தோத மூன்று செய்யுளாயும் நிற்குங்கவி.
திரிபணி - உபமானப்பொருள் நிகழ்கி ன்ற செய்கையிற்பானன் படுதற்பொ ருட்டு உபமேயத்தின் உருவத்தைக் கொண்டுபயித்தல்(உ-ம்) தாட்கமல த்தா னடந்து கட்குவளையாலேநக்கு.
திரிபதகை - கங்கை.
திரிபதம் - முத்தெருக் கூடுமிடம்.

திரிபதாகம் - நெற்றியிலுள்ள மூவிரே
திரிபதார்த்தம் - பசுபதிபாசம். [கை.
திரிபதி - யானைக்காலிலிடுஞ்சங்கிலி.
திரிபதை-இசைப்பாவகையுளொன்று.
திரிபலம் - திரிபலை.
திரிபலாசம் - முருக்கமரம்.
திரிபலை - கடுக்காய்,தான்றிக்காய்,நெல்லிக்காய்.
திரிபழுகம் – பால், நெய், தேன்.
திரிபாகி - மிறைக்கவியிலொன்று. அது ஒருமொழிமூவெழுத்தானின்றோர் பயனும் அதனிடையெழுத்து நீங்க வேறோர் பயனும் அதன் முதலெழுத்துநீக்க வேறோர்பயனுங்கொண்டு முடிவது.
திரிபாதம் - முச்சந்தி.
திரிபீஜம் - ஒருபுன்செய்த் தானியம்.
திரிபு - முத்திவிக்கினமூன்றிலொன்று, வேறுபாடு, தகரம்.
திரிபுக்காட்சி-ஒன்றைவேறொன்றாய்க் காணுதல்.
திரிபுடகம் - முக்கோணம்.
திரிபுடி – ஞாதிரு, ஞானம், ஞேயம்.
திரிபுடிபலம் – ஆமணக்கு
திரிபுடை – சத்ததானத்தொன்று.
திரிபுண்டரகம் } மூன்று வரியாப்பூசும் விபூதிப்பூச்சு.
திரிபுண்டரபி
திரிபுண்டரம்
திரிபுரசுந்தரி - பார்ப்பதி. திருநாரையூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர். திருவான்மியூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
திரிபுரசுந்தரியம்மை - திருநல்லூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
திரிபுரதகனன் - சிவன்.
திரிபுரமல்லிகை – ஒருமல்லிகை.
திரிபுரமெரித்தான் – சிவன், நொச்சி, மாவிலிங்கை.
திரிபுரம் - முப்புரம்.
திரிபுராசுரர் - தாரகாசுரன் புத்திரராகிய கமலாக்ஷன், வித்தியுன்மாலி, தாரகாக்ஷன் என்னும் மூவரும் இப்பெயர் பெறுவர். இவர்கள் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்றுலோகத்தாலும் அமைந்த கோட்டைகளையுடைய மூன்று ஜங்கமபுரங்களைப் பெற்று அப்பட்டணங்களோடு அந்தரத்தெழுந்து தமக்கிஷ்டமாகிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு முள்ள பட்டணங்கள் மீது உட்கார்ந்து அவைகளை நாசஞ்செய்து வந்தார்கள். அதுகண்ட விஷ்ணு நாரதரை யேவித் திரிபுராசுரருக்குப் பாஷண்டமதத்தை உபதேசித்துச் சிவன்மீது அவர்வைத்தபத்திக்கு ஊறு செய்வித்தார். அதனால் சிவபெருமான் இவர்களை அழிக்க நினைந்து யுத்தஞ்செய்து மூவரையுங்கொன்று தமது கணங்களோடு சேர்த்தருளினர்.
திரிபுராந்தகேசுரர்-திருவிற் கோலத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி திருநாமம்.
திரிபுராந்தகன் - சிவன்.
திரிபுரி - சாதனை.
திரிபுருஷம் - முத்தலைமுறை.
திரிபுருஷ்டன்-வசுதேவருக்குத் திருத்தேவியிடத்துப் பிறந்த புத்திரன்.
திரிபுரை - ஒருசத்தி, பார்ப்பதி.
திரிபுவனம் - சுவர்க்கமத்தியபாதலம்.
திரிபுவனம் - காவிரியின் தென்கரையிலுள்ள திருவிடைமருதூரை அடுத்த ஒரு சிவஸ்தலம். இங்கே நரசிம்மமூர்த்திபூர்த்தியைக் காணலாம்.
திரிபோகம் - பெண்போகம்.
திரிப்பு - மாற்றுதல், முறுக்கு.
திரிமஞ்சள் - கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், மரமஞ்சள்.
திரிமணை - திருமணை.
திரிமனம் - அறிவு, நினைவு, புத்தி.
திரிமார்க்கம் – முச்சந்தி.
திரிமுருடம் – திரிகூடபர்வதம்.
திரிமூர்த்தி - மும்மூர்த்தி.
திரிமூர்த்திகள் - சுத்தப்பிரமம் சிருஷ்டி ஸ்திதி சங்காரம் என்னும் முத்தொழிற்காகச் சகளீகரித்த பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னு மூன்று திருமேனிகள்.
திரிமூலம் - கண்டுமூலம், சித்திரமூலம், [திப்பிலிமூலம்.
திரிய - திரும்ப.
திரியம் – விலக்கு, மிருகம்.

திரியக்கு - குறக்கு.
திரியகதி - தேங்காய்.
திரியமுகம்-அடிவானம் நோக்கிய பார்வை.
திரியம்பகன் - அரன், அருகன், விட்டுணு, விநாயகன், வீரபத்திரன்.
திரியவும் - திரும்ப.
திரியங்குமுகம் - சமுகம்.
திரியமிசன் - விப்பிரசித்தி புத்திரன்.
திரியம்பகம்-வீரபத்திரர் தக்கனையழிக்க எடுத்தவில், பிறகு அதசிதையோடு நிலத்திற் றோன்றிக்கிடந்து அவர் கல்யாண காலத்தில் ஸ்ரீராமரால் முறிக்கப்பட்டது.
திரியம்பகன் - சிவபெருமான், மூன்று கண்களை யுடையவன்.
திரியாங்கம் - திரயாங்கம்.
திரியாமகம் - பாவம்.
திரியாமயம் - முத்திவிக்கினம் மூன்று.
திரியாமை - இரவு, நீலக்கல், யமுனையாறு.
திரியாவரம் - புரளி.
திரியேகத்துவம் - மூன்றொன்றாயிருத்தல்.
திரியேகம் முப்பொருளொன்றாயிருத்தல்.
திரியேகன் - கடவுள்.
திரிரேகம் - சங்கு.
திரிலிங்கம் - திரீலிங்கம்.
திரிலோகசிந்தூரம் - ஒருமருந்து.
திரிதோகம் - திரிபுவனம் அதுபூமி அந்தரம் சுவர்க்கம். பொன் வெள்ளி செம்பு.
திரிலோகவசியம் - சருவ வசீகரம்.
திரிலோகாதிபதி - இந்திரன், கடவுள்.
திரிலோகி - விட்டுணுசரந்தை.
திரிலோகேசன் - சூரியன்.
திரிலோசதி - அர்ச்சை.
திரிலோசனன் - திரியம்பகன்.
திரிவசியம் - பெண்வசியம்.
திரிவட்டம் - இயந்திரத்திலொருறுப்பு.
திரிவருக்கபாரீணன் - திருவருக்க மடைந்தவன்.
திரிவருக்கம் - அகவியல் மூன்று; அது அசுத்தம், அறியாமை, சுத்தம், அரசியல் மூன்று; அது ஆதாயம் நட்டம் மத்திமம், இயல்பாய் விரும்புவது மூன்று, அது கடமை செல்வம் பெண்போகம்.
திரிவாய் - தீவாய்.
திரிவிக்கிரமன் - ஓராசன், விட்டுணு.
திரிவிஷ்டபம் - ஆகாயம், சுவர்க்கலோகம்.
திரிவு - திரிபு.
திரிவேணிசங்கமம் - ஒருதலம். அது கங்கை சரச்சுவதி யமுனை என்னும் மூவாறுகளின் சந்திப்பு.
திரீ, ஸ்திரீ } பெண்.
திரீசனப்பிரியன் - தூர்த்தன்.
திரீயத்துவம்-மூன்றொன்றாயிருப்பது.
திரீலிங்கம் - சிறீலிங்கம்.
திரு - அழகு, இலக்குமி, செல்வம், தெய்வீகம், மங்கல மொழியி லொன்று, மேன்மை.
திருஅகத்தியான்பள்ளி-காவிரியாற்றுத் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், வேதாரணியத்துக்குத் தெற்கிலுள்ளது. சுவாமிபெயர் அகத்தீசுரர், அம்மைபெயர் மையார்தடங்கண்ணி, சம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்றது.
திருஅச்சிறுபாக்கம்-திருக்கழுக்குன்றத்துக்குத் தென்மேற்றிசையிலுள்ள ஒரு சிவஸ்தவம். சுவாமிபெயர் பாக்கபுரேசர். அம்மைபெயர் ஆதிசுந்தரமின்னம்மை. முப்புரத்தையழிக்கும் பொருட் டெழுந்த சிவபெருமானுக்குத் தேவர்கள் தோராகி தமது உதவியின்றித் திரிபுரஞ்யங் கூடாதென்று நின்ற அத்தேவர்கருவத்தைப் பங்கப்படுத்தத் தேரின் அச்சைச் சிவபிரான் திருவடிவைத்தொடித்தலமாதலால் இதற்கு இப்பெயர் வாய்த்தது. இது சம்பந்தர் தேவாரம் பெற்றது.
திருஅச்சோபுரம்-நடுநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
திருஅண்ணமலை-பிரம விஷ்ணுக்களுக்குச் சோதிப்பிழம்பாக நின்று சிவன் தரிசனம் கொடுத்த தலம் இதுவே. இங்குள்ளது தேயுலிங்கம். இது நடுநாட்டிலுள்ள அதி பிரபலமான சிவஸ்தலம். மாணிக்கவாசகர் திருவெம்பாவையும் திருவம்மானையும் பாடி

யது இத்தலத்திலேயே. இது சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது. திருப்புகழ்பாடின அருணகிரிநாதரது ஜன்மபூமியு மிதுவே.

திரு அம்பர்ப்பெருந்திருக்கோயில் - காவிரிநதியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் பிரமபுரநாதேச்சுரர்; அம்மைபெயர் பவளவண்ணப் பூங்குழல்நாயகி. இந்த ஆலயம் கோச்செங்கட் சோழரால்செய்விக்கப்பட்ட திருப்பணி, சம்பந்தரால் பாடப்பெற்றது, சோமாசி மாறநாயனர் ஜன்மபூமியு மிதுவே.

திருஅம்பர்மாகாளம் - காவிரி யாற்றுத் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். மாகாளர் காவலிலிருந்த இந்திராணியை அஜமுகியிழுத்துக் கைவெட்டப்பட்டஸ்தலம். சம்பந்தரால் பாடப்பெற்ற தலம்.

திருஅம்பிலாந்துறை - காவிரியாற்றின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் சத்தியவாகீசுரர், அம்மைபெயர் சௌந்தரநாயகி. திருநாவுக்கரசராலும் சம்பந்தராலும் பாடப்பெற்றுள்ளது.

திருஅரசிலி - திருஅச்சிறு பாக்கத்துக்குத் தெற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் அரசிலிநாதர், அம்மைபெயர் பெரியநாயகி. இது சம்பந்தரால் பாடப்பெற்றது.

திருஅரதைப் பெரும்பாழில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பாதாளேச்சுரர், அம்மை அலங்காரநாயகி. இரணியாக்ஷனைக் கொன்றுன்மத்தங்கொண்ட வராகத்தினது கொம்பைச் சிவன் ஒடித்து தமது மார்பிலணிந்துகொண்ட ஸ்தலம். சம்பந்தரால் பாடப்பெற்றது.

திரு அரிசிற்கரைப்புத்தூர் - புகழ்த்துணைநாயனூரவதரித்தசிவஸ்தலம் அரிசில் நதிதீரத்திலுள்ளது. மூவராலும் பாடப்பெற்றது.

திரு அருவேயவிண்ணகரம் - காவிரியின் வடகரையின்கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் குடமாடிய கூத்தன், சத்தி விழியமுதவல்லி. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றது.

திரு அவணிவணல்லூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சாட்சிநாயகேசுரர், அம்மை சவுந்தரநாயகி. சம்பந்தராற் பாடப்பெற்றது.

திருஅழுந்தூர் - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி வேதபுரேசர், அம்மை சௌந்தராம்பிகை. சம்பந்தராற் பாடப்பட்டது. சோழநாட்டிலே காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் ஆமருவியப்பன், சத்தி செங்கமலவல்லி. திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம் உடையது.

திருஅன்பில் - காவிரின் வடகரையிலேயுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி வடிவழகிய நம்பி, சத்தி சௌந்தரியவல்லி. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றது.

திருஅன்னியூர்-சோழநாட்டிலே காவிரிக்கு வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி ஆபத்சகாயேசுரர், அம்மை பெரியநாயகி. நாவுக்கரசராலும் சம்பந்தராலும் பாடப் பெற்றது.

திருஆய்ப்பாடி - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பாலுகந்தார், அம்மை பெரியநாயகி. நாவுக்கரசராலும் ஐயடிகள் காடவர்கோனாலும் பாடப்பட்டது.

திருஆலம்பொழில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி ஆத்மநாதேசுரர், அம்மை ஞானம்பிகை. நாவுக்கரசராற் பாடப்பட்டது.

திருஆவூர்ப்பசுபதீச்சுரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமி பசுபதீச்சுரர், அம்மைமங்களநாயகி. சம்பந்தராற் பாடப்பட்டது.

திருஇடும்பாவனம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சற்குணநாதேச்சுரர், அம்மை மங்களநாயகி. சம்பந்தராற் பாடப்பட்டது.

திருஇடைச்சுரம் - திருக்கச் சூராலக் கோயிலுக்குத்தெற்கே திருக்கழுக் குன்றுக்கு வடக்கே உள்ள ஒரு சிவஸ்தலம். சிவாமி இடைச்சுரநாதர், அம்மை இமயமடக்கொடி. சம்பந்தராற் பாடப்பட்டது.

திருஇந்தளூர் - காவிரின் வடகரையின் கணுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம். சுவாமி சுகந்தவனநாதர். சத்தி புண்டரிகவல்லி. குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார் இவர்களால் பாடப்பெற்றது.

திருஇராதாபுரம் - மறந்து மாலைக்காலங்காறும் வேட்டையாடித் தனது நகரஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்யவியலாது காட்டிற்றங்கி அதுவே கவர்சியாக விருந்த வரகுணபாண்டியனுக்குச் சிவன் தரிசனமருளியதலம். அது பாண்டியநாட்டிலே தென்பாலிலுள்ளது. சுவாமி வரகுணபாண்டியேச்சுரர், அம்மை நித்தியகல்யாணி.

திருஇராமனதீச்சரம் காவிரியின்தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிஇராமநாதேச்சுரர். அம்மைகருவார்குழலி சம்பந்தராற் பாடப்பட்டது.

திருஇராமேசுரல்லூர் - பாண்டியநாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிஇராமனுதேச்சுரர். அம்மைகுணக்குன்றநாயகி. இத்தலம்தாமிரவருணி நதிதீரத்திலுள்ளது.

திருஇராமேச்சுரம் - பாண்டிநாட்டிலே சேதுதீர்த்தத்தை யடுத்த ஒரு சிவஸ்தலம். ஸ்ரீராமர் பிரதிஷ்டைசெய்து பூசித்த லிங்கமூர்த்தி யுண்மையால் இதற்குஇப்பெயர்வாய்ந்தது. சுவாமி பெயர் இராமநாதர், அம்மை பெயர் பர்வதவர்த்தனி.

திருஇரும்பூளை - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது ஆலங்குடியெனவும்படும். சுவாமி பெயர் காசியாரணியேசர், அம்மை பெயர் ஏலவார்குழலி. இத்தலம் சம்பந்தரால் பாடப்பட்டது.

திருஇரும்பைமாகாளம் - தொண்டைநாட்டிலே திருஅரசிலுக்குத் தென்கீழ்த்திசையிலேயுள்ள ஒரு சிவஸ்தலம். மாகாளர் பூசித்த தலமாதலால் இப்பெயர்வாய்த்தது. சுவாமிபெயர் மாகாளேசுவரர், அம்மைபெயர் குயின்மொழியம்மை.

திருஇலம்பையங்கோட்டூர் - காஞ்சிநகரத்துக்கு வடகிழக்கிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் சந்திரசேகரேசுவரர், அம்மைபெயர்கோடேந்துமுலையம்மை. இத்தலம் சம்பந்தராற் பாடப்பட்டது.

திருஇளையான்குடி - காவிரியாற்றின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். இளையான் குடிமாற நாயனார் அவதரித்த தலமிதுவே.

திருஈயங்கோய்மலை - காவிரியாற்றின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் மரகதாசலேசுவரர், அம்மை பெயர் மரகதவல்லி. சம்பந்தரால்பாடப்பட்டது. அகத்தியர் ஈயுருக்கொண்டு பூசித்ததலமாதலால் இதற்கு இப்பெயர் வாய்ந்தது.

திருஉத்தரகோசமங்கை - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது மாணிக்கவாசகருக்குத் தரிசநந்தந்த தீத்தல் விண்ணப்பம் பாடப்பெற்றது.

திருஎயினனூர் - காவிரியாற்றின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். ஏனாதிநாயனார் அவதரித்த தலமிதுவே.

திருஎருக்கத்தம்புலியூர் - நடுநாட்டிலே மணிமுத்தாநதி தீரத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். நாகேந்திரபட்டணமெனவும்படும். சம்பந்தராற் பாடப்பட்டது. சுவாமி நீலகண்டநாயகர், அம்மை நீலமலர்க்கண்ணி.

திருஎறும்பியூர் - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். அது எறும்பு பூசித்தருள்பெற்ற தலமாதலின் இப்பெயர்த்தாயிற்று. நாவுக்கரசராற் பாடப்பட்டது. சுவாமி எறும்பீசர், அம்மை நறுங்குழல்நாயகி.

திருஏகம்பம் - சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்ட காஞ்சிபுரத்துச் சிவஸ்தலம். மிக்க பிரபலமுடையது. சோழர்களுக்கு இராஜதானியாகவுமிருந்தது. சுவாமி ஏகாம்பரநாதர், அம்மை காமாக்ஷி. உமாதேவியார மண்ணுற் சிவலிங்கம் ஸ்தாபித்துப் பூசிக்க அதனைப் பரீக்ஷிக்குமாறு சிவபெரு

மான் கம்பாநதியை பெருகச்செய்து அவ்விலிங்கத்தைப் மூழ்குவிக்க, தேவியார் மார்போடதனை யெடுத்தணைக்க, அவர்முலைத்தழும்பு பதிந்தபடியே சிவலிங்கப்பெருமானாகிய அற்புத நிகழ்ந்தஸ்தலம். அங்குள்ள மாமரம் வேதங்களின் வடிவம்.

திருஓமாம்புலியூர் - இதுகாவிரியின்வட கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். புலியினாலே தொடரப்பட்ட ஒருவேடன். இத்தலத்து வில்வமரத்திலேறியிருந்து அஸ்தமயனகாலமுதல் விடியுங்காறும் அம்மரத்துப் பத்திரங்களைப் பறித்தொவ்வொன்றாக அதன்கீழிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கர்ச்சித்து விடியற்காலத்திலே அருள்பெற்று அப்புலியோடு நற்கதிபெற்றமையின் இப்பெயர்த்தாயிற்று. சுவாமி துயர்தீர்த்தசெல்வர், அம்மை பூங்கொடியம்பிகை.

திருகணி - சங்குதிரி, திருகாணி.

திருகணை - புரிமணை.

திருகம் - சாதிக்காய், துவாரம்.

திருகலி - நுனிவளைந்தபனைமுதலியன.

திருகல் - முரணல், முறுகல், வளைதல்.

திருகல்முறுகல் - திருக்கானது.

திருகாணி - சுரியாணி.

திருகு - கள்ளம், திருகென்னேவல். முறுக்கு, வஞ்சனை.

திருகுகள்ளி - ஒருவகைக்கள்ளி.

திருகுதல் - திருப்பி முரித்தல், திரும்புதல், பறித்தல், முறுகுதல்.

திருகுதாழை - ஒருதாழை.

திருகுதாளம் - மாறுபாடு.

திருகுதாளி - மாறுபாடுள்ள ஆள்.

திருகுபலை - வலம்புரிக்காய்.

திருகூசி - தமருசி, துலா அச்சு.

திருக்கங்கைகொண்டான்-பாண்டிநாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்கச்சிஅத்திகிரி - இதுதொண்டைநாட்டிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம். சுவாமிவரதராஜப்பெருமான், சத்திபெருந்தேவியார். இத்தலம் இக்காலத்தில் சின்னகாஞ்சிபுரம் எனப்படுகிறது.

திருக்கச்சி அநேகதங்காவதம் - காஞ்சிபுரத்திலேதிருவேகம்பத்தைச்சார்ந்த ஒரு சிவஸ்தலம்.

திருக்கச்சிஓணகாந்தன்றளி - இதுவும் திருவேகம்பத்தைச்சார்ந்த ஒரு சிவஸ்தலம். இது ஓணகாந்தனென்னும் அசுரன் பூசித்தது.

திருக்கச்சி நெறிக்காரைக்காடு - இது திருவேகம்பத்தைச் சேர்ந்த ஒரு சிவஸ்தலம்.

திருக்கச்சிமேற்றளி இது திருவேகம்பத்தைச் சேர்ந்த ஒரு சிவஸ்தலம். பிள்ளையார் பாலயத்திலே உள்ளது.

திருக்கச்சூராலக்கோயில்-இது தொண்டைநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுந்தரமூர்த்திக்குத் திருவமுது அளித்த ஸ்தலம்.

திருக்கஞ்சனூர் - இது காவிரியின் வடகரையிலுள்ள ஒருசிவஸ்தலம். மணக்கோலஞ்செய்து மணப்பந்தரின் கீழ் வந்திருந்த கன்னிகையினது கைத்தலை மாவிரதி வேடங்கொண்டு சென்று சிவபெருமான்கேட்க, அதனை அக்கன்னிகையின் தந்தையாகிய மானக்கஞ்சாறநாயனார் மறுதுகொய்து கொடுத்த ஸ்தலமுமிதுவே. பழுக்கக் காய்ச்சிய இருப்புப் படியேறிச் சிவபரஞ்சாதித்த ஹரதத்தாசாரியர் திருவவதாரஞ்செய்த ஸ்தலமுமிதுவே. இங்குள்ள சிவமூர்த்தி அக்கினீச்சுரர், அம்மை கற்பகநாயகி.

திருக்கடம்பந்துறை - காவிரியின்தென் கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி கடம்பவனநாதர், அம்மை முற்றிலா முலையம்மை. நாவுக்கரசரால் பாடப்பட்டது.

திருக்கடம்பூர்க்கரகோயில் - இது காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி அமிர்தகடேசுவரர், அம்மை சோதிமின்னம்மை. இது நாவுக்கரசரும் சம்பந்தரும் பாடிய தலம்.

திருக்கடவூர் - காவிரியின் தென்பாலிலே சோழநாட்டிலே கீழ்க்கடலோரத்திலேயுள்ள சிவஸ்தலம். மூவராலும் பாடப்பட்டது. அது யமசம்மாரமூர்த்தியாய்ச் சிவனெழுந்தருளியிருக்கும் ஸ்தலம். சுவாமி அமிர்தகடேசுரர், அம்மை அபிராமித்தாய் இது அட்டவீரட்டத்துள்ளொன்று.

யம சங்காரம் காசியில் நடந்தது. குங்கிலியக் கலய நாயனார்க்கும் அபிராமிப் பட்டர்க்கும் ஜன்ம ஸ்தலமிதுவே.

திருக்கடவூர் மயானம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். இதுவும் மூவராலும் பாடப்பட்டது.

திருக்கடிகை-தொண்டைநாட்டிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம். இது சோழங்கிபுரமென வழங்கப்படுவது. சுவாமிநாசிங்கமூர்த்தி. சத்தி அமிர்தவல்லி, பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்னும் மூவராலும் பாடப்பட்டது.

திருக்கடிக்குளம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி கற்பகேச்சுரர், அம்மை சௌந்தரநாயகி. இது கற்பகவிநாயகர் சிவன்பால் மாங்கனிபெற்ற ஸ்தலம். சம்பந்தர் பாடல்கொண்டது.

திருக்கடித்தானம் - மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். திருவஞ்சைக்களத்துக்குத் தென்கிழ்த்திசையிலுள்ளது.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சொர்ணபுரேச்சுரர். அம்மை சிவாம்பிகை, நாவுக்கரசர் பாடல்கொண்டது.

திருக்கடைமுடி - இது சோழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தர் பாடல்கொண்டது.

திருக்கடைக்காப்பு-கோவிற்கதவு சார்த்தல், பிரபந்தத்தின் முடிவுப் பாட்டு.

திருக்கடையாப்பு-சம்பந்தர் பாடியநூல்

திருக்கடையூர் - தஞ்சாவூருக்கருகில் ஒரு சிவஸ்தலம்.

திருக்கண்சார்த்துதல் - கிருபையாய்ப் பார்த்தல்.

திருக்கண்டியூர்-பிரமனது சிரங்கொய்த ஒரு சிவஸ்தலம். காவிரியின் தென்கரையிலுள்ளது. சுவாமி வீரட்டானேச்சுரர். அம்மை மங்கைநாயகி. சம்பந்தராலும் நாவுக்கரசராலும் பாடப்பட்டது. காவிரியின் தென்கரையிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம். சுவாமி அருஞ்சாபந்தீர்த்த பெருமாள், சத்தி கமலமடந்தை.

திருக்கண்ணங்குடி -காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். திருமங்கை யாழ்வாராற் பாடப்பட்டது.

திருக்கண்ணமங்கலம்-காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்கண்ணபுரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். காளமேகப்புலவர், இங்குள்ள விஷ்ணுமூர்த்தியைப் பாடிராயின் கபாடந்திறவேனென்றாடிகின்ற காமக்கிழத்தியினது ஊடலைத் தீர்ப்பான் கருதி, "கண்ணபுரமாலே கடவுளினும் நீயதிகம்" என்று முதலடியைக் கூறி அவளை மகிழ்வித்துக் கதவு திறப்பித்த பின்னர், "உன்னிலுமோ ரனதிகமொன்றுகேள் முன்னமே-உன்பிறப்போ பத்தா முயர்சிவனுக் கொன்றுமில்லை, என்பிறப் பெண்ணப்போகாதே" என்று மற்றைய அடிகளையுங்கூறி நிந்தாஸ்துதிசெய்யப்பெற்றது மித்தலமே.

திருக்கண்ணப்பதேவர்மறம்-நக்கீரர் பாடிய பிரபந்தம். கல்லாடரும் இப்பெயரால் ஒரு பிரபந்தம் பாடினர்.

திருக்கண்ணமங்கை -காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி சௌந்தரராஜப் பெருமான்; சத்தி கண்ணபுரநாயகி. குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் மூவராலும்பாடப்பட்டது.

திருக்கண்ணார்கோவில் - இது சோழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி கண்ணாயிரேச்சுரர்; அம்மை முருகுவளர் கோதை, சம்பந்தராற் பாடப்பட்டது.

திருக்கைலாசபுரம் - பாண்டி நாட்டின் கணுள்ள ஒருசிவஸ்தலம். இது சிந்துபூந்துறை யெனவும்படும். சுவாமிகைலாயநாதேச்சுரர், அம்மை சிவகாமி. இது அகஸ்தியருக்குச் சிவன் திருமணக்கோலங்காட்டி யருளிய தலம்.

திருக்கரணம் - பாம்பு.

திருக்காம்பனூர் -காவிரியின் வடகரையின்கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

சுவாமி புருஷோத்தமன்; சத்தி பூர்வாதேவி. திருமங்கை யாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காவீரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி காவீரேச்சுரர்; அம்மைபிரத்தியக்ஷமின்னுன். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கரிவலம்வந்தநல்லூர்-இதுபாண்டி நாட்டின்கண்ணுள்ளஒருசிவஸ்தலம். சுவாமி பால்வண்ண நாதர், அம்மை ஒப்பிலம்பிகை. குலசேகர பாண்டியன் வேட்டையாடும்போது எதிர்ப்பட்ட ஒரு யானையைத்துரத்த அஃதோடிப் போய் இம்மூர்த்தி யிருந்த புதரை வலம்போய்ச் சிவகணமாகப் பெற்றமையால் அத்தலம் இப்பெயர் பெற்றது.

திருக்கருகாவூர்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி முல்லைவனநாதர்; அம்மைகரும்பனையாள். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கருக்குடி-காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். இதுவலங்கைமான் எனவும்படும். சுவாமி சற்குண லிங்கேச்சுரர்; அம்மை சர்வாலங்கிருத மின்னம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கருப்பறியலூர்-இது ஞாயிறு என வழங்குஞ்ஒருசிவஸ்தலம் சோழநாட்டிலே காவிரியின் வடகரையிலுள்ளது. சுவாமி குற்றம்பொறுத்த நாதர், அம்மை கோல்வளைநாயகி; பூதவடிவு கொண்டுநின்ற தம்மை புணராமற் குலிசத்தாற்றாக்கவெத்தனித்த இந்திரன்மீது நாடகமாத்திரையாகக் காட்டிய கோபாக்கினியைத் தணித்துப் பிழைபொறுத்து அவனுக்குச் சிவபிரான் அருள்புரிந்ததலமாதலின் இங்கே கோயில்கொண்டிருக்கும் மூர்த்தி கோபம் பொறுத்த நாதர் எனப்படுவர். சுந்தராலும் சம்பந்தராலும் பாடப்பட்டது. தணித்த கோபாக்கினியை மேலைச்சமுத்திரத்திற் சிவன் வீச அது ஜலந்தராசுரனுயிற்று.

திருக்கருவிலி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சற்குணேச்சுரர்; அம்மை, சர்வாங்கநாயகிநாவுக்கரசரால் பாடப்பட்டது.

திருக்கருவூர்த்திருவாநிலை-கொங்கு நாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம். கருவூரெனப்படும். பிரமாசிருஷ்டியின்றியிருந்த காலத்திற் காமதேனுசிவனை வழிபட்டுச் சிருஷ்டி அதிகாரம் பெற்ற தலமாதலின் ஆநிலையெனப்பட்டது. சிவயோகமும் அணிமாதிசித்திகளும்வல்லவராய், மழைபொழிவித்தல், விளைந்தபோது வெயிலை நீக்கல், அரங்கநாதரை அழைத்தது முதலிய அற்புதங்களைச் செய்து விளங்கியவரும், திருவிசைப்பா பாடியவருமாகிய கருவூர்த்தேவர்க்கு அவதார ஸ்தலமுமிதுவே. சுவாமி பசுபதிச்சுரர்; அம்மை கிருபாநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது. இத்தல சம்பந்தமான சரித்திரங்களுக்கு அளவில்லை.

திருக்கலிக்காமூர் - சோழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது

திருக்கலையநல்லூர் - காவிரியின் தென் கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுந்தரரால் பாடப்பட்டது.

திருக்கவித்தலம் - இது காவிரியின் வடகரையின் கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம் சுவாமி கஜேந்திரவரதர்; சத்தி ரமாமணிவல்லி, திருமழிசை யாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்கழிப்பாலை சோழநாட்டிலே காவிரியின் வடபாலிலுள்ள ஒரு சிவஸ்தலம். சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருக்கழுக்குன்றம் - இது திருவிடைச்சுரத்துக்குத் தெற்கும் செங்கல்பட்டுக்கு மேற்கும்ஒன்பதுகல்லில்உள்ள ஒரு சிவஸ்தலம். சிவபெருமான் திருவாக்கிற்கு எதிர்வாக்குரைத்த அறவிகளிருவரும் கழுகுருபம்பெற்று அங்கே வழிபட்டுக்கொண்டின்று மிருக்கப்பெற்ற ஸ்தலம். மாணிக்கவாசகருக்குக் குருவடிவு காட்டிய தலமிதுவே. "காட்டினாய் கழுக்குன்றிலே" எனத் திருவாசகத்திலே வருதல் காண்க. சுவாமி வேதகிரீச்சுரர்; அம

மை பெண்ணினல்லரன். சமயாசாரியர் மூவராலும் தேவாரஞ் சூட்டப்பட்டது.

திருக்கழுமலமும்மணிக்கோவை - பட்டினத்தடிகள் பாடிய பிரபந்தங்களுளொன்று.

திருக்காளக்காடு - பாண்டி நாட்டின்கணுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிசகலபுவனேச்சுரர். அம்மை உமாதேவி.

திருக்கவர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தராற் பாடப்பட்டது.

திருக்களிற்றுப்படியார் - ஒரு சைவசித்தாந்த நூல்.

திருக்கள்ளில்-திருவொற்றியூருக்குவடமேற்கிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தராற் பாடப்பட்டது.

திருக்கள்வனூர் - தொண்டைநாட்டின்கணுள்ளஒருவிஷ்ணுஸ்தலம். சுவாமி ஆதிவராகன்; சத்தி அபயநாயகி. திருமங்கையாழ்வாராற் பாடப்பட்டது.

திருக்கற்குடிமலை - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி முத்தீச்சுரர். அம்மை அஞ்சனாட்சி; மூவராலும் பாடப்பட்டது. இது உமையக்கொண்டான் என்றுவழங்குகிறது

திருக்கன்றாப்பூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். பசுக்கன்றுத் தறியிலேதோன்றி ஒருபெண்ணுக்குத் தரிசனங்கொடுத்த தலமாதலால் இப்பெயர்பெற்றது. இது திருநாவுக்கரசரால் பாடப்பட்டது

திருக்காசிபேச்சரம் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது அம்பாசமுத்திரம் எனவும் படும், சுவாமி பெயர் எரித்தாள் உடையார்; அம்மை பெயர் சிவகாமி. சிவசர்மனது பொருளைக் கவர்ந்துகொண்டு போய்ச் சத்தியஞ்செய்யப்புகுந்த அர்ச்சகனை யெரித்துச் சிவசர்மாவை ஆட்கொண்டமையால் இந்த மூர்த்திக்கு எரித்தாள் உடையார் என்னும் பெயருண்டாயிற்று.

திருக்காட்கரை-மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். இது நம்மாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காட்சி - தேவதரிசனம்.

திருக்காட்டுப்பள்ளி-சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் ஆரணியசுந்தரேச்சுரர். அம்மைபெயர்அகிலாண்டநாயகி. இது சம்பந்தராற் பாடப்பட்டது.

திருக்காந்தீச்சரம் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது ஆழ்வார் திருநகரி யெனவும்படும்.

திருக்காம்பிலி-காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்காரகம்-தொண்டை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் கருணாகரன்; அம்மைபெயர் பத்மாமணி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காராயில்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், இதுசப்தவிடங்களுளொன்று, சம்பந்தராற் பாடப்பட்டது.

திருக்கார்வானம் - தொண்டை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுமாமி பெயர், நவநீதசோரன், அம்மைபெயர் கமலவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காவளம்பாடி-காவிரியின்வடகரையிலுள்ளஒருவிஷ்ணுஸ்தலம், சுவாமி பெயர் கோபாலன், அம்மை பெயர் மடவரல் மங்கை. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காழிச்சீராமவிண்ணகரம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸதலம், சுவாமிபெயர் ஸ்ரீநிவாசன் அம்மை பெயர் உலகநாயகி, திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்காளத்தி-தொண்டைநாட்டுச் சிவஸ்தலங்களு ளொன்று. சிலந்தியும் பாம்பும் யானையும் பூசித்து முத்திபெற்ற தலமாதலால் இதற்கு இப்பெயர்வாய்ந்தது. இத்தலத்திலேயே கண்ணப்பநாயனார் முதிர்ந்த திடபத்தியினால் ஆறு நாளுக்குள்ளே முத்திபெற்றனர்.

திருக்கானப்பேர்- பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் காளைக்காளையீச்சுரர், அம்மைபெயர்

மகமாயி, சுந்தரராலும் சம்பந்தராலும் பாடப்பட்டது.
திருக்காறட்டுமுள்ளூர்-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் பதஞ்சலி நாதேசுவரர்; அம்மைபெயர் திரிபுரசுந்தரி. சுந்தரரால் பாடப்பட்டது.
திருக்கானூர் - காவேரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் செம்மேனி நாயகர்; அம்மைபெயர் சிவயோக நாயகி. சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.
திருக்கீழ்வேளூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் அக்ஷலிங்கேசுவரர்;அம்மைபெயர் வனமுலைநாயகி. சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.
திருக்கு-கண்,குற்றம்,முறுக்கு,வஞ்சம்.
திருக்குடந்தாபுரி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் ஆராவமுது; அம்மைபெயர் கோமளவல்லி. பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வாரென்பவர்களால், பாடப்பட்டது.
திருக்குடந்தைக்காரோணம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் சோமநாதர்; அம்மைபெயர் தேனார்மொழி. சம்பந்தரால் பாடப்பட்டது.
திருக்குடந்தைக்கீழ்கோட்டம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் மடந்தைபாகர்; அம்மைபெயர் பெரியநாயகி. திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.
திருக்குடமூக்கு - கும்பகோணம், காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இங்குள்ள தீர்த்தம் மாமக தீர்த்தமெனப்படும். ஒரு முனிவர் தமது தாயின் அஸ்தியை யெடுத்துக்கொண்டு தீர்த்தங்க டோறுஞ் சென்று சிராடி, சுவர்ண, புஷ்கரிணியென்னும் மாமக தீர்த்தத்திலும் ஆடிக்கரையேறி அவ்வென்புப்பொதியை யவிழ்த்துப் பார்க்க அது பொற்றாமரைப் பூவாயிற்று. சுவாமிபெயர் கும்பேசுவரர்; அம்மைபெயர் மங்களநாயகி. மூவராலும் பாடப்பட்டது.
திருக்குடவாயில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் கோணேசர். அம்மைபெயர் பெரியநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.
திருக்குரக்குக்கா - காவிரியின் வடகரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபெயர் கொந்தளேசர்; அம்மைபெயர் கொந்தளநாயகி. திருநாவுக்கரசரால் பாடப்பட்டது. அநுமாரால் பூசிக்கப்பட்டது.
திருக்குரங்கணின்முட்டம் - தொண்டைநாட்டிலே வாலி பூசித்த ஒரு சிவஸ்தலம். இது திருமாகறலுக்கு வடக்கேயுள்ளது. சுவாமிபெயர் வாலீச்சுரர்; அம்மைபெயர் இறையார் வளையம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது.
திருக்குருகாவூர்-சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் திருமேனி வெள்ளடையீச்சுரர்; அம்மைபெயர் காவியங்கண்ணி. அப்பராலும் சுந்தராலும் பாடப்பட்டது.
திருக்குருகூர் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் ஆதிநாதப்பெருமாள். அம்மைபெயர் ஆதிநாதவல்லி, நம்மாழ்வாரால் பாடப்பட்டது.
திருக்குலசேகரன்பட்டினம் - இந்தத் தலத்திலுள்ள ஒரு அற்புதமான மாமரம் எக்காலத்தும் பூவும் காயுமாறுமல் பூத்துக் காய்த்திருப்பது. இந்தச் சிவஸ்தலம் திருச்செந்தூருக்குத் தென்மேற்கிலுள்ளது.
திருக்குழந்தை - பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் மாயக்கூத்தன்; அம்மைபெயர் குழந்தைவல்லி.
திருக்குழப்பம் - திருவிளையாட்டு,தேவசெயர் குழப்பம், புராணித்தனம்.
திருக்குழல்நாயகி - திருச்செங்காட்டங்குடியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
திருக்குளம் - கோயிற்குளம்.

திருக்குறிப்புத்தொண்டர் - காஞ்சிபுரத்திலே ஏகாலியர்குலத்தில்அவதரித்த ஒரு சிவபத்தர். சிவபெருமான் ஒரு முனிவர்போல வேடங்கொண்டு சென்று வெளுத்துத் தரும்படி தம்மிடத்துக்கொடுத்த ஆடையை மழையினால் வெளுத்தரக் கூடாமையாகிய காரணத்தால் வாக்குத்தவறிற்றே; குளிரினால் சிவபத்தர் வருந்துவரே யென்று தம் தலையைக் கல்லின்மேல் மோதப் புகுந்து சிவபெருமான் திருக்கரத்தாலே தடுத்தாளாகிய பெரும்பேறு பெற்றவர்.

திருக்குறுக்கை - மன்மதனை யெரித்த ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் வீரட்டானேசுவரர். அம்மையார் பெயர் ஞானம்பிகை. திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.

திருக்குற்றாலம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். அகத்தியமுனிவர் பொதிகைக்கு எழுந்தருளும்போது அதனை விஷ்ணுதலமென்றறியாமல் அதன் வழியே செல்ல, அங்குள்ள வைணவர்கள் அகத்தியர் தரித்திருந்த சிவ சின்னங்களைக்கண்டு பொறாதவர்களாகி வெளியே துரத்த, அகத்தியர் வெளியேவந்து, வைஷ்ணவர்கள் போல வடிவுதாங்கி மீண்டு சென்று அவர்கள் அநுமதிப்படி ஆலயத்துட் பிரவேசித்து விஷ்ணுமூர்த்தியைத் தமது திருக்கரத்தால் குழைவித்து சிவலிங்கமாகச் செய்து பூசித்து வைணவர்களைக் கர்வபங்கஞ்செய்த ஸ்தலம். இது சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்குன்றமலை - திருக்கோணமலை.

திருக்கூடலூர் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம்.

திருக்கூடலையாற்றூர் - நடுநாட்டில்மணிமுத்தா நதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்கூடல்தென்மதுரை-பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் கூடலழகர்; அம்மைபெயர் வகுளவல்லி. திருமழிசை யாழ்வார் பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார் என்னு மூவரால் பாடப்பட்டது.

திருக்கூட்டம் - தேவதொண்டர்கூட்டம்.

திருக்கூத்து - திருநடனம்.

திருக்கேதீச்சரம் ஈழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது சம்பந்தராலும் சுந்தராராலும் பாடப்பட்டது. ஆலயம் அழிந்துபோயிற்று.

திருக்கை - ஒருவகைமீன்.

திருக்கைச்சினம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கைலாயஞானவுலா - சேரமான் பெருமாணாயனாரால் செய்யப்பட்ட ஒரு பிரபந்தம்.

திருக்கொடுங்குன்றம் - பாண்டிய நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சோலைமலைக்குக் கிழக்கே யுள்ளது.

திருக்கொடும்பாளூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்கொட்டையூர்க்கோடீச்சரம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் கோடீச்சுரர்; அம்மை பெயர் பந்தாடு நாயகி. திருநாவுக்கரசராலே பாடப்பட்டது.

திருக்கொண்டீச்சரம் - காவிரியின் தென்கரையிலுள்ளஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் பசுபதீச்சுரர்; அம்மை பெயர் சாந்தநாயகி. திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.

திருக்கொள்ளம்பூதூர் - சோழநாட்டிலே குடமுருட்டி நதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் வில்வவனநாதர்; அம்மைபெயர் சௌந்தரநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கொள்ளிக்காடு-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கொன்றை - ஒருமரம்.

திருக்கோகர்ணம் - திருக்கைலாயத்திலே சிவனிடத்து இராவணன் இரந்துபெற்ற சிவலிங்கத்தை, இவ்விடத்தில் ஒரு அந்தணச்சிறுவனாகத் தன் முன்னே தோன்றியவிநாயகர் கையிலே கொடுத்து சலமோசனம் செய்தபோது விநாயகர் அதனைக் கீழேவைத்துவிட அவன் தன் இருபது கைகளாலும் பற்றியிழுக்கவும், அது

பசுவின்காதுபோலக்குழைந்து வேர்கொண்டமையால் இது மஹாபலம் என்று சொல்லிவிட்டுப் போனான். அதுபற்றி இத்தலம் கோகர்ணம் எனப்பட்டது இது துளுவநாட்டிலேயுள்ளது. திருநாவுக்கரசராலும் சம்பந்தராலும் பாடப்பட்டது.

திருக்கோடிக்கா - காவிரியின்வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்கோடிக்குழகர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திர வெண்பாவாலும்சம்பந்தவாகீசராது தேவாரத்தாலும் பாடப்பட்டது.

திருக்கோடீச்சுரம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். அகஸ்தியர்மணலால் அமைக்க அமைக்க அமையாதின்ற இலிங்கத்தைப்பார்த்து இதென்ன கோட்டி யென்றுகூறித் தியானித்தலும் அமைந்திருந்தமையால் இதற்கு இப்பெயர் வாய்ந்தது.

திருக்கோட்டாறு - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கோட்டியூர் - பாண்டி நாட்டிலுள்ளஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் சௌமியநாராயணர்; அம்மைபெயர் திருமாமகள். பூதத்தாழ்வார் முதலிய ஐவரால் பாடப்பட்டது.

திருக்கோட்டூர் - காவிரியின் தென்கரையிலுள்ளஒருசிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருக்கோணமலை ஈழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது சம்பந்தரால் பாடப்பட்டது. திரிகோணமலை எனவும்படும்.

திருக்கோலக்கா - சம்பந்தருக்குப் பொற்றாளமருளிய ஒரு சிவஸ்தலம். இது சோழநாட்டிலுள்ளது. சுந்தரர் சம்பந்தர் இருவராலும் பாடப்பட்டது.

திருக்கோலம் - திருவேடம், திருவமண்டலம், தேவகோலம்.

திருக்கோவலூர்வீரட்டலம் - போர்க்கோலங்கொண்டு கைலாயத்துக்குச் சென்ற அந்தகாசுரனை வென்றருளின ஒரு சிவஸ்தலம். இது அட்டவீரட்டானத்துளொன்று. பெண்ணையாற்றங் கரையிலுள்ளது. அப்பர் சம்பந்தர்களால் பாடப்பட்டது.

திருக்கோழம்பம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபெயர் கோகிலேசுவரர்; அம்மைபெயர் சௌந்தரநாயகி. அப்பர் சம்பந்தர்களால் பாடப்பட்டது.

திருக்கோளிலி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் கோளிலிநாதர்; அம்மைபெயர் வண்டமர் பூங்குழல், மூவராலும் தேவாரஞ் சூட்டப்பட்டது. சப்தவிடங்க ஸ்தலங்களு ளொன்று. சுந்தரமூர்த்திகள் தாம் குண்டையூர்க் கிழவர்பாற் பெற்ற நெற்குவையைக் கொண்டுபோதற்கு ஆளின்மையால் வருந்திச் சிவபெருமானை நோக்கி, "ஆளிலை யெம்பெருமான்" என்று பாடிப்பூதகணங்களை ஆளாகப்பெற்ற தலம் இதுவே.

திருக்கோளூர் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். இது நம்மாழ்வாரால் பாடப்பட்டது.

திருக்கோவில் - தேவகோயில், சிதம்பரம்.

திருசி - கண்.

திருசிபத்துவம் - பார்வை.

திருசியம் - தோற்றமுள்ளது.

திருசை - கண்.

திருசோபம் - வெண்டாமரை.

திருச்சக்கரப்பள்ளி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தராற் பாடப்பட்டது.

திருச்சங்கரநாராயணர்கோவில் - பாண்டிநாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருச்சத்திமுற்றம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சத்திமுற்றப்புலவர் வணங்கிய ஸ்தல புமிதுவே. சுவாமி சிவக்கொழுந்தீச்சுரர்; அம்மை பெரியநாயகி. நாவுக்கரசர், "கோவாய்முடுகியதிறற்கூற்றங் குமைப்பதன்முன் பூவாரடிச்சுவடென்மேற் பொறித்துவை" என்று தேவாரத்தில் விண்ணப்பஞ் செய்த ஸ்தலமுமிதுவே.

திருச்சவை - திவ்யசங்கம், தேவசபை.

திருச்சாத்தமங்கை அயவந்தி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்

தலம். இது சிவனடியார் வேண்டும் எதனையும் மறுதகொடுக்கும் இயல்புடையராகிய இயற்பகை நாயனரிடத்திலேசிவபிரான் ஒரு விடபுருடனுகிச்சென்று அவர்மனைவியை வேண்ட, மறுதகொடுக்கத்துணிந்த அந்நாயனருடைய பத்தியை மெச்சி அவருக்கு முத்தியளித்த ஸ்தலம்.

திருச்சிக்கல்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். திருஞான சம்பந்தராற் பாடப்பட்டது.

திருச்சிங்கவேள்குன்றம் -வடநாட்டின்கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருச்சித்தம் - திவ்வியசித்தம்.

திருச்சித்திரக்கூடம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். இதசிதம்பரத்தக்குவைஷ்ணவர்கள் இட்டுக்கொண்டபெயர். சுவாமிகோவிந்தராஜன்; சத்தி டண்டரீகவல்லி. குலசேகராழ்வார் முதலியோராற் பாடப்பட்டது.

திருச்சிராப்பள்ளி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். தனகுப்தன் மனைவி சிவபத்தியிற் சிறந்தவளாதொழுகி வருநாளிற் கருப்பவுறியாகிப் பிரசவித்தாள். அச்சமயம் அவள் தாய் காவிரிப்பெருக்கால் அக்கரையில நின்றுவிடச் சிவபிரான் அத்தாயைப்போல் உருவங்கொண்டு சென்றுபோய் அப்பெண்ணுக்குப் பிரசவ அறையில் உதவி டரிந்திருந்தார். அதுபற்றி இத்தலத்தி லெழுந்தருளியிருக்கும் சுவாமிக்குத் தாயுமானர் என்னும் பெயருண்டாவதாயிற்று.

திருச்சிவபுரம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பிரமபுரி நாயகேச்சுரர். அம்மை பெரியநாயகி.

திருச்சிறுகுடி-காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிமங்களேச்சுரர்; அம்மை மங்களநாயகி.

திருச்சிற்றம்பலம் - சிதம்பரம்.

திருச்சிற்றேமம் - காவிரியின் தென்கரையிலுள்ளஒருசிவஸ்தலம். சுவாமி பொன்வைத்த நாதேச்சுரர்; அம்மை அகிலாண்டேசுவரி. திருஞான சம்பந்தராற் பாடப்பட்டது.

திருச்சின்னம் - ஒருவாச்சியம்.

திருச்சீரலைவாய் - திருச்செந்தூர்.

திருச்சுண்ணம் - அபிஷேகச்சுண்ணம்.

திருச்சுழியல் - பாண்டிநாட்டின்கணுள்ளஒரு சிவஸ்தலம். சுவாமி திருமேனிநாதேச்சுரர்; அம்மை துணைமாலை. சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பாடப்பட்டது.

திருச்செங்காட்டங்குடிக்கணபதிச்சரம் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சிறுதொண்டநாயனர் விளங்கிய ஸ்தலமுமிதுவே. சுவாமி கணபதிச்சுரர்; அம்மை திருக்குழலுயகி.

திருச்செங்குன்றூர்-கொங்கு நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிஅர்த்தநாரீச்சுரர்; அம்மை பாகம்பிரியாள். திருஞானசம்பந்தராற் பாடப்பட்டது மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருச்செந்தூர் - சீரலைவாயெனப்படும். இராமேசுரத்துக் கருகில்சுப்பிரமணியர் பிரதான ஸ்தலங்களி லொன்று. பாண்டி நாட்டிலே சமுத்திரதீரத்துள்ளது. சுவாமிசுப்பிரமணியர்; அம்மை வள்ளியம்மை தெய்வானை.

திருச்செப்பறை-பாண்டிநாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி தியாகேச்சுரர்; அம்மை சிவகாமியம்மை. இத்தலம் திருநெல்வேலிக்கு வடகீழ்த்திசையிலுள்ளது.

திருச்செம்பொன்செய்கோவில் - காவிரியின் வடகரையிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம். சுவாமி கிருபாகரன்; சத்தி அல்லிமலர் மங்கை. திருமங்கையாழ்வாராற் பாடப்பட்டது.

திருச்செம்பொன்பள்ளி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சொர்ணபுரேச்சுரர்; அம்மை சுகந்தவனநாயகி. நாவுக்கரசராலும் சம்பந்தராலும் பாடப்பட்டது.

திருச்சேய்ஞலூர்-குமாரக்கடவுளுக்காக விசுவகர்மாவினல் அமைக்கப்பட்ட நகரம். இது சோழ நாட்டிலுள்ளது. இது வடமொழியிலுஞ் சேய்ஞலூ

றென்றே வழங்கப்பட்டுள்ளது. குமா
ரக்கடவுள், சூரசங்காரத்தின் பொரு
ட்டுச்செல்லும் வழியில், ஒருநாள்
தங்கிச் சி பூசைசெய்து ஆயுதங்கள்
பெற்ற தலமிதுவே. இங்கெழுந்தரு
ளியிருக்குஞ்சிவமூர்த்தி சத்தகிரீசர்,
அம்மை சகிதேவி. சண்டேசர் அவத
ரித்த தலமுமிதுவே. சம்பந்தராற்
பாடப்பட்டது.

திருச்சேயன்மாதேவி-பாண்டி நாட்டி
லுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருச்சேர்ந்தமங்கலம் - பாண்டி நாட்
டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருச்சேறை - காவிரியின் தென்கரை
யிலுள்ள ஒரு சிவஸ்தலம் சுவாமிபெ
யர் செந்நெறியய்யர், அம்மை ஞான
வல்லி. சம்பந்தராலும் வாகீசராலும்
பாடப்பட்டது. காவிரியின் தென்
கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருச்சோமேச்சுரம் - பாண்டிநாட்டுச்
சிவஸ்தலங்களுளொன்று. இது ஆற்
றூரெனவும்படும்.

திருச்சோற்றுத்துறை-காவிரியின் தெ
ன்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
சுவாமிபெயர் தொலையாச்செல்வே
ச்சுரர். அம்மைபெயர் ஒப்பிலாவம்
பிகை. மூவராலும் பாடப்பட்டது.

திருடகம் - அடுச்சு.

திருடகாண்டம் }
திருடக்கிரந்தி } மூங்கில்.

திருடதை - உறுதி, பெலம், வயிரம்.

திருடநேமி - சத்தியதிருதன் மகன்.

திருடமூலம் - தேங்காய். [மிருதி.

திருடம் - இரும்பு, தத்துவம், பெலம்,

திருடலோமை - காட்டுப்பன்றி, பருமயி

திருடல் - திருடுதல். [ர்.

திருடவிரதன் - விஜயன் மகன்.

திருடபூம் - தேங்காய்.

திருடஹநு - சேநசித்தன் மகன்.

திருடன் - கள்வன், விஷ்ணுசரந்தை. [ன்

திருடாபத்தி - நம்பிக்கையான மனையா

திருடார்த்தி - மிகுவருத்தம், வின்னுதி.

திருடாசுவன் - தண்டாசுவன்.

திருடி - கள்ளி.

திருடு - களவு, திருடென்னேவல்.

திருடுதல் - களவெடுத்தல்.

திருட்டகூடம் - கொடிக்கதை.

திருட்டம் }
திருஷ்டம் } தெளிவு.

திருட்டாந்தம் } அத்தாட்சி, உதார
திருட்டாந்தரம் } ணம், சாத்திரம்.

திருட்டாபோகம் இம்மையிற் கண்ணால்
அனுபவிக்கு மனுபவம்.

திருட்டி - அறிவு, கண், பாம்பு, பார்வை,

திருட்டித்தல் - காண்டல். [விஷம்.

திருட்டிப்பந்து - மின்மினி.

திருட்டிபாதம் - பார்வை.

திருட்டிபூதம் - காக்கப்பட்டது.

திருட்டிபோகம் - கட்பார்வை புணர்ச்சி.

திருட்டியம் - ஞானம்.

திருட்டினிபாதம் - பார்வை.

திருட்டு - அனுப்பு களவு.

திருட்டுத்தனம் - கள்ளக்குணம், தந்திர

திருட்டுமாயம் - திருக்கு, மாறுபாடு. [ம்.

திருணகம் - வாளுறை.

திருணகேது - மூங்கில்.

திருணசாதி - மாமுதல்மருந்து.

திருணசாரை - வாழை.

திருணசிங்கம் - தறிகருவி.

திருணகுளியம் - தாழை.

திருணதை - வில்.

திருணத்தானியம் - புன்பயிர்.

திருணத்துருமம் - பனை தெங்கு முதலி

திருணபூலி - புற்பாய். [ய மரம்.

திருணம் - உடையார், திரணம், அரும்
பு, தேள், தேனீ, புல், வில்.

திருணராசன் - பனை.

திருணவிந்து - மநுசக்கரவர்த்திவமிசத்
தில் வந்த புதன் மகன், விசாலன்
தந்தை.

திருணாவர்த்தன் - சுழற்காற்றுருவங்
கொண்டுபோய் திருவாய்ப்பாடியில்
சிசுவாயிருந்த கண்ணனை வாரிக்கொ
ண்டு ஆகாயத்தி லெழுந்தபோது அக்
கண்ணனாலேயே கொல்லப்பட்டவ

திருணியை - புற்றிரள். [ன்.

திருணோற்பவம் - காட்டுப்பயிர்.

திருதபதம் - செதிநடை.

திருதம் - தரித்தல்.

திருதன் - காந்தாரன்பௌத்திரன், கங்
காபுத்திரன்.

திருதி - உறுதி, ஒருமீன், சந்தோஷம்,
திருத்தி, துணை, தோல், நித்தியயோ
கத் தொன்று, நீர்த்தருத்தி, யாகம்,

திருநிகரி - நாய்.

திருநியபிரகிருதி - அண்ணகன், அலி.

திருநியை - மூன்று.

திருத்தக்கதேவர் - சீவகசிந்தாமணி என்னும் நூல்செய்த தமிழ்ப்புலவர். இவர் சோணாட்டிலிருந்த சமணசமயி.

திருத்தங்கால் - பாண்டி நாட்டூர்களுள் ஒன்று; இது வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனால் பிரமதாயமாகக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகேயுள்ளது.

திருத்தண்கா - தொண்டைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம். சுவாமிபெயர் தீபப்பிரகாசன்; தேவியார் பெயர் மரகதவல்லி. திருமங்கை யாழ்வாரால் பாடப்பட்டது.

திருத்தண்காலூர் பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம்.

திருத்தண்டலைநீணெறி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் நீணெறி நாதேச்சுரர்; தேவியார் பெயர்ஞானநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தருமபுரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர்யாழ்மூரிநாதேச்சுரர்;தேவியார்பெயர் சதாமதுராம்பிகை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தம் - ஒப்பரவு, ஒழுங்கு, திருந்தல், தீர்க்கம்.

திருத்தலைச்சங்காடு - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் சங்கநாயகேச்சுரர்; செங்குருநாதேச்சுரர்அம்மை பெயர் சவுந்தரியம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தலையாலங்காடு - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் ஆடவல்ல வீச்சுரர். தேவியார்பெயர் திருமடந்தை. வாகீசரால் பாடப்பட்டது.

திருத்தலையூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். உருத்திர பசுபதி நாயனார் திருவவதாரஞ் செய்த தலமிதுவே.

திருத்தல் - திருந்தச்செய்தல்.

திருத்தாண்டவம் - திவ்வியநடனம்.

திருத்தி - பூரணம், மனரம்மியம்.

திருத்திரு - யானைமுதலியவற்றை நடத்தும் ஓசை.

திருத்திலதைப்பதி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர்மதிமுத்தநாதேச்சுரர்;தேவியார் பெயர் பொற்கொடியம்மை.

திருத்தினைநகர் - கெடிலநதிக் கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் திருநந்தீச்சுரர்;தேவியார் பெயர் ஒப்பிலாநாயகி. சுந்தரரால் பாடப்பட்டது.

திருத்து - பயிர்செய்த நிலம்.

திருத்துசெய்கை - திருத்தென்னேவல்.

திருத்துதல் - சமனுக்குதல், சீர்திருத்தல், செவ்வைப்படுத்தல், தேற்றுதல், நிலமுதலியவற்றைப் பண்படுத்தல், மிகுவித்தல்.

திருத்துருத்தி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது குற்றாலமெனவும்படும். சுவாமி பெயர் வேதேச்சுரர்; தேவியார் பெயர் அமிர்த முகுளாம்பிகை. மூவராலும் பாடப்பட்டது.

திருத்துருவாசநல்லூர் - பாண்டி நாட்டுச் சிவஸ்தலங்களுளொன்று. சுவாமி பெயர் கானத்தீச்சுரர்; தேவியார் பெயர் பூங்கோதை யம்மை.

திருத்துறையூர் - சகலாகமபண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரியர் அவதரித்த ஒருசிவஸ்தலம். இது நடுநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் துறையூரப்பேச்சுரர்;தேவியார் பெயர் பூங்கோதையம்மை. சுந்தரரால் பாடப்பட்டது.

திருத்தூங்கானைமாடம் - கெடிலநதிக்கயிலுள்ள ஒரு சிவஸ்தலம். வாகீசர் தமது தோள்களில் சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப் பெற்ற தலம். சுவாமிபெயர் சுடர்க்கொழுந்தீச்சுரர், தேவியார்பெயர் மடந்தை நாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தெங்கூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் வெள்ளிமலை நாதேச்சுரர், தேவியார்பெயர் பெரியநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தெளிச்சேரி - காவிரியின் தென் கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர்பார்தாளேச்சுரர்; தேவியார் பெயர் சத்தியம்மாள். சம்பந்தரால் பாடப்பட்டது. சம்பந்தர் புத்தசமயியாகியநந்திசெய்ததீமைக்காக அவன் தலையின்மேல் இடிவிழச்செய்து தம்மோடு வாதஞ்செய்ய வெழுந்த ஆசாரியையும் அவன் கூட்டத்தாரையும் வென்று அவர்களை நீறணிவித்த தலமிதுவே.

திருத்தெற்றியம்பலம் - காவிரியின்வடகரையிலுள்ளஒருவிஷ்ணுதலம்,சுவாமிபெயர் செங்கண்மால்; தேவியார் பெயர் செங்கமலை. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருத்தென்குடித்திட்டை - காவிரியின் தென்கரையிலுள்ளஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் சுபதீச்சுரர்; தேவியார் பெயர் உலகநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தென்முல்லைவாயில் - சோழநாட்டிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபெயர் முல்லைவனநாதேச்சுரர், தேவியார் பெயர் அணிகொண்டகோதை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருத்தேவனூர்தொகை - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் மாதவப்பெருமான் தேவியார்பெயர்கடிராப்திவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருத்தேவி - தேவகன் மகள், வசுதேவன் மனைவி.

திருத்தேவூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி தேவகுருநாதேச்சுரர். அம்மை மதுரபாஷிணி. சம்பந்தராற் பாடப்பட்டது.

திருத்தொண்டரந்தாதி - நாயன்மார்சரிதத்தை நம்பியாண்டார் நம்பிசுருக்கி அந்தாதியாகசெய்தநூல்.

திருத்தொண்டர்-தெய்வத்தொண்டர்.

திருத்தொண்டு - தேவதொண்டு.

திருத்தொலைவில்லிமங்கலம் - இது பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி அரவிந்தலோசனன். அம்மை கருந்தடங்கண்ணி. நம்மாழ்வாராற் பாடப்பட்டது.

திருநடனம் - திருத்தாண்டவம்.

திருநணா - கொங்குநாட்டின்கணுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி சங்கமேச்சுரர்; அம்மை வேதாம்பிகை. சம்பந்தராற்பாடப்பட்டது. இதுபவானியெனவும்படும்.

திருநந்திபுரவிண்ணகரம் - காவிரியின் வடகரையின்கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி ஜகநாதன்; அம்மை செங்கமல மடந்தை. திருமங்கையாழ்வாராற் பாடப்பட்டது.

திருநயனம் - திருக்கண்.

திருநல்லம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது கோனேரிராயபுரமெனவும்படும். சுவாமி உமாமகேசர்; அம்மை மங்களநாயகி. திருநாவுக்கரசராலும் சம்பந்தராலும் பாடப்பட்டது.

திருநல்லூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெரியபாண்டவேச்சுவரர்; அம்மைதிரிபுரசுந்தரி. திருநாவுக்கரசர் திருவடிசூட்டப்பெற்றதலம். சம்பந்தராலும் நாவுக்கரசராலும் பாடப்பட்டது.

திருநல்லூர்ப்பெருமணம் - கொள்ளிடக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது ஆச்சாபுரமெனவும்படும். சுவாமி சிவலோகத்தியாகேசர்; அம்மை திருநீற்றுமையம்மை. திருஞானசம்பந்தர் சிவஜோதியுட்கலந்த தலம். அவராற் பாடப்பட்டது.

திருநறுலிங்கபுரம் - பாண்டிநாட்டின் கணுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி நவலிங்கேசுவரர். அம்மை சிவகாமி.

திருநன்னாறு - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி தெர்ப்பாரணியேச்சுரர், அம்மை போகமார்த்த பூண்முலை. மூவராலும் பாடப்பட்டுள்ளது.

திருநறையூர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி வடிவழகியநம்பி, சத்தி நம்பிக்கை நாய்ச்சியார்.

திருநறையூர்ச்சித்தீச்சரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்,

இது திருநறையூர் எனவும் படும். சுவாமி சௌந்தரேச்சுரர், அம்மை அழகம்பிகை. சம்பந்தராலும் சுந்தராலும் பாடப்பட்டது

திருநனிபள்ளி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். கோச்செங்கட்சோழரால் எடுப்பிக்கப்பட்ட ஆலயத்திருப்பணியையுடையது. சுந்தரராற் பாடப்பட்டது.

திருநாகேச்சுரம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநாகைக்காரோணம் - காவிரியின் தென்பாலிலே கடற்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி காயாரோகணர், அம்மை நீலாயதாக்ஷி மூவராலும்பாடப்பட்டது. இத்தலபுராணம் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையால் பாடப்பட்டது அது சொற்பொலிவும் பொருட்சிறப்புமுடையது.

திருநாட்டியத்தான்குடி - காவிரியின் தென்கரையிலுள்ளஒரு சிவஸ்தலம்

திருநாதன் - விட்டுணு.

திருநாமக்கத்திரி - ஒரு பாம்பு.

திருநாமச்செடி }
திருநாமத்தத்தி } ஒரு பூடு.
திருநாமப்பாலை. }

திருநாமம் - தெய்வீகநாமம். மேன்மையான நாமம்.

திருநாராயணபுரம் - துளுவநாட்டிலுள்ள ஒருவிஷ்ணு ஸ்தலம்.

திருநாரையூர் - காவிரின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். மரத்திலே நின்ற கனிபறித்தெறிந்து துருவாசமுனிவரது நிஷ்டைக்கிடையூறு செய்து அவரதுசாபத்தால்நாரையுருப்பெற்ற ஒருகந்தர்வன் சிவனைப்பூசித்து முத்திபெற்றதலமாதலால் இதற்கு இப்பெயர்வாய்த்தது நம்பியாண்டார் நம்பி அவதரித்த தலமும் இதுவே.

திருநாவலூர் - சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்த சிவஸ்தலம். நடுநாட்டில் திருவதிகைக்கு மேற்கேயுள்ளது.

திருநாவுக்கரசுநாயனார் - திருமுனைப் பாடிநாட்டிலே திருவாமூரிலே வேளாளர்குலத்தில் புகழனார் என்பவர்க்குமாதினியார்வயிற்றிற் பிறந்தவர். மருணீக்கியாரென்பது இவரது பிள்ளைத்திருநாமம் இவர் சைவசமயாசாரியர் மூவரில் ஒருவர் இவரது அற்புத சரித்திரமுழுதும் பெரியபுராணத்திற் பரக்கக்காணலாம்.

திருநாளைப்போவார் - சிவத்தொண்டரில் ஒருவர் நந்தனார். ஆதனூரிலே புலையர் குலத்தில் அவதரித்தவர். பூர்வ புண்ணியமேலீட்டால் தில்லை நடராஜரைத் தரிசிக்கவேண்டுமென்கிறபேரவாவுடையராய் நாளைப்போவேன் என்று சொல்லித்திரிந்தகாரணத்தால் இவர் இப்பெயர் பெற்றனர். இவர் சிதம்பரத்தை யடைந்து புறத்தேநின்றபொழுது சிவாக்ஞையால் வளர்க்கப்பட்ட அக்கினியில முழுகி நடராஜரைத் தரிசித்து முத்தியடைந்தவர்.

திருநாள் - விசேடாராதனைத்தினம்.

திருநிலாத்திங்கட்துண்டம் - தொண்டைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம். இது கச்சித் திருவேகம்பராலயத்திலுள்ள ஸ்தலமாம்.

திருநின்றவூர் - சோழநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்தொண்டைநாட்டிலுள்ள ஒருசிவஸ்தலம். பூசலாநாயனார் திருவவதாரக்ஷேத்திரமும் இதுவே இங்கே ஒரு விஷ்ணுதலமுமுண்டு.

திருநீடூர் - சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநீரகம் } தொண்டைநாட்டிலுள்
திருநீர்மலை } ள ஒரு விஷ்ணுதலம்.

திருநீலகண்டநாயனார் - வேசையுறவு காரணமாக தம்மனைவியார் திருநீலகண்டமறிய எம்மைத்தீண்டற்க வென்றுசொன்ன ஆணையால் அம்மனைவியையன்றிப் பிறரைத் தீண்டாது இருந்து மூப்புவந்தகாலத்துச் சிவபிரான் ஓடொன்றைக்கொடுத்துமறைத்தமையால் சத்தியஞ்செய்யப் புகுந்து மனைவியைத் தீண்டாது கோலினொருதலைப்பற்றி வாவியில் மூழ்கி இளமைபெற்று முத்தியடைந்தவராகிய இவர் சிதம்பரத்தில் குலாலவமிசத்திலவதரித்து விளங்கினவர்.

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்- சிவபெருமானுடைய திருப்புகழையாழிலிட்டுப் பாடுவோராய் மதுரைச் சோமசுந்தரக்கடவுளால் தாம்பெற்ற பொற்பலகையுடையராய்த் திருஞானசம்பந்த நாயனார் பாடியருளும் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பெரும் பேருடையராய்த் திருநல்லூர்ப்பெருமணத்திலே அவரோடு முத்தியடைந்தவராகிய இவர் திருவருக்கத்தம்புலியூரிலே அவதரித்தவர்.

திருநீலகண்டன்-ஒருபூரான். சிவதொண்டரிலொருவன்.

திருநீலக்குடி-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநீலநக்கநாயனார் சிவபூசையும் அடியார்பூசையுஞ் செய்பவராய் அயவந்தியிலுள்ள சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கையில், அந்த லிங்கத்தின் மீது விழுந்தசிலம்பியைமனைவியார் வாயாலூதினமையால்அவரைத்துறந்துவித்திரை செய்தபோது சிவபிரான்வெளிப்பட்டு உன்மனைவி யூதினவிடமொழியமற்றையிடங்களிலெல்லாம் கொப்புளம் மிகுந்திருப்பதைப்பாரென்று காட்டியருள மகிழ்ந்து மனைவியாரோடு திருத்தொண்டு செய்திருக்கப்பெற்றவராய்த்திருஞானசம்பந்தசுவாமிகளிடத்தே அன்புள்ளவராயுள்ள இவர்சாத்தமங்கையிலேமறையவர் குலத்திலே அவதரித்தவர்.

திருநீறு - விபூதி.

திருநீற்றுக்காப்பு-விபூதியிட்டிரட்சை.

திருநீற்றுக்கோவில் - திருநீற்றுப்பை.

திருநீற்றுப்பச்சை } உருத்திரசடைப்
திருநீற்றுப்பத்திரி } பூடு.

திருநீற்றுப்பழம் - திருநீற்றுண்டை.

திருநெடுங்களம் - வங்கியசோழன் நாடோறும் தரிசித்துப் பேறுபெற்ற சிவஸ்தலம். இது காவிரியின் தென் கரையிலுள்ளது.

திருநெய்த்தானம்-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநெல்வாயிலரத்துறை } செடின
திருஅரத்துறை } நதிக்
கரையிலேயுள்ள ஒரு சிவஸ்தலம். இது அரத்துறையெனவும்படும்.

திருநெல்வாயில்-சோழநாட்டிலே காவிரிக்கு வடக்கேயுள்ள ஒருசிவஸ்தலம் சிவபுரி யெனவும்படும்.

திருநெல்வெண்ணை - பெண்ணை நதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருநெல்வேலி-வேதசர்மா பஞ்சகாலத்தில் நைவேத்தியத்திற்கென இரந்து வந்துலர்த்திய நெல்லை அப்போது பெய்த பெருமழை நனைத்து வாரிப் போகாதபடி சிவபிரான் காத்தருளினமையால் இது இப்பெயர்த்தாயிற்று. சுவாமிபெயர் நெல்வேலி நாதர், தேவியார் பெயர் காந்திமதி. சபை தாமிரசபை. சம்பந்தரால் பாடப்பட்டது

திருநோக்கு - திவ்யபார்வை.

திருந்தை-பெருமையிற் சிறந்தோன்.

திருந்தைமை - பெருமை, மேன்மை.

திருந்தவர் } பகைவர்.
திருந்தார் }

திருந்துகை - செவ்வைப்படுதல்

திருந்துதல்-செய்துமுடித்தல், திருத்தமாதல், திருந்தல், தேறுதல்.

திருந்துதேவன்குடி - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.

திருபலை - ஒருசெடி.

திருப்படைவீடு - தேவர்கள் பெரியோர்கள் கூட்டத்துடனிருக்கும் வாசஸ்தலம்.

திருப்பட்டீச்சரம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருப்பணி - கோயில்வேலை, திவ்விய தொண்டு. [ணல்.

திருப்பனித்தல்-யானையை நீர்சப்பண்

திருப்பணிமுட்டு-கோவிற் றளபாடம்.

திருப்பதி-தேவதலம், விட்டுணு. வேங்கடமலை. இது பிரபலமான விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் வேங்கடேசுவரர்; தேவியார்பெயர் அலர்மேன்மங்கை. இந்தத்தலம் பூர்வகாலத்திலும் இப்போதும் சுப்பிரமணிய ஸ்தலம் என்று சைவர் பல பிரமாணங்கொண்டு கூறுவர், இது தமிழ்நாட்டு வடவெல்லையாயிருப்பது.

திருப்பந்தணைநல்லூர் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருப்பம் - திரும்புகோடி, பணவியாபாரம்.
திருப்பயற்றூர்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
திருப்பரங்குன்று-மதுரைக்கருகில் சுப்பிரமணியருக்குப் பிரதானமலை.
திருப்பரங்கிரி } மதுரைக்கு தெற்கேயுள்ள ஒரு
திருப்பரங்குன்றம் } சுப்பிரமணியஸ்தலம்.
திருப்பரமேச்சுரவிண்ணகரம் - தொண்டை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் வைகுந்தநாதர், தேவியார்பெயர் வைகுந்தவல்லி.
திருப்பாம் - சோறு.
திருப்பராய்த்துறை-காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம்சுவாமிபெயர் பராத்துறைநாதர். தேவியார் பெயர் பொன்மயிலம்பிகை. சம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடப்பட்டது. மாணிக்கவாசகராலும்எடுத்துக் கூறப்பட்டது.
திருப்பருதிநியமம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபெயர் பருதியப்பேசர், தேவியார் பெயர் மங்களநாயகி, சம்பந்தரால் பாடப்பட்டது.
திருப்பல்லவனீச்சுரம்-காவிரிப்பூம் பட்டினம். இது பல்லவராயன் பூசித்து அநேக வரங்களைப் பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது, இயற்பகை நாயனாரும் பட்டினத்தடிகளும் அவதரித்ததலம். சம்பந்தரால்பாடப்பட்டது.
திருப்பவளவண்ணம்-தொண்டை நாட்டிலுள்ளஒருவிஷ்ணுஸ்தலம்.சுவாமிபெயர் பவளவண்ணர், தேவியார் பெயர் பவளவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.
திருப்பழனிமலை-பாண்டி நாட்டிலுள்ள ஒரு சுப்பிரமணியஸ்தலம். பழத்துக்காகப் பிணங்கியிருந்த குமாரக்கடவுளைச் சிவபிரான் பழம் நீயன்றோ வென்று சொல்லிச் சாந்திசெய்தருளின தலம்.
திருப்பழமண்ணிப்படிக்கரை - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் நீலகண்டேசர், தேவியார் பெயர் அமிர்தகரவல்லி. சுந்தரரால் பாடப்பட்டது.
திருப்பழனம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் ஆபத்ஸஹாயர், தேவியார்பெயர் பெரியநாயகி. அப்பூதியடிகள் அவதரித்த தலம். சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.
திருப்பழுவூர் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் வடவனமூலநாதர், தேவியார் பெயர் அருந்தவநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.
திருப்பழையாறை - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர், சோமேசர், தேவியார் பெயர் சோமகலாநாயகி.
திருப்பள்ளி - சயனதலம்.
திருப்பள்ளித்தாமம் - கோவிற்பூமாலை.
திருப்பள்ளியெழுச்சி - ஒரு பிரபந்தம், தேவர்களனந்தல் விட்டெழுதல்.
திருப்பறியலூர் வீரட்டானம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் வீரட்டானேசுவரர், தேவியார்பெயர் இளங்கொம்பன்னை. இது தக்கன் தலையறிந்த தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.
திருப்பனங்காட்டூர் - இது திருவல்லத்துக்குத் தெற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம். கண்ணுவர் நிவேதநத்துக்கொன்றங்கிடையாமையால் பனம்பழத்தை நிவேதித்து அநுக்கிரகம்பெற்ற தலமாதலால் அன்றுதொட்டு தாறும் பனங்கனியும் நிவேதனப் பொருளாயிற்று. நடுநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.
திருப்பனந்தாள் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சிவபத்தியிற்சிறந்த ஒரு பெண்மணியார் தாம் தொடுத்த மாலையை இங்குள்ள சிவபெருமானுக்குச் சாத்தப்போனபோது தமது ஆடைநெகிழ அதனை யிரண்டு முழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டு திருமாலைத் தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததேயென்றுகவலையுறசிவபெருமான்தமதுதிருமுடியைச் சாய்த்து மாலை யேற்றுக்கொண்ட

தலம், குங்கிலியக்கலயநாயனார் தமது கழுத்தில் கயிறுபூட்டியிழுக்க நிமிர்ந்தது இந்த லிங்கமே.

திருப்பனையூர்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் சௌந்தரேசுவரர், தேவியார் பெயர் பெரியநாயகி. சப்தவிடங்கஸ் தலங்களுளொன்று. சம்பந்தராலும் சுந்தரராலும் பாடப்பட்டது.

திருப்பாசூர் - சோழனுக்குச் சிவபெருமான் பாம்பாட்டியாகவந்து தரிசனங்கொடுத்ததலம். இது திருவொற்றியூருக்கு மேற்றிசையில் திருவெண்பாக்கத்திற்குத் தெற்கேயுள்ளது. திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய கோயிற்புக்க திருத்தாண்டகத்தில் 'பாசப்பொழுதெல்லாம்பாசூர்மேவி' என்று எடுத்தானப்பெற்றது. இங்கே எழுந்தருளிய நடராஜமூர்த்தியின் மூர்த்தவிசேஷம் மேற்படாலால் நனகு விளங்கும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும் திருக்கடைக்காப்பால் துதிக்கப்பெற்ற கோயிலாம்.

திருப்பாச்சிலாச்சிராமம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். கொல்லிமனனவன் தன் மகளுக்குண்டாகிய குமரகண்டவலியைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரால் நீக்குவித்த சிவஸ்தலம். சுவாமிபெயர் நீலகண்டேசுவரர், தேவியார்பெயர் விசாலாக்ஷி. சம்பந்தராலும் சுந்தராராலும் பாடப்பட்டது. "நச்சிலராகிவிவரல்லாற் பிராளில்லையோ" என்று பாடிப்பொன்பெற்றதலமுமிதுவே.

திருப்பாடகம்-தொண்டைநாட்டு விஷ்ணுஸ்தலங்களுளொன்று, சுவாமிபெயர் பாண்டவதூதன். தேவியார்பெயர் உருக்குமிணி. பெரியாழ்வார் திருமழிசையாழ்வார்திருமங்கையாழ்வார் இம்மூவராலும் பாடப்பட்டது.

திருப்பாணாழ்வார் - சோழதேசத்தில் உறையூரில் அவதரித்தவர். இவர்வீணை வாசிப்பதில் வெகு சமர்த்தராய்ப் பகவந்நாம ஸ்மரணைசெய்து அதனுல் சிறந்து இறைவரது கருணைக்கிலக்கானவர்.

திருப்பாண்டிக்கொடுமுடி - கொங்குநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் கொடுமுடி நாதேசுவரர், தேவியார் பெயர் பண்மொழியம்மை. இது மூவராலும் பாடப்பட்டது. இங்குள்ள லிங்கம் அகஸ்தியருடைய கமண்டலத்தைக் கவிழ்த்த விநாயகரால் தாபித்துப் பூசிக்கப்பட்டது.

திருப்பாதாளேச்சுரம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது பாமணி யெனவும்படும், சுவாமி பெயர் சர்ப்பபுரேசர், தேவியார் பெயர் அமிர்தநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்பாதிரிப்புலியூர் - சமணர்கள் கற்றூணிற் சேர்த்துக்கட்டிக் கடலில் வீழ்த்தினபோது, வாகீசர் "சொற்றுணைவேதியன" என்னும் தேவாரப் பதிகம்பாடிக் கரைசேர்ந்த சிவஸ்தலம். இதுபெண்ணைநதிக்கரையிலுள்ளது. சுவாமிபெயர் தோன்றாத்துணையீசர், தேவியார்பெயர் தோகையம்பிகை. சம்பந்த வாகீசர்களால் பாடப்பட்டது.

திருப்பாம்புரம் - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பாம்புரேச்சுரர், தேவியார்பெயர் வண்டமர்பூங்குழல் நாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்பார்த்தன்பள்ளி-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் பார்த்தசாரதி, தேவியார் பெயர் மலர்மாது. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருப்பாலைத்துறை-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பாலைவனநாதர், தேவியார் பெயர் தவளவெண்ணகையம்மை, வாகீசரால் பாடப்பட்டது.

திருப்பாற்றுறை-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் திருமூலநாதேசுவரர், தேவியார்பெயர் மேகலாம்பிகை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்பாவநாசம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பாவநாசேசுவரர், தேவியார் பெயர் உல

கம்மை. மாணிக்கவாசகப் பெருமானால் பாடப்பெற்றது.

திருப்பிரமபுரம் - சீகாழியென்று வழங்கப்படும் சிவஸ்தலம்.

திருப்பிரமேச்சுரம் பாண்டிநாட்டுச்சிவஸ்தலங்களுளொன்று.

திருப்பிருதி-வடநாட்டுவிஷ்ணுஸ்தலங்களுள்ஒன்று. சுவாமிபெயர்பரமபுருஷர், தேவியார்பெயர் பரிமளவல்லி. திருமஙகையாழ்வாரால் பாடப்பட்டது.

திருப்பிரம் - நெய்.

திருப்பு - வளைப்பு.

திருப்புகலூர் - வாகீசர் முத்தியடைந்த சிவஸ்தலம். இது காவிரியின் தென்கரையிலுள்ளது, சுந்தரர் பொன்வேண்டிப் பாடினபோது செங்கல்பொன்கல்லானதலமுமிதுவே, இதுமூவராலும் பாடப்பட்டஎட்டுத்திருப்பதிகங்களையுடையது. சுவாமிபெயர் அக்நீசுவரர், தேவியார்பெயர் கொந்தார் குழலியம்மை.

திருப்புகலூர்வர்த்தமாநேச்சுரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர்வர்த்தமாநேச்சுரர், தேவியார்பெயர்கருந்தார்குழலி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்புகழ்-அருணகிரிநாதர் குமாரசுவாமியின் புகழைப் பலவகையாலும் புகழ்ந்துபாடின ஒருநூல், இது பதினாறுயிரம் பாடலுள்ளது. இதன் தொகை இவ்வளவிற்றுதல் "எம்மருணகிரிநாதனோது பதினாறுயிரத்திருப்புகழமுதமே" என்னும்விரிஞ்சிபுரத்துப் பிள்ளைத்தமிழ்க் காப்புப்பருவச் செய்யுளால் அறியப்படும்.

திருப்புக்கொளியூரவிநாசி-கொங்குநாட்டுச் சிவஸ்தலங்களுளொன்று, இது அவிநாசியெனவும்படும். சுவாமி பெயர். அவிநாசிசுவரர், தேவியார்பெயர் பெருங்கருணைநாயகி. சுந்தரர், "புரைக்காடுசோலை" என்னும் பதிகம் பாடிமுதலையுண்டபிள்ளையைமீட்டதலமிதுவே.

திருப்புடார்ச்சுனபுரம் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருப்புட்குழி-தொண்டை நாட்டிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம், சுவாமி ஜயராகவன், சத்தி மரகதவல்லி. திருமங்கை யாழ்வாராற் பாடப்பட்டது.

திருப்புதல்-திரும்பச்செய்தல்,மாறவைத்தல், மீட்குதல், மொழிபெயர்ப்பு.

திருப்புத்தீசர் - திருப்புத்தூரிலே கோயில்கொண்டிருக்குஞ் சுவாமிபெயர்.

திருப்புத்தூர்-பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது திருக்கோட்டியூருக்குத் தென்கீழ்த்திசையிலுள்ளது.

திருப்புல்லாணி - பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமி கல்யாண ஜகநாதன், சத்தி கல்வியாணவல்லி திருமங்கையாழ்வாராற்பாடப்பட்டது.

திருப்புளிங்குடி-பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருப்புள்ளமங்கை - காவிரியின்தென்கரையிலுள்ளஒருசிவஸ்தலம் சுவாமி திருவாலந்தரித்த ஈச்சுரர், அம்மை அல்லியங்கோதை. சம்பந்தராற்பாடப்பட்டது.

திருப்புள்ளம்பூதங்குடி-காவிரியின் வடகரையின்கணுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருப்புள்ளிருக்கும்வேளூர்-இதுசோழநாட்டிலுள்ள ஒருசிவஸ்தலம்.சடாயுபுள் பூசித்தமையால் இப்பெயர்பெற்றது. திருப்புள்ளிருக்குவேளூர் எனக்கொண்டு புள்ளும் இருக்குவேதமும்சுப்பிரமணியரும் சித்தலமென்று பொருள்பண்ணுவாருமுளர். சுவாமிவைத்தியநாதர்,அம்மைதையல்நாயகி. அப்பர்சம்பந்தர்களாற் பாடப்பட்டது. இத்தலத்து முத்துக்குமாரசுவாமிமேலுள்ள பாமாலைகள் அநேகம் புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகஞ்செய்தவர் செங்குந்தமரபிலே திருவவதாரஞ்செய்தபடிக்காசுப்புலவர்தரிசனார்த்தமாக நாற்றிசையிலிருந்தும் சனங்கள் சென்று பெருந்திரளாகக் கூடுவார்கள். இத்தலத்தைவசித்தவர்களும் நோய்தீரப் பெறுவரென்பது ஐதிகம்.

திருப்புறம்பயம் - இதுகாவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி சாட்சிநாதர், அம்மை கரும்பன்ன

சொல் நாயகி. அரவாலிறந்தவணிகனைச் சம்பந்தர் பதிகம்பாடி யுயிர்ப்பித்ததலம். சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருப்புனவாயில் - பாண்டி நாட்டின்கணுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபழம்பதிநாதர், அம்மையரங்கருணைநாயகி சுந்தரர் சம்பந்தர்களாற் பாடப்பட்டது.

திருப்புன்கூர் - நந்தனார்பொருட்டு நந்திதேவரை விலகும்படி செய்து அவர்க்குத் தரிசநங் கொடுத்தருளின சிவஸ்தலம். சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ளது. சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருப்புட்குருத்தி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் புஷ்பவனநாதர், தேவியார் பெயர் அழகாலமர்ந்தநாயகி. வாகீசரால் பாடப்பட்டது.

திருப்பூவனூர் - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருப்பெருந்துறை - சோழநாட்டுச்சிவஸ்தலங்களுளொன்று, பாண்டியனுக்காகக் குதிரை கொள்ளச் சென்ற மாணிக்கவாசகரைத் தடுத்தாட்கொண்டு திருவாசகம் பெற்ற தலம். சுவாமிபெயர் ஆன்மநாதன். தேவியார் பெயர் உமாதேவி.

திருப்பெருமிழலையூர்-காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருப்பெரும்புலியூர் - கா…ரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர்வியாக்கிரபுரேசுவரர், தேவியார்பெயர் சவுந்தரநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்பெருவேளூர் - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் பிரியாதநாயகர், தேவியார் பெயர் மின்னனையாள். சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.

திருப்பேணுபெருந்துறை - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சுவாமிபெயர் சிவாநந்தேசர், தேவியார்பெயர் மலையரசி, சம்பந்தரால் பாடப்பட்டது.

திருப்பேரகர் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் அப்பக்குடத்தான், தேவியார்பெயர் கமலவல்லி. திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் இந்நால்வராலும் பாடப்பட்டது.

திருப்பேரூர்-கொங்குநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், இது மேலைச்சிதம்பரமெனவும்படும். சுவாமிபெயர் பட்டீச்சுரர், தேவியார்பெயர் பச்சைநாயகி. ஸ்தலவிருக்ஷங்கள் பிறவாப்புளியும் அரசும் இறவாப்பனையும், முசுகுந்தன் குரங்குமுகம் ஒழிந்து மனிதர்முகம் பெற்றதலம், "பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றும்மன்றோ" என்று சுந்தரரால் பாடப்பட்டது.

திருப்பேரெயில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் சகலபுவனேசுவரர், தேவியார் பெயர் மேகலாம்பாள். வாகீசரால் பாடப்பட்டது.

திருப்பைஞ்ஞீலி - காவிரியின்வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் மாற்றறிவரதேசுவரர், தேவியார்பெயர் வாலசவுந்தரி. இங்குள்ள ரத்நசபையிலாடியருளும் நடேசர் ரத்நசபாபதி யெனப்படுவர், மூவராலும் பாடப்பட்டது ஒரு வைஷ்ணவரால் இரத்தினசபாபதி மாலையும் பாடப் பெற்றுள்ளது.

திருமங்கலக்குடி - காவிரியின்வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமிபெயர் பிராணவரதேசுவரர், தேவியார் பெயர் மங்களநாயகி. அரசிறைப்பொருளை ஆலயத் திருப்பணிக்குபயோகித்து அரசனுக்கஞ்சி உயிர்விட்ட ஒரு சிவபத்தருக்கு உயிர் கொடுத்ததலம். அப்பர் சம்பந்தர்களால் பாடப்பட்டது.

திருமங்கைபுரம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது கோவிற்பட்டி யெனவும்படும். சுவாமிபெயர் பூவணலிங்கேசுவரர், தேவியார் பெயர் சண்பகவல்லி. சுந்தரரால் பாடப்பட்டது.

திருமங்கையாழ்வார்-இவர் கலியுகம் நாலூற்றறுபதின்மேல் இவர்.திருநகரிலே நீலன் என்னும் ஒருசூத்திரனுக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் திருவரங்கத்துக் கோபுரத்திருப்பணி செய்த விஷ்ணுபக்தர். இவர் தேவியார் குமுதவல்லி, இவர் விஷ்ணுபக்தராவதற்கு முன்பு ஆறலைக்குங் கள்வராயிருந்தவர், இவர் திருவாய் மலர்ந்தருளின பெரிய திருமொழி நாலாயிரப் பிரபந்தத்தில் இரண்டாவதாயிரமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

திருமணஞ்சேரி - சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் அருள்வள்ளநாயகேச்சுரர், தேவியார் பெயர் யாழின்மென்மொழியம்மை. சம்பந்த வாகீசரர்களால் பாடப்பட்டது.

திருமணவைமாநகரம் - பாண்டியநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் மங்கலேச்சுரர், தேவியார் பெயர் மங்களாம்பிகை.

திருமணிக்கூடம்-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் மணிக்கூடநாயகர்,தேவியார்பெயர் திருமாமகள். திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருமந்திரம் திருமூலரால்செய்தருளப்பட்ட ஒருநூல். இது மூவாயிரம் பாடலுள்ளது. இந்நூல் சரியை கிரியை யோகம்ஞானம்என்னும் நான்கு பாதங்களையும் விரித்துக்கூறும்.

திருமந்திரேச்சுரம் - பாண்டியநாட்டுச் சிவஸ்தலங்களு ளொன்று.

திருப்பூட்டு - தாலி, மங்கலியதாரணம்.

திருப்பூட்டுதல் – மங்கலியந்தரித்தல்.

திருமகண்மைந்தன் - மன்மதன்.

திருமகள் – இலக்குமி.

திருமஞ்சனம் – அபிஷேகம்.

திருமடந்தை – இலக்குமி.

திருமணியிற்றார் முந்துக்கோப்பார்.

திருமண் – திருநாமம்.

திருமண்டலம் - திருவமண்டலம்.

திருமயிலை - மயிலாப்பூர். சிவநேசர் இறந்துபோன தம்பெண்ணினது எலும்பைச் சம்பந்தருக் கெதிரேவைக்க அவர் திருப்பதிகம்பாடி அவ்வெலும்பு உருப்பெறச்செய்த சிவஸ்தலம். சுவாமிபெயர் கபாலீச்சுரர், தேவியார்பெயர்கற்பகவல்லி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருமயேந்திரப்பள்ளி – சோழநாட்டிலே கொள்ளிட நதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இதுதிருக்கோயிலினுள்ளேயிருந்த தீபத்தைத் தூண்டிய எலிக்கு மானுடப்பிறப்பருளிஸ்தலம். சுவாமிபெயர் திருமேனி அழகேசுரர், தேவியார்பெயர்முல்லை நகைவடிவம்மை, சம்பந்தரால்பாடப்பட்டது.

திருமரம் – அரசு.

திருமருகல் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுவாமி பெயர் மாணிக்கவண்ணேச்சுரர், தேவியார் பெயர் வண்டுவார்குழலி. சம்பந்த வாகீசர்களால் பாடப்பட்டது.

திருமலர் - தாமரை.

திருமலை - கயிலாயமலை திருப்பதி கைலாயம், திருவேங்கடமலை இது வடநாட்டுவிஷ்ணுஸ்தலங்களுளொன்று. இங்கே எழுந்தருளிய மூர்த்தியின் திருக்கோலம் சுப்பிரமணிய மூர்த்தியின காக்ஷியாகும்

திருமழபாடி – காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் வச்சிரத்தம்பநாதேச்சுரர், தேவியார்பெயர் அழகாம்பிகை.சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருமழிசையாழ்வார் - திருமழிசையில் பிருகுவுக்கு ஒரு அப்ஸரஸ்த்ரீயினிடத்துப் பிறந்தவர். இவர் பாடிய திருச்சந்த விருத்த முதலியவை நாலாயிரப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

திருமறம் - கல்லாடர்கண்ணப்பநாயனார் மீது பாடினநூல், நக்கீரர் செய்தது.

திருமறுமார்பன் - அருகன், திருமால்.

திருமறைக்காடு-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம் இதனை வடநூலார் வேதாரணிய மென்பர், சுவாமி பெயர் மறைக்காட்டீச்சுரர், தேவியார் பெயர் யாழைப்பழித்த

மொழியம்மை. இது சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருமாகறல் - காஞ்சிக்குத்தெற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் அடைக்கலங்காத்தவர், தேவியார் பெயர் புவநநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருமாணிகுழி - திருப்பாதிரிப்புலியூருக்குத் தெற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் மாணிக்கமேனி வாதேசுவரர், தேவியார் பெயர் மரகதவல்லி. சம்பந்தரால்பாடப்பட்டது.

திருமாது - இலச்சுமி.

திருமாந்துறை - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர். ஆம்ரவநேசுவரர், தேவியார் பெயர் அழகாலுயர்ந்த அம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருமாலிருஞ்சோலை - பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமி மாலலங்காரர், தேவியார் சௌந்தரியவல்லி. நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் இவர்களால் பாடப்பட்டது. இது சுப்பிரமணியர் க்ஷேத்திரமாம்.

திருமாலுந்தி - தாமரை.

திருமால் - விட்டுணு.

திருமால்புதல்வன் - மன்மதன்.

திருமாற்பேறு - காஞ்சிபுரத்திற்கு வடக்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், விஷ்ணு பூசித்துச்சக்கரம்பெற்றதலம், சுவாமி பெயர்வாள்வணக்கேசுவரர், தேவியார் பெயர் கருணைநாயகி. சம்பந்த வாகீசர்களால் பாடப்பட்டது.

திருமாநகரம் - வைகுண்டம்.

திருமீயச்சூர் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் திருமுயற்சி நாதேச்சுரர், தேவியார்பெயர் சவுந்தரநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருமீயச்சூரிளங்கோயில் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம், சுவாமிபெயர் சகலபுவனேசுவரர், தேவியார்பெயர் மேகலாம்பாள். வாகீசரால் பாடப்பட்டது.

திருமுகம் - தேவசந்நிதானம்பெரியோர் சமுகம், வரைந்தனுப்புமோலை.

திருமுண்டீச்சுரம் - நடுநாட்டிலுள்ளஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் முண்டீச்சுரர், தேவியார்பெயர் கானார்குழலி. வாகீசரால் பாடப்பட்டது.

திருமுதல் - திரும்புதல்.

திருமுதுகுன்றம் - நடுநாட்டிலே மணிமுத்தா நதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர்பழமலைநாதர், தேவியார்பெயர் பெரியநாயகி விருத்தாசலமென்பது மிதுவே, மூவராலும் பாடப்பட்டது.

திருமுருகன்பூண்டி - கொங்குநாட்டிலுள்ள வொரு சிவஸ்தலம். சுவாமி பெயர் முருகநாதர், தேவியார் பெயர் முயங்குபூண்முலை. சுந்தரரால் பாடப்பட்டது.

திருமுருகாற்றுப்படை - நக்கீரர் தமக்கு நேரிட்ட ஆபத்காலத்திலே சுப்பிரமணியக் கடவுளைப்பாடி அவரது அநுக்கிரகத்தால் அவ்வாபத்து நீங்கப் பெறுதற் காரணமான ஒருநூல், இது பத்துப்பாட்டு என்னும் நூலின் முதலிலுள்ளது.

திருமுழுக்காட்டுதல் - அபிஷேகம்பண்ணுதல்.

திருமுழுக்கு - திவ்வியாபிடேகம்.

திருமுறப்பநாடு - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருமுறை - திருவாசகம், புத்தகம்.

திருமூ ற்றம் - குதிரை வையாளிவீதி, கோயில், கோயிற்சந்நிதானம்.

திருமுன் } தேவசந்நிதானம், பெரி
திருமு ன்பு } யோர் முன்பு.

திருமூக்கீச்சுரம் - சோழநாட்டில் குடமுருட்டிநதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பஞ்சவர்ணநாதேசுவரர், தேவியார்பெயர் காந்திமதியம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருமூலநகரம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருமூலநாதேசுவரர் - திருப்பாற்றுறையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

திருமூலநாயனார் - நந்திதேவர் மாணாக்கராகிய சிவயோகியா ரென்பவர்,

இவர் அகஸ்தியரைக் காணும் பொருட்டுத் தெற்கு நோக்கிச் செல்லும் வழியில் திருவாவடுதுறையில் மூலன் என்னு மோரிடையன் இறந்து கிடக்க அவனால் மேய்க்கப்பட்ட பசுக்கள் நின்று கதறியழுவதைக்கண்டிரங்கி அவனுடம்பிற் பிரவேசித்து அவனைப்போல அவற்றை மேய்த்து அவற்றின் துயரத்தை யொழித்து வந்து தமது சரீரத்தைத் தேடிக் காணாமையால் அம்மூலன் சரீரத்தோடே அங்கிருந்து மூவாயிரவருடம் யோகஞ் சாதித்த இவர் வருடத்திற்கொரு பாடலாக மூவாயிரம் பாடல் பாடியருளினர், அந்தப்பாடல் திருமந்திரம் எனப்படும்.

திருமூழிக்களம்-மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் திருமூழிக்களநாதர், தேவியார்பெயர் மதுரநாரணி. நம்மாழ்வாரால் பாடப்பட்டது.

திருமெய்யம் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமி பெயர் சத்தியகிரிநாதர், தேவியார் பெயர் அத்திவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருமெழுக்கு-கோவில்மெழுகுதல்.

திருமேர்பூச்சு-திருமேனியிற்பூசும்பூசு

திருமேனி ஓராபரணம், குப்பைமேனி, திவ்வியதேகம், விக்கிரகம்.

திருமேனிக்கடுக்கன் - கைம்பெண்காதணியொன்று.

திருமேனியழகர்-திருமயேந்திரப் பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர். திருவேட்டக் குடியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

திருமேனியழகி - குப்பைமேனி.

திருமோகூர்-பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திரும்பல் - திரும்புதல்.

திரும்பு-இடியேறு, சக்கிரம், சந்திரன், திரும்பென்னேவல், பாம்பு.

திரும்புதல்-மாறுதல், மீளல், வளைதல்.

திருவக்கரை-திரு அச்சிறுபாக்கத்திற்குத் தென்மேற்றிசையிலே தேவாரம் பெற்றுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருவஞ்சைக்களம் - மலைநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் அஞ்சைக் களத்தீசர், தேவியார் பெயர் உமையம்மை.

திருவடதளி-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் வடதளிநாயகர், தேவியார்பெயர் கௌரியம்பிகை.

திருவடமுல்லைவாயில்- திருவொற்றியூருக்குத்தென்மேற்றிசையிலேதிருப்பாசூருக்குத் தெற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமி பெயர் பாசுபதேச்சுரர், தேவியார் பெயர் கொடியிடையம்மை.

திருவடவாலவாய்-மதுரையிலுள்ளஒரு சிவஸ்தலம். இடைக்காடன் பொருட்டு ஆலவாயினின்றும் சிவபெருமான் எழுந்தருளியிருந்ததலம். இது வைகை நதியின் தென்கரையிலுள்ளது.

திருவடி - ஆருப்புண், திவ்வியபாதம்.

திருவடிநிலை - ஒரூர், பாதுகை.

திருவடிப் ண்-ஆருதகலும்புண்.

திருவடிராச்சியம் முறைகெட்டவிராச்சியம்.

திருவடுகூர் - திருப்பாதிரிப்புலியூருக்கு மேற்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் வடுகேசுவரர், தேவியார் பெயர் வடுவகிர்க்கண்ணி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருவணையானம் - சமயசாதனம்.

திருவட்டம் - திரிவட்டம்.

திருவட்டபுயங்கம் - தொண்டைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமி பெயர் சக்கரராஜன், தேவியார் பெயர் பதுமவல்லி. பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் இருவராலும் பாடப்பட்டது.

திருவட்டி - கன்னி.

திருவணை - சேது.

திருவண்ணாமலை - அருணாசலம்.

திருவமுது - திவ்வியவுணவு.

திருவண் புருஷோத்தமம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம். சுவாமிபெயர் புருஷோத்தமன், தேவியார்பெயர்புருஷோத்தமவல்லி திருமங்கையாழ்வாரால்பாடபட்டது.

திருவண்வண்டூர் - மலை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம். சுவாமிபெயர் பாம்பணையப்பன், தேவியார்பெயர் கமலநாயகி, நம்மாழ்வாரால் பாடப்பட்டது.

திருவரகுணமங்கை - பாண்டி நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், நம்மாழ்வாரால் பாடப்பட்டது.

திருவருட்பயன்-கொற்றவன் குடியார் செய்த ஒரு சைவசித்தாந்தநூல்.

திருவலகு - கோவில் விளக்குமாறு.

திருவலஞ்சுழி-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் சித்திசுவரர், தேவியார்பெயர் சித்தியநாயகி. சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.

திருவலிதாயம் - தொண்டை நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். இது திருவொற்றியூருக்குத் தென்மேற்றிசையிலுள்ளது, சுவாமிபெயர் திருவலிதாயநாதேசுவரர், தேவியார்பெயர் தாயம்மை. சம்பந்தரால் பாடப்பட்டது. இது பாடியென வழங்கப்படுகிறது.

திருவலிவலம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது.

திருவல்லவாழ்-மலை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் கோலப்பிரான், தேவியார்பெயர் செல்வத்திருக்கொழுந்துவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருவல்லிக்கேணி-சென்னப்பட்டணத்தைச்சார்ந்த ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருவள்ளக்குளம்-காவிரியின் வடகரையிலுள்ளஒருவிஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் கண்ணன், தேவியார்பெயர் நன்மலராள். திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருவள்ளுவர்-ஒரு நீதிநூல், வள்ளுவநூலாசிரியன்.

திருவனந்தபுரம் - மலையாளக் கரையில் ஒரு பட்டினம்.

திருவன் - கள்வன், திருவாலி, விகடக்காரன்.

திருவன்னியூர்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம், வாகீசரால் பாடப்பட்டது.

திருவாக்கு - திவ்வியவாக்கு.

திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம்- காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தராலும் வாகிசராலும் பாடப்பட்டது.

திருவாசகம் - ஸ்ரீவாசகம், மணிவாசகம், திருவாக்கு, மாணிக்கவாசகர் செய்த தமிழ் வேதம்.

திருவாசி - ஓராபரணம்.

திருவாசிகை - ஒருமாலை.

திருவாஞ்சியம்-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தரால் பாடப்பட்டது.

திருவாடானை - பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தரால் பாடப்பட்டது.

திருவாடுதண்டு•திருவுருவைக்காவுமரம்.

திருவாட்சி - ஒரு பூமரம்.

திருவாதரம் }
திருவாதிரம் } புரளி.

திருவாதிரை - ஒருநாள்.

திருவாத்தி - ஒருபூமரம்.

திருவாத்தான் - விகடன்.

திருவாபரணம் - தெய்வாபரணம்.

திருவாயில் - கோயில்வாயில், மடம்.

திருவாய் - திருவாக்கு.

திருவாய்ப்பாடி - வடநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் நவமோகனக்கிருஷ்ணன், தேவியார்பெயர் சத்தியபாமை. குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் இம்மூவராலும் பாடப்பட்டது.

திருவாய்மலர்தல்-தேவவாக்கு விள்ளுத [ல்.

திருவாய்மொழி-ஒருபிரபந்தம், தெய்வவாக்கு, பெரியோரதுசொல்.

திருவாரூர்-ஒருபிரபலதிவ்யக்ஷேத்திரம்

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி- திருவாரூர் மூலட்டானத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பரவையுண்மண்டளிச்சுரர், தேவியார்பெயர் பஞ்சின் மெல்லடியம்மை. சுந்தரரால் பாடப்பட்டது.

திருவாலி-கள்வன், திருவாதிரக்காரன், பொய்யன்.

திருவாலிதிருநகரி - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் வயலாலிமணவாளன்,

தேவியார் பெயர் குமுதவல்லி. திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருவாவினன்குடி - சுப்பிரமணியர் படைவீடாறினுள் ஒன்று அது பழனி.

திருவாழங்கோடு - ஒருதலம்.

திருவாழித்தண்டு - திருவாடுதண்டு.

திருவாழ்த்தான் - விகடன்.

திருவானன் - செல்வன்.

திருவான்கொளிபுத்தூர் - திருமால் மாணிக்கத்தைவைத்துப் பூசித்த சிவஸ்தலம். இது காவிரியின் வடகரையிலுள்ளது, சுவாமிபெயர் மாணிக்கவண்ணேச்சுரர், தேவியார் பெயர் வண்டமர் பூங்குழனாயகி.

திருவாறன்விளை - மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் திருவாமநன, தேவியார்பெயர் பத்மாஸநநாய்ச்சியார்.

திருவானைக்கா - ஜம்புகேஸ்வரம்.

திருவான்கோடு - ஒருபட்டினம்.

திருவிசயமங்கை-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், இது அர்ஜுநன் பூசித்த தலமாதலால் இப்பெயர்த்தாயிற்று, சுந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.

திருவிடவெந்தை - தொண்டைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.

திருவிடையாறு - நடுநாட்டிலே பெண்ணைநதிக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் இடையாற்றீச்சுரர், தேவியார்பெயர் சிற்றிடைநாயகி. சுந்தரரால் பாடப்பட்டது.

திருவிண்ணகரம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், சுவாமிபெயர் உப்பிலியாப்பன், தேவியார்பெயர் பூமிதேவி. திருமங்கையாழ்வாராலும் நம்மாழ்வாராலும் பாடப்பட்டது.

திருவியலூர் - இது காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் யோகாநந்தேசுவரர், தேவியார்பெயர் சவுந்தரநாயகி. சம்பந்தரால் பாடப்பட்டது.

திருவிருந்து - திவ்வியவிருந்து அது சத்திய வேதத்தார் உடன்படிக்கையில் ஒன்று.

திருவிலி - கைம்பெண், அறியன்.

திருவிழா - உற்சவம்.

திருவிளக்கு - கோவிற்றீபம்.

திருவிளநகர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருவிளம் - சிவதை, திராய்.

திருவிளையாடல் } ஒருபுராணம், திருவிளையாடற்புராணம் பரஞ்சோதி முனிவராலும் வேப்பத்தூர் கூட்டத்தாராலும் பாடப்பட்டது. தெய்வவிளையாட்டு.

திருவிளையாட்டு }

திருவிற்குடி வீரட்டானம் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், இதுசலந்தரனைச்சிரங்கொய்தஇடம்.

திருவிற்றுவக்கோடு - மலைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருவினம்பர் - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருவீழிமிழலை-காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருவுந்தியார் - மெய்கொண்ட சாத்திரத்தொன்று, மாணிக்கவாசகர்செய்த திருவாசகத்தோருறுப்பு.

திருவுரு - விக்கிரகம்.

திருவுளச்சீட்டு - தெய்வ சித்தமறியுஞ்சீட்டு.

திருவுளமத்தியஸ்தம் - தேவ மத்தியஸ்தம்.

திருவுளம் - கடவுள், திவ்வியசித்தம்.

திருவுளம்பற்றுதல் - கிருபையாய்ச்சொல்லுதல்.

திருவுளம்வைத்தல் - கிருபைபுரிதல்.

திருவுருப்பு - மதன்மேலணி.

திருவூசல் } தெய்வவூஞ்சலாட்டு.

திருவூஞ்சல் }

திருவூறல் - காஞ்சிபுரத்துக்கு வடக்கேயுள்ள ஒரு சிவஸ்தலம், திருவாயினின்றும் நீருறிக்கொண்டேயிருத்தலால் இது இப்பெயர்பெற்றது. இத்தலபுராணம் அவ்வூர் ஐயாசெல்லப்பநாகமணி முதலியார் அவர்கள் குமாரர்களாகிய இராமசாமி முதலியார் இராமகிருஷ்ணமுதலியார் என்னும் இருவர் பெருமுயர்ச்சியால் பாடப்பெற்று வருகிறது.

திருவெஃகா - தொண்டைநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுதலம்.

திருவெளர்சாரம் - காசிச்சாரம்.

திருவேங்கடம் - திருப்பதி, வடமலை.
திருவேடம் - சமயவேடம்.
திருவேட்களம்-காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சுவாமிபெயர் பாசுபதேசுவரர், தேவியார்பெயர் நல்லநாயகி. சம்பந்தமூர்த்திகளால் பாடப்பட்டது.
திருவேதிகுடி - காவிரியின்தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தராலும் வாகீசராலும் பாடப்பட்டது.
திருவேரகம்-சுவாமிமலை சுப்பிரமணியராநிடத் தொன்று.
திருவேளுக்கை - தொண்டைநாட்டிலுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம், பேயாழ்வாராலும் திருமங்கை யாழ்வாராலும் பாடப்பட்டது.
திருவைகன்மாடக்கோயில் -காவிரியின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம். சம்பந்தரால் பாடப்பட்டது.
திருவைகாவூர் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், சம்பந்தரால் பாடப்பட்டது.
திருவைகுந்தவிண்ணகரம் - காவிரியின் வடகரையிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம், திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது.
திருவொற்றாடை - விக்கிரகங்கட்குச் சார்த்துமாடை.
திருவொற்றியூர்-சென்னைக்கருகில்ஒரு பிரபல திவ்ய சிவஸ்தலம்.
திருவோணம் - ஒருநாள்.
திருவோலக்கம் - மகா திவ்விய சபை.
திருனகம் - திருணகம்.
திரேககாணம் - இராசியை மூன்றாய்ப் பகிருதல்.
திரேககாணுதிபன் - திரேககாணத்ததிபன்.
திரேகம் - தேகம், மூன்று.
திரேக்காணம் - உதயராசியை மூன்றாகப் பகிர்தல்.
திரேசந்தி - திராய்.
திரேதம் - இரண்டாம்யுகம்.
திரேதாக்கினி - மூத்தீ.
திரேதாயுகம் - திரேதம்.
திரேத்து - பிறைவு.
திரேந்தி - திராய்.
திரை - அலை, இடுதிரை, உடற்றிரை, கடல், திரைச்சீலை, திரையென்னேவல், திரைவு, புனற்றிரை, யாறு; வைக்கோற்புரி.
திரைச்சீலை - மறைப்பீட்டுச்சீலை.
திரைதல் - சுருங்குதல், பால் முதலிய கண்விடுதல்.
திரைத்தல் - திரைக்குதல்.
திரைப்பு - திரைதல்.
திரைப்புடைவை - திரைச்சீலை.
திரையல் - சுருங்கல், வெற்றிலை.
திரையன் - தொண்டைமான், நெய்தனிலத்தலைவன்.
திரையெறிதல் - திரைவீசுதல்.
திரைராசிகம் - மூத்தொகைவினு.
திரைவிழுதல்-உடறிரங்குதல், சுருங்குதல், திரைதல்.
திரைவு - திரைப்பு.
திரோகதம் - அதரிசனம்.
திரோகிதம் - மறைவு.
திரோதசத்தி - பஞ்சசத்தியிலொன்று.
திரோதம் } பஞ்ச கிருத்தியத்தொ
திரோதயம் } ன்று, மறை.
திரோதாயி } பஞ்ச சத்தியின்
திரோதானசத்தி } ஒன்று.
திரோதானம் - திரைச்சீலை, மறைப்பு.
திரோபவம் - மயக்கம்.
திரோபவித்தல் - மறைத்தல்.
திரோபாவம் - மயக்கம்.
திர்ப்தி - திருத்தி.
திலககண்டம் - ஊர்க்குருவி.
திலகடம் - பிண்ணாக்கு.
திலகபிரமணி-குருவிந்தப் பதுமராகம்.
திலகம் - கலித்துறை, சிந்தூரம், சுட்டி, திலோதகம், பொட்டு, மஞ்சாடிமரம், மேன்மை.
திலகலம் - செக்கு.
திலகற்கம் - பிண்ணாக்கு.
திலகாசிரயம் - நெற்றி.
திலகாதுகன் - வாணியன்.
திலகாளகம் - கரும்புள்ளி.
திலசூர்ணம் - எட்பொடி.
திலட்சாரம்-எள்ளிலெடுக்கும்லவணம்.
திலதண்டகன் - வாணிபன்.
திலதண்டுலகம் - எள்ளுடன்கலந்தஅரிசி.
திலதம் - சுட்டி, நெற்றித்திலகம், பொட்டு.
திலதயிலம் - நல்லெண்ணெய்.
திலதர்ப்பணம் - எள்ளுந் தண்ணீரு மிறைத்தல்.

திலதேனு - தானஞ்செய்ய எள்ளினாற் செய்த பசு.
திலபகம் - தூபம்.
திலபவம் - எண்ணெய்.
திலபருணி, திலபருணிகை } சந்தனம்.
திலபாவி - கொளுஞ்சிமரம்.
திலபாவிகி - சாதிமல்லிகை.
திலபிச்சடம் - பிண்ணாக்கு.
திலபிஞ்சம் - ஆணெள்.
திலபேறும் - ஒருவகையெள்.
திலமயூரம் - ஒருவிதமயில்.
திலமலம் - பிண்ணாக்கு.
திலம் - எள், மஞ்சாடிமரம்.
திலயந்திரம் - செக்கு.
திலரசம் - எள்ளெண்ணெய்.
திலவகம் - வெள்ளிலோத்திரம்.
திலாட்சாரம் - திலாலவணம்.
திலீபன் - ஓரரசன்.
திது - மூன்று.
திதுப்புது - முப்பது.
திலோதகம் - எள்ளும் நீரும்.
திலோத்தமை - ஓரரம்பை.
தில்-அசைச்சொல், ஒழியிசை, காலம், விழை.
தில்லகம் - வெள்ளிலோத்திரம்.
தில்லமெழுகு - தில்லைமெழுகு.
தில்லம் - காடு.
தில்லாநு - ஒரு சந்தக்குறிப்பு, தாளக் குறிப்பு.
தில்லிபம்-எட்சாட்டி, நல்லெண்ணெய்
தில்லுப்பில்லு, தில்லுமுல்லு } சண்டை, தருக்கம், மாறுபாடு.
தில்லை - ஒருமரம், சிதம்பரம்.
தில்லைநாயகம் - ஒருவிதநெல்.
தில்லைநாயகர் - சிதம்பரேசுவரன்.
தில்லைமூவாயிரவர்-சிதம்பர க்ஷேத்திர வுரிமைப் பார்ப்பார்.
தில்லையம்பலம் - கனகசபை.
தில்லையம்பலவாணன் - சிதம்பரேசுவரன்.
தில்லையெண்ணெய்-தில்லைமரத்தெண்ணெய்.
தில்லைவனம் - சிதம்பரதலம், ஆகாயத் தலம்.
திவசகரன் - சூரியன், விடியல்.
திவசமுகம் - உதயகாலம்.
திவசம் - சிராத்தம், நாள்.
திவசாத்தியம், திவசாவசானம் } அந்தி.
திவச்சுவான்-துவாதசாதித்தரி லொருவன்.
திவடல் - துவளுதல்.
திவண்டல் - துவளல்.
திவம்-ஆகாயம், காடு, தோற்றம், நாள், பகல்மோக்ஷம், விளக்கம்.
திவரம் - காடு.
திவலுதல் - சாதல்.
திவலை - துளி, மழை, மழைத்துளி.
திவவு - படி, வீணைவலிக்கட்டு.
திவளல், திவளுதல் } துவளல், மெலிதல்.
திவறல் - சாதல்.
திவா - பகல்.
திவாகரம் - ஒருநிகண்டு, காகம், சூரிய காந்தப்பூ.
திவாகரன்-திவாகரஞ்செய்தவன், சூரியன், நாவிதன்.
திவாக்கீர்த்தி - ஆந்தை, சண்டாளன், நாவிதன்.
திவாசுத்தம் - பகனித்திரை.
திவாடனம் - காக்கை.
திவாநிசம் - பகலிரா
திவாந்தகி - மூஞ்சூறு.
திவாந்தம் - ஆந்தை.
திவாபீதம் - ஆந்தை, வெண்டாமரை.
திவாபூதன் - கள்வன்.
திவாபீதி - ஆந்தை.
திவாமணி - சூரியன்.
திவாமத்தியம் - நடுப்பகல்.
திவாமானம் - பகற்காலம்.
திவாராத்திரம், திவாராத்திரி } பகலிரா.
திவார்த்தம்-பகலிற்பாதி, மத்தியானம்.
திவிசர் - தேவர்.
திவிபிரபம் - கொடிவேலி.
தி யன் - சாத்துவதன்மகன்.
திவிரதன் - ததிவாகனன்மகன்.
திவேச்சுரன்-துவாதசாதித்தரிலொருவன்.
திவோதாசன், திவோதாதன் } காசியரசன்.
திவ்வியகந்தம் - கராம்பு.
திவ்வியகவி - தெய்வப்புலவன்.
திவ்வியகாயகன் - கந்தருவன்.

திவ்வியசட்சு
திவ்வியதிருட்டி } ஞானநோக்கு,தெய்வீக பார்வை.
திவ்வியது - திவ்வியமானது.
திவ்வியநானம் - சூரியகிரணம் பாயுமழைத்தூறலிற்படிதல் இது எழ்வகை நாணத்தொன்று.
திவ்வியம்-ஆணை,இனிமையானது,ஒருவகைச்சந்தனம்,கராம்பு,தெய்வீகமானது மேன்மையானது.
திவ்வியரதம் - நறுஞ்சுவை.
திவ்யரத்தினம்-சிந்தாமணி, சூடாமணி.
திவ்வியவருஷம் - தேவவருடம் அதுமானிட வருஷம் முந்நூற்றறுபத்தைந்துகொண்டது.
திவ்வியாதிவ்யம்-தெய்வீகமும்மனுஷீகமும்.
திவ்வியாத்திரம்-தேவர்களாற் கொடுக்கப்பட்ட அம்பு.
திவ்வியோதகம்-நீர்த்தநீர், மழைத்தண்ணீர்.
திளைத்தல்-அழுந்துதல், அனுபவித்தல், நிறைதல், நெருங்கல், பெருகுதல்.
திறக்கு - காரியம்.
திறக்குதல்-அதிகப்படல்,திறத்தல்.[ன்
திறத்தகை - வலியானகை,வலிவானவ
திறத்தல் -திறக்குதல், வலுத்தல், வழிவெட்டிவிடுதல், விரித்தல், விளக்கு
திறத்தார்-பகுதியார்,பக்கத்தார். [தல்.
திறத்தி - மருத்துவிச்சி.
திறந்தறை-அந்தரங்கத்தை வெளிவிடுவோன், அரணற்றது.
திறபு - ஈயம், துத்தநாகம்.
திறப்படுதல்-தேறுதல், பலப்படுதல்.
திறப்பணம் - தமரூசி, துறப்பணம்.
திறப்பாடு - வகை, வலிமை.
திறப்பு - காவலின்மை, துறப்பு.
திறமை - சமர்த்து, தகுதி, மேன்மை, வகை, வலி.
திறம்-அதிகம்,அரையென்னுமோரிலக்கம்,உச்சிதம்,உறுதி,காரணம்,குணம், குறை, நரம்புள்ளவீணை, கூறுபாடு, சாமர்த்தியம், தத்துவம்,தன்மை,திறமை, பக்கம், பாக்கியம், மருத்துவம், மேன்மை, வகை, வலி.
திறம்பல்
திறம்புதல் } தவறுதல், மாறுபடல்.
திறயம் - திரயம்.
திறலோன்-வல்லமையுள்ளவன், திண்ணியன்.
திறல்-தைரியம், பகை, போர், வலி.
திறவறிதல் - உளவுபார்த்தல், மறைந்திருப்பதை யறிதல்.
திறவாளி - காரியகிரகஸ்தன், விவேகி.
திறவான் - வலியவன்.
திறவு - உளவு, திறத்தல், வழி.
திறவுகோல் - திறப்பு.
திறவுண்ணல் - திறவுபடல்.
திறனில்யாழ் - செய்தல் யாழ்த்திறம்.
திறன் - காரணம், குணம், கூறுபாடு.
திறுணி - திராணி.
திறி - மூன்று.
திறிதண்டம் - நெருஞ்சில்.
திறிநியம் - செவ்வள்ளி.
திறிதேகி - பற்பாடம்.
திறிபாதி - சிறுபுள்ளடி.
திறியம் - செவ்வள்ளி.
திறிலிங்கம் - தான்றி.
திறிலேகரி - விஷ்ணுகரந்தை.
திறிவாசம் - கக்கரி.
திறிவிச்சதா - மூக்கிரட்டை.
திறுதட்டம்
திறுதிட்டம் } நேரே நிற்றல்.
திறுதியை - நிருதியை.
திறுதிறுத்தல்
திறுதிறுப்பு
திறுதிறெனல் } அச்சக்குறிப்பு.
திறேதம் - திரேதம்.
திறை - அரசிறை.
திறைகொள்ளுதல் - திறை வாருதல், வெல்லுதல்.
திறையளத்தல் - இறைகொடுத்தல்.
திற்றி - தின்றற்குரியன.
தினகரன் - சூரியன்.
தினகவி - அரசர்க்குப்புகழ்ச்சியாயந்திசந்தி சொல்லுங்கவி, தினகவிப்புல
தினகாலம் - நித்தமும். [வன்.
தினகேசவம் - இருள்.
தினசேரி - நித்தம்.
தினத்திரயம் - ஒருநாளில்மூன்றுபெருநாள் சம்பவிப்பது.
தினந்தினம் - நாளுக்குநாள்.
தினபலம் - ஐந்தாம் ஆறும் ஏழாம் எட்டாம் பதினொன்றும் பன்னிரண்டாமிராசிகள், தினபடக்கும்பலன்.

தினப்பாடு - தினசேரி.
தினப்பிரணி } சூரியன்.
தினமணி
தினமானம் - சித்தரும்.
தினம் - திருநாள், நாள், பகல்.
தினவிருத்தி - நாடோறும், நாள்வேலை, சித்தம்.
தினவு - சொறிவு.
தினவுதின்றல் } சொறிதல்.
தினவெத்துதல்
தினாங்கிசம் - சாமம்.
தினாதி - விடியல்.
தினாதினம் - பிரதானநாள், பிரதானப் பிரதானம்.
தினாந்தகம் - இரவு.
தினாந்தம் - மாலைப்பொழுது.
தினாந்தரம் - ஒன்றைவிட்டொருநாள், நாடோறும்.
தினாமிசம் - நாளின்பங்கு.
தினாரம்பம் - வைகறை.
தினாவசானம் - அந்தி.
தினிகை - நாட்கூலி.
தினுசு - வகை.
தினுசுவாரி - பலவகை.
தினை - ஒருசாமை, சிறுமை.
தினைக்குருவி - ஒரு சிறுகுருவி.
தினைச்சாமை - ஒருசாமை.
தினைப்புனம் - தினைவிளைபுலம்.
தின்பனவு - உணா.
தின்மை - தீமை.
தின்றல் - உண்ணல், மெல்லுதல் அது நால்வகை யுணவில் ஒன்று.
தின்றி - தீன்.
தின்னல் - தின்றல்.
தின்னாத்தின் - இழிந்தபோஜனம், சிக்கைப்பட்டுவாங்கிப் புசிக்கும் புசிப்பு.
தின்னி - தின்கிறவன்.
தின்னுகை - தின்னுதல்.
தின்னுதல் - உண்ணல்.

தீ

தீ - அறிவு, இனிமை, உபாயவழி, ஓரெழுத்து, ஜடாராக்கினி, கொடுமை, தீமை, தீயென்னேவல், நரகம், நெருப்பு அது அட்டமூர்த்தத்தொன்று, பஞ்சபூதியத்தும் ஒன்று.
தீகன் - சந்திரன்.
தீக்கஞ்சி - ஆரதிகருப்பூரம்.
தீக்கடன் - ஈமக்கடன்.
தீக்கடைகோல் ஞெலிகோல்.
தீக்கட்டி - அக்கினிக்கட்டி.
தீக்கணம் - நேரசைநடுவும் நிரையசை யிருபாலும் நிற்பன.
தீக்கதர் - தீட்சதர்.
தீக்கதிக்கும்பச்சை - நாகப்பச்சை.
தீக்கதிர் - உலையாணிக்கோல், சூரியன்.
தீக்கரண்டி - நெருப்பகப்பை.
தீக்கருமம் - ஈமக்கிரியை, துற்கிரியை.
தீக்கரை - முருக்கு.
தீக்கல் - நெருப்புக்காலுங்கல்.
தீக்காய்தல் - குளிர்காய்தல்.
தீக்காரியம் - அக்கினிகருமம், பொல்லாங்கு.
தீக்காலி - துடைகாலி.
தீக்கித்தல் - தீட்சித்தல்.
தீக்குணம் - துர்க்குணம்.
தீக்குணர் - கீழ்மக்கள்.
தீக்குண்டம் - அக்கினிவளர்க்கும் குழி.
தீக்குதல் கருகுவித்தல், தீயச்செய்தல்.
தீக்குதித்தல் - ஆவேசமுதலியவற்றால் தீப்பாய்தல்.
தீக்குருவி - தழல்விழுங்கி.
தீக்கு - வெறுங்குகை, சவுக்காரம்.
தீக்குளித்தல் - அக்கினியிற்படிதல்.
தீக்குறி - துற்குறி, அபசகுனம்.
தீக்கூர்மை - இந்துப்பு, திலாலவணம்.
தீக்கை - தீட்சை, விரதநியமம்.
தீக்கையோன் - அரன், குரு, தீட்சை பெற்றோன்.
தீக்கோள் - அர்க்கிரகம்.
தீங்கனி } உருசியானபழம்.
தீங்காய்
தீங்கு - குற்றம், கேடு, தவறு, தீமை.
தீங்குணர் - துட்டர்.
தீசகன் - ஆலோசனைகாரன், உபாத்தி.
தீச்சகுனம் - துற்சகுனம்.
தீச்சடம் - அமுரி.
தீச்சட்டி - நெருப்புச்சட்டி.
தீச்சலம் - கடலுரை.
தீச்சனம் } மிளகு.
தீக்ஷணம்
தீச்சுடர் - வெடியுப்பு.

தீச்சொல் - சாபம், பழிச்சொல்.
தீஞ்சுவை - நற்சுவை.
தீஞ்சொல் - இனியசொல், நற்சொல்.
தீட்சணகண்டகம் - முண்ணுவல்.
தீட்சணகந்தகம் - ஈரவெண்காயம்.
தீட்சணகம் - வெண்கடுகு.
தீட்சணசாரம் - இலுப்பை.
தீட்சணதண்டுலம் - திப்பிலி.
தீட்சணபத்திரம் - அலரி.
தீட்சணபுட்பம் - காம்பு.
தீட்சணம்-ஆயுதம், இரும்பு, உக்கிரம், உப்பு, உறைப்பு, கஞ்சாங்கோரை, கூர்மை, தொன்னோய், கோபம், சீக்கிரம், நஞ்சு, போர், மரணம், வெப்பம்.
தீட்சணசரம் - வெடியுப்பு.
தீட்சணியம் உக்கிரமம், கூர்மை, வெப்பம்.
தீட்சதர் - சிதம்பரப்பார்ப்பார், தீட்சைபெற்றோர்.
தீட்சம் - சம்பவிப்பதை வெறுத்தனுபவித்தல்
தீட்சதன் - தீட்சைபெற்றோன்.
தீட்சாவரன் - தீட்சதன்.
தீட்சித்தல் - தீட்சைகொடுத்தல்.
தீட்சை - உபதேசம், விரதநியமம்.
தீட்சைகேட்டல்-உபதேசம்பெறுதல்.
தீட்சைகொடுத்தல், தீட்சைபண்ணுதல், தீட்சைவைத்தல் } உபதேசங்கொடுத்தல்.
தீட்டம் - ஆசூசம்,மகளிர்தொடக்கு.
தீட்டவரிசி தவிடுநீங்கமினுக்கினவரிசி.
தீட்டல் - தீட்டுதல்.
தீட்டு-அழுக்கு ஆசூசம், எழுதுதல், கூர்மையாக்குதல், சூதகம், தீட்டென்னேவல், மகளிர் சூதகம்.
தீட்டுக்கோல் - எழுதுகோல்.
தீட்டுக்கல் - சாணைக்கல், மாக்கல்.
தீட்டுக்கழித்தல் - அழுக்குக்கழித்தல்.
தீட்டுக்காரி - சூதகக்காரி.
தீட்டுக்குற்றி - ஆயுதந்தீட்டுந்தடி.
தீட்டுச்சீலை - அழுக்குச்சீலை.
தீட்டுதல்-அழுத்துதல்,எழுதுதல், கட்டுதல், கூராக்கல், சாதித்தல், சித்திரித்தல், மினுக்குதல்.
தீட்டுத்தடி - ஆயுதந்தீட்டுந்தடி.
தீட்டுப்படுதல்-அழுக்குப்படுதல், அனுசாரப்படுதல், குற்றப்படுதல், சூதகநீர்பாய்தல்.
தீட்பு - இழிவு, கீழ்மை.
தீண்டல் - தொடல்.
தீண்டியம் - பவளக்குறிஞ்சி.
தீண்டுகை, தீண்டுதல் } தொடுதல் அது மெய்ப்பரிசமெட்டில் ஒன்று.
தீதல் - கருகுதல், தீந்துபோதல்.
தீதி - தாகம்.
தீதிலி - குற்றமில்லான்.
தீது - குற்றம், தீமை.
தீதை - அறிவு, கன்னி.
தீத்தகம் - பொன்.
தீத்தசிகுவை - நரி.
தீத்தட்டி - தீத்தருங்கருவி.
தீத்தட்டிக்கல் - தீக்கல்.
தீத்தட்டிக்குடுக்கை - சக்கைமுக்கி.
தீத்தட்டிவளையம் - தீக்கல்லைத் தட்டும் வளையம்.
தீத்தபிங்கலம் - சிங்கம்.
தீத்தம் சிங்கம், சுவாகமமிருபத்தெட்டினொன்று, தீர்த்தம், பிரகாசம், பெருங்காயம், பொன்.
தீத்தரசம் - நாக்கூழ்.
தீத்தலோகம் - கிரம், மாக்துளிர்க்கல், வெண்கலம்.
தீத்தலோசனம் - பூனை.
தீத்தா - வட்டத்திருப்பி.
தீத்தாங்கம் - மயில்.
தீத்தாங்கி - தீமறைக்கும் பலகை.
தீத்தாட்சம் - பூனை, மயில்.
தீத்தி-அழகு, சாகதி, பிரகாசம், வெண்கலம்.
தீத்தியம் - அரத்தை.
தீத்திரன் - ஊழித்தீ, சுவாலைக்கூட்டம்.
தீத்தீண்டல் - கலியாணம்.
தீத்தீண்டுசையான் - சிவபெருமான்.
தீத்தெய்வம் - அக்கினி.
தீத்தொழில்-தகாதசெய்கை அக்கினி, கருமம், துர்ச்செய்கை.
தீத்தோபலம் - சூரியகாந்தக்கல்.
தீநா - கப்பற்காரர் துறைபிடிக்கக் கொளுத்தின வெளிச்சம்.
தீநாற்றம் - கெட்டநாற்றம், முடை.
தீநிரம் - மாக்துளிர்க்கல்.
தீநுரை - கடனுரை.
தீந்தமிழ் - இனியதமிழ், நற்றமிழ்.
தீந்திரியம் - அறிகருவி.
தீபகம் - ஒரலங்காரம் அது ஒரிடத்துநின்றமொழி பலவிடத்துநின்றுபொருள்தருவது, சந்திரகிரணம், புட்பகுக்

கும்படி கொண்டுபோகிறபுள், மஞ்சள், விளக்கு.
தீபகாந்தி, தீபகாந்தியோன் } வயிரக்கல்.
தீபகூபி, தீபகோரி } விளக்குத்திரி.
தீபக்கால் - தீபக்கருவி.
தீபக்கொடிச்சி - ஆரதிகருப்பூரம்.
தீபங்காட்டல்-தீபார்ச்சனைசெய்தல் அது புண்ணியமொன்பதினொன்று.
தீபசிகை - விளக்குச்சுவாலை.
தீபதிச்சம் - வாலுளுவை.
தீபதைலி - ஆமணக்கு.
தீபபாதவம் - விளக்குத்தண்டு.
தீபபுட்பம் - சண்பகப்பூ.
தீபவத்திகை - விளக்குத்தண்டு.
தீபம் - சோதிநாள், தீவு, விளக்கு அது இராசசின்னத்தொன்று.
தீபவதி - யாறு.
தீபவராடி - வராடித்திறத்தினொன்று.
தீபவிருட்சம் - விளக்குத்தண்டு.
தீபனம்-ஆகாரம், நைவேத்தியஞ்செய்தல், பசி, பிரகாசம், மஞ்சள், மிகப்பிரகாசம்.
தீபாக்கினி - ஒருசுடர் கொண்டெரியு
தீபாந்தம் - பெருச்சாளி. [நெருப்பு
தீபாராதனை - விளக்காலாத்தி.
தீபாவலி, தீபாவளி, தீபாளி } ஒருபண்டிகை, தீபவரிசை, தீவாளி.
தீபிகை - விளக்கு.
தீப்தம் - தீத்தம்.
தீப்படுதல்-அழிதல், எரிச்சலடைதல், எரிந்துபோதல்.
தீப்பாய்தல் - தீக்குதித்தல்.
தீப்பி - நெருப்பு.
தீப்பியமானம் - பிரபை.
தீப்பியம் - அசமதாகம், சுவாலை.
தீப்பிரகாசி - குங்கிலியம்.
தீப்பிரம் - பிரபை.
தீப்பிரயகம் - ஓமம்.
தீப்பு - எரிப்பு, கருக்குதல்.
தீப்பொறி - கங்கம்.
தீப்போடுதல் குரூரஞ்செய்தல், கோத்தல், நெருப்பிட்டுச்சுடுதல்.
தீமதி - அறிவுள்ளவன்.
தீமலம் - கரி.
தீமத்தன்-புரூரவன்மகன், விருஹணன் மகன்.
தீமான் - பண்டிதன், புத்திமான், வியாழபகவான்.
தீமிதித்தல் - நெருப்பினடத்தல். [ம்.
தீமுகம்-உலைமுகம், நெருப்பெரியுமிட
தீமுறுகல்-ஒருசரக்கு அது வைப்புப்பாஷாண முப்பத்திரண்டில் ஒன்று.
தீமை - கேடு, பொல்லாங்கு.
தீமைக்கஞ்சல்-பொல்லாங்கிற்குப் பயப்படல் அது தயாவிருத்தி எட்டில் ஒன்று.
தீமொழி-சாபம், பொல்லாவார்த்தை.
தீம் - இனிமை, தித்திப்பு.
தீம்பண்டம் - நற்பண்டம்.
தீம்பர் - கீழ்மக்கள், தீங்குசெய்வோர்.
தீம்பால் - தித்திப்பாளபால்.
தீம்பி - துட்டை.
தீம்பு - கீழ்மை, தீது.
தீம்புகை - நறும்புகை.
தீம்புழல் - இனியபணியாரம்.
தீய-இனிமையான, சுத்தமான, தீதான.
தீயகம் - நரகம்.
தீயது-ஆரதம், இனியது, தீங்குள்ளது.
தீயபுட்பம் - சண்பகப்பூ.
தீயம் - தித்திப்பு.
தீயர் - கீழ்மக்கள், பொல்லாதவர்கள், வேடர்.
தீயல் - தீய்ந்தது, பொரிக்கறி.
தீயவன் - தீயோன்.
தீயவு - தீய்தல்.
தீயவி - காசா, காய்.
தீயறம் - பொல்லாங்கு.
தீயன-இனிமையுள்ளன, சுத்தமுள்ளன, தீங்குள்ளன.
தீயாக்கீரை - பொன்னாங்காணி.
தீயாடியப்பர் - மேலைத் திருக்காட்டுப்பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
தீயார் - தீயோர்.
தீயின்வயிரம் - மீனம்பர்.
தீயொழுக்கம் - துன்மார்க்கம்.
தீயோர் - தீம்பர், மூடர், வேடர்.
தீய்ச்சலம் - அக்கினிக்கட்டி.
தீர - முற்றாக.
தீரத்துவம்-அறிவுடைமை, உறுதி, தைரியம்.

தீரம்-அம்பு,அறிவு,கரை,குளிர்,சிறவரம்பு, பெலன், மஞ்சன், மனத்தைரியம், வலி.
தீரன் - திண்ணியன்.
தீராந்தரம் - மறுகரை.
தீராந்தி - மச்சுமரம்.
தீராப்பசியன் - மகோதரன்.
தீராமை - கொடுமை.
தீரிக்கை - ஒழிந்தவேளை.
தீரை - அறிவுடையாள்.
தீர்கடை - முடிவு, முழுமை.
தீர்க்ககணம் - வெண்சீரகம்.
தீர்க்ககதி - ஒட்டகம்.
தீர்க்ககந்தை - மெருகன் கிழங்கு.
தீர்க்ககாடிகம் - ஒட்டகம்.
தீர்க்ககாண்டம் - கோரைப்புல்.
தீர்க்ககேசம் - நெடுமயிர்.
தீர்க்கக்கிரீபம் - ஒட்டகம்.
தீர்க்கசங்கம் - ஒட்டகம், ஒரு நாரை, தொடை.
தீர்க்கசதுரம்-சரிசதுரம்,நீண்டசதுரம்.
தீர்க்கசத்திரம் - ஒருயாகம்.
தீர்க்கசந்தி - எழுத்து விகாரப்பட்டுப் புணரும் புணர்ச்சியில் ஒன்று. அது நிலைமொழியீறும் வருமொழி முதலுநிற்கும் அகர ஆகாரங்கெட ஆகாரமும் இகர ஈகாரங்கெட ஈகாரமும் உகர ஊகாரம் கெட ஊகாரமுந் தோன்றுதல்.
தீர்க்கசாலம் - சாலமரம்.
தீர்க்கசிருவம் - பாம்பு.
தீர்க்கசிவம் - நெட்டாயுள்.
தீர்க்கசுமங்கலி - பூரணசுமங்கலி.
தீர்க்கசுரதம் - நாய்.
தீர்க்கசுரம் - நெட்டுயிரெழுத்து.
தீர்க்கசூத்திரம் - கண், குன்மநோய், வயிற்றுவலி.
தீர்க்கதண்டம் - ஆமணக்கு, சாட்டாங்கம், பூரணவணக்கம்.
தீர்க்கதமசு-தீர்க்கமகன், அகலியைநாயகனாகிய கௌதமன்.
தீர்க்கதமன -உதத்தியன் மகன், இவன் பாரிபாத்துவேஷிணி, புத்திரர் கௌதமாதியர். இத்தீர்க்கதமன் பிறவிக்குருடன், சுராவந்தரன் மகன். தன்வந்திரிக்குத் தந்தை.
தீர்க்கதரிசனம் - முக்கால வருத்தமானமறிதல்.
தீர்க்கதரிசி - முக்கால வருத்தமானமறிவோன்.

தீர்க்கதரு - பனைமரம்.
தீர்க்கதாரு - கிலப்பனை.
தீர்க்கதிருட்டி - உற்றுப்பார்த்தல்.
தீர்க்கநாதம் - சங்கு.
தீர்க்கநிச்சுவாசம் - பெருமூச்சு.
தீர்க்கநித்திரை-நெடுந்தூக்கம்,மரணம்.
தீர்க்கபத்திரகம், தீர்க்கபத்திரம் - உள்ளி.
தீர்க்கபரணி - வாழை.
தீர்க்கவாகு, தீர்க்கபாகு - கட்டுவாங்கன்மகன், இரவுக்குத் தந்தை.
தீர்க்கபாதபம் - தென்னமரம்.
தீர்க்கபாதன்-ஒருமுனிவன், சூரியன்.
தீர்க்கபிருட்டம் - பாம்பு.
தீர்க்கமாருதம் - யானை.
தீர்க்கமூலம் - ஒருவகைவில்வம், தொட்டாற்சுருங்கி, முடக்கொற்றான்.
தீர்க்கம் - அந்தரம், ஆறுமேழாமிராசிகள். உச்சரிப்பின் நிறம், திட்டம், தெளிவு, ஆரம், நிச்சயம், நீளம், நெட்டுயிரடையாளம், நெட்டுயிரெழுத்து, பூரணம்.
தீர்க்கரஸநம் - பாம்பு.
தீர்க்கரதம் - பன்றி.
தீர்க்கராஜிகை - மஞ்சள்.
தீர்க்கராத்திரம்-நீண்டராத்திரி, நெடுங்காலம்.
தீர்க்கலோகிதம் - சிலிந்தி, தருப்பை.
தீர்க்கவசனம் - உறுதிச்சொல்.
தீர்க்கவத்திரம் - யானை.
தீர்க்கவருணம் - நெட்டுயிரெழுத்து.
தீர்க்கவர்சிகை - முதலை.
தீர்க்கவிருக்ஷம் - பெருமரம்.
தீர்க்கவைரம்-நெடுநாளாயில்விரோதம்.
தீர்க்காசனம் - பாம்பு.
தீர்க்காதேவி - திருதிபாரி.
தீர்க்காயு, தீர்க்காயுசு - காகம், நீடிய ஆயு, மார்க்கண்டன்.
தீர்க்காயுஷியம் - நெடுங்காலம்.
தீர்க்காயுதம் - ஈட்டி, பன்றி.
தீர்ணம் - காயம்.
தீர்தல்-இட்டமாதல், எழுதல், செல்லுதல், நடத்தல், நிசமாதல், நீளம், நீளித்தல், முடிதல், விடுதல், வெடி, தீதல், வெட்டல்.
தீர்த்தகர் - சமணமுனிவர், பெரியோர்
தீர்த்தகரன் - சமணகுரு.

தீர்த்தகாரர் } ஜைனமதாசாரியார். அ
தீர்த்தங்கரர் } வர் ஆதிநாதன் முதலி
ய இருபத்து நால்வர்.
தீர்த்தசேவி - தீர்த்தவாசி.
தீர்த்தம் - சுத்தம், திருமஞ்சனநீர், திரு
விழா, தீ, நீர், பிறப்பு, புண்ணியதீ
ர்த்தம், பெண்குறி, யாகம்.
தீர்த்தராஜி - காசி கெங்காநகரம்.
தீர்த்தர் - கடவுளர், பரிசுத்தர்.
தீர்த்தல் - இட்டமாக்கல், தீர்ப்புச்செய்
தல், நீக்கல், போகுதல், முடித்தல்,
விடுத்தல்.
தீர்த்தவாகம் - மயிர்ச்சுருள்.
தீர்த்தவாசி - யாத்திரைகாரன்.
தீர்த்தன் - அருகன், ஆசான், ஆலோச
னைக்காரன், உபாத்தியாயன், குரு,
சிவன், பரிசுத்தன்.
தீர்த்தி - பரிசுத்தவாட்டி, பார்ப்பதியா
தீர்த்திகை - யாறு. [று.
தீர்ந்தவன் - துறந்தவன், தேறினவன்,
தைரியவான்.
தீர்ப்பான் - வைத்தியன்.
தீர்ப்பு } நியமம், கீர்த்தி, பரிகரி
தீர்மானம் } ப்பு, முடிப்பு.
தீர்மானித்தல் - நிச்சயித்தல்.
தீர்மானிப்பு - தீர்மானம்.
தீர்வு - தீர்வை, முடிப்பு, விலக்கு.
தீர்வை - கிரி, சங்கம், தீர்மானம், பிரே
தக்கிரியையிலொன்று, விதி.
தீர்வைக்காரன் - ஆயக்காரன்.
தீர்வைச்சரக்கு ஆயமிறுக்குஞ்சாமான்.
தீர்வைத்துறை - ஆயத்துறை.
தீவகம் - தீபகம்.
தீவட்டி } ஒருவிளக்கு.
தீவத்தி }
தீவரம் - தீவர்த்தி, தீவிரம்.
தீவரி - செம்படத்தி.
தீவர்த்தி - எரிபந்தம்.
தீவலஞ்செய்தல் - லியாணச் சடங்கி
லொன்று; அது அக்கினிப்பிரதட்
சணம் பண்ணல், கலியாணம்.
தீவளர்த்தல் - அக்கினிவளர்த்தல்.
தீவளர்ப்போர் - அந்தணர், முனிவர்.
தீவறை - பெருநெருப்பெரிக்குங்குழிய
தீவாந்தரம் - தீவு, வெளி. [டுப்பு.
தீவாவளி - தீபாவளி.
தீவான் - கரையான்,

தீவி - புலி.
தீவிகை - தீபிகை.
தீவிதிராட்சம் - கொடிமுந்திரிகை.
தீவியது - இனியது.
தீவிரகந்தம் - துளசி.
தீவிரம் - உறைப்பு, கொடுமை, சடுதி,
சூரியகிரணம், நரகம், பெருங்கோ
பம், மூர்க்கம்.
தீவிரவேதனை - மிகுவேதனை.
தீவிரித்தல் - கொடுமையாயிருத்தல், சீக்
கிரம்பண்ணல்.
தீவிளங்குவயிரம் - மீனம்பர்.
தீவிளி - காய். [ன்று.
தீவினை - பாவம் அது இருவினையிலொ
தீவு - கடலிடைக்குறை, கடலுட்டிடர்,
கண்டம், சுவை, தீய்தல், தீவாந்
தரம், தூரதேசம்.
தீவுபற்று - தீவுப்புறம்.
தீவேட்டல் - கலியாணம், யாகம்பண்ண
தீவேள்வி - கலியாணம். [ல்.
தீழ்ப்பு - கீழ்மை, தீட்டு.
தீற்றுக்கல் - மணியாசிக்கல்.
தீற்றுதல் - ஊட்டுதல், சுத்தம்பண்ணு
தல், சுவர்முதலிய மெழுகுதல்.
தீற்றுப்பலகை - மணியாசிக்கட்டை.
தீனபந்து - கடவுள்.
தீனம் - இட்டம், எளிமை, குரூரம்,
குறை, கேடு.
தீனர் - இரப்போர், தீம்பர்.
தீனன் - இரப்போன், தரித்திரன், பெ
ருந்தீனன்.
தீனி - தீன்.
தீன் - உணவு, உண்டல்.
தீன்பண்டநல்லகல் - உணப் பொருளீத
ல் அது அறம் முப்பத்திரண்டிலொ
ன்று.
தீன்பண்டம் - இரசவஸ்து, தின்பண்
டம்.

து

து - அசைத்தல், அநுபவம், இருதிணைமு
ப்பா லொருமைத்தன்மை விகுதி
(உ-ம்) யான்நடத்து, எரித்தல், ஒரெ

மூத்து, கெடுத்தல், சேர்மானம், துவ்வென்னேவல், நடத்தல், நிறைத்தல், பிரிவு, பிறவினை, விகுதி, வருத்தல், வளர்தல்.
துகளிதமாடல் - துகளாக்கல்.
துகளிதம் - தூள்.
துகள் - குற்றம், பராகம், புழுதி, பூந்தாது.
துகி - மகள்.
துகிதுபதி - மகளின்கணவன்.
துகிதை - துகி.
துகிரிகை - சாந்து, சித்திரம்.
துகிர் - பவளம்.
துகிர்த்தாளி - பவளமல்லிகை.
துகிலிகை - எழுதுகோல், சித்திரம்.
துகிலின்பீசம் - பருத்திவிதை.
துகில் - சீலை, விருதுக்கொடி.
துகினசயிலம் - இமயமலை.
துகினம் - சந்திரகிரணம், பனி.
துகினாத்திரி - இமயம்.
துகு - வருத்தம்.
துகூலம் - நொய்யபுடைவை.
துகைத்தல் - இடித்தல், உழக்கல், நசுக்கல், வருத்தல், வருந்துதல்.
துகையல் - துகைத்தபொருள்.
துக்ககன் - துயரமுள்ளோன்.
துக்கங்கொண்டாடுதல் - இழவுகொண்டாடுதல், புலம்புதல்.
துக்கசாகரம் - உலகம், பெருந்துக்கம்.
துக்கதோக்கியை - உதைகாலி.
துக்கத்திரயம் - கடவுளாலும் உயிர்த்தோற்றங்களாலும் பஞ்ச பூதியங்களாலும் உண்டாகிற துக்கம்.
துக்கம் - கிலேசம், குற்றம், துன்பம், நாகம், நோ.
துக்கரம் - அம்பு, ஒருதேயம்.
துக்கராகம் - துக்கப்பாட்டிற்குரியராகம்.
துக்கவீடு - செத்தவீடு.
துக்காணி - இரண்டு தம்படிகொண்ட ஒரு செம்பு நாணயம்.
துக்காநிதம் - சுகம்.
துக்காராம் - பக்தலீலாம்ருதத்திற்சொல்லப்பட்ட ஒரு விஷ்ணுபக்தர்.
துக்கி - துக்கமுடையோன், துக்கியென்னேவல்.
துக்கிதம் - வருத்தம்.
துக்கிதன் - துக்கிக்கிறவன்.
துக்கித்தல் - கிலேசித்தல், புலம்பல், மனநோதல்.
துக்கிப்பு - துக்கம்.
துக்கு - உதவாதது, கீழ்மை, துப்பு.
துக்குணி - அற்பம்.
துக்கை - மகளிர் குதகம்.
துக்கைச்சி - குதகமுள்ளவள்.
துங்கசேகரம் - மலை.
துங்கதை - துங்கம்.
துங்கமந்தோச்சம் - கிரகவட்டத்தினதூரமான நிலை.
துங்கபத்திரி, துங்கபத்திரை - ஒரு புண்ணியநதி.
துங்கப்பிரஸ்தம் - இராமகிரிக்குக்கிழக்கின்கணுள்ள மலை.
துங்கம் - உயர்ச்சி, நுனி, பரிசுத்தம், பெருமை, மந்தோச்சம், மலை, வெற்றி.
துங்கரிகம் - காவிக்கல்.
துங்கன் - கிரகவட்டத்தின் தூரமான முனை, மேன்மையுடையோன்.
துங்கி - இரவு.
துங்கீசன் - சந்திரன், சிவன், சூரியன், திருமால்.
துங்கீபதி - சந்திரன்.
துசகம் - கொம்மட்டிமாதுளை, மாதுளை.
துசம் - இருபிறப்புள்ளன, உமி, குங்கிலியம், கொடி, தவிடு, துவசம், பல்.
துசன் - பார்ப்பான்.
துசானலம் - உமித்தீ.
துச்சகம் - சுகந்தம்.
துச்சதானியம் - பதர்.
துச்சத்தாரு - ஆமணக்கு.
துச்சம்-கீழ்மை, கொம்மட்டி, பதர், பொய், பேய்க்கொம்மட்டி, வெறுமை.
துச்சலை - திருதராஷ்டிரன்மகள், தாய்காந்தாரி, ஜெயத்திரதன் மனைவி.
துச்சவனன் - இந்திரன்.
துச்சன் - கீழ்மகன்.
துச்சாசனன், துச்சாதனன் - துரியோதனன் தம்பி.
துச்சி - அநுபவம், பரிட்சை, புசிப்பு, பூசிது.
துச்சிமை - கீழ்மை.
துச்சில் - ஒதுக்கிடம், சரீரம், கூட்டு, தங்குமிடம்.
துஞ்சர் - அசுரர்.
துஞ்சல் - துஞ்சுதல்.
துஞ்சற - முற்றுக.

துஞ்சுதல் - உறங்குதல், சாதல், சோம்பல், நிலைபெறுதல், வாடுதல்.
துஞ்சிலை - கட்டில்.
துஞ்சுமன் - சோம்பன்.
துடக்கம் - தொடக்கம்.
துடக்கறுப்பான் - கொத்தான்கொடி, முடக்கொற்றான்
துடக்கு - அசூசகம், கட்டு, சிக்கு, துடக்கென்னேவல், மகளிர் சூதகம்.
துடக்குதல் - கட்டுதல், தொடங்குதல், பொருத்துதல்.
துடங்கு - துடங்கென்னேவல், துலங்குமரம்.
துடங்குதல் - தொடங்குதல்.
துடப்பம் - துடைப்பம்.
துடராமுறி - தொடராமுறி.
துடரி - தொடரி.
துடர் - தொடர்.
துடர்ச்சி - தொடர்ச்சி
துடர்தல் - தொடர்தல்
துடவை - உழவுகொல்லை, பூந்தோட்டம்.
துடி - அகில், இசங்கு, உடுக்கை, உதடு, ஏலம், காலதசப்பிரமாணத்தொன்று; அது நிமிடமெட்டுக்கொண்டது. காலநுட்பம், குமாரனுடல், குறிஞ்சிப்பறை, கூதாளிச்செடி, சத்தகன்னிகைகளாடல், துடியென்னேவல், பாலைநிலப்பறை, மேன்மை, வலி.
துடிகம் - தும்பை.
துடிசாத்திரம் - துடிநூல்.
துடிதுடிக்குதல் - துடிக்குதல், துட்டத்தனம் பண்ணல்.
துடிதுடிப்பு - துடியாட்டம், துட்டத்தனம், மிகுசுறுக்கு.
துடித்தல் - அசைதல், அதிகப்படுதல், உருக்கங்கொள்ளுதல், குதித்தல், செருக்கங்கொள்ளல், துள்ளுதல், பதறல், பதற்றல், மின்னல்
துடிநூல் - சரீராங்கத்துடிப்பினால் வருநயநட்டஞ்சொல்லுமோர்சாத்திரம்.
துடிப்பு - அசைவு, உருக்கம், சதிப்பு, சுறுக்கு, துட்டத்தனம், பதைப்பு.
துடியடி - யானைக்கன்று.
துடியன் - கோபமுள்ளவன், துட்டன், விரைவுள்ளவன்.
துடியாஞ்சி - இசங்கு
துடியாட்டம் - துடிப்பு.
துடியானவன் - பலாத்திடிகன்.
துடியிடை - பெண், பெண்ணிடை.
துடுக்கன் - தீம்பன், துடியன்.
துடுக்கு - குறும்பு, தீக்குணம், விரைவு.
துடுப்பாற்றி - ஒருவகைமீன்
துடுப்பு - அகப்பை, நெய்த்துடுப்பு முதலியன, பூங்கொத்து, மரக்கோற்கை, வலிதண்டு.
துடுப்புக்கீரை - ஒருகீரை.
துடுப்புள்ளான் - ஒருகுருவி.
துடுமெனல் - ஒலிக்குறிப்பு.
துடுமை - ஒருவகைத் தோற்கருவி.
துடுவை - நெய்த்துடுப்பு.
துடை - அரசமரம், சுவர்க்கட்டை, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம், துடையென்னேவல், தொடை, விஷமூங்கில், விட்டம்.
துடைகாலி - நீக்காலி.
துடைக்குதல் } அழித்தல் செய்தல்,
துடைத்தல் } தள்ளுதல், நாசம் பண்ணுதல், விட்டுவிடுதல், வீழ்த்தல்.
துடைப்பம் - வாருகோல்.
துடைப்பு - துடைத்தல்.
துடைவாசி - விஷமூங்கில்.
துடைவாழை - தொடைவாழை.
துடைவை - உழவுகொல்லை, பூந்தோட்டம்.
துட்காரம் - ஆகாயம், வருத்தப்பட்டு நிறைவேற்றுங்கிரியை.
துட்கல் - அச்சக்குறிப்பு.
துட்கிரமம் - எட்டாதது, ஒழுங்கற்றது.
துட்குதல் - வெருவுதல்.
துட்குலேயன் - இழிகுலன்.
துட்கெனல் - அச்சக்குறிப்பு.
துட்சணத்துவம் - பொல்லாங்கு.
துட்சணம் - அசப்பியம், பொல்லாங்கு.
துட்டகண்டகன் - துட்சணன், கிற்பந்தன், மகாகுரூரன்.
துட்டகம் - பொல்லாங்கு.
துட்டக்குணம் - தீக்குணம்.
துட்டசதுர்த்தர் - மகாபாரதத்தில் கொடுமையிற் சிறந்த நால்வராகிய கன்னன் சகுனி துச்சாதனன் துரியோதனன்.
துட்டசித்தன் - கொடியோன்.
துட்டசிரோமணி - கொடியன்.
துட்டதேவதை - அக்கிரமதேவதை.
துட்டத்தனம் - தீக்குணம்.
துட்டத்தொழில் - துர்ச்செய்கை.
துட்டநிக்கிரகம் - துட்டரை யழித்தல்,

துட்டமிருகம் - காட்டுமிருகம், தீயமிருகம்,
துட்டம் - அடங்காமை,ஒழுங்கீனம்,கீழ்மை, தீங்கு, நீலோற்பலநிறம் அது மரகதக்குறறத்தொன்று, பலவீனம், பொல்லாங்கு.
துட்டரி - தொடரி.
துட்டரோகம் - ஒருநோய்.
துட்டர் - தீயர்.
துட்டவி - ஒருசெடி.
துட்டவித்தை - தீக்கல்வி,தீத்தொழில்.
துட்டவினை - தீத்தொழில்.
துட்டன் - தீயன், தேள்.
துட்டாட்டம் - துட்டத்தனம்.
துட்டாப்பு - காவுதடி,சுமத்தல், மந்தம்.
துட்டு - தீமை, பணத்திறலில் ஒன்று கொண்ட நாணயம்.
துட்டுத்தடி - குறுந்தடி, வலைதடி.
துட்டுவம் - அரபம்.
துட்டை - வசவி.
துட்பிரதருசனி - சேம்பு.
துணங்கறல - இருள், திருவிழா.
துணங்கு - இருள்.
துணங்கை - இருகையுமுடக்கிப்பழுப்புடையொத்தியாடல், கூத்து, திருவிழா.
துணர் - பூ,பூங்கொத்து,பூந்தாது. [ழா.
துணர்த்தல் - முகைத்தல்.
துணவு - சீக்கிரம், நுணுமரம்.
துணி - ஒளி, கந்தை, சீலைத்துணி, சோதிநாள், துணியென்னேவல்,துணிவு, துண்டு, தூக்கங்கள், தெளிவு, தேரிடக்கியம்.
துணிகரம் - தைரியம், துணிவு.
துணிகை - துணிவு.
துணிக்கை - துணுக்கை, துண்டாக்கல்.
துணிச்சல் - துணிகரம்
துணித்தல் - திடனகொள்ளல், தெளிதல், நிச்சயித்தல், முயலல், வெட்டுண்ணல்.
துணித்தல் - அறுத்தல், வெட்டல்.
துணிபு - தீர்ப்பு, தெளிவு.
துணிபொருள் - நிசப்பொருள்.
துணிவு - திடன், துண்டு, தெளிவு, நம்பிக்கை, நோக்கம், வெட்டு.
துணிவுரை - விருத்தியுரைப்பிரிவு பதினானகில் ஒன்று.
துணுக்கம் - அச்சம், உள்ளோசை.
துணுக்கிடுதல் - நடுக்கிடுதல்,பயப்படுதல்.
துணுக்கு - துண்டு, பயங்கரம். [ல்.
துணுக்குறுதல் - அச்சப்படுதல்.
துணுக்கெறிதல் - நடுங்கல்,வருத்தமாற்று அமூச்சுவிடுதல்.
துணுக்கெனல் அச்சக்குறிப்பு.
துணுக்கை - துண்டு.
துணுக்குதல் - வெறுவுதல்.
துணை - அளவு, ஆதரவு, ஆயுதமுனை, இணை, உதவி, ஒப்பு, சகாயம், சல்லியம், சோடு.
துணைக்கருவி - உபகருவி.
துணைக்காரணம் - உபகாரணம்.
துணைக்காரணவகத்திணை - உதவிக்காரணம் (உ-ம்) ஐம்பொறி புணர்ந்தந்தன்மையறிவுள்ளோர் நம்பார்.
துணைசெயல்விலக்கு - துணைசெய்வார்போற் கூறி விலக்குவது.
துணைச்சொல் - உதவிச்சொல்.
துணைப்படை - உதவிப்படை.
துணைமை - துணை.
துணைவர் உடற்பிறந்தோர்,சகோதரர்,தோழர், மந்திரிகள்.
துணைவன் - உதவிக்காரன், கடவுள், மகோதரன்,தலைவன்,தோழன்,மந்திரி.
துணைவி - சகோதரி, தோழி, மனைவி.
துண்டகன் - கபடன்.
துண்டகேரி - கோவைக்கொடி, பருத்திச்செடி.
துண்டம் - கைவாய்க்கால்,சாரைப்பாம்பு, துண்டித்தல், துண்டு, பங்கு, பறவைமூக்கு, முகம், மூக்கு, யானைத்துதிக்கை.
துண்டரிக்கம் - குரூரம்,நெருக்கிடை.
துண்டாயம் - பொற்பணம், பொன்மணல்.
துண்டி - கழி, கொப்பூழ், துண்டியென்னேவல், துண்டு, துண்டுகிலம், பறவைமூக்கு முகம்.
துண்டிகேரி } துண்டகேரி.
துண்டிகேரிகை }
துண்டிகை - கொப்பூழ்.
துண்டித்தல் - அறுதல், உறுத்திப்பேசல், கண்டித்தல், கிழித்தல், தறித்தல், பங்கிடுதல், பலப்படுதல், வெட்டல். [தல்.
துண்டிப்பு - உறுதிப்படுத்தல்,துண்டித்

துண்டிவிநாயகன் - காசியில் விநாயகன்.
துண்டீரபுரம் - காஞ்சிமாநகர்.
துண்டீரன் - காஞ்சியரசன்.
துண்டு - இரண்டு சிப்பம் புகையிலை, கையொப்பத்துண்டு, துணி, துணிக்கை, நஷ்டம், பங்கு, பற்றுச்சீட்டு.
துண்டுக்கத்திரி - ஒருவிஷப்புழு.
துண்டுபம் - ஒருவகைப்பாம்பு.
துண்டுவிழுதல் - நட்டம்விழுதல்.
துண்ணிடுதல் - திடுக்கிடுதல்.
துண்ணெனல் - அச்சக்குறிப்பு, விரைவுக்குறிப்பு, [வி.
துதகாரம் - துப்பும்பொழு தெழுமொலி.
துதமுகம் - தலையாட்டம், வேண்டாமைக்குத் தலையசைத்தல்.
துதம் - அசைவு.
துதி - துதியென்னேவல், தோத்திரம்.
துதிக்கை - துதிக்குதல், யானைத்துதிக்கை.
துதித்தல் - வழுத்தல்.
துதிகிர்த்தை - இகழாவிகழ்ச்சி.
துதிபூமி - யாகபூமி.
துதிப்பு - துதி.
துதியம் - ஈவிமேலாத்திரம்.
துதியரிசி - அட்சதை.
துதியை - இரண்டாந்திதி.
துது - இருது.
துதை - துதையென்னேவல், நெருக்கம்.
துதைதல் - நெருங்குதல்.
துதைத்தல் - நெருக்கல்.
துத்தகம் - துத்தம்.
துத்தநா - முசற்புல்.
துத்தநாகமணல் - ஒருமருந்து.
துத்தநாகம் - சத்தலோகத்தொன்று.
துத்தபாஷாணம் - ஒருபாஷாணம்.
துத்தபேனம் - பாலுரை.
துத்தமஞ்சு - முயற்புல்.
துத்தமன் - ஒருஞார்த்தல்.
துத்தம் - ஏழிசையினொன்று, கண்மருந்து, சமனிசை, சீ, நாய், நாவினுற்பிறக்குமிசை, நாணற்புல், மாண்முகப்புல், நாய்ப்பாகல், நீர்முள்ளி, பால், யாழினோர் நரம்பு, வயிறு.
துத்தல் - அனுபவித்தல், புசித்தல்.
துத்தன் - கபடன், தப்பிலி.
துத்தாஞ்சனம் - துத்தம்.
துத்தாப்தி - பாற்கடல்.
துத்தாப்திசயனன் - விட்டுணு.
துத்தாப்திதனையை - இலக்குமி.
துத்தாரி - ஒருவிதசீலை, ஒருவாச்சியம்.
துத்தி - உண்டற்குரியன, ஒருசெடி, தேமல், பாம்பின்படப்பொறி.
துத்தியம் - துதி, வணக்கம்.
துத்து - கம்பளி, தப்பிதம், பொய், வஞ்சனை.
துத்துநாகம் - துத்தநாகம்.
துத்துமாற்று - எத்து, தந்திரம், பொல்லாங்கு.
துத்தூரம் - ஊமத்தை.
துநீ - நதி, பறவைமுட்டை.
துநீநாதன் - சமுத்திரம்.
துந்தகடம் - கோதுமைநோய்.
துந்தகூபிகை - கொப்பூழ்.
துந்தமம் - ஒருபறை.
துந்தம் - வயிறு.
துந்தி - கொப்பூழ், வயிறு.
துந்திகன் - தொப்பையுள்ளவன், பெருவயிறன்.
துந்திகை - துந்தி.
துந்திதன் - பெருங்கொப்பூழுள்ளவன்.
துந்திபன் - பெருவயிறன்.
துந்து - உதங்கமகாரிஷிக்குப்பகைவனாயிருந்த ஒரு கொடிய அசுரன். குவலயாசுவன் தன் புத்திரர் இருபத்தோராயிரவரோடுஞ் சென்று இவ்வசுரனை எதிர்த்து யுத்தஞ்செய்து கொன்று துந்துமார னென்னும் பெயர் கொண்டான். குவலயாசுவன் புத்திரருள் திருடாசுவன், சந்திராசுவன், கபிலாசுவன் என்னும் மூவரொழிய, ஒழிந்தோர் யாவரும் துந்துவினது அக்கினி சுவாசத்திலகப்பட்டு மடிந்தனர். இச்சரித்திரத்தைக் கம்பர் "துந்துவெனுந்தானவனைச் சுடுசரந் தாந் தொலைத்தாளும்" என்பதாற் சுட்டினர். கம்பராமாயணம் குலமுறைகிளத்து படலம்.
துந்துபம் - கடுகு.
துந்துபி - துந்துமி. நரன்மகன். மயன் புத்திரன். மாயாதேவியினது இரண்டாம் மகன். வாலியாற் கொலையுண்டவன். மதங்கமுனிவர் வாசஞ்செய்த இருஷியமுக பர்வதத்திலே துந்துபியினது இரத்தம் தெறித்து வீழ்ந்து அதனை அசுசிதம்பண்ண, மதங்கர், "இவ்வசுசித்துக்குக் கார

ணுகிய வாலி இம்மலையை மிதிப்பனேல் அவன் தலை ஆயிரம், கூறுறுக" என்று சபித்தனர். அன்று தொட்டு வாலி அங்கே செல்லா தொழிகினன்.

துந்துமாரன் - (இக்ஷ்வா) குவலயாசுவன் துந்து என்னும் இராக்ஷசனைக் கொன்றவனாதலின் இப்பெயர் பெற்றான். துந்து காண்க.

துந்துமாரி - முதலெழுவள்ளலி லொருவன்.

துந்துமி - துந்துபி, ஐம்பத்தாறாவது வருடம், ஓரசுரன், துளிமழை, பறைப்பொது, பேரிகை, பேரொலி.

துந்துருபாவை } துடிப்புள்ளவர், துடிப்புள்ளவன்.
துந்துருமாலை }

துந்துவாயன் - சேணியன்.

துபரம் - கொம்பில்லாப்பசு.

துபாக்கி - துப்பாக்கி.

துபாக்கிக்காது - துப்பாக்கிவத்திவாய்.

துப்பம் - உதிரம்.

துப்பாக்கிவத்திவாய் - இரஞ்சகம்.

துபாசி - துப்பாசி.

துப்பகம் - நெய்.

துப்பட்டா } ஒரு சீலை.
துப்பட்டி }

துப்பரவு - துப்புரவு, முழுமை, மேன்மை.

துப்பலிடுதல் - ஆணையிடுதல், எச்சலிடுதல்.

துப்பல் - உமிழ்நீர், துப்புதல்.

துப்பல்விடுதல் - ஆணையைவிலக்கல்.

துப்பற்களாசி - துப்பற்பாத்திரம்.

துப்பாக்கி - துவக்கு.

துப்பாசி - பாஷையை மறுபாஷையிற் சொல்பவன்.

துப்பிரசம் - கருஞ்சொண்டி.

துப்பு - அரக்கு, அறிவு, அனுபவம், ஆயுதப்பொது, ஆராய்ச்சி, உணவு, கறை, குற்றம், சகாயம், சாமர்த்தியம், சிவப்பு, சுத்தம், சோதித்தல், துணை, துணைக்காரணம், துப்பென்னேவல், நெய், பகை, பவளம், பாணம், பொலிவு, மேன்மை, வலி, வன்மை.

துப்புக்கேடு - சீர்கேடு.

துப்புண்ணி - சீர்கேடி.

துப்புதல் - உமிழ்தல்.

துப்புத்துருவிசாரித்தல் - ஒட்டினது தப்பினது விசாரித்தல்.

துப்புரவு - அலங்காரம், அனுபவிப்பன, ஐம்பொறி நுகர்ச்சி, ஒப்புரவு, ஒழுங்கு, சுத்தம், முழுமை, மேன்மை.

துப்புளி - ஆயுதச்சாலை.

துமாகாரன் - கொல்லன்.

துமால் - இறையின்மை.

துமானம் - ஆபரணப்பெட்டி.

துமி - சிறுதிவலை, துமியென்னேவல், மழைத்துளி.

துமிதம் - நீர்த்துளி.

துமித்தல் - அறுத்தல், துளித்தல், வெட்டல்.

துமிப்பு - துமி, வெட்டு.

துமிரம் - கருமை, மிக்க சிவப்பு.

துமிலம் - பேரொலி.

துமுலம் - குழப்பம்.

தும் - உளப்பாட்டுத்தன்மைப் பன்மை வினை விகுதி (உ-ம்) நடந்தும், துகள், தும்மென்னேவல்.

தும்பகர் - தும்பை.

தும்பகா - அத்தி, தும்பரம், தும்பராஷ்டகம், தும்பை, பேராத்தை.

தும்படைசி - நாடாவிதேனுருப்பு.

தும்பம் - வீணைக்காய்.

தும்பரம் - அத்தி.

தும்பராஷ்டகம் - பேராத்தை.

தும்பல் - தும்மல்.

தும்பன் - துட்டன்.

தும்பாலை - சுரை.

தும்பால் - துமால்.

தும்பி - ஒருமீன், கரும்பு, கருவண்டு, கொத்தான், சுரை, துட்டை, தும்பிமரம், யானைவண்டினுன், வண்டு.

தும்பிகரும்பு - பனிச்சை.

தும்பிக்கை - துதிக்கை.

தும்பிச்சி - துட்டை.

தும்பிழுத்தல் - நுரைதள்ளுதல்.

தும்பிலி - ஒருமரம்.

தும்பு - கரும்பு, கயிறு, குறைநவு, சிம்பு, நார், நெருஞ்சில்.

தும்புராட்டகம் - தும்பராஷ்டகம்.

தும்புரு - ஒருகந்தருவன், வீணை, வீணைப்பரிட்சையுள்ளவன்.

தும்பை - ஒருகொடி, ஒருபூடு, ஒருமீன், கறவைப்பசு, கூட்டம், பொருதல், போர் வென்றோர்க்குமாலை, வெற்றிலை.

தும்பைமாலை - ஒருபிரபந்தம், அது தும்பைப்பூ மாலை சூடி மாற்றாரோடு பொருவதைக்கூறுவது, போர்வென்றோர்க்கு மாலை.
தும்மட்டி - ஒருசெடி.
தும்மல் - உயிர்ப்பு, தும்முதல், விடுதல்.
தும்மிட்டி - சிறுகுமட்டி, பேரீந்து.
தும்மு - கொசுகு, தும்மல், தும்மென்னேவல்.
தும்முட்டி - ஒருசெடி.
தும்முதல் - ,தும்மல்.
துயக்கம் - சோர்ச்சி.
துயக்கு - சோர்வு, தளர்வு.
துயங்குதல் - சோர்தல்.
துயம் - இரண்டு, கொடி.
துயரடி - துன்பம், வாட்டம்.
துயரம் - கிலேசம், துன்பம், மழை.
துயரி - யாழ்நரம்பு.
துயருறுவோன் - தரித்திரன், துன்புறுவோன்.
துயர் - கிலேசம், துயரென்னேவல், துன்பம்.
துயர்தல்-கிலேசப்படல், துன்பப்படல்.
துயர்தீர்த்தசெவ்வர் - திருஓமாம் புலியூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
துயலுதல் - அசைதல்.
துயவு - அறிவின்றிரிபு.
துயிலல் - நித்திரைசெய்தல்.
துயிலாதாராலயம் - மகமேரு.
துயிலார் - தேவர்.
துயிலிடம் - நித்திரைசெய்யுமிடம், மக்கட்படுக்கை.
துயிலுகல் - நித்திரை செய்தல்.
துயிலுணர்தல் - விழித்தல்.
துயிலெடை - துயிலெழும்பல்.
துயிலெடைநிலை - ஒரு பிரபந்தம் அது மனக்கவற்சியின்றிப் பாசறைக்கட்டுயின்ற அரசர்க்குப் புகழ்கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெழுப்புதலாகப் பாடுவது.
துயில் - துயிலென்னேவல், நித்திரை.
துயில்கூர்தல் - நித்திரை பண்ணல்.
துயில்போதல் - ஆறுதல், நித்திரையாதல்.
துயில்வு - நித்திரை.
துயிறல் - நித்திரை செய்தல்.
துயிற்றுதல் - நித்திரையாக்கல்.
துயுலி - தொய்யில்.
துய் - அறிவின்றிரிபு, உணவு, துய்யென்னேவல், பஞ்சிற்றொடர் றனி.
துய்ச்சி - அனுபவம்.
துய்து - துய்யது.
துய்த்தல் - அனுபவித்தல், நுனுற்றல், புசித்தல்.
துய்ப்பு - அனுபவம், புசிப்பு.
துய்மை - தூய்மை.
துய்யது - சுத்தமானது.
துய்யம் - சுத்தம்.
துய்யவன் - சுத்தமானவன்.
துய்யனேயிரவியாக்கி - பவளப் புற்றுப் பாஷாணம்.
துய்யன் - பரிசுத்தன், வெள்ளிமணல்.
துய்யாள் - அழகுள்ளவள், சரசுவதி.
துய்யான்குறுமணல் - வெள்ளிமணல்.
துய்யோன் - சுத்தமானவன்.
துரகதமூலம் - நீர்முள்ளி.
துரகதம் - குதிரை.
துரகம் - குதிரை, குதிரைப்பற் பாஷாணம், மனம்.
துரக்காரர் - பொறுப்பாளிகள்.
துரகாநநம் - குதிரைமுகமீன்.
துரகி - அச்சுவமூர்வோன்.
துரங்கப்பிரியம் - கோதும்பை.
துரங்கமம் - குதிரை.
துரங்கம் - குதிரை, மனம்.
துரங்கவதனர் - கந்தருவர்.
துரங்காரி - எருமை.
துரங்கி - குதிரைக்காரன்.
துரடன் - துர்மார்க்கன்.
துரட்டு - துறட்டு.
துரதிட்டம் - துர்ப்பாக்கியம்.
துரத்துதல் - ஓட்டுதல், செலுத்தல், தொடர்தல்.
துரந்தரம் - பொறியெருது, வல்லபம்.
துரந்தரன் - பாரந்தாங்குவோன், வல்லோன்.
துரபிமானம் - ஈனபிமானம், வீண்பெருமை.
துரப்பணம் - கம்மக்கருவியினொன்று.
துரப்பு - துரத்துதல்.
துரமி - தூதுளை, தொடரி.
துரம் - சுமை, பொறுப்பு.
துரவு - கிணறு, தூது.
துரவுச்சட்டம் - குறுவளிச்சட்டம்.

துரா - பாரம்.
துராகதம் - துன்னடை.
துராகன் - மிலேச்சன்.
துராகிருதம் - தீத்தொழில்.
துராசாரம் - ஒழுக்கத்தவறு, பவித்திரவீனம்.
துராசாரி ஒழுக்கவீனன், ஒழுக்கவீனி
துராசை - துரிச்சை.
துராத்தியம் - எளிமை.
துராத்துமா - தீம்பன்.
துராபம் - பெறுதற்கரியது.
துராயணல் - நடையின்றி வாசித்தல், பாராயணம்.
துராயுதம் - அசீதி.
துராய்-அறுகம்புல்லாற்றிரித்த பழுதை
துராரோகம் - பனை, பேரீந்து.
துராலபம் - கிடைத்தற்கரியன, சிறுகாஞ்சொறி.
துராலாபம் - பழிமொழி.
துராலோகம் - பேரொளி.
துராலோசனை - தீயோசனை.
துராலோபம் - சிறுகாஞ்சொறி.
துரால் - செற்றை, துரும்பு, துன்பம்.
துரி - எழுதுகோல், நூற்பாத்திருத்தும் படைமயிர்.
துரிகம் - சொர்ணபாத்திரம்.
துரிசி - துருசி.
துரிசு - குற்றம், துருசி, துன்பம்.
துரிச்சை - பொல்லாவிருப்பு.
துரிஞ்சில் - உசிலமரம், வௌவ்வால்.
துரிட்டம் - பெரும்பாவம்.
துரிதம் - ஒருதானம், கலக்கம், காலதசப்பிரமாணத்தொன்று, அது அடியிரண்டுகொண்டது, கேடு, சீக்கிரம், துன்பம், பாவம்.
துரியசித்தன்-யயாதிபுத்திரனாகிய துர்வாசன் பௌத்திர பௌத்திரன். இவனுக்குச் சந்ததியில்லாமையால் பரதன் சிற்றப்பனாகிய திஷ்யந்தனைத் தத்த புத்திரனாக வெடுத்து வளர்த்தான்.
துரியத்தானம் - நாபிக்கமலம்.
துரியம் - சுத்தநிலை, சுமத்தல், நான்காமவத்தை, பரமாத்துமா, பொதியெருது.
துரியர் - கடவுள், சுத்தநிலையிற் சலனமற்றிருப்போர்.

துரியாதீதம் - ஆன்மாக்கள் மிகத்தூய்மையாய்நிற்குமந்நிலை ஐந்தாமவத்தை.
துரியாதிதானம் - மூலாதாரம்.
துரியோதனன் - தூயோதனன்.
துரிலபம் - அருமையானது பெறுதற்கரியது.
துரீ - நெய்வார் கருவியினொன்று.
துரீயபாகம் - காற்பங்கு.
துரீயம் - நான்காவது, பொதியெருது.
துரீயவருணன் - சூத்திரன்.
துரீல் - சடுதி.
துரீயன் - பிரமன்.
துரு - உபாயம், களிம்பு, கறை, பொன்.
துருகணன் - பிரமன்.
துருகம் - மலைமேற்கோட்டை.
துருகா - ஆடு.
துருகியு - யயாதிபுத்திரன்.
துருக்கநாட்டுமணி - மரகதமணி.
துருக்கபாதை - ஒடுங்கியபாதை.
துருக்கபுரம் - அரணனகர்.
துருக்கம் - ஒடுக்கவழி, கத்தூரி, கத்தூரி மிருகம், கலக்கம், காடு, குங்குமமரம், சேரற்கரியவிடம், பஞ்சவிரையினொன்று, மலைமேற்கோட்டை, மான்.
துருக்கர் - ஒருபாடைக்காரர்.
துருக்கல் - கீச்சுக்கிட்டம்.
துருக்கன் - ஒரசுரன்.
துருக்கி - துருக்கதேயம்.
துருக்கு - துருக்கருக்குரியது, துலுக்கப்பாஷை, மிலேச்சசாதி.
துருக்கை - துர்க்கை.
துருசி - ஒருமருந்து, களிம்பு, சீக்கிரம்.
துருசிக்குரு - நவசாரம்.
துருசு - மயிற்றுத்தம், மாசு.
துருணம் - கத்தி, துரோணாசாரியன் வில், தேள், வண்டு, வில்.
துருணன் - சிக்கனக்காரன்.
துருணி - தேள், பெண்ணாமை, வின்னாண்.
துருதம் - துரிதம்.
துருதுருத்தல் - விரைதல்.
துருதுருபாவை - ஆடுமாலை.
துருதுருப்பு - சுறுசுறுப்பு.
துருதுரும்பை - பிள்ளைகள் விளையாட்டினொன்று.
துருதொனல் - விரைவின்குறிப்பு.
துருதை - சுறுசுறுப்பு, சொறிவு.

துருத்தி - ஆற்றிடைக்குறை, ஊதுந்துருத்தி, தோல், நீர்த்துருத்தி, மட்டத்துருத்தி.
துருத்தாம் - ஊமத்தை.
துருநகம் - முள்.
துருந்தல் - ஆராய்தல், துளைபருக்கப்பண்ணல்.
துருபதன் - துரோபதைதந்தை, பாஞ்சாலதேசத்தரசன்.
துருபவருணி - காட்டாமணக்கு.
துருப்பணம் - தரப்பணம்.
துருப்பிடித்தல் - ஆராய்ந்துபிடித்தல், கறைபிடித்தல்.
துருமசிரேட்டம் - பனை.
துருமங்கம் - முள்.
துருமம் - கற்பகதரு, குங்குமமரம், மரப்பொது, மனக்கலக்கம்.
துருமரம் - முள்.
துருமவருணி - காட்டாமணக்கு.
துருமவியாதி - கொம்பரக்கு.
துருமநகம் - முள்.
துருமாரி - யானை.
துருமேசுவரம் - பனை.
துருமோற்பலம் - கோங்குமரம்.
துரும்பம் - பூமுடித்தகொண்டை.
துரும்பர் - ஈனர், பறையர் முதலானவர்க்கு வண்ணார்.
துரும்பு - திரணம்.
துருவகம் - குற்றி.
துருவங்கட்டுதல் - சூத்திர முண்டாக்குதல், வகைபண்ணல்.
துருவசக்கிரம் } துருவச்சக்கிரம் } துருவத்திற்கு இருபத்துமூன்றரைப் பாகையளவி னிற்பது, வான்சோதிமண்டலம்.
துருவணம் } துருவண்ணம் } வெள்ளி.
துருவதாளம் - நவதாளத்தொன்று.
துருவமண்டலம் - துருவபதம்.
துருவம் - அசையாநிலை, உபாயம், ஒடுக்கவழி, கிரகநடையின்றூரம், கூத்தின்விகற்பம், சத்ததாளத்தொன்று, சூத்திரம், துருவநட்சத்திரம், நிச்சயம், நித்தியம், நித்தியயோகத்தொன்று, நியாயசாத்திரம், நிலைபேறு, மோக்கம், வட்டத்தின்முனை.
துருவம்பண்ணுதல் - துருவங்கட்டுதல்.
துருவயம் - அளவு.
துருவலகு - துருவுமணை.
துருவல் - ஆராய்தல், கடைதல், துளைத்தல், தேடுதல், பிறாண்டுதல்.
துருவன் - முனையினிற்கு நட்சத்திரம். உத்தானபாதனுக்குச் சுநீதியிடத்துப் பிறந்தவன். அஷ்டவசுக்களு ளொருவன். மதிசாரன் இரண்டாம் புத்திரன், பலராமன் தம்பி. துருவநட்சத்திரம். பிரமன், விஷ்ணு, சிவன்.
துருவாசன் - ஒருமுனிவன்.
துருவாடு - செம்மறியாடு.
துருவாட்டி - சிற்றேவல்.
துருவாதி - காட்டாமணக்கு.
துருவு - துருவல், துருவென்னேவல், துளை.
துருவுதல் - கடைதல், துளைத்தல், தேடுதல், தொடர்தல்.
துருவுபலகை } துருவுமணை } தேங்காய்,துருவுமோர் கருவி.
துருவை - செம்மறியாடு, தேவுறுப்புளொன்று.
துருளக்கம் - குந்திரிக்கம்.
துரை - அதிகாரி, மேன்மகன்.
துரைசாணி } துரைசானி } மேன்மகள்.
துரைச்சி - உலோககிளி.
துரைத்தனகாரர் - அதிகாரமுள்ளோர்.
துரைத்தனம் - அதிகாரம்.
துரைப்பெண் - துரைசாணி.
துரைமகள் - மேன்மகள்.
துரைமகன் - மேன்மகன்.
துரோகசிந்தனம் - துராலோசனை, பாதகநினைவு.
துரோகம் - கலக்கம், குற்றம், கொடும்பாவம், தப்பிதம்.
துரோகாடன் - எத்தன், வேட்டைக்காரன்.
துரோகி - இரக்கமற்றவன், கொடும்பாவி.
துரோட்டி - தாட்டுக்கோல், தோட்டி.
துரோணகாகம் } துரோணகாகலம் } காகம்.
துரோணகை - வெண்ணொச்சி.
துரோணமுகம் - துரோணிமுகம்.
துரோணம் - அண்காற்புள், ஒருமரம், காக்கை, சத்தமுகிலினொன்று; அது மண்பொழிவது, தனுவிராசி, தும்பைச்செடி, தலைவாய், பதக்கென்னுமோரளவை, வில்.

துரோணன் - குருகுலத்தாசர்குரு.
துரோணாசாரியன் - பரத்வாஜமுனிபுத்திரன். அசுவத்தாமன் தந்தை, பாரதயுத்தத்தில்த்ருஷ்டத்யும்நனுல்கொல்லப்பட்டவன். இவனுக்குக் கும்பனென்றம்பேர். துரோணம் ஓரளவு கருவியாகிய கும்பம், பரத்வாஜரது தவத்தை யழிக்கும் பொருட்டு இந்திரன் ஏவலிற் சென்ற மேநகை அவருக்கு மோகமுண்டாக்க, அவர் தமது வீரியத்தை ஒரு துரோணத்திலேவிட்டார், அதினின்றும் பிறந்தவராதலால்; இவருக்கு துரோணன் எனப்பெயர்வாய்த்தது. இவன்கௌரவ பாண்டவர்களாகிய இருதிறத்தார்க்கும் வில்வித்தை கற்பித்த ஆசிரியன்.
துரோணிகை - ஆவிரை.
துரோணிதலம் - தாழை.
துரோணிமுகம் - நானூறு கிராமத்திற்றலைப்பட்டினம்.
துரோதரம் - சூதாட்டு.
துரோபதை-பஞ்சகன்னிகளி னொருத்தி, பாண்டவர்மனைவி.
துரோபவம் - மயக்கு.
துர் - தீதுப்பொருட்குமோருபசருக்கம்.
துர்க்கதி - கெட்டநடை, தரித்திரம், நரகம்.
துர்க்கநிநாசிநி - துர்க்கை.
துர்க்கந்தம் - கெட்டநாற்றம்.
துர்க்கமம் - பெறற்கரியது.
துர்க்கம் - அருக்கம்.
துர்க்கி - பார்வதி.
துர்க்குணன் - தீயன்.
துர்க்கை-கொற்றவை, பூரநட்சத்திரம்.
துர்ச்சநன் - துஷ்டன்.
துர்ச்சனம் - செருக்கு, மோகலீலை, வன்மம்.
துர்ச்செயன் - தநுபுத்திரன்.
துர்த்தமன் - துத்தமன். காந்தாரன். பௌத்திர புத்திரன், பத்திரசேநன் புத்திரன்.
துர்த்திநம் - கெட்டநாள், மழை.
துர்த்தூரம் - துருத்தூரம்.
துர்ப்பரிகம் - சிறுகாய்ஞ்சொறி.
துர்ப்பலம் - துர்பலம்.
துர்ப்பிட்சம் - துர்பிட்சம்.
துர்ப்பீசம் - துர்பீசம்.
துர்மதன் - வசுதேவன் புத்திரன்.
துர்மதி - துர்ப்புத்தி, துன்மதிவருடம்.
துர்மர்ஷணன் - துரியோதநன் தம்பி.
துர்மாமிசம் - துன்மாமிசம்.
துர்மார்க்கம் - துன்மார்க்கம்.
துர்முகன் - துரியோதனன் தம்பி, மாலியவந்தன் மகன்.
துர்முகி - துன்முகி, ஒருவருஷம்.
துர்மேதை - மந்தபுத்தி.
துர்லபம் - துரிலபம்.
துர்வசன் } யயாதிக்குத் தெய்வயானை
துர்வசு } யிடத்துபிறந்தபுத்திரன்.
துர்வர்ணகம் } வெள்ளி.
துர்வர்ணம் }
துர்வாசன் - அத்திரிக்கு அநசூயையிடத்துப் பிறந்த புத்திரன், இவன் சகோதரன் சோமதத்தாத்திரேயன், இவன் கடுங்கோவியாதலால் இவன் கோவம் உலகத்தாருக்கு உவமானப்பிரமாணமாய் விட்டது, கோவியாயினும் தவத்திற் சிறந்தவன், தாம் நீட்டியமாலையைத் தோட்டியா லேற்று யானைத் தலையிலெறிந்த இந்திரனது செல்வமெல்லாம் போய்த் திருப்பாற்கடலிற் புக்கொளிக்கும்படி சபித்தவன் இவனே.
துர்வாதம் - நியாயக்கேடானவாதம்.
துர்விதன் - தூர்ஜநன்.
துர்விருத்தன் - துஷ்டன்.
துலக்கம் - தெளிவு, பளபளப்பு, பிரகாசம்.
துலக்கல் - விளக்கல்.
துலக்கு-துலக்கென்னேவல்,பிரகாசம்.
துலக்குதல் - பிரகாசிப்பித்தல்,விளக்குதல், வெளிப்படுத்தல்.
துலங்கல் - ஒளிசெய்தல்.
துலங்கு - துடங்கு, துலங்கென்னேவல், தொழுமரம்.
துலங்குதல் - தெளிதல், பிரகாசித்தல்.
துலம் கனம்,கோறை,நிறை, நீர்முள்ளி.
துலவம் - பஞ்சு.
துலா - ஏற்றமரம், ஒன்றற்குச் சரியாந்தன்மை, கைமரம், துலாராசி, நிறைகோல், பண்டிக்கோல், பாகம்.
துலாகோசம் - துலாபரீட்சை.
துலாகோடி - ஒருநிறை, காலணியி னொன்று, பத்துக்கோடி.
துலாக்கட்டை - நிராவி.
துலாக்கொடி - பட்டைக்கொடி.

துலாக்கோல்-தராசுக்கோல் துலாப்படி.
துலாசூத்திரம் - துலாப்பிரகிரகம்.
துலாதடம் - சவன்மரம்.
துலாதரன் - சூரியன்.
துலாதாரம் - துலாக்கோல், துலைத்தட்டின்கயிறு.
துலாதாரன் - ஒரு வியாபாரி. வாரணாசியிலிருந்த ஒரு வணிகசிரேஷ்டன், இவன் ஜாஜிலியென்னும் இருடிக்குப்பிரமஞானத்தையுபதேசஞ்செய்த புருஷோத்தமன்.
துலாந்த - ஒருவகைவிட்டம்.
துலாபரீட்சை - குற்றவாளியை நிறுத்தறிதல்.
துலாபாரதானம் - ஒருதானம்.
துலாபாரமேறுதல் - தன் நிறைக்குப் பொன்கொடுக்கத் தன்னை நிறுத்தல்.
துலாபுருஷதானம் - துலாபாரதானம்.
துலாபுருஷன் - நிறுக்கப்பட்டவன்.
துலாப்படி - நிறைகோல்.
துலாப்பிரகாரம்-துலாக்கோலின்கயிறு.
துலாமானம் - நிறை.
துலாம் - ஏற்றமரம், ஐந்துவீசைகொண்டநிறை, ஓர்ராசி, நிறைகோல், நூறுபலம்கொண்ட நிறை.
துலாம்பரம் - தெளிவு, விளக்கம்.
துலாவிஷுவம் } துலாராசியிற் சூரியன் வருங்காலம்.
துலாவிடுவம் }
துலி - ஒருமுனி, பெண்ணாமை.
துலிதம் - அசைவு, ஒப்பு, நிறுக்கப்பட்டது.
துலிகி - இலவமரம்.
துலிபலை - இலவு.
துலியாசனம் - செம்முருங்கை.
துலுக்கப்பூ - ஒருவகைப்பூ.
துலுக்கர் - துருக்கர்.
துலுக்காணம் - ஒருதேயம்.
துலுக்காணியம் - துலுக்கராச்சியம்.
துலுக்கிச்சி - துலுக்கப்பெண்.
துலுக்கு - அசைப்பு, ஒருதேசம், ஒரு பாஷை, துலுக்கென்னேவல்.
துலுக்குச்செவ்வந்தி - ஒருசெவ்வந்தி.
துலுக்குதல் - குலுக்கல்.
துலை - ஒப்பு, கனம், துலா, துலாராசி, துலையென்னேவல், தூரம், நிறை, நீரிறைக்குந்துலை, நூறுபலம், மடைமுகம்.
துலைக்கிடுதல் - தூரப்படுதல்.
துலைதல் - தொலைதல்.

துலைத்தல் - தொலைத்தல்.
துலைப்பள்ளம் }
துலைமுகம் } துலைக்கிடங்கு.
துலைவாய் }
துலோபம் - கருஞ்சண்டி.
துல்லபம் - அருமை, எட்டாதது, மேன்மை.
துல்லம் - பேரொலி.
துல்லிபம் } மேன்மை.
துல்லிமை }
துல்லியப்பக்கம் - ஒத்தபக்கம்.
துல்லியபலம் - சரிபலம்.
துல்லியபானம் - பலரொன்றிக்குடித்தல்.
துல்லியம் - அப்பிரகம், உவமை, ஒருமிப்பு, சுத்தம்.
துல்லியரூபம் - ஒரேமாதிரி.
துல்லியவிருத்தி - ஒத்ததொழில்.
துல்லியயோகிதாலங்காரம் - ஒப்புமைக்கூட்டவணி.
துவக்கம் - ஆரம்பம்.
துவக்கல் - கட்டல், தொடங்கல்.
துவக்சவிவரம் - செவ்வலரிசி.
துவக்கு - உடல், கட்டு, சங்கிலி, சம்பந்தம், துப்பாக்கி, துவக்கென்னேவல், தோல், பிணக்கு.
துவக்குதல் - துவக்கல்.
துவங்கல் - தொடங்குதல்.
துவங்கிசம் - சேதம், நட்டம்.
துவங்குதல் - துவங்கல்.
துவசங்கட்டுதல் - கொடிகட்டுதல், முயற்சியாய் நிற்றல்.
துவசப்பிரகரணம் - காற்று.
துவசம்-அடையாளம், கொடி, விருதுக்கொடி.
துவசர்-கள்விற்போர், சாணார்.
துவசல் - தொடிசு.
துவசாரோகணம் - கொடியேற்றம்.
துவட்சி - அசைவு, பலவீனம், வறட்சி.
துவட்சிகை - கடுப்பிஞ்சு.
துவட்டர் - கம்மாளர், தச்சர்.
துவட்டல் துடைத்தல், துவட்டற்கறி, துவட்டுதல்.
துவட்டன் - துவாதசாதித்தரில் ஒருவன்.
துவஷ்டா } விச்சுவகன்மா.
துவட்டா }
துவட்டாநாள் - சித்திரைநாள்.
துவட்டு-துவட்டென்னேவல்,துவள்வு.
துவட்டுதல்-செறிவித்தல், துடைத்தல், துவளச்செய்தல்.

துவணீர் - துவண்டநீர்.
துவண்டை - காஷாயப்புடைவை.
துவத்தம் - விழுதல்.
துவந்தம் - இரட்டித்தது, இரண்டு, ஒன்றைத்தொடர்ந்தது, தொந்தம், நெருக்கம்.
துவந்யுத்தம் - விடாதபோர். [தடை.
துவந்தனை-அலைவு,இரட்டித்திருப்பது,
துவந்தித்தல் - ஒன்றற்கொன்று தொடர்ந்திருத்தல், தொந்தித்தல்.
துவந்துவசரம் } சக்கிரவாகம்.
துவந்துவசாரி }
துவந்துவம்-இரண்டு, ஒன்றற்கொன்று தொடர்ந்திருப்பது,சோடு,புணர்ச்சி, வாது.
துவம் - அசையாநிலை, இரண்டு, சத்து
துவயம் - இரண்டு. [வம்.
துவயாதிகன் - பரிசுத்தன்.
துவயார்த்தம் - உபயார்த்தம்.
துவரம் - துவர்ப்பு.
துவரி - காஷாயம்.
துவரை - ஒருபயறு, துவாரகை.
துவரைக்கோமான் - இடைச்சங்கப்புலவருள் ஒருவர்.
துவரைமல்லி - புஷ்பராகத்தரிப்பு.
துவர் - சிவப்பு, துவரென்னேவல், துவர்ப்பு, பகை, பவளம், விறகு.
துவர்க்கட்டி - காய்ச்சுக்கட்டி.
துவர்க்காய் - பாக்கு.
துவர்ச்சிகை - கடுக்காய்ப்பிஞ்சு.
துவர்தல்-தியிர்தல், தெளிதல், பிரிதல்.
துவர்த்தல் - துவர்ப்புக்கொள்ளுதல், பூசுதல்.
துவர்ப்பு-அறுசுவையிலொன்று, பத்து.
துவலல் } தீவிரித்தல், துளிவிடுதல்.
துவலுதல் }
துவலை - துளி, மழை, மழைத்தூவல்.
துவல் - சீக்கிரம், துவலென்னேவல்.
துவளல் } அசைதல், ஒசிதல், ஒட்டுதல், காய்தல், வளைதல், வாடல்.
துவளுதல் }
துவள்தல் }
துவள்வு - துவட்சி.
துவறல் - துவலைவிடுதல், விரைவு.
துவனம் - அக்கினி.
துவனி - ஒலி, துவண்டிருப்பது.
துவனிகிரகம் - காது, சேவி.
துவனை - தொனித்தல்.

துவன் - வட்டத்திருப்பி.
துவன்றல் - சாதல், நிறைதல், நெருங்கல், பொலிவு.
துவா - இரண்டு.
துவாட்சரி - இருவருக்கவெழுத்தான் முடியுமோர்கவி.
துவாதசகரன் - குமரன், வியாழம்.
துவாதசம் - பன்னிரண்டு.
துவாதசவிலோசனன் - குமரன்.
துவாதசாங்கிசம் - இராசியைப் பன்னிரண்டாய்ப் பகிர்தல்.
துவாதசாதித்தர்-பன்னிருசூரியர்,அவர் தாத்திரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவாச்சுவரன், பூடன், சவித்திரு, துவட்டன், இவர் மேடமுதல் மீனமீறாய விராசியில் அவ்வம்மாதத்திற் புகுந்த சூரியனுக்கு முறையே செல்வர்.
துவாதசாந்தஸ்தலம் - மதுரை.
துவாதசாந்தம் } பன்னிரண்டாமவத்தை.
துவாதசாந்திரம் }
துவாதசாவத்தை - உயிர்வேதனை பன்
துவாதசான்மா - சூரியன். [னிரண்டு.
துவாதசி - பன்னிரண்டாந்திதி.
துவாஸ்தன் }
துவாஸ்திதகன் } துவாரபாலன்.
துவாஸ்திதன் }
துவாந்தம்-இருள்,நரகம்,வினையெச்சம்.
துவாந்தாராதி - சூரியன்.
துவாபரம் - மூன்றாம்யுகம்.
துவாப்புலு - இருபது.
துவாரகண்டகம் - கதவு.
துவாரதம் - நிவரம், துவாரகை.
துவாரகாபுரி - துவாரகை.
துவாரகேசன் - விட்டுணு.
துவாரகை - ஒருபட்டினம், சத்தபுரியி
துவாரசாகை - சிறுகதவு. [லொன்று.
துவாரத்தம்பம் - கதவுநிலை.
துவாரபாலகன் - கடைகாப்போன்.
துவாரபிண்டி - வாசற்படி.
துவாரம் - துளை, வழி, வாயில்.
துவாரயந்திரம் - பூட்டு.
துவாரவதி } துவாரகை.
துவாராவதி }
துவாரிகன் - துவாரபாலகன்.
துவாரிகை - துவாரவதி.

துவாலே-உதிரப்பெருக்கு.நீட்டு, பூச்சு, பூச்சுமருந்து.
துவாலேயிடுதல் - பூசுதல்.
துவாளிப்பு - குடைவு.
துவானம் - ஒலி.
துவி - இரண்டு.
துவிகபா - வட்டத்திருப்பி.
துவிகன்மக்கத்துருப்பிரயோகம் - செயப்படு பொருளிரண்டுடை வினைமுதலின் முடிபு.
துவிகன்மக்கன்மணிப்பிரயோகம் - செயப்படு பொருளிரண்டைச் செயப்படுபொருளின் முடிபு.
துவிகாபா - வட்டத்திருப்பி.
துவிகாயாசின் - செம்முருக்கை.
துவிகிருத்தியை - கருப்பிணி.
துவிசபதி - சந்திரன்.
துவிசபம் - கவைக்குளம்புள்ளது.
துவிசம் - பல், முட்டையிற்பிறப்பன.
துவிசராசகுலோத்துங்கன் - இராஜசார்த்தூல பாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
துவிசவிரணம் - பற்கொதி.
துவிசன்-பிராமணன்,இருபிறப்பாளன்
துவிசாதி - பிராமணர்,முட்டையிற்பிறப்பன.
துவிசாயணி - பூணூல்.
துவிசாரகன் - அனந்தன், கருடன், சந்திரன்.
துவிசாலயம் - பிராமணவீதி, மரப்பொந்து.
துவிசிருவன் - கள்வன், கோட்சொற்காரன், பாம்பு.
துவிசோத்தமன் - பிராமணன்.
துவிஷ்டம் - பித்தளை.
துவிதகேந்திரம் - கால்வட்டத்திற் குறைவாயிருப்பது.
துவிதசம் - இருபது.
துவிதபாவனை - இரண்டாய்ப் பாவிப்பது.
துவிதம்-அசைவு,இரண்டு,இருமடக்கு.
துவிதயம் - சோடு.
துவிதவாதம் - சிவனுஞ்சீவனும்வேறெனக் கொள்ளுஞ்சமயம்.
துவிதவாதி - சிவனுஞ்சீவனும் வேறெனக் கொள்ளுஞ்சமயி.
துவிதன் - பிரமமானஸபுத்திரருளொருவன்.
துவிதாகதி - நண்டு.
துவிதாகதி - முதலை.
துவிதாது - விநாயகன்.
துவிதாத்துமகம் - சாதிக்காய்.
துவிதியகேந்திரம்-துவிதகேந்திரம்.
துவிதியம் - இரண்டாவது, இரண்டு.
துவிதியை - கோரோஜனம்.
துவிதீயன் - புத்திரன்.
துவிதேகன் - விநாயகன்.
துவிபடி - துப்பட்டி.
துவிபமதம் - யானைமதம்.
துவிபம் - யானை.
துவிபாதசெந்து - இருகாலுள்ளது.
துவிபுடம் - கடலை.
துவிபுத்திரு தண்ணீர்விட்டான்.
துவிமீடன் - ஹஸ்திகன் இரண்டாம் புத்திரன், இவன் வமிசத்தார் பௌரவர் எனப்படுவர்.
துவிமுகம் - துவிபம்.
துவிமுகாகி - இருதலைப்பாம்பு.
துவிமுனை - நீர்ச்சாடி.
துவிமூர்த்தநன் - தநுபுத்திரருளொருவன்.
துவிரசனம் இரண்டுமுறைசாப்பிடுதல், பாம்பு.
துவிரதம் - யானை.
துவிரதாந்தகம் - சிங்கம்.
துவிரம் - தேனீ.
துவிராபம் - யானை.
துவிருடை - இரண்டுதாரமுள்ளவன்.
துவிருத்தி - இரண்டுபடச் சொல்லல், கூறியது கூறல்.
துவிரேபம் - மிருகம், வண்டு.
துவிரேபாரி - சண்பகமரம்.
துவிலிங்கி - சத்திரியன்.
துவிவசனம் - இருவசனமிணைந்தது.
துவிவிதன் - மயிந்தன் சகோதரனாகிய ஒரு வாநரன், இவன் நரகாசுரன் சிநேகன், நரகாசுரனைக் கிருஷ்ணன் கொன்ற கோபத்தால் அந்தக்கிருஷ்ணனது நகரத்தில்இவ்வாநரன்சென்று அழிவுசெய்தபோது பலராமனால் கொல்லப்பட்டவன்.
துவிவிதாரி - விட்டுணு.
துவிவேசரை - ஒருவிதபண்டி.
துவீபசித்திரம் - சிறுத்தைப்புலி.
துவீபம் - தீவு, புலித்தோல்.
துவீபவதி - ஒருநதி, பூமி.
துவேசம்
துவேஷம் } பகை, வெறுப்பு.

துவேசித்தல்
துவேஷித்தல் } வெறுத்தல்.
துவை - இறைச்சி, ஒலி, துவையென்னேவல், துளசி, பருகுதற்குரியனை, பிண்ணாக்கு, புளிங்கறி.
துவைதம் - துவிதம்.
துவைதல் - துவைக்கப்படுதல்.
துவைநிகரணம் - கூறுசெய்தல்.
துவைத்தல் - ஒலித்தல், துவைக்குதல், தோய்க்குதல், பானம் பண்ணுதல். பேரொலி, வாச்சியம், வாசித்தல், விடுதல்.
துவைபாயனன் - வியாசன்.
துவைப்பு - இடித்தல், ஒலித்தல், துவைக்குதல், துவையல்.
துவைமாதுரன் - விநாயகன்.
துவையல் - ஒருபச்சடி, சுண்டாங்கி, துவைக்கப்பட்டவை.
துவ்வல் . அனுபவித்தல், புசித்தல்.
துவ்வாதார்
துவ்வார் } தரித்திரர்.
துவ்வாமை - அநநுபவம், தரித்திரம், பொருமை, வெறுப்பு.
துவ்வு - அனுபவம், உணவு, ஐம்பொறி நுகர்ச்சி, துவ்வென்னேவல்.
துழத்தல் - அளைதல், கலத்தல்.
துழவை - துழாவுதல்.
துழவை - துழாவியட்டகூழ், துளவை, மூங்கிற்பற்றை.
துழனி - ஒலி, பறவைக்கூட்டத்தொலி.
துழா - துழாவுதல், துழாவென்னேவல்.
துழாய் - துளசி.
துழாய்மௌலி - விட்டுணு.
துழாய்வணம் - துழாய்.
துழாவல் - ஆராய்தல், கலத்தல், பரவுதல், வெட்டல்.
துழாவாரம் - ஊர்ப்பேச்சுப்பேசுகை.
துழாவு - துழாவுதல், துழாவென்னேவல்.
துழாவுதல் - துழாவல்.
துளக்கம் - அசைவு, அச்சம், ஒலி, ஒளி, கலக்கம், சோதிநாள்.
துளக்கல் - அசைத்தல், ஒளிசெய்தல்.
துளக்கு - அசைவு, துளக்கென்னேவல்.
துளக்குதல் - துளக்கல்.
துளங்கல் - அசைதல், அச்சப்படுதல், ஒளிசெய்தல், கலங்கல்.
துளங்கொளி - கேட்டைநாள், மிக்கவொளி.
துளசி - ஒருபூச்செடி, ஒருபெண்.
துளசிதாசர் - பக்தலீலாம்ருதத்திற் சொல்லப்பட்ட ஒரு விஷ்ணுபக்தர்.
துளசிதீர்த்தம் - துளசிபத்திரநீர்.
துளசிமணி - ஒருமணி.
துளசிமாடம் - துளசிமண்டபம்.
துளசிமாலை - துளசிமணிமாலை.
துளபம் - துளசி.
துளம்பிச்சிரி - ஆதொண்டை, காற்றோட்டி.
துளர் - களைக்கொட்டு.
துளவம் - துளசி.
துளவன் - சோரபாஷாணம், திருமால்.
துளவி - திப்பிலி.
துளவு - துளவம்.
துளவை - துளை, மூங்கிற்பற்றை.
துளாரி - நெய்வார்கருவியில் ஒன்று.
துளாவாரம் - தொளாவாரம்.
துளி - திவலை, துளியென்னேவல், பெண்ணாமை, மழை, மழைத்துளி.
துளித்தல் - துளியாய்விழுதல், மழைபெய்தல்.
துளிப்பு - துளித்தல்.
துளிமழை - திவலையாய்ச்சொரியுமழை.
துளிர் - தளிர், துளிரென்னேவல்.
துளிர்த்தல் - செழித்தல், தளிர்த்தல்.
துளிர்ப்பு - தளிர்ப்பு.
துளும்பல் - அலைதல், எழும்பல், ஒளிசெய்தல், திமிர்தல், திமிறல், துள்ளுதல்.
துளுவம் - தேயமைம்பத்தாறில்ஒன்று, பதினெண்பாஷையில் ஒன்று.
துளை - துவாரம், துளையென்னேவல், மூங்கில், வாயில்.
துளைக்கருவி - சின்னமுதலிய துளையுடை வாத்தியம்.
துளைக்கை - யானைத்துதிக்கை.
துளைச்செவி - உட்செவி, துளைக்காது.
துளைதல் - அனுபவித்தல், கலத்தல், சுளியோடுதல்.
துளைத்தல் - துளைக்குதல்.
துளைப்பு - துளைக்கை.
துளையடித்தல் - துளைத்தல்.
துளையரியம் - ஊதுகொம்பு.
துள்ளம் - துளி, துள்ளு.
துள்ளலோசை - கலிப்பாவினோசை.
துள்ளல் - ஆடு, கலிப்பாவினோசை, குதித்தல், கூத்து, கொசுகு, விரைந்து பாடுமிசை.
துள்ளாட்டம் - துள்ளு.

துள்ளி - திவலை.
துள்ளு - குதிப்பு, துள்ளென்னேவல்.
துள்ளுதல் - குதித்தல்.
துள்ளுப்பூச்சி - தெள்கு.
துறக்கம் - தேவலோகம்.
துறடு } யானைத்தோட்டி.
துறட்டு }
துறட்டிச்செடி - ஒருமுட்செடி.
துறட்டு - சுறட்டு, தொரந்தரை.
துறட்டுத்தடி - கொழுவுதடி.
துறட்டுவாதம் - பிடிவாதம். [தல்.
துறத்தல் - துறவு, நீக்கல், வெறுத்திவிடு
துறந்தார் } நீத்தோர், துறவிகள்.
துறந்தோர் }
துறப்பணம் - துளைக்குழுசி.
துறப்பு - துறவு, துறவுகோல்.
துறவர் - முனிவர்.
துறவறம் - இல்லறந்துறத்தல் அது நாலாச்சிரமத்தொன்று.
துறவி - நீத்தோன், முனிவன்.
துறவு - இல்லறநீங்கி நிற்றல், விடுதல்.
துறவுபூணுதல் - துறவறத்துட்படல்.
துறவொழுக்கம் - சந்நியாசதருமம்.
துறவோர் - நீத்தோர்.
துறவோருரைக்குஞ்செயல் - புராணமோதல்.
துறு - உணவு, கூட்டம், செம்பூரான், துறுவென்னேவல், நெருக்கம்.
துறுகல் - சலதாரை முதலிய வடைக்குங்கல்.
துறுக்கல் - திணித்தல், துருக்கல்.
துறுக்குதல் - செறுமுதல்.
துறுட்டி - சிற்றேலம்.
துறுதல் - நெருங்குதல், புசித்தல்.
துறுத்தல் - நெருக்குதல்.
துறுபவம் - நெருக்கம்.
துறுப்பு - திணிக்கை.
துறுமல் } நிரட்சி, நெருங்கல்.
துறுமுதல் }
துறுவல் - நெருங்கல், புசித்தல்.
துறுவு - உணவு, துறுவென்னேவல், நெருக்கம்.
துறுவுதல் - உண்ணல், நெருங்குதல்.
துறை - ஆறு, இடம், இறங்குதுறை, எல்லை, கலித்துறை, காரியம், தங்குமிடம், நீர்த்துறை, நூல், பாவினத்தொன்று, வழி.

துறைத்தோணி - துறையிலேற்றற்குரியதோணி.
துறைநியாயம் - அகப்பொருள் புறப்பொருட்டுறை மரபு.
துறைபிடித்தல் - உபாயந்தேடல்.
துறைபெயர்தல் - துறைமுகத்தைவிட்டுப்போதல்.
துறைபெய்தல் - நதியாடுவித்தல்.
துறைபோகுதல் } நூல்கற்றறிதல், முடிவறிதல்.
துறைபோதல் }
துறைப்பேச்சு - சொந்தப்பேச்சு.
துறைமாலை - பகைத்திறச் செய்கைக்குரியமாலை.
துறைமுகம் - ஏற்றமிறக்கஞ்செய்யுந்
துறைவல்லோர் - கற்றோர். [துறை.
துறைவன் - நெய்தனிலத்தலைவன்.
துறோட்டி - தோட்டி.
துற்கதம் - உபத்திரவம், வறுமை.
துற்கதி - ஒடுங்கியபாதை, தரித்திரம், துற்சிவியம், நரகம்.
துற்கந்தம் - கெட்டவாசனை.
துற்புரம் - துருக்கபுரம்.
துற்கமார்க்கம் - துருக்கபாதை.
துற்கம் - துருக்கம்.
துற்கருமம் - தீவினை, பாவம்.
துற்கன் - துருக்கன்.
துற்கன்மம் - துற்கருமம்.
துற்காதேவி - துருக்கை.
துற்காநவமி - புரட்டாசிமாதப் பூருவபக்கத்துநவமி.
துற்கிருதகருமம் - ஆகாமியம்.
துற்கிருதம் - பாவம்.
துற்கீர்த்தி - அவகீர்த்தி.
துர்க்குணம் - தீக்குணம்.
துற்குறி - அவக்குறி.
துற்கை - துற்காதேவி.
துற்சகுனம் - துர்க்குறி.
துற்சரிதம் - தீத்தொழில்.
துற்சனம் - துட்சணம், துராசாரம், பொல்லாங்கு.
துற்சனவியோகம் - துன்னடை.
துற்சனன் - துட்டன், தூர்த்தன்.
துற்சாதம் - அநிட்டவீனம், துற்பிறப்பு.
துற்செய்கை - அவச்செய்கை.
துற்பகை - குணங்கெட்டமனைவி.
துற்பரிகம் - சிறுகாஞ்சொறி.
துற்பலம் - பலவீனம்.

துற்பலன் - தீங்கு, மத்திமபலன்.
துற்பாக்கியம் - நிற்பந்தம்.
துற்பிட்சம் - பஞ்சம்.
துற்பீசம் - நல்விதியற்றபிள்ளை.
துற்புத்தி - பொல்லாதபுத்தி.
துற்போதனை - தீயுபதேசம்.
துற்றல் - உண்டல், குவிதல், நிறைதல், நெருங்கல்.
துற்று - உணவு, சோறு, துறுகல், துற்றென்னேவல், நெருக்கம்.
துற்றுதல் - குவிதல், துறுத்தல், நிறைதல், நெருக்கல், நெருங்குதல்.
துற்றுமாற்று - கிரியாவரம்.
துறைவி - திப்பிலி.
துனி - அச்சம், கோபம், சினம், துன்பம், நோய், புலவிநீட்டம், யாறு, வெறுப்பு.
துனிநாதம் - கடல்.
துனை, துனைவு - விரைவு.
துன் - தூர், துன்னென்னேவல், நெருக்கம்.
துன்பிலி - கடவுள்.
துன்பம் - உபத்திரவம், கிலேசம், நோய், வருத்தம்.
துன்பு - துன்பம்.
துன்புறுதல் - வருந்துதல்.
துன்மதி - அவமதி, ஐம்பத்தைந்தாவதாண்டு.
துன்மரணம் - அவச்சா.
துன்மனம் - தீமனம், அகாலமரணம்.
துன்மாதிரி - துற்பாவனை.
துன்மாமிசம் - ஊழ்த்தவிறைச்சி, ஒருநோய்.
துன்மார்க்கம் - தப்புவழி.
துன்மித்தல் - வருந்துதல்.
துன்முகன் - குதிரை, சிங்கன்.
துன்முகி அரக்கி, முப்பதாவதவருடம்.
துன்மை - தின்மை.
துன்றல், துன்றுதல் - நெருங்கல்.
துன்னகாரர் - தையற்காரர்.
துன்னகாயகன் - தையற்காரன்.
துன்னபோத்து - எருமைக்கடா.
துன்னம் - கிழிவு, தைத்தல், தையல்.
துன்னர் - சக்கிலியர், செம்மார், தையற்காரர், தோல்வினைமாக்கள்.
துன்னலர் - பகைவர்.
துன்னல் - கிட்டல், தைத்தல், நெருக்கல்.
துன்னவாயன் - தையற்காரன்.
துன்னாதார், துன்னார் - பகைவர்.
துன்னிமித்தம் - துற்சகுனம்.
துன்னியார் - அடுத்தோர், சிநேகிதர்.
துன்னீதி - துன்னடை, அநீதி.
துன்னீர் - எச்சில்.
துன்னு - இறைச்சி, துன்னென்னேவல், நெருக்கம், பிதக்கம், முதுகு.
துன்னுதல் - கிட்டுதல், தைத்தல், நிறைதல், நெருங்குதல், பிதுங்கல்.
துன்னுநர் - அடுத்தோர், சிநேகிதர், துன்னர்.
துன்னூசி - தையலூசி.
துன்னெறி - கெட்டநடை.

தூ

தூ - ஒரெழுத்து, சி, சுத்தம், தசை, தூவென்னேவல், பகை, பற்றுக்கோடு, புள்ளிறகு, வெண்மை.
தூசம் - காற்று.
தூக்கணங்குருவி - ஒருகுருவி.
தூக்கணம் - உறி, தூக்கணங்குருவி, தொங்கல்.
தூக்கணாங்குருவி - தூக்கணங்குருவி.
தூக்கம் - அயர்ச்சி, ஆபரணத்தொடக்கு, காதணி, சல்லியம், சோம்பு, தணிவு, தூக்கணம், நித்திரை, மந்தம், வடிவு, வதக்கம், வாட்டம்.
தூக்கம் - தூக்குதல்.
தூக்கி - தூக்குவோன்.
தூக்கிரி - காவலான்.
தூக்கிரிமேரை - காவலுக்குக் கொடுக்குந் தானியம்.
தூக்கு - ஆசாரியன், ஆராய்வு, உயர்ச்சி, உவமைச்சொல், உறி, கனம், காற்றலாம், கூத்து, துலாராசி, தூக்கல், தூக்கணங்குருவி, தூக்கணம், தூக்குதல், தூக்கென்னேவல், நிறை, நிறைகோல், பாட்டு.
தூக்குக்கோல் - நிறைகோல்.
தூக்குணி - தழுக்குணி.
தூக்குதல் - ஆராய்தல், உதவிசெய்தல், உயர்த்துதல், சிந்தித்தல், தூங்கவைத்தல், நிறுக்குதல்.
தூக்குநூல் - நேரறிகயிறு.

தூக்குப்பரிசை - செந்தூக்கு.
தூக்குமரம் - கொல்வோரைத் தூக்கு மரம்.
தூக்குவிளக்கு - கொடிவிளக்கு.
தூங்கணம் - தூக்கணங்குருவி, தூக்கு.
தூங்கணி - ஓராபரணம்.
தூங்கமுட்டு - கோரைக்கிழங்கு.
தூங்கலன் - சோம்பன்.
தூங்கலாளி - தூங்குமூஞ்சி.
தூங்கலோசை - வஞ்சிப்பாவினோசை.
தூங்கல் - ஆடல், உறங்கல், ஓரோசை, கூத்து, சொரிதல், சோம்பல், சோம்பி, தணிதல், தாழ்தல், யானை, [வது.
தூங்கல்வண்ணம் - வஞ்சிபயின்றுவரு
தூங்காமை - அரசர்குணமூன்றினொன் று; அது சோர்வில்லாமை.
தூங்கானைமாடம் - ஒரு சிவஸ்தலம்.
தூங்கிசை - கிரையொன்றாசிரியத்தளை யான் வருவது.
தூங்கிசைச்செப்பல் - இயற்சீர்வெண் டளையான் வரும் வெண்பா.
தூங்கிசைத்துள்ளல் - கலிப்பாவோசை யினொன்று.
தூங்கிசையகவல் - கிரை கிரை யியற்ற ளையான் வருமகவல்.
தூங்குதல் - அசைதல், சொரிதல், சோம் பாயிருத்தல், சோர்தல், நாலுதல், வாடுதல்.
தூங்குமஞ்சம் - ஆடுமஞ்சம்.
தூங்குமூஞ்சி - தூக்கமுள்ளோன்.
தூசரம் - மங்கினவெண்மை.
தூசரன் - எண்ணெய்வாணிபன்.
தூசர் - வண்ணார்.
தூசி - குதிரை, கொடிப்படை, தூசு, படைவகுப்பு, புழுதி.
தூசிகம் - புளியாரை.
தூசிதாங்கு - அழுக்குத்தாங்க உடை யின்மேற்கட்டுந் தண்டுப்புடவை.
தூசிப்படை - கொடிப்படை.
தூசியம் - கூடாரம்.
தூசு - சித்திரைநாள், சீலை, தூய்து, யா னைகட்டுங்கயிறு, படைவகுப்பு, புழுதி.
தூசுதாங்கி - தூசிதாங்கி.
தூசுப்பு - தண்ணீர்விட்டான்.
தூடணம் } அசப்பியம், குற்றம், தூஷணம் } நிந்தனை, பழுதுபடு தல், மீறுதல்.

தூஷணன் - இராவணன் தம்பிமாரில் ஒருவன்.
தூஷணாரி - இராமன்.
தூஷணித்தல் - நிந்தித்தல்.
தூஷனை - நிந்தனை.
தூஷிகை - பீளை.
தூஷித்தல் - திட்டாக்கல்.
தூஷிப்பு - தூஷணம்.
தூட்டி - சீலை.
தூட்டிகம் - தும்பை.
தூணம் - அம்புக்கூடு, தூக்கணம், தூண், பகை.
தூணி - அம்புக்கூடு, நாலுமரக்காலளவு.
தூணிகர் - செட்டிகள்.
தூணித்தல் - பருத்தல்.
தூணிப்பு - பருப்பம்.
தூணியங்கம் - அத்திப்பிசின்.
தூணீரம் - அம்புக்கூடு.
தூண் - தம்பம், பற்றுக்கோடு.
தூண்டல் - தூண்டில், தூண்டுதல். [க்கு.
தூண்டாவிளக்கு - தானேயெரியும்விள
தூண்டிக்காட்டல் - எடுத்துக்காட்டல்.
தூண்டில் - தோட்டி, மீன்பிடிக்குங் கருவியி னொன்று.
தூண்டிவிடுதல் - உந்துதல், ஏவுதல்.
தூண்டு - தூண்டுதல், தூண்டென்னே வல், முபற்சி.
தூண்டுகுச்சி - தூண்டுகோல்.
தூண்டுகோல் - ஏவிவிடுவான், திரிதூண் டு மீர்க்கு.
தூண்டுதல் - எழுப்பல், ஏவுதல், செலுத் துதல், தள்ளுதல், திரிப்பூட்டுதல்.
தூதகம் - தூசி.
தூதம் - அசைவு, நிந்தை, தள்ளப்பட் டது.
தூதர் - ஒற்றர், கிங்கரர், சமாதானம் பேசுவோர்.
தூதல் - தாவுதல்.
தூதளை - தூதுவளை.
தூதனம் - மூங்கில்.
தூதன் - தூதுசெல்வோன், புதன்.
தூதாயி - ஒருவிதப்பூண்டு.
தூதிகை - தூதி.
தூது - ஒருபிரபந்தம்; அது காமுகர் பா ணன் முதலிய வுயர்திணையையாவது கிள்ளை முதலிய அஃறிணையையாவ து தூதனுப்புவதாகப் பாடுவது,

காரியம்பேசியிணக்குமாள், கோடாங்கல், சம்மதிபண்ணக் காரியம் பேசுவித்தல், செய்தி, பகை.
தூதனம் } தூதணி } பொது,தூக்குணங்குருவி.
தூதுணை } தூதுவளை } ஒருசெடி.
தூதுவன் - தூதன். புதன்.
தூதுளை } தூதுவளை } தூதுவளை.
தூதை - சிறுமுட்டி, சூதாடுபந்தயம்.
தூஸ்தம் - அணு, தூசு, பாவம், பின்னல், மயிர்.
தூத்தியம் - செய்தி.
தூத்திராக்கூர்ச்சம் - ஆண்தருப்பை.
தூந்துதிருப்பிடித்தல் - நட்ப ஆராய்ச்சிசெய்தல்.
தூபக்கலசம் - தூபங்காட்டுங்கலசம்.
தூபக்கால் - ஒரு தூபக்கருவி.
தூபங்கொடுத்தல் - தூபங்காட்டுதல் அது புண்ணிய மொன்பதினொன்று.
தூபமுட்டி - தூபக்கலசம்.
தூபம் - புகை.
தூபரதண்டி - ஊதாரி.
தூபரம் - கொம்பில்லாமிருகம்.
தூபவருக்சம் - நறும்புகைப் பாண்டம்.
தூபனம் - தூபம், பிசின்.
தூபாயிதம் - அக்கினியில் மரணம்.
தூபி - மலைமுடி, முகடு.
தூபிகை - கோவில்முடி, தூமம். [பம்.
தூபிதம் - அக்கினியில் மரணம், வெப்
தூபிப்ரதிட்டை - சிகரத்தாபனம்.
தூமகம்பம் - ஒருற்பாதம்.
தூமகாரம் - சூதபாஷாணம்.
தூமகேதனன - தீ.
தூமகேது - அக்கினி, அக்கினிதேவன், கேதுகொடுமை, வால்நட்சத்திரம், விண்வீழ்கொள்ளி.
தூமத்துவசன் - தீ.
தூமப்பிரபை ஏழ்நரகவட்டத்தொன்று.
தூமம் - சூளை, புகை, புனிகறளை.
தூமம்போக்கி-புகைக்கூடு.
தூமயோனி - முகில்.
தூமலம் - கருமை,மிகச்சிவப்பு, பாவம்.
தூமாகாரம் - புகைவடிவு.
தூமாதிமார்க்கம் - பிதிர்க் கருமங்களைத் தவறுமற் செய்தவர்கள், பிதிர்லோகம் செல்லுமார்க்கம், பிதிரர்பொருட்டு வளர்க்கப்பட்ட அக்கிஹோத்ரத்தின் தூமகாரணம்பற்றி இப்பெயர் உண்டாயிற்று.
தூமான் - ஆசனம், ஆபரணச்செப்பு.
தூமியம் - புகை.
தூமிரகம் - ஒட்டகம்.
தூமிரகேது - தருபுத்திரன்.
தூமிரம் - தூமலம்.
தூமிராபம் - காற்று.
தூமிராக்ஷன் - சுமாலிபுத்திரன், இவன் அநுமனுற் கொல்லப்பட்டவன்.
தூமினை - பிரஜாபதி பாரி, தான் என்னும் வசுவுக்குத் தாய்.
தூமை - தூய்மை, மகளிர்சூதகம், வெண்மை.
தூமோர்ணபதி - யமன். [ண்மை.
தூமோர்ணை - யமன்மனைவி.
தூம் - ஓரளவு.
தூம்பல் - சுரை.
தூம்பா - தும்பை.
தூம்பிரகருப்பம் - துத்தபாஷாணம்.
தூம்பிரம் - தூமிரம்.
தூம்பிராஷ்டகம் - ஒருகுளிகை.
தூம்பு - இடுக்குவழி, ஈயம், உட்டுளை, ஏரிமதகு, சலதாரை, பாதை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.
தூம்பை - பாடை.
தூயது - சுத்தமானது.
தூயவர் - முனிவர்.
தூயவுடம்பினனுதல் - இறைவனெண்குணத்தொன்று.
தூயவுடம்புடைமை - கடவுளெண்குணத்தொன்று.
தூயான் - சரச்சுவதி, சுத்தவாட்டி.
தூய்தன்மை - அசுத்தம்.
தூய்தாக்கல் - சுத்தமாக்குதல், செப்பம் பண்ணல்.
தூய்து } தூய்மை } சுத்தம்.
தூய்வெள்ளை - சுத்தவெள்ளை.
தூரகாரி - வருகாரியமறிவோன்.
தூரகாரியம் - காரியமொருவழியுங் காரணமொருவழியுமாய் நிகழ்வது.
தூரகுலை - ஒருகுலை.
தூரணம் - சீக்கிரம்.
தூரணி - தீவிரம்,மலம், மனம். [யான்.
தூரதரிசி - தீர்க்கதரிசி,பண்டிதன்,வலி

தூரதிட்டி
தூரதிருஷ்டி } அஞ்சன பாஷாணம், தீர்க்கதரிசி, தூலப்பார்வை, முன்னுணர்ச்சி.

தூரதிட்டிக்கண்ணாடி - தூரத்திற் பொருளைக் கிட்டக் காட்டுமோர்கருவி.

தூரதை - தூரம்.

தூரத்தான் - அன்னியன்.

தூரஸ்திரீ - இடக்கரமானபெண்.

தூரம் - இசைக்கருவி, ஊமத்தை, சேய்மை, புறம்பு, விலாசம், வித்தியாசம்.

தூரல் - தூருதல், வருத்தம்.

தூரவத்திரகம் - திருவாணம்.

தூராகு - எலிச்செவிக்கள்ளி.

தூராதூரம் - வெகுதூரம்.

தூரி - ஊசல், ஊரி, எருது, தூரிக்கோல், பலகறை, பெருவலை.

தூரிகை
தூரிகைக்கோல் } எழுதுகோல்.
தூரிக்கோல்

தூரியகண்டம் - ஒரிசைக்கருவி.

தூரியக்கோல் - தூரிகை.

தூரியம் - ஆயுதப்பொது, ஈட்டி, உவகைப்பறை, எருது, எழுதுகோல், கைவேல், நல்லாடை, முரசப்பறை, வாத்தியப்பொது.

தூரியன் - கடவுள், தூரத்திலேயுள்ளவன்.

தூரு - அடி.

தூருதல் - மேவப்படுதல், வெளியடைதல்.

தூருவாசு - வசுதேவன் தம்பியாகிய விருகன்பாரி.

தூரேத்தி - கம்பந்திராய்.

தூரோணம் - கவிழ்தும்பை.

தூர் - சேறு, தூரென்னேவல், மண்டி, வேர்.

தூர்க்கை - பூரநாள்.

தூர்ச்சடி - சிவன்.

தூர்தல் - நிரவுதல்.

தூர்த்தத்தனம் - காமுகத்தன்மை.

தூர்த்தம் - அரப்பொடி, ஊமத்தை, தூர்த்தத்தனம்.

தூர்த்தர் - காமுகர், துட்டர், வஞ்சகர்.

தூர்த்தல் - கூட்டல், செறுத்தல், நிரப்புதல்.

தூர்த்தவியாபாரம் - தா[illegible]கடை.

தூர்த்தன் - காமுகன், வஞ்சகன்.

தூர்த்தை - தூர்த்தக்குணமுள்ளவள்.

தூர்ப்பு - நிரப்புதல்.

தூர்மம் - தேட்கொடுக்கி.

தூர்வம் - மீன்.

தூர்வகம் - சுமத்தல், பொதியெருது.

தூர்வாக்கிரம் - அறுகுநுனி.

தூர்வாசம் - அட்டாதச உபபுராணத்தொன்று.

தூர்வாசன் - ஒருமுனிவன், இவர் அத்திரிமகாரிஷியின் புத்திரர்.

தூர்வு - தூர்ப்பு.

தூர்வை - அறுகு, கிணற்றடைதூர், கிணற்றைச்சார்ந்தநிலம், செத்தல், செய்கையினால் மிருதுபட்டநிலம்.

தூர்ஞ - முசற்புல்.

தூலகம் - பருத்தி.

தூலகாயம் - தூலதேகம்.

தூலகார்முகம் - பஞ்சவட்டந்தடி.

தூலசரீரம் - புறவுடல்.

தூலசர்க்கரை - பருத்திவிரை.

தூலசிருட்டி - காணப்படுபூதியம்.

தூலசேசனம் - நூனூற்றல்.

தூலதனு - ஸ்தூலதேகம்.

தூலதேகம் - தூலசரீரம்.

தூலபஞ்சாக்கரம் - பூதபஞ்சாக்கரம்.

தூலபிசு - பஞ்சு.

தூலபூதம் - காணப்படுபூதியம்.

தூலப்பிரகாரம் - உறுப்புக்கேடு.

தூலம் - ஆகாயம், இலவமரம், கோணா, சிவதேகமூன்றினொன்று, அது தூலதேகம், நஞ்சு, நீர்முள்ளி, பஞ்சு, பருத்தி, பருமை, வீட்டுத்திரம்.

தூலவிருக்கம் - இலவமரம்.

தூலன் - தூளித்தவன்.

தூலாசம் - வில்.

தூலி - எழுதுகோல், பருத்தவள்.

தூலிகை - எழுதுகோல், மெத்தை, விளக்குத்திரி.

தூலித்தல் - பருத்தல், தூளித்தல்.

தூலிபலம் - இலவங்காய்.

தூலிப்பு - தூளிப்பு.

தூலினி - இலவு.

தூலை - பருத்தி.

தூவத்தி - வான்.

தூவரம் - இடபம், துவர்ப்பு, மொட்டை.

தூவரன் - அண்ணகன்.

தூவரிகை - உவர்மண்.

தூவலகன் - மல்லயுத்தத்தில் க்ருஷ்ணனாற் கொல்லப்பட்டவோரசுரன்.

தூவல் - அம்பிறகு, இறகு, எழுதுமிறகு, சிந்தல், தளிர், தூரியக்கோல்,

நீர்த்துளி, மழை, மழைத்துளி, மழைபெய்தல்.
தூவானம் - காற்றினுற் சிதறப்படு மழைத்திவலை.
தூவி - அன்னச்சிறகு, இறகு, மயிற்ருேகை, மீன்சிறகு.
தூவு-ஊண், தூவுதல் தூவென்னேவல்.
தூவுதல் - சிந்துதல், தெளித்தல், மழை [தூறல்.
தூளம்
தூளனம் } தூள்.
தூளி - அனுமானிதம், தூளியென்னேவல், பராகம், புழுதி.
தூளிகுச்சம் - கதம்பப்பொடி.
தூளிகேதாரம் - கொத்தளம்.
தூளிதம் - தூள், விபூதி.
தூளித்தல் - பருத்தல்.
தூளித்துவசம் - காற்று.
தூளிப்படலம் - புழுதிப்போர்ப்பு.
தூளிப்பு - பருப்பம்.
தூளிமட்டம் - தரைமட்டம்.
தூள் - கறித்தூள், சூரணம், புழுதி, பூந்தாது, பொடி.
தூறல் - பழிச்சொல்லல், மழை, மழைத்துளி, மழைபெய்தல்.
தூறவம் - நாவல்.
தூறன் - தூர்த்தன்.
தூறு - கூட்டம், சிலும்பல், சிறுசெடி, சிறுபற்றை, தூறென்னேவல், திராய், பழிச்சொல், பற்றைக்காடு, [மஞ்சள்.
தூறுகுணம் - கடம்பு.
தூறுட்டி - சிற்றேலம்.
தூறுதலை - சிலும்பிய மயிர்த்தலை.
தூறுதல் - கிளைத்தல், சடைபற்றல், சிதறுதல், தூறுபடுதல், கிந்தித்தல், மழைதுமித்தல்.
தூறுபடுதல் - சடைபற்றல், சிதறிப்போதல், பரவுதல், பழமொழிகூறப்படல்.
தூறுபண்ணல் - அவதூறுசெய்தல்.
தூறுபுட்பம் - சிலந்தி, சிந்தில்.
தூறுபேசுதல் - தூற்றுதல், பின்பிதற்றல், பழிசொல்லுதல்.
தூறுமாறு - குழப்பம், தப்பு.
தூறுவாயன் - பழிச்சொற்காரன்.
தூற்றல் - சிதறுதல், தூற்றுதல், பழிகூறல், மழைத்தூறல்.
தூற்ருநெல்
தூற்ருப்பொலி } பதர்பிரியாநெல்.
தூற்ருரி - ஆராதூரி.
தூற்ருரித்தனம் - ஆராதூரித்தனம்.
தூற்று-தூற்றுதல், தூற்றென்னேவல், பழிப்பு.
தூற்றுக்காடு - சிறுதூறு, பற்றை.
தூற்றுக்கூடை - தூற்றங்கூடை.
தூற்றுதலையன் - பிரமம்மரம்.
தூறுவாதி - நிம்பாலை.
தூற்றுதல் - கோட்சொல்லல், சிதறல், சிலும்பச்செய்தல், நென்முதலியவற்றைத் தூற்றுதல், பழிகூறல், வீண்செலவு செய்யல்.
தூற்றுமைக்கொற்ருன்
தூற்றுவாய்க்கொற்ருன் } ஒருகொடி.
தூனம் - அக்கினியில்மரணம், அசைதல், வருத்தம்.
தூவனம் - அகற்றல், அசைதல்.

தெ

தெகிடி - ஒரு விளையாட்டு, புரட்டு.
தெகிட்டு - தெவிட்டு.
தெகிள் - ஒரு கொடி.
தெகுட்டல் - தெவிட்டல்.
தெகுட்டி
தெகுட்டிகை } தேட்கொடுக்கி.
தெகுளம் - நிறைவு, பெருக்கம்.
தெகுளல்
தெகுளுதல் } நிறைதல், பெருகுதல்.
தெக்கணம் - தெற்கு.
தெங்கங்காய் - தேங்காய்.
தெ ங் க ண ம் - தேயமைம்பத்தாறில் ஒன்று.
தெங்ககாடு - குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கு இடையிலிருந்த நாடு.
தெங்கு - சத்தநீவினென்று, தென்னமரம்.
தெசகண்டன்
தெசகந்தரன்
தெசமுகன் } இராவணன்.
தெசம் - தசம்.
தெசலம் - தேமா.
தேசவம் - மா.
தெசனி - பெருங்குரும்பை, மஞ்சள்.

தெட்சகன் - இரட்சிப்பவன், சாமர்த்தியன், தட்சகன். [ஏத்தி.
தெட்சணகயிலாயம் - தென்கயிலை, சீகா
தெட்சணதுருவம் - தென்முனை.
தெட்சணபூமி - தென்பூமி.
தெட்சணம் - தெட்சிணம். [சம்.
தெட்சணாதி - மேருவுக்குத் தென்பாரி
தெட்சணாமூர்த்தி - அகத்தியன், சிவன்.
தெட்சணாவிருத்தம் - வலம்புரிச்சங்கு.
தெட்சணை - காணிக்கை, வலப்பக்கம்.
தெட்சிணம் - தெற்கு, வலப்பக்கம்.
தெட்டத்தெளிய - மிகுதெளிவாய்.
தெட்டல் - அபகரித்தல்
தெட்டு - எத்து, தெட்டென்னேவல், யானைக்கணையம்.
தெட்டுதல் - வஞ்சித்தல்.
தெட்பம் - தெளிவு, முதிர்ச்சி.
தெண் - தெளிவு.
தெண்டம் - அபராதம், வணக்கம்.
தெண்டனை - தண்டனை.
தெண்டன் - வணக்கம், வணங்கல்.
தெண்டி - தண்டி, தெண்டியென்னேவல்.
தெண்டித்தல் - ஒறுத்தல், சிட்சித்தல், பிரயாசப்படல்.
தெண்டிப்பு - கண்டிப்பு, பிரயாசம்.
தெண்டிரை - சமுத்திரம்.
தெண்டு - தண்டு.
தெண்டுதல் - மிண்டுதல்.
தெண்ணடை - நெருக்கிடை.
தெண்ணீர் - தெளிநீர்.
தெண்மை - சாமர்த்தியம், தெளிவு.
தெத்தம் - தத்தம்.
தெத்து - தெற்று.
தெத்துமாற்று - அத்துமாற்று.
தெத்துவம் - கொடுத்தல்.
தெந்தனு - தானக்குறிப்பு.
தெந்தி - நேர்வானம்.
தெப்பம் } புணை.
தெப்பல் }
தெம்பல் - சேறு.
தெம்பாங்கு - ஒருவகைச்சந்தம்.
தெம்மாடி - அறிவிலான்.
தெம்முனை - இரணகளம், பகைமுகம்.
தெய்ய - இடைச்சொல் (உ-ம்) சொல்லென்றெய்ய). [வோன்.
தெய்வகட்டாடி - ஆவேசங்கொண்டாடு

தெய்வகலை - தெய்வமயம், தெய்வவிள
தெய்வகாரியம் - தெய்வகருமம். [க்கம்.
தெய்வகாவல் - தேவதுணை.
தெய்வசகாயம் - தேவவுதவி.
தெய்வசாட்சி - தெய்வமத்திட்சம்.
தெய்வசாயல் - தேவலோகம்.
தெய்வசிந்தனை } தெய்வதியானம்.
தெய்வசிந்தை }
தெய்வசுரபி - காமதேனு.
தெய்வசோதனை - தேவபரிசோதனை.
தெய்வச்செயல் - தெய்வத்தின்செய்
தெய்வதம் - தெய்வம். [கை.
தெய்வதயானை - தெய்வயானை.
தெய்வதுணை - தெய்வவுதவி.
தெய்வதூஷணம் - தேவதூஷணம்.
தெய்வத்தாபனம் - தேவப்பிரதிட்டை.
தெய்வத்தீர்வை - தேவதீர்ப்பு.
தெய்வத்துதி - கடவுள் வாழ்த்து.
தெய்வத்துரோகம் - தெய்வபாதகம்.
தெய்வத்துவம் - தெய்வீகம்.
தெய்வநிந்தை - தெய்வதூஷணம்.
தெய்வநியமம் - தெய்வத்தீர்ப்பு, தெய்வம் நியமித்தது.
தெய்வபயம் - தெய்வபக்தி, தெய்வவச்
தெய்வபூசை - தேவாராதனை. [சம்.
தெய்வபோகம் - தேவானுபவம்.
தெய்வப்பசு - காமதேனு.
தெய்வப்புலமை - சரசுவதிவாக்கு, தெய்வீகவுணர்ச்சியுடன்படுதல்.
தெய்வப்பெயர்த்தொகுதி - நிகண்டில் ஒருபாகம்.
தெய்வமணம் - திவ்வியமணம், வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது.
தெய்வமத்தியட்சம் - தேவநடுத்தீர்வை.
தெய்வமந்திரி - வியாழன்.
தெய்வம் - ஊழ், எண்வகை மணத்தினொன்று, ஐவகை யாகத்தொன்று, கடவுள், வருடம்.
தெய்வயாகம் - பஞ்சமாவெச்சத்தொன்று அது ஓமம் வளர்த்தல்.
தெய்வயானை - குமரன்தேவி.
தெய்வயானைகாந்தன் - குமரன்.
தெய்வவிரதன் - வீடுமாசாரி. [கோலம்.
தெய்வவுத்தி - சிதேவியென்னுந் தலைச்
தெய்வாதீனம் - தெய்வசுதந்திரம், தெய்வத்திற்கடங்கியது.

தெய்வாராதனை - தெய்வவழிபாடு.
தெய்வாவி - பரிசுத்தாவி.
தெய்விகம் / தெய்வீகம் } தெய்வத்தன்மை.
தெய்வேத்தனம் - தெய்வச்செயல்.
தெய்வோபாசனை - தேவவழிபாடு.
தெரிகடை - நிரக்கழிகடை.
தெரிகவி - பலகவியுட் டெரிந்தெடுக்குங்கவி.
தெரிசனம் - தரிசனம்.
தெரிசித்தல் - தரிசித்தல்.
தெரிசியம் - காட்சி.
தெரிசொல் - அருமொழிவிளக்கம், காரணம், சத்தியம்.
தெரிதரல் - அறிதல், தோற்றுதல்.
தெரிதருதேற்றவுவமை-ஐயுற்றதனைத் தெரிந்துதுணிவது, (உ-ம்) கறைவிரவிரவாததனால் மதியன்று முகமே.
தெரிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசித்தல், காணல், தெரிந்துகொள்ளுதல்.
தெரித்தல்-எழுதல்,கொழித்தல்,சொல்லல், தெரிவித்தல், பங்கிடுதல், மாறுபடுதல்.
தெரிநிலை - விளங்கிநிற்பது.
தெரிநிலைவினை - கருத்தாகாலம் கிரியையெனும் மூன்றனையும் விளங்கிநிற்கும்வினை.
தெரிநிலைவினைப்பெயரெச்சம் - செயலுங்காலமும் விளக்கிப் பெயரையவாவிநிற்பது.
தெரிநிலைவினைமுற்று - செயல்காலம் வினையெனு மூன்றனையும் விளக்கி முற்றுப்பெற்று நிற்பது.
தெரிநிலைவினைவினையெச்சம் - செயல்காலமிரண்டையும் விளக்கி வினையையவாவிநிற்பது.
தெரிபடுதல் - தெரிந்தெடுக்கப்படுதல்.
தெரிப்பு - அறிவிப்பு,ஆராய்வு,எழுதல், கொழிப்பு, சொல்லுதல், பிரிப்பு.
தெரிமா - சிங்கம்.
தெரிமானனப்புள் - ஆக்தை.
தெரியக்காட்டுதல் / தெரியக்கொடுத்தல் } வெளிப்படுத்துதல்.
தெரியப்படுதல் - காணப்படுதல்.
தெரியப்படுத்துதல் / தெரியப்பண்ணுதல் } அறிவித்தல், காண்பித்தல்.
தெரியலர்-அறிவீனர்,தரியலர்பகைஞர்.
தெரியல் - ஆராய்தல், காணல், பூமாலை.

தெரியவருதல் - அறிதல்.
தெரியவைத்தல் - அறிவித்தல்.
தெரியாத்தனம் / தெரியாப்புத்தி / தெரியாமை } அறியாமை, தோன்றாமை.
தெரியிழை - பெண்.
தெரிவிடுதல் - ஆராய்தல், தெரிந்தெடுத்தல்.
தெரிவித்தல் - அறிவித்தல், வெளிப்படுத்தல்.
தெரிவு - அறிவு, ஆராய்வு, தெரிதல், தெரிந்தெடுக்கப்பட்டன.
தெரிவை - இருபத்தாறுமுதல் முப்பத்தொருவயதிற்பெண், பெண்.
தெரு - வழி, வீதி.
தெருட்சி - அறிவு, தெளிவு.
தெருட்டு - இருது, தெருட்சி, தெருட்டென்னேவல்.
தெருட்டுக்கல்யாணம்-இருதுச்சடங்கு.
தெருட்டுதல் - அறிவுறுத்தல்,மனதைத் தெளிவித்தல், வற்புறுத்தல்.
தெருண்டபெண் - இருதுவானபெண்.
தெருண்டமேலவர்-அறிவிற்சிறந்தோர்
தெருமரல் / தெருமருதல் } சுழலல், நம்பிக்கையற்றிருத்தல்.
தெருவிலழகி - குப்பைமேனி.
தெருவு - தெரு.
தெருளல் - இருதுவாதல், தெளிதல்.
தெருளுடைமை - அறிவு, ஞானம்.
தெருளுதல் - தெருளல்.
தெருள் - அறிவு, தெருளென்னேவல், தெளிவு.
தெருள்வின்மை - தெளிவின்மை.
தெருள்வு - தெளிவு.
தெர்ப்பாரண்ணியேசுவரர் - திருநள்ளாற்றிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி திருநாமம்.
தெலிங்கம் - ஒருதேயம்.
தெலிங்கு / தெலுங்கு } ஒருபாடை.
தெல் - அஞ்சல், கலாதி, நெடுக்கிடங்கு, நெடும்பாத்தி.
தெல்லாட்டம் - அலுப்பு,இழுபறி,எத்து, குழப்பம்.
தெல்லு - தெல்.
தெல்லுக்கட்டுதல் - இழுப்பறிப்படுதல், பாத்திகட்டுதல்.
தெல்லுக்காரர் - அஞ்சற்காரர்.

தெல்லுப்பு - விளையலுப்பு
தெல்லோட்டு - தொந்தரை.
தெல்லோட்டுதல் - தொந்தரைபண்ணுதல்.
தெவம் - மாமரம்.
தெவிட்டல் தெவிட்டுதல்.
தெவிட்டு - தெவிட்டென்னேவல், நிறைவு, வெறுப்பு.
தெவிட்டுதல்-உமிழ்தல்,ஒலித்தல்,தேக்கிடுதல், நிறைதல், நினைத்தல், வாந்தித்தல்.
தெவினல் } நிறைதல்.
தெவிளுதல் }
தெவு - எடுத்துக்கொள்ளுதல்.
தெவுட்டல் - அடைத்தல், கொப்பளித்தல், சத்தித்தல், தங்குதல், நிறைதல், நினைத்தல், மறைத்தல்.
தெவுட்டு-தெவுட்டென்னேவல், நிறைவு.
தெவிரல் } பெருகுதல்.
தெவிளுதல் }
தெவ் - சத்துரு, பகை, போர்.
தெவ்வர் - பகைவர்.
தெவ்வினை - போர்.
தெவ்வு-சத்துரு,சந்திரன்,பகை,போர்.
தெவ்வூன்றி - இராகு.
தெழித்தல் - அதட்டல், கோபம், சினக்குறிப்பு, துவைத்தல்,பேரொலி,பிரித்தல்.
தெழிப்பு - இரைச்சல்,தொனி.
தெளி - ஒளி, விற்கால்.
தெளிஞன் - அறிஞன், கல்வியிற்சிறந்தோன்.
தெளிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனை, ஊடுருவுதல்,கலக்கம், கொழுக்குதல்-சுத்தமாதல்,தேறுதல்,நீங்கல்.
தெளித்தல் - ஒலித்தல்,கொழித்தல்,சுத்தமாக்குதல்,தூவல், தெரித்தல், நிச்சயித்தல், புரோட்சித்தல், விதைத்தல்.
தெளிநீர் - சுத்தநீர்.
தெளிப்பு-தெரிப்பு,நிச்சயம், விதைப்பு.
தெளிமணி - நல்லிரத்தினம்.
தெளிர்-உள்ளோசை, தெளிரென்னேவல்.
தெளிர்தல் - பிரகாசித்தல், பேசலாலெழுமொலி, பொருந்துதல்.
தெளிவித்தல் - அறிவித்தல், தெரியப்பண்ணல், விவரித்தல்.
தெளிவு - அறிவு,குணவலங்காரம்பத்தினொன்று அது கவியாற்கருதியபொருள்விளக்கத்தொடுப்பது,கொழுப்பு, தீர்க்கம், துணிவு, தெளித்தெடுக்குங்கஞ்சி, மனத்தேற்றம், வெளிச்சம்.
தெளிவுகொடுத்தல் - உணர்வுவரப்பண்ணல்.
தெளிவெண்ணெய் - நறுவேப்பெண்ணெய்.
தென் - தென்கு, தென்னென்னேவல்.
தென்கு-ஒருபூச்சி,தென்கென்னேவல்.
தென்குதல் - தெளிவித்தல், வீசுதல்.
தென்விளி - ஒரிராகம், மகிழ்ச்சியாலார்த்தல்.
தென்னச்சி - பூநீறு.
தென்னத்தெளிதல் - நன்றாய்த் தெளிதல்.
தென்னல் - தென்ளுதல்.
தென்ளி - யானை.
தென்ளிமை - அறிவு, தெளிவு.
தென்ளியர் - அறிவுடையோர், கல்வியிற் சிறந்தோர்.
தென்ளு - தென்கு, தென்ளுதல், தென்னென்னேவல்.
தென்ளுதமிழ் - செந்தமிழ்.
தென்ளுதல் - கொழித்தல்,தெளிவித்தல்.
தென்னேணம் - மகளிர்விளையாட்டு.
தெறி - அணி, அக்கி முதலியவற்றின் கடைப்பூட்டு,சிதறுகை,தெறியென்னேவல்.
தெறிகெடுதல் நிலைகெடுதல்.
தெறிக்கடித்தல் - சிதறடித்தல்.
தெறிக்குதல் } அட்டா துட்டி பண்ணல், அதைத்தல், சிந்தல், பாய்தல், முரிதல்.
தெறித்தல் }
தெறிப்பு - அதைப்பு, சிந்துதல், சுண்டுகை, முரிவு.
தெறிமுற்றினது - முழுதும்பழுத்தது.
தெறியன் - இதானது.
தெறியில் - சுண்டுவில்.
தெறுக்கால் - தேள், விருச்சிகவிராசி.
தெறுதல் - அழித்தல், தங்குதல்.
தெறுத்தல் - நெறித்தல்.
தெறுநர் - கொலையாளர், பகைவர்.
தெற்கித்தி - தெற்கேயுள்ளது.
தெற்கித்தியகாற்று - தென்காற்று.
தெற்கித்தியான் - தென்சீமையான்.
தெற்கு - தெக்கணதிக்கு.
தெற்பை - தருப்பை.
தெற்றல்-அலைத்தல்,இழைத்தல்,இறுக்கல், உடுத்தல், தடைப்படுதல், பின்னல், மாறுபடல்.
தெற்றி - சித்திரகூடம், திண்ணை.
தெற்றித்தல் - தெற்றுதல்.
தெற்று-அடைப்பு,இழைப்பு,தெற்றல், தெற்றென்னேவல், பின்னல்.

தெற்றுக்கால் - முட்டிக்கால்.
தெற்றுதல் - தெற்றல்.
தெற்றுமாற்று - திரியாவரம்.
தெற்றுவாய் - திக்குவாய்.
தெற்றென - தெளிய, விரைய.
தெற்றெனல் - தெளிதல், விரைவுக்குறிப்பு.
தெற்றெனவு - தெளிவு.
தெனாது - தெற்கு, தெற்குள்ளது.
தென் - அழகு, இசை, எதிர், சுருவம், தெற்கு, தென்னமரம்.
தென்கயிலை - பொதியமலை, திருக்காளத்தி.
தென்கலை - தமிழ்.
தென்காசி - பாண்டிநாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
தென்காஞ்சி - ஆதிசங்கரர் காலத்திலே செங்குந்தமுதலிகள்குடியேறிய ஒரு பட்டினம்.
தென்கால், தென்காற்று } சோழகம்.
தென்கிழக்கு, தென்கீழ்திசை } அக்கினிமூலை.
தென்கீழ்திசைப்பாலன், தென்கீழ்த்திசையிறை } அக்கினிதேவன்.
தென்குமரி - ஒரியாறு.
தென்குரங்காடுதுறை - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
தென்சார் - தென்பக்கம்.
தென்சிதம்பரம் - ஒருதலம்.
தென்படுதல் - கிடைத்தல்.
தென்பரதம் - தென்பாரதம்.
தென்பாண்டி - கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று.
தென்பாரதம் - நவகண்டத்தொன்று; அதுபாரதகண்டத்திற்றென்பக்கம்.
தென்பாரிசம் - தென்றிசை.
தென்பாலிரேபதம் - நவகண்டத்தொன்று.
தென்பால் - தென்பக்கம்.
தென்பால்விதேகம் - நவகண்டத்தொன்று.
தென்புலத்தார் - பிதிர்கள்.
தென்புலம் - இயமலோகம்.
தென்புறம் - தென்பக்கம்.
தென்பூமி - பூமியின்றென்பக்கம், மேருவின் றென்பால்.
தென்மதுரை - திருவாலவாய்.
தென்மலை - சோலைமலை, பொதியமலை.
தென்முனை பூமியின்றென்புறக்கோடி.
தென்மேல், தென்மேற்கு, தென்மேற்றிசை } நிருதி திசை.
தென்மேற்றிசைப்பால் - நிருதி.
தென்விதேகம் - தென்பால்விதேகம்.
தென்றமிழ் - செந்தமிழ்.
தென்றல் - தென்றற்காற்று, முன்பனிப்பருவத்தின்காற்று.
தென்றற்றேரோன் - மன்மதன்.
தென்றி - தெற்கு, தென்காற்று.
தென்றிசை - தெற்கு.
தென்றிசைக்கோன், தென்றிசைப்பாலன் } இயமன்.
தென்றிருப்பேரை - பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
தென்னங்கிளி - கிளியினோர்பேதம்.
தென்னங்குரும்பை - தென்னம்பிஞ்சு.
தென்னமரம் - தெங்கு.
தென்னம்பிள்ளை - தென்னங்கன்று.
தென்னர் - பகைவர்.
தென்னவன், தென்னன் } பாண்டியன்.
தென்னிரேபதம் - தென்பாலிரேபதம்.
தென்னி - வாழை.
தென்னிலங்கை - இராவணன் பட்டணம்.
தென்னிலம் போர்க்களம்.
தென்னை - தென்னமரம்.

தே

தே - ஓரெழுத்து, கடவுள், கிருபை.
தேககாந்தி - சரீரவொளி.
தேககோசம் - தோல்.
தேகக்கல் - நீலக்கல்.
தேகசம்பந்தம் - சரீரசேர்வை.
தேகசாரம் - மூளை.
தேகட்சயம் - நோய்.
தேகதாரகம் - என்பு.
தேகத்தியாயம் - உயிரைக் கொடுத்தல், சரீரப்பற்றுவிடல், மரணம்.
தேகத்திரயம் - சரீரத்திரயம்.
தேகநாசம் - சரீரவழிவு.
தேகபந்தம் - சரீரசேர்மானம்.
தேகமண் - செம்மண்.

தேகம் - உடல்.
தேகயாத்திரை - சரீரபோஷணை, மர [ணம்.
தேகரசம் - வெயர்வை.
தேகராசம் - கரிசாலை.
தேகனி - மஞ்சள்.
தேகாதாரம் - உண்டி, எலும்பு.
தேகாத்துமவாதி-சாருவாகமதஸ்தன்.
தேகாந்தம் - மரணம்.
தேகாபரணம் - உடை.
தேகாபிமானம் - சரீரப்பராமரிப்பு.
தேகி - சீவாத்துமா, புல்லூரி.
தேகிகை - ஒருபுழு.
தேக்கம் - தியக்கம், கிலேசீர், கிறைவு.
தேக்கல் - தியங்குதல், கிறைதல்.
தேக்கிடுதல் - தெவிட்டல், கிறைதல்.
தேக்கு - ஒருமரம், சமுகு, தித்திப்பு, தெவிட்டு, கிறைவு, தேக்கென்னேவல்.
தேக்குதல் - தடைபண்ணுதல், தெவிட்டுதல், கிறைதல்.
தேக்கெறிதல்-ஏப்பமிடல், தெவிட்டல், கிறைதல்.
தேங்கல் - அச்சக்குறிப்பு, கிறைதல்.
தேங்காய் - தெங்கங்காய்.
தேங்காய்க்கயில் - தேங்காய்ப்பாதி.
தேங்காய்க்கீரை - ஒருகீரை.
தேங்காய்த்துருவல் - தேங்காய்ப்பூ.
தேங்காய்ப்பாரை - ஒருமீன்.
தேங்காய்ப்பால்-தேங்காய்ப்பூவின்பால்.
தேங்காய்ப்பூ - தேங்காய்த்துருவல்.
தேங்காய்ப்பூக்கீரை } பீளைசாறி.
தேங்காய்ப்பூசாறி }
தேங்காய்மொத்தி - மாட்டின்முன்காலூடேயிருக்குந்திரட்சி.
தேங்கிட்டி - தேன்கொடுக்கி.
தேங்குதல் - அஞ்சல், கிறைதல்.
தேசகன் - ஆஞைக்காரன்.
தேசகாலம் - இடமும், நேரமும் நெடும்பொழுது.
தேசசஞ்சாரி - பரதேசி.
தேசசு - தேயசு, அழகு.
தேசசுவாதியம் - தேயத்தின்சுகம்.
தேசதருமம் - தேசகட்டளை, தேசவொ [ழுங்கு.
தேசநம் - மூங்கில்.
தேசபாடை-அவ்வத்தேயத்திற்குரியபா [ஷை.
தேசபாரம்-இராச்சியபொறுப்பு.
தேசப்பழமை - தேசவழக்கம். [ன்.
தேசமுகி-இரைமுதலியவெழுதவோ
தேசம் - இடம், உறைப்பு, கட்டளை, கூர்மை, நாடு, பங்கு, பிரபை.
தேசரூபம் - தேசாசாரம்.
தேசவழக்கம் } தேசநடபடி.
தேசவளமை }
தேசவியவகாரம் - தேசவழக்கம்.
தேசனம் - திருத்தம்.
தேசனி - மஞ்சள்.
தேஜஸ்வி - அகத்தியன் பௌத்திரன், திருசியன் புத்திரன்.
தேசா - ஒருபண்.
தேசாசாரம் - தேசநடை.
தேசாச்சாரம் - மயிர்.
தேசாட்சரி - ஓரிராகம்.
தேசாதி - கவரைசாதித்தலைவன்.
தேசாதிபதி - தேசத்தையாள்வோன்.
தேசாதிபத்தியம் - தேசத்தையாளுமதி [காரம்.
தேசாதேசம் - ஒவ்வோர்தேசம்.
தேசாந்தரம் - பரதேசம்.
தேசாந்தரி - பரிதேசி.
தேசாந்திரம் - பூமத்தியின்சாய்ப்பு.
தேசாந்திரரேகை - பக்கவரி.
தேசாவரம் - ஒருசெடி.
தேசி - எலுமிச்சை, ஓரிராகம், குதிரை, பரதவுறுப்புள்ஒன்று, பெருங்குதிரை.
தேசிகம்-அவ்வவ்நாட்டுச்சொல், அழகு, ஒளி, ஒருகூத்து, காந்தி, பொன்.
தேசிகன் - அரசன், அழகன், உபாத்தியயன், குரு, தேசாந்தரி, வணிகன், வேதமோதுவிப்போன், வேதாந்ததேசிக [ன்.
தேசிக்காய் - எலுமிச்சங்காய்.
தேசிதம் - கூர்மை.
தேசியம் - திசைச்சொல்.
தேசு அழகு, உறைப்பு, ஒளிகாங்கை, கீர்த்தி, கூர், பலம், பொன், மகத்துவம், மனக்கதி, மூளை, விந்து, வீரம்.
தேசோபத்திரவம் - தேயவியாகுலம்.
தேசோபிந்து - உபநிடதமுப்பத்திரண்டில் ஒன்று.
தேசோமந்தரம் - நெல்லி.
தேசோமயம் - அழகு, பிரபை, பேரொ [ளி.
தேசோரூபம் - ஒளி, ஒளியுருவம்.
தேசோரூபன் - கடவுள்.
தேசோவதி - யானைத்திப்பிலி.
தேஜோவதி - அக்கிதேவனது நகரம், இது சோதிமயமாயிருக்கும்.
தேடல் - தேடுதல்.

தேடாக்கூறு - தேட்டாக்கூறு, பராமரிப்பின்மை.
தேடாமை - விசாரியாமை.
தேடித்தம் - தோத்திரஞ்செய்தல்.
தேடுதல் - சம்பாதித்தல், பராமரித்தல், விசாரித்தல்.
தேட்கடை - ஒருமூலி, மூலநாள்.
தேட்குமச்சி - கதண்டு.
தேட்கெண்டை - ஒருமீன்.
தேட்கொடுக்கி } ஒருசெடி.
தேட்கொடுக்கிலை } ஒருசெடி.
தேட்டக்காரன் - சம்பாத்தியக்காரன்.
தேட்டம் - ஆராய்வு, கவலை, சம்பாத்தியம், சேகரித்தபொருள், சேகரிப்பு, மராமரிப்பு, பேரவா.
தேட்டாக்கூறு - தேடாத்தன்மை.
தேட்டாண்மை - சம்பாதிப்பு, நாட்டம், விசாரிப்பு.
தேட்டாளன் - தேட்டக்காரன்.
தேட்டு - தேட்டம்.
தேட்டை - தெளிந்தநீர், தெளிவு, தேட்டம்.
தேணிறம் - மாந்தளிர்க்கல்.
தேண்டுதல் - தேடுதல்.
தேதி - திகதி.
தேநவர் - சுசுதரோடு ஆயுர்வேதங்கற்றவர்.
தேமம் - ஈரம்.
தேமல் - படர்சுணங்கு.
தேமனம் - சிரமம், புளிப்பு.
தேமா - இருநேரசைச்சீர் வாய்பாடு, தித்திப்பு மாமரம்.
தேமாங்கனி - நேர்நேர் நிரையசைச்சீர் வாய்பாடு.
தேமாங்காய் - மூன்றுநேரசைச்சீர்வாய்பாடு.
நேமாநறுநிழல் - நேர்நேர்நிரைநிரைசீர் வாய்பாடு.
தேமாநறும்பூ - நேர்நேர்நிரை நேர்சீர்க்குவாய்பாடு.
தேமாந்தண்ணிழல் - நேர்நேர்நேர்நிரை சீர்வாய்பாடு.
தேமாந்தண்பூ - நான்கு நேரசைச்சீர்வாய்பாடு.
தேம் - இடம், ஈரம், எழனுருபு (உ-ம்) கோடாய்தேத்து, கள், தித்திப்பு, தேசம், தேன், வாசனை.
தேம்பல் - அழுகை, இளைத்தல், தேய்தல், பழம்பூ, மெலிதல், வாடல்.
தேம்பாவணி - ஒருகாப்பியம்.
தேம்புதல் - அழுகை, தேம்பல், தேய்தல்.
தேயசு - அழகு, ஒளி, வித்து.

தேயபரிச்சேதம் - ஒருதேசத்துண்டு ஒருதேசத்தின்றென்பது.
தேயாமணி - வைரமணி.
தேயம் - இடம், உடல், ஒளி, களவு, கொடைப்பொருள், நாடு.
தேயவாதனம் - ஒரு தாண்மடித்துமற்றைத் தாளூன்றியிருப்பது.
தேயு - நீஅது சிவனட்ட மூர்த்தத்தொன்று.
தேயுடலி - தேவாங்கு.
தேய்கடை - தேய்ந்தது.
தேய்தல் - உரைதல், குறைதல், மெலிதல்.
தேய்தவளை - தேரை.
தேய்த்தல் - அழித்தல், உரைத்தல், குறைத்தல், கொல்லல், துலக்கல்.
தேய்பிறை - அபரபக்கச்சந்திரன்.
தேய்ப்பு - தேய்த்தல்.
தேய்மானம் - சிக்கனம், தேய்வு, பொன்னுரை.
தேய்வாங்கு - தேவாங்கு.
தேய்வு - அழிதல், உரைதல், குறைவு, மெலிவு.
தேய்வை - பரிமளச்சாந்து.
தேரகன் - தேர்ப்பாகன்.
தேரடி - தேர்ச்சுவடு, தேர்நிலை, தேர்முட்டி.
தேரர் - பௌத்தர்.
தேரலர் - பகைவர், மதியீனர்.
தேரல் - தேன்.
தேரன் - ஒரு வைத்தியசாத்திரப் புலவன்.
தேரார் - கல்லாதவர், கீழ்மக்கள், பகைவர், மதியீனர்.
தேராள் - தேரேற்றத்தானை.
தேரி - மணற்றிட்டை.
தேரிடக்கியம் - தேர்க்கொடி.
தேருமச்சி - நத்தை.
தேரை - இட்டமானவீகை, தவளையின் ஒருபேதம்.
தேரைபாய்தல் - நோய்பட்டுடேய்தல்.
தேரைமேய்தல் - உல்லிபற்றல்.
தேரையர் } தேரன்.
தேரையன் } தேரன்.
தேரனார் } தமிழிலே அகஸ்தியரிடத்து வைத்தியங் கற்ற மாணாக்கருள்ளே முதன்மை பெற்றவர், வைத்தியத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் மில்லாதவர், சாரீரம் நிதானம் சிகிச்சை முதலிய துறைகளிலெல்லாம் மிகுசமர்த்தர், பதார்த்த
தேரையர் }

குணமெல்லாம் கடைபோக ஆராய்ந்
தவர் பதார்த்தகுண சிந்தாமணியென்
னும் சிறந்த நூல் செய்தவரும்
இவரே. தமிழிலே இறந்தன ஒழிய
எஞ்சியுள்ள உண்மைப் புராதநவைத்
திய நூல்கள் இவராற் செய்யப்பட்ட
னசிலவே, மற்றைய வெல்லாம் கற்
பித நூல்களேயாம். நீர்க்குறி, நெய்க்
குறி, தயிலவருக்கச்சுருக்கம், கஷா
யம்நூறு, பதார்த்தகுணம், சிகித்ஸை
ஆயிரம் முதலியன இவராற்செய்யப்
பட்டன. சிகித்ஸை ஆயிரமும் அச்
சிடுவோரால் ஆராய்வின்றி இடை
யிடையே பிழைபட் டிருக்கின்றது.
தேரையர் கூறும் சிகித்ஸைகள் உள்
ளபடியே செய்யப்படுமாயின் தவ
றுது, சாஸ்திர வைத்தியத்திலும் சி
றந்ததாகிய கபாலசல்லியத்திலே பெ
யர் படைத்தவ ரென்றால் அந்தத்து
றையில் அவர் வல்லுநத்தன்மை
சொல்லவொண்ணுது, ஒருவாற்று
னும் நீங்காததலைக்குத்தினுல் வருந்தி
ன அரசனொருவனுக்கு, அந்நோயின்
காரணத்தை நிதானித்துச் சம்மோ
கினியைப் பிரயோகித்து அவனை ம
யக்கி அவன்கபாலத்தைத் திறந்து அ
மிர்தத்திலிருந்த தேரையை ஒரு நீர்க்
கிண்ணத்தினுள்ளே பாய்வித்துப்
பின்பு சந்தாநகரணியினுலே அந்தக்
கபாலத்தை முன்போலப் பொருத்தி
அந்தநோயை நீக்கினுரென்பது கார
ணபரம்பரை, இதற்கொப்பான சரித்
திரமொன்று போஜப்ரபந்தம் என்
னும்வடநூலினுங்கூறப்பட்டுள்ளது,
அஷ்டவித பரீக்ஷையினுலே யன்றி
நோயினது சாத்தியா சாத்தியங்களை
ஆடிக் கலசத்திற்பெய்த மூத்திர நடு
வேவிட்ட ஒரு துளியெண்ணெ
யைக்கொண்டுபண்டிதரல்லாதவரும்
உணர்ந்து கொள்ளுமாறு நெய்க்குறி
நூல்செய்தவர் தேரையரே.

சூத்திரங்களுட் சிலவருமாறு
"விடுதுளிசிதறிவெவ்வேருயின்ம
ற்கடுகெனப்பரவிற்கைவிடன்முறை
யே" "அவியுமூத்திரமுமணங்கொன்
றினுவி, அவியுமென்றல் கவுதம
ரறையே" "முல்லை யரும்புமுளரிப்
பூவுஞ், சொல்லிய துளியிட்டோற்
றிடுமாயின்," இல்லையில்லை நோயெ
ன்பது சரதமே.

தேரோடும்வீதி - கோயிற்புறவீதி.
தேரோட்டு - தேரிழுப்பு.
தேரோன் - இரதவீரன், சூரியன்.
தேர் - இரதம்அது நால்வகைத்தானையி
னென்று, உரோகணிநாள், தேரென்
தேர்கடை - தீர்மானம். [னேவல்.
தேர்க்கவி - மிறைக்கவியி னென்று, அ
து தேரங்கமாய்க் கோடுகீறியெழுத்
தடைக்குங்கவி.
தேர்க்காரன் - தேரேற்றக்காரன், தேர்ப்
தேர்க்கால் - தேர்ச்சில். [பாகன்.
தேர்க்குடம் - தேர்முடி.
தேர்க்கூம்பு - கொடிஞ்சிமரம்.
தேர்க்கொடி - தேரிடக்கியம்.
தேர்க்கொடுங்கை - தேரின்மரச்சுற்று.
தேர்க்கொத்தர் - தேரிழுக்கிறவர்கள்.
தேர்ச்சார்பலகை - தேரின்தட்டு.
தேர்ச்சி - ஆராய்தல்எண்ணல், கல்வி, தெ
தேர்ச்சித்துணைவர் - மந்திரிகள் [ளிவு.
தேர்ச்சியர் - மந்திரியர்.
தேர்ச்சில், தேர்ச்சில்லு } தேர்ச்சக்கரம்.
தேர்ச்சுவடு - தேரடி.
தேர்ச்சேனை - தேர்த்தானை.
தேர்தல் - அறிதல், ஆராய்தல், சொல்ல
ல், தெளிதல், நிச்சயித்தல்.
தேர்த்தடம் - தேர்ச்சுவடு.
தேர்த்தட்டு - தேர்நடு.
தேர்த்தானை - தேர்ச்சேனை.
தேர்த்திருநாள் - தேர்த்திருவிழா நாள்.
தேர்த்துகள் - இரததுளி, கதிரொழுதுக
ளெட்டுக்கொண்டது.
தேர்தலை - தேரடி, தேர்முட்டி.
தேர்ந்தவன் - அறிஞன்.
தேர்ப்பந்தர் - தேர்ப்போலும் பந்தல்.
தேர்ப்பாகன் - தேர்செலுத்துவோன்.
தேர்தப்பார் - தேர்த்தட்டு.
தேர்முட்டி - தேர்விடுமிடம்.
தேர்மொட்டு - தேர்க்கூம்பு.
தேர்வடம் - தேரிழுக்குங்கயிறு.
தேர்வண்மலையன் - வட வண்ணக்கன்
பெருஞ் சாத்தனுரால் புறநானூற்றி
லே வைத்துப் பாடப்பட்டவன்,
இவன்இராஜசூயம்வேட்டபெரு நற்

கின்னிக்குத் துணையாகிச் சேரமான் மாந்தரஞ்சேரவிரும் பொறையைப் போரில் வென்றன்.
தேர்வீரர் - போர்மன்னர்.
தேர்வு - ஆராய்வு, தெளிவு.
தேலிகை - இலேசு.
தேறுதல் - தப்புதல், விலகல்.
தேவகங்கை - ஆகாயகங்கை.
தேவகணிகையர் - தேவநாடகியர்.
தேவகம் - தேவீகம்.
தேவகம்மாளன் - தேவதச்சன்.
தேவகன் - கிருட்டிணன்பாட்டன், தேவகிதந்தை.
தேவகன்னி - தேவரம்பை.
தேவகா - கோவிற்பூங்கா.
தேவகாஷ்டம் - தேவதாரி.
தேவகாதம் - மலைக்குகை.
தேவகாத்துமசை - கிருட்டிணன்ருய்.
தேவகாந்தாரி - ஒருபண்.
தேவகாயன் - கந்தருவன்.
தேவகாளம் - தேவர்கட்குரியராகம்.
தேவகி - கண்ணன்ருய், வசுதேவன்மனைவி.
தேவகிருனு
தேவகிநந்தனன் } கிருட்டிணன்.
தேவகிமைந்தன்
தேவகிரகம் - தேவாலயம்.
தேவகிரி - ஒருமலை.
தேவக்கிரியை - ஒருபண், தெய்வச்செயல்.
தேவசுவம் - கராம்பு.
தேவகுண்டம் - தானுயுண்டானவூற்று.
தேவகுரு - வியாழபகவான்.
தேவகுருவஞ்சம்
தேவகுருவம் } போகபூமி யாறில் ஒன்று.
தேவகுலம் - கோயில், தேவசாதி.
தேவகூத்தியர் - தேவரம்பையர்.
தேவகெந்தம் - குங்கிலியம்.
தேவகோட்டை - மதுரைக்கருகில்நாட்டுக் கொட்டையாரூர்.
தேவகோயில் - தேவாலயம்.
தேவக்கிரியை - ஓரிராகம்.
தேவசங்கு - சங்கநிதி.
தேவசபை - தேவகூட்டம்.
தேவசாட்சி - ஆணை, தெய்வமுன்னிலை
தேவசாயுச்சியம் - தேவனுடனென்றியிருத்தல்.
தேவசிகிச்சகன் - தேவமருத்துவன்.
தேவசிகிருதம் - தெய்வத்திற்குச்சேர்ந்தது.
தேவசிரவசு - வசுதேவன்தம்பி.
தேவசிருட்டி - சராசரம்.
தேவசிருட்டை - மதுபானம்.
தேவசுருதன் - தேவன், நாரதன்.
தேவசேகரம் - தவனம்.
தேவசேனுபதி - குமரக்கடவுள்.
தேவசேனை - இந்திரன்மகள், தேவகூட்டம்.
தேவச்சந்தம் - நூறுசரமுள்ளமுத்தாரம்
தேவடன் - சிற்பி.
தேவடியாள் - தேவதாசி, வேசி.
தேவதச்சன் - விச்சுவகன்மா.
தேவதத்தம் - அருச்சுனன்சங்கு.
தேவதத்தன் - ஓட்டமுயிளைப்பும் வியர்வும் வருவிக்கும் வாயு, புத்தன்றம்பி.
தேவதத்தாக்கிரசன் - புத்தன்.
தேவதத்துவம் - தெய்வவல்லபம்.
தேவதரு - கற்பகம், மந்தாரம்.
தேவதா - தேவதை.
தேவதாகாரம் - கோவில்.
தேவதாசன் - அரிச்சந்திரன் மகன், தெய்வத்தொண்டன்.
தேவதாசி - தேவடியாள்.
தேவதாசொரூபி - அநிருத்த முள்ளவன் திவ்வியசொரூபி.
தேவதாதிபன் - இராகு, தீ.
தேவதாதிபன் - இந்திரன்.
தேவதாமரை - பதுமநிதி.
தேவதாயதனம் - கோவில்.
தேவதாயோக்கியம் - தெய்வீகம்.
தேவதாரம் - ஐந்தருவிலொன்று, ஒருமரம், செம்புளிச்சை.
தேவதாரி - ஒருமரம்.
தேவதாரு - செம்புளிச்சை, பஞ்சகற்பகதரு, பஞ்சதருவிலொன்று.
தேவதாருவனம் - ஒருதபோவனம், பிருகு முதலிய மகாரிஷிகள் தவஞ்செய்த மகாவனம், அந்த மகாரிஷிகளுடைய தவத்தை சோதிக்கும் பொருட்டும், மீமாஞ்சையே உண்மைநூலெனவும், அந்த நூலிலே கூறப்பட்ட யாகங்களே இருமைப்பயன்களையும் தரவல்லனவெனவும் கொண்ட மயக்கத்தைத் தீர்த்தாட்கொள்ளும் பொருட்டும் சிவபெருமான் பிக்ஷாடநவேடம்பூண்டு விஷ்ணுவை மோகினியாக்கித் தம்முடன் கொண்டு இவ்வனத்திற் புகுந்தார், மோகினிவடிவைக்கண்ட முனிவர்கள் காம

மயக்கத்தால் மனங்கலங்கித் தமது தியமமிழந்தார்கள், ரிஷிபத்தினிகள் பிக்ஷாடன மூர்த்தியுடைய பேரழகைக்கண்டு தமது கற்புநிலை கலங்கித் தம்மை மறந்து அவர்பின் சென்றுழன்றார்கள், முனிவர்கள் தம்மனைவியரது கற்பைக்கலக்கிய சிவபிரானைக் கொல்லும்பொருட்டு அபிசாரயாகஞ் செய்து அதினின்றும் பூதங்களையும் புலியையும் பாம்பையும் முயலகனையுந்தோற்றுவித்தார்கள், பூதங்களைச் சிவபெருமான் தமக்குப்பரிசகமாக்கிக்கொண்டார். புலியையுரித்து அத்தோலை ஆடையாக்கிக்கொண்டார், பாம்புகளை ஆபரணமாகப் பூண்டுகொண்டார், முயலகனைத் திருவடியின்கீழே யமைத்துக் கொண்டார், இதைக்கண்ட முனிவர்கள் தமது மயக்க மொழிந்து சிவபெருமானை வழிபட்டு உய்ந்தார்கள். இந்தச் சரித்திரத்தில் சிவபெருமான் ஆன்மாக்களை ஆணவமலத்தைக்கெடுத்து ஆட்கொண்டருளல் வெளிப்பட்டது, பிக்ஷாடனமூர்த்தம், சிவம், மோகினி வடிவம், சத்தி, ரிஷிகள், மெய்யுணர்வு தலைப்படாத பக்குவான்மாக்கள், ரிஷிபத்தினிகள் அகங்காரம்.

தேவதாவியற்சனம்-விக்கிரகாராதனை.

தேவதாளி - ஒருசெடி.

தேவதானியம் - ஒருதானியம்.

தேவதீபம் - கண்.

தேவதுந்துமி - தேவப்பறை.

தேவதூஷணம் - தெய்வநிந்தை.

தேவதூதர்-தெய்வதூதரென்பவரோனோர்.

தேவதூபம் - சாம்பிராணி, வெள்ளைக் குங்கிலியம்.

தேவதேவன்-சிவன்,பிரமன்,விட்டுணு

தேவதை - தெய்வம், தேவி, பேய்.

தேவத்துவம் - தேவதன்மை.

தேவநகர் - கோவில், தேவபட்டணம்.

தேவநந்தி-இந்திரன் வாயில்காப்போன்.

தேவநாகரம் } சம்ஸ்கிருதத் தோர்வ
தேவநாகரி } கை யட்சரம்.

தேவநாயகன்-கடவுள்,தேவர்தலைவன்.

தேவநாயகன்பட்டணம் - கூடலூருக் கருகிலோரூர்.

தேவநிகாயம் - மோக்கம்.

தேவநிந்தகன் - தேவநிந்தனைகாரன்.

தேவநீதி - தெய்வத்தினால் வருஞ்சிட்சை.

தேவந்தி - கண்ணகியின் பார்ப்பனத் தோழியாய் மாநாயகன் மனையில் வளர்ந்தவள். மானிடவடிவங் கொண்ட சாத்தனென்னும் தெய்வத்தின் மனைவி, தான்கண்ட தீக்கனவைக் கண்ணகி சொல்லியபொழுது தேற்றியவள், கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்த துன்பத்தைக் கேட்டு மதுரையையடைந்து பின்பு வஞ்சி நகரஞ்சென்று அங்குப் பிரதிட்டிக்கப்பட்டிருந்த கண்ணகிவடிவத்தைப் பூசித்தவள்.

தேவபதம் - ஆகாயம், இராசசமூகம்.

தேவபதி - இந்திரன்.

தேவபத்தினி - தேவபாரி.   [க்கம்.

தேவபவனம்-அரசமரம்,கோவில், மோ

தேவபாகன் - வசுதேவன்தம்பி, உத்தமனுக்குத் தந்தை.

தேவபாஷை - தேவர்களின்பாஷை.

தேவபாணி - இசைப்பாவின் பகுதியுள் ஒன்று.

தேவபூதி - கங்கை.

தேவபூமி - தேவலோகம்.

தேவபசு - காமதேனு.

தேவப்பிரதிமை - விக்கிரகம்.

தேவப்பிரமா - நாரதன்.

தேவப்பிரயாகை - இது அலகநந்தைகங்கையோடு சங்கமிக்கு மிடத்துள்ள நகரம், இங்கே 900 அடி யுயரமுள்ள ஒரு விஷ்ணு ஆலய மிருக்கின்றது.

தேவப்புள் - அன்னப்பறவை.

தேவப்பெண் - தேவஸ்த்ரீ.

தேவமஞ்சரம் - கிருட்டிண னாபரணம்.

தேவமணி - அகன்மணி, கிருட்டிணனாபரணம், குதிரைநற்சுழியில் ஒன்று, சிவபிரான்.   [ம்மாதம்.

தேவமாசம் - கருப்பமுண்டான எட்டா

தேவமாதா } அதிதி.
தேவமாது }

தேவமாநகம் - கௌஸ்துபமணி.

தேவமித்திரன் மாண்டுகேயன் சிஷன்.

தேவமீடன் - ஹிருதிகன் மகன், வசுதேவன் பாட்டன்.   [ம், மாமரம்.

தேவம்-அனிச்சை, குளிநாவல்,தெய்வ

தேவயாத்திரம் - திருவிழா.
தேவயானம்-தேவவாகனம்,விமானம்.
தேவயானி - சுக்கிரன் புத்திரி.
தேவயானை-இந்திரன் பட்டத்தியானை. சுக்கிரன் மகள், முருகன்தேவி.
தேவயோனி - தேவப்பிறப்பு.
தேவரங்கம் - பணிப்புடைவை.
தேவரதம் - தேவயானம்.
தேவரம்பை - தேவப்பெண்.
தேவரன் - கொழுந்தன்.
தேவராசன் - இந்திரன்.
தேவராட்டி - சன்னதகாரி.
தேவராதன் - மிதிலையினரசன். சுகேத ன்மகன். காம்பியாகிய குந்திமகன். சனசேபன்.
தேவராளன் - சன்னதக்காரன்.
தேவருணவு - அமுதம்.
தேவர்-உயர்ந்தோர், சுரர். ஜன்மதேவர் கர்மதேவர் என இருதிறத்தினர். தேவர், அக்கினி, இந்திரன், யமன், சூரியன், வாயு, வருணன் முதலியோர் ஜன்மதேவதைகள். இவர்கள் லோ கோபகாரார்த்தமாக ஒவ்வோ ரதிகா ரத்தோடு சிருஷ்டிக்காலத்திலே சிரு ஷ்டிக்கப்பட்டுத் தத்தம் அதிகாரத் தைச் சாரகாலம்வரைக்குஞ் செலுத் தினின்று அழிபவர்கள், இனிக் கர்ம தேவதைகள் மனுஷருள்ளே புண் ணிய விசேஷத்தாற் சுவர்க்கம்போய்த் தேவகதியடைந்து மீள்பவர்கள். இவர்கள் நகுஷன்முதலியோர், இன் னும் பிதிர்தேவதைகளெனவும் ஒரு பாலாருளர், அவர்கள் பிரஜாபதி புத் திரர்கள், இவர்களே மனுஷகணங் களுக்கு ஆதிபிதாக்கள் இன்னும் இறந்து போகின்றவர்களெல்லாரும் தத்தம் குடும்பத்தினர்க்குப் பிதிர ராகின்றார்கள்.

ஒருகாலத்தில் இந்திராதி தேவர்க ளும் பிதிர்களும் அசுரபீடைக்கஞ் சிக்காக ரூபந்தாங்கிப் பூமியிற் சஞ் சரித்தார்கள், அதுபற்றியே காகங் களுக்குப் பிண்ட மிட்டுண்ணும் வ ழக்கம் உலகத்துண்டாயது, இது வாய சபிண்ட மெனப்படும்.

ஜன்மதேவர் முப்பத்துமூவர் பிர மா இந்திரன் வசுக்கள் ருத்திரர் ஆதித்தர் பிரமேந்திரரை நீக்கிஅசு வினி தேவர் இருவரையுங் கூட்டி எண்ணுவாருமுளர்.
தேவர்கோன் - தேவேந்திரன்.
தேவர்வசம் - அரசு.
தேவலகன் - பூசாரி.
தேவலதை - அடுக்குமல்லிகை.
தேவலன் - ஒருமுனி, கொழுந்தன், சன் மார்க்கன், பார்ப்பான். அஷ்டவசுக் களு ளொருவனுகிய பிரத்தியூஷன் மகன். இவனுக்கு சுமாவர்த்தன், மனஸ்வி என இருவர் புத்திரர். அக் குரூரன் சேட்டபுத்திரன். தேவகன் மகன்.
தேவலோகம் - சுவர்க்கம்.
தேவவணக்கம் - தேவவழிபாடு.
தேவவதி-சுகேசன்பாரி, கிராமணி யென் னும் கந்தருவன் மகள் தேவமணி.
தேவவத்திரம் - அக்கினி.
தேவவருடம் - தேவாண்டு.
தேவவருணனை - தெய்வப்புகழ்ச்சி.
தேவவல்லபம் - சுரபுன்னை.
தேவவாசி - இந்திராணி.
தேவவர்த்தகி - விசுவகர்மா.
தேவவர்த்தனன் - தேவகன்மகன்.
தேவவாக்கியம் - தேவவனம்.
தேவவிரதன்-தேவனை வழிபடுவோன், வீடுமன்.
தேவவிருட்சம் - பஞ்சதரு.
தேவவுணவு-அமுதம், அவிர்ப்பாகம்.
தேவவைத்தியம் - சித்தர்வைத்தியம்.
தேவளம் - கோவில்.
தேவனம் - அழகு, ஒளி, சூதாடுகருவி, தாமரை, துக்கம், நதி, தோழி, நந் தனவனம், பொழுதுபோக்கு.
தேவன் - அகம்படியன், அரசன், அரு கன், ஈட்டிக்காரன், கடவுள், கொ ழுந்தன், பரிசைக்காரன், மடையன்.
தேவாங்கம் - பட்டுச்சீலை.
தேவாங்கு - ஒருமிருகம்.
தேவாசனம் - தேவபத்திராசனம்.
தேவாசிவன்-கோவிற்பணிவிடை செய் யும் பிராமணன்.
தேவாசுவம் - இந்திரன் குதிரை.
தேவாண்டு - தேவராண்டு, அது முந் நூற்றறுபத்தைந்து மானிட வருஷங் கொண்டது.

தேவாதி - கடவுள்.
தேவாதிதி - அக்குரோதன்மகன்.
தேவாதீனம் - தெய்வத்திற்குரியது.
தேவாத்திரம் - தேவர்களாற் கொடுக்கப்பட்ட அம்பு.
தேவாத்துவா - அரசமரம்.
தேவாந்தகன் - இராவணன்மகன் அநுமந்தனுற் கொல்லப்பட்டவன்.
தேவாபி - பிரதீபன் சேட்டபுத்திரன், இவன் தன்தம்பியாகிய சந்தனுவுக்கு இராச்சியத்தைக் கொடுத்து விட்டு காட்டுக்குத் தபசுக்குப் போனவன்.
தேவாபிருதன் - சாத்துவதன் புத்திரருளொருவன். இவனுக்குப் பப்பிருவென்னும் புத்திரனொருவன் பிறந்தான்.
தேவாபீட்டை - வெற்றிலை.
தேவாமுதம் - தேவர்கள் பருகுமமுதம்.
தேவாயதனம் - கோவில்.
தேவாயுதம் - மழைவில்.
தேவாரணியம் - லோகித்தியநதி தீரத்திலுள்ள ஒருவனம், இங்கே மாணிதரன் என்னும் யக்ஷன் வசித்தான்.
தேவாரம் - ஒரு திருப்பாடல். தேவ ஆரம் தேவாரம், ஆரம்-மாலை, கடவுளுக்கு நாரினாலே தொடுத்துச் சாத்தப்படும் பூமாலைபோல, பத்திமையாகிய நாரினால் தொடுத்துச் சாத்தப்படும் சொன்மாலையாதலால் இது தேவாரம் எனப்பட்டது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், என்னு மூவரால் பாடப்பட்ட சொன்மாலையே தேவாரமெனப்படும், அவை தொண்ணூற்றுறுயிரம் பதிகங்கள். அவற்றுள் இறந்தொழிந்தன போக எஞ்சியுள்ளன எழுநூற்றுத்தொண்ணூற்றைந்து பதிகங்கள். அபயகுலசேகர சோழன் தன் சபையில்வந்த புலவர்வாயினல் ஒவ்வொரு தேவாரப் பாக்களைக் கேட்டு அவற்றின் இனிமையையும் பெருமையையும் அறிந்து பேராசையுற்று அத்திருமுறைகளை யெங்குந் தேடிக் கிடைக்கப்பெருதவனுய் நம்பியாண்டார்நம்பியிடத்திற்சென்று இப்போதுள்ள எழுநூற்றுத் தொண்ணூற்றைந்து பதிகங்களைப் பெற்றுன், அதுபெற்றகாலம்இற்றைக்குஎழுநூறுவருடங்களுக்கு முன்னுள்ளது.
தேவாலயம் - கோவில், தேவபதவி, மேருகிரி.
தேவாலயஸ்திதபஜிதம் - ஆலயவிபூதி.
தேவாவாசம் - அரசமரம், கோவில்.
தேவாசிகன் - க்ஷமதக்வாமகன்.
தேவானுட்டிப்பு - தேவவணக்கம்.
தேவான்னம் - நைவேத்தியவமுது.
தேவி - அரசி, காளி, சிதேவியார், தலைவி, துர்க்கை, தேவப்பெண், பதுமினிப்பெண், பார்வதி, மனைவி.
தேவிகம் - தேவீகம்.
தேவிகை - ஊமத்தை, ஒருநதி.
தேவிகோட்டம் - ஒரூர், காளிகோவில்.
தேவிபட்டினம் - ஒரூர்.
தேவிமுத்திரை - காஸ்மீரபடிகம்.
தேவிரு - கொழுந்தன், முந்தினகணவன்.
தேவிலன் - தார்மிகன்.
தேவீகம் - தெய்வீகம்.
தேவேக்கியம் - ஓமம்.
தேவேசியம் - பிருகற்பதி.
தேவேத்தனம் - தெய்வேத்தனம்.
தேவேந்திரன் - தேவராசன்.
தேவை - அவசரம், இராமநாதபுரம், வேண்டுந்தன்மை.
தேவோக்கித்தம், தேவோத்தம் - வெளிப்படுத்தல்.
தேவோத்தியானம் - தேவகா.
தேளி - தேளித்தேங்காய், கிளிமீன், தேன்கெண்டை, தேள்.
தேள் - அனுடநாள், ஒருசெந்து, தெறுக்கால், விருச்சிகவிராசி.
தேள்கொடுக்கி - ஒருபூண்டு.
தேறகம் - தேறை.
தேறலர், தேறலார் - அறியாதார், பகைவர்.
தேறல் - கள், தங்கல், துணிதல், தேறுதல், தேன், நிச்சயம்.
தேறார் - அறிவிலோர், பகைவர்.
தேறு - சுத்தம், தேறென்னேவல், தேற்றுமரம், நிச்சயம், மஞ்சள் முதலியவற்றின் தேறு.
தேறுகடை - தீர்மானம்.
தேறுகுடு - தெளிவு குடு.
தேறுதலை - ஆறுதல், தைரியம்.
தேறுதல் - அறிகப்படுதல், தங்கல், துணிதல், துன்பந்தீர்த்தல், தெளிதல், நம்புதல், நிச்சயம், விறைத்தல்.

தேறுநர் - கற்றோர், சேர்ந்தோர், நம்பினோர்.
தேறை - ஒருமீன்.
தேற்றம் - அதிகப்படல்,கருமமுடிக்குந்துணிவு, திடன், தெளிவு, நிச்சயம்.
தேற்றாவாளன்-திடப்படுத்துகிறவன், திடனுடையோன்.
தேற்றாரு - திடப்படுத்துதை,தெளிவு.
தேற்றல் - அறிவித்தல், தீர்த்தல், தேறப்பண்ணுதல்.
தேற்றவுவமை - பொருளினுயர் விழிபு தோன்ற ஏகாரம் புணர்த்தி யுருவகிப்பது (உ-ம்) அல்லார் திருவின் இனிதே நல்லார் வறுமை.
தேற்று - ஒருமரம்.
தேற்றார் - அறிவிலார், பகைவர்.
தேற்றுதல் - தேற்றல்.
தேனம் - சமுத்திரம்.
தேனர் - அசுரர், திருடர்.
தேனார்மொழியம்மை – திருக்குடந்தைக்காரோணத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் திருநாமம்.
தேனிகை - கொத்துமல்லி.
தேனிலையான் - தேனீ.
தேனிறுட்டு }
தேனிறால் } தேன்கூடு.
தேனீ - தேன்கூட்டுமீ.
தேனீக்குடிக்கீரனார்- கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்.
தேனு - எருமை, களவு, குதிரை, தெய்வப்பசு, பசு, பாற்பசு.
தேனுகசூதனன் - கிருட்டிணன்.
தேனுகம் - பெண்யானை.
தேனுகன் – ஓரசுரன்.
தேனுகா - தேனுகை, பாற்பசு, பெண்யானை.
தேனுகாசுரன் - பிருந்தாவநத்திலிருந்த ஜநங்களைக் கழுதை யுருத்தாங்கிக் கொன்றுவந்த ஓரசுரன். இவன் பலராமனுற் கொல்லப்பட்டான்.
தேனுகாதுத்தம் – பசுப்பால்.
தேனுகாரி – கிருட்டிணன்.
தேனுமுத்திரை - ஒருசைவமுத்திரை.
தேனெல் - அச்சுவினிநாள்.
தேனெறும்பு - பெரிய எறும்பு.
தேன்-கள், பெண்வண்டு, மது, வண்டு, வாசனை.
தேன்கடல்-சத்தசமுத்திரத்தொன்று.
தேன்கதலி – ஒருவாழை.
தேன்குழல் }
தேன்குழாய் } ஒரு பண்ணிகாரம்.
தேன்கூடு }
தேன்கூண்டு } தேனீக்கூட்டம்,தேன்வதை.
தேன்தொடை – தேன்றொடை.
தேன்மரம் - ஒருமரம்.
தேன்வதை - தேனிறால்.
தேன்றொடை - ஒருதொடை.

தை

தை - ஒரெழுத்து, ஒருமாதம், தாளக்குறிப்பினொன்று,தைக்கத்தக்கவை, தையென்னேவல், பூசநாள், மகராசி.
தைசசம் - உலோகம், நெய், பலம்.
தைசசாவர்த்தினி - உலோக முருக்குங்குகை.
தைசதம் – அக்கினி சம்பந்தம், மகராசி, மூவாங்காரத் தொன்று.
தைலம் - விரனுனி.
தைதல் - அலங்கரித்தல்.
தைதிலம் - காண்டாமிருகம்,தைதுலம்.
தைதுலம் }
தைதுலை } கழுதைக்கரணம்.
தைதேயர் – இராக்கதர்.
தைத்தல் - அடைதல், அறைதல், கணைக்குப்பூட்டுதல், தையல்செய்தல், படுதல், பொருத்துதல்.
தைத்தியகுரு - சுக்கிரன்.
தைத்தியசேனை-தேவசேனையின் தமக்கை, அரிஷ்ட நேமிமகள்.
தைத்தியதேவன் - வருணன்.
தைத்தியநிசூதனன் - விட்டுணு.
தைத்தியபுரோகிதன் – சுக்கிரன்.
தைத்தியமதநம் - காணைச்செடி.
நம்பியாண்டார்நம்பி - திருநாரையூரிலே அவதரித்த ஒரு ஆதிசைவப்பிராமணர். இவர்இளம்பருவத்திலே ஒருநாள்இவர்தந்தையார் இவரையழைத்து, இன்றைக்கு நான் ஓரூருக்குப் போகவேண்டி யிருத்தலால், பொல்லாப்பிள்ளையார் கோயிற்பூசையை நான் நடத்துவதுபோற்சென்று நடத்திவரக் கடவையென்று கட்டளையிட்டுப்போனார். அவ்வாறே நம்பியாண்டார் பிள்ளையார் கோயிலுக்குப் போய் விதிப்படி பூசைசெய்து நைவேத்தியத்தை பிள்ளையார் திருமுன்னேவைத்து தந்தையார் வைக்கும் நைவேத்தியத்தைப் பிள்ளையார் திருவமுதுசெய்து வருபவரென்றெண்ணி, எம்பெருமானே திருவமுது செய்தருளுமென வேண்டினர். இவர் வேண்டியவாறே பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பது கண்டு, நம்பியாண்டார் மனம் வருந்தி, எம்பெருமானே, அடியேன் என்ன தவறு செய்தேனென்று அழுது கொண்டே தம் தலையைக் கல்லிலே மோதப் புகுந்தார். உடனே பிள்ளையார், நம்பீ, பொறு, என்று தடுத்து அந்த நைவேத்தியத்தைத் திருவமுது செய்தருளினர். பின்னு மொருநாள் சோழராஜன் முன்னிலையில் இந்த அற்புதம் நிகழ்ந்தது. இவரே திருத்தொண்டர் சரித்திரத்தைத் திருவந்தாதியாகப் பாடினவர். தேவாரத்திருமுறை கண்டவருமிவரே.
நம்பியாண்டார்நம்பி - ஒருபுலவன்.
நம்பியான் - நம்பி.
நம்பு - நம்பென்னேவல், நாவல், விருப்பம்
நம்புதல் - விசுவாசித்தல், விரும்பல்.
நம்பூரி - மலையாளப்பார்ப்பாரி லுயர்ந்தோர்.
நம்மாழ்வார் - தாம்பிரவன்னி நதிக்கருகிலிருந்த ஒரு வேளாள வைணவாசாரியர். திருக்குருகூரிலே காரிமாறப்பிரானுக்குஉடையநங்கையாரிடத்திலவதரித்த ஒரு விஷ்ணுபக்தர், இவரது பக்தி ப்ராபவம் அவாங்மானசகோசரம், இவர்இறைவர்மீது பாடிய பாடல்கள் ஆயிரம், இதற்கு திருவாய்மொழியென்றுபெயர். இதற்குப் பூர்

வாசாரியர்களா லருளிச்செய்யப்பட்ட வ்யாக்யாநஸங்கியை இரண்டு லக்ஷம் கிரந்தம். அன்றியும் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்பவைகளும், இவரால் அருளிச் செய்யப்பட்டனவே.

நயகுணன் - நற்குணமுடையோன்.

நயக்கன் - நாய்.

நயச்சொல் - இச்சகம், சிரித்துப் பேசல், முகமன் வார்த்தை.

நயத்தல் - அதிகப்படல், ஆசைப்பெருக்கம், சிறத்தல், சிநேகித்தல், நன்மைப்படல், பலன்படல், பின்செல்லுதல், மதித்தல், மலிவாதல், விரும்பல்.

நயகத்திரயன் - சிவபிரான்.

நயநயவார்த்தை-உறுதியில்லாச்சொல்.

நயநிலைப்படலம் - நாடகம்.

நயநௌஷதம் - கண்மருந்து.

நயந்துகேட்டல் - இரந்துகேட்டல்.

நயந்துசொல்லுதல்-பலன்படப்பேசல், பாராட்டுதல்.

நயந்தோர் - சிநேகிதர்.

நயபோசனம் - நல்லாகாரங்கொடுத்தல் அது புண்ணியமேழினொன்று.

நயப்பாடு - பலன், மேம்பாடு.

நயப்பித்தல் - களிப்படுத்தல், சந்தோஷப்படுத்தல், சம்மதப்படுத்தல்,சிறப்பித்தல், மலிவாக்கல்.

நயப்பு - அன்பு, ஆசை, இலாபம், சந்தோஷம், மலிவு.

நயப்புணர்வு - கண்ணோட்டம்.

நயப்புரை - விருப்புமொழி.

நயமாலி - மனோசிலை.

நயம் - அதிகம், அரசாட்சி, இலாபம், இன்பம், உபசாரம், சரி, நடத்தம், நன்மை, நீதி, பலன், மலிவு, மிகுதி, மேன்மை, வேதசாஸ்திரம்.

நயம்பயம் - நன்மைதின்மை.

நயம்பேசுதல்இன்னோசையுண்டாதல்.

நயவர் - சிநேகிதர்.

நயவார்த்தை - பணிவானசொல்.

நயவான் - ஆதாயக்காரன் நயப்புள்ளோன், நல்லுபகாரி,விரும்பினோன்.

நயவிசாரதன் - நீதிசாத்திரமறிந்தவன்.

நயனகத்தூரி - ஒரு கண்மருந்து.

நயனதீட்சை - ஞானதீட்சையினொன்று அது விஞ்ஞானகலர்க்குரியது.

நயனத்தோன் - புட்பராகம்.

நயனபாஷை - கண்பயில்.

நயனப்பத்து - ஒருபிரபந்தம் அது கண்ணினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

நயனமோட்சம் - கண்டிறத்தல்.

நயனம் - கண்.

நயனரோகம் - நேத்திரரோகம்.

நயனவாரி - கண்ணீர்.

நயனவிதி - நேத்திரவைத்தியவாகடம்.

நயனவீடு - விக்கிரகத்துக்குக்கண்திறத்தல்.

நயனௌஷதம் - கண்மருந்து.

நயனை - கண்மணி.

நயனோபாந்தம் - கடைக்கண்.

நயனோற்சவம் - அலங்காரப் பொருள், விளக்கு.

நயன் - இன்பம், கொடையாளி, நன்மை, பலன், மகிழ்ச்சி.

நயிச்சியம் - நைச்சியம்.

நயிட்டிகப்பிரமசாரி - பிரமசாரிமுறை தவறாது நிற்போன்.

நயிஷ்டிகம் } நியமநிட்டை.
நயிட்டிகம் }

நயிட்டிகர் - நிட்டைதவறாதோர்.

நயிந்தை - நாயனீர், நாயன்.

நயிராக்கியம் - நைராக்கியம்.

நயினார் - ஆண்டவன், எசமானன், ஐயனார், சைநர், நாயனார்,பாளையக்காரர்.

நரககதி - நரகப்பிராப்தி.

நரகதேவதை - பிசாசம், மூதேவி.

நரகபாதாளம் - ஆழ்நரகம்.

நரகம் - பாதாளம், பாபலோகம், அது இருபத்தெட்டுப் பேதமாயிருக்கும், அந்தப் பேதத்தின் பெயர்களாவன: தமம், அந்ததமம், ரௌரவம், மகாரௌரவம், கும்பிபாகம், காலசூத்திரம், அசிபத்ரவநம், கிருமிபக்ஷம், அந்தகூபம், சந்தஞ்சம், சன்மலி, சூர்மி, வைதரணி, பிராணரோதம், வைசசம், லாலாபக்ஷணம், வீசி, சாரபக்ஷணம், வஜ்ரகண்டம், காரம், பிசிதபக்ஷணம், சூலப்ராந்தம், விரோதகம், தந்தசூகம், பர்யாவருத்தம், திரோதாநம், சூசிமுகம், பீடகம் என்பனவாம்.

நரஹரி } நரசிங்கம்.
நரகரி }

நரகர் - கீழுலகத்தவர்.

நரகலித்தல் - அருவருத்தல், அழுக்குடைத்தாதல்.
நரலோகம் - கீழுலகம், அது பாவிகள், அடையுமுலகு.
நரகல் - அசுத்தம், மலம்.
நரகவட்டம் - நரகச்சுற்று.
நரகவாசி - நரகத்திலுள்ளவன்.
நரகவாதி - நரகத்திற்கிடானவன்.
நரகவாய் - குதம், நரகம்.
நரகனுதி - தேன்கொடுக்கி.
நரகன் - விஷ்ணுவுக்கு வதராஹாவதாரத்திலே பூமியிற் பிறந்த புத்திரன். இவன் அசுரன், இவன் இராஜதானி பிராக்ஜோதிஷபுரம், இவன் வாகனம் சுப்பிரதீகம் என்னும் யானை. இவன் புத்திரன் பகதத்தன் இந்நரகாசுரன் அதிதியினது கர்ண குண்டலங்களையும் வருணனது சத்திரத்தையும் கவர்ந்துகொண்டு தேவலோகத்திற் சென்று இந்திரனது சிங்காதனத்தையுங் கவர்ந்தான். அதுகண்டு இந்திரன் திருமாலிடம்போய் முறையிட அவர் இவனையும் இவன் தமையனுகிய முராசுரனையுங் கொன்று, இவன் சிறைப்படுத்தியிருந்த பதினாறாயிரம் கன்னியரையும் சிறைமீட்டு மணஞ்செய்துகொண்டுதேவலோகஞ்சேர்ந்தார். இவன் இறந்த நாள்நரக சதுர்த்தசியென்று உலகத்தாரால் கொண்டாடப்படுகின்றது.
நரகன் - நரசுரன், நரகத்திலுள்ளோன்.
நரகாசுரன் - நரசுரன்.
நரகாசுரவைரி - கண்ணன்.
நரகாந்தகன் - விட்டுணு.
நரகாமயம் - ஆத்துமா.
நராரி - விட்டுணு.
நரகாலி - மாட்டுக்குவருமோர்நோய்.
நரகீலகன் - குருவத்திசெய்தோன்.
நரகு - நரகம்.
நரங்கடித்தல் - கெடுத்தல்.
நரங்குதல் - தேய்ந்துதேய்ந்துகெடுதல்.
நரசிங்கமுனையரையநாயனுர் - சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தலும் திருநீறுமே பெரும்பேறெனக்கொண்டொழுகுமாயின சிவபத்தர். இவர் திருமுனைப்பாடி நாட்டில்குறுநிலமன்னர்குலத்தில் அவதரித்தவர்.
நரசிங்கமூர்த்தி - திருமால்.
நரசிங்கம் - திருமால் தசாவதாரத்தொன்று.
நரசிங்கராச்சியம் - விஜயநகரத்தைச் சார்ந்த தேசம்.
நரசிங்காவதாரம் - விஷ்ணுதசாவதாரங்களுள் ஆறுவது அவதாரம். இரணியகசிபனைக் கொன்று பிரகலாதனை இரக்ஷிக்கும் பொருட்டுப் பொற்றூணில் அவதரித்த அவதாரமிதுவே, கண்டத்தின்கீழ் நரரூபமும் அதற்குமேல் சிங்கரூபமு மாதலால் இது நரசிங்கவதாரமெனப் பெயர்பெற்றது.
நரசிவன் - மனிதர்.
நரதாரணன் - கடவுள்.
நரதுதி - மானிடரைப்புகழ்தல்.
நரதேவன் - அரசன்.
நரத்துவம் - மனிதத்தன்மை.
நரநாராயணர் - விஷ்ணு அமிசமாகப் பிறந்த இரண்டு முனிவர்கள். இவர்கள்பதரீவனத்தில் நெடுங்காலந் தவஞ்செய்தவர்கள். இவர்களுடைய தவத்தைக் கெடுக்கும்பொருட்டு இந்திரன் அரம்பையரையனுப்ப, நாராயணன் தன்தொடையினின்றும் ஒரு கன்னிகையைத் தோற்றுவித்தான், அவளுடைய ரூபலாவண்யங்களைக் கண்ட அரம்பையர் நாணி அவ்விடம் விட்டு நீங்கினர். நரநாராயணர் என்னும் பெயர் கிருஷ்ணார்ஜுனர்களுக்கும் வழங்கும்.
நரநாராயணன் - திருமால் பதினைந்தவதாரத் தொருவன்.
நரந்தம் - கஸ்தூரிமிருகம், காகம், நாரத்தை, வாசனை.
நரந்தை - கொற்றான்.
நரபதி - அரசன், விசயநகரத்திராசா.
நரபலி - மனிதபலி.
நரபாலன் - அரசன்.
நரபுடம் - ஐம்படுதருப்புடம்.
நரபூமி - பாரதவருஷம்.
நரபிரதிட்டை - நரவுருத்தாபனம், மனிதர் தாபித்த விக்கிரகம்.
நரப்புக்கருவி - வீணைமுதலியவாத்தியம்.
நரப்புக்கருவியாளர் - யாழ்முதலிய வாசிப்போர்.
நரப்புக்கருவியைக் கொளுத்துமாக்கள் நரப்புக் கருவியாளர்.

நரப்புச்சிலந்தி - ஒருவிதச்சிலந்தி.
நரப்புச்சுழுக்கு - நரப்புச்சுளுக்கு.
நரமடங்கல் - நரசிங்கம்.
நரமேதம் - ஒருயாகம் அது நரபலியிட்டுச்செய்வது.
நரம்பன் - ஒருவகைப்புகையிலை, நரம்புபுடைத்த சரீரமுள்ளவன்.
நரம்பு - இலைமுதலியவற்றினரம்பு, தந்தி, நாடி, நாணி, நார், வின்னாண்.
நரம்புக்காய் - முருங்கை.
நரம்புச்சிலந்தி - ஒருவகைப்புண்.
நரம்புபுடைத்தல் - நரம்பு புறப்பட்டிருத்தல்.
நரம்புவாங்கல் - நரம்பையிழுத்துக்கொள்ளுதல், வெற்றிலை முதலியவற்றினரம்பை யெடுத்தல்.
நரம்புவீச்சு - நரம்புவலி.
நரர் - மனிதர்.
நரலல் - ஒலித்தல், பேசலாவெழுமொலி.
நரலுதல் - ஒலித்தல்.
நரலை - கடல்.
நரலோகம் - பூமி.
நரல் - சனக்கூட்டம், செத்தை.
நரல்வு - உள்ளோசை, ஓசை.
நரஹரி } நரசிங்கம்.
நரவரி }
நரவலித்தல் - அலுத்தல், நரகலித்தல்.
நரவாகனம் - குபேரனைச்சுமப்போன், சிவிகை.
நரவாகனன் - குபேரன்.
நரளி - கடலை.
நரற்றல் - ஒலித்தல்.
நரன் - ஒருதேவரிஷி, இவனும் நாராயணன் எனனும் இருஷியும் நரநாராயணரெனப்படுவர், இவ்விருவருமேஅருச்சுனனும்கிருஷ்ணனுமாகப் பின்னர்ப்பிறந்தார்கள் பிரியவிரதன் வமிசஸ்தனாகிய கயன்மகன். புமன்னியன்மகன். சங்கிருதி தந்தை.
நரன் - அருச்சுனன், கடவுள், திருமால், மனிதன்.
நரா - தழும்புபட்டது, நருங்கப்பட்டது.
நராங்குதல் - கிராங்குதல்.
நராதாரை - பூமி.
நராதிபன் - அரசன்.
நராந்தகம் - மரணம்.
நராந்தகன் - இயமன், விட்டுணு.
நராந்தம் - காகம்.
நராபோகம் - கிளைத்திராவாழ்வுபெறல்.
நராயணன் - நாராயணன்.
நராரி - விட்டுணு.
நராலை - நரகம்.
நராவதாரம் - மனுவவதாரம்.
நரி - ஒருமிருகம்.
நரிக்கரய்ச்சி - ஒருவகைப்பனை.
நரிக்கொன்றை - ஒருமரம்.
நரிதல் - நெறிதல்.
நரித்தல் - நருக்குதல், கிந்தித்தல், பிரமித்தல்.
நரிநிறம் - பலநிறக் கலப்பு, பலவெண்ணம், வெறுப்பு.
நரிப்பயறு - ஒரு புன்பயறு.
நரிப்பள்ளம் - ஆறுமுதலியவற்றிற்குள்ளிருக்குங் கிடங்கு.
நரிப்பாகல் - காட்டுப்பாகல்.
நரிப்பு - ஆச்சரியம், இகழ்வு, நருக்கம்.
நரிப்புத்தி - தந்திரப்புத்தி.
நரிப்புறம் - மிருகசீரிடம்.
நரிமருட்டி - சிறுசிறுப்பை.
நரிமுருக்கு - ஒருநெல், ஒருமுருக்கு.
நரிமெருட்டி - நரிமருட்டி.
நரியனெல் - ஒருவகைநெல்.
நரியன் - குள்ளத்தனமுள்ளவன், சூதன்.
நரியிலந்தை - ஒருமரம்.
நரியுடை - மொசமொசக்கை.
நரியுணி - நண்டு.
நரிவழை - நரிக்குழி.
நரிவாற்புல் - ஒருபுல்.
நரிவிளா - கிலவிளா.
நரிவெங்காயம் - ஒரு வெங்காயம்.
நரிவெருட்டுதல் - காரண மில்லாமல் வெருளல்.
நரிவெரூஉத்தலையார் - இவர்கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். இவர் தம்முடம்பிலுள்ளதாகிய வேறுபாடு காரணமாக இப்பெயர் பெற்றவர். சேரவிரும் பொறையனைக் கண்டமாத்திரத்தே அவ்வேறுபாடு நீங்கி நல்லுடம்பு பெற்றவர். (புறநானூறு)
நருகட்டியெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
நருக்கல் - ஒருவயிற்றுவலி, நொருக்கல்.
நருக்கற்குத்து - காரியம் வாய்க்கரமற்பண்ணுதல், பறவறைக்குத்து.
நருக்காணி - நருவாணி.
நருக்கு - நருக்குதல், நருக்கென்னேவல்.

நருக்குதல் - நொருக்குதல்.
நருக்கெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.
நருங்குதல் - நொருங்குதல்.
நருநருத்தல் } ஈரடுக்கொலிக் குறிப்பு,
நருநரெனல் } சருச்சரைக் குறிப்பு.
நருமதை - சத்தநதிகளிலொன்று.
நருமுதல் } துண்டாக்கல், பல்லுநரு
நரும்புதல் } ம்புதல்.
நருவல் - நறுங்கினது.
நருவலொருவல் - இருநருவல்.
நருவாணி - சிற்றுருவானது.
நருவியுப்பு - ஒருப்பு.
நருள் - சனம்.
நரேசன் } அரசன்.
நரேசுவரன் }
நரேந்திரன் }
நரை - இடபவிராசி, கருமை கலந்த வெண்மை, சரை, சாமரை, சிவன், நரையென்னேவல், நாரை, மாயை யாக்கை பதினெண்குற்றத் தொன்று, ரிஷபம், வெண்மை.
நரைகொம்பு - எலும்பு.
நரைக்கொள்ளு - சிரக்கோழிப்பூடு.
நரைச்சல் - நரை, வெளிறினபயிர்.
நரைதல் - மெலிதல்.
நரைத்தல் - மலர்வெளிறல், மயிர்முதிய வெளுத்தல்.
நரைமயிர் - வெளுத்தமயிர்.
நரைமாலினி - முகரோமக்காரி.
நரையல்லி - வெள்ளாம்பல்.
நரையன் - ஒருபருந்து, நரைதிரமுள்ளது, வல்லூறு.
நரையான் - காகம், சின்னது, செங்காலுநாரை, மார்க்கண்டன், மீன்குத்திப்புள்.
நர்க்குடகம் - நாசி.
நர்த்தகம் - ஆண்யானை.
நர்த்தகி - பெண்யானை.
நர்த்தகப்பிரியம் - மயில்.
நர்மடம் - சாதகப்புள், முலைக்கண்.
நர்மடன் - சூரியன், விடன்.
நர்மதை - மேகலாபர்வதத்தி லுற்பத்தியாகிச் செல்லும் நதி.
நலகீலம் - முழந்தாள்.
நலகூபரன் - குபேரன் மகன்.
நலக்குதல் - அழுக்காக்குதல், கசங்கச்செய்தல்.
நலங்கல் - அழுக்காதல், அழுக்கானது.
நலங்கு - அரைத்தகுழம்பு, ஒரு கலியாணச் சடங்கு, நலங்கென்னேவல், வைசூரிக்குப் பூசுமோர் மருந்து.
நலங்குதல் - அழுக்காதல், வதங்குதல்.
நலச்சூடு - கடுப்புச்சூடு.
நலதம் - வெள்வெட்டிவேர்.
நலதம்பு - வேப்பமரம்.
நலதை - சடாமஞ்சில்.
நலத்தல் - சிந்தித்தல், நயத்தல்.
நலத்தட்டுதல் - விதையைவாங்கல்.
நலப்பாடு - அதிஷ்டம், ஆதாயம், நன்மை.
நலப்பு - சித்தி, நன்மை.
நலமடித்தல் } நலந்தட்டுதல்.
நலமெடுத்தல் }
நலம் - அழகு, இன்பம், உபகாரம், உயர்வு, கண்ணோட்டம், சுக்கு, நன்மை, பயன், விருப்பம், விலங்கின்விதை.
நலம்நசுக்குதல் - நலந்தட்டுதல்.
நலம்பாராட்டுதல் - புனைந்து அழகுசெய்தல்.
நலம்பொலம் - நன்மையுந் தின்மையும்.
நலவு - நலம்போடுதல், நன்மை.
நலன் - நலம்.
நலி - நலியென்னேவல், நோய்.
நலிதல் - ஒலிவிகற்பம், சரிதல், தவறுதல், மெலிதல், வருத்தல்.
நலித்தல் - நலிவித்தல்.
நலிதம் - தாமரை, நீர், வெண்ணுரை.
நலிநீருறம் - தாமரைத்தண்டு.
நலிவு - அழிவு, மெலிவு, வருத்தம்.
நல் - எற்ற, நல்ல, மிகுதி.
நல்கல் } ஈதல், கடாட்சித்தல், விரும்பல்.
நல்குதல் }
நல்குரவு - தரித்திரம்.
நல்கூர்தல் - தரித்திரப்படல்.
நல்கூர்ந்தோன் - தரித்திரன்.
நல்கூர்வேள்வியார் - சங்கப்புலவரில்ஒருவர்.
நல்லதம்பிரான் - நாகபாம்பு.
நல்லதனம் - சிநேகத்தன்மை, நற்குணத்தன்மை.
நல்லது - செம்மை, நன்மையானது.
நல்லதுபண்ணுதல் - இணக்குதல்.
நல்லத்தை - தந்தையின் சகோதரி.
நல்லந்துவனார் - கலித்தொகைநூலாசிரியர். இவர் கடைச்சங்கப்புலவர்களுள்ளவர், சமயத்தாற் சைவரென்பது கடவுள் வாழ்த்து முதலியவற்றாற் புலப்படும்.

நல்லபாம்பு - நாகபாம்பு.
நல்லப்பன் - தந்தையின் சகோதரன்.
நல்லமை - சற்குணம்,சினேகம்,நன்மை.
நல்லம் - கறுப்பு, மங்கல்.
நல்லம்மாள் - தாயின் சகோதரி.
நல்லம்மான் - தாயின் சகோதரன்.
நல்லம்மான்பச்சரிசி - ஒருபூடு. [று.
நல்லறிவஞ்சம் -போசபூமியாறிலொன்
நல்லவர்-அறிஞர், உத்தமர், சினேகிதர்.
நல்லவழி - நற்குலம், நன்னடக்கை, மோட்சவழி.
நல்லவளம் - வசதி.
நல்லவெல்லம் - கருப்பக்கட்டி.
நல்லவேளை - அதிஷ்டகாலம், நல்வேளைப்பூடு, நற்சமயம்.
நல்லவை-நற்சவை,மேன்மையானவை
நல்லவையோர் பெருமையிற் சிறந்தோர்.
நல்லள் - நல்லவள்.
நல்லறம் - நல்வாழ்க்கை.
நல்லறிவு - ஒழுக்கம், ஒருநூல், நற்போதனை, பேரறிவு.
நல்லன் - நல்லவன்.
நல்லாங்கு - நன்மை.
நல்லாச்சி-நல்லப்பன்றேவி,நல்லம்மாள்
நல்லாதனார் - அகஸ்தியர் காலத்திருந்த ஒரு ஆசிரியர், இவர் திரிகடுகம் என்னும் நூல் செய்தார்.
நல்லாள்பிள்ளை -தொண்டைநாட்டிலே மகாதலம் பேட்டையிலே கருணிகர மரபிலே நூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னே அவதரித்தவர். வடமொழி தென்மொழி யிரண்டும் வல்லவர். இவர் வில்லிபுத்தூ ராழ்வார் பாரதத்தை வடமொழிப் பாரதம் போல விரிக்கவெண்ணி இடையிடையே தந்துவிரித்துப் பதினாலாயிரத் தெழுநூற்றிருபத்தெட்டு விருத்தங்களாற் பூர்த்தி செய்தவர். அவற்றுள் வில்லிபுத்தூராழ்வார்பாடல் நாலாயிரத்து முந்நூற்றைம்பது. நல்லாப்பிள்ளைசெய்த பாரதம் நல்லாப்பிள்ளை பாரதமென வழங்கும். தமிழிலே பாரதம் முதலிற் செய்தவர் பெருந்தேவனார். பின்னர்ச்செய்தவர் வில்லிபுத்தூரார் கடைசியிற்செய்தவர் இவர். இதனைப் பாடும்போது இவர்க்கு வயசு இருபது.

நல்லாப்பு - நன்மை.
நல்லார் - அறிஞர், உத்தமர், மாதர்.
நல்லாள் - அழகுடையாள், நலமுடையாள், பெண்.
நல்லாறு - நல்வழி.
நல்லி - நல்லாள்.
நல்லுறவு - இதமானவுறவு.
நல்லெண்ணெய் - திலநெய்.
நல்லேறு - எருமையேறு.
நல்லோர் - அறிஞர், உத்தமர்.
நல்வழி - ஔவையார்செய்த ஒருநூல், சன்மார்க்கம்.
நல்வார்த்தை - உத்தமமொழி, இது வாக்கினற்குண நான்கிலொன்று. [கை.
நல்வாழ்வு - இல்லறமகிழ்ச்சி, சுகவாழ்க்
நல்வினை - புண்ணியம், இது இருவினையிலொன்று.
நவகண்டம் - ஒன்பதுகண்டம், அது கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபாரதம், தென்பாரதம், மத்திமகண்டம்.
நவகம் - ஒன்பது.
நவகாரிகை - புதுமணப்பெண்.
நவக்கிரகம் - நவக்கோள் அவை ஆதித்தன், இராகு, கேது, சந்திரன், சனி, சுக்கிரன்,செவ்வாய்,புதன்,வியாழம்.
நவசாரத்தான் - பொன்மணல்.
நவசாரம் - நவச்சாரம்.
நவசி - ஒரு சமுகு, ஒரு தெங்கு.
நவசித்தர் - நவநாதசித்தர்.
நவசிரார்த்தம் - கருமாதி காலத்தில் முதலில் ஒன்பது பிராமணருக்கு கொடுக்கும் கொடை.
நவசூதிகை - இளங்கன்றுப்பசு, இளம்பிள்ளைக்காரி.
நவச்சாரம் - ஒருமருந்து.
நவச்சி - எவட்சாரம்.
நவச்சிரார்த்தம் - முதலாம் மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் பதினோராநாளிற்செய்யுஞ் சிரார்த்தம்.
நவஞ்சம் - அசமதாகம்.
நவட்சாரம் - நவச்சாரம்.
நவதளம் - தாமரைத்தளிர்.
நவதம் - யானைமேற்றவிசு.
நவதாரணை - ஒன்பதுதாரணை, அவைசுதரங்கதாரணை,சத்ததாரணை, சித்திர

தாரணை, நாமதாரணை, பேததாரணை, மந்திரதாரணை, மாயாதாரணை, வச்சிரதாரணை, வத்துத்தாரணை.
நவதானியம் - ஒன்பதுதானியம் அவை உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு.
நவதி - தொண்ணூறு, பொடுதலை.
நவதிகை - தூரியக்கோல்.
நவதை - புதுமை.
நவத்தம் - சடாமாஞ்சி.
நவத்துவாரம் - ஒன்பதுவாயில் அவை கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.
நவநதி - கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, கோதாவரி, காவிரி, பயோஷ்ணி, சரயு, குமரி என்னும் இவ்வொன்பதும் நவநதியெனப்படும். தம்மிற்படிவோர் பாவமனத்தையும் தாங்கவர்க்கு சமத்தலாற்றாது ஒருங்குகூடிப் பெண்ணுருக்கொண்டு கைலைசென்று சிவனை வழிப்பட்டுத் தமது குறையைத் தீர்த்தருளும்படி வேண்டச் சிவன் அந்நதிகளை நோக்கிக் கும்பகோணத்திலே அக்கினிதிக்கிலே ஒரு தீர்த்தமுளது. வியாழன் சிங்கராசியில் வரும்பொழுது மகநக்ஷத்திரத்திலே நீங்கள் அத்தீர்த்தத்திற்சென்று படிந்து உங்கள் பாவத்தைப்போக்கக் கடவீரென்றனுக்கிரகித்தார்.
நவநாகம் - அசமதாகம், ஒன்பது நாகம். அவை அனந்தன், ஆதிசேடன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி.
நவநாணயம் - புதுவழக்கம்.
நவநாதசித்தர் - ஒன்பதுசித்தர் அவர் அநுதிநாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர்.
நவநிதி - கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி இவையே குபேரன் நவநிதி.
நவநீதகம் - நெய்.
நவநீதசோரன் - விட்டுணு, வெண்ணெய்திருடிய கிருஷ்ணன்.
நவநீதபாகம் - செய்யுளினேர்சுவை.
நவநீதம் - புதுமை, புதுவெண்ணெய்.
நவபல்லவம் - தளிர்.
நவபவகம் - நூதநகிருதம்.
நவபாஷணம் - புதுமையான சொல், தேவிபட்டினம்.
நவபுண்ணியம் - ஒன்பது புண்ணியம். அவை அமுதமேந்தல், அருச்சித்தல், ஆசனத்திருத்தல், எதிர்கொளல், தாள்கழுவுதல், தீபங்காட்டல், தூபங்கொடுத்தல், பணிதல், புகழ்தல்.
நவபேதம் - சிவபேதமொன்பது அவை பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம், சிவம், சத்திநாதம், விந்து.
நவப்பிரீதி - வெடியுப்பு.
நவப்பிரேதம் - ஒன்பது திக்கிற் காவற்பூதங்கள்.
நவமணி - ஒன்பதிரத்தினம், அவை கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம்.
நவமணிமாலை - ஒரு பிரபந்தம் அது வெண்பாமுதலாகப் பலவேறுபட்ட பாவும் பாவினமுமாக ஒன்பது செய்யுளாந்தாதித்துப் பாடுவது.
நவமஸ்கந்தம், நவமம் - பாகவதத்தின் ஒன்பதாம் அத்தியாயம்.
நவமி - ஒன்பதாந்திதி.
நவமுகில் - ஒன்பது மேகங்கள், அவை ஆவர்த்தம், சம்வர்த்தம், புட்கலம், துரோணம், காளம், நீலம், வாருணம், வாயுவம், தமம்.
நவம் - ஒன்பது, கார்காலம், கேண்மை, சாரணை, சினேகம், புதுமை, பூமி.
நவயௌவனை - வாலைப்பெண்.
நவரசம், நவரதம் - ஒன்பதுசுவை அவை அற்புதம், இரௌத்திரம், கருணை, குற்சை, சாந்தம், சிங்காரம், பயம், பெருநகை, வீரியம்.
நவரதன் - வீமரதன் புத்திரன்.
நவரத்தினம் - நவமணி.
நவராத்திரம், நவராத்திரி - கன்னிமாசம் சுக்லபக்ஷ பிரதமைமுதல் ஒன்பது ராத்திரி, கிருதயுகத்திலே பக்தியிற் சிறந்த சுகேதன் என்னுமோர் ராசன் தனது இராஜ்யத்தையிழந்து மனைவியோடு வனத்துக்குப் போனபோது அங்கிரசன் என்னு மிருடி

நவராத்திரி பூஜா மஹிமையையும் அதன் முறையையும் உபதேசித்தார். அவ்வரசன் அவ்வாறே நவராத்திரி பூசையை பத்தியோடுசெய்து தனது இராஜ்யத்தை மீளவும்பெற்று வாழ்ந்திருந்தான். அதனால் அதுமுதலாக உலகத்தில் வருஷந்தோறும் அக்காலத்திலே துர்க்கை இலக்ஷ்மி சரசுவதி இம்மூவரையும் முறையே ஒவ்வொருவர்க்கு மூன்றுதினமாக ஒன்பதுநாளும் பூசித்து ஒன்பதாநாள் ஆயுதங்களையும் புஸ்தகங்களையும் வைத்துப் பூசித்து வருகிறார்கள். அடுத்தநாள் விஜயதசமி எனப்படும்.

நவரோசு - இராகம்.

நவலோகசுப்பி - சுதைமண்.

நவலோகம் - ஒன்பதுலோகம்.

நவலோகாங்கம் - காந்தம்.

நவவடிவிறந்தோன் - பரமசிவன், நவவடிவமாவன:-பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவம், என்பன. இவற்றுள் பிரமன் முதல் நான்கும் உருவம், விந்து முதல் நான்கும் அருவம், இடைநின்ற சதாசிவம் அருவுரு [வம்.

நவவது - புதுமணப்பெண்.

நவவஸ்திரம் - புதுத்துணி.

நவவரிகை - புதுமணப்பெண்.

நவவர்ஷங்கள் - பாரதம், கிந்நரம், ஹரி, இளாவருதம், ரம்யகம், ஹிரண்மயம், குரு, பத்ராசுவம், கேதுமாலம் என ஒன்பது வர்ஷங்கள், ஆரியர் இப்பூகோளத்தை ஊர்த்வகபாலம், அதக்கபாலம் என இருகூறிடுவர், அவற்றுள் ஊர்த்வகபாலம் நிலமும், அதக்கபாலம் நீருமாம், நிலமுழுதும் மலை வேறுபாட்டால் ஒன்பது வருஷங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுமேருவை (துருவத்தை) இடையிலுடையது இளாவ்ருத வர்ஷம், அதற்குத் தெற்கேயுள்ளது ஹரிவர்ஷம், அதற்குத் தெற்கேயுள்ளது கிந்நரம், அதற்குத் தெற்கேயுள்ளது பாரதம், ரம்யகம் ஹிரண்மயம், குரு என்னும் மூன்றும் இளாவருதத்துக்கு வடக்கேயுள்ளன, மற்றையவிரண்டும் இருபாரிசத்திலும் உள்ளன.

நவவாயில் - நவத்துவாரம்.

நவவியாகரணம் - சம்ஸ்கிருத விலக்கணமாகிய ஒன்பது வியாகரணம்.

நவவிலாசசபை - அதிதூதர், சத்துவகர், ஞானநிக்கர், தூதர், நாதகிருத்தியர், பத்திச்சுவாலகர், பத்திராசனர், பலவத்தர் பிராதமிகர் என்னுமொன்பது வகைச் சுத்தான்மாக்கள்கூடிய தேவ [சபை.

நவாகம் - பிரதமை.

நவாங்கிசம், நவாமிசம் - இராசியை ஒன்பதாய்ப் பகிருதல், ஒன்பதுபங் [கு.

நவாம்பரம் - கோடிப்புடைவை.

நவான்னம் - புதியதானியம், வெஞ்சோறு. [மழு.

நவியம் - புதியது, கோடாலி, புதுமை.

நவிரம் - ஆண்மயிர், உச்சி, தலை, புன்மை, மயில், மருதயாழ்த்திறம், மலை, வாள்.

நவிரெழுசங்கு - முட்சங்கு.

நவிர் - ஆண்மயிர், கிரணம், மயிர், மருதயாழ்த்திறம், வாள்.

நவிலல், நவிலுதல் - கற்றல், சொல்லல்.

நவிழ்த்தல் - அவித்தல்.

நவிறல், நவிற்சி, நவிற்றல் - சொல்லல்.

நவிற்றுதல் - அதிகாரத்தோடுரைத்தல், சொல்லல்.

நவின்றோர்க்கினிமை - நூலின்பத்தழகி னொன்று அது கற்போனுக்கு திருத்தி படுத்துகை.

நவீனம் - புதுமை.

நவுதல், நவுந்துபோதல் - இற்றுப் போதல், தளரல்.

நவை - இகழ்ச்சி, குற்றம்.

நவோடை - புதுமணப்பெண்.

நவோத்திருதம் - வெண்ணெய்.

நவ்வல் - நாவல்.

நவ்வி - அத்தநாள், அழகு, இளமை, தோணிமான்.

நவ்வியம் - புதியது.

நவ்வு - ஆடு, தோணி, நன்மை.

நவ்வுசவ்வு - இதாகிதம், நயநட்டம்.

நழுக்கம் - ஆழமின்மை, மழுங்கல்.

நழுக்கு - நழுக்குதல், நழுச்சென்னேவல், மழுகுதல்.

நழுங்கல் - மழுங்கல், வழுவுதல்.

நழுவமிழ்து - கூழ்.
நழுவர் - நளவர்.
நழுவல் - வழுவுதல், விலகல்.
நழுவி - பிடிகொடாதவன்.
நழுவுசாதம் - கூழ்.
நழுவுதல் - அழுக்குதல், வழுவுதல்.
நள - ஐம்பதாவது வருஷம்.
நளகூபரன் - குபேரன்மகன், அழகிற்சிறந்தவன், மணிக்ரீவன் தமையன், இவ்விருவரும் கைலாயத்தில் சலக்கிரீடைசெய்துகொண்டிருக்கையில், நாரதர் கண்டு, நீங்கள் நிர்வாணிகளாக நீராடிநிற்குந்தோஷத்தின் பொருட்டு மருதமரங்களாகக் கடவீர்களென்று சபித்தார். அவர்கள் அவ்வாறே பூமியில் நந்தன் வீட்டிற்கருகே இரண்டு மருதமரங்களாகப்பிறந்து நின்று கிருஷ்ணன் தான் கட்டுண்ட உரலையிழுத்துச் சென்றபோது அவ்வுரலால் இடறப்பெற்று வேரோடு சாய்ந்து சாபம் நீங்கிப் பழைய வடிவம் பெற்றார்கள்.
நளத்தம் - சடாமாஞ்சி.
நளத்தி - நளப்பெண்.
நளம் - அகலம், கள்ளிறக்குஞ்சாதி, சாணார், சிற்பநூலின் முப்பத்திரண்டில் ஒன்று, தாமரை.
நளவர் - கள்ளிறக்குஞ்சாதியார், சாணார்.
நளன் - யதுவினது மூன்றாம்புத்திரன், யயாதி பௌத்திரனாகிய அனுவின் இரண்டாம் புத்திரன், நிஷததேசத்தரசனாகிய வீரசேநன்மகன், இவன் மனைவி தமயந்தி, இவன் மகன் இந்திரசேநன், மகள் இந்திரசேனை, நளன் கொடையாலும் நடையாலும் கல்வியாலும் படையாலும் அழகாலும் ஆண்மையாலும் தன்னின் மிக்காரும் ஒப்பாருமில்லாத சக்ரவர்த்தி, இவன் கீர்த்தியை ஓரன்னப்பறவை சொல்லக்கேட்ட தமயந்தி, தன்சுயம்வரத்துக்கு இந்திரன் முதலிய தேவர்கள் வந்திருக்கவும், அவர்களை விரும்பாது நளனைவிரும்பி அவனுக்கே மாலையிட்டுச் சிறிதுகாலம் காமனும் இரதியும்போல இன்புற்று வாழுங்காலத்தில், கலிபுருஷன் பொறாமைகொண்டு, புஷ்கரராஜனை யேவி, நீ நளனோடுசூதாடுவையாயின், அவனைவென்று அவனது இராஜ்யத்தை நீ கவர்ந்து கொள்ளும்படி அநுகூலஞ்செய்வே னென்றான். அவ்வாறே அவன் போய்த் தமையனாகிய நளனோடு சூதாடி இவனது இராஜ்யத்தைக் கவர்ந்துகொண்டு நளனையும் தமயந்தியையும் உடுத்த ஆடைமாத்திரத்தோடு காட்டுக்குப் போகும்படி செய்தான். அங்கே மெல்லியலாகிய தமயந்தி பஞ்சணையையும் வஸ்த்ராபரணங்களையும் களபகஸ்தூரிகளையும் பாங்கியரையும் மற்றைய போகங்களையுமறந்து, கல்லும் முள்ளும் வெயிலும் வருத்தும் வருத்தத்தையும் நோக்காது, நாயகன்மீதுள்ள பேரன்பால், அவன் படுந் துன்பங்களுக்கிரங்கி, அவனது சாயைபோல நீங்காது சஞ்சரிக்கும்போது, ஒருநாளிரவு நளன் அவள் படுந்துன்பங்களைச் சகியாதவனாகி நடுச்சாமத்தில் அவளைத் தனியே விடுத்தகன்றான், அவள் தனியளாய்த் தேடிப் புலம்பியலைந்து பல இடையூறுகளுக் கெல்லாந் தப்பித் தன் தந்தைவீடு சேர்ந்தபின்பு, நளன் தமயந்தியைத் தேடிக்கண்டு, அவளை அழைத்துச்சென்று புஷ்கரனைவென்று முன்போலத் தனது இராஜ்யத்தைப் பெற்று வாழ்ந்திருந்தான். இவன் அறுவகைச்சக்கிரவர்த்திகளிலும்முதலெழுவள்ளல்களிலும் ஒருவன். இவன் சரித்திரத்தைவிரித்துரைக்கும் நூல் நைஷதம், அது தமிழிலும் அப்பெயராலேயே விளங்கும், விசுவகர்மாவுக்குப் பிறந்த ஒரு வாநரன், சேதுபந்தநம் செய்தவன் இவனே. ஒரு தேவதச்சன்.
நளி - அகலம், குளிர்ச்சி, கூட்டம், தேள், நெருக்கம், பெருமை, வெண்சாரணை.
நளிர் - குளிர், நண்டு, பகை, பெருமை.
நளினச்சொல் - பரிகாசப்பேச்சு.
நளினம் - இங்கிதம், தாமரை, திந்தை, நீர், நீலம், பரிகாசம்.
நளினி - இலக்குமி, ஒருபண், தாமரைவா[வி.
நளினை - இலக்குமி.
நளுக்கு - அழுங்கு, ஒரு கிளிஞ்சில்.
நளுத்தை - ஒருபண்.

நளுநொளுத்தல்
நளுநொளுப்பு
நளுநொளெனல் } வழுவி நழுவிப் போதல்.
நளை - ஏலத்தோல்.
நள் - உச்சிப்பொழுது, திருவோணம், நடு நள்ளென்னேவல், மருங்கு, மிகுதிப் பொருட்டும் ஓரிடைச்சொல்.
நள்ளலர் - பகைவர்.
நள்ளல் - நட்டல்.
நள்ளார் - பகைவர்.
நள்ளாறு - ஒரு சிவஸ்தலம்.
நள்ளி - கடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய ஒரு மலைநாட்டரசன். "ஆர்வமுற் றுள்ளிவரு நருலைவு நணிதீரத், தள்ளா தீயுந் தகைசால் வண்மைக் கொள்ளாரோட்டிய நள்ளியும்" எனப் புறநானூற்றிலே பெருஞ்சாத்தனாரால் புகழப்பட்டவன். உறவு, கற்கடகவிராசி, நண்டு.
நள்ளிருள் - நடுரா.
நள்ளிருக்ளுறி - இருவாட்சிப்பூ.
நள்ளு - நடு, நள், மருங்கு.
நள்ளுதல் - நட்புக்கொள்ளுதல்.
நள்ளுநர் - சிநேகிதர்.
நறவம் - அனிச்சமரம், கள், குங்குமமரம், ஞாழல், தேன், வாசனை.
நறவு - கள், குங்குமமரம்தேன், நறுமை, நன்மை, வாசனை.
நறளை - ஒருபூடு, இது சிறுநறளை, புளிநறளை, பெருநறளை என மூவிதம்.
நறா - கள், தேன், வாசனை.
நறியது - நல்லது.
நறிவெங்காயம் - ஒரு வெங்காயம்.
நறு - நறுமை.
நறுக்கு - ஊதுகுழலின் நாக்கு, ஓலையுறுதி, துண்டு, நறுக்கென்னேவல்.
நறுக்குதல் - துண்டித்தல்.
நறுக்குத்திப்பிலி - தேசாவரம்எனும்சரக்கு.
நறுக்கிமூலம் - திப்பிலிக்கட்டை, வெட்டிவேர்.
நறுங்கரந்தை - ஒருகரந்தை.
நறுஞ்சுதை - நல்லபசும்பால்.
நறுதடி - அடைகல்.
நறுநறுத்தல்
நறுநறெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு, வாய்க்குக் கடினமாயிருத்தல்.
நறுநாற்றம் - சுகந்தம்.
நறுநுதல் - பெண், மணங்கமழ்நெற்றி.

நறுநெய் - பசுநெய்.
நறுந்தாளி - வாசனைத்தாளி.
நறுந்தொகை - அதிவீரராம பாண்டியனால் செய்யப்பட்ட ஒரு நீதிநூல்.
நறுமணம் - சுகந்தம்.
நறுமருப்பு - இஞ்சி.
நறுமா - அற்பம், எளியவன், அலட்சியம், வெறுமை.
நறுமுதல் - நறும்புதல்.
நறுமுறுத்தல்
நறுமுறெனல் } முறுமுறுத்தல்.
நறுமை - சுகந்தவருக்கம், நன்மை, வாசனை.
நறும்பிசின் - சாதிசம் எனும் பிசின், ஒருமருந்து.
நறும்புகை - சுகந்தபுகை.
நறும்புதல் - நரும்புதல்.
நறுவியது - நல்லது, வாசனைப்பண்டம்.
நறுவிலி
நறுவீழி
நறுவுளி } ஒரு மரம், அது சிறு நறுவிலி பெருநறுவிலி என இருவகை.
நறை - கள், குற்றம், தேன், நறும்புகை, வாசனை.
நற்கதி - மோக்ஷம்.
நற்கந்தம் - சுகந்தம்.
நற்கருணை - தெய்வீகவிருந்து, நற்கிருபை.
நற்கலிதம் - நற்சங்கலிதம்.
நற்கல் - ஆட்டுக்கல்.
நற்காலம் - சுககாலம், தற்செய்காலம்.
நற்கீரன் - நக்கீரன், ஒருசங்கப்புலவன்.
நற்கீர்த்தி - நல்லபுகழ்.
நற்குணம் - நல்லகுணம்.
நற்குலமேரு - செம்புமலை.
நற்குலம் - உயர்குலம்.
நற்குறி - நல்லடையாளம், நற்குணம்.
நற்கோள் - நற்கிரகம்.
நற்கடினம் - நன்னிமித்தம்.
நற்சங்கலிதம் - ஒன்றுதொடுத்துமுறையே தானங்களைநிகிர்பது.
நற்சமயம் - நற்றருணம்.
நற்சரக்கு - உயர்ந்தசரக்கு, பழுதற்றசரக்கு.
நற்சா - சுகமரணம்.
நற்சாங்கம் - சாலம்பாஷாணம், நல்லடையாளம்.
நற்சாந்து - சுண்ணச்சாந்து.
நற்சாரி - நவசாரம்.
நற்சாளை - ஒருமீன்.
நற்சித்தன் - இராசவத்தனக்கல்.

நற்சிலை - கருங்கல்.
நற்சிரகம் - கறிச்சீரகம்.
நற்சீர் - நன்னிலை.
நற்செங்கல் - மஞ்சட்காவிக்கல்.
நற்செய்தி - சுகசெய்தி.
நற்பாகுன்றி - சிந்துலவணம்.
நற்பலம் - வெட்பாலை.
நற்பிரியம் - ஒருசெடி, மிகுபட்சம்.
நற்புத்தி - நற்போதகம்.
நற்றத்தனார் - அகஸ்தியரின்சிஷர்களில் ஒருவராகிய நற்றம் எனும் ஒரிலக்கண நூலாசிரியர்.
நற்றமிழ் - இனியதமிழ், சுத்ததமிழ்.
நற்றாய் - பெற்றதாய்.
நற்றிணை - சங்கப்புலவர்செய்த எட்டுத்தொகைநூல்களுளொன்று, பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்தும் கபிலர் முதலியோரால் பாடப்பட்ட ஏனைய நானூறுபாக்களுமுடையது, இந்நூலைத் தொகுப்பித்தோன் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி.
நற்றுணையப்பர்-திருநன்னி பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
நற்றுளி - அத்திப்பிசின், அத்திமரம்.
நனந்தம் - புன்கு.
நனந்தலை - உச்சி, நடு.
நனவு - அகலம், இடம், சாக்கிரம், தெளிவு, பரப்பு, மயக்கநீங்கல்.
நன்காடு - சுடுகாடு.
நனா - நனவு.
நனி - நெருக்கம், பெருமை, மிகுதி.
நனை - கள், தேன், நனையென்னேவல், பூமொட்டு.
நனைதல் - ஈரலித்தல்.
நனைத்தல் - ஈரமாக்கல்.
நனைப்பு - ஈரமாக்குகை.
நனையாவிருட்டி - கொட்டைப்பால்.
நனைவிட்கூ - ஓதமறுபூமி.
நனைவு - ஈரம், நனைதல்.
நன்கு - அழகு, இலாபம், நன்மை, மிகுதி.
நன்குணர்தல் - கற்றறிதல்.
நன்கொடை - உபகாரக்கொடை.
நன்செய் - நெல்விளைபுலம்.
நன்சொல் - இன்சொல், நற்புத்தி.
நன்பகல் - நண்பகல்.
நன்பன் - சணல்.
நன்மச்சான் - நல்லம்மான்பிள்ளை.
நன்மச்சினி - நல்லம்மான்புத்திரி.
நன்மருகன் - சொந்தமருமகன், அதாவது ஒருவனுக்கு சகோதரிமகன் அல்லது ஒருவளுக்கு சகோதரன்மகன்.
நன்மருகி - சொந்தமருமகள், அதாவது ஒருவனுக்கு சகோதரிமகள். அல்லது ஒருவளுக்கு சகோதரன்மகள்.
நன்மணம் - மணப்பூரணம்.
நன்மாமன் - நல்லம்மான்.
நன்மாமி - நல்லத்தை.
நன்மார்க்கம் - உபசாரம், சன்மார்க்கம், நன்னெறி.
நன்முகம் - தாராளம்.
நன்மை - அதிட்டம், உதவி, உபகாரம், சன்மார்க்கம், நன்கு, பிரயோசனம்.
நன்மைகடைப்பிடித்தல் - தயாவிருத்தியெட்டினொன்று அது செய்ந்நன்றி மறவாதிருத்தல்.
நன்மைத்துனன்-நல்லம்மான்புதல்வன்
நன்மைப்பகுதி - நல்வினைப்பயன்.
நன்மைப்படுதல் - இருதுவாதல், பலன்படுதல்.
நன்மைப்பேறு - நன்மைப்பகுதி.
நன்மையானபெண் - இருதுவானபெண்.
நன்மொழி - தேவபாணி.
நன்றி - உபகாரகுணம், நன்மை.
நன்றிகேடு - செய்ந்நன்றியில்லாமை.
நன்றிகோறல்-செய்ந்நன்றிகெடுத்தல்.
நன்றிமறத்தல் - செய்ந்நன்றியயர்தல்.
நன்றியறிதல் - செய்ந்நன்றியயர்தல்.
நன்றீனம் - செய்ந்நன்றிகேடு.
நன்று - சுகம், நல்லது, நன்மை, பெருமை, வாழ்வு.
நன்னடை - நல்லொழுக்கம்.
நன்னயம் - உபசாரச்சொல், நன்மை, நினைவு.
நன்னயன் - எண்ணம், நயப்பு, முகமன்.
நன்னருக்கல் - அற்பநோ.
நன்னர் - நன்மை.
நன்னலம் - அழகு, சிறந்தகாலம், நயப்பு, மேன்மை.
நன்னன்-விச்சிக்கோவினது பூர்வமரபிலுதித்தவன் பல்குன்றக்கோட்டமென்னும் ஊரையாண்டவன், மலைபடுக

டாம் என்னும் பிரபந்தத்தைப்பெற்ற கன்னன் இவன் மகன்.
நன்னாகனார் - புறநானூற்றிலே கரும்பனூர்கிழானைப்பாடிய ஒருபுலவன்.
நன்னாரி - பாற்கொடி.
நன்னரி - சிற்றுருவானது. [செய்.
நன்னிலம்-ஒருசிவஸ்தலம்,நற்றரை,நன்
நன்னிலை - உலகம், சுகம், தவம், நல்லொழுக்கம்.
நன்னிறம் - வெண்மை.
நன்னுதல் - நறுக்குதல், பெண்.
நன்னூல் - நல்லநூல், பவணந்திமுனிவர்செய்த இலக்கண நூல்.
நன்னெருக்கல் - நன்னருக்கல்.
நன்னெறி - துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளால்செய்யப்பட்ட ஒரு நீதிநூல், நல்வழி.

நா

நா - அயலார், அயல், சுவாலை, திறப்பு, மணிமுதலியவற்றினாக்கு, நடு, நாக்கு, பொலிவு.
நாககங்கணன் - சிவபெருமான்.
நாககர்ணன் - சிவபிரான்.
நாககர்ணம் - செவ்வாமணக்கு.
நாககள்ளி - கள்ளியிலோர்பேதம்.
நாககற்பம் - செவ்வீயம்.
நாககன்னிகை - நாகலோகத்துப்பெண்.
நாககெந்தி - நேர்வாளம்,வஞ்சிக்கொடி.
நாகக்குவடு - செம்புமலை.
நாகசம் - சிந்துரம், வங்கம்.
நாகசம்பவம் - செவ்வீயம்.
நாகசரம் - ஒருகுழல்.
நாகசாபம் - நாகத்தைக் கொல்வதினால் வருஞ்சாபம்.
நாகசிகுவிகை - சிவந்தபாஷாணம்.
நாகசின்னம் - ஒருகுழல்.
நாகசீவனம் - அத்தநாகம்.
நாகசுரம் - ஒருகுழல்.
நாகசுவந்தை - நாகுலி.
நாகசேதகன் - இந்திரன்.
நாகச்சிலைக்கல் - சிலாநாகக்கல்.
நாகணம் - நேர்வாளம்.
நாகணவாய்
நாகணவாய்ப்புள் } ஒருபட்சி.
நாகதத்துவம்-நிரீதத்துவங்களிலொன்று.
நாகதந்தகம் - மூலையாணி.
நாகதந்தம் - பாம்பின்பல், மூலையாணி, யானைத்தந்தம்.
நாகதந்தி - ஒருமரம், வேசை.
நாகதமனி - ஒருமரம்.
நாகதம்பிரான் - நாகதேவன்.
நாகதலம் - வாசுகிநாகராஜனுக அபிஷேகம்பண்ணப்பட்ட இடம்.
நாகதாளி - ஒருவகைக்கள்ளி.
நாகதாளிக்கள்ளி - ஒருமரம்.
நாகதீபம் - ஐந்தலைவிளக்கு.
நாகதேவன் - ஆதிசேடன்.
நாகதேவி - நாகப்பாம்பு.
நாகதேனி - பெருமருந்து.
நாகதைவிகை - நசமிதிதி.
நாகத்திசை - மேற்குதிசை.
நாகத்தின்பாம்பு - பூநாகம்.
நாகநாடு - பவணலோகம்.
நாகநாதன் - ஆதிசேடன், இந்திரன்.
நாகநாயகபுரோகிதன் - பிருகற்பதி.
நாகநாயகன் - நாகநாதன்.
நாகநந்தி - நாகணம்.
நாகபடம் - ஒருகாதணி, பாம்பின்படம்.
நாகபடலம் - கண்ணோயுளொன்று.
நாகபட்டினம் - ஒரூர்.
நாகபந்தம் - நாகபெந்தம், ஒரு சித்திரக்
நாகபந்து - அரசமரம். [கவி.
நாகபலன் - வீமன்.
நாகபலை - நாகமல்லி.
நாகபாசம் - நாகரூபமான ஒருகயிறு, வருணனாயுதம்.
நாகபாஷாணம் - ஒருபாஷாணம்.
நாகபிரம்பு - ஒருபிரம்பு.
நாகபூஷணன் - சிவபிரான்.
நாகபெந்தம்- ஒருமிறைக்கவி, அது இரண்டுபாம்பு தம்முட் பிணைவதுபோல இரேகைகீறியொரு நேரிசைவெண்பாவும் ஒரின்னிசை வெண்பாவும் எழுதியிரேகையிற் சந்திகளினின்ற எழுத்து மற்றையிடங்களினுமுறப் பாக நிற்கப்படுவது.
நாகப்பகை - கருடன்.
நாகப்பச்சை - ஓரிரத்தினம்.
நாகப்பற்று - அத்தநாகப்பிடிப்பு.

நாகப்பிரதிட்டை - நாகவிக்கிரகப்பிரதி [ட்டை.

நாகப்பூச்சி - நாக்குளிப்பூச்சி.

நாகமணி - நாகரத்தினம்.

நாகமல்லம் - ஐராவதம்.

நாகமல்லி } அனிச்சமரம், ஒருவ
நாகமல்லிகை } கைப் புட்பம்.

நாகமாதா - துளசி.

நாகமுக்கியர் - கத்துருவை காசிபனுக்குப் பெற்றபுத்திரர். இவர் நாகராயினர், முக்கியர், முதன்மையானவர், அவர், சேஷன், வாசுகி, ஐராவதன், தக்ஷகன், கார்க்கோடகன், தனஞ்சயன், காளியன், மணிநாகன், முதலாயினோர்.

நாகமுத்து - பாம்பின்கல்.

நாகமோடி - ஒருபுடவை.

நாகம் - ஆகாயம், ஈயம், ஒலி, ஒருகரணம், ஒருபாம்பு, ஒருமரத்துமரம், சந்தகம், கருங்குரங்கு, காரீயம், குரங்கு, ஞாழல், துத்தநாகம், தேவலோகம், நற்புடவை, நாகபாஷாணம், நாகப்பச்சை, பாம்பு, புன்னைமரம், மலை, யானை.

நாகம்பூ - ஒருமருந்து

நாகம்மா - நாகதேவி.

நாகரகம் - தேன்றோடை.

நாகரகன் - கள்வன், கைச்சித்திரவிவேகி.

நாகரங்கம் - தேன்றோடை.

நாகரத்தினம் - நாகமணி.

நாகரம் - இளைப்பு, ஒருபாஷை, ஒருவண்டு, சுக்கு, தேன்றோடை, விருப்பு.

நாகரவண்டு - பொன்வண்டு.

நாகரன் - கணவனின்சகோதரன், சிறந்தோன், நகரத்தான்.

நாகராகம் - ஒருபண்.

நாகராசன் - அனந்தன்.

நாகரி - குருக்கத்தி.

நாகரிபு - கருடன். [ம்.

நாகரிமுனை - மதுரைக்குச்சேர்ந்தஓரிட

நாகரிகம் - கண்ணோட்டம், சாதுரியம், பிலுக்கு விநோதம்.

நாகரிகம்விடுதல் - நாகரிகம்பேசல்.

நாகரிகர் - காமுகர், நகரத்தார், சதுரர்.

நாகரு - குருக்கத்தி.

நாகருகம் - தேன்றோடை.

நாகரேணு - செவ்வியம்.

நாகரை - ஒருபூடு.

நாகர் - சற்பசாதியார், தேவர்.

நாகலதை - ஆண்குறி.

நாகலோகம் - கீழேழுலகிலொன்று, தேவலோகம்.

நாகல் - நாவல்மரம்.

நாகவம் - பாம்புக்காணம்.

நாகவடம் - ஒருகாதணி.

நாகவராளி - ஒருபண்.

நாகவல்லி - கலியாணப்பூர்த்திச்சடங்கிலொன்று, வெற்றிலைக்கொடி, வெற்றிலை.

நாகவல்லிதளம் - வெற்றிலை.

நாகவள்ளி - ஒருகிழங்குக்கொடி, வெற்றிலைக்கொடி.

நாகவாடை - செம்பூறல், துத்தநாகப்பிடி [ப்பு.

நாகவாய் - ஒருசடைச்சற்கருவி.

நாகவாரிகம் - இராசயானை, கலுழன், [மயில்.

நாகவாரிகன் - யானைப்பாகன்.

நாகவீதி - பால்வீதி மண்டலம். தருமன் மகள். இவள்தாய் யாமி, இவள்நக்ஷத்ரவீதியின் உத்தரபாகத்துக்கு அபிமாந தேவதை.

நாகன் - தசவாயுவிலொன்று, அது கீட்டலும் முடக்கலும் கிளக்கலுஞ்செய்விப்பது.

நாகன்றேவனார் - கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்.

நாகாசனன் - கருடன்.

நாகாதிபன் - அனந்தன், இந்திரன், இமயமலை, இராசயானை, ஐராவதம், மலையரசன், மேருகிரி.

நாகாத்திரம் - நாகபாணம்.

நாகாந்தகன் - இந்திரன், கருடன், சிவன், விட்டுணு.

நாகாபரணம் - நாகருபானஓராபரணம், சிவனணியிலொன்று.

நாகாபரணன் - சிவன்.

நாகாம்பிகை - கிருஷ்ணதேவராயன்தா [ய்.

நாகாயுதம் - ஒரு படைக்கலம்.

நாகாராதி } கருடன், தேவேந்திரன்.
நாகாரி }

நாகாலயம் - தேவகோயில், பாதலம்.

நாகிணி - வஞ்சிக்கொடி, வெற்றிலை.

நாகு - இளமரம், இளமை, எருமை, சங்கு, நத்தை, பசி, மரையிவற்றின்கன்னிப்பெண், நத்தை, புற்று, பெண்மீன், மரக்கன்று, மலை.

நாகுலி - அரத்தை, கீரிபுரண்டான்பூடு.

நாகூர் - ஓரூர்.
நாகேசுரம் - ஒருசிவஸ்தலம், சிறுநாகப்பூ.
நாகேசுவரன் - ஆதிசேடன்.
நாகேந்திரன் - நாகாதிபன்.
நாகை - நாகப்பட்டினம், நாகூர், வெற்றிலைக்கொடி.
நாகோதரம் - மார்க்கவசம்.
நாக்கப்பாம்பு } நாங்கூழ்.
நாக்கப்பூச்சி }
நாக்கரளை - நாவில்வரும் ஒருநோய்.
நாக்கனிடுங்கூர்மை - செந்தலவணம்.
நாக்கியாக்கிரம் - ஒரு முட்செடி
நாக்கிரந்தி - ஒருநோய்.
நாக்கு - கதிர், திறப்பு முதலியவற்றிறு
நாக்குத்தவறுதல்-சொற்றவறுதல் [நா.
நாக்குப்புரட்டு - பொய்.
நாக்குப்புற்று - ஒருநோய்.
நாக்குப்பூச்சி - வயிற்றுமலப்பையிலுள்ள பெரும்புழு.
நாக்குமீன் - ஒருமீன்.
நாக்குவளைத்தல் - இகழ்தல்.
நாக்குவாங்கல் - நாக்கையிழுத்தல், வில்லங்கப்படுத்தல்.
நாக்குவிழுதல்-பேசநாவெழாதிருத்தல்.
நாக்குழிஞ்சான் - ஒருசெடி.
நாக்குளிப்பாம்பு } நாகப்பூச்சி.
நாக்குளிப்பூச்சி }
நாக்குறுதி - சொல்வன்மை.
நாக்கை - நாக்குளிப்பூச்சி.
நாங்கள் - நாம்.
நாங்குதல் - சோம்புதல், தைரியங்குன்றல்.
நாங்குழு } நாக்கப்பூச்சி.
நாங்கூழ் }
நாசகன் - அழிப்பவன்.
நாசகாரி - கேடுசெய்வோன்.
நாசகாலம் - அழிவுகாலம்.
நாசஞ்சியம் - போக்கல்.
நாசமிலி - சிவபெருமான், என்றுமுள்ளவன்.
நாசம் - அழிவு, மரணம், விடுதல்.
நாசயோகம் - மரணயோகம்.
நாசரகிதன்-அழிவற்றவன், சிவபிரான்.
நாசனம் - நாசம்.
நாசன் - அழிப்போன், நமன்.
நாசாக்கிரம் - நாசிநுனி.
நாசாதக்கணம் - வலமூக்கு.
நாசாபுடம் - மூக்குத்தொளை.
நாசாவாமம் - இடமூக்கு.
நாசி - சலதாரையின்வாய், மூக்கு, மூக்குத்துளை, மேல்வாய்தற்படி.
நாசிகாக்கிரம் - மூக்குநுனி.
நாசிகாபீடம் - நாசிக்குள் வளருமோர் நோய்.
நாசிகாமலம் - மூக்குச்சளி.
நாசிகேது - அக்கினி.
நாசிகை - கதவுநிலையின் மேற்சட்டம், மூக்கு.
நாசிதாரு - மேல்வாய்தற்படி.
நாசித்தல் - நசித்தல்.
நாசித்துவாரம் - மூக்குத்துளை.
நாசிப்பொடி - மூக்குத்தூள்.
நாசுகம் - பீர்க்கு.
நாசுவன் - அம்பட்டன்.
நாசியம் - நாணயக்கயிறு, மூக்காங்கயிறு.
நாசோற்பத்தி - அழிந்துபிறப்பது.
நாச்சிமார் - சத்ததேவிகள்.
நாஞ்சிநாடு - மலையாளம்.
நாஞ்சில் - கலப்பை, மதிலுறுப்பு.
நாஞ்சிற்படையோன் - பலபத்திரன்.
நாடகக்கணிகை - நாடகசாலைப்பெண்.
நாடகசாலை - கூத்துப்பயிலிடம், நாடகக்கணிகை.
நாடகத்தமிழ் - நாடகவழங்குந் தமிழ், அது முத்தமிழிலொன்று.
நாடகத்தி - ஆடுமாலைப்பெண், கூத்தி, கூத்து, விளையாடும்பெண்.
நாடகப்பெண் - நடனப்பெண்.
நாடகமடித்தல் - ஆடுமாலைத்தனம்பண்ணுதல்.
நாடகமாடுதல் - ஆடுமாலைத் தனம்பண்ணுதல், கூத்தாடுதல்.
நாடகம் - கலைஞானமறுபத்து நான்கில் ஒன்று, அது கதை தழுவிவருங்கூத்து, கூத்துப்பாட்டு, நடனவீதி.
நாடகர் - கூத்தர்.
நாடகாங்கம் - அவிநயம்.
நாடகாங்கனை - வேசை.
நாடகியர் } கூத்தர்.
நாடகீயர் }
நாடடிப்படுத்தல்-தேசத்தைக்கீழ்ப்படுத்தல்.
நாடன்-கார்த்திகைநாள், சோழன்.
நாடன்பருத்தி - ஒருசெடி.
நாடா - ஒருகயிறு, நாளுழி.
நாடான்-சாணுருக்குரியபட்டப்பெயர்.

நாடி - ஆண்மயிர். இருபத்தினாலு கிமிடங்கொண்டது, இலேகரம்பு, உட்டுளை, தாடி, தாது, துவாளிப்பு, நரம்பு, நாசி, நாழிகை, பூவிற்றுள், மூக்கு, யாழி நரம்பு.
நாடிகேளம் - நாரிகேளம்.
நாடிக்கிரந்தம் - பதினெந்துநாடிக் கிரந்தங்களுள அவை சூரியநாடி, சந்திரநாடி, குசநாடி, புதநாடி, சுக்கிரநாடி, குருநாடி, சாமிநாடி, இராகுநாடி, கேதுநாடி, சர்வ சங்கிரகநாடி, பாவநாடி, துருவநாடி, சர்வநாடி, சுகநாடி, தேவிநாடி, என்பன. இந்நாடிக்கிரந்தங்களிலே உலகத்திலே யுள்மாந்தர் பெரும்பாலர்க்கும் ஜாதகங்களும்பலன்களுங்கூறப்பட்டுள்ளன.
நாடிசுத்தி - யோகத்திற்குத் தாதுசுத்திபண்ணல்.
நாடிதாரணை - நவதாரணையிலொன்று.
நாடிநரம்பு - நாடியோட்டநரம்பு.
நாடிபார்த்தல் - நாடிக்குறியறிதல்.
நாடிப்பயிற்சி } தாதறியுமறிவு.
நாடிப்பரிட்சை }
நாடிமண்டலம் - ஆகாயசமரேகை.
நாடியொடுக்கம் - நாடித்தூக்கம்.
நாடியோடுதல் - நாடியியங்குதல்.
நாடிவிதி - நாடித்திட்ட மறிவிக்குநூல்.
நாடிவிழுதல் - நாடியொடுங்கல்.
நாடு - இடம், உலகம், ஊர், நாடென்னேவல், பக்கம், பூமி.
நாடுதல்-தேடுதல், விசாரித்தல், விரும்புதல்.
நாடுபடுதல் - நாட்டார் வசப்படுதல்.
நாடுபடுதிரவியம் - நாட்டிலுண்டாகுந்திரவியம், அது கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழை.
நாடுரி - நாவிரி.
நாடேயன் - நாடகக்கணிகைபுத்திரன்.
நாடோடி - நிலையற்றவன்.
நாடோடிச்சொல் } வழக்கச்சொல்.
நாடோடிப்பேச்சு }
நாடோறும் - நாள்தோறும்.
நாடோன் - நாடகக்கணிகைபுத்திரன்.
நாட்கடத்துதல் - நாள்விடுதல்.
நாட்கணக்கு - அன்றாடகக்கணக்கு.
நாட்கால் - மங்கலப்பந்தருக்கு முதனாட்டுங்கப்பு.

நாட்குறித்தல் - நன்முகூர்த்த நியமித்தல்.
நாட்கூலி - அற்றைக்கூலி.
நாட்கொள்ளுதல் - புதிதாய்த் தொடங்கல்.
நாட்செலவு - அன்றன்றுசெல்லுஞ்செலவு, நாட்செல்லுதல்.
நாட்டமிலி - குருடன், அந்தகன்.
நாட்டமைதி - நாட்டுச் சிறப்பிற் குடையன. அவை குறும்பின்மை, செங்கோல், செல்வம், செழிப்பு, நோயின்மை, விளைநிலம்.
நாட்டம் - அசைவு, ஒருபண், கண், நோக்கம், வாள், விருப்பம்.
நாட்டல் - ஆடல், நாட்டுதல்.
நாட்டவத்தனம் - நாட்டுப்பாங்கு.
நாட்டவன் - நாட்டான்.
நாட்டா - ஊர்ப்பசு.
நாட்டாசாரம் - உலகவொழுக்கம்.
நாட்டாண்மை - ஊரதிகாரம்.
நாட்டார் - ஊரார்.
நாட்டியக்காரன் - கூத்தன்.
நாட்டியசாலை - நடநசாலை.
நாட்டியப்பிரியன்-சிவன், நடனப்பிரியன்.
நாட்டியம்-கருத்து,குறிப்பு,கூத்து.
நாட்டு - நாட்டென்னேவல், தாபிப்பு.
நாட்டுக்குற்றம் - ஊருக்குத் தீது செய்வன. அவை கள்வர் கிளை தன்னரசு, தொட்டியர், நட்டம், பன்றி, பெருமழை, மிகுகாற்று, மிகுமழை, யானைவிட்டில் வேற்றரசு.
நாட்டுச்சார்பு - மருதநிலம் அது நாட்டைச் சார்ந்திருப்பது.
நாட்டுச்சிறப்பு - நாட்டுவளம்.
நாட்டுதல்-தாபித்தல்,நடத்தல்,நிறுத்தல்
நாட்டுப்புரம் - பட்டிக்காடு.
நாட்டுப்பெண் - மருமகள்.
நாட்டுப்போக்கு - நாட்டுக்கடுத்தவிதம்.
நாட்டுவழக்கம் - தேசநடை.
நாட்டுவளப்பண் - நாட்டின்சீர்.
நாட்டுவளம் - நாட்டுச்சிறப்பு.
நாட்டுவெள்ளரி - ஒரு வெள்ளரி.
நாட்டை - ஒருபெண்.
நாட்படுதல் - நாட்செல்லுதல்.
நாட்பட்டது - நாட்சென்றது.
நாட்பணிவிடை - அன்றாடகவேலை,நன்முகூர்த்தத்திற் செய்யும் வேலை.
நாட்பார்த்தல் - சுபதினம்பார்த்தல்.

நாட்பு - ஞாட்பு, வலி.
நாட்பூ - அன்றலர்ந்தபூ.
நாட்பொருத்தம் - சென்ம நட்சத்திரப் பொருத்தம் இது தசப்பொருத்தத் தொன்று.
நாணகம் - நாணயம்.
நாணக்கேடு - வெட்கமின்மை.
நாணப்படுதல் - அடங்குதல், மதித்தல், வெட்கித்தல்.
நாணம்-அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம் இது மடவுக்குணம் நான்கில் ஒன்று.
நாணயகாரன் - கிதானி.
நாணயங்குத்துதல் - மிருகங்களுக்குமூக்குத் துளைத்தல்.
நாணயங்குலைத்தல் } மானமழிதல்.
நாணயங்கெடுதல் }
நாணயசில்லவம் - அவமானம்.
நாணயச்சரக்கு - விலைச்சாமான்.
நாணயஞ்செலுத்துதல்-உண்மை தவறாமனடத்தல், பேச்சை யுண்மைப்படுத்தல்.
நாணயத்தப்பு - நாணயப்பிழை.
நாணயம் - உண்மை,உயர்வு,உரோசம்,கட்டுப்பாடு, காசுநாணயம், கிதானம், நேர்மை,வழக்கம்,வாக்குப்பிசகாமை.
நாணயவான் - உண்மைதவறாதவன், நிதானி.
நாணல் - ஒருபுல், நாணுதல்.
நாணவந்தான் - நாணுவம்.
நாணறை - நாணற்றவன்.
நாணுங்கள்ளி - ஒருகள்ளி.
நாணி - நாணமுடையாள், வின்னாரி.
நாணிக்கண் புதைத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.
நாணித்தல் - நாணுதல்.
நாணிலி - வெட்கமில்லாதவன்.
நாணுகம் - குதிரை.
நாணுதல்-அடங்குதல்,மதித்தல், வெட்குதல்.
நாணுவத்தான் }
நாணுவம் } நாகணவாய்ப்புள்.
நாணுவான் }
நாணேறிடுதல் } வில்வளைத்தல்.
நாணேற்றுதல் }
நாணயம் - நாணயம்.
நாண் - கயிறு,நாணென்னேவல், வின்னாண், வெட்கம்.
நாண்மலர்-அன்றுபூத்தமலர், புதுமலர்.
நாண்மீன் - நட்சத்திரம்.
நாண்முகப்புல் - ஒருபுல்.
நாதகிருத்தியர் - கடவுளது கிருத்தியத்தை அவனருளாற்புரிபவர்.
நாதக்குடம் - சங்கு.
நாததத்துவம் - நாதம்.
நாதம் - அப்பிரகம், இந்திரியம், ஒலி, நாணக்கயிறு, பாதிவட்டம்.
நாதரூபம் - சிவனதுருவினொன்று.
நாதவத்தம் - பெருநெருஞ்சில்.
நாதன்-அரசன்,அருகன்,எப்பொருட்குமிறைவன், கடவுள்,கணவன்,குரு, சிவன்,தலைவன்,முதிவன்,முத்தோன்.
நாதாக்கள் - சுத்தவான்கள், பெரியோர்.
நாதாங்கி - கதவுநிலைச்சங்கிலி, பூட்டுக்களினொருறுப்பு.
நாதாந்தசோதி - கடவுள்.
நாதாந்தம் - ஞான நெறிகளினொன்று, பஞ்சகருத்தாவி லொருவன்.
நாதாந்தவிளக்கம் - ஒருநூல்.
நாதாந்தன் - சிவபெருமான்.
நாதாந்தி - பொன்னிமிளை.
நாதி ஒருபெருங்காயம்,ஜாதி, பங்காளி.
நாதித்தல் - ஒலித்தல்.
நாதேயம் - இந்துப்பு,செந்தில், நதியிற்பிறப்பன, நீலாஞ்சனம்.
நாதேனி - மணித்தக்காளி.
நாத்தழும்பல் } நாவப்பியாசப்பட்டிருத்தல்.
நாத்தழும்பேறுதல் }
நாத்தனார் - கணவன், சகோதரி.
நாத்தாங்கி - இலேக்கள்ளி, நாதாங்கி.
நாத்தாங்கிப்பேசுதல் - எண்ணிப்பேசுதல், நாவெறத்துப்பேசல்.
நாத்தி - கணவன்சகோதரி,தாழ்வாரம், நாசம்.
நாஸ்தி - இன்மை.
நாஸ்திகமதம் - சூனியவாதம்.
நாஸ்திகம் - தெய்வமின்மை.
நாஸ்திகன் - சூனியவாதி.
நாத்திரம் - அதிசயம், புகழ்.
நாத்திரன் - சிவபிரான்.
நாத்தூண் - மைத்துனி.
நாந்தகம் - கிருஷ்ணன்வாள், வாள்.
நாந்தல் - ஈரம்.
நாந்தி - ஒருவனைப்புகழ்ந்து பாடியகவி, பதினறுகருமத்தொன்று.
நாந்திகான் } மங்கலப்பாடகன்.
நாந்திவாதி }
நாந்துதல் - நனைதல்.
நாந்தெனி - ஒருபூடு.

நாபம் - நாபி.

நாபாகன் - இக்ஷுவாகு தம்பியாகிய திஷ்டன்புத்திரன். இவன் தனது க்ஷத்திரியத் தொழிலை மேற்கொண்டொழுகி வைசியனுகிச் சுப்பிரபையென்னும் வைசியப்பெண்ணையே மணம்புரிந்தவன். இவன்புத்திரன் ஜலந்தரன். இக்ஷுவாகு தம்பிகளுள் மற்றொருவனுகிய நபகன்புத்திரன். இவன் அம்பரீஷன் தந்தை. சுகோத்திரன்புத்திரன். அம்பரீஷன்.

நாபி - ஆக்கினீத்திரன்புத்திரர்ஒன்பதின்மருளொருவன், இவன் பங்காக ஜம்புத்வீபங் கிடைத்தது. இவன் பாரி மேருதேவி புத்திரன் ரிஷபன் (பரதகண்டங் காண்க.) கஸ்தூரி, கொப்பூழ், வற்சநாபம்.

நாபிக்கமலம் - கொப்பூழ்.

நாபிக்கொடி - கொப்பூழ்க்கொடி.

நாபிசன், நாபிசன்மன் } பிரமன்.

நாபிசூத்திரம் - நாபிக்கொடி.

நாபிதன் - அம்பட்டன்.

நாபித்தானம் - கொப்பூழ்.

நாபிநாடி - உந்திக்கொடி.

நாபிநாளம் - கொப்பூழ், நஞ்சுக்கொடி.

நாபீலம் - கடிதடகம், கொப்பூழ்க்குழி.

நாபீலை - உத்தமஸ்திரீ.

நாப்பண் - இடை, தேர்நடு, நடு, யாழினுறுப்பு.

நாப்பு - எத்து, பரிகாசம்.

நாப்புற்று - நாவறளை.

நாப்பொடிதல் - நாவுலர்தல்.

நாம - பயம்.

நாமகரணம் - பெயரிடுதல்.

நாமகள் - சரச்சுவதி, சரஸ்வதி.

நாமக்கட்டி - விட்டுணுபத்திக்காரர்போடுமோர் சாந்துக்கட்டி.

நாமக்காரர் - வைணவர்.

நாமக்குச்சரி, நாமக்குச்சவி } ஒருவகைப்புடைவை.

நாமசங்கிதை - சிற்பநூன்முப்பத்திரண்டினென்று.

நாமசாஸ்திரம் - நிகண்டு.

நாமசேடம் - மரணம்.

நாமச்சி - நத்தை.

நாமஞ்சாத்துதல் - நாமந்தரித்தல்.

நாமடந்தை - சரச்சுவதி.

நாமதாரணை - நவதாரணையி னென்று, அதுபூரணமாய்க்கடவுளைத்தியானித்தற்குக் கற்பித்த நாமதியானத்தினுல் அக்கடவுளை யெல்லைப்படுத்தல்.

நாமதாரி - நாமந்தரித்தோன், விட்டுணுபத்திக்காரன்.

நாமதேயம் - பெயர்.

நாமத்துத்தி - ஒருபூடு.

நாமப்பொருத்தம் - பெயர்ப் பொருத்தம்.

நாமமாலை - ஒருபிரபந்தம், அது அகவலடியுங் கலியலடியும் வந்துமயங்கிவஞ்சிப்பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

நாமமிடுதல் - நாமக்குறிதீட்டுதல், பெயர் கொடுத்தல்.

நாமம் - அதிசயம், இணக்கம், ஐயம், கோபம், நிச்சயம், நிந்தை, நினைப்பு, மாய்மாலம் அவைகளைக் காட்டுஞ் சொல், கீர்த்தி, அம்பை, நிறைகோலினடு, பெயர், அது எண்குற்றத்தொன்று, வைஷ்ணவரிடு நாமம்.

நாமராசி - இராசிப்பொருத்தம், பெயர்ப் பொருத்தம்.

நாமவந்தம் - பெருநெருஞ்சில்.

நாமவெகுண்டம், நாமவைகுண்டம் } அம்பை.

நாமறல் - பெருமற்றுப்போதல், முற்றுமறல்.

நாமாது - சரச்சுவதி.

நாமபாரதம் - சிந்தனை.

நாமிதம் - வளைவு.

நாமுடி - நாநுனி.

நாமோச்சாரணம் - நாமவுச்சரிப்பு.

நாம் - அச்சம், பால்பகாவுயர்திணைத்தன்மைப் பன்மை.

நாம்பல் - இளைத்தமிருகம், இளைத்தல்.

நாம்பன் - இளவெருது.

நாம்பு - நாம்பென்னேவல், மெலிவு.

நாம்புதல் - மெலிதல்.

நாயகசுரம் - நாகசின்னம்.

நாயகச்சி, நாயகத்தி } தலைவி, தேவி, மனைவி.

நாயகத்வம் - தலைமை.

நாயகப்பானை - முதலுலைகட்டிப் பொங்கும்பானை.

நாயகமணி - மணிமாலை நடுவிலே கோத்திருக்கும் பெருமணி.

நாயகம் - ஆளுகை, கிரந்திநாயகம், சன்னிநாயகம், தலைமை, மாலையின் பிரதானமணி. [தல்.
நாயகம்பண்ணுதல் - முதன்மைசெலுத்
நாயகவளந்து - பொங்கல்செய்வோர்முதலிலைவைக்கும் பானை.
நாயகன் - அரசன், எசமான், எப்பொருட்கு மிறைவன், சிவபெருமான், நடத்துவோன், பாளயக்காரன்.
நாயகாதிபன் - அரசன்
நாயகி - எசமாட்டி, பார்வதி, பெருமையிற் சிறந்தவள், மனைவி.
நாயகிமேனி - மரகதப்பச்சை.
நாயக்கன் - சேனைத்தலைவன், தெலுங்கருளோர் வகையான்.
நாயரஞ்சி - நாயுருவி.
நாயனார் } அரசன், எசமான், ஐயனார், நாயன் } கடவுள், சிவபிரான, பெருமையிற் சிறந்தோன்.
நாயன்மார் - தலைவர், துறவோர், பெருமையிற் சிறந்தோர்.
நாயாட்டம் - உலைச்சல், பேயாட்டம்.
நாயில் - ஞாயில்.
நாயிறு - ஒருகிழமை, சூரியன், ஓரூர்.
நாயிறுதிரும்பி - பொழுதுவணங்கி.
நாயிறுவணங்கி - கொழிஞ்சி.
நாயுருவி - ஒருபூடு.
நாயுறக்கம் - பொய்யுறக்கம்.
நாயோட்டம்-குதிரைநடையிலொன்று.
நாய் - ஞமலி, குதாடுகருவி, தென்மேற்றிசைப் பாலன்குறி.
நாயகர் - செட்டிகள்.
நாய்குருவி - நாயுருவி.
நாய்க்கடுகு - நாய்வேளை.
நாய்க்கரந்தை - குன்றி.
நாய்க்குட்டிச்செடி - ஒருசெடி.
நாய்க்கோலம் - இழிவானகோலம்.
நாய்ச்சி } எசமாட்டி.
நாய்ச்சியார் }
நாய்ச்சீரகம் - ஒருசீரகம்.
நாய்த்தயிர்வேளை - ஒருசெடி.
நாய்த்திசை - தென்மேற்கு.
நாய்த்துளசி - கஞ்சாங்கோரை.
நாய்நாக்கி } இலைக்கள்ளிபூடு.
நாய்நாக்கு }
நாய்ப்பயறு - ஒருபூடு.
நாய்ப்பாகல் - ஒருபால்.
நாய்ப்புடுக்கன் - ஒருமரம்.
நாய்ப்புடோல் - ஒருகொடி.
நாய்முருகை - ஒருமுருகைக்கல்.
நாய்முள்ளி - ஒருமுள்ளி. [ம்புக்கல்.
நாய்விட்டைக்கல் - ஒருவகைச்சுண்ணா
நாய்வெள்ளை - நாய்த்தயிர்வேளை.
நாய்வேம்பு } ஒருபூடு.
நாய்வேளை }
நாரகம் - நரகம்.
நாரகன் - நரகன்.
நாரகி - நரகவாசி.
நாரங்கம் - தேன்றோடை, நாரத்தை.
நாரங்கி - ஒருவகைக் கிச்சிலி.
நாரசிங்கம் - இது அட்டாதசவுபபுராணத்தொன்று, உபகீடத முப்பத்திரண்டிலொன்று, நரசிங்கம், அது திருமாலவதாரத் தொன்று.
நரசிங்கன் - விட்டுணு.
நாரணவன் - ஒரு கிருமி, மாட்டுநோயி
நாரணன் - விஷ்ணு. [லொன்று.
நாரணி - துர்க்கை.
நாரதம் - பதினெண்புராணத் தொன்று, முகில்.
நாரதன் - இவர் முந்திய மகா கற்பத்தில் உபவருகன் என்னும் கந்தருவனை விருந்து பிரமசிரேஷ்டர் என்னும் பிராமணர் செய்த யாகத்துக்குப் போய் அங்கே வீணகானஞ்செய்து அங்குவந்திருந்த ஒருகன்னிகையை வசியஞ்செய்து அவளைப் புணர்ந்து போயினர், அதுணர்ந்த பிராமணர் இவரைச் சூத்திர வருணத்திற் பிறக்கவென்று சபிக்க அவ்வாறே சூத்திரனாய்ப் பிறந்து மகாதவஞ்செய்து பிரமமானச புத்திரராகப் பிந்திய கற்பத்திற் பிறந்தவர், இவர் கலகப்பிரியர், இவர் தக்ஷப்பிரஜாபதி பிள்ளைகள் யாவருக்கும் ஞானோபதேசஞ்செய்து சிருஷ்டிக்குப் பிரதிகூலஞ்செய்ய அதுகண்ட தக்ஷன் சந்ததியில்லாதவராய் நிலையற்றலைகவென்று, இவரைச்சபித்தான் அதனாலே இவர் திரிலோகங்களினுஞ் செல்பவராயினர். இவர் தாங்காதினாற் கேட்டவற்றைப் பிறர்க்குரையாமலிருப்பதில்லை, தேவசபை இராஜசபை வேள்விச்சாலைமுதலிய

எவ்விடத்துந் தடையின்றிச் செல்லும் சுவாதீனமுடையவர், தனியிடங்களிலகப் பட்டுத் திக்கற்றிருப்பவர்களுக்கு வெளிப்பட்டு உபாயங்களும் பின்னிகழ்வதுங் கூறுபவர், தூது போய்ச்சாதுரியமாகப் பேசுவதிலும் வல்லவர், தருமநூலிலும் சிறந்தவர் வீணையிலே ஒப்பாரும் மிக்காருமில்லாதவர். கிருஷ்ணனது அவதாரத்தைக் கஞ்சனுக்குணர்த்தினவரும், இராமாயணத்தை வான்மீகியாருக்குரைத்தவரும் இத்தேவவிருடியே, இவர் சம்பந்தப்படாதவைதிகசரித்திரங்கள் மிகச்சில. இவர்திருமால் பதினைந்தாவதாரத்தொருவன், பஞ்சபாரதீயமென்னும் இசைத்தமிழ் நூலாசிரியன்.

நாரதீயம் - அட்டாதசவுப புராணத்தொன்று, பதினெண்புராணத்தொன்று. இது நாரதப்ரோக்தம், பெரிய கற்பதர்மங்களைக் கூறுவது, இது இருபத்தையாயிரம் கிரந்தமுடையது, உபபுராணங்களுள்ளும் இப்பெயருடைய தொன்றுண்டு, இராகதாளலக்ஷணங்களைக் குறித்து நாரதர் செய்தநூல்.

நாரதை - நதி.

நாரத்தம் - சடாமாஞ்சி, வசம்பு.

நாரத்தம்புல் - ஒருபுல்.

நாரத்தை - ஒருதோடை.

நாரம் - அன்பு, சனத்திரள், நாண், நாரத்தை, நீர், நீர்வாழ்புள், பசுக்கன் [று, பாசி.

நாராங்கி - நாதாங்கி.

நாராசபாணம்-ஓரத்திரம். [யினென்று.

நாராசமுத்திரை-பூசாமுத்திரைவகை.

நாராசம்-அம்பு, இருப்பாணி, எழுத்தாணி, சலாகை, விட்டம்.

நாராயணகவசம் - ஒருமந்திரம், இதைக் கிரமமாகச் செபிப்போர்க்கு நாராயணன் விரைந்து அருள்புரிவர்.

நாராயணசதகம் - ஒருநூல்.

நாராணகவுளம் - ஒருபண். [யோர்.

நாராயணகோபாலர்-திருமாலுருவுடை

நாராயணகோபியவர் - பல பராக்ரமங்களில் கிருஷ்ணனுக்குச் சமமானவர்கள், இவர்கள் யாதவர்கள், இவர்கள் பதினேயிரவரும் அரியோதநனுக்குத் துணையாகச்சென்றபோது அர்ஜுனனால் கொல்லப்பட்டார்கள்.

நாராயணதைலம் - ஒருதைலம்.

நாராயணப்பிரியன் - சிவன்.

நாராயணமுநி - ஒருமுனிவன்.

நாராயணம் - அரசமரம், உபநிடதமுப்பத்திரண்டினொன்று, மீன்.

நாராயணன் - சந்திரன், சிவன், பிரமன், வருணன், விட்டுணு.

நாராயணன் - திருமால், மஹாப்ரளயத்தில் எல்லாப் பொருள்களும் நீரிலொடுங்கினபோது அதனையிடமாகக் கொண்டுஎல்லாவற்றையும் தோற்றுவித்தாரென்றுவேதபுராணாதிகளின் துணிபு. ஆதலால் இவர்க்கு நாராயணன் எனனும் பெயர்வழங்கும். நாரம்-நீர், அயநம்-இடம். இந்தநாராயணபதம் சிவனுக்கும் வழங்குமென்பர். உலகம் அப்புவில் ஒடுங்கிய கற்பத்திலே அதனை மீளவும் தோற்றுவித்த பரப்பிரமத்தினது புருஷாமிசமே நாராயணனெனப்பட்டது நாரமென்பது அப்புவினது மூலப்பகுதி. அது எழுந்திட்டாடும் சர்ப்ப வடிவினையுடையதாயிருக்கும் அதன் சத்திபாகம் சங்கினது வடிவினையுடையது அப்புவினிடத்து விளங்கும் புருஷாமிசம் ஆதிசேஷனென்னுஞ்சர்ப்பத்தை பாயலாகக்கொண்டு அறிதுயில் செய்யும் நாராயணனைக் கூறப்படும். ஒடுங்காதெஞ்சிநின்று மீளவும் சகத்துக்கு ஆதிகாரணமாய்க் கிடந்தது, அப்புவினது மூலப்பகுதியாதலின், அது ஆதிசேஷன் எனப்பட்டது, (சேஷம்) எஞ்சியஅப்புவினது மூலப்பகுதிமண்டலமிட்டெழுந்தாடுஞ் சர்ப்பவடிவினதென்பது அப்புவினது அணுவை யெடுத்துச் சோதித்தால் இனிது புலப்படும். அவ்வணுவானது ஸ்தூல நிலைவிட்டுச் சூக்குமித்துச் சூக்குமித்துப் போய் ஏழாவது நிலையையடையும் அவதரத்தில் இவ்வடிவைப்பெறும், கமல வடிவுடைய அப்புவினிடத்தே பிரமாவாகிய சிருஷ்டி புருஷன் தோன்றுவன். அதநிற்க அப்புவின் மூலப்பகுதியைஆதிசேஷனென்றும், அப்

புவுக்குக் குறிகமலமென்றங் கூறிய நமது பூர்வ வேதாந்த சித்தாந்தநூலாசிரியர்களது பூதபௌதிக ஞானமும் புத்திநுண்மையும் அநுபவமும்பெரிதும்பாராட்டப்படத்தக்கன வென்பது இக்காலத்து ஐரோப்பிய இரசாயன பரீக்ஷகர்கள் வெளியிட்ட பரீக்ஷாவிஞ்ஞாபனங்களை ஊன்றி விசாரிக்குமிடத்து நன்கு துணியப்படும்.

நாராயணாஸ்த்ரம் - ஒருபாணம்.

நாராயணி - இலக்குமி, ஒரிராகம், கங்காதேவி, சத்தமாதர்களிலொருத்தி, தண்ணீர்விட்டான்கிழங்கு, துர்க்கை.

நாரி - இடை, ஒருபண், கள், சேனை, தேன், நன்னாரி, நாணி, பன்னாடை, பார்வதி, வாசனை, பெண்.

நாரிகேரம், நாரிகேளம் - தென்னமரம், தேங்காய்.

நாரிபாகன் - சிவபிரான்.

நாரியங்கம் - தேன்றொடை.

நாரிதூஷணம் - பதிவிரதா விரதத்திற்குத் தப்பானது அது அன்னியக்கிரகசயனம் அன்னியக்கிருகப் பிரவேசம், அன்னியக்கிரகாசனம் கணவனைப் பிரிந்திருத்தல் துர்க்கூட்டம் மதுபானம்.

நாரீகவசன் - இக்ஷுவா, மூலகன்.

நாரீசங்கன் - ஒரு கொக்கரசன்.

நாரீதீர்த்தங்கள் - சௌபத்திரம், பௌலோமம், காரண்டவம், பிரசன்னம், பாரத்துவாஜம் எனத் தக்ஷணத்திலுள்ள ஐந்துதீர்த்தங்கள், நந்தை, சௌரபேயி, சமீசிவசை, லதையென்னும் ஐந்து அப்சரஸ்திரீகள், ஒரிருஷி சாபத்தினால் இத்தீர்த்தங்களிலே முதலைகளாகிக்கிடந்து, அத்தீர்த்தங்களிற் படிவோரைப்பற்றி விழுங்கி வந்து, அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றபோது அவன் காலைத்தீண்டிச் சாபவிமோசனம் பெற்றார்கள்.

நாரை - ஒருபுள்.

நாரைக்கொம்பு - நீண்டகொம்பு.

நாரைப்பசு - ஒருசைப்பசு.

நார் - அன்பு, கயிறு, கல்நார், தும்பு, மட்டை முதலியவற்றினார்.

நார்ச்சிலை - மரவுரி, வலைக்கோணி.

நாலடி, நாலடியார் - ஒருநூல், பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள முதலாவதுநூல், ஜைந முனிவர்களால் பாடப்பட்டது, பதுமனாரால் தொகுக்கப்பட்டது, நாற்பது அதிகாரமும் நானூறு செய்யுட்களு முடையது. இது அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என முப்பால்களையுடையது, இதற்குப் பதுமனார் ஒரு உரை செய்தனர். திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் செய்த உரையுமுண்டு.

நாலம் - தாமரைப்பூ முதலியவற்றின் காம்பு.

நாலை - நாளம்.

நாலல் - தாழ்தல், தொங்குதல், விழுதல்.

நாலாகாரியம் - பலவகைக்காரியம்.

நாலாஞ்சடங்கு, நாலாநீர்ச்சடங்கு - விவாகத்தினாலாநாட்பண்ணு முழுக்குச்சடங்கு.

நாலாமுறைக்காய்ச்சல் - நாலுநாளைக்கொருமுறைவருங்காய்ச்சல்.

நாலாம்வருணம் - வேளாளர், சூத்திர சாதி.

நாலாம்வருணர் - சதுர்த்தர் வெள்ளாழர்.

நாலாயிரப்பிரபந்தம் பன்னிருத்தாழ்வார்கள்பாடிய வைணவப்பிரபந்தம்.

நாலாவிதம் - பலவிதம்.

நாலி - கார்த்திகைப்பூ, முத்து.

நாலிகம் - எருமை, காகம், தாமரை.

நாலிகை - அடுப்புச்சந்து, தொளை, மூங்கில், குழை.

நாலுகவிப்பெருமான் - திருமங்கையாழ்வார்.

நாலுதல் - தொங்குதல்.

நாலுபாதச்சைவம் - ஒருசைவம்.

நால் - நாலென்னேவல், நான்கு.

நால்வகைச்சாந்து - சாந்துவகை நாலு அவை கலவை பீதம் புலி வட்டிகை.

நால்வகைத்தோற்றம் - நான்குவகைப் பிறப்பு அவை கிலம்பை முட்டை வியர்வை இவைகளிற் சனிப்பு.

நால்வகைப்பொருள் - அறம் பொருள் இன்பம் வீடு.

நால்வர் - சம்பந்தர் அப்பர் சுந்தரர்மாணிக்கவாசகர், இந்நால்வரும் சைவசமயாசாரியரெனப்படுவர், இவராற் செய்யப்பட்டவை தேவார திருவாசகங்கள். இப்பாடல் சொற்சுவை பொருட்சுவை பத்திரசம் முதலிய

வற்றுற் பொலிந்துள்ளன, இப்பாடல்களால் முதலை விழுங்கினபிள்ளையை யுமிழ்ந்தது, என்புபெண்ணுனது, நரி பரியானது முதலிய அநேக அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன, பெண்ணுசை யொழித்தவர்க்கே வீடுபேற்றையருள்வோமென்று வேதாகமாதிகளால் விதித்த எல்லாம் வல்ல இறைவர் தாமே தமது எற்பாட்டை மறந்துச் சுந்தரர் பொருட்டுப் பரவையென்னும் வேசையினிடத்திற்கு அர்த்தயாமத்தில் தூது போனதற்குக் காரணம் இந்தப்பாடலின்மீது அவர்வைத்த விருப்பமேயாமன்றோ, அடியில்வரும்பாடலால் இவர்கள் மேம்பாடு இனிது விளங்கும், "சொற்கோவுந் தோணிபுரத்தோன்றலுமென் சுந்தரனும், சிற்கோலவாதவூர்த்தேசிகனும் - முற்கோலி, வந்திலரே னீரெங்கே மாமறைநூ லெங்கே, எந்தைபிரா னைந்தெழுத்தெங்கே" இதனல் தென்னாட்டிலே சயணரால் மயங்கிய சைவத்தைமீளவும் விளக்கினவர்கள் இந்நால்வரே யென்பது தெள்ளிதிற் புலப்படும் நான்குபேர்.

நால்வாயன் - இந்திரன், விநாயகன்.

நால்வாய் - யானை. [மௌனம்

நாவடக்கம் - நாவெழாமற் பண்ணல், மௌனம்

நாவடைத்தல் - பேசக்கூடா திருத்தல்.

நாவணம் - உண்ணு.

நாவரசன் - அப்பர், சுவாமிகள், புலவர்.

நாவரட்சி - நீர்த்தாகம்.

நாவரணை - நாப்புற்று.

நாவரளுதல் - நீர்விடாய்த்தல்.

நாவலந்தீவு - சத்ததீவிலொன்று.

நீரணிமாடம் - பள்ளியோடம்.
நீரகிதி - கடல்.
நீரம் - நீர். [று.
நீரண் - அகழ் அது நான்கரணிஞென்
நீரரமகளிர் - நீரில்வாழுந் தெய்வப் பெண்கள்.
நீரரவம் - நீர்ப்பாம்பு.
நீரருகல் - நீர்ச்சிறப்பு.
நீரலரி - ஒரலரி.
நீரழிவு - ஒருநோய்.
நீராகாரம் - நீர்த்தன்மை, பானகம்.
நீராசனம் } ஆலாத்தி, கண்ணூறு
நீராஞ்சனம் } கழிக்கு மோர்வகை யாலாத்தி.
நீராடல் - நானம்பண்ணல், நீர்திலுங் குந் தேங்காய்.
நீராடுதல் - நானம்பண்ணல், நீர்விளையாடல்.
நீராட்டம் - நீராடல்.
நீராட்டு - நீர்விளையாட்டு, முழுகவார்த்தல்.
நீராட்டுதல் - முழுக்காட்டுதல்.
நீராமம் - ஒருநோய்.
நீராமை - ஒருசிலந்தி,ஒருநோய்,கடலா
நீராம்பல் - ஆம்பல்;ஒருநோய். [மை.
நீராரம்பம்-பாய்ச்சல் நிலம்.
நீராரை - நீருளாரை.
நீராலி - நீர்த்துளி.
நீராவி - கேணி, புகை.
நீராழி - கடல்.
நீராழிமண்டபம் - குளத்தினடுவே கட்டிய மண்டபம்.
நீராளம் - நீராகாரமானது, மயக்கமில்லாதவன்.
நீரிலாநிலம் - பாலை.
நீரிழிவு - நீர்ப்பாடு.
நீரிறக்கம் - நீர்வற்றம்.
நீருடும்பு - ஒருடும்பு.
நீருதிபாசம் - கடற்பாசி.
நீருபம் - ஆகாயம், காற்று.
நீருமரி - ஒருபூடு.
நீருளாரை - நீராரை.
நீருள்ளி - வெண்காயம்.
நீரூற்று - நீரூறுதல்.
நீரெடுத்தல் - நீர்பெருகுதல்.
நீரெடுப்பு - நீர்ப்பெருக்கு.

நீரெட்டி - ஒருமரம்.
நீரெரிப்பு - நீர்க்கடுப்பு.
நீரெலி - ஒரெலி.
நீரேற்றம் - ஒருநோய், சலதோஷம், நீர்ப்பெருக்கு.
நீரொட்டி - நீராரை. [ம்.
நீரோசை-கொண்டாட்டம், சந்தோஷ
நீரோடி - இருசாரையு மிணைக்குமரம், மதகு.
நீரோட்டம் - நீர்ப்பாய்ச்சல்.
நீரோருகம் - தாமரை.
நீரோற்காரி - ஆவர்த்தம்.
நீர் - கடல், குணம், சாறு, தன்மை, நீரென்னேவல், நீவிர், புனல், இது அட்டமூர்த்தத்தொன்று, பஞ்சபூதத்து மொன்று, பூராடநாள்.
நீர்க்கொள்வான் - ஸ்போடகம்.
நீர்க்கடம்பு - ஒருமரம்.
நீர்க்கடன் - திலதர்ப்பணம்.
நீர்க்கடுப்பு - சலக்கடுப்பு.
நீர்க்கட்டு - நீர்மறிப்பு.
நீர்க்கட்டுதல் - கொப்புள முதலிய நீர்ப்பிடித்தல்.
நீர்க்கணம் - அட்டகணத்தொன்று, அது ஒரு நேரசையு மிரண்டு நிரையசையு மடுத்து வருவது.
நீர்க்கண்டலி - நீர்முள்ளி.
நீர்க்கமல்லி - அல்லி.
நீர்க்கரை - தண்ணீர்த்துறை.
நீர்க்கழிவு - நீரழிவு.
நீர்க்காகம் } ஒரு புள்
நீர்க்காக்கை }
நீர்க்காசம் - ஒருநோய்.
நீர்க்கால் - நீர்வாய்க்கால்.
நீர்க்காவி - கருங்குவளை, காளுந்தோய்க்கும் புடவையிற் பற்றுநிறம்.
நீர்க்கிராம்பு - ஒருபூடு.
நீர்க்கீரை - ஒருகீரை.
நீர்க்கீழ் - உதயத்திற்கு நாலாமிராசி.
நீர்க்குடம் - பூரணகும்பம், இது அட்டமங்கலத்தொன்று இராசசின்னத்து மொன்று.
நீர்க்குட்டம் - ஒருநோய்.
நீர்க்குண்டி - வெண்ணொச்சி.
நீர்க்குதல் - நீராதல்.
நீர்க்குமிழி - நீரிலெழும்புங் குமிழ்ப்பு வடிவு.

நீர்க்குளிரி - கல்லாரச்செடி.
நீர்க்குறிஞ்சா - ஒருசெடி.
நீர்க்குன்று - நத்தை.
நீர்க்கொதி - நீரெரிவு.
நீர்க்கொழுந்து - நீர்த்திவலை.
நீர்க்கொள்ளான் - கொப்புளிப்பான்.
நீர்க்கொள்ளுதல் } நீர்பிடித்தல்.
நீர்க்கோத்தல் }
நீர்க்கோத்தை - ஒருவகைத் தண்ணீர்ப் பாம்பு.
நீர்க்கோவை - நீர்ப்பிடிப்பு.
நீர்க்கோழி - நீர்வாழுங்கோழி.
நீர்ச்சங்கு - ஒருபூடு.
நீர்ச்சலவை-புடவையைத்தோய்த்தல்.
நீர்ச்சாணி - நீர்விட்டுத்திட்டுஞ்சாணை.
நீர்ச்சாரை - தண்ணீர்ச்சாரை.
நீர்ச்சால் - தண்ணீர்பூரிக்குஞ்சால்.
நீர்ச்சாவி - நீரால்வரும்பதர்.
நீர்ச்சிக்கு - நீரடைப்பு.
நீர்ச்சித்திரம் - நீரடிமுத்து.
நீர்ச்சிரங்கு - சேற்றுப்புண், நீர்ப்புழு.
நீர்ச்சிறப்பு - சிறநீர்.
நீர்ச்சின்னி - ஒருபூடு.
நீர்ச்சீலை - குளிசீலை.
நீர்ச்சுண்டி - தொடி நெட்டிச்செடி.
நீர்ச்சுழல் } நீரிலுண்டாஞ் சுரிப்பு.
நீர்ச்சுழி }
நீர்ச்சுனை - நீர்த்தடாகம்.
நீர்ச்சூலை - அண்டவாயு.
நீர்ச்செம்பை - ஒருசெடி.
நீர்ச்செறிவு - நீர்ப்பரப்பு.
நீர்சேம்பு - ஒருபூடு.
நீர்ச்சோறு - பழஞ்சோறு.
நீர்துாவுந்துருத்தி - நீர்விடுவிசிறி.
நீர்த்தல் - நீராதல்.
நீர்த்தாரை - சலதாரை, நீரோட்டம்.
நீர்த்தானம் - நீர்க்கீழ்.
நீர்த்திவலை - நீர்த்துளி.
நீர்த்துளி - நீர்ச்சொட்டு.
நீர்த்துறை - நீர்க்கறை.
நீர்த்தூம்பு - மதகு.
நீர்த்தோஷம் - சலதோஷம்.
நீர்நாய் - நாய்மீன்.
நீர்நாள் - பூராடம்.
நீர்நீதி - கடல்.
நீர்நிலை - குளம், தண்ணீரின்மட்டு,மடு.
நீர்நெட்டி - ஒருபூடு.

நீர்நொச்சி - ஒருநொச்சி.
நீர்பெய்கலன் - கமண்டலம்.
நீர்ப்பசண்டை - ஒருபூடு.
நீர்ப்பஞ்சு - கடற்காளான்.
நீர்ப்படுவன் - ஒருநோய்.
நீர்ப்பரிசை - ஆமை.
நீர்ப்பறவை - நீரில்வாழும்பட்சி அவை யன்னரம்புள் முதலியன.
நீர்ப்பனை - புல்லாமணக்கு.
நீர்ப்போக்கு - ஊறற்பாக்கு.
நீர்ப்பாசி - வைப்புப்பாஷாண முப்பத் திரண்டிலொன்று.
நீர்ப்பாடு - நீரழிவு, நீர்க்குறைவு, விஷக் கிராணி.
நீர்ப்பாட்டுச்சன்னி - ஒருசன்னி.
நீர்ப்பாம்பு - நீர்க்கோத்தை.
நீர்ப்பாய்ச்சல் - ஒருநோய், நீரோட்டம்.
நீர்ப்பிடி } நீர்கொண்டிருத்தல்.
நீர்ப்பிடிப்பு }
நீர்ப்பிரமியம் - நீர்க்கடுப்பு.
நீர்ப்பிளவை - ஒருசிலந்தி.
நீர்ப்பீனசம் - ஒருபீனசம்.
நீர்ப்பு - நீர்த்தல்.
நீர்ப்புடையன் - ஒருபாம்பு.
நீர்ப்பூ - நால்வகைப்பூவிலொன்று அது சலத்திலுண்டுபடும்பூ.
நீர்ப்பூலா } நீர்ப்புல்லாய்.
நீர்ப்பூல் }
நீர்ப்பெருக்கு - சலப்பெருக்கு, நீர்ப் பாய்ச்சல்.
நீர்மட்டம் - சரிமட்டம்,சரிமட்டம்பார்க் குங் கருவி.
நீர்மறிப்பு - சிறுநீர்த்தடை.
நீர்மாங்காய் - மாங்காயடைக்காய்.
நீர்மாடம் - பள்ளியோடல்.
நீர்மீட்டான் - நீர்விட்டான்.
நீர்முகம் - இறங்குதுறை, நீர்ப்பாய்ச் சல் முனை.
நீர்முள்ளி - ஒருமுள்ளி.
நீர்மேனெருப்பு - கல்லுருவி.
நீர்மை - ஒப்புறவு, குணம், நிலைபரம்.
நீர்மோர் - ஒருபானம்.
நீர்வஞ்சி - ஒருவகைப்பிரம்பு.
நீர்வண்டு - நீரில்வாழ்வண்டு.
நீர்வரத்து - நீர்ப்பெருக்கு.
நீர்வல்லி - வெற்றிலைக்கொடி.
நீர்வழுக்கை - ஒரு நீர்ப்பூடு.

நீர்வளம் - நீர்ச்சிறப்பு, நீர்நயத்தினால்வருஞ் செல்வம்.

நீர்வள்ளி - சாற்றுவாரி, வெற்றிலைக்கொடி.

நீர்வற்றம் - நீர்வற்று.

நீர்வற்றத்தேங்காய் - கொப்பறுத்தேங்காய்.

நீர்வற்றுதல் - ஈரம்வற்றுதல், நீர்சுவறுதல்.

நீர்வாத்து - ஒருபறவை.

நீர்வாரம் - குளநெல், நீர்வஞ்சி.

நீர்வாழைக்காய் - மீன்.

நீர்வாழ்சாதி - நெய்தனிலமாக்கள், மீன்முதலியன.

நீர்வாழ்வன - எழுவகைப்பிறப்பில் ஒன்று அது மீன்முதலிய நீந்துப்பிராணி.

நீர்விடுதல் - பதனழிந்துநீராதல்.

நீர்விட்டான் - சாற்றுவாரி.

நீர்விழுதல் - இரத்தினகாந்தி, தளம்பல்.

நீர்விளையாட்டு - சலக்கிரீடை.

நீர்வேட்கை - நீர்த்தாகம்.

நீர்வேட்டல் - நீர்தாகித்தல்.

நீலகண்டசாத்திரியார் - தருக்கசங்கிரகதீபிகைக்கு நீலகண்டீயம் என்னும் வியாக்கியானஞ் செய்தவர். இவர் அறுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே பல்லாரியிலிருந்த ஒரு தெலுங்கர்.

நீலகண்டசிவாசாரியர் - இவர் வேதாந்த சூத்திரத்திற்குச் சுத்தாத்துவிதபக்ஷமாகப் பாஷியஞ்செய்தவர். இவர் திருக்கோகர்ண ஸ்தலத்திலே பிறந்து விளங்கியவர்; தெலுங்கர். இவர் செய்த பாஷியம் நீலகண்ட பாஷியமெனப்படும். மாதவாசாரியர் செய்த சங்கரவிஜயத்திலே சங்கராசாரிய சுவாமிகள் நீலகண்ட சிவாசாரியரை வாதத்திலேவென்றனரென்று கூறப்படுதலாலும், நீலகண்ட விஜயத்திலே சங்கராசாரிய சுவாமிகள் நீலகண்ட சிவாசாரியர் வினவியவைகளுக்கு உத்தரங்கூறவியலாது திகைத்தனரென்று கூறப்படுதலாலும், இருவரும் ஏககாலத்தவர்களென்பது பெறப்படுகின்றது. சரித்திரம்மாறுகொள்வனவாயினும் இருவரும் ஒருவரையொருவர் கண்டனரென்பதுண்மையாதலின் ஒரேகாலத்தவர்களென்பது நன்கு துணியப்படும். இருவிஜயங்களுங் கற்பித நூல்களாகுமிடத்து ஏககாலத்தவர்களென்பதும் பொய்மையின்பாலதாம். நீலகண்டர் இராமாநுஜாசாரியரது கொள்கைகளையெடுத்துக் கண்டித்தலாலே நீலகண்டர் இராமாநுஜருக்குப் பிந்தியவரென்பதும் அவர்காலம் எண்ணூறு வருஷங்களுக்கு முன்னரென்பதும் சங்கராசாரியர் காலநிருபணஞ்செய்த பாஷியாசாரிய பண்டிதர் கருத்து. அதுண்மையாயின், நீலகண்டருக்கு இருநூறு வருஷங்களுக்குமுன்னேயுள்ளவரென்றுபாஷியாசாரியபண்டிதராலேகூறப்பட்ட ஹரதத்தாசாரியர் "நீலகண்டபாஷியத்துக்குச் சமர்த்தனம்" எனப்பெயரிய வியாக்கியானஞ்செய்தமை பொருந்தாதன்றோ ஆதலின் ஹரதத்தாசாரியர் நீலகண்டருக்குப் பின்னர்க்காலத்திலாயினும் ஏககாலத்திலாயினும் உள்ளவராவர். ஆகவே பாஷியாசாரியபண்டிதர் கருத்துப் பொருத்தமுடையதன்று. அற்றேல் முன்னிருந்த நீலகண்டர் தமக்குப் பின்னர் விளங்கிய இராமாநுஜரது கொள்கைகளை எடுத்துக்கண்டித்தல் எங்ஙனங்கூடுமென்றாலோ, அக்கொள்கைகள் முன்னரு முள்ளனவேயாமாதலாலும அந்நூலிலே இராமானுஜர் பெயர்கேட்கப்படாமையாலும் அதுவிளுவாகாதென்க. நீலகண்ட சிவாசாரியர் வேதாகம புராணேதிகாசங்களிலே மிகவல்லுநரென்பது எடுத்துக்கூறவேண்டா, சங்கராசாரியரை வேதாந்திகள் எவ்வளவினராகக் கருதுகின்றார்களோ அவ்வளவாகச் சைவர்களும் நீலகண்ட சிவாசாரியரைத் தழுவுகின்றார்கள். சிவபரம்சாதித்த பிரபல ஆசாரியர்கள் நீலகண்டர் ஹரதத்தர் அப்பையதீக்ஷிதர் என்னும் மூவருள்ளே நீலகண்டர் எல்லாவகையாலும் முதன்மையுற்றவர். இந்த மூவரும் வடமொழிப் புலவர்களாக அவதரித்திலராயின் சைவசமயம் நிலைகலங்கி விடுமென்றாலும் குற்ற

மன்று, நீலகண்டர் சுவேதாசாரியர் மாணக்கர். இவர் ஸ்ரீ கண்டர் எனவும்படுவர்.
நீலகண்டக்ஷேத்ரம் - இமாலயத்துக்குச் சமீபத்திலே கௌசிகிநதி யுற்பத்திஸ்தாநம்.
நீலகண்டநாயனார் - திருவெருக்கத் தம்புலியூரிலேகோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
நீலகண்டம் - மயில்.
நீலகண்டன் - ஒருபூரம், கொடியவன், சிவன், அருசி; முருங்கை, திருநீலக் கண்டநாயனார்.
நீலகண்டபட்சம் - உருத்திராக்கம்.
நீலகண்டி - பாம்பி னச்சுப்பல்வி னென்று பொல்லாதவள்.
நீலகண்டேசர் - திருமண்ணிப் படிக்கரையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
நீலகண்டேசுவரர் - திருப்பாச்சிலாச்சிராமத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
நீலகந்தி - ஒருவகைக்கெம்பு.
நீலகமலம் - நீலோற்பலம்.
நீலகம் - கருப்பு, அருசு.
நீலகாசம் - கண்ணேயுளொன்று.
நீலகிரி - அட்டமலையிலொன்று, செங்குட்டுவன் வஞ்சிநகரத்திலிருந்து இமயமலைக்குப் போம்போது ஒருகால் தங்கியிருந்த மலை இது சேரநாட்டிலுள்ளது இராவ்ருத வருஷத்துக்கு வடக்கெல்லையாகவுள்ளமலை.
நீலகண்ணுடி - நீலநிறக்கண்ணுடி.
நீலக்கத்திரி - ஒருவழுதுணை.
நீலக்கல் - நீலரத்தினம்.
நீலக்காக்கட்டான் - ஒருபூடு.
நீலக்காரம் - துருசு.
நீலக்காலி - அவுரி, ஒருநண்டு.
நீலக்கிராந்தை - விஷ்ணுகிராந்தை.
நீலக்கிரீவன் - சிவபிரான்.
நீலக்கிரௌஞ்சம் - கருங்கொக்கு.
நீலங்கட்டுதல் - நீலந்தீர்த்தல், பெரும்பொய்கூறல்.
நீலசம்பூடம் - ஒருவகைகாவல்.
நீலச்சால் - நீலநிறச்சாய முறவைக்குஞ்சால்.
நீலதரு - தெங்கு.
நீலநிதி - குபேரனவநிதிகளிலொன்று.
நீலந்தர் - இராகம்பாடுவோர்.
நீலந்தீர்தல் } புலநிறம்போடுதல்.
நீலந்தோய்தல் }
நீலபங்கம் - கறுஞ்சேறு.
நீலபடிகம் - பளிங்கு.
நீலபதுமம் - நீலோற்பலம்.
நீலபத்திரம் - கருங்குவளை.
நீலபம் - சந்திரன், தேனீ, முகில்.
நீலபாஷாணம் - ஒருபாஷாணம்.
நீலபுட்பம் } அவுரி, எட்டிமரம், விட்
நீலபுட்பிகை } டுணுகரந்தை, விட்டுணுகாந்தி.
நீலப்பணி - புடவையிலிடுநீலச்சாயம்.
நீலமணி - கண்ணிற்கருமணி, நீலரத்தினம், மரகதமணி.
நீலமணிகாயம் - கண்ணேயுளொன்று.
நீலமண்டலம் - சிற்றீச்சமரம்.
நீலமருந்து - அவுரி.
நீலமலர்க்கண்ணி - திருவெருக்கத்தம்புலியூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
நீலமாதவன் - திருமால்.
நீலமார்க்கம் - கையாந்தகரை.
நீலமீளிகை - மின்மினி.
நீலமேகம் - நீருண்டமேகம்.
நீலமேனியள் - பார்வதி.
நீலமேனியன் - இராமன், அருசி, விட்டுணு.
நீலம் - இருள், ஒருநிறம், ஒருமேகம், கருங்குவளை, கறுப்பு, காற்று, அருசு, நஞ்சு, நவமணியிலொன்று, நீலக்கட்டி, பனை.
நீலம்பற்றவைத்தல் - கதைகட்டுதல்.
நீலம்பாரித்தல் - விஷமுதலியவற்றாற் சரீரம் நீலவண்ணமாதல்.
நீலராசன் - ஓரரசன்.
நீலராஜாவத்தம் - ஓரிரத்தினம்.
நீலருத்திரன் - ஒருருத்திரன்.
நீலலோகிதன் - சிவபிரான், பின்னேருருத்திரரிலொருவன்.
நீலவசனம் - சனி.
நீலவண்ணன் - சனி, விட்டுணு.
நீலவண்ணுன் - சாயக்காரன்.
நீலவத்திரம் - நீலப்புடவை.
நீலவத்திரன் - பலராமன்.
நீலவருணம்-சத்தமுகிலிலொன்றுஅது தீப்பொழிவது, நீலநிறம், மேகம்.

நீலவழுதலை - நீலக்கத்தரி.
நீலவாசன் - சனி.
நீலவாடையன் - பலராமன்.
நீலவிதானம் - நீலப்பட்டுமேற்கட்டி.
நீலன் - நீலியென்னும் பைசாசத்தால் கொல்லப்பட்ட ஒருவணிகன், குருரன், சனி. அசமீடன் புத்திரன். இராஜசூய யாகத்திலே சகாதேவனோடு யுத்தஞ்செய்த மாகிஷ்மதிபுரிராஜன். ஆக்கினிக்குப்பிறந்தவாநரன், இவன் சுக்கிரீவனுக்குப் படைத்தலைவன்.
நீலாக்காலி - ஒருநண்டு.
நீலாங்கம் - மலைத்தேன்.
நீலாங்கு - புழு.
நீலாசலநாதர் - இந்திரநீலப் பருப்பதத்தில்கோயில்கொண்டிருக்கும்சுவாமிபெயர்.
நீலாஞ்சனம் - கல்லீயம், கறப்புக்கல், துருசு.
நீலாஞ்சனை - மின்னல்.
நீலாட்சம் - அன்னப்புள்.
நீலாம்பிகை - இந்திரநீலப் பருப்பதத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
நீலாப்பிரகம் - கருமுகில்.
நீலாம்பரன் - பலபத்திரன்.
நீலாம்புசம் - கருங்குவளை.
நீலாம்புரி - ஒருபண்.
நீலாயதாக்ஷி - திருநாகைக் காரோணத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
நீலி - அவுரி, கருநொச்சி, கறுப்பு, காளி, துட்டை, துருசு, துர்க்கை, பாம்பினச்சுப்பல்லினொன்று, பார்வதி, மேகவண்ணப்பூவுள மருதோன்றிமரம், சங்கமன் என்னும் வைசியன் மனைவி. கோவலன் கொலையுண்ணும்படி அவனுடைய முற்பிறப்பில் அவனைச் சபித்தவள். பழையனூர் வணிகன் மனைவி. இவள்விவாகமாகிக்கொஞ்சகாலத்தில் இறந்து திருவாலங்காட்டிலே போய்த் திரிந்துகொண்டிருந்தாள், ஒருநாள் அவள் கணவன் அக்காட்டுவழியே தனித்துச் சென்றபோது இந்தநீலிப்பேய் அவனது இரண்டாமனைவியைப்போல வடிவங்கொண்டு, ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கி மருங்கிலே தாங்கிக்கொண்டு அவனைத்தொடர, அவன் அவ்வடிவைப் பேயென நிச்சயித்து அப்பேயினது வஞ்சக மொழிகளுக்கு இணங்காதோடினான், பேயும், இது முறையோ என்னைக் காட்டில் தனியேவிடுத்துச் செல்லா நின்றீரே, என்று அழுதுகொண்டே பின்றொடர்ந்து காஞ்சிபுரத்தை யடைந்து, அங்கேபொதுவிடத்தில்கூடியிருந்த வேளாளரிடத்திற்சென்றுதன்வழக்கைச் சொல்லிற்று, அவ்வேளாளர் இவ்விருவர் வழக்கையுங் கேட்டுப் பேயைப்பார்த்து, நீ சொல்லுவதற்குச் சாக்ஷியாரென்று கேட்க, பேய், இந்தப்பிள்ளையை விடுகிறேன், இது அப்பாவென்றழைத்துத் தந்தைமடிமே லேறுதோ, பாருங்களென்று, சொல்லி விடுக்க, குழந்தை அவ்வாறே செய்ய, வணிகன், இது பேய்க்கூத்தென்றான், அதுகேட்ட வேளாளர், அது உண்மையானால் நாங்கள் பிணையாவோம் நீயும் இவளும் இந்த அறையினுள்ளே போய்ச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து வாருங்கள் என்று சொல்ல வணிகன் அச்சொல்லைத்தடுக்கவொண்ணாதவனாய் அறையினுள்ளே செல்ல, பேயுந்தொடர்ந்துள்ளே புகுந்து கதவடைத்து அவனுயிர் குடித்து மறைந்தது. வேளாளர் எழுபதின்மரும் கதவைத் திறந்து பார்த்துத் தம்மாலிறந்த வணிகன் பொருட்டுத்தாமுந் தீப்பாய்ந்து உயிர்விட்டார்கள், சிவபெருமான் அவர்களுடைய சத்திய மார்க்கத்துக்கிரங்கி, அவர்களெல்லாரையும் பிழைப்பித்து வேளாளர் வாக்கைக் காத்தருளினார், இச்செய்தி தொண்டைமண்டல சதகத்திலும் சேக்கிழார் புராணத்திலுங் கூறப்பட்டுள்ளது.
நீலிகை - அவுரி, தழும்பு.
நீலினி - அவுரி.
நீலோற்பலம் - கருங்குவளை, கல்பாரம்.
நீல் - காற்று, நீலம், வாதம்.

நீவரகம் - பஞ்சம்.
நீவரம் - சேறு, நீர், வியாபாரம்.
நீவல் - நீவுதல்.
நீவாரம் - செந்நினை, நாடு, வனநெல்.
நீவான் - மீகாமன்.
நீவி - கொய்சகம், சீலை, முதற்பணம்.
நீவியம் - சீலை.
நீவிரம் - வீட்டிறப்பு.
நீவிர் - நீங்கள் இது முன்னிலைப்பன்மைப் பெயர்களிலொன்று.
நீவுதல் - தடவுதல், தட்டுதல், துடைத்தல், பூசுதல்.
நீழல் - ஒளி, நிழல், நோய்.
நீளங்கடை - நாட்செல்லல்.
நீளப்பூச்சி - ஒருபூச்சி.
நீளம் - தாமதம், தூரம், நெடுமை.
நீளல் - ஓடுதல், தூரம், நீளுதல்.
நீளி - நீளியென்னேவல், நெடியன், நெடுமை, நெடுவல்.
நீளிடை - சேய்மை.
நீளித்தல் - தாமதித்தல், நாட்போதல், நீளுதல், நெடுநாளிருத்தல்.
நீளிப்பு - நீடிப்பு.
நீளியசாரை - கானற்கல்லு.
நீளியது - நெடியது.
நீளியன் - நெட்டையன்.
நீளுதல் - அதிகப்படுதல், ஓடுதல், நீளமாதல், நெடுகுதல்.
நீள் - உயரம், ஒளி, நீளம், நீளென்னேவல், பிரபை.
நீள்சடையோன் - கொன்றை.
நீறடித்தல் - சுவிற்றிறுற்கோலமிடுதல்.
நீறணிந்தோன் - சிவபிரான்.
நீறுடி - சிவபெருமான்.
நீறுடுதல் - அழித்தல், உத்தூளனமாய்ப்பூசுதல், பொடிபடுத்தல்.
நீறு - சாம்பர், சுண்ணம், துகள், நீறென்னேவல், புழுதி, விபூதி, அவம்சம்.
நீறுதல் - நீறுதல்.
நீறுபடுதல் - அழுக்குப்படிதல், சாம்பற்பொடித்தல்.
நீற்றல் - எரியிட்டுநீறச்செய்தல்.
நீற்றறை - சுண்ணாம்புச்சூளை.
நீற்றுக்குட்டான் - சிறிய சுண்ணாம்புப்பெட்டி.
நீற்றுண்டை - முட்டை.
நீற்றுதல் - நீறுக்குதல்.
நீற்றுப்பூசணி - ஒருகொடி.
நீற்றுப்பூசணிக்காய்த்தானம் - மிருத்துதானத்தொன்று.
நீற்றுப்பெட்டி - எண்ணெயூற்றுங் கூடை, மாவவிக்கும் பெட்டி.

நு

நு - ஆயுதப்பொது, ஐயம் சங்கை வினைவென்பவைகளைக் காட்டுமோருபசருக்கம், தியானம், தோணி, நிந்தை, நேரம், புகழ்.
நுகம் - நுகத்தடி.
நுகம்புரட்டி - ஒழுங்கு தவறுகிறவன், கட்டுக்கமையாத எருது.
நுகர்ச்சி - அனுபவம், உணவு, உண்டல்.
நுகர்த்தல் - அனுபவித்தல், புசித்தல், விழுங்கல்.
நுகர்வு - நுகர்ச்சி.
நுகைதல் - இளகுதல், தளர்தல்.
நுகைத்தல் - இளக்குதல், தளர்த்தல்.
நுகைப்பு - நுகைத்தல்.
நுகைவு - இளக்கம், தணிவு, தளர்வு, மிருது.
நுக்காங்குலை - காய்விழுந்த பனங்குலை.
நுக்கு - எட்டிமரம், நுக்கென்னேவல், நுங்கு, பொடி.
நுக்குடம் - காஞ்சிறை.
நுங்கல் - பருகல், விழுங்கல்.
நுங்கு - நுங்கென்னேவல், பனையினிளங்காய்.
நுங்குக்கண் - நுங்கிற்கண்.
நுங்குதல் - குடித்தல், விழுங்குதல்.
நுங்கை - உன்றங்கை, உன்றாய்.
நுசுப்பு - இடை.
நுசை - சிவதைவேர்.
நுடக்கம் - தள்ளாட்டம், நுட்பம், முடக்கம், வளைவு.
நுடக்கு - முடக்கு.
நுடங்கல் - நுடங்குதல்.
நுடங்கு - நுடக்கம், நுடங்கென்னேவல்.
நுடங்குதல்-ஆடல், துவளல், முடங்கல்.
நுட்பம் - எளிது, ஓரலங்காரம், அது குறிப்பாற் கருத்தறிவித்தல், சூட்சம், சொற்பம், திட்பம், நுண்மை.

நட்பவுரை - நண்ணியதாய்விளக்குமு
நணக்கம் - நணங்கல். [ரை.
நணங்கல் - துவளல், நுண்மை, முடங்கல்.
நணங்கியோர் - அறிவுடையோர்.
நணங்கு - தேமல், நணங்கென்னேவல், நுண்மை.
நணங்குதல் - நுண்மையாதல், வளைதல், வாடல்.
நணலை - ஒருமீன், தவளை.
நணல் - தவளை, தவளையினோர்பேதம்.
நணவு - தணக்கமரம், நுணாமரம்.
நணவை - தணக்கமரம்.
நுணா - ஒருமரம்.
நுணாக்காய் - கிரந்தி, ஒருகிரந்தி.
நுணாசுதல் - தடவுதல்.
நுணாவுதல் - தடவித்தெரிதல்.
நுணி - நுணியென்னேவல், நுதி.
நுணித்தல் - குணம், நுணுக்கல்.
நுணுகு - நுணுகென்னேவல், நுண்மை.
நுணுகுதல் - நுண்மையாதல்.
நுணுக்கம் - அடக்கம், சூட்சம், கூர்மை, நுண்மை.
நுணுக்கல் - நுண்மையாக்கல்.
நுணுக்கு - அற்பம், எழுத்துக்குணுக்கம், நுணுக்கென்னேவல்.
நுணுக்குதல் - நுணுக்கல்.
நுணுங்கல் - நுண்மை.
நுணுங்கு - நுணுங்கென்னேவல், நுண்மை.
நுண் - அணு, நுண்மை.
நுண்ணறிவு - நுண்ணியபுத்தி.
நுண்ணிச்சிறை - கொசுக்கட்டைக்குரு
நுண்ணிடை - சிற்றிடை, பெண். [வி.
நுண்ணிமை - நுட்பம்.
நுண்ணியது - நுண்மையானது.
நுண்ணியர் - அறிவுடையோர், நுட்பமானவர், பெரியோர், மந்திரிகள்.
நுண்ணுணர்வு - கூறிய அறிவு.
நுண்பிண்டி, நுண்பொடி } புழுதி.
நுண்பொருள் - நுட்பமானகருத்து, நுண்ணியபொருள்.
நுண்பொறிவெள்ளை - சிலமரையினோ
நுண்மணல் - மெல்லியமணல். [ரு.
நுண்மருங்குல் - நுண்ணிடை.
நுண்மை - கூர்மை, நுட்பம், நேர்த்தி.
நுதம் - தோத்திரம்.

நுதம்புதல் - கனைத்திளகுதல்.
நுதலணி - சுட்டி.
நுதலல் - கருதல், குறித்தல்
நுதலிப்புகுதல் - முப்பத்திரண்டுத்தியினொன்று, அது சொல்வனென்று கூறிப் புகுதல்.
நுதலுதல் - நுதலல்.
நுதல் - சொல், நுதலென்னேவல், நெற்றி, புருவம்.
நுதன்விழியன், நுதற்கண்ணன் } சிவபெருமான்.
நுதற்சுடிகை - சுட்டி.
நுதனாட்டன் - சிவபிரான்.
நுதி - புகழ், முனை, வணக்கம்.
நுதுத்தல் - அடக்கல், அவித்தல், அழித்தல்.
நுதுப்பு - தணிப்பு.
நுந்துதல் - தள்ளுதல், தூண்டுதல்.
நுந்தை - உங்கடந்தை.
நுபம் - எருக்கு.
நுமர் - உம்மவர்.
நுமன் - உம்மவன்.
நும் - விரவுத்திணைமுன்னிலைப்பன்மை, சாரியை (உ-ம்) எல்லீர் நும்மையும்.
நும்பி - உம்பி.
நும்மோர் - உம்மவர்.
நுரு - நொரு, முளியில்நுழைக்குமட்டம்.
நுரை - குமிழி, நீர்முதலியவற்றினுரை, நுரையென்னேவல், வெள்ளை, வெண்ணெய்.
நுரைத்தல் - நுரைக்குதல்.
நுரைப்பீர்க்கு - ஒருபீர்க்கு.
நுரையீரல் - ஈரலிலோர்வகை.
நுலையிலி - ஊமை.
நுவணம், நுவணை } கல்விநூல், தினைமாவு, நுண்மை, பஞ்சிநூல்.
நுவலல் - சொல்லுதல்.
நுவலாநுவற்சி - ஓரலங்காரம்.
நுவலுதல் - நுவலல்.
நுவல் - சொல், நுவலென்னேவல்.
நுவல்கை - சொல்லுதல்.
நுவற்சி - சொல்லுகை.
நுழாய்ப்பாக்கு - முதிராப்பாக்கு.
நுழுந்தி - நழுவி.
நுழுந்துதல் - திருடுதல், நகர்தல், நழுவுதல், பதுங்குதல்.
நுழுவல் - நழுவல், நுழாய்ப்பாக்கு.

நுழுவுதல் - நழுவுதல்.
நுழை - நுண்மை, நுழையென்னேவல். நுழைவாயில், பலகணி, துவாரம்
நுழைகடைவை - நுழைகண்டாயம்.
நுழைச்சல் - ஏழு, நுழைத்தல்.
நுழைசற்புலு - எழுபது.
நுழைதல் - சாடைசொல்லுதல், நுழைக்குதல், மட்டுக்கட்டுதல்.
நுழைத்தல் - நுழைதல். நுழைவித்தல்
நுழைநரி - ஒருநரி.
நுழைவாயில் - சிறுவாயில்.
நுழைவு - கூரியபுத்தி.
நுளம்பு - கொசுகு, மின்மினி.
நுளும்புதல் - அசட்டைபண்ணுதல்.
நுளை - ஈனம், குருடு.
நுளைச்சி - நெய்தனிலப்பெண்.
நுளையர் - நெய்தனிலமாக்கள்.
நுள் - கிள்ளு, நுள்ளென்னேவல்.
நுள்ளான் - ஒரெறும்பு.
நுள்ளு - நுள்.
நுள்ளுதல் - கிள்ளுதல்.
நுனி - நுண்மை, நுனியென்னேவல், முனை.
நுனித்தல் - உற்றுராய்தல், கூராக்கல்.
நுனித்துநோக்கல் - கூர்மையாய்ப் பார்த்தல்.
நுனிப்பந்தி - கடைப்பந்தி.
நுனை - முனை.
நுன் - உனது.

நூ

நூ - ஆபரணம், நவெழுத்து, நூவென்னேவல்.
நூக்கம் - தோதகத்திமரம், நூக்கு.
நூக்கல் - செலுத்தல், தள்ளல், நெய்வார் கருவியிலொன்று.
நூக்கு - தள்ளு, நூக்கென்னேவல், நொய்.
நூக்குதல் - செலுத்துதல், தள்ளுதல்.
நூங்கு - நூங்கென்னேவல், பெருமை, மிகுதி.
நூங்குதல் - பெருமையாயிருத்தல், மிகுதியாயிருத்தல்.
நூடி - சிற்றேலம்.
நூதனசாலி - புதுநெல்.
நூதனமணம் - புதுமணம்.
நூதனவிவாகம் - புதுமணம்.
நூதனவஸனம் - புதுவஸ்திரம்.
நூதனவஸ்திரம் - புதியஆடை.
நூதல் - அவிதல்.
நூதனகாரன் - நூதனச்செய்கையுள்ளவன்.
நூதனசட்டம் - புதிய ஏற்பாடு.
நூதனத்துவம், நூதனம் - புதுமை.
நூதனி - நூதனகாரன்.
நூத்தல் - நொதுத்தல்.
நூபம் - இடபவிராசி, எருக்கு, எருது.
நூபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.
நூப்பு - தணிப்பு.
நூரல் - அவிதல், ஆறல், பதனழிதல்.
நூர்த்தல் - அணைத்தல், ஆற்றல்.
நூலச்சு - கம்பியிழுக்கு, மச்சு.
நூலறிவு - கல்வியறிவு.
நூலாசிரியன் - நூலாக்கியோன்.
நூலாதாரம் - முதல்புத்தகம்.
நூலான்புடை - ஒட்டடை.
நூலான்பூச்சி - சிலந்திப்பூச்சி.
நூலியாப்பு - நூலினிடத்தியாப்பமைக்கும் விதம், அது தொகுத்தல் தொகைவிரி மொழிபெயர்ப்புவிரித்தல்.
நூலில்லாமாலை - வைப்புக்கட்டு.
நூலிழந்தாள் - அமங்கலி.
நூலிழைத்தல் - நூனூற்குதல்.
நூலுண்டை - நூற்சுருள்.
நூலுத்தி - தந்திரவுத்தி.
நூலுரைப்போன் - உபாத்தி.
நூலுரையுணர்வோர் - ஒல்லுநர்.
நூலுறிஞ்சி - நெய்வார்கருவியிலொன்று.
நூலேணி - கயிற்றேணி.
நூலோடுதல் - தையலினூல்விட்டுப் பம்முதல்.
நூலோர் - அறிஞர், பார்ப்பார், மந்திரிகள்.
நூல் - ஆண்குறி, ஆலோசனை, இழை, எண்ணல், ஏற்றநூல், கல்விநூல், குறியைப்பற்றிய நரம்பு, சாஸ்திரம், நூலென்னேவல், பஞ்சிநூல், பூணூல், நாடகத்தமிழ்நூல்களுளொன்று.
நூல்சேர்த்தல் - நூல்பதனிடுத்தல்.
நூல்போடுதல் - நேர்பிடிக்கக் கயிறடித்தல்.

நூல்யுத்தி - நூலுத்தி.
நூல்வலை - நூலினன் முடியும்வலை.
நூல்வல்லோர் - அறிஞர், மந்திரிகள்.
நூல்வழக்கு - செய்யுள்வழக்கு.
நூல்விடுதல் - சிலம்பி முதலிய நூலுண்டாக்கல்.
நூவு - என்.
நூழல் - நூறல்.
நூழிலாட்டு - கொலை,மெய்புதைபடை பறித்து மாற்றுரை யிரித்தல்.
நூழிலாட்டுதல் - கொல்லுதல்.
நூழில் - குவித்தல், கொடிக்கொத்தான், கொலை,தன்மெய்புதைந்தபடையைப் பறித்து நிற்கை, படர்கொடி, யானை.
நூழை - துவாரம், நுண்மை.
நூறல் - அழித்தல்.
நூறுவிரம் - இலட்சம்.
நூறு - ஓரெண், நூறென்னேவல்.
நூறுதல் - அழித்தல், நசுக்குதல்.
நூறை - மலங்குமீன்.
நூற்கயிறு - நூலினற்றிரிக்குங்கயிறு.
நூற்கருத்து - நூற்பொருள்.
நூற்கழி - நூற்பந்து.
நூற்குச்சு - நூற்குச்சம்.
நூற்குதல் - நூற்றல்.
நூற்சாடு நூலினற்செய்யுமோர்கயிறு.
நூற்சுருள் } நூற்பந்து.
நூற்சுருளை }
நூற்பகந்திரம் - நூலடியிற்கட்டு.
நூற்படுகு - நெசவுபா.
நூற்பயன் - நூலினதுபலன், அவை அறம், இன்பம், பொருள், வீடு.
நூற்பவுந்திரம் - நூற்பகந்திரம்.
நூற்பழக்கம் - கல்விப்பயிற்சி.
நூற்பா - சிலவகையெழுத்துக்களாகிய சொற்றொடராய்ப் பலவகைப் பொருள்களை விளக்கித்திடம் நுட்பமைந்துவருவது.
நூற்பாவகவல் - இலக்கணசூத்திரம்.
நூற்புறனடை - நூலின்புறத்தினடைக்குங் காப்புமொழி.
நூற்பொருள் - நூலிற் சொல்லப்படுபொருள்.
நூற்றந்தாதி ஒருபிரபந்தம் அதுவெண்பாநூறினுனேனுங் கலித்துறை நூறினுனேனு மந்தாதித்துப்பாடுவது.

நூற்றல் - நூற்குதல்.
நூற்றுது - நூனுழி.
நூற்றுறை-நூற்கருத்து, நூற்பொருள்.
நூனம் - குறைவு, நிச்சயம்.
நூனயம்-கல்விநயம், நூலின்மேன்மை.
நூனுயம் - ஊனுயம்.
நூனுதிகம் } குறைவு நிறைவு.
நூனுதிக்கம் }
நூனுழி - நாடா.
நூனுட்பம் - நூலினது நுண்மை.
நூன்முகம் - நூற்றுறை, பாயிரம்.
நூன்முடிபு } நூலினது பொருளுணக்கம்
நூன்முடிவு }

நெ

நெகல் - கனிதல், நெகித்தல்.
நெகிடி - நெருப்புக்குவை.
நெகிழம் - பாதச்சிலம்பு.
நெகிழி - ஞெகிழி.
நெகிழிசை - வல்லெழுத்துவராது மற்றீரின வெழுத்தி னென்றுன் முடியுஞ்செய்யுள்.
நெகிழுதல் . நெகிழ்தல்.
நெகிழ்ச்சி - இளக்கம், தளர்ச்சி.
நெகிழ்தல் - அழுந்தல், அவிழ்தல், இளங்குதல், இளகுதல்,உருகுதல்,குழைதல், தளரல், நழுவல், நுகைத்தல், பிரிதல், பொசிதல், பொடியாதல், மலர்தல், விட்டுநீங்குதல்.
நெகிழ்த்தல் } அவிழ்த்தல்,உருக்கல்,
நெகிழ்த்துதல் } நீக்கல், நசுக்கல், பிரித்தல், மலர்த்தல்.
நெகிழ்ப்பு - நெகிழ்த்தல்.
நெகிழ்வு - குறைவு, தளர்வு, நுகவு, பிரிவு, மலர்தல், விட்டுநீங்கல்.
நெகிளம் - ஞெகிளம். [தல்.
நெகுதல் - உருகுதல், கரைதல், நுகை
நெக்கல் - உக்கல், உருகுதல், கனிதல், கனிந்தது, கிளப்பல், தளர்ந்தது, தன்னல்.
நெக்கு - நெக்குதல்,நெக்கென்னேவல்.
நெக்குடைதல் - நெகிழ்ந்துருகுதல்,நெகிழ்ந்துவிள்ளுதல், மனம் உருகுதல்.

நெக்குதல் - உருகுதல், கனிதல், இளப்பல், தன்ளல், அசைதல், தாரத்தியடித்தல், விள்ளுதல்.
நெக்குருகுதல் - விண்டுருகுதல்.
நெக்குரோதம் - நியக்குரோதம்.
நெக்குவிடுதல் - நரைதல், விண்டுடைதல்.
நெசவு - நெய்குதல்.
நெசவுகாரர் - நெய்வார்.
நெச்சி - கடுக்காய்.
நெஞ்சகம் - நெஞ்சு.
நெஞ்சடைப்பு, நெஞ்சடைவாதம் } ஒருநோய்.
நெஞ்சம் - மனம், மார்பு.
நெஞ்சழிதல் - ஏங்கல், மதிமயங்கல்.
நெஞ்சறிதல் - மனமறிதல்.
நெஞ்சறிவிளக்கம் - ஒருநூல்.
நெஞ்சறிவுறுத்தல் - மனத்துக்கறிவித்தல்.
நெஞ்சன் - ஓர்மி.
நெஞ்சாங்கட்டை - சவஞ்சுடுவதற்கு நெஞ்சில் வைக்குங்கட்டை, தாராலோசனை, நெஞ்செலும்பு.
நெஞ்சாங்குலை - ஈரற்குலை.
நெஞ்சாங்குற்றி - நெஞ்சாங்கட்டை.
நெஞ்சாங்கொழுந்து - நெஞ்சாங்குலை.
நெஞ்சிடி - நெஞ்சுபதறுதல்.
நெஞ்சிற்கல் - கவலை, அக்கம்.
நெஞ்சு - ஒருமம், துணிவு, தைரியம், தொண்டை, மனம், மார்பு.
நெஞ்சுக்கோழை - ஒருநோய்.
நெஞ்சுத்தடிமல் - நெஞ்சிற் சளிப்பிடியுண்டாந்தடிமல்.
நெஞ்சுத்துணிவு - மனவுறுதி.
நெஞ்சுநோ-நெஞ்சினோ, மனவிதனம்.
நெஞ்சுவிடுதூது - மெய்கண்ட சாத்திரத்தொன்று.
நெஞ்சுன்றி - ஒருபக்கம் வளைந்துமறுபக்கம் மிதந்திருப்பது.
நெஞ்செறிச்சல் - பொறாமை.
நெஞ்செறிதல் - எரிச்சற்படல், பொறாமைப்படல், மனநோப்படல்.
நெஞ்செறித்தல் - உடற்பிசகால் வரும் ஒருநோய்.
நெஞ்செரிப்பு - நெஞ்செரித்தல், பொறாமை.
நெஞ்சோர்மம் - நெஞ்சுத்துணிவு.
நெடநெடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.

நெடி - சின்வண்டு, நாற்றம், நெடியென்னேவல், மிளகாயின்காரம்.
நெடிசு - நெடிது.
நெடித்தல் - பொழுதுநீட்டித்தல்.
நெடியவட்டம் - மரவட்டணம்.
நெடியவன் - நெட்டையன், விட்டுணு.
நெடியன், நெடியான் } நெட்டையன்.
நெடியோன் - திரிவிக்கிரமனுனவிட்டுணு, அனுசி, மூக்கிரட்டை.
நெடியோன்குன்றம் - வேங்கடமலை, இது தமிழ்வழங்கு நிலத்தின் வடவெல்லையாயுள்ளது.
நெடிலடி - ஐஞ்சீரடுத்துநிற்பது.
நெடிலி - கடற்பறவையினென்று.
நெடிலெதுகை - அடிதோறு நெடிலெழுத்தெதுகையாய்வருவது.
நெடில்-நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.
நெடிற்றொடர் - நெட்டெழுத்தொடர்ந்து வருவது.
நெடின்மோனை - அடிதோறு முதலெழுத்து வருவது.
நெடு - நீண்ட.
நெடுகலும் - நீளத்திலே.
நெடுகல் - நீளுதல், போதல்.
நெடுகுதல் - உயருதல், சாதல், நீளித்தல், நீளுதல்.
நெடுக்கு - நீட்சி.
நெடுங்கடல் - கரையடுத்தகடல்.
நெடுங்கணக்கு - அரிவரி, பழங்கடன், பெருந்தொகை.
நெடுங்கணவாய் - ஒருகணவாய்.
நெடுங்கண்விழுதல் - பன்னமொருபக்கம்நெடுகி மறுபக்கந் தளர்ந்திருத்தல்.
நெடுங்கதை - பழங்கதை.
நெடுங்கயிற்றில்விடுதல் - நாட்கடத்துதல்.
நெடுங்கரை - நீண்டகரை.
நெடுங்கல்நின்றமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள ஐவகைமன்றத்தொன்று, இது நஞ்சுண்டோர், பித்தேறினோர், பேய்பிடிக்கப்பட்டோர் ஆகிய இவர்கள் துன்பத்தை யொழிப்பது.
நெடுங்கழுத்தன் - ஒட்டகம்.
நெடுங்காலம் - வெகுகாலம்.

நெடுங்கிள்ளி - கோவூர் கிழாரால் பாடப்பட்டவன், இவன சோழபரம்பரையிற் சேர்ந்தவன்.
நெடுங்குடர் - மணிக்குடர்.
நெடுங்குரலன் - கழுதை.
நெடுங்குரல் - பெருங்குரல்.
நெடுங்குளம் - பாண்டிநாட்டி லுள்ள வோரூர், இது அக்காலத்தில் உறையூரிலிருந்து மதுரைக்குப் போகும் வழியிலுள்ளது.
நெடுங்கேடு - தீராதகேடு.
நெடுங்கோணி - ஒட்டகம்.
நெடுஞ்சட்டை - அங்கி.
நெடுஞ்சாலை } நெடுஞ்சாண்கிடை } நெடுங்கிடை.
நெடுஞ்செழியன் - மதுரையி லிருந்த வொருபாண்டியன். இவன் ஆராயாது கோவலனைக் கொலை புரிவித்துக் கண்ணகிக்கு வழக்கிற் றோத்துத் தனக்குண்டான பழியை நினைந்து உயிர்விட்டவன்.
நெடுத்தல் - நீளுதல், நெடுக்குதல், நெடும்பொழுதாதல்.
நெடுநல்வாடை - நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது. இது பத்துப்பாட்டுள் ஏழாவது.
நெடுநாவை - நீண்டநாவை.
நெடுநாள் - வெகுநாள்.
நெடுநீட்டு - வெகுநீளம்.
நெடுநீர் - கடல், தாமதம்.
நெடுநீளம் - நேர்நீளம்.
நெடுநெடுகுதல் } நெடுநெடுத்தல் } நெடுகநீளுதல், நெடுகவளர்தல்.
நெடுநேரம் - வெகுநேரம்.
நெடுந்தகை - பெரியோன்.
நெடுந்தகைமை - மேன்மை.
நெடுந்தட்டு - ஒரு கடுதாசிப்படம்.
நெடுந்தாயம்-அடுத்தடுத்துவிழுந்தாயம்.
நெடுந்துயில் - சாவு,நீண்டதூக்கம்.
நெடுந்தூரம் - வெகுதூரம்.
நெடுந்தெரு - இராசவீதி,நீண்டதெரு.
நெடுப்பம் - நீளம்.
நெடுப்பிணை - வங்கமணல்.
நெடுப்பு - நீளிப்பு.
நெடுமழை - பெருமழை.
நெடுமன் - நீண்டது, பாம்பு.
நெடுமால் - விட்டுணு.
நெடுமாறநாயனார் - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் சுரநோயும் கூனும் தீரப்பெற்றுச் சமணசமயம் விடுவித்துச் சைவசமயப் பிரவேசமான கூன்பாண்டியனார், இவரே வடதேயத் தரசரைத் திருநெல்வேலிப் போர்க்களத்தில் வென்று, சைவசமயம் வளரும்படி நெடுங்காலம் அரசியற்றினவர்.
நெடுமி - நீண்டமரம்,நீளியபெண்,பனைமழை.
நெடுமூரல் - ஒருமீன்.
நெடுமுழம் - ஒருவகைப்புடவை.
நெடுமூச்சு - பெருமூச்சு இது யாக்கைக் குற்றத்தொன்று.
நெடுமை - அமிர்தம், உயரம், நீளம், பெண்மயிர்.
நெடுமொழி - தன் மேம்பாட்டுரை.
நெடும்பயணம் - நெடும்பிரயாணம், மரணம்.
நெடும்பழக்கம் - வெகுகாலச்சாதனை.
நெடும்பழி - பெரும்பழி.
நெடும்பா - ஆடாதோடை.
நெடும்பார்வை - கண்ணூன்றிப் பார்த்தல்.
நெடும்புகழ் - மிகுபுகழ்.
நெடும்புரிவிடுதல் - எய்த்தல், கடத்தல்.
நெடும்பொழுது - நெடுநேரம்.
நெடுவல் - நீளி.
நெடுவாய் - உள்ளாமீன்.
நெடுவாலூடகம் } நெடுவாற்றிரளி } ஒருமீன்.
நெடுவிரல் - ஆடாதோடை.
நெடுவேர் - சாயவேர்.
நெடுவேளாதன் - குன்றூர் கிழார் மகனாராற் பாடப்பட்டவன்.
நெடுவேள்குன்றம் - திருச்செங்குன்று, இது சோழநாட்டிலுள்ளது.
நெட்டநெடியது - மிகநெடியது.
நெட்டம் - மிளகு.
நெட்டாயம் - நீளம்.
நெட்டி - ஒரு புல் கிடைச்சி, சடை, நெட்டு, நெட்டை அது யாக்கைக் குற்றமைந்தி லொன்று, முளி.
நெட்டிக்கோரை - ஒருபுல்.
நெட்டிசை - நீண்டொலிக்குமிசை.
நெட்டிப்பூ - கிடைச்சியிற்செய்தபூ.
நெட்டிமாலை - கிடைச்சிமாலை.

நெட்டிமுரிதல் - நெட்டைமுரிதல்.
நெட்டிமையார் - பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய புலவர்.
நெட்டிலிங்கு - அசோகு.
நெட்டில் - மூங்கில்.
நெட்டு - இணுக்கு, காம்பு, குலை, சீத்தல், தள்ளுதல், நெட்டென்னேவல்.
நெட்டுக்கட்டுதல் - குலைகட்டுதல்.
நெட்டுதல் - சீத்தல், தள்ளுதல்.
நெட்டுயிர் - நெட்டொலி யுயிரெழுத்து அது இரண்டு மாத்திரை யொலிப்பது.
நெட்டுயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல்.
நெட்டுயிர்ப்பு - பெருமூச்சு.
நெட்டுரு - நீடியருபு, வாய்ப்பாடம்.
நெட்டுருப்படுத்துதல் } வாய்ப்பாடமாக்கல்.
நெட்டுருப்பண்ணுதல் }
நெட்டேத்தி } ஒருவித சங்கு.
நெட்டேதி }
நெட்டேரம் - திட்டேரம்.
நெட்டெழுத்து - உடல்வாசகம், கையொப்பம், நீட்டு, நெடிலெழுத்து.
நெட்டெழுத்துக்காரன் - வாசகமெழுதுவோன்.
நெட்டை - நெடுமை, நெட்டி, முழுவெலும்பு.
நெட்டைக்கங்காளம் - நெடுமையுள்ளது, நெட்டி.
நெட்டைச்சி - நெடுமி.
நெட்டையன் - நெடுவல்.
நெட்டோடை - நீண்டவோடை.
நெண்டுதல் - நெளித்தல்.
நெத்தகர் - ஒருபூடு.
நெத்தலி } நெய்த்தோலி.
நெத்தில் }
நெம்பு - இருகூர்ஆணி, மணிப்பழு, எற்றமடலாணி, நென்பு, மிண்டி, விலாவெலும்பு.
நெம்புதல் - உயர்த்துதல், குனப்பல்.
நெய் - இரத்தம், சித்திரைநாள், நறுநெய் இது பஞ்சகௌவியத்தொன்று, நிணம், நெய்யென்னேவல்.
நெய்க்கடல் - சத்தசமுத்திரத்தொன்று.
நெய்க்குறி - தேரையர்செய்த மூத்திர பரீக்ஷை கூறும் நூல்.

நெய்க்கொட்டான் - பூவந்திமரம்.
நெய்க்கொடை - பூவந்திப்பழம்.
நெய்ச்சட்டி - செங்கழுநீர், பணிகாரச் சட்டி, பவளக்குன்றிமணி.
நெய்ச்சாதம் - நெய்ச்சோறு.
நெய்ச்சிட்டி - சிற்றிலைச்செடி.
நெய்ச்சுட்டி - ஒருசீரை.
நெய்தலுரிப்பொருள் - இரங்கல், இரித்தல், ஊடல், பிரிதல், புணர்தல் இவற்றினிமித்தம்.
நெய்தல் - ஆடைமுதலியநெய்தல், ஆம்பல், இரங்குதல், ஐந்நிலத் தொன்று அது கடலுங் கடல் சார்ந்த விடமும், சாப்பறை, புலர்ந்தோர் புலம்பல்.
நெய்தல்விளைவு - உப்பு, மீன்.
நெய்தற்கருப்பொருள் - நெய்தனில விளைபொருள்.
நெய்தற்குப்பொருள் - நெய்தனிலத்துற்பத்திப் பொருள்கள் அவை வருணன் முதற்கடலாட லீறாய பதினான்குமாம்.
நெய்தற்பதி - நெய்தற்றலைவன், நெய்தனிலத்தூர்.
நெய்தற்பறை - சாப்பறை, நெய்தனிலப்பறை.
நெய்தற்புரம் - தபுதாரநிலை, தாபதநிலை.
நெய்தற்றலைவன் - நெய்தனிலத் தலைவன், வருணன்.
நெய்தற்றிணை - நெய்தனிலம்.
நெய்தற்றிறம் - நெய்தற்பண்.
நெய்தற்றெய்வம் - வருணன்.
நெய்தனிலத்தலைவன் - சேர்ப்பன்.
நெய்தனிலத்தியாழ் - விளரியாழ்.
நெய்தனிலத்தினீர் - உவர்நீர்.
நெய்தனிலத்தூர் - பாக்கம்.
நெய்தனிலப்பறவை - கடற்காக்கை.
நெய்தனிலப்பறை - பம்பை.
நெய்தனிலப்பெண் - அளத்தி, நுளைச்சி, பரத்தி.
நெய்தனிலமரம் - அடம்பு, கோங்கு, தாழை, புன்னை, முள்ளி.
நெய்தனிலமாக்கடொழில் - கடலாடல், மீன், உப்புப்படுத்தல்.
நெய்தனிலமாக்கள் - அளவர், நுளையர், பரதவர்.
நெய்தன்மாக்களுணா - விலைக்குப் பெற்றன.

நெய்தன்மாக்கள் - நெய்தனிலமாக்கள்.
நெய்தன்முதற்பொருள் - கடலுங்கடல் சார்ந்தவிடமுஞ் சிறு பொழுதாய் வெற்பாடும் பெரும்பொழுதாறும்.
நெய்தை - பெருமை.
நெய்த்தல் - கொழுத்தல்.
நெய்த்துடுப்பு - ஆகுதிவிடுந்துடுவை.
நெய்த்தோர் - இரத்தம்.
நெய்த்தோலி - ஒரு பொடிமீன்.
நெய்நெட்டி - சம்பம்புல்.
நெய்ப்பற்று - நெய்ப்பிடி.
நெய்ப்பீர்க்கு - நுரைப்பீர்க்கு.
நெய்ப்பு - கொழுப்பு, சிதல்.
நெய்மீன் - வெள்ளிருமீன்.
நெய்யடிசில் - நெய்ச்சோறு.
நெய்யரி - பன்னாடை.
நெய்யல் - நெசவு, நெய்குதல்.
நெய்யற்கயிறு - நெய்வார் கருவியில் ஒன்று.
நெய்யன்னம் - நெய்ச்சோறு.
நெய்யாடுதல் - நெய்பூசிமுழுகுதல்இது பிள்ளைபேற்றுச் சடங்கினொன்று.
நெய்வண்டி - நெய்த்தவண்டி.
நெய்வார் - நெசவுகாரர்.
நெய்விழா - நெய்யாடுதல்.
நெய்விளக்கு - நெய்வார்த் தெரிக்கும் விளக்கு, மாவிளக்கு.
நெய்வு - நெசவு.
நெய்வைத்தல் - கொழுப்பேறுதல்.
நெரடு - வாசிக்ககடினமானது.
நெரி - நெரியென்னேவல், நெரிவு, புடைவை முரிப்பு, புரி, மடிப்பு.
நெரிகுழல் - சுரிகுழல், பெண்.
நெரிகொட்டை - நெருங்குகொட்டை.
நெரிசல் - மனக்குறை, வெறுப்பு.
நெரிஞ்சி } ஒரு முட்பூண்டு இது தச
நெரிஞ்சில் } மூலத்தொன்று.
நெருஞ்சின்முள் - ஒரு யுத்தாயுதம்.
நெரிதரல் } உடைதல், ஒடல், சாய்
நெரிதல் } தல், நசிதல், நொருங்குதல்.
நெரித்தல் - நசுக்குதல், நிமிட்டல், நொறுக்குதல், வருத்தல்.
நெரிநெட்டி } சம்பம்புல்.
நெரிநெட்டிக்கோரை }
நெரிமடுதல் - நசுங்குதல்.
நெரிபிடித்தல் - புடைவைமுரிப்புவிடல்.
நெரிபுருவம் - கண்புருவம்.
நெரிப்பு - நெரிதல்.
நெரிமயிர் - சுரிமயிர்.
நெரிமீட்டான் - ஒருபூண்டு.
நெரியாசம் } எரிதாசு.
நெரியாசி }
நெரிவருண்சுக்கிரன் - கண்ணோயுள் ஒன்று.
நெரிவிடுதல் - நெரிபிடித்தல்.
நெரிவு - நெரிதல், பகை.
நெரிக்கடி - இக்கட்டு, கடுமை, பலவந்தம், வருத்தம்.
நெருக்கட்டியெனல் - சீக்கிரக்குறிப்பு.
நெருக்கம் - இடைஞ்சல், இடைவிடாமை, ஒடுக்கம், கிட்டுமானம், கொடுமை, நெருங்குதல்.
நெருக்கல் - நெருக்குதல்.
நெருக்கவாரம்-தரித்திரம்,நெருக்கிடை.
நெருக்கிடை - குரூரம், தரித்திரம், நெருக்கம்.
நெருக்கு - நெருக்கம், நெருக்கிடை, நெருக்கென்னேவல்.
நெருக்குண்ணுதல் - நெருக்குப்படுதல், நெருங்குதல்.
நெருக்குதல் - ஒடுக்குதல், கடினம்பண்ணுதல், நெருங்கச்செய்தல், பலவந்தம் பண்ணுதல்.
நெருக்குவழி - அருக்கைவழி.
நெருக்குவாரம் - நெருக்கிடை.
நெருக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.
நெருங்கப்பிசைதல் - இருகப்பிசைதல்.
நெருங்கல் - உறுதிச்சொல், கொல்லல் செறிவு.
நெருங்குதல் - உறுதிப்படுதல், கடினமாதல், கிட்டுதல், கொல்லல்.
நெருஞ்சி } நெரிஞ்சில், ஒரு முட்
நெருஞ்சில் } செடி.
நெருடல் - இழைபொருத்தல், உறுதித்தடவல், வஞ்சித்தல்.
நெருடன் - வஞ்சகன்.
நெருடு - இழையின் பொருத்து, நெருடென்னேவல், வஞ்சனை.
நெருடுதல் - நெருடல்.
நெருட்டுப்புத்தி - வஞ்சகப்புத்தி.
நெருநல் - சற்றுமுன், முன்னைநாள்.
நெருநெருத்தல் - ஒலிக்குறிப்பு,சீக்கிரக்குறிப்பு.
நெருநெருப்பு - அடைசல், உள்வலி, ஒலிக்குறிப்பு.

நெருநெரெனல் - நெருநெருத்தல்.
நெருப்பன் - கடுங்கோபி, பொல்லாதவன்.
நெருப்பு - அக்கினி.
நெருப்புக்கண் - சிவனதுநெற்றிக்கண், தீயன்.
நெருப்புக்கண்ணன் - அக்கினிக் கண்ணன்.
நெருப்புக்கல் - காடிக்காரம், தீத்தட்டிக் கல், சக்கிமுக்கி.
நெருப்புக்கொளுத்துதல் - அநீதஞ் செய்தல், கோபங்கொள்ளுதல், தீக் கொள்ளுதல்.
நெருப்புக்கொள்ளி - தீயன், தீயுறுவிறகு.
நெருப்புக்கோழி - தீக்கோழி, வான் கோழிச்சேவல்.
நெருப்புச்சட்டி - தீச்சட்டி.
நெருப்புச்சயநீர் - ஒரு திராவகம்.
நெருப்புச்சாணை - ஒரு சாணைக்கல்.
நெருப்புச்சிகை - அக்கினிக்கொழுந்து.
நெருப்புத்தண்ணீர் - எரிநீர்.
நெருப்புத்தழல் - தீக்கட்டி.
நெருப்புத்திரான் - தீத்திரன்.
நெருப்புத்திராவகம் - நெருப்புத்தண்ணீர்.
நெருப்புப்படுதல் - அழிதல், தீப்படுதல்.
நெருப்புப்பிடித்தல் - தீப்பற்றல்.
நெருப்புப்பொறி - தீப்பொறி.
நெருப்புமழை - அக்கினிமழை.
நெருப்புவட்டம் - அக்கினி மண்டலம்.
நெருப்புவிழுதல் - தீவிளைதல்.
நெருமுதல் - கருமுதல்.
நெரேலெனல் - ஒலிக்குறிப்பு.
நொர்க்குண்டி - நொச்சி.
நெல் - நெல்லு, வாகை.
நெல்லி - ஒருமரம்.
நெல்லிக்கந்தகம் - நெல்லிக்காய்க் கந்தகம்.
நெல்லிக்காய் - நெல்லிமரத்தின் காய் இது திரிபலையிலொன்று, அவர்பத்திலுமொன்று.
நெல்லிக்காய்கந்தகம் - ஒருகந்தகம்.
நெல்லித்தத்தி - ஒருபூடு.
நெல்லிமுள்ளி - பெருநெல்லிவற்றல்.
நெல்லு - ஓரளவு, சாலி, நெற்பயிர்.
நெல்லூர் - ஒரூர்.
நெளி - ஒருவகைமோதிரம், நெளியென்னேவல்.
நெளிச்சலன் - வளைத்தவன்.

நெளிச்சல் - வளைதல்.
நெளிதம் - அற்புதம், இலேசு.
நெளிதல்-கழிதல், புரளுதல், வளைதல்.
நெளித்தல் - இறுமாப்புக்காட்டல், நெளிக்குதல்.
நெளிப்பு-இறுமாப்பு, நெளித்தல், பரிகாசம்.
நெளியலன்-கூனன், வளையலன்.
நெளியல் - நெளிவுள்ளது.
நெளிர் - பேசலாமெழுமொலி.
நெளிர்தல் - பேசலாமெழுமொலி.
நெளிவு - வளைவு.
நெறநெறெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
நெறி - ஒழுங்கு, கண்மண்டைக்குழி, கற்பு, கோவில், சன்மார்க்கம், சுளுக்கு, செவ்வை, நரப்புத்திரட்சி, நீதி, முறை, வழி, விதம்.
நெறிகேடன் - நெறிகெட்டவன்.
நெறிகேடு - முறைதவறு.
நெறிக்கல் - சுக்கான்கல்.
நெறிக்கோரை - ஒருபுல்.
நெறித்தல் - சிலிர்த்தல், செவ்வேறிற்றல், முறிப்புக்கொள்ளல்.
நெறிநிற்போன் - சன்மார்க்கத்தில் நிற்பவன்.
நெறிபிழைத்தல் - நெறிதவறுதல்.
நெறிப்படுத்தல் - ஒழுங்குப்படுத்தல், குணப்படுத்தல், வழிப்படுத்தல்.
நெறிப்பு - சிலிர்ப்பு, முரிப்பு.
நெறிமயிர் - சிலிர்த்தமயிர்.
நெறிமான் - நீதிமான்.
நெறிமை - நீதி.
நெறியிலார் - கீழ்மக்கள், நீதிகேடர்.
நெறியிலி - துன்மார்க்கன்.
நெறுக்கட்டியெனல் - ஒலிக்குறிப்பு.
நெறுக்கிடுதல் / நெறுக்கெனல் } ஒலிக்குறிப்பு.
நெறுநெறுத்தல் / நெறுநெறுப்பு / நெறுநெறெனல் } ஈரடுக் கொலிக்குறிப்பு.
நெறுமுதல் - நெருமுதல்.
நெற்கணக்கு - நெல்வாய்க்கணக்கு.
நெற்கழி - ஒருவகைநிலம்.
நெற்காணி - நெல்விளைநிலம்.
நெற்குவியல் / நெற்குவை } நெற்போர்.
நெற்குறி - நெற்கொண்டு சொல்லும் ஒரு சோசியம்.

நெற்கூர் - நெல்வால்.
நெற்சப்பி - ஒருபுல்.
நெற்பயிர் நெல்விளைவு.
நெற்பரப்பு - பன்னிரண்டுகுழிகொண்ட நிலம்.
நெற்பழம் - மதத்தினால்வெடித்தநெல்.
நெற்பு - தீ, மெலிவு.
நெற்பூமி - நெற்காணி.
நெற்போர் - நெற்குவை.
நெற்றலன் - செத்தன்.
நெற்றலி - ஒருமீன்.
நெற்றி - உச்சி, நுதல், படைவகுப்பு.
நெற்றிக்கண்ணன் - சிவபிரான்.
நெற்றிச்சுட்டி - ஓராபரணம், நெற்றியில் வெண்ணிறப்புள்ளி.
நெற்றிச்சுழி - நெற்றியிற் சுழிப்பு.
நெற்றிச்செகில் - செகிற்சுட்டியேறு.
நெற்றித்தலம் - நெற்றி.
நெற்றித்திலகம் - பொட்டு.
நெற்றிப்பட்டம் - ஓராபரணம்.
நெற்றிப்புருவம் - புருவம்.
நெற்றிப்பொட்டு - திலகம்.
நெற்றிமாலை - ஒருமாலை.
நெற்றிமுட்டு - கிட்டுமானம், சரிநேர், முன்புறம்.
நெற்றியிற்கல்லுவைத்தல்-ஓராக்கினை, நெருக்கிடை.
நெற்று - உலர்ந்தபழம், நெற்றென்னேவல்.
நெற்றுதல் - இடறுதல்.
நென்பு - பழு, மர ஆப்பு.
நென்னல் - முன்னைநாள்.

நே

நே - ஓரெழுத்து, நேயம்.
நேசகன் - வண்ணான்.
நேசநாயனார் - சாதியிற் சாலியராகிய ஒரு சிவபத்தர். இவர் சிவனடியார்க்கு உடையும் கீளும் நெய்து கொடுக்குந் திருத்தொண்டு பூண்டு காம்பிலி நகரத்திலிருந்தவர்.
நேசம் - அன்பு.
நேசன் - அன்பன், சிநேகன்.
நேசி - அன்புள்ளான், நேசியென்னேவல்.
நேசித்தல் - அன்புவைத்தல்.
நேசிப்பு - அன்பு.
நேடல், நேடுதல் - தேடல், விரும்பல்.
நேத்தி - நேற்றி.
நேத்திரசம் - கண்ணீர்.
நேத்திரச்சதம் - கண்மடல்.
நேத்திரநோய் - கண்ணோய்.
நேத்திரபரியந்தம் - கடைக்கண்.
நேத்திரபிண்டம் - கண்விழி, பூனை.
நேத்திரபேஷஜம் - கண்வைத்தியம்.
நேத்திரப்படலம் - ஒருகண்ணோய்.
நேத்திரநோக்கம் - கண்பார்வை.
நேத்திரம் - கண், பட்டாடை, வேர்.
நேத்திரயோனி - இந்திரன், சந்திரன்.
நேத்திராஞ்சகம் - கண்ணுக்கிடுமை.
நேத்திரரோகம் - கண்ணோய்.
நேத்திரவாயு - ஒருவாயு.
நேத்திரவிதி - நயனவிதி.
நேத்திரவீட்சணம் - கிருபையாய்ப்பார்த்தல்.
நேத்திரவைத்தியம் - நயனபரிகாரம்.
நேத்திரவைத்தியன் - கண்பரிகாரி.
நேத்திராஞ்சனம் - கண்மருந்து.
நேத்திராமயம் - கண்ணோய்.
நேத்திராம்பு - கண்ணீர்.
நேத்திராரி - கள்ளிமரம்.
நேத்திராவுடதம் - கண்மருந்து.
நேத்திரோற்சவம் - கண்ணுக்கு விருப்பமானது.
நேத்திரௌஷதம் - கண்மருந்து.
நேபம் - நீர்.
நேபன் - புரோகிதன்.
நேபாலிகை - ஒருபாஷாணம்.
நேபாளம் - ஒரு நச்சுமரம், தேயமைம்பத்தாறினொன்று.
நேமகம் - நியமம்.
நேமநிட்டை - நியமநிட்டை.
நேமம் - அறுப்பு, சாயங்காலம், நியமம், நேரம், பங்கு, பிளப்பு, முறை, மேல், வேர், வெளி.
நேமி - கடல், சக்கரவாகப்புள், சக்கிரம், தேருருள், நேமியென்னேவல், பூமி, மூங்கில், மோதிரம், வட்டம்.
நேமிசந்தன - வேங்கை.
நேமித்தல் - நியமித்தல்.
நேமிநாதம் - தொண்டைநாட்டில்களத்தூரில் விளங்கிய குணவீரபண்டிதர்

என்னும் ஆருகதர் செய்த தமிழிலக்கண நூல், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னு மிரண்டுமேயுள்ளது, இது தொண்ணூற்று வெண்பாக்களால் முடிந்துள்ளது.
நேமிநாதன் - அருகன், கடவுள், திருமால், வருணன்.
நேமிப்புள் - சக்கரவாகப்புள்.
நேமியான் } விட்டுணு.
நேமியோன் }
நேமிவலயம் - பூமண்டலம்.
நேமிவலவன் - அரசன், கடவுள்.
நேயம் - அன்பு, எண்ணெய், நன்மை, நிலப்பனை, நெய், உறவு.
நேயன் - நேசன்.
நேர - உவமைச்சொல்.
நேரகாலம் - தற்காலம்.
நேரங்கடத்துதல் - பொழுதுபோக்கல்.
நேரங்கெட்டநேரம் - ஒவ்வாதசமயம்.
நேரசை - குற்றெழுத்தேனு நெட்டெழுத்தேனுந் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது.
நேரசைக்கலித்துறை - நேரசையாய்த் தொடங்குங் கலித்துறை.
நேரஞ்சாய்தல் - பொழுதுசரிதல்.
நேரடி - அளவடி.
நேரஸ்தன் - குற்றவாளி.
நேரம் - அபராதம், காலம், குற்றம், சமயம், தண்டிப்பு, நற்சமயம், பகலிற்பாதி.
நேரலர் - பகைவர்.
நேரல் - ஒத்தல்.
நேராக்தல் - சரிப்படுத்துதல்.
நேராதல் - இணங்குதல், சரியாதல்.
நேரார் - பகைவர்.
நேராளி - நேருள்ளவன்.
நேரி - சோழதேயத்தோர்மலை.
நேரிசம் - அம்பு, எறிபடை.
நேரிசைக்கலிப்பா - கலிப்பாவினோர் பேதம்.
நேரிசைச்சிந்தியல்வெண்பா - மூன்றடியாய் நேரிசை வெண்பாப்போல விரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்றுவருவது.
நேரிசையாசிரியப்பா - ஈற்றயலடிமுச்சீராய் மற்றையடியெல்லா நாற்சீராய் வருவது.
நேரிசையொத்தாழிசைக்கலிப்பா - தரவுதாழிசை தனிச்சொல் சுரிதகமென்று நான்குறுப்புக்கொண்டு வருவது.
நேரிசைவெண்பா - நான்கடியாய் இரண்டா மடியினிறுதி தனிச்சொல்லால் வர அடிமுழுதும் ஒரோதுகையாயேனும் முன்னிரண்டும் ஒரோதுகையும் பின்னிரண்டு மற்றோரோதுகையாயேனும் வருவது.
நேரிடுதல் - எதிர்த்தல், எதிர்ப்படுதல், சம்பவித்தல், தொடங்குதல்.
நேரிட்டபடி - எழுந்த மரணம்.
நேரியது - நேரானது.
நேரியன் } சோழன், நுண்ணறிவினன்.
நேரிவெற்பன் }
நேரிவாயில் - உறையூர்க்குத் தெற்கிலுள்ளவோரூர்.
நேரிழை - பெண்.
நேரியிறை - சோழன்.
நேரீற்றியற்சீர் - நேரசையாலிறுமாசிரியவுரிச்சீர்.
நேருக்குச்சீர் - செம்பாகம்.
நேரேடம் } நாவன்மரம்.
நேரேடு }
நேரொன்றாசிரியத்தளை - இயற்சீர்கள் ஒன்றும்பலவுந் தம்முளொத்துநின்ற சீரினீற்றசை நேராய் நிற்கவருஞ்சீர் முதலசை நேராய் ஒன்றிவருவது.
நேரோடல் - நேராயோடல் இது துரகதியினொன்று.
நேர் - உடன்பாடு, உண்மை, உவமை, ஒப்பரவு, கற்பு, சரி, செவ்வை, தகுதி, நீதி, நீளம், நுட்பம், நேரசை, நேரென்னேவல், பாதி, முன், மேல்வரிசை.
நேர்கடன் - நேர்ந்தகடன்.
நேர்கட்டுதல் - சரிக்கட்டுதல்.
நேர்காட்டுதல் - சரிவளமாக்குதல், முன்காட்டுதல், விழுங்குதல்.
நேர்காற்று - வளக்காற்று.
நேர்சீர் - இணக்கம், நேருக்குச்சீர்.
நேர்சொல்லுதல் - சத்தியஞ்சொல்லுதல்.
நேர்ச்சி - இணக்கம், சம்மதம், சிநேகம், தகுதி, நேர், பிரதிக்கினை.
நேர்ஞ்சிராய் - நேரியசிராய்.
நேர்தல் - ஈதல், உடன்படல், எதிர்த்தல், கிட்டல், சம்பவித்தல், பொருதல், மெலிதல், வேண்டுதல்.

நேர்திறம் - பாலைப்பண்ணின் திறமைந்தனுளொன்று.
நேர்த்தி - சிறப்பு, திருத்தமுள்ளது, நேருதல், நேர்ந்த பொருள்.
நேர்த்திக்கடன் - வாசாதத்தம் பண்ணியது.
நேர்த்திக்குறிப்பு - தவமுறைமை.
நேர்நஞ்சு - கல்மதம்.
நேர்நிதானம் - சரிநிதானம்.
நேர்நிறை - கற்பு, சரிபாரம், நீதி.
நேர்நெட்டி - ஒருபூடு.
நேர்ந்தபடி, நேர்ந்தபாடு, நேர்ந்தபார் - எதிரிட்டபடி.
நேர்ந்தார் - சினேகிதர்.
நேர்ந்துகொடுத்தல் - கொடுக்கவியமித்தல்.
நேர்பசை - நேர்க்கீழ்க்குற்றுகர முற்றுகரம் வருவது.
நேர்படுதல் - இணங்குதல், சந்தித்தல், சம்மதித்தல், சிநேகித்தல்.
நேர்பண்ணுதல் - சத்தியம்பண்ணுதல், சமனாக்குதல்.
நேர்பாடு - சம்மதி. நினையாமல்வருகிறது, நீளம்.
நேர்பாடுசொற்பாடு - சொற்படிவாய்ப்பு, நினைத்திராத காலத்துவந்தது.
நேர்பு - எழுச்சி, ஒன்றிப்பு, நீளம்.
நேர்போதல் - இணங்குதல், குணமாதல், சரிபோதல்.
நேர்ப்பிசின் - ஒருபூடு.
நேர்ப்பு - நேர்த்தி.
நேர்முகம் - எதிர்முகம்.
நேர்மை - இணக்கம், செவ்வை, நிதானம், நுண்மை.
நேர்மையம் - சரிநடு.
நேர்வனம் - செவ்வழியாழ்த்திறம், பாலையாழ்த்திறம், வேய்ங்குழல்.
நேர்வாளம் - ஒருமரம், நேபாளங்கொட்டை.
நேர்வான் - சித்திரைநாள்.
நேர்வு - உடன்பாடு, எதிர்தல், கூடுதல், கொடை, சம்பவிப்பு, சருவுதல், பொருதல்.
நேற்றி - செவ்வை, நல்லது.
நேற்று - முதனாள்.

நை

நை - இகழ்ச்சிக்குறிப்பு, ஓரெழுத்து, நையென்னேவல்.
நைகரம் - துன்பம், வருத்தம்.
நைகோதி - நசிகோதி.
நைக்காட்டுதல் - நையாண்டிபண்ணல்.
நைசர்க்கிகம் - சுபாவம்.
நைசல் - வியாதி.
நைசிகம், நைசியம் - காக்கை, நாசியிற் புகுத்து மருந்து.
நைச்சி - காகம், பாம்பு.
நைச்சிகம், நைச்சியம் - தாழ்வு.
நைஷதம், நைடதம் - ஒருகாப்பியம், நிடதம்.
நைட்டிகன் - நிட்டைக்காரன்.
நைட்டூரியம் - நிட்டூரம்.
நைவல் - இரங்கல், கெடுதல், தளர்தல், துக்கித்தல், துன்புறல், நசிதல், வதங்கல், வருந்தல், வாடல்.
நைநிகை - முல்லை.
நைதெனல் - இரக்கக்குறிப்பு, மெலிவின் குறிப்பு.
நைத்தல் - கெடுத்தல், தளர்த்தல், துக்கப்படுத்தல், நசித்தல், வருத்தல், வாட்டல்.
நைத்திகம், நைத்தியம் - நித்தியம் நித்தியாராதனை.
நைநையெனல் - இகழ்ச்சிக்குறிப்பு.
நைந்திகை - நைநிகை.
நைபடல் - நசிபடல்.
நைபாலி - அடுக்குமல்லிகை, சிவந்த பாஷாணம், நீலம்.
நைபாலிகம் - தாமிரம்.
நைபுணம் - நிபுணத்துவம்.
நைபுணன் - நிபுணன்.
நைபுண்ணியம் - நிபுணத்துவம்.
நைமிசம், நைமிசாரணியம் - ஒருவனம். வடநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
நைமிசம் - மரீசி, அத்திரி, பிருகு, வசிஷ்டன், கிருது, அங்கிரசன் என்பவர்களுடைய வமிசத்தவர்கள் தவஞ்செய்த ஆரணியம்.
நைமித்திகம், விசேடாராதனை.

நைமித்திகதானம் - நிமித்தத்தாற் செய்யும் தானம்.
நைமுத்தியம் - நைமித்திகம்.
நையத்தியம் - நியதத்துவம்.
நையல் – நைசியம்.
நையல் - கிரந்திவியாதி, துன்பம், மெலிவு, வகுரி.
நையாண்டி - இகழ்ச்சி, சரசம், பரிகாசம்.
நையாயிகம் - ஒருமதம்.
நையாயிகர் - கௌதமகணுதமத வாதிகள், இவர்கள் சித்துஞ்சடமுமாகிய இரண்டுமே நித்தியப்பொருள்களென்பார்கள். சடமாகிய இவ்வுலகம் பீஜத்தினின்றும் தோற்றுவிக்கப்பட்டதென்றும், தோற்றுவிப்பது சித்துப்பொருளென்றும்; தோற்றும்போது பீஜம் ஏகாணுவாய்ப் பின்பு த்வயாணுவாய் பின்பு த்ரயாணுவாய் வடிவுடைப்பொருளாகுமென்றும் ஒடுங்கும்போதும்அவ்வாறேயொடுங்கிச்சென்று பீஜமாய் நிற்குமென்றும், அந்நிலையில் அதுநித்தியமென்றும், வடிவுடையதாய் நிற்கு நிலைக்கண் அழியுமியல்பிற்றென்றும், சித்தின்றிச்சடம் காரியப்படாதென்றும், ஆன்மகோடிகளெல்லாம் சகத்காரணமாகிய சித்துப்பொருளின் அமிசங்களேயாமென்றும் அமிசங்களாதலால் சிற்றறிவும்சிறு தொழிலு முடையனவென்றும் சகத்காரணமாகிய சித்து முழுமுதலாதலால் முற்றறிவும் முற்றுத் தொழிலுமுடைய தென்றும், ஆன்மாக்கள் சரீரத்தோடுகூடியயிருக்கும்போது அஞ்ஞானமுடையதாயிருக்குமென்றும், இடையறுத முயற்சியால் ஞானத்தை யடைந்தவிடத்து அவ்வான்மாக்கள் முழுமுதலோடு சேர்ந்து பேரானந்தத்தை யநுபவிக்குமென்றும் கூறுவார்கள். இவையே நையாயிகமதக்கொள்கை.
நையாயிகன் - நியாயசாத்திரி, நையாயிகமதாநுசாரி.
நைரந்தரியம் - இறுக்கம்.
நைராக்கியம் - பரிகாசம்.
நைராசியம் - ஆசையின்மை.
நைருதி - நிருதி, நிருதிதிசை.
நைர்க்குண்ணியம் - நிற்குணம்.
நைர்மல்லியம் - சுத்தம்.
நைவளம் - குறிஞ்சியாழ்த்திறம்.
நைவு - நைதல்.
நைவேதனம் - நிவேதனம்.
நைவேத்தியம் - காணிக்கை, தேவர்க்குச் சமர்ப்பிப்பது.
நைஷதம்-ஸம்ஸ்கிருதத்தில் பஞ்சகாவியங்களுள் ஒன்று. இது ஸ்ரீஹர்ஷன் என்னு மஹாகவியால் செய்யப்பட்டது, நிஷததேசத் தரசனுகிய நளமஹாராஜன் சரிதத்தைச் சொல்லுதலால் இந்தக் காவியத்துக்கு நைஷதம் என்று பெயராயிற்று. இது தமிழில் புகழேந்திப் புலவரால் வெண்பாக்களாலும், அதிவீரராம பாண்டியனால் விருத்தங்களாலும் மொழிபெயர்க்கப்பட்டுவழங்கிவருகின்றது அன்றியும் இது கலித்துறையாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மொழிபெயர்த்தவர் பெயர் முதலியவை நன்கு புலப்படவில்லை. இந்நூலில் இரண்டொரு செய்யுட்களேயன்றி நூல் முழுதும் காணப்படவில்லை. இதில் முதற்காப்புச்செய்யுள் இங்குத்தருவாம், "தழைவிரி கொன்றைத் தளிமுதலோன் செஞ்சடையில் வைத்த, குழவிவெண்டிங்களையிற்றநங்கோட்டின் குறையிதெனப், புழைநெடுங்கையதனுற் பற்றிப்பொற்புறநோக்கி நிற்கும், மழைமதயானைமுகத்தோ னிருசரண் வாழ்த்துவனே."

நொ

நொ - ஓரெழுத்து, துன்பம், நொவ்வென்னேவல், நோய், வருத்தம்.
நொக்காங்குலை - நக்காங்குலை.
நொக்கு - வெடிப்பு.
நொங்கு - நுங்கு.
நொசி - மெல்லியது.
நொசிதல் - துவளல், நுண்மையாதல், வருந்தல், வாடல்.
நொசிவு - துவள்வு, நுண்மை, வருத்தம் வாட்டம்.

நொச்சி - ஒருசெடி அது அட்டாதச மூலத்தொன்று, சிற்றூர், மதில்.
நொச்சிநியமங்கிழார் - புறநானூற்றினுள்ளே ஒரு பாடல் பாடிய புலவர்.
நொச்சிமாலை - ஒருபிரபந்தம் அது மாற்றார்க்கெதிரின்றி நொச்சிப்பூமாலை சூடித் தம்மதில்காக்குந் திறங்கூறுவது, மாற்றார்க்கெதிருன்றித் தம் மதில் காப்போர்க்கு மாலை.
நொடி - காலநுட்பம், கைந்நொடி, சொல், நொடி யென்னேவல், பன்னம், விடுகதை.
நொடிதல் - சொல்லல்.
நொடித்தல் - அழித்தல், கையால்நொடிக்குதல், சொல்லல், பால்சுரத்தல்.
நொடிபாராட்டுதல் - விடுகதைசொல்லல்.
நொடிப்பு - நொடித்தல்.
நொடியவிழ்த்தல்-விடுகதைவிளக்குதல்.
நொடுநொடுக்கெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
நொடுநொடுத்தல்-திடீனமாய் நடத்தல், பரபரத்தல்.
நொடுநொடுப்பு - திடீனம், பரபரப்பு.
நொடுநொடெனல் - நொடுநொடுத்தல்.
நொடை - விலை, விற்றல்.
நொட்டை - நொன்னை.
நொண்டல் - நொண்டுதல், முகத்தல், விழுங்கல்.
நொண்டி - ஒருநூல், கான்முடவன், பொய்க்கால்.
நொண்டுதல் - கால்முடக்கப்பட்டுக் குந்திநடத்தல்.
நொதி - நொதியென்னேவல், பெருஞ்சேறு.
நொதித்தல், நொதிப்பு - ஊறல், கொப்புளித்தல், சேச்சுட்டல், நுரைத்தெழும்பல்.
நொதுக்கல் - நொதுப்புள்ளது.
நொதுத்தல் - அவித்தல்.
நொதுநொதுத்தல், நொதுநொதுப்பு, நொதுநொதெனல் - இளக்கக்குறிப்பு.
நொதுப்பு - இளக்கம்.
நொதுமலர் - அயலோர்.
நொதுமல் - அயல், நொய்மை, பற்றிகலின்மை.

நொத்தல் - நொப்புக்கட்டுதல், வருத்துதல்.
நொத்து - நொப்பு.
நொந்தகைமை, நொந்தலை, நொந்தலைமை - நோ, பலவீனம், வறுமை.
நொப்பு - ஆட்டின்மூலையிற் சுற்றிய ஓலை, தடை.
நொய் - இலேசு, உடையுந்தன்மை, குறுநல், மிருதுத்துவம், மென்மை.
நொய் - நொய்மை.
நொய்தல் - நுண்மை.
நொய்து - மிருது, மெல்லிசு, விரைவு.
நொய்தெனல் - மெதுமெதுத்தல், விரைவின் குறிப்பு.
நொய்மை - உருக்கம், எண்வகையூறில் ஒன்று, எளிமை, கேடு, தளர்வு, நொய்வு, மிருது, மென்மை, வறுமை.
நொய்யசொல் - எளியசொல்.
நொய்யரிசி - குறுநல்.
நொய்யவன் - எளியவன், பலவீனன், வறியவன், வெஞ்சொற் பொறாதவன்.
நொய்யெனல் - நுண்மைக்குறிப்பு.
நொய்வு - இலகு, நொய்மை.
நொரு - துரு காய்ப்புமாறின பின்னரும்பும் பிஞ்சு, பயிரினடியில் முளைப்பது.
நொருகை - தின்பண்டம்.
நொருக்கரிசி - உக்கலரிசி முட்டரிசி.
நொருக்கல் - நொருங்கப்பட்டது.
நொருக்காய் - குருவிற்காய்.
நொருக்கு - அடி, நெரிவு, நொருக்கென்னேவல், முரிவு.
நொருக்குதல் - அடித்தல், நருக்குதல்.
நொருங்குதல் - நருங்குதல், முரிதல்.
நொருநொருத்தல், நொருநொருப்பு, நொருநொரெனல் - ஈரடுக் கொலிக்குறிப்பு.
நொருவல் - நொரு, நொருங்குண்டது.
நொருவெடித்தல் - பயிர்கள்கப்பித்தல்.
நொலை, நொலையல் - அப்பவருக்கம்.
நொவ்வி - தளர்வு, நொய்மை, நொவ்வென்னேவல், நோ, வருத்தம்.
நொவ்வுதல் - நொய்தாதல், வருந்துதல்.
நொளநொளத்தல் - நளுநொளுத்தல்.

நொளுக்கல் - இளம்பாக்கு.
நொளுநொளுத்தல்-நொளநொளத்தல்.
நொளுநொளெனல்-நொளநொளத்தல்.
நொளுவல் - நொளுக்கல்.
நொளுநொளுப்பு - நளுநொளுப்பு.
நொள்கல் } அச்சக்குறிப்பு, ஞொள்கல், முகத்தல்.
நொள்குதல் }
நொள்ளல் - குருடு, கொசுமூ, நுளம்பு.
நொள்ளுதல் - நொள்குதல், விழுங்குதல்.
நொள்ளை - குருடு, நாகரவண்டு.
நொறிதல் - விரைவு.
நொறில் - அடக்கம், விரைவு.
நொறுக்கு - அடிக்கை, நருக்கு.
நொறுக்குச்சக்கந்தம் - பரிகாசம்.
நொறுக்குதல் - நறுக்குதல், பொடியாக்கல்.
நொறுக்குநொறுக்கெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
நொறுங்கல் - நொறுங்குதல், நொறுங்கினது.
நொறுங்கு - குறுநல், நொய்மை, நொறுங்கென்னேவல்.
நொறுங்குதல் - நருங்குதல், நொய்தாதல்.
நொறுவை }
நொற்பம் } நொய்து.
நொற்பன் }
நொன்னை - சரசம்.

நோ

நோ - இன்னம், ஓரெழுத்து, சிதைவு, துக்கம், துன்பம், நோவென்னேவல், பலவீனம், வியாதி.
நோக்கம் - அருமை, அழகு, உயர்ச்சி, எண்ணம், கண், காவல், புன்மை, தோற்றம், பார்வை, விருப்பம்.
நோக்கர் - கழைக்கூத்தர்.
நோக்கல்-காணல்,காத்தல்,நோக்குதல்.
நோக்காடு - தரித்திரம், நோ, பிரசூதிநோ.
நோக்கு - அழகு, எண்ணம், கண், கிரகநிலைகளினேழாமிடம், தயவு, நோக்கென்னேவல், பார்வை, விருப்பம், வினோதக்கூத்து.
நோக்குதல் - கடாச்சித்தல், காத்தல், தயவுசெய்தல், பார்த்தல், விரும்புதல்.
நோக்குவித்தை - ஒரு தந்திரவித்தை.
நோசல் - நோவு.
நோஞ்சல் - மெலிதல்.
நோஞ்சி - மெலிந்தவன்.
நோடாலம் - நூதனம், நொன்னை.
நோட்டம் - கண்ணோடியறிதல், கண்திட்டம், விலை.
நோட்டம்பார்த்தல் - தகுதியறிதல், விலைபார்த்தல்.
நோட்டம்பேசுதல் - பிறரைத்தன்பேச்சுக் குட்படுத்தும்படி பேசல்.
நோண்டல் } உரித்தல், கிண்டல், கிள்ளுதல், தோண்டல், முகத்தல்.
நோண்டுதல் }
நோதலை - தரித்திரம், நோ, மெலிவு.
நோதல் - கேடு துக்கித்தல், துன்புறல், நோயுறல், பெலவீனம், மரத்தின் சதா, வறுமை.
நோப்படுதல் - காயப்படல், மெலிதல், விதனப்படுதல்.
நோம்பு - நோன்பு.
நோம்புதல் - நுழைவுதல்.
நோயணுகாவிதி - தேரையர் செய்த ஆரோக்கிய நூல்.
நோயாளி - வியாதிக்காரன்.
நோயின்மை - நாட்டுப்பெருமையாறில் ஒன்று.
நோய் - துன்பம், வருத்தம் இது மாயயாக்கைபதினெண்குற்றத்தொன்று.
நோய்கொள்ளுதல் - வியாதிகொள்ளுதல்.
நோய்ச்சல் - நோய்கொள்ளல்.
நோய்ஞ்சலன் - மெலிந்தவன்.
நோய்ஞ்சல் - நோய்ஞ்சி, நோய்.
நோய்ஞ்சி-வியாதிகொண்டுமெலிந்தது.
நோய்ஞ்சியன் - நோய்ஞ்சலன்.
நோய்த்தல் - நோய்ச்சல்.
நோய்முகன் - சனி.
நோலல் - நோற்றல்.
நோலாதார் - தவமில்லார், பொறுமையுள்ளோர்.
நோலாமை - தவமின்மை, பொறுமை.
நோலோர் - நோலாதார்.
நோலுதல் - நோற்றல், பொறுத்தல்.
நோலை - எள்ளுருண்டை.
நோவாளி - நோவுள்ளான், மிடியன்.

கோவு - கோய், மஞ்சள், மெலிவு, வருத்தம்.
கோழிசை - தூற்பசுது.
கோற்பு - தவம், பொறுத்தல், விரதம்.
கோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல்.
கோனுமை - தவமின்மை, பொறுமை.
கோனார் - தவமில்லார், பகைவர், பொருமையுள்ளோர்.
கோனுதல் - தவஞ்செய்தல், நிலைநிறுத்தல், பொறுத்தல், விரதமனுட்டித்தல்.
கோன்பி - தவத்தி.
கோன்பி - உபவாசம், தவம், விரதம்.
கோன்புதிறத்தல் - பாரணை பண்ணல்.
கோன்மை - தவம், பெருமை, பொருமை, வலி.
கோன்றல் - தன்னல், நிலைநிறுத்தல், பொறுத்தல்.
கோன்றூன் - வலியகால்.

ப

ப - இருபதிலோர் பாகத்தைக் காட்டும் ஓர் கீழ்வாயிலக்கக்குறி, ஓரெழுத்து, காற்று, சாபம், பெருங்காற்று.
பஃறுழிசைக்கொச்சகக்கலிப்பா - பல தாழிசைகளோடு மற்றை யுறுப்புக்களையும் பெற்று வருவது.
பஃறி - இரேபதி, ஓடம், மரக்கலம்.
பஃறுளியாறு - குமரியாற்றுக்குத் தெற்கின்னேடிய ஓராறு.
பஃறொடை வெண்பா - நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்றுவருவது.
பகசித்து - கண்ணன், வீமன்.
பகடக்காரன் - அதட்டி, எத்தன், தந்திரி, வெளிவேஷக்காரன்.
பகடம் - சிலம்பம், தந்திரம், வெருட்டு, வெளிவேடம்.
பகடி - அகசியக்காரன், பரிகாசம், விகடம்.
பகடு - ஆணை எருமை பசு இவற்றினாண், ஓடம், தெப்பம், பெருமை, பொதியெருது, யானை.
பகடை - அதிட்டம், சக்கிலிச்சாதி, சூது தாயங்களி லொன்று.

பகட்டு - அதட்டு, இறுமாப்பு, தந்திரம், பகட்டென்னேவல், பார்வை, பிரகாசம், மயக்கம், மினுக்கம், வெருட்டு, வெளிவேடம்.
பகட்டுதல் - அதட்டுதல், தந்திரம்பண்ணுதல், வெருட்டுதல், வெளிவேஷங்காட்டுதல்.
பகண்டை - ஒருவாச்சியம், சிவற்பட்சி.
பகதத்தன் - நரகாசுரன் மூத்தமகன்.
பகந்தரம் - ஒருகுதநோய்.
பகநிருத்தன் - கண்ணன், வீமன்.
பகந்திரம் - நூலடியிற்கட்டு.
பகபகெனல் - வேகக்குறிப்பு.
பகம் - அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியமென்னுமறுகுணம், அழகு, காக்கட்டான்கொடி, காந்தி, கொக்கு, பெண்குறி, மகத்துவம், முத்தி.
பகரம் - அலங்காரம், ஒரெழுத்து, மினுக்கம்.
பகரிப்பு - மினுக்கு.
பகர் - பங்கம், பாளை.
பகர்ச்சி - சொல்.
பகர்தல், பகர்வு - கூறல், சொல்லல், விற்றல்.
பகலவன் - சூரியன், பரணிநாள்.
பகலோன் - சூரியன்.
பகல் - ஒளி, சூரியன், தினம், நடு, பகற்காலம், பகுதல், பிரிதல், பிளத்தல், மதியாணி, மத்தியானம், மூர்த்தம்.
பகல்மானம் - பகனாழிகை.
பகல்வத்தி - ஒரு விளையாட்டினக்கு.
பகல்வாயில் - பகல் தோற்றுகிற வழி, கீழ்த்திசை.
பகல் வெள்ளிகாட்டுதல் - இன்மைப் பொருட்கு ஒருவமைக்குறிப்பு.
பகல்வேஷம் - பகற்காலத்துருமாற்றல்.
பகவதி - தருமதேவதை, துர்க்கை, பார்வதி.
பகவதிநாள் - பூராநாள்.
பகவத்கீதை, பகவற்கீதை - ஸ்ரீகிருஷ்ணபகவான் பாரதயுத்தத்தில் திருத்தேர்த் தட்டிலிருந்து அர்ஜுனனுக்குபதேசித்த ஞானநூல், இது பாரதத்தின் ஒரு பகுதியேயாயினும் தனி நூலாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பேரின்பத்துக்குச் சாத

னமாகிய நிஷ்காம்ய கர்மமும் ஞான சாதனமாகிய யோகமுமே கூறப்பட்டுள்ளன. வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் உண்மைப்பொருளை யுணரும் பக்குவம் இந்தக் கலியுகமாந்தர்க்குக் கைகூடாதென்பது கருதியே, இந்தயுகம் தொடங்குவதற்கு முன்பே, லோக சம்ரக்ஷணார்த்தமாகத் திருவவதாரஞ் செய்தருளின ஸ்ரீகிருஷ்ணபகவான் அவ்வுபநிஷத்ஸாரமாகிய இந்நூலை அர்ஜுனன் வாயிலாகச்சர்வான்மாக்களுடைய ஈடேற்றத்தின் பொருட்டு உபகரித்தருளினார், பலாபேக்ஷையின்றிக் கர்மங்களைச் செய்துகொண்டும் ஒருவன் ஞானியா யிருக்கலாமென்பதே இந்நூற்றுணிபு. இந்த உபதேசநூலைக் கேட்டிருந்து வெளியிட்டவர் சஞ்சயமுனிவர். இந்நூலுக்குச் சங்கராசாரியர் அத்வைத பரமாகவும், இராமாநுஜாசாரியார் விசிஷ்டாத்வைத பரமாகவும், மத்வாசாரியர் த்வைதபரமாகவும், ஸ்ரீகண்டர் சுத்தாத்துவித பரமாகவும், பாஷ்யங்கள் செய்திருக்கின்றனர். இந்நூலை ஐரோப்பிய பண்டிதர்கள் பலர் புகழ்ந்தும் தமது பாஷையில் மொழிபெயர்த்தும் உச்சிமேற்கொண்டு கொண்டாடுவதே இதன் பெருமைக்குப் பெருஞ் சான்றாகும்.

பகவற்பத்தன் - தேவதொண்டன்.

பகவன் - அரன், அரி, அருகன், கடவுள், குரு, பிரமன், புத்தன்.

பகவான் - கடவுள், சூரியன், துவாத சாதித்தரி லொருவன்.

பகவிருக்கம் - நிலக்கடம்பு.

பகவு - துண்டு, பங்கு, பிளப்பு, வெடிப்பு.

பகவைரி - கண்ணன், வீமன்.

பகழி - அம்பிற்குதை, அம்பு.

பகற்குருடு - காக்கை.

பகற்குறி - களவுப்புணர்ச்சியிற் பகற்காலஞ் சந்திக்க நியமிக்குமிடம்.

பகற்பாடு - பகற்காலம்.

பகன் - ஏக சக்ரபுரத்துப் பிராமணருக்குத் துன்பஞ் செய்துகொண்டிருந்த ஒரு ராக்ஷஸன், (பகாசுரன்) அந்தப் பிராமணர் தத்தம் முறைப்படி தினந்தோறும் ஒரு வண்டிசாதமும் இரண்டு எருமைக்கடாவும் ஒரு பிராமணப்பிள்ளையும் உணவாகக் கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டு கொடுத்து வருநாளில், அந்த அக்ரகாரத்தில் வீமன் தங்கியிருந்த வீட்டுக்காரன் முறைவந்தது சாதத்தை மாத்திரம் வண்டியி லேற்றிக்கொண்டு வீமன் தானேசென்று பகனைக்கண்டு சாதம் வந்தது ஒப்புக்கொள்கவென்றான் சாதத்தோடு எருமைக்கடா முதலாயின வாராமை கண்டு அவன் கோவித்து வீமனைச்சாட, அவன் அந்தப் பகனைக்கொன்று மீண்டான். பிருந்தாவனத்தில் கஞ்சன் ஏவலால் ஸ்ரீ கண்ணபிரானைக்கொல்ல யத்தனித்து வந்து அவராற் கொல்லப்பட்ட ஒரு ராக்ஷஸன், கங்கன் மூத்தமகன். துவாத சாதித்தருளொருவன், தக்கன் யாகத்தில் வீரபத்திரரால் தண்டிக்கப்பட்ட சூரியன்.

பகன்றை-திலுதிலுப்பை, திலேதை, சிந்தில், பெருங்கையால்என்னுங்கொடி.

பகாங்குரம் - பெண் யோனி யுறுப்பினொன்று.

பகாசூரன் - ஓரசுரன்.

பகாசுரவைரி - வீமன்.

பகாநிலை - பிரிவுபடாது நிற்பது.

பகாப்பதம்-பகுப்பிற்பயன்படாப்பதம்.

பகாப்பொருள் - கடவுள்.

பகாரி - கண்ணன், வீமன்.

பகாலம் - கபாலம்.

பகாலி - சிவபெருமான்.

பகிகண்டம் - பிடரி.

பகிடி - பரிகாசம், விகடம்.

பகிரங்கம் - மறைப்பின்மை, வெளியரங்கம்.

பகிரண்டம் - அண்டத்தின்வெளி, பேரண்டம்.

பகிரதன் - ஓரரசன்.

பகிர் - பகிரென்னேவல், பகுப்பு, வெடிப்பு.

பகிர்ச்சி - பகுப்பு.

பகிர்தல் - பங்கிடல், பிளத்தல்.

பகிர்விடல் - பிளவாதல்.

பகினி - உடன்பிறந்தாள், பெண்.

பகினேத்திரம் - கண்ணரம்பைப் பற்றின ஒருசன்னி.
பகீரதன் - ஒரு சூரிய குலத்தரசன். (இக்ஷ்வாகு) திலீபன் புத்திரன், இவன் சகரன் புத்திரரும் தனக்குப் பாட்டன்மாருமாகிய சகலரைக் கபிலா் சாபத்தினின்று நீக்கிக் காக்கும் பொருட்டு ஆகாய கங்கையைக் கொண்டுவந்து இவ்வுலகில் விட்டவன்.
பகீரதி - கங்கை.
பகீரிடுதல்-வெடித்தல், வேகக்குறிப்பு.
பகீரெனல் - அச்சக்குறிப்பு.
பகு - பகுவென்னேவல், பலது.
பகுகந்தன் } சுத்தியுவின் புத்திரன்.
பகுகவன் }
பகுதி - இயல்பு, குடியிறை, சொன் முதனிலை, பகுபதத்தோருறப்பு,பங்கு, படை, பிரிவு, பிரகிருதி.
பகுதிகட்டுதல் - இறைகொடுத்தல்,பங்கிடுதல்.
பகுத்தல் - ஈதல், தறித்தல், பங்கிடல், இது வணிகரெண் குணத்தொன்று, வெட்டல்.
பகுத்தறிதல் - பிரித்தறிதல், மனநியாயமறிதல்.
பகுத்தறிவு மனநியாயம்.
பகுபதம் - பகுதி விகுதி முதலியவுறப் பிளவுனியன்றபதம்.
பகுப்பு - பகுதி, பகுத்தல், பிரிவு.
பகுரதன் } புரஞ்சயன் மகன்.
பகுநாதன் }
பகுவபஞ்சம் - உபகிடத முப்பத்திரண்டிலொன்று.
பகுவாய் - பிழா பேழ்வாய்.
பகுளசத்தமி கிருட்டிணபக்கச் சத்தமி.
பகுளம் - கிருட்டிணபக்கம்.
பகுளாசுவன் - ஸ்ரீகிருஷ்ணபகவானால் மோக்ஷமடைந்தவன்.
பகுளை - உத்தானபாதன் புத்திரனாகிய உத்தமன் மனைவி.
பகை - பகையென்னேவல்,விரோதம், வெறுப்பு மூன்றுவதாளுவது நாம்புகள்.
பகைஞர் - சத்துருக்கள்.
பகைத்தல் - பகைகொள்ளல்,முரணல்.
பகைத்தானம் - ஆறுமிடம்.
பகைத்தொடை - முரண்டொடை.
பகைநாள் - பிறந்தநாட்கு முதனாள்.
பகைநிரைகவர்தல் - பகைவரது காலிகளைக்கோடல், அது எண்வகை வெற்றியிலொன்று.
பகைப்படல் - விரோதமாதல்.
பகைப்பு - பகைத்தல்.
பகைமுன்னெதிருன்றல் - பகைவர்க்கு முன்னெதிர்த்தல்,அது எண்வகை வெற்றியிலொன்று.
பகைமேற்செல்லல் - மாற்றாரைப்பொரப்போதல், இது எண்வகை வெற்றியிலொன்று.
பகைமை - பகைத்தனம்.
பகையகம் - போர்க்களம்.
பகையாளி - பகைஞன்.
பகைவாரண்வளைத்தல்-மாற்றாரதுமதிலைவளைத்தல், அதுஎண்வகை வெற்றியிலொன்று.
பகைவர் - சத்துருக்கள்.
பகோளம் - வானஉண்டை.
பக்கம் - பக்கம், புறக்கதவு.
பக்ககன் - கூட்டாளி.
பக்ககேசம் - நரைமயிர்.
பக்கசம் - செட்டை.
பக்கசரம் - சந்திரன், யானை.
பக்கசமன் - சந்திரன்.
பக்கசூலை - பக்கத்திலே வருஞ்சூலை.
பக்கச்சொல் - துணைச்சொல்.
பக்கணம் - ஊர்,கிராமம்,பற்பல தீவிற்பண்டம் விற்குமிடம், வேடர் வீதி.
பக்கதி - செட்டைமூலம், பிரதமை.
பக்கத்தார் - அயலவர், இனத்தவர்,கன்னையிலுள்ளவர்.
பக்கத்துணை - பக்கவுதவி.
பக்கபாதம் - பட்சபாதம்.
பக்கபாநிதை - சேர்மானம்.
பக்கப்பகந்திரம் - குறியின் பக்கத்தில் வருஞ்சிலந்தி.
பக்கப்பிளவை - முள்ளந் தண்டருகிற் பிளவை.
பக்கப்போலி - பொருளிருக்குமிடம்.
பக்கமூலம் - செட்டைக்குழி.
பக்கம் - அம்பிறகு, அருகு,அருத்தாபத்திப்பொருள், அவயவம், இடம், இராசயானை, இறகு, உறவு,எதிரிடை, ஒருகையணி, கனிவு, சந்திரனுள், சமீபம், சத்தம், செட்டை, சேனை,

தகுதி, நட்பு, நாவார, பட்சம், பதினை ந்துநாள், புட்பொருத, புறம், வகுப்பு, வமிசம், வால், வீடு.
பக்கரசம் - மதி.
பக்கரை - அங்கவடி, சேணம், முடீட்டின் கீழ்க்கட்டு.
பக்கரைக்கட்டு - முசட்டுக்கட்டு.
பக்கர் - சுற்றத்தார், பக்கல்.
பக்கல் - இனம், பக்கம்.
பக்கவாகனன் - பட்சி.
பக்கவாதம் - பாரிசவாதம்.
பக்கவாயு - பக்கத்திலொருக்கும்வாயு.
பக்கவாரி - வெந்நீர்.
பக்கறை - குழப்பம்.
பக்காசயம் - இரைகுடர்.
பக்காந்தம் - பக்கத்தின்கடைநாள்.
பக்கான்னம் - சமைக்கப்பட்ட போசனம்.
பக்கி - பக்கியென்னேவல், பக்ஷி, பறவை, பிள்ளை.
பக்கிகை - அத்தாட்சி, தந்திரம், பெருங்காயம்.
பக்கிடுதல் - திடுக்கிடுதல், வெடித்தல்.
பக்கித்தல் - பட்சித்தல்.
பக்கிராசன் - கலுழன், கருடன்.
பக்கிநேத்திரகம் - ஒருநோய்.
பக்கு - உடைவு, [illegible]த்தை, பிளவு, புண்ணசறு, பொருக்கு, மரப்பட்டை.
பக்குப்பக்கெனல் - அச்சக்குறிப்பு.
பக்குவகாலம் - தக்ககாலம்.
பக்குவசாலி - பக்குவவாளி.
பக்குவப்படுதல் - இருதுவாதல், தகுதியாதல்.
பக்குவமாக்குதல் - தகுதியாக்குதல்.
பக்குவமாதல் - ஏற்றதாதல், தகுதியாதல்.
பக்குவம் - தகுதி, திராணி, பருவம்.
பக்குவரசம் - சாராயம்.
பக்குவர் - மோட்சபக்குவர்மூவகை அவர் கருமகாண்டிகர் ஞானகாண்டிகர் பத்திகாண்டிகர்.
பக்குவவாளி, பக்குவன் - தகுதியுள்ளோன், வைத்தியன்.
பக்குவாசயம் - அன்னமயகோசம்.
பக்குவாத்துவர் - பரிபாகி.
பக்குவி - பக்குவப்பட்டபெண், பரிபாகி
பக்குவிடுதல் - பிளத்தல், வெடித்தல்.
பக்கெனல் - அச்சக்குறிப்பு, ஒலிக்குறிப்பு.
பக்தன் - பத்தன்.
பக்தி - பத்தி.
பங்கக்கிரீடம் - பன்றி.
பங்கசம் - பங்கயம், தாமரை.
பங்கசாசனன் - பிரமன்.
பங்கசாசகி - திருமகள்.
பங்கசாதம் - தாமரை.
பங்கசார்த்தம் - அகிதார்த்தம், பிசனத்தனம்.
பங்கசினி - தாமரைக்குளம்.
பங்கசூரணம் - தாமரைவேர்.
பங்கணம் - நீசர்சேரி.
பங்கணி - பங்கம்பாளை.
பங்கப்படுதல் - பின்னப்படுதல்.
பங்கப்பாடு - ஈனம், தோல்வி, பழுது, வெட்கம்.
பங்கம் - அசைவு, அச்சம், அலை, ஈனம், எத்து, குழைசேறு, குளம், குற்றம், துண்டு, தூசு, தோல்வி, நீர்ப்பாய்ச்சல், நோய், பந்தயம், பயம், பழுது, பாவம், பிளப்பு, பின்னம், புழுதி, முடம், வத்திரம், வெட்கம், வேறுபாடு.
பங்கம்பாலை, பங்கம்பாளை - ஆடுதின்னாப்பாலை.
பங்கயத்தவன் - பிரமன்.
பங்கயம் - தாமரை.
பங்கயன் - சூரியன், பிரமன்.
பங்கயாசனன் - பிரமன்.
பங்கருகம் - தாமரை.
பங்கவாசம் - நண்டு.
பங்காசுவன் - நூறுபுத்திரரையும் நூறுபுத்திரிகளையும் பெற்றபின்பு இந்திரன் வரத்தால் பெண்ணுருக்கொண்டவோரரசன்.
பங்காரம் - படி, வரம்பு.
பங்காரு - ஒருவகைப்பொன்.
பங்காலி - வெளவால்.
பங்காளம் - ஒருதேயம், ஒருபண்.
பங்காளன், பங்காளி - கூட்டாளி, பங்குக்காரன்.
பங்கி - ஆண்மயிர், கஞ்சா, பங்கியென்னேவல், பிரிவு, புறமயிர்.
பங்கிடுதல் - பகர்தல்.
பங்கித்தல் - அரிதல், பிளத்தல்,
பங்கிலம் - தெப்பம்.

பங்குவித்து - கஞ்சாவிதை.
பங்கீடு - உபாயம், திட்டம், பங்கு, பங்கு செய்தல், வழிவகை.
பங்கு - கூட்டு, கூறு, சனி, பாதி, முடம், முடவன்.
பங்குக்கிராகம் - மகராசி.
பங்குசம் - தலைக்கோலம்.
பங்குதை - அவலட்சணம்.
பங்குபடுதல் - பின்னப்படல், பொதுவாதல்.
பங்குபட்டநாள் - இரண்டு ராசியிற்றன்னங்கிசஞ்சேர்ந்திருக்கும்பெருநாள்.
பங்குரம் - ஆற்றமுடக்கு, வளைவு.
பங்குரை - அதிவிடயம்.
பங்குவீதம் - பங்கின்படி.
பங்குனன் - அருச்சுனன்.
பங்குனி - உத்திரநாள், ஒருமாதம்.
பங்கூரம் - மரமஞ்சள்.
பங்கேசம், பங்கேருகம் - தாமரை.
பசகன் - சமையற்காரன்.
பசண்டை - ஈரம், பச்செனவு.
பசதன் - இந்திரன், சூரியன், தீ.
பசத்தல் - காமமுதலியவற்றாற்பொன்னிறப் புள்ளியுண்டாதல், நிறமாறுதல், பசுமையாதல், மங்கல்.
பசந்தம் - நேரம்.
பசந்து - பசுந்து.
பசபசத்தல் - அலப்புதல், தினவெடுத்தல்.
பசபசப்பு - பசபசத்தல்.
பசபசெனல் - அலப்புதல், மசமசத்தல்.
பசப்பல் - பசப்புதல்.
பசப்பு - ஈரடிப்பிடிப்பு, ஏப்பு, சாரம், பசலை, பச்சைநிறம், பொன்மை, மயப்பு
பசப்புதல் - ஓயாமற்பேசல், மயக்கல்.
பசமந்திரம் - மரமஞ்சள்.
பசம்பை - கழுத்து.
பசர் - சமைத்தல்.
பசவிமம் - வெந்தது.
பசலை - காமமுதலியவற்றாலுண்டாம் பசப்பு தேமல்.
பசவியம் - புல்.
பசளி - ஒருகீரை, மடைமுகம்.
பசளை - எருமுதலியவுரம், ஒருகீரை.
பசளைக்கதை - முகமன்கதை, வீண்கதை.
பசறு - பச்சிலைச்சாறு.
பசனம் - சங்கோசை, சமைத்தல், சிற்றின்பம், வணக்கம்.
பசனன் - அக்கினி, பாகஞ்செய்வோன்.
பசாசம் - பேய்.
பசாசன் - பேயன்.
பசாசு - பேய்.
பசாசு, பசாடை - கண்ணிற்படலம், மாசு.
பசாரி - விபசாரி, கடைவீதிவருகுவாள்.
பசார் - சாரமற்றது.
பசானம், பசான் - ஒருநெல்லி.
பசி - அக்கினி, சமைத்தல், புசித்தல் இது உயிர்வேதனையிலொன்று, மாயையாக்கை பதினெண் குற்றத்துமொன்று.
பசிதம் - சாம்பர்.
பசித்தல் - பசிகொள்ளல்.
பசிப்பு - பசி.
பசியம் - கயிறு.
பசியெடுத்தல் - பசியுண்டாதல்.
பசிரி - ஒருகீரை.
பசு - ஆன், இடபவிராசி, உயிர், எருது, கடவுள், சீவனுடையது, பலி, மிருகம், யாகத்துக்குரிய ஆடு, வெள்ளாடு.
பசுகரணம் - உயிர்க்கரணம், சீவகரணம்.
பசுகாதம் - மிருகபலி.
பசுகாயத்திரி - பலியிடப்படு மிருகத்திற்குபதேசிக்கு மந்திரம்.
பசுகை - புன்மிருகம்.
பசுகௌவியம் - மிருகபலி.
பசுக்கன்று - பசுவின்கன்று.
பசுக்காத்தல் - சூத்திரர், வைசியர்க்குரிய வறுதொழிலிலொன்று.
பசுக்காவலர் - இடையர்.
பசுக்கிரியை - புணர்ச்சி.
பசுங்கதிர் - இளங்கதிர், சந்திரன்.
பசுங்கதிர்த்தே - சந்திரன்.
பசுங்கலை - பச்சைக்கல்.
பசுங்காய் - செங்காய்.
பசுங்குடி - போதியகுடி.
பசுங்கொடி - அறுகு.
பசுங்கொற்றன் - ஒருகொற்றன்.
பசுங்கோரை - ஒருபுல்.
பசுஞானம் - தத்துவஞானம், ஆன்மஞானம்.
பசுண்டி - சிரசம்.

பசுதருமம் - தைமைப்புணர்ச்சி, பரதாரப் புணர்ச்சி, பொறுமைக்கடன்மை, மனுநீதிவழு, மிருகநடை.
பசுதை - மிருகத்தன்மை.
பசுத்தக்காளி - ஒருசெடி.
பசுத்துவம் - ஆத்துமதத்துவம், மிருகத்தன்மை.
பசுநரம்பு - பச்சைநிறநரம்பு.
பசுநா - பிராய்மரம்.
பசுநாகு - இளம்பசு, ஈனுநாகு.
பசுநிரை - பசுமந்தை.
பசுந்தரை - புற்றரை.
பசுந்து - அழகு, நெற்றி, பசுமை, மேன்மை.
பசுபதி - சிவபெருமான்.
பசுபதிநாயகி - திருப்பாசூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
பசுபதிநாயகேசுவரர் - திருச்சக்கரப்பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பசுபதி - சிவபிரான், அஷ்டமூர்த்திகளுள் ஒருவர்.
பசுபதீசர் - திருப்பந்தண நல்லூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
பசுபதீசுரர் - திருஆவூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பசுபதீசுவரர் - திருக்கருவூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பஜமானன் - சாத்துவதன புத்திரன். அந்தகன் ஜேஷ்ட புத்திரன்.
பஜி - சாத்துவதன் புத்திரன்.
பசுபந்தம் - ஒருயாகம்.
பசுபாசம் - மூலமலம்.
பசுபாலனம் - பசுக்காத்தல்.
பசுபாலன் - கோபாலன்.
பசுபர்வம் - ஆத்துமவியல்பு, உயிர்க்குச் செய்யும் பாவம்.
பசுபிரேணம் - சாபம்.
பசுபுண்ணியம் - ஆத்துமாக்களுக்குச் செய்யுந்தருமம்.
பசுப்பட்டி - பசுத்தொழுவம்.
பசுப்பிரோணம் - ஆவோட்டல்.
பசுமந்தை - சுபாபி, பசுத்தொழுவம்.
பசுமுல்லை - ஒருமுல்லை.
பசுமை - ஈரம், உண்மை, ஒருபுடவை, குளிர்மை, சாரம், சிறப்பு, செல்வம், செவ்வி, பச்சை, பொன்னிறம்.
பசும்பயறு - பாசிப்பயறு.
பசும்பிடி - பச்சிலைமரம்.
பசும்புல் - ஒருபுல், பச்சைப்புல், பயிர்.
பசும்பொன் - உயர்ந்தபொன்.
பசுரட்சணம் - பசுக்காத்தல்.
பசுராசன் - சிங்கம்.
பசுவதை - கோஹத்தி.
பசுவாசாரம் - சத்திபூசை.
பசுவாட்டம் - பன்னிருக்குழியாட்டம்.
பசூசகன் - சோதிடன்.
பசேலெனல் - பச்சைநிறமாயிருத்தல்.
பசேவியன் - சூரியன், தீ.
பசேலுகன் - சமையற்காரன்.
பசை - அன்பு, ஆசை, இலாபம், ஈரம், ஒட்டும் பசை, குழைவு, சாரம், செந்தளிப்பு, தளிர்வு, பசையென்னேவல், பற்று, விருப்பம்.
பசைகாரம் - காரங்கூட்டியபசை.
பசைதல் - அன்புகொள்ளல், ஒட்டுதல், சாரமுடைத்தாதல், பசையாக்கல், பிசைதல்.
பசைந்தார் - சிநேகிதர்.
பசைமட்டை - இரும்பைப் பசையுமட்டை.
பசையற்றன் - அமித்திரன், வறியன், வன்கண்ணன்.
பசைவு - அன்பு, நட்பு, பிசைதல்.
பச்சடி - துவையற்கறி.
பச்சடியன் - வெள்ளையிலே கறுப்பு புள்ளி யுள்ளது.
பச்சரிசி - அவியாமற்குத்தினவரிசி.
பச்சவடம் - பச்சைவடம்.
பச்சன் - சூத்திரன், வேளாளன்.
பச்சன்னியம் - மரமஞ்சள்.
பச்சாது - பின்பு.
பச்சாத்தாபம் - செய்த குற்றத்துக்கு மனஸ்தாபம், மனந்திரும்புதல்.
பச்சிமகாண்டம் - புதுவேற்பாடு.
பச்சியதோகரன் - கள்வன், தட்டான்.
பச்சிமப்பிறை - இளம்பிறை.
பச்சிமம் - பின், மேற்கு, நெற்றி.
பச்சியம் - அதிசயக்குறிப்பு.
பச்சிலை - ஒருமரம், பசுமருந்து, பச்சையிலை.
பச்சிலைப்பாம்பு - ஒருபாம்பு.
பச்சிலையோணன் - பச்சோந்தி.
பச்சிறச்சி - பச்சையிறச்சி.

பச்சுடம்பு - குழந்தையினுடல்,புண்ணு விளைமை பெற்றவுடல்.
பச்செனல் - சிறப்பாயிருத்தல்,பச்சையா யிருத்தல்.
பச்செனவு - ஈரம், தழைவு, பச்சை.
பச்சை - அவியாதது, இளமை, இன்பம், ஈரம், ஒருநிறம், ஒருபுதர், தோல், பசுமை, புதன், மரகதம், மிகுதிக்குறிப்புச்சொல், (உ-ம்) பச்சைப்பொய், மூலபலவருக்கம், வாசனை, விட்டுணு.
பச்சைக்கட்டு - சாந்திமருந்து தாடாற்றி பரிதானக் கொடுக்கை.
பச்சைசுற்றுதல் - பச்சைவண்ணம் பதித்தல்.
பச்சைக்கருப்பூரம் - ஒரு கருப்பூரம்.
பச்சைக்கல் - மரகதம்.
பச்சைக்கிளி - பசுங்கிளி.
பச்சைக்குங்கிலியம் - ஒரு குங்கிலியம்.
பச்சைக்குவடு - மரகதம்.
பச்சைக்கூடு - தாலதேகம்.
பச்சைக்கொம்பு - இஞ்சி.
பச்சைக்கடையன் - வயிரவன்.
பச்சைநஞ்சு - தியன்.
பச்சைநிறகிற்வளன் - தருசி.
பச்சைபழுக்காயடைத்தல்- கருகிற்மும ஞ்சணிறமு மூட்டல்.
பச்சைப்பசேரெனல்-பச்சைநிற வொளிக்குறிப்பு.
பச்சைப்படி - அவியாமற் கொடுப்பது.
பச்சைப்பட்டி - எரு.
பச்சைப்பதம் - இளம்பதம்.
பச்சைப்பயறு - பசம்பயறு.
பச்சைப்பாம்பு - பச்சிலைப்பாம்பு.
பச்சைப்பாலன் - குழந்தை.
பச்சைப்புண் - புதுப்புண்.
பச்சைப்புல் - பசம்புல்.
பச்சைப்புழு - ஒருபுழு.
பச்சைப்புறு - ஒருபுறு.
பச்சைப்பெருமான் - ஒருநெல், திருமால்.
பச்சைப்பொட்டு - பசுந்திலகம்.
பச்சைமண் எருவிடாமண்,வேகாமண்.
பச்சையன் - திருமால்.
பச்சையப்பன் - ஒரு வித்தியாதானக் கருத்தன்.
பச்சையுடல் - புண்ணுடல்.
பச்சைவடம் - ஒருவகைச்சீலை.
பச்சைவில் - இந்திரதனு.
பச்சைவெட்டு - எரிய இடாமருந்து.
பச்சைவெண்ணெய் - உருக்காநெய்.
பச்சோணன், பச்சோந்தி - ஒருவகை ஓந்தி.
பச்சோலை - பச்சை ஓலை.
பஸ்பம், பஸ்மம் - சாம்பர், பற்பம்.
பஸ்மகுண்டு - விபூதிமடல்.
பஞ்ச, பஞ்சம் - ஐந்து.
பஞ்சகதி - நாசகதியைந்து அவை மயூரகதி மல்லகதி வானரகதி விடபகதி வியாக்கிரகதி.
பஞ்சகம் - ஐந்தின்கூட்டம்,புத்தகளம்.
பஞ்சகம்மாளர் - ஐந்துவகைக்கம்மாளர். அவர் கன்னார் கொல்லர் சிற்பர் தச்சர் தட்டார்.
பஞ்சகருத்தாக்கள் - ஐவகைக் கருத்தாக்கள் அவர் அயன் அரி உருத்திரன் சதாசிவன் மகேசன்.
பஞ்சகலியாணி - பஞ்சகதியுள்ள குதிரை.
பஞ்சகலை - ஐவகைக்கலை, அவை சாந்தி, சந்தியாதீதம், நிவிர்த்தி,பிரதிஷ்டை, வித்தை.
பஞ்சகவ்வியம் - கோமயம் கோமூத்திரம் தயிர் நெய் பால் என்பன.
பஞ்சகன்னிகள் - ஐந்து கன்னிகைப் பெண்கள், அவர் அகலிகை சீதை தாரை துரோபதை மண்டோதரி.
பஞ்சகாலம் - கருப்புக்காலம்.
பஞ்சகாவியம் - ஐவகைக்காப்பியம், அவை குண்டலகேசி சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி.
பஞ்சகிருத்தியம் - பிரபஞ்சத் தொழிலைந்து அவை சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம்.
பஞ்சகுத்தம் - ஆமை.
பஞ்சகுரோசஎல்லை - காசியில் ஓரிடம். இந்த இடத்தில் அசுசியானவன் வேறு மதத்தன் வரக்கூடாது.
பஞ்சகூடம் - ஆமை.
பஞ்சகோசம், பஞ்சகோஷம் - அன்ன முதலியவைந்தினாலாய கூடு அவை அன்னமயகோசம், ஆனந்த

மயகோசம், பிராணமயகோசம், ம
னோமயகோசம், விஞ்ஞானமயகோ
சம். [லம்.
பஞ்சகோண மண்டலம் - சக்கிரமண்ட
பஞ்சகோலம் - சித்திரமூலம் சுக்கு செ
வ்வியம் திப்பிலி மூலம்.
பஞ்சகௌடம் - கவுடதேயத்தின் ஐந்து
பகுதி, அவை உற்கலம் கானகுச்சம்
சாரசுவதம் சுத்தகௌடம் மைதிலை.
பஞ்சகௌடர் - ஸாரஸ்வதம், கன்யாகுப்
ஜம், மிதிலம், கௌடம், உத்கலம்
என்னும் இந்த ஐந்து தேசத்துப் பி
ராமணரும் பஞ்சகௌடர் எனப்ப
டுவர்.
பஞ்சகௌவியம் - பஞ்சதிரவியம்.
பஞ்சக்கருவி - ஐந்துவகைச் சத்தக்கரு
வி அவை கஞ்சம் கண்டம் துளை
தோல் நரம்பு இவற்றாலாயது, அன்
றியும் ஐந்துபொறி அவை கண் செ
வி மூக்கு மெய் வாய்.
பஞ்சசதம் - ஐஞ்ஞூறு.
பஞ்சசத்தி - இச்சாசத்தி, கிரியாசத்தி,
சிற்சத்தி, ஞானசத்தி, பராசத்தி.
பஞ்சசயனம் - ஐந்தாலாய மெத்தை, அ
வை அன்னத்தூவி, இலவம்பஞ்சு,
செம்பஞ்சு, மயிர்றூவி, மெத்தை
வெண்பஞ்சு.
பஞ்சசனன் - ஓரசுரன்.
பஞ்சசன்னியம் - குதிரை.
பஞ்சசரன் - மன்மதன்.
பஞ்சசாகம் - முன்கை.
பஞ்சசாயகன் - மன்மதன், பஞ்சபாண
ன் என்பது பொருள்.
பஞ்சசிகன் - மிதிலைக்கரசனுகிய, ஜநக
னுக்கு உபதேசஞ்செய்தமஹாத்மா.
பஞ்சசிகை - சௌளம் பண்ணுது விடு
மைந்திடம், அவை தலை யுச்சி கண் பு
ருவம் முழங்கை முதல்வரையும்.
பஞ்சசுகந்தம் - பஞ்சவாசம்.
பஞ்சசுத்தி - ஐவகைச்சுத்தி, அவை ஆத்
துமசுத்தி இலிங்கசுத்தி திரவிய
சுத்தி பூதசுத்தி மந்திரசுத்தி.
பஞ்சசுடை - ஒரு அப்ஸரஸ், நாரத
ருக்குப் பெண்கள் சுபாவம் இது
வென்றெடுத் துரைத்தவள்.
பஞ்சஜநன் - ஸம்ஹ்லாதன்புத்திரன், சா
ந்திபன் புத்திரனைப் பிரபாச தீர்த்
தத்துள்ளே யிழுத்துக் கொண்டு
போன ராக்ஷஸன், ஸ்ரீ கிருஷ்ணபக
வான் தம் குருபுத்திரனை அவன் மோ
சஞ்செய்தானென்றறிந்து அவனைக்
கொன்று, அவன் கழுத்தெலும்பை
யெடுத்துப் பாஞ்சஜந்யம் என்னுஞ்
சங்காக்கினர்.
பஞ்சசூனை - அம்மி, உரல், உலக்கை,
துடைப்பம், மடைப்பள்ளி.
பஞ்சசென்னியம் - பாஞ்சசன்னியம்.
பஞ்சஞானன் - புத்தன்.
பஞ்சடைதல் - கண்பஞ்சாடுதல்.
பஞ்சணை - பஞ்சாலாயமெத்தை.
பஞ்சதசப்பிரகரணம் - ஒருவேதாந்தநூ
ல், இது வசநரூபமாயுள்ளது.
பஞ்சதசகம் }
பஞ்சதசம் } பதினைந்து.
பஞ்சதசி - பூரணை, வேதாந்தசாத்திரங்
களிலொன்று.
பஞ்சதத்துவம் - வாம பூசைக்கடுத்த
தசாங்கமைந்து, அவை இறைச்சி
சாராயம் திரீ சம்பாஷணை புணர்ச்
சி யபிநயம் மீன்.
பஞ்சதந்திரம் - ஐந்துவகை தந்திரம்,
அவை அசம்பிரேட்சிய காரித்துவம்
அர்த்தநாசம் சந்திவிக்கிரகம் சுகிர்
லாபம் மித்திரபேதம்.
பஞ்சதம் - சாவு.
பஞ்சதன்மாத்திரம் }
பஞ்சதன்மாத்திரை } பஞ்சபூதமூலம்.
பஞ்சதாது - பஞ்சபூதம்.
பஞ்சதாரை - சருக்கரை.
பஞ்சதிரவியம் - கோசலம், கோமயம்,
தயிர், நெய், பால்.
பஞ்சதிராவிடர் - தெலுங்கர், திராவிடர்,
கன்னடர், மஹாராஷ்ட்ரர், கூர்ஜரர்
என்னும் இவ்வைவரும் பஞ்சத்ரா
விடர் எனப்படுவர்.
பஞ்சதீர்க்கம் - உதரம், கண், கை, மார்
பு, மூக்கு எனு மைந்துறுப்பு.
பஞ்சது - குயில், கோரம்.
பஞ்சதை - பஞ்சபூதியம்.
பஞ்சத்துவம் - ஐந்தின்கூட்டம், மரண
பஞ்சநகர்க்கூர்மையோன் - ஆமை. [ம்.
பஞ்சநகம் - ஆமை, புலி, யானை.
பஞ்சநகி - உடும்பு.

பஞ்சநதம் } திருவையாறுவென்னும்
பஞ்சநதி } ஒரு சிவஸ்தலம்.
பஞ்சநிம்பம் - வேம்பின் இலை பட்டை பழம் பூ வேர் என்பன.
பஞ்சநிறக்கல் - சிலாநாகக்கல்.
பஞ்சநீராஞ்சனம் - ஐவகை யாலாத்தி அவை சாட்டாங்கம் சீலை தளிர் தாமரை விளக்கு.
பஞ்சபட்சி - எழுத்துப்பொருத்தமறியுமைந்துபட்சி, அவை வல்லூறு ஆந்தை காகம் கோழி மயில் அவை சுட்கு முறையே எழுத்து அ, இ, உ, எ, ஒ, ஒரு சாத்திரம், வைப்புப் பாஷாண முப்பத்திரண்டினொன்று.
பஞ்சபட்சிக்காதல் - ஒருசாத்திரம்.
பஞ்சபத்திரகன் - வியசனமுள்ளவன்.
பஞ்சபல்லவம்-அருச்சனைக்கேற்ற ஐவகைப்பத்திரம் அவை ஆத்தி மா முட்கிளுவை முல்லை வில்வம்.
பஞ்சபாணம் - மன்மதாத்திர மைந்து அவை முல்லை அசோகுவனசம் சூதம் நீலம் அவை முறையேதைக்குமிடம், உச்சி நெற்றி நெஞ்சு முலை குய்யம்.
பஞ்சபாணன் - காமன்.
பஞ்சபாணவத்தை - மன்மதாத்திரத்தினுலுண்டாகு மைந்துபாதி, அவை சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம் மோகம் மரணம்.
பஞ்சபாணி - பார்வதி.
பஞ்சபாண்டவர் - பாண்டுவினைந்துபுத்திரர், அவர் தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகதேவன்.
பஞ்சபாண்டவர்முல்லை - ஒருமுல்லை.
பஞ்சபாதகம் - ஐந்து அரோகம் அவை களவு கள்ளுண் குருநிந்தை கொலை பொய்.
பஞ்சபாதகன் - பஞ்சபாதகஞ் செய்வோன், முழுத்துரோகி.
பஞ்சபாத்திரம் - ஒருபாத்திரம்.
பஞ்சபாரதீயம் - நாரதர்செய்த இசைத்தமிழ்நூல்.
பஞ்சபிராணன் - தசவாயுவினுள் வாயுவைந்து அவைஅபானன்உதானன் சமானன் பிராணன் வியானன்.
பஞ்சபூதம்-ஐந்துபூதம் அவை பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்.
பஞ்சப்பிரமம் - பஞ்சமுகேச்சுரன்.
பஞ்சமகதி - மோக்கம்.
பஞ்சமம் - அழகு, ஐந்து, ஒருபண், சத்ததானத்தொன்று, சமர்த்து.
பஞ்சமரபு - அறிவனார்செய்த இசைத்தமிழ்நூல்.
பஞ்சமலம் - ஐந்துமலம்.
பஞ்சமன் - ஐந்தாம்சாதி.
பஞ்சமாசத்தம் - பஞ்சக்கருவினுலுண்டாகுநாதம்.
பஞ்சமாசியம் - குயில்.
பஞ்சமாபாதகன் - பஞ்சபாதகன்.
பஞ்சமாயெச்ஞியம் } ஐவகையாகம், அ
பஞ்சமாயெஞ்ஞம் } வை அக்கினி கருமம்தேவபூசை பிதிர்பூசை விருந்தோம்பல் வேதாத்தியயனம்.
பஞ்சமாரன் - பலதேவன் மகன்.
பஞ்சமி - அவிட்டமுதலைந்துநாள், ஐந்தாந்திதி, சொக்கட்டான்மனை, அரோபதி, துர்க்கை.
பஞ்சமிப்பேய்-பஞ்சமியிலிறந்துளிநிற்கும் பேய்.
பஞ்சமுகன் - சிங்கம், சிவபிரான்.
பஞ்சமுத்திரை - சைவதவத்தோர்முத்திரை, அவை உருத்திராக்கம் கமண்டலம் காவிப்புடவை சடை தண்டு.
பஞ்சமூலம் - ஐவகைமூலி, அவைசிறுபஞ்சமூலம் பெரும் பஞ்சமூலம் என இருவகைப்படும்.
பஞ்சம் - இக்கு, கருப்பு, விழுதல்.
பஞ்சயன் - பஞ்சராத்திரி.
பஞ்சயாகம் - ஐந்தியாகம்,அவைசுற்றப்போஷிப்பு தனக்குணவு தேவபலி பிதிர்பலி யோகிகள்பலி.
பஞ்சரத்தினம் - ஐவகைமிதி, அவை சுகந்தி பொன் மரகதம் மாணிக்கம் முத்து ஒரு பிரபந்தம்.
பஞ்சரம்-இடம், உடல்,கழுகு,கூடு, செருந்திமரம், பன்னும்கூடு, மட்கலம் வளையுங்கூடம்.
பஞ்சராகேடம் - மீன்களைக் கொல்லுமுபாயம். [று.
பஞ்சராத்திரம் - வைணவமதத்தொன்
பஞ்சரித்தல் } உபசாரமாய்ப்பேசல்,
பஞ்சரிப்பு } குதலைபோல் கெஞ்சிக் கேட்டல், விரிவாய்ப்பேசல்.

பஞ்சலட்சணம் - இலக்கணம் ஐந்து அவை எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி, புராண வுறுப்பைந்து. அவை சரிதைத்தலைவர் வமிசம் பிரபஞ்சத்தோற்றம் பிரபஞ்சநாசம் மனுக்களாசாட்சி மனுவமிசவரலாறு.

பஞ்சலவணம் - ஐவகையுப்பு.

பஞ்சலிங்கம் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்துபூதங்களினாலும் தனித்தனி யுண்டான லிங்கங்கள். பிருதிவிலிங்கம் காஞ்சியிலும், அப்புலிங்கம் ஜம்புகேசுரத்திலும், தேயுலிங்கம் அருணாசலத்திலும், வாயுலிங்கம் காளத்தியிலும், ஆகாசலிங்கம் சிதம்பரத்திலும் உள்ளன.

பஞ்சலித்தல் - பஞ்சங்கூறுதல்.

பஞ்சலிப்பு - பஞ்சங்கூறுதல், பஞ்சத்தின்வருத்தம்.

பஞ்சலோகம் - ஐந்துலோகம், அவை இரும்புஈயம்செம்புபொன்வெள்ளி.

பஞ்சலோபி - மிகுபிசுனன்.

பஞ்சவடம் - பூணூல்.

பஞ்சவடி - ஒருதலம்.

பஞ்சவடி - ஸ்ரீராமர் வநவாசகாலத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டிருந்த இடம், இது கோதாவிரி தீரத்திலுள்ளது, வடம் - ஆலமரம், ஐந்து ஆலமரங்கள் கூடியொரு தோப்பாயிருந்தால்இது பஞ்சவடியெனப்படும்.

பஞ்சவட்டந்தடி-எஃகுக்கோல். [டது.

பஞ்சவத்திரம் - சிங்கம்.

பஞ்சவத்திரன் - சிவபிரான்.

பஞ்சவர் - பாண்டுமக்கள்.

பஞ்சவர்தூதன் - கிருட்டிணன்.

பஞ்சவனநாதர்-திருமூக்கிச் சுரத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

பஞ்சவன் - பாண்டியன்.

பஞ்சவன்னக்கிளி - ஓரினக்கிளி, அது ஐந்துவன்ன முடையது.

பஞ்சவன்னம் - ஐந்துவன்னம், அவை கருமை செம்மை பச்சை மஞ்சள் வெண்மை.

பஞ்சவாசம் - ஐவகைவாசம் அவை இலவங்கம் ஏலம் கருப்பூரம் சாதிக்காய் தக்கோலம்.

பஞ்சவிடயம் - பஞ்சப்பொறியினால் அறியப்படுவன, அவை இரசம் உருபம் கந்தம் சத்தம் பரிசம்.

பஞ்சவெச்சம் - பஞ்சயாகம்.

பஞ்சறைக்கிழவன் - அறக்கிழவன்.

பஞ்சனம் - அழித்தல்.

பஞ்சனி - சொக்கட்டான்மனை.

பஞ்சாக்கரம் - பஞ்சாட்சரம்.

பஞ்சாக்கினி - ஐந்து அக்கினி, அவை இராகம் காமம் கோபம் சடம் தீபனம் தவஞ்செய்வோர்கிற்குமைந்தக்கினி அவை நாற்றிசைக்கு நான்கு தீக்குண்டம் மேலே சூரியன்.

பஞ்சாங்கருத்தம் } ஆமை.
பஞ்சாங்கக்கூர்மை }

பஞ்சாங்கதெண்டன் - கால் கை தலை எனு மைந்துறுப்பு நிலந்தோய வணங்கல். [கண்டபலன்.

பஞ்சாங்கபலன்-பஞ்சாங்க திருமித்திலி

பஞ்சாங்கம் - ஆமை, குதிரை, சோதிடத்திற் குரியவைந் துறுப்பு, அவை கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம்.

பஞ்சாங்கவாக்கியம் - கணித முறையில் ஒன்று.

பஞ்சாங்கி - குதிரைக்கடிவாளம்.

பஞ்சாங்குலம் - ஆமணக்கு, கை.

பஞ்சாசியம் - சிங்கம்.

பஞ்சாடித்திருக்கை-ஒருதிருக்கைமீன்.

பஞ்சாடுதல் - கண்பஞ்சடைதல்.

பஞ்சாட்சரம் - சிவநாமாக்கரமைந்து.

பஞ்சாதபை - பஞ்சாக்கினி மத்தியிற் செய்யுந்தவம்.

பஞ்சாப்ஸரஸ்மந்தகர்ணன் - தண்டகாரணியத்தி லுண்டாக்கின ஓர் குளம்.

பஞ்சாமிர்தம் - ஐந்தமுதம் அவைசருக்கரை தயிர் தேன் நெய் பால்.

பஞ்சாமிலம் - இலந்தை மாதளை புளியாரைநெல்லிஎலுமிச்சைசேர்ந்தது.

பஞ்சாமுதம் - பஞ்சாமிர்தம்.

பஞ்சாயத்தார் - நியாயசங்கத்தார்.

பஞ்சாயம் - ஐந்துபேர்கூடிய நியாயசங்கம்.

பஞ்சாயுதபாணி - விட்டுணு. [கம்.

பஞ்சாயுதம் - ஓராபரணம், விட்டுணுவினைந்தாயுதம், அவை சக்கரம் சங்கு தண்டு தனு வாள்.

பஞ்சாயுதன் - விட்டுணு.
பஞ்சாய் - கோரை.
பஞ்சாரகேடம் - மீன்கூடு.
பஞ்சாரம் - எருது பரி யிவற்றினுயுள், பழையது.
பஞ்சாரி - சொக்கட்டான்மனை.
பஞ்சார்க்கதோஷம் - ஐந்தருக்கத் தாலும் வருந்தோஷம்.
பஞ்சார்க்கம் - ஐந்தருக்கம் அவை இந்திரவில் கேது தூமம் பரிவேடம் விதிபாதம்.
பஞ்சார்த்தல் - பஞ்சாடுதல்.
பஞ்சாலம் - ஒருதேயம்.
பஞ்சாவடம் - பூணூல்.
பஞ்சாவத்தம் - பிரேதம்.
பஞ்சாவத்தை - ஐந்தவத்தை அவை சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்.
பஞ்சாளர் - பஞ்சகம்மாளர்
பஞ்சானனம் - சிங்கம்.
பஞ்சானனன் } சிவபிரான்.
பஞ்சானன் }
பஞ்சான் - பச்சைக்குழந்தை.
பஞ்சி - சடைந்தது, சோம்பு, தூறு, பஞ்சாங்கம், பஞ்சு, வருத்தம்.
பஞ்சிகம் - தாளி.
பஞ்சிகாரகன் - கணிதன், சோம்பன், வருத்தக்காரன்.
பஞ்சிகை - கணக்கு, நமன், பஞ்சாங்கம், மயிர், வியார்த்திப் பண்ணப்பட்ட நூல்.
பஞ்சிதம் - விண்மீன்.
பஞ்சிற்றொடர் - நூனுனி.
பஞ்சீகரணம் - ஒவ்வொரு பூதமும் இருகூறாகி ஒரு கூற்றை நிறுத்தி மற்றைக் கூற்றை நான்கு கூறாக்கி, எனைய நான்கு பூதங்கட்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்தும் வாங்கியும் தம்மிற்கூடுவதே பஞ்சீகரணமாம். அதாவது பிருதிவியிலே பிருதிவி தன்மாத்திரை அரை, அப்பு தன்மாத்திரை அரைக்கால், தேயு தன்மாத்திரை அரைக்கால், வாயு தன்மாத்திரை அரைக்கால், ஆகாய தன்மாத்திரை அரைக்கால், இவ்வாறே மற்றவையும் ஆமெனக் கொள்க, தூல பூதங்களைச் சோதித்தால் இக்கூறுகள் புலனாகும்.
பஞ்சீகரணம் - பஞ்சபூதவமிசகூட்டம்.
பஞ்சு - சீலை, தூறு, பருத்திப்பஞ்சு முதலியன.
பஞ்சுநீலப்பாணி - துருசி.
பஞ்சுரம் - ஒருபண், குறிஞ்சி யாழ்த்திறம், பாலைநிலத்திராகம்.
பஞ்சுருட்டான் - ஒருபறவை.
பஞ்சுருத்தான் - ஒருகுருவி.
பஞ்சுவாய்க்கொள்ளுதல் - மூலைக்கொள்ளுதல்.
பஞ்சூகம் - பெருமை.
பஞ்சேந்திரியம் - ஐம்பொறி அவை கண் காது தோல் நா மூக்கு.
பஞ்சை - இரப்போன், எளிமை, தரித்திரம், பலவீனன்.
பஞ்சைமயிர் - மெல்லியரோமம்.
பஞ்சையன் - எளியன் தரித்திரன், பலவீனன்.
படகம் - இரணபேரி, கலகம், கவரிமா, கோல், தம்பட்டம், திரைச்சீலை, படாய்வீடு, பரண், விஷ்ணுகரந்தை.
படகாரன் - ஓவியன், நெய்வோன்.
படகு - தெப்பம்.
படகுடி - கூடாரம்.
படக்குப்படக்கெனல் - அச்சக்குறிப்பு, ஈரடுக்கொலிக்குறிப்பு, துடித்தல்.
படங்கன் - ஒருமீன்.
படங்கு - கூடாரம், சலாகை, பெருங்கொடி, பெருவரிச்சல், மெய்போற்பேசுதல், மேற்கட்டி, பதக்கம்.
படங்குந்திநிற்றல் - காலிற் பெருவிரலூன்றி நிற்றல்.
படச்சரம் - பழம்புடவை.
படபடத்தல் - துடிதுடித்தல், விரைதல்.
படபடப்பு - துடிதுடிப்பு, விரைவு.
படபடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.
படபம் - பாதாளம்.
படபை - வடவைத்தீ.
படப்பம் - மருங்கிலூர் சூழ்பதி.
படப்பு - கொல்லை, வைக்கோற்போர்.
படப்பை - ஆன்கொட்டில், கொல்லை, நாடு, மருதநிலத்தூர்.
படப்பொறி - அத்தி, பாம்பின்படத்தினடையாளம்.
படமஞ்சரி - ஓரிராகம்.
படமடக்கி - தாழை.

படமண்டபம் } கூடாரம்.
படமயம் }
படமரம் - நெய்வார்கருவியி லொன்று.
படமெடுத்தல் - பாம்பு படம்விரித்தல்.
படம் - எழுத்துப்படம், காற்றேட்டி சீலை, திரைச்சீலை, பாம்பின் படம், யானைமுகபடாம், விருதுக்கொடி.
படரடி - சிதறடிப்பு, முழுக்கூறும் வேண்டாத்தலை.
படருருக்கி - செந்நாயுருவி.
படரை - ஆவிரை.
படர் - இழிமக்கள், ஏவல் செய்வோர், சருத்து, செலவு, துகிர்க்கொடி. துன்பம், துன்புறவோர், நடை, நினைப்பு, நோவ, பகை, படரென்னே வல், படைவீரர், மேடு, வருத்தம், வழி.
படர்கொடி - பயிர்க்கொடி, பீர்க்கு.
படர்க்கை - மூன்றுமிடம்
படர்ச்சி - நடை, பரப்பு, பரவுதல், விரித்தல்.
படர்தல் - அகலம்,நடத்தல்,நினைத்தல், பரவுதல், விரிதல்.
படர்தாமரை } ஒரு சரப்பன்.
படர்தேமல் }
படர்மல்லிகை - ஒருமல்லிகை.
படர்வு - படர்ச்சி.
படலம் - அடுக்கு, அதிகரிப்பு, இரதனக்குற்றம், இலக்கியச்செய்யுட் கூறுபாடு, கூட்டம், திசை, திலகம், நேத்திரபடலம், பரிவாரம், படல், மூடி.
படலிகை - இளைப்பு, கைமணி, படலம், பூந்தட்டு, பெரும்பீர்க்கு, வட்டம், வட்டவடிவு.
படலி - கூட்டம், வீட்டின்மேற்கூரை.
படலை - கட்டுக்கதவுகோத்தமாலை, தார் மணி, பரந்தவடிவு, பரந்த வாய்ப்பறை, பூமாலை, வெளிக்கதவு.
படலைமாலை - பச்சிலைமாலை.
படல் - அகப்படுத்தல், அத்தமித்தல், உண்டாதல், ஒன்றுடனே தோய்தல், கெடுதல், சாதல், தட்டி, தெறித்தல், படுதல், பதிதல், புலனிலேறுதல், பூத்தல், முட்டுதல்.
படவாசகம் - கூடாரம், வாசனைத்தூள்.
படவாசம் - கூடாரம்.
படவாள் - படைவாள்.

படவு - படகு.
படவை - செருப்படி.
படனம் - படித்தல், மனப்பாடம்.
படன் - இழிகுலன், படவீரன்.
படாகை - கிராமம், விருதுக்கொடி.
படாடோபம் - உடைப்பகட்டு.
படாந்தரம்-கட்டுக்கதை, கோள், முழுப்பொய்.
படாபஞ்சனம் - நீர்க்கநாசம், படாவஞ்சனம்.
படாப்பழி - பெரும்பழி.
படாம் - சீலை, திரைச்சீலை, பெருங்கொடி.
படாம்வீடு - கூடாரம்.
படாரமுக்கி - வெண்ணுயுருவி.
படாரன் - பிடாரன்.
படாரிடுதல் - ஒலிக்குறிப்பு.
படாரூபம் - படாப்பழி.
படாரெனல் - படாரிடுதல்.
படாவஞ்சனம் } கடும்பொய், கொடிய
படாவஞ்சனை } வஞ்சனை.
படி - ஒப்பு, ஓரளவு, குணம், குதிரையங்கபடி, சம்பளம், சோபானம், தரம், தாழ்வாரம், நாழி, நிறையறிபடி, நீர்நிலை, நூறுபலங்கொண்ட நிறை, பகை, படியென்னேவல், பூமி, வாயிற்படி, விதம்.
படிகட்டுதல் - இடைகட்டுதல்,படிகொடுத்தல்.
படிகபச்சை - ஓரிரத்தினம்.
படிகம் - கூத்து, பளிங்கு, பிச்சை, வெள்ளிலோத்திரம்.
படிகர் - வாயிலாளர்.
படிதை - படிவு, புடைவை.
படிகொடுத்தல் - நாளுக்குநாள் வேண்டிய செலவு கொடுத்தல்.
படிக்கட்டளை - கோயில் முதலியவற்றிற்குள்ள நித்திய விருத்திச் செலவு, நியமிதம்.
படிக்கட்டு - நியம அளவு.
படிக்கம் - படிக்காசு புலவன்.
படிக்காசு - இராமநாதபுரம், இரகுநாத சேதுபதியின் சமஸ்தானத்தில் ஒரு புலவன், இவர் சாதியில் செங்குந்தர் படிகொடுக்கும் பணம்.
படிக்காரம் - சினக்காரம்.

படிக்காரர் - படிகொடுப்போர், படி வாங்குவோர்.
படிக்குப்பாதி - நியமித்ததிற்பாதி.
படிசம் - தூண்டில்.
படிசு - நிலபரம்.
படிதம் - படித்தல்.
படிதல் - அமருதல், அமைதல், கலத்தல், குளித்தல், கூத்து, திறந்தல்.
படிதவ்வியம் - படித்தற்குரியது.
படித்தாம் - நிபந்தனை.
படித்தல் - சொல்லுதல்,பழகுதல்,வாசித்தல்.
படித்திரம் - சூட்டிறைச்சி.
படித்தின் - படிக்கணக்கான சாப்பாடு.
படித்துறை - படிக்கரை.
படிப்பனை-சமர்த்து, படிப்பு,போதனை.
படிப்பனவு - படிப்பு, போதனை.
படிப்பாளி - கற்றோன்.
படிப்பித்தல் - கற்பித்தல், பழக்குதல்.
படிப்பினை - படிப்பனவு, வங்கமணல்.
படிப்பு - அறிவு, கல்வி, சொல்லல்,பழக்கம், புத்தி, வாசனை, வாசிப்பு.
படிப்போன் - மாணுக்கன்.
படிமக்கலம் - கண்ணுடி.
படிமதானம் - நவதானத்தொன்று.
படிமத்தாள் - சன்னதகாரி.
படிமத்தான் } தேவாாளன்.
படிமத்தோன் }
படிமம் - கண்ணுடி, சுத்தம், வெண்மை, வெறியாட்டு.
படிமாத்தான் - படிமத்தான்.
படிமானம் கீழ்ப்படிதல், தகுதி, திருத்தம், விலைகுறைதல்.
படிமை - தவவேடம்.
படியகம் - படிக்கம்.
படியச்சு - ஒருகருவி.
படியப்பார்த்தல் - அடக்குதல், குறைத்தல், சேர்த்தல்.
படியாம் - ஓரம்.
படியவைத்தல் - படியப்போடுதல்.
படியளத்தல் - படிகொடுத்தல்.
படியளந்தோன் - விட்டுணு.
படியாள் - படிக்காரன்.
படிரம் - படீரம்.
படிலன் - வீரன், வேலைக்காரன்.
படிவம் - உடலுறுப்பு, உடல், சித்திரரூபம், நோன்பு, வடிவு.
படிவர் - சடைமுடியோர், முனிவர்.
படிவு - அடங்குகை, அழுந்துகை, கீழ்ப்படிவு, குளித்தல், தாங்குதல், தாழ்தல், வணக்கம்.
படிறர் - திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்.
படிறு - கனவு, பொய், வஞ்சகம்.
படினம் -பக்குவம்,மேன்மை,வெற்றி.
படீரம் - உதரம், உயரம், சந்தனம், சிவப்பு, வயல், வாதம்.
படீரிடுதல் } ஒலிக்குறிப்பு.
படீரெனல் }
படு - உப்பு, குலை, கள், குளம், கூர்மை, கொடுத்து, சம்பத்து, நன்மை, நிர்நிலை, படுவென்னேவல், மரக்குலை, மிகுதிக்குறிப்பு, (உ-ம்) படுபொய், வெப்பம்.
படுகர் - இருந்தேறும்வழி, குளம், பள்ளம், மருதநிலம், வயல்.
படுகளம் - போர்க்களம்.
படுகள்ளன் - வலுகள்ளன்.
படுகாடு - சுடுகாடு.
படுகாயம் - உயிர்ச்சேதமானகாயம்.
படுகாச்சி - உபசாரமறியாதவன், கட்டையிற் புனைவிலை.
படுகி - சினக்காரம்.
படுகிடங்கு - பொறிகிடங்கு.
படுகு - வாக்குவிசேடம்.
படுகுடி - கெடுகுடி.
படுகுழி - யானை முதலிய படுகிடங்கு.
படுகை - ஆற்றங்கரையடுத்தவயல்.
படுக்கையாமணக்கு - ஓராமணக்கு.
படுக்காளி - தந்திரி, பொய்யன்.
படுக்காழிவிசேஷம் - கட்டுக்கதை.
படுக்கை - அடிப்பட்டை, படுத்தல், பல்லணம், மக்கட்படுக்கை, விலங்கின் படுக்கை.
படுசூரணம் - மருந்துத்தூள், முழுநாசம்.
படுஞாயிறு-அத்தமசூரியன்,ஒருநோய்
படுதடி - பட்டதடி.
படுதல் - அகப்படுதல், அத்தமித்தல், இல்லாமை, உண்டாதல், ஒலி, சகித்தல், சாதல், படுந்தன்மை, பதித்தல், புலப்படுதல், பூத்தல், மூட்டுதல்.
படுதா - ஒதுக்கிடம்.
படுதாமரை படர்தாமரை.

படுத்தடி - முரட்டுத்தன்மை.
படுத்தலோசை - தாழ்த்திசை.
படுத்தல் - அகப்படுதல், கொலைசெய்தல், சயனித்தல், சயனிப்பித்தல், செறித்தல்.
படுத்துருமம் - வெள்வேலமரம்.
படுத்துவம் - சமர்த்து, வலிமை.
படுநிலம் - பாலைநிலம், மயானம், யுத்தபூமி.
படுநீலி - முழுநீலி.
படுபழம் - முதிர்ந்தபழம், வஞ்சகன்.
படுபழி - மிகுபழி.
படுபள்ளம் - பெரும்பள்ளம்.
படுபுரளி - சுத்தப்புரளி.
படுபுளுகு - மிகுபுளுகு, வீண்புகழ்ச்சி.
படுபொய் - முழுப்பொய்.
படுபொழுது - மாலைநேரம்.
படுமரம் - பட்டமரம்.
படுமலைப்பாலை - ஓரிசை.
படுமுடிச்சு - அவிழாமுடிச்சு.
படுமோசம் - முழுமோசம்.
படுவநாயகி - பாற்சோற்றி.
படுவர் - கள்விற்போர்.
படுவன் - ஒருசிலந்தி, ஒருநோய், ஒருபூண்டு.
படுவான் - அழிவான், மேற்றிசை.
படுவி - கள்விற்பாள், வசவி.
படுவை - தெப்பம்.
படை - அடுக்கு, ஆயுதம், கலப்பை, கல்லணை, செதிள், தானை, இஃது அரசியலிலொன்று நிரன், நித்திரை, நிரை, படையென்னேவல், போர், போர்ப்படை, மெத்தை.
படைக்கலம் - ஆயுதப்பொது.
படைக்குழப்பம் - படைவீரரின்குழப்பம்.
படைக்கோலம் - போர்க்கோலம்.
படைச்சனம் - படைவீரர்.
படைச்சால் - உழவுசால்.
படைச்செருக்கு - படைவீரம்.
படைத்தலைவன் - சேனாபதி, இவன் அரசர்க்குத் துணைவரி லொருவன்.
படைத்தல் - உடைத்தாதல், சிருட்டித்தல், இது முத்தொழிலிலொன்று, சோறு முதலிய வுண்கலத்திடுதல்.
படைத்தவன் - ஒன்றையடைந்தவன், கர்த்தா, பிதா.
படைத்துணை - போர்க்குதவி, போர்த்துணைவன்.
படைத்தோன் - கடவுள்சிருட்டிகர்த்தர்.
படைபயிற்றல் - சிலம்பம்பழக்கல், அது அரசாறுதொழிலிலொன்று.
படைபெற்றல் - கீழறுத்தல்.
படைப்பு - சம்பாத்தியம், சாத முதலிய படைத்தல், சிருட்டி, சிருட்டிக்கப்பட்டது.
படைப்பௌஞ்சு - படைவகுப்பு.
படைமரம் - நெய்வார் கருவியிலொன்று.
படைமுகம் - போர்முகம்.
படையல் - அடிக்குமடி, நிவேதனப்பொருள்.
படையன் - அடித்தல், அடிமை.
படையாச்சி - ஒருசாதி.
படையாளர் - ஆயுதவீரர், போராளர்.
படையிராசன் - வெடியுப்பு.
படையிறங்குதல் - பாளையம்போடுதல்.
படையுறுப்பு - படையணி.
படையுறை - ஆயுதவுறை.
படையுன்படுவோன் - சின்னமூதி.
படையெடுத்தல் - சேனையெழுதல்.
படையெழுச்சி - படையெழும்பல்.
படைவகுப்பு - படையணி.
படைவரம் - குதிரைச்சேணம்.
படைவாள் - கலப்பை, கலப்பையினோருறுப்பு.
படைவீடு - ஆயுதசாலை, தேவாலயம், பாசறை.
படைவீரர் - சேனைவீரர்.
படைலோகம் - சிப்பி.
படோலம் - யானைக்கட்டுத்தறி, முள்ளுவெள்ளரி.
படோலி - நிலவு
படோலுகை - புடல்.
படோல் } பேய்ப்புடல்.
படோல்ராசி }
பட்கை - பாம்பின்மேல்வாயினோர்பல்.
பட்சசம் - திட்டிவாயல்.
பட்சகன் - பெருண்டியன்.
பட்சசரம் - பட்சி.
பட்சசரன் - பார்ப்பான்.
பட்சணம் } இரை, உணவு, உண்டல்.
பட்சணை }
பட்சணி - உண்போன்.
பட்சணித்தல் - உண்டல்.
பட்சணியம் - உண்ணத்தகுபொருள்.
பட்சதாபம் - உருக்கம், பரிதாபம்.
பட்சத்துவாரம் - திட்டிவாயில்.

பட்சபாதம் - ஓரவாரம்.
பட்சபித்து - கிலாமுகிப்புள்.
பட்சம் - உருக்கம், செட்டை, தரம், நேசம், பக்கம், பதினைந்து நாட் கொண்டது, பாட்டியம், மீனம்பர், வகுப்பு.
பட்சயம் - போசனம்.
பட்சவாதம் - பட்சபாதம்.
பட்சவாதி - ஓரவாரஞ் செய்பவன்.
பட்சாந்தம் - அமாவாசை, பூரணை.
பட்சு - பாசஞ்செய்வோன்.
பட்சி - பட்சியென்னேவல், பறவை.
பட்சிசாதி - பறவைக்குலம்.
பட்சிசாத்திரம் - பஞ்சபட்சியைக்குறித் தறியநூல்.
பட்சிசாலம் - பறவைக்கூட்டம்.
பட்சிசிங்கம் - கலுழன்.
பட்சித்தல் - உண்ணல், விழுங்கல்.
பட்சித்தோஷம் - பறவைத்தோஷம்.
பட்சிப்பு - பட்சித்தல்.
பட்சியம் - மாப்பலகாரங்கள்.
பட்சியிராசன் - கலுழன், செருடப்பச் சைக்கல்.
பட்சியினெச்சம் - பொன்னம்பர்.
பட்சிராஜன் - கருடன்.
பட்டகசாலை - பண்டசாலை.
பட்டகம் - பண்டசாலை, புழுக்கொல் விச்செடி.
பட்டங்கட்டி - செங்குந்தரிற்றலைவன், நெய்தனிலமாக்களிற்றலைவன், பட் டவத்தனன்.
பட்டங்கட்டுதல் - பட்டப்பேர்கொடுத் தல், பட்டமணிதல்.
பட்டசம் - ஒரு ஆயுதம்.
பட்டசாலை - பட்டகசாலை.
பட்டச்சீட்டு - பட்டப்பேரொப்பம்.
பட்டஞ்சூடுதல் - அபிஷேகமடைதல், பட்டமணிதல்.
பட்டஞ்சூட்டுதல் - அரசரைக் குரவ ரைஅபிஷேகம் பண்ணுதல், பட்டப் பேர்கொடுத்தல்.
பட்டடை - அடைகல், கழுத்தணி, குவியல், தலைதாங்கி, தாங்குபலகை, தாப ரம்,தானியஉறை,|நரம்புகளின் இளி.
பட்டடைக்கழனி - தண்ணீரிறைத்துப் பயிரிடுங்கழனி.
பட்டடையார் - முதல் வேலைகாரர்.

பட்டணசுவாமி
பட்டணத்துப்பிள்ளை } ஒருஞானி.
பட்டணத்தோர் - நகரப்பதியோர்.
பட்டணப்பிரவேசம்-நகரிவலம்வருதல்.
பட்டணம் - நகரம்.
பட்டணவர் - செம்படவர்.
பட்டத்தியானை - இராசயானை.
பட்டத்திரி - செருப்புத்திரி.
பட்டத்திரி
பட்டஸ்திரீ } இராசாத்தி.
பட்டத்துக்குமாரத்தி - அரசன் றலைம கள்.
பட்டத்துக்குமாரன்-அரசன்றலைமகன்.
பட்டத்துத்தேவி - இராசாத்தி.
பட்டத்துரை - பட்டவத்தனன்.
பட்டந்தரித்தல் - பட்டப்பேர்கொடுத் தல், பட்டமணிதல்.
பட்டந்தீர்தல் - ஆபரணந்துண்முதலிய வற்றிற் பட்டம் வகுத்தல்.
பட்டப்பகல் - நடுப்பகல், நல்லபகல்.
பட்டப்பேர் - குலமுறைப்பேர்,பட்டஞ் சூட்டப்பேர்.
பட்டமணி - பட்டந்தீர்ந்தமணி.
பட்டமரம் - படமரம்.
பட்டம் - ஆயுதம்,எழுதம்படிசெய்ததக டு, கடுதாசிப்படம், கவரிமா, குளம், சதுக்கம், சீலை, தீர்க்கம், நாற்காலி, நெற்றிப்பட்டம், பட்டினம், பரிசை, மனிதர் படுக்கை, வழி,வாள், விலங் கின்படுக்கை.
பட்டயம் - பிரசித்தபத்திரிகை, வாள்.
பட்டர் - பாடுவோர், பிராமணரிலோர் வகுப்பு.
பட்டவர்த்தனர் - பட்டந்தரித்தவரசர்.
பட்டவிளக்கு - ஒருவிளக்கு.
பட்டறை - கண்டத்தணியுமோராபரண
பட்டணம் - பட்டினம். [ம்.
பட்டன்-சத்துரு, ஞானி, பாடுவன்.
பட்டா
பட்டாகத்தி } வாள்.
பட்டாங்கு - வாழ், சித்திரச்சேலை, பரி காசம், மெய்.
பட்டாசிரியன்-ஒருசமையவாசிரியன்.
பட்டாசு - சீனவெடி.
பட்டாடை - பட்டுவஸ்திரம்.
பட்டாணி - ஒருகருவி, ஒரு சாதியான், ஒரு செடி.

பட்டாணி தயிலம் - ஒரு சிரங்கெண்ணெய்.
பட்டாணிப்பயறு - ஒருபயறு.
பட்டாணிப்பாஷை - ஒருபாஷை.
பட்டாபிஷேகம் } பட்டந்தரித்தல்,
பட்டாபிடேகம் } முடிசூட்டல்.
பட்டாரகர் - கடவுளர், குருக்கள்.
பட்டாரகன் - அரசன், அருகன், இருடி, கடவுள், குரு, சூரியன்.
பட்டாலிகம் - உறுதிப்பத்திரம்.
பட்டி - அட்டவணை, ஆட்டுக்கிடை, இடம் ஒருசெடி, ஒருவிதச்சிகிச்சை, களவு, கள்வன், சிற்றூர், சீலை, தெப்பம், நெகிழ்ச்சி, படல், பலகறை, பிள்ளை, மந்தை, வாலையென்னுமோர் கருவி, விக்கிரமாதித்தன் மந்திரி, வெற்றிலைச்சுருள், வேசி.
பட்டி - சந்திரசர்மன் புத்திரன், விக்ரமார்க்கன் தம்பி.
பட்டிகர் } திருடர்.
பட்டிகன் }
பட்டிகை - அரைநாண், சிந்தில், சீலை, சுவர்த்தலத்தின் சித்திரக்கம்பி, தெப்பம், தோணி, எட்டிச்செடி, முலைக்கச்சு.
பட்டிக்கடா - மாப்பிள்ளைக்கடா.
பட்டிக்காடு - காட்டுக்குள்ளூர்.
பட்டிக்கிடை - பட்டிக்கிடைவை.
பட்டிக்குறி - பரவணிக்குறி.
பட்டிசம் - ஒருபாணம்.
பட்டிடை - நந்தியாவட்டை.
பட்டிணி - பட்டினி.
பட்டிதி - பார்ப்பனத்தி, போகமாது.
பட்டிப்பார்த்தகொம்பு - நிமிர்ந்து முன் வளைந்த கொம்பு.
பட்டிப்படி - பட்டியேய்ப்போர் செலவு.
பட்டிப்பயல் - திருட்டுப்பயல்.
பட்டிப்பொங்கல் - மந்தையிற் பொங்கல்.
பட்டிமண்டபம் - பாடற்சவை மண்டபம், ஒலிக்க மண்டபம்.
பட்டிமரம் - கள்ளமாட்டின் கழுத்திற் கட்டுமரம்.
பட்டிமாடு - கள்ளமாட்டின் கழுத்திற் கட்டுமரம், பயிரழிக்குமாடு.
பட்டிமுறித்தல் - ஒருவிளையாட்டு, கட்டுக்கடந்துபோதல், கூட்டத்தை நீக்கல்.
பட்டிமேய்தல் - மிருகம், பயிரழித்தல்.
பட்டிமை - களவு, வஞ்சம்.
பட்டியல் - வலிச்சல்.
பட்டியூண் - விளைவிற்பட்டிக்காரனுக்கு வைக்கும் பங்கு.
பட்டியெருது - பட்டிமாடு.
பட்டிவிடுதி - அந்திநேரத்தில் மழை விடுதல்.
பட்டினத்தடிகள் } சோழநாட்டிலே,
பட்டணத்துப்பிள்ளையார் }
காவிரிப்பூம் பட்டினத்தில், வைசிய குலத்தில், ஆயிரத்திருநூறு வருஷங்களுக்கு முன்னே அவதரித்து, திருவெண்காட்டீசனிடத்தில் பேரன்புடையராயொழுகின காரணப் பெயர்பெற்ற ஒரு புருஷரத்நம், இவர் கப்பல் வியாபாரத்தால் பெரும்பொருள் படைத்துக் குபேரனெனவும், சிவனடியாரைச் சிவனெனவேகொண்டு உபசரிக்கும் பத்திமேலீட்டால் சிறுத்தொண்டரெனவும் வாழ்ந்து இல்லறம் நடத்தி வருநாளில் விவாகஞ் செய்து கொள்வதற்குப் பொருளின்றிவருந்தியிருந்த ஒரு ஆதிசைவரிடம் சிவபிரான் ஒரு மாணிடவுருக்கொண்டுசென்று உமதடிமையாகப் பாவித்து என்னைக் கொண்டு சென்று விற்றுக் கலிதீர்த்துக்கொள்வீராகவென்றுகூற, ஆதிசைவர் அவ்வாறே அவரைக்கொண்டு சென்று பட்டினத்தடிகளிடம்விற்றுப் பொருள்பெற்றுப் போயினர். பட்டினத்தடிகள் அவ்வடிமையை அடிமையாக நினையாது புத்திரனைப்போல வைத்து வணிகமுறை பயிற்றி, மரக்கலத்திலேற்றி, ஊர்தோறுமனுப்பிப் பொருளீட்டுவித்து மகிழ்ந்து வருநாளில், அவ்வடிமையானவர் ஒருமுறை தாம் மரக்கலத்திற் கொண்டுபோன பண்டங்களையெல்லாம் விற்றுப்பெற்ற பெரும்பொருளை ஒரு தீவிலே ஆலயத் திருப்பணிக்கும் தருமத்துக்கும் செலவுசெய்துவிட்டு மீளும்போது அந்த மரக்கலநிரம்ப எருமுட்டைகளையேற்றிக் கொண்டுவந்துபண்டாரத்திற் சேர்த்துப் பொன்மணலையெருமுட்டை-

கனில்செறித்தவந்தே னெனக்கூறி ஒன்றைப் பிட்டுக்கரைத்துக் காட்டினர், பின்பு அவரோடு சென்றசிலர் பட்டினத்தடிகளிடம் போய், இவர் உம்மை வஞ்சித்தா ரென்றுகூற அவர் அவ்வடிமையைச் சிறையிட்டு வைத்தார் அங்கே அவரிடத்து விளங்கிய அற்புதங்களை யறிந்த பிள்ளையார் அவரைச் சிறைநீக்கிவிட, அவர் பிள்ளையாருக்குஞானோபதேசஞ்செய்தருளினர், அவ்வளவில், பிள்ளையார் துறவாமை கண்ட பரமசிவன் ஒருகாதற்றவூசியால்அவருக்குஞான முதிக்கச் செய்து மறைந்தருளினர், உடனே பிள்ளையார் துறவடைந்து தலங்கள் தோறுஞ் சென்று பாடி தரிசித்து அற்புதப்பாடல்களைப்பாடியும் அநேக அற்புதங்களைச்செய்தும் இறுதியில் திருவொற்றியூரையடைந்து சமாதிகூடிச் சிவலிங்காகாரமாயினர்.

பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத்திரட்டு - இதனுள் கோயினான்மணிமாலை, திருக்கழுமலமும் மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர்த் தொகை, திருவேகம்பமாலை முதலிவை அடங்கும். இவை யிற்றுக்கு வேண்டிய பொருள் வெறுப்பக்கொடுத்து அச்சுவாகன மேற்றி உலகத்திலே உலாவரச் செய்தவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவரும், பொருட்செல்வத்தோடு அருட்செல்வமொருங்குடையவரும், சிதம்பராலய ஜீரணோத்தாரரும் இராஜராஜாங்கத்தாரால் நன்கு மதிக்கப்பெற்றவரும், சிதம்பரம் நகர சீர்திருத்த சபையின் சபாநாயகரும் ஆகிய ஆனரெபில் S. RM. M. இராமசாமிசெட்டியார் அவர்களாம்.

பட்டினப்பாக்கம் - காவிரிப்பூம் பட்டணத்தின் உண்ணகர்.

பட்டினப்பாலை - பத்துப்பாட்டின் ஒன்பதாவது, கரிகாற்சோழனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடியது.

பட்டினம் - ஊர், நெய்தநிலத்தூர்.

பட்டினவர் - நெய்தனிலமாக்கள், செம்படவர்.

பட்டினவர்சேரி - நெய்தனிலம், செம்படவரூர்.

பட்டினி - இராசாத்தி, உணவற்றிருத்தல், பார்ப்பனத்தி.

பட்டினிகாத்தல் } பசியிடத்தல்.
பட்டினியிடத்தல் }

பட்டினிப்பண்டம்-சாவீட்டுக் கனுப்பும் போசன பண்டம்.

பட்டீசுவரர் - திருப்பட்டீச்சரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பட்டு-உல்லாசம், ஒருபருத்தி, சிற்றூர், பட்டாடை, மடிப்பு, மேற்போர்வை.

பட்டுக்கரைச்சீலை - பட்டுநூலா லருகு நெய்யப்பட்ட புடவை.

பட்டுச்சீலை - மடிப்பு.

பட்டுத்தரித்தல் - பட்டணுபவித்தல்.

பட்டுநூற்பூச்சி } ஒரு சிலம்பி.
பட்டுப்பூச்சி }

பட்டை ஆபரணத்தோருறுப்பு, காறை, சலாகை, தோன்மூட்டு, நீரிறைக்கும் பூட்டை, பட்டுநாடா, பிழா, போதிகை, மரத்தோல். [டன்ளுங்குழி.

பட்டைகிடங்கு கிணற்றிற் பட்டையிட்

பட்டைக்காறை - ஒரு கழுத்தணி.

பட்டைக்கொடி - துலாக்கொடி.

பட்டைச்சாதம் - புற்கைத்தளிகை.

பட்டைச்சாராயம் - வெள்வேலம் பட்டையைக்காய்ச்சிஇரக்கும் ஒருபானம்.

பட்டைச்சுருக்கு } ஒருவகைத்தடம்.
பட்டைத்தடம் }

பட்டைநாமம் - விட்டுணு பத்திக்காரர் நெற்றியிலணியுமோர்குறி.

பட்டைப்பெல்லி - பட்டைப்பிடி.

பட்டையம் - பட்டயம்.

பட்டையரைஞன் - ஓரரைஞாண்.

பட்டோஜிதீக்ஷிதன் - பாணினிவியாகரண சூத்திரங்களைச் சித்தாந்த கௌமுதி என்னும் பெயராற்பிரகரணஞ் செய்த பண்டிதர். இவர் கௌடப்பிராமணர் இவர்காலம் இற்றைக்கு 800 வருஷத்துக்கு முந்தியது.

பட்டோலை - அட்டவணை, அரசர்விடுந் திருமுகம், காரியக் குறிப்பெழுது மோலை.

பட்டோலைகொள்ளல் - திருமுறையெழுதல்.
பணகரம் - பாம்பு.
பணக்கொழுப்பு - செல்வச்செருக்கு.
பணசம் - வியாபாரச்சாமான்.
பணச்சலுகை } பணப்பெருமை.
பணச்செருக்கு }
பணச்செலவு - பொருள்விரயம்.
பணதரதரன் - சிவபிரான்.
பணதரம் - பாம்பு.
பணதி - ஆபரணம், செவ்வை.
பணநம் - விக்கிரயம்.
பணப்பித்து - பணவாஞ்சை.
பணப்புரட்சி } பணவரவு.
பணப்புரட்டு }
பணப்பெட்டி - உரொக்கத்தயிலா.
பணப்பேய் - பணவாஞ்சை.
பணப்பைத்தியம் - பணப்பித்து.
பணமணி - நாகமணி.
பணயிடுக்கு - பணப்பெலன்.
பணம் - காசு, கிரகம், சூதாடுதல், பருமை, பாக்கியம், பாம்பின்படம், பாம்பு, பொக்கசம், வியாபாரச்சரக்கு, விலை, வேலை, சூதாடுபந்தயம்.
பணயம் - அடகு, பணம், பொருத்தப்பணம்.
பணர் - மரக்கிளை.
பணவம் - தம்பட்டம்.
பணவன் - பணிசெய்மகன்.
பணவிடை - வராகனிலொன்பதிலொருபங்கு.
பணவை - அட்டாலை, ஓளவு, கழுகு, பரண்.
பணறு - பணர்.
பணாதரம் - பாம்பு.
பணாங்கனை - வேசி.
பணாடவி - ஆதிசேஷன்.
பணாபவம் } பாம்பு.
பணாதரம் }
பணாதரதரன் - சிவபிரான்.
பணாமகுடம் - பாம்பின்படம்.
பணாமணி - நாகரத்தினம்.
பணாமரம் - கொப்படர்த்தியானமரம்.
பணாமுடி - பாம்பின்முடி.
பணாயிதம் - வணங்கல்.
பணாயை - கடைவீதி,தொழில்,வியாபாராதாயம்.

பணி - ஆபரணம், ஈகை, எருமை, ஏவல், கட்டளை, செய்கை, சொல், தொண்டு, தொழில் , தோற்கருவி, பட்டாடை, பணியென்னேவல், பாம்பு, வார்த்தை, வேலை.
பணிகாரத்அத்தி - ஒருவகைப்பூடு.
பணிகாரம் - அப்பவருக்கம்.
பணிக்கம் - திருத்தம்.
பணிக்கணம் - பாம்பின்கூட்டம்.
பணிக்களரி - தொழில்செய்யுமிடம்.
பணிக்கன் - உபாத்தியாயன், கூத்து முதலிய பயிற்றுவோன், கொற்றர்தலைவன், சாராயங்காய்ச்சுகிறவன், நாவிதன், யானைப்பாகன், விஷவைத்தியன்.
பணிக்கு ஆசான்வேலை,பணிக்கை. [ன்.
பணிக்குச்செலுத்துதல் - முற்கந்தம் பண்ணுதல்.
பணிக்குதல் - பணித்தல்.
பணிக்கை - செய்கை, நேர்த்தியானசெய்கை, பணித்தல்.
பணிசாரகன் - வேலையாள்.
பணிச்சக்கரம் - வேளாண்மைநாட்பொருத்தம் பார்க்குமோர் சக்கிரம்.
பணிதல் - இறங்கல்,உண்டல்,குறைதல், தாழ்தல், வணங்கல், இது புண்ணியமொன்பதிலொன்று, வளைதல்.
பணிதவ்வியம் - விற்றற்குரியது.
பணிதானம் - தோத்திரஞ்செய்தல்.
பணிதி - பணதி.
பணித்தட்டார் - பொற்கொல்லர்.
பணித்தலைவன் - ஆதிசேடன்.
பணித்தல் - ஏவுதல், கட்டளையிடல், குறைத்தல், கொடுத்தல், சொல்லல், தாழ்த்தல்.
பணித்திறத்தல் கீழேயிறக்கிவைத்தல்.
பணிப்படுத்துதல் - அலங்கரித்தல், செப்பனிடுதல்.
பணிப்பகை - கருடன், மயில்.
பணிப்பிரியம் - காற்று.
பணிப்பு - பணிதல்.
பணிப்பெண் - குற்றேவற்காரி.
பணிமாறுதல் - இரட்டல்.
பணிமுட்டு - தளபாடம்.
பணிமொழி - நல்லவார்த்தை.
பணியல் - வணங்கல்.
பணியாரத்அத்தி - ஒருஅத்தி.
பணியாரம் - பணிகாரம்.

பணியார் - பகைவர்.
பணியிறைக்கு - தண்ணீர்விட்டான் பூடு.
பணியிறை - ஆதிசேடன்.
பணியுலகு - நாகலோகம்.
பணிராஜன் - ஆதிசேடன். [த்தை.
பணிலம் - சங்கு, வலம்புரிச்சங்கு, வார்
பணிவிடை - கட்டளை, குற்றேவல்வேலை
பணிவு - தாழ்வு, பதுங்குகை, வணக்கம்.
பணினம் - பாம்பு.
பணீசுரன் - சேடன்.
பணை - அரசமரம், உயரம், கிளை, குதிரைப்பந்தி, தப்பிதம், பணையென்னேவல், பருமை, பறைப்பொது, பிழை, பெருமை, மரக்கொம்பு, மருதநிலப்பறை, மருதநிலம், முரசு, மூங்கில், வயல், விலங்கின் படுக்கை,
பணைத்தல் - கிளைத்தல், பருத்தல், பிழைத்தல்.
பணைத்திராய் - ஒருபூடு.
பணைப்பு - கிளைப்பு, பருமை.
பணையம் - பணயம்.
பணையூதி - கிருஷ்ணன்.
பண் - அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், குதிரைக்கல்லணை, சீர், செவ்வை, தகுதி, திக்கைத, திறைநரம்புள்ளவீணை நீர்நிலை, படுகுழி, பண்ணென்னேவல், பாய்மரக்கயிறு, மகளிர்கூட்டம்.
பண்கொடி - பிரம்பு.
பண்செய்தல் - பணிவிடைசெய்தல், பண்படுத்தல்.
பண்டகசாலை - களஞ்சியம், பொக்கசச்சாலை.
பண்டகாசினி - வேசி.
பண்டகேந்திரம் - ஒருகணிதம்.
பண்டசாலை - பண்டகசாலை.
பண்டபதார்த்தம் - இரசநிரசவஸ்து.
பண்டப்பழிப்பு - தேட்டாக்கூறு, நிந்தித்துரைத்தல்.
பண்டமாற்று - விற்பனவு.
பண்டம் - அறிவு, உணவுப்பொருள், கலைக்கியானம், தானியம், பண்ணிகாரம், பொருள், பொன், வயிறு.
பண்டர் - பாடற்கீழ்மக்கள்.
பண்டவறை, பண்டவீடு } பொக்கசச்சாலை.
பண்டனம் - கவசம், போர்.
பண்டன் - ஆண்டன்மையில்லாதவன்.

பண்டாகி - சேம்பு.
பண்டாரக்குரு - ஆகமக்குரு.
பண்டாரசன்னிதி - ஆதீனத்துப்பெரியோர்களின் சாத்திர விசாரணைத்தலம், ஆதீனத்துப் பெரியோர் தலைவன்.
பண்டாரச்செரம் - பொதுச்செரம்.
பண்டாரத்தி - பண்டாரப்பெண்.
பண்டாரத்தெரு - இராசதெரு.
பண்டாரத்தோப்பு - இராசதோட்டம்.
பண்டாரப்பிள்ளை - அதிகாரியினேவற்காரன்.
பண்டாரமும்மணிக்கோவை - குமரகுருபரரால்செய்யப்பட்டஒருபிரபந்தம்.
பண்டாரமேளம் - இராசமேளம்.
பண்டாரம் - குங்குமம், சிவனடியான், திரைத்தனம், பலபண்டம், பொக்கசம், பொதுமஞ்சட்பொடி, மடாதீனத்தான்.
பண்டாரவாய்க்கால் - பொதுவாய்க்கா [ல்.
பண்டாரவிடுதி - பொதுவிடுதி.
பண்டாரவூழியம், பண்டாரவேலை } அமஞ்சி வேலை, பொதுவூழியம்.
பண்டாரி - பண்டாரம், பொக்கிஷக்காரன் வேளாண்மை நெய்வாரி லோர் வகுப்பு. [று.
பண்டி - உரோகணிநாள், வண்டில், வயி
பண்டிகை - ஒருவகை சிற்பவேலை, திருவிழா, பெருநாள்.
பண்டிதபார்ப்பார் - பார்ப்பாரினோர் வகை.
பண்டிதம் - வித்தை, வைத்தியம்.
பண்டிதவாய் - கடுக்காய்.
பண்டிதன் - சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன், வித்துவான்.
பண்டிலன் - தூதன்.
பண்டு - பழமை.
பண்டுகம் - அசமதாகம், செவ்வகத்தி.
பண்டை - கல்வி, ஞானம், பண்டு.
பண்டையர், பண்டையோர் } முன்னோர்.
பண்ணல் - செய்தல்.
பண்ணவர் - கடவுளர், குருமார், திண்ணியர், தேவர், பாடகர், முனிவர்.
பண்ணவன் - அருகன், ஆசிரியன், கடவுள், குரு, திண்ணியன், தேவன், பாடகன், முனிவர்.

பண்ணிகாரம் - அப்பவருக்கம், பலபண்டம்.
பண்ணியக்கூலம் - பலபண்டம்.
பண்ணியசாலை - அப்பசாலை, சந்தை, வியாபாரவீடு.
பண்ணியஸ்திரீ - வேசி.
பண்ணியபலத்துவம் - வியாபாரசித்தி.
பண்ணியம் - பலகாரம், பலபண்டம், விற்றற்குரியது.
பண்ணியவீதி - கடைத்தெருவு.
பண்ணியாங்கனை - வேசி.
பண்ணியாசிவகம் - நடை.
பண்ணுதல் - செய்தல்.
பண்ணுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
பண்ணுறுத்தல் - சிர்ப்படுத்தல், வாகனங்களை ஆய்த்தம் பண்ணல்.
பண்ணை - ஒருகீரை, குளம், சமுசாரம், நீர்நிலை, படகு, மனை, மகளீர் கூட்டம், மகளீர்விளையாட்டு, மரக்கலம், மருதநிலம், வயல், விலங்கின் படுக்கை, விலங்கின் மேற்சேணம், தோட்டம்.
பண்ணைக்காரர் - பறையரிற் றலைவர், வயற் செய்கைக்காரர்.
பண்ணைக்காரியம் - சமக்காரியம், சமுசாரகாரியம்.
பண்ணையாள் - வயல்வேலைக்காரன், வீட்டுவேலைக்காரன்.
பண்ணைவீடு - தானியவீடு, மடைப்பள்ளி.
பண்ணைவைத்தல் - உணவுசமைத்தல், படகுவைத்தல்.
பண்படி - பண்புப்பகுதி.
பண்படுதல்-அமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருந்தல், சொற்படி செய்தல்.
பண்படுத்தல் - சிர்ப்படுத்தல்.
பண்பாகுபெயர் - பண்பினலாய ஆக்கப்பெயர் (உ-ம்) வரை.
பண்பி - பண்பையுடையபொருள்.
பண்பு - குணம், தகுதி, விதம்.
பண்புச்சொல் - உரிச்சொல்.
பண்புத்தற்கிழமை - பண்பி னொற்றுமையுடைமை, (உ-ம்) கதிர்மணி.
பண்புத்தொகை - குணத்தொடு குணிக்குண்டாகிய வொற்றுமை நயத்தை விளக்கும் ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருந் தொடர், (உ-ம்) ஆதிபகவன்.
பண்புப்பெயர் - உரிப்பெயர்.
பண்புமறிநிலை - ஓரலங்காரம், அது ஒன்றன் குணத்தை மற்றொன்றற் குரைத்தல்.
பண்டறிச்சொல் - பொறிகளா லறியப் படுகுணம், (உ-ம்) செம்மை.
பண்புரைப்பார் - தூதர்.
பண்புவமை - ஒன்றின் பண்பை மற்றொன்றிற் கொப்பிடுவது.
பண்மை - தகுதி.
பண்மொழியம்மை - திருப்பாண்டிக்கொடுமுடியிலே, கோயில்கொண்டிருக்குந் தேவியார் பெயர்.
பதகம் - ஒருபறவை,பாதகமென்பதின் குறுக்கம்.
பதகர் - சண்டாளர்.
பதகளித்தல் - பதறுதல்.
பதகளிப்பு - பதறுகை.
பதகன் - கீழ்மகன்.
பதகை - திரிபதகை.
பதக்கம் - மாதரணிவடம், மார்பணியில் ஒனறு.
பதக்கிரமம் - காலடி.
பதக்கு - இரண்டுகுறுணிகொண்டது.
பதக்குபதக்கெனல் - அச்சக்குறிப்பு.
பதக்கெடுதல் - தைரியங்கெடல், பதனழிதல்.
பதங்கமம் - பறவைப்பொது, விட்டில்.
பதங்கம்-இரசம், சந்தனம், சாம்பிராணி முதலிய வற்றினெடுக்கும் பதங்கம், பறவைப்பொது, விட்டில்.
பதங்கராஜன் - கருடன்.
பதங்கன் - சூரியன்.
பதங்கு - ஒட்டுவரிசை, குழி, பிளவு.
பதசம் - சந்திரன், பட்சி, மயிர்ப்புழு.
பதச்சேதம்பண்ணுதல் - பதமுடித்தல்.
பதஞ்சலி - ஒருஇருஷி,சேடன். யோகசூத்திரம்செய்தவராகிய இவர்,இளா விருத வருஷத்தில் அங்கிராணுக்குச் சநியிடத்திற் பிறந்தவர், இவர் பிறந்தவுடன் திரிகாலஞானமுடையராய் எல்லாமுணர்ந்தவர், இவர் லோனுபையைச் சுமேருவிலிருந்த ஓரால மரத்தைப் பொந்திலே கண்டு மணம்

புரிந்தனர், பாணினி வியாகரணத்திக்கு மகா பாஷியஞ்செய்த பதஞ்சலி, இரண்டாயிரத் தெண்ணூறு வருஷங்களுக்கு முன்ன ரிருந்தவரென்பது சங்கராசாரிய காலநிருபணத்தால் நன்றாக நிச்சயிக்கப்படும், இக்கால நிருபணம் ஐரோப்பிய பண்டிதருக்கு மொத்ததுணிபரம், இப்பதஞ்சலிக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்தவர் பதஞ்சலி முனிவர், அவர் ஆதிசேஷனுடைய அவதாரம். ஆதிசேஷன் சிவபிரானது திவ்வியநடனங் காணவேண்டிப் பதஞ்சலி முனிவராக அவதரித்தும் தில்லைவனத்திலேஆனந்த தாண்டவதரிசனம் பண்ணிக்கொண்டிருந்தவரென்பது கோயிற்புராணம். மகாபாஷியஞ் செய்தவரும் யோகசூத்திரம் செய்தவரும் இருவேறு பதஞ்சலி என்பாருமுனர்.

பதஞ்சலியம் - பதஞ்சலிசெய்த நூல்.

பதடி - பதர்.

பதணம் - மதிலுண்மேடை, மதில்.

பதத்திரம் - சிறகு.

பதத்திரி - பறவை.

பதநியாசம் - ஒருபூடு, காலடி, நடை.

பதநிறம் - மாங்கிஷநிலை.

பதநீர் - கருப்பநீர்.

பதந்தன் - பூஜிக்கத்தக்கவன்.

பதபஞ்சனம்-சொல்லிலக்கணம்,சொற்பிரிவு விளக்கப்பண்ணுதல்.

பதமெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.

பதபாதம் - காலடி.

பதப்படுதல்-சீர்ப்படுதல், பக்குவமாதல்.

பதப்படுத்துதல் - சீர்ப்படுத்துதல்,பக்குவப்படுத்துதல்,

பதப்பலம் - கால்பலம்.

பதப்பாடு - மதிலுறுப்பு.

பதப்புணர்ச்சி - நிலைமொழியிலும் வருமொழி முதலும் இயல்பாயேனும், விகாரமாயேனும் புணர்தல்.

பதப்பேறு - பதமுத்தி.

பதப்பொருட் காட்சியணி-ஓரலங்காரம், அது உபமானோபமேயங்களுளொன்றின் றருமத்தை ஒன்றினாரோபித்தல்.

பதப்பொருத்தம் - சொற்பொருத்தம்.

பதப்பொருள் - பதவுரை, அது உரையிலக்கணமைந்தினொன்று.

பதமம் - சந்திரன், பட்சி, விட்டில்.

பதமழிவு - பதனழிவு.

பதமுடித்தல் - பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரமெனுமாறையுங்கொண்டு மொழிகளைப் பிரித்துக் காண்டல்.

பதமுத்தி - பதவிமுத்தி, பாதமுத்தி.

பதமை - அமைதி, இணக்கம்,தாழ்மை, மிருது, மெத்தனவு, மெல்லோசை.

பதம்-அடையாளம், அழகு, அறுகம்புல், ஆடை, இடம், இன்பம், ஈரம், உண்டல், எழுத்தாலாயபதம், ஒளி, ஒருமொழியிற் பிரகிருதியாய் நிற்பது, கால், காவல், குழைவு, கூர்மை, கொக்கு, சிந்து, சொல், சோறு, தின்றல்,தெருநாழிகை,பக்குவம், பதவி, பாவினொருறுப்பு, பூரட்டாதி, பொருள், பொழுது, முயற்சி, வரிசை, வழி, வேஷம்.

பதம்பிரித்தல்-சொற்பிரிப்புச்செய்தல்.

பதரி - இலந்தை.

பதரி } சரஸ்வதி நதிக்குச் சமீபத்துள்ள ஒரு புண்ணியவனம்.
வதரி }

பதரிகாச்சிரமம்-ஒருதபோவனம், விஷ்ணுஸ்தலம், வேதவியாசராச்சிரமம்.

பதர்-அறிவீனன், அற்பம், சப்பட்டை, பலனற்றது.

பதலம் - பதனம்.

பதலை - ஒருகட்பறை, குண்டான், சிறுமலை தாழி, மத்தளம், மரக்கலம், வாயகன்றபறை.

பதல் - வதின்.

பதவாயுதம் - சேவற்கோழி.

பதவி - இடம்,உலகம்,ஒழுங்கு,நதி, செல்வம், நிலை, நிலைபரம், முத்தி, வழி.

பதவியகுணம் - மெத்தெனவு.

பதவியடைதல் - கதியடைதல், பாதமடைதல்.

பதவியது-சாதுவானது,மிருதுவானது

பதவியல் - பதப்புணர்ச்சியிலக்கணம்.

பதவியன் - சாதுவானவன்.

பதவு - ட ல், மெத்தனவு.

பதவுரை - சொற்றோறு முரைக்கும் பொருள்.

பதவை - வழி.

பதறல், பதறுதல் - தளம்புதல், நிடுக்கிடல், நடுங்கல், விரைதல்.
பதறை - வெங்தோன்றி.
பதற்றம் - பதறுதல்.
பதனகேந்திரம் - அக்கசன்னம், உதயத்திலிருந்து நாலாம் ஏழாம் பத்தாமிடம்.
பதனம் - இறக்கம், இறக்குதல், களைதல், தாழ்தல், பத்திரம், பாவம், பேணல், போதல், வியோமாட்சரேகை, விழுதல்.
பதனழிதல் - ஊழ்த்தல்.
பதனழிவு - ஊழ்ப்பு.
பதனி - பதநீர்.
பதனிடுதல் - பதமையாக்கல், மிருதுவாக்கல்.
பதன் - பக்குவம், பதம்.
பதன்படுதல் - பக்குவமாதல், பதமையாதல், பாகமாதல்.
பதாகன் - அரசன், பதாகையுடையோன்
பதாகினி - படை.
பதாகை - அடையாளம், அதிட்டம், கூத்தினோர்விகற்பம், விருதக்கொடி.
பதாசனம் - பாதபடி.
பதாசி - பதாதி.
பதாதி - அமைதியின்மை, எதுமற்றவன், காலாள், சேனைத்தொகை பத்தினென்று அது ஒரு தேரும் ஒரு யானையும் மூன்று பரியும் ஐந்து காலாளுங்கொண்டது.
பதாயுதம் - கோழி.
பதாரம் - காலிற்றுகள், தெப்பம்.
பதார்த்தகுணசிந்தாமணி - ஒருவைத்தியநூல்.
பதார்த்தசாரம் - வைத்திய சாத்திரத்துளொன்று, அது பதார்த்தங்களின் குணத்தைச் சொல்வது.
பதார்த்தசிந்தாமணி - பதார்த்தசாரநூல்.
பதார்த்தம் - கறி, பதப்பொருள், பாக்கியம், பொருள், போசனவஸ்து.
பதி - அரசன், இடம், ஊர், எப்பொருட்குமிறைவன், ஒளி, கடவுள், குதிரை, குரு, கொழுநன், சிவபிரான், தலைவன், பட்டினம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, பூமி, மருதநிலத்தூர், மூத்தோன், வீடு, வேர்.
பதிகசந்ததி - வழிச்செல்வோர்கூட்டம்.
பதிகம் - பத்துச்செய்யுளான் முற்றுப்பெறுமோர்பிரபந்தம், பாசி, பாயிரம்.
பதிகன் - காலாள், வழிச்செல்வோன்.
பதிகி - வழிச்செல்வோன்.
பதிக்கினி - புருஷனைக்கொல்லி.
பதிசத்திசாலம் - சிவசத்திமாயை.
பதிச்சாத்திரம் - பதிநூல்.
பதிசேவை - புருஷனுக்குக்கீழ்ப்படிதல்.
பதிச்சம் - வாலுளுவை.
பதிஞானம் - தேவவறிவு, அறவி.
பதிதபாவனன் - பதிதர்களின் பாதித்தியத்தைப் பரிகரிக்கிறவன்.
பதிதம் - கூத்தினோர்விகற்பம், தவறு, வருணச்சிரமந்தவறுகை.
பதிதல் - அழுந்துதல், ஊன்றல், எழுத்துப்பதிதல், ஒடுங்குதல், கீழ்ப்படிதல், தங்குதல், தாழ்தல், பணிதல், பள்ளமாதல்.
பதிதன் - குல சமய முதலிய வொழுக்கத்திற் றவறினோன்.
பதித்தல் - அழுத்தல், எழுதல், தரித்தல், தாழ்த்தல், பள்ளமாக்கல், புதைத்தல், வைத்தல்.
பதித்திரி - உலைத்துருத்தி.
பதிநிச்சயம், பதிநிண்ணயம், பதிநிதானம், பதிநியமம் - கடவுளது தன்மைமுதலியன அறிதல்.
பதிநூல் - கடவுளது தன்மையை விளக்குநூல்.
பதிபடை - ஒளித்திருக்கும் படை.
பதிபக்தி - நாயகவிசுவாசம்.
பதிப்பிராஞ்ஞன் - வழியறிந்தவன்.
பதிப்பிராணை - பத்தினி.
பதிப்பு - பதித்தல்.
பதிமினுக்கி - விளக்குமாறு.
பதிமை - பிரதிமை.
பதிம்பரை - சுவயம்பரை.
பதியம் - பதிக்கப்பட்டநாற்று, பத்துச்செய்யுளான்முடியும்பிரபந்தம், பாசி, பாசிப்பூடு.
பதிபோதம் - இறைஞானம்.
பதிரன் - செவிடன்.
பதில் - வதில்.
பதிவத்தினி - மங்கலை.
பதிவாகன் - சுமைகாரன்.
பதிவிடை - ஒளித்திருக்குமிடம்.
பதிவிரதம் - கற்புத்தவறாமை.
பதிவிரதாதருமம் - கற்புநெறி.

பதிவிரதாபத்தினி - பதிவிரதை.

பதிவிரதாபுண்ணியம்
பதிவிரதாவிரதம் } கற்புநெறி.

பதிவிரதி
பதிவிரதை } கற்புடையாள்.

பதிவிருத்தல்-ஒளியில்மறைந்திருத்தல்.

பதிவு - குனிவு, சாய்வு, பதிதல்.

பதிவைத்தல் - நாற்றுப்பதித்தல், வேர்வைத்தல்.

பதிற்றந்தாதி - ஒரு பிரபந்தம் அது பத்து வெண்பாவும் பத்துக் கலித்துறையுந்தோன்ற அந்தாதித்துப்பாடுவது.

பதிற்றுப்பத்தந்தாதி- நூறுசெய்யுள்கொண்ட ஒருபிரபந்தம் அதில் ஒவ்வொருபத்தும் அந்தாதித்துப் பாடியது.

பதிற்றுப்பத்து-நூறு.கடைச்சங்கப்புலவரியற்றிய எட்டுத்தொகையுள்நான்காவது. இந்நூல் சேரர் புகழையெடுத்துக் கூறுவது.

பதிற்றொன்பான் - தொண்ணூறு.

பதினாயிரம் - ஒரெண், பத்தாயிரம்.

பதினாலுலோகம்-கீழேழுலகுமேலேழுலகு, அவை, அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம். இவை ஏழுங்கீழுலகு, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோகம், இவையேழும், மேலுலகு.

பதினாறுகோணம் - எட்டுத்திசையுமதினுள்ளந்தரான மெட்டும்.

பதினெண்கணம்-பதினென் கூட்டம், அவர் அசுரர், அந்தரர், அமரர், ஆகாயவாசிகள், இயக்கர், உரகர், கருடர், கந்தருவர், கிம்புருடர், கின்னரர், சித்தர், திருதர், பூதர், பைசாசர், போகபூமியர், முனிவர் விஞ்சையர், வித்தியாதரர்.

பதினெண்குடிமை - ஓடாவி, கன்னார், குயவர், கொல்லர், கோவியர், சிவியார், தச்சர், தட்டார், நாவிதர், பள்ளர், பாணர், மாலைக்காரர், மூவாணியர், வண்ணார், வலையர், வெட்டியான்.

பதினெண்ணுப்புராணம் - பதினெண் புராணத்து மெடுத்து ஆக்கியோர் பெயராய்வழங்குஞ்சார்புநூல், அவை ஆங்கிரம், உசனம், கபிலம், காளி, சனற்குமாரம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், துருவாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், பார்க்கவம், மாரீசம், மானவம், வாசிட்டலிங்கம், வாருணம்.

பதினெண்பாடை - பதினெண்தேசத்தார்க்குரிய பாஷை, அவை அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பதினெண்புராணம் - சிவபுராணம்பத்தும் விட்டுணுபுராணநான்கும் பிரமபுராண மிரண்டும் அக்கினிபுராணமொன்றும் சூரியபுராணமொன்றுமாம். இவைமுறையேஇலிங்கம்காந்தம், கூர்மம், சைவம், பிரமாண்டம், பெடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்.

பதினோராடல்-புறக்கூத்திற் குரியவற்றன் ஒன்று.

பதுகரை - பழமுண்ணிப்பாலை.

பதுக்கம் - ஒளிப்பு, கபடம், பதுங்குந்தன்மை.

பதுக்காயன் - குள்ளன்.

பதுக்காய் - உள்ளான்குருவி, கூழை, வளர்ச்சியற்றது.

பதுக்குதல் - மறைத்தல்.

பதுக்கை - சிறுதிட்டை, சிறுதூறு, பாறை.

பதுங்கலன் - பதுங்கி.

பதுங்கல் - ஒளித்தல்.

பதுங்கி - பின்னிற்பவன்.

பதுங்குதல் பதுங்கல்.

பதுமகருப்பன் - பிரமன், விட்டுணு.

பதுமகேசரம் - புன்னைமரம்.

பதுமகோசரம் - நாட்டியத்தில் ஐந்து விரல்களும் மேனோக்க விற்போல் வளைத்துக்காட்டல்.

பதுமகோமளை - சூரபத்மன்மனைவி. இவளிடத்திற் பிறந்த புத்திரன் பானுகோபன்.

பதுமசாரிணி - ஒரு தாமரை.

பதுமதந்து - தாமரைநாளம்.

பதுமநாபன் } விட்டுணு.
பதுமநாபி }
பதுமகானம் - தாமரைக்கொடி.
பதுமநிதி - தாமரையுருவாய்க்கிடக்கும் பொன் அது இந்திரனிருவகை நிதிகளிலொன்று, குபேரனவநிதிகளிலுமொன்று.
பதுமபத்திரம் - தாமரையிலை.
பதுமபந்து - சூரியன், தேனீ.
பதுமபந்தம்-ஓரலங்காரம், ஒருசித்திரக் [கவி
பதுமபர்ணம் - தாமரையிலை.
பதுமபாணி - சூரியன்,பிரமன்,புத்தன்.
பதுமபுராணம் - பாத்தும புராணம்.
பதுமம் - ஈயம், ஒருகுளிகை, கோடாகோடி, சோதிநாள். தாமரை பதினெண்புராணத்தொன்று, பதுமாசனம், முடியுறுப்பைந்தி லொன்று, யானைத்துதிக்கைப் பொறி.
பதுமமணி - தாமரைக்கொட்டை.
பதுமயோனி - பிரமன்.
பதுமராகம்-செம்பு,நவமணியிலொன்று
பதுமரேகை- கையிரேகையிலொன்று.
பதுமரோகம்- கண்ரெப்பைக்குள் சிகப்புசதை வளர்ச்சி.
பதுமலாஞ்சனன் - அரசன்,குபேரன், சூரியன், பிரமன்.
பதுமலாஞ்சனை - இலக்குமி, சரசுவதி.
பதுமவிரோதி - சந்திரன்.
பதுமவீசம் - தாமரைக்கொட்டை.
பதுமனார் - நாலடியாருக்கு உரையெழுதின ஒரு ஆசிரியர்.
பதுமன் - அட்டநாகத்தொன்று, இராமன் ஒரு சக்கிரவர்த்தி, பிரமன்.
பதுமாகரம் - தடாகம்.
பதுமாக்கம் - பதுமவீசம்.
பதுமாசநன் - பிரமன்.
பதுமாசனை - திருமகள்.
பதுமாசனம் - அட்டாங்கயோகாசனத்தொன்று அது இருதொடைமேலுமிரண்டுள்ளங் காலையு மாறித்தோன்றவைத்திருத்தல்.
பதுமாதனம் - பதுமாசனம்.
பதுமாந்தரம் - தாமரையிதழ்.
பதுமாப்தன் - சூரியன்.
பதுமார்க்கம் - கவிழ்தும்பை.
பதுமாலயை - இலக்குமி, சரச்சுவதி.
பதுமாவதி-ஒருநதி, ஒருமுனி பத்தினி.
பதுமினி - கூத்திலோற்விகற்பம், நால்வகைப் பெண்களிலொருத்தி.
பதுமினிகாந்தன் - சூரியன்.
பதுமுகம் - ஓரிருக்கை.
பதுமை - இலக்குமி, ஓரிதழ்த்தாமரை, காளி, பதிமை.
பதுமைகதை - பதிமைகதை, பாவையின்கதை.
பதுமோத்பவன் - பிரமன்.
பதைத்தல் - பதைப்பு.
பதைபதைத்தல் } மிகப்பதைத்தல்.
பதைபதைப்பு }
பதைப்பு - இரக்கம்,தகளிப்பு,பதறுதல்.
பதோதகம் - சதக்கல், பாதப்பிரட்சாளனநீர், வழிக்கரையிற்றண்ணீர்.
பத்தகணம் - பத்தர் கூட்டம்
பத்தகாரன் - சமையற்காரன்.
பத்தகேசரி - கருப்பூரம்.
பத்தங்கம் - செஞ்சந்தனம்.
பத்தசந்தம் - போசனப்பிரியம்.
பத்தசனம் - தொண்டர்.
பத்தசாரம் - காடிச்சலம்.
பத்தசை - அமுதம்.
பத்தநி - ஒழுங்கு, கிரியைகளை விதிக்கிறநூல், சொற்பயன், வழி.
பத்தபராதீநன் - கடவுள்.
பத்தம் - உணு, உண்மை, கட்டு, நன்றியறிகை.
பத்தராடிப்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வார்.
பத்தரூபி - கருப்பூரம். [கர்.
பத்தர் - தட்டார்,தேவதொண்டர்,வத்த
பத்தல் - ஒருபாத்திரம், நீரிறைக்குஞ்சால், யாழிலோருறுப்பு.
பத்தவத்தலவன் - கடவுள்.
பத்தரு - மொசுமொசுக்கை.
பத்தனம் - பட்டணம்.
பத்தன் - அன்புடையோன்,தட்டான், தொண்டன்.
பத்தா - கணவன்.
பத்தாசு } மஞ்சி.
பத்தாயம் }
பத்தி - அடைப்பு,அன்பு,ஒழுக்கம், ஒழுங்கு, தாணிடை, வெளி, தொண்டு, நடை, நம்பிக்கை, நிரை, பங்கு, பதாதி, பாத்தி, முறைமை, வரிசை, வழிபாடு, விசுவாசம், வீட்டிறப்பு.

பத்திகாண்டிகர் - மூவகைப்பக்குவரில் ஒருவர் அவர் நேசப்பெருக்க முடையோர்.
பத்திசாரர் - திருமழிசையாழ்வார்.
பத்திசூலம் - ஒருநோய்.
பத்திச்சுவாலகர்-கடவுளைப்பற்றிய பத்தியிற் சுவாலிப்போர்.
பத்திநெறி - பக்திமார்க்கம்.
பத்திபங்காரம் - ஆற்றநீர்ப்பாய்ச்சல்.
பத்திபாய்தல் - கதிர்வீசல், பிரதிவிம்பித்தல்.
பத்திமார்க்கம் - பத்திநடை.
பத்திமான் - பத்தியுடையோன்.
பத்திமை - அன்புடைமை, ஒழுக்கமுடைமை, தேவபத்தியுடைமை.
பத்தியம் - ஆரியம்தெலுங்குஇவற்றின் பிரபந்தம், இணக்கம், இதம், கடு, தமிழ், பாடல், போசனம், மருந்திற்கிசைந்த, புசிப்பு.
பத்தியகாரி - சிறுகீரை.
பத்தியம் - பத்தர்.
பத்திரகம் - இலை, இறகு, சந்தனம், பூசுதல்.
பத்மாவதி - விந்தியத்துக்குச் சமீபத்துள்ள ஒருநகரம். ஓரிராச குமாரிக்கும் பெயர்.
பத்திரகாகலம் } புள் சிறகடித் தெ
பத்திரகாகலை } ழுமொலி.
பத்திரகாளி - பார்வதிஅமிசமாகியஒரு தேவி.
பத்திரகிரி - ஒரு விஷ்ணுஸ்தலம்.
பத்திரகிரியார் - பட்டணத்தடிகள்பால் ஞானோபதேசம் பெற்ற ஒருதுறவி இவர் பாடிய புலம்பல் ஞானமிர்தம் பொழிந்து எவர் மனத்தையு முருக்குமியல்பினது. இவர்ஒருஅரசர், பட்டினத்டிகளது உபதேசத்தாலே அரசுதுறந்து ஞானமுடிசூடினவர்.
பத்திரகும்பம் - முடிசூட்டுக்குச் சலம்பூரித்த கும்பம்.
பத்திராங்கம் - செஞ்சந்தனம்.
பத்திரசிரயம் - சந்தனம்.
பத்திரசிரேட்டம் - வில்வம்.
பத்திரசுரம் - கட்டாரி.
பத்திரசூசி - முள்.
பத்திரசேனன மகிழ்மந்தன் புத்திரன்.
பத்திரதன் - சம்பன்பௌத்திரன்,பிருகத் கர்ணன் தந்தை.

பத்திரதாரகம் - சட்டவாள்.
பத்திதாருகம் - தேவதாரம்.
பத்திரதாலி - சாதிமல்லிகை.
பத்திரநாடிகை - இலைநரம்பு.
பத்திரபதி - சிற்றுமுட்டி.
பத்திரபாசு - அரம்.
பத்திரபலநம் - பலராமன்.
பத்திரபாணி - பூசிணி.
பத்திரபதை-இரேபதி, உத்திரட்டாதி.
பத்திரம் - அதிட்டம், அம்பிறகு,அம்பு, அழகு, இரும்பு, இலை, இறகு,உடைவாள், உறுதிப்பத்திரம், எருது,குறிச்சி, குற்றவாள், சந்தோஷம், செல்வம், திரட்சி, திருமுகம், நன்மை, மடை, பத்திரவாகரணம், புத்தகத்தினொற்றை, பூவிதழ், பேணம், பொன், மலை, முடியுறப்பு, மெல்லிய தகடு, வாகனம்.
பத்திரயௌவனம் - தளிர்.
பத்திரரதம் - பட்சி.
பத்திரரேணு - ஐராவதம்.
பத்திரலதை - பெரிய பட்டாக்கத்தி.
பத்திரவம் - பத்திரவாகரணம்.
பத்திரவாகம் - அம்பு, பட்சி.
பத்திரவாகரணம் - விட்டிக்கரணம்.
பத்திரவாகன் - சீட்டோலை கொண்டு போவோன்.
பத்திரவாகு-வசுதேவன் புத்திரன்,சுபத்திரன் சகோதரன்.
பத்திரவீரியகம் - கோணூமூங்கில், பிரப்பஞ்செடி.
பத்திரன் - சிவபிரான், வீரபத்திரன், வசுதேவன் புத்திரன், சுபத்திரன், சகோதரன்.
பத்திராகரணம் - சௌளஞ்செய்தல்.
பத்திராக்கியம் - தாளிசபத்திரி. [ம்.
பத்திராங்கம் - ஊமத்தை, செஞ்சந்தன
பத்திராசலம் - ஒரு விஷ்ணுஸ்தலம்.
பத்திராசனம் - அட்டாங்கயோகத்தோராசனம், அதுபீசத்தின்கீழ்ச்சிவனியிடத் திருகாற்பாட்டையும் வைத்தல் விருபதத்தையு மிருகையா விறுகப்பிடித் தசையா திருத்தல். இராசாசனம்.
பத்திராசனர் - வானோர் நவகணத்தொருவர், அவர் கடவுளாதனத்தைப் புகழ்ந்துறைவோர்.
பத்திராசிரயம் - சந்தனம்.

பத்திராசவம் - நவகண்டத்தொன்று.
பத்திராஞ்சனம் - மை.
பத்திராட்சம் - ஒருகொட்டை, வீரபத்திரமணி.
பத்திராதனம் - பத்திராசனம்.
பத்திராத்தியம் - திப்பிலிமூலம்.
பத்திராத்துமசம் - வாள்.
பத்திராவதி - அஸ்தினபுரத்துக்கு ஐந்துகாதத்திலுள்ள ஒரு நகரம்.
பத்திரி - அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.
பத்திரிகை - இலை, ஒற்றை, ஓலையுறுதி, திருமுகம்.
பத்திரை - அவுரி, இரண்டாம் ஏழாம் பன்னிரண்டாந்திதி, கங்கை, காளி, சிரிபுரண்டான்பூடு, நற்பசு, மஞ்சள், துர்க்காதேவி, வசுதேவன்பாரி, கிருஷ்ணன் பாரிகளுளொருத்தி கேகயன் மகள்.
பத்திரைகேள்வன் - வீரபத்திரன்.
பத்திரோதகம் - இலையினீர்.
பத்திரோர்ணம் - வெண்பட்டு.
பத்திரோல்லாசம் - இலைத்தளிர்.
பத்திவான் - பத்தன்.
பத்திவிசுவாசம் - உறுதியானநம்பிக்கை.
பத்திவைராக்கியம் - தெய்வபத்தியிற் பிடிவாதம்.
பத்தினி - இல்லாள், கற்புடையாள்.
பத்தினிக்கடவுள் - கண்ணகி, இவளுக்கு இப்பெயர் கோவலனோடு சுவர்க்கஞ் சென்றபின்பு வந்தது.
பத்தினித்தனம் - கற்புநெறி.
பத்தினிப்பிள்ளை - குடிப்பிள்ளை.
பத்து - ஒரெண், தேவபத்தி, பாதம்.
பத்துக்காலோன் - நண்டு.
பத்தூரம் - பொன்னூங்காணி.
பத்தை - வகிர்.
பஸ்மம் - பற்பம், பர்மம், விபூதி.
பந்தகம் - கட்டு.
பந்தகி - பெண்யானை.
பந்தடித்தல் - பந்தெறிதல்.
பந்ததந்திரம் - சதுரங்கம், வியபிசாரி
பந்ததயிலம் - பந்தமெரித்திறக்கு நெ ண்ணெய்.
பந்தம்-அழுகு,உண்டை, உறவு,ஏ பாடு, கட்டு, கவிழ, கைவிளக்கு,தளை, இது யாப்புறப்பெட்டினென்று, திரட்சி, தீக்கொளுத்தும் பந்து, தொடர்பெருந்திருத்தி, மதில், மயிர்முடி, முடிச்சு, முறை, விலங்கு.
பந்தயங்கட்டுதல் - ஒட்டம் வைத்தல்.
பந்தயச்சீட்டு - ஒட்டம் யார்க்குடையதென வெழுதிப்போடுஞ் சீட்டு.
பந்தயமொட்டுதல் - பந்தயம் பிடித்தல்.
பந்தயம் - ஒட்டம்.
பந்தயித்துவம் - கட்டல்.
பந்தரம் - காண்டகபாஷாணம்.
பந்தரி - பிடாலவணம்.
பந்தர் - ஒருபட்டினம், பந்தல், பாசத்துக்குள்ளானவர்கள், நிழல்.
பந்தல் - ஒடுஞ்சாலை, பந்தர்.
பந்தவரிசை - ஒரு விளையாட்டு, குதிரைப் பற்பாஷாணம்.
பந்தவிளக்கு - திவத்தி பந்தாய்த் திரட்டிக்கொளுத்தும் விளக்கு.
பந்தற்பாடன் - முகடுபதிந்து தாழ்வாரமுயர்ந்தது.
பந்தற்பாடு - சாய்ப்பு.
பந்தர்பூ - உதிர்ந்த இருப்பைப்பூ.
பந்தனம் - அரைஞாண்,கட்டல்,கவிற, காவல்செய்தல்.
பந்தனலயம் - சிறைச்சாலை.
பந்தனை - கட்டு, கிருணயம்,பந்தித்தல், மகன்.
பந்தன் - ஒருவாணிகன் இவன்பேரில் ஔவை பந்தனந்தாதி எனும் நூல் பாடினள், சிர்பந்தபாஷாணம்.
பந்தன் } திரணவிந்துதந்தை புதன்
வந்தன் } எனவும் படுவன். இவன் மனுவமிசத்தோன்.
பந்தி - ஒழுங்கு,ஒருபண், கீர்த்தி, குதிரை யானை முதலிய நிற்குஞ்சாலை, கூட்டம், சபை,பந்தியென்னேவல்.
பந்தித்தல் - கட்டுதல்.
பந்தித்திரம் - கேயம்.
பந்திபோசனம்-பலரையுஞ் சோவைத்துப் புசித்தல்.
பந்திப்பாய் மிகவொடுங்கி நீண்டபாய்.
பந்திருபாவனன் - சங்கைமான்.
பந்திலம் - அசைவு, சுபம்.
பந்திவஞ்சனை - பந்தி பரிமாறுதலில் வஞ்சித்தல்.
பந்தினம் - பந்துசனம்.

பந்து உறவு,எறியும் பந்து சகோதரன் சினேகிதன், திரட்சி, திரிகை, தாராவோசனை, மட்டத்தருத்தி.
பந்துக்கட்டு - கட்டுக்கதை, பலவாயு மொன்றாய்ச் சேர்த்துக்கொள்ளல், போலி வெளிவராது மறைத்தல்.
பந்துசனம் - வமிசம்.
பந்துத்துவம் - இனச்சேர்வு.
பந்தூரம் - அழகு.
பந்துரை - வேசி.
பந்துவராளி - ஒருராகம்.
பந்தூரம் - தொளை.
பந்தையம் - பந்தயம்.
பபதி - சந்திரன்.
பபீதி - ஏகபாத்திரபானம்.
பப்பரப்புளி - தொதி, பெருக்கமரம்.
பப்பரம் - ஒருபாடை, தேயமைம்பத்தாறினொன்று, பதினெண் பாடையினொன்று, பருப்பம்.
பப்பரர் - பப்பரதேசத்தார்.
பப்பரவன் - பருத்தது.
பப்பரவாகனன் } அருச்சுனனுக்குச் சித்திராங்கதையி
பப்பருவாகனன் } டத்திற் பிறந்தபிள்ளை.
பப்பளி - ஒருமரம்.
பப்பளிச்சேலை - ஒருவகை வன்னச் [சேலை.
பப்பாதி - பாதிபாதி.
பப்பாளி - பப்பளி.
பப்பிரு - விதர்ப்பன் பௌத்திரன், சாத்துவதன் பௌத்திரன், நிருஹியன் புத்திரன்.
பப்பிருவாகனன் - அருச்சுனன் மகன் இவன்தாய் மணலூர். இராஜாவாகிய சித்திரவாகனன் மகளாகிய சித்திராங்கதை. தருமன் அசுவமேதஞ் செய்தபோது அசுவத்தைத்தடுத்த பப்பிருவாகனனோடு அருச்சுனன் யுத்தஞ் செய்திறக்க, நாக கன்னிகை யாகிய உலூபி அருச்சுனனை மீளவும், உயிர் பெறும்படி எழுப்பிக் காத்தாள்.
பப்பு - ஒப்பு, பரப்பு.
பப்புவர் - புகழ்வோர்.
பமரம் - பேரொலி, வண்டு.
பம் - கிரகம், விண்மீன்.
பம்பம் - நிராய், புகை.
பம்பரத்தி - ஆடுமோலை, காமாதுரமுள்ளவள்.

பம்பரமாட்டுதல் - அலைக்கழித்தல், பம்பரஞ் சுழற்றுதல்.
பம்பரம் - ஒரு விளையாட்டுக்கருவி, மந்தரகிரி, வேசி.
பம்பரை - ஒருபலா.
பம்பல் - ஆரவாரம்,பம்புதல், மிகுதிவலி.
பம்பளபளோ - இளமைக்குறிப்புமொழி
பம்பா - தக்ஷணத்தில் ஒருநதி.
பிம்பிகை - பீர்க்கு.
பம்புதல் - ஆரவாரித்தல் எழுச்சி,நெருங்கல், பரவல், பொலிதல்.
பம்பை - ஒருவாச்சியம், சுருண்டமயிர், பம்பாநதி, முல்லைநிலப்பறை. கிஷ்கிந்தைக்குச் சமீபத்திலுள்ள ஒருவாவி.
பம்மல் - செம்முதல், பொருந்திக்கட்டுகை, மந்தாரம், மந்திப்பு, மூடுதல்.
பம்மாத்து - வெருட்டு, வெளிவேடம்.
பம்முதல் - பம்பல்.
பம்மை - சித்திரப்பாவை.
பயங்கரம் - அச்சம்.
பயசம் } நீர், பால்.
பயசு }
பயசுபம் - பூனை.
பயணங்கட்டுதல் - பிரயாணத்துக்காயத்தம்பண்ணல்.
பயணம் - பிரயாணம்.
பயணவிரோதி - பூனை.
பயதம் - வண்டு.
பயத்தல் - உண்டாதல், கொடுத்தல், சிந்தித்தல், பிரப்பித்தல்.
பயந்தாள் - தாய், பெற்றவள்.
பயந்தான் } பிதா.
பயந்தோன் }
பயபத்தி - ஒடுக்க வணக்கம்.
பயப்படல் - அஞ்சல்.
பயப்பாடு - அச்சம்.
பயப்பு - கிருபை, தேமல்,நிறம்,பசப்பு.
பயம் - அச்சம், அது சுபாவகுண மொன்பதினொன்று, அமிர்தம், குளம், சுதை, நீர், பயன், பால், பிரமா, மையயாக்கை, பதினெண் குற்றத்தொன்று. மன்னர் விளைச்சி.
பயம்பு - பள்ளம், யானைபடுகுழி.
பயரை - ஒருமரம்.
பயல் - சரிபாதி, பள்ளம், பையல்.
பயளி - பசளி.

பயளை - பசளை.
பயறி - ஒரு குரு நோய்.
பயறு - ஒருதானியம், சித்திரைநாள்.
பயற்றங்காய் - ஒருகாய்.
பயற்றம்மை - ஒருவித வைசூரிநோய்.
பயனில சொல்லல் - பிரயோசனமில்லாத பேச்சுப்பேசல், இதுவாக்கின் தீக்குண நான்கினொன்று.
பயனிலான் - வேசி.
பயனிலி - வீணன்.
பயனிலை - பயன்முடிவு.
பயனின்மை - பயன்படாமை.
பயனுரைத்தல் - உரைசொல்லல்.
பயனுவமம் - பிரயோசனத்தையேயுவமையாய்ச் சொல்லுவது (உ-ம்) மாரிவண்கை.
பயன் - அகலம், சொல்லுரை, நீர், பலன், பால்.
பயன்சொல்லுதல் - வியர்த்தி பண்ணல்.
பயன்படச்சொல்லல் - பிரயோசனந்தரச்சொல்லல், அதுவாக்கினற்குணநான்கினொன்று.
பயன்படுசொல் - பிரயோசனந் தருஞ்சொல்.
பயன்படுதல் - பிரயோசனமாதல்.
பயன்முடிவு } பொருளின் முடிவு.
பயன்முற்று } பொருளின் முடிவு.
பயாபகன் - அரசன்.
பயாப்தி - பாற்கடல்.
பயாப்திசயநன் } விட்டுணு.
பயாப்திசாயி } விட்டுணு.
பயாபிலாஷி - பூனை.
பயானகம் - அச்சம், இராகு, புலி.
பயிக்கம் - பிச்சை.
பயித்தியம் - பைத்தியம், மதிகேடு, மிண்டித்தனம்.
பயிந்தரி - ஏகம்பபாஷாணம்.
பயிரங்கம் - அறிக்கைப்பத்திரம்.
பயிரவி - முடக்கொத்தான்.
பயிரி - ஒருநோய், ஒருவசூரி.
பயிருகம் - பழம்பாசி.
பயிரேறுதல் - பயிர்ப்படல்.
பயிர் - இடும்பயிர், ஒலி, பயில், பறவைக்குரல், புல், விலங்கொலி.
பயிர்த்தல் - ஒலித்தல்.
பயிர்ப்பங்கு - செய்கைப்பங்கு.
பயிர்ப்பு - அசுத்தம், குற்சிதம் இது மகடூஉக்குண நான்கினொன்று.
பயிலல்-சொல்லுதல் பிடித்தல்,பழகல்.
பயிலியம் - குப்பைமேனி.
பயிலுதல் - பயிலல்.
பயில் - சைகை, சொல், பயிலென்னேவல், பழக்கம், பாதி.
பயில்விடுதல் - பயில்காட்டுதல்.
பயில்வு - செய்கை, பயிற்சி.
பயிறல் - ஒலித்தல், கூடுதல், சொல்லுதல்,பயிலுதல்,பேசலாமெலுமொலி.
பயிற்சி - பழக்கம்.
பயிற்பேச்சு - யூகப்பேச்சு.
பயிற்றுதல் - படிப்பித்தல், பழக்குதல்.
பயினி - இணக்கம், ஒருமரம்.
பயின் - உட்படுகுருத்து, பிசின்.
பயோகடம் - தீவு.
பயோகனம் - ஆலாங்கட்டி.
பயோதகம் - சமுத்திரம்,நீர்ப்பிரிவு,முகில்.
பயோததி - சமுத்திரம்,பாற்கடல்.
பயோதம் - முகில்.
பயோதரப்பத்து - ஒருபிரபந்தம் அது முலையினைப் பத்துசெய்யுளாற் கூறுவது.
பயோதரம்- கடல், கரும்பு, பால், முலை, மேகம்.
பயோததி - பாற்கடல்.
பயோதி - கடல்.
பயோதிகம் - கடலுரை.
பயோநிதி - சமுத்திரம்.
பயோவிரதம் - ஒருமாதவரைபசுக்கோட்டத்துறைந்து பால்மாத்திர முண்டுசெய்யுமோர் விரதம்.
பயோஷ்ணி - விதர்ப்பதேசத்தில் பிரவாகமாகி வரதநதியிற் கலப்பதாகிய ஒருநதி.
பய்யன் - பையன்.
பரசுதி - முத்தி
பரகளத்திரம் - பிறர்மனையாள்.
பரகளத்திராவிகமனம் விபசாரம் பண்ணுதல்.
பரகாயப்பிரவேசம் - கூடுவிட்டுக் கூடுபாய்தல் அது கலைஞான மறுபத்துநான்கினொன்று.
பரகாயம் - பிறசரீரம்.
பரகாரியம் - பிறகாரியம்.
பரகாலன் - திருமங்கையாழ்வார்.

பரகிதம் - நுட்பமாகக்கணிக்கப்பட்டது, பிறர்க்கு நன்மையானது.
பரகீயம் - பிறர்க்குரியது.
பரகுடிலம் - பிரணவம்.
பரக்கம் - பரத்தல்.
பரக்கருணையம்மை - திருப்புனவாயிலிலே கோயில்கொண்டிருக்குந் தேவியார்பெயர்.
பரங்கி - இலவங்கம்.
பரங்கிரிநாயகர் - திருப்பரங்குன்றத்திலே கோயில்கொண்டிருக்குஞ் சுவாமிபெயர்.
பரசஞ்சகம் - ஆன்மா.
பரசதம் - பலநூறு.
பரசமயகோளரி - திருஞான சம்பந்த மூர்த்திகள்.
பரசமயம் - பிறசமயம்.
பரசமயி - பிறசமயி.
பரசம் - ஓரிரத்தினம்.
பரசாதி - அன்னியசாதி.
பரசிராமன் - மழுவுடையிராமன் இவன் சமதக்கினியுமிரேணுகையுந் தந்தை தாயாகத் திருமாலவதரித்தது.
பரசிவம் } கடவுள்.
பரசிவன் }
பரசு-கோடாலி,பரசென்னேவல்,மழு.
பரசுகம் - மோட்சானுபவம்.
பரசுகரியன் - பரிவேடம்.
பரசுதரன் - கணேசன்,சிவன்,பரசுராமன்.
பரசுதல் - துதித்தல்.
பரசுபாணி சிவபெருமான்,பரசுராமன், விநாயகன்.
பரசுராமன் - திருமாலவதாரத்தி லொன்று.
பரசுராமன் - ஜமதக்கினிக்குரேணுகையிடத்துப் பிறந்த புத்திரன். இவன் விஷ்ணுவினது ஆறுமவதாரம். கார்த்த வீரியார்ச்சுனன் புத்திரர் யாகப் பசுவைநாடிச் சென்றபோது ஜமதக்கினியினுடைய ஆச்சிரமத்தில் அதிற்கக்கண்டு ஜமதக்கினியைக் கொன்று பசுவைக் கவர்ந்துசென்றனர். அச்சமயம் வெளியேபோயிருந்தபரசுராமன் மீண்டுவந்து தந்தைகொல்லப்பட்டதைக் கண்டு, "க்ஷத்திரியரைவேரறுத்து இப்பழிதீர்ப்பேன்" என்று விரதம்பூண்டு க்ஷத்திரியரையெல்லாம் கருவறுத்து அவ்விரதத்தாற் பிதிர்கருமஞ்செய்தான். இவர் உக்கிரதவஞ் செய்து சிவனிடத்து அநேக திவ்வியாஸ்திரங்களைப் பெற்று வில்வித்தையிலே தனக்கிணையில்லா திருந்தான். இவன் சிறுபிள்ளையாயிருந்தபோது தந்தை சொற்படி தாயைக் கூசாது கொன்றவன். இவன் இராமர் காலத்திலே இராமரால் அபஜய மடைந்து மகேந்திரமலைக்குச் சென்று அங்கே இன்றும் சிரஞ்சீவியாகத் தவஞ் செய்கின்றானென்பர்.
பரசுவதம் - பரசு.
பரசுவம் - பிறர்பொருள்.
பரசூதனன் - சிவபிரான், பரசிராமன்.
பரசை - பரிசு.
பரஞ்சோதிமுனிவர் - திருவிளையாடற்புராணஞ் செய்தவர்.
பரஞானம் - பதிஞானம்.
பரஞ்சம் - செக்கு, நுரை, வாணுதி.
பரஞ்சனன் - வருணன்.
பரஞ்சுடர் - சுயம்பிரகாசக்கடவுள்.
பரஞ்சேயன் - பரஞ்சனன்.
பரஞ்சை - காகளமுதலியவற்றின்தொனி.
பரஞ்சோதி - கடவுள், பரஞ்சுடர்.
பரடன் - கூலிக்காரன்.
பரடு - கரடு.
பரட்டை - பறட்டை.
பரணம் - கவசம், சம்பளம், தாங்குதல், பட்டுச்சீலை, பரணி, பாரம்.
பரணர் - இவர் கடைச்சங்கப் புலவர்களுளொருவர். இவருங் கபிலரும் மிகநண்பினர்கள். இவர் கோச்செங்குட்டுவன்மேல் ஒருபிரபந்தம்பாடிப் பரிசிலாக உம்பற்காட்டுவாரி கொண்டவர். இவர் ஒளவையாராலும் தாம் பாடிய "அமரர்ப் பேணியும்" என்னும் பாடலிலே, "சென்றமர் கடந்த நின்னாற்ற றோற்றிய-வன்றும் பாடுநர்க்கரியை யின்றும் பரணன் பாடினன்" என்றெடுத்துச் சுட்டப்பட்டவர். இவர் தெய்வப் புலமையுடையவர்.
பரணி - அடுப்பு,அணிகலச்செப்பு,எரி, ஒருநாள், ஒருபாத்திரம், ஒருபிரபந்தம் அது ஆயிரங்களிற்றைக்கொன்ற வீரனைத் தலைமகனாகக்கொண்டு கட

வுள்வாழ்த்தும்சடைத்திறப்பும்பாலை நிலமுங் காளி கோவிலும் பேய்க ளோடுகாளியுங்காளியோடு பேய்களு ஞ்சொல்லத்தான் சொல்லக்கருதிய தலைவன்சீர்த்திவிளங்கலும்அவன் வ ழியாகப்புறப்பொருட்டோன்ற வெம் போர் வழங்க விரும்பலு மென்றி வையெல்லா மிருசீரடி முச்சீரடி யொழித்தொழிந்த மற்றையடிகளா னீரடிப் பஃறொழிசையாற் பாடுவது, கூத்து, மதகு.

பரணியம் - கூலி, சம்பளம்.

பரண் - இதணம்.

பரண்டை - கணைக்கால்.

பரதகண்டம் - நவகண்டத்தொன்று.

பாரதகண்டம் - பாரத வருஷமானது விதேகம், ரேபதம், மத்தியம், பரத மெனநான்குகண்டங்களையுடையது விதேகம் மேல்பாலிலுள்ளது. ரேப தம் கீழ்பாலிலுள்ளது. மத்தியம் இம யத்துக்கும் விந்தியத்துக்கு மிடை யேயுள்ளது. பரதம்விந்தியத்துக்குத் தெற்கேயுள்ளது. இவை நான்கை யும் நவகண்டமாக்கிக் கூறுவாருமு ளர்.

பரதசாத்திரம் - நடனநூல்.

பரதசேனுபதீயம் - ஆதிவாயிலார்செய் த நாடகத் தமிழ்நூல்.

பரதநாட்டியசபை - கூத்துக்களரி.

பரதநூல் - பரதசாத்திரம்.

பரதந்திரம் - சுதந்திரமின்மை.

பரதந்திரன் - சுதந்திரமற்றவன்.

பரதபித்தல் - பரிதபித்தல்.

பரதமோகனநாட்டியம் - பரதமுறைப் படியாடுங் கூத்து.

பரதமோகினி - நாடகி.

பரதம் - இலட்சம்கோடி, கோடாகோடி, கூத்து, நவகண்டத்தொன்று, பரத நூல்.

பரதம் - ஒரு நாடகத் தமிழ் நூல்.

பரதர் - நெய்தனிலமாக்கள், வைசியர்.

பரதவசந்தன் - ஒருகூத்து.

பரதவருடம் - பரதகண்டம்.

பரதவர் - நெய்தனிலமாக்கள்.

பரதவித்தை - பரதசாத்திரம்.

பரதனம் - பிறர்பொருள்.

பரதன் - ஒருமஹருஷி, சந்திர குலத் தோரரசன், நெய்வான், பரதசாத்தி ரஞ் செய்தோன், தசரதன்புத்திரன் ஸ்ரீராமன் றம்பி இவன் அதிக நற் குணவான். இவன் இராமன் பெற வேண்டிய அரசிபலைத் தனக்குவஞ் சனையாலே தாய் பெற்றுக்கொடுத் தாளென்றறிந்து, அதனை வேண்டா மென்று மறுத்து ராமனுக் குரைக்க, ராமன் தந்தை சொல்லைக் கடக்கலா காதென்று கூறிச் சமாதானஞ்செய் ய, அது கேட்டொருவாறு ஸ்ரீரா மன் வரும் வரைக்கும் அரசியலைக் கைக்கொண்டவன். சகுந்தலை வயிற் றிலே துஷ்யந்தனுக்குப்பிறந்தபுத்தி ரன், இவன் ஆரியதேசம் முழுதை யும் கட்டியாண்டமையால் பாரதவ ருஷப்பெயர்அத்தேசத்திற்காயிற்று இவனுடைய ஒன்பதாஞ்சந்ததிகுரு, குருவினது பதினொன்காஞ் சந்ததி சந்தனு. சந்தனுவுக்கு நான்காஞ்சந் ததிபாண்டவர்.

பரதன்மம் - பரோபகாரம்.

பரதாக்கிரசன் - இராமன்.

பரதாபம் - பரிதாபம்.

பரதாரகமனம் - பிறர்மனைகலத்தல்.

பரதாரகமனன் - பிறன்மனைவிழைவோன்.

பரதாரம் - பிறர்மனை.

பரதாரோபசேவனம் - விபசாரம்.

பரதி - நாடகி.

பரதிரவியம் - பிறர்திரவியம்.

பரதிருதானயோசும் - பிறர்செய்ததீமை யை மறந்து நன்மையை நினைத்தல் அது தயாபவிருத்தி பதினொன்றில் ஒன்று.

பரதிருஷ்டிகோசரம் - வேறொருவன் யறிதல்.

பரதுக்கம் - அயலார் துன்பம்.

பரதூஷணம் - பிறரைத் தூஷணித்தல்.

பரதேசம் - பிறதேசம்.

பரதேசிவாசி - பிறதேசத்தோன்.

பரதேசி - ஒருசாதி, பிரதேசத்தான், யாசகி.

பரதேவதை - கடவுள்.

பரத்தர் - தூர்த்தர்.

பரஸ்தலம் - வேற்றிடம்.

பரத்தல் - பரம்புதல், மிகுதல், விருத்தி யாதல்.

பரத்தன் - பரத்தையை நுகர்பவன்,

பாத்தி-நெய்தனிலப்பெண், பரவப்பெண், பாத்தியென்னேவல்.
பாத்தியானம் - தேவதியானம்.
பாத்திரம் - மறுமை.
பாத்திரவியம் - பிறர்பொருள்.
பாத்திரி } வேசி, வேற்றுப்பெண்.
பாஸ்த்ரி }
பாத்திரிகமனம் } தூர்த்தவியாபாரம்.
பாஸ்த்ரிகமனம் }
பாத்துவம் - கடவுட்டன்மை, யுத்தம், வித்தியாசம்.
பாத்துவாசன்-சரிக்குருவி, சத்தவிருடிகளில் ஒருவன் துரோணசாரியன் றந்தை.
பாத்துவாஜன் - உதத்தியன்புத்திரன். மமதை இவன் தாய். இவன் பிரஹஸ்பதி பிரசாதத்தால் உற்பத்தியானவன்.
பாத்துவாஜி - மாளவதேசத்தில் பிரவகிக்கும் ஒரு நதி.
பாத்தை - ஒருசெடி, வேசி.
பாத்தையருவி - பரந்துவெட்டுமருவி.
பாத்தையிற்பிரிவு - தலைமகன்பரத்தையிடத்துப்பிரிதல், வாயில்வேண்டன் முதலாக வாயினேர்தலீறாகிய நான்குமாம்.
பாஸ்பரம் - பாற்பரம்.
பரநாதம் - ஒருமருந்து.
பாநாமத்திலே - மாவிலிங்கிலே.
பரந்தநீர் - கடல்.
பரந்தவடிவு - தட்டைவடிவு.
பரந்தவட்டம் } சேமக்கலம்.
பரந்தவட்டிகை }
பரந்தவம் - சேர்மானம்.
பரந்தவர் - யாசகர்.
பரந்தாமம் - வைகுந்தம்.
பரந்தாமன் - திருமால்.
பரபட்சம் - பிறர்நிலைசொல்லும்பகுதி, விரோதம்.
பரபதம் - மேன்மை, மோட்சம்.
பரபத்தி - சிவபத்தி.
பரபத்தியம் - சமன்செய்தல், பணங்கொடுக்கல், வாங்கல் பண்ணுதல்.
பரபத்தியம்வாங்கல் - பணங்கடன்வாங்கல்.
பரபரத்தல் - தீவிரப்படல்.
பரபரப்பு - சீக்கிரக்குறிப்பு.
பரபரிணம் - உரிமை, பாரம்பரை.
பரபரெனல் - சீக்கிரக்குறிப்பு.
பரபாகம் - அதிட்டம், சேடம், பிறர் சமைத்தது, மேன்மை.
பரபிண்டம் - பிறர்கையுணவு.
பரபிண்டாதன் - எப்பொழுதும்பிறரன்னம் புசிப்பவன்.
பரபிருதம் - காகம், குயில்.
பரபிருத்தம் - காகம்.
பரபுட்டமகோற்சவம் - மாமரம்.
பரபுட்டம் - குயில்.
பரபுட்டன் - காமதூர்த்தன்.
பரபுட்டை - வேசி.
பரபுருடன் -கள்ளப்புருடன், விட்டுணு.
பரபூமி - பிறதேசம்.
பரபூருவை-முன்கலியாணமுடித்தவள்.
பரபேதகம் - சத்துருவை யழித்தல்.
பரபோகம் - பேரின்பம்.
பரப்பத்தியம் - விசாலம்.
பரப்பல் - பரம்பச்செய்தல், பரவுதல்.
பரப்பிரபௌத்திரன் - அப்பாட்டன்.
பரப்பிரமம் - கடவுள்.
பரப்பு - அகலம், ஒருநிலவளவுப்பிரமாணம், சப்பிரமஞ்சம், படுக்கை, பரப்பென்னேவல்,பரவைக்கடல், மிகுதி விசாலம், வீதி.
பரப்புதல் - பரம்பச்செய்தல்,பரவுதல்.
பரம - சிரேஷ்டமான, திவ்வியமான, பிரதானமான.
பரமகதி - அடைக்கலம், மோட்சம்.
பரமகருத்தன் - கடவுள்.
பரமகாரியம் - தேவகாரியம், மகாகாரியம்.
பரமகுரு - ஆசாரியனுக்கு ஆசாரியன்.
பரமக்கியானம் - பரமஞானம்.
பரமசண்டாளன் - மகாதுரோகி.
பரமசத்துரு - மகாசத்துரு.
பரமசந்தேகம் - மிகுசந்தேகம்.
பரமசந்தோஷம் - மிகுமகிழ்ச்சி.
பரமசமாதி - தியானம்.
பரமசித்தி - முத்தி.
பரமசிவன் - ஸ்ரீகைலாசத்திலேகோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர். மும்மூர்த்திகளையும் படைத்தருளும் தனிமுதற் கடவுள். இக்கருத்து அதர்வசிகையிற் கூறப்பட்டுள்ளது.
பரமசுந்தரி - தருமதேவதை.

பரமண்டலம் - வானுலகம்.
பரமத்திமிரபாநு - ஒரு சைவநூல்.
பரமதம் - கடவுள், பிறசமயம்.
பரமதுஷ்டன் - மிகுதுஷ்டன்.
பரமநாழிகை - முற்றமுள்ள நாழிகை.
பரமநிவர்த்தி - பாசவிமோசனம்.
பரமபதம்-உலகம், மோட்சம், விட்டுணு.
பரமபாகவதசிகாமணி } வைணவ சந்
பரமபாகவதன் } நியாசி.
பரமமூர்த்தி - பரப்பிரமம், விஷ்ணு.
பரமம் - பரப்பிரமம், மகாமேன்மை.
பரமரகசியம் - அந்தரங்கவுண்மை, ஒரு நூல்.
பரமலுத்தன் - மிகுலோபி.
பரமலோகம் - சிவலோகம், மோக்கம்.
பரமலோபி - மிகுலோபி.
பரமவிந்து - வேதம்வாசிப்போர் வாயிலிருந்து தெறிக்குநீர்.
பரமவிராகன் - ஏகாதிபதி.
பரமவியோமம் - பரமாகாசம் மோக்ஷம்.
பரமன் - கடவுள், சிர்பந்தபாஷாணம், சிவபிரான்.
பரமாகாயம் - துவாதசாந்தம், வெறுவெளி.
பரமாங்கனை - சௌந்தரி.
பரமாங்கிசம் - உடதிடதமுப்பத்திரண்டிலொன்று. [ட்பம்.
பரமாணு - அதிசூக்கவணு, ஒருகாலநு
பரமாத்துமன் - கடவுள், சன்னியாசி, பெருமையிற்சிறந்தோன்.
பரமாத்துமா - சுத்தாத்துமா.
பரமாயு - பூரண ஆயு.
பரமார்த்தம் - உண்மை, ஞானார்த்தம், தேவவறிவு, மெய்ம்மை.
பரமாற்புதம் - தேவாற்புதம்.
பரமானந்தம் - பேரின்பம்.
பரமானந்தன் - கடவுள்.
பரமானம் - பரமான்னம்.
பரமானுபவம் - ஆசிபதசோதனை.
பரமான்மா - இதரபதார்த்தாவச்சின்னவான்மா.
பரமான்னம் - சருக்கரையமுது.
பரமுத்தாத்துமா - சாயுச்சியகதியடைந்தோர், பக்குவர்.
பரமுத்தி - சாயுச்சியம், மோக்கம்.
பரமேசன் } கடவுள், சிவன், விட்டுணு.
பரமேசுரன் }
பரமேசுவரன் }
பரமேசுவரி - இலக்குமி, பார்வதி.
பரமேச்சுரன் } பரமேசன்.
பரமேச்சுரவன் }
பரமேச்சுவரி - பரமேசுவரி.
பரமேட்டி - அருகன், கடவுள், சிவபிரான், பிரமன், விட்டுணு.
பரமேஷ்டி - பிரமா, இந்திரத்துய்ம்மன் புத்திரன்.
பரமோட்சம் - பரமுத்தி.
பரமோபகாரம் - பேருதவி.
பரமோபகாரி - பேருதவிசெய்வோன்.
பரமௌஷதம் - மேலானமருந்து.
பரம் - அத்திமரம், உடல், கடவுள், கவசம், குதிரைக்கல்லணை, கேடகம், செயல், தனிமை, பழமை, பாரம், மிகுதி, முற்றத்துறத்தல், முன்பு, மோக்கம்.
பரம்படித்தல் - பலகையடித்தல்.
பரம்பதம் - மோட்சம்.
பரம்பரம் - சுந்தரம், வமிச பாரம்பரை, வமிசம்.
பரம்பரன் - அப்பாட்டன், கடவுள்.
பரம்பராகம் - யாகபசுக்கொலை.
பரம்பராதி - தொன்றுதொட்டுள்ளது, பரவணியானது.
பரம்பரை - சம்பிரதாயம், தொடர்பு, தொன்றுதொட்டது, பரவணி.
பரம்பர் - ஒருசாதியார்.
பரம்பு - கழனிதிருத்தும்பலகை, பரம்பென்னேவல், வரம்பு, விசாலம்.
பரம்புதல் - பெருகுதல், விசாலித்தல்.
பரராசசேகரன் - ஓரரசன்.
பரராஜகுஞ்சரன் - ஆயோதனவீரபாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
பரரூபம் - விகாரப்படுதல்.
பரர் - அன்னியர், பகைவர்.
பரலோககமனம் - மரணம்.
பரலோகக்கிரியை - அபரக்கிரியை.
பரலோகசாதனம் - மோக்கத்துக்குரிய சாதிப்பு.
பரலோகசௌக்கியம்- மோட்சானந்தம்.
பரலோகம் - தேவலோகம், மோக்கம்.
பரலோகவாசி - மோட்சத்தான்.
பரல் - பருக்கைக்கல், விதை.
பரவசஞ்சொல்லுதல் - பிரமாணத்தோடே வாக்குத்தத்தம் பண்ணுதல்.

பரவசம் - தன்வசமற்றிருத்தல், பிரமா ணத்தோடுபெண்ணும்வாக்கு, பிரமை, மிகுகளிப்பு, மூர்ச்சை.
பரவசவிலக்கு - தன்வசமல்லாமற்கூறி விலக்கு மலங்காரம்.
பரவணி - தலைமுறை, வமிசம்.
பரவணிகாரன் - தலைமுறை,தலைமுறை யாயுரித்துக்காரன்.
பரவணிப்பட்டம் - தலைமுறைப்பட்ட வரிசைப்பெயர்.
பரவர் - ஒருசாதியார்,ஒருசெம்படவர், வலைஞர்.
பரவல்-சொல்லுதல்,பரவுதல்,புகழ்தல், வணங்கல்.
பரவான்மா - முற்றத்துறந்த வான்மா, திரும்பாத்துறவி.
பரவிராகம் - முத்தியிலிச்சைக்கொள்ள [ல்.
பரவிருதயம் - குயில்.
பரவிவேகம் - ஞானவறிவு.
பரவுதல்-சொல்லல்,துதித்தல்,பரப்பிச் செப்பம் பண்ணுதல், பரப்புதல், வணங்கல், விரிதல்.
பரவுபகாரம் - பரோபகாரம்.
பரவெளி - பராகாயம், மாயாசூனியம்.
பரவை - இலக்குமிகூத்து, கடல்,சுந்தரர் மனைவி,திடல், நீர்ப்பரப்பு, பிரபலம், வழக்கு.
பரவையமுது - உப்பு.
பரவைவழக்கு - உலகவழக்கு, செய்யுளல்லாவியல்.
பரற்பரம் - பதிலுபகாரம்.
பரற்பரவிரோதம்-ஒன்றுக்கொன்று விரோதம்.
பரன் - கடவுள், சிவன், விஷ்ணு.
பராகண்டம் } அசட்டை, பராமுகம்.
பராகண்டிதம் }
பராகதம் - சருவுதல்.
பராகத்தின்சேவகன் - பன்றி.
பராகமண் - செம்மண்.
பராகம் - ஒருமலை, ஒருவாசனைத்தூள், கிரகணம், கீர்த்தி, சந்தனம்தூளி, பூந்தாது, மகரந்தம், மற்றைநாள், தூள்.
பராகரணம் - இகழ்தல்.
பராகாயம் - பரவெளி.
பராக்கதம் - தைரியம்.
பராக்காட்டுதல் - பராக்குக்காட்டுதல்.
பராக்கிரமசாலி - பலவான், வீரன்.
பராக்கிரமம் - வலி, வீரம்.
பராக்கிரமன் } பலவான், வீரன்.
பராக்கிரமி }
பராக்கிரமவாகுபாண்டியன் - விக்கிரமவாகு பாண்டியனுக்குப்பின் அரசு செய்தவன்.
பராக்கிரமித்தல் - வீரங்காட்டல்.
பராக்கு - அசட்டை,ஒருபிரபந்தம்,நோக்கம், பலதையும் பார்த்தல், பொழுது கழித்தல், விளையாட்டு, வேறுபுலனு யிருத்தல்.
பராக்கதன் - சிவபிரான்.
பராக்கவம் - சமுத்திரம்.
பராங்குசர் - நம்மாழ்வார்.
பராசத்தி - பஞ்சசத்தியிலொன்று அது பிராணன்முதலிய வாயுவாகநிற்பது.
பராசயம் - தோல்வி.
பராசரஸ்மிருதி - ஒருதருமநூல்.
பராசரம் - அட்டாதச வுபபுராணத்தொன்று, தருமநூல், பதினெட்டினுமொன்று.
பராசரன் - வியாசன்றந்தை.
பராசரஸ்மிருதி - கலியுகத்துக்கு ஏற்ற தருமங்களைக்கூறும் தருமசாஸ்திரம், பராசர் செய்தது.
பராசரன்-வசிஷ்டன்பௌத்திரன் சத்திபுத்திரன், வியாசன்றந்தை, சுகன் பாட்டன், இவன் தந்தையாகிய சத்தியை இராக்ஷசன் கொன்றுதின்றுனென்றுணர்ந்து அவனையும் ஏனையஇராக்ஷசர்களையும் கொல்வதற்காக ஒரு யாகஞ்செய்தவன், அதுமுடிந்த பின்னர் இவன்யமுனையைத் தாண்டவேண்டிஒரோடத்தேறிச் செல்லும்போது சத்தியவதியென்னும் பெண் அவ்வோடத்தைத் தனியேதாங்கிச்செல்லக்கண்டுஅவளைப்புணர்ந்து வியாசரைப்பெற்ருன், இவன் அவள்மீது இயல்பாக வீசிக்கொண்டிருந்த புலான்மணத்தைமாற்றித் திவ்விய பரிமளம் வீசும்படிசெய்து அவளுக்கு யோசனகந்தியென்னும் பெயரைக் கொடுத்தான்.
பராசரியம்-சிற்பநூல் முப்பத்திரண்டிலொன்று.
பராசனம் - கொலை.

பராசனன் - கொலைசெய்வோன்.
பராசிதம் - சிவபிரான், வைவான்.
பராசியம் - பலரறிந்தது.
பராசுவை - துக்கம், மரணம்.
பராஞ்சம் - ஆயுதவலகு, செக்கு.
பராடம் - வனச்சார்பினிலம்.
பராதாரம் - காகம்.
பராதி - பீராதி.
பராதீனம் - சுதந்திரமற்றது.
பராத்தம் - பரார்த்தம்.
பராந்தகன்-இவன் சாரமுனிவர் சாபத்தால் தன் உறையூர் மண்மாரியாலழியப்பெற்ற சோழன்.
பராந்திரம் - பிறவழி.
பராபத்தியம் - பாரபத்தியம்.
பராபரக்கண்ணி - தாயுமானுற்பாடலில் ஒருபிரிவு.
பராபரம் - கடவுள்,சிவம்,நன்மைதீமை, நடுத்தரம், முன்பின்.
பராபரவஸ்து - கடவுள்.
பராபரன் - பரமேசுவரன்.
பராபரித்தல் - பராமரித்தல்.
பராபரிப்பு - பராமரிப்பு.
பராபரை - பார்ப்பதி.
பராபவ - நாற்பதாவதுவருஷம்.
பராபவம் - அபசாரம், தோல்வி.
பராபூதன் - தோற்றவன்.
பராமரிசம்-தீர்க்கமாக விசாரித்தறிகை.
பராமரிசித்தல்-ஆராய்தல்பகுத்தறிதல்.
பராமரித்தல் - ஆதரித்தல், ஆராய்தல், நடத்தல், பத்திரப்படுத்தல், வளர்த்தல், விசாரித்தல்.
பராமரிப்பு - விசாரிப்பு.
பராமாத்துமியம் - உபநிடத முப்பத்திரண்டினுென்று.
பராமுகம்-அசட்டை, கவனிப்பின்மை, பின்னோக்கியமுகம்.
பராயணம் - அறுசமயத்தொரு வகுப்பு இராசிமண்டலம், பற்று, விருப்பு, வேதத்தின்பகுதி.
பராயணர்-குறிக்கொள்வோர், வேதாத்தியயனர்.
பராயணி - கன்னன்.
பராயத்தம் - பிறாதீனம்.
பராய் - பிராய்மரம்.
பராரி - மூன்றும் வருடம்.
பராருகம் - கல்.
பராரை - உள்ளோசை, பருமரத்தடி.
பரார்த்ததேவப்பிரத்தியம் - பிறர்க்காகத் தேவாராதனைசெய்தல், இது தயாவிருத்தி பதினுன்கினுென்று.
பரார்த்தம் - ஆயிரங்கோடி, கோடாகோடி, பிரமகற்பத்தரை, பிறர்க்குபகாரமானது.
பரார்த்தவனுமானம் - பிறர் பொருட்டாவனுமானம்.
பராவரம் - கடல்.
பராவித்தன் - குபேரன்.
பராவிருத்தமுகம் - வேண்டாததற்கு முகந்திருப்பல்.
பராவுதல் - துதித்தல், பரவுதல்,வணங்கல்.
பரானுகூலம் - பிறர்க்கனுகூலம்.
பரானுகூலி - உபகாரி, விபசாரி.
பரான்னம் - பிறர்கொடுத்தபோசனம்.
பரி-அசுபதி,அச்சுவினி, அடையாளம் அலங்காரம், அன்பு, உண்மை, உயர்ச்சி, உள்ளக்களிப்பு, கருமை, காழ்த்தல், குதிரை, சுமை, செல்வம், துக்கம், துன்பம், நெருக்கிடை, பங்கு, பரப்புதல், பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, மிகுதி, முடிவு, வணக்கம், வருத்தம், வழி, விசாலம், விரிவு, விரைவு.
பரிகட்டம் - ஒருவகைக்கோடரி.
பரிகதம் - அறிவு, ஆதாயம், தடை,மறதி, விசாரணை.
பரிகதை - தரித்திரம்.
பரிகம் - அகழ், அழித்தல், இருப்புத்தண்டு, கதவிற்றுள், கிழங்கு, நித்தியோகத்தொன்று, நீர்ச்சாடி, மதிலுண்மேடை, மதில், வீடுதடி, வெளிக்கதவு.
பரிகம்பம் - பயங்கரம்.
பரிகரணம் } பிடித்தல், விடுதல்.
பரிகரமாணம் }
பரிகாரம் - இடைக்கட்டு, தீர்ப்பு, துவக்கம், படுக்கை, பரிவாரம்.
பரிகரித்தல் - காத்தல்,குணமாக்கல்,நீக்கல், பத்தியம்பண்ணல்,பிராயச்சித்தம் செய்தல், மாற்றல், வைத்தியம் பண்ணுதல்.
பரிகரிப்பு-குணமாக்கல், வகைசெய்தல், விலக்கல்.

பரிகருத்தனம் - குன்றல்.
பரிகருமம் - அலங்கரிப்பு, சுத்தி.
பரிகலச்சேடம் - உச்சிட்டம், மகாத்துமாக்களின் விசேடம்.
பரிகலத்தார் - பரிவாரசனம்.
பரிகலம்-சேனை,பரிவாரப்பேய், பரிவாரம், மகாத்துமாக்களுண்ணும் பாத்திரம்.
பரிகலிதம் - உருகுதல், பாய்தல்.
பரிகற்பனம் - உணவுமுதலியதேடல்.
பரிகாசப்பட்டன் - பரிகாசக்காரன்.
பரிகாசப்பேரர் - பகிடிச்சண்டை.
பரிகாசம் - பகிடி, நிந்தனை, மிருநகை.
பரிகாதநம் - கதாயுதம், பெருந்தடி.
பரிகாதம் - ஆயுதம், கொல்லுதல்.
பரிகாரகண்டு - வைத்திய அசாதி.
பரிகாரம் - அவசங்கை, சூழ்தல், நீக்குகை, பரிகரித்தல், பிராயச்சித்தம், பெண்மயிர், மாற்றமருந்து, மிகுதி, வைத்தியம்.
பரிகாரி - நாவிதன், வைத்தியன்.
பரிகிருசம் - மெலிவு.
பரிகீர்த்தனம் - சொல்லுதல், புகழ்தல்.
பரிகை - அகழ்,அன்பு, உருக்கம், மதிலுண்மேடை.
பரிக்கந்தி - அமுக்கிராக்கிழங்கு.
பரிக்காரம் - அலங்காரம், திலக்கம்.
பரிக்காரர் குதிரைக்காரர்,யானைக்காரர்.
பரிக்கிரகம் - பிறிக்கக்கூடியது, அழிவு, ஆணை, இணக்கம், ஏற்றுக்கொள்ளுதல், கிலேபேற, பிற்படை, மனையாள், மூலம்.
பரிக்கிரகித்தல் - கைக்கொள்ளல்.
பரிக்கிரமம் - அலைந்துதிரிதல், சுற்றுதல், போதல், விளையாட்டு.
பரிக்கிரயம் - மீட்பு, சூழல்.
பரிக்கிராகம் - பலிபீடம்.
பரிக்கிரியை - வேலியடைத்தல்.
பரிக்கை - பரிட்சை.
பரிசக்குன்று - நாகபச்சை.
பரிசணித்தல் - மிருதுவாய்ப்பேசல்.
பரிசதன்மாத்திரை - பரிசவுணர்வின் மூலம்.
பரிசதிட்சை -ஒருதீட்சை அது பிரனயாகலருக்குப் பரிசத்தினுல் மலமறுத்தருளுதல்.
பரிசத்தலன் - கூட்டாளி.
பரிசம் - உபத்திரவநோய்,சற்பாவுசாணம்,கிரகணம்பற்றல், தொடல்,தொடுதலையறியுமறிவு, இது பஞ்சபுலனிலொன்று, மணவாளன்பெண்ணின் பிதாமாதாவுக்குக் கொடுக்கும் வெகுமானம்.
பரிசயம் - ஐக்கம், பரிசனை.
பரிசாம் - அகலம், மரணம், முறை.
பரிசரன் - காவற்காரன், தோழன், படைத்தலைவன்.
பரிசரியம் - எங்குந்திரிதல்.
பரிசருப்பம் - சூழ்தல்.
பரிசவேதி - உலோகங்களைப் பொன்னுக்குவதாகியவோர் குருமுடிப்பு.
பரிசனம் - உறவு, ஏவல்செய்வோர், சூழ்வோர், தொடுதல், பரிசிப்பு.
பரிசனவேதி - இழிந்த லோகங்களைப் பொன்னுக்குமருந்து.
பரிசனன் - காற்று.
பரிசனை - ஐக்கம், பழக்கம்.
பரிசன்னியம் - பொன்மலை,மேருகிரி.
பரிசாதனம் - செய்துமுடித்தல், நிர்மானம்.
பரிசாயம் - ஓமக்கிடங்கு, நிமம்.
பரிசாரகம் - ஏவல்வேலை.
பரிசாரகன் - ஏவல்செய்வோன்,கூடப்போகிறவன்.
பரிசாரம் - பரிவாரம், பெண்மயிர்.
பரிசாரிகை - ஏவல்செய்பவள்.
பரிசித்தல் } தீண்டல், பழகுதல்.
பரிசிப்பு } தீண்டல், பழகுதல்.
பரிசிரமம் - பிரயாசம், வருத்தம்.
பரிசிரயம் - கூட்டம்.
பரிசிலாளர் - இரப்போர்.
பரிசில் - ஈகை, கங்கை,பண்பு,பயணச்சனம், பரிது, விதம்.
பரிசுகேடு - சங்கையீனம்.
பரிசுத்ததீர்த்தம் - புண்ணியதீர்த்தம்.
பரிசுத்தம் - தூய்மை, புனிதம், மாசின்மை, முழுதஞ்சுத்தம், முழுமை.
பரிசுத்தவான் } சுத்தமுள்ளோன்.
பரிசுத்தவன் } சுத்தமுள்ளோன்.
பரிசுத்தாத்மா - மகாஞானி.
பரிசுத்தாவி - சுத்தமான ஆவி.
பரிசுத்தி - பரிசித்தம், முற்றுக.
பரிசுத்தை - சுத்தமுள்ளவள்.
பரிதேசம் - எல்லை, பிரிவு, மாற்று.

பரிசேதனம் - சிரிப்பு, பரிசேதம்.
பரிசை - கேடகம்.
பரிசைக்காரர் - ஒருசாதியார், கேடகம் பிடிப்போர்.
பரிசோதனை - பூரணசோதனை.
பரிசோதித்தல் - முற்றுஞ்சோதித்தல்.
பரிசோபை - அலங்காரம்.
பரிச்சதம் - மூடி.
பரிச்சயம் - பழக்கம், வேதசுரத்தினொன்று.
பரிச்சிதம் - பழக்கம்.
பரிச்சித்து - அருச்சுனன் பௌத்திரன், ஓரரசன்.
பரிச்சிரமம் - மிகுவருத்தம்.
பரிச்சேதம்-எல்லை, தண்டிப்பு, நூற்கூறுபாடு, பகுத்தறிகை, முழுவதும்.
பரிசேதனம் } இலக்கியச்செய்யுட்கூ
பரிசேதன் } றுபாடு, இன்னம், நீக்கம், முற்றும்.
பரிச்சை - பரிச்சியம்.
பரிஞ்சு - வாட்பிடி.
பரிஞ்ஞானம் - அறிவு.
பரிட்காரம் } அலங்காரம், சமைத்தல்,
பரிஷ்காரம் } சமயாசாரத்துட்படுத்தல், துலக்கம், முடிவு.
பரிட்கிருதபூமி - பலிபீடம்.
பரிட்சாவிற்பத்தி - அப்பியாசசத்திரம்.
பரிட்சித்தல் - அப்பியாசித்தல், ஆராய்தல்.
பரிட்சித்து - பரிச்சித்து.
பரிக்ஷித்து - குருவினதுபுத்திரனொருவன் இவன் ஜன்னுவினது தம்பி அபிமன்னியுபுத்திரன், அருச்சுனன் பௌத்திரன் இவன் கலியுகாரம்பத்தில் அஸ்தினபுரத்தில் அரசுசெய்தவன், இவன் தாய் உத்தரை. இவன் மகன் ஜனமேஜயன்.
பரிட்சை-ஆராய்வு, சோதனை, பழக்கம்.
பரிட்சைபண்ணுதல் } அப்பியாசம் ப
பரிட்சைபார்த்தல் } ண்ணுதல், ஆராய்தல்.
பரிட்டினகம் - பட்சிவட்டமிடுதல்.
பரிணதம் - கனிவு, முதற்பணம், வளைவு.
பரிணதை - விவாகஞ்செய்தவள்.
பரிணமித்தல் - பேதப்படல், வேறுபடல்.
பரிணயம் - கடைப்பிராயம், கலியாணம், முதிர்வு.
பரிணயனம் - கலியாணம், பற்று.
பரிணாகம் - அகலம், வட்டத்தின்சுற்றளவு.
பரிணாக்கன் - கணவன்.
பரிணாமசரீரம்-ஒன்றுதிரிந்துண்டான தேகம் அது தூலதேகம்போல்வது.
பரிணாமசூலம் - ஒருநோய்.
பரிணாமம் - வேறுபாடு, [வம்.
பரிணாமரூபம் - பரிணமிக்கப்பட்டவுருவம்.
பரிணாமவாதசைவன் - உயிர்கெட்டுக் கூடி அரனடியில் ஒன்றாகிப் போமென்று சொல்லுமோர் அகச்சமயி.
பரிணாமாலங்காரம் - திரிபணி.
பரிணாயம் - சொக்கட்டான்காய்.
பரிணேத்திரு - கணவன்.
பரிதகனம் - பொசுக்குதல்.
பரிதபித்தல் - இரங்குதல், துக்கித்தல், வருந்தல்.
பரிதபிப்பு - இரக்கம், துக்கம்.
பரிதல் - அறுத்தல், அன்பு அன்போடு பேசல், இரங்கல், ஒடித்தல், ஒழுகல், தறித்தல், பங்கிடல், பரிந்துபேசுதல், வெட்டுதல்.
பரிதாபசுரம் - ஒருசுரம்.
பரிதாபப்படுதல் - பரிதாபித்தல்.
பரிதாபம் - இரக்கம், ஒருநரகம், துயரம், பயம், வருத்தம், வெப்பம்.
பரிதாபி - துயருறவோன், நாற்பத்தாறாவதாண்டு.
பரிதாயம் - சகவாசிகள், சந்து, நீர்க்குண்டு, பின்றொடை.
பரிதானக்காரன் - கைக்கூலி வாங்குவோன்.
பரிதானம் - உடுப்பு, கைக்கூலி, பொருள்கொடுத்துப் பொருள்வாங்குதல்.
பரிதி - ஒளி, சக்கராயுதம், சூரியன், தேர்ச்சில் பரிவேடம், பொன், யாகமேடை, யூபஸ்தம்பம் வட்டத்தின்சுற்றளவு, வட்டம்.
பரிதிமண்டலம் - சூரியமண்டலம்.
பரிதிவிட்டாம் - அகழ்.
பரிது - பரியது.
பரிதுஷ்டம் - சந்தோஷம்.
பரிதேவனம் - அச்சம், புலம்பல்.
பரிதேவிதம் - புலம்பல்.
பரித்தம் - பரிவட்டம்.
பரித்தல் - காத்தல், சுமத்தல், தரித்தல், தாங்குதல், தாபரித்தல்.
பரித்தியாகம் - நட்டம், முற்றும் விடுதல்.

பரித்தியாகி-சன்னியாசி, துறந்தோன்.
பரித்தியாச்சியம் - முற்றத்துறத்தல்.
பரித்திராணம் - தற்காத்தல்.
பரிநாமம் - கீர்த்தி, செல்வம்.
பரிநியாசம் - முடிவுசெய்தல், வசனப்பொருள்.
பரிபக்குவம் - ஏற்றசமயம், ஏற்றபக்குவம்.
பரிபணம் - கைப்பணம்.
பரிபதி - பகைவன்.
பரிபந்தகன் - எதிரி.
பரிபந்தி - எதிரி, கள்வன்.
பரிபவபதம் - நிந்தையான நிலைமை.
பரிபவம் - அவசங்கை, இகழத்தகுபொருள் இழிவு, எளிமை, தோல்வி, வியாகுலம்.
பரிபாகம்-அடுதல், ஏற்றபக்குவம், சமர்த்து, பலம், சமித்தல், முதிர்வு.
பரிபாகி - ஏற்றபக்குவன்,முத்தியடையும் பக்குவன்.
பரிபாஷணம்- இணக்கம்,சம்பாஷணை, நிந்தை, முறை.
பரிபாடல் - தலைச்சங்கப் புலவர்செய்த பரிபாடலென்னும் நூல் இறந்தொழிந்தது. கடைசங்கப்புலவர் செய்ததுவே இப்போதுளது, அது எழுபது பாடல்களையுடையது, "திருமாற்கிருநான்கு செவ்வேட்குமுப்பத்-தொரு பாட்டுக்கார் கோளுக்கொன்று,மருவினிய - வையையிருபத்தாறு மாமதுரை நான்கென்ப செய்யபரிபாடற்றிறம்" என்னும் பாவால்அவ்வெழுபதின் விபாகமுணர்க. அவ்வப்பாடல்களின் கீழ் ஆசிரியர்கள் பெயர் கூறப்பட்டுள்ளன.
பரிபாடி - ஒழுங்கு.
பரிபாடைசூத்திரம் - தெய்வவணக்கஞ் செயலும் மங்கலமொழிமுதல் வகுத்தலும் தொகைவகை விரியாய்ச் சொல்லலும் ஏற்புடைப் பொருளையுரைத்தலுமெனு நான்குமாம்.
பரிபாஷை - குழூஉக்குறி, சங்கேதம்.
பரிபாலகன் - காப்போன்.
பரிபாலம், பரிபாலனம் } அருளுதல், ஆளுகை, காவல், சமாளித்தல், தற்காத்தல்.
பரிபாலனன் - காப்போன்.
பரிபாலன் காப்போன்,சமாளிப்போன்.
பரிபாலி - காப்போன், பரிபாலியென்னேவல்.
பரிபாலித்தல் - அருளுதல், காத்தல், செழித்தல்.
பரிபாலம் - நிந்தை.
பரிபிட்டகம் - ஈயம்.
பரிபீரேசனம் - கலைதல், விடுதல்.
பரிபுடம் - நூறெருப்புடம்.
பரிபுட்கரை - ஒருவெள்ளரி.
பரிபுதம் - வெறுப்பு.
பரிபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.
பரிபூசனம் - வணக்கம்.
பரிபூதம் - அவமானம்; சுத்தப்பட்டது, தெரிவு, பழையது.
பரிபூரணதை - திருத்தி.
பரிபூரணத்துவம் - திருத்தி, நிறைபூரணத்தன்மை.
பரிபூரணம் - திருத்தி, மிகுதி,முழுப்பூரணம்.
பரிபூரணன்-எங்குந்நிறைந்தோன், கடவுள், சிவபிரான்.
பரிபூரணி - இலட்சுமி, பார்ப்பதி.
பரிபூர்த்தி - நிறைவு, மிகுதி.
பரிபோகம் - பிறன்பொருட்போகம்.
பரிப்பிரமம் - சுழலல், தவறு. திரிதல்.
பரிப்பு - பரித்தல்.
பரிமண்டலம், பரிமண்டலிதம் } உண்டை.
பரிமந்தம் - அற்புதம், மந்தம்.
பரிமருச்சியம் - துடைத்தல்.
பரிமளகந்தி-மற்சகந்தி, வேதவியாசன்றாய்.
பரிமளக்குழம்பு - கலவை.
பரிமளசுகந்தநாயகி - திருவேள்விக்குடியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பரிமளசுகந்தம் - நற்கந்தம்.
பரிமளச்சேறு - பரிமளக்குழம்பு.
பரிமளதயிலம், பரிமளதிரவியம், பரிமளத்தைலம் } கந்ததயிலம்.
பரிமளப்பொடி - சுகந்தப்பொடி.
பரிமளம் - சந்தோஷம், சம்போகம், மிகுமணம்இது அட்டபோகத்தொன்று.
பரிமளவருக்கம் - பரிமளதயிலம்.
பரிமளி - கரந்தை.
பரிமளித்தல் - சந்தோஷித்தல், சமாளித்தல், மிகமணத்தல்.

பரிமளிப்பு - சந்தோஷம்,வாசம்.
பரிமா - குதிரை.
பரிமாணசந்தேகம் - அளவையிற் கா
ணுஞ் சந்தேகம்.
பரிமாணம் - அளவு.
பரிமார்ச்சனம் - சுத்திபண்ணுதல்.
பரிமாவடிப்போர் - குதிரைப்பாகர்.
பரிமாறுதல் - உட்கொள்ளுதல்,ஊடாடு
தல், கொடுத்துமாறுதல், திரிதல்,
நடமாடுதல், பங்கிடுதல்.
பரிமாற்றம் - ஊடாட்டம், கலப்பு,நடத்
தை, புணர்ச்சி.
பரிமிதம் - அளவுபட்டது, எல்லை, மட்
டுப்பட்டது.
பரிமிதாகாரம் - மட்டானபோசனம்.
பரிமித்தல் - அணிதல், அலங்கரித்தல்.
பரிமுகம் - அசுபதி, காவிற்றூல்.
பரிமுகவம்பி - குதிரைமுகவோடம்.
பரிமுகன் - ஹயக்ரீவன்.
பரிமேயம் - அளவுபட்டது.
பரிமேலழகர்-திருவள்ளுவர் குறளுக்கு
உரைசெய்தஓரந்தணக்கவிஞர் இவர்
காஞ்சிபுரத்திலே வைஷ்ணவப்பிரா
மணகுலத்திலேஅவதரித்துவடமொ
ழி தென்மொழி யிரண்டிலும் வல்லு
நராய் விளங்கித் திருவள்ளுவர் குற
ளுக்குரை யியற்றிய ஆசிரியர். இவ
ரைப் பாண்டிநாட்டிற் பிறந்தவரெ
ன்பாரு முளர். அது பொருந்தாமை.
"வள்ளல் சிவப்பெருமானைச் சர்சா
த்தர் வழுதி முதற் - றள்ளுவனுர்க்
குந் தலையான பேரையுந்தன்னுரை
யை - வள்ளுவனுர்க்குந் திருக்காஞ்
சிவாழ் பரிமே - லழகன் - வள்ளு
வனுர்க்கு வழிகாட்டினன்றொண்டை
மண்டலமே" என்னுந் தொண்ட
மண்டல சதகத்தானுணர்க.வள்ளுவ
வர் குறளுக்கு உரை செய்தவர்கள்
பதின்மர். அவருள்ளே சிறந்தவர்கள்
நச்சினர்க்கினியரும் இவருமே யாவ
ர்கள். அவ்விருவருள்ளும் இவரேதம்
மூரையாற் சிறந்தார். பதின்மர்உரை
யையு மொருங்கு கற்று ஒப்புநோக்
கிய அன்றோர் ஒருவர் கூறிய:—
"பாலெல்லா நல்லாவின் பாலாமோ
பாரிலுள - நூலெல்லாம் வள்ளுவர்
செய்நூலாமோ - நூலிற் - பரித்தவு
ரையெல்லாம்பரிமேலழகன் - தெரி
த்த வுரையாமோ தெளி" என்பத
னல் அவ்வுண்மை பெறப்படும் நச்சி
னர்க்கினியர்இவர் காலத்தவரேயாயி
னும் அவர் வயசால் முதிர்ந்தவர்.
இவர் வைஷ்ணவ ரென்பது "அரி
மேலன்புறா உமன்பமையந்தணன்,
என்னும் ஆன்றோருரையாற்றுணிய
ப்படும். இவர் வைஷ்ணவரே யாயி
னும் சைவாகம வுணர்ச்சியு முடை
வரென்பது வள்ளுவருரையி லிடை
யிடை யெடுத்துரைக்கு மாற்றால்
விளங்குகின்றது. வள்ளுவருக் குரை
செய்த பதின்மருள் முற்பட்டவரா
கிற தருமர் ஆருகதர். அவரை ஆருக
தர்கள்தருமசேனர்என்பர். அவருரை
த்தவுரையிலேபெரும்பாலும் ஆருகத
மதக்கொள்கைகளே பிரசங்கிக்கப்ப
ட்டன இவ்வாறேமற்றையோரும் த
த்தஞ்சார்புபற்றியுரைத்தார்கள் அவ
ருள்ளே நச்சினர்க்கினியர் ஒருவரே
திருவள்ளுவரைப் பொது நூலென
க்கொண்டு நடுநிலை கலக்கா துரை
செய்தார். ஆயினும் அவ்வொன்பதி
ன்மர் உரையும் மெய்யுரையல்லவெ
னக் கண்டே பரிமேலழகர் தாம்
உரை செய்யப்புகுந்தார். பரிமேலழ
கர் யோகப்பயிற்சியுடையரென்றும்
ஒவ்வொரு சொல்லுக்குஞ்சமாதியம
யிருந்தே மெய்ப்பொருள், கண்டன
ரென்றும்,பூர்வம்வைஷ்ணவராயிரு
ந்து பின்னர்ச்சுப்பிரமண்யோபாசக
ராயின ரென்றும் ஒரு கர்ண பரம்ப
ரையுளது. மற்றைய சரித்திரம் எவ்
வாறாயினும் ஒவ்வொரு சொற்குஞ்
சமாதியிருந்தே மெய்ப்பொருள் கண்
டாரென்பது அவருரையை யூன்றி
நோக்குந்தோறும் நம்பத்தக்கதாகின்
றது.

இவர் உரையிலே பொருள் வன்
மையும், செஞ்சொற் சிறப்பும்,இல
க்கணங் கூறும் சாதுரியமும், விசே
டவுரை தெரிக்கு மாற்றலும், மேற்
கோளெடுத்துச் சித்தாந்தஞ் செய்யு
முபாயமும், பிறரெல்லாம் பலசொ
ற்களானன்றி, யறிவுறுத்த வொண்
ணுத விஷயத்தைச் சிலசொற்களாம்

விளக்கிக்காட்டும் பேராண்மையும், வடமொழிகளைத் தென்மொழியாக்கும் சாமர்த்தியமும், சொற்றடைபட்டு வடசொற்களை யெடுத்தாளும் வறியர்போலாது செந்தமிழ்ச்சொற்செல்வ முடைமையும், வேதாகம சாஸ்திர புராணேதிஹாஸ ஸ்ம்ருத காவ்ய நாடகாலங்காராதிகளில் வடமொழிப் புலமையும், அஷ்டாங்க ஹ்ருதயம், ப்யாஹடம் முதலிய ஸம்ஸ்கிருத ஆயுர்வேத பரிசயமும் நன்கு புலப்படுகின்றன.

இவர் வைதிக சமயவுணர்ச்சியில் இணையற்றவரென்பது "யாதுமெய்யென நிகழுமையத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம்மநுபவத்தானீக்கி மெய்யுணர்வார்" என்றும், "நிலமுதலுயிரீறாகியதத்துவங்களின்றொகுதியெனவுணர்ந்து, அவற்றைநிலமுதலாகத் தத்தங்காரணங்களி லொடுக்கிக்கொண்டு சென்றால், காரண காரியங்களிரண்டு மின்றி முடிவாய் நிற்பதையுணர்தலாம், என்றும் வீடாவதுநிரதிசயவின்பம்" என்றும் தோற்றக் கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை யொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய் தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி யென்றுமொருதன்மைத்து என்றும், "அன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி யீட்டப்பட்ட வினைப்பயன்களுள் இறந்த வுடம்புகளான் அநுபவிக்கப் பட்டனவும் பிறந்த வுடம்புகளால் முகந்து நின்றனவுமொழியப் பின்னும் அநுபவிக்கக் கடவனவாய்க்கிடந்தன, அவை விளக்கின் முன்னிருள்போல ஞான யோகங்களின் முன்னர்க் கெடுதலான்" என்றும், "பரம்பொருளை யுணரப்பிறப்பறும்" என்றும் வரும் விசேடவுரைகளால் துணியப்படும்.

இவர் தம்முரையிலே தமக்குடன் பாடாயுள்ள உரையாசிரியர்களுடைய மதங்களை யெடுத்துக்காட்டித் தழுவுவதோடு தமக்குடன் பாடில்லாத மதங்களையு மெடுத்துக்காட்டி யேதுக்கூறி மறுத்தலுஞ் செய்வர்.

இவரும்நச்சினார்க்கினியரும்ஒரே காலத்தவரென மேலே கூறினும், பரிமேலழகர் திருவள்ளுவருக்கு உரையொன்றெழுதி, அதிலே தமதுரையைச் சிற்சில விடங்களிலெடுத்து மறுத்திருக்கிறாரென்று கேள்வியுற்ற நச்சினார்க்கினியர், பரிமேலழகரிடத்திற் சென்று அவ்வுரையைத் தமக்குக் காட்டும்படி வேண்டினர், அவ்வாறே அவர்காட்டினர். அதனை நச்சினார்க்கினியர் இருகையாலுமேற்றுத் தமக்குச்சந்தேகமாயிருந்த சில குறள்களை யெடுத்துநோக்கிச் சென்றனர். சென்றபோது, "குடம்பைதனித்தொழியப் புட்பறந்தற்றே, யுடம் போடுயிரிடை நட்பு" என்னுந் திருக்குறளிலே குடம்பை யென்பதற்குத் தாம்கூடென்றுரைத்திருக்க பரிமேலழகர் அதற்குமுட்டையென்றுரை யெழுதி, "கருவுந்தானு மொன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றலால் அதுடம்பிற் குவமையாயிற்று" என்றும், "அதனுள் வேற்றுமையின்றி நின்றேபின் புகாமற் போகலின்புள் உயிர்க்குவமையாயிற்று என்றும், விசேடவுரை வரைந்து, கூடுபுள்ளுடன்றோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும் உடம்பிற்குவமையாகாதென்று மறுத்திருக்கக்கண்டு, தாமுரைத்ததைக் கண்டித்தாரென்று வெகுளாமலும் நாணாமலும், மெய்ப்பொருள் மெய்ப்பொருள் என்று பாராட்டி உச்சிமேலேற்றிக் கொண்டாடின ரென்பது ஆசிரிய கர்ண பரம்பரை. இவ்வாறே தருமர் முதலியோரது உரைகளையும் ஒரோ விடங்களிலெடுத்து மறுப்பர்.

சந்தபுராணம் கம்பராமாயண முதலிய நூல்களினின்றும் உதாரண மெடுத்துக்காட்டாமையால் இவரது காலம் அவரது காலத்துக்கு முற்பட்

டதென்று அணியப்படுகின்றது. இவர் ஆயிரத்திருநூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர்.
பரிமோகனம் - மயக்கு.
பரியகம் - காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.
பரியங்கம் - கட்டில், மக்கட்படுக்கை.
பரியஸ்தம் - மேல்கீழாதல், தள்ளுதல், விழுதல்.
பரியஸ்திகை - படுக்கை.
பரியந்தம் - எல்லை, முடிவு, வரைக்கும்.
பரியம் - பரிசம்.
பரியயணம் - சேணம்.
பரியயம் - அசட்டை, எதிரிடை, ஒழுக்கின்மை, படுக்கை.
பரியவசானம் - முடிவு.
பரியவஸ்தானம் } எதிரிடை.
பரியவத்தை }
பரியவம் - பலர்செல்லுநெறி.
பரியன்னியம் - முகில், முழக்கம்.
பரியன்னியன் - இந்திரன்.
பரியாகாரம் - காகம், கொண்டுபோதல், சுமை, தானியக்குவியல், நுகம்.
பரியாசம் - பரிகாசம்.
பரியாத்தம் - கூட்டுந்தன்மை, சம்மதம், திருத்தி.
பரியாத்தி - காத்தல், சம்பாதித்தல், சம்மதம், தகுதி, திருத்தி, பகுத்தறிதல், விலக்குதல்.
பரியாயசந்தேகம் - அற்பசந்தேகம்.
பரியாயச்சொல் - ஒருபொருள்குறித்த மறுசொல்.
பரியாயநாமம் - ஒருபொருட்கினமாயிருப்பது.
பரியாயம் - ஒழுங்கு, ஒன்றற்குரியன, ஓரலங்காரம், அது கருதியபொருளை அதற்குரிய விதத்தாற் கூறாது மற்றொரு விதத்தாற் கூறுதல், சமயம், சுபாவம், செய்யப்படுபொருள், மாதிரி, முகவுரை.
பரியாயான்னம் - ஒருவருணத்தான்மற்றோர் வருணத்தானுக்குக் கொடுக்குமன்னம்.
பரியாரம் - பரிகாரம்.
பரியாரி - பரிகாரி, அம்பட்டன்.
பரியாலோசனம் - ஆலோசித்தல், சூழ்வரப் பார்த்தல்.
பரியாளம் - பரிவாரம்.
பரியானம் - சேணம்.
பரியுதஞ்சனம் - கடன்.
பரியுதாசம் - வழுச்சூத்திரம்.
பரியுதாசனம் - வணக்கம்.
பரிரட்சணம் - காத்தல்.
பரிரபமாணம் - ஆலிங்கனம்.
பரிவசதம் - கிராமம்.
பரிவசிதம் - குருவைக்காத்தல்.
பரிவட்டம் - சீலை, தலையிற்கட்டுஞ்சீலை, துண்டுச்சீலை, நெய்வார்கருவியினொன்று, விக்கிரகத்தினுடை.
பரிவதனம் - அழுதல், நிந்தித்தல்.
பரிவயத்தம் - விரோதித்தல்.
பரிவயம் - அரிசி, இளமை, நெடுநாட்கூடியிருத்தல்.
பரிவருக்கம் - பரிவாரம், பாக்கியம், பொருள்.
பரிவருத்தம்-உலகமுடிவு, கூர்மம், சதுர்யுகமுடிவு, சுற்றுதல், நூன்முடிபின்னிடுதல், பொருள்கொடுத்துப் பொருள்வாங்கால்.
பரிவருத்தனம் - அதிகப்படல், சுற்றுதல், மாற்றுதல்.
பரிவருத்தனை - ஓரலங்காரம் அதுபொருள் ஒன்றற்கொன்று கொடுத்து வேறொன்று கொண்டனவாகக் கூறுவது, பரிவருத்தனம்.
பரிவருத்திதம் - சக்கரமானது.
பரிவற்சரம் - வருடம்.
பரிவற்சனம் - கொலை, விருதல்.
பரிவாகம் - பெருக்கு, மதகு.
பரிவாகிதமுகம்-மதத்தாற்றலையை ஒருபுறஞ்சாய்த்துச்சிறிதாய்ச்சுற்றியாட்டல்.
பரிவாகிதம் - வெறுமை.
பரிவாசம் - தங்குதல்.
பரிவாதகன் - வழக்காளி.
பரிவாதம்-குற்றச்சாட்டு, பழிச்சொல், வீணை வியக்கும் வில்.
பரிவாபம் - சௌளம் பண்ணல், நீர்க்குண்டு, பரிவாரம்.
பரிவாபனம் - மயிர்களைதல்.
பரிவாரதேவதை - ஏவற்றேவர்.
பரிவாரம் - அணிசெய்வோர், உறை, சூழ்வோர், படை.

பரிவிணன் } முன்னோன் மணமுடி
பரிவித்தி } யாதிருக்க முடித்த
பரிவிந்தகன் } பின்னோன்.
பரிவிரட்டம் - தவறு.
பரிவிருகிதம் - அதிகப்படல்.
பரிவிருங்கணம் - அதிகப்படுத்தல், சேர்க்கப்படுவன.
பரிவிருடன் - மேன்மையுடையோன்.
பரிவிருத்தம் } ஒரு பொருள் கொடுத்
பரிவிருத்தி } தொருபொருள் வாங்குதல், கிரகச்சுற்று, சுற்றுதல், முடிவு, முழுவட்டம்.
பரிவிலி - இரக்கமில்லாதவன்.
பரிவின்மை - இரக்கமின்மை.
பரிவீதம் - பிரமன்வில்.
பரிவு - அன்பு, இன்பம், சுகம், துன்பம், பக்குவம்.
பரிவேசம் } சந்திர சூரியரைச்சூழத்
பரிவேஷம் } தோன்றும் வட்டம், சுற்றளவு, சூழுதல்.
பரிவேடணம் - சூழுதல், விருந்திடல்.
பரிவேடம் - பரிவேசம்.
பரிவேட்டணம் - சுற்றளவு, சூழுதல்.
பரிவேதனம் - ஆராய்வு, உபத்திரம், சம்பாத்தியம், விவாகம்.
பரிவேதிரு - பரிவிந்தகன்.
பரிற்பவம்-அசைவு,கொடுங்கோன்மை, மூழ்குதல்.
பரிஹிணசுவன் - அமிதாசுவன்,இவன் திருதரிசுவன் தந்தை.
பரிஹிஷதர் பிதிருள் ஒருசாரார்.
பரிஹிஷதன் - ப்ராசிநபர்ஹி.
பரிஹிஷ்மதி-விசுவகர்மாவின் புதல்வி, பிரியவிரதன் மனைவி.
பரீகம் - சித்தியோகத்தொன்று.
பரீகாசம் - பரிகாசம்.
பரீக்ஷை - தான் விவகரிக்கும் பொருளினிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப்பார்த்தல், அது போதப்பிரதார மூன்றினொன்று.
பரீசாரம் - சுற்றுதல்.
பரீட்சணம் - சோதனை.
பரீட்சித்தல் - ஆராய்தல், பழகுதல்.
பரீட்சை - அப்பியாசம், ஆராய்வு, பழக்கம்.
பரீஷ்டி - ஆபத்தம், ஆராய்வு, ஊழியம்.
பரீணம் - ஒடித்தல்.

பரீணயம் - சூதிகாயெடுத்தடைத்தல்.
பரீதாவி - ஓராண்டு.
பரீபாவம் - நிந்தை.
பரீமலம் - நறுமணம்.
பரீயமாணம் - ஊடுருவுதல்.
பரீரம் - பழம்.
பரீரம்பம் - தழுவல்.
பரீவத்தம் - கொடுத்துமாற்றல்.
பரீவாகம் - பிரவாகம்.
பரீவாதம் - கடிந்துகொள்ளல், வீணைவாசிக்கும் வில்.
பரீவாரம் - பரிவாரம், வாளுறை.
பரு-கடல், கண், குரு, சிலந்தி, பருமை, பருவென்னேவல், மலை, மோக்கம்.
பருகல் } குடித்தல் அது நால்வகை
பருகுதல் } புணவினொன்று, நுகருதல், புசித்தல்.
பருக்கல் - பருக்கச்செய்தல்.
பருக்கன் - பரும்படியானது, விழுதவற்றது.
பருக்குதல் - பருகச்செய்தல்,பருத்தல்.
பருக்கை - உருண்டை, சோறு, பருக்கைக்கல், பளிங்கு.
பருக்கைக்கல் - தரிசு.
பருங்கடி - மேற்கடித்தல்.
பருங்காரியம் - பெருங்காரியம்.
பருங்குடல் - மலவாகி.
பருங்கை தாராளமாகக்கொடுக்குங்கை, பெருஞ்செல்வம்.
பருஞ்சாய் - சடாமாஞ்சில்.
பருஷம் }
பருஷவருஷம் } கடுஞ்சொல்.
பருஷோத்தி }
பருஷோத்திகன - கடுஞ்சொற்காரன்.
பருணயனம் - விவாகம்.
பருணிதர் - புலவர்.
பருதி - பரிதி.
பருதியப்பேசுவரர் - திருப்பருதி நிப்புரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பருத்தல் - பெருத்தல்.
பருத்தாரம் - குதிரை.
பருத்தி - ஒரு பஞ்சச்செடி.
பருத்திக்குண்டிகை - பருத்திப் பஞ்சடைத்த குடுவை.
பருத்தித்தூறு - வாய்க்கிரந்தி.
பருத்திபன்னுதல் - பஞ்சனூற்றல்.

பருந்தலை - பெரியதலை, பெருமையிற் சிறந்தோர், மேட்டிமைகாரர்.
பருந்தின்விருந்து - நண்டு.
பருந்தின்வீழ்வு - சூத்திரநிலை நான்கில் ஒன்று, அதாவது அதுவுடத்துச்சூத்திரம் பின்னோரிடத்துச்சூத்திரத்தை அவாவி நிற்பது.
பருந்து - ஒருபறவை.
பருந்தொட்டு - பருமிதம்.
பருபருக்கை - இருவனொருவல், வேவாச்சோறு.
பருபாரித்தல் - பருத்தல்.
பருப்பதமங்கை - திருப்பருப் பதத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
பருப்பதம் - மலை, ஸ்ரீசைலம்.
பருப்பதி - பார்வதி.
பருப்பதேசுவரர் - திருப்பருப்பதத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பருப்பம் - அளவு, பருத்தல், பருமை.
பருப்பித்தல் - பரிதாக்கல்.
பருப்பு - அதிகப்படல்,பயறு,பருப்பம், வித்தின்பருப்பு.
பருப்பொருள் - நுண்மையற்ற பொருள்.
பருப்போரை - பருப்புச்சாதம்.
பருமட்டம் } செவ்வையின்மை,பரும்
பருமட்டு } படி.
பருமம் - அகடு, குதிரைக்கல்லணை, நிதம்பம், மூவாறுகோவைமணி, பருப்பம்.
பருமல் - கப்பற்பாய், கட்டுமரம்.
பருமன் - பருத்தது, பருத்தவன்.
பருமிதம் - இறுமாப்பு, சிரமம்.
பருமித்தல் - அலங்கபுத்தல், இறுமாப்பாயிருத்தல், சிரமஞ்செய்தல்.
பருமிப்ப - இறுமாப்பு, சிலம்பம்.
பருமுறி - பரும்புடைவை.
பருமை - பருப்பம்.
பரும்படி - பருமட்டு.
பரும்பனையன் - ஒருநோய்.
பருவகம் - முழந்தாள்.
பருவகாலம் - உரியகாலம், பக்குவகாலம்.
பருவக்காய் - உரியகாலத்திற்காய்.
பருவசந்தி - உவாக்கடையும் பிரதமை முதலும் பொருந்துஞ்சமயம்.
பருவணிகை - ஒருகண்ணோய்.
பருவதகாகம் - ஒருகாகம்.
பருவதம் - ஒருமரம், ஒருமீன், மலை.
பருவதவர்த்தினி - பார்ப்பதி.
பருவதவாசினி - காயத்திரி, துர்க்கை.
பருவதாகாரம் - மலைபோலும் வடிவு.
பருவதாசயம் - முகில்.
பருவதாசிரயம் - சரபப்பட்சி.
பருவதாதாரை - பூமி.
பருவதாரி - இந்திரன்.
பருவதி - சந்திரன், பார்வதி.
பருவபேதம் - காலவேறுபாடு.
பருவமலைவு - ஒரு காலத்துக்குரியதை மற்றோர்காலத்துக்குரியவாகக் கூறுவது.
பருவமழை - காலமழை.
பருவமாதல் - இருதுவாதல், தகுதியாதல்.
பருவம் - அமாவாசி, இருது, இளமை, உயரம், எது, கணு, காலம், பகுதி, பக்குவம், பருவகாலம், பிரமாணம், பூரணை, பெருநாள், பொழுது, முளி, வயது.
பருவயோனி - கரும்பு.
பருவரல் - அருவருப்பு, துன்பம்.
பருவரீணம் - திருவிழா.
பருவருதல்-அருவருத்தல், துன்பப்படல்.
பருவலயம்-குழியம்,பெரியவட்டம்.
பருவல் - பருத்தது.
பருவி - தில்லை.
பருவு - பரு.
பருவெட்டு - பரும்படியாய் வெட்டின வெட்டு.
பருஉ - பருமை, பறித்தல்.
பரேஷ்டி - பரமேட்டி.
பரேதம் - பிசாசு.
பரேதராசன் - நமன்.
பரேபம் - நீர்நிலை.
பரை - ஐந்துமரக்கால்கொண்டஓரளவு, பார்வதி.
பரோதம் - நெல்லிக்காய் கந்தி.
பரோட்சக்கியானம் - அதிரிசியமான வற்றையறிதல்.
பரோட்சஞானம் - சத்தாவத்தையில்ஒன்று அது பிரமமொன் றுண்டென்று கேட்டறிதல்.
பரோட்சபோகம் - பரத்திரவியானுபவம்.
பரோட்சம்-அதிரிசியமானவை,இறந்தகாலம்.

பரோட்சன் - தலசி.
பரோட்சாதம் - காணப்படாத பொருள்.
பரோதிதம் - அச்சுறுத்தல்.
பரோபகாரம் - பிறர்க்குபகாரம்.
பரோபகாரன் } பிறர்க்குபகாரி.
பரோபகாரி }
பரோபசாபம் - வாக்குவாதம்.
பரோபரீணம் - தோற்றாசமற்றது.
பர்க்கம் - ஒளி, வீரியம்.
பர்க்கன் - சிவபெருமான், சூரியன், பிரமன், விஷ்ணு.
பர்ணசாலே - இருடியர் ஆச்சிரமம், இலைகளால் வேய்ந்தகுடில்.
பர்ஜந்யன் - மேகங்களுக்கு அதிதேவதை.
பர்ணம் - பன்னம்.
பர்ணாசநம் - மேகம், இலையுணவு.
பர்ணி - முருக்கமரம்.
பர்த்தா - பத்தா.
பர்த்ருஹரி - இவர்தன் பெயராலொரு வடமொழி நூல்செய்த ஒரு பிரபல பண்டிதர்.
பர்ப்படாகம் } பற்பாடகம்.
பர்ப்பாடகம் }
பர்மம் - கொப்பூழ், பொன்.
பர்மியாசுவன் - பூருவமிசத்து அஜமீடன் புத்திரன்.
பர்யந்ததேசங்கள் - ஆர்யா வர்த்தத்துக் கயலிலேயுள்ள மிலேச்சருக்கு தேசங்களுக்குப் பெயர்.
பர்யுகஞ்சனம் } கடன்.
பர்யுதஞ்சனம் }
பர்வதம் - பருவதம்.
பர்வதராஜபுத்ரி - திருநனிபள்ளியிலே கோயில்கொண்டிருக்குந் தேவியார் பெயர். பார்வதி.
பர்வதராஜன் - இமயமலை, இமயராஜன்.
பர்வதன் - நாரதன் சகோதரி புத்திரன்.
பர்வதாக்கிரம் - மலையுச்சி.
பல - அனேகம்.
பலகணி - சாளரவாயில், திட்டிவாயல்.
பலகண்டன் - உப்பரவன், மண்வேலை செய்வோன்.
பலகம் - அடுக்கு, கேடகம், நாற்காலி, பின்சந்து.
பலகலப்ப } பலவுங் கலந்தது, வாசனைப்பொடி.
பலகலவை }
பலகறை - கவடி.

பலகாரம் - அப்பவருக்கம், யானைமேற்றவிசு.
பலகீனம் - பலகேடு.
பலகேசரம் - தெங்கு.
பலகை - கேடகம், தொட்டிப்பாஷாணம், நெற்றியெலும்பு.
பலகைக்கவிறு - நெய்வார் கருவியினென்று.
பலகைக்கள்ளி - ஒருகள்ளி.
பலகைப்பா - இரதத்தோருறுப்பு, பரவப்பட்ட பலகை.
பலகைமரம் - நெய்வார்கருவியினொன்று.
பலகையடித்தல் - பரம்படித்தல்.
பலகையுரு - வளையலுப்பு.
பலங்காரம் - பித்தம்.
பலசத்ரு - இந்திரன்.
பலசந்தமாலை - ஒருபிரபந்தம். அதுபப்பத்துச் செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுள் கூறுவது.
பலசம் - நகரவாயில், பழம், பனசம், புத்தம், வயல்.
பலசம்பத்து } பலபொருள்.
பலசம்பாரம் }
பலசரக்கு - கடைச்சரக்கு, பலசாமான்.
பலசாடவம் - மாதளை.
பலசாலி - பலமுள்ளோன்.
பலசித்தி - பலப்பேறு.
பலசிரேட்டம் - மாமரம்.
பலசூதனன் } தேவேந்திரன்.
பலசூதநன் }
பலச்சரீடம் - குன்றி.
பலட்சயம் - பலவீனம்.
பலட்சாரம் - இரத்தம்.
பலண்டு - வெங்காயம்.
பலண்டுறகபாஷாணம் - விளைவு பாஷாணமுப்பத்திரண்டினொன்று.
பலதம் - மரம்.
பலதானம் - கருப்பதானம்.
பலதிரட்டு - பல பாடலினு மெடுத்துச் சேர்த்திருப்பது.
பலதுறை - நானாபேதம், பலவழி.
பலதுக - புளியாரை.
பலதேவன் - பலபத்திரன், வாயு.
பலத்தல் - பெலத்தல்.
பலத்தியாகம் - பயனிழக்கை, வலியிழக்கை.
பலத்திபயம் - திரிபலை.
பலத்தகன் - நாபாகன் புத்திரன்.
பலபடப்புனைவணி - ஓரலங்காரம், அது ஒருபொருளிற்பலரும் பல தருமங்க

ளாற் பொருள்களை ஆரோபித்தலும் ஒருவரே யொருபொருளில் விடய பேதங்களாற் பல பொருள்களை யாரோபித்தலுமாம் (உ-ம்) ஆரணங்காணென்ப ரந்தணர்யோகிய ராகமத்தின் காரணங்காணென்பர் எனவும். வில்லிற்கு விசயன் கல்விக்குச் சேடன் எனவும் வரும்.

பலபடுதல் - இரட்டித்தல், வேறுபடல்.

பலபட்சணம் - கனியுணவு.

பலபட்டடை - ஓரூர்.

பலபட்டறை - பண்டகசாலை.

பலபண்டம் - பலகாரம், பலபொருள்.

பலபத்திரர் } பலராமர் } ஆதிசேஷன் அம்சமாக வசுதேவனுக்குரோகிணியிடத்துப் பிறந்த புதல்வர். இவர் கிருஷ்ணரோடு வளர்ந்து விளையாடி, கிருஷ்ணருக்கு எல்லாக் காரியத்திலும் துணையாயிருந்தவர், துரியோதநனுக்குக் கதாயுதவித்தை பயிற்றினவர், இவர்க்குக் கொடிபனைக்கொடி, ஆயுதம்கலப்பைஇவருங்கிருஷ்ணரும் ஒருங்கு கூடிய விஷ்ணுவினது எட்டாம் அவதாரமானவர். தேனுகாசுரனையும் பிரலம்பாசுரனையும் கொன்றவர், யமுநாநதியைத்தாமிருக்குமிடத்திற்குத் தமதுகலப்பைப்படையினல் இழுத்துப் பாயும்படி செய்தவரும் இவரே. இவர் ரைவதராஜபுத்ரியாகிய ரேவதியை மணம் புரிந்தவர்.

பலபத்திரன் - பலதேவன். [புரிந்தவர்

பலபந்தம் - வலோத்காரம்.

பலபலெனல் - ஒலிக்குறிப்பு, ஒளிக்குறிப்பு, விடியற்குறிப்பு.

பலபாகம் - கனிகொடுக்கும் பக்குவம், கனிமுதிர்வு, பிரயோசனப்பங்கு.

பலபாடு - பலதொந்தரை.

பலபூமி - நரகம், மோக்கம்.

பலபூரகம் } பலபூரம் } மாதுளை.

பலபெயர்த்திரிசொல் - செந்தமிழ்நிலத்து மொழிகளாய்க் கற்றோர்க்குமாத்திரந் தம்பொருள் விளக்கி யொருபொருளைக் குறித்த பல பெயராய் வரும் பெயர்ச்சொல்.

பலபை - சூரியன் மேஷவரியினிற்கையிற் கடிகார மத்தியில் விழு நிழல்.

பலபொருட்சொற்றொடரணி - ஓரலங்காரம் அது பல பொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக் கூறுதல்.

பலபொருளுவமை - ஒரு பொருட்குப் பலவுமையையெடுத்துக் காட்டுவது (உ-ம்) வேலுஞ்சேலும்போலும்விழி.

பலபொருளொருசொல் - பலவருத்தங் கொள்ளுஞ் சொல்.

பலபொருள் - குறித்த ஒருவினைத் திரிசொல் செந்தமிழ்நிலத்து மொழிகளாய்ச் செய்யுட்கே யுரியவாய்க்கற்றோர்க்கு மாத்திரம் பொருள்விளக்கிப் பலபொருடரு மொரு சொல்லாய் நிற்கும் வினைச்சொல்.

பலபொருள்குறித்த ஓரிடைத்திரிசொல்-செந்தமிழ் நிலத்துமொழிகளாய் செய்யுட்கே யுரியனவாய்க்கற்றோர்க்கு மாத்திரந் தம்பொருள் விலக்கிப் பல பொருடரு மோர் சொல்லாய் நிற்கு மிடைச்சொல்.

பலபொருள்குறித்தவோருரித்திரிசொல். அரிதுணர்பொருளாய்ப் பல பொருடருமோருரிச்சொல் (உ-ம்) கடி.

பலப்படுதல் - பலயடைதல், வளர்தல்.

பலப்பம் - மாக்கல்.

பலப்பல் - பலபல்.

பலப்பித்தல் - பலப்படுத்தல்.

பலப்பிராப்தி - பலசித்தி.

பலப்பிரியம் - செம்போத்து.

பலப்பிறேதம் - திப்பிலி.

பலப்பேறல் - உரப்பேறல்.

பலமுகம் - பலகாரியம், பலதிசை, பலவழி.

பலமுறை - நானுவிதம், பலதரம். [ழி.

பலமூலசாகாசனர் - முனிவர்.

பலமூலாசகர் - தவசிகள்.

பலமூலசாகாதி - இலை கனிகிழங்கு முதலியன.

பலம் - அம்பலகு, ஆதாயம், ஆயுதறனி, இலை, காய் கிழங்கு, சேடகம், கொழு, சாதிக்காய், சுரூபம், கெல்வாக்கு, தாது, தொனை, நிமிஷம், நிறைகல், நிறை யளவிலொன்று, நெற்றிப்படை, பயன், பருப்பம், பழம், பிறித்துக்கண்டபேறு, பெலன், பொன் மகளிர் சூதகம், மாதிரி, மாமிசம், வட்டத்தின் பரப்பு, வெட்பாலை,

பலம்பழம் - சேக்கொட்டை.
பலரறிசுட்டு - யாவராலு மறியப்பட்ட சுட்டு.
பலரறிசொல் - அலர்மொழி, உயர்திணைப் பன்மைச்சொல், பிரசித்த வார்த்தை.
பலராமன் - பலபத்திரன்.
பலர் - அனேகர்.
பலர்க்கம் - கதுப்பு.
பலர்பால் - ஆண்பன்மையையும் பெண்பன்மையையும் இருவர் பாற்கும் பொதுப் பன்மையையுங் காட்டி நிற் [பது.
பலலப்பிரியம் - காகம்.
பலலம் - சேறு, பிண்ணாக்கு, மாமிசம்.
பலலன் - இந்திரன்மகன், பலராமன், பேருண்டியான்.
பலலாசயம் - கழுத்து.
பலவத்தர் - கடவுட்டிருவுளப்படி மெய்தக் கருமங்கட்குவரு மிடையூற்றை யவனருளாற்றடுப்பவர்.
பலவத்தை - பலம்.
பலவந்தம் - பலபந்தம்.
பலவிற்போலியுவமை - ஒரு தொடர்மொழிக்கட் பலவுவமைவர அவ்வுவமைதோறு முவமைச் சொற்புணர்ந்து வருவது (உ-ம்) மலர்வாவி போலு மாதர் அதின் மலர்கள்போலும் அவர்முகம் அதினுறை அணிபோலு மவர்விழி.
பலவரி-ககரமுதனகரமீறுய பதினெட்டெழுத்து.
பலவழித்தோன்றல் - மருமகன்.
பலவறிசொல் - அஃறிணைப் பன்மைச் சொல்.
பலவறுதி - பலவீனம்.
பலவன் - ஒரு மருந்துப்பூண்டு.
பலவானம் - மந்தாரச்சிலை.
பலவான் - பலசாலி.
பலவிதம் - நானாவிதம்.
பலவிருட்சகம் - பலாமரம்.
பலவினைச்சிலேடை - பலவினை யான் வருவது.
பலவினைத்திரிசொல் - செந்தமிழ்நிலத்து மொழிகளாய்க் கற்றோர்க்கு மாத்திரந் தம்பொருள் விளக்கி ஒருவினைகுறித்த பல சொல்லாய் வரும் வினைச்சொல்.
பலவின்கூட்டத்தற்கிழமை-பலவினொன்றாமை (உ-ம்) படையதுதொகுதி.
பலவின்பால்-அஃறிணைப் பன்மைப்பா [ல்.
பலவு - பலாமரம்.
பலவிரோதி } தேவேந்திரன்.
பல்லவரி }
பலற்காரம் - பலபந்தம்.
பலனம் - கனிகொடுத்தல்.
பலன்-இந்திரனால் கொல்லப்பட்ட ஒரு இராட்சதன், இலாபம், ஈரவெங்காயம், காய், சிவதரும முதலியவற்றுன் வரும்பேறு, பலதேவன், பழம், பிரயோசனம், புண்ணியம்.
பலன்கொடுத்தல் - பிரயோசனமளித்தல், பேறுதல்.
பலா - ஒருமரம், சிற்றுமுட்டி.
பலாகம் - கொக்கு.
பலாகன்-சுசர்மன்மனைவியைக் கவர்ந்த அசுரன், ஜாதகர்ணி சேஷன்.
பலாகாசுவன் - புரூரவன்மகனுய்அமவசுவமிசத்து அஜகன்மகன், குசிகன் தந்தை.
பலாகாரம் - பழமுதலிய போசனம்.
பலாக்கினி - பித்தம்.
பலாங்கம் - ஒருவிதமீன்.
பலாசம் - இலை, ஒருபிசாசம், பச்சைநிறம், பயிர், பலாமரம், புன்முருக்கு, மகதம், முருக்கு.
பலாசவகேசுரர்-திருநாவலூர் மயானத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பலாசனம் - கிளி.
பலாசாக்கியம் - பெருங்காயம்.
பலாசி - மரப்பொது.
பலாசிநி - ஒருநதி, இது சுத்திமந்தத்திலுற்பத்தியாகிமகாநதியிற்கலப்பது.
பலாசு - பலாசம்.
பலாசுவன் - இரண்டாங் கனித்திரன் பௌத்திரன்.
பலாட்டியம் - பலபந்தம், பலம்.
பலாண்டு - ஈரவெங்காயம்.
பலாதவம் - பூனைக்காலி.
பலாதனம் - கிளி.
பலாதன் - ஓராக்கன்.
பலாத்காரம் - பலாற்காரம்.
பலாநுஜன் - கிருஷ்ணன்.
பலாந்தம் - ஒருகாற் காய்த்துப்படுமரம், மூங்கில்.

பலாபம் - யானைமத்தகம்.

பலாபலம்
பலாபலன் } நயநட்டம், மிகுபலன்.

பலாபேக்ஷை - பயன்விருப்பம்.

பலாயனம்-நிலைகுலைவு, புறங்காட்டுகை, போதல்.

பலாரன்
பலாராதி } தேவேந்திரன்.

பலாரி - இந்திரன், பலசூதனன்.

பலாரெனல் - விடிதற்குறிப்பு.

பலார்த்தம் - அரைப்பலம்.

பலார்பற்றல் - பலாரெனல்.

பலாதோகதம் - மாமரம்.

பலாலகிருஹம் - காவக்கோல்வீடு.

பலாத்பிரதிமை - வைக்கோற்பர்வை.

பலாப்புரி - வைக்கோற்பிரிணை.

பலாலப்போர் - வைக்கோற்போர்.

பலாலம் - வைக்கோல்.

பலி - இதை, உடற்றிரை, ஒரு சக்கிரவர்த்தி, காகம், காணிக்கை, காய்த்திருந்தமரம், சாம்பல், சேடம், சோறு, தேவருணவு, நீறு, பலிபதார்த்தம், பிச்சை, பூசை, விண்ணோருணவு. சுதபன் எனனும் அசுரன் புத்திரன்; பிரகலாதன் புத்திரனுகிய விரோசநன்மகன், இவன் மகாபராக்ரமசாலி, விஷ்ணு இவனைக் கொல்வதற்காக வாமநாவதாரமெடுத்து அவனிடஞ்சென்று மூன்றடிமண் தருகவென் றிரக்க அவன் சம்மதித்தலும், விசுவருபக்கொண்டு பூமியையோரடியாலளந்து, ஆகாயத்தை மற்றோரடியாலளந்து, மூன்றாமடிக்கிட மின்மையால் அவன் சிரத்தில் அடிவைத்து அவனைப் பாதலத் தழுத்திவிட்டார்.

பலிகம் - சுவர், நீர்க்குடம், பளிங்கு, பிச்சைப் பாத்திரம், வாயில்.

பலிகை - பிண்ணாக்கு.

பலிகொடுத்தல்
பலிசெலுத்தல் } பலியிடுதல்.

பலிச்சக்கரவர்த்தி - மாபலி.

பலிதம் - கனியுள்ளது, சேறு, பலிப்பது, மயிர்நரை, வெம்மை.

பலிதானம் - பலிகொடுத்தல்.

பலிதை - கிழவி.

பலித்தம் - இலாபம்.

பலித்தல் - செழித்துவளர்தல், நயப்படல், வாய்த்தல்.

பலிநந்தநன் - வாணாசுரன்.

பலிபீடம் - பலிசெலுத்தும்பீடம்.

பலிபுட்டம் - காக்கை.

பலிபுத்ரன் - வாணாசுரன்.

பலிபோடுதல் - பலிகொடுத்தல்.

பலிப்பு - பலித்தல்.

பலிமந்திரம் - பாதாளம்.

பலிமுகம் - குரங்கு.

பலியங்கம் - பரியாங்கம்.

பலியம் - தளிர், பூ.

பலியயனம் - சேணம்.

பலியிடுதல்
பலியூட்டுதல் } பலிசெலுத்துதல்.

பலியெடுத்தல் - உயிரெடுச்குதல், பலியேற்றல்.

பலினம் - காய்த்திருக்குமரம்.

பலிபாத்திரம் - பிக்ஷாபாத்திரம்.

பலினி - காய்த்திருந்தமரம், கோங்கு, ஞாழல், பலினம், மிளகு.

பலீ - எருது, ஒட்டகம், கடா, கோழை, பன்றி.

பலுகம் - குரக்கு.

பலுகல்
பலுகுதல் } பெருகுதல்.

பலுட்டல் - முடித்தல்.

பலேந்திரன் - பலவான்.

பலை - பழம்.

பலோதயம் - ஆதரியம், சந்தோஷம், பலம், மோக்கம்.

பலோத்தமை - திராக்ஷிப்பழம்.

பலோற்காரம் - வலோற்காரம்.

பலோற்பதி - மாமரம்.

பலோனி - பெண்குறி.

பல் - ஆயுதக்கருக்கு, கங்கூரநாக்கு, பல்லு.

பல்கண் - நுழைவாயில்.

பல்கல் - பருகல், வெகுநாள்.

பல்காயனார் - ஒரு இலக்கண ஆசிரியர்.

பல்காற்பறவை - வண்டு.

பல்குதல் - பலுகுதல்.

பல்சாலைமுதுகுடுமி - பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

பல்பல - பலபல.

பல்லகம் - கரடி.

பல்லக்கர் - சிவனடியார்.

பல்லக்கு - சிவிகை.

பல்லக்குழி - பல்லாக்குழி.
பல்லணம் - குதிரைக்கல்லணை.
பல்லதி - ஓரிராகம்.
பல்லம் - அம்பு, ஓரெண், கரடி, குதிரைக்கல்லணை, கோரிகை, சேரான்மரம்.
பல்லரணை } ஒருநோய், பற்களிலேவரும் ஒரு நோய்.
பல்லரனை }
பல்லவகன் - தூர்த்தன்.
பல்லவதாரம் - மரக்கொம்பு.
பல்லவத்திரு - அசோகமரம்.
பல்லவபாணி - சரசுவதி.
பல்லவம் - இலை, கிளை, கொப்பு, கையணி, சாயம், தளிர், தேயமைம்பத்தாறில் ஒன்று, பதத்திேேனாருறுப்பு, விசாலித்தல்.
பல்லவர் - கீழ்மக்கள், தூர்த்தர், பலர்.
பல்லவாதம் - மான்.
பல்லவாதாரம் - கொப்பு.
பல்லவாத்திரன் - காமன.
பல்லவி - பல்லவம்.
பல்லவை - இழிபானபொருள், கீழ்மை, பலபொருள்.
பல்லாக்கு - பல்லக்கு.
பல்லாங்குழி - பன்னாங்குழி.
பல்லாண்டு - ஒருவகை வாழ்த்துக்கவி, பலவருஷம், வாழ்த்து.
பல்லாண்டு - திருப்பல்லாண்டு. ஒரு சைவநூல்.
பல்லாதகம் }
பல்லாதகி } சேரான்மரம்.
பல்லாதம் }
பல்லாதன் - உதச்சேநன் புத்திரன்.
பல்லார் - பலர்.
பல்லாரி - ஓரூர்.
பல்லாவரம் - ஓரூர்.
பல்லி - இடம், இடையரூர், ஒருடும்பு, கௌளி, சிற்றூர்.
பல்லிக்கை - சேங்கொட்டை, பல்லி.
பல்லிச்சாத்திரம் - கௌளிநூல்.
பல்லிப்பூடு - ஒருபூண்டு.
பல்லியம் - சங்கீதம், வாச்சியப்பொது.
பல்லியோர்சியம் - பல்லிச்சாத்திரம்.
பல்லிலான் }
பல்லிலி } சூரியன்.
பல்லினர் - சதுரக்கள்ளி.
பல்லினர்குழவி - மலைப்பச்சை.
பல்லு - தந்தம்.
பல்லுகம் - கரடி. பெருவாகை.
பல்லுக்கடித்தல் - அதரத்தைக் கடித்தல்.
பல்லுக்காட்டுதல் - கெஞ்சுதல்.
பல்லுக்கிட்டுதல் - அலகுபூட்டுதல்.
பல்லுக்கெஞ்சுதல் - மன்றாடுதல்.
பல்லுக்கொறிக்குதல் - பல்லோடுபல்லராத்தல்.
பல்லுங்கம் - மூங்கில்.
பல்லுத்தீட்டுதல் - பல்லுக்கொறிக்குதல், பல்லுமினுக்குதல்.
பல்லுவிளக்குதல் - பல்லுமினுக்குதல்.
பல்லுறசெங்கலை - குதிரைப்பற்பாஷாணம்.
பல்லூசம் - கரடி, குரங்கு.
பல்லூழி - அனேகயுககாலம்.
பல்வலம் - சிறுகுளம், வாவி.
பல்வலன் - இல்வலன்புத்திரன், இவன் பலராமரோடு யுத்தஞ்செய்தபோது அவரால் கொல்லப்பட்டவன்.
பல்வலாவாசம் - ஆமை.
பவ - எட்டாவதாண்டு.
பவசாகரம் - பிறவிக்கடல்.
பவகாரணி - அழகர் மலையிலுள்ள ஒரு பொய்கை, இது தன்னிடத்தில் மூழ்குவோர்க்கு அவர் முற்பிறப்பிற்செய்தவற்றை யுணர்த்துவது.
பவணநதி - இவர் தொண்டைநாட்டிலே சநகாபுரத்திலே சன்மதி முனிவருக்குப்புத்திரராயவதரித்துத் தமிழ்ப்புலவராய் விளங்கிய ஒரு சமணமுனிவர், சீயகங்கனது வேண்டுகோளின்படி தொல்காப்பியத்தைச் சுருக்கிப் பாணினீவியாகரண முறைமைப்படி நன்னூல் என்னும் இலக்கணநூல்செய்தவர், இந்நூலின் சூத்திரங்கள் மிகவும் திட்பநுட்பங்களமைந்தன்ன வென்பது சர்வசம்மதம். "மொழிமுதற் காரணமா மணுத்திரளொளியெழுத்து" என்று ஒலியெழுத்திற் கிலக்கணக்கூறிய இவரது சதுரமைமிகப்பெரிதும் வியக்கற்பாலது, குற்றெழுத்து வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களுக்கெல்லாம் எண்கூறியவரை யறந்தவர். ஐயும், ஔவும் எல்லாவிடத்தும் நெட்டெழுத்தாகா வென்பது உய்த்துணரவைக்கும் பொரு

ட்டு, நெட்டெழுத்திற்கு மாத்திரம், "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்" என்று வாளாசூத்திரஞ் செய்த இவரதுசாக்ரபுத்திஅத்யத்புதமானது. இவ்வாறே ஒவ்வொரு சூத்திரமும் ஒவ்வோரதிசயமுடையன, இத்தன்மைத்தாகிய நிட்பநுட்பங்களமைந்த இலக்கணநூல் வேறெந்தப் பாஷையிலு மில்லை, இது கருதியன்றே "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள், நன்னூலார்தமக் கெந்நூலாரும், இணையிலையென்னுந் துணிவே மன்னுக" என்றார் இலக்கணக்கொத்துச்செய்த சுவாமிநாததேசிகர் இப்பவணந்தி முனிவர் தொளாயிரவருஷங்களுக்கு முன்னிருந்தவரென்பதுசிலஹேதுக்களால் துணியப்படும்

பவனை - கழுகு.

பவநாசம் - ஒருபுண்ணிய தீர்த்தம்,ஒரு சிவஸ்தலம்.

பவநாசன் - கடவுள், சிவபிரான்.

பவநாசினி - சரயுநதி.

பவந்தம் - சூது.

பவந்தி - கற்புடையாள்.

பவபந்தம் - பிறவிக்கட்டு.

பவபூதி - ஐசுவரியம், சிவன்,ஒருஸம்ஸ்கிருதகவி, இவர் காசிப்கோத்திரத்தார், இவர் தேசம் விதர்ப்பம், இவர் போஜராஜ ஸம்ஸ்தாந கவீசுவரருளொருவர்.

பவமானம் } தீ, வாயு.
பவமானன்

பவம் - அழிவு, இருத்தல், உலகம்,காற்று,சதுப்புநிலம்,சம்பாத்தியம்,சாணி, சிங்கக்காரணம் சத்தம்,தூர்த்தல்,நிலை, பரம், பலன், பாவம், பிறப்பு, மேன்மை.

பவரணை - பூரணை.

பவர் - கவர், நெருங்கல், மூங்கை.

பவர்க்கம் - நரகம்.

பவவீதி - முடிவு, முற்றத்துறத்தல்.

பவழம் - பவளம்.

பவளக்காலி - ஒருபுள், ஒருபூடு.

பவளக்குறிஞ்சி - ஒருபூண்டு.

பவளங்குறிஞ்சி - ஒருபூண்டு.

பவளக்கைநாயகி - திருவைகாவிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார் பெயர்.

பவளக்கொடியம்மை - குரங்காடுதுறையிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார் பெயர்.

பவளச்சோளம் - ஒரு சோளம்.

பவளநெடுங்குஞ்சியோன் - வயிரவன்.

பவளப்புற்றுப்பாஷாணம் ஒருவைப்புப்பாஷாணம்.

பவளப்பூண்டு-ஒருபூண்டு.

பவளப்பூலா } ஒருசெடி.
பவளப்பூல்

பவளமல்லிகை - ஒருமல்லிகை.

பவளமனோசிலை - ஒருசரக்கு.

பவளம் - நவமணியிலொன்று.

பவளவங்காரவாச்சி - ஒருபூண்டு.

பவளவன்னப்பூங்குழலம்மை - திருஅம்பார்ப்பெருந்திருவிலே கோயில்கொண்டிருக்குந்தேவியார் பெயர்.

பவனகுமாரன் - அக்கினி.

பவனசுதன் } ஆஞ்சநேயன், வீமன்.
பவனநந்தனன்

பவனம் - அரமனை, இடம்,இராசி,ஒதுக்கல், காடு, காற்று, குயவன்சூளை, தொழித்தல், கோட்டை,சத்தம்,தூர்த்தல், தூற்றுதல், தேவலோகம், நாகலோகம்,பவனவாய்பாவனை,பூஞை பூமி, பொழுது, வாயு, வீடு.

பவனவாசல் } அபானத்துவாரம்.
பவனவாய்

பவனவாயு - அதோவாயு.

பவனன் - காற்று.

பவனாசநாசம் } கருடன், மயில்.
பவனாசநாசன்

பவனாசம் } பாம்பு.
பவனாசனம்

பவனாத்துமசன் - அக்கினி,அனுமான், வீமன்.

பவனி - உலாப்போதல், பயணம்.

பவனிக்காதல் -ஒருபிரபந்தம், அதுபவனிவந்ததலைமகன்மேற்கொண்ட காமத்தாற் சிவபிரான் சிறப்பைப்பிறரோடுரைத்து வருந்துவதாகக் கூறுவது.

பவனோதரம் - உள்வீடு.

பவன் - கடவுள், தானுண்டானவன். அஷ்டமூர்த்திகளிலொருவன்,சிவனு

பவாகை - சுழற்காற்று.

பவாநி - பார்வதி.

பவாநிகுரு - இமயமலை.

பவாபாவம் - நூலகுணியம்.

பவாயனை - கங்கை.
பவாரண்மியம் - பாவக்கேடு.
பவானி - கோயம்பத்தூருக்கருகிலொரூர், காவிரியாற்றின்கிளைநதி, பார்வதி.
பவி - இடியேறு.
பவிகம் - சிலாக்கியம், மங்களம்.
பவிஞ்சு - பவுஞ்சு.
பவிசி }
பவிஷி } பவுஷி, மானம்.
பவிஷு }
பவிஷியம் } எதிர்காலம், ஒரு புரா
பவிடியம் } ணம், செல்வம்.
பவிதம் - சுத்தம், மிளகு.
பவிதவ்வியம் } சுபம், பாக்கியம்.
பவிதவ்வியதை }
பவித்திரகம் - அத்திமரம், அரசமரம், தருப்பைப்புல், நெய், வலைக்கயிறு.
பவித்திரமுடிச்சு - ஒருவகைமுடிச்சு.
பவித்திரமோதிரம் - பவித்திரமுடிச்சாய்ச்செய்த மோதிரம்.
பவித்திரம் - காணிக்கைப்பாத்திரம், செம்பு, தண்ணீர், தருப்பை, தருப்பைப்புல்லாற்செய்த ஓர்முடிச்சு, துடைத்தல், தூய்மை, தேன், நெய்பூணூல்.
பவித்திரவான் } பரிசுத்தவான்.
பவித்திரன் }
பவித்திராங்குலி - தருப்பைமுடிச்சணிவிரல்.
பவித்திராரோபணம் - பூணூலணிதல்
பவித்திரி - சுத்தன், தருப்பை.
பவித்திரிதம் - சுத்தம்.
பவித்திரீகணம் - நெய்.
பவித்திரீகரணம் - சுத்திசெய்தல்.
பவித்திரை-தூய்மையுள்ளவள், தண்டீசர்தாய்.
பவிநன் - நூலாசிரியன்.
பவிஷ்யத்புராணம் - பிரமன் சூரியன் பெருமையை மநுவுக்குரைத்த பின்னர் அவர் அம்மநுவுக்கு அகோர கற்பத்திலே, லோகோத்பத்திகிரமம் ஸ்ருஷ்டி பேதம் முதலியவற்றையுரைத்ததாகச்சொல்லுவது. இதுமுப்பத்தோராயிரங் கிரந்தமுடையது.
பவுகம் - சுபம்.
பவுஞ்சு - படை.
பவுஷி }
பவுஷு } சம்பிரமம், வாழ்வு.
பவுஷ் }
பவுண்டரம் - வீமன்கையிற் சங்கு.
பவுண்டரிகம் - ஒருயாகம்.
பவுண்டிரகம் - ஒருபலி.
பவுதிகம் - பௌதிகம்.
பவுத்திரம் - பவுந்திரம்.
பவுந்திரர் - பௌத்திரர்.
பவுரணமி } பௌரணை.
பவுரணை }
பவுராணிகம் - பௌராணிகம்.
பவுரி - கூத்தின் விகற்பம்.
பவுரிசம் - போலியானநடை, வேஷம்.
பவுன்சு - ஆடம்பரம், ஐசுவரியம்.
பவேசம் - மோவாய்க்கட்டை, மீசைமயிர்.
பவோற்பவன் - பன்னோருருத்திரரிலொருவன்.
பவ்வம் - பௌவம், கடல்.
பவ்வியம் - சத்தியம், சுபம், பயன்.
பவ்வியன் - சுவாயம்புவ மநுபுத்திரருளொருவன்.
பவ்வியை-உமாதேவி, யானைத்திப்பிலி.
பழகல் - பழகுதல்.
பழகாடி - பழக்கமுடையோன்.
பழகாதபழக்கம் - கெட்டபழக்கம்.
பழகுதல் - இணக்கமாதல், ஊடாடுதல், கற்குதல், பயிலல், வழங்குதல்.
பழக்கம் - அறிமுகம், சாதத்தியம், பயிற்சி, பரிசனை, வழக்கம்.
பழக்கம்பண்ணுதல் - அப்பியாசித்தல், அறிமுகப்படுத்தல், பாவித்தல்.
பழக்காய் - செங்காய்.
பழக்குதல் - அறிமுகப்படுத்தல், பயிற்றல்.
பழங்கஞ்சி - முதனாட்கஞ்சி.
பழங்கணக்காதல் - பழசுபடல்.
பழங்கணனவர் - துயருருவோர்.
பழங்கண் - இளைப்பு, ஒலி, துன்பம், பழுதாய பயனின்மை, மெலிவு.
பழங்கதை-கிழக்கதை, பூருவகதை, பழமொழி, அதுபவக்கதை.
பழங்கிடையன - கெடுநாட்பட்டது.
பழங்குடி - தொன்மரவு, ஆதிகாலத்தேதிய குடி.
பழசு - சாரமற்றது, பழயது.
பழசுபடுதல் - பழயதாதல்.
பழஞ்சாதம் - பழஞ்சோறு.
பழஞ்சுரம் - பழங்காய்ச்சல்.

பழஞ்சொல் - பழமொழி.
பழஞ்சோறு - பழஞ்சாதம்.
பழந்தண்ணீர் - நீர்ச்சோறு.
பழந்தரை - பழநிலம்.
பழந்திருடன் - நெடுநாட்டிருடன்.
பழப்பாசம் - கருஞ்சீரகம்.
பழப்புளி - புளியம்பழக்கனி.
பழப்பேசி - செட்புநெருஞ்சில்.
பழமலை - திருமுதுகுன்றம், விருத்தாசலம் என்னும் பெரிய ஒரு சைவத்தலம்.
பழமலையந்தாதி - சிவப்பிரகாசர்செய்த ஒரு பிரபந்தம், அது கற்பனலங்காரமலிந்துள்ளது.
பழமலை - விருத்தாசலம்.
பழமனை - அழிந்தவீடு, முன்வீடிருந்த நிலம்.
பழமுண்ணிப்பாலை - ஒருமரம்.
பழமை - சாரமின்மை, பூருவம், முதுமொழி.
பழமொழி - ஒரு நீதிநூல், முதுசொல். பதினெண் கீழ்க்கணக்கினு ளொன்று. முன்றுறையரையர்செய்தது, அது நானூறு வெண்பாக்களையுடையது. அதுமுற்றும்நீதியே கூறுவது.
பழமொழித்திரட்டு - ஒருநூல்.
பழம் - கனி, பலன், முதிர்ந்தது.
பழம்பகை - தொந்தப்பகை, நெடுநாட்பகை.
பழம்பஞ்சாரம் - மிகமுதியோர், வெகுநாட்பட்டது.
பழம்பஞ்சுரம் - ஒருபண்.
பழம்பதிநாயகர் - திருப்புனவாயிலிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி பெயர்.
பழம்பழுத்தல் - சொக்கட்டானிலோர் [செய்கை.
பழம்பாசி - ஒருபூடு.
பழம்பாடம் - படித்தபாடம்.
பழம்பொருள் - கடவுள், பழையபொருள், புதையல்.
பழயகாலம் - முற்காலம்.
பழயபடி - முந்தினபிரகாரம்,
பழயபாடல் - முன்னோர்பாடல்,
பழயமனிதர் - முன்னோர்.
பழவடியார் - வழித்தொண்டர்.
பழவினை - ஊழ்வினை, பழம்பகை.
பழனமாக்கள் - பள்ளர்.

பழனம் - மருதநிலம், வயல்.
பழனி - ஒருசுப்பிரமணிய க்ஷேத்திரம், திருவாவினன்குடி.
பழி - குற்றம், நிந்தை, பழியென்னேவல், பொய், பொல்லாங்கு, வயிராக்கியம், விரோதம்.
பழிகட்டுதல் - பழிபிடித்தல், பழிமூட்டுதல், வசைகூறல்.
பழிகாரன் - பழிக்குடக்கைக்காரன், பழிவாங்குவோன்.
பழிகிடத்தல் - யாதொன்றுபெறுவதற்குப் பட்டினி கிடத்தல்.
பழிகூறல் - தூற்றல், அது மும்மொழியினொன்று.
பழிக்குச்செய்தல் - கடன் வழிக்குச்செய்தல்.
பழிக்குடி - எதிரிடைக்குடி, எளியகுடி, பழிக்கிடமா யிருக்குங்குடி.
பழிக்குவிடுதல் - தன்காரியமல்லவென்றுவிடுதல், மறுபெயரிலே பழிவரும்படி விடுதல்.
பழிசுமத்தல் - பழிசுமத்துதல், பழிவைத்து பொறுத்தல்.
பழிசுமத்துதல் - பழியைச்சுமத்துதல், பிறர்மேற் பாரம்போடுதல்.
பழிசூழ்தல் - பழியடைதல், முற்பழி வந்து சேருதல்.
பழிசெய்தல் - தீங்குசெய்தல்.
பழிசொல்லுதல் - பொல்லாங்குசொல் [லல்.
பழிச்சல்
பழிச்சுதல் } துதித்தல்.
பழிச்சொல் - பழமொழி
பழிதீர்தல் - குற்றநீங்கல், சமாதானமாதல், பொல்லாங்கு தீர்தல்.
பழிதீர்த்தல் - குற்றநீக்கல், சமாதானபடுத்தல், பொல்லாங்கு நீங்குதல்.
பழிதூறுதல்
பழிதூற்றுதல் } புறங்கூறல்.
பழிதேடுதல் - பழிகட்டுதல், பொல்லாங்கு செய்தல்.
பழித்தல் - நிந்தித்தல்.
பழிநாணல் - பழிக்கஞ்சுதல்.
பழிபடுசெயல் - தீச்செயல்.
பழிபடுதல் - குற்றப்படல், பழிக்குட்ப [டுதல்.
பழிபிடித்தல் - விரோதங்கட்டல்.
பழிப்படுதல் - குற்றப்படல், பழியேறு [தல்,
பழிப்பனவு - பழிப்பனகாரியம்.

பழிப்பு - நிந்தை, பழி.
பழிமீட்குதல் - பழிதீர்த்தல், பழிவாங்
பழிமுடிதல் - பழிமூட்டுதல். [குதல்.
பழிமுடித்தல் - பழிசாதித்தல், விரோ
தங்கட்டல்.
பழிமூட்டுதல் - கோள்மூட்டுதல்
பழிமூளுதல் - பொல்லாங்குண்டுபடல்.
பழிமொழி - நிந்தனை, புறங்கூறல்.
பழியஞ்சல் - பழிக்கஞ்சுதல்.
பழியிடுதல் - பழியேற்றுதல்.
பழியெடுத்தல் - பழிதேடுதல்.
பழியேறுதல் - பழிபிடித்தல்.
பழியேற்குதல் - பழிக்குடன்படல்.
பழிவருதல் - பழிசுமருதல்.
பழிவாங்கல்-தீமைக்குத்தீமைசெய்தல்.
பழிவேலை - வேண்டா வெறுப்பான
வேலை.
பழிவைத்தல் பழிப்படுத்திச்சொல்லல்.
பழு - ஏணிப்பழு, பழுவென்னேவல்,
விலா, விலாவெலும்பு, பிசாசு.
பழுக்கச்சுடுதல் - பொன்னணியைப்
பழுப்பாக்கல்.
பழுக்கப்போடுதல் - காய் பழமாகும்படி
கிடக்கிற்போடுதல்.
பழுக்கா - பொன்னிறம்.
பழுக்காய் - ஒருநிறம், தேங்காய், பாக்கு.
பழுதாதல் - பழுதுபடல்.
பழுது-குற்றம், சிதைவு, பொய், பொல்
லாங்கு, சேதம், மிடி.
பழுதுபடல் - சீர்கெடல்.
பழுதுபார்த்தல் - திருத்துதல்.
பழுதை-கயிறு,பாம்பு,வைக்கோற்புரி.
பழுத்தபழம் - தீர்க்ககன்வன், பூரணப
லம், முதிர்ந்தவன், விருத்தன்.
பழுத்தல் - கனிதல், பழமாதல், பழுத்த
இலை, பழுப்புநிறங்கொள்ளல், முதிர்
பழுபாகல் - ஒருபாகல், தும்பை. [தல்.
பழுப்படைசுதல் இடைப்பழுப்பேறல்.
பழுப்பு - அரிதாரம், ஒருநிறம், நெய்பு,
பழுத்தலாயிருப்பது.
பழுப்பேறுதல் - பழுப்படைசுதல்.
பழுமரம் - ஆலமரம், பழுத்தமரம்.
பழுவம் - காடு.
பழுவறை - பழு.
பழைசு } பழையது.
பழைது }
பழைமை - தொன்மை.
பழைமைபாராட்டல் - பழைய வுரிமை
களை யெடுத்துப்பேசல்.
பழையது - நாட்பட்டது, பழஞ்சாதம்.
பழையர் - கள்விற்போர், தொல்லோர்.
பழையனூர்நீலி - பழையனூர்வணிகன்
மனைவி.
பழையன் - பாண்டிநாட்டு மோகூர்க்
குறுநிலமன்னன்.
பழையோன் - காடுகாள்.
பளகம் - பவளம், மலை.
பளகு - குற்றம்.
பளபளத்தல் - ஒளிகொள்ளுதல்.
பளபளப்பு - அலங்காரம், ஒளிக்குறிப்பு.
பளாபளா - இன்மைக்குறிப்பு, வியப்
புக்குறிப்பு.
பளபளெனல் - ஒளிக்குறிப்பு.
பளிக்கறை - பளிங்குமண்டபம்.
பளிக்கு-கண்ணாடி, சுக்கிரன், தோணிக்
கயிறு, படிகம்.
பளிச்சட்டியெனல் - பளிச்செனல்.
பளிச்சிடுதல் - ஒளிமின்னுதல்.
பளிச்சுப்பளிச்செனல் - ஒளிக்குறிப்பு.
பளிச்செனல் - ஒளிக்குறிப்பு.
பளிஞ்சி - கப்பலிறுஞ்சான்கயிறு.
பளிதம் - ஓரெண், கருப்பூரம்.
பளிரிடுதல் - பளிச்சிடுதல்.
பளிரெனல் - ஒளிக்குறிப்பு.
பளிர்பளிரெனல் - ஒளிக்குறிப்பு.
பளுவு - பாரம், சுமை.
பளை - வளை.
பள் - ஒருசாதி, ஒருபிரபந்தம்.
பள்ளக்கை - பதிந்தநிலச்சார்பு.
பள்ளச்சி - பள்ளப்பெண்.
பள்ளச்சேரி - பள்ளக்குறிச்சி.
பள்ளத்தாக்கு - இரண்டுமேட்டுக்கூடா
யிருக்குநிலம்.
பள்ளத்தி - பள்ளப்பெண்.
பள்ளம் - ஆழம், தாழ்ந்தநிலம்.
பள்ளயம் - தேவதைகட்குச்செய்யுங்கு
பள்ளர்-உழவர்,ஒருசாதியார். [ளிர்த்தி.
பள்ளாடு - பள்ளையாடு.
பள்ளி - அறச்சாலை, அறை, ஊர், ஒரு
சாதி, கல்லூரி, சிற்றூர், தேவர்,
கோவில், நித்திரை, பட்பெண், பள்
ளிக்கூடம், மக்கட்படுக்கை, மருத
நிலத்தார், முனிவர் வாசம்.
பள்ளி - இடைச்சேரி.

பள்ளிக்கணக்கர் - கற்போர்.
பள்ளிகொண்டபெருமாள் - விட்டுணு.
பள்ளிகொள்ளுதல்-நித்திரைசெய்தல்.
பள்ளிக்குவைத்தல் - பிள்ளைகளைக்கற்க வைத்தல்.
பள்ளிக்கூடம் - கல்விபயிலிடம்.
பள்ளிசெய்தல் - பள்ளிவளர்தல்.
பள்ளிப்பழக்கம் - கல்லூரிப்பயிற்சி.
பள்ளியடைத்தல் - சாலையுண்டாக்கல்.
பள்ளியறை - சயனவறை.
பள்ளியிற்பிள்ளை - கற்போன்.
பள்ளியெழுச்சி-ஒருபிரபந்தம், துயிலெழுப்புகை;நித்திரைவிழித்தெழுதல்.
பள்ளியெழுப்புதல் - நித்திரைவிழிக்கச் செய்தல்.
பள்ளிவளர்தல் - நித்திரைசெய்தல்.
பள்ளு - பள், ஒரு நாடகத்தமிழ்நூல்.
பள்ளுவிலி - ஒருசாதி.
பள்ளை - ஆடு, குள்ளம், வயிறுபருத்தது, வெள்ளாடு.
பள்ளையம் - உண்கலம், தாம்பாளம், படைக்கப்பட்டபலி.
பள்ளையன் - படர்ந்தவன்.
பறக்கடித்தல்-அகற்றல், துரத்துதல்.
பறக்காளி - பறைக்காளி.
பறக்குதல் - பறத்தல்.
பறங்கி - ஒரு மேகவியாதி, பறங்கிப் பாடைக்காரன்.
பறங்கிக்காய் - பூசினிக்காய்.
பறங்கிக்காரன் - ஒருபாடைக்காரன்.
பறங்கிக்கொடி - பூசினிக்கொடி.
பறங்கிக்கிழங்கு - சீதனக்கிழங்கு.
பறங்கிக்கூர்மை - காசிசாரம்.
பறங்கிச்சாம்பிராணி - ஒருமருந்து.
பறங்கிச்சிலைநிறம் - மாங்கிஷச்சிலை.
பறங்கித்தாழை - அன்னதாழை.
பறங்கிப்பட்டை - சீனக்கிழங்கு.
பறங்கிப்பாஷாணம் - ஒரு பாஷாணம்.
பறங்கிப்பாவை - ஒருபாவை.
பறங்கிப்புண் - ஒரு தொற்றுவியாதி.
பறங்கிப்பேட்டை - ஓரூர்.
பறங்கியணிநுணா - ஒருமரம்.
பறங்கியாமணக்கு - ஓராமணக்கு.
பறங்கிவராகன் - ஒருவகைவராகன்.
பறங்கிவியாதி - மிரந்திநோய்.
பறட்டை - சடைவு, செழிப்பற்றது, தழைவற்றது, வளர்ச்சியற்றது.
பறட்டைக்கீரை - ஒருவிதகீரை.
பறண் - பரண்.
பறண்டுதல் - சுறண்டுதல்.
பறதி - அவசரம், பறத்தல்.
பறதிக்காரன் - அவசரக்காரன்.
பறத்தல் - அவசரம்பண்ணல்,கிளர்தல், தூசி முதலிய கிளம்புதல், விரைவாயோடல்.
பறந்தடித்தல் - அவசரப்படுதல்.
பறந்தலை - சுடுகாடு, போர்க்களம்.
பறந்துவிழுதல் - பறந்தடித்தல்.
பறபறத்தல் } சரடுக் கொலிக்குறிப்பு,
பறபறப்பு } சீக்கிரம் பண்ணுதல்.
பறபறவிளையாட்டு - ஒரு விளையாட்டு.
பறபறெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.
பறப்பன - பட்சிசாதி.
பறப்பன் - அவசரக்காரன், தேள், விருச்சிகம்.
பறப்பு - பறதி.
பறப்பை - செய்விடுபாத்திரம்.
பறம்பர் - தோல்வினைஞர்.
பறம்பு - மலை, பாரியென்னும் வள்ளலுடையமலை, முலை.
பறவாதி-பறதிக்காரன்,பேராசைக்காரன்.
பறவை-அவிட்டநாள்,இறகு,ஒருநோய், பறப்பு, புள்.
பறவையின்வச்சிரம் - பொன்னம்பர்.
பறவைவேந்தன் - கருடன்.
பறழ் - அணிலாதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை, ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி, பூனை, மான், முயல் இவற்றின்குட்டி, பருப்பு.
பறளிகை }
பறளை } குறடு, பற்றிரும்பு.
பறுண்டுதல் - பிறுண்டுதல்.
பறுசிடுதல் }
பறுரெனல் } ஒலிக்குறிப்பு.
பறி - பறித்தல்,பறியென்னேவல், பொன், மீன்படுக்குங்கருவி, மீன்பெய்யுங்கருவி
பறிகாரன் - பறிக்கிறவன், வலைஞன்.
பறிகுதல் - கடந்தோடுதல், பெயர்ந்தவழுவுதல்.
பறிகொடுத்தல் - அழியக் கொடுத்தல், களவுகொடுத்தல், பறிக்கக்கொடுத்தல்.
பறிக்கல்லு - கற்கிட்டம்.

பறிக்குதல் - இறக்குதல், கொய்தல், சாய்த்தல், தோண்டுதல், பிடுங்குதல், வலாற்காரமாய் கவர்தல்.
பறிதலையர்-சமணரிலோர் விகற்பிகள்.
பறிதல் - பறிகுதல், வெளிப்படல்.
பறித்தல் - பறிக்குதல்.
பறிமணல் - பொன்மணல்.
பறிமுதல் - பறிக்கப்பட்டது.
பறிய - தூரமாக.
பறியல் - பறிப்பு.
பறியவிடுதல் - தப்பவிடுதல், நெகிழவிடுதல்.
பறிவு - ஒட்டுகை, பறியல்.
பறிவை - சீந்திற்கொடி.
பறுகன் - கட்டையன், சுறட்டையன்.
பறுகு - சிறுதூறு, பறட்டை.
பறுணி - கொன்று, சீந்தில், பெருங்குமிழ், பெருங்குரும்பை.
பறுவதம் - பருப்பதம்.
பறை - இறகு, ஓரளவு, ஓரளவுக்கருவி, சாதி, சொல், பறையென்னேவல், வாச்சியப்பொது, ஒருவகைநோன்பு.
பறைக்கம்பு - பறைவெட்டுங்கம்பு.
பறைக்தாலி, பறைக்கால், பறைக்காளி } ஒருவித புடைவை.
பறைகொட்டுதல் - மேளமடித்தல்.
பறைசாற்றுதல்-பறையடித்தறிவித்தல்
பறைசேவி - சிறுநன்னரி.
பறைச்சல் - பேச்சு.
பறைச்சி - பறைப்பெண்.
பறைதட்டுதல் - பறைமுறையடித்தல், பறைவெட்டுதல், பிரசித்தப்படுத்தல்.
பறைதல் - சொல்லல், தேய்தல்.
பறைநாகம் - ஒருபாம்பு.
பறைபோடுதல் - பறையடித்தல்.
பறைப்பருந்து - கரும்பருந்து.
பறைப்புடையன் - ஒருபாம்பு.
பறைப்பூச்சி - ஒரு சிலந்திப்பூச்சி.
பறைமுழக்கு - பறையொலி.
பறைமுழக்குதல் - பறையடித்தல்.
பறைமுறை, பறைமுறைசாற்றுதல் } பறையடித்தறிவித்தல்.
பறைமேளம் - பறையடிக்குமேளம்.
பறையடித்தல் - பறைமுழக்கிப்பிரசித்தம் பண்ணுதல், மேளமடித்தல்.
பறையர் - ஒருசாதியார்.
பறையறைதல் - பறையடித்தல்.
பறையன் - ஒருசாதியான்.
பறையாமை - கரியவாமை.
பறையூர் - சேரநாட்டினுள்ளதோரூர்.
பறைவு - பறைச்சல்.
பறைவெட்டு - பறைதட்டுதல்.
பற்கம் - பிரபை.
பற்கன் - சிவபிரான், சூரியன், பிரமன், விட்டுணு.
பற்காவி, பற்காறை } பற்கிடுமோர் தூள்.
பற்குச்சி, பற்குச்சு } பற்கொம்பு.
பற்குறி - தந்தரேகை.
பற்குநன், பற்குனன் } அருச்சுநன், பங்குனியுத்தரத்திலே பிறந்தமையின், அவன் இப்பெயர் பெற்றான்.
பற்குனி - உத்திரநாள், பங்குனி.
பற்கொம்பு - தந்தசுத்திக்கம்பு.
பற்சர் - பகைவர்.
பற்சனம் - நிந்தை.
பற்சிராய் - பற்கறள்.
பற்ணி - வல்லாரை.
பற்னை - தண்ணீர்விட்டான் கிழங்கு.
பற்படகம், பற்படம் } ஒருபூடு.
பற்பணம் - ஒருபலம்.
பற்பநாபன் - பதுமநாபன், விஷ்ணு.
பற்பறிகொடுத்தோன் - சூரியன்.
பற்படாமுனி - ஒருமுனி.
பஸ்பம், பற்பம் } தாமரை, தூள், நீறு, பதுமம், விபூதி.
பற்பராகம் - பதுமராகம்.
பற்பரீகம் - அகங்கை, இனிப்பு, சூரியன், தீ, நீர்.
பற்பல - பலபல.
பற்பறித்தல் - பற்பிடுங்குதல்.
பற்பாடகம் - பற்படகம்.
பற்பித்தல் - பற்பமாக்கல்.
பற்பேத்தை - முரசிற்கட்டு.
பற்மகாரன் - வண்ணான்.
பற்மம்-பதுமம், பஸ்மம், பொன், விபூதி.
பற்மராகம்—பதுமராகம்.
பற்மவேதகம் - கருப்பூரம்.
பற்மாசனம் - பதுமாசனம்.
பற்மீகரம் - சாம்பர்.
பற்மீகரித்தல் - பற்பமாக்கல்.
பற்றகற்றி - பாத்திரஞ்சுரண்டுங்கருவி.

பற்றடித்தல் - கல்லுமுதலியவற்றிற்கு ஒட்டிடுதல்.
பற்றம் - கனம், துணையாகப்பிடிக்கை.
பற்றம்பிடித்தல் - இருவர்கைவாருய்த் தாங்குதல்.
பற்றலர் - சத்துருக்கள்.
பற்றல் - ஆசைபெருகுதல், குறித்தல், தொடர்தல், பிடித்தல்.
பற்றவைத்தல் - தீமூட்டல், பொருதவைத்தல்.
பற்றறுதல்-அன்புகெடுதல், பாசபந்தம் விடல், முழுது மற்றுப்போதல்.
பற்றற்ருர் } முனிவர்.
பற்றற்ளேர் }
பற்ருக்கூலி - அற்பகூலி, நாட்கூலி.
பற்ருக்கை - அம்புகட்டுங்கயிறு,கட்டுங் கயிறு.
பற்ருசு - இருகுறளேணரிசைவெண்பா விற்கிடைவருவது, உலோகங்களைப் பொருத்தவிடையிடுந் துண்டு.
பற்ருதது - அலட்சியமானது, போதா
பற்ருதவர் - அலட்சியமானவர். [தது.
பற்ருப்படி } அரும் பூட்டு, கு
பற்ருப்பணயம் } றைவு.
பற்ருப்பொரி - சரியற்றவெதிரி.
பற்ருர் - பகைவர்.
பற்றி - குறித்து, பற்ருசு.
பற்றிக்கொள்ளல் } தொடர்ந்து நிற்ற
பற்றிப்பிடித்தல் } ல், நன்ருய்ப் பிடித்தல்.
பற்றிரும்பு - அன்ளு.
பற்றிலி - துறந்தோன்.
பற்றினர் - உறவோர், சிநேகிதர்.
பற்று - அறவிட்டது, அன்பு, ஆசை, இசைவு, உலோகங்களைப் பொருத்துங்கூட்டு, சம்பந்தம், சிற்றூர், சேர்வை, தொடர்ச்சி, பசை, பற்றெனேவல், பிடி, பொத்து, மண்டி, வாரப்பாடல்.
பற்றுக்கால் - தாபரம்.
பற்றுக்குறடு - ஒரு கம்மக்கருவி.
பற்றுக்கொள்ளுதல் - அன்புவைத்தல், ஆசை கொள்ளுதல்.
பற்றுக்கோடு } ஊன்றுகோல், தஞ்
பற்றுக்கோல் } சம்.
பற்றுதல் - அன்பு, ஊன்றிப்பிடித்தல், தீப்பற்றுதல், நம்பிக்கை, பிடித்துக் கொள்ளுதல், பொருந்துதல், வாங்குதல்.
பற்றுப்பூசுதல் } பொருந்தப் பசை
பற்றுப்போடுதல் } போடுதல்.
பற்றுவரவு - கொடுக்கல்வாங்கல்.
பற்றுவாய் - திரிவாய்.
பற்றுவீடு - இனமுதலிய துறத்தல்,பாசம் விடுகை.
பற்றுவைக்குதல் - அன்புவைக்குதல், ஆசை கொள்ளுதல், தண்டிட்டு விலக்குதல்.
பற்றை - சிறுதூறு, செங்காந்தள்.
பற்றைச்சி - சோரஸ்திரீ.
பற்றைப்பிள்ளை } சோரபுத்திரன்.
பற்றையன் }
பனங்கட்டி - பனைவெல்லம்.
பனங்கந்து - பனைத்திரள்.
பனங்கள் - பனைமரத்தி லிறக்குங்கள்.
பனங்கறுக்கு - இளம்பனை. [ழை.
பனங்கற்றுழை- பனையிலுண்டாகுந்தா
பனங்காட்டீசர் - திருப்பனங்காட்டூரி லேகோயில்கொண்டிருக்குஞ்சுவாமி பெயர்.
பனங்காய் - பனையிற்காய்.
பனங்கிழங்கு - பனைவித்திற்கிழங்கு.
பனங்கிளி - அன்றில், ஒருகிளி.
பனங்கீரை - ஒருகீரை.
பனங்கொடியோன் - பலராமன்.
பனங்கொட்டை - பனைவிரை.
பனங்கோரை - ஒருபுல்.
பனசம்.-ஈரப்பலா, பலாமரம், முள்ளு.
பனசயித்தி - அரசு.
பனசை - ஒருபட்டினம், ஒருபாம்பு, ஒருவிதக்கொப்புள அம்மை.
பனநார் - பனைநார்.
பனந்தாமன் - பலபத்திரன்.
பனந்தாரான் - சேரன், பலபத்திரன்.
பனந்தாழை - ஒரு கற்றுழை.
பனம்பழம் - பனங்கனி.
பனம்பாகு } பனங்கட்டிப்பாணி.
பனம்பாணி }
பனம்பாரனர்-இவரே தொல்காப்பியத் திற்குப் பாயிரஞ் செய்தவர். பனம் பாரமென்னும்சூத்திரம் செய்தாரும் இவரேபுறப்பொருட் பன்னிரு படலம்செய்த ஆசிரியர், அகத்தியர் மாணக்கர் பன்னிருவருள் இவரும் ஒரு

வர், இவர் தொல்காப்பியரைப் போலவே தலைச்சங்கத் திறுதிக்காலத்திலிருந்தவர்.

பனம்பிடுக்கு - பனம்பூ.

பனம்பூ - ஆண் பனைப்பாளை.

பனர் - கிளை.

பனவம் - சிறுதம்பட்டம்.

பனவர் - பார்ப்பார்.

பனவோலை - பனையோலை.

பனாட்டு - பனங்களியிலட்டடி.

பனாட்டுத்தோல் - தோற்பனாட்டு.

பனாட்டுப்பாய்-பனங்களிபெய்யும்பாய்.

பனார் - தம்பு.

பனி-அச்சம், இக்கட்டு, குளிர், துக்கம், துளி, நடுக்கம், பயம், பனியென்னேவல், பெய்யும்பனி.

பனிகாலம் - மார்கழி முதலிய நான்கு மாசம்.

பனிக்கஞ்சி - தாமரை.

பனிக்கட்டி - உறைந்தபனி, உறைந்த மழை.

பனிக்கதிர் - சந்திரன்.

பனிக்காற்று - குளிர்காற்று.

பனிக்குடம் - பன்னீர்க்குடம்.

பனிக்குதல் - பனித்தல்.

பனிக்கூர்மை-இந்துப்பு, சிந்தலவணம்.

பனிச்சா - கஞ்சாங்கோரை.

பனிச்சாமை - ஒருசாமை.

பனிச்சை - காட்டத்திமரம் பின்னிமுடிக்கு மயிர்ச்சுருள், அது ஐம்பாலில் ஒன்று.

பனிதாங்கி - ஒருபூடு.

பனித்தல் - இடைவிடாது மழைபெய்தல், துளித்தல், தூறல், நடுங்கல், வருந்தல்.

பனிநத்தை - ஒருநத்தை.

பனிநீர் - ஒருவாசனை நீர்.

பனிப்பகை - சூரியன்.

பனிப்படலம் - பனிச்செறிவு.

பனிப்பயறு - ஒருபயறு.

பனிப்பருவம் - பனிகாலம்.

பனிப்பு - பனித்தல்.

பனிப்புகட்டு - பனியிறைப்பு.

பனிப்புகார் - பனிமேகம்.

பனிப்புழு - சேற்றுப்புழு, பனியிலுண்டாகும் புழு.

பனிப்பூக்காரம் - பனிமக்குளம்.

பனிப்பூடு - ஒருபூண்டு.

பனிப்பெயர்தல் - பனியுண்டுபடுதல்.

பனிப்பெய்தல் - பனிசொரிதல்.

பனிமலை - இமயமலை.

பனிமேகம் - வெண்மேகம்.

பனிமொழி குளிர்ந்தமொழி, பெண்.

பனியவரை - ஓரவரை.

பனிவரை - இமயமலை.

பனுக்குதல் - தெளித்தல்.

பனுவலாட்டி - சரச்சுவதி.

பனுவல்-ஆகமம், கல்வி, சொல், நூல், பஞ்சிநூல், புலமை.

பனை - அனுடநாள், ஒருமரம்.

பனைக்கொடியோன் - பலபத்திரன், வீடுமன்.

பனைசை - பனையூர், பனப்பாக்கம்.

பனைமடல்-பனைமட்டை, பனையோலை.

பனைமீன் - யானைமீன்.

பனைமுகிழ்-பனங்காய்முகிழ்.

பனையன் - ஒருநோய், ஒருபாம்பு, ஒருமீன்.

பனையேறி - ஒருகுருநோய், ஒருபாம்பு.

பனைவட்டு - பனைவெல்லம்.

பனைவாரை - பனைமரக்கீற்று.

பனைவெட்டு - பனைவெல்லம்.

பன் - ஒருபுல், பத்தின்சிதைவு, (உ-ம்) பன்னொன்று, பன்மை, பன்னென்னேவல்.

பன்பாய் - புற்பாய்.

பன்மணிமாலை ஒருபிரபந்தம் அது ஒருபோது அம்மனையும் ஊசலுமீக்கி மற்றை யுறுப்புக்களெல்லாங் கலம்பகம்போலமையக்கூறுவது.

பன்முறைக்கருவியர் -படைக்கும்உற்சவதுக்குக் கொட்டுவோர்.

பன்மூன்று - பதின்மூன்று.

பன்மை - பலவாகியதன்மை.

பன்மைபண்ணுதல் - கண்டுசாய்த்துவிடுதல்.

பன்மைப்பால் - பலவின்பால்,

பன்மைப்பொதுப்பெயர் - பன்மைப்பால்கட்குரியபொதுப்பெயர் (உ-ம்) செவியிலி.

பன்மையாய்விடுதல் - கண்டுசாய்ப்பாய்விடுதல்.

பன்மொழித்தொகைத்தொடர் - பலமொழி தொடர்ந்ததிற்குத் தொகைநிலை, (உ-ம்) செங்கிறக்குவளை.

பன்றி - ஒருமிருகம், கொடுந்தமிழ்நாட்டிலொன்று.

பன்றிக்காணம் - ஒருகாணம்.
பன்றிக்கிடை - பன்றிக்கூடு.
பன்றிக்குளி - ஒருவிதமீன்.
பன்றிக்குறும்பு - நிலப்பனை.
பன்றிக்கொவ்வை - ஒருகொவ்வை.
பன்றிச்சுருங்கு - ஒருதண்டனை, கூன் வாங்கிக்கட்டுதல்.
பன்றித்தகரை - ஒருதகரை.
பன்றிநெல் - ஒருநெல்.
பன்றிப்புல் - ஒருவகைப்புல்.
பன்றிமயிர் - எய்ப்பன்றிமயிர்.
பன்றிமொத்தை - சிறுகுரட்டை.
பன்றிவெட்டுதல் - ஒருவிளையாட்டு.
பன்னகசாலை - பன்னசாலை.
பன்னகண்டம் - மரம்.
பன்னகம் - சீதரங்கபாஷாணம்,பாம்பு.
பன்னகவைரி - கருடன்.
பன்னகாசனன் - கலுழன், விட்டுணு.
பன்னகாபரணன் - சிவபிரான்.
பன்னகாரன், பன்னக்காரன் - பன்னவேலைசெய்பவன்,வெற்றிலைவாணிபன்.
பன்னசந்தரம் - இலைமெத்தை.
பன்னசாலை - புல்வீடு,முனிவர்வாசம்.
பன்னசி - தாமரை, வசந்தமண்டபம்.
பன்னச்சத்தகம் - காப்புச்சத்தகம்.
பன்னத்தண்டு - நெய்வார் கருவியில் ஒன்று.
பன்னத்தை - பனிநத்தை.
பன்னநரன் - சாச்சடங்கிற் கிலையாற் செய்யப்பட்ட மனுவடிவு.
பன்னபோசனம் - இலையுணவு.
பன்னமாசாலம் - ஒருமரம்.
பன்னமிருகம் - இலையுண்ணும் விலங்கு.
பன்னம் - இலை, ஓலை முதலியவற்றாற் பின்னும் வேலை, பத்திரி, பலாசு, வெற்றிலை.
பன்னலதை - வெற்றிலைக்கொடி.
பன்னல் - சொல்லுதல், தேர்தல், நெருங்கல், பருத்தி.
பன்னவல்லி - பன்னலதை.
பன்னவேலை - ஓலை முதலியவற்றாற் பின்னும்வேலை.
பன்னாக்கு - தண்டிகைப் பன்னாணம், தென்னோலைப்பன்னாக்கு.
பன்னாக்குழி - பதினான்கு குழியுள்ள ஒரு விளையாட்டுத்தட்டு.
பன்னாகம் - துளசி.
பன்னாசனம் - இலையுணவு, புற்பாய், புன்மெத்தை, முகில்.
பன்னாசி - ஒருதுளசி.
பன்னாடை - நெய்யரி.
பன்னாணம் - பன்னாக்கு.
பன்னாலம் - தெப்பம்.
பன்னான்குழி - பன்னாங்குழி.
பன்னி-குருவின்றேவி,சணல்,மனைவி.
பன்னிணவிலைஞர்-ஆட்டுவாணிகர்.
பன்னிரடாண்டித்தர் - துவாதசாதித்தர்.
பன்னிருபடலம் - அகஸ்தியர்மாணாக்கர் பன்னிருவராலும் செய்யப்பட்ட புறப்பொருணூல் இது தற்காலம் எங்கும் கிடைப்பது அரிதா யிருத்தலால் முற்காலத்திலேயே இறந்தொழிந்ததுபோலும்.
பன்னீர் - ஒருவாசனைநீர், கருப்பைநீர், காயத்திற்பாயுநீர்.
பன்னீர்க்குடம் - கருப்பத்தைச் சூழ்ந்த நீர்ப்பை.
பன்னீர்க்குப்பி, பன்னீர்ச்செம்பு, பன்னீர்த்துருத்தி - பன்னீர் தூவு கருவி.
பன்னீர்மரம் - ஒருபூமரம்.
பன்னீர்வடித்தல்-பன்னீர்காய்ச்சுதல்.
பன்னு - வரி.
பன்னுதல் - பன்னல்.
பன்னுமல் - புல்லுமல்.
பன்னை - ஒருசெடி, கருப்பூரம், சூடன்.
பன்னொன்று - பதினொன்று.
பஃறுளி - குமரியாற்றிற்குத் தெற்கே யுள்ளதோராறு. இது ஆதிகாலத்தில் கடல் கொள்ளப்பட்டது. இதனை யுள்ளிட்ட நாற்பத்தொன்பது நாடுகள் கடல்கொண்டழிந்த காலத்தே தலைச்சங்க மிருந்த தென்மதுரையும் அவற்றோடு அழிந்ததென்பது சிலப்பதிகாரவுரையினால் இனிது விளங்கும். அதுவருமாறு, "முதலூழியிறுதிக்கண் தெனமதுரையில் தலைச்சங்கத்து சயமா கீர்த்தியானாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்திவைத்தான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றிற்கும், குமரி

யென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவாலென்ன மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல்கொண்டழிதலால்" என்பது "வடிவேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ள" என்பதனுலும் அது வலியுறுத்தப்படும்.

பா

பா - அழகு, ஒரெழுத்து, கடிகாரவூசி, கிழக்குப்பா, நிழல், நெசவுபா, பஞ்சிநூல், பரப்பு, பரவுதல், பாட்டு, பாவென்னேவல், பிரபை, வெண்பா முதலியவைந்துபா அது இரண்டுமுதலிய வடிகளாலுக்கப்பட்ட பிரபந்தம்.

பாகஎக்கியம் - அஷ்டகம், பாம்வணம், ஸ்தாலிபாகம், சிரார்த்தம், மாசிகம், சர்ப்பபலி, ஈசாநபலி, ஆக்கிரஹாயணம் முதலிய எக்கியங்கள்.

பாககம் - பிரிக்குந்தொகை.

பாகசம் - ஒருவகையுப்பு, சூலம்.

பாகசாஸநன் - இந்திரன், விருத்திராசுரனுடைய சகோதரனாகிய பாகாசுரனைக் கொன்றவனாதலால் இவனுக்கு இப்பெயர் உண்டாயிற்று.

பாகசன் - ஒரிராக்கதன்.

பாகசாசனி } அருச்சுனன், இந்திரன் மகன், சயந்தன்.
பாகசாதனி }

பாகசாதனன் - இந்திரன்.

பாகசாலை - மடைப்பள்ளி.

பாகண்டன் - வெளிவேஷக்காரன்.

பாகதம் - எல்லாநாட்டுமேலோர்மொழி.

பாகதாரி - சமையற்காரன்.

பாகதானம் - மடைப்பள்ளி.

பாகபாண்டம் சமையற்பாத்திரம்.

பாகபுடி - குயவன் சூளை.

பாகப்படுதல் - சமைக்கப்படுதல், பக்குவப்படல், பதப்படுதல்.

பாகப்படுத்துதல் - சமைத்தல், பக்குவப்படுத்தல்.

பாகமாகுதல் - பாகப்படுதல்.

பாகம் - அச்சம், ஆந்தை, ஒருகணிதம், ஒரு பிசாசம், சமித்தல், சமைத்தல், செய்யுள்நடை, தேசபயம், நரை மயிர், நான்குமுழங் கொண்டவளவு, பக்கம், பக்குவம், பங்கு, பானை, பாதி, பாத்திரம், பிச்சை, புயம், ஒருவகைத் தோற்கருவி.

பாகம்பண்ணுதல் - சமைத்தல், பகுத்தல், பக்குவப்படுத்தல்.

பாகர் - யானை குதிரை முதலியவற்றை நடத்துவோர்.

பாகலம் - குதிரை, யானைநோய்.

பாகலன் - உன்மத்தன்.

பாகல் - ஒருகொடி, பலா, வெட்பாவட்டை.

பாகவதம் - பதினெண் புராணங்களுள் ஒன்று. இது பன்னிரண்டு ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பத்தாங்கந்தம் ஒன்று மாத்திரம் பூர்வபாகம் உத்தரபாகம் என இருவகையாய்ப் பகுக்கப்பட்டிருக்கிறது. முதல்கந்தத்தில் மாயவன் அமிசாவதாரம், ஸ்ரீநாரதர் தோற்றம், தர்மபுத்ரன் அரசியல் முதலியவைகளும், இரண்டாங்கந்தத்தில், மாயவன் நிலை, சௌநகாதியர் அன்பின்நிலை, முதலியவைகளும், மூன்றுங்கந்தத்தில் மைத்ரேயர் விதுரனுக்குத் தத்வம் உணர்த்தல், மலரவன்தோற்றம் முதலியவைகளும், நான்காங் கந்தத்தில் மரீசி முதலியோர் படைப்பு, தக்கன் வேள்வி யழிவு முதலியவைகளும், ஐந்தாங்கந்தத்தில்பிரியவிரதன்மரபு, பரதன்சரித்திரம்முதலியவைகளும், ஆறுங்கந்தத்தில் அஜாமிளன்கதை, தக்கன் படைப்பு நாராயண கவசம் முதலியவைகளும், ஏழாங்கந்தத்தில் சிசுபாலன் வீடுபேறு, இரணியவதை முதலியவைகளும், எட்டாங் கந்தத்தில் மநுக்கள் வரலாறு, கஜேந்த்ர மோட்சம், க்ஷீராப்திமதநம் முதலிய

வைகளும், ஒன்பதாங்கந்தத்தில் இளன்கதை, சையாதிகதை, அப்பரீடன்கதை, இக்ஷ்வாகுன்கதை, ஹரிச்சந்திரன்கதை முதலியவைகளும், பத்தாங் கந்தத்தில் ஸ்ரீ கண்ணபிரான் திருவவதாரம், பூதனைவீடுபேறு, சகடமுதைத்த சரித்திரம், மருதிடைத் தவழ்ந்த சரித்திரம், ப்ருந்தாவந மடைந்தசரித்திரம் அரவின்மேலாடிய சரித்திரம், வேய்ங்குழ லிசைத்தல், கோபியர் துகில் கவர்தல், வேள்வி மங்கையர் உணவளித்தல், கோவர்த்தந மெடுத்தல், கோபியரை மணத்தல் முதலியவைகளும், பதினொன்றாங்கந்தத்தில் இருப்புலக்கைபெறல், வசுதேவர்க்கு நாரதர் தத்வம், உரைத்தல், உத்தவர்தத்வம்வினவுதல், ஞானகர்மம், உரைத்தல், யோகசித்தி உரைத்தல், இயமநியமாதி உரைத்தல், முதலியவைகளும், பன்னிரண்டாங்கந்தத்தில், கலிதர்மம், கற்கியவதாரம், பரிக்ஷித்து வீடுபேறு முதலியவைகளும் விசதமாகக் கூறப்பட்டுள்ளன.

பாகவதர் - விட்டுணு சமயத்தவர்.

பாகவிரோதி, பாகவைரி, பாகசூதநன் } இந்திரன்.

பாகனம் - ஒருவருடம்.

பாகன் - சங்கம்வாங்கி, நடத்துவோன், புதன், விருத்திராசுரன் தம்பி, இவன் தன் தமையனாகிய விருத்திராசுரனை இந்திரன் கொன்றதைக் கேட்டு தான்வந்து அவ்விந்திரனை யெதிர்த்துப் போர்செய்து அவனாலேயே கொல்லப்பட்டான், இவனைக் கொன்றதனால் இந்திரனுக்குப் பாகசாசநன் என்னும் பெயர் உண்டாயிற்று.

பாகாரம் - பங்கிடுதல், பிரிவுகணக்கு.

பாகாரி - இந்திரன், வெண்பொன்.

பாகிநாய் - பக்குவன்.

பாகிடுதல் - பங்கிடுதல்.

பாகிநேயன் - மருமகன்.

பாகியம் - புறம்பானது.

பாகியேந்திரம் - புறவுறுப்பு.

பாகீடு - பங்கீடு.

பாகீரதி - கங்கை.

பாகு - கரை, கற்கண்டு, குழம்பு, சத்தி, சருக்கரை, தலைப்பாகு, பங்கு, பரணிநாள், பாகன், பாக்கு, பால், பிச்சை, புயம்.

பாகுடம் - அரசிறை.

பாகுபடுதல் - பகுக்கப்படுதல்.

பாகுபாடு - பகுப்பு.

பாகுரி - இலக்கணி.

பாகுலம் - கார்த்திகைமாதம்.

பாகுவன் - படையன். [பூசை.

பாகேக்கியம்-பிதிர்பூசை, வைசுவதேவ

பாகை - தலைப்பா, பகுதி, வட்டத்தின் முந்நூற்றறுபதி லொருபங்கு.

பாகோடன் - சூரியன்.

பாக்கபுரேசர் - திரு அச்சிறுபாக்கத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

பாக்கம் - ஊர்ப்பொது, நெய்தனிலத்தூர், மருதநிலத்தூர்.

பாக்கல், பாக்கல்லு } பாவுகல்.

பாக்கன் - பூனை.

பாக்கானூல் - பாவினூல்.

பாக்கி - நிலுவை.

பாக்கியசாலி - அதிட்டமுள்ளவன்.

பாக்கியத்தானம் - சென்மத்துக்கு ஒன்பதாமிடம்.

பாக்கியம் - அதிட்டம், கஷாயம், சித்தி, செல்வம், தனம், பேறு.

பாக்கியலட்சுமி - அட்டலக்குமியில் ஒன்று இது செல்வந் தருவது.

பாக்கியவதி - செல்வி.

பாக்கியவான் செல்வன்.

பாக்கியானுகூலம் - செல்வப்பேறு.

பாக்கு எதிர்காலவிடைச்சொல் (உ-ம்) உண்பாக்குவந்தான், துவர்க்காய்.

பாக்குக்கட்டுதல் - ஒரு விளையாட்டு.

பாக்குச்சாரம் - பாக்குச்சாறு, பாக்கு வெற்றிலைத் தம்பலம்.

பாக்குப்பறித்தல் - மணமுடிக்க வருமணவாளனது சயஞ் சோதித்தல்.

பாக்குப்பை - அடைப்பை.

பாக்குப்போடுதல் - ஒருவிளையாட்டு, பிளவிலையருந்தல்.

பாக்குவெட்டி - பாக்குச்சீவுங்கருவி.

பாக்குவெற்றிலைப்பை - அடைப்பை.

பாங்கம் - பலண்டுறுவபாஷாணம்.

பாங்கர் - இடம், தோழர், பக்கம்.
பாங்கன் - தோழன்.
பாங்கி - தோழி.
பாங்கு - அழகு, இடம், இணக்கம், உரிமை, தகைமை, பக்கம், மாதிரி, முறை.
பாங்குபண்ணல் - சிறப்பித்தல்.
பாங்குமம் - கருஞ்சீரகம்.
பாசகத்திரி - சமயற்காரி.
பாசகம் - சூதாடுகருவி, மடைத்தொழில், மூலாக்கினி.
பாசகரன் - காலன், நமன், வருணன், விநாயகன்.
பாசகர் - மடையர்.
பாசகர்ணன் - சுமாலி புத்திரன்.
பாசகரன் - யமன்.
பாசகன் - அக்கினி, சமையற்காரன்.
பாசகுசுமம் - இலவங்கம்.
பாசக்கட்டு - பிரபஞ்சக்கட்டு.
பாசக்கயிறு - பாசம்.
பாசங்களிவீங்கல் - நிருமலமாதல் இது சிவனெண் குணத்தொன்று.
பாசஞானம் - உலகஞானம்.
பாசடம் - வெற்றிலை.
பாசடை - பச்சிலை.
பாசண்டத்துறை - சமயக்கட்டினிலை.
பாசண்டம் - சமயக்கட்டு தொண்ணூற்றாறு சமயங்களின் சாத்திரக்கோவை, வைதிக சமயக் கொள்கை யோடு அவைதிக சமயக் கொள்கையையும் எடுத்து விதிப்பது பாசண்ட சமயமெனப்படும்.
பாசண்டர் - சமயிகள்.
பாசதரன் - காலன், நமன், வருணன், விநாயகன்.
பாசநாசம் - பந்தநாசம்.
பாசநாசன் - கடவுள்.
பாசபந்தம் - கண்ணி, மலபந்தம்.
பாசபந்தர் - பாசநீங்காதோர்.
பாசபந்திகள் - பாசசம்பந்தர், மலசம்பந்தர்.
பாசபாணி - சிவன், யமதூதரில் ஒருவன், யமன், வருணன், விநாயகன்.
பாசபெந்தர் - பாசபந்திகள்.
பாசபேயம் - ஒருயாகம்.
பாசமோசனம் - பாசநாசம்.
பாசமோசகன் - கடவுள்.

பாசம் - அழகு, அன்பு, இருள், ஊசித்துளை, ஓரளவைப்பிரமாணம், ஒருபடைக்கலம், கட்டு, கண்ணி, கயிறு, கவசம், கற்பாவநாணம், சிவனாயுதம், சிரகம், சுற்றம், நமனாயுதம், நூல், பலபந்தம், பாசக்கயிறு, பாசி, பிசாசம், மாயை, விலங்கு.
பாசரகிதன் - கடவுள்.
பாசருகம் - அகில்.
பாசலம் - காற்று, தீ, தீயிலாப்பாகம்.
பாசவபாலனம் - புற்றரை.
பாசவர் - இலையமுறிடுவோர், கயிறுதிரித்துவிற்போர், பச்சையிறைச்சி கூட்டிறைச்சி விற்போர்.
பாசவிமுக்தன் - கடவுள்.
பாசவிமோசனம் - மலநீங்கல்.
பாசவிமோசகன் - கடவுள்.
பாசவைராக்கியம் - பிரபஞ்சவெறுப்பு.
பாசறை - ஒருமரம், துன்பம், பகைமேற்சென்றோருறைவிடம், மணியாசிப்பலகை.
பாசறைமுல்லை - ஒருநூல், அது பாசறைத் தலைமகன் றலைவியை நினைத்தல்.
பாசனகம் - பருகுவன்.
பாசனம் - அக்கினி, உண்கலம், உறவு, ஒருமருந்து, நிவிர்த்தி, பங்கு, பாண்டம், பாத்திரம், பிரிவுக்கணக்கு, புளிப்பு மட்கலம்.
பாசன் - இயமன், ஒருமுகிவன், சிவன், வருணன்.
பாசாங்கடித்தல் - மாரீசம்பண்ணுதல்.
பாசாங்கடி - இல்லதை யுள்ளதாய்க்காட்டல், பாவனை, மாரீசம்.
பாசாங்கு - மாரீசம்.
பாசாங்குகாரன் - எத்தன், தந்திரி, பாவனைகாரன்.
பாசாங்குசன் - விநாயகன்.
பாசாங்குசை - சத்தி.
பாசாங்குசதரன் - விநாயகன்.
பாசாங்குபண்ணுதல் } மாரீசம் பண்ணுதல்.
பாசாங்குபோடுதல் }
பாசாண்டம் - பாசண்டம்.
பாசாண்டர் - பாசண்டர். [தல்.
பாசாபந்தம் - மாயையால் மறைக்கப்படு
பாசாபாசம் - அம்புக்கட்டு, கயிறு.
பாசானபேதி - செப்புநெருஞ்சில்.

பாசி - கன்னியேற்றுவோன், கரியமணி, சடைச்சி, சமைத்தல், நமன், நாய், நீர்ப்பாசி, நெட்டி, பலம், புல்லுருவி, மீன், வருணன்.

பாசிதம் - ஈவு, பிரித்தானது.

பாசித்திரளை - மீன்றிரளை.

பாசிபடர்தல் } பாசிபிடித்தல்.
பாசிபற்றல் }

பாசிப்படை - பலமுள்ளபடை.

பாசிப்பயறு - ஒருவகைப்பயறு.

பாசிமணி - கரியமணி, பச்சைமணி.

பாசிலை - பச்சிலை.

பாசிவிலை - மீன்விலை.

பாசு - தைரியம், பசுமை, பச்சைமூங்கில்.

பாசுபதம் - உட்சமயமாறினொன்று, பசுபதிபாணம், பசுபதியுடையது.

பாசுபதர் - பாசுபத சமயத்தோர்.

பாசுபதன் - பாசுபதசமயி. சிவபிரான் விபூதி, சடைமுதலியவைதரித்த திருக்கோலமாய்த் தோற்றித் தன்னடியார்க் கருள்செய்வன் என்பவன். இவன் அகப்புறச்சமயிகளு ளொருவன்.

பாசுபதாத்திரம்:- சிவபிரான்பாணம்.

பாசுபதி - ஒருயாகம்.

பாசுபதேசுவரர் - திருவேட் களத்திலும் திருமுல்லை வாயிலிலும் கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர். இது அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரங் கொடுத்ததனால் உண்டான பெயர்.

பாசுபாலியம் - பசுக்காத்தல்.

பாசுரம் பாட்டு, வசனம், வேய்ங்குழலோ

பாசுவசுரேணி காட்டாமணக்கு. [சை.

பாசூர்நாதர் - திருப்பாசூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

பாஸ்கரராமாயணம் - பாஸ்கரரால் செய்யப்பட்ட இராமாயணம், இது பாஸ்கரர், அவர் குமாரனாகிய மல்லிகார்ஜுநபட்டு, சிடனாகிய குமார ருத்ரதேவன், சிநேகிதனாகிய ஐயலார்யன் என்னும் இந்நால்வராலும் செய்யப்பட்டது, ஆயினும் பாஸ்கரர் முக்கியராதலால் பாஸ்கரராமாயணம் எனப்பட்டது. இது இவ்வாறியற்றப்பட்டதற்குக் காரணம் அந்தக் காலத்தில் இவருக்கு ஆசிரியனாயிருந்த அரசனிடத்தில் இவரது உறவினனாகிய அரங்கநாதன் என்பவன் அரசனது கட்டளையால் திவிபதராமாயணமொன்று செய்யத் தொடங்கும்போது அவரிடத்தில் தமக்குண்டாயிருக்கிற இயற்கையாகியபொறாமையால், அரசனை நோக்கி உன்பெருமைக்கு திவிபதகாவியம் தகுந்ததன்று, நான் பத்யகாவ்வியம் செய்துகொண்டு வருகிறேன், அதனையேற்றுக்கொள் என்று சொல்ல, இவர்சொன்னசொல்லைத் தடுக்கவொண்ணாமையாலும், அரங்கநாதனது கிரந்தத்தையே யேற்றுக் கொள்ள வேண்டு மென்னுங் கருத்தின்மை யாலும், எவர் முன்னே கொண்டு வருகிறார்களோ அவரது கிரந்தத்தை யேற்றுக்கொள்வேனென்று சொல்லி அனுப்பினான். அப்போது அரங்கநாதனது இராமாயணம்மூன்றுபங்குமுடிந்திருந்தது, ஆகையால் இவர் அதுமுடிவதற்குமுன்பே தனது இராமாயணத்தை முடித்துக்கொண்டு போகவேண்டும் என்றும், எண்ணங்கொண்டவராய், மேற்சொல்லப்பட்ட மூவரது உதவியாலும் விரைவில் முடித்துக்கொண்டு அரசனிடம் போயினர். அப்போது அரங்கநாதன் தனது இராமாயணத்தை முடித்து அரசனது ஆஸ்த்தானத்துக்குக் கொண்டுவந்திருந்தான். அதைப்பார்த்து அரசன் அரங்கநாதன் பக்கத்தில் வலது கையையும், பாஸ்கரர் பக்கத்தில் இடது கையையும் நீட்டினான். அதற்கு பாஸ்கரர் கோவங்கொண்டு, பசுபாத முன்னை உன்னையொத்த அரசனுக்கு என்கவியை ஏர்ப்பிப்பதைப் பார்க்கிலும் ஒரு குதிரைக்காரனுக்கு ஏர்ப்பிப்பது நன்மையாமென்று சொல்லிக்கொண்டே ஆஸ்த்தானத்தை விட்டு வெளிப்பட்டுப் போகும்போது, அவ்வரசனுடைய குதிரைக்காரன் வந்து, கவிசார்வபௌமனே, நீசொன்னசொல் தவறுதே யென்று வழிதடுத்துக் கும்பிட்டான். அவ்வளவில் இவர் அவனுக்குத்தன்கிருதியையேற்பித்தனர் அதனாலேயே காவ்யாரம்பத்தில், "ஸாஹிணிமாரா" என்று ஸம்போதித்துச்சொல்லப்பட்டிருக்கின்றது

பாஸ்கராசாரியர்- இவர்ஒருபிரபலஜோதிஷ கிரந்தகர்த்தா, பீஜகணிதம்செய்தவர் இவரே இந்த பீஜகணிதத்தில் வருக்க சங்கரணவிதி யென்று சொல்லப்படுவதாகிய ஒரு அருமையாகிய கணிதவிதி சொல்லப்பட்டிருக்கின்றது. இவர் எழுநூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.

பாஸ்வரர் - ஒருதேவகணத்தார், இவர் அறுபத்து நால்வர்.

பாசை - சமைத்தல், பாஷை.

பாச்சல் - எழுச்சி, பாய்தல்.

பாச்சி - பாச்சிகை, பால்.

பாச்சிகை, பாச்சிக்கை } சொக்கட்டான் கவறு.

பாச்சியம்-பங்கு, பிரிக்கப்படுந்தொகை.

பாச்சுருட்டி, பாச்சுற்றி } தறிமரம்.

பாச்சை - ஒருவண்டு.

பாச்சையடித்தல் - வண்டூதல்.

பாச்சொற்றி - பாற்சொற்றி.

பாஞ்சசத்திகம் - வாத்தியப்பொது.

பாஞ்சசன்னியதரன் - விட்டுணு.

பாஞ்சசன்னியம் - ஒடு,ஒருமீன்,கிருட்டிணன் சங்கு அது சலஞ்சலமாயிரஞ்சூழ்ந்தது, தீ.

பாஞ்சசங்கியம் - விஷ்ணுசங்கம், பஞ்சசநன்என்னும் அசுரனது எலும்பினாற் செய்யப்பட்டதாகையால், இந்தச் சங்கத்துக்குஇப்பெயருண்டாயிற்று.

பாஞ்சராத்திரம்-ஐந்துநாளளவும்பிரமாவுக்கு விட்டுணு வுபதேசித்தஒரு சமயம் இது புறச்சமயமாறினொன்று, வைணவாகம மிரண்டினொன்று.

பாஞ்சராத்திரி, பாஞ்சராத்திரிகன் } பாஞ்சராத்திரிமகத்தோன்.

பாஞ்சராத்திரி- நாராயணன்தன்னை வழிபட்டவருடையபந்தத்தைநீக்கி,அவர்களை விரஜாநதியில் மூழ்குவித்து பரிசுத்தர்களாகச்செய்து, வைகுண்டத்திலே தனது சாரூபபதவியைக் கொடுப்பவனென்பவன். இவன் புறச்சமயிகளுளொருவன்.

பாஞ்சலிகை - சித்திரப்பாவை.

பாஞ்சார்த்திகன்-பாசுபதமதஸ்தன்.

பாஞ்சாலபுருஷன் - இலட்சணவான்.

பாஞ்சாலமட்டியம் - ஒருதாளம்.

பாஞ்சாலம் - இலட்சணம், தேயமைம்பத்தாறி னொன்று.

பாஞ்சாலம் - அஸ்தினபுரத்துக்குவாயுதிக்கில் இமயமலைக்கும்சர்வநதிக்கும் நடுவிலுள்ள தேசம்.

பாஞ்சாலன் - இலட்சணவான், பாஞ்சாலதேயத்தான்.

பாஞ்சாலி-சித்திரப்பாவை, துரோபதி.

பாஞ்சாலிகை - சித்திரப்பாவை.

பாடகம் - ஒருவைத்தியக்கருவி,ஒருநீட்டலளவை,கரை,காலணியினொன்று, கிராமத்திற்பாதி,கூலி, சூதவிளையாடல், நட்டம்.

பாடகர் - பாடுவோர்.

பாடகன் - உபாத்தி, பாடுவோன், மாணக்கன்.

பாடங்கேட்டல் - ஆசிரியனிடத்தினூற் பொருள் விசாரித்தல், மாணாக்கன் கற்றது சோதித்தல்.

பாடசாலை - பள்ளிக்கூடம்.

பாடச்சுரன் - கள்வன்.

பாடச்சுவடி - தாயேடு.

பாடஞ்செய்தல் - பதப்படுத்தல்.

பாடஞ்சேர்தல் - அடைந்தயர்தல்.

பாடஞ்சொல்லல் - மாணாக்கற்கு நூற்பொருள் விளக்கல், மாணாக்கன் படித்த பாடத்தை ஆசிரியனுக்குச் சொல்லல்.

பாஷணம், பாடணம் } சம்பாஷணை, போதனை.

பாடம் - பாடவம்.

பாடமாக்குதல் - பாடம்பண்ணுதல்.

பாடம் - அடுக்கு,அழுத்தம்,இடையர்வீதி, எழுதும்பாடம், ஓதும்பாடம், தெரு,படித்தல்,படியவைத்தது,பொன் முதலியவற்றினுரை,விரிவு,வீதி.

பாடம்பண்ணுதல் - மனப்பாடமாக்கல்.

பாடம்போற்றல் - கேட்டபாடத்தைபலகாற்சிந்தித்தல், இது நூல்கற்போரியல்புளொன்று.

பாடலத்துருமம் - புன்னைமரம்.

பாடலம் - குதிரை, சபதம், இளஞ்சிவப்பு, சோன்குதிரை, பாதிரிமரம், மழைகாலத்திப்பழுக்குநெல், வெண்சிவப்பு.

பாடலக்கிரி - புறா.

பாடலாவதி - ருக்ஷபர்வதத்தில் உற்பத்தியாகிப் பாயும் நதி.

பாடலி - ஒருநெல்,ஒருபூக்கொடி,ஒருமரம், கள்.
பாடலிபுத்திரம் - ஒரூர். பிரதிஷ்டானபுரம், உதயாசுவன் அமைத்தநகரம், இது குசுமபுரி யெனவும்படும், சோணைநதிகங்காநதியோடு கூடுமிடத்துக்குச் சமீபத்திலிருந்ததாகிய இந்தப் பழைய நகரத்தை ஆயிரத்துநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே கங்கைப் பெருக்கு அழித்துவிட்டது. இவ்விடத்தில் பௌத்த முனிவர் மடங்களும் நூறு சிவாலயங்களும் இருந்தனவென்றும், அந்த மடங்களில் ஐயாயிரம் பௌத்த முனிவர்களிருந்தார்களென்றும், மற்ற வைதிகசமயிகள் தொகைக்கு அளவில்லையென்றும், சீனதேசத்திலிருந்து ஆரிய தேசத்துக்கு வந்துபோன ஹியூன்சங்கன் என்பவன் சொல்லுகிறான், இதனால் இந்த நகரம் நெடுங்காலம் கீர்த்திபெற்று விளங்கினதென்பதற்குச் சந்தேகமில்லை.
பாடலிபுரம் - பாடலிபுத்திரம்.
பாடலை - ஒருமரம்,தர்க்கை,பாடல்வர்ணப்பசு, பாடலிபுரம்.
பாடலோபலம் - மாணிக்கம்.
பாடல் - சங்கீதம், செய்யுள் பாடுதல், வாசித்தல்.
பாடவம் - களிப்பு, சமர்த்து, சுகம், பெருமை, வடவாமுகாக்கினி.
பாடவள்-பாடன்மகடூஉ,மிதுனவிராசி.
பாடவன் - பாடுபவன், மிதுனவிராசி.
பாடவிகன் - தூர்த்தன்.
பாடவை - பாடவன், மிதுனவிராசி.
பாஷணம், பாடணம் - பாடுதல், பேச்சு,போதித்தல், வெட்டல்.
பாடன்மகடூஉ, பாடன்மகள் - பாடுவான், பாணாபெண்.
பாடா - பங்கம்பாளை.
பாஷாசமம் - இரண்டு பாஷைக்கேற்றசொல்.
பாடாணதாகம், பாடாணதாரணம் - கல்லுளி.
பாடாணத்தாபனம் - சவக்கிரியையிலொன்று.
பாடாணமுத்தி - கர்போற் கிடக்குமுத்தி.
பாடாணம், பாஷாணம் - கல், நச்சுச்சரக்கு.
பாடாணவாதசைவன்-ஆன்மா முத்தியிலும் சகசமலம் நீங்காதுகல்லைப்போலக் கிடக்குமென்பவன். இவன் அகச்சமயிகளு ளொருவன்.
பாடாணளுபி - அகலிகை.
பாடாணமாரி - கல்மழை.
பாடாண்டிணை - புறப்பொருட்டிணையிலொன்று.
பாடாதல் - கெடுதல்.
பாஷாந்தரமாக்குதல் - பிறபாஷைப்படுத்தல்.
பாஷாந்தரம் - பலபாஷை,மறுபாஷை.
பாடாவறுதி, பாடாவாரி - மிகுபாடு.
பாடாவிதி - கெடுவிதி.
பாடாற்றல் - சகித்தல்.
பாடி - ஊர்,ஓரிராகம்,கவசம்,சேரி,சேனைநகரம், நாடு, உளவாளி, பாசறை, பாடுபவள், முல்லைநிலத்தூர்.
பாடிக்கதை - வீண்பேச்சு.
பாஷிதம், பாடிதம் - சொல்லல், பேச்சு.
பாஷியகாரன் - உரைகாரன்,பாஷைப்படித்தவோன்.
பாடியம், பாஷியம் - உரை, சூத்திரவிருத்தியுரை.
பாடியோடுதல், பாடியோட்டம் - ஒருவிளையாட்டு.
பாடிரம் - ஒருகிழங்கு, சந்தனம், தத்தநாகம், முகில், மூங்கிலரிசி, வாதம்.
பாடிலம் - நாடு.
பாடிவீடு பகைமேற்சென்றோருறைவிடம்.
பாடினி - பாடுவாள், மட்பாண்டம்.
பாடீநம் - சித்திரமூலம்.
பாடீநன் - உபாத்தியாயன்.
பாடீரம் - பாடிரம்.
பாஷீரம் - சந்தனம்.
பாடு - அனுபவிக்கை, இடம்,உண்டாகுகை, உதயத்துக்கேழாமிடம், ஏழாம்வேற்றுமை யுருபு, ஓசை, கடமை, குணம், கேடு, சயகாரியம், நடப்பு, பக்கம், படுதல், பாடென்னேவல், பெருமை, மலை வருத்தம், விருத்தி, வேலை.
பாடுகெட்டுதல் - பக்கம்சரிந்து கிடக்குதல், பாட்டிலேவிழுதல்.
பாடுகாயம் - படுகாயம்.

பாடுகிடத்தல் - வரங்கிடத்தல்
பாடுதல் இராகம்பாடுதல், கவிசெய்தல், பாடியோடுதல், வாசித்தல்.
பாடுபடுதல் - ஆக்கினைப்பண்ணுதல், வருத்துதல்.
பாடுபடுத்துதல் - ஆக்கினைபண்ணுதல், வருத்துதல்.
பாடுவள் - பாடுவாள்.
பாடுவன் - பாடுவான்.
பாடுவாள் / பாடுவிச்சி } பாடன்மகள்.
பாடுவித்தல் - பாடப்பழக்குதல், புலமைபாடச்செய்தல்.
பாடேடு - தாயேடு.
பாஷை - சபதம், சரச்சுவதி, பேச்சு.
பாடை - ஆசந்தி, பருத்தி, பாடைமரம், பாஷை, வட்டத்திருப்பி.
பாடைகுலைத்தான் - பாகல்.
பாஷைக்காரன்-பாஷையில்வல்லோன்
பாஷைசொல்லுதல்-சபதம்சொல்லுதல்
பாடைப்படுத்தல் / பாஷைப்படுத்தல் } ஒருபாஷையிலுள்ளதை வேறோர் பாஷையிற் றிருப்புதல்.
பாஷையிடுதல் - சபதம்சொல்லுதல்.
பாட்சிகன் - குருவிவேட்டக்காரன்.
பாட்டகம் - வைசூரி.
பாட்டகன் - பாடகன்.
பாட்டப்பிரபாகரம் - வேதமே தெய்வமென்னு மதம்.
பாட்டம் - அச்சல், மழை, பலகாரம், பாட்டா சாரியமதம்.
பாட்டான்-பாட்டமதத்தான், மூதாதை.
பாட்டா - பாட்டன்.
பாட்டாசாரியம் - பட்டாசாரியர் வேதமேதெய்வமென்றேற்படுத்திய கொள்கை.
பாட்டாப்பிரபாகரம் - பாட்டப்பிரபாகரம்.
பாட்டாளிபாடுவோன் - வேலைப்பிரயாசி.
பாட்டாள் - பிரயாசி, வீணன்.
பாட்டி - ஒருசார்விலங்கின்பெண்பொதுநரிநாய்பன்றிஇவற்றின்பெண், பாடன்மகள், பாடுவாள், மூதாய்.
பாட்டியமி / பாட்டியம் } பிரதமை.
பாட்டியர் - பாணிச்சியர்.
பாட்டியல்-ஒருநூல்செய்யுளிலக்கணம்.
பாட்டியர் - இப்பெரியநூல்கள்பலவுள, அவற்றுள் வச்சணந்தியால்செய்யப்பட்டது வச்சணந்திமாலை யெனப்படும், குணவீரபண்டிதரால் செய்யப்பட்டது வெண்பாப்பாட்டியலெனப்படும், அது, "பண்பார்கவிஞர்வினயக்கெடுத்தபாட்டியலை, வெண்பாவந்தாதிவிளம்பினன், மண்பாவும் - கோடாத சீர்த்திக்குணவீரபண்டிதனும், பீடார்களந்தைப்பிரான்" என்னும் வெண்பாவால் அறியப்படும். இனியெஞ்சி நின்ற பலவற்றுள் ஒன்று தியாகராஜதேசிகர் செய்தநூல், இது மங்கலப்பொருத்த முதலியவற்றைக் கூறுவது, இந்தத்தியாகராஜதேசிகர், இலக்கணவிளக்கஞ்செய்த வைத்தியநாத நாவலர்க்குப் புதல்வர், இவர் காலம் இருநூறுவருடங்களுக்கு முற்பட்டது.
பாட்டு - இசைப்பாட்டு, சங்கீதம் இது அட்டபோகத்தொன்று, செய்யுள், சொல், வசைமொழி.
பாட்டுக்காணி - பாட்டுநிலம்.
பாட்டுக்காரன் - பாடுவோன்.
பாட்டுடைச்செய்யுள் -பலபாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய இயலிசை நாடகப்பொருட்டொடர்நிலைச் செய்யுள்.
பாட்டுடைத்தலைவன் / பாட்டுநாயகன் } கவியுடைத்தலைவன்.
பாட்டுவாளி - பாடுவோன்.
பாட்டை - வழி.
பாட்டைசாரி - வழிப்போக்கன்.
பாட்டம் / பாஷ்பம் } கண்ணீர்.
பாஷ்யம் - பாடியம்.
பாணகோசரம் - சரகதி.
பாணச்சி / பாணத்தி } பாணப்பெண்.
பாணபத்திரன் - மதுரைவரகுணபாண்டியனின் மந்திரி.
பாணபத்திரன் - இவன்வரகுணபாண்டியன் சபையிலே விளங்கிக்கொண்டிருந்த ஒரு யாழ்வல்லோன், தன் இசைப்பாட்டினாலே சிவபிரானைவசப்படுத்தி அவரிடம்ஒருபாசுரம்வரைந்த திருமுகமொன்று பெற்றுக்கொண்டுபோய்ச் சேரமான் பெருமாளையனிடங்கொடுத்து அளவற்ற பொ

ருள்பெற்று பெருஞ்செல்வனாக விளங்கினவன். அந்தப், பாசுரம் "மதிமலிபுரிசை மாடகூடற், பதியிசைநிலவும் பானிறவரிச்சிற, கன்னம்பயில் பொழிலாலவாயில், மன்னியசிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக்கொண்மூப் படியெனப்பாவலர்க், குரிமையினுரிமையி னுதவியொளிதிகழ், குருமாமதிபுரை குலவியகுடைக்கீழ்ச், செருமாவுகைக்குஞ்சேரலன்காண்க, பண்பாலியாழ்பயில்பாணபத்திரன்,தன்போலென்பாலன்பன்றன்பால், காண்பது கருதிப் போந்தனன், மாண்பொருள்கொடுத்து வரவிடுப்பதுவே" என்பது இவ்வரகுணபாண்டியன் கூன்பாண்டியன் காலத்துக்கு இரண்டாயிர வருஷங்களுக்குப் பின்னே யிருந்தவன்.

பாணம் - அம்பு, கை, திப்பிலி, துதி, நாடகவகைப்பத்தினென்று, பூம்பட்டு, மலைழவண்ணக்குறிஞ்சி, வியாபாரம்.

பாணர் - சங்கீதம்பாடிப் புகழ்வோர், தையற்காரர்.

பாணன் - காட்டாமணக்கு. கல்வியின் மூத்தமகன், இவன் ஆயிரங்கையுடையவன், அநீகன் புத்திரன்.

பாணு - சால்,பருத்தசட்டி,பருத்தபீசம் வயிறுபருத்தபானை.

பாணுத்தடி - சிலம்பக்கம்பு.

பாணுனு - சூதிலோர்தாயம்.

பாணி - இலைச்சாறு, ஊர்,ஊர்சூழ்சோலை,ஓசை, கடைவீதி, கருப்பநீர் முதலியவற்றின் பாணி, கள், காண்டகபாஷாணம், கா, காடு, காலம், கீதம், கூத்து, கை இது கருமேந்திரியமைந்தினுமொன்று. தாமதம், சொல், தயிரோதனம், சருக்கரைக் கரும்பு, நாடு, நீர், நெடுநேரம், படை, பலபண்ட,ம்பழச்சாறு, பற்று, பாட்டு, பாணியென்னேவல், பூம்பந்தல், மலை, வாச்சியப்பொது, வாணிபன்.

பாணிகன் - பாடன்மகன், வாத்தியகாரன்.

பாணிகை - அகப்பை.

பாணிகொட்டல் - கைகொட்டல். [ம்.

பாணிக்கிரகணம் - கைப்பற்றல், விவாசம்.

பாணிக்கிரகீதி - விவாகமனைவி.

பாணிக்கிரகம் - கைபிடித்தல், விவாகம்.

பாணிகம் - கைநகம், தாமரை.

பாணிசாரியை - கயிறு.

பாணிதம் - கருப்பஞ்சாறு.

பாணிதலம் - இரண்டு தூலாங்கொண்டது, உள்ளங்கை.

பாணித்தல்-பொழுதுநீட்டித்தல், மதித்தல், தாமதித்தல்.

பாணிந்தயம் - கைமண்டையாய்க் குடித்தல்.

பாணிபாத்திரம் - கமண்டலம்.

பாணிபீடனம் - விவாகம்.

பாணிப்பனுட்டு-பாணியிலிட்டபனுட்டு.

பாணிப்பிடி - பாணிப்பற்று.

பாணிப்பு - பாணித்தல்.

பாணிப்பூ - இலுப்பைப்பூ.

பாணிமுத்தம் - எரியாயுதம்.

பாணியம் - வலம்புரிக்கொடி.

பாணிருகம் - கைநகம், தாமரை.

பாணிவாதன் - வாணிகன்.

பாணினன் - ஓரிலக்கணநூலாசிரியன்.

பாணிநி-இவர் நாலாயிரம்வருஷங்களுக்கு முன்னே காந்தார தேசத்திலே, சலாது நகரத்திலே பிறந்து உரிய காலத்தே வித்தியாப்பியாசஞ் செய்துவரும்போது, மந்த மதியுடையரா யிருத்தலைக் கண்டு குருவாலும் சகபாடிகளாலும் அவமதித்துத் தள்ளப்பட்டு மனம் வருந்தித் தமது வீடு நோக்கிச் செல்லாது. இமயமலையை நோக்கி நடந்து அங்கே சிவபிரானைநோக்கித் தவங்கிடந்து அவர்பாற் சகல சாஸ்திரங்களுக்கும் மூலசாஸ்திரமாகிய மாகேசுவர சூத்திரோபதேசம்பெற்றுக் கலையெல்லாம் வல்லவராயினவர். இவர் தந்தையார் பெயர் பணினி என்பவர். தாயார் பெயர் தாக்ஷியென்பது, தாக்ஷிபுத்திரரெனவும்இவர்வழங்கப்படுதலால் நன்கு துணியப்படும். இவர் அம்மாகேசுவர சூத்திரங்களை ஆதாரமாகக்கொண்டுசெய்த சம்ஸ்கிருதவியாகரணம் பாணினீயம் எனப்படும். அது எட்டு அத்யாயங்களையுடையதாதலின் அஷ்டாத்யாயி எனவும்படும். இவரும்வரருசியும் ஒரேகாலத்

தவர்கள். பாணினி பகவான் வியாகரணஞ் செய்யுமுன்னே வரருசிகாதந்திரமெனப் பெரிய ஓரிலக்கணம் வகுத்தாரேனும், பாணினி பகவான் செய்தருளிய நூலே சிறந்ததெனக் கண்டு அதற்குத் தாம் ஒருரை யியற்றினர். அவரே பாணினியத்துக்கு முதலுரை யாசிரியர்.

பாணினியத்துக்கு மிகவிரிந்ததோருரைசெய்தவர் பதஞ்சலி பகவான். விரிவுநோக்கி அதற்கு மஹா பாஷ்யம் என்னும் பெயருளதாயிற்று. பதஞ்சலிபகவான் தாமியற்றிய பாஷ்யத்திலே இச்சூத்திரங்களின் பெருமையை நோக்குமிடத்துப் "பொருளில்லாததோரெழுத்தையேனும் அவற்றினுள்ளேயான் காண்கின்றிலேன்" எனக்கூறிப் போவரேல், பாணினிய சூத்திரங்களின் வன்மையும் நுட்பமும் வனப்பும் எடுத்துரைக்கவேண்டா, ஐரோப்பியபண்டிதர்களும் தாம் கண்ட பாஷைகளில் பாணினியத்திற் கிணையான இலக்கணமொன்றில்லையென்றுகூறி உச்சிமேற்கொண்டு பாராட்டுவார்கள். பாணினியத்துக்கு முன்னரும் ஐந்திர முதலிய வியாகரணங்கள் பல தோன்றி நடைபெற்றனவேனும் அவையெல்லாம் அது தோன்றிய பின்னர்க்கற்கெளிதலவென்று மாந்தரால் கைவிடப்பட்டனவாயின. ஆகவே, பாணினியமே நின்று நிலவுவதாயிற்று. அது வேதமொழிக்கும் சாமானியமொழிக்கும் இலக்கணங்கூறுவது, பூர்வ வியாகரணங்கள் எல்லாம் வேதமொழிக்கே இலக்கணங்கூறுவன. பாணினியம் இரண்டிற்கு மாதலின் மிகச்சிறப்பதாயிற்று, அதுவுமன்றி அது பூர்வ வியாகரணங்களைப்போல வேதத்திற்கும் அங்கமாயிற்று.

இத்துணைச் சிறப்புவாய்ப்ப வியாகரணஞ்செய்த பாணினியாரது அவதாரகாலம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதென்பர் சிலர். பாணினியத்தினுள்ளே வரும் யவநபதம் கிரேக்கரைக் குறிப்பதென்பது அச்சிலர் கருத்து. அது கிரேக்கரைக் குறிப்பதன்றென்பது கௌதமதருமசூத்திரம், மநு, இராமாயணம், பாரதம், காசிகாவிருத்தி முதலியவற்றினுள்ளே கூறப்படும் 'யவநவரலாற்றாற் பெறப்படும். இராமாயணம், "யவநராவார் சகரனாலே விசுவாமித்திராது ஆணைப்படி முண்டிதஞ்செய்து ஓட்டி விடப்பட்ட க்ஷத்திரியர்" என்றுகூறும். பாரதம் யவனர் துர்வசுவினது சந்ததியாராவர்" என்று கூறும், காசிகாவிருத்தியும் விஷ்ணு புராணமும் "யவனர் தமது தலையை முண்டிதஞ் செய்து கொள்பவர்" என்று கூறும் கிரேக்கரோ தமது தலையை வழித்துக் கொள்பவரல்லர். அது கிரேக்கனாகிய "டெமொஸ்தெனி" என்பவன் தான் வெளியே செல்லாவகை தன்தலையை முண்டிதஞ் செய்துகொண்டு ஓரறையினுள்ளே மறைந்திருந்து நூலோதி வந்தான் என்பதனால் நன்கு துணியப்படும், ஆதலின் பாணினி குறித்த யவநரும் வேறு, ஐரோப்பிய பண்டிதர்குறிக்கும் யவநரும் வேறென்பது காட்டப்பட்டதாயிற்று, ஆதலின் கிரேக்கர் படையெடுத்து ஆரியாவர்த்தத்தை தாக்கியபின்னரைப்பாணினி விளங்கினாரென்னுங் கொள்கை ஏற்புடைத்தன்று. நிர்வாண பதத்திற்குப் பாணினியார் கொண்ட பொருளும் வேறு; பௌத்தர் கொள்ளும் பொருளும் வேறென்பது பாணினி பாஷியத்தினுள்ளே பதஞ்சலியாரெடுத்துக் கூறும் தீபங் காற்றினால் நிர்வாணமுற்றது என்பது முதலாகிய உதாரணங்களால் காட்டப்படும், ஆதலின் அதுகொண்டு அவர்காலம் புத்தர் காலத்துக்குப் பிற்பட்டது என்றும் சாதிப்பாரது கொள்கையும் பிரமாணமாகாது.

அது நிற்க, பாணினி தாம்செய்த வியாகரணத்தைக் காஸ்மீரதேசத்தரசனாகிய கநிஷ்க மஹாராஜன் சபையில் அரங்கேற்றி, தம்மை முன்னே அவமதித்த புலவர்களை யெல்லாம் வாதத்தில் வெற்றிகொண்டு, கலைகள்யாவும் முற்று முணர்ந்த பெரிய

பண்டித ரென்று திசையெல்லாம்
புகழ்செல்ல விளங்கினர். இவர் திரு
வுருவைச் சிலையி லமைத்தும் பிர
திஷ்டைசெய்து பூசித்து வந்தவனு
கிய காதிஷ்கராஜன் சந்திரகுப்தனுக்
கு நெடுங்காலத்துக்கு முன்னே அர
சுசெய்தவன். இதனுலும் பாணினி
முனிவர்காலம் நாலாயிரம் வருஷங்
களுக்கு முந்தின தென்பது நன்கு
விளங்கும். இவரது சரித்திரம் கதா
சரித் சாகரம் என்னும் நூலிலும் அ
தற்கு முதனூலாகிய ப்ருஹத் கதை
யிலுங் கூறப்பட்டுள்ளது.

பாணினியம் } ஒருகிரந்தவிலக்கணம்.
பாணினீயம் } பாணினி முனிவர்
செய்த ஸம்ஸ்கிருத வ்யாகரணம்,
இது மூவாயிரத்துத் தொளாயிரத்
துத்தொண்ணூற்றாறு சூத்திரங்களை
யுடையது.

பாணிகரணம் - விவாகம்.

பாண்-இசைப்பாட்டு,கள், பாணச்சாதி,
[பாழ்.

பாண்டகம் - சாமான்.

பாண்டம் - ஆபரணம், ஆற்றின்பரப்பு,
உடம்பு. ஓடு. கையிருப்பு, பரிகாசம்,
பாத்திரம், மட்கலம், வாத்தியக்கரு
வி, விலங்கின் கழுத்தணி, வெண்
ணெய்மலை.

பாண்டரங்கண்ணனுர் - சோழன் ராஜ
சூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப்
பாடின புலவர்.

பாண்டரங்கம் - சிவபிரான்கூத்து.

பாண்டரங்கன் - சிவபெருமான்.

பாண்டரம் - செஞ்சுண்ணும்பு, மல்லி
கை, வெண்மை.

பாண்டல் - பாழ்த்துபோனது.

பாண்டவர் - பாண்டுராஜ குமாரர்கள்.
இவர் ஐந்துபேர், அவர் தருமன்,
வீமன், அருச்சுனன், நகுலன், சகா
தேவன் எனபவர். இவருள் முந்தின
மூவரும்குந்திமைந்தராதலால் கௌந்
தேயர் எனவும் பிந்தின இருவரும்
மாத்திரி மைந்தராதலால் மாத்ரேயர்
எனவும் சொல்லப்படுவர். இவர்கள்
பாண்டுராஜன் இறந்தபிறகு அஸ்தி
னாபுரத்தில்திருதராஷ்டிரனிடத்தில்
வளர்ந்து தநுர்வேத முதலிய வித்
தைகளில் மிகு சமர்த்தர்களா யிருக்
கையில், இவர்களுடைய மேன்மை
யைக்கண்டு திருதராஷ்டிரனுடைய
பெரிய மகனுகிய துரியோதனன்
பொறுக்கமாட்டாமல்சகுனி,கர்ணன்,
துச்சாசனன் என்பவர்களோடுகூடி
க்கொண்டு இவர்களுக்கு இடையூறு
செய்துகொண்டேயிருந்தான். அது
எவ்வாறெனின், ஒருநாள் துரியோ
தனன் வீமன் கண்ணுறங்கும்போது
அவனைப் பெருங்கயிறுகளாற் கட்டி
கங்கையாற்று மடுவில் தள்ளுவித்
தான். மற்றொருநாள் அவனுடைய
உடம்பு முழுதும் கிருஷ்ண சர்ப்பங்
களைக்கொண்டு கடிப்பித்தான். மற்
றொருநாள் போஜநசமயத்தில் அவ
னுக்கு நஞ்சுண்பித்தான். அவன்அள
வற்ற பலமுள்ளவனும் திவ்ய புரு
ஷனுமாதலால்துரியோதனன்செய்த
கொடுமைகளெல்லாம் அவனையொ
ன்றுந்தீமைசெய்யாவாயின, மேலும்
துரியோதனன் பாண்டவ ரெல்லாரு
க்கும், அபாய முண்டுபண்ண யோ
சித்து, வாரணுவதத்தில் அரக்குமா
ளிகை யொன்று கட்டுவித்து அதில்
பாண்டவரைச் சேர்த்து நெருப்புமூ
ட்ட யத்தனிக்கும்போது, இந்தச்செ
ய்தியைப்பாண்டவர் விதுரனுல்அறி
ந்து அவ்விடத்திலிருந்து தப்பித்து
க்கொண்டுபோய் தாயாரோடு கூட
வேறு வேஷதாரிகளாய்ஏகசக்ராபுர
த்திலே கொஞ்சகாலமிருந்து, பின்பு
துருபதராஜனது பட்டணத்திற்குப்
போய் அவ்விடத்தில் அர்ஜுநன்
துரௌபதியின் சுயம்வரத்தில் மச்
சயந்திரத்தை யெளிதி லறுத்து எல்
லாவரசரையும் வென்று துரௌப
தையைக் கைக்கொண்டு, குருவாக்ய
த்தால். அவளை ஐவரும் மணம்புணர்
ந்தார்கள். அவ்வளவிலே அந்தச் செ
ய்தியெல்லாம் திருதராஷ்டிரன்அறி
ந்து, பாண்டவரை வருவித்து,அவர்
களுக்குப் பாதிராச்சியங் கொடுத்து
இந்திரப் பிரஸ்தபுரத்தி லிருக்கும்
படியனுப்ப அவர்களுடைய ராஜ்யப்
பெருக்கு குணசம்பத்து முதலியவ
ற்றைக்கண்ட துரியோதனன் பொ
றுக்கமாட்டாமல் சகுனியின் வஞ்

சனியால் மாயச்சூதாடி, தருமனைத் தோற்பித்து பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் ஜநபதத்தில் அஜ்ஞாதவாசமும் செய்யும்படி யேற்பாடுசெய்து, ராஜ்யத்தை விட்டோட்டினன். அவ்வாறே பாண்டவர் வனவாசஞ் செய்து அஜ்ஞாதவாசமும் செய்து மீண்டுவந்து தமது பங்கைக்கேட்க, கொடுக்காமல் துரியோதநன் அவர்களை விரோதித்து எதிர்த்துப் போர்செய்து மாண்டான். பாண்டவர்கள் பகைவரைக் கொன்று, ராஜ்யத்தைக் கைக்கொண்டு அசுவமேத முதலிய யாகங்களால் ஜநங்களுக்குச் சந்தோஷ முண்டாக்கி, கண்ணபிரான் திருநாடலங்கரித்த பிறகு பரிக்ஷித்துக்குராஜ்யாபிஷேகஞ் செய்து சுவர்க்கலோகமடைந்தார்கள்.

பாண்டவர் - முன்பிறந்தோர், தன்னன்.

பாண்டவதானம் - வாத்தியமியக்கல்.

பாண்டவாக்ரஜன் - தருமன்.

பாண்டவாபிலன் - கிருட்டிணன்.

பாண்டவாயகன் - கிருஷ்ணன்.

பாண்டவிகை - பெண், ஊர்க்குருவி

பாண்டவேயன் - பாண்டுவமிசத்தான்.

பாண்டாகாரம் - பண்டசாலை.

பாண்டி - ஒருதேயம், ஒருபண், ஒருவிளையாட்டு, பன்னாங்குழிப் பலகை, வாகைமரம்.

பாண்டிகன் - பள்ளியெழுச்சி பாடுவோன்.

பாண்டிதேசம் - சோழதேசத்துக்குத் தென்மேற்கில் கன்யாகுமரி வரையிலுள்ளதேசம், இதற்கு ராஜதானி மதுரை. பாண்டியன் அரசசெய்தமையால் இதற்கு இப்பெய ருண்டாயிற்று. இதுவே தமிழ்பிறந்த நாடு, இது மிக்க பழமையும் பெருக்கேற்றியும் அநேகசரித்திரங்களும் புண்யக்ஷேத்திரங்களும், நதிகளும் மலைகளும் உடையநாடு, முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் முச்சங்கமிருந்ததும் இந்நாடே. சிவபெருமான் அறுபத்துநான்குதிருவிளையாடல் செய்ததும் இந்த நன்னாடே.

பாண்டித்தியம் - கல்வித்திறம், படித்தல்.

பாண்டிமண்டலம் } பாண்டியன் தேயம், இது தேயமைம்பத் தாறினொன்று.
பாண்டியம் }

பாண்டியவமிசேசன் - சேரவமிசாந்தக பாண்டியனுக்குப் பின்னே அரசுசெய்த பாண்டியன்.

பாண்டியன் - தமிழ்நாட்டு மூவேந்தரில் ஒருவன். துஷ்யந்தன் தம்பியாகிய திஷ்யந்தனது பௌத்திரனாகி ஆசிரிதன் புத்திரன், இவனே பாண்டிதேயஸ்தாபகன், இவன் வமிசத்துவந்தோர் பல்லாயிரம் பாண்டியர், இவனே குலசேகரபாண்டியன்போலும், இவன் தென்மதுரையை நகராக்கி நான்கு வருணத்தாரையும் குடியேற்றி, காசியிலிருந்து ஆதிசைவர்களையும் கோயிற் பூசைக்காகக் கொணர்ந்து அகஸ்தியர் அநுமதிப்படியே அரசுபுரிந்தவன் இவன்மகன் மலயத்துவச பாண்டியன், மலயமலையைத் தனது கொடியில்லெழுதிக்கொண்டதனால் மலயத்துவசன் என்னும் பெயர் இவனுக்குண்டாயிற்று, இவன் அகஸ்தியரைக்கேட்டே எந்தக்காரியமுஞ் செய்பவன், என்பது அக்கொடியின் குறிப்புப்பொருள். இந்தப் பாண்டியன்காலம் துவாபரயுகம்.

பாண்டீச்சுரன் - வமிசசிரோமணி பாண்டியனுக்குப் பின்னே அரசுசெய்த பாண்டியன்.

பாண்டியன் அறிவுடைநம்பி - இவன் தமிழ் புலமையிற் சிறந்த வோரரசன், படைக்கவேண்டிய செல்வங்க ளெல்லாவற்றையும் படைத்தும் பலருடனே யுண்ணும் பெருஞ்செல்வனாயினும், காலம் இடையேயுண்டாகக் குறுகக்குறுக நடந்துபோய், சிறுகைநீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலிட்டும், கூடப்பிசைந்தும், வாயாற்கவ்வியும், கையால் துழாவியும், நெய்ச்சோற்றை உடம்பிற்படப் பூசியும் தந்தைதாயருடைய அறிவை மயக்கும்புதல்வரில்லாதவருக்குத் தம் வாழ்நாட்பயன் வேறில்லை யென்னுங் கருத்துடையு

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு முன்னும், உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக், குறுகுறு நடந்து சிறுகை நீட்டி, இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும், நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்து. மயக்குறு மக்களை யில்லோர் பயக்குறவில்லை நாம் வாழுநாளே" எனனுஞ்செய்யுள் செய்த பெருந்தகையிவனே, இவனைப்பாடிய புலவர் பிசிராந்தையார், இவன கடைச்சங்க காலத்திருந்தவன்.

பாண்டியன ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் - இவனேகோவலனைக் கொல்லுவித்தவனென்பது சிலப்பதிகாரத்தா லினிது விளங்கும், இவன் கல்வியைப் பொருளாகவும் கற்றோரைத் தனக்குறுதிச் சுற்றமாகவும் கொள்பவன், கோவலன் ஊழ்வினைவலியே இத்துணைச்சிறந்த இவ்வரசனைப்புத்திமயக்கி, அவனைக்கொல்விக்கும்படி செய்தது போலும். இவ்வரசனுடைய கல்வியறிவும் உலகியலுணர்ச்சியும் பெரிதும் வியக்கற்பாலதென்பதற்கு, உற்றுழியுதவியுமுறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலைமுனியாது கற்றனன்றே, பிறப்போரன்னடன் வயிற்றுள்ளும், சிறப்பின்பாலாற்றாயுமனந்திரியும், ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும், மூத்தோன்வருக வென்னாதவருள், அறிவுடையோனாறரசுஞ்செல்லும் வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனு மவன்கட்படுமே" என்னும் இவ்வற்புதமான அநுபவப்பொருளையுடையசெய்யுளே சாக்ஷியாகும், இச்செய்யுள் இவனாற்பாடப்பட்டதென்பது புறநானூற்றினுட்காண்க, சோழநாட்டில் படையேற்றி வெற்றிபுனைந்து மீண்ட கயவாகு ஆங்குப் புகுந்ததும் மீண்டதும் பாண்டிநாட்டின்வழியே யாமாதலால் இவன இலங்காபுரத்திக் கரசனாகிய அந்தக் கயவாகுவுக்கு நண்பன்போலும், இவனும் கரிகாற்சோழனும் கயவாகுவும் ஒருகாலத்தவர்கள், இவன் தனது நாட்டைச் செவ்வையாய்க் காக்கும் பொருட்டு உத்தரதேசத்திலிருந்து படைவீரரைக் கொணர்ந் திருத்தினவனாதலால் இவன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் என்னும்பெயர்பெற்றான்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் - இவன் புலமையிற் சிறந்தவனென்பது புறநானூற்றி லுள்ளேவரும் எழுபத்திரண்டாஞ் செய்யுளால் இனிதுவிளக்கும், இவன் புலமையிற்சிறந்த புலவரைக் காத்தலினும் அவரால் பாடப்படுதலினும் மிகு விருப்புடையவனென்பது மாங்குடி மருதனாரால் மதுரைக்காஞ்சிக்குத் தலைவனாக்கப்பட்டமையாலும், கல்லாடர் இடைக்குன்றூர் கிழார் முதலியோரால் பாடப்பட்டமையாலும், இனிது புலப்படும், இவன் தலையாலங்கானத்திலே கோச்சேரமான்யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பெரும்போரில் வென்றானாதலால் இத்தப்பெயர் உடையவனாயினான்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் - இவ்வரசன் நக்கீரனாராலும் மதுரை மருதனிளநாகனார் முதலியோராலும் பாடப்பட்டவன், கடுஞ்சினத்தையுடையயானைப்படையும், வாயுவேகமுஞ்செருக்குமுடைய குதிரைப்படையும் பெருங்கொடிகளையுடைய தேர்ப்படையும், வன்னெஞ்சும்போர்விருப்புமுள்ள காலாட்படையுமாகிய நான்கினாலும் அரசுசிறந்ததாயினும் சிறந்த அறநெறியே அரசாதுவெற்றிக்குக் காரணமாகும், அதனால் இவர் நம்மவரெனக்கொண்டு அவர்செய்யுங்கொடுஞ்செயல்களைப் பொறுத்து நின் செங்கோலுக்குக்குற்றத்தையுண்டாக்கிக் கொள்ளாமலும், இவர் பிறரெனக்கொண்டு அவர்செய்யும்நற்செய்கைகளைக் கெடாமலும் சூரியனைப் போற் காய்ந்தும் சந்திரனைப்போற் குளிர்ந்தும் மழையைப்போல் வழங்கியும் நீடூழி வாழ்கவென்னும்பொருளையுடைய "கடுஞ்சினத்த கொல்க

விறங் கதழ்பரிய கரிமாவும், நெடுங்கொடிய திமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவருமென நான்குடன் மாண்டதாயினு மாண்ட, அறநெறி முதற்றே யரசின்கொற்றம், அதனால் நமரெனக்கோல் கோடாது பிறரெனக் குணங் கொல்லாது, ஞாயிற்றன்ன வெந்திற லாண்மையும், திங்களன்னதன் பெருஞ்சாயலும்,வானத்தன்ன வண்மையு மூன்றும், உடையையாகி நீடூழி வாழிய" என்னும் இச்செவியறிவுறூஉச் செய்யுள் மதுரை மருதனிளநாகரால் இவனுக்குரைக்கப்பட்டது. இக்காலத்துப் புலவர் போலாது அக்காலத்துப் புலவர் அரசருக்கு அறமுறையெடுத்து இடித்துரைக்கும் ஆண்மையும் அறிவும் உடையோரென்பதும், அவர் சொல்லை, அரசரும்விரும்பி யேற்றொழுகும் இயல்பின ரென்பதும் இச்செய்யுளால் வெளித்துணராற்பாலது.

பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர்வழுதி - இவன் இரும்பிடர்த்தலையாரால் பாடப்பட்டபெருங்கொடையாளன்.

பாண்டியன் கானப்பேர்ந்த வுக்கிரப்பெருவழுதி - "இரவலர்க் கருங்கல மருகாதவீசி, வாழ்தல்வேண்டுமிவண் வரைந்த வைகல், வாழச்செய்த நல்வினையல்லது,ஆழுங்காலைப்புணை பிறிதில்லை, உயர்ந்து மேந்தோன்றிப் பொலிகநுந்நாளே" என்று ஔவையாரால் பாடப்பட்டவன். இவனே வேங்கைமார்பனைவென்று கானப்பேர் என்னும் அரண்கொண்டவன்இவனே திருவள்ளுவருக்குச் சிறப்புப்பாயிரஞ் சொன்ன பாண்டியன்.

பாண்டியன் கீரஞ்சாத்தன் - இவன் ஆவூர் மூலம் கிழாரால் பாடப்பட்டவன, இவன் தன் வாயிலையடைந்த பெரியோரை "என்மேலாணையுரைமின்" என்று கூறுற்றிரந் துண்பிப்பவன் என்பதும், போரில் பிறர்க்குடைந்து முதுகிட்டோடும் வீரர்க்கு முன்னே சென்று அபயங்கொடுத்துப் போரில் துணைசெய்து அவர்க்கு வெற்றி கொடுப்போன் என்பதும், "மணன் மலிமுற் றம்புக்க சான்றோர், உண்ணாராயினுந் தன்னொடு சூளுற், றுண்மெனவிரக்கும் பெரும்பெயர்ச்சாத்தன், நெடுமொழிமறந்த சிறுபோரானர், அஞ்சி நீங்குங்காலை, ஏம்மாகத்தான் முந்துறுமே" என்னுஞ் செய்யுளாற் பெறப்படும்.

பாண்டியன் கூடகார்த்துத் துஞ்சிய மாறன்வழுதி - இவன் ஐயூர் முடவனாலும் மருதனிள நாகனாராலும் பாடப்பட்ட ஒருபாண்டியன், இவன் கூட காரமென்னு மூரிலிறந்தவன், இவனது பேராண்மையை ஐயூர் முடவனார், "நீர் மிகிற்சிறையுமில்லைத் தீமிகின், மன்னுயிர் நிழற்று நிழலுமில்லை, வளிமிகின் வலியுமில்லையொளிமிக், கவற்றோரன்ன சினப்போர்வழுதி, தண்டமிழ் பொதுவெனப் பொறான் போரெதிர்ந்து, கொண்டி வேண்டுவனாயிற் கொள்கெனக் கொடுத்த மன்னர் நடுக்கற்றனரே" என்னுஞ் செய்யுளா லெடுத்துரைத்தனர்.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்-இவன் சீத்தலைச் சாத்தனாரால் "காய்சினந்தவிராது கடலூர்பெழுதரு, ஞாயிறனையை நின்பகைவர்க்குத் திங்களனையை யெம்மனோர்க்கே"என்று பாடப்பட்டவன், பகைவரிடத்தேபெரிஞ்சினமும் புலவரிடத்தே பேரருளு முடையவனென்பது இச்செய்யுட்கருத்து.

பாண்டியன் மதிவாணனார்-மதிவாணர் நாடகத்தமிழ் நூலாசிரியர்.

பாண்டில் - அகல், இடபவிராசி, எருது, ஒருவாத்தியம், கட்டில், கைத்தாளம், நாடு, பண்டி, மூங்கில், வட்டம், வாகனம், வாகைமரம், தேர்வட்டை.

பாண்டீச்சுரன் - வமிசசிரோமணிபாண்டியனுக்குப் பின்னே அரசுசெய்த பாண்டியன்.

பாண்டீரம் - ஆல், வெண்மை.

பாண்டு-ஒருநோய்சிறுபூளைவெண்மை. ஓரரசன், பாண்டுராஜன் விசித்திர வீரியன் மனைவியிடத்து வியாசருக்குப்பிறந்த இரண்டாம் புத்திரன்.

இவன் தாய் அம்பாலிகை, திரிதராஷ்டிரனுக்குத் தம்பி, இவனுக்குக் குந்தியும் மாத்திரியும் மனைவியர், இவன் காட்டில் வேட்டையாடச் சென்றபோது நெடுந்தூரத்தில் ஒரு முனிவர் மானுருக்கொண்டு தமது பத்தினியோடு கலந்திருப்பதை நோக்காது தனி மானெனக்கருதி அம்பெய்து இருவரையுங் கொன்றான். முனிவர் பாண்டுவைநோக்கி, நீயும் கலவிக்காலத்தில் தலைபிளந்திறக்கக் கடவையென்று சபித்திறந்தார். ஆதலாற்றான் இந்தப் பாண்டுராஜனுக்கு நேர்சந்தான மடையத்தகுந்த யோக்யதை யில்லாமற்போயிற்று அச்சாபத்தால் நெடுநாள் கலவியின்றி யிருந்தும் ஒருநாள் காமாதிகாரத்தால் மாத்திரியைப் புணர்ந்துயிர் துறந்தான்.

பாண்டுகம் - காமாலை, மங்கல்வெள்ளை.
பாண்டுகம்பலம் - ஒருகல், யானைமேற் றவிசு, வெண்கம்பளம்.
பாண்டுசருமிலை - துருபதி.
பாண்டுநாகம் - ஐராவதம்.
பாண்டுபத்தினி - குந்திதேவி.
பாண்டுபுத்ரர் - தருமன் முதலிய ஐவர்.
பாண்டுபூபதி - பாண்டுராஜன்.
பாண்டுமைந்தர் - தருமன் முதலைவர்.
பாண்டுயாவநம் - பேரீச்சமரம்.
பாண்டுரம் - ஒருநோய், ஒருமரம், வெண்மை.
பாண்டுராகம் - வெண்மை.
பாண்டுராங்ககம் - தவநம்.
பாண்டுருவன் - பெரியவுருவுள்ளது.
பாண்டுரேட்சு - வெண்கரும்பு.
பாண்டுரை - பாதிரிமரம்.
பாண்டுரோகம் - பாண்டுவியாதி.
பாண்டுலாம் - கறிப்புடோல்.
பாண்டுவண்ணம் - வெண்மை.
பாண்டை - ஊழ்த்தநாற்றம்.
பாண்டைநெறி - வெடுக்கன்.
பாண்டைநாற்றம் - ஊழ்த்தநாற்றம்.
பாண்மகள் - பாடுவாள்.
பாண்மகன் - பாடுவான்.
பாண்மூலை - பாய்மூலை.
பாதகடகம் - பாடகம்.
பாதகண்டீரம் - ஒதக்கால்.
பாதகம் - துரோகம்.
பாதகன் - துரோகி.
பாதகாணிக்கை - பாததட்சணை.
பாதகாப்பு - செருப்பு.
பாதகி - துரோகி.
பாதகுறடு - மிதியடி.
பாதங்கி - சனி.
பாதசத்துவரம் - அரசமரம், ஆடு, ஆலாங்கட்டி.
பாதசரம் - ஒருகாலணி.
பாதசன் - சூத்திரன், வேளாளன்.
பாதசாகை - கால்விரல்.
பாதசாபலியம் - உதைத்தல்.
பாதசாரம் - கிரகமன்றன்று நிற்குநிலை.
பாதசாரி - காலாள்.
பாதசாலம் - காலணிப்பொது.
பாதசிலை - தூண்டாங்குழிக்கல்.
பாதசுத்தி - கால்சமூவல்.
பாதசேவனம் - ஊழியம், பாவந்தனம்.
பாதசேவை - அடித்தொண்டு.
பாதச்சனி - வாக்குத்தான்றதச் சனி.
பாதச்சாயை - மிதித்தவடிநிழல்.
பாதஞ்சலம் } பதஞ்சலி செய்த
பாதஞ்சலியம் } நூல்.
பாததட்சணை - பாதகாணிக்கை.
பாததரிசனம் - பெரியோர்காட்சி.
பாததாடனம் - உதை.
பாதசாரி - காலின்வெடிப்பு.
பாதத்திராணம் - பாதரட்சை.
பாததீட்சை - பாதமுத்திரைகொடுத்தல், இது தீட்சை வகையிலொன்று.
பாததீர்த்தம் - பெரியோர்பாதங்கழுவியநீர்.
பாததூளி - காலிலொட்டினமண், திருவடித்துகள், நடைப்புழுதி.
பாதபடி - பாதம்வைக்குமாசனம், மிதியடி.
பாதந்தனம் - தொழுவம்.
பாதபம் - பாதவம்.
பாதபரிசம் - சிதரக்க பாஷாணம்.
பாதபரித்திருநம் - பாதபரிதட்டனம்.
பாதபீடம் - பாதகடி.
பாதபீடிகை - கீழ்த்தொழில், பாதபடி.
பாதபூசை - பெரியோர்க்குச் செய்யும் பாதாராதனை.
பாதபை - மிதியடி.
பாதம்பிரகாரம் - உதை.
பாதப்பிரக்ஷாளநம் - கால்சமூவல்.

பாதப்பிரதாரணம் - பாதரட்சை,கால்கழுவல்.
பாதமயக்கு - நான்கடியிலேது மொன்றை முதலாய் வாசிக்கச் சரிவரும்பா.
பாதமுத்தி - பரகதி, பாததீட்சை.
பாதமுத்திரை - குருவின்பாதஞ்சிரசில் வைத்தல்,பெரியோரின்பாதரட்சை.
பாதமூலம் - குதிக்கால்.
பாதம்-இராகு, கால், இது கருமேந்திரியமைந்திலொன்று, கிரணம், சம்பவித்தல், சரிதை முதலிய நிலைசெய்யுட்களினடி, திடர், நாலிலொன்று, நீர்பக்கு, மரவேர், வட்டத்திலொன்றிலொன்று, வைகறை, பொய்யென்னு நிச்சயம்.
பாதரசம் - இரதம்.
பாதரட்சணம் } தொடுதோல், மிதியடி.
பாதரட்சை }
பாதரதம் - இரதம், காலாட்படை, தொடுதோல்.
பாதராயணன் - வாதராயணன், வியாசன்.
பாதரோகணம் - அரசமரம்.
பாதலத்தம் - திலக்காளான்.
பாதலம் - சமர், கிடங்கு, குகை, சூரியனிற்கு மிராசிக்கு நாலாமிராசி, நரகம், பாதாளம்.
பாதலவாழ்நர் - நாகர்.
பாதவந்தனம் - பாதவணக்கம்
பாதவம் - தோப்பு, பாதபடி, மரப்பொது, மரம், மலை.
பாதவன்மீகம் - ஒருநோய்.
பாதவிகன் - வழிச்செல்வோன்.
பாதவிரசை - பாதுகை.
பாதனம் - இழிதல், அக்கத்தாற் றலைசாய்தல், விழுதல்.
பாதன் - சூரியன், தீ.
பாதாக்கிரம் - கானுதி.
பாதாக்கிராந்தன்-அடிவணங்குவோன்.
பாதாங்கதம் - பாதகடகம்.
பாதாங்குட்டம் - காற்பெருவிரல்.
பாதாங்குட்டிகை - கால்விரலணி.
பாதாசனம் - பாதபடி.
பாதாதம் - காலாட்படை.
பாதாதி - பதாதி.
பாதாதிகேசம் - ஒருபிரபந்தம் அதுகலிவெண்பாவாலடிமுதன் முடியளவுங் கூறுவது,பாதமுதற் சிகைபரியந்தம்.
பாதாரம் - கிரணம்.
பாதாரவிந்தம் - சீர்பாதம்.
பாதார்த்தம் - எட்டிலொன்று, பாதகாணிக்கை.
பாதார்த்தியம் - குருபகாரம்.
பாதாவசேசனம் - பாதசுத்தி.
பாதாவத்தம் - நீரிறைக்குஞ்சூத்திரம்.
பாதாவனேசனம் - கால்கழுவல்.
பாதாவிகன் - காலாள்.
பாதாளகங்கை - கீழுலகநதி.
பாதாளகிரணம் - காணுக்கிரகணம்.
பாதாளகேதன் - மதாலசனை யெடுத்துப்போய்க் காலவனுக்குத் தபோபங்கஞ்செய்த வோரசுரன்.
பாதாளேசுவரர் - திருஅரதைப்பெரும்பாழியிலே கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி பெயர்.
பாதாளநிலயம் } கீழ்பூமி.
பாதாளபூமி }
பாதாளநிலயன் - தைத்தியன்.
பாதாளபேதி - காடி.
பாதாளமூலம் } ஆடுதின்னாப்பாலை, கறையான்,கோரைக்கிழங்கு,சிறுநெருஞ்சில்,சீந்திற்கொடி.
பாதாளமூலி }
பாதாளம் - கீழுலகம், தாழ்வு, நரகம், பிலம்.
பாதாளலோகம் - கீழுலகம்.
பாதாளவஞ்சனம் - பூமிக்குட் பொருளைத்தெரிய காட்டுமை.
பாதாளவயிரவன் - ஒருவயிரவன்.
பாதாளவாகினி - பாதாளகங்கை.
பாதாளவாசிகள் - நாகர்.
பாதாளவினையன் - ஆழமானவினையன்.
பாதி - அரைவாசி,கணவன்,தலைவன், பங்கு, கூறு.
பாதிகம் - சம்பளம்.
பாதிச்சாமம் - பாதியிரா.
பாதிடுதல் - நெருக்கல்,பங்கிடுதல்,பாதுகாத்தல்.
பாதித்தல் - கூறுசெய்தல்.
பாதித்தியம் - பதித்தனம்.
பாதிமதி - அர்த்தசந்திரன்.
பாதிமம் - நான்கிலொன்று.
பாதியிரா } அர்த்தசாமம், நள்ளிரவு.
பாதியிராத்திரி }
பாதிரம் - மலையாத்தி.
பாதிரி - பாதிரிமரம்,அதுதசமூலத்திலொன்று, மூங்கில்.
பாதிரிவிநாயகன் - பழனிவிநாயகன்.

பாதிலி - வலை.
பாதிவிர்த்தியம் - பதிவிரதைத்தனம்.
பாதிடு-காத்தல்,செறித்தல்,பங்கிடுதல்.
பாது - காவல், சூரியன், பங்கு.
பாதுகம் - செங்குத்து, தொடுதோல், மிதியடி.
பாதுகன்-நடைவல்லோன், விழுமியல்புள்ளவன்.
பாதுகாகாரன் - சக்கிலியன்.
பாதுகாசித்தி-நீர்மேல்மிதியடியி னடக்குஞ்சித்தி.
பாதுகாத்தல் - உதவிசெய்யல்,காத்தல்.
பாதுகாப்பு - காவல்.
பாதுகாவலன் - காவல்செய்வோன்.
பாதுகாவல் - பாதுகாப்பு.
பாதுகிருது - சக்கிலியன்.
பாதுகை - பாதுகம், சிறுசெருப்படை.
பாதேயம்-கட்டுச்சோறு,கன்னியிராசி.
பாதை - அடிப்பாடு, மரக்கலம்,மிதவை முறை, வழிவகை.
பாதோசம் - தாமரை.
பாதோதகம் - கால்கழுநீர், வழியருகிற்றண்ணீர்.
பாதோதம் - தாமரை, முகில்.
பாதோதரம் - முகில்.
பாதோதி } கடல்.
பாதோநிதி }
பார்த்தம் - எல்லாநாட்டுமொழி,மருது.
பாத்தல் - கொடுத்தல், பங்கிடுதல்.
பாத்தி-சிறுசெய்,பங்கு,பயிரிடுமேடை, வீடு.
பாத்திபம் - புருமுட்டிப்பூடு, பூமி.
பாத்திபன் - அரசன்.
பாத்தியஸ்தனம் - பங்காளி.
பாத்தியஸ்தன் - பாத்தியன்.
பாத்தியம் - உரிமை,சம்பந்தம்,பகுக்கப்பட்டது, பங்கு, பாதமலம்பக்கொடுக்குநீர், பாதமலம்புதல் இது பூசையியல்பினொன்று, பிணை.
பாத்தியல் - தண்ணீர்விட்டான்.
பாத்தியன் - உரியவன், பிணைகாரன்.
பாத்திரைச்சுரை - ஒருசுரை.
பாத்திரடீரம் - காகம், தீ, நாரை,பாத்திரம்.
பாத்திரபதம்-இரேவதி,உத்திரட்டாதி. புரட்டாசிமாசம்.
பாத்திரபாலம் - சுக்கான்.
பாத்திரப்பிரவேசம் - ஒருவிளையாட்டு.
பாத்திரமாதரன்-கற்புடையான்மகன்.
பாத்திரம் - இரப்போர்கலம், இலை, உடல், உண்கலம், எண்சேர்கொண்டது, கட்டளை, தகுதி, புரட்டாதி, மந்திரி, வாய்க்கால்.
பாத்திரவாளி } தகுதிவான்.
பாத்திரவான் }
பாத்திரன் - இரட்சகன், தகுதிவான்.
பாத்திராநிரம் - அக்கினி.
பாத்திராபாத்திரம் - தகுதி தகுதியின்மை.
பாத்திரிவன் - யாகோபகரணம்.
பாத்திரீயம் - பலிப்பாத்திரம்.
பாத்திரீரம் - காணிக்கை.
பாத்திரேசமிதன் - மாய்மாலன், விரிந்தூண்பிரியன்.
பாத்திரை - இரப்போர்கலம்.
பாத்தில் - வீடு.
பாத்து - கஞ்சி, சோறு, நான்கு, பங்கு, பாதி.
பாத்துதல் - பங்கிடுதல்.
பாத்துப்புலு - நாற்பது.
பாத்துமகற்பம் - பிரமனது ஆயுட்காலத்தில் முற்பாதி.வாராஹகற்பமென்பதுமிதுவே.
பாத்துமபுராணம் - பாத்மகற்பவரலாறு கூறும் புராணம், இது 55,000 கிரந்தமுடையது.
பாநாள் - அத்தசாமம், பாதிநாள், மத்தியானம்.
பாநிலம் - பாநபாத்திரம்.
பாநியாமலகம் - நெல்லியினோர்பேதம்.
பாநுமதி - விக்கிரமார்க்கன் மனைவி.
பாநேமி - சூரியன்.
பாந்தம் - அடியாறு, ஒழுங்கு,பகரவீடு.
பாந்தல் - பதுங்கல்.
பாந்தவம் } அடியாறு, பந்தத்துவம்.
பாந்தவியம் }
பாந்தள் - பாம்பு, பெரும்பாம்பு.
பாந்தன் - வழிச்செல்வோன்.
பாந்து - அலை, பாந்தென்னேவல்.
பாந்துதல் - பதுங்குதல், மறைதல்.
பாந்தை - அலை, பொள்ளல்.
பாபகம் - பாவம்.
பாபகிரகம் - இராகு, சனி, செவ்வாய்.
பாபக்கினம் - எள்.
பாபசமனம் - பாவப்பரிகாரம்.

பாபசரியன் - இராட்சசன், பாவஞ் செய்வோன்.
பாபத்தி - வேட்டை.
பாபபிரதி - பொல்லாங்கு.
பாபம்பொறுத்தல் - பாவமன்னிப்பு.
பாபமார்க்கம் - பாவவழி.
பாபமூர்த்திகள் - வேடர்.
பாபமோசம் - பாவநிவிர்த்தி.
பாபம் - குற்றம், பாவம்.
பாபயோனி - பாவப்பிறப்பு.
பாபரஹிதன் - பாவமற்றவன்.
பாபரோகம் - ஊழ்நோய், கொப்புளிப் பான்.
பாபரோகி - தொழுநோயாளி.
பாபர்த்தி - பாபத்தி.
பாபவிக்கியானம் - பாபசங்கீர்த்தனம்.
பாபவிமோசனம் - பாவநாசம்.
பாபாத்துமா - பாவி.
பாபாபநுதி - பாவநிவிர்த்தி.
பாபி - பாவி.
பாபிஷ்டன் - பாவஞ்செய்வோன்.
பாபிஷ்டை - பாபஞ்செய்பவள்.
பாப்பார்ச்சி - ஒருவகைத்தொடுதோல்.
பாப்பான் - ஒருபூடு, பார்ப்பான்.
பாப்பு - பரத்தல், பிராமணசாதி.
பாப்புரி - பாம்புரி.
பாப்பு - பரத்தல்.
பாப்பூசு - ஒருவகைத் தொடுதோல்.
பாமகள் - சரசுவதி.
பாமக்கினம் - கந்தகம்.
பாமடந்தை - பாமகள்.
பாமதம் - வாலுளுவை.
பாமநன் - சிரங்குபிடித்தவன்.
பாமம் - கோபம், தினவு, நுரை, பரப்பு, பிரபை.
பாமரம் - அறிவின்மை, இழிமை.
பாமரன் - அறிவிலான்.
பாமரர்-அரசர்க்குத்துணைவர், அறிவீனர்.
பாமரவைத்தியன் - அநுபவியாச வைத்தியன்.
பாமரன் - அறிவீனன், கீழ்மகன்.
பாமன் - சூரியன், மைத்துனன்.
பாமாரி - கந்தகம்.
பாமாலை - ஒருவன்கீர்த்தியைப்புகழ்ந்து தொடுத்த பா.
பாமினி - பெண்.
பாமுதல்வி - சரச்சுவதி.
பாமை - அசங்காரி, காமி, சிரங்கு.

பாம்பரணை - ஓராணை.
பாம்பாட்டம் - சோலி.
பாம்பாட்டல் - தொந்தரைபண்ணல், பாம்பையாடச்செய்தல்.
பாம்பாட்டி-அரவாட்டுவோன், கௌசிகன்.
பாம்பாட்டிசித்தர் - ஒருசித்தர்.
பாம்புரேசர்-திருப்பாம்புரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பாம்பு-அரவு,ஆயிலியநாள்,கரைவரம்பு.
பாம்புகண்டசித்தன் - காடி.
பாம்புகொல்லி - ஒருபூண்டு.
பாம்புக்கல் - பாம்பின்விஷத்தை இழுக்கும்கல்.
பாம்புக்கண்ணி - சங்கங்குப்பி.
பாம்புக்குத்தச்சன் - கறையான்,செல்.
பாம்புதின்னி - முண்ணுயிி.
பாம்புமொச்சை - ஒருபூண்டு.
பாம்புரி - அகழி, பாம்புச்சடை.
பாம்பாட்டிசித்தர் - இவர் திருக்கோகர்ணத்தைத் தமக்குச் சக்மஸ்தானமாகவுடைய ஒரு சித்தர், இவர்காலம் நன்கு புலப்படா தாயினும் சமீபகாலத்தவரல்லரென்பது எளிதிற்றுணியப்படும், இவர், "ஆடுபாம்பே யெழுந்தாடுபாம்பே" என்னும் பாம்பை முன்னிலையாக்கிப் பாடல் செய்திருக்கிறாரகையால் இவர்க்குப் பாம்பாட்டிச் சித்தரென்னும் பெயர் வழங்கிவருகின்றது. இவர் பாடல் கூத்தர் பாடல்போல் வெள்ளையாயிருப்பினும் தத்துவார்த்தங்களின் மேலதாகிய அற்புத ஞானக்கருத்தை யுட்கொண்டிருக்கும். இவர்பாம்பென்று கூறுவது பாம்புருவாக மண்டலமிட்டுக்கிடக்குங் குண்டலிசத்தியை அதையெழுப்புதல் யோகிகளுக்கு அத்யாவசியகமாதலால் அதனையெழுப்புவாராயினர்.
பாம்புவிரல் - நடுவிரல்.
பாம்போடுவடலி - நெடுமட்டைவடலி.
பாயசம் - பால்,பாற்சோறு,பாற்சோற்றிச்செடி.
பாயமுகம் - வடவாக்கினி.
பாயம் - நீர், புணர்ச்சியைக் கருதுங்கருத்து, விருப்பமானது.
பாயல் - மக்கட்படுக்கை.

பாயிகன் - காலாள்.
பாயிரம் - பொழிப்புரை, முகவுரை, வரலாறு.
பாயிழுத்தல் - தோணியிற் பாய்தூக்கிவிடல்.
பாயு } குதம் அது கருமேந்திரியமைந்திலொன்று.
பாயுரு }
பாயெடுத்தல் - பாயிழுத்தல்.
பாய் - களப்பாய் முதலியன, கூறைப்பாய், பாயல், பாயென்னேவல்.
பாய்க்கோரை - ஒருபுல்.
பாய்ச்சல் - கீழ்ப்படியாமை, பாய்தல்.
பாய்ச்சல்காட்டுதல் - பாயும்படிவைதல்.
பாய்ச்சல்விடுதல் - குதிரைமுதலியவற்றைப் பாயவிடல்.
பாய்ச்சான்போடுதல் - இருவர்கூடி ஒருலக்கையை மாறியோச்சல்.
பாய்ச்சி } சொக்கட்டான்முதலியவற்றின் கவறு.
பாய்ச்சிக்கை }
பாய்ச்சு - பாய்ச்சென்னேவல்; பிளாச்சு.
பாய்ச்சுதல் - உட்செலுத்துதல், பாயச்செய்தல்.
பாய்ச்சுலக்கை - பாய்ச்சானுலக்கை.
பாய்ச்சுவலை - ஒருவலை.
பாய்ச்சை - தத்துப்பூச்சி.
பாய்தல் - உருவுதல், ஓடல், குதித்தல், தாண்டல், நீர்முதலியபாய்தல், பரம்புதல், பறக்குதல், பறிதல், மூட்டல்.
பாய்தூக்கல் - கப்பற்பாயெடுத்தல்.
பாய்த்தல் - பாயச்செய்தல்.
பாய்த்து - பாய்ச்சல், பாய்த்தென்னேவல்.
பாய்த்துதல் - பாய்ச்சுதல்.
பாய்மரம் - கப்பல் முதலியவற்றின் பாய்தூக்குமரம்.
பாய்மா - குதிரை, புலி.
பாய்மாறுதல் - தோணியிற்பாயை மறுபுறமாக்கிவிடல்.
பாய்வலித்தல் - கப்பற்பாயிழுத்தல்.
பாய்விரி - பசிரி.
பாரகஸ்பத்தியம் - தருமநூல் பதினெட்டிலொன்று.
பாரகம் - கடக்குதல், திரைச்சீலை, தோணிநீந்தல், பூமி.
பாரகர் - கரைபிடித்தவர், தாங்குவோர்.
பாரங்கதன் - கல்வியிற்கரைகண்டவன்.
பாரங்கு - காட்டுப்பருத்தி, சிறுதேக்கு, பாரத்துவாசி.
பாரசவம் - ஆயுதப்பொது.
பாரசவன் - பார்ப்பானுக்குச் சூத்திரச்சி பெற்றபிள்ளை, வேசிபிள்ளை.
பாரசிகை - பருந்து.
பாரசீகம் - பாரிசதேசம், பாரிசதேயத்திற் குதிரை.
பாரசுவதன் - மழுவேந்தி.
பாரசுவயம் - பொன்.
பாரச்சுமை - வலுச்சுமை.
பாரஞ்சுமத்துதல் - பாரமேற்றுதல்.
பாரணம் } உண்டல், உபவாசமிருந்துண்ணல், திருத்தி செய்தல், முகில்.
பாரணை }
பாரதகண்டம் - நவகண்டத்தொன்று.
பாரதசம்பு - அநந்தபட்டர்செய்த ஒரு ஸம்ஸ்க்ருத காவியம்.
பாரதந்திரியம் - பராதீநம்.
பாரதம் - இரதம், ஐந்தாம்வேதம், பாரதவருடம், பாரதரசம். பரதவமிசத்தரசர்கள் சரித்திரம், இது இதிகாசமெனப்படும், இதில் சிருஷ்டியாதிகளின் வரலாறும் தருமநூல் உபநிடதப்பொருள் முதலியவற்றைச் சரித்திரத்திலடக்கிக் கூறுவது. இது வியாசர் சொல்ல விநாயகர் மேருமலையை யேடாகவும் தமது கொம்பையெழுத்தாணியாகவுங் கொண்டெழுதப்பட்டது, இது லக்ஷத்தையாயிரங் கிரந்தமுடையது. இதனைத்தமிழ் வெண்பாவாற் பாடினவர்பெருந்தேவனார் இதுபாடினகாரணம்பற்றி இவரைப் பாரதம் பாடிய பெருந்தேவனாரென்பர். இதைவிருத்தப்பாவாற் பாடினவர்வில்லிபுத்தூரார், அதன்பிறகு இதனை எண்ணாயிரம் பாக்களாயிடையிடையிட்டு விரித்துப் பாடினவர்நல்லாப்பிள்ளை, இற்றைக்கு ஐயாயிரவருஷங்களுக்குமுன்னே சந்திரவமிசத்திலுதித்த திருதராஷ்டிரன் பிறவிக்குருடனா யிருக் தமையால், அவன் தம்பி பாண்டு அரசனாகி, தருமன் முதலிய ஐவரைப்புத்திரராக்கி யிறந்துபோக, திருதராஷ்டிரன் அந்தஐவருக்கு அந்த அரசிற்பாதி கொடுத்து இந்திரபிரஸ்த நகரத்திலிருக்கச்செய்ததும், திருதராஷ்டிரன்புத்திரர் நூற்றவருள் மூத்தோனாகிய

துரியோதனன் பாண்டவர்களுடைய அரசைச் சூதாடிக் கவர்ந்துகொண்டு அவரைக் காட்டுக்கனுப்பினதோடு அவர்கள் மனைவியாகிய துரோபதையையும் துகிலுரிதல் முதலிய மானபங்கஞ் செய்ததும், அதுகண்ட பீஷ்மர் முதலிய பெரியோர் பாண்டவருடைய அரசைக்கவர்வது தகாதகாரியமென்று துரியோதனனுக்கு எடுத்துரைத்தபோது அவன்பாண்டவர்பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் செய்து மீண்டு வருவராயின் அவர்களுக்குப் பாதியரசு கொடுப்பேன் என்றுடன்பட்டதும், அவ்வாறே பாண்டவர் செய்து மீண்டுவந்து, கண்ணபிரானைத் தூதுபோக்கித் தமது பாகத்தைக் கேட்டதும், அவன் மறுத்ததும், பின்னே குருக்ஷேத்திரத்திலே பதினெட்டுநாள் பெரும்போர் புரிந்ததில் துரியோதனாதியர் நிர்மூலமாயொழிந்ததும், பாண்டவர் வெற்றியடைந்து அரசுபெற்றுச்செங்கோல் செலுத்தியதும் ஆகிய சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாய் இதில் கூறப்படும்.

பாரதம்பாடிய பெருந்தேவனார் - இவர் பாரத கதையைத் தமிழிலே உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றிய ஆசிரியர், இவர் சாதியில் வேளாளர், இவர் நாடு தொண்டைநாடு, நற்றிணை, கலித்தொகை, புறநானூறு முதலிய நூல்களிலுள்ள கடவுள் வாழ்த்துக்களும் இவரால் பாடப்பட்டனவே, கடைச்சங்கப்புலவர்களுள்ளே பெயர் படைத்தவர்களுள் இவரொருவர். இவர் சைவசமயத்தினர்என்பது இவராற்பாடப்பட்ட கடவுள் வாழ்த்துக்களாலினிது விளங்கும், புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தாக இவர் செய்த "திருமுடிமேற் சூட்டப்படுங் கண்ணிகார் காலத்து மலரும் நறிய கொன்றைப்பூ; ஊறப்படுவது தூயவெளிய ஆனேறு; மிகச்சிறந்தகொடியும்அவ்வானேறு, என்று சொல்லுவர். நஞ்சினது கறுப்புத் திருமிடற்றை அழகுசெய்தலுஞ் செய்தது, அக்கறுப்புத்தான் மறுவரும் வானோரை யுய்வித்தமையால் வேதத்தைப் பயிலும் அந்தணராற் புகழவும் படும், பெண்வடிவு ஒரு பக்கமாயிற்று, ஆகிய அவ்வடிவுதான் தன்னுள்ளே யொடுக்கிமறைக்கினும் மறைக்கப்படும், பிறை நிருதற்கு அழகாயது, அப்பிறைதான் பெரியோன் சூடுதலால் பதினெண்கணங்களாலும் புகழப்படும். எவ்வகைப்பட்ட வுயிர்களுக்குங்காவலாகிய நீர்தொலைவறியாக் குண்டிகையானும் தாழ்ந்த திருச்சடையானும் சிறந்தசெய்தற்கரிய தவத்தையுடையோனுக்கு என்னும் பொருளினையுடைய செய்யுள் வருமாறு "கண்ணிகார் நறுங்கொன்றைகாமர், வண்ணமார்பிற் றாருங் கொன்றை, யூர்தியால் வெள்ளேறே சிறந்த, சீர்கெழுகொடியு மவ்வேறென்ப, கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை, மறைநவி லந்தணர் நுவலவும்படுமே, பெண்ணுருவொருதிறனாகின் றவ்வுருத், தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும், பிறைநுதல் வண்ணமாகின்றப்பிறை,பதினெண் கணனு மேத்தவும்படுமே, எல்லாவுயிர்க்கு மேமமாகிய, நீரற வறியாக் கரகத்துத், தாழ்சடை பொலிந்த வருந்தவத்தோற்கே என்பது, இச்செய்யுளிலே சிவபெருமானுக்குரிய பூவும் மாலையும் வாகனமும் கொடியும் அவர் நஞ்சுண்டருளிய பெருங்கருணையும் ஆன்மாக்களின் பொருட்டுக் கொண்டருளிய வடிவும் தலையிலே கங்கையையும் சந்திரனையுமணிந்தமையும், அவர் எல்லாவுயிர்க்குங் காவல்பூண்டமையும் எடுத்தோதப்பட்டன. இச்செய்யுளிலே "பெண்ணுருவொருதிறனாகின்றவ்வுருத் தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்" எனவரும் அடிகளால் சிருஷ்டியின் பொருட்டுத் தமது சத்தியை ஒருபாலாகத் தோற்றுவித்துப் பின்னர் உலகை யொடுக்குங் காலத்திலே தமது சத்தியைத் தம்முன்னே மறைத்துக் கொள்வர் என்பதுதோன்ற நிற்றலின், இவர்சைவ

சமயத் துள்ளுறைப் பொருளெல்லாம் நன்குணர்ந்தவ ரென்பது அறியக்கிடக்கின்றது. இவர் மதுரைச் சங்கத்திறுதிக் காலத்திலே யிருந்த புலவர்களுள்ளே மிக முதியவர்.
பாரதர் - குருகுலவேந்தர்.
பாரதவருடம் - பரதகண்டம்.
பாரதன் - குருகுலவேந்தரி லொருவன், கூத்தாடி, தீ.
பாரதாரிகன் - விபசாரன்.
பாரதாரியம் - விபசாரம்.
பாரதி - சரச்சுவதி, சொல், மரக்கலம், பைரவி.
பாரதிகொழுநன் - பிரமன்.
பாரதிதீபம் - ஒரு நிகண்டு.
பாரதிபூசை - சரச்சுவதி பூசை.
பாரதியாங்கம் - கடலே.
பாரதூரம் - மிகப்பெரியது, வெகுதூரத்தது.
பாரதேசிகன் - அன்னியன், பரதேசி.
பாரத்துவாசம் - எலும்பு, கரிக்குருவி, காடை, வலியான்.
பாரத்துவாசன் - அகத்தியன், துரோணசாரியன்.
பாரத்துவாசி - துரோணசாரி.
பாரந்தாங்குதல் - பாரஞ்சுமத்தல்.
பாரபட்சம் - ஓரவாரம்.
பாரபத்தியக்காரன் - அதிகாரி, உத்தியோகத்தன்.
பாரபத்தியம் - அதிகாரம், மேல்விசாரணை.
பாரப்படுதல் - பாரமாதல்.
பாரப்படுத்துதல் - பருப்பித்தல், பாரமாக்குதல்.
பாரப்பழி - மிகு குற்றம்.
பாரமார்த்திகன் - பரமார்த்தயுக்தன்.
பாரமிதம் - மேலானது.
பாரமுகாக்கியம் - சிவலிங்கமுகப் பூசை, பூசையியல்பினொன்று.
பாரமேச்சுரம் - சிவாகமமிருபத்தெட்டினொன்று.
பாரமேஷ்டி - பிரமன்.
பாரம் - இரதம், ஒருவிளையாட்டு, கடமை, கரைப்பொருது,கவசம்,கனம், காவுதடி, குதிரைச்சேணம், சுமை, துலாமிருபத்தெட்டுக்கொண்டது அது இரண்டாயிரம் பலங்கொண்டது, தோணி, நிறை, நீர்க்கரை, பருத்திப்பூ, பூமி, பொறுப்பு, பொறுமை முடிவு, வரம்பு.
பாரம்பரம்
பாரம்பரியம் } ஐதிகம், கிரமக்கிரமமாய் வருவது.
பாரம்பரை
பாரம்பரைநியாயம் - கிரமக்கிரமமாய்வருமுறைமை.
பாரலௌகிகம் - பாயசம்.
பாரவதம் - புருப்பொது.
பாரவம் - வின்னாண்.
பாரவாகனம் - சுமையெடுத்தும்யானம்.
பாரவாகனன் - காக்காரன்.
பாரவி - இவர்கிராதார்ஜுநீயம் செய்த ஒரு ஸம்ஸ்க்ருதகவி.
பாரவிருதம் - உபகாரம், பலி.
பாரன் - பிருதுசேநன் புத்திரன், இவன் மகன் நீபன்.
பாராகம் - உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று.
பாராசரம் - ஒருபுராணம்.
பாராசரி - சுக்கிரன்.
பாராசரியகற்பிகன் - பாராசர நூற்படி நடப்போன்.
பாராசரியன் - பாராசரி.
பாராசரியம் - பராசரியம்.
பாராசாரி - வியாசன்.
பாராட்டல் - மெச்சல், தூறல்.
பாராட்டு - கொண்டாட்டம், பாராட்டென்னேவல், புகழ்ச்சி.
பாராட்டுக்காரன் - புகழ்வோன்.
பாராட்டுதல் - உபசரித்தல், உரிமைபாவித்தல், புகழ்தல்.
பாராட்டுந்தாய் - ஐவகைத்தாயாரிலொருத்தி.
பாராட்டுப்பண்ணுதல் - புகழ்தல்.
பாராயணப்பத்திரம் - மாணாக்கர்க்குபாத்தியாயர் கொடுக்குமுறுதி.
பாராயணம் - கடந்துபோதல், நியமமாகப்படித்தல், முற்றறமுடித்தல்.
பாராயணர் - நியமமாய்க் கற்போர், பார்ப்பார்.
பாராயணி - சரச்சுவதி.
பாராயணிகன் - கற்போன்.
பாராருகம் - மலே.
பாராவதம் - கருங்காலி, கரும்புறா, குரங்கு, புருப்பொது, மலே.

பாராவலையம் } வளைதடி.
பாராவளையம் }
பாராவாரம் - கடல், கடற்றிரை, கரை, சமுத்திரம்.
பாராவாரீணன் - இருபக்கஞ் சாய்ந்தவன்.
பாரி - இராக்காவல், ஓரளவு, கடையெழுவள்ளலிலொருவன், கட்டில், கள்குடிக்கும்பாத்திரம், கோட்டம், சிங்கம், சிறங்கைநீர், நல்லாடை, பாரியென்னேவல், பூந்தாது, பூமி, பெரியோன், மனைவி, யானைகட்டுங்கயிறு. இவன் பறம்பு என்னு மூரிலிருந்த ஒருசிற்றரசன், இவன்கொடையாற் சிறந்தோனுதலால் வள்ளல்களில் ஒருவனுனன், இவன் கொடைச்சிறப்புநோக்கிக் கொடையாளரைப் புகழ்வோரெல்லோரும் பாரியேயென்று புகழ்வார்கள். சுந்தரமூர்த்திநாயனுரும் இவனது வள்ளற்றன்மையைக் கேள்வியுற்றே இவனைக் கொடைக்கிலக்கியமாகக் கூறியது, "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினும்" என்னுந் திருப்புகலூர்ப் பதிகத்துத் தேவாரத்தாற் பெறப்படும், இவன்தன் காலத்திலிருந்தசேரசோழபாண்டியர்களுடைய கீர்த்திப் பிரகாசத்தையெல்லாம் தன் கொடைக்கீர்த்திப் பிரகாசத்தால் மழுங்குவித்தவன்; அதுகண்டு அவ்வேந்தர் மூவரும் போர் தொடுத்து இவனைக் கொன்றெழித்தார்கள். இவனோடு இவன்சுற்றத்தாரும் போரில் மடிந்தொழிய இவனை யடுத்து வாழ்ந்திருந்தபுலவர்களும்நிலைகுலைந்தொழிந்தார்கள். இவனுடையபுத்திரிகள் தம்மைக்காப்பவரொருவருமின்றிக் கபிலரையடைய அவர் தாம் பாரியிடத்துப்பெற்றநன்றியைமறவாது அவர்களை வளர்த்துக்கோமக்களுக்கு மணம்பொருத்த முயன்றும் பயன்படாமையால் அந்தணர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார். கபிலர் கடைச்சங்கப்புலவரு ளொருவர்.
பாரிகன் - காக்காரன்.
பாரிகாரிகன் - மாலைக்காரன்.
பாரிகாரியம் - கடையம், பிடித்தல்.
பாரிக்கிதன் - பரிக்கிருது.
பாரிக்கை - பாரிப்பு.
பாரிசகிரணம் - பக்கக்கிரணம்.
பாரிசநோ - ஒருநோய்.
பாரிசம் - ஒருமலை, திசை, பக்கம்.
பாரிசவாதம் } ஒருநோய்.
பாரிசவாயு }
பாரிசாதகம் - பஞ்சதருவிலொன்று.
பாரிசாதம் - ஐந்தருவிலொன்று, பவளமல்லிகை, முருக்கு.
பாரிஜாதம் - க்ஷீராப்தி மதநகாலத்துத் தோன்றின பஞ்ச தருக்களிலொன்று, வீமன் திரௌபதையின் பொருட்டுத் தேவலோகஞ்சென்று இதன் மலரொன்றை யெடுத்து வந்து அவளுக்குக் கொடுத்தான்.
பாரிசாரம் - ஏவல், கட்டளை.
பாரிசேடம் - ஒழிபளவை அது தருக்கசாத்திரத்தி லொருறுப்பு அது கூட்டிக்கழித்தல்.
பாரிஷதன் - காவற்காரன், பார்க்கிறவன்.
பாரிடம் - பூதகணம், பூமி.
பாரிணயம் - சீதனம்.
பாரிதத்தியை - நெற்றிச்சுட்டி.
பாரிதோஷிகம் - உபகாரம்.
பாரித்தல் - உண்டாக்கல், குற்றஞ்சார்த்துதல், தோற்றல், பரப்பல், பருத்தல், பலன்படல், வளர்தல்.
பாரிந்திரன் - சிங்கம்.
பாரிபத்திரம் - வேப்பு, கருசதேசத்து முக்கியபட்டணம், விந்திய பர்வதத்துக்குச் சமீபத்திலுள்ளது.
பாரிபந்திகன் - கள்வன்.
பாரிபாட்டியம் - ஒழுங்கு.
பாரிபார்ச்சவிகன் - உதவிக்காரன், அணைக்கவிசொல்வோன்.
பாரிபாவிகம் - கை.
பாரிபாவியம் - ஒருகுளிகை, கோஷ்டம், பிணை.
பாரிப்பு - அதிகரிப்பு, கனம், பருப்பம், வீக்கம்.
பாரியம் - கடுக்காய், முருக்கு.
பாரியாடன் - மனைவியைப் பிறர்க்கனுகூலப்படுத்திச் சீவிப்போன்.
பாரியாடிகன் - மனைவிக்கடங்கிய கணவன்.
பாரியாதிக்கிரமம் - விபசாரம்.
பாரியாத்திரம் - ஒருமலை.

பாரியாத்திரன் - குருபுத்திரன், இவன் குசன்வமிசத்தவன்.
பாரியான் - பருத்தவன், மனையாள்.
பாரியானிகம் - பண்டி.
பாரியை - மனைவி.
பாரிரட்சகன் - தவசி.
பாரிவர்ணம் - முன்னாங்கி.
பாரிவேட்டை - வேட்டை.
பாரீட்சிதன் - ஜநமேஜயன்.
பாரீந்திரம் - சிங்கம், மலைப்பாம்பு.
பாரு - சூரியன், தீ.
பாருஷியம் - அகில், இந்திரன் தனம், கடுஞ்சொல், கொடுமை, நிந்தை.
பாரோகம் - வாள்.
பாரோதரணம் - காவுதல்.
பாரை ஒருமீன், இருப்புலக்கை, கடைப்பாரை, குழிகல்லுங்கருவி.
பார் - அடுக்கு, உரோகணிநாள், தேசம், தேரின்பரப்பு, நிலம், படுக்கை, பாரென்னேவல், பார்ப்பார், பாறை, புத்தன், பூமி, முறை.
பார்க்க - பார்க்கிலும்.
பார்க்கடம் - சாம்பர்.
பார்க்கபூமி - பார்க்கவன் புத்திரன்.
பார்க்கவப்பிரியம் - வச்சிரம்.
பார்க்கவம் - உபபுராணம் பதினெட்டில் ஒன்று.
பார்க்கவன் - சுக்ரன், பரசுராமன், வில்லாச்சிரமி, சிவபிரான், வீதிஹோத்ரன் மகன்.
பார்க்கவி - இலக்குமி, சிறுதேக்கு, பார்வதி, வெள்ளறுகு.
பார்க்கியம் - நன்னடை.
பார்க்கியன் - சத்துரு.
பார்க்குணம் - பாற்குணம்.
பார்சவம் - பக்கம், பரிசு, வட்டத்தின் சுற்றளவு.
பார்சவன் - பரிசுபெற்றோன்.
பார்சுவகன் - கள்வன்.
பார்சுவத்தன் - அணைசொற்காரன், உதவிக்காரன்.
பார்சுவம் - உதவி, துதிப்போர்கூட்டம், வட்டம், விலா.
பார்சுவாசாந்தம் - உச்சிட்டபந்திபோசனம்.
பார்த்தசாரதி - பார்த்தனதுசாரதி, கிருஷ்ணன்.
பார்த்தல் - ஆராய்தல், கவனித்தல், காணல், தேடல், நோக்குதல், பத்திரம் பண்ணல், பிரயாசப்படுதல், வணங்கல்.
பார்த்தவம் - மிகுதி.
பார்த்தன் - அருச்சுனன், கார்த்தவீரியன்.
பார்த்திவ - பத்தொன்பதாவதாண்டு.
பார்த்திவசாலை - இராஜசபை.
பார்த்திவம் - பார்த்திபம், பூமி.
பார்த்திவன் - அரசன், பார்த்திபன்.
பார்த்திப - பார்த்திவ.
பார்ப்பதி - பார்வதி, பெருநெருஞ்சில்.
பார்ப்பதிகொழுநன் - சிவபிரான்.
பார்ப்பரன் - யமன்.
பார்ப்பனக்கொலை - பிரமகத்தி.
பார்ப்பனச்சேரி - பார்ப்பார்சேரி.
பார்ப்பனத்தி - பிராமணத்தி.
பார்ப்பனமாக்கள் - பார்ப்பார்.
பார்ப்பனி - பார்ப்பனத்தி.
பார்ப்பாரறுதொழில் - ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்.
பார்ப்பான் - இயமன், பிராமணன்.
பார்ப்பினி - பார்ப்பனி.
பார்ப்பு - கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, தவழ்சாதியின்பிள்ளை, பறவைக்குஞ்சு, பார்த்தல், பிரமசாதி, மான்கன்று.
பார்மகன்சாரி - பச்சைக்கருப்பூரம்.
பார்மிசையோன் - புத்தன்.
பார்வணம் - பூரணை, மான், பாசமிருபத்தொன்றிலொன்று.
பார்வணன் - சந்திரன்.
பார்வதம் - மலை, வாலுளுவை, வேம்பு.
பார்வதி - இடைச்சி, உமை, காவிமண், அருபதி.
பார்வதிகம் - மலைக்கூட்டம்.
பார்வதிகுமாரன் - முருகன்.
பார்வதிலோசனம் - தாளவகையிலொன்று, அது பதினாறு மாத்திரையையுடையது.
பார்வதேயம் - மலையிற்பிறப்பன.
பார்வல் - குஞ்சு, நீவகப்பட்சி, மான்கன்று முதலியன.
பார்வை - கண், கவனம், சிறப்பு, குனியமரக்கு, நோக்கு, பார்த்தல், மதிப்பு.
பார்வைக்காரர் - நோய்தீர்ப்போர், மதிப்புக்காரர்.

பார்வைத்தகடு-துறப்பு வாய்த்தற்றகடு.
பார்வைத்தாழ்ச்சி - குருடு பராமரிப்புத் தாழ்ச்சி.
பார்வைபார்த்தல் - நோய்தீர்க்க மந்திர முச்சரித்தல்.
பாலகத்துவம் - தற்காத்தல்.
பாலகம் - என்னு,குருவேர், கோட்டம், சிகைதோளணி, மோதிரம்.
பாலகன்-காப்போன், குதிரைக்காரன், குழந்தை, புத்திரன்.
பாலகி - புத்திரி.
பாலங்கம் - குதிரை, பறவை.
பாலசரசுவதி - நந்நயபட்டருடைய சிடன். இவர் ஸம்ஸ்க்ருதாந்த்ர மிரண்டினும் நந்நயபட்டீய வ்யாகரணத்திக்கு வ்யாக்யாநம் செய்தவர்.
பாலசரியன் - முருகன்.
பாலசவுந்தரியம்மை -திருப்பைஞ்ஞீலியிலேகோயில்கொண்டிருக்கும்தேவியார் பெயர்.
பாலசிகிச்சை - குழந்தை வைத்தியம்.
பாலசூரியன் - உதயாதித்தன்.
பாலசூலிகம் - சாமரம்.
பாலடை - ஒருசெடி, பாலகப்பை, பாலுறட்டி.
பாலதனயம் - கருங்காலி.
பாலதிருணம் - இளம்புல்.
பாலபோச்சியம் - சிறுவருணவு.
பாலமுடாங்கி - வேலிப்பருத்தி.
பாலம் - ஆற்றுப்பாலம், நெற்றி, பிரபை, பூமி, மரக்கொம்பு, மழு.
பாலரசம் - பொன்னிறம்.
பாலரதி - இளமைப்பருவப்பெண்.
பாலராஜம் - வைடூரியம்.
பாலரீரி - பிள்ளைத்தன்மை.
பாலர் - இடையர், பிள்ளைகள்.
பாலலீலை - குழந்தைவிளையாட்டு.
பாலலோசநன் - சிவபிரான்.
பாலவம் - வாலவம்.
பாலவரை - ஓரவரை.
பாலவற்சை - த்யுமத்ஸேநன் மனைவி, சத்யவந்தன் தாய்.
பாலவாயஜம் - வைடூரியம்.
பாலவாகடம் - ஒரு வைத்தியநூல்.
பாலனம்-இளங்கன்றின்பால், காத்தல், பாற்சோறு.
பாலனன் - காப்போன்.
பாலன் - இடையன், எழுத்துத்தானம் ஐந்தினொன்று, எழுவயசுக்குட்பட்டவன், காப்போன்.
பாலாக்குதல் - சாதுவாக்குதல், பங்கிடுதல்.
பாலாங்கன் - சிவபிரான்.
பாலாசம் - பச்சைநிறம்.
பாலாடை - பாலிற்பிறக்கு மாடை.
பாலாட்சன் - சிவபிரான்.
பாலார்க்கன் - இளஞ்சூரியன்.
பாலி -அலை,ஆலமரம்,எல்லை,ஓர்பாஷை, ஓர்யாறு, கன்,கறை, காதிற்சோணை, சுற்றளவு, செம்பருத்தி, பாலியென்னேவல், பாற்பசு, பானை,புகழ்,வரிசை, வாண்முனை, கௌதமர்காலத்திலும் அதற்குப் பூர்வாபர காலங்களிலும் ஆர்யாவர்த்தத்திலே வழங்கியபாஷை, இந்தப்பாஷையிலேயே பௌத்தசமய சாஸ்திரங்களெல்லாமுள்ளன. இது ஸம்ஸ்க்ருதப்ராக்ருதம்.
பாலிகை - அடம்பு, ஆயுதமுனை, உதடு, படைவாளின்முட்டி, பாற்கரண்டி, பெண்பிள்ளை, முளைப்பாலிகை, வட்டம்.
பாலிசின்னம் - ஆலவட்டம்.
பாலிதம் - பெருந்தேக்கு.
பாலிதன் - வளப்புப்புத்திரன்.
பாலித்தல் - அருளுதல், ஈதல்,காத்தல்.
பாலியம் - எழுவயசுக்குட்பட்டபருவம்.
பாலிறக்கம் - வைசூரிக்கொப்புளத்திற் பால் வடித்தல்.
பாலிறவி - முருக்கு.
பாலுகம் - கருப்பூரம்.
பாலுண்ணி - சரீரத்திலுண்டாகிற ஒரு காய்.
பாலுறட்டி - வெள்ளுறட்டி.
பாலேடு - பாலாடை.
பாலேயம் - கழுதை, சிறு முள்ளங்கி, மிருது.
பாலை - ஒருகொடி, ஒருமரம், ஒருமீன், கடல், கல்வியிற்பிரிதல், குழந்தை, பாடற்சுவையினொன்று, பாலைநிலம், பாலைப்பண், பாலைப்பூ, புநர்பூசநாள், பொருள்வயிற்பிரிதல், மிருகசிரிடநாள், வெம்மை.

பாலைக்கருப்பொருள் - பாலைநிலத்தற் பத்திப்பொருள் அது காளிமுதற் குறையாட வீருய பதினொன்கு.
பாலைக்கிழத்தி - துர்க்கை.
பாலைத்திணை-பாலைநிலத்திற்குரியவை.
பாலைநிலக்குடிகள் - குறவர், வேடுவர்.
பாலைநிலத்தவன் - காளை.
பாலைநிலத்தெய்வம் - காளி, துர்க்கை.
பாலைநிலத்தூர் - குறும்பு.
பாலைநிலநீர் - வறங்கூவநீர்.
பாலைநிலப்பண் - பஞ்சுரம்.
பாலைநிலப்பறை - துடி.
பாலைநிலப்புள் - கழுகு, பருந்து, புறா.
பாலைநிலப்பூ - கள்ளி, பாலை, பூளை.
பாலைநிலமரம் - ஓமை, கள்ளி, குரா, பாலை, மரா.
பாலைநிலமக்கடொழில் - கொள்ளையாடல்.
பாலைநிலமாக்களுணு - ஆறலையும்பதிப் பறியும்.
பாலைநிலம்-ஐந்நிலத்தொன்று, அதுநீரு நிழலுமில்லாச்சுரமுஞ் சுரஞ்சார்ந்த விடமும்.
பாலைநிலவிலங்கு - செந்நாய்.
பாலைப்புறம் - சுரநடை, முதுபாலை.
பாலைமுதற்பொருள்-சுரமுஞ்சுரஞ் சார்ந்த விடமும் வேனில் நண்பகல்பின் பனி யென்னும் பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுகளுமாம்.
பாலையாழ் - பாலைநிலத்தியாழ்.
பாலைவனம் - சுரம்.
பாலொடுவை - கொடிப்பாலை.
பாலோபவீதம் - பூணூல்.
பால்மொடிக்கா - ஒருபூடு.
பால் - இடம், இயல்பு, உரிமை, ஊழ், எழுறுப்பு, கடமை, குணம், திக்கு, பகுதி, பக்கம், பங்கு பஞ்சகௌவியத்தொன்று அது பசுப்பால், பலன், பாதி, மரப்பால், முலைப்பால், வெண்மை.
பால்கட்டுதல் - பால்கொள்ளுதல், வைக்குரிப்பால், குற்றுதல்.
பால்கறத்தல் - பால்பிழிந்தல்.
பால்தோய்தல் - பாலுறைதல்.
பால்தோய்த்தல் - பாலுறைவித்தல்.
பால்பகாவஃறிணைப்பெயர் - பால்பகுத்தலின்றி நிற்கு மஃறிணைப்பெயர், (உ-ம்) மாடுவந்தது.
பால்பகாவுயர்திணைப்பெயர் - பால்பகுத்தலின்றி நிற்கு முயர்திணைப்பெயர் (உ-ம்) மக்கள்வந்தார்.
பால்பிடிபதம் - பயிர்க்கதிர் பாலடையும் பதம்.
பால்மரம் - பாலுள்ளமரம்.
பால்மறத்தல் - பால்குடிமறத்தல்.
பால்மறுத்தல் - பால்வற்றுதல்.
பால்மாறிக்கை - சோம்பு.
பால்மாறுதல் - சோம்பாயிருத்தல்.
பால்முடக்கி - ஒருபூடு.
பால்முட்டான் - ஒருமீன்.
பால்வண்ணன் - பலராமன்.
பால்மேனியாள் - சரசுவதி.
பால்வழு - பான்மயக்கம்.
பால்வண்ணநாதர் - திருக்கழிப்பாலையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பால்வளை-திருபட்டீச்சுரத்திலேகோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
பால்வளைநாயகி - திருச்சக்கரப்பள்ளியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
பால்வீதிமண்டலம் - வாணுட்சரேகையிற்ருேன்றும் சோதிவரி.
பால்வெடித்தல்-நென்முதலான தானியம் பாலடையாது விள்ளல்.
பால்வெள்ளைமண் - சுதைமண்.
பாவகம்-இயல்பு, கருத்து, உருவு, கொலை, சேங்கொட்டை, தூய்மை, தோற்றம், பாவனை, மனநினைவை வெளிப்படுத்தல்.
பாவகன் - அக்கினிதேவன், கற்றோன், சுத்தமடைந்தோன், சொரூபி, தூய்மை செய்வோன், நெருப்பு.
பாவகாரி - பாவாத்துமா.
பாவகி - முருகன்.
பாவசம் - காமம்.
பாவசன் - மன்மதன்.
பாவடம் - பாவாடம்.
பாவட்சயம் - பாவநிவிர்த்தி.
பாவட்டை-ஆடாதோடை திரணைச்செடி.
பாவட்டைச்சக்களத்தி-ஒருசெடி.
பாவண்ணம் - வண்ண பேதங்களில் ஒன்று.
பாவநாசம்-ஓரூர், ஒருநதி, பாவநீக்குதல்.
பாவநிவாரணம் } பாவநீக்குதல்.
பாவநிவிர்த்தி }

பாவமன்னிப்பு - பாவப்பொறுதி.

பாவமூர்த்திகள் - கீழ்மக்கள், வேடர்.

பாவம் - அக்கிரமம்,அதிட்டவீனம், ஆத்துமா,இயக்கம், இயங்குதிணை, இயல்பு, உலகம், உள்ளது, கருத்து, கருப்பை,செயல்,சொற்பொருள்,சொன்மூலம்,தன்மை, நோக்கம்,பரதவுறுப்பொன்று, பாபம், பாவனை, பிறப்பு, பொருள், பொழுதுபோக்கு,போதனை, மெய்ப்பாட்டுக் குறிப்பு.

பாவலர் - கவிகள், புலவர்.

பாவல் - பாதகுறடு,பாவுதல், மரக்கலத்தோருறுப்பு.

பாவவாளி - பாவி.

பாவவிமோசனம் - பாவநிவிர்த்தி.

பாவனகடுக்காய் - ஒருவகைகக்டுக்காய்.

பாவனத்துவனி } சங்கு.
பாவனத்தொனி }

பாவனதீர்த்தம் - புண்ணியதீர்த்தம்.

பாவனம் - அத்தாட்சி,அலங்கரிப்பு,ஆப்பி, ஆராய்வு, இணைவு, எண்ணம், கருத லனுமானம் அது அளவையெட்டினுென்று, சுத்திசெய்தல், தவம், தியானம், தூபம், தூய்துசெய்தது, தூய்மை.

பாவனன் - அனுமன், ஒரு மறுருஷிபுத்திரன், தீ, வியாசன், வீமன்.

பாவனுதீதம் - பாவனைக் கெட்டாதது.

பாவனுவுருவகம் - உருபகா லங்காரத்தொன்று.

பாவனி - கங்கை, துளசி, பசு.

பாவனை-எண்ணம்,தியானம், நடத்தை, மாதிரி.

பாவனைபண்ணுதல் - பாசாங்குபண்ணல், பாவித்தல், மாரீசம்பண்ணுதல்.

பாவாடம் - நாவறுத்தல்.

பாவாடன் - சுத்தன், தூர்த்தன்.

பாவாடை - கோலம், நிலத்தில் விரிக்குஞ்சீலை, பெண்களாடை.

பாவாடைப்பூ - இலுப்பைப்பூ.

பாவாடையமுது-ஒருவகை நைவேத்தியம்.

பாவாணர் - புலவர்.

பாவாத்துமா - பாவி.

பாவாறுகை - சாயை.

பாவார்த்தம்-சொற்பொருள், வெளியருத்தம்,

பாவாற்றி - நெய்வார்குச்சு.

பாவி - உள்ளது, சுபாவி, தீயோன், பாவியென்னேவல், பேதை.

பாவிகம் - ஓரலங்காரம், அது சென்றதையும் வருவதையும் நிகழ்வதாகச் சொல்லுதல், காப்பியமாய் முடியவுரைப்பது.

பாவிதம் - கலப்பு,கூட்டு,சங்கற்பித்தல், சம்மதம், பாவிப்பு, பேறு.

பாவித்தல் -பாவனைசெய்தல்,வழங்கல்.

பாவித்திரம் - மூன்றுலகம்.

பாவிப்பு - பாவனை.

பாவினம் - பாக்களினமாகிய அகவற்பா கலிப்பா துற்பா மருட்பா வஞ்சிப்பா, வெண்பா என்னும் பாக்களுமிவற்றின் விகற்பங்களுமாம்.

பாவின்புணர்ப்பு - ஓரலங்காரம்அதுஒரு பாட்டைப் பிரித்து வாசிக்க வெவ்வேறு பாட்டாகவரத் தொடுத்தல்.

பாவு - பா, பாவென்னேவல்.

பாவுகம் - சந்தோஷம், சுபதினம்.

பாவுகல் - வரிசைபடப் பரப்பினகல்.

பாவுதல் - தாண்டல்,நடுதல்,பரப்புதல், பரம்புதல், பற்றுதல், வேர்வைத்தல், விரித்தல்.

பாவுபலகை - மேல்மச்சு.

பாவை - சித்திரப்பாவை பதுமை, பெண், மதில், இலக்குமிக்கூத்து.

பாவைக்கயிறு - பாவையாட்டுங்கயிறு.

பாவைகூத்து - பாவையாட்டுதல்.

பாவைமன்றம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐவகைமன்றத்தொன்று, இது அரசனுடைய செங்கோல்கோடுதல் முதலிய குற்ற முண்டானல் அவற்றைப் பாவை தெரிவிப்பதற்கிடமாயுள்ளது.

பாவோடல் - இழையோடுதடி,பாவோடுதல்.

பாவோடுதல் - நெய்வார்தொழிலின்று.

பாவோதயம் - ஓரலங்காரம்.

பாழாக்குதல்-அழித்தல்,கெடுத்தல்.

பாழாதல் - ஊழ்த்தல், கெடுதல்,சினத்தல்.

பாழி - அகலம், அளை, ஆகாயம், உரை, ஊர், கடல், இராமம், குகை,சயனம், சிறுகுளம், தேவர்கோயில், பகைவரூர், பாழ், பெருமை, மருதநிலத்தூர், முனிவர் வாசம், வலி, விலங்கின்படுக்கை.

பாழித்தியம் - ஒருநூல்.
பாழ் - அழிவு, ஆகாயம், கெடுதி, சூனியம், நட்டம், பாழென்னேவல், வீண், வெறுமை.
பாழ்க்கடி - கெடுதல், கேடு.
பாழ்க்கடித்தல் - பாழாக்கல்.
பாழ்க்கடிப்பு - கெடுத்தல், கேடு.
பாழாக்குதல் - பாழாக்கல், பாழாதல்.
பாழ்ங்கிணறு- செடிக்கிணறு,நீரில்லாக்கிணறு.
பாழ்ங்குடி - கெடுகுடி.
பாழ்ங்கோயில் - பாழடைந்தகோயில்.
பாழ்ஞ்சேரி - பாழ்பட்டபட்டினம்.
பாழ்த்தல் - பாழாதல்.
பாழ்நத்தம் - பாழ்பட்டவூர்.
பாழ்நிலம் - செய்கையற்றநிலம்,பாலைநிலம்.
பாழ்ந்தலம் - பாழாயிருக்குமிடம். [லம்.
பாழ்படுதல் - அழிதல், கெடுதல்.
பாழ்மூலை - வழங்காமூலை.
பாழ்வாயன் - வீண்பேச்சுக்காரன்.
பாழ்வாய்கூறல் - நியாயமற்ற முறைப்பாடு, வீண்பேச்சு.
பாழ்வாய்ச்சி - வீண்பேச்சுக்காரி.
பாழ்வீடு - குடியில்லாதவீடு.
பாழ்வெளி- அந்தரவெளி,சூனியவெளி.
பாளச்சிலை - மருந்துபூசிக்காயவைத்தபு
பாளபந்து-தேவநாகரஎழுத்து. [டவை.
பாளம் - கட்டி, சிலையின்கிழிவு, பொற்பாள முதலியன, வெடிப்பு.
பாளயம் - பாளையம்.
பாளாசக்கயிறு - குதிரை கால்கட்டுங்கயிறு.
பாளி - அடையாளம், பாசறை.
பாளிக்கிரமம் - வேதமோதுங்கிரமம்.
பாளிதம் - கண்டசருக்கரை,கருப்பூரம், குழம்பு, சந்தனம், சோறு, பட்டுப்புடைவை, பாற்சோறு.
பாளை - கமுகு, தெங்கு, பனை முதலியவற்றின் பாளை, பதர், பாலப்பருவத்திற்கு முன்பருவம்.
பாளைப்பருவம் - கருவிலோர்பருவம்.
பாளைமடல் - பாளையை மூடியமடல்.
பாளையகாரன் - அரசர்களுக்கீழ்ச்சில சேனையோடும் ஒவ்வோர் புறங்கட்கதிகாரியாயிருப்போன், கூடாரத்திலிருப்பவன், படைத்தலைவன்.
பாளையப்பேட்டு - பாளையகாரன்.
பாளையமிறங்குதல் - கூடாரம் போடுதல், படைவந்திருத்தல்.
பாளையமெழும்பல் - படையெழுச்சி.
பாளையம் - குறுநிலமன்னரூர், சுற்றூர், படை, பாசறை.
பாளையம்போடுதல் - நெடுக விருத்தல், பாளையமடித்தல்.
பாளையாரம் - ஓராம்.
பாளைவருதல் - தெங்குமுதலியவற்றிற் பாளை புறப்படல்.
பாளைவெடித்தல் - பாளைவிடல்.
பாறல் - அடிப்பறிதல், இடபவிராசி, எருது, ஓடல், பொறியெருது, பொருதல், நீங்கல்.
பாறு - பருந்து, பாறென்னேவல்,மரக்கலம்.
பாறுதல் - அடிப்பறிதல், ஓடுதல்.
பாறை -கற்பாறைமுதலியன,இட்டை.
பாறையுப்பு - ஒருப்பு.
பாற்கடம் - பாற்குடம்.
பாற்கடல் - சத்தசமுத்திரத்தொன்று.
பாற்கடற்பிறந்தாள் - இலக்குமி.
பாற்கடற்றுயில்வோன் - விட்டுணு.
பாற்கட்டுப்பயிர் - முட்டுக்காய்ப் பருவத்திற்பயிர்.
பாற்கரம் - உபநிட்த முப்பத்திரண்டின்றென்று, பொன், வீரம்.
பாற்கரன் } ஆதித்தன், தீ, வீரன்.
பாஸ்கரன் }
பாற்கரியோன் - தேவேந்திரன்.
பாற்கலசம் - பால்கறக்குங் கலசம்.
பாற்கவடி - பாற்சோகி.
பாற்காய் - பாலுண்ணி, பாற்பிடியான காய்.
பாற்காரன் - பால்விற்போன்.
பாற்காரி - குழந்தைப்பிள்ளைக்காரி,செவிலித்தாய், பால்விற்பவள்.
பாற்காவடி - பால்கொண்டுபோகுங்கா
பாற்குடம் - பாற்கும்பம். [வடி.
பாற்கும்பம் - பாற்குடம்.
பாற்குழந்தை - கைக்குழந்தை, முலைப்பாலுண்ணும் பிள்ளை.
பாற்குழம்பு - குழம்புப்பால்,
பாற்குனம் } உத்திரான்,பங்குனிமாதம்.
பாற்குனி }
பாற்குனிகம் - பங்குனி.
பாற்கெண்டை - ஒருமீன்.

பாற்கொவ்வை - ஒருகொவ்வை.
பாற்சிரசந்தன் - செருடபச்சை.
பாற்சுண்டு - பாலினடிப்பற்று.
பாற்சுறு - ஒரு சுறுமீன்.
பாற்சொக்கு - செல்லச்சொக்கு.
பாற்சொற்றி - பாற்சோற்றி.
பாற்சோறு - பாலன்னம்.
பாற்சோற்றி - ஒருபூண்டு.
பாற்பசு - கறவை.
பாற்பள்ளயம் - ஒருகுளிர்த்தி, பால்விட்டுப் பொங்கிய அன்னப்படைப்பு.
பாற்பீர்க்கு - வெள்ளைப்பீர்க்கு.
பாற்புடல் - வெண்புடல்.
பாற்பொங்கல் - பாலோதனம்.
பாற்று - உரியது (உ-ம்) வைக்கற் பாற்றன்று பாலது.
பாற்றுத்தம் - வெண்டுத்தம்.
பானகம் - ஒருவகை நீர்மோர்.
பானகோட்டிகை - மதுக்கடை.
பானக்கம் - பானகம்.
பானசம் - பலாப்பழத்தட்டமது.
பானசியர் - மடையர்.
பானபரம் - குடித்தல்.
பானபலி - மதுப்பலி.
பானபாசனம் - குடிக்கும் பாத்திரம்.
பானபாத்திரம் - வள்ளம், கிண்ணம்.
பானம் - கள், குடித்தல், பருகுவன.
பானம்பண்ணுதல் - குடித்தல்.
பானல் - கடல், கருங்குவளை, கள், குதிரை மருதநிலம், வயல், வெற்றிலை.
பானுள் - அத்தசாமம், மத்தியானம், பாதினுள்.
பானி - படை, பருகுவோன், பானியென்னேவல்.
பானிக்குருச்சி - சீனக்காரம்.
பானித்தல் - குடித்தல்.
பானியம் - பாகபாத்திரம்.
பானியவல்லி - வலம்புரிக்கொடி.
பானீயம் - நீர், பருகுவன.
பானு - அரசன், அழகு, அழகுடையான், எஜமான், ஒளி, கிரணம், சிற்பதுன் முப்பத்திரண்டின்றென்று, சூரியன்.
பானு - வசுதேவன் தம்பி, சூரியன், தக்ஷப்ரஜாபதி மகன்.
பானுகோபன் - இவன் சூரபன்மனுக்குப் பதுமகோமளையிடத்துப் பிறந்த புதல்வன். இவன்தொட்டிலின் கண்ணே மகவாய்க் கிடக்குநாளி லொருநாள் தன் கண் கூசும்படி சூரியன் பிரகாசித்தா னென்று கோபித்து அவனைப் பிடித்துவந்துதொட்டிலிற்றளைசெய்தவனுதலாலேபானுகோபனென்னும்பெயர்பெற்றான். (பானு) சூரியன், கோபன் காய்ந்தவன். இவன் சுப்பிரமணிய யுத்தத்தி லுயிர்துறந்தவன்.
பானுபலை - வாழை.
பானுபூமி - மகாதலலோகம்.
பானுமதி - கார்த்தவீரியார்ச்சுனன் தங்கை. அகம்யாதி பாரி. துரியோதனன் பாரி. சகதேவன் பாரி.
பானுமந்தன், பானுமரன் } சீதாதேவிசகோதரன்
பானுமைந்தன் - கன்னன், சனி, சுக்கிரீவன், சமன்.
பானுவாசரம், பானுவாரம் } ஞாயிற்றுக்கிழமை.
பானை - மிடா.
பானைக்குடுவை - சிறுபானை.
பானைமூடி - மல்லாய்.
பானைவெடிச்சான் - புளவைகொல்லி.
பான் - எதிர்காலவிடைச்சொல் (உ-ம்) உண்பான்வந்தான், பத்திஞேர்திரிபு (உ-ம்) ஒருபான்.
பான்மயக்கம் - ஒரு பாற்குரிய சொல் வேறோர்பாற்குரியசொல்லுடன்வழங்கல்.
பான்மாறுதல் - பான்மயங்குதல்.
பான்முளை - ஊழ்முளை.
பான்மை - குணம், தகுதி, தன்மை, பங்கு.
பாஷ்கலி - பாஷ்கலன் புத்திரன்.
பாஹிமிகம் - சிந்துநதிக்குச் சமீபத்திலுள்ள தேசம்.
பாஹிலிகன் - குருவமிசம் பிரதிபன் புத்திரன். சோமதத்தன்தந்தை. பூரிசிரவன் பாட்டன். இவன் பாரதயுத்தத்திலிறந்தவன்.
பாஹூகன் - சகான் தந்தை. விருகன் புத்திரன். நளன் இருதுபர்ணனிடம் சென்றிருந்த காலத்துத் தான் பூண்ட பெயர்.
பாஹூதை - சரவதிநதியோடு சேருகின்ற ஒரு நதி. மகாநதியிற் கலக்கின்ற சிறுநதி.

பி

பி - அழகு, ஓரெழுத்து.
பிகபந்து - மாமரம்.
பிகம் - குயில்.
பிகவிரோதி - மேகம்.
பிகராகம் } மாமரம்.
பிகவல்லபம் }
பிகசத்ரு - மேகம்.
பிகாங்கம் - ஒருபுள்.
பிகானந்தம் - வசந்தகாலம்.
பிகி - பெண்குயில்.
பிகு- சத்தத்தினுன்றனை,பிகுவு,பெலன்.
பிகுதல் - தளர்ந்ததை வலிதாக்குதல்.
பிகுப்பட்டை - குதிரைமேற் சேணங் கட்டும் வார்.
பிகுவு - இறுக்கம், பெருமை.
பிகுவேற்றுதல் - இறுக்கல், பிளிதல், வில் வளைத்தல்.
பிக்கம் - யானைக்கன்று.
பிக்கு-ஒவ்வாமை,தலக்கடி,சிக்கு,பிசகு.
பிக்குப்பிசகு - பிசகு.
பிங்கசடன் - சிவபிரான்.
பிங்கதிருட்டி - சிங்கம்.
பிங்கம் - இளங்கன்று, பொன்மைகலந்த சிவப்பு.
பிங்கலந்தை - பிங்கலன் செய்த நிகண்டு
பிங்கலமுனிவர் - திவாகரநிகண்டுசெய்த திவாகரர் புத்திரனர். இவர் சோழவமிசத்தி லுதித்தவரே யாயினும் துறவு பூண்டு தமிழ்நூலாராய்ச்சியிலே தமது காலத்தைப் போக்கியவர். இவர் செய்தநூல், பிங்கல நிகண்டு. இவர் காலம் நச்சினார்க்கினியர் காலத்துக்கு முந்தியது.
பிங்கலம் - அரிதாரநிறம், ஆந்தை, கிரி, குபோநவநிதியிலொன்று, குரங்கு, பிங்கலந்தை, பித்தளை, பொன், பொன்மைநிறம், வடக்கு.
பிங்கலலோசனம் - பித்தளை.
பிங்கலன் - ஒருநிகண்டாசிரியன், குபேரன், சிவபிரான், சூரியன், தீ.
பிங்கலை - ஆந்தை, தசநாடியிலொன்று அது வலமூக்கினிற்பது, பார்வதி, பிங்களை, வலமூக்கிற்சரம்.
பிங்கள - ஐம்பத்தோருவதாண்டு.
பிங்களம் - களிம்பு,பின்னிதம்,வஞ்சகம்.
பிங்களித்தல் - அருக்களித்தல், பின் போடுதல்.
பிங்களை - ஆயுட்காலத்தின் மூன்றிலோர் பகுதி, தக்ஷிணதிக்குக் காவல் பூண்ட யானைக்குப் பெண்யானை.
பிங்கன் - பாலகன்.
பிங்காசம் - ஒருவகைப்பொன்.
பிங்காசி - அவுரி.
பிங்காட்சன் - சிவபிரான்.
பிங்கி - வன்னிமரம்.
பிங்கேட்சணன் - சிவபெருமான்.
பிசகடி - தடை.
பிசகு - ஒவ்வாமை, தடை, தப்பிதம், பிசகென்னேவல்.
பிசகுதல் - தவறுதல், பிசகுபடல்,விலகுதல்.
பிசகுபண்ணுதல் - தடைபண்ணுதல்.
பிசக்கு - பிசகு, பிசகென்னேவல்.
பிசக்குதல் - தடுத்தல், நலக்குதல்.
பிசங்கதை - கருமைக்கலந்த பொன்மை, வெண்மை.
பிசங்கம் - பொன்மைகலந்த சிவப்பு.
பிசங்கல் } நலங்கல்.
பிசங்குதல் }
பிசண்டம் - மிருகத்தின் முதுகு, வயிறு.
பிசண்டிலன் - பெருவயிறுள்ளவன்.
பிசத்துதல் - பிதற்றுதல்.
பிசம் - இறகு, தாமரைவளையம்.
பிசல் - எருத்திமில், புசல்.
பிசவ்வியம் - பருத்தி.
பிசறல் } கலத்தல்.
பிசறுதல் }
பிசனம் - செஞ்சந்தனம்.
பிசாசகி - குபேரன்.
பிசாசகை - ரிக்ஷபர்வதத்திலுற்பத்தியாகுமொரு நதி.
பிசாசம் - பேய், பேய்க்கரும்பு.
பிசாசர் - தேவயோனியிற பிறந்ததோரிழிகுண சிருஷ்டிகள்.
பிசாசன்-பேய்,பேய்க்குணமுடையோன்.
பிசாசிகை - கிணற்றுப்பெண் தவளை.
பிசாசு - பிசாசம்.
பிசாச்சி - சடாமாஞ்சில்.
பிசாரதம் - நூதனம்.
பிசானம் - ஒருநெல்.

பிசான் - அழுக்கு, பிசு பிசுப்பானது.
பிசி - அரும்பொருள், சோறு, பொய்.
பிசிண்டம் - பிசண்டம்.
பிசிதம் - உதாரணம்,ஊன்,நீர்,வேம்பு.
பிசிதாசி - ஊனுண்போன்.
பிசிதாசனர் - இராக்கதர்.
பிசிர் - துளிமழை.
பிசினம் - கோட்சொல்.
பிசினன் - கோளன்.
பிசிஞறி - பிசிகேனறி.
பிசினி - கோட்சொல்வோன், பசை.
பிசிகேனறி - உலோபி, ஒருமரம்.
பிசின் - சாம்பிராணி, நீர்வஞ்சி, பஞ்சினூல், மரப்பிசின்,வெட்டுக்குருத்து.
பிசு - இரண்டு துலாங்கொண்டது, ஒரசுரன், ஒருநோய், பருத்தி.
பிசுகம் - உத்தாமணி.
பிசுகுதல் - கொசறுதல்.
பிசுக்கு - கிள்ளீடு,தொசையீடு,பீர்க்கு.
பிசுங்கொட்டுதல் - பிசான்பிடித்தல்.
பிசுணம் - சீதேவியார்.
பிசுதூலம் - பருத்தி.
பிசுபிசுப்பு - பிசான்.
பிசுபிசெனல் - பிசுபிசுப்புக் குறிப்பு.
பிசுமத்தம், பிசுமந்தம் } வேம்பு.
பிசுலம் - நீர்க்காகம், பிஞ்சு.
பிசுனத்தனம் - பிசினித்தனம்.
பிசுனம் - உலோபம், காகம், பருத்தி, மஞ்சள்.
பிசுனவசனம்-கோட்சொல்பழிமொழி
பிசுனன், பிசுனி } உலோபன், கோளன்,பொய்யன், வேவுகாரன்.
பிசுனித்தனம் - உலோபத்தனம்.
பிசூகம் - வேலிப்பருத்தி.
பிசைதல், பிசைவு } சேர்த்துக்கலத்தல், பசைதல்.
பிச்சடம் - ஈயம், துத்தநாகம்.
பிச்சப்பழம் - வத்தகுப்பழம்.
பிச்சம் - ஆண்மயிர், இருவேலி, இறகு, காஞ்சிரை, குடுமி, பீலிக்குஞ்சம், முடி, வத்தகு, வெண்குடை.
பிச்சர் - பித்தர், மருளர்.
பிச்சல் - பியத்தல்.
பிச்சாகாரம் - இரப்பூண்.
பிச்சாடனம் - இரக்குதல்.
பிச்சாசரன் - பிச்சைக்காரன்.
பிச்சாடிக்கயிறு - பாளாசக்கயிறு.
பிச்சாபாத்திரம் - இரப்போர்கலம்.
பிச்சி - ஒருகொடி, ஒருபெண், ஒரு பிசாசம், ஒருமல்லிகை, கொம்மட்டி, சிறுசண்பகம்.
பிச்சிலம் - ஆணம், ஈரம், கஞ்சி.
பிச்சு - பித்து.
பிச்சை - இரப்பு, ஒழுங்கு, சிசுரமரம், சோற்றுநுரை, பாக்கு,மார்ச்சட்டை வத்தகுக்கொடி, வரிசை, வாழை.
பிச்சைக்காரன் - இரப்போன்.
பிச்சைக்குடி - இரப்புக்குடி.
பிச்சைச்சோறு - அறச்சோறு.
பிச்சைத்தனம்-இரப்புத்தனம்எளிமை.
பிச்சைபண்ணுதல் - இரத்தல்.
பிச்சைமுட்டி - பிடியரிசி.
பிச்சையுண்ணி - யாசகி.
பிச்சையெடுத்தல் - இரத்தல்.
பிஞ்சகம்-இறகு,கொலை,தலைக்கோலம்.
பிஞ்சகன்-கொலைக்காரன், சிவபிரான்.
பிஞ்சடம் - பீளை.
பிஞ்சம் - இறகு, கொலை, சத்திக்கொடி, பெலம்.
பிஞ்சரம் - அரிதாரம், கருமைகலந்த சிவப்பு, பொன்.
பிஞ்சலம் - அரிதாரம், தருப்பை.
பிஞ்சனம் - நூலெஃகும் வில்.
பிஞ்சானம் - பொன்.
பிஞ்சிதை - கொட்டையிட்ட பஞ்சு.
பிஞ்சு - இளங்காய், முற்றுமை.
பிஞ்சுஷம் - காதுகுறும்பி.
பிஞ்சுலம் - விளக்குத்திரி.
பிஞ்சுலை - தருப்பைப்புற்கட்டு.
பிஞ்சேடம் - கண்ணிற்பீளை.
பிஞ்சை - பஞ்சு, மஞ்சள்.
பிஞ்சோலம் - இலை முதலியவற்றொெழுமொலி.
பிஞ்ஞகம் - தலைக்கோலம்.
பிஞ்ஞகன் - சிவபிரான்.
பிஞ்ஞை - நப்பின்னை.
பிடகம் - கோரிகை,நூல், பிச்சை, புத்தாகமம், பெட்டி.
பிடகன் - புத்தன், வைத்தியன்.
பிடகாரி - விடவைத்தியன்.
பிடகை - பூந்தட்டு.
பிடக்கு - வைத்தியன்.
பிடங்கம் - பெருவள்ளரி.

பிடங்கு - ஆயுதங்களின் பிற்பக்கம், சோங்கு.
பிடம் - புடம், பெட்டி, மரக்கால்.
பிடரம் - ஒருபுல், தயிர்கடைதறி, முகப்பரு.
பிடரி, பிடர், பிடர்த்தலை } புறங்கழுத்து.
பிடர்ப்பிளவை - ஒருசிலந்தி.
பிடவம், பிடவு } ஒருசெடி, முதகு.
பிடவை - புடவை.
பிடாகன் ஒரு முனிவன்.
பிடாந்திரம் - இல்லாப்பழி.
பிடாரச்சொல் - நூதனச்சொல், வாகடச்சொல்.
பிடாரம் - வைத்தியவாகடம்.
பிடாரர் - குறவர், வைத்தியர்.
பிடாரன்-குறவன், பாம்புபிடிப்போன், வைத்தியன்.
பிடாரி - காளி, பிடாரிதேவி.
பிடாரிச்சி - குறப்பெண்.
பிடி - ஏலம்,ஒட்டகம்,கவரி, யானையிவற்றின்பெண், காமுட்டி, கிரகிப்பு, கைப்பிடி, கைப்பணம், நம்பிக்கை, நால்விரல் கொண்ட அளவு, பற்றுகை, பிடிபென்னேவல், பெலன்.
பிடிகடா - சத்துவாங்கினகடா.
பிடிகம் - பிள்ளைக்கைவலை.
பிடிகாரர் - வேட்டைக்காரர்.
பிடிகொடுத்தல் - இடம்கொடுத்தல்.
பிடிக்கொழுக்கட்டை - ஒருவகைக்கொழுக்கட்டை.
பிடிச்சராவி -கம்மாளர்கருவியில்ஒன்று.
பிடிச்சீலை - பிடித்துணி.
பிடிதம் - பிச்சை.
பிடித்தபிடி - பற்றிக்கொண்ட நிலை, விடாப்பிடி.
பிடித்தம் - அபராதம், பிடிக்கும் காசு, வழக்கமின்றிப்போதல்.
பிடித்தல் - அடுப்பு முதலிய பிடித்தல், உடன்படல், உட்கொள்ளல், கடல், கப்பாத்துப்பண்ணல், காய் பூ முதலிய பற்றல், சளி, முதலியபற்றல், சார்தல், சுமையெடுத்தல், தெண்டுதல், தைத்தல், நீக்கியெடுத்தல், பட்டைகோலுதல், பற்றல், மட்டுக்கட்டுதல், மனதுக்கிணக்குதல், முடித்தல், வசமாக்கல், வேண்டியதாயிருத்தல்.
பிடித்திராவி - பிடிச்சராவி.
பிடிநடை - பெண் யானைபோலும் நடை.
பிடிபடுதல்- அகப்படுதல்மட்டுக்கட்டுதல்
பிடிபாடு - அகப்படுதல், செல்விக்கை, சேர்மானம், பட்சம்,பிசினித்தினம்.
பிடிப்பிட்டு - ஒருபிட்டு.
பிடிப்பித்தல் - விதையடித்தல்.
பிடிப்பு - சேர்மானம், பிடித்தல்.
பிடிமானம் - அன்பானபற்று, உலோபம், உறுதி,கையிருப்பு,சேர்மானம், தேட்டம்.
பிடியரிசி - தருமஞ் செய்ய அள்ளிவைக்குமரிசி.
பிடியல் - சீலை, நல்லாடை.
பிடியன் - கொள்ளத்தக்கது, பெண்யானை.
பிடியாள் - அமஞ்சியாள், பலபந்தமாகப் பிடித்த ஆள்.
பிடிவாதக்காரன் - பிடிவாதி.
பிடிவாதம் - கொண்டதுவிடாமை முரட்டு வைராக்கியம்.
பிடிவாதி - கொண்டது விடாதுநிற்போன்.
பிடுக்கு - பனம்பூ, பீசம்.
பிடுங்கல், பிடுங்குதல் } கவர்தல், பறித்தல்.
பிடை - மூசை.
பிடையன - புடையன்.
பிட்குதல் - பிள்ளச்செய்தல்.
பிட்சகன் - இரப்போன்.
பிட்சாசரம், பிட்சாடனம் } இரத்தல்.
பிட்சாதானம் - தருமங்கொடுத்தல்.
பிட்சாபாத்திரம் - இரப்போர்கலம்.
பிட்சான்னம் - பிட்சைச்சோறு.
பிட்சை - ஊழியம், கூலி, யாசகம்.
பிட்டகம் - பலகாரம், பல்லழுக்கு.
பிட்டபம் - உலகம்.
பிட்டம் - இடித்தமா, ஈயம், சகனம், சிற்றுண்டி, மாவு.
பிட்டர் - ஆடுதின்னுப்பானை.
பிட்டல் - பிட்குதல்.
பிட்டவத்தி - ஒரு பணிகாரம்.
பிட்டி - சிறுகூடை.
பிட்டிலம் - ஏலம்.

பிட்டு - சிற்றண்டி, தினைமா.
பிட்டை - அண்டவாதம், விட்டை.
பிணக்கம் - பிணங்கல்.
பிணக்கன் - பிணக்கக்காரன்.
பிணக்காடு - சுடுகாடு, யுத்தகளம்.
பிணக்கு - சண்டை, நெருக்கம், பிணக்கென்னேவல், வனப்பேதம்.
பிணக்குதல் - கட்டுதல்.
பிணங்கல், பிணங்குதல் - குழம்புதல், சண்டைசெய்தல், நெருங்கல், பின்னல், மாறுபடல்.
பிணந்தின்னி - மாமிசபேதி.
பிணந்தின்னிப்பிசாசு - ஒரு பிசாசம்.
பிணப்பறை - சாப்பறை.
பிணம் - சவம், பிசாசம்.
பிணம்வீழ்களம் - சுடுகாடு, போர்க்களம்.
பிணர் - சோங்கு, சருச்சரைவடிவு.
பிணவறையன் - பருந்தேதி.
பிணவு - கவரிமா நாய் பன்றி புல்வாய் இவற்றின்பெண், பெண்பொது, விலங்கின் பெண்.
பிணவெடில் - சாவெடில்.
பிணா - பிணவு.
பிணாரம் - பெரிய சடலமுள்ளது.
பிணி - வடைதாலைப்பிணிக்கு, தாற்படை, ஒரு பிசாசம், கட்டு, துன்பம், நோய், பிணியென்னேவல்.
பிணிகை - கச்சு.
பிணிக்குறை - பேய்க்குறை.
பிணித்தல் - கட்டல்.
பிணிப்பு - கட்டு. [றம்பேய்.
பிணிப்பேய் - பிள்ளைகளை நோய்செய்
பிணிமிதித்தல் - நெய்வார் தொழிலொன்று.
பிணிமுகம் - அன்னம், பறவைப்பொது, மயில், முருகன் யானை.
பிணியன், பிணியாளன் - நோயாளன்.
பிணியாளி - நோயாளி.
பிணிமோலை - பிணிக்குறைக்குக் கட்டுமட்சரவோலை.
பிணை - ஆசை, உரி[illegible]ாடு, ஒட்டகம், கவரிமா கழுதைதில[illegible]ர நாய் பன்றி புல்வாய் யாடியிவற்[illegible]ின் பெண், கட்டு, பிணையென்னேவல், [illegible] பூமாலை, மான், வதிட்பொருள்.

பிணைகாரன், பிணைக்காரன் - பிணைப்பட்டவன்.
பிணைதல் - இணைத்தல், கலத்தல்.
பிணைத்தல் - இணைத்தல், கட்டல் தொடுத்தல்.
பிணைபடுதல், பிணைப்படுதல் - இறக்க உத்தரவாதியா யுட்படல், கட்டுப்பாட்டிற் குள்ளாதல்.
பிணைப்பு - இணைப்பு.
பிணையடித்தல் - பிணைத்தல்.
பிணையல் - இரணை, கதவு முதலியவற்றிலிடு மிணைப்புச்சலாகை, தொடுவை, பின்னியமாலை, மாலை, இரட்டைக்கை.
பிணையாளன், பிணையாளி - உத்தரவாதத்திற் குட்பட்டவன்.
பிணைவு - இணைவு, புணர்ச்சி.
பிண்டகம் - நறுந்துபம்.
பிண்டகருமம் - பிதிர்பூசை.
பிண்டகன் - பிதிர்பிண்டமிடுவோன்.
பிண்டகாப்பு - சோறு.
பிண்டகோசம் - வாசனைப்பிசின்.
பிண்டசன் - யாசகன்.
பிண்டசூத்திரம் - தொகைச்சூத்திரம்.
பிண்டதன் - உபகாரி, கிட்டினவுறவன், தாபரிப்போன், பிதிர்பிண்ட மிடுவோன்.
பிண்டதானம் - பிண்டமிடுதல்.
பிண்டபாதம் - யானை.
பிண்டபுட்பம் - அசோகு, செவ்வந்தி.
பிண்டப்பிரசாதம் - பிதிருணவு.
பிண்டப்பிரதானம் - பிதிர்பூசை.
பிண்டப்புறனடை - புறனடைகளி லொன்று.
பிண்டப்பொருள் - குவிக்கப்பட்டபொருள், சடப்பொருள், தொகுக்கப்பட்ட பொருள்.
பிண்டம் - இரும்பு, உடல், உண்டைகந்தவருக்கம், கருப்பம், கவளம், கற்கண்டு, கால்வட்டத்திருபத்து நான்கிலொன்று, கூட்டம், சிவன், செவ்வந்தி, சோறு, தொகை, பிச்சை, பெலன், போசனம், மாமிசம், மூலபதம், விலா, வெண்ணெய். விளாங்கனிப் பிரமாணமாகப் பிதிர் தேவதைகளுக்கு இடப்படும் பலி.
பிண்டம்விழுதல் - கருப்பம் விழுதல்.
பிண்டவைத்தல் - பிதிர்கடன்செய்தல்

பிண்டரோபணம் - நாரத்தை.
பிண்டலம் - அணை, பாலம்.
பிண்டவுரை - பொழிப்புரை.
பிண்டனம் - பிண்டலம்.
பிண்டாசன் - யாசகன்.
பிண்டாப்பிரம் - ஆலங்கட்டி.
பிண்டாயசம் - உருக்கு.
பிண்டாரம் - ஒருபுண்ணியக்ஷேத்திரம். இது தாவாரகாபுரசமீபத்துள்ளது.
பிண்டாரன் - இடையன் யாசகன்.
பிண்டாரி - கொள்ளைக்காரன்.
பிண்டி-அசோகமரம்,குவிக்கப்பட்டது, கூட்டம்,சில்லினுட்சுருள், திணைமா, தொகுக்கப்பட்டது. நென்மா, பிண்டியென்னேவல், பிண்ணாக்கு, புனர்பூசம், ஒற்றைக்கை, பொருட்கை.
பிண்டிகரணம் - ருண்டீகரணம்.
பிண்டிகை - ஆசனம்சில்லினுட்சுருள்.
பிண்டிதகம் - மருக்காரை.
பிண்டித்தல் - குவித்தல், தொகுத்தல்.
பிண்டிபாலம் - எறியாயுதம்,
பிண்டிலம் - பாலம்.
பிண்டிலன் - சாதககணிதன்.
பிண்டிவாலம் - பிண்டிபாலம்.
பிண்டிவாசனம் - குந்திருக்கம்.
பிண்டீகரணம் - உண்டையாக்கல்.
பிண்டீகாம் - தொகுப்பு.
பிண்டீதகம் - மருக்கொழுந்து.
பிண்டீரம்-சாரமின்மை,மாதளை. [ப்பு.
பிண்ணாக்கு - எண்முதலியவற்றினரை
பிண்ணாக்குக்கீரை - ஒருகீரை.
பிண்ணாக்குமாடன் - மதிகேடன்.
பிதகம் - இடி.
பிதாம் - பிளத்தல்.
பிதளை - எண்ணெய்ப்பாத்திரம்.
பிதற்றல் - பலகாற்பேசல்,பேசலாலெழுமொலி.
பிதற்று-பிதற்றல், பிதற்றென்னேவல் மழலை.
பிதற்றுதல் - பிதற்றல்.
பிதா - அருகன், கடவுள், சிவபிரான், தந்தை, பிரமன், பெருநாரை.
பிதாநம் - யானைமேற்கவசம்.
பிதாபிதா - பாட்டன்.
...மகன் - பாட்டன், பிரமன்.
...க - பாற்பசு.

பிதிகம் . பெருங்குரும்பை.
பிதிரம் - பிதி.
பிதிராசாரம் - பிதிர்பூசை.
பிதிராட்சணை - முதசோம்.
பிதிரார்ச்சிதம் - பிதிரார்ச்சனை.
பிதிருலகம் - பிதிர்பதம்.
பிதிரெக்கியம் - பிதிர்யாகம்.
பிதிர் - கதை, காலநுட்பம், தந்தைவழியின்மூதாக்கள், திவலை,நொடி,பராகம், பிதாபிதிரென்னேவல்,பிதிர்கள், போர்க்கதை, யாசம்ஐந்தினுென்று.
பிதிர்கடன் } சிரார்த்தமுதலியதென்
பிதிர்கருமம் } புலத்தோர் கடன்.
பிதிர்கணம் - அங்கிரசப்பிரசாபதிக்குச் சுவதையிடத்துப் பிறந்தவர்கள் இவர்களேஉலகத்துப் பிரஜாவிருத்திக்குவித்தாயிருப்பவர்கள் இவர்களேபிதிர்தேவதைகள், வசுருத்திர ஆதித்தியர் என்னுமிவர்களுடைய ரூபங்களையுடையராய்ச் சந்திரலோகத்திருப்பவர்கள் பிதிர்லோகத்தை ...டை பவர்கள்மீளும்போது, சந்திர ...விட்டு ஆகாசம்,காற்று,புகை, மேக ...,மழை,வித்துஇவற்றின் வழியாக ...ந்திரீ புருஷர்களையடைந்து பிறப்ப ...ர்கள்.
பிதிர்காதகம் பிதாவைக்கொ... ால்லுகை.
பிதிர்காரியம் - பிதிர்க்கடன்.
பிதிர்காலம் - சிரார்த்தபுண்ணி ...யகாலம். அது பதினெண்ணாழிகை...)தாடங்கியிருபத்துநாலு நாழிகைபரி ...யந்தம்.
பிதிர்கானனம் - மாயானம்.
பிதிர்கிரியை - பிதிர்கருமம்.
பிதிர்குலியை - மலயத்திலு... ...த்திராகுமொருநதி.
பிதிர்க்காதம் - பிதா கொலை
பிதிர்க்கிரகம் - சுடுகாடு.
பிதிர்ச்சந்ததி - பிதிர்வழி.
பிதிர்சனம் - மூற்பிதாக்க... ...ர.
பிதிர்சாமான்னியர் - மு... ...ர்பிதாக்கள்.
பிதிர்சிராத்தம் - பிதாவு... ...டையபிதிர்பலி.
பிதிர்தல் - உதிர்த்த... ...), சிதறல்.
பிதிர்தானம் - சிரா... ...த்தானங்களிலொன்று.
பிதிர்திதி - அமா... ...). [ன்று.
பிதிர்தினம் - பிதிர்... ...ன்.
பிதிர்தீர்த்தம் - கெ... ...ய கயை, பிதிர்கடமைதீர்க்கும் புண்... ...ணிய தீர்த்தம்.
பிதிர்தேவர் - தென்... ...லத்தார்.

பிதிர்தைவதம் - மகம்.
பிதிர்த்தல் - சொரிவித்தல்.
பிதிர்த்துரோகம் - இறந்தபிதாமுதலோர்க்கு விரோதஞ்செய்தல், பிதிர்கடமை செய்யாது விடல்.
பிதிர்த்துவம் - பிதாத்துவம், பிதிர்தன்மை.
பிதிர்நாள் - அமாவாசி, இறந்தோர்நாள், மகநாள்.
பிதிர்பதம் - தெற்கு.
பிதிர்பதி - நமன், பிதிர்கட்குச் செய்ய வேண்டிய கடமை.
பிதிர்பந்து - பிதாவழிச்சுற்றம். [ன்.
பிதிர்பாந்தவன் - பிதா வழிச்சுற்றத்தான்.
பிதிர்பிண்டம் - இறந்தோர்க்கிடுமுணவு.
பிதிர்பிதிர் - பாட்டன்.
பிதிர்புண்ணியகாலம் - பிதிர்காலம்.
பிதிர்பூசை-பிதிர்கட்குச்செய்யும்பூசை
பிதிர்போசனம் - பிதிருணவு.
பிதிர்ப்பிரசு-பிதாவின்மாதா, மாலைவெளிச்சம்.
பிதிர்மந்திரம் - கோரி, பிதிர்தேவதைகட் குரியமறை.
பிதிர்மேதம் - சிராத்தம்.
பிதிர்யானம் - விமானம்.
பிதிர்வசதி - பிதிர்வனம்.
பிதிர்வசனம் - இறந்தோர்வாக்கு.
பிதிர்வழி - பிதாவமிசம்.
பிதிர்வனம் - சுடுகாடு.
பிதிர்வனேசரன் - சிவபிரான்.
பிதிர்வாக்கியபரிபாலனம் - பிதிர்வசனத்தைப் போற்றி நடத்தல்.
பிதிர்வாக்கியம் - பிதிர்வசனம்.
பிதிர்விரதம் - பிதிர்கருமம்,
பிதிர்வு - பிதிர்தல்.
பிது - இடி.
பிதுகம்-நவமணிக்குற்றத்தொன்றுஅது தாமரை நிறம்.
பிதுக்கம் - பிதுங்கல்.
பிதுக்கல் } பிதுங்கச்செய்தல்.
பிதுக்குதல் }
பிதுங்கல் } உள்ளடங்காமற் புறப்படல்.
பிதுங்குதல். }
பிதுரம் - இடி.
பிதுரு } பிதிர்.
பிதுர் }
பிதுர்யானம் - பிதுர்லோகப்பிராப்தி.

பித்தசம் - நவமணிக் குற்றத்தொன்று அது வெளிநிறம்
பித்தகாசம் - ஒருகாசம்.
பித்தகாமாலை - ஒருநோய்.
பித்தகாரம் - பித்தகாங்கை.
பித்தகாய்ச்சல் - பித்தசுரம்.
பித்தகாலம் - பித்தத்தினதிகாரகாலம்.
பித்தக்கிராணி - ஒருநோய். [ஞ்சுழற்சி.
பித்தக்கிறகிறுப்பு - பித்தத்தினால்வரு
பித்தசரீரம் - பித்தாதிகாரமானதேகம்.
பித்தசாந்தி - பொன்னாங்காணி.
பித்தசிலேட்டுமம் } பித்தத்தோடுகலந்தசேட்பம்.
பித்தசிலேற்பனம் }
பித்தசுரம் - ஒருசுரம்.
பித்தசூடு - பித்தகாரகம்.
பித்தசூலை - ஒருசூலை.
பித்தசோகை - ஒருவிதசோகைநோய்.
பித்தச்சுழற்சி - தலைச்கிறகிறுப்பு.
பித்தநாடி - நடுவிரனடி.
பித்தநீர் - பித்தத்தினாலுண்டான நீர்.
பித்தபாண்டு } காமாலை.
பித்தபாண்டுரு }
பித்தப்பிளப்பு - பித்தவெடிப்பு.
பித்தமயக்கம் - கிறுகிறுப்பு, பைத்தியம்.
பித்தம் - கூத்தின்விகற்பம், மயக்கம், முப்பிணியினொன்று.
பித்தரோகம் - பித்தநோய். [ளை.
பித்தலம் - ஒளியுடைப்பொருள், பித்த
பித்தலாடகம் } ஒன்றை மற்றொன்றாய்க் காட்டல்.
பித்தலாட்டம் }
பித்தல் - அருகு, பிடங்கு, விளிம்பு.
பித்தவாயு - உட்டணவாயு.
பித்தளை - செம்புநாகமுங்கலந்தது.
பித்தளைமலை - காளிக்கம்.
பித்தளையாடகம் - சூது.
பித்தன் - கள்வன், சிவபிரான், பைத்தியகாரன், வயிரவன்.
பித்தாதிகாரம் } பித்தமேலீடு.
பித்தாதிக்கம் }
பித்தாதிசாரம் - உவாந்திப்பிராந்தி.
பித்தாந்தலைக்கொட்டி - ஒருபூடு.
பித்தி - ஒதுக்கிடம், சுவர், துண்டு, பங்கு, பிற்றி, வெடிப்பு.
பித்திகம் - பிச்சிப்பூ.
பித்திகை - சிறசண்பகம், சுவர்.
பித்திசௌரன் - கள்வன்.
பித்து - ஈரர்பித்து, பித்தம்.

பித்றுப்பை - பித்தமிருக்குங் குடர்ப் பொர்வை.
பித்தேறல் - பித்தலூறல்.
பித்தை - ஆண்மயிர்.
பிந்தபாலம் - எறியீட்டி.
பிந்தியாகாலம் - சாயங்காலம்.
பிந்து - புள்ளி, விந்து.
பிந்துசாரம் - ஒருவிஷவைத்தியநூல்.
பிந்துசாரன் - சந்திரகுப்தன்புத்திரன், மகத தேசாதிபதி.
பிந்துதல் - தாமதித்தல், பிற்படுத்தல்.
பிந்துமதி - சசிபிந்தன்மகள், மாந்தாதா பாரி.
பிபாசிதன் } தாகங்கொண்டவன்.
பிபாசு
பிபாசை - தாகம்.
பிபீலவாதம் - பரமாணு பிரபஞ்சத்துக்கு காரணமெனல், பைபீலவாதம்.
பிபீலி - எறும்பு.
பிபீலிகாவாதம் - பிபீலவாதம், மிருகபா [வை.
பிபீலிகை - பிபீலி.
பிப்பலகம் - முலைக்கண்.
பிப்பலன் - இல்வலன்புத்திரன், அரிஷ்டன் தம்பி.
பிப்பலம் - அரசு, ஒருபுல், நீர்.
பிப்பபார்சையர் - கொப்பூரில் விளங்கிய ஒருசிவனடியார். இவர்சிவனடியாருடைய பரிகலசேஷத்தைவாரிக்கொண்டு ஒருவைஷ்ணவஅக்கிரகாரவழியே செல்லும்போது அவ்வக்கிரகாரத்தார் தடுக்கச் சினங்கொண்டு அப்பரிகலசேஷத்தை வாரிவீசினர் அது பட்ட வீடுகள் எல்லாமெரிந்து சாம்பராயின, வைஷ்ணவர்கள் அது கண்டு அவரைச் சரணமடைந்து அநுக்கிரகம் பெற்றார்கள்.
பிப்பலாசகம் - யானை.
பிப்பலாதம் - சூரியகிரணம்.
பிப்பலாதன் - ஒரிருடி.
பிப்பலி - திப்பிலி.
பிப்பலிகம் - தைக்கிறநூல்; முலைவட்ட [ம்.
பிப்பலிகை - அரசமரம்.
பிப்பலை - திப்பிலிச்செடி.
பிப்பிகை - பல்லழுக்கு.
பிப்பிலி - பிப்பலி.
பிப்பிலியத்தி - பெருநெருஞ்சில்.
பிம்பகம் - சந்திரசூரியமண்டலம், கோவைக்கனி.
பிம்பம் - அடையாளம், ஒருவன், தமண்டலம், கோவைக்கனி, சந்திரசூரியாதி மண்டலம், பிரதிபிம்பம், யோநி.
பிம்பி - கோவை.
பிம்பிகை - சந்திரசூரியமண்டலம், கோவைக்கனி.
பியை - அச்சம்.
பிய்ச்சல் - பிய்த்தல்.
பிய்தல் - கிழித்தல், பிள்ளுதல்.
பிய்த்தல் - கிழித்தல், பிட்குதல்.
பிய்ப்பு - பிய்த்தல்.
பிர - தோற்றம், மிகுதிமேன்மை, விரைவு இவைகளைக்காட்டு முபசருக்கம்.
பிரகசம் - சொல்லுதல்.
பிரகசனம் - பெருநகை, மகிழ்ச்சி, வசைப்பாட்டு.
பிரகசிதம் - பெருநகை.
பிரகஸ்பதி - பிரகற்பதி.
பிரகடம் - வெளியரங்கம்.
பிரகடம் - விளம்பரம்.
பிரகடிதம் - வெளிப்படல்.
பிரகணம் - அசையப்பட்டது, இருப்புத்தண்டம், செப்புப்பாத்திரம், முற்றம்.
பிரகணன் - சுமாலிபுத்திரன்.
பிரகணேசி - சந்திரன்.
பிரகண்டம் - புயவென்பு, முன்புயம்.
பிரகதவாதம் } ஒருவாயு.
பிரகதவாயு
பிரகதாரண்ணியம் - உபநிடத முப்பத்திரண்டி லொன்று.
பிரகதி - கத்திரிச்செடி வழுதுணைச்செ [டி.
பிரகஸ்தம் - விரித்தகை.
பிரகமனம் - தருக்கம், தேற்றம்.
பிரகம்பனம் - அசைவு, காற்று, நாசம்.
பிரகம்பிதமுகம் - அதிசயக் குறிகாட்டு முகம்.
பிரகம்பிதம் - அசைவு.
பிரகரணம் - அத்தியாயம், ஆயுதம், சமயம், பகுதி, பெண்பிள்ளைகள் சாரிவருந்தேர், முகவுரை, யுத்தம், விடையமுடிவு.
பிரகாரம் - உதவி, ஒருவாசனைமரம், குவியல், சக்கை, பூஞ்செண்டு, வளமை.
பிரகாரி - முன்றிற்றோட்டம்.
பிரகரித்தல் - சஞ்சரித்தல்.

பிரகருசம் - மிகுதி, மேன்மை.
பிரகலை - கீதவுறுப்புளொன்று.
பிரகற்பதி - தருமநூல் பதினெட்டில் ஒன்று, வியாழம்.
பிரகஸ்பதி } பிரமமானச புத்திர
பிரஹஸ்பதி } குள் அங்கிரசன் புத்திரனாகிய வியாழன். இவன் தேவ குரு. மகாபுத்திமான். வாசஸ்பதியெனவும்படுவன். இவன் பாரி தாரை இவன் சகோதரி யோகசித்தி. இவன் பாரியாகிய தாரையைச் சந்திரன் கவர்ந்தான். அதனால் பிருகஸ்பதிக்கும் சந்திரனுக்கும் பெரும்போர் மூண்டது. பிரமதேவர் சந்திரன்பாற் சென்று தாரையை விட்டுவிடும்படி செய்தார். தாரை பிருஹஸ்பதிக்கு மீண்டும் மனைவியானள். சந்திரனுக்குத் தாரைவயிற்றிற்பிறந்த புத்திரன் புதன். அவனே சந்திர வமிசஸ்தாபகன், பிருகஸ்பதி மண்டலமும் பிருஹஸ்பதி யெனப்படும். அது பொன்மயமா யிருத்தலின் பிருகஸ்பதி பீதகன், பொன் என்னும் பெயர்களைப் பெறுவன். இம்மண்டலத்தைச் சூழ்ந்துள்ள மண்டலங்களிலே மனுஷரிற் சிறந்த அறிவுடையோர்கள் வசிக்கின்றார்க ளென்பது ஐரோப்பிய வானசாஸ்திரிகள் துணிபு. அது பிருஹஸ்பதியைத் தேவகுரு என்று கூறும் நமது ஆசிரிய சித்தாந்தத்திற்கு மொத்த தாகும் பிருகஸ்பதி மண்டலம் நமது பூமண்டலத்திலும் பதின்மடங்கு பெரிதாயினும் மிக்க லேசான கோளமாயுள்ளது. அதுபற்றி ஆங்குள்ளோரும் அந்தரத்திற் சஞ்சரிக்கும் லகுதேகிகளாயிருப்பார். அவர்களைத் தேவகணத்தினர் என்பது புராணமதம். பிருஹஸ்பதி மண்டலம் புராணங்களிலே ரதமெனப்படும், அதனைச் சூழ்ந்துள்ளமண்டலங்களைப்புராணங்கள் வெண்ணிறக் குதிரைகளாக ரூபகாரம்பண்ணும். ஐரோப்பிய வான சாஸ்திரிகள் அவைகளைச் சந்திரரென்பார்கள். அம்மண்டலங்களின் தொகையைப் புராணங்கள் எட்டென ஐரோப்பியர் ஐந்தென்பர்.

பிரகற்பன் - பிரபு.
பிரகாசத்தி - அப்பிரகம்.
பிரகாசம் - ஒளி இது வானோர்வர நான்கிலொன்று, நகை, பாரிசியம், பொருமல், போலுந்தன்மை, விரிவு, விளக்கம், வெண்கலம், வெய்யில்.
பிரகாசனம் - பிரகாசம்.
பிரகாசன் - ஒளியுடையோன், முத்தாத்துமா.
பிரகாசாத்துமா - சூரியன்.
பிரகாசித்தல் - ஒளிசெய்தல், பிரபலியமாதல், விளங்குதல்.
பிரகாண்டம் - கொப்பு, மரக்குற்றி, மேன்மை.
பிரகாண்டரம் - மரம்.
பிரகாபரணம் - தூத்தல்.
பிரகாமியம் - அட்டபாக்கியத்தொன்று. நிறைவு.
பிரகாரணம் - நன்கொடை.
பிரகாரம் - காயப்படுத்தல், கோயின்முதலியவற்றின் வீதி, தன்மை, மதில், வகுப்பு, வழி, விதம், விசேடணம், விந்தியாசம்.
பிரகி - இணறு.
பிரகிதம் - அனுப்பியது, எறியது, நியமித்தது, வைக்கப்பட்டது.
பிரகிருட்டம் - மேலானது.
பிரகிருதபிரளயம் - உலகநாசம்.
பிரகிருதம் - உண்டாக்கப்பட்டது.
பிரகிருதி - அரசாட்சிக்குரிய வுறுப்பேழு அது அரசன் ஆளுகை செல்லுமிடம் கோட்டை சேனை நட்பாளர் பொக்கசம், மந்திரி, ஆதாரம், இயல்பு, காரணம், பகுதி, பகுதிமொழி, பஞ்சபூதம், பிரதானம், பிரபஞ்ச மூலமாயிருக்கும்மாயை, பெண், மாதா, மிருகம், யோனி.
பிரகீர்ணம் - சாமரம் விசாலம்.
பிரகுஞ்சம் - ஒருபலம்.
பிரகுடி - காட்டுமல்லிகை.
பிரகுலம் - யௌவனதேகம்.
பிரகேசுவரர் - திருகன்னிலத்துப் பெருங்கோயிலிலே எழுந்தருளி யிருக்குஞ் சுவாமிபெயர்.
பிரகேசுவரி - திருகன்னிலத்துப் பெருங்கோயிலிலே எழுந்தருளி யிருக்குந் தேவியார் பெயர்.

பிரகேலகம் - இனிப்புப்பதார்த்தம்.
பிரகேலிகை - நொடி.
பிரகோட்டம் } தோண்டுலம், முற்றம்.
பிரகோஷ்டம் }
பிரகோபணம் - காத்தல்.
பிரகோபம் } கோபம், மூர்க்கம்.
பிரகோபனம் }
பிரகோவம் - கடுங்கோவம்.
பிரக்கணம் } யாழோசை.
பிரக்கரணம் }
பிரக்கரம் - போர்க்கவசம்.
பிரக்கியம் } அறிவு.
பிரக்கியாதம் }
பிரக்யாதி - அறிவு, கீர்த்தி.
பிரக்கியாதை - ஒழுகல்.
பிரக்யானம் - அறிவு.
பிரக்கிரமம் - அடிமை, கிரணம், சமயம், தராசுக்கயிறு, துவக்கம், நெருக்கிடை, பசுக்கட்டுங்கயிறு, பட்சம், பிடித்தல், புயம், போதல், மேற்கொள்ளுதல்.
பிரக்கிராகம் - தராசுக்கயிறு, பிடித்தல்.
பிரக்கிரீடிதம் - கிரீடை.
பிரக்கிரீவம் - கிரீடைமனை, சாளரம், மயிர்நுனி.
பிரக்கினை - அறிவு, உணர்வு.
பிரஸகந்தனம் } பேதிப்பண்ணல், வயிற்றுளைவு.
பிரஸகந்திகை }
பிரசகம் } இலையுண்மிருகம்.
பிரசகனம் }
பிரசங்கம் - உட்படுதல், கூட்டம், தருக்கநிர்மானம், தெளிவு, நியாயத்தொடர்பு, பற்று, பாயிரம், பிரபலியம், வாக்கியம், வெளிப்படுத்தல்.
பிரசங்கி - ஆடம்பரகாரன், பிரசங்கியென்னேவல், வியாக்கியானி.
பிரசங்கித்தல் - தீர்மானமெடுத்துக்காட்டல், பிரபலியப்படுத்தல். [புகழ்ச்சி.
பிரசஞ்சனம் - சேர்த்தல், பாவித்தல்,
பிரசஞ்சை - புகழ்ச்சி.
பிரசண்டகதி - அதிவேககமனம்.
பிரசண்டமாருதம் - பலத்தகாற்று.
பிரசண்டம் - பெலன், மிகுதி, மிகுவெப்பம், வலி, வீரம், வேகம்.
பிரசண்டவாயு - பலத்தகாற்று.
பிரசண்டவேகம் - அதிவேகம்.
பிரசண்டன் - வலியன், வீரன், வேசி.

பிரசத்தம் - சதானந்தம், நித்தியம்.
பிரசத்தி - அருத்தாபத்தி, இசைவு, கிருபை, சுத்தம், பற்று, பிரமையுள்ளது, முயற்சி, விம்பிக்கத்தக்கது.
பிரசபம் - பிரசவம், வலோற்காரம்.
பிரசமனம் - கொலை, சமாதானமாக்கல்.
பிரசம் - கள், தேனீ, தேன், தேன்கூடு, வண்டு.
பிரசயம் - இணைவு, திரட்சி.
பிரசரணம் - ஊர்கொள்ளையிடல், சத்துருவைச்சூழல், சுற்றுதல், சூழப்போதல், பரப்புதல், போதல்.
பிரசரம் - அம்பு, இடம், கதி, சமயம், சிறுகொம்பு, திரள், பெரிதாதல், போர், வழக்கம், வழி, விசாலித்தல்.
பிரசருப்பகன் - அழைக்கப்படாது விருந்துக்கு வந்தவன்.
பிரசருப்பணம் - விசாலித்தல்.
பிரசலாகம் - பாம்பு, மயிற்றோகை, வில்லாச்சிரமம்.
பிரசலிதம் - அசைத்தல், திரிதல்.
பிரசவபந்தனம் - பூந்தண்டு.
பிரசவம் - சந்ததி, பலம், பிள்ளைப்பேறு, பிறப்பித்தல், பிறப்பு, புட்பம்.
பிரசவவேதனை - பிள்ளைப்பேற்றுவருத்தம்.
பிரசவித்தல் - பிறத்தல், பெறுதல்.
பிரசற்பம் - மழலை.
பிரசனம் - கருப்பந்தரித்தல்.
பிரசனிகை - மாதா.
பிரசன் - கணவன்.
பிரசன்னமுகம் - அலர்ந்தமுகம்.
பிரசன்னம் - காட்சி, தெளிவு, தோற்றப்படுதல், பிறப்பு, பெண்குறி.
பிரசன்னன் - கடவுள், தோற்றப்பட்ட
பிரசாகிதம் - நீர். [வன்.
பிரசாக்கடை - மதகு.
பிரசாணம் - ஆறுதல்.
பிரசாட்சயம் - சனவழிவு.
பிரசாதகன் - இந்திரத்துய்மன், வமிசத்தரசன்.
பிரசாதனை - கோலஞ்செய்வான், வண்ணெல்.
பிரசாதம் - அமுதம், அருள், கருப்பமுண்டாக்குமருந்து, களங்கமின்மை, கூட்டம், சுசீலியம், தெளிவு, நிருமாலியம், நிவேதனப்பொருள், பட்

சம், பயன், பவித்திரம், பிரதிஷ்டை, பிரார்த்தனை, பிள்ளைப்பேறு, பேறு, மனவமைதி.
பிரசாதருமம் - புத்திரதருமம்.
பிரசாதனம் - அலங்கரிப்பு, சீப்பு, சுத்தம், சோறு, மனத்திருத்தி.
பிரசாதனம் - வெள்ளி.
பிரசாதி - புணர்ச்சி.
பிரசாபகன் - அரசன்.
பிரசாபதி அரசன், ஆண்குறி, சூரியன், தீ, பிதா, பிரமன், மருமகன்.
பிரசாபத்தம் } பெண்சுற்றமுமாண்
பிரசாபத்தியம் } சுற்றமுமொத்துத் தீமுன்னர்க்கொடுக்குமணம்.
பிரசாபன் - அரசன்.
பிரசாமம் - சமாதானம், மனவமைதி.
பிரசாரணம் - சத்துருவைச்சூழ்தல், விசாரித்தல், தருமம்.
பிரசாரணை - பிரஸ்தாபம்.
பிரசாரம் - நடை, பரம்புதல், போதல், வழக்கம், வேக்கைமரம்.
பிரசாரி - வாயுலோகம்.
பிரசாலம் - வீணுதண்டு.
பிரசாவதி - சகோதரன், மனைவி, மாதா.
பிரசாவிருத்தி - சனப்பெருக்கம், புத்திரவிருத்தி.
பிரசிதம் - சிதல்.
பிரசித்தப்பத்திரிகை - அறிக்கைப்பத்திரிகை.
பிரசித்தம் - அறிவிப்பு, கீர்த்தி, பராசியம், விளக்கம்.
பிரசித்தி - புகழ்.
பிரசிரயம் - உபசாணை, உருக்கம், சங்கை, நட்பு.
பிரசிரவணம் - அருவி, சிறுநீர், கிரிலை, பொசித்தல், மலைமேற்குளம், வேர்வை.
பிரசிரன் } உசுதேவனுக்குச் சாந்தி
பிரசிருத்தி } யிடத்துப்பிறந்த புத்திரன்.
பிரசிருதி - அவையார்த்தம்.
பிரசினதுதி - நொடி.
பிரசினம் } கேள்வி.
பிரசினை }
பிரசீவனம் - சம்பாதிக்கை, சீவனம்.
பிரசீனம் - காற்று.
பிரசுரபுருடன் - சோரன்.
பிரசுரம் - அறிவிப்பு, மிகுதி.
பிரசுரான் - சுக்கிரன்.
பிரசுரீகரணம் - சேர்த்தல்.
பிரசுருதம் - நீர்முதலியபாய்தல்.
பிரசுவாலம் - பேரொலி.
பிரசு - ஒருகொடி, பெண்குதிரை, மாதா, வாழை.
பிரசூதம் - பிள்ளைபெறுதல்.
பிரசூதன் - சாரதி.
பிரசூதவாயு - கருப்பவாயு.
பிரசூதி - பிள்ளைப்பேறு, சுவாயம்புவமனு மகள்.
பிரசூதிகாலம் - பேறுகாலம்.
பிரசூதிகாவாயு - கருப்பவாயு.
பிரசூதிகை - பிள்ளைபெற்றிருத்தல்.
பிரசூதிசம் - வியாகுலம்.
பிரசூதிசயாதல் - பிரவேசமாதல்.
பிரசூதிவேதை - கருப்பவேதனை.
பிரசூதிவைராக்கியம் - பிள்ளைப்பேற்றினால் வந்த தீர்மானம்.
பிரசூதை - பிள்ளைபெற்றிருப்பாள்.
பிரசூனம் - கனி, புட்பம்.
பிரசேகம் - நனைத்தல், பொசித்தல்.
பிரசேச்சுவரன் - அரசன்.
பிரசேதசர் - பிராசீனபருக்குச் சமுத்திரன் மகளாகிய சத்திருதியிடத்துப்பிறந்தவர்கள், இவர்கள்பதின்மர் சகோதரர், மகாதபோதனர்கள். இவர்கள் பாரி மரீஷை.
பிரசேதசு - காந்தாரன் பௌத்திர பௌத்திரன். இவன் புத்திரர் யாவரும் மிலேச்சராயினர்.
பிரசேதன் } வருணன்.
பிரசேதசன் }
பிரசேதிரு - சாரதி.
பிரசேலகம் - குதிரை.
பிரசேனசித்தன் - இரேணுகைதந்தை, ஜமதக்கினி மாமன்.
பிரசேனன் - சத்திராசித்து தம்பி.
பிரஜாபதி - பிரமன்.
பிரஜாபதிக்ஷேத்திரம் - பிரயாகை, பிரதிஷ்டானபுரம், வாசுகி, ஹிரதம், வெகுமூலபர்வதம், என்னும்இக்ஙான்கிடத்துக்கு மிடையேயுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரம். இதில் ஸ்நானஞ் செய்வோர் வெகு புண்ணியங்களைப் பெறுவர்.
பிரஜானி - பிராம்சுமான்.
பிரசை - குடி, சனம், பிள்ளை.

பிரசோதனம் - அனுப்புதல், சொல்லுதல், முறை.
பிரசோதினி - கண்டங்கத்திரி.
பிரசோற்பதி, பிரசோற்பத்தி } ஐந்தாவதாண்டு.
பிரச்னை - உணர்ச்சி, கேட்டல்.
பிரச்சாதனம்-மூடி, வெளிப்புடைவை.
பிரச்சாது - பின்பு.
பிரச்சினை - பிரசினை.
பிரச்சுவாலியம் - கொளுத்தல்.
பிராஞ்ஞத்துவம் - அறிவு, உணர்ச்சி.
பிராஞ்ஞமானம் - அறிஞர்க்கிடு முபசாரணை.
பிராஞ்ஞம் - அறிவுகேடு.
பிராஞ்ஞன் - அறிஞன், சமர்த்தன், பண்டிதன்.
பிரஞ்ஞாபகம் - அறிவு, கேடு.
பிரஞ்ஞானம் - அடையாளம், அறிவு.
பிரஞ்ஞை - அறிவு, அறிவுடையாள், சரச்சுவதி.
பிரடை - முறுக்காணி.
பிரட்சாளகம், பிரட்சாளனம் } கழுவுதல்.
பிரட்சாளியம் - கழுவுதல்.
பிரஷ்டம் - தள்ளுபடி.
பிரட்டம் - ஆதி, தள்ளுபடி, நீங்கானது, பொரித்தது.
பிரஷ்டன் - ஆதித்தன், துற்குணன்.
பிரட்டானம் - திதிவிசேடம்.
பிரட்டு - புரட்டு.
பிரட்டுக்கல் - இராசவருத்தனக்கல்.
பிரட்டை - ஒருசெடி.
பிரணம் - பழமை.
பிரணதன் - வணக்கமுள்ளவன்.
பிரணயகலகம் - கலவியிற்பிணக்கல்.
பிரணயமானம் - தலைவனுக்குத் தலைவிக்கு நடக்கு நேய விவாதம்.
பிரணயம் - அன்பு, கீழ்ப்படிதல், கல்வி, கேட்டல், நம்பிக்கை, பழக்கம், பிரதி, பிரார்த்தனை, மோக்கம்.
பிரணயம் - கொடுத்தல், நடத்தல், பரப்புதல்.
பிரணருத்தினம் - ஆடல்.
பிரணவம் - ஒருபறை, ஓங்காரம். ஆதி அக்ஷரம் பிரணவமானது சிருஷ்டிக்குமுன்னுள்ள அவசரத்திலே பிரமத்தின் வேறாகாத சித்சோதியாகவுள்ளது. அது சிருஷ்டியின்பொருட்டு விகாரப்படுமிடத்து விந்துருபமாகக்கிடக்கும். விந்துருபமாகக்கிடக்கும் அவசரத்திலே அதனிடத்துளதாகிய வைந்தவ சத்தியினாலே புருஷாமிசமாகிய நாதம் கம்பிதமாகும். அதாவது, வட்டவடிவினதாகிய விந்து விஷமப்பட்டு அண்டவடிவு பெறும். எனவே பிரணவம் விஷமப்பட்டவிடத்து விந்துவென்றும் அதுவிஷமப்பட்டவிடத்து நாதமென்றும் பெயர்பெறும். காரணத்தி லொடுங்கிய வுலகத்தை மீளவும் எழுப்புவது சைதன்னியசேஷ்டையேயாம். சைதன்னிய சேஷ்டையின்றி உலகம் இயங்காது ஐரோப்பிய பௌதிகதத்துவ பண்டிதர்களும் சேஷ்டையே சிருஷ்டிக்குக் காரணமென்பார்கள்.

அந்தச் சேஷ்டை புரிபோலச்சுழன்று செல்வதென்பது ஐரோப்பியர் மதம். ஆரியசாஸ்திரங்களும் பிரணவம் சங்கு வடிவினது என்று கூறுகின்றன வாதலால், இரண்டிற்கும் வேறுபாடு காண்கிலேம். சங்கு தன்னிடத்தே ஆகாயவெளியும் புரியும் உடையததலால் பிரணவத்துக்குக் குறியாயிற்று.

பிரணவம், தூலப்பிரணவம், சூக்குமப்பிரணவம் என்று இருவகைப்படும். ஹ்ரீம்என்பது ஸ்தூலமும் ஓம் என்பது சூக்குமமுமாம். பிரணவம் பதினாறு உறுப்புக்களாலாயது அவ்வுறுப்புக்கள் மாத்திரையெனப்படும். அப்பதினாறு மாத்திரைகளும் வருமாறு:—

(1) அ, (2) உ, (3) ம், (4) அர்த்தம், (5) நாதம், (6) விந்து, (7) கலை, (8) கலாநிதை, (9) சாந்தி, (10) சாந்தியாதீதை, (11) உன்மனி, (12) மனோன்மனி, (13) புரி, (14) மத்தியமை, (15) பசியந்தி, (16) பரை, இப்பதினாறும் நூற்றைம்பத்தாறாகவும் வகுக்கப்படும். இவையெல்லாம் அப்பைய தீக்ஷிதர் செய்தருளிய அநுபூதி, மீமாம்ஸா பாஷ்யத்திலே விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன.

அகாரம்பிரமாவையும், உகாரம்விஷ்ணுவையும், மகாரம் ருத்திரனையும், குறி

க்குமென்பாரும், அகரம் விஷ்ணுவையும் உகரம் ருத்திரனையும் மகரம் பிரமாவையும் குறிக்கு மென்பாருமாக. சைவவைஷ்ணவ சமயிகள் இப்பிரணவப் பொருளிலே தம்முண் மாறுபடுவார்கள். அகரம்பிரமத்தைக் குறித்தநிற்றலால் அந்தப்பிரமத்தை விஷ்ணுவென்றும் சிவனென்றும் தத்தமக் கிஷ்டமான பெயர்களால் வழங்கும் இருவர் குறிக்கோளும் ஒன்றேயாம்.

பிரணவசொருபத்தையினவென் றெடுத் துரைத்தல் கூடாதென்று சாஸ்திரங்க ளெல்லாங் கூறுதலின், உண்மை யுணர்ந்த ஞானிகளுக்கே அதன் பரப்பெல்லாம் புலனுமென்க. மந்திரங்களுள்ளே பிரணவமே சிறந்ததும் மோக்ஷசாதனமா யுள்ளதுமாம், முண்டகோபநிஷத்தில் இப்பிரணவமாகிய வோங்காரத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட ஒரு வாக்கியம் வருமாறு:—

"ஓம்" என்பது வில்லு, ஆன்மாவே பாணம் பிரமமே குறி, இடையறுத் தியானத்தினலேயே குறியை எய்தல் கூடும். குறியிற் புதைந்த பாணம்போல ஆன்மா பிரமத்திற் புதையக்கடவது, "பிரணவம் என்பதன் பொருள் அழியாதது. கழிந்ததும் நிகழ்வதும் வருவதுமாகிய முக்கூற்றுப் பிரபஞ்சமெல்லாம் ஓமெனும் பொருளே" "அகரம் ஜாக்கிரவுலகமாய் யாவரும் வசித்தற்கிடமாக வுள்ளது. இதனை யுணர்பவன் இஷ்டபோகத்தை யடைகிறான். உகரம் சொப்பனமாய்ப் பிரகாசமாக வுள்ளது. மகரம் சுஷுப்தியாய் முடிவிடமாகவுள்ளது."

பிரணவருபம் - கடவுள், சிவபிரான்.
பிரஞசம் - அழிவு. [ரோலி.
பிரணுதம் - காதுநோயினென்று, பே
பிரணயம் - இணங்காமை, நிதார்த்தம், வெறுப்பு.
பிரணலம் - மதகு. [யில்
பிரணி - தானம்,தியானம்,முயற்சி, வா
பிரணிதி - ஒற்றன்,கேட்டல்,தோழன்.
பிரணிநாதம் - பேரொலி.

பிரணிபதனம் } வணங்கல்.
பிரணிபாதம் }
பிரணீதம் - உண்டாக்கப்பட்டது.
பிரண்டை - பரண்டை.
பிரதகம் - முன்பு.
பிரதக்கணம் - வலம்வருதல்.
பிரதக்கு - தனிமை.
பிரதட்சணம் - பிரதக்கணம்.
பிரதமகற்பிகன் - பாலமாணக்கன்.
பிரதமகாலம் - பூருவகாலம், விடியற்காலம்.
பிரதமசிருட்டி-பூருவசிருட்டி. [த்தது.
பிரதமம்-ஆரம்பம் முதன்மை, விசேஷி
பிரதமை - ஒன்று, கடுக்காய், முதல், முதற்றிதி.
பிரதம் - கொட்டை, பிரசித்தம், புகழ்.
பிரதரம் - அம்பு, சுருக்கு, சுழலல், பிளப்பு, விறைப்பு.
பிரதர்த்தன் - திவோதாசன் புத்திரன்.
பிரதலம் அம்பு, பாதலம்.
பிரதனம் } கிழித்தல், நீளுதல், படை
பிரதனை } யிலோர் தொகை அது வாகினி மூன்றுகொண்டது, புராதனம், யுத்தம், விரித்தல்.
பிரதன் - ஈவையானன்.
பிரதாபசூரியன்-சண்பகப் பாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
பிரதாபதி - பாண்டு.
பிரதாயமார்த்தாண்டம் - வீமாதபாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.
பிரதாபம் - உயர்ச்சி, கீர்த்தி, பிரகாசம், பெருமை, மகிமை, வீரம், வெப்பம்.
பிரதாபருத்திரீயம் - வித்தியாநாத கவி செய்த அலங்காரம் சாஸ்திரம்.
பிரதாபானம் - நாகம்.
பிரதாரம் - கடத்தல்.
பிரதாரகம் - எத்து.
பிரதாவனம் - காற்று.
பிரதானவாது - சுக்கிலம்.
பிரதானம்-அங்குசம், கடவுள்,கொடை, சுபாவம், புத்தி, மூலம், விசேடம், வீம்பு. [ன்.
பிரதானன்-முதன்மந்திரி, யானைப்பாக
பிரதானி - அதிகாரன், பொக்கிஷக்கார
பிரதானிகம் - அதிகாரம். [ன்.
பிரதானியம் - பிரதானம்.

பிரதி - அற்பம், எதிர், எழுதிச்சேர்த்தல், தடை, பகுதி, பதில், மூலம், விசாதம்.
பிரதிகதி - அசைப்பு.
பிரதிகஸ்தகன் } பதிலாள்.
பிரதிகஸ்தன் }
பிரதிகம் - அவல், குழந்தை.
பிரதிகரணம் - வெறுத்தல்.
பிரதிகருமம் - அலங்கரித்தல், பதிற்கிரியை, மாற்று.
பிரதிகாசம் - பரிகாசம்.
பிரதிகாதம் - அதைத்தல், தடுத்தல், மோதுதல்.
பிரதிகாதனம் - கொல்லல்.
பிரதிகாந்தி - பிரதிவிம்பம்.
பிரதிகாயம் - அடையாளம், குறிப்பு.
பிரதிகாரகன் - வஞ்சகன், வாயில்காப்போன்.
பிரதிகாரணம் - உட்படுதல்.
பிரதிகாரம் - அனுப்பு, கதவு, பதில், பழிவாங்குதல்.
பிரதிகாரன் - வாயில்காப்போன்.
பிரதிகிரகணம் - பதில்வாங்கல்.
பிரதிக்கிரகம் - ஏற்றல்.
பிரதிகிருதி - பதில்செய்தல், பிரதிகாயம், பிரதிபிம்பம்.
பிரதிகூலம் - எதிர், கைகூடாமை, மாறுபாடு.
பிரதிகூலியம் - எதிரிடை.
பிரதிக்கியாதம் - சம்மதித்தல்.
பிரதிக்கினம் - சரீரம்.
பிரதிக்கினை - அத்தாட்சி, அறிக்கையிடுதல், சம்மதி, நேர்த்திக்கடன், பொருத்தனை, வேண்டியது.
பிரதிசங்காரம் - அழித்தல், குறைத்தல்.
பிரதிசங்கை - பயம்.
பிரதிசத்தம் - எதிரொலி.
பிரதிசந்தானம் - இச்சையடக்கம்.
பிரதிசமாதானம் - மாற்றுமருந்து.
பிரதிசம் - கோணதிசை.
பிரதிசாரம் - கைக்கடகம், படைவகுப்பு, மாலை.
பிரதிசரன் - வேலைக்காரன்.
பிரதிசருக்கம் - சிருட்டிப்பு, புராணத்தினுறுப்பு.
பிரதிசாகிரம் - எச்சரிக்கை.
பிரதிசாந்தானிகன் - புலவன்.
பிரதிசாடம் - எதிர்ச்சபிப்பு நிதானித்தல்.
பிரதிசாயை - சுரூபம், நிழல்பிரதிபிம்பம்.
பிரதிசாரணம் - இரணங்கட்டல், தள்ளல்.
பிரதிசிகுவை - உண்ணு.
பிரதிசந்தனம் - ஆலோசித்தல்.
பிரதிசிரயம் - அடைக்கலவிடம், இருப்பிடம், கூட்டம், யாகசாலை.
பிரதிசிரவணம் } சம்மதித்தல்.
பிரதிசிரவம் }
பிரதிசீரை - திரைப்படாம்.
பிரதிசூரியகம் - சூரியமண்டலம், பல்லி.
பிரதிசூரியம் - பல்லி.
பிரதிசூரியன் - சூரியப்பிரதிபிம்பம்.
பிரதிதேசம் - எதிரிடை.
பிரதிஞ்ஞாபத்திரம் - உறுதிச்சீட்டு.
பிரதிஞ்ஞானம் - சம்மதி.
பிரதிஞ்ஞாவிரோதம் - எதிர்நியாயம்.
பிரதிஞ்ஞானம் - சம்மதி.
பிரதிஞ்ஞேபன் - புகழ்வோன்.
பிரதிஞ்ஞை - தத்துணிபுரைத்தல்.
பிரதிட்டம் - ஸ்தாபனம்.
பிரதிட்டாகலை - பஞ்சகலையினொன்று.
பிரதிட்டாபனம் - நிறுத்துதல்.
பிரதிஷ்டவான் - கீர்த்தியுள்ளோன்.
பிரதிட்டை } இடம், எல்லை, ஓர்பா, கீர்த்தி, சடங்கு, முடித்தல், தாபனம், நிறைவேற்றல், நேர்த்தல், பூமி.
பிரதிஷ்டை }
பிரதிதன் - அறிவாளி.
பிரதிதாரணம் - யுத்தம்.
பிரதிதானம் - கைம்மாறு, திரும்பக்கொடுத்தல், பொருண்மாற்றுதல்.
பிரதிதி - கீர்த்தி.
பிரதிதிசம் - சகல இடமும்.
பிரதிதினம் - நாடோறும்.
பிரதிதுரை - பதிற்றுரை.
பிரதிதுவந்துவம் - எதிரிடை, விரோதம்.
பிரதித்துவனி - எதிரொலி.
பிரதிதேவன் - சூரியன், நாள்.
பிரதித்தொனி - எதிரொலி.
பிரதித்தல் - உருவுகாட்டுதல், தோற்றுதல்.
பிரதிநாதம் - எதிரொலி.
பிரதிநிசம் - இரவோடிரா.
பிரதிநிதி - உருநாட்டு, பிரதிபிம்பம்.
பிரதிநியாயம் - பதில்நியாயம்.
பிரதிபட்சன் - எதிரி.
பிரதிபதகன் - எதிரிடைகாரன்.

பிரதிபதம்-அடிக்கடி, பரியாயச்சொல்.
பிரதிபதூரியம் - உவகைப்பறை.
பிரதிபத்தி - அடக்குதல், அதிகரித்தல், எய்த்தல், கீர்த்தி, சம்பாதித்தல், சம்மதித்தல், நன்னடை, நிதானிப்பு நோக்கம் பாவிப்பு, மிகநம்பிக்கை.
பிரதிபத்திபடகம் - பெரும்புறை.
பிரதிபத்திரம் - மறுமொழிச்சீட்டு.
பிரதிபக்தகம் } கட்டுப்பாடு, தடை.
பிரதிபந்தம் }
பிரதிபம் - முரடு.
பிரதிபலநம் } பிரதிபிம்பம்.
பிரதிபலம் }
பிரதிபன்னம் - அறியப்படுதல்.
பிரதிபாகம் - பங்கு.
பிரதிபாதகம் - செயற்படுத்துவது.
பிரதிபாதனம் - ஈகை, உலகநடைசெய்து முடித்தல், நிதானித்தல், பிறப்பித்தல், முடித்தல்.
பிரதிபாதுகம் தெளியப்பண்ணல், நிதானித்தல்.
பிரதிபாலகன்-அரசன், தற்காப்போன்.
பிரதிபாலனம் - காத்தல், பழகுதல்.
பிரதிபாவியம் - அடகு.
பிரதிபானம் - தைரியம், பிரபை.
பிரதிபிம்பம் - பிரதிவிம்பம், அதாவது எதிருருவம்.
பிரதிபுருடன் - ஒவ்வொருவன்.
பிரதிபூசனம் - வணக்கம்.
பிரதிபேதனம் - பிரித்தல், வெட்டுதல்.
பிரதிபை - அறிவு, கூர்மை, பிரகாசம், பிரதிகாந்தி.
பிரதிபோதம் - கற்பித்தல்.
பிரதிமண்டலம் - சுற்றளவு.
பிரதிமதை - பிம்பம்.
பிரதிமாலை - ஈற்றெழுத்துக்கவி.
பிரதிமானம் - சாரூபம், யானைக்கொம்பினடு, யானைநெற்றி.
பிரதிமூர்த்தி - தோற்றம், பாவனை, பெயர்த்தெழுதகை.
பிரதிமை - விக்கிரகம்.
பிரயத்தினம் - எதிரிடை, திரைப்படுத்தல், பழிவாங்குதல், விருப்பம்.
பிரதியாதனை - சாயல்.
பிரதியுத்தரம் - பிரத்தியுத்தரம்.
பிரதியுபகாரம் - பிரத்தியுபகாரம்.

பிரதியெழுதல் - ஒன்றைப் பார்த்தது போலெழுதல்.
பிரதியோகம் - எதிரிடை, கூட்டம்.
பிரதியோகி - எதிரி, கூட்டாளி.
பிரதிராத்திரம் - இராவுக்கிரா.
பிரதிரூபம் - பிரதிமை.
பிரதிரோதகன் - எதிரி, கள்வன்.
பிரதிரோகம் - எதிரிடை, களவு, மறைத்தல், மூற்றிகை போடுதல்.
பிரதிரோதி - திருடன்.
பிரதிலம்பம் - இலாபம்.
பிரதிலோமகன் } இழிபுயர்பாண் பெண்ணிற் பிறந்தோன்.
பிரதிலோமன் }
பிரதிவசசம் - கிராமம்.
பிரதிவசனம் - இணக்கம், எதிரொலி, மறுமொழி.
பிரதிவாகு-கிருஷ்ணன் வமிசத்து வச்சிரன் புத்திரன் அக்ரூரன் தம்பி.
பிரதிவாக்கியம் - மறுமொழி.
பிரதிவாசரம் - நாளுக்குநாள்.
பிரதிவாணி - பிரதிவாக்கியம்.
பிரதிவாதம் - எதிர்வாதம்.
பிரதிவாதி - எதிர்வாதி.
பிரதிவாதிப்பு - மறுமொழி.
பிரதிவாபம் - மருந்தனுபானம்.
பிரதிவிந்தியன் - தருமராஜனுக்குத் திரௌபதையிடத்துப்பிறந்தபுத்திரன்.
பிரதிஷ்டானபுரம் இதங்கையும் யமுனையும் கூடுமிடத்துக்குக் கிழக்கேயுள்ள ஒரு நகரம்.
பிரதிவிம்பம் - கண்ணாடி முதலியவற்றிற் றோற்றும் போலியுரு.
பிரதிவிம்பர் - உபதேவர்.
பிரதிவிம்பித்தல் - போலியுருத் தோற்றுதல்.
பிரதிவேசம் - அயல்வீடு.
பிரதீகம் - அவயவம், பங்கு.
பிரதீகாரம் - இணக்கம், கதவு, சீர்திருத்தல், பழிவாங்கல், மருத்துசெய்தல்.
பிரதீசி } மேற்கு.
பிரதீசீனம் }
பிரதீதம் - கீர்த்தி, சக்கை, சந்தோஷம்.
பிரதீதி - அறிவு, கீர்த்தி, விருப்பம்.
பிரதீபம் எதிர், ஒப்பிடல், வக்கிரித்தல்.
பிரதீபவசனம் - எதிரிடை, முகங்கோடாத மறுமொழி கொடுத்தல்.
பிரதீபனம் - ஏவுதல், ஒருமருந்து.

பிரதிபன்-வீமன் புத்திரன்,இவன்மனை விசுநந்தை,புத்திரர்,தேவாபி,சந்தநு.
பிரதீபாலங்காரம் - எதிர்நிலையணி.
பிரதீரம் - கரை.
பிரதீவாபம்- அனுபானஞ்சேர்த்தல், உபத்திரவம், உலோகநீற்றல்.
பிரதிவேசம் - அயல்.
பிரநுகம் - அலகுள்ளபட்சி.
பிரதெட்சணம் - பிரதட்சணம்.
பிரதேகம் - அபிஷேகம்.
பிரதேசம் - இடம், பிரதேசம்.
பிரதேசனம் - காணிக்கை, வெகுமதி, வெளிப்பாடு.
பிரதேசனி, பிரதேசினி } முன்விரல்.
பிரதை - அருச்சுனன் தாய், ஈகை, கீர்த்தி, குந்திதேவி.
பிரதோஷகாலம், பிரதோஷபுண்ணியகாலம். } திரயோதசித் திதியிற் பொழுதத்தமிக்க முன் மூன்றே முக்கானாழிகை தொடங்கி அத்தமித்து மூன்றே முக்கானாழிகை பரியந்தமுள்ள நேரம்.
பிரதோடம், பிரதோஷம் } அந்தமனத்துக்கு முன்னும் பின்னும் மூன்றே முக்கால் நாழிகை, இராவின் முதற்சாமம், திரயோதசி விரதம்.
பிரதோதம் - அங்குசம்.
பிரஸ்தம் - ஓரளவை, மலைமேற்பரந்ததலம், வயிரமானது, விசாலித்தல்.
பிரஸ்தரம் - இரத்தினம், ஓரிசை, கல், படுக்கை.
பிரத்தல் - எழுத்திலாஒலி.
பிரஸ்தாபம்-அத்தியாயம், அறிவித்தல், சமயம், புகழ்ச்சி, வெளிப்படுத்தல்.
பிரத்தாபம் - அவசரம், பகிரங்கம்.
பிரஸ்தாபனம்-அனுப்பல், நியமித்தல்.
பிரஸ்தாபனை கட்டியம், துவக்கம், வெளிப்படுத்தல்.
பிரஸ்தாரம் - காடு, படுக்கை, பிரத்தாரம், புட்பசயனம்.
பிரத்தாரம் - தாளப்பிரமாணம் பத்தினொன்று.
பிரத்திக்கினை - பிரதிக்கினை.
பிரத்திட்சம் - பிரத்தியட்சம்.
பிரத்திதம் - கேட்கும்பொருள்.
பிரத்தியக்கதரிசனம் - கண்ணாற்கண்ட காட்சி.
பிரத்தியக்கப் பிரமாணம் - பிரத்தியட்சப் பிரமாணம்.
பிரத்தியக்கம் - காட்சியளவை.
பிரத்தியக்காசாபதி - வருணன்.
பிரத்தியக்கிரன்-உபரி சரவசுவின் புத்திரன்.
பிரத்தியக்கு - பிரிவு, மேற்கு, வேறு.
பிரத்தியகுநாயகியம்மை-திருக்கரவீரத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பிரத்தியங்கம் - உபாங்கம், பாதவுறுப்புள் ஒன்று, பிரதியுறுப்பு,மூக்குமுதலிய வுறுப்புகள்.
பிரத்தியங்கிரி - ஒருதேவதை.
பிரத்தியட்சப் பிரமாணம் - ஓரளவை அது கண்ணாலேகண்டு நிச்சயிப்பு.
பிரத்தியட்சம் - காணத்தக்கது.
பிரத்தியட்சாபாசம்-காட்சிப்பிரமாணம்
பிரத்தியதநம் - உணவு.
பிரத்தியநீகன் - சத்துரு.
பிரத்தியபகாரம்-தீமைக்குத்தீமை சரிக்கட்டுதல்.
பிரத்தியபதம் - விகுதி.
பிரத்தியபம் - அறிவு, ஆணை, கீர்த்தி, தியானம், நம்பிக்கை, நிச்சயம், நோக்கம், விகுதி.
பிரத்தியபாயம் - காணத்தக்கது.
பிரத்தியம் - குறக்கு, விகுதி.
பிரத்தியயம் - சம்ஸ்கிருதவிகுதி.
பிரத்தியருத்தம்-எதிரிடை,மறுமொழி,
பிரத்தியவசாநம் - போசநம்.
பிரத்தியவசிதம் - பட்சித்தல்.
விரத்தியவாயம் - எதிர், குற்றம், நம்பிமோசம்போதல், பாவம்.
பிரத்தியவியோகம் - எதிர், வழக்கு.
பிரத்தியாகரணம் - புலனடக்கல்.
பிரத்தியாகாரம்-இருந்துவாங்கல், உபாதியை நீக்கியுண்ணோக்கல் இது அட்டயோகத்தொன்று, எடுத்துக்கொள்ளுதல், சுருக்கம், படையுறை பற்றுதல்.
பிரத்தியாக்கியானம் - தள்ளல், தள்ளுதல், நிந்தை, மறுத்தல்.
பிரத்தியாசத்தி - கலப்பு.
பிரத்தியாசாரம் - சேனை.

பிரத்தியாசாரம்-அணிவகுப்பு, சேனை.
பிரத்தியாதேசம்-அசரீரிவார்த்தை, அறிவித்தல், எச்சரித்தல், தள்ளுதல், மறுத்தல்.
பிரத்தியாசை - நம்பிக்கை.
பிரத்தியாபாசம் - ஓரளவை.
பிரத்தியாலீடம்-வலக்கான்முன் வைத்திடக்கான் மண்டலித்த கிர்குகிலை.
பிரத்தியுத்தரம் } கைம்மாறு, மறுமொழி.
பிரத்தியுத்தாரம் }
பிரத்தியுத்தானம் - உபசரித்தல்.
பிரத்தியுத்தி - மறுமொழி.
பிரத்தியுபகாரம் - கைம்மாறு.
பிரத்தியும்நன்-கிருஷ்ணனுக்கு ருக்மிணியிடத்துட்பிறந்தபுத்திரன் இவன் மனைவி ரதி.
பிரத்தியுர்கம்-யுத்தகிமித்தம்.
பிரத்தியுர்பன்னம்-ஆயத்தம், பெருச்
பிரத்தியூகம் - தடை. [சம்.
பிரத்தியூசன் } அட்டவசுக்களிலொருவன்.
பிரத்தியூஷன் }
பிரத்தியுஷன் - அஷ்டவசுக்களில்ஒருவன்.
பிரத்தியேகம்-தனிமை, பிறநீங்கல்.
பிரத்தியேகராச்சியம் - தனியரசு.
பிரத்தியோகம் - மனவேற்றுமை, நடு
பிரத்தியோகார்த்தம் யுத்தநிமித்தம்.
பிரத்தியோதம்-கிரணம், பிரபை.
பிரத்தியோதநன் } சூரியன்.
பிரத்தியோதனன் }
பிரத்தியோதன் - சுக்ரீரகன்புத்திரன்.
பிரத்துலம்-பருத்தல்.
பிரத்துவம்சாபாவம் - அழிவு, ஊறுபட்ட பாவம்.
பிரத்தொங்கிசம்-நிமைக்குத்நிமை, சரிக்கட்டல், பழிவாங்குகை.
பிரகவிகாணம் - கொலை.
பிரந்தயோகம் - கூட்டம்.
பிரக்தாகாரம் - அதிசயம்.
பிரந்தாரம் - அழகு.
பிரந்திட்டம்-மிகுகூட்டம்.
பிரந்தை - சமூகம்.
பிரபஞ்சக்கட்டு - இலௌகிக மயக்கப்பெருக்கம்.
பிரபஞ்சசாகரம் - இலௌகிகசமபக்கம்.
பிரபஞ்சபந்தம்-பிரபஞ்சக்கட்டு.
பிரபஞ்சபந்தம் - இலௌகிகபந்தம்.

பிரபஞ்சமாயை - இலௌகிகமாயை.
பிரபஞ்சமூலம் - பிரபஞ்சகாரணமான மாயை மூலப்பிரகிருதி.
பிரபஞ்சம் - உலகம், எத்து, கூட்டம், சேனை, பகிடி, மாயை, மாறு, விசாலம்.
[க்கம்.
பிரபஞ்சலட்சணம்-அசத்து, சடம், து
பிரபஞ்சவாதனை - பிரபஞ்ச வாசனை, இலௌகிகாப்பியாசம்.
பிரபஞ்சவாழ்வு - இலௌகிக சம்பாவஷணை, இலௌகிக வாழ்க்கை.
பிரபஞ்சவியாபாரம் - இலௌகிக காரியம்.
பிரபஞ்சவிரக்தி } உலகவெறுப்பு.
பிரபஞ்சவிராகம் }
பிரபஞ்சவிருத்தி - உலகச் செய்கை, மாயாகாரிய விருத்திப்பு.
பிரபஞ்சவிலாசம் - மாயாகாரிய சம்பிரமம்.
பிரபஞ்சவைராக்கியம் - உலகவெறுப்பு.
பிரபஞ்சனன் - காற்று.
பிரபஞ்சசாரம் - உலகவொழுக்கம்.
பிரபஞ்சானுக்கிரகம் - உலகதயை.
பிரபதனம் - அடைந்து கொண்டது, அழிவு, மரணம், விழுதல்.
பிரபதன் - மகன்.
பிரபதை - மகள்.
பிரபந்தகற்பனை - கட்டுக்கதை.
பிரபந்தம்-கதை, தொடர்பு, பாமாலை.
பிரபந்நன் - சரணடைந்தவன்.
பிரபம் - தண்ணீர்ப்பந்தர்.
பிரபலம்-கீர்த்தி, தளிர், பெலன், முக்கியம்.
பிரபலன் - செளரியவான், பேர்போனவன்.
பிரபலியம் - கீர்த்தி, முக்கியம்.
பிரபலோற்பலன் - விஷ்ணுபரிசாரகருளொருவன்.
பிரபவ - முதலாண்டு.
பிரபவம்-ஆதாரம், காரணம், பிறப்பு, பெலன்.
பிரபன்னம் - அடைதல், ஒதுங்குதல், சேருதல்.
பிரபா - பந்தல், பிரமம்.
பிரபாகரம்-ஆறுசாத்திரத்தொன்று.
பிரபாகரன்-அக்கினி, ஒருநூலாசிரியன் சந்திரன், சமுத்திரம், சூரியன்.

பிரபாகீடம் - மின்மினி.

பிரபாசம் - ஒரு புண்ணியதீர்த்தம், அசுவினி முதலிய இருபத்தேழு மனைவியருள்ளே ரோஹிணி மிக்க அழகுள்ளவளாதலால் சந்திரன் அவளிடத்தில் மிக்க விருப்பமுள்ளவனா யிருந்தான், அதற்கு மற்றைய மனைவியர் யாவரும் பொறாமைகொண்டு தமது தந்தையாகிய தக்கனிடத்திற்போய் இந்தச் செய்தியைத்தெரிவிக்க, அவன் மிகு கோபங்கொண்டு, சந்திரனுக்கு க்ஷீணகதியுண்டாகும்படி சபித்தான். அப்படியேநாளுக்குநாள்குறைந்து வருவதைக் கண்ட தேவர்கள் அவனை யழைத்துக்கொண்டு தக்கனிடத்திற்குப்போய் இவன் இனிமேல் தம் மனைவியரெல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்புடையவனா யிருப்பான். இவனது குறைபாடு நீங்கும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது தக்கன் மனமிரங்கி, பதினைந்துநாள் முறையே வளர்ந்தும். பதினைந்துநாள் குறைந்தும் வரக்கடவனென்று சொல்லி, சரசுவதீநதி கடலிலேசங்கமமான இந்தத் தீர்த்தத்தில் அமாவாசைகள்தோறும் ஸ்நாநம்செய்யும்படி நியமித்தான். அவ்வாறே சந்திரன் ஸ்நாநம்செய்து லோகப்பிரபாஸனானான். ஆதலால்இந்தத்தீர்த்தத்துக்குப் பிரபாச மென்னும் பெயருண்டாயிற்று. ஒரு பட்டணம்-இது துவாரகைக்குச் சமீபத்திலுள்ளது.

பிரபாசன்-அஷ்டவசுக்களில் ஒருவன், பீஷ்மன் இவனுடைய அம்சமென்பது, புராணநிச்சயம்.

பிரபாசை-பிரஜாபதி மனைவி.

பிரபாணி - உள்ளங்கை.

பிரபாதம் - கரை, செங்குத்து, தெரு, மலையின் வீழருவி, வைகறை.

பிரபாதசமயம் - விடியற்காலம்.

பிரபாதிகம் - மயில்.

பிரபாலன் - மாணாக்கன்.

பிரபாவதி - சூரியன் மனைவி.

பிரபாவம் - ஒளி, கீர்த்தி, சமனுக்கல், பெலன், மகத்துவம், மகிமை.

பிரபாவனம் - கொல்லை.

பிரபானம் - பிரகாசம்.

பிரபித்தம் - கிடைக்கும் பொருள்.

பிரபு-அதிகாரி, இரதம், உயர்குலத்தவன், கொடையாளி, தலைவன், தொனி, பெருமையிற்சிறந்தோன், வல்லவன், விட்டுணு.

பிரபுதத்துவம் ஆளுகை, பெருந்தன்மை

பிரபுதை - பெருமை, மகத்துவம்,

பிரபுத்தனம் - மேம்பாடு.

பிரபுத்துவம் - பிரபுதத்துவம்.

பிரபுமோடி - மேம்பாடானநடை.

பிரபுலிங்கலீலை - துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட நூல்களுள் ஒன்று, இது ஐக்யவாதசைவநூல்களுட்சிறந்தது, இதிலமைந்துள்ள சொன்னலம் பொருணலம் முதலியவை கன்னலையுங் கைப்பிக்கும், இதில் கற்பனைகள் அநந்தம்.

பிரபூரணம் - அம்பு, நாணேற்றல்.

பிரபேதம் - விதம்.

பிரபை - ஒளி, குபேரனகரம், தண்ணீர்ப்பந்தல், திருவாசி, துர்க்கை, தெளிவு புஷ்பாரணன் மனைவி, இவனது மக்கள்பிராதகாலம்மத்தியாநம் சாயங்காலம் என்பன.

பிரபோதசந்திரோதயம்-ஒருநூல். வடமொழியில் கிருஷ்ணமிசிர பண்டிதரால் செய்யப்பட்ட அற்புதமான ஒரு வேதாந்த நாடகம். இதனைத் தமிழிலே விருத்தப்பாவான்.மொழிபெயர்த்தவர் மாதை - திருவேங்கடசுவாமிகள். ஆன்மாக்களுடைய காமக்குரோதாதிகளையும், விவேகம், சாந்தம் முதலியவைகளையும் உருவகம் பண்ணிப் பாரதகதைபோல நாடுகவர்தல் காட்டுக்கோட்டல் தூதுபோக்கல் போர்புரிதல் வாகைசூடல்ஞானமுடிசூட்டல் என்னும்உட்பிரிவுகளையுடையது, சொற்சுவை பொருட்சுவைகளிற்சிறந்தது, இது ஆயிரத்துமுந்நூறு வருஷங்களுக்கு முன்னே வடமொழியிற் செய்யப்பட்டது.

பிரபோதம்-அறிவு, சுறுசுறுப்பு, தெளிதல், புத்தி.

பிரபோதனம்-எழுப்புதல், படிப்பித்தல்

பிரஸ்போடனம் - அலர்தல், குல்லம், புடைத்தநெல், வீங்குதல்.
பிரப்பங்கூடை - ஒரு பிரம்பினால் செய்தகூடை.
பிரப்பங்கோரை - ஒரு கோரைப்புல்.
பிரப்பு - ஒருகலத்திற் பல்லுணாப் பரப்புவது, பேருண்டி.
பிரமகத்தி
பிரமகத்திதோஷம்
பிரமகத்தியாதோஷம்
பிரமகத்தியை } பிராமணனைக்கொன்ற தோஷம்.
பிரமகற்பம் - பிரமன்வாழ்நாள் அது ஆயிரங்கோடாகோடி வருடம்.
பிரமகன்னிகை - சரச்சுவதி, ராமணப்பெண்.
பிரமகாதகன் - பிராமண கொலைபாதகன்.
பிரமகாயத்திரி - ஒரு மஹாமந்திரம்.
பிரமகீதை - இது உபநிடதப்பொருளையெடுத்துரைப்பது, இதனை அருளிச்செய்தவர் பிரமதேவர், இதனைத்தமிழிலேபாடினவர் தத்துவராய சுவாமிகள்.
பிரமகுலம் - பிராமணசாதி.
பிரமகைவர்த்தம் - பதினெண் புராணத்தொன்று. இது வசிஷ்டமுனிவரால் செய்யப்பட்டது. இது பதினெண்ணாயிரம் கிரந்தமுடையது.
பிரமக்கியானம் - பிரமஞானம்.
பிரமக்கியானி - பிரமஞானி.
பிரமக்கிரந்தி - ஒருமுடிச்சு.
பிரமக்கொலை - பிராமணக்கொலை.
பிரமசடங்கம் - ஆறங்கத்தோடு செய்யுமோர் செபம்.
பிரமசரியம்
பிரமசரியவிரதம் } கற்று விரதங்காத்து விவாகமின்றியிருக்குநிலை இது ஆச்சிரம நான்கில் ஒன்று.
பிரமசாபலம் - உபநிடத முப்பத்திரண்டினொன்று.
பிரமசாரி பிரமசாரியமனுட்டிப்போன் வீடுமன், வேதம்படிக்குமாணாக்கன்.
பிரமசாரிசந்நியாசி - பிரமசரிய நிலையிலிருந்து சந்நியாசத்திற் குவோன்.
பிரமசாரித்துவம் - பிரமசரியநிலை.
பிரமசித்தி - தேவஞானசித்தி.
பிரமசூத்திரம் - முப்புரிநூல், வேதாந்தசூத்திரம்இதுவேதவியாசமுனிவரால்செய்யப்பட்டநூல், இதுபிரமமீமாம்ஸை என்றும் சொல்லப்படும். இதனை திரிமதஸ்தர்களும் அங்கீகரித்திருக்கிறார்கள், இதற்குசங்கராசாரியர், நீலகண்ட சிவாசாரியர், இராமாநுஜாசாரியர் என்னும் மூவரும் பாஷ்யங்கள் அருளிச்செய்திருக்கிறார்கள்.
பிரமசைதன்னியம் - கடவுள், மூலகாரணம்.
பிரமஞானம் - கடவுளையறியும்ஞானம்.
பிரமஞானி - தேவஞானமுள்ளோன்.
பிரமஞ்ஞம் - தேவவறிவு.
பிரமஞ்ஞானம் - தேவஞானம்.
பிரமணம் - சுழற்சி, திரிதல்.
பிரமதகணம் - கைலாயத்திலிருக்கும்பக்தசமூகம்.
பிரமதண்டம் - குருக்கு, பிராமணர்க்குரியகோல்.
பிரமதண்டு - ஒருபூடு, பிரமதண்டம்
பிரமதத்தன் - சூளிபுத்திரன், இவன் குசநாபன்புத்திரிகளைமணம்புரிந்தவன், அணுஹன்மகன். இவன்யோகதந்த்ரமென்னும் ஒருகிரந்தஞ்செய்தவன், ஓரரசன; இவன்ஒருகாலத்தில் கௌதமருக்கு அன்னம் பரிமாறும்போது அதில் மாம்ஸகண்டம் காணப்பட்டமையால்அவரால் கழுகாய்ப்பிறக்கும்படி சபிக்கப்பட்டு அந்தச்சாபம் ஸ்ரீராமரது கரஸ்பாஸத்தால் நிவர்த்தியாதலும் தேவசரீரமடைந்தான்.
பிரமதத்துவம் - தேவத்தன்மை, தேவவறிவு, மெய்ஞ்ஞானம்.
பிரமதம் - சந்தோஷம், வெறி.
பிரமதனம் - கடைதல், கொலை, வருந்தல்.
பிரமதாகானனம் - நந்தவனம், பிரமதாவனம்.
பிரமதாதிபன் - சிவபிரான்.
பிரமதாலயம் - நாகம்.
பிரமதாவனம் - நந்தனவனம்.
பிரமதானம் - வேதபோதனை.
பிரமதி - ச்யவநனுக்கு சுகந்யையிடத்துப் பிறந்த புத்திரன், இவன் மகன் உருரன், இவன் மனைவி கிருதாசி.
பிரமதிதம் - கடைதயிர்.
பிரமதேவன் - பிரமா.
பிரமதை - உருபவதி.
பிரமத்தம் - அசட்டை, பிழை, மதிமயக்கு, வெறி.

பிரமத்தி - பிரமகத்தி.
பிரமத்துவம் - பிரமதத்துவம்.
பிரமத்துவரை-விசுவாவசு என்னும்கந்தர்வராஜன் மகன், இதன்தாய் மேநகை.
பிரமநிருவாணம் - கடவுளுடனொன்றியிருத்தல்.
பிரமபதம் } பிரமலோகம்.
பிரமபதவி }
பிரமபத்திரம் } புகையிலை.
பிரமபத்திரி }
பிரமபந்து - பிராமணன்.
பிரமபிங்கை - வெள்ளி.
பிரமபிந்து - உபநிடத முப்பத்திரண்டினொன்று.
பிரமபுத்திரம் - ஒருநதி.
பிரமபுத்திரி-சரஸ்வதி, சரஸ்வதியாறு.
பிரமபுரநாதர் - திரு அம்பர்ப் பெருந்திருவிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
பிரமபுரம் - சீகாழிப்பதி.
பிரமபுராணம் - பிருமபுராணம்.
பிரமபுரிநாயகர் - திருச் சிவபுரத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
பிரமபுரீசர் - திருக்கடவூர் மயானத்தில் கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
பிரமபூதி - சந்திவெளிச்சம்.
பிரமப்பிரளயம் - பிருமப்பிரளயம்.
பிரமமணம் - பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர் கொடுக்குமணம் அது எண்வகை மணத்தொன்று.
பிரமமரிசம் - வெள்ளைமிளகு.
பிரமமுனி - பிரமரிஷி.
பிரமமூலி - பிரமி.
பிரமம்-அக்கினிஅட்டாதசவுபபுராணத்தினொன்று, ஆதிகாரணம், ஆதித்தன், இருடி, உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று, கடவுள், கலக்கம், சந்திரன், சிவபிரான், சுழல்,காற்று, சுழற்சி, ஞானம், தண்டசக்கிரம்,தத்துவம்,தவம்,தவறு,திரிதல்,திருமால் நடு, நித்தியயோகத்தொன்று, நீர்ப்பாய்ச்சல், பஞ்சமாவெச்சத் தொன்று,அதுவேதமோதல், பதினெண் புராணத்தொன்று, பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுக்குமணம், பிரமன், மந்திரம், மாயை, முத்தி, யாகம், யோக மிருபத்தேழினொன்று, வேதம், வேதாந்தம். ஏகமாய் சச்சிதானந்தமாய் உலகமுழுதும்தோன்றி யொடுங்குதற்கிடமாயுள்ள பொருளாகிய கடவுள், புராணங்களும் ஒன்று,இதுபதினாயிரங்கிரந்தமுடையது. லோக ஸ்ருஷ்டியையும் மந்வந்தரங்களையும் சூரியசந்திரவமிசத்தாரையும், சூரியன் பொருட்டும் சிவபெருமான் பொருட்டும் ஜகந்நாதர் பொருட்டும் உள்ளதிருக்கோயில்களையும், திருநந்தந வநங்களையும் ஜகந்நாத மான்மியத்தையும் உணர்த்துவது.
பிரமயம் - கொலை, மரணம்.
பிரமயாகம்-பஞ்சமாவெச்சத்தொன்று அது வேதமோதல்.
பிரமயோனி - பிராமணப்பிறப்பு
பிரமராட்சு - பருத்தமுருடன்.
பிரமரந்திரம் - உச்சித்துவாரம்.
பிரமரம் - வண்டு.
பிரமராட்சதன் } அவமரண மடைந்த
பிரமராட்சதை } பிராமணனுவியெடுக்கு மிராட்சதப்பேய்.
பிரமராம்பை-ஸ்ரீசைலத்திலுள்ள பராசத்தி பெயர்.
பிரமரி - கூத்தின்விகற்பம், சுழலல்.
பிரமரிஷி - பிராமணருஷி.
பிரமரிஷிதேசம்-குருக்ஷேத்ர மத்யபாஞ்சால சய்யாகுப்ஜ சூரசேந மதுராதேசங்கள் இப்பெயராற்கூறப்படும்.
பிரமரீதி - பித்தளை.
பிரமலிபி - பிரமாவினெழுத்து.
பிரமலோகம் - சத்தியலோகம்.
பிரமவமிசம் - பிராமணச்சாதி.
பிரமவருத்தனம் - செம்பு.
பிரமலோசை - ஒரு அப்ஸரஸை.
பிரமவாதம் - வேதமதம்.
பிரமவித்து - ஞானிகளிலொர்வகை.
பிரமவித்தை - பிரசாபதிமனைவி பிரமா அதர்வனுக் குபதேசித்த ஞானநூல்.
பிரமவிந்து - பிரமபிந்து.
பிரமனுன் - உரோகணி.
பிரமன் பிரபா,பிராமணன்,முதற்குரு.
பிரமன்றந்தை - விட்டுணு.

பிரமா-பிரமதேவன். சிருட்டித்தொழிலைச்செய்யுமோர்தேவன்இவன்திரிமூர்த்திகளிலொருவன். இவன்மனைவி சரசுவதி, திருமாலின் திருநாபிகமலத்தில் அவதரித்தவன்.
பிரமாஞ்சலி-இருகையுங்குவித்துநெஞ்சிடைவைத்து வணங்கல்.
பிரமாட்சரம் - மூலவெழுத்து. [ல்.
பிரமாணஞ்செய்தல் - சத்தியம்பண்ண
பிரமாணம்-அத்தாட்சி,அளவு,அளவை, ஆணை, உண்மை, எல்லை, போழ்து, மூகாந்திரம், முதல்வேதம், விதி.
பிரமணன் - மெய்யன், விட்டுணு.
பிரமாணுகிதம் - பிரமாணத்தைக் கடந்தது.
பிரமாணுபாவம்-அத்தாட்சியில்லாமை, அளவின்மை.
பிரமாணிகம் } ஆணை, உண்மை, திட்டாந்தம்.
பிரமாணிக்கம் }
பிரமாணிக்கன் - மெய்யன்.
பிரமாணித்தல் - அளவுபடுத்தல், கிதானித்தல், மதித்தல்.
பிரமாண்டநாயகன் - கடவுள், சக்கரவர்த்தி, சிவபெருமான்.
பிரமாண்டம் - உலகம், காத்திரம், பதினெண்புராணத்திலொன்று இதுபிரமதேவனாற் செய்யப்பட்டது, இது பன்னீராயிரங் கிரந்தமுடையது.
பிரமாண்ணியம் பிராமணர்கூட்டம்.
பிரமாதம்-அசட்டை,உவாதித்தல், கொல்லல், தவறல், மதியீனம், மோகம், வருத்தம், வலாற்காரம், வெறி.
பிரமாதா - பாட்டன்.
பிரமாதாமகன் - அப்பாட்டன்.
பிரமாதி - பதின்மூன்றுவதாண்டு.
பிரமாதிகமனம் - வேதம்படித்தல்.
பிரமாதிகை - நிண்டப்பட்டவன்,புத்திகெட்டவள்.
பிரமாதிட்சு - அறிவித்தல்.
பிரமாதீச - நாற்பத்தேழாவதாண்டு.
பிரமாத்தியம் - அசட்டை, மதிமயக்கு.
பிரமாத்திரம் } பிரமபாணம்.
பிரமஸ்திரம் }
பிரமாந்தரம் - உயிர்நிலை.
பிரமாபணம் - கொலை.
பிரமாம்பசு - கோசலம்.
பிரமாயு - பிரமகற்பம்.
பிரமாயுதம் - பத்திலட்சம்.
பிரமாண்ணியம் - வேதாரணியம், திருமறைக்காடு.
பிரமாவர்த்தம் - சரசுவதி த்ருஷத்வதி என்னு மிரண்டுநதிகளுக் கிடையேயுள்ள தேசம். [ம்.
பிரமானந்தம்-பரமானந்தம், பேரின்ப
பிரமி-ஒருபூடு,சுழல்,சுழல்காற்று, தண்டசக்கிரம், தவறு, பிழை, நடத்தல்.
பிரமிதம் - அறியப்பட்டது. [றிவு.
பிரமிதி-அளத்தல், அநுமானம்,மெய்ய
பிரமித்தல்-அதிசயத்தாலு மச்சத்தாலும்விறைத்தல்,எங்குதல்,திகைத்தல்.
பிரமிப்பு - அதிசயம், திகைப்பு.
பிரமியம் } ஒருபூண்டு,ஒருவியாதி.
பிரமியன் }
பிரமுகுதம் - மிகுமேன்மை.
பிரமுகம் - அதிகநல்லது, நிகழ்காலம்.
பிரமுகன் - ரேவதிதந்தை.
பிரமுதிதம் - சந்தோஷம்.
பிரமூடன் - மடையன், மருண்டவன்.
பிரமேகம் - மேகவியாதி.
பிரமேயம் - அளவிடப்படுவது அறியப்படுவதுஒரலங்காரம்அநசரீரம் ஆன்மா முதலிய பன்னிரண்டுபொருளையுடைத்தாயதாட்சிப் படுத்தப் படவேண்டியது, சமுசயம்.
பிரமை-அறியாமை,மாட்சி,பைத்தியம் மயக்கம், மெய்யறிவு, நடத்தல்.
பிரமோகம் - மயக்கம்.
பிரமோசனம் - இட்டமாதல்.
பிரமோதகி - மல்லிகைக்கொடி.
பிரமோதம்- விரும்பியபிரயத்தினப்பட்டதையடைதல், உவகை.
பிரமோதிதன் - குபேரன்.
பிரமோதூத - நான்காவதாண்டு.
பிரமோத்தரகாண்டம் - பிரம புராணத்துக் கடைக்கண்டம். வரதுங்கராம பாண்டியன்பாடியவொருதமிழ்நூல் இது சைவபுராணங்களின் சாரமாயுள்ளது.
பிரமோற்சவம்- கோயில்களில் வருஷத்துக் கொருதரம் நடக்கும் விசேஷஉற்சவம்.
பிரம்பு-ஞால்,தேர்,தேர்முட்டி,வரம்பு.
பிரயதன் - பரிசுத்தன்.

பிரயத்தனம்
புல்லாந்தி - பூல்.
புல்லாமணக்கு - ஓராமணக்கு.
புல்லாமொய்ச்சி - புற்பற்றை.
புல்லார் - பகைவர்.
புல்லாற்றூரெயிற்றியனார் - தன்மக்கள் மேற்போருக்கெழுந்த கோப்பெருஞ்சோழனைப்பாடி அது செய்யாதபடி தடுத்தவர், போர்வலியிற் சிறந்த வேந்தேகேள், உன்னைப் பகைத்திருப்பவர் யார், உன் புதல்வரன்றோ, நீயவரைப் போரில் வென்றுவாழ்ந்திருந்துவிண்ணுலகாளப் புகும்போது இம்மண்ணுலகை யாரும் பொருட்டு யாரைவைத் தகலுவை, ஒருகால் அவர்க்குநீ தோற்பின் உன் பகைவர் கொண்டாடப் பேரிழிவை நிலைநிறுத்துவையன்றோ, ஆதலால் உன் சினம் ஒழிவதாக என்னுங்கருத்தமைத்து இவர் பாடிய பாட்டுமிகவுஞ் சாதுரியமானது. (புறநானூறு) (௨௧௩) பாட்டு.
புல்லி புறவிதழ், பூவினிதழ்.
புல்லிங்கம் - ஆண்பால்.
புல்லிதழ் - பூவின்புறவிதழ்.
புல்லிது - புன்மைத்து, பூ.
புல்லியம் - புளிநறளை.
புல்லியர் - கீழ்மக்கள்.
புல்லு - புதர்.
புல்லுக்கற்றை - புற்கற்றை.
புல்லுதல் - இணங்குதல், தழுவுதல், புணர்தல்.
புல்லுநர் - சினேகிதர்.
புல்லுருவி - குருவிச்சை.
புல்லுவர் - வேடர்.
புல்லூதியம் - பனை.
புல்லூரி - குருவிச்சை.
புல்லெடுத்தல் - புன்மிகுத்தல்.
புல்லெனல் - ஒளிமழுங்கல், பொலிவழிதல்.
புல்லை - மங்கலானமஞ்சள்நிறம், வெண்மைகலந்த சிவப்பு.
புல்வரகு - ஒருவிதபயிர்.
புல்வாடி - புல்கற்றையடுக்கியவாடி.
புல்வாய் - கருமான், கலைமான்.
புல்வாரி - புல்லுச்சத்தகம்.
புல்விரியன் - ஒருபாம்பு.
புல்வெட்டிப்பல்-மாட்டின் முன்வாய்ப்பல்.

புவலோகம் - மேலேழுலகிலொன்று.
புவனகோசம் - பூகோளம்.
புவனசாத்திரம் - பூமிசாத்திரம்.
புவனத்திரயம் - திரிலோகம் அது சுவர்க்கம் மத்தியம் பாதலம்.
புவனகாயகர் - புவனகர்த்தாக்கள்.
புவனநாயகியம்மை - திருமாகறலிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
புவனமெண்வச்சிரம்-காலமீர்ப்படிகம்.
புவனம் - அப்பியாசம், ஆகாயம், நீர், பதினான்குலகப் பொது, பூமி.
புவனி - பூமி.
புவனியு - எசமான், முச்சுடர்.
புவனேகலாகு - விஜய கூழங்கைச் சக்ரவர்த்தியானவன் யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்த காலத்தில் அவனுக்கு மந்திரியாயிருந்தவர், இவர் தமிழ்ப் புலமையிற் சிறந்தவர், இவரால் கட்டப்பட்ட சுப்பிரமணியர் ஆலயம் இன்றும் நல்லூரில் நிலைபெற்று விளங்குகின்றது இவர் ஆயிரத் தெண்ணூற்றைம்பத்லதந்து வருடங்களுக்கு முன்னிருந்தவர், இவர், ஊர் தோறும் தருமபாடசாலைகள் அமைத்துத் தமிழ்க்கலையை வளர்த்தவர்.
புவனேசுவரி - பார்வதி ஒட்டரதேசத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
புவனை - ஒருசத்தி.
புவி - பூமி.
புவிதலருக்கம் - பெருவாகை.
புவிப்பாத்திரம் - மண்கலம்.
புவுபீரு - தண்ணீர்விட்டான்.
புழக்கம்- அறிமுகம், தோற்றம், பழக்கம்.
புழங்குதல் - வழங்குதல்.
புழல் - ஒரூர், சலதாரை, துளையுடைப் பொருள்.
புழு - கிருமி, புழுவென்னேவல்.
புழுகு - நாவிப்புழுகு.
புழுகுசட்டம் - ஒருவாசனைப்பண்டம்.
புழுகுசம்பா - ஒருநெல்.
புழுகுபிள்ளை } காவிப்பிள்ளை.
புழுகுபூனை }
புழுக்கடி - புழுக்குத்தல்.
புழுக்கம்-உட்டணம், பொருமை, வன்மம், வெப்பம்.
புழுக்கல் - அவித்தல், சோறு, முதிரைப் பண்டம்.
புழுக்கு - அவிப்பு, புழுக்கென்னேவல்.
புழுக்குதல் - அவித்தல்.
புழுக்குத்தல் - புழுவரித்தது, புழுவரித்தல்.
புழுக்குத்தி - கொண்டலாத்தி.
புழுக்குத்துதல் - புழுவரித்தல்.
புழுக்கூடு - புழுவிருக்குமிடம்.
புழுக்கை - அடிமை, ஆடு முதலியவற்றின் எரு.
புழுக்கைச்சி - அடிமைப்பெண்.
புழுக்கையன் - அடிமை.
புழுக்கொடியல் - அவித்த ஒடியல்.
புழுக்கொல்லி-வண்டுகொல்லிச்செடி.
புழுங்கலரிசி - அவித்த நெல்லரிசி.
புழுங்கல் - உட்டணமாதல், சினக்குறிப்பு, புழுக்கினதானியம்.
புழுங்குதல் - அவிதல், உட்டணித்தல், கோபித்தல்.
புழுதி - பராகம்.
புழுதிப்படலம் - தூளிச்செறிவு.
புழுதிமாயம் - காரியஞ் சரிக்கட்டினது போற் காட்டல்.
புழுதியாடல் - புழுதிகுளித்தல், புழுதியாக்கல் இது எண்வகை நானத்தொன்று.
புழுதியார்த்தல் - தூளிபரம்புதல்.
புழுதிவிதைப்பு - ஈரமில்லாவிதைப்பு.
புழுது - அம்புக்குதை.
புழுத்தல் - புழுவுண்டாதல்.
புழுப்பு - புழுத்தல்.
புழுமேய்ச்சல் - புழுவரித்தல்.
புழுமேய்தல் - புழுக்கடித்தல்.
புழுவறை - தேனீவைக்கும் புழுக்கூடு.
புழுவெட்டு - புழுமேய்ச்சல்.
புழுவெட்டுதல் - புழுவரித்தல்.
புழை-உட்டுளை, கதவிட்டுப்புகும்வழி, துளையுடைப்பொருள்.
புழைக்கடை - பின்புறவாயில்.
புழைக்கை - துதிக்கை, யானை.
புளகம் - அரிதாரம், கண்ணாடி, சோறு, புடைப்பு, மகிழ்ச்சி, மயிர்சிலிர்த்தல், வெடிப்பு.
புளகாலயன் - குபேரன்.
புளகிதம் - மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு.
புளகித்தல் - மகிழ்தல், மயிர்சிலிர்த்தல்.

புளகிப்பு - மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு.
புளப்பாகல் - சிறவாறுளுவை.
புளம் - அண்ணம், குதிரை நடையிலொன்று.
புளவை - பிளவை.
புளாகம் - கஞ்சி, சோற்றுத்திரளை.
புளி - ஒருசுவை, புளியமரம், புளியென்னேவல்.
புளிக்கறி - புளிங்கறி.
புளிக்கீரை - ஒருகீரை.
புளிக்குடித்திருத்தல் - பிள்ளைபெற்றிருத்தல்.
புளிக்குழம்பு - புளியிட்டுச்செய்யுங் குழம்பு.
புளிங்கறி - புளிக்குழம்பு.
புளிச்சல் - புளித்தது.
புளிச்சற்பணிகாரம் - ஒருபணிகாரம்.
புளிச்சாறு - ஒருணவுநீர்.
புளிச்சை - ஒருசெடி.
புளிஞர் - வேடர்.
புளிஞ்சோறு - புளியோதனம்.
புளிதம் - ஊன்.
புளித்தல் - நெருங்கல், புளிப்பு.
புளித்தோடை - ஒருதோடை.
புளிநடலை } புளிமதுரை.
புளிநறளை }
புளிந்தம் - புலிந்தம்.
புளிந்தயிர் - புளித்ததயிர்.
புளிந்தர் - விந்தப்பாநத்த தேசங்களிலுள்ள ஒருசாதியார்.
புளிந்தன் - வேடன்.
புளிப்பற்றுதல் - புளிப்பிடித்தல்.
புளிப்பு - ஒருசுவை, பொங்குகை.
புளிமண்டி - அதிகவழுக்கு, புளிப்புக்கொண்டது.
புளிமதுரை - ஒருசெடி.
புளிமா - ஒருமரம், கிரை நேராய்வருஞ் சீர்க்கு வாய்பாடு.
புளிமாங்கனி - நிரைநேர் நிரையாய்வருஞ் சீர்க்கு வாய்பாடு.
புளிமாங்காய் - நிரைநேர் நேராய்வருஞ் சீர்க்கு வாய்பாடு.
புளிமாதளை - ஒருமாதளை.
புளிமாநறுநிழல் - நிரைநேர்நிரைநிரையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளிமாநறும்பூ - நிரைநேர் நிரைநேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளிமாந்தண்ணிழல் - நிரைநேர் நேர் நிரையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளிமாந்தண்பூ - நிரைநேர் நேர்நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
புளியமரம் - ஒருமரம்.
புளியமிலைக்கம்பி - புளியிலைபோற் சிறுஞ் சாயரேகை.
புளியம்பாசி - ஒரு நீர்ப்பூண்டு.
புளியறளை - ஒருபூண்டு.
புளியாமணக்கு - ஒருபூண்டு.
புளியாரை - ஒருகீரை.
புளியுப்பு - ஒருப்பு.
புளியோதனம் - புளிஞ்சோறு இது நிவேதனச் சாதவகையிலொன்று.
புளியோரை - புளியிட்டுத் தாளித்த சாதம்.
புளினம் - மணற்குன்று, மணற்றிட்டை.
புளினர் - வேடர்.
புளுகன் - விசித்திரகாரன், வீம்பன்.
புளுகு - புளுகென்னேவல், பொய், விசித்திரம், வீம்பு.
புளுகுதல் - மெய்போற் பொய்கூறல், வீம்பு பேசல்.
புள் - அவிட்டநாள், ஒரு விளையாட்டுக்கருவி, பறவைப்பொது இது பிறப்பேழிலொன்று, வண்டு.
புள்ளடி - உலாதல், புள்ளினடிச்சுவட்டையொத்த அடையாளம், ஒருபூடு.
புள்ளம் - அரிவாள், கொடுவாள்.
புள்ளரசு - கருடன்.
புள்ளலூர் - தொண்டைநாட்டகத்தோரூர்.
புள்ளி - இலக்கப்புள்ளி, ஒற்றெழுத்து, ஒரு அடையாளம், கணிசம், நண்டு, பணத்தொகை, பல்லி, பொறி, மதிப்பு, தேமல், நவமணியைக் குற்றத்தொன்று.
புள்ளிக்கணக்கன் - கணக்கிற் பயின்றவன்.
புள்ளிக்கணக்கு - இலக்கக்கணக்கு.
புள்ளிக்கல்லு - கானற்கல்.
புள்ளிக்காரன் - கணக்கன், கணிசவான்.
புள்ளிபாய்தல் - புள்ளிவிழுதல்.
புள்ளிபார்த்தல் - கணக்குப்பார்த்தல்.
புள்ளிபோடுதல் - புள்ளிவைத்தல், மதித்தல்.
புள்ளிமான் - ஒருபுள்ளியுடையமான்.
புள்ளியிருகம் - கலைமான்.
புள்ளியம் - சிறுகுறிஞ்சா.

புள்ளிருக்குவேளூர் - வைத்தீஸ்வரன் கோயில்.
புள்ளிரோகம் - ஒருநோய்.
புள்ளிவண்டு - சழுறைதவண்டு.
புள்ளிவராகன் - ஒருவகைவராகன்.
புள்ளிவரி - இடாப்பு.
புள்ளிவைத்தல் - கணக்கிற்றள்ளி யடையாளம் போடல்.
புள்ளீட்டம் - பறவைக்கூட்டம்.
புள்ளு - புள்.
புள்ளுவம் - வஞ்சகம்.
புள்ளுவர் - கீழ்மக்கள்,வஞ்சகர்,வேடர்.
புள்ளொலி - பறவைக்கூட்டத்தொலி.
புள்ளோச்சல் - பட்சிதுரத்தல்.
புள்ளோப்பல் } பட்சிகாத்தல்.
புள்ளோம்பல் }
புறக்கட்டு - சுற்றுவீடு.
புறக்கணித்தல் - வேற்றுமைபண்ணல்.
புறக்கணிப்பு - புறக்கணித்தல்.
புறக்கண் - கடைக்கண்.
புறக்கதவு - வெளிக்கதவு.
புறக்கந்து - கந்தினருகு.
புறக்களறி - வெளிக்களறிவிடல்.
புறக்காதுபடல் - காதிற்சோணை யுள்வளம் புறவளமாதல்.
புறக்காரியம் - பக்கத்திற்காரியம்.
புறக்காவல் - வெளிக்காவல்.
புறக்காழ் - புறவயிரம், பெண்மரம்.
புறக்கூரை - வெளிக்கூரை.
புறக்கை - புறங்கை,வலப்புறம்,வெளிப்புறம்.
புறக்கோடி - வெளிக்கோடி.
புறங்கடை - வெளிக்கதவு.
புறங்காடு - சுடுகாடு.
புறங்காட்டல் - தோற்றோடுதல், பின்காட்டல்.
புறங்காணுதல் - தோற்றோடச் செய்த [ல்.
புறங்கால் - புறவடி.
புறங்காழ் - புறக்காழ்.
புறங்கான் - முல்லைநிலம்.
புறங்கூறல் - தூற்றல்.
புறங்கூற்று - பின்புறணி.
புறங்கை - உள்ளங்கைக்குட் புறவளம்.
புறங்கொடுத்தல் - தோற்றுத்திரும்பல்.
புறச்சுட்டு - மொழிக்குப் புறத்துச் சுட்டெழுத்தாய்ப் புணர்ந்து நிற்பது.

புறச்சவர்திற்றல்-சொந்தமானவர்களை விட்டுப் பிறனுக்குபகாரம்பண்ணல்.
புறச்சுற்று - வெளிச்சுற்று.
புறச்சேரி - வெளிச்சேரி.
புறணி - குறிஞ்சிநிலம், தோல், புறங்கூறல், புறம், முல்லைநிலம்.
புறதேசம் - அன்னியதேசம்.
புறத்தவன் - ஐயனார்.
புறத்தான் - புறம்பானவன்.
புறத்தி - பின்பக்கம், புறம்பு.
புறத்திணை - வெட்சிமுதலிய எழுவகையொழுக்கம்.
புறத்தியான் - அந்நியன்.
புறத்துறுப்பு - புறத்தங்கம்.
புறநகர் - நகர்ப்புறம்.
புறநடம் - வென்றிக்கூத்து முதலானவை.
புறநானூறு - ஒருசெய்யுள். இந்நூல் கடைச்சங்கத்தார் காலத்தது.
புறநிலை - ஒரு பிரபந்தம் அது நீதொழுதெய்வ நிற்புறங் காக்க வாழ்வையென வெண்பா முதலும் ஆசிரிய விறுதியுமாகப் பாடுவது.
புறநிலைமருதம் - உழைகுரலாய்க் கைக்கிளை குரலாய மேற்செம்பாலை.
புறநிலையகத்திணை - தான் குறித்தவற்றின் புறத்துட் பிறிதொரு பொருளை எடுத்துக்காட்டித் தன்பொருளை விலக்குதல்.
புறநிலைவாழ்த்து - புறநிலை.
புறநீங்கல் - தன்னிட்டம், விடுதலை, விலக்கு.
புறநீர்க்குந்தம் - கண்ணோயுளொன்று.
புறநீர்மை - ஒருபண், வெளிக்குணம்.
புறந்தரல் } ஓம்பல், தோற்றல்.
புறந்தருதல் }
புறந்தாள் - புறங்கால்.
புறப்பகை - வெளிப்பகை.
புறப்படுதல் - பயணப்படுதல், வெளிவருதல்.
புறப்பத்தியம் - பிற்பத்தியம்.
புறப்பற்று - வெளிப்பற்று.
புறப்பாடு - புறப்படுகை.
புறப்பாவகவல் - பாடாண்பாட்டுத் துறை மேற்பாடு மாசிரியம்.
புறப்புறம் - பாடாண்பொருளியல்.
புறப்பேச்சு-அயவறிவு,மயங்கிப்பேசல்.

புறப்பொருள் - அறம்பொருளென்னு மிருவகைப் பாற்பட்டிருப்பன, படைத்திறம்.
புறமயிர் - உரோமம்.
புறமறிவு பிறர்க்கு நன்மை நினைக்கை.
புறம் - இடம், ஏழாம்வேற்றுமையுருபு, சுற்று, பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம், வெளிவளம்.
புறம்பணை-குறிஞ்சிநிலம், முல்லைநிலம்.
புறம்பணையான் - சாதவாகனன்.
புறம்பு - தனியானது, புறத்தி, மற்றை.
புறம்புக்கிருத்தல் - மலங்கழிக்க விருத்தல்.
புறம்புபண்ணுதல்-புறத்திபண்ணுதல்.
புறம்புறுத்தல் - புறக்காவல்செய்தல்.
புறம்பொசிதல் - வெளிவருதல்.
புறவடி - புறங்கால்.
புறவடை - மலங்கழிப்பிக்க அபானவாயில் வைப்பது.
புறவட்டம் - வெளிவட்டம்.
புறவணி - குறிஞ்சிநிலம், முல்லைநிலம்.
புறவம் - காடு, குறிஞ்சிநிலம், புறா, முல்லை நிலம்.
புறவயிரம் - ஆண்மரம், வெளிவயிரம்.
புறவளையம் - குழப்பூசு மருந்துப்பூச்சு.
புறவாயில் - கடைத்தலை.
புறவாளி - புறவேலை.
புறவிடன் - கடல், சோலை,மலை, யாறு.
புறவிதழ் - புல்லிதழ்.
புறவீச்சு - ஒருசன்னி.
புறவீதி - வெளிவீதி.
புறவு குறிஞ்சிநிலம்,புறா, முல்லைநிலம், விலங்கின் கூட்டம்.
புறவுரை - பாயிரம்.
புறவெட்டு - பட்டையடுத்தபலகை, எதிர்ப்பேச்சு, புறத்திவெட்டு.
புறவெண்டு - கடுக்கனிற் புறத்தவெண்டு.
புறவெளி - பராகாயம்.
புறவேலை - சக்கிரவாளத்தைச் சூழ்ந்த சமுத்திரம்.
புறவொடுபுலத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.
புறனடை-புறக்காப்பாய்ச் சொல்வது.
புறன் - புறம், முதுகு.
புறா - ஒருபுள்.
புறாக்காலி - ஒருபூடு.
புறுண்டுதல் - பிறுண்டுதல்.
புறுப்பாத்தல் - களவெடுத்தல்.
புறுமாடம் - புறுவசிக்குமிடம்.
புறுமுட்டி - ஒருபூடு.
புற்கசன் - சண்டாளன், வேடன்.
புற்கம் - எத்து, குறை.
புற்கலம் - உடல்.
புற்கலன் - உடல், உயிர்.
புற்கவ்வுதல் - தோல்விக்குறியாப்புல்லுக் கவ்வுதல்.
புற்கற்றை - புற்பிரள்.
புற்கு - கபிலநிறம், குறை, நிந்தைக்குறிப்பு.
புற்கெனல் - அந்திப்பொழுதின்குணம், புகர்நிறக்குறிப்பு.
புற்கை - கூழ்.
புற்கொடி - சுரை.
புற்கோரை - ஒருபுல்.
புற்சாமை - ஒருசாமை.
புற்செடி - புற்பற்றை.
புற்பதி - அனுடநாள், பனை,வாழைக்கிழங்கு.
புற்பாய் - புன்மாய்.
புற்புதம் - நீர்க்குமிழி.
புற்புல்லெனல் - விடியற்குறிப்பு.
புற்பொழி - புற்பற்றை.
புற்போதி - பூவரசு.
புற்றுஞ்சோறு - கறையான்கூடு.
புற்றுளி - அனுடம், பனை.
புற்றிற்பூ - காளான்.
புற்று - வளை, வன்மீகம்.
புற்றக்குதைச்சி - புற்றுஞ்சோறு.
புற்றெடுத்தல் - கறையான் முதலியன வளை தோண்டல்.
புனக்கல் - தேகக்கல்.
புனஸ்காரம் - வணக்கம்.
புனமுருக்கு - பலாசு.
புனமுருக்கை - ஒருமுருங்கை.
புனம் - கொல்லை, வயல்.
புனராகமனம் - திரும்பிவருதல்.
புனராவர்த்தம் - சனனம், சுற்றுதல், அதரம்.
புனராவிருத்தி - செனனம்.
புனரி } ஒருபூடு.
புனரித்தண்டு } ஒருபூடு.
புனருக்தம் - புனருத்தம்.
புனருத்தசன்மம் - பார்ப்பான்.

புனருத்தம் } கூறியது கூறல்.
புனருத்தி }
புனர்செனனம் - மீண்டுபிறத்தல்.
புனர்தம் - புனர்பூசம்.
புனர்நவம் - நகம்.
புனர்பூசம் - ஒரு நட்சத்திரம்.
புனர்ப்பவம் - நகம், மீண்டுபிறத்தல்.
புனர்ப்பாகம்-சமைத்ததைச் சமைக்கை.
புனர்வசு - சிவபிரான், திருமால், புனர்பூச நட்சத்திரம், தவித்தியோதன் தம்பி, தந்தபிமகன்.
புனர்விவாகம் - இரண்டாமணம்.
புனலி - ஒருபூண்டு, புனரி.
புனலை - நெய்க்கொட்டான்மரம்.
புனல் - ஆறு, குதலை, நீர்.
புனல்முருங்கை - ஒருமுருங்கை.
புனல்விடுதல் - குதலைகொஞ்சல்.
புனல்வேந்தன் - வருணன்.
புனவர் - குறிஞ்சிநிலமாக்கள்.
புனற்பாகம்-சமைத்ததைமறுபடிசமை
புனற்பெருக்கு - நீர்ப்பெருக்கு. [த்தல்.
புனற்றிரை - நீர்த்திரை.
புனனாடன் - சோழன்.
புனனாடு - காவேரிநாடு இது கொடுந்தமிழ் நாட்டிலொன்று, சோணாடு.
புனுகம் - பின்பு.
புனிகம் - சங்கபாஷாணம்.
புனிதம் - புனீதம், பரிசுத்தம்.
புனிதன் - அருகன், இந்திரன், சிவபிரான், சுத்தன், புத்தன்.
புனிறு - ஆருசம், ஈன்றணிமை, குதகம், தோல, பதுமை.
புனிற்று - இனங்கன்றப்பசு.
புனீதம்-சுத்தம், புனர்பூசம், நட்சத்திர
புனுகு - புழுகு. [ம்.
புனை - அலங்கரிப்பு, அழகு, சீலை, புதுமை, புனையென்னேவல், பொலிவு, விலங்கு.
புனைகுழல் } பெண்.
புனைகோதை }
புனைசுருட்டு - சதியோசனை, சூது.
புனைதல் - அணிதல், அலங்கரித்தல்.
புனைந்துரை-சிறிதினைப்பெருக்கிப்பெரிதினைச் சுருக்கிக்கூறல், பாயிரம்.
புனையிழை - பெண்.
புனைவர் - கம்மாளர்.
புனைவில் - உபமானப்பொருள்.

புனைவிலிநவிற்சியணி - ஓரலங்காரம் அது உபமானத்தை வன்னிக்க அதனதுசம்பந்தத்தால்உபமேயந்தோன்றச் சொல்லுதல்.
புனைவுளி - வன்னிக்கப்படுபொருள்.
புனைவுளிவிளையணி - ஓரலங்காரம் அது சொல்லப்பட்ட ஒரு உபமேயந்தோன்றுதலாம்.
புன்கண் - தரித்திரம், துன்பம், நோய்,
புன்கம் - உணவு, சோறு. [மெலிவு.
புன்காலி - காயாமரம், பாதிரிமரம்.
புன்கு - புனமுருங்கை, புன்கமரம்.
புன்குசடை - குஞ்சிச்சடை.
புன்குமரம் - பொன்னுங்காய்மரம்.
புன்குரி - புங்கம்பட்டை.
புன்சிரிப்பு - புன்முறுவல்.
புன்செக்கர் - மாலைநேரம்.
புன்செய் - சிறுதானியம் விளைநிலம், தரிசுநிலம்.
புன்செய்கை - சிறுதானியச்செய்கை.
புன்சொல் - எளியசொல்.
புன்பயிர் - சிறுபயிர்.
புன்புலால் - இழிவாகிய ஜன்.
புன்மரம்-மூங்கில் முதலிய வட்டைமரம்.
புன்மாலை - புனசெக்கர். [ம்.
புன்மானம் - இளஞ்செக்கர்வானம்.
புன்முறுவல் - மந்தச்சிரிப்பு.
புன்மை - அற்பம், ஈனம், சிறுமை, துன்பம், மறதி, வறுமை.
புன்றுமி - தூறல், சிறுதுளி.
புன்றுளி - சிறுதிவலை.
புன்றொழில் - இழிதொழில்.
புன்னகை - புன்சிரிப்பு.
புன்னறவம் - இஞ்சி.
புன்னறுவம் - சாறணை.
புன்னாகம் - கோழிக்கீரை, புன்னை.
புன்னாகவராளி - ஒருராகம்.
புன்னிடா - தகரை.
புன்னெறி - ஈனவழி.
புன்னை - புன்னைமரம்.

பூ

பூ - அழகு, இடம், இந்துப்பு, இருக்குதல், இலை, ஓமாக்கினி, ஒரெழுத்து,

ஒருகண்ணோய், ஒருநரகம், கூர்மை, தாமரை, தீப்பொறி, பிறப்பு, புட்பம், பூமி, பூவென்னேவல், பொலிவு, மகளிர்ருதகம், பூநீறக்குமுன்பு தோன்றுங்கதிர், மலர்.
பூகதம்பம் - நிலக்கடம்பு.
பூகதர் - புகழ்வோர்.
பூகபீடம் - அப்பற்காளாஞ்சி.
பூகம் - இருள், உண்டை, கமுகு, கழுகு, குவியல், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, கௌரி, சுபாவம், திரட்சி, நேரம், பலா, பாக்கு, பிளப்பு.
பூகம்பம் } பூமிநடுங்கல்.
பூகம்பனம் }
பூகரபம் - கையாந்தகரை.
பூகரம் - நஞ்சு.
பூகர்ணம் - பூகன்னம்.
பூகலம் - மதர்த்தகுதிரை.
பூகன்னம் - மையவரியினரைவிட்டம்.
பூகாகம் - அன்றில், கரும்புறா.
பூகாந்தை - பூமிதேவி.
பூகாமி - பூமிவழியாய்ச்சமவரிக்குங்குதிரை.
பூகேசம் - ஆலமரம், நீர்ப்பாசி.
பூகோளசாஸ்திரம் - புவனசாஸ்திரம்.
பூகோளம் - பூகோளசாஸ்திரம், ஆரிய சாஸ்திரம்பூமியினிடையேமேருவும் கடலினிடையே வடவைத்தீயுமிருக்கின்றன வென்றகூறும், இவை முறையே வடத்ருவம் என்றும் தென்த்ருவம் என்றுங்கூறப்படும், பூமத்யம் என்று ஆரிய சாஸ்திரத்திலே சொல்லப்பட்ட இடம் வடத்ருவமுனை, ஆரியசாஸ்திரம் பூமியை மேகலாரேகையை யெல்லையாக வைத்து உத்தரகோளார்த்தம் தக்ஷிணகோளார்த்தம் என்றிரு கூறாகப் பிரித்து உத்தர கோளார்த்த முழுதும் நிலமென்றும், தக்ஷிண கோளார்த்த முழுதும் நீரென்றுங் கூறும் உத்தர கோளார்த்த முழுதும் நிலமெனவே அதன் மத்யஸ்தானம் வடத்ருவத்திலுள்ள சுமேரு வாகின்றது, இனிக் கடலின் மத்யமெனவே தக்ஷிணகோளார்த்த முழுதும் நீராக அதன் மத்யஸ்தானம் தென்த்ருவத்திலுள்ள வடவாமுகமாகின்றது, உத்தரகோளார்த்த முழுவதையும் ஜம்புத்வீபம் என்று வழங்குவர். இந்த ஜம்புத்வீபம் ஒன்பது வர்ஷங்களாக வகுக்கப்பட்டது, இவற்றின் விரிவெல்லாம் பெரு நூல்களிற் காணலாம். பூச்சக்கிரம்.
பூக்கஞ்சா - ஒருகஞ்சா.
பூக்கட்டுதல் - பூதொடுத்தல்.
பூக்கர்த்தகம் - புடமிட்ட கந்தகம்.
பூக்கம் - ஊர்ப்பொது, கமுகு, மது, மருதநிலத்தூர்.
பூக்காணம் - சமரேகையின் விட்டளவு.
பூக்குடலை } பூக்கூடை.
பூக்குட்டான் }
பூக்குதல் - பூத்தல்.
பூக்குறடு - பூமாலை தொடுக்குஞ் சாலை.
பூக்கொய்தல் - பூவெடுத்தல்.
பூங்கஞ்சா - பூக்கஞ்சா.
பூங்கணை - புஷ்பபாணம்.
பூங்கதிர் - ஒளி, வெண்கதிர்.
பூங்கரும்பு - செங்கரும்பு.
பூங்கவணி - ஒருவகைப்புடைவை.
பூங்கா - நந்தனவனம்.
பூங்காரம் - மந்தாரம்.
பூங்காரை - ஒருநாரை.
பூங்காவனம் - பூங்கா.
பூங்காவி - ஒருகாவி.
பூங்குழல் - மெல்லியகுழல்.
பூங்கொடிநாயகி - திருவோமாம் புலியூரில்கோயில்கொண்டிருக்குந்தேவியார்பெயர்.
பூங்கொத்து - மலர்த்திரள்.
பூங்கொம்பனை - திருஇன்னம்பரில் கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பூங்கொல்லை - பூந்தோட்டம்.
பூங்கோதை - மதுரையிலே இற்றைக்கு இருநூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னேயிருந்த ஒரு தாசி, இவள் சீதக்காதியென்னும் சோனகப் பிரபுவுக்குக் காமக்கிழத்தியானமையால் தன்னினத்தாராலே நீக்கப் பட்டவள், இவள் காயற் பட்டினத்திலே சீதக்காதி கொடுத்த பெருநிதியைக்கொண்டு தன்னூருக்குப் போகும்வழியிலே கள்ளர் அப்பொருளை பறித்துக்கொள்ள, கதியற்றவளாய் நின்று "தினங்கொடுக்குங் கொடையானே" என்னு முதற் குறிப்

புன்ன பாட்டுப்பாடி மீட்டும் அவனி டத்திற் பெரும்பொருள் பெற்றுப் போனனென்பர், இவள் தமிழ்ப்புல மையிற் சிறந்தவ ளென்பதற்கு இப் பாட்டே போதுமான சாட்சியாகும்.
பூங்கோரை - ஒருபுல்.
பூசகன் - பூசைசெய்வோன்.
பூசக்கிரவாளம் - சக்கிரவாளகிரி.
பூசக்கிரன் - அரசன்.
பூசணம் - பிசான், பூஞ்சணவன், பூஞ் சு, பூடணம்.
பூசணி - ஒருகொடி.
பூசம் - ஒருநாள், நக்ஷத்திரம்.
பூசல் - கழுவல், பூசுதல், பெரிதொ லித்தல், பொருதல், பொருந்தல்.
பூசறுத்தல் - சுத்திபண்ணல்.
பூசனம் - பூசை.
பூசனி - அடைக்கலான்குருவி, வணக் கம்.
பூசனை - ஆராதனை.
பூசாகாலம் - ஆராதனை வேளை.
பூசாக்கல் - சுக்கான்கல்.
பூசாசாரி - பூசாரி.
பூசாந்தப்படலம் } பூம்படல்.
பூசாந்தப்படல் }
பூசாந்திரம் - அருமைபண்ணல், ஒரு கடுக்கன்.
பூசாபந்தம் - ஓரடி ஒருவரியாக நான்கு வரியெழுதி அந்நான்குவரியுள் மேல் வரியிரண்டுந் தம்மிற்றுமே கோமூத் திரியாகவும் கீழ்வரியிரண்டுந் தம் மிற்றுமே கோமூத்திரியாகவும் மேல் வரி கீழ்வரி மூன்றினும் வந்து கோ மூத்திரியாகவும் கீழ்வரி மேல்வரி மூன்றினும் வந்து கோமூத்திரியா கவும் வருவது.
பூசாபலம் } பூசையின் பலம்.
பூசாபலன் }
பூசாமுகம் - பூசைமுகம்.
பூசாயத்தம் - பூசையாயத்தம்.
பூசாரி - கோவிற்பூசைபண்ணுவோன்.
பூசாலி - பூசாரி.
பூசாவந்தம் - பூசாந்திரம்.
பூசாவிதி - பூசைமுறை.
பூசிதபயங்காம் - சடங்காராதனை.
பூசிதம் - வணக்கம்.
பூசிதன் - கனவான், பூசிக்கப்படுவோன்.
பூசித்தல் - பூசனைசெய்தல்.
பூசிப்பு - வணக்கம்.
பூசிலன் - தேவன்.
பூசு - தூசி, பூசென்னேவல், போர்.
பூசுணி - பறங்கிக்கொடி.
பூசுதல் - அலங்கரித்தல், கழுவல், சந்த னமுதலியவற்றைப் பூசுதல், சாத்தி யிணுக்கல், தடவல்.
பூசுதன் - செவ்வாய்.
பூசுரை - சிதை.
பூசுத்தி - துடைத்தல், மெழுகுதல், பஞ் சசுத்தியில் ஒன்று.
பூசுரர் - அந்தணர்.
பூசை - அன்னதானம், ஆராதனை, பூனை.
பூசைப்பரிகாரன் - குருவின் சீடன்.
பூசைப்பெட்டி - பூசைத்தளவாடப்பெ ட்டி.
பூசைமுகம் - பூசாசந்நிதானம்.
பூசைமேடை - பூசைக்குறடு.
பூச்சக்காம் - சூரியனோடும்பாதை, பூமிச் சுற்று, பூமி
பூச்சக்கரன் - அரசன்.
பூச்சட்டை - குடலைக்கதிர்.
பூச்சாண்டி - வெருளி.
பூச்சாயை - இருள், பூமிநிழல்.
பூச்சாரம் - கிலத்தன்மை, பூவினிரசம், பூநீறு.
பூச்சி - செந்து, புள்ளி.
பூச்சிகாட்டுதல் - வெருள்காட்டுதல்.
பூச்சிக்கூடு - ஓராபரணம்.
பூச்சியம் - அருமை, ஆடம்பரம், கீர்த்தி, சங்கை, சுன், பூசிக்கப்படத்தக்கது, மேன்மை, வெறுமை, பூசித்தல்.
பூச்சியவார்த்தை - கணிசப்பேச்சு.
பூச்சியன் - கருப்பும்வெள்ளையுமானயா டு, பூசிக்கப்படத்தக்கவன், மாமன்.
பூச்சிலை - கருந்தண்ணீர்க்கல்.
பூச்சியாண்டி - பூச்சாண்டி.
பூச்சிவிடுதல் - பூச்சிகாட்டுதல்.
பூச்சு - மினுக்கு, பூசுதல், வெளிக்காட்சி.
பூச்செண்டு - புட்பச்செண்டு.
பூச்சேலை - பூச்சித்திரப்படாம்.
பூஞை - பூனை.
பூஞ்சக்கல் - ஈதக்கல்.
பூஞ்சணங்கட்டுதல் - சிக்குப்பூத்தல், பூஞ் சுகட்டல்.
பூஞ்சணம் } பூஞ்சு.
பூஞ்சணவன் }
பூஞ்சப்பாம் - பூவினாற்செய்யுஞ்சப்ப ரம்.

பூஞ்சலாடுதல்-கண்ணொளிமயங்குதல்.
பூஞ்சல் - கண்மயங்குதல், பூஞ்சு, பூஞ்சை.
பூஞ்சற்கண்-குழிந்தகண்,பீளைக் கண், மயங்கினகண்.
பூஞ்சாடுதல்-பூச்சியாடல்போறகாணல்.
பூஞ்சாட்டி - பூம்பயிர்ச்சாட்டி.
பூஞ்சான் - ஒருபுல்.
பூஞ்சி - பூஞ்சு, பூஞ்சை.
பூஞ்சிவிகை - புஷ்பப்பல்லாக்கு.
பூஞ்சிறகு - பட்சிக்குஞ்சின் றூவி.
பூஞ்சு - ஒட்டை, பூசு.
பூஞ்சுண்ணம் - பூந்தாது.
பூஞ்சை - மங்கல்.
பூஞ்சைநிலம் - பாழ்நிலம்.
பூஞ்சோலை - புட்பக்கா.
பூஷணம் } ஆபரணம்.
பூடணம் }
பூஷணை - உபசாரம்.
பூடன் - துவாதசாதித்தரிலொருவன்.
பூஷிதம் - அலங்கரிப்பு, ஆபரணம்.
பூடு - உள்ளிப்பூடு, புல்லு, பூண்டு.
பூட்கரம் - கோட்டம்.
பூட்கை - தோல், மேற்கோள், யாளி, யானை.
பூட்சி - உடல், உரித்து, பூணல், பொருத்து.
பூட்டகம் - இளப்பமானவேலை, வெளிவேஷம்.
பூட்டகம்பண்ணுதல் - வீம்படித்தல்.
பூட்டகவேலை-சொற்பன்வேலை, மேன்மினுக்கானவேலை, வெளிவேஷமான வேலை.
பூட்டகாரன் - வீம்பன்.
பூட்டக்கம் - தொந்தறை, வில்லங்கம்.
பூட்டங்கயிறு - பூட்டாங்கயிறு.
பூட்டம் - முடித்தல்.
பூட்டாங்கம் - பூட்டக்கம்.
பூட்டாங்கயிறு - நுகக்கயிறு.
பூட்டல் - அடைத்தல், அணிதல், கணக்குத் தைத்தல், கொழுவுதல், தொடுத்தல்.
பூட்டன் - பாட்டன், தகப்பன்.
பூட்டு-கதவுமுதலிய பூட்டும்பூட்டு, கொளுவி, இலக்கு, பூட்டெனேவல், பொருத்து, வில்லங்கு, வின்னாண்.
பூட்டக்கயிறு - பூட்டங்கயிறு.
பூட்டுதல் - பூட்டல்.
பூட்டுவாய் - திருவுகோல் புகுந்துவாரம்.

பூட்டுவிற்பொருள்கோள் - செய்யுண் முதலினு மிறுதியினு நிற்குஞ் சொற்கள் தம்முட் பொருள்கொள்வது.
பூட்டை - இறைகூடை, ஏற்றமரம், செக்கு.
பூட்பராசன் - கருஞ்சீரகம்.
பூணல் - அணிதல்.
பூணாரம் - ஆபரணம்.
பூணாரவெலும்பு - காறையெலும்பு, மணிக்கட்டி னெலும்பு.
பூணி - இடபவிராசி, எருது.
பூணித்தல் - சுட்டுதல்.
பூணிப்பு - தீர்ப்பு.
பூணுதல் - அகப்படுதல், அணிதல், உட்படுதல், பொருந்துதல்.
பூணுநூல் } உபவீதம்.
பூணூல் }
பூணூற்கலியாணம்-உபநயனச்சடங்கு.
பூணை - முல்லைநிலம்.
பூண் - ஆபரணம், உலக்கை முதலியவற்றிலிடும்பூண், கிம்புரி, பூணெனேவல்.
பூண்டி - ஓர் ஊர், கடற்குட்டிடர்.
பூண்டு - பூதர், பூடு.
பூதகணம் - பூதசேனை.
பூதகரப்பன்பட்டை-பீநாறிப்பட்டை.
பூதகலம் - பூதாக்கலம்.
பூதகாலம் - சென்றகாலம்.
பூதகி - கிருஷ்ணனை முலைமூலமாய் விஷமூட்டிக் கொல்லும்படி கம்சனால் ஏவப்பட்ட ஒரு அரக்கி, பேய்.
பூதகிராமம் - பஞ்சபூத சம்பந்தம்.
பூதகிருதாயி - இந்திராணி.
பூதகிருது - இந்திரன்.
பூதகேசரி - வெட்பாலை.
பூதகேசி - காஞ்சுரை.
பூதக்கண்ணாடி - சிறிதைப் பெரிதாகக் காட்டுங் கண்ணாடி.
பூதக்கலம் - பூதாக்கலம்.
பூதக்கால் - பருத்தக்கால்.
பூதக்கியம் - ஆலம்விழுது.
பூதசஞ்சாரம் - உலகவாழ்வு.
பூதசஞ்சாரி - உலகவாழ்வை விடாதோன், சாட்டாக்கினி.
பூதசரீரம் - பூதவுடம்பு.
பூதசாரசரீரம் - தேவர்களினுண்ணிய தேகம்.
பூதசாரம் - பஞ்சபூதசத்து.

பூதசுத்தி - பஞ்சசுத்தியென்று.
பூததயை - ஆன்மாக்கட்குச் செய்புந்தயை.
பூததாத்திரி - பூமி.
பூததானியம் - எள்.
பூதத்துணர் - புன்முருக்கு.
பூதநம் - சந்திரகிரணம், சூரியகிரணம்.
பூதநாசநம் உருத்திராக்கம், கடுகு, சேங்கொட்டை, மெழுகு.
பூதநாசினி - பெருங்காயம்.
பூதநாடி - பசாசுபிடித்தவர்க் கியங்குநாடி, மரணநாடி.
பூதநாதன் - சிவபிரான்.
பூதநாயகி - உமையம்மை.
பூதநிருத்தம் - ஒருகாலைமுடக்கியாடல்.
பூதநை - கடுக்காய்மரம், குபேரன்பட்டணம், சடாமாஞ்சி, பூதநையென்னுமோரரக்கி.
பூதபஞ்சகம் - பஞ்சபூதம்.
பூதபஞசாக்கரம் - ஒரு பஞ்சாக்கரம்.
பூதபதி - சிவபிரான்.
பூதபத்திரி - துளசி.
பூதபரிணமதேகம் - தூலதேகம்.
பூதபரிணமம் - பூதங்களின் திரிபு.
பூதபலம் - பலா.
பூதபலி - உச்சிட்டங்கொடுத்தல்.
பூதபாவநன் - விட்டுணு
பூதமகிபாலன் - ஔவையாருக்கு விருந்திட்டு அவரால் பாடப்பட்டவணுகிய புள்ளலூர் வேளாளப்பிரபு.
பூதம் - ஆல், இறந்தகாலம், உண்மை, உயிர், ஐம்பூதம், கிடக்கும்பொருள், சங்கு, சடாமாஞ்சில், சுத்தம், தருப்பை, பரணி, பூதகணம், பேய்.
பூதயாகம் - பஞ்சயாகத்தொன்று, அதுபலியீதல்.
பூதரநாதன் - மலையரையன்.
பூதரபுத்ரி - பார்ப்பதி.
பூதரம் - பூமிதாங்கல், பொன்மலை, மலை.
பூதராரி - கிருஷ்ணன்.
பூதரவில்லான் - சிவபிரான்.
பூதரன் - அரசன், விட்டுணு.
பூதராயன் - பிசாசம்.
பூதர் - சாரதர் இவர் பதினெண்கணத்தொருவர்.
பூதலமார்க்கம் - உலகநெறி.
பூதலம் - பூமி.
பூதலவாசனை - பிரபஞ்சப்பற்று.

பூதலவாசி - பூலோகவாசி.
பூதலிகை - மாப்பலகாரம்.
பூதவக்குருக்கண் - ஆலம்விழுது.
பூதவச்சம் - பீநாறி.
பூதவம் - ஆல், மருது.
பூதவாக்கு - கெட்டபேச்சு.
பூதவாசகம் - பெருந்தேக்கு.
பூதவாசம் - சரீரம், தான்றி.
பூதவாதம் - ஒருசமயம்.
பூதவார்த்தை - பூதவாக்கு.
பூதவிருக்கம் - பெருவாகை.
பூதவிருட்சம் - ஆலமரம்.
பூதவிருள் - உலகவிருள்.
பூதவேசி - பூதாவேசி.
பூதனன் - அரசன்.
பூதனைகனன் - கிருட்டினன்.
பூதனைசரீரம் - பூதபரிணம தூலசரீரம்.
பூதனைகுதனன் } கிருஷ்ணன்.
பூதனாரி }
பூதனை - ஒருபெண்தேவதை, பூதகி ஸ்ரீகிருஷ்ணர்சிசுவாயிருந்தபோது கஞ்சனது ஏவலால்தன்முலைகளிலேநஞ்சூட்டிக் கொண்டுவந்து சிசுவுக்குப் பாலூட்டினபோது அந்தப் பாலின் வழியாகவே அவளுயிரையும் கிருஷ்ணர் வாங்கிக்கொள்ள இறந்துபோன பூதகியென்னு மோரரக்கி.
பூதன் - கடுக்காய், கிருட்டினபக்கத்துபதினைன்காந்திதி, மகன், வசுதேவன் பத்திரன்.
பூதாக்கலம் - மாப்பிள்ளைக்கு மணவாட்டி சோறிடுங்கலம்.
பூதாக்கலம்பணிதல் - மணவாளப் பிள்ளைகள் முதன்முறை ஒரு பாத்திரத்திற் புசித்தல்.
பூதாங்குசம் - பேய்மருட்டி.
பூதாதியாங்காரம் - பூதோர்பத்தியாங்காரம்.
பூதாத்திரி - கீழ்க்காய்நெல்லி.
பூதாத்துமன் - சந்நியாசி.
பூதாத்துமா - உடல், சிவபிரான், துணைக்காரணம், பிரமன்.
பூதாரம் - பன்றி.
பூதாரன் - அரசன்.
பூதாரி - பெருங்காயம்.
பூதவாசன் - விட்டுணு.
பூதாவேசி - வெண்ணொச்சி.

பூதி-உடம்பு,ஊன், கொடுமை, சாம்பர், சித்தி,சுத்தம்,செல்வம், தசை,தத்துவம், துற்கந்தம்,நரகம், நாய், வேளை, பிறப்பு, புலால், புழுதி, பூமி, பொரிக்கறி, மகத்துவம், யானை, மைதுனம், விபூதி.

பூதிகந்தம்
பூதிகந்திகம் } கந்தகம், துற்கந்தம்.

பூதிகம் - அகில், ஆயில்மரம், ஒருவாசனைப்புல், சாதிக்காய், நிலவேம்பு.

பூதிகர்ப்பன் - பவபூதியென்னும் வடமொழிப்புலவன்.

பூதிகாஷ்டம் - செம்புளிச்சை.

பூதிகாமன் - மந்திரி.

பூதிசாரிகை - நாவி.

பூதிமாமிசம் - துன்மாமிசம்.

பூதிமாருதம் - வில்வமரம்.

பூதியம் - உடல், பிருதிவி முதலிய பூதம், பூமி.

பூதிவாகம் - வில்வமரம்.

பூதேசன் - சிவபிரான்.

பூதேவர் - பார்ப்பார்.

பூதை - அம்பு.

பூத்காரி - மரவயிரம்.

பூத்தட்டுதல் - மெழுகைத் தகடாக்கல்.

பூத்தல் - உண்டாதல், பயத்தல், மலர்தல், மாதவிருதுவாதல்.

பூத்தானம் - அருமைபண்ணல்.

பூஸ்திதி - நிலசம்பத்தி.

பூத்திரணை - சணம்பு.

பூத்திரம் - மலை.

பூத்திரி - ஒருவகைவிறிசு.

பூத்துப்பூத்தெனல்- இளைப்புக்குறிப்பு, பூர்ப்பூரெனல்.

பூத்தொடுத்தல் - மாலைகட்டல்.

பூநதி - புன்குமரன்,பொன்னுங்காய்மரம்.

பூநாகம் - நாங்கூழ், பூநீறு.

பூநாதம் - வெடியுப்பு.

பூநிம்பம் - நிலவேம்பு.

பூநிறம் - மாந்தளிர்க்கல்.

பூநீபம் - நிலக்கடம்பு.

பூநீர் - பனிநீர்.

பூநீலம் - சுத்தநீலம்.

பூநீறு - ஒருமருந்து.

பூநொய் - சிறுநொய்.

பூந்தட்டம்
பூந்தட்டு } பூவைச்சுந்தட்டம்.

பூந்தாது - கோங்கு, பூவிற்றுகள்.

பூந்தார் - மலர்மாலை.

பூந்தி - பூவந்தி.

பூந்துகள் - பூந்தாது.

பூந்துணர்-புன்முருக்கை, பூங்கொத்து.

பூந்துளிர் - மெல்லியதுளிர்.

பூந்தூள் - பூந்துகள்.

பூந்தேர் - புட்பத்தினலாயதேர்.

பூந்தேன் - பூவிற்றேன்.

பூந்தை - ஒரூர், பூதன் தந்தை.

பூந்தோடு - பூவிதழ்.

பூந்தோட்டம் - நந்தனவனம்.

பூபசாலை - பணிகாரக்கடை.

பூபதம் - மரம்.

பூபதி-அரசன், ஒருகுளிகை,மல்லிகை.

பூபம் - பட்டாபிஷேகம், பணிகாரம்.

பூபரிதி - சூரியனெடும்பரி.

பூபன் - அரசன்,பூசாசாரி,பூரட்சகன்.

பூபாலர் - பூவைசியர்.

பூபாலன் - அரசன், வேளாளன்.

பூபாளம் - ஓர்ராகம்.

பூபிரதிதம்பம் - மலைநடு.

பூபுத்திரி - சீதை.

பூப்பகம் - பெண்குறி.

பூப்பதாரி - தூரஸ்திரீ.

பூப்பரிதி - அயனவரி.

பூப்பருத்தி - பூவரசு.

பூப்பலகை - ஒருமரம்.

பூப்பிரதக்ஷணம்- பூமியைவலம்வருதல்.

பூப்பு - பூத்தல், மகளிர்சூதகம்.

பூமகணாயகன் - திருமால்.

பூமகண்மைந்தர் - வேளாளர்.

பூமகண்மார்பன் - திருமால்.

பூமகள் - இலக்குமி, பூமிதேவி.

பூமகன் - செவ்வாய்.

பூமடல் - பிள்ளைமடல்.

பூமடி - மெல்லியமடி.

பூமடை - பூவினலிடுமடை.

பூமணம் - புஷ்பபரிமளம்

பூமண்டலம் - பாதவுறுப்புளொன்று, பூச்சக்கிரம்.

பூமத்தை - ஒருசெடி

பூமஸ்நானம் - எழ்வகை நானத்தொன்று, அது வில்வம்முதலியதிவ்வியமரத்தருகின் மிருத்திகையாற் பூசுதல்.

பூமலேச்சினம் - சங்கங்குப்பி, ஞாழல்.

பூமன் - செவ்வாய், பிரமன்.

பூமாலை - புட்பமாலை, இது இராசசின்னத்தொன்று.
பூமாதலை - காய்க்காமல் பூமாத்திரம் விடும் மாதலை.
பூமான் - புமான், புருஷன்.
பூமி - இடம், குவியல், கோணங்களின் கீழ்வரி, தேசம், நிலம், பூமீறு, பூவுலகு, மூவுலகத்தொன்று.
பூமிகதம்பம் - நிலக்கடம்பு.
பூமிகாமி - பூகாமி.
பூமிகுருவகம் - வெள்ளெருக்கு.
பூமிகொழுநன் - திருமால்.
பூமிக்கூர்மை - வெடியுப்பு.
பூமிசம் - நரகம், பூமியிலுண்டானது.
பூமிசம்பவை - சீதை.
பூமிசன் - செவ்வாய், நரகாசுரன்.
பூமிசாரம் - ஒருநூல், பூசாரம்.
பூமிசை - இலக்குமி, சீதை.
பூமிசைநடந்தோன்-அருகன், புத்தன்.
பூமிச்செருக்கன் - உவர்மண்.
பூமிதேவன் - பார்ப்பான்.
பூமிதேவி - பூமிலட்சுமி.
பூமித்திரம் - மலை.
பூமித்தைலம் - மண்டயிலம்.
பூமிநடுக்கம் - பூமியதிர்ச்சி.
பூமிநாதம் - இந்துப்பு, காந்தம், பூமீறு.
பூமிநாயகன் - காஸ்மீரப்படிகம், நிலவேம்பு.
பூமிபரிட்சை - கலைஞான மறுபத்துநான்கினொன்று.
பூமிபாரம் - சிருட்டிப் பொருள்களாற் பூமிக்குண்டானபாரம்.
பூமிபாலகன் - அரசன்.
பூமிபிசாசம் - பனை.
பூமிப்பிரவேசம் - விளைநிலத்திற் செய்கைபண்ண நாளுக்குப்போதல்
பூமியதிர்தல் - பூமிநடுங்கல்.
பூமிபதிர்த்தல் - பூமிக்ஷோபம்.
பூமிலட்சுமி - இலக்குமி, பூமிதேவி.
பூமிலாபம் - மரணம்.
பூமிலேபனம் - மெழுகுதல்.
பூமிவெளுப்புமண் - சுதைமண்.
பூமிவேர் - பூநாகம்.
பூமின் - இலட்சுமி, பூமிதேவி.
பூம்பட்டாடை, பூம்பட்டு - ஒருபட்டுப்புடைவை.
பூம்பந்து - பூவினாலாயபந்து.
பூம்பதியல் - குறைவு, நட்டுக்கேடு.
பூம்பனை - ஆண்பனை.
பூம்பாளை - பூப்பாளை.
பூம்பிஞ்சு - இளம்பிஞ்சு.
பூம்பிடா - பூக்குடலை.
பூம்பிரயோசனம் - புன்பயிர்ப் பிரயோசனம்.
பூம்புகை - நறும்புகை.
பூம்பொழில் - புஷ்பச்சோலை.
பூயம் - சீழ், முறிந்தாரத்தம்.
பூயாரி - வேம்பு.
பூயாசலம் - கட்பீளை.
பூரகம்-பிதர்பிண்டம், பூரித்தல், பெருக்குந்தொகை, மத்தங்காய்ப்புல், மூச்சுள்ளே வாங்கல்.
பூரங்களித்தல் - நீபாராதனை.
பூரட்சகன் - அரசன்.
பூரட்டாதி - ஒருநக்ஷத்திரம்.
பூரணகருப்பம் - நிறைகருப்பம்.
பூரணகருப்பிணி - நிறைகருப்பிணி.
பூரணகலசம், பூரணகும்பம் - சலம் பூரித்தகலசம், நிறைகுடம்.
பூரணசந்திரன் - நிறைகலசந்திரன்.
பூரணசற்குணம் - நிறைந்தநற்குணம்.
பூரணசற்குணன்-நிறைந்தநற்குணன்.
பூரணசாத்திரம், பூரணசூத்திரம் - அகத்தியர்செய்த ஒரு நூல்.
பூரணதிசை - சாஞ்செல்லுந்திசை.
பூரணநூல் - பூரணசாஸ்திரம்.
பூரணபலன் - நிறைபலன்.
பூரணபாத்திரம் - இருநூற்றைம்பத்தாறு சிறங்கையரிசிகொண்ட பாத்திரம், பூரணகும்பம்.
பூரணபிண்டம் - நிறைகரு.
பூரணமனம் - நிறையனம்.
பூரணமாசம் - பிரகுதிமாதம்.
பூரணமி - பூரணை.
பூரணமை - பௌர்ணமி.
பூரணம் - உடைநூல், எல்லாம், கடல், நிறைவு, பிதர்பிண்டம், பெருக்கம், பொலிவு, மழை, முழுமை.
பூரணலேகியம் - ஒருலேகியம்.
பூரணவடிவு - கட்டழகு, மகாலங்காரம்.
பூரணவர்ணன் - ஆயிரத்தநானூறுவருஷங்களுக்கு முன்னே மகததேசத்தையாண்ட ஓரரசன், இவன் பௌத்தசமயி, கயாவிலே யிருந்த போதி

விருக்ஷத்தை சாங்கன் அழித்தானென்பதைக் கேள்விப்பட்டு ஆற்றதற்கரிய துக்கமுடையவனாய் நிலத்தில் விழுந்து புரண்டழுது தெளிவடைந்து ஆயிரம் பாற்பசுக்களைக் கொண்டு சென்று, அவற்றின்பால் முழுதுங் கறந்து அடிமரத்துக்கு அபிஷேகஞ் செய்விக்க, அந்த அடிமரம் ஓரிரவுக்குள்ளே எழுமுழத்தளவாய் வளர்ந்தோங்க அதுகண்டு பேராநந்தமுடையவனாய் அதனை மீளவும் வேறொருவர் வெட்டாதபடி அதனைச் சுற்றிப் பதினாறுமுழ வுயரமுடைய ஒருமதி லெழுப்பினவன் இவனே.

பூரணவயசு - நிறைவயசு.

பூரணவித்தை - முழுக்கல்வி.

பூரணவிரதம் - உத்தமவிரதம்.

பூரணன் - அரசன், அருகன், கடவுள், மூர்த்தபாஷாணம், விஷ்ணு.

பூரணாகுதி - ஓமச்சடங்கை நிறைவேற்றுங் கடைசியாகுதி.

பூரணாதிலேகியம் - பூரணலேகியம்.

பூரணாயு - பூரணவயசு.

பூரணானகம் - சந்திரகிரணம், மேளம்.

பூரணி - இலவமரம், காடு, நிறைவுள்ளவன், பூமி

பூரணேந்து - பூரணசந்திரன்.

பூரணை - ஐயனர் தேவிகளிலொருத்தி, சந்திரனைந்தாம் பத்தாந்திதி, பௌரணை.

பூரணைகேள்வன் - ஐயன்.

பூரபதி - பச்சைக் கருப்பூரம்.

பூரம் - இரசகருப்பூரம், ஒருநாள், ஒருமருந்து, கருப்பூரம், சூழ்தல், தேன், நீர்க்குண்டு, பூரணம், பூரான்.

பூரவாகனி - சரச்சுவதி.

பூராசி - பூத்திரன்.

பூராடமாசு - பால்வீதிமண்டலம்.

பூராடம் - ஒருநக்ஷத்திரம்.

பூராயக்கதை - பழங்கதை.

பூராயம் - ஆராய்வு, பூருவம், விசித்திரம், விருப்பம்.

பூரான் - ஒருவிஷசெந்து, பனங்கொட்டை முதலியவற்றினுட்பருப்பு.

பூரான்காவிக்கல் - மஞ்சட்காவி.

பூரி - ஓரிசை, ஒருபணிகாரம், ஒருவீரன், கலப்புநெல், குற்றம், சிராத்தகிரியையினொன்று, சிவபிரான், திருமால், நாணி, நூறுகோடி, கோடிகோடாகோடி, பகல், பிரமன், புல், புரியென்னேவல், பொன், மிகுதி, சோமதத்தன் மூத்தமகன்.

பூரிகம் - அப்பவருக்கம்.

பூரிகலியாணி - ஓரிராகம்.

பூரிகா - அகில்.

பூரிகை - அப்பவருக்கம், ஊதிடும்பூரிகை.

பூரிகொடுத்தல் - சிராத்தச் சடங்கி லொன்று.

பூரிக்கோ - குறுந்தொகைதொகுத்தவன்

பூரிசிரவன் - சோமதத்தன் இரண்டாம் புத்திரன்.

பூரிநேசன் - சரியாதி புத்திரருளொருவன்.

பூரிதம் - பூரணம்.

பூரித்தல் - உவத்தல், நிரப்புதல், நிறைத்தல், பருத்தல், வாயுவை நிறைத்தல்.

பூரிபோசனம் - சிராத்தத்தின்பிற்கொடுக்கும் போசனப்பொருள்.

பூரிப்பு - பூரணம், மிகக்களிப்பு, மிகுதி.

பூரிமாயு - ஆணரி, பழமை.

பூரியம் - அரசர்வீதி, அரசிருக்கை, ஊர், மருதநிலத்தூர், வேந்தர்வீதி.

பூரியர் } கீழ்மக்கள்.
பூரியோர் }

பூரு - குருகுலத்தரசரிலொருவன், புருவம், யயாதிமகன். யயாதிக்குச் சன்மிஷ்டையிடத்துப்பிறந்த புத்திரன், இவன் தந்தைக்குத் தனதிளமைப் பருவத்தைக் கொடுத்து அவனது முதுமைப் பருவத்தைத் தான் பெற்றுத் தந்தையை மகிழ்வித்தவன், இவன்மகன் ஜநமேஜயன், இவன் பாண்டவர்க்கு முன்னிருந்தவனாதலால் பாண்டவர்க்குப் பின்னிருந்த பரிக்ஷித்து மகனாகிய ஜநமேஜயன் வேறு.

பூருகம் - மரம்.

பூருண்டி - மல்லிகை, வேலிப்பருத்தி.

பூருது - பூநீறு.

பூருபூரெனல் - பூர்பூரெனல்.

பூருவகங்கை - நருமதை.

பூருவகதை - பழங்கதை.

பூருவகருமம் } ஊழ்வினை.
பூருவகன்மம் }

பூருவகாட்டை - கிழக்கு.
பூருவகாலம் - முற்காலம்.
பூருவகௌளம் - ஓரிராகம்.
பூருவக்கியானம் - பிரார்த்தஞானம்.
பூருவசந்தியை - விடியல்.
பூருவசனனம் - முற்பிறப்பு.
பூருவசனன் - தலைமகன்,முன்னோன்.
பூருவசன்-ஜேஷ்டபுத்திரன் தமையன்
பூருவசன்மம் - முந்தியசனனம்.
பூருவசாகசம் - கடுந்தண்டம்.
பூருவசைலம் - உதயமலை.
பூருவஞானம்-முன்னனுபவத்தை யறி
யு மறிவு.
பூருவதிக்கு } கிழக்கு.
பூருவதிசை }
பூருவதுவந்தம் - ஊழ்வினைப்பயன்.
பூருவதேகம் - முந்தியசரீரம்.
பூருவதேசம் - கிழக்கு.
பூருவதொடர்ச்சி - பழவினைத்தொடர்.
பூருவதொந்தம் - முந்திய துவந்தம்.
பூருவபக்கம் } வளர்பிறைப்பக்கம்.
பூருவபட்சம் }
பூருவபதம் - நிலைமொழி.
பூருவபருப்பதம் - உதயமலை.
பூருவபற்குனி - பூரம்.
பூருவபற்குனிபன - வியாழன்.
பூருவபாகம் - முற்பங்கு.
பூருவபாஷை - ஆதிபாஷை.
பூருவபுண்ணியம் - முற்றருமம்.
பூருவப்படுதல் - தொன்று தொட்டுரித்
தா யிருத்தல்.
பூருவமீமாஞ்சை-மீமாஞ்சையின் முற்
பூருவமுகம் - கிழக்குமுகம். [பகுதி.
பூருவம் - ஆதி, எல்லாம், கிழக்கு, சந்தி
ரன்முன்பக்கம், பழஞ்சரித்திரம்,பழ
மை, முதன்மை, முயற்சி, முன்பு.
பூருவவாசனை - முற்பிறப்பின் பற்று.
பூருவாஷாடம் - பூராடம்.
பூருவாண்ணம் } முன்னேரம்.
பூருவாண்ணியம் }
பூருவாபாரம் - அத்தாட்சி.
பூருவாப்பியாசம் - பழயவழக்கம்.
பூருவீகம் - ஆதி, பழமை.
பூருவோத்திரம் - பூருவோத்திரம்,வட
கிழ்த்திசை.
பூருவோத்தர விருத்தம் - முன்னுக்கும்
பின்னுக்கும் விரோதம்.

பூருவோத்திரசங்கதி - பூருவத்தின்வா
லாறு.
பூருவோத்திரம் - பூருவீகம்.
பூரை - குறைவின்மை, பூரணம்.
பூரையிடுதல் - அலுத்துப்போதல்.
பூர்ணகம் - பொற்சிறைப்பறவை.
பூர்ணம் - பூசணம், பூரணம்.
பூர்ணாவதாரம் - இராமாவதாரம்,நாசிங்
காவதாரம்.
பூர்ணிமை - தாதாவுக்கு அநுமதியிடத்
தப் பிறந்த புத்திரி.
பூர்தல் - நிறைதல்.
பூர்த்தம் - தருமம்.
பூர்த்தி - ஐக்கம், நிறைவு.
பூர்ப்பியம் - துதனம், பழங்கதை.
பூர்ப்பூரெனல் - பொலிந்து பருத்தல்.
பூர்வசித்தி - ஆக்கினீத்ரன் மனைவியாகிய
ஓரப்ஸரஸை.
பூர்வம் - பூருவம், கிழக்கு.
பூர்வராத்ரம் - முன்னிரவு.
பூர்வாசாரியர் - முற்காலத்தாசாரியர்.
பூர்வாத்ரி - உதயகிரி.
பூர்வார்த்தம் - முற்பாதி.
பூர்வான்னம் - பகலின் முற்பாதி.
பூர்வீகம் - பூருவீகம்.
பூர்வீகன் - பழையோன்.
பூலதை - நாங்கூழ்,படர்கொடி,பூநாகம்.
பூலத்தி - மருதமரம்.
பூலம் - புற்கட்டு.
பூலா - பூல்.
பூலாசம் - புல்லாந்தி.
பூலித்தகடு-மணியழுத்தவைக்குந்தகடு.
பூலோகம் - பூமி இது மேலேழுலகில்
ஒன்று.
பூல் - ஒருசெடி, புல்லாந்தி, பூலா.
பூவசியர் - பூவைசியர்.
பூவணநாதர் திருப்பூவணத்திலேகோ
யில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பூவணம் - மதுரைக்கருகில் ஒருசிவஸ்த
பூவணை - பூமெத்தை. [லம்.
பூவந்தம் } நிலாவிரை.
பூவந்தவம் }
பூவந்தி - ஒருமருந்து, செய்க்கொட்டா
ன்,பன்குமரம்,பொன்னுங்காய்மரம்.
பூவமளி - புட்பசயனம் இது அட்ட
போகத் தொன்று.
பூவம்பன் - மன்மதன்.

பூவரசு - ஒருமரம்.
பூவலயம் - பூகோளம்.
பூவல் - சிவப்பு, தாவு, செம்மண்.
பூவல்மண் - செவ்வல்.
பூவழலே - பூநீறு.
பூவள்ளம் - தங்கக்கிண்ணம், மண்கிண்ணம்.
பூவன்வாழை - ஒருவாழை.
பூவாணம் - ஒருவிதவாணம்.
பூவாமரம் - கோளி.
பூவாமற்காய்க்குமரம் - ஆல்முதலியன.
பூவாளி - ஒருபாணம், மதன்பாணம், மன்மதன்.
பூவிதழ் - பூந்தோடு.
பூவிந்து - அப்பிரகம், வீரம்.
பூவிந்துநாதம் - அப்பிரகம்.
பூவிலைமடந்தையர் - அற்றைப் பரிசக்கொள்வோர்.
பூவில் - மன்மதன்வில்.
பூவிளம் - கற்பாஷாணம்.
பூவுலகு - பூமி.
பூவெண்ணெய் - ஒரு நற்றயிலம்.
பூவை - காயாமரம், கிளி, குயில், நாகணவாய்ப்புள், பெண்.
பூவைசியர் - களமர், உழவர், வேளாளர் இவர் மூவைசியரிலொருவர்.
பூவைவண்ணன் - காயாம்புமேனியன், விஷ்ணு.
பூவொல்லி-தேங்காயிலோர்வகை யொல்லி.
பூவோடு - தொட்டிபாஷாணம்.
பூழான் - சவுதாரி, கானுங்கோழி.
பூழி - குழைசேறு, கொடுந்தமிழ்நாட்டினொன்று, சேற்றிற்குமிழி, பராகம், புழுதி.
பூழியபலம் - பூசுணி.
பூழியன் - சேரன், பாண்டியன்.
பூழில் - அகில், பூமி.
பூழிவேந்தன் - பாண்டியன்.
பூழை - கோபுரவாயிற் கதவிலிட்டுப் புகும் வழி, துவாரம், புதவு.
பூழ் - காடை, கானுங்கோழி.
பூழ்க்காம் - கோட்டம்.
பூழ்க்கை - பூழைக்கை, யாளியானை, யானை.
பூழ்தி - தூசி, பராகம், புலால், புழுதி.
பூளம் - பூவரசு.

பூளை - இலவம்பஞ்சு, ஒருசெடி.
பூனை - பூஞை.
பூனைக்கச்சி - ஒருசெடி.
பூனைக்கண் - ஒருமணி, புருடராகம்.
பூனைக்கழற்சி - ஒருசெடி.
பூனைக்காஞ்சொறி - ஒருகாஞ்சொறி.
பூனைக்காய்வேளை - ஒருசெடி.
பூனைக்காலி - ஒருசெடி.
பூனைக்கீரை - ஒருகீரை.
பூனைத்திசை - தென்கிழக்கு.
பூனைப்பகைவன்முள் - எலிமுள்ளு.
பூனைப்பிடுக்கன் } ஒருசெடி.
பூனைமடி } ஒருசெடி.
பூனைமயிர் - பூனைக்கழற்சி, வெண்மயிர்.
பூனைவணங்கி - குப்பைமேனி.
பூஷன்-துவாதசாதித்தருளொருவன், தக்ஷயாகத்தில் வீரபத்திரரால் பல்லுதிர்க்கப்பட்டவன்.

பெ

பெங்கு - கள்ளிகளுள்ளோர்பேதம்.
பெடம் - மிருதி.
பெடை - பறவைப்பெண்.
பெட்டகத்துத்தி - ஒருதுத்தி.
பெட்டகம் - பெட்டி, ஒருசிறுநூல், இதனுல் உறையூரிலொருவன் தன் பெண்சாதியை அருந்ததிக்கு மேலான கற்புடையவளென நம்பியிருந்த அவனுக்கு பெண்சாதியின் சோரத்துவத்தை ஒளவையாரால் விளக்கிக்காட்டப்பட்டது.
பெட்டல் ஆசைப்பெருக்கம்,விரும்பல்.
பெட்டார் - சிநேகிதர்.
பெட்டி - கூடை, பேழை, மூனிவாய்.
பெட்டிலிக்குழல் - நச்சுக்குழல்.
பெட்டிக்கோரை - ஒருபுல்.
பெட்டு - பொய்.
பெட்டை-ஒட்டகம், கழுதை, குதிரை, சிங்கம், நாய், மரை யிவற்றின் பெண், பறவைப்பெண், பெண்பொது.
பெட்டைக்கடல் - சிறுகடல்.
பெட்டைக்கட்டு - வளமற்றகட்டு.
பெட்டைக்கண் - ஊனக்கண், சாய்ந்தகண், சிறுகண்.

பெட்டைக்கண்ணன் - சிறுகண்ணுள்ளவன்.
பெட்டைமுடிச்சு - பெட்டைக்கட்டு.
பெட்டையன் - அலி ஆண்மையற்றவன்.
பெட்பு - அன்பு, ஆசை, பெருமை.
பெண் - கற்றாழை, ஸ்த்ரீ, மனைவி, விலங்கின் பெண்பொது.
பெண்கரு - சுரோணிதம்.
பெண்கலை - வண்ணத்தின் சிற்றின்பப்பகுதி.
பெண்குமஞ்சான் - சாம்பிராணி.
பெண்குறி - யோனி.
பெண்கேட்டல் - பெண்ணை மணம்பேசுதல்.
பெண்கொடி - பெண்.
பெண்கொடுத்தல் - பெண்ணை விவாகஞ்செய்து கொடுத்தல்.
பெண்சாதி - மனைவி.
பெண்சோடினை - பெண்வேஷவணி.
பெண்டகர் - அலியா.
பெண்டகை - பெண்டன்மை.
பெண்டர் - பெண்டகர்.
பெண்டாட்டி - பெண், மனையாட்டி.
பெண்டாரி - பிண்டாரி.
பெண்டிர் / பெண்டில் } பெண்.
பெண்டீர் - பெண்கள், மனைவி.
பெண்டுகம் - களற்சி.
பெண்டு - பெண்மகள்.
பெண்ணரசி - இராசாத்தி, செல்வமுடையாள், விவேகமுள்ளவள்.
பெண்ணரசுநாடு - பெண்ணுள்ளை செய்யுமிராச்சியம்.
பெண்ணலம் - பெண்ணிலுள்ள வினபம்.
பெண்ணழைத்தல் - பெண்ணை விவாகஞ்செய்தல்.
பெண்ணன் - ஆண்மையற்றவன்.
பெண்ணாசை - ஸ்த்ரீவிருப்பம், இது மூவாசையிலொன்று.
பெண்ணாள் - பெண் நட்சத்திரம்.
பெண்ணினல்லாள் - திருக்கழுக்குன்றத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பெண்ணீலி - ஒருபெண்தேவதை, துட்டை.
பெண்ணுறுப்பு - பெண்குறி, பெண்ணிலட்சணம்.
பெண்ணெடுத்தல் - பெண்கொள்ளுதல்.
பெண்ணெழுத்து - நெட்டெழுத்து.

பெண்ணை - அனுடநாள், ஓராறு, நீர்முள்ளி, பனைமரம், பெண்மரம்.
பெண்தண்டு - காதினுட்புறத்தண்டு.
பெண்பழி - பெண்துரோகம்.
பெண்பனை - காயும்பனை.
பெண்பாகன் - சிவபிரான்.
பெண்பால் - ஸ்த்ரீலிங்கம், இது ஐம்பாலிலொன்று.
பெண்பால்விகுதி - பெண்பகுதியை விளக்கிநிற்கும் விகுதி.
பெண்பாற்பிள்ளைக்கவி - ஆண்பாற்பிள்ளைக் கவியுறுப்புள் சிறுதேர் சிறுபறை சிற்றில் எனுமூன்றொழித்து ஏனையுறுப்பேழுடன் அம்மனை ஊசல்கழங்கெனுமூன்றுறுப்புங்கூட்டி யுறுப்புக்குப் பப்பத்து விருத்தத்தான் முடிவது.
பெண்பிடித்தல் - கூத்திபிடித்தல்.
பெண்பிள்ளை - சிறுமி, பெண், மணவாட்டி.
பெண்பிறந்தவன் - பெண்ணுப்பிறந்தவன்.
பெண்புத்தி - பேதைப்புத்தி.
பெண்பேசல் - பெண்ணை மணம்பேசுதல்.
பெண்பேதை - ஏழைப்பெண்.
பெண்போகம் - அறம் முப்பத்திரண்டிலொன்று, அது மணமுடிப்பித்தல், ஸ்திரீபோகம், இது அட்டபோகத்தொன்று.
பெண்மகள் - ஸ்திரீ.
பெண்மதி - பெண்புத்தி.
பெண்மயக்கம் / பெண்மயல் } பெண்போகம்.
பெண்மயிர் - அளகம்.
பெண்மரம் - புறவயிரமுள்ளமரம்.
பெண்மாயம் - பெண்மயக்கம்.
பெண்மூச்சு - பெண்மூர்க்கம்.
பெண்மை - பெண்டன்மை, மாட்சிமை.
பெண்மைச்சினைப்பெயர் - பெண்பான் முப்பகுதிக்கும் பொதுவான வுறுப்பாகுபெயர் (உ-ம்) முடத்தி.
பெண்மைச்சினைமுதற்பெயர் - பெண்பான் முப்பகுதிக்கும் பொதுவான வுறுப்புமுதற்பொருட்பெயர் (உ-ம்) முடக்கொற்றி.
பெண்மைமுதற்பெயர் - பெண்பான் முப்பகுதிக்கும் பொதுவான முதற்பொருட்பெயர் (உ-ம்) கொற்றி.

பெண்மைமுறைப்பெயர் - முறைநயைக் காட்டிவரும் பெண்பெயர்; (உ-ம்) தாய்.
பெண்வகை - பெண்வகுப்புநான்கு, அது பதுமினி சித்தினி சங்கினி அத்தினி.
பெண்வழி } பெண்ணைப் பற்
பெண்வழிசுற்றம் } றிய வினம்.
பெண்வழிச்சேறல்-பெண்வழியே செல்லுதல், பெண்பேச்சைக்கேட்டல்.
பெதரிகானம் - காஞ்சிரை.
பெதும்பை - பதினொரு வயதிற்பெண், பெண் பொது.
பெத்தகாலம் - இலயகாலம்.
பெருத்ததிசை - ஆன்மாபாசத்திற்குட்பட்டிருக்குங் காலம்.
பெத்தமுத்தி - இலயமுத்தி.
பெத்தம் - ஒடுக்கம், கட்டு, சேர்மானம், நிலைபரம்.
பெத்தரிக்கம் - அகந்தை, கலம்பகம்.
பெத்தர் - அடிமைகள், பாசபந்தர்.
பெத்தல் - பெருங்குரும்பை.
பெத்தி - தசிமுள்ளி.
பெந்தம் - பந்தம்.
பெந்தர் - பந்தர்.
பெந்தனம் - பந்தனம்.
பெந்தித்தல் - பந்தித்தல்.
பெந்திப்பு - கட்டு.
பெந்து - சுற்றம்.
பெந்தை - அவலட்சணமாய்ப் பருத்தது, கலப்பையினோருறுப்பு.
பெந்தைக்கண் - பெரியகண்.
பெந்தைக்கயிறு - படைவாளை, மேழியோடிணைக்குங்கயிறு, வடக்கயிறு.
பெம்மான் - உயர்ந்தவன், பெருமான்.
பெயரடி - பெயர்ச்சி, பேர்மூலம்.
பெயரன் - பாட்டன், பேரன்.
பெயராளி - கீர்த்திமான்.
பெயரிடுதல் - நாமகரித்தல்.
பெயரிடைநிலை - பெயர்ப்பகுதிவிகுதிகளிரண்டிற்கு நடுவினிற்குமெழுத்து; (உ-ம்) வலைஞன், வலை-ஞ்-அன்.
பெயரியற்சொல் - செந்தமிழ்நிலத்து மொழிகளாய் உலகவழக்கினுஞ் செய்யுள் வழக்கினுநின்று தம்பொருளையியல்பாக விளக்கும் பெயர்ச்சொல்.
பெயரின்னிசை - ஒருபிரபந்தம், அது பாட்டுடைத் தலைவன் பெயரினைச் சார வின்னிசை வெண்பாவாற் பாடுவது.
பெயருதல் - நிலைவிலகுதல்.
பெயரெச்சம் -பெயரையவாவிநிற்குஞ் சொல் அது அகரமும் உம்முமாகிய இரு விகுதிகளையும்பெற்று கருத்தா காரணம் இடம் காலம் செயல் செயப்படுபொருள் எனு மாறனுள் ஒன்றைக்கொண்டு முடியும்.
பெயரெடுத்தல் - கீர்த்தியடைதல்.
பெயரெடுப்பு - நாமப்பிரபலியம்.
பெயர் - கீர்த்தி, நாமம், பெயரென்னேவல், பெயர்ச்சொல்.
பெயர்ச்சி - திரும்புதல், புரட்சி.
பெயர்ச்சூத்திரம் - இடுகுறி காரணக்குறியாலிதற்கிது பெயரென்றிடுதல்.
பெயர்ச்சொல் - இடுகுறியாயுங் காரணக்குறியாயும் வேற்றுமை யுருபுகள் சார்தற்கிடனாய் ஒன்றன் பெயரை விளக்கி நிற்குஞ்சொல்.
பெயர்தல் - ஆடல், உரிஞ்சல், எடுபடல், திரும்பல், போதல், வேறுபடல்.
பெயர்த்தல் - கிளப்புதல், திருப்புதல், வேறுபடுத்தல்.
பெயர்த்தி - பாட்டி, பெயர்ச்சி, பேத்தி.
பெயர்த்து - பெயரையுடையது.
பெயர்நேரிசை-ஒருபிரபந்தம் அது பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவாற் கூறுவது.
பெயர்போதல் - கீர்த்தி பிரபலமாதல்.
பெயர்ப்பகுதி - பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனு மறுவகை அடிகள்.
பெயர்பிரஸ்தாபம் - கீர்த்தி.
பெயர்ப்பு - பெயர்ச்சி.
பெயர்வழி - தலைமுறை, பெயர்முறை.
பெயர்விகுதி - பெயர்ச்சொல்லின்விகுதி.
பெயர்விளங்கல்-கீர்த்தியுண்டாதல்.
பெயர்வு - பெயர்தல்.
பெயர்வேற்றுமை - எழுவாய்வேற்றுமை.
பெயலை - மழை.
பெயல் - மழை, மழைத்துளி.
பெயர்தானம் - வேங்கை.
பெய்கலம் - கொள்கலம்.
பெய்தல் - செறித்தல், சொரிதல், விடுதல்.
பெய்துரை - பாயிரம்.
பெய்வளை - பெண்.

பெய்வு - பெய்தல்.
பெரிசு } கனக்கொண்டது, பருத்தது.
பெரிது }
பெரியகை - கொடைக்கரம், தாராளமானகை.
பெரியகுணம் - பெருந்தன்மை.
பெரியதகப்பன்-தந்தையின் றமையன்.
பெரியதம்பிரான்-ஒருதேவதை. [மை.
பெரியதனம் - பெருந்தன்மை, மேட்டி
பெரியதாய் - தாய்க்குமுன்பிறந்தாள்.
பெரியது - பெரிது.
பெரியநங்கை - பிரியாணங்கை.
பெரியநடை - நல்லொழுக்கம்.
பெரியநாயகி - பார்வதி. திரு அரசிலியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர். திருப்பனையூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர் திருமுதுகுன்றத்திலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர். திருப்பனந்தாளிலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர். திருப்பழனத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
பெரியநாயகியம்மை - திருவலஞ்சுழியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர். திருக்குடவாயிலிலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர். திருச்சிவபுரத்திலேகோயில்கொண்டிருக்கும்தேவியார்பெயர். திருத்தென்கூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர். திருப்பனையூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர். திருஉசாத்தானத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பெரியமாண்டேசுவரர் - திருநல்லூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
பெரியபிராட்டி - இலட்சுமி.
பெரியபுராணம்-திருத்தொண்டர் புராணம்.
பெரியபுலு - நூறு.
பெரியப்பன் - பெரியதகப்பன்.
பெரியமனம் - உதாரமனம்.
பெரியம்மான்பச்சரிசி - ஒருபூடு.
பெரியம்மை - வசூரிகை.
பெரியர் - பெரியோர்.
பெரியவர் - மேன்மையுடையோர்.
பெரியவன் - தத்துவசாலி, மேம்பாடுடையோன், வளர்ந்தவன்.
பெரியாணங்கை - ஒருபூடு.
பெரியாத்தாள் } பெரியதாய்.
பெரியாயி }
பெரியாம்பிகை - திருநாலூர் மயானத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பெரியார் } பெரியவர்கள்.
பெரியோர் }
பெரியாழ்வார் - இவர் ஸ்ரீ வில்லிபுத்தூரிலே புரச்சுடனென்னும் வேதியனுக்குப் புதல்வராயவதரித்து வேதங்களில் வல்லவராகிய ஒரு பிராமணர், இவர் திருமகளாற் கோதைநாய்ச்சியார், இவர் அயோநிஜராய்த் திருத்துழாய் வனத்திற் கண்டெடுக்கப்பட்டவர், திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி முதலியவை பாடினவர் இவரே, இவரைஆண்டாளென்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் கோதையென்றுங்கூறுவர்.
பெருகல் - பெருகுதல்.
பெருகியல்-இராகத்தகுதியினொன்று.
பெருகியன்மருதம்-குரல்தாரமாயத்தாரங்குரலாய விளரிப்பாலை.
பெருகு - தயிர், பெருகென்னேவல்.
பெருகுதல் - பாய்தல், மிகுதல், விருத்தித்தல்.
பெருக்கமரம் - பப்பரப்புளிமரம்.
பெருக்கம் - செல்வம், பெருகுதல், பெருக்கிக்கண்டபேறு, மிகுதி, விசாலம், விருத்தி.
பெருக்கம்பண்ணுதல் - பெருமைபண்ணுதல், போகுதல்.
பெருக்கல் - அதிகப்படுத்தல், எண்கூட்டித்தாக்கல், சீய்த்தல், நிறைத்தல், பருத்தல், மிகுவித்தல், விசாலித்தல்.
பெருக்கன் - பருக்கன்.
பெருக்காச்சவட்டு - கவலையீனம், வேண்டாவெறுப்பு.
பெருக்காளர் - போதியவர்கள்.
பெருக்கு - கணக்குவகை நான்கினொன்று, பப்பறப்புளி, பாய்ச்சல், பெருக்கென்னேவல், விசாலம், வெள்ளம்.

பெருக்குக்கணக்கு - கணக்குவகைநான்கினொன்று.
பெருக்குதல் - பெருச்கு.
பெருக்குவேளை - உச்சிப்பொழுது.
பெருங்கடல் - சமுத்திரம்.
பெருங்கடி - தொடுகடி.
பெருங்கணக்கு - பெருகிரவி, பெருந்தொகை.
பெருங்கதை - பிள்ளையார்நோன்புமுடிவில் வாசிக்குங்கதை.
பெருங்கருணைநாயகி-கொங்கு நாட்டில் கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பெருங்கலம் - ஆயிரங் கோலையுடைய பேரியாழ்.
பெருங்கலையன் - ஒருநெல்.
பெருங்காக்கைபாடினியம் - ஒருநூல்.
பெருங்காஞ்சொறி - ஒரு காஞ்சொறி
பெருங்காப்பியம் - ஒருபிரபந்தம் அது தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் வாழ்த்தும் முன்னுளதாய் அறம் பொருள் இன்பம் வீடு எனு நாற்பொருட் பயத்ததாய் கவி நாயகனை யுடைத்தாய் மலைகடல் நாடு நகர் பருவ முதலியவற்றின் வளங்கூறுதலும் மணமுடித்தல் முடிகவித்தல் பொழில் விளையாட்டு நீர்விளையாட்டு உண்டாட்டு புலவி கலவி என்றிவற்றைப்புகழ்தலும் மந்திரம் தூதுசெலவு போர்வென்றி என்பவற்றைக் கூறலுமாகிய வினைதொடரச் சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்னும் பகுதியை யுடைத்தாய் வருவது.
பெருங்காயம் - ஒருமருந்து.
பெருங்காரை - ஒருமரம், ஒருவன்.
பெருங்கால் - சண்டமாருதம், பெருவாய்க்கால், யானைக்கால்.
பெருங்காற்று - உரத்தகாற்று.
பெருங்கிடை / பெருங்கிடைச்சி } ஒருகிடைச்சி.
பெருங்கிரந்தி - ஒருநோய்.
பெருங்கிராமம் - ஐஞ்ஞூறுகுடிகொண்டவூர்.
பெருங்கிழங்கு - ஈசரவேர், ஒருபூடு.
பெருங்கிழமை - முழுவுரிமை.
பெருங்கிள்ளி - கோவலன் காலத்தில் உறையூரிலிருந்தசோழன், இவனைப் பெருநற் கிள்ளியெனவுங் கூறுவர்.
பெருங்குடல் - ஒருகுடல்.
பெருங்குடிவாணிகர் - வணிகருள் ஒருவகையார்.
பெருங்குமிழ் - ஒரு குமிழ் அது தசமூலத்தொன்று.
பெருங்குரல் - பெருஞ்சத்தம்.
பெருங்குருகு - சக்கரவாகப்புள் இதுஒரு இசைத்தமிழ்நூல், இதனைச் செய்தவர் தலைச்சங்கப்புலவருளொருவர்.
பெருங்குருந்து - ஒருகுருந்து.
பெருங்குரும்பை - ஒருமருந்து.
பெருங்குளவி - ஒருகுளவி.
பெருங்குறடு - பெரியகுறடு.
பெருங்குறட்டை-ஒருசெடி, காக்கணங்கொவ்வை.
பெருங்குறிஞ்சா - ஒருகுறிஞ்சா.
பெருங்குறிஞ்சி - இது சங்கநூல்களுளொன்று.
பெருங்குன்றூர்கிழார் - இவர்பதிற்றுப்பத்தும் ஒன்பதாம் பத்துப்பாடிச் சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை பால் முப்பத்திராயிரம் காணப்பெற்றவர்.
பெருங்கொடி - ஒரு துவசம்.
பெருங்கொண்டலாத்தி - புழுக்குத்திப்புள்
பெருங்கொன்றை - ஒருகொன்றை.
பெருங்கோடணை - முரசு.
பெருங்கோழிநாய்கன் மகன் கண்ணனார்-இவர்சோழன் போர்வைக்கோப் பெருநற் கிள்ளியைப் பாடிய ஒரு தமிழ்ப்புலவர், இவர் வைசியர், இவர் கைக்கிளைப் பொருண்மேற் கவி பாடுவதில் மிக்க வல்லவர், "சிறந்த வீரக் கழலினையும், மைபோன்ற தாடியினையுமுடைய காளையை எண்ணுந்தோறும் என்கைவளை யென்னைக் கைவிடுவதை என் தாய்காண்பாடாயின் கடிவளே யென்று என் மனமேங்குகின்றது, இது வொரு பக்கமாக, அவட்குப் புலனாகாமல் அவனைக் கூடுவேனென்று துணிந்தாலும் அவனைச் சூழ்ந்திருக்கும் சபைக்குஎன் செய்வதென்று நாணம் அதிகரிக்கின்றது, இவ்வாறு மயங்குகின்றேன் என்னுங் கருத்தமைந்த" அடிபுனை தொடு கழல்

என்னுஞ்செய்யுளைப் பாடினவர் இவரே. (புறநானூறு.)

பெருச்சாளி - ஒரெலி.

பெருஞ்சித்திரனார் - இவர் ஒரு அற்புதக்கவிஞர், இவர் மிகவும் வறுமையுற்றவராய் ஒருகாலத்திலே குமுணனது கொடைச் சிறப்பினைப்புலவர்வாய்க்கேட்டு அவனிடத்துச்சென்று தமது நிலைமையை உள்ளவாறு கூறி, அவனிடத்துப் பெற்ற பெருஞ்செல்வத்தால் குபேரனைப்போல வாழ்ந்தவர்.

பெருஞ்சிறப்பு - மிகுசிறப்பு.

பெருஞ்சினம் - பெருங்கோவம்.

பெருஞ்சித்தனார் - இவர் கடைச்சங்கப் புலவருளொருவர்.

பெருஞ்சீரகம் - ஒருசரக்கு.

பெருஞ்செய்யான - ஒருதேன்.

பெருஞ்செருப்படி - ஒருபூடு.

பெருஞ்செல்வம்-திரண்ட ஐசுவரியம்.

பெருஞ்சொல் - பலரறிசொல்.

பெருத்தல் - அதிகப்படல், பருமையாதல்.

பெருநகை - பெருஞ்சிரிப்பு, பெருமகிழ்வு, இது சுபாவகுணத்திலொன்று, புறக்கூத்தினுளொன்று.

பெருநடை - உயர்ந்தநடை.

பெருநட்பு - பெருஞ்சிநேகம்.

பெருநண்டு - ஒருநண்டு.

பெருநத்தியாவட்டம் - ஒரு நத்தியாவட்டம்.

பெருநம்பி - குலச்சிறைநாயனார்.

பெருநயப்புரைத்தல்- பெருவிருப்பைக் கூறல் இது அகப்பொருட்டுறையிலொன்று.

பெருநறளை - ஒருபூடு.

பெருநறுவிலி - ஒருமரம்.

பெருநாரை ஒருநாரை, தலைச்சங்கத்து இசைத்தமிழ் நூல்களுளொன்று, இது இறந்தொழிந்தது.

பெருநாள் - அச்சுவினி முதலியநாள், இரேவதி, கொண்டாட்டமானநாள்.

பெருநிரவி - குழுக்கு, மொத்தம்.

பெருநிம்பம் - வேம்பு.

பெருநீர் - கடல்.

பெருநூல் - விரிவுநூல்.

பெருநெருஞ்சி - ஒருநெருஞ்சி.

பெருநெருப்பு -தீச்செறிவு.

பெருநெறி - நன்மார்க்கம்.

பெருநையல் - பெருவியாதி, மசூரிகை,

பெருந்தகை-அரசன், பெருமையுடையோன்.

பெருந்தக்காளி - ஒருசெடி.

பெருந்தலைக்கறையான்-ஒருகறையான்

பெருந்தலைச்சாத்தனார்-தம்பியால் நாடு கொள்ளப்பட்டு காட்டிலிருந்த குமுணனைப் பாடியபோது அவன் தலையைக் கொண்டுபோய்த் தம்பியையிற் கொடுத்தால் பெரும் பொருள் பெறுவீரென்று தன் வாளைக்கொடுத்து அறக்கச்சொல்ல,இவர்அந்தவாளைக்கொண்டுபோய் அவன் தம்பிக்குக்காட்டி அவன் மனவைரத்தை மாற்றின பெருந்தகையிவரே.

பெருந்தன்மை - அகந்தை, மானம், மேன்மை.

பெருந்தாரா - ஒருதாரா.

பெருந்தாளி - ஒருதாளி.

பெருந்திணை - பொருந்தாக்காமம்.

பெருந்திணைமணம் - பெருந்திணைக்குரியமணநான்கு அவை பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம்.

பெருந்தில்லை - ஒருமரம்.

பெருந்தீன் - பேருண்.

பெருந்துத்தி - ஒருபூடு.

பெருந்துளசி - ஒருதுளசி.

பெருந்தேவபாணி - இசைப்பா வகையுளொன்று.

பெருந்தேவனார்-தொண்டை நாட்டிற் பிறந்து தமிழில் மிகவல்லுநராய் பாரதத்தை வெண்பாவாற் பாடிக்கொண்டுபோய் மதுரைச்சங்கத்தில் அரங்கேற்றினவர். இவர்சாதியில்வேளாளர், "சிறுதம்பாடல்பன்னீராயிரமுஞ் செழுந்தமிழ்க்கு, வீரர் கஞ்சங்கப் பலகையிலேற்றிய வித்தகனார் பாரதம்பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண், மாருதம் பூவின்மணம் வீசிடுந் தொண்டைமண்டலமே" என்பதுமேற்கோள். வீரசோழியத்துக் குரைசெய்த ஆசிரியர்.

பெருந்தேன் - பேரிலையான், கூட்டுத்தேன்.

பெருந்தொகை - மிகுதொகை.

பெருந்தொடை - ஆடுதொடை.
பெருப்பம் - பருப்பம்.
பெருப்பித்தல் - அமிதப்படுத்தல், பருப்பித்தல்.
பெருமகள் – கோவலன்தாய், இவளைப் பெருமனைக்கிழத்தியென்றும், பேரிற்கிழத்தியென்றும், வழங்குவர், இவள் மதுரையில் கோவலன் கொலையுண்டிறந்ததைமாடலனால் தெரிந்து தன்னுயிரைவிட்டவள்.
பெருமகன் – அரசன், சிறந்தோன்.
பெருமகிழ்ச்சிமாலை - ஒரு பிரபந்தம், அது தலைவியது, சிறப்பைக்கூறுவது.
பெருமக்கள் - பெரியோர்.
பெருமங்கலம் – ஒரு பிரபந்தம்.
பெருமணிக்கோட்டுவான்-ஒரு நீர்ப்புள்.
பெருமந்தாரை - ஒருசெடி.
பெருமம் - பெரியது.
பெருமரம் - பீநாறி, பெருங்கள்ளிமரம்.
பெருமருந்து - ஒருமருந்து.
பெருமலை-மகாமேருகிரி. சேரநாட்டில் உள்ளவொருமலை.
பெருமலைகலக்கி - ஒருபூடு.
பெருமல்லரி - பெருங்கள்ளி.
பெருமல்லிகை - ஒருமல்லிகை இது தசமூலத்தொன்று.
பெருமழை – மிகு மழை.
பெருமன் - பருத்தது.
பெருமா – யானை.
பெருமாகோதையர் - சேரமான் பெருமான்.
பெருமாட்டி – தலைவி.
பெருமாந்தம் – ஒருநோய்.
பெருமாரி – பெருமழை.
பெருமான் - முருகன், திருமால், பெருமையிற் சிறந்தோன்.
பெருமான் - அரசன், குரு, சிவபிரான், தலைவன், திருமால், பெருமையிற் சிறந்தோன், மூத்தோன்.
பெருமிட்டை - பீநாறி.
பெருமிதம் - களிப்பு, மிகுதி.
பெருமிழலைக்குறும்பநாயனார்-இவர்பெருமிழலை யென்னு மூரிலே வாழ்ந்த ஒரு சிவபத்தர், இவர் சுந்தரமூர்த்திநாயனார் கைலாயமடைவதைத் தமது யோகப் பிரத்தியக்ஷத்தா லறிந்துபோக முயற்சியினாலே பிரமரந்திரந் திறந்துசென்று முத்தியடைந்தவர்.
பெருமீன் - யானைமீன்.
பெருமுசட்டை - ஒருபூடு.
பெருமுட்டி – கூடம்.
பெருமுத்தரையர் – செல்வர், சொந்தப் பொருட்காரர்.
பெருமூலை - ஒருவகைப்பாடு.
பெருமூச்சு - நெடுமூச்சு.
பெருமை - ஆங்காரம், பொலிவு, மாட்சிமை.
பெருமைபண்ணுதல் - ஆங்காரங்காட்டுதல்.
பெருமைபாராட்டுதல் - வீம்புபேசுதல்.
பெரும்பசிரி - ஒருகீரை.
பெரும்பஞ்சமூலம் - தழுதாழைபாதிரி, பெருங்குமிழ், வாகை, வில்வம்.
பெரும்படி - பரும்படி.
பெரும்படை - ஒரு தேவகூட்டம்.
பெரும்பதி - தலைக்கிராமம், மருங்கிலூர் சூழ்பதி.
பெரும்பதுமனார் – இவர் புறநானூற்றிற் கூறப்பட்ட புலவருளொருவர்.
பெரும்பயறு - ஒருவகைப்பயறு.
பெரும்பயன் - மிகுபேறு.
பெரும்பாக்கு - அசட்டைத்தனம்.
பெரும்பருந்து - கூகை.
பெரும்பறவை - எண்காற்புள், சரபம்.
பெரும்பறை – ஒருவகைத்தோற்கருவி.
பெரும்பற்றப்புலியூர் - சிதம்பரம்.
பெரும்பனசை, பெரும்பனையன் } மசூரிகையினோர் வகை.
பெரும்பாடு - தீட்டுதிரமிறைப்பு.
பெரும்பாணாற்றுப்படை - இது பத்துப்பாட்டிலொன்று, கச்சிநகரத்திருந்த தொண்டைமானிளந் திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.
பெரும்பாந்தள், பெரும்பாம்பு } ஒருபாம்பு.
பெரும்பாலும் - மிகுதியும்.
பெரும்பாவி - மிகுபாவி.
பெரும்பாழ்வெளி - சூனியவெளி, துவாதசாந்தம்.
பெரும்பாற்சொற்றி - ஒருபூடு.
பெரும்பான்மை - மிகுபான்மை.

பெரும்பிரண்டை }
பெரும்புரண்டை } ஒரு பிரண்டை
பெரும்புலால் - பெருமீன்.
பெரும்புலி - ஒருபுலி.
பெரும்புழுக்கல் }
பெரும்புழுக்கு } பேரவியல்.
பெரும்புன் - கூகை.
பெரும்புரு - ஒருபுரு.
பெரும்பூண் - பதக்கம்.
பெரும்பூழை - கதவிலிடும்வாயில்.
பெரும்பூளை - ஒருபூடு.
பெரும்பேச்சு - பலரறிசொல்.
பெரும்பெருக்கு - பெருவெள்ளம்.
பெரும்பெயர் - பராசியம்.
பெரும்பொங்கல் - ஊர்ப்பொங்கல், தைப்பொங்கல்.
பெரும்பொழுது - ஆறுபருவம் அவை கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில்.
பெரும்போகம் - பேரனுபவம்.
பெருவண்ணம் - இசைப்பா வகையுளொன்று.
பெருவயிறு - ஒருநோய், குடவயிறு.
பெருவலி - பெருநோ.
பெருவல் - தூக்கத்தில் பிதற்றல்.
பெருவழக்கம் }
பெருவழக்கு } பலராலும் வழங்கப்படுவது.
பெருவள்ளி - ஒரு கிழங்குக்கொடி.
பெருவாகை - ஒருமரம்.
பெருவாஞ்சை - பேராசை.
பெருவாரி - கொள்ளைநோய்,
பெருவாரிக்காய்ச்சல் - கோதாரிக்காய்ச்சல்.
பெருவாழ்வு - மிகுசெல்வம்.
பெருவிடை - நெடுவிடை.
பெருவியாதி - இரத்தநோய், குஷ்டம், மகூரிகை, தொழுநோய்.
பெருவிரியன் - ஒருபாம்பு.
பெருவெக்கைநோய் - வாந்திபிராந்தி.
பெருவெளி - ஆகவெளி.
பெருவெள்ளம் - மிகுவெள்ளம்.
பெருவெள்ளை - ஒருநெல்.
பெலக்குதல் - பலத்தல்.
பெலசாலி - பெலனுள்ளோன்.
பெலட்சயம் - பெலவீனம்.
பெலத்தல் - பலப்படல், மிகுத்தல்.
பெலபிடி - பெலன், பேருதவி.

பெலப்படுதல் - உறுதிப்படல், திரப்படுதல்.
பெலப்படுத்துதல் - உறுதிப்படுத்துதல், திரப்படுத்துதல்.
பெலப்பித்தல் - பெலப்படுத்துதல்.
பெலப்பு - உதவி, பெலன்.
பெலப்பேறுதல் - பெலப்படுதல்.
பெலம் - பலம்.
பெலவந்தம் - பலவந்தம்.
பெலவறுதி - பலஹீனம்.
பெலன் - உறுதி, வலிமை.
பெலன்செய்தல் - உறுதிப்படல், பலித்தல், வலிமை கொள்ளுதல்.
பெலி - காணிக்கை.
பெலிபீடம் - பலிபீடம்.
பெல்லி - சூனியம் தறட்டியின்முள்,
பெல்லித்தடி - பூட்டைப்பிடி. [பிசாசம்.
பெறல் - பெறுதல்.
பெறுவிலை - அதிகவிலை, குறைந்தவிலை.
பெறக்கல் - பொறுக்கல்.
பெறுதல் - அடைதல், கிடைத்தல், பிரசவித்தல்.
பெறுதி - பெறுதல், பெறும்விலை.
பெறுத்தல் - பெறுவித்தல்.
பெறுமதி - உறுதி, தகுதி, திராணி, பெறும்விலை, வெகுமதி.
பெறுமானம் - பெறத்தக்கவிலை.
பெறுவகொள்வோர் }
பெறுவதுகொள்வோர் } க்ஷத்தியர், வைசியர்.
பெற்றத்துவசன் - சிவபிரான்.
பெற்றப்பாகன் }
பெற்றமேறி } சிவபிரான்.
பெற்றம் - இடபவிராசி, எருது, காற்று, பசுசாதிப் பொது.
பெற்றம்பெற்றவன் - பீமன்.
பெற்றவூர்தி - சிவபிரான்.
பெற்றார் - ஈன்றார்.
பெற்றி }
பெற்றிமை } குணம், தன்மை.
பென்னம்பெரிது - மிகப்பெரிது.

பே

பே - ஓரெழுத்து, நுரை, மேகம்.
பேகடம் - ஒருவகை மீன்.

பேகம் - தவளை - முகில்.
பேகன் - ஆண்தவளை, கடையெழு வள்ளல்களுளொருவன். இவன் கபில பாணர்களுக்குப் பேருபகாரியாயிருந்த ஒரு மலைநாட்டரசன், இவனது இராஜதானி நல்லூர், இவன் மனைவி பெயர் கண்ணகி, அவளைத் துறந்திருந்த இவனைக் கைக்கிளைவகைப் பாடாண் பாட்டாற் பாணர் பாடினர்.
பேகி - பெண்டவளை.
பேசகம் - ஆந்தை,கூகை முகில்,யானைவாலடி, யானைவாலுனி, வாயில்.
பேசகி - யானை.
பேசலம் - உலக்கை, ஊமை, குயில், தகுதி, மிருது.
பேசலன் - சிவபிரான்.
பேசல் - சொல்லல்.
பேசாதபேச்சு - அசப்பியம்.
பேசாநிலை - மோகநிலை.
பேசாவநுபூதி - மௌனாநுபவம்.
பேசாமை - மௌனம்.
பேசி - இடியேறு, உடை, ஒருயாறு, தசை, நரம்பு, பூமொட்டு, முட்டை.
பேசிகோசம் - முட்டை.
பேசிலம் - யானை.
பேசுதல் - பறைதல்.
பேசுவாயன் - பரிந்துபேசுபவன், வாயாடி.
பேச்சல் - பறைச்சல்.
பேச்சழிதல் - பேச்சுத்தப்புதல்.
பேச்சறுதல் - மௌனம்.
பேச்சறுதி - தீர்மானம்.
பேச்சற்றவன் - பேசமாட்டாதவன், பொய்யன், மௌனி.
பேச்சாட்டுத்துணை - பேச்சுத்துணை.
பேச்சாளி - சொல்லாளி, நிதானி.
பேச்சி - ஒரு பெண்பேய்.
பேச்சு - சம்பாஷணை, சொல்,பாஷை, பேசுதல்.
பேச்சுக்குற்றம் - சொற்குற்றம்.
பேச்சுக்கொடுத்தல் - பேச்சுவளர்த்தல்.
பேச்சுநடத்தல் - சம்பாஷித்தல்.
பேச்சுவளர்த்தல் - நீடிக்கப்பேசல்.
பேச்சுவாயன் - வாயாடி.
பேச்சுறுதி - பேச்சுநிதானம்.
பேடகம் - கூடை, திரள்.
பேடணம் - திரிகைக்கல், பொடிசெய்தல்.
பேடம் - தெப்பம், வெள்ளாடு.
பேடர் - அலியர்.
பேடாடல் - மன்மதன் கூத்து.
பேடி - அலி, பெண்ணுடு.
பேடிகை - கூடை.
பேடிசம் - மயக்கு.
பேடிசவித்தை - மயக்குத்தொழில்.
பேடியர் - அலியர்.
பேடு - அலி, ஊர், காமனுடல், பறவைப்பெண், பெண்.
பேடுமூஞ்சி - பெண்முகம்.
பேடை - கூடை, பறவைப்பெண்.
பேட்டி -பெரியவரது வரவு காத்திருத்தல்.
பேட்டை - நகரத்தருகுஞ் சந்தை கூடலுமாகியவூர், பட்டைக்கரை.
பேணகம் - ஒருபணிகாரம்.
பேணம் } பேணுதல்.
பேணாவு }
பேணலர் - பேணார்.
பேணல் - ஆசைப்பெருக்கம், கருத்து, காத்தல், குறித்தல், விரும்பல்.
பேணாமை - போற்றாமை.
பேணார் - பகைவர்.
பேணுதல் - பேணல்.
பேண் } தலாத்தாங்கி, பேணென்
பேண்மரம் } னேவல்.
பேதகமணி - வெண்காரம்.
பேதகம் - பேதம்.
பேதகன் - தப்பிதகாரன்.
பேதசைவம் - ஒருசைவம்.
பேததாரணை - நவதாரணையிலொன்று, அது இயமாதி யோகசாதனையாற் பிராணன் அபானன் உதானன் வியானன் எனு நான்கு வாயுக்களையுஞ் சமான வாயுவுடன் சேர்த்து அதோமுகமாயிருக்கு மிதயகமலத்தைப் பிராணவோச்சாரணத்தா லூண்முகமாக்குவது.
பேதகம் - பன்றி.
பேதமை - அறிவின்மை.
பேதம் - ஒவ்வாமை, சிவாகமமிருபத்தெட்டிலொன்று, திரிபு, பகுப்பு, பகை, வினை, வேற்றுமை.
பேதலித்தல் - மறப்பு, இது உபாயநான்கிலொன்று,வேற்றுமைப்படல்.
பேதலிப்பு } வேற்றுமை.
பேதலிமை }

பேதனம் - பேதிப்பு, இது அட்டகரு மத்தொன்று.

பேதாதிபேதம் } பலபேதம்.
பேதாபேதம் }

பேதாளு - ஒருவிதை.

பேதி - இரதம், கழிச்சல், சேர்வாளம், பேதமானவன், பேதிப்பது, பேதியென்னேவல், வெளி.

பேதிகாரி - ஆற்றுத்தும்மட்டி, பேதி மருந்து, பேய்க்குமட்டி.

பேதிதம் - பிளத்தல்.

பேதித்தல் - பகைத்தல், விரோசனித்தல், வேற்றுமைப்படுதல், வேற்றுமைப்படுத்தல்.

பேதிபண்ணுதல் - விரோசனஞ் செய் [தல்.

பேதிப்பு - பேதம்.

பேது - மதிமயக்கம்.

பேதுரம் - வச்சிராயுதம்.

பேதுறல் - பேதுறுதல், மதிமயங்குதல்,

பேதுறவு - மதிமயக்கு.

பேதுறுதல் - புத்திகலங்குதல்.

பேதை - அறிவிலான், ஏழு வயதுப் பெண், சுபாவி, தரித்திரன், பெண், பேடி, பேதைமை - அறிவின்மை, ஏழைமை, சுபாவம்.

பேதையர் - அறிவீனர், ஏழுவயதிற் பெண்கள், கீழ்மக்கள், தரித்திரர், பாலகிலமகளிர்.

பேத்தி - பேர்த்தி.

பேத்துவம் - அமுதம், நெய். [தை.

பேத்தை - ஒருமீன், கெளிசு, பற்பேத்

பேத்தைப்பற்றுதல் - கெளிசுபற்றுதல்.

பேநன் - சந்திரன், சூரியன்.

பேம் - பயம்.

பேயகற்றுதல் - பேயோட்டுதல்.

பேயத்தி - ஒருமரம்.

பேயம் - கஞ்சி, நீர், பால்.

பேயவரை - ஓரவரை.

பேயன் - மதிகேடன்.

பேயன்வாழை - ஒருவாழை.

பேயாடுதல் - பேயுருக்கொள்ளுதல்.

பேயாட்டி - பேய்வித்தைக்காரன்.

பேயாட்டுதல் - பசாசையுருக்கொள்ளுவித்தல்.

பேயாமணக்கு - ஓராமணக்கு.

பேயாவிரை - ஒரு ஆவிரை.

பேயாழ்வார் ஒருவைணவாசாரியர், முதலாழ்வார்களாகிய மூவருளொருவர், இவர் பூதத்தாழ்வார் அவதரித்த மற்றைநாள் திருமயிலையில் ஒருவாவியிலே செவ்வல்லிமலரிலே யவதரித்தவர், மூன்றாந் திருவந்தாதி பாடினவர் இவரே.

பேயுள்ளி - ஒருள்ளி.

பேயுறைதல் - பேய் குடிகொள்ளுதல்.

பேயூடம் } அமுதம், ஈன்றவேழாநாட் கறக்கும்பால், நவநீதம்.
பேயூஷம் }

பேயூமத்தை - மருளுமத்தை.

பேயேற்றுதல் - பேயை யேவிவிடுதல்.

பேயோடாடி - சிவபிரான்.

பேயோட்டி - ஒருமரம், பேய் துரத்துவோன்.

பேயோட்டுதல் - பேயகற்றல்.

பேயோணன் - ஒருவகை ஓணன்.

பேய் - பிசாசம், மதிகெட்டது.

பேய்க்கண் - அஞ்சத்தக்கவிழி, வெருண்டபார்வை.

பேய்க்கண்டல் - ஒருமரம்.

பேய்க்கரும்பு - ஒருகரும்பு.

பேய்க்கனி - பேயன் வாழைப்பழம்.

பேய்க்காடு - பேயுறையுங்காடு.

பேய்க்காளான் - ஒருகாளான்.

பேய்க்குணம் - பேய்த்தனம்.

பேய்க்குப்பார்த்தல் - பேயைத் துரத்துதல்.

பேய்க்குமட்டி - ஒருசெடி.

பேய்க்குறை - பேய்த்தொடர்ச்சி.

பேய்க்குன்றி - ஒருகுன்றி.

பேய்க்கூண்டு - மாயவித்தை படிக்குமோரிடம்.

பேய்க்கொம்மட்டி - பேய்க்குமட்டி.

பேய்க்கோட்டாலை - பேய்க்குறை.

பேய்க்கோலம் - கோலக்கேடு.

பேய்ச்சத்தம் - அவசத்தம்.

பேய்ச்சாளை - ஒருமீன்.

பேய்சசி - பேய்க்குணமுள்ளான்.

பேய்ச்சுரை - ஒருசுரை.

பேய்த்தக்காளி - ஒருசெடி.

பேய்த்தண்ணீர் - மதுநீர்.

பேய்த்தனம் - அறிவின்மை.

பேய்த்திமிட்டி - ஒருபூடு.

பேய்த்தும்பை - ஒருதும்பை.

பேய்த்தும்மட்டி - பேய்க்கொம்மட்டி.

பேய்த்தேர் - கானல்.
பேய்நரி - வெறிநரி.
பேய்நாய் - வெறிநாய்.
பேய்பிடித்தல் - பிசாசுபிடித்தல்.
பேய்ப்பசலை, பேய்ப்பயலை } ஒருகீரை.
பேய்ப்பலவன் - படுவன்கீரை.
பேய்ப்பள்ளி - பேய்க்கூண்டு.
பேய்ப்பாகல் - ஒருபாகல்.
பேய்ப்பார்வை - மருட்பார்வை.
பேய்ப்பாற்சொற்றி - ஒருபாற்சொற்றி.
பேய்ப்பிடி - வீண்பிடி.
பேய்ப்பிரம்பு - ஒருபிரம்பு.
பேய்ப்பீர்க்கு - ஒருபீர்க்கு.
பேய்ப்புடல், பேய்ப்புடோல் } ஒருபுடோல்.
பேய்ப்புத்தி - மதியீனம்.
பேய்ப்புல் - கணைப்புல்.
பேய்ப்போக்கு - ஒழுங்கின்மையான நடை.
பேய்மகள் இளவெயினி - சேரமான் பாலையாடிய பெருங்கடுங் கோவைப் பாடினவள், இவளை மாறுடவுருக் கொண்டுவந்த வொருபேயென்பாரு முளர்.
பேய்மகன் - கெட்டவன்.
பேய்மருட்டி - ஒருசெடி.
பேய்மனம் - அங்கலாய்த்தமனம்.
பேய்மாடி - புளிநறளை.
பேய்முகம் - அவலட்சணமுகம்.
பேய்முசட்டை - ஒருகொடி.
பேய்முல்லை - ஒருகொடி.
பேய்முன்னை - ஒருமரம்.
பேய்வித்தை - சூனியவித்தை.
பேய்வெருட்டி - ஒருபூடு.
பேரகத்தி - ஓரகத்தி.
பேரடம் - வெண்ணொச்சி.
பேரடிபடுதல் - பெயர்பிரபல்யமாகுதல்.
பேரணி - நடுச்சேனை.
பேரணிகலம் - பெரும்பதக்கம்.
பேரண்டம் - உலகம், நரி.
பேரத்தி - கறிமுள்ளி.
பேரப்பிள்ளை - பாட்டப்பிள்ளை.
பேரமட்டி, பேரமுட்டி } ஒருசெடி.
பேரம் - உடல், காஸ்மீரதேயம், பேரிகை.
பேரம்பலம் - சிதம்பரத்துச் சபைகளில் ஒன்று.

பேராத்தை - பஞ்சமூலத்தொன்று.
பேரவம் - நரி.
பேரவன் - அரக்கன், அரசன்.
பேரவியல் - பெரும்புழுக்கு.
பேரருளுடைமை - கடவுளெண்குணத் தொன்று.
பேரருள் - பெருங்கருணை.
பேரறிவு - ஞானம், மூதறிவு.
பேரறுகு - ஒரு அறுகம்புல்.
பேரன் - பெயரன்.
பேரன்புடைமை - மிகுந்தவன்பாயிருத்தல், இது அறத்துறுப்பி னொன்று.
பேராசிரியர் - ஒருரையாசிரியர்.
பேராசை - மிகுவாசை.
பேராட்டி - பெருமையுடையவள்.
பேராண்டு - அறுபதுவருடங்கொண்ட காலம்.
பேராண்மை - அரியசெயல், வீரம்.
பேராந்தை - கூகை, நிலாமுகிப்புள்.
பேராமட்டி - பேரமட்டி.
பேராமணக்கு - ஓராமணக்கு.
பேராமல்லி - ஒருமல்லிகை.
பேராமுட்டி - ஒருகொடி.
பேராலவட்டம் - ஓராலவட்டம்.
பேராவூரான் - இவன் தொண்டை நாட்டுப் பேராவூரில் வாழ்ந்த ஒரு வேளாளப்பிரபு, புலவருக்குப் பொன்மாறி பொழிவோன், நந்தனைத் தன்னருகேயிருத்திப் புலையனென்று அருவருக்காமல் அவருடனிருந்துண்டோன்.
பேராழம் - பெரியஆழம்.
பேராழி - பெருங்கடல்.
பேராழிமாமுனி - திருவள்ளுவர் தந்தை.
பேராளன் - கீர்த்தியுடையோன், மிருகசீரிடம்.
பேராளி - பேருள்ளவன்.
பேராளிமாமுனி - வள்ளுவன் றந்தை.
பேராறு - சேரநாட்டுள்ளதோராறு.
பேரானந்தம் - மோட்ச சந்தோஷம்.
பேரி, பேரிகை } பறைப்பொது, முரசு.
பேரிடி - முழக்கம்.
பேரிடுதல் - நாமஞ்சூட்டுதல்.
பேரியாழ் - நால்வகையாழிலொன்று.
பேரிலக்கம் - முழுவிலக்கம்.
பேரிளம்பெண் - நாற்பதுவயதுப்பெண்.

பேரின்பம் - ஆனந்தம், மோட்ச சந்தோஷம்.
பேரிகம் - வட்டத்திருப்பி.
பேரிச்சு
பேரிஞ்சு } ஒருமரம்.
பேரிந்து
பேரு - சமுத்திரம், சூரியன், தீ, பொன்மலை.
பேருண்டம் - கருப்பந்தரித்தல், பயம், பறவை விசேடம்.
பேருண்டி - பேருணவு இது தாமத குணத்தொன்று.
பேருந்தம் - நரி.
பேருமரி - ஒருபூடு.
பேருயிர் - பெருங்காற்று.
பேருரியோர் - சக்கிலியர்.
பேருறி - திடவத்தாட்சி.
பேரூர் - பெரும்பதி, மேலைச்சிதம்பரம்.
பேரூழி - உருத்திரசங்காரம்.
பேரெடுத்தல் - கீர்த்திபெறுதல்.
பேரெடுபடுதல் - பிரபலமாதல்.
பேரெண் - அளவடியீரடியாக இரண்டுவருவது, பேரிலக்கம்.
பேரெயின்முறுவலார் - நம்பிநெடுஞ்செழியனைப்பாடிய புலவர்.
பேரெல்லைவெண்பா - எட்டடிவெண்பா.
பேரெழும்புதல் - பிரபலமாதல்.
பேரேடு - கணக்கேட்டிலோர்வகை, பெயர் கணக்கேடு.
பேரொலி - மிகுவொலி.
பேரொளி - மிகுபிரபை.
பேரோசை - பேரொலி.
பேர் - பெயர், பெரிய.
பேர்க்குறி - பெயர்க்குறி.
பேர்ச்சி - பெயர்ச்சி.
பேர்தரித்தல் - நாமஞ்சூட்டல்.
பேர்தல் - பெயர்தல்.
பேர்த்தல் - பெயர்த்தல். [திரி.
பேர்த்தி - பாட்டி, பெயர்த்தி, பௌத்திரி.
பேர்வழி - பேரட்டவணை, வமிசவரிசை.
பேலகம் - தெப்பம்.
பேலம் - சிறுபங்கு, பீசம், போதல்.
பேலவம் - மிருது.
பேலன் - தீரன்.
பேலி - குதிரை.
பேலிகை - எச்சில்.
பேலுதல் - மலங்கழித்தல்.
பேழை - பேடகம், பெட்டி.
பேழ் - பெருமை.
பேழ்வாய் - பெருவாய்.
பேறு - இலாபம், ஒன்று, கொடை, செல்லல், நல்லூழ் பெறுதல், வரம், வாய்ப்பு.
பேறுகாலம்
பேற்றுக்காலம் } பெறுங்காலம்.
பேனம் - நுரை.
பேனவர்கி - இடி.
பேனுக்கிரம் - நீர்க்குமிழி.
பேனுசனி - இந்திரன்.
பேன் - தலையிற்பற்றும்பூச்சி.

பை

பை - அழகு, ஓரெழுத்து, குடர், சாக்கு, நிறம், பசுமை, பச்சைநிறம், பாம்பின்படம், பையென்னேவல், பொக்கணம், மந்தக்குணம், மெத்தெனவு.
பைகோ
பைகோவு } ஒருதேயம்.
பைகோவை
பைகோவைச்சிவப்பு - ஒருவகை மாணிக்கம்.
பைக்கம் - பிச்சை.
பைக்கூறை - பை.
பைங்கண் - பசியகண்.
பைங்கழை - பசுமையானமூங்கில்.
பைங்காய் - பசுங்காய்.
பைங்கிளி - பச்சைக்கிளி.
பைங்கூழ் - நோய், பயிர்.
பைங்கொடி - பசுங்கொடி.
பைசந்தி - வாக்குநான்கினொன்று.
பைசாசநிலை - ஒருதாளினின்று மற்றைத்தாண் முடக்கிநிற்றல், இது யுத்தநிலை நான்கினொன்று.
பைசாசமணம் - துயின்றுழிச்சென்றுகூடுங் கூட்டம்.
பைசாசம் - இரும்பு, ஒருமணம், ஒரு யுத்தநிலை, பிசாசம்.
பைசாசி - இராக்கதத்தி, சடாமாஞ்சில், பிராகிருத பாஷைகளு ளொன்று, இது பைசாசி குளிகையென்றும் வழங்கும், இது பிசாச தேசங்களில்

பேசப்படுவது. கேகயம், நேபாளம், பாகிலிகம் முதலிய தேசங்கள் பிராசதேசங்க ளெனப்படும்.
பைசார் - ஒருதொடுதோல்.
பைசுனம் - உலோபத்தனம்.
பைஞ்ஞீலம் - பசியநீலம், மக்கட்பரப்பு.
பைஞ்ஞீலி - ஒரு சிவஷேத்திரம்.
பைஞ்ஞீல் - பைஞ்ஞீலம்.
பைண்டின்னியம் - யாசகம்பண்ணி வயிறு வளர்த்தல்.
பைதல் - துன்பம், பையல்.
பைதிரம் - நாடு.
பைத்தம் - பித்தம்.
பைத்தல் - கோபம், சினக்குறிப்பு, துன்பம், பசுமையாதல், பாம்பு படம் விரித்தல்.
பைத்திகம் - பைத்தம்.
பைத்தியக்காரன் - பித்தன்.
பைத்தியம் - பயித்தியம்.
பைத்திராகோராத்திரம் - பிதிர்களின் ஓர்நாள் அது மனிதருக்கோர் மாதம்.
பைத்து - பசுமை.
பைத்ருகதநம் - பிதுரார்ஜிததநம்.
பைத்ருகபூமி - பிதுரார்ஜிதபூமி.
பைத்ருகம - பித்ருசம்பந்தம்.
பைந்தார் - பசியபூமாலை.
பைந்தினை - ஒருதினை.
பைந்தொடி - பச்சைவளையல், பெண்.
பைந்நாகம் - சர்ப்பம்.
பைபீலம் - எறும்பு.
பைபீலவாதம் } எறும்புகளின் பேச்சறிதல், அது கலைஞான மறுபத்து நான்கின் ஒன்று.
பைபீலிகாவாதம் }
பைபீலிகை - எறும்பு.
பைபைய - மெல்லமெல்ல.
பைமை - தவப்பெண், பசுமை.
பைம்பூண் - பொன்னுபரணம்.
பைம்பொன் - பசும்பொன், மேருகிரி.
பைய - மெல்ல.
பையல் - பயல்.
பையன் - சிறுவன்.
பையுள் - அற்பம், சிறுமை, துன்பம், நோய்.
பையெனல் - மந்தக்குறிப்பு.
பையோடதி - பச்சைக்கொடி, [ன்று.
பைரவம் - அச்சம், உட்சமயமாறிலொ

பைரவன் - சிவன், வயிரன், சிவமூர்த்தங்களுளொன்று.
பைரவி - ஓர்ராகம், காளி.
பைராகி - வைராகி.
பைபலவான் } ஓர்ருடி.
பைலன் }
பைவுன் - ஒரு வேதவியாசர் மாணக்கருளொருவன், ருக்வேதாத்யாபகன், ஜாதகர்ணி சீடன்.

பொ

பொகுட்டு - சேற்றிலெழுங்குமிழி, தாமரைக்கொட்டை, மலை.
பொகுத்தல் - பொத்தல் செய்தல்.
பொக்கசம் - திரவியசாலை, திரவியம்.
பொக்கசவைப்பு - புதைத்ததிரவியம்.
பொக்கணப்பிச்சி - முடக்கொத்தான்.
பொக்கணம் - ஒருவகைப்பை, சோளி, பெருமருந்து.
பொக்கணி - ஒருபானபாத்திரம், குழியுரல், விரிந்ததொப்புள்.
பொக்களை - கல்வளை, குழியுரல், மரப்பொந்து.
பொக்கம் - பொய், பொலிவு, மிகுதி.
பொக்கல்வாய் - பொக்குவாய்.
பொக்கிஷக்காரன் - திரவியவான், பொக்கிஷ விசாரணைக்காரன்.
பொக்கிஷம் - பொக்கசம்.
பொக்கிலவணம் - திலாலவணம்.
பொக்கு - குற்றம், பொள்ளல்.
பொக்குப்பொக்கெனல் - ஒலிக்குறிப்பு.
பொக்குவாய் - பல்லற்றவாய்.
பொக்குளித்தல் - கொப்புளித்தல்.
பொக்குளிப்பான் - கொப்புளிப்பான்.
பொக்கெனல் - விரைவின்குறிப்பு.
பொக்கை - சிறுதிவலை.
பொக்கைவாய் - பொக்குவாய்.
பொக்கைவாய்ச்சி - பொக்குவாய்ச்சி.
பொங்கடி - யானை. [லிவு.
பொங்கம் - கெற்பு, பரிமளிப்பு, பொ
பொங்கர் - இலவமரம், சோலை, மரக்கொம்பு, மலை, வாடற்பூ.
பொங்கலாண்டி - பொங்கற்காரன்.
பொங்கல் - உயர்ச்சி, கிளர்தல், சமைத்தல், பொலிதல், மிகுதி, கள்.

பொக்கழி - நாற்றுநெல்.
பொங்காரம் - பொங்கல், மிகுதக்கம்.
பொங்குசனி - இரண்டாமுறை ஏழரையாய் வருஞ்சனி.
பொங்குதல் - கொதித்துக் கிளர்தல், கோபித்தல், சாதஞ்சமைத்தல், கொதித்தல், பொலிதல்.
பொசிதல் - இரகசியம்வெளித்தல், கசிதல், நீரரும்பல், நீர்பறிதல்.
பொசித்தல் - புசித்தல்.
பொசிவு - அருசிச்செல்லல்.
பொசுக்குதல் - சுடுதல்.
பொசுங்கல் - கருகினது, கருகுதல்.
பொசுங்குதல் - வெம்மையாற்றீய்தல்.
பொசுபொசுத்தல் - இரகசியம்பேசல், கொஞ்சங் கொஞ்சமாய் வெளிப்படுதல்.
பொசுபொசெனல் - ஒலிக்குறிப்பு.
பொச்சடித்தல் - வெறுநாக்கடித்தல்.
பொச்சம் - அவா, உணவு, குற்றம், தேங்காய்மட்டை, விருப்பம்.
பொச்சாத்தல் } பொல்லாங்கு,
பொச்சாப்பு } மறதி.
பொச்சாலிநெல் - ஒருநெல்.
பொச்சாவாமை - மறவாமை.
பொச்சு - பொய்ச்சு, பயனில்லது.
பொச்சை - கரிகாடு, காடு, சிறுமலை, புழுக்கூடு, மலை.
பொஞ்சுதல் - ஒவ்வுதல், செழித்தல்.
பொடி-சிறிசு, சூரணம், பஸ்மம், பராகம், புழுதி, பொடியென்னேவல்
பொடிச்சி - சிறுபெண்.
பொடிச்சிலை - மஞ்சட்கல்.
பொடிதல் - கெடுதல், திட்டுதல், தூளாதல்.
பொடித்தல் - கெடுத்தல், தூளாக்கல், மயிர்சிலிர்த்தல், முளைத்தல்.
பொடிபண்ணல்-தண்டித்தல், மாவாக்கல், சுண்ணமாக்கல்.
பொடிபொடிதல் - மிகத்தூளாதல்.
பொடிபொட்டு - சிறியது, பதரானது.
பொடிப்பு - புளகம்.
பொடியன் - சிறுவன்.
பொடியாதல் - துகளாதல்.
பொடிவிளக்கணம் - பொன் முதலியவற்றைப் பொருத்திச்சுடுதல்.
பொடிவு - திட்டு, பொடிதல்.

பொடிவெட்டி - பொன்வெள்ளி முதலிய வெட்டுங் கத்திரிகை.
பொடுகன் - சிற்றூன்.
பொடுகு - ஒருபூடு, சிறிசு, சொடுகு.
பொடுதலை - ஒருபூண்டு.
பொடுபொடுத்தல் } அநுகரணம், ஒரு
பொடுபொடுப்பு } குறிப்பு, காய்
பொடுபொடெனல் } தல், சீக்கிரக் குறிப்பு.
பொட்டணம் } ஒத்திடும் மூட்டை,
பொட்டணி } பொதி.
பொட்டலம் - பொட்டணம்.
பொட்டல் - கரம்பு.
பொட்டனி - பொட்டணம்.
பொட்டிலுப்பு - வெடியுப்பு.
பொட்டில் - பொதி.
பொட்டு - ஒருபூச்சி, சங்கை, தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நுழைவழி, நெற்றித்திலகம்.
பொட்டுக்கட்டுதல் - தாலிகட்டுதல்.
பொட்டுக்குலைதல் - சங்கைகெடுதல்.
பொட்டுக்குத்துதல் - திலகமெழுதல்.
பொட்டுக்கேடு - சங்கைகேடு.
பொட்டுத்தாலி - பொட்டாகாரத்தாலி.
பொட்டுப்பூச்சி - ஒரு சிலந்திப்பூச்சி.
பொட்டெனல் - சீக்கிரக்குறிப்பு.
பொட்டை-குருடு, கூசியகண்.
பொதி - அம்பலம், ஓலைக்குடை, கரிகாடுபொதியப்பட்டது,பொதியமலை, பொதியென்னேவல், மலரரும்பு, மூட்டை.
பொதிகாரன் - பொதிமாடு செலுத்துவோன்.
பொதிகை - பொதியம்.
பொதிசோறு - கட்டுச்சோறு.
பொதிதல் - திணித்தல், மறைத்தல்.
பொதிப்போதா - பெருநாரை.
பொதிமாடு - பொதியெருது.
பொதியமுனி - அகத்தியன்.
பொதியம் - தென்மலை, மலயமலை.
பொதியவிழ்த்தல் - கட்டுமு தவிழ்த்தல், பூ முதலிய விரிதல்.
பொதியவெற்பன் - பாண்டியன்.
பொதியறை-அவாரமில்லாத கீழறை.
பொதியன் - அகத்தியன்.
பொதியில் - அம்பலம், பொதியமலை, பாண்டி நாட்டிலுள்ளதொரு மலை,

இது தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பொதுவிடமா யிருத்தலால் இப்பெயர் பெற்றது.
பொதியெருது - பொதியெடுக்கு மெருது.
பொதிர் - நடுக்கம், பொதிரென்னேவல், மிகுதல்.
பொதிர்தல் - மிகுதல்.
பொதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.
பொதிர்வு - பொதிப்பு, மிகுதல்.
பொதிவு - பொதிதல்.
பொதின்பொதினெனல் } ஒலிக்குறிப்பு.
பொதிர்பொதிரெனல் }
பொது - சாதாரணம், பலர்முன்னிலே.
பொதுக்கட்டுதல் - நடுக்கட்டுதல்.
பொதுக்கு - ஒதுக்கு, பொதுக்கென்னேவல், மறைப்பு.
பொதுக்குதல் - மறைத்தல்.
பொதுச்சீர் - நான்கசையாய்வருஞ்சீர்.
பொதுச்சூத்திரம்-தொகைச்சூத்திரம்.
பொதுச்சொல் - திணை பால் இடம் காலங்களைக் குறித்துப் பொதுவாயிருக்குஞ்சொல், பொதுப்பொருள்.
பொதுத்தல் - துளைத்தல்.
பொதுத்தன்மை - பொதுவியல்பு.
பொதுத்தன்மைத்தொகை - பொதுத்தன்மை தொக்குநிற்பது (உ-ம்.) காந்தட்போதினை நிகர்க்குங்கை.
பொதுத்தன்மையுருபுத்தொகை - பொதுத்தன்மையு முருபுந் தொக்குநிற்பது (உ-ம்) கயற்கண்.
பொதுத்தன்மை யுருபுவமானத் தொகை - பொதுத்தன்மையு முருபுவமானமுந்தொக்கது (உ-ம்)குயிற்கிளவி.
பொதுத்தன்மை யுவமானத்தொகை - பொதுத் தன்மையு முபமானமுந் தொக்கு நிற்பது (உ-ம்) நாசிபோல்வது மற்றுரும்.
பொதுத்திணை - பலதிணைக்கும் பொதுச்சொல்.
பொதுத்திரீ } வேசி.
பொதுஸ்திரீ }
பொதுநடுவர் - மத்தியட்சர்.
பொதுநலம் - பலர்நன்மை.
பொதுநிலம் - எல்லார்க்கும் பொதுவாயிருக்கும் நிலம்.
பொதுநிறம் - பலநிறக்கலப்பு.
பொதுநீங்குவமை - இயைபின்மையணியது உவமையைக்கூறி மறுத்துப் பொருடன்னையே யுவமையாய்க் கூறுவது(உ-ம்)திங்களில் வதனஞ் சிறப்புடைத்ததனல.துவேயதற்கு நிகர்.
பொதுநோக்கம் - பொதுப்பார்வை.
பொதுபொதுத்தல் } ஒலிக்குறிப்பு, மெதுமெதுத்தல்.
பொதுபொதெனல் }
பொதுப்பணம் - பலர்க்கு முரியபணம்.
பொதுப்பெண் - பொதுமகள்.
பொதுப்பெயர் - திணை பால் இடங்களைக்குறித்துப் பொதுவாய்வரும்பெயர்.
பொதுப்பொருள் - பலர்க்கு முரிய [பொருள்.
பொதுமகள் - வேசி.
பொதுமத்தியம் - பொது.
பொதுமனிதன் - நடுவன்.
பொதுமாது - வேசை.
பொதுமுதல் - பங்கானமுதல்.
பொதுமை - பொதுத்தன்மை.
பொதுமொழி - பொதுப்பெயர்.
பொதும்பர் - மரச்செறிவு, மரப்பொந்து. [து.
பொதும்பு - பொந்து.
பொதுவகத்திணை - அகத்திணைப் பொது தனிக்குறுப்பெனப் பலவற்றையடக்கிக் கொள்ளல். [சொல்.
பொதுவசனம் - பலவற்றை நோக்குஞ்
பொதுவடி - இயற்சீருரிச்சீர் பொதுச்சீரென் னும் மூன்று மூம் வருமடி.
பொதுவர் - இடையர். [ப்பு.
பொதுவறுசிறப்பு - தனக்கேயுரிய சிற
பொதுவனுமானம் - ஓரளவை அது சாதனசாத்தியங்களி னொற்றுமையுணராது பொதுவாயனுமானித்தல்.
பொதுவார்த்தை - பட்சபாதமில்லாத [சொல்.
பொதுவி-முல்லைநிலப்பெண்.
பொதுவிதி - பொதுவான நிருணயம்.
பொதுவியர் - இடைச்சியர்.
பொதுவில் - அம்பலம்.
பொதுவெழுத்து - தமிழிற்குமாரியத்திற்கும்பொதுவாய் வழங்குமெழுத்து.
பொதுவைத்தல் - நடுக்கட்டுதல்.
பொதுளல் } செழித்தல், நெருங்குதல்.
பொதுளுதல் }
பொத்தலூசி - துளையூசி.
பொத்தல் - தவாரம், துளைத்தல், புரைதல், மூடுதல்.

பொத்தாறு
பொத்தாறுகட்ஸ் } எர்க்கால்.
பொத்தி-வாழைமுதலியவற்றின்காய்ப் பொத்தி. பிருகுக் கிழங்குத்தோற் பொத்தி.
பொத்திக்கரப்பன் - தண்டுக்கிரந்தி.
பொத்திக்கானான் - ஒருகானான்.
பொத்திதள்ளுதல் - வாழை முதலிய பொத்திபோடுதல்.
பொத்திரை - பாழடைந்த அகழ்.
பொத்தி - ஆண்குறி, தவறு, புரைவு, பெண்குறி, பொத்தென்னேவல், பொந்து, பொய், மூடுதல்.
பொத்துதல்-அடித்தல், புரைதல், மூடுதல்
பொத்துப்பாய் - பருக்கன்பாய்.
பொத்துப்பொத்தெனல்-ஒலிக்குறிப்பு.
பொத்துமான்- ஒருவகைமான்.
பொத்தை - பருத்தது, மட்சிறுமலை.
பொத்தைக்கால் - யானைக்கால்.
பொத்தைச்சி - கும்மலி.
பொத்தையன்-நீர்ப்பிடியான சரீரமுள்ளவன்.
பொந்தர் - ஒருவகை நீர்ப்புள்.
பொந்தி - சரீரம், மரவான், மொத்தி.
பொந்து - மரப்பொந்து, வங்கு.
பொந்தையக்கோல் - ஒருவகைப்பற்றுக் கோல்.
பொம்மலாட்டம் - பாவைக்கூத்து.
பொம்மலி - பருத்தவள்.
பொம்மல் - சோறு, பொம்மை, பொருமல், பொலிவு, மிகுதி.
பொம்மெனல் - அனுகரணவோசை.
பொம்மை - சிறுசுவர், பிரதிமை.
பொய் - அசத்தியம், இது தாமதகுணத்தொன்று, சிறுசிராய், பஞ்சபாதகத்துமொன்று, பொய்யென்னேவல், மரப்பொந்து, வேஷம்.
பொய்கை - குளம், கோட்டான்.
பொய்கையார்-ஒருபுலவன், கோச்செங்கட்சோழனால்சிறைசெய்யப்பட்ட சேரமான் கணைக்காலிரும் பொறையைச் சிறைவிடும்பொருட்டு அந்தச் சோழனைக் களவழி நாற்பது என்னும் நூலாற் பாடியபுலவர், இவர் பிறந்த இடம்தொண்டிநகர், சேரமான் கோக்கோதையும் இவராற்பாடப் பட்டவனே.
பொய்கையாழ்வார் - ஒருவைணவாசாரியர்.
பொய்க்கடி - பருங்கடி.
பொய்க்கண் - கண்மண்டை.
பொய்க்கண்ணி-பிஞ்சுபிடியாதகண்ணி.
பொய்க்கண்ணுறக்கம் - குறைக்கணித்திரை.
பொய்க்கதை - கட்டுக்கதை.
பொய்க்கால் - போலிக்கால்.
பொய்க்கிளை - பிஞ்சுபிடியாதமுளை.
பொய்க்குதல்-பொய்சொல்லுதல், பொய்யாய்ப்போதல்.
பொய்க்குரல் - போலிச்சத்தம்.
பொய்க்குழி-நாற்றுநட்டகுழி, பொறிக்கிடங்கு.
பொய்க்கூடு - சரீரம், பொய்ச்சரீரம்.
பொய்க்கை-ஒருமீன்,பொய்த்தல், போலிக்கை.
பொய்க்கோட்டை - பொய்ப்பிஞ்சு.
பொய்க்கோலம் - நரவேடம், போலிவேடம்.
பொய்சொல்லல் - தப்புப்பேசல் இது வாக்கின் தீக்குணநான்கினொன்று.
பொய்ச்சத்தம் - பொய்குரல்.
பொய்ச்சத்தியம் - பொய்யாணை.
பொய்ச்சாட்சி - கள்ளச்சாட்சி.
பொய்ச்சாதல் - மறத்தல்.
பொய்ச்சு-கொட்டைசளையற்றது, பயனில்லது.
பொய்தல் - தோழி,மகளிர்கூட்டம்,மகளிர் விளையாட்டு.
பொய்த்தலை - போலித்தலை
பொய்க்நீர் - கானல்.
பொய்படுதல் - பொய்யாதல்.
பொய்ப்பத்திரம் - கள்ளச்சீட்டு.
பொய்ப்படுதல் - பொய்படுதல்.
பொய்ப்பிஞ்சு - நிலையாப்பிஞ்சு.
பொய்ப்பு - பொய்த்தல்.
பொய்ப்பூ - பிஞ்சுபிடியாதபூ.
பொய்மயக்கம் - அன்பிலாக்கூட்டம்.
பொய்முளை - பொய்க்கிளை.
பொய்மூக்கு - உண்மூக்கு.
பொய்மை - கரவடம், பொய், பொய்வேஷம், மாயம்.
பொய்யடி - பகடம், வெருட்டு.
பொய்யடிமையில்லாதபுலவர்- மதுரைச்சங்கத்திலிருந்த கபிலர் பாணர் முதலியோர்.

பொய்யன் - பொய்சொல்வோன்.
பொய்யாணை - பொய்சத்தியம்.
பொய்யாதல் - பொய்சொல்லல்.
பொய்யாமை - தவறாமை,பொய்மொழி கூறாமை.
பொய்யாமொழி - சத்தியம்தவறாமை.
பொய்யாமொழிப்புலவர் - தெய்வப்புலவர், துறையூரிலே செங்குந்த குலத்திலேஅவதரித்துத் தமிழ்ப்புலமையும் சாபாநுக்ரஹமும்உடையராயிருந்தஒருதெய்வப்புலவர்,அழிந்துபோன தமிழ்ச்சங்கத்தை மீட்டும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராவலுடையராய் வணங்காமுடிப் பாண்டியனிடஞ்சென்றனர். அவன்இவர்கருத்தையுணர்ந்து புலவரே சங்கந் தாபிக்குஞ்செய்தியைப்பற்றிப்பின்னேயோசிப்போம், இப்போது நமது சிவாலயத்திலே தாபிக்கப்பட்டிருக்கும் சங்கப்புலவர்களுடைய விக்கிரகங்களெல்லாம் தலையசைக்கும்படிப் பாடக்கடவீரென்றான். உடனேயிவர்,"உங்களிலே யானொருவனொவ்வேனொவ்வேனே நிங்கட்குலனறியச்செப்புங்கள், சங்கத்துப் பாடுகின்றமுத்தமிழ்க்கென்னைத்தமிழு மொக்குமோ, ஏடவிழ்தாரேயெழுவீரே" என்னும் வெண்பாவைப்பாடினர், உடனே அந்தவிக்கிரகங்களெல்லாம் தலையசைத்தன. இந்தஅற்புதத்தைக்கண்டும் அப்பாண்டியன் இவரது விண்ணப்பத்தைப்பொருட்படுத்தானாயினன் அது கண்டு, புலவர் தமதுசோணாட்டை நோக்கி, பல்லக்கிலேறி மீண்டார், அப்போது பாண்டியன் மனைவியார் தாமது பல்லக்கேறித்தொடர்ந்துபோயிறங்கி இவருடைய பல்லக்குச் சுமப்போருள் ஒருவராயினர். அதையறிந்த புலவர் நீ எமது பல்லக்குத் தாங்கப் புகுந்த கருத்தையறிந்தேம், யாம் வெகுண்டுஅரசனைச் சபிப்பேமல்லேம், அதற்கு நீ யஞ்சற்கவென்று அவ்வுத்தமியைத்தடுத்து, "உமையாளுநீயு மொருங்கொப்பேயொப்பே, உமையாளுக் கங்குண்டோருனம், உமையாடன், பாகத்தோய்ந்தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின் ஆகந்தோய்ந்தாண்டானரசு" என்று வாழ்த்திப்போயினர். இவர் சோழராஜனது மந்திரியாகிய சீநக்கராயனுக்குப்பிரியாநண்பர், ஒருநாள் சீநக்கராயன் கட்டிலிலே அவனும் புலவருமாகவிருந்து பொழுதுபோய் பின்பு நெடுநேரம் அளவளாவிக்கொண்டிருக்கையில், புலவர் தமக்கு நித்திரைவந்ததென்று கூறி, ராயனைப் போஜநத்துக்குப் போம்படிசெய்து, அந்தக் கட்டிலின் ஒருபக்கத்தில் நித்திரை செய்தனர். ராயன் போஜநஞ் செய்துகொண்டு நிலாமணி மேடையிற்போய் சிறிதுநேரங்கழித்து மீளு முன்னே, ராயன்மனைவியும், அந்தக் கட்டிலிற் படுத்துறங்குகிறவரைத் தன் கணவனென்றெண்ணி ஒருபுறத்திற் படுத்துறங்கினாள், அதன்பின்பு ராயனும்போய் படுத்துறங்கினான், வைகறையிலே புலவர் முன்னேயெழுந்தார், அவ்வரவங்கேட்டு அரசனுமெழுந்தான், புலவர் தம்மருகேராயன்மனைவி படுத்துறங்குவதைக்கண்டு அனுக்குற்று ராயனைநோக்கி, என் செய்தாய் என்றனர், ராயன் அவரை நோக்கி, "அஞ்சாதீர் இப்போதெழுந்திருக்கவேண்டாம் சொல்லக் கிடமின்" என்றான். மனைவி அவ்வொலிகேட்டுப் பதைத்தெழுந்தோடி அந்தப்புரஞ் சேர்ந்தாள்.

ராயன் புலவரைநோக்கி, என் மனையாளைமாத்திரமன்று, உலகத்துப்பெண்களெல்லாரையும் தாய்மாராகக்கொண்டு போற்றுகின்ற உமது பக்கத்திலே யென்மனையாள் படுத்துறங்கினதை யெனது பெரும்பாக்கியமாகக் கொண்டேன் என்றான். அன்று முதலாகப் புலவரும் ராயனும் ஈருயிரும் ஒருடலும் போன்று ஒழுகினர். இவர் சீநக்கராயனிறந்தபோது சோழன் தடுக்கவுங் கேளாமல் மேல்வருங்கவிகளைக்கூறி உடன்கட்டை யேறினர்.

"வாழிசோழ வென்வாய் மொழி கேண்மோ, ஊழிநிலவெறிமாளிகையின்வயிற், கட்டிளங்கணவன் கவின்

பெறசேக்கை, என்றறி மனைவி நெடிது அயில்தொளச், செல்லக்கிடமி னெனக்கிடந்தருகெனச், சொல்லிய நண்பன் றனிச்செல்பவனே, நானுமேகுவ னற்றணையவர்க்கே"

"அன்று நீசெல்லக்கிட வென்றுயாயிழையோ, டின்றநீவானுலகமேறிஞய், மன்றல்கமழ், மானுக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச், சீனக்காசெல்லக்கிட"

இப்புலவர் பெருமானே தஞ்சைவாணன் கோவைபாடினவர், அந்தக் கோவையிலுள்ள சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றையெடுத்துச்சொல்ல வல்லார்யாவர், இவர்தொண்டைநாட்டிலும் சிறிதுகாலம் வசித்தவரென்பதும்அக்காலத்தில் முருகக்கடவுள் தம்வாயால், "விழுந்ததுளியந் தரத்தேவே மென்றும்" எனனுமுதற்குறிப்புள்ள வெண்பாப் பாடப்பெற்றவரென்பதும் தொண்டைமண்டல சதகத்தால் உணரப்படும். இவர் அதிவீரராமபாண்டியனுக்குச் சற்றுமுன்னேயிருந்த வணங்காமுடி பாண்டியன்காலத்தவராதலால் இவர்காலம் ஏறக்குறைய ஆயிரவருஷங்களுக்கு முற்பட்டது. திருவள்ளுவநாயனர்.

பொய்யுடல் - நிலையற்றவுடல்.
பொய்யுறக்கம் - குறைநித்திரை.
பொய்வார்த்தை - பொய்ப்பேச்சு.
பொய்வாழ்க்கை - அநித்தியவாழ்வு.
பொய்வாழ்வு - பொய்வாழ்க்கை.
பொய்வேஷம்-கபடவேஷம்,போலிக்கோலம்.
பொரி-கரிகாடு,நெற்பொரி முதலியன, பொரியென்னேவல்.
பொரிகாரம் - வெண்காரம்.
பொறிக்கறி - பொரியல்.
பொரிதல்-எரிச்சற்படுதல்,தீதல், பொரியாதல், பொருக்குவெடித்தல்.
பொரித்தல் - அலப்பல்,குஞ்சுபிறப்பித்தல், பொரியச்செய்தல், வறுத்தல்.
பொரிபொரிச்சான் - வெடிபலவன்,
பொரிமலர் - புன்கு.
பொரிப்பூண்டு-கரப்பான்பூண்டு, வயற்சுள்ளி.
பொரிமா - பொரியரிசிமா.
பொரிமாச்சிந்தி } விளைண்ணை மென்னுவோன்.
பொரிமாத்தட்டி }
பொரியரிசி - பொரித்தரிசி.
பொரியல் - பொரிக்கறி, பொரிதல்.
பொரிவிளங்காய் - பொரிமாத்திரளை.
பொரிவு - சிலிர்ப்பு.
பொருகளம் - போர்க்களம்.
பொருகு - சோறு.
பொருக்காங்கட்டி - பொருக்குமண்கட்டி.
பொருக்கு - செதின், தகட்டுவெடிவாய் வெடிக்கும் வண்டு.
பொருக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.
பொருட்காட்சியணி - ஓரலங்காரம். அதொன்றன் செய்கையினை னற்பொருளையாயினுந் தீப்பொருளையாயினுந் தெரிவித்தல்.
பொருட்குறைவிசேடம் - பொருட்குறைவினுல் விசேடித்துக் காட்டுவது (உ-ம்) இருநாழிநெற்கொண்டுயிரனைத்தமூட்டும்.
பொருட்சிதைவு - பொருட்சேதம்.
பொருட்சிறப்பு - அருத்தாலங்காரம்.
பொருட்சுவை - அருத்தரசம்.
பொருட்செல்வம் - திரவியசம்பத்து.
பொருட்செல்வி - இலக்குமி.
பொருட்டிரிபு-கருத்துத்திரிபு.
பொருட்டு - காரணம், நிமித்தம், மேம்பட்டது.
பொருட்டொடர்நிலைச்செய்யுள் - ஒரு பிரபந்தம் அது பொருளாற்றொடர்ந்துவருவது.
பொருட்படுதல் - பயன்படுதல்,
பொருட்படுத்தல் - ஒரு பொருளாகமதித்தல், பயன்படுத்தல்.
பொருட்பால் - பொருளின்பகுதி.
பொருட்பிறிதின்கிழமை - தன்னேடொற்றுமையில்லாப்பொருள்(உ-ம்) குமரன் வேல்.
பொருட்பின்வருநிலை - மொழிந்தபொருளே பொருளாயினுஞ் சொல்வேறாய் வருவது.
பொருட்பெண்டிர் - வேசிகள்.
பொருட்பெற்றி - பொருளின்குணம்.
பொருட்பேறு - திரவியலாபம்.
பொருணயம் - கருத்து, நயப்பு.
பொருணி - கள்.

பொருணிலை - பயனிலை.
பொருண்முடிவு - கருத்துமுடிவு.
பொருண்மை - பொருட்டன்மை.
பொருதல்-அலைபோதல், ஒப்புதல், தம்மை, பொருந்தல், போர்செய்தல், இது அரசரறு தொழிலினொன்று.
பொருதுதல் - பொருத்தல்.
பொருத்தக்கடுதாசி-உடம்படிக்கைக் கடுதாசி.
பொருத்தமின்மை - இணக்கமின்மை.
பொருத்தம் - இணக்கம், தகுதி, பொருத்தனை.
பொருத்தல் - பொருத்துதல். [த்தனை.
பொருத்தனை - நேர்த்திக்கடன், பொருத்தம்.
பொருத்து - இணக்குகை,இசைப்பு,சந்து,பொருத்தென்னேவல், மரக்கண், மூட்டு.
பொருத்துதல் - அமைத்தல், பொருந்தச்செய்தல்.
பொருத்தோலை - பொருத்தச்சீட்டு.
பொருநராற்றுப்படை - ஒருநூல். முடத்தாமக் கண்ணியாரால் பாடப்பட்ட ஒரு பிரபந்தம், இது பத்துப்பாட்டிலொன்று.
பொருநர்-அரசர்,கூத்தர்,நாடகர்,படைத்தலைவர், படைவீரர், புகழ்வோர்.
பொருநன் - அரசன்,குறிஞ்சிநிலத்தலைவன், திண்ணியன், நாடகன், படைத்தலைவன், படைவீரன்.
பொருநுதல் - உடன்படல்.
பொருநை-தாமிரபரணியாறு, தாமிரபர்ணிநதி, இது பாண்டிநாட்டிலுள்ளது. இது சேரநாட்டுக்குரிய தென்டாருமுளர்
பொருநைத்துறைவன் - சேரன்.
பொருந்நதி - சூதநதி.
பொருந்தம் - பொருநை.
பொருந்தர் - நெய்வார், மேதரவர்.
பொருந்தலர் - பகைவர்.
பொருந்தல் - அடுத்தல், அமைதல், இயைதல், கலத்தல், சம்மதித்தல்.
பொருந்தாமை - இயையாமை, வெறுப்பு.
பொருந்தார் - பகைவர். [பு.
பொருந்துதல் - பொருந்தல்.
பொருபுவி - படலைநிலம், போர்க்களம்.
பொருபொருத்தல் - அறத்திதல், மனவெரிச்சறபடல்.
பொருபொரும்பான் - ஒருமரம்.
பொருபொரெனல் - ஒலிக்குறிப்பு.
பொருப்பரையன் - மலையரையன்.
பொருப்பரையன்பாவை - பார்வதி.
பொருப்பன் - குறிஞ்சிநிலத்தலைவன்.
பொருப்பு - கொல்லிமலை, மலை.
பொருப்புவில்லான் - சிவபிரான்.
பொருப்பேந்தி - கிருஷ்ணன்.
பொருமலி - கொழுத்தபெண்.
பொருமல் - பொருமுதல், வயிற்றுப்பொருமல்.
பொருமுதல் - அழுதல், ஊதிக்கசிதல், வீங்கல்.
பொரும்பி - சுழலாவாரை.
பொருவ - உவமவுருபு.
பொருவாய் - ஒருமீன்.
பொருவு - உவமை, குற்றம், பொருவென்னேவல்.
பொருவுதல் - ஒப்பல்.
பொருளகத்திணை -தனக்குறுப்பெனப் பலவற்றையடக்கிக்கொள்வது.
பொருளணி - பொருளான் வருமலங்காரம்.
பொருளந்தாதி - ஈற்றுப்பொருளை முதற்பொருளடியாகப்பாடல்.
பொருளவனுதி - பொருளானுயர்பு தோன்றக்கூறு மலங்காரம்.
பொருளாகுபெயர் - முதற்பொருளின் பேரைச் சினைப்பொருட்கு வழங்குவது (உ-ம்) மரையிதழ்.
பொருளாசை - திரவியவாஞ்சை.
பொருளாலணையும்பெயர் - சுற்றமென் குழூஉ பொருண் முதலியவற்றான் வரும் பெயர்.
பொருளானந்தம் - சொற்பொருட்குற்றம்.
பொருளிலக்கணம் - அறம்பொருளின்ப மென்பவைகளை விளக்கு மிலக்கணம் இதுபஞ்சலட்சணத்தொன்று.
பொருளின்பம் - பொருட்சுவை.
பொருளீட்டல் - பொருள் சம்பாதித்தல் இது சூத்திரர் வைசியர்க்குரிய அறதொழிலினொன்று.
பொருளுவமம் - பொருட்டன்மையை யுவமிப்பது (உ-ம்) நீர்போலுந் திருவுள்ளம்.

பொருள் - அருத்தாபத்தி, உடைமை, உண்மை, குணம், சம்பத்து இது நாற்பயனுள்ளி லொன்று, சொற்பொருள், தலைமை, பணம், பலபண்டம், பிள்ளை, பொன், வஸ்து.
பொருள்கோள்-ஆசுரமணம், பயனிலை.
பொருள்பண்ணுதல் - அருத்தம் பண்ணுதல், மதித்தல்.
பொருள்வயிற்பிரிவு - அசப்பொருட்டு றையிலொன்று.
பொருள்விலக்கு ஓரலங்காரம் அது குறித்தபொருளை மறுத்துக்கூறுவது.
பொருள்விளங்கவைத்தல் - அருத்தம் விளங்கவைத்தல் இது நூற்குணம் பத்திலொன்று.
பொருள்வீடு - பொருட்பற்றறுதல்.
பொருனன் - பொருநன்.
பொருனை - பொருநை.
பொலங்கலம் - ஆபரணம்.
பொலந்துறவு - பெருந்தவம்.
பொலம் } அழகு, பொல்லாங்கு, பொன், பொன்மைநிறம், மேன்மை.
பொலன் }
பொலி - தூற்றுநெல், பொலியென்னேவல்.
பொலிகடா - பொலியெருது.
பொலிக்கந்து - பொலியருகிற்கந்து
பொலிக்கடா - பட்டிக்கடா.
பொலிக்கடை - பொலியெருது கட்டுங்கட்டை.
பொலிக்கொடி - வைக்கோல்.
பொலிசை - இலாபம்.
பொலிதல் - அதிகரிப்பு, அழகு, எழுச்சி, சிறத்தல், தாராளம், பருமை, புணர்தல், மிகுதல்.
பொலிதூற்றுதல் - தானியந்தூற்றல்.
பொலிநடையன் - பொலியெருது.
பொலியளவு - நிறையளவு.
பொலியெருது - போரடிக்கிற எருதுகளிற் பொலிகட்டைக்கடுத்த எருது, மாப்பிள்ளை, மாடு.
பொலிவு - அழகு, பொலிதல்.
பொலுகுதல் - நீர்பறிதல்.
பொலுபொலுத்தல் - உதிருதல்.
பொலுபொலுப்பு - உதிர்வு.
பொலுபொலெனல் - பொலுபொலுத்தல்.
பொல் - பொல்லு.
பொல்லம் - தண்டு, தைத்தல்.
பொல்லர் - சக்கிலியர், செம்மார், தையற்காரர்.
பொல்லன் - பொல்லான்.
பொல்லாங்கு - ஈனம், தீங்கு, மறதி.
பொல்லாது - பொல்லாதது.
பொல்லாநடை - தீநடை.
பொல்லாநிலம் - நரகம், மயானம்.
பொல்லாப்பிள்ளையார் - அபய குலசேகர சோழராஜன் கொண்டுபோய்க்கொடுக்க, நம்பியாண்டார் நம்பியென்னும் ஆதிசைவப் பிராமணர் வாங்கி நிவேதித்த பழம் அவல் என்னுண்டை முதலியவற்றைத் தமது துதிக்கையை நீட்டி யெடுத்துத் திருவமுதுசெய்த விநாயகமூர்த்தி, இந்த மூர்த்தி திருநாரை யூரிலுள்ளது.
பொல்லாப்பு - பொல்லாங்கு.
பொல்லாமணி - பொள்ளாமணி, துளையிடாதமணி.
பொல்லாமை - பொல்லாங்கு.
பொல்லார் - தீயோர்.
பொல்லு - [illegible]ன்றகோல், தடி, பதர்.
பொழிதல் - ஈதல், சொரிதல், மழைபெய்தல்.
பொழிப்பளபெடை - முதற்சொற்கண்ணும் மூன்றாஞ்சொற்கண்ணு மளபெடைவரத் தொடுப்பது.
பொழிப்பியைவு - முதற் சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும்இயைபுவரத் தொடுப்பது.
பொழிப்பு - அனுமானம், குறிப்பு, சுருக்கம், தொகைப்பொருள்.
பொழிப்புத்திரட்டல் - பொழிப்புரையுரைத்தல்.
பொழிப்புத்திரட்டு - பொருட்டொகுப்பு.
பொழிப்புமுரண் - முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும், முரண்வரத் தொடுப்பது.
பொழிப்புமோனை - முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ்சீர்க்கண்ணு மோனைவரத் தொடுப்பது.
பொழிப்புரை - பொருடொகுத் துரைக்குமுறை.
பொழிப்பெதுகை-முதற் சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும் எதுகைவரத் தொடுப்பது.

பொழில் - உலகப்பொது, சோலை, நாடு, பூந்தோட்டம், பூமி, பெருமை.
பொழிவு - பலன், புகழ்ச்சி, பொழிதல், மேன்மை, வருமானம்.
பொழுதறுதி - அத்தமனபரியந்தம்.
பொழுதிற்கூடல் - பொழுதொடுபுணர்தல்.
பொழுது - காலம், சூரியன்.
பொழுதுசாய்தல் - பொழுது மதியந் திரும்பல்.
பொழுதுபடுதல் - சூரியனத்தமித்தல்.
பொழுதுபுகுதல் - பொழுதத்தமித்தல்.
பொழுதுபோக்கல் - பொழுதுகழிய விளையாடல்.
பொழுதுபோக்கு - பராக்கு, பாராட்டு.
பொழுதுபோக்குதல் - காலம்விடுதல், பராக்குப்பண்ணல்.
பொழுதுவணங்கி - சூரியகாந்தி.
பொழுதுவிடிதல் - சூரியனுதித்தல்.
பொழுதுவிடுதல்-பொழுதுபோக்குதல்
பொழுதொடுபுணர்தல் - வணிகரெண் குணத்தொன்று.
பொளி - துளை, கண்வெட்டி வெட்டு, வரம்பு.
பொளிதல் } கன்முதலிய கோதல்,
பொளிவு } துளைசெய்யல்.
பொள்ளல் - அப்பவருக்கம், தழும்பு, பொத்தல், பொளிதல், மரப்பொந்து.
பொள்ளாமணி - துளையாமணி, சயம்புமணி.
பொள்ளுதல் - பொந்துபோதல்.
பொள்ளெனல் - அனுகரணவோசை, சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.
பொறாமை - எரிச்சல், தரியாமை.
பொறி - அடையாளம், அறிவு, இயந்திரம், இலக்குமி, இலிபி, எழுத்து, கைவரை, செல்வம், தீப்பொறி, தேமல், தேர், புலப்பொறி, புள்ளி, பொருள், பொலிவு, பொறி, பொறியப்படுவது, பொறியென்னேவல், பொறிவு, மதிலுறுப்பு, மரக்கலம், முத்திரை.
பொறிக்கல்-சிலாநாகக்கல், சுக்கான்கல்.
பொறிக்குதல் - பொறித்தல்.
பொறிதல் - கலைதல், சரிதல், சறுக்குதல், பறிதல், விழல்.
பொறித்தட்டுதல் - கண்மின்னுதல், பறிதல்.
பொறித்தல் - எழுதல், சித்திரமெழுதல், பொறியச்செய்தல்.
பொறிப்பு - பொறித்தல்.
பொறியார்த்தல் - கண்மின்னுதல்.
பொறியிலார்-அதிட்டமீனர், கீழ்மக்கள்.
பொறியிலி - அறிவிலி, விதிகேடன்.
பொறியேற்றுதல் - பொறிவைத்தல்.
பொறிவு-சாய்ந்தபதிவு, தொங்குபறிவு, பொறிதல்.
பொறுக்கல் - தாங்குதல், பெறுக்கல்.
பொறுக்கி - பொறுக்கல்.
பொறுக்குதல் - பொறுக்கல்.
பொறுக்கு - பொறுக்கி, பொறுக்கென்னேவல்.
பொறுதி - ஓய்வு, தணிவு, தாமதம், பொறுமை, மன்னிப்பு.
பொறுத்தல் - தறித்தல், தாங்குதல், பொறுமை, மன்னித்தல்.
பொறுப்பாளி - பொறுப்புக்காரன்.
பொறுப்பானவன்-பிரதானமானவன்.
பொறுப்பித்தல் - சுமத்துதல்.
பொறுப்பு-சென்மானம், தகுதி, பாரம், பிரதானம், பொறுத்தல், பொறுமை.
பொறுமை - சகிப்பு, பொறுதி.
பொறை - கருப்பம், சலதாரை முதலிய வடைக்குங்கல், சிறுமலை, சுமை, பாரம், பூமி, பொறுமை இது பெரியோரியல்பு ளொன்று, சாத்துவிக குணத்தமொன்று, மலை.
பொறைசாலி - பொறுதிக்காரன்.
பொறையன் - சேரன், தருமராசன்.
பொறையிலார் - பூமியர், வேடர்.
பொறையுயிர்த்தல் - பாரங்கழித்தல், மகப்பெறுதல்.
பொற்கசை - பொற்கம்பி.
பொற்கணக்கு - பொன்னிறையளவு.
பொற்கண்டை - பொற்செண்டை.
பொற்கம்பி - பொன்னின்கம்பி.
பொற்கலம் - பொன்பாத்திரம்.
பொற்கலை - பொன்வஸ்திரம்.
பொற்காசு - கொள்ளுபொன்னின்கா
பொற்காரை - ஒருகழுத்தணி.
பொற்குவை - பொன்குவியல்.
பொற்கொல்லன் - கம்மாளன்.
பொற்சபை - கநகசபை.
பொற்சரக்கு - உயர்ந்தசரக்கு.
பொற்சரிகை - பொன்னூல்.
பொற்சிலை - பொன்மலை.
பொற்சிந்தில் - ஒருசிந்தில்.

பொற்சுண்ணம் - பொற்றூள்.
பொற்ப - பொற்புக்கொள்ள.
பொற்பணதி - பொன்னாபரணம்.
பொற்பராகம் - பொற்பொடி.
பொற்பணி - பொன்னாபரணம்.
பொற்பானம் - பொற்சலாகை.
பொற்பிரகாசம் - பொன்னொளி.
பொற்பு - அலங்கரிப்பு, அழகு, ஒப்பனை, பொலிவு, மிகுதி.
பொற்புறுத்தல் - அலங்கரித்தல்.
பொற்பூ - பொன்மலர்.
பொற்பூச்சு - மலாம்பூச்சு.
பொற்பூண் - பொன்னாபரணம்.
பொற்பூவராகன் - ஒருவராகன்.
பொற்பொருப்பு - மேருமலை.
பொற்றகடு - பொன்னின்றகடு.
பொற்றலைக்கரிப்பான் - பொற்றலைக்கையாந்தகரை.
பொற்றலைக்கையாந்தகரை - ஒருகையாந்தகரை, மஞ்சள் கரிசலாங்கண்ணி.
பொற்றாது - பொற்றலைக்கையாந்தகரை
பொற்றாமரை - பொன்னுருவத்தாமரை, மதுரையிலேயோர் தீர்த்தம்.
பொற்றிக்கீரை - ஒருகீரை. [ன்.
பொற்றேகாசம் - பொற்றலைக்கரிப்பா
பொற்றை - சிறுதூறு, சிறுமலை, மலை.
பொற்றொடி - பெண், பொன்வளை.
பொன் - அழகு, இரும்பு, இலக்குமி, ஒருநாணயம், சூரியன், பஞ்சலோகப்பொது, பிரகாசம், பொலிவு, பொன், வியாழம்.
பொன்காத்தபூதம் - புதையல்காத்தபூத
பொன்செய்கொல்லர் - தட்டார். [ம்.
பொன்பற்றியூர்ப் புத்தமித்திரனார்-வீரசோழன் காலத்திலேயிருந்து அவன் பெயரால் வீரசோழியம் என்னுமிலக்கணநூல் செய்தவர்.
பொன்புனைதல் - அகப்பொருட்டுறையினொன்று. [தல்.
பொன்பூணுதல்- கடுக்கன்முதலியவணி
பொன்மணி-பொன்னினாற்செய்தமணி
பொன்மயம் - பொற்பிரகாசம். [றை
பொன்மயிர்க்கொன்றை - ஒரு கொன்
பொன்மயிலம்பிகை - திருப்பராய்த்துறையிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
பொன்மலாம் - பொற்பூச்சு.
பொன்மலை - திருச்சிராப்பள்ளியில் தாயுமானவர் மலை, மாமேரு.
பொன்மழை - புட்கலாவர்த்தமுகில் பொழியுமழை.
பொன்முசட்டை - பங்கம்பாளை.
பொன்முடியார் - கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.
பொன்மூசை - பொற்காசினச்சு.
பொன்மெழுகு - ஒருமெழுகு.
பொன்மை - பொன்னிறம்.
பொன்வண்டு - பொன்னிறவண்டு.
பொன்வண்ணத்தந்தாதி - சேரமான் பெருமான் செய்த ஒரு அந்தாதி.
பொன்வலயம் - பொன்வளையம்.
பொன்வன்னக்காரிளை - கெந்தகம்.
பொன்வாய்ப்புள் - சிச்சிலிக்குருவி.
பொன்வானம் - பித்தளைமலை.
பொன்வித்து - நாகமணல்.
பொன்விலை - அரியவிலை.
பொன்விலைமகளிர் - வேசையர்.
பொன்விளைந்தகளத்தூர் - ஒரூர்.
பொன்வினைமாக்கள் - தட்டார்.
பொன்றல் - அழிதல், குறைதல், சாத
பொன்றுவல்லி - சீந்திற்கொடி. [ன்.
பொன்றுதல் - பொன்றல்.
பொன்னகர்-சுவர்க்கம், தேவலோகம்.
பொன்னகர்க்கிறைவன் - இந்திரன்.
பொன்னகை - பொன்னாபரணம்.
பொன்னத்துப்பெட்டி - தாலி கூறை வைத்துக்கொண்டு போகும்பெட்டி.
பொன்னப்பிரகம் - ஓரப்பிரகம்.
பொன்னம்பர் - ஒருமருந்து.
பொன்னரிதாரம் - ஓரரிதாரம்.
பொன்னரிமாலை } ஒரு ஆபரணம்.
பொன்னரியமாலை }
பொன்னவண்டு - பொன்னிறவண்டு.
பொன்னவன் - இரணியன், வியாழன்.
பொன்னன் - அருகன், பொன்னுடையவன்.
பொன்னாங்கண்ணி - பொன்னாங்காணி.
பொன்னாங்காணி - ஒருகீரை.
பொன்னாசை - திரவியவாஞ்சை அது ஆசை மூன்றினொன்று.
பொன்னாங்கொட்டை - பூவந்தி.
பொன்னாந்தட்டான் - ஒருபட்சி.
பொன்னாபரணம் - பொன்னகை.
பொன்னாம்பனம் - நெய்கொட்டான்.

பொன்னாவிரை - ஒருசெடி.

பொன்னி - எட்டாம்பாட்டன், காவேரி.

பொன்னித்துறைவன் - சோழன்.

பொன்னிமிளை - ஒருகல்.

பொன்னிலம் - தேவலோகம்.

பொன்னிறமாட்சி - பொன்னிமிளை.

பொன்னுக்குவீங்கி - கூகைக்கட்டு.

பொன்னுச்சாமித்தேவர் - புதுக்கோட்டைச் சிவஞானத்தேவர் புதல்வராகிய இவர், சேதுபதி சமஸ்தானத்துச் சர்வாதிகாரியாகி அந்த ராஜ ராஜாங்கத்தைச் சிறப்படுத்தி நன்னிலையி லுய்த்தவர், முற்காலத்தில் தாராநகரத்திலிருந்து சம்ஸ்கிருதபாஷையை வளர்த்த போஜராஜனே இக்காலத்தில் தமிழையும் வளர்க்க இப்பொன்னுச்சாமித்தேவராக அவதரித்தாரென்று புலவர் நாவினும் பாவினும் போற்றற் குறியாய் விளங்கிய ராஜபண்டிதர், இவர் ஒருவரே தமிழ்ப்புலமை சிவநேசம், ராஜதந்திரம் பெருங்கொடை முதலிய நற்குண சமூகத்துக்கு ஆசரமா யிருந்து விளங்கினவர், இவர் குமாரர் மதுரைத் தமிழ்ச் சங்கஸ்தாபகராகிய பாண்டித்துரைத் தேவர்.

பொன்னுருக்குதல் - பொன்னை நீராக்குதல்.

பொன்னுரை - தேய்மானம்.

பொன்னுலகு - தேவலோகம்.

பொன்னுமத்தை - ஒருமத்தை.

பொன்னூல் பொன்னாற்சமைத்தநூல்

பொன்னெயில்வட்டம் - அருகனிருக்குமிடம்.

பொன்னெயிற்கோன் - அருகன்.

பொன்னேரி - ஓரூர்.

போ

போ - அசைச்சொல் (உ-ம்) பிரியின் வாழாதென்போ, ஓரெழுத்து, போ வென்னேவல்.

போககிருகம் - வசிக்கும்வீடு.

போககுஞ்சம் - பணயம்.

போகடல் - போகவிடல்.

போகடிபோக்கு - வந்தவாகு.

போகணி - ஒருபாத்திரம்.

போகண்டன் - ஐந்துவயசு தொடங்கிப் பதினாறு வயசுக்குட்பட்டவன்.

போகஸ்தானம் - ஆனந்த மயகோசம், உடல்.

போகஸ்த்ரீ - பொதுப்பெண்.

போகபதி - அதிபதி.

போகபாலன் - அசுவரக்ஷகன்.

போகபிசாசிகை - பசி.

போகபிருதன் - கூலிக்காரன்.

போகபூமி - கருமலபூமி, தேவலோகம், நல்வினைப்பலனை யனுபவிக்கும் பதவி, விளநிலம்.

போகபோக்கியம் - அனுபவவின்பம்.

போகமார்த்தபூண்முலைநாயகி - திருநள்ளாற்றிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

போகம் - அனுபோகம், இன்பம், கூலி, செல்வம், தின்றல், பணயம், பாம்பின்படம், பாக்கியம், பாம்பினுடல், பாம்பு, பிரயோசனகாலம், வளர்த்தல், விளைவு.

போகம்பண்ணுதல் - அனுபோகித்தல், புணர்தல்.

போகர்-ஒருசித்தர், இவர்சாதியிற்சீனர், புத்தசமயத்தர், ஆசிரமத்தால் துறவி, இற்றைக்கு ஆயிரத்தறுநூறு வருஷங்களுக்கு முன்னே சீனதேயத்திலிருந்து பாரத வருஷத்துக்கு வந்து பாடலிபுரம் கயா முதலிய விடங்களை தரிசித்துக்கொண்டு, தக்ஷிணதேசத்திலும் சோழபாண்டி நாடுகளுக்குச் சென்று அங்கே நெடுங்காலம் வசித்து ஆங்காங்குள்ள பண்டிதர்களிடத்தில் தாமறியாதவற்றைக் கற்றும் அவரறியாதவைகளை அவருக்குக் கற்பித்தும் மீண்டு சீனதேசத்தை யடைந்தவர், இவரிடத்தில் வைத்தியங்கற்ற மாணாக்கர் ஒருவர் அவர் கூறிய முறைகளைச் செய்யுளுருவமாகப்பாடிப் போகர் நூலெனப் பெயர் புனைந்தார், பிற்காலத்து வைத்திய பண்டிதர்களும் தாமநுபவத்தாலறிந்த முறைகளைப்பாடிக் காலந்தோறும் அந்த நூலில் நுழைத்தும் விட்டார்கள், பிறகு அச்சிடப் புகுந்தோறும் கூட்டியும் திருத்தியும்

மாற்றியும் அதனை அடியோடு பிறழ வைத்தார்கள்.

இவர் சீன தேசத்துக்கு மீண்டு சென்றபோது இவருக்கு மாணாக்கராகச்சிலதமிழரும் உடன்சென்றார்கள் அப்பொழுது தஞ்சாவூர் பிருகதீசுவரன்கோயில் விமானத்துக்கபாலக்கல் சிற்பவேலைமுடிந்தும் அந்தச் சிற்பி யிறந்தமையால் நெடுங்காலமாக விமானவேலையில் பழுதுருவண்ணமேற்று மூபாயந்தேர்ந்து கொள்ளப்படாமற் கிடந்தது, அவ்வளவே யன்று, நாகப்பட்டினத்துப் புதுவெள்ளிக்கோபுரத்துச் சக்கரத்தை திறத்தி அந்தக் கோபுரத்துள்ளே வைக்கப்பட்டு நெடுங்காலமாய்க் கிடந்த பொற்குவையையும் எடுக்கும் வகை தெரிந்து கொள்ளப்படா திருந்தது, இந்தச் செய்தியைப் போகரோடு சென்ற சீடர்வாய்க் கேட்ட சீன தேசத்துச் சிற்பிகளுள் ஒருவன் அந்தப் பெரிய கபாலத்தை யேற்றுதற்கு அவ்வூரில் பஞ்சுப்பொதியில்லையாவெனவும் அச்சக்கரத்தைத் தடுக்க வாழைத்தண்டு இல்லாதொழிந்ததாவென்றும் சொல்ல, அது கேட்ட தமிழருளொருவனுகிய கைக்கோளனொருவன் வேறொருவருமறியாமல் சோழநாட்டையடைந்து அரசனுக்கறிவிக்க, அரசன் பஞ்சை விமானத்தளவாகக் குவித்து அந்தக் கல்லை யேற்றுவித்தான் என்றும், வாழைத்தண்டை யிட்டுச் சக்கரத்தை திறத்திப் பொற்குவையைக் கவர்ந்து திருவரங்கத்து சத்தப் பிராகாரத் திருப்பணியை முற்றுவித்தானென்றும் ஒரு கர்ண பாரம்பரியமுண்டு.

புலிப்பாணியென்பவர்போகரோடு சீனதேசத்திலிருந்து வந்து அவர் மீளும்போது அவருடனே போகாமல் தமிழ்நாட்டிலேயே தங்கி விட்டவர், அவர் பாடலொன் றன்னையாவும் அவரால் பாடப்பட்டனவன்று, அதுவும் புரட்டு நூலேயாம், இவர் வைத்தியமும் சாலவித்தையும் கைவந்தவர், தமிழ்நாட்டுக்கு ஆதியிலேயே வைத்திய நூல்கள் உபகரித்தவர்கள், அகஸ்தியர் தேரையர் முதலியோர்களே அவர்களுள்ளே பெரும்பாலன அழிந்தன வேனும் எஞ்சி நின்ற சில நூல்களை நோக்குமிடத்து அவை யாவும் வடநூல்களுக்கிணக்கமா யிருப்பது பிரத்தியக்ஷமாகும், போகர் புலிப்பாணி நூல்களோடு சிறிதுமொவ்வா.

போகல் - உயர்ச்சி, செல்லல், நீனம்.
போகவதி - நல்லனுபவமுடையவள், நாகலோகம், பாதால நதி, வாசுகி ராஜதானி.
போகவாஞ்சை - அனுபோகப்பிரியம்.
போகாங்கபூசை - சிவகணுதிபர்க்குச் செய்யும பூசை.
போகார்க்கம் - பாக்கியம், செல்வம்.
போகாவலி - கட்டியம், புகழ்ச்சி.
போகாவாசம் - அந்தப்புரம்.
போகி - அரசன், இந்திரன், ஒருபண்டிகை, கார்போகிவிதை, சுகமனுபவிப்போன், சௌனகன், தலைமைக்காரன், பாம்பு, பிரபஞ்சவியாபாரி, போகியென்னேவல்.
போகிகன் - குதிரைக்காரன்.
போகிகாந்தம்-காற்று, குதிரைக்காரன்.
போகிசயனம் - சர்ப்பசயனம்.
போகிசயனன் - திருமால்.
போகித்தல் } அனுபவித்தல், அநுபோகம், புணரல்.
போகிப்பு }
போகில்-கொப்பூழ், பறவை,பூவரும்பு.
போகிவல்லபம் - சந்தனம்.
போகிவாசம் - சந்தனமரம்.
போகீசன் - ஆதிசேஷன்.
போகீந்திரன் - அனந்தன்.
போகு - நெடுமை.
போகுதல் - அழிதல், செல்லல், நீளம், நேர்மை, மாறுதல்.
போகை - போதல்.
போக்கடி-அழிவு, சுயேச்சை, நட்டம், போக்கடியென்னேவல், வழிச்செலவு.
போக்கடித்தல் - அழித்தல்.
போக்கணங்கேடு - இலச்சைக்கேடு.
போக்கணம்-இலட்சை, கட்டுச்சோறு.
போக்கல் - போக்குதல்.
போக்கன்-துஷ்டன், பரதேசி, வழிச் செல்வோன்.

போக்காடு - சாவு.
போக்காட்டுதல் - அனுப்புதல்.
போக்கி - பரதேசி.
போக்கிடம்-ஒதுங்குமிடம்,சேர்கதி [ள்.
போக்கியப்பொருள்-அனுபவப் பொரு
போக்கியம் - அனுபவப்பொருள் அனு
பவம், செல்வம்.
போக்கியல் - சரிதகம். [ருவர்.
போக்கியார்-கடைச்சங்கப்புலவருளொ
போக்கிரி - போக்கிலி, துர்மார்க்கன்.
போக்கிலி - கதியற்றவன், நாணயமில்
லாதவன்.
போக்கு - அறையிருப்பு, சாட்டு, சாவு,
பழக்கம், போகுதல், போக்கென்
னேவல், யாதொன்று செல்லுந்து
வாரம், வழி, விதம்.
போக்குதல் - அழித்தல், அனுப்புதல்,
செலுத்தல், விடுதல்.
போக்குநீக்கு - ஊடுவெளி, பழக்கம்,
போச்சுரு - புசிப்பவர். [விபரம்.
போக்காலம் - அழிவுகாலம்,சாங்காலம்.
போங்கு - போக்கு.
போஜகடகம் - நர்மதா நதிக் கரையி
லுள்ள வொருபட்டணம்.
போசக்கை - மாயம், வெளிப்போலி,
வெளியலங்காரம்.
போஜசம்பு - ஒரு சமஸ்கிருத காவி
யம், இது போஜராஜனுற் செய்யப்
பட்ட ஸ்ரீராமசரித்திரம்.
போஜபதி - கஞ்சன்.
போஜப்பிரபந்தம் - இதிலே போஜ
சரித்திரமும், காளிதாசன் தண்டி
முதலிய வித்வந் மணிகளது வரலா
றும் கூறப்பட்டுள்ளது.
போசம் - அகத்தி, ஒருதேசம்.
போஜர் - யாதவருள் ஒரு சாரார்.
போஜனகஸ்தூரி - நாரத்தங்காய்.
போஜனக்குறடா - மிளகாய்.
போசனசவுக்கியம் - ஊண்சுகம்.
போசனபதார்த்தம் - தின்பண்டம்.
போசனப்பிரியன் - பெருந்தீன்காரன்.
போசனம் - உணவு, புசித்தல், இது
அட்டபோகத்தொன்று.
போசன்-ஒருஅரசன், செல்வன். சாத்
துவதன்புத்திரன், குந்தியைவளர்த்த
தந்தை,இவன்குந்திப்போஜன்மஹா
போஜன் என்றும் வழங்கப்படுவன்.
மாளவதேசத் தரசனுகத் தாரா நகரத்
திலிருந்தரசுசெய்தவோர் பிரபலமா
ன அரசன். இவன் இற்றைக்குஆயி
ரத் திருநூறு வருஷங்களுக்கு முன்
னே அரசு புரிந்தவன். இந்தப்போ
ஜன் காலத்திலே கல்விஅபிவிருத்தி
யடைந்தது போல் முன்னுமில்லை
பின்னுமில்லை, முற்காலத்திலே பூர்
ணசந்திரன் போலப் பிரகாசித்த
பிற்காலத்திலே அபரபக்ஷ சந்திரன்
போ லொளியிழந்த கலைஞானங்க
ளெல்லாம் இவன்காலத்திலே மீள
வும் பூர்வபக்ஷத்துச் சந்திரன்போல
நாளுக்குநாள் விருத்தியடைந்தமை
யால் இவனைக்கலைமகளுக்குத்தந்தை
யென்னலாம்,இவ்வரசன்மஹாபண்
டிதனு யிருந்தமையால் கலைகளெல்
லாவற்றையும் வித்துவான்களை கொ
ண்டு ஆராய்விப்பானுயினன், இவ
னுற் செய்யப்பட்ட வைத்ய நூலும்
ஒன்றுண்டு. இவன்காலத்திலேவேத
முதலாகவுள்ள எல்லா நூல்களும்
விருத்தி யடைந்ததுபோலவே அவ
ற்றை ஆராய்ந்தபண்டிதர்களும் விரு
த்தியடைந்து விளங்கினுர்கள், காளி
தாசன் முதலிய வித்வன் மணிகள்
ஒளிசெய்ததும் இவனது சமஸ்தா
னத்திலேயேயாம். இவன்காலத்தில்
மாநுஷவைத்திய மாத்திரமேயன்று
அசுரவைத்தியமாகிய சத்திர வைத்
தியமும் மிகவும் விளங்கியதென்
பது வல்லாளன் செய்த போஜப்ர
பந்தத்திற் கூறப்பட்ட ஒரு சரித்தி
ரத்தால் அநுமிக்கப்படும், போஜப்ர
பந்தம் போஜனைப்பற்றிய சிறுசரித்
திரங்களை யெடுத்துக்கோத்துக் கூறு
வது. இவன் ஒருகாலத்தில் கொடிய
தலைவலியால் வருந்தவானுயினன்,
அத்தலைவலியானது அவன் சமஸ்
தானத்திலிருந்த சிறந்த வைத்தியர்க
ளெல்லாராலும் தீர்க்கப்படாததாய்
மேன்மேலும் அதிகரித்தது. இதுமா
ணஹேதுவாக வுண்டான தலைவலி
யென்று யாவரும் நிச்சயித்தார்கள்.
அந்தச்சமயத்தில், சல்லியசாத்திரத்
தில் மிகவல்லுநராகிய இருவர் ராஜ
சமஸ்தானத்தையடைந்தார்கள், அவர்

கன் இந்த நோயை நிதானித்துநோக்கி, இது சத்திரவைத்தியத்தாலன்றித் தீரும் வழிவேறில்லை யென்றார்கள், அதற்கு அரசன் உடன்படுதலும் அரசனுக்குமூர்ச்சையுண்டாகும்படி சம்மோகனி யென்னும் ஒருஔஷதம் பிரயோகித்தலும் அரசன்மூர்ச்சித்தான், பண்டிதர்கள் அரசனது கபாலத்தை ஆயுதத்தால் திறந்து மூளையிலிருந்த விஷாமிசத்தை நீக்கிச் சுத்திசெய்து கபாலத்தை முன்போலவேபொருத்திச் சந்தானகரணியிட்டுச் சஞ்சீவி யென்னு மருந்தை உள்ளுக்குப் பிரயோகித்து உயிர்ப்பும் அறிவும் உதிக்கும்படி செய்ய, அரசன் நித்திரை நீங்கி யெழுந்தவன் போலக் கண்விழித் தெழுந்து பூர்ண சுகமடைந்திருந்தான், இதன் விரிவு போஜப் பிரபந்தத்திற் காணலாம்.

சம்மோகனி யென்பது தற்காலம் ஐரோப்பிய பண்டிதர்கள் பிரயோகிக்கும் "க்ளோரபாரம்" போல்வதொரு மூர்ச்சையுண்டாக்குமருந்து, அது க்ளோரபாரத்திலும் மிகச்சிறந்தது க்ளோரபாரம் அபாயஞ் செய்வது, சம்மோகனி ஒரு பகற்காலம் வரைக்கும் அபாயஞ்செய்யாது வேண்டியபோது சஞ்சீவினி பிரயோகத்தால் அதன் அதிகாரமுழுதும்நீங்கி, அறிவுதயமாகும், அக்காலத்து ஆரிய பண்டிதர்கள் சஞ்சீவினி கையிலிருப்பினன்றிச் சம்மோகனிப் பிரயோகஞ் செய்யார்.

மேற்கூறிய சரித்திரத்தால்ஐரோப்பிய பண்டிதர்கள் தற்காலம் தாம் நூதனமாகக் கண்டுபிடித்த சஸ்திரசிகிச்சையென்றுஉச்சிமேல் வைத்துக்கொண்டாடும் கபாலசல்யம் (கபாலத்தைத் திறந்து சிதைவு சோதித்தல் முதலியன) ஆரியபண்டிதர் பல்லாயிரவருஷங்களுக்குமுன்னே சிறிதும் அபாயமின்றிப்! பயின்று வந்த அரிய சிகிச்சைகளுள் ஒன்றேயாமென்பது நன்கு புலப்படுகின்றது, இந்தக்கபாலசல்யசம்பவம் இஃதொன்று மாத்திரமன்று, கௌதமபுத்தருடைய வைத்தியபண்டிதனாகவிளங்கிய ஜீவகனும் அநேகமாகியகபாலசல்ய சிகிச்சைகள் செய்து புகழ்படைத்தானென்று பௌத்தநூல்கள் கூறுகின்றன சம்மோகனிக்கீடாக, "க்ளோரபாரம்" ஐரோப்பியவாகடத்திலுள தென்றாலும், சஞ்சீவினிக்கீடாக அந்த ஐரோப்பிய வாகடத்தில் ஒன்றுமில்லை யென்பது இதனால் புலப்படும்.

போஷகன் - காப்போன்.

போஷணம், போஷணை } பராமரிப்பு.

போசாதிபன் - கஞ்சன்.

போச்சியம் - உண்ணற்குரியபொருள்.

போஷித்தல் - ஆதரித்தல்.

போஷிப்பு - பேணுதல்.

போஷியன் - வளர்ப்புப்பிள்ளை.

போஸ்தக்காய்-உலர்ந்தகசகசாநெற்று.

போடகம் - தொப்புளிப்பான்.

போடம்-தேயமைம்பத்தாறினொன்று.

போடல் - அடித்தல், எறிதல், போடுதல், வழுவவிடல், வைத்தல்!

போடி - சம்புநாவல்மரம்.

போடுதடி-அலட்சியமானது, தேவையற்றது.

போடுதல் - அணிதல்,இடுதல், ஈனுதல்.

போட்டரி - இராட்சசன்.

போட்டி - எதிரிடை, கேலி.

போட்டிக்கை - போட்டி.

போட்டிக்காரன் - எதிரிடைக்காரன், கேலிக்காரன்.

போட்டுப்பொல்லாங்கு-குற்றம், வசை.

போணி - போகணி, முதல்விக்கிரயம்.

போதகம் - இளமை, உபதேசம், காஞ்சிரை, சிங்கக்குட்டி, பசளை, புலிக்குட்டி, மரக்கன்று, யானை, யானைக்கன்று.

போதகன்-உபதேசி, உவாத்தி,ஒற்றன்.

போதகான் - எழுச்சிபாடுவோன்.

போதகனம் - ஞானவடிவு.

போதகாசிரியன் - ஒருஆசிரியன்.

போதகி - பெண்ணூர்க்குருவி.

போதகாசக்தி - போதிப்புவல்லமை.

போதப்பிரகாரம் - அறிவகை இதுஇலக்கணம், உத்தேசம், பரீக்ஷை என மூவகைப்படும்,

போதம் - அறிவு, கன்று, ஞானம், பரணி, புடைவை, மரக்கலம், யானைக்கன்று, வீட்டுநிலம்.
போதரல் - போகுதல்.
போதரவு - ஆறுதல், உபசரணை, கணிசம், பேணுதல்.
போதருதல் - போதரல்.
போதலிப்பு } போதரவு.
போதலிமை }
போதல் - அகலல், அழிதல், உட்படல், திருத்தியாதல், நீளப்போகல், வரல்.
போதவாகன் - தோணியோட்டுவோன்.
போதவுரம் - திடஞானம்.
போதனம் - அறிவித்தல், அறிவு, துபங்காட்டல்.
போதனை - கற்பனை, தூண்டுகை, போதிப்பு, இராமகிரிக்குக் கிழக்கேயுள்ள ஒருமலை.
போதன் - அருகன், அறிவுடையோன் பிரமன்.
போதா - பெருநாரை.
போதாக்குறைச்சல் - மேற்குறைச்சல்.
போதாச்சாதனம் - கூடாரம்.
போதாந்தம் - ஞானந்தம்.
போதாந்தன் - கடவுள்.
போதாமை - குறைவு, வெறுப்பு.
போதாயகர் - ஓரிருடி.
போதாயநீயம் - உபநிடதமுப்பத்திரண்டில்வொன்று.
போதி - அரசமரம், அறிவு, போதியென்னேவல், மலை. [டை.
போதிகை - குறுந்தறி, சுமையடைக்கட்
போதிகைக்கட்டை - தாழ்வாரந்தாங்கி.
போதிகைத்தூண் - குறுந்தூண்.
போதிதரு - அரசமரம்.
போதித்தல் - கற்பித்தல், புத்திசொல்லுதல், போதகஞ் செய்தல்.
போதிப்பு - உபதேசம், படிப்பனை,
போதியது - போந்தது. [போதித்தல்.
போதியவன் - கணிசவான், தக்கவன்.
போதிவேந்தன் - புத்தன், மலையரசன்.
போது - காலம், பூ, பூவலரும்பருவத்தரும்பு, போதென்னேவல்.
போதுதல் - அகலல், செல்லல், தகுதியாதல், திருத்தியாதல், நீளல்.
போதை - மயக்கம், மூதறிவு. [புல்.
போதைப்புல் - கர்ப்பூரப்புல், காவட்டம்

போத்திரம் - இடியேறு, கொழு.
போத்திராயுதம் - பன்றி.
போத்திரி - பன்றி.
போத்து - எருமைகாட்டா, பசு, புலி, புல்வாய், பூனை, மயில், மரை, இவற்றின் ஆண், செம்போத்து, நீர்சாதியினாண், மரக்கன்று, விலங்கின் படுக்கை.
போந்தகாலம் - தக்ககாலம்.
போந்தகுணம் - மேன்மையானகுணம்.
போந்தது - போதுமானது.
போந்தலிமை - போதலிமை.
போந்தவன் - தகுதியானவன்.
போந்தி - பருமை, வீக்கம்.
போந்தின்றுரோன் - சேரன்.
போந்து } அனுடநாள், இளம்பனை,
போந்தை } பனை.
போபடி - சாடை.
போம் - அசைச்சொல், பயம்.
போம்பல் - நீர்கடம்பு.
போரடி - ஒருவிளையாட்டு.
போரடித்தல் - சூடுதறல், தேங்காய்முதலிய அடித்து விளையாடுதல்.
போரடுக்குதல் - போர்வைத்தல்.
போராடல் - யுத்தம்பண்ணல்
போராடுதல் - பொருதல், மலைதல்.
போராட்டம் - தொந்தறை செய்தல், போர்பண்ணல்.
போராட்டல் - கோட்டிசெய்தல்.
போரி - எதிரி, ஒத்தாம், திருப்போரூர்.
போரிடுதல் - சண்டைபிடித்தல்.
போரித்தனம் - எதிரித்தனம்.
போருடலல் } பொருதல்.
போருடறல் }
போருடன்றல் - போர்செய்தல்.
போரேறு - செவ்வாய், போர்வீரன்.
போரேற்றுதல் - போரடுக்குதல்.
போர் - சதயநாள், நெற்போர், பொந்து, போரென்னேவல், யுத்தம்.
போர்கலத்தல் - போர்கடத்துதல்.
போர்க்கடா - போர்பண்ணுங்கடா.
போர்க்கதவு - இரட்டைக்கதவு.
போர்க்களம் - யுத்தகளம்.
போர்க்கறைகூவல் - போருக்கழைத்தல்
போர்க்கெழுச்சி - படையெழுச்சி.
போர்க்கெழுவஞ்சி - ஒருபிரபந்தம் அதுமாற்றூர்மேற்போர்குறித்தெழும்வயவேந்தர் வஞ்சிப்பூமாலைசூடிப் புறப்

ும் படையெழுச்சிச் சிறப்பை ஆசிரியப்பாவாற் கூறுவது.
போர்க்கோலம் - போரணித்தரிப்பு.
போர்ச்சேவகர் - யுத்தவீரர்.
போர்த்தல் - மூடுதல்.
போர்த்துக்கட்டுதல் - உள்ளுக்குள்ளே சரிப்படுத்துதல், மறைத் தடக்கிக் கொள்ளல்.
போர்த்துமூடுதல் - மறைத்துக்கொள்ளுதல்.
போர்த்தேங்காய் - வலியதேங்காய்.
போர்போடுதல் - போரடுக்குதல்.
போர்படை - படைச்சனம்.
போர்ப்பறை - இரணபேரிகை.
போர்ப்பு - போர்த்தல், போர்வை.
போர்ப்பை - உழவுசாலினுட்கை, களக்கட்டையடி.
போர்ப்பைக்காளை } உட்கைக் காளை,
போர்ப்பையன் } பொலியெருது.
போர்மடந்தை - துர்க்கை, வீரலக்குமி.
போர்மாந்தம்-அஷ்டமாந்தத்தொன்று.
போர்முகம் - படைமுகம்.
போர்முடிதல் - போர்மூட்டுதல்.
போர்முன் - சேவலின் கால்முள்.
போர்முனை - போர்முகம்.
போர்மூட்டுதல் - போருண்டாதல்.
போர்மூளுதல் - போருண்டாக்கல்.
போர்விடுதல் - போர்செய்யும்படி ஏவிவிடுதல்.
போர்வீரன் - போர்வல்லன்.
போர்வெல்லல்-யுத்தத்திற் செயமடைதல், இது எண்வகை வெற்றியில் ஒன்று.
போர்வை - தோல், மூடுதல், மெய்க்கவசம், மேற்போர்வை.
போர்வைச்சிலை - மூடுகுப்பாயம்.
போர்தைத்தல் - போரடுக்குதல்.
போல - உவமைச்சொல்.
போலல் - போலுதல்.
போலி - ஒட்டகம், ஒப்பு, ஒன்றுபோலொன்றிருத்தல், கள்ளமுமிளப்புமாயிருப்பது, கேலி, சாயல்.
போலித்தனம் - வெளிவேஷம்.
போலிநடை - கேலிநடத்தை, வெளியலங்காரமான நடத்தை.
போலிபண்ணுதல் - கேலிப்படுத்தல்.
போலியான் - வெளிவேஷக்காரன்.
போலியெழுத்து-பதிற்றெரனியக்கரம்.
போலிவேலை - கள்ளவேலை.
போலுதல் - உவமையாதல், சரியாதல்.
போலும் - அநுமான சந்தேகப்பொருளுணர்த்தும் இசைநிறை யசைச்சொல் (உ-ம்) வடுவென்றதண்ணுய் வருந்தினை போலும்.
போலூகன் - சேவகன்.
போல் - உவமை, பதர், பொந்து, போலென்னேவல், மூங்கில்.
போல்வு - போலுதல்.
போவது - போகவேண்டியது.
போழல் - பிளக்குதல்.
போழ் - பிளவு, போழென்னேவல்.
போழ்தல் - பிளத்தல்.
போழ்து - காலம், பொழுது.
போழ்முகம் - பன்றி.
போழ்வாய் - திறந்தவாய், பொக்குவாய்.
போழ்வு - பிளவு.
போளம் - ஒருவாசனைப்பண்டம், நிலக்கடம்பு, மணிவகையிலொன்று.
போளி - அப்பவருக்கத்தொன்று.
போறல் - போலுதல்.
போறை - கோறை.
போற்றரவு - பேணரவு.
போற்றலர் - பகைவர்.
போற்றல் - போற்றுதல்.
போற்றார் - பகைவர்.
போற்றி - துதி, பாட்டன்.
போற்றிப்பஃறொடை - ஒருநூல்.
போற்றிமார் - ஒருவகைப் பிராமணர், கோளதேசத்துப் பிராமணர்.
போற்று - காப்பு, துதி, போற்றென்னேவல்.
போற்றுதல்-காத்தல், துதித்தல், புகழ்தல், பேணுதல், வணங்கல், வளர்த்தல்.
போனகச்சட்டி - சாதமெடுக்கும் பாத்திரம்.
போனகச்சாலை - அன்னச்சாலை.
போனகத்தி - வீட்டுத்தாய், சமைக்கிறவள், வெள்ளாட்டி.
போனகம் - சோறு.
போனபோக்கு - நேரிட்டபடி.

பௌ

பௌஞ்சு - சேனை.
பௌஷம் } தைமாதம்.
பௌடம்
பௌஷிகம் } பதினெண் புராணத்
பௌடிகம் } தொன்று, முதல்
பௌடியம் } வேதம்.
பௌஷியன் } ஒருசக்கரவர்த்தி.
பௌடியன்
பௌண்டரம்-வீமசேநன், சங்கு, ஒட்ர தேசத்துக்கும் ஆந்த்ர தேசத்தின் உத்தரபாகத்துக்கும் ப்ராசீநநாமம், இதற்கு பலியின் புத்ரனுகிய புண்டரனுல் இப்பெயருண்டாயிற்று.
பௌண்டிரம் - ஒருதேயம்,பவுண்டரம்.
பௌதி - இராத்ரி.
பௌதிகசரீரம் - பூதவுடம்பு.
பௌதிகம் - பூதியத்துக்கடுத்தது.
பௌதிகப்ரபஞ்சம் - பௌதிகலோகம்.
பௌதிகன் - சிவபிரான்.
பௌதீகம் - உலகம்.
பௌத்தம் - புத்தமதம்.
பௌத்ரன் - பெயரன்.
பௌத்தர் - புத்தர். பௌத்தமதத்தை அவலம்பித்திருப்பவர்கள். இந்தமதம் சத்திய சிலங்களையும் யோகவித்தையையும் செவ்வனே போதிப்பது.
பௌத்தன் - புத்தசமயத்தான்.
பௌத்தி - பவுத்தி.
பௌத்திரம்-சுத்தம், புத்திரற்குரியது.
பௌத்திரர் - பெயரமார்.
பௌத்திரன் - சுத்தன், மகன் மகன்.
பௌத்திரி - பெயர்த்தி.
பௌத்திரிகேயன் - மகண் மகன்.
பௌமம் - நிலத்திற்பிறப்பன.
பௌமன் - செவ்வாய், அங்காரகன், பூபுத்ரனுதலால் இவனுக்குஇப்பெயருண்டாயிற்று, நரகாசுரன்.
பௌமி - சீதை.
பௌரகம் - நகர்சூழ்சோலை.
பௌரணமி } பூரணை.
பௌரணிமி
பௌரணை - பூரணை, மரக்கன்று.
பௌரம் - பட்டினம்.
பௌரவர் - குருகுலவேந்தர், பூருவமிசத்தோர்.
பௌரவி - மாதிலிங்கன்மகள், வசுதேவன்மனைவி.
பௌராணிகமந்திரம் - பிரணவ மில்லா மந்திரம்.
பௌராணிகம் - புராணமதம்.
பௌராணிகன் - புராணப் பிரசாரம் பண்ணுவோன்.
பௌருஷம் - புருஷத்தன்மை.
பௌரோகித்தியம் - புரோகிதத்தன்மை.
பௌர்ணிமி - பூரணை.
பௌலஸ்தி - சூர்ப்பணகை.
பௌலஸ்தியன் - இராவணன், குபேரன், விபீஷணன்.
பௌலோமர் - வைவசுவதரன் என்னும் தாநவன்மகளாகிய புலோமையிடத்து மரீசிக்குப் பிறந்த அரக்கர்கள், இவர்கள் அருச்சுநனுல் கொல்லப்பட்டார்கள்.
பௌலோமி - புலோமசை, சசிதேவி, புலோமன்மகள், இந்திரன்மனைவி.
பௌவம் - உப்பு, கடல், நீர்க்குமிழி, துறை, பூரணை, மரக்கனு.
பௌளி - ஓர்ராகம் பூபாளன்மனைவி.
பௌனருத்தம் - புனருத்தம்.
பௌஷியன் - உதங்கனுக்குக் குண்டலங்கொடுத்த அரசன்.

ம

ம - இயமன், இறந்தகால விடைநிலை (உ-ம்) என்மர், ஓரெழுத்து, ஒருமந்திரம், காலம், சந்திரன், சிவபிரான், நஞ்சு, நேரம், பிரமன், விட்டுணு.
மக - இளமை, காணிக்கை, பிள்ளை, மகன்.
மககம் - ஆமை.
மககன் - மேன்மகன், விட்டுணு.
மகக்குழை - மாவிலை.
மகங்காரம் - அசங்காரம்.
மகசம் - அறிவு, விதம்.
மகடி - ஒருகுழல், ஒருவித்தை, ஒருவிளையாட்டு.
மகடூஉ - பெண்.

மகடூஉக்குணம் - பெண்டன்மைக்குரிய குணம்.
மகண்மா - அலி.
மகண்மை - மகட்டன்மை.
மகேசுவரன் - சிவபிரான்.
மகேசுவரி - பார்வதி.
மகதந்திரம் - சிற்பநூன் முப்பத்திரண்டிலொன்று.
மகதம் - தேயமைப்பத்தாறி லொன்று, பதினெண்பாடையிலொன்று. வங்க தேசத்துக்குமேற்றிசையிலுள்ள தேசம், இதுமிகப்பழமையானது, உத்தமகுல வேந் தரால் பாரம்பர்யமாக அரசு செ ட்பட்டது, புராணேதி காசங்க லாவற்றிலும் எடுத்துக் கூறப்ப து, இதனது ராஜதானியும் மென்றே வழங்கப்படும், இத்தே த்தார் மாகதர் எனப்படுவர்.
மகதி - சேம்பு, திப்பிலி, நாரதன், வீ
மகதியாழ் - நாரதன் வீணை. [ணை.
மகதிமுனி - நாரதமுனி.
மகதேசுவரன் - சராசந்தன், மகததேசத்தரசன்.
மகதை - திப்பிலி.
மகதோத்பவன் - மகததேசத்திற் பிறந்தவன்.
மகத்திராத்திரு - இராமன்.
மகத்திருநாள் - மாசிமகம்.
மகத்து - பெரியது, பெரியவர், மகாத்
மகத்துவம் - மேன்மை. [துமா.
மகபதி - இந்திரன்.
மகப்பால்வார்த்தல் - அறுத பிள்ளைக்குப் பாலூட்டல், இது அற முப்பத்திரண்டி லொன்று.
மகமது - மக்காதிபர்.
மகமாயியம்மை - திருக்கானப்பேரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மகமுறை - யாகக்கிரமம், விருந்து.
மகமேரு - மகாமேரு.
மகமை - தருமத்தொகை.
மகம் - இருபத்தொன்று, இன்பம், ஒருநாள், பலி, பிரபை, யாகம், விழவு.
மகரகண்டிகை - மகரதோரணம்.
மகரகந்தம் - வெண்காயம்.
மரககாலம் - மாமரம்.
மகரகுண்டலம் - காதணியிலொன்று

மகரகேதனம் - மச்சக்கொடி.
மகரகேதனன் } மன்மதன்.
மகரகேது }
மகரக்குழை - மகரகுண்டலம்.
மகரக்குறுக்கம் - கான்மாத்திரையாய்நிற்கு மகரவெழுத்து.
மகரக்கொடியோன் - மன்மதன்.
மகரச்சா - சாவாக்கியத்தொன்று.
மகரச்சேலை - செஞ்சாயச்சேலை.
மகரதோரணம்-வாயலிற்றூக்குந் தோரணம்.
மகரத்துவசன் காமன்.
மாரக்தம் - கள்,குயில், தேமாமரம், தேனீ, தேன், பூந்தாது.
மகரந்தவதி - பாதிரிப்பூ,மதுவிசேடம்.
மகரந்தாட்டஹாஸம் - முல்லைச்செடி.
மகரந்தெனகம் - புஷ்பம்.
மகரமச்சம் - மகரமீன்.
மகரமண்டலம் - உத்தரவீதிக்கடை.
மகரமாதம் - தைமாதம்.
மகரமீன் - சுறவு.
மகரமுயர்த்தோன் - மன்மதன்.
மகரம் இராசியின்னொன்று, ஒரிராசி,ஒரெழுத்து,ஒருகாயம், ஒருநிதானம், காமனகொடி,குபேரனவநிதிகளில்ஒன்று,சாயநிறம்,சுறமீன்,தேவருலகு, பூந்தாது, முதலை, விருப்பம்.
மகரம்பு - வெண்டையம்.
மகரயாழ் - நால்வகையாழிலொன்று.
மகரயூகம் - படைவகுப்பிலொன்று.
மகரரேகை - நிலவானிலக்கணம்.
மகரவாய்மோதிரம் - கால்விரலணி.
மகரவாழை - காட்டுமல்லிகை, மருகு.
மகரவியூகம் - மகரரூபமாக வகுக்கப்பட்ட படைத்தொகுதி.
மகரன் - ஆகாயத்தைத் தோற்றுவித்த பூதம், முக்குணமூலம்.
மகராகரம் } கடல்.
மகராங்கம் }
மகராங்கன் - காமன்.
மகராசன் - அரசன், பாக்கியவான்.
மகராசி - பாக்கியவாட்டி.
மகராசுவன் - வருணன்.
மகராசுதன் - காரன் புத்திரன்.
மகராட்டிராம் சாதிகானவிலொன்று,ஒரு [தேயம்.
மகராலயம் } கடல்.
மகராலேயம் }

மகராலயாம்ருதம் - உப்பு.
மகரி - கடல்.
மகரிகை - தோரணம்.
மகரிஷி - பெரியரிஷி.
மகருதம் - கொடிவேலி.
மகலோகம் - மேலேழுலகிலொன்று.
மகவதி - இந்திராணி.
மகவன் - இந்திரன்.
மகவாட்டி-குழந்தைப்பிள்ளைக்காரி.
மகவான் - இந்திரன்.
மகவு - கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, மகன்.
மகளிக்கீரை - ஒருகீரை.
மகளிரான்மலர்மரம் - மகடூஉக் காரணமாயலருமரம் அவை அசோகு எழிலைம்பாலை குராகுருக்கத்தி சண்பகம் பாதிரி புன்னை மகிழமரம் மரா முல்லை இவை முறையே உதைக்கநட்புரா அணைக்க பாட நிழல்பட நிந்திக்க ஆடசவைக்க பார்க்க நகைக்க தளிர்த்துப் பூர்ப்பனவாம்.

மகளிர் } பெண்கள்.
மகளீர் }

மகள் - புத்திரி, பெண்.
மகன் - ஆண்பாற்பிள்ளைப்பொது,புதல்வன், புருடன்.
மகன்மை - ஆண்டன்மை.
மகா-பெருமை, மிகுதி, மேன்மை யிவற்றை விளக்குமோருபசருக்கம்.
மகாகச்சம் - சமுத்திரம், மலை.
மகாகதம் - காய்ச்சல்.
மகாகதி - மேற்கதி.
மகாகந்தம் - உள்ளி.
மகாபித்தம் - வில்வமரம்.

மகாகருவம் } பத்திலட்சங்கோடி.
மகாகர்வம் }

மகாகவம் - யுத்தம்.
மகாகாசம்-குதிரைக்கனைப்பு,பரவெளி.
மகாகாயம் - யானை.
மகாகாலம் - நெடுங்காலம், மாமரம்.
மகாகாலன் - உருத்திரன்.

மகாகிதி } கோடி கோடாகோடி.
மகாக்ஷிதி }

மகாகிரீவம் - ஒட்டை.
மகாகும்பி - பெரும்பூசினி.
மகாகுலம் - உத்தமகுலம். [தோன்.
மகாகுலிகன் - உயர்குலத்திற் பிறந்

மகாகூபம் - பெருங்கிணறு.
மகாகோஷம் - பேரொலி.

மகாகோணி } இலட்சங் கோடா கோடி.
மகாக்ஷோணி }

மகாகோரம் - நரகத்திலொரிடம்.
மகாக்கினி - ஓமாக்கினி.
மகாங்கம் - ஒட்டை.

மகாசகா } வாடாப்பூவுள மருதோன்றிமரம், வாடாமல்லிகை.
மகாசகை }

மகாசங்கம் - ஆயிரங்கோடாகோடி,எலும்பு,குபேரனிதியிலொன்று,நெற்றி.
மகாசங்காரம் - சருவசங்காரம்.
மகாசண்டன் - யமகிங்கரன்.
மகாசத்தி - குமரன்.
மகாசம்பு - பெருநாவல்.
மகாசயம் - சமுத்திரம்.
மகாசயன் - பிரபு.
மகாசனன் - பெரியோன்.
மகாசாந்தபனம்-ஆறுநாளாயனுட்டிக்கும்ஒருவிரதம் அது முதனாட் கோசலமும் இரண்டாநாட்கோமயமும் மூன்றுநாட் பாலும் நாலாநாட்டயிரும் ஐந்தாநாணெய்யும் ஆறுநாட்டருப்பையவித்தநீருமுண்டனுட்டிப்பது.
மாகாசாலி - பெரும்பீர்க்கு.
மகாசிவராத்திரி - சைவசமயிகளுக்குரிய விசேடவிரதநாள், இது மாசிமாதத்தில் வருவது.
மகாசுகம் - புணர்ச்சி.
மகாசுவேதம் - சிறுவாலுளுவை.
மகாசுவேதை - சரச்சுவதி.
மகாசூதம் - போர்பறை.
மகாசூத்திரன் - இடையன்.
மகாசேனன் - சேனாபதி,புத்தன் முருமகாசைவம் - ஒருசைவம். [கன்.

மகாசோபம் } நூறு கோடி கோடாகோடி.
மகாக்ஷோபம் }

மகாச்சாயம் - ஆல்மரம்.
மகாச்சுவாலம் - ஓமாக்கினி.
மகாதந்தம் - யானை, யானைக்கொம்பு.
மகாதம்பிரபை - கீழ்நரகம்.
மகாதலம் - கீழேழுலகிலொன்று, கீதிதலம்.
மகாதனம் - தூபம், பொன், வேளாண்
மகாதாது - பொன். [மை.
மகாதாரம் - பெருங்கொட்டை.
மகாதிம்பம் - பெருமரம்.

மகாநியாகம் - சருவத்துறவு.
மகாதுந்துமி - போர்ப்பறை.
மகாதுருமம் - அரசு.
மகாதேஜம் - பாதரசம்.
மகாதேவன் - கடவுள், சிவபிரான், தெய்வம், வருணன்.
மகாதேவி - துர்க்கை, பார்வதி.
மகாதோரை - ஓரெண்.
மகாத்துமா - பரமஞானி.
மகாநசம் - அடுக்களை.
மகாநடன் - சிவபிரான்.
மகாநதி - கங்கை.
மகாநந்தசாகரம் - பேரின்பக்கடல்.
மகாநந்தல் - மோக்ஷம்.
மகாநந்தம் - பேரின்பம்.
மகாநந்தலோகம் - முத்தியுலகு.
மகாநந்தன் - கடவுள்.
மகாநந்தை - கள், ஒருநதி.
மகாநரகம் - ஒருநரகம்.
மகாநலம் - யாசகக்கிநி.
மகாநாகம் - சுரபுன்னைமரம், பெருஞ்சர்ப்பம்.
மகாநாதம் - சங்கு, சிங்கம், பேரொலி முகில், யானை.
மகாநாடு - ஜனசபை.
மகாநிசி - அர்த்தசாமம்.
மகாநிதி - குபேரனதிநிதியி லொன்று, பெருந்தூக்கம்.
மகாநிதியோன் - குபேரன்.
மகாநித்திரை - மரணம்.
மகாநிம்பம் - பூவரசமரம்,பெருவேம்பு
மகாநீசன் - வண்ணான்.
மகாநீலம் - கையாந்தகரை, மரகதம்.
மகாநுபாவன் - மகாத்துமன்.
மகாநேமி - காகம்.
மகாபதம் - துர்க்கதி, மன்மதலோகம், இராசமார்க்கம்.
மகாபட்சி - ஆந்தை.
மகாபதுமம்-குபேரனதிநிதியி லொன்று, பத்துக்கோடாகோடி, வெண்டாமரை.
மகாபதுமன் - அட்டநாகத்தொன்று.
மகாபத்திரம் - பனைமரம்.
மகாபத்திரை - கங்கை.
மகாபாரதம் - வடமொழியிலே சாரங்கதேவமுனிவர்செய்தபாரதசாஸ்திரம், இது லக்ஷக்கிரந்தமுடையது, இதை செய்வித்தவன் சோமராயன் என்னுமரசன், செந்தமிழ்ப் பரமாசாரியாகிய அகஸ்தியமுனிவரால் தமிழிலே ஆயிரஞ் சூத்திரரூபமாகச் செய்யப்பட்ட பாதநூல்.
மகாபலம் - ஆகாசம், குடம், கொளிஞ்சி, சித்தம், தெங்கு.
மகாபலலிங்கநாதர் - திருக்கோகர்ணத்திலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மகாபலன் - காற்று, பெலவான்.
மகாபலி - பலிச்சக்கிரவர்த்தி.
மகாபலிபுத்ரன் - பிரகலாதன்.
மகாபலிபுரம் - மாவலிபுரம் ஓரூர்.
மகாபலை - வில்வம்.
மகாபவன் - சுக்கிரன்.
மகாபாதகன் - யாசதி.
மகாபாசன் - யமதூதன்.
மகாபிரபம் - விளக்கொளி.
மகாபிரபு - அரசன், இந்திரன்.
மகாபிரளயம் - நானூற்று முப்பத்திரண்டுகோடி வருடமுடிவில் வருமழிவு, பிரமகர்பத்தழிவு.
மகாபிராணம் - காகம்.
மகாபிலம் - ஆகாசம்.
மகாபுத்தி - பேரறிவு.
மகாபுருஷன் - உத்தமபுருடன்.
மகாபூ - சுக்கிரன், பெருஞ்சீரகம்.
மகாபூதம் - பஞ்சபூதம்.
மகாபுரி - ஆயிரங்கோடி, கோடி கோடாகோடி.
மகாபெலா - பேராமுட்டி.
மகாப்பிரகாசசத்தி - தப்பிரகம்.
மகாமகம்-மாசிமகத்திற்குருவருநாள்.
மகாமகிமை - பெருமகிமை.
மகாமசானம் - அவிமுத்தம், காசிநகரம்.
மகாமதம் - மதயானை, வெறி.
மகாமதி - பேரறிவு.
மகாமந்திரி - முதல்மந்திரி,குருபன்னி, செல்வி.
மகாமாத்திரன் - செல்வன், மந்திரி, யானைப்பாகன்.
மகாமாந்திரி - குருபன்னி, செல்வி.
மகாமாயி - துர்க்கை.
மகாமாயை-பஞ்சமாயையிலொன்று, பார்வதி.
மகாமாரி - பார்வதி.
மகாமிருகம் - யானை.

மகாமிருத்து - சிவபிரான்.
மகாமுகம் - முதலை.
மகாமுனி - அகத்தியன், புத்தன், வசிட்டன், வியாசன்.
மகாமூஷிகம் - பெருச்சாளி.
மகாமேதை - மருளூமத்தை.
மகாமேரு - பொன்மலை.
மகாமேருவில்லி - சிவபிரான்.
மகாயாகம் - மகாயச்கியம்
மகாயுகம் - நாலுயுகங்கூடினது.
மகாயச்கியம் - பார்ப்பார் தேவர் பிதிர் சுற்றம் தானென்னும் ஐவரையும் ஓம்பி வருதல்.
மகாரசுதம் - ஒருமாமரம்.
மகாரசதம் - பொன்.
மகாரசம் - ஒருமரம், கஞ்சி
மகாரசனம் - மகாரசதம்.
மகாரண்ணியம் - பெருங்காடு.
மகாரதம்-பதினோராயிரந் தேற்குமுதற் றேர், பேராசை.
மகாரதன் - பதினோராயிரந்தேர்க்காருடனே பொருவோன், பதினோராயிரம் தேருக்குத் தலைவன்.
மகாராசன் - அதிபதி, அரசன், கவலையற்றவன், குபேரன், சமணகுரு, செல்வமுடையோன்.
மகாராட்டிரம்-ஒருதேசம், ஒருபாஷை.
மகாராத்திரம் - அத்தசாமம்.
மகாருத்ரன் - மஹாதேவன்.
மகாரூபகம் - நாடகத்தமிழ்.
மகாரூபன் - சிவபிரான்.
மகாரோகம் - குட்டமுதலிய பெருநோய் வியாதி.
மகாரௌரவம் - ஒருநரகம்.
மகார் - மக்கட்பன்மை.
மகாலக்குமி - மகாலட்சுமி.
மகாலயம் - கோயில், பிரமலோகம்.
மகாலயன் - கடவுள், பிரமன்.
மகாலிங்கன் - சிவபிரான்.
மகாலோகம் - நீக்கால்கள், மேலேழுலகினொன்று.
மகாலோகம் - காகம்.
மகாவநம் - பெருங்காடு.
மகாவபன் - சிவபெருமான்.
மகாவராகம் - சுவேதவராகம்.
மகாவல்லி - வசந்தமல்லிகை, வில்வம்.
மகாவற்புதம் - ஒரு பேரெண்.
மகாவாக்கியப்பொருள் - வேதமுடிவாகிய வாக்கியார்த்தம்.
மகாவாக்கியம்-பெரும்பதம், ஒருநூல்.
மகாவிசுவம் - மேடசங்கிராந்தி.
மகாவிஷம் - இருதலைப்பாம்பு.
மகாவிந்தம் - ஓரெண், நளன், நகரம், வைகுந்தம்.
மகாவிந்து - அப்பிரகம்.
மகாவியாகிருதி - காயத்திரிமந்திரம்.
மகாவிரதம் - வீரசைவம்.
மகாவிரதர்-இலிங்கதாரிகள், சைவர்கள்.
மகாவிரதன் - சிவன் என்புமாலை தரித்த மூர்த்தியாய் அருள் செய்வரென்று சொல்வோன். இவன் அகப்புறச் சமயிகளுளொருவன்.
மகாவிருகதி - செம்பு.
மகாவிருக்கம் - சதுரக்கள்ளி.
மகாவிலயம் - ஆகாயம், இதயம், குகை, நீர்ச்சாடி.
மகாவீசி - ஒருநரகம், பேரலை.
மகாவீரம் - அருக்கியபாத்திரம், ஓமாக்கினி, குயில், சிங்கம், வெண்குதிரை.
மகாவீரன் - அக்கினி, கலுழன், விட்டுணு, வீரன்.
மகாவெள்ளம் - ஓரெண்.
மகாவேகம் - குரங்கு.
மகாவேசன் - சிவபிரான்.
மகானந்தம் - முத்தி.
மகானசம் - மடைப்பள்ளி.
மகானலம் - ஓமாக்கினி.
மகான்னவம் - கடல்.
மகி - பூமி.
மகிமை - மூடுபனி.
மகிடசங்காரி - துர்க்கை, காளி.
மகிடமர்த்தினி - துர்க்கை, காளி.
மகிஷம் } மயிடம், எருமை.
மகிடம் } மயிடம், எருமை.
மகிடதானம் - எருமைதானம்.
மகிடரோசனை - கோரோசனை.
மகிடவாகனன் - யமன்.
மகிடச்செற்றாள் - துர்க்கை, காளி.
மகிடன் - மகிடாசுரன்.
மகிடாசுரமர்த்தனி - துர்க்கை, காளி.
மகிடாசுரன் - ஒரு அசுரன்.
மகிஷி - இராணி.
மகிடி - மௌடி.
மகிடித்தல் - மக்களித்தல்.

மகிணன் - மகிழ்நன், மேன்மை.
மகிதம் - சிவன்சூலம்.
மகிதலபரணன் - ஆதிசேடன்.
மகிதலம் - பூமி.
மகிந்தகம் - எலி, கிரி.
மகிபதி, மகிபன் } அரசன்.
மகிமா - மகத்துவம், மிகவும் பருத்தல், அது அட்டமாசித்தியில் ஒன்று.
மகிமை - கனம், பெருமை.
மகிரன் - சூரியன்.
மகிருகம் - மகீருகம்.
மகிலம் - மயிலம்.
மகிலை - பெண், வெறிகாறி.
மகிழ் - ஒருமரம்,களிப்பு,மகிழென்னேவல்.
மகிழ்ச்சி - இன்பம், களிப்பு.
மகிழ்தல் - களித்தல், சந்தோஷித்தல்
மகிழ்நன்-கணவன்,மருதநிலத்தலைவன்
மகிழ்வு-இன்பம், களிப்பு, சந்தோஷம்
மகிளம் - பூவிதழ்
மகிளி - ஒருகீரை.
மகிளித்தல் - மக்களித்தல்.
மகினம் - இராச்சியம்.
மகீ - ஒருயாறு, பசு, பூமி.
மகீசுதன் - செவ்வாய்.
மகீசுதை - சீதை.
மகீதரம் - மலை.
மகீதரன் - ஆதிசேடன்.
மகீதலம் - பூமி.
மகீத்திரம் - மலை.
மகீபதி, மகீபன், மகீபாலன் } அரசன்.
மகீப்பிராசீரம் - சமுத்திரம்.
மகீமயம் - மண்ணாற்செய்யப்பட்டவை.
மகீருகம் - தாபரயோனி, மரம்.
மகீலதை - நாங்கூழ்.
மகுடபங்கம் - கிரீடாவமானம்.
மகுடம் - சல்லடைக்கொப்பு, சிகரம், சிவாகமமிருபத்தெட்டினொன்று, தலையணி, மத்தள முதலியவற்றின் விளிம்பு, மறைவு, மூடி, மூடியுறப்பு.
மகுடராகம், மகுடராமக்கிரியம் } ஒருபண்.
மகுடவர்த்தனர் - முடிதரிக்குமரசர்.
மகுடாதிபதி - கிரீடதாரி.
மகுடி - மகிடி.
மகுணன் - மகிணன்.
மகுரம் - கண்ணாடி, தண்டசக்கிரம், பளிங்கு, பூமொட்டு.
மகுலம் - மகிழமரம்.
மகூலம் - மலர்ந்தபூ.
மகேசம் - அப்பிரகம், இந்திரன், சிவபிரான்.
மகேசன் - சிவபெருமான்.
மகேசுவரதீர்த்தர் - ஸ்ரீராமாயணத்துக்கு வியாக்யானஞ்செய்தவர் இந்த வியாக்யானத்துக்கு மஹேஸ்வர தீர்த்தியம் என்று பெயர்.
மகேசுவரன் - சிவபிரான்.
மகேசுவரி - பார்வதி.
மகேச்சரன், மகேச்சுவரன் } சிவபெருமான்.
மகேச்சுவரி - பார்வதி.
மகேந்திரகதலி - ஒருவாழை.
மகேந்திரசாலம் - ஒருமாயவித்தை அது கலைஞானமறுபத்துநான்கினொன்று.
மகேந்திரநகரி - அமராவதி.
மகேந்திரபுரி - தென்கடலினிடையேயிருந்த ஒரு நகரம், இது சூரபன்மனது ராஜதானி.
மகேந்திரம் - ஒருநகரம்,ஒருமலை,மஹேந்திரம்.
மகேந்திரன் - இந்திரன்.
மகேந்திராணி - இந்திராணி.
மகேந்திரை - ஒருநதி.
மகேலிகை, மகேலை } பெண்.
மகேசுவரியம் - செல்வம்.
மகோததி - இந்திரன், கடல்.
மகோதயம் - ஒருபுண்ணியகாலம், பெருமை, முத்தி, மேன்மை, விடுதல்.
மகோதரம் - ஒருநோய், பெருவயிறு.
மகோதரன் - இராவணன் மந்திரிகளில் ஒருவன்.
மகோதி - சசிதேவி.
மகோக்ரமரம் - முருங்கைமரம்.
மகோபநிடதம் - உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று.
மகோற்சவம் - திருவிழா.
மகோற்பலம் - தாமரை
மகோன்மதம் - மருள்வெறி.
மகௌடதம் - சுக்கு, திப்பிலி, வசம்பு.
மகௌடதி - நன்மருந்து.
மக்கடம், மர்க்கடம் } குரங்கு.

மக்கடித்தல் - அழித்தல்.
மக்கட்டம்பிடித்தல் - மற்கட்டம் பிடித்தல்.
மக்கட்பரப்பு-நாட்டார்,மன்பதை.
மக்கநகர் - அருக்கருக்கு விசேஷமான ஒரு தலம்.
மக்கம்-எருக்கு, ஒருதேயம், நெய்வார்த்திபுரளுதல்.
மக்கல்-உக்குதல்.
மக்களித்தல் - சளுக்குதல், திரும்புதல்.
மக்களிப்பு - மக்களித்தல்.
மக்கள் - மகார், மனிதர் இவர் எழுவகைப்பிறப்பில் ஒருவர்.
மக்கனம் - ஆழ்தல், கேலி.
மக்கன் - பலவான்.
மக்காச்சோளம் - பெரியசோளம்.
மக்கி - உக்கன்மாக்கல், ஒருகுளிகை.
மக்கினம் - அமிழ்ந்தல், வெட்கம்.
மக்கு - அடைமண், மந்தகுளம்.
மக்குதல் - உக்கியழிதல்.
மக்குலம் - சிலாசத்து.
மங்கணன் - தபோமகிமையாலேசாரசுவதத்தில் நடநஞ் செய்தவன்.
மங்கலகாரியம் - சுபகாரியம்.
மங்கலகிரி - விஷ்ணுநாரசிங்கமூர்த்தியாய்எழுந்தருளியிருக்கும் மூன்று ஸ்தலங்களிலொன்று, மூன்றுவன:-அகோபிலம், மங்கலகிரி, சுவாலை என்பன.
மங்கலகௌசிகம் - ஓரிராகம்.
மங்கலசண்டி - துர்க்கை.
மங்கலச்சொல் - மங்கலமொழி.
மங்கலஸ்நானம் - மங்கலகாரியத்திற்குமுழுகுதல்.
மங்கலநாயகியம்மை - திருக்குடமூக்கிலேகோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மங்கலப்பாடகர் - கடிகைமாக்கள், சோபனம் பாடுவோர்.
மங்கலப்பிரதன் - சுபமுண்டாக்குவோன்.
மங்கலப்பிரதை - மஞ்சள்.
மங்கலமடந்தை - ஒருபெண் தெய்வம், இத்தெய்வத்தை மங்கலாதேவி என்பர், இத்தெய்வத்திற்கு ஆலயம் மலைநாட்டிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும் உண்டு, மங்களூர் என்பதை இதுபற்றிவந்த மங்கலபுரம் என்னும் பெயரின் மரூஉ வென்றுங்கூறுவர்.
மங்கலமொழி - சோபனவார்த்தை,செய்யுட்களின் முதற்கவியின் முதலில் வரவேண்டுஞ்சுபமொழி அவை அமிழ்தம், ஆரணம், உலகம், எழுத்து, கங்கை,கடல்,சீர், சொல், திரு,தேர், திலம்,நீர்,பரி, பரிதி, புகழ், புயல்,பூ, பொன், மணி, மதி, மலை, யானை முதலியன.
மங்கலம் - கலியாணம்,சுபம், சேகரிப்பு, சோபனம், தசனபலி, தருமம், பொலிவு, வாழ்த்து.
மங்கலம்பாடுதல் - சோபனம்படித்தல்.
மங்கலவள்ளை - ஒருபிரபந்தம், அதுஉயர்குலத்துதித்த மடவாலை வெண்பாவொன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது.
மங்கலவாசகம் - மங்கலச்சொல்.
மங்களவாத்தியம் - மங்களவாச்சியம்.
மங்கலவாரம் - செவ்வாய்க்கிழமை, நல்லநாள்.
மங்கலன் - செவ்வாய், அங்காரகன்,நாவிதன்.
மங்கலி - நாவிதன், மங்கலியதாரி.
மங்கலியகம் - சிறுசடலை.
மங்கலியம் - தாலி.
மங்கலை - அம்பட்டத்தி, இலக்குமி, உமை, கற்புடையாள், சுமங்கலி.
மங்கல் - ஒளியின்மை, கெடுதல்,தோற்றக்குறைவு.
மங்கல்லியம் - சந்தனம், தயிர்.
மங்கிலியகாரி - இல்லவள்.
மங்கில்லியம் - சந்தனம்,செவ்வியம்,தயிர்,பொன்.
மங்களகரன் - சுப முண்டாக்குவோன், சிவபிரான்.
மங்களகௌசிகம் - ஒருபண்.
மங்களநாயகி - திருமங்கலக் குடியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர், திருக்கண்டியூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர், திருநல்லத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர், திரு இடும்பாவனத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர், திருப்பரிதி நியமத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மங்களநாயகியம்மை - திருவாரூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மங்களபாடகர் - மங்கலபாடகர்.

மங்களம்-காரியம்,சுபகாரியம்,வாழ்த்து.
மங்களாசரணை - மங்களவழிபாடு அது வாழ்த்து,வணக்கம், வத்துநிர்தேசம் என மூவகைப்படும்.
மங்களாசாசநம்-மங்கலவாழ்த்து, ஆசீர்வாதம்.
மங்களாதேவி - இலக்குமி. [ர்.
மங்களூர் - மேற்கடற்கரையிலுள்ளவொரு
மங்களை - யோகினிதிசையினொன்று.
மங்கிணி - மண்ணுணி.
மங்கிலம் - காட்டாக்கினி.
மங்கிலியம் - மங்கலியம். [லை.
மங்குங்காலம் - துன்பகாலம், மரணவே
மங்குசனி - முதன்முறைவருமேழரை நாட்சனி.
மங்குதல் - கெடுதல், தோற்றங்குறைதல், மழுங்குதல்.
மங்குரம் - பளிங்கு.
மங்குலம் - மங்குளம்.
மங்குல் - ஆகாயம்,இரவு,இருள்,மேகம்.
மங்குளம் - இருள், கலக்கம், மந்தாரம்.
மங்கை - கற்றாழை,பதின்மூன்றுவயதுடையப்பெண், பெண்.
மங்கைதீர்க்கம் - மணவாளிகாளுக்குமணவாளனுள் பதின்மூன்றக்குமேற்பட்ட நாளாயிருத்தல் இது தசப்பொருத்தத்தி லொன்று.
மங்கைநாயகி - திரு அகத்தியான்பள்ளியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர், திருவிசயமங்கையிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மங்கைபங்கன்
மங்கைபங்காளன் } சிவபெருமான்.
மங்கைபாகன்
மங்கையர்க்கரசியம்மை - திருவேதிகுடியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர் பாண்டிமாதேவி.
மங்கையர்க்கரசியார்- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வரவழைத்துத் தமது நாயகனாகிய கூன் பாண்டியனுக்குச்சுரம் நீப்பித்தவராகியமாதசிரோமணியார், இவர் சோழராஜபுத்திரியார். அறுபத்துமூவரிலொருவர், கூன்பாண்டியன் மனைவி.
மசகம் - கொசுகு, நீர்த்துருத்தி, மயக்கம், மயிர்.

மசகி - அத்திமரம்.
மசகிற்புள் - ஒருகடற்பறவை.
மசகு - கடலிற்றிசைதெரியாத இடம், வண்டிக்கீல்.
மசகுதல் - சுணங்குதல், மயங்குதல்.
மசக்கல் - மசங்கல்.
மசக்குதல் - கசக்குதல், கலக்குதல், மயக்குதல்.
மசக்கை - கருப்பமசக்கு.
மசக்கைக்காரி - கருப்பஸ்திரீ.
மசங்குதல் - கசங்கல், மயங்கல்.
மசண்டை - அந்திநேரம், சருகுமாலை.
மசமசத்தல் - தினவுகொள்ளல்.
மசமசப்பு - சொறிவு.
மசமசெனல் - மசமசத்தல்.
மசம்-அளவு,கொசுகு,கோபம்,தொனி.
மசாதம் - பேய்த்தேர்.
மசனம் - அளத்தல், வருத்தல்.
மசாகம் - குருவி.
மசாரகம் - இந்திரநீலமணி.
மசாரம் - மரகதம், நீலரத்நம்.
மசாணம் - மயானம், சுடலை.
மசி
மஷி } மசியென்னேவல், மை.
மசிகம் - பாம்புபளை.
மசிகூபி - மைக்கூடு.
மசிசலம் - மை.
மசிதல் - நசிந்துகுழைதல்.
மசிதானம்
மசிதானி } மைக்கூடு.
மசித்தல் - நசித்துக்குழைத்தல்.
மசிபண்ணியன் - எழுத்துக்காரன்.
மசிபதம் - தூவல்.
மசிப்பாணி
மசிமணி } மைக்கூடு.
மசியல் - மசிக்கப்பட்டது, கடையப்பட்
மசி - அறுகு, மயிர். [டது.
மசிவு - மசிதல்.
மசீது - பள்ளிவாசல்.
மசீலம் - வண்ணாரச்சேரி.
மசுக்கரம் - மூங்கில்.
மசுரம் - கட்டில்.
மசுரை - வேசி.
மசூசிகம் - மசூரிகம்.
மசூரகம் - வட்டத்தலையணை.
மசூரம் - மூட்டுப்பூச்சி.
மசூரன் - தட்டான்.

மசூரி } சின்னமுத்து, இருக்கர்
மசூரிகம் } கல்லறை.
மசூரிகை - குருநோய்.
மசூரை - வேசை.
மச்சகந்தி - வியாசன்றாய்.
மச்சதேசம் - விராடபுரம், மச்சதேசம்.
மச்சத்தின்சல்லியம் - மீனெலும்பு.
மச்சரம் - பொறாமை.
மச்சனம் - ஸ்நாநம்.
மச்சம்-தேயமைம்பத்தாறிலொன்று,பதினெண்புராணத்தொன்று, மாற்றறிதானமறியவெட்டி வைத்திருக்கும் பதிற்பொன்,மீனவிராசி,மீன் இது திருமாலவதாரத்துமொன்று.
மச்சன் - உபரிசரவசுவின் மூன்றாம் புத்திரன்.
மச்சாவதாரம் - விஷ்ணு தசாவதாரத்துள் ளொமுதலவதாரம்,இவ்வவதாரம் வேதங்களை யபகரித்துக்கொண்டோடிக் கடலிலொளித்திருந்த சோமுகாசுரனைக்கொன்று அவற்றைமீட்டற்பொருட்டெடுத்தது. இந்தஅவதாரத்திலேயே மகாப்பிரளயம்வர ஏழாவது மநுவும்சப்தரிஷிகளும் மீனுருக்கொண்டு தம்முயிர் பிழைத்திருக்க, மற்றெல்லா வுலகங்களும் அழிந்தொழிந்தன. மீனவதாரம், இது திருமால் தசாவதாரத்துமொன்று.
மச்சாள் - மைத்துனி.
மச்சான் - மைத்துனன்.
மச்சி - பூனைக்காலி, மச்சுனி.
மச்சிகை - மோர்.
மச்சியம் - கடுகுரோகிணி, சிவபுராணத்தொன்று.
மச்சியாச்சி - பொன்னாங்காணி.
மச்சினச்சி - மச்சுனி.
மச்சினன் - மச்சான்.
மச்சினி - மச்சாள்.
மச்சினிச்சி - மைத்துனி.
மச்சு - குற்றம், சுவர்க்குமேல் வெளியடைப்பு, மஞ்சு, மேனிலை.
மச்சுக்கல் - மேல்வீட்டிற்பாவுகல்.
மச்சுவீடு - மச்சடைத்தவீடு.
மச்சுனச்சி - மச்சுனி.
மச்சுனமை - மைத்துனவுரிமை.
மச்சுனன் - மைத்துனன்.
மச்சுனி - மைத்துனி.

மச்சேந்திரநாதர்-நவநாதசித்தரிலொருவர்.
மச்சை - உட்சுரம், மறு, மீனம்பர், மூளை அது சத்ததாதினொன்று.
மச்சைசமுற்பவம் - சுரோணிதநீர்.
மச்சோதரி - மச்சகந்தி.
மஞ்சகம் - கட்டில், மேடை.
மஞ்சகாசிரயம் - மூட்டுப்பூச்சி.
மஞ்சட்கடம்பு - ஒருமரம்.
மஞ்சட்கல் - கொடுங்கோபிச்சிலை.
மஞ்சட்காப்பு - மஞ்சட்பொடிச்சாந்து.
மஞ்சட்காமாலை - ஒருநோய்.
மஞ்சட்செவ்வந்தி - ஒருசெவ்வந்தி.
மஞ்சட்டி - மஞ்சிட்டி.
மஞ்சட்பாவட்டை - ஒருபாவட்டை.
மஞ்சட்பூச்சு - மஞ்சட்குளிப்பு.
மஞ்சணத்தி } மஞ்சணுணா.
மஞ்சணாற்றி }
மஞ்சணீர்ச்சீட்டு வளர்ப்புப் பிள்ளையைச் சுதந்தரத்திற்குரித்தாக்குஞ்சீட்டு.
மஞ்சணீர்ப்பிள்ளை சுதந்தரத்திற்குரிய வளர்ப்புப்பிள்ளை.
மஞ்சணுணா - ஒருநுணா.
மஞ்சனை - எண்ணெய்க்குங்குமம்.
மஞ்சமண்டபம் - பள்ளிமண்டபம்.
மஞ்சம் - கடல், கட்டில், சப்பரம்.
மஞ்சரம் - முத்து.
மஞ்சரி-ஒருபிரபந்தம், தளிர், நாயுருவி, பூங்கொத்து, பூத்திரள், பூமாலை, மலர்க்காம்பு, முத்து.
மஞ்சரிகம்-பிருதுவானமருக்கொழுந்து
மஞ்சலன் - விற்காரன்.
மஞ்சலிக்காள் - உருத்திரசடை.
மஞ்சளலரி-ஒருசிவலிங்கச்செடி, அலரி
மஞ்சளாலாத்தி-ஆலாத்திகளிலொன்று
மஞ்சளினங்கலையன் - ஒருவகைநெல்.
மஞ்சள் - அரிசனம்.
மஞ்சள்மந்தாரை - ஒருவிதமந்தாரை.
மஞ்சள்வசந்தம் - ஒருசடங்கு, ஒருவிளையாட்டு.
மஞ்சனச்சாலை - ஸ்நானமண்டபம்.
மஞ்சனம் - குளித்தல், முழுகல்.
மஞ்சனி - வேலிப்பருத்தி.
மஞ்சன் - மகன், மைத்துனன்.
மஞ்சா - இலைக்கள்ளி.
மஞ்சாடி - இரண்டு குன்றிமணிகொண்டநிறை ஒருமரம், வயிரநிறை.

மஞ்சாரி - கஞ்சாங்கோரை.
மஞ்சாளி - வயிரநிறக்குகிறை.
மஞ்சி - சங்கம்வாங்கி, சிறவரம்பு, படகு, பேடகம், பேழை, மரல்நார்.
மஞ்சிகம் - தாளிக்கொடி, பேடகம்.
மஞ்சிகன் - நாவிதன்.
மஞ்சிகை - காதணி, குண்டலம், கையாந்தகரை, தாளிக்கொடி, பேழை, வேசி.
மஞ்சிட்டம் - மஞ்சாடி.
மஞ்சிஷ்டி } ஒரு கொடி, ஒரு சாய
மஞ்சிட்டி } வேர்.
மஞ்சிதேவர் - காசியிலுள்ள பெருமான் விக்கிரகத்தை எழுந்து சென்று எல்லாருங்காண சிவலிங்கத்தை வணங்கச் செய்தவர் அது காரணமாக அங்கிருந்த வைணவர்கள் சிவ தூஷணம் செய்யாதடங்கினர்.
மஞ்சிபலை - வாழை.
மஞ்சிமம் - அழகு.
மஞ்சிரம் - காலாழி.
மஞ்சிலிக்கான் - உருத்திரசடைப்பூடு.
மஞ்சிலை - செங்கல்.
மஞ்சில் - பழையவரம்பின்வழி.
மஞ்சிற - கையாந்தகரை.
மஞ்சிரம் - வண்ணார்சேரி.
மஞ்சு - அழகு, ஆபரணம், இளமை, கட்டில், களஞ்சியம், பனி, முகடு, முதுகு, மேகம், யானைமுதுகு, வலி.
மஞ்சுகமநன் - நடையழகன்.
மஞ்சுகமநை - அன்னப்பேடை.
மஞ்சுகம் - கொக்கு.
மஞ்சுகேசி - கிருட்டினன்.
மஞ்சுகோசர் - வஜ்ரசூசிசெய்த அசுவகோசர் குரு.
மஞ்சுக்கட்டை - மறமாடி.
மஞ்சுபாஷணி - நயவசனி.
மஞ்சுலம் - நீர்ப்பாய்ச்சல்.
மஞ்சுவந்தம் - இமயமலைக்கு உத்தர திசையிலுள்ள ஒருமலை, இதில் மிகப்பெரிய தடாகமொன்றுண்டு, அதில் பஞ்சவர்ணங்களோடு கூடியதாமரை மலர்கள் மலர்வன.
மஞ்சுவாணி - இந்திராணி, கௌரி.
மஞ்சுளம் - அழகு.
மஞ்சூஷை } கோட்டை, பேழை
மஞ்சூடை }
மஞ்சூரம் - கடலை.
மஞ்ஞை - மயில்.
மஞ்ஞையூர்தி - கந்தக் கடவுள்.
மஞ்ஞைவாகநன் - சுப்பிரமணியன்.
மடக்கடி - கலக்கம், முடக்கு.
மடக்கடிக்காரன் - சூதன்.
மடக்கம் - அடக்கம், முடக்கு, வளைவு.
மடக்கல் - அடக்கல், தடுத்தல், வளைத்தல்.
மடக்கியல் - சரிதகம்.
மடக்கு - ஓரலங்காரம் இது வந்தமொழியே மடங்கி வருவது, ஒருபாத்திரம், பேரகல், மடக்கென்னேவல், மடங்கடிப்பு, முடக்கு.
மடக்குக்கத்தி - பூச்சாத்தி.
மடக்குக்குடர் - ஒரு குடர்.
மடக்குதல் - மடக்கல்.
மடக்குப்பிடிக்கத்தி - எழுத்தாணிக்கத்தி.
மடக்குமடக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மடக்குவரி - இறைமேலிறை.
மடக்கொடி - பெண்.
மடங்கடித்தல் - தோற்றோடச்செய்தல், முறியடித்தல்.
மடங்கலர் - பகைவர்.
மடங்கல் - இடி, இயமன், காலன், கீழ்ப்படிதல், சிங்கம், தாழை, மீளல், முடங்கல், புகமுடிவு, வடவா முகாக்கினி, வியாதி.
மடங்கலூர்தி } பராசத்தி.
மடங்கல்வாகநி }
மடங்கல்விரோதி } சரபம், எண்காற்
மடங்கல்வைரி } புள்.
மடங்கற்கொடியோன் - வீமன்.
மடங்கு - அளவு, இளைக்கயிறு, பங்கு, மடங்கென்னேவல், வியாதி.
மடங்குதல் - கீழ்ப்படிதல், மீளல், முடங்கல்.
மடதருமம் - மடபுண்ணியம்.
மடதி - ஆலங்கட்டி.
மடத்தல் - அறியாமையாயிருத்தல்.
மடத்தனம் - அறியாமை.
மடநடை - பதவியநடை.
மடநல்லார் - பெண்கள்.
மடநோக்கு - எண்ணமுமச்சமுங்கூடிய பார்வை.
மடந்தை - பத்தொன்பதாண்டிற் பெண், பருவமாகாதபெண், பெண்.
மடந்தைபாகன் } சிவபெருமான்.
மடந்தைபாதியன் }
மடப்பத்து - மடத்திற்குரியன.

மடப்பம் - அரண்மனையிற் பெண் ஐஞ்ஞூறு கிராமத்திற்குத் தலைக்கிராமம்.
மடப்பளி - ஒருசாதி, சமயல்வீடு.
மடப்பற்று - மடத்திற்பொருள்.
மடப்பிடி - பெண்யானை.
மடமடத்தல் }
மடமடப்பு } ஈரடுக்கொலிக்குறிப்பு.
மடமடெனல் }
மடமை - அறிவின்மை இது பெண்கள் காற்குணத்தொன்று, கபடின்மை, புத்தியீனம்.
மடம் - அறப்புறம்,இரதம்,கோயில், சத்திரம், மடமை, முனிவர், வாசம்.
மடரன் - ஒருமஹாருஷி.
மடலரிதாரம் - ஓரரிதாரம். [வீடு.
மடலாயம் - மடம், பெரியோர்வசிக்கும்
மடலித்தல் - மடங்கித்திரும்புதல்.
மடலூர்ச்சி - மடலூர்தல்.
மடலூர்தல் } மடற்குதிரையிவர்தல்
மடலேறுதல் } இது அகப்பொருட்டுறையினொன்று.
மடல் - ஈந்து, கமுகு, தாழை, தெங்கு பனை,வாழையிவற்றின்பூமுடி, ஏற்றமடல், ஒருபிரபந்தம், ஓலைமடல், காதின்மடல், கைச்சிப்பு, சிறுவாய்க்கால், பனைமட்டைக்கங்கு, பூவிதழ், வாழை முதலியவற்றின் மடல்.
மடவரல் }
மடவாள் } இளம்பெண்.
மடவாமீன் - ஒருமீன்.
மடவார் - அறிவீனர், பெண்கள்.
மடவியர் - பெண்கள்.
மடவை - ஒருமீன்,கடவுமரம், துடுப்பு.
மடவைக்கெண்டை - ஒருவகைமீன்.
மடற்பனை - கங்குப்பனை.
மடற்பாளை - பூமடற்பாளை.
மடற்றத்தம் - ஒருதத்தம்.
மடன் - அறியாமை,அறிவிலான், உன்ம
மடன்மா - மடற்குதிரை. [த்தன்.
மடாதிபதி - மடத்தலைவன்.
மடாதிபத்தியம் - மடத்தலைமை.
மடி - அடங்கல், கேடு, சீலை,சோம்பல், சோறு,தாழை,தாழைவிழுது,நோய், பொய்,மடக்குதல்,மடித்தது,மடியென்னேவல், முலைமேற்றிரள்,வயிறு, வலையினுறுப்பு.
மடிகம்பு - வலைகம்பு.
மடிகால் - கால்முடக்கி சகனத்தின்கீழ் வைத்திருத்தல்.
மடிக்குதல் - உபாயமாய்ச் செயித்தல், கொல்லுதல்,மடக்குதல்,முடக்குதல்.
மடிச்சுக்கட்டி - ஒருவிதப்புழு.
மடிதல் - கெடுதல், சாதல், மடங்குதல்.
மடித்தல் - மடிக்குதல்.
மடிபிடி - சண்டை, மடிச்சீலையிற் பிடிக்கும்பிடி.
மடிப்பணம் - கைப்பணம்.
மடிப்பாளி - மடிப்புக்காரன்.
மடிப்பிச்சை - மடிச்சீலையில் வாங்கும்
மடிப்பிளை - வங்கமணல். [பிச்சை.
மடிப்பு - மடக்கு, மடித்திருப்பது, மோசம், வஞ்சகம். [கன்.
மடிப்புக்காரன்-தீதுசெய்வோன்,வஞ்ச
மடிப்பெட்டி - கொட்டைப்பெட்டி.
மடிப்பை - அடைப்பை.
மடிமாங்காய்போடுதல் - பரிதானங்கொடுத்தல், பொய்க்குற்றஞ்சார்த்துதல்.
மடிமை - சோம்பு.
மடிவிடுதல் - மடிதளர்தல், அது பசு முதலியன சினைக்குறிகாட்டல்.
மடிவித்தல் - மடியச்செய்தல்.
மடிவு - கேடு, சாவு, சோம்பு, தரித்திரம், மடக்கம், மடிதல்.
மடு - ஆற்றினுட்பள்ளம், குளம், மடுவென்னேவல்.
மடுத்தல் - சந்தியல், நிறைத்தல், மடிப்புச்செய்தல், வாய் முதலியவற்றுளுட்கொள்ளல்.
மடுப்பு - மடிப்பு.
மடை - ஆபரணக்கடைப்பூட்டு,சோறு, அவாரம், தேவதைகட்குப் படைப்பது, நீர்பாயுமடை, மதகு, வாய்க்கால்.
மடைக்கடல்-முகத்துவாரமுள்ளகடல்.
மடைத்தலை - மடைமுகம்.
மடைத்தனம் - அறிவீனம்.
மடைத்தொழிலோன் - சமயற்காரன் இவன் அரசர்க்குறுதிச்சுற்றத்தொருவன்.
மடைத்தொழில் - சமையல்வேலை.
மடைநூல் - பாகசாஸ்திரம்.
மடைபரவுதல் - நிவேதனஞ்செய்தல்.
மடைப்பண்டம், பரப்பல். [ல்.
மடைபோடுதல் - மடைப்பண்டம்பரவ

மடைப்பண்டம் - அலங்காரநைவேத்தியம்.
மடைப்பள்ளி - அடுக்களை, ஒருசாதி.
மடைப்புத்தி - அறிவீனம்.
மடைமாற்றுதல் - மடைக்கழித்தல்.
மடைமுகம் - ஆற்றுவரம்.
மடையசாம்பிராணி - அறிவீனன்.
மடையப்புத்தி - மடைப்புத்தி.
மடையன் - அறிவிலான், சமயற்காரன்.
மடையான் - ஒருபறவை.
மடைவேலை - சமையல்வேலை, புத்தியற்றவேலை.
மடைவைத்தல் - மடைபோடுதல்.
மட்கலசம் - மண்கலயம்.
மட்கலம் - மண்பாண்டம்.
மட்கல் - அழுக்கேறல், ஒளிமழுங்கல்.
மட்குகை - மண்குகை, மழுங்குதல்.
மட்குடம் - மண்குடம்.
மட்குதல் - மட்கல்.
மட்சம் - குரோதம், சமூகம்.
மட்சிகம் / மட்சிகை } ஈ.
மட்டக்கோல் - மட்டங்கட்டுங்கோல்.
மட்டங்கட்டுதல் - சரியாய்நிறுத்தல், நிதானம்பண்ணல்.
மட்டசுத்தம் - மட்டம்.
மட்டச்சுறு - ஒருமீன்.
மட்டத்துருத்தி - ஒருவிசிறி.
மட்டந்தட்டுதல் - ஒப்புரவுதட்டுதல்.
மட்டப்பலகை - சமனறிகருவி.
மட்டம் - அளவு,எல்லை,உத்தேசம், ஒப்புரவு, கரும்பு நெல் மூங்கில் வாழையிவற்றின் கன்று,கேடகம்,சமம்,வாலயானை, வாலக்குதிரை, மூன்றொருத்தடையதானம்.
மட்டம்பிடித்தல் - கப்பித்தல், நிதானம்பண்ணல்.
மட்டம்வெடித்தல் / மட்டம்வைத்தல் } கப்பித்தல்.
மட்டலகு - ஒருகருவி.
மட்டவேலை - பருமட்டானவேலை.
மட்டறிதல்-அளவறிதல்,குறிப்பறிதல்.
மட்டாயுதம் - வாள்.
மட்டி - ஒழுக்கின்மை, கடன்மட்டி, படைக்கலம், மட்டியென்னேவல், மதிகேடன்.
மட்டிகை - சாணிமுத்திரை.

மட்டிடுதல் - மட்டுக்கட்டுதல்.
மட்டித்தல் - பூசுதல், மட்டுக்கட்டுதல், மண்டலித்தல், முறித்தல்.
மட்டித்தையல் - பருக்கன்றையல்.
மட்டியம் - சத்ததாளத்தொன்று.
மட்டிலை - பச்சிலை.
மட்டு - அவதி, அளவு, எல்லை, கள்.
மட்டுக்கட்டுதல் - அளவிட்டறிதல்.
மட்டுக்கோணம் - சரிகோணம்.
மட்டுத்தப்பு - அளவுக்கதிகம், நிதானமின்மை.
மட்டுத்திட்டம் - சரிநிதானம்.
மட்டுப்படாமை - அடங்காமை, எட்டாமை.
மட்டுப்படுதல் - அளவுபடுதல்.
மட்டுப்படுத்தல் - அளவுபடுத்தல்.
மட்டுப்பிரமாணம் - சரியளவு.
மட்டுமதியம் - அளவு, நிதானம்.
மட்டுமரியாதை - ஆசாரவுபசாரம்.
மட்டுமிஞ்சுதல் - மட்டுத்தப்புதல்.
மட்டுவார்குழலி - திருச்சிராப்பள்ளியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
மட்டை - உடற்குறை,ஒருபாம்பு,கமுகு தெங்கு வாழை பனை யிவற்றின்மட்டை, முட்டாள்.
மட்டைகட்டுதல் - கடகமுதலியவற்றிற்குமட்டைவைத்துத் தலைகட்டுதல்.
மட்டைக்கட்டு - வட்டுத்திராட்சி.
மட்டைகுதிரை - மடலாற் செய்யப்பட்டகுதிரை.
மட்டைக்குறி - ஒருசாயக்குறி.
மட்டைக்கோரை - ஒருபுல்.
மட்டைச்சொண்டு - பெரியசொண்டு.
மட்டைத்தேள் - திருநீலகண்டன்,பிள்ளைத்தேள்.
மட்பகைஞன் - குயவன்.
மண்பாண்டம் - குயக்கலம்.
மட்பாத்திரம் - மண்பாண்டம்.
மணக்கோலம் - கலியாணவலங்காரம்.
மணங்கட்டுதல் - வாசனை சேர்க்குதல்.
மணங்கல் - பானை, மிடா.
மணங்கு - ஆட்டுக்குட்டி, இருவாட்சி, ஒருநிறை.
மணச்சிலை - கூரைச்சீலை.
மணத்தக்காளி - ஒருசெடி.

மணத்தல் - கமழ்தல், கூடல், மோத்தல், வேட்டல்.

மணந்தட்டுதல் - மணங்கிளர்தல்.

மணப்பந்தல் - கலியாணப்பந்தல்.

மணப்பறை - கலியாணப்பறை.

மணப்பு - மயப்பு, வாசனை.

மணப்பெண் - கலியாணப்பெண்.

மணப்பொருத்தம் - விவாகத்திற்குரிய பொருத்தம் பத்து அவை இராசி இராசித்தலைவர் இரச்சு கணம் திரி தீர்க்கம் தினம் மாகேந்திரம் யோனி வசியம் வேதை.

மணமகள் - மணவாளி, மனைவி.

மணமகன் - புருடன், மணவாளன்.

மணமண்டபம் - கலியாணமண்டபம்.

மணமுரசு - விழாமுரசு.

மணம் - கலியாணம், கூட்டம், மகிழ்ச்சி, வாசனை.

மணம்பிடித்தல் - எழில்பிடித்தல்.

மணலக்கம்பம் - பால்வீதிமண்டலம்.

மணலி - ஒரூர், மருக்கொழுந்து.

மணலிமுத்துகிருஷ்ணமுதலியார் - இவர் இற்றைக்கு நூற்றைம்பது வருஷங்களுக்குமுன்னே சென்னையில் பிரபலமாக வாழ்ந்திருந்த ஒரு வேளாளப்பிரபு, கல்வி கேள்வி யொழுக்கங்களோடு பெருஞ்செல்வம் ஈகை முதலிய நற்குணங்களுக்கெல்லாம் ஆலயமாயிருந்தவர். இராமாயண கீர்த்தனைபாடின சீகாழி அருணாசலகவிராயருக்குப் பொன்மாரி பொழிந்தவள்ளல் இவரே ஆயிரம்வருஷங்களுக்கு முன்னே பாடப்பட்ட கம்பராமாயணத்திற்கும் இவர் மரபினரே அபிமானப் பிரபுக்களாயிருந்தார்கள்.

மணலூர்புரம் - மணிபுரம், பாண்டிநாட்டகத்தே சித்திராங்கத பாண்டியனுக்குஇராஜதானியாயிருந்தநகரம். சோழநாட்டிலுள்ள ஒரு சிற்றூர்.

மணலை - ஒருமீன்.

மணல் - வெள்ளைமண்.

மணல்வாரி - ஒருநெல், ஒருபுல், மணல் நீக்குங்கருவி.

மணவணி - கலியாணவலங்காரம்.

மணவறை - பள்ளியறை, மணமண்டபம்.

மணவறைத்தோழர் - மணமக்கடோழர்.

மணவாட்டி - மனைவி.

மணவாளதாசர் - இவர் பிரபந்தகாயத்ரி யென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற இராமானுஜ நூற்றந்தாதி பாடின திருவரங்கத்தமுதனார் திருப்பேரனார், இவர் பிரபந்தவகை தொண்ணூற்றாறுஞ்செய்த பிரபலமான தமிழ்ப்புலவர் திலகர், இவரால் செய்யப்பட்ட நூல்களுள்ளே, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி முதலிய எட்டுமாத்திரம் அஷ்டப்பிரபந்த மென்னும் பெயர்பெற்று அச்சேறிஅச்சோடுவிளங்குகின்றன, மற்றவையாவும் இறந்தொழிந்தன ஆயினும், இவரருளிச்செய்த திருவரங்கக்கோவையென்னும் பிரபந்தத்திற் சிலபாடல்கள் மாத்திரம் இறவாது உயிரோடிருந்துலாவுகின்றன, அப்பாடல்களிற் சிலவற்றை அடியில் வரைந்திருத்தல் காண்க.

"பேயோவெயினா முதாலயத்திற்பிறந்தவுன்னை, யேயோநினைப்புனங்காவல் வைத்தாரொழுபாருமுண்ட, வாயோன்றிவுந்தி பூத்தோனரங்கன் மணிவரைமேல், ஆயோவெனுங்குரலந்தோ புனத்தையழிக்கின்றதே."

"அல்லைப்பகல்செய்தமாவரங்கேசரணி வரைமேற், கொல்லைக் குறவர்மடந்தை யெங்கே சொலும்கோலமதன், வில்லைக்குனிப்பவரேய நூராகம்விளைப்பவரே, கல்லைப்பெண்ணாக்குமவரே யென்மானத்தைக்காப்பவரே."

"நீவக்கெனக்குமுன்னேநின்றமாயமுகீடழையோ, டாய்வந்தமாயமும்யாது கொல்லோவன்று நூற்றுவர்பாற், போய்வந்தநேமிப் பெருமானரங்கன்பொருப்பிலின, வேய்வந்ததோளி யெனக்கென் சொன்னாள் கொலைவேலவனே."

மணவாளமாமுனிகள் - இவரும் சிவாக்ரயோகிகளும்ஒருகாலத்தவர்கள், இருவரும் தஞ்சாவூரிலே சரபோஜிமகாராஜன் சமுகத்தில்பதினேழுநாள்செய்தசமயவாதப் போரிலேதோற்றவராயினும் இவர்தமிழ்ப்புலமையில் மிகச்சிறந்தவரென்பது இவர் அருளிச்

செய்த உபதேசரத்னமாலை முதலிய பிரபந்தங்களால் சாதலா மலகமாக விளங்கும்.

மணவாளன் - ஆண்மகன், நாயகன்.

மணவாளி-புதுமணப்பெண், யாப்பிளை.

மணவியது - மணமுடையது.

மணவினை - விவாகச்சடங்கு.

மணவை - அடுப்பு, திருர்.

மணவோலை விவாகத்திற்கு வரவழைக்கும் பத்திரிகை.

மணற்காளான் - தவளை, மணலிலே முளைக்குங்காளான்.

மணற்குன்று - மணற்றிட்டை.

மணற்கூகை - தவளை.

மணற்கோவை - ஒருகொவ்வை.

மணற்சோறு - மணலாற் சங்கற்பிக்குஞ்சோறு.

மணற்பாக்கு - மணலிலிட்டுவைக்கும் பாக்கு.

மணற்பாங்கு - மண்ணிலம்.

மணற்றரை - மணல்கொண்டநிலம்.

மணற்றவளை - தவளையினோர்பேதம்.

மணற்றாரா - ஒருவகைத்தாரா.

மணற்றிட்டை - மணற்றிண்ணை.

மணாட்டி - மணவாட்டி.

மணாளன் - ஆண்மகன், மணவாளன்.

மணி - அடிக்குமணி, அழகு, ஆட்டின் கழுத்தின்கீழ்த் தொங்குந் தசை... இரண்டரைநாழிகை கொண்ட நேரம், உருத்திராக்கம், எறிமணி, ஓசை, கண்விழி, கறுப்பு, சங்கு முதலியவற்றாலாயமணி, தாமரைக்கொட்டை, தளசி, நவமணிப்பொது, நன்மை, நீர்க்கலசம், நெல் முதலிய தானியம், பருக்கைக்கல், பறவையின் கழுத்தாரம், பெண்குறியினோருறுப்பு, பொன் முதலியவற்றாலாயமணி, மருந்துக்கல், முத்து, யானைமணி.

மணிகடம் - உத்தாமணி.

மணிகண்டன்-சிறிகண்டன், சிவபிரான்

மணிகம் - நீர்க்குடம்.

மணிகர்ணிகை - காசியிலுள்ள ஒரு தீர்த்தம், இது காசியில் கங்கையின் ஒரு கூட்டம். தீர்த்தத்துறை இத்தத்துறையில் முழுகுவோர்அடையும்பயன் மிகப்பெரிதென்பதுலோகப்பிரசித்தம்

மணிகன்றிகை / மணிகன்னிகை } காசித்தலத்திலோர் தீர்த்தம்.

மணிகாசம் - கண்ணேயுளொன்று.

மணிகாரகன் - இரத்நங்களை வேகடம் செய்வோன் அல்லது சாணைபிடிப்போன்.

மணிகாரம் - வெண்காரம்.

மணிகானனம் - கழுத்து.

மணிகிரி - இரத்நகிரி.

மணிகூடம் - ஒருபர்வதம்.

மணிக்கஞ்சட்டி - மணிச்சட்டி.

மணிக்கட்டு - புயத்தின்கீழ்.

மணிக்காம்பு - தக்காளி.

மணிக்கிரீவன் - குபேரன் மக்களிலொருவன்.

மணிக்குடர் - சிறுகுடர்.

மணிக்கூடு - நாழிகைவட்டம்.

மணிக்கோவை - மணிமாலை.

மணிசகம் - சந்திரகாந்தம்.

மணிசரம் - மணிக்கோவை.

மணிசேகரம் - யமன் அந்தப்புரம்.

மணிசௌபாநம் முத்து முதலிய இரத்நங்களாற்றொடுத்த ஆரம்.

மணிச்சட்டி - பெருஞ்சட்டி.

மணிச்சோதி - இரத்நகாந்தி, வாயுதேவன்வில்.

மணிதம் - மணியோசை.

மணிதனு - வானவில்.

மணிதீபம் - பாற்கடலின் நடுவேயுள்ள ஒருதீவு.

மணிதுருவிடுதல் - வேகடஞ்செய்தல்.

மணித்தக்காளி - ஒருசெடி.

மணித்துவீபம் - பாற்கடலிலுள்ளவோர் த்வீபம்.

மணித்துவீபன் - அனந்தன்.

மணிநா - மணியிலுறுக்கு.

மணிந்தம் - கைக்குளைச்சு.

மணிபத்திரன் - ஒருசைனபோதகன்.

மணிபந்தம் - மணிக்கட்டு.

மணிபூர்வதம் - ஒருபர்வதம்.

மணிபிடித்தல் - தானியம்பிடித்தல்.

மணிபுரம் - கலிங்கதேசத்துள்ள ஒரு பட்டணம்.

மணிபுஷ்பகம் - சகாதேவனதுசங்கு.

மணிபூமி - இரத்தினம்விளைநிலம்.

மணிபூரகம் - ஆறுதாரத்தொன்று அதுநாபித்தானம்.

மணிபூரம் - இரைக்குடர், கொப்பூழ்.
மணிப்பவம் - இருபது.
மணிப்புளகு - நெய்க்கொட்டான்.
மணிப்புரு - ஒருபுரு.
மணிப்புன்கு - பொன்னுங்காய்.
மணிப்பிரபை - ஒருநதி மனைவி.
மணிமகுடம் - வட்டின்புறங்காப்போலே யின் முடிச்சு.
மணிமங்கலம் - ஒருதலம்.
மணிமண்டபம் - இரத்நமண்டபம்.
மணிமதி - வில்வலன்வாதாவி என் போரிருந்த பட்டணம்.
மணிமந்தம் - இந்தப்பு.
மணிமந்தன் - குபேரனுக்குத்தோழனு கியவொரு யக்ஷன்.
மணிமலை - பொன்மலை.
மணிமாலை - இலக்குமி, ஒரு பிரபந்தம் அது எப்பொருண்மேலும் வெண் பாவிருபதும் கலித்துறை நாற்பதும் விரவிவரச் செய்தது, கழுத்தணிமா லை, நக்ஷத்ரேகை, பிரபை, முத்து வடம்.
மணிமான் - சூரியன்.
மணிமேகலை - ஒருபெண் தெய்வத்திற் கும், கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்த மகளுக்கும், ஒரு தமிழ்க்கா வியத்திற்கும் பெயர், இந்தத் தமிழ் க்காவியம் கோவலன் காமக்கிழத்தி யாகிய மாதவியின் மகளாகிய மணி மேகலை யென்பவளுடைய சரிதத் தைக் கூறுதலால் இந்தப்பெயர்பெற் றது. இது சாத்தனாரால் செய்யப்பட் டது இது சொற்சுவை பொருட் சுவை முதலியவற்றால் மிகச் சிறந்த தென்பது துறைமங்கலம் சிவப்பிர காசசுவாமிகள் அருளிச்செய்த திரு வெங்கைக் கோவையிலுள்ள, "மந் தாகினியணி வேணிப்பிரான் வெங்கை மன்னவனே, கொந்தார் குழன்மணி மேகலை தனுட்பங்கொன்வதெங்ங ன், சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக்கொளினும்,நந்தாவுரையை யெழுதலெவ்வாறு நவின்றருளே.' என்னுஞ் செய்யுளாலினிது விளங் கும், இந்நூல் பௌத்தமதச் சார் புள்ளது. பஞ்சகாவியத்தொன்று.
மணியகாரன் - விசாரணைகாரன்.
மணியம் - மணியகாரன், வேலை.
மணியாசம் - தலக்கம், மணியாசப்பல [கை.
மணியாசி - ஒருமரம்.
மணியாசிக்கட்டை - சாந்தழுத்தம்பல [கை.
மணியாட்சி - ஒரூர்.
மணியாட்டி - பூசாரி.
மணியாமணக்கு - பறங்கியாமணக்கு.
மணியிலையான் - ஓரிலையான்.
மணியீரல் - ஓரீரல்.
மணியூதுதல் - மணிதிரட்டுதல்.
மணிராககம் - இங்குலிகம்.
மணிவடம்-அக்கமாலை, இரத்தினமாலை, பாதசாலம், முத்துமாலை, வீரக்கழல்.
மணிவலை - ஒருவலை.
மணிவீசம் - மாதளை.
மணிவேர் - மணிபோலிடையிடை திர ட்சி விழுந்திருக்கும் வேர்.
மணிசகம் - சந்திரகாந்தம்.
மணிவசம் - பூ.
மணிவண்ணன் - காவிரிப்பூம்பட்டினத் திற்கு மேற்கே கோயில் கொண்டி ருக்கும் திருமால் பெயர்.
மணை - திருவலகு, பணிமுதலிய முட்டு, பாதபடி, மழுங்கல்.
மணையது - மழுங்கலாயுதம்.
மண் - அணு, ஒப்பனை, கழுவுதல், சுட்டசாந்து, அகள், நிலம், பூமி, மண்ணெண்ணவல், மலை, மாட்சி மை, முழவின் மார்ச்சனை.
மண்கட்டி - மண்ணாங்கட்டி.
மண்கட்டுதல் - கருக்கட்டுதல்.
மண்கட்டை - உடம்பு, வாணக்குழலி னெதிரடைப்பு.
மண்கணை - ஒருபறை, வாச்சியப்பொ
மண்கண்டம் - மட்பார். [து.
மண்கலம் - ஓடு, மட்பாண்டம்.
மண்கல் - செங்கல், வெண்சுக்கான்கல்.
மண்கிணறு - கற்பாரற்றகிணறு.
மண்கிண்டுதல் - மண்வேலை செய்தல்.
மண்குகை - நிலவறை, மண்ணாற்செய் தகுகை.
மண்கும்பம் } மண்மேடு.
மண்கும்பி
மண்கொத்தளம் - மண்ணாற்செய்தகோ
மண்கொழுத்தல் - மண்மதத்தல்.[புரம்.
மண்கோபுரக்கல் - செங்கல்.
மண்சாடி - மட்சாடி.

மண்சிலை - கற்காவி.
மண்சிவப்பு - இருண்டசிவப்பு.
மண்சீலை - குகையைச்சுற்றும்படி மண் டோய்த்தசீலை.
மண்செய்கை - மண்வேலை.
மண்சோறுகறி - சிறபிள்ளைகள் மண்ணாற் சங்கற்பிக்குஞ் சோறுகறி.
மண்டகம் - ஒரு சிற்றுண்டி, சர்க்கரை போடாதபூரி.
மண்டகாரகன் - சாராயம்வடிப்போன்.
மண்டக்கம் - மண்டக்கு.
மண்டக்கன் - மண்டக்குப்பிடிப்போன்.
மண்டக்காரன் - மண்டக்கன்.
மண்டக்கிழுத்தல் - மண்டக்குக் கயிற்றை யிழுத்தல்.
மண்டக்கு - முத்தக்குளிப்பவர்களை யிழுக்குங் கயிறு.
மண்டக்குக்கயிறு - மண்டக்கன்கைகயிறு.
மண்டைக்குக்காரன் - மண்டக்காரன்.
மண்டநம் - அலங்காரம், ஆபரணம்.
மண்டப்படி - அலங்காரப்படைப்பு.
மண்டபம் - மாடம்.
மண்டம் - அலங்காரம், ஆமணக்கு, தயிரேடு, தலை, மண்டை.
மண்டயத்தம் - அலங்காரம், சோறு.
மண்டயிலம் - மண்ணிலூறுந் தயிலம், மண்ணில் வடிக்குந்தயிலம்.
மண்டர் - படைவீரர்.
மண்டலகம் - சூரியன் வட்டாகாரம், பளிங்கு.
மண்டலசெயம் - திக்குவிசயம்.
மண்டலதிருத்தம் - சுற்றியாடு திருத்தம்.
மண்டலநிலை - இருகாலும் பக்கல்வளைய மண்டலித்து நிற்றல்.
மண்டலபுருடன் - தொண்டைநாட்டிலே வீரையென்னுமூரிலே யிருந்த ஆருகதராகிய ஒரு தமிழ்ப்புலவர், சூடாமணி நிகண்டு இவர்செய்ததே, இவர் குன்றையூரி லிருந்த குணபத்திரருக்கு மாணாக்கர். இவர் கிருஷ்ணராயன் என்னும் அரசன் காலத்தவர்.
மண்டலபுருஷன் - சூடாமணி நிகண்டு செய்த வாசிரியன்.
மண்டலமட்டி - சிற்றிலுப்பை.
மண்டலமழை - எங்கும்பொழியுமழை.
மண்டலமாக்கள் - அரசர்.
மண்டலமிடுதல் - மண்டலம் வகுத்தல், மண்டலித்தல்.
மண்டலம் - இயந்திரம், இருகாலும் பக்கல்வளைய நிற்குநிலை, உண்டை, குவியல், சூரியமண்டல முதலியன தேயம், நகக்குறி, நாடு, நாற்பது நான் கொண்டது, நாற்பத்தெட்டு நாள், பூமி, வட்டம்.
மண்டலம்போடுதல் - மண்டலமிடுதல்.
மண்டலம்வகுத்தல் - நவக்கிரக மண்டல மிரேகித்தல்.
மண்டலவந்தாதி - ஈற்றடி யிறுதியும் முதலடி முதலுமொன்றாகவருவது.
மண்டலவிதி - சக்கரங் கீறுவதற்கான ஒரு விதி.
மண்டலாகாரம் - வட்டாகாரம்.
மண்டலாக்கிரம் - வாள்.
மண்டலாதிபதி, மண்டலாதிபன் - ஏகசக்ராதிபதி.
மண்டலாதீசன் - அரசன்.
மண்டலாத்தல் - அரைவட்டம்.
மண்டலாபிடேகம், மண்டலாபிஷேகம் - நாற்பது நாள் மட்டுக்குநாள் வட்டம் பண்ணுமபிடேகம்.
மண்டலாயிதம் - உண்டை.
மண்டலார்த்தம் - அர்த்தகோளம், பாதிவிட்டம்.
மண்டலி - ஓரெலி, ஒருவகைப் பாம்பு, கூட்டம், நாய், பாம்பு, பூமி, பூனை, மண்டலியென்னேவல்.
மண்டலிகன் - இருபதயோசனை விஸ்தாரமான தேசத்தை யாள்வோன்.
மண்டலித்தல் - வட்டமிடுதல்.
மண்டலிப்பு - வட்டமிடுதல், வட்டம்.
மண்டலீகரணம் - உருட்டல்.
மண்டலீகர் - அவ்வத் தேசத்தையாளு மன்னர்.
மண்டலேசுவரர் - திருவாரூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மண்டலேசன், மண்டலேசுபரன், மண்டலேச்சுவரன் - அரசன், உலகாதிபதி, மண்டலாதிபதி.
மண்டல் - செருக்கல், மண்டுதல், மிகுதல்.
மண்டா - இரட்டைக்கருவிட்டி.
மண்டி - இருகான்முடக்கிநிற்குநிலை, கலக்கனீர், களஞ்சியம், கள் முதலியவற்றி னடையல்.

மண்டிகை - அப்பவருக்கம்.
மண்டிதம் - சிறுகீரை. அலங்காரம்.
மண்டிதன் - அலங்கரிக்கப்பட்டவன், புத்தகனுதிபன்.
மண்டிபோடுதல் } இருகால் முடக்கி
மண்டியிடுதல் } நிற்றல்.
மண்டிரவல் - கைமாற்றாய் வாங்கியது.
மண்டிலம் - குதிரை, நடனம், நாடு, போர், வட்டமாயோடல், வட்டம்.
மண்டு - மண்டல்.
மண்டுகம் - தவளை.
மண்டுகால் - முட்டுக்கால்.
மண்டுதல் - நெருங்கல், மிகக்குடித்தல்.
மண்டுசீவன் - தவளைக்கல்.
மண்டுகபன்னி - அழிஞ்சில்.
மண்டுகம் - கிச்சுக்கிட்டம், தவளை.
மண்டுகோரகம் - ஒருபண்.
மண்டுகர் - ஒரிருடி.
மண்டுகி - பெண்தவளை.
மண்டுகை - வேசி.
மண்டுகை - மட்கலசம்.
மண்டுரம் - கிச்சுக்கிட்டம்.
மண்டெரி - பெருந்தீ.
மண்டை - இரப்போர்கலம், தலையோடு.
மண்டைக்கண் - தாழ்ந்தகண்.
மண்டைக்கரப்பன் - ஒருநோய்.
மண்டைக்குடைச்சல் - தலைக்குத்து.
மண்டைக்கோழை - ஒருகோழைநோய்.
மண்டைசூலை - ஒருநோய்.
மண்டைப்பீனசம் - ஒருநோய்.
மண்டையோடு - தலையோடு.
மண்டைவியாதி - தலைநோய்.
மண்டோதகம் - கோலமிடுதல்.
மண்டோதரி - இராவணன்மனைவி.
மண்ணகுண்டம் - மண்ணான் மேடைசெய்திருக்குமட்டாலை.
மண்ணம் - சுண்ணாம்பு.
மண்ணரசி - பூவரசுமரம்.
மண்ணரிநார் - குயக்கலம்வனைந்தரிகயிறு.
மண்ணரியான் } குயவன்.
மண்ணரிவான் }
மண்ணரைத்தல் - சோம்பி வீணாயிருத்தல்.
மண்ணல் - மண்ணுதல்.
மண்ணவர் - மனிதர்.
மண்ணன் - மதிகேடன்.
மண்ணா - ஒருமீன்.
மண்ணாங்கட்டி - மண்கட்டி.

மண்ணாசை - ஆசைமூன்றினொன்று.
மண்ணாளி - அரசன்.
மண்ணாள்வோன் - அரசன்.
மண்ணி - மந்தன்.
மண்ணியற்று - மண்பாத்திரம்.
மண்ணிலம் - பூமி.
மண்ணில்வேந்தன் - அரசமரம், முடிதும்பை, வெற்றிலை.
மண்ணினுதம் - உவர்மண்.
மண்ணின்பிரட்டு - பேரோசனை.
மண்ணின்வத்தனம் - இராசவத்தனக்கல்.
மண்ணீடு - திண்ணை, மாடம், மூடி சாந்திட்ட வீடு.
மண்ணீட்டாளர் - குயவர், சிற்பாசாரியர்.
மண்ணீரல் - மண்ணிரவீறல்.
மண்ணீர் - கழுவுநீர்.
மண்ணுடையான் - அரசன், குயவன்.
மண்ணுணி - ஒருபாம்பு, மந்தன்.
மண்ணுதல் - அலங்கரித்தல், கழுவல்.
மண்ணுலகு - பூமி.
மண்ணுளி - ஒருவகைப்பாம்பு.
மண்ணுறுத்தல் - அலங்கரித்தல்.
மண்ணை - அறிவிலான், இளமை, பசாசு, வாளுறை.
மண்ணைத்தனம் - அறியாமை.
மண்ணைமனைத்தல் - காரசாரமற்றிருத்தல்.
மண்ணையன் - மதிகேடன்.
மண்ணொட்டர் - மண்சுமப்போர்.
மண்ணோரம் - பக்ஷபாதம்.
மண்ணோர் - மனிதர்.
மண்பாண்டம் } மட்கலம்.
மண்பாத்திரம் }
மண்பார் - மண்கண்டம்.
மண்பிடி - மட்பசை.
மண்பொதுத்தந்தை - பிரமன்.
மண்மகள் - பூமிதேவி.
மண்மகள்புதல்வர் - வேளாளர், சூத்திரர்.
மண்மக்கள் - சூத்திரர், வேளாளர்.
மண்மலி - மருக்கொழுந்து.
மண்மழை } புழுதிமழை.
மண்மாரி }
மண்வெட்டி - ஓராயுதம், குயவன்.
மதகந்தை - மஸ்துள்ளது.
மதகமனம் - குழுக்கடா.
மதகயம் } ஆண்யானை.
மதகரி }
மதகரிக்கனை - யானைத்திப்பிலி.

மதகிரி - யானை.
மதகு - சலதாரை, ஏரிநீர்வெளியே போகும்வழி.
மதகுஞ்சரம் - மதயானை.
மதகுபலகை - நீர்தாங்குபலகை.
மதக்கம் - ஆகாசம், மயக்கம், வத்சரம்.
மதங்கஜம் - யானை.
மதங்ககாதன் - நவநாத சித்தரிலொருவ [ன்.
மதங்கமம் - யானை.
மதங்கலை - ஒருமலை.
மதங்கம் - ஒருபறை, ஒருமலை, கலம்பக வுறுப்புப் பதினெட்டி லொன்று, முகில், யானை.
மதங்கர் - ஒருமுனி, பாணர்.
மதங்கன் - ஒருமுனி, சண்டாளன், முருகன், ஒருபார்ப்பனப்பெண்வயிற்றி லே ஒரிழிகுலத்தானுக்குப்பிறந்தபுத்திரன், இவன் பார்ப்பானுவதற்குமுயன்றும் வாய்க்காது இந்திரனைப் பூசித்துச் சண்டதேவனென்னும் பட்டப்பெயர்பெற்றிருந்தவன், ஓரிருடி, இவர் தபோசக்தியினாலே பராசத்தி தன் புத்திரியாகி அவதரிக்கப்பெற்றவர், அது காரணமாக பார்வதி தேவிக்கு மாதங்கி என்னும் பெயர் வாய்த்தது. இந்தப்பெயர் இக்கும் பெயர்.
மதங்காச்சிரம் - மதங்கமுனியின் தவச்சாலை.
மதங்கி - காளி, பதினாறுவயதுப்பெண், பாடுவான், பார்வதி.
மதசலம் - மதநீர்.
மதசாகம் - அன்னப்பறவை.
மதசாரம் - இலவு.
மதசைலம் - யானை.
மதஸ்தலம் - மதிக்கடை.
மதத்தல் - கொழுத்தல், செருக்குதல், மயங்குதல், வெறித்தல்.
மதஸ்தன் }
மதத்தன் } சமயவாதி.
மதஸ்தானம் - மதஸ்தலம்.
மதநகோபாலன் - கிருஷ்ணன்.
மதநசரம் - மன்மதபாணம்.
மதநம் - கடைதல்.
மதனலீலை - கலவி.
மதனன் - மன்மதன்.
மதநாகமம் }
மதனாகமம் } கொக்கோகம்.

மதநியை - மல்லிகைக்கொடி.
மதநீர் - மதசலம்.
மதபேதி - சமயபேதி.
மதப்பிரயோகம் - மதம்பொழிதல்.
மதப்பு - கொழுப்பு, செருக்கு, மயக்கு.
மதப்பூ - மராட்டிமொக்கு.
மதப்பொருப்பு - யானை.
மதமடு - வெள்வெங்காயம்.
மதமதப்பு - மிகுமதப்பு.
மதமதெனல் - ஈரடிக்கொலிக்குறிப்பு, சரீரங்குன்றல், மதமூறல்.
மதமத்தகம் - கஞ்சா.
மதமத்தம்பூ - ஊமத்தை. [போன்.
மதமத்தன - மதத்தினல்மயங்கிக்கிடப்
மதமராளம் - மதர்த்த அன்னப்பறவை.
மதமலை - யானை.
மதமெடுத்தல்-மதத்தல், மதமடக்குதல்.
மதமொய் - யானை.
மதம் - அறிவு, கருத்து, சன்மதம், கொழுப்பு, சந்தோஷம், சமயம், சம்மதம், செருக்கு அது உட்பகையாறி னொன்று, தாது, நாவிச்சட்டம், நோக்கம், பெருமை, பைத்தியம், போதனை, மதாளிப்பு, மஸ்தன்னது, மாயையாக்கை பதினெண் குற்றத்தொன்று, யானைமதம், வலி, விகாரமெட்டினுமொன்று, விருப்பம், வெறி.
மதம்பாய்ச்சுவடு - மதநீர்பாயுஞ்சுவடு.
மதயந்தி }
மதயந்திகை } ஒருமல்லிகை. மித்திரசகன் மனைவி.
மதராகன் - சேவல், மன்மதன்.
மதரபன்னி - வட்டத்திருப்பி.
மதர் - ஆச்சல், களிப்பு, செருக்கு, மதரெனனேவல், மிகுதி.
மதர்த்தல் - களித்தல், செழித்தல்.
மதர்ப்பு }
மதர்வு } அழகு, ஆசைப்பெருக்கம், இடம், இறுமாப்பு, செழிப்பு, மிகுதி.
மதலிகை - ஆபரணத்தொடக்கு வடிவு,
மதலிங்கம் - அமுக்கிரா. [தாக்கம்.
மதலை - கொடுங்கை, கொன்றைமரம், சாக்கொன்றை, தூண், பிள்ளை, மரக்
மதவிருத்தம் - யானை. [கலம், மழலை.
மதவு - மதகு.
மதவெறி - அகங்காரம், இரத்தவெறி, காமவெறி குடிவெறி, மார்க்கவெறி, மதவெற்பு.

மதனை - மழலை.
மதனகளத்திரம் - இரதிதேவி.
மதனகாகளம் - குயில்.
மதனகாருரவம் - புரு.
மதனகாமியப்பூ - ஒருசரக்கு.
மதனகேதநம் - மன்மதன்கொடி, மீன்.
மதனசத்திரம் - சந்திரன்.
மதனசமுத்திரம் - பாற்கடல். [யில்.
மதனசலாகை-ஒருமருந்து பெடைக்கு
மதனசாத்திரம் } இவிலைநூல் இது க
மதனநூல் } லைஞான மறுபத்
நான்கினென்று.
மதனபாடகம் - குயில்.
மதனமோகநன் - கிருஷ்ணன்.
மதனம் - ஈ, கடைதல், காமம், தேன், மெழுகு, மஸ்து, மருக்காரை, மனக்கலக்கம், மௌனம், இது பஞ்சபாணவத்தைக் குணங்களினென்று வசந்தகாலம்.
மதனலீலை - காமவிளையாட்டு.
மதனன் - காமன்.
மதனுங்குசம் - குய்யம், நகம்.
மதனுயுதம் - குய்யம்.
மதனலயம் - குய்யம், தாமரை.
மதனுவத்தை - பிரிவு.
மதனி - மைத்துனி.
மதனை - கள்.
மதனோற்சவம் - வேனில்விழா.
மதனோற்சவை - அரம்பை.
மதன் } அழகு, கலக்கம், காமன், மாட்
மது } சிமை, வலி, வளமை, ஓரசுரன், இராம புத்திரனுகிய குசன்வமிசத்தரசன், இராவணன் மைத்துனன், இவன் மகன் லவணுசுரன், வைடூரிய பர்வதத்தில் அசுவினிதேவர்களை இந்திரன் சோமபானஞ்செய்வித்தபோதுசியவநன் அவ்விந்திரனைக்கொல்லும்பொருட்டுப் பெற்றபுத்திரன், கார்த்தவீரியார்ச்சுநன் புதல்வருளொருவன், தேவசுத்திரன் புத்திரன்.
மதாசலம் - யானை.
மதாசாரம் - சமயவொழுக்கு.
மதாணி - ஆபரணம், பதக்கம்.
மதாத்தியம் - மதுவினுன்வருநோய்.
மதாநுசாரம் - சமயத்தைத்தைக்கொள்ளுதல்.
மதாந்தரம் - மதபேதம்.
மதாபிமானம் - மதப்பற்று.
மதாபிமானி - தன்சமயமே மெய்யெனக்கொள்வோன்.
மதாமத்தன் - மதோன்மத்தன்.
மதாமத்து } மிகவெறி, வெறுப்பின்
மதாமஸ்து } மை.
மதாம்பரம் - இந்திரன், யானை.
மதாரம் - கஸ்தூரி, பன்றி, யானை, யானைமைதுனம்.
மதாரன் - எத்தன், தூர்த்தன்.
மதாலசை-ஒருஅப்ஸரசை, வற்சன்மகனுகியகுவலயாசுவன்மனைவி, இவள் தன்புத்திரராகியவிக்ராந்தன், சுபாகு சத்ருமர்த்தநன், அலர்க்கன் என்னும் நால்வர்க்கும் நீதிநெறியுணர்த்திவளர்த்த மஹாமதியாகிய மாதுசிரோமணி.
மதாலம் - கொன்றை. [ரோமணி.
மதார் - மதர்.
மதாலாபி - குயில்.
மதாவளம் - யானை.
மதாளித்தல் - ஓங்கிவளர்தல்.
மதாளிப்பு - செழிப்பு [போர்.
மதானுசாரியர் - சமயநிலை யனுசரிப்
மதி - அறிவு, கர்கடகவிராசி, சங்கை, சந்திரன், ஞாபகம், நிதானம், பானபாத்திரம், புத்தி, மதியென்னேவல், மாதம், முன்னிலையசைச் சொல் (உம்) சென்மதி, வணக்கம், விருப்பம்.
மதிகம் - மோர்.
மதிகாந்தி - காஸ்மீரப்படிகம், பளிங்கு.
மதிகூர்மை - இந்துப்பு.
மதிகேடன் - மூடன்.
மதிகேடு - அறிவின்மை.
மதிக்கணம் கணமெட்டினென்று அது சிரைவேர் கோடுத்து வருகிறது, சந்திரகணம்.
மதிக்கலை - பதினறு.
மதிக்கல் - சந்திரகாந்தக்கல்.
மதிக்கிராக்கிரம் - மதுக்கடை.
மதிசகன் - மன்மதன்.
மதிசாரன் - அந்திசாரன், இவன் இருகேயன் புத்திரன்.
மதிதம் - மோர்.
மதிதனு - பொன்மணல்.
மதிதாக்னி - கஸ்டக்தெடுத்தநெருப்பு.
மதிதிசை - வடக்கு.

மதித்தல் - எண்ணல், கடைதல், கணித்தல், கருதல், கொழுத்தல், வரையறுத்தல்.
மதிநாள் - மிருகசீரிடம்.
மதிபதிச்சம் - வாலுளுவை.
மதிப்பகை - இராகு, கேது.
மதிப்பிரமம் / மதிப்பிராந்தி } பிழை, மதிமயக்கம்.
மதிப்பு - மதித்தல்.
மதிமகன் - சந்திரனுக்கும் உரோகணிக்கும் பிறந்த பிள்ளையாகிய புதன்.
மதிமணல் - வெள்ளிமணல்.
மதிமண்டலம் - சந்திரமண்டலம்.
மதிமயக்கம் - புத்திமயக்கம்.
மதிமயங்கல் / மதிமயங்குதல் } புத்திகெடுதல்.
மதிமரபு - சந்திரவமிசம்.
மதிமறு - சந்திரகளங்கம்.
மதிமலை - சந்திரகிரி.
மதிமேகக்கல் - மந்தாரச்சிலை.
மதிமோசம் - புத்திமோசம்.
மதியமுதம் - சந்திராமிர்தம்.
மதியம் - கனிசம், சந்திரன், நடு, மத்தியானம்.
மதியழிவு - அறிவுகேடு.
மதியாணி / மதியாணிக்கட்டை } நுகத்தினடுவாணி.
மதியிலி - மதிகேடன்.
மதியீனம் - புத்தியீனம்.
மதியுணி - இராகு, கேது.
மதியுள்ளான் - ஒரு ஞானியரசன்.
மதிரம் - மது.
மதிராக்ருஹம் - கள்விற்கும்வீடு.
மதிராட்சி - பெண்.
மதிரை - கள், குபேரன்மகள், வசுதேவன் பாரிகளி லொருத்தி.
மதிலுண்மேடை - கொத்தளம்.
மதிலுறுப்பு - மதிலின் சித்திரம்.
மதில் - இஞ்சி, மதின்.
மதில்காத்தல் - பகைவர்மேலிடாமலுட்பரிசையைக் காவல்செய்தல் இது புறப்பொருட்டுறைகளிலொன்று.
மதில்வளைத்தல் - மாற்றுருப்பரிசையைச் சூழ்தல் இது புறப்பொருட்டுறைகளி லொன்று.
மதிவல்லி - கொத்தான்கொடி.
மதிவல்லோர் - மந்திரிமார்.

மதிவாணர்நாடகத்தமிழ்நூல் - மதிவாணன் என்னும் பாண்டியன் செய்த நாடகத் தமிழ்நூல்.
மதிவாம்பல் - செந்தில்.
மதிவேணி - சிவபெருமான்.
மதில்-சுற்றுச்சுவர் இதுஇராசசின்னத்
மதிற்சுற்று - மதிற்புறம். [தொன்று.
மதினி - மதனி, தமையன் மனைவி.
மது - அசோகு, அதிமதுரம், அமுதம், இருப்பைப்பூத்திராவகம், உருசி, ஓரரக்கன், கள், சித்திரைமாதம், சீனி, தேன், நீர், பால், மகரந்தம், மஸ்துன்னது, வசந்தகாலம், மதன்.
மதுகண்டம் - குயில்.
மதுகந்தம் - இலுப்பைமரம், மகிழமரம்.
மதுகம் - அதிமதுரம், இருப்பை, எட்டிமரம், காஞ்சிரை, தரா, தித்திப்பு, அத்தநாகம்.
மதுகரம் - ஆண்வண்டு, கள், தேனீ, பழம், வச்சநாபி, வண்டு.
மதுகரன் - அன்பன்.
மதுநாயகம் - குயில்.
மதுகாரி - தேனீ.
மதுகாரை - ஒருபூடு.
மதுகுச்குடிகை / மதுகுக்குடீ } எலுமிச்சை.
மதுகேசடம் - மதுகாரி.
மதுகை - வலி, வெற்றி.
மதுகைடபன் - ஓரசுரன்.
மதுகைடயாரி - கிருஷ்ணன்.
மதுகோஷம் - குயில்.
மதுக்கிரமம் - தேன்கூடு.
மதுக்கிருது - தேனீ.
மதுக்கடம் - கட்குடம்.
மதுக்கடல் - தேன்கடல்.
மதுக்கூடு - தேன்கூடு.
மதுக்கொண்டை - ஒருமீன்.
மதுக்கோஷம் - குயில், தேன்கூடு.
மதுசகன் / மதுசகாயன் } காமன்.
மதுசாரதி - மன்மதன்.
மதுசாரன் - மதுசகன்.
மதுச்சிஷ்டம் - மெழுகு.
மதுசுவரம் - குயில்.
மதுசூதனன் - திருமால்.
மதுச்சந்தன் - விஸ்வாமித்திரன்,புத்திரன்.
மதுஸ்மிதி - பறங்கிச்சக்கை. [ரன்.

மதுதிருணம் - கரும்பு.
மதுதீபன் - காமன்.
மதுதூதம் - மாமரம்.
மதுதூலி - கருப்பஞ்சாற்றுப்பாணி.
மதுத்திருமம் - இலுப்பைமரம்.
மதுநாலிகேரம் - ஒருவகைத்தெங்கு.
மதுநேதிரு } தேனீ.
மதுநோலேகம் }
மதுபதி - காளி, யோகினி.
மதுபம் - கள், வண்டு.
மதுபருணிகை - அவுரி, ஒருபூடு.
மதுபர்ணிகை - சீந்தில்.
மதுபலம் - ஒருவகைத்தெங்கு.
மதுபலி - காளி.
மதுபன்னி - சீந்தில்.
மதுபாயி - வண்டு.
மதுபானம் - சுராபானம்.
மதுபாணி - சுராபாணி.
மதுபீஜம் - மாதுளை.
மதுபுரி - மதுராபுரி.
மதுப்பிரியன் - பலராமன்.
மதுமதனன் - விட்டுணு.
மதுமதி - ஒருநதி.
மதுமத்தை - ஒருமத்தை.
மதுமந்தம் - ஜனஸ்தானந்தாண்க.
மதுமல்லி - இரட்டைமல்லிகை.
மதுமாமிசம் - கள்ளும் இறைச்சியும்.
மதுமூலம் - ஒருகிழங்கு.
மதுமோதி - வண்டு.
மதுரகவி - திருமால்தொண்டரிலொருவன், நாற்கவியி லொன்று, அதுபொருட்செல்வம்,சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பம், செறியஉருபக முதலிய அலங்காரத்தோடு இன்னோசைத்தாய்அமுதமுறப்பாடுங்கவி
மதுரகவியாழ்வார்-இவர் பாண்டிதேசத்திலே திருக்கோளூரிலே முக்காணிப் பிராமணருக்குப் புத்திரராகப் பிறந்தவரா்த அயோத்திக்குச்சென்று மீண்டுவந்து நம்மாழ்வாரை யடைந்து தத்துவஞானநிலைக பெற்றவர்.
மதுரசப்பீலு-பெருங்குரும்பை. [றவர்.
மதுரகம் - இனிமை, கரும்பு,கொடிமுந்திரிகை, சாராயம், சொற்சுவை, பனைப்பொதி, முந்திரிகை.
மதுரசம்பீரம் - இன்னெலுமிச்சை.
மதுரசை - பெருங்குரும்பை.
மதுரபாகம் - கமுகு.
மதுரபாடணம் } கிலஞான மறுபத்து நான்கில் ஒன்று, சாதுரியம், வாயாற் பாடல்.
மதுரபாஷணம் }
மதுரபாடனம் }
மதுரம் - அதிமதுரம்,இனிப்பு,ஒருகவி, கொடி முந்திரிகை, சமனிசை, செஞ்சந்தனம், தித்திப்பு, நத்தநாகம், நஞ்சு, மதுரை, முந்திரிகை, மூளை.
மதுரவசனம் - நயவசனம்.
மதுரவசனியம்மை - திருக்கோட்டூரிலே கோயில் கொண்டிருக்கும் அம்மன் பெயர்.
மதுரவல்லி - சர்க்கரைவள்ளி.
மதுரைவள்ளி - வத்தாலைக்கொடி.
மதுராந்தகம் - தொண்டைநாட்டின் கண்ணுள்ள ஒருவிஷ்ணுஸ்தலம்.
மதுராநாயகன் } கிருஷ்ணன், பாண்டியன்.
மதுராபதி }
மதுராபுரி - மதுரைப்பட்டினம்.
மதுராலாபை - நாகணவாய்ப்புள்.
மதுரித்தல் - உருசித்தல், தித்தித்தல்.
மதுரிப்பு - விட்டுணு.
மதுரிப்பு - உருசி.
மதுரேசன்-கிருட்டிணன்,பாண்டியன்
மதுரை - இனிமையானது, ஒருநகரம், கள், மதுரவஸ்து. யமுனைக்கரையிலுள்ள நகரம் இந்நகரம் கிருஷ்ணனுக்குரியது. கிருஷ்ணன் பகைவனாகிய ஜராசந்தன் இந்நகரத்தைப் பதினெண்முறை வளைத்தான்.

பாண்டிதேசத்துக்கு இராஜதானி. இது வைகைக்கரையின்கணுள்ளது. இது முன் கடம்பவனமாகவிருந்தது. அதனை நகரமாக்கிச் சிவபெருமானைக் கொண்டு அவர் சடைக்கங்கை நீரால்சுத்திசெய்வித்தபோது அந்நீர்த்திவலைகள் மதுரமாயிருந்தமையால் அந்நகரம் மதுரையெனப் பெயர் பெற்றது.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ், சௌந்தர பாண்டியனெனுந் தமிழ்நாடனுஞ், சங்கப்பலகையுந் தழைத்தினிதோங்கு, மங்கலப்பாண்டி வளநாடென்ப" என்று புகழப்பட்டதாகிய பாண்டி நாட்டு

க்கு முகம் போல்வதாகிய இந்நகரம் மிக்க பழமையும், மிக்க செல்வமும், மிக்க கீர்த்தியும், மிக்க தெய்வத்தன்மையும், மிக்க அலங்காரமுமுடையதாய்ப் பாண்டியர்களுக்கு இராஜதானியாக நெடுங்காலம் விளங்கியது. உமாதேவியாரது அவதாரமாகிய தடாதகைப் பிராட்டியாரும், சோமசுந்தரமூர்த்தியும், உக்கிரப்பெருவழுதியாகிய குமாரக்கடவுளும் உண்மையாகத் திருமுடிசூடி யரசாண்ட நகரமாகிய இம்மதுரையினது பெருமை எழுத்திலடங்குவதன்று.

பல்லாயிரம்வருஷங்களாகப்பல்லாயிரம் புலவர் சிகாமணிகளிருந்து பல்லாயிரம் நூல்களை இயற்றியும்ஆராய்ந்தும் தமிழைவளர்த்தது மித்திவ்விய நகரமேயாம். இந்நகரத்துக்குக் காவலாகப் பூர்வத்திலமைக்கப்பட்டுக்கிடந்த மதிலினது சிறப்புக்களைப் பௌராணிகர்களெடுத்துக் கூறியிருக்கின்றபடி கூற வீண்டமை யாதாயினும் அவற்றுட் சில கூறுவாம். வேற்றரசர் வந்து புகுங்காலத்தில் அவரைப் புகவொட்டாயலெதிர்த்து யுத்தஞ் செய்யுமாறு அம்மதின்மேலே யமைக்கப்பட்டுக் கிடக்கும் பொறிகளும், பாவைகளும் எண்ணிலவாம். அவற்றுட் சில பாவைகள் அக்கினியை வாரிவீசும்; சில மணலை வாரிப் பொழியும்; சில வாளை வீசிவெட்டும்; சில கயிறுகளை வீசிக்கட்டும்; சில வில்லு வளைத்துப் பாணங்களை யிடையறுமற் செலுத்தும்; சில பாம்புப் பொறிகள் சீறியெழுந்து மேல்விழுந்து பகைவரைக் கடித்துக் கொல்லும்; பகைவர்விடுகின்றபாணங்களை யெட்டிப் பிடித்து அப்பகைவர்மேற் செலுத்துவன சில பொறிகள். சில மல்லயுத்தஞ்செய்யும்; சிலவெந்நீரையூற்றும்; இவ்வகைச்சிறப்புக்களும்சிற்பசாதுரியங்களும் மலிந்து விளங்கிய இந்நகரம் பின்னர்க்காலத்திலே வேற்றரசர் கைப்பட்டுப் பூர்வமாண்பெல்லாமிழந்து பிரசண்ட மாருதத்திற் பட்டமரம்போலின்னாள் நின்று நிலவுவதாயிற்று.

மதுரைக்காஞ்சி - மாங்குடிமருதனார் பாடியநூல். இதற் குரைசெய்தவர் நச்சினார்க்கினியர்.

மதுரைத்தமிழ்நாயனார் - ஒருசங்கப்புலவர்.

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்-இவர்கடைச்சங்கப்புலவர்களு ளொருவர்.

மதுரைத்தமிழ்நாயகனார் - இவர்கடைச் சங்கப்புலவர்களு ளொருவர்.

மதுரைப்பாலாசிரியனார் - இவர்கடைச் சங்கப் புலவர்களு ளொருவர்.

மதுரைப்பெருமருதனார் - இவர்கடைசங்கப்புலவர்களு ளொருவர்.

மதுரைமாதெய்வம் - மதுரைநகரத்தின் அதிதேவதையாகிய ஒருபெண்தெய்வம். இந்தத்தெய்வத்தாலேயே கண்ணகிகோவலனுடைய முற்பிறப்பின் வரலாறு முதலியவற்றைத்தெரிந்து கொண்டாள்

மதுரைமாதேவி - மீனாட்சிதேவி.

மதுரை யறுவைவாணிகர் இளவேட்டனார் - இவர்கடைச்சங்கப்புலவர்களிலொருவர். இவர் வஸ்திரவணிகர், சாதியில் செங்குந்தர்.

மதுரையாசிரியன்மாறனார்-இடைச்சங்கப் புலவருளொருவர்.

மதுரையாசிரியர் - இவரேபேராசிரியர் எனப்படுவர் இவர் இளம்பூரணருக்கு வித்தியாகுரு. நச்சினார்க்கினியர்க்குஇளம்பூரணர்வித்தியாகுரு. நச்சினார்க்கினியர்தமதுகுருவாகிய இளம்பூரணரை ஆசிரியர் என்றும்தமதுகுருவுக்குக் குருவாகியமதுரையாசிரியரைப்பேராசிரியரென்றும்வழங்குவாராயினர். அவ்வழக்குப்பற்றி இவர்க்குப் பேராசிரியர்என்னும் பெயர்நிலைப்பதாயிற்று. இவரது இயற்பெயர்புலப்படவில்லை. இவரே குறுந்தொகையிலேயுள்ள நானூற்றிரண்டுசெய்யுளுள்ளே முன்னூற் றெண்பத்திரண்டு செய்யுட்களுக்கு முரைசெய்தவர், எஞ்சிய இருபதுக்குமுரைசெய்யுமுன்னே இவர் தென்புலஞ் சென்றனர். அவ்விருபதுக்கும் நச்சினார்க்கினியர் உரை செய்தனர். இப்பேராசிரியரே திருக்கோவையாருக்கு முரைசெய்தாரென்பாருஞ் சிலருளர்.

மதுரைஅளக்கர்ஞாழலார் மகனார் மள்ளனார் - பாண்டியன்மருகனாகியசிறுகுடிகிழான் பண்ணனைப் பாடியபுலவர். இவர் பாடிய செய்யுளிலே வெள்ளி தென்புலத்துறைய உலகில் விளைவு குன்றும் என்னும் சோதிட வுண்மை விளக்கமாகின்றது.

மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் - புறநானூறு பாடினொருவர். போரிலே வெற்றிபெறுதல் எளிது. கொடிய சர்ப்பமுறைகின்றபுற்றைப் போலவும், கொல்லுகின்றவலியஇடபத்திரிகின்ற சாலையைப் போலவும், வலிய காவலையுடைய பகைவரதுபாசறைக்கண்ணே புகுந்திட்டானென்னும்புகழே பெறுதற்கரியதொன்றும் என்னும் கருத்தினைக்கொண்ட "இரும்பமுூசஞ்சிதைய" வென்னுமிவர்பாடல்வீரர்க்கு ஊக்கந்தருதலின் மிகச் சிறந்தது.

மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார் - புறநானூறு பாடினொருவொருவர்.

மதுரைகணக்காயனார் - தமிழ்க்கலைமுற்றும் பருகிய ஒப்பிலாப்புலவர் சிகாமணியாகிய நக்கீரருக்குத் தந்தையார் இவரும் புலமையிற் சிறந்தவரே.

மதுரைக்கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் - புறநானூறுபாடினொருவர் ஒருவர்.

மதுரைக்கூலவாணிகன்சீத்தலைச்சாத்தனார் - கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர்இவர்பாண்டியன் சித்திரமாடத்துஞ்சியநன்மாறன அபிமானப்புலவர்

மதுரைத்தமிழ்க்கூத்தனார் - புறநானூறு பாடினொருவொருவர்.

மதுரை நக்கீரனார் - புறநானூறுபாடினொருவொருவர். பிடவூர்க்கிழார் மகன் பெருஞ்சாத்தன் மகனுக்கு இவர் அபிமானப் புலவர்.

மதுரைப்படை மங்கமன்னியார் - புறநானூறு பாடிய புலவருளொருவர்.

மதுரைப் பூதனிளநாகனார் - புறநானூறு பாடினொருவொருவர்.

மதுரைப்பேராலவாயார் - பூதபாண்டியன் தேவி தன்நாயகனோடுஉடன்கட்டையேறியதுகண்டு வியந்து பாடியவர்.

மதுரைமருதனிளநாகனார் - இறையனாரகப் பொருளுக்குரைசெய்தநாற்பத்தொன்பதின்மருளொருவர். இவருரை நக்கீரரொழித் தொழிந்தோருரையினுஞ் சிறந்தது. புறநானூறுபாடினொருள்ளொருவர். இவராற் பாடப்பட்டோன் நாஞ்சில் வள்ளுவன் முதலியோர்.

மதுரைவீரன் - அரசக்காரத்வனென்றுகாட்டகத்தேகொண்டுபோய்விடுக்கப்பட்டகாசிராஜாவினதுபுத்திரன். இவன் ஒரு சக்கிலியன் மனையாள் கண்டெடுத்துப்போய் வளர்க்க வளர்த்து, வளர்த்த தந்தை தாயார் தென்னாட்டிற்சென்றபோது அங்கே மதுரையிலே பொம்மணன் சேவையிலிருந்து அவன் மகளைக் கவர்ந்துகொண்டு சீரங்கத்தை யடைந்து சோழனுக்குப்படைத்துணைவனாகிமதுரையை வெற்றிகொண்ட பராக்கிரமசாலி. இவன் தொட்டியர்க்கும் வேறுசில ஜாதியாளர்க்கும் குலதெய்வமானான். இவன் தெய்வபத்தியிற் சிறந்தவன்.

மதுரோதகம் - நல்லதண்ணீர்க்கடல்.

மதுர்ச்சி - பொன்னிமிளை.

மதுலம் - மஸ்துள்ளபொருள்.

மதுலேகம்
மதுலேகி } வண்டு.

மதுலோலுபம் - வண்டு.

மதுவடித்தல் - மதுபானங் காச்சிவடித்தல்.

மதுவம் - கள், வண்டு.

மதுவனம் - குயில்.

மதுவனம் - யமுனைக் கரைக்கணுள்ள வனம். கிஷ்கிந்தைக்குச்சமீபத்துள்ளவனம், இது சுக்ரீவனுக்குரியது.

மதுவீசம் - மாதளை.

மதுனி - மைத்துனி.

மதூகம் - இருப்பை, எட்டிமரம், வண்டு.

மதூகரம் - வண்டு.

மதூகவலர் - இலுப்பைப்பூ.

மதூச்சிட்டம் - தேனீ, மெழுகு.

மதூலி - அதிமதுரம், மாமரம்.

மதோன்மத்தர் - மிகு களிப்புடையோர், மிகுவெறியர்.

மத்குணம் - மூட்டுப்பூச்சி, யானை.

மத்தகஜம் - மதயானை.
மத்தகமூலம் - கழுத்து.
மத்தகம் - சென்னி, நெற்றி, பொல்லாநிலம், யானைமத்தகம்.
மத்தகாசம் - கண்ணோயிலொன்று.
மத்தகாசி - மேன்மையுடையாள்.
மத்தகாசிநி - உத்தமஸ்திரி.
மத்தகீசம் } யானை.
மத்தகீசன் }
மத்தகுணம் - மதகுணம், யானை.
மத்தக்காளி - ஒருபூடு.
மத்தங்காய்ப்புல் - ஒருபுல்.
மத்தப்பிரமத்தன்-மிகு களிப்புடையோன், மிகுவெறியன்.
மத்தமாதங்கம் - மதயானை.
மத்தம் -எருமைக்கடா, களிப்பு, குயில், பூமத்தை, மதம், மத்து, வெறி, ஊமத்தை.
மத்தவாரணம்- அத்தவட்டத்தலையணை, நந்தனவனம், பாக்கு வெற்றிலைத்தையல், மதயானை, மேல்வீட்டுத்தாழ்வாரம்.
மத்தளம் - ஒருபறை.
மத்தனம் - கடைதல், கடைதல், தேய்த்தல்.
மத்தனலிங்கம் - மருக்காரை.
மஸ்தன் } புலன் வேறு பட்டிருப்போன், பைத்தியக்காரன்.
மஸ்தான் }
மத்தன் - மாலியவந்தன்புத்திரன்.
மத்தாடி - கருஷமத்தை.
மத்தாப்பு - ஒருவாணம்.
மத்தி - நடு.
மஸ்தி - எலும்பு.
மத்திகை - குதிரைச்சம்மட்டி, கூடம், பூமாலை, விளக்குத்தண்டு.
மத்திக்காய் - ஒருகாதணி.
மத்தித்தல் - கடைதல், தேய்த்தல்.
மத்திபதீபம் - நடுநிலைவிளக்கு,இதநீபிகாலங்காரத்தொன்று.
மத்திபம் - குறை, மத்திமம்.
மத்திமகண்டம் - நவகண்டத்தொன்று.
மத்திகூர்மை - நிலாலவணம்.
மத்திமசரீரம்-அயிராவதம், காமதேனு முதலியன.
மத்திமதானம் - நடுத்தரமானவீகை, இது மூவகைக்கொடையிலொன்று.
மத்திமதீபம் - ஓரலங்காரம்.
மத்திமபட்சம் - நடுத்தரம்.
மத்திமபூமி - உட்டணமுஞ் சீதளமுஞ் சமமானபூமி.
மத்திபம் - மத்தியதேசம்.
மத்திமம் - இடை, குறைவு, சமனிசை, இது மூவிசையிலொன்று.
மத்திமன் - நடுத்தரமானவன், நடுவுள்ளவன்.
மத்திமை-நடுவிரல்,நான்கு வாக்கினுள் ஒன்று.
மத்தியகந்தம் - மாமரம்.
மத்தியட்சம் - நடுநியாயம்.
மத்தியதேசம்- விபாசைக்குக்கிழக்கேயும் பிரயாகைக்குமேற்கேயும் இமயத்துக்குத்தெற்கேயும் விந்தியத்துக்கு வடக்கேயுமுள்ள தேசம். இங்கே வசிப்போர் மாத்யமிகரெனப்படுவர். குருக்ஷேத்திரத்திற்கும் தெற்கும் அளகபாதத்திற்கு வடக்கும் இமயத்திற்குமேற்கும் விந்தத்திற்குக்கிழக்குமாக வுள்ள பூமி என்றுங் கூறலாம்.
மத்தியஸ்தம் - மத்தியட்சம்.
மத்தியஸ்தலம் - இடை.
மத்தியஸ்தன் - நடுநியாயக்காரன்.
மத்தியஸ்தை - நடுநிலை.
மத்தியந்தினமுனிவர்-இவர் வியாக்கிரபாதமுனிவருடைய தந்தையார்.
மத்தியபானம் - மதுபானம்.
மத்தியபூமி - நிலவுலகம்.
மத்தியசங்கிரகம் - பிறர்மனைக்கலப்பு.
மத்தியமண்டபம் - மது, நரை.
மத்தியமபிருதகன் - கமக்காரன்.
மத்தியமம் - இடை, சத்தசுருதியில் ஒன்று, நடுவிரல், மத்தி.
மத்தியமாவதி - ஓரிராகம்.
மத்தியமிகை - கன்னிப்பெண்.
மத்தியமை - குமரி, நடுவிரல்.
மத்தியம் - இடை,கள், நீழ்ப்பு, நடு மேற்கு, விபரீதசாதனை.
மத்தியாத்திரம் - நள்ளிரவு.
மத்தியலோகம் - பூலோகம்.
மத்தியலோகேசன் - அரசன்.
மத்தியவிருத்தம் - உந்தி.
மத்தியவுறுப்பு - இடை.
மத்தியாமோதம் - மகிழமரம்.
மத்தியானம் - உச்சிப்பொழுது.

மத்திமை - இடை, ஒரிராகம், காயமுநாணமுஞ் சமமாகவுள்ளவன், நடுவிரல்.

மத்திரம் - சிபிபுத்திரனாகிய மத்திரனாலே இமயமலைச்சாரலிலே திருவிக்கப்பட்டதேசம், சந்தோஷம்.

மத்திராகரணம் - பிறவியுயிர்களைதல்.

மத்திரன் - சிபியுடைய நான்காம் புத்திரன், மத்திரதேசத்தரசன்.

மத்திரிப்பு - சினம்.

மத்திரை - சுமத்திரை, பாண்டுவின் மனைவி.

மத்திவிருத்தம் - மத்தியவிருத்தம்.

மத்து - ஊமத்தை, தயிர் முதலியகடையுமத்து.

மஸ்து - தயிர், பைத்தியம், வெறி, தயிர்ச்சலம்.

மத்துமலை - மந்திரமலை.

மத்துவமதம் - சைவம்.

மத்துவம் - இலகிரி, மத்துவமதம்.

மத்துவன் - சிவபிரான்.

மத்துவாசவம் - பன்னீர்.

மத்துவாசாரியர் - இவர் துவைதமதஸ்தாபகர். இவர் கோத்திரம் பாசககோத்திரம் இவர் ஜன்மநாள் தைமாசத்துச் சுக்கிலபக்ஷ நவமி.

மத்துவாசாரியர் - துளுவப்பிராமணர்.

மத்தேபம் - மதயானை.

மத்தேபகமனை - மதயானைபோல் நடப்பவன்.

மத்தை - ஊமத்தை, மஸ்துள்ளது.

மநுநீதிகண்டசோழன் - இவன் திருவாரூரை இராஜதானியாக்கி அரசுசெலுத்திவருநாளில், தன் மகனாகிய வீதியிடங்கன் தேரேறிச் சென்றபோது, தற்செயலாயொரு பசுவின் கன்றோடி, அத்தேர்க் காலிலகப்பட்டு அரைப்புண்டிறக்க, அதன் தாய்ப்பசுவோடி ஆராய்ச்சிமணியை யசைத்துக் கதறியது கண்டு மனமிரங்கி, அதன் துயரத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தன் மகனைத் தன் தேர்க்காலிலிட்டரைத்துக் கொல்ல முயன்றபோது சிவபெருமானது திருவருளால் அக்கன்று உயிர்பெறவெழக் கண்ட பேருட் பெருந்தகை.

மந்திகதி - தாமதநடை.

மந்தகர்ணி - இவன் வாயுபோஜநனும்தற்படுக்கையனுமாகி, பதினாயிரம் வருடம் உக்ரதபசு செய்கையில், தேவர்கள்பயந்து இவன் தவத்துக்கு இடையூறு செய்யும்பொருட்டு ஐந்து அப்ஸரஸ்திரீகளை யனுப்பினார்கள். அவர்களைப்பார்த்து மோகித்துப் பஞ்சாப்ஸரசு என்கிற ஒரு பொய்கையையுண்டாக்கிக்கொண்டு அதில் அந்த அப்சர ஸ்திரீகளோடு கிரீடித்துக் கொண்டிருந்த ஒரு முனிவன்.

மந்தகாசம், மந்தகாசியம் - சுயரோகம், புன்னகை.

மந்தகாமி - பையநடப்பவன்.

மந்தகுணம் - செறியாக்குணம்.

மந்தகேந்திரம் - கிரகநடையிலொன்று.

மந்தக்குணம் - சமியாமையினால் வருமோர் நோய், விபரீதமற்றகுணம்.

மந்தக்கொதி - ஒருநோய்.

மந்தசம் - வெண்ணெய்.

மந்தசன்னி - சனீச்சுரன்றாய்.

மந்தசானம் - அக்கினி சிவன், நித்திரை.

மந்தசைலம் - மந்தரமலை.

மந்தணம் - இரகசியஆலோசனை, சடைதல்.

மந்ததண்டகம் - தயிர்கடைதறி.

மந்ததரம் - சோம்பு, சத்திநிபாதத்தொன்று.

மந்தநகடி - தயிர்கடைதாழி.

மந்தபாலன் - ஒரு பிரமசாரி. இவன்பிரமசரியத்தோடு அதிநிஷ்டையனாய் அநேகமாயிரம் வருடங்கள் தவஞ்செய்தும் புத்திரப் பேறண்டாகாமையால் புண்யலோகத்தையடையுமுரிமை யில்லாதவனாகி விரைவில் புத்ரலாபமடையும் பொருட்டு சார்ங்கிஜாரன் என்னும் பறவையாகி அந்த ஜாதிப்பெண்ணாகிய ஜரிதையென்பவளைச்சேர்ந்து நான்கு புதல்வரைப்பெற்றுப் புண்யலோகத்தையடைந்தவன்.

மந்தரபுரேசர் - திருவுசாத்தாநத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

மந்தப்படுதல் - அசிரணித்தல், அவிவேகப்படுத்தல், கூர்மையற்றுப்போதல்.

மந்தப்புத்தி - அவிவேகபுத்தி.

மந்தமதி - மந்தவறிவு.

மந்தமா - யானை.

மந்தமாருதம் - சிறுதென்றல்.

மந்தம் - அழித்தல், அற்பம்,அசீரணம், உலகவழிவு, ஒருநோய், கடைதல், கண்ணோயி லொன்று, கூர்மையின் மை, சோம்பல், பீழை, மத்து, மெல் லெனவு, வெறி.
மந்தரகிரி - மந்திரமலை.
மந்தரதரன் - விபகேது.
மந்தரம் - அறிவின்மை, ஒருமலை, கீழ் மை, கோட்டை, கோபம், சோம்பு, தடிப்பு, தடை, தயிர்கடைதறி,தேவ லோகம், பருமை, பழம், பனிக்கு, பொக்கிஷம், மந்தாரம், மாலை, வெ ண்ணெய்.
மந்தரன் - ஒற்றன், சோம்பன்.
மந்தராசலம் } மந்தரமலை.
மந்தராத்திரி }
மந்தரை - கைகேசியின் வேலைக்காரி. விரோசனன் புத்திரி. கைகேசியி னுடையதோழி, ஸ்ரீராமர் பாலியத் தில் பந்தடித்து விளையாடும்போது, இவள் அந்தப்பந்தை தட்டிவிட்டாள். அதற்காக ஸ்ரீராமர் கோபித்து இவ ளைத் தமது திருவடியால் நிலத்தில் விழும்படியுதைத்தார். இவள் அந் தக்குரோதத்தை மனதில் வைத்துக் கொண்டிருந்து, ஸ்ரீராமருக்கு யுவ ராஜ்யப்பட்டம் கட்டவொட்டாமல் இடையூறுசெய்தாள், இப்படி செய் தற் பொருட்டே இவளைத் தேவர் கள் பிறப்பித்தார்களென்று சொல் லுவர், இவள் கூனியாயும் விகார ரூபமுள்ளவளாயுமிருப்பாள்.
மந்தவசாரம் - சனிக்கிழமை.
மந்தவரை - மந்தாரத்தம்.
மந்தவாகினி - சுக்திமந்தத்தில் உற்பத்தி யாகிய ஒருநதி. இது புண்யதீர்த் தங்களுளொன்று.
மந்தவாரம் - சனிக்கிழமை.
மந்தவிசை } மெல்லியவோசைஇது
மந்தவோசை } மூவிசையிலொன்று.
மந்தவிரோதி } சுக்கு.
மந்தவைரி }
மந்தனம் - அழித்தல், ஆலோசனை, கடைதல், புகழ், யானைமுகபடாம்.
மந்தனி - தயிர்கடைதாழி.
மந்தன் - கூர்மையில்லான், சனி, நமன்.
மந்தாகம் - புகழ்.

மந்தாகினி-தேவகங்கை, ஆரவாரமின்றி மெல்லப் பாய்வது என்பது இதன் பொருள், இந்நதி தேவர்களுக்கு நடைவாவி யாதலால் சுரதீர்த்திகை யென்று சொல்லப்படும். ருக்ஷபர்வ தத்தி லுற்பத்தியாகிப் பெருகிப் பா ய்வதாகிய ஒரு நதி. இது சித்திர கூடத்துக் கருகே பாயாநிற்கும், இத னையிக்காலத்தில் காசிகங்கை யென் பர். [கை.
மந்தாகினி - அறுபதாண்டுள்ளவள், கங்
மந்தாசம் } புன்சிரிப்பு, வெட்கம்.
மந்தாசியம் }
மந்தாட்சம் - வெட்கம்.
மந்தாயு - அற்பாயுசு.
மந்தாரகாசம் - ஒருநோய்.
மந்தாரகாந்தி - பிடாலவணம்.
மந்தாரகெங்கையோன் - தரிசு.
மந்தாரக்கல் - ஈரற்கல்.
மந்தாரக்கொன்றை - ஒருகொன்றை.
மந்தாரங்கட்டுதல் - மந்தாரம்போடுதல்.
மந்தாரசு - வெள்ளெருக்கு.
மந்தாரச்சிலை - ஒருமருந்துக்கல்.
மந்தாரபீதம் - பித்தளைமலை.
மந்தாரமஞ்சி - சூதபாஷாணம்.
மந்தாரமேரு - தொட்டிபாஷாணம்.
மந்தாரம் - ஐந்தருவிலொன்று,செம்பர த்தை, பூங்காரம், மப்பு முண்முருக்கு.
மந்தாரன் - ஒரு வித்தியாதரன்.
மந்தாரித்தல் - பூங்காரம்போடல்.
மந்தாரிப்பு - பூங்காரம்.
மந்தாரை - ஒரு பூச்செடி.
மந்தார்த்தம் - சூரியனதுமையத்திருந்து வேறொரு கிரகத்திற்குள்ள தூரவள [வு.
மந்தானம் - மத்து.
மந்தி - ஆடுதின்னுப்பாலை, கருங்குரங் கின்பெண், குரங்கு, பெண்குரங்கு, பெண்முசு, மந்தியென்னேவல், வ [ண்டு.
மந்திட்டி - மஞ்சிட்டி.
மந்தித்தல் - மந்தமடைதல்.
மந்திப்பு - மந்தம். [ரை.
மந்திமூலைத்தலைவாரை - ஒரு தலைவா
மந்திரகாஷாயம் } ஒரு காவிப்புடை
மந்திரகாவி } வை.
மந்திரகிருது - மந்திரி.
மந்திரகூடம் - கருங்கல்.
மந்திரகூடன் - ஒற்றன்.

மந்திரகூர்மை - இந்துப்பு.
மந்திரக்கூறை - மணக்கூறை.
மந்திரசஞ்சீவி - இந்திரகோபம்.
மந்திரசத்தி - மந்திரப்பலன்.
மந்திரசாத்திரம் - மந்திரவித்தை, இது கலைஞானமறுபத்துநான்கில் ஒன்று.
மந்திரசிருவன் - தீ.
மந்திரசித்தி - மந்திரத்தான்வரும்பேறு.
மந்திரசெபம் - மந்திரவுச்சாரணம்.
மந்திரதன் - உபாத்தியாயன்.
மந்திரதாபனம் - மந்திரவிதியுடன்கூடியதாவிப்பு.
மந்திரதாரணை - நவதாரணையிலொன்று அது பிரபஞ்சமனைத்துமாயும் அவற்றிற் கதிட்டானமாயுமிருப்பவன்சிவனன்றி வேறொன்றல்ல வெனக்கொண்டு பௌராணிக மந்திரத்தாற் சிவபெருமானைத் தியானித்தல்.
மந்திரத்தம்பம் } மந்திரத்தாற் றம்பித்தல்.
மந்திரத்தம்பனம் }
மந்திரஸ்நாகம் - எழ்வகை ஸ்நாநத்தொன்று அது மந்திரநீர்ப்புரோட்சணம்.
மந்திரநிதினி - தீ.
மந்திரநாயகர் - மந்திரதேவர்.
மந்திரபசு - பூனை.
மந்திரபூதாத்துமன் - கருடன்.
மந்திரப்பயிற்சி - மந்திரப்பழக்கம்.
மந்திரப்பிரயோகம் - மந்திரத்தாற் பிரயோகித்தல்.
மந்திரப்பொருத்தம் - அவ்வவர்க்குரிய தேவதைகளின் மந்திரம் பொருந்துதல்.
மந்திரமுருவேற்றுதல் - மந்திரமுச்சாரணம் பண்ணுதல்.
மந்திரமூர்த்தி - மந்திரதேவர்.
மந்திரம் - ஆலோசனை, இராசமனை, உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று, உள், எண்ணல், ஒருதேயம், கடல், கள்ளு, குகை, குதிரைக்கூட்டம், குதிரைப்பந்தி, கோயில், தாழ்த்திசை, நாப்புடைப்பெயரா அச்சரித்தல், பொருப்பு, வீடு, வேதம்.
மந்திரவாதம் - ஒருசமயம்.
மந்திரவாதி - மந்திரசமயி, மந்திரவித்தைக்காரன்.
மந்திரவான் - அந்தரங்கவான், அரசியற்குரியவான்
மந்திரவித்தை - மந்திரசாத்திரம், மந்திரோபாசனை.
மந்திராசரணை - மந்திரஞ்செபித்தல்.
மந்திராட்சதை - மஞ்சளரிசி.
மந்திராலோசனை - இரகசியாலோசனை.
மந்திரி - குபேரன், சுக்கிரன், தந்திரி, திராய், தேர்ச்சித்துணைவன், இவன் அரசர்க்குக் குழுவிலொருவன், அரசர்க்குத் துணைவரினு மொருவன், புதன், மந்திரியென்னேவல், வருங்காரியஞ் சொல்வோன் வியாழம்.
மந்திரித்தல் - செபித்தல்.
மந்திரித்தனம் - மந்திரிக்குரியதன்மை.
மந்திரை - வீடு.
மந்திரோச்சாரணம் - மந்திரவுச்சரிப்பு.
மந்திரோபாசனை - மந்திராசரணை.
மந்தினி - தயிர்கடைதாழி.
மந்திபவம் - அறியாமை, சோம்பு.
மந்து - அரசன், காய்வேளை, தப்பிதம், மனிதன்.
மந்துரம் - குதிரைப்பந்தி.
மந்துரை - தொழுவம், படுக்கை.
மந்தை - ஆடுமாடிவற்றின்கூட்டம்.
மந்தைக்கல் - ஆவுரிஞ்சுதறி.
மந்தையன் - அவிவேகி, கூர்மையற்றவன்.
மந்தைவெளி - மேய்ச்சனிலம்.
மந்தேஹாருணர் - மந்தேஹர், இவர்கள் பிரமனைநோக்கித் தவஞ்செய்து சூரியனோடு போர்புரியும்படி வரம்பெற்றவர்கள். இவர்களைச் சங்கரிக்கும் பொருட்டு முச்சந்திகளினும் வேதியர் காயித்ரியால் அபிமந்திரித்த அஸ்திரங்களை அருக்கிய மூலமாக விடுவார்கள் அவர்கள் அந்த அஸ்திரங்களால் சங்கரிக்கப்பட்டும் வரபலத்தால் மீட்டும் உயிர் பெற்றெழுந்து சூரியனோடு போர் புரிவார்கள்.
மந்தோச்சம் - கிரகவட்டத்தின் தூரமானமூலை.
மந்தோட்டணம் - உட்டணசீதளம்.
மந்தோட்டணவாரி - இளவெந்நீர்.
மந்தோததி - பாற்கடல்.
மந்தோதரி - இராவணன்மனைவி, மிகவும் கம்பீரமான ரூபமுள்ளவள், இவள் திதிபுத்திரனாகிய மயனுக்குமகள்.
மப்பு - மந்தம், மந்தாரம், மயக்கம்.
மம - அதிட்டம், நீர்.
மமகாரம் - அகந்தை.

மமகாரன் - ஓரரசன்.

மமதை - அகந்தை, தனிமை, பெருமை, உதத்தியன் மனைவி, தீர்க்கதமன் தாய், இவள் பிருகற்பதி அநுக்கிரகத்தால் பரத்துவாசரைப் பெற்றாள்.

மம்மர் - துன்பம், மயக்கம்

மம்மட்டி - சிற்றுமுட்டி.

மம்மரி - மாங்கிஷபேதி.

மயகோசம் - ஒன்றற்குறைவிடமாயிருப்பது.

மயக்கடி - மயக்கம்.

மயக்கமின்மை - அறத்துறப்பிறென்று, அது தெளிவு.

மயக்கம் - உன்மத்தம் இது முச்சுற்றத்தொன்று, சாச்சடக்கிறென்று சோம்பு

மயக்காவம் - ஒருபாம்பு.

மயக்கல் - மயக்குதல்.

மயக்கவணி - ஓரலங்காரம் அது ஒப்புமையி னொருபொருளை மற்றொன்றாக நினைத்தல் (உ-ம்) மரகதக்கதிரைப்புல் புல்லெனக் கறிக்கும்.

மயக்கவொழிப்பு - அபநுதி யுருபகத்தொன்று அது ஒரு பொருளை மற்றொரு பொருளென்று கொள்ளும் பிராந்தியை உண்மைகூறி யொழித்தல் (உ-ம்) சுரமன்று காமநோய் வெப்பம்.

மயக்கிடை - மயக்கம்.

மயக்கு - மயக்கம், மயக்கென்னேவல்

மயக்குதல் - அறிவைக்கெடுத்தல், கலத்தல்.

மயக்குறல் - கலங்குதல்

மயங்கல் } அறிவுகெடுதல், தன்மினமிழ்ந்துதல், புத்தி கலங்குதல்.
மயங்குதல் }

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா - தரவு தாழிசை அராசம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமென்னு மாறுறுப்பு மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும் பலவாறு மயங்கிவருவது.

மயடம் - புற்குடிசை.

மயண்டை - மைம்மல்.

மயப்பு - சாரம், செல்வமுடைமை, நிறம்.

மயம் - அழகு, ஒட்டை, சிற்பநூன் மூப்பத்திரண்டி னொன்று.

மயர்வு - மயக்கம்.

மயல் - உன்மத்தம், செத்தை, பயம், பிசாசம், மந்தம், மயக்கம் பைத்தியம்.

மயனூல் - சிற்பசாத்திரம்.

மயன் - ஒருதேவதச்சன், கின்னரன், தச்சன், வினைஞன், காசிபமுனிவருக்கு திதிவயிற்றிற் பிறந்த புத்திரன், அசுரர்க்குத் தச்சன், சிற்பசாத்திரம் செய்தவன் இவனே, மாளிகைகளும் அரண்மனைகளும் சமைப்பதில் மிகு சமர்த்தன். இதுவேயுமன்றி நினைத்த மாத்திரத்தில் நிருமிக்கும் ஆற்றலுமுடையவன், இவனுக்கு மாயாவி, துந்துபி என்றிரண்டு புதல்வரும், மண்டோதரி என்றொரு புதல்வியுமுண்டு, இராவணன் இவனுக்குமருமகன், இவனுக்குப் பின்வந்தோரும் இப்பெயராலேயே விளங்கினர் என்பது, அர்ஜுனன் மயனுயிரைக் காத்தானென்றும், அந்த நன்றியின் பொருட்டு மயன் ஒரு அலங்கார மண்டபஞ்செய்து பாண்டவர்க்குத் தந்தானென்றும்வரும் பாரதகதையாலறியப்படும், மயன் வமிசத்தார் தெய்வகம்மியராகிய துவஷ்டா எனப்படும் விசுவகர்மாவினது வமிசத்தார்க்கஞ்சி, ரோகமபுரியை யடைந்து அசுரகம்மியராகி, அவர்க்குப் படைக்கலங்களும் ரதங்களும் மாடமாளிகைகளும் ஏனைய பலவகைக்காருக கம்மியங்களும் பயிற்றி விளங்குவாராயினர், ரோமகபுரி கடலாற் கொள்ளப்பட்டழிந்தபோது அவ்வம்சத்தார் பலர் அப்பிரளயத்துக்குத்தப்பி, மீண்டும் ஆரியதேசத்தையடைந்தனர். அவர் பெருக, மற்றைத் துவஷ்டாவின்வமிசத்தார் குறைந்தனர், ஆலயசிறயமானங்கள் ஆகமத்தி லொன்றும் மயன்விதியில் வேறொன்றுமாக இக்காலத்தும் மாறுபடுதல் காண்க.

மயானக்கரை - இடுகாடு, சுடுகாடு.

மயானக்கிரியை - சுடலையிற் செய்யுங் கருமம்.

மயானஞானம் - மயானவைராக்கியம்.

மயானபூமி } மயானக்கரை.
மயானம் }

மயானவயிரவன் - ஒருவயிரவன்.

மயானவைராக்கியம் - பிறர்மரித்தபோதுண்டாகும் வயிராக்கியம.

மயிடமத்தனி - துர்க்கை.

மயிடம் - எருமை.

மயிடரோசனை-எருமைக்கோரோசனை
மயிடற்செற்ருன் - காளி, துர்க்கை.
மயிடோசனை - ஒருமருந்து.
மயிந்தி - பதுங்கி.
மயிந்துதல் - பதுங்குதல்.
மயிரகம் - மயிர்ச்சிலை.
மயிரொறிகருவி - கத்திரிகை,சௌளக்கத்தி.
மயிரொழுங்கு - உரோமரேகை, மயிர்க்குழற்சி.
மயிரோசனை - ஒருமருந்து,மயிர்மாணிக்கம்.
மயிர் - உரோமம்.
மயிர்க்கழித்தல் - சிரைத்தல்.
மயிர்களைவோன் - நாவிதன்.
மயிர்க்கடை - மயிர்க்கடை.
மயிர்க்கால் - உரோமத்துவாரம்.
மயிர்க்கிடை - உரோமவளவிடை.
மயிர்க்கிளர்ச்சி - உரோமச்சிலிர்ப்பு.
மயிர்க்குச்சு-கொண்டைக்குச்சு, தகிலிகை.
மயிர்க்குட்டம் - ஒருநோய்.
மயிர்க்குட்டி - கம்பளிப்பூச்சி.
மயிர்க்குந்தம் - ஒருமருந்து
மயிர்க்குரு - உரோமத்துவாரத்திற்ரோன்றியபரு.
மயிர்க்குழற்சி - உரோமப்புளகிதம், மயிர்க்குழைவு.
மயிர்க்கூச்சு - உரோமப்புளகிதம்.
மயிர்க்கூச்செறிதல் - மயிர்சிலிர்த்தல்.
மயிர்க்கொன்றை - ஒரு பூமரம்.
மயிர்க்கோரை - ஒருபுல்.
மயிர்சிலிர்த்தல் - மயிர்பொடித்தல்.
மயிர்ப்பட்டு - ஒருபுடவை.
மயிர்ப்பிளவை - ஒருபரு.
மயிர்ப்பொத்தி - மயிரொழுங்கு.
மயிர்மாட்டி - ஓராபரணம்.
மயிர்மாணிக்கம் - ஒருசெடி, கோரோசனை, பசுவுடற்பிரட்சி.
மயிர்முடி - குடுமி
மயிர்வாரி - சீப்பு.
மயிர்வினை - கத்தரிகை, சௌளம்பண்ணல்.
மயிர்வினைஞர் - நாவிதர்.
மயிலடி - மாதர்காலாழியினொன்று.
மயிலடிக்குருந்து - ஒருமரம்.
மயிலம் - குப்பைமேனி, மயிலிறகு, திருப்புகழ்பெற்ற ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரம்.
மயிலாடுதுறை - இது காவிரியாற்றின் தென்கரையிலுள்ள ஒருசிவஸ்தலம், இதில்வந்து தங்கினவர்கள், இதைப் புகழ்ந்தவர்கள், இதைத் தியானித்தவர்கள் ஆகிய யாவரும் சிவபதமடைதல் திண்ணமாதலால், இது சிவஸ்தலங்களெல்லாவற்றினுஞ் சிறந்ததென்பர் அறிஞர்.
மயிலாப்புரி, மயிலாப்பூர் - தேவாரம்பெற்ற ஒரு சிவஸ்தலம்.
மயிலியல் - மயிற்சாயல்.
மயிலுச்சிட்டம் - பாம்பு.
மயிலுச்சிட்டவெச்சில் - தென்றற்காற்று.
மயிலெண்ணெய் - ஒரு மருந்தெண்ணெய்.
மயிலெள் - ஓரெள்.
மயிலை - இருவாட்சி, கருமைகொண்ட வெள்ளை,மீனவிராசி, மீன்,வெட்சி. ஒரு சிவஸ்தலம்.
மயிலைநந்தி - மருதோன்றி.
மயிலியம் - செம்பருத்தி.
மயிலூர்தி, மயிலேறி - முருகப்பிரான்.
மயில்விரோதி - பச்சோந்தி.
மயில் - செங்கத்தாரி, மயூரம், மயிலாப்பூர், பஞ்சபட்சியிலொன்று.
மயில்முனிவன் - அகத்தி.
மயில்விரோதி - பச்சோந்தி.
மயில்வாகனன் - குமரன்.
மயிற்குரல் - அகவல்.
மயிற்பிச்சம் - மயிலிறகுக்குடை.
மயிற்பீலி - மயிலிறகு, மயில்விசிறி.
மயிற்றுத்தம் - துருசி, வெண்டுத்தம்.
மயிற்றோகை - மயில்வால்.
மயு - குதிரைமுகம்.
மயுகம் - மயில்.
மயுராஜன் - குபேரன்.
மயூகம் - அழகு, கடிகாரவூசிநிழல், கிரணம், சுவாலை, பிரபை.
மயூரகதி - தாககதி ஐந்தினொன்று.
மயூரகம் - துருசி, நாயுருவி, மயில்.
மயூரக்கிரீவகம் - துத்தம்.
மயூரபதகம் - நகக்குறி.
மயூரபிச்சம் - மயிற்பீலி.
மயூரபுரி - மயிலாப்பூர்.
மயூரம் - குரோசாணி, நாயுருவி, மயில், மயிற்கொன்றை.
மயூரவாஹநன் - குமரக்கடவுள்.

மயூராதனம் - இருமுழங்கையு மூந்தியி லழுந்தப் புவியிற் கையூன்றிக் காலிட்டித் தலை நிமிர்ந்திருத்தல்.
மயூராரி - ஒந்தி, பல்லி.
மயூரி - பெண்மயில்.
மயேசன் } சிவபிரான்.
மயேசுரன் } சிவபிரான்.
மயேசுவரி - பார்வதி.
மயேச்சுரர் - இவர் ஒரு யாப்பிலக்கண நூலாசிரியர் என்பது குணசாகரர் காரிகையால் விளங்கும், இதனால் குணசாகரர்க்கு முன்னிருந்தவர் என்பதும் அந்நூல் இறந்துபோயிற் றென்பதும் இனிது விளங்கும்.
மயேந்திரசாலம் - ஒருமாயவித்தைஅது கலைஞான மறுபத்து நான்கில் ஒன்று.
மயேந்திரம் - ஒருபட்டினம்.
மரகதபத்ரி - நீர்ப்பாசி.
மரகதப்பச்சை - காகப்பச்சை.
மரகதமேனியன் - திருமால்.
மரகதமேனியள் - பார்வதி.
மரகதம் - பச்சைநிறம், பச்சைமணி இது நவமணியினொன்று.
மரகதவல்லி - உமை, தருமதேவதை.
மரகதவல்லியம்மை - திருவீங்கோய் மலையிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மரகதன் - குபேரன்.
மரகதாசலேசுவரர் - திருவீங்கோய்மலையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மரகம் - பேதி.
மரக்கனு - மரக்கெட்டு.
மரக்கலப்பாய் - கப்பற்பாய்.
மரக்கலமோட்டி - மீகாமன்.
மரக்கலம் - கப்பல், தோணி.
மரக்கலன் - மீகாமன்.
மரக்கறி - காய்க்கறி.
மரக்கா - நந்தனவனம்.
மரக்காரை - ஒருமரம்.
மரக்கால் - ஆயிலியம், உப்பனம், கலத்தின் பன்னிரண்டிலொரு பங்கு அது ஒரு குறுணி, கொற்று, சோதிநாள், திருமால், தூக்கைக்கூத்து, முகந்தளக்குங் கருவியி னொன்று, வள்ளம், விஷ்ணுகூத்து.
மரக்காளான் - மரத்தில் முளைக்குங்காளான்.
மரக்கிளை - மரக்கிளை.
மரக்கூட்டம் - தோப்பு.
மரக்கொம்பு - மரத்தின்கொம்பு.
மரங்கொத்தி - ஒருபுள்.
மரக்கோல் - தோணியோட்டுங் கம்பு, மொட்டம்பு.
மரச்சிலைக்கல் - கண்டிச்சிலை.
மரச்செப்பு - பரணி.
மரச்செறிவு - சோலை, மரப்பொது.
மரணகண்டி } ஒருநூல்.
மரணகண்டிகை } ஒருநூல்.
மரணகண்டிதம் - மரணகாலநிண்ணயம்.
மரணகாலம் - சாவறுதி.
மரணக்குறி - சாவடையாளம்.
மரணக்கெடி - மரணபயம்.
மரணசன்னி - ஒருநோய்.
மரணசாதனம் - சாகுந்தறுவாயி லெழுதப்பட்ட வேலை. [க்கு.
மரணசூதகம் - மரணத்தாலாகுக்தொட
மரணச்சனி - மூன்றுமுறை யுடலுயிர் பன்னிரண்டாமிராசியில்வருஞ்சனி.
மரணஸ்தம்பனம் - மரணத்தைநிறுத்தல்.
மரணத்தருவாய் - மரணவேலை.
மரணமடைதல் - சாதல்.
மரணம் - சாவு இது மாயயாக்கை பதினெண் குற்றத்தொன்று, பஞ்சபாவத்தையினொன்று, அந்தமபக்கமுமாய்தலும்.
மரணயோகம் - நாசயோகம்.
மரணவேதனை - மரணவேளைதனிற் படும் வருத்தம்.
மரணாசௌசம் - மரணசூதகம்.
மரணாவத்தை - மரணத்தறுவாய்.
மரணித்தல் - மரணமடைதல்.
மரணிப்பு - மரணம்.
மரணை - சாதல், ஞாபகம்.
மாகதம் - [illegible]ச்சை.
மரதம் - சாவு.
மரதன் - கோவிந்தன், சிவபிரான்.
மரத்தம் - ஓரிரத்தினம்.
மரத்தல் - பிரமித்தல், விறைத்தல்.
மரத்துவக்கு - மரப்பட்டை.
மரத்துவவாழை - மருத்துவவாழை.
மரத்தோல் - கீரை.
மரநா - விறைத்தநாக்கு.

மரநாய் - மரத்தில்வாழுநாய்.
மரநோய் - புல்லுருவி
மரந்தம் - பூந்தேன்.
மரபினோர்-சான்றோர், சுற்றத்தார். [ம்.
மரபு குணம், பழமை, முறைமை, வமிச
மரபுப்பெயர் - தொன்றுதொட்டு அவ்வவற்றிற்கு மரபுப்பெயராய் வழங்குஞ்சொல் (உ-ம்) பலா.
மரப்பட்டை - மரத்தோல்.
மரப்பத்தல் - இறைமரம்.
மரப்பாத்திரம் - மரவை.
மரப்புண் - திருவடிப்புண்.
மரப்பெட்டி - பெட்டகம்.
மரப்பெத்து - சோலை.
மரப்பொந்து - மரக்குடைசு.
மரப்போர் - மரப்பொந்து.
மரமஞ்சள் - ஒருமஞ்சள்.
மரமரம் - சருகு முதலியவற்றானெழு [மொலி.
மரமரிவாள் - ஈர்வாள்.
மரமெறிகருவி - கோடரி, கோடலி.
மரமூலம் - மரவேர்.
மரமேறி - சான்றான், சாணன்.
மரம் - விருக்கம்.
மரல் - அரலை, ஒருகற்றாழை, மருள்.
மரவட்டணம் / மரகுடணை / மரவட்டம் } தட்டு, நெடும்பரிசை.
மரவட்டு - மரத்தின் குருத்திருக்குந்தா [னம்.
மரவட்டை - ஓரட்டை.
மரவணில் - ஒருஅணில்.
மரவண்டு - ஒருவகைவண்டு.
மரவம் - குங்குமமரம்.
மரவள்ளி - ஒரு வள்ளிக்கிழங்கு.
மரவாணி - மரச்கெடுதி.
மரவிடை - பிரயோசனந்தருமரம்.
மரவினைஞர் / மரவினையாளர் } தச்சர்.
மரவீடம் - தாவரலிங்கம்.
மரவுப்பு - இருப்பு.
மரவுரி - சீரம், கார்ச்சீரைகுறவிகளுடை.
மரவெண்ணெய் - ஒருதயிலம்.
மரவெலி - ஓரெலி.
மரவெறும்பு - ஒரெறும்பு.
மரவை - மரச்செப்பு.
மரவொல்லி - கதம்பையொல்லி. [ம்பு.
மரா-அரசமரம், ஆச்சாமரம், வெண்கட
மராடம் - தேயமைம்பத்தாறினொன்று. பதினெண்பாடையினொன்று, மருக்காரை.
மராட்டிமொக்கு - ஒருபோதைவஸ்து.
மராட்டம்-இடம், புறமயிர், பெண்மயிர்.
மராட்டியம் / மராட்டிரம் } மராஷ்டம்.
மராட்டியர் - ஒருபாஷைக்காரர்.
மராமரம் - அரசு, ஆச்சா, கடம்பு.
மராம் - கடம்பு, வெண்கடம்பு.
மராரம் - பண்டகசாலை.
மராலம் - கண்ணிடுமை, குதிரை, தாரா, மாதளை.
மராளம் - அன்னம், பாம்பு, மாதளை.
மராளவாகனன் - பிரமன்.
மராளாசனம் - தாமரைமலர்.
மரிக்கை - மரித்தல்.
மரிசம் - பொறுமை, மரீசம்.
மரிசி - புதுவரம்புவழி.
மரிசிதம் - பொறுமை.
மரித்தல் - சாதல், ஸ்மரித்தல்.
மரித்தோர்தலம் - கல்லறை, மயானம்.
மரிப்பு - சா.
மரிமாங்காய் - ஒருவகை மாங்காய்.
மரியாதம் - ஒழுங்கு, நீதி.
மரியாதை-அனுமவித்தநிச்சயம், எல்லை ஒழுக்கம், கரை, சரிமுறை, நீதி, வணக்கம், வரம்பு.
மரியை - எல்லை, நிச்சயித்த நிபந்தனை, நீதி, பெரியோர்கள்.
மரீசம் - மிளகு.
மரீசி - ஓரிருடி, இவன்பிரமனது மாநஸ புத்திருளொருவன், இவனுக்குக்கர்த்தமன்மகளாகிய கலையினிடத்தில், காசிபன் என்னு மகனும் பூர்ணிமையென்னும் மகளும் பிறந்தார்கள். இந்தப் பூர்ணிமையைச் சில இடங்களில் மகளென்றும் சொல்லியிருக்கிறார்கள். கிரணம், பிசுனன், மிளகு.
மரீசிகம் / மரீசிகை } கானல்.
மரு - ஒருபரிமளப்புல், மருவென்னேவல், மலை, வனாந்தரம், வாசனை.
மருகம் - மான்.
மருகல் - ஒரு சிவக்ஷேத்திரம்.
மருகன் - மருமகன்.
மருகி - மருமகள்.

மருகு - ஒரு வாசனைப்பூண்டு, மகாவாழை, மருமகன்.
மருக்கடம் - சிலம்பி, மர்க்கடம்.
மருக்கடவாசம் - சிலம்பிப்பொட்டு.
மருக்கடாசியம் - செம்பு.
மருக்கம் - காற்று, குரங்கு, சரீரம்.
மருக்காரை - ஒருகாரை.
மருக்கொழுந்து - ஒருவாசனைப்புல்.
மருக்கொழுந்துசக்களத்தி - அளத்துப்பச்சை.
மருங்கு - இடை, ஒழுங்கு, பக்கம்.
மருங்குல் - இடை, பக்கம்.
மருங்கை - பிரசவித்தைத்தாகாள்.
மருச்சகம் - கொம்மட்டிமாதளை.
மருச்சகன் - அக்கினி, இந்திரன்.
மருச்சுதன் - அனுமான், வீமன்.
மருட்கிழங்கு - மருளின்வேர்.
மருட்சி - அறிவின்மை, மயக்கம்.
மருட்செந்தொடை - இனவெழுத்துப்பெற்று மோனைமுதலாகிய தொடையுந்தொடைவிகற்பமும் போலாமை வேறுபட்டு வருவது
மருட்டம் - கள்.
மருட்டல் - எத்துதல், மயக்குதல்.
மருட்டி - எத்தி, கள், மயக்கந்தருவது.
மருட்டு - ஏய்ப்பு, மயக்கு, மயக்கென்னேவல்.
மருட்டுதல் - எத்துதல், மயக்கல்.
மருட்பா - ஐந்துபாவினொன்று அது முதற்கண் வெண்பாவுங் கடைச்சண் மகவலுமாய்வருவது.
மருட்பார்வை - வெருண்டபார்வை.
மருண்மா - மதயானை.
மருண்மாலை - கருகுமாலை.
மருதக்கருப்பொருள் - மருதநிலத்துற்பத்திப்பொருள் அவை இந்திரன் முதற்சனையாடலீறுயவாம்.
மருதங்கிளி - ஒருகிளி.
மருதணி - நாடுசார்நிலம், மருதாணி.
மருதத்திணை - மருதத்திற்குரியன.
மருதநிலம் - மருதணி.
மருதநிலவேந்தன் - இந்திரன்.
மருதப்பண் - ஒருபண்.
மருதப்பறை - ஒருபறை.
மருதப்புறம் - குறிஞ்சிக்குறங்கலி.
மருதப்பேசார் - திருவிடைமருதூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மருதமலை - கொங்குநாட்டிலுள்ள ஒரு சுப்பிரமணியஸ்தலம்.
மருதமுதற்பொருள் - பழனமும்பழனஞ்சார்ந்த விடமும் வைகறை யென்னுஞ் சிறுபொழுதும் ஆறுபெரும்பொழுதுகளுமாம்
மருதம் - ஐந்நிலத்தொன்று அது வயலும் வயல் சார்ந்த இடமும், ஒருமரம், காற்று, மருதநிலப்பண், மருது, வயல்.
மருதயாழ் - ஒருயாழ்.
மருதவேந்தன் - இந்திரன்.
மருதாணி - ஒருபூடு.
மருது - மருதமரம்.
மருதூர் - ஒரு சிவஸ்தலம்.
மருதேசம் - குருகுலத்தார்சேனைபாரதயுத்தகாலத்தில் தங்கியிருந்த இடம்.
மருதோன்றி - ஒருமரம்.
மருத்தன் - ஓரரசன் மருத்துவன், வாயுபகவான்.
மருத்திப்போதி - நாயுருவி.
மருத்திரதம் - குதிரை, விமானம்.
மருத்திடு - மருந்திடுதலினல்வருந்தோஷம்.
மருத்து - காற்று, ஒருசக்ரவர்த்தி, இக்ஷுவாகுவின் தம்பி மகனாகிய நாபாகனுடைய வமிசத்தனாகிய அவீக்ஷித்துவின் மகன், இவன் செய்ததுபோல ஒருவரும் யாகங்கள் செய்ததில்லையென்றும், இவனுடைய யாகப்பொருள்களெல்லாம் பொன்மயமாயிருந்தன வென்றும் பெரியோர் கூறுவர், இவன் புத்திரன் நரிஷ்யந்தன், இவன் காமாதிகளை வென்ற மேலானவொழுக்கமுடையவன், இவன் யாகம் செய்யுங்காலத்தில் இராவணன் போய்ப் போருக்கழைக்க, அவன் யாகம்நிறைவேறுதென்றெண்ணி இராவணனோடுசமாதானம்செய்துகொண்டான், அந்த இராவணனுக்கஞ்சி, இந்திரன் மயிலாகவும், யமன் காகமாகவும் குபேரன் ஓந்தியாகவும் உருமாறி யொளித்து மீண்டு போயினர்.
மருத்துண்ணி - பாம்பு.
மருத்துநீர் - ஒருமுழுக்குநீர்.
மருத்துபதம் - பரமாணு.
மருத்துபலம் - ஆலாங்கட்டிமழை.
மருத்துபாரதம் - தேசையர்செய்தவைத்தியநூல்.
மருத்துபாலன் - இந்திரன்.

மருத்துப்பை - மருத்துச்சரக்கு.
மருத்துமகன் - அநுமான், வீமன். [ன்.
மருத்துமரம் - மருந்துமரம் போன்றவ
மருத்துமாவாழை - ஒருவகைவாழை.
மருத்துவக்கலைஞன் வைத்தியசாத்திரி
இவன் அரசர்க் குறதிச் சுற்றத்
தொருவன்.
மருத்துவதி-தக்கன்,மகள்தருமன் மனை
வி, ஜயந்தன் மருத்துவந்தன் என்
னு மிருவரும் இவள் புதல்வர்.
மருத்துவந்தன்- தர்மனுக்குமருத்துவதி
யிடத்துப் பிறந்த மூத்தமகன்.
மருத்துவம் - பரிகர்ப்பு, வைத்தியம்.
மருத்துவர் - அச்சுவினி தேவதைகள்,
வைத்தியர்.
மருத்துவர்நாள் - அசுபதி.
மருத்துவவாழை - மருத்துமாவாழை.
மருத்துவன் - இந்திரன், வைத்தியன்.
மருத்துவன்றாமோதரனார் -இவர்கடை
ச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்
திருவள்ளுவர்நாயனாருக்குக்கூறிய சிற
ப்புப்பாயிரக் கவி, பாயிரமாதலோடு
உலகத்தார்க்குத் தலைக்குத்து மருந்
தாகவு மிருக்கின்றது அது "சிந்தி
நீர்க்கண்டந் தெறிசுக்குத்தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்
காந்தி - மலைக்குத்து மால்யானை
வள்ளுவர் முப்பாலாற்றலைக்குத்துத்
தீர்வுசாத்தற்கு" என்பது.
மருத்துவாகம் - தீ, புகை.
மருத்துவான் - இந்திரன்.
மருத்துவிச்சி - பிரசவவைத்தியை.
மருத்தெண்ணெய் - வியாதிகட்குவடிக்
குமெண்ணெய்
மருந்தம் - தாலம்பபாஷாணம், நஞ்சு.
மருந்தீசுவரம் திருவான்மியூரிலே கோ
யில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மருந்திடு - மருத்திடு, வசியம்.
மருந்து - அமுதம், நட்டதி, ஔடதம்.
மருபுகா - வாழை.
மருபூ - பாலைநிலம்.
மருபூமிகள்-சிந்துதேசத்துள்ளமலைநாடு
கள்.
மருப்பு - இஞ்சி,மாக்கொம்பு,விலங்கின்
கொம்பு.
மருப்புத்திரன் - மருச்சுதன்.
மருப்பரியம் - ஒட்டை.
மருமகள் சகோதரிமகள்,மகன்மனைவி.
மருமகன் - சகோதரிமகன்,மகள்கணவ
மருமம்-இரகசியம் உயிர்நிலைமார்பு.[ன்.
மருமரம் } இலை முதலியவற்றால்
மருமராஞ்சம் } எழுமொலி.
மருமவணி - பதக்கம்.
மருமா-ஒருவகைக்கொண்டை.[ன்றல்.
மருமான்-மகன், மருமகன், வழித்தோ
மருவகம் - இராகு,ஒருகாரை,புலி,மருக்
காரை, மருக்கொழுந்து.
மருவலர் - பகைவர்.
மருவல்-அணைதல், கலத்தல், கிட்டல்,
சருவுதல், பொருந்துதல்.
மருவாரி - பாலை.
மருவார் - பகைஞர்.
மருவியகாந்தி - வைடூரியம்.
மருவு - கலியாணத்திடுவிருந்து, மருகு,
மருவுதல் - மருவல். [வாசனை.
மருவூர்ப்பாக்கம் - காவிரிப்பூம் பட்டி
னத்தின்புறநகர்.
மருளங்கிழங்கு - ஒருகிழங்கு.
மருளல்-அஞ்சல், எழுத்திலாவோசை,
பேசலாமெனழுமொலி. மயங்குதல்,
மருளிந்தம் - ஒருபண். [வெருளுதல்.
மருளுதல் - மருளல்.
மருளுமத்தை - ஒருமத்தை.
மருள் - உவமையுருபு, உன்மத்தம், ஒரு
கிழங்கு, கள், குறிஞ்சியாழ்த்திறம்,பி
சாசம், மயக்கம், மருளென்னேவல்.
மரூஉமொழி - மருவிவழங்குமொழி.
மரூகம் - மயில்.
மரை-ஒருவகைமான், தவளை, தாமரை.
மரைக்காயர் } சோனகர்.
மரைக்கார் }
மரைநீகம் - தவளை.
மரைப்பூ - தாமரைப்பூ.
மரையிறக்கம் - மரையூடாடுமிடம்.
மர்க்கடபிப்பலி - நாயுருவி.
மர்க்கடப்பிடி - குரங்குப்பிடி.
மர்க்கடமுகம் - குரங்குமுகம்.
மர்க்கடச்சேட்டை-குரங்குச்சேட்டை.
மர்க்கடவேந்தன் - சுக்கிரீவன்.
மர்க்கடவைரி - பாம்பு.
மர்க்கடம் - குரங்கு.
மர்க்கடாசியம் - தாமிரம்.
மர்க்கடி - பூனைக்காலி, பெண்குரங்கு.
மர்க்கரம் - கையான்றகரை.

மர்த்தகம் - சூர்ணித்தல், பிசைதல்.
மர்த்தலம் - மத்தளம்.
மர்த்தனம் - இடிக்கை, கடைதல்.
மர்த்தன் - மநிதன்.
மர்த்தித்தல் - அரைத்தல்,உடைத்தல், கடைதல், மருந்துகலத்தல்.
மர்த்தியம் - உலகம்.
மர்த்தியன் - மர்த்தன்.
மர்மகீலன் - கணவன்.
மர்மம் - மருமம்.
மர்மரீகன் - ஏழை.
மர்மவித் } மருமக்காரன்.
மர்மவேதி
மர்யாதகன் - மரியாதைக்காரன்.
மலஹரன் - சிவபெருமான்.
மலகரி - ஓர்இராகம்.
மலக்கடி - கலக்கம்.
மலக்கட்டு - மலச்சிக்கு.
மலக்கம் - கலக்கம்.
மலக்கனம் - பொன்னம்பர்.
மலக்கனல் - இராசவத்தனக்கல்.
மலக்குடர் - மலவாசயம்.
மலங்கல் - கலங்கல், குளம், விலாங்கு.
மலங்கு - ஒருமீன், மலங்கென்னேவல்.
மலங்குதல் - மலங்கல்.
மலசகிதர் - மலசம்பந்தர்.
மலசம் - சிதல்.
மலசம்பந்தம் - மலத்தோடுகூடியிருத்தல்.
மலசலம் - மலமூத்திரம்.
மலச்சிக்கு - மலப்பின்னல்.
மலச்சுத்தி - மலக்கழிவு,மலநிவாரணம்.
மலடன் - பிள்ளையில்லாதவன்.
மலடி - மகப்பேறில்லாதவள், வந்தி.
மலடு - கருவற்றது, பாழ்.
மலதூஷிதம் - அழுக்கு.
மலத்திரயம் - மும்மலம்.
மலத்துவாரம் - அபானவாய்.
மலபந்தம் - மலக்கட்டு.
மலபந்தன் - மலசகிதன்.
மலபரிபாகம் - பந்தபாசநீங்கிப்பக்குவமடைதல்.
மலபரிபாகன் - மும்மலமும் சத்திநிபாதமுடையோன்.
மலபாகம் - மலபரிபாகம்.
மலபுக் - காகம்.
மலப்பற்றம் } மலப்பிடி.
மலப்பற்று
மலப்பாண்டம் - உடம்பு.
மலப்புழு - மலத்திலுண்டாகுங்கிருமி.
மலப்பை - மலவாசயம்.
மலமலத்தல் }
மலமலப்பு } ஒலிக்குறிப்பு.
மலமலெனல் }
மலம் அழுக்கு, இரத்தம், கட்டம், கண்பீளை, கருப்பூரம், கறள், குறும்பி, சலம், தாது, நகம், பந்தம், பாவம், மண்டி, மூக்குச்சளி, மூளை, வேர்வை.
மலயகந்திநி - உமாதேவி சேடியரில் ஒருத்தி.
மலயக்கால் - மலையக்கால்.
மலயசம் - மலையசம்.
மலயத்துருமம் - சந்தகமரம்.
மலயமுனி - அகத்தியன்.
மலயம் - சந்தனம், மலையம், பொதியமலை.
மலயாசலம் - பொதிகை.
மலயோத்பலம் - சந்தனம்.
மலரவன் - பிரமன்.
மலருக்குநாயகம் - கருவண்டு.
மலருதல் - மலர்தல்.
மலரோன் - பிரமன்.
மலர் - பூ, மலரென்னேவல், மலர்ச்சியானது.
மலர்க்கணைவேள் - காமன்.
மலர்க்கா - புஷ்பவனம்.
மலர்ச்சி - அவர்ச்சி, எழுச்சி, களிப்பு, பொலிவு.
மலர்தல் - எதிர்தல், தோன்றல், நிறைதல், விரிதல்.
மலர்தாங்கி - ஒருகொடி.
மலர்த்தாள் - மலர்க்காம்பு.
மலர்த்திரள் - பூங்கொத்து.
மலர்த்தேன் - பூந்தாது, பூந்தேன்.
மலர்மங்கை - திருநாட்டியத்தான் குடியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மலர்மிசையேகினன் புத்தன், பிரமன்.
மலர்வு - மலர்ச்சி.
மலவாசயம் - மலக்குடர்.
மலவாயில் - எச்சவாய்.
மலன் - லோபி.
மலாகை - தூதி, தூர்த்தை, பெண்யானை.
மலாக்கா - ஒருதேசம்.
மலாசு - சிறுபூளை.
மலாடனூர் - ஒரு சங்கப்புலவர்.
மலாடு - கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று அது மலையமானாடு.
மலாபஹாரிணி - ஒருநதி.
மலாம் - ஒருபூச்சு.

மலாரடி - கலக்கம்.
மலார் - மிலாறு, விளார்.
மலாவகம் - பிண்ணாக்கு.
மலிதல் - நிறைதல், பெருகல்.
மலினி - இராஜஸ்வலை.
மலிவு - நயம், மிகுதி.
மலினமுகம்-அக்கினி, ஆவி, சருக்குரா [கு.
மலினமுகன் - இறந்தோன், கொடியவன், நீக்கடவுள், தீயோன், முசு, வண்டு
மலினம் - அழுக்கு, கருமை, குற்றம், பாவம், மாசு, மோர்.
மலீமசம் - அழுக்கு, இரும்பு.
மலூகம் - குருவி.
மலை - உவமை, பருப்பதம், மலையென் [னேவல்.
மலைகலக்கி - ஒருபூடு
மலைகளிறு - போர்க்களிறு.
மலைக்கடுகு - ஒருகடுகு.
மருக்கரு - சாத்திரவேதி.
மலைக்கலவாய் - ஒருமீனிருஞ்சிப்புள்.
மலைக்கற்றாழை - ஒரு கற்றாழை.
மலைக்கால் - ஆட்டுக்கால்.
மலைக்குகை - மலைமுழைஞ்சு.
மலைக்குக்குறப்பான - ஒருபுள்.
மலைக்குடையோன்-கிருஷ்ணன், முருகக்கடவுள்.
மலைக்குறவி - சாத்திரவேதி.
மலைக்கொடுமுடி - மலையுச்சி.
மலைசாரி - கினிஞ்சில்.
மலைச்சக்கரம் - சாலக்கிராமம்.
மலைச்சக்கரைவள்ளி - ஒருவள்ளிக்கொ [டி.
மலைச்சாரல் - மலையருகு.
மலைச்சார்வு - மலையைச்சார்ந்தவிடம்.
மலைதல்-அணிதல், உவமையாதல், எதிர்த்தல், ஒருவழிபடாதநிற்றல், பொருதல், மறுத்தல், செய்யுள் வழுவில் ஒன்று, அது ஒன்றற்குரியதை மற்றொன்றற் குரியதாகப் பாடுவது.
மலைதாங்கி - ஒருகொடி, பங்கம்பாளை.
மலைத்தலை - மலையுச்சி.
மலைத்தலைவான் - மலையரையன்.
மலைத்தலை - தடுமாறல், பொருதல்.
மலைத்தொடக்கு - கல்மதம்.
மலைத்தும்பை - ஒருதும்பை.
மலைத்துவரை - ஒருதுவரை.
மலைத்தேன் - மலையில்வைக்குந்தேன்.
மலைநாடன் - சேரன்.
மலைநாடு - சேரநாடு.
மலைநாதம் - கல்மதம், சாத்திரவேதி.
வக்கிராந்த பாஷாணம்.
மலைநார் - கல்நார்.
மலைநெல் - மலையில் விளைநெல்.
மலைபடுகடாம் - பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியநூல்.
மலைபடுதிரவியம் - மலையிலுண்டாகுந் திரவியம் அது மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம்.
மலைப்பச்சை - ஒருபூடு.
மலைப்பருத்தி - ஒருபருத்தி.
மலைப்பாம்பு - ஒருபாம்பு.
மலைப்பாழி - மலைக்குகை.
மலைப்பாறை - மலைத்திட்டை, மலைப்ப [க்கம்.
மலைப்பிஞ்சு - கல்.
மலைப்பிறக்கம் - உலோகமணல்.
மலைப்பு - கூத்தின் விகற்பம், திகைப்பு, போர், மலைவு.
மலைப்புரு - ஒருவகைப்புரு.
மலைப்பூடு - ஒருபூடு.
மலைமகள் / மலைமடந்தை } உமை, பார்வதி.
மலைமதம் - கல்மதம்.
மலைமல்லிகை - ஒருமல்லிகை.
மலைமுழை / மலைமுழஞ்சி } மலைக்குகை.
மலைமுன்னக்கி ஒருபூடு.
மலையகம் - ஒருசாதி.
மலையக்கால் - தென்றல்.
மலையசம் - சந்தனம், தென்றல், மலையாடு.
மலையடிப்படி - குறிஞ்சிநிலக்கிராமம்.
மலையடிவாரம் - மலையினடிப்பக்கம்.
மலையத்தி - அசமந்தம், ஓரத்தி.
மலையத்துவஜன் - குலசேகரபாண்டியன்மகன், இவன்மகள் தடாதகைப்பிராட்டி. இவன் மனைவி காஞ்சனமாலை இவன் விச்சாவதி என்பவளது அவதாரம். அசுவத்தாமாவினாற்கொல்லப்பட்ட பாண்டியன்.
மலையத்துவசபாண்டியன் - ஒருபாண்டியராசன் அவன் மீனாட்சியின் தந்தை.
மலையத்தேரோன் - மன்மதன்.
மலையமாருதம் - தென்றற்காற்று.
மலையமான் - சேரன்.
மலையமான்திருமுடிக்காரி - சடையமுவள்ளல்களுள் ஒருவனாகியகாரியெனப்படுபவன் இவனே. தொண்டை

நாட்டுக்குஞ் சேரநாட்டுக்கு மிடையேயுள்ள மலைநாட்டைக் கோவலூரிலிருந்தாண்ட சிற்றரசன் இவனே இவன் கொடையாலும புஜபலத்தாலுஞ் சிறந்தவன். புலவர்க்குப் பேருபகாரி. இவன் குதிரையும் காரியெனப்படும்.

போரிற் புறங்கொடுத்தோடும்வேந்தர்க்குத்துணைபுரிந்து வெற்றிமாலை சூடுவித்தலைத் தொழிலாக வுடையவன் காரியென்றும், குளிர்காலத்திலே காட்டகத்திலே ஒரு மயிலைக் கண்டு அது குளிரால் வாடுமேயென்றிரங்கித் தான்போர்த்திருந்த போர்வையை அதற்குக் கொடுத்தவன்பேகனென்றும், முல்லைக்கொடியிற் சிக்கியதேரை அக்கொடியைச்சிதைத்து மீட்காது அக்கொடி படர்ந்தலுக்குப்பயன்படும்படி அத்தேரை அதற்குக் கொடுத்தவன் புறம்புகாட்டுவேந்தனாகிய பாரியென்றுஞ் சிறுபாணாற்றுப்படையிற் கூறப்பட்ட எழுவர் கடைவள்ளல்களுள்ளே இவன் விசேடித்துக் கூறப்பட்டவன்.

மலையம் - இந்திரன்கா, குறிஞ்சியாழ்த்திறம், தோட்டம், பொதியமலை மலை, மலையினுச்சி.

மலையரசன் - இமயபருவதராஜன்.

மலையரண் - மலையினாலாயகாவல் இது நான்கரணினொன்று.

மலையருவி - மலையிலிருந்து வீழ்நீர்.

மலையரையன் - பர்வதராஜன்.

மலையன் - ஒருசாமை, கடையெழுவள்ளலிலொருவன்,குறிஞ்சிநிலத்தலைவன்சேரன்.

மலையாசலம்-பொதியமலை.

மலையாசலவாசி - அகத்தியன்.

மலையாடு - ஒருவகை ஆடு.

மலையாத்தி - ஓராத்தி.

மலையாமணக்கு - ஓராமணக்கு.

மலையாமி - மலையாளபாஷை.

மலையாரம் - சந்தனம்.

மலையாழம்-தேயமைம்பத்தாறிலொன்று

மலையாளபகவதி - ஒருதேவதை, உமாதேவியார்.

மலையாளம் - மலையாழம்.

மலையாளி - ஒருதேவதை, மலையாளத்திற்பிறந்தோன், மிளகு.

மலையானிலம் - தென்றல்.

மலையிசம் - சந்தனம்.

மலையிரும்பு - உலோகமணல்.

மலையிருவேலி - ஓரிருவேலி.

மலையிற்பிரண்டதி - கடனுரை.

மலையினுச்சி-மலைமுடி, மாமிசபேதி.

மலையின்முனிவன் - அகத்தி, மிளகு.

மலையீஞ்சு, மலையீந்து - ஓரீந்து.

மலையுச்சி - மலைச்சிகரம்.

மலையுருக்கன் - ஒருவெற்றிலைக்கொடி.

மலைவருணனை - மலைச்சிறப்புரைத்தல்.

மலைவளர்காதலியம்மை - இராமேச்சரத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

மலைவாசிக்கொம்பு - பன்றிக்கொம்பு.

மலைவாணர் - வேடர், மலைவாழ்நர்.

மலைவில்லோன் - சிவபிரான்.

மலைவாழை - ஒருவாழை.

மலைவிரோதி - இந்திரன்.

மலைவீரியம் - அன்னபேதி.

மலைவு- உவமை, போர், மயக்கம், மாறுபாடு.

மலைவெட்பு - சந்தனம்.

மலைவேம்பு - ஒருவேம்பு.

மல் - கூத்தினோர் விகற்பம், திருமால் கூத்து, பெருகல், வலி, வளமை.

மல்கல் - நிறைதல், பெருகல்.

மல்காத்தல் - முதுகுகீழாய்க்கிடத்தல்.

மல்குவித்தல் - நிரப்பல்.

மல்புற - கார்போகரிசி.

மல்லகசாலை - மற்களரி.

மல்லகதி - துரககதியைந்தினொன்று.

மல்லகம் - சிறுவாலுளுவை.

மல்லகை - மல்லிகை.

மல்லக்கச்செட்டி - மற்பிடிக்குஞ்சாதி.

மல்லசம் - மிளகு.

மல்லடர்த்தோன் - கிருஷ்ணன்.

மல்லதூர்யம் - ஒருவாத்தியம்.

மல்லநாகம் - இந்திரன்யானை.

மல்லம் - ஒருபாத்திரம் கதுப்பு,தட்டம், மற்பிடி, யாகமிச்சில், வலிமை.

மல்லயுத்தம் - மற்பிடி அது கலைஞானமறுபத்துநான்கினொன்று.

மல்லரங்கம் - மல்லகசாலை.

மல்லரி - பம்பைமேளம்.

மல்லர்-மற்போர்செய்வோர்,வலியோர்.

மல்லல் - மிகுதி, வலி, வளமை.
மல்லன் - திண்ணியன், மல்வல்லன், வலியோன்.
மல்லாக்குப்பறிதல்-உட்புறம்மேலாதல்.
மல்லாடல் - பதினோராடலு ளொன்று. வாணாசுரனை வெல்லக் கண்ணன் மல்லனாய்ச் சென்று அவன் உயிர் நீங்க நெரித்தாடியது.
மல்லாட்டம் - போராட்டம்.
மல்லாத்தல், மல்லாத்துதல் } உட்புறம் மேலாய்க் கிடப்பித்தல்.
மல்லாய் - ஒருபாத்திரம்.
மல்லாரி - சண்டைக்காரி, பம்பைமேளம்.
மல்லாருதல் - மல்லார்தல்.
மல்லி - கொத்துமல்லி, மல்லிகை, மிகப் பருத்துராத்தவள்.
மல்லிகம் - பிரப்பஞ்செடி.
மல்லிகாட்சம் - வெண்கட்குதிரை.
மல்லிகாமோதினி - குண்டுமல்லிகை.
மல்லிகார்ச்சுனம்-ஒரூர்ஒருசிவஸ்தலம்.
மல்லிகை - ஒரு பாத்திரம், ஒரு பூச்செடி, விளக்குத்தண்டு.
மல்லிநாதன் - இவன் இரகுவமிசம் நைஷதம் மாகம் இவைகளுக்கு வியாக்கியான கர்த்தா.
மல்லிபத்திரம் - ஒருகாளான்.
மல்லு - ஒருகூத்து, ஒருபோர்.
மல்லுக்கட்டுதல் - போராட்ட மாடுதல், மல்லுப்பிடித்தல்.
மல்லுப்பிடித்தல் - மற்பிடித்தல்.
மல்லூகம் - புழு.
மல்லை - இரப்போர்கலம், கைப்பரை, கப்பரை, மௌனம், வட்டம்.
மல்வில் - ஒரு சிவஸ்தலம்.
மவுடி - முடி.
மவுட்டியம் - அறியாமை.
மவுலி - மௌலி.
மவுனம் - மோனம்.
மவுனி - ஆமை, மவுனஞானி.
மழ - இளமையான.
மழகளிறு - இளங்களிறு.
மழம் - இளமை.
மழலை - இளமை, நிரம்பாமென்சொல்.
மழலைப்பேச்சு - குதலைவார்த்தை.
மழவன் - கட்டிளமையோன்.
மழவு - இளமை, குழந்தை.
மழித்தல் - மொட்டையாக்கல்.

மழு - எரியிரும்பு, சிவனாயுதத்தொன்று, பரசாயுதம்.
மழுக்கம் - கூரின்மை, தோற்றமின்மை, மங்கல்.
மழுக்கரன் - சிவபிரான்.
மழுக்கல், மழுக்குதல் } அடித்தல், அரிசி மினுக்குதல், கூர்மை மழுக்கச்செய்தல், தோற்றங்கொள்ளாமற் பண்ணல்.
மழுக்குலுக்குதல் - மழுவெடுத்தல்.
மழுங்கல், மழுங்குதல் } ஒளிமழுங்கல், ஒருவகைப்பொன், கூர்கெடுத்தல், பேர்குறைதல், பொலிவழிதல்.
மழுப்பன் - குதர்க்கி, நியாயப்புரட்டி.
மழுப்புதல் - வீண்பேச்சினாலே புரட்டுதல்.
மழுமட்டை - அறமழுங்கல்.
மழுமாறி - புரட்டன்.
மழுவன் - அஞ்சாதவன், நகர்காப்போன், பிடித்ததை விடாதவன்.
மழுவாளி - சிவபிரான், பரசிராமன்.
மழுவெடுத்தல் - எரியிரும்பைக் கையேந்தல், பொய்யை நிலையாக்கல்.
மழுவெண்ணெய் - நீக்குளிர் விக்கும் எண்ணெய்.
மழுவேந்தி - சிவபிரான், பொய்யன்.
மழை - குளிர்ச்சி, நீர், மாரி, மிகுதி, மேகம்.
மழைகாலம் - மாரிகாலம்.
மழைக்கண்ணி - ஒருபட்சி.
மழைக்கரு - மழைக்குரியசூல்.
மழைக்காலிருட்டு - மழையடுத்த பேரிருள்.
மழைக்காற்று - குளிர்காற்று.
மழைக்கிளி - ஒரு வெட்டுக்கிளி.
மழைக்குறி - மழையடையாளம்.
மழைக்கோள் - சுக்கிரன்.
மழைதுளிதல் - மழைதூறல்.
மழைத்தல் - மழைபெய்தல்.
மழைத்தாரை - அநேகதியாய்ப் பெய்யுமழை.
மழைத்துமி, மழைத்துளி, மழைத்தூவல், மழைத்தூற்றம் } பிதிர்மழை.
மழைத்தோற்றம் - மழைச்சாடை.
மழைப்பெய்தல் - மழைசொரிதல்.

மழைப்புகார் - மழைமுகில்.
மழைப்பூங்காரம் - மழைக்குணங் கொண்டமைப்பு.
மழைமரக்கால் - மழையினளவு.
மழைமுகில் - சூற்கொண்டமேகம்.
மழையடை - மழையடைப்பு.
மழையடைத்தல் - மழைவிடாதுபெய்தல்.
மழைவண்ணக்குறிஞ்சி - ஒருகொடி.
மழைவண்ணன் - திருமால்.
மழைவாங்குதல் - மழைவிட்டொழிதல்.
மளமளத்தல், மளமளப்பு, மளமளெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
மளாரட்டியெனல், மளாரிடுதல், மளாரெனல் - ஒலிக்குறிப்பு.
மளிகாரம் - வெண்காரம்.
மளிகை, மளிகைக்கிடங்கு - பண்டசாலை, பல பொருட் கடை வீடு.
மளிகைக்கடை - கடைவீடு.
மளுக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மள்ளம் - வலி
மள்ளர் - உழவர், குறவர், குறிஞ்சி நிலமாக்கள், திண்ணியர், படைவீரர், மறவர்.
மள்ளல் - வலி.
மள்ளு - கைமரம்.
மறதி - மறப்பு, அது தாமத குணத்தொன்று.
மறத்தல் - அசட்டை பண்ணல், பொச்சாப்பு, விட்டுவிடல்.
மறத்தியர் - பாலைநிலப்பெண்கள்.
மறநிலைப்பொருள் - மறத்தாற்கவர்பொருள் பகைவர்பொருள் திறைப்பொருள் சூதில் வெல்பொருள் முதலியன.
மறநிலையறம் - புறப்பொருட் டுறையினொன்று, அது திறைமீட்டுப் பகைவென்று செஞ்சோற்றுக்கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச் செய்தல்.
மறநிலையின்பம் - அகப்பொருட்டுறையினொன்று அது இலக்கமெய்தல் ஏறுதழுவல் முதலியமறத்தகையாற் கன்னியை மணமுடித்தின்புறுதல்.
மறப்பிலி - கடவுள்.

மறப்பு - மறதி.
மறப்புலி - சிங்கம்.
மறமலி - யானை.
மறமறத்தல், மறமறப்பு - ஈரடுக்கொலிக்குறிப்பு.
மறம் - ஒரு பிரபந்தம் அது கலம்பகத்தினொருறுப்புமாம், கெடுதி, கொலை, கோபம், சினம், நமன், பாவம், பிணவலி, வீரம்.
மறம்வைத்தல் - வன்மம் வைத்தல்.
மறலி - நமன், மயக்கம்.
மறலிமறலி - சிவபிரான்.
மறல் - எழுச்சி, ஒருகூத்து, காலன், குற்றம், சாதல், தரித்திரம், நமன், பகை, பிணக்கு, போர், மயக்கம், மறதி.
மறவர் - படைவீரர், பாலைநிலமாக்கள், வேடர்.
மறவன் - சிலேஷ்மம்.
மறவி - ஈனம், கள், மறதி.
மருடம், மருட்டியம் - மகாராட்டிரம்.
மருடர், மருட்டியர் - மகாராட்டிரர்.
மறி - அழுங்கு ஆடு குதிரை மான் இவற்றின் குட்டி, ஆடு, குதிரை, மானிவற்றின் பெண், மறியென்னேவல், மான், மேடவிராசி.
மறிகாண்குதல் - குட்டிபோடுதல்.
மறிக்கான்கல் - சக்கான்கல்.
மறிக்கையன் - சிவபிரான்.
மறிதரல் - மீளல்.
மறிதல் - தடைபடல், திரும்பல், மடங்கல்.
மறித்தல் - காவற்படுத்தல், தடுத்தல்திருப்புதல்.
மறிப்பு - தடுப்பு, திருப்பு.
மறிக்கரன், மறிக்கையன் - சிவபிரான்.
மறியல் - சிறை, தடை.
மறியேந்தி - சிவபிரான்.
மறு - குற்றம், மச்சம், மறுவென்னேவல், மற்றை, மாசு.
மறுகலிடுதல் - திரும்பிவருதல்.
மறுகலித்தல் - மறுதலித்தல்.
மறுகல் - மறுகுதல், வியாதிதிரும்பல்.
மறுகு - இரண்டாம்விளைச்சல், குறுந்தெரு, தெரு, மறுகென்னேவல்.
மறுகுதல் - சுழலல், புரளுதல், மனங்குழம்புதல்.

மறுகை - நங்கு,பொதியினொருபக்கம், மற்றப்பக்கம்.
மறுக்கம் - இக்கட்டு, சுழற்சி, மனக்குழப்பம்.
மறுக்காரங்காய் - ஒருவகைக்காய்.
மறுக்காரை - மருக்காரை.
மறுக்கிடுதல் - பெயர்தல்.
மறுக்குதல் - மறுதலித்தல், மறையுழவுழுதல், மனஞ்சுழலல்.
மறுக்குத்து - ஒருசெடி.
மறுதடவை - மறுமுறை
மறுதலித்தல் - மறுத்தல், வேறுபடல்.
மறுதலிப்பு - மறுப்பு.
மறுதலை-சத்துரு, மறுதலிப்பு, வேறிடம்.
மறுதல் - மாறுதல்
மறுத்தல் - கொடாமை, தவறு, நீக்கல், மறையுழவுமுதல், வெட்கம்.
மறுத்தல்விடை - வினவெதிர்மறுத்தல் (உ-ம்) உண்டாயோவெனஉண்ணேனென்பது.
மறுபத்தியம் - பிறபத்தியம்.
மறுபாவி - சத்துரு.
மறுபிறப்பு, மறுபிறவி } மறுசனனம்.
மறுபொருளுவமை- முன்வைத்தபொருட்கு நிகராவதோர்பொருள்பின்னரும்வைப்பது (உ-ம்) மக்களி லுனக்கொப்பில்லை சூரியனுக் கொப்பில்லைச் சுடர்கள்.
மறுப்படுதல் - ஊறுடைதல்,வசைப்படல்.
மறுப்பு - மறுக்குதல், மறுவுழவு.
மறுமாடி - மஞ்சுக்கட்டை,மலைப்பிளவு.
மறுமை - மரணத்தின் பின்வருநிலைபரம், வருபிறப்பு.
மறுமைப்பயன் - மரணத்தின் பின்னடைவது.
மறுமொழி - உத்தரம்.
மறுவல், மறுவி } கஸ்தூரிமிருகம், கஸ்தூரி.
மறுவிலி - குற்றமற்றவன்.
மறுவுத்தரம் - பிரதியுத்தரம்.
மறை - அடைக்கலம்,இரகசியம்,இரண்டாமுழவு, எதிர்மறுப்பு, ஒளிப்பிடம், கறை, கேடகம், சங்குச்சுரி, சொல், புள்ளி, மந்திரம்,மறையென்னேவல், மறைவு, வேதம்.
மறைக்காடன் - சிவபிரான்.
மறைக்காடு - வேதாரணியம்.
மறைக்காட்டீசுவரர் - திருமறைக்காட்டிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மறைக்கொடியோர் - அந்தணர்.
மறைக்கொடியோன் - துரோணாசாரியன், பிரமன், பிராமணன்.
மறைசை - வேதாரணியம்.
மறைச்சி - அரும்பிச்சி, பார்ப்பனத்தி.
மறைஞானசம்பந்தர்-திருக்களாஞ்சேரியிலே விளங்கிய சந்தனாசாரியராகிய இவர் உமாபதி சிவாசாரியருக்குக் குருமூர்த்திகள். இவர் சற்றேறக்குறைய அறுநூறு வருஷங்களுக்கு முன்னே யுள்ளவர். இவர் அருணந்திக்கு மாணாக்கர். சிவதருமோத்தரத்தை வடமொழியிலிருந்து தமிழான்மொழி பெயர்த்துப் பாடியவர் இவரே.
மறைதல் - ஒளித்தல், தோன்றாமற்போதல்.
மறைத்தலை - வேதாந்தம்.
மறைத்தலைவி - இலக்குமி, உமை,சரச்சுவதி.
மறைத்தல் - மறையச்செய்தல்,மூடல்.
மறைபடல் - ஒதுக்குப்படல்,மறைக்கப்படுதல்.
மறைபாடு - மறைவு.
மறைபுகல் - அடைக்கலம் புகுதல்.
மறைபொருள் - உட்பொருள்.
மறைப்பிரிவு - வேதசாகை.
மறைப்பு - மறைத்தல், மறைவு.
மறைப்பொருள் - வேதார்த்தம்.
மறைமுடி - வேதத்துச்சி.
மறைமுடிவு - கடவுள், வேதாந்தம்.
மறைமுதலி, மறைமுதல் } கடவுள், சிவபிரான், விட்டுணு.
மறைமொழி - வேதமந்திரம்.
மறையவர் - அந்தணர், அரும்பர்,முனிவர்.
மறையவர்கோன் - பிரமன்.
மறையன் - மறுவுடையது.
மறையிலார் - கீழ்மக்கள்.
மறையோர் - பார்ப்பார், முனிவர், பஞ்சர்கிராமிகள்.
மறையோன் - பிரமன், பிராமணன்,வியாழம்.
மறைவிடம் - மறைவானவிடம்.

மறைவு - ஒதுக்கு, தோன்றாமை.
மற்கடப்பிடி - குரங்குப்பிடி.
மற்கடம் - குரங்கு.
மற்கட்டம்பிடித்தல் } இழுபறிப் படுதல்.
மற்கட்டம்பொருதல் }
மற்கரை - குகை, மலடி.
மற்குணம் - மத்குணம்.
மற்கோல் - பகை
மற்சதேசம் - இப்பெயரினல் இரண்டு தேசங்களுள் ஒன்று கூர்ச்சரதேசத்துக்கு மேற்றிசைக்கணுள்ளது. மற்றது தற்காலம் திருசபுரமென்று வழங்கும் இடத்துக்குச் சமீபத்துள்ளது.
மற்சபுராணம் - விஷ்ணுவினது மீனவதார மான்மியமும், அவ்விஷ்ணுஜலப்ரளய காலத்திலே மனுவையும் பிறவற்றையும் ஒரு பேழையினுள்ளே வைத்து இரக்ஷித்தமையும், பிரமசிருஷ்டியும், திரிபுராசுரர் சங்காரமும், தாரகாசுரனுக்கும் தேவர்களுக்கும் இடையினிகழ்ந்த யுத்தமும், பார்வதியம்மையார் திருக்கல்யாணமும், முருகக்கடவுள் திருவவதாரமும், விஷ்ணு அவதாரமுமாகிய கதைகளை யுணர்த்துவது. பதினாலாயிரங் கிரந்தமுடையது.
மற்சரம் - மச்சரம்.
மற்சியம் - மீன்.
மற்போர் - மல்லுயுத்தம்.
மற்ற - அடுத்த, பிற, மற்றவை, வேறு.
மற்றது - அடுத்தது, பிறிது, வேறு.
மற்றவர்-ஏனையோர், பிறர், மறுபெயர்.
மற்று - அசைநிலை, பிறிதின்பொருள் வினைமாற்றுப் பொருள் என்பவற்றைத் தருமிடைச்சொல். அவற்றிற்குமுறையே (உ-ம்) மற்றென்னையாள்க, ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று, மற்றறிவா நல்வினை.
மற்றும் - பிறவும்.
மற்றை } சுட்டியதற்கினம், மற்றைநாள்.
மற்றைய }
மற்றையது - மற்றது.
மற்றே - அதிசயவிரக்கச்சொல்.
மனக்கசப்பு - மனவெறுப்பு.
மனக்கசிவு - மனவுருக்கம்.
மனக்கயக்கம் - மனத்துயர்.
மனக்கருத்து - உட்கருத்து.
மனக்கலக்கம் - மனச்சஞ்சலம்.
மனக்கவலை - மனவிசாரம்.
மனக்களிப்பு - அகக்களிப்பு.
மனக்கறை - மனக்களங்கம்.
மனக்கனிவு - மனவுருக்கம்.
மனக்காய்ச்சல் - மனக்கொதி.
மனக்காவல் - மனக்கட்டுப்பாடு.
மனக்கிடக்கை } மனவெண்ணம்.
மனக்கிடை }
மனக்கிலேசம் - மனத்துயர், மனப்பீடை.
மனக்குத்து - மனவிதனம்.
மனக்குருடு - அறிவீனம்.
மனக்குவிபு - மனவொருமிப்பு.
மனக்குழப்பம் - ஒருமிப்பின்மை.
மனக்குள்ளம் - தந்திரம், வஞ்சகம்.
மனக்குறிப்பு - கருத்து, நோக்கம்.
மனக்குறை - பிரியவீனம்.
மனக்கூச்சம் - வெட்கம்.
மனக்கூர்மை - தெளிந்தபுத்தி.
மனக்கொடுமை - மனப்பொல்லாங்கு.
மனக்கொதி - எரிச்சல், கோபம்.
மனக்கோட்டம் - அழுக்காறு.
மனக்கோட்டரவு - மனவாட்டம்.
மனங்கசிதல் - இரங்கல், மனமுருகல்.
மனங்கரைதல் - துக்கித்தல், மனமிளகுதல்.
மனங்கலங்குவிப்போன் - மன்மதன்.
மனங்கல் - ஒடுங்கல்.
மனங்கனிதல் - மனமிருகல்.
மனங்கு - இருபத்தைந்திருந்தல் கொண்டது கைபடை.
மனங்குவிதல் - மனங்கூம்புதல்.
மனங்குறுவுதல் - மனங்கோணல்.
மனங்கூம்புதல் - மனமடங்குதல்.
மனங்கொதித்தல் - மனவேகங்கொள்ளல்.
மனங்கோணுதல் - மனங்கோடுதல்.
மனசாதேவி - ஒருதேவதை.
மனசார - மனசறிய.
மனசிசயன் } மன்மதன்.
மனசிசன் }
மனசியன் - பிரவீரன் புத்திரன்.
மனசு - மனது.
மனசுவிதை - நம்பிக்கை.
மனசை - மனசாதேவி.
மனச்சஞ்சலம் } துக்கம்.
மனச்சடைவு }

மனச்சந்தோஷம் - அகக்களிப்பு.
மனச்சம்பூரணம் - மனத்திருத்தி.
மனச்சலிப்பு - மனச்சஞ்சலம்.
மனச்சாட்சி - பகுத்தறியுமறிவு.
மனச்சாய்ப்பு, மனச்சாய்வு } மனவாரம்பம்.
மனச்சார்பு - மனப்பற்று.
மனச்சான்று - மனச்சாட்சி.
மனச்சுகம் - இதம்.
மனச்சுத்தம் - இருதயத்தூய்மை.
மனச்சோர்வு - மனவயர்ச்சி.
மனஞ்சலித்தல் - துக்கித்தல், மனமலுத்தல்.
மனஞ்சிறியர் - லோபகுணமுள்ளவர்.
மனதார - மனப்பூருவமாக.
மனது - மனம்.
மனதிருக்கம் - மனக்கசிவு.
மனதிருகல் - மனங்கசிதல்.
மனத்தழிவு - மனவொடுக்கம்.
மனத்தழுக்கம் - அழுக்காறு.
மனத்தளர்ச்சி - மனமெலிவு.
மனத்தாபம், மனஸ்தாபம் } மனவிதனம்.
மனத்தாராளம் - மனப்பூரணம்.
மனத்தாழ்மை - மெத்தெனவு.
மனத்திடன் - மனத்தைரியம்.
மனத்திட்டம் - மனப்பிரமாணிப்பு.
மனத்தியானம் - மனச்சிந்தனை.
மனத்திருத்தி - மனப்பூரணம்.
மனத்துக்கம் - மனத்துயர்.
மனத்துணைநாதேசுவரர் - திருவலிவலத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மனத்துப்பரவு - மனச்சுத்தம்.
மனத்துயரம், மனத்துயர், மனத்துன்பம் } மனநோ.
மனத்தூய்மை - மனச்சுத்தம்.
மனத்தேற்றம் - மனத்திடன்.
மனத்தொழுக்கம் - மனவொழுங்கு.
மனநசிவு - மனக்குறை.
மனஸ்நாநம் - மானதஸ்நானம்.
மனநியாயம் - மனச்சாட்சிக்குரிய நீதி.
மனநிலை, மனநிறை } மனந்தளம்பாமை.
மனநிறைவு - மனப்பூரணம்.
மனநீதி - மனநியாயம்.
மனநெரிடு - வஞ்சகம்.
மனநெரிவு - மனக்குறை.
மனநெருக்கு - வெடுவெடுப்பு.
மனநேர், மனநேர்மை } மனதறிந்தவுண்மை.
மனநோ, மனநோக்காடு } மனவிதனம்.
மனந்தழைத்தல் - மனந்திருத்தியடைதல்.
மனந்தளம்புதல் - மனமசைதல்.
மனந்தளர்தல் - தைரியங்கெடல்.
மனந்திரும்புதல் - மனமானது ஒன்றைத் தீதெனக்கண்டு மற்றொன்றைப் பற்றுதல், மனத்திரிபு கொள்ளல்.
மனந்தீத்தல் - ஏங்குதல், மனம்புழுங்குதல்.
மனந்தெளித்தல் - மனந்தேறுதல்.
மனப்பகை - உட்பகை.
மனப்படுத்தல் - சம்மதப்படுத்தல்.
மனப்பற்று - சிநேகம்.
மனப்பாடம் - மனதிலே பதிந்தபாடம்.
மனப்பிடிப்பு - மனப்பற்று.
மனப்பிணக்கு - மனமாறுபாடு.
மனப்பிணி - மனோவியாதி.
மனப்பிரமை - மனமயக்கம்.
மனப்பின்னிதம் - மனவிரோதம்.
மனப்பீடை - மனத்துன்பம்.
மனப்புகைச்சல், மனப்புழுக்கம் } எரிச்சல்.
மனப்புனிதம் - மனச்சுத்தம்.
மனப்பூரணம் - உள்ளக்களிப்பு, மனத்திருத்தி.
மனப்பூருவம் - மனப்பூரணம்.
மனப்பேய் - மதிமயக்கு.
மனப்பொருத்தம் - மனவொன்றிப்பு.
மனப்பொலிவு - மனத்தாராளம்.
மனப்பொறுப்பு - மனத்தரிப்பு.
மனமடிவு - மனத்துயரம்.
மனமலர்ச்சி - சந்தோஷம்.
மனமலர்தல் - சந்தோஷித்தல்.
மனமலிகம் - மதிவழுக்கு.
மனமிடுக்கு - மனவலி.
மனமுரிதல் - மனம்வெறுத்தல்.
மனமுரித்தல் - மனதை மடியப்பண்ணுதல்.
மனமுரிவு - மனவெறுப்பு.
மனமுருகல் - மனதுருகல்.
மனம் - இந்துப்பு, சிந்தை இது உட்கரண நான்கில் ஒன்று, முப்பொறியினுமொன்று.
மனம்பதிதல் - கருத்துவைத்தல்.

மனம்புழுங்கல் - மனங்கன்றுதல்.
மனம்பொங்குதல் - கோபங்கொள்ளல், மனங்களித்தல்.
மனம்வெறுத்தல்-வெறுப்புக்கொள்ளல்
மனராசி - சந்தோஷம், மனப்பொருத்தம்.
மனவஞ்சனை - குள்ளம்.
மனவந்தரம் - ஒருமனுவுடையவாளுகை காலம், அது ஒரு தேவாண்டு.
மனவலி - ஊக்கம்.
மனவாசகங்கடந்தார் - சித்தாந்த சாத்திரம் பதினன்கனுளொன்றாகிய உண்மை விளக்கமென்னு நூலாசிரியராகிய இவர் மெய்கண்டதேவர் மாணக்கருளொருவர். இவருக்கு ஜந்மநகரம் திருவதிகை.
மனவாஞ்சை - மனவாசை.
மனவிகற்பம் - மனவேறுபாடு.
மனவிகாரம் - மனத்திரிபு.
மனவிருத்தி - மனவிருப்பம்.
மனவிழி - இசைப்பாட்டு.
மனவிறப்பு - மனவொடுக்கம்.
மனவினை - குள்ளம்,மனவைராக்கியம்.
மனவு - அக்குமணி, சங்குபுடவை, மணிப்பொது.
மனவுச்சாகம் - மனவூக்கம்.
மனவுறுதி - மனவுச்சாகம்.
மனவூக்கம் - மனவெழுச்சி.
மனவெப்பல் - மனவழல்.
மனவெழுச்சி - மனவூக்கம்.
மனவெறுப்பு - மனக்கசப்பு.
மனவேகம் - கோபம்.
மனவொற்றுமை - மனவொருமிப்பு.
மனவொன்றிப்பு - மனப்பொருத்தம்.
மனனம் - சிந்தித்தல், ஞாபகம்.
மனஸ்வி - தேவலன் இரண்டாம்புத்திரன்.
மனஸ்வினி-ப்ரஜாபதிபாரி, (உ-ம்) குகண்டன் பாரி.
மனன் - ஹரியசுவன் புத்திரன்.
மனோகுலம் - மனோவிதனம்.
மனோகை - பெண்யானை.
மனோயி - மனுமனைவி.
மனோவு - அரைப்பட்டிகை.
மனிதர் - மானிடர்.
மனிதன் - மானிடன்.
மனிலா - ஒரூர்.
மனிலா ஆத்தா - ஒரு ஆத்தா.
மனிலாப்பயறு - வேர்கடலை.

மனு - தருமநூல் பதினெட்டில்ஒன்று, நீதி, மந்தரம், மனுச்சக்ரவர்த்திகள் அவர் சுவாயம்பு சுவாக்ஷிருஷன் உத்தமன் தசமன் இரேவதன் தாக்ஷிஷன் வைவச்சுவதன்,மனுதன்,மன்றுட்டு விண்ணப்பம்.

சிருஷ்டி ஆரம்ப காலத்திலே பூமி பரிபாலனஞ் செய்யுமாறு தெய்வ ஆஜ்ஞையாற் பிறந்தவர். மனுக்கள் பதினல்வர். சுவாயம்புவன், சுவாரோசிஷன் உத்தமன் தாமசன், ரைவதன், சாக்ஷுசன், வைவசுதவன், சூரியசாவர்ணி, தக்ஷசாவர்ணி, ப்ரஹ்மஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, தர்மஸாவர்ணி, ரௌவியன், பௌசியன் என்போர்.

இம்மனுக்களே அவ்வச் சிருஷ்டிதோறும் மநுஷவர்க்கத்தைத் தோற்றுவிப்பவர்களாதலின் அவரே மனுஷருக்கு மூலபிதாக்களாவர். இப்போதுள்ள சிருஷ்டிக்கு மூலபிதா வைவசுவதமனு, இது ஏழாவது மந்வந்தரம். ஒரு மந்வந்தர காலம் 4320000 மநுஷ்யவர்ஷம். இப்படி மந்வந்தரம் ஆறு சென்றன, இப்போது செல்லாநிற்பது ஏழாவது மந்வந்தரம்.

மனுகுலம் - மனுஷசாதி.
மனுக்கள் - மனிதர்.
மனுசன் - மனிதன்.
மனுசேந்திரன் - அரசன்.
மனுசை - பெண்.
மனுடன் } ஆத்துமா, மனிதன்.
மனுஷன் }
மனுஷீகத்துவம் } மனுஷசுபாவம்.
மனுஷீகம் }
மனுதர்மசாத்திரம் - மனுவினுற் செய்யப்பட்ட அறநூல்.
மனுத்தேவன் - ப்ரஹ்ம புத்ரருளொருவன்.
மனுநீதி - தருமநூல், மனுமுறை.
மனுநூல் - மனுநீதிசாத்திரம்.
மனுநெறி - தருமநூல், மனுமுறை.
மனுபு - மனிதன்.
மனுப்புத்திரர் - மனுடர், மனுவமிசத்தார்.
மனுப்பேசுதல் - பரிந்துபேசுதல்.

மனுசன் - பிரபு, யோக்கியன்.
மனுமக்கள் - மனிதர்.
மனுமசித்தி - பூர்வம்,நெல்லூரிலரசசெய்தராஜா.
மனுவந்தரம் - மனுவின்காலம்.
மனுவர் - கொல்லர், மானுடர்.
மனுவவதாரம் - மனுப்பிறப்பு.
மனுஸ்மிருதி - அஷ்டாதசஸ்மிருதிகளிலே சிரேஷ்டமானது.
மனை - இரண்டாயிரத்து நானூறு குழிகொண்டநிலம்,பதினறரையேயரைக்காற் குழிகொண்டநிலம், மனைவி, [வீடு.
மனைக்கிழத்தி - மனையாட்டி.
மனைக்கோள் - பல்லி.
மனைத்தக்காள் - இல்லொழுக்கத்திற்குரிய மனைவி.
மனைத்தாயம்-இல்லொழுக்கத்தின் திறமை, வீட்டுரிமை.
மனைமாட்சி - இல்லறத்துக்குரிய நற்குண நற்செய்கைகள், இல்வாழ்க்கையிலட்சணம்.
மனைமாட்சிக்குரிய - நிமித்தம்போற்றன்முதலாக வச்சமுற்றிரங்கலீறாகச்சொல்லப்பட்டவைத்தும்.
மனையவறம் - ஈதல், ஏற்றல், காத்தல், ஒழுக்கம், புணர்தல், துய்த்தல்.
மனையறம் - இல்லறம்.
மனையாட்டி, மனையாள் - மனைவி.
மனைவாழ்க்கை, மனைவாழ்வு - இல்லாச்சிரமம்.
மனைவி - நாயகி.
மனோகதம் - எண்ணம், விருப்பம்.
மனோகதி - மனோவேகம்.
மனோகரம்-அழகு,இச்சை, சந்தோஷம்
மனோகுலம் - மனோகுலம்.
மனோக்கியம் - அழகு,மனத்திற்குவப்பு
மனோசங்கற்பம்-மனக்கருத்து [ள்ளது.
மனோசஞ்சலம் - துக்கம்.
மனோசலனம் - மனவசைவு.
மனோசவம் - விவேகம்.
மனோசன் - மன்மதன்.
மனோசாஞ்சல்யம் - மனச்சலனம்.
மனோசாட்சி - மனசாட்சி.
மனோசிலம், மனோசிலை - ஒருமருந்து இது விளைவு பாஷாண முப்பத்திரண்டிலொன்று.
மனோச்சாகம் - மனவூக்கம்.
மனோதண்டம் - மனக்கட்டுமை.
மனோதத்தம் - மனதிலேயிதற்குச் சங்கற்பித்தல்.
மனோதீபம் - மனதிறக்கப்படாதது.
மனோதுக்கம் - மனத்துக்கம்.
மனோதைரியம் - மனத்திடன், மனமுயற்சி.
மனோநாசம் - மனமிறத்தல்.
மனோநிதானம் - மனதின்தீர்ப்பு.
மனோபதி - பிரமன்நகரம்.
மனோபத்தி - மனப்பத்தி.
மனோபலம் - தைரியம்.
மனோபலம் - மனசிலேபிறந்தது.
மனோபவன் - மன்மதன். [ல்.
மனோபாஷிதம் - தன்னொடுதான்பேசல்.
மனோபாவம்-மனநிலை,மனவெண்ணம்.
மனோபாவனை - மனப்பாவிப்பு.
மனோபீஷ்டம் - மனப்பிரியம்.
மனோபு - மன்மதன்.
மனோபூசை - உட்பூசை.
மனோமயகோசம், மனோமயம் - பஞ்சகோசத்தொன்று.
மனோயோனி - காமன்.
மனோரஞ்சிதம் - மனப்பிரியம்.
மனோரதம்-இச்சை,இன்பம்,விருப்பம்.
மனோரதியம்-இல்லதையுள்ளதுபோற்கற்பித்தனுபவித்ததாயுருசியடைதல்.
மனோரமை - மேற்புத்ரி, இவன் இமவானைப் பெற்றுக் கங்கையையும் பார்வதியையும் பெற்றவள்.
மனோரமை - மேருமலைக்குமகளு மிமயமலைக்கு மனைவியுமாகிய மேனை.
மனோரம்மியம் - மனத்திருத்தி.
மனோராசி - மனச்சம்மதி.
மனோராச்சியம் - மனதினைவினுற்றுன்மகிமை யடைந்தனுபவிப்பதாகச் சிந்தித்து மகிழ்தல் வீணெண்ணம்.
மனோலயம் - பரிகாசம்.
மனோலயம் - மனவொடுக்கம்.
மனோலவுலியம் - வீண்தோற்றம்.
மனோலி - பகிடிக்காரன், பரிகாசம்.
மனோலித்தனம் - பகிடிக்குணம்.
மனோவிகாரம் - மனச்சஞ்சலம்.
மனோவிசனம் - மனவிதனம்.
மனோவிதனம் - துக்கம்.
மனோவியாபாரம் - மனசின்றொழில்.
மனோவிருத்தி - மனதின்வியாபாரம்.

மனோவேகம் - எரிச்சல், மனக்கதி.
மனோற்சாகம் - மனமுமபற்சி.
மனோற்பவன் - மன்மதன்.
மனோன்மணி } அப்பிரகம், உக்மாசத்
மனோன்மனி } தி, பார்வதி. [தி.
மனோன்மணித்தாய் - இந்தப்பு, பார்ப்ப
மன் - அசைச்சொல் (உ-ம்) அது மற்
றொண் கன்றேரே, ஆக்கம் (உ-ம்)
கெடியன்மன், இறந்தகால விடை
நிலை (உ-ம்) என்மனோர், ஒழியிசை,
(உ-ம்) கூறியதோர் வாண்மகன்,
கழிவு (உ-ம்) சிறியகட் பெறினேயெ
மக்கீயுமன்னே, மிகுதி (உ-ம்) எந்
தையெமக்கருளுமன், அரசன், நிலை
பேறு, பெருமை.
மன்மதை - மக்கட்பரப்பு.
மன்மத - இருபத்தொன்பதாவதாண்டு.
மன்மதபாணம் - ஒருவகை மல்லிகை,
காமன்கணை.
மன்மதம் - காமம், விழா.
மன்மதன் - காமன், மனக்கலக்குவிப்
போன், விஷ்ணுமாநஸ புத்திரன்.
இவன்பாரி இரதி. கொடி மகரம்,
பாணம், புஷ்பம்.

மன்மதன் என்பதன் பொருள்,
மனதிக்குக் கிளர்ச்சியைக் கொடுப்
பவன் என்பது. மன்மதனை பிரஹ்ம
புத்திரனென்று கூறுவாருமுளர்.
ருக்வேதம் ப்ரஹ்ம சைதந்யத்திலே
முதற்கணெழுந்தது இச்சை யென்
றுகூறும். அது நிற்க காமவிச்சைக்
கதிதேவதையாகிய மன்மதனே பெ
ரும்பாலும் புராணங்களிலே பேசப்
படுவன். மன்மதன் அழகோடுகூடிய
யௌவநத்தை அதிகரித்து நின்று
ஆண் பெண்ணைக் கூட்டி பிரஜாவி
ருத்திக் குபகாரஞ்செய்யும் இதிகார
மூர்த்தி மன்மதன் அருபியாய் வச
ந்தகாலம். நிலா, மணி, மேடை,
மணற்குன்று, பூஞ்சோலை, சந்த்
ரோதயகாலம், புஷ்பம், வாசனை,
அழகு முதலியவைகளைத் தனக்குப்
பரிவாரமாகக் கொண்டிருப்பவன்.

தாரகாதி அசுரரால் வருந்திய தே
வர் வேண்டுகோளுக்கிரங்கி மன்ம
தன் சிவபிரான்மீது தனது காம
பாணங்களைச்செலுத்தி அவர் நெற்
றிக்கண்ணுக் கிரையாகி அங்கமிழ
ந்து அன்றுதொட்டு அநங்கன் என்
னும் பெயர்கொண்டான். மன்மதன்
பாரியாகிய ரதிதேவி பார்வதியைப்
பன்முறையிரந்து தன் குறையைக்
கூற, பார்வதி இரதியைத்தேற்றி
"உன்கணவன்கிருஷ்ணனுக்கு பிரத்
யும்நன் என்னும் பெயரோடுபுத்திர
னாகப் பிறப்பான். அச்சிசுவைச் சம்
பராசுரன் கவர்ந்துபோய்க் கடலி
லிடுவான். அதனை மீன் கவர்ந்து
விழுங்கும். அம்மீனை வலைஞர்பிடி
த்து சம்பரனுக்குக் கொடுப்பார்கள்.
நீ அவன்வீட்டு ஏவற்பெண்ணாகிஅம்
மீனை வாங்கி அறுத்து அச்சிசுவைக்
கவர்ந்தேகி, அவனோடு வாழ்வை
என்றார். அவ்வாறே இரதி சம்பரன்
மனையில் ஏவற்பெண்ணாகி யிருந்து
பிரத்யும்நனை நாயகனாகப் பெற்றான்.

இச்சரித்திரம், வாமந, பாகவத,
விஷ்ணு புராணங்களில் கூறப்பட்
டுள்ளது. ஸ்காந்தபுராணத்திலேகூற
ப்பட்ட சரித்திரம் சற்றே விகற்ப
மன்மதாலயம் - மாமரம். [மாம்.
மன்வந்தரம் - மனுவந்தரம்.
மன்வந்தராதிபர் - ஸ்வாரோசிஷ மந்
வந்தரத்திலே விபஸ்சித்து என்னும்
நிலிம்பதியும், உத்தம மந்வந்தரத்தில்
சுசாந்த னென்னும் அமரபதியும்,
தாமசமந்வந்தரத்தில் சிபி என்னுமி
ந்திரனும், ரைவத மந்வந்தரத்தில் வா
சவனும், சாக்ஷுச மந்வந்தரத்தில்
மனோச்சவசன் என்னும் தேவபதி
யும், வைவஸ்வத மந்வந்தரத்தில் பு
ரந்தரன் என்னும் பிருந்தார கேந்த்ர
னும், சூர்யாதிதேவர்களையும், வசிஷ்
டாதி ருஷிகளையும் நடாத்துவார்கள்.
மன்விருத்தம் - ஆசிரியவிருத்தம்.
மன்ற-அசைச்சொல், தோற்றம்(உ-ம்)
கடவுளாயினுமாக மடவமன்ற வா
ழியமுருகே.
மன்றகம் - சபை.
மன்றக்கூத்தன் - சிவபிரான்.
மன்றம் - சபை, நிச்சயம், நெடுந்தெரு,
பலர்கூடும்வெளி, வாசனை, வெளி.
மன்றல் - கல்யாணம், நெடுந்தெரு,
வாசனை,

மன்றவாணன் - சிவபிரான்.
மன்றூடி - சிவபெருமான்.
மன்றூடுதல் - இரந்துகேட்டல்.
மன்றூட்டம் } வேண்டுதல்.
மன்றூட்டு }
மன்று - கனகசபை, சபை, நீதித்தலம், வெளி.
மன்றுபடுதல் - வெளிப்படல்.
மன்றுளாடி - சிவபிரான்.
மன்னர் - அரசர்.
மன்னர்பின்னோர் - வைசியர்.
மன்னர்மன்னவன் } இராசாதிராசன் துரியோதனன்.
மன்னர்மன்னன் }
மன்னல் - மன்னுதல்.
மன்னவர் - மன்னர்.
மன்னவன் - மன்னன்.
மன்னன் - அரசன், ஆடவர் பருவத்தொன்று அது முப்பத்திரண்டுக்கு மேல் நாற்பத்தெட்டுக் குட்பட்டது. உத்திரட்டாதிநாள் எப்பொருட்கு மிறைவன்.
மன்னோர் - ஒரூர், பகைவர்.
மன்னோர்கோயில் - ஒரூர்.
மன்னித்தல் - பொறுத்தல்.
மன்னிப்பு - பொறுதி.
மன்னியு - இடைஞ்சல், கோபம், துக்கம், பலி, பெருமை.
மன்னியை - பிடர்நரம்பு, விசைநரம்பு.
மன்னிறைதருதல் - வேளாண்மைமாந்தரியல்பி லொன்று.
மன்னுதல் - சேர்தல், நிலைபெறுதல்.
மன்னுமான் - கடவுள்.
மன்னுயிர் - ஆத்துமா, சீவன்.
மன்னுலகு - தேவலோகம்.
மன்னெச்சி - மனவிதனம்.
மன்னை-கதுப்பு, கோபம், தொண்டை.
மன்னே - அசைச்சொல்.
மஹதி } நாரதர்வீணை.
மகதி }
மஹாகாலம் - ஒரு புண்யக்ஷேத்ரம், அது உஜ்ஜயினியிலுள்ளது.
மஹாகாலன் - ஸர்வஸம்ஹார மூர்த்தியாகிய சிவபிரான்.
மஹாசவாலே-ஒருநரகம், அது வ்யபிசாரம் புரிவோர் அடைதற்குரியது.
மஹாதேவன் - அஷ்டமூர்த்திகளினொருவர், சிவபிரான்.
மஹாநந்தி - மகததேசத்து இராஜாக்களாகிய சைசுநாகருளீற்றரசன்.
மஹாநாபன் - ஹிரண்யாக்ஷன் மகன்.
மஹாபலன் - சுமாலிபுத்திரன்.
மஹாபலி - பலிச்சக்கரவர்த்தி.
மஹாபார்ஸ்வன் - இராவணன் சிறிய தாய் புத்திரருளொருவன்.
மஹாபிஷன் - பிரதீபன்.
மஹாபோஜன் - சாத்துவன் புத்திரன் இவன் வமிசத்தார் போஜரெனப்படுவர் இவன் மிக்க தர்மசீலன்.
மஹாப்ரகன் - விதிலன்வமிசத்தோர் அரசன், கீர்த்திராதன் தந்தை.
மஹாமகம் - சிங்கராசியில் ப்ருஹஸ்பதி ப்ரவேசமாயிருக்கும் வருஷத்தில் மாசிமாசத்துப் பௌர்ணிமை. அது கும்பகோணத்திலே உள்ள மஹாமகத் தீர்த்தத்திலே ஸ்நாநஞ் செய்தற்குரிய விசேஷ புண்யநாள்.
மஹாமநன் - மஹாமசாலன் புத்ரன். இவன்புத்ரர் உசிநரன் திதிக்ஷன் என்போர்.
மஹாமயன் - கீழ்லோகங்களில் ஒன்றாகிய அதலலோகத் ததிபதி.
மஹாயுகம் - சதுர்யுகம், இது 4320000 வருஷம் கொண்டது.
மஹாராஜிகர் - கணதேவதைகளுளொருபேதம் இவர்கள் இருநூற்றிருபதின்மர்.
மாஹாராஷ்டிரம் - கூர்ஜ்ஜரதேசத்துக்குத் தெற்கின்கணுள்ள தேசம். இத்தேசத்தில் வழங்கும் பாஷையும் இப்பெயரேபெறும். இது பஞ்சத்ராவிடத்தொன்று. இத்தேசத்தார் மஹாராஷ்டரர் எனப்படுவர்.
மஹாரோமன் - கீர்த்திராதன் புத்ரன்.
மஹாரௌரவம் - அக்கிமயமான ஒருநரகம் இது கொடிய பாபிகள் போய் வருந்துமிடம்.
மஹாவர்மன் - நந்தன்.
மஹாவாகு - ஹிரண்யாக்ஷன் புத்ரன்.
மஹாவீரன் - ஜைந குருக்களுளொருவன். இவன் கடைத்தீர்த்தங்கரன்.
மஹாவீர்யன் - புமங்யன் புத்ரன். ஹருக்ஷயன் தந்தை. ப்ருஹத்ரதன் புத்ரன்.
மஹாஹயன் - ஸதஜித்து - ஹ்யேஷ்ட புத்ரன்.

மஹிஷன் - தேவரும் அசுரரும் யுத்தஞ்செய்தபோது, அசுரரெல்லோரும் இறந்தபோக, திதியென்பவள், தவஞ்செய்து ப்ரஹ்மாவினது அநுக்ரஹத்தினலே இம்மஹிஷனைப் பெற்ருன். இவன் கண்டத்தின்மேல் மஹிஷரூபமும் அதன்கீழ், மநுஷ்யரூபமும் உடையவன் இவன் மிக்க கொடுமையினை யுடையவன். இவனைத் துர்க்காதேவியார் கொன்று மஹிஷாஸுரமர்த்தநியென்னும் பெயர் பெற்ருள்.

மஹிஷாஸுரமர்த்தநி - துர்க்காதேவி.

மஹிஷ்மந்தன் - சஹஜித்துபுத்ரன். நர்மதாநதி தீரத்தில் மாஹிஷ்மதிபுரத்தை நிர்மாணஞ்செய்தவன் இவனே.

மஹேந்த்ரம் - இது உத்கலம் முதல் காண்டவநாடு வரையும் வ்யாபித்திருக்கும்மலை. குலபர்வதங்களுள் ஒன்று.

மஹோதயம் - மகதநாட்டிலுள்ள ஒரு பட்டணம். இது விஸ்வாமித்திரன் இராஜதாநி குசிகன்மகன் குசநாபனலே நிர்மிக்கப்பட்டது. தைமாசமும அமாவாசையையும் திருவோணநக்ஷத்ரமுங் கூடிய சுபதினம் மஹோதய புண்யகாலமெனப்படும். இப்புண்ய காலத்திலே செய்யப்படும் தாநதர்ப்பண முதலியன நற்பலன் தரும்.

மஹோதரன் - இராவணன் சிறியதாய் புத்திரன் நீலனற் கொல்லப்பட்டவன் இவனே.

மா

மா - அசைச்சொல், அழகு, அழைத்தல், அளவு, அறிவு, ஆணி, இடித்தமா, இடை, இலக்குமி, எதிர்மறையுபசருக்கம், ஐபவுபசருக்கம், ஓரசைச்சொல், ஒரொண், அது இருபதில் ஒன்று, ஒரெழுத்து, ஒருமரம், கட்டு, கறுப்பு, குதிரை பன்றி யானை யிவற்றினுண், குதிரைப் பொது, சரச்சுவதி, சீலை, செல்வம், தாய், துகள், நஞ்சுக்கொடி, நிறம், பரி, பிரபை, பெரிய, பெருமை, மகத்துவம் மாணம், மிகுதி, மேன்மை வண்டு வயல், வலி, வியங்கோளொடு வருமசைச்சொல் (உ-ம்) உப்பின்று புற்கை புண்கமா கொற்கையோனே, விலங்கின் பொது, வெறுப்பு.

மாக்கல் - கானற்கல்.

மாகசம் - கையாந்தகரை.

மாகட்டகம் - செந்நாயுருவி.

மாகண்டம் - அதிகண்டம் அது யோகம் இருபத்தேழினொன்று.

மாகதம் - மகததேயத்துள்ளது.

மாகதர் - அரசமாதுக்கும் வைசியனுக்கும் பிறந்தொருவர் வீரமுதலியவற்றைப் புகழ்வோர், பாணர், மகததேயத்தார்.

மாகதன் - ஜராசந்தன்.

மாகதி - சீனி, திப்பிலி, பிராகிருத பாஷை, முல்லைக்கொடி, மகததேசத்துப் பாஷை இது பிராக்ருதங்களுளொன்று, கோணநதிக்கும் பெயர்.

மாகநீர் - யாசித்தீர்த்தம்.

மாகந்தம் - மாமரம்.

மாகநந்தி - நெல்லிமரம், தக்ஷணபாஞ்சாலத்து இராஜதாநி.

மாகம் - ஆகாயம், மகநாள், மாசிமாதம். மாகன் செய்த ஸம்ஸ்கிருத காவ்யம் இக்காவ்யம் கிருஷ்ணன் சிசுபாலனை வதஞ்செய்த வரலாறு கூறுவது.

மாகயம் - கெளரிபாஷாணம்.

மாகரி - ஆண்யானை.

மாகலி - இந்திரசாரதி, சந்திரன்.

மாகந்தி - ஆகாயகங்கை.

மாகலோகம் - விண்ணுலகு.

மாகபதி - இந்திரன்.

மாகவதி - கீட்டிசை.

மாகறல் - தொண்டைமண்டலத்து ஒரு சிவஸ்தலம்.

மாகனன் - பார்ப்பான்.

மாகன் - மாகஞ்செய்த சமஸ்கிருதகவி. இவன் தத்தகன் மகன்.

மாகாணம் - நாடு.

மாகாணி - ஒரொண் அதுபதினறிலொரு பங்கு.

மாகாதிபன் - இந்திரன்.

மாகானம் } ஒரு சிவஸ்தலம்.
மாகானயம் }
மாகாளன் - அயன்படைத்தலைவன்.
மாகாளி - சத்தமாதர்களி லொருத்தி, களாவிழுது, மாவலிக்கிழங்கு.
மாகாளிசரன் - களாவிழுது.
மாகாளேசுவரர் - திரு இரும்பை மாகாளத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மாகிரன் - தேவேந்திரன்.
மாகினம் - இராச்சியம்.
மாகுத்தம் - பூனைக்காலி.
மாகுலர் - வேடர்.
மாகேசன் - தேவேந்திரன், மகேஸ்வரன்.
மாகேசி - துர்க்கை.
மாகேசுவரி - சத்தமாதர்களி லொருத்தி, பார்வதி.
மாகேந்திரம் - நித்தியயோகத்தொன்று மணப்பொருத்தம் பத்தினொன்று.
மாகேயம் - பவளம்.
மாகேயி } பசு.
மாகை }
மாக்கடு - குரத்துக்கடுக்காய்.
மாக்கருவி - குதிரைக்கல்லணை.
மாக்கள் - பிள்ளைகள், மனிதர்.
மாங்கல்லியசூத்திரம் - தாலிக்கொடி.
மாங்கல்லியதாரணம் - தாலிக்கட்டு.
மாங்கல்லியபிச்சை - தாலிப்பிச்சை.
மாங்கல்லியம் - தாலி.
மாங்கன் - ஒரீரல், ஒருமீன்.
மாங்காடு - குடகுமலைப் பக்கத்துள்ள தோரூர் இது இக்காலத்து மாங்காவென்று வழங்கப்படுகின்றது, தொண்டைநாட்டிலோரூர் இங்கே காமாக்ஷி அம்மையார் ஆலயம் உள்ளது.
மாங்காயீரல் - ஒரீரல்.
மாங்காய்ப்பூட்டு - ஒருவகைப்பூட்டு.
மாங்கிசம் - மாமிசம்.
மாங்கிஷச்சிலை - ஈரற்கல்லு.
மாங்கிஷபட்சணி - அசைகன், மாமிசம், புசிப்போன்.
மாங்கிஷம் - மாங்கிசம்.
மாங்கிஷவாசன் - கத்தூரி, எலும்பு.
மாங்குடிமருதனார் - இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.
மாங்கொட்டை - மாம்பழத்தின் கொட்டை.
மாசக்காய்-ஒருமருந்துச்சரக்கு.

மாசங்கம் - சூதகம்.
மாசப்பிரவேசம் - மாசப்பிறப்பு.
மாசமானம் - வருடம்.
மாசம் - மாதம்.
மாசரம் - சஞ்சிமேலேடு.
மாசலம் - நோய், முதலை.
மாசலன் - கள்வன்.
மாசவிடாய் - மாதவிடாய்.
மாசறல் - குற்றந்தீர்தல், நன்மை.
மாசனம் - பிராமணர், பெரியோர்.
மாசாதம் - கூழ்.
மாசாத்தர் - திருக்கைலாச ஞானவுலாவை அங்கே கேட்டுவந்து திருப்பிடவூரிலே வெளியிட்டவர்.
மாசாத்தன் - கண்ணகைதந்தை.
மாசாத்துவான் - கோவலன் தந்தையின் இயற்பெயர். இவன் கோவலன் இறந்ததை மாடலன் சொல்லக்கேட்டு தன் கையிலுள்ள பொருள் அனைத்தையும் தானஞ்செய்துவிட்டுத் துறவு பூண்டவன்.
மாசாந்தம் - அமாவாசியை.
மாசாலம் - ஒருமாயவித்தை, சிணுங்கை.
மாசி - ஒருமாதம், புதுவரம்பு, மகநாள். மேகம்.
மாசிகம் - இறந்தோர்க்கு மாசந்தோறுஞ் செய்யும் ஒருகடன், ஒருமருந்து.
மாசிகை - பறவை.
மாசிங்கம் - கலங்கொம்பு.
மாசிபத்திரி - ஒருபூடு.
மாசிமகம் - ஒருதிருநாள்.
மாசியம் - மாசிகம்.
மாசிரம் - சீக்கிரம்.
மாசிலாமணியீசுவரர்-திருவாவடுதுறையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர், திருமுல்லைவாயில் சுவாமி பெயர்.
மாசிலி - கடவுள்.
மாசிலிப்பட்டினம் - ஒருநகரம்.
மாசு - அழுக்கு, அற்பம், கருமை, குற்றம், பால்வீதி, மண்டபம், மழை, மறு, மேகம்.
மாசுகம் - பீர்க்கு.
மாசுணம் - பாம்பு, பெரும்பாம்பு.
மாசுணக்கங்கணன் } சிவபிரான்.
மாசுணக்கச்சையன் }
மாசுதிர்ப்பான் - நாவிதன்.

மாசேனன் - அருகன், கடவுள், குமரன், திருமால்.
மாசேனை - மிகுதி.
மாசை - பொன்.
மாச்சக்காய் - மாசக்காய்.
மாச்சரியம் - பொறாமை.
மாச்சல் - மாய்ச்சல்.
மாச்சாதம் - கூழ்.
மாச்சி - பாம்புகொல்லி.
மாச்சிலை - மரக்கல்லு.
மாஞாலம் - பெரியபூமி, மாசாலம்.
மாஞ்சி - ஒரு வாசனைபபண்டம, சடாமாஞ்சி.
மாஞ்சில் - ஒருமருந்து.
மாடகம் - வீணைமுறுக்காணி.
மாடக்குழி-விளக்குவைக்குஞ்சுவரறை.
மாடப்புறா - ஒருபுறா.
மாடப்புறாக்கண்ணிறம் - அமுக்கிறா.
மாடிதம் - உழுந்து.
மாடம் - உப்பரிகை,உழுந்து,மண்டபம்.
மாடலன்-தலைச்செங்கானத்திள்ள ஒரு அந்தணன் கோவலனுடைய நட்பாளன் கோவலன் மதுரையில் கொலையுண்டது முதலியவற்றைக் காவிரிப்பூம் பட்டினத்தார்க்குச் சொல்லித் தன் சொல்லால்அவர்களிற்சிலரிறந்தமைதெரிந்து அப்பாவத்தைப்போக்குதற் பொருட்டுப்போய்க் கங்கையாடி மீளுகையில் இடையேசெங்குட்டுவனைக்கண்டு அளவளாவிவஞ்சிநகரஞ்சார்ந்து, அவனை யாகஞ் செய்யும்படி தூண்டி, அது செய்வித்து அவனை நல்வழிப்படுத்தினவன்.
மாடல் - செய்தல்.
மாடன் - ஒருபேய், மடையன்.
மாடி - அரண்மனை, இக்கட்டு,இரணைப்பல், கோபம், தரித்திரம், குளிர், புடைவையோரம்.
மாடியம் - பாதை.
மாடு - அகன்மணி, இடம், இரத்தினம், தனம், செல்வம், பக்கம், பசுப்பொது, பொன்.
மாடை - அரைவராகனெடைப்பொன், பொன்,விரிந்துமுன் வளைந்திருத்தல்.
மாடைக்கொம்பன் - உள்வளைந்த கொம்பன்.
மாட்சி, மாட்சிமை - அழகு,பெருமை.

மாட்டடி - குருட்டடி.
மாட்டல் - மாட்டுதல்.
மாட்டறைதல் - உறுதியின் கீழ்ப்புறத்தெழுதல்.
மாட்டக்கோல் - மாடோட்டுங்கோல்.
மாட்டாமை - இயலாமை.
மாட்டார் - லொதார்.
மாட்டிலையான் - பெரிய ஈ.
மாட்டிறக்கம் - ஆற்றிலே மாடிறங்குதுறை.
மாட்டீ - பேரீ.
மாட்டுக்கிடை - பசுத்தொழுவம்.
மாட்டுக்கொட்டில் - பசுக்கொட்டில்.
மாட்டுதல் - அடித்தல், இயலுதல், கடாவுதல், கட்டுதல், சம்மதித்தல், செருக்குதல், பூணுதல், மான்வித்தல்.
மாட்டுத்தான் - பருக்கன்கடுதாசி.
மாட்டுமுலைக்காளான் - ஒருகாளான்.
மாட்டெறிந்தொழுதல் - ஒருயுத்தி.அது ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றற்கு மாட்டிச் சொல்லி நடத்தல்.
மாட்டுணி - பேருணி.
மாட்டேற்று - குறிப்பு, புறத்துச்செலுத்துகை.
மாணம் - மாட்சிமை.
மாணல் - நன்மை, மாட்சிமை.
மாணவகம் - கல்வி.
மாணவகன் - அறிவீனன், பிரமசாரி, பிள்ளை, மாணாக்கன்.
மாணவம் - பதினாறுகோவையுள்ளமுத்தாரம்.
மாணவன் - பிள்ளை, மனிதன்.
மாணவ்வியம் - சிறுவர்கூட்டம்.
மாணாக்கன் - கற்போன்.
மாணாமை - மாட்சிமைப்படாமை.
மாணார் - பகைவர்.
மாணி - ஆண்குறி, குறள், பிரமசாரி.
மாணிகை-எட்டுப்பலங்கொண்ட நிறை.
மாணிக்கத்தான் - வேசி.
மாணிக்கத்தியாகர்-திருவொற்றியூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மாணிக்கம் - சிவப்புக்கல், செம்மணி அது நவமணியினொன்று.
மாணிக்கவண்ணஈச்சுவரர்- திருமருகலிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

மாணிக்கவண்ணர் - திருவாழ்கொளி புத்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

மாணிக்கவரதேசுரர் - திருமாணிகுழியிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

மாணிக்கவல்லியம்மை - திருமாணிகுழியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

மாணிக்கவாசகன்-திருவாதவூரரடிகள்.

மாணிக்கவாசக சுவாமிகள் – அரிமர்த்தனபாண்டியர்க்காகக் குதிரைகொள்ளச்சென்றவழியில் சிவபெருமான் ஞானசாரியராக எழுந்தருளி வந்து உபதேசஞ் செய்தாட்கொண்டருளப்பட்டவரும் குதிரை வாங்கும்பொருட்டுக்கொண்டுசென்ற திரவியங்களையெல்லாம் சிவாலயத் திருப்பணிக்காக்கிய துணர்ந்து பாண்டியனுலொறுக்கப்பட்டு நின்றபோது சிவபிரான் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுபோய்க் கொடுத்தவழி அவரால் காத்தருளப்பட்டவரும் பரிகளெல்லாம் நரிகளாகமீளுதலும் பின்னரும் பாண்டியனொறுக்க, சிவன் வைகையைப்பெருக்கச்செய்து அதன்கரையைஅடைக்கக் கூலியாளாகிச்செல்லப்பெற்றவரும் அதுவாயிலாகப்பாண்டியன்பணியினின்றும் நீங்கிச்சிவன் முத்தராய் வணங்கினவரும் கேட்டோரை மனமுருக்கி முத்திநெறியிற்செலுத்துமியல்பினதாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் பாடியருளியவருமாகிய சைவசமையாசாரியர் இவர்பூர்வாச்சிரமநாமம் வாதவூரர். இவர்க்குப் பாண்டியனால் சூட்டப்பட்ட பட்டப்பெயர் தென்னவன்பிரமராயன். கல்லாடத்திலே.

"வெடிவாற் பைங்கட்குறு நரியினத்தினை, யேழிடத்தோன்றியின் னூற்கியைந்து, வீதிபோகிய வாலுளைப்புரவி, யாக்கியவிஞ்சைப்பிறை முடியந்தணன்," என்றும்.

"மண்ணகழ்ந்தெடுத்து வருபுனல்வையைக், கூலஞ்சுமக்கக்கொற்றாளாகி, நரைத்தலைமுதியோ ளிடித்தடு கூலி கொண், டடைப்பதுபோல வுடைப்பதுநோக்கிக், கோமகனடிக்க அவனடிவாங்கி"

என்றும் வருதலாலே கடைச்சங்கப் புலவராகிய கல்லாடருக்கு முன்னுள்ளவரென்பது நிச்சயிக்கப்படும்.

சிவன்வலைவீசியதிருவிளையாடலை இவர்பன்முறை யெடுத்தெடுத்துத்திருவாசகத்திலோதுதலால் வலைவீசிய திருவிளையாடல் நிகழ்ந்தகாலத்தை யடுத்திருந்தவரென்பதும், எந்து, அச்சன், அச்சோபப்புஎன்பனமுதலிய மலையாளச்சொற்களை அத்திருவாசகத்திலேபிரயோகித்தலால் மலையாளத்திருந்தவந்து பாண்டிநாட்டிலே குடிகொண்டவரென்பதும் அநுமிக்கக் கிடக்கின்றன. இச்சிவஞானச்செல்வர். சண்டேசரையுங்கண்ணப்பரையும்தமக்குமுந்தினோராக வெடுத்துக்கூறி, அவர்பெருமையைப்புகழுவர். கன்றூல்விளவெறிந்தகிருஷ்ணன்செயலும் திருவாசகத்திலெடுத்துக்கூறப்படுதலின், இவர் கிருஷ்ணன்காலத்துக்குப் பிற்பட்டவரென்பதற் கையஞ்சிறிதுமில்லை. திருநாவுக்கரசு நாயனாராலே, தமது தேவாரத்திலே நரியைக் குதிரைசெய்த அற்புத மெடுத்துக் கூறப்படுதலால் அவர் காலத்துக்கு இவர் முன்னுள்ளவரென்பதற்கும் ஆக்ஷேபஞ்சிறிதுமில்லை. திருநாவுக்கரசு நாயனார்காலம், முன்னே சம்பந்தர் என்பதனுட் கூறப்பட்டபடி நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளது. அவர்க்கு இவர் முன்னுள்ளவராதலின் இவர் காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்குணியப்படும். அதுமாத்திரமன்று, திருவாசகத்திலுள்ள பிற் காலத்திலே அறியப்படாத அநேக சரித்திரங்களும், க்ஷேத்திரங்களும் எடுத்தோதப்படலாலும், கண்ணப்பர் சண்டேசர்களைத் துதிப்பவர் திருஞானசம்பந்தர் முதலியோரைத் துதிக்காமையாலும், "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்" என்னுந் திருவாசகத்திலே

தேனித்தல் என்னுஞ் சொல்வழக்கும், உவலை முதலிய அரியசொற்களும் பிற்காலத்துவழக்கன்மையாலும் திருவாசகம் தேவாரத்துக்கும் கடைச்சங்கத்து நூல்களுக்கும் முந்தியதென்பது நன்றாகத் துணியப்படும். இனித் திருத்தொண்டத்தொகையினுள்ளே எடுத்தோதப்படாமையின், மாணிக்கவாசகர் - சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பிற்பட்டவரெனச்சாதிப்பாருஞ் சிலருளர். அஃதறியாமையின் பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலியோரெல்லாம் சிவபக்தியிலும் சிவயோகத்திலுஞ் சிறந்த மெய்யடியார்களாகவும் அவரையெல்லாந் திருத்தொண்டத்தொகையினுட்கூறாமையாது காரணமாமோ அதுவே மாணிக்கவாசகரைச் சேர்த்தோதாமைக்குங் காரணமாம். முன்னர் வெளிப்படாத அடியார் வரலாறுகளே சேக்கிழாருக்கு அருளிச்செய்யப்பட்டனவன்றி முன்னே வெளிப்பட்ட சரித்திரங்களல்ல. மாணிக்கவாசகசரித்திரம் முன்னே ஆலாசியத்திற் கூறப்பட்டது. அதுபற்றியே அவர்சரித்திரம் திருத்தொண்டத்தொகையிலும் பெரிய புராணத்திலும் கூறப்படாதொழிக்கப்பட்டது. அவ்வாறே அகஸ்தியர் பதஞ்சலி வியாக்கிரபாதர்கள் சரித்திரங்களும் சிதம்பரமான்மியத்திலும் பிறவற்றிலுங் கூறப்பட்டுக் கிடந்தமையின் அவையு மொழிக்கப்பட்டன. அற்றேல், சம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம் ஆலாசியத்திற் கூறப்பட்டிருக்கவும் மீளவும் பெரியபுராணத்திலும் திருத்தொண்டத் தொகையிலும் கூறப்பட்டது யாதுபற்றியோவெனின், ஆலாசியத்துள் அச்சரித்திரம் விரித்துரைக்கப் படாமையினென்க. இதுவே திருத்தொண்டத்தொகையிலும்மாணிக்கவாசகர் எடுத்துக் கூறப்படாமைக்குக் காரணமாமெனக்கொள்ளுக. அதுநிற்க மாணிக்கவாசகர் இடையறு சிவத்தியானமுஞ் சிவபத்தியுமுடையராய் விளங்கினரென்பதும், அவருடைய சரித்திரம் முற்று முண்மை யென்பதும் அவர் திருவாக்குக்களே வெளிப்படப்பகர்கின்றன. வாசனையாற்புறத்தே காணப்படும் எச்செயல்களையுஞ் சிவசம்பந்தப்படுத்தியே யெடுத்தோதுவர். திருவண்ணாமலையிலே, இவர் தலவாசஞ்செய்த காலத்திலே அங்குள்ள பெண்கள் வைகறையிலேயெழுந்து சிவதோத்திரஞ் சொல்லிக்கொண்டு அயல்வீட்டுப் பெண்களையெழுப்பி நீராடப் போதலைக்கண்டு, அச்செயலைச்சிவசத்திகள் சிருஷ்டியின்பொருட்டு ஒருவரை யொருவரெழுப்புவதாகப் பாவித்துத்திருவெம்பாவைப் பாடியருளினார். இப்படியே புறத்தே நிகழுகின்ற செயல்களாகிய படையெழுச்சி சாழல்பொற்சுண்ணம் முதலியவைகளை யெல்லாம் சிவஞானச் செயலாகப் பாவித்துப் பாடியருளினார்.

இவருடைய மனமுஞ்செயலுமெங்கேயழுந்திக்கிடந்தன வென்பது.

எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ்
செய்யற்க, கங்குல்பக லெங்கண்மற்
றொன்றுங் காணற்க, இங்கிப்பரிசே
யெமக்கெங்கோனல்குதியே, லெங்
கொழிலென் ஞாயி றெமக்கு’’

என்பதுமுதலியதிருவாக்காலுணரப்படும். பேரின்பக்கனியாகிய சிவத்தைக்கிடைத்தற்கரியபெரும்பேறு மதித்தார் என்பது,

‘‘ஞானக்கரும்பின் றெளிவைப்பாகை
மாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்தித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்து’’

என்னுந் திவ்விய வாக்கா லுணரப்படும்.

இவருடைய பாடலெல்லாம்ஞானப்பொருள் குறித்தவுருவகங்களாமென்பதற்கு.

வையகமெல்லா முரலதாக
மாமேருவென்னு முலக்கைநாட்டி

மெய்யெனு மஞ்சனிறைய வட்டி
மேதகு தென்னன் பெருந்துறையா
ன்செய்யத்திருவடிபாடிப்பாடிச்செ
ம்பொனுலக்கைவலக்கைபற்றியைய
னணிதில்லை வாணனுக்கே யாடப்
பொற்சுண்ண மிடிதாமே'' என்
னுந்திருவாக்குச் சான்றாம்.
இனி இவருடைய மெஞ்ஞானபோ
தவாற்றலோ வென்றால் அஃதெடுத்
துரைக்குந்துணைத்தன்று. கல்லையுங்
கனியவைக்குந்திவ்வியவாய்ச்சொல்
லைச்சொல்லென்றுரைத்தலாகாதெ
ன்றே மாணிக்கவாசகமென் றிவ்வுல
கந் தலைமேலேற்றி ஒலமிடுவதா
யிற்று.

தாமேதமக்குச் சுற்றமும்
தாமேதமக்கு விதிவகையும்
யாமாரெம தார்பாசமா
ரென்னமாய மிவைபோகக்
கோமான் பண்டைத்தொண்ட
ரொடுமவன்றன் குறிப்பேகுறிக்கொ
ண்டு, போமாறமைமின் பொய்நீக்கி
ப்புயங்கனுள்வான்பொன்னடிக்கே''
இப்பரமோத்தம வாக்கு வேதோபநி
ஷதங்க ளெல்லாவற்றையு மொருங்
கேயனக்குந்துணையதாம். இப்படியே
ஒவ்வொன்று மொவ்வோருப நிஷத
மாமன்றி வாளா இலக்கியமன்று
சிதம்பரத்திலே சிவத்தோ டிரண்ட
றக் கலந்தபோது இவர்க்கு வயசு
முப்பத்திரண்டு

மாணிக்குழி - ஒரூர்.
மாணிக்குறி - ஆண்குறி.
மாணிபத்திரன் - குபேரன்சேனாபதி யாகிய ஒரு யக்ஷன் குபேரனோடு போர்புரிந்த போது இம்மாணிபத்ரன் இராவணனை யெதிர்த்து அமர் புரிந்து மிக்க சூரனாய் நின்றசமயத்து இராவணன் தன் கதாயுதத்தால் அவன் தலையை மோத அவன் தலை ஒருபக்கஞ்சாய்ந்து போனமையால் பார்சுவ மௌலியெனப் பெயர் பெற்றான்.
மாணிபந்தம் } உப்பு.
மாணிமந்தம் }
மாண் - மாட்சிமை, மாணென்னேவல்.
மாண்டது - மகிமைப்பட்டது.
மாண்டல் - மாட்சிமைப்படுதல்.
மாண்டவி - தசரதபுத்திரனாகியபரதன் பாரி. குசத்துவசன் புத்திரி. மாளவி யெனவும் படுவள்.
மாண்டார் - இறந்தோர், பெரியோர்.
மாண்டவ்வியன் - மகாதவங்களைச்செய்து சிறந்த ஒரு பிரமரிஷி. இவரே விதுரனாகப் பின்னர்ப் பிறந்தவர். விதுரன் காண்க.
மாண்டுகேயன்-இந்திரப்பிரமிதி சிஷர். இவர் இருக்கு வேதாத்தியயனர்.
மாண்டுகம் - உபநிடதமுப்பத்திரண்டில் ஒன்று.
மாண்பு - அழகு, பெருமை, மாட்சிமை.
மாதங்கதிவாகரன் - ஒரு வடமொழிப் புலவன்.
மாதங்கம் - அரசு, உத்தியாபரணம், யானை.
மாதங்கர் - சண்டாளர்.
மாதங்கன் - அரசமாதிக்கும் வேடனுக்கும் பிறந்துசெருப்புத்தைப்போன், கீழ்மகன், வேடன்.
மாதங்கி - காளி, துர்க்கை.
மாதருதகம் - மாததூரம்.
மாதச்சங்கிரமம் - மாதப்பிறப்பு.
மாதண்டம்-இராசவீதி, பெரும்பாதை.
மாததூரம் - மகளிர்ருதகம்.
மாதகம் - இலவங்கம்.
மாதப்பிறப்பு - சூரியனொரிராசியினின்றமற்றொரிராசிக்குச் செல்லுஞ்சமயம்.
மாதப்புறா - ஒரு நீர்ப்புள்.
மாதம்-கடைதல்,கரம்பு,கொல்லல், சந்தோஷம், பாதை, பெருமை, மதம், மாசம்.
மாதரி-காளி,மதுரையைச்சார்ந்த ஆயர்பாடியிலிருக்கும் இடைச்சியர் தலைவி. இவள் கோவலன் கொலையுண்டிறந்ததையும் கண்ணகி துன்புற்றதையுங்கேட்டுவருத்தமுற்றுத் தீயில் விழுந்திறந்தவள்.
மாதர் - அழகு, ஆசை, இசைச்சொல், தலைவியர், பெண்கள்.
மாதர்கள் - சிவனுக்கு ஏவற்குரியமாதர்கள் இப்பெயர் பெறுவார்கள், அவர்கள் பிராமி,மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டி என எழுவர், சிலர் மதப்

படி சண்டியோடு அஷ்டமாதர் எனவும் படுவர்.
மாதர்குணச்சலம் - கெந்தகம்.
மாதலி - இந்திரன்சாரதி.
மாதலுங்கம் - மாதளை.
மாதவப்ரியம் - செம்பூசினி.
மாதவம் - இனிமை, கள், தவம், வசந்தகாலம், வைகாசிமாதம்.
மாதவர் - முனிவர்.
மாதவறுதி - மாதக்கடை.
மாதவன்-பெரியதவமுடையவன், திருமால், வசந்தன்.
மாதவாசாரியர் - வித்தியாரணியர்.
மாதவன் - விஷ்ணு,மதுவமிசத்தில்வந்தவன், கிருஷ்ணன், பாசுராமன், வசந்தன்.
மாதவி-அருச்சுனன்மனைவி, ஒருகொடி கண்ணன் மனைவி, கள்ளினையட்டவெல்லம், குருச்சத்தி, சினி, துளசி துர்க்கை, துதிகை, காடகக்கணிகை, வசந்தகால மல்லிகை. யயாதிபுத்திரி, இவள் காலவனை மணந்து அஷ்டகன் முதலியோரைப் பெற்றவள், அகத்திய முனிவர் சாபத்தால் உலகிற் பிறந்த உருப்பசி, கோவலன் காதற்பரத்தை இந்திரன் சபையில் ஒருவரை யொருவர் காமுற்று அகத்திய முனிவரால் சாபம் பெற்ற சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலையில் மூங்கிலாகவும், காஞ்சி நகரத்திலே தேவகணிகையாகவும் பிறந்தனர் என்பது சிலப்பதிகாரம், உருப்பசி காஞ்சிநகரிற் பிறந்து மாதவியென்னும் பெயர் கொண்டாள், அவள் மரபிற்பிறந்த கோவலன் காதற்பரத்தையும் மாதவியெனப்பட்டாள்.
மாதவிகை - வசந்தமல்லிகைக்கொடி.
மாதவிகொழுநன் - அருச்சுனன், கண்ணன்.
மாதவிடாய் - மாதத்தீட்டு.
மாதவிடை - மாதத்தீட்டு.
மாதவியசங்கிதை - காலநிர்ணயம், வித்யாரண்யர்செய்த ஜோதிஷகிரந்தம்.
மாதவியம் - பராசரஸம்ருதிவியாக்யாநம் மாதவாசாரியர் செய்தது.
மாதளை - ஒருமரம்.
மாதளைச்சிலை - மாந்தளிர்க்கல்.
மாதறி - விட்டம்.

மாதனம் - காரம்பு.
மாதன் வித்யாதரங்களாற் கர்வித்திருப்பவன்.
மாதா - தாய் இலக்குமி, துர்க்கை, உமாதேவியார், உலகத்தை யீன்றளித்தலால் உமாதேவியார்க்கு இப்பெயர் உவமையாகு பெயர்.
மாதாசை - பெண்ணாசை.
மாதாநுபக்தி - திருவள்ளுவநாயனார்.
மாதாந்தம் - மாதவறுதி.
மாதாமஹன்-தாயைப்பெற்றபாட்டன்.
மாதாமஹி - தாயைப்பெற்றபாட்டி.
மாதி - மா, வட்டமாயோடல்.
மாதிகம் - குதிரைமார்க்கம்.
மாதிபோதி - நெருஞ்சில்.
மாதிரக்காவலர் - திக்குப்பாலகர்.
மாதிரம் - ஆகாயம், திசை, பூமி, மண்டலம், மலை, யானை.
மாதியாடையான் - சிவபிரான்.
மாதிரி - அதிவிடயம், மாதிரிகை.
மாதிரிகை - சாயல், மாதா; விதம்.
மாதிரு - ஆகாயம், இரேபதி, இலக்குமி, பசு, பார்ப்பனிச்சி, பூமி, மாதா.
மாதிருகசிதன் - பாசுராமன்.
மாதிருகாசுதன் - அறிவீனன்.
மாதிருகாதகன் - இந்திரன்.
மாதிருகை - அரிவரி, கைத்தாய், தேவி, மாதா.
மாதிருகோத்திரம் - மாதாவமிசம்.
மாதிருமுகன் - அறிவீனன்.
மாது - அசைச்சொல்,(உம்) விளிந்தன்று மாதவர்த்தெளிந்தவென்னெஞ்சு, பெண், விருப்பம்.
மாதுகரம் - பிரமசாரிபிச்சை.
மாதுங்கம் - கொம்மட்டிமாதளை.
மாதுபங்கன் - சிவபிரான்.
மாதுபாகம் - புட்பராகம், பெண்பக்கம்.
மாதுபாகன் - சிவபிரான்.
மாதுமையம்மை - திருக்கோணமாமலையிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மாதுரம் - மல்லிகை.
மாதுரி - சாராயம்.
மாதுரியம் - மிதுமதுரம்.
மாதுரு - மாதா.
மாதுருகமனம் } ஈன்றாட் கலத்தல்
மாதுருகாரணம் } இது பாதகமொன்பதில் ஒன்று.

மாதுருமட்டை - விசான்மட்டை.
மாதுலங்கம் - மாதளை, கொடிமாதளை.
மாதுலம் - ஊமத்தை.
மாதுலர் - மாமன்மார்.
மாதுலன் - மாமன்.
மதுல } மாமன், மனைவி.
மாதுலானி }
மாதுலி - மாதவி, மாமன்மனைவி.
மாதுலுங்கம் - மாதளை.
மாதுவசை - பெண்வசம்பு
மாதுவம் - கள்.
மாதுளங்கம் } மாதளை.
மாதுளம் }
மாதுறப்பு - உத்தியாபரணம்.
மாதூகரம் - மாதுகரம்,பிரமசாரிபிச்சை
மாதேவன் - சிவபிரான்,பன்னொருருத்திரரிலொருவன்.
மாதேவி - பார்ப்பதி.
மாதேவியம்மை - திருஅம்பர்மாகாணத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மாதைவேங்கடேசுரன் - இத்தப்பிரபுதமிழ்ப் புலவர்களுக்குப் பரமோபகாரியாயிருந்து தமிழை வளர்த்த அவதாரபுருஷன் ஒரு கவிக்கு ஆயிரம் பொன்னைத் தொண்ணூற்றொன்பதுகவிக்குக்கொடுத்து நூறுவது கவிக்கு நூறாயிரம் பொன் கொடுத்து ஒரு பிரபந்தங்கொண்ட பிரபு சிகாமணியிவனே, இது நோக்கியேபடிக்காசுப்புலவர், தமது தொண்டைமண்டல சதகத்தில், "எல்லப்பன் என்னும் செய்புளிலே," மாதைவேங்கடேசுரன்போல வரிசைசெய்தான் என்று புகழ்ந்திருக்கின்றனர்.
மாதொருபாகன் - சிவபெருமான்.
மாதோ - அசைச்சொல்.
மாத்தகை - மிகுசிறப்பு, மிகுதகை.
மாத்தியாதி - ஞானிகளிலோர்வகை.
மாத்தியானம் }
மாத்தியானிகம் } மத்தியானம்.
மாத்தியான்னம் }
மாத்திரம் - அளவு, தனிமை.
மாத்திரி - மத்திரன்மகள்,சல்லியன்தங்கை, பாண்டுமகாராஜனுடைய இரண்டாமனைவி, இவள் தன் கணவனோடு உடன்கட்டை யேறினவள், நகுல சகாதேவர்கள் இவள்வயிற்றிற் பிறந்தவர்கள்.
மாத்திரை - அளவு, அற்பம், காதணி, காலநுட்பம், காலவிரைவு, குளிகை, குற்றுயிரெழுத்து, பாக்கியம்.
மாத்திரைக்கோல் - அளவைக்கோல்.
மாத்திரைச்சுருக்கம் - ஒருபொருள்பயந்து நிற்பதோர் சொல்லொரு மாத்திரை குறையவேறோர்பொருள் பயக்கப்பாடுவது (உ-ம்) வரி, வரி.
மாத்திரைவருத்தனம்-ஒரு பொருள்பயப்பதோர் மொழி ஒருமாத்திரைகூடப் பிறிதோர் பொருள்பயப்பது, (உ-ம்) ஒதி, ஓதி.
மாத்மீகன் - அறிவும்அறியப்படுபொருளும் சூனியமென்றும், அதனாலே பிரபஞ்சம் தோன்றுதென்றும்சொல்பவன்.
மாத்ரி - பாண்டுராஜன் மனைவி, வசம்பு.
மாத்ரீபதி - பாண்டுராஜன்.
மாத்ருகாதகன் - தேவேந்திரன்.
மாத்ருகேசடன் - மாமன்.
மாத்ருநந்தனன் - முருகக்கடவுள்.
மாத்விகம் - இலுப்பைப்பூச் சாராயம்.
மாநசபூசை - மனப்பூசை.
மாநசவாவி - மாநசதடாகம்.
மாநடன் - சிவபிரான்.
மாநவன் - பாலகன், மனிதன்.
மாநவி-சுவாயம் வமநுவின்மகள், மாநுடப்பெண்.
மாநவ்யம் - மானுடத்தொகுதி.
மாநாகம் - ஒருபாம்பு
மாநாய்கன் - கண்ணகிதந்தை, இவன் கோவலன்கொலையுண்டதையும்கண்ணகி துன்புற்றதையும் மாடலன்கூறக்கேட்டுத் துன்புற்றுத்தன் பொருளையெல்லாம் தானஞ் செய்துவிட்டுத் துறவுபூண்டவன்.
மாந்தக்கொதி - ஒருசுரம்.
மாந்தசன்னி - ஒருநோய்.
மாந்தப்புல் - ஒருபுல்.
மாந்தம் - ஒருநோய், மந்தம்.
மாந்தரஞ்சேரலிரும்பொறை- சேரருள் ஒருவன், இவன் பராசரன்என்னும் அந்தணனுக்குப் பரிசுகொடுத்தவன்.
மாந்தர் - ஆண்மக்கள், மனிதர்.

மாந்தல் - அவிந்தடங்கல், உள்ளழி தல், குடித்தல், புசித்தல்.
மாந்தளிர் - மாமாத்தளிர் இது தவர்ப் பத்தில் ஒன்று.
மாந்தளிர்ச்சிலை - கற்சாவி.
மாந்தளிர்ப்பச்சை - கொச்சுக்கல்.
மாந்தன் - ஆண்மகன், மனிதன்.
மாந்தாதா - (இக்ஷுா) இரண்டாம்யுவ னாசுவன் புத்திரன், இவன் மனைவி, சசிபிந்து, இவன்மகன் விந்துமதி, மாந்தாதா புருகுற்சன் அம்பரீஷன் முசுகுந்தன் என்னும் மூன்று புத்தி ரனையும் ஐம்பது புத்திரிகளையும் பெற்றவன் சௌபரி யென்னும் முனிவன் இந்த ஐம்பது பெண்களை யும் மணம்புரிந்தான்.
மாந்தாதிரு - ஓரரசன்.
மாந்தி - ஒரு கலியாணச்சடங்கு, மாம ரம்
மாந்தியம் - மந்தமானது.
மாந்திரியர் - மந்திரவாதிகள்.
மாந்துதல் - மாந்தல்.
மாந்தை - ஒரூர், ஒருநோய்.
மாபத்தியன் - காமன்.
மாபலன் - காற்று.
மாபலி-மாவலி பலிச்சக்ரவர்த்திஇவன் பிரஹ்லாதன் புத்திரனுகிய விரோ சன மகன், மகா பராக்ரமசாலி, தேவர்களை இவன் துன்புறுத்த, அ வர்கள் திருமாலிடத்தில் முறையிட அவர் வாமநாவதாரமெடுத்துப்போய் மூன்றடி மண் கேட்டுவாங்கி, பூமி யை ஓரடியாகவும் ஆகாயத்தை ஓ ரடியாகவும் அளந்து மூன்றுமடிக்கு அவன் தலைமேல் திருவடியையூன்ற நெரிந்திறந்தவன், இந்தச் சரித்திர த்தைக் கம்பர் இராமாயணத்தில் மிக சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர்.
மாபலிவாணன் - ஒரு சக்ரவர்த்தி.
மாபனம் - அளவு, தராசு
மாபுலி - சிங்கம்.
மாபுறப்பாகம் - வெளியரங்க சிவபூசை.
மாபூதி - சத்தநாகிஞென்று.
மாப்பலகை - மாக்கல்.
மாப்பிடி - மாப்பிடிப்பு.
மாப்பிள்ளை - மணவாளப்பிள்ளை.
மாப்பு - மிகுதி, மீன்பிரன். குளம்.
மாமகக்குளம் - கும்பகோணத்திலோர்
மாமசம் - மாசிமகம், மாமாங்கம்.
மாமகன் - அம்மான், பிசுனன், மன் மதன்.
மாமடி - மாமன்.
மாநாதன் } திருமால்.
மாமணாளன் } திருமால்.
மாமணி - மாணிக்கம்.
மாமருத்துநூலோர் - வைத்தியர்.
மாமல்லபுரம் - மாபலிபுரம்.
மாமன் } அத்தைகொழுநன், அம்மான், புருஷன் தந்தை, மனைவி யின் தந்தை.
மாமா } அத்தைகொழுநன், அம்மான், புருஷன் தந்தை, மனைவி யின் தந்தை.
மாமாங்கம் - ஒருபுண்ணியகாலம், கும்ப கோணத்தில் பன்னிரண்டு வருஷத் துக் கொருதரம் நடக்கும் விசேஷ தீர்த்தத் திருவிழா.
மாமாத்திரர் - வைத்தியர்.
மாமி - அம்மான்மனைவி, பிதாவின் சகோதரி, மனைவியின்றாய்.
மாய்சதாரி - ஊன் தின்போன்.
மாயிரசிலை - கார்திறக்கல்.
மாயிரபேதி - ஒருபூடு.
மாயிசம் - இறைச்சி.
மாயிசி - சடாமாஞ்சில்.
மாயிசோத்தானம் - உயிர்த்தெழுதல்.
மாமுகன்கை - ஐந்து.
மாமுடி - நெட்டி.
மாமுதி - அருகன், சிட்டன், நாயுருவி.
மாமூலனர் - இவர் கடைச்சங்கப்புலவ ருளொருவர். இவர் "பேர் மூல முணருமா மூலர்" என்று ஆன்றோ ரால் புகழப்பட்டவர்.
மாமேரு - மகாமேரு.
மாமை - அழகு, நிறம், அரித்துவாரம்.
மாயகர் - தாருகாசுரன் அரசுசெய் திருந்த நகரம்.
மாயப்பெண் - மாயாபோகப்பெண்.
மாயம் - அழகு, கறுப்பு, தந்திரம், தீமை, பொய், வஞ்சகம், கனவு.
மாயயாக்கை - மாயாதேகம்.
மாயருபம் - மெய்போலத் தோற்றும் பொய்யுருவம்.
மாயவள் - இடாகினி, காளியேவல் செய்வாள், தெய்வப்பெண்.
மாயவன் - திருமால்.
மாயவன்சோதரி - துர்க்கை.
மாயவன்மேனி - நாகப்பச்சை.

மாயாவித்தை - ஒரு மாந்திரியவித்தை, தந்திரத் தொழில்.
மாயவன் - கரியவன், திருமால்.
மாயாகாரன் - இந்திரசாலக்காரன்.
மாயாகாரியம் - மாயையிற் றோற்றப்படு தல்.
மாயாகிருது-மாயாகாரியகர்த்தன்.
மாயாசங்கற்பம் - மாயாகாரியம்.
மாயாசத்தி - பஞ்சசத்தியில் ஒன்று.
மாயாசாலம் } மாயம்.
மாயாசித்து }
மாயாசிதை - போலிச்சிதை.
மாயாசுதன் - புத்தன்.
மாயாசூனியம் - மறைவின்மை.
மாயாதாரகம் - முதலே.
மாயாதாரகம் - மாயையை ஆதாரமாக வுடையது, மாயையை முதற்காரண மாகவுடையது.
மாயாதாரணை - நவதாரணையில் ஒன்று அது நாமம் வடிவு முதலிய விகாரங் களின்றிக் காலத்தகத்தும் இடத்த கத்தும் படாத பரமாத்மாவிடத்தில் அந்தக்கரணஞ் செய்கையாற் புனைந் துரைக்கப்பட்ட பிரபஞ்சத்தை வி யாபாரமின்றித் துறத்தற்குக் கருவி யான மகா வாக்கியத்தைப் பொரு ளுணர்ச்சியோடுச்சரித்தல்.
மாயாதி - நரபலி.
மாயாதேகம் - கிலேயற்றசரீரம், மாயை யாலான தேகம்.
மாயாதேவி - சம்பராசுரன் வீட்டில் பதிவிரதத்தை அறவஞ்சித் திருந்த வள். புத்தன் றாய்.
மாயாதேவிசுதன் - புத்தன்.
மாயாபாசம் - பந்தமாயை.
மாயாபிரதிபிம்பர் - ஒன்றின் சாயலாய்த் தோற்ற மருபிகள், மாயையாற் பிர திபலிக்கு முருவுடையோர்.
மாயாபுரி - சத்தபுரியில் ஒன்று, பித்த ளை, மாயாசரீரம்.
மாயாமந்திரம் - ஒருமந்திரம்.
மாயாமயக்குமாரன் - முருகப்பெருமா ன்.
மாயாமருளி - ஒருதேவதை.
மாயாமலம் - மாயைமலம்.
மாயாலட்சணம் - அசத்து சடம் அநித் தம் துக்கம் கண்டம் ஆகிய ஐந்து.
மாயாவதி - சம்பாசுரன் மனைவி, இர திதேவி புத்தன் தாய்.
மாயாவரம் - அழியாதவரம்.
மாயாவல்லபம் - மாயாகாரிய வல்லமை.
மாயாவாதம் - ஏககன்ம ஒருசமயம்.
மாயாவாதி - சுத்தமாகிய பரப்பிரமம் மாயோபாதியினாலே வாதிக்கப்பட் டுச் சரீரத்திலுள்ளே சீவான்மா வாக நிற்குமென்றும் சீவான்மாவும் விவேகஞான மடைந்து மாயாவித் தையைக் கடந்து பரமான்மாவோடு கடாகாயமும் மஹாகாயமும்போல அபேதமாய்க் கலந்து விடுமென்றும் சொல்லுமோர் சமயி.
மாயாவி - மயன் மூத்தமகன், மண்டோ தரிக்கும் தந்துபிக்கும் தமையன், இவன் வாலியாற் கொல்லப் பட்ட வன், மாயக்காரன்.
மாயாவித்தை - மாயவித்தை.
மாயாவிமோசனம் - மாயைநீக்கல்.
மாயாவினோதம் - மாயைவிளையாட்டு.
மாயாவீடு - முத்தி.
மாயாளி - வட்டத்திருப்பி.
மாயு - பித்தம்.
மாயுராஜன் - குபேரன் மகன்.
மாயூரம் - ஓரூர், மைலம், மயில்.
மாயூரேசர் - திருமயிலாடு துறையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மாயேசுபரி - சத்தமாதர்களில் ஒருத் தி, பார்வதி.
மாயை-அறிவு, இந்திரசால முதலியன இரக்கம், இரதிதேவி, இலக்குமி, காளி, சத்தபுரியில் ஒன்று. பஞ்ச மாயையில் ஒன்று, அது சகத்து ரூபமான அன்னிதாத் தோற்றத் திற்குக் காரணமாகை, பொய், மா யம், மாயாசத்தி, வஞ்சகம், வித்தி யாதத்துவமேழில் ஒன்று.
மாயைபசை - ஒருசத்தி.
மாயைபுரி - மாயாநகர், இது கஜமுகா சுரன் இராஜதானி, இது ஜம்புத் வீபத்திலுள்ளது.
மாயைமலம் - மும்மலத்தொன்று அது மறைப்பு.
மாயையுற்றாள் - காளி.
மாயோபதானம் - மாயையையுபாதான மாகவுடையது.
மாயோள் - பெண்.

மாயோனுடல் - குடக்கூத்து.
மாயோனுள் - திருவோணம்.
மாயோன் - திருமால்.
மாயோன்மருமகன் - குமரக்கடவுள்.
மாய் - ஆச்சா.
மாய்ச்சல் - சாவருத்தம்.
மாய்ச்சி - பூட்டுவிலங்கு.
மாய்தல் - சாதல், மடிதல், மறைதல்.
மாய்த்தல் கொல்லல், மடித்தல், மறைத்தல், வருத்தல்.
மாய்ப்பு - மாய்தல்.
மாய்மாலம் - எத்து, பேமாசாலம், மாரீசம்.
மாய்வு - சாவு, மறைவு.
மாரகம் - மரணம், மரணம் வருவிக்கிறது, மாரி.
மாரகன் - கொல்வோன்.
மாரகாகனம் - குயில்.
மாரகேதம் - மன்மதன்கொடி.
மாரசயன் - புத்தன்.
மாரசத்ரம் - மன்மதன்கொடை.
மாராசரம் } மன்மதபாணம்.
மாராசாயகம் }
மாரடித்தல் - இழவுக்கடித்தல்.
மாரடைப்பு - நெஞ்சடைப்பு [தி.
மாரணசாந்தி - அழிக்கச்செய்யுஞ் சாந்தி.
மாரணமந்திரம் - மாரணத்தொழில் பண்ணு மந்திரம்.
மாரணம் - மந்திரத்தாற் கொல்லல், மரணம் அது அட்டகருமத் தொன்று.
மாரணம்பண்ணுதல் - மந்திராதிகளிலுலழித்தல்.
மாரணயாகம் - அந்நியேஷ்டி, மாரகஞ் செய்யும் வேள்வி.
மாரணவித்தை - சூனியவித்தை, மாரணக்கிரியை.
மாரணவோமம் - மாரணயாகம்.
மாரண்டம் - பாம்புமுட்டை.
மாரதம் - நால்வகையுத்தரத்திலொன்று.
மாரதர் - நால்வகையிரதவீரரிலொருவர்.
மாரதனுசு - மன்மதன்வில்.
மாரதன் - சிவன், மகாரதன், விட்டுணு.
மாரத்துச்சாமை - ஒருசாமை.
மாராரி - மாரன்வின்னுண்.
மாரபேரி - மன்மதன் முரசு.
மாரமணம் - சுருமம்.
மாரம் - எதிரிடை, கோடகசாலை, மரணம்.
மாராதம் - மன்மதன் தேர்.
மாரதந்தி - மன்மதன்யானை.
மாரன் - காமன்.
மாராட்டம் - ஒரூர், நகரம்.
மாராபிராமன் - புகழேந்திப்புலவர் காலத்திலே தொண்டைநாட்டுச் செஞ்சிநகரை யாண்டிருந்த சிற்றரசன். இவன் தமிழ்க்கலை விநோதனுய்ப் புலவர்களை அபிமானித்து ஆதரித்து வந்தவன்.
மாராப்பு சீலைப்பொட்டணி.
மாராப்புப்பட்டை - கத்தியின்கச்சை.
மாராயம் - உவகை, சோபனம், வந்தனம், விசேஷம்.
மாரி - அழிவு, உவாதி, ஒட்டுநோய், கள், காடுநாள், கொலை, சாவு, நீர், பற்பலரிறக்குநோய், மழை, மாரிகாலம், மேகம்.
மாரிகாத்தோன் - கிருஷ்ணன்.
மாரிகாலம் - ஐப்பசிகார்த்திகையின்பருவம்.
மாரிக்குடா - வடமேற்றிசை.
மாரிசா - பெருந்திரைக்கிளர்ச்சி, மாறுபாடு.
மாரிசாதம் - வாணம்பாடி.
மாரிநாள் - உத்திரநாள்.
மாரிப்பண் - மாரிப்பொழுது.
மாரிப்போகம் - புன்பயிர்விளைவு.
மாரிமறுத்தல் - மழைவறுத்தல்.
மாரிமுத்து - ஒருநோய்.
மாரீசம் - அட்டாதசவுபராணத் தொன்று, மாயம். உபபுராணங்களுள் ஒன்று.
மாரீசன் - இராவணன் மாமனுன ஒரரக்கன், மாயம்பண்ணுவோன்.
மாரீசன் - தாடகையின் புத்திரன், சுபாகு தமையன் மாயா விநோதங்களில் வல்லவன், விசுவாமித்திரமுனிவர் யாகஞ் செய்தபோது அதனை யழிக்கக் கருதிவந்த இந்த மாரீசன் சுபாகு என்னு மிருவருஞ் சுபாகுவை ஸ்ரீராமர் நெருப்புக்கணையாற் கொன்று மாரீசனை வாயுக்கணையாற் கடலிலே தள்ளிவிட்டார் ரதன்பின்னே இந்த மாரீசன் சீதையை இராவணன் கவர்ந்து சென்ற காலத்தில் மாயாமானுகிவந்து இராமரை வஞ்சித்துக் காட்டில் கொண்டுசெல்ல இராமர் இது பொய்ம்மானென்றறிந்து அவனைத் தன்னுெரு பாணத்தாற்கொன்றார்.
மாருண்டம் - பாதை, பாம்புமுட்டை.

மாருதம் - காற்று, வாயு.
மாருதபுத்ரன் } அநுமான், வீமன்.
மாருதாத்மஜன் }
மாருதவன்னக்கல் - காக்கைக்கல்.
மாருதவீமன் - ஸ்தம்பபாஷாணம்.
மாருதவர்னம் - காற்றுமழை.
மாருதவேகம் - வாயுவேகம்.
மாருதாசநம் - பாம்பு.
மாருதாத்துமசன் - ஹநுமான், வீமன்.
மாருதாபகம் - எலுமிச்சை.
மாருதி - அநுமன், காற்று, வீமன்.
மாருதிச்செங்கை - கண்டங்கத்திரி.
மாருதிகாதம் - வங்கமணல்.
மார் - பன்மைவிகுதி (உ-ம்) தாய்மார், மார்பு, வருங்காலங்காட்டி நிற்குமோர் வினைமுற்று விகுதி (உ-ம்) உண்மார்.
மார்கழி - ஒருமாதம், மிருகசீரிடம்.
மார்க்கசகாயர் - திருவிரிஞ்சைப் பதியிலெழுந்தருளியிருக்குஞ்சுவாமிபெயர்.
மார்க்கசஹாயம் - வழித்துணை.
மார்க்கசிரம் - மார்கழிமாதம்.
மார்க்கணம் - அம்பு, இரப்பு, தேடல்.
மார்க்கணர் - இரப்போர்.
மார்க்கண்டர் - ஒருமுனிவர்.
மார்க்கண்டேய புராணம் - வேதவியாசமுனிவருடைய சீடராகிய ஜைமினி பகவான் முற்பிறப்பிலே பிராமண குலத்தனவாயும், முற்பிறப்பில்எய்திய ஞானவிசேடத்தினாலே மிருகமாத்தன்னனவாயுமிருந்த இரண்டுபக்ஷிகளை நோக்கி, திருமால் மானுடசரீரம் எடுத்ததற்குக் காரணம் யாதென்றும், தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும்பாண்டவர் ஐவருக்கும் பொதுவாகத் திரௌபதியம்மையாரென்னும் ஒருவரே மனைவியாதற்குக் காரணம் யாதென்றும், பலராமர் மதுமயக்கத்தால் தாம்செய்துகொண்ட பிரமகத்தி பாவ நிவாரணத்தின் பொருட்டு இவர் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டியது யாதுக்கென்றும், த்ரௌபதியாருடைய புதல்வர் ஐவருக்கும் காத்தற்குரியவரா யிருந்த கிருஷ்ணார்ஜுநர் இருவருக்கும் அகாலமரண முண்டாவதற்குக் காரணம் யாதென்றும் வினவிய நான்கு விசேட வினக்களின் உத்தர விவரணங்களை புணர்த்தும்புராணம், இது மூப்பத் திராயிரம் கிரந்தமுடையது. இது மார்க்கண்டேயராற் சொல்லப்பட்டதனால் இப் பெயர்த்தாயிற்று.
மார்க்கண்டேயம் - பதினெண்புராணத்தொன்று.
மார்க்கண்டேயனர் - மதுரைத் தலைச்சங்கப் புலவருள் ஒருவர். புறநானூற்றில் ஒரு செய்யுள் இவராற் பாடப்பட்டது, இவர் செய்தானாலேகச்சினார்க்கினியார் தலையாயவேகத்தென்று கூறுவர், இத்தனை "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரையிற் காண்க.
மார்க்கண்டேயர் - மிருகண்டுமுனி புத்ரர், இவர் மகாரிஷி, இவர் தமது ஆயுளெல்லை பதினாறென்பதை யறிந்து தீர்க்காயுள்பெறக் கருதிச் சிவபெருமானை நாடோறும்இடைவிடாமற் பூசித்து அவரருளால் காலன் வலியை வென்றவர்.
மார்க்கதேனு - யோசனைதூரம்.
மார்க்கம் - ஆராய்வு,உலகம்,ஒருகூத்து, கஸ்தூரி,கையாந்தகரை, சமயம்,தானப்பிரமாணம் பத்திலொன்று, தெரு, மறுதலை, மார்கழிமாதம், மூலம், வழி.
மார்க்கவம் - கரிசாலை.
மார்க்கிகன்-வழிச்செல்வோன்வேடன்
மார்ச்சரியம் - பொறாமை, இது உட்பகையாறினொன்று, விகாரமெட்டினுமொன்று.
மார்ச்சனம் - துடைத்தல்.
மார்ச்சனி - விளக்குமாறு.
மார்ச்சனை-முழவின்வாய்வார்,முழவொலி.
மார்ச்சாரகண்டம் - மயில்.
மார்ச்சாரகம் - மயில்.
மார்ச்சாரம் - பூனை.
மார்ச்சாரி - கஸ்தூரி.
மார்ச்சாலகியாயம்-சந்தேகிக்கும் படியான நியாயம்.
மார்ச்சாலம் - கோமேதகம், பூனை, மரநாய்.

மார்த்தண்டன் - எருக்கு, பன்றி.
மார்த்தண்டம் - சூரியன்.
மார்த்தம் - ஒரு நீதிசாஸ்திரம்.
மார்த்தவம் - மிருதுத்தவம்.
மார்த்தண்டம் - பதினெண் புராணத்தொன்று அது சூரியமண்டலம்.
மார்த்தாண்டமண்டலம் - சூரியமண்டலம்.
மார்த்தாண்டன் - சூரியன்.
மார்த்தோல் - மரமேறிகள் மார்பிலிடுந்தோல்.
மார்பகம் - நெஞ்சு.
மார்பதை - மாதம்.
மார்பம் - மார்பகம்.
மார்பு - அகலம், நெஞ்சு.
மாலகம் - மேடு, வேப்பமரம்.
மாலதி - இரவு, இளம்பெண், ஒருமல்லிகை, சந்திரகிரணம், சிறுசண்பகம், புட்பம், மல்லிகை, முல்லை. காவிரிப்பூம் பட்டினத்திரா ஒரு பார்ப்பனி.
மாலபத்திரி - சாதிபத்திரி.
மாலதிபலம் - சாதிக்காய்.
மாலமாயம் - பேயின்றந்திரம்.
மாலம் - குங்குமமரம், பேய், வயல்.
மாலயம் - சந்தனம், மாளயம்.
மாலயற்கரியான் - சிவபிரான்.
மாலரும்பு - மராட்டிமொக்கு.
மாலர்-கவசம், பார்ப்பனப் பெண்ணுக்குஞ் சூத்திரனுக்கும் பிறந்தோர புலைஞர், வேடர்.
மாலவம் - ஒருதேசம்.
மாலவன் - புதன்.
மாலன் - விட்டுணு, வேடன்.
மாலாகண்டம் - நாயுருவி.
மாலாகாரன் - பூவிற்போன்.
மாலாதீபகம் - ஓரலங்காரம், தீபகச்சொல் மலையாய் வருவது (உ-ம்) மனைக்கு விளக்கு மடவாண் மடவாடனக்குத்தகைசால் புதல்வர்.
மாலாபலம் - உருத்திராக்கம்.
மாலி - ஆதித்தன், கள், மாலையணிந்தவன், சுகேசன்புத்திரன், இந்த ராக்ஷஸன் தேவாசுர யுத்தத்தில் விஷ்ணுமூர்த்தியாற்கொல்லப்பட்டவன்.
மாலிகன் - பூவிற்போன்.
மாலிகை - ஒருமது, கழுத்தணி, நிரல்படநிற்குங் குழுஉ, மகள், மாலை.
மாலிங்கம் - இலிங்கபாஷாணம்.
மாலிமி - இளமைப்பருவத்திற் செய்த கட்டு, மாலுமி.
மாலிமை - மாலுமி, மாலுமித்தனம்.
மாலியம் - புஷ்பம், மானம்.
மாலியவந்தம் - கிஷ்கிந்தைக்குச் சமீபத்திலுள்ள ஒருமலை, வாலி வதத்தின் பிறகு ராமலக்ஷ்மணர்களிருந்து கார்காலத்தைக் கழித்த விடம் இம்மலையே.
மாலியவான் } சுகேசன் புத்திரன்,
மாலியவந்தன் } முதல்முதல் இலங்காபுரியில் அரசுசெய்தவன் இவனே இவனை வென்று குபேரன் அரசனானன், அவனைவென்று இராவணன் இலங்கையைக் கைக்கொள்ள மாலியவான் அவனுக்கு மந்திரியானன்.
மாலினி - உமை, கங்கை, காளி, பூமாலைக்காரி.
மாலினி - ஒருநதி இது அயோத்திக்கு வாயுதிக்கில்அபராதலபர்வதங்களில் உற்பத்தியாகிக் கோசலதேசத்திற் பிரவகிப்பது.
மாலிகரணம் - நவபாதகத்தொன்று.
மாலுகம் - வேம்பு.
மாலுக்கிளையாள் - துர்க்கை, மால்தங்கை.
மாலுங்கம் - புளிமாதுளை.
மாலுடைக்கண்டன் - புருடாரகம்.
மாலுதல் - மயங்குதல்.
மாலுதாசனன் } கண்குத்திப்பாம்பு.
மாலுதானம் }
மாலுந்திவந்தோன் - பிரமன்.
மாலுமி - மீகாமன்.
மாலுமிசாத்திரம் - கடலோடிகளின் கணிதம்.
மாலுறல் - மயங்கல், மாறுபாடாய் நினைத்தல்.
மாலூரம் - வில்வமரம், வில்வம்.
மாலூதி - கருடன்.
மாலை - அந்திப்பொழுது, அரசன்மனை, இயல், இரா, ஒழுங்காயிருப்பது, ஒழுங்கு, சொல்லாலேனும் பூவாலேனும் பொன்னாலேனும் மணியாலேனுந் தொடுத்ததொடை, நோய், பெண், முறை, வரி.
மாலைக்காதம் - மாலைநேரம்.
மாலைக்கண் - மாலைக்காலத்திருப்பிடிக்குங்கண்.

மாலைக்காமாலை - மாலைக்கண்.
மாலைசூட்டு - சுயம்வரம்.
மாலைநுழைஞ்சான் - ஒருகருவி, ஒரு
மாலைநேரம் - அந்திப்பொழுது. [பூடு.
மாலைப்படிதம் - பனிக்கு.
மாலைப்பண் - மாலைப்பொழுது.
மாலைப்பொழுது - அந்திக்காலம்.
மாலைமாற்று - முதலெழுத்துக் கடை தொடுத்தும் வாசிக்க ஒரு படித்தாய் முடியும் பா.
மாலையணி - ஒரு அலங்காரம் அது பின் பின் வருவனவற்றிற்கு முன் முன் வந்தவற்றை விசேடணங்களாகவே னுஞ் சொல்லுதல் (உ-ம்) மன்னி வள்கண் காதளவுங் காது தோண்மட் டிசையும் எனவும் புனலு மதிளூற மருமதன் மணமுமெனவும் வரும்.
மாலையாங்காலம் - மாலைநேரம்.
மாலையீடு - மாலைசூட்டு.
மாலையுவமை - ஓரலங்காரம், அது ஒரு பொருட்குவரும் பல வுவமையை மாலையாகத் தொடுத்துக் கடைக்கட் பொருளைக் கூட்டியுரைப்பது.
மாலைவாரம் - மாலைப்பொழுது.
மாலைவெள்ளி - அந்திவெள்ளி.
மாலோன் - திருமால், புதன்.
மால் - அருகன, இந்திரன், கண்மணி, கம்மாளர்கருவியிலொன்று, கருமை, காற்று, கொட்டில், சோழன், திருமால், பழமை, புகர்நிறம், புதன், பெருமை, மயக்கம், மேகம், வலை, வீடு, வெற்பு, வேட்கை.
மால்சமயம் - விஷ்ணுசமயம்.
மால்தங்கை - உமை, ஏகம்பபாஷாணம்.
மால்தொடை - துளசி.
மால்பாகலட்சுமி - அரிதாரம்.
மால்பு - கண்ணேணி.
மால்முருகு - துளசி.
மால்மைத்துனன் - சிவபிரான், அருச.
மால்வணங்குமீசர்-திருமாற்பேற்றிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி
மால்வித்து - அப்பிரகம். [பெயர்.
மால்வீடு - சாலக்கிராமம்.
மால்வெட்டல் - நெல்லுவெட்டல்.
மாவகம் - இலுப்பை, காஞ்சிரை.
மாவசன் - அச்சோதைதந்தை.
மாவடியார் - ஏகாம்பரநாதர்.
மாவட்டை - செவ்வட்டை.
மாவகை - தேனில்லாவகை.
மாவலர் - குதிரைப்பாகர், யானைப்பா
மாவலி - ஒரு சக்கிரவர்த்தி. [கர்.
மாவிடை - மாச்செறிவு.
மாவிட்டம் - கடலுரை.
மாவிரதம் - உட்சமயமாறிலொன்று.
மாவிரதியர் - இலிங்கிகள்.
மாவிருக்கம் - சதுரக்கள்ளி.
மாவிலங்கு } ஒருமரம்.
மாவிலங்கை }
மாவிலக்தம் - விடத்தேர்.
மாவிலிங்கு - ஒருவகைமரம்.
மாவிலைத்தோரணம் - மாவிலையாலிடுந் தோரணம்.
மாவிளக்கு - மாவினாற்செய்த நெய் விளக்கு.
மாவிளம் - வில்வம்.
மாவிறங்கல் - மாப்பிடிப்புக் கீழ்படுதல், மாவிறங்கியது.
மாவீரன் - அதிவீரன்.
மாவுத்தன் - குதிரைப்பாகன், யானைப் பாகன்.
மாவுரம் - வலி.
மாவெனல் - அழைத்தல்.
மாவொல்லி - ஒருவிதவொல்லி.
மாழாத்தல் - மயங்குதல்.
மாழை - அழகு, அறிவின்மை, ஆயம், உலோகக்கட்டி, ஓலை, திரட்சி, புளி மா, பொன், மாமரம்.
மாழையங்கண்ணி - திருமலிவலத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மாழ்கு - சா, மயக்கம், மாழ்போன்னே வல், மிருகசீரிடம்.
மாழ்குதல் - சாதல், சோம்பல், மயக் கம், மேவல்.
மாள-முன்னிலை யசைச்சொல் (உ-ம்) சிறிது தவிர்ந்தீகமாளதின்பரி சில ருய்ம்மார்.
மாளயபட்சம்- புரட்டாசிமாதத்.௯ அபர பக்கத்தும் பிரதமைமுதற் பூருவபக் கத்துச் சதுத்திமட்டு முன்னர்காலம்.
மாளயம் - புரட்டாதிமாதத்திற் பண் ணும் பொதுச்சிராத்தம்.
மாளல் - மாளுதல்.
மாளவகவுளம் - ஓரிசை.

மாளவம் - தேயமம்பைத்தாறி னொன்று. முன்னர் உச்சயினிபுரமும் பின்னர்த் தாராபுரமும் இராஜதானியாகப் பெற்றதேசம், இது விதற்பதேசத்துக்கு வடதிசையிலுள்ளது,இது மாளுவம் எனவும்படும்.
மாளவி - ஒரிராகம். மத்திரதேசாதிபனுகிய அசுவபதியின் மனைவி, சாவித்திரியின் தாய்.
மாளிகை - அரசன்மனை, வீடு.
மாளிகைத்தேவர் - ஒரு ஞானசாரியர்.
மாளுதல் - சாதல், தாழ்தல்.
மாளுவவேந்தர் - மாளவதேசத்தரசர்.
மாறக்கட்டுதல் - இல்லையென்று புரட்டுதல்.
மாறல் - ஆடல் கொடுத்து வாங்குதல், தவிர்தல், மறுபுறமாக்கல், விடுதல், விற்றல், வேருக்கல்.
மாறன் - சடகோபாழ்வார், பாண்டியன், மாறிவருவது.
மாறனர் - மதுராசிரியன் மாறனர் எனப்படுவர் இவரே, இவர் இடைச்சங்கத்துப் புலவர்களுள் ஒருவர்.
மாருடி - மாறுபாடுகாரன்.
மாருடுதல் - எதிராடுதல், மயங்குதல்.
மாருட்டம் - மயக்கம், மாறுபாடு.
மாறி - மாருடி.
மாறு - தடைப்பம், பகை, பிரதி, மாறொன்னேவல், மிலாறு, விகாரம்.
மாறுகண் - சாய்ந்தகண்.
மாறுகம் - சீலை.
மாறுகூலி - மரமேற்றுக்கார்கூலி.
மாறுகோள் - ஒவ்வாமை, விரோதம்.
மாறுதல் - மாறல்.
மாறுத்தரம் - மறுமொழி. [தல்.
மாறுபடல் - மாறிப்போதல், விரோதித்
மாறுபடுபொருள் - ஒரலங்காரம் அது கருதிய பொருளை மறைத்ததனைப் பழித்தற்குமற்ருென்றைப்புகழ்வது
மாறுபாகை } பிசகு, மருதலிப்பு, விரோதம்.
மாறுபாடு }
மாறுவேடம் - வேற்றுருவம்.
மாறொக்கத்தாப்பசலையார் - கொற்கையைச் சூழ்ந்த நாட்டில் விளங்கிய இப்புலவர் 'காரி முதலியோரைப்பாடிப் பெருஞ் செல்வம் படைத்தவர் (புறநானூறு.)

மாற்கண்டேயம் - மார்க்கண்டேயம்.
மாற்கரியோனுதல்விழிப்பால் - அக்கினிமூலை.
மாற்சரியம் - மாச்சரியம்.
மாற்றமிலி - மௌனி.
மாற்றம் - சொல், பகை, வேற்றுமை.
மாற்றலர் - பகைவர்.
மாற்றல்-ஒன்றுகொடுத்தொன்று வாங்கல், ஒன்றை யொன்ருக்கல், கொடாமை, தீர்த்தல், விற்றல்.
மாற்றறிவரதேசுரர் - திருப்பைஞ்ஞீலியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
மாற்றவள் } சக்களத்தி, வேற்றுப் பெண்.
மாற்ருடிச்சி }
மாற்ருட்டி }
மாற்ருந்தகப்பன் - மாதாவின் பின்தாரத்துக் கணவன்.
மாற்ருந்தாய் - பிதாவின் பின்தாரத்துப்பெண்.
மாற்ருர் - பகைவர்.
மாற்ருன் - பகைவன்.
மாற்று - எதிர் கிரயம், பொன் வெள்ளின் தரம், மாற்றல்.
மாற்றுதல் - மாற்றல்.
மாற்றுகொடி - பிரதிகொடி.
மாற்றுயர்பொன் - தங்கம்.
மாற்றுவஸ்திரம் - வதிற்புடவை, விலையுயர்ந்தபுடவை.
மான-உவமைச்சொல் (உ-ம்)கொங்கை முகமான முன்னிலையசைச்சொல்.
மானக்கலை - அரையாடை.
மானசக்காட்சி - மனோதரிசனம்.
மானசசரோவரம் - மாநதப்பொய்கை.
மானக்கஞ்சாறநாயனர்-கஞ்சனூரெனவழங்கும் கஞ்சனூரிலே வேளாளர் குலத்திலே விளங்கிய ஒரு சிவபக்தர். மணக்கோலஞ்செய்து மணப்பந்தலின் கீழ்வந்திருந்த தமது புதல்வியினது கூந்தலை மாவிரதி வேடங்கொண்டு சென்று சிவபெருமான் கேட்க அதனை மறுக்காது கொய்து கொடுத்தவரிவரே.
மானக்குறை - மானக்கேடு.
மானக்கேடு - சங்கையீனம்.
மானச்சரசு } கைலாயத்தில் குபேரவனத்திலுள்ள சரசு,
மானசவாவி }

அன்னப்பக்ஷிகளுக்கு உறையிட மிருவே, அன்னங்கள் பிறவிடங்களிற் சென்று வாழினும் மழைக்காலத்தில் மீண்டு சென்று இவ்வாவியை அடையும், இந்த வாவியின் காட்சிமிக்க ரமணியமும் வசீகரமும் உடையதாம்.
மானசதீர்த்தம் - ஒருதீர்த்தம்.
மானசம் - கருத்து, புத்தி, மனது, மானதவாவி.
மானசன் - மந்மதன்.
மானசஜபம் - மனத்திற்செய்புஞ்செபம்.
மானசவிரதம் - கொல்லாமை முதலிய
மானசாலயம் - அன்னப்பறவை.
மானசூத்திரம் - அரைஞாண்.
மானதஞானம் - எழ்வகை ஞானத்தொன்று, அது சற்குருவருளான் மூலமலமறுத்தல்.
மானதபூசை - மனோபூசை.
மானதப்பிரத்தியட்சம்-மானதக்காட்சி.
மானதம் - மனத்துக்கடுத்தது.
மானதவாவி - பிரமலோகவாவி.
மானதீபம் - உபகிடதமுப்பத்திரண்டில் ஒன்று.
மானத்தாட்சி - மானக்கேடு.
மானதவாவி - மானசதடாகம்.
மானத்தோல் - பீஜம்.
மானபங்கம் - மானஹீனம்.
மானபாவி - பெரும்பாவி.
மானபோதம்-சிற்பநூல் முப்பத்திரண்டிலொன்று.
மானமா - கவரிமா.
மானமிருகம் - கவரிமா.
மானம் அகங்காரம், அபிமானம், அளவு, உவமை, ஒருவிதப் பொருத்தம், கணிதம், குற்றம், சேசம், பிடிப்பு, பெருந்தன்மை, பெருமை, மரியாதை, வலி, விமானம், வெட்கம்.
மானம்பாடி - வானம்பாடி.
மானரந்தரி - நாழிகைவட்டில்.
மானரியம் - பூராயம், விடுப்பு.
மானல் - இவச்சை, ஐயம், ஒத்தல், மயக்கம்.
மானவம் - உபபுராணங்களுளொன்று.
மானவர் - ஆண்மக்கள், படைவீரர், மனிதர், மானமுடையோர்.
மானவர்ஜிதன் - வெட்கமற்றவன்.
மானவிலங்கு - கவரிமா.
மானவு - தெளிவு.
மானவேதியன் - வேதமுணர் போதிவோன்.
மானனம் - சங்கை.
மானன் - தலைவன், மூடன், வேடன்.
மானு - பாட்டன்.
மானுகம் - பெருநாரை.
மானுகர் - கோவலன்றந்தை.
மானுபரணம் - மானமாகிய ஆபரணமுடையோன்.
மானுர் - பகைவர், பெண்கள்.
மானி - மானமுடையோன், மானியென்னேவல்.
மானிகை - ஒரு முகத்தளவு, சாராயம்.
மானிடச்சட்டை - மானிடதேகம்.
மானிடத்தன் - சிவபிரான்.
மானிடத்தன்மன் - குபேரன்.
மானிடமுடையோன் } சிவபிரான்.
மானிடமேந்தி }
மானிடத்தான் - சிவபிரான்.
மானிடம் } மனுஷப்பிறப்பு.
மானிஷம் }
மானிடர் } மனிதர்.
மானிடவர் }
மானிடவன் - சிவபெருமான்.
மானிடன் - சிவன், மனிதன்.
மானிடவைத்தியம் - ஓடதி கொண்டு செய்யும் வைத்தியம்.
மானிதம் - கனம், மானம்.
மானிதை - மகத்துவம்.
மானித்தல் - சங்கித்தல்.
மானிபம் - மானம், வெட்கம்.
மானியக்காரன் - சொந்தநிலக்காரன்.
மானியம் - அரசர்கள் சம்மானத்தால் விட்டநிலம், சங்கம்.
மானினி - பெண்.
மானுசன் - மனிதன்.
மானுடமடங்கல் - நாசிங்கம்.
மானுடம் } மானிடப்பிறப்பு.
மானுஷம் }
மானுடயாகம் - பஞ்சமா வெச்சத்தொன்று அது இரப்போர்க்குணவு முதலியவீதல்.
மானுடர் - மனிதர்.
மானுடவைத்தியம் - மானிட வைத்தியம்.
மானுஷகம் - மனுஷிகம்.
மானுதல் - மானல்.

மானுபாவன் - மஹாநுபாவன்.
மானுபாவி - மானபாவி.
மானேறு - உத்திரநாள், கலைமான்.
மானோக்கியகம் - சிறப்பு.
மான் - உருவம், ஒருமிருகம், குதிரை, பெண், மகரமீன், மகரராசி, மானென்னேவல், விலங்கின்பொது.
மான்களங்கம் - சந்திரகளங்கம்.
மான்கனிக்கண் - இருவட்டக்கம்பி.
மான்கையன் - சிவபிரான்.
மான்கொடி - ஒரு படர்கொடி.
மான்செவி - இலைக்கள்ளி, எருமைநாக்கிப்பூடு.
மான்செவிக்கள்ளி - ஒருகள்ளி.
மான்மகன் - பிரமன், மன்மதன்.
மான்மதம் - கஸ்தூரி.
மான்மதச்சேறு - கஸ்தூரிக்குழம்பு.
மான்மியம் - மகிமை, சரித்திரம்.
மான்மைத்தனன் - சிவபிரான்.
மான்றலை - மிருகசீரிடம்.
மான்வேடன் - மாரீசன்.
மான்றல் - மயக்கம், மயங்கல்.
மாஹேசுவரசூத்திரம் - ஸம்ஸ்கிருத வியாகரணத்துக்கு முதனூலாகச் சிவபிரான் தமது டமருகத்தி னின்றுந் தோற்றுவித்தசப்தமூலசூத்திரங்கள்.
மாஹிஷ்மதி - நர்மதாநதி தீரத்திலுள்ள ஒருநகரம். [று.
மாஹேசுவரம் - உபபுராணங்களுள்ஒன்
மாஹேயர் - இப்போது முல்டான் என்று வழங்குகிற தேசத்துப் பிராசீக வேளாளர்.

மி

மிகல் - கடத்தல், மிகுதல்.
மிகவல்லோர் - அதிவீரர், அறிஞர்.
மிகவும் - மிகுதியும்.
மிகன் - பெருமை.
மிகன்மக்கள்-பெருமையிற்சிறந்தோர்.
மிகிரம் - காற்று, முகில்.
மிகிரன் - சந்திரன், சூரியன்.
மிகிராணன் - சிவபிரான்.
மிகுகளிப்பு - பெருமகிழ்ச்சி.
மிகுகொடையாளன் - கன்னன், தியாகி.
மிகுண்டம் - சாறணை.
மிகுத்தியல் - வில்வம்.
மிகுர்குதல் - மிகுத்தல்.
மிகுதம் - மிகுதி.
மிகுதல் - அதிகப்படல், கடத்தல், பூரித்தல்.
மிகுதி - அதிகம், திரட்சி, பூரிப்பு, பொலிவு, மதர்ப்பு, மீதி.
மிகுத்தல் - அதிகப்படல்.
மிகுத்துச்சொல்லல்-விதந்துசொல்லல்
மிகுந்தவனம் - தண்ணீர்விட்டான்.
மிகுப்பலத்தம் - காத்தொட்டி.
மிகுவெறி - பெரும்பைத்தியம்.
மிகை-குற்றம், கேடு, துன்பம், மிகுதி, வருத்தம்.
மிகைபடைக்கூறல்-அதிகப்படச்சொல்லுதல், அது நூற்குற்றம் பத்தில் ஒன்று.
மிகைபடல் - குற்றப்படல், மிகுதல்.
மிகையதன்செய்கையுருவகம் - ஓரலங்காரம் அது உருவகம் செய்கையிலொத்தும் யாதோமிக்குள தெனச்சொல்வது.
மிகையொற்றுமையுருவகம் - உருவகத்தில் யாதுமோர் யேற்பாடு தோன்றச்சொல்வது (உ-ம்) தடங்கட்டெண்டை.
மிக்கது - மிகுதியானது.
மிக்கவன் - பெருமையிற்சிறந்தோன்.
மிக்கவை - உச்சிட்டம், ஊண், சோறு, நியாயமல்லவை, நிறை.
மிக்கான் - மேலானோன்.
மிக்கிளமை - கட்டிளமை.
மிக்கு - மிகுதி.
மிக்கோர் - அறிஞர், பெரியோர்.
மிசி - தாளிசபத்திரி, சதகுப்பை.
மிசிகம் - பாம்புவளை.
மிசிரகேசி-வசுதேவன்தம்பியாகிய வற்சகன் மனைவி.
மிசிரம் - கலப்பு, சமம்.
மிசிரவர்ணம் - கலப்புநிறம்.
மிசிரன் - கல்வியாலுயர்ந்தபெரியோர்க்குரிய ஒரு வரிசைப்பெயர், கிருஷ்ணமிசிரன் வராஹமிசிரன், என்பன போல்வன.
மிசிரஸ்தாநம் - துருக்கரால் மிசிரு என்று வழங்கப்படுகிற ஒருதேசம், தற்

காலத்தில் ஐரோப்பியரால் ஈஜிப்ட் என்று வழங்கப்படுகின்றது. யயாதியால் தன் தேசத்தினின்றும் ஓட்டப்பட்ட அவன் புத்திரர் நால்வரும் இந்த மிலேச்ச தேசத்திற் சென்று அத்தேசத்தரசராகி அந்தத் தேசத்தச்சனங்களோடு கலந்தமையால் இது மிசிரஸ்தாநம் என்னும் பெயருடைத்தாயிற்று.
மிசுக்கன் - ஈனன், தரித்திரன்.
மிசுக்கை - சின்னத்தனம்.
மிசுரம் - உச்சவிசை.
மிசை - உணர்வு,உயர்ச்சி,சோறு,தரித்திரம்,மிசையென்னேவல்,மீமிசைச்சொல், மேடு, மேல்.
மிசைதல் - அனுபவித்தல், உண்டல்.
மிசைத்திரன் - காடு.
மிசைவடம் - வீரதண்டை.
மிச்சம் - சேடம், மிகுதி.
மிச்சரம் - மிசிரம்.
மிச்சிரகாவகம்-இந்திரன்பூந்தோட்டம்.
மிச்சிரம் - கலப்பு.
முருக்கிதழ் - முருக்கம்பூப்போலும் அதரம்.
முருக்கு - எலுமிச்சை, கிஞ்சுகமரம், கொலை முருக்கென்னேவல்.
முருக்குதல் - அழித்தல், உருக்குதல், கொல்லல்.
முருங்கல் }
முருங்குதல் } அழிதல்.
முருங்கை - ஒருமரம்.
முருடர் - வேடர்.
முருடு - ஒருவாச்சியம், பறைப்பொது, பெருங்குறடு, விறகு.
முருந்தம் }
முருந்து } கோமளாஸ்தி, இறகினடியிற்குருத்து, வெட்டிய மரத்தினடி, வெண்மை, வெண் குருத்து.
முருமுரன் - சூரியன்குதிரையிலொன் [று.
முருவிலி - வவ்வாலொட்டி.
முரை ஒன்பதாம்நந்தன் மனைவி, இவன் சந்திரகுப்தன் தாய், இவள் சூத்திர குலத்தினள்.
முர்முரெனல் ஈரடுக்கொலிக்குறிப்பு.
முலரம் - மலாம்.
முலை - கொங்கை, விலங்கின்மடி.
முலைக்கச்சு - இரவிக்கை.
முலைக்கட்டு - இரவிக்கை, ஒரு சிலந்தி.

முலைக்கண் - முலைப்பால்வருந்துவாரம்.
முலைக்காம்பு - முலைக்கண்.
முலைக்கால் - ஆட்டுக்கால்.
முலைக்கோடு - ஸ்தநாக்ரபாகம்.
முலைத்தாய் - செவிலித்தாய்.
முலைப்பணி - ஸ்தநாபரணம்.
முலைப்பாவை - புற்ரும்பழம்.
முலைப்பால்-பெண்கள் முலையின்பால்.
முலைமார்பு - நெஞ்சு.
முலைமுகம் - முலைச்சிகரம்.
முலைமூடி - கச்சு, கஞ்சுகம்.
முலையணி - ஸ்தநாபரணம்.
முல்லை இசை, ஐந்நிலத்தொன்று, அது காடுங் காடுசார்ந்தவிடமும், ஒருமரம், கற்பு, மன்மதன் கணையினென்று, முல்லைக்கொடி, வனமல்லிகை, வெற்றி.
முல்லைக்கருப்பொருள் - முல்லை நிலத்துற்பத்திப் பொருள் அவை முல்லைத்தெய்வம் முதற் கான்யாறுடலீருயவாம்.
முல்லைக்கான்யாறு முல்லைநிலத்தியாறு
முல்லைக்குழல் - முல்லைக்கொடியால் முப்புரியாகத்தெற்றிய வளையை வளைவாய்க்கட்டெறித்து துங்குழல்.
முல்லைத்தலைவன் - குறும்பொறை, நாடன், திருமால்.
முல்லைத்தலைவி - கிழத்தி.
முல்லைத்திணை - முல்லைக்குரியன.
முல்லைதெய்வம் - திருமால்.
முல்லைத்தொடை - முல்லைமலராற்றொடுத்த மாலை அது கற்பிற் சிறந்த மகளிர்க்குரியது.
முல்லைநகைவடிவாள் - திருமயேந்திரப்பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
முல்லைநிலத்தூர் - பாடி.
முல்லைநிலநீர் - கான்யாறு, குறுஞ்சுனை.
முல்லைநிலப்பண் - முல்லை நிலத்திற்குரியராகம்.
முல்லைநிலப்பயிர் - காராமணி சாமைவரகு.
முல்லைநிலப்பறை - பம்பை.
முல்லைநிலப்புள் - காட்டுக்கோழி.
முல்லைநிலப்பெண் - ஆய்ச்சி
முல்லைநிலமரம் - காந்தள், காயாகுருந்து கொன்றை துளசி முதலிய.
முல்லைநிலமாக்கடொழில் - ஏறு தழுவல் கான்யாறு குளித்தல் குரவையாடல் குழலூதல் பசுமேய்த்தல்.
முல்லைநிலமாக்கள் - ஆயர்.
முல்லைநிலம் - மான்முயல்.
முல்லைநிலம் - காடாகியநிலம். [ல்.
முல்லைப்பல் - முல்லையரும்புபோன்றபல்.
முல்லைப்பாட்டு - ஒருநூல், இது, காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனாரால் பாடப்பட்டது.
முல்லைப்புறம் - இல்லாண்முல்லை, பாசறைமுல்லை.
முல்லைமுதற்பொருள் - புறவும் புறவுசார்ந்த விடமும் கார் மாலை என்னும் பெரும்பொழுது சிறு பொழுதகளுமாம்.
முல்லையர் - இடையர்.
முல்லையாழ்-முல்லைநிலத்திற்குரியயாழ்.
முல்லையுரிப்பொருள் - உரிப்பொருள்.
முல்லைவனநாதர் - திருமுல்லைவாயிலில் கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
முல்லைவநேசர் - திருக்கருவூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
முல்வயன் } முன்வாயன்.
முல்வாயன் }
முவலம் - அவுபலபாஷாணம்.
முழக்கம் - ஆரவாரம், ஒலி, குமுறுகை, மேகத்தில், ஒலிப்பு.
முழக்கல் - முழக்குதல்.
முழக்கு - ஒலி, முழக்கென்னேவல், மேகோற்காரம்.
முழக்குதல் - தொனிப்பித்தல்.
முழக்கோல் - நிலமளக்குங்கோல், முழக்கம்பு.
முழங்கல் - ஒலித்தல், வானங்குமுறல்.
முழங்கனீர் - கடல்.
முழங்கால் - முழந்தாள்.
முழங்காற்சில்லு - முழந்தாளினுருளை.
முழங்கை - மணிக்கட்டின்கீழ்.
முழங்கோதை - முழங்கொலி.
முழத்துண்டம் - முரத்துணி.
முழந்தாட்கச்சு - அரைச்சட்டையும் காலுறையும் பூட்டிக்கட்டுமோர்கச்சு.
முழந்தாள் } முழங்கால்.
முழந்து }

முழம் - இருசாண்கொண்டது.
முழல் - சுழற்சிக்கொடி.
முழவம் - குடமுழா, முரசு.
முழவின்மார்ச்சனை - மண்.
முழவு - பறைப்பொது.
முழவுக்கனி - பலா.
முழவுத்தோள் மத்தளம்போலும் புயம்.
முழா - மேளம்.
முழாசு - சுவாலை.
முழாசுதல் - சுவாலித்தல்.
முழாவுசால் - முடிவுசால்.
முழி - விழி.
முழுகல் } குளித்தல்.
முழுகுதல் }
முழுக்க - முழுதும்.
முழுக்காடுதல் } அப்பியங்கஸ்நானம்.
முழுக்காட்டல் }
முழுக்காட்டு - நீராட்டு.
முழுக்காளி - சலாபங்குளிக்கிறவன்.
முழுக்கு - மாதவிடாய், முழுகல்.
முழுக்கூறு - முழுமை.
முழுக்கொலை - பிராணவதை.
முழுங்கல் - விழுங்கல்.
முழுச்சவுரம் - சருவாங்கசௌளம்.
முழுச்சேதம் - முழுநஷ்டம்.
முழுச்சௌளம் - முழுச்சவுரம்.
முழுது } எல்லாம்.
முழுதும் }
முழுதொருங்குணர்ந்தோன் - அரன், அருகன், கடவுள்.
முழுத்தசுரம் - ஒருநோய்.
முழுத்தம் - முகூர்த்தம்.
முழுத்தல் - முழுமையாதல், மூழ்குவித்தல்.
முழுத்திருடன்-பெருந்திருடன்.
முழுநட்டம் - முழுச்சேதம்.
முழுநா - இராசிக்குப்பங்குபடாநாள்.
முழுநோக்கு - பூரணநோக்கு இது கிரகநோக்கில் ஒன்று.
முழுப்பகை - பெரும்பகை.
முழுப்பார்வை - பூர்ணதிருஷ்டி.
முழுமகன் - அறிவிலான், மூடன்.
முழுமணி - தொளையாதமணி.
முழுமதி - பூரணசந்திரன்.
முழுமதிக்குடையோன் - சந்திரன்.
முழுமனை - அறுபதடி நீளமும் நாற்பதடி அகலமுங்கொண்ட நிலம்.
முழுமன் - முழுமை.
முழுமுதல் - கடவுள்.
முழுமுற்றும் - முழுதும்.
முழுமை - எல்லாம், முற்றும்.
முழுவதுஞ்சேறல்விலக்கு-ஓரலங்காரம் அது ஒருபொருட்கோர் காரியத்தைக்காட்டித் திரும்ப எல்லாவற்றின்மேலுஞ் செல்லுவதாகக் கூறியதற்குமாத்திரமன்றெனல்.
முழுவதும் - முழுமை.
முழுவலயம் - முழுவட்டம், வெற்றி.
முழுவெலும்பு - தசைகழிந்தவென்பு.
முழை - குகை, துடுப்பு.
முழைஞ்சு - மலையினுட்குகை.
முழைத்தல் - எழுத்தில்லாவோசை.
முழைவாசி - சிங்கம்.
முழகாணை - ஒருபூடு.
முளரி - ஓமவிறகு, கடைக்கொள்ளி, காடு, தாமரை, நுண்மை, நெருப்பு, முட்செடி, விறகு.
முளரிநாளம் - தாமரைவளையம்.
முளரிப்பகை - சந்திரன், பனி.
முளரிமாது - சரசுவதி, திருமகள்.
முளரியான் - பிரமன்.
முளவு - முட்பன்றி.
முளா - முள்ளங்கி.
முளி - குளசு, மர முதலியவற்றின்கரடு, முளியென்னேவல்.
முளித்தல் - காய்தல், வறத்தல்.
முளை - அங்குரம், ஆப்பு, தண்டாயுதம், தறி, நாணபவச்சு, பருவின் முளை, மகன், முளையாணி, முளையென்னேவல், மூங்கில்.
முளைக்குதல் - அரும்புதல், வெளிப்படல்.
முளைக்கூச்சு - குண்டூசி.
முளைக்கொட்டு - ஆற்றுக் காலாட்டிப் பெண்களினோர் விளையாட்டு.
முளைதெளித்தல் - முளையிடல்.
முளைத்தல் - முளைக்குதல்.
முளைப்பாலிகை - அங்குரார்ப்பணம்.
முளைப்பு - முளைத்தல்.
முளையடித்தல் - ஆப்பறைதல், நாணயமச்சடித்தல்.
முளையாணி - கதவுநிற்குமிரும்பு.
முளையான் - குழந்தை.
முள் - நுண்மை, முள்ளு.
முள்காத்தல் - மௌனமாயிருத்தல்.

முள்வறையன் } ஒரு கறையான்
முள்வாயன் }
முள்ளங்கத்திரி - முள்ளாங்கத்தரி.
முள்ளங்கி - ஒரு கிழங்கு.
முள்ளங்கிழங்கு - ஒரு கிழங்கு.
முள்ளந்தண்டு - முள்ளெலும்பு.
முள்ளம்பன்றி - முட்பன்றி.
முள்ளாங்கத்தரி - ஒருசெடி.
முள்ளி - ஒருசெடி.
முள்ளிக்கீரை - ஒருகீரை.
முள்ளிலவு - ஒருமரம்.
முள்ளு - ஒருகருவி, நுண்மை,மரத்தின் முள், மீன்முள்.
முள்ளுடைய மூலம் - முள்ளுள்ளவை.
முள்ளுநாயகம் - ஒருகொடி.
முள்ளுப்பலா - ஒருபலா.
முள்ளெலி - ஒரெலி.
முள்ளெலும்பு - முள்ளந்தண்டு.
முறண்டு - முரண்டு
முறண்டுகம் - அவுபலபாஷாணம்.
முறச்செவியன் - யானை.
முறம் - சுளகு, விசாகநாள்.
முறி - அடிமை, இலை, உயர்ந்தவெண்கலம், எழுதுமுறி, ஒருவகைப் புடைவை, தளிர், தண்டு, முறியென்னேவல், மூலமுறி.
முறிகரை - இடிகரை.
முறிகட்டி - உயர்ந்த வெண்கலக்கட்டி.
முறிக்கலை - உலதிரத்துண்டு.
முறிக்கலைச்சுருக்கு - தண்டுபெற்றகலையாகிய சுருக்கு அது தண்டிற் கட்டியிருப்பதை யவிழ்த்துச் சுத்தாசமந முதலிய செய்தற்குக் கையிற் சுருக்கிக் கொள்ளப்படுவது.
முறிக்குதல் - முறித்தல்.
முறிச்சாதனம் - முறிப்பத்திரம்.
முறிச்சி-விற்றற்குரியஅடிமைப்பெண்.
முறிதல் - திரைதல், முரிதல்.
முறிதிரிகுலை - ஒருகுலை.
முறித்தல் - முறிதல்.
முறிப்பத்திரம் முறிச்சீட்டு.
முறிப்பு - முரிப்பு.
முறியல் - விற்றற்குரிய அடிமைகள்.
முறியல் - முறிதல்.
முறியன்-விற்றற்குரியஅடிமைக்காரன்
முறிவு - முரிவு.
முறிவெட்டியான் - ஒருசுடற்காளான்.

முறுகல் - கடுமைபடல், திருகல், முதிர்தல், வேகங்கொள்ளுதல்.
முறுகுபதம் - முதிர்ந்தபதம்.
முறுக்காவு - ஒருபாம்பு.
முறுக்கல் - கோபித்தல்,திரித்தல்,வலித்தல்.
முறுக்கவரை - ஒரவரை.
முறுக்கவிழ்தல் - கட்டுநெகிழ்தல்.
முறுக்காணி - சுரியாணி.
முறுக்கு - ஒரு பண்ணிகாரம், பிணக்கு, புரி, முறுக்கென்னேவல், வீறுப்பு.
முறுக்குதல் - சினத்தல், முறுக்கல்.
முறுக்குப்பணிகாரம் - ஒரு பண்ணிகாரம்.
முறுக்குவிரியன் - ஒருவகைப்பாம்பு.
முறுமுறுப்பு - குறைசொல்லல்.
முறுவஞ்சி முத்து.
முறுவலித்தல் - சிரித்தல்.
முறுவலிப்பு - புன்னகை.
முறுவல் - எயிறு, சிறிப்பு, இது இறந்தொழிந்த நாடகத் தமிழ் நூல்களுள் ஒன்று, பழைய காப்பியம் ஐந்தனுள் ஒன்று.
முறுவல்முகம் - நகைமுகம்.
முறை-இடைச்சொல், உறவொழுங்கு, ஒழுக்கம், ஒழுங்கு, கிராமம், குணம், தரம், பழமை, புத்தகம், முறைமை, முறையீடு, வரிசை.
முறைகாரர் - முறைப்படிசெய்வோர்.
முறைகேடு - தப்புநெறி.
முறைக்காச்சல் - ஒன்றை விட்டொருநாள்வருங் காச்சல்.
முறைதெரிந்தோன் - சிற்பாசாரி, பிரமன்.
முறைதெரிபகவன் - பிரமன்.
முறைத்தல் - விறைத்தல்.
முறைத்தவறு - கிரமக்கேடு.
முறைதிரணிறை - நேர்திரணிறை.
முறைப்படுதல் - முறையிடுதல்.
முறைப்பாடு - முறையீடு.
முறைப்பு - விறைப்பு.
முறைமசக்கு - முறைகேடு.
முறைமயக்கி - குப்பைமேனி.
முறைமாறுதல் - ஒழுங்கு தப்பிவரல், முறைப்படி மாறுதல்.
முறைமாற்றுதல் - கிரமத்தைக் கெடுத்தல்.

முறைமை - ஒழுக்கு, கட்டளை, கிரமம்.
முறையிடுதல் - குறைகூறுதல்.
முறையிலுயர்புகவிற்சியணி - ஓரலங்காரம், அது காரணகாரிய மொருவழி கிகழ்வதாகக் கூறுவது.
முறையிலோர் - கீழ்மக்கள்.
முறையினிலைமை - கட்டளைமுறை
முறையின்வைப்பு - நூலழகினென்று.
முறையீடு - முறைப்படுதல்.
முற்கந்தெரித்தல் - தொனிவைத்தல்.
முற்கம் - செற்சிதம், பச்சைப்பயறு.
முற்காம் - ஓராயுதம், சம்மட்டி, படைக்கலம்.
முற்காவன் - குபேரன்.
முற்கலம் - உபநிடத முப்பத்திரண்டினென்று.
முற்கலன் } இவ்விருடிமிகுசிலமுடை
முற்கவன் } யவராய்த் தூர்வாசரிஷி முதலியோர்களை நட்புச்செய்துதெய்வலோகத்தளவும் பிரசித்திப்பெற்றவர். அஜமீடன் இரண்டாம் புத்திரனாகிய நீலன் வமிசத்தவன், தந்தை அரியசுவன், இவன் மகன் திவோதாசன். இவன் புதல்வி அலிகை, இவன் கௌதமரிஷி பத்தி, இந்த முத்கலன் க்ஷத்ரியனாயினும் தபசினால் பிராமணன் ஆயினன், இவன் வமிசத்துப் பிராமணர் மௌத்கல்யகோத்திரத்தாரென்று சொல்லப்பட்டு இன்றளவு மிருக்கின்றனர்.
முற்கு - செற்சிதம்.
முற்குனம் - பூராடம்.
முற்குறி - உற்பாதம்.
முற்கூறு - துவக்கம், முற்பாகம்.
முற்கொழுங்கோல் - பூரட்டாதி
முற்சநநம் - முற்பிறப்பு.
முற்சனி - மசநாள்.
முற்சாமம் - முதற்சாமம்.
முற்பகல் - ஒருபகலின் முற்பகுதி.
முற்பக்கம் - பூர்வபக்ஷம்.
முற்படல் - எதிர்தல், முந்தல்.
முற்படுதல் - எதிர்ப்படுதல், கையிடுதல், பிணைப்படுதல், முந்துதல்.
முற்பவம் - பழையபாவம், முற்பிறப்பிற்பாவம், முற்பிறப்பு.
முற்பழி - பூருவப்பழி.

முற்பனி - மார்கழி தை மாதங்களிற்பனி.
முற்பாடு - முற்படுகை.
முற்பால் - முற்கூறு.
முற்பிறப்பு - முற்சநநம்.
முற்ற - எல்லாம்.
முற்றத்துறத்தல் - சந்நியாசித்தல்.
முற்றம் - முன்றில்.
முற்றல் - காழ்கொள்ளல், முடிதல், முதிருதல், மூப்பு, வளைத்தல், வளைவு, வெறுத்தல்.
முற்றவுணர்கை - கடவுளெண்குணத்தொன்று.
முற்றவுணர்தல் - முற்றுமறிதல்.
முற்றளபெடை - எல்லாச் சீர்க்கண்ணுமளபெடை வரத்தொடுப்பது.
முற்றறிவு - பேரறிவு.
முற்றறிவன் - கடவுள்.
முற்றாமை - முடியாமை.
முற்றாய்தம் - தன் மாத்திரையிற்குன்றுவாய்ந்த வெழுத்து.
முற்றிகாம் - முற்றியலிகாம்.
முற்றிக்கை - முற்றுக்கை.
முற்றியலிகாம் - ஓசைகுன்றாவிகாம்.
முற்றியலுகாம் - ஓசைகுன்றாவுகாம்.
முற்றியைபு - எல்லாச்சீர்க்கண்ணுமியைபுவரத் தொடுப்பது.
முற்றில்-சிறுமுறம், முற்றம், விசாகநாள்
முற்றிழை - பெண்.
முற்று-எல்லாச்சீர்கண்ணுமோனை முதலாயின வருவது, முடிவு முற்றென்னேவல்.
முற்றுகாம் - முற்றியலுகாம்.
முற்றுகை - குறைவு, நெருக்கம், முற்று
முற்றுணர்ச்சி - பூர்ணஞானம். [தல்.
முற்றுதல்-முடிதல், முதிர்தல், விளைதல்.
முற்றுதொடர்மொழி, எழுவாயும் பயனிலையு முடிவுபெற்று நிற்பன.
முற்றுமடக்கு - ஓரலங்காரம், அது அடிமுழுது மடங்கி வருவது.
முற்றுமுருகுவெண்பா - நான்கடியுமுடுக்காய் வருவது.
முற்றுமுரண் - எல்லாச்சீர்க்கண்ணுமுரண்வரத் தொடுப்பது.
முற்றுமோனை - எல்லாச் சீர்க்கண்ணுமோனைவரத் தொடுப்பது.
முற்றும் - எல்லாம் கடை, பெயரெச்சம், மூலநாள்.

முற்றுருவகம் - அவயவ அவயவிகளை எற்ற இடத்தோடும் பிறவற்றோடும் முற்ற உருபகஞ்செய்வது (உ-ம்) உள த்தடத்து விழிவண்டுமொழித்தேனு முளமலரொன் றும் மலர்ந்தது.
முற்றுவமை - பூர்ணோபமம்.
முற்றுவினை - வினைமுற்று.
முற்றூட்டு - பூர்ணநுபவபூமி.
முற்றெச்சம் - வினையெச்சத்திற்காக வழங்கப்படும் வினைச்சொல்.
முற்றெதுகை - எல்லாச்சீர்க்கண்ணுமெ துகை வரத்தொடுப்பது. [டு.
முற்றெருத்தின்செவி -எழுத்தாணிப்பூ
முனி-அகத்தி,தவத்தோன், பலாசு,புத் தன்முனியென்னேவல்,யானைக்கன் று, வில், தக்கன் புதல்வியருள் ஒருத் தி.
முனிசடிலம் - தவசும்.
முனிச்சிரேட்டன் - முனீந்திரன்.
முனிஷி - பாஷைபயிற்றுவோன்.
முனிதல் - சினத்தல், வெறுத்தல்.
முனித்துருமம் - காரகத்தி.
முனிந்துரை - வெந்தயச்செடி.
முனிபித்தலம் - தாமிரம்.
முனிபுங்கவன் - முநிசிரேஷ்டன்.
முனிமூத்திரம் - கல்லுப்பு.
முனிவர் - அந்தணர், சடைமுடியோர், தவத்தோர்.
முனிவறுமை - கோபமாறுமை, அது உயிர்வேதனையி னின்று.
முனிவு - கோபம், சினம், வெறுப்பு.
முனீந்திரன் - புத்தன், முனீசுரன்.
முனை-அணிவு,தனி,பகை, முதன்மை, முனையென்னேவல், யுத்தம், வினை வெறுப்பு.
முனைசுனை - விகண்டிப்பு.
முனைதல்-சினக்குறிப்பு,போர்கலத்தல், முனையாக்கல்.
முனைந்தோர் - பகைவர்.
முனைப்பதி - பாடிவீடு.
முனைமடிதல் - அபசயப்படுத்தல், கூர் மழுங்கல்.
முனைமுகம் - போர்முகம்.
முனையடுவார்நாயனுர் - சோழ நாட்டி லே திருநீடூரிலே வேளாளர் குலத் திலவதரித்துக் கூலிப்படையாளாகப் போர்முனையிற் சென்று பொருது பொருளீட்டி அப்பொருளைக் கொ ண்டு சிவனடியார்க்குத் திருவமுது செய்வித்தலே விரதமாகக்கொண்ட ஒரு சிவபக்தர்.
முனையிடம் - பாலைநிலத்தூர், போர்க் களம்.
முனையுள்ளோன் - தைரியவான்.
முனைவர் - பகைவர், முனிவர்.
முனைவன்-அருகன்,கடவுள், பகைவன், புத்தன்.
முனைவு - கோபம், சினம், வெறுப்பு.
முன்-இனியென்பது,ஏழனுருபு (உ-ம்) கற்றூர் முற்றோன்று கழிவிரக்கம், பக்கம், பழமை, முதல், முன்பு,முன் னென்னேவல், மேல்.
முன்கட்டு - முன்னுலேகைமடித்துக் கட்டுதல், வீட்டின்முற்பக்கம்.
முன்குடிமி - முக்கொண்டை.
முன்குடுமிப்பார்ப்பார் - சோழியப் பார் ப்பார், மலையாளப்பார்ப்பார்.
முன்கை-கெண்டைக்கை,முன்புறம்[ல்
முன்கைவளை - முன்கையிலிடும்வளைய
முன்கொம்பு - பல்லக்கின்முன்புறக் கொம்பு.
முன்சொல் - பழமொழி.
முன்தண்டு - முற்படை.
முன்தளை - முன்னங்காற்கட்டு.
முன்பக்கம் - முன்புறம்.
முன்பனி - மார்கழி தை மாதங்களிற் பனி, மார்கழி தையின் பருவம்.
முன்பனியுரிமை - கொண்டல்வீசலுஞ் சிதகன் கூதை ஆர்த்தை இவை மகிழ் தலும் மாவுஞ் சிவந்திபூ மலர்தலும் இலந்தை பழுத்தலும் செந்நெல் விளைதலும் கரும்பு முதிர்தலுமாகும்.
முன்பன் - முதல்வன்.
முன்பிறந்தாள் - அக்காள்.
முன்பாலைநாடு - குமரியாற்றுக்கும் பஃ றளி யாற்றுக்கும் இடையிலுள்ள நாடு.
முன்பு - பழமை, பெருமை, முன்,வலி.
முன்மடி - மேன்மடி.
முன்மறம் - முற்கோபம்.
முன்மாதிரி - பூருவநடை.
முன்முகப்பு - ஆசாரவாயில்.
முன்முகனை - துவக்கம்.
முன்முச்சியம் - அவிழ்த்தல்.

முன்முடுகுவெண்பா முன்னிரண்டடி முடுக்காய்வருதல்.
முன்மொழி - தொடர்மொழியின்முன் னிற்குஞ்சொல், மூதுரை, வேதம்.
முன்மொழிந்துகோடல் - ஓர்யுத்தி, அது முன்னே ஒன்றனைச் சொல்லிப் பின்பு அதனை வேண்டுமிடத்தோ றும்மெடுத்துக்கொள்ளல்.
முன்வாய் - உதடு, வாய்முகனை.
முன்றலை - முன்கார்கட்டு.
முன்றுதை - பாட்டன்.
முன்றுய் - பாட்டி.
முன்றுனை - முன்றேனை, மேற்போர் [வை.
முன்றில் - முற்றம்.
முன்றொடரி ஒருசெடி.
முன்றோன்றல் - தமையன்.
முன்னக்கால் - முன்பக்கத்திற்கால்.
முன்னங்கை - முன்கை.
முன்னடி - முன்னே.
முன்னடியான் - காவற்றேவதை.
முன்னடைப்பான் - மிருகங்கட்கு வரு மோர்நோய்.
முன்னணி - முற்படை.
முன்னணை - மாட்டுத்தொட்டி, முதற் பிள்ளை.
முன்னதம் - கரலட்சணத்தொன்று, அ துபதாகைக்கையில் சுட்டுவிரலைப் பி ரித்திடலாம்.
முன்னந்தொடை - தொடையின் முற் பக்கம், தோள்.
முன்னமிசம் - முற்கூறு.
முன்னம் - கருத்து, குறிப்பு, சீக்கிரம், சீக்கிரியரம், மனம், முன்.
முன்னர் - ஆதி, இடம், நெஞ்சு, முன்.
முன்னவர்விலக்கு - ஓரலங்காரம், அது குறிப்பி னொருபொருளை விலக்கு வது.
முன்னல் - கினைத்தல், நெஞ்சு.
முன்னவள் - தமக்கை, மூதேவி.
முன்னவன் - கடவுள், சிவன் தமையன் முதலானவன்.
முன்னவையகத்தினை - எடுத்துப்பொ ருடோன்ற முன்னையவற்றை விரித் துக்காட்டல்.
முன்னிடுதல் - நேரிடுதல்.
முன்னிட்டி-விலங்குணவிடுந்தொட்டி.
முன்னிரவு - இரவின்முற்பகுதி.
முன்னிரா - இரவின்முற்பகுதி.
முன்னிருட்டு - முன்னிராவிருள்.
முன்னிரை-பெருந்தொகைக்கூட்டம்.
முன்னிலவு - முன்னிராவின்நிலவு.
முன்னிலை - காரணம், முகதா, மூவிடத் தொன்று.
முன்னிலைகாரன் - கொல்லர், தச்சர், வண்ணுறிற் றலைவன்.
முன்னிலைத்தீபகம் - தீபகாலங்காரத் தொன்று.
முன்னிலைப்பன்மைவினைமுற்று - இர், ஈர் என்னும் விகுதிகளையுடையபன் மை வினைமுற்று.
முன்னிலைப்புறமொழி - முகதாவினிற் போர்க்குப்பிறருடன் பேசுதல்போற் பேசல்.
முன்னிலைமொழி - அறத்தொடுநிலை.
முன்னிலை யேவலொருமை வினைமுற் று - ஆய் உ ஆல் எல்காண் என்னும் ஐந்து விகுதிகளையும் அகர முதல் ஔகாரவீறுதிகின்ற பன்னிருயிரை யும் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொருமெய்களையும் ஈ றுகவுடைய இருதிணை முக்கூற்றொ ருமை முன்னிலையேவல் வினைச் சொற்கள்.
முன்னிலையேவல்பன்மைவினைமுற்று- மின் உம் என்னும் விகுதிகளை இறு தியுடையாய் இடைநிலை யேலாது எதிர்காலத்தைச் காட்டி வருமொழி கள்.
முன்னிலையொருமை வினைமுற்று - ஐ ஆய் இ என்னும் விகுதிகளையுடைய இருதிணைமுக்கூற் றொருமை வினை முற்று.
முன்னிளவல் - தமையன்.
முன்னிற்றல் - உதவுதல், முன்னேநிற் குதல்.
முன்னீடு - தலைமை, முன்னடைவு.
முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்- அகப்பொருட்டுறையினொன்று.
முன்னூல் - கடவுள்மொழிந்தநூல், ப ழையநூல், வேதம்.
முன்னூற்கேள்வன் - கடவுள்.
முன்னெழுச்சி - பழையவெண்ணம் முன்னெண்ணம்.
முன்னெறி - பழையமார்க்கம்.

முன்னெற்றி - மேனெற்றி.
முன்னேரம் - இளம்பகல்.
முன்னோர் - முன்னுழவுமாடு.
முன்னேறுதல் - முந்துதல்.
முன்னை - அக்காள், அண்ணன், ஒரு மரம், பழமை.
முன்னையோர் - பழமையோர்.
முன்னொற்றி - முன்னீடு.
முன்னோடி - முன்போவோன்.
முன்னோர் - பழையோர், மந்திரிகள்.
முன்னோர்நூல் - முதனூல்.
முன்னோன் - சிவபிரான், அருகன், கடவுள், தமையன், விநாயகன்.
முஷ்டிகன் - கஞ்சன், தூதன், இவன் மற்போரிற் சிறந்தவனுகிய பலராமனுல் கொல்லப்பட்டவன்.

மூ

மூ-ஓரெழுத்து மூப்பு,மூவென்னேவல்
மூகம் - ஊமை, ஒருபைசாசம், ஒரு மீன், தரித்திரன், மௌனம்.
மூகன்-ஓரசுரன், ஊமை, வறிஞன். அருச்சுநன்தவஞ்செய்தபோது அவன் தவத்தைச்சோதிக்கும்பொருட்டுக்கிராதவேடங்கொண்டுசென்றசிவபெருமானுல் கொல்லப்பட்டவன், இவன்பன்றியுருக்கொண்டவோரசுரன்.
மூகரன் - ஊமை, செவிடன்.
மூகலன் - இராக்கதன்.
மூகாத்தல் - மௌனமாயிருத்தல்.
மூகாம்பை - சையமலைக்கருகே எழுந்தருளியிருக்கும் தேவியார் பெயர்.
மூகை - ஊமை.
மூக்கணங்கயிறு - நாணயக்கயிறு.
மூக்கரிகத்தி-வெற்றிலைக்காம்பரிகருவி.
மூக்கறட்டை - ஒருபூடு.
மூக்கறை - நாசியறுபட்டவன்.
மூக்கறைச்சி - அரிதாரம், ஒருசெடி.
மூக்கன் - முன்கார்ச்சிப்பின்குருத்து.
மூக்காங்கயிறு - மூக்கணங்கயிறு.
மூக்காங்கொழுந்து - நாசிமுனை.
மூக்காந்தண்டு - மூக்கினடுத்தண்டு.
மூக்காவளை } ஒருபூடு.
மூக்காவனை }
மூக்கிரட்டை - மூக்கறட்டை.
மூக்கிலழகி - குமிழ்.
மூக்கிலி - சொக்களிப்பூடு, மூக்கறை.
மூக்கில் - வசம்பு.
மூக்கிறைச்சி - ஒருபூடு.
மூக்கிற்சல் - காக்கைக்கல்.
மூக்கு - நாசி இது பஞ்சப்பொறியினென்று, பறவைமூக்கு, விளக்கினின்மூக்கு, விளக்கு முதலியவற்றின் மூக்கு.
மூக்குக்கண்ணுடி மூக்கிலிடுங்கண்ணுடி.
மூக்குக்கொழுந்து-மூக்காங்கொழுந்து.
மூக்குச்சளி - மூக்கிற்சளி.
மூக்குச்சாத்திரம் - சரசாத்திரம்.
மூக்குச்சிந்துதல் - மூக்குச்சீறுதல்.
மூக்குத்தழுக்கி } ஓராபரணம்.
மூக்குத்தி }
மூக்குத்தூள் - புகையிலைப்பொடி.
மூக்குப்பிளவை - ஒருசிலந்தி.
மூக்கூழ்தல் - கவிந்து விழுதல்.
மூக்கூளை - மூக்குச்சளி.
மூக்கொலி-நாசியிற்பிறக்குமோசை.
மூக்கொலியன் - சங்கு.
மூக்கொற்றி - ஒருகாய், ஒருகோரை, மூக்குத்தி.
மூக்கொற்றிப்பூண்டு - ஒரு பூண்டு.
மூங்கர் - மூங்கையர்.
மூங்கா - கீரி.
மூங்காப்பிள்ளை - கீரிப்பிள்ளை.
மூங்கி - சிறுபயறு.
மூங்கிலரிசி - மூங்கிற்கொட்டை.
மூங்கிலுப்பு - ஓருப்பு.
மூங்கில் - ஒருமரம்.
மூங்கிற்குத்து - மூங்கிற்போத்து.
மூங்கிற்குழல் } வேய்ங்குழல்.
மூங்கிற்குழாய் }
மூங்கிற்புதர் - மூங்கிற்கிளை.
மூங்கிற்போத்து - மூங்கில்முளை.
மூங்கிற்றண்டு - மூங்கிற்கழி.
மூங்கினெல்-குறிஞ்சியுணவில்ஒன்று.
மூங்கின்முத்து-மூங்கிலிற்பிறந்தமுத்து
மூங்கு - சிறுபயறு.
மூங்கை - ஊமை.
மூங்கையர் - ஊமையர்.
மூசல் - சாதல், மூசுதல், மொய்த்தல்.
மூசாந்தம் - வெண்டாமரை.

மூசாப்பு - மந்தாரம், மூட்டமூச்சு.
மூசாம்பரம் - காசுக்கட்டி.
மூசாலே - அந்தசந்தமற்றது, சோம்பு.
மூசுதல் - மூசல்.
மூசை - மட்குகை.
மூச்சடக்கல் - சுவாசபந்தநம்பண்ணல்.
மூச்சன் - ஆண்மைக்காரன்.
மூச்சு - ஆண்மை, உயிர்ப்பு, சுவாசம், பலம்.
மூச்சுக்காட்டுதல் - ஆண்மைகாட்டுதல்.
மூச்சுத்தாங்கல் - மூச்சடைப்பு.
மூச்சுப்பறிதல் - சுவாசம் வெளியே செல்லல், பலவீனப்படுதல்.
மூச்சுப்பிடிக்குதல் - மூச்சமர்த்தல்.
மூச்சுப்பேச்சு - அசுமாற்றம்.
மூச்சுப்பொறுத்தல்-மூச்சுத்தாங்குதல்.
மூச்சுவாங்கல் - மூர்ச்சையுள்ளேஅடக்கல்.
மூச்சுவிடுதல் - சுவாசம்விடல்.
மூச்செடுத்தல் - மூச்சுவாங்குதல்.
மூச்செறிதல் - நெடுமூச்சுவிடுதல், மூச்சுவிடுதல்.
மூச்செறிவு - மூச்செறிதல்.
மூச்சை - மூர்ச்சை.
மூச்சொடுங்கல் - சாதல், மூச்சடங்கல்.
மூஞ்சல் - மொய்த்தல்.
மூஞ்சி - மூஞ்சை.
மூஞ்சிசுண்டுதல் - முகங்கருகல், முக்கை நெரிதல்.
மூஞ்சுறு, மூஞ்சூறு - சுந்தரி.
மூஞ்சூற்றுமுன்னான் - ஒருகிழங்குக்கொடி.
மூஞ்சை - கோணியமுகம், நீண்டமுகம், நீண்டமூக்கு.
மூஷககர்ணி, மூஷகபர்ணி - எலிச்செவிகீரை.
மூஷகம் - பெருச்சாளி.
மூஷகவாஹநன - விநாயகன்.
மூஷகவிரோதி, மூஷகவைரி - பூனை.
மூஷகாராதி - பூனை.
மூஷம் - மூஷகம்.
மூஷாதுத்தம் - துருசு.
மூடகருப்பம் - கருப்பத்திலிருந்த பிள்ளை.
மூடக்கொத்தான் - முடக்கொற்றான்.
மூடதை - அறியாமை.
மூடத்தனம் - அறிவின்மை.
மூடமதி - அறிவிலி.
மூடம் - அறிவின்மை, எட்டுமரக்கால் கொண்ட ஓரளவை, ஐயம், குளிர், மந்தாரம்.
மூடர் - அறிவிலார், கீழ்மக்கள்.
மூடல் - மூடுதல், மேன்மூடி.
மூடவிருத்தி - தாமதவிருத்தி.
மூடனம் - மிளகு.
மூடன் - அறிவீனன், மந்தன்.
மூடாத்துமா - மதிகேடன்.
மூடி-கொத்தமல்லிப்பூடு, மூகடி, மூடப்பெண், மேன்மூடி.
மூடிகம், மூஷிகம் - எலி, பெருச்சாளி, மலையான தேயத்தினோர் பகுதி.
மூஷிகவாகனன் - விநாயகன்.
மூஷிகாங்கன், மூஷிகாஞ்சனன் - விநாயகன்.
மூடிகாராதி - பூனை.
மூஷிதம் - திருடப்பட்டது.
மூடுகுப்பாயம் - மேற்போர்வை.
மூடுசன்னி - மொய்யற்சன்னி.
மூடுசாந்து - மேற்புறஞ்சாந்துக்காறை போட்டிருப்பது.
மூடுகுலை - மொய்ப்பு.
மூடுதல் - போர்த்தல், மறைக்குதல்.
மூடுபனி - மறைபனி.
மூடை - பொதிப்பை.
மூட்டம் - ஆயத்தம், உலைமுகம், கம்மாளர் கருவி, மூடியிருப்பது, விறகு.
மூட்டம்பண்ணுதல் - மூட்டங்கட்டுதல்.
மூட்டல்-இசைத்தல், எவிவிடுதல், கோண்மூட்டுதல், சந்திப்பு, பற்றப்பண்ணுதல்.
மூட்டு - எழுச்சி, கடிவாளம், கோள், பொருத்து, மூட்டென்னேவல்.
மூட்டுச்சாட்டு - கோள்.
மூட்டுதல் - மூட்டல்.
மூட்டை - ஒருபூச்சி, சாமான்பை.
மூண்டன் - மிளகு.
மூதணங்கு - காடுகாள்.
மூதண்டகஷாயம் - அறுகும் மிளகும் சேர்ந்த கஷாயம்.
மூதண்டமலை - கூணிகாசலம்.
மூதண்டம் - பழையலோகம்.
மூதண்டவேடத்தான் - தாராமலை.
மூதரித்தல், மூதலித்தல், மூதலிப்பு - ஒப்புவித்தல்.

மூதறிஞர் - பேரறிவுடையோர்.
மூதறிவன் - கடவுள்.
மூதறிவு - பேரறிவு.
மூதா - தம்பலப்பூச்சி.
மூதாக்கள் } முதியோர்.
மூதாட்கள் }
மூதாட்டி - முதியவள்.
மூதாதை - பாட்டன்.
மூதாய் - பாட்டி.
மூதாளர் - முதியோர்.
மூதிக்கம் - சிவனார்வேம்பு.
மூதிற்பெண்டிர் - மறக்குடிமகளிர்.
மூதிரி - எருமை.
மூதிரை - திருவாதிரைநாள்.
மூதுகுருகு - முதற்சங்கத்தார், செய்த இசைத்தமிழ் நூல் இது பெருங்குருகு எனவும்படும். இஃதிறந்தொழிந்தது.
மூதுணர்வு - பேரறிவு.
மூதுநாரை - முதற்சங்கத்தார், செய்த இசைத்தமிழ் நூல் இதுவும் இறந்தொழிந்தது.
மூதுரை - ஒருசெய்யுள், பழமொழி.
மூதூர்ப்பொழில் - இலவந்திகைச்சோலை.
மூதேவிக்கொடி - காகம்.
மூதேவி - சேட்டை.
மூதேவிபுத்திரன் - வறியன்.
மூதை-இசங்கு, முதணங்கு, வெட்டிச்சுட்டகாடு.
மூத்தல் - முதிர்தல்.
மூத்தார் - புருஷன் தமையன்.
மூத்தாள்-அக்காள், கிழவி, தலைவி, மூதேவி.
மூத்திரகிரிச்சம } ஒருநோய், கல்லடைசல்.
மூத்திரகிரிச்சனம் }
மூத்திரகிறிச்சனம் }
மூத்திரக்குளவி - ஒருகுளவி.
மூத்திரசங்கம் - நீரிழிவு.
மூத்திரசுக்கிலம் - வெட்டைநோய்.
மூத்திரதோஷம் - சலரோகம்.
மூத்திரத்தடை - நீரடைப்பு.
மூத்திரபுடம் - கீழ்வயிறு.
மூத்திரப்பை - சலப்பை.
மூத்திரம் - சிறுநீர்.
மூத்திரரோகம் - நீர்வியாதி.
மூத்திரலம் - சலக்கடுப்பு.
மூத்திராகாதம் - சலவடைப்பு.
மூத்திராசயம் - சலப்பை.

மூத்திராதிக்கியம் - நீர்வியாதி.
மூத்திரோற்சங்கம் - இரத்தரோகம்.
மூத்தோர் - புலவோர், மந்திரிகள், முதியோர்.
மூத்தோன் - அண்ணன், முதிர் வயதுடையோன், விநாயகன்.
மூப்பர் - முதன்மைக்காரர், முதியோர்.
மூப்பன் - பறையரிற்றலைவன், முதன்மைக்காரன்.
மூப்பு - தலைமை, முதுமை.
மூப்புதல் - மூடுதல்.
மூரல் - சிரிப்பு, சோறு, பல்.
மூரி - எருது, எருத்துத்திமில், எருமை, ஓலை மூரி, சோம்பல், நெரிவு, பழமை, பெருமை, வலி.
மூரிமுரித்தல் - திமிர்தீரவுடற்பொருத்து நெறித்தல்.
மூரியூரிதி } சிவபிரான்.
மூரிவாகனன் }
மூர்க்கநாயனார் - தொண்டைநாட்டிலே வேளாளர் குலத்திலே தலைமைபெற்று விளங்கிய ஒரு சிவபக்தர், இவர் தம்மிடத்துள்ள திரவியங்களையும், நிலம் அடிமை முதலிய வற்றையும் மகேசுவர பூசையின் பொருட்டுச் செலவு செய்துவிட்டு, வேறுவழியில்லாமையால் தாம் முன்னேபயின்ற சூதாட்டத்தால் பொருள்சம்பாதித்துத் தாம் எடுத்துக்கொண்ட காரியமாகிய மகேசுவர பூசையைக் குறைவற நடத்தி வந்தவர்.
மூர்க்கம்-உக்கிரம், கோபம், சலஞ்சாதித்தல், நாகப்பூச்சி.
மூர்க்கர் - கீழ்மக்கள்
மூர்க்கன் - அங்காரன்.
மூர்க்கை - அங்காரி, மூர்க்கம்.
மூர்ச்சனம் - கலக்குதல், மூர்ச்சனை.
மூர்ச்சனை - நினைவுமயக்கம்.
மூர்ச்சாலன் - மூர்ச்சாரோகி.
மூர்ச்சிதம் - அறிவின்மை, உயரம், நினைவுமயக்கம், வாட்டம்.
மூர்ச்சித்தல் - நினைவுமயங்கிக்கிடத்தல்.
மூர்ச்சிப்பு - மூர்ச்சிதம்.
மூர்ச்சை - அறிவுமயக்கம், வாட்டம்.
மூர்ச்சைதீர்த்துயிர்தருமருந்து - குற்றுயிர் தருமருந்து.
மூர்ச்சைவாயு - அறிவை மயக்குமோர் [வாயு.

மூர்த்தகர்ணி - குடை.
மூர்த்தகன் - க்ஷத்திரியன்.
மூர்த்தகோலம் - குடை.
மூர்த்தகம் - தலைமயிர்.
மூர்த்தம் - இருசடிகைப்பொழுது, உடம்பு, உருவுடையது, தலை.
மூர்த்தரசம் - கஞ்சிநுரை.
மூர்த்தவேட்டணம் - தலையணி.
மூர்த்தன்னியம் - கிளர்ச்சி.
மூர்த்தாபிஷிக்தன் சத்திரியன், மந்திரி.
மூர்த்தி - அருகன், உடல், உருவம், சிவன், தலைவன், தேவன், புத்தன், பொருள், மாதிரி.
மூர்த்திகரம் - தெய்வீகம், தேவச்செயல்.
மூர்த்திகள் - அஷ்டமூர்த்திகள்.
மூர்த்திகன் - குமரன், வயிரவன்.
மூர்த்திநாயனார் - பாண்டி நாட்டிலே மதுராபுரியிலே வைசிய குலத்திலே அவதரித்து விளங்கிய ஒரு சிவபக்தர், தாம் செய்துவந்த சந்தநத்திருத்தொண்டுக்குச் சந்தநக்கட்டை அகப்படாமல் இடையூருண்டாகத் தமது முழங்கையைச் சந்தநக் கட்டைபோலக் கல்லிலே எலும்பு தேயும்படி தேய்த்த மனவுறுதியுடையவரும், மதுரை நகருக்கு அரசனாகும்படி சிவாஜ்ஞையுண்டானபோது, சடாமுடியே கிரீடமும், ருத்ராக்ஷமே ஆபரணமுமாகக் கொண்டு அரசுசெய்தவரும் இவரே.
மூர்த்திமம் - சரீரம்.
மூர்த்திமான் - கடினதிரவியம்.
மூர்த்தனி - தலை.
மூலகதலம் - ஒருமுருங்கை.
மூலகந்தம் - வெட்டிவேர்.
மூலகபல்லவம் - முருங்கைமரம்.
மூலகம் - கிழங்கு, முள்ளங்கி.
மூலகருமம் - சடகருமம்.
மூலகன் - நாரீகவசன், இவன் அசுமகன் புத்திரன், பரசுராமன், க்ஷத்ரியநாசஞ்செய்துவரும்போது இவன் தன் மனைவியை வைத்துவிட்டிறந்தான், அவன் மூலமாக மீளவும் க்ஷத்திரியவமிசம் தழைத்தமையால் இவன் மூலகன் என்னும் பெயர் பெற்றான்.
மூலகாரியம் - முதற்காரியம்.
மூலக்கடுப்பு - மூலநோய்.
மூலக்கரப்பன் - ஒருகரப்பன்.
மூலக்கரணி - கற்கடகபாஷாணம்.
மூலக்கிரந்தம் - முதனூல்.
மூலக்கிரந்தி - ஒருநோய்.
மூலக்கிராணி - ஒரு கிராணிநோய்.
மூலக்கொதி - ஒருநோய்.
மூலசத்தி - குண்டலிசத்தி.
மூலசம் - வேருற்பத்திப்பயிர்.
மூலசாகிநம் - வேர்விளைநிலம்.
மூலச்சோதி - கடவுள்.
மூலதனம் - மூலத்திரவியம்.
மூலதிரவியம் - மூலதநம்.
மூலதேவன் - கஞ்சன்.
மூலத்தம்பம் - ஒரு சிற்பநூல்.
மூலத்தனம் - முதற்பணம்.
மூலத்தானம்
மூலஸ்தானம் } ஆகாயம், கடவுள், கெற்பக்கிரகம்.
மூலத்திரவியம் - அடியுரக்கம்.
மூலத்தின்சாரம் - அமுரி, இந்துப்பு.
மூலத்துருவம் - கிரகவீதியின் மூலநீளவு.
மூலநாடி - குதநாடி.
மூலநாள் - மூலநட்சத்திரம்.
மூலபஞ்சாட்சரம் - மூலமந்திரம்.
மூலபத்திரன் - கஞ்சன்.
மூலபலதம் - பலா.
மூலபலம் - அடிப்பலம், அடிப்பெலமாயிருக்குஞ்சேனை.
மூலபாடம் - உரைதவிர்த்தெழுதும்பாடம்.
மூலபாடை
மூலபாஷை } ஆதிபாஷை.
மூலப்படை - மூலபலம்.
மூலப்பகுதி
மூலப்பிரகிருதி } பிரபஞ்ச காரணமான மாயை.
மூலப்பொருள் - கடவுள், மூலதனம்.
மூலமந்திரம் - பஞ்சாட்சரமந்திரம்.
மூலமலம் - ஆணவமலம்.
மூலம் - ஆதி, உரையில்லாப்பாடம், ஒருநாள், ஒருநோய், காரணம், கிழங்கு, சமீபம், சொந்தம், தலைமை, தாலம்பபாஷாணம், பாதம், மூலாதாரம் இது ஆதாரமாதிஞென்று, வேர்.
மூலவல்லி - வெற்றிலை.
மூலவாயு - ஒருநோய்.
மூலவிக்கிரகம் - மூலத்தான விக்கிரகம்.
மூலவியாதி - மூலநோய்.

மூலவிருள் - ஆணவமலம்
மூலவுவம் - ஒன்றினடங்கி யிருப்பதை எடுத்துவமிப்பது (உ-ம்) ஆணவம் போலும் பிரகிருதி.
மூலவேர் - முதல்வேர்.
மூலன் - பெருந்தலைச் சாத்தனரால் இகழ்ந்து பாடப்பட்ட ஒருசிற்றரசன், அப்புலவர்பாடிய "பொய்கைநாரை" என்னும்பாடலிலே 'மழனுடைப்பெருமரந் தீர்க்கெனக் கையற்றுப் பெறாது பெயரும் புள்ளினம்போல நின்னசை தரவந்து நின்னிசை நுவல் பரிசிலேன், வறவியேன் பெயர்கோ' என்றுபாடி நொந்து சென்றனர்.
மூலாக்கிரம் - அடியுநுனியும்.
மூலாக்கினி - உதராக்கினி.
மூலாசனம் - வேர்கிழங்கு புசித்தல்.
மூலாதாரம் - ஆறுதாரத்தில் ஒன்று அது குதத்தானம்.
மூலி - கிழங்கு, மருத்துபூடு, வேருள்ள மரம்.
மூலிகன் - மரத்தடியிலிருக்கும் தவசி.
மூலிகை - மருத்துப்பூடு, மருந்துவேர்.
மூலிக்காரணம் - அறுதிமுறி, ஆதி.
மூலிக்கை - மூலிகை.
மூலியம் - கொண்டபொருள், சம்பளம், விலை.
மூலேரம் - சடை.
மூலை - கோணம், வீடு.
மூலைக்குடா - கோணத்துமுடுக்கு.
மூலையரம் - முக்கோணவரம்.
மூலையோட்டம் - சரிகோணமற்றது.
மூவசைச்சீர் - நேரசையாவது நிரையசையாவது தன்னோடு தானேனும் ஒன்றோடொன்றேனும் புணர்ந்து மூன்றசையடங்கிவருவது.
மூவட்சித்தொக்கு - தேங்காய்நார்.
மூவரசர் - மூன்றிராசாக்கள், அவர் சேரன், சோழன், பாண்டியன்.
மூவர்-திரிமூர்த்திகள், சைவசமயாசாரியர் மூவர் அவர் அப்பர் சுந்தரர் திருஞானசம்பந்தர் என்பவர்.
மூவாசை - மூன்றாசை அது மண், பெண், பொன்.
மூவாமுதல் - கடவுள், பரமேசுவரன்.
மூவிசை-மந்தம், மத்திமம், தாரம் எனு மூன்று விகற்பமான இராகங்கள்.
மூவிடம் - மூன்றிடம், அவை தன்மை முன்னிலை படர்க்கை.
மூவிலை - நரிப்பயறு.
மூவிலைவேல் - சூலம்.
மூவுதல் - முடிதல், விலகுதல்.
மூவுலகம் - மூன்றுலகம் அவை, பூமி அந்தரம், சுவர்க்கம்.
மூவுலகளந்தோன் - விஷ்ணு.
மூவுலகாதரன் - கடவுள்.
மூவுலகாளி - இந்திரன், கடவுள்.
மூவுலகு - மூவுலகம்.
மூவுலகுணர்ந்தோன்-அருகன், கடவுள்.
மூவுலகுண்டோன் - விஷ்ணு.
மூவுலகேந்தி - கடவுள்.
மூழி - அகப்பை, குளம், சோறு, தடுப்பு, மத்து.
மூழிக்களம் - ஒரு விஷ்ணுக்ஷேத்திரம்.
மூழை-அகப்பை,சோறு.தடுப்பு,மத்து.
மூழ் - மூகிழ்.
மூழ்தல் - அமிழ்த்தல், கெடுதல்.
மூழ்த்தல் - மொய்த்தல்.
மூளல் - மூளுதல்.
மூளி காதறை,பெட்டி,விளிம்பற்றது.
மூளிவாய் - பெட்டி.
மூளுதல் - கூடுதல், நெருப்பு முதலிய பற்றல், மூபறல்.
மூளை - தலை முதலியவற்றின் மூளை.
மூள்தல் - மூளுதல்.
மூறவர் - பெருக்குறும்பை.
மூன்று - ஒரெண்.
மூஷிகம் - ஒருதேசம், இது தற்காலம் கொச்சி எனப்படும், விநாயகர் வாகனம், சௌபரி முனிவன் மனைவியாகிய மனோரமையை என்பவளைக்கிரவுஞ்சன் என்னும் கந்தர்வராஜன் கண்டு மோகித்து அவள் கையைப்பிடித்தான், அதுகண்டமுனிவர் வெகுண்டு கிரவுஞ்சனை, மூஷிகமாகுகவென்று சபித்தார் அவ்வாறே அவன் மூஷிகமாகி பலிபீடமுள்ள விடங்களையெல்லாம் அகழ்ந்து திரிகையில் விநாயகக்கடவுள் அந்தமூஷிகத்தைத் தமக்கு வாகனமாக்கிக்கொண்டனர்.
மூஷிகம் - பெருச்சாளி.

மெ

மெச்சல் } கொண்டாடல், துதித்
மெச்சுதல் } தல், புகழ்தல்.
மெட்டு-ஆயத்துறை,கிராமத்தைச்சூழ்ந்தகாடு, முனிப்பு, சுங்கச்சாவடி.
மெது - மிருது.
மெதுக்கு - ஒருசெடி.
மெதுமெதுத்தல் } மிருதுவா யிருத்
மெதுமெதெனல் } தல்.
மெதுமெதுப்பு - நுகைவு.
மெத்த - மிக.
மெத்து - மென்மை.
மெத்துதல் - மிருதல்.
மெத்தெனல் } மிருது, சாந்தகு
மெத்தெனவு } ணம்.
மெத்தை - ஒருபூடு, அமளி, சட்டை, மேல்வீடு.
மெத்தைப்பாய் - ஒருவகைப்பாய்.
மெத்தைவீடு - தட்டுவீடு.
மெந்திரி - எதண்டை.
மெய் - உடல், இது பஞ்சப்பொறியி னொன்று, உண்மை, ஒற்றெழுத்து, சொல், சொற்பொருள்.
மெய்கண்டதேவர் - திருவெண்ணெய் நல்லூரிலிருந்த வேளாளராகிய சுவேதவனப்பெருமான் இவர் பரஞ்சோதி முனிவருடைய மாணாக்கர் சித்தாந்த சாத்திரத்தின் மெய்ப்பொருளுணர்ந்து உலகுய்ய வெளிப்பட்டருளிய குருபீடமாதலால் மெய்கண்டதேவர் என்னும் காரணப்பெயர்பெற்றார், வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து அந்தப்பெயரினாலேயே வெளியிட்டவர் இவரே இவரதுமாணாக்கர் அருணந்தி சிவாசாரியர்.

அருணந்தி சிவாசாரியர்தாம்மெய்கண்டதேவருக்கு வயதினாலும் கல்வியறிவினாலும் சிறந்தவரென்று நினைந்து தம்மாணாக்கரோடு அவரிடஞ் சென்று இறுமாப்போடு உலாவி நின்றார். அப்பொழுது அருணந்தி சிவாசாரியர் வலால் அவர் மாணாக்கருளொருவர் மெய்கண்ட தேவரை வணங்கி அகங்காரமாவது யாதென் றுவினவ, மெய்கண்டதேவர், நம் குருமூர்த்தி நிற்குநிலையே அதுவாம் என்றருளிச்செய்ய, அருணந்திசிவாசாரியர் மெய்கண்டான் திருவடியிலேவிழுந்து, திருவடி யிரண்டையும் பற்றிக்கொண்டு தமக்கு ஞானோபதேசம் செய்தருளுமாறு வேண்டிச் சிவஞான போதநூலைக் கேட்டறிந்தார் என்பது கர்ணபரம்பரை, இவர்கள் காலம் அறுநூற்றறுபதுக்கு முன்னுள்ளது, இந்த மெய்கண்டதேவர் அவதாரஞ் செய்திலராயின், தமிழ்நாட்டில், ரௌரவாகமத்திற் கூறப்பட்டசிவஞானபோதபடலமாகிய சகலாகம நவநீதம் எளிதிலே வெளிப்படுதலும் சைவம் ஏனைய சமயப் பெரும்படைகளை யெதிர்த்துப் பொருதுவெற்றித் தம்பம் நாட்டுவதும் இல்லையாம்.

இந்தக்கலியின் கொடுமைக்கஞ்சிச் சமயாசாரியரெல்லாரும் மறைந்த இக்காலத்தில் நாற்றிசையிலும் ரணபேரி முழக்கி வளைந்திருக்கும் புறச்சமயவாதிகள் படைத்திரள் இச்சிவஞானபோத மென்னும் பேரகழிக்கும் சிவஞானசித்தி யென்னும் வாளாஸ்திரத்துக்குமே அஞ்சி நிலைதளர்கின்றது, அந்தப் பேரகழியும் அந்த வஸ்திரமு மில்லையாயின்,சைவம் நெடுங்காலத்திற்கு முன்னமே அரசிழந்துவிடும், அவ்வகழியைக்கடக்கு மாற்றலும் அவ்வஸ்திரத்திற்கு மேற்பட்ட வஸ்திரமும், உலகத்தில் வேறெந்தச் சமயமும் எக்காலத்திலும் பெறுதென்பது நன்கு துணியப்பட்ட உண்மையாம்.

மெய்காப்பாளர் - உற்றகாவற்காரர்.
மெய்காவல் - உற்றகாவல்.
மெய்கூறல் - உண்மைபேசல், அது மும்மொழியினொன்று.
மெய்க்கவசம் - மார்ச்சட்டை.
மெய்க்கிளை - மெய்முளை.
மெய்கீர்த்திமாலை - ஒருபிரபந்தம், அது சொற் சீரடியென்னுங் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியைக்கூறுவது.

மெய்க்கூத்து - சாந்திக்கூத்து நான்கி னுளொன்று.
மெய்க்கொட்டை - பலாக்காய் மூளை.
மெய்க்கொள்ளல் - நம்புதல்.
மெய்கோள் - முன்னறவாங்கல்.
மெய்சொல்லல் - உண்மைபேசுதல்.
மெய்ச்சுதல் - புகழ்தல்.
மெய்ஞ்ஞாலம் - உண்மையானநலம்.
மெய்ஞ்ஞானசாரம் } ஒருநூல்.
மெய்ஞ்ஞானதிபம் }
மெய்ஞ்ஞானநீலகண்டேசுவரர் - திருப்பைஞ்ஞீலியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
மெய்ஞ்ஞானம் - உண்மைஞானம்.
மெய்ஞ்ஞானவிளக்கம் - ஒருநூல்.
மெய்ஞ்ஞானி - உண்மைக்கியானி.
மெய்த்தல் - உண்மைப்படல்.
மெய்நலம் - வலி.
மெய்நூலன் } துரோணாசாரியன்.
மெய்நூலானன் }
மெய்ப்புகுசருவி - கவசம்.
மெய்ப்படாம் - திரைச்சேலை, சிலையங்கி.
மெய்ப்படுதல் - உண்மைப்படுதல்.
மெய்ப்படுத்தல் } உண்மைப் படுத்தல்.
மெய்ப்படுத்துதல் }
மெய்பரிசம் - தொட்டுணருமுணர்வு.
மெய்ப்பாடு - குறிப்பு வெளிப்படுக்குந் தோற்றம்.
மெய்ப்பித்தல் - மெச்சுவித்தல், மெய்ப்படுத்தல்.
மெய்ப்பீரம் - மேகம்.
மெய்ப்பு - மெய்ச்சிக்கொள்ளப்படல், மெய்மை.
மெய்ப்பை - சட்டை.
மெய்ப்பொருணாயனார் - தமது அரண்மனையினுள்ளே புகுந்து சைவாகமோபதேசஞ்செய்ய வந்தே னென்று கூறி அங்கே யொரு தனியிடத்திற் கொண்டு சென்றிருந்து உபதேசஞ் செய்வார் போல, மறைத்து வைத்திருந்த உடைவாளினால் தம்மைக் குத்தி வீழ்த்திய முத்திநாதன் என்னும் பகையரசனுக்கு அவ்வுயிர் நீங்குஞ்சமயத்திலும் ஒருவரும் இடையூறுசெய்யாதபடி பக்கத்தில் நின்றவர்களைத் தடுத்து உயிர்விட்ட பத்தசிரோமணியாகிய இவர் சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே மலையமாநாட்டாருக்கு அரசாயிருந்தவர்.
மெய்ப்பொருள் - உண்மை, கடவுள், கல்வி, நற்போதனை, மெய்ப்பாக்கியம்.
மெய்ப்பொறி - கன்மேந்திரிய ஞானேந்திரியங்கள்.
மெய்மயக்கம் } ஒற்றெழுத்திணைபு.
மெய்மயக்கு }
மெய்மலம் - உடம்பின்மாசு, நாகல்.
மெய்மறதி - கோபம், தன்னைமறத்தல், வெறி.
மெய்மறத்தல் - தன்னைமறத்தல்.
மெய்மாசு - உடம்பின்மாசு, மலம்.
மெய்ம்மை - உண்மை, கருத்து, தினைவு.
மெய்மொழி - வேதம்.
மெய்யர் - பார்ப்பார், மகார், முனிவர், மெய்சொல்வோர்.
மெய்யறிவு - மெய்ஞ்ஞானம்.
மெய்யன் - கடவுள், சத்தியவான்மகன்.
மெய்யிலி - பொய்யன்.
மெய்யுணர்வு - உண்மையறிதல், நல்லறிவு.
மெய்யுரை - சத்தியவாசகம், இது வாக்கி நற்குண நான்கினுளொன்று.
மெய்யுரைத்தல் - உரைசொல்லல், சத்தியஞ்சொல்லல்.
மெய்யுவமம் - உண்மையையே யெடுத்துவமிப்பது (உ ம்) சூரியப் பிரகாசம்போன் மணி யொளி.
மெய்யுறுபுணர்ச்சி - மெய்தொட்டுப்பயிறல்.
மெய்யுறை - கவசம்.
மெய்யெழுத்து - ஒற்றெழுத்து.
மெய்வகை - உறவிகழ்வைக்கூறுவது.
மெய்வழிநீர் - அமுரி.
மெய்வாழ்த்து - உறுப்புகளை முறையே கூறுவது.
மெய்விரதன் - தருமன், வீடுமன்.
மெய்விவாகம் - தலைமகனுந்தலைவியும் இருசுற்றமு மிசைந்து முடிக்குமணம்.
மெருகிடுதல், மிருதுவாக்குதல், மெழுகிடுதல்.
மெருகு - ஒருகிழங்கு, மிருது, மெழுக்கு.
மெருகெண்ணெய் - மினுக்கெண்ணெய்.
மெலிதல் - இடைதல், இளைத்தல்.
மெலித்தல் - இசையை மெல்லிதாக்கல், வல்லினவெழுத்து வழங்குதல்.
மெலிந்தோன் - விபன்னன்.

மெலியது - மென்மையானது.
மெலிவடைதல் - சஞ்சலப்படல்.
மெலிவித்தல் - கனங்குறைத்தல், மிருது
வாக்கல், வாட்டல்.
மெலிவு - இளைப்பு, வருத்தம்.
மெலு - அற்பன்.
மெலுக்கு - வெளியலங்காரம்.
மெல்கல் - இலேசாதல்.
மெல்ல - மிருதுவாக.
மெல்லணை - மெத்தை.
மெல்லல் - மெல்லுதல்.
மெல்லன் - நெய்தனிலத்தலைவன்.
மெல்லி - பெண்.
மெல்லிக்கை - ஒஞ்சட்டை.
மெல்லிது - மிருது.
மெல்லிமை - மென்மை.
மெல்லியது - மெல்லிது.
மெல்லியநல்லாள் - பெருமாட்டி.
மெல்லியர் - மாதர், மெலித்தவர்.
மெல்லியலார் - பெண்கள்.
மெல்லியல்-பெண். மரத்திளங்கொம்பு.
மெல்லியார் - எளியோர், பெண்கள்,
மென்மையோர்.
மெல்லியார்கூந்தல் - அம்மையார் கூந்த
மெல்லியாள் - பெண். [ல்.
மெல்லிலை - வெற்றிலை.
மெல்லினம் - மெல்லொலியெழுத்து.
மெல்லினவெதுகை-எல்லாச் சீர்க்கண்
ணும் மெல்லின வெழுத்துகளெது
கையாய் வருவது.
மெல்லுதல் - சுறித்தல்.
மெல்லெழுத்து-மெல்லினவெழுத்து.
மெல்லெனல் - மந்தக்குறிப்பு
மெல்லெனவு - மிருது.
மெல்லொற்று - மெல்லினவொற்று.
மெழுகல் - மெழுகுதல்.
மெழுகிடல் } தரைமெழுகுதல், மெ
மெழுகிடுதல் } ழுகு கட்டுதல், மெ
ழுகு பூசுதல்.
மெழுகு - அரக்கு, மெழுகென்னேவல்.
மெழுகுகட்டுதல் - மெழுகுபூசுதல்.
மெழுகுசாணை - ஒருசாணை.
மெழுகுசீலை - மெழுகுதோய்த்த புடை
மெழுகுசேர்வை - ஒருசேர்வை. [வை.
மெழுகுதல்-சிலத்தைப்பூசுதல், பூசுதல்.
மெழுகுதிரி - மெழுகாலாயதிரி.
மெழுகுத்தட்டு - மெழுகுத்தகடு.
மெழுகுத்தண்டு - மெழுகுதிரி.
மெழுகுபதம் - மருத்தெண்ணெய்க் கடு
கு மெழுகுபோலுருளும் பதம்.
மெழுகுபனையன் - ஒருவைசூரி.
மெழுகுபாகல் - ஒருபாகல்.
மெழுகுமண் } பசைமண்.
மெழுமண் }
மெழுகுவத்தி - மெழுகுதிரி.
மெழுக்கிடுதல் } மெழுகுதல்.
மெழுக்கு }
மென்ன - மிருதுவாய்.
மென்கணம் - மெல்லினம்.
மென்பால் - மருதநிலம். [ருதல்.
மென்புரட்டு - கைமாற்றிலே புரட்டிவ
மென்மேல் - ஒன்றன்மேலொன்று.
மென்மை - மிருது, அது எண்வகை பூ
திஞென்று, சாத்துவித குணத்து
மொன்று. [தல்.
மென்றல் - வெற்றிலை முதலியமெல்லு
மென்றொடர் - மெல்லெழுத்துத் தொ
டர்ந்து வருவது.
மென்னடை - அன்னம், மிருதுவானந
மென்னி - மிடறு. [டை.
மென்னிலை - சரலட்சணத்தொன்று, அ
து பெருவிரலை மடக்கி மற்றைய வி
ரல்களை விரித்து நீட்டுதலாம்.
மென்னை - சொத்தை, மிடறு.

மே

மே - அன்பு, ஒரெழுத்து.
மேகதாக்கையோன் - சீர்பந்தபாஷாண
மேகலகங்கை - நர்மதாநதி. [ம்.
மேகசாந்தி } ஒருநோய்.
மேககாரகம் }
மேககாலம் - கார்காலம்.
மேககெற்சனம் - இடி.
மேகக்கருப்பக்கல் } ஆட்டுக்கல்.
மேகக்கல் }
மேகக்கிராணி - ஒரு கிராணிநோய்.
மேகசத்தேகம் - ஒருஸம்ஸ்கிருதநூல்.
மேகசம் - மேகத்திற்பிறப்பன, மேகத்
திலுண்டாகிற கோழிமுட்டை யள
வுள்ள முத்து, முத்து.
மேகசாரம் - கர்ப்பூரம்.
மேகசாலம் - ஒருமணி, முகிற்கூட்டம்.

மேகசிந்தகம் } சாதகப்பட்சி.
மேகசீவகம் }
மேகசூலை - ஒருசிலை.
மேகசோரணம் - இராசவத்தனக்கல்.
மேகச்சிலை - மாக்கல், வங்கக்கல்.
மேகதாரி - மயிலிறகு.
மேகதீபம் - மின்.
மேகதேகம் - மேகநோய்கண்டவுடம்பு.
மேகஸ்தம்பம் - மேகத்தூண்.
மேகத்தின்கருப்பக்கல் - ஆட்டுக்கல்.
மேகத்தின்வித்து - பூநாகம்.
மேகத்துவாரம் - ஆகாயகங்கைசெல்வ [ழி.
மேகத்தொனி - முழக்கம்.
மேகநாதசித்து - இலக்குமன்.
மேகநாதம் - சிறுகீரை, பலாசு, மலைப் பச்சை, முழக்கம்.
மேகநாதன் - இந்திரசித்து, இந்திரன், நவசாரம், வருணன். ராவணனுக்கு மந்தோதரியிடத்துப் பிறந்த புத்திரன், இந்திரனோடுபொருது அவனை வென்றமையால் இந்திரஜித்து என்னும் பெயர் படைத்தவன், இவன் லக்ஷ்மணனால் கொல்லப்பட்டவன், இருவருக்கும் நடந்தயுத்தம் மிகக் கொடியதும் கம்பர் தாம்பாடிய இராமாயணத்திலே இவனை, "வில்லாளராளுர்க்கெல்லாம் மேலவன்" என்று புகழ்ந்திருக்கின்றனர்.
மேகநாயகன் - இந்திரன்.
மேகநீர் - ஒருநோய், நீர்.
மேகநோய் - ஒருநோய்.
மேகபச்சை - நாகபச்சை.
மேகபடலம் - ஒருகண்ணோய் மேகச் [செறிவு.
மேகபந்தர் - முகிற்படலம்.
மேகபந்தி - முகினிரை.
மேகபிரசவம் - மழை.
மேகபுட்பம் - நீர், மழை.
மேகபூதி - இடி.
மேகப்புள் - வானம்பாடி.
மேகமண்டலம் - முகின்மண்டலம்.
மேகமந்தாரம் - மந்தாரச்சிலை.
மேகமாலை - முகிற்கூட்டம்.
மேகம் - ஒருநோய், கடுக்காய், குயில், [முகில்.
மேகயோனி - புகை.
மேகரஞ்சி - ஒரிராகம்.
மேகராகக்குறிஞ்சி - குறிஞ்சித்திரத்தில் [ஒருபண்.
மேகராடி - மயிலடிக்குருந்து.

மேகலம் - நர்மதாநதி ப்ரவஹிக்கும் தேசம் மேகலம் என்னும் மலை.
மேகலன் - விந்த மலைச்சாரலில் வசிக்கும் ஒருமுனி.
மேகலகன்னிகை - நர்மதை, மேகலபர்வதத்தில் உற்பத்தியாதலால், இது இப்பெயர் பெற்றது.
மேகலாகன்னிகை - நருமதை.
மேகலாத்ரிஜை - நர்மதாநதி.
மேகலாபதம் - இடை.
மேகலாபாரம் - எழுகோவைமணிவடம்.
மேகலை - இடைக்கட்டு, ஒமகுண்டத்தை வளையவிடுங்கோலம், சிலை, தேர்முடி, நருமதை, மலைப்புடைப்பு, மலைமுடி, மலையருகு, மாதரிடையணியுளேழு கோவைமணி, மான்றோற் பூணூல், மேருகிரிச்சிகரம்.
மேகவண்ணக்குறிஞ்சி - மழைவண்ணக் [குறிஞ்சி.
மேகவண்ணன் - திருமால்.
மேகவத்திவம் - பரமாணு.
மேகவருணை - அவுரி.
மேகவாகனன் - இந்திரன், கருங்கல், [சிவன்.
மேகவாயு - ஒருநோய்.
மேகவியாதி - மேகநோய்.
மேகவிரஞ்சி - மேகரஞ்சி.
மேகவிரோதி - பெருங்காற்று.
மேகவூறல் - மேகநீர்ப்பாய்ச்சல்.
மேகவெட்டை - ஒருநோய்.
மேகனம் } ஆண்குறி, மூத்திரம்.
மேஹநம் }
மேகாகமம் - கார்காலம், மழை.
மேகாக்கினி - மின்.
மேகாஸ்பதம் - ஆகாயம்.
மேகாநந்தி } மயில்.
மேகாரம் }
மேகோதகம் - மழை.
மேக்கு - உயர்ச்சி, மேல், மேற்கு.
மேசகம் - இருள், கருமை, புகை, மயிற்றோகைக்கண், முகில்.
மேசகாலகை - யமுநாநதி.
மேசகை - இருள், கருமனோசிலை.
மேசை - பீடம்.
மேடகம் - மேடம்.
மேடக்கோடு - ஆட்டுக்கோட்டுப்பாலை.
மேடசிங்கி - புழுக்கொல்லி.
மேடப்பாய்ச்சல் - ஆட்டுப்பாய்ச்சல்.
மேடமதி - சித்திரைமாதம்.

மேடம் } ஆடு, ஆட்டுக்கடா, ஒரி
மேஷம் } ராசி.
மேடவிடவம் - மேடாயனம்.
மேஷவிஷாணிகை - ஆட்டுக்கொம்பு.
மேஷவிலோசநம் - பேரவுரி.
மேடவீதி - சித்திரை வைகாசி ஆனி மாதங்களிற் சூரியன் செல்லும்வீதி.
மேடாயனம் } ஆதித்தனிடப விராசி
மேஷாயனம் } யினின்று கற்கடக விராசிக்குச் செல்லும்பாதை, உத்தராயண மூலம்.
மேடு - உயர்ச்சி, ஊர், திடர், வயிறு
மேடுகம் - சுவர்.
மேடை - உப்பரிகை, மேடால் வகுக்கப்பட்டது, வேதிகை.
மேட்டி - இறுமாப்பு, முதன்மை.
மேட்டிமை - அகந்தை, மேன்மை.
மேட்டிரம் - ஆட்டுக்கடா, ஆண்குறி.
மேட்டிசாந்தம் - மேல்.
மேண்டம் - ஆடு.
மேதகம் - கோமேதகம், சாலங்கபாஷாணம், மதிட்பு, மேன்மை.
மேதகு - மேன்மையான.
மேதகையோர் - உயர்ந்தோர்.
மேதச்சி - கற்பரிபாஷாணம்.
மேதம் - கொலை, கொழுப்பு, யாகம்.
மேதரவர் - வேக்காரர்.
மேதாதிதி - பிரிய விரதன் புத்திரருள் ஒருவன், இவன் பாகத்துக்குவந்தது ப்லக்ஷத்வீபம், இவன் புதல்வர் எழுவர், கண்ணுவர்புத்திரன், இவன குலத்தார் காண்வாயர் எனப்படும்.
மேதாதிதி - ஒருமுநி.
மேதாநிதி - சிரகாரி.
மேதாரம் - மலை.
மேதாருத்திரன் - காளிதாசன்.
மேதாவதி - அறிவுள்ளவள்.
மேதாவர் - மூங்கில்வெட்டி விற்போர்.
மேதாவி - அறிவு, உணர்வு, கிளி, பண்டிதன், புத்தியுள்ளவன்.
மேதாவிசி - நாகணவாய்ப்புள்.
மேதாவியர் - அறிஞர்.
மேதி - எருமை, கெர்சனம், பொலிக்கட்டை, வெந்தயம்.
மேதிக்கவுணன் - மூர்த்தபாஷாணம்.
மேதிச்சென்னிமிதித்தோள்-துர்க்கை.
மேதியன் } இயமன்.
மேதியூர்தி }
மேதிரம் - சமம்.
மேதிரன் - புத்திசாலி.
மேதிவாகநன் - யமன்.
மேதினி - பூமி.
மேதினீத்திரவம் - பூதூளி.
மேது - அறிவு.
மேதேதலை - திணப்பை.
மேதை - அறிஞன், அறிவு, இறைச்சி, கள், தோல், நரம்பு, திணம், புதன், பேரறிவு, பொற்றலைக் கையாந்தகரை, மேன்மை.
மேதையர் - புலவர்.
மேதோசம் - எலும்பு.
மேத்தியம் - சுத்தம், சிரகம்.
மேத்திரம் - ஆட்டுக்கடா, சலவாய்.
மேநகாத்மஜை - பார்வதி.
மேநகை - மேனகை.
மேநகைப்புதல்வி - பார்வதி.
மேந்தலை - கப்பலிற் காற்றெதிர்பக்கம், முதன்மை, மேன்மை.
மேந்தானம் - உயரம்.
மேந்தி } வெந்தயம்.
மேந்திகை }
மேந்திரி - மெந்திரி.
மேம்படுதல் - உயர்தல்.
மேம்பாடு - புகழ், மேன்மை.
மேய் - தகுதியான.
மேய்க்கி - இடையன், கவளங்கொடுப்போன்.
மேய்ச்சல் - விலங்குணவு.
மேய்தல் - உண்டல், மூடல்.
மேய்த்தல் - மேயச்செய்தல்.
மேய்ப்பர் - இடையர்.
மேய்ப்பன் - இடையன்.
மேய்ப்பு - மேய்ச்சல்.
மேரு-பூமிக்கு நாரசம்போலத் தென்றுருவமுதல் வடதுருவம்வரையும் உள்ளே வளர்ந்து வடதுருவத்தில் முளைத்திருக்கும் பொன்மயமாகிய மலை, வடதுருவம் சுமேருவென்றும் தென்துருவம் குமேருவென்றும் வடவாமுகம் என்றும் சொல்லப்படும், சுமேருவே சாதாரணமாக மேருவென்று வழங்கப்படும், இந்தசுமேரு ப்ரதேசத்திலிருப்பவர்களுக்கு உத்தராயண காலமாகிய ஆறுமாசமும் பக

னும், தக்ஷிணாயகாலமாகிய ஆறுமாச முஞ் இரவும் ஆயிருக்கும், இந்த மேருவின் புதல்வி மேநகை.
மேரு - ஆசனபீடம், ஒருவகைச்குப்பி, பொன்மலை, மலை.
மேருகம் - ஒருவாசனை.
மேருசாவணன்-பதினொன்றாவதுமநு.
மேருதேவி - நாபியின் மனைவி, ருஷபமன் தாய்.
மேருமணி - நாயகமணி.
மேருயந்திரம் - சதிர்க்கம்பி.
மேருவில்லி - சிவபிரான்.
மேருவின்வாரி - பொன்மணல்.
மேரை - குடிமக்கட்குக் களத்திற்றருந் தானியம், மரியாதை, வகை.
மேலகம் - மேல்வீடு, மோக்கம்.
மேலச்சுலுகம் - சிறுத்தைப்புலி.
மேலத்தாட்சி - மேலொப்பனை.
மேலநம் - கலப்பு.
மேலவரிறைவன் - இந்திரன் முருகன்.
மேலவர் - பெரியோர், வானோர்.
மேலனம் - கலப்பு, கூட்டம், பழக்கம்.
மேலாடை - அங்கவஸ்திரம்.
மேலாத்தல்-மேற்புறமாக்கல்,மேன்மை
மேலாமண்டலம் - எழுதமைக்கூடு.
மேலாமுதாம் - கஸ்தூரிஎலும்பு.
மேலார்ப்பு - மேல்விரித்துப் பிடிக்கும் புடவை.
மேலாலம் - மழை.
மேலாலவத்தை - மேனோக்கி நிற்கும் அவத்தை.
மேலிடுதல் - அதிகப்படுத்தல், அதிகரித்தல், மேலேதாவுதல்.
மேலிமைத்தாறு - கற்கடகபாஷாணம்.
மேலீடு - அதிகரிப்பு, ஓராபரணம், மேவிடுதன்மை, மேன்மை.
மேலுக்கெடுத்தல் - எதிரெடுத்தல்.
மேலுதடு - மேலதரம்.
மேலுலகம் - தேவலோகம், பூலோகமுதலேழுலகம்.
மேலுறதி - திணையுறதி.
மேலெடுப்பு - மேன்மையான எடுப்பு, வீம்பு.
மேலெழுச்சி - பெருமிதம், மேம்பாடு.
மேலேடு - காவலொற்றை.
மேலே - அஞ்சனக்கல், மேலிருப்பது, மேல், மேற்கு, மேன்மை, வருங்காலம்.
மேலைத்திசை - மேற்றிசை.
மேலைத்திருக்காட்டுப்பள்ளி - காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம்.
மேலைநாள் - முன்னாள்.
மேலையார் } பெருமையிற் சிறந்
மேலையோர் } தோர்.
மேலொற்றி - திரும்பவைத்தவொற்றி.
மேலோங்கி - கரையாரிலோர்பகுதி.
மேலோர் - அறிஞர்,புலவர்,பெரியோர், வானோர்.
மேல்-அகலம், அதிகம், ஆகாயம், இடம், இனியென்பது ஏழாம் வேற்றுமையுருபு, சரீரம், பின், மிசை, முன்னே மேற்கு, மேற்புறம், வருங்காலம்.
மேல்காற்று - கோடைக்காற்று.
மேல்கை - உயர்ந்தபூமி, மேடு, மேற்கு.
மேல்சாதி - உயர்குலம்.
மேல்பார் - மேற்கு.
மேல்பால்விதேகம் - நவகண்டத்தொன்று.
மேல்பால் - மேற்கு.
மேல்பாலிரேபதம் - நவகண்டத்தொன்று.
மேல்வட்டம் - சங்கை, மகத்துவம். [ம்.
மேல்வாசகம்-பத்திரிகையின் புறவாசக
மேல்வாய் - அண்ணம், ஒன்று முதலாய் மேற்பட்ட கணக்கு.
மேல்வாரம் - இறைப்பங்கு, வாரக்காரன் வைத்தவாரம்.
மேல்விசாரணை - பராமரிப்பு, முதன்மையான விசாரணை.
மேல்விதேகம் - மேன்பால்விதேகம்.
மேல்விழுதல் - யுத்தங்கலத்தல்.
மேல்வீடு - மச்சுவீடு.
மேவலர் - பகைவர்.
மேவல் - உண்டல், சமமாக்கல், சேர்தல், நிரவுதல், விரும்பல்.
மேவாமை - பொருந்தாமை.
மேவார் - பகைவர்.
மேவினர் - உறவோர், சிநேகிதர்.
மேவு - ஆசை, மேவென்னேவல்.
மேவுதல் - மேவல்.
மேழகம் - ஆடு, கவசம், செம்மறிக்கடா, திருவாட்டேறு.
மேழகவூர்தி - முருகக்கடவுள்.
மேழகயாகம் - அஜமேதயாகம்.
மேழி-கலப்பை,கலப்பையின்கைப்பிடி.
மேழிப்படையோன் - பலதேவன்.

மேழியர் - பூவைசியர்,மருதநிலமாக்கள், வேளாளர்.
மேளம் - பறைப்பொது.
மேளனம் - கூட்டம்.
மேற்கட்டி - படங்கு.
மேற்கட்டு - மேல்வீடு.
மேற்கதி - மேற்செலவு, மோட்சம்.
மேற்கதுவாயளபெடை - முதலயலொழிந்த மற்றெல்லாவற்றின் கண்ணுமளபெடை வரத்தொடுப்பது.
மேற்கதுவாயியைபி - கடையயற்சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணுமியைபுவரத்தொடுப்பது.
மேற்கதுவாயெதுகை - முதலொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணுமெதுகை வரத்தொடுப்பது.
மேற்கதுவாய் - முதலயற் சீர்க்கணின்றியொழிந்த சீர்க்கண் மோனை வரத்தொடுப்பது.
மேற்கதுவாய்முரண்-முதலயற்மொழிந்த மற்றெல்லாச்சீர்க்கண்ணு முரண் வரத்தொடுப்பது.
மேற்கதுவாய்மோனை - முதலயற் சீர்க்கண்ணும் மெல்லின வெழுத்துக்கள் எதுகையாய் வருவது.
மேற்கத்தியான் - மேற்குதேயத்தவன்.
மேற்காது - காதின்மேற்புறம்.
மேற்காவல் - மேல்விசாரிப்பு.
மேற்கு - மேல், மேற்றிசை. [யர்.
மேற்குலத்தோர் - மேல்சாதியார்,வேதி
மேற்கொள்ளல் / மேற்கொள்ளுதல் } தலைப்படுதல்,வெல்லல்.
மேற்கோள் - உதாரணம், சனி, போர்வை, முன்னோர்வழக்கு, மேன்மை.
மேற்சாட்சி - மறுசாட்சி.
மேற்சுவாசம் - மேனோக்கியமூச்சு.
மேற்செம்பாலை - ஓரிசை.
மேற்செல்லல் - போர்க்குச்செல்லல், மாற்றுரெதிர்த்தல், மேலேநெருங்கிப்போதல்.
மேற்படல் - அதிகப்படல், மேன்மைப்படல், வெல்லுதல்.
மேற்படி - மறுபடி, முன்குறித்தபடி.
மேற்பாதவாதனம்-இருகாலுஞ்சம்மணமாகமடித்து மேலாக்கிக் கிடப்பது.
மேற்பாரம் - மேலேயணைத்துச் சேர்க்கும் பாரம்.

மேற்புலவர் - தேவர்.
மேற்புறணி - மேற்பட்டை.
மேற்புரம் - மேற்பக்கம்.
மேற்பூச்சு - வெளிப்பூச்சு.
மேற்பேச்சு - மனத்தோடியையபில்லாத சொல்.
மேற்போடுதல் - தலைப்போடுதல்.
மேற்போர்வை - கிலேயங்கி, மீக்கோள்.
மேற்றட்டு - மேலறை.
மேற்றரம் - உயர்ந்ததரம்.
மேற்றலை - மேற்புரம்.
மேற்றளம் - கப்பலின் மேற்பக்கம், காலாற்படை, மேனிலம்.
மேற்றிசை - மேற்குதிக்கு.
மேற்றிசைப்பாலன் - வருணன்.
மேற்றிராணி - அதிகாரம், அதிகாரி.
மேனகை - ஒரு அப்ஸரஸ்த்ரீ, இவளை இந்திரனனவன் விசுவா மித்திருடைய தவத்தை அழிக்கும்பொருட்டு ஏவ, அவள்சென்று அவரைக்கூடிச் சகுந்தலையைப் பெற்றாள், மேருவின்புதல்வி, மலையரையன் மனைவி இவளுக்கு மனோரமை என்றொரு பெயருமுண்டு, இவள்புதல்வியர் கங்கையும் பார்வதியும்.
மேனகைபுதல்வி - பார்வதி.
மேனா - மேநகை.
மேனஜா / மேனஜை } பார்வதி.
மேனடு - பொன்னுங்காணி.
மேனதம் - பூனை, மயில், வெள்ளாடு.
மேனதரன் - மலையரையன்.
மேனதவம் - இமயம்.
மேனதவன் / மேனநாயகன் / மேனபதி } மலையரையன்.
மேனி - அங்கம், அழகு,உடல்,உருவம், காந்தி,குப்பைமேனி,நிறம்,மினுக்கு.
மேனை - பிதிர்தேவதைக்குச் சுவதையிடத்துப்பிறந்த புத்திரி, இவள் புத்திரி வைதரணி, மலையரையன் மனைவியாகிய மேநகை.
மேனோக்கம் / மேனோக்கு } மேற்பார்வை.
மேனோக்குதல் - ஊர்த்துவமுகமாதல், மேற்கதி கொள்ளல்.
மேன்பாடு - மேம்பாடு.

மேன்மக்கள் - பெரியோர்.
மேன்மாடம் - மேன்மாளிகை.
மேன்மேல் - அதிகமதிகம்.
மேன்மை - மகிமை, மேலாந்தன்மை.
மேன்மைபாராட்டல் - புகழ்தல்.
மேன்றலை - மரக்கலத்தின் முன்புறம்.

மை

மை - அஞ்சனம், இருள், எழுதுமை, தொழுத்து, கருப்பு குற்றம், செம்மறியாடு, நீர், மலடி, மலட்டெருமை, மேகம், மேடவிராசி, மையென்னேவல், வெள்ளாடு.
மைகம் - வக்கிராந்தபாஷாணம்.
மைகரம் - மயக்கம்.
மைகொடுத்தல் - வன்னம்பூசுதல்.
மைக்கூடு - மைப்பாத்திரம்.
மைசூர் - ஒருபட்டினம்.
மைச்சந்தன், மைச்சமனுந்தன் } கச்சற் பாஷாணம்.
மைச்சாரி - கருங்குருவைநெல்.
மைச்சாள் - சகோதரனுடைய மனைவி, மைத்துனி.
மைச்சான், மைச்சுனன் } மைத்துனன்.
மைச்சுனி - மைத்துனி.
மைஞ்சன் - மகன்.
மைதல் - மசிதல்.
மைதானம் - உறநடு, வெளி.
மைதிராவருணன், மைதிராவருணி } அகத்தியன்.
மைதிலி - சீதை.
மைதிலிநாயகன், மைதிலிமணாளன் } ஸ்ரீராமன்.
மைதீட்டுதல் - மைபூசுதல்.
மைதுலை - பஞ்சசௌடத் தொன்று, மிதிலை.
மைதுனம் ஒன்றிப்பு,புணர்ச்சி, விவாகம்.
மைதுனன் - மச்சான்.
மைதுனி - மச்சாள்.
மைத்திரம் - சினேகம்.
மைத்திரன் - சினேகன், பிராமணன்.
மைத்திராவருணம் - உபநிடத முப்பத்திரண்டில் ஒன்று.
மைத்திராவருணி - அகத்தியன், வால்மீகி.
மைத்திரியம் - சிநேகம்.
மைத்திரீபலன் - புத்தன்.
மைத்திரேயன் - குசிலவன் புத்திரன், பராசான் சீடன், இவன் துரியோதனனைக் காமிய வனத்திற்கண்டு அவனுக்கு ஞானோபதேசம் செய்ய நினைத்தபோது, அதனைச்சிரவணஞ்செய்யாது பரிகசித்தமையால் துரியோதனனை வீமன் கதாயுதத்தால் இறக்கும்படி சபித்துச்சென்ற ஒருமுனிவன்.
மைத்துனவமை - மைத்துனவுரிமை.
மைத்துனன் - மச்சான்.
மைத்துனி - மச்சாள்.
மைநகர்ப்பூமி - வக்கிராந்தபாஷாணம்.
மைநா - சொல்லறிபுள்.
மைநாகசகாயன் - வாயுதேவன்.
மைநாகசுவசிரு - பார்வதி.
மைநாகம் - ஒருமலை.
மைநாகன் - இமவான் மேனகையிடத்துப்பெற்றபுத்திரன், கிருதயுகத்தில் மலைகளெல்லாம் சிறகுகளையுடையனவாய்ப் பூவுலகில் எங்கும் பறந்து பட்டணங்கள் மீதுசென்று படிந்து அந்தப் பட்டணங்களையும் அவற்றிலுள்ள ஜநங்களையும் நாசஞ்செய்துவந்தன, அதுகண்ட இந்திரன் அந்தமலைகளின் சிறகறிந்து அவை பறவாதபடி தடுத்தான், அந்தச்சமயத்தில் மைநாகன்மாத்திரம் வாயுதேவனதுசகாயத்தால்தப்பியோடிச்சமுத்திரத்தில் ஒளித்துக்கொண்டான்.
மைந்தர் - ஆண்மக்கள், மனிதர்.
மைந்தன் - ஒருவாநரன், இவனுக்குச் சகோதரர் இருவர், இவன் அசுவினிதேவர்களுடைய புத்திரன், இவன் சுக்ரீவன்சேநாதிபதிகளுள் ஒருவனாயிருந்தவன், திண்ணியன், மகன்.
மைந்து - மயக்கம், வலி, அழகு.
மைமல் - மாலைநேரம்.
மைமா - கரும்பன்றி.
மைமுகன் - முசு.
மைமை - மலடி, மலட்டெருமை.
மையண்டம் - முட்டை.
மையம் - நடு.
மையம்பாய்தல்-இருபக்கமுஞ்சாய ஒவ்வாமலிற்றல்.

மையலி - மாசாலி.
மையல் - உன்மத்தம், மயக்கம், மோகம்.
மையவாடி - முன்வேலியுள்ளவிடம்.
மையாத்தல் - மயங்குதல்.
மையார்தடங்கண்ணுபதி - திருக்கோடிக்குழகரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மையிடுதல் - மைதீட்டுதல், மைபூசுதல், மைபோடுதல்.
மையுடை - கருவேல்.
மையுண்ணல் - மைதீட்டப்படுதல்.
மையூட்டுதல் - மைதீட்டுதல்.
மையேரயம் - ஒருதைலம்.
மைவார்குழலியம்மை - திருவிற்குடி வீரட்டத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மைவிளக்கு - நெய்விளக்கு.
மைனம் - மீன்.
மைனு - நாகணவாய்ப்புள்.
மைனிகன் - கரையான்.

மொ

மொகமொகெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
மொகவை - முகவை.
மொக்கட்டை - முகம்.
மொக்கட்டைமுறித்தான் - குறும்பன்.
மொக்கட்டைமுறித்தல் - முகமுறித்தல்.
மொக்கட்டையீனம் - சங்கைத்தாழ்வு.
மொக்கணி - தோற்பை, பொக்கணி.
மொக்கவீனம் - சங்கையீனம்.
மொக்களித்தல் - தாமதித்தல், பயணத்திற்றரித்தல்.
மொக்கன் - பருத்தவன்.
மொக்கு - பூமொட்டு, மரத்தின்கணு.
மொக்குளித்தல் - குழியிட்டொலித்தல்.
மொக்குள் - கொப்பூழ், நீர்க்குமிழி, பலரும்பருவத் தரும்பு.
மொக்கை - அங்கை, கூரின்மை, பருமை, மனை, வெட்கம்.
மொக்கைகுலைதல் - அவமானப்படுதல்.
மொக்கைச்சோளம் - ஒருசோளம்.
மொக்கைபண்ணல் - அவசங்கையாக்கல், ஆயுதங்களைமனைத்தல், கெடுத்தல்.
மொக்கைபோதல் - அணுப்பப்படுதல், அவசங்கைப்படுதல், ஆயுதமுனைமடிதல்.
மொக்கையீனம் - சங்கைக்குறைவு.
மொங்கன் - மொழுங்கன்.
மொசுமொசுக்கை - முசுமுசுக்கை.
மொசுமொசுத்தல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு, நினவுக்குறிப்பு.
மொச்சடித்தல் - மொச்சையசடித்தல்.
மொச்சு - மொச்சை.
மொச்சை - ஆட்டுமணம், ஒருவகைப்பயறு.
மொச்சையடித்தல் - மொச்சைமணம் விடுதல்.
மொஞ்சி - ஸ்தனம்.
மொடமொடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
மொடு - இலாபம், நயம், பயற்றஞ்சப்பட்டை, பருமை.
மொடுக்குமொடுக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மொடுமொடுத்தல், மொடுமொடுப்பு - ஈரடுக் கொலிக்குறிப்பு.
மொடுமொடெனல் - ஒலிக்குறிப்பு.
மொட்டம்பு - அலகில்லா அம்பு.
மொட்டல் - அரும்பல்.
மொட்டு - இளம்பூவரும்பு, குமிழ்ப்புவடிவுள்ளது.
மொட்டருமலர் - முழுதும் விகசியாத புஷ்பம்.
மொட்டுதல் - அரும்புதல்.
மொட்டை - கூரின்மை, மழுக்கம், மூண்டிதம்.
மொட்டைக்கறப்பர் - எமதூதர்.
மொட்டைச்சி - அமங்கலி, பூசீறு.
மொட்டைத்தலை - மொட்டந்தலை.
மொட்டைப்புத்தி - மழுங்கற்புத்தி.
மொட்டையடித்தல் - தலை முண்டிதமாக்கல்.
மொட்டையம்பு - அலகில்லாத அஸ்திரம்.
மொட்டையன் - மொட்டைத்தலையான்.
மொட்டைவெட்டு - முண்டித வெட்டு.
மொண்டணி - மொந்தணி.
மொண்டன், மொண்டாவன் - ஒருசாமை.
மொண்டி - ஒருசாமை, நொண்டி.
மொண்டு - அலைவு, முரண்டு, மொண்டெனச்சம்.
மொண்டுக்காரன் - அலைவு பண்ணுபவன், முரண்டன்.

மொதமொதெனல் - ஒலிக்குறிப்பு, கொதத்தற்குறிப்பு.
மொத்தம் - தொகை, பருப்பம், பொது.
மொத்தல் - அடித்தல்.
மொத்தளம் - கூட்டம், தொகை.
மொத்தி - புடைப்பு.
மொத்து - அடி, மொத்தென்னேவல்.
மொத்துண்ணல் - அடியுண்ணல்.
மொத்துதல் - அடித்தல்.
மொத்தை - பருத்தது.
மொந்தணி-திரட்சி,பருப்பம்,மரக்கணு
மொந்தணியன்-திரண்டது, பருத்தது.
மொந்தன் - ஒரினவாழை.
மொந்தை-ஒருகட்பறை, ஒருபாத்திரம், பருத்தது.
மொந்தைவாழை - ஒருவகைவாழை.
மொப்பு - வெடிநாற்றம்.
மொய்-கூட்டம்,தாய், பெருமை, போர், போர்க்களம், மகமை, மொய்த்தல், மொய்யென்னேவல், யானை,வண்டு.
மொய்கதிர் - அடர்ந்தகதிர், மூலே.
மொய்குழல் - பெண்.
மொய்ச்சல் - மொய்த்தல்.
மொய்தாய் - ஈன்றாள்.
மொய்த்தல் - நெருங்கல், மூடுதல்.
மொய்த்தாய் - ஈன்றாள்.
மொய்ப்பணம் - மகமைப்பணம்.
மொய்ப்பு - மொய்த்தல்.
மொய்ம்பு - தோள், வலி.
மொய்யெழுத்து - தருமசாதனவெழுத்து.
மொருமொருத்தல், மொருமொரெனல் - ஒலிக்குறிப்பு.
மொலுமொலுத்தல்-ஒலிக்குறிப்பு, தினவுக்குறிப்பு.
மொல்லு - இரைச்சல்.
மொல்லுமொல்லெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
மொழி - சொல்,மொழியென்னேவல்.
மொழிக்கொடை - வித்யாதாகம்.
மொழிதல் - சொல்லுதல்.
மொழிந்ததமொழிதல் - செய்யுள் வழுவினொன்று.
மொழிபெயர்த்தல்-பாஷைதிருப்புதல்.
மொழிபெயர்ப்பு - பாஷைதிருப்பல்.
மொழிப்பொருள் - சொற்பொருள்.
மொழிமாற்று - பொருள்கோளெட்டில் ஒன்று அது பயனிலைகட் கேற்ற மொழிகளைப் பயனிலைகட் கேலா மொழிகளோடு புணர்ப்பது (உ-ம்) யானைக்கு நீத்துமுயற்குநிலே.
மொழிமாகம் - ஆகமளவை.
மொழிமுதலெழுத்து - சொற்குமுதனிற்குமெழுத்து.
மொழிமை - பழஞ்சொல்.
மொழியன் - பரும்பேன்.
மொழிஇடையெழுத்து - சொல்லிடைநிற்குமெழுத்து.
மொழியீற்றெழுத்து - சொல்லிறுதியில் நிற்குமெழுத்து.
மொழியொலிக்குறிப்பு - எழுத்தினோசைக்குறிப்பு.
மொழியோசை - சத்தம்.
மொழுக்கன், மொழுங்கன் - தடித்த ஆள், வெண்மட்டவேலே.
மொழுக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மொள்ளல், மொள்ளுதல் - முகத்தல்.
மொறுமொறுத்தல், மொறுமொறெனல் - ஒலிக்குறிப்பு,மிக்காய்த்தல்.

மோ

மோ - ஓரெழுத்து, முன்னிலையசைச் சொல் (உ-ம்)கேண்மோ, மோவென்னேவல்.
மோகநீயம் - மோகமின்மை.
மோககரன் - மன்மதன்.
மோகப்படைக்கலம் - எதிரியை மயக்கும் படைக்கலம்.
மோகம் - ஆசை, உட்பகையாறினொன்று, உன்மத்தம், காமம், தம்பிதம், பஞ்சமாயையினொன்று அது விபரீதஞானமுண்டாக்குவது, பஞ்சபாணுவத்தையினொன்று அது அழுங்கலும் பிதற்றலும், பாதிரி, மயக்கம், மதியீனம், முருங்கை, வருத்தம், வாழை, விகாரமெட்டினுமொன்று.
மோகரம் - உக்கிரம், மயக்கம்.
மோகரித்தல் சினத்தார்த்தல், மயங்கல்.
மோகரிப்பு - ஆக்கிரமிப்பு, மயக்கம், வீராவேசம்.

மோகர் - உன்மத்தர், சித்திரக்காரர்.
மோகலீலை - காமவிநோதம்.
மோகவதி - மோகவந்தன் புத்திரி, சுதரிசகன்மனைவி, இவளே நிருவகன் வமிசத்துக் கடைத்தோன்றல், பாரதயுத்தம் நடக்குங்காலத்திலே குருக்ஷேத்திரத்தின்சமீபத்திலிருந்தவோர் நதி. பாண்டவர்கள் பாரதயுத்தம், முடிந்த பதினெட்டா நாளிரவில் இந்நதிக்கரையிற் படுத்து நித்திரை செய்தார்கள்.
மோகவியாபாரி-காமவிகாரி, தூர்த்தன்.
மோகவுவமை - பொருண்மே லெழுந்த வேட்கையான் வந்த மயக்கந்தோன்ற வுரைப்பது (உ-ம்) கயல்போலுமென்று நின் கண் பழிப்பல் கண்ணின்செயல்போற் பிறழுந் திறத்தாற்கயல் புகழ்வன்.
மோகனக்கல் - கோயில் வாயின்மேற் படிக்கல்.
மோகனசாத்திரம் அறிவைமயக்குநூல்
மோகனநாட்டியம் - மகளிர்கூத்து.
மோகனப்படைக்கலம் - மோகப்படை.
மோகனமாலை - ஓராபரணம், ஒரு பிரபந்தம்.
மோகனம் - அணைப்பு, புணர்ச்சி, மயக்கம், மன்மதன் கணையினொன்று அது அட்டகருமத் தொன்று, கலைஞான மறுபத்து நான்கினுமொன்று.
மோகனவித்தை - மயக்குத்தொழில் இது அட்டகருமவித்தையி னொன்று.
மோகனாங்கனை } மோகினி.
மோகனாங்கினி } மோகினி.
மோகனாஸ்திரம் - மன்மதபாணம்.
மோகனி - மோகனப்பெண்.
மோகனீயம் - அட்டகுற்றத் தொன்று அது மோகமின்மை.
மோகன் - மன்மதன்.
மோகாதி - முக்குற்றம் அது காமம், வெகுளி, மயக்கம்.
மோகாம்பிகை - திருப்பாற் றுறையிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
மோகி - கஞ்சா.
மோகிதன் - காமங்கொள்வோன், மோகமுள்ளவன்.
மோகித்தல் - மயங்கல்.
மோகிப்பு - மயக்கம்.
மோகினி - திருமால் பெண்வடிவங் கொண்டகாலத்தில் தேவர்களோடு அசுரர் மாறுகொண்டுநிற்க, அந்த அசுரரை அமிர்தத்திற் பங்குபெறாமல் தடுக்கும் உபாயமாக இந்த மோகினி ரூபத்தை விஷ்ணுவெடுத்து, அவரவர்களை நோக்கி,இந்தஅமிர்தம்வேண்டுமோ என்போகம் வேண்டுமோ என்றுகேட்க, அவர்கள் அந்த மோகினிமேற் காதல்கொண்டு புறஞ்சென்றார்கள், அந்தச் சமயத்தில் தேவர்களெல்லாருங்கூடிஅமிர்தத்தைப்பங்கிட்டுக் கொள்வாராயினர், அப்போது ராகுவும் கேதுவும் தேவவுருக்கொண்டு தேவர்களோடு கலந்துநின்று அமிர்தம்பருக யத்தனித்தார்கள், அதனைச் சூரியசந்திரர்கள் குறிப்பாலுணர்த்த உணர்ந்த விஷ்ணுமூர்த்தியானவர் தமது சக்ராயுதத்தால் ராகு கேதுக்களது சிரசரீரங்களைச் சேதித்தாரென்பது புராணகதை தாருகாவனத்தில் சிவபெருமான் மிகஅழகான வடிவங்கொண்டபோது, விஷ்ணு மூர்த்தியானவர் எடுத்த மோகினிவடிவு.

ஒரு அப்ஸரஸ்த்ரீ - இவள் பூஞ்சோலைமுதலிய இடங்களிலும், காமுகர் கனவிலும் தோன்றி, அவர்களை உருக்குலைக்குந் தொழிலையுடையவள், ஒருதேவதை, திருமால்கொண்டபெண்ணுரு இது திருமால் பதினொந்தவதாரத் தொன்று.
மோகினிப்பணம் உற்சவவரிப்பணம்.
மோகொரம் - துருக்கர்பண்டிக்கை.
மோக்கட்டை - மோவாய்க்கட்டை.
மோக்கம் - தீர்தல், பாகதி, விடுகை.
மோக்கல் - மணத்தல், மொள்ளல்.
மோக்குதல் - மணத்தல், முகந்துகொள்ளல்.
மோசகம் - துறவு, வாழை.
மோசகன் - துறவி.
மோசகி - கிலுகிலுப்பைச்செடி.
மோசனம் - விடுகை.
மோசகி - இலவமரம், பாதரட்சை.
மோசம் - அவத்தம், தவறு, பிசகு, வஞ்சனை.

மோசநம் - ஒருவகைநெல், கிரகணம்விடுகை, தீர்தல், துறத்தல், விடுகை.
மோசாசம் - பருத்திப்பிசின்.
மோசாடம் - சந்தனம், வாழைப்பழம்.
மோசிகீரனார் - இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர், சேரமான் தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையும், கொண்கானம் கிழானும் இவரால் பாடப்பட்டோர், இவர் திருவள்ளுவருக்கும் சிறப்புக் கவியொன்று பாடியிருக்கின்றனர்.
மோசிகை - உச்சிமுடி.
மோசிசாத்தனார் - புறநானூறு பாடின புலவர்களுள் ஒருவர்.
மோசித்தல்-தவறுதல், மோசம்போதல்.
மோசை - அவுரி, இலவு, வாழை.
மோஷகன் - தட்டான், திருடன்.
மோடசகன் - கள்வன்.
மோஷணம் - சேதித்தல், வதைத்தல்.
மோடணம் - அரைத்தல், காற்று.
மோடன் - மூடன்.
மோடி-காடுகாள், பிணக்கு, மேட்டிமை, மெனடி, வேடிக்கை, வனத்தில் வாழுங்காளி.
மோடு - உயர்ச்சி, பிளப்பு, பெருமை, மூகடு, மூடத்தனம், மேடு, வயிறு.
மோட்சமார்க்கம் - முத்திநெறி.
மோட்சம் - இட்டம், கடன்செய்தல், தீர்தல், மரணம், மோக்கம்.
மோட்சவாசம்-மோட்சத்திலிருத்தல்.
மோட்சவாசி, மோட்சவாதி, மோட்சவான் - மோட்சஞ்சேரப்பக்குவன், மோட்சத்திற் சஞ்சரிப்போன்.
மோட்சவிளக்கு - வீரசைவர் பிரேதமடக்குமிடத்துவைக்கும் விளக்கு.
மோட்சாநந்தம் - மோட்சவின்பம்.
மோட்சோபாயம் - கதிபெறும் வழிவகை.
மோட்டுத்தனம்-முரட்டுத்தனம்.
மோணம் - பழவற்றல், பாம்புப்பெட்டி.
மோதகக்கையன் - விநாயகன்.
மோதகப்பிரியன் - விநாயகன்.
மோதகமரம் - குதிரைபிடுக்கன்மரம்.
மோதகம் - அப்பவருக்கம், இணக்கம், ஒருபணிகாரம், சந்தோஷம், தோசை.
மோதகி - விஷ்ணுகதாயுதம்.
மோதநம் - சந்தோஷம்.
மோதம் - விரும்பியதையடையப் பிரயத்தினப்படுதல், ஓமம், களிப்பு, சந்தோஷம், வாசனை.
மோதயந்தி - காட்டுமல்லிகை.
மோதல்-அடித்தல், இடித்தல், பருத்தல்.
மோதனம் - உவகை.
மோதிதம் - சந்தோஷம்.
மோதிதன் - களிப்புடையோன்.
மோதினி - கஸ்தூரி, மல்லிகை.
மோதிரக்கள்ளி - ஒருகொடி.
மோதிரகண்ணி - ஒருசெடி.
மோதிரமாறுதல் - விவாக வுடம்படிக்கையிற் பெண்ணும் ஆணுங் கணையாழி மாற்றிக்கொள்ளுதல்.
மோதிரம் - விரலணி.
மோதை - வசம்பு.
மோத்தல் - முகத்தல்.
மோத்தை - வெள்ளாட்டுக்கடா.
மோப்பம் - மணத்தல், மூக்கு.
மோப்பி - கைம்பெண்.
மோப்பு - மோப்பம்.
மோரடம் - கரும்புவேர், பெருங்குரும்பை, வேர், வீழி.
மோரடம் - கரும்புவேர்.
மோருதல் - முகத்தல்.
மோர் - மச்சிகை.
மோலி - மௌலி.
மோவாய் - தாடி.
மோவாய்க்கட்டை - மோவாய்.
மோழல் - பன்றி.
மோழை - கஞ்சி, கீழாறு, மடமை, மொட்டை, வெடிப்பு.
மோரு - ஒரு பொற்காசு.
மோறை - மோவாய்.
மோனம் - மௌனம் அது சாத்துவிதகுணத்தொன்று.
மோனர் - முனிவர், மௌனிகள்.
மோனை - ஆதி, ஒருதொடை.
மோனைத்தொடை - முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனு முதலெழுத் தோன்றிவருவது.

மௌ

மௌகலி } காகம்.
மௌகுலி }
மௌக்திகமாலை - முத்துவடம்.
மௌத்திகம் - முத்து.
மௌக்திகதண்டுலம் - வெண்சோளம்.
மௌக்திகப்ரஸவம் - முத்துச்சிப்பி.
மௌகூர்த்திகர் - தர்மன் முகூர்த்தையினிடமாகப்பெற்ற தேவகணம், முகூர்த்தகாலங்களுக்கு அதிதேவதைகளாகிய இவர்கள் அந்தந்த முகூர்த்தங்கள்தோறும் உலகத்தாரால் செய்யப்படுங் கருமங்களை ஏற்றுவைத்திருந்து அந்தக் கிரமமாகவே அந்தக் கருமங்களின் பயன்களை யூட்டுவோர்.
மௌஞ்சி-நாணற்புல்லாற்செய்த வரைஞாண், முஞ்சி.
மௌடி-ஒருவித்தை,பகடம்,பரிகாசம்.
மௌட்டியம் - அறியாமை.
மௌட்டை - கைபொத்திக்குத்துங்குத்து.
மௌண்டம் - ஒரு பலகாரம்.
மௌண்டிதம் - உபநிடதமுப்பத்திரண்டில் ஒன்று, முண்டிதம்.
மௌத்கல்யன் - ஒருமுநி.
மௌதகல்லியர் - முத்கலன் கோத்திரத்துப் பிராமணர்.
மௌத்கல்லியன் - சாகல்லியன் சீடன்.
மௌத்காலம் - காகம்.
மௌத்திகம் - முத்து.
மௌநேயர் - காசிபன் முனியென்பவளிடத்திற்பெற்ற கந்தருவர்.
மௌரவி } வின்னுன்.
மௌர்வி }
மௌரவியர் - சந்திரகுப்தவமிசத்தரசர் இவர் பதின்மர், நூற்றுமுப்பத்தேழு வருடம் அரசசெய்தனர்.
மௌலன் - நல்லமிசத்தான்.
மௌலி - உச்சிக்குடுமி,கள்,சடை,தலை, பூமி, மயிர்முடி, முடி.
மௌவல் - முல்லை, வனமல்லிகை.
மௌளனம் - மோனம்.
மௌனம் - மோனம்.
மௌனியர் - முனிவர்.
மௌனேயம் - கந்தர்வகணவிசேஷம்.

ய

ய - இறந்தகாலவிடைநிலை (உ-ம்) போயது, ஒரு எழுத்து.
யக்கராசன் - குபேரன்.
யக்கர் - இயக்கர்.
யக்கராத்திரி - கார்த்திகாபூரணை.
யக்காபரான் - குபேரன்.
யக்கர் } காசிபன் சரசையிடத்துப்பெற்ற புத்திரர், இவர் குபேரன் முதலானோர், உவாதேவசபையில் யாழ்வாசிப்பவர், யக்கர், கிந்நரர், கந்தருவர் என்பவர் தேவருக்குப் பிறந்தமையால் தேவயோநிகள் எனப்படுவர்.
யக்ஷர் }
யக்கன் - யக்கராசன்.
யக்ஞோபவீதம் - பூணூல்.
யக்கியக்கிநன் - யஜ்ஞ மூர்த்தியாகிய விஷ்ணு மூர்த்தியால் கொல்லப்பட்டவன்.
யக்கியகோபன் - இவன் யஜ்ஞகோபன் எனவும் படுவன், இவன் மாலியவந்தன் புத்திரன்.
யக்கியசாலை - யாகசாலை.
யக்கியசூத்திரம் - முப்புரிநூல்.
யக்கியசேடம் - யாகமிச்சில்.
யக்கியதத்தன் - இவன் ஒரு பிராமணபுத்திரன், தசரதன் வேட்டையாடச் சென்றபோது இவன் தன் கமண்டலத்திலே குனிந்து நீருந்துகையில், இவனை ஒருயானையென்று நினைத்து தூரத்திலே யிருந்து அம்பெய்துகொன்றனன், அதுகண்ட அந்தவேதியச் சிறுவனுடைய தந்தை தாயரீர் தசரதனைநோக்கி, யாம் இச்சிறுவனது சோகத்தால் உயிர்விடுகிறோம், நீயும் எம்மைப்போலவே புத்திரசோகத்தால் உயிர் நீங்கக்கடவையென்று சபித்துவிட்டு உயிர்துறந்தார்கள்.
யக்கியஸ்தானம் - யாகம்பண்ணுமிடம்.
யக்கியநாமிகை - மகநட்சத்திரம்.
யக்கியபசு - குதிரை, பலிக்கேதுவான மிருகம்.
யக்கியபுருஷன் - விட்டுணு.
யக்கியம்-தேவதாப்பிரீதியாகச்செய்யப்படும் அக்கி காரியம், இது இருபத்

தொருவகைப்படும். (யக்கியம் - யாகம்) அவையாவன ஸப்தயாகயஜ்ஞும், ஸப்தஹவிர்யஜ்ஞும், ஸப்தஸோமஸ்மஸ்தம் என்பன, இவற்றைக்குறித்த விதானங்களெல்லாம்ஆபஸ்தம்பஸூத்ரத்துட்காண்க இன்னும் பிராமணர்க்கு நியதமாகவுள்ள யாகங்கள் ஐந்து அவை பஞ்சமஹா யஜ்ஞுமென்று சொல்லப்படும், அவைதேவயஜ்ஞும், பிருத்யஜ்ஞும், பூதயஜ்ஞும், மாநுஷ்யஜ்ஞும், ப்ரஹ்மயஜ்ஞும் என்பன.

யக்கியம் - துவாபரயுகம், யாகம்.

யக்கியவராகம் - வராஹாவதாரம்.

யக்கியன் / யஜ்ஞன் } ருசிப்ரஜாபதிக்குச்சுவாயம்புவமனு புத்ரியினிடத்திற் பிறந்த புத்திரன் இவனுடைய தங்கையை தக்ஷிணன் மணம்புரிந்தான், இந்த யக்கியனை விஷ்ணு அவதாரமென்பாருமுளர்.

யக்கியயோக்கியம் - அத்திமரம்.

யக்கியாரி - சிவபிரான்.

யக்கியோபவீதம் - முப்புரிநூல், பூணூல்.

யக்கேசன் - குபேரன்.

யக்கூரா - அதிவிடையம்.

யசசு - புகழ்.

யசந்தன் - யாககர்த்தா.

யசமானன் - தலைவன், யாககுரு.

யசனம் - யாகஞ்செய்தல்.

யசஸ்வி - புகழானன்.

யசாகன் - கொடையாளி.

யசசு / யசரு } இரண்டாம் வேதம்.

யசோதை - நந்தன் மனைவி, இவளே கிருஷ்ணனை வளர்த்த தாய், கிருஷ்ணன் பிறந்த அன்றிரவிலே இவள் வயிற்றிலும் ஒரு பெண்குழந்தை யோகநித்திரையின் அமிசமாய்ப்பிறந்தது, அது பிறந்தவுடனே யசோதை பிரசவவேதனையால் அறிவழிந்து சோகமுற்றுக் கிடந்தாள், அவளருகே யிருந்தவர்களும் சோகித்துக் கிடந்தார்கள், அப்போது மழையும் காரிருளும் மூடுவவாயின அந்தச் சமயத்தில் வசுதேவன் தன் குழந்தையாகிய கிருஷ்ணனை கஞ்சன்வாளுக் கிரையாகாமல் தப்புவிக்கவேண்டுமென்னும் கருத்துடையவனாய் பிறந்தவுடனே கையிலேந்திக்கொண்டுபோய், நந்தன் மனையுட் புகுந்து யசோதையின் பக்கத்திற் கிடத்திவிட்டு, அங்கிருந்த பெண்குழந்தையைக் கொண்டுபோய்த் தேவகிபக்கத்திலேவிட அதுவரைக்கும் வாய் திறவாமற்கிடந்த சிசு அழத்தொடங்கிற்று, அவ்வழுகுரல்கேட்ட காவலாளர்போய்க் கஞ்சனுக்கறிவிக்க, அவனோடிப்போய் அக்குழந்தையை யெடுத்துத்தரையிற்கிடத்திவாளையோங்கினன், அதுகண்ட தேவகி கதறியழுது, அண்ணா, மண்டலேசுவரா, இது பெண்குழந்தை இதனால் உனக்கு என்ன தீங்குநேரிடப்போகிறது, வீணாக உயிர்க்கொலை செய்வதனால் உனக்கென்ன லாபம் என்று சொல்லித் தடுத்தாள், அது அவன் செவியிற் பட்டிலது, அவன் ஓங்கியவாள் மீளுமுன்னே அந்தக்குழந்தை ஆகாயத்திலெழுந்து எட்டுக்கைகளோடு சோதி ரூபமாய்த் தோன்றி நின்று, ஓ, கஞ்சனே என்னை வீணாய்க் கொல்ல முயன்றாய், உன்னைக் கொல்ல வந்தபாலன் வேறோரிடத்தில் வளர்கின்றான், அவனாலே நீ மடிந்தொழிவது சத்தியம் என்று சொல்லி மறைந்தது.

அது நிற்க, அங்கே யசோதை மயக்கந் தீர்ந்து விழித்துப் பார்த்தபோது நீலரத்நம்போல ஒரு ஆண்குழந்தையிருக்கக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்து அதனை நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்தாள், அந்தக் குழந்தையின் உண்மையாகிய வரலாறு முழுதும் அறிந்த பின்பும் தன் அருமைக்கண்மணிபோலவே அன்போடு வளர்த்துவந்தாள்.

யசோவிதி - ஈசானபுடவேதம்.

யஜ்ஞகோபன் / யக்கியகோபன் } மாலியவந்தன் புத்திரன்.

யச்சு - இரண்டாம்வேதம், புகழ்.

யட்சர் - ஒருசாதியார்.

யட்சி - குபேரன்மனைவி.

யட்சிணி-எட்சிணி, ஒரு ஜாலவித்தை.

யட்டி - ஊன்றுகோல், தண்டு, மாலை, முத்துத்தாழ்வடம்.

யதா - ஏற்ற, சரியான, தகுதியான.

யதாகத்தவ்வியம் - சருவகத்தவ்வியம்.

யதாகற்பம் - கற்பனைப்படி.

யதாகாரம் - உண்டியொறுப்பு.

யதாகாலம் - காலத்துக்கேற்க.

யதாசத்தி - இயன்றமாத்திரம்.

யதாஸ்திகம் - அடியாருய்.

யதாஸ்து - முற்றுமப்படியாக.

யதாபூருவம் - தொன்றுதொட்டது.

யதார்த்தம் - சரிமுறை.

யதி-அடக்கம், இளைப்பாற்றி, ஒன்றிப்பு, ஓரிருடி, கைம்பெண், தாளப்பிரமாணம் பத்தினென்று, முனி, மோனை, வாசகத்திற் றரிக்குமிடம் பிரமனது மானஸ புத்திரருள் ஒருவன், நகுடனுடைய மூத்த மகன், யயாதிக்குத் தமையன், இவன் இராஜ்யத்தை விட்டுத் துறவியாய்ப் போனவன்.

யதிபதி - யதிராஜன், சங்கரன்.

யதிகிரி - திருநாராயணபுரம்.

யதிபாத்திரம் - பிச்சைப்பாத்திரம்.

யதிராஜர் - ராமாநுஜர் இவரை பாஷ்யகாரர் உடையவர்முதலிய பலபெயர்களால் வழங்குவர், வைஷ்ணவ சமயத்திற்குச் சிரோபூஷணமானவர், இவர் எழுபத்துநான்கு சிங்காசநாதிபதிகளை யேற்படுத்தி அவர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காராதிகாரமுங் கொடுத்து அவர்கள் வாயிலாக உலகத்தைச் சீர்திருத்தினவர் ஸ்ரீபாஷியம், முதலிய அநேக மோக்ஷப்ரதமான நூல்கள் இவராலே செய்யப்பட்டன.

யது - ஓரரசன், அவன் யயாதிக்குத் தேவயானை வயிற்றிற் பிறந்த புதல்வன், இவன் வமிசத்தார் யாதவர் எனப்படுவார்.

யதுகிரி - மைசூரையடுத்த பிரதேசத்துள்ள ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம், இதனை யாதவகிரி, யாதவாத்ரி, திருநாராயணபுரம் மேலைக் கோட்டை முதலிய பல பெயர்களால் வழங்குவர், இது துவாபரயுகாந்தத்தில் பலராமர் முதலிய யாதவ சிரேஷ்டர்களால் ஆராதிக்கப் பெற்றமையால் யாதவகிரி யதுகிரியென்னும் பெயர்களுண்டாயின, இந்தக் கலியுகத்தில் ஸ்ரீமத் ராமாநுஜ யதீந்திரரால் ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்பட்டகாலந் தொட்டு யதிகிரி எதிகிரியென்னும் பெயர்களும் வழங்குவனவாயின, இந்த திவ்யக்ஷேத்ரம் ஸ்ரீமத் நாராயணனுக்கு இருதயஸ்தானம் என்று அவ்வெம்பெருமானாலேயே தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஸ்ரீவடபதரிகாசிரமத்தில் உபதேசிக்கப்பட்டது. இத்திருமலை திருவநந்தாழ்வானது அவதாரம், இதன்மேல் விளங்கும் விமானத்துக்கு ஆநந்தமய விமானம் என்றுபெயர். இவ்விமானம் பூர்வத்தில் பிரமனது தவத்திற் கிரங்கிய ஸ்ரீமந்நாராயணனால் ஆரோகணித்தருள பெற்றுத் திருநாட்டினின்றும் இழிந்துவர, அந்தப்பிரமன் சத்யலோகத்தில் வைத்து ஆராதித்துப் பின்பு ஸநத்குமாரருக்குக் கொடுக்க அவரால் இத்திரு நாராயணகிரியில் திருக்கலியாணிக் கருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டது, பிரமலோகத்தில் ஐந்து லக்ஷயோசனை அளவாயிருந்த இது இங்கு ஐந்து அங்குலமாயிற்க, "சுருக்குவாரையின்றியே சுருங்கினாய்" என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்தபடியே, பெருமாளும் தமது திவ்யாயுத திவ்யபூஷணங்களுடனே சுருங்கிய விமானத்திற்கேற்பச் சுருங்கி நின்றருளினார், இந்த மூலவிக்ரஹத்திற்குத்திருநாராயணப் பெருமான் என்றும், உத்ஸவ விக்ரஹத்திற்கு ஸம்பத்குமாரர், என்றும் செல்வப்பிள்ளையென்றும், தேவிமார்க்கு சிதேவி பூதேவியென்றும் பெயர்கள் இந்தத் திருமலையில் அநந்தகருட விஷவக் ஸேநாதி நித்யமுக்த முமுக்ஷுக்கள் மாநுஷதிர்யக்ஸ்த்தாவரங்களாக வர்த்திக்கின்றனர், இதில் வாழ்வாரைக் கலிதோஷம்அணுகாது, யமயமபடர் என்பவரும் தூரத்தே நின்று தண்டன் சமர்ப்பிப்பர், இத்தலத்தில் கல்யாணி, வைகுண்ட கெங்கை, நாராயணஹ்ரதம், மைத்ரேயகுண்டம், வேதபுஷ்கரிணி, தர்ப்பதீர்த்தம், கமலதீர்த்தம், பலாசதீர்த்தம், யாதவி என்று

சொல்லப்படுகிற ஒன்பதுபுண்யதீர்த்தங்களுண்டு, இத்திருமலையின் சிகரமாகிய நரசிம்ஹகிரியில், ஸ்ரீப்ரஹலாதாழ்வான்எழுந்தருளப்பண்ணின அழகிய சிங்கரது திருக்கோயில் விளங்காநிற்கும். இந்தத்திருமலையின் கீழே திருக்கல்யாணி தீர்த்தக்கரையில் ஞானப்பிரானாகிய ஸ்ரீவராஹப்பெருமான் எழுந்தருளியிருக்கின்றனர். இந்த ப்ரதேசத்திற்கு வராஹஸ்தானம் என்றும் வைகுண்ட வர்த்தந க்ஷேத்ரம் என்றும் பெயர். பெரிய திருவடி சுவேதத் வீபத்தினின்றும் திருமண்கொணர்ந்து இங்கு ப்ரதிஷ்டைபண்ண, அது எம்பெருமான் திருவருளால் நாளுக்குநாள் பெருகி வருகின்றது.

ஒருகாலத்தில், இத்தலத்தில் வாழ்ந்திருந்த சுதரிசநர் என்னும் பிராமணோத்தமர் தேச யாத்திரையின் பொருட்டுவெளியேசென்றிருக்கும்போது, இவர் ஆசரித்துவந்த கட்டளைப்படித் திருமாளிகையி லிருந்த நாராயணன் என்னும் இவரது கனிஷ்டகுமாரர், தமது மாதாவாகிய சுசீலையைக்கேட்டுப் பிரசாதம் வாங்கிக்கொண்டுபோய்ப் பெருமாளை யாராதித்து, அமுதுசெய்தருளும்படி பிரார்த்திக்க, அச்சிறுவனது பிரார்த்தனைக்கிரங்கி, லோகபாரணரான பகவான் தேவியாரோடுஞ் சேவைசாதித்து அந்த ப்ரஸாதத்தைத் திருவமுது செய்தருளினர். இங்கு எம்பெருமானது வாத்ஸல்ய ஸௌலப்யாத்யஸங்க்யேய திவ்ய கல்யாணகுண விசேஷங்களை யறியாத மாதாவானவள், ப்ரஸாதத்தைப் பூனைக்கிரையாக்கினன் போலுமெனக் கோவித்து, அவனை மாதுகரமெடுத்துண்ணும்படிவிடுக்க, அப்படியே அந்தப்பிள்ளை யெழுதரம் செல்ல, கருணாரூபியாகிய பிராட்டியார் வீடுதோறு மறைந்து நின்று நவரத்நங்களையே பிக்ஷையாயிட்டு எட்டாந்தரம் அமுதளித்தனர், இத்யாதி வைபவங்கள் இந்த ஸ்தல புராணமாகிய யாதாத்ரி மாஹாத்ம்யத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

யதுநாதன், யதுநாதன் } கிருட்டிணன்.
யதேந்து - என்ன, யார்.
யதேச்சை - இட்டம்.
யதேஷ்டம் - சுயேச்சை, மிகுதி.
யதேந்திரியம் - கற்புவழுவாமை.
யதோத்தேசபக்ஷம் - இருந்தவிடத்திருந்து கொண்டு காரியங்களை நடைபெறச் செய்தல்.
யத்தனம் - எத்தனம்.
யத்திரகிரகம் - சூத்திரம், செக்கு.
யத்தினம் - யத்தனம்.
யந்திரசாத்திரம் - இயந்திர மமைக்கும் வித்தை.
யந்திரதாபனம் - சக்கரதாபனம்.
யந்திரம் - செக்கு, கிரிகை, தீக்கடைகோல், தேர், பஞ்சரைக்குஞ்சூத்திரம், பொறி, மந்திரசக்கிரம்.
யந்திரலோகம் - பயறு.
யந்திரு ஆளுவோன், குதிரைப்பாகன், தேர்ப்பாகன்.
யமகம் - வந்தசொல்லேவருதல்.
யமகண்டம் - எமகண்டம், ஒருபாட்டு.
யமகாளிந்தி - சரயுநதி.
யமகிங்கரன் - நமனேவற்காரன்.
யமகீடம் - ஒருபுழு.
யமசபம் - இயமசபை.
யமதக்கினி - சமதக்கினி.
யமதூதன் - பாம்பின் நச்சுப்பற்களில் ஒன்று, யமகிங்கரன்.
யமதூதி-பாம்பின்நச்சுப்பல்லிலொன்று.
யமதேவதை - பரணி நட்சத்திரம்.
யமத்ருமம் - இலவமரம்.
யமபகினி - யமுனைநதி.
யமபடன் - யமகிங்கரன்.
யமபாசம் - காலபாசம்.
யமப்ரியம் - ஆலமரம்.
யமம்-அடக்கம், இயமம், காக்கை, சனி, தருமநூல் பதினெட்டி லொன்று, தவம், திருவிழா, பஞ்சகிருத்தியத் தொன்று.
யமரதம் - எருமைக்கடா.
யமராஜம் - யமுனைநதி.
யமவாகனம் - யமரதம்.
யமவாசம் - சிறுகாய்ஞ்சொறி.

யமவிரதம் - இயமானுட்டிப்பு, பட்சபாதமின்றி அரசுமுறை நடத்தல்.

யமவிரோதி }
யமவைரி } சிவபிரான்.

யமளம் - இரட்டை.

யமனிகை - சீலைப்படல்.

யமன் - நமன். காசிபன் புதல்வனாகிய விவசுவதன் என்னுஞ்சூரியன் புத்திரன், இவன் அஷ்டதிக்குப் பாலகர்களுள்ளும் ஒருவன், இவன் பிதிர்லோகாதிபன், இவனிருக்குந்திசை தென்றிசை,இவன் மனைவி சாமளாதேவி, பட்டணம் சம்யமநி, வாகநம் மகிஷம், ஆயுதம் தண்டம், தருமன் என்றும் பெயர் பெற்றவன், யமன் என்பதற்குக் கூற்றுவன் என்பது பதப்பொருள் கூறுசெய்வோன் என்பது கருத்து. இவனது தொழில், உயிர்களை ஆயுள் முடிவில் உடலினின்றும் பிரித்துக்கொண்டு போதல். அத்தொழிலில் சிறிதும் நடுநிலைதவறாதவன், அது பற்றியே இவனைத் தருமனென்று கூறுவர், இவன் தருமத்தைக்குறித்து "போற்றவும்போகான் பொருளொடும்போகான், சாற்றவும் போகான் தமரொடும் போகான், நல்லாரென்னான் நல்குரவறியான், தியாரென்னான்செல்வரென்றன்னான்" என்று ஆன்றோரும் பாடினர் மார்க்கண்டேயரைச் சிவபெருமானுக்கு உத்தமத்தொண்டரென்று கருதாது அவர்மீது பாசந்தொட்டு அவரைப் பற்றியபோது சிவபெருமானார்அவனுக்கு முன்னே தோன்றி தடுத்தபோதும் அஞ்சாமல் தனது ஆணையைச் செலுத்த யத்தனித்து அவரால் கொல்லப்பட்டுப் பின் உயிர் பெற்றானென்றால் அவனது நடுவுநிலைமை பெரிதும் வியக்கற்பாற்று.

யமாந்தகன் - சிவபிரான்.

யமாரி - சிவபெருமான்.

யமி - முனிவன்.

யமீ - யமுநாநதி.

யமுனாசனகன் - சூரியன்.

யமுனாதீரவிஹாரன் - கிருஷ்ணன்.

யமுனாநதி-சூரியன்புதல்வி, யமனுக்குச் சகோதரி, இந்தநதி களிந்தமலையில் உற்பத்தியாதலால் இதற்குக் காளிநதியென்னும் பெயருண்டாயிற்று.

யமுனாப்பிராதிரு - யமன்.

யமுனை - சத்தநதிகளிலொன்று அது காளிந்தி.

யமுனைத்துறைவர் - இவர்க்கு ஆளவந்தாரென்னும் வேறொரு பெயருமுண்டு, இவர் பன்னிரண்டு வயது நிரம்பாச் சிறுவராக இருக்குங்காலத்திலேயே பாண்டியனது சம்ஸ்தான வித்வானாகிய ஒருபிரபலமஹா பண்டிதரை (வித்வசன கோலாகலனை) மூன்று அற்பவினாக்களால் வென்று பாண்டியன் சங்கேதப்படி அவனது பாதி நாட்டைப் பெற்று அரசாண்டவர், "உமது தாய் புத்திரவதியல்லள்" என்றும் "தர்மவானாகிய பாண்டியன் தர்மவான் அல்லன்" என்றும், பதிவிரதையாகிய ராஜபத்நி பதிவிரதையல்லள்" என்றும் ஏதுக்கூறி ஸ்த்தாபித்தல் வேண்டுமென்று கேட்ட கேள்விகளுக்கு பண்டிதர் விடைசொல்ல மாட்டாமல் மௌனமாயிருக்க, பாண்டியன்யமுனைத்துறைவரைநோக்கி, நீர் இந்தக் கேள்விகளுக்குசரியான விடைசொல்லி நிர்வகிப்பீராயின் என்னாட்டிற்பாதி தருவேனென்று சொல்லுதலும், யமுனைத்துறைவர் அரசனை நோக்கி. ஒருமரமுந்தோப்பல்ல ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல, என்னும் பழமொழியின்படியே ஏக புத்திரனைப்பெற்றவள் மலடியென்று சொல்லப்படுவாள். இது முதல் வினாவுக்குவிடையென்றும், குடிகள் செய்யும்பாவம் அரசனைச்சேரும் என்னும் விதியால் அரசன் தருமவான் அல்லன், இது இரண்டாம் வினாவுக்கு விடையென்றும், மணப்பந்தரிலே அக்நி முதலிய தேவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுப் பிறகு கணவன் கையில் ஒப்பிக்கப்பட்டவளாதலால் பதிவிரதையல்ல, இது மூன்றும் வினாவுக்கு விடையென்றுங்கூற, அரசன் அவருடைய நுண்ணறிவிற்கு

வியந்து அவரை மார்புறத் தழுவிக்கொண்டு தன் பாதிநாட்டை அவர் அரசாளக் கொடுத்தான்.

இவர் சிலநாள் அரசுசெய்து வருகையில் மணக்கால் நம்பியென்றும் வைஷ்ணவாசாரியர் இவரிடத்தில் வந்து நீர் எம்மோடு தனித்துவருவீராயின் உமது பாட்டனார் வைத்துப் போன புதையலைக்காட்டுவேனென்றுகூறி இவரை வஞ்சித்தழைத்துப்போய்த் திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் அழியாநிதியாகிய திருமாலைக் காட்ட பூர்வஜந்மவாசனையால் அந்தச் சந்நிதியையடைந்த மாத்திரத்தில், இவர் துறவுடையராகி, விஷ்ணுவழிபாடே பரமசாம்ராஜ்யமெனக்கொண்டு அன்றுமுதல் அதனையே பற்றிநின்றார். இவரெழுநூற்றறுபது வருடங்களுக்கு முன்னிருந்தவர்.

யயாதி-குருகுலத்தரசர்களி லொருவன் நகுஷன் புத்திரன், இவன்முன்னே சுக்கிரன் புதல்வியாகிய தேவயானையையும், பின்னே ருஷபர்வன்புதல்வியாகிய சர்மிஷ்டையையும் மணம்புரிந்தவன், தேவ யானையிடத்தில் யது,துர்வசனன்என்று இரண்டுபுத்திரரையும், சர்மிஷ்டை யிடத்தில் அநுகியன், அணு, பூரு என்று மூன்று புதல்வரையும் பெற்றான்.

சுக்கிரன் யயாதியைநோக்கி, இருவரையும் பக்ஷபாதமின்றி நடத்திவரவேண்டுமென்று சொல்லித் திட்டப்படுத்தி யிருந்தும் யயாதியானவன் அந்த நியதியினின்றும்தவறினமையால், சுக்கிரன்யயாதிமேற் கோவங்கொண்டு நீ கிழப்பருவத்தையடையக் கடவையென்று சபித்துப் போயினான். அதனால் யயாதியானவன் வருந்தி தன் புத்திரரைநோக்கி, என் கிழப் பருவத்தைப் பெற்றுக் கொண்டு தன் இளமைப்பருவத்தையெனக்குக் கொடுக்க விரும்புவோருமில் யாவனென, ஏனையர் மறுக்க, பூருவென்பவ னொருவன் மாத்திரம் அதற்குச் சம்மதித்து முகமலர்ச்சியோடு தனது யவ்வநத்தை அவனுக்குக் கொடுத்து அவனது கிழத்தனத்தைத் தான் வாங்கிக்கொண்டான். அதனைப் பெற்ற யயாதியானவன், ஆயிரம் வருடம் சிற்றின்பம் அநுபவித்தும் திருப்தியடையாமல் முடிவில் பூருவுக்கு முடி சூட்டிக் காட்டிற் சென்று தவஞ்செய்து தன் காலங்கழித்தான். யதுவினால்யாதவவமிசமும், துர்வசனால் சேர சோழ பாண்டிய வமிசமும் அநுகியனால் காந்தாரவமிசமும் விருத்தியடைந்த

யயு-அசுவமேதக்குதிரை,குதிரை. [ன.

யவகம் - ஒருவகைத்தாநியம்.

யவகாரி – கிருட்டிணன்.

யவசம் - வெடியுப்பு.

யவசி - கழுதைப்பாலை.

யவசூகம் - யவசம்.

யவட்சாரம் – எவட்சாாம், வெடியுப்பு.

யவநம் - பாரத வர்ஷத்துக்குமேற்கேயுள்ளதேசம், க்ரேக்கதேசம், அத்தேசத்தார் யவநர் எனப்படுவர், யவநரும் யவநப்பெண்களும் முற்காலத்தில் ஆரிய ராஜாக்களுக்கு அடிமைகளாயிருந்தார்களென்பது சில ஸம்ஸ்க்ருதநாடகங்களால் அறியப்படுகின்றது, அவருள்ளே சிலர் ஆரிய சாஸ்திரங்களைக் கற்றுப் பண்டிதர்களாகித் தமது நாட்டிற் சென்று விளங்கியதுமன்றிச் சோதிடசித்தாந்த முதலிய நூல்களும் செய்தார்கள். அவை ஆரியராலும் எடுத்தாளப்பட்டு வருவனவாயின.

யவநர்-பாரத வர்ஷத்துக்கு மேற்கேயுள்ள தேசத்தார் யவநர் எனப்படுவர். இவர்களுள்ளே ஒரு சாரார் யயாதியின் புத்திரனாகிய துர்வசு வமிசத்திலே பிறந்த வேதாநுஷ்டானங்களைத் துறந்து பதிதரான க்ஷத்திரியர், அவர்கள் பாரத வர்ஷத்தைவிட்டு அதன் மேற்கேயுள்ள தேசங்களிற்போய், யவனரோடுகூடி யவநராயினார்கள். தற்காலத்தவரால் கிரேக்கர் என்று சொல்லப்படுவோர்களும், மற்றையஹூணர்களும் பாரசீகர்களும் பூர்வகாலத்தில் யவநரென்றே சொல்லப்படுவார்கள். யவநர் வெண்ணிற முடையவரும் கருநிற

முடையவரும் என்றிருவகையினர். கருகிற முடையவர் காலயவநர் என்றும் மற்றவர் உவநர் என்றும் வழங்கப்படுவர்.
யவபலம் - மூங்கில்.
யவம் - நெல்லு, வாற்கோதுமை
யவநர் - துலுக்கர், மிலேச்சர் முதலாயினோர்.
யவநாலசம் } வெடியுப்பு.
யவலாசம் }
யவனப்பிரியம் - மிளகு.
யவநம் - சீக்கிரம், தேயமைம்பத்தாறினொன்று.
யவனர்-கம்மாளர், சித்திரக்காரர், சோனகர்.
யவனாசார்யன் - சோதிடசாத்திரகர்த்தாவாகிய ஒருமுநி.
யவனாரி - கிருட்டிணன்.
யவனிகை - திரைச்சீலை.
யவாநி } ஓமம்.
யவாநிகை }
யவீநரன் - பூரு வமிசத்துத்துமீடன், புத்திரன், முற்கலன் தம்பி.
யவ்வனம் - யௌவனம்.

யா

யா - அஃறிணைப்படர்க்கைப் பன்மை வினா, அசைச்சொல் (உ-ம்) யாபன்னிருவர், ஓரெழுத்து, ஒருமரம், சந்தேகம், இல்லை.
யாகசாலை - வேள்விச்சாலை.
யாகசேனன்-ஒருஅரசன்,பாஞ்சாலன், துருபதராசன்.
யாகத்தம்பம் - வேள்வித்தூண்.
யாகத்திரவியம் - யாகப்பொருள்.
யாகபதி-ஓரரசன், இவன் திருமால்பதினெண்தவதாரத் தொருவன்.
யாகபத்தினி } துரோபதை.
யாகபன்னி }
யாகபாகம் } அவிர்பாகம்.
யாகபோசனம் }
யாகபோசனர் - வானோர்.
யாசம் - பலி, வேள்வி.
யாகுவம் - சாவகம்.
யாக்கியவற்கியம்-அட்டாதசதரும சாத்திரத்தொன்று உபநிடத முப்பத்திரண்டினொன்று.
யாக்கியவற்கியன் - ஒருமுனி,ஜனகராஜனுக் குபதேசம்செய்தவர் இவரே.
யாக்குதல் - கட்டுதல்.
யாக்கை - உடல், கட்டு.
யாக்கணம் } யாங்ஙனம்.
யாங்கண் }
யாங்கு - இடத்தின் ஐயுற்றசொல்.
யாங்ஙனம் - எங்ஙனம்.
யாசகபந்து - கர்ணன்.
யாசகம் - இரப்பு, இராசயானை, மதயானை.
யாசகர் - இரப்போர்.
யாசமாநன் - யாசகன்.
யாச்னம்-பூசாபலிநடத்தல்,வெடித்தல்.
யாசனை - பிச்சை.
யாசிதம் - இரப்புத்தொழில்.
யாசித்தல் - இரத்தல்.
யாஜ்ஞவல்க்யன் - இவன்பிரமராதன் புத்திரன், வைசம்பாயநர்சீடன், ஒருநாள் வைசம்பாயநர் தமது சகோதரி புத்திரனை இருளிலே கால்பிழைத்து மிதிக்க, அந்தப்புத்திரன் இறந்தான், அதனால் அவர்க்கு பிரமகத்திநேர்ந்தது, அதனை நீக்கும் பொருட்டுத் தமது சீடர்களை விரதங்காக்கும்படி யேவினார். யாஜ்ஞவல்கயர், மற்றையோர் சரீரபலமில்லாதவராயிருத்தலால் அதனைத்தாமேசெய்வதாகவேண்டினார். அவர் தம்முரையை மறுத்தாரென்று யாஜ்ஞவல்க்யரைமுனிந்து என் வேதங்களை விடுத்துப்போகவென்றனர். அவர் பக்திமிகுதியினால் சொன்னதையறியாமல் முனிந்த வுமக்கு யான் சீடனாயிருத்தலும் தகாதெனக்கூறி, அவரிடத்தோதிய யஜுர்வேத சாகைகளை யெல்லாம் கண்டத்தினின்றும்உதிரங்கக்கி விழும்படி யோதிவிட்டு, இந்த வேதசாகைகளை இனி ஓதமாட்டேன்என்று சொல்லிப் போய்ச் சூரியனை நோக்கித் தவஞ்செய்தார்.

சூரியன் குதிரைவடிவங்கொண்டு வெளிப்பட்டு வைசம்பாயநர்க்குத் தெரியாத பதினைந்து சாகைகளை அநுக்ரஹித்துப்போக, யாஜ்ஞவல்

கியர் அவற்றை யோதுவாராகி தம் சிடரையு மோதுவித்தார், குதிரை வடிவோடு வந்து அநுக்ரஹித்தமையால் வாஜநேயசம்ஹிதை யென்னும் பெயர் இந்தச் சாகைகளுக் குளதாயிற்று. முன்னே இவர் உமிழ்ந்த உதிரங்களை சஹபரடிகள் மாறுட சரீரத்தோடிருந்துண்பது தகாதென்று தித்திரி ரூபங்கொண்டு உண்டமையால் அந்தச் சாகைகளுக்குத் தைத்திரீய மென்னும் பெயர் உளதாயிற்று.

யாஜ்ஞுவல்க்யம் - பதினெட்டு ஸ்ம்ருதிகளுளொன்று இதற்கு வி[illegible]ஞாநேசுவர யோகிகள் ஒரு வியாக்கியாநம் செய்தனர்.

யாஜன் - ஒரு முனிவன், இவரதநுக்ரஹத்தால் துருபதராஜன் அக்நி குண்டலத்திலே த்ருஷ்டத்யும்நன் என்னும் புத்திரனையும் க்ருஷ்ணை யென்னும்புத்திரியையும்பெற்றான்.

யாஞ்ஞுவற்கியம் - தருமநூல் பதினெட்டில் ஒன்று.

யாஞ்ஞுவற்கியம்-ஓர்மிருதிநூலாசிரியர்.

யாடம் – காஞ்சொறி.

யாடு - ஆடு.

யாணர் - அழகு, தச்சர், நன்மை, புதுமை, வளமை.

யாண்டு - இடஐபச்சொல், எங்கு, எப்பொழுது, காலம்.

யாண்டை - இடஐயச்சொல்.

யாதசாம்பதி - வருணன்.

யாதபதி - கடல், வருணன்.

யாதம் - இபாதம், பசுக்கூட்டம்

யாதயாமம் - ஜீர்ணம்.

யாதவநிகண்டு-ஒருஸம்ஸ்க்ருத நிகண்டு.

யாதவம் - யாதம்.

யாதவர் – யதுவமிசத்தார், இந்தவழிசம் பல்கிப் பல கிளைகளாகி அநேகமான ப்ரபலராஜாக்களைத் தந்தது, யதுவினுடைய மூத்தகுமாரனுகிய ஸஹஸ்ரஜித் என்பவனுலே ஹேஹய வமிசமாயிற்று. அவர்களுக்கு ராஜதாநி மாஹிஷ்மதி, அந்தவமிசத்திற்றுனே கார்த்தவீரியார்ஜுனன்என்னும் ப்ரசித்திபெற்ற அரசன்தோன்றினன். அவன் சந்ததியிலே தாளஜங்கர்தோன்றி விளங்கினர், யதுவினது இரண்டாம் புத்திரனுகிய குரோஷ்டுவேவமிசத்திலேபிரசித்திபெற்றவர்கள். சசிபிந்து, சியாமகன், விதர்ப்பன் என்பவர். இவருள்ளே விதர்ப்பனுல் விதர்ப்பராஜ வமிசமுண்டாயிற்று, விதர்ப்பன் மூன்றும் புத்திரனுலே சேதிவமிசம் வந்தது. இரண்டாம் புத்திரன் வமிசத்தனுகிய சாத்துவதனுல் போஜவமிசமும், அந்தக வமிசமும் வ்ருஷ்ணிவமிசமும் உண்டாயின, போஜவமிசத்துக்கு ராஜதாநி தாராபுரம், அந்தகவமிசத்திலே க்ருஷ்ணர் அவதரித்தார்.

யாதவன் - கிருட்டிணன், இடையன்.

யாதவாத்ரி - திருநாராயணபுரம்.

யாதவி - உமை.

யாதனம் - தெப்பம், மரக்கலம்.

யாதனுசரீரம் - ஆக்கினையனுபவிக்கத்தக்க சரீரம், புரியட்டகாயம்.

யாதனை - துன்பம், நரகத்திற்கொல்லாது வருத்துநோய்.

யாதி - ஆழியகருத்து, ஞாபகம்.

யாதிகன் - வழிச்செல்வோன்.

யாது -அஃறிணைபடர்க்கை யொருமைவினு, இராக்கதர்கள்.

யாதுதானவர் - இராக்கதர்.

யாதோ - ஐபச்சொல்.

யாதோநாதன் - ஸமுத்ரராஜன்.

யாதோநிவாசம் - நீர.

யாத்தல் - கட்டல்.

யாத்திரகாணம்-பிரயாணம் புறப்படல், பொழுதுபோக்கு.

யாத்திராப்பிரசங்கம்-யாத்திரையிலிருத்தல்.

யாத்திரை - கடலேறிச்செல்லும் பயணம், கூத்து, திருவிழா, நடத்தல், பிரயாணம், வழக்கம்.

யாத்திரைக்காவி - புண்ணியஸ்தல தரிசனர் தரிக்குங் காவிவத்திரம்.

யாத்திரோற்சவம் - வெளித்திருவிழா.

யாபம் - மைதுனம்.

யாபனம்-இகழ்ந்துவிடல், தாமதித்தல், பொழுதுபோக்குதல்.

யாபாரம் - வியாபாரம்.

யாப்பண்டம் - வயாப்பண்டம்.

யாப்பருங்கலம் – ஓர் யாப்புநூல்.

யாப்பியம்-எளிமை, பொழுதுபோக்கு.
யாப்பியானம் - சிவிகை.
யாப்பிலக்கணம் - செய்யுளியல்புணர்த்தும்விதி.
யாப்பு - கட்டு, செய்யுள்.
யாமகோடம்-சேவல், நாழிகைவட்டம்.
யாமகேமி - இந்திரன்.
யாமபதி - சந்திரன்.
யாமம் - இடக்கைமேளம், இராத்திரி சாமம், தெற்கு, மாலைப்பொழுதின் பின்பத்து நாழிகை.
யாமர் - யக்ஷயன் மக்கள். இவர்பன்னிருவர், சுவாயம்புவ மநுவந்தரத்திலுள்ள தேவதைகள்.
யாமவதி - இராத்திரி.
யாமளம் - இளமை, தோடு, பச்சை.
யாமளேந்திரர் - இந்திரகாளிய நூலாசிரியர், இந்த்ரகாளியமென்னும் இசைத்தமிழ்நூல் செய்தவர், இவர் கடைச்சங்கமிருந்தகாலத்தை யடுத்திருந்தவர், சிலப்பதிகாரவுரை யாசிரியர் மேற்கோளாகக் கொண்ட நூல்களுள் இந்நூலுமொன்று.
யாமளை-காளி,பார்வதி, உமாதேவியார்.
யாமி - இரா, கற்புடையாள், சகோதரி, தெற்கு, மகள், மருமகள், ஜாமி, இரண்டாவது தக்ஷப்ரஜாபதிமகள், தருமன் மனைவி, இவள் அருக்கதேசத்துக்கு அதிஷ்டானதேவதை.
யாமிகன் - நகர்சோதனைக்காரன்.
யாமிகை - இராத்திரி.
யாமிநி - ஒரு கலாசத்தி.
யாமநீ - இராத்திரி.
யாமிநீபதி - கர்ப்பூரம், சந்திரன்.
யாமியம் - அட்டாதச தருமசாத்திரத்தொன்று, சந்தனம், தெற்கு.
யாமியன் - அகத்தியன்.
யாமியாயனம் - தெக்கணாயனம்.
யாமியை - இரா.
யாமிருகம்-காடகவனை பத்திஜென்று.
யாமினி - இராத்திரி.
யாமினியம் - தெற்கு.
யாமீரன் - சந்திரன்.
யாமீரை - இராத்திரி.
யாமுகம் - ஆலோசனை.
யாமுனம் - அஞ்சனக்கல்.
யாமுனாசாரியர் - ஓர்வைணவாசாரியர்.
யாமுனேட்டகம் - ஈயம்.
யாமை - இரா, தெற்கு, பரணி.
யாம் - நாம்.
யாரி - எதிரி, கதவு.
யார்பதம் - வாலுளுவை.
யாரும் - யாவரும்.
யார் - நத்தைச்சூரி, யாவர்.
யாவம் - ஆச்சாமரம்.
யாவகம் - காருளுந்து, செம்பஞ்சு.
யாவசூகம் - வெடியுப்பு.
யாவச்சிவம் - இச்சீவியத்துக்கடுத்தது.
யாவநாலம் - சோளம்.
யாவம் - அரக்கு, செம்பஞ்சு.
யாவரும் - எல்லாரும்.
யாவர் - உயர்திணைப்படர்க்கைமுப்பாற் பொது வினா.
யாவள் - உயர்திணைப்படர்க்கையொருமைப்பெண்பால்வினா.
யாவன் - உயர்திணைப்படர்க்கையொருமையாண்பால் வினா.
யாவும் - எல்லாம்.
யாவை-அஃறிணைப்படர்க்கைப்பன்மை வினா.
யாழ் - முன்னிலையசைச்சொல் (உ-ம்) செய்வினை மருக்கிற் செலவயர்ந்தியாழ.
யாழல் - கறையான்.
யாழினுமென்மொழியம்மை - திருவிளமரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
யாழின்மென்மொழிநாயகி - திருமணஞ்சேரியில் எழுந்தருளியிருக்கும்தேவியார் பெயர்.
யாழைப்பழித்தமொழியம்மை - திருமறைக்காட்டிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
யாழோர்கூட்டம் - காந்தருவமணம்.
யாழ் - அசுபதி, ஆந்தை, திருவாதிரை, நீர்ச்சுழியின் திரை, மிதனவிராசி, வீணை.
யாழ்நரம்பு - தந்திரி.
யாழ்ப்பாணம் - ஒரூர்.
யாழ்ப்பாணர் -ஒருதேசத்தார், யாழ்வாசிப்போர்.
யாழ்முநி - நாரதர்.
யாழ்முரி - ஒரு சம்பந்தர் திருப்பதிகத்தில் ஒரு பதிகம்.

யாழ்மூரிநாதேசுவரர் - திருத்தருமபுரத் திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
யாழ்வகை - குறிஞ்சிநெய்தல் பாலைமருதவமனு ரானிலத்தியாழ்.
யாழ்வல்லோர் - கந்தருவர், வீணைவல்லோர்.
யாழ்வல்லோன் - நாரதன்.
யாளி - சிங்கம், சிங்கவிராசி, மரக்கலப் பாய்க்கு நீர்வீசுங்கருவி, யாளியானை.
யாளியானை - பூட்டை.
யாளியூர்தி - காளி, துர்க்கை.
யாறு - ஆறு.
யாற்றுநீர்ப்பொருள்கோள் - பொருள்கோளெட்டி னொன்று அது அடி தொறும் யாற்று நீரொழுக்குப்போலநெறிப்பட்டு அற்றற்றொழுகுவது.
யானபாத்திரம் - மரக்கலம்.
யானமுகம் - பண்டியினேர்க்கால்.
யானம் - அறைவீடு, கள், சிவிகை, மரக்கலம், வாகனம்.
யானை -ஆனை, இது இராசசின்னத்தொன்று, வடதிசைப்பாலன்குறியுமாம்.
யானைக்கச்சை-யானைகழுத்தணிகயிறு.
யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை - பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனாற் கட்டுண்டவன், இவனைப் பாடிய புலவர் குறுங்கோழியூர்கிழார்.
யானைக்கண் - இலை காய் முதலியவற்றில் விழும்புள்ளி.
யானைக்கம்பம் - யானைகட்டுந்தறி.
யானைக்கள்ளிமுளையான் - ஏழுமான்.
யானைக்காலை - யானைவிட்டு நிற்கு மடைப்பு.
யானைக்கால் - மொத்திக்கால்.
யானைச்சப்பரம் - யானைமேற்றவிசு.
யானைச்சாலை - யானைக்கூட்டம்.
யானைச்சிரகம் - கத்தரிநாயகம்.
யானைத்தடிச்சல் } ஏிநடலை.
யானைத்தடிப்பு }
யானைத்தண்டம் - யானைசெல்புறவழி.
யானைத்தந்தம் - யானைக்கொம்பு,யானைப்பல்.
யானைத்தம்பம் } யானைகட்டுந்தாண்.
யானைத்தறி }
யானைத்திசை - வடக்கு.
யானைத்திப்பிலி - ஒருதிப்பிலி.
யானைநெருஞ்சி - பெருநெருஞ்சி.
யானைப்பாகன் - யானைப்பணிக்கன்.
யானைப்புச்சான் - ஒருசெடி.
யானைப்பெருங்காயம்-ஒருபெருங்காயம்.
யானைமஞ்சன் - பெருமஞ்சன்.
யானைமட்டம் - இளயானை.
யானைமாவுத்தன் - யானைப்பாகன்.
யானைமீன் - ஒரு பெருமீன்.
யானைமுகன் - விநாயகன்.
யானைமுகவற்கிளையோன் - வீரபத்திரன்.
யானைமுகவன் } விநாயகன்.
யானைமுகன் }
யானையுண்குருகு - சக்கரவாகம்.
யானையுரித்தோன் - சிவபிரான்.
யானையேற்றம் - கசபரீட்சை.
யானையைவிழுங்குமீன் - திமிங்கிலம்.
யானைவணங்கி - தேட்கொடுக்கி.
யானைவாழை - ஒருவாழை.
யானைவிச்சுளி - ஒருகழுகு.
யானைவீரன் - அரசருக்குத் துணைவரிலொருவன்.

யு

யுகங்கள் - க்ரேதாயுகம், திரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என நான்கு, இந்நான்குங் கூடினது ஒரு சதுர்யுகம், இது சந்தி அமிசகாலங்களுட்பட்ப் பன்னீராயிரம் தேவ வருடங்கொண்டது.
கிருதயுகம் 17,28,000 வருடங்கொண்டது.
திரேதாயுகம் - 12,96,000 வருடங்கொண்டது.
தவாபரயுகம் 8,64,000 வருடங்கொண்டது.
கலியுகம் - 4,32,000 வருடங்கொண்டது.
இந்த சதுர்யுகம் ஆயிரங்கழிந்தால் பிரமனுக்கு ஒருபகலாம், பின்னும் ஓராயிரங்கழிந்தால் ஓரிரவாம், இப்படி 360 பகலிராக்கள் கழிந்தால்பிரமவருட மொன்றாம் இவ்வருடம்நூறு சென்றால் பிரமனுடைய ஆயுள்

முடிவாம். இந்த ஆயுளின் முற்பாதியாகிய ஐம்பது வருடம் பாத்மகல்பமென்றும் பிற்பாதியாகியயைம்பது வருடம் வாராஹகல்பமென்றும் சொல்லப்படும். இப்போது நடப்பது வாராஹகல்பம். பிரமனது ஒரு பகற்காலத்தில் பதினான்குமநுக்கள் அரசுசெய்வர். அந்த மநுவந்தரம் ஒன்றில், தேவேந்திரன் சப்தரிஷிகள் முதலியோர் பிறந்திறப்பார்கள். பிரமனுக்கு இரவாகும்போது பிரளய காலமுண்டாகும். அந்தப் பிரளயத்தில் த்ரிலோகங்களும் அழிந்தொழிய மஹாலோக வாசிகள் ஜனலோகஞ் சேர்வார்கள்.

க்ருதயுகத்திலே தர்மதேவதை நான்குபாதத்தாலும் த்ரேதாயுகத்தில் மூன்றுபாதத்தாலும் த்வாபரயுகத்தில் இரண்டுபாதத்தாலும் கலியுகத்தில் ஒருபாதத்தாலும் நடக்கும். இன்னும் க்ருதயுகத்திலேதியாநமும் த்ரேதாயுகத்திலே தியாநமும், யாகமும். த்வாபரயுகத்திலே யாகமும். கலியுகத்திலே தாநஞ்செய்தலும் சற்கருமங்களெனப்படும்.

யுகசந்தி - கிருதயுகத்துக்கு தேவவருடம் எண்ணூறும் மற்றை யுகங்களுக்குத் தனித்தனியே இருநூறு.

யுகதருமம் - யுகபேதத்தினாலுண்டாகும் நடை.

யுகந்தரம் - ஒருமலை, தேயமைம்பத்தாறினொன்று. தேர்முதலியவற்றைப் பிணிக்குந்தறி.

யுகபத்ரகம் } கோவிதாரமரம்.
யுகபத்ரம் }

யுகபத்திரிகை - அசோகமரம்.

யுகப்பிரளயம் - யுகாந்தம்,யுகாந்தவெள்ளம்.

யுகமுடிவு - உலகமுடிவு.

யுகம் - இரண்டு, இருபொருள்,ஓர்காலத்தளவு, நாலுமுழங்கொண்டது, நுகத்தடி, பூமி.

யுகவத்திரகம் - காட்டாத்தி.

யுகளமந்த்ரம் - லக்ஷ்மீநாராயணுதிமந்த்ரங்கள்.

யுகளம் } இரண்டு.
யுகளி }

யுகாதி - அருகன், கடவுள், வருஷாரம்பம்.

யுகாந்தம் - உலகாந்தம், யுகமுடிவு.

யுக்மபத்திரிகை - அசோகமரம்.

யுக்மம் - இரண்டு.

யுஜாநன் - சாரதி.

யுதகம் - இரண்டு, ஜயம், சீலத்தொடங்கல், சம்பந்தம், நன்கொடை.

யுதாஜித் - யதுவமிசத்தவ்ருஷ்ணியின் இரண்டாம் புத்திரன், இவன் புத்திரர் சினி அநமித்ரன் என இருவர், கேகய தேசாதிபதி,அவன் தசரதன் மனைவியாகிய கைகேசிக்குச் சகோதரன். இவன் ராஜதாநி கிரிவிரஜம்.

யுதிட்டிரன் - தர்மநந்தனன். குருவமிசத்துப் பாண்டு மூத்தமகனாகிய தருமராஜன். யுதிஷ்டிரன் என்பதற்குக் கலங்காமல் யுத்தஞ் செய்வோன் என்பது பொருள். இவன் பொறுமைக்கு இலக்கியமாயுள்ளவன்.

யுத்தகளம் - போர்க்களம்.

யுத்தங்கலத்தல் - போர்செய்தல்.

யுத்தசன்னத்தன் - போர்க்காயத்தமானவன்.

யுத்தசன்னாகம் - போர்க்கு ஆயத்தம்.

யுத்தசாரம் - குதிரை.

யுத்தந்தொடுத்தல் - போர்மூட்டுதல்.

யுத்தமுகம் - போர்முகம்.

யுத்தம் - உசிதம், கூடுதல், நாலுமுழங்கொண்டது, உபாயம், பொருத்தமானது, போர்.

யுத்தரங்கன் - குமரன்.

யுத்தவேது - ஓரலங்காரம், அது பொருத்தமான வேது.

யுத்தி - அருத்தாபத்தி, ஆராய்வு, உபாயம், ஓரலங்காரம், கூடுதல், தகுதி, பொருத்தம், மேற்கோளகூறல், யூகை, யோசித்தல், வழக்கம்,விவேகம்.

யுபம் - சாமர்த்தியம், புத்தி.

யுயு - குதிரை.

யுயுதாநன் - இந்திரன், ஸாத்யகி,யதுவமிசத்துச் சாத்யகி.

யுயுற்சன் - திருதராஷ்டிரனுக்குவைசியப் பெண்ணிடத்துப் பிறந்த புத்திரன்,திருதராஷ்டிரனுக்குப்பின்னே இந்திரப்பிரஸ்தத்தில் அரசு புரிந்தவன்.

யுவ - ஒன்பதாவதாண்டு.

யுவதி - பதினாறுவயதுபெண்.

யுவநாசுவன் - சூரியகுலத்தரசரி லொருவன். இந்தன் புத்திரன், சபஸ்தன் தந்தை, திருதாசுவன்மகன், இவன் மகன்மாந்தாதா, இவன் தனக்குச்சில காலம் புத்திரோற்பத்தி யில்லாமையால், அதன்பொருட்டு ஒரு இந்திரயாகஞ் செய்தான், அந்த யாகத்தில் இவன்மனைவிக்காக மந்திரித்துவைத்த நீரை இவன் இரவில் மிகுந்ததாகத்தால் அதுவென்றறியாது பருகினமையால் தன்மனைவி சுமக்கவேண்டிய கருப்பத்தைத் தானே தரித்தான் அதிகாரணமாக அவன் வயிற்றிலிருந்த சிசுவானது வயிற்றைப் பீறிக்கொண்டு உரியகாலத்தில் வெளிப்பட்டது. தாயின்பாலுக்குப் பிரதியாக இந்திரன் தன் விரலைக்கொடுத்து வளர்த்தான், இக்காரணம்பற்றியே அந்தச் சிசுவுக்கு மாந்தாதாவென்னும் பெயருண்டாயிற்று.

யுவராசன் - இளவரசன், ஒருசமணகுரு.

யுவன் பதினாறுக்குமேல் முப்பதுவயசுக்குட்பட்டவன்.

யூ

யூகம் - அகப்பொருளறிதல், ஒருபுல், கருக்குரங்கு, கவந்தம், காந்தி, கோட்டான், தருக்கம், படை, படைவகுப்பு, பெண்குரங்கு, பெண்முசு, பேன், யோசிப்பு, விவேகம்.

யூகபதி - சுக்ரீவன்.

யூகவான் - புத்திமான்.

யூகி - யூகியென்னேவல், விவேகி.

யூகித்தல் - ஆராய்தல், யோசித்தல்.

யூகிபாடை } ஒருபயிற்பேச்சு.
யூகிப்பயில் }

யூகை - கல்வி, பேன்.

யூதநாதன் }
யூதபதி } இனத்தைக் காக்கு மியானை.
யூதபம் }
யூதபன் }

யூதப்பிரஷ்டன் - கிளைவிட்டயானை.

யூதம் பசுக்கூட்டம், பட்சிசாலம், யானைக்கூட்டம், விலங்கின் கூட்டம்.

யூதர் - ஒருசாதியார்.

யூதி - அம்பட்டன், காட்டுமுல்லை.

யூதிகம் - முல்லை.

யூபத்தம்பம் - வேள்வித்தூண்.

யூபம் - உடற்குறை, படைவகுப்பு, யாகப்பசுவைக்கட்டுந்தறி, யாகம், வேள்வித்தம்பம், வெற்றித்தம்பம்.

யூபாக்ஷன் - இராவண பரிவாரத்தாருள் ஒருவன், இவன் அநுமானால் அசோகவநத்தில் கொல்லப்பட்டவன்.

யோ

யோகக்கட்டு - இருகாலுஞ் சம்மணமாய் மாறியக்கால்களையு மிடையையுஞ்சேர்த்துத் தொடுப்பது.

யோகக்காட்சி - தேசகால விகற்பமின்றித் தன்செயலற்றுச் சிவன்செயலிற் கூடியறிவுமறிவு.

யோகசத்தி - நவசாரம்.

யோகசமாதி - யோகநிலைஎட்டினொன்று அது இந்திரியாதி தத்துவ சகிதமாய் யாக்கையுணினறும் அவற்றிற் பற்றின்றியிருக்கும் ஆத்துமதரிசனம்.

யோகசம் - சிவாகம மிருபத்தெட்டினொன்று.

யோகசரன் - அனுமான்.

யோகசாதனை - யோகப்பரீட்சை.

யோகசாத்திரம் - யோகாப்பியாச நூல் இது கலைஞான மறுபத்து நான்கில் ஒன்று.

யோகசாரன் - சவுத்திராந்திகளிற் சிறிது வேறுபட்டு, அறிவு அரூபமென்னும் பிரபஞ்சம் பொய்யென்றும் சொல்பவன், இவன் புறப்புறச் சமயிகளிலொருவன்.

யோகசித்தி - அங்கிரசன்புத்திரி, ப்ரஹஸ்பதிசகோதரி, பிரபாசுரன்மனைவி, விசுவகர்மன் தாய்.

யோகசேமம் - சமாசாரம், செய்தி.

யோகசைவம் - ஒருசைவம்.

யோகம் - கூடல்.

யோகசித்தி - யோகபலிதம்.

யோகஞ்சாதித்தல் - யோகம்பழகுதல்.
யோகஞ்செய்தல்-தியானம்பண்ணுதல்.
யோகட்சேமம் - யோகசேமம்.
யோகதண்டம்-யோகமுத்திரைக்கோல்.
யோகதீட்சை-ஒருதீட்சை.
யோகநந்தேசர் - திருவியலூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
யோகஸ்நாநம் - எழுவகை ஸ்நாநத்தொன்று அது யோகாப்பியாசத்தாலாத்துமசுத்தியடைதல்.
யோகநாவிகம் - ஒருமீன்.
யோகநித்திரை - அறிதுயில்.
யோகநிலை - யோகானுட்டிப்பு.
யோகநூல் - யோகசாத்திரம்.
யோகநெறி - யோகமார்க்கம்.
யோகப்பட்டை - யோகக்கட்டுக்கேற்ற கச்சு.
யோகபரீக்ஷை } யோகப்பயிற்சி.
யோகபரீட்சை
யோகபாதம் - யோகநிலை.
யோகபீடம் - யோகாசநம்.
யோகப்பிரத்தியட்சம்-யோகக்காட்சி.
யோகமாயை-பகவதி, விஷ்ணுமாயை.
யோகமார்க்கம் - யோகநிலை.
யோகம்-அட்டயோகம், அதிட்டம், உபசாரம், உபாயம், உயர்ச்சி, உற்சாகம், எத்து, கூடல், கூட்டம், கூட்டல், சாவு, சிவிகை, சூத்திரம், தகுதி, தியானம், நிஷ்டை, பக்கம், பஞ்சாங்கவுறுப்பிலொன்று, பலன், பொருத்தம், போர்க்கவசம், வரம். இந்திரியங்களை வசஞ்செய்துகொண்டு சித்தத்தைப் பிரமத்தில் நிறுத்தல், இது இராஜயோகம் கர்மயோகம் ஹடயோகம் என மூன்றுவகையாயிருக்கும், மேலும் ஸாங்க்யதாரக அமநஸ்கம் எனவும் மூன்றுவிசையுண்டு, அன்றியும் மந்திரயோகம், லயயோகம் ஹடயோகம் என்றொரு மூவிகையுண்டு, இவற்றின்விரிவெல்லாம் யோகநூல்களிற் காண்க. இந்த யோகசாஸ்திரம் செய்தவர் பதஞ்சலிபகவான்.
யோகரங்கம் - கொளுஞ்சிமரம்.
யோககுடி - காரணவிடுகுறி.
யோகர் - சமணமுனிவர், முனிவர்.
யோகவாகி - இரசம்.
யோகாசநம் - யோகஞ்செய்வோரிருப்பு அது சுவத்திகமுதனூற்றெட்டுவகையிருப்பு.
யோகாசாரம் - யோகவொழுக்கம்.
யோகாசாரியன்-யோகபோதகன், யோகாப்பியாசி.
யோகாதிசயம் - சுகம், நிலைபரம்.
யோகாப்யாசி - யோகம்பழகுவோன்.
யோகாரங்கம் - கொளுஞ்சிமரம்.
யோகார்த்தம் - திரிசொல் பலகருத்துடைய ஒருசொல்.
யோகி-அரன்,அருகன்,ஐயன்,நிஷ்டைசெய்வோன், முனிவன். நிர்மலசத்துவபரிணாமரூபமாகிய சித்தவிருத்திகளை அந்தர்முகமாகத்திருப்பி அவற்றை அவற்றின் காரணத்திலே யொடுக்குதலா மென்பவன், இவன் புறச்சமயிகளு ளொருவன்.
யோகிகன் - முனிவர்.
யோகிதண்டம் - பிரம்பு.
யோகித்தல் - ஆழ்ந்துநினைத்தல்.
யோகினிகள்-இவர் பன்னிருவர், வித்யா, ரேசிகா, மோசிகா, அமிர்தா, தீபிகா, ஞானா, ஆபியாயதி, வியாபிநி, மேதா,வயோமா, சித்திருபா, லக்ஷ்மி யோகினிகள், இவர்கள் வித்தியாசக்திகளாய் வாகினிகளோடு அக்ஷரங்களை அதிகரித்து நிற்பவர்கள்.
யோகிப்பு - சிந்திப்பு.
யோகினி - காளி, காளியேவல் செய்பவள். [நடப்பது.
யோகினிதிசை- யோகினிதேவதையா
யோகீசுவரன் - யாக்கியவற்கியமுனி, யோகஞ்செய்வோன்.
யோகீசுவரி - துர்க்கை.
யோகு - யோகாப்பியாசம்.
யோகேசன் - சிவபிரான், முனிவன்.
யோகேசுவரன் - கிருஷ்ணன்.
யோக்கியதாபத்திரிகை - நடத்தைக்கடுதாசி.
யோக்கியதை - யோக்கியம்.
யோக்கியதைச்சீட்டு-யோக்கியதாபத்திரிகை.
யோக்கியாபாத்திரம்-யோக்கியவான்.
யோக்கியம் - ஆசாரம், தகுதி.
யோக்கியர் } தக்கவர், பெரியோர்.
யோக்கியவாளர்

யோக்கியவான் - ஒழுக்க முதலியவற்றிற் பிறம்பாதவன்.
யோசனம் - யோசனை.
யோசனன் - கடவுள்.
யோசனவல்லி-மஞ்சிட்டிவேர், வல்லாரை.
யோசனை - ஆலோசனை, ஓசை,நாலுகுரோசவளவு, தியானித்தல், புத்தி.
யோசனைகந்தி - வியாசன்றாய்.
யோசனைவான் - பூகவான்.
யோசித்தல் - ஆராய்தல், கூட்டுதல்.
யோசியம் - சோதிடம்.
யோசியர் - சோதிடர்.
யோதனன் - போர்வீரன்.
யோது - அளவு.
யோதேயன் - போர்வீரன்.
யோதைகன் - அறிவுடையோர்.
யோத்திரம் - நுகக்கயிறு.
யோநலம் - ஒருதானியம்.
யோனி - ஆண்குறி, காரணம், நீர்பிறப்பு, பெண்குறி.
யோனிக்கலப்பு - சாதிக்கலப்பு.
யோனிசங்கரம் - யோனிக்கலப்பு.
யோனிசங்கரன் - பிறப்பிலிழிந்தோன்.
யோனிபேதம் - பிறவிபேதம்.
யோனிப்படுதல் - பிறத்தல்.
யோனிப்பொருத்தம் - மணப்பொருத்தம்பத்திலொன்று.
யோனிமுத்திரை - யோனியாகாரமாகச்செய்யு முத்திரை.
யோனிரஞ்சகம் - பூப்பம்.
யோனிலிங்கம் - யோனிமணி.
யோனிவாய் - யோனி.

யௌ

யௌகிகம் - பகுபதம்.
யௌதகம் - சீதனம்.
யௌதம் - ஓரளவு, பெண்கள்கூட்டம்.
யௌதம் - யவ்வனம்.
யௌவநன் - பிரியவிரதன் வமிசத்தவன், நிமந்தன் மகன்.
யௌவநாசுவகன் } மாந்தாதா, அம்பரீஷன் புத்திரன், ஹரிதன் தந்தை.
யௌவநாசுவன் }
யௌவநிதை - பதினறுவயதுதொடங்கி ஐம்பதுவயதுக்குட்பட்டபெண்.
யௌவனகண்டகம் - முகப்பரு.
யௌவனதசை - வாலிபம்.
யௌவநபருவம் - குமாரப்பருவம்.
யௌவனம் - அழகு, இளமை, களிப்பு, மகளிர் கூட்டம்.
யௌவனலட்சணம்-அழகு, கொங்கை.

ர

ரகு-தீர்க்கயாஹுபுத்திரன், அஜன்தந்தை, (ரகு வைத்திலீபன் மகனென்பது ரகுவமிசம்) ஆண்மையிலும் கல்வியிலும் சிறந்த பெயர் படைத்தவன், இவன்விசுவஜித் என்னும் யாகஞ்செய்து அந்த யாகத்திற் சென்றிருந்த அந்தணர் கூட்டத்துக்குத் தன் செல்வமுழுதும் வாரி வழங்கினவன்.
ரக்தபீஜன் - சும்பநிசும்பாசகோதரிபுத்திரன், இவனுடம்பிலிருந்து சிந்துகிற ரத்தத்துளிகள் எத்தனையோ அத்தனை அசுரர் பிறப்பார்களென்று நியமமிருந்தமையால் அதனை நினைத்துக் காளிகாதேவி காாள ரூபந்தாங்கி ஒரு துளியாவது சிந்தாமல் அவனைக்கொன்று தொலைத்தார்.
ரங்கநாதன் - திருவரங்கத்திற் கோயில்கொண்டிருக்கும் விஷ்ணுமூர்த்தி ஒரு ஆந்திரகவி, இவராற் செய்யப்பட்ட இராமாயணம் இரங்கநாதராமாயண மென்னும் பெயரால் விளங்குகின்றது.
ரசக - அநேகசவமிசத்துத் திரிசுகுத்தன் தந்தை.
ரசநிருபணம் ஓரலங்கார கிரந்தம், இது சிருங்காரரச நிருபணம், அஷ்டரச நிருபணம், பாவநிருபணம் என மூன்று நிருபணங்களை யுடையது.
ரசாத்நாகரம் - ஒருரசவாதகிரந்தம் நவரத்நங்கள், லோஹங்கள் கந்தகாதிகள் என்பவற்றைப் பஸ்பம் பண்ணும் முறை, உருக்குமுறை, முதலியன இதிற்கூறப்படும். இது நித்யநாதசித்தராற் செய்யப்பட்டது.
ரசனை - நிதிபுத்திரி, துவஷ்டாவின்ம[னைவி.

ரசாதலம் - கீழேழுலகத்தொன்று,இது மலைமயமாயுள்ளது, இதற்கு அரசன் வாசுகி, இதற்கு இராஜதாநி போகவதி நகரம், வாமநாவதார மெடுத்த விஷ்ணுவினால் மிதித்தழுத்தப்பட்ட பலிச்சக்கிரவர்த்திபோயுறைந்த இடமிது வாதலால் பலிசத்துவமென்னும் பெயர் பெற்றது.

ரசை - பிரஜாபதியின் மனைவி, அகன் என்னும் விசுவுக்குத் தாய்.

ரஜன்-பிரியவிரதன் வமிசத்துவிரஜன் புத்திரன், ஆயுபுத்திரன், புரூரவன் புத்திரன் நகுஷன் தம்பி இவனுக்கு ஐஞ்ஞூறு புத்திரர் பிறந்தனர். அவர்களெல்லாரும்மஹாவீரர்கள், தேவர்கள் அவர்களைவேண்ட, அவர்கள் தைத்தியர்களைவென்று தேவேந்திரனுக்குச் சுவர்க்கலோகத்தைக்கொடாமல் தாமே ஆள விரும்பியபோது இந்திரனால் நிர்மூலமாக்கப்பட்டார்கள்.

ரதிகன் - ஜயசேநன புத்திரன்.

ரதிதேவி - மன்மதன்மனைவி, இந்தரதிதேவியே மாயாதேவியாகவும் பிரத்தியும்நன் மனைவியாகியும் அவதரித்தாளென்பது புராணகதை.

ரதீதரகோத்திரங்கள்-ரதீதரன் மனைவியிடத்து ஆங்கிரஸமுநிக்குப் பிறந்த பிரமதேஜோதநருடைய சந்ததிகள்.

ரதீதரன் - இக்ஷுவாகு தம்பி,நபகன்வமிசத்து அம்பரீடன் புத்திரனாகிய விரூபன் பௌத்திரன்.

ரத்நகிரிநாதர் - திருநாட்டியத்தான்குடியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.

ரத்நபரீக்ஷை - வயிரம் காண்க.

ரத்நநாயகர் - திருவாடானையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

ரத்நாபணம் - பிரதாபருத்ரீயவியாக்யானம்.

ரத்நாவளி - ஸ்ரீஹர்ஷதேவர் செய்த ஒரு ஸம்ஸ்கிருதநாடகம். இது பாண்டவ வமிசத்து உதயணன் சரித்திரத்தை விரித்துக் கூறுவது.

ரந்திதேவன் - பூருவமிசத்தன்,சங்கிருதிபுத்திரன், இவன் தன் சம்பத்துக்களையெல்லாம் வறிஞர்க்குக் கொடுத்துவிட்டு வனத்திற்போய் வசிக்கும்போது ஒருநாள் பசியால் வருந்தி கிடைத்த அற்பவுணவை யுண்ணத்தொடங்கும்போது, ஓரந்தணனும்பசியால்வாடிஅவனிடம்வந்தான்,ரந்திதேவன்அவ்வுணவிற்பாதியைஅவ்வந்தணனுக்குக் கொடுத்தான். அந்தச் சமயத்தில் மற்றொரு அந்தணன் பசித்து வந்தான், அவனுக்கும் எஞ்சியபாகத்தில் பாதியைக் கொடுத்தான், மற்றொருவன் வரவே மிச்சமாயிருந்த தன்பாகத்தையுங் கொடுத்தான். இங்ஙனமாக, பின்னுமோர் அதிதிவந்து தாகத்திற்காக வைத்திருந்த நீரையுங் குடித்துவிட்டுப்போனான், அதுகண்ட தேவர்கள் இவனுடைய வுபகார குணத்தை மெச்சி இவனுக்கு வேண்டிய வரங்களைத் தந்துபோனார்கள், இவன் அளவற்ற யாகங்கள்செய்தவன், யாகபலித்தோலின் உதிரத்தால் ஒருநதி யுண்டாயிற்று, அது சர்மணவதி எனப்படும்.

ரபசன் - ஆயுவின்பௌத்திரன், கம்பீரன் தந்தை,ஒரு ஸம்ஸ்க்ருத நிகண்டு செய்த பண்டிதன் அந்த நிகண்டு ரபஸகோச மெனப்படும்.

ரம்பன்-ஆயுபுத்திரன், புரூரவன் பௌத்திரன், நகுஷன் தம்பி.

ரமா } இலக்குமி.
ரமை }

ரம்பை - அரம்பை, இந்திரன் சபையிலாடும் ஒரு அப்ஸர ஸ்த்ரீ, இவள் மஹாசௌந்தர்யவதி, இவள் நளகூபரன் மனைவி, கௌரி.

ரா

ராகு- விப்ரஜித்தி புத்திரன், இவன்தாய்சிங்கிகை, இவன் தம்பி கேது,இவ்விருவரும் காசிபன் பௌத்திரர், விஷ்ணுவானவர் மோகினி வேடங்கொண்டு அமிர்தம் பங்கிடும்போது ராகு தேவரூபங்கொண்டு தேவரோடுகலந்து அமிர்தம் பெற யத்தனித்தபோது, சூரிய சந்திரர் அதையறிந்து விஷ்ணுவுக்கறிவித்தமையால்சூரியசந்திரர்க்கும் ராகுகேதுக்களுக்கும்

நீராப்பகை யுண்டாயிற்று. அந்தச் சமயத்தில் விஷ்ணுவானவர் ராகுவின்தலையைக் கொய்துவிட்டார், ராகுகேதுக்கள் சாயாக்ரஹங்கள்.

ராகை - தாதாவின்மனைவியரி லொருத்தி, சுமாலிமகள், தூஷணன் திரிசிரன் என்பவர்களுக்குத்தாய்.

ராக்ஷஸர் - காசிபனுக்குச் சுரசையிடத்துப்பிறந்தபுத்திரர்கள், இவர்கள்பிறந்தவுடனே பசிதாகங்களை யடைந்த சிலர், "யக்ஷாம என்றும் பசிதாகங்களில்லாதமற்றவர்கள், "ரக்ஷாம" என்று அழுதார்கள், அதுபற்றியே யக்ஷர் என்றும் ராக்ஷசர் என்றும் பெயர்பெற்றார்கள், யக்ஷாமயாமுண்ணுக, ரக்ஷாம்யாம்காக்க, நந்தர்களுடைய மந்திரி ராக்ஷசன் என்னும் பெயருடையவன், முத்ராராக்ஷஸம் என்னும் நாடகத்தில் இவன் முக்கிய பாத்திரமாயுள்ளவன், ராக்ஷஸர்கள் புலஸ்தியன் மரபில்வந்தவர்களென்று கூறுதலுண்டு. இவர்கள் பிராமண அமிசமாகப் பிறந்தும், நரமாம்ஸபக்ஷணமும்மாயவல்லமையுமுடையவராய்த் தேவர்களுக்குப் பகைவராயிருந்தவர்கள், இவர்களுள்ளே ராவண கும்பகர்ணர்கள் முக்கியர்கள்.

ராசிகள் - மேஷமுதலும் மீனம் இறுதியுமாயுள்ளபன்னிரண்டும் ராசிகளெனப்படும், சூரியன் ஒருராசியிற் சஞ்சரிக்கும்காலம்ஒருமாசமெனப்படும்.

ராஜசேகரி - ஒருசோழன், ஈழநாட்டில் அரசுபுரிந்தவோரரசன், அரசகேசரிகாண்க.

ராஜதர்யன் - நாரீஜங்கன்.

ராஜராஜநரேந்திரன் - வேகி தேசாதிபதி இந்த அரசனது சமஸ்தாந வித்வானே நன்னயப்பட்டவன்.

ராஜன் - சந்திரன், இந்திரன், ஒருயக்ஷன்

ராஜாநகன் - உத்தம பண்டிதர்களுக்கு முற்காலத்தில் சூட்டப்பட்டதாகிய ஒரு பட்டப்பெயர்.

ராஜாதிதேவி - வசுதேவன் தங்கை, ஜயசேநன் மனைவி, இவள்புத்திரர் இருவர், அவர் விந்தன் அநுவிந்தன் என்பவர்.

ராதை - கிருஷ்ணன் பிரிய நாயகி, நந்தன் தங்கை, கர்ணனைவளர்த்த தாதை, இதுபற்றியேகர்ணன்ராதேயன்என்றும்பெயர்பெற்றவனானான்.

ராமகிரி நாகபுரத்துக்குச் சமீபத்திலுள்ளவொருமலை, இதன் பிரஸ்தாபம் மேகசந்தேகத்திற் சொல்லப்படும்.

ராமகிருஷ்ணன் - ஒரு ஆந்த்ரகவி, இவனூர்தெனாலி, கிருஷ்ணதேவராயருடைய சபையிலிருந்த வித்வான்கள் எண்மருள் ஒருவன், அதிக சாதுரிய புத்தியும் விகட சாமர்த்தியமும் உடையவன், தெனாலிராமன் என்னும் பெயர் சாதாரணவழக்கு, பாண்டுரங்கமான்மியம் என்னும் பெருங்காவியஞ்செய்தவனும்இவனே, இதுமுழுதும் விலக்ஷணரசமுடையது, இவன் சொன்ன விகடகதைகள் அநேகம் இக்காலத்தும் வழங்கி வருகின்றன.

ராமபுத்திரன் - இவர் கிஷ்ண தேவராயர்சபையில்வித்வான்கள் எண்மருள் ஒருவர், ராமாப்யுதயம் என்னும் மஹாகாவியஞ் செய்தவர்.

ராமமந்திரி - ஒரு ஆந்திரகவி, இவர் அதிக்கவிகளுள் ஒருவர், இவர் தசாவதார சரித்திரஞ் செய்தவர்.

ராமராஜபூஷணம் - பட்டுமூர்த்தி.

ராமர் - விஷ்ணு தசாவதாரங்களுள் ஏழாம் அவதாரமாயுள்ளவர், இவர் இக்ஷ்வாகுவமிசத்திலே அஜன் புத்திரனாகிய தசரத சக்கிரவர்த்திக்குக் கௌசலையிடத்துப் பிறந்த புத்திரர், இவர் மனைவி சீதை, பரதன் லக்ஷ்மணன் சத்துருக்கன் என்பவர் மூவரும் இவர்தம்பிமார், குசலன் லவன் என்னுமிருவரும் புத்திரர், இவர் மனைவியோடும், லக்ஷ்மணனோடும் பித்ருவாக்கியபரிபாலனார்த்தம் பதினான்கு வருடம் வனவாசஞ்செய்து ராவண கும்பகர்ணாதியரைக் கொன்று, தண்டகாரண்ய வாசிகளாகிய முனிவர்களுக்கு அவ்வரக்கரால் விளைந்த துன்பங்களை நீக்கி மீண்டு தமது இராஜ்யம்பெற்று நல்லரசு புரிந்தவர், இவர் தசரதன் புதல்வராதலால் தாசரதியென்றும், ககுத்தன் வமிசத்தாராதலால் காகுத்தன் என்றும், ரகுகுலத்

திற் பிறந்தமையால் ராகவன் என்றும் பெயர்பெறுவர்.

ராவணனைக்கொன்று,சீதையைச் சிறைமீட்டபோது ஸ்ரீராமருக்கு வயசுநாற்பது.பூர்வகாலத்தில் தேவர்க்கும் அசுரர்க்கும் யுத்தம் நடந்தபோது பிருகுமஹாமுனிவருடைய பத்தினியை விஷ்ணுகொன்ற காரணத்தால் பிருகுமஹாமுனிவர் கோபித்து விஷ்ணுவை நரனாகப்பிறந்து பத்தினியைப்பிரிந்து வருந்தும்படி சபித்தமையால் விஷ்ணு இந்த அவதாரமெடுத்து வருந்தினர், ஸ்ரீராமர் தம்மைக் காட்டுக்கனுப்பித் தனது புத்திரனாகிய பரதனுக்கு அரசுபுரிவித்த சிறிய தாயாகிய கைகேசியினிடத்திலே அணுவளவும் கோவமில்லாதவராய்த் தமதுதந்தையாகிய தசரதசக்ரவர்த்தியினிடஞ்சென்று அவனைச் சபித்த சாபத்தை நீக்கும்படி வரம்பெற்ற பெருந்தகைமையும், பிறர்துயர்கண்டு சகியாதபேரருளும் உடையரென்றால் அவரிடத்து விளங்கிய திவ்விய மங்களகுணங்களை யெடுத்துப் புகழவல்லார் யாவர்.

ஸ்ரீராமபிரான் நல்லரசு புரிந்ததற்கேயன்று; அவரது பெருங்கருணைக் குணத்தைப்பற்றியே இந்நாளிலும் யாவராலும்வழிபடப்படுவாராயினர். இவரை வழிபடுவோர் தொகையும் இவர்க்குள்ள ஆலயங்களும் ஆரியாவர்த்தத்தில் எண்ணிலவா யிருக்கின்றன, "ராமராம சத்யநாம" என்னும் மந்திரம் ராமபக்தர்களுடைய நாவிலும் மனத்திலும் நீங்காதிருப்பது, இவரது பெருந்தகைமையை மேல்வரும் "இராமாயணம்" என்பதனுட் காண்க.

இது ஸ்ரீராமருடைய திவ்யசரித்திரத்தைக் கூறுவதாகிய ஓரிதிஹாசம், இது வடமொழியிலே வால்மீகிபகவானால் கூறப்பட்டது, இது ஆதிகாவியம் எனவும்படும், இது பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம்,சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என ஏழுகாண்டங்களைக் கொண்டிருக்கும், இது இருபத்துநாலாயிரங் கிரந்தமுடையது, ஒவ்வோராயிரத்து முதற் சுலோகத்து முதற்பாதம் காயித்திரிமந்திரத்து ஒவ்வோரெழுத்தால் தொடங்கப்பெறுதலால் இது காயித்திரி ரூபமெனப்படும் காயித்திரி மந்திரம் இருபத்து நான்கெழுத்துக் கொண்டது, இந்தக் காயித்திரி மந்திரம் வேதியருக்கு இன்றியமையாத மஹாமந்த்ரம், இந்த மந்த்ராஜபத்தால் பஞ்சமஹா பாதகங்களும் பெருநெருப்பிற்பட்ட பஞ்சு போல எரிக்கப்பட்டொழியும்.

இந்த ராமாயணத்தை தமிழில் மொழி பெயர்த்துக் காவியரூபமாக அருளிச்செய்தவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார், இவர் சாலிவாகநசகம் எண்ணூற்றேழில் விளங்கியிருந்தவர், இவர் மொழிபெயர்த்தது ஸ்ரீவால்மீகி ராமாயணத்தையேயென்று "தேவபாடையினிக்கதைசெய்தவர் மூவரானவர் தம்முளுமுந்திய, நாவினாருரையின்படி நற்றமிழ்ப், பாவினாலிதுணர்த்திய பண்பரோ" என்னுங் கம்பர்வாக்கினானே அறியப்படும், முதலிற் செய்தவர் வான்மீகிபகவான், அதின் பின் செய்தவர் வசிட்டர், அதன்பின்னே செய்தவர் போதாயநர், கம்பராமாயணத்துச் சரித்திரம் பெரும்பாலும் வால்மீகிராமாயணத்தை யொத்திருப்பதேயாயினும் கற்பனை வர்ணனை முதலியவும் கம்பருடையனவேயாம். சுந்தர காண்டத்தை லங்கா காண்டமென்று வழங்குவர்வடநூலார், பாலகாண்டமுதல் யுத்தகாண்டம் வரைக்குமே கம்பராற் செய்யப்பட்டது, உத்தர காண்டம் ஒட்டக்கூத்தரால் செய்யப்பட்டது.

கம்பர் பாடிய ராமாயணத்திலே சொல்வன்மை சொற்சாதுரியம் சந்தவின்பம் அர்த்தகௌரவம், முதலியவும் சிங்காரம் சோகம் வீரம் முதலியநவரசங்களும் அவ்வவ்விடங்களு

க்கேற்ப அமைந்து பயின்றுபயின்று வருதலால், இது தமிழிலேயுள்ள இலக்கியங்களை யெல்லாம் வென்று தமிழ்க்கலைவிநோதரை யெல்லாம் வசீகரிக்கும் பெருஞ்சிறப்பினையும்பெருமதிப்பினையு முடையபெருங்காப்பியமாயிற்று. கம்பர்வாக்குமுழுதும்உற்றுநோக்குமிடத்து ஒரு பொருளும், வெளிப்படையி லொரு பொருளும், பயப்பனவாகி கற்போருக்கு அதிசயமும் ஆராமையு முண்டாக்கு மியல்பினவாயிருக்கின்றன, அவரது சாதுரியத்தை மேல்வருங் கவியினாலறிக.

"இந்திரன் சசியைப்பெற்றானிரு மூன்றுவதநத்தோன் றன்றந்தையுமையைப்பெற்றான் றாமரைச்செங்கணானும், செந்திருமகளைப்பெற்றான் சீதையை நீயும்பெற்றால், அந்தரம் பார்க்கினன்மை யவர்க்கிலை யுனக்கேயையா"

என்னும் இக்கவியிலே "நன்மை அவர்க்கில்லை உனக்கே நன்மையென்னும்" பொருள் தொனிக்கினும், பின்னே நிகழப்போவனவற்றைநோக்குமிடத்து. "நன்மை அவர்க்கு உனக்கில்லை" என்பது தோன்றுகின்றது, இக்கவியில் மாத்திரமன்று அடுத்த இரண்டுகவிகளிலும் இவ்வாறே மேல்வரும் அநிஷ்டப் பொருட்குறிப்பமையப்பாடியிருத்தல்காண்க.

"பாசத்தில் ஒருவன் வைத்தால்" என்னுஞ்செய்யுளிலே நீயெங்குவைத்து வாழ்த்தி, என்றவினாவியதற்கு நீயெவ்விடத்தில்வைத்துவாழப்போகிறாய் என்றும், நீ யெப்படிவைத்து வாழப்போகிறாய் வாழமாட்டாய்என்றும் பொருள்பட வமைத்திருக்கின்றனர். மற்றொருசெய்யுளிலே, "பின்னைபோற் பேச்சினளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்" என்பதற்கு. சீதையைப் பெற்றபின் அவள் இஷ்டத்திற்குமாறாக யாதுஞ் செய்யமாட்டாய் என்றொரு பொருளும், அவளைப்பெற்றால் இறப்பாய் என்றுவேறொரு பொருளும் தோன்றஅமைத்திருக்கின்றனர். இவ்வாறே அவர் சாதுரிய சாமர்த்தியங்கள் உய்த்து நோக்குந்தோறும் ஊற்றாய்ச் சுரக்கும். இங்கே யெடுத்துக்காட்டிய செய்யுட்கள் மாரீசன் வதைப்படலத்திலே சூர்ப்பணகை கூற்றாகவருவன.

இனிவான்மீகிபகவான் வைதிகப் பொருளையெல்லாம் லௌகிகப்பொருள்மேல் வைத்துக் கூறுங் கருத்துடையவராய், ராம சரித்திரத்தையே ஒற்ற வாயிலாகக்கொண்டு, வெளிப்படையிலே லௌகிகத்துக் குரிமையும் இனிமையும் பயக்கவும், குறிப்பிலே வைதிகபோதமும் தத்வார்த்தங்களும் விளங்கவும் இந்தப் பாரகாவியத்தை இயற்றியருளினர். இவ்வுண்மை மேலேயெடுத்துக்கூறியகாயத்ரீயக்ஷரக்குறிப்பினால் நன்கு அணியப்படும்.

ராமாயண கதாநாயகராகிய ஸ்ரீராமபிரான் சக்ரவர்த்தித்திருமகனாராக அவதரித்தும் தந்தையார் வாக்கினைக் காக்குமாறு காட்டுக்கேகிய பெருந்தகைமையும், சத்தியம், பொறுமை, அறிவு, ஆண்மை, நீதிதிறம்பாமை, பேரருளுடைமை, நன்றிமறவாமை, அடுத்தவரையாதரிக்கும்பேராற்றல், சகோதரவொற்றுமை, முதலிய உத்தமகுணங்களுக்கெல்லாம் உறைவிடமாகவுள்ளவர். அவருடைய இல்லறவொழுக்கச்சிறப்பு சூர்ப்பணகைக்கு எடுத்தோதியநன்மதிவிளக்கச்சொற்களால் இனிதுவிளங்கும். ஸ்ரீராமனை இளமைப்பருவத்தில் வீதியில் விளையாட்டயருங்காலத்தில், கண்டு உச்சிமோந்து கட்டித்தழுவிச் செல்வோனாகிய ஒரு பிச்சைக்காரன், அவர் காட்டுக்கேகி மீண்டுவந்து பட்டாபிஷேகம்செய்துகொண்டுஎழுந்தருளியிருக்கும் சமயத்திலே, அவர் சபைக்கெதிரே வந்து, நின்று, அடாராமா, எங்கடா போயிருந்தாய், உன்னைக் காணாமையால் என் கண்கள்மிகவருந்தினவே யென்று பெரிய ஆராமையோடு கூவியழ, அவர்சிங்காதனத்தை விட்டெழுந்து, யானும் உம்மைக்காணாமையால் பெருந் துன்பமடைந்தேன், வாரும்என்சிறிய தந்தையே,

என்றிருகையும் நீட்டியழைக்க, அந்தச் சபையிலிருந்த அரசர் முனிவர் பெரியோர் எல்லாரும் அதிசயித்தெழுந்து வழிவிட, பிச்சைக்காரனாகிய முதியோன்சென்று அவரைத்தழுவி உச்சிமோந்து போயினன், அவனது அழுக்காடையும் நாறுகின்ற சரீரமும் நோக்காது பேரன்பாற் கட்டுண்டு மயங்கிய ராமபிரானது பெருந்தகைமைக்கு ஒருஎல்லையுமுண்டோ, இத் தனைச்சிறந்த பெரியோனது சரித்திரத்தைக்கற்றலும் கேட்டலும் உலகத்தார்க்கும்பெரும்பயனைத் தராமற்போகுமா, இந்தப்பெருமையெல்லாம் நோக்கியே பெரியோரெல்லாரும் இதனை மோக்ஷகிரந்தமென்று சிரவண பாராயணஞ்செய்வர்.

ராமாநுஜாசாரியர்-விசிஷ்டாத்வைத மதோத்தாரகராகிய இவர் எண்ணூற்றிருபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர், இவர் தந்தையார் ஆசுரிகேசவாசாரியர், தாயார் காந்திமதி, இவர் ஜந்மஸ்தாநம் பூதபுரம் (ஸ்ரீபெரும்பூதூர்) இவர் வித்யாப்யாஸஞ்செய்த விடம் காஞ்சி.

இவர்யாதவப்ரகாஸரென்னும்ஸந்யாஸியிடத்திற் சாஸ்த்ரங்களைக்கற்றுவல்லவராகித்தங்குரு முன்னிலையிலே தானே விசிஷ்டாத்வைத மதத்தைச் சாதித்துப் பின்னர் த்ரிதண்டஸந்யாஸியாகியதிராஜன் என்னும் பெயர்பெற்றுத் திருநாராயணபுரம் ஸ்ரீரங்கம், திருப்பதி முதலிய ஸ்தலங்களிற் சென்று ஆங்காங்கும் மடங்கள் ஸ்தாபித்து வைஷ்ணவமதத்தை நிலைநாட்டினர், அதன்பின்னர்ப் பலவிடங்களுக்குஞ் சென்று பரமதங்களைக் கண்டித்துத் தமது மதநாட்டி ஆங்காங்குஞ் சிஷியர் குழாங்களைச்சேகரித்துத் தமது மதத்தைவ்ருத்திசெய்தனர், இவர்கீதாபாஷ்யம் வ்யாஸ ஸூத்ர பாஷ்யம், தர்க்க பாஷ்யம் முதலிய அநேகநூல்களைச் செய்தார், இவரை வைஷ்ணவர்கள் பாஷ்யகாரரென்றும் எம்பெருமானாரென்றும்வழங்குவர், இவருக்குமுன்னர் விசிஷ்டாத்வைத மதம் நாட்டினவர்கள் பன்னிருவராவார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார்,நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், சூடிக்கொடுத்தாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்போர்.

ராமேஸ்வரம் - ஸ்ரீராமர், ராவணனைக் கொன்றுதிரும்பியபோதுஸேதுவோரத்திலே சிவலிங்க ப்ரதிஷ்டைசெய்து பூசைபுரிந்த ஸ்தலம், இவ்விலிங்கத்தைத் தரிசித்து வழிபடுவோர் சகலபாபங்களும் நீங்கப்பெறுவர்என்பது புராண சம்மதம்.

ராவணன் - ராக்ஷஸர்தலைவன். இவன் ராஜதாநி லங்காபுரி, புலஸ்த்யன்புத்ரனாகிய விஸ்ரவாவுபுத்ரன். தாயஸுமாலிபுத்ரியாகிய கைகஸி, இவன் பாரி மயன் மகளாகிய மந்தோதரி (மண்டோதரி) கும்பகர்ணன், விபீஷணன், என்போர் இவன் தம்பியர், ஸூர்ப்பணகைதங்கை, இவன் புத்ரன், இந்த்ரஜித்து, இவன் பத்துத்தலைகளையுடையனுதலின், தஸக்ரீவன் தஸகண்டன், முதலிய நாமங்களைப்பெறுவன், இவன் மகாஉக்ரதவங்கள்செய்து,மனுஷரைப்பொருட்படுத்துகிலேன், மற்றெவ்வகைத் தேவராலும் அசுரராலும் இறவாதிருக்க வரந்தருக, வென்று ப்ரஹ்மாவை வேண்டிப்பெற்றான். அவ்வரப்ரஸாதத்தால்மிக்க கர்வமுடையவனாகித்ரிலோகங்களிலுஞ்சென்று சாதுக்களையுந்துன்புறுத்திவந்தான். இத்துன்பந்தனையொழிக்குமாறேவிஷ்ணு ஸ்ரீ ராமராகப்பிறந்துராவணனைக்கொன்றார். ராவணன்திக்கெல்லாம்வெற்றிபெற்று வடக்கிற்சென்றுகுபேரனைக்கண்டு அவனை ஜயித்து அவன்புஷ்பகவிமாநத்தைக் கவர்ந்துகொண்டு கைலைக்குமேல் நேராக வந்தபோது நந்திதேவர்தடுப்ப, இவன் தனது விமாநத்தோடிழிந்து அக்கைலையைவேரோடும் பறித்துச் செல்வேனென்று கர்வங்கொண்டு பெயர்த்துத் தோள்மேற்கொள்ள வெத்தனிக்க, அது

கண்ட சிவபெருமான் தமது பெருவிரலாலழுத்த அம்மலையின்கீழ் அகப்பட்ட இவன் நெடுங்காலங்கிடந்து வருந்திச் சிவபெருமானை ஸ்தோத்திரித்து அவ்வாபத்தினின்றும் நீங்கிப் போயினான். அக்கைலையின்கீழ்க்கிடந்துச் சவிசையாலழுது திரித்தமையால் இவனுக்கு ராவணன் என்னும் பெயர் வாய்ப்பதாயிற்று.

இவன் திக்விஜயஞ் செய்யப்போனவிடங்களில் அபஜயப்பட்டுத் திரும்பியது இரண்டிடத்தன்றி மற்றெங்குமில்லை. ஒன்றுவாலியாலும் மற்றது கார்த்தவீர்யார்ஜுனனாலுமேயாம். இவன் மேருபக்கஞ் சென்றபோது அங்கே ரம்பையைக்கண்டு அவளைப் பலவந்தம் பண்ணிப் புணர்ந்தான். அதுகேட்ட நளகூபரன் சினந்து, நீ எப்பெண்ணை யாயினும் அவள் சம்மதமின்றிப் புணர்வையேல் உன் தலைகள் ஆயிரந் துண்டமாகச் சிதறியிறக்கக்கடவை யென்று இவனைச் சபித்துப் போனான். அதுபற்றியே ஸீதா பிராட்டியாரை மானபங்கஞ் செய்யாது தன் சிறையிலிட்டுஅவன் பார்சென்றிரந்து வருவானாயினதும் முன்னோரைப் பொருட் படுத்தாது கேட்டவ ரத்திமுக்கால் நரனாகிய ஸ்ரீராமராலிறந்ததுமாமென்க.

ராஷ்ட்ரபாலன் - கம்ஸன் தம்பி.

ராஷ்ட்ரபாலிகை-உக்ரஸேநன்புத்திரி, ஸ்ருஞ்ஜயன் பாரி.

ரி

ரிபு - யதுவினது நான்காம்புத்திரன்.

ரிபுஞ்ஜயன்-ப்ருஹத்ரதன் வம்ஸத்துமகததேசராஜர்களுள் கடையரசன். இவன் தனது மந்த்ரி ஸுநக்ரீகனால் கொல்லப்பட்டவன்.

ரு

ருகன்-வருகன் தந்தை, விஜயன்புத்திரன்.

ருக்மகேஸன், ருக்மதரன், ருக்யநேத்ரன், ருக்மபாஹு } ருக்மிதம்பியர்.

ருக்மன், ருக்மேஷு } ருசிகன் புத்திரர், ஸ்யாமகன் ஸஹோதரர்.

ருக்மி - விதர்ப்பராஜனாகிய பீஷ்மகன் மூத்தமகன், ஸ்ரீருக்மிணி தமையன்.

ருக்மிணி- ஸ்ரீகிருஷ்ணன்மூத்தமனைவி, பீஷ்மகன புத்திரி, பிரத்யுமநன்தாய்.

ருக்ஷபன் - மஹாவீரன் புத்திரன், இவனுக்குப் புஷ்கராருணி, கவி, த்ரயாருணி, எனமூவர் புத்திரர், இவர்கள் க்ஷத்தியார் ப்ராஹ்மணராயினர்.

ருசி-ஒருப்ரஜாபதி. ஸதரூபன் புத்திரியாகிய ஆஹூதிஇவன்பாரி, இவளிடத்திற் பிறந்தபுத்திரன் யஜ்ஞன்.

ருசிகன்-தர்மன் புத்திரன், இவன் புத்திரர் ஸ்யாமகன், பிருது, ருக்மேஷு, ருக்மன், ப்ருஜித்து என்போர்.

ருசிதரன் - குரு.

ருசிராஜன் - பிருஹத்திஷன்வம்சத்துச் சேநஜித்துபுத்ரன், பிராஜ்ஞன்தந்தை

ருத்ரகோடி - ஒருதீர்த்தம், இது ஒருகாலத்தில் ருத்திரன் ருஷிகளுக்கு பிரத்தியக்ஷமாகக் கோடி ரூபமாய்த் தோன்றினமையால் இப்பெயர் பெற்றது.

ருத்ரபர்வதம்-ஜாஹ்நவி கட்டமென்னும், கங்கைக்கரையிலே யுள்ளமலை.

ருத்ரப்ரயாகை - மந்தாகினிக்கும் அளகநந்தைக்கு மிடையேயுள்ளக்ஷேத்ரம்.

ருத்ரர்-இவர்அஜான், ஏகபாதன், ஹரன் அஹிர்ப்புத்யன், ஸம்பு, த்ரியம்பகன், அபராஜிதன். ஈஸாநன், த்ரிபுவநன், த்வஷ்டா, ருத்திரன் எனப்பதினொருவர், இவர்களை ருத்திரன் மாநஸபுத்ரரெனவழங்குவர், ப்ரஹ்மமாநஸபுத்ரரெனவும் படுவர்.

ருத்ரன் - த்ரிமூர்த்திகளுளொருவராகிய ஸம்ஸாரகர்த்தா, சிவனுக்கும் பெய

ராம், ப்ரஹ்மாவினது புத்ரருள்ளு மொருவராவர் ஸ்ரீகண்ட ருத்திரர் முதலிய ருத்திரபேதமெண்ணிலம்.

ருத்ராக்ஷம் - சிவபக்தராற்றரிக்கற் பாலதாகிய ஒருமணி, த்ரிபுராஸுரர்களை வதம்பண்ணப்புறப்பட்டபோது காயத்ரியை ஜபிக்கக் கண்களிலிருந்து வீழ்ந்த கண்ணீர்த் துளிகள் இம்மணிகளாயின வென்பது சரித்ரம்.

ருமை - ஸுக்ரீவன்பாரி.

ருரன்-ப்ரமதிக்கு ஸ்யவனன்புத்ரனாகிய க்ருதாசியென்னும் அப்ஸரஸையிடத்திற்பிறந்த புத்ரன். இவர்ஒருருஷி, இவர் பாரி ப்ரமத்வரா. இவர் தமது பாரி ஒரு பாம்பாலிறக்க, அவளைத் தமது தபோமஹிமையா லெழுப்பி, அன்றுமுதற் பாம்புகளைக் கொல்வதேவிரதமாகக்கொண்டவர், அவ்விரதத்தை நீக்கினவர் டுண்டுபமென்னும் சர்ப்பரூபந் தாங்கியிருந்தவராகிய ஸஹஸ்ரபாத முனிவர். ருரன் மகன் ஸுநகன்.

ரூ

ரூபாஸ்வன் - க்ருதாஸ்வன்.

ரூபாவாசிகள் - ரூபாநதிதீரவாஸர்கள்.

ரூபை - சுக்திமந்தமென்னு மிடத்திலிருந்து பாய்கின்ற வொருநதி.

ரே

ரேணுகை - பரஸுராமன்தாய், ஜமதக்கிபாரி.

ரேணுமதி - நகுலன்பாரி.

ரேவதி - ரைவதபர்வதமீதில்தகமரைத்தடாகத்திற் பிறந்த ஒரு கந்யகை. இவளை பரமஸன. என்னு முனிவர் எடுத்து வளர்த்தார், இவள் புத்ரன் ரைவதமநு.

(உ) பலராமர் பாரி, ரேவதன் புத்திரி. இவள் சர்யாதிபௌத்ரனாகிய ரைவதன்புத்ரன்,குகுத்மிபுத்திரியெனவும் படுவள்.

(ங) நக்ஷத்திரங்களுளொன்று.

(ச) ஹரிஷ்டன் பிப்பலன் என்போர்க்குத்தாய் மத்ரன் பாரி.

ரேவந்தன் - ஒரு குஹ்யகன்.

ரை

ரைப்யன் - ஈளிகன் இவன்ஸுமதிபுத்ரன், (உ)அர்த்தாவஸு,பதிராவஸு என்போர் தந்தை.

ரைவதம் - ஒருமலை. இதுகுடமலையெனவும்படும். இது தவாரகைக்குச்சமீபத்திலேயுள்ளது. றுருதவாக்குஎன்னும்ருஷியால் சபிக்கப்பட்ட ரேவதி இம்மலைமேல் வீழ்ந்து ஒரு தடாகமாயினமையால் இப்பெயர்பெற்றது.

ரைவதன் ஐந்தாம்மநு ப்ரியவ்ரதன்வம்ஸத்துத் தாத்தமநுக்கு ரேவதியிடத்திறபிறந்த புத்திரன்.

(உ) ஆனர்த்தன் புத்திரன்,குகுத்மி தந்தை.

ரோ

ரோசனை-வசுதேவர்பாரிகளுள்ஒருத்தி

ரோமகவித்தாந்தம் - ஜ்யோதிஷவித்தாந்தங்களுளொன்று. இது ரோமகன் என்னும் பண்டிதன் செய்தது.

ரோமகபுரி - இதுபூர்வகாலத்திலே,மேகலாரேகையிலே இலங்கைக்கு மேற்கே தொண்ணூறுபாகை தூரத்திலிருந்த பட்டணம்.

ரோமகர்ஷணன்-வேதவியாசபகவானுடைய மாணுக்கராகிய சூதர், இவர் அநேக புராணுதி காசங்களையுபதேசித்தவர் (உ) உக்ரசிரவசன்தந்தை.

ரோமகன் - ரோமகபுரியிலிருந்து ஆரிய தேசத்தில்வந்து ஆரிய சாஸ்திரங்களைக்கற்று விளங்கின முற்காலத்துப் பண்டிதன்.

ரோகிணம் } ரோஹிணம் } (க) ஒருமலை, இந்தமலையிலே அநேக ரத்நாகரங்களுண்டு, (உ) ஒருமரம், இதிலே வாலகில்லியர் தலைகீழாகத்தூங்

கித்தவஞ்செய்துகொண்டிருந்தபோது கருடன் அமிர்தங்கொண்டு வரப்போனது, அவன் தனக்கு வழியுணவாக ஒரு யானையையும் ஒரு ஆமையையும் கொண்டுபோய், இந்த மரத்தின்கிளை யொன்றின்மேல் உட்கார்ந்தவுடனே இவனது பாரம்பொறுக்கமாட்டாமல் அந்தமரம் ஒடிந்து அடியோடு சாய்ந்து விட்டது. சாய்ந்தவுடனே அந்தமரம் விழுவதற்கு முன்னே கருடனெழுந்து தன்காலிலகப்பட்ட அம்மரத்தையும் அவ்வுணவையும் உடன்கொண்டுபோய் நிஷ்புருஷமலையிலே யிறங்கித் தனது உணவைத் தின்றுவிட்டான். அந்தமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வாலகில்லியரும் அந்த மரத்தோடு கொண்டுபோய் இந்த மலையில்விடப்பட்டார்கள்.

ரோமபாதகன் - (௧) (அங்) தசரதன் தருமரதன் புத்திரன், இவன் தனக்குச் சந்ததியில்லாமையால் ஸ்ரீமான் தந்தையாகிய தசரதன் புத்திரியாகிய சாந்தையை யெடுத்து வளர்த்தவன் (௨) விதர்ப்பன் மூன்றாம் புத்திரன்.

ரோமஸன் - இந்திரன் ஏவலால் அருச்சுநன் நாகலோகத்தி லிருக்கிறானென்று தருமருக்குணர்த்தி, அருச்சுநனைத் தீர்த்தயாத்திரைசெய்ய ஏவிய முனிவர்.

ரோஹிணி - நக்ஷத்திரங்களு ளொன்று. தக்ஷன் மகள், சந்திரன் அதிப்ரீதையாகிய நாயகி, (௨) பலராமன் தாய், வசுதேவன் மனைவி.

ரௌ

ரௌகிதம் - பாரதயுத்தத்துக்குப் புறப்பட்ட கௌரவசேனைக்குப் பாசறையாயிருந்தவனம்.

ரௌத்திராசுவன் - அஹம்யாதி புத்திரன், இவனுக்கு க்ருரு தாசியினிடத்திற்பிறந்த புத்திரர் பதின்மர், இவர்களில் மூத்தவன் இருசேயன்.

ரௌரவம் - ஒருநரகம், இதில் மிகுந்த பாவம் செய்தவர்களை யமபடர் வீழ்த்திவருத்துவர், இரண்டாயிரம்யோசனை சதுரமாயுள்ளது, இந்நரகம் முழங்கால் ஆழம் உருக்கிய செம்புநீர்ப் பரவையாயிருப்பது.

ல

லங்காதேவி - தருமன் மனைவியாகிய தக்ஷன்மகள், இவளுக்கு லம்பா என்றொரு பெயருமுண்டு.

லங்காபுரி, லங்கை } ராவணன்ராஜதானி. இது தென் சமுத்திரத்திலே த்ரிகூடபர்வதசிகரத்திலே விசுவகர்மாவினால் நிருமிக்கப்பட்ட பட்டணமும், அதைச்சேர்ந்த நாடுமாம், இது முதலிலே மால்யவந்தனுக்கு ராஜதானியாகி, அதன்பிறகு குபேரனுக்கு ராஜதானியாகி அதன்பிறகு ராவணனாலே அபகரிக்கப்பட்டது. இந்தப் பட்டணத்துக்கு ஏழு மதில்களுண்டு இதைச்சேர்ந்த நாட்டைச்சேர்ந்து எழுநூறுகாதம் விஸ்தாரமுடையது, இது சூரிய சித்தாந்தத்திலேசொல்லப்பட்ட மேகலா நகரங்கள் நான்கனுள்ஒன்று. சோதிடசாஸ்திரத்துக்குநாடிஸ்த்தாநமாயிருந்தது இப்போதுள்ள லங்கைமேகலாரேகைக்கு வடக்கே அதிதூரத்தி லிருப்பதாலும் ஆதிலங்காபுரி மேகலா ரேகையிலிருந்தமையாலும், கடலாற்கொள்ளப்பட்ட இலங்கையின் ஒரு சிறகூறே தற்காலத்துளதாதல்வேண்டும்.

லங்கினி - இலங்காநகரத்தைக் காவல் செய்திருந்த வோரரக்கி, இவன்வாயுபுத்ரனாகிய ஆஞ்சநேயனால் கொல்லப்பட்டான்.

லங்கை - லங்காபுரிகாண்க.

லக்ஷ்மணவதி - கௌடபுரி.

லக்ஷ்மணன் - ஸ்ரீராமருக்குத் தம்பி, தசரதனுக்குச் சுமித்திரை யென்னும் மனைவியினிடத்திற் பிறந்த மகன், இவன் தன் தமையனிடத்தில் அதிக அன்பும் பக்தியுமுள்ளவன் இவன் ஸ்ரீராமர்மேல் வைத்த அன்பினாலும் பக்தியினாலும் சகோதர வாஞ்சையா

லும், ஸ்ரீராமர் வநவாசத்திற்குச் சென்றபோது அவரை விடாதுதொடர்ந்துசென்று அவர்க்கு நேரிட்டதுன்பங்களையெல்லாம் தானும் உடனிருந்து அநுபவித்தானுதலால் இவனை உலகத்தாரெல்லாரும் சகோதரவாஞ்சைக்குச் சிறந்த இலக்ஷியமாயெடுத்துப் புகழ்ந்து பேசுவார்கள்.

லக்ஷ்மி - திருப்பாற்கடலைத்தேவாசுராகிய இருதிறத்தாரும் கடைந்து அமிர்தம் பெற்றகாலத்தில் அந்தக் கடலிற்றோன்றிய பெண்ணரசியார், இவர் திருமாலின் வலத்திருமார்பில் வாழ்க்திருப்பவர், இவர் செல்வங்களுக்கெல்லாம் அதிதேவதையா யிருப்பவர் இவர் பிரமாவுக்குப் புத்திரியாகிய ஜ்யேஷ்டாதேவிக்குப்பின்பிறந்தவரென்றுஞ்சொல்லப்படுவர், பிருகுபுத்திரியென்றும் அக்காரணத்தானே பார்க்கவியென்னும் பெயர்பெற்றனரென்றும் சிலர் கூறுவர், இந்த விகற்பமாகிய கொள்கைகளெல்லாம், கற்பந்தோறும் அவதாரபேதத்தால் உண்டாவன, இவர்க்கு, இந்திரை லோகமாதா, மா, ரமை, மங்கள தேவதை, லோகஜநநீ, க்ஷீரசாகரகந்யகை, கமலாசனை, கமலாலயை, பதுமாலயை, பொறி, ஆக்கம், பொன், செய்யாள், பூமகள், முதலிய பல பெயர்களுண்டு

லக்ஷ்மீசுவரர் - திருநின்றியூரிலேகோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

லதை - ஒரு அப்ஸரஸ்த்ரீ, இவள் பூங்கொடிப்போல் பவனாதலால் இவளுக்கு இப்பெயருண்டாயிற்று, (லதை-கொடி.)

லம்போதரன் - விநாயகன், இவர் சரிந்தவயிற்றையுடையராதலால் இவர்க்குஇப்பெயருண்டாயிற்று, விநாயகன் விக்கராஜன், த்வைமாதுரன், கணாதிபன், ஏகதந்தன், ஹேரம்பன், கஜாநநன், என்றற்றொடக்கத்துப் பலபெயர்களும் இவருக்குண்டு. இவற்றுள் விநாயகன் என்பதற்கு, துஷ்டரையும் இடையூறுகளையும் சிக்ஷிக்கிறவனென்றும், தனக்குமேலொருநாயக னில்லாதவனென்றும் பொருள், விக்கராஜன் என்பதற்கு இடையூற்றை ஆக்கவும் போக்கவும் வல்லவன் என்பதும், த்வைமாதுரன் என்பதற்குகங்கை பார்வதி என்னும் இரண்டு தாய்மாரை யுடையவன் என்பதும், கணாதிபன் என்பதற்கு பிரமதாதிகணங்களுக்குத் தலைவன் என்பதும், ஏகதந்தன் என்பதற்கு ஒற்றைக்கொம்புள்ளவன் என்பதும், ஹேரம்பன் என்பதற்கு சிவனருகே யிருப்பவனென்பதும், கஜாநநன் என்பதற்குயானைமுகத்தையுடையவனென்பதும் பொருள்.

லவணாசுரன் - மதுபுத்திரன், இவன் உலகத்திலுள்ள சாதுக்களெல்லாரையும் வருத்துவதே தொழிலாகக்கொண்டு திரியுங்காலத்திலே, சத்ருக்கனாலே கொல்லப்பட்டவன்.

லவன் - ஸ்ரீராமர் புத்திரன்.

லா

லாங்கலி - பலராமன்.

லாங்கலினி - மகேந்திரமலையிலுற்பத்தியாகுமோர் நதி.

லாசகன் - சிவன்.

லி

லிங்கம் - சிவபெருமானர், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுய்யும்படி கொண்ட நிர்குணசொரூபமாகிய சகளவடிவம் பீடமும் லிங்கமும் சதாசிவவடிவம் அது கன்மசாதாக்கிய வடிவமெனவும்படும், பீடம் சத்தியையும் லிங்கம் சிவத்தையும் குறிக்கும். இந்தச்சாதாக்கியத்திருமேனிசர்வான்மாக்களையும்,சர்வாண்டங்களையும் தன்னுள்ளேயடக்கிக்கொண்டிருக்கும், பரம காரணனை விளக்குதலால், உலகத்துமக்கள் நியமித்து வழிபடுதற்குச் சிறந்த குறியாயுள்ளது, இதினுஞ் சிறந்ததாகிய குறி வேறொன்றுமில்லை. இந்தலிங்கம் பரார்த்தமென்றும்இஷ்டமென்றும் இருவகைப்படும். அவற்

நன்பாரார்த்தம், சுயம்புகாணம், தைவிகம், ஆரிடம், மாநுடம்எனஐந்துவகையாம். இஷ்டலிங்கம் சுவார்த்தமாகப் பூசிக்கப்படுவதாய் ஒருவன் தன் குருவினிடத்துப் பெறுவது விக்ரஹங்களுக்குப் பொதுப்பெயர்.

லீ

லீலாவதி - இரணியகசிபன்மனைவி, ப்ரஹ்லாதன் தாய், பாஸ்கராசாரியர் புத்ரி, இவள்பொருட்டே லீலாவதியென்னும் பரபலகணிதநூல் பாஸ்கராசார்யராலேசெய்யப்பட்டது, அர்ச்சை.

லீலாவதியென்னுங் கணிதநூலிலே வல்லவளாகியபின்னேதான்செய்த நூல்களை யெல்லாம் தன்தந்தை பெயரால் பரசுரித்தாள் என்பர்.

லை

லைங்கம் - லிங்கபுராணம், இது நந்திகேசுரரால் சொல்லப்பட்டது இதுபதினோராயிரங் கிரந்தங்களையுடையது.

லோ

லோகபாலர் - பூமிக்கு சுற்புறத்திலும் லோகாலோக பர்வதத்திலேயிருந்து பூமியைக் காக்கின்ற சுதந்தவன், சங்கன், ஹிரண்யரோமன், கேதுமந்தன் என்னும்நால்வர் இப்பெயர்பெறுவர்.

லோகாலோகம்-சக்கரவாளகிரி இதுவட்டவடிவாயிருப்பது, இதிவரைக்குந்தான் சூரியகிரணம் வியாபிக்கும், மனிதர் வசிக்க வொண்ணாத பூப்பிரதேசம் அலோகமென்றும் வசித்தற்குரியது லோகமென்றும் சொல்லப்படும், பூகோளத்தின் அத்யுத்தரபாகமும் அதிதக்ஷிணபாகமும் அலோகமாம், இரண்டையும் பிரிக்குமெல்லையே லோகாலோக பர்வதமாம்.

லோகிதாசியன் - அரிச்சந்திரன்மகன்.

லோகித்தியநதி - தேவாரணியத்தருகேயுள்ள வோர்நதி.

லோபாமுத்திரை-அகஸ்தியமுனிவர் மனைவி, விதர்ப்பதேசத்தாசன் மகள், புலஸ்தியர் தங்கை.

லோமபாதன் - அங்கதேசத்தரசன்.

லோலா - லோலை, லவணாசுரன் தந்தையாகிய மதுவின் தாய்.

வ

வஃகான் - வகரம்.

வகி - எருது, காற்று, சிநேகிதன்.

வகது - எருது, பிரயாணக்காரன்.

வகத்திறம் - வாகை.

வகந்தம் - காற்று, குழந்தை.

வகம் - காற்று, வழி, வாகனம்.

வகரம் - வகரஎழுத்து.

வகனிருதனன் - வீமன்.

வகன் - குபேரன், பகன்.

வகாரத்திரவியவித்தை-பஞ்சாக்கரவித்தைகளுண் மூன்றுவித்தை.

வகாரம் - ஓரெழுத்து.

வகித்தல் - சகித்தல்.

வகிரங்கம் - பகிரங்கம்.

வகிரியாகம் - வெளியரங்கப்பூசை.

வகிருதல் - அறுத்தல், கோதல், பங்குசெய்தல், போழ்தல்.

வகிரேந்திரியம் - அரிகருவி.

வகிர் நரம்பு, பிளவு, வகிரென்னேவல், வழி, வார்.

வகிர்தல் - வகிருதல்.

வகுண்டம் - கவிழ்த்தும்பை.

வகுண்டிமடம் - வாலுளுவை.

வகுதி - வகுப்பு.

வகுத்தல் - வகைப்படுத்தல்.

வகுத்திரம் - தெப்பம்.

வகுத்திராபிகாரம் - பஞ்சேந்திரியம்.

வகுத்துக்காட்டல் - ஒருயுத்தி, அது தொகுதி காட்டியவைகளை வேறு விரித்துக்காட்டுதல்.

வகுந்து - வழி.

வகுப்பு - அழகு, பகுப்பு, பொலிவு.

வகுலி - ஒருமீன்.

வகுளமாலாதரர்
வகுளபாஸ்கரர் } சடகோபர்.
வகுளபூஷணர்
வகுனி - ஒலி.
வகுள் - சமுத்திராப்பச்சை.
வகுளிநாதர் - நவநாதசித்தரிலொருவர்.
வகை - இனம், உபாயம், ஏது, கூறுபாடு, தரம், பகுப்பு, முதல், முறை, வகுப்பு, வழிவகை.
வகைதேடுதல்
வகைபார்த்தல் } உபாயந்தேடுதல்.
வகைபுனைதல் - வகைப்பண்ணல்.
வகைப்படுதல் - பங்குபடுதல்.
வகைப்படுத்தல் - பங்கிடுதல்.
வகையசத்திணை - தொகையாயுரைத்த பொருளை வகையறத் துரைத்தல்.
வகையிடுதல் - வகைப்படுத்தல்.
வகையுளி - அவ்வச்சொன்முடிவேசீர் முடிவாக்கித் தளைகொள்ளாமல் வேண்டியவிடத்துச் சீர்முடிவு செய்து தளைகோடல்.
வக்கட்டை - கடவான்.
வக்சணம் - நாகரிகம், நிந்தை, பட்டப்பேர், மார்பு, வர்ணனை, விற்பன்னம்.
வக்கணத்தி - ஒருபூண்டு.
வக்கனை - வக்கணம்.
வக்கபாகை - ஒரூர்.
வக்கரை - பக்கரை.
வக்கா - ஒருபட்சி.
வக்காமணி - ஒருமணி.
வக்கான் - வைக்கான்.
வக்கிரகட்கம் - கரவாளம்.
வக்கிரகண்டம் - இலந்தை.
வக்கிரக்கிரீவம் - ஒட்டகம்.
வக்கிரசச்சு - கருடன், கிளி, வலியான்.
வக்கிரசந்திரன் - இளம்பிறை.
வக்கிரசிருங்கி - வளைகொம்புப்பசு.
வக்கிரசுஞ்சி கிளி.
வக்கிரதந்தம் - வளைந்தபல்.
வக்கிரதுண்டம் - கிளி, வக்கிரசச்சு.
வக்கிரபுஷ்பம் - முருக்கமரம்.
வக்கிரநக்கிரம் - கிளி.
வக்கிரநக்கிரன் - பிசுகன், லோபி.
வக்கிரநாசிகம் - ஆந்தை, கிளி.
வக்கிரம் - கலக்கம், கொடுமை, திமிர்தல், பொய், பொறுமை, மீனையடக்குதல், மீளுதல், வஞ்சனை, வட்டம், வளைவு.
வக்கிரவத்திரம் - பன்றி.
வக்கிரவாலதி - நாய்.
வக்கிரவாலி - நாய்.
வக்கிரன் - உருத்திரன், குரூரன், சனி, செவ்வாய், தந்தவக்கிரன்.
வக்கிராங்கம் - அன்னம்.
வக்கிராங்கி - கடுகுரோகணி, கூனி.
வக்கிராத்தமனம் - திரும்புதலோடத்தமனம்.
வக்கிரித்தல் - திரும்புதல்.
வக்கிரோதயம்-திரும்புதலோடுதித்தல்.
வக்கு - தொட்டி, தோல், வழி.
வக்குத்திரிகரணம் - படுக்கை.
வக்திரு - சொல்வோன்.
வக்தரயோதி - விப்ரஜித்தி புத்ரன்.
வங்கக்கடல் - கப்பலோடுங்கடல்.
வங்கக்கல் - சக்கான்கல்.
வங்கசெந்தூரம் - ஈயபஸ்மம்.
வங்கசேநகம் - வெள்ளகத்தி.
வங்கடம் - உயிசம்.
வங்கணம்
வக்கனம் } உற்றநேசம், ஒருதேயம், சிநேகம்.
வங்கணதூஷணம் - அவதூறுபண்ணுதல்.
வங்கணன் - உற்றதோழன்.
வங்கதீறு - ஈயமணல்.
வங்கபற்பம்
வங்கபஸ்மம் } வங்கசெந்தூரம்.
வங்கமணல் - வங்கதீறு.
வங்கம் - ஆற்றுமடக்கு, ஈயம், கத்தரிச்செடி, கருத்து, சிறுகத்தரி, துத்தநாகம், தேயமைம்பத்தாறினொன்று, இது கௌடதேயத்தைச் சார்ந்திருப்பது பதினெண் பாடையினுமொன்று, மரக்கலம், வளைவு, வெள்ளி.
வங்கம்விளையுங்கல்-வெள்ளைச்சுக்கான்கல்.
வங்கர் - ஒருசாதியார், சண்டாளர்.
வங்களம் - சேம்பு.
வங்கனர் - ஒரு சங்கப்புலவர்.
வங்கன் - பலியின்இரண்டாம்புத்திரன், இவனால் அரசாளப்பட்டநாடு வங்கநாடென்று வழங்கப்பட்டது.
வங்கா - காளம்.
வங்காரம்-உலோகக்கட்டி, பொன், வணிதம்.
வங்காரவச்சி
வங்காரவாசி } ஒருமீன்.

வங்காளத்திப்பிலி - ஒருதிப்பிலி.
வங்காளப்பச்சை-ஒருபூடு, ஒருவர்ணம்.
வங்காளம் - தேயமைம்பத்தாறினொன்
வங்கி - ஒரு கைவளை, தடிவேலி. [று.
வங்கிஷம் - வமிசம்.
வங்கியசூடாமணி - சண்பகபாண்டியன் தருமியென்பவன் இவன்காலத்திலிருந்தவனே.
வங்கியசேகரன்-விக்ரமச்சோழன் காலத்திலே மதுரையில் அரசுபுரிந்த பாண்டியன், இவன் சோமசுந்தரக் கடவுளிடத்துத் தமிழ்ச்சங்கப்பலகைபெற்றவன், கடைச்சங்கத்தைத் தாபித்து அதற்குவேண்டிய நிபந்தனைகளையேற்படுத்தி நூலாராய்ச்சியும் நூல் செய்வித்தலுமாகிய இவைகளாலேயே தமிழை விருத்தி செய்தவன் இவனே.
வங்கியம்-இசைக்குழல்,மூங்கில்,வளைவு.
வங்கிலம் - முள்.
வங்கு - அளை, கழுதைப்புலி, கற்புழை, சந்து.
வங்குக்கட்டை }
வங்குக்கால் } மரக்கலத்தறி.
வங்கூழ் - காற்று, வாதம்.
வங்கை - பகை.
வசகம் - கொறடு.
வசக்கட்டு - ஆட்சி.
வசக்குதல் - படியப்பண்ணல்,வசையப்பண்ணல்.
வசக்கேடு - சரீரமெலிவு.
வசங்களித்தல் - ஆட்சியைவிலக்கல்.
வசங்கெட்டவன் - இட்டமில்லாதவன், சுகமற்றவன்.
வசட்டி - வயிரமண்.
வசதி - இடச்சுகம், இரா, இருப்பிடம், கல்விடம், மருதநிலத்தூர், வீடு.
வசதிக்கேடு - சுகவீனம்.
வசத்திற்சோதினி - எலுமிச்சை.
வசநாவி - நஞ்சு.
வசநீயம் - வார்த்தை.
வசநீயதை - நிந்தை.
வசந்தகாலம் - சித்திரைவைகாசியின்ப
வசந்தகோஷி - குயில். [ருவம்.
வசந்தங்களித்தல் - வசந்தனடித்தல்.
வசந்தசகன் - மன்மதன்.
வசந்தசமுகன் - காமன்.

வசந்ததிரு - மாமரம்.
வசந்ததிருநாள் - மஞ்சணீர்த்திருவிழா.
வசந்ததூதம் - குயில், சித்திரை,மாதம், மாமரம்.
வசந்தநாதன் - மன்மதன்.
வசந்தபைரவி - ஒரிராகம்.
வசந்தமண்டபம்- இளைப்பாறுமண்டபம் சிறு தென்றல் வீசுமண்டபம்.
வசந்தமலர் - இலவங்கம்.
வசந்தமல்லிகை - ஒருகொடிமல்லிகை.
வசந்தமாலை - ஒருபிரபந்தம்,அது தென்றலைச் சிறப்பித்துப் பாடுவது, மாதவிதோழி, இவளுக்குக் கூனி யென்றொரு பெயருமுண்டு.
வசந்தம் - இந்திரன்மாளிகை, இளவேனில், ஒரிராகம், சின்னமுத்து, சுகந்தம், தென்றற்காற்று, வாசனை.
வசந்தருது - இளவேனிற்பருவம்.
வசந்தவிழா - வேனில்விழா.
வசந்தனடித்தல் - வசந்தன்கூத்தாடல்.
வசந்தன் - ஒருகூத்து, குரங்கு, தென்காற்று, மன்மதன்.
வசந்திகை }
வசந்தியை } தேமல்.
வசப்படல் }
வசப்படுதல் } வசமாதல்.
வசப்படுத்தல் - வசமாக்கல்.
வசப்பிழை - பெலவீனம்.
வசமாக்கல் - ஆட்சிகொடுத்தல்.
வசமாதல் - ஆட்சியாதல்.
வசம் - அமைச்சல், ஒழுங்கு, கீழ்ப்படிதல், கைவசம், தரைத்தனம், நிலவரம், பிறப்பு.
வசம்பு - ஒருமருந்து.
வசரம் - கோழி.
வசலு - சத்துரு.
வசலை - ஒருகொடி, பசலை.
வசவி - தட்டை.
வசவு - இழிவுரை.
வசளை - பசளை.
வசனம் - அரைப்பட்டிகை, சொல்,பழமொழி, புடவை, பேச்சு, வாக்கியம், வாசகம், வீடு.
வசனுபாசம் - ஒரளவைப்பிரமாணம்.
வசனுவி - வச்சநாபி.
வசனித்தல் - சொல்லல், விபரித்தல்.
வசன் - எல்லை, நேர்.

வசன்கட்டு - எல்லைவரம்பு.

வசாரம் - அபிப்பிராயம்.

வசி - இருப்பிடம், கழுமுள், குற்றம், கூர்மை, சூலம், தழும்பு, திரட்சி, வசியம், வாள், மழை.

வசிகம் - மிளகு.

வசிகரணம் - கலைஞான மறுபத்துநான்கினொன்றுபுணர்ச்சித்கிணக்கம், மன்மதன் கணையினொன்று, வசியென்னேவல், வாள்.

வசிகரம் - சிந்தில், வசியன்.

வசிகரித்தல்-வசப்படுத்தல்,வேண்டுதல்.

வசிகரிப்பு - மன்றாட்டு.

வசிட்டம் - வாசிட்டம்.

வசிட்டன்-ஓரிருடி,பிரமனது மாநசபுத்திரருள் ஒருவர், இவர் தவத்தால் மிகச் சிறந்தவர். இக்ஷ்வாகு வமிசத்தரசரெல்லாருக்கும் இவரே குலகுரு. இவர் வைவசுவத மந்வந்தரத்திலே சப்தரிஷிகளுள்ளே ஒருவர். இவர். மனைவி அருந்ததி, புத்திரர் சக்தி முதலிய நூற்றுவர், இவர் முற்காலத்திலே தக்ஷன் மகளாகிய ஊர்ச்சையென்பவளை மணம்புரிந்து அவரிடத்திலே ரஜன், கோத்திரன், ஊர்த்வபாகு, தவநன்,அநகன், சுதபன், சுக்ரன் என்னும் எழுபுதல்வரைப்பெற்றார். இவ்வெழுவரும்சுவாயம்புவ மந்வந்தரத்திலே சப்தரிஷிகளாக இருந்தார்கள். இவர் முன்னே பிரமாவின் மாநச புத்திரராக இருந்தபோது நிமி சாபத்தால் சரீரமிழந்து, பிறகு மித்ரா வருணர்களுக்குப் புத்திரராகப் பிறந்தார். பிறகு வியாசராகப் பிறந்தவரு மிவரே.

வசிதை - கீழ்ப்படுத்தல், மருட்டுதல்.

வசித்தல் . தங்கல், வசனித்தல்,வசியம் செய்யல்.

வசித்துவம் - அட்டசித்தியினொன்று அது யாவரும் வணங்கநிற்றல்.

வசிகி - வன்னிமரம்.

வசியகாரன் - வசியஞ்செய்வோன்.

வசியமை - வசியஞ்செய்யும் மை.

வசியம் -காம்பு, கைவசம், மணப்பொருத்தம் பத்தினொன்று, வசமாதல், அது அட்டகருமத்தொன்று.

வசியை - பதிவிரதை.

வசிரம் - ஆனைத்திப்பிலி, கடலுப்பு.

வசிவு - வளைவு.

வசீகரணம்-கீழ்ப்படுத்தல், வசிகரணம், வசியப்படுத்தல்.

வசீகரம் - வாசம்.

வசீகரன் - வசியப்படுத்துவோன்.

வசீரம் - யானைத்திப்பிலி.

வசு அட்டவசுக்கள், ஒருமணி, கிரணம் குபேரன்,சிவபிரான், சூரியன், செல்வம், தேவர், நீர், நெருப்பு, பசுவின்கன்று, பொருள், பொன், மரப்பொது, வெள்வெங்காயம்,சேதிராயனுடைய கருதி புத்திரன், திருகன்வமிசத்துப் பூதசோதி புத்திரன்.

வசுகந்திகை - நாய்வேளைச்செடி.

வசுகடன் - யாசகன்.

வசுகூபம் - அமுரி.

வசுக்கள் - அட்டவசுக்கள்.

வசுரேசன் }
வசுசேனன் } கர்ணன்.

வசுதன் - குபேரன், திருசதசியன்.

வசுதாதரம் - மலை.

வசுதாதிபன் - அரசன்.

வசுதாரை-அருகர்க்குரியஒருசத்தி, அளகை.

வசுதேவநந்தநன் - க்ருஷ்ணன்.

வசுதேவன் - ஆநகதுந்துபி,சூரன்புத்திரன், தேவகிநாயகன், க்ருஷ்ணபலராமர்களுக்குத் தந்தை, கண்ணுவன்.

வசுதை - பூமி, தேசம் மாலியனென்னும் இராக்கதன் மனைவியாகிய கந்தருவப்பெண்.

வசுநாள் - அவிட்டநாள்.

வசுந்தரை - பூமி.

வசுபதன் - உபரிசர வசுவினது சேனுபதி, கோலாகல சங்கமத்திலே சுக்திமதியிலே பிறந்தவன்.

வசுபை - புநர்பூச நட்சத்திரம்.

வசுப்பிராணன் - நெருப்பு.

வசுமதி - பூமி.

வசுமந்தன் - சுருதாயு.

வசுவசி }
வசுவாசி } ஜாதிபத்திரி.

வசூரி - மசூரி.

வசூரை - வேசி.

வசை-இகழ்ச்சிச்சொல்,கணவன்சகோதரி, குற்றம், பசு, பெண், பெண்யா

னை, மகள், மலட்டுப்பசு, மனைவி, மூழை.
வசைச்சொல் - இகழ்ச்சிச்சொல்.
வசைதல் - சூழப்படல், வளைதல்.
வசைத்தல் - வளைக்குதல்.
வசையாடுதல் - நிந்தித்துப்பாடுதல்.
வசைப்படுதல் - வடுப்படுதல்.
வசைபாட்டு - சாபப்பாட்டு.
வசைவினை - துன்னடை.
வச்சகத்தண்டுலம் - வெட்பாலையரிசி.
வச்சகம் - மலைமல்லிகை.
வச்சநாபி - வற்சநாபி.
வச்சதி - மஞ்சள்.
வச்சலமணி - கோரோசனம்.
வச்சாதனி - சீந்தில்.
வச்சி - காய்மரம்.
வச்சிரகங்கடம் - வச்சிரக்கட்டை.
வச்சிரகங்கடன் - அனுமன்.
வச்சிரகங்கணம் - வயிரகங்கணம்.
வச்சிரகம் - தாமரைக்காய்.
வச்சிரகம்பம் - வயிரத்தூண்.
வச்சிரகரன் - இந்திரன்.
வச்சிரகவசன் - வயிரச்சட்டை.
வச்சிரகாயம் } வச்சிரயாக்கை.
வச்சிரசரீரம் }
வச்சிரசிதன் - கருடன்.
வச்சிரசுவாலை - கும்பகர்ணன் மனைவி.
வச்சிரகுசிகாபரணம் - ஒருவகையம்பு.
வச்சிரசூரியன் - புத்தன்.
வச்சிரசெலதம் - கோரைக்கிழங்கு.
வச்சிரச்சுவாலை - மீன்.
வச்சிரதசனம் - எலி, பன்றி.
வச்சிரதந்தன் - பகதத்தன் புத்திரன்.
வச்சிரதந்தி - ஒருபுழு.
வச்சிரதம்ஷ்டிரன் - ராவணன் துணைவரிலொருவன்.
வச்சிரதம்பநாயகர் - திருமழபாடியிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வச்சிரதரன் - இந்திரன்.
வச்சிரதாரணை - நவதாரணையி லொன்றுஅது அகங்காரத்தையுஞ் சிவதத்துவத்தையுநீக்கிப் பாதத்தவமேதியானஞ்செய்யத்தக்கதென் றறிதல்.
வச்சிரதுண்டம் - கருடன், கொசுகு, வலியான்.
வச்சிரதுண்டம் - விநாயகன்.
வச்சிரதேகம் - வச்சிரயாக்கை.
வச்சிரத்தலைச்சி - கதண்டு.
வச்சிரநாடு - ஒருதேயம், இது சேனையாற்றின் கரையிலுள்ளது.
வச்சிரநாபன் - விப்ரஜித்தி புத்திரன், இவன் தாய் சிங்கிகை, இவன் மகள் ப்ரபாவதி.
வச்சிரபஞ்சகவசம் - ஒருகாப்பு.
வச்சிரநிம்பம் - கருவேம்பு.
வச்சிரபாணி - இந்திரன்.
வச்சிரபாதம் - இடியேறு.
வச்சிரபீசகம் - கொடிப்புன்கு.
வச்சிரபீஜம் - கழற்சிக்காய்.
வச்சிரபுட்பம் - எட்பூ.
வச்சிரப்பசை - ஒருபசை.
வச்சிரமுஷ்டி - மாலியவந்தன்புத்திரன்.
வச்சிரம் - அத்திபேதி, இடி, எட்பூ, ஒருபிசின், குலிசம், கொடுஞ்சொல் சதுரக்கள்ளி, சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று, தருப்பை, நித்தியயோகத்தொன்று, பசுமை, மாட்டுத்தோலினின்றெடுக்கும்பசை, வச்சிராயுதம், வயிரமணி, வயிரம்.
வச்சிரயாக்கை - ஊறுபடமாட்டாத சரீரம்.
வச்சிரவராகி - சமணர் கொண்டாடும் ஒரு மாயாசத்தி.
வச்சிரவல்லி - பிரண்டை, பொழுதுவணங்கிப்பூச்செடி.
வச்சிரவாகு - சூரபன்மன் மைந்தரிலொருவன், இவன் தாய் பதுமகோமளை.
வச்சிரவாராகி - மாயாதேவி.
வச்சிரன் - இந்திரன், ஒருபத்தன், கிருஷ்ணன் பௌத்திரனாகிய அநிருத்தன் மகன், கிருஷ்ணாவதாரத்தின் பிறகு இவனே மதுராபுரிக் கரசனாயிருந்தவன்.
வச்சிராங்கதம் - இடியேறு.
வச்சிராங்கம் - சதுரக்கள்ளி.
வச்சிராங்கன் - காசிபன் புத்திரன், இரணியாக்ஷன் இரணிய கசிபன் என்போர் இறந்த பிறகு திதியானவள் புத்திரவாஞ்சையால் தவஞ்செய்து கருப்பங்கொள்ள, அந்தக்கருப்பத்தை இந்திரன் சேதித்தான், அப்படி சிதைந்த கருப்பமானது ஏழுகூறாக ஏழுமருத்துக்கள் பிறந்தார்கள், அத

ன்பிறகும் புதல்வர்ப்பேற்றைக் குறித்துத் தவஞ்செய்து இந்த வச்சிராங்கனை யீன்றாள். இந்த வச்சிராங்கன் இந்திரனை வென்று பிரமாவைநோக்கித் தவஞ்செய்து தாரகனைப் பெற்றான்.
வச்சிராங்கி - வச்சிராங்கன் மனைவி, தாரகன் தாய்.
வச்சிராசனி - இந்திரன்கொடி.
வச்சிராட்சி - பிரண்டை.
வச்சிராதம் - பன்றி.
வச்சிராயுதம் - குலிசம்.
வச்சிராயுதன் - இந்திரன்.
வச்சிராவர்த்தம் - இராமன்வில்.
வச்சிரி - இந்திரன்.
வச்சிரீமரணம் - இடைபிங்கலைசுழிமுனை.
வச்சிரை - ஒரு ரப்ஸரஸ்த்ரீ.
வச்சையம் - கலைமான்.
வஞ்சகச்சொல் - மடிப்பானபேச்சு.
வஞ்சகமூடி - ஆமை.
வஞ்சகம் - அணுப்பு, இது தாமதகுணத்தோன்று, சூத்திரம், நரி, மடிப்பு, மறைவு.
வஞ்சகவொழிப்பு பெயர் முதலியசொற்களால் வருணியத்தினது தருமத்தை மறைத்தல், (உ-ம்) இம்மடந்தை கட்கடை நோக்கென்னும் பெயரினைக்கொண்டம்மதவேள்வாளிபடும்.
வஞ்சகன் - தூர்த்தன், நரி, வஞ்சிப்போன்.
வஞ்சகாரம் - கொடிவேலி.
வஞ்சசதம் - கபடம்.
வஞ்சநடை - கபடநடை.
வஞ்சநவிற்சியணி - ஓரலங்காரம், அது ஒரு காரணத்தானிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொரு காரணங்கூறி மறைத்தல்.
வஞ்சகந்தீர்தல் - பழிவாங்கல்.
வஞ்சப்பழிப்பணி - ஓரலங்காரம், அது நிந்தையானிந்தை தோன்றச் சொல்லல்.
வஞ்சப்புகழ்ச்சியணி-ஓரலங்காரம், அது பழிப்பினுற் புகழ்ச்சியும் புகழ்ச்சியாற்பழிப்பும் புகழ்ச்சியாற் புகழ்ச்சியுந் தோன்றச் சொல்லல்.
வஞ்சப்பெண் - காளியேவல் செய்வாள்.
வஞ்சமனம் - கபடமனம்.
வஞ்சமனத்தான் - கபடமனமுள்ளவன்.
வஞ்சம் - கபடம், கொடுமை, சிறுமை பொய், வடிப்பு, மாயம், வாள்.
வஞ்சவம் - பாம்பு.
வஞ்சனம் - ஒருமீன், வஞ்சகன்.
வஞ்சனி - இடாகினி, காளியேவல்செய்வாள், பெண்.
வஞ்சனை - ஆணை, தெய்வப்பெண், பொய், மாயம், வஞ்சகம்.
வஞ்சனைபண்ணுதல் - வஞ்சித்தல்.
வஞ்சன் - வஞ்சகமுள்ளவன்.
வஞ்சி-ஒருகொடி, ஒருபா, கருவூர், சீந்தில்கொடி, தருமதேவதை, பகைவர்மேற்செலவு, பகைவர்மேற்செல்வார்க்குமாலை, பெண், வஞ்சியென்னேவல், சேரர்களுக்கு இராஜதானி, இதனைக் கொடுங்கோளூர் என்பார் சிலர், திருவஞ்சைக்களம் என்பார் சிலர், இவ்விரண்டூர்களும் கொச்சியைச்சார்ந்த நாட்டில் ஒன்றுக்கொன்று சமீபித்திருப்பன.
வஞ்சிச்சீர் - வஞ்சியுரிச்சீர்.
வஞ்சிதன் - வஞ்சிக்கப்பட்டவன்.
வஞ்சித்தல் - வஞ்சனைசெய்தல்.
வஞ்சித்தளை - கனிநிழலென்னும் வாய்பாடுகளின் பின் நேரசையேனுநிரையசையேனும் வருவது.
வஞ்சித்தாழிசை - நிரையசை யோடேனு நேரசை யோடேனும் புணர்ந்து இருசீரடி நான்குகொண்டொருபொருள்மேல் மூன்றடுக்கிவருவது.
வஞ்சித்துறை - இருசீரடிநான்குகொண்டுவருவது.
வஞ்சிப்பா - ஐந்துபாவிலொன்று, அது பெரும்பான்மை வஞ்சித்தளையுஞ் சிறுபான்மை பிறதளையுந்தழுவிஇருசீரடியானேனு முச்சீரடியானேனுமூன்று முதலிய பல அடிகளைக்கொண்டு தனிச் சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிவது.
வஞ்சியர் - பெண்கள்.
வஞ்சியர்தரிசனம் - கண்ணுடி.
வஞ்சியுரிச்சீர் - நேரசையு நிரையசையுந்தம்முன் விரவி மூன்றடுத்துநிரையசைமுடிவுபெற்று நிற்பது (உ-ம்) தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி.
வஞ்சிரம் - ஒருமீன்.

வஞ்சிவிருத்தம் - முச்சீரடிநான்குகொண்டு வருவது.
வஞ்சிவேந்தன் - சேரன்.
வஞ்சினம் சபதம்.
வஞ்சுளம் - அசோகமரம், வேங்கை.
வஞ்சுளன் - கரிக்குருவி.
வஞ்சூரன் - ஒருமீன்.
வடகடல் - வடதிசைக்கடல்.
வடகம் - உல்லாசம், ஒரு பணிகாரம், தோல், போர்வை, மேலங்கி, வற்றல்.
வடகயிலாயம் - உத்தரகயிலாயம்.
வடகலை - கிரந்தநூல், வைணவத்திலோர்பேதம்.
வடகாற்று - வாடை.
வடகிரி - மாமேரு.
வடகீழ்த்திசை - ஈசானம்.
வடகீழ்த்திசைப்பாலன் - ஈசானன்.
வடகீழ்த்திசைப்பாலன்குறி - காகம்.
வடகீழ்த்திசையானை - சுப்பிரதீபம்.
வடகுரங்காடுதுறை - காவிரிக்கரையிலுள்ளவொரு சிவஸ்தலம்.
வடகோடு - வக்கிரசந்திரனின் வடநுதி.
வடகோடை - குன்றுவாடை.
வடக்கயிறு - பருங்கயிறு.
வடக்கு - வடதிசை.
வடசொல், வடதமிழ் } கிரந்தமொழி.
வடதிசைப்பாலன் - குபேரன்.
வடதிசைப்பாலன்குறி - யானை.
வடதிசையானை - சாருவபூமம்.
வடதேசம் - பாண்டிமண்டலத்திற்குவடபாற்பூமி.
வடநாடு - வடதேசம்.
வடநாட்டுத்திருப்பதி - வடதேசத்திலுள்ள திருப்பதிகள்.
வடநூல் - ஸமஸ்கிருதசாஸ்திரம்.
வடநெடுந்தத்தனார் - இவர் நாலைகிழவனைப்பாடிய புலவர்.
வடந்தை - வடகாற்று, வாடை.
வடபத்ரசாயி - விஷ்ணு.
வடபத்திரம் - ஆலிலை.
வடபாதம் - பரதகண்டத்தினோர்பிரிவு.
வடபாரிசம்-வடக்குப்பக்கம்.
வடபாலிரேவதம் - நவகண்டத்தொன்று.
வடபால் - வடக்குப்புறம்.
வடபால்விதேகம் - வடவிதேகம்.
வடபுறம் - வடபக்கம்.

வடபூமி - வடதேசம்.
வடமதுரை - வடநாட்டிலுள்ளதோர் விஷ்ணுஸ்தலம்.
வடமரம் - ஆலமரம்.
வடமர் - பிராமணரிலோர்பேதம்.
வடமலை - திருப்பதி, மகாமேரு.
வடமலையாண்டவன், வடமலையான், வடமலைவாணன் } ஒருநெல், திருப்பதிப் பெருமான்.
வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் - இவர் வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனாரெனவும் படுவர். தேர்வண்மலையனைப்பாடிய புலவர் இவரே.
வடமீன் - அருந்ததி.
வடமீன்கணவன், வடமீன்காதலன், வடமீன்கொழுநன் } வசிட்டன்.
வடமுகம் - பாரிசம்.
வடமூலகன் - சிவபிரான்.
வடமூலநாதர் - திருப்பழுவூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வடமேரு - மகாமேரு.
வடமேற்கு - வாயுமூலை.
வடமேற்றிசைப்பாலன் - வாயு.
வடமேற்றிசைப்பாலன்குறி - கழுதை.
வடமேற்றிசையானை - புட்பதந்தம்.
வடமொழி - கிரந்தமொழி.
வடம் - ஆலமரம்; ஊர், ஒரு பண்ணிகாரம், கயிறு, நாணி, பூவரும்பு, மணிவடம், வட்டம்.
வடரம் - தலைச்சீலை, பாய்.
வடலி - இளம்பனை.
வடதனல், வடவாக்கனல், வடவாக்கினி } வடவாமுகம்.
வடவாசி - இயக்கன், ஆலடியில் வசிப்போன்.
வடவாசுதர் - தேவமருத்துவர்.
வடவாநலம், வடவாமுகம், வடவாமுகாக்கினி } ஊழித்தீ.
வடவாமுகம் - குமேரு.
வடவிதேகம் - நவகண்டத்தொன்று.
வடவிருக்கம், வடவிருட்சம் } ஆலமரம்.
வடவேங்கடம் - திருப்பதி.

வடவை-அச்சுவினி, அடிமைப்பெண், ஊழித்தீ, எருமை, பெண்குதிரை, பெண்யானை, பெண்குதிரை யுருவாகிச் சூரியனைக்கூடிய அச்சுவினி, இது சமுத்திரத்தி னிடையேயுள்ளது.
வடஸ்தாகம் - பாரதயுத்தகாலத்திலேகுருசேனைக்குப்பாசறையாயிருந்தவிடம்.
வடவாம்பிகை- திருக்கோடிகாவிலெழுந்தருளியிருக்கும் தேவியார் பெயர்.
வடாகரம் - கயிறு.
வடாது - வடக்கு.
வடாரகை - கயிறு.
வடி-கயிறு,கள், குசைக்கயிறு, கூர்மை, நாய், வடியென்னேவல்.
வடிகட்டுதல் - வடித்தெடுத்தல்.
வடிகயிறு - குதிரைவாய்க்கயிறு.
வடிகாது - தாழ்காது.
வடிக்கண் - வடுவகிர்போலுங்கண்.
வடிக்கதிர் } நூல் முறுக்கு மோர் கருவி.
வடிக்கருவி }
வடிக்குதல் - களங்கமறுத்தல், வடியச் செய்தல்.
வடிசம் - தூண்டில்.
வடிசல் - வடிதல்.
வடிசாந்து - நற்சாந்து.
வடிதங்கம் - சுத்ததங்கம்.
வடிதமிழ் - தெளிதமிழ்.
வடிதயிர் - நீர்வடிந்த தயிர்.
வடிதல் - நீர்முதலியபாய்தல், நீளம், நீளுதல், வற்றுதல்.
வடித்தல் - கூராக்குதல்,தெளித்தெடுத்தல், வசமாக்குதல்.
வடிப்பம் - அழகு, செப்பம், திரம்.
வடிப்பு - சலாகை, தெளித்தெடுத்தல், வடித்தல்.
வடிம்பு - நுதி, விளிம்பு.
வடிம்புக்கழி - எதிர்ச்சட்டம், குறுக்கு விட்டம்.
வடியல்-ஒன்றிலிருந்து நீங்கியநீர், வடி தல்.
வடியெண்ணெய் - கடுகுவடித்தெடுக்குமெண்ணெய்.
வடிவம் - உடல், உருவு.
வடிவவுவமம் - உருவத்தையே யுவமிப்பது,(உ-ம்) சிவன்வடிவேகுருவடிவு.
வடிவு - அல்குல், அழகு, உருவு.
வடிவுடையம்மை - திருவொற்றியூரில் கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வடிம்பலம்பநின்றபாண்டியன் - பஃறுளியாற்றை யமைத்தவன், இவன் கடற்றெய்வத்துக்குப் பெருவிழவாற்றினவன்.
வடிவுப்பண்புத்தொகை - உருவுப்பண்பைக்காட்டி நிற்குந்தொகை நிலை, (உ-ம்) வட்டக்கல்.
வடிவெழுத்து - வரியுங்கோடும் புள்ளியுமாகச் சட்புலனுக்கு விடயமாயெழுதமெழுத்து.
வடு - இளங்காய், குற்றம், செம்பு, தழும்பு,பிரமசாரி, மச்சம், மருதயாழ்த்திறம், வசை, வடுவென்னேவல், வண்டு, வாலிபன், வாள்.
வடுச்சி - வடுகப்பெண்.
வடுகநம்பி - ஒரு வைணவாசாரியர்.
வடுகன் - பிரமசாரி, மூடன்,வயிரவன், வாலிபன்.
வடுகன்றாய் - காடுகாள்.
வடுகி - தர்க்கை.
வடுகு - உபநயனம், இந்தளராகம், ஒரு சாதி, ஒருதேயம், ஒருபாவை, மருதயாழ்த்திறம்.
வடுகேசுவரர் - திருவடுகூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வடுச்சொல்லல் - வசைசொல்லல்.
வடுத்தல் - இளங்காயரும்பல்.
வடுநேர்கண்ணம்மை - திருவலம்புரத்திலே கோயில்கொண்டிருக்கும் தேவியார்பெயர். திருவடுகூரிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
வடுப்படுதல் - ஏறுபடுதல், குற்றமடைதல், வசைபூணல்.
வடுப்படுத்துதல் - குற்றப்படுத்துதல்; மறுப்படுத்துதல்.
வடுவகிர் - மாவடுவின்பிளவு.
வடுவரி - வண்டு.
வடுவிலி - மறுவற்றவன்.
வடோரணம் - பூணூலணிதல்.
வடை - உழுந்துவடை.
வடையற்றது - வீணானது.
வட்கல் - கெடுதல், வெட்கம்.
வட்கர் - பகைவர்.
வட்கார் - பகைவர்.
வக்ஷஸ்தலம் } மார்பு.
வட்சஸ்தலம் }
வட்டகை-அடைப்புநிலம்,சிறுகிண்ணம்.

வட்டக்கிலுகிலுப்பை - ஒருகிலுகிலுப்பை.
வட்டக்குடில் - பெருங்குடில்.
வட்டக்கைச்சில் - தேங்காயடிச்சில்.
வட்டச்சீட்டு - கழுவுசீட்டு.
வட்டணம் - கெடும்பரிசை, பரிசை.
வட்டணிக்கை - சுற்றுகை,வட்டவடிவு.
வட்டணித்தல் - வட்டமாக்கல், வட்டிப்பாய்வருதல்.
வட்டணை - தாளம், வட்டம்.
வட்டணையுறுத்தல் - தாளம்போடல்.
வட்டத்தலைப்பா - தலைப்பாக்கட்டினொன்று.
வட்டத்தாமரை - மலையாளத்திலிருக்கும் ஒரு தாமரை.
வட்டத்திரி - காதிடுதக்கை,துவக்கிற்கு நெருப்புவைக்குந்திரி.
வட்டத்திருப்பி - மலைதாங்கி.
வட்டத்துத்தி - ஒருசெடி.
வட்டத்தொப்பி - சோனகத்தொப்பி.
வட்டப்பாலை - நால்வகைப்பாலையினொன்று.
வட்டமிடுதல் - சுற்றுதல்.
வட்டம் - குளம், கேடகம், கைம்மணி, கொள்கலம், சக்கிரம், சிலை, தாழ்வு, திரிகை, நாணயமாற்றுதலின்கழிவு, நீர்ச்சால், பரிவேடம், பீடம், வட்டவடிவு, வளைதடி, வாகுவலயம்.
வட்டம்பண்ணுதல் - தேவதுதியைநான் வட்டத்திற் படித்தல்.
வட்டரவு - வட்டவடிவு, விருத்தம்.
வட்டவடிவு - வட்டாகாரம்.
வட்டறவு - முற்றுக அறவுபண்ணுதல்.
வட்டா - ஒருபாத்திரம்,தட்டம்,தாம்பாளம்.
வட்டாகிருதி - வட்டவடிவு.
வட்டாடல் - சூதாடல்.
வட்டாப்பத்து - கூந்தற்பூகத்தோலையாற்செய்யுமோர் விசிறி.
வட்டாறம் - சுற்றுப்புறம், தானியக்களஞ்சியம், வீடு.
வட்டி - கூடை, பலகறை, முதற்பொருட்கு வருமூதியம், வட்டியென்னேவல்.
வட்டிகை - கூடை, கைமணி, சித்திரம், நால்வகைச்சாந்திலொன்று வட்டம்.
வட்டிக்குவட்டி - வட்டிபணத்துக்கு மேல்வட்டி.
வட்டித்தல் - ஆணையிடல், வளைதல், தாளம்போடல், வட்டமாதல்.
வட்டிப்பு - வட்டம்.
வட்டில் - ஒருண்கலம், கிண்ணம், கூடைசூதாடுகருவி, புட்டில், வழி.
வட்டிற்பூ - தாமரைப்பூ.
வட்டு - ஒருசெடி, ஒருவிளையாட்டு, கறிமுள்ளி, சூதாடு கருவி, திரட்சி, மரவட்டு.
வட்டுக்குத்தி - மரவட்டு.
வட்டுச்செடி - வட்டு.
வட்டுடை - ஒருடைவிசேடம், சீலை.
வட்டுவம் - ஒருவகைப்பை.
வட்டுறுப்பு - திருத்தம்.
வட்டை - இரதம், புலியினதுடல்வரி, வழி.
வட்புலி - சிங்கம்.
வணக்கம் - கீழ்ப்படிதல், சங்கித்தல், தொழுதல் இது மங்களாசரணை மூன்றினொன்று.
வணக்கல் - வளைத்தல்.
வணங்கல் - தொழுதல், வளைதல்.
வணங்காமுடியன் / வணங்காமுடியினன் / வணங்காமுடியோன் } துரியோதனன் மற்றொருவரை வணங்காதவன்.
வணசி - ஒருகாணம்.
வணம் - உதயானம், ஓசை, பலகறை, வகம்.
வணர் - வளைவு.
வணிகபதம் - வியாபாரம்.
வணிகம் - செட்டு, வியாபாரம்.
வணிகன் - செட்டி, துலாராசி, வியாபாரி.
வணிசம் - எருது, எருதுக்காணம்.
வணிசன் - ஒருகரம், வாணிகன்.
வணிச்சியம் - வாணிச்சியம்.
வணிதம் - செப்பம்.
வண் - தெளிவு, மிகுதி.
வண்களமர் - சூத்திரர், வேளாளர்.
வண்கை - கொடைக்கை.
வண்மை - வழங்குகை.
வண்சிறை - மதில்.
வண்டத்தனம் - குறும்புத்தனம்.
வண்டமர்பூங்குழலம்மை - திருக்கோவிலிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வண்டமர்பூங்குழலுயகி - திருவாழ்கொளிபுத்தூரிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

வண்டமர்பூங்கழனியம்மை - திருப்பரம்புரத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வண்டம் - குந்தாயுதம்.
வண்டரம்-நாய்,நாய்வால்,மார்பு,முகில்.
வண்டரன் - அண்ணகன், உலோபி.
வண்டர் - கடிகைமாக்கள்,கவிகற்றோர், மங்கலப்பாடகர், மிண்டர்.
வண்டலம் - சேறு.
வண்டல் - அடையுங்கஞ்சல், நீர்ச்சுழி, பருபருக்கை, பெருக்கு மகளிர் விளையாட்டு.
வண்டன் - குள்ளன், திண்ணியன், திட்டன், விருத்தசேதனம் பண்ணப்பட்டவன்.
வண்டார்குழலி - திருவாலங்காட்டிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.திருக்கோளிலியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார்பெயர்.
வண்டாலம் - குந்தாலி, குராயுத்தம்.
வண்டானம் - நாரை.
வண்டி - பண்டி, வயிறு.
வண்டிக்கடுக்கன் - ஒருவகைக்கடுக்கன்.
வண்டிக்கால் - வண்டிவிற்சில்லு.
வண்டியகவாய் - வண்டிற்றோடு.
வண்டில் - பண்டி.
வண்டிற்கால் - வண்டிற்சில்.
வண்டிற்சத்தம் - வண்டிற்கூலி.
வண்டு- அம்பு, குற்றம், கைவளை, சங்கு
வண்டுருத்தி - ஒருகுருவி. [பூசநாள்.
வண்டுகொல்லி ஒருசெடி,தேவதாரம்.
வண்டுணுமலர்மரம்- சண்பகமரம், வேங்கைமரம்.
வண்டுவார்குழலியம்மை - திருமருகலிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வண்டுறை - எழுத்திலாவோசை.
வண்டை - ஒருசெடி.
வண்டோதரி - பஞ்சகன்னிகளி லொருத்தி,அவள்இராவணன்பெண்சாதி.
வண்ணக்கஞ்சாத்தனார் - இவர் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவர்.
வண்ணம் - அழகு, இராகம், குணம்,சந்தம், சந்தனம், சாந்துப்பொது நிறம் முடுகியல், வடிவு, வாசனை.
வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா - கலிப்பாவினோர்பேதம்,அது ஒருதரவு. மூன்றுதாழிசை, அராகம், அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னுமிவ்வா றுறுப்பினையுங் கொண்டு வருவது.
வண்ணகூபிகை - மைக்கூடு.
வண்ணக்கிரமம் - எழுத்தொழுங்கு, சாதியொழுங்கு,
வண்ணக்குழிப்பு
வண்ணக்குனப்பு } ஓரோசை.
வண்ணதூதன் - திருமுகங் கொண்டு போவோன்.
வண்ணத்தரு - ஒருபாடல்.
வண்ணப்பண்புத்தொகை - நிறத்தைக்காட்டிநிற்கும்பண்புத்தொகை (உ-ம்) செந்தாமரை.
வண்ணமகள் - கோலஞ்செய்வாள்.
வண்ணமாதிரு - இலேகினி நூதி.
வண்ணமாதிருகை - சரச்சுவதி.
வண்ணமாலை - அரிவரி.
வண்ணம் - அழகு, இராகம், ஒப்பனை, குணம், சந்தம், சாந்துப்பொது, செயல், நன்மை, நிறம், வடிவு, விதம்.
வண்ணாத்தி - பூநீறு,வண்ணாரப்பெண்.
வண்ணாத்திப்பூச்சி - ஒருபூச்சி.
வண்ணாப்பண்டி - வண்ணார் புடவையேற்றும் வண்டில்.
வண்ணான் - ■காலியன்.
வண்ணிகன் - எழுத்துக்காரன்.
வண்மை - அழகு, ஈகை, குணம், புகழ், மெய்மை, வளமை, விதம்.
வதகம் - மரணம், வியாதி.
வதகன் - கொலைகாரன்.
வதக்கம் - வாட்டம்.
வதக்கல்
வதக்குதல் } வதைத்தல், வாட்டல்.
வதங்கல்
வதங்குதல் } வாடுதல்.
வதண்டன் - ஒருமுனி.
வததண்டம் - கொலைக்கேற்றதண்டம்.
வதஸ்தானம் - கொலைக்களம்.
வதத்திரம் - அம்பு.
வதத்திரி - பறவை.
வதியன் - வரையாதகொடுப்போன்.
வதந்தி - கதை, பேச்சு.
வதம் - கொலை.
வதரம் - இலந்தை, இலந்தைக்கனி.
வதரி - இலந்தை, பதரி.

வதரியாச்சிரமம்-வடநாட்டிலுள்ளதோர் விஷ்ணுஸ்தலம்.
வதவரிசி - நிஞ்சரிசி.
வதவல் - வாடினது.
வதறுதல் - திட்டல், மழலைபொழிதல்.
வதனம்- முகம், முக்கோணத்தின்மேற்கோணம்.
வதனசவம்-உமிழ்நீர்.
வதனாரவிந்தம் - பெண்முகம்.
வதனேந்து - முகம்.
வதன் - கொலைசெய்வோன்.
வதாங்கம் - சிறைவீடு.
வதாங்கம் - நஞ்சு.
வதாருகன் - வதைத்தற்குரியவன்.
வதாகலம் } ஒரு மீன்.
வதாவம் }
வதாவதன்-இராஜசபைமுதலானவிடங்களில்நிஸ்ஸங்கையாகப்பேசவோன்.
வதானியன்-குபேரன். வரையாதுகொடுப்போன்.
வதி-சேறு, வதியென்னேவல், வழி.
வதிட்கடித்தல் - வக்கணந்தரித்தல்.
வதிட்சீட்டு - பிரதிபத்திரம்.
வதிட்டன் - பருத்தது, பருத்தவன்வசிட்டன்.
வதிதல் - தங்கல்.
வதிரன் - செவிடன்.
வதிரிகாச்சிரமம் - ஒரு தபோதலம்.
வதில் } பதில்.
வதின் }
வதிவு - இருத்தல்.
வதின்மொழி - பிரதிவாக்கு.
வதி - கொலைகாரன்.
வது - மகன் மனைவி, மனைவி.
வதுகை - மனைவி.
வதுவடி - பாலை.
வதுவர்-குதிரைப்பாகர், யானைப்பாகர்.
வதுவை - கலியாணம், வலுவந்தம், வாசனை.
வதூ-புதுமணப்பெண், பெண், மனைவி.
வதூவரர்-மணப்பெண்ணு மாப்பிள்ளையும், தம்பதிகள்.
வதூசரை - ஒருநதி, இது மிருகுரிஷியின் மனைவியைப் புலோமன் என்னும் இராக்கதன் கவர்ந்து போனபோது அவள் கண்களிலிருந்தொழுகிய நீர்த்தாரைகளாலுண்டாகிய நதியென்பர்.

வதூடி - மருமகன்.
வதூவரர்-மணப்பெண்ணும்மணாளனும்.
வதை - உபத்திரவம், கொலை, தேன்வதை, வதையென்னேவல்.
வதைசெய்தல் } கொல்லல்.
வதைத்தல் }
வதோபாயம்-கொலைக்கேதுவான உபாயம்.
வத்தகமை-வருத்திப்பு,வியாபாரம்.
வத்தகம் - வத்தகைமை, வெட்பாலை.
வத்தகன் - செட்டி, வியாபாரி.
வத்தகாலம் - நிகழ்காலம்.
வத்தகோபன் - கோபத்தையடக்கினோன்.
வத்தங்கி - ஒருமரம்.
வத்தமம் - ஆமணக்கு.
வத்தமானம் - கருமம், சங்கதி, நிகழ்காலம் நிகழ்ச்சி.
வத்தர் - வத்திரு.
வத்தல் - சிறுவள்ளம், செத்தல்.
வத்தனை - பெருக்கம், வமிசம்.
வத்தாச்கு } ஒருகொடி, கொம்மட்டி.
வத்தாலை }
வத்தாவி - ஒருதேயம்.
வத்தி - இரத்தினத்தின் மேற்பதிக்குந்தகடு, சீலைத்தொங்கல், திரிச்சீலை, திரிவாய்ப்பெட்டி, பரிமளதிரவியங்களைக்கூட்டியரைத்துச்செய்தவத்தி வத்தியென்னேவல், வரி, விளக்கு, விளக்குத்தகழி.
வத்தித்தல் - பெருகல்.
வத்தியதானம் - கொலைக்களம்.
வத்தியபாலன் - சிறைச்சாலைக் காவற்காரன்.
வத்தியபூமி - வத்தியதானம்.
வத்தியம் - மரணம்.
வத்தியன் -வதைக்கப்படுதற்குரியவன்.
வத்திரசேவை - முகதரிசநம்.
வத்திரசோதினி - எலுமிச்சை.
வத்திரதண்டன் - விநாயகன்.
வத்திரதாரணம் - ஆடைதரித்தல்.
வத்திரபஞ்சகன் - சிவபிரான்.
வத்திரபட்டம் - நெற்றிப்பட்டம்.
வத்திரபுத்திரிகை - சித்திரப்பாவை.
வத்திபேதகன் - தையற்காரன்.
வத்திரம் } ஆடை, உடை, சீலை, போர்க்கருவி, முகம்.
வஸ்திரம் }
வத்திராஞ்சலம் - புடைவையருகு.
வத்திராட்சம் - பத்திராட்சம்.

வத்திரானசந்தானம்-பஞ்சமுகக்கூடல்.
வத்திரி - தோல்வார்.
வத்திரு - பேசுவோன், வாக்கி.
வத்திரதாரு - செம்புளிச்சை.
வத்திரேணம் - பெருமரம்.
வத்து, வஸ்து } பொருள்.
வத்துதாரணை - சுவதாரணையென்று அது விடயப்படா தனைசவற்றிருக்கு மனம் புத்தியை சித்தத்திற் சேர்க்கச் சித்தந்தன்னிடத் தமைந்த புத்தியை மனதிற்சேர்க்கச் சித்தமும் மனமும் புத்தியை அகங்காரத்திற் சேர்க்க அகங்காரம் புத்தி சித்தம் மூன்றும் மனத்திற்சேர அம்மனத்தாற் பிரமதரிசனம் பிறத்தல்.
வஸ்துநிச்சயம், வஸ்துநிர்ணயம், வஸ்துநிதானம் } பிரபஞ்சகாரணமாய்க்கடவுளுண்டென்றும் அவன்யாவனென்றுங் கண்ட தீர்ப்பு.
வத்துபரிச்சேதம் - ஒரு பொருளிஃதாகும் ஒரு பொருளிஃதன்றென்பது.
வத்துவித்தியாபதி - சிற்பநூன் முப்பத்திரண்டி லொன்று.
வத்தூரம்-பொன்னூங்கண்ணி.
வத்தேக்கு - கொம்மட்டி, வத்தகங்கிச்சாயமரம்.
வத்தேந்தி - கதவு நிலைக்குமேல் வைக்குஞ் சுவர்தாங்கி
வத்தை - ஒரு மரத்தோணி, சோற்றி.
வத்தைவெட்டு சோற்றிவெட்டு.
வநசதர்ப்பன் - பிரமன்.
வநசந்தகம் - அகில், தேவதாரம்.
வநசந்திரிகை - மல்லிகை
வநசம்பகம் - காட்டுச்சண்பகம்.
வநசன் - பிரமன்.
வநச்சாகம் - காட்டாடு.
வநஜாசநன் - பிரமன்.
வநஜாசனை - திருமகள்.
வநஜீரம் - காட்டுச்சீரகம்.
வநஜை - இலக்குமி.
வநஜநாபி - திருமால்.
வநதேநு - காட்டுப்பசு.
வனமல்லிகை - காட்டுமல்லிகை.
வநமிருகம் - காட்டுமிருகம்.
வந்தனமாலை - வாயிலிற் கட்டுந்தோரணம்.
வந்தனம் - அட்டாங்கமாகப் பணிதல், பணிதல், முகம், வினயம்.
வந்தனித்தல் - வந்தித்தல்.
வந்தனை - ஆராதனை, வணங்கல்.
வந்தி ஏணி, மலடி, வந்தியென்னேவல், வருத்தம், வாராவந்தி, ஒரிருடி, ஜநகமஹா ராஜனுடைய யாகசாலையிலே இவரை அஷ்டவக்ரன் வென்றான்.
வந்திகட்டுதல்-கட்டாயம் பண்ணுதல்.
வந்திகன் - கவிஞர், புகழ்வோர், மங்கலப்பாடகர்.
வந்தித்தல்-பங்கம்பாழை, புகழ்தல், வணங்கல்.
வந்தித்திற்போர்-புகழ்ந்துபாடுவோர்.
வந்திபாடம் - புகழ்ந்து பாடிய பாட்டு.
வந்திபோடுதல் - கட்டாயமாய்ப் பொறுப்பித்தல்.
வந்தியர்-புகழ்வோர், மங்கலம், பாடகர், மலடிகள்.
வந்தியாபுத்திரன் - மலடிமகன்.
வந்தியிறத்தல் - கட்டாயத்திற் கிறத்தல்.
வந்தியை - மலடி.
வந்திவாங்குதல் - கட்டாயமாய் வாங்குதல்.
வந்து காற்று.
வந்தை - பெறமை, மலடி.
வந்த்ரம் - கல்யாணம்.
வந்த்ரன் - பூசித்தற்குரியவன்.
வபனம் - சக்கிலம், மழித்தல், முண்டிதம், விதைத்தானியம்.
வபிலன் - பிதா.
வபு - உடல். வபு வபுசு ரப்ஸரசங்யை, இவள் நாரதரேவலால் துர்வாசமுனிவருடைய தவத்தை யழிக்க யத்தனித்தபோது, அவரால் சபிக்கப்பட்டுப்பறவையாய்ப்பிறந்தாள், தர்மபக்ஷிகளைப் பெற்றவள் இவளே.
வபுஷ்டை - காசிராஜன் மகள், மூன்றாம் ஜநமேஜயன் மனைவி.
வபுஷ்மந்தன்-பிரியவிரதன் புத்திரரில் ஒருவன், இவன்பங்குக்குச் சான்மலித்தீவுவந்தது, இவன்புதல்வரெழுவர்.
வபை - வயிற்றுநாபிக்குள் வெண்டுகில் போன்ற புரையாகிய நிணம்.
வப்பிரம் - ஈயம்.
வப்பு - இடைவேற்று.
வப்ரீ - புற்று.
வமநம் - சத்திபண்ணல்.
வமநீ - அட்டை, பருத்தி.
வமம் - வமநம்.
வமி - அக்கினி, தூர்த்தன், வாந்தி.

வமிசபரம்பரை - வமிசக்கிரமம்.
வமிசம் } சந்ததி, சுற்றம்.
வம்சம் }
வம்படித்தல் - சரசம்பண்ணல், தீங்கு செய்தல், தீதுபேசுதல், நிந்தித்தல்.
வம்பமாக்கள் - புதியமாக்கள்.
வம்பம் - சாலங்கபாஷாணம்.
வம்பலர் - அயலோர், புதியோர்.
வம்பல் - திசை.
வம்பளத்தல் - பொருந்தாதபேச்சுப்பேசுதல்.
வம்பன் - சோரபுத்திரன், துட்டன்.
வம்பி-சருவண்டு, சோரபுத்ரி, துட்டை
வம்பு - சயிறு, அசப்பியம், சண்டை, தீச்செயல், தீச்சொல், நிலையின்மை புதுமை, மிடா, முலைக்கச்சு, வாசனை, வீம்பு.
வம்புக்காய்-பருவந்தப்பி காய்க்குங்காய்.
வம்புக்காரன் - வம்பன்.
வம்புத்தனம் - நேரின்மை, மடிப்பு.
வம்புப்பாளை - பருவந்தப்பிவரும்பாளை
வம்புபிறப்பு- சோரஸ்திரியிடத்திற்பிற[த்தல்
வம்புப்பேச்சு-தூஷணவார்த்தை
வம்புவழக்கு - வீண்வியாச்சியம்.
வயகுண்டம் - சவிழ்தும்பை.
வயக்கம் - பிரபை.
வயக்குதல் - வசக்குதல்.
வயங்கல் - ஒளிசெய்தல், நடத்தல்.
வயசு - வயது, காலபம்.
வயசுப்பிள்ளை - வாலிபப்பிள்ளை, வாலி[பன்.
வயணம் - வகை.
வயதரம் - கடுக்காய்.
வயது - ஆயுசு, யௌவனம்.
வயதுவம் - முதிர்வயது.
வயதெர்ரி - திப்பிலி.
வயத்தன் - அடிமை.
வயந்தம் - வசந்தம்.
வயப்படுதல் - வசப்படுதல்.
வயப்படை - வெற்றிப்படை.
வயக்கொடி - வெற்றிக்கொடி.
வயப்புலி } சிங்கம்.
வயப்போத்து }
வயமா - குதிரை, சிங்கம், புலி, யானை.
வயம் - ஆடு, இரும்பு, குதிரை, நீர், பறவைவசம், வலி, வெற்றி.
வயலூர் - பாண்டிநாட்டிலுள்ள ஒரூர் இது வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனால் பிரமதாயமாகக் கொடுக்கப்பட்டது, இது திருத்தங்காலுக்குக் கிழக்கேயுள்ளது.
வயல் - கழனி, மருதநிலம், வெளி.
வயல்நெட்டி - ஒருநெட்டி.
வயல்மாதளை - ஒருமாதளை.
வயல்மெருகு - ஒருமெருகு.
வயவரி - புலி.
வயவர் - படைவீரர்.
வயவன் - கரிக்குருவி, காதலன், தலைவன், திண்ணியன், வலியன், வீரன்.
வயவாள் - வெற்றிவாள்.
வயவீரர் - வெற்றிவீரர்.
வயவு - ஆசை, கருப்பம்.
வயவை - வழி.
வயிளை - பசளை.
வயற்கல் - வெள்ளைச்சுக்கான்கல்.
வயற்கொடிக்கி - ஒருகொடிக்கி.
வயற்சேவியன் - ஒருபாம்பு.
வயற்சார்பு - மருதநிலம்
வயற்கன்னி - பொரிப்புண்டு.
வயற்செம்பை - ஒருசெம்பை.
வயற்றுத்தி - ஒருதுத்தி.
வயனம் - வயணம்.
வயணிலம் - மருதநிலம்.
வயன்கட்டு - வசன்கட்டு.
வயா - ஆசை, கருப்பநோ, கருப்பம், கருப்பவருத்தம், சோர்வு, நடுக்கம், மசக்கை.
வயாப்பண்டம் - கருப்பவதி விரும்பிய [பொருள்.
வயாமது - சிந்தில்.
வயாவு - வயா.
வயாவுயிர்த்தல்-கருவீனல், வருத்தந்தீர்[தல்.
வயானம் - பறவை.
வயாணன் - வலியன்.
வயிக்கிராந்தம் - குமுதபாஷாணம்.
வயிடூரியம் - வைடூரியம்.
வயித்தியம் - வைத்தியம்.
வயிந்தவம் - வைந்தவம்.
வயிசாணி - பெருநெருஞ்சில்.
வயிரங்கி - அவக்கிற்றிரிகாய் தலைக்குமோர்கருவி.
வயிரஞ்சாதித்தல் - பகைசாதித்தல்.
வயிரத்தனம் - வன்குணம்.
வயிரப்படை - வச்சிராயுதம்.
வயிரப்படையோன் - இந்திரன்.
வயிரப்பொடி - வயிரமணி.

வயிரமணி-ஒருவகைப்பொன்மணி, வச்சிரம்.
வயிரமுடிச்சேவை-வயிரமுடிதரிசநம்.
வயிரமுத்து - வயிரித்தமுத்து.
வயிரம்-கூர்மை,சலஞ்சாதித்தல், சினம், தண்டாயுதம், திருவோணம், பூணுக்கட்டுவது, மரவயிரம்,வச்சிரமணி, வச்சிராயுதம், வாளியின்தகடு.
வயிரவகுருசந்தானம் - வைரவமார்க்கக் குருபரம்பரை.
வயிரவசாந்தி-வயிரவருக்குச் செய்யுஞ்
வயிரவம் - பயம், பைரவம். [சாந்தி.
வயிரவல்லி - பிரண்டை.
வயிரவளை - நரிப்பயறு.
வயிரவன் - ஒருகடவுன், சிறகீரை, வயிரவக்கீரை.
வயிரவாள் - குலிசம்.
வயிரவி - துர்க்கை, பைரவி.
வயிரவூசி - முத்துத்துளைக்குமூசி.
வயிரவேர் - சாயவேர்.
வயிராகம் } வைராக்கியம்.
வயிராக்கியம் }
வயிராவி - ஒருவகைவிரதி, வயிரமனமுடையோன். [ன்.
வயிரி - வல்லூறு, வன்னெஞ்சுடையவ
வயிரித்தல் - வயிரமாதல், வலுத்தல்.
வயிரிப்பு - வயிரம், வலிப்பு.
வயிரியம் மயிர்ச்சிலை.
வயிரியர் - கூத்தர், பாணர்.
வயிர் - ஊதுகொம்பு.
வயிறு - உதரம், கருப்பப்பை.
வயிறுகழித்தல் - பேதியாதல்.
வயிறுசாத்துதல் - பசித்தல்.
வயிறுதாரி - வயிற்றுமாரி.
வயிறுபிடித்தல் - வயிறுநோதல்.
வயிறுபேதித்தல் - வயிறுகழிதல்.
வயிறுப்புதல் - வயிறூதுதல்.
வயிறுவளர்த்தல் - வயிற்றூண் மாத்திரம் பெற்றுப் பிழைத்திருத்தல்.
வயிறுவாய்த்தல் - கருப்பமாதல்.
வயிறுவிடுதல் - வயிறுகழிதல்.
வயிற்றுக்கடுப்பு - ஒருநோய்.
வயிற்றுக்கழிச்சல் - வயிற்றுப்போக்கு.
வயிற்றுக்கனப்பு - கொழுப்பினால் வயிறூதல், தொந்திப்பு, புசிப்பினால் வயிறுவிம்மிதல்.
வயிற்றுக்காய்ச்சல் - பசி.
வயிற்றுக்கிருமி - வயிற்றுட்புழு.
வயிற்றுக்குத்து - வயிற்றிலுண்டாகுங்
வயிற்றுக்கொதி - பசி. [குத்து.
வயிற்றுச்சுரப்பு - வயிற்றுக்கனப்பு.
வயிற்றுப்படிப்பு - உதரபோஷணார்த்தம், படித்தல்.
வயிற்றுநோய் - வயிற்றுவலி.
வயிற்றுப்பாதி-சீவனத்தேடித் திரிதல்.
வயிற்றுப்பறப்புசீவனத்தேடுமலைச்சல்
வயிற்றுப்பாடு - உட்புறம். [வியம்.
வயிற்றுப்பிழைப்பு - உணவுதேடுதல், சீ
வயிற்றுப்புகைச்சல் - வயிற்றுட்புகைத
வயிற்றுப்பொருமல் - வயிறூதல். [ல்.
வயிற்றுப்போக்கு - உவாந்திப் பிராந்தி.
வயிற்றுமாரி - பேருணன்.
வயிற்றுவலி - வயிற்றுநோவு
வயிற்றுளைவு - ஒருநோய்.
வயிற்றெரிச்சல் - பொறாமை.
வயிற்றெரிவு - ஒருநோய்.
வயிற்றைப்பொறுத்தல் - உண்ணுதகுறைத்தல்.
வயிற்றைவலித்தல் - குடர்வலிகொள்ள
வயினதேயவாகனன் - திருமால். [ல்.
வயினதேயன் - கருடன்.
வயினம் - பறவை.
வயின் - இடம்,எழனுருபு (உ-ம்) அவர்வயிற்செல்வாய், வயிறு, வீடு.
வயுநம் - ஞானம், தேவாலயம்.
வயேகடம் மரமஞ்சள்.
வயோதிகம் - விருத்தாப்பியம்.
வயோதிகர் - கிழவர்.
வயோவங்கம் - ஈயம். [ன்.
வயோவிருத்தன் - வயதினாற்பெரியவ
வரகவி - தேவவருள்பெற்றுப்பாடும் பு
வரகு - ஒருதானியம். [லவன்.
வரகுணபாண்டியன் - சேரமான்பெருமாணயனார் காலத்தில் மதுரையில் அரசுசெய்த பாண்டியன்.
வரகுந்திரி - வகுரிவிலோர்வகை.
வரக்காட்டல் } வரவிடுதல்.
வரக்காட்டுதல் }
வரக்கிருது - இந்திரன்.
வரங்கொடுத்தல் - வரமருள்தல்.
வரச்சந்தனம் - ஒருசந்தனம்.
வரடம்-அன்னம்,ஒருபுழு, மாட்டை, மூல்
வரடி - அன்னப்பேடை. [லை.
வரட்சி - வரள்வு.

வரட்சுண்டி - ஒருசெடி.
வரணசி - வாரணசி.
வரணம் - ஒட்டகம்,சூழ்தல்,நியமித்தல், பால்,மதில்,மறைத்தல்,மாவிலிங்கு.
வரணை-காசிக்கருகே ப்ரவஹிக்கும் ஒரு சிறுநதி.
வரண்டகம்-உண்டை, சுவர், முகப்பரு, யானைமேற்றவிசு.
வரண்டம் - சாலை, தூண்டிற்கயிறு, புற்குவியல், முகப்பரு
வரண்டாலு - ஆமணக்கு.
வரண்டியம் - பேராமுட்டி.
வரண்மாடு - கடாரிமாடு.
வரதகம்-அனுக்கிரகக்குறிப்பாக இதயத்திற்குச்சமீபமாய்க் கையுறவித்தல்.
வரதம் - ஈதல்.
வரதனு - அழகு.
வரதன்-அரன்,அரி,அருகன், உபகாரி, வரமருளத்தக்கோன்.
வரதானம் - விரும்பினவரங்களைக்கொடுத்தல்.
வரதாரு - தேக்குமரம்.
வரதுங்கபாண்டியன் - பிரமோத்தர காண்டத்தைத் தமிழிற்பாடினவர், இவர் அதிவீரராமபாண்டியனுக்குத் தமையனார்.
வரதை - கன்னி, விதர்ப்பதேசத்தி லுற்பத்தியாகிக்கோதாவிரியிற் கலக்கும் ஒருநதி.
வரத்து - வருகை, வருமானம்.
வரநதி - கங்கை.
வரநதிச்சடையோன் - சிவபிரான்.
வரந்தருவார் - வில்லிபுத்தூ ராழ்வார்க்குப் புதல்வர், இவர் தமது தந்தையிடத்தே பாடங்கேட்டு வரும்போது, ஒருநாள் தந்தைசொன்ன பொருளைவிடுத்து தாமாக வொன்றைக் கற்பித்துரைத்தனர், அதுகண்ட வில்லிபுத்தூரர்சினங்கொண்டு தம்வீட்டினின்றும் இவரை யோட்டிவிட்டனர். அன்று முதல் அவர் வேறொரு ஆசிரியரையடுத்து கல்விகற்று வல்லவராகித் தமது தந்தையாருக்குப் புலப்படாமல் நெடுநாள் மறைந்தொழுகி வருவாராயினர். தந்தையார் பாரதம் பாடி அரங்கேற்றுங்காலத்தில் இவர் வேடமாறி அந்தச்சபையிற் சென்றிருந்தார், வில்லிபுத்தூரர் நூலை அரங்கேற்றத் தொடங்கி "ஆக்குமாறயனும்" என்னும் பாடலைக் காப்பாக வெடுத்தோதி, அதன்பொருளை விரித்துரைத்தனர், அந்தச் சபையிலிருந்தவர்கள் வில்லிபுத்தூரரை நோக்கி எமது வினவுக்கு உத்தரங்கூறி, பிறகு உமது நூலை அரங்கேற்றக் கடவீர் என, வில்லிபுத்தூரர் அவர்களை நோக்கி, உமது வினயாதென்றனர், அவர்கள், உமது நூலுக்கு முதநூல் வியாசபாரதமன்றோ, அதில்விநாயக வணக்கஞ் செய்து நூல் ஆரம்பித்திருக்க. நீர் அவ்வாறுசெய்யாமல்பொதுவாகத் தெய்வ வணக்கங் கூறியது என்ன வென்றார்கள், அப்பொழுது வரந்தருவார் எழுந்து, இந்தச் சபையில் பலவகைச்சமயவாதிகளுங் கூடியிருக்கும்பொதுவாதலால் அவரெல்லார்க்கும் ஒப்பக்கூறியது மற்றை விநாயகவணக்கம் கவி தம் அகத்துக் கூறிவிட்டே இதுகூறினர் என்றார், அதுகண்ட வில்லிபுத்தூரர் மகிழ்ந்து அச்ச மொழிந்தனராயினும் அது கூறினன் யாவனென்று அதிசயித்திருந்தார்.

சபையார் வரந்தருவாரைநோக்கி, வில்லிபுத்தூரர் மனத்தால் விநாயக வணக்கஞ் செய்தது உமக்கெப்படி புலப்பட்ட தென்றார்கள், அதற்கு விடையாக வரந்தருவார்.

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்னநாள், ஏடாக மாமேரு வெற்பாகவங் கூரெழுத்தாணி தன், கோடாகவெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

என்னுங் காப்பைப்பாடி இதுவே அவர்கூறிய காப்பென்பது யான் முன்னமே அறிந்திருக்கிறேன்யான் அவர்க்குப் புதல்வன் என்றார். அது கேட்டுச் சபையார் வாயடங்குதலும் வில்லிபுத்தூரரும்மனக்களிப்புடனே நூலை அரங்கேற்றினர். அது முடிந்தபின்பு வில்லிபுத்தூரர் தம் புதல்வனையே அதற்குச் சிறப்புப்பாயிரம்

செய்தவென்றேவி அவ்வாறேஅவர் செய்யக்கண்டு மனமகிழ்ந்து அவ ரைத் தழுவிக்கொண்டார் என்பது கர்ணபரம்பரை அச்சிறப்புப்பாயிரம் இவரே செய்தார் என்பது "அவன் மகன் வரந்தருவா னிப்பதிகஞ் செப் பினனே" என்னும்பாடலாலுணர்க. இதில் தம்மைப் படர்க்கையாகக் கூறி யது வடநூல் வழக்கு.
வரந்தருவான் - வில்லிபுத்தூரான்.
வரபலம் - தென்னமரம்.
வரப்பார்த்தல் - வரவுகாத்தல்.
வரப்பிரசாதம் - தேவவருட்கொடை.
வரப்பிரதானம் - நன்கொடை.
வரப்பிரதை - அகத்தியன்மனையாள்.
வரப்பு - எல்லை, வரம்பு.
வரப்புக்கடா - நண்டு.
வரப்புன் - வயல்.
வரம்-அடைக்கலாங்குருவி, ஆசீர்வாதம் எறம்பு,கையிட்டுக்கொள்ளல்,குழல், தேவவீகை,நவநிதியிலொன்று,மஞ் சள், மேன்மை, விருப்பம்.
வரம்பழிதல் - ஒழுங்குகெடுதல்.
வரம்பிகத்தல் - அளவுகடத்தல்.
வரம்பிலாற்றலுடைமை - கடவுளெண் குணத்தொன்று.
வரம்பிலின்புடைமை - கடவுளெண்கு ணத்தொன்று.
வரம்பிறத்தல் - ஒழுங்குதப்புதல்.
வரம்பு - அணை, எல்லை, ஒழுங்கு, வழி.
வரம்புகட்டுதல் - அணைகட்டுதல்,எல்லை கட்டுதல், முடித்தல்.
வரம்புபண்ணல் - சரிப்படுத்தல்.
வரயிதன் - கணவன், தந்தை.
வரயோகம் - சுபயோகத்தொன்று.
வரருசி - ஓர்வடமொழிப்புலவன்,பாணி கியாகரணத்துக்கு வியாக்கியாநஞ் செய்த வோரிருடி, இவருக்குக் காத் யாயகர் என்கொரு பெயருமுண்டு.
வரர் - மேலோர், வானோர்.
வரலக்ஷமிவிரதம் - ஆவணி மாசத்துச் சுக்கிலபக்ஷத்துச் சுக்கிரவாரத்திலே லக்ஷமிதேவியைக் குறித்து அநுஷ் டிக்குமோர் விரதம் இதனால் பெண் கள், புத்திர பௌத்திர விருத்தியும் சகல சம்பத்தும் அடையப்பெறுவர் என்பது நூற்றுணிபு.
வரலாறு - ஒழுங்கு, மூலம்.
வரலாற்றுவஞ்சி - ஒருபிரபந்தம், அது குலமுறையிற் பிறப்பு முதலிய மேம் பாட்டின் பல சிறப்பையுங் கீர்த்தி யையும் வஞ்சிப்பாவாற் கூறுவது.
வரல் - வருதல்.
வரல்வாறு - வரலாறு.
வரவண்ணினி - இலச்குமி, ஓர்நிறம், தவசி, கற்புடையாள், சரஸ்வதி, பெண், மஞ்சள்.
வரவர - மேலும்மேலும், வழிபாடு.
வரவரச்சுருட்டி - ஒரு தேவதாசி.
வரவிடுதல் - அனுப்புதல்.
வரவிருத்தன் - சிவபிரான்.
வரவு - வருகை.
வரவுகாத்தல்-வருதலைக்காத்திருத்தல்.
வரவை - விளையுட்பாத்தி.
வரனரை - ஒருசெடி.
வரன்தல் - காய்தல்.
வரன் - கணவன், சந்யாசிகளிலோர் பேதம்,சிவன், தமையன், மருமகன்.
வராகனிடை - ஒன்பது பணவிடை கொண்டநிறை.
வரன்முறை - ஊழ், வரலாறு.
வரன்றல் - கொழித்தல்.
வராககர்ணன் - ஒருயக்ஷன்.
வராககர்ணி - அசுவகந்தி.
வராகபுடம் ஐம்பதெருவைத்தெரிக்கும் புடம்.
வராகபுராணம் - விஷ்ணுவின்வாயிற்கா வலானராகிய ஜயவிஜயர்என்னுமிரு வரும்ஒருகாலத்தில் வைகுண்டலோ கப்ரவேசஞ் செய்யவந்த ஒரு முனி வரைத் தடைசெய்தமையால் சாப மடைந்து, பூமியிலே காசிபருக்குத் திதியினிடத்துப் புதல்வராகப் பிறந் து இரணியாக்ஷன் இரண்யகசிபு என ப் பெயர்பெற்றதும், இவ்விருவரி லே இரணியகசிபு மூன்றுலகத்தை யும்வென்றதும், இரணியாக்ஷன் நே ரேசுவர்க்கத்துக்குப்போய்த் தேவர்க ளைவென்றதும் தேவர்கள் வராகரூப மாயிருந்த விஷ்ணுவைவேண்ட, அ வர் அந்தஇரணியாக்ஷனைக்கொன்றது ம், திதியென்பவளுக்கும்விஷ்ணுவுக் கும்நடந்த யுத்தத்திலே திதிதோற்ற தும்,விஷ்ணுவானவர் வராகவுருவை

நீக்கிக்கொண்டதும் ஆகிய விஷயங்க ளெல்லாவற்றையும் உணர்த்துவதா கிய ஒருபெரியநூல். இது இருபத்து நாலாயிரங் கிரந்தமுடையது.

வராகமிகிரர்-ஒரு ஜோதிஷ சாஸ்திரி, இவர் கலியுகம் மூவாயிரத் தறுநூற் றில் இருந்தவர், அதாவது இற்றைக் குஆயிரத்துநானூறு வருஷங்களுக்கு முன்னே யிருந்தவர், இவர்செய்த நூல்கள் ப்ருஹத்ஸம்ஹிதையும் ப்ரு ஹத் ஜாதகமுமாம்.

வாய்போடுதல் - வாயிட்டுக்கேட்டல்.
வாய்ப்படுதல் - உரிசிப்படுதல்.
வாய்ப்பன் - ஒரு பண்ணிகாரம்.
வாய்ப்பனசட்டி - ஒருபணிகாரச்சட்டி
வாய்ப்பாடம் - ஏடுபாராமற் சொல்லும் பாடம்.
வாய்ப்பிரசங்கம் - வாயாற்பேசும் பிரசங்கம்.
வாய்ப்பிறப்பு - வாய்மொழி.
வாய்ப்பு - சித்தி, சிறப்பு, தகுதி, நயம், பேறு, வளமை.
வாய்ப்புண் - வாய்க்கிரந்தி.
வாய்ப்புள் - நிமித்தம்.
வாய்ப்பூட்டு - அடைப்பு.
வாய்மட்டம் - வாய்வளையம்.
வாய்மண்போடுதல் - கொடுமைசெய்தல்.
வாய்மதம் - வாய்க்கொழுப்பு.
வாய்முத்தம் - பல்லு.
வாய்மூடுதல் - வாய்பொத்தல்.
வாய்மூத்தகுடி - வாய்ப்பேச்சினலெவரையு மடக்கிவருங்குடி.
வாய்மூத்தவன் - முந்திப்பேசுவோன்.
வாய்மை - மெய் அதுசாத்துவிதகுணத்தொன்று, சொல், வலி.
வாய்மொழி - வாயினற்சொல்வது.
வாய்மோசம் - பேச்சுமோசம்.
வாய்வடம் - குதிரைவாய்க்கயிறு.
வாய்வழங்கல் - உண்டல், பேசல்.

வாய்வளையம் - யாதொன்றின் வாயில் வைக்கும் வளையம்.
வாய்விசேடம் - வாக்குச்சுத்தியால்வருவது.
வாய்விடல் - பேசல்.
வாய்விடாச்சாதி - மிருகம்.
வாய்விடுதல் - வாய்விடல்பேசத்தொடங்கல்.
வாய்விலங்கம் } ஒருமருந்து.
வாய்விளங்கம் }
வாய்வெட்டு - பறைவெட்டு.
வாய்வெருதல் - அயர்ச்சியில்வாய்குளிறுதல்.
வாய்வைத்தல்-கடித்தல், கேட்டல், புசித்தல்.
வாரகம் - குதிரை, குதிரைநடை.
வாரகி - கடல், சத்துரு, தவத்தி.
வாரகிரம்-சிப்பு, பேன், போர்க்குதிரை, வடவாமுகம்.
வாரகீரன் - சுமைகாரன், மைத்துனன்.
வாரக்கம் - நெல்வட்டிக்குக்கொடுக்கும் பணம்.
வாரக்குடி - நிலம்பயிரிட்டுப் பங்குபெறுங்குடி.
வாரக்குடிச்சி - வாரக்குடிப்பெண்.
வாரங்கம் - ஆயுதப்பிடி, புட்பொது.
வாரசுகாமம் - ஆட்சி, உறுதி.
வாரசுந்தரி - வேசி.
வாரசேவை - வேசிகூட்டம்.
வாரடம் - வயல்.
வாரடித்தல் - நீர்கிரவியோடுதல்.
வாரணசி - வாரணாசி, காசி.
வாரணபுசை - வாழை.
வாரணம் - உன்மத்தம், கடல், கவசம், காத்தல், கேடகம், கோழி, சங்கு, சட்டை, தடை, பன்றி, மாவிலங்கை, யானை, விடுதல்.
வாரணவல்லபை - வாழை.
வாரணவச்சி } காசி. வாரணை, வரணை
வாரணாசி } அசி என இருநதிகள் கூடி பிரவகித்தலால் இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று.
வாரணாவதம்-பிரயாகை, இது துரியோதனன்பாண்டவர்களை இருத்திக்கொல்லும்பொருட்டு அரக்குமாளிகை யமைத்த இடம். இது பாரத யுத்தகாலத்தில் கௌரவசேனைக்கு ஒருபாசறையாகவு மிருந்தது.
வாரணை } தடுத்தல்.
வாரணையம் }

வாரத்தண்டு - கறிமுல்லை.
வாரநாரி - வேசி.
வாரபலம்-வாரத்தாலுண்டாகும் பயன்.
வாரபுசை - வாழை.
வாரப்படுதல் - உருக்கங்கொள்ளுதல்.
வாரப்பாடு - உருக்கம்.
வாரமுக்யை - வேசி.
வாரம்-அன்பு,உரிமை,ஏழுகிழமை கொண்டது, கடல், கரை, சமயம், சிறவரம்பு, சுரிதகம், தடை, திரள், திரை, நாடகவகை பத்திலொன்று, நாள், பக்கபாதம், பங்கு, பஞ்சாங்கத்திலொன்று, பாத்திரம், மலைச்சார்பு, வாயில்.
வாரல் - அள்ளுதல் நிலைமுதலிய வாருதல், கொள்ளையிடல், கோலுதல், தடவுதல், நீளல், மயிர்கோதல், முகத்தல், வடிதல், வாரலென்னேவல்.
வாரவது - வேசி.
வாரவாணம் - பஞ்சுபெய்து தைத்தமெய்ப்பை, மார்க்கவசம்.
வாரவாணி - குயிலுவன், நியாயாதிபதி, வருடம், வேசை, விறலி.
வாரவாரம் - கவசம்.
வாரவிலாசினி - வேசை.
வாரச்செலவு - வாரவிரயம்.
வாரஸ்திரீ - வேசை.
வாராகம் ஒருகற்பம்,ஒருபுராணம், இது கற்பாதிமாநங்களும்பிரவுங்கூறுவது, இது இருபத்து நாலாயிரங் கிரந்த முடையது.
வாராஹம் - ஒருதீர்த்தம்.
வாராகி - ஒருகிழங்கு, சத்தமாதர்களி லொருத்தி, பூமி. பெண்பன்றி.
வாராங்கனை - வேசி.
வாராசனம் - நீர்க்குடம்.
வாரணசி - காசி.
வாரணசேயன் - காசியிற்பிறந்தவன்.
வாராதிபன் - கிழமைக்கதிபன்.
வாராஸ்திரீ - வேசை.
வாராநிதி - சமுத்திரம்.
வாராவதி - பாலம்.
வாராவந்தி - கட்டாயமாய்வந்தது.
வாராவரத்து - அநீதமாய்வருதல்.
வாராவாரி - மிகுதி.
வாராவிருந்து - கல்விருந்து,வருதற்கரியவிருந்து.
வாராதனை-வரவழைத்தல்இதபிள்ளைக் கவியுறுப்புப் பத்திலொன்று.
வாரி இசைக்குழல், கடல்,கதவு,சரச்சுவதி,சீப்பு, தானியம், சிறைநீர்,நீர்,மடை,மதில்,மதிற்சுற்று,மிகுதி,யானை கட்டுங்கயிறு, யானைக்கொட்டம், யானைபடுகுழி, வழி,வாயில்,வாரியென்னேவல், விளைவு, வெள்ளம்.
வாரிகிருமி - அட்டை.
வாரிக்காய்ச்சல் - கோதாரிக்காய்ச்சல்.
வாரிசம் - உப்பு, சங்கு, தாமரை.
வாரிசரம் - மீன்.
வாரிசன் - பிரமன், திருமால்.
வாரிசாசநன் - பிரமன்.
வாரிசாசதி இலக்குமி, சரசுவதி.
வாரிசாக்ஷன் - திருமால்.
வாரிசாக்ஷி-தாமரை மலர்போலுங் கண்ணுடையவள்.
வாரிசாதம் - தாமரை.
வாரிசாதை - இலக்குமி.
வாரிசாமரம் - நீர்ப்பாசி.
வாரிசோத்பவன் - பிரமன்.
வாரிடுதல் - இழிதல், கீழ்மக்கள்.
வாரிஷதம் - கடல், நாகலோகம்.
வாரிஷதன் - வருணன்.
வாரிதம் - தடை, மேகம்.
வாரிதி - கடல்.
வாரிதித்தண்டு - பவளம்.
வாரிதிநஞ்சு - அக்கினிக்கட்டி.
வாரிதிநாதம் - சங்கு.
வாரிதிவித்து - கடலுரை.
வாரித்தல் - ஆணையிடல், தடுத்தல்.
வாரித்திரம் - ஓலைக்குடை, சாதகப்புள், பக்கான்.
வாரிநாதம் - கடல், பாதலம், முகில்.
வாரிநாதன் - வருணன்.
வாரிநிதி - கடல்.
வாரிபர்ணி - வள்ளைக்கீரை.
வாரிப்பிரவாகம் - நீர்ப்பெருக்கு, மலையருவி.
வாரிப்பிரசாதன் - தேற்று.
வாரிமசி - முகில்.
வாரியுற்பவம் - தாமரை.
வாரிரசிதம் - வெள்ளிமணல்.
வாரிரதம் - தெப்பம்.
வாரிராசி - கடல்.
வாரிருஹம் - தாமரை.

வாரிவனநாதன் - சிவபெருமான்.
வாரீவாகம் - மேகம்.
வாரீசம் - கடல், தாமரை.
வாரீடம் - யானை.
வாருகம்-ஆற்றுத்தும்மட்டி, வெள்ளரி.
வாருகோல் - துடைப்பம்.
வாருடம் - ஆசந்தி.
வாருணம் - அட்டாதச வுபபுராணத்தொன்று, கடல், மாவிலக்கு, மேகம், மேற்கு, சலம்.
வாருணி-அகத்தியன், ஆட்டாங்கொடி, கள், காய்ச்சிவடித்த மது, சதயநாள், மேற்குமத்தியத்திக்கு அதிதேவதை.
வாருணிவல்லபன் - வருணன்.
வாருண்டகம் } எண்காற் புள், கண்பீழை, குருப்பி.
வாருண்டம் }
வாருதல்-கவர்தல், கொழித்தல், கொள்ளல், திருடல், வரன்றல், வாரல்.
வாருதி - நவசாரம், வாரிதி.
வாருல்லியம் - விருத்தி.
வாரூடம் - பகடை.
வாரூணி-அகத்தியன், பட்டாகி. [ம்.
வாரை-காத்தண்டு, திராந்தி, மரவுத்திர
வாரைபிட்டகம் - உத்திரம். [தல்.
வாரொலிகூர்தல் - நீண்டு ஒலித்தகூர்
வார்-கச்சு, தோல்வார், நீர், நீளம், நுண்மை, நேர்மை, புயல், வாரென்னேவல்.
வார்கடை - வார்த்துமிஞ்சினது.
வார்கொண்ட முலையம்மை - மேலைத்திருக்காட்டுப் பள்ளியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வார்க்கயிறு - தோற்கயிறு.
வார்க்குதல் - உலோக முதலியவற்றையுருக்கி விட்டுருவ முதலிய வுண்டு பண்ணல், பெய்தல்.
வார்க்கோலபுரம் - தோயமாபுரம்.
வார்ச்சியாநீயம் உபநிடதமுப்பத்திரண்டினொன்று.
வார்தல்-உயர்ச்சி, ஒழுகல், தெரிதல், நீளல், வாருதல்.
வார்த்தகம்-கிழத்தன்மை, கிழவர்குழு.
வர்த்தகமை - விருத்தியுரை.
வார்த்தசாகி - கற்றுழை.
வார்த்தம் - சுகம், பதர்.
வார்த்தரம் - நீர்.
வார்த்தலம் - கெட்டநாள்.
வார்த்தல் - வார்க்குதல்.
வார்த்தவம் - இருது.
வார்த்தாகம் - கத்தரிக்காய், கத்தரிச்செடி.
வார்த்தாகி - சிறுவழுதலை [டி.
வார்த்தாயனன் } ஓலைச்செய்திகள் கொடு போகுவோன், தூதன்.
வார்த்தாவகன் }
வார்த்திகம்-கிழத்தன்மை, கிழவர்குழு, மார்க்கசடப் பிராமணத் தொன்று அது நான்கு மாத்திரையோர் கலையாகக்கொண்டது.
வார்த்திகன் - தூதன், வைசியன். தக்ஷிணாமூர்த்தி, கிழவன்.
வார்த்தை - செய்தி, வசனம்.
வார்த்தைத்தொழிலோர் - பூவைசியர்.
வார்த்தைநாணயம் - பேச்சுறுதி.
வார்த்தைபோடுதல் - பேசுதல், பேச்சுநிச்சயம்பண்ணுதல்.
வார்த்தைப்பாடு - பேச்சுநிச்சயம்.
வார்த்தையெடுத்தல் - பேச்சுத் தொடங்கல்.
வார்நாமச்சீட்டு - ஏற்றுமதிச்சீட்டு.
வார்ப்பு - வார்த்தல்.
வார்ப்புவேலை - உருக்கிவத்தர் வேலை.
வார்மை - நன்னடை.
வார்வாரணம் - மார்க்கவசம்.
வாலகம் - கடையம், மோதிரம், வால்.
வாலகருப்பிணி - கன்னிகருப்பிணி, முதற்சினைப்பசு.
வாலகிருமி - பேரன்.
வாலகில்லியர்-அறுபதினாயிரம்ரிஷிகள் இவர்கள் பிரமனது மாநச புத்திரர்களுள் ஒருவராகிய கிருதுவின் புத்திரர்கள். இவர் அறுபதின்மர், பெருந்தவ முடையோர், இவர்கள் அங்குஷ்டப் பிரமாணமா புள்ள தேகமுடையவர்கள், இவர்கள் எப்போதும் சூரியரதத்தைச் சூழ்ந்து திரிவர்.
வாலசந்திரன் - இளம்பிறை.
வாலசந்நியாசி-இளமையிற்றுறந்தவன்.
வாலசரம்-உரியாதேசத்திலோரூர், ஒருநெல்.
வாலசுப்பிரமணியன் - முருகக்கடவுள்.
வாலசூரணம் - ஒருமருந்து.
வாலசூரியன் - இளவாதித்தன்.
வாலஞானம் - இளமையில்ஞானம்.
வாலதத்துவம் - யௌவனசத்தி.

வாலதந்திரம் - மருத்துவநூல்.
வாலதி - யானைவால், வால்.
வாலநாயகம் - சிறபிள்ளையதிகாரம்.
வாலபத்திரம் - கதிரம், கருங்காலி.
வாலபுட்டி - முல்லை.
வாலமாலம் - அரிதாரம்.
வாலமுர்த்தையன் முருகப்பிரான். [யிர்.
வாலம்-கந்தைத்துணி, தலைமயிர், வால்ம
வாலயக்கியோபவீதம்-பிள்ளைப்பூணூல்
வாலரசம்-சாதிலிங்கத்தில்வடித்தரசம்.
வாலராசன் - வைடூரியம்.
வாலவதனயன் - அபரசன்.
வாலவம் - புலிக்கரணம்.
வாலவயசு } இளவயது
வாலவயது }
வாலவாயசம் } வைடூரியம்.
வாலவாயம் }
வாலவாயம் - இளம்பிராயம்.
வாலவியசனம் - கவரிமயிர் விசிறி.
வாலறிவன் - கடவுள், மெய்யறிவுடையோன்.
வாலறிவு - பேரறிவு.
வாலன் - வாலிபன்.
வாலாசம் - பின்வாரி.
வாலாதி - பந்தயக்குதிரை.
வாலாதித்தன் - உதயகாலசூரியன்.
வாலாமை - அசுத்தம், மகளிர்சூதகம்.
வாலாம்பிகை - பார்வதி. திருநெய்த்தானத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.
வாலாயம் - வைடூரியம், வழக்கம்.
வாலான் - ஒருநெல்.
வாலி-கிட்கிந்தைமன்னன், சுக்கிரீவனுக்குத்தமையன், அங்கதனுக்குத்தந்தை, இவன்மனைவி தாரை, இவன் சுக்கிரீவன் வேண்டுகோளின்படி இராமரால் கொல்லப்பட்டவன் இவன்இறந்தபிறகு தாரை சுக்கிரீவன் மனைவியானாள், பலதேவன்.
வாளிகை - மணல்.
வாலிசம் - தலையணை.
வாலிசன்-அறிவீனன், இளவயதுடையோன்.
வாலிகை - இளம்பெண்.
வாலிது - தூயது.
வாலிபம் } பாலியம்.
வாலியம் }
வாலியன் - இளவயதுடையோன்.
வாலிசர் - வாலிபர்.
வாலீசுவரர்-குரங்கணில் முட்டத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வாலு-சாணை, பசுப்புட்டம், பிரவாளம்.
வாலுகக்குன்று - மணற்குன்று.
வாலுகசந்தகை - கங்கை.
வாலுகபிரபை-ஏழ்நரக வட்டத்தொன்று அது சுடுமண்ணிலம்.
வாலுகம் - வெண்மணல், மணல்.
வாலுகர் - மடையர்.
வாலுகை - குப்பி.
வாலுங்கி - கக்கரி, வாலுளுவையரிசி.
வாலுவசாத்திரம் } மடைநூல்.
வாலுவநூல் }
வாலுவர் - மடையர்.
வாலுளுவை - ஒருமருந்து.
வாலூசம் - நஞ்சு.
வாலேபம் } கழுதை.
வாலேயம் }
வாலை-இளமை, ஒருசத்தி, சுத்தம்; இரவகம் வடிக்கும் பாத்திரம், பன்னிருவயதிற் பெண், பெண்.
வாலைமெழுகு - ஒருமருந்து, ஒருமீன்.
வாலோபவீதம் - பிள்ளைப்பூணூல்.
வால்-இளமை, சுத்தம், தோகை, மிகுதி, வெண்மை.
வால்மிளகு - ஒரு வாசனைச்சரக்கு.
வால்மீகபலம் - எறுபிச்சை.
வால்மீகம்- இந்திரதநுஸ்ஸு, வால்மீகராமாயணம்.
வால்மீன் - வால்நட்சத்திரம்.
வால்மீகி-வடமொழியிலே இராமாயணம் செய்த மஹாபண்டிதர், இவர் ஜாதியிலே பிராமணராகியும், கிராதர் தொழிலே மேற்கொண்டு காட்டிலேயிருந்துவழிப்போக்கர்களை அழைத்து அவர்கள் பொருளைக் கவர்ந்தொழுகும் நாளில், நாரதர் கண்டு ஞானோபதேசம் பண்ணி நல்வழியி லொழுகச் செய்தார், பிறகு இவர் மஹா தவசிரேஷ்டராகி, ராமாயணத்தைச்செய்து முடித்தார், இந்த இராமாயணத்தை வால்மீகி ராமாயணமென்று கூறுவர், ஸ்ரீராமர் சீதாபிராட்டியைக் காட்டுக் கனுப்பின

காலத்தில், பிராட்டியையும் புத்திரர்களாகிய குசலவர்களையும் ஆதரித்தவர் இவரே, இவர் தேகாபிமானமற்று கடுந்தவம் புரிந்திருந்தபோது, இவர் மீது புற்றுவளர்ந்து நெடுங்காலஞ் சென்றபிறகு அந்தப் புற்றிலிருந்து வெளிப்பட்டதனால் இவர்க்கு வான்மீகி யென்னும் பெயர் வழங்கலாயிற்று. இவரை வருணன் புத்திரர் என்றுங் கூறுவர், வருணனுக்குப் பிரசேதஸ் என்னும் பெயருண்மையால், இவரை பிராசேதசர் என்றுங் கூறுவர்.

வால்லவேயம் - எருது.

வால்வெள்ளி - ஒருநட்சத்திரம்.

வாவயம் - துளசி.

வாவரியுரி - கிளியூறற்பட்டை.

வாவல் - கடத்தல், நசை, வெளவால்.

வாவி - குளம்.

வாவிப்பாய்தல் - தாவிப்பாய்தல்.

வாவிமலே - கிட்கிந்தை.

வாவாசம் - குதிரையின் வாய்வார்.

வாவுதல் - கடத்தல், பாய்தல்.

வாழசம் - குந்துருக்கம்.

வாழப்புளப்பி - முல்லை.

வாழவந்த நாயகியம்மை-திருவாஞ்சியத்திலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

வாழவைத்தல் - வாழ்வித்தல்.

வாழாக்கோடி - விவாகமற்றிருப்பவள்.

வாழாத்திப்போளம் - ஒருவிதபோளம்.

வாழி-வாழ்த்து,இடைச்சொல் வாழிய.

வாழித்தல் - மதர்த்துண்டாதல்.

வாழிப்பு - மதர்ப்பு.

வாழிய-முன்னிலையசைச்சொல்(உ-ம்) காணிய வாழிய மலைச்சாரல், வாழ்க வென்னேவல்.

வாழுதல் - வாழ்தல்.

வாழைக்குட்டி - வாழைக்கன்று.

வாழைப்பழத்தி - எருமைநாக்கி.

வாழைமட்டம் - வாழைக்கன்று.

வாழையடிவாழை -வாழைக்கீழ்வாழை.

வாழ்க்கை ஊர்,சந்தோஷநிலை, சீவிப்பு, செல்வம், மருதநிலத்தூர், மனைவி.

வாழ்க்கைத்துணை - இல்லாள்.

வாழ்க்கைப்படுதல்-இல்லாச்சிரமமாதல்.

வாழ்தல்-சீவித்தல்,செல்வத்தோடிருத்தல், வாழ்வு.

வாழ்த்தல் - துதித்தல்.

வாழ்த்து - ஆசீர்வாதம், ஒருவருக்குநன்மைவருவதாக வெனக்கூறுவது, ஓரலங்காரம், சுபவசனம், துதி, மங்களாசரணை மூன்றினொன்று, வாழ்த்தென்னேவல்.

வாழ்த்துதல் - ஆசீர்வாதம் பண்ணல், சோபனம்பாடுதல், துதித்தல்.

வாழ்த்துரை - வாழ்த்து.

வாழ்த்துவிலக்கு - ஓரலங்காரம், அது வாழ்த்தி மறுப்பது.

வாழ்த்தொலி - வாழ்த்துதலினொலி.

வாழ்கன் - வாழ்வோன்.

வாழ்நாள் - சீவியகாலம்.

வாழ்வாடிச்சி } சுமங்கலி
வாழ்வாட்டி }

வாழ்வாளன் - வாழ்வுடையோன்.

வாழ்வித்தல் - வாழச்செய்தல்.

வாழ்விழத்தல்-அமங்கலியாதல், தாரமிழத்தல்.

வாழ்விழந்தவள் - அமங்கலி.

வாழ்வு - முறைமை, வாழ்தல்.

வாளமலை - சக்கரவாளகிரி.

வாளப்புலி - சக்ரவாகப்பறவை.

வாளம் - சக்கரவாளகிரி, சக்கரவாளப்புள், வளைவு, வாள்.

வாளகம் - வெட்டிவேர்.

வாளரம் - ஓரரம்.

வாளவரை - ஓரவரை.

வாளா - வீண்.

வாளாண்மை - வாட்போர்.

வாளாமை - கேளாமை, பயனின்மை, மௌனம்.

வாளி-அம்பு, மாதர் காதணியினொன்று, வட்டமாயோடல்.

வாளிச்சிமேனி - மாணிக்கம்.

வாளீரல் - வளைத்தவீரல்.

வாளுழவர் - படைவீரர்.

வாளேந்தி - துர்க்கை.

வாளை - ஒருவகைமீன்.

வாளைகடியன் - விஷமுள்ள ஒரு கடற்பாம்பு.

வாள்-அரிவாள், ஈர்வாள், ஒளி, பட்டயம்.

வாள்கைக்கொண்டாள் - துர்க்கை.

வான்மீன் - ஒருமீன்.
வான்வரிக்கொடுங்காய்-வளைந்தவரிகளையுடைய வெள்ளரிக்காய்.
வாறன்-கப்பலினோர்கயிறு,வருகிறான்
வாறு - பெலன், வாய்ப்பு.
வாற்கம் } மரவுரி
வாற்கலம் }
வாற்சின்னம்-அகப்பை, ஒருசின்னம்.
வாற்கோதும்பை - ஒருவிததானியம்.
வாற்சகம் } கன்றுக்கூட்டம், பசுக்கூட்டம்.
வாற்சலம் }
வாற்சல்லியம் - உருக்கம்.
வாற்சிபுத்திரன் - வாற்சோபுத்திரன்.
வாற்சியாயன் - ஒருமுனிவன்.
வாற்சோபுத்திரன் - அம்பட்டன்.
வானகப்புதைச்சி - கதண்டு.
வானகம் - ஆகாயம், தேவலோகம், மஞ்சாடி.
வானக்கல் - காக்கைக்கல்.
வானசாத்திரம் - வான சோதிகளின் போக்குவரவறியுஞ் சாத்திரம்.
வானசோதி - ஆகாயப்பிரபாரூபிகள்.
வானட்சத்திரம் - வால்வெள்ளி.
வானதி - ஆகாயகங்கை.
வானதிசூடி - சிவபிரான்.
வானதிச்சடையன் - சிவபெருமான்.
வானநாடு-பொன்னுங்காணி, தேவலோகம்.
வானநாட்டிறை-தேவேந்திரன்.
வானபத்தி - பூவாதுகாய்க்குமரம்.
வானபத்தியம்-பலாசு, பூவாமற்காய்க்குமரம்.
வானப்பிரத்தம்-இலுப்பை, நாலாச்சிரமத்தொன்று, அது வனத்திற்றவஞ் செய்தல், பலாசு.
வானப்பிரத்தன்-வனத்திற் றவஞ்செய்யு மூன்றுமாச்சிரமி.
வானப்பிரத்தி - காட்டிற் றவஞ்செய்பவன், பூவாது காய்க்குமரம்.
வானப்பிரியை - மரம்.
வானமிருகம் - கத்தூரி எலும்பு.
வானம்-அத்திபாரம், ஆகாயம், உலர்ச்சி, உலர்ந்தகாய், உலர்ந்தது, உலர்ந்த மரம், கோபுரத்திலோருறுப்பு, சிவனோடிருத்தல், சுவரறை, நீர்த்திரை, புற்பாய், போதல், மழை, வாசனை.
வானம்பாடி - ஒருபறவை.
வானம்பார்த்தகதிர் - கொப்புத்தாழாக்கதிர்.
வானம்பார்த்தபயிர் - மழையால் விளையும் பயிர்.
வானம்பார்த்தபிறவி - விருட்சயோனி.
வானரகதி - நரகதியைந்திலொன்று.
வானரக்கொடியோன் - அருச்சுனன்.
வானரநேயம் - பழமுண்ணிப்பாலை.
வானரபதி - சுக்கிரீவன்.
வானரப்பகை - நண்டு.
வானரம் - குரங்கு.
வானவருலகு - தேவலோகம்.
வானரவிரோதி }
வானரவைரி } நண்டு.
வானரசத்துரு }
வானராகரம் - மரம்.
வானராராதி - நண்டு.
வானரேந்திரன்-அனுமான்,சுக்கிரீவன்
வானலம் - துளசி.
வானவரம்பன் - சேரன்.
வானவருறையுள்-தேவர்கோயில்,தேவலோகம்.
வானவர் - தேவர்.
வானவர்கோன் - இந்திரன்.
வானவர்பகைவர் - அசுரர்.
வானவர்முதவன் - சேரன், பிரமன்.
வானவல்லி - மின்னற்கொடி.
வானவன்-இந்திரன், சேரன், பிரமன்.
வானவில் - இந்திரவில்.
வானசி - கார்போகரிசி.
வானி - ஓமம், கூடாரம், படை, மேற்கட்டி, விருதுக்கொடி.
வானியம் - வனம்.
வானிற்கெற்பத்தி - முத்துச்சிப்பி.
வானீரம் - நீர்ப்பிறப்பு, நீர்வஞ்சி.
வானுலகம் - தேவலோகம்.
வானேறு - இடி.
வானோர்பிரான் }
வானோர்தலைவன் } இந்திரன்.
வானோர்பெருமான் }
வானோர் - தேவர்கள்.
வானோர்கணம் - நவகணத்தொன்று.
வானோர்கோமான் - இந்திரன்.
வானோர்பகைஞர் - அசுரர்.
வானோர்மாற்றலர் - அசுரர், இராக்கதர்.
வானோர்முதவன் - சேரன், பிரமன்.
வானோர்வரம் - வானவாசிகள், பேறு, அது இலகு, குக்குமம், அட்சயம், பிரகாசம், இவைமுறையேகனமின்மை,

கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கம்.

வான்-அமுதம், ஆகாயம், எதிர்காலவினையெச்சவிடைச்சொல், புயல், பெருமை, மகத்துவம், மழை, முகில்.

வான்கொடி - ஆகாயவல்லி.

வான்கோழி - கோழியிலோர்வகை.

வான்பயிர் - மரப்பயிர்.

வான்பிரயோசனம் மரப்பிரயோசனம்.

வான்மிகம் - இந்திரவில், புற்று.

வான்மிளகு - ஒருமிளகு.

வான்மீகம் - குங்குமப்பூ.

வான்மீகி - ஒருமுனி.

வான்மீகியார் - முதற்சங்கத்திலிருந்த ஒரு சிறந்த தமிழ்ப்புலவர், இவர் செய்தநூலை நச்சினார்க்கினியர் தலையாயவோத்தென்பர். கடைச்சங்கப்புலவருளொருவர், இவரால் பாடப்பட்ட பாடலொன்று புறநானூற்றிலுளது.

வான்மீன் - நட்சத்திரம்.

வி

வி-அதிகம் அறிவு இன்மை நிச்சயம் பிரிவு மூகாந்திரம் வித்தியாசம் வெறுப்பு இவற்றைக் காட்டுமோருபசருக்கம், ஆகாயம், கண், காற்று, திசை.

விககம்-அம்பு, ஒருபட்சி, கிரகம், சந்திரன், சூரியன், முகில்.

விகங்கதம் - இலந்தை.

விகங்கபதி } கருடன்.
விகங்கராஜன் }

விகங்ககேதநன் } திருமால், பிரமன்.
விகங்கத்துவசன் }

விகங்கமை - காத்தண்டு.

விகங்கம்-அம்பு, அன்னம், சந்திரன், சூரியன், பறவை, முகில்.

விகசதா - மூக்கிரட்டை.

விகசம்-கேது, மஞ்சாடி, மலர்தல், மலர்ந்தது, மிச்சப்பண்டம், மொட்டை

விகசனம் - புன்னகை, மலர்ச்சி.

விகசன் - சந்திரன்.

விகசாதன்-திருமாலியலூணன். [ர்தல்.

விகசிதம்-புனமுருக்கு, மந்தகாசம், மல

விகசித்தல் - மலர்தல்.

விகசுவரம் - விசாலம்.

விகடகவி-பகிடிக்காரன், பகிடிப்பாட்டு.

விகடசக்கரன் - கச்சித்திருவேகம் பத்தாலய விநாயகன்.

விகடபுத்தி-கருக்குச்சுட்டடான் புத்தி.

விகடம்-அழகானது. உன்மத்தம், தொந்தரை, பெரியது, வேறுபாடு.

விகடவிநாயகர் - விஷ்ணு சக்கரத்தைக் கவ்வின கபாலம் அதனை நெகிழ்க்காதாகவிஷ்ணுவிநாயகரைவேண்ட, அவர் விகடக் கூத்தாடுவையாயின் அதனை வாங்கித் தருவோமெனக் கூறி, அப்படியாயின பிறகு சக்கரத்தை வாங்கித் தந்தவர்.

விகடன் - சுமாலி புத்திரன்.

விகடி - கருக்குசுருட்டான ஆள்.

விகடிகை விநாடி.

விகணனம் - கடனிறுத்தல், கணித்தல், தியானித்தல்.

விகணிதம் - தீர்ப்பு.

விகண்டிதம் - பிரிவு, வேறுபாடு.

விகண்டித்தல் } ஆட்சேபித்தல், வேறுபடுதல். [யம்.
விகண்டிப்பு }

விகண்டை - தடெரண்ணம், வைராக்கி

விகதம்-இட்டமானது, இருளுதல், கடனிறுப்பு, சாவு.

விகதனம் -புகழ்ந்துரைத்தல்.

விகதி - தோழன்.

விகத்தனம்-அடித்தல், அவிழ்த்தல், இகழாவிகழ்ச்சி, உரோஞ்சுதல், புகழ்ந்துரைத்தல்.

விகத்தை - இகழாவிகழ்ச்சி, புகழ்ச்சி.

விகமம் - பிரிவு.

விகமனம் - துர்நடக்கை.

விகம் - வழியீற்றுப்பசுப்பால்.

விகம்பிதம் - நடுக்கம்.

விகாம் - இயைபின்மை, நோய், பிரிவு.

விகான் - காற்றுப்புசிப்போன், திருமா

விகாலம் - மிகப்பெரியது. [னி.

விகர்ணன் - அரியோதநன் தம்பி.

விகர்த்தனன் - சூரியன், பிதாவினதிகாரத்தை வலிதாகக் கவர்ந்தமகன்.

விகர்ப்பத்தம் - அடாதது.

விகர்மிகன் - விகன்மிகன்.

விகலபாணிகன் - கும்பினகையன்.

விகலபுத்தி - சபலபுத்தி.

விகலம் - கலக்கம், குறைபாடு, விகலை.
விகலாங்கம் - உறுப்புக்குறை.
விகலாங்கன் - குறையுறுப்புள்ளவன்.
விகலிதகேசம் - நெகிழ்ந்தகேசம்.
விகலிதம்-சிந்தல், நெகிழ்ந்தது, முடியப்பட்டது, வடிதல், விழுந்து போனது. [ன்.
விகலிதாங்கன் - தளர்ந்தசரீரமுடையவ
விகலை - காலநுட்பம், காலம், நாழிகை.
விகற்பக்காட்சி - பொருளின் பேதங்களைக் கண்டறியுங் காட்சி.
விகற்பத்தின் முடித்தல்-ஒருயுத்திஅது விளங்குதற் பொருட்டுப் பலவேறு பாடுகளின் சிறப்பு வாய்பாட்டான் முடித்தல்.
விகற்பயுத்தி - வேறுபாடானயுத்தி.
விகற்பம்-சந்தேகம், தவறு, பிழை, வேற்றுமை.
விகற்பித்தல் - வேறுபடுத்தல்.
விகற்பு - விகற்பம்.
விகனம் - கனமற்றது.
விகன்மிகன் - காரியவிசாரணைகாரன்.
விகன்னம் - எதிரிடை, கொலை, நீங்கு, பருத்தி கடைதறி,
விகன்னன் - செவிடன்.
விகாகம் - அமிழ்ந்தல், மூழ்கல்.
விகாசதம் - ஆகாயம், ஆடம்பரம், தனிமை, புன்னகை, மகிழ்தல், மலர்தல்.
விகாசதை-தனிமை, தோற்றம், விரிவு.
விகாசம்-விகாசதம், விரித்தல், மலர்ச்சி.
விகாசனம் - தனிமை, விரிவு, வெளிப்படுதல்.
விகாசை - நா.
விகாதம்-அழிவு, எதிர், தடை, விரோதம்
விகாதித்தல் - விரோதித்தல்.
விகாபதம் } கொடை.
விகாபிதம் }
விகாயசம் - பட்சி.
விகாய் - ஒருமரம்.
விகாரப்புணர்ச்சி - நிலைமொழியேனும் வருமொழியேனு மிவ்விருமொழியுமேனுந் தோன்றல் திரிதல் கெடுதலெனும் விகாரத்தோடு புணர்வது.
விகாரம்-அலைந்துதிரிதல், உலர்த்துதல், கவலை, காமக்கவலை, தன்மயம்தோன், நோய், பொழுதுபோக்கு, வருத்தம், வேற்றுமைப்படுதல், விளையாட்டு.
விகாரவுவமை உவமையைவிகாரப்படுத்தியுவமிப்பது (உ-ம்) முத்துக்கூர்த்தன்னமுறுவல்.
விகாரி - இருபத்திரண்டாவதுவருஷம் மோகி.
விகாரிதம் - மாறுபட்டது.
விகாரித்தல் - பேதித்தல், மோகித்தல்.
விகாலகம் } மைம்பல்.
விகாலம் }
விகாலிகம் - நாழிகையறியவைக்கு மில்லிக்குடம்.
விகானம் - துற்செய்தி, நிந்தை.
விகிசிரன் - சந்திரன்.
விகிதம் - சிநேகம், விகிர்தம்.
விகிதி - எதிர், நிந்தை, பாடல்.
விகிரணம் - சிதறுதல், விரிதல்.
விகிரம்-இறைத்தல், துண்டு, புட்பொருடு.
விகிருடம் - இழுக்கப்படுவது. [அ.
விகிருதம் - தலைமகடன் றலைவர்க்குத் தன்காதல் சொல்ல நாணித்தல்.
விகிருதி-அச்சம், கல்லிற்பிறந்தபொருள், கவலை, நோய், பயம், பொழுதுபோக்கு, மாறுதல், வருத்தம், விகிர்திவருஷம், விகுதி, வேறுபடுதல், ஜீமூதன்புத்திரன்.
விகிர்தம்-அங்கபங்கம், குறைவு, நோய், பொய், விதி, முறை, வெறுப்பு, வேறுபாடு.
விகிர்த்தி - இருபத்துநாலாவதாண்டு, வேறுபாடு.
விகீதம் - ஒவ்வாமை.
விகீதி - நிந்தை, விரோதம்.
விகீரணம் - எருக்கிலை.
விகீரியம் - இறைத்தல்.
விகுட்சி - இக்ஷ்வாகுராஜபுத்திரன்.
விகுணம் - குணமின்மை.
விகுணி - குணங்கெட்டது.
விகுதி-பகுபதவுறுப்பினொன்று, பிரகிருதிமாயை, விகாரம்.
விகுரம் - வென்னெருக்கு.
விகுர்வாணன் நிறைமனமுள்ளவன்.
விகுக்ஷி - குக்ஷிபுத்திரன், ககுஸ்த்தன் தந்தை.
விகூணகம் - கடைக்கண்பார்வை.
விகூணம் - வாக்குப்பார்வை.
விகூணிகை - மூக்கு.
விகேசம் - கூடம், மொட்டை.

விகேசிகை - சேர்வைச்சிலை,விக்கினத் தலைவன் விநாயகன்.
விகேடன் - வேதனைசெய்வோன்.
விகேடம் - தீங்கு.
விகேடனம்-அரைத்தல், தாக்கம், வாதித்தல்.
விகை - மோக்கம்.
விகோகன் - வருகாசுரபுத்திரன்.
விகோஷணம் - பிரசித்தம்.
விகோடம் - கடினம், துறந்தது.
விகௌதுகம் - பழமையானது.
விக்கம் - யானைக்கன்று.
விக்கல் - ஒருநோய், விக்குதல்.
விக்கியாதம் - கீர்த்தி, பிரசித்தம்.
விக்கியாதன் - பிரசித்தன்.
விக்கியாதி - விக்கியாதம்.
விக்கியாபனம் - அறிவிப்பு, விண்ணப்பம், வெளிப்படுதல்.
விக்கியானம் - கல்வி, விபரீதார்த்தம்.
விக்கியானி - கல்விமான்.
விக்கிரகம்-விசேஷயிடம், உடல், கருங்கல், சாயல்,மங்கு,போர்,விரிவு,விகுதி.
விக்கிரகாராதனை - சுரூபவணக்கம்.
விக்கிரசாவரம் - முதுகு.
விக்கிரம் - பதினொன்காவதாண்டு.
விக்கிரமசிங்கன் } விக்கிரமாதித்தன்.
விக்கிரமசேனன் }
விக்கிரமசோழன்-ஒருசோழன், இவன் மீது ஒருகோவை பாடப்பட்டுளது.
விக்கிரமம்-நடத்தல், பராக்கிரமம், மிகுபலம், வெற்றிமுறை, பிழைத்தல்.
விக்கிரமாணம் - போதல்.
விக்கிரமாதித்தன் } ஓரரசன். சந்திரசர்மன்என்னும்
விக்கிரமார்க்கன் }
பிராமணனுக்கு உச்சயினி புரத்தரசனாகிய சுருதகீர்த்தியினது புத்திரியிடத்துப் பிறந்த புத்திரன். இவன் கடுந்தவம் புரிந்து காளிதேவியின் அனுக்ரஹம் பெற்று அந்த அநுக்ரஹபலத்தால் எந்தக் காரியத்தையும் சாதிக்கத்தகுந்த ஆற்றலுடையவனானன், சாகசாங்கன் என்னும் சிறப்புப்பெயர் இவனுக்கு இக்காரணத்தால் உண்டானதேயாம். இவன்நெடுங்காலம் உச்சியினிபுரத்திலே பெரும் புகழோடு அரசுசெய்து இறுதியிலே சாலிவாகனனாலே கொல்லப்பட்டான். இவன் அரசுபுரியத்தொடங்கினகாலம் இற்றைக்கு ஏறக்குறையஆறுயிரம்வருடங்களுக்குமுன்னேயாம்.
விக்கிரமார்ச்சிதம்-வெற்றி.
விக்கிரமி - சிங்கம், வீரன்.
விக்கிரமோர்வசியம் - ஒரு ஸம்ஸ்கிருத நாடகம், இது காளிதாசனாற் செய்யப்பட்டது. இது புரூரவன் ஊர்வசிமேல் வைத்த காதற்சிறப்பை யெடுத்துக் கூறுவது.
விக்கிரயணம் } விற்றல்.
விக்கிரயம் }
விக்கிரயிகன் - விற்போன்.
விக்கிரயீ - விற்போன்.
விக்கிராந்தகன் - சிங்கம், வீரன்.
விக்கிராந்தம் - வீரம்.
விக்கிராந்தி-குதிரைநடை,பராக்கிரமம். வீரநடை, வீரம்.
விக்கிராயிகன் - விற்போன்.
விக்கிரேயம் - விற்கத்தக்கது.
விக்கிரோசனம் - இகழ்ச்சி.
விக்கிள் - விக்கல்.
விக்கினகாம் - தடுத்தல்.
விக்கினத்வம்ஸன் - விநாயகன்.
விக்கினநாசஸன் - பீடைதீர்ப்போன், விநாயகன்.
விக்கினம் - இடையூறு, தடை, தீமை.
விக்கினராசன் - விநாயகன்.
விக்கினவிநாசனன்-விக்கினநாசனன்.
விக்கினவிநாயகன் - விக்கினாரி.
விக்கினாபனம் - அறிக்கை.
விக்கினாரி }
விக்கினேசன் } விநாயகன், வினைதீர்ப்போன்.
விக்கினேசுவரன் }
விக்கினேச்சுவரன் }
விக்குதல் - விக்கல்.
விக்ஞாபனம் - விக்கியாபனம்.
விக்ஞானம் - விக்கியானம்.
விங்கம் - குதிரைக்குளம்பு.
விங்கனம்-கபடம்,களிப்பு,திரிவு,பேதம்.
விங்களித்தல் } குதுசெய்யல், கிலையற்றிருத்தல், பிரித்தல்,
விங்களிப்பு }
வித்தியாசப்படுத்தல்.
விசங்கடம் - சிங்கம்.
விசசம் - தாமரை.
விசசனம்-கொடுவாள்,கொலை,தண்டம்.
விசதம்-அழகு,சுத்தம்,கிருமலம், வெண்மை, வெளிப்படை,

விசத்துரு - அடம்பு.
விசபிலம் - சேறு.
விசபுட்பம் } தாமரை.
விசப்பிரசூனம் }
விசமபாதம் - அணுப்பு, ஒவ்வாமை.
விசமம் - சமமின்மை, வைராக்கியம்.
விசம் - தாமரைநூல்.
விசய - இருபத்தேழாவதாண்டு.
விசயகுஞ்சரம் - இராசகயம்.
விசயகேதநம் - வெற்றிக்கொடி.
விசயகோதண்டம் - வெற்றிவில்.
விசயசித்தி - வெற்றி.
விசயச்சந்தம் - எழுநூறுகோவை முத்துத் தாழ்வடம்.
விசயத்துவசம் - வெற்றிக்கொடி.
விசயநகரம் - ஒருபட்டினம்.
விசயநாதர் - திருவிசய மங்கையிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
விசலபேரி - வெற்றிமுரசு.
விசயப்பொறி - விற்பொறி.
விசயமத்தளம் - இரணபேரிகை.
விசயம்-அடைக்கலம், ஆராய்வு, ஐயம், சருக்கரை, சிவாகமமிருபத் தெட்டில் ஒன்று, சூரியமண்டலம், தேவவிமானம், வெற்றி.
விசயனம் - ஆராய்வு.
விசயன்-அருச்சுனன், கலிசகார்த்தன், திருமால், வாயில்காப்போன்.
விசயாரத்தம் - திருக்கைலைமலை.
விசயை - துர்க்கை, துர்க்கையேவல் செய்வாள், மூன்றும் எட்டாம் பதினைந்தாந்திதிகள்.
விசரம் - கூட்டம், கொலை.
விசர் - பைத்தியம்.
விசர்க்கம்-கொடை, தள்ளுதல், துறத்தல், தெட்சணாயனபாதை, நிறுத்தியுச்சரிப்பதற்கிடு மடையாளம், பிரவை, பிரிதல், போதல், மலங்கழித்தல், விடுதல்.
விசர்ச்சனம் - அனுப்புதல், நன்கொடை, விடுதல்.
விசர்ச்சிகை - இலக்குமி, சிரங்கு.
விசர்ச்சிதை - கூத்திஞோர்விகற்பம்.
விசர்ப்பம்-ஒருசிலந்தி, பரம்புதல்,பறத்தல்.
விசர்ப்பனம் - பரம்புதல்.

விசலம் - கஞ்சி, தளிர்.
விசலனம்-உறுதியின்மை, தற்புகழ்ச்சி.
விசலி - சிந்தில்.
விசலிதன் - சலநகுணமுள்ளவன்.
விசவல்லி - கீழ்காய் நெல்லி.
விசளை-சட்டி, நீற்றுப்பெட்டி கொண்ட அளவு.
விசனம்-அபாக்கியம், கலகம், துன்பம், தின்மாறுவஷியம், பாவம், பேராசை, விசிறி.
விசனனம் - பிறப்பு.
விசனுமனம் - யாகதோத்திரம்.
விசாகதத்தன்-முத்திராராக்ஷஸம் என்னும் நாடகம் செய்த மஹாகவி.
விசாகசம் - தோடை.
விசாகம் - அனிலநாள், வைகாசி.
விசாகலம் - ஓராச்சிரமம்.
விசாகன் - குமரன்.
விசாகை - வியாகம்.
விசாதி - நோய், புறசாதி, வேறுபட்ட சாதி.
விசாதிபேதம்-பேதமூன்றில் ஒன்றது தமாத்திற்குங் கல்லுக்குமுள்ள வித்தியாசம்.
விசாயம் - தூங்கல். [தியாசம்.
விசாரகன் - நியாயாதிபதி.
விசாரங்கம் - கீர்த்தி.
விசாரசர்மர் - சண்டேசுரநாயனார்.
விசாரசாகரம் - ஒரு வேதாந்தநூல்.
விசாரணம்-கொலை, தியானம், நிதானித்தல்.
விசாரணியம் - சாஸ்திரம். [த்தல்.
விசாரணை-ஆராய்ச்சி,மீமாஞ்சை,விசாரிப்பு.
விசாரதர் - சிறந்தோர், புலவர். [ரிப்பு.
விசாரபூ - கல்விச்சங்கம்.
விசாரம் - ஆராய்வு, ஆலோசனை, ஊருதல், கவலை, மரம், மீன், விவாதம்.
விசாரவகம் - கீர்த்தி.
விசாரவம்-கீர்த்தி, நம்பிக்கை, புத்தி.
விசாரி-கலக்கமுடையோன், வாயுத்திசை, விசாரியென்னேவல்.
விசாரிதம் - ஆலோசிக்கப்பட்டது.
விசாரிதன் - ஆலோசனைகாரன்.
விசாரித்தல் } ஆராய்தல், பராமரித்தல்.
விசாரிப்பு }
விசாலகுலம் - நல்வமிசம்.
விசாலதை-அகலம், பருமை, மேன்மை.
விசாலம்-அகலம், ஒருபட்சி, ஒருமான், கடம்பு, சிற்பநூன்முப்பத்திரண்டில்

ஒன்று, பெரியது, பேய்த்திமிட்டி. விரிவு. கிரிவிரசத்துக்கும் மிதிலைக்கும் இடையேயுள்ள நாடு.

விசாலன்-இக்ஷ்வாகு தம்பியாகிய நபகன் வமிசத்து, திருணபிந்தவின் புத்திரன் இவன் புத்திரன் ஹேமசந்திரன்.

விசாலாக்கன் } கருடன், சிவபிரான்.
விசாலாட்சன் }

விசாலாட்சி-விரிந்த கண்களை யுடையவள், பார்ப்பதி.

விசாலாக்ஷி-காசியி லெழுந்தருளியிருக்கும் தேவியார் பெயர், திருப்பைஞ்ஞீலியிலே கோயில்கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

விசாலித்தல் - விரிதல்.

விசாலிப்பு - விரிவு. [ணி.

விசாலை-சத்தபுரியிலொன்றாகிய உச்சி

விசானபூமி } மசானம், சுடுகாடு.
விசானம் }

விசி அலை, கட்டில், கட்டு, பறையிறுக்கும் வார்.

விசிகம் - அம்பு, புனர்நிலை.

விசிகப்பிரயோகம்-அஸ்திரப் பிரயோகம்.

விசிகாந்தம் - அம்புநுனி. [ம்.

விசிகிலம் - தவநம், மல்லிகை.

விசிகை-கச்சு, கருத்து, தெரு, பாரை, வைத்தியக்கிரகம்.

விசிஷ்டம் } மேன்மை.
விசிட்டம் }

விசிட்டாத்துவிதம்-ஒருபிரபந்தம், வைணவ மதம்.

விசிதம் - விபூதி. [ணவ மதம்.

விசிவிரு - நியாயாதிபதி, பங்காளி.

விசினை - வசித்துவம்.

விசித்தல் - கட்டல்.

விசித்தி-அழிவு, இழத்தல், எல்லை, கடுகு, தரிப்பு, பிரித்தல், விசுத்தி, வெட்டல்.

விசித்திரகம் - அதிசயம்.

விசித்திரதேகம் - முகில்.

விசித்திரதை - விசித்திரகம்.

விசித்திரம் - அதிசயம், எதிர்ப்பேச்சு, பலநிறம், பேரழகு, வேடிக்கை.

விசித்திரவீரியன் - சந்திரகுலத்தரசரிலொருவன். திருதராஷ்டிரன், பாண்டு என்னு மிருவருக்கும் தந்தை இவன் தந்தை சந்தநு. தாய் சத்யவதி, தமையன் சித்ராங்கதன்.

விசித்திரவேளாகொல்லி - கொல்லித்திறத்தில் ஒன்று.

விசித்திரன்-கநகவிஜயருடையநட்பாளனாகிய வேரரசன்.

விசித்திராங்கம்-அழகு, நன்னிறம், மயில்

விசியம் - கோயில்.

விசிப்பலகை - வாங்குப்பலகை.

விசிப்பு - கட்டி.

விசிமந்தம் - வேம்பு.

விசிரகந்தி - பொன்னரிதாரம்.

விசிரதை - தளர்ந்தகாலம்.

விசிரயம் - ஒதுக்கிடம், தாவரம்.

விசிரவசு புலஸ்தியன் புத்திரன், இவன் மனைவியர் நால்வர், த்ருணபிந்துவின் புத்திரியாகிய இளாவலை என்பவளிடத்தில் குபேரன் பிறந்தான், சுமாலிமகளாகிய கைகேசியிடத்தில், இராவணன் கும்பகர்ணன் விபீஷணன் என்னும் மூன்று புதல்வர் பிறந்தார்கள், இவள் தங்கையாகிய ராகையிடத்தில் கரன் தூஷணன் திரிசிரன் என்போர் பிறந்தார்கள், இவனை விசித்திரவாகு என்றுங் கூறுவர்.

விசிராமம்-இளைப்பாற்றி, தரிப்பு, மனவமைதி.

விசிருஷ்டன்-கம்ஸன் தம்பி. [மைதி.

விசிலம் - கஞ்சி.

விசிறி - ஒருசெடி, சிற்றாலவட்டம்.

விசிறுதல் - விசுக்கல், வீசுதல்.

விசினம் - பிரபை.

விசினி - தாமரைப்பூந்திரள்.

விசிஷ்டாத்வைதம் - இராமாநுஜ மதம் இது பிரமம் வேறு, ஆன்மா வேறு, ஆன்மாபிரமத்துக்குசரீரமாயிருந்து, பிரமத்தின் சந்நிதான விசேஷத்தால் ஞானம் கைகூடப்பெற்றுப் பிரபஞ்சத்தை முற்றத்துறந்து, பரமத்தின் மேல் பற்றுடையராய் வைகுண்டத்தை யடைந்து பிரமசாரூபம் பெற்று இன்புற்றிருத்தலே முத்தியென்று கூறுவது.

விசு } பதினைந்தாவதாண்டு.
விஷு }

விசுக்கிடுதல் - பிரியவீனப்படுதல், விதனப்படுதல்.

விசுக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.

விசுதம் - கறிப்புடோல்.

விசுத்தம் - சுத்தம், புத்தி, வணக்கம்,

விசுத்தி / விஸத்தி } அடிநாத்தானம் அது ஆரு தாரத்தொன்று ஐயம், சுத்தம், திருத்தம், தீர்தல், திகர்.

விசுபம் / விசுமம் } உடம்பு, உலகம், சடபதார்த்தம்.

விசுமிகினி - வேம்பு.

விசும்பு-ஆகாயம், திசை, தேவலோகம், மேகம், வீம்பு.

விசும்புதல் - அசட்டையாய்விலக்கல்.

விசும்புத்திசை - உச்சி.

விசுருதி - கீர்த்தி, பாய்தல்.

விசுவகந்தன்-பிருதன் புத்திரன். சாசுவதன், இந்தன், விசுவகன், அதிசாந்திரன் என்னும் பெயர்களும் இவனுக்குண்டு.

விசுவகந்தன் - பூமி.

விசுவகர்மஜை - சூரியன்மனைவி.

விசுவகர்மசுதா - குபேரன்மனைவி.

விசுவகர்மா-பிரபாசனுக்கு யோகசித்தியினிடத்துப்பிறந்தபுத்திரன், இவன் தேவகம்மியன்.

விசுவகர்மன் - தேவத்தச்சன்.

விசுவகன் - பிரமன்.

விசுவகந்தன்-அங்கிரசன் வமிசத்து ஒரக்கினி.

விசிவகன்மா - சூரியன், தேவதச்சன்.

விசுவகேது - அகிருத்தன்.

விசுவக்கிராசம்-உலகத்தை யுட்கொண்டிருத்தல்.

விசுவசகன் - விருத்தசர்மன் புத்திரன், கட்டுவாங்கன் தந்தை.

விசுவகோதிரு - இந்திரன், திருமால்.

விசுவங்கரம் - கண்.

விசுவசகை - பூமி.

விசுவசங்கிராந்தி - சூரியன் விசுவத்தினின்று அயலிராசிக்குப் போவது.

விசுவசனம் - நம்புதல்.

விசுவசித்து-ஒருவேள்வி. ஜயத்திரதன் புத்திரன், சேனசித்திக்குத் தந்தை.

விசுவதாரிணி - பூமி.

விசுவதினம் - இராப்பகனுழிகை சரியாயிருக்குநாள்.

விசுவதேவம்-தேவபூசை, பிதிர்பூசை.

விசுவதேவர் - திரயோதச தேவகணத்தொருவர்.

விசுவதேவர்கள்-சிரார்த்த காலத்திலே அர்ச்சிக்கப்படுகிற தேவதைகள், இவர்கள் வசுபந்தர், கிருதுதக்ஷர், காலகாமர், துர்விரோசநர், புரூரவாத்திரவர் எனப் பதின்மர்.

விசுவநாதர்-அகிலேசன், விசுவேசுரன் காசியிலேயுள்ள சந்திரசேகரசுவாமி.

விசுவநாதன் - சிவபிரான்.

விசுவநாள் - உத்திராடம்.

விசுவபதி / விசுவபுக்கு } அங்கிரசன் வமிசத்து ஒ ரக்கினி.

விசுவபேடகம் - வேர்க்கொம்பு.

விசுவபை - சந்திரன், சூரியன், தீ.

விசுவபோதன் - புத்தன்.

விசுவமதை - நிநாவேழிஞென்று.

விசுவம் - அதிவிடையம், உலகம், எல்லாம், பூமியின் சமரேகையுஞ் சூரியன்பாதையுஞ் சந்திக்குமிடம், ஒரு கிகண்டு, இது விசுவனாற் செய்யப்பட்டது.

விசுவம்பரம் - பிரபஞ்சாதாரம்.

விசுவம்பரன் - இந்திரன், விட்டுணு.

விசுவம்பராதிபன் - அரசன்.

விசுவம்பரை - பூமி.

விசுவம்பாரன் - இந்திரன், சிவபிரான், விஷ்ணு.

விசுவயு - காற்று.

விசுவராசன் - சுபாதிபதி.

விசுவரூபம் - பிரபஞ்சரூபம்.

விசுவரூபன்-திருமால். துவஷ்டாவுக்கு ரசனையிடத்துப்பிறந்த புத்திரன்.

விசுவரேதா - பிரமன்.

விசுவரோசனம் - ஒருகிழங்கு.

விசுவவராகம் - ஊர்ப்பன்றி.

விசுவன்-விசுவம் என்னும்கிகண்டுசெய் தவன்.

விசுவாசகன் - நம்பிக்கைவான்.

விசுவாசகாதகன்-விசுவாசத்தைக் கொலைப்போன்.

விசுவாசகாதம்-நம்பிக்கைக்கிரண்டகம்.

விசுவாசத்ரோஹி-நம்பிக்கைத்ரோஹி.

விசுவாசபங்கன் - விசுவாசகாதன்.

விசுவாசபத்தி - நல்விசுவாசம்.

விசுவாசபாதகம்- நம்பிக்கைத்துரோகம்.

விசுவாசபாதகன்-நம்பிக்கைத்துரோகி.

விசுவாசபாத்திரன் - நம்பத்தக்கவன்.

விசுவாசபூமி - நம்பத்தக்கது.

விசுவாசம்-உண்மை, நம்பிக்கை, பத்தி.

விசுவாசி - வேங்கை.

விசுவாசித்தல் - நம்புதல்.

விசுவாத்துமன் - கடவுள்.
விசுவாநரன்-சாண்டில்யமிசத்திற்பிறந்தவன். இவன் புத்திரன் வைசுவாநரன் என்னும் அக்கினி.
விசுவாமித்திரர்-புரூரவன் மூன்றாம்புத்திரனாகிய அமவசன் வமிசத்திற்பிறந்த காதிபுத்திரர், இவர் ஜாதியில் க்ஷத்ரியர், தனது தபோபலத்தால் பிராமணராயினர், தம்மைப் பிராமணராக அங்கீகாரஞ்செய்யாத வசிஷ்டர்மீது கோவங்கொண்டு அவருடையபுத்திரர் நூற்றுவரையும் சபித்துக் கொன்றுவிட்டார், அதனால் வசிஷ்டர் சவிக்காதிருந்தார்,திரிசங்குவுக்கு அந்தர சுவர்க்கம் கொடுத்தவரும் அரிச்சந்திரனைக் கொடிய பரீக்ஷையால் சத்தியவிரதன் என்னும் பெயரோடு விளங்கச் செய்தவரும் சகுந்தலைக்குத் தந்தையும் இவரே.
விசுவாமித்திரபிரியம் - தென்னமரம்.
விசுவாமித்திரப்புல் - ஒருபுல்.
விசுவாமித்திரன் - ஓரிருடி.
விசுவாமித்திரை - வைடூரியபர்வதத்திலுண்டாகி ப்ரவஹிக்கிற ஒருநதி.
விசுவாவசு இருபத்தொன்பதாவதாண்டு, ஒரு கந்தர்வராஜன், இவனுக்கு யாஜ்ஞவல்க்ய மஹருஷிதத் வோபதேசம் செய்தார்.
விசுவாசன் - ஒரு கந்தருவன்.
விசுவான்மா - பிரமன்.
விசுவேசன் } சிவபிரான்.
விசுவேசுவரன் }
விசுவை - தக்ஷப்ரஜாபதிமகள், தருமன் மனைவி, இவளிடத்திற்பிறந்த புதல்வர் விசுவதேவர்.
விசுவௌஷதம் - சுக்கு.
விசுளி - களா.
விசூசை - ஒருநோய்.
விசூரணம் - அக்கம்.
விசூரிதம் - குணப்படுதல்.
விசேடகம் - நெற்றித்திலகம்.
விசேடாலங்காரம் -ஓரலங்காரம் அது ஒப்புமையாட் பெரதுமை யுற்றிருந்தவிரண்டு பொருள்களுக்கொருகாரணத்தால் விசேஷந்தோன்றவுரைத்தல்.

விசேடனம் - அடைமொழி,குணத்தைவிளக்குவன, பகுத்தறிவு.
விசேஷதீட்சை - ஒருதீட்சை.
விசேஷம் - பிரதானம்.
விசேடம்-மேன்மை, வகை, விசேடாலங்காரம், விதம், வித்தியாசம்.
விசேடணம் - பண்பு.
விசேடவாக்கியம் - சிறப்புமொழி.
விசேடிதம் - உறுதிப்படுத்துவது.
விசேடித்தல் } விசேஷப்படுத்தல்.
விசேஷித்தல் }
விசேடியம் - அடையடுத்தபொருள்.
விசேடோத்தி-ஓரலங்காரம், அது காரணகாரியத்தையிணைத்துச்சொல்வது.
விசேட்டிதம் - தற்செய்கை, முயற்சி.
விசேதம்-அபாக்கியம், இடம், கலக்கடி, அக்கம், பிரிவு.
விசை-சீக்கிரம், தரம், பொறி, முறை, வலிக்கை, விசையென்னேவல்.
விசைகொள்ளல் - பெலன்கொள்ளல்.
விசைக்கம்பு } நெய்வார் கருவியில் ஒன்று.
விசைக்கால் }
விசைக்காற்று - செல்விசையினுண்டாகுங் காற்று.
விசைத்தடி - நெய்வார்கருவியினொன்று, பொறியினோர்தடி.
விசைத்தல் - வேகமுறல்.
விசையதண்டம் - சதுரங்கதானையை மோதிவென்ற வீரன்கதைத்தண்டு.
விசையம் - விசயம்.
விசையன் - அருச்சுனன்.
விசையேற்றுதல் - பொறியேற்றுதல், மூட்டிவிடுதல்.
விசையை - விசயை.
விசையனம் - ஆராய்வு.
விசோகம்-அசோகமரம்,சோகரஹிதம்.
விசோதனம் - சுத்திகரித்தல்.
விச்சதையன் - புல்லூரி.
விச்சநந்தா - வெள்னெருக்கு.
விச்சம் - தாமரை.
விச்சலம் - அம்பு.
விச்சல்லி - பேய்த்திமிட்டி.
விச்சாதரர் - வித்தியாதரர்.
விச்சாதி - வேறுசாதி.
விச்சிக்கோன் - கபிலரால் பாடப்பட்ட ஒரு சிற்றரசன், பாரியினது புத்திரிகளை மணத்திற் கொள்ளுகவென்று

கபிலர் வேண்டிய வழியும் உடன்படாது மறுத்தவன் இவனே.
விச்சித்திரம் - விற்பன்னம்.
விச்சிரமம் - ஓய்வு, மலங்கழித்தல்.
விச்சிராந்தம் - கடைக்கண்.
விச்சிராந்தி - ஓய்வு, ஒருதீர்த்தம்.
விச்சிராமம் - விச்சிரமம்.
விச்சிராவம் - கீர்த்தி.
விச்சிரானம் - கொடை.
விச்சிரானம் - பேதிமருந்து.
விச்சிரிப்பு - சிச்சிலுப்பான். [ரிதல்.
விச்சிரும்பணம் - பொழுதுபோக்கு, வி
விச்சிரும்பிதம் - அலர்ச்சி, பொழுது போக்கு, விருப்பம்.
விச்சிலுப்பை - விச்சிரிப்பு.
விச்சிறல் - கோரை.
விச்சின்னம் - வேறுக்கப்பட்டது.
விச்சு - வித்து.
விச்சுருதம் - ப்ரசித்தம்.
விச்சுருதி - புகழ்.
விச்சுவன் - பிரமன். [வன்.
விச்சுவகன்மா - தேவகம்மாளரிலொரு
விச்சுவகாசிபம் - சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
விச்சுவகேது - அநிருத்தன்.
விச்சுவங்கரம் - நேத்ரம்.
விச்சுவசாரம்-சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
விச்சுவதருமம் - சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
விச்சுவதாரிணி - பூமி.
விச்சுவநாதன் - உலகநாதன், அகிலநாதன், சிவபிரான்.
விச்சுவதேவர் - பிதிர்களிலோர்பிரிவு.
விச்சுவபோதம் - சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
விச்சுவம் - விஸ்வம்.
விச்சுவரேகை - வானவரை. [பார்.
விச்சுவர் - சிற்பர், வானோரிலோர்வகுப்
விச்சுவேசம்-சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
விச்சுளி-ஒருகுருவி, சுறுக்கன்,விவேகி.
விச்சுளியன் - விவேகி.
விச்சை - அறிவு, அறுதொழிலினொன்று, அதுவித்தை, தெருவெள்ளெருக்கு.
விச்சொரூபம் - விகாரவடிவம்.

விச்சோடு - சோடற்றது.
விஜயநகரம் கன்னடதேசராஜதானி இக்காலத்தும் இது ஆரியராஜனால் ஆளப்பட்டு வருகின்றது.
விஜயமாநகரம் - பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
விஜயன்-சுதேவன் புதல்வன், உருகன் தந்தை. (விஷ்ணு பரிசாருளொருவன்,அர்ஜுநன், அமவசுபிருகன்மாசுபுத்திரன், ஜயன் புத்திரன்.)
விஜயாசுவன்-பிருது சக்ரவர்த்திமகன், இவன் அந்தர்த்தாநன் எனவும் படுவன்.
விஞ்சுதல் - மிகுதல்.
விஞ்சை - கல்வி.
விஞ்சையரூர் - வித்தியாதரரூர்.
விஞ்சையர் - புலவர், வித்தியாதரர்.
விஞ்ஞை - ஞானம்.
விஞ்ஞ்ம் - அறிவு.
விஞ்ஞாதம் - அறிந்தது, அறிவு, பிரசித்தம்.
விஞ்ஞாத்தி - அறிவிப்பு.
விஞ்ஞாபனம் - அறிவித்தல்.
விஞ்ஞானகலர் - மூவகை ஆத்துமாக்களிலொருவர்.
விஞ்ஞானபாதன் - வியாசன்.
விஞ்ஞானமயகோசம் - பஞ்சகோசத்தொன்று அது ஞானேந்திரியமும் புத்தியும்.
விஞ்ஞானம்-அறிவு,வாத்தியம், வேலை.
விடகடி } விஷந்தீண்டல்.
விஷகடி
விடகன்-சுமாலிபுத்திரன்.
விடாரி - காண்டாமிருகக் கொம்பு, விடவைத்தியன்.
விடக்கு - ஊன்.
விடங்கம் - அழகு, ஆண்மை, கொடுங்கை, சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம், தகிற்கொடி, புழுக்கூடு, புறவுகட்குத் தூண்கண்மேற்செய்த கூட்டின் வரிசை, முகடு, வீதிக்கொடி.
விடங்கர் - சிறுவழி, தியாகராஜர்.
விடங்கொல்லி } ஒருபூண்டு.
விஷங்கொல்லி
விடசிருங்கம் } ஒருவண்டு.
விடகுங்கம்
விடகுசகம்-சகோரப்புள்.

விடசெந்து - விஷப்பிராணி.
விடதந்தகம் - பாம்பு.
விடதம் - அருசி, முகில்.
விடதாம் - பாம்பு, மேகம்.
விடதரன் - சிவபெருமான்.
விடதாரி } மருத்துவன், வைத்
விஷதாரி } தியன்.
விடதானம் - நவதானத்தொன்று.
விடத்தலை
விடத்தேரை } ஒருமரம்.
விடத்தேர்
விடத்துக்காசன் - கெருடபச்சை.
விடநீர் } சரீரத்தறுமோர் தோஷ
விஷநீர் } நீர்.
விடந்தை - ஒரூர்.
விடபகதி - தாககதியைந்தினொன்று.
விடபட்சணம் - நஞ்சுபுசித்தல்.
விடபதுவசன் - சிவபிரான்.
விடபபதி - சிவபெருமான்.
விடபம் - அலர்வு, இடபவிராசி, எருது, சிவனூர்தியுக்கொடியும், சிறுதுறு, தளிர், மரக்கொம்பு, விசாலம்.
விடபாரி - கிருட்டிணன்.
விடபி - ஒருமரம், மரப்பொது.
விடப்பு - கமர்.
விஷமசாகசம் - ஏக்கம்.
விஷமந்திரன் - குறவன்.
விடமம் } சமமின்மை, தொந்தரவு,
விஷமம் } வருத்தம்.
விஷமவிபாகம் - சரியற்றபங்கு.
விஷமாசனம் - அசிரணபோசனம்.
விஷமாட்சன் - சிவபிரான்.
விஷமாயுதன் - காமன்.
விஷமி - வன்மி.
விஷமுட்டி - காஞ்சிரமரம்.
விடமூங்கில் - ஒருமரம்.
விடமாக்கனி - எட்டிப்பழம்.
விடம் - அதிவிடையம், எத்து, காய்ச்சப்பு, தாமரைநூல், தேன், நஞ்சுநீர், பரஸ்திரீகமனம், பாஷாணம், மலை.
விஷம் - நஞ்சு, நீர், பாஷாணம்.
விடம்பனம் - உபத்திரவம்.
விடம்பு - கமர்.
விடயக்காட்சி - பஞ்சபொறிகளினுலறி [தல்.
விடயஞானம்-உலகஞானம்.
விடயபஞ்சகம் - கண்டுகேட்டுண்டுயிர்த்தற்றறிதல்.

விடயபருத்தியாகம் - அறத்தல், நீங்கல்.
விடயம் } அடைக்கலம், அறியப்படத்
விஷயம் } தக்கது, இருத்தல், உரியது, உலகப்பொருள், காணப்பட்டது, காரணம், சுக்கிலம், தேயம், நாயகன்.
விடயவாசனை - விஷயப்பற்று.
விடயாயி - அரசன், காமம், சிற்றின்பம், பதார்த்த மாத்திர முண்டென்று சொல்பவன், பொறி.
விடயி - பொருள்.
விடரவன் - பூனை.
விடரு - அதிவிடயம்.
விடருகம் - விடரவன்.
விடராசன் - கெருடபச்சை.
விடரோகம் - ஒருநோய்.
விடர் } கமர், காடு, தூர்த்தர், மலைப்
விடர்வு } பிளப்பு.
விடலம் - உள்ளி, குதிரை, நஞ்சு.
விடலி - கீழ்மக்கள், பூப்பதாரி மலடி.
விடலை - ஆண்மகன், இளவாண்பொது, திண்ணியன், பாலைநிலத் தலைவன், மணவாளன், முப்பதுவயதிற் குட்பட்டவன்.
விடல் - குற்றம், சாதல், விடுதல்.
விடவம் } அயனவரி.
விஷவம் }
விஷவாதகரப்பன் - ஒருகரப்பன்.
விடவிடெனல் - நடுக்கக்குறிப்பு.
விடவு - கமர்.
விடன் - தூர்த்தன், விடம்.
விடாச்சேரி - நீங்காவரவு.
விடாணம் } விலங்கின்கொம்பு.
விஷாணம் }
விடாணி-எருது, கொம்புள்ளது, யானை.
விடாதம் - இக்கட்டு, மனத்தளர்ச்சி.
விடாதவாகுபெயர்-கருவியின் பெயரே கருத்தாவைக்காட்டி நிற்பது (உ-ம்) குதிரையாலவ்வூர் கொள்ளை யிடப்பட்டது.
விடாதவாக்கச்சொல் - தன்செம்பொருளைவிடாது நின்றும் பிறபொருளையுந் தழுவிநிற்கு மாக்கச்சொல்.
விடாநோய் - தீராதநோய்.
விடாந்தகன் - சிவபெருமான்.
விடாப்பிடி-ஒருகண்டசீர், பிடித்தபிடி.
விடாப்பூட்டு - ஒப்பில்லாமை.

விடாமழை } ஓபாமழை, தினமழை.
விடாமாரி }
விடாயுதம் - பாம்பு.
விடாய் - ஆசை, சோர்வு, தாகம்.
விடாய்த்தல் - தாகமடைதல்.
விடாய்ப்பு - தாகம்.
விடாரகம் } பூனை.
விடாரகன் }
விடாரம் - பாம்பு,
விடாலகம் - பூனை, பொன்னரிதாரம்.
விடாலநியாயம் - மார்ஜாலநியாயம்
விடாலம் - கண்மணி, பூனை.
விஷானனம் - பாம்பு.
விஷானி - சதுரக்கள்ளி.
விடி - திரைச்சீலை,விடியென்னேவல்
விடிதல் - அனுகூலமாதல்,உதயமாதல்.
விடியல் - வைகறை, விடியற்காலம்
விடியற்றரம் - விடியற்காலம்.
விடிவு - அனுகூலப்பட்டது.
விடிவெள்ளி - வைகறை வெள்ளி
விடு - நீர்யானை, யானைமத்தகத்தினடு.
விடுகதை - தொடி.
விடுகாசு - பொடிக்காசு.
விடுகாலி - கட்டாமாடு, தூர்த்தன்.
விடுகை - விடுதல்.
விடுசரம் - ஊர்ப்பன்றி.
விடுசி - அம்பு
விடுதலை - இட்டம், தன்னிட்டம், நீக்குதல், மூடிவு, விடுந்தலைப்பு.
விடுதல்-அனுப்புதல், எரிதல், ஒழிதல், நீக்கல், விள்ளுதல்.
விடுதி - ஆறியிருத்தல், உத்தரவு, தங்குமிடம்.
விடுது - விழுது.
விடுதுறை - வாசித்து திறுத்துமிடம்.
விடுத்தம் - தடவை.
விடுத்தல் - அனுப்பல், தங்கல், தள்ளுதல், நடத்தல், பிரிதல்.
விடுந்தலைப்பு - தொய்யகம்,முன்ருனை
விடுபடை - அஸ்திரமுதலியன.
விடுபதி - மருமகன்.
விடுப்பு - ஆராயுங்குணம், பூராயம், வேடிக்கை.
விஷ்டவம் } விடவம்.
விடுவம் }
விடுவாய்ச்செய்தல் - அறுத்தல்.
விடுவித்தல் - விடுதலைசெய்யல், விரித்துரைத்தல்.
விடுசி - அம்பு.
விஷேபம் - திரிபு.
விடேலெனல் - அனுகரணவோசை.
விடை-இடபம், இடபவிராசி, உத்தரம் இது உரையிலக்கணமைந்தினென்று, எதிர்மொழி, எருது, குதிரை, கோழிப்பேடு, வருத்தம், வலிமை, விடுதல்.
விடைகாலெறிதல் - இனங்கன்று துள்ளிக்காலைஎறிதல்,கால்வீசியுதறுதல்.
விடைகொடுத்தல்-உத்திரவுகொடுத்தல்.
விடைகொள்ளல் - உத்திரவு பெறுதல் விடைபெறுதல்.
விடைக்கந்தம் - செம்மணத்தக்காளி.
விடைக்கொடி - இடபக்கொடி.
விடைகொடிபன் - சிவபிரான்.
விடைக்கோழி - விடை தரத்தப்பட்ட கோழிக்குஞ்சு.
விடைதல் - அபராதம்சொல்லுதல், கோபம், சினம், பிரிதல், பிளத்தல்.
விடைதரத்தல் - குஞ்சுகளை விடுதல்.
விடைத்துவசன் - சிவபெருமான்.
விடைத்தல் - சினக்குறிப்பு பெருங்கோபம்.
விடைபெறல் - உத்திரவுபெறல்.
விடைப்பு - அபராதம்.
விடையூர்தி } சிவபிரான்.
விடையேறி }
விடையோன் - சிவபிரான்.
விஷ்கம்பம் - நித்தியயோகத்தொன்று.
விட்கம்பம் - கதவின்றாழ், செயல், தடை, தூண், நித்தியயோகத்தொன்று, விசாரித்தல், விட்டம்
விட்சவம் - இருமல்.
விட்சி - ஒருமரம்.
விட்சேபசத்தி - ஒருசத்தி அது சுருங்கி விரியத்தக்கது.
விட்சேபணம்-அனுப்பல்,எறிதல்,சிதறல்.
விட்சேபம் - அனுப்பல்,உமிழ்தல்,எறிதல், ஒன்றைச்சொல்லத் தொடங்கி வேறுனுபகத்தாற்சொல்லாமல்விட்டுவிடுதல், கலக்கம், கூத்திஞேர் விகற்பம், புதனம், பயம், பொய்யென்ற ருபித்தல், வாளுட்சரேகை.
விட்டம் - உத்திரம், குறுக்களவளி.
விட்டாச்சிரவன் - திருமால்,

விட்டரம் - ஆசனம், ஒருபிடிதருப்பை, ஒருமரம், தோன்கலம், தவத்தோர் பீடம், படுக்கை.
விட்டரி - அகத்தி.
விட்டவர் - துறவோர், பகைவர்.
விட்டவாகுபெயர் - மொழிக்கியன்ற பொருளைவிட்டு குறிக்கப்படு பொருட்கிடனாய்ப் பிறிதொன்றை விளக்குவது (உ-ம்) கங்கைக்கண் இடைச்சேரி.
விட்டவாக்கச்சொல் - சொற்பொருளை விட்டு வேறொன்றிற்கு வழங்குஞ் சொல் (உ-ம்) அவ்வூர் வந்தது.
விட்டாடி - தனியன்.
விட்டார்த்தம் - பாதிவிட்டம்.
விட்டாற்றி - ஆறுதல்.
விட்டி - கோழி, கோழிக்கரணம்.
விட்டிசை - பிரிந்திசை.
விட்டிசைத்தல் - பிரிந்திசைத்தல்.
விட்டித்தல், விஷ்டித்தல் - மலங்கழித்தல்.
விட்டில் - ஒருபறவை, ஒருவண்டு, நாட்டுக்குற்றமேழினொன்று, சிராய்மரம், வெட்டுக்கிளி.
விட்டுணு, விஷ்ணு - திருமால்.
விட்டுணுகரந்தை - ஒருபூடு.
விட்டுணுகாந்தி ஒருதருமநூல், ஒருபூடு.
விட்டுணுகிராந்தி - மூங்கில்.
விட்டுணுபதம் - பரமபதம், பாற்கடல், வைகுந்தம்.
விட்டுணுபுராணம் - ஒரு வைணவ புராணம்.
விட்டுணுப்ரியம் - துளசி.
விட்டுணுரதம் - கருடன்.
விட்டுணுலோகம் - வைகுண்டம்.
விட்டுணுவல்லபை - இலக்குமி.
விட்டேறாணம், விட்டேறு - வேல்.
விட்டை, விஷ்டை - இலத்தி, சட்டி, திரளை.
விட்டோசை - விட்டிசை.
விட்பாரம் - விற்றெனி.
விஷ்வம் - விடலம்.
விண்டு - ஆகாயம், இளமை, கடுதாசிப் படத்திலோர் கருவி, தேவலோகம், மேகம்.
விணிகை - மூலைக்கச்சு.
விண்டபூரகம் - மாதளை.

விண்டிலம் - ஆகாயம்.
விண்டல் - அலர்தல், மூங்கில், வெடித்தல், வெளிவருதல்.
விண்டு - அட்டாதசதருமநூலி லொன்று, காற்று, தகரை, திருமால், மலை, மூங்கில், மேகம், விஷ்ணுகரந்தி.
விண்டுதம் - தகரை.
விண்டுநதி - ஆகாயகங்கை.
விண்டுபதம் - ஆகாயம்.
விண்டுரதம் - கருடன்.
விண்ணபத்திரம் - விண்ணப்பபத்திரம்.
விண்ணப்பபத்திரம் - மன்றாட்டுப்பத்திரம்.
விண்ணப்பம் - அறிவித்தல், மன்றாட்டம்.
விண்ணல் - காவட்டம்புல்.
விண்ணவர்கோன் - இந்திரன்.
விண்ணவர்பிரான், விண்ணவர்பெருமான் - இந்திரன்.
விண்ணவர்க்கிறை - தேவேந்திரன்.
விண்ணவர்தலைவன் - இந்திரன்.
விண்ணவன் - அருகன், தேவன்.
விண்ணாங்கு - ஒருமரம்.
விண்ணா - கடுகுரோகிணி.
விண்ணாணம் - நாகரிகம், மாசாலம், விஞ்ஞானம், வெட்கம்.
விண்ணுகம் - கறிமுள்ளி.
விண்ணுலகம் - தேவலோகம்.
விண்ணுளார் - ஆகாயவாசிகள், விண்ணோர்.
விண்ணேறு - இடி.
விண்ணோர் - தேவர்.
விண்மணி - சூரியன்.
விண்மீன் - நட்சத்திரம்.
விண்முழுதாளி - இந்திரன்.
விண்விண்ணெனல் - இசைக்குறிப்பிடுக்குமொழி.
விண்வீழ்கொள்ளி - உற்கை.
விதண்டம் - ஒருபூட்டு, யானை.
விதண்டாவாதம் - வாதவகையிலொன்று.
விதண்டை - அகப்பை, தன்மதநிறுத்திப்பேசல், திருத்தம்.
விததம் - விசாலம், வீணை முதலான வாத்தியம் பொய்.
விததன் - பரத்வாஜன், இவன் உதத்தியின் மனைவியிடத்தில் ப்ருஹஸ்பதிக்குப் பிறந்தவன், இவன் பிறந்தவுடனே தந்தைதாயரிருவரும் இறந்துபோயினர், அப்போது மருத்து

இவனை யெடுத்துப்போய்சந்தாகமில்லாதிருந்த பூருவம்சத்துப் பரதனுக்குக் கொடுத்தார். இவன் புத்திரனாகிய புமங்யனைப் பரதன் தத்தபுத்திரனாக்கிக் கொண்டான். தவத்தி, பண்டிதன்.
விததி - சமூஹம், விஸ்தாரம்.
விதத்தல் - மிகுத்தனைரத்தல்.
விதத்தியம் - அசத்தியம்.
விதந்து - அமங்கமலை, மாங்கல்ய நூலிழந்தவள்.
விதப்பு - அதிசயம், சீக்கிரம், நடுக்கம், மதிலுறுப்பு, மிகுதி.
விதப்புக்கிளவி - விதப்புமொழி, சிறப்பித்துச் சொல்லுமொழி.
விதம்-அறியப்படுதல், இனம், சம்பளம், சாயல், சூத்திரம்,செயல், துளை, மாதிரி, விலக்குணவு.
விதம்பம் - கற்பரிபாஷாணம்.
விதரணம் - அழகு, ஈகை,சுறுக்கு,போதல், விடுதல், விவேகம்.
விதரணை - விவேகம்.
விதரம் - பிளப்பு.
விதரி - அறியப்படுதல்.
விதயுதம் - உருக்கப்பட்டவை.
விதர்க்கணம்-ஆலோசனை, சம்பாஷணை
விதர்க்கம் - எண்ணம், ஐயம், நியாயம் பஞ்சமயகோசத்தொன்றபெருக்கம்.
விதர்த்தி - சாலை, பந்தர், பீடப்பலகை.
விதர்ப்பஜை - அகத்தியன்மனைவி, தமயந்தி, ருக்மிணி.
விதர்ப்பம் - அஸ்திநாபுரத்துக்குத்தெற்கேயுள்ள தேசம்.
விதர்ப்பன் - சியாமகன் புத்திரன், இவன் அரசாண்டதேசம் விதர்ப்பமென்றுபெயர் பெருவதாயிற்று, இவனுக்கு குசன், க்ருதன், ரோமபாதன் என மூவர் புத்திரர். [ற்றி.
விதர்ப்பு-அச்சம், நெருக்கம்,போர், வெ
விதலம் - கீழேழுலகங்களுள் இரண்டாவது இது இருளால் மூடப்பட்டிருக்கும்.
விதலம்-கீழேழுலகிலொன்று, பயற்றம்பருப்பு, பெட்டி.
விதலை - நடுக்கம்.
விதவளம் - அசைவு.
விதவாகாமி - கைம்பெண்ணை விரும்புவோன்.
விதாவவேதனம் - கைம்பெண்ணை விவாகம்பண்ணல்.
விதவை - கைம்பெண்.
விதற்பம் - விதர்ப்பம்.
விதனம் - மனத்துயர், வேதனை.
விதனித்தல் - துயருறல்.
விதன் - பண்டிதன்.
விதஸ்தை - சந்திரபாகையிற் பிரியுமோர் உபநதி.
விதாகம் - உறைப்பு, வெப்பம்.
விதாதா - அருகன், பிரமன்.
விதாதிரி - திப்பிலி.
விதாதிரு - காமன், பிரமன், விதி.
விதாதை - தாதைதம்பி, இவன்மனைவி நியதி.
விதாரம் - போடல்.
விதாரகம் - கிணறு.
விதாரணம் - கிழித்தல், கொல்லல், பிளத்தல், யுத்தம்.
விதாரம் - கிழித்தல், பிளத்தல், யுத்தம், வெள்ள மெடுத்தல்.
விதாரி - புன்முருக்கு.
விதாரு - பல்லி.
விதாவிதம் - பலவிதம்.
விதாகனம் - குவியல், மேற்கட்டி, வருத்தம்.
விதானகன் - பண்டிதன்.
விதானம் - இளைப்பாற்றி, உபாயம், ஒழுங்கு, ஒருபண், கற்பனை, குவியல், கூட்டம், சாமியின்மை,செயல்,செல்வம், பாக்கியம், மந்தம், மாதிரி, முறைமை, மேற்கட்டி, யாகம், யானை, யுணவு, வணக்கம், வன்மம், விகுதி, விடுதி, விதம், விரிவு.
விதானிகரணம் - மூடுதல்.
விதி-அறிவு, உண்மை, ஊழ், கட்டளை, காலம், குணம், குதிரை முதலியவற்றினுணவு, சூத்திரம், செய்தொழில், செல்வம், நியமிப்பு, பிரமன், மெய், விட்டுணு, விதம், விதியென்னேவல், வேதாகமமுறை.
விதிசை - மாளவதேசத்துள்ள ஒருநதி, மாளவதேசத்திலுள்ள ஒருநகரம்.
விதிகபாலி - சிவபெருமான்.
விதிக்கு - கோணத்திசை.

விதிசாரதி - சிவபிரான்.
விதிசிரந்தடிந்தோன் - சிவபிரான்.
விதிச்சூத்திரம் - முன்னில்லதனை விதித்தல்.
விதிதம் - சம்மதித்தல், தெரியப்பட்டது, வெளிப்படை.
விதிதன் - கவிஞன், புத்தன், யோகி.
விதிதரிசனி விதிதேசகன்.
விதிதேசகன் - யாகபாதகன்.
விதித்தல் - உண்டாக்கல், செய்தல், சொல்லல், நியமித்தல்.
விதித்தோன் - கடவுள், பிரமன்.
விதிநிஷேதம் - செய்வதும், தவிர்வதும்.
விதிபாதம் - வியதிபாதம்.
விதிப்பான் - மகன்.
விதிப்பிரசங்கம் } சூத்திர முறையைச் சாதித்தல்.
விதிப்பிரயோகம் }
விதிப்பு - இலயிப்பு, நியமிப்பு.
விதிமுறை - நெறிப்பிரகாரம்.
விதியர் - கணக்கர், தந்திரிகள், மந்திரிகள்.
விதியுனி - ஓமம், தூதர், விவாகம்.
விதியை - இரண்டாந்திதி.
விதியோகம் - விதிப்பிரகாரஞ்சம்பவித்தல்.
விதிர்க்குவிதிர்க்கெனல் - படபடத்தல்
விதிர்த்தல் - அசைத்தல், அஞ்சுதல், நடுங்கல்.
விதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.
விதிர்விதிர்த்தல் - சுழலல், நடுங்குதல்.
விதிவத்து - முறைப்படியானது.
விதிவிலக்கு - விதிநிஷேதம்.
விதிவினை - உடன்பாட்டான் முடியும்வினை.
விது - கருப்பூரம், சந்திரன், நிவிர்த்திக்காயபலி, பிரமா, விட்டுணு.
விதுகம் - விலகல்.
விதுடன் - கற்றவன்.
விதுடி } அறிவாளி, கற்றவள்.
விதுஷி }
விதுட்சயம் - தேய்பிறை.
விதுரமுகம் - வேண்டாமைக்குத் தலையசைதல்.
விதுதம் - தள்ளப்பட்டது.
விதுநகம் - சலநம்.
விதுந்துதம் - இராகு.
விதுபஞ்சரம் - வாள்.
விதுப்பிரியை - உரோகணி.
விதுபுக் - பாம்பு.
விதுப்பு - ஆசை, காமித்தல், சீக்கிரம்.
விதுமுகி - சந்திரமுகி.
விதும்பல் - ஆசைப்படல்.
விதுரஜம் - வைடூரியம்.
விதுரம் - கலக்கம், பிரிவு.
விதுரன் - அறிஞன், கள்வன், திண்ணியன், தூர்த்தன, வாழ்க்கைத்துணையிழந்தோன். குருகுலவரசருளொருவன், திருதராஷ்டிரன் மந்திரி. அம்பிகையின் தோழியினிடத்தில் வியாசருக்குப் பிறந்த புத்திரன், இவன் மாண்டவ்யர் சாபத்தால் சூத்திரனாகப் பிறந்தயமன், இவன் மஹா தர்மசீலன், திருதராஷ்டிரன் பாண்டவரை வஞ்சிக்கத் துணிந்தபோது அது தகாதெனவாதாடினவன், இவன் தருமமார்க்கத்திற் சிறிதும் வழுவாதவன், பாண்டவருக்கு திருதராஷ்டிரனும் அவன் புத்திரரும் சூழ்ந்த வஞ்சனைகளையெல்லாம் அப்பாண்டவருக் கறிவித்து அவர்களை அவ்வஞ்சனைக்குத் தப்புவித்தவனும் அரக்குமாளிகையமைத்து அதில் பாண்டவர்களையிருத்தித் தீக்கொளுவிக் கொல்லத் துரியோதனன் யத்தனித்தபோது, அந்த மாளிகையிலே ரஹஸ்யமாகப் பிலவழியொன் றமைப்பித்து அவ்வழியே புகுந்து பாண்டவர்களை உயிர்பிழைக்கும்படி காத்தவனும் இவ்வுத்தமனேயாவன், இவன் யவநபாஷையிலும் வல்லவன், யுதிஷ்டிரனும் யவநபாஷையில் வல்லவன், இவன் திருதராஷ்டிரன் சபையில் நடந்த ரஹஸ்யங்களையெல்லாம் இந்தப் பாஷையிலேயே யுதிஷ்டிரனுக்குப் பிறரறியாதபடி வாய்மொழியாலும் திருமுகக் குறியாலும் அப்போதைக்கப்போது உணர்த்திவந்தவன்.
விதுவதனம் - சந்திரன்போலுமுகம்.
விதுவனம் - அச்சம், உதறதம்.
விதுவேணி - சந்திரசடையோன், சிவபிரான்.
விதுன்னகம் - துத்தம்.
விதுஷன் - இந்திரனுக்குச் சசிதேவியிடத்துப் பிறந்த மூன்றாம் புத்திரன்.
விதூடணம் - பெருந்தூஷணம்.
விதூதம் - நடுக்கம், விடுதல்,
விதூநிதம் - நடுக்கம்.

விதூரஜம் - வைடூரியம்.
விதூரதன்-ஓரரசன், சூரதன்புத்திரன்.
விதூரம் - வெகுதூரம்.
விதூனனம் - கலக்கம்.
விதூனனம் - உதருதல்.
விதேகமுத்தி - நால்வகை முத்தியிலொன்று.
விதேகம் - தேகவிமோசனம், மிதிலை.
விதேகன்-நிமிபுத்திரன், மிதிலன், அரசுபுரிந்தமையால் மிதிலாதேசம் விதேகதேசமெனவும்படும்.
விதேகை - மிதிலைநகரம்.
விதேசம் - தூரதேசம், பிரதேசம்.
விதேயன் - சொற்படிகேட்போன்.
விதை-அறிவு பத்தி, பெருமை, விதையென்னேவல், வித்து.
விதைத்தல் - வித்திடுதல்.
விதைப்புனம் - புதுக்கொல்லை.
விதைமணி - விதைக்குந்தானியம்.
விதைமுதல் - வித்துமுதல்.
வித்தகம்-அதிசயம், ஞானம், நன்மை.
வித்தகர் - அறிஞர், கம்மாளர், தூதர், பெரியோர்.
வித்தகன் - அறிஞன், சதுரப்பாடுள்ளோன், தூதன், வயிரவன்.
வித்தகன் - பொருள்கொடுப்போன்.
வித்தம் - அறிவு,இகழ்வு, ஞானம், பாக்கியம், பொருள், டொன்.
வித்தரித்தல் } பெருக்கல் விரித்துச்
விஸ்த்தரித்தல் } சொல்லல்.
வித்தன் - உபகாரி, தவத்திபண்டிதன்.
வித்தாரகவி - நாற்கவியிலொன்று அது மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை, இயல், இசை, நாடகம், பாசண்டத்துறை இவைமுதலிய விரித்துப்பாடுங்கவி.
வித்தாரம் } அகலம், சிற்பநூன் முப்
விஸ்தாரம் } பத்திரண்டிலொன்று.
மரக்கொம்பு, மிகுதி, விட்டம், வித்தாரகவி, விரித்தல், விற்பன்னம்.
வித்தாரி } விற்பன்னன்.
விஸ்தாரி }
வித்தி-அறிவு, ஆராய்தல், சம்பாதிப்பு.
வித்தியதம் - வேதிகை.
வித்தியம் - அறிவு, தான்றி.
வித்தியர் - கம்மாளர்.
வித்தியாகரன் - அறிஞன்.
வித்தியாகலை - பஞ்சகலையிலொன்று.
வித்தியாசம் - வேறுபாடு.
வித்தியாதத்துவம் - தத்துவத்திரயத்தொன்று, தொண்ணூற்றாறு தத்துவங்களுள் இருபத்துநாலு தத்துவங்கொண்டது.
வித்தியாதரர் - கந்தருவர், தேவர்களுள் ஒருபேதம், இவர்கள் மாலிகாஞ்சநாதி வித்தைகளையுடைய மேகவாகநர்கள்.
வித்தியாதானம் - படிப்பித்தல்.
வித்தியாதுரம் - கல்வியாசை.
வித்தியாநாதன் - ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னே ஏகசிலா நகரத்திலிருந்த ஒரு ஸம்ஸ்கிருதாலங்கார கவி, இவர் தமது அபிமாநப் பிரபுவாகிய ப்ரதாபருத்ரன்மேல் அலங்கார நூலொன்று செய்து பிரதாபருத்ரீயம் என்னும் பெயரினால் அதை ப்ரசுரஞ்செய்தவர்.
வித்தியாபாரகன் - கற்போன்.
வித்தியாப்பியாசம் - கற்றல்.
வித்தியாப்பிராத்தி - கல்விச்செல்வம்.
வித்தியாரண்யசுவாமி - வேதாந்தசிரியர்களிலொருவர்.
வித்தியாரணியர் மாதவாசாரியர், இவர் துங்கபத்திராநதி தீரத்திலுள்ள பம்பையென்னுங் கிராமத்திலே, இற்றைக்கு ஐந்நூற்றறுபது வருஷங்களுக்கு முன்னே வித்யாநகரத்தில் அரசுசெய்திருந்த ஹரிஹரராயர் காலத்திலிருந்தவர்.

இவர் ஸம்ஸ்க்ருதத்திலே ஏறக்குறைய எல்லாச் சாத்திரங்களிலும் வல்லவராய் அவ்வச்சாத்திரங்களிலும் தாம் சில நூல்கள்செய்து விளங்கியிருந்த பிரசித்தமான பண்டிதர்.

இவர் தந்தை மாயணன், போகநாதர்சாயணசாரியர் என்பவர் இவர் சகோதரர்கள், இவர் புக்கணன என்னும் அரசனுக்குமந்திரி யாகவுமிருந்தவர், பராசரமாதவியம் செய்தவருமிவரே.

இவர் வறிய குடும்பத்திற்பிறந்தவராதலால் இளமையிலேயே செல்வராக வேண்டுமென்னும் பேராவ

லோடு கல்விகற்றுவந்தார். தமதெண்ணம் விரைவிலே கைகூடாமையால் திருமகளையும் கலைமகளையும் நோக்கி தவஞ்செய்யும் பொருட்டுக் காட்டிற் சென்று திரிவாராயினர், ஒருநாள் அக்காட்டில் அரசனுடைய மாடுகளை மேய்த்துத் திரிபவனாகிய புக்கணனென்னு மொரு க்ஷத்ரியனைக்கண்டு தாம் அனுபவிக்குங் கஷ்டத்தை யெடுத்துக்கூறினார். அதைக்கேட்ட அவர்மீது பேரிரக்கமுடையவனாய், அவர்க்கு தினந்தோறும் வேண்டிய பால் கொடுப்பதாக வாக்களித்தான். அதற்கு இவர் அரசனுக்குரிய பாலை யான்பெருதல் துரோகமாகுமேயென்ன, புக்கணன், அரசனுக்கு அளவுக்கு மேற்படப் பாலிருத்தலால் அவமாகவே யொழுகிப்போகிற பாலிலொரு சிறுகூறு தவம்புரிகின்ற வுமக்குப் பயன்படுதல் அவனுக்குப் புண்ணியப் பயக்குமேயென்ன, இவர் அந்தப்பாலை யேற்றுக்கொள்ள வுடன்பட்டனர். இப்படி தினந்தோறும் புக்கணன் கொடுக்கும்பாலை யுண்டு காலங் கழித்துவரும் மாதவாசாரியர் அந்தப் புக்கணன் மீது பேரன்புடையவரானார், உணவின் கவலைதீர்த்தலும் மாதவர் தாமெண்ணிய தவத்தைப் பெருக்கத்தோடு முயன்று செய்துவந்தார்.

நெடுங்காலங் கழிந்தபிறகு கலைமகளும் திருமகளும், புக்கணனுக்குத்தோன்றி, மாதவர்கருத்து இப்பிறப்பிலே நிறைவேறாதென்றுகூறிப்போக அவன் அந்தச் செய்தியை மாதவர்க்குக் கூறினான். அதுகேட்டும் மாதவர் தம் தவத்தை விடாது செய்துவந்தார். இறுதியிலே அவர் கோலங்கொண்டு தமது பூணூலை யறுத்தெறிந்துவிட்டுச் சந்நியாசியாயினர். அதைக்கண்ட திருமகளும் கலைமகளும் வெளிப்பட்டு, இனி உனக்கு வேண்டியதைக் கேட்கக்கடவையென்ன, இவர் கலைமகள் அநுக்ரஹமொன்றேவேண்டுவது, திருமகள் அநுக்ரஹத்தையினிவேண்டேன், ஆயினும் திருமகள் அநுக்ரஹம் புக்கணனுக்குண்டாகுக, அவனே நமதருளை யான் பெறுதற்குக் காரணராயிருந்த பரமோத்தமன் என்றார். அதுகேட்ட இரண்டுதேவியரு மனமகிழ்ந்து, மறைந்துபோயினர். இது நிகழ்ந்த சிலநாளில் அஸ்தினாபுரத்தரசன் இறக்க, அவனுடையமந்திரிமார்பட்டத்து யானையை அலங்கரித்து அபிஷேககுடத்தை அதன்கையிற் கொடுத்து ஓரரசனைக் கொண்டுவரும்படி பரிசனங்களோடு விடுத்தனர். அதுபலநாடுகளைக் கடந்து புக்கண்ணனிருக்குங் காட்டையடைந்தது.

அந்தச்சமயத்தில் புக்கணன் நித்திரைசெய்துகொண்டிருந்தான். யானை அவனைக்கிட்டி, அவன்மீது கங்கைநீரைச்சொரிய, அவன் துணுக்குற்றெழுந்துபார்க்க அவன்கழுத்தில் மாலையைச் சூட்டிவணங்கி அவனைத் தூக்கித் தன் முதுகின்மேலுள்ள தவிசின்மே லிட்டுக்கொண்டுபோய் அவனை யரசனாக்கிற்று.

அதன் பின்னர் சிலநாள் கழிந்தபிறகு மாதவாசாரியர், புக்கணன், தம்மேற்கொண்ட அன்பைஅரசனாயிருக்குங்காலத்திலும் சாதிப்பவனோவென்று நிதானிக்கும்பொருட்டு அவனிடத்தேசென்று இவர்வரவையொற்றராலறிந்த புக்கணன் முன்னிலுமிகுந்த அன்பும் வணக்கமும் அடக்கமும் நட்பு முடையவனாய் நடந்தெதிர்கொண்டு தழுவிக்கொண்டாடி இவரைத் தனக்குபிரிய நண்பராக்கிக்கொண்டு எந்தக்காரியமும் இவரது கருத்திற்கிணங்கவுசாவிநடத்திவருவானாயினன்.

ஒருநாள்புக்கணன் இவரைப்பார்த்து உமதுபெயர் இவ்வுலகில் நிலைபெற்றிருக்கும் பொருட்டும், எனக்குப்பின்னே வருகிற மக்கட்பரப்புக்கெல்லாம் பயன்படும்பொருட்டும் பலநூல்களைச்செய்து உலகுக்கு உபகரிக்கக் கடவீரென்ன, அப்படியே செய்வோமென் றுரைத்து, எண்ணிறந்த நூல்களுக்கு வியாக்கியானங்கள் செய்து பிரகடனஞ்செய்தனர்.

வேதம் உபநிஷத்து சூதசங்கிதை முதலானவையாவும்இவர் அவதாரஞ்செய்திலராயின் பாஷ்யங்கள் வியாக்

யோகங்கள் என்பன கண்ணிற்கா ணப்படமாட்டா. பாஷ்யங்களுக்கும் வ்யாக்கியானங்களுக்கும் அளவில்லை, இவர்செய்த சங்கரவிலாசம் நாற்பதி னாயிரம் சுலோகமுடையது, வித்யா ரண்யா என்பது இவர்க்குத் தீக்ஷா [நாமம்.
வித்தியாரம் - பூராயம்.
வித்தியாரம்பம் - கற்கத்தொடங்கல் இது பிள்ளைச்சடங்குகளினொன்று.
வித்தியார்த்தி - கற்போன்.
வித்தியாலயம்-பாடசாலை, கல்லூரி.
வித்தியானுசேபனம் - கல்வி தேறச் செய்தல்.
வித்தியானுபாலனம் - படித்தல், படிப் பித்தல்.
வித்தியை - அறிவு, கமனகுளிகை, தா் க்கை.
வித்தியோதமானம் - பிரகாசம்.
வித்தியோபாற்சனம்- கல்வித்தேற்றம்.
வித்திரகம் - வெள்ளெருக்கு.
வித்திரணம் - விரிவு.
வித்திரம் - துளைத்தல், பிளப்பு.
வித்திரவம் - பின்னிடல்.
வித்திராவணம் - உலோக முதலிய உ ருக்குதல், தாத்தல்.
வித்திருதி, விஸ்திருதி } அகலம், விசாலம், விட்டரேகை.
வித்.து - சம்பிரதாயம், வமிசவழி, வி தை, வித்தென்னேவல், விந்து.
வித்துதல் - விதைத்தல்.
வித்துரு - மின்னல்
வித்துருமம் - இளந்தளிர், பவளம்.
வித்துருமாதரி, வித்துருமோஷ்டி } பவளம்போலும்அ தரமுள்ளவள்.
வித்துவகற்பன் - சொற்பகவிக்காரன்.
வித்துவஞ்சம் - அவமரியாதை, பகை, வெறுப்பு.
வித்துவாமிசன், வித்துவான் } [illegible]டலவன்.
வித்துவேடணம், வித்துவேஷணை } விரோதித்தல் அது அட்ட கருமத் தொன்று, கலைஞான மறுபத்தநான் கினுமொன்று.
வித்துவேடம் - விரோதம்.
வித்துவேடி, வித்துவேஷி } பகைவன்.
வித்தேசன் - குபேரன்.

வித்தை - கல்வி, ஞானம், தந்திரத்தொ ழில், மாசாலம், வித்தியாதத்துவமே ழினொன்று.
வித்யமாநம் - வர்த்தமாநம்.
வித்யாதநம் - கல்விப்பொருள்.
வித்யாதேவி - சரச்சுவதி.
வித்யாபாரங்கதன் - கல்விகரை கண் டோன்.
வித்யுத்ருவன் - குபேரன் ஏவலாளரு ளொருவன், கங்கன் என்னும் பக்ஷி ராஜனைக் கொன்றதாகக் கந்தான் என்னும் பக்ஷியாற் கொல்லப்பட்ட வன்.
வித்யுத்கேசன் - ஹேதி புத்ரன், இவ ன் தாய் பயை.
வித்யுத்ஜிஹ்வன்-ராவணன் தூதருளொ ருவன், மஹாமாயாவி, சீதை, அசோ கவனத்திலிருந்தும் ராவணனது ஜா லங்களுக் குடன்படா திருந்ததைக் கண்ட இவன் ராம லக்ஷ்மணர்களு டைய தலைகளைக் கொய்துவந்தே னென்று பொய்த்தலைகள் செய்து காட்டி, இனியாயினும் ராவணன் கருத்துக் கிணங்கமாட்டாயா வென் றுகேட்டவன், சூர்ப்பணகைநாயகன் இவன் காலகேயவமிசத்தவன், ராவ ணன் திக்குவிஜயத்துக்குச் சென்ற போது உடன்சென்ற இவனைகால கேயுத்தத்திலே தனது மைத்துன னென்றறியாது கொன்று மீண்ட போதுதன்செயலையுணர்ந்து சூர்ப்ப ணகையைத்தேற்றி, அதற்காக ஜந ஸ்தாநத்தை நிருமித்து அங்கே அவ ளையிருந் தரசு செய்யுமாறு செய் தான்.
விநதம் - தொனி, வளைவு.
விநதன் - சீதையைத் தேடிவரும்பொ ருட்டுச் சுக்ரீவனால் அனுப்பப்பட்ட தூதருளொருவன்.
விநதாசூனு - அருணன், கலுழன்.
விநதி - மரியாதை, வணக்கம், வளைவு
விநதை, வினதை } சத்தபுரியினொன்று தக்ஷப் ரஜாபதிமகள், காசிபன் மனைவியரி லொருத்தி, இவள் கரு டன்தாய்.
விநயம் - கட்டளை, தருமம், நன்னடை மரியாதை, வணக்கம்.

விநயனம் - சட்டளை, நன்னடை, மரியாதை, வணக்கம்.
விநாசகம் - அழிப்பு.
விநாசகர் - அழிப்போர்.
விநாசகன் - மூக்கறை.
விநாசம் } அழிப்பு, கொலை, நாசம்.
விநாசனம் }
விநாசன் - கொலைசெய்வோன்.
விநாசி - அழிப்போன்.
விநாடி } காலநுட்பம்.
விநாடிகை }
விநாயகசட்டி - கார்த்திகையிற் கார்த்திகைகழித்த இருபத்தோராநாள் வருஞ்சட்டி.
விநாயகம் - தடை, பெருநாயகம்.
விநாயகன் - விக்கினேசுவரன், கருடன் அருகன், குரு, புத்தன்.
விநாழிகை - நாழிகையறுபதிலோர் பங்கு, பங்கிடல்.
விநிகதம் - உற்பாதம்.
விநிகமம் - நியாயத்தால் வந்ததீர்ப்பு.
விநிச்சுவாசம் - பெருமூச்சு.
விநிபாதம் - இகழ்ச்சி, இக்கட்டு, மரணம், விழுதல்.
விநிமயம் - அடகு, மாற்றுதல்,
விநியோகம் - தடை, நியமிப்பு, பிரிதல் விடுதல்.
விநிர்ப்பயம் - அச்சமின்மை.
விநீதம்-அழகு, அனுப்புதல், கற்பு, சாந்தம், தண்டிப்பு, நடத்துதல், நன்னடை, படியப்பண்ணுதல், மரியாதை.
விநீதன் - தண்டிக்கப்பட்டவன், விநயமுள்ளவன்.
விநீதை - கற்புடையாள்.
விநீயம் பாவம்.
விநோதம் - அவா, அழகு, சந்தோஷம் தன்னுதல், தொழில், பகை,மகத்துவம், விளையாட்டிற்பொழுதகழித்தல்.
விநோதர் - பொழுதகழிப்போர்.
விந்தலன் - சந்திரன்.
விந்தம் - ஓரெண், குதிரைப்பற்பாஷாணம், விந்தியமலை, மாணிக்க வகையுளொன்று.
விந்தரம் - கற்கடகபாஷாணம்.
விந்தர் - இடையர்.
விந்தாக்கினி - காமாக்கினி.
விந்தாநுவிந்தர் - ஜயத்ஸேநனுக்கு வசுதேவன்தங்கையாகிய ராஜாதிதேவியிடத்திற் பிறந்த புத்திரர்.
விந்தாரற்கல் - ஈரற்கல்.
விந்தியகூடன் - அகத்தியன்.
விந்தியபர்வதம் - விந்தமலை, இது தக்ஷிணோத்தரதிசைகளைப் பிரிக்கும் எல்லைமலை, அகத்தியரால் பாதாளத்தில் அழுத்தப்பட்டமலை.
விந்தியம் - அட்டகுலமலையிலொன்று.
விந்தியவாசி } கோட்டம், துர்க்கை.
விந்தியவாசினி }
விந்தியாவலி - புத்திரன், வாணாசுரன்.
விந்தியாவளி - பலிச் சக்ரவர்த்தியின் மனைவி.
விந்து-குறி, தாது, நீர்த்துளி, நெற்றித்திலகம், புருவமத்தி, புள்ளி,வட்டம்.
விந்துசாலம் - யானைமுகப்பொறி.
விந்துசித்திரகம் - மான்.
விந்துதந்திரம் - சூதாடுகருவி, சூதாடுபடம்.
விந்தை - ஆச்சரியம், ஓரசத்தி, துர்க்கை விற்பன்னம், வீரலட்சுமி.
விந்தையம் - செங்கத்தாரி.
விபகரித்தல் - வழக்குச்சொல்லல்.
விபகலனம் } கழித்தல்.
விபகலிதம் }
விபகாரம் - வியவகாரம்.
விபக்கம் - பகை.
விபக்கன் - பகைவன். [தல்.
விபக்கம்-உடைத்தல்,பிரித்தல், வளைத்தல்.
விபசாயம் - பயிர்த்தொழில், கிருஷி.
விபசாரம் - வியபிசாரம், வேசித்தனம்.
விபசாரி - வியபிசாரி.
விபசியம் - அறிவு.
விபச்சித்து - பண்டிதன்.
விபஞ்சி } வீணை.
விபஞ்சிகம் }
விபஞ்சிகை - பொழுதுபோக்கு, விளையாட்டு, வீணை.
விபட்சதை - எதிரிடை யுத்தம்.
விபட்சதை - பிறபட்சம், விலக்கு.
விபட்சன் - எதிரி, சத்துரு.
விபணம் - விலை.
விபணி-கடை, கடைவீதி, வியாபாரி, வியாபாரப்பண்டம், விலைச்சரக்கு.
விபண்டகன் - இவன்பிரமசரியவிரதத்தையநுட்டித்துவரும்போதொருநாள்

ஒரு தடாகத்திலே நீராடிநிற்கையில் அங்கே ஊர்வசியை, அவளைக்கண்டு மோகித்து தனது வீரியத்தை அத்த டாக நீரில்விட்டான், அதனை ஒரு பெண்மான் நீரோடருந்திக் கருப்ப மடைந்து ருசிய சிருங்கன் என்னும் குமரனை யீன்றது

விபண்ணகம் - பலாசு

விபதம் - கெடுவழி, கைக்காணிக்கை.

விபதி - குருவி.

விபதை - தரித்திரம்.

விபத்தம் - காஞ்சிரை, பஞ்சம்.

விபத்தன்-அபாக்கியன், கிலேசமுடையோன், விகாரி, வேறுபட்டோன்.

விபத்தி-அபாக்கியம், கலக்கம், குற்றம், தரித்திரம், துன்பம், பங்கு, மரணம், வேதனை, வேற்றுமை.

விபத்து-அபாக்கியம், ஆபத்து, கலக்கம், துன்பம்.

விபங்கம் - நஷ்டம், பாம்பு.

விபம் - செல்வம், மேலானதத்துவம், மேன்மை.

விபரம் - விரிவு.

விபரிணமம் - மாறுதல்.

விபரித்தல் - விரித்துச்சொல்லல்.

விபரியயம்-அழிவு, எதிரிடை, கோபக்குணமாறுதல்.

விபரியாசம் எதிரிடை, மாறு.

விபரீதனை - எதிரிடை.

விபரீதம் - அதிசயம், மாறுபாடு.

விபரீதவிலக்கு - ஒலங்காரம் அது காரணத்திற்கியையாது விபரீதமாய்க் காரியங்கூறி விலக்கிக்காட்டல்.

விபரீதவுணர்ச்சி - ஒன்றையொன்றாக அறிதல்.

விபரீதவுவமை - தொன்றுதொட்டு வழக்கு முவமையைப் பொருளாக்கியும் பொருளை யுவமையாக்கியு முரைப்பது (உ-ம்) கண்போர்பிறழுங் கயல்.

விபலம்-காலநுட்பம், பயனின்மை.

விபலாயனம் - பறத்தல்.

விபலீகரணம் - தடுத்தல், பயனில்செய்கை.

விபவ - இரண்டாவதுவருஷம்.

விபவம் - சாதல், செல்வம், பொருள், மகத்துவம், வரம், வாழ்வு.

விபவனம்-கீழ்ப்படிவு.

விபன்னம் - குற்றம், மெலிவு.

விபன்னன் - மெலிந்தோன்.

விபாகம்-உருசி, சமைத்தல், சிரணித்தல், செய்பலம், செல்வம், தரித்திரம், தற்செயலாய்வருவது, பக்குவம், பங்கு, பழுத்தல், போகம், மாறுதல், வேறுபாடு.

விபாகரன்-சூரியன், நீக்கடவுள்.

விபாசம் பந்தமோசனம்.

விபாசன் - ஒருமுநி, பற்றற்றவன்.

விபாச்சியத்துவம் - பகுக்கத்தக்கது.

விபாச்சியம் - பகுதி, பகுப்பு.

விபாசை - பிரகாசம்.

விபாடம் - அம்பு

விபாடிகை-ஒரு குட்டரோய்.

விபாதம் - உதயகாலம்.

விபாதனம் - அழித்தல்.

விபாதிகை - நொடி, பித்தவெடிப்பு.

விபாவசன் - விபாகரன், நரகனின்புத்திரருளொருவன, முராசுரன் புத்திரன், இவன் கிருஷ்ணமூர்த்தியால் கொல்லப்பட்டவன, ஒருபிராமணன், இவன தனது தம்பியால் கூர்மமாகச் சபிக்கப்பட்டுக் கருடனால் பக்ஷிக்கப்பட்டவன்.

விபாவசி மந்தாரன் என்னும் வித்யாதரன்மகள் இவள் சுவரோசிக்கு மிருக பக்ஷிஜாதிகளுடைய பாஷைகளையறியும் வித்தையைக் கற்பித்து அவனுக்கு மனைவியானவள்.

விபாவசு சந்திரன், சூரியன, நீக்கடவுள்.

விபாவரி இராத்திரிசங்கம்வாங்கி, வேசி.

விபாவனம் - ஆராய்வு, தீர்த்தல், பகுத்தறிவு, தரிசனம், பாவிக்கப்பட்டது.

விபாவனை-ஆராய்வு, ஒலங்காரம் அது உலகறிகாரண மில்லாதிருப்பக் காரியம் பிறத்தலைச் சொல்வது, மட்டுக்கட்டுதல்

விபாவன் - சினேகிதன்.

விபாவியம் - சிந்தித்தல்.

விபினசரன் - வேடன்.

விபினமிருகம் - காட்டுமிருகம்.

விபினம் - காடு.

விபீடன்புத்தி - ஒருநூல்,

விபீடணன் - இராவணற்கிளையோன்.

விபீதகம் - தானிமரம்.

விபீஷணன் - விசிரவசுவுக்குக்கைகேசியிடத்திலே பிறந்த மூன்றும்புத்திரன்,

இராவணன்தம்பி. இவன் சீதையை இராமனிடத்திற்கொண்டுபோய் ஒப்பித்து விடும்படியாகப் பலவாறு போதித்தும் அவன் கேளாமையால் அவனை விட்டுப்போய் ஸ்ரீராமபிரானைச்சரணமடைந்தவன், இவனுக்கு ஸ்ரீராமர், அபயந்தங்கொடுத்து இராவணசங்காரத்தின்பிறகுஇவனை இலங்கைக்கரசனாக்கினர். இவன் சிரஞ்சீவிகளில் ஒருவன், இவன்பொருட்டாக ஸ்ரீரங்கநாதர் தென்முகமாக அறிதுயில் செய்கின்றனர் என்பது பிரத்தியக்ஷாநுபவம்.

விபு-ஆகாயம்,ஆன்மா, எசமான், இடம், கடவுள்,கருத்தா, சிவன், தலைவன், நித்தியம், நேரம், பரிபூரணம், பிரமன், விட்டுணு, வேலைக்காரன். சத்தியகேதுபுத்திரன், சுரபுதந்தை, பப்பிருபுத்திரன்.

விபுசத்துரு-தண்ணீர்விட்டான்யோன்

விபுணன்-சிறந்தோன், வெற்றியுடை

விபுதர்-அறிஞர், மிகக்கற்றோர்,வானோர்.

விபுதர்கந்தம் - நெய்ச்சட்டி.

விபுதர்கோன், விபுதர்தலைவன், விபுதர்பிரான், விபுதர்பெருமான் } தேவேந்திரன்.

விபுதன்-சந்திரன்,தேவன், பண்டிதன்.

விபுதானன்-ஆசாரியன்,தேவன், பண்டிதன்.

விபுத்துவம் பரிபூரணமாயிருத்தல்.

விபுதை-தத்துவம்.

விபுத்தன் - நன்மாணாக்கன்.

விபுலம்-அகலம், இமயகிரி, பூமி, பெருமை, மேருகிரி, விரிவு.

விபுலன் பலராமன்தம்பி, சலகன் தம்பியருளொருவன், மேரு, இமயம்.

விபுலரசன் - கரும்பு

விபுலை - பூமி.

விபூஷணம், விபூடணம் } அலங்காரம், ஆபரணம்.

விபூடை - அலங்காரம், அழகு, பிரபை.

விபூதி - அஷ்டைசுவரியம்,உத்தமகுணம், குற்றம், கொடுமை, செல்வம், தசை, பெருமை திருநீறு. சைவசின்னங்களுள்ளே மேன்மையாகிய திருநீறு. இது ஐசுவரியத்தைத் தருவதும் பாவநாசஞ்செய்வதும் சகல துக்கங்களையும் நீக்குவதுமாகிய குணங்களையுடையது. இக்காரணம்பற்றி இது விபூதி ரக்ஷைமுதலிய பெயர்களைப் பெறும் விபூதியென்பதன் பொருள், அரன் வலி.

விபூயம் - முஞ்சிப்புல்

விபேகம் - புத்தி, வல்லபம்.

விபேதி - சூரியன்.

விபேகம் - எதிர், கலக்குதல், பிரித்தல், வன்மம்.

விபேதனம் - பிரித்தல்.

விபை - அழகு, கிரணம், பிரபை.

விபோதம் - புத்தி.

விப்பிரகாசியம்-ஆகாயவுருவங்காணல்.

விப்பிரகாதகன் - பிராமணகாதகன்.

விப்பிரத்துரோகி பிராமணத்துரோகி.

விப்பிரகாரம்-எதிரிடை, தீங்கு,நிந்தை, பொல்லாங்கு.

விப்பிரகிருதி - நிந்தை, பதில்.

விப்பிரசித்தி-இவன் காசிபனுக்குத்தநுவினிடத்திற் பிறந்தபுத்திரன், திதிபுத்திரியாகியசிம்மிகையென்பவள் இவன் மனைவி, இவன் புத்திரர், ராகு, கேது, நமுசி, வாதாபி, இல்வலன், நரகன், சுவர்ப்பரகன், டலோமன், வக்த்கயோதி முதலியோர்.

விப்பிரதகம் - வற்றல்.

விப்பிரபம் - ஒளியின்மை.

விப்பிரதிகாரம்-எதிரிடை,பதில், மாறு.

விப்பிரதிசாரம்-கோபம், சீர்ப்படுதல், பகை, பொல்லாங்கு, விசனம்.

விப்பிரதித்துவம் - தடை, விலக்கியது.

விப்பிரமம்-அழகு, இலீலாமோசனவெறுப்பு,குற்றம்,பிரமை, மோகப்பிணக்கு, மோகலீலை.

விப்பிரம்-அழகு, ஐயம், சந்தேகம், சிக்கிரம், சுழலுதல், தவறு, பிழை.

விப்பிரயோகம் - ஒவ்வாமை, பஞ்சபாணாவத்தையினொன்று அதுவெய்துயிர்த்திரங்கல், பிரிதல்.

விப்பிரர் - பார்ப்பார்.

விப்பிரலம்பம் - அனுப்பு, சண்டை, பிரிவு, தலைவன்றலைவி பிரிதல்.

விப்பிரலாபம் - பயனற்றபேச்சு, வாக்குவாதம்.

விப்பிரவமிசம் - பிராமணசந்ததி.

விப்பிரவாசம் - பரதேசவாசம்.

விப்பிரவாசனம் - ஊருக்கப்புறப்படுத்தல்.

விப்பிரன்-பிராமணன். சிஷ்டிபுத்திரரு ளொருவன்.
விப்பிராந்தசிலம் - குரங்கு, சூரியசந்திர வட்டம்.
விப்பிராந்தி-கலக்கம், சுழலுதல், தவறு.
விப்பிராஜன் - சுக்ருதி புத்திரன்.
விப்பிரியம் - மீறுதல்.
விப்பிலம் - தேசோபத்திரவம்.
விப்பிலவம் - அநியாயப்போர், அநீதக் கொள்ளை, கலக்கம், சீக்கிரம், பொல் லாங்கு, வல்லமை.
விப்பிலீகரணம் - தடுத்தல், பயனில்செய்கை.
விப்புருதி - ஒருசிலந்தி.
விப்ரகாரம் - பற்கடித்தல்.
விப்ரப்ரியம் - முருக்கமரம்.
விப்ரதியோகம்- பிரிவு.
விமதன் - பகைவன்.
விமதி - எண்ணப்பேதம், வெறுப்பு.
விமயம் - பொருண்மாற்றல்.
விமரிசம், விமரிசனம், விமரிமை, விமர்ச்சம், விமர்ச்சநம் } ஆராய்வு, கேள்வி, பாவனை, யூகம்.
விமர்த்தல் - அழித்தல், தேய்த்தல்.
விமர்த்தனம் - அடக்குதல், அமர்த்துதல், அரைத்தல், அழித்தல், கிரகணம், தாளாக்குதல், தேய்த்தல், வாசனை,
விமர்த்தார்த்தம் - கிரகணஸ் பரிசனகாலந்தொடங்கி மோசனம்வரைக்கும்.
விமலதாநம் - ஈசுவரப்ரீதியாய்ச் செய் யுந்தானம்.
விமலமணி - பளிங்கு.
விமலம் - அழகு அழுக்கின்மை, சிவாகமமிருபத்தெட்டினொன்று, பொன் மலாம் வெண்மை.
விமலன் - கடவுள், சிவபிரான்.
விமலாகாசம் - ஞானகாசம்.
விமலாத்மகன் - மலமில்லாதவன், நிர்ம லன்.
விமலார்த்தம் - மலமின்மை, நிர்மலம்.
விமலி, விமலை } இலக்குமி, சரச்சுவதி, துர்க்கை, பரிசுத்தவாட்டி, பார்ப்பதி, விந்தை.
விமாதிரு - சிறியதாய்.
விமாமிசம் - அசுத்தபோசனம்.
விமார்க்கம்-துன்னடை, விளக்குமாறு.
விமானம்-அவசங்கை, அளவு, உரோகணி, இராசமாளிகை, எழ்நிலைமேடை, ஒருவகைத்தேர், குதிரை, தேவர் கோயில், தேவலோகம், வாகனம்.
விமுகம் - பஹிர்முகம்.
விமுகிதை - எதிரிடை.
விமுக்தம் - விமோசநம், நன்றாய்விடப் பட்டது.
விமுத்தி - பிரிவு முத்தி.
விமுத்திரம் - தளிர், பூந்தளிர்.
விமூட்சஞ்ஞும் - அறிவின்மை.
விமோகனம் - அனுப்புதல்.
விமோசனம் - ஒழிதல், நிவிர்த்தி, விட்டு நீங்கல்
விமோட்சணம் - விடுதல்.
விமோட்சம் - விமுத்தி.
விம்ஸகம் - இருபதுகூடியது.
விம்ஸதி - இருபது.
விம்பகம் - விம்பம்.
விம்படம் - கடுகுச்செடி.
விம்பபூசை - திருவுருவாராதனை.
விம்பப்பிரதிவிம்பபாவம் - விம்பத்திற் கும் பிரதிவிம்பத்திற்கு முளடையது.
விம்பம் - உருவம், ஒளி, கொவ்வை, சந் திரசூரியர்களின் மண்டலம், சாயை, சாலங்கபாஷாணம், சிவாகமமிருபத் தெட்டினொன்று, நிழல், பலண்டுறு கடாஷாணம், வட்டம்.
விம்பிகை - கோவைக்கொடி.
விம்பித்தல் - சாயைவீசுதல்.
விம்பு - கமுகு.
விம்மல் - அழுதல், இறுகிப்பொலிதல் ஏங்கல், ஒலித்தல், கலக்கம், சந்தோ ஷம், பருத்தல்.
விம்மிதம் - அச்சம், அதிசயம், உடல்.
விழ்முதல் - விம்மல்.
விய - இருபதாவதுவருஷம்.
வியக்கம் - பெருமை.
வியக்கம் - குடிக்கூலி.
வியத்தம் - வியத்தம்.
வியங்கம் - தவளை, பிறவிமறு.
வியங்கியம் - குறிப்பு, குற்றுவார்த்தை.
வியங்கோள், வியங்கோள்வினைமுற்று } ஐம்பான் மூவிடங் களினு மியலும் வினை அது க-ய-ர்- அல்-அட்டு என்னும் விகுதிகளைப் பெற்றுவரும்.

வியசநியன் - வெறிகாரன்.
வியசனம்-அரிட்டம், உபத்திரவம்,காற்று, குற்றம்.
வியஞ்சகம் - அபிநயம், எத்து.
வியஞ்சனம்-அடையாளம், ஒற்றெழுத்து, தாடி, பருப்புத்திரளை, யோனி, கறி.
வியடம்பகம் - ஆமணக்கு.
வியட்டிருபம் - தூலருபம்.
வியதம் - வேதனை.
வியதிதன் - துக்கிதன்.
வியதிபாதம் - கலகம், துன்னிமித்தம், நித்தியயோகத் தொன்று.
வியதிரேகம் - எதிர்மறை, விகற்பம், விழுதல், வெதிரேகம்.
வியதீகாம் - அபாக்கியம் கலகம்
வியதீகாரம் - மாறு.
வியதீபாதம் - நித்தியயோகத்தொன்று.
வியதை - கஷ்டம், வேதனை.
வியத்தகன்மை - சங்காரதி.
வியத்தபதம் - தனிச்சொல்.
வியத்தம் - அத்தாட்சி, அறிவு, எதிர், கலக்கம், தரிசிக்கத்தக்கது, தெளிவு, பிரதானம், மூலம், விளக்கம்.
வியத்தல் - அதிசயப்படல், துதித்தல், நன்குமதித்தல், பாராட்டல்.
வியத்தி - காரியம், வெளிப்படுதல்.
வியத்திகை - பெருமை.
வியத்தியாசம் - ஒரிடத்துப் பிரிந்தோரிடத்துறல், வித்தியாசம்.
வியத்தூதி - அந்தகாரம்.
வியநெறி - பெரும்பாதை.
வியந்தரம் - பிசாசம்.
வியபதேசம் - அவகாசிகயம், சாட்டு.
வியபரோபணம் - கிருமூலம்.
வியபிசாரம் - தவறு, தூர்த்தம்.
வியபிசாரி - வேசி.
வியபேட்சை - சாதனை, சேர்மானம், வரவுகாத்திருத்தல்.
வியப்பித்தல் - அதிசயப்படுத்தல்.
வியப்பு - அதிசயம், மெய்ப்பு, வியப்பைக் கூறுமலங்காரம்.
வியமம் - துக்கம், வியாமம்.
வியம் - அகலம், உடல், ஏவல், செலவு, பறவை, பெருமை.
வியயம் - செலவு.
வியர்த்தம் - பயனின்மை.
வியர்த்தல் - சினக்குறிப்பு, வேர்த்தல்.
வியர்ப்பு - சினம், வேர்வை.
வியர்வு } வேர்வை.
வியர்வை }
வியலிகை - பெருமை.
வியலிடம் - அகலம்.
வியலீகம் உபாதி,துற்செய்கை,மீறுதல்
வியலூர் - செங்குட்டுவனால் வெல்லப்பட்டவூர்களுளொன்று, வீயலூரெனவும் வழங்கும்.
வியல் - அகலம், காடு,பெருமை,விரிவு.
வியல்களு - திப்பிலி.
வியல்பூதி - வில்வம்.
வியவகாரம் பிணக்கு, முறைமை, வழக்கு, வியாபாரம், விநோதம்.
வியவகாரவிதி - நியாயப்பிரமாணம்.
வியவன் - ஏவுவான், திண்ணியன், வழிச்செல்வோன்.
வியனிலையுருவகம் - ஓரலங்காரம், அது ஒன்றனங்கம் பலவற்றையு முருவகித்து முருவகியாது முரைப்பது.
வியனிலைமருட்பா - கைக்கிளை வெண்பா முதலாசிரியமீறாக வருமிடத்தாசிரியவடி யிரண்டேயா யவற்றுளீற்றயலடி யொவ்வாது வருவது.
வியனுகாதம் - எதிரொலி.
வியனுலகு - தேவலோகம்.
வியன் - அதிகம், ஒற்றை, பெருமை.
வியன்சமன்சங்கலிதம் - ஒருசங்கலிதம்.
வியன்சமன்பார்த்தல் - பெருமையுமொப்புங்குறித்தல்.
வியன்மணி - சூரியன்.
வியாகதம் - கலங்கினது. [கம்.
வியாகம் ஒருநட்சத்திரம், காற்று, விவாகம்.
வியாகரணம் - இலக்கணம் அது வேதாங்கத்தொன்று, கலைஞான மறுபத்துநான்கினுமொன்று, விபரம்.
வியாகன் - குமரன்.
வியாகாதம் - அழிவு, இடையூறு,தடை நித்தியயோகத்தொன்று.
வியாகாரம் - அவலட்சணம், சத்தம், சருவுதல், பேச்சு, மாறுதல்.
வியாகிருதி - வியாகாரம்.
வியாகிருதம்-மாறு,விபரம், பிரிக்கப்பட்டது.
வியாகுலம் - கலக்கம், துக்கம்.
வியாகுலித்தல் - துக்கப்படல்,
வியாகூதி - எத்து, மாயம்.
வியாக்கியானம் - உரை, விபரம்.

வியாக்கியானன் } உரைகாரன்.
வியாக்கியனி }
வியாக்கியாதா - வியாக்கியானன்.
வியாக்கிரகதி - தாளகதியைந்திலொன்று.
வியாக்கிரதலம் - திருப்புலீச்சரம், ஆமணக்கு.
வியாக்கிரநகம் - புலிதொடக்கி.
வியாக்கிரநாயகன் - நரி.
வியாக்கிரபாதர் - மத்தியந்தி னமுனிவர் குமாரர், இவர் பூர்வநாமம் பாலமுனிவர், இவர் சிவபூசையின் பொருட்டுக்கொய்யும் மலர்கள் பகற்காலத்திலே வண்டுகளால் எச்சிற்படுகின்றனவேயென்றுவருந்தி, சிவனிடத்திலே புலிக்கண்ணும் புலிக்காலும் வேண்டிப்பெற்றுத்தில்லைவனத்திலே இராவிற்சென்று மலர்கொய்தலைத்துப் பகல்முழுதும் பூசைசெய்பவர், இக்காரணம் பற்றியே இவர் வியாக்கிரபாதர் என்னும் பெயர்பெற்றார். இவர் சிதம்பரத்திலே கனகசபையிலே சிவபெருமான் செய்கிற ஆநந்தத் தாண்டவத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவர்.
வியாக்கிரபாதன் - கௌதமரிஷி, புலிப்பாணி.
வியாக்கிரபுச்சம் - ஆமணக்கு.
வியாக்கிரபுரம் - சிதம்பரம், புலியூர்.
வியாக்கிரபுரேசர் - திருப்பெரும்புலியூரில் கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வியாக்கிரமம் - ஆமணக்கு,உத்தமம், சிறந்தசொல், புலி, மேன்மை.
வியாக்கிரம்-சிறந்தசொல், புலி, மேன்மை.
வியாக்கிராசனம்-புலித்தோலாசனம்.
வியாக்கிராசியம் - பூனை.
வியாக்கிரி - கண்டங்கத்தரி.
வியாசங்கம்-கலக்கம், சேர்த்திக்கை, பிரிவு.
வியாசசிந்தை - ஓரலங்காரம்.
வியாசம்-உவமை, தந்திரம், தருமநூல், பதினெட்டிலொன்று, தாரணம், தீபம்,பகுத்தறிதல், பொல்லாங்கு, மாயம், முகாந்தரம், விரிவு, வேஷம்.
வியாசர்-கிருஷ்ணத்வைபாயனர், பராசரர் சத்யவதியைக் கூடிப்பெற்ற புத்திரர், வேதங்களை வகுத்த காரணத்தால் வேதவியாசர் எனப்பெயர் பெற்றனர். வேதாந்தசூத்திரஞ்செய்தவரும் மஹாபாரதத்தை விநாயகரைக்கொண்டு எழுதுவித்தவரும் இவரே, இவர்புத்திரர் சுகர், இவர் கங்காத் வீபத்தி லேபிறந்தமையால் த்வைபாயனர் என்னும் பெயர்பெற்றனர். (த்வீபம் - தீவு அயனர் - அதிற்பிறந்தவர்) இவர் புராணங்களையும் பதினெட்டாக வகுத்தனர். பாண்டு திருதராஷ்டிரன் என்பவர்களுக்குத் தந்தையுமிவரே.
வியாசன் - வேதவியாசன்.
வியாசை - இமயமலைக்குத் தெற்கே உற்பத்தியாகி சதத்துருநதியிற் கலக்கிறவோர்நதி, இது புத்ரசோகத்தால் வருந்திய வசிஷ்டரது பாசத்தை வியோசநம் செய்தமையால் இப்பெயர் பெற்றது.
வியாச்சியம் - வழக்கு.
வியாடம் - இலையுணவிலங்கு, பாம்பு.
வியாதம் - உபத்திரவம், துயரம், வேறுபாடு.
வியாதன்-கீழ்மகன்,வியாசன்,வேடன்.
வியாதாகாரம்-தயாவிருத்தி பதினொன்றினொன்று அது துயரகற்றல்.
வியாதாமம் } இடி, குலிசம்.
வியாதாவம் }
வியாதானம் - வாயில்.
வியாதி - கோட்டம், நோய், சருவநீசமகன்.
வியாதிகாதம் - கொன்றை.
வியாதிசாந்தி - வியாதிதீர்த்தல்.
வியாதிதம் - அசைவுள்ளது.
வியாத்தம்-உறுதி, கலந்திருப்பது, கீர்த்தி, சூழ்வு, நிறைவு, வியாத்தியோடு கூடியது, விரிவு.
வியாத்தி - பெறுதல், வியாபித்தல்.
வியாபகத்துவம் - நிறைந்திருத்தல்.
வியாபகம் - எங்குமிருப்பது, சாதாரணம், சயதன்மை, வியாபித்தல்.
வியாபனம் - வியாபகம்.
வியாபாதம் - கேடுநினைத்தல்,வஞ்சகம்.
வியாபாதனம் - கொல்லல்.
வியாபாரம்-அப்பியாசம், செட்டு, தொழில்.

வியாபாரி - செட்டுச்செய்வோன், தொழிற்படுவோன்.
வியாபி - எங்குநிறைந்தது, வியாத்தி.
வியாபித்தல் - எங்குமிருத்தல்.
வியாபிருதன் - மந்திரி.
வியாபினி - வியாபித்திருப்பது.
வியாபுத்தி - வருந்தல்.
வியாப்தம் - வியாத்தம்.
வியாப்தி - வியாத்தி.
வியாப்பித்தல்-சூக்குமமாய்க் கலந்திருத்தல்.
வியாப்பியம்- அருத்தாபத்திப்பொருள், காரணம், கோட்டம், வியாத்தியையுடையது.
வியாமம் - இக்கட்டு,இளைப்பு,ஒளி,சாந்தகுணம், நான்குமுழஅளவு நிந்தை புகை, முரஞ்சு, வருத்தம், வழி.
வியாமனம் - அங்க சேட்டையின்மை, மதியாமை.
வியாயோகம் - நாடகவகை பத்தினொன்று.
வியாவகாரிகன் - மந்திரி.
வியாவத்தம் - சுழலல், சூழ்தல்.
வியாவத்தனம் - வியாவத்தம்.
வியாவபாஷி - வாக்குவாதம்.
வியாவிருதி - புறம்பு, மறைவு
வியாவிருத்தி - தள்ளுதல், தெரிதல், புகழ்ச்சி, மறைத்தல்.
வியாழகேந்திரம்-வியாழவீதியின்மத்தி.
வியாழநிசை வியாழனுக்குச் செல்லுங்காலம்.
வியாழம் - ஒருகிரகம், ஒருகிழமை, தேவகுரு.
வியாழவட்டம் - வியாழத்தின் பன்னிருவருடச்சுற்று.
வியாழன் - வியாழம்.
வியாளகம் - வியாளம்.
வியாளக்கிராகன், வியாளக்கிராகி } குறவன், பிடாரன்.
வியாளகேதரன், வியாளத்தவசன் } துரியோதகன்.
வியாளம் - கெட்டயானை, பாம்பு, புலி.
வியாளபுக் - மயில்.
வியாளாசனம் - காற்று.
வியாளாயுதம் - புலிதொடக்கி.
வியானபூமி - மயானபூமி.
வியானம்-நான்குமுழ அளவு, மயானம்
வியானன்-தசவாயுக்களிலொன்று அது சரீரமுழுதும் வியாபித்திருப்பது.
வியுட்டம் - நாள், பலன், வைகறை.
வியுட்டி - கீர்த்தி, பலன், வத்திப்பு.
வியுற்பத்தி-சொற்புணர்ச்சியிலக்கணம்
வியுஷ்டி-டுவஷ்பாரணனுக்குத்தோஷையிடத்துப் பிறந்த புத்திரருளொருவன், இவன் மனைவிபுஷ்கரிணி, இவன்புத்திரன்சர்வதேஜஸ்ரூபிரதோஷன் கிசிதன் என்பவர், இவன் தமையன்மார்.
வியூககாரன் - தையற்காரன்.
வியூகபங்கம் - அணிகுத்தல்.
வியூகபேதம் - அணிமுறிதல்.
வியூகம் - உடல், கூட்டம், படைவகுப்பு, விலங்கின்கூட்டம்.
வியூசனம் - ஒழுக்கு, சரீரக்கட்டு.
வியூட்டி - அணி, ஒழுங்கு.
வியோகம் - பிரிதல், விடுதல்.
வியோகி - சக்ரவாகம்.
வியோடம் - திரிகடுகம்.
வியோமகேசன் - சிவபிரான்.
வியோமசாரி - இருடி, தேவன், பட்சி பார்ப்பான்.
வியோமசாரிபுரம் அரிச்சந்திரன் பட்டினம்.
வியோமதூமம் - முகில்.
வியோமமஞ்சரம், வியோமமண்டலம் } கொடி.
வியோமபலம் - மழை.
வியோமமூதம் - முகில்.
வியோமம - ஆகாயம், கோவில், நீர்.
வியோமரூபி - அரூபி.
வியோமன்-கம்ஸன் சேநாபதி, இவன் திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணமூர்த்தியாற்கொல்லப்பட்டவன், தசாருகன் புத்திரன்.
விரககதியன் - விரேகி, வீம்பன்.
விரகதம் - வெள்ளைச்சாரணை.
விரகதாபம் - காமவருத்தம்.
விரகநோய் - காமவிகாரம்.
விரகம் - காமநோய், தணித்தல், பிரிவு, புலவி விடுதல்.
விரகவேதனை - காமநோய்.
விரகறிதல் - பிராயமாதல்.

விரகாங்கன் - ஓரரசன், இவன், புத்திரர் ஐவரும் வேதத்திலுள்ள சிலகீதங்களுக்குக் கர்த்தர்.
விரகிணி சம்பளம், தலைமகற்பிரிந்தாள்.
விரகிதம் } அழிவு, உச்சாகம், உணர்வு, உபாயம், கதி, சமர்த்து, புத்தி.
விரகு }
விரக்தன் - விரத்தம்.
விரக்தன் - பற்றற்றவன்.
விரசகம் - அக்கி, ஓரரக்கன், சந்திரன், சூரியன்.
விரசம் - நிந்தை.
விரசனம் - இணைத்தல், உண்டாக்கல், போதல்.
விரஜன் - ஜாதகர்ணன், சேஷன், துவஷ்டா புத்திரன்.
விரசாகிரம் - தொழுவம்.
விரசுதல் - நெருங்குதல்.
விரஜை - பரமபதத்திப்புறத்தியாறு.
விரச்சனம் - கரவாளம், வெட்டுதல்.
விரஞ்சன் - பிரமன்.
விரடம் - புயம்.
விரட்டுதல் - மிரட்டுதல்.
விரணகம் - ஆமணக்கு.
விரணகிருது - சேங்கொட்டைமரம்.
விரணம் - ரணம், புண், விழல்.
விரணம்போக்கி - ஆடுதின்னாப்பாளை.
விரதகற்பம் } ஒருநூல்.
விரதகுச்சம் }
விரதமஞ்சரி }
விரதங்காத்தல் - நியமம்பேணல்.
விரதசங்கிரகம் - விரதத்திற்குச் சங்கற்பித்தல்.
விரதநிண்ணயம் - விரதவிதி.
விரதநியமம் - தீட்சித்தல்.
விரதநிறுத்தல்-விரத நிறைவேற்றுதல்.
விரதபங்கம் - விரதபின்னம்.
விரதம் - ஆணை, காமநோய், தவம் இது புண்ணியமேழினென்று, தின்றல், பொய், வேறுபாடு.
விரதயம் - ஒளி.
விரதர் - தவத்தோர், துறவோர்.
விரதலோபனம் - சங்கற்பமீறுதல்.
விரதவுத்தியாபனம் - விரதமுடித்தல்.
விரதன் - யோகி.
விரதாசரணம் - விரதானுட்டிப்பு.
விரதாதேசம் - உபவீதம்பூணல்.
விரதாநுஷ்டானம் - விரத மேற்கொள்ளல்.
விரதி - ஒழிவு, துறவி, துறவு, முறை.
விரதோபவாசம் - உபவாசம், விரதானுட்டிப்பு.
விரத்தம் - துறவு, வெறுப்பு.
விரத்தன் - விரதி.
விரத்தி - துறவு, விருத்தி.
விரயம் - பேதி, மிகுசெலவு.
விரலணி - மோதிரம்.
விரலம் - தூரம், நெகிழ்வு, நெற்றி, புளித்த தயிர்.
விரலேவறு - ஒருவகைத் தோற்கருவி.
விரல் - அங்குலி.
விரல்கொடி - நாயுருவி.
விரவலவர் - பகைஞர்.
விரவலர் - கலத்தல், பொருதல்.
விரவி - வெள்ளரி.
விரவு - கலப்பு, விரவென்னேவல்.
விரவுதல் - அணுகல், கலத்தல்.
விரவித்திணை - பொதுத்திணை.
விரவுப்பெயர் - பொதுப்பெயர்.
விரளம்-தயிர், நீக்கம், நெகிழ்வு, மிருது, விசாலம்.
விரற்சுற்று - நகச்சுற்று.
விரற்புட்டில் - விரலுறை.
விராகநிலை - வைராக்கியநிலை.
விராகம் - வெறுப்பு.
விராகன் - அருகன், ஒரு பொற்காசு, இச்சையற்றவன், கடவுள்.
விராடம் - ஒருதேயம்.
விராடன்-மச்சதேசாதிபதி, இவன்தேசத்திலேயே பாண்டவர்கள் தமது அஞ்ஞாதவாசகாலத்தைக் கழித்தார்கள், இவன் மகளாகிய உத்தரையை அர்ஜுநன் புத்ரனாகிய அபிமந்யு பாணிக்ரஹணம் பண்ணினன், பாண்டவர்களுக்கு பாரதயுத்தத்திலே விராடராஜன் பெருந்துணையாயிருந்தவன்
விராட்டு - அழகு, சுவாயம்புவமனுவின் பிதா மாதா. அது பிரமன் தான்தானேஸ்திரீபுருடரூபமாய்த்தோற்றியது, பரப்பிரமம், பிரமன், புள்ளரசு.
விராணி - யானை.
விராநகம் - பீடை.
விராதம்-எதிரிடை, கலக்கடி, கூட்டம், கைவேலை, தடை, நான்வேலை.
விராதன் - ஒருதைத்தியன், ஓரரசன். முற்காலத்தில் தம்புரு என்னும் கந்

தருவன் குபேரன் சாபத்தால் ராக்ஷசனுகி இப்பெயர்பெற்ருன். இவன் ஸ்ரீராமர் தண்டகாரணியஞ் சென்றபோது அவரால் கொல்லப்பட்டவ[ன்.
விராதானம் - வருத்தம்.
விராதினன் - கூலிக்காரன், வேலையில்லோன்.
விராத்தம் - இறைப்பணம், தண்டல்.
விராத்தியன் - சாதிதருமம் விட்டவன். பிரதிலோமத் தந்தைக்கு மனுலோமத்தாய்க்கும் பிறந்தவன்.
விராமம் - இளைப்பாற்றி, ஒற்றெழுத்து, தரிப்பு, முடிவு.
விராயம் - தளபாடம்.
விராய் - தலவாடம், விறகு.
விராலம் - பூனை.
விராலி - ஒருமலை, ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரம், ஒருசெடி.
விரால் - வரால்.
விராவம் - ஒலி.
விராவி - சந்திரனுலகு.
விராவுதல் - விரவுதல்.
விராளி - விரகல்.
விராறு சாக்கணம்.
விரி - பொதியெருதிலிடுஞ்சேணம், விரியென்னேவல்.
விரிகண் - ஒரு கண்ணோய்.
விரிகி - நெல்.
விரிகுளம்பு - கவைக்குளம்பு.
விரிக்கட்டு - சேணம்.
விரிசநன் - பிரமன்.
விரிசற்குளம்பு - கவைக்குளம்பு.
விரிசா - கையாந்தகரை.
விரிசிகை - முப்பத்திரண்டு கோவையுள்ள மாதரிடையணி.
விரிச்சு - நன்னிமித்தம்.
விரிச்சிகம் - விருச்சிகம்.
விரிச்சிகன் - சூரியன்.
விரிச்சியூர்நன்னாகனுர் - புறநானூறுபாடின புலவருளொருவர்.
விரிஞ்சகம் - காற்று, பரமாத்மா.
விரிஞ்சனன் } பிரமன்.
விரிஞ்சன்
விரிஞ்சி-சிவபிரான், பிரமன், விஷ்ணு
விரிதல் - அகலுதல், அலர்தல், ஒளிசெய்தல், பரவல், விசாலித்தல்.
விரிதூறு - புதர், பெருந்தூறு.

விரித்தல்-அலர்த்தல், சொல்லல், பரப்பல், பூசுதல், விரிவாக்குதல், விளக்குதல்.
விரித்துரை - விரித்தியுரை.
விரிபுலப்பொருட்டற்குறிப்பணி - ஓரலங்காரம் அது உபமானத்திற்கும் உபமேயத்திற்கு முரிய காரணத்தானுபமேயத்தை யுபமானமாகச் சொல்லுதல் (உ-ம்) காமத்தீப்புகைபோலுமிருள்.
விரிப்பூடு - பற்படாம்.
விரிப்பு - விரித்தல்.
விரிமுரண் - இசைப்பாவகையினொன்[று.
விரியலர் - மலர்ந்தபூ.
விரியல் - ஒளி, பரவல், மலர்த்தல், விரிந்தது.
விரியன் - ஒரு பாம்பு.
விரியுரை - அகலவுரை.
விரியுருவகம்- மாட்டேற்றுச்சொல்விரிந்து நிற்பவுருவகிப்பது (உ-ம்) கொங்கை முகையாக, மென் மருங்குல் கொம்பாக, அங்கை மலராவடிதளிராத் திங்கள் அளிநின்ற மூரலணங்காமெனக்கு வெளிநின்றவேனிற்றிரு.
விரியுவமை - உவமானமும் உவமேயமும், பொதுத்தன்மையும் உவமை யுருபும் விரிந்து வருவது.
விரியூர்நக்கனுர் - புறநானூறுபாடினபுலவருளொருவர், விரியூர் அக்கன் எனப்படுவாரும் இவரே யென்பர் சிலர்.
விரிவு - அகலம்.
விரீகி - அரிசி, காரேலம், நெல்.
விரீகிபாகாரம் - களஞ்சியம்.
விரீடம் - வெட்கம்.
விரீடனம் - மரியாதை, வெட்கம்.
விருகதேசகன் } இவர்கள் சிஷ்டி புத்திரர்கள்.
விருகலன்
விரிகத்திரணம் - மூக்கில்.
விருகந்தண்டு - ஒருபயிர்.
விருகம் - ஓநாய், காகம், செந்நாய், நரி, மிருகம்.
விருகற்பதி - வியாழம்.
விருகற்பாடலி - விளா.
விருகற்பாலம் - ஆல்.
விருகற்பானு - தீ.
விருகன் - இருகன் புத்திரன், பாருகன் தந்தை, சுகன் என்னும் தைத்தியன்

புத்திரன், வசுதேவன்தம்பி, வசுதேவன் தம்பியாகியவர்க்கசன்புத்திரன்.
விருகாராதி } சிங்கம், நரி, நாய், புலி,
விருகாரி } வெருகு.
விருகு - ஒருமரம், வெருகு.
விருகோதரன் - பிரமன், வீமன்.
விருக்கண்டம் - ஆராமம்.
விருக்ககாதனம் - கோடாலி, வாய்ச்சி.
விருக்ககுக்குடம் - காட்டுக்கோழி.
விருக்கசம் - பல்லி.
விருக்கசரம் - குரங்கு, கோட்டில்வாழ் விலங்கு.
விருக்கசஞ்சாரி - குரங்கு.
விருக்கசாயிகை - அணில்.
விருக்கசாயை - மரநிழல்.
விருக்கதலம் - மரவடி.
விருக்கதேனி - புல்லூரி.
விருக்கநாதன் - அரசு.
விருக்கநிவாசம் - மரவாசம்.
விருக்கபவனம் - மரப்பொந்து.
விருக்கபாகம் - விருக்கநாதன்.
விருக்கபேதி - உளி.
விருக்கம் - விருட்சம்.
விருக்கவாடிகை - நந்தனவனம்.
விருக்காக்கிரம் - மரநுனி.
விருக்காங்கிரி - மரவடி.
விருக்காலபம் - பட்சி.
விருக்காவாசன் - தவத்தி.
விருக்கிணன் - கார்த்த வீரியார்ச்சுநன் பௌத்ரன், மநுபுத்திரன், வ்ருஷ்ணி தந்தை.
விருக்கிதம் - யானைபிளிறொலி.
விருசகத்தி - விரியறுகு.
விருசம் - இஞ்சி, எலி.
விருசனம்-ஆகாயம்,உரோமம்,பாவம்.
விருசினம் இக்கட்டு, உரோமம், பாவம்.
விருசு - ஒருமரம்.
விருச்சலாபம் - நெருஞ்சில்.
விருச்சி - சொன்னிமித்தம்.
விருச்சிக்காணி - தேள்கொடுக்கி.
விருச்சிகம் ஓரிராசி,ஒருமாதம்,சாரணை, கண்டு, மயிர்க்குட்டி, வண்டு, புழு.
விருஜினவந்தன்-குரோஷ்டு புத்திரன்.
விருடசத்துரு - விட்டுணு.
விருஷணம் - பீசம்.
விருடத்துவசன் - சன்மார்க்கன், சிவபிரான், விநாயகன்.

விருடபக்தி - தாரகசநிஐந்தினொன்று.
விருடபதி - கட்டாக்காலி, சிவபிரான்.
விருடபத்துவசன் - சிவபிரான்.
விருடபம் } எருது, காது, யானைக்
விருஷபம் } காது, வாசகத்திறம்.
விருடபாருடன் - சிவபிரான்.
விருடன் - இடபம், எலி, ஓரிராசி, சன்மார்க்கன், தருமம், மயிற்றோகை, மேன்மை.
விருடலம் - உள்ளி, குதிரை.
விருடலி - கீழ்மகள், பன்னிரண்டாண்டிற் பெண், பூப்பதாரி, மலடி.
விருடலோசனம் } எலி.
விருடலோசனன் }
விருடவாகனன் - சிவபிரான்.
விருடன் - கன்னன், காமன், சத்துரு, சிவபிரான், விட்டுணு.
விருடாகபாயி - இலக்குமி, கவுரி, சசி, சுவாகை.
விருடாகாரன் - பூனை.
விருடாங்கன் சிவபிரான்,தேவபத்தன்.
விருட்சசரம் - குரங்கு.
விருட்சநாதன் } அரசு.
விருட்சபாகன் }
விருட்சம் - விருக்கம்.
விருட்சராஜம் - அரசமரம்.
விருட்சவாடிகை - தொல்லை, சோலை.
விருஷ்டி - மழை.
விருஷ்டிலோபம் - மழைக்குறை.
விருதம் - அழுதல், வெள்ளெருக்கு.
விருதர் - படைவீரர்.
விருதா - பயனின்மை, பிழை, வீண்.
விருதாதானம் - அதமதானம்.
விருதி - கேட்குதல், சூழ்தல், தெரிந்தெடுத்தல், மறைத்தல்.
விருது - அடையாளம், கொடி, வமிசம், விரதம், வெற்றி.
விருதுக்கொடி - வெற்றித்துவசம்.
விருதுமோதிரம் - அரசன் வீரங்கல்வி முதலிய கண்டு கொடுக்குமோதிரம்.
விருத்தகங்கை - கோதாவரி.
விருத்தகிரி - விருத்தாசலம், பழமை.
விருத்தசங்கம் - முதியோர்கூட்டம்.
விருத்தசர்மன்-தசரதன்புத்திரன்,இலீயன் என் று ம் சொல்லப்படுவன், இவன் புத்திரன் விசுவசகன். [ணம்.
விருத்தசேவை - விருத்தாதிகார வந்த

விருத்ததை - எதிரிடை, ஒவ்வாமை, வன்மம்.
விருத்தத்தானம் - செய்யுட்டானப்பொருத்தத்திலொன்று.
விருத்தத்துவம் - முதிர்வயசு
விருத்தபம் - மிளகு.
விருத்தபன்னி - பங்கம்பாழை.
விருத்தபாவம் - முதிர்வயசு.
விருத்தபுட்பம் - கடம்பு.
விருத்தபேதம் ஓரளவைப்பிரமாணம்.
விருத்தபோசனம் - விருத்தான்னம்.
விருத்தப்பண் - விருத்தராகம்.
விருத்தப்பிரபிதாமகன்-முப்பாட்டன்.
விருத்தம் - அறிவு, ஆமை, ஒவ்வாநியாயம், ஒவ்வாமை, ஓரளவைப் பிரமாணம், கடினமானது, கிழத்தன்மை, குவியல், சிற்பநூன்முப்பத்திரண்டிலொன்று, சூது தாயத்தொன்று, சூழ்ந்தது, செய்தி, தடை, தெரிந்துகொள்ளப்பட்டது, தொழில், நடக்கை, நடக்தேறினது, நிலக்கடம்பு, நூதனம் படித்தது, பழமை, பாவினத்தொன்று, பிரபலிய முள்ளது, பெலன், முதுமை, மூடினது, மூப்பு, வட்டம், விரோதம், வெறுப்பு, வேறுபாடு.
விருத்தர் - கிழவர், மேலோர்.
விருத்தவிலக்கணம் - ஒருபிரபந்தம்.
விருத்தன்-அதிகாரி, கிழவன், படித்துத்தேறினவன் முதிர்ந்தவன்.
விருத்தசூத்ரன் - ஐயத்ரான் தந்தை.
விருத்தாங்குலி - பெருவிரல்.
விருத்தாசலம்-ஒருசிவஸ்தலம் பழமலை.
விருத்தாசிரமம் - திரிதல்.
விருத்தாந்தம் - இளைப்பாற்றி, கதை, காரியம், சுபாவம், செய்தி, முழுமை, வர்த்தமானம், விதம்.
விருத்தாப்பியம் - கிழத்தன்மை.
விருத்தாரணியம்-ஒரூர், காவியம், வாசிக்குமிடம்.
விருத்தான்னம் - பழஞ்சோறு.
விருத்தாதீபகம் - ஓரலங்காரம் அது "வரிவண்டோலு மதுலரம்பாகப், பொருவெஞ் சிலைக்குப்பொலிவும், பிரிவின், விளர்க்கு நிறமுடையார் தம்மேன்மெலிவும், வளர்க்கு மலையாநிலம்" எனவரும்.
விருத்தி அடிமை, அபராதம், இலாபம், ஏறுதல், ஒழுக்கம், ஓரலங்காரம், ஒருமை, குவியல், கூட்டம், சந்தோஷம், சித்தி, செல்வம், தரித்தல், தொழிலிலாபம், நல்லொழுக்கம், நித்தியயோகத்தொன்று, பலன், பாக்கியம், பிழைப்பு, போக்கு, மருது, வட்டம், வளர்தல், விபரம், வியாபாரம்.
விருத்திசந்தி நிலையொழியுறநி, அகார ஆகாரங்கண்முன் ஏகார ஐகாரம்வரில் ஐகாரமும் அவ்விரண்டிலொன்றன்முன் ஓகார ஔகாரம் வந்தால் ஔகாரமும் நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெடத்தோன்றல்.
விருத்திதானம் - சீவனங்கொடுத்தல்.
விருத்தியர் - அடிமைகள்.

விருத்திரகன்
விருத்திரத்திரு
விருத்திரத்துவிஷன்
விருத்திரதாரி
} இந்திரன்.

விருத்திரம் - இருள், ஒருமலை, சத்தம், முகில்.

விருத்திரவிரோதி
விருத்திரவைரி
} இந்திரன்.

விருத்திரன் - இந்திரன், ஓரிராக்கதன், சத்துரு, ஓரசுரன். துவஷ்டாதனது மூத்த மகனாகிய விசுவசொரூபனை இந்திரன் கொன்றானெனக் கோவித்து அவனை வெல்லும் பொருட்டுத் தவஞ்செய்து பெற்றபுத்திரன் இவன். இவ்விருத்திரன் மேகங்களைப் பிடித்துச் சிறையிட்டபோது இந்திரன் நெடுங்காலம் போர்செய்து இவனைக் கொன்றொழித்தான்.
விருத்திராரி - இந்திரன்.
விருத்திரூபம்-துலரூபம், வட்டவடிவு.
விருத்தை - கிழவி, இது பெண்பருவநான்கில் ஒன்று.

விருத்தோக்கம்
விருத்தோட்சம்
} எருது.

விருந்தம்-காம்பு, குவியல், கூட்டம், மண்பாண்ட முதலியவற்றின் பாதம், முலைக்காம்பு, விலங்கின்கூட்டம், வேம்பு.
விருந்தர் - அதிதியர், புதியவர்.
விருந்தனை - மனைவி.
விருந்தாகம் - சேம்பு.
விருந்தாரகன் - தேவன் பிரதானி.

விருந்தாரம்-அழகு, மேன்மை.
விருந்தாட்டு - நித்தல்விழாவன்றியாண்டுதோறுஞ் செய்யும் விழைவு.
விருந்திடல் - விருந்துகொடுத்தல்.
விருந்திட்டநாதர் - திருக்கச்சூராலக்கோயிலிலே யெழுந்தருளியிருக்கும் சுவாமி பெயர்.
விருந்தினர் - அதிதியர், புதியோர்.
விருந்து - புதிதாய்வந்தோர்க் குணவுகொடுத்தல், புதுமை
விருந்துபுறந்தருதல் - விருந்தினர்க்கீயவஞ்சல்.
விழுந்துவனப்பு - இப்பொழு துள்ளாரைப்பாடுவது.
விருந்தெதிர்கோடல் - விருந்தினரையெதிர்கொள்ளல்.
விருந்தை - சலந்தரன்மனைவி, துளசி
விருந்தோம்பல் - வேளாண்மை மாந்தரியல்பினொன்று.
விருபன் - வெள்ளொலி.
விருப்பம் - ஆசை, பிரியம்.
விருப்பின்மை - அவாவின்மை இதுஅறத்துறுப்பி னொன்று.
விருப்பு - ஆசை, பிரியம்.
விருமன்னியம் - சேங்கொட்டை.
விரும்பல் } ஆசைப்படுதல், கருத்து
விரும்புதல் }
விருவிருத்தல் - சீக்கிரக்குறிப்பு.
விருவிருப்பு நஞ்சுமுதலியவேறுங்குறி.
விருவிரெனல் - சீக்கிரக்குறிப்பு.
விருனை - கடிவாளப்பூண்.
விருஷகன் - சகுனிதம்பி
விருஷசேநன் - கர்ணன்புத்திரன், இவன்அருச்சுநனாற் கொல்லப்பட்டவன்
விருஷணன் - கார்த்த வீரியார்ஜுநன் மூன்றும் புத்திரன்.
விருஷதர்ப்பன் - சிபிமூத்தமகன், உசீநாதேசத்தரசன்.
விருஷத்திரன்-இக்ஷ்வாகுதம்பி, வைவசுவதன் புத்திரன், இவன் குருசாபத்தால் சூத்திரனாகி பிறகு பிராமணனாயினான்.
விருஷபகிரி - தற்காலம் ரத்நகிரிஎனப்படும். இது மகததேசத்திலேவராஹ பர்வதத்துக்கருகேயுள்ளது. திருமாலிருஞ்சோலைமலை, இது தென்மதுரைக்கருகேயுள்ளது, இதிலெழுந்தருளியிருக்கும் சுவாமியெயர் அழகர் என்றும் அலங்காரர் என்றும் பிரசித்தம், இதில் சந்திர விமாநம், நூபுரநதி (சிலம்பாறு) முதலியவையுண்டு, இதன்பெருமை சொல்லுக்கடங்காது, இந்த இடபகிரியிலெழுந்தருளியிருக்கும் பெருமாள் விஷயமாக வேப்பத்தூர் சங்கத்தாரால் செய்யப்பட்ட கலம்பக மொன்றுண்டு. அதற்கு அழகர் கலம்பகமென்று பெயர், கலம்பகங்கள் பலவற்றுள்ளும் இது சொற்சுவைபொருட்சுவைகளால் மிகவுஞ் சிறந்து விளங்குவது, திருக்குறளுக்குஉரையிட்ட பதின்மருள்ளே சிறந்த புலவரொருவருக்குப் பரிமேலழகர் என்னும் சிறப்புப்பெயர்வாய்த்ததும் இந்த திவ்விய தேசத்திலேயே யாமென்பது எல்லாருக்குந்தெரிந்த விஷயம்.
விருஷபர்வன் - தானவர்க்கதிபதி, சுக்கிரன்சிஷ்யன், இவன் காசிபனுக்குத் தநுவினிடத்திற் பிறந்த புதல்வன், இவன் மகளாகிய சர்மிஷ்டை சுக்கிரன் மகளாகிய தேவயானையை அவமதித்துப்பேசினள். அதை யறிந்த விருஷபர்வன் அந்தச் சர்மிஷ்டையைத் தேவயானைக்கு ஏவற்பெண்ணாகுகவென்று சபித்தான். அவ்வாறு அவள் அடியவளாயிருக்குங் காலத்தில், யயாதி யென்பவன் தேவயானையை மணம்புரிந்தபோது சர்மிஷ்டையையும் உடன் கொண்டுபோய் பிறகு அவளையு மனைவியாக்கிக்கொண்டான்.
விருஷரதன் - கர்ணன் தம்பி.
விருஷன் - சிருஞ்சயன்ராஷ்டிரபாலிகை வயிற்றிற்பிறந்த புத்திரன்.
விருஷ்ணி விருக்கிணன் புத்திரன் விதர்ப்பனுடைய இரண்டாம் புத்திரன துவமிசத்துச் சாத்துவனது நான்காம்புத்திரன், இவன் வமிசத்தோர் வ்ருஷ்ணர் எனப்படுவர், சுமித்திரன் யுதாசித்து என்பவர் இவன் புதல்வரே, அந்தகன் பௌத்திரன், குரூரன்புத்திரன், பஜமாநன் புத்திரருள் ஒருவன்.
விருட்சணம் - ஆணை, குற்றச்சாற்று.

விருபகரணம் - சந்தக்கேடு செய்தல்.
விருபகரூபகம் - ஓரலங்காரம் அது ஒரு பொருட்குக்கூடாத தன்மை பலவு ங்காட்டி யுருவகஞ் செய்வது (உ-ம்) தண்மதிக்குத் தோலாது தாழ்தடத் துவைகாது மலரும் அரிவைவதனும் புயம்.
விருபம் - அந்தக்கேடு, குணபேதம், விகாரரூபம், வேற்றுமை.
விருபன் - இரண்டாம்அம்பரீஷன்மகன்
விருபாக்கன் } சிவபிரான், பன்னொரு
விருபாட்சன் } ருத்திரர்களி லொருவன்.
விருபாக்ஷன் - மாலியவந்தன் புத்திரன் இவன் சுக்ரீவனாற் கொல்லப்பட்டவன், சதுபுத்திரன்.
விரூபி - யமன்றேவி, வடிவற்ற ஆள்.
விரூபை - இயமன்மனைவி.
விரேகம் - கழித்தல்.
விரேசனம் - கழித்தல், பேதி, பேதிமருந்து விடுவித்தல்.
விரேசித்தல் - கழிதல்.
விரேபம்-ஆற்றப்பொது, ஒரறு.
விரை - கலவைச்சாந்து, தூபம், நறும்புகை, பூந்தேன், வாசனை, வித்து,விரையென்னேவல்.
விரைதல் - விரைவு, விரைவு செய்தல், வெயில், வேண்டல்.
விரைத்தல் - விதைத்தல்.
விரைவு - வேகம்.
விரோகம் - பொந்து.
விரோசநசுதன் - மஹாபலி.
விரோசநி - ஒருநதி.
விரோசனசுதன் - வாலி.
விரோசநன் - ப்ரஹலாதன்புத்ரன், பலிச்சக்ரவர்த்திக்குற் றந்தை.
விரோசனன் - அக்கினி, சந்திரன், சூரியன், பலிச்சக்கிரவர்த்தி தந்தை.
விரோதச்சிலேடை - முன்னர்ச்சிலேடித்தவந்தவற்றைப் பின்னரும் விரோதிப்பச் சிலேடிப்பது.
விரோதம் - அதிட்டவீனம், எதிர், ஒவ்வாமை, ஓரலங்காரம், சூழ்தல், பகை போர், வன்மம், வேற்றுமை.
விரோதவுவமை ஓரலங்காரம் அது உபமானோபமேயங்கட்மு ளொன்றற்கொன்றுபகையனவெனக்கூறுவது, (உ-ம்) செம்மரை மலருந் திங்களுநம்முகமுந் தம்முட்பகை விளக்குந் தன்மையவே.
விரோதனம் - எதிரிடை, ஒவ்வாமை, கோபமூட்டல், தடை, பகை.
விரோதாபாசம் - ஓரலங்காரம்.
விரோதாலங்காரம் - மாறுபட்ட சொல்லானும் பொருளானு மாறுபடுந்தன்மை விளைவு தோன்றவுரைப்பது.
விரோதி - இருபத்து மூன்றாவதாண்டு எதிரி, சத்துரு, விரோதியென்னேவல். [ண்டு.
விரோதிகிருது - நாற்பத்தைந்தாவதா
விரோதித்தல் - பகைத்தல், வேற்றுமைப்படுதல்.
விரோதோத்தி - எதிர்ப்பேச்சு.
விரோஹணன் - நரன்புத்திரன்.
விலகல் } எறிதல், நீங்கல்.
விலகுதல் }
விலக்கணம் - திருட்டாந்தமற்றது, வித்தியாசம்.
விலக்கம் - மாற்றல், விலங்குந்தன்மை.
விலக்கு-தவிர்ப்பு, மறிப்பு, வழு, விலக்கென்னேவல்.
விலக்குதல் - தவிர்த்தல், மறித்தல்.
விலக்குருவகம் - ஓரலங்காரம் அதுஉருவகிக்கிற பொருளினியல்பை விலக்கி உருவகிப்பது (உ-ம்) மலையிற்பயிலாமட மஞ்ஞை.
விலக்குவமை-ஓரலங்காரம் அது முன்னியமித்த வுவமையின் குறைகளையெடுத்துக்காட்டி யுவமைப்பொருட்கு ஒப்பல்லவென்பது படப்புணர்ப் [பது.
விலங்கரசு - சிங்கம்.
விலங்கிறை - சிங்கம்.
விலங்கல் - கலங்கனீர், மலை, விலகுதல்
விலங்கலிறை - மலையறையன்.
விலங்கு - தடை, தளை, மிருகம், விலங்கென்னேவல்.
விலங்குதல்-எறிதல், துலங்கல்,விலகல்.
விலசனம் - விநோதவிளையாட்டு.
விலசிதம் - இலீலாவிநோதம்.
விலட்சணம் - மேன்மை, பிங்கம்.
விலட்சத்துவம் - அடையாளமின்மை, அதிசயம்,பகுத்தறிவின்மை, வெட்க [ம்.
விலட்சயம் - அபாவவியல்பு.

விலத்தல், விலத்துதல் - நீக்குதல், நீங்குதல்.
விலபனம் - மழலை.
விலம் - அகில், குகை, பொந்து.
விலம்பனன் - தாமதம்.
விலம்பம் - தாமதம், தூங்குதல், நன்கொடை, கொடுத்தல்.
விலம்பிதம் - தாமதம்.
விலயம் - அழிவு, உருக்குதல், உலகாந்தம்.
விலயனம் - அகற்றுதல், அழித்தல், உருகுதல்.
விலா - பழு.
விலாக்கொடி - எலும்பு.
விலாங்கு பாம்புபோன் ஒருவகைமீன்.
விலாசகானனம் - விநோததானம்.
விலாசமந்திரம் - விநோதாலயம்.
விலாசம் - அழகு, ஆடவர்மகளிர் விளையாட்டு, இலீலாவிநயம், நாணயக்குறிப்பு, பத்திரிகையின்புறவெழுத்து, பொழுதுபோக்கு, விளையாட்டு, விநோதம், வேடிக்கை.
விலாசனை - மகளிர்விளையாட்டு.
விலாசி - காமன், சந்திரன், சிவபிரான், திருமால், தீ, பாம்பு.
விலாசினி - பெண், வேசி.
விலாடித்தல் - இரட்டைவரிகொடுத்தல்.
விலாத்தோரணம் - என்பு.
விலாபம் - கனவுகண்டிரங்கல், புலம்பல்
விலாமிச்சை, விலாம்மிச்சை - ஒரு வாசனைப்புல்.
விலாய் - சட்டம்.
விலாலம் - இயந்திரம், பூனை.
விலாழி - குதிரைவாய்நுரை, யானைக்கையுமிழ்நீர்.
விலாலம் - ஆண்பூனை, பூனை.
விலீனம் - அழிந்தது, உருக்கப்பட்டது, கலக்கப்பட்டது.
விலூபன்னி - பெருங்குரும்பை.
விலேசயம் - எலிகுகை, பாம்பு, முயல்.
விலேபம் - சாந்து, பூச்சு.
விலேபனம் - பூசுதல், வாசனை.
விலேபி - கஞ்சி.
விலை - கிரயம், விற்றல்.
விலைகட்டுதல் - விலைமதித்தல்.
விலைகாரர் - கொள்வோர்.
விலைகுறித்தல் - விலைமதித்தல்.
விலைகூறுதல் - விலையைப் பலமுறையுஞ்சொல்லல்.
விலைக்கிரயம் - விலை.
விலைச்சரக்கு, விலைச்சாமான் - விலைப்படுத்த வைத்திருக்கும்பொருள்.
விலைஞர் - செட்டிகள்.
விலைதிருதல், விலைதீர்தல், விலைதீர்த்தல் - விலைநிதானித்தல்.
விலைபேசுதல் - விலைசொல்லல், விலைநிதானித்தல்.
விலைபோடல் - விலைகுறித்தல்.
விலைபோதல் - விலைப்படல்.
விலைப்படல், விலைப்படுதல் - விற்கப்படல்.
விலைப்படுத்தல் - விற்குதல்.
விலைப்பண்டம் - விலைப்பொருள்.
விலைப்பருவம் - விலையின்முறைமை.
விலைமகள் - வேசி.
விலைமானம் விலைப்படுதற்கானமதிப்பு.
விலையாளர் - விலையிடுவோர்.
விலையுணி - அலட்சியமானஆள்.
விலையுயர்தல் - விலையதிகப்படல்.
விலைவைத்தல் - விலைகுறித்தல், விலையேற்றுதல்.
விலோகணியதை - அழகு.
விலோகனம் - பார்வை.
விலோசனபாதம் - பார்வை.
விலோசநம் - கண், பார்வை.
விலோசனம்பு - கண்ணீர்.
விலோசனஹீநன் - குருடன்.
விலோடனம் - உருளுதல், கலக்குதல்.
விலோடிதம் - மோர்.
விலோதம் - துகிற்கொடி, பெண்மயிர், மயிற்குழற்சி.
விலோதனம் - துகிற்கொடி, பெருங்கொடி.
விலோபம், விலோபனம் - அழிவு, இழுத்தல், கலக்குதல், புகழ்ச்சி, மயக்கம்.
விலோமதநயன் - குரூரன் பௌத்திரனாகிய வ்ருஷ்ணி புத்திரன்.
விலோமத்திரைராசிகம் - குறைக்கு முத்தொகைவினா.
விலோமம் - நீரியந்திரம், நீர், பாம்பு, பின், முறைபிறழ்த்தல்.
விலோமவிதி - ஒழுங்குதப்பின முறை.
விலோமன் - வருணன்.
விலோலதை - உறுதியின்மை.
விலோலம் - சஞ்சலம்.

வில்-ஒளிசேரன்கொடி,தனு,மூலநாள், வில்லென்னேவல்.
வில்கண்டம் - பலபந்தம், மூட்டு.
வில்ஞாண் - விற்கயிறு.
வில்லங்கம் - தடை, பலபந்தம், மூட்டு, வியாச்சியம்.
வில்லடை - இடையூறு, எதிர்த்தனம்.
வில்லண்டம் - வில்கண்டம்.
வில்லம்-குகை, பெருங்காயம், வில்வம்.
வில்லவன் - சேரன்.
வில்லவன்கோதை-செங்குட்டுவன் மாதிரி.
வில்லாச்சிரமம் - விற்பயிற்சி.
வில்லாண்மை - வில்வல்லமை.
வில்லார் - வில்லுடையார், வேடர்.
வில்லாளி - அருச்சுனன்.
வில்லி-மன்மதன், விசையன், விற்போராளன், வீரபத்திரன்.
வில்லிபுத்தூரன்-பாரதம் தமிழிற் செய்த ஒரு கவிஞன்.
வில்லியர் - வில்வல்லோர்.
வில்லுகன் - சிற்றுமுட்டி.
வில்லுவம் - வில்வமரம்.
வில்லூதி - ஒரு சகலாத்து.
வில்லேருழவர் - படைவீரர், வில்லார்.
வில்லை - அடை, அண்டை, தகட்டு, வட்டம், வட்டித்தது, வில்வம்.
வில்லைமுருகு - ஒருகாதணி.
வில்வஞ்சாத்துதல்-தெய்வங்கட்கு வில்வஞ்சாத்தி யருச்சித்தல்.
வில்வமாலை - பொன்வெள்ளிகளாற்செய்யு மோர்வகைமாலை.
வில்வம்-ஒருமரம்,இது, தசமூலத் தொன்று.
வில்வல்லவன்-வில்லாச்சிரமி.
வில்வநாதர் - திருக்கொள்ளம் பூதூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வில்வநேசர்-திருவைகாவிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வில்வளைவு, வில்வாங்கல் - வில்லாகாரமான வளைவு.
வில்வித்தை - வில்லாச்சிரமம்.
விவகரித்தல் - நியாயஞ்சொல்லுதல்.
விவகலனம், விவகலிதம் - கழிவுக்கணக்கு.
விவகாசம் - சிரிப்பு.
விவகாரதரிசனம் - நீதம் விசாரித்தல்.
விவகாரஸ்தானம் - நீதாசனம்.
விவகாரம்-நீதியதிபதித்துவம்,பிணக்கு, முப்பொருளினொன்று அது பொருளீட்டல்,தொழில்,வழக்கு,வளமை.
விவகாரவிதி - நியாயப்பிரமாணம்.
விவகாரவேலை - தொழில்செய்யுங் காலம்.
விவகாரி - வழக்காளி.
விவகாரிகம் - வழக்கம், வழக்கு.
விவசம்-கீழ்ப்பட்டது, பரவசம், பற்றிலாமை, மரணவிருப்பம்.
விவசாயம் - கிருஷி, பயிர்த்தொழில், வேளாண்மை.
விவசுதன் - சூரியன், த்வாதசாதித்தியருளொருவன், இவன் தந்தை காசிபன் இவன் தாய் அதிதி, இவன் விசுவகர்மன் புத்திரிகளாகிய சஜ்ஞாதேவி சாயாதேவியென்னும் இருவரையும் மணம்புரிந்தான் இந்தவிசுவதனுக்கு, வைவசுவதமநு, யமன், சநி என்னு மூன்று புத்திரரும் யமுனை, தபதி என்னும் இரண்டு புத்திரிகளும் பிறந்தார்கள்.
விவஸ்வதி - சூர்யநகரம்.
விவட்சை - விருப்பம்.
விவதம் - காத்தண்டு, குவித்தல், சுமை, தெரு.
விவத்து - பவித்து.
விவஸ்தை - பகுத்தறிவு.
விவத்தை - ஆபத்து.
விவம் - ப்ரகாசம்.
விவரணம் - விபரம்.
விவரநாலிகை - மூங்கில்.
விவரம் உட்டுளை, குகை, குறை, பிரிவு, வகை, விருத்தாந்தம்.
விவரிதம் - விபரிதம்.
விவரித்தல் - பகுத்துச்சொல்லல்.
விவருணம் - நிழ்ப்பு, அன்னிறம்.
விவர்ணன்-நீசன்,விவேகமில்லாதவன்.
விவர்த்தம்-ஆடல், கூட்டம், சுற்றி வருதல், தப்பிதம், திரிவு.
விவர்த்தரூபம் - மாயாரூபம்.
விவர்த்தனம்-சுழலல்,சுற்றிவரல்,திரும்புதல்,பிரித்தல்,புரளல், வருத்திப்பு.
விவாகம் - மணம்.
விவாகரணம், விவாசம், விவாசனம் - ஊருக்குப் புறப்படுத்தல்.
விவாதம் - சொற்கலகம், தருக்கம், வழக்காடுதல்.

விவாரம் - விரிதல்.
விவித்தம் - ரஹஸ்யம்.
விவிதம் - பலவிதம்.
விவிம்சன் - இரண்டாங் கனித்திரன் [தந்தை.
விவிருதி - விவரம்.
விவிருருதி - சுழலல், வருத்திப்பு.
விவேகசிந்தாமணி - ஓராகமநூல்.
விவேககுநிபம் - அறிவின்மை.
விவேகதை - புத்தி.
விவேகம் - ஆராய்வு, பகுத்தறிவு, புத்தி, மனக்கூர்மை.
விவேகி - சூரியன், புத்தியிருந்தோன்.
விவேகிதை - ஆராய்வு, பகுத்தறிவு.
விவேகித்தல் - மட்டுக்கட்டல்.
விவேசனம்-ஆராய்வு, பகுத்தறிவு.
விழம்பு - சோறு.
விழலர் - வீணர்.
விழலாண்டி - வீணன்.
விழல் - ஒருபுல், விழுதல், வீண்.
விழவு - திருவிழா, மிதுனவிராசி.
விழற்கட்டு - புல்வீடு, வீடு.
விழா - திருவிழா, மங்கலச்சடங்கு.
விழாவரிசி - ஒருமருந்து.
விழால் - விழாவரிசி [ல்.
விழி-கண், கண்மணி, விழியென்னேவ
விழிதரை - பாரம், வழிவகை.
விழித்தல்-அருண்டெழுதல், உருட்டிப்பார்த்தல், கண்டிறத்தல், பார்த்தல்.
விழிப்பு - எரிச்சரிக்கை, சாக்கிரதை, துயிலொழிவு, தெளிவு.
விழியழகர் - திருவீழிமிழலையிலேகோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
விழியன் - பெருங்கண்ணன்.
விழுவிழுங்கி - கண்ணேயுளொன்று.
விழுகுதல் - வீழ்தல்.
விழுகை - விழுதல்.
விழுக்காடு - குறைவு, சகட்டுவிலை, தூக்கம், வசக்கேடு, விதம்.
விழுக்கு - கிணம்.
விழுங்கல் - நுங்குதல், பட்சித்தல்.
விழுசுமை - வலுசுமை.
விழுதல் - சாதல், வீழல்.
விழுதி - ஒருமரம்.
விழுது - ஆலமரமுதலியவற்றின் வீழ், ஆழம்பார்ப்பதற்கானகயிறு, நெய்வார்க்குவியினென்று, வெண்ணெய்.
விழுத்தம்-கருஞ்சீரகம்.

விழுபாலை - ஒருகொடி.
விழுப்பம் - ஆசை, குலம், சிறப்பு, நன்மை, மேன்மை.
விழுப்பகை - பெரும்பகை.
விழுப்பழி - பெரும்பழி.
விழுப்பு - அனுசாரம், தீட்டு.
விழுப்புரம் - ஒரூர்.
விழுப்பொருள் - நுண்ணிய பொருள், மேன்மையான பொருள் [மை.
விழுமம்-இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்
விழுவிழெனல்-பசைபிடியாதிருத்தல்.
விழைச்சு-இளமை, புணர்ச்சி.
விழைதல் - ஆசைப்படல், ஆசைப்பெருக்கம், புணர்தல்.
விழைந்தோர் - கணவர், சிநேகிதர், விரும்பினோர்.
விழைவிலி - துறவி, விரக்தன்.
விழைவு - ஆசைப்பெருக்கம், உள்ளோசை, கலத்தல்.
விளகம் - சேங்கொட்டை. [ல்.
விளக்கணம்-பொடிவைத்து விளக்குத
விளக்கணி - ஓரலங்காரம், அது உபமானமு முபமேயமு மொருதருமத்தின்முடிதல். [ணை.
விளக்கம் - சந்திரன், தெளிவு, விசார
விளக்கல்- அழுக்குநீக்கல், ஒட்டவைத்தல், தெளிவித்தல், பிரகாசிப்பித்தல், மினுக்குதல்.
விளக்கொளி-பொருட்கொளி.
விளக்கறை - தீபமேற்றுமாடம்.
விளக்கீடு - ஒருதினம் அது சருவாலயதீபமேற்றுதல்.
விளக்கு அட்டமங்கலத்தொன்று அது ஆலாத்தி, ஒளி, சோதிநாள், தீபம், விளக்கென்னேவல்.
விளக்குக்கூடு-விளக்குத்தகழி.
விளக்குதல் - விளக்கல்.
விளக்குத்தகழி - விளக்ககல்.
விளக்குத்தண்டு - விளக்குத்தான்.
விளக்குநிலை - ஒருபிரபந்தம். அதுவேலும் வேற்றலையும் விலங்காதோங்கிய வாறுபோலக் கோலொடு விளக்குமொன்று பட்டோங்கு மாறேங்குவதாகக் கூறுவது.
விளக்குநிறுத்துதல் - விளக்கணைத்தல்
விளக்குப்பாதம் - விளக்குத்தண்டு.
விளக்குமாறு - துடைப்பம்.

விளக்கெண்ணெய் - ஆமணக்கெண்ணெய், விளக்கிடுமெண்ணெய், வேபபெண்ணெய்.
விளக்கேற்றல் - தீபம்வைத்தல்.
விளக்கொளி - தீபப்பிரகாசம்.
விளக்கொளிப்பெருமாள் - தீபப்பிரகாசர், இது வைணவ திருப்பதியில் ஒன்று. இங்கே நடைபெறும்; சர்வாதிகாரமும் செங்குந்த முதலியாருடைய தர்மம்.
விளங்கம் - வாயுவிளங்கம்.
விளங்கல் - ஒளிசெய்தல், தெளிதல்.
விளங்கிழை - பெண்.
விளங்கு - சிற்றாத்தை.
விளங்குதல் - விளங்கல்.
விளங்குதிங்கள் - சுக்கிரன்.
விளத்தல் - விபரித்தல், விலக்குதல்.
விளத்தாரு - அடம்பு.
விளத்துதல் - விலத்துதல்.
விளம்பம் - தாமதம்.
விளம்பரம் அறிக்கைப்பத்திரம், விளக்கம்.
விளம்பல் - சொல்லல், விசாரித்தல்.
விளம்பனம் - தாமதம். [டு.
விளம்பி-கள், முப்பத்திரண்டாவதாண்
விளம்பிதம் - தாமதப்பட்டு முற்றுதல், அது தாளப்பிரமாணத்தொன்று.
விளம்புதல் - விளம்பல்.
விளரி- இளமை, ஏழிசையினொன்று அது நெஞ்சாற்பிறப்பன, நெய்தனிலத்தியாழ், மிகுதி, யாழிறுேர் நரம்பு, யாழ், வேட்கை.
விளரிப்பாலை - ஓரிசை.
விளர் - இளமை, கொழுமை, கிணம், வெண்மை.
விளர்த்தல் - வெளுத்தல்.
விளர்ப்பு - வெளுப்பு.
விளவு-கமர், விளவென்னேவல், விளாமரம்.
விளவுதல் - விளாவல்.
விளவெறிந்தோன் - விட்டுணு
விளா - விளாமரம்.
விளாகம் - போர்க்களம்.
விளாசம் - விலாசம்.
விளாத்தி - விளா.
விளாப்பு - பிறர்க்குப்பங்கில்லாதது.
விளாம்பூச்சு - ஒரு சித்திரப்பூச்சு.

விளாவல் - கலத்தல்.
விளி - அழைப்பு, எட்டன்வேற்றுமை, ஏழிசையினொன்று, விளியென்னேவல்.
விளிதல்-கெடுதல், கோபித்தல், சாதல் மறிதல், வருத்தப்படுதல்.
விளித்தல் - அழைத்தல்.
விளிம்பு - அருகு, கண்ணிமை, கரை.
விளிம்புதெற்றி - கரைத்திண்ணை.
விளிவித்தல் - அழைப்பித்தல், சொல்லல்.
விளிவிலி - இறவாதவன், சிரஞ்சீவி.
விளிவு - கோபம், சாவு.
விளை - ஒருமீன், கொல்லை.
விளைகரி - திலக்கரி.
விளைச்சல் - விளைவு.
விளைஞர் - மருதநிலமாக்கள்.
விளைநிலம் } வயல்.
விளைபுலம் }
விளைப்பு - செய்தல்.
விளைமீன் - ஒருமீன்.
விளையாடுதல் - பொழுதுபோக்கல்.
விளையாட்டு - பொழுதுபோக்கு
விளையாட்டுப்பிள்ளை - சிறுபிள்ளை வீண
விளையுங்காலம் - அறுப்புக்காலம் [ன்.
விளையுள் - வயல்.
விளைவித்தல் - விளையச்செய்தல்.
விளைவு - சம்பவிப்பு, தானியம், பயன், மேகம், வயல்.
விளைவுகாலம் - தானியம் விளைந்திருக்குங்காலம்.
விள்ளல் } தழுவல், திறத்தல், பிரிதல், பேசுதல், மலர்தல், வெடித்தல், வேறுபடல்.
விள்ளுதல் }
விள்ளோடன் - பருப்புவேறுசிரட்டைவேறாய்க்கழலுந் தேங்காய்.
விறகு - சுறல், சமிதை.
விறகுதலையன் - விறகுவெட்டி.
விறத்தல்-அஞ்சுதல், நெருங்குதல், பெருகுதல், போர்செய்யல், வெல்லல்.
விறப்பு-அச்சம், நெருக்கம், பெருக்கம், போர், வெற்றி.
விறலி - பதினாறுவயசுப்பெண், பாடன்மகடூ. [து.
விறலுவமம்- ஒன்றன்விறலாலுவமிப்ப (உ-ம்) மதயானைபோலு மகங்காரம்.

விறலோன் - அருகன், திண்ணியன்.
விறல்-பெருமை, வலி, வீரம், வெற்றி.
விறல்மிண்டநாயனார் - அறுபத்துமூன்றுநாயன்மாருளொருவர். இவர்திருச்செங்குன்றூரிலேவேளாளமரபிலே தோன்றின மஹா சிவபக்தர். இவர் சுந்தரமூர்த்திநாயனார் காலத்தவர்.
விறற்கொடி - வெற்றிக்கொடி.
விறற்படை - வெற்றிப்படை.
விறன்மிண்டநாயனார் - அறுபத்துமூவரிலொருவர்.
விருட்டி - எருவராட்டி முதலியன.
விருண்டுதல் - பிருண்டுதல்.
விருய் - வீருப்பு.
விரிசு - ஒருவாணம், புழுகுப் பேச்சு, பொய்.
விறுதா - விருதா.
விறுமதண்டம் - குருக்குற்றி.
விறுமதரு - டன்முருக்கு.
விறுமமூலி - பிரமி.
விறுமனை - ஒருதேவதை.
விறுமை - பிரமை.
விறுவிறுத்தல் - சொதித்தல், விறுவிறுப்புக்கொள்ளல்
விறுவிறுப்பு - சொதிக்கிளைதற்குறிப்பு, மிகுகோபம், விரைவுக்குறிப்பு.
விறுவிறெனல் - விரைவின் குறிப்பு, விறுவிறுத்தற் குறிப்பு
விறைத்தல் - மரத்துநிற்றல்
விறைப்பு திமிர், பிரமிட்பு, முறைப்பு.
விற்குதல் - விலைப்படுத்தல்.
விற்பத்தி - கல்விவல்லபம்.
விற்பத்திமான் - கல்வியிற்சிறந்தோன்.
விற்பனம் - விற்பன்னம்.
விற்பனவு } விற்றல்.
விற்பனை }
விற்பன்னம்-கல்வி, ஞானம், பிரசங்கம், வித்தை.
விற்பன்னர்-கற்றோர், ஞானகாரர், புலவர்.
விற்பன்னித்தல் - சிறப்பித்தல்.
விற்புருதி - ஒருசிலந்தி.
விற்புருதிநாயகம் - அமுக்கிரா.
விற்பூட்டு - பொருள்கோளெட்டினொன்று அது செய்யுளிறுதியினு முதலினுநிற்கு மொழிகளைக்கூட்டிப் பொருள் கொள்வது.
விற்போர் - வில்லாண்மைப்போர்.
விற்றல் விலைக்கிரயம்பண்ணுதல்.
வினகம் - செங்கொட்டைமரம்.
வினதாசுதன் - கருடன்.
வினதை - கருடன்றாய், சத்தபுரியிலொன்று.
வினயம் - வஞ்சகம், விநயம்.
வினவல் } அளவளாவுதல், கேட்டாராய்தல்.
வினவுதல் }
வினா-உரையிலக்கணமைந்திலொன்று, கேள்வி, சொல், வினாவென்னேவல்.
வினாசம் - காணாதிருத்தல்.
வினாசன் - விநாசன்.
வினாடி - விநாடி.
வினாதல் - வினாவுதல்.
வினாபூதகற்பனை - தெளிவில்லாதது.
வினாயகன் - விநாயகன்.
வினாவிடை - சல்லாபம்.
வினாவுதல் - கேள்விகேட்டல்.
வினாவுத்தரம் - மிறைக்கவியில் ஒன்று அது ஒரு செய்யுட்கண் வினாவினுக்கனுன்கடை வினாயதற்கோருத்தரமாய் நின்றமொழி பிரிந்து மேலவினாய பலவினாவிற்கும் பலவுத்தரமாய் நின்ற பொருடரத் தொடுப்பது.
வினாவெண்பா-ஒருசைவசித்தாந்தநூல்
வினாவெதிர்வினா - வினாவுக்குவிடையாய்வினாவுதல் (உ-ம்) உண்டாயோவென்றவழி உண்ணேனோ வென்பது.
வினாவெழுத்து - வினாப்பொருடருமெழுத்து, அவற்றன் எ, யா, ஏ. முதனிலைவினா ஆ, ஏ, ஓ, ஈறடிநிலைவினா.
வினியோகக்காரன்-கொடையாளன்.
வினியோகம் - பிரதி பலனை நோக்கியீதல்.
வினீதன்-தண்டிக்கப்பட்டவன், வினையமுள்ளவன்.
வினை-இரண்டு, ஊழ், கருத்து, கன்மம், தொழில், போர், வஞ்சகம்.
வினைசாதித்தல் - வினைபாராட்டல்.
வினைச்சொல் இடம் கருவிகருத்தாசெய்ப்படுபொருள் செயல் காலம் எனுமிவைகளை விளக்கிநிற்குஞ் சொல்.
வினைஞர் - கம்மாளர், கூத்தர், சூத்திரர், செயலாளர், மருதநிலமாக்கள்.
வினைதீர்த்தல் - விக்கினந்தீர்த்தல்.
வினைதீர்த்தான் - விநாயகன.
வினைத்தொகை-பெயரெச்சத்தின்விகுதியிடை நிலைகெடாக்கு நிற்கப்பதம்

வந்து புணரும் புணர்ச்சி (உ-ம்) விடுசரம்.

வினைபாராட்டல்-வினையழுத்தல்.

வினைப்பகுதி - வினையிற் பகாப்பதமாய் முதனிற்கு முறைப்பு.

வினைப்பகாப்பதம்-செய்யென்னும்வாய் பாட்டால் வருமுதனிலைவினை.

வினைப்பகுபதம் பகுதிமுதலியவுறுப்புக்களாற் பிரிக்கத்தக்க வினைச்சொல்.

வினைப்பயன் - முன்வினைப்படி வந்தபலன்.

வினைமுதல் - கருத்தா.

வினைமுதற்பொருள் - தொழிற் காரணம்.

வினைமுறுகுதல் - வினைமூளுதல்.

வினைமுறுக்குதல் - வினைமூட்டுதல்.

வினைமுற்று - பொருள்இடமுதலிய ஆறன்புடை பெயர்ந்துசெய்பவன் முதலிய ஆறையும்பெரும்பாலுந்தோற்றிமுடியும்வினை, (இவற்றுள்) தெரிநிலைவினை முற்று பொன், வயல், வேணல், காம்,பசப்பு,பிறப்பு என்பவற்றோடு நீண்டது என வொட்டிக்காண்க,குறிப்பு, வினைமுற்று அவன் பொன்னினன், புறத்தன், ஆதிரையான், தாளன், கரியன், நடையன் (இவைபோல்வன)

வினையம் - வஞ்சகம்.

வினையழுத்தல்
வினையளத்தல் } வினைபாராட்டல்.

வினையாளர் - வேலைசெய்வோர், ஒருதொழிலிற்றலைப்பட்டோர்.

வினையியற்சொல் - செந்தமிழ் நிலத்துமொழிகளாய் உலகவழக்கினுஞ்செய்யுள்வழக்கினு நின்று தம்பொருளையியல்பாக விளக்கும் வினைச்சொல்.

வினையுரைப்போர் - தூதர்.

வினையுவமம் - தொழிலையே யுவமமாகவெடுத்துக்கூறுவது (உ-ம்) தீப்போற்றீயன்.

வினையெச்சக்குறிப்பு-தொழில் தோன்றாது வினையெச்சம்போல நின்று பிறிது வினையோடு முடிவது (உ-ம்) அன்றி-இன்றி என்பவற்றோடு நின்றூர் என வொட்டிக்காண்க.

வினையெச்சம்.-பிறிதோர் வினையொடு முடிய அவாவிநிற்கும்வினைச்சொல், இதில் தெரிநிலை வினையெச்சம் செய்து, செய்பு, முதலிய வாய்பாட்டான்வருவன, குறிப்புவினை யெச்சம் - அன்றி, இன்றி, முதலியன.

வினையெஞ்சணி - ஓரலங்காரம் அது வினையெஞ்சி நிற்பது.

வினைவயிற்பிரிதல் - அகப்பொருட்டுறையில் ஒன்று.

வினைவசம் - கர்மவசம்.

வினைவழிச்சேறல் - அகப்பொருட்டுறையிலொன்று.

வினைவளர்த்தல் - வினைபாராட்டல்.

வினைவிநாசன் - கடவுள்.

வினைவிளைத்தல் - பொல்லாங்குசெய்தல்.

விநோதம் - அவா, அழகு, எதிரிடை, சந்தோஷம், தள்ளுதல், தொழில், பொழுதுபோக்கல், ம க த் து வ ம், விளையாட்டு.

விநோதன் - பொழுதுகழிப்போன்.

விநோதி - ஒன்றிலே பொழுதுகழிப்போன்.

வின்னம் - அறியப்பட்டது, கிடைத்தல், தடை, பங்கப்பட்டது.

வின்னு - கடுகுரோகிணி.

வின்னாண் - விற்பூட்டுங்கயிறு.

வின்னூலாளன் - துரோணசாரியன்.

வின்னூல் - வில்லாச்சிரமவித்தை.

விஷ்ணு-திரிமூர்த்திகளிலொருவர், இவர் உலகத்தைக் காக்குந் தொழிலையுடையவர் இவர்லோகபரிபாலனத்தின் பொருட்டுச் செய்த அவதாரங்கள் பத்து அவையாவன மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமம், ஸ்ரீராமம், கிருஷ்ணம்,புத்தம், கற்கியெனபனவாம். இவருக்குபீதாம்பரன், கருடத்வஜன், சக்ராயுதன், லக்ஷ்மீபதி, நாராயணன், வைகுண்டன், தாமோதரன், ஹ்ருஷீகேசன், கேசவன்,மாதவன், தைத்யாரி, புண்டரீகாக்ஷன், கோவிந்தன்,அச்சுதன், சாரங்கபாணி,ஜனார்த்தனன், உபேந்திரன், சக்கரபாணி, சதுர்ப்புஜன் முதலியபலநாமங்களுண்டு.இவருக்கு ஆயுதம்சுதரிசனம் என்னும்சக்ரமும்பாஞ்சஜன்யம் என்னுஞ் சங்கும், கௌமோதகியென்னுந் தண்டும், நந்தகம் என்னும்வாளும், சார்ங்கம் என்னும் வில்லுமாகிய ஐந்தாம், இவருக்கு ஆப

ரணம் கௌஸ்துபம், இவர் மார்பிலேயுள்ள மறுவுக்கு ஸ்ரீவத்ஸம் என்றபெயர், இவர் திருப்பாற்கடலிலே சர்ப்பசயநத்திலே யோகநித்ராரதராயிருப்பவர், நாராயணனே விஷ்ணுவென்றும், சகுணவடி வென்றும், நிர்க்குணவடி வென்றும், புராணங்கள் பலபடக்கூறுகின்றன. (நாராயணன் காண்க.)

விஷ்ணுகுப்தன் - சாணக்யன்.

விஷ்ணுசர்மன்.-(க) வேதநாராயண புரத்து அக்ரஹாரத்தில் வசித்துக்கொண்டிருந்த வொருபிராமணன். இவன் புத்திரன் விக்ரமார்க்கன் தந்தையாகிய சந்திர சர்மன். (உ) பஞ்சதந்திரமென்னும் நூலைச்செய்து சுதரிசநன் என்னும்அரசனுடையபுத்திரருக்கு அந்த நூலினல் ராஜதந்திரம் நீதிசாஸ்திரம் முதலியவற்றைக் கற்பித்தவர்.

விஷ்ணுபுராணம்-பதினெண் புராணத்தொன்று. இது பாராசர முனிவரால் அருளிச் செய்யப்பட்டதிது இருபத்து நாலாயிரங் கிரந்தமுடையது இதில் வராககர்பம் முதலியவற்றின் வரலாறுகள் விரிவாய் கூறப்படும். பலவகையாகிய வுலகங்களையும் கிரகமண்டலங்களையும் யுகசரித்ரங்களையுங் குறித்து ஆராயவிரும்புவோர்க்கு இது சிறந்த நூலாகும்.

விஷ்வக்ஜோதி - பிரியவிரதன் வமிசத்து ஓரரசன்.

விஷ்வக்ஸேநன்-(க)பிரமதத்தன்மகன், (உ) விஷ்ணுபரிசாரு ளொருவன்இவன் வைகுண்ட சேநாதிபதி.

விஷ்ணுவர்த்தநன் - பாஸ்கர வுபாத்யாயர்.

விஹாரம் - வங்கதேசத்துக்கு வடக்கேயுள்ள தேசம்.

வீ

வீ - ஒரெழுத்து, கருப்பந்தரித்தல், சாவு, சொல்லுதல், நீக்கம், பறவை, பூ. போதல், முன்னிலையசைச்சொல், விரும்புதல், வீயென்னேவல்.

வீகம் காற்று, பட்சி, பூட்டு, மோதிரம்.

வீகாசம் - ஆடம்பரம், தனிமை.

வீக்கம் - ஒரு வியாதி, ஆசை, கட்டு, பூரிப்பு, மிகுதல், வீங்குதல்.

வீக்குதல் - அழிக்குதல், கட்டல்.

வீங்கல் - நித்திரைசெய்தல், பருத்தல், மிகுதல், வீக்கம், வீங்கலான்.

வீங்கி - சேங்கொட்டை, பேராசையுள்ளோன், வீங்கையாள்.

வீங்குதல் - வீங்கல்.

வீங்கை - அசைதல், ஆடல், குதிரைநடை.

வீசகா - வேங்கை.

வீசகணிதம் - அட்சரகணிதம்.

வீசகோசம் - கொட்டை, தாமரைக்கொட்டை.

வீசநோய் - அண்டநோய்.

வீசமாதிருகை - வீசகோசம்.

வீசம் - அவசியம், ஓரெண், ஒருசணிதம், ஒருமந்திரம், கொட்டை, சத்தியம், சுக்கிலம், நெல்லிடைப்பொன், மாகாணி, மூளை, மூலம்.

வீசயனம் - விசாரணை.

வீசல் - அடித்தல், ஈதல், எறிதல், பாவல், மோதல், வீசல்.

வீசனம் - சிற்றாலவட்டம், பொருள்,வி[சிறி.

வீசாட்சரம் - மந்திரமூலம்.

வீசி - அலை, அற்பம், இளைப்பாற்றிகிரணம், சந்தோஷம், வீசத்தை யுடை[யது.

வீசிமாலி - சமுத்திரம்.

வீசிதரங்கம் - ஒரு நியாயம்.

வீசிதரங்கநியாயம் - தருக்கநூலிற்சொல்லப்படுமோர் நியாயம்.

வீசுகாலேணி - ஓரேணி.

வீசுதல் - வீசல்.

வீசுதவர் - ஒருஅறப்பணம்.

வீசுவில் - விசுதவரின்வில்.

வீசுவிற்குடம் - வீசுதவரின்குடம்.

வீசை - ஒருநிறை, மீசை.

வீசோதகம் - ஆலாங்கட்டி.

வீசோதகிருட்டம் - நல்விதை.

வீச்சம் - நாற்றம்.

வீச்சு - அடி, ஆட்டம், எறிதல், ஒருநோய், பூமி, வலி.

வீச்சுக்காரன் - செலவுகாரன்.

வீச்சுக்காரி - செலவுகாரி, வேசி.
வீச்சுக்கொள்ளுதல் - வலிசொன்னல்.
வீச்சுவலை - ஒருவலை.
வீச்சேணி - வீசுகாலேணி.
வீஞ்சுதல் - அதிகவிரயஞ்செய்தல்.
வீடல் - சாதல், விடுதல்.
வீடாரம் - வீடு.
வீடாவழி - வீட்டுக்கு வீடு.
வீடி - கொத்தான்.
வீடிகை - கட்டு, தாம்பூலம்.
வீடு - ஒன்று, மனை, மோக்கம், விடுதல் வீடென்னேவல்.
வீடுதூக்கி - தூக்குணி.
வீடுநெறிப்பால் - ஓர்நூற்பகுதி.
வீடுமன் - பீஷ்மன்.
வீடுவிலக்கம் - மகளிர்சூதகம்.
வீரோன் / வீரேர்முதலி } இவன் தொண்டைநாட்டில் வீரேர்க்கிறைவனுகிய வொரு வேளாளப்பிரபு, இவன்தமிழ்ப்புலவர்க்குத்தாதா வென்று தன்வாயிலே கொடிகட்டித் தன்னிடம் வரும் புலவர்க்கெல்லாம் பெரும்பொருள் வழங்கி வரும்நாளில் ஒருநாள் ஒருபுலவன் போய்த் தனது நுண்புலமை நிலைநாட்ட, இவன் அவனைப் புகழ்ந்து மெச்சி, உமக்கு வேண்டுவதைக்கேட்டருளுமென்ன புலவன் உன் பிரியநாயகியை யெனக்குத் தரல்வேண்டுமென்றுன் அது கேட்ட இந்தப்பிரபு சற்றும் மனம் வருந்தாமல், கற்பிற் சிறந்த தன் மனையாளை யழைத்து, உன்னை இப் புலவர் பெருமானுக்குக் கொடுத்து விட்டேன். இன்று முதலாக நீ யெனக்கு மனைவியல்லை தாயாகிறுய் என்றுன். அதுகேட்ட புலவன் நெஞ்சந் தனுக்குற்று, புருஷசிகாமணியே, உன்மனதைச் சோதிக்கும்பொருட்டு நான் கேட்டதேயன்றி வேறல்ல, என் குற்றத்தைப் பொறுத்தருளி, என் புத்திரியாகிய இவ்வுத்தமியைப் பழையபடியே மனைவியாயங்கீகரித்துக்கொண்டு, இன்றுமுதலாக என்னை உமது மாமனுகக்கொண்டு என்மீது அன்புசெய்தி வரக்கடவை, இதுவே நீயெனக்குச் செய்ய வேண்டிய வுபகாரமும்பரிசிலும்ஆகு மென்றுன். பிரபவும் புலவன் சொல்லை மறுக்காமல் அங்கீகரித்தான்.

"போதாருந்தண்பொழில்வீரேதிபன் புலவர்க்கெல்லாந், தாதாவெனக்கொடி கட்டுதலா லவன்றன் மனையை, நீதாவென வொருபாவணன் கேட்பவந்நேரிழையை, மாதாவென வழைத்தா னென்கொலாந் தொண்டை மண்டலமே.

என்னுந் தொண்டைமண்டல சதகத்தாற் பெறப்படும்.

வீட்சணம் / வீட்சனை } பார்த்தல், பார்வை, விழுதல்.
வீட்சம் - அதிசயம்.
வீட்சிதம் - பார்வை.
வீட்சியம் - அதிசயம், காணப்பட்டது.
வீட்டாள்-மனைவி, வீட்டுவேலைகாரி.
வீட்டுக்கிரியை - சாச்சடங்கிலொன்று.
வீட்டுக்குத்தூரம் - மகளிர்சூதகம்.
வீட்டுதல் - கொல்லல்.
வீட்டுநெறி - முத்திமார்க்கம்.
வீட்டுநெறிப்பால் அறப்பாலிலொன்று.
வீட்டுப்பூனை - இற்புலி.
வீட்டுமம் - வைராக்கியம்.

வீட்டுமன் / வீஷ்மன் } கங்கைவயிற்றிலே சந்தநுவுக்குப் பிறந்த புத்திரன், சந்தநு கிழப்பருவ மடைந்தபோது அதிருபவதியாகிய ஒரு கன்னிகையைக் கண்டு, அவள்மீது, மோகங்கொண்டு, அவளுடைய தந்தையாரிடத்தில் தூதனுப்பித்தனக்கு மணம்பேசுவித்தான். அவர்கள் பீஷ்மன்பட்டத்துக்குரிய புத்திரனுயிருத்தலால், அவள்வயிற்றிற் பிறக்கும்புத்திரன் பட்டத்துக்குரியவனுகமாட்டானென்று மறுத்தார்கள். அதைக் கேள்வியுற்ற பீஷ்மன் தந்தையின் ஆசையைத் தீர்க்கும்பொருட்டு, அந்தப்பெண்ணினுடைய தந்தையிடஞ் சென்று, தனக்கு அரசுரிமையும் விவாஹமும் வேண்டுவதில்லையென்று சத்தியஞ்செய்து கொடுத்தான். அதன்பிறகு சந்தநு அந்தக் கன்னிகையை மணம்புரிந்து, அவளிடத்துப் பெற்ற விசித்ரவீரியனுக்கு அரசுரிமையைக்கொடுத்தான். பீஷ்மன் வி

சித்ரவீரியனையும், அவன் புத்திரனையும் சத்தியக்தவருமல் அன்போடு காத்துவந்தான். இவன் பாரதயுத்தத்திலே அர்ஜுனனுக்குத் தோற்று நெடுங்காலந் தவஞ்செய்திருந்தான்

வீட்டுமாசாரி - பீஷ்மாசாரி.

வீட்டுமுன்கட்டு - முன்கட்டுவீடு.

வீட்டுவாடை - வீட்டில் இருப்போர் கொடுக்கும் குடிக்கூலி.

வீட்டுவிசாரணை - உக்கிராணம்.

வீட்டுவீரன் - வீட்டிலிருந்து வீரம்பேசியும் வெளியில் அஞ்சுவோன்.

வீட்டுள்ளார் - உள்ளிட்டார்.

வீஷ்மம் - வீட்டுமம்.

வீஷ்மாசாரி - சந்தனுவின் புத்திரன்.

வீணன் - வீண்வார்த்தையுடையவன், விருதாவி.

வீணாகரணம் - வீணைவாசித்தல்.

வீணாகானபுரம் - யாழ்ப்பாணம்.

வீணாகானம் - வீணைநாதம்.

வீணாதிபுனை - சாசுவதி.

வீணாசியன் - நாரதன்.

வீணாட்டம் - வீண்பிரயாசம்.

வீணாதண்டம் } முள்ளெலும்பு, வீணைக்கழுத்து.
வீணாதண்டு }

வீணாவாதன் - யாழ்ப்பாடி.

வீணான் - விருதாவி.

வீணானுபந்தம் - வீணையினடிப்பக்கம்.

வீணை-ஓசையாழ், கலைஞானமறுபத்துநான்கினென்று, மின்னல், தபதிநதி.

வீணையியக்கல் - வீணையிலேபாடுதல்.

வீணைவல்லோர் - கந்தருவர்.

வீணைவாசித்தல் - வீணையியக்கல்.

வீண் - பயனின்மை.

வீண்பத்தி - அவபத்தி.

வீதகவ்வியன் - ஒருமுனிவன்.

வீதசோகம் - அசோகு.

வீதபயன் - விஷ்ணு

வீதம் - அவிழ்த்துவிடப்பட்டது, இட்டமானது, சமாதானம், பங்கு, முறை, விதம், வேறு வேறாய்ப்பகுத்த பகுப்பினளவு.

வீதராகம் - பற்றின்மை, விஷமம், வைராக்கியம்.

வீதராகன - பற்றற்றவன், புத்தன்.

வீதராகி - பற்றற்றவன்.

வீதல் - கெடுதல், சாதல், வறுமை.

வீதன் - சாந்தன்.

வீதி ஒழுங்கு, கடைவீதி, குதிரை, சத்திபண்ணல், தெரு, நாடகவகைபத்தினொன்று, நேரோடல், பிரபை, மேடை, வரி, வழி, விசாலம், வையாளி வீதி.

வீதிகோத்திரன்-அக்கினி, சூரியன்.

வீதிக்குதல் } பங்கிடுதல், விசாலித்தல்.
வீதித்தல் }

வீதியங்கம் - சம்பாஷணை.

வீதிவண்ணச்சேலை-ஒருபுடவை.

வீதிஹோத்திரன் - தானஜங்கன் புத்திரன் (உ) (கா) திருஷ்டசேதன் புத்திரன், பாரவன் தந்தை (௩) இந்திரசேனன் புத்திரன்.

வீத்துகம் - சதகுப்பை, வெள்ளரி.

வீநாகம் - கூவர்சவர்.

வீபணி - கடைவீதி.

வீபத்து - சந்திரன்.

வீபற்சு - அருச்சுனன்.

வீப்பகழிபுட்பாத்திரம்-மன்மதன்கணை.

வீமசேனன்-தமயந்தியின்பிதா, பஞ்சபாண்டவரி லொருவன்.

வீமதேவன்-பன்னிருருத்திரரி லொருவன்.

வீமபராக்கிரமன் - ஒரு பாண்டியன்.

வீமம் - பயங்கரம், பருமை.

வீமாதன் - ஒரு பாண்டியன்.

வீமன்-வீமசேனன். பாண்டுவினது இரண்டாம் புத்திரன் வாயுவினது அனுக்கிரகத்தினாற் பிறந்தவன். இவன் மல்யுத்தத்திலும், புஜ பலத்திலும், காதயுதப்போரிலும் தனக்கிணையில்லாதவன். ஜராசந்தனை வென்றவனும், திரௌபதியைக் கவர்ந்துசென்ற ஜயத்திரதனை வென்றவனும், விராடனிடத்திலே மடைப்பளிக் கதிபனாக விருந்தவனும் கீசகனைக் கொன்றவனும் இடிம்பனைக் கொன்று அவன் தங்கையை மணம்புரிந்தவனும் இவனே.

வீம்பு - புகழ்ச்சி, பெருமை.

வீரகண்டாமணி - வீரத்தாற்கட்டுமணி

வீரகத்தி - வீரரைக் கொன்றபழி.

வீரகத்திச்சேதகன் - திருமறைக்காட்டில் எழுந்தருளி யிருக்கும் விநாயகர் பெயர்.

வீரகம் - மீன்.
வீரகன் — சுத்தத் திரகாக்கினியைத்த ணியவிட்ட பார்ப்பான், விநாயகன்.
வீரகவிராயர் - தமிழிலே அரிச்சந்திர புராணம் பாடியபுலவர். இவர் நல்லூர் நகரத்தில் நானூறு வருஷங்களுக்கு முன்னே இருந்த ஒருமகாவித்வான்
வீரகுடியான் - பதினெண் குடிமையி னொருவன்.
வீரகெம்பீரம் - மிகுவீரம்.
வீரகேயூரம் - இருப்புத்தோளணி.
வீரகச்சு - புலித்தோற்கச்சு.
வீரக்கடகம்-மிருகவேட்டையாடின வீ ரர்க்குக் கொடுக்குங் காப்பு.
வீரக்கவசம் - வயிரமணியான் மார்பி லணியுஞ் சீரா.
வீரக்கழல்-கெண்டாமணி, கொடையா லும் வீரத்தாலுங் கட்டுங்கழல்.
வீரக்குட்டி - வீரவான்.
வீரக்குழல் முன்கையிலணியு மிருப்புக் கவசம்.
வீரக்கொடி - வெற்றிக்கொடி.
வீரங்காட்டுதல் - சூரங்காண்பித்தல்.
வீரசயந்திகை - யுத்தம், யுத்தவீராத நடனம்.
வீரசல்லாபம் - வீரக்களிப்பாற் பேசிக் கொள்ளும் பேச்சு.
வீரசாகி - தேமரம்.
வீரசு ஆண்பிள்ளையின்றாய் வீரன்றாய்
வீரசூரம் - மிகுவீரம்.
வீரசூரன் - அதிவீரன்.
வீரசூலம்-போரிலேற்றவ சீரர்லைச் சூல த்தாற் குற்றிப் பிடுங்கின வீரன் வி ருது.
வீரசேநசன் - நளராசன்,
வீரசேனன்-நளராசாவின் பிதா நளன் மகனும் இப்பெயர் பெறுவன்.
வீரசைவம் - ஒருசமயம்.
வீரசைவர் - இலிங்கதாரிகள்.
வீரசொற்கம் - போரிலிறக்கும் வீரர் சேரும்பதவி.
வீரசோழியம் - பொன் பற்றியூர் புத்த மித்திரனாற் செய்த இலக்கண நூல் இது வீரசோழன் என்னும் அரச னால்செய்விக்கப்பட்டது.
வீரச்சலங்கை - ஒற்றைக்காலிலணியும் பொற்சலங்கை.
வீரச்செல்வி - துர்க்கை.
வீரட்டம் - ஒருசிவதலம்.
வீரட்டாணம் - கூத்தின் விகற்பம்.
வீரட்டானம் - ஒருசிவஸ்தலம்.
வீரட்டானேசுவரர் - திருக்கண்டியூர்மு தலிய அட்டவீரட்டத்திலும்கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வீரணம் - இலாமிச்சம் வேர்.
வீரணன் - ஒரு பிரஜாபதி.
வீரணி - மிளகு, விளாமிச்சை.
வீரதச்சுவன் - மன்மதன்.
வீரதண்டை - வீரத்தாலணியுந் தண் டை.
வீரதத்துவம் - வீரத்தன்மை.
வீரதரம் - அம்பு.
வீரதராசநம் - வில்.
வீரதரு - மருது, விடத்தேர்.
வீரதுரந்தரன் - மகாவீரன்.
வீரதை - வீரம்.
வீரதட்டி - மான்றோற்பட்டை.
வீரநகரம் - தேவிகாநதி தீரத்திலே புல ஸ்திய பிரமா தவஞ்செய்த இடம்.
வீரந்தரம் - மயில், மார்ச்சட்டை.
வீரபத்திரர் - சிவகுமாரருளொருவர் த க்ஷன் சிவனையும் உமாதேவியாரை யும் அவமதித்த காரணத்தால் சிவன் கோபித்து தனது நெற்றிக்கண்ணை விழிக்க அதில் நின்றும் வீரபத்திரர் அவதரித்தார். அவர் சிவபெருமா னது கட்டளையால் தக்ஷன்யாகஞ் செய்கிற இடத்திற்குச் சென்று அந் தயாகத்தையும் அழித்து அந்தயாகஞ் செய்பவனாகிய தக்ஷனையும் கொன் றார். அதுகண்ட தேவர்களெல்லா ரும் பயந்து சிவபெருமானை நோக்கி யாம் செய்த பிழையைப் பொருத்த ருள வேண்டுமென்று பிரார்த்திக்க அவர் தக்ஷனை ஆட்டுத் தலையை உடையவனாக்கி எழுப்பி யருளிப் போயினர்.
வீரபத்திரர் - ஆயிரம் தலையும் இரண் டாயிரம் கையும் மூவாயிரம் கண் ணும் உடையவர்.
வீரபத்திரன் - அசுவமேத யாகத்துக் கேற்ற குதிரை, உருத்திரமூர்த்திக ளிலொருவன், சிவகணத் தொரு வன், வீரவான்.

வீரபத்தினி - கண்ணகி, இவள் நெடுஞ் செழியனை மதிக்கில் வென்று மதுரையை தன் கற்பால் எரித்தமையால் இவளுக்கு இப்பெயர்வழங்கிற்று, இவள் மதுரையிலிருந்த கோவலன் என்னும் வணிகனது இல்லறக்கிழத்தி கற்பினில் அருந்ததிக்குச் சமானமானவள். இவள் சரித்திரம் பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் விரிவாய் காணலாம்.

வீரபாஹு - விஷ்ணு,நவவீரரில்ஒருவர்.

வீரப்பட்டயம் - வெற்றிபெற்ற வீரர் நெற்றியிலணியும் பொற்றகடு.

வீரபாண்டியன் - மதுரையில் பரம்பரையாய் அரசாண்டுவந்த பாண்டியருள் ஒருவன் இவன் தான் அரசாட்சி செய்யுங்காலத்தில் ஒருநாள் வேட்டையாடும் பொருட்டு காட்டுக்குச் சென்று பல மிருகங்களைக்கொன்று கடைசியில் ஒரு புலியைக்கொல்ல எத்தனித்தபோது அது இவன் குறிக்குத்தப்பி, இவன்மேல் விழுந்து இவனைக் கொன்றுவிட்டது.

வீரப்பாடு - வெற்றி.

வீரமகரம் - கடல்கடந்து பகைவருரைக் கைப்பற்றிய தேர்வேந்தர் முன்பாகப் பிடிக்கும் விருது.

வீரமாகாளர் - ஐபன்படைத்தலைவன்.

வீரமார்த்தாண்டன் - நவசத்தி புத்திரரிலொருவன்.

வீரமாலை - வெற்றிபெற்று வாங்கும் பொன்மணிமாலை.

வீரமுட்டி } வீரசைவத் தருத்திரவேடம்பூண்டு சமயப் பாதகாவலனு யிருப்போன்.
வீரமுஷ்டி }

வீரமுத்திரிகை - சண்டுவிரலணி.

வீரம் - இஞ்சிக்கிழங்கு, ஓரத்தி, ஓரலங்காரம் அது வீரந்தோன்றக்கூறுவது, ஓர்மருந்து, கஞ்சி, சிவாகமமிருபத்தெட்டினொன்று, பெலன், மலை, மிளகு, மேன்மை, வலி, வீராதனம், வீரியம்.

வீரம்பேசல் } வீம்புபேசுதல்.
வீரம்பேசுதல் }

வீரபாகம் - வீரபத்திரருக்குச் செய்யும் ஒரு வேள்வி.

வீராதம் - அம்பு.

வீரரேணு - வீமசேனன்.

வீரர் - படைவீரர்.

வீரலட்சுமி - அட்டலட்சுமிகளி லொருத்தி.

வீரவாகு - முருகவேள்கணத்தலைவன். விசுவாமித்திரர் வேண்டுகோளுக்கு இசைந்து அரிச்சந்திரனை அடிமை கொள்ளும் பொருட்டுச் சண்டாளனாகி அவதரித்தயமன்.

வீரவாகுதேவர் - இவர் பார்வதிதேவியாருடைய காலில் அணிந்த சிலம்பில் நின்றும் சிந்திய நவரத்தினங்களும் நவசத்திகளாகி சிவத்தை இச்சித்து நோக்கி, தனித்தனி ஒவ்வொரு புத்திரரை ஈன்றார்கள். அவருள் முதற் சத்தியாகிய இரத்தினக் கன்னிகை ஈன்ற புத்திரனர் இந்த வீரவாகுதேவர். இவர் முருகக்கடவுள் சூரபன்மனை சங்கரிக்க அவதரித்தபோது அவருக்கு சேனபதியாயிருந்து சூரசங்காரத்துக்கு பேருதவியா யிருந்தவர். இவரது பராக்கிரமம் முதலிய வீரகுணங்கள் கந்தபுராணத்தில் விரிவாய்க்கூறப்படும். இவர் சந்ததியார் செங்குந்தராம்.

வீரவாரம் - வெட்சிமாலைமுதலியன.

வீரவாளி - ஒருபுடவை.

வீரவிருட்சம் - சேமரம்.

வீரவெட்சிமாலை - ஒரு பிரபந்தம் அது நிரைகோடற்கு வெட்கிப் பூமாலை சூடிப்போய் நிரைகவர்ந்தவரி லவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய்வந்த வெற்றியைக் கூறுவது.

வீரவெண்டயம் - வீரகண்டாமணி.

வீரவெறி - வீரத்தாலாயமதர்ப்பு.

வீரன் - அருகன்,ஓமாக்கினி,கூத்தாடி, திண்ணியன், தீ, வீட்டுமாசாரி.

வீராசனம் - நாடகவகை பத்தினொன்று, போர்க்களம், முழந்தாளி னிற்றல், வீராதனம்.

வீராணம் - ஒருவாத்தியம், நகரம், நீர்க்கரை

வீராணிக்கிழங்கு - ஒருகிழங்கு.

வீராதனம் - வலத்தொடையிலிடக்காற் பாட்டைச்சேர்த்தி இருமாப்புற்றிருத்தல்.

வீராதிவீரன் - மிகுவீரன்.

வீராப்பு - பொருமல்.

வீராய்தல் - அகலல், சுற்றி விசாரித்துச் சம்பாதித்தல்.

வீராவளி - வீராவேசம்.
வீராவேசம் - வீரவெறி.
வீரி - காளி, துர்க்கை, வட்டத்திருப்பி, வீரமுடையவள்.
வீரிடம் - நாவல்.
வீரிடுதல் - ஒலிக்குறிப்பு.
வீரியம் - சுக்கிலம், தைரியம், பறைப்பொது, பிரபை, மகத்துவம், வலி, வித்து, வீரம்.
வீரியர் - வீரமுடையோர்.
வீரியவான் - வீரமுடையோன்.
வீருதம் - பிடைதூறு.
வீரேசன் - சிவபெருமான்.
வீரேசுவரன்-மகாவீரன். வீரபத்திரன்.
வீரை ஒருபட்டினம், ஒருமரம். கடல், துன்பம், மனைவி, மாதா, வாழை, வட்டத்திருப்பி.
வீரைச்செடி - ஒருசெடி.
வீர்யஜன் - புத்திரன்.
வீர்வீரெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு
வீவதம் - கா, காத்தண்டு.
வீவதிகன் - சுமைசுமப்போன்.
வீவு - சாவு.
வீழி - ஒருசெடி, விழுது.
வீழுதல் - விழுதல்.
வீழ் - மரவிழுது, வீழென்னேவல்.
வீழ்கதி - நரகம்.
வீழ்க்கை - சோதிநாள். விருப்பம்.
வீழ்ச்சி - வீழுக்காடு, வீழுதல்.
வீழ்தல்-ஆசை, ஆசைப்படுதல், ஆசைப்பெருக்கம், மேவல், வீழுதல்.
வீழ்த்தல் - வீழுவித்தல்.
வீழ்த்துதல் - வீழுத்தூதல்.
வீழ்நாள் - இழந்தநாள்.
வீழ்பிடி - குறைவு, வெறுப்பு.
வீழ்வு - வீழுதல்.
வீறல் - வீறுதல்.
வீறுப்பு - இறுமாப்பு, சினப்பு
வீறு - தனிமை, பிரகாசம், புண்ணியம், பெருமை, மருந்துச்சத்து, விளக்கம், வீறுதல், வீறென்னேவல், வெறுப்பு, வேகம்.
வீறுகாட்டல் - பெருமைகாட்டல்.
வீறுதல்-இழுத்தல், கீறுதல், தனித்திருத்தல், பிரிதல், பீறுதல், பெருமையுறுதல், விளங்குதல், வெறுப்பாதல்.
வீற்றம் - வேறுபாடு.
வீற்றிருத்தல்-சிறந்தஆசனத்திருத்தல், தனித்திருத்தல், மகிழ்ந்திருத்தல்.
வீற்று - தனி, வளைவு, வேறுபாடு.

வெ

வெஃகல் - ஆசைப்படுதல், ஆசைப்பெருக்கம், விரும்பல்.
வெஃகா - வைணவத் திருப்பதிகளில் ஒன்று.
வெஃகாமை-வெறுப்பு, வேண்டாமை.
வெகு - பல.
வெகுகரிஷாத்தம் - பருத்தல்.
வெகுசனத்துரோகம்- பலசனத்துரோகம்.
வெகுசனரட்சை - பலசனரட்சிப்பு.
வெகுசனவிரோதம்-வெகுசனப்பகை.
வெகுசு - மிகுதி.
வெகுச்சுருதம் - சிற்பநூன் முப்பத்திரண்டில் ஒன்று.
வெகுட்சி - கோபம்.
வெகுண்டம் - கரும்பு.
வெகுதானிய-பன்னிரண்டாவதாண்டு.
வெகுத்தம் - அநேகம், மிகுதி.
வெகுத்தல் - மிகுத்தல்.
வெகுத்துவம் - பன்மை, மகத்துவம்.
வெகுநாயகம் - வெகுபோதிகாரம்.
வெகுநிபாயம் - வெளியரங்கபூசை.
வெகுபத்திரி- அறிநெல்லி, கறிமுள்ளி, வட்டு.
வெகுபிட்டம் - விரிவு.
வெகுபுத்திரி - கீழ்காய்நெல்லி, துளசி.
வெகுப்பு - மிகுதி.
வெகுமதி - வெகுமானம்.
வெகுமாரி - மிகுதி, வெகுமழை.
வெகுமானம் உபசாரம், மிகுகணம்.
வெகுமானித்தல் - உபசரித்தல்.
வெகுமுகம் - பலகவர், பலநோக்கு, பலவழி.
வெகுரசம் - கரும்பு.
வெகுரூபன் - ஓந்தி, சிவபிரான், திருமால், பிரமன், மதன்.
வெகுர் - உட்டணத்தால் வரும்பரு.

வெகுலரங்கம் - ஆடுதின்னுப்பாளை.
வெகுலாதி - சிற்றேலம்.
வெகுளல் - வெகுளுதல், கோபித்தல்.
வெகுளாமை - கோபம், கோபியாமை
வெகுளி-கோபம், சினம் இது முக்குற்றத்தொன்று, மாயையாக்கை பதினெண் குற்றத்துமொன்று.
வெகுளிவிலக்கு-ஓரலங்காரம் அது வெகுளி தோன்றக்கூறி விலக்குவது.
வெகுளுதல் - கோபித்தல்.
வெகுள்வு - கோபம்.
வெக்காயம் - சூடு.
வெக்காலி - ஒருமரம்.
வெக்காளம்-மழையில்லாக்காலம், வெப்பியாரம்.
வெக்காளித்தல்-வானந்தெளிதல்,வெப்பியாரப்படுதல்.
வெக்கை - காங்கை, நிலக்கொதிப்பு.
வெக்கைநோய் - மிருகங்கள் நோயில் ஒன்று, வைசூரிநோய்.
வெங்கண்-ஒருமீன், பொறாமை, வைராக்கியம்.
வெங்கண்மை - தறுகண்மை.
வெங்கதிர் - சூரியன்.
வெங்கதிர்ச்செல்வன் - சூரியன்.
வெங்கலம் - சுடுகையுள்ளபாத்திரம்.
வெங்களம் - போர்க்களம்.
வெங்காயம் - வெண்காயம்.
வெங்காரம் - வெண்காரம்.
வெங்கார் - வேடை.
வெங்கான்வெளி-கடுங்கானல்வெளி.
வெங்கிணுத்தி - ஒருபாம்பு.
வெங்கிராயன்வெளி - கடுங்கானல்வெளி.
வெங்கை - ஒரு சிவஸ்தலம்.
வெங்கோஷ்டம் - ஒருமருந்து.
வெங்கோல் - கொடுங்கோல்.
வெங்கோன்மை-கொடுங்கோன்மை.
வெச்சுவெந்நீர் - சுடுநீர்.
வெச்செனல் - வெம்மையாதல்.
வெச்செனவு - சூடு.
வெஞ்சமம்-பாலைநிலத்திராகம், போர்.
வெஞ்சமன் - இயமன்.
வெஞ்சம் - கோபம், பழி.
வெஞ்சனம்-கறிபதார்த்தம்,சிற்றுண்டி, சுண்டற்குழம்பு.
வெஞ்சிலைச்செல்வன் - வீரபத்திரன்.
வெஞ்சினக்காரன்-கடுங்கோபக்காரன்.
வெஞ்சினம் - கடுங்கோபம்.
வெஞ்சுடர்க்கிரணன் - சூரியன்.
வெடி - அச்சம், இடி, கள், துப்பாக்கிமுதலியவற்றிற் பிறக்குமொலி, நறுமணம், நறும்புகை, புகை, வெடியென்னேவல், வெளி.
வெடிகிரந்தி - ஒருவகைக்கிரந்தி.
வெடிகுண்டு - ஒருவிதவெடி.
வெடிக்குதல் - வெடித்தல்.
வெடிசன்னி - சன்னிபேதத்திலொன்று.
வெடிசூலை - ஒருசூலை.
வெடிச்சுடுதல் - வெடிவைத்தல்.
வெடித்தகுரல்-கடுந்தொனியானகுரல்.
வெடித்தசொல் - வெடுவெடுப்பானபேச்சு.
வெடித்தல்-பிளத்தல்,விள்ளுதல்.
வெடிபலவன் - பேய்ப்பலவன்.
வெடிப்பாய்ப்பேசல்-வெறுப்பாய்ப்பேசல்.
வெடிப்பு - அதிகம், கமர், விள்ளுகை.
வெடியுப்பு, வெடிலுப்பு - ஒருப்பு.
வெடிலுப்புத்திராவகம்-ஒருதிராவகம்.
வெடில் உறணுற்றம், வேட்டு.
வெடுக்கன் - கோபி.
வெடுக்கு - வெடில், வெட்டெனவு, வெட்டெனவுள்ளது.
வெடுக்கெனல்-கடுமைக்குறிப்பு.
வெடுப்புக்காட்டுதல்-சினப்புக்கொள்ளுதல்.
வெடுவெடுத்தல் - கடுமையாயிருத்தல், கோபித்துப்பேசல்.
வெடுவெடெனல் - சினக்குறிப்பு.
வெட்கக்கேடு - மானபங்கம்.
வெட்கம் - நாணம்.
வெட்கல் - அச்சக்குறிப்பு, நாணுதல்.
வெட்குதல் - வெட்கல்.
வெட்கறை - இலச்சை.
வெட்கிளுவை-கிளுவையோர்பேதம்.
வெட்குவெட்கெனல் வெட்கக்குறிப்பு.
வெட்சி-ஒருபூஞ்செடி, பகைநிரையோட்டுவார்க்குமாலை.
வெட்சித்தாரோன், வெட்சிமாலையோன் - குமரக்கடவுள்.
வெட்சிவிருப்பன்-முருகப்பெருமான்.
வெட்டல் - கொலைசெய்தல்,தறித்தல், நால்வகை பூமிபாட்டிலொன்று, மெய்ப்பரிசமெட்டிலொன்று.
வெட்டவெளி-ஏகவெளி, வெளியரங்கம்.
வெட்டருமுலி - நத்தைச்சூரி.

வெட்டெனம் - காப்புக்கட்டல்.
வெட்டெனவு - கடுமை, பலோற்காரம், வெடுக்குத்தனம்.
வெட்டாந்தரை - கடுந்தரை.
வெட்டி-இருவேலிச்செடி, வழி, வீண்.
வெட்டிப்பேசல்-கண்டித்துப்பேசுதல்.
வெட்டிமை - வெட்டியான்றொழில்.
வெட்டியான் - ஒருபூச்சி, சவஞ்சுடுவோன், பறையன்.
வெட்டிரும்பு-இரும்புவெட்டுமோருளி.
வெட்டிவீரன் - சத்தவீரன்.
வெட்டிவேர் - இருவேலிவேர்.
வெட்டிமை - கடுமை, சினம்.
வெட்டு - ஒரூறு.
வெட்டுக்கன்று - வரைகன்று.
வெட்டுக்கிளி - ஒருபூச்சி.
வெட்டுணி - தப்பிலி.
வெட்டுண்ணல் - வெட்டப்படுதல்.
வெட்டுப்படுதல்-வெட்டுண்ணல்.
வெட்டுதல் - வெட்டல்.
வெட்டுத்தட்டு - பறையின்வாய்வார்.
வெட்டுமாறன்-வெறியுள்ளஒருவஸ்து.
வெட்டுனர் வெடுவெடுப்பானபேச்சு.
வெட்டுரைப்பணம் - கள்ளநாணயம்.
வெட்டுவாய் - தறிவாய், பொருத்து.
வெட்டுவாள் - ஒருவாள்.
வெட்டுவெட்டெனல்-கடுமைக்குறிப்பு
வெட்டுவேளாண்மை-தானியமறப்பு.
வெட்டெனல் - கடுமைக்குறிப்பு.
வெட்டெனவு - கடுமை.
வெட்டேறு - ஒருகருவி.
வெட்டை - உட்டணம், ஒருநோய், கடினம், நிலக்கொதி, வெளி, வெறுமை.
வெட்டைவெளி - வெறுவெளி.
வெட்பகடம் - வெளிப்பகடம்.
வெட்பாடம் - வாய்ப்பாடம்.
வெட்பாலை - ஒருமரம்.
வெட்பாவட்டை - ஒருபாவட்டை.
வெட்புக்கார் கருக்கொள்ளாமுகில்.
வெட்பூல் - ஒரூபூல்.
வெண்கடம்பு - ஒருகடம்பு.
வெண்கடுகு - ஒருகடுகு.
வெண்கண் - வெங்கண்.
வெண்கதிரோன் } சந்திரன்.
வெண்கதிர் }
வெண்கலம் - செம்பும் வெள்ளியமும் கலந்த ஒருலோகம்.
வெண்கலி - கலித்தளையும் வெண்டளையும் விரவியும் அயற்றளையருகியும் வந்து ஈற்றடி முச்சீரானிறுவது.
வெண்கல் - வெள்ளைக்கல்.
வெண்கவி - பொருளாழமில்லாத பாட்டு, வெண்பா.
வெண்காக்கணம்-வெள்ளைக்காக்கணம்.
வெண்காசம் - கண்ணோயுளொன்று.
வெண்காடர் - பட்டினத்தடிகள்.
வெண்காடு - ஒரு சிவதலம்.
வெண்காந்தள் - ஒருகொடி.
வெண்காயம் - வுள்ளி, ஒருகாயம்.
வெண்காரம் - ஒருகாரம்.
வெண்காரை - வெள்ளைக்காரை.
வெண்கிடை } ஒருகிடைச்சி.
வெண்கிடைச்சி }
வெண்கிளி - வெள்ளைக்கிளி.
வெண்குங்குலியம்-வெள்ளைக்குங்குலியம்.
வெண்குட்டம் - ஒருநோய்.
வெண்குமுதம் - வெள்ளாம்பல்.
வெண்குன்றி - அதிமதுரம்.
வெண்குன்று - முருகக்கடவுளுடைய திருப்பதிகளுள் ஒன்று.
வெண்கூதாளம்-ஒருசெடி, நீர்த்தாளி.
வெண்கூவெண்பா- இனவெழுத்துமிக்கிசைப்பது.
வெண்கொடிவேலி - ஒருபூடு.
வெண்கொல் - வெள்ளி.
வெண்கொற்றக்குடை-தவளச்சத்திரம்
வெண்கோட்டம் - ஒருசெடி.
வெண்சலசமுற்றூள் - சரச்சுவதி.
வெண்சலசம் - வெண்டாமரை.
வெண்சலசை - சரசுவதி.
வெண்சாமரம் } வெள்ளைச்சாமரம்.
வெண்சாமரை }
வெண்சாரை - இந்திரியம், வெள்ளைச்சாரை.
வெண்சீர்-மூவசைநேரீற்றுச்சொல்.
வெண்சீர்வெண்டளை - காய் முன்னேனும் பூ முன்னேனும் நேரொன்றி வரும் பந்தம்.
வெண்சுக்கான்கல் - ஒரு உபரசம்.
வெண்சுடர் - சந்திரன்.
வெண்செந்துறை - இரண்டடிகள் தம்முள் அளவொத்துவிழுமியபொருளொழுகியவோசையுமாய் வருவது.
வெண்டகரை - ஒருபூடு.

வெண்டயம் - வெண்டையம்.
வெண்டலூர் - ஓரூர்.
வெண்டலை - தலையோடு.
வெண்டல் - காய்தல்.
வெண்டளை - வெண்பாவுக்குரிய பந்தம் இது வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை என விருவகைப்படும்.
வெண்டாது - வெள்ளி.
வெண்டாமரை - வெள்ளைத்தாமரை.
வெண்டாமரையாள் - சரச்சுவதி.
வெண்டாவி - அன்னக்கிளி.
வெண்டாழிசை - வெண்பா வினங்களி ஞென்று அது மூன்றடியாய் முதலிரண்டடியு நாற்சீராயும் ஈற்றடி யொன்றும் வெண்பாவைப்போல முச்சீராயும் முடிவுபெற்று வேற்றுத்தளை விரவிவருவது.
வெண்டாழை - ஒருதாழை.
வெண்டாளி - இடைச்சங்கத்து நூல்களுளொன்று.
வெண்டி - விறுதா.
வெண்டிக்காய் - வெண்டைக்காய்.
வெண்டு - உட்டுளை, கடுக்கன்புரி.
வெண்டுறை - வெண்பா வினங்களிஞென்று அது மூன்றடிமுதலேழடியீருதப் பின்பு நின்ற சிலவடிகளிற் சில சீரடி குறைந்துவருவது.
வெண்டுறைநாதர் - திருவெண்டுறையிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வெண்டேர் - கானல்.
வெண்டைக்காய் - ஒருகாய்.
வெண்டையம் - ஒரு சிறுமணி. [மலர்.
வெண்டோன்றி - வெள்ளைத்தோன்றி
வெண்ணங்கு-ஒடைக்கொடி, ஒருமரம்
வெண்ணந்தை-வெள்ளாந்தை.
வெண்ணயுருவி - ஒருசெடி.
வெண்ணரி - ஒருநரி.
வெண்ணரை - ஒருகொக்கு.
வெண்ணாவலன் - திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான்.
வெண்ணாவல் - ஒருநாவல்.
வெண்ணிலம் - மணற்றரை, வெருக்தரை.
வெண்ணிலவை - மென்புரட்டு. [ரை.
வெண்ணிலை - கைமாற்றுக்கடன்.
வெண்ணிறம் வெள்ளைநிறம், வெள்ளைநரை.
வெண்ணெய் - உருக்காநெய்.
வெண்ணெய்ச்சுரு - ஒருசுரு.
வெண்ணெய்தல்-ஒரு நீர்ப்பூ.
வெண்ணெய்நல்லூர் - ஒரு சிவதலம்.
வெண்ணெய்மலை - இதுகொங்குநாட்டிலுள்ள சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று இது முருகக்கடவுளுக்கு மிகவும் விருப்பமான ஸ்தலம்.
வெண்ணொச்சி - ஒருநொச்சி.
வெண்ணோ - ஒருகண்ணோ.
வெண்பதம் - இளம்பதம்.
வெண்பலி - சாம்பல்.
வெண்பா-ஒருபா அது ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்றுக் காய்ச்சீருமகவற்சீரும் வெண்சீர்வெண்டளையு மியற்சீர் வெண்டளையுங் கொண்டுவருவது.
வெண்பாக்கநாதர் - திருவெண்பாக்கத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வெண்பாட்டு - வெண்பா.
வெண்பாப்புலி - ஒருபுலவர்.
வெண்பு - வெண்ணிலம், வெளிப்பு.
வெண்புணர்ச்சிமாலை - தண்டகமாலை அது வெண்பாவான் முந்நூறுசெய்யுட்கூறுவது.
வெண்புழுக்கு - இளம்புழுக்கு.
வெண்பொன் - வெள்ளி.
வெண்பொன்மலை - கைலாசகிரி.
வெண்மட்டம்- கொத்துவேலையில்லாத செய்கை.
வெண்மட்டவேலை-ஒப்புரவானவேலை.
வெண்மணல் - வெள்ளைமணல்.
வெண்மணி - வெள்ளைவிழி, ஒருமணி.
வெண்மயிர் - சாமரம், நரைமயிர்.
வெண்மலை - திருக்கைலைமலை.
வெண்மை அறிவின்மை, இளமை, வெள்ளை.
வெண்மொந்தன்-ஒருவாழை. [ள்ளை.
வெதிரம் - செவிடு.
வெதிரன் - செவிடன்.
வெதிரேகம்-எதிர்மறை,பிரிவு,விலக்கு.
வெதிரேகவனுமானம் - ஒரு அளவைப்பிரமாணம்.
வெதிரேகாலங்காரம் - ஒருஅலங்காரம், அது உவமான வுபமேயத்திற் பிரிவு தோன்றச் சொல்வது.
வெதிர் - செவிடு, மூங்கில்.

வெதிர்த்தல் - அஞ்சுதல், சினத்தல், நடுங்குதல்.
வெதிர்ப்பு - கலக்கம், சினக்குறிப்பு, நடுக்கம்.
வெதுக்கலன் - வெதும்பினவன்.
வெதுக்கல்- வெதுப்பல்,வெதும்பலன்.
வெதுப்படக்கி - குப்பமேனி.
வெதுப்பம் - ஒருநோய்,வெப்பம்.
வெதுப்புல் - வாட்டல்.
வெதுப்பு-சுரம், வெதுப்பென்னேவல், வேம்பு.
வெதுப்புதல் - வாட்டுதல்.
வெதும்பல் - சினக்குறிப்பு, வாடல்.
வெதும்புதல் - வாடல்.
வெதுவெதுத்தல் - இளஞ்சூடாயிருத்தல்.
வெவவெதுப்பு - இளஞ்சூடு
வெங் , மூதகு
வெந்தயம் - ஒருசரக்கு.
வெந்தல் - வெந்தயம்.
வெந்தித்தல் - கொதித்தல், சினத்தல்.
வெந்திப்பு - கொதிப்பு, சினப்பு.
வெந்து - கிளை.
வெந்திசனம் - சுற்றத்தார்.
வெந்தை - பிட்டு.
வெந்தையம் - வெந்தயம்.
வெந்நிடுதல் - புறங்காட்டுதல்.
வெந்நீர் - சுடுநீர்.
வெப்பசாரம்-மனத்துயர், வெக்காளம்.
வெப்பம்-ஆசை, மனத்துயர், வெந்திப்பு, வெம்மை.
வெப்பித்தல் - வெம்மைகொள்ளுதல்.
வெப்பியாரம் - வெப்பசாரம்.
வெப்பு - ஒருநோய், மனத்துயர், வெம்மை.
வெப்புக்கட்டி - வெப்பினால் வயிற்றில் உண்டாகுங்கட்டி.
வெப்புக்கொதி-வெப்பினா லுண்டான காய்ச்சல்.
வெப்புப்பாவை-வெப்புக்கட்டி.
வெப்புவெப்பெனல் - கோபக்குறிப்பு, துயர்க்குறிப்பு.
வெம்பல்-பெருங்கோபம், வாடல், விம்மல்,வெக்காளித்தல்.வெம்பலானது.
வெம்பளிக்கை - வெம்பிளிக்கை.
வெம்பினாந்தி- வெயிலாந்தி.
வெம்பிளிக்கை-அகங்காரம்.
வெம்புதல்-கலங்குதல், சினத்தல், வாடுதல், வெக்காளித்தல்.
வெம்மை - ஆசை, உட்டணம், எண்வகையூறினொன்று, கடுமை.
வெயிலுந்தரவிந்தம் - தாமரை.
வெயிலெறித்தல் - ஒளிவீசல்.
வெயில்- ஒளி, சூரியகிரணம், சூரியன்.
வெயிற்குளித்தல்-வெயிலடியுணல்.
வெயிற்குளிர்தல் - சூரியகிரண வெம்மை தணிதல்.
வெய்து-வெம்மையுடையதுவெய்யது.
வெய்துயிர்த்தல் - நெடுமூச்சுவிடல்.
வெய்துரை - கடுஞ்சொல்.
வெய்துறல் - அச்சக்குறிப்பு, சினக்குறிப்பு, துன்பம்.
வெய்தெனல்-விரைவுக்குறிப்பு.
வெய்யது-பொல்லாதது, வெம்மையானது.
வெய்யநீர் - வெந்நீர்.
வெய்யவன் - கொடியோன், சூரியன், மிருகசீரிடம், விருப்புற்றோன்.
வெய்யில் - சூரியகிரணம், வெய்யில்.
வெய்யோன் - வெய்யவன்.
வெரிந் - முதுகு.
வெரு - அச்சம்.
வெருகடி - பூனையடி.
வெருகடிப்பிரமாணம் - மூன்றுவிரலாற் கிள்ளுமளவு.
வெருகம் - வாலின்கீழ்.
வெருகு - ஆண்பூனை, பூனை, மெருகு.
வெருக்கொள்ளல் - அச்சமுறல்.
வெருட்சி - அச்சம், மயக்கம்.
வெருட்டல்-அச்சமுறுத்தல், மயக்கல்.
வெருட்டி-அச்சம்,அச்சுறுவிப்போன்.
வெருட்டு - அச்சுறுத்தல், வெருட்டென்னேவல்
வெருட்டுதல்-வெருட்டல்.
வெருவை - பாவட்டை.
வெருவந்தம் - அச்சம்.
வெருவல் - வெருவுதல்.
வெருவு அச்சம், வெருவென்னேவல்.
வெருவுதல் - அஞ்சல்.
வெருளல் - வெருளுதல்.
வெருளார்த்தல்-திகைத்தல், மயங்கல்.
வெருளி-அச்சமுடையது, அச்சமுறுவிப்பது வெருட்சி.
வெருளிகட்டுதல்-அச்சுறுத்தல், வெருட்சிக்குறி.
வெருளுதல் அஞ்சுதல், மருளுதல்.
வெருள் - அச்சம், உன்மத்தம், வெருளென்னேவல்.

வெருள்வு - வெருட்சி.
வெலி - நீக்கல்.
வெலிசம் - கற்றாழை.
வெலிகாரம் - வெண்காரம்.
வெலித்தி-கடித்தமில்லாதது, சிவல்.
வெல்லப்பாகு - வெல்லப்பாணி.
வெல்லம் - கரும்பின்கட்டி.
வெல்லல் - சுசித்தல், சயித்தல்.
வெல்லி - சிற்றேலம்.
வெல்லுதல் - மேற்கொள்ளல்.
வெல்லுமா - புலி.
வெல்வி - வெற்றி.
வெவ்விது - வெய்து.
வெவ்வியன்-கோபி,வெப்பமுடையோன்.
வெவ்வினை - போர்.
வெவ்வுயிர்த்தல் - பெருமூச்செறிதல்.
வெவ்வுரை - கடுஞ்சொல்.
வெவ்வுழவு - அடையாதவுழவு.
வெவ்வேறு - வேறுவேறு.
வெளி-ஆகாயம், புறம், மறைப்பில்லா [வெளி.
வெளிக்கட்டு - வீட்டிற்புறக்கட்டு.
வெளிக்காட்சி - வெளியானதோற்றம்.
வெளிக்கிடல் - புறப்படல்.
வெளிசங்கம் - வெளியரங்கம்.
வெளிசம் - தூண்டில்.
வெளிச்சங்காட்டுதல் ஒளிகாட்டுதல்.
வெளிச்சம்-பிரபை, வெளியரங்கம்.
வெளிதிறத்தல் - வெளிவிடுதல்.
வெளிது-வெண்மையுடையது, வெறிதானது.
வெளித்தட்டு-பொறுப்பின்றிக் காரிய நடத்தல்.
வெளித்தல் - தெளிதல், வானம்வெளிவாங்குதல்,விளங்குதல்,வெறிதாதல்.
வெளித்தோற்றம்-உள்ளொன்று புறம் பொன்றாயிருப்பது, உற்பத்தி, பிரத்தியட்சம்.
வெளிநாடுதல்-வெளியேகாணப்படுதல்.
வெளிநாட்டம்-புறநோக்கம்.
வெளிபொருள் - வெளியரங்கமான பொருள்.
வெளிப்பகட்டம் - உள்ளிருப்பதைமறைத்து நடப்பது, வீண்பகட்டு.
வெளிப்பகட்டு வெளிவெருட்டு.
வெளிப்படல் } தோற்றல், வெளிவருதல்.
வெளிப்படுதல் } [க்கல்.
வெளிப்படுத்தல்-அறிவித்தல்,வெளியா
வெளிப்படை - வெளியரங்கம்.
வெளிப்படைச்சொல் - இயல்பாய் விளங்கிநிற்குமொழி.
வெளிப்படையுவமம்-வினையும் பயனும் உவமையுருபும் வெளிப்பட விளங்கி நிற்குமுவமம்.
வெளிப்பாடு - காணிக்கை, தோற்றம்.
வெளிப்பு - விளக்கம், வெளித்தல், வெளியிடம்.
வெளிமடை - புறமடை.
வெளிமான் - பெண்மான்.
வெளிமான் - பெருஞ்சித்திரனாரற் பாடப்பட்டோன், இச்சிற்றரசன் மிக்க கொடையுளோன், இவன் இறக்கும் போது பெருஞ்சித்திரனார்க்குப் பரிசுகொடுக்குமாறு தம்பிக்கு ஆஜ்ஞை செய்திருந்தான். அவன் கூறியஅளவிற் சிறிது கொடுப்பப் பெருஞ்சித்திரனார் ஏற்றுக்கொள்ளாமற்போய்க் குமணனை யடைந்து, யானையும் பொன்னும் பெற்று, மீண்டுபுக்கு அவனைநோக்கி,இரப்போர்க்குக்கொடுப்பவரில்லையுமல்லர், யான்பெற்று வந்து ஊர்ப்புறத்தே கட்டியிருக்கும் யானை குமணன் தந்த பரிசில் யான் போய் வருகிறேன் என்னுங் கருத்தினையுடைய.
"இரவலர் புரவலை நீயுமல்லை, புரவலரி லவர்க்கில்லையுமல்ல, ரிரவலருண்மையுங்கா ணினி யி ர வலர்க்கீவோருண்மையுங்காணினி நின்னூர்க், கடிமரம் வருந்தத்தந்தியாம்பிணித்த, நெடுநல்யானை யெம்பரிசில், கடுமான்றோன்றல் செல்வல்யானே" என்னும் பாடலைக் கூறிப்போயினார்.
வெளியடை - திரைச்சீலை.
வெளியரங்கம் - வெளிப்படை.
வெளியாகுதல் - வெளித்தல், வெளிவருதல்.
வெளியாக்கல் } விளக்குதல், வெளிவரப்பண்ணுதல்.
வெளியாக்குதல் }
வெளியாடை - தோரணம்,புறவுடை.
வெளியார் - மௌட்டியர்.
வெளியிடல் - வெளிவாங்குதல்.
வெளில் - அணில், கட்டுத்தறி, தயிர்கடைமத்து,யானைத்தூண்,வெண்மை.

வெளிவாங்குதல் - வெளித்தல்.
வெளிவாயன் - அந்தரங்கமற்றவன்.
வெளிவாய் - பரிகசியவாக்கு.
வெளிவிடுதல் - வெளிப்படுத்தல்.
வெளிவிருத்தம்-வெண்பாவினங்களில் ஒன்று அது மூன்றடியானேனும் நான்கடியானேனும் முற்றுப்பெற்ற அடிகளினிறுதிதோறுந் தனிச்சொற்பெற்றுவருவது.
வெளிவேடம் - புறக்கோலம்.
வெளிறர் - அறிவில்லார்.
வெளிறல் - வெண்மையாதல்.
வெளிறு-அலிமரம், அறிவின்மை, நறவிலிமரம், வயிரமில்லாமரம், வெண்மை, வெளிறென்னேவல்.
வெளிறுதல் - வெளிறல். [ம்.
வெளிற்றுக்குணம்-விநயமில்லாத குண
வெளிற்றுமரம் - அலிமரம், முருக்கு.
வெளிற்றுறை - பொருளுணய மின்றிய சொல்.
வெளுத்தல் ஒருமரம்,வெள்ளையாக்கல், வெள்ளையாதல்.
வெளுப்பு - விடியல், வெண்மை, வெளுத்தல்.
வெளுவெளுத்தல்-மிகவும்வெளிறுதல்.
வெளுவெளுப்பு - நோயடைந்தவெண்மை.
வெளுவை - வெளுத்தல்.
வெளேரெனல்-வெண்மைக்குறிப்பு.
வெள்கல்-அச்சம்,வெட்கம்,வெட்குதல்
வெள்வரி - பலதறை.
வெள்வவ்வால் - ஒருவகைமீன்.
வெள்வாடை - சிறுவாடை.
வெள்வெடி - சத்தவெடி
வெள்வங்காயம் - வெள்ளுள்ளி.
வெள்வெட்சி - ஒருபூடு.
வெள்வெற்றிலை-வெள்ளைவெற்றிலை.
வெள்வேல் - ஒருமரம்.
வெள்ளக்காடு - பெருவெள்ளம்.
வெள்ளடி - வெருட்டு.
வெள்ளடிச்சேவல்-கத்திகட்டாமலடிக்குஞ்சேவல்.
வெள்ளடை - வெள்வெற்றிலை.
வெள்ளணியணிந்து விடுத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.
வெள்ளப்பாடு - பள்ளம், வெள்ளம்பிடிப்பதினுல் வருஞ்சேதம்.
வெள்ளம்-ஒரெண், கடல், நீர்ப்பெருக்கு, மிகுதி.
வெள்ளரசு - ஒரு அரசு.
வெள்ளரளை - சிலேப்பேன்.
வெள்ளரவம் - ஆதிசேஷன்.
வெள்ளரவவெற்பு - திருவேங்கடமலை.
வெள்ளரி - ஒருகொடி.
வெள்ளலரி - ஒருபூமரம்.
வெள்ளல்லி-வெள்ளாம்பல்.
வெள்ளழுகல் - அழுகி வெண்ணிறம்பிடித்தது.
வெள்ளறிவன் - அறிவீனன்.
வெள்ளறிவு - அவிவேகம்.
வெள்ளறுகு - ஒருபூடு.
வெள்ளாடு - ஒருவகையாடு.
வெள்ளாட்டி - ஏவற்பெண்.
வெள்ளாண்மை - கிருஷி.
வெள்ளாந்தை-ஒரு ஆந்தை.
வெள்ளாப்பு - வைகறை.
வெள்ளாம்பல் - ஒரு ஆம்பல்.
வெள்ளாவி - வெறுமாவி.
வெள்ளாவிதட்டுதல் - ஆவிபிடித்தல்.
வெள்ளாவிரை - ஒரு ஆராவிரை. [ல்.
வெள்ளாவிவைத்தல்-ஆவிபட வைத்த
வெள்ளாளர் - பூவைசியர், மருதநிலமாக்கள்.
வெள்ளானை - ஐராவதம்.
வெள்ளி - வெண்பொன். சுக்கிரன்,இவன் அசுரகுரு.
வெள்ளிக்காசு-ஒருமீன்.
வெள்ளிக்கிழமை - சுக்கிரவாரம்.
வெள்ளிக்கோல் - ஒருநிறைகோல்.
வெள்ளிடி - மழைக்குண மில்லாமல் விழு டி.
வெள்ளிடை - வெளி.
வெள்ளிடைமன்று - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஐந்துமன்றத்துளொன்று. இதுதிருடர்களைவெளிப்படுத்துவது
வெள்ளித்தோற்றம் - சுக்கிரோதயம்.
வெள்ளிநகம் - கைலாசம்.
வெள்ளிநிமிளை - ஒருநிமிளை.
வெளிப்பிரிவு - சுக்கிரனிருந்த விராசிவிட்டுப்பிரிதல்.
வெள்ளிமடந்தான் - ஒருமீன்.
வெள்ளிமலாம் - ஒருமலாம்.
வெள்ளிமலை - கைலைமலை, கயிலாசம்.
வெள்ளிலை - வெறுமிலை, வெற்றிலை.

வெள்ளிமலைநாதர் - திருத்தெங்கூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வெள்ளியம்பலம் - மதுரையிலுள்ள ஒரு மன்றம்.
வெள்ளயம்பெருமலை - வித்தியாதரர்களுடையமலை.
வெள்ளிலோத்திரம் - ஒருமருந்து, விளாம்பட்டை.
வெள்ளில் - பாடை, விளாமரம்.
வெள்ளிவாயல் - ஒருஊர்.
வெள்ளிவீதியார் இவர் திருவள்ளுவர்க்குச் சிறப்புப்பாயிரஞ் சொல்லிய கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்பாடிய "கன்றமுண்ணு அகலத்திலும்படாது" என்றபாட்டுத்தொல்காப்பியவுரையிலு மொன்றுளது. இவர் கற்பனலங்காரம் பெறப்பாடுவதில் வல்லவர்போலும்.
வெள்ளிறகுமந்தாரை - ஒருமந்தாரை.
வெள்ளிறால் - ஒருவகையிறால்.
வெள்ளீயம் - ஒருஈயம்.
வெள்ளீரல் - மணிக்குடர்.
வெள்ளுப்பு - ஒருப்பு.
வெள்ளுழவு - புழுதியுழவு.
வெள்ளுளுவை - ஒருமீன்.
வெள்ளுள்ளி - ஒருள்ளி.
வெள்ளுறட்டி - ஒருபண்ணிகாரம்.
வெள்ளுமத்தை - ஒருமத்தை.
வெள்ளூக்காப்பியனார் - இடைச்சங்கப் புலவருள் ஒருவர்.
வெள்ளெருக்கு - ஒரெருக்கு.
வெள்ளெலி - ஒரெலி.
வெள்ளெலும்பு - தசைகழிந்த வெள்பு.
வெள்ளெழுத்து - கண்புகைச்சல் பார்வைக்கு வெளிதாய்நிற்கு மெழுத்து.
வெள்ளெல் - ஒரெள.
வெள்ளென - காலம்பெற.
வெள்ளெனல் - வெண்மையாதல்.
வெள்ளேடு - எழுதாவேடு.
வெள்ளேறன் - பழுதானஇரும்பு.
வெள்ளை - ஆழமான கருத்தில்லாதது, சங்கு, சுண்ணாம்பு, பலபத்திரன், மேற்கட்டி, வெட்டை, வெண்பா, வெண்மை, வெள்ளாடு, வெள்ளாட்டுமறி, வெள்ளி, வேங்கை.
வெள்ளைகட்டுதல் மேற்கட்டிகட்டுதல்.

வெள்ளைக்கமலத்தாள் - சரசுவதி.
வெள்ளைக்கரு - முட்டையிற் சிவப்புக் கருவின்புறக்கரு.
வெள்ளைக்கலையாள் - சரசுவதி.
வெள்ளைக்கவி - புன்சொற்கவி.
வெள்ளைக்காகம் - வெண்காக்கை.
வெள்ளைக்காக்கணம் - ஒருகொடி.
வெள்ளைக்காரர் - வெள்ளைமனிதர்.
வெள்ளைக்காரை - ஒருசெடி.
வெள்ளைக்கிளி - ஒருகிளி.
வெள்ளைக்கீரி - இராசகீரி.
வெள்ளைக்கீரை - ஒருவகைக்கீரை.
வெள்ளைக்குங்கிலியம் - ஒருமருந்து.
வெள்ளைக்குன்றி - அதிமதூரக்கொடி.
வெள்ளைகுன்றிமணி - ஒருகுன்றிமணி.
வெள்ளைக்கொம்பு - நரைமயிர்.
வெள்ளைச்சாரணை - ஒருசாரணை.
வெள்ளைச்செவ்வந்தி - ஒருசெவ்வந்தி.
வெள்ளைநாவல் - ஒருநாவல்.
வெள்ளைநிறத்தாள் - சரச்சுவதி.
வெள்ளைநெல் - ஒருநெல்.
வெள்ளைபுரளுதல் - மல்லாக்காய்க்கிடத்தல்.
வெள்ளைப்பணியாள் - சரசுவதி.
வெள்ளைப்பவளம் - வெள்ளைப்போளம்.
வெள்ளைப்பாகல் - ஒருபாகல்.
வெள்ளைப்பாட்டு - வெண்பா.
வெள்ளைப்பாஷாணம் - ஒருபாஷாணம்.
வெள்ளைப்பிள்ளை - வஞ்சகமற்றவன்.
வெள்ளைப்புத்தி - பிள்ளைப்புத்தி.
வெள்ளைப்பூண்டு - வெள்ளுள்ளி.
வெள்ளைப்பேச்சு - சத்தவாக்கு.
வெள்ளைப்பொன்னுவிரை ஓராவிரை.
வெள்ளையபோளம் - ஒருமணி, ஒருமருந்து.
வெள்ளைமந்தாரை - ஒருமந்தாரை.
வெள்ளைமனிதர் - வெள்ளைக்காரர்.
வெள்ளைமாதளை - ஒருமாதளை.
வெள்ளைமெய்யாள் - சரச்சுவதி.
வெள்ளைமேனியாள் - சரச்சுவதி.
வெள்ளையடித்தல் - சுவர் முதலியவற்றிற்கு நீறபூசுதல்.
வெள்ளையானை - கீழ்த்திசையானை.
வெள்ளையானையூர்தி இந்திரன், ஐயன்.
வெள்ளைவண்ணாத்தை - ஒருபூச்சி.
வெள்ளைவாரணன் - வெள்ளையானையூர்தி.
வெள்ளைவிழி - கருமணியருகு.
வெள்ளைவெளுக்குதல் - ஆடையழுக்கற்றல்.

வெள்ளைவெளேறெனல் - மிகுவெள்ளைக்குறிப்பு. [சை.
வெள்ளொத்தாழிசை - வெண்டாழிசை
வெள்ளொலியல் புடைவைக்குஞ்சம்.
வெள்ளோக்காளம் } சக்கலில்லாத
வெள்ளோங்காளம் } வோங்காளம்.
வெள்ளோடன் - ஒடுவிட்டுக்களருந்தேங்காய்.
வெள்ளோந்தி - ஒருவோந்தி.
வெள்ளோலை - எழுதாவோலை, முத்திரையில்லாவோலை
வெறி-அச்சம், ஆடு, கலக்கம், கள், கோபம், சீக்கிரம்,நாற்றம், பிசாசம், மஸ்து, வட்டவடிவ, வியாதி, வெறியென்னேவல், வேலனுடல்.
வெறிகொள்ளுதல் - சன்னதங்கொள்ளல், வெறித்தல்.
வெறிக்கப்பார்த்தல் - பயமுறுத்திப்பார்த்தல்.
வெறிக்கடுக்காய் - பேய்க்கடுக்காய்.
வெறிக்குணம் - மஸ்துக்கொண்டகுணம், மருட்குணம், மூர்க்கருணம்.
வெறிக்குதல் - வெறிகொள்ளுதல்.
வெறிது-அறிவின்மை,கோது, வறிது.
வெறித்தபார்வை - பயமுறப் பார்க்கும் பார்வை.
வெறித்தல்-ஆவேசமாதல், மயக்குதல், வெறிதாய்ப்போதல்.
வெறிநாய் - பயித்தியம்பிடித்தநாய்.
வெறிப்பு-பஞ்சம், மயக்கம்,வெறித்தல், வெறுமைத்தன்மை.
வெறியயர்தல் - வெறியாடல்.
வெறியன் - பித்தன். [கொள்ளல்.
வெறியாடல் - சன்னதமாடல், வெறி
வெறியாட்டாளன்-உன்மத்தன்,சன்னதக்காரன்.
வெறியாட்டு-உன்மத்தம், சன்னதம்.
வெறியெடுத்தல் - சன்னதங்கொள்ளுதல் இது அகப்பொருட் டுறையின் ஒன்று.
வெறியேறி - அக்கினி.
வெறியோடுதல்-திகைத்தல், நம்பிக்கையறல், வெறுமையாதல்.
வெறு-வெறுமை,வெறுவென்னேவல்.
வெறுக்கை - கள், செல்வம், பொன், விழுப்பொருள்.
வெறுங்கை - பொருளின்மை.
வெறுங்கோது - மூடன்.
வெறுத்தல் - கோபித்தல், சினத்தல், பகைத்தல்,மறுத்தல்,வேண்டாமை.
வெறுநுகம் - சோதிநாள்.
வெறுப்பின்மை விருப்பம் இது அறத்துறப்பினென்று.
வெறுப்பு - அச்சம், கலக்கம், சினம், செறிவு, துன்பம், வேண்டாமை.
வெறுப்புக்காட்டுதல்-பிரியவீனங்காண்பித்தல்.
வெறுப்புக்கொடுத்தல்-பிரியவீனப்பட [ல்.
வெறுமனே - வெறிது.
வெறுமை - இன்மை.
வெறும்பிலுக்கு - வீண்வேடம்.
வெறும்புறங்கூறல் - பழிகூறல், அலர்தூற்றல்.
வெறும்புறங்கூற்று - அலர்மொழி.
வெறும்புறம் - ஒன்றுமில்லாதிருக்கை.
வெறுபிரதம் - கருப்பூரசிலாசத்து.
வெறும்பேச்சு - வீண்சொல்.
வெறுவாயலட்டுதல் } வீண்பேச்சுப்
வெறுவாய்பசப்புதல் } பேசுதல்.
வெறுவிலி - வறியவன்
வெற்பன்-குறிஞ்சிநிலத்தலைவன்.
வெற்பு - மலை.
வெற்றம் - சயம்.
வெற்றாள் - தனியாள், வெறுவிலி.
வெற்றி - வென்றி, ஜெயம்.
வெற்றிசாலுதல் } வெல்லுதல்.
வெற்றிகொள்ளல் }
வெற்றிக்கம்பம் - வெற்றித்தம்பம்.
வெற்றிக்காரந்தைமஞ்சரி ஒருபிரபந்தம் அது பகைவர்கொண்ட தன்னிரை மீட்டான் கரந்தைப்பூமாலை சூடிப்போய் மீட்பதைக் கூறுவது.
வெற்றிக்குதிரை - பந்தயம் வென்ற குதிரை.
வெற்றிக்கொடி - விருதுக்கொடி.
வெற்றிச்சீட்டு - பந்தயச்சீட்டில் வெற்றிகுறித்தசீட்டு.
வெற்றித்தண்டை - வீரத்தண்டை.
வெற்றித்தம்பம்-வெற்றிக்கொடிகட்டுந்தூண், வென்றோர் நிறுத்துந்தூண்.
வெற்றித்துவசம் - வெற்றிக்கொடி.
வெற்றிமாலை - போர்வென்றோர் சூடுமாலை.
வெற்றிலை - தாம்பூலம்.

வெற்றிலைக்காய் - மாற்று வெற்றிலைக்கொடியின்காய்.
வெற்றிலைக்கால் - வெற்றிலைத்தோட்டம்.
வெற்றிலைக்கொடி - தாம்பூலவல்லி.
வெற்றிலைக்கொழுந்து - வெற்றிலைக்கொடி.
வெற்றிலைசுருட்டி - ஒருபுழு.
வெற்றிலைச்சருள் - ஒருவிதவெற்றிலைக்கட்டு, மணவாளர்கையிற் பிடிக்குஞ்சருள்.
வெற்றிலைத்தட்டம் - வெற்றிலைவைக்குந்தட்டம்.
வெற்றிலைத்தட்டி - வெற்றிலைச்சவை.
வெற்றிலைத்தம்பலம் - வெற்றிலைபாக்குமென்றசாரம்.
வெற்றிலைநறுக்கி - ஒருசெடி.
வெற்றிலைநாரி - ஒருபுதர்.
வெற்றிலைப்படிக்கம் - தாம்பூலப்படிக்கம்.
வெற்றிலைப்பூமணி - மாதரணிபணியின் ஒன்று.
வெற்றிலைமடிப்பு - வெற்றிலைச்சருள்.
வெற்றிலைவெடிபதம் - மருந்தெண்ணெய்பதத்திலொன்று.
வெற்றிலைவைத்தல் - கலியாணத்துக்கு வரவழைத்தற்குறிப்பு.
வெற்றிவாகை - போர்வென்றோர் சூடுமாலை.
வெற்றிவேற்கை - ஒரு நீதிநூல்.
வெற்றிவேற்செழியன் - கொற்கை நகரத்திருந்த ஒருபாண்டியன், இவன் கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப்பலியிட்டுத் திருவிழாச்செய்து தன்னாட்டிற் சம்பவித்திருந்த தன் பங்களையெல்லாம் நீக்கினவன், இவனுக்கு இளஞ்செழியனென்றும் பெயருண்டு.
வெற்று - வெறு.
வெற்றுடம்பு - தசைபிடியற்றதேகம், வெறிதாயவுடல்.
வெற்றுரை - பயனில்சொல்
வெற்றெலும்பு - தசைகழிந் தெலும்பு.
வெற்றெனத்தொடுத்தல் - நூற்குற்றம் பத்திலொன்று.
வெற்றொழிப்பு - அபநுதியுருவகத்தொன்று அது உபமான தருமத்தை யாரோபித்தற்கு உபமேயதருமத்தை ஒழித்தல் (உ-ம்) மதியன்று வெண்கமலப்பூ.
வென்முதுகு.
வென்றி - வெல்லி, வெற்றி.
வென்றிக்கொடி - வெற்றிக்கொடி.
வென்றிமாலை - செந்திபுர புராணஞ்செய்தோன் போர்வென்றோர்சூடுமாலை.
வென்றோர் - புலனடக்கப்பெற்றோர், வெற்றியடைந்தோர், துறவோர்.
வென்றோன் - அருகன்.
வென்னிடுதல் - புறக்கொடுத்தல்.

வே

வே - ஒருளழுத்து, வேயென்னேவல், வேவு, வேவென்னேவல்.
வேகசரம் - ஒட்டகம், குதிரை.
வேகடம் - ஒருமீன், மணியழுக்ககற்றல், யௌவனம்.
வேகடன் - மணியொப்பஞ்செய்வோன், வாலிபன்.
வேகடை - வேகடம்
வேகடைத்தாள - குருநாப்பட்டை.
வேகநாசனம் - சோளை.
வேகம் - கடுமை, மதி, கோபம், சினம், சுக்கிலம், தீவிரம்.
வேகம் - உக்கிரம், உறைப்பு.
வேகரோதம் - மலமறிப்புநோய்.
வேகவதி - காஞ்சிநதி, கம்பையாறு, வைகையாறு.
வேகவத்தமம் - மிருகதி.
வேகவிதாரணம் - தடை.
வேகாகாதம் - தடை, மலக்கட்டு.
வேகாப்பிணம் - குறைக்கட்டைப் பிணம்.
வேதாளம் - சீக்கிரம்.
வேகி - வேகமுடையோன்.
வேகிதை - விரைவு.
வேகித்தல் - மேகமடைதல்.
வேகுதல் - அவிதல், உக்கிரங்கொள்ளல், எரிதல், காய்தல்.
வேக்காடு - சூடு, வேகுதல்.
வேக்காளப்படுதல் - வெட்கப்படுதல், வெப்பியாரப்படுதல்.
வேக்காளம் - வெக்காளம்.
வேங்கடம், வேங்கடாசலம் - ஒருமலை. இது தமிழ்நாட்டுக்குவடவெல்லையாகவுள்ளது. இதிலே அதிப்புராதனமாகிய ஒருசுப்பிரமணியஆல

யமும், விஷ்ணுவாலயமும் உள்ளன முன்னையது தற்காலம் விஷ்ணுவாலயமாக மாற்றப்பட்டுள்ளது. பின்னது குகனேரி தீர்த்தக்கரையிலுள்ள ஆலயமேயாம்.
வேங்கை-ஒருமரம், புலி, பொன்.
வேசகம்-யானைவாலுனி, வால், வீடு
வேசடை - துக்கம்.
வேசந்தம் - குளம்.
வேசம் உடை, கதம், சம்பளம், வாயில், வீடு, வேசிதெரு, வேஷம்.
வேசரம்- ஒட்டகம், தெலுங்குபாஷை.
வேசரி - கழுதை, கோவேறுகழுதை.
வேசரிவாஹநி - மூதேவி.
வேசனம்-மருதநிலத்தூர், வாயில், வீடு
வேசாடல் - மனக்கலக்கம்.
வேசாடை - துக்கம்.
வேசாறல் } வேசாறுதல் } ஆறுதல், இளைப்பாறுதல், துக்கமடைதல்.
வேசி - வியாபாரி, விலைமகள்.
வேசிகை - வாயில்.
வேசிக்குணம்-விபசாரக்குணம்.
வேசிதெரு - பரஸ்திரிகுடியிருப்பு.
வேசித்தனம் - கர்புத்தவறல், வேசித்தன்மை.
வேசிநடை - விபசாரநடை.
வேசிப்பார்வை - புணர்ச்சிநோக்கு.
வேசிப்பிள்ளை - கொண்டோற்பிழைத்துப்பெற்ற புத்திரன்.
வேசியார்க்கம்-துர்த்தநடை, வேசிகள்நடை
வேசியம்-வேசிதெரு, வேசிவீடு.
வேசியாசனமாசிரயம் - வேசிவீடு
வேசியாசாரியன் - நட்டுவன்.
வேசியாடுதல்-கற்பொழுக்கந் தவறிநடத்தல்.
வேசியை - வேசை.
வேசிவிலை - பயணம்.
வேசிவிளையாட்டு - கணிகையர் கூத்து, வேசிநடை.
வேசுமகுலம் - மூன்குலம்.
வேசை - சம்பளம், வேசி.
வேஷகம் } வேடகம் } காதணி.
வேடங்காட்டுதல்-கோலங்காட்டுதல்.
வேடசேரி - வேடரூர்.
வேடச்சி - வேடப்பெண்.
வேடதாரி-வேஷந்தரிப்போன்.

வேடம் } வேஷம் } ஆவேசம், உடை, ஒருகாதணி, தன்கோலம் விட்டு வேறு கோலங்கொள்ளல்.
வேஷகம் - வேடகம்.
வேடன் - வேடுவன்.
வேடிக்கை-அலங்காரவேஷம், ஆடம்பரம்.
வேடிக்கைகாட்டுதல் - ஆடம்பரங்காட்டல், கோலங்காட்டுதல்.
வேடிச்சிகாலன் - குமரன்.
வேடிதம் - மருந்துநாற்றம்.
வேடு -'செமுதல், பொட்டணி, மூடுசீலை, வடிகட்டுசீலை.
வேடுகட்டல் } வேடுகட்டுதல் } பொட்டணிகட்டல், வண்டுகட்டல்.
வேடுவன்-பாலைநிலமகன், வேட்டைக்காரன், வேட்டையாளி.
வேடை- அபேட்சை, காமநோய், செட்டித்தெரு, மரக்கலம், வெப்பம்.
வேட்கை - ஆசை.
வேட்கைத்துணைவி - மனைவி.
வேட்கைப்பெருக்கம் - காமநோய், பேராசை.
வேட்கோபன் - குயவன்.
வேட்சை - அபேட்சை, புடவை.
வேட்டகம் - தலைப்பா, புத்தகம், மாமியார்வீடு.
வேஷ்டகம் - பிசின்.
வேட்டணம் - காது, காப்புக்கட்டல், சுவர்சுற்றல், சூழ்தல்.
வேட்டம் - சாரம், பிசின், வேட்டை.
வேட்டல் ஆசைப்பெருக்கம், ஓமஞ்செய்தல் அது அந்தணர் வணிகர்க்குரிய அறுதொழில் ஒன்று, மாயையாக்கை பதினெண் குற்றத்தொன்று விருப்பம், விவாகஞ் செய்தல்.
வேட்டார்-சிநேகிதர், புருடர்மித்திரர், விவாகமானோர்.
வேட்டாள்-மணம்புரிந்தவள், மனைவி.
வேட்டி - வேஷ்டி, சோமன்.
வேட்டிதம்- கூத்தின்விகற்பம், சூழ்வு, தடை, மடிப்பு
வேட்டியம் - சுற்றல்.
வேட்டு - வெடி வேட்டென்னேவல்.
வேட்டுவன் -குளவி, மகநாள், வேடன், வேட்டையாளி.
வேட்டை-இளைப்பு, துன்பம், வேட்டம்
வேட்டைக்கடா-வேட்டைக்குப்பழக்கியகடா.

வேட்டைக்காரர்-வேட்டையாடுவோர்.
வேட்டைநாய் - கடிநாய், வேட்டையாடப்பழகியநாய்.
வேட்டைப்பல் - வக்கிரதந்தம்.
வேட்டையவியல் - கூட்டிடாவவியல்.
வேட்டையாடல் } வேட்டஞ் செய்தல்.
வேட்டையாடுதல் }
வேட்டைவாளி - ஒருகுளவி.
வேட்டோர் - வேட்டார்.
வேட்டோன் - சிநேகிதன், புருடன்.
வேட்பித்தல் - ஓமஞ்செய்வித்தல் அது அந்தணரறதொழிலில் ஒன்று.
வேட்பு - விருப்பம்.
வேணவை - மதில், வேட்கை.
வேணவா - ஆசைப்பெருக்கம்
வேணன் - அம்பட்டத்தியிடத்திற் பார்ப்பானுக்குப் பிறந்து புகழ்ந்து பாடுவோன்.
வேணி-ஆகாயம், இடையர்வீதி, சடை, மரவேர், யாறு, வசம்பு.
வேணிகை - சடை.
வேணிசம்ஹாரம் - ஒருநூல்.
வேணிரம் - பொன்னுங்கொட்டை.
வேணீர் - தாகநீர்.
வேணு - உட்டுளை, கலைஞானமறுபத்துநான்கில் ஒன்று, குழல், புள்ளாங்குழல், மூங்கில், வாள், வில், வேய்ங்குழல்.
வேணுகம் - யானைத்தோட்டி.
வேணுகன் - வேய்ங்குழலூதுவோன்.
வேணுசாநம் - வேய்ங்குழலூதல்.
வேணுகோபாலன் கிருஷ்ணன், வேய்ங்குழல் வாசிக்கும் வடிவத்திற்கொண்ட பெயர்.
வேணுநம் - மிளகு.
வேணுநாதர் - திருநெல் வேலியிலே கோயில் கொண்டிருக்கும் சவாமி பெயர்.
வேணுநாதன் - வீணைவாசிப்போன்.
வேணுபலம் - மூங்கிலரிசி.
வேணும் - வேண்டும். [குர்.
வேணுவனம்-திருநெல்வேலி, திருப்பா
வேணுணயன் - சதசித்து புத்திரன்.
வேண் - அவா, கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று, வேட்கைப்பெருக்கம்.
வேண்டல் - ஆசை, ஆசைப்பெருக்கம் இரத்தல், விரும்புதல்.
வேண்டாத்தலையன் - அஞ்சாதவன், மூடன்.
வேண்டாமை - வெறுப்பு.
வேண்டார் - பகைவர்.
வேண்டாவெறுப்பு - பகை, வேண்டாமென்றவெண்ணம்.
வேண்டிக்கேட்டல் மன்றாடிக்கேட்டல்
வேண்டுதல்-வாங்குதல், வேண்டிக்கேட்டல்.
வேண்மாள் - செங்குட்டுவன் மனைவி, இவள் கண்ணகியைப் பிரதிஷ்டை செய்து பூசிக்கவேண்டும் என்றுதன் கணவனை வேண்டிக்கொண்டு அவனது அநுஜ்ஞைபெற்று அவ்வாறே பூசித்துவந்தவள், கண்ணகி கற்பிற் சிறந்தவளாதலால் இவள் பூசித்தற்குரியவளானள்.
வேதகம் - கருப்பூரம், தானியம், வேறுபடுத்தல்.
வேதகருப்பன் - பார்ப்பான், பிரமன்.
வேதகர்ப்பை - தர்க்கை.
வேதகாரர் - நெய்வார், பொருந்தர்.
வேதகிரீசுரர் - திருக்கழுக் குன்றத்திலே கோயில் கொண்டிருக்கும் சுவாமிபெயர்.
வேதகௌலேயகன் - சிவபிரான்.
வேதக்கொடியோன் - துரோணசாரியன்.
வேதசங்கிதை - வேதத்திரட்டு.
வேதசம் - பிரம்பு, பெருவிரலடி.
வேதசாத்திரம் - வேதம்.
வேதசாத்திரி - வேதவியார்த்தி பண்ணுவோன்.
வேதசாரம் - நாணற்புல், வேதத்தின் சத்து.
வேதசிரசு-பிராணன், புத்திரன், உசேநசுதந்தை, மார்க்கண்டேயன் புத்திரனென்றும் சிலர் கூறுவர்.
வேதஞ்ஞன் - வேதஅறிஞன்.
வேதண்டம் - கைலை, பொதியமலை, மலை, யானை.
வேதண்டவில்லி - சிவபெருமான்.
வேதத்துவம் - வேதப்பொருள்.
வேதநாதன் - கடவுள், பிரமன்.
வேதநாதேசுவரர் - திருவோத்தூரிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமி பெயர்.
வேதநாநம் - அனுபவித்தல்.

வேதநாயகன் - வேதநாதன்.

வேதநாயகி - திருக்கழிப் பாலையிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

வேதநி - வெந்தயம்.

வேதநிந்தகன் - நாஸ்திகன், புத்தன்.

வேதநிந்தை - வேதத்தையிகழ்தல்.

வேதநிருத்தன்-சமணன், சூனியவாதி.

வேதநீயம் - உபாதியின்மை.

வேதபாரகர் - பார்ப்பார்; வேதத்தைப் படிப்பிப்போர்.

வேதபுண்ணியம் - வேதானுசாரம்.

வேதப்பொருத்தம் - மணம்பொருத்தம் பத்தில் ஒன்று.

வேதபுரீசர் - திருவேதிகுடியிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர். திருவெழுந்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமிபெயர்.

தேவமங்கையம்மை - திருநணாவிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

வேதமாதிரு - காயத்திரி.

வேதமாயாவாதம் - ஒருசமயம்.

வேதமார்க்கம் - வைதிகம்.

வேதமித்திரன் - செனபரிகுரு.

வேதமுக்கியை - கஸ்தூரி.

வேதமுதல்வன் - கடவுள்.

வேதமுதல்வி - சரச்சுவதி, பார்வதி.

வேதம் - அறிவு, ஆழம், கலைஞானமறுபத்து நான்கில் ஒன்று, துளைத்தல், முதனூல் விபரம். சுருதி, இது இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வணவேதம் என நான்குவகைப்படும். இந்நான்கும் ஞானகாண்டம் கர்மகாண்டம் என இருவகைப்படும். ஞானகாண்டம் பிரமத்தைப் பிரதிபாதிப்பது, அது உபநிஷத்து எனப்படும், கர்மகாண்டம் வர்ணாசிர தர்மங்களையும் இந்திராதி தேவபூசைகளையும் விவரித்துக்கூறுவது அந்தப்பூசைகள்சர்வாந்தரியாமியாகிய பரமபதிக்கும் பிரீதியாக ஒவ்வொரு மூர்த்தமூலமாகச் செய்யப்படுவன. இந்தவேதம் காலந்தோறும் அந்தந்தக் காலவேறுபாட்டுக்கேற்ப இருடிகளால் வகுக்கப்படும். தற்காலத்துள்ள நான்கும் துவாபரயுகத்தின் இறுதிக்காலத்தில் அவதரித்த கிருஷ்ணத்வையாயனர் என்று சொல்லப்படுகிற வேதவியாச முனிவரால் வகுக்கப்பட்டன, இருக்குவேதம் இருபத்தொரு சாகையும் யஜுர்வேதம் நூறுசாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையும் உடையன, இன்னும் இந்தவேதம் மந்திரமென்றும் பிராமணமென்றும் இரண்டு பிரிவுகளையுடையது, மந்திரம் தேவதைகளை நியாகிக்கும் வாக்யங்கள், பிராமணம் அந்த மந்திரங்களைப் பிரயோகிக்கு முறையை யறிவிப்பது.

வேதாஞ்சகன் - பிரமா.

வேதரட்சணம்-வேதத்தைப் பாதுகாத்தல்.

வேதல் - வேகுதல், வேய்தல்.

வேதவசனம் - திருவாக்கு.

வேதவாக்கியம் - வேதவசனம்.

வேதவதகம் - வியாகரணம்.

வேதவதி-ஒருநதி, குசத்வராஜபுத்திரி. சீதையின் பூர்வநாமம், இவள் குசத்வஜன் என்னும் முனிக்கு மாநசபுத்திரியாகப் பிறந்து விஷ்ணுவுக்குத் தேவியாக வேண்டுமென்னும் விருப்பத்தோடிருக்குங்காலத்திலே, தம்பன் என்னும் இராக்ஷஸன், இவளைத் தனக்கு மனைவியாகத்தருமாறு குசத்வஜனைவேண்ட, அவன் அதற்கு உடன்படாது மறுத்தான், அதற்குத் தம்பன் கோபங்கொண்டு குசத்வஜனைக்கொன்று, அந்தக்கொலைகாரணமாக நேர்ந்த பிரமகத்தியால் தானும் இறந்தான், அப்பால், இவளை, இராவணன் கண்டு மோகித்து வலாத்காரம்பண்ண, அவள் கோபித்து, அடா பாவி, நீ யென்னை அவமானஞ்செய்ய எத்தனித்தமையால் நான் வுன் வமிசத்துக்கு நாசகாரணமாக, உலகத்திலே யோனிவாய்ப்படாது பிறந்து இப்பழி தீர்ப்பேனெனக் கூறித் தீப்பாய்ந்து அந்தச் சரீரத்தையொழித்தாள், அதன்பிறகு அவள் இலங்கையில் ஒருதடாகத்தில் தாமரைப் பூவிற்பிறந்து அழகாகிய சிசுவாய் விளங்க, அச்சிசுவை ஏவலாளர்கண்டு எடுத்துப்போய் இராவணன்கையிற்

கொடுத்தார்கள், அவன் இந்தச் சிசுவினால் இலங்கையழியுமென்று சோதிடர் கூறக்கேட்டு, சிசுவை ஒரு பொற்பேழையில் அடக்கஞ்செய்து கடலிலிட்டான், அந்தப்பேழை மிதந்துபோய் மிதிலைநாட்டுத் துறையிற் சேர்ந்து மண்ணிற்புதைந்து கிடந்து ஜநகமஹாராஜன் புத்திரகாமேஷ்டியாகஞ்செய்ய வுழுதபோது அவன் கையிலகப்பட்டது அந்தச் சிசுவே சீதை.

வேதவதி-ஒருநதிகுசத்வஜராஜபுத்திரி.

வேதவநம்-திருமறைக்காடு, வேதாரணியம்.

வேதவரசன் - பார்ப்பான்.

வேதவித்தகன் - வேதங்கற்றோன்.

வேதவியாசர் - வியாசர்.

வேதவியாசன்-ஒரிருடி அவன் வேதத்தைச் சிக்கறுத்தோன்.

வேதவிருத்தம் - வேதபோதனை.

வேதனம் - அறிவு, ஒருசடங்கு, கூலி, சம்பளம், சீவனம், துளைத்தல், பொன், விடயத்தான்வந்த அறிவு, வேதம், வேதனை.

வேதனுதானம் - கூலிகொடாமை.

வேதனி - கன்னவேதனக்கருவி.

வேதனை - அலைத்தல், நோய்,வருத்தம்

வேதனைக்காட்சி - காட்சி பேதத்தொன்று அது இச்சாஞானச் செயலிலராகாதி செலுத்தல்.

வேதனைதீர்தல் - மாயாமறைவு விடுதல், வருத்தந்தீர்தல்.

வேதனைப்படுதல் - உபாதிப் படுதல், மறைக்கப்படுதல்.

வேதன் - அருகன், கடவுள், பிரமன், வியாழம், பௌஷ்ய இராஜாவுக்குக் குரு, அயோத தவுமியன் சீடன்.

வேதா - கடவுள், சூரியன், பிரமன், முனிவன்.

வேதாகமம் - வேதம்.

வேதாக்கினி - ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினியம்.

வேதாக்ரணி - சரச்சுவதி.

வேதாங்கம் - வேதசாத்திரம், வேதப்பகுதி (வேதாங்கம்-வேதவுறப்பு.) அது சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம் என்னும் ஆறும் வேதத்துக்கு அங்கமெனப்படும், இதனை ஷடங்கமென்பர் வடநூலார், வேதத்தை ஸ்வரத்தோடு கிரமமாக ஓதுதல்வேண்டும். அவ்வாறு ஓதாவிடின், ஓதப்படுகிற மந்திரங்கள் தத்தம் பயன்களைத் தராதொழிதலே யன்றி தோஷமும் சித்திக்கும், ஸ்வரபேதத்தாலுச்சரிக்கப்படுகிற முறையைத் தெரிவிப்பது சிக்ஷையெனப்படும். வேதங்களால் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டிக்குங் கிரமத்தைத் தெரிவிப்பது கற்பமெனப்படும், வேதங்களின் எழுத்து சொல் பொருள் ஆகிய இவற்றினிலக்கணங்களை தெரிவிப்பது வியாகரணமெனப்படும், வேதார்த்தத்தை நிச்சயிப்பது நிருத்தமெனப்படும், வேதமந்திரங்களில் காயித்ரி முதலிய சந்தஸ்ஸுகளின் பெயரையும் அவைகளின் எழுத்து இத்தனை யென்பதையும், அறிவிப்பது சந்தோபிசிதம்எனப்படும், வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிற கர்மங்களைச் செய்தற்குரிய காலத்தை நிச்சயிப்பது சோதிடம் எனப்படும்.

வேதாதி, வேதாதிபீஜம் } பிரணவம்.

வேதாதிவர்ணம் - வேதாதி.

வேதாதிவண்ணன் - கடவுள்.

வேதாத்தியாபகன் - வேதமோதுவிப்போன்.

வேதாத்தியாபனம், வேதாத்தியாயனம் } வேதமோதல்.

வேதாத்தியயி - வேதமோதுவோன்.

வேதாத்திரி - வேதமலை, கழுக்குன்றம்.

வேதாந்தகன் - வைதிகன்

வேதாந்தகன் - வேதாந்தி.

வேதாந்த சூடாமணி, வேதாந்த சூளாமணி } இது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தமிழ்மொழியிற் செய்யப்பட்ட ஒரு வேதாந்த நூல், இது செய்யுட்சிறப்பு பொருளாழம் முதலியவற்றாற்சிறந்தநூல், இதற்கு முதனூல் வடமொழியிலுள்ள விவேகசிந்தாமணி, இது பத்துப் பரிச் சேதங்களையுடையது, அந்தப் பத்துப் பரிச்சேதங்களுள் ஒன்றாகிய வேதாந்த பரிச்சேதத்தின் மொ

ழிபெயர்ப்பே இந்த வேதாந்த சூடாமணியென்னும்நூல், பிரபுலிங்கலீலை முதலிய பலநூல்கள் இவ்வாசிரியராற் செய்யப்பட்டன.

வேதாந்தசூத்திரம்-வேத சாரங்களாகிய உபநிடதங்களையெல்லாம் ஆராய்ந்து வேதவியாசமுனிவரர் இயற்றிய சூத்திர ரூபமாகிய பிரமமீமாஞ்சைவேதாந்த சூத்திரம் எனப்படும், இதனை உத்தரமீமாஞ்சையெனவும், சாரீரகசூத்திரமெனவுங் கூறுவர், இந்த வேதாந்தசூத்திரம் நான்கு அத்தியாயங்களையும், பதினாறுபாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையும் உடையது.

இரண்டாம் அத்தியாயத்திலே சாங்கியம் முதலிய புறச்சமயவிரோதபரிஹாரமும், மூன்றும், அத்தியாயத்திலே வித்தியாசாதநநிர்ணயமும் நான்காம் அத்தியாயத்திலே ஞானசாதக பலமாகிய வீடுபேறும் சொல்லப்படும்.

வேதாஞ்ஞன் - வேதாந்தி.

வேதாந்ததீபம் - ஒருநூல்.

வேதாந்தம் - வைதிகம். வேதமுடிவு, அது உபநிஷத்து எனப்படும். உத்தரமீமாஞ்சை,அது அத்வைதமெனப்படும்.

வேதாந்ததேசிகர்-இவர்வடகலை வைஷ்ணவாசாரியர், வடமொழியில் சிறந்த பண்டிதசிகாமணி, இவராற்செய்யப்பட்ட வடமொழி நூல்களும் தென்மொழி நூல்களும் பலவுள, வடமொழிநூல்களாவன த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி முதலியன, தென்மொழி நூல்களாவன, தேசிக பிரபந்த முதலியன, இவர் ஐந்நூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர்

வேதா - பிரமன்.

வேதாந்தன் - அரன், அருகன் ,கடவுள்.

வேதாந்தி - வைதிகன்.

வேதாப்பியாசம் - வேதமோதல்.

வேதாரணியம் - திருமறைக்காடு. சோழநாட்டின் தெனபுறத்திலுள்ள ஒரு சிவஸ்தலம், வேதாரணியம் என்பதன்மொழிபெயர்ப்பு வேதங்களால் பூசிக்கப்பட்ட தலமாதலால் இதற்கு வேதாரணிய மென்னும் பெயர் வழங்கலாயிற்று.

வேதாரன் - பல்லி.

வேதார்த்தன் - கடவுள்.

வேதாளம் - ஒருபிசாசம்.

வேதாளி - காளி.

வேதாளியர் - புகழ்வோர்.

வேதி - ஓமகுண்டம், கேட்டைநாள், மதில்,வேதிகைவேதியென்னேவல்.

வேதிகை - கேடகம், திண்ணை, பலிபீடம், மேடை தருமராஜன் மனைவி, திரௌபதி.

வேதிகைபீடம் - ஓமவதி.

வேதிஜை - திரௌபதி.

வேதிதம் - துளைத்தல், துளையுடைப்பொருள்.

வேதித்தல் - பிளத்தல், விகாரப்படுத்தல் வேறுக்கல்.

வேதித்துவம் - அறிவு.

வேதியர் - பார்ப்பார்.

வேதினம் - ஈர்வாள்.

வேதீசன் - பிரமன்.

வேது - காரமருந்து, வெய்து.

வேதை-இரேகை, துன்பம், பொன்னுக்கல், வேதித்தல்.

வேதைச்சிந்தூரம் - உலோகங்களைப் பொன்னுக்குமருந்து

வேதோதயன் - சூரியன்.

வேதோபகாரணம்-வேதானுசாரமானது.

வேத்தவை - இராஜசபை.

வேத்தியம் - அடையாளம், அறியத்தக்கது.

வேத்திரகீயம் - ஒருநகரம்.

வேத்திரச்சாய் - பிரப்பங்கோரை.

வேத்திரதரன், வேத்திரதாரகன் } கட்டியகாரன், நந்திதேவன் வாயில் காவலன்.

வேத்திரத்தாள் - பிரப்பங்கிழங்கு.

வேத்திரம்-அம்பு, இலக்கை, பிரம்பு.

வேத்திரவதி - ஒருநதி.

வேத்திராசனம் - பிரப்பம்பாய்.

வேத்திரி - துவாரபாலகன்.

வேத்தவை - இராசசபை.

வேந்தன் - அரசன், இந்திரன், சந்திரன், சூரியன், வியாழன்.

வேந்து - அரசன், இறைமை.

வைபோகம்-சந்தோஷம், சிற்றின்பசம்பிரமம், வயணம், விவேகம்.
வைபோகி - விவேகி.
வைபோதிகன்-சாமக்காவற்காரன். [ன்.
வைப்பாட்டி - குடிப்பெண்ணல்லாதவ
வைப்பிராசை-மேருவுக்கு மேற்கேயுள்ள ஒருவனம், இது அதிரமணீயமானது.
வைப்பு-இடம்,ஊர்,உண்டாக்கல், சேமதிரவியம், பெருமை, வைத்தல்.
வைப்புக்கட்டு - பொய்க்கதை.
வைப்புச்சரக்கு-உண்டாக்கினசரக்கு.
வைப்புச்செப்பு - வைக்குமிடம்.
வைப்புத்தலம் - மூவர் பாடல்பெறாததலம்.
வைமாத்திரேயன்-சக்களத்திபுத்திரன்.
வையகம் } உரோகணி, சிவிகை, தண்டிகை,தேர்,பண்டி,பாண்டில்பூண்டவூர்தி, பூமி, வாகனம்.
வையம் }
வையாகரணம் - வியாகரணம், இலக்கணம்.
வையாகரணன் } இலக்கணம் ஆக்கியோன், வியாகரணம் படித்தோன்.
வையாகரணி }
வையாசம் - வியாசம்.
வையாபுரி - பழனியிலுள்ள ஓரேரி, ஒரு புண்ணியதீர்த்தம்.
வையாளி - குதிரையின் விருத்தி.
வையாளிவீதி - குதிரைகடத்தும்வீதி.
வைரகரம் - பகைசாதித்தல்.
வைரகாரன் - சத்துரு.
வைரங்கிதன் - பற்றிலான்.
வைரசுத்தி - பகைதீர்த்தல்.
வைரநிரியாணம் - பகைநீக்கல்.
வைரம் - நவமணியிலொன்று, பகை, விரோதம், வீரத்தின்றன்மை. வயிரம், வலாசுரன் கொல்லப்பட்டபோது அவனது எலும்பு சிதறி பல மலைகளின்மேலும் விழுந்து வைரமணிகளாயின, ததீசியெலும்பு என்பாருமுளர், அவ்வயிரம் ஒளிவேறுபாட்டால் நான்காகும். "அந்தணன் வெள்ளையரசன் சிவப்பு, வந்தவைசியன் பச்சை, சூத்திரன், அந்தமில் கருமையெனறறைந்தனர் புலவர்."

அவை பிரமவயிரம்,க்ஷத்திரியவயிரம் வைசிய வயிரம் சூத்திரவயிரம் என்பனவாம்.

வயிரத்திற்குக் குற்றமாவன:—"சரைமலங்கீற்றுச்சம்படிபிளத்தல், துளைகரிவிந்து காகபாதம், இருத்துக் கோடிகளிலாதன் முரிதல், தாரைமழுங்கறன்னோ, டீராறும் வயிரத்திழிபெனமொழிப" என்றபடி பன்னிரண்டாம், அவற்றுள் பெருங்குற்றம் நான்கும் பயனுமாவன,
"1. காகபாதநாகங்கொல்லும்"
"2. விந்துசிக்கையிற்சந்தாபந்தரும்"
"3. மலம்பிரியாத துளிவந் தருகிளை கெடும்"
"4. கீற்றுவரலினைபெற்றவர் மாய்வர்" எனப்படும்.

குணமாவன:—பலகை யெட்டுங் கோணமாறும், இலகிய தாரையுஞ் சுத்தியுந்தராசமும், ஐந்துங்குணமென்றறைந்தனர்புலவர், இந்திரசாபத் திக வொளிபெறினே" என்பன.

சில சாத்திரங்களில் வயிரம் ஒருவகைக் கல்லென்று கூறப்பட்டுள்ளது,புயிரம், மதங்கமலை இமயமலைவேணுகதி முதலிய இடங்களி லுண்டாமென்பது ஆரியநூற்றுணிபு, வயிரத்தைச் சரீரத்திலணிவதனுல், சர்ப்பதோஷத்தால் புத்ரோத்பத்தியில்லாத பெண்களுக்குப் புத்திரலாபமும், எல்லார்க்கும் இடிவிஷம்முதலியவற்றுக்கு அஞ்சாமையுமுண்டாகும். வலாசுரன்வயிற்றின் புறத்தைக்கொத்திவிழுங்கிய கருடன் அதனைக் கழித்துமிழ, அது வீழ்ந்து பல மலைகளிலுமுறிப் பிறந்த கற்கள் மரகதமெனப்படும், கருடோத்காரம் எனப்படுவது மதுவே, பச்சைக்கு, "நெய்த்த மயிற்கழுத்தொத்தபைம்பயிரிற், பசுத்தல்பொன்மை தன்னுடன் பசுத்தல், வக்கிபாய்தல், பொன்வண்டின் வயி,ஜொத்ததெளிதலோடெட்டுங் குணமே"

"கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்று, பரிவுதார் சாயையிறுகுதன் மரகதத், தெண்ணிய குற்ற மிவையெனா மொழிப"

இனி மாணிக்கம் பதுமராகம் சௌகந்தி குருவிந்தம் கோவாங்கு என நான்கு. "தாமரை கழுநீர் சாதகப்

புட்கண கோபமின்மினி கொடுங் கதிர்விளக்கு, மாதுளைப் பூவி னைத வன்னி யீரைந்து, மோது சாதுரங்க வொளியா கும்மே''

''திலக மூலோத்திரஞ் செம்பருத் திப்பூக், கவிமலர்குன்றி முயலுதிரம் மே, சிந்தூரங் குக்கிற் கண்ணென வெட்டும், எண்ணிய குருவிந்தமன் னிய திறமே''

''கோகிலக்கண் செம்பஞ்சு கொய் மலர்ப்பலாசம், அசோகப் பல்லவ மணிமலர்க்குவளை, இலவத்தர்க னென்றூறு குணமும்சௌகந்திக்குச் சாற்றிய திறனே''

''கோவை நற்செங்கல் குராமல மஞ்சளெனக், கூறிய நான்குங் கோ வாங்கு திறனே''

இனிப் புருடராகத்தின் குணம், பொன்னையுருக்கி மாசறத் தெளிய வைத்தாலொத்த நிறத்தினை யுடை மை, வைடூரியம் - தேன்றுளி நிறத் தினையுடையது. நீலம், ''வெள்ளை சிவப்புப்பச்சை கருமையென்றெண் ணிய நாற்குலத்திலங்கிய திறமே'' ''கோகிலக்கழுத்துக்குவளை கரும்பர், ஆகுலக் கண்களவுரிச்சாறு, காயா நெய்தல் கனத்தல்பத்தி, மாய்தலெ னக்குணம் பதினொன்றுமே'' என வருவனவற்றுலே தெளியப்படும்.

நீலத்துக்குக் குற்றமெட்டு, இது வரைக்கும் சொல்லிய மணிகளெல் லாம் ஒருமுதலிற் றோன்றின.

இனி முத்துக்குரிய குற்றம் - காற் றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை யென்பன, குணம்-சந்திர னிறமும், வெள்ளியின் சோதியும், செவ்வாயி னொளியும் என மூன்றும். எல்லாம் உருண்டனவாதல்வேண்டும்.

பவளத்தின் குணம்- துளையின்மை யும், உருட்சியும், சிந்தூர நிறமும், மூசுமூசுக்கைக் கனிநிறமும் உடை மை, முத்தினுல் மேகவெப்பந் தணி யும், பவளத்தினுல் சர்மரோகம் நீங் கும்,இவற்றின்விரிவெல்லாம்இரத்க பரீக்ஷையென்னும்நூல் முதலியவற் றிற் காண்க.

வைரவக்கடவுள்-சிவரூபங்களு ளொன் று, இவர் சிவபெருமான் திருக்குமா ருள் ஒருவர், சிவபெருமான் தம் மை மதியாத பிரமனது ஐந்து சிரங் களி லொன்றைக் கொய்விக்கும்பொ ருட்டுத் தோற்றுவித்தமூர்த்தி.

வைரவம் - வயிரவம்.

வைரவன் - பைரவன்.

வைரன் - சத்துரு.

வைராகம் - விராகம்.

வைராகி - துறவி.

வைராகிகன் - துறவி,

வைராக்கிய சதகம்-ஒருதுறவுநூல். வைராக்கியதீபம்செய்தசாந்தலிங்க சுவாமிகளாற் செய்யப்பட்ட ஒரு ஞானநூல், இது சொற்பொருள்களால் மிகச் சிறப்புற்று விளங்குவன.

வைராக்கியசூரியோதயம்-ஒருநூல்.

வைராக்கியதீபம் - ஒருநூல்.

வைராக்கியம்- பகை, வெறுப்பு, ஆசை யற்றிருத்தல்.

வைராடம் - இந்திரகோபம்.

வைராயமாணம் - சத்துருத்தனம்.

வைராரோஹம் - பெரும்போர்.

வைராவி-வயிரமனதுடையோன்.

வைரி - சத்துரு.

வைரிதை - வன்மம், வீரம்.

வைரியம் - வீரியம், வைராக்கியம்.

வைரியர் - பாணர்.

வைரூப்பியம் - அவலட்சணம்.

வைரோசனநிகேதனம் - பாதலம்.

வைரோசனன்-சூரியன்,மாவலி,வாலி.

வைரோசனி - புத்தன்,மாவலி,வாலி.

வைரோதாரம் - பழிவாங்கல்.

வைலட்சணம் - அவலட்சணம்.

வைலட்சயம்-எதிரிடை, வித்தியாசம்.

வைலவம் - வில்வம்.

வைவசுவதமநு-விவசுவதன்புத்திரன், இவன்மனைவி சிரத்தை, இவன் புத்திரர், இக்ஷ்வாகு திருகன், சரியாதி, திஷ்டன், திருஷ்டன், கரூசன், நரிஷ்யந்தன்,விருஷத்திரன்,நபகன், கவி எனப்பதின்மர், இவருள் இக்ஷ்வாகு வமிசத்தரசர்களுக்கு அயோத்தை இராஜதானியாயிற்று.

இக்ஷ்வாகுவுக் குக்ஷி மூத்தமகன், குக்ஷி தம்பியாகிய நிமிக்கு மிதிலை இராஜதானி.

கரூசன் வமிசத்தார் காரூசர் எனப்படுவர்.

நபகன் வமிசத்தார்க்கு கண்டகிநதி தீரத்திலுள்ள தேசமுரியது.

சரியாதி வமிசத்தார்க்கு குசஸ்தலி இராஜதானி. இவர்களே வைவசுவத மநு வமிசத்தரசர்கள்.

வைவசுவத மநுவின் மனைவியாகிய சிரத்தையானவள் தனக்கு ஒரு புத்திரியும் வேண்டுமென்று பிரார்த்தித்து இளை யென்னும் புத்திரியைப் பெற்றாள், அதுகண்ட வைவசுவதன் தனது குருவாகிய வசிஷ்டரை நோக்கி, அந்தப் புத்திரியைப் புத்திரனாகச்செய்து தருகவெனவேண்ட, அவரும் அவ்வாறே இளையென்னும் புத்திரியைச் சுத்தியுமநன்என்னும் புத்திரனாகச்செய்து தருதலும், அவனையும் ஒரு திசைக் காசனாக்கினன், அவன் ஒருநாள் வேட்டைமேற் சென்றபோது, சரவணப் பொய்கையைக்கண்டு அங்கே தங்கினன், தங்குதலும், பூர்வகாலத்தில் பார்வதிதேவியார், யாவனொருவன் இந்தப் பொய்கையில் வந்து தங்குவானோ அவன் பெண்ணுருவை யடையக் கடவனென்று விதித்திருந்ததனால் சுத்தியுமநன் மீளவும் இளையென்னும் பெண்ணாயினன், அந்தப்பெண்ணுருவைக் கண்ட புதன் மோகங்கொண்டு அவளைக்கூடிப் புரூரவனைப் பெற்றான். இந்தப் புரூரவனாலேயே சந்திரவமிசம்பெருகுவதாயிற்று, பிறகு வசிஷ்டரது முயற்சியால் இளையானவள் ஒருமாசம் பெண்ணாகவும், ஒரு மாசம் சுத்தியுமநன் என்னும் ஆண் மகனாகவும் இருக்கும்படிச் சிவபெருமான் அருள் செய்தார்.

வைவச்சுதன் - ஏழாவதுமனு, நமன்.

வைவஸ்வதன்-ஏழாவதுமனு, சனி.

வைவஸ்வதி - தென்றிசை.

வைவாகிகம் - விவாகத்திற்குரியது.

வைவு - எச்சு, சாபம்.

வைச்சுதன் - ஒருமனு, சனி, நமன்.

வைனதகம் - நெய்ப்பாத்திரம்.

வைனதேயன் - வைநதேயன்.

வைனம் - பருத்தல்.

வைஹாரம் - மகததேசத்து இராஜதானியாகிய கிரிவிரசத்துக்குச் சமீபத்திலுள்ள ஒருமலை.

வைஷ்ணவம் - விஷ்ணுசம்பந்தம், வைதிகசமயம் மூன்றனுள் ஒன்று, மூன்றாவன-சைவம் வைஷ்ணவம் சாக்தம் என்பன.

வைஷ்ணவமாவது விஷ்ணுவை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுசமயம்.

இது தென்கலை வடகலை யென இரண்டு பிரிவுகளை யுடையதாகும், இவற்றுள்.

தென்கலையாவது நாலாயிரப்பிரபந்தத்தையும் வேதபுராணேதிஹாஸங்களையும் சமமாகக்கொண்டசமயம்.

வடகலையாவது நாலாயிரப்பிரபந்தத்தை அவ்வாறு அங்கீகரியாத சமயமாம்.

ஆழ்வார்களும் இராமாநுஜாசாரியரும் இந்தச்சமயத்தை நிலைபெறுத்தினவர்களாவார்கள். வைஷ்ணவர்கள் விசிஷ்டாத்வைத சித்தாந்தக் கொள்கையை யுடையவர்கள்.

வௌ

வௌ - ஒலிக்குறிப்பு, ஓரெழுத்து, வௌவென்னேவல்.

வௌவம் - தாமரை.

வௌவல் - கொள்ளையிடல், திருடல், பிடித்தல், வாருதல்.

வௌவி - மான்.

வௌவுதல்-வௌவல்.

வௌவால்-ஒருபறவை. இதற்குப் பல்லிருத்தலால் மிருகவினத்தி லொன்றென்பாருமுளர்.

வ்

வ்ருகதூமம் - மீர்மேற்படர்கொடி.
வ்ருகோதரன் - வீமசேநன்.
வ்ருஜநம் - தலைமயிர்
வ்ருஜிநம் - கிலேசம்.
வ்ருட்சசரம் - குரங்கு.
வ்ருட்சநாதம் } ஆலமரம்.
வ்ருட்சபாகம் }
வ்ருட்சஸம் - உடம்பு.
வ்ருட்சாதநம் - அரசமரம், கோடரி.
வ்ருட்சாதநி - காட்டுப்பாகல்.
வ்ருத்தசங்கம் - கிளிஞ்சில்.
வ்ருத்தபலம்-இலந்தை,மாதளை, மிளகு.
வ்ருத்தமல்லிகை - குடமல்லிகை.

ஸ்ரீ

ஸ்ரீ-ஒரெழுத்து ஒருமொழியிலே மின்னிர்க்கு காட்ட முன்னிற்கும் எழுத்து.
ஸ்ரீகண்டம் - மலயபர்வதம்.
ஸ்ரீகண்டன்-சிவபெருமான், பவபூதி.
ஸ்ரீகண்டாசாரியர்-நீலகண்ட சிவாசாரியர், இவர் சங்கராசாரிய ரிருந்த காலத்திலிருந்தவர், இவ்விருவரும் ஒருமுறை சந்தித்தபோது, ஸ்ரீகண்டர் வினவிய வினக்களுக்குச் சங்கராசாரியர் விடைகூறாது மயங்கி நரசிங்கமூர்த்தியைத் தியானித்தார் அந்தமூர்த்தி வெளிப்பட்டு ஸ்ரீகண்டரைத் தண்டிக்க யத்தனித்தது, அது கண்ட நீலகண்டர் பரமசிவத்தைத் தியானித்தனர்.

அப்பொழுது பரமசிவம் சரபரூபங்கொண்டு நரசிங்கத்ஸைதக் கிழித்தெறிய, சங்கரர் ஸ்ரீகண்டரை வணங்கி, அவரிடத்துச் சிவதீக்ஷைபெற்றுச் சிவாநந்தலகரி சௌந்தரியலகரி முதலியவற்றைச் செய்தாரென்பர். இவ்விரண்டையும், வீரைக்கவிராஜ பண்டிதர் என்னும் புலவர் பெருமானனவர் தமிழில் விருத்தயாப்பால் மொழிபெயர்த்தருளினர் இதில் நாற்பது கவி சிவசத்திகளுடைய இன்பப்பெருக்கையும் மேலே எழுபது கவி தேவியின் சௌந்தரியப்பெருக்கையும் கூறும். இந்நூலில் காணப்படுகிற சொற்சுவை பொருட்சுவை கற்பனலங்காரங்கள் வேறெந்த நூலினும் காணப்படா, இதைச் சத்திபத்தி மிகுந்தவர் விசேடமாகக் கொண்டாடுவார்கள்.
ஸ்ரீசைலம் - க்ஷிதிதாம் என்னும் மலை, இதனைத் திருப்பருப்பத மென்பர் தமிழர்.
ஸ்ரீதராசாரியர் - ஸ்ரீவிஷ்ணு புராணத்துக்கும் பாகவதத்துக்கும் வியாக்யாநஞ்செய்தவர்.
ஸ்ரீதேவி - இலக்குமி, தேவகன்மகள், வசுதேவன் மனைவியாகிய தேவகியோடு பிறந்தவள்.
ஸ்ரீபெரும்பூதூர் - தொண்டை நாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், இதில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் பெருமான் பெயர் ஆதிகேசவப் பெருமான் இந்த திவ்யதேசத்திலே விசிஷ்டாத்வைத மதோத்தாரகராகிய ஸ்ரீராமாநுஜாசாரியர் எண்ணூற்று முப்பது வருஷங்களுக்கு முன்னே அவதரித்து வைஷ்ணவமதஸ்த்தாபகராய் விளங்கியிருந்தனர்.இவர்தந்தையார்பெயர் ஆசுரி-கேசவாசாரியர், தாயார் பெயர் காந்திமதி, இந்த ஸ்ரீபெரும்பூதூரை ஸ்ரீபூதபுரியென்றுமவழங்குவர் இவர் கல்விகற்றது திருக்கச்சியில் திருக்காஞ்சியில் பிரபல வித்வானயிருந்த யாதவப்பிரகாசர் என்னும் சந்நியாசியினிடத்தில் சகலசாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக்கற்றுவல்லவராகி தமது குரு முன்னிலையிற்றனே விசிஷ்டாத்வைதமதத்தைச் சாதித்துப்பின்னர்த் திரிதண்டசந்நியாசியாகி, யதிராஜன் என்னும் பெயர்பெற்று திருநாராயணபுர முதலிய தலங்களிற்சென்று ஆங்காங்கு மடங்கள் கட்டுவித்து ஸ்ரீவைஷ்ணவ ப்ரபாவத்தை ப்ரவசநஞ்செய்து, வைஷ்ணவமதத்தை நிலைபெறுவித்தவர், இவர் பல

இடங்களினுஞ்சென்று பல மதங்களைக்கண்டித்து தமது மதத்தைநாட்டி, அவ்வவ்விடங்களிற் சிடர்கள் அநேகரைச்சேர்த்து, தமது மதத்தை விருத்திசெய்தனர், இவர் கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், தர்க்கபாஷ்யம், வேதாந்த தீபம் முதலிய அநேக நூல்களைச்செய்தார், இவரைவைஷ்ணவர் பாஷ்யகாரரென்றும், எம்பெருமானாரென்றும், உடையவரென்றும், வழங்குவர், இவருக்கு முற்காலத்தில் விசிஷ்டாத்வைத மதத்தை நாட்டினவர். பன்னிருவர் அவராவார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வர், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், என்பவர்.

ஸ்ரீமுஷ்டம் - நடுநாட்டிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம், இதில்திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீவராகப் பெருமான் என்றுதிருநாமம், இத்தமிழிலே திரிமுட்டம் என்று அழைக்கப்படும்.

ஸ

ஸ்காந்தம் - சிவபுராணங்களுள் ஒன்று, சிவமான்மியங்களையும் ஏனையதர்மங்களையும் மிகவிரிவாய்க் கூறுவது.

இது சகல வேதாந்த சித்தாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கினதாய் ஐம்பது காண்டங்களால் புனையப்பட்டதாய், ஓரிலக்கம் கிரந்தமுடையதாய், சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூதசங்கிதை, என ஆறுசங்கிதையுடையதாம், ஓரிலக்கம் கிரந்தத்தைக்கொண்டு விளங்கும்.

ஸ்காந்தத்தின் ஒருபாகமே கந்தபுராணம் என்னும்பெயரால் கச்சியப்பசிவாசாரியராலே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது, கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்து அர்ச்சகராயிருக்கும்போது சுப்பிரமணியக்கடவுளது ஆஞ்ஞையினாலே கந்தப்புராணத்தைமொழிபெயர்த்தனர் என்று கூறுவர், அது உண்மையேயாமென்பது அப்புராணச் செய்யுணடையாலும், செம்பாகத்தாலும், சாஸ்திரக்கருத்துக்களின் பொலிவாலும் இனிதுவிளங்கும் உபபுராணம்பதினெட்டிலே ஸ்காந்தம்என்பதும் ஒன்றுண்டு.

ஸ்தண்டிலம் - மந்திரவேதிகை. [டு.

ஸ்தபனம் - ஸ்தாபனம்.

ஸ்தூலகர்ணன் - ஒருயக்ஷன், இவனாலேயே சிகண்டி புருஷத்வம்பெற்றது.

ஸ்தூலகேசன் - பிரமத்துவரையென்பவனுக்குத் தந்தை.

ஸ்தூலசிரசு - கவந்தனுக்குச் சாபமிட்ட மஹாரிஷி

ஸ்நபனம் - ஸ்நானம்.

ஸ்நுஷை - விதர்ப்பன்மனைவி.

ஸ்ம்ருதி - தக்ஷன்புதல்வி, முதல் அங்கிரசன்மனைவி, இவளுக்கு சிரத்தையென்றும் ஒருபெயர் வழங்கும், சினீவாலி, குகு, ராகை, அநுமதி என்பவர் இவள் புதல்வியர்.

ஸ்ம்ருதிகள் - வேதார்த்தங்களைத்தழுவிச் செய்யப்பட்ட தர்ம சாஸ்திரங்கள், அவற்றுள்ளே மநுஸ்ம்ருதி மிகவுஞ்சிறந்து விளங்குவது, அது பிரபஞ்சசிருஷ்டிமுதல், சகலவிஷயங்களோடும் மாந்தர் தத்தம்வர்ணாசிரம தர்மப்படியே ஒழுகவேண்டிய விஷயங்கள் எல்லாம் விரித்துரைப்பது. இது கலியுக மிருதியன்று.

பிருஹஸ்பதி ஸ்ம்ருதி, தக்ஷஸ்ம்ருதி, கௌதம ஸ்ம்ருதி, யமஸ்ம்ருதி, ஆங்கிரஸ ஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி, ப்ரசேதஸ ஸ்ம்ருதி, சாதாதப ஸ்ம்ருதி, பிராசர ஸ்ம்ருதி, ஸம்வர்த்த ஸ்ம்ருதி, ஔஸநஸ்ம்ருதி, சங்கஸ்ம்ருதி, லிகித ஸ்ம்ருதி, ஆத்ரேய ஸ்ம்ருதி, விஷ்ணு ஸ்ம்ருதி, ஆபஸ்தம்பஸ்ம்ருதி, ஹாரீதஸ்ம்ருதி என ஸ்ம்ருதிகள் பதினெட்டு, இவையேயன்றி உப ஸ்ம்ருதிகளும் பதினெட்டுண்டு, அவை கண்வ

கபில லோஹித தேவல காத்யாயந லோகாக்ஷி புத சாதாதப அத்ரிபிர சேதக்ஷ விஷ்ணுவ்ருத்த விஷ்ணு வ்ருத்தமநு தௌம்யநாரத பௌல ஸ்த்ய உத்தராங்கிரஸ ஸ்ம்ருதிகள்.

இந்த ஸ்மிருதிகளை எல்லாம் ஆதாரமாகக்கொண்டு தென்னாட்டிலே வசித்துவந்த வைத்தியநாததீக்ஷிதர் செய்தருளிய ஸ்மிருதியை வைத்திய நாத தீக்ஷிதியம் எனப்படும். இதிலே இக்காலத்திலே பெரும்பாலும் அனுஷ்டிக்கத்தக்கதாம்.

ஸ்வதை - பிதிர்தேவதைகள் மனைவி.

ஸ்வயம்ப்ரபை-ஹேமையென்னும் அப்ஸரசுபுத்ரி, அநுமான் முதலியோர் ஸீதையைத் தேடிச் சென்றபோது, இவளிருக்கும் காஞ்சாபிலத்தில் பிரவேசித்துவெளிப்பட வொண்ணுமல் திகைத்திருக்க இவன் அவர்கள் வெளிப்படும்படி உதவிசெய்தவள்.

க்ஷ

க்ஷடூர்மி-பசிதாகம், சோகம், மோகம், ஜனனமரணங்களாம்.

ஹ

ஹம்ஸகீதை-ஹம்சரூபியாகிய பிரமன், சாத்தியர்களுக்கு உபதேசித்த கீதை இது தர்மமார்க்கத்தை விரிவாய்க் கூறும்.

ஹம்ஸன் - வசுதேவனுக்குச்சிரேதேவியிடத்துப்பிறந்த இரண்டாம் புத்திரன், கடிகன் சகோதரன், இவன் கௌசிகன் எனவும்படுவன்.

ஹம்ஸை - மேருவுக்கு உத்தரபாகத்தில் உள்ள ஒருமலை.

ஹயக்ரீவன் - குதிரை முகமும் மநுஷ்யதேகமும் உடைய சக்தி யவதாரத்தாராகிய விஷ்ணு பூர்வகாலத்தில் விஷ்ணுவானவர் யோகநித்ரை செய்யும்போது மதுகைடபர்கள் பிறந்து வேதங்களை அபஹரித்துக்கொண்டு போய் பாதாளத்தில் அடக்கிவிட, ஸ்ரீமந்நாராயணன்பிரமனது வேண்டு கோளால் யோகநித்திரைநீங்கி,ஹயக்ரீவரூபந்தரித்து மதுகைடபர்களைக் கொன்று வேதங்களைக் கொண்டுவந்து பிரமதேவனுக்குக் கொடுத்தார்.

ஒருதாநவன்,இவனுக்குசோமகன் என்னும் வேறொருபெயரும்உண்டு.

ஹயசிரை-வைவசுவாநரன்புத்ரி,க்ருது மனைவி.

ஹரதத்தாசாரியர் - கஞ்சனூரிலேமது சூதநாசாரியருடைய புதல்வர். இவர் பூர்வசமயம் வைஷ்ணவம். பிறகு சைவசமய சாஸ்திரங்களைக் கற்றுச் சைவசமயத்தராயினர், அதுகண்ட வைஷ்ணவர்கள், இவரை நோக்கி, உமது சிவன் உண்மையாகப் பரம் பொருளாயின் நாங்களிடம் இருப்புப் படிமே னின்று சிவபரத்துவத்தை நிலைபெறுத்தக் கடவீரென இவர் அதற்குடன்பட்டு, வைஷ்ணவர்கள் பழுக்கக் காய்ச்சிய இருப்புப்பாளப் படியேறிச் சிவபரத்துவஞ் சாதித்தவர், அப்போது இவரால் செய்தருளப்பட்ட நூலுக்கு சதுர்வேத தாற்பரியசங்கிரகம் என்பதாம், இதைத் தமிழிலே மொழி பெயர்த்தவர் துறைமங்கலம் சிவஞான முனிவரர். இவர் பூர்வநாமம் ஹரிதத்தர்.

ஹரன் - பாவஹாரி,பாபத்தைக்கெடுப்பவன், சிவன்,மாலியவான்புத்திரன் விபீஷணன் மந்திரி.

ஹரி - விஷ்ணு.

ஹரிகேசன் - வசுதேவன் தம்பியாகிய சியாமகன் மகன்.

ஹரிக்ராமம் - விதர்ப்ப தேசத்து ஒரு நகரம்.

ஹரிச்சந்திரன்-இவன் அரிக்கும் சந்திரனுக்கும் பிறந்தவன் சூரியவம்சத்தில் இருபத்துமூன்றும் சந்ததியில் வந்த திரிசங்குவால் வளர்க்கப்பெற்றவன், கதைவரலாறு, சந்திரன் தட்சப்பிரசாபதியின் இருபத்தேழுகன்னிகைகளையும் விவாகஞ் செய்துகொண்டு, அவர்களை யனுபவிக்க முதலில்அச்சுவினி,பரணி,கார்த்திகை,

மூவரையுஞ் சேர்ந்து நாலாநாள் உரோகணியிடம் போக உத்தேசித்திருக்கையில் அவன் பேடியானதால் என்செய்வதென்று ஆலோசித்து வனத்திற்சென்றுதவஞ்செய்துபெண்வடிவு பெற்றாலன்றி உயிர்விடுவதே நலமெனத் தீர்மானித்து வனமடைந்து விஷ்ணுவைநோக்கித் தவம்புரிய அவர் எதிர்வந்து என்னவரம் வேண்டுமென்று கேட்க அவன் தனது பேடித்தன்மையைத் தெரிவிக்க அவர் ஒரு தடாகத்தை யுண்டுபண்ணியதில் முழுகிவரும்படி கட்டளையிட அவன் அங்ஙனமேசெய்து கோடி சூரியப்பிரகாசமான தேஜசு பெற்று அதிக ரூபலாவண்யமடைந்து உடனே சந்திரன் வருவதற்கு முந்தித் தன் வீட்டிற்குபோகஉத்தேசித்து வனத்தின்வழியேவருகையில் சந்திரன்சந்தித்து அவன் தனதுமனைவியெனத் தெரிந்துகொள்ளாது அவளைக்கண்டு மயங்குகையில் அவள் தனது நாயகனெனத் தெரிந்துகொண்டு அவனைநோக்கி ஐயா இதோ தெரிகிற தடாகத்தில் மூழ்கி வருவாயாயின் உன்னை அணைவேனெனச் சொல்லி யனுப்பிவிட்டுத் தனதிருப்பிடம் வந்துவிட்டனள். சந்திரன் அவள் வார்த்தையை நம்பித் தடாகத்தில்மூழ்கி, எழுந்தவுடன் தான் பெண்வடிவாகிவிடத் தன்னைக்கண்டு வெட்கித் தனது மைத்துனனாகிய விஷ்ணுவைத் தியானித்தவுடன் அவர்வந்து சந்திரனாகிய பெண்வடிவினைக்கண்டுமோகித்து ஆலிங்கனஞ்செய்ய அவன் சந்திரனென்று பலவிதம் சொல்லியும் கேளாது பிடித்து வலித்துப் புணர்ந்தனன். அப்போது விஷ்ணு தனது வீரியத்தை ஒருசங்கினில் வாங்கிச் சமுத்திரத்திலெறிந்தனன் அவ்வீரியம்சென்று அச்சமுத்திரக்கரையில்புத்திரனைநோக்கித் தவம்புரிந்துகொண்டிருந்த திருசங்கு என்பவனுக்குச் சமீபத்தில் சங்கத்தோடுருவாகிய குழவியவனிடமணுக அவன் அச்சங்கினைக் கரத்திலெடுக்க அச்சங்கம் வெடித்து குழந்தை வடிவாக அதை யெடுத்து வளர்த்தனர். சந்திரன் விஷ்ணுவின் உத்தரவின்படி வேறு தடாகத்தில் மூழ்கி ஆண்வடிவங்கொண்டு உரோகணிபாலடைந்து எல்லா விருத்தாந்தங்களையும் தெரிந்துகொண்டு வாழ்ந்தனன், அரிச்சந்திரன் மனைவி சந்திரதயன் புதல்வியாகிய சந்திரமதி, இவன்புத்திரன் லோகிதாசன்.

ஹரிச்சந்திரன் மஹா உதாரசீலனும், சிறிதுந்தவறாத சத்தியவந்தனுமாய் விளங்கினவன், இவனது சத்தியவிரதத்தை வசிஷ்டமுனிவர் இந்திரன் சபையில் எடுத்துப் புகழ்ந்தபோது விசுவாமித்திரன் அதுபொறாமல், அந்த அரிச்சந்திரன் சத்தியந்தவறிப் பொய்சொல்லப் பண்ணுகிறேனென்று சபதஞ்செய்து, அவனது சத்தியவிரதத்தைப் பரீக்ஷிக்கப் புகுந்தான், இவன்செய்த கொடிய வஞ்சப் பரீக்ஷைகளுக்கெல்லாம் அவன் சிறிதுங் கலங்காதின்று, தன்மனைவி மக்களைப்பிரிந்து தானும் புலையனுக்கடிமையாகியும் தான்கொண்ட சத்தியவிரதத்தைக்காத்து என்றும் அழியாத பெரும்புகழ்படைத்தவன்.

ஹரிணங்கன் - சந்திரன்.

ஹரிணி - ஓரப்ஸரசை.

ஹரிதன் - யவனாசுவன்புத்திரன் இவன் தவத்தால்பிரமரிஷியானவன் இவன் க்ஷத்திரிய வர்ணஸ்தனேயாயினும் இவன் வமிசத்தாரெல்லாரும் பிராமணராயினர், இவரெல்லாரும் ஹரிதர் எனப்படுவர், அம்பரீஷஆங்கிரசயாவனாசுவ வமிசமாகப் பிறந்தார்கள், லோகிதாசியன் புத்திரன், சம்பன் தந்தை.

ஹரித்துவாரம் - கங்காத்வாரம் எனப்படும் க்ஷேத்ரம், விஷ்ணுவாற் கொல்லப்பட்ட மது தனது மரணகாலத்திலே இந்தத் தலம் புண்ணிய ஸ்தலமாகும்படி, அநுக்ரகிக்க வேண்டுமென்று வேண்ட, அவ்வாறேயாகுகவென்றநுக்ரஹித்தார்.

ஹரியங்கன் - சம்பன் புத்திரன்.

ஹரியசுவன் - த்ருடாசுவன் புத்திரன், நிகும்பன் தந்தை, அநரணியன் புத்

திரன், சமநசன் தந்தை த்ருஷ்ட கேது புத்ரன். பர்மியாசுவன்.

ஹரிஹராயன்-இவன் துங்கபத்ராநதி தீரத்திலே காடு வெட்டி நாடாக்கி வித்யாநகரம் நிருமித்து அங்கிருந்து அரசியற்றின ஓரரசன், இவன் இற்றைக்கு ஐந்நூற்றுப்பத்து வருஷங்களுக்கு முன்னிருந்தவன்.

ஹரிஹரன்-விஷ்ணும் சிவனும் கூடிக் கொண்டிருக்கும் வடிவம்.

ஹரிஹரபுத்திரன் - சாத்தனர் இவர், ஐயனர் என்றும் வழங்கப்படுவர், மோஹினி வடிவங்கொண்ட விஷ்ணுவைச் சிவன் கூடித் தோற்றுவித்த புத்திரர் இவரே, இவர் அறநெறி வழுவினோரைத்தண்டிப்பவர், இவர்க்கு வாகநம் வெள்ளையானை, இவர்க்குத் தேவிமார் பூரணை புட்கலை என் னுமிருவருமே, இவர் தற்காலத்திலே கிராம தேவதையாகப் பூசிக்கப்படுபவர், இவர்க்கு ஆயுதம் செண்டு, நிறம் கருங்கடல் நிறம். ஹரிதன் - விசுவாமித்திரன் புத்திரன், இவன் வமிசத்துப் பிராமணர் ஹரிதர் எனப் படுவர்.

இந்திரன் சூரபதுமனுக்குப் பயந்து இந்திராணியைச் சீகாழிப்பதியிலே தனியே யொளித்துவைத்து விட்டுத் தான் தேவருடன் மேரு மலைக்குப் போயிருக்கையில் சூரன தங்கையாகிய அஜமுகி தனது தமையன் உத்தரவின்படி உலகெங்கும் தேடிச் சீகாழியில் இந்திராணியைக் கண்டு பலாத்காரமாக விழுக்கையில் ஹரிஹரன் தனது சேவகனுகிய மாகாளரைக் கொண்டு அஜமுகியினின்றும் இந்திராணியை விடுவித்து அவ்விராக்கதஸ்திரீயின் வலதுகரத்தையறுப்பித்தனர்.

ஹர்ஷன் - தருமனுக்குச்சிரத்தையிடத்துப்பிறந்த புத்திரன், இவன் மனைவி நந்தை, இவன் சகோதரர் சமன் காமன் என்பவர்.

ஹவாதன் - ப்ரஹலாதன்தம்பி, இவன் அநுஹலாதன் எனவும்படுவன்.

ஹவ்யவாகநன் - க்ரஹபதி, அக்கி, சுசி புத்ரன்.

ஹவிர்ப்புக்-ப்ரீதி. இவன் புலத்தியன் மனைவி, விச்சிரவாவு தாய்.

ஹவிர்யக்ஞியங்கள் - சிரௌதாக்கினியிலே அமைக்கப்படும் யஜ்ஞபேதங்கள், அக்நியாதேயம், அக்கிஹோத்ரம், தர்ஸ பூர்ணமாசம், ஆக்ரஹாயயணம். சாதுர்மாசியம், நிருடபசுபந்தம், சௌத்ராமணி, என ஏழாம்.

ஹவிர்த்தாநன் - விஜயாசுவன்என்னும் அந்தர்த்தாநனுக்கு நபஸ்பதியிடத்துப் பிறந்த புத்திரன், இவன் பர்ஹிஷ்டதன் என்னும் பிராசீநபர்ஹிஷதயன், சுக்கிலன், க்ருஷ்ணன், சத்தியன், என்னும் யஜன், ஜிதவரதன் என அறுவர்புதல்வரைப்பெற்றான், அவருள், ப்ராசீநபர்ஹிக்குப் பதின்மர்புத்திரர் பிறந்தார்கள், அவர்கள் ப்ரசேதசர் எனப்படுவார்கள்.

ஹனுமந்தன் - ஹநுமான், சுக்ரீவன் மந்திரி ஸ்ரீராமதூதன், வாயுதேவனது அநுக்ரஹத்தால் அஞ்சநா தேவியினிடத்திற் பிறந்தவன், சூரியனிடத்தில் கல்விகற்று நவவியாகரண பண்டிதன் எனப் பெயர்படைத்தவன், ஸ்ரீராமாயணமென்கிற பெரிய மணிமாலையில் நாயகமணியாய் விளங்கினவன், ஸ்ரீராமாயணத்தில் எல்லாப் பாகங்களிலும் வியாபித்து விளங்குவது இவனது பராக்ரமாதிசயமே, இவன் ஸ்ரீராமாநுக்ரஹத்தால் ஸ்திரஜீவிபட்டம் பெற்றவன், அன்றியும் அவரது ஸ்ரீபாதத்தை யிடையறாது தாங்கினமையால் சிறிய திருவடியென்னும்பெயரும்பெற்றவன், இராவணதியர் யுத்தத்தில் இவனால் மாண்ட ராக்ஷஸசேனையின் சங்கியை மிகப் பெரிது. இவனது பிரபாவம் ஸ்ரீராமாயணத்தில விரிவாய்க்காணலாம்.

ஹஸ்திபுரம் - ஹஸ்திநபுரம்.

ஹஸ்திநபுரம் - கௌரவர்களுக்கு ராஜதாநி, இது ஹஸ்திகனால் நிருமிக்கப்பட்ட நகரம், இந்நகரம் பிற்காலத்தில் கங்கைகொண்டழிந்தது, இப்போதுள்ள இலங்கை தில்லிநகருக்கு அநகாத தூரத்திலுள்ளது.

ஹஸ்தன் - வசுதேவனுக்குயோசனையிடத்துப்பிறந்த புதல்வன்.

ஹஸ்திகன் - சுஹோத்திரன் புத்திரன், இவனே அஸ்தினபுரத்தை நிருமித்தவன், அஜமீடன், த்விமீடன், புருமீடன் என்போர் இவன்புத்திரரே.

ஹா

ஹார்த்திக்கியன் - க்ருதவர்மா.
ஹாஹா - ஒருகந்தருவன்.

ஹி

ஹிரண்யநாபன் - ஸ்ரீராமன் மகனாகிய குசன் வமிசத்திற் பிறந்தவன், இவன் ஜைமினிசிடனாகியயாஜ்ஞவல்கியரால் யோகமார்க்கம் உபதேசிக்கப்பெற்றவன், மைநாகன்.
ஹிரண்யபுரம் - நிவாத கால்கேயர்களுடைதேசம், இது சமுத்திரத்திடையே யுள்ளது.
ஹிரண்யரோமன் - நன்கு லோகபாலகர்களுள் ஒருவன்.
ஹிரண்யாக்ஷன் - ஹிரண்யகசிபன் தம்பி, தந்தை காசிபன், தாய், திதி, இவனும் இவன்தமையனும் சநகசநந்தனர்களுடைய சாபத்தால் ராக்ஷசர்களாகப் பிறந்த ஜயவிஜயர்கள், இவ்விருவரும் விஷ்ணுத்வாரபாலகர்கள் இவர்கள் தவத்தினால் மிகு சர்வமுடையவர்களாகி, தேவர்களுக்குத் துன்பஞ் செய்துவருங் காலத்தில், விஷ்ணுவினாற் கொல்லப்பட்டவர்கள், வசுதேவன் தம்பியாகிய சியாமகனது இரண்டாம் புத்திரன்.
ஹிடிம்பன் - வீமனாற் கொல்லப்பட்டவோரசுரன்.
ஹிடிம்பை-ஹிடிம்பன் தங்கை, இவளை வீமன் காட்டகத்திற் கண்டு மணம்புரிந்தான், இவள் வயிற்றிற் பிறந்த புத்திரன் கடோத்கசன்.
ஹிமசுதை - பார்வதி.
ஹிமசுதன் - மைநாகன்.
ஹிமபுரம் - ஓஷதிப்ரஸ்தம்என்னும்ஹிமாலை ராஜதானி.
ஹிமம் - பனி.
ஹிமான்-ஹிமவந்தன், இமயமலைமேருபுத்ரியாகிய மநோரமை யென்னும் மேனையை மணம்புரிந்து பார்வதியையும் கங்கையையும் பெண்களாகப் பெற்றுவளர்த்தவன்.
ஹிமாயம் - இமயபர்வதம்.
ஹிமாலயம் - பனிமலை.
ஹிம்சை-நிருதிமகள், அதர்மனமனைவி.
ஹிரண்யகசிபன்- காசிபனுக்குத் திதியினிடத்துப் பிறந்தபுத்திரன், இவன் விஷ்ணு நரசிங்காவதாரத்திற்கொல்லப்பட்டான், இவன் மூவுலகையும் வென்றவன், இவன்மகன் ப்ரஹலாதன்.
ஹிரண்யகர்ப்பன் - பிரமன், விஷ்ணு.
ஹிரண்மயவருஷம் - நவ வருஷங்களுளொன்று, இது இளாவ்ருதவர்ஷத்துக்கு வடக்கேயுள்ளது.
ஹிரஸ்வரோமஸ்-சுவர்ணரோமன் புத்திரன், இவன் இரண்டாஞ் சநகன் தந்தை.
ஹிருஷிகேசன் - விஷ்ணு.
ஹில்வலை - மிருகசீரிடநக்ஷத்திரத்தின தலையிலுள்ளஉபநக்ஷத்திரங்களைந்தும் இப்பெயர்பெறும்.
ஹிரன்-நைஷதம்செய்த ஹர்ஷன் தந்தை.
ஹிருதிகன்-போஜன்புத்திரன், இவன் புத்திரர் தேவமீடன், சத்தந்வன், கிருதவர்ணன்.

ஹூ

ஹூணதேசம் - ஹூணர்களுடைய தேசம், இத்தேசத்தவர் யவநர் எனவும்படுவர், ஹூணர் - வெண்ணிறமுடையவர்.
ஹூஹூ - ஒரு கந்தருவன், இவன் ஒருசாபத்தால் முதலையாய்க் கிடந்து கஜேந்திரன் என்னும் யானையைப் பிடித்தபோது விஷ்ணுவினாற்கொல்லப்பட்டவன்.

கடவுள் துணை.

பொருளகராதி.

கடவுள் வணக்கம்.

அருடருந் தெய்வத் தடிமலர் போற்றப்
பொருளக ராதிப் புந்தியில் வருமே.

நதிகாட்டுந் திருமுடியு சடங்காட்டும் பதமலரு நஞ்ச மின்று
துதிகாட்டுந் திருமிடறுந் துணைகாட்டும் பாரசிவையுந் துஞ்ச லில்லா
விதிகாட்டுந் திருவாயும் விடைகாட்டு மீச்சரனூர் விழைவி னேத்தப்
பதிகாட்டுந் திருக்குடிலைப் பதங்காட்டுந் தணிகைவரைப் பகவன் வாழி

அ-சிவபெருமான், பிரணவத்துமுதல் எழுத்து. அகாரம் பிரமன், உகாரம் விஷ்ணு, மகாரம் உருத்திரன்எனக் கொள்வதொன்றாயினும்அவற்றிற்கு அதிதேவதை பரசிவனே என்க.

அகக்கூத்து, அகம், அகமார்க்கம், அகநாடகம், குணத்தின்வழி.

அகங்காரதத்துவம் - முப்பத்தாறுதத்துவங்களுள் ஒன்று. இது புத்திதத்துவத்தினின்றுந் தோன்றி, இவ்விடத்து யாவர்தான் என்னோடு ஒப்பாவர் ஒருவரும் இல்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் வாயிற்காட்சிக்கு விஷயமாய்த் தோன்றியதொன்றனை இது இன்னதென்று புத்திதத்துவம் நிச்சயிக்கும்படியாக யான் எனவும், எனது எனவும் அதன்கண் ஒருபட்டெழுந்து ஆன்மாவுடன் முதல்வனது ஆணையினாலே வேற்றுமையின்றி நிற்கும் என்க. அது குணவொற்றுமைபற்றி முத்திறப்படும்.

அகங்காரவகை - வைகரியாங்காரம், தைசதாங்காரம், பௌதிகாங்காரம், என மூன்றாம்.

இவற்றினுள்ளே தைசத வகங்காரத்தினின்றும் மனமானது தோன்றி எதிர்ப்பட்ட பொருளைச் சித்தரூபமாய்நின்று சிந்தித்தும், ஐயுற்ற அதனை நிச்சயித்தற்கண்ணதாய் வேட்கையைச்செய்தும் நிற்கும். அதன்பின் செவி, மெய், கண், நா, மூக்கு என்னும் பஞ்சேந்திரியங்கள் தோன்றாநிற்கும். இவற்றை முறையே வடநூலார் சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பர், வைகரி யகங்காரத்தினின்றும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்துந்தோன்றும். பூதாதியகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம், என்னுந் தன்மாத்திரைகள் ஐந்துந்தோன்றும். தன்மாத்திரைகளும், இச்சாரூபமாகிய அர்த்தக்

காரணங்கள் மூன்றுங் கூடிப் புரியட்டகசரீரம் எனப்படும்.

அகசியம்-விகடம், விநோதக்கூத்து.

அகசு-பகல்மானம், அளவு.

அகச்சமயங்கள்-பாடாணவாதசைவம் சங்கிராந்தவாதசைவம், அவிகாரவாதசைவம், பரிணாமவாதசைவம், சுத்தசைவம்,பேதவாதசைவம் என்னும்ஆறுமாம். இவற்றுள்,பாடாணவாதம் ஆவது ஆன்மாமுத்தியிலும் சகசமலம் என்னும் இயற்கைமலம் நீங்காது, ஆகந்துகமலம் என்னும் செயற்கைமலம் மாத்திரம் நீங்கப்பெற்றுக் கல்லுபோலக்கிடக்கும் என்பதாம். சங்கிராந்தவாதசைவம் ஆவது விகாரமின்றி நிற்கும் ஆன்மாவின் சந்நிதியிலே அசத்தாகிய கருவிகளே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய்நின்று அறியுமெனக் கொள்வதாம். அவிகாரவாதசைவம் ஆவது கொடியவெப்பமிக்க வெயிலிலே நடந்தோரால் அடையப்படுகின்ற மரநீழல்போலப் பதி விகாரமின்றிநிற்ப ஆன்மாவானது தானே பக்குவமடைந்தபோதுஞானக்கண் பெற்றுப் பதியைச்சேரும் எனக் கொள்வதாம். பரிணாமவாதசைவம் ஆவது உயிர்கெட்டுக்கூடி அரனடியில் ஒன்றாய் நிற்கும் என்பதாம். சுத்தசைவம்ஆவது ஆன்மாவுஞ்சிவமுங்கூடியவிடத்து ஆன்மா சிவாநுபவத்திற்கு உரித்தாகாது எனக் கொள்ளுமதம். இந்நூல் இக்காலத்துள்ளதென்பாருமுளர். பேதவாதசைவம் ஆவது ஆன்மா தத்துவஞானமடைந்தபோதே மும்மலமும் நீங்கப்பெறுமென்றும், இதுவே முத்தியென்றும் கொள்ளுவதாகும்.

அகடிதகடனாசாமார்த்தியம் - மாயம். கூடாததையும் கூட்டுந்தன்மை.

அகண்டானந்தமுனி-இலக்குமிதோத்திரமுதலியநூல்களைச்செய்த சமஸ்கிருதகவி; இவர்ஜென்மதேயம்கச்சி.

அகத்தி-அச்சம-சரீரம், முனி

அகத்தியசங்கிதை இது அகத்தியமகாமுனிவரால் வடமொழியிலே செய்யப்பட்ட ஒருசிறந்த நூல்.

அகத்தியபட்டன் - அகத்தியபண்டிதன், இப்பண்டிதர்வடமொழியிலே பாலபாரதம் என்னும் நூலைச்செய்தவர்; இவர் கச்சியிலிருந்தவர்.

அகத்தியபக்தவிலாசம் - சிவனடியார் சரித்திரங்களை முறையாகக்கூறும் வடமொழி நூல், அகத்தியராற் சொல்லப்பட்டது.

அகத்தியப்பிரமதா - அகத்தியமுனிவன் சகோதரன்.

அகத்தியம்-முதனூல். முத்தமிழிலக்கணம் இது இயல் இசை நாடகம் என்னும்முத்தமிழ் இலக்கணத்தையும் பன்னீராயிரஞ் சூத்திரத்தாற் தெரிவிப்பதாகிய இலக்கண நூல். தென்மதுரைக்கணிருந்த தலைச்சங்கப்புலவர்களுள் முதல்வராகிய அகத்தியனாற் செய்தருளப்பட்டது. இது நச்சினார்க்கினியர் காலத்திலேயேமறைந்ததென்ப தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிறரும் ஆங்காங்குச் சிற்சில சூத்திரங்களையெடுத்துக்காட்டியிருக்கின்றனர். பேரகத்தியம், சிற்றகத்தியம் எனப் பிரசுரிக்கப்பட்டன. பிறழ் வென்பது பெரியோர்கிடக்கை.

அகத்தியன் - கடயோனி, கடோற்பவன், கலசமுனி, கலசோற்பவன், குடமுனி, கும்பசம்பவன், கும்பசன்,கும்பயோனி, கும்போற்பவன் கும்பமுனி,குறுமுனி, மலயமுனி, முத்தமிழ் முனியோன், மைத்திராவருணி, தத்தோத்திரி, வாரிகுடித்தோன், கும்போனி, புலத்தியன், மைந்தன், பிரீதிபுதல்வன், சித்தன் ருதை,தமிழ்வளர்த்தோன், உலோபாமுத்திரை கணவன்,அகத்தியன் என்னும்பெயருடைய இவர்இருடிசிரேட்டர்களுள் முதல்வர்மித்திராவருணர் என்னும் முனிவரானவர் சமுத்திரக் கரையிற் சஞ்சரித்தபோது அங்கே ஊர்வசிவர, அவள் மீதுகொண்ட போக மேலீட்டினாலே இந்திரியங் கலிதமாக, அதனை அவர் குடத்தில்விட அதினின்றுந் தோன்றினவர், பலர் பிரமதேவர் செய்தயாககும்பத்தினின்றுந் தோ

ன்றினவர் எனவுங் கூறுவர். குடத்தினின்று முற்பவித்தமையாற் றான் கும்பயோனி, கலசமுனி, கும்பசம்பவர், கடோற்பவர் எனப் பெயர் பெற்றனர். ஆரியர்கள் விந்தமலைக்குத் தெற்கேபோகலாகாதென்றகட்டுப்பாட்டைக்கடந்து முதன்முதல் தக்ஷிணம் வந்து அந்நாட்டியல்புகளைத் திருத்தி செம்மை செய்தவர். இவரே சிவபெருமானிடத்துங் குமாரக்கடவுளிடத்துஞ்செந்தமிழினியல்புகளைச் சந்தேகம் விபரீதம் மயக்கம் என்னும் முக்குற்றமுமறத் தெரிந்துதெளிந்தவராவர் மற்றும் பிரமனுமறியாப் பிரணவப்பொருளுண்மையைக்குன்றமெறிந்த தேவருஞ்சரி நாயகனிடத்துக் கேட்டுணர்ந்தாரும் இவரே. உமாதேவியாரின் கலியாணத்துக்குத்தேவர்முதலிய அண்டத்துள்ள உயிர்வர்க்கங்கள் யாவும் அணுகி திரண்டபோது இமயமலை தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. அது கண்ட தேவர் முதலாயினோர் அன்னோ? சிவனேயென்று இரங்க, சிவபெருமான் அகத்தியரையே தென்றிசைக்கணுள்ள பொதியத்துச் சென்றிருவெனக் கட்டளையிட அவர் அதனைச் சிரமேற்றுச்சென்று பொதியமலையில் வரப்பூமி சமப்பட்டதுபின்னர் அங்கேயே திருமணக் கோலத்தையுந் தரிசித் தருளினர். ஓர்கால் மேருமலையின்பக்கத்துத்தவஞ்செய்திருந்தனர். அப்போது மேருமலையோடு பகைத்தவிந்தமாமலையானது வளர்ந்து பெருத்து தேவர்கள்செலவைத்தடுப்பத், தேவர்கள் யாவரும் அகத்திய முனிவரே யோலமோலம்! என்று அழைத்திரங்க, அதனையுணர்ந்த முனிவனார்மலையின் வலியையடக்கித் தேவர்துயரை தீர்ப்பான் எண்ணிச் சிவபிரானைத் தியானிக்க அவர் தோற்றியருளி, விந்தமலையையடக்கும் ஆற்றலும், பூசை நிமித்தம் கயிலையிலிருந்த காவிரி தீர்த்தமுங் கொடுப்பப்பெற்றவர். புத்திரப் பேறுவிரும்பிவிதர்ப்பராசன்பயந்த உலோபாமுத்திரை யாரை விவாகஞ்செய்து, சித்தன் என்னும் குமாரனைப்பெற்று வைத்துத் தென்றிசைநோக்கிச் சென்றனர். சமுத்திரக் கன்னிகையைமணந்துபெருஞ்சாகரர் என்னும் புத்திரரைப் பெற்றார் என்றும், உலோபாமுத்திரை புலத்தியனாரின்சகோதரியெனவுஞ் சொல்லாநிற்பர். இவர் குமாரராய சித்தமுனிவரின் புத்திரரான சுபதிட்டமுனிவர் இலங்கையையரசாண்ட புலவசிகாரத்தினமாகிய பராசசோரன்என்னுஞ்சக்கரவர்த்தியின் கொலுமண்டபத்திற்கு வந்து பறங்கிக்காரார், உலாந்தக்காரர் அங்கிலேய ராதியர் இவ்வூரை இந்த இந்தக்காலத்து, அரசாள்வரெனச் சொல்லிப்போயினர் என பாரம்பரிய கதையும் ஒன்றுளது.

வழியில் கிரவுஞ்சன் என்னும் ஓர் அசுரன் மலைவடிவாய் நின்று மயக்கக் கோடமுற்று, மலையாகநின்றுவானவர் முனிவரைமயக்கிக் கந்தக் கடவுளின் வேலாயுதத்தால் அழியக் கடவையெனச் சாபமிட்டுமீண்டு, விந்தமலையைப் பாதலம் போயழுந்துமாறு கையால் இருத்தி, அசமுகியின்மைந்தர்களான வில்வலன் வாதாவி என்னும் இரண்டசுரர்களையும் அழித்து, திருக்குற்றாலம் என்னும்தலத்தையடைந்து, விஷ்ணுவிம்பத்தைச்சிவலிங்கமாகத்தாபித்துப் பொதியமலைக்குச்சென்று வீற்றிருந்தனர். காவிரிபூமியில் வந்ததற்கும் இவரே காரணர். தமதுகமண்டலத்திலிருந்த காவிரியை விநாயகக்கடவுள் காகவடிவாய்ச்சென்றுகவிழ்ப்பப்பரந்தோடிய அதனை அரசிளங்குமரனைத் துணையாகக் கொண்டு, ஒருமுகமாகத் திருப்பி காடுவழியே பாயுமாறு விடுவித்தவரும் இவரே. பொதியமலையின் பாங்கருள்ள நாடுகளையெல்லாம்நாடாக்கினர். அவைகளே ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு ஏழ்குணகாரைநாடு, ஏழ்குறும்பனைநாடு, குமரி, கொல்லம் முதலிய பன்மலைநாடு எனப்பட்டனவாம். இவைகளைத்திருத்

தியபின்யமதக்கினியாருழைச்சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு துவாரகைக்குச் சென்று கண்ணமூர்த்தி வழிக்கண்வந்த அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளி ருள்ளிட்டாரையும் அருவாளரையுங்கொண்டுபோந்து அந்நாடுதோறுமிருத்திக் குருபீடமாய்விளங்கினர். அப்போது இலங்கைநகரத்திருந்து இராக்கதர்கள் வந்து பற்பல துன்பஞ் செய்ய எத்தனித்தார்கள். அதுகண்ட அகத்தியனார்இராவணனைச்சங்கீதத்தாற்சிநேகஞ்செய்து,இராக்கதர் அந்நாட்டிற்குவாராதிருக்குமாறு செய்வித்தனர். அகத்தியரோடு வந்த அரசிளங்குமரரே சேரசோழபாண்டி மண்டலங்களை அமைத்தவர். அதற்கு முன் அரசுசெய்தவர்குறுநில மன்னர் ஆகும். தென்னாட்டைத்திருத்தம்பல வகையானும் விருத்திசெய்தவர் துவராபதி அரசிளங்குமரரேயாம். அது "சுராதிராசன் முதலாகவரு சோழனுமுனாட்சோழமண்டலமமைத்த பிறகு எனவும்" காலனுக் கிது வழக்கெனவுரைத்தவனுங்காவரிப்புனல்கொணர்ந்தவனும், எனவும் கலிங்கத்துப் பரணிகூறுவதனால் அறிக.

இந்திரன்முதலிய தேவர்பொருட்டுக் கடலின்கண் ஒளித்திருந்த விருத்திராசுரனைவெளிப்படுத்தநினைந்தருளித் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் அருளினார் கையைநீட்டி உழுந்தனவாகக் கடலையடக்கி யுண்டனர். காசியம்பதியிலேசம்ஸ்கிருதத்தைவிருத்தி செய்யும்படி பாணினி முதலிய முனிவரர்கள் சங்கமொன்று தாபித்தனர். அதிற் றம்மையுஞ் சேர்க்குமாறு முனிவர்பெருமான் வேண்டவும் அவர் மறுத்தாராக. கோபமுற்று திருவேங்கடப்பதிபோந்து, சிவசுப்பிரமணியக் கடவுளை நோக்கித் தவங்கிடப்ப அவர் தோன்றிச்செந்தமிழினியல்பெல்லாந் தெரிக்கத் தெரிந்து பொதியத்திற் சென்றுதம்நாட்டுக்குரியதமிழ்பாஷையையுஞ் செம்மைசெய்யக்கருதி அகத்தியம்என்னும் முதனூலைச்செய்தனர் அதன்பின்னர்ச் சோதிடம், வைத்தியம் முதலிய நூல்கள் பலவற்றைச் செய்தனர். அவை யெல்லா மறைந்தொழிந்தன. இக்காலத்து அவர்பெயரால் வழங்கப்படும் வைத்தியமுதலிய நூல்கள்யாவும் அவராற் செய்யப்பட்டனவல்ல. இங்ஙனம், நூல்களையியற்றித் திரண தூமாக்கினி என்னுந் தொல்காப்பியனார், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட்சேஎய், வையாபிகனார், வாய்ப்பியனார், பனம்பாரனார், கழாரம்பனார், அவிநயனார், காக்கைபாடினியார், நற்றத்தர், வாமனர் என்னும் பன்னிருவர்க்கும் போதித்தனர்.

அதன்பின்னராய முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்து இறையனாரையுங் குமரவேளையும் உடனிருக்கவேண்டி,முரிஞ்சியூர்முடிநாகராயர் நிதியின்கிழவனார் என்றிவருள்ளிட்ட நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் கூட ஆராய்ந்து, தம் நூல்களையரங்கேற்றினர். அன்றிமற்றையோர்எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும், களரியா விரையும் முதலிய நூல்களைச் செய்தனர். நாலாயிரத்து நானூற்றுநாற்பதிற்றியாண்டு ஆராயப்பட்டது. இத்தலைச்சங்கமிரீஇயினார் காய்சின வழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ள பாண்டியர் எண்பத்தொன்பதின்மர். அவருட் கவி யரங்கேற்றினார் எழுவர் பாண்டியருள் ஒருவனாய சயமா கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான்.

இத்தலைச்சங்கம் குறித்தவருடம் அளவும் நிலைபெற்றுவருங் காலத்தில் அதற்கிடமாயிருந்த தென்மதுரைகடல்கொள்ளப்பட்டது. இதுவன்றிமேற்காட்டிய நாற்பத்தொன்பது நாடுகளும் அழிபட்டன. இக்காலத்தை ஆராயுமிடத்துத் துவாபரகலியுகசந்தியாதல் வேண்டுமென்றும், எனவே இற்றைக்குப் பன்னீராயிரம் வருடத்திற்குமுன் எனவுங் கூறுகிற்பர்.

இற்றைக்கு ககசஅக, வருடங்களுக்கு முன்னர் ஒருபிரளயம்வந்ததென்றும், அப்பிரளயத்தால் இப்பூமுகத்

திலேசமுத்திரக்கரையாற் சூழப்பட்ட நாடுகளெல்லாஞ் சிதைந்தும்வேறுபட்டும் போயினவென்றும், "போசிடோனிஸ்" முதலிய தீவுகள் கடல்வாய்ப் பட்டழிந்தனவெனவும் அப்பிரளயத்தாலேயாமென்றும், அத்திலாந்திச் சரித்திரமெழுதிய எல்லியட் என்னும் ஆங்கிலபண்டிதர் கூறியதும் இதற்கோர் ஆதாரமாம்.

அதுநிற்க, தேவவிருடியாகிய இக்குறுமுனிபாற் கேட்ட மாணாக்கருள் சிகண்டி என்னும் அருந்தவமுனிவர் ஒருவர் உளர் என்றும் அவர் இடைச்சங்கத்து அநாகுலன் என்னுந் தெய்வப்பாண்டியன் தேரோடு ஆகாயவழியிற் செல்லும்போது திலோத்தமையைக்கண்டு தேரிற் கூடினவிடத்துத் தேவரும் முனிவருஞ் சரியா நிற்கத் தோன்றினமையாற்சாரகுமாரனெனப்பெயர்பெற்ற அக்குமாரன் அறிதற்காக இசைநூலாகிய இசைநுணுக்கம் செய்தனர் என்றும் அடியார்க்குநல்லார் உரைத்திருக்கின்றனர்.

ஓர் காலத்து இந்திரசபையிற் சென்றிருந்த அகத்தியமுனிவரைஇந்திரன் மகிழ்விக்குமாறு உருப்பசியையழைத்து நடனஞ்செய்க வென்ன, அவளும்அங்ஙனம் ஆடத்தொடங்கும்போது, சித்திரசேனன் என்னுங் கந்தருவன், கோலமுங் கோப்பும் இசையும் நடமுந்திருத்திக்காந்துவருகின்ற திரையுட் புகுந்துபாட, வெளிப்பட்டு ஆடுகின்றவள் சயந்த குமாரனிடத்து மோகங்கொண்டாள். அதனை யறிந்த நாரத மகாமுனிவர் கலகப்பிரிய ராதலின் அம்மோகத்தைப்பலர்க்கும் அறிவிக்கவிரும்பிப் பனைநரம்புபட யாழ் வாசித்தனர். அதனால் ஊர்வசியின் ஆடல்நெகிழ்ந்தமையையும், பாடல் முதலிய பலவகைக் கருவிகள்நெகிழ்ந்தனவுங்கண்டஅகத்தியனார் சினந்து சயந்தனை மூங்கிலாகவும், உருப்பசியை மானுடமகனாகவும், நாரதர்துயமழை மங்கலமிழ்ந்துமணமிசைதங்கும்வீணையாகவும் ஆகவென்றுசபித்தாரெனவும் அங்ஙனமே சயந்தன் விந்தமலையில் மூங்கிலாகவும் உருப்பசி காஞ்சிமாநகரத்தில் மாதவியென்னும் பெயருடன் தேவகணிகையாகவும் பிறந்தனரெனவும், மகதியாழ் மண்மிசைத் தங்கியதெனவுஞ்சரிதமுண்டு. அதனை "வானவர்கோமான்வானிடையிருந்து" எனவரும் சுத்தானந்தப்பிரகாசபரத நூற்செய்யுளானும், நாரதன்வீணை என்னும் கடலாடுகாதைச் செய்யுளானும் "திருந்திய பொதியிலருந்திறலகத்தியன்" என்னும் சிலப்பதிகாரநூன்முகச் செய்யுளானு மறிக.

இன்னும் இம்முனிவரனார் நகுடன் என்னும் அரசன் தேவேந்திரபதம்பெற்றகாலத்தில் அவன்சிவிகையைமுற்றுந்தாங்கிச் சென்றாராக, அவன் விரைவாகச் செல்லுங்கள் என்னும் பொருள்பட "சர்ப்பசர்ப்ப" எனக்கூற உடனேமலைப்பாம்பாகச்சபித்தார் எனமகாபாரதமும், சீதாதேவியின்சிறைமீட்டற்காக இராமபிரான் இலங்கையம் பதிநோக்கிவருவழியில் இம்முனிவரின் ஆச்சிரமத்திற்றங்கி, இராவணன் வரலாற்று முறைமைகளையும், இலங்கையின்மகாத்மியம் முதலானவற்றையுங்கேட்டுணர்ந்து, அவராற்கொடுக்கப்பட்டபிரமாஸ்திரத்தைக் கைக்கொண்டு அவர் அருளையும்பெற்றுச் சென்று வெற்றியடைந்தனர் எனக் கூர்மமகாபுராணமும் இராமாயணமுங்கூறுகின்றன.

"கொங்குதேர் வாழ்க்கை" என ஆலவாயடிகளாற் திருவாய்மலர்ந்தருளப்பட்ட திருமுகப் பாசுரத்திற்குக் குற்றங்கூறிய கடைச்சங்கப் புலவருள் ஒருவராய் களவியற்பொருள் கண்ட மதுரைக்கணக்காயன் மகனாரான நக்கீரர்க்கு மயக்கம் நீங்க இலக்கணங்களை யிறைவன் ஆஞ்ஞைப்படி உபதேசித்தனர் என ஆலாசியமான்மியமும் கூறுகின்றது.

இவ்விருடியர்பெருமானது கலைகளுள் ஒன்று தற்காலத்து எம்மனோரை யுய்விப்பான் சிவஞானமுனிவர் என்னும் திருநாமத்தோடு தோன்றி, திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறைஆதீனத் தமர்ந்து செந்தமிழை விருத்திபண்ணியதன்றிப்பரமத தி

கரணமும் சைவசித்தாந்தமாகியசுவமதஸ்தாபனமுஞ் செய்து, சிவஞானபோதமுதலிய உண்மை நூல்களுக்குத் திராவிடமாபாடியம் எனப்பெயரியஉரையும், வார்த்திகமுஞ் செய்து விளக்கிற்றுஎன்பது வெள்ளிடையிலே போற்றெள்ளிதின் விளக்கமே. எனவே இவர்செந்தமிழ் நங்கைக்குச்செவிலித்தாயாய் விளங்கினரென்பது திண்ணமேயாம்.

அகத்தியமுனிவர் பெயரால்ஒரு நட்சத்திரமுமிருக்கின்றது. அது தோன்றுமாயின் சமுத்திர அலைகள் ஒடுங்கும்இதுகடல்குடித்த பெருமாட்சிமைக்கு ஓரறிகுறியாக் கொள்ளத் தக்கதாகும்.

அகத்தீசுவரர்- திருவகத்தியான்பள்ளி என்னும் திவ்விய க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் சுவாமிபெயர்.

அகநகர் - நகருள்ளிடம், இராசதானியைச்சூழ்ந்தநகரம்.

அகநானூறு- இறவெட்டுத்தொகையுள் ஏழாவதுதொகை, வாழ்த்துஉட்பட சா0 செய்யுளையுடையது உத்தரமதுரைக்கணிருந்தகடைச்சங்கப்புலவர்களுள்பாரதம்பாடியபெருந்தேவனாரால்வாழ்த்துச்செய்யுளும், மாமூலனார்முதல் உலோச்சனார் இறுதியாகவுள்ள புலவர் பலரால் மற்றைநானூறுசெய்யுட்களுஞ் செய்யப்பட்டுள்ளது. அகப்பொருட்பகுதிகளையேபொருளாகஉடையதுபதின் மூன்றடிச் சிறுமையும்முப்பத்தேழடிப்பெருமையுமுள்ளஆசிரியப்பாக்களாலமைந்தது இத்தொகைக்கண் வாழ்த்துஒழிந்த நானூறு செய்யுட்களில்முன்புள்ளநூற்றிருபது செய்யுள் களியற்றியானைநிறை எனவும், அவற்றின் பின்புள்ள நூற்றெண்பதுசெய்யுள் மணிமிடை பவளம் எனவும்,மற்றைய நூறும் நித்திலக்கோவை எனவும் கூறப்படும். இத்தொகைதொகுத்தவர் மதுரை உப்பூரி குடிகிழார் மகனாருருத்திரசன்மர். தொகுப்பித்தவர் உக்கிரப்பெருவழுதி. இது அகம் அகப்பாட்டு எனவும்பெயர்பெறும்

அகநிலைப்பாசக்கை-சுட்டுவிரல் நுனியிற் பெருவிரலகப்படுவது.

அகநிலை-ஊர். (ப்பாலை.

அகநிலைமருதம்-உழைநரலாய கோடி

அகநீகு - தேவரனீகன்புத்திரன், குருவின் பிதா.

அகப்புறக்கருவி- எழுவகை முழவின் ஒன்று. மந்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்ச முதலாயின.

அகப்புறச்சமயங்கள் - சைவம், பாசுபதம்,மாவிரதம்காளாமுகம் வாமம் வைரவம் என்னும் ஆறுமாம் இவற்றுள் சைவசமயி சிவன் தாண்டவபூஷணமூர்த்தியாய் அருள்செய்வர் எனக் கூறுவன். பாசுபதசமயிதிருநீறுஞ்சடைமுடியுந் தரித்தமூர்த்தியாகவும், மாவிரதி என்புமாலை தரித்தமூர்த்தியாகவும்காளாமுகத்தன் படிகம் புத்திர தீபமணிகள்தரித்தமூர்த்தியாகவும், வாமசமயிஅக்கினியும்உபவீதமுந்தரித்த மூர்த்தியாகவும்,வைரசமயி தமருகமுஞ் சிலம்புந்தரித்த மூர்த்தியாகவும் அருள் செய்வர் என்றுங் கூறுவர். இவ்வறுவருஞ் சிவபெருமானையேகடவுளாகக்கொண்டு அவர்க்கு முக்கண்ணுடைமையையொப்பிநிற்றலாற் சிறிதுவேறுபாட்டையுடையர்.

அகப்பை-கோரிகை,மூழி,மூழை.

அகமார்க்கம் - அருமையிற்பாடல், மெய்க்கூத்து.

அகமுழவு-முழவு வகையின் ஒன்று, அதாவது உத்தமமான மத்தளம். சல்லிகை, இடக்கை, காடிகை, பேரிகை,பாடகம் குடாமுழாவென்ற இவையாம்.

அகம்பன் - கும்பகன்னன் புத்திரன். இவன் அநுமானாற் கொல்லப்பட்டான்.

அகலம்- அகலுள், அகறல்,ஆய்வு, ஆன்றல்,இடம்,இடம்பாடு, கண்ணறை, சேண், தடம்,தளம்,தளி,தனவு,சக்குரோதம், படர்தல், பாழி, மார்பு விபுலம், வியல், விரிவு, விசாலம், வியலிடம்.

அகலிகை-முற்கல முனிவர் புத்திரி, இவள் அதிக சுந்தரமுடையவள்

அதனால் அநேகர் மணஞ்செய்ய விரும்பவும், அதுகண்ட முனிவர் நீர்க்குள் நின்று நெடுங்காலந் தவஞ்செய்வார்க்கே இவள் உரியவள் என்று சொல்ல, பற்பல முனிவருந் தேவரும் அங்ஙனம் புகுந்து முடியாராயினர். இந்திரனும் பற்பல முறை சூழ்ந்து சூழ்ச்சிசெய்து இயலாமற்போயினன். கௌதமரே அங்ஙனம் நெடுங்காலஞ் செய்தமையால் மனைவியாக்கப் பெற்றனர். இந்திரன் மாயவடிவங் கொண்டு வந்துசேர்ந்தமையால், கௌதமமுனிவரால், கல்லாகக்கிடக்கும்படி சாபம்பெற்றனள். பின் இராமரின் திருப்பாத தூளிபட்டமையால் முன்னுருவாகி முனிவரைச் சேர்ந்தனள். பன்னிருவருடமழையில்லாமையால் எங்கணுமுள்ள முனிவர்யாரும் இவள் ஆச்சிரமத்திற்குச்செல்ல அவர்களைக்கௌதமர் இவருடைய தவப்பலத்தாற்றன் பாதுகாத்துவந்தனர் இவள் கங்கையின் வரத்தினால் எங்கே தோண்டுகின்றனரோ அங்கே தூயநீர் வருமென்ப. இவளை காலிற்பாடகமணிக்கே திருப்பாற் கடலில் பிறந்தவள் என்பாருமுளர்.

அகலுள்-தெரு எவ்விடமும்.

அகல் இடிஞ்சில், சராவம், சுத்திகை தகழி, பாண்டில்.

அகவல்-ஆசிரியம், தொகை.

அதனிலக்கணமாவது- அளவடியுடைத்தாய் இயற்சீர்பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி கூவிளங்கனியென்னும் இருசீருங் கலவாது மூன்றுமுதலியபலவடிகளால் முற்றுப்பெற்று, ஈற்றிற் பெரும்பாலும் ஏகார ஓகாரங்கள்வந்து நடக்கப்படுவதாம். நேரிசையாசிரியப்பா நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பாஎனநான்குவகைப்படும்

அகவற்பாவினம் - ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் என மூவகைப்படும்.

அகவிதழ்-அல்லி.

அகவை-பதினாறுவயதிற்கு உட்பட்ட பிராயத்தையுடையவள்.

அகழி-அகழ், உடு, நடை, சயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை, பாம் [புரி, அகப்பா.

அகழெலி-இரும்பன்.

அகறல்-கணத்தல், வல்லி, பிரிதல், நீங்கல், உலர்தல், தவிர்தல்.

அகற்றல்-உச்சாடனம், ஒருவுதல், துறத்தல், நீக்கல், தவித்தல், துரத்தல் ஓட்டல், நீத்தல், பரித்தல், கழித்தல், தீர்த்தல், விடுத்தல். [சலாகை,

அகன்மணிப்பொதுப்பெயர்-அரதனம்

அகன் -அகாசுரன், இவன். கஞ்சனேவலால் மலைப்பாம்பு வடிவாய் வந்து கண்ணனைவிழுங்கி அவராற்கொல்லப்பட்டவன். [இராசதானி.

அகிச்சேத்திரம் - உத்தர பாஞ்சாலத்து

அகிலாண்டேசுவரி- திருவானைக்காவிலே கோயில்கொண்டிருக்குந்தேவியார் பெயர்

அகிலேசர் - திருவாரூரிலே கோயில் கொண்டிருக்குஞ் சுவாமிபெயர்.

அகிலேசுவரி-திருவாரூரிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்பெயர்.

அகில் - அகரு, உலோகம், காகதுண்டம், சாகர துண்டம், சோங்கம், யுழில், வமிசசம்.

அகில்வகை-அருமணவன், தக்கோலி, கிடாரவன் காரகில்.

அகோபிலம் - தொண்டைநாட்டிற்கு வடமேற்றிசையிலுள்ள ஒருவைணவமடம்.

அகோரசிவாசாரியர்-சைவசித்தாந்தத்தைப் பற்பலவத்தியற்புதசெய்கைகளாலும் போதனையினாலும் நிலைநிறுத்திய மகான்களுள் இவருமொருவர் சைவசித்தாந்தத்திற்கு வேண்டியநூல்களை வடமொழியில் இயற்றினர். மிருகேந்திராகமம் முதலிய சிவாகமங்கட்குஉரைசெய்தும்வியாக்கியானஞ்செய்து முள்ளார். ஆதிசைவப்பிராமண குலத்தில் அவதரித்தவர். சிதம்பர க்ஷேத்திரத்திலே பரிபூரண தசையடைந்தனர் அவதரித்தகாலமும் அதுவென்றுகூறுகின்றனர். அகோர தேவரென்று இவர்க்குப்பெயருமுண்டு. அதிவீரராமபாண்டியர்க்குத் தீக்ஷாகுருவாயிருந்தனர் என்றுங் கூறுவாருமுளர்

அகோரசிவாசாரியார்பத்ததி-இதுவட மொழியிலே அகோரசிவாசாரிய ராற் செய்தருளப்பட்ட நூல். பத்த திகளுள்ளே இதுவும்வாமதேவசிவா சாரியராற் செய்தருளப்பட்ட வாம தேவ பத்ததியுமேமுக்கியமாகக்கை க்கொள்ளப்படுகின்றன. சைவக்கி ரியைக்கிரமங்களைப்போதிக்கும்.

அகோரம்-சிவபெருமானதுஐந்துதிரு முகங்களுள் ஒன்று. இதுகண்டவர் க்குப்பயங்கரமுண்டாக்குந்தோற்ற முடையதாய்கீழேதூங்குந்தாடியை க்கொண்டு, புறப்பட்டபற்களும் வி ருத்தர்முகம்போன்ற தன்மையையு முடைத்தாய்கருநிறமுற்றுவலப்புய த்தின்மேல் தெற்குநோக்கிவிளங்கு ம், விசயம், நிச்சுவாசம்,சுவாயம்புவ ம்,ஆக்கினேயம், வீரம் என்னும்ஐந் தாகமங்களையும் பாரத்துவாசவிரு டிபொருட்டுத்தோற்றுவித்ததும்இ துவேஅகத்தியான்மக நூல்கள்தோ ன்றினவென்றுஞ் சிவாகமங்கூறும்.

அக்கசாலையர்தெரு-ஆவேசனம். [யன்

அக்கபாதன்-நியாயநூல்செய்த ஆசிரி

அக்கயபாத்திரம். சூரியதேவனிடத்தி னின்றும் அவன்பேரருப தருமரா சன்பெற்றுக்கொண்டவற்றாதபாத் திரம் எவ்வளவு ஆயிரவர் வரினும் அவர்கள் யாவர்க்கும் அன்னங்கொ டுக்கும் விசேடமுடையது.

அக்கன் - இராவணன் மகன் அனுமா னாற் கொல்லப்பட்டவன்.

அக்காரக்கனிநச்சுமனார் - கடைச்சங் கப்புலவருளொருவர்.

அக்கிவிட்டி - நெருகிழி, இரத்தனம், கொப்பிடுகலம், அனற்குணவை.

அக்கினிதேவன்-சாதவேதா, மைவா கனன், நிபதி, சித்திரபானு,தனஞ் சயன், தென்கீழ்த்திசையோன், தேயு,வாயுசகன்,பாவகன்.

அக்கினிமுகன்-சூரபன்மனது புத்திர ருள் ஒருவன் வீரவாகுவின்றுணைவ ராயஒரு வரானுங் கொல்லப்படாதி ருந்தவீரதீரன், வீரமார்த்தாண்டன் வீரகேசரி முதலியஎண்மர்களையும் போர்முகத்திற்பின்கண்டவன் இ வனேகாளியின்வரபலமுடையவன்.

அக்கினிவகை-ஆகவனீயம், காருகபத் தியம், தக்கிணாக்கினியம் என்னு மூன்றுமாம். இவை முறையே சது ரம் வில்வட்டம், கோணம் என்னு மூவடிவினவாம்.

அக்கினிதிக்கு-தென்கீழ்த்திசை.

அக்கினிமனைவி-சுவாகாதேவி.

அக்கினிவாகனம்-ஆட்டுக்கடா. [மணு.

அக்குமணி. சங்குமணி,மகவுவளைமணி

அக்குரோணி - தாதிவகை. அநீகம் மூன்றுபங்குகொண்டது.

அக்குரோணிவகை-பதாதிசேனாமுகம் குமுதம், கணகம்,வாகினி, பிரளயம் சமுத்திரம்,சங்கம், அனிகம் என்று மொன்பதுமாம். இவற்றுள் பதாதி யாவது ஓரியானையும், ஒருதேரும், மூன்றுகுதிரைகளும்,ஐந்துகாலாளு ங்கொண்டது. சேனாமுகம் ஆவது பதாதி மூன்று பங்குகொண்டது. குமுதம் ஆவது சேனாமுகம்மூன்று பங்குகொண்டது. கணகம் ஆவது குமுதம் மூன்று பங்குகொண்டது வாகினி ஆவதுகணகம்மூன்றுபங்கு கொண்டது. பிரளயம்ஆவது வாகி னிமூன்றுகொண்டது. சமுத்திரம் ஆவதுபிரளயம் மூன்றுகொண்டது சங்கம் ஆவது சமுத்திரம் மூன்று கொண்டது. அனிகம் ஆவது சங் கம் மூன்றுகொண்டது அவற்றின் றொகையாவன.

	யானை-௧.
	தேர்-௧.
௧. பதாதிக்கு—	குதிரை-௩.
	காலாள்-௫.
	யானை-௩.
	தேர்-௩.
உ. சேனாமுகத்திற்கு—	குதிரை-௯
	காலாள்-௧௫.
	௯,
	௯,
௩. குமுதத்திற்கு—	உ௭.
	௪௫.
	உ௭.
	உ௭.
௪. கணகத்திற்கு—	௮௧.
	'௫

௫. வாகினிக்கு	௮௧, ௮௧ ௨௪௩ ௪௦௫.
௬. பிரனயத்திற்கு	௨௪௩. ௨௪௩. ௭௨௯ ௧௨௧௫.
௭. சமுத்திரத்திற்கு.	௭௨௯. ௭௨௯. ௨௧௮௭ ௩௬௪௫
௮. சங்கத்திற்கு	௨௧௮௭. ௨௧௮௭. ௬௫௬௧. ௧௦௯௩௫.
௯. அனீகத்திற்கு—	௬௫௬௧. ௬௫௬௧. ௧௯௬௮௩. ௩௨௮௦௫

அங்கக்கிரியை வசைக்கூத்தின் இலக்கணத்தொன்று. (ஒருவன்

அங்கதன் - குரங்குச்சேனைவீருள்

அங்கதேசராசன்-கன்னன்

அங்கநாடு-விஷ்ணுமூர்த்தியின் மனத்தினின்றுந் தோன்றினமையால் மனோபவன், மனோசன், சித்தசன் எனப் பெயர்பெற்ற மன்மதனானவன் சிவபெருமான் சனகர், சனந்தனர், சனற்குமாரரென்னும் நான்கு மகா முனிவர்களுக்கு சிவஞானயோகத்தைக் காட்டாநிற்புழி, பிரமன்முதலிய தேவர்களின் ஏவலாற் சென்று அம்பு பிரயோகிக்க, நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினி சுட்டதனால் வெந்துவிழுந்த நாடாம்.

அங்கவகை-படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறுமாம்.

அங்காகமம்-மதனநூல், கொக்கோகம்.

அங்காடி-கடைவீதி, ஆவணம், கூலம், பீடிகை, ஞெள்ளல்.

அங்குலன் சாகபுரத்திலிருந்தவேடன். பாதகங்களைச்செய்தவன். இவன் ஒருநாள் வேட்டையாட வனத்திற்குச் சென்று அங்கு மிருகம் பறவைகள் ஒன்றும் அகப்படாமையால் வருந்தி நீரருந்தவரும் மிருகங்களைக் கொன்றுபோவோமென்று நினைத்து ஒருகரையினிடத்துள்ள வில்வமரத்தின் மேலேறி மறைவாயிருக்கும் இலைகளையெல்லாம் தன் வாளினாலும் கைகளினாலும் அரிந்தும்பிடுங்கியுமெறிய, அவையெல்லாங்கீழிருந்த சிவலிங்கத்தினுச்சியிற்பட்டன. இங்ஙனமே மிருகபயத்தினால் நித்திரையின்றி இராமுழுவதுங் கழிந்தமையாலும், அத்தினத் துணவின்றியிருந்தமையாலும், சிவசந்நிதியிலுள்ள வில்வமரத்து இலைகளைப்பறித்தெறிய. அவை அருச்சனைசெய்ததுபோலாகலானும், சிவராத்திரிதினமாகிய அவ்விரதத்தை அன்புடன் அநுட்டித்தவாறு பலன் அவனுக்குக்கிடைத்தது. இங்ஙனமாயவேடன் மறுநாள் தன்வீடு சென்று மனைமக்களோடு சிறிதுகாலம் வாழ்ந்து இறந்தனன். யமதூதர்கள் பாசத்தினாற்கட்டி யமலோகங்கொண்டுபோகச் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி நந்திகணங்கள் சென்றுயமதூதர்களை யடித்துத் துரத்திப் பாசத்தையவிழ்த்து விமானத்திலேற்றிச் சிவலோகஞ்சார்த்தனர். சிவபெருமான் அவ்வேடனைநோக்கி அன்பனே! சிவராத்திரி விரதத்தையநுட்டித்த பலனையுடையை ஆதலாற் சிவகணத்தவர்களுள் ஒருவனாய் இருக்கக் கடவாயென்று கூறியருள அங்ஙனமிருந்தனன்.

அசகாயசூரன்-வேறொருவரது சகாயமில்லாமற் பகைவரை வெல்லும் பலமுள்ளவன்.

அசநி-குட்டினி, தொழுத்தை, கூளி, குறளி, படுவி, குண்டம், துட்டை.

அசநியாடல்-நகை, நயச்சொல், மிக்குச்சிரித்துவிளம்பல், நகல், நயக்கினவி.

அசமுகி-காசிபமுனிக்கும் மாயையென்பவட்கும்பிறந்தவள். துருவாசமுனியுடன்சேர்ந்து வில்வலன் வாதாவியென்னும்இருமைந்தரையும்பெற்றவள் வீரமாகாளரால் கைவெட்டப்பட்டவள்.

அசிதம் சிவாகமம் இருபத்தெட்டினுள் ஒன்று, சத்தியோசாதமுகத்தினின்றுந் தோன்றியது. நாற்பாதங்களையும் பதினாயிரங்கிரந்தசங்கியைகளையுமுடையது. நான்குஉபபேதங்களையுடையது. இது சதாசிவமூர்த்திக்குமுழந்தாளென்ப. இது கேட்டவர் சிவர், சுசிவர், அச்சுதராகும்.

அசுணமா-கேகயம், இசையறி பறவை.

அசுத்தபுவனம்-ஆன்ம தத்துவம் எனவும்படும். பிரகிருதி முதற் பிருதிவி தத்துவம் இறுதியாகவுள்ள இருபத்துநான்குமாம்.

அசுத்தமாயை - மாயாமலத்தின் கூறுபாடினுளொன்று. இது சுத்தமாயையின் அதோபாகமாய், பிரகிருதிமாயைதோன்றுதற்குக் காரணமாயுள்ளது. பிரபஞ்ச சங்கார காலத்தில், இஃதழிந்தால்மீட்டும் இதனை உண்டாக்கும் அப்பொருளுக்கும் ஓர் உபாதானமாக அநவத்தா தோடமடைதலால் இதற்கு அநித்தியத்துவங்கூடாதபடியினாலே அழிவில்லாததாய் அருவமாய், அநேகமென்கின்ற பிரமாண மில்லாத படியினாலே ஒன்றாகி, சகல சகத்துக்குங் காரணமாய், காரியஞ்சடமாயிருத்தலாற்றானுஞ்சடமாய், எவ்விடத்துங் காரியங்காணப்படுகையினாலேவியாபகமாய் நிருமலராகிய சிவபெருமானுக்குப் பரிக்கிரக சத்தியாய், ஆன்மாக்களுக்கு மாயேயமான தனுகரணபுவனபோகங்களையுண்டாக்குவதாய், ஆணவம், மாயைகன்மம் என மூவகைப்பட்டமலங்களில்ஒன்றாய் மாயாமலத்தின் காரியப் பாட்டினுளொன்றாய்விளக்குவதாம். எனவே விந்துவின் கீழாயடங்கி மலகர்மங்களோடு விரவிமுதற்காரணமாய் நிற்பதாம்.

அசுத்தமாயைத் தோற்றம்-வாயுவானதுகடலின்ஒருபிரதேசத்தை விகாரப்படுத்துமாறுபோல அனந்ததேவநாயனார் கிரியா சத்தியால் அசுத்தமாயையின்ஒருபிரதேசத்தை விகாரப்படுத்தி அதனின்றும் நியதியையுங் காலதத்துவத்தையுமுண்டாக்குவர். எனவே முதல்வனாணையால் அனந்தேசுரநாயனார் கிரியா சத்தியைப் பிரேரிக்க, அது சத்திதத்துவத்தையெழுப்ப, சத்தி தத்துவங் காலதத்துவத்தையெழுப்ப, அது ஆன்மாவுக்கு கன்மத்தைக் கூட்டுமெனக் கொள்க. அந்தக்காலம்இறந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம், எனமூன்றுபட்டு,இறந்தகாலத்துஎல்லையும், நிகழ்காலத்திற்பலமும், எதிர்காலத்திற் புதுமையுமுண்டாக்கும். நியதி தத்துவம் அரசன் நியாயம்போலச் சிவபெருமானாற் கன்மத்துக் கீடாகக்கொடுக்கப்பட்ட போகங்களைப் புசிக்கும்படியறுதியிடும். காலதத்துவம் நியதிக்குப் பின்தோன்றி ஆணவத்தைச் சிறிதுநீக்கி ஆன்மாவின் சேட்டைக்குக் காரணமாய கிரியா சத்தியைத் தோற்றுவிக்கும்.

அசுத்தம் - அசுசி, அருவருப்பு, குற்சிதம், சூதகம், தூயதின்மை, பயிர்ப்பு, வாலாமை, ஆசௌசம்.

அசுரர்-அவுணர், சுக்கிரசீடர், தகுவர், தநுசர், தானவர், திதிசுதர், திதிமைந்தர், தைதேயர், தைத்தியர், நிசாசரர், நிசிசரர், பூர்வதேவர், வானோர் மாற்றலர், கண்டகர், மேனிகரப்போர், கார்வண்ணர், மாயைமைந்தர்

அசுவத்தாமன் - துரோணாச்சாரியன் புதல்வன். பிறந்தபோது அசுவம் போலக்கனைத்தமையின் இப்பெயர் வந்தது. சிரஞ்சீவிகளுள் ஒருவன்.

அசுவினிதேவர்-நாதன், தத்தியன்.

அசை - தானவகையுளொன்று, ஒரு மாத்திரை, இதற்கு வடிவு-எ.

அசை-எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்குறுப்பாய் வருவது. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும் அவற்றுள் நேரசையாவது குற்றெழுத்தேனும் நெட்டெழுத்தேனுந் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது நிரையசையாவது குறிலிணைந்தும் குறினெடில் இணைந்தும், குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறினெடிலிணைந்து ஒற்றடுத்தும் வருவது.

அசைச்சீர் - நேரசையாயினும் நிரையசையாயினுந்தனித்துநின்றுசீராய்

வருவதாம். உதாரணம்நேர் (நாள்) நிரை (மலர்) இவை பெரும்பாலும் வெண்பாவி னீற்றிலுஞ் சிறுபான்மை மற்றையாவற்றுள்ளும் வரும்.

அசைச்சொல் - அத்து, அந்தில், அம்ம, அரோ, அன்று, ஆங்கு, ஆம், ஆல், இரும், இட்டு, இருந்து, கொன்று, ஒரும், கா, குரை, சின், தம், தாம், தான், தில், நின்று, பிற, பிறக்கு, போம், போலும், மன், மன்னோ, மா, மாது, மாதோ, யா, இக, மியா, போ, நும், வான், சொல், மற்று, ஆங்க, ஓ, உம், இவற்றுண், மாவென்னுமசைச்சொல் வியங்கோளோடும் வரும். அன்றியும் முன்னிலையசைச்சொன் முதலிய தத்தம் வரியிற் காண்க. இவை அசைநிலைகளெனவும் படும். என்னை? வேறுபொருள் உணர்த்தாதுபெயர்ச்சொல்லோடும்வினைச்சொல்லோடுஞ் சார்த்திச்சொல்லப்பட்டு நிற்றலாயின

அசைத்தல் - சார்த்துதல், அலங்கல், ஊசல், ஒசிதல், சலித்தல், சாய்தல், ததும்பல், தயங்கல், தளம்பல், தன்னாடல், திவளல், துயல்வரல், துவளல், கசடல், காலுதல், கம்பிதஞ்செய்தல், சஞ்சலித்தல், தளர்தல், ஆடல், ஆட்டல், இரட்டல், ஒசித்தல், சலிப்பித்தல், துவட்டல்.

அசைத்தொழில் - தாக்கியெழுதல்.

அசைமீட்டல் - மிருகங்கடாம் உண்ட உணவை இரைப்பையினுட் செலுத்தல்.

அசையாநிலை - அசலம், சலியாமை, சாசுவதம், துருவம், துவம், தம்பநிலை.

அசைவு - உலோகம், சம்பனம், கம்பம், கம்பிதம், சஞ்சலம், சலம், சலனம், தானம், துலிதம், மடிவு.

அசோகமரம் - காகோளி, சிஞ்சுபம், செயலை, சேந்து, பிண்டி.

அசோகவனம் - இராவணனது உத்தியானவனம், சீதையை சிறைவைத்த இடம். சோகத்தைமாற்றும் வனம்.

அச்சக்குறிப்பு - அருக்கல், உலமரல், ஓடல், குலைதல், குலைபல், துணிர், கூசல், ஞெரேலெனல், ஞொள்கல், திட்கல், துட்கல், துணுக்கெனல், துண்ணெனல், தேங்கல், வெட்கல், வெய்துறல், துடுக்கெனல், திடுமெனல், திண்ணெனல்.

அச்சமின்மை - அபயம், நிர்ப்பயம், வெருவாமை, தறுகண்மை, அஞ்சாமை.

அச்சமுன்னோன் - கரிதன், காதரன், சிதன், பீதன், பீரு, பீருகன், பீலுகன், சகிதன்.

அச்சம் - அடுப்பு, அணங்கு, அற்றம், உட்கு, உரும், உருவு, உறகண், கடி, கம்பலை, கலக்கம், கவலை, கொன், கோரம், சூரம், சூர், தரம் தாம், பயம், பனி, பனிப்பு, பீதி, பீர், புலம்பு, பைரவம், பேம், பிறப்பு, வெடி, வெருவந்தம், வெருவு, வெறி, வெறுப்பு, அதிர்ப்பு, பயானகம்

அச்சவலிசயம் - நாடகவுறுப்பினொன்று, அதாவது ஒடுங்கிய உடம்பும், நடுங்கியநிலையும், மலங்கிய கண்ணும், கலங்கியமனமும், மறைந்துவருதலுடைமையுமசையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமும் இசைந்த பண்பினதாம்.

அச்சியந்திரம் - எழுதாவெழுத்து, எழுத்துப்பதிக்கருவி. [காலம், முன்பனி.

அச்சிரவகாலம் - வாடையொடு வருஉங்

அச்சு - தென்னுதெனுவென்று பாடல், பாரணை, ஆனந்தி.

அச்சமாருவாதிமதம் - ஆன்மாக்கள்பிறவியை யடையும்போது முன்னர் ஆணாய்த் தோன்றியது ஆணாகவும், பெண்ணாய்ப்பிறந்தது பெண்ணாகவும், பிறக்குமென்றும், சிவபூசையின் பலத்தினாற் பிறவியொழிந்து சிவசந்நிதியிலே அச்சமாருமலே யிருக்குமென்றுங் கொள்வதாம்.

அச்சருவாணி - அச்சாணி, அச்சு.

அச்சுவகண்டன் - ஒருவிஞ்சையன், திவிட்டகுமாரனாற்கொல்லப்பட்டவன்.

அச்சுவினிநாள் - இரலை, ஏறு, ஐப்பசி, சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முதனாள், யாழ், வாசி.

அச்சுவினிதேவர் - பரிமருத்துவர், அச்சுவினிகள், மருத்துவதர், மருத்துவதி குமாரர்.

அஞ்சலிக்கை - இரட்டைக்கை, அதாவது, இரண்டுகையும் பதாகைபோல

மார்பிலேஒன்றிக்கூப்பவதுஎன்னை? "அஞ்சலியென்ப தறிவுறக்கிளப்பி னெஞ்சலின்றி இருகையும் பதாகையாய்,பந்தகம்பொருந்துமாட்சித் தென்ப" என்றாராகலின்.

அஞ்சலித்தல் - கும்பிடுதல், கைகூப்பல், கைம்முகிழ்த்தல்.

அஞ்சல்-உட்கல், கலங்கல்,பயப்படல், மருளல், வெருவுதல், வெருளல்.

அஞ்சனக்கோல் - மைதீட்டியகோல்.

அஞ்சனாட்சி - இவர்கல்வியிற் சிறந்து விளங்கிய தஞ்சையிலிருந்தவித்வாம்சை. கம்பநாடன் இராமாயணம்பாடிமுடித்து அரங்கத்திற்கு அரங்கேற்றக்கொண்டுபோனகாலத்து, அங்குள்ள பிராமணர் அவரை நோக்கி, புலவீர்! இன்னவின்னவிடங்கள்சென்று இவ்விவர்கையொப்பமுங்கொண்டுவருகவென்றபோது இவர்கையொப்பமுங் கொண்டுவருக வென்றாரென்றும், கம்பர் அங்ஙனமே சென்று கேட்டபோது அதிவியப்புற்று, தாமிந்த அற்பகாரியத்தையிட்டுவருதல் சாலுமாவென்று இங்கிதவுரைகூறி, "அம்பராவணிசடை யரனயன்முத-லும்பரான் முனிவரான் யோகராலுய-ரிம்பராற் பணிக்கருமிராமவேழஞ்சேர் - கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாம்" என்னுஞ் செய்யுளையும் பாடிக்கொடுத்தனர். என்றுங் கதைகூறுவர். இவர் தாசிகுலத்திற் பிறந்தவர்,சண்பகவடிவிமுதலிய மாதுசிரோமணிகள்போல இவருஞ் சிறந்தபண்டிதை யென்க. இவர்காலம்கம்பநாடர்காலமே. இற்றைக்குச் சுமார் ஆயிரத் திருநூறு வருடங்களுக்கு முன்னராம்.

அஞ்சுமான் - சிவாகமம்இருபத்தெட்டினுளொன்று. வாமதேவமுகத்தினின்றுந்தோன்றியது.நாற்பாதங்களையும் பன்னிரண்டு உபபேதங்களையுமுடையதுஇதுசதாசிவநாயனார்க்குமுதென்ப. ஐந்திலக்ஷக்கிரந்தசங்கியைகளையுடையது. இது கேட்டவர் அம்பு, உக்கிரர், ஆதித்தியராம்.

அஞ்செழுத்து-ஐந்தெழுத்து, பஞ்சாக்கரம், சிவமந்திரம், மகாமனு.

அஞ்சைக்களம் - திரு வஞ்சைக்களம், தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று.

அஞ்ஞாதவாசம்-தான் இன்னனென்று ஒருவரும்அறியாதபடி வசிப்பது. ஞாதம் - அறியப்பட்டது. ந-என்னும் நஞ்ஞா ஈண்டு இன்மைப்பொருளது. இவ்வாசம் பாண்டவர்களாலும் திரௌபதியினாலுஞ் செய்யப்பட்டது. தருமராசன் சந்நியாசவேடத்துடன் கங்கபட்டர் என்னும் பெயரோடு சொக்கட்டானாட்டம், பட்சிசகுனம், இரத்தினபரீக்ஷை, வேதாந்த சித்தாந்த சாத்திரபோதனை, பஞ்சாங்கமுரைத்தல் முதலியவற்றால் வசித்தனன்.

வீமன் வல்லன் என்னும் பெயருடன் பாகசாலைத்தலைவனாய்ச் சயம்பாகத்தொழிலில் அமர்ந்திருந்தான்.

அர்ச்சுனன் ஊர்வசிசாபத்தால் அடையும் அலிவேடத்தையெடுத்துப் பிருகந்நளை யென்னும் நாமத்தோடு விராடராசன் மகளாகிய உத்தரையென்பவட்கு வீணைவாசித்தல் முதலாய விநோத வித்தைகளைக் கற்பித்தான்.

நகுலன் தந்திபாலன் என்னும் பெயரினனாய் அரசனிடத்தில் அசுவசிட்சை செய்திருந்தான்.

சகாதேவன் கோலுங் குழலுங் கொண்ட இடையன்உருவங்கொண்டு தாமக்கிரந்தியென்னும் பெயருடன் பசுநிரைகளை மேய்த்துப் பாதுகாத்து வந்தான்.

திரௌபதியானவள் தான் சைரந்திரி சாதியிற் பிறந்தவளென்றும், கந்தருவர் ஐவரின் மனைவியென்றும், துவாரகையிலும் அத்தினபுரியினும் உருக்குமிணி முதலாயினோருக்குக் கோலஞ்செய்யும் பணிவிடையிலிருந்தவள் என்றும், தன் பெயர் மாலினியென்றும், விராடராசன் மனைவியாகிய சுதேட்டிணையினிடத்துச் சொல்லி, தன் கந்தருவருடையபயத்தாலும், தேவதைகளின் பலத்தாலும், தன்னை யெவருங் கற்பழிக்கமுடியாதென்றும் நம்பச்செய்து அரசிக்கு இஷ்ட

மானபடி நடந்து சோலமகளிர்வேலையிலிருந்து கழித்தான்.

அஞ்ஞானம் - அவிச்சை, அவித்தை, அவிவேகம், மிச்சை பொய்யறிவு.

அஞ்ஞானவிதம் - தமசு, மோகம், மகாமோகம், தாமிச்சிரம், அந்ததாமிச்சிரம், என்பனவாம். இவையைந்தும் அதர்மத்திலே பிரவிருத்தி பண்ணின ஆன்மாக்களுக்குச் சிவபெருமானது ஆஞ்ஞையினாலே பிரவிருத்திக்குவரும். இவற்றள் தமசாவது அநான்மாவாகிற தேகாதிகளை ஆன்மாவென்று புத்திபண்ணுகை. அது நாலுபூத சம்யோகமே ஆன்மாவென்பதும், பஞ்சபூதங்களே ஆன்மாவென்பதும், ஞானேந்திரியங்களைத்தாமே ஆன்மாவென்பதும், பஞ்சதன்மாத்திரைகளே யான்மாவென்பதும், மனமே யான்மாவென்பதும், புத்தியே யான்மா வென்பதும், அகங்காரமேயான்மாவென்பதும், குணதத்துவமே யான்மாவென்பதும், அவ்வியத்த அதோபாகமாகிய சித்தமே யான்மாவென்பதும், புருடதத்துவமே யான்மாவென்பதும் என இவ்வாறு பத்துவகைப்படும். மோகமாவது மயக்கம். அது அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எட்டனுள் ஒவ்வொன்றைப்பற்றி அதுவேமேலாயபேறெனக் கொள்ளலால் எட்டுவகைப்படும். மகாமோகமாவது சத்தமுதலிய ஐந்துவிடயங்களும், அநிமானுடமிருத்தியமாகத் தூலசிரவணாதிகளுண்டாய் ஐந்து சித்தியிலும் சத்தாதிகளைத் தேவலோகத்தும் பூவுலகத்துங் கிரகிக்கையாகிய பத்துமே பரப்பிரயோசனமென்கை. தாமிச்சிரமாவது திவ்விய அதிவ்வியபேதமாகிய சத்தமுதலிய பத்துவகைச்சித்தி காரணமாகவும், அணிமாவாதி யட்டசித்தியின்பொருட்டுஞ் செய்யப்படுகின்ற சாதனக்குறைவு வர்த்தகாலத்துஞ் சித்தியாய், இவைகளுக்கு நாசம்வந்தகாலத்திலும் இந்தப்பிறகெட்டினும் வருந்தாபம் யாதொன்றுண்டோ அதுவேயாம். அந்ததாமிச்சிரமாவது திவ்வியாதிவ்வியபேதத்திலே சத்தாதிகன்பத்தும், அணிமாமுதலிய சித்திகளெட்டும் பெற்று அதனிலே அத்தியந்தாபிநிவேசம் பண்ணுதல். (அபிநிவேசம்-மனப்பற்று) இவ்வாறாக அஞ்ஞானபேதம் ஆக அறுபத்துநான்காம்.

அடக்கம்- அடங்கல், ஒடுக்கம், ஒருங்கல், குத்தி, சங்கோசம், செறில், முணங்கு, முடக்கம், மடங்கு.

அடங்கல்-ஒருங்கு, அமைவு.

அடமானம்-அடகு, ஈடு, கடன், பிணை.

அடம்பு-பாலிகை, அடப்பமரம்.

அடரொலி - அதிர்த்தல், தெழித்தல், அசட்டல், உரைத்தல், உரப்பல்.

அடவியன்-பனையோலைக்கடை, ஈர்க்கு, துடைப்பம்.

அடிசில்-அடப்படுவது, சோறு, போனகம், மூரல், அமலை, அயினி, பொம்மல், மடை, மிசை, உணா, புழுக்கல், வல்சி, பானிசம், அன்னம், பதம்; மிதவை, பாத்து, துற்று, உண்டி, சரு, சொன்றி, புன்கம், அசனம், ஊண், கூழ், ஓதனம், புகா, அவி, பலி, அமிழ்து, புற்கை, நிமிரல், கவளம், உதகாசம்.

அடிச்சேரி- அடிக்குதல்.

அடித்தல்-அறைத்தல், அதுக்கல், அறைதல், எறிதல், எற்றல், குத்தல், கொட்டல், புடைத்தல், மொத்தல், மோதல், வழுக்கல், மொக்கல், தாக்கல்.

அடிமுதல்-எழுவாய், மோனை, ஆதி, பூருவம், தலைத்தான்.

அடிமை-ஆள், இணைகர், சேடர், தாசர், தொண்டு, தொத்து, தொழும்பர், தொழும்பு, தொறுவு, பிருத்தியர், விருத்தி, தாதர், தாதி, தாசி, இவற்றுட்சிறந்தபெயர் - சேடர், சேடியர் என்பனவாம்.

அடிமையோலை-ஆவணவோலை, முறி.

அடியவர்வகை-சாமுசித்தர், பிராகிருதர், வைநயிகர் என மூவகையர்.

அடியாரிலக்கணம் - பொதுவிலக்கணம், சிறப்பிலக்கணம் என விருவகைப்படும். அவற்றள் பொதுவிலக்கணங்களாவன, கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்

ணுமை, பிறர்மனைநயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலியன. சிறப்பிலக்கணம், ஆவது புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும் புறத்திலக்கணம் பத்து, உடலிலக்கணம் பத்து, அகத்திலக்கணம்மூன்று. ஆகச்சிவனடியாரிலக்கணம்மூன்று. அவற்றுள்,

புறத்திலக்கணம் பத்தாவன-விபூதி உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களைத்தரித்தல், குருவைவழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களையுச்சரித்தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக்கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப்போசனம் பண்ணுமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்.

உடலிலக்கணம் பத்தாவன-சிவபெருமானுடையபெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத்தடித்தல், உதடுதுடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ்சிலிர்த்தல், குறுவியர்வைகொள்ளல், நாத்தழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர்சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த்தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

அகத்திலக்கணம் மூன்றாவன-பஞ்சாக்கரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னோடுபிரிவறக்காண்டல் என்பவைகளாம்.

அடியார்க்குநல்லார்-இவர் பண்டைக் காலத்து உரையாசிரியர்களுள் ஒருவர். இளங்கோவடிகளாற் செய்யப்பட்ட சிலப்பதிகாரம்என்னும்பெருங்காப்பியத்திற்கு உரைசெய்தவர் இவரே. இவர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கம் பொருவனாட்டுத் தேவனூர் செங்குந்த குலத்திற் பிறந்தவர், காலம் கி. பி. 1000 என்பது கல்வெட்டு., உரைச்சிறப்புப்பாயிரத்தில் நிரம்பை "பொப்பண்ண காங்கேயர் தோனளித்தசோற்றிச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுமுரைத்ததுவே" என்றதனால், பொப்பண்ண காங்கேயன் என்ற அரசன் சமஸ்தானத்திலிருந்தவர் என்பதும், அவன் கேள்விப்படியுரை செய்தனர் என்பதும், பெறப்படலால் அவ்வரசன் காலத்தவர் எனவுங் கொள்ளக்கிடக்கின்றது. அன்றியும், நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல்பற்றி நச்சினார்க்கினியரது காலத்திற்கு முந்தியிருந்தாரெனத் துணிபுறக்கிடக்கின்றது. இவரது சமயம் சைவசித்தாந்த சமயமே. இவர் சைவசித்தாந்த வுணர்ச்சிகளிலும், முத்தமிழ்த்துறைகளினும், அருகமதக் கலைகளிலும் மிக்க ஆராய்ச்சி யுடையரென்பது இவருரையாற் றெள்ளிதிற் புலப்படுகின்றது. மற்றையுரையாசிரியர்கள்போலாது தாமெடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இன்னின்ன நூலின்கணுள்ளனவென்று பெரும்பாலுங் குறிப்பிட்டுள்ளார். இவர்மேற்கொண்ட நூல்களுட் பெரும்பாலன அகத்தியம், அகநானூறு, அணியியல், இசைநுணுக்கம், இந்திரகாளியம், உதயணன்கதை, ஒலிபநூல், கலிங்கத்துப்பரணி, கலித்தொகை, களரியாவிரை, கருநூல், குணநூல், குருகு, குறுந்தொகை, கூத்தநூல், சயந்தம், சிந்தாமணி, சிறுபாணாற்றுப்படை, சூளாமணி, செயிற்றியம், தண்டியலங்காரம், தானவகையோத்து, திருக்குறள், திருச்சிற்றம்பலக்கோவையார், திருமுருகாற்றுப்படை, திவாகரம், தொல்காப்பியம், நாலடியார், நான்மணிக்கடிகை, நெடுநல்வாடை, பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பாதசேனாபதீயம், பாரதம், பரிபாடல், பழமொழி, பாசண்டம், புறநானூறு, புறப்பொருள், வெண்பாமாலை, பெருங்குறிஞ்சி, பெருநாரை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மணிமேகலை, மதிவாணர். நாடகத்தமிழ்நூல், மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், முத்தொள்ளாயிரம்,

முறவல், வளையாபதி, வெண்டாளி முதலிய நூல்களின் பிரமாணங்களே காட்டப்பட்டிருக்கின்றன. சிற்சிலவிடத்துப்பத பிரயோசனமும் அலங்காரமும்மெய்ப்பாடுகளும் வேறுசில குறிப்புகளும் இவராலெழுதப்பட்டுள்ளன. அரும்பதவுரையைத் தழுவியும், சிறுபான்மை மறுத்தும், சிலவிடத்துப்பதவுரையாகவும் ஒரேவிடத்துப் பொழிப்புரையாகவும் எழுதி: ஆங்காங்குச்சொன்னயம்பொருணயங்களை யினிது புலப்படுத்தி, இயற்றமிழ்ப் பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும் இசைத்தமிழ் நாடகத்தமிழ்ப் பகுதிகளையும் ஐந்திணைக்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றையும் மேற்கோளோடு விரித்திருக்கின்றனர். இவராற் சுட்டப்பட்டவுரையாசிரியர் நக்கீரர், இளம்பூரணர், அரும்பதவுரையாசிரியர் என்னுமூவரேயாம். இவரதுஉரைநடைசிலசிலவிடத்து எதுகைமோனைமுதலியவற்றோடு கூடி இனியசுவைபயந்துசெய்யுணடையாக வமைந்துள்ளது. பழமொழிகளும், திசைச்சொற்களும் வருமாயின் இன்னது இன்னபழமொழியென்றும், இன்னசொல் இன்னநாட்டுவழக்கு என்றுங் காட்டாநிற்பர். இவரதுஉரைக்கண் இக்காலத்து விசேடித்துவழங்கவில்லாத இசைநாடகத்தமிழ்நூற் சூத்திரங்களும், பரிபாடைகளும், வேறுபலவும் நிறைந்துள்ளனவாகலின் படிப்போர்க்கு மிகவும்பயன்படும், சிலப்பதிகாரத்திற்கன்றி வேறுநூல்களுக்கு உரைசெய்ததாக விளங்கப்படவில்லை.

அடியிலக்கணம் - அதாவது நேரொன்றாசிரியத்தளை முதலிய தளைகள் ஒன்றும் பலவும் அடுத்துவருவதாம்.

அடிவகை-குறளடி, சிந்தடி, அளவடி, அல்லதுநேரடி, நெடிலடி, கழிநெடிலடியென ஐந்துவகைப்படும். அவற்றுள் இருசீரான்வருவது சிந்தடி, நாற்சீரான்வருவது அளவடி, ஐஞ்சீரான்வருவது நெடிலடி, ஐந்தின்மிக்கசீரான்வருவன கழிநெடிலடியாம்.

அடிவெண்குருத்து-முருந்து.

அடுக்களை- அட்டில், மடைப்பள்ளி, பாகசாலை.

அடுக்குதல்-எற்றல்.

அடுப்பு-உத்தானம், கரமரம், குமுதம், கபாலிகை, சுல்லி, சோபாலிகை, மணவை, நிரை.

அடை-அப்பம்.

அடைகுறடு-பட்டடை.

அடைக்கலம்-அபயம், இல்லடை, கையடை, சரணம், சரண், மறை, புகல், தஞ்சம்.

அடைக்கலம்புகுதல் - சரணடைதல், சரணம், சரண் புகல், மறை, புகல்.

அடையாளம்-அங்கம், அச்சு, அறிகுறி, ஆணை, ஆவணம், இலக்கணம், இலாஞ்சனம், இலிங்கம், களங்கம், குறி, கேது, சாதனம், சின்னம், துவசம், நிமித்தம், பதம், பாளி, பொறி, முத்திரை, வியஞ்சனம்.

அடைவு-ஆம்பல்.

அட்டகசம்-ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூபம, சுப்பிரதீபம் என்பனவாம்.

அட்டகணிதம் -சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம் என்பனவாம். அவற்றுள் சங்கலிதமாவது கூட்டல், விபகலிதமாவது கழித்தல், குணனம்ஆவதுபெருக்கல். பாகாரம் ஆவது பங்கிடல் (பிரித்தல்.) வர்க்கமாவது சமமாகிய ஈரெண்ணின்பெருக்கம். கனமாவது சமமாகியமூவெண்ணின்பெருக்கம்.

அட்டகிரி - இமயம், எமகுண்டம், கைலை, நிடதம், நீலம், மந்தரம், விந்தம் என்பனவாம்.

அட்டசித்திகள்-அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம் ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். இவற்றுள் முதன்மூன்றும் தேகசித்தியான ஐசுவரியங்களாம், அணிமாவாவது பரமாணுவிலுஞ் சூக்குமமான தேகத்தை யுடைத்தாயிருக்கை. மகிமாஆவது தேகேந்திரியாதிகளினால் வியாபியாய்ப்பிரமலோகபரி

யர்தமுமுள்ளதேகத்தையுடைத்தாயிருக்கை, இலகிமா ஆவது சீக்கிரவேகியாய்ச் சேற்றிலுஞ்சலத்திலும் அடியமிழ்ந்தாமற்செல்லுந்தேகத்தையுடைத்தாயிருத்தல். கரிமாவாவது பர்வதத்திலும் பாரமாய் மகாவாயுவினாலும் அசைக்கப்படாமல் இருத்தலாம். பிராத்தியாவதுமனத்தினாலே நினைத்த பதார்த்தங்கள்யாவும்முன்னேவந்தடையப்பெறுதல். பிராகாமியமாவது திவ்வியரூபமான அநேக பெண்களை மனச் சங்கற்பத்தினா லுண்டாக்கி யாவரோடும் ஏககாலத்திலே அவற்றிற்கொத்த வடிவங்கள்கொண்டுகூடுவதாம். ஈசத்துவமாவது பிரமன் விஷ்ணு முதலிய சர்வதேவர்கள் முனிவர்கள் ஆகிய யாவரிடத்துந் தன்னுடைய ஆக்கினையைச் செலுத்தல். வசித்துவமாவதுசர்வசனங்களையும்பிரகிருதியையும் வசீகரணம்பண்ணிச் சிருட்டி முதலிய கிருத்தியங்களைச் செய்தலாம். இவைவேறுவிதமாக உரைக்கப்படும். இவை பூவுலகத்திற்கு மேலாகப் பிசாசபதம் முதலாக உத்தரோத்தரத்து விகுணமாய் அறுபத்துநாலுகுணமாம் அவையாவன பிசாசபதவாசிகளான உருத்திர பிசாசங்களுக்குப் பிருதிவி புவனங்களை வியாபித்த அணிமாமுதலிய எட்டுக்குணங்களுண்டு. மனுடர்களுள் சிவபூசாதாரதம்மியத்தினாலே இரௌத்திரபிசாசகணபதத்தை யடைந்தவர்களுக்கும் இவ்வாறேயுண்டாம். இராக்ஷசலோகவாசிகட்குப்பிருதிவி அப்பு என்னு மிரண்டு புவனங்களையும் வியாபித்துத் துவிதகுணமான ஐசுவரியமுண்டு.

இயக்கலோகத்திருப்பவர்க்குப் பிருதிவி, அப்பு, தேயு என்னு மூன்று தத்துவங்களுடையபுவனங்களையும் வியாபித்தமுக்குணமான ஐசுவரியமுண்டு.

கந்தருவலோகத்திலவசிப்பவர்க்குப் பார்த்திவாப்பிய தைசதவாயவ்வியமான நாலுதத்துவபுவனங்களையும் வியாபித்த சதுர்க்குணமான ஐசுவரியமுண்டு.

இந்திரனுலகிலிருப்பார்க்கு ஐந்துபுவனங்களையும் வியாபித்த ஐஞ்குண ஐசுவரிய முண்டு.

சோமலோகவாசிகளுக்குப் பஞ்சபூதங்களுள் மனேதத்துவமுஞ் சேர்ந்த ஆறு புவனத்தையும் வியாபித்த ஆறுகுண ஐசுவரியமுண்டு.

பிரசாபத்திய வுலகத்தவர்க்குக் கீழ்ச்சொன்ன ஆறுடன் அகங்காரதத்துவமுமாக ஏழு புவனங்களையும் வியாபித்த எழுகுண ஐசுவரியங்களுண்டு.

பிரமலோகவாசிகட்குக் கீழ்ச்சொல்லப்பட்ட ஏழுடன் புத்திதத்துவபுவனமுங்கூட எட்டுப்புவனங்களையும் வியாபித்த அட்ட ஐசுவரியமுண்டு.

இங்ஙனமே மானுடர்களுள்ளும் சிவபூசையின் தாரதம்மியங்களினாலே யந்தந்த உலகத்தை யடைந்தவர்களுக்கு இவ்வாறாகிய ஐசுவரியசித்திகள் உண்டென்க.

அட்டதிக்கு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பனவாம். பூமி ஆகாயமென்னுமிரண்டனையுஞ்சேர்த்துப் பத்தென்பதுமாம்.

அட்டதிக்குப்பாலகர் - இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்களாம். பிரமவிஷ்ணுக்களையுங்கூட்டிப் பத்தென்பதுமாம்.

அட்டதிக்குப்பாலகர்குறி - கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, காகம், யானை யென்பனவாம்.

அட்டபரிசம்-தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல், வெட்டல், கட்டல், ஊன்றல் என்பனவாம்.

அட்டமங்கலம்-கவரி, நிறை, குடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்பனவாம்.

அட்டமாநாகம்-அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பனவாம். இவை படமும் வாலுமுடையனவாய் மற்றைய வுறுப்புக்கள் எல்லாந் தேவ வடிவங்கொண்டிருப்பனவாம்.

அட்டமூர்த்தம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்பனவாம்.

அட்டமூர்த்தவிறைவர் - பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், மகாதேவன், உக்கிரன், உருத்திரன் என்பவர்களாம்.

அட்டமூர்த்தவிறைவர் மனைவியர் - சுவர்ச்சலை, உரோகணி, உமை, சுகேசி, சுவாகை, திசை, சிவை, தீக்கை யென்பவர்களாம்.

அட்டமூர்த்தவிறைவர் மைந்தர் - சனி, புதன், சுக்கிரன், செவ்வாய், குசன், சுவர்க்கன், மனோசிவன், சந்தானன் என்பவர்களாம்.

அட்டவசுக்கள் - தரன், துருவன், சோமன், ஆபத்சைவன், அனலன், அனிலன், பிரத்தியூசன், பிரபாசன் என்பவர்களாம்.

அட்டவீரட்டத்தலம் - திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் என்னுமிவைகளேயாம்.

அட்டவீரட்டம் - பிரமனைத் தலை கொய்தல், அந்தகனை யழித்தல், திரிபுரமெரித்தல், தக்கன் தலையடித்தமை, சலந்தரவதம், கயாசுரசங்காரம், காமதகனம், காலனை யுதைத்தமை என்னுமிவைகள் சிவபிரானாற் செய்தருளப்பட்ட முக்கிய வீரங்களாம்.

அட்டாங்கயோகம் - இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம். இவற்றுள்,

இயமமாவது - கொல்லாமை, மெய்ம்மைகூறல், கள்ளாமை, பிறர்பொருள் விழையாமை, இந்திரியமடக்கல் என்பனவாம்.

நியமமாவது - தவம்; சுத்தமுடைமை, தத்துவநூலோர்தல், பெற்றதுகொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடல் என்பனவாம்.

ஆதனமாவது - பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சுவத்திகம், சுகாதனம், வீரம், மயூரம் முதலிய இருப்பினுளொன்று யிருத்தல்.

பிராணயாமம் ஆவது - பிராணவாயுவைத் தடுத்தல், இரேசக பூரக கும்பகங்களாற்றடுத்தல், இரேசகம் என்பது மூச்சை விடுக்குதல். பூரகம் என்பது வாயுவை உட்செலுத்துதல். கும்பகம் என்பது அங்ஙனேற்றிய வாயுவை நிறுத்துதல். இது அகற்பம், சகற்பம் என இருவகைப்படும். மந்திரமில்லாது நிறுத்துதல் அகற்பம். பிரணவத்துடன் காயத்திரி மந்திரத்தையும் உச்சரித்து நிறுத்துதல் சகற்பமாம்.

பிரத்தியாகாரம் ஆவது - மனமானது இந்திரிய வாயிலாக விடயாதிகளிற்சென்று பற்றி யுழலாவண்ணம் அடக்குதலாம். எனவே சிவவுபாதியைநீக்கிப் பிரபஞ்ச உபாதியைச் சிவசொரூபமாகப் பார்த்தல்,

தாரணை ஆவது - உந்தி, இதயம், உச்சியென்னு மூன்றிடத்தும் சித்தத்தை நிலைநிறுத்தல். இதுவன்றி முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலம் என்னும் ஐந்துஇடங்களிலும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களையு மொடுக்கி, அவ்விடங்களின் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளையும் இருத்திப் பாவித்தலாம் என்றுங் கூறுவர்.

தியானம் ஆவது - ஐம்புலத்தையும் அந்தக்கரணத்தையுமடக்கி ஒருகரத்து மழுவும், ஒருகரத்து மானும் ஏந்தியதாய், அபயவரத அத்தங்களையுடையதாய், சதுர்ப்புயம், காளகண்டம், திரிநேத்திரம் உடையதாய் விளங்குஞ் சிவமூர்த்தியைத் தியானித்தலாம்.

சமாதி ஆவது - ஓரிடத்தேனும் மந்திரத்தோடு நோக்காமல் எங்கணுஞ் சிவவியாபகமாய் நோக்கி, அவ்வஸ்துவையுந் தன்னையும் பிரிவறப் பொருத்தல், இவற்றின் விரிவுகளை யெல்லாங் கூர்மமகாபுராணம், சூதசங்கிதை, வாயுசங்கிதை, அடையோகதீபிகை, சிவராஜயோகதீபிகை முதலிய மூக்நூல்களில் விரிவாய்க்காண்க.

அட்டாங்கவணக்கம் - கை இரண்டு தோள் இரண்டு, கால் இரண்டு, மார்பு, நெற்றி என்னும் எட்டுறுப்பும் நிலத்திற்றோய விழுதல். இது சாஷ்டாங்கம் எனவுஞ் சொல்லப்படும்,

அட்டாவதானம் - வேலும்மயிலும் என்று இடைவிடாது கூறுதல், கையில் இலாடசங்கிலிவைத்துக் கழற்றுதல், ஒருவன் கேட்ட வினாக்களுக்கு விடை சொல்லுதல், எதிரில் சூதாடல் முதுகில் கல்லு என்னு நெல்லு உழுந்து ஒருவர் எறியின் ஸ்பரிசவுணர்ச்சியால் அவை ஒவ்வொன்றும் இவ்வளவினவென்று சொல்லுதல், சதுரங்கம் ஆடல், புலவோர் சொல் கவியை யவதானித்துப் பொருள் சொல்லல், அறுபத்து நான்குபேர் எழுதிவருவதற்கு அவர் கேட்டபடி கவிசொல்லுதல் என்பனவாம்.

அட்டிகை - சரடு, கழுத்தணி.

அட்டை - உரு, சளுகம், சளுகம்.

அணி - அதாவது செய்யுட்கழகுசெய்து நிற்பதாம். அது பொருளணி, சொல்லணியென இருவகைப்படும். அவற்றுட் பொருளணி உவமையணிமுதல் எதுவணி யிறுதியாக நூறுவகைப்படும்.

அணிகலச்செப்பு - கண்டிகை, பீடிகை, காண்டம், கடிப்பம், கோடிகம்.

அணிகளின் கடைப்புணர்வு - மடை, கயில்.

அணிதல் - ஆர்த்தல், சூடல், தரித்தல், புனைதல், பூணல், மலைதல், மிலைதல், வேய்தல், மிளைச்சல், எய்தல், வரித்தல், அலங்கரித்தல்.

அணிநூல் - தண்டியாசிரியராற் செய்யப்பட்ட நூல். உவமான அலங்காரம், உருவகவலங்காரமுதலிய செய்யுள் அழகுகளைக் கூறுமென்க.

அணியியல் - இது ஓர் அலங்கார நூல். தண்டியாசிரியராற் சேய்யப்பட்ட தண்டியலங்கார மென்னும் அணி நூலுக்கு முந்தியதே. இது யாப்பருங்கல முதலியவற்றிற் பேசப்பட்டமையின் துணிபாயிற்று.

அணில் - இலுதை, வரிப்புறம், வெளில், இதன் பிள்ளை - குட்டி, பறழ், பிள்ளை

அண்டகோளகை - கூடம், கடாகம்.

அண்டங்காக்கை - கலோலம்.

அண்டசம் - முட்டையிற்றோன்றுவனவாய உயிர்கள்.

அண்டச்சுவர் - பித்திகை.

அண்டபகிரண்டம் - துருவசக்கரத்துக்கு உள்ளண்டங்களும்வெளியண்டங்களுமாம்.

அண்டமுகடு - மூதண்டம்.

அண்ணம் - மேல்வாய், அணரி, அணர்.

அண்ணன் - தமையன், முன்னை, முன்னோன், முன், சேட்டன், தம்முன் தோன்றல், மூத்தோன்.

அண்ணன்மனைவி - அண்ணி, குருமனைவி.

அதங்கோட்டாசிரியர் - அகத்தியமுனிவர் மாணாக்கருள் ஒருவர், கபாடபுரத்திலிருந்த இடைச்சங்கப் புலவருள் ஒருவர். தொல்காப்பியனார் அகத்தியரொடு மாறுபட்டுத் தொல்காப்பியஞ்செய்து, அரங்கேற்றுங் காலத்து அகத்தியனார் இவரை நோக்கி நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்கவென்று கூறினர். தொல்காப்பியனாரோ பல்காலஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல்வேண்டும் என்று கூறவே, இவ்விருவரும் கோபங்கொள்ளாத வகையைத்தெரிந்து இந்நூலிற் குற்றங் கூறிடுவேன் எனக்கருதி அரங்கின்கட் சென்று தொல்காப்பியத்தில் ஆங்காங்கு மாறுகாட்டி யாக்ஷேபித்தார். அவைகட்கெல்லாம் தொல்காப்பியனார் விடைகொடுத்தனர் என நச்சினார்க்கினியர் உரைத்தனர். திராவிடமாபாடிய கருத்தாவாகிய சிவஞான யோகிகள் இவற்றை மறுத்து ஒருவராற் செய்யப்பட்ட நூல் ஒரு வேந்தனது அவைக்களத்தில் ஒரு புலவனுக்கு எற்பித்தாங்கேறின் அது சிறக்குமாகலின் பாண்டியனவையின் அதங்கோட்டாசாற்கரிறபத் தெரித்தனர் என்று சாதித்தார். இதனை, "நிலந்தரு திருவிற் பாண்டினவையத்தறங்கரை நாவினோன் முற்றியவதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து" என்று பனம்பாரனார் பாயிரங்கூறியவாற்றானறிக.

அதட்டல் - அதிர்த்தல், உரப்பல், ஒப்பல், சிறல். தெழித்தல், தொனித்தல், முழங்கல்.

அதமத்தோற்கருவி - முழவேழ்வகையினொன்று, புரமுழவு, புறப்புறமுழவு.

அதள்புனையரணம் - தோற்கைத்தளம் என்னுங் கருவி. அவையாவன - கணைப்பறை முதலாயினவும் கெய்தற்பறை முதலாயினவுமாம்.

அதிகமான் - திருவள்ளுவநாயனாரது சகோதரருள் ஒருவர். அவர்க்குச் சேட்டராம். இவர் வளர்ந்த இடம், அரும்பார்சோலைச்சுரும்பார்வஞ்சி - யதிகனில்லிடை யதிகமான் வளர்ந்தனன் என இவர் சகோதரராகிய கபிலர் கூறுவதனால் அறிக.

அதிகன்-அதிகமான் எனவும், அதிகமானெடுமான் வஞ்சியெனவும் பெயர் பெறுவன்; இவனது ஊர் வஞ்சியாகும். அக்காலத்திருந்த அரசருள் ஒருவன். இவனே திருவள்ளுவநாயனாரது தமையனாகிய அதிகமானையெடுத்து வளர்த்தவனாகும் வள்ளலாருள் ஒருவனாகவும் எண்ணப்பட்டவன் இவன் றன்னூர் மலைப்பக்கத்து நின்று அழகுபெற்ற கருநெல்லியினது அமிழ்து விளையும்பழத்தை ஔவையார் விரும்பிக் கேட்பக் கொடுத்தானென்றும், அதனையுண்டமையால் அக்கல்வியின் முதியாள், வயதிலும் முதியவளாய் விளங்கினள் எனவுந் தெரிகின்றது. அதனைப் புறநானூற்றிற் பாடாண்டிணையில் வாழ்த்தியற்றுறையாய் 'வளம்படு வாய்வாளேந்தி' என்னுஞ் செய்யுளால் ஔவையாரே தெரிவித்திருக்கின்றனர். அன்றியும் எறுமாநாட்டு நல்லியக்கோடனை, இடைக்கழிநாட்டு நல்லூர்நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையினும் "கமழ்பூஞ்சாரற்கவினியநெல்லி - யமிழ்துவிளை தீங்கனியௌவைக்கீந்த - வரவுச்சினங்கனலுமொளிதிகழ்நெடுவேல் - விரவக்கடற்றானையதிகனும்" எனக் கூறப்பட்டிருக்கின்றது. காலம் திருவள்ளுவநாயனார் ஔவையார் முதலிய புலவர் காலமாம்.

அதிகாயன் - இராவணனது மகன், இவன் பிரமனிடத்தில் அழித்தற்கரிய கவசம் பெற்றுப் பின்னர் அநுமனாற் கொல்லப்பட்டான்.

அதிகாரம் - அதிகரித்தலையுடைய பட [லம்.

அதிசயங்கள் - அருகனாற் செய்யப்பட்ட தருமவொழுக்கங்களாம். அவை சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயம் என மூவகைப்படும்.

அதிசயச்சொல் - அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னோ, ஆஅ, எற்றே, என்னே, ஐயோ, ஓஒ, அம்மா, அப்பா, என்னே, என்ன.

அதிசயம்-அதிரேகம், அற்புதம், இறும்பூது, சித்திரம், விசித்திரம், விபரீதம், விம்மிதம், வியப்பு, இரும்பு.

அதிபத்தநாயனார் - அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவர்.

அதிபலை - இராமலக்குமணர் நாட்டு மார்க்கமாக விசுவாமித்திரர்பின் போனபோது, பசியாலும், சோகத்தாலும் வருந்தாவண்ணம் விசுவாமித்திரர் உபதேசித்த இருமந்திரங்களுளொன்று.

அதிமதுரகவி-இவர் திருமலைராயனது சமஸ்தானவித்துவான்களுட் சிரேட்டர். இவர்க்கு அறுபத்துநான்கு கனகதண்டிகைப் புலவர்கள் கற்றுச் சொல்லிகளாயுளார். அவர்கள் தம் இருபாங்கருந் தாரகாகணம்போலச் சூழ்ந்துவர உடுபதிபோல நடுவே மதயானையொன்றினேறி இராச வீமரிசைகளோடு அரசன் சமுகஞ்சென்று திரும்புவார். இவர்க்குங் காளமேகப் புலவர்க்கும் வாக்குவாதம் நேர்ந்து அதில் இவர் தோற்றனர். அவைகளைக்காளமேகப்புலவர் என்னும் வரியிற்காண்க. ஆயினுஞ் சிறந்த வித்வான் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர் தனிப்பாடல்கள் அன்றி வேறு நூல்கள் செய்ததாகக் காணோம். இவர் காலம் திருமலைராயன்காலமே. இவர் மரபில் சோணாட்டுமுதலி என்பவரொருவ ரிருந்தார்.

அதிமதுரம் - அதிங்கம், மதுகம், யட்டி சல்லி.

அதிவீரராமபாண்டியர் - மதுரையிலிருந்து அரசுபுரிந்தபாண்டிய அரசருள் ஒருவர் கொற்கைமாநகரத்தை யரசாண்டவர் என்று 'நறுந்தொகை' என்ற வெற்றிவேற்கையிற் கூறப்பட்டுள்ளது. இவர்க்கு வல்லபதேவர்,

பிள்ளைப்பாண்டியன் குணசேகர வழுதி யெனவும் பெயர்கள் உண்டு, இவர் துணைவரும் இவரைப்போலச் சிறந்த அரசரேறாகவும் விளங்காநின்று பிரமோத்தரகாண்டம் முதலிய பல நூல்களை யியற்றியுள்ளார், அவர் பெயர் வரதுங்கராம பாண்டியர்.

இவர் சந்திரவமிசத்துச் சிற்றரசர்களில் ஒருவர். சிலர் பாண்டிநாட்டின்கண்ணுள்ள தென்காசியிலிருந்து அரசு செலுத்தினர் எனவும் சிலர் மதுரையிலிருந்து அரசுபுரிந்தவர் எனவுங் கூறுகிற்பர். மதுரைப்புராணத்திற் கூறியபடி பாண்டியர்கள் நெடுங்காலமாகக் கொற்கையென்னும் நகரத்திலே வசித்தார்களெனத் தெரிகின்றது. அது "பெரிபிளசு" என்னும் நூலாசிரியர் கூறிய பாண்டியர் பட்டினமாகிய கொல்கியேயாம் அல்லதேல் டிஆன்வில்லி யென்பவர் சொல்லும் இராமேசுரத்துக்கு அருகிலிருக்கும் கீழ்க்கரை என்பதேயாம் என்று பாண்டித்தேச சரித்திரங்கூறுகிற்கும். இதனானும் நறுந்தொகைக்கூற்றானும் இவரும் தன்வமிச அரசர்போலக் கொற்கையிலிருந்தார் எனத் தெளிவாகின்றது. இமயத்தொடங்கிக் கன்னியாகுமரி வரைக்கும் உள்ள இடங்களைத் தமக்குச் சுவாதீனமாகக்கொண்டு மற்றைய தேசத்து அரசர்கடமக்குத் திறை கொடுக்க ஆண்டவர். அரசு செலுத்துவதிற் றங்காலத்தைக் கழித்துவிடாது உலகத்தவர்க் குறுதிபயப்பனவாய் வடமொழிக்கண் விளங்கும் புராணங்களையும் காவியங்களையும் வேறுதனி நூல்களையும் மொழிபெயர்த்துச் செந்தமிழ் நடையிற் சிறந்த கவிகளாற் பாடியருளினர்: இதனாற் சம்ஸ்கிருதத்தன்றித் தெள்ளிய திராவிடத்தும் மிக்க நிலைமையையுடையவரென்பது வெளியாகின்றது. இவர் பாடிய நூல்கள் கூர்மமகாபுராணம், இலிங்கபுராணம், காசிகாண்டம், திருக்கருவைவெண்பா வந்தாதி, நறுந்தொகை யெனப்படும். வெற்றிவேற்கை, வாயுசங்கிதை முதலியனவாம். இவற்றுள் வாயுசங்கிதை குலசேகரன் என்னும் பாண்டிய அரசனால் இயற்றப்பட்டது என்பர். அது சரியன்றென்பது பலர்கிடக்கை என்னெனிற் குலசேகரன், குணசேகரன் என்னும் பெயர்கள் இவ்வரசனுக்கே சிறப்புடைத்தாய் பாநடையு மிவர் நடைபோ லிருத்தலினென்க. இவர் இளமையிலே சிற்றின்பப்பிரியராயிருந்து வினைவயத்தால் அதனையே மெய்யின்பாக் கருதி யொழுகி அதனியலபெல்லாவற்றையும் உணர்த்தும் கொக்கோகரிஷியினாற் செய்யப்பட்ட கொக்கோகநூலை மொழிபெயர்த்து அப்பெயர் சாத்தியும் இந்திரபுரிப்படலத்திற்கூறப்பட்ட மதனாகமவியல்களை "மதனக்கோவை" எனச் சூட்டியும் செய்தார் எனவும் அவற்றைத் தஞ்சகோதரர் பெயரால் வெளிப்படுத்தினர் எனவுங் கூறுப. இங்ஙனமன்றி இணங்காமனைவியரை யம்முறையானிணக்கி யில்லறச் சகடத்தையிழுத்து உலகுவீட்டுநெறியடையுமுபாயத்தாற் செய்தனவென்பர். இவர்க்குக்காமவொழுக்கமிகுதியாற் றொழுநோய் பற்றியவிடத்துத் திருக்கருவை க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிராநின்ற சிவபெருமானமீது மேற்படி அந்தாதிகளிரண்டையும் பாடித் துதிக்க அது நீங்கப்பெற்று அதன் பின்னர் இறைவன் திருவடியின்பமே மெய்யின்பமெனக் கண்டு அதுபெறுவா னருந்தவங்கிடந்தனராம். இவர்க்கு வித்தியாகுரு சுவாமிநாததேவர் என்பவரும், தீட்சாகுரு அகோர சிவாசாரியார் அவர்களுமென்று கொள்ளக் கிடக்கின்றது. ஏனெனில் அவர்களிருவரையும் தாம் செய்த நூல்களிற் குருவணக்கமாகப் போற்றினமையினென்க. இவர் செய்த நைடதமேயன்று மற்றைய நூல்களும் புலவர்க்கௌடதம்என்பதிலையமின்று. இவர் அருளிச்செய்த வெற்றிவேற்கையென்னுஞ் சிறுநூலினருமை நோக்கி ஆங்கில திராவிடாரிய பாடாவல்லவராய் 'பயிலர்' என்னும் பாதிரியார் இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கின்றனர். இவரிருந்தகாலம் கி. பி. ௧௫-ம் நூற்றாண்டெனவும், ௧௧, அல்லது பன்னி

ரண்டாம் நூற்றாண்டெனவுங்கூறுகிற்பர். சேது புராணம் செய்தருளியநிரம்பவழகியதேசிகர் இவர்க்கு ஆசிரியராயிருந்தனர் என்னுங் காரணங்காட்டிப் பதினைந்தாம் நூற்றாண்டெனக் காட்டல் சாலுமெனின், அங்ஙனங் குருவணக்கச்செய்யுளிற்பாண்டியனார்கூறிப்போந்திலாராகலின் அது முற்றுமியையாது ஆக்ஸ்போர்ட் என்னும் நகரத்திலிருந்தசமஸ்கிருத பாஷாவிற்பனரும் ஆகியஹோரெஸ் ஹேமென்வில்சன் துரையவர்கள் சாசனங்களைக் கொண்டாராய்ந்து எழுதிய "ஹிஸ்றடம் ஆப் பாண்டிய" என்னுஞ் சரித்திரநூலிலே "தமிழ்க் கல்வியிலே பாண்டியன் என்னும்பேர்தான் ஒருபிரபலமானபெயர். மேற்படி பாண்டியராசனை அதிவீரன், அல்லது அதிவீரபாண்டியனெனச் சொல்வதுமுண்டு. அவன்வடமொழியிலிருந்து அநேக நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்திருக்கின்றானென்றும் கிறிஸ்துவருஷம் ஆயிரத்து நாற்பத்தொன்றுக்குச் சரியான சாலிவாகன சகாத்தம் ௯௬௨-ம் வருடத்திலே அவன் பிரபலித்திருந்தானென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுசரிதானென்று ஒத்துக்கொள்ளத்தக்க திருட்டாந்தங்களுமிருக்கின்றன" என்று கூறியிருக்கின்றனராதலால் அவர்காலம் பதினோராவது நூற்றாண்டெனக் கொள்ளலே தகுதியதாம். இன்னும் இவற்றின் விரிவுகளை யெல்லாம் கூர்மமகா புராணத்திற் கண்டுணர்க.

அதிவீரன் - சூரபன்மனது சேனைவீரருள் ஒருவன். வீரவாகுதேவராற் கொல்லப்பட்டவன்.

அத்தநாள்-அங்கிநாள், ஐமீன், ஐவிரல், களிறு, கன்னி, சாமரம், கைம்மீன், கைனி, கௌத்துவம். நவ்வி.

அத்தவானம் - வடகம்,உல்லாசம்.

அத்தான் - முன்னவன் கொழுநன், மைத்துனன்.

அத்திமரம் - அதவு, உதும்பரம், கோளி, அதம்.

அத்தியாயம் - படலம், இலம்பகம், சருக்கம், காண்டம், பரிச்சேதம்.

அத்திரசத்திரங்களைத்த புண்மாற்றுமருந்து-சல்லியகரணி.

அத்திரம் - அம்புக்கட்டு, புதை.

அத்தினபுரி - அத்தி, அத்திப்பதி, குருக்ஷேத்திரம்.

இதனைத் திரியோதனன் முற்காலத்தாண்டிருந்தனன். யானைசேனைமிகுதியாக விருத்தல் பற்றி இப்பெயர் பெற்றதெனவும், ஹஸ்தி யென்னும் அரசனால் முதலில் ஏற்படுத்தப் பட்டமையால் இப்பெயர் பெற்றதெனவுங் கொள்ளப்படும். இது இக்காலத்து டில்லியென வழங்கப்படுகின்றது. இங்கேதான் துவாபரயுக முடிவில் துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் பாரத யுத்தம் நடந்த தென்ப.

அத்துவா-மந்திராத்துவா, பதாத்துவா, புவனாத்துவா, கலாத்துவா, வர்ணாத்துவா, தத்துவாத்துவா என ஆறும்.

அநபாயன்-சோழராசர்களுள் ஒருவன் திருநீற்றுச் சோழனெனவும் பெயர்பெறுவன். இவ்வரசரேறுதான் அருண்மொழித்தேவரென்னும் ஸ்ரீ சேக்கிழார் நாயனார் திருத்தொண்டர் பெரியபுராணஞ் செய்தருளத் துணை நின்றவர்.

அநவத்தாதோடம் - அநவத்தை அதாவது ஒன்றற்கொன்று வேண்டப்பட்ட அளவுகடந்த குற்றம்.

அநவரதத்தாண்டவம் - சிதம்பரத்தின் கண்ணுள்ள கனகசபையினிடத்தே சிவபெருமான் ஆன்மாக்களின் இருவினைகளையும் புசிப்பித்துக் கழிப்பித்து முத்தியளிக்க வேண்டித் தனுகரண புவன போகங்களுக்காகச் செய்யும் படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் நிகழ்த்துமாறு எப்பொழுதுஞ் செய்தருளும் நிருத்தமாம்.

அநாகுலன் - இடைச்சங்கத்தார் காலத்திருந்த தெய்வப்பாண்டியன் திலோத்தமையுடன் சேர்ந்து சாரகுமாரனைப் பெற்றவன்.

அநாதி - ஆதியின்மை, தொடக்கமில்லது.

அநாமிகை - ஆழிவிரல், பவித்திர விரல்.

அநாரியர் - மிலைச்சர், மிலேச்சர்.

அநித்தியம் - நித்தியமில்லாதது, நிலையற்றது.
அநிருத்தன் - காமன்மகன் அழகிற்சிறந்தவன் வாணாசுரன்மகளாகிய உஷாவென்பவள் இவனை மாயத்தாற் தருவித்துப்புணர்ந்து கருப்பமுற்றனள். அதனைக்கேட்டஅவள் தந்தையாகிய வாணாசுரன்கோபமுற்றுச்சிறையிட்டனன் அச் சிறையிட்டதற்காகவே கண்ணபிரான் பஞ்சலோகத்தானும் மண்ணானுஞ் செய்யப்பட்ட குடங்கொண்டாடி வாணனைக் கொன்று மீட்டனராம்.
அநீகம் - சங்க மூன்று, அக்குரோணிப் பகுதி.
அநுத்திரபஞ்சமம் - அயிர்ப்பு.
அநுலோமத்தானும் பிரதிலோமப்பெண்ணுங்கூடிப் பிறந்தபிள்ளை - அந்தாளரன்.
அநுலோமப் பிரதிலோமம் - விபூதி தரிக்கும் வகையினொன்று. அதாவது பெருவிரல், நடுவிரல், ஆழிவிரல் என்னு மூன்றானுந் தரிப்பதாம்.
அநுலோமப்பெண்ணும் பிரதி லோமத் தானுங் கூடிப்பிறந்த பிள்ளை-விராத்தியன்.
அநுவயம் - கண்ணழிவு அதாவது ஒரு செய்யுளைப் பொருளுக் கியையப் பதங்களைப் பிரித்துக்கோடல்.
அந்தணாறுதொழிலின் பெயர் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.
அந்தணர் - பார்ப்பார், அந்தணோர், பூசுரர், அறுதொழிலாளர், பிராமணர், இருபிறப்பாளர், எரிவளப்போர், ஆதிவருணர், வேதியர், வேள்வியாளர், மறையவர், விப்பிரர், மேற்குலத்தோர், முற்குலத்தோர், ஐயர், வேதபாரகர், முப்புரிநூலோர், தொழுகுலர், முத்தீமரபினர், கமலதாரினர், வேதக்கொடியர், தருப்பையர், முஞ்சியர், சமித்தினர், ஆய்ந்தோர், மெய்யர், முனிவர், உயர்ந்தோர், சிகைவர்.
அந்தணர்கொடி - வேதக்கொடி.
அந்தணர்க்குரியபொருள் - தருப்பை, சமித்து, முஞ்சி தண்டு, கமண்டலம்.
அந்தணர்க்குரியமார்க்கம் - வேதம். ஆகமம், சுத்தசைவம், வைதிகசைவம்.
அந்தணர்மாலை - தாமரைமாலை.
அந்திப்பொழுது - சந்தி, சாயங்காலம், சாயம், சாய்பொழுது, மாலை, கோதூழி.
அபயவத்தம் - இரட்டைக்கை, அதாவது இருகரங்களும் சுகதண்டமாக நெஞ்சுநோக்கி நெகிழ்ந்து நிற்பது.
அபரபக்கம் - கிருட்டிணபக்கம், தேய்பிறை, பிற்பக்கம்.
அபானவாயு - உச்சத்தலத்தில் நிற்பது.
அபானவாயுவின்தொழில் - மல மூத்திரங்களைப் பெய்வித்தல்.
அப்பவர்க்கங்கள் - அஃகுல்லி, அடை, அண்டகை, அபூபம், இலட்டுகம், சஞ்சம், நொலை, தோசை, பூரிகம் பொள்ளல், போளி, மண்டிகை, மோதகம், இலையடை, மெல்லடை, நொலையபூரிகை, போனகம், இடிசஃகுல்லிபிட்டு நுவணை, மலாவகம், ஒச்சை, துவை. இவற்றுள் அஃகுல்லி யென்பது உக்காரிக்கும் சிற்றுண்டிக்கும், அடை அப்பத்திற்கும், அபூபம்வடைக்கும் கஞ்சம் ஓர் அப்பத்திற்கும் இடிமாவிற்கும் சஃகுல்லியில்லடைக்கும் நுவணை தினைமாவிற்கும் பேராம்.
அப்புதல் - கொட்டல், சதர்த்தல், சாத்தல், அப்பல்.
அமங்கலை - கைம்மை, கைணி, கலன்கழி மடந்தை, விதவை, தாபதநிலையவள்.
அமரர்மாது - அரமகள், அரம்பை, சூர்மகள், அணங்கு.
அமாவாசை - இந்துரவிகூடல், குரு அமை.
அமிழ்து - விமரி, அமிர்தம், அமுதம், அமுது, சுதை, பியூடம், மருந்து, சாவாமருந்து.
அமைச்சர் - தேர்ச்சித்துணைவர் எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர், அமைச்சு.
அமைத்தல்-செழுமல், சமைத்தல், புல்லுதல், பொருத்தல்.
அமையுமென்றல் - அலம்.
அம்பலம் - சபை, பொதி, பொதுவில், மன்றம், மன்று.
அம்பிறகு - ஈர்க்கில், உடு.

அம்பு - அத்திரம், ஆசுகம், ஆவரி, ககம், கங்கபத்திரம், கணை, கதிரம், காண்டம், கோ, கோல், சரம், சாயகம், சிலீமுகம், தொடை, தோணி, பகழி, பத்திரம், பத்திரி, பல்லம், பாணம், பிரதரம், புங்கம், புதை, மார்க்கணம், வண்டு, வாளி, விசிகம், வேத்திரம் இவற்றுண் மொட்டம்பு உதணம். முன்விடும்பின்பெயர், அத்திரம், சாயகம்.

அம்புக்குதை - குலை, பகழி, புங்கம்.

அம்புக்குப்பி - புழுது.

அம்புக்கூடு-ஆவநாழிகை, ஆவம், கணைப்புட்டில், தூணம், தூணி, தூணீரம்.

அம்புத்தலை - உடு, சுரை.

அம்புத்திரன் கட்டுங்கயிறு - பற்றுக்கை பாணங்கட்டும்பாசம்.

அம்மனைப்பருவம் - பெண்பாற்பிள்ளைக் கவிப்பருவத்தொன்று. இது ஐந்து வயதிற்கு மேல் ஒன்பதுவரைக்குமுள்ள ஆண்டின்கண் நிகழ்வது.

அம்மானை - அம்மனை, ஒருமகளிர்விளையாட்டு.

அம்மானைவரி - ஒருவகைச்செய்யுள்.

அம்மி - அரைசிலை.

அம்மிக்கல் - குழவி.

அயலோர் - ஏதிலர், நொதுமலர், வம்பலர், அருகினர்.

அயல் - ஏதில், ஒன்றுவிட்டயல், உபாந்தியம், அருகு, பக்கம், அண்டை, பாரிசம்.

அயனுலகு - பிரமலோகம், சத்தியலோகம், மனோவதி. [காயத்திரி.

அயன்மனைவியர் - வாணி, சாவித்திரி,

அயன்வாழ்நாளின்பாதி - பரார்த்தம்.

அயன்வாழ்நாள் - கற்பம், பரம்.

அயிராணியாடல் - கடையம்.

அயிராவணம் - இரண்டாயிரம் கொம்புள்ளயானை இது வசிக்குமிடம் சிவலோகம்.

அயிராவதம் - வெள்ளையானை, நாற்றந்த யானை அமரரும்பல்.

அயிரை - நொய்ம்மீன், சிறுமீன், ஒரு நதி. [தை.

அயோத்தி - கோசலம், சாகேதம், வினி

அரக்கர் - இராக்கதர், யாது, தானவர், நிசாசரர், பிசிதாசனர், நிருதர், சாலகடங்கடர்.

அரக்காம்பல் - செங்குமுதம், செவ்வல்லிப்பூ, செவ்வாம்பல்.

அரக்கு - அரத்தம், தமரம், துப்பு.

அரக்குதல் - சிதைத்தல், தேய்த்தல், கீழ்த்தல்.

அரங்கம் - ஆற்றிடைக்குறை, சீரங்கம், இது விட்டுணுத்தலம், விபீடணனாற் பிரதிட்டை செய்யப்பட்டது.

அரங்களக்குமுறை - ஆடுதற்கு மூன்று கோலும், ஆட்டுவோர்க்கு ஒரு கோலும், பாடுநர்க்கு ஒரு கோலும் அந்தரமொருகோலும், குயிலுவர் நிற்றற்கு ஒரு கோலுமாக அளந்துகொள்க.

அரங்கு - நாடகசாலை, நடனசாலை.

அரசமரம் - அச்சுவத்தம், கணவம், குஞ்சராசனம், சுவலை, திருமரம், பணை, பிப்பலம், போதி.

அரசாறுதொழில் - ஓதல், பொருதல், உலகுபுரத்தல், ஈதல், வேட்டல், படை பயிறல்.

அரசாறுவகைத்தானை - வேல், வாள், வில், தேர், பரி, களிறு.

அரசர்கோயில் - மாளிகை, சாலை, மந்திரம், பவனம், குலம்.

அரசர்க்குரியபரி - பெண்களது மணம்போல் மிக்கமணத்ததாய் வாழை மடலைப்போலச் செவியினையுடையதாய் நான்கு காலும் பிடரு முகமு முதுகும் முன்புறமும் வெண்ணிறமுடையதா பெண்பத்திரண்டு விரலுயர்ந்த குதிரை தத்தமக்குரிய குணங்களையுடைய அரசர்க்குரியது.

அரசர்க்குரியபாவகை - பிள்ளைக்கவி முன்னேரிசை ஆசிரியப்பா வாயினும் கொச்சகக்கலிப்பா வாயினுங் கூறுதல்.

அரசர்க்கெண்வகைத்துணைவர் - கரணத்தியல்வோர், கருமவதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்கைவகையுறுதிச்சுற்றம் - நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலாளர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர்.

அரசவீதி - பூரியம்.

அரசன்-புரவலன், பெம்மான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன்,

நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன்.

அரசன்மனைவி - அரசி, பெருமாட்டி, பூமிச்செல்வி, தலைவி, இறைவி, இராணி, கொற்றவை, பூமாதா.

அரசியலாறு - அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்.

அரசிருக்கை - அத்தாணி, பூரியம், ஆசாரம், வேத்தவை.

அரசிறை - திறை, மிறை, கப்பம், பாகுடம்.

அரசுவாவினிலக்கணம் - நான்கு காலுந் துதிக்கையுங்கோசமும்வாலும் ஆகிய எழுறுப்பும் நிலத்திற் றோய்வதும், பாலையுஞ் சங்கையுமொத்த வெண்ணிறம் வாய்த்த கால்களுமுடையதுமாய், காலினாலுந் தனது துதிக்கையினாலும், சரீரத்தாலும் வாலினாலுங் கொம்பினாலுங் கொல்ல வல்லதாய், எழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழநீண்டு பதின்மூன்றுமுழஞ்சுற்றுடைத்தாய், சிறியகண்ணிணையுஞ்சிவந்தபுள்ளிகளையுமுடையதாய், முன்பு முற்கூறியவாறுயர்ந்து பின்பு தாழ்ந்தது அரசியானையென்று அறிவுடையோர் சொல்வர்.

அரம் - முடுகியல்.

அரிசாரம் - பழுப்பு.

அரிசி - அரி, தண்டுலம், பரியலம், வீயம்.

அரிதல் - சேதித்தல், அறுத்திடல், விடுவாய்செய்திடல், குலல், கொய்தல், ஈர்தல்.

அரித்துவாரம் - மாயாபுரி கங்காத்துவாரம்.

அரிமுகவம்பி - சிங்கவோடம், சியப்புணை.

அரிவாள் - குயம், கூனிக்குயம், கூனிரும்பு, கொடுவாள், புள்ளம், ஈர்வாள்.

அருகனூல் மூன்று - அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம்.

அருகன் - அசோகன், அண்ணல், அநசயன் அந்தணன், அமலவன், அரியணைச்செல்வன், அருட்கொடிவேந்தன், அறவோன் அறிவன், ஆசான், ஆதன், ஆத்தன், உரவன், உறுவன், கந்தன், கமலவூர்தி, கருத்தா, கலையாதன், காதிவென்றோன், காமற்காய்ந்தோன், குற்றங்களில்லோன், கொல்லாவேதன், சதுமுகன், சமி, சம்பு, சாதரூபி, சாதசாந்தன், சித்தன், சிவகதியிறைவன், சினவரன், சினன், சினேந்திரன், சீமான், செய்யோன், செல்வன், சைனன், தத்துவன், தருமராசன், திகம்பன், திருமறுமார்பன், தீர்த்தன், நக்கன், நான்முகன், நிச்சிந்தன், நிராயுதன், நீதிநூலி, நீத்தவன், பண்ணவன், பரமேட்டி, பிதா, புண்ணியன், புத்தன், புலவன், புனிதன், பூமிசைநடந்தோன், பொன்னெயிற்கோன், போதன், மாமுனி, மால் முக்குடைச் செல்வன், முத்தன், முனிந்தோன், மூலவன், யோகி, வரதன், வாமன், விதாதா, விநாயகன், விராகன், விறலோன், வீரன், அநகன், எண்குணன், அறவாழிவேந்தன், வரன், தேவன், மூவுலகுணர்ந்த மூர்த்தி, எண்சிறப்புமுற்றோன், அத்தன், சோதி, பகவான், அநயன், சயம்புமாசேனன், வென்றோன்.

அருகன்கன்மசயம் - எண்வகைக் கன்மங்களாம். அவை யாதெனின்:--ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம் கோத்திரம், அந்தராயம்என்பனவாம்.

அருகன்குணங்கள் - கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்பனவாம்.

அருகன்கேவலஞானம் - மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியாயஞானம் என்பனவாம். இவற்றுள் மதிஞானமாவது சுபாவபுத்தி, சுருதஞானமாவது நூலுணர்ச்சி, அவதிஞானமாவது தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு. மனப்பரியாய ஞானமாவது தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியுமறிவு. கேவலஞானமென்பது திரிகால வுணர்ச்சியாம்.

அருகன்மையறவு - அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம் என்னும் ஐந்துமாம்.

அருகன்கொடி - காட்சி, சீலம், ஞானம்,

அவற்றுள் குணவிரதமானது திக்குவிரதம், தேசவிரதம், அநர்த்ததண்டவிரதம் என மூன்றுவகைப்படும்.
அருகன்சத்திரம் - சகலபாசனம், சந்திராதித்தியம், நித்தியவிநோதம்.
அருகன்படை - தருமசக்கரம், அம்புயம்.
அருகன்மதில் - உதயதரம், கலியாணதரம், பிரீதிதரம்.
அருகன்வழிபாடு - அருகசரணம்.
அருகன்வாகனம் - தாமரைப்பூ.
அருகன்கொடி - காட்சி, சீலம், ஞானம்.
அருகோடுமாகமம் - அங்காகமம் பகுசுருதியாகமம், பூர்வாகமம் என மூவகைத்தாம். அவற்றுள் அங்காகமம் பன்னிரண்டுவகுப்புடைத்து. அவையாவன ஸ்ரீஆசாராங்கம், சூத்திரகிருதாங்கம், ஸ்தாநாங்கம், சமவாயாங்கம், வியாக்கியாப்பிரஞ்ஞபத்யாங்கம், ஞாதுருகதாங்கம், உபாசகாத்தியயனாங்கம்.
அருகன்ஞானம் - மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியஞானம், கேவலஞானம்.
அருங்கலச்செப்பு - மணிக்கலம், பெய்தபணிப்பெட்டகம், ஒருநூல்.
அருச்சித்தல் - புட்பஞ்சமர்ப்பித்தல், பூப்பலியிடல், மலர்தூவல்.
அருச்சுனன் - அனுமக்கொடியோன், ஆண்டொழின் மைந்தன் காண்டீபன், கிரீடி, கிருட்டிணன், கேசவற்றோழன், சவ்வியசாசி, சுரேந்திரன் மைந்தன், சுவேதவாகனன், தனஞ்சயன், பற்குணன், பார்த்தன, மாதவிகொழுநன, விஜயன், வீபற்சு, கிருட்டிணசகாயன், சுவேதவாகனன்.
அருநெறி - அத்தம், சுடற்சுரம்.
அருந்ததி - சாலி, வடமீன், ஊர்ச்சை, வசிட்டபத்தினி.
அருந்தவப்பெண் - கௌமாரி, கௌந்தி.
அருமைசெய்தல் - பேராண்மை.
அரும்பண்டம் - தாரம்.
அரும்பாலைவகை - உழைகுரலாதல்.
அரும்பு - குகை, நனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, கோரகம்.
அரும்பொருள் - அருமையான பதார்த்தம், ஞாபகம், பிசி. [கொதி.
அருவருத்தசேறு - கொளில், ஊழில்,
அருவருப்பு - குற்சிதம், பயிர்ப்பு.
அருவல் - பருவரல்.
அருவி - சுழிமுகம், மலைநீர்.
அருவிப்புனல்வீழிடம் - தூவானம்.
அருளோன் - காருண்ணியன், கிருபையுடையோன்.
அருள் - கதவு, கருணை, இரக்கம், தயவு, தயா, கிருபை, அபயம்.
அரைஞாண் - கடிசூத்திரம், அரைநூல், இரதம். இரத்னம்.
அரைப்படிகை - அத்து, கலை, மருவு.
அலங்கரித்தல் - அணிதல், ஒப்பனை, கைசெய்தல், கைத்தல், புனைதல், பூசுதல், பொற்புறுத்தல், மண்ணல், வனைதல், வேய்தல்.
அலங்காரம் - அணி, ஒப்பனை, கட்டழகு, காமர், கை, சிங்காரம், திப்புரவு, தையல், பொற்பு. [கவீரம்.
அலரி - அயமரம், சனவீரம், கரவீரம்,
அலர்தல் - விரித்திடல், அவிழ்தல், விள்ளல், எதிர்த்தல்.
அலாபத்திரம் - அதாவது சிறுவிரல் முதலாகிய ஐந்தும் வளைவதென்னை? "அலாபத்திரமேயாயுங்காலைப்-புரைமையின் மிகுத்த சிறுவிரன் முதலாவரன்முறை யைந்தும் வளைந்தமறிவருவே" என்றாராகலின்.
அலி - பேடி, பேடு, நபுஞ்சகம், பேடன், பேதை, பெண்டகன், சண்டகன்.
அலியிலக்கணவகை - நச்சுப்பேசல், நல்லிசையோர்தல். அச்சுமாறல், ஆண்பெண்ணுதல், ஒருகையை வீசி நடத்தல், தலையிலொரு கைவைத்தல், எதிர்ந்தோரைக்கண்டுவிலகல், எதிர்ந்தோர்மேற்செல்லுதல், பார்வை வேறுபடுதல், பிறருக்கு நடுநடுங்கிச் சுழலுதல், பிறரைக்கண்டுநகைத்தல். நாணுதல், பலநாடகஞ்செய்தல், பக்கம்பார்த்தல், பதுங்கித்திரிதல், காரணமில்லாமற் பலவற்றைக் கோபங்கொண்டுபேசுதல், தன்முலையைத்தானே வருத்தல், அசக்கல், அழுதல், சேர்ந்தருவருத்தல், குறுக்கிக் கூட்டிப்பார்த்தல், இடையில் ஒரு கை

வைத்தல், அதனை வாங்கல், இரங்கிப்பேசல், எல்லென்று பாடுதல், இவைபோன்ற பிறசெய்கைகளுமுடைத்தாதலாம்.

அவிக்கை - நாடக வுறுப்பி னொன்று. பொதுக்கை அதாவது மூன்றுசொல் வளையம் அபிநயத்துடன் காட்டிச் செய்யுமிடத்துச்செய்யு முறைமை, வகையினொன்று, அது சர்ப்பசிரம் வண்டு, முகுளம், கத்தரிகை, கேசம், கபித்தம் என அறுவகைத்தாம்.

அவிமரம் - வெளிறு.

அவியெழுத்து - மெய்யெழுத்துப் பதினெட்டுமாம்.

அலையல் - அலைதல், அழுங்கல், ஆஞ்சி சோம்பு, ஞெகிழ்தல், ஞொள்கல், துளும்பல், தளும்பல், நடுங்கல்.

அல்குல் - அகல், கடிதடம், நிதம்பம், பெண்குறி, வடிவு, அரை, யோனி, பகம், பூப்பசம், பொன், சின்னம்.

அல்லியவாடல்-மாயனுடல், ஆறுறுப்பி, [அலிப்பேடு.

அவதரம் - உசிதசமயம்.

அவந்திகர் - உஞ்சை.

அவமதுசிரிப்பு - அசி.

அவயவம் - காத்திரம், கைகால் முதலிய உறுப்பு, அங்கம், வடிவு.

அவரை - சிக்கடி, சில்லை, முதிரை.

அவலத்தவிநயம் - துன்பக்காட்சி, அதாவது துன்பத்துடன்கூடிய கண்ணீர்மையும் வாடியதன்மையும் வருந்திய செலவும் பெருமையழிவும் பிதற்றிய சொல்லும் நிறைகையழிதலும் குணமில்லாச்சொல்லுமுடைமையாம்.

அவாவின்மை-ஆசையின்மை, வெறுப்பு, முனைவு, ஒல்லாமை, வேண்டாமை, உவர்ப்புமா, அறுத்திடல்.

அவிட்டநாள் - ஆவணி, காகப்புள், பறவை, புள், வசுநாள்.

அவித்தல் - நதுத்தல், நவிழ்த்தல், நுதுத்தல், நொதுத்தல், தணித்தல், நூத்தல், அணைத்தல்.

அவிநயநிலம் - நிற்றலும், இருத்தலும், கிடத்தலும், இயங்கலும் என்னு நான்குமாம். இவையன்றி சரிகமபதநி என்னுமெழுவகைப்பட்ட எழுத்தடியாகப்பிறக்குங் குரன் முதலாகிய எழுமாம்.

அவிநயவகை - வெகுளல், சோம்பல், களித்தல், ஐயமுறல், உவத்தல், அழுக்காறுடைமை, இன்பமுறல், தெய்வமுறல், ஆஞ்ஞையுறல், உடன்படல், உறங்கல், துயிலுணர்தல், சாதல், மழை பெய்யப்படல், பனித்தலைப்படல், வெயிற்றலைப்படல், நாணமுறல், வருத்தமுறல், கண்ணோவுறல், தலைநோவுறல், அழற்றிறம்படல், சீதமுறல், வெப்பமுறல், நஞ்சுண்ணல் என்னு மிருபத்துநான்குமாம்.

அவிழ் - பதம்.

அவ்விடம் - அந்தயிடம், அங்கு, அங்ஙனம், அந்தில், அம்பர், அவண், ஆங்கு, ஆண்டு, ஆங்க.

அழகு - அணங்கு, அணி, அந்தம், அபிராமம், அமலம், அம, அம்மை, அலரி, ஆரியம், இராமம், இல்லிதம், இலாவண்ணியம், எழில், ஏர், ஐ, உண்மை, ஒப்பு, கவின், களை, காந்தி, காமர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், சந்தம், சவி, சாயல், சித்திரம், சர், சுந்தரம், செல்வி, செழுமை, சேடு, சொக்கு, சோபம், சௌமியம், தகை, தகைமை, தளிமம், தென்தேசிகம், தையல், தொட்டி, தோல், நலம், நல்வி, நன்கு, நோக்கம், நோக்கு, பதம், பத்திரம், பந்தம், பந்துரம், பாங்கு, பூ, பை, பொற்பு, பொன், மஞ்சு, மவசுளம், மணி, மதன், தயம், மனோகம், மனோக்கியம், மாண்பு, மாதர், மானம், மாழை, முருகு யாணர், யௌவனம், வகுப்பு, வடிவு, வண்மை, வளம், வனப்பு, வாகு, வாமம், விடங்கம், அன்றியும் பேரழகின் பெயர், அலங்காரம், கட்டழகு, காமர், சித்திரம், விசித்திரம், சிறப்பு, பொலிவு, மா.

அழகுவகை - கொம்மை, மனோகரம், சுந்தரம், சித்திரம், மனோஹரம், காரு,

அழிஞ்சில் - அபகோலம், செம்மரம், சேமரம்.

அழித்தல் - அரக்குதல், அரைத்தல், கீழ்த்தல், சுட்டித்தல், சிதைத்தல், சிரத்தல், தேய்த்தல், தூறல், விறகு.

அழிவின்மை-அச்சுதம், கன்னி, குமரி, கோணை, நிறை.

அழிவு-இளம், சிதிலம், சீரணம், சிதைவு, தேய்வு, குறைவு.

அழுக்காறு-ஔவியம், கோட்டம், பொறாமை, மனக்கோட்டம், மனத்தழுக்கம், நோனாமை.

அழுக்காறுடையோனவிநயம் - குற்றத்தோடு கூடிய பொருளுடைமையும் குவிந்தவாயும் கோணலாம் சொல்லும் நடுக்கமுற்ற கையுடைமையும் கோபமுடைமையும் காரணமில்லாமல் மெலிந்த முகமுடையதனாலும் மெலிவருகொண்ட துன்பமும் பொருந்துமென்று புலவர் கூறுகிற்பர்.

அழுக்கின்மை-அமலம், நிருமலம் நின்மலம் விமலம், சுத்தம்.

அழுக்கு-களங்கம், மலம், மலினம், மாசு

அழுங்கின்குருளை-மறி.

அழுங்கு-விலங்கு, மறி.

அழுதல்-அரற்றல், அழுங்கல், இரங்கல், உரோதனம், ஏங்கல், கசிதல், கலங்கல், கலுழ்ச்சி, கலுழ்தல், பொருமல், விம்மல், புலம்பல், தறுமல்.

அழுந்தல்-அமுங்கல், அரங்கல், ஒடுங்கல்.

அழைத்தல்-அகவல், ஆகருடணை, இருதல், உளைத்தல், கரைத்தல், குயிறல், கூவல், கேதல், மாவெனல், வாங்கல், வாவெனல், விளித்தல்.

அளகக்குழற்சி-குந்தளம், விலோதம்.

அளகமுடி-மயிர், கொப்பு, மிஞ்சம், கசிகொண்டை, தம்மிலம், முச்சி, சிகழிகை.

அளகமுடிக்கும் ஐம்பால் - மிடி, குழல், தொங்கல், பணிக்கை, சுருள், இவற்றுள் மயிரை யுச்சியின் முடித்தல் முடிசுருட்டிமுடித்தல்குழல், மயிரை முடிந்து தொங்கவிடுதல் தொங்கல், பின்னிவிடுதல் பனிச்சை, பின்னே சொருகுதல் சுருள்.

அளகம்-குழல், கூந்தல், கூழை, குந்தளம், ஓதி, ஐம்பால், கதுப்பு, சுருள்விலோதம், பரிசாரம், கேசம், சுரியல், விராட்டம் கோதை, குருள், குரல், கூமல்.

அளாத்தல்-கச்சல், கடத்தல், அளத்தல்.

அளபெடை-புலுதம்.

அளபெடைவகை - இயற்கை யளபெடை, செயற்கை யளபெடை, இசையளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை.

அளவளாவல்-சினேகஞ்செய்தல், பழகல், குழாவல், வளாவல், சிவணல், புணர்தல், பொருந்தல்.

அளவின்மை - அநந்தம், அபரிமிதம், பாடிரம், அமானம், அமிதம், எல்லையின்மை.

அளவு - அந்தரம், அவதி, அளவை, காகிறு, தனை, தாறு, துணை, பிரமாணடிமடங்கு, மட்டு, மாத்திரை, மாடிம், மிதம், வரை, வரையறை, வல்லி.

அளவுப்பாணி-தாளவகை அதாவது தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல்.

அளவை-பிரமாணம், கச்சம், கடன்.

அறச்சாலை - தருமசாலை, புறம், சாலை, பள்ளி.

அறத்தின்பிரயோசனம்-பொருள், பானன்பு வீடு.

அறநிலைப்பொருளியல் - நெறிவழி நின்று தந்த நிலையினால் முயன்று பெறு பொருளறநிலைப் பொருளாம்.

அறநிலையறத்தினியல்-நான்கு வருணத்தாருந்தத்தம் வருணத்திற்பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல்.

அறநிலையின்பவியல்-குலமு மொழுக்கமுங் குணமும் பருவமு மொத்த கன்னியை தீவேட்டுமணக்க லிருத்தல்.

அறம்-சுகிர்தம், தருமம், நல்வினை, புண்ணியம், வீறு, ஒழுக்கம், ஆசாரம், உறுதிகை, தவம்.

அறவகை-ஒழுக்கம், வழக்கு, தண்டம், இவற்றை முறையே ஆசாரம், விவகாரம் பிராயச்சித்தம் என்பவர் வடநூலார்.

அறவோர்பள்ளி - அருகர்பள்ளி புத்தர்பள்ளி.

அறனேம்படை- தருமம்போதிக்குமிடம்.

அறிந்தமறியார்போறல்-அறிமடம்.

அறிவனார்-பஞ்சமரபுநூலார்.

அறிவிலான்-அஞர், அஞ்ஞன், அஞ்ஞை, அவிவேகி, அறிவிலி, ஆதன், இழுதை, ஏழை, சிதலை, சிதடன், பேதை, மடன், மண்ணை, முழுமகன், மூடன்,

அறிவின்மை - அசேதனம், அவிவேகம், அறியாமை, எய்யாமை, சிதடு, பேதைமை, மடமை, மடம், மாட்சி, மாழை, வெண்மை, வெறு,வெறிது.

அறிவு - உணர்வு, உண்மை, உரன், உறழ்வு, ஒண்மை, ஓதி, காட்சி, சேதனம், சைதன்னியம், ஞாபகம், ஞானம், தீ, துப்பு, தெருட்சி, தெளிவு, புத்தி, புந்தி, புலன்பொறி, போதம், மதி, மேதை, விவேகம், அன்றியும், பேரறிவு, முசரிமை, முதுக்குறைவு.

அறிவுடைப்பொருள் - சித்து, சேதனம், உயிர், ஆன்மா, சித்தம், தன்பசு, இயங்கியற்பொருள் சங்கமம், சத்து.

அறிவுடைமையில்பொருள் - அசித்து, அசத்து, சடம், அசேதனம், பாசம், மலம், நிலையற்பொருள், தாவரம்.

அறிவுடையோர் - அறிஞர், முனிவர், ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றவர், உயர்ந்தோர், உரவோர், உரியோர், உலகம், எழுத்தாயர், கணக்காயர், கலைவல்லோர், கவிஞர், குசலர், கூவலர், சான்றோர், சிரியர், தகுதியோர், நல்லோர், நிபுணர், நூலுரைப்போர், நூலோர் மிகவல்லோர், மிக்கோர், மேதாவியர், மேலோர், விபுதர்.

அறுகு-இளம்புல், சட்பம், தூர்வைபதம்.

அறுகுவெள்ளரிசிகலந்தது - அக்ககம்.

அறுகை - அறவை, தோளிவிடுமுறி, அருகருத்த ராசங்கம்.

அறுத்தல் - அகைத்தல், அரிதல், ஈர்தல், கடிதல், கத்தரித்தல், கொய்தல், சூலம், சேதித்தல், தடிதல், துணித்தல், துண்டித்தல், பகல், பரிதல், விடுவாய் செய்தல்.

அறுவகைச்சுவை - தித்தித்தல், கூர்த்தல், துவர்த்தல், கார்த்தல், கைத்தல், புளித்தல்.

அறுவகைப்பருவம் - கார் கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். இவை முறையே ஆவணி புரட்டாசி கார், ஐப்பசி கார்த்திகை கூதிர், மார்கழி, தை, முன்பனி, மாசி பங்குனி, பின்பனி, சித்திரை, வைகாசி இளவேனில், ஆனி ஆடி முதுவேனில்.

அறுவகைப்புறச்சமயம் - உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம்.

அறுவகையிருது - வசந்தம், கிரீடம், வருடம், சரம், ஏமாந்தம், சிசிரம். இவை முறையே சித்திரை வைகாசி வசந்தம், ஆனி ஆடி கிரீடம், ஆவணி புரட்டாசி வருடம், ஐப்பசி கார்த்திகை சரம், மார்கழி, தை ஏமந்தம், மாசி பங்குனி சிசிரம்.

அறுவகையுட்சமயம்-வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்பனவாம்.

அறை - பாறை, முரஞ்சு.

அற்பத்தின்பெயர் - சிறுமையைக்காண்க.

அற்பம் - சணம், இறை, வறிது, சின்னம், கன்று, ஆசு, தன்னம், துட்டு, இலம் தோகம், இட்டிடை.

அற்புதம் - கோடி பத்துக்கொண்டது.

அனந்தன் - சகத்திரசிரன், சர்ப்பராசன், சேடன், பாரேந்தி, போகவதிக்கிறை, பதஞ்சலியவதாரன்.

அனற்பொறி - நெருப்புப்பொறி புலிங்கம்.

அனற்றிரள் - உற்கம்.

அனிச்சமரம் - அருப்பலம், சுள்ளி, கறவம்.

அனுகரணவுபயவோசை-வெடுவெடெனல், திடுதிடெனல், களகளெனல், கொளகொளெனல், நெடுநெடெனல், மொகமொகெனல், நெறுநெறெனல், படபடெனல், மொடுமொடெனல், சடசடெனல், சளசளெனல் கலகலெனல், சலசலெனல், கிடுகிடெனல்.

அனுகரணவோசை - இம்மெனல், கல்லெனல், இழுமெனல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெரேலெனல், கொம்மெனல், சரேலெனல், ஞொள்ளெனல், கொல்லெனல், அம்மெனல்.

அனுடநாள் - தாளி, தேள், பனை, புல். பெண்ணை, போந்தை மித்திரநாள்.

அனுபவித்தல் - திளைத்தல், துய்த்தல், நுகர்தல்.

அனுபோகம் - உரிமை, துப்பு, துவ்வு, நுகர்ச்சி, போகம்.

அனைத்துமுண்டாகும் நிலம்-உருவரை.

அன்பு - அளி, ஆணம், ஆர்வம், இட்டம் ஈரம், காமம், நாரம், நார், நேசம்,

நேயம், பரிதல், பரிவு, பற்றுபா
சம், வாரம், விசுவாசம், அன்றியும்
விடா தடுதொடர்ந்தவன்பு, உழுவல்.

அன்றில் - கிரவுஞ்சம், தரிஞ்சகம், இத
ணுண் - அகன்றில், இதன் குஞ்சு
பிள்ளை, கவுஞ்சம்.

அன்னத்திற்கு - தூவி.

அன்னம் - அஞ்சம், உன்னம், எகினம்,
ஓதிமம், மராளம், வக்கிராங்கம், விக
ங்கம், இதனுண், சேவல், இனிதா
கப்பாடு மன்னம், காதம்பம், இனி
தாக நடக்குமன்னம், மென்னடை.

ஆ

ஆவென்னும்பெயர் - எருமை, பசு,
மரை. [ஞானம்.

ஆகமம் - தந்திரம், சிரௌதம், நிகமம்,

ஆகாமச்சொல்லிலக்கணம்-நெஞ்சொடு
கூறல், கேட்போர்க் குரைத்தல்,
தானே கூறல்.

ஆகாயத்தின்குணம் - வெகுளி, மதம்,
மானம், ஆங்காரம், உலோபம்.

ஆகாயம் - அண்டம், அநந்தம், அந்தரம்,
அம்பரம், ஆசினி, இடம், உம்பர்,
உலகம், ககனம், கம், காயம், குடிலம்,
தலை, சேண், நபம், நாகம், புட்கரம்,
மங்குல், மாகம், மாதிரம், மீமேல்,
வானம், வான் விசும்பு, விண், விண்
டலம், வியோமம், குண்டலம், வெளி,
வேனி.

ஆக்கம் - அதிகாரம், செல்வம், நந்தம்,
பெருக்கம். [தருக்கி, கருவம்.

ஆங்காரம் - அகங்காரம், செருக்கு,

ஆசாரியன்-ஓசன், பணிக்கன், உபாத்தி,
தேசிகன், பட்டாரகன், பதி, பண்
ணவன், பகவன், அத்தன், தீர்த்தன்,
ஆசான், அடிகள், புங்கவன், சாமி,
ஈசன், நாதன், இறைவன், கடவுள்,
கோமான், குரவன், ஐயன்.

ஆசிரியப்பா - அகவல்.

ஆசிரியர்கூற்று - கவிக்கூற்று, முது
மொழி, மேற்கோள், ஆசிரியவச
னம், பழஞ்சூத்திரம்.

ஆசிரியவிருத்தம் - மனவிருத்தம்.

ஆசுகவிவகை - பொருள், அடி, பா,
அணி முதலிய கொடுத்து மற்றொரு
வன் பாடுக என்றவுடனே பாடுவது.

ஆசை - அணங்கு, அருத்தி, அவா, ஆத
ரம், ஆர்த்தி, ஆர்வம், ஆவல், இச்சை,
இராகம், எட்டை, காதல், காமம், கா
மர், நசை, நச்சு, நம்பு, நயப்பு, நாம்பு,
பற்று, பிணை, புரி, பெட்பு, மாதர்,
மோகம், வயாவு, வாஞ்சை, விதப்பு,
விருப்பு, விழுப்பம், விழைவு, விழரி,
விளைவு, வெப்பம், வெம்மை, வேட்
கை, வேட்பு.

ஆசைபெருக்கம் - அவா, இரதி, இவ
றல், கவர்தல், காதலித்தல், சார்வு,
தாழ்தல், நச்சுதல், நம்பல், நயத்தல்,
நல்கல், பற்றல், பெட்டல், பேணல்,
மேவல், விரும்பல், விழைதல், வீழ்
தல், வெஃகல், வேட்டல், வேண்டல்.

ஆச்சாமரம் - ஆ, சாலம், சுள்ளி, மரா
மரம், யாலம்.

ஆடலாசிரியனமைதி - இருவகைத்தா
கிய அகக்கூத்தினிலக்கணங்களை யறி
ந்து பலவகைப்பட்ட புறநடங்களை
யும் விலக்குறுப்புக்களைச்சேரப்புண
ர்க்கவும் வல்லவனுகி அல்லியமுதற்
கொடு கொட்டி ஈறாக்கிடந்த பதி
னொரு கூத்துகளும் அக்கூத்துக்களு
க்குரிய பாட்டுகளும், அவற்றுக்கடை
த்த வாச்சியங்களின் கூறுகளும் நூல்
களின் விதித்தவழியே தெரிந்துகூத்
தும் பாட்டும் தாளங்களும் தாளங்க
ளின் வழிவந்த தூக்குக்களும் தம்மிற்
கூடினநெறியுடைய அகக்கூத்தும்
புறக்கூத்து முதலாயின நிகழ்த்துமி
டத்துப்பிண்டிபிணையல் எழிற்கை
தொழிற்கை யென்று சொல்லப்
பட்ட நான்கினையும் நூலினகத்துக்
கொண்ட கூறுபாட்டையறிந்து அக
க்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதி
யாகச் செய்த கைவாரக்கதியுட்புகா
மலும் வாரக்கதியாகச் செய்தகை
கூடைக்கதியுட்புகாமலும் புறக்கூத்
துநிகழுமிடத்து ஆடனிகழு மிடத்து
அவிநய நிகழாமலும், அவிநயநிகழு
மிடத்து ஆடனிகழாமலும் குரவைக்
கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விர
வாதபடியுஞ்செலுத்தி யமைந்த தன்
மையுடையனும்.

ஆடல் - அகவல், அசைதல், ஆவல்,
குனித்தல், தாண்டல், தூங்கல், தடித்
தல், தொடங்கல், பெயர்தல், மாறல்,
இவற்றுள், வாயார்த்தாடலின்பெ
யர், ஆவலங்கொட்டல்.

ஆடவர்கூட்டம் - சலவை, பண்ணை, சங்
கம், கோட்டி, அவை, சபை. [ல்.

ஆடவர்கொடைவீரத்தாலணிவது - கழ

ஆடாதோடை - ஒருசெடி, வாசை.

ஆடிமாதம் - ஆசாடம், சுசி, ஆஷாடம்.

ஆடு - அசம், அருணம், உடு, ஒருவு,
திருவை, தள்ளல், புருவை, வெறி,
செம்மறி - மோத்தை, உதள், கொச்
சை, ஏழகம், வற்காலி, பள்ளை,
வெள்ளை, வருடை, மேடம், கடா,
மை, மறிகொறி, சாகம், தகர், மேழகம்.

ஆட்டுக்குட்டி - குட்டன், சோரன்,
பறழ் மணங்கு, மறி, வெள்ளை.

ஆட்டுவாணிகன் - சாபலன்.

ஆணி - கீலம்.

ஆணை - சத்தியம், சபதம், சூள், தெரி
சொல், தேவசாட்சி, பிரமாணம்,
விரதம் அன்றியு மிடும்பாடையின்
பெயர்-சபதம், வஞ்சம், வஞ்சனை.

ஆணைச்சிறப்பிக்கும்பெயர் - நம்பி.

ஆணையிடல் - தகைதல், தடுத்தல், தட்
டல், வடித்தல், வாரித்தல்.

ஆண்குறி - இலிங்கம், கோசம், சிசிநம்,
மேசநம், மேட்டிரம்.

ஆண்ஞெண்டு - அலவன்.

ஆண்டிற்பாதி - அயனம்.

ஆண்டு - ஆயனம், சமை, அயனம், தெய்
வதம், வருடம், வருஷம், வற்சரம்.

ஆண்பாலெழுத்து - அகாமுதல் ஔகார
மிறுதியாகிய உயிரெழுத்துக்கள்பன்
னிரண்டும் ஆணெழுத்துக்களாம்.

ஆண்பாற்பிள்ளை பாட்டின்வகை - இத
னிலக்கணத்தைத் தெளிவாகக் கூறு
மிடத்து இரண்டாமாதத்திற் செங்கி
ரை கூறுதலும், ஐந்தா மாதத்திற்
சொற்பயில்வுசொற்றலும், எழாமா
தத்தில் அமுதூட்டலும, எட்டாமா
தத்திற் குலாட்டுதலும், ஒன்பதாமா
தத்திற் சப்பாணி கொட்டலும், பதி
னோராமாதத்தில் முத்தங் கூறலும்
பன்னிரண்டா மாதத்தில் வாரானை
கூறுதலும் பதினெட்டா மாதத்திற்
சந்திரனையழைத்தலும், இரண்டாம்
வருடத்திற் சிறுபறை கொட்டலும்
மூன்றுமாண்டிற் சிற்றில் சிதைத்த
லும், நாலாமாண்டிற் சிறுதேருருட்ட
லும், பத்தாமாண்டிற் பூணணிதலும்,
பன்னிரண்டாம் ஆண்டில் கச்சி
னோடு உடைவாளை விரும்பத் தரித்
தலுமென்று சொல்லப்பட்டவையும்
இவை யொழிந்த பிறவுமாம். இவை
களுள் கூறுதல்கற்றலோடு அமுப்
தூட்டலும், பூணணிதலும், கச்சோடு
சுரிகைபுனைதலும் என்னும் இவற்
றையொழிந்த காப்புமுதல் பத்தும்
ஆண்பாற்பிள்ளைக்கவியில் வரும் இ
வற்றுள் ஓராண்டொறுமுரைத்த நில
ங்கள் இருபாலுக்கு முரியனவாம்.

ஆண்பான்மயிர் - குஞ்சி, பித்தை, ஓரி,
குழல், கார், பங்கி, கேசம், சுரியல்,
கதுப்பு, தலை, நவிர், பிச்சம், சிகை

ஆண்பெயர் - அஃறிணையில் உயர்தி
ணையில்வரும் புல், பறவை, விலங்கு,
மனிதர் முதலாயினோர்க்காம்.

ஆண்பான்மயிர்முடி - பின்னகம், பந்
தம், முடி, முடிச்சி, கொண்டை, சிக
ழிகை, குழல், சுடிகை, மௌலி.

ஆண்மகன் - ஆடூஉ, காளை, குமரன்,
புமான், புருடன், மகன், மாந்தர்,
மாண்பர், மைந்தர், மானவன், ஆட
வன் அன்றியும் ஆண்மகனுக்குச்
சிறந்த பெயர், புமான், நம்பி.

ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும்
பொது - கதுப்பு, கேசம், சுரியல், குழ

ஆண்மரம் - எகின், சேமரம். [ல்.

ஆண்முதலை - கரா.

ஆண்வண்டு - சுரும்பு, மதுகரம், தும்பி.

ஆதல் - நந்துதல்.

ஆதாரநிலை - கந்து, ஆலம்பம், ஆலம்
பனம், தஞ்சம், தாவு.

ஆதி - அடி, ஆரம்பம், எழுவாய், தலை,
தாழ், தொடக்கம் பிரசாயம், பூருவம்,
முதல், முன்னர், மூலம், மோனை.

ஆதிவேதம் - இருக்கு, பௌடிகம்.

ஆதொண்டை - தொண்டைச்செடி.

ஆத்தி - ஆரம், ஆர், சல்லதி, தாதகி,
ஆத்திமரம்.

ஆந்தை - இருடி, கின்னரம், கூன்,
பிங்கலை.

ஆபரணக்கடைப்புணர்வு-கயில், மடை.
ஆபரணத்தின்றூங்கணி-தூக்கம், தொங்கல், நிலை, மதலிகை.
ஆபரணத்தொங்கல் - உத்தி. [சாலை.
ஆபரணமுதலியவைக்கும்வீடு - பண்ட.
ஆபரணம் - அணி, அணிகலம், அணிகலன், ஆரம், இழை, கலம், கலன், நகை, பணி, பூடணன், பூண், மஞ்சு, மதாணி, வள்ளி, இவற்றுட்பேராபரணத்தின்பெயர் - ஆரம், மதாணி, பூணைகக்கட்டு மாபரணத்தின்பெயர்-கிம்புரி, தாங்கி, வயிரம், மணிவடத்தின்பெயர்-ஆரம், காழ், சரம், தாமம், மணிக்கோவையின்பெயர் - காழ்சவி.
ஆபரணம்வைக்குஞ்செப்பு - கடிப்பம், கண்டிகை, காண்டம், கோடிகம், துமானம், பரணி, பீடிகை.
ஆபாணவோசை - கிஞ்சிதம்.
ஆமணக்கு - எரண்டம், சித்திரம், ஒரு செடி.
ஆமை - அண்டசம், அம்பணம், அழுங்கு, உறுப்படக்கி, ஒடுங்கி, கச்சபம், கமடம், கல்வி, கூர்மம், இதன்-பெண் இடலி, துளி.
ஆம்பற்பொது - அல்லி, சயம், நெய்தல், இவற்றுட் செவ்வாம்பல், அரக்காம்பல், செங்குமுதம், செவ்வல்லி, சேதாம்பல், வெள்ளாம்பலின்பெயர் - கயிரவம், குமுதம்.
ஆயத்தமானோன் - சந்நத்தன்.
ஆயம் - அல்கு, காரியை சங்கம்.
ஆயர்வீதி - ஆபீனம், இடையர் தெரி.
ஆயிரம் - பத்துநூறு, சகசிரம், சகத்திரம்.
ஆயிலியநாள் - அரவுநாள், ஆயில், கௌவை, பாம்பு. [ங்கம்.
ஆயுதஞ்சுதகூத்துப்பயில்களம் - அர
ஆயுதப்பொது - அசி, அரி, அலகு, இரும்பு, எஃகு, எதி, கருவி, கழுமுள், காண்டம், கார்த்திகை, கூர்த்திகை, சுதனம், சேனை, தானை, துப்பு, படை, படைக்கலம், வேல் இவற்றுட் கைவிடுமாயுதப் பொதுப்பெயர்-அத்திரம், தூரியம், கைவிடாவாயுதப் பொதுப்பெயர் - சரித்திரம்.
ஆயுதவுறை - உறை, கருவிப்புட்டில், தடறு, படையுறை.

ஆயுதவெழுத்து - அஃகேனம், ஆய்தம், ஒற்று, தனிநிலை, முப்புள்ளி.
ஆயுள்வேதியர் - மாமாத்திரர், மத்துவதர், மருத்துவர், வைத்தியர், பிடகர், பரிகரிப்போர், பண்டிதர்.
ஆரபடியாவது - பொருள் பொருளாக வீரராகிய மானுடர் தலைவராக வருங் கூத்து.
ஆரம்பம் - எழுங்கமுடையது, முகம், எழுவகையுழவு இது எழுவகைப் பட்ட வழவினற் சமைக்கப்பட்ட புழுதியுளிட்டவித்துப் பலஞ்செய்து முளைத்து முடிவதுபோல்வது.
ஆரவகை - மலையாரம், நீமுரன்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, ஆரி, சந்தனம், வேர்சுக்கொடி.
ஆராதனை - அருச்சனை, அர்ச்சனை, பத்திபலி, பூசனை, பூசை, வந்தனை, வழிபாடு, வேள்வி, புலி.
ஆராய்தல் - ஆராய்ச்சி, ஆய்தல், ஆலோசனை, ஓர்தல், சூழல், சூழ்ச்சு, தூக்கு, தெரிதல், தெளிதல், தேர்தல்.
ஆரான்மீன் - ஆரல், ஆரால், ஒருமீன்.
ஆலகாலவிடம் - காளகூடம், ஆலாலம், ஆலம், கொடியவிஷம்.
ஆலமரம்-ஆலம், ஆல்கான்மரம், கோளிதொன்மரம், நியக்குரோதம், பழுமரம். பாலி, பூதவம், வடம், இதன் விழுது, வீழ். [ருந்தம், பீலி.
ஆலவட்டம் - உக்கம், காலசம், தாலவி
ஆலாங்கட்டி - ஆலி, கரகம், கனோபலம்.
ஆலிங்கனம் - தழுவல், விள்ளல், முயங்கல், விழைச்சல், தைவரல், புல்லல், பொருத்தல், சேர்த்தல்.
ஆலீடம் - வலக்காலை மண்டிவித்து, இடக்காலை முன்னுநவைத்தல்.
ஆலை - இயந்திரம், யந்திரம்.
ஆலோசனை - சூழல், சூழ்ச்சி, தேர்தல், தெளிதல், மந்திரம், விசாரம்.
ஆவஞ்சி - இடக்கை, குடுக்கை, வினைக்கிரியைகள் இடக்கையாற் செய்ய வேண்டலின் இடக்கையென்றும், குடுக்கையாக வடைத்தலாற் குடுக்கையென்றும் பெயர்வந்தது.
ஆவஞ்சியென்னும் பெயர்க்காரணம் - பசுவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் அப்பெயர்பெற்றது.

ஆவணிமாதம் - சிராவணம், நபம்.

ஆவிரை - பகரி.

ஆவிரைச்சி - வள்ளுரம்.

ஆழம் - அழுந்து, கம்பீரம், கயம், குட்டம், குண்டு.

ஆழ்வாரிகிலம் - ஓதை.

ஆளத்திக்குவருமெழுத்து - குறிலைந்தும் நெடிலேழும், மெய்களுள் தவ்வும் நவ்வும், மவ்வுமாம்.

ஆளத்திக்குவாராவெழுத்து - த, ந, ம, அல்லாவேனைமெய்கள்.

ஆளத்தியாவது - முதற்பாடுமிடத்து மகரவொற்றுலே நாதத்தை யுச்சரித்து அதனைத் தொழில் செய்யுமிடத்துக் குறிலாலும் நெடிலாலுஞ் செய்யப்படுவது.

ஆளத்திவகை - காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணளத்தி இவற்றுள் அச்சுடனிகழ்வது காட்டாளத்தி, நிறங்குலையாமற் பாரணையுடன் நிகழ்வது நிறவாளத்தி, பண்ணையே கருதி வைக்கப்படுவது பண்ணளத்தி.

ஆறு - உந்தி, ஒலியல், ஓணம், குடிஞை, சிந்து, தடினி, தரங்கணி, நிலை, நிபவதி, நிர்த்திகை, துறை, துனி, நதி, புனல், யாறு, வருபுனல், வேணி இவற்றுண் மேற்கோடுமாறு - நதம், கிழக்கோடுமாறு - நதி, சிறையாறு - பீராறு, வழாறு - வாரி, புதுப்புனல் வரவு - தலையல், நீந்துபுனல் - அசாதம் நீத்து.

ஆறுமுகத்தம்பிரான் - திருவண்ணமலையாதீனத்தைச் சார்ந்திருந்த அடியார் குழாத்துளொருவர். இவர் சேக்கிழார் நாயனாராற் செய்தருளப்பட்ட திருத்தொண்டர் பெரிய புராணம் எனனும் பன்னிரண்டாந் திருமுறையின், ஒரு பாகத்திற்கும் திருமுறைகண்ட புராணம் சேக்கிழார் புராணம், திருத்தொண்டர்புராணசாரம், மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி என்பவற்றிற்கும் விசேடவுரை செய்தனர் அவ்வுரைகளால் அவரது கல்வித்திறமையும் சிவபத்தியும் உலகோபகாரமும் நன்குவிளங்கும். இவர் இற்றைக்குஞ் சில வருடங்களுக்கு முன்னர் இவ்வுலக வாழ்வொருவினர். சைவசித்தாந்தவுணர்ச்சியில் வல்லவர்.

ஆற்றிடைக்குறை - அரங்கம், இலங்கை துருத்தி.

ஆற்றுவரிச்செய்யுள் - காவிரியைச் சுட்டியபா.

ஆனாயநாயனார் - அறுபத்துமூவர்களுள் ஒருவர். இவர் மழநாட்டின்கணுள்ள திருமங்கலமென்னுந் திருப்பதியில் திருவவதாரஞ்செய்து பசுக்களை மேய்த்துவந்தார் திருக்கொன்றை மரத்தின் அருகுசார்ந்து புள்ளாங்குழலிலே பஞ்சாக்கரமந்திரத்தை யமைத்து வாசித்துவருதலை நியதமாகக்கொண்டார். அவ்விசைகேட்ட சராசரவுயிர்கள் யாவும்கேட்டு உள்ளமுருகிப் பரவசமடைந்து நிற்ப, சிவபெருமான்றோன்றி யருள்செய்து எந்நாளுஞ் சிவபதத்திலிருந்து புள்ளாங்குழல் வாசிக்கக்கடவாய் என்ன, அவருடன் சென்றனார். இவர் குருபூசைத்தினம் கார்த்திகைமாதத்து அத்த நட்சத்திரமாம்.

ஆனிமாதம் - சுக்கிரம், சேட்டம்.

ஆனென்னும்பெயர் - அ, எருமை, மரை.

ஆன்பொருந்தநதி - ஆனிவானி, ஆன்பொருநை, சூதநதி.

ஆன்மலக்கணம் - ஆன்மாவானது பிரமப்பொருளின் பரிணாமமாய்த்தோன்றி அறிவிச்சைசெயல்களை யடைந்து ஏகாநேக குணகுணிபாவமாய் நிற்குமென்று பரிணாமவாதி கூறுவான். குணகுணித் தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்குமென்று சாங்கியன் கூறுவன். உருவப்பொருளா யிருப்பதென்றுபௌராணிகர் கூறுவர். அருவுருவப்பொருள் என்றுகவுளகர் கூறுவர். ஆகாயம்போல அருவாய் அவிகாரியாய் நிற்குமென்று பாதஞ்சலர் பகர்வர். உயிர் அறிவில்லாத சடமாயினும் மனத்தோடுகூடி சித்தாயறியுமென்றுவைசேடியர் விளம்புவர். சித்தும் அசித்துமாமென்று சைவரில் ஓர் சாரார் கூறுவர். கருவியையுறுத சித்துப்பொருளாம் என்று பட்டாசாரியமதத்தார் உரைப்பார். சரீரத்தினிடத்தே பரமாணு அளவிற்றாய் நிற்பதெனப்

பாஞ்சராத்திரிகள் விளம்புவர். உடம்பினிடத்துப் புன்னுனித்துளிபோல ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப அவ்வுயிரினறிவு விளக்கொளிபோல எவ்விடத்தும வியாபிக்குமென மிருதிநூலார் செப்புவர். உடம்பளவில் நிறைந்து நின்று அங்கேயறிவதாமென்று சமணர்கள் சாற்றுகிற்பர். முதல்வனைப்போல் எங்கணும் வியாபியாய் நின்று அறிவுதாம் என்று ஐக்கியவாதிகள் அறைவர். இங்ஙனமே மற்றைய சமயிகள் யாவரும் முரணுகக் கூறியதுபோலவே மாயாவாதியும் ஆன்மா வொன்றென்றும், அது பிரமமேயென்றும் அப்பிரமம் மாயையினாலே வாதிக்கப்பட்டுக் கூடத்தன், ஈசுவரன், சீவன் என்னும் பெயருடன், மேகாகாயம், மேகசலப் பிரதிபிம்பாகாயம்போல விளங்கும் எனவும், சீவனுக்கு ஆன்மசப்தஞ் சொல்லாதெனவும் விளம்புவன். இவர்கள் கூற்றெல்லாம் பூர்வபக்கமாக்கி நின்ற சைவசித்தாந்த உண்மையாவது:- ஒருவாற்றானும் அசித்தாதலில்லாத வியாபகப் பொருள்போல ஔபச்சிலேடிக வியாபகமாதலும் அதுபற்றி அநிருக்கும சித்தாதலும் இன்றி, அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாம் வழக்கு உடைத்தாய் அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைக்கப்பட்டுக் கிடக்கின்ற அழியாத இச்சாஞானக்கிரியைகளை யுடைத்தாய்த் தூலசித்தாகிக் கேவலப்பட்டு நிற்குமென்றும், அதன்பின் அனந்ததேவராற் கலக்குண்ட பகுதியாகிய காரணசரீரத்தைப் பொருந்திப் பொதுவகையாற் சமட்டிரூபமாய், மாயாதத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தி, வியட்டி ரூபமாய்ப் பிரிந்து தோன்றி, அந்தக்கரணம் முதலியவைகளைத் தமக்குள்ளடக்கி நின்ற முக்குண சரீரங்களினிடமாக வருமிடங்களின் வியாபரிக்க நின்று சூக்கும தூலதேகங்களையும் பெற்று ஐந்தவத்தைப்பட்டு நிற்கும் என்பதாம்.

ஆன்மா - பசு, உயிர், புற்கலன், சீவன், சேதனன், அணு, இயமானன், ஆதன், செந்து, ஆவி, பூதன், உறவி, கூத்தன், சார்போதன்.

இ

இக - ஓரசைச்சொல்.

இகழத்தகுபொருள் - இழிதகவு, இழிவு, தண்மை, பரிபவம்.

இகழ்ச்சி - இகழ்வு, இழிவு, உவர்ப்பு, ஒல்லாமை, தாழ்ச்சி, தாழ்வு, நகவு, நகை, நிந்தை, பழி.

இகழ்ச்சிக்குறிப்பு - இளி, எல், எண், ஏஏ, சீச்சீ, சையெனல்.

இகழ்ச்சிச்சொல் - அங்கதம், இழிசொல், வசைச்சொல்.

இகழ்தல் - இகழ், எள்கல், எள்ளல், நகுதல், நிந்தித்தல், பழித்தல்.

இசங்கஞ்செடி - குண்டலி, முத்தாபலம்.

இசை - இராகம், கந்தருவம், காநம், காந்தாரம், தென், நரம்பு, இவற்றுண் மந்தவிசையின்பெயர் - காகுளி, மந்தரம் சமனிசையின்பெயர் - தத்தம், மதுரம், மத்திமம், உச்சவிசையின் பெயர்: - தாரம், வல்லிசை.

இசைக்காரணம் - பல இயற்பாக்களுடனே நிரத்தை இசைத்தலால் இசையென்னும் பெயர்த்து.

இசைக்குப்பிறப்பிடம் - நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை எனவிவை.

இசைக்குரிய எண்வகை - ஆராய்தல், குறும்போக்கு, கையூழ், செலவு, தைவரல் பண்ணல், பரிவட்டணை, விளையாட்டு இவற்றுள் பாடநினைத்த பண்ணுக்கு, இணை, கிளை, பகை, நட்பான நரம்புகள் பெயருந்தன்மாத்திரையறிந்து வீக்குதல் பண்ணலாம். ஆரோகண அவரோகண வகையால் இசையைத்தெரிதல் ஆராய்தலாம். குடச்செலவும் அன்னச்செலவும் பாடுதல் குறும்போக்கு. வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகப் பாடுதல் கையூழ் ஆளத்தியிலே நிரம்

பப் பாடுதல் செலவு. அது சுருதி யேற்றல் தைவரல் வீக்கினநரம்பை யகவிரலாலும் புறவிரலாலும் காணஞ்செய்து தடவிப்பார்த்தல் பரிவட்டனையாம்.

இசைக்குரிய எழுத்து - சரிகமபதநி.

இசைக்குழலிசை - சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம்.

இசைக்குழலிலக்கணம் - மூங்கில்சந்தனம் வெண்கலம், செங்காலி, கருங்காலி என்னும் இவற்றுளொன்றாற் செய்யப்படுவது. மூங்கிலிற் செய்வது உத்தமம், வெண்கலம் மத்திமம் ஏனையவை யதமம் மூங்கில் பொது செய்யும் வெண்கலம் வலிதுமரம் எப்பொழுதும் ஒத்தநிற்கும் இக்காலத்துக் கருங்காலி செங்காலி இவற்றாற் கொள்ளப்படும். இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்தநிலத்திற் பெருக வளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லையாமாதலின் மயங்காநிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒருபுருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி யொருபுருடாகாரமாகச்செய்து அதனை நிழலிலேயாறவிட்டுவைத்துத் திருகுதல், பிளத்தல், போழ்ந்துபடுதல் முதலிய செய்கையறிந்து ஓரியாண்டு சென்றபின் இலக்கணவகையான் வங்கிய மாயகுழல் செய்யப்படும்.

இசைக்குழல்-ஆம்பல், வங்கியம், வாரி, வேய்ங்குழல் இவற்றுண் மூக்கால் வாசிக்குங்குழல் - முரளி.

இசைக்குழற்பிண்டியிலக்கணம் -நீளம், இருபதுவிரல், சுற்றளவு நாலரைவிரல், இது துளையிடுமிடத்துநெல்லரிசியில் ஓர்பாதிமரணிறுத்திக்கடைந்து வெண்கலத்தாலே யணைசுபண்ணியிடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.

இசைக்குழற்றுளை யிலக்கணம் - அளவு இருபதுவிரல். இதிலே துபமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய்விட்டு இம் முதல்வாய்க்கு எழங்குலம்விட்டு வளைவாயினு மிரண்டுநீக்கி நடுவினின்ற ஒன்பதுவிரலிலும் எட்டுத்துளையிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை யென்று கழித்துநீக்கி நின்ற எழினும் எழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்புஒருவிரலகலங்கொள்ளப்படும்.

இசைஞானியார் - சடைய நாயனார் தேவியார். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தமக்குப் புத்திரராகப் பெற்றவர். இவர் சித்திரைமாதத்து சித்திரைநட்சத்திரத்திலே முத்தியடைந்தனர்.

இசைநிறையசைச்சொல் - ஏ - குறை.

இசைநுணுக்கம் - இது சாரகுமாரன், அல்லது சயந்தகுமாரன் இசையறிதற்பொருட்டு அகத்தியமுனிவர் மாணாக்கருளொருவரால் சிகண்டி என்னும் அருந்தவ முனிவரால் வெண்பாவாலியற்றப்பட்ட இசைத் தமிழ் நூல் இது இடைச்சங்கமிருந்தகாலத்துச் செய்யப்பட்டதென்று அடியார்க்கு நல்லாருரையானும், அச்சங்கத்தினர்க்கு நூலாகவிருந்ததென்று இறையனார் அகப்பொருளுரையானுந் தெளியப்படுகின்றது.

இசைப்பாட்டு-இசை இராகம் கந்தருவம், காந்தாரம், காமரம், கானம், கீதம், குழல், கேயம், கோளை, பா, பாட்டு, பாணி, பாண், மனைவிழி, வரி இவற்றுள் வாக்கியத்தோடு பாடு மிசைப்பாட்டு-சங்கீதம், பாண்.

இசைப்பாமுகநிலை, கொச்சகம், மூரி.

இசைப்பாவகை-செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டிலம் இன்னும் சுத்தம், சாளகம், தமிழென்னுஞ் சாதியோசைகள் மூன்றினுடனுங் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகைப்படும். அவையாவன: சிந்து, திரிபதை, கவலை, சமபாதம், விருத்தம், செந்துறை, வெண்டுறை, தேவபாணி, வண்ணம்.

இசைப்பு-அத்து, இசை, இயை, உத்தானம், சந்தி, புணர்ச்சி, இயைபு, இசைவு.

இசையாசிரியனிலக்கணம் - யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும் இருவகைத்

தாளக்கூறுபாடுகளும் மிடற்றுப்பாடலும் மந்தமாகிய காத்தினையுடைய தண்ணுமையும் அகம்புறம் பதினோராடல் என்னுங் கூத்துக்களினும் வல்லனாய் இவற்றுடனே சேரச் செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரசம்பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களின்கணுள்ள பாஷைகளையுமறிந்து அந்தப் பாஷைகள் இசைபூணும்படியையுமறிந்து இயற்புலவனினைவும், நாடகப்புலவனிடும் வரவுகளும் இவற்றுக்கடுத்த பாடல்களும் தம்மிற் சந்திப்பிக்குமிடத்துக் குற்றந்தீர்ந்த நூல் வழக்காலே விரிக்கவும் வகுக்கவும் வல்லவன் என்ப.

இசைவிகற்பம் - எனை.

இஞ்சி - அல்லம், ஆத்திரகம், மருப்புவேர்க்கொம்பு.

இடக்கை - வாமகரம். ஆமந்திரிகை.

இடக்கைவாத்தியமென்னுங்காரணம் - வினைக்கிரியைகள் இடக்கையாற் செய்தலினப்பெயர்த்து.

இடக்கைவாத்தியம் - ஆமந்திரிகை.

இடங்கழிநாயனார் - கோநாட்டின்கண் உள்ள கொடும்பாளூரில் வாழும் குறுநிலமன்னருள் முதல்வர் அறுபத்துமூன்று அடியருள் ஒருவர் கனகசபையைப் பொன்னால் வேய்ந்த சோழவமிசத்தவர், ஓரடியார் திருவமுதிற்கு நெல்லில்லாமை காரணமாகத் தம் பண்டாரத்தைக் கொள்கவென்று கொடுத்தவர். இவரது குருபூசைத்தினம் ஐப்பசிமாதத்துக்கார்த்திகை நட்சத்திரமேயாம்.

இடதுபக்கம் - அபசவ்வியம், இடம், வாமம்.

இடத்தையச்சொல் - யாண்டு, யாங்கு, யாங்ஙனம், யாண்டை.

இடபம் - ஏறு, உக்கம், நரை, நந்தி, கூளி.

இடபவிராசி - இடபம், இருல், எருது, ஏறு, குண்டை, சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாலல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை.

இடம் - அகம், அயல், அரங்கு, இடை, இல், உழி, உளி, உள், உறை, கடை, கண், களம், கால், கீழ், சார், தலம், தலை, தாமம், தானம், திசை, திணை, தேம், தேயம், நிலம், பக்கம், பட்டி, பதி, பாங்கர், பாடு, பால், பின், புடை, புலம், புரம், மாடு, முகம், முதல், முன், மேல், வயின், வலம், வழி, வளாகம், வாய், வைப்பு. [சூ.

இடம்புரிச்சங்கு - இப்பியாயிரஞ்சூழ்ந்த

இடாகினி - சுடுகாட்டிற் பிணங்களைத் தின்னும் பேய்.

இடாகினி - மாயவள், வஞ்சனி, வலவை.

இடி - அசனி, அனலேறு, இதளி, உரும், ஏறு, ஒலி, செல், மடங்கல், வானேறு, விண்ணேறு, வெடி.

இடுதிரை - அவிடு, கஞ்சிகை, அவனிகை, காண்டம், ஒழினி, சண்டம், பாரகம், கழனி, படம், படாம்.

இடை - உக்கம், நடு, நுசுப்பு, நுண்ணிடை, மத்திமம், மத்தியம், மருங்கு.

இடைக்காடர் - இடைக்கழிநாடு என்னும் ஊரிற் பிறந்தவராதலால் இந்நாமமெய்தியதுபோலும். இவர் கலாவல்லவராகி ஊசிமுறி என்னும் இலக்கணநூலைச் செய்தார் என்று கூறுப. திருவள்ளுவர் குறளை யரங்கேற்றியகாலத்து "கடுகைத்துளைத் தேழ் கடலைப்புகட்டிக் குறுகத்தறித்த குறள்" எனச் சிறப்பித்தனர். மற்றைய சரிதங்களைத் திருவிளையாடற் புராணம் இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலத்திற் காண்க.

இடைசுருங்குபறை - துடி.

இடைச்சங்கப்புலவர் - அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க்கருங்கோழி, மோசியார், வெள்ளூர்க்காப்பியர், சிறுபாண்டரங்கனார், மதுரையாசிரியனார், மாறனார், துவரைக்கோமான், கீரந்தையார், வெண்டேர்ச்செழியன், முடத்திருமாறன் முதலிய ஐம்பத்தொன்பதின்மர்.

இடைச்சொல் - அம், ஆம், அல், ஆல், உம், எம், ஏம், ஏ, தம், தில், நம், பாக்கு, பான்மன், வான்.

இடைப்பக்கம் - ஒக்கல்.

இடைப்பானிலம் - அரங்கு, சிலம், குழி,

தோண்டியவீட்டுத் மண்மிகாமலும் குறையாமலு மிருக்குநிலம்.

இடையரூர் - ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பல்லி, வல்லியம், வாடை.

இடையர் - முல்லைநிலமாக்கள்.

இடையர்வீதி - சிரேணி, சேடி, சேரி, பாடம், பாடி, வாடை, வேணி.

இடையாபரணம் - குறங்குசெறி, கவாணை, அரைப்பட்டிக்கை, மேகலை.

இண்டு - இண்டை, ஈகை, ஈங்கை, ஈண்டு புலிதொடக்கி.

இதோபதேசம் - நீதிகளைக் கற்பிக்கும் ஓர் வடமொழி நூல். இது தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டது.

இத்திமரம்-இரத்தி, இரத்திரி, இறலி, கல்லாலமரம்.

இந்திரகாளியம் - இது யாமளேந்திரரென்னும்ஆசிரியராற்செய்யப்பட்ட இசைத்தமிழ்நூல். அடியார்க்கு நல்லார் உரையெழுதுவதற்கு மேற்கோளாகக் கொண்ட நூல்.

இந்திரகோபம் - ஈயல், கோபம், மூதா.

இந்திரன் . அமராவதியோன், ஆயிரங்கண்ணன், சதமகன், கோபதி, போகி, சங்கிரந்தனன், பாகசாதனன், வச்சிரப்படையோன், மேகவாகனன், விண்முழுதாளி, வாசவன், மகவான், வானவன், கௌசிகன், ஆகண்டலன், அயிராவதன், வலாரி, புருகூதன், சக்கிரன், புரந்தரன், மருத்துவன், மருதக்கிழவன், வரைச்சிறகரிந்தோன், அரி, சசிவல்லவன், திருமலி, சுவர்க்கன், வேள், விநாயகன், புலவன், வேந்தன், புரோகிதன், சுனாசி, கரியவன், புனிதன், காண்டாவனன், மால், வெள்ளைவாரணன், தேவர் வேந்தன், பொன்னகர்ச்செல்வன், ஐந்தருநாதன்.

இந்திரன்அணிவது-சிந்தாமணி, சூமணி.

இந்திரன்உணவு - அமுதம்.

இந்திரன்குதிரை - உச்சைச்சிரவம்.

இந்திரன்கொடி - இடி.

இந்திரன்கோ - காமதேனு.

இந்திரன்சேமநிதி - நவநிதி.

இந்திரன்தேவி - இந்திராணி.

இந்திரன்நகரம் - அமராவதி,

இந்திரன்படை - வச்சிரம்.

இந்திரன்பண்டாரம் - சுதன்மம்.

இந்திரன்பூனைவது . கற்பகமலர்.

இந்திரன்மகன் - சயந்தன்.

இந்திரன்மண்டபம் - சயதந்தம்.

இந்திரன்மாளிகை - வசந்தம்.

இந்திரன்மேகம் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம்.

இந்திரன்யானை - ஐராவதம்.

இந்திராணி - அயிராணி, இந்திரன் மனைவி, சசி, சுந்தரி, புலோமசை ஐந்தருச்செல்வி.

இந்திராணிகூத்து - கடையம்.

இந்திரியம் - கந்தம், கரணம், பொறி.

இந்துப்பு - சயிந்தவம்.

இப்பிறப்பு - இம்மை, இப்பவம், இகம்.

இப்போழ்து - இன்று, இன்னே.

இமயமலை - இமயம், இமாசலம், பனிமலை, பார்வதிபிறந்தமலை.

இம்மி - யளவு, தேர்த்துகள் எட்டுக்கொண்டது.

இயமம் - பொய், கொலை, களவு, காமம், பொருளாசை இவ்வைந்தையு மடக்கியது.

இயமன்-யமன், அரி, அந்தகன், தென்றிசைக்குரியோன், சமன், சண்டன் சண்பன், தருமன், நமன், மறலி, தண்டாதன், சைமினி நகரோன், வைதரணி நதியோன், செங்கோற்கடவுள், நாசவன், நடுவன், கூற்று, எருமையூர்தி, வைவச்சுதன்.

இயமன்கொடி - சிங்கம்.

இயமன்படை - தண்டு.

இயமன்மந்திரி - காலன்.

இயமன்வாகனம் - எருமை.

இயமானன்கணவகை - நேர்நேர்நேர், தேமாங்காய்.

இயம்புதல்-இசைத்தல், பிதற்றல், பேசல், இறுத்தல், கதை, நுவல், காதை, கிளவி, பனுவல், அறை, பறை, வாணி, கூற்று, மொழி, குயிறல், புகறல், மாற்றம், மறை, நொடி, பரவல், இசை, இயம், பேச்சு, உரை, எதிர்ப்பு.

இயற்பகைநாயனார் - அறுபத்துமூவருள் ஒருவர் - சிவனடியார்க்கு விரும்பிய பொருள்கள் யாவும் கொடுப்பவர்.

சிவபெருமானே வஞ்சவேடங்கொண்டு வந்து நின் காதலியை தருகவென்ன அன்போடுங்கொடுத்தவர். இவர் குருபூசைத்தினம் மார்கழிமாதத்தவரும் உத்தராநட்சத்திரமே யாம். இவர் காவிரிப்பூம் பட்டினத்திலே வணிகர்குலத்திற் றிருவவதாரஞ்செய்தவர்.

இயைபு-இசைப்பு, புணர்ச்சி.

இரக்கச்சொல்-அக்கோ, அச்சோ, அந்தோ, அய்யோ, அன்னோ, ஆ அ, எேறெ, என்னே ஒ ஒ.

இரக்கம் - இனைவு.

இரங்குதல்-இளைதல், இனைதல், குனிறல், நைதல், பரிதல்.

இரட்டைக்கை-பிணையல், இணைக்கை.

இரட்டைக்கைவகை-அஞ்சலி, புட்பாஞ்சலி,,பதுமாஞ்சலி, கபோதம், கர்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்கங்கம், புட்பபுடம்,மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம் என்ற விவைகளாம்.

இரட்டையர்- இருவித்துவான்கள் ஒருவர்முடவர், ஒருவர் குருடர், ஆமாத்தூர்க்கலம்பகம், ஏகாம்பரநாதருலா முதலிய சொற்சுவைபொருட்சுவை கணிறைந்த அருமையான பாடல்களைப் பாடியுள்ளார்.

இரண்டாம்பக்கம்-பத்திரை.

இரண்டாம்வேதம் - யசு, தைத்திரியம்,

இரண்டு-யுகளம், உபயம்,இணை,துணை.

இரதம்-சபுலம், சூதம், பாதரசம், பாரதம், பேதி.

இரத்தக்கண்ணன் - ஓரசுரன்.

இரத்தபீசன் - ஓரசுரன்.

இரத்தம் - அரத்தம், ஆர்க்கம், உதிரம், எருவை, கறை,கீலாலம், குருதி, சுடுவல்,செந்நீர்,செம்பால், செம்புனல், சோணிதம், சோரி, தோரை, தோன்றி, நெய், நெய்த்தோர், புண்ணீர், புலாணீர்.

இரத்தல்-இரவு, ஏற்பு, ஏற்றல், குறைகோள், யாசித்தல், வேண்டல்.

இரத்தவிந்து - ஒருவகை மாணிக்கம்.

இரத்தினகுணம் - எட்டுப்பலகையும் ஆறுகோடியும் தாரையும் சுத்தியும் தாராகமும் எனவிவை.

இரத்தினக்குற்றம் - சரைமலம்,கீற்று, சம்படிபினத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், மிருத்து,கோடியில்லன, கோடிமுறிந்தன, தாரை, மழுங்கல் என்னுமிப் பன்னிரண்டுமாம்.

இரப்போர்-இரவலர், இரவோர், நினர், கிரப்போர், பரிசிலாளர், மார்க்கணர், யாசகர், வறிஞர்.

இரப்போர்கலன் - கடிஞை, கப்பரை, பாத்திரம், மண்டை, ஓடு, சிரட்டை, குடுவை.

இரப்போர்க்கீயுமிடை வள்ளல் - அந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், சந்திமான், கன்னன், சந்தன்.

இராகப்புள் - மிதுனம், கின்னரம்.

இராகு - கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி.

இராகுகாலம் - சுபகருமங்கள் செய்யத்தகாதகாலம்.

இராகுதசை-இராகுவின் அனுபவபலாபலம் வருங்காலம்.

இராக்கதர் - அரக்கர், இடும்பர், சாலகடங்கடர், நிருதர், பிசிதாசனர், யாது, யாதானவர், கிருதர், வானோர் மாற்றலர்.

இராசதகுணவகை-தானம், தவம்,தமம், பேணல், ஞானம், கல்வி, நலன், கேள்வி.

இராசதானி-புரம், புரி, நகரம், பட்டணம்.

இராசதேவிமனை-அந்தப்புரம், கந்தவாரம்.

இராசப்பகவிராயர் - இவர் திரிகூடராசப்பகவிராயர் எனவும் பெயர் பெறுவர். திருநெல்வேலிக் குற்றாலத்திற் பிறந்தவர், திருக்குற்றாலப்புராணம் திருக்குற்றாலக் குறவஞ்சி யென்னுமிவைகளை யியற்றினர்.

இராசமனை-அரமனை, குலம், கோயில், சாலை, நகரம், பவனம், மந்திரம், மாலை, மாளிகை.

இராசவாகனம் - கஞ்சிகை, மனிக்காற்பள்ளி.

இராசா-அண்ணல், அதிபதி,அதிபன், அயன்றோன், வந்தோன், அரசன், ஆண்டகை, இறை,இறைவன்,இனன்,ஏந்தல், ஓங்கல், காரணன், காவ

லன், குரிசில், கோ, கொற்றவன், கோமான், கோன், சக்கிரி, தராபதி, தலைவன், தோன்றல், நரபதி, நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன் மாண்டலீகன், மன்னவன், மன்னன், மீளி, முதல்வன், வாகுசன், வேந்தன், இவற்றுண் மற்றொருவரைப் பணியா துலகாள்வோன் பெயர்:-- சக்கிரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன், குறுநில மன்னர் பெயர்:-அரட்டர், குறும்பர், புரோசர், வேளிர், சாளுவர்பெயர் - சளுக்கு வேந்தர், வேல்புலவரசர்.

இராசிகளின்பொது - இல், ஓரை, பவனம்.

இராசியின்பெயர் - மேடம், இடபம், மிதுனம், கார்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்பனவாம்.

இராசிவீதி-மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி. இவற்றுள்மேட.வீதியாவது-இடபம், சிங்கம், மிதுனம், கர்க்கடகம், இடபவீதியாவது - மீனம், மேடம், கன்னி, துலாம்; மிதுனவீதியாவது-தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம்.

இராத்திரி - அல், அல்கல், அல்லி, இரசனி, இரவு, இரா, எல்லி, எமம், கங்குல், திநாந்தகம், திரீ, நத்தம் நிசாநிசி, மாலை, யாமம், யாமினி, விபாவரி.

இராமகவிராயர் - சென்னைக் கடுத்த பொன்னேரியிற்பிறந்தவர். திருவாய்ப்பாடிப்புராணம், சாரப்பிரபந்தம் என்னுமிரண்டனையுஞ் செய்தவர்.

இராமசுவாமிஐயர் - வேதவேதாந்த கணித சாஸ்திரங்களில் வல்லவர் - யாழ்ப்பாணத்திலே வட்டுக் கோட்டையிற் பிறந்தவர். நாடகத்தமிழில் நன்கு பழகியவர்.

இராமலிங்கபிள்ளை - இவர் திருவருட்பிரகாச வள்ளலார் எனப்படுவர். இம்மகான் செய்தருளிய நூல் திருவருட்பா என்று கூறப்படும் இதனருமை பெருமை சொல்லமுடியா.

இராமன் - தசரதபுத்திரன், விட்டுணுவின் அவதாரமென்ப சீதேவியின் சிறைமீட்டற்காக இலங்கையம்பதியையணைவழியாய்ச்சென்றடைந்து இராவணாதியரைச் சங்கரித்தவர்.

இராமன்குரு-வசிட்டமுனிவர்.

இராமன்புத்திரர் -குசலவர்.

இராமன்மனைவி - சீதை.

இராமாநுசன்-வைணவசாரியருள் ஒருவர் வியாசசூத்திரத்திற்குப் பாடியஞ்செய்தாருள்ஒருவர். உடையவர் எனவும் பெயர்பெறுவர்.

இராமாயணம் - இதிகாசத்தொன்று இராமனது சரித்திரங்களையும் பிறவற்றையும் உணர்த்துவது. இது பலராமாயணம் மூல்லராமாயணம், வால்மீகிராமாயணம், அத்யாத்ம ராமாயணம், கம்பராமாயணம், சம்பு ராமாயணம் எனப் பலவகைத்து.

இரிதல் - ஓடல், உடைதல், கெடுதல், நீஙல், பாறல், பிமிர்தல்.

இருடிகள்-முனிவர், மாதவர், இலிங்கிகள், முனைவர், படிவர், உறுவர், பண்ணவர், ஐயர், அறவோர், தபோதனர், அறிஞர், அந்தணர், துறவோர், கடிந்தோர், மேனியர், யோகியர், கோபங்காய்ந்தோர், நீத்தோர், மெய்யர், தாபதர்.

இருதிறைபின்வகை - செந்துறை, வெண்டுறை.

இருத்தல்விகற்பம்-யானை, தேர், புரவி, பூனைமுதலியன இவைதிரிதாவுடையபகுதியவாம். பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம், இவை திரிதரவில்லாத பகுதியனவாம்,

இருந்தையூர்க்கருங்கோழி மோசியார் - இடைச்சங்கப்புலவர் ஐம்பத்தொன்மதிருளொருவர்.

இருபத்தைந்து தத்துவம் - பூதம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம், புலன், அந்தக்கரணம், ஆன்மா.

இருப்புக்காந்தம் - சும்பகம்.

இருப்புமுள்-தாறு.

இருப்புலக்கை - முசலம்.

இருப்பை - மதுகம், குலிகம்.

இருமல் - ஐ.
இரும்பு-அகி, அயம், அயில், கருங்கொல், கருந்தாது, கரும்பொன்.
இரும்புல்வாங்குஞ்சலாகை - சம்பகம்.
இருவாட்சி - அனங்கம், கருமுகை, மயிலை.
இருவேலி-மூலகந்தம், வேரி, பீதகம்,
இருள்-அந்தகாரம், அந்தரம், அல், கங்குல், கச்சளம், கருவரி, கருள், கார், சருவரி, தமம், திமிரம், துணங்கறல், துவாந்தம், நத்தம், நிசி, நீலம், மங்குல்
இரேவதிநாள்-இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள்
இலக்கியபொருட்டொடர்-நிலைச்செய்யுட்கூறுபாடு - அத்தியாயம், இலம்பகம், காண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம், இவற்றுள், வேதநூல் விரிக்கும் இலக்கியத்திற்கும், முனிவருரைத்த இலக்கியத்திற்குங் கூறுபாடு-அத்தியாயம் தொடுத்த பொருண்முடிக்குங் கூறுபாடு - இலம்பகம், சருக்கம். வ ன்.
இலக்குமணன்-இராமன்தம்பி, இளைய
இலக்குமி - அரிப்பிரியை, ஆக்கம, இந்திரை, இரமை, இளையாள், உலகமாதா, கமலை, கோகனகை, சீதேவி, செய்யாள், செல்வி, திரு, திருமகள், நளினி, பதுமாசனி, பதுமாலயை, பதுமை, பார்க்கவி, பாற்கடற் பிறந்தாள், பின்னை, பொருட் செல்வி, பொறி, பொன், மா, மூண்டகாசனை, விமலை.
இலக்குமிகூத்து - பரவை.
இலதைக்கை - அதாவது நடுவிரலுஞ் சுட்டுவிரலுங்கூடி நிமிரப் பெருவிரலவற்றின் கீழ்வரை சேர, ஒழிந்த இரண்டுவிரலும், வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது.
இலந்தை-இரத்தி, குலவலி, குல்லரி, கோலி, கோற்கொடி, வதரி.
இலந்தைக்கனி - குலம், கொண்டை, கோலம்.
இலவந்திகை-நீராவியைச்சூழ்ந்த வயந்தச்சோலை.
இலவமரம், சான்மலி, பூரணி, பொங்கர்.
இலவம்பஞ்சு - பூளை.

இலாபம்-அதிகம், ஆக்கம், ஆயம், ஊதியம், சலபம், நந்தல், நயன், பசை, பயம், பயன், பலன், பலித்தல், பேறு, பொலிசை, அன்றியுந் தொழிலிலாபம் - உருத்திதம், விருத்தி.
இலை-அடை, சதம், சதனம், தகடு, தண்ணடை, தமாலம், தலம், தழை, தாம், பத்திரம், பத்திரி, பலாசம், பலாசு, பன்னம், பாசடை, பாசிலை, முரி, அன்றியும், ஏடு-பனைக்கும், பூவிதழுக்குமுரித்து, ஓலை-பனை, தெங்கு, தாழைக்குமுரித்து, மடல்-ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழைக்குமுரித்து, அன்றியும், தோடு-தாழை, தெங்கு, பனை, பூவிதழ்க்குமுரித்து.
இலைக்கறி - அடகு.
இலைநுகர்விலங்குணா - குளகு.
இலைமூக்கரிகத்தி - குளிர், கணிச்சி.
இல்லறத்தின்றுறை-தன்னையொழிந்த மூவர்க்கும், இறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இரந்தார்க்கும், தேவர்க்கும், முனிவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பிறர்க்குந் துணையாதலும், வேள்வி செய்தலும் ஒழுக்கங்காத்தல் முதலியனவுமாம்.
இல்லெலி - ஆகு.
இவ்விடம் - இங்கு, இங்ஙனம், இம்பர், இவண், ஈங்கு, ஈண்டு.
இழிகட்பெருங்கண்ணனார் - கடைச்சங்கப்புலவர்நாற்பத்தொன்பதின்மருள் ஒருவர் திருவள்ளுவமாலையில் இவர் இயற்றிய பாடலொன்றுமிருக்கின்
இழிந்தேறும்வழி. படுகர். [றது.
இழிப்பினவிநயம் - இடுங்கியகண்ணும் வெளிப்பட்ட பற்களும், ஒடுங்கிய முகமும், நடவாக் காலும், சோர்ந்த வுடலும், சொல் நிரம்பாமையும் உடைத்தாதல். [தாழ்வு, பரிபவம்.
இழிவு - அவமானம், இழிதகவு, இளிவு.
இளங்கதிர் - பீள்.
இளங்கொம்பு - வளார், மெல்லியல்,
இளங்கோவடிகள்-சிலப்பதிகாரம் என்னும் பஞ்சகாவியங்களுள் ஒன்றைச் செய்தவர் இவரே. இவர் சேரநாட்டில்வஞ்சிநகரத்திலிருந்துஅரசுசெய்தசேரலாதனென்னும் அரசனுடையபுத்திரர். சேரன் செங்குட்டுவனு

டைய தம்பி இதனால் இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப்பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளென்றுபெயர்பெற்றனர் பதிவிரதமுடைய மகளிரைத் துதித்தலை யுட்கொண்டும் இக்கதைமுகமாகச் சில தருமங்களை உலகத்தார்க்குத் தெரிவிக்கவேண்டுமென்பதைக் கடைப்பிடித்துமே சிலப்பதிகாரஞ் செய்தனர். இவர் மலைநாட்டினராதலால் அந் நாட்டுச் சொற்கள் பலவற்றை நுழைத்திருக்கின்றனர். இவர் சமயம் சைவசமய மென்று கொள்ளற்றுணிபு. சைனமதக்கொள்கையை அதிகங் கூறியிருத்தலால் அஃதென்றுங்கூறுவர். இவர் காலங் கடைச்சங்கப்புலவர் காலமே அஃதாவது இலங்கைச்சரித்திரத்திற்கூறியபடி முதலாங்கயவாகுவின் காலமே [யாம்.

இளஞ்சூல். மீட்டை.

இளஞ்சென்னி-வெற்றிவேற் செழியனென்றும்பெயர். பாண்டிய அரசர்களுள் ஒருவன்.

இளந்திரயன் - தொண்டைமான் தொண்டைமானிளந்திரையன் ஆதொண்டைச் சக்கிரவர்த்தி யெனவும் பெயர்பெறுவன். நாகபட்டினத்துச்சோழன். பிலத்துவாரத்தாற் சென்றுபாதலலோகமடைந்து நாகக்கன்னியைப்புணர்ந்து பிரியுங்காலத்து, மகவையென்செய்வதென்று கன்னி கேட்டாளாகச் சோழன் நோக்கி மாதே ஆண்குழந்தைபிறக்கும். அதனைத் தொண்டைச்செடியாற் கட்டிக்கடற்க ணெறியக்கடவாய். அது நம்மூர் வந்து சேரும். அப்போது எம்மரசினை யதற் களிப்ப மென்று சென்றனன். நாகமங்கை யங்ஙனமே குழந்தைபிறந்தவுடன் கணவன் கட்டளைப்படி தொண்டைச் செடியாற்கட்டிக்கடலகத்திட்டாள். திரை கொண்டுவந்து கரையிற் சேர்த்தது. குழந்தையையெடுத்து அரசனிடங் கொண்டு சென்று காட்ட, அரசனதைவாங்கி, அளவிலா ஆனந்தங் கொண்டு திரைதருதலால் திரையன் எனவும் தொண்டைச் செடியாற் கட்டினமையின், தொண்டைமான் ஆதொண்டைச் சக்கரவர்த்தியெனவும் பெயர்வைத்து அரசாள வைத்தனன் என்று பத்துப்பாட்டுக் கூறப்பட்டது.

இளமரம்-கன்று, குல்லி, பிள்ளை, போதகம், போத்து.

இளமை-இளை, எழில், கயம், கன்னி, குருகு, குருளை, குழவி, குழரு, கொம்மை, கோமளம், சேடு, சேய், தருணம், நவ்வி, நாகு, புருவை, போதகம், மஞ்சு, மண்ணை, மழவு, முருகு விளரி, மிளர், வெண்மை.

இளமைநாயனார்குளம் - சிதம்பரத்தின் கணுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம், திருநீலகண்டநாயனாரும்அவர்தேவியாருஞ் சிவனடியவரின்றிருவோடு காரணமாகச் சத்தியஞ் செய்தற்கு இதன்கண் முழுகி யெழுந்தபோது இளமைப் பருவமடைந்து முத்திபெற்றாராகலின் இளமைநாயனார்குளமெனப்பட்டது பெரிய புராணத் [திற் காண்க.

இளம்பனை - போந்தை

இளம்பிறைக்கை-சுட்டுவிரலும் நடுவிரலும் பவித்திரவிரலும் சிறுவிரலுஞ் சேர்ந்து உள்வளையப்பெருவிரல் அவற்றைவிட்டுநீங்கி வேறாயிருப்பது.

இளம்புல் - சட்பம்.

இளம்பூரணர் - தொல்காப்பியத்திற்கு உரை செய்தாருள் இவரும் ஒருவர். இவர் அடியார்க்குநல்லார், நச்சினார்க்கினியர் என்பவர்க்கு முற்பட்டவர். தொல்காப்பியத்திற்கு இவரே முதன்முதல் உரை யெழுதிய காரணத்தினால் இவர்க்கு உரையாசிரியர் என்னும் பெயர்வழங்கப்பட்டது.

இளவேட்டனார் - கடைச்சங்கப் புலவர் நாற்பத் தொன்மதின்மருள் ஒருவர் திருவள்ளுவர் குறட்குச் சிறப்புக்கவி கூறியுள்ளார் "மதுரையறுவை வாணிகர் இளவேட்டனார்" எனக் கூறுவதனால்இவர்ஊர்மதுரையெனவும்,குலம் ஆடைவிற்கும் வணிககுலமெனவுங்கொள்ளக் கிடக்கின்றது.

இளவேனில்-மது, மாதவம், வசந்தம்.

இளைஞர்-ஆடவர்,இளவல்,உவா,காளை, குமரன், சேய், மழவு,முருகன், யுவா.

இளைத்தல் - எய்த்தல், கிரிசம், சிக்கல், சிங்கல், ஞொள்கல், நைதல், தேம்பல், தேய்தல், நாம்பல், பழங்கண், மெலிதல்.

இளையனார்வேலூர் - தொண்டைமண்டலத்திலே காஞ்சிபுரத்திற்கு தென்கிழக்கிலுள்ள பத்துகடிகை தூரத்தில் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலம்.

இளையான் குடிமாறநாயனார்-அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவர் வேளான்குடியிலே திருவவதாரஞ்செய்த இவர் வறுமையால் உணவின்றி மிகப்பசித்திருந்தும் இருளோடுகூடிய மழைக்காலத்துச் சிவபெருமான் அடியார்வேடங்கொண்டெழுந்தருள வயலையுழுதுவிதைத்த சம்பாநென் முளைகளை மனையலக்கால் அமுதாக்கிக் குழிநிரம்பாத புன்செய்ப் பயிரின் கீரையலாகிய கறியமுதைச் சமைப்பித்துக் கொடுத்துச் சிவபெருமான் திருவருளான் முத்தி யடைந்தனர். முத்தியடைந்ததினம் ஆவணி மாதத்து மகநட்சத்திரத்திலேயாம்.

இறகினடிமுள் - முருந்து.

இறகு - இறை, குறல், கூறல், கூழை, சதம், சதனம், சிறகு, சிறை, செட்டை, தூவி, தோகை, பக்கம், பத்திரம், பர்ணம், பறை, பிரசம், பிஞ்சம், வாசம்.

இறக்குதல் - அவரோகணம் அவாவுதல், இழிதல்.

இறங்குதல் - அவா, சுத்தம், அவதாரம்.

இறவி - இத்தி.

இறல் - இறவு.

இறுக்கல் - தற்றல்.

இறுமாப்பு-செம்மாப்பு, எக்கழுத்தம்.

இறை - பொறி, வரை.

இறைகூடை-அம்பி, இடார், இறைவைகாசாம்பி, கிழார், பிழார், புட்டில், பூட்டை, பட்டை, அன்றியும், நீரிறைக்குமரப்பத்தல்இறைவை.[மாமிசம்.

இறைச்சி-தன்னு, மேதை, வள்ளூரம்.

இவற்றுலாவினிறைச்சி-வள்ளூரம், குடிறைச்சி, குசியம், படித்திரம்.

இறையனார்-பாண்டியனும் கடைச்சங்கப்புலவர்களும் பொருணூல் இல்லா அவருந்த ஆலவாயடிகளே 'அன்பினைந்திணை' என்னும் அகப்பொருளிலக்கணத்தை யருளிச்செய்தார்.

இறையனாரகப்பொருள்- அன்பினைந்திணை, களவியல், அகப்பொருளென்னும்பெயர்பெறும். இஃது 'அன்பினைந்திணை' முதலாய அறுபதுசூத்திரங்களையுடையது இறைவனாலருளப்பட்டு அவன் திருநாமத்துடன் விளங்கும் அகப்பொருணூல் இதுவன்றிவேறொன்றுமின்று இந்நூற்குக் கடைச்சங்கபுலவர் நாற்பத்தொன்பதின்மரும் உரை செய்தார்கள். அவற்றுள் மதுரைக்கணக்காயன் மகனார் நக்கீரனார்செய்த வுரையேஉருத்திரசன்மக் கடவுளாலும், மற்றையோர்களாலும் மெய்யுரை யெனக்கொள்ளப்பட்டது. மதுரை மருதனிளநாகனார் உரையைக்கேட்டகாலத்து உருத்திரசன்மரிடத்து மாத்திரம் கண்ணீர்சொரிந்துமயிர்சிலிர்த்தும், பரணருரை கேட்டகாலத்து சிலசிலவிடங்கள்தோறும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தும் மயிர் சிலிர்த்தும் நக்கீரனருரை கேட்டகாலத்து ஒவ்வோர் பதந்தோறும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தும் மயிர்சிலிர்த்தும் வியப்புக்காட்டினர். நக்கீரர் தமது உரையைக்கீரவி. காற்றனார்க்கும், அவர் தேனூர்க்கிழார்க்கும், அவர்படியங்கொற்றனார்க்கும், அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கும், அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கும் அவர்சொல்லூர் ஆசிரியர் ஆண்டைப்பெருங்குமாரனார்க்கும், அவர்திருக்குன்றத்து ஆசிரியர்க்கும், அவர் மாதளவனார் இளநாகனார்க்கும், அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கும் முறையே உரைத்தனர் என்ப.

இனிமை-அமிழ்து, ஆறு, இமிழ், இரதம், இழுமெனல், சாரம், சுவை, சேறு, தமிழ், தீ, தீம், மதுரம்.

இனியவைநாற்பது-பதினெண் கீழ்க்கணக்கிலுளொன்று. இனியனவாகிய விஷயங்களை நாற்பதுபாக்களாற்றெரிக்கும் நூல். பூதஞ்சேந்தனார், என்

பவராற் செய்யப்பட்டது. கடைச் சங்கத்திலரங்கேறப்பட்டதென்பமுழுவதும் இன்னிசை வெண்பாவாற் செய்யப்பட்டுச் சொற்சுவை பொருட்சுவைகளையுடைத்து.

இனியென்பது - ஞாங்கர், புறம்,மற்று, முன், மேல்.

இன்சுவைநீம் - இரதம்.

இன்பமொடுபுணர்ந்தோனவிநயம் - துன்ப நீங்கப்பெற்றுத் தவர்த்தயாக்கையும் பெருமகிழ்வுடைமையுஞ்செலவு மிகுதியுடைமையும் அழகுபொதிந்த சொற்பொலி வுடைமையும், அழகுடனே மலர்சூடி யிருத்தலும் பருத்த புயமுடைமையுங் கொண்டுளதென்ப.

இன்பம் - ஏமம்,கடி,களிப்பு,சுகம்,சேமம், தொய்யல், நகை, நயன், நலன், நன்னிலை, பரிவு, மகிழ்ச்சி, அன்றியும், பேரின்பம், ஆனந்தம்.

இன்னாநாற்பது - இதுவும் பதினெண்கீழ்க்கணக்கிலுளொன்று. இனியவையல்லாத விஷயங்களை நாற்பது பாக்களாற் றெரிக்குநூல். கடைச் சங்கத்தார்காலத்திற் கபிலதேவராற் செய்யப்பட்டது.முழுவதுமின்னிசை வெண்பாவையுடையது.

இன்னிசையளபெடை - அளபெடையிருபத்தொன்றனுளொன்று. பாட்டிலோசை குறையாதாயினும் அளபெடுக்கிற் சந்தவின்ப முடைத்தாயின் குற்றெழுத்து நெட்டெழுத்தாகநீண்டு ஒலிப்பதாம், 'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்சார்வாயமற்றாங்கே யெடுப்பதூஉ மெல்லாமழை' என்னுந் திருக்குறளானறிக.

இன்னிசைவெண்பா-வெண்பா வகையிலுளொன்று. அதாவது முதன்மூன்றடியும் நான்குசீர்பெற்றும், இறுதியடியொன்று முச்சீர்பெற்றுந் தனிச் சொல்லின்றி வருவதாம். "வேதசிவாகமத்தான் மெய்ச்சமயமென்று தெளி, போதசிவ சித்தாந்த பூடணவொண்மைக்கருளே, மீராயிரமருப்பியேறி வினையாட்டருளே, மோராயிரமருப்பியோர்" எனவரும் செய்யுளானறிக.

ஈ

ஈகை - அளி, இடுக்கை, உதவி, உதாரம், உபகாரம், கடப்பாடு, கவிகை, கொடை, தத்தம், தானம், தியானம், பிரதம், புரவு, வண்மை, லாகை, விதாணம் வேளாண்மை, வேள்வி, அன்றியும் வரையாக்கொடையின்பெயர். கொடை, மடம்.

ஈகையாளன் - உபகாரி, கொடையாளன், தனதன், தாதா, தியாகி, புரவலன், உதாரனியன், வேளாளன், வேள்வியாளன், அன்றியும் வரையாது கொடுப்போன் பெயர் ஔதாரியன், வள்ளல் வள்ளியோன்.

ஈதல் - சிதல், ஈயல்.

ஈசன்செயல் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல்,அருளல் என்பனவாம்.

ஈசன்நவபேதம்-சிவம், சத்திநாதம்,விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன்; விஷ்ணு,பிரமன்என்பனவாம்.

ஈசன்வில்-பினாகம்,மேரு. [ளொன்று.

ஈசாவாசியோபநிடதம் - உபநிடதத்து

ஈசானர் - வடகீழ்த்திசைப்பாலகர்.

ஈசானதிசை - வடகிழக்குத்திசை.

ஈசானம்-சிவபெருமானது ஐந்து திருமுகங்களுளொன்று.

ஈசானியமடம்-திருநெல்வேலியிலுள்ள திருவாவடுதுறை ஆதீன மடாலயம் சிதம்பரத்தின்கணுள்ள தருமபுர ஆதீனத்தார்மடம்.

ஈசானியதேசிகர் - இயற்றமிழாசிரியர்.

ஈடணைத்திரயம் - உலகவீடணை, தனவீடணை, தாரவீடணை, என்பனவாம்.

ஈட்டி - இட்டி. கழுக்கடை, கழுமுள், சலாகை, சவளம்.

ஈட்டியெழுபது-ஒட்டக்கூத்தரால் செய்தருளப்பெற்ற ஓர் அரிய பெரிய தெய்வீக நூல்.

ஈதல்-அருளல். அளித்தல், இருத்தல், இசைத்தல், இடுதல், உதவல்,கொடுத்தல், தருதல், நல்கல், நீட்டல்,நேர்தல், பகுத்தல், பணித்தல், புரத்தல், பொழிதல், வழங்கல், வீசல்.

ஈந்து - கர்ச்சூரம்.

ஈயம் - சீருள், தகரம், வங்கம்.

ஈரப்பலா - ஆசினி, பலாசம்.

ஈரல் - ஈருள், குண்டி சுருள்.

ஈரெண்வகைக்கூலம் - நெல்லு, புல்லு, வாகுதினை, சாமை, இறுங்குதோரை இராகி, என்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்பனவாம்.

ஈரொற்றுவாரம் - இரண்டொத்திரை பெற்றுவருஞ் செய்யுள்.

ஈர்வாள் - அரி, இரம்பம், கரபத்திரம், வேதினம்.

ஈழதேசம் சிங்களம், பொன்னகரம் இலங்கை, சிம்மளம், சிங்களத்வீபம்.

ஈழவர் - மலையாளதேயத்துள்ள ஒருவகைச்சாதியார், ஈழதேசத்தார்.

ஈனம்-அடம், இகழ்ச்சி இரதம், இழிவு, இழுக்கு, கீழ், கீழ்மை, குறைவு, தாழ்வு, பிரப்பு, புன்மை, பொல்லாங்கு, மறவி.

ஈன்றணிமை - புனிறு.

ஈன்றபடி - வற்சலை.

ஈன்றவள்-அவ்வை, அம்மனை, அம்மை, அன்னை, ஆயி, தம்மனை, தாய்பயந்தாள், மோய், யாய்.

ஈன்றவன்-அச்சன், அத்தன், அப்பன், அம்மான், ஐயன், தந்தை, தாதை, பிதா.

உ

உகந்தமலை-இலங்கையிலே திரிகோணமலைக்குச் சமீபத்துள்ள ஒரு சுப்பிரமணியஸ்தலம்.

உகப்பாட்டு - தலைப்பாட்டு, இது கூட்டக் கூத்தியர்க்குரியபா.

உகவை - தலைப்பாட்டுக்கூத்தியர்.

உகமுடிவு - ஊழி, மடங்கல்.

உகிர்நிலைப்பசாசக்கை - சுட்டுவிரலும் பெருவிரலும் நகநுனியைக்கௌவி நிற்பது.

உக்காரி - அஃகுல்லி.

உக்கிரம்-தேவடிவுகள் மூன்றனு ளொன்று.

உக்கிரப்பெருவழுதி-சோமசுந்தரபாண்டியகுமாரர் இவரை வீரபத்திரக்கடவுளது திருவவதாரமென்ப. "கலையுணர்புலமையிற்றலைமையோ ணுகிவிதிமுறை வழாது முதனிலைப் புரக்கும்-பெருந்தகை யுக்கிரப்பெருவழுதியென்னும் தன்னிகரில்லா மன்னவர்பெருமான்" எனச் சிறப்பித்துக் கூறப்பட்டவர் இவரே. சங்கப்புலவராயிருந்து தமிழாராய்ந்தாருள் இவரும் ஒருவரே, இவர் வரலாறுகளைத் திருவிளையாடற்புராணத்திற்காண்க

உசிலமரம் - சிக்கிரி, அரிஞ்சில்,

உச்சாகம் - சந்தோஷம், உள்ளத்தின் மிகுதி.

உச்சி-குடுமி, சிகரம், சிக்கம், சுடிகை, குழிகவிரம், நனந்தலை.

உச்சிப்பொழுதில் வந்தோன் விஷயம்-சொரியாகின்றபெருந்தன்பில் வருந்தவன் உடம்பு எரிவுற்றுச் சிவந்த கண்ணும் அயர்ந்தநோக்கமுமுற்று இருப்பதாம்.

உஞ்சல் - ஊசல், விண்டாண்டு.

உஞ்சை-உச்சயினிமாநகரம், இது அவந்திதேசத்துள்ளது.

உடல்வந்தனை . மேய்சாய்தல், இடைநெரித்தல் கழித்தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தல் என்னு மொன்பதுமாம் "செய்தாய் விடைநெரிவு, மேற்கருவோ டாங்கணைத்தல் - கைதூக்கசைத்தல் கலைபற்றல்-கைகள், விரித்தல் குவித்தலிவை சிங்களமாமென்று-தெரித்தனர்தண்டமிழோர் தேர்ந்து" என்றதனுணர்க.

உடல்-அங்கம், அவயவம், ஆகம் ஆதாரம் உடம்பு, உயிர்நிலை, உரு, உறுப்பு, கடம், களேபரம், காத்திரம், காயம், குரம்பை, சடம், சட்டகம், சரீரம், தனு, தாவரம், துவக்கு, தேகம், தேயம், படிவம், பிண்டம், புகல், புணர்வு, புதைபுரம், புற்கலம், பூட்சி, பூதியம், மூர்த்தம் மெய், யாக்கை, விக்கிரகம், வியம், அவ்வுருவத்தின் பெயர், சட்டகம், படிவம், மேனி, வடிவம்.

உடற்குறை - கவந்தம், மட்டை, முண்டம், ரூபம்.

உடற்றழும்பு-அங்கிதம், சேர்க்கைவசி, வடு.

உடனிகழ்ச்சியிடைச்சொல்-ஒடு, ஓடு.

உடன்படல்-இசைதல், ஒட்டல், சம்மதித்தல், நேர்தல், வலித்தல்.

உடன்பிறந்தாள் - சகோதரி, பகினி.

உடுக்கை - துடி.

உடுக்கைப்பறை - ஒருவகைத் தோற்கருவி.

உடுத்தல் - இருக்கல், ஒற்றல், சுற்றல், தற்றல்.

உடும்பு-அண்டசம்,கோதா தடி, முசலி' முசலிகை.

உடைவாள்-சுரிகை, பத்திரம்,குறும்பி.

உட்சொல் - நெஞ்சொடுகூறல்.

உட்சொல்லிலக்கணம்நெஞ்சொடு கூறும்நீர்மைக்காக அது சுண்ணம், சுரிதகம் வண்ணம், வரிதகமென நான்குவகைப்படும்.

உட்டணம்-அழல், அனலம், உருப்பம், உருமம், கருமம், கோரம், தகம், தாபம், வெப்பம், வெம்மை.

உட்டுளை-அரி, குழல், சுஷிர், சுரை, தசிரம், தூம்பு, நாடி, நாழி,நாளம்,புரை, புழை, வேணு, வேய்.

உட்பகையாறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்,மாற்சரியம்.

உணவு-அசனம்,ஆகாரம், இசை, உணா, உண்டி,ஊட்டி, ஓதனம், துப்புபதம், போசனம், வல்சி, அன்றி::ம் பேருணவின்பெயர்-பிரப்பு சிற்::ணவின் பெயர்-அப்பவர்க்கத்தைக்கா:ண்க.

உண்கலம்-கலம், தட்டம், தளிகை, தாலம், பாசம், பாசனம்.

உண்டல் - புசித்தல்.

உண்டாக்கல்-காண்டல், சிருட்டித்தல், தோற்றுவித்தல்,நியமித்தல், நிருமித்தல்,படைத்தல்,பயத்தல், பாரித்தல், விதித்தல்,

உண்டாதல்-அஞ்சிதம், சுரத்தல், நந்தல் படல், பூத்தல், விளைதல்.

உண்டிப்பொருத்தவகை - ஒகாரீங்கிய உயிர்க்குற்றெழுத்துநான்கும், க ச த ந ப ம வ என்னும் மெய்யெழுத்தேழும்,அமுதெழுத்தாகக்கூறலால் இவ்வெழுத்துக்களுளொன்றை முதலாகவுடைய முதற்சீர்க்கும் கூறிய கணத்திற்குரிய நட்சத்திரத்தோடு பாடவேண்டுதல்முறையாம். இதுவுமன்றித் தலைவன்பிறந்த நாளேனும் பெயர்நாளேனும் இரண்டிலொன்று பொருந்தக்கூறிய அடியை முதலெழுத்துச்சொன்னால் அப்பாட்டுடைத் தலைவனுக்குச் செல்வம் எப்போதும் வளர்ந்துவருமெனப் புலவர்கூறுகிற்பர்.

உண்ணு - அண்ணம்.

உண்பூடன - தூற்றி.

உண்மாசு - உபமலம்.

உண்மிடறு - அணல்.

உண்மைவிளக்கம் - மெய்கண்ட சாத்திரம் பதினன்கனுளொன்று சிவஞானபோதம் சிவஞானசித்தியார் என்னுமுதனூல்களின் உண்மைப்பொருள்களைச் சுருக்கமாக தெரிவிப்பது மெய்கண்ட தேவநாயனார் மாணாக்கருள் ஒருவராகியதிருவதிகைமனவாசகங்கடந்த தேவநாயனாரால் செய்தருளப்பட்டது. ஐம்பத்துநாலு திருவெண்பாக்களையுடையது. இது சாலிவாகனசகாத்தம் கககஎ௵த்தில் இயற்றப்பட்டுள்ளது.

உண்மைநெறிவிளக்கம் - மெய்கண்ட சாத்திரம் பதினன்கனு ளொன்று ஆறு திருவிருத்தங்களை யுடையது திருக்கடந்தை மறைஞான சம்பந்த தேசிகருமாணாக்கராகிய காற்றவன்குடி உமாபதி தேவநாயனாரற்செய்தருளப்பட்டது. தத்துவரூபம் தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம்,ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவபோகம் சிவானந்தம் என்னுந் தசகாரியங்களையுமெடுத்து விளக்குவது இதுசாலிவாகனசகாத்தம் கஉ௩௪௵த்திற்செய்யப்பட்டது.

உதடு-இதழ், துவ, பாலிகை, முத்தம், அன்றியு மேலுதடு,ஒட்டம்,கீழுதடு, அதரம்.

உதயகிரி-சூரியசந்திரர் தோன்றுமலை, கிழக்கின்கணுள்ளது.

உதயணன்கதை-இது பைசாச பாடையிற் குணாட்டியனென்னும் மகா பண்டிதரொருவரால்முற்காலத்துச்செய்யப்பட்டுள்ள பிருகத் ¦ கதையின் மொழிபெயர்ப்பாகவுள்ளது. சொற்

சுவை பொருட்சுவைகளிலே மிகச் சிறந்தது. உதயணனென்னும் இராசகுமாரனொருவனது சரித்திரத்தைக் கூறுவது. சிந்தாமணிமுதலிய காப்பியங்களிலும் இதனைமேலாகமதித்து அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு சிற்றுறுப்புக்களும் மிகப்பெரிய ஆசிரியப்பா. ஒவ்வொன்றால் இயற்றப்பட்டுள்ளது. அவ்வுறுப்புகள் பலவமைந்து காண்டம் என்னும் பேருறுப்பு விளங்கும் அவற்றுள் முதலாவது உஞ்சைக்காண்டம் ருஅ - பகுப்பினையும், இரண்டாவது இலாவாணகாண்டம் உ௦-பகுப்பினையும், மூன்றாவது மகதக்காண்டம் உஎ-பகுப்பினையும், நான்காவது வத்தவகாண்டம் கஎ-பகுப்பினையும், ஐந்தாவது நரவாணகாண்டம் கூ-பகுப்பினையும் உடையன. இப்பொழுது கிடைத்த கையெழுத்துப் பிரதியின் முதலுங் கடையுஞ் சிதைந்து காணப்பட்டமையால் ஐந்தாவது காண்டத்திற்குமேல் இத்தனை காண்டங்களுள்ளனவென்பதும், அவற்றின் சிற்றுறுப்புக்கள் இவ்வளவினவென்பதும்புலப்படவில்லை இது கதையெனவும் பெருங்கதை யெனவும் வழங்கும் இஃது இடைச் சங்கத்துப் புலவர்க்கே செய்யுளிலக்கியமாவிருந்ததென்றும் அவர்கள் அதனை யாராய்ந்தறிந்து கலி, குருகு, வெண்டாளி முதலிய நூல்களையியற்றினார் எனவுங் கூறப்பட்டிருக்கின்றது. உதயணகுமாரன் கதையென்று விருத்தபாவினாலமைந்த தமிழ்நூலொன்று சைனர்களது ஆட்சியிலுள்ளது அதனை யுரையாசிரியார் அங்கீகரிக்கவில்லையெனத் தெரிகின்றது.

உதயம் - புலரி, விடியல், வைகறை.

உதாத்தம் - வேதமோதுஞ் சுரத்தையின் ஒன்று. [காட்டல்,பிசிதம்.

உதாரணம் - இதியாசம், இலக்கியங்

உதானவாயுவின்குணம் - உண்டானவற்றைக் கீழாக்குவது.

உதானன் - நாபியினின்று பெற்றநிற்பது.

உதைகாற்பசு - கதை.

உத்தமதானம் - அறத்தாலீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக்கொள்கெனப்பணித்து குறையிரந்துமனமகிழ்ந்து கொடுத்தல்.

உத்தமத்தோற் பெருங்கருவிவகை - மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகையென்னு நான்குமாம்.

உத்தமமானதோற்கருவி - மத்தளம், சல்லிகை, இடக்கை, காடிகை, பேரிகை, படகம், குடமுழாவென்றுசொல்லப்பட்ட இவைகளாம். இவற்றுள் மத்தளம். மத்து - ஓசைப்பெயர், இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பலகூத்திற்கும் உரித்ததாகலானும்பாடல்எழுத்தான் உள்ளே பிறத்தலானும், முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும், இதனை சான்முழ வென்றுங்கூறுப. சல்லிகை சல்லென்ற ஓசையுடைத்தாதலாற் பெற்றபெயர். இடக்கையென்னுங் காரணப் பெயர் முன்னுரைத்தாம். காடிகை காடி கத்தினாற்போலும் ஓசை யுடைத்தாதலினப்பெயர்த்து.

உத்தரகுரு - போக பூமியாறினு ளொன்று.

உத்தரகௌத்தன் - வாரணவாசி நகரத்தரசன்.

உத்தரகுமாரன் - விராடன்மகன்.

உத்தரன் - கனமவிசயர்க்குத் துணையாய்நின்ற ஓரரசன்.

உத்தரை - விராடராசன் புத்திரி, அபிமன்னன் மனைவி.

உத்தரீயம் - உத்தராசங்கம், ஏகாசம்,அன்றியு மேற்போர்வை, மீக்கோள்.

உத்தரட்டாதிநாள் - அறிவன்றன், நீபம், பிற்கொழுங்கோல்,மன்னன், முரசு.

உத்தரநாள் - டை யெழுஞ்சனி, கதிர்நாள், செங்கதிர்நாள், செங்கதிர்பிறந்தநாள், பங்குனி, மானேறு.

உத்தராடநாள் - ஆடி, ஆனி, கடைக்குளம், விசுவநாள்.

உபகரணம் - ஆயுதம், எது, காரணம், துணைக்காரணம், சாமக்கிரி, துப்பு.

உபகாரம் [illegible], நன்மைவேளாண்மை.

உபசாரம் - சன்மானம், நயம், முகமன்.

உபப்பிலாவியம் - குருநாட்டின்கணுள்ளனர், இங்குத் தருமபுத்திரர் முதலாயினோர் தங்கியிருந்தார்கள்.

உபபுராணம்-நாரசிங்கம், சனற்குமாரம் நாரதீயம்,சிவதருமம், திருவாசம்,நந்திகேச்சுரம்,அவுசனம், காளிகம்,வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம்,காபிலம், மானவம்,வாசிட்டலிங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம்.

உபயாங்கவாச்சியம் - கீதம், திருத்தம் என்னும் இரண்டற்கும் வாசிப்பது.

உபரிகை - மேல்நிலை.

உபாங்கம் - ஒருவகைத்தோற்கருவி.

உபாத்தியாயன்-அய்யன்,ஆசான்,ஆசாரியன், ஆசிரியன், தீர்த்தன், தேசிகன், பணிக்கன்.

உபாயம் - யோகம், விரகு.

உபேந்திரன்-இந்திரனது வேண்டுகோளிருபடி காசிபமுனிவர்க்கும் அதிதியென்பவட்கும் புத்திரராகத் திருவவதாரஞ்செய்த திருமாலாகும்.

உப்பமைப்போர் - அளவர், உமணர், கழியர்.

உப்பமைப்போர்பெண்கள் - அளத்தியர்

உப்பளம்-அளக்கர், அளம், இருணம், உவர்க்களம், உவர்த்தரை, உவளகம், கழி.

உப்புவாணிகர்-அளவர்,உப்பர், உமணர்.

உமாபதிசிவாசாரியர் - உமாபதி தேவநாயனர், கொற்றங்குடியார், கொற்றங்குடிமுதலி, அந்தணர் பெருமான் எனவும்படுவர். தில்லைவாழந்தணர் மூவாயிரருள் ஒருவர் இவர் திருப்பெண்ணாகடத்தி லெழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவர்க்குச் சிஷ்யரான ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் மாணக்கராய் திருக்கடந்தை மறைஞான சம்பந்தநாயனரிடந் தீட்சைபெற்று, வேதசிவாகமாதிகலைகளில்வல்லவராய், ஞானமார்க்கத்தைக்கைக்கொண்டிருந்தனர். இருக்குநாளிலே உலகமுய்யும்படி சைவசித்தாந்தவுண்மைகளை யெல்லாந்திரட்டிஒவ்வோர் நூலாகத் திருவாய்மலர்ந்தருளினர். அவைகள் பதிபசுபாசம் என்னுந் திரிபதார்த்த லக்கணங்களை எடுத்துவிளக்கிற்கும் அவையாவன திருவருட்பயன், சிவப்பிரகாசன் வினாவெண்பா போற்றிப்பஃறொடை கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம் சங்கற்ப நிராகரணம் என்பனவாம். இவருட்சிவப்பிரகாசம் - ௧௦௧ - திருவிருத்தங்களையுடையது. இதற்குமதுரைச் சிவப்பிரகாசரும் காஞ்சிபுரம்பிள்ளையார்பாளயம் இலக்கணம் சிதம்பரநாதமுனிவரும் உரையிட்டனர். இந்நூலையாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை சாத்திரத்தலைவராயிருந்த "ஓயிசிங்றங்" என்னும் ஆங்கிலேய பாதிரி யொருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க, அமரிக்க கீழ்த்தேசசங்கத்தார் அச்சிற்பதிப்பித்திருந்தனர். சிவப்பிரகாசம் சாலிவாகன சகாத்தம் ௧௨௨௮ இலுத்தும், திருவருட்பயன் ௧௨௨௯ ம் - வினாவெண்பா ௸ முப்பதினும் போற்றிப் பஃறொடைமுப்பத்தொன்றினும், கொடிக்கவி முப்பத்திரண்டினும், நெஞ்சுவிடுதூது முப்பத்திமூன்றினும், சங்கற்பநிராகரணம் முப்பத்தைந்தினும், உண்மைநெறிவிளக்கம் ௸ சகாப்தம் ௧௨௩௪ (வருஷ)த்திலும் அருளிச்செய்யப்பட்டது. திருவருட்பயன் ௧௦௧ திருக்குறளையும், வினாவெண்பா-௧௩- திருவெண்பாக்களையும்போற்றிப் பஃறொடை ௯௫ அடிகளையும் கொடிக்கவி கலித்துறை யொன்றையும் திருவெண்பாமூன்றனையும், நெஞ்சுவிடுதூது கலிவெண்பாவாய்-௨௯௮ அடிகளையும்,உண்மைநெறிவிளக்கம், ௬ திருவிருத்தங்களையும் சங்கற்பநிராகரணம் இருபது திருவாசிரியங்களையுடையன. சேக்கிழார் நாயனர் செய்தருளிய பெரியபுராண சரிதம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு செய்யுளில் இயற்றித் திருத்தொண்டர் புராணசாரம் எனப் பெயரிட்டனர் அருண்மொழித் தேவராய சேக்கிழார் சரிதத்தையும் சேக்கிழார்புராணம் என்னு நூலாற் றெளித்தருளினர் சிதம்பரமான்மியத்தை விரித்துகோயிற் புராணம் எனப் பெயரிட்டுப்பாடி முடித்தனர். திருமுறைக்

கண்டபுராணம்என்னுநூலையும் திருப்பதிகோவை திருநட்சத்திரம் நாயன்மார்முத்தியடைந்த நாள் என்பவற்றையும் இயற்றினர். சிவபுண்ணியத்தெளிவு என்னுநூலையும் சிவக்ஷேத்திரநாமக்கலி வெண்பா என்னும் நூலையும் இயற்றினர். 'அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் குடியார்க்கெழுதியகைச்சீட்டுப் படியிசைப், பெற்றான்,சாம்பனுக்குப்பேதமறத்தீக்கைசெய்தே - முத்திகொடுக்கமுறை" எனச்சிவபெருமான்பாடியனுப்பியருளிய திருமுகமேற்றுப்பெற்றான் என்னும் புலையனுக்குமுத்தி கொடுத்தருளினர். இதனையாதசாம்பன் மனைவி யரசனிடஞ் சென்று, தன்புருடனை யாதோமோசஞ்செய்தனர் என்றுமுறையிடஅரசனிவரிடஞ் சென்று சந்தேகத்தை நீக்கி யருளவேண்டு மென்று பிரார்த்திக்க, அங்கணின்ற முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்தனர் என்ப, கோயுற், புராணம் அரங்கேற்றப்படாது பேடகத்துளிருக்கச் சபாநாயகர் மற்றைய அந்தணர்களது சொப்பனத்திற்றோன்றி, "நாம்கொற்றவன்குடி உமாபதியுடைய பெட்டகத்துளிருக்கின்றோம்'என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் விரைவில் அதனையரங்கேற்றுவித்தனர் எனவுங்கூறுப. இம்மகானுக்கு அருணமச்சிவாயதேசிகர் முதலாம்பலமாணாக்கருளர், இம்முனிவர் பெருமானைச் சிவஞானப் பெருஞ்செல்வ சித்தாந்ததீபமாகிய தாயுமான சுவாமிகள் "குறைவிலருள் ஞானமுதற்கொற்றங்குடியடிகளை மலர்த்தாட்கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ" எனத் தங்குருமரபினில் வைத்துத் துதிசெய்தாராயின் இவரது பெருமையையளவிடயார்க்கும் அரிதரிது சாலவுமரிதேயாம்.

உமை - ஆரியை, காமக்கோடி, அம்பிகை,நாரி,சத்தி,நாயகி, கௌரிதேவி, சாம்பவி, தருமச்செல்வி, மலைமகள், சங்கரி,மாதா,இமை,பரை,பராபரை, உருத்திரை,பார்ப்பதி, அந்தரி, சீலி, கன்னி,நிமலை,குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அபலை, இமயவதி, அயிராணி, அபிராமி, சமயமுதல்வி,தற்பரை, மனோன்மணி, உருத்திராணி, சிவை, அம்மை, அரனிடத்தவள், உலகமாதா,பவானி, புண்ணிய முதல்வி, கௌரி.

உம்பலென்னும்பெயர் - யானை, யாடு.

உயர்ச்சி- உகப்பு, உச்சம், உத்தரம், உத்துங்கம், உந்தி, உக்குதல், உம்பர், உரை, உவணம்,உவப்பு,உறை, உன்னதம்,ஊக்கம்,எழுமை,எக்கல், ஒக்கம், ஒழுதல்,ஒழுக்கம்,ஓங்கல்,சிகரம், சிறப்பு, சீர்,சேண்,துங்கம்,நிமிர்தல்,நிவப்பு, நிவர்தல், நீள்,பிறங்கல், புங்கல், புரை,பொங்கல், மிசை, மீ, மேக்கு, மேடு, மேம்பாடு, மேன்மை, மோடு, யோகம், வார்தல், ஓச்சல், மீச்செலவு, வரை.

உயர்ந்தபெண்ணும் இழிந்த ஆணுங்கூடிப் பிறந்தபிள்ளை-பிரதிலோமர்.

உயர்ந்தோர் - உலகம்.

உயர்ந்தவாணுமிழிந்த பெண்ணுங்கூடிப்பிறந்தபிள்ளை-அநுலோமர்.

உயிர்-அணு,ஆதன்,ஆவி, ஆன்மா, இயமானன்,உரவி,கூத்தன்,சிவன், செந்து,சேதனன்,பசு,பிராமணன், புற்கலன், பூதம், சார்போதன்.

உயிர்தருமருந்து-மிருதசஞ்சீவினி.

உயிர்த்தோற்றம்-பை, முட்டை, வியர்வை, வித்து, கொடி முதலியன இவற்றைமுறையே சராயுசம் விண்டசம், சுவேதசம், உற்பிசம் என்பர் வடநூலார்.

உயிர்ப்பு - ஆவி, கொறுக்கை, சுவாசம், தும்மல், மூச்சு.

உயிர்வாழ்தல்-உய்தல், உய்தி, சீவனம், சீவித்தல், பிழைத்தல், வாழ்தல்.

உயிர்வேதனை - அனல், சீதம், வாதம், அசனி,புனல்,ஆயுதம், விடம், மருந்து பசி, தாகம்பிணி முனிவுறமை எ[ன்பனவாம்.

உய்தல்-ஆற்றுதல்வலிதல்

உய்யவந்ததேவநாயனார் - திரிவியலூரிற் திருவவதாரஞ்செய்த காரணத்தினால்திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் என்ப. மெய்கண்ட சாத்திரம்பதினான்கனுள் ஒன்றாய் திருவுந்

தியார் என்னும் நூலை யியற்றினர். இதனில்நாற்பத்தைந்து பாக்களுள்ளன. இதற்குத் திருவாவடுதுறையாதீனத்துத் தில்லைசிற்றம்பலவர் என்னுஞ்சிவப்பிரகாசனார் உரைசெய்தனர். இவர்உத்தரபூமியினின்றுந்தக்கிணபூமியு ளுள்ளாரது ஆன்மலாபத்தினிமித்தம்சேதுவலைக்கும் யாத்திரைசெய்தலாவிக்காவேரி நதிதீரத்தில் வந்து எழுந்தருளியிருக்கும் காளிலே திருக்கடவூரிற் றோன்றியருளிய ஆளுடையதேவநாயனார்இவரைக்கண்டு ஓர் ஞானநூல் இயற்றவேண்டுமெனக் கேட்டபோது இத்திருவுந்தியாரையியற்றினர். இதனை "வையமுழுதுமலக்கயங்கண்டிடு முய்யவந்தானுரையுந்திபற ஒருபொருளாலேயென்றுந் தீபற" என்னுஞ் செய்யுளானறிக.

உரல் உனூகம்,எருந்து,கறை,நிட்டை.

உராய்தல் - உரிஞ்சல், உரோஞ்சல்.

உரித்து - ஆட்சி, ஆவணம், காணி, செழு,தகைமை,தகவு,தகுதி, தாயம், பாங்கு, பால்.

உரிமை-ஆட்சி இதம், உரித்து, ஒற்றுமை, காணி, கிழமை, குறிக்கோள், செழுதகைமை, தகவு, தகுதிபாங்கு, பால்.

உரிமையின்மை - அதிகம்.

உரியோர் - கிழவர்.

உருக்கு - எஃகு.

உருத்திரங்கண்ணர்-கடியலூரிற் பிறந்தமையால் "கடியலூர் உருத்திரங்கண்ணர்" எனப்பெயர்பெறுவர்இவர் பத்துப்பாட்டுள் ஒன்ருய் பெரும்பாணாற்றுப்படையைச் செய்தனர். அது ௫00. அடிகளையுடையது. தொண்டைமானிளந்திரையனைப் ;பாட்டுடைத்தலைவனுகக்கொண்டு ;கூறப்பட்டது. இவர்காலங்கடைச் சங்கத்தார்காலமே. இவர்செய்த நூலுக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசிநச்சினார்க்கினியர் உரைசெய்தனர்.

உருத்திரசன்மகண்ணர்-கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின் மருள் ஒருவர் திருவள்ளுவமாலைச் செய்யுளொன்று செய்தனர்.

உருத்திரசன்மர் - இவர்குமாரக்கடவுளின்திருவவதாரமாவுள்ளவர், மதுரைமாநகரிலே உப்பூரிகுடிகிழார் குலத்திற்றோன்றினவர். கடைச்சங்கத்துப்புலவரு ளொருவராயிருந்தார் அன்பினைந்திணையென்னும் அகப்பொருளியிக்கணநூலின் மெய்யுரையிதுவென்றுதெரிவித்தார். திருவிளையாடர்புராணத்திலே இவர்தனபதியென்னும் வணிகர்தவத்தால் அவர்க்குப் பிள்ளையாய்ச் சென்று வளர்ந்தனர். எனக்கூறப்பட்டிருக்கின்றது. திருவள்ளுவநாயனார் திருக்குறளை யரங்கேற்றும்போது அவருடன் அச்சங்கப்பலகையில்கூட யார் இருக்கவேண்டும்என்றுசந்தேகம் வந்தபோது "திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ-டுருத்தகுநற்பலகையொக்க விருக்க, வுருத்திரசன்மரென வுரைத்தவானி - லொருக்கவோ வென்றதோர்சொல்"என்று அசரீரியாற் குறிக்கப்பட்டார் இவரே. உருத்திரனுல்அடைந்த சன்மத்தை யுடையவர் எனப் பொருள்விரிப்பார் சிலர். சிவபெருமான் உமாதேவியார்க்குப் பிரணவஉபதேசஞ்செய்தருளிய காலத்தில்குமாரனார் ஒளித்திருந்து கேட்டதனுல் மதுரையில் மூங்கைப் பிள்ளையாய்ப்பிறக்கச்சபித்தார் எனவும், அதனுல்பூமியிற் றோன்றினார் எனவுங்கூறுப சர்மா என்பது பிராமணசாதிக்குரிய சிறப்புப்பெயராகலின் உத்திரனுகிய சர்மன் எனவும் உரைப்பதுமொன்று, எனவே வைசியப்பிராமணர் எனக்காட்டுவர்.

உருவுதல் - சிதகல்.

உரை-அத்தம், அருத்தம், சொற்பயன், பதம்,பாழி, அதுநால்வகையாம் அகலவுரை,கருத்துரை, பதவுரை, பொழிப்புரை.

உரைகல் - கட்டளை, கட்டளைக்கல்.!

உரைதல்-உராஞ்சல்,உராய்தல், உராய்போதல்,உரிஞ்சல். உரைஞ்சல், உரோஞ்சல், தேய்தல்.

உரைத்தல் - தேய்த்தல்.

உரைப்பொருள் - விரித்துரை, மெய்யுரை.

உரையுரைத்தல்-பயனுரைத்தல், மெய்யுரைத்தல், பிரித்துரைத்தல், அன்றியும் பதவுரையுரைத்தலின் பெயர் கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல்-பொழிப்புரைத்தல்.

உரோகணிநாள் - அயநாள், உருளி, உருள், உரோணி, ஊற்றல், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், மோனம், வையம்.

உலகத்தோற்றம் - புராண இலக்கணங்கள் ஐந்தனுளொன்று. அதாவது உலகத்தினுற்பத்தியைப்பற்றிக் கூறுவதாம்முதல்வனுணையாலே சுத்தமாயையினின்று அசுத்தமாயையும், அதினின்று காலதத்துவமும், நியதித்துவமும் காலாதத்துவமும் முறையேதோன்றும். இக்கலையினின்றும் வித்தியாதத்துவந் தோன்றி யறிவினைசிறிது உதிக்கப்பண்ணும் வித்தை, அராகம், புருடன் இவையொன்றினொன்றுமுறையேதோன்றும் அதன்பின் மூலப்பிரகிருதியானது கலையினின்றும்வருகின்றஅவ்வியத்தகுணவடிவாய் முதல்வனுணையாலே தோன்றிக் குணதத்துவத்தை யுண்டாக்க, அதினின்றும் புத்திதத்துவமும், அதினின்றும் அகங்காரதத்துவமு முதிக்கும். அது குணவேற்றுமைபற்றி பூதாதியகங்காரம் வைகரியகங்காரம், தைசதவகங்காரம் என மூவகைப்படும் அவற்றுள் தைசதவகங்காரத்தினின்றும் மனமும் ஞானேந்திரியங்களுந்தோன்றும் வைகரியகங்காரத்தினின்று கன்மேந்திரியங்கடோன்றும் ஞானேந்திரியங்களுக்கு விடயமாகச் சத்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம் என்பவைபொருந்தும். பூதாதி யகங்காரத்தினின்றும் மேற்சொல்லப்பட்ட சத்தாதி பஞ்சதன் மாத்திரைகளுந்தோன்றும். இத்தன்மாத்திரைகளி லிருந்து பிருதிவி முதலிய தூலபூதங்கடோன்றும். இதுவே சைவசித்தாந்தத்திற் கூறப்பட்ட முறையாகும்.

உலகவொடுக்கம் - முற்சொல்லியபடி ஒவ்வோர் காரியதத்துவங்களும் அதன்காரணத்தி லொடுங்குதலாம்.

உலகம்பதினான்கு - கீழுலகம்மேலேழுலகம் அவையாவன.—கீழேழுலகம்-அதலம், விதலம், சுதலம், தலாதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பனவாம். மேலேழுலகம் பூலோகம், சுவர்லோகம், சனலோகம், மகலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பனவாம்.

உலகின்பொது - அவனி, தலம், நாடு, புவனம், புவி, பொழில்.

உலக்கை - உரோங்கல், தடி, முசலம்

உலக்கைப்பாட்டு - வள்ளை.

உலண்டு - கீடம், கோற்புழு.

உலர்ந்தபுல் - திரணம்.

உலர்ந்தபூ - உணங்கல், சாம்பல், வாடம்

உலர்மரம் - வானம்.

உலாப்போதல் - சாரி, பவனி.

உலாவல்-அசைதல், தியங்கல், திரிதல், வழங்கல்.

உலைக்களம் - உலோகங்கள் உருக்குமிடம், உரவி.

உலைத்துருத்தி-அத்திரி, உதை, சிவிர.

உலைப்பு-அசைத்தல், மிறைத்தல், வேதனை.

உலைமூக்கு - குருகு, சிவை.

உலையாணிக்கோல் - சுட்டுக்கோல்.

உலோகக்கட்டி - ஆடகம், சுவணம், நகனை, மாழை, வங்காரம்.

உலோபன் - கிருபணன், பிசுனன்.

உல்லாசம் - அத்தவாளம், எகாசம், மிக்கோள், மேற்பார்வை, வடகம்.

உவகை-உகவை, ஓகை, களிப்புசந்தோஷம், பிரியம், பிரீதி, மகிழ்ச்சி, மாராயம், முத்தம், மோதம்.

உவகைப்பறை - தூரியம்.

உவந்தோனவிநயம் - உயர்ந்து இனிதாயுள்ள கண்மலருடைமையும், இனிமையானஉள்ளமுடைமையும், கோபமின்றியமுறுகலும், நகையுமுடையும் இருத்தலும் சோலை முதலியவற்றிற்சென்று விளையாடலுடைமையு முதலியனவாம்.

உவமை-இகல், இடை, இணை, ஈடு, உவமம், உறழ்வு, எதிர், ஒப்பு, கட்டளை, சங்காசம், சதிரிசம், சாம், சமானம், சன்னியம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், நேர், புரைபொருவு

பொருவுதல், போல், மலை, மானம் மான்.
உவமையின்மை - அநமானம், அதுலம், தனிமை.
உவமையுருபு - அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன்ன, உறழ, என்ன, எய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கறழ்வு, கேழ், சன்னியம், சேத்து, தக்கு, நிகர, நேர, புரைய, பொருவ, போல, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, வெள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மருப்ப, புல்ல, பொற்பு, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, துணைப்ப, அற்றுகாய்த்த.
உவர்க்களம் - உவளகம்.
உவர்த்தரை - இருணல், களிநிலம்.
உவர்த்தல் - இலவணம், உப்பு, பௌவம்.
உவர்நீர் - உறவுநீர், உறை.
உவ்விடம் - உம்பர், உவணை.
உவா - பூதநாதன், உம்பல், யானையரசு, களிறு.
உவாவாளி - அறுகு, பூட்கை.
உழக்குதல் - உழுதல், மடித்தல்.
உழவு - தொய்யில்.
உழிஞ்சில் - உன்னம்.
உழுந்து - மாடம், ஒருதானியம்.
உழுபடைச்சால் - சிதை.
உளி - இடங்கம், கணிச்சி.
உளு - உசு.
உள் - அகடு, அகணி, அகம்.
உள்ளங்கை - அகங்கை, அங்கை, குடங்கை.
உள்ளதுசிறத்தல் - களிப்பு, கூர்ப்பு.
உள்ளமிகுதி - ஆட்சி, ஆண்மை, ஆள்வினை, உத்தியோகம், உரம், உரன், உற்சாகம், ஊக்கம், சால்பு, சான்றாண்மை, தாளாண்மை, யோகம்.
உள்ளான் - உள்ளல், ஓர்பறவை.
உள்ளோசை - ஞெளிர், தெளிர், நரல்வு, நுழைவு, நுணுக்கம், முரல்பு, விழைவு.
உறவு - இருளை, இனம், உறவி, ஒக்கல, கடும்பு, கயிளை, கிளை, குடும்பம், கூளி, கேண்மை, கேள், சுற்றம், தொடர்பு, நட்பு, நண்ப, நள்ளி, பந்தம், பரிசனம், பாசனம்.
உறவோர் - அடைந்தோர், இருளை, இனத்தார், உரியோர், உற்றார், கிளைஞர், சார்ந்தோர், சிறந்தோர், சுற்றத்தார், சூழ்ந்தோர், தக்கார், தமர், நட்டோர், நள்ளியர், பரிசனம், பந்தினர். மேவினர் அன்றியுந் தந்தைவழிச்சுற்றம், தாயம் இல்வழி யுறவோர் ஞாதிகள். தாயத்தார் தாயாதிகள் குடியில் இறந்தோர் பெயர் - தென்புலத்தார் பிதிர்க்கள்.
உறி - சிக்கம், சிதர், சிமிலி, தூக்கு.
உறுதிச்சொல் - இடி, இடித்தல், கழறல், நெருங்கல்.
உறுதிப்படுத்தல் - தெருட்டல், வருட்டல், வற்புறுத்தல்.
உறுப்பு - அங்கம், அவயவம், காத்திரம் சினை.
உரைகாரர் - காட்டோடர், முச்சியர்.
உறையூர் - உறந்தை, கோழி.
உற்சவம் - சாறு, சேறு, துணங்கறல், முருகு, திருவிழா.
உற்சாகம் - உஞற்று, இயற்றல், உழப்பு, உத்தியோகம், ஆள்வினை, தாளாண்மை, தாள், முயற்சி, ஊக்கம்.
உற்பவம் - பிறப்பு, சனனம், தோற்றம்.

ஊ

ஊக்கம் - முயற்சி, உள்ளமிகுதி.
ஊசி - சூசி.
ஊசித்துளை - பாசம்.
ஊசிமுல்லை - தளவு, நைநிகை, மாகதி.
ஊடலைத்தீர்த்தல் - உணர்தல், ஒல்லல்.
ஊடல் - பிணக்கு, புலவி, துனி.
ஊதுகொம்பு - ஆம்பல், இரலை, கொம்பு, கோடு, வயிர்.
ஊமத்தை - உன்மத்தம், மத்தம்.
ஊமை - ஊமன், குணி, சொல்லிலி மூகன், மூகை, மூங்கை.
ஊரிலுள்ளார்உண்ணும்நீர் - உருணி.
ஊர் - அகலுள், அருப்பம், இருக்கை உறையுள், எயில், ஒழுக்கம், காடு, காண்டகம், குண்டம், குடி, குடிக்காடு, குப்பம், சும்மை, சேரி, நத்தம், நிவோகனல், பக்கணம், பட்டினம், பதி பாக்கம் பாடி, பாழி, புரி, பூக்கம், பூண்டிபூரியம், பேடு, முட்டம், மேடு

வாசம், வாழ்க்கை, வேலி, வைப்பு, அன்றியும், சிற்றூரின் பெயர்-சொச்சி, பட்டி, பட்டு, பள்ளி. இராஜதானியின் பெயர்-நகரம், பரம், புரி பட்டணம், நூறுகுடியூரின் பெயர் கிராமம் ஐந்நூறு குடியூரின் பெயர் பெருங்கிராமம் ஐந்நூறு கிராமங்கட்குத்தலைக்கிராமத்தின்பெயர் - மடப்பம். மலைகள்செறிந்த வூரின்பெயர் - கேடகம், மலையும்யகறும் சூழ்ந்த வூரின்பெயர்-கார்வடம் மலைமேலே றதிய வூரின்பெயர்சம்வாகம். பகைமேற் சென்றோ ருறைவிடத்தின் பெயர்-பாசறை, பாடிவீடு, முனைப்பதி அன்றியும் பகைவரூர் - பாழி. அன்றியுங் குறிஞ்சி முதலைந்திணையூரின்பெயர் தத்தம்வரியிற் காண்க.

ஊர்க்குருவி-கடலகம், சலிங்கம், கல்விகுலிங்கரி, சகடம், சடகம், புலிங்கம்.

ஊர்சூழ்சோலை - வனம்.

ஊழிக்காலம் - யுகமுடிவு, மடங்கல்.

ஊழித்திகடையனல்-தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை.

ஊழ் - உண்மை. தெய்வம், நியதி, வான்முறை, விதி.

ஊறுபுனல் - உறவி, ஊற்று.

ஊற்று - உறவி, ஊறல், மணற்கேணி.

ஊற்றுநீர் - ஊறுநீர்.

ஊன்-ஊழ்த்தை, ஊழ்த்தல், தசை, தடி, தூவு, பிசிதம், புண், புரணி, புலவு, புலால், புளிதம், வள்ளூரம், விடக்கு.

ஊன்விற்போர் - சூனர்.

ஊன்றுகோல்-ஊற்றுக்கோல், தண்டம், தண்டு, பற்றுக்கோல்.

எ

எச்சில் - உச்சிட்டம், எச்சம், சேடம், மிச்சில்.

எடுத்தலோசை-அகவல், குமுறல், கிருமித்தல், குளிதல். சிரற்றல், கௌிர்தல், தெளிரல், நரல்வு, கௌிதல், பயிறல், முக்கல், பிறற்றல், முரல்வு.

எடுத்தலோசைவகை - வளி.

எடுத்துக்கோள்வரி-தான் கையறவெய்திவீழ்ந்தானாக வீழ்ந்து, பிறர்எடுத்துக்கொள்ளும்படி நடித்தல்.

எட்டிமரம் - காளம், காஞ்சிரம், கோடரம், பதுகம், முட்டி.

எண் - கரணம், கணக்கு, கணிதம்.

எண்கார்புள்-சம்பரம், சரபம், சிம்புள், துரோணம், பெரும்பறை, வருடை, வாருண்டம்.

எண்கூட்டிப்பெருக்கல்-உறழல்அன்றியும், ஒற்றைபட வெண்ணல்-ஒன்றித்தல் இரட்டைபட வெண்ணல்-இரட்டித்தல்.

எண்டிக்கு-கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு. வடக்கு, வடகிழக்கு.

எண்டிசைப்பாலர்-இந்திரன், அக்கினி இயமன், நிருதி, வருணன். வாயு, குபேரன், ஈசானன்.

எண்டிசையானை - ஐராவதம் புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம். புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம்.

எண்டிசையோனி - கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, காகம், மான்.

எண்ணெய் தைலம், நேயம்.

எண்வகுப்பு-ஒன்றுமுதல் முப்பத்தாறுதானம் வருமாறு, அஃது.

(௧) ஒன்று - ஏகம்இரண்டு-உபயம் துவந்தம், துவி, மிதுனம், யுதம், யுகளம், யுகளி. மூன்று-திரி. நான்கு-சது ஐந்து-பஞ்சம். ஆறு-சடு. ஏழு-சத்தம். எட்டு-அட்டம். ஒன்பது - ஒன்பான், தொண்டு. நவம். (௨) தசம்-பத்து. (௩) சதம்-நூறு (௪) சகத்திரம்-ஆயிரம் (௫) ஆயுதம்-பதினாயிரம் (௬) நியுதம்-இலட்சம், நூறாயிரம் (௭) பிரயுதம்-பத்திலட்சம். (௮) கோடி - நூறுலட்சம் (௯) தசகோடி - தசகோடி (௧௦) சதகோடி நூறுகோடி (௧௧) அர்புதம், - ஆயிரங்கோடி (௧௨) நிகர்ப்புதம் - பதினாயிரங்கோடி (௧௩) கர்வம்-இலட்சங்கோடி. (௧௪) மகாகர்வம் - பத்திலட்சங்கோடி (௧௫) பதுமம்-கோடாகோடி (௧௬) மகா பதுமம்-பத்துக்கோடாகோடி (௧௭) சங்

கம்-நூறு கோடாகோடி (௧௮) மகாசங்கம்- ஆயிரங் கோடாகோடி (௧௯) கோணிபதினாயிரங்கோடாகோடி (௨௦) மகாகோணி - இலட்சங் கோடாகோடி (௨௧) நிதி-பத்திலட்சங் கோடாகோடி (௨௨) மகாநிதி - கோடி கோடாகோடி (௨௩)சோபம் - பத்துக்கோடி கோடாகோடி (௨௪) மகாசோபம் நூறுகோடி கோடாகோடி (௨௫) பராத்தம்-ஆயிரக் கோடி கோடாகோடி (௨௬) சாகரம்- பதினாயிரங்கோடி கோடாகோடி (௨௭) பரதம் இலட்சங்கோடி கோடாகோடி (௩௮) அசந்தியம்- பத்திலட்சங்கோடி கோடாகோடி (௨௯)அத்தியந்தம்கோடி கோடிகோடாகோடி (௩௦) அனந்தம் பத்துக்கோடி கோடி கோடாகோடி (௩௧) பூரி-நூறுகோடிகோடி கோடாகோடி (௩௨) மகாபூரி - ஆயிரங்கோடி கோடி கோடாகோடி (௩௩) அப்பிரமேயம் - பதினாயிரக் கோடி கோடி கோடாகோடி(௩௪) அதுலம்-இலட்சங் கோடி கோடி கோடாகோடி (௩௫) அகம்மியம்-பத்திலட்சங்கோடி கோடி கோடாகோடி (௨௬) அவ்வியத்தம் கோடி கோடி கோடி கோடாகோடி.

இன்னுமோர் வகையாவது:-

ஒருபலம் - தொடி.
துலாமிருபது - பாரம்.
காற்பலம் - கஃசு.
மாகாணிப்பலம் - வீசம்.
ஒன்று - ஏகம்.
பத்து - தசம்.
நூறு - சதம்.
ஆயிரம் - சகஸ்ரம்.
பதினாயிரம் - அயுதம்.
நூறாயிரம் - (இலட்சம்) நியுதம்.
பத்துநூறாயிரம் - பிரயுதம்.
கோடி (பிரயுதம்பத்து) தசபிரயுதம்.
அற்புதம்(கோடிபத்து) தசகோடி [ம்.
நிகர்ப்புதம் (அற்புதம்பத்து) தசாற்புத
கும்பம் (நிகர்ப்புதம்பத்து) தசநிகர்ப்பு
கணகம்(கும்பம்பத்து) தசகும்பம். [தம்.
கற்பம் (கனகம்பத்து) தசகனகம்.
நிகற்பம் (கற்பம்பத்து) தசகற்பம்.
பதுமம் (நிகற்பம்பத்து) தசநிகற்பம்.
சங்கம் (பதுமம்பத்து) தசபதுமம்.
சமுத்திரம் (சங்கம்பத்து) தசசங்கம்.
அந்தியம் (சமுத்திரம்பத்து) தசசமுத்திரம்.
மத்தியம் (அந்தியம்பத்து) தசாந்தியம்
பரார்த்தம் (மத்தியம்பத்து) தசமத்தியம்
பூரியம்(பரார்த்தம்பத்து) தசபரார்த்தம்
பிரமகற்பம் (பூரியம்பத்து) தசபூரியம்.

எண்வகைக்கணவகை - அறம், பொருள், இன்பம், வீடென்று சொல்லப்பட்ட இவற்றினது பாகுபாடமைய ஒரு நூலைச்சொல்லுங்காலத்து நீர், நிலம், தேயு, வாயு, அந்தரம், இயமானன், சூரியன், சந்திரன் என்று சொல்லப்பட்ட எண்வகைக்கணங்களு முதற்செய்யுளின் முதலிலமையைக் கூறவேண்டும்.

இவற்றுள் நீரின்கணவகை-நேர்நிரைநிரை. கூவிளங்கனி - நிலத்தின்கணவகை-நிரைநிரை நிரை கருவிளங்கனி. தேயுவின்கணவகை - நிரை நேர் நிரைபுளிமாங்கனிவாயுவின் கணவகை நேர்நேர்நிறைதேமாங்கனி அந்தரகணவகை - நிரைநிரை நேர்கருவிளங்காய். இயமானன் கணவகை-நேர்நிரை நேர் கூவிளங்காய். சந்திரகணவகை - நிரை நேர்நேர்புளிமாங்காய் இவ்வெட்டினுள்நிலம்நீர்,மதி, இயமானனாகிய தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்கனி, கூவிளங்கனிச்சீர்கள்முன்வரில் நன்றிமற்றைத்தேயுவாயு அந்தர சூரியகணங்களாகியதேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், கூவிளங்காய், முன்வரித் தீது.

எண்வகைமாலை-வெட்சி, கரந்தை வஞ்சி காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை. இவற்றுள்:-

வெட்சியாவது;-அரசனால் அனுப்பப்பட்டு முனைப்புலங்காத்திருந்த தண்டத்தலைவர் பகைநிலத்தே சென்று களவினாலே பசுக்கூட்டங்களைக் கவர்ந்துசென்று பாதுகாத்தலை யுடைத்தது. இது படையியங்கரவம் பாக்கத்துவிரிச்சி,புடைகெடப்போகிய செலவுபுடைகெடஒற்றினாகியவேய், வேய்ப்புறமுற்றினாகியவிறை, முற்றிய வூர்க்கொலை ஆகோள், பூசன்மாற்று, கோயின்றுய்த்தல், நுவலுழித் தோற்றம், தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு. கொடை எனப்பதினொன்கு வகைப்படும்,

வஞ்சியாவது:—இருபெரு வேந்தருட்டோற்றே னொருவன் ஒருவன் மேற்செல்லுங்கால் வஞ்சிமாலை யணிந்துசெல்வதாம். இதுமுல்லையெனப்பட்ட அகத்திணைக்குப் புறனும் இயங்குபடையரவம், எரிபரந்தெடுத்தல், வயங்கலெய்பெருமை, கொடுத்த லெய்திய கொடைமை,அடுத்தூர்ந்தட்ட கொற்றம், மாராயம் பெற்றநெடுமொழிபொருளின் றுய்த்தபேராண்பக்கம் வருவிசைப்புனலைக்கற்சிறைபோல ஒருவன் தாங்கியபெருமைபிண்டமேய பெருஞ்சோற்றுநிலை, வென்றோர்விளக்கம்,தோற்றோர்தேய்வு,குன்றாச்சிறப்பிற்கொற்றவள்ளை,அழிபடைதட்டோர்தழிஞ்சி எனப் பதின்மூன்று துறையினை யுடைத்து.

உழிஞையாவது:-வேற்று வேந்தனுடையஅரணைச்சென்றேவேந்தன்வளைத்தலும், இருந்தவேந்தன் காத்தலுமாகிய இருவழியானவிலக்கணத்தையுடைத்து. இது மருதமாகிய அகத்திணைக்குப்புறனும்கொள்ளார்தேசங் குறித்த கொற்றம்,உள்ளியது முடிக்கும்வேந்தன்சிறப்பு, தொல்லெயிர்இவர்தல் தோலின்பெருக்கம், அகத்தோன்செல்வம், முரணியபுறத்தோன் அணங்கியபக்கம், திறப்படவொருதான் மண்டியகுறுமை, உடன்றோர்வருபகைபேணார் எயில்கூறல் எனஎட்டுவகைத் துறையையுடைத்து.முரசவுழிஞையெனவும் வேறோர் வகை கொள்ளலுமொன்று.

தும்பையாவது:—உலகம் புகழ்தலையே பொருளாகக்கொண்ட அரசன் வேறோர்வேந்திடஞ்சென்று அவன்றலைமைதீர்க்குமிதக்கணத்தையுடைத்து இது நெய்தலென்னும் அகத்திணைக்குப்புறனும். களங்குறித்துப் போர்செய்யும் வெட்சிப்புறத்தும்பை வஞ்சிப்புறத்தும்பை, உழிஞைப் புறத்தும்பையெனவும்பாகுபாடுபெறும் கோனருட்குழூவணிலை, தார்நிலை இருவர்தலைவர் தபுதிப்பக்கம்,கூழைதாங்கிய வெருமை, படையறுத்துப் பாழிகொள்ளுமேமம்,களிறெறிந்தோர்பாடு, களிற்றொடுபட்ட வேந்தனையட்டவேந்தன் வாளோர் ஆடுமமலை, இருபெருவேந்தருஞ்சுற்றமு மொருவருமொழியாத் தொகைநிலை, எள்வாள்வீசிய நூல்எனப்பன்னிருவகைப்பட்ட துறவினையுடைத்து.

வாகையாவது:— நான்குவருணத்தாரும்அறிவரும்தாபதர்முதலினோரும் ஒழுக்கத்தானே தம்மை மிகுதிப்படுத்தலாம். இது பாலைத்திணையென்னும் அகத்திணைக்குப்புறமாகும் அறுவகைப்பட்டபார்ப்பனப்பக்கம், ஐவகைமரபினரசர்பக்கம், அறுவகைப்பட்ட வேளோர்பக்கம்,அறிவின்தேயம், தாபதப்பக்கம், அறிமரபிற்பொருநர்பகுதி எனவெழுவகைத்துறையை யுடைத்து.

காஞ்சியாவது:—அறம் பொருளின்பமாகிய பொருட்பகுதியாலும், அவற்றுப்பகுதியாகிய உயிரும்யாக்கையுஞ்செல்வமுமிளமையுமுதலியவற்றாலும் நிலைபேறில்லா வுலகியற்கைப்பொருந்திய நன்னெறியினையுடைத்து. இது உரிப்பொருளல்லாத பெருந்திணைக்குப்புறனும். மாற்றருங் கூற்றஞ்சாற்றியபெருமை, கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டியமுதுமை, புண்கிழித்துமுடியுமறம், புண்ணோனைப்பேயோம்பியபேய்ப்பக்கம், இரங்கியமனை, வஞ்சினக்காஞ்சி, தின்னுதல்கடிந்த தொடாக்காஞ்சி அஞ்சினக்காஞ்சி, முதுகுடிமகட்பாடு அஞ்சியமகட்பால், சோதிக்கொண்டோன் தலையொடு முடிந்தநிலையெனப்பத்து, வகைப்படும்.

எதிர்த்தல் - எதிரூன்றல், எதிர்த்தல், ஏற்றல்,கிடைத்தல், கிட்டல், தலைப்படல், தாக்கல், நேர்தல், மலைதல்,முடுகல், முட்டுதல், மோதல்.

எதிர்மொழி - உத்தரம், விடை.

எப்பிறப்பு - எம்மை.

எப்பொருட்கு மிறையோன்-அதிபன் அரசன்,ஆதி,ஆதிபன்,ஈசன், காந்தன்,கொழுநன், கோன், செம்மல்,நாதன், நாயகன், பதி,பிரான், பெருமான், மன்னன்.

எப்போழ்தும் - அவிர்தம், அனவரதம், அனாரதம்,என்றும்,சத்தம்,சதா, சந்தம், சர்வதா,நித்தம், நிரந்தரம்.

எயிறு - விளிம்பு, தந்தம், மூரல், பல்.

எருக்கு-அருக்கம்,அருச்சுனம்,அர்க்கம்.

எருது-இடபம், இருல், ஏறு, குண்டை, கூளி, கொட்டியம், கோ, சே, நந்தி, நூபம், பகடு, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், போத்து, மூரி, விடபம், விடை. அன்றியும், பொதியெருதின்பெயர்-தூரியம், தூர்வகம், பகடு, யாறல். பொலியெருது - கூளி.

எருத்தின்றிமுல்-அக்கு, இமில், முறிப்பு

எருமை-கவரி, காரா, காரான், சயிரிபம், தேனு, மகிடம், மூரி, மேதி, வடவை. இதன்பெண்-ஆநாகு, இதன்பிள்ளை கன்று, குழவி இதன்மடிசெருத்தல், இதன்மலடு - மைமை.

எருமைக்கடா-உம்பல், ஏறு, ஒருத்தல், பகடு, போத்து.

எலி - ஆகு. எலியம் - சிகரி.

எலுமிச்சை-அருணம், இலிகுசம், சதாபலம், சம்பீரம், முருக்கு.

எலும்பு-அக்கு, அங்கம். அத்தி, என்பு, கனேபாம். அன்றியும், தசைகழிந்த முதுசெலும்பின்பெயர் - கங்காளம், கெட்டை, முழுவெலும்பு.

எல்லாம்-அகண்டம், அகிலம், அடங்கல், அடையல், அடைவ, அனைத்தும், எவையும், ஒருங்கு, சகலம், சமத்தம், சமம், சர்வம், நிகிலம், பூரணம், முடியல், முழுதும், முற்ற, முற்றம், யாவும்.

எல்லை-அவதி, அளவை, எணி, கரை, காடு, கொத்தம், பரியந்தம், வரப்பு, வரம்பு, வரைவு.

எவ்விடம்-எங்கு, எம்பர், எவண், யாங்கு யாண்டு யாண்டை.

எழாலும் - மயிலுமொழிந்த பறவையினுண் - சேவல்.

எழால் - மயிலென்னுமிரண்டினுண்பெயர் - போத்து.

எழிற்கை - அழகுபெறக்காட்டுங்கை.

எழுகடல்-உப்பு, தேன், கருப்பஞ்சாறு, தயிர், நெய், பால், சுத்தோதகம்.

எழுச்சி-அகைத்தல், இவர்தல், உம்பல், உறுமல், எழ்பு, ஒழுகல், ஓங்கல், கஞநல், கதித்தல், கலித்தல், கோப்பு, பம்பல், பாச்சல், பொலிதல், மறல்.

எழுதல்-கிறுக்கல், கீறல், தீட்டல், தெரித்தல், பொறித்தல், வரிதல், வரைதல்.

எழுநீவு-நாவல், இறலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்காம்.

எழுதுகோல்-கோல், துகிலிகை, தூரியம்.

எழுதுவோன் - இலேசகன்.

எழுத்தாணி-ஆணி, இலேகினி, ஊசி, ஓலை, தீட்டும், படை, பண்டம்.

எழுத்தின்சாரியை-காரம், காரம், கான், அகரம், எனம்.

எழுத்து-அக்கரம், அஷரம், இரேகை, இலேகை, பொறி, வரி.

எழுத்துப் பொருத்தவகை - நல்லகணமென்றும், நிலநீர்மதி இயமானன் என்பவற்றுளொன்றாய்வரும் மூவகைச்சீர் நான்கும் வல்லெழுத்தேயன்றி, மெல்லெழுத்து முதற்சீராகவரத் தொடுக்கூடா, எவ்வகைப்பட்டசெய்யுளுக்கு நற்கணம் வகையால் வருமூவகைச்சீரே முதற்சீராய்பாடவேண்டும்.

எழுபத்திராயிரநாடிநிலை - மூலாதாரக்கண்ணுள்ள இந்நாடிகள் பீர்க்கம்பூக்கூட்டின்மூன்று கண்ணும்போல இடை, பிங்கலை, சுழுமுனையென்னும் மூன்றுநாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனையொழிய இரண்டு மூக்காலும் ஒவ்வோர்பாரிசத்து ஐந்துநாழிகையாகக் கொண்டு ஒருமாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாசமாய் ஒரு சுவாசத்திலே பன்னிரண்டங்குலிவாயுப்புறப்பட்டு நாலங்குலிதேய்ந்து எண்விரலடங்கும் பிராணவாயுவாகச்செறிந்துநிற்கும் என்க.

எழுநரகங்கள்-கூடசாலம், கும்பிபாகம், அன்னல், அதோகதி, ஆர்வம், பூதி, செந்து என்பனவாம்.

எழுபிறப்பு-எழ்பவம்இவைதேவர், மனிதர், விலங்கு, பறவை ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவாம்.

எழுப்பில்-எடுப்பல், எற்றல், கிளப்பல்.

எழுமலை-கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், நீலகிரி, என்பனவாம்.

எழுமேகம்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பனவாம். இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீயென்னும் மழைகளைப் பொழிவனவாம்

எழுவகைத்தாது-இரத்தம், உதிரம், என்புதோல், தசை, மூளை, சுக்கிலம் என்பனவாம்.

எழுவகைநதி-கங்கை,யமுனை,நருமதை சரசுவதி, காவிரி, குமரி,கோதாவரி.

எழுவகை நரகவட்டம்-பெருங்களிற்றுவட்டம், பெருமணல்வட்டம், எரிபரல்வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், பெருங்கீழ்வட்டம், இருள் வட்டமென்பனவாம்.

எழுவகைப்பெண்பருவம் - பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். இவற்றினாண்டாவன-முறையே ௭, ௧௧, ௧௩, ௧௯, ௨௫, ௩௧, ௪௦ ஆகும்.

எழுவகையோனிபேதவிரிவின்-பெயர் தேவர் பதினான்கு நூறாயிரயோனி பேதம், மக்களொன்பது நூறாயிர யோனிபேதம், தாவரம் இருபது நூறாயிரயோனிபேதம், ஊர்வன பதினொருநூறாயிர யோனிபேதம், நீர் வாழ்வன பத்துநூறாயிரயோனி பேதம், விலங்குபத்துநூறாயிரம். பறவைபத்துநூறாயிரம் ஆக எண்பத்துநான்குநூறாயிரயோனிபேதமாம்.

எளிமை-எண் எண்மை, தஞ்சம்.

எள் - எண், திலம், நூவு, வெள்ளெள்ளின்பெயர்-குமிகை. இளங்காயின் பெயர் - கௌவை. [து.

எள்ளினளவு - இம்மியெட்டுக்கொண்ட

எறிச்சலூர்மலாடனார் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின் மருள் ஒருவர். இவர் ஊர் எறிச்சலூர் எனத் தெரிகிறது "பாயிர நான்கில் லறமிருபான்பன் மூன்றே தூயதுற வறமொன்றூழாகவாய, அறத்துப் பானால் வகையாவாய்ந்துரைத்தார் நூலின் றிறத்துப்பால் வள்ளுவனார் சேர்ந்து" என்று திருவள்ளுவமாலைக்குச் சிறப்புக்கவி சொற்றுளார்.

எறிதல்-இடுதல், ஏற்றல்,ஒச்சல் செலவிடல். விடுதல், விலக்கல், வீசுதல்.

எறிமணி - சேகண்டி.

எறியாயுதம்-எஃகம், தோமரம்,பிண்டிபாலம், பீலித்தண்டு.

எறும்பு-உறவி,பிபீலிகை, பிலஞ்சுலோபம். இழன்பேதம் - ஞகை.

ஏ

ஏகதாளம் - ஒரொத்துடையதாளம், அரைமாத்திரைகொண்டது.

ஏகம் - தனிமை,-ஒன்று.

ஏகபாதம் - ஓரிருப்பு கூத்து விகற்பத்தொன்று.

ஏகம்பவாணர்-இவர் ஓர்பண்டிதரெனக்கூறுவர். கம்பநாடன் காலத்திலே இருந்தார் என்பதற்கு ஐயமில்லையாம்இவர்வாணன்என்னும் ஒருவேளாளப்பிரபுவின் மைந்தர் தென்னாட்டில்வசித்து ௧௦௦௦-ஏர்வைத்து உழவுத்தொழில் செய்த ஒரு வேளாளனுக்குவாணன் என்றபெயர். அவன் மனைவி ஓராண்பிள்ளையைப் பெற்று இறந்தனள் வாணன் தனக்கும் அந்தியகாலம் நேரிட்டதை யுணர்ந்து தன் பண்ணைக்காரருள் ஒருவனாய ஏகன் என்னுஞ் சாம்பானைக்கூவித் தன்புதல்வனை யவனிடமொப்புவித்து உன் பிள்ளைபோல இவனைப்பாதுகாத்தல் நின்கடமை கொல்லையிலே திரவியம் இருக்கிறது என்று இறந்தனன். ஏகன என்னுஞ் சாம்பானோ ஒரு வேளாளனை யேற்படுத்திப் பாலனுக்குச் சோறூட்டிவித்து வளர்த்துக் கம்பரிடங் கல்வி கற்க விடுத்தனன். பருவகாலத்திலே தகுந்த குடும்பத்திலேயோர் பெண்ணையும் விவாகஞ்செய்துவைத்திறந்தான். அப்புதல்வன் றன்னைவளர்த்த சாம்பான் இறந்தமையால் அதிகவருத்தமுற்றுச்செய்யவேண்டியகிரிகைகளையுஞ்செய்து நிறைவேற்றினன். அதன்பின் அவ்வாலிபர்தந்தைபோலிருந்து தன்னையன்புடன் வளர்ப்பித்த ஏகன் சாம்பான்என்னும்நாமத்தில் ஏகன் என்னும் முதற்பதத்தையுந்தன் ஆசிரியரான கம்பரின்நாமத்தை மத்தியிலும் தந்தையின்பெயரை கடைசியிலுமவைத்து ஏககம்பவாணன் என்னும் பெயரைத் தனக்குவைத்துக்கொண்டார் அது ஏகம்பவாணன் எனமருஉவிற்று. இவர் கவிபாடுவதின் மகா சாமர்த்தியராம்.

ஏகம்பவாணன்மனைவி-இவர் சொல்லப்பட்டவாணனது மனைவியான ஒரு பண்டிதை. தன் புருடன் ஒருநாட் கழனிக்குப் போயிருந்த காலத்துச் சேரசோழ பாண்டியர் என்னு மூவரும் ஏகம்பவாணனைக் காணுமாறு அவன் வீட்டிற்குவந்து, முதலியார் யாண்டுப்போயினர் என வினவ அவன்காதலியாகிய இப்பண்டிதை. அவர் கழனிக்குப் போயினர் என உத்தரமனுப்ப, அரசர்கள் கேட்டு, ஆ,ஆ,, "முதலியார் முடிநடப்போயினரா" என்று உழவுத் தொழிலையிழித்துப்பேச அச்சுடுசொற்கள் காதில்விழப்பெற்ற பதிவிரத சிரோமணியாகிய இம்மாது பெருங்கோபமுற்று அரசர் என்றதையும் பாராமல் "சேனைதழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி- யானைமிதித்த வருஞ்சேற்றின்-மானபரன் பார்வேந்தனேகம்பவாணன்பறித்துநட்டான் மூவேந்தர்தங்கண் முடி" என்னும் பாடலைவரைந்து உடனேயரசர் சமுகத்திற் கனுப்பினராம். அரசர்கள் அதனைப்பார்த்தவுடனே யதிக சந்தோஷமும்வெட்கமுமுற்றுத் தத்தம்பதியேகினர். பின்னர்த்தனது நாயகன் வீட்டுக்குவந்தழி நடந்த வரலாற்றையெல்லாஞ்சொல்லவாணன் ஒரு பூதத்தின் சகாயத்தால் அவர்களைச் சிறைப்படுத்தி அவர்கள் பகுதிகொடுப்ப ஒப்பியபின் சிறையினின்றும் விடுத்து ஆண்டனன் என்ப.

ஏகம்பன்-ஏகம்பநாதன், ஏகன், ஏகாம்பரன், கம்பன், கம்பநாதன் எனவும் பெயர். இவைகாஞ்சிபுரத்தி லெழுந்தருளியிருக்குஞ் சுவாமிபெயர்.

ஏகலைவன்-பாண்டவர் இருந்த காலத்துள்ள ஒருவேடன். இவன் துரோணரிடஞ்சென்று வில்வித்தைகற்றுக்கொடுக்கும்படி பிரார்த்திக்க அவர் வீட்டுமராதியரின் அபிப்பிராயப்படிமறுத்தனுப்பினர். அகன்றவனு யஇவன் தானிருக்குமிடஞ்சென்று ஆண்டுத்துரோணரைப்போல ஒருருவஞ்செய்துஅத்தியந்த அன்புடனேயவர் கற்பிப்பதுபோலத் தன் மனத்தே பாவகம்பண்ணிக் குருவழிபாட்டின் மிகுதியினாலே தேர்ந்து விசயனைப்போல விளங்கினன். பின்னர்த்துரோணர் ஒரு கபடங்காரணமாக அழைப்பித்து உனது பெருவிரலை யெனக்குக் குருதக்கிணையாகக் கொடுவென்னத்தடையின்றிக் கொடுத்தனன் என்று மகாபாரதங் கூறுகின்றது.

ஏகாதசி - பதினோராந்திதி.

ஏகாதசிநோன்பு-தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்திற்றோன்றிய ஆலகாலத்தைச் சிவபெருமான் தேவஸ்திரீகளின் மங்கலநாண் நிலைபெறும் பொருட்டாக உண்டு கண்டத்திலடக்கினர். அத்தினம் ஏகாதசியாம். அற்றையிரவு முழுதும் தேவர்கள் சிவபெருமானைப்பூசித்து நற்பேறு பெற்றனர். இதனை "பொங்குங் கங்காதரன் காளமயின்றே யொன்றும் புகலாமலிருந்தனன்" எனவருஞ்சகலாகமத்திரட்டுச் செய்யுளா னறிக. இதுயாவரும் அநுட்டிக்கவேண்டிய விரதமாம்.

ஏகாதசிநோன்புப்பலன்-புரூரவாகு என்பவன் அநுட்டித்துத் தன் விலங்குருவொழிந்து சக்கிரவர்த்தியாயினன். அயோத்தி நகரத்திருந்தரசாண்ட உருக்குமாங்கதன் அநுட்டித்துப் பரமபதமடைந்தான். அவனேவற்பெண்ணொருத்தி யநுட்டித்து ஓராமகன் கொம்மட்டிக் கொடியிற் சிக்குண்டுநின்றமையைவிலக்கித்தேவலோகஞ்செல்லவிடுத்தனள் அம்பரீடனென்பவன் அநுட்டித்து உலகையொருகுடையினாண்டு வைகுந்தமடைந்தான். வீமன் அநுட்டித்து நினைத்ததுபெற்றான். மற்றையோர் சரித்திரங்களை மேற்கூறுதும்.

ஏகாதசிபுராணம்-இஃது சொற்சுவை பொருட்சுவைகளா னிறைந்துள்ள ஓர் காப்பியம், யாழ்பாணத்துச் சுன்னாகப்பதியி லெழுந்தருளியிருந்த வரதராஜபண்டிதர் அவர்களாற் செய்தருளப்பட்டது. சைவர், வைணவர் ஸ்மார்த்தர் முதலாயினோர் அநுட்டிக்கவேண்டிய ஏகாதசியின் கூறு

பாடுகளையும், அநுட்டித்தார் பெற்ற பேறுகளையும் எடுத்து விளக்குவது. கடவுள்வாழ்த்து, காலநிர்ணயச்சருக்கம்,உருக்குமாங்கதச்சருக்கம், வீமேகாதசிச்சருக்கம் எனநான்குபாகங்களையுடைத்து, மூந்நூற்றைம்பத்தெட்டுச் செய்யுள்களையுடையது. காருடபுராணம், சூரியசித்தாந்தம், பிரமகைவர்த்தம், ஆக்கினேயம், விஷ்ணுபுராணம், பவிடியபுராணம், பதுமம், பிரமபுராணம், கந்தபுராண முதலிய நூல்களிலிருந்துகண்ணுவர், உத்தாலகர், சனற்குமாரர், காத்தியாயனர், பிருகற்பதி, மார்க்கண்டர், வியாதர், சேடர்,தேவலர்,கபிலர்,பயிட்டனசி, யாக்ஞியவற்கியர், இருசியசிருங்கர் முதலாயினோர்சொல்லிய சாரங்களையெல்லாம் வித்தியாரணிய முனிவர் திரட்டியோர் நூல்செய்தனர். அதனையுங்கொண்டு இயற்றினர்.

ஏகாதசிமாதவிரதம் - பன்னிருமாதங்களிலேவருகின்ற இருபக்க ஏகாதசிகளின்பெயரும் அநுட்டித்தார் பெயரும் வருமாறு.

ஏகாதசிவிரதம்- அநுட்டிப்போர் மார்கழிமாதத்திலேபூருவபக்கத்தில்வரும் ஏகாதசியையே முதலாகக்கொண்டு அநுட்டிக்கவேண்டும் ஆதலின்அது ஆரம்பஏகாதசியெனப் பெயர்பெறும். முற்காலத்துநாடிசங்கன் மகனாயமுரு என்னும் அசுரனுக்குத் தோற்றோடிய இந்திரன், திருமால் சமுகத்திற்சென்று முறையிட அவரது திருமேனியினின்றும் ஓர்சத்தி பெண்ணாகத் தோன்றி அவ்வசுரனைக் கொன்று இந்திரனதியிமையவர் துன்பத்தை யிரியச்செய்தனள். அதனால் அச்சத்தியானவள்ஏகாதசியென்னும் பெயருடையவளாய், அத்தினத்தையும் ஏகாதசியெனநோற்பிக்கும் வரத்தையும் பெற்றாள். மற்றைய அபரபக்கத்தவரும் ஏகாதசிக்கு மோக்ஷஏகாதசியென்று பெயர் இதனைக் கோகுலபுரத்து வைகானசர் என்னும் இராசவிருடியநுட்டித்து முத்தியடைந்தனர்.

தைமாதத்திலே பூர்வபக்கத்தில் வரும் ஏகாதசிக்கு புத்திரதா ஏகாதசியென்று பெயராம். இதனைப் பத்திரவதி புரக்கணிருந்த சுகேது என்னும் அரசனும்,அவன்தேவியாய சைப்பியா என்னும் அரசியும் அநுட்டித்துப் புத்திரப்பேற்றையடைந்தனர். அபரபக்கத்துவருவதற்குச் சபலஏகாதசியென்றுபெயர். இதனைச்சம்பகாவதிபட்டினத்து அரசகுமாரனாய் லுகலன் உபாசித்துத் தத்துவஞானஞ் சாரப்பெற்று முத்தியடைந்தான்.

மாசி மாதத்திலே பூருவபக்கத்து வரும் ஏகாதசியை சயஏகாதசி என்று கூறுவர். இதனைக் கந்தருவகுலத்துமாலியவானும், அவன் மனைவியான புட்பவதியும் அநுட்டித்து இந்திரன் சாபத்தானேர்ந்த பிசாசவடிவுநீங்கப் பெற்றனர். அபரபக்கத்துவரும் ஷட்டில ஏகாதசியை ஓர்பிராமண நங்கை நோற்று இட்டசித்தி யெய்தப் பெற்றாள்.

பங்குனிமாதத்திலே பூருவபக்கத்துவரும் ஏகாதசிக்கு ஆமலக ஏகாதசியென்றுபெயர். இதனை வைதிசநகர்ச்சசபிந்து மன்னனும், சயந்திபுரத்துவீரவேந்தனும் நோற்றவேண்டியபெற்றனர். மற்றைய அபரபக்கத்துவருகின்ற விசய ஏகாதசியை இராமசந்திரர் உபாசித்துஇராவணவதஞ்செய்து சீதாபிராட்டியையுஞ் சிறைமீட்டு அரசாட்சிபெற்றனர்.

சித்திரைமாதத்திலே பூர்வபக்கத்தில்வரும் ஏகாதசிக்குக் காமதா ஏகாதசியென்றுபெயர். அதனைநாகலோகத்திருந்த லலிதன் என்னுங் கந்தருவன் அநுட்டித்துப் புண்டரீகன் என்னும் அரசன் சாபத்தாலடைந்த இராக்கதரூபம் மாறப்பெற்றான். மற்றைய அபரபக்கத்தாய பாவமோசன ஏகாதசியை மஞ்சுடாவென்னுந் தேவ கன்னிகையநுட்டித்துப் பாவங்கள் தொலையப் பெற்றாள்.

வைகாசிமாதத்து பூருவபக்கத்தில் வரும் மோகினி ஏகாதசியை துதிமான்என்னும் அரசனும், திருட்டபுத்தி என்னும் வைசியனும் நோற்றுப் பரம

பதமடைந்தனர் அபரபக்கத்து வரூதினி ஏகாதசியை அநேக மகாபாதகர்கள் அநுட்டித்து வைகுண்டபதவி யடைந்தனர்.

ஆனிமாதத்திலே பூர்வபக்ஷத்துப் பொருந்தும் பாண்டவ ஏகாதசியை பாண்டவர்கள் அநுட்டித்துக் கண்ணமூர்த்தியைத் துணையாகக் கொண்டனர். மற்ற அபர ஏகாதசியில் நித்திரைகொள்ளாத அநேகமாக பாதகர்கள் திருவருள்பெற்று வைகுண்ட மடைந்தனர்.

ஆடிமாதத்துவரும் பூருவபக்கத்துப்பதும ஏகாதசியைமாந்தாதா என்னுஞ் சக்கிரவர்த்தி யநுட்டித்துமழை பெய்வித்துத் தேசவளப்பஞ்செழிக்கப் பரிபாலனஞ்செய்தான். அபரபக்கத்துவரும் யோகினி ஏகாதசியை இயக்கனாய எமமாலியும், அவன் மனைவியான விசாலாட்சி, சுருபை யென்பவர்களும் அநுட்டித்துக் குபேரனால்நேர்ந்த சாபநிவாரணம் பெற்றனர்.

ஆவணிமாதத்திலே பூருவபக்கத்துவரும் ஏகாதசிக்கு நந்தன ஏகாதசியென்று பெயர். அதனைமகிசித்தராசன்என்பவன் நோற்று மகப்பேறடைந்தான். அபரபக்கத்துவரும் ஏகாதசிக்குக்காமிக ஏகாதசியென்றுபெயர். அத்தினத்திற் பசியாயிருந்து உயிர்நீங்கிய பஞ்சபாதகர் யாவரும் பரமபதஞ்சேர்ந்தனர்.

புரட்டாதிமாதத்திலே பூருவபக்கத்துவரும் ஏகாதசிக்கு வாமன ஏகாதசியென்றுபெயர். இதனை யுபாசித்த விரோசனகுமாரனாய மாவலிச்சக்கிரவர்த்தி யநுட்டித்து இன்புற்றான். மற்றைய அபரபக்கத்து ஏகாதசிக்கு அசா ஏகாதசியென்று பெயர் இதனையரிச்சந்திரமகாராசன் நோற்று இராச்சியங்கொண்டான்.

ஐப்பசிமாதத்திலே பூருவபக்கத்துவரும்ஏகாதசிக்குப்பாசாங்குச ஏகாதசியென்றுபெயர். இதனைத் தருமராசன்மெய்யன்புடனோற்றுத் தருமத்திற்கு அதிபதியானான். மற்றை இந்திர ஏகாதசியை இந்திரசேனன் அநுட்டித்து தன்தந்தைக்குச் சுவர்க்கங் கொடுத்தான்.

கார்த்திகைமாதத்தும் பூருவபக்கத்து ஏகாதசியாகிய பிரபோதினி ஏகாதசியே சிறப்புடைத்து. இத்தினத்திற்றான் அரிமூர்த்தி அறிதுயிலொருவி யெழுந்திருப்பர். இதனிற் போகமுத்தியடைந்தார் தொகையைப் புகலுதலரிதேயாம் மற்றையது இரமா ஏகாதசியாம் இதனைச் சந்திரபாகையென்னும் இராசகுமாரியநுட்டித்துத் தன்காதலனையடைந்து வாழ்ந்தாள். இது ஏகாதசி புராணத்தினின்றும் எடுக்கப்பட்டது.

ஏகாதசிவகை-சொல்லப்பட்ட ஏகாதசிகளுடன் பரம ஏகாதசி, பதுமினியேகாதசி, கௌசிகயேகாதசி, கைசிகயேகாதசி, சர்வசிவேகாதசி தத்தவேகாதசிகளுமுண்டு.

ஏகாந்தம் - ஒருவந்தம், தனியிடம், வேறிடம்.

ஏசுமதநிராகரணம்-துறைமங்கலஞ் சிவப்பிரகாச சுவாமிகள் செய்தருளிய கிறிஸ்துமதகண்டன நூல். [மை.

ஏட்டையென்னும்பெயர்-எருக்கு, எரு

ஏணி-இறைவை, கடவை, சேணி,அன்றியுங் கண்ணேணி-மால்பு.

ஏமாப்பு-எக்கழுத்தம், செம்மாப்பு,இறுமாப்பு, அகங்காரம்.

ஏயர்கோன் - கலிக்காமநாயனார்அறுபான்மும்மை யடியார்களி லொருவர். பெரியபுராணமென்னுந் திருத்தொண்டர் புராணத்தில் அவர்சரிதத்தைக்கண்டுதெளிக. அவர் முத்தியடைந்ததினமாகிய குருபூசை நட்சத்திரம் ஆனிமாதத்து அசுவினி நட்சத்திரமாம். கலிக்காமநாயனார் எனவும் பெயர்பெறுவர்.

ஏரகம்-திருவேரகம்,சுவாமிமலை இஃது சுப்பிரமணியக் கடவுளின திருப்படைவீடு ஆறனுளொன்று. அருணகிரிநாத சுவாமிகளாற் புனையப்பட்டுள்ள திருப்புகழுடையது.

ஏரண்டத்தைலம்-ஆமணக்க முத்து முதலியவற்றாற் செய்யப்படும் ஒரு தைலம்.

ஏரம்பமூர்த்தி - விநாயகர் சகசிரநாமத்துளொன்று. உருத்திரர்க்குப் பக்கத்திலிருப்பவன் என்பது பொருள்

ஏரெழுபது-கம்பநாடன் வேளாளரது ஏரின்சிறப்பைப்பற்றி எழுபது பாக்களாற் றெரித்த ஒரு பிரபந்தம்.

ஏர்மங்கலப்பாட்டு - ஏரைக்குறித்துப் பாடும் பாட்டு.

ஏலம் - ஆஞ்சி, இலாஞ்சி, அடி.

ஏலாதி - பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்றென்பது "நாலடி நான்மணிநானாற்ப தைந்திணைமுப் - பால்கடுங்கோவை பழமொழி - மாமூலமெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதியென்பவே - கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு" என்றவெண்பாவாற் றெரியக்கிடக்கின்றது.

ஏலேலசிங்கர்-திருவள்ளுவநாயனார் காலத்திலே அப்பெருமானிடத் திகத்தலில்லா அன்புவைத் தொழுகியவர் தமது மகளைத் திருவள்ளுவ நாயனார்க்கு இல்லற நடாத்தி விளக்கும்படி மனைவியாக்கொடுத்த ஓர்வேளாளப் பிரபுவாம்.

ஏவலிற்சிறந்தவள் - சேடி.

ஏவலிற்சிறந்தவன் - பாங்கன்.

ஏவல் - ஆணை, பணி, பரிசாரம்; வியக்கோள்.

ஏவல்செய்வோர்-உழையோர், கிங்கரர், சிலதர், சிலதியர், சேடர், சேடியர், பரிசனம், பரிசாரகர்.

ஏவற்சிலதியர் - மடைப்பள்ளியார்.

ஏவுவான் - வியவன்.

ஏழிசை - சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பனவாம். என்னை "சரிகமபதநி யென்றே ழெழுத்தாற்றானம் வரிபரந்த கண்ணினாய் வைத்துத்-தெரியவரிய, வேழிசையுந்தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ் - சூழ்முதலாஞ்சுத்தத்துளை" என்று கூறினாராதலின்.

ஏழுபாலை-செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்பனவாம்.

ஏறங்கோட்பறை - ஒரு வாத்தியம்.

ஏறுதல்-ஆரோகணம், இவர்தல், உந்துதல், ஊக்கல், எக்கல், எஃகல், மிக்கோள்.

ஏறென்னும்பெயர்-புலி, உழை, மரை ஆ, புல்வாய், எருமை, பன்றி, சுறா சங்கு.

ஏற்குமட்கலம்-கடிஞை, ஐயம், பாத்திரம்.

ஏற்போன் - இரவலன், பரிசிலாளன், யாசகன், தீனன்.

ஏற்றமரம் - பூட்டை.

ஏற்றம் - தியாதி.

ஏற்றல்-இரத்தல், குறைகோர், வேண்டுதல், யாசித்தல்.

ஏனப்படம் - பன்றிமுகக்கடகு.

ஏனாதிநாயனார்-அறுபத்துமூன்று அடியார்களொருவர், இவர் சரித்திரத்தைப் பெரிய புராணத்திற் காண்க முத்தியடைந்த தினம் புரட்டாதி மாதத்துத் திருவோண நட்சத்திரமேயாம்.

ஐ

ஐக்கியவாதி-சமயிகளுளொருவன் அவன்கொள்கையாவது பதி பசு பாசம் என்னுந்திரிபதார்த்த உண்மைகளைச்சொல்லுமிடத்துபதியென்றுசொல்லப்பட்ட பரமசிவனொரு முதலாயிருப்பதொன்று. பசுவென்று சொல்லப்பட்டஆன்மாக்கள்பல முதலாயிருப்பதொன்று பாசமென்று சொல்லப்பட்டது மாயையென்றுங் கன்மமென்று மிருவகைப் பட்டிருப்பதொன்று. பிரபஞ்சத்திற்குத் தாய் தந்தையாகவுள்ள சிவபெருமான் தமதுகாருணியத்தினாலே ஆன்மாவுக்கு புண்ணிய பாவங்களுக்கீடான சரீரங்களை மாயையினின்றுங் கொடுப்பர். கருமேகஞ் சூரியனிற் சென்றுபொருந்துமிடத்து அவ்வாதித்தனது கிரணங்களெல்லாம் நீங்கினதன்மைபோல் முதலிற் சுத்தமாய் அறிவாயிருக்கு மான்மாவினிடத்தில் மாயாதேகமொடுக்காலி நீங்காமற் பொருந்திவரும், முன்னே செய்த புண்ணியபாவங்களை இச்சரீரத்திற் கர்த்தாவிவனுக்கெக்காலும் புசிப்பிப்பன்

ண்ணியபாவ மிரண்டுந்துலையொத்து ஒரு சன்னத்திலெல்லாக்கன் மங்களும் புரிந்துத் தொலையத் தக்கதாக வேதேனுமொரு சிவபுண்ணியம் வந்தெதிர்ப்பட்ட அவதரத்து, இவ்வான்மாவுக்குச் சத்திநிபாதமென்ப தொன்றுண்டாக இறைவன் றன்காருண்யமே தனக்குத் திருமேனியாகக் கொண்டருளி உலகத்தவர் யாவருங் கொண்டாடத்தக்க ஆசாரியனாக வெழுந்தருளி வந்து அழுக்கினால் மிகுத்திருக்கும் புடைவையைவண்ணான் வெள்ளாவியிலே வைத்து அவ்வழுக்கை நீக்கிச் சுத்தமாக வெள்ளையாக்கின தன்மையைப்போல, இவனிடத்துள்ள பாசத்தைத் தீக்கைசெய்து கிரமத்திற் போகத்தக்கதாக உபதேசமருளுமாம். அங்ஙனஞ்செய்யவே இவ்வான்மாவிடத்துள்ள குறைதலெல்லாம் நீங்கச்சுத்தனாகித் தண்ணீருந் தண்ணீர்கூடி ஐக்கியமா யொன்றுபட்டு நிற்குந்தன்மைபோலச் சிவனுடைய அறிவோடு தன்னறிவுகூடி ஐக்கியம் றந்தொன்று நிற்றலே முத்தியாம் என்க. இதனைச்சங்கற்ப நிராகரணத்தாற் பூர்வபக்கம் பண்ணப்பட்டமையறிக.

ஐங்கணை-தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, நீலோற்பலம் என்பனவாம்.

ஐங்கணைச்செயல்களாவன - பெருமயக்கு, சிந்தாகுலம், புணர்ச்சிக் கிணங்குதல், மோகனம், சந்தாபம், வசீகரணம்.

ஐங்கணையவத்தைகளாவன-சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்,என்பனவாம். அவற்றுட்சுப்பிரயோகமாவது, பேசாதொழியாநினைவாம், விப்பிரயோகமாவது பெருமூச்செரிந்து வருந்துதலாம். சோகமாவது வெதும்பியுணவுவெறுத்தலாம். மோகமாவது அழுதலும் பிதற்றலுமாம். மரணமாவது உயிர் சோர்தலுமயங்குதலுமாம்.

ஐங்கதி -மல்லகதி, மயூரகதி,வானரகதி, இடபகதி, மனோகதியென்பனவாம்.

ஐங்கலையாவன-வித்தியாகலை நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, சாந்திகலைசாந்தியதீதகலை, யென்பனவாம்.

ஐங்குரவர்-தாய்,தந்தை, அரசன், உபாத்தியாயன், குரு என்பவர்களாம்.

ஐங்குழு-அமைச்சர்,புரோகிதர், சேனாதியர், தூதவர், சாரணரென்றவிவர்அரசர்க்கைம்பெருங்குழுவென்ப

ஐது-வரிசை,அழகு, நெருக்கமின்மை.

ஐந்தக்கினி-தவாக்கினி, பஞ்சாக்கினி, இது தவஞ்செய்வோர்க்குரிய நெருப்பாம். அதாவது கிழக்குமேற்குவடக்குத்தெற்கு என்னும் நான்குதிசைகளினும் மூட்டப்பட்ட அக்கினிகளுடன்மேலே சூரியாக்கினியுமொன்று கூடிய ஐந்தாம்.

ஐந்தடி-பாக்களினடிவகைகள். அவையாவன குறளடி, சிந்தடி, அளவடி, நேரடி, கழிநெடிலடியென்னு மைந்துமாம். அவற்றுள் இருசீரான் வருவது குறளடி. முச்சீரான் வருவது சிந்தடியாம்.நாற்சீரான்வருவது அளவடியாம்ஐஞ்சீரான்வவருவது நேரடியாம்ஐந்தின்மிக்கசீர்களான் வருவது கழி நெடிலடியாம்.

ஐந்தங்கம்-வாரம், திதி,சரணம், யோகம், நட்சத்திரம் இவை பஞ்சாங்கம் எனவுஞ் சொல்லப்படும்.

ஐந்தருவருக்கம்-சந்தானம் தேவதாரம் கற்பகம்மந்தாரம், பாரிசாதம் இவையிந்நைத்தெய்வமரமென்றுங் கூறுவிற்பர் தெரிந்திசினோர்.

ஐந்தவத்தைகள்-சாக்கிரம், சொப்பனம்சுழுத்தி, துரியம்துரியாதீதம் என்பனவாம்.

ஐந்தறிவுயிர் - மக்களேயன்றிக்கடவுளையும் அவனருள் வழிப்பட்டோரையும்உள்ளவாறுணர்ந்து வழிபடாதமாக்களுமாம்.

ஐந்தாம்பக்கம் - சுக்கிலபக்கத்து ஐந்து பத்து, பதினைந்தாம் நாட்கள்.

ஐந்திணை-குறிஞ்சி,பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். இவற்றுள்மலையும் மலைசார்ந்த விடமும் குறிஞ்சி,குறிஞ்சியும் முல்லையுந்திரிந்தவிடம் பாலை, காடுங்காடு சார்ந்த நிலமும் முல்லை,வயலும், வயல்சார்ந்

நிலமும் மருதம், கடலுங்கடல் சார்ந்த நிலமும் நெய்தல்.

ஐந்திணை-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம்.

ஐந்திணைத்தெய்வம் - குறிஞ்சிக்குமுருகன், பாலைக்குதுர்க்கை, முல்லைக்குத் திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் என்க.

ஐந்திணைநிலமாவது - மலையும்மலை சார்ந்தநிலமுங்குறிஞ்சி குறிஞ்சியும்குறிஞ்சியும் முல்லையுந் திரிந்தநிலம் பாலை, காடுங்காடுசார்ந்த, நிலமும். முல்லை, வயலும் வயல்சார்ந்தநிலமும் மருதம், கடலுங் கடல்சார்ந்த நிலமும் நெய்தலாம்.

ஐந்திணைப்பொழுது-குறிஞ்சித் திணைக்குப் பெரும்பொழுதகூதிரும் சிறுபொழுது நள்ளியாமமுமாம் பாலைக்குப் பெரும்பொழுது இளவேனில் முதுவேனில் என்னும் இருவகை வேனிலும், சிறுபொழுது நண்பகலுமாம். முல்லைநிலத்திற்குப் பெரும்பொழுது காரும், சிறுபொழுது மாலைக்காலமுமாம் மருதத்திணைக்குப் பெரும்பொழுது இளவேனிலும் சிறுபொழுதுயாமமும் வைகறையுமாம். நெய்தற்றிணைக்குப் பெரும்பொழுது கார்காலமும் சிறுபொழுது இருவகை வேனிலுமாம்.

ஐந்திந்திரியங்கள்-மெய், வாய், கண், மூக்கு, செவியென்பனவாம்இவை ஞானேந்திரியம் எனப்படும் இவற்றைத்துவக்கு, சிகுவை, சட்சு, ஆக்கிராணம், சுரோத்திரம் என்பர் வடநூலார். வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் இவ்வைந்துங் கன்மேந்திரியங்களாம்.

ஐந்திரவியாகரணம்-இந்திரனாற் செய்யப்பட்ட ஓரிலக்கணநூல், "ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்" எனத் தொல்காப்பியப் பாயிரவுரையினும், "புண்ணியசரவணம் பொருந்துவிராயின்-விண்ணவர்கோமான் விழுநூலெய்துவிர்" எனச் சிலப்பதிகாரம் காடுகாண்காதைச் செய்யுளானும் அதனை யறியலாம்.

ஐந்திலக்கணம்-எழுத்து. சொல். பொருள், யாப்பு, அணி யென்பனவாம்.

ஐந்துகாவியம்-சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி யென்பனவாம்.

ஐந்துசத்தி - ஆதிசத்தி பராசத்தி இச்சாசத்தி ஞானசத்தியென்பனவாம்.

ஐந்துசுத்தி - சிவபூசைக்கு முன்னர்ச் செய்யப்படுங்கிரியையிலொன்று. அதாவது பூதசுத்தி, மந்திரசுத்தி, திரவியசுத்தி, ஆன்மசுத்தி, இலிங்கசுத்தி யென்பனவாம்.

ஐந்துதந்திரம்-மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்கிரகம், லப்தஹானி அல்லது அர்த்தநாசம், அசம்பிரேக்ஷியகாரித்துவமென்பனவாம். இவை நட்புப்பிரிவு, நட்புப்பேறு அடுத்துக்கெடுத்தல், பேறழிவு ஆராயாது செயல்எனவும்படும். அவற்றுள் மித்திரபேதமாவது சிநேகிதத்தைக்கெடுத்துப் பகையுண்டாக்கல். சுகிர்லாபமாவது தங்களுக்குச் சமானமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல் சந்திவிக்கிரகமாவது பகைவரையடுத்து உறவுசெய்து செல்லுதல். அர்த்தநாசமாவது தன்கையிற் கிடைத்தபொருளை யழித்தல், அசம்பிரேக்ஷிய காரித்துவமாவது காரியத்தைத்தேற விசாரியாமற் செய்தல்.

ஐந்துதிரவியம் - கடல்படுதிரவியம் ஐந்து, காடுபடுதிரவியம் ஐந்து, மலைபடுதிரவியம் ஐந்து, நாடுபடு திரவியம் ஐந்து, நகர்படுதிரவியம் ஐந்து.

ஐந்துபுலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்என்பனவாம். இவைதன்மாத்திரை, விடயம் எனவுஞ்சொல்லப்படும்.

ஐந்துமந்திரம் - ஈசானாய, அகோராய, தற்புருடாய, வாமதேவாய, சத்தியோசாதாயஎன்பவற்றின் இறுதியில்நமசப்தம்வைத்து உச்சரித்தலாம்.

ஐந்துமலம்-ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி.

ஐந்துமுகம் - ஈசானம், தற்புருடம், அகோரம்வாமதேவம்சத்தியோசாதம்.

ஐந்துமூர்த்தி-பிரமன், விஷ்ணு, உருத்திரர், மகேசுரர், சதாசிவர் இவர்கள்

அணுபக்ஷம், சம்புபக்ஷம் என விருவகைப்படுவர்.

ஐந்துலோகம்-இரும்பு, பொன், வெள்ளி, ஈயம், செம்பு.

ஐந்துவிரை - கோட்டம், துருக்கம், தகரம், அகில், ஆரமெனவிவை.

ஐந்துறுப்பு-பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தியென்பனவாம்.

ஐந்தெழுத்து - பஞ்சாக்கரம், சிவிதமந்திரம், மகாமனு.

ஐந்தொழில்-படைத்தல்,காத்தல், அழித்தல்,மறைத்தல், அருளல் என்பனவாம். இவற்றை முறையேசிருட்டி, திதி, சங்காரம், திரோசவம்,அநுக்கிரகம் என வடநூலார் கூறுவர்.

ஐப்பசிமாதம் - ஆசுவிகம் - ஆசுவீரம்.

ஐம்படை-சங்கு,சக்கரம், வில், வாள்,தண்டென்பன. இவற்றிற்குப்பெயர்களாவன-பாஞ்சசன்னியம் சுதரிசனம், சார்ங்கம், காந்தம், கௌமோதகி.

ஐம்பால்வகை-ஒருவன், ஒருத்தி, பலர் ஒன்று, பல இவை முறையே ஆண்பால்,பெண்பால்,பலர்பால்,ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாம்.

ஐம்பான்முடி-முடி,குழல், தொங்கல், பனிச்சை, சுருள் இவற்றின்விவரமாவது முடிமயிரை யுச்சியின் முடித்தல். குழல்-சுருட்டிமுடித்தல். தொங்கல் மயிரைமுடித்து தூங்கவிடுதல்,பனிச்சை-பின்னிவிடுதல்,சுருள் பின்னேசொருகல்.

ஐம்பூதங்கள் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பனவாம். மண், சலம், நெருப்பு, காற்று வெளியெனவுஞ் சொல்லப்படும்.

ஐம்பூதங்களின்குணம் - ஆகாயம் சத்தகுணமுடைத்து. காற்று சத்த பரிசங்களையுடைத்துநெருப்புச்சத்தம்பரிசம்உருவம்என்று முக்குணங்களையுமுடைத்து சலம் அம்மூன்றனோடு, இரசகுணத்தையு முடையது. மண் அந்நான்கனோடு கந்தமென்னுங் குணத்தையு முடையது.

ஐம்பூதத்தின்றொழில்-ஆகாயம் இடங்கொடுக்கும். காற்று சபித்து எவைகளையுந்திரட்டும். நெருப்புசுட்டு ஒன்றவிக்கும்சலம்நெகிழ்ச்சிசெய்து குளிர்விக்கும், மண் உரத்துத் தரிக்கும்.

ஐம்பூதக்ஷேத்திரம் - பிருதிவி, காஞ்சி, அப்பு,திருவானைக்கா, தேயு. திருவண்ணமலை வாயு-திருக்காளத்தி, ஆகாயம் - சிதம்பரம்.

ஐம்பொறிநுகர்ச்சி-துப்புரவு, துனவு.

ஐயச்சொல் - என்னை, கொல், எவன், யாது.

ஐயடிகள்காடவர்கோனாயனார், அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவர். தொண்டைமண்டிலத்திலே காஞ்சிபுரத்திலேயிருந்து அரசுபுரிந்த பல்லவராயன் என்னும் அரசனது குடும்பத்திற் பிறந்தவர். உலகமெல்லாவற்றையு மொருகுடையிலாண்டு விரத்தியுற்று, சிவாலயசேவைசெய்தலையே தமக்கு அரசாகக்கொண்டுசிதம்பரக்ஷேத்திரத்தை யடுத்துச் சிவகாமிசமேத சபாநாயகரது திருப்பணிவிடைகளைசெய்து அவரது திருவருள்பெற்று மற்றையதலங்கடோறுஞ்சென்று க்ஷேத்திரத்திருவெண்பாபாடியருளி முத்தியடைந்தனர். அவர் குருபூசைத்தினம் ஐப்பசிமாசத்துவரும் மூலநட்சத்திரமேயாம்.

ஐயமுற்றோன்விஷயம்-அதாவது வாடியவுறுப்பும், மயங்கிய பார்வையும் பீடழிபலனும், பேசாதிருத்தலும் வேறுபட்டசெய்கையும் ஆகாயத்தையுந் திசைகளையும் பன்முறை மாறி மாறிப் பார்த்தலையுஞ் செய்வதாம்.

ஐயனார்கொடி - கோழிக்கொடி.

ஐயனார்தேவிமார் - பூரணை, புட்கலை.

ஐயனார்வாகனம்-வெள்ளையானை, வாரிக்குதிரை.

ஐயனார்-அரிகரபுத்திரன். அறத்தைக்காப்போன்,ஆரியன், ஐயன், கருங்கடல்வண்ணன், காரி, கோழிக்கொடியோன்,சாதவாகனன்,சாத்தன், செண்டாயுதன், புட்கலைமணாளன், புறத்தவன், பூரணைகேள்வன், யோகி, வெள்ளையானையூர்தி.

ஐயை-மாதரிமகள், இவள் கண்ணகியிளிடத்தமிக்க அன்புள்ளவளா யிருந்தவையாத்தேவகியோடு சேரனாடுசென்று கண்ணகிகோயிலையடைந்தாள்.

ஐராவதம்-இந்திரனுக்குரியதாகி, சுவர்க்கலோகக்கணுள்ளதோர் வெள்ளானை. நாலுகொம்பர்களை புடையது; கந்தசுவாமியின் தேவியாருளொருவராயதெய்வயானையம்மையாரை வளர்த்ததிதுவே; இது பூசித்த தளம் - ஐராவதேசம் எனப்படும்.

ஐவகைக்குசலவித்தை- எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

ஐவகைத்தந்தையர்-அரசன், தலைவன், தந்தை, முன்னோன், குரு.

ஐவகைத்தாயர் - ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், செவிலித்தாய், கைத்தாய்.

ஐவகைத்தெய்வமணி, சிந்தாமணி, சூடாமணி, சூளாமணி, சிவந்தகமணி, கௌத்துவமணி.

ஐவகைப்பாதம் - எழுவகைக்கூத்துக்களினிலக்கணத்தொன்று, அவை சமயநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்பனவாம்.

ஐவகைமன்றம்-காவிரிப்பூம் பட்டினத்தேயுள்ளன அவையாவன-வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், கல்மன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம் என்பனவாம் அவற்றுள்.

(க) வெள்ளிடை மன்றமாவது அளவும்நிறையும் எண்ணுமாகிய இலச்சுக்கள் தம்மிடத்திட்டப்பட்ட பெயர்பெறித்தபொதிகள் பண்டசாலை வாயிலையும்மற்றுயத்துக் கருந்தாழாகிய காயலையுமுடையோர் காத்திருக்கும் அரி வாயகாவலையும் விடப்பட்ட வாகலான் இக்நகர்க்குப் புதியமாக்கள் சிலர்கட்போருளராயின், அவர் கழுத்துக் கடுக்கப்பொதிய வைத்து ஊரைச் சூழ்ப்பினல்லாது அவர்க்கே யவற்றைக்கொடுத்து விடாதாதலாற் களவென்பதனைமனத்தாற் கனவில்நினைப்பினும் நினைப்போரை நடுக்குவிக்கும் வெளியான இடத்தை யுடையதாம்.

(உ) இலஞ்சிமன்றமாவது கூனர் முதலாயுள்ளோரும், தொழுநோயால் அழுகு மெய்யினையுடையோரும் புகுந்து முழுகினவளவிலே பழுதில்லாத தோற்றத்தையுடைய நல்ல நிறம்பெறுகையினலேதன்னை வலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கை செறியவிருப்பதாம்.

(ங)கல்மன்றமாவது வஞ்சனையாற்சிலர் மருந்தூட்ட வுண்டு பித்தேறிணுரும், நஞ்சையுண்டு நடுங்கு துயாமுற்றேருரும், அழலும் விடத்தையுடைய அரவின் வாயிற்கூர்த்த எயிறழுந்தக் கடியுண்டாரும், பிதுங்கின கண்ணையுடையபேய்ப்பிடிக்கப்பட்டாருமென்னுமிவர்கள் ஒருகால் வலம்வந்து வணங்க, அதனுடனே யத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக்கால்வதோர் நெடியகல் நாட்டி நாட்டப்பட்டிருப்பதாம்.

(ச) பூதசதுக்கமாவது தம்மைப்பிறர் நம்புவதற்குத் தவவேடத்தின் மறைந்து நின்று அத்தவத்திற்கு இழுக்கானவற்றின்க ணொழுகும்பொய்வேடத்தாரும், தம்மைத்தங்கணவர் நம்புவதற்குப் பொய்யொழுக்கத்தின் மறைந்துநின்றுவசிசரிப்பி னொழுகும் அலவற்பெண்டிரும், தம்படை குடிமுதலியவைந்தினெடு உயிருறப்புரிமைக்குத்தம்மைத்தேறியளித்த அரசரைக்கீழ்மையெண்ணுவாரையும். தமதமனைவியர் தனிப்பத்தனித்த பிறர் மனைவியரை விரும்புக் துச்சாரிகளும், தமது நெஞ்சறிபொருளை வஞ்சித்துப் பொய்ச்சான்றுஎறுவாரும், சிறப்புற் செய்துழி அவர் முன்னிலையிற் புகழ்ந்து புறம்போக்கித் தூற்றுவாரும், ஆகிய இவர்களே யென்கையிற்கொண்ட இப்பாசத்திடத்து அகப்படும் பெயரென அவ்வூர் நாற்காதவெல்லையுங் கேட்கும்படித்னது கடிய குரலா லுணர்த்திப்பின் அங்ஙனஞ்செய்வாரைப்பாசங்கட்டிவாநிலத்திற் புடைத்தண்ணும்பூத நிற்கப்பெறுதலையுடைத்தாம் இது நாற்சந்தியாயுள்ளது.

(ரு) பாவைமன்றமாவது அரசனுடைய செங்கோன்லமயிற் சிறிதுகோடிற்றுயினும் தருமநூன் முறைமையிற் சிறிது கோடிற்றுயினும் தருமநூன் முறைமையின் அறங் கூறுந் தருமாசனத்தார் உரைக்கும் நடுவுநிலைமை கோ

டியொருமருங்கு பற்றினும், நாவாற் கூறுத நீருருத்தக் கண்ணுற் கூறும் பாவை திறப் பெறுவதாம்.

ஐவகைலோகத்தின்பொது-பொன் இவற்றின்கட்டி-தகனம்,மாறை வங்காரம்.

ஐவகைவேள்வி-கடவுள்வேள்வி (தேவயாகம்.) பிரமவேள்வி (பிரமயாகம்) பூதவேள்வி (பூதயாகம்) மானுடவேள்வி (மானுடயாகம்) தென்புலத்தார் வேள்வி (பிதிர்யாகம்) என்பனவாம்.

ஒ

ஒடு - உடுப்பை.

ஒடிதல் இடிதல்,இறுதல், ஒசிதல், நெரிதல், பரிதல், முரிதல், முறிதல்.

ஒடுங்கல் - கூம்பல், சாம்பல்.

ஒட்டகம் அத்திரி,இரவணம், ஒட்டை, கனகதம், தாசேரகம், நெடுங்கழுத்தன். இதன்பெண்-பிடி, பெட்டை இதன்குட்டி - கன்று, குழவி.

ஒட்டக்கூத்தர்(மகாகவிகளாகியபுகழேந்திப்புலவர், கம்பர் என்னுஞ் சைவவதாசர்கட்கு எதிரியாயிருந்த ஒரு பண்டிதசிரோமணியார் உறையூரிலிருந்து அரசுபுரிந்த இராசேந்திரசோழனுக்கும் அவன் மகன் குலோத்துங்க சோழனுக்கும் சமஸ்தான் வித்துவனும் பிரதிபிதாவாயுமிருந்தவர். செங்குந்தர்மரபிற் பிறந்தவர். கூத்தர் என்பது இவரியற்பெயராம் இவரதுசாதியாராகியசெங்குந்தர்வந்து இவரைநோக்கிப் புலவர் எறே, வேளாளர், வணிகர்முதலிய சாதியார்க்குச் சிறப்பிப் பாடல்களிருப்பதுபோல நம்சாதியார்க்குப் பாடல்களொன்றுமில்லையே யென்றுவருந்தியபோது அவரை நோக்கியங்ஙனம் பாடல்செய்யின் அதற்குப் பரிசாகநம்குலத்தலைப் பிள்ளைகள்எழுபதுபேரது தலைகளைக் கொடுப்பீராவென்று கேட்டனர். அதற்குச் செங்குந்தர் எக்கமுற, அவர்களாத்திருப்புவித்தனர். பிறகுசெங்குந்தர் தம்பிள்ளைகள் தலைகளை யறுத்துக்கொண்டுவர இவர்சோழராசனது ஆசாரவாயலிற் குவியுங்களெனக் கட்டளையிட்டனர். அங்ஙனங்குவித்ததைக்கண்டசோழராசன்கூத்தரைக்கூவி, ஐயகூத்தரே, இதென்னை கூத்தென்று வினவ, இவர்நடந்தவிடயங்களைக்கூறி அத்தலைகளையெல்லாங் குவித்துச் சிங்காசனம்போலச் செய்து அவற்றின்மேலேறியிருந்து "ஈட்டியெழுபது" என்னும் தெய்வீகப்பிரபந்தத்தைப் பாடி முடித்து இறுதியில் "கலைவாணிநீயுலகிலிருப்பதுவும் கல்வியுணர் கவிவல்லோரை, நிலையாகப்புரப்பதுவு மவர்நாவில்வாழ்வது நிசமேயன்றோ" என்னும் எழுப்பெழுபதின் முதற்பாடலைப் பாடி யுயிர்கொடுத்துத் தலையு முடலு மொட்டச் செய்தெழுப்பினமையால் ஒட்டக்கூத்தர் எனச்சிறப்புப்பெயர்பெற்றனர். இராமாயணத்தில் உத்தரகாண்டமும் இவராற் பாடப்பட்டது. புகழேந்திப்புலவர்க்கும் இவர்க்கும் வாக்குவாதமாக, நிகழ்த்திய பாடல்கள் பலவுள. புகழேந்திப்புலவரைச் சிறைச்சாலையிலடைப்பித்து அவர்க்குப் பலவித ஞானமூட்டியவர் இவரே இவர்புகழேந்திக்குத் துன்பஞ்செய்ததன்றி, கல்வியில்லாமல் இராசசபைக்குவந்தனர் வேறநேக புலவர்களையும்சிறைசெய்வித்தும் சிரச்சேதம்பண்ணுவித்தும் வந்தனர். இவர் கோவை உலா அந்தாதிபாடுவதில்மிகச்சமர்த்தர். அது "வெண்பாவிற்புகழேந்தி பரணிக்கோ சயங்கொண்டான் விருத்தமென்னு மொண்பாவிலுயர்கம்பன் கோவையுலாவந்தாதிக்கொட்டக்கூத்தன்" என்னும்பாவிற்காண்க அதற்கத்தாட்சியாக இவர்பாடியஒலியகலந்தாதி குலோத்துங்கன் கோவை, விளங்குகின்றன. இவர் காலம் கந்தபுராணகாரர்க்குப் பிற்பட்ட கம்பர் புகழேந்தி காலமே.

ஒட்டலர்நாடழித்தல் - கொற்றவள்ளை.

ஒட்டினர்மேற்சாராமை - தழிஞ்சி.

ஒட்டுதல் - அணவல்.

ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவு.

ஒண்டி - ஊற்றுணி.

ஒதுக்கிடம் - தச்சில்.

ஒதுங்கல் - ஒடுங்கல்.

ஒத்தறுத்தல்-தட்டல்,வட்டணை,வட்டித்தல்.

ஒத்து - அந்தாக்கொட்டு,முகமெனவும் பெயர். இந்த ஒத்து ஆடின பின்னர் அல்லது உருக்காட்டுதல் வழக்கல்லவென்ப. என்னை, முகமொடு தமிரியோகப் பொருட்டே என்றுராகலின்.

ஒப்படியிருக்கை - யாழ்வாசிக்கு மிருப்பினுளொன்று.

ஒப்பனை - அணிதல்,அலங்கரித்தல்,கைசெய்தல்,புனைதல்,பூசல், மண்ணல், வனைவல், வேய்தல்.

ஒய் - யானையைப் பாகர்வையுமாரியமொழி.

ஒருகட்பருவாய்ப்பறை - பதலை.

ஒருகட்பறை - மொந்தை.

ஒருகலை - அமா, திதி, பக்கம்.

ஒருகலைவருமதிநாள் - சினீவாலி.

ஒருகுடி - உதிரப்பிரிவினர்.

ஒருகுடியிற்கொண்டோன் - சகலன்.

ஒருங்கு - உடங்கு.

ஒருதலைக்காமம் - கைக்கிளை.

ஒருத்தல் - கவரி, யானை, பன்றி.

ஒருபலம் - காடி, தொடி.

ஒருபறைநவிசர்ப்பம் - பீலி.

ஒருபாவொருபது - பிரபந்த வகையிலொன்று.

ஒருபிறப்பு - ஒருமை.

ஒருமை - இறையுணர்வு.

ஒருவகைப்புல் - புதவு.

ஒலி-அதிர்தல்,அமலை,அரவம், ஆகுலம், ஆம்பி, ஆரவாரம், ஆர்ப்பு, ஆர்வம், இசை,இடி, இமிழ், இயம்,இரக்கம், இரட்டு, இறை, உசை,ஒசை,ஒதை, ஒலை, கம்பலை, கலி, கவ்வை, கனன், குரல், குறை, குளிறு, கோடணை, சிலை, சும்மை, சுருதி, ஞிமிர்,துவை, ஞெளிர்,துழனி,தொனி,நாதம்,நிவதம், பாடு, பிளிறு, புலம்பு, முழக்கம், வகுணி, வகுளி, அன்றியும் பறவையாலெழுமொலியின்பெயர் கலகலம், அழனிபயிர். விலங்கினுலெழுமொலியின்பெயர் கோலாகலம், அசையுஞ்சிலையானுமிலையானு மெழு மொலியின்பெயர் - மருமராஞ்சம் அசையுமாபரணத்தா லெழுமொலியின்பெயர்-சிஞ்சிதம், அன்றியும்பேரொலியைக்காண்க.

ஒலிக்குறிப்பு - அனுகரணவோசை, அவையாவன: அம்மெனல்,இம்மெனல்,இழுமெனல்,ஒய்யெனல், ஒல்லெனல்,கல்லெனல், கொம்மெனல்கொல்லெனல்,கோவெனல், சரேலெனல்,ஞொள்ளெனல், தடுமெனல், நேரேலெனல், பொம்மெனல், பொள்ளெனல், முகரெனல், வல்லெனல், விடேலெனல். அன்றியு மீரடுக்கொலியின்பெயர்-உபயவோசை, அக்குறிப்புச் சொல்லாவன-கடகடெனல், சலசலெனல், களகளெனல், குளகுளெனல்,சடசடெனல்,சரசரெனல் சலசலெனல், களசளெனல், திடுதிடெனல், நெடுநெடெனல், நெறநெறெனல்,பகபகெனல், படபடெனல் பதபதெனல், மடமடெனல், மளமளெனல், முகமுகெனல்,முடமுடெனல், இது அநுவாதமென்க.

ஒலித்தலினுட்பேசலா லெழுமொலி - இரத்துதல், உழைத்தல், கரைத்தல், கல்லல், கவலல், குமுதல், குருமித்தல், குளிறல், சித்துதல், தெளிர்தல், நரலல், நெளிர்த்தல், பயிர்தல், பயிர்த்தல், பயிறல், பிதற்றல், புளிறல், மருளல், மிழற்றல், முக்கல், முரல்.

ஒலித்தல்-அரிற்றல், அரம்பல்,அலறல், அழுங்கல், அர்த்தல்,ஆலல், இசைத்தல்,இடித்தல், இமிர்தல், இமிழ்தல், இயம்பல்,இரங்கல், இரட்டல்,இரைத்தல், இணைத்தல்,உறற்றல்,உறைத்தல், உலம்பல், உழம்பல், உளைத்தல், எங்கல், கதித்தல், கரைதல், கலித்தல்,கறங்கல்,கனைத்தல்,குமறல், குரைத்தல், குளிறல், சலித்தல், சிதைத்தல், சிம்பல், சிரத்துதல், சிலம்பல், சிலும்பல்,சிலைத்தல்,ஞெள்ளல்,தழங்கல்,துவைத்தல், தெவிட்டல், தெழித்தல்,தொனித்தல், நரலல்,நரற்றல், பயிறல், பிளிறல்,பிறங்கல்,புலம்பல், முரலல்,முரற்றல்,முழங்கல்,விம்மல்.

ஒலியலந்தாதி-ஒட்டக்கூத்தர்பாடியதில் இதசந்தப்பாக்களையுடையதோர் அரிய பெரிய பிரபந்தமாகும்.

ஒலியினகாரியம் - எழுத்து.

ஒழிதல்-ஒய்தல், ஓவல்.

ஒழியாமை - ஓவாமை.

ஒழுக்கமின்மை - கையறல், கையறை,

ஒழுக்கம்,ஆசாரம், இயல்புகை, கையாறு, சரிதை, சரித்திரம், சாரித்திரம், செயல், செய்கை, செய்தி, திணை, நசை, நடை, நன்னிலை, பத்தி, முறை, வாகை, அன்றியும் நல்லொழுக்கம் - சீலம், ஞானம், விருத்தி, ஒழியா வொழுக்கத்தின் பெயர். கைதுவாவை, கையொழியாமை.

ஒழுங்கு-அணி,ஆவளி, ஆளி, இராசி, ஒளி,கோதை, சிரேணி, தாமம்,தாரை, நிரல், நிரை, பந்தி, மாலை, வீதி.

ஒளி-அரி, ஆதபம், இலக்கம், எல், கடி, கதிர், கரம், காந்தி, கானல்,கிரணம், கிளர், கேழ், சவி, சுடர், செடி,சோதி,தாமம், துணி, துளக்கம், தேசிகம், தேசு, நகை, நிலவு, நிழல், நீமம், மின்வாமம், வாள், விரியல், வில், வெயில், மிகுமொளி-சுப்பிரம்.

ஒளிசெய்தல் - அலங்கல், அவிர்தல், இமைத்தல், இலகுதல், இலங்குதல், ஒடித்தல், ஒளிர்தல், சுடர்தல், தயங்கல், திகழ்தல், துலங்கல், துளங்கல், நகுதல், நிகழ்தல், நிலவல், மிறழ்தல், மிளிர்தல், மின்னல், வயங்கல், விரிதல், விளங்கல்.

ஒளித்தல் - காத்தல், காப்பு, காவு, குவித்தல், மறைதல்.

ஒளிமழுங்கல் - அழுங்கல், புல்லெனல், மட்கல், மழுங்கல்.

ஒற்றர் - சாரணர், சாரர், வேயர்.

ஒற்று - வேய்.

ஒற்று - செங்கோட்டியாழுறுப்பினுள் ஒன்று.

ஒற்றுமை - ஒருவந்தம், ஒருமை, குறிக்கோள், தோட்டிமை, சிநேகம்.

ஒற்றெழுத்து - உடம்பு, உடல், புள்ளி, மெய்,வியஞ்சனம், விராமம்,உறுப்பு.

ஒற்றைக்கைவகை - இணையா வினைக் கையெனவுஞ் சொல்லப்படும்அவை யாவன:பதாகை, திரிபதாகை கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி,கமலகோசிகம்,காங்கூலம், கபித்தம், விற்பிடி,குடங்கை,அலா, பத்திரம்,பிரகாம், தாம்பிரசூடம்,பசாசம், குமுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்குவண்டு, இலதை, கபோதமும், மகரமுகம், வளம்புரியென்னும் முப்பத்துமூன்றுமாம். அதனை "இணையா வினைக்கையியம்புங்காலை- யணைவுறுபதாகைதிரிபதாகையே-கத்தரிகை, தூபமராளா மிளம்பிறைசுக துண்டம்மே முட்டிகடகஞ் - சூசிபதுமகோசிகந் துணிந்தமாசில்காங்கூலம்வழுவறுகபித்தம்- விற்பிடி தெரிநிலை யலாபத்திரமே-பிரமரந்தன்னேடு தாம்பிரசூடம் - பசாசமுகுளம் பிண்டி தெரிநிலைபேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலஞ்சதுரமான்றலைசங்கே வண்டே-யதிர்விலவிலதை கபோதமகாமும் - வலம்புரி தன்னேடு முப்பத்து மூன்றென்-றிலங்கு மொழிப்புலவரிசைத் தனரென்ப" என்னுஞ் சூத்திரத்தானறிக.

ஒன்று - ஏகம்.

ஓ

ஓசனித்தல்-போதற்கொருப்பட்டு முக

ஓசுநர் - பறவர். [றல்.

ஓசைசெய்தலை-குடச்சூல், ஞெகிழம்.

ஓடம்-அம்பி, நாவாய், பகடு, பஃறி.

ஓடவகை-அரிமுகவம்பி, கரிமுகவம்பி. பரிமுகவம்பி, இவற்றுள் சிங்கமுகவோடம் அரிமுகவம்பியாயம், யானைமுகவோடம் கரிமுகவம்பியாயம், குதிரைமுகவோடம் பரிமுகவம்பியாயம்.

ஓடல் - இரிதல்,கியிர்தல்,சேறல், செறிதரல், பாறல், அன்றியு நேரோடல் ஆதி, தாரை, வீதி, வட்டமாயோடலின்பெயர் சாரிகை, சுற்றல், மாதி, வாளி.

ஓடை-தடாகம்,நீர்நிலை, யாற்றிடைக்கு

ஓடைமரம் - உவளம். [றை.

ஓட்டல்-செலுத்தலின்பெயரைகாண்க.
ஓணன்-அண்டசப், ஓதி,ஓந்தி, ஓமான், சரடம், சாயாதனம், தண்டுமுசலி.
ஓதல் - பாடமையாடல்.
ஓதிம்பள்ளி - அறப்புறம்.
ஓத்து -நேர்மையான இனம்பொருந்தியஇரத்தினங்களை வரிசையாக வைத்ததுபோலஓரினப்பொருளை ஒருவழிவைப்பதாம்.
ஓதுரைப்போர் - கணக்காயர்.
ஓமகுண்டம்-தடம், நித்தியவிதி, வேதிவேள்வி, வேள்விக்குண்டம்.
ஓமமண்டபம் - சமித்தம்.
ஓமவிறகு - சமிதை, முளரி.
ஓமாலிகை - முழுகுதற்குரிய நன்னீரிலேயிடப்படுஞ் சுகந்தப் பொருள்களுளொன்று. அதுமுப்பத்திருவகைப்படும். அவையாவன : இலவங்கம், பச்சிலை,கச்சோலம்,ஏலம், நாகணம், கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம்,கண்டில், வெண்ணெய், கடுநெல்லி, தான்றி, தத்தம், வண்ணக்கச்சோலம்,அரேணுகம்,மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னைத்தாது, புலிநகம், பூஞ்சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரிநாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம்.
ஓய்வு - ஓரினப்பொருளை வரிசைபடவைப்பது.
ஓமைமரம் - உகா.
ஓரறிவுயிர்-பரிச வுணர்ச்சியொன்றனையேயுடைய புல்மரம்முதலியனவாம்.
ஓரிற்றுப்பசு - கிட்டி.
ஓரொற்றுவாரம்-ஒருமாத்திரை பெற்றுவரும் நாடகச்செய்யுள்.
ஓர்குடியிற்கொண்டோன் - சகலன்.
ஓலமிடல் - அபயமிடல்.
ஓவியர் - சித்திரகாரர்.
ஓவியர்குடியிற்பிறந்தோன் - நல்லியக்கோடன்என்னும்அரசன். இவனிலங்கையிற்பிறந்து இந்தியாவில்வந்து ஆமூர்எயிர்பட்டினம். வேலூர் என்னும் மூன்னூரினுமிருந்து அரசாண்டவன் பகைவரா லடிக்கப்பட்ட ஓர் காலத்திலே குன்றமெறிந்த குமரவேளைவழிபட்டு அவராஞ்ஞைப்படி தானீராடியகேணிப்பூவைவேலாகப் பாவித்தெறிய அது சென்றுபகைவரையழிக்கத் தான் அரசைக்கொண்டாண்டானென்க.

ஔ

ஔகம் - இடைப்பாட்டு.
ஔகி - இடைப்பாட்டுக்கூத்தி.
ஔசு - நோற்பாகுணவு.
ஔவையார் - இவர் சரசுவதியின் அவதாரமென்ப. கருவூர் ஆதியென்பாள் வயிற்றிற் பகவன் என்னும் பிராமணர்க்குப் புத்திரியாக அவதரித்து "நரப்புக் கருவியோர்கண்ணிடுசேரியிற் - பாணரகத்தி லௌவைபிறந்தனன்" என்பதனால் பாணர்சேரியில் வளர்ந்து வந்தனர். "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறினாராயினும்பிரமசரியவிரதத்தை யநுட்டித்துவந்தனர். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்,கல்வியொழுக்கம்மூதுரை,நல்வழி,விநாயகரகவல்,பந்தனந்தாதி,அசதிக்கோவை,நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, ஞானக்குறள்என்பவற்றோடுபிடக நிகண்டு என்னுநூலையும்பாடினர்.முன்னையவாய ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் என்னு மிரண்டினையும் டாக்டர் ஜோன்என்பவரும்றெவரெண்டு பிஸ்லெட்என்பவரும்சட்சென்என்பவரும்ஆகிய ஆங்கிலர் மூவரும் வியந்துஇங்கிலீஷ் பாஷையில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

அன்றி ஜர்மனிபாடையாரும் உலாந்தாக்காரரும் தத்தம் பாஷையின் மொழிபெயர்த்திருக்கின்றனர். இவர் அதிகமான்வஞ்சியினாற் கொடுக்கப்பட்டஅழிஞ்சிவிதையும் கருநெல்லிப் பழத்தைப்புசித்து அநேககாலம் வசித்திருந்தனர் எனத் தெரிகிறது. அது புறநானூற்றுச்செய்யுளாற் காட்டியுள்ளாம். இவர் பற்பல தனிப்பாடல்களைப் பாடி

னர். கணபதிபூசைசெய்தஅவர் துதிக்கையாற் கைலைக்குவிட அங்கு வாழ்ந்திருக்கின்றனராம்.

உயிர்வருக்கப்பொட்டொகுதி முற்றிற்று.

க

கக்கரி - வாலுங்கி.

கங்கணம் - தொடி

கங்கை - சானவி, சுரநதி, திரிபதகை, பகீரதி, மந்தாகினி, வரநதி.

கசப்பு - கடு, கைக்கை, கைத்தல், கைப்பு, திக்தம்.

கச்சபாலஐயர் - காஞ்சிபுரத்தில் பிறந்தவர் வீரசைவ குலத்தவர் சைவசித்தாந்தக் கோட்பாடுடையவர் இவர் அநேக தனிப்பாடல்கள் செய்துள்ளார் இவர் குறுநிலமன்னராய் வீற்றிருந்த குமாரகுருமுதலியார் பரம்பரையில்வந்த பிரதாபம் சரவணப்பெருமாள் முதலியார் முதலியோருக்கு ஆசிரியராவர்.

கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் - தொண்டைமண்டலத்திற்சிறந்து விளங்காநின்ற காஞ்சிபுரத்தின் கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்வியறிவொழுக்கங்களினாலுஞ்சிவபத்திசிவஞானங்களினாலுஞ் சிறப்புற்றோங்கியகாளத்தியப்பசிவாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சிபுரத்துள்ள குமரகோட்டத் தருச்சகருள் ஒருவர் அவர் நெடுங்காலம் புத்திரனில்லாமையாற் பெருங் கவலைகொண்டு புத்திரபாக்கியத்தின் பொருட்டுக்குமரகோட்டத்தின்கண் எழுந்தருளிய பெருங்கருணைக் கடலாகியசுப்பிரமணியக்கடவுளை விதிப்படிசிரத்தையோடும் உபாசித்துக்கொண்டுவந்தார். வரும்பொழுது,அக்கடவுளது திருவருளினாலே, தமிழ்நாட்டார்கள்சுப்பிரமணியபத்தி பெற்றுய்யும்பொருட்டு, அச்சிவாசாரியருக்கு அவருடைய கற்பினிற் சிறந்த பத்தினியாரது அருமைத் திருவயிற்றில் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார்.

அப்புத்திரருக்குக்கச்சியப்பர் என நாமகரணஞ் செய்யப்பட்டது. அவர் ஐந்தாம்வயசிலே வித்தியாரம்பஞ் செயப்பெற்று சமஸ்கிருதம் தமிழ்என்னும் இரண்டு பாஷைகளையுங் கற்பாராயினர். அன்பு அருள் வாய்மை பொறை அடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுடன் வளர்ந்தன. அவர் ஏழாம்வயசிலே உபநயனஞ் செயப்பெற்று, வேதாத்தியயனஞ் செய்வாராயினர் சிலகாலத்துள்ளே சம்ஸ்கிருதத்தில் வேத வேதாங்கங்களையும் தமிழில் இலக்கணவிலக்கியங்களையுங் கற்றுவல்லவ ராயினர்.

அவர் சிலகாலமானபின் சமயதீக்ஷைபெற்று,தமிழ்வேதமாகியதேவார திருவாசகங்களை ஓதுவாராயினர். அதன்பின்விசேஷதீக்ஷைபெற்றுச்சைவாகமங்களிற் கிரியாகாண்டங்களைக் கற்றறிந்துகொண்டார். அதன்பின்நிருவாண தீக்ஷையும் ஆசாரியாபிஷேகமும் பெற்று சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதி,அவற்றின் பொருளையுந்தேவார திருவாசகங்களின் பொருளையுங் கேட்டு,அப்பொருள் வேதத்தின்ஞானகாண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாயிருக்கக்கண்டு அதனைச் சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

இவ்வியல்புடையராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசைசெய்துகொண்டு வந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலேதோன்றி "அன்பனே, நீ காந்தபுராணத் தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத்தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்,' என்று ஆஞ்ஞாபித்து திகடசக்கரச்செம்முகமைந்துளான் என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தரு

ளினார். உடனே கச்சியப்ப சிவாசாரியர் விழித்தெழுந்து அழலிடைப்பட்ட மெழுகுபோலநெஞ்சநெக்குருக உரோமஞ்சிலிர்ப்ப, உரைதடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒரு பொருட்படுத்து வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக் கடவுளது பெருங் கருணைத்திறம் இருந்தபடி என்னே என்னே" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

மற்றைத்தினத்திலே கச்சியப்ப சிவாசாரியர் நித்திய கரும முடித்துக் கொண்டு சுப்பிரமணிய பூசை செய்தபின், புராணம் பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு செய்யுள்பாடி அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும் இராத்திரிகாலப் பூசை முற்றிய பின் குமரகோட்டத் தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளிகைக்குப் போவார். பிற்றை நாட்காலையிலே நித்தியகரும முடித்துக்கொண்டு, பூசையின்பொருட்டுத் திருக்கோயிலுள்ளே புகுந்து ஏட்டை எடுத்துப்பார்த்து, அதிற் சிலவிடங்களிலே திருத்தப் பட்டிருத்தல் கண்டு அதனைச் சிறமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச்சிறிதுபொழுது நின்று பின் பூசை செய்வார்.

இவ்வாறே கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடிந்தபின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும் பொருட்டுச் சுபதினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக் கொண்டு எங்குமுள்ள சிவனடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினார். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்ட சுபதினத்திலே, திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்ல பெரியோர்களும், சிவாகம விற்பன்னர்களும், வேத வேதாங்க பண்டிதர்களும், தமிழ்ப் புலவர்களும் இராசாக்களும் பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்ப சிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசைசெய்து, அவர் சந்நிதானத்திலேமெழுகிப் பீடமிட்டு, அதின்மேற் பட்டைவிரித்து, புஷ்பங்களைத்தூவித் தூபங்கொடுத்து ஆசனங் கற்பித்து, கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்துகொண்டு "திகடசக்கரச்செம்முகமைந்துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறைவாசித்து "திகழ்தசக்கரச்செம்முகம் ஐந்துஉளான்" என்றெடுத்து "விளங்காநின்ற பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்துதிருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொருளருளிச்செய்தார். உடனேஅங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள், திகழ்சதம் திகடசம் எனப்புணர்தற்குவிதிதொல்காப்பியமுதலிய இலக்கண நூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்ப சிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும் ஆயின் இம்முதலடிஎன்வாக்கன்று சங்கப்புலவராகிய சுப்பிரமணியக்கடவுளது திருவாக்கு அவரேஎனக்குஇவ்வடியெடுத்துத்தந்தருளினார் என்றார். அது கேட்டஅப்புலவர் புன்முறுவல்செய்து சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக ஆயினும் அது இரகசியம் அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம் அக்கடவுள் சுவாமிகளுக்குத்தோன்றியதுபோல எங்களுக்குந்தோன்றி இவ்வடி நாமே எடுத்துக்கொடுத்தருளினேம் என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்போம். அன்றேல் இதற்கு யாதானுமோரிலக்கண நூலில் விதிகாட்டின் அங்கீகரிப்போம். அல்லாக்கால் அரங்கேற்ற வொட்டோம் என்றார். "கச்சியப்பசிவாசாரியர்" இவ்விரண்டினுள் ஒன்று நாளைச்செய்யப்படும் என்றருளிச்செய்து சபையாரைப்போக்கிவிட்டு அற்றைத்தினத்திலே திருவமுது செய்யாது இராத்திரிகாலப்பூசை முற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு சந்நிதியிலே தரையிலேசயனித்தருளினார். அப்பொ

ழுது சுப்பிரமணியக்கடவுள், கச்சியப்ப சிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஒரிலக்கணநூலிருக்கின்றது திகழ்தசம் திகடசம் என்ப்புணர்தற்கு அந்நூலிற் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளிலிருக்கின்றது சோழதேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற்கொண்டுவந்து அவ்விதியையெல்லாருக்குங் காட்டுவன்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

மற்றைநாட் சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்ப சிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச்சொல்லியருளினார். உடனே ஒருபுலவர் ஒருபுத்தகங்கையிற்கொண்டு அங்கேவந்தனர் அவரை அங்குள்ளோர்கள் நோக்கி "நீர் யாவர், உமதுகையிற் புத்தகம் யாது" என்று வினவினார்கள். அதற்கு அப்புலவர் "நாம் சோழதேசத்துள்ளோம், இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னை நாளின் ஆக்ஷேபித்த புலவர் விரைந்துசென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளை வாசித்துத் திகடசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலையுணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத் தமிழ்ப்புலவர்களும் ஒருவர்பின் ஒருவராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப்புத்தகத்தைக் கச்சியப்பசிவாசாரியார் கையிற்கொடுத்து, சபையாரெல்லாரையும் நோக்கி "ஆக்ஷேபம் ஒழிந்ததா. என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். உடனே கச்சியப்ப சிவாசாரியர் தம்மையாண்டருளிய அறுமுகக்கடவுளது பெருங்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து, சரீரம் விதிர்ப்புற, மயிர்க்கால்தோறும் நிவலை உண்டாக என்பெல்லாம்நெக்கு நெக்குருக, மதகிடைப் புதப்படும் சலம்போல் ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்தபரவசராய் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சபையாரெல்லாரும் இங்ஙனம் எழுந்தருளிவந்தபுலவர் குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வை கொள்ள ஆனந்தவருவிசொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்ப சிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்றமரம்போல்விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ் செய்தார்கள். ஆக்ஷேபஞ் செய்த புலவர் கச்சியப்ப சிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே, புழுத்தநாயினுங் கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச்சிறிதும்அறியாது ஆக்ஷேபித்த பெருங் குற்றத்தைப் பொருத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடுபிரார்த்தித்து, மீட்டும் அடியற்றமரம்போலவீழ்ந்து கிடந்தார். கச்சியப்ப சிவாசாரியர் எழுந்து, அப்புலவருடைய இரண்டு கைகளையுந்தம்முடைய அருமைத்திருக்கைகளினாலே பற்றியெடுத்து இறுகத்தழுவி, 'ஐயரே தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது இதன்பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது, அறியேம் அறியேம்' என்று பாராட்டியருளினார்.

அதன்பின் சபையாரெல்லாரும்நமஸ்கரித்து, "சுவாமிகாள், இனிப்புராணத்தைத்தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக' என்றுவிண்ணப்பஞ்செய்தார்கள். அங்ஙனமேகச்சியப்பசிவாசாரியர் அரங்கேற்றுவாராயினார் காஞ்சித்திருநகரத்திலுள்ள ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங் கேட்கவந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசன முதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்து நான்கு கோட்டத்து வேளாளப்பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாகவந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்ப சிவாசாரியர் தினந்தோ

றம்புராணம் வாசித்துப் பொருள்சொல்லிஒருவருஷத்திலேமுடித்தருளினார்.

புராண முற்றுப்பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனைசெய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மிவிம்மித் தண்டாகாரமாக விழுந்து கச்சியப்பசிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேறிக்குவியநின்று துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்கு கோட்டத்துமுள்ள வேளாண்மையுள்ள வேளாளப் பிரபுக்களுள்ளே சிலர் சிவிகைதாங்க சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடைகொடிபிடிக்க, நானாவிதமங்கலவாத்தியவொலியினாலே திக்குகளெல்லாஞ்செவிடுபட பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் சரவணபவ, சரவணபவ என்று சொல்லும் பேரொலி தழைக்க திருநகரவாசிகள் திருவீதிகடோறுஞ் சுத்திசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள்வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திருபுண்டரத்தின் அழகையும் உருத்திராக்ஷமாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக்கண்களினின்று பொழியும் பரமானந்த வாரியையும் அடியார்கள் கண்டு மன நெக்குநெக்குருக வணங்கித் துதித்து, ஆனந்தக்கூத்தாட திருவீதி வலஞ்செய்து, குமரகோட்டச் சந்நிதியை அடைந்து சிவிகையினின்றும், இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலுள்ளே கொண்டுபோய்த்திருமுன்னே வைத்தருளினார். உடனே எல்லாரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்றவழியும் தவிராது ஆராமையினாலே பலகாலும் நமஸ்கரித்து "பரமகருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டாரெல்லாரும் பிழைக்கும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய அப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவி வாய்மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ் நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும் இக் கந்தபுராணத்தை மிகப் பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும் பொருள் சொல்வோரும், கேட்போருமாய் இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சிலகாலம் குமரகோட்டத் தடிகளைப் பூசை பண்ணிக்கொண்டும் ஞான நிட்டை செய்துகொண்டும் இருந்து அகண்டாகார சுத்த வியாபகசச்சிதானந்தப்பிழம்பாய்நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

இந்தக் கந்தப்புராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம் இது சத்தியம் சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.

கச்சியப்பமுனிவரர் - இந்நூலாசிரியர் பெயர் கச்சியப்ப முனிவர். ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீநமசிவாய மூர்த்திகள்மரபில் அநுக்கிரகம்பெற்றவருந் தமிழ்ப்பாஷை தழைத்தோங்கும் வண்ணம் அவதரித்த மஹான்களுள் ஒருவருமாய் இச் சிரேஷ்டாசிரியர் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பதுவருஷத்திற்குமுன் தொண்டைமண்டலத்திலே தணிகைத்திருப்பதியிலே, காஞ்சிபுரத்துப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே அபிஷிக்தர்மரபிலே அவதரித்து ஒழுக்கம் அன்பு அருள்முதலிய நற்குணங்களோடு வளருவாராயினார்.

தந்தைதாயர்களாற் றக்க பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றும் சிறிது கல்வி கற்றளவிலே அவர் சிவபுண்ணியமேலீட்டினாலே சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத் தொடங்கினார். தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் யாவுந் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டிலே விராட் புருடனுக்கு இருதய ஸ்தானமாகிய சிதம்பரம் முதலியதிருப்பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீஞானக்கோமுத்தி நவகோடி சித்தவாசபுரம், அராவனம் ஆதியாகிய திருப்பெயர்கள் பூண்ட திருவாவடுதுறையையடைந்து, மடாலயத்தினுள்ளேபுகுந்து, திருக்கைலாசப் பரம்பரை சித்தாந்த சைவபானுவாகிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்துத் திருவருணோக்கஞ் சித்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபிற் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசாரியராகிய பின்வேலப்பதேசிகரை ஒடுக்கத்திலேபோய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினார். வணங்கியபின் அந்த ஞானதேசிகரிடத்திற்றானே சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் பெற்றுக்கொண்டார்.

இங்ஙனம் சிவதீக்ஷைபெற்ற கச்சியப்பமுனிவர், அகத்திய மகாரிஷியின் வரத்தினாற் றென்னாட்டில் அவதரித்து எளிதிலே வடமொழி தென்மொழிக்கடல்கள் கரைகண்டுணர்ந்து அவ்வேலப்ப தேசிகராகிய ஞானாசாரியரிடத்தே அனுக்கிரகம்பெற்று மெய்யுணர்வின் முதிர்ந்து சித்தாந்த சைவசிவஞான யோகீஸ்வரரை வித்தியாகுருவாகக் கொண்டு அம் மெய்ஞ்ஞானமுனிவரிடத்தே தென்மொழியிலே பல இலக்கண நூல்களும் இலக்கியங்களுந் தருக்கமுஞ், சிவஞான நூல்களாகிய மெய்கண்ட சாஸ்திரம் பதினான்கும் பண்டார சாஸ்திரம் பதினான்கும் மற்றும் பலநூல்களும் ஓதியுணர்ந்து கல்விகேள்விகளில்முற்றுப்பேருடைய மஹாவித்துவானெனப் பெயர்பெற்று, அச்சிவஞானயோகிகளுடைய மாணாக்கராகிய இலக்கணம் சிதம்பரநாத முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சரவணபத்தர், சிதம்பரபத்தர், இராமநாதபுரம், சோமசுந்தரம்பிள்ளை முதலிய பல்லோருள்ளும்மிகச் சிறந்தவராய் வீற்றிருந்தார்.

"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்றதுணர விரித்துரையாதார்" எனவும் "உய்த்துணர்ந்துஞ் - சொல்வன்மையின் றெனினன்றோ மஃதுடைத்தேற் - பொன்மலர்நாற்றமுடைத்து" எனவும் நாயனாதியர்கூறியதற்கு இவரோர் இலக்கியமாகத்திகழ்ந்தனர். இவரது வாக்குவல்லபத்தையும் பிரசங்கசாதுரியத்தையும் புகழாதார்இல்லை. இவர்செய்யு ளியற்றும்விரைவு கெட்டுருப்பண்ணியபழம்பாடம் ஒப்பித்தல்போல் இருந்ததென்று சொல்லுவர். இதுமட்டோ காலம் இடங்கட்குத் தக்கபிரகாரம் நூதனம் நூதனமானயுத்திகள் வேண்டியவாறு தவராது வாயினின்றுஞ் சனித்துக்கொண்டிருக்குமானால் அவர் பெருமை இத்துணைத்தென்று சொல்லற்பாலதா.

பின்பு கச்சியப்பமுனிவரர் சிவபெருமான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளி யிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபொழுது திருவானைக்காப்புராணமும் பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த்தருளினார்.

பின்னர்க் கொங்கநாட்டிலே விராட் புருடனுக்கு விந்துஸ்தானமாகிய ஆதிபுரியென்னுந் திருப்பேரூரிற்கு எழுந்தருளி, ஆண்டுச்சின்னாள் வதிந்து பேரூர்ப் புராணம் மொழிபெயர்த் தருளினார்.

அதன்பின் திருத்தணிசென்று ஆங்குச் சிலகாலம் வீற்றிருந்து இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெருமாளையர், வித்வான் சரவணப்பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினோர்க்குக் கல்வி கற்பித்தருளினார். அப்பொழுது அன்னோரும் அன்னோன்னபிறருந்தமிழிற்குஓர்புறச்சமயியாற் செய்யப்பட்ட சீவக சிந்தாமணியை பேரிலக்கியமாகக் கொண்டாடுதலைப்பார்த்து தமிழிலவ்வி மாட்சிமைபொருந்திய இலக்கியம் பிறி

தின்மையான் மனக்கவற்சியுடையாய் அக்குறையைத்தாமே முடித்தல்வேண்டுமென்று திருவுளத்தமைத்து இத்தணிகைப் புராணத்தை அருளிச்செய்தார். சொல்வளம், செய்யுணடை, சந்தம் பொருட்சுவை யென்றிவற்றித் தமிழுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேற்பட்டிலதென்பது இதனை வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும். சிவசிந்தாமணியின் சந்தமும் வனப்பும் இதில் யாண்டுங் காணலாம்.

தம்மாணாக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஓர் குன்மநோயுண்டுபட்டபொழுது தணிகையாற்றுப்படையைப் பாடி அவர் நோயை மாற்றியருளினார். அதனான் அவர் எத்துணைச்சிவானுபூதிமானென்பது தெள்ளிதிற் புலப்படும். இவையன்றித் திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதியும் அவேறுசிலபிரபந்தங்களும்ங்கேஇருந்தபொழுது இயற்றினார். பின்புசென்னைமாநகர்க்குச்சென்று ஆங்குச்சிறிதுகாலம்வதிந்தார் அப்பொழுது அவ்விடத்துப்பக்தஜனங்களுட் பிரபுக்களாயுள்ளோர் பலரது வேண்டுகோட்கிசைந்து விநாயகபுராணம் சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி அவர்களடியுறையாக இரண்டாயிரம்வராகனிட அதைக்கொண்டு திருவாவடுதுறையில்ஆதீனபரமசாரியராகிய ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள் சந்நிதிமண்டபப்பணி அணிபெறச் செய்வித்தருளினர். விநாயகபுராண மரங்கேற்றிய சபைக்கு ஐயாப்பிள்ளைஎன்னும் ஒருபெரியபிரபுதாம்வர இதென்ன இராமாயணமாஎன்று சற்றிகழ்ந்தனர். மற்றப்பிரபுக்கள் முனிவர்க்கு அதனை மறைத்தும் அவர் யாரும் பிரமிக்கத்தமது புராணத்தை ஆரம்பியாது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு முதல் ஆறுசெய்யுளில் நூறுகுற்றங்கூறினார். உடனே அப்பிரபு நூறுவராகனும்மிகவுயர்ந்த பட்டுவஸ்திராதிகளுங் கொண்டுபோய்ப் பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டஞ்சமர்ப்பித்துத் தேவரீர் சுவாமிகள் மகத்துவம் அறியாத ஏழையை மன்னித்தருகவென்று விண்ணப்பஞ்செய்ய அதன்மேற் றமது புராணத்தை ஆரம்பித்து அரங்கேற்றினார்.

இம்முனிவர் சென்னப்பட்டணத்திலிருக்கும்போது காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய சிவஞானயோகிகள்பால் ஆங்குள்ள தமிழ்வித்துவான்கள் ஒருங்குசேர்ந்து நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப்புகுந்து அதன்கட் கடவுள்வாழ்த்திற் "சங்கேந்து மலர்க்குடங்கைப்புத்தேளு மறைகோவந்தழல்கால்குல-மங்கேந்து மம்மானுந் தத்தமதுதொழிறலைநின்றாற்றச் செய்தோர்-பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப விருமுனிவர் பணிந்துபோற்றக்- கொங்கேந்துமணிமன்றாட்குனித்தருளும்பெருவாழ்வைக் குறித்துவாழ்வாம்" என்னுஞ் சபாநாயகர்துதியை முன்னரமைத்துத் "தணந்த பெருந்துயர்க்கடன்மீக் கூர்தலினால் மலைபயந்த தாளமுமர்-கனங்குழையாள் புரிபூசைமுடிவளவுந்தரியாம லிடையேகம்பை-யணங்கினைத்துதென விடுத்துவலிந்திறுகத் தழீஇக்கொள்ள வமையாக்காதன்-மணந்தருளிக் குறிபூண்ட வொருமாவிற்பெருமானை வணக்கஞ் செய்வாம்"எனத் தலநாயகராகிய ஏகம்பநாதர்துதியைப்பின்னாவைத்தது தவறென்று சாதித்தனர். அவர் தமது மாணாக்கனைக்கொண்டு அவர்களைப் பங்கப்படுத்துவதே தகுமென்று திருவுளத்தமைத்து அதனைக் கச்சியப்ப முனிவருக்குத் தெரிவித்தார். உடனே முனிவரர் சென்னையினின்றும் புறப்பட்டு காஞ்சிக்குச்சென்றனைவரையும் ஏகம்பநாதர் மண்டபத்திற் சேரச்செய்துபிரசங்கம் பண்ண ஆரம்பிப்பாராகி, அந்தஸ்தலத்து ஓதுவாரை நீக்கிச் சமயகுரவர்களாகிய நாயன்மாராற்பாடப்பட்ட தேவாரத்திருமுறையில் இந்த ஸ்தலத்துப்பதிகங்களுள்ஒன்றனை முதலிலேஓதும்படி சொல்ல அவர்கள் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்போதவர் வித்துவான்களைநோக்கி இவர்கள்"திருச்சிற்றம்பலம்" என்று ஆரம்பிக்கின்றார்களே இது உங்கட்குச் சம்மதிதானோ இவர்களையெல்லாம் நீங்கள்சேர்ந்து இச்சந்நிதியிலிருந்த ஸ்தலத்துப்பதி

கங்கைளப்பிருதிவியம்பலமென்று சொ
ல்லிஆரம்பிக்கும்படி செய்யக்கூடாதா
வென்ன அனைவரும்வாயடாதாமைமர்
கள்போலத் தலைவணங்கி யிருந்தனர்.
அதன்மேற் கடவுள்வாழ்த்தில்முன்னர்
விநாயகவணக்கமு மதன்பின்னர் சபா
நாயகர்துதியுங்கூறுதலே சிறந்ததென்
றுபலபலபிரபல நியாயங்கள்காட்டியவ்
வித்வான்களவமானமடையசெய்தனர்
பின்னர் ஸ்ரீகாஞ்சிபுரத்தில் எழுந்
தருளியிருக்கத் திருவுளங்கொண்டார்.
அங்கே வீற்றிருந்தபோது தமதுஆசிரி
யர்சொல்லைத் தலைமேற்கொண்டு காஞ்
சிப்புராணத்து இரண்டாங் காண்டஞ்
செய்தருளிப் பின்புகச்சியானந்த ருத்
திரேசர் வண்டுவிடுதூது கச்சியானந்த
ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி பஞ்
சாக்கரவந்தாதியென்று இன்னோரன்
னபலநூல்கள் இயற்றி யருளினர்.

இங்ஙனம் லோகோபகாரமாகப் பல
நூல்கள் இயற்றிப் பல நன்மாணக்கர்
களுக்கும் கற்பித்துத் தமிழ்மொழியை
அபிவிர்த்திசெய்து சிவபேற்றிற்குக்கா
ரணமாகிய சிவத்தியானநிகளினுரைப்
பில்லுந்தருளி, கச்சியப்பமுனிவரர் ஸ்ரீ
காஞ்சிபுரத்திலே சாலிவாகனசகாப்தம்
௧௭௧௨ க்குச் சரியான சாதாரணவருஷ
சித்திரைமீ ௧௧௨ யாஜியமங்களவாரத்
தில் புனர்பூசநட்சத்திரமும் பூர்வபக்ஷ
த்துச் சத்தமியுங்கூடிய கும்பலக்கினத்
தில் பரிபூரணத்தை யடைந்தனர்.

கச்சின்றலைப்பு - கஞ்சகம், சாரவாரம்
கச்சு-பண்டிகை, வம்பு, வார், சிவி
கை, கஞ்சா, கஞ்சம், குல்லை.

கஞ்சி - காடி, குழம்பு, பாகு, பாத்து,
மோழை, வாக்கு.

கடகக்கை - பெருவிரல்நுனியும் சுட்டு
விரலின்நுனியும் பொருந்த வளைந்
துநகநுனியைப் பொருந்திநிற்ப மற்
றைய மூன்றுவிரல்களும் நிமிர்ந்து
நிற்பனவாம். அதனை "கடகமுகமே
கருதுங்காலைப் - பெருவிரநுனியுஞ்
சுட்டுவிரநுனியு - மருவவளைந்தவ
வுகிர்நுனிகௌவி - யொழிந்தமூன்
றும் வழிவழிநிமிர- மொழிந்தனரெ
ன்ப முடிபறிந்தோரே" என்னுஞ்
சூத்திரத்தானறிக.

கடகம்-சங்கணம், கண்டிகை, வைதவளை,

கடகாவருத்தக்கை - இரண்டுகையுங்
கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயை
ந்துநிற்பது அதனை "கருதியகடகா
வருத்தக்கையே - பிருகையுங்கடக
மணிக்கட்டியையவது" என்னுஞ் சூத்
திரத்தானறிக.

கடத்தல் - அகறல், இகத்தல், உகளுத
ல், கழிதல், குதித்தல், குப்புறல், தா
ண்டல், தாவுதல், நீடுதல், நீந்தல்,
வாவுதல்.

கடமையின்குட்டி-கன்று, குழவி, கட
ம்பு, அரத்தம், இந்துளம், கதம்பம்,
நீபம்,விசாலம், அன்றியுநிலக்கடம்பு,
கோகனம், வெண்கடம்பு, மரா, மரா
[மரம்.

கடலை - சூரம், மஞ்சூரம்.

கடல் - அத்தி,அப்பு,அம்பரம், அம்புரா
சி, அம்போதி, அரி, அருணவம், அ
லை, அளக்கர், ஆர்கலி, ஊழி, உத்தி,
உந்தி,உப்பு,உவரி,உவர், ஓதம், கலி,
கார்கோள்,குரவை,சக்கரம், சமுத்தி
ரம்,சலதி,சலநிதி, சலராசி, சாகரம்,
சிந்து,தெண்டிரை, நதிபதி, நரலை,
நீராழி, நேமி, பயோததி, பரப்பு,
பரவை, பாராவாரம், புணரி, பெரு
நீர், பௌவம்மகராலயம், மகோததி,
முந்நீர், வாரம், வாரணம், வாராசி,
வாரி, வாரிதி, வாருணம், வீரை,
வெள்ளம், வேலாவலயம், வேலை.

கடல்சார்ந்தநிலம் - நெய்தல்.

கடல்படுதிரவியம் - உப்பு, ஒக்கோலை,
சங்கு, பவளம், முத்து.

கடவுண்மகாமுனிவர் - இவர்கச்சியப்ப
முனிவரர்காலத்திலிருந்த ஒருபுலவர்
இவர் குன்மநோய் வாய்ப்பட்டு உழ
ந்தைக்கண்ணுற்ற முனிவரனுந் தம்
உள்ளத்தாற் கிளர்ந்த அன்புமேலீ
ட்டாலே அவரைநோக்கி, நீவிர்
வாதவூரடிகள் திருச்சரிதத்தைப்
புராணமாகப் பாடுதிரென்ன, அங்ங
னம் பாடிமுடித்துத் தம்நோய்நீங்கப்
பெற்றனரென்ப,இவர்பாடியபுராண
த்திற்குத்திருவாதவூரடிகள்புராணம்
என்றுபெயர். அது எழுசருக்கங்க
ளையும் - ௬௫௪ - செய்யுள்களையு மு
டைத்து, இவர் இலக்கணம் சிதம்
பரநாதமுனிவர் சகோதரரென்பர்.

கடவுண்மணி - மாணிக்கம், சிந்தாமணி.

கடவுரம் - கடவை, கவரிநாக்கு, நடவை, மடவை.

கடவுள் - அகண்டாகண்டன், அகிலை, அகாரி, அசலன், அச்சயன், அச்சுதன், அடிகள், அதிகுணன், அதலன், அத்தன், அந்தாதி, அபயன், அமலன், அருட்குடையோன், அருளாழி, வேந்தன், அரூபி, அரக்கொடியோன், அறவாழி மன்னன், அறுகுணன், அனகன், அனந்த ஞானி, அனந்த லோகனன், அனந்தன், அனாதி, ஆதி, ஆதிபுங்கவன், இறையோன், ஈசன், ஈச்சுரன், ஈறிலி, உள்வழி, உடந்தோன், உள்ளத்துறைவோன், எண்குணத்தோன், ஏகதேவன், ஏகன், ஐ, ஐம்புலதடங்கான், கருணாலயன், கருத்தாகுணநிதி, குணபத்ரன், சகநாதன், சகலவியாபி, சச்சிதானந்தன், சதாநந்தன், சுயம்பு, சருவேச்சுரன், சாமிசிபதி, சோதி, தற்பரன், தனிக்கோலான், தாபயன், தேவன்-தேவாதிநாயகன், நிதானன், நித்தன், நிமலன், நிரஞ்சனன், நிரந்தரன், நிரம்பரன், நிராமயன், நிருநாபன், நிருமலன், நிரூபன், நீதிபரன், பகவன், பராப்பொருள், பரஞ்சோதி, பரதுக்கதுக்கன், பரப்பிரம், பரமம், பரமேச்சுரன், பரம், பராபரம், பிதா, பிரமம், பிரான், பிறப்பிறப்பில்லான், புங்கவன், பூரணன், மயேச்சுரன், மாசேனன் முக்குற்றங்கடிந்தோன், முதலோன், முத்தொழிற்பகவன், முழுதொருங்குணர்ந்தோன், முன்னூற் கேள்வன், முன்னோன், மூவுலகாதாரன், மூவுலகாளி, மூவுலகேந்தி, விதித்தோன், விமலன், வினைவிராசன், வேதன், வேதா, வேதாந்தன், வேதார்த்தன்.

கடற்கரை - பாராவாரம், வேலை.

கடற்கரையிற் பலபல தீவிற் பண்டம் விற்குமூர்-பட்டினம்.

கடற்றிரை-அலை, அறல், ஓதம், சீகரம், தரங்கம், புணரி, அன்றியும், பெருந்திரையின்பெயர்-உல்லோபலம், கல்லோலம்.

கடன் - இருணம், இறை.

கடாரமென்னுமூர் - காழகம்.

கடிமைமாக்கள்-எட்டர், கவிகள், கரோர், வண்டர், வந்திகள்.

கடிகைமுத்துப்புலவர்-இவர் திருநெல்வேலியைச்சார்ந்தஎட்டையாபுரத்திற்பிறந்து அவ்வூர் அரசனாகியசகவீரராமவேங்கடேசுவர எட்டப்பநாயகனது சமஸ்தானவித்துவானாய்இருந்தனர். இவர் காலம் ௧௮-வது நூற்றாண்டு இவரதுபாடல்கள் மிகச்சிறந்த வருணனைகளை யுடையது. நூறு செய்யுள்கொண்ட "கழிக்கரைப்புலம்பல் என்னுஞ் சமுத்திர விலாசத்திற்கு இவர் ஆக்கியோர். ௨௩௦-செய்யுள்கொண்ட, திக்குவிசயம், என்னும் நூலையுஞ் செய்தனர்.

கடிகையார்-அரசனுக்குச் சென்றநாழிகைக்குக் கவி சொல்லுவார்.

கடிப்பகை - வெண்சிறுகடுகு.

கடிப்பு - குணில்.

கடிவானப்பூண் - விருளை.

கடுகு - ஐயவி, கடிப்பகை, வெண்கடுகு, சித்தார்த்தம்.

கடுக்காய்மரம் - அரிதகி, கடு, பத்தியம், கடுங்கோன்-தலைச்சங்கமிருத்தியபாண்டியர்களில் இறுதியான்.

கடுப்பு-ஒல்லை, கடுமை, கதவு, கதனம், துரிதம், நொறில், வல்லை.

கடுமரம் - அரிதகி, பத்தியம்.

கடுவனென்னும்பெயர்-குரங்கு, பூனை.

கடை - அந்தம், இறுதி, ஈறு, எல்லை, முடிதல், முடிவு, முற்றும், வாயில்.

கடைக்கண்பார்வை - அபாங்கம், கடாக்ஷம், சிறக்கணிப்பு.

கடைக்கூட்டல் - ஒருப்படுத்தல்.

கடைக்கொள்ளி - இராதம், உறக்கை, ஞெகிழி, முளரி.

கடைதல் - கவர்தல், குடைதல், ஞெலிதல், திருவல், மதநம், மதித்தல்.

கடையவாடல் - கடைசிக்கூத்து, இந்திராணியாடல், இதற்கு உறுப்பு-ஆறு.

கடையவார்கூத்து - பதினோராடலுளொன்று. வாணாசுரனுடைய வடக்கு வாயிற்கணுள்ள வயலிடத்தே நின்று இந்திராணியாடியது.

கடைவீதி - அங்காடி, ஆபணம், ஆவணம், ஆவணியம், கூலம், நியமம், பீடிக்கை, விபணி, வீபணி.

கட்டல் - அசைத்தல், ஆர்த்தல், இசைத்தல், இமிழ்த்தல், சிமிழ்த்தல், சுருக்கல், துவக்கல், தொடர்தல், தொடுத்தல், பிணித்தல், பிணைத்தல், யாத்தல், யாப்புறல், வளைத்தல், விசித்தல், வீக்குதல்.

கட்டழகு - காமர், அலங்காரம்.

கட்டில்-அங்கம், அரி, பரியங்கம், பாண்டில், பாரி, மஞ்சம், மஞ்சு.

கட்டிளமையோன்- காளை, குமரன், சேடன், மழவான், முருகன்.

கட்டு - ஆர்ப்பு, பந்தம், பிணி, புரி, யாக்கை, யாப்பு.

கட்டுத்தறி-ஆளானம், கந்து, தறி வெல். அன்றியுங்குறுந்தறி-போதிகை.

கணகம்-கும்பம், பத்தாகக்கொண்டது.

கணக்கர் - காவிதியர்.

கணக்கு - எண், எழுத்து.

கணநாதநாயனர் - சீகாழியி லவதரித்த இவர் அறுபத்துமூன்று அடியார்களுள் ஒருவர். திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் காலத்தி லிருந்தவர். திருத்தோணியப்பருக்கு நந்தவனம் வைத்து மலர்கொய்துமாலை தொடுத்துச் சாத்திச் சிவஞானம் பெற்று முத்தியடைந்தனர். இவர்குருபூசைத்தினம் பங்குனிமாத திருவாதிரை நாளாம்.

கணப்பறை - ஒருவகைத்தோர் கருவி கண்ணுடையாட்டியர்-கள்ளை விற்கும் வலைச்சியர்.

கணம்புல்லநாயனர் - வடவெள்ளாற்றின் தென்றிசைக்கணுள்ள இருக்குவேளூரின்கண் அவதரித்தவர், திருத்தில்லையின்கணுள்ள புலீச்சரத்தில் வீற்றிருந்தருளா நின்ற சிவபிரான் சந்நிதியில் திருவிளக்கிட்டுவந்தவறுமையாலொரு நாட்கணம் புல்லால் விளக்கிட அதுவும் குறித்த காலம் வரைக்கும் போதாமற்போகத் தமது தலைமயிரின்கண் நெருப்பைக் கொளுத்தும்போது சிவபெருமான்றோன்றிச் சிவானந்தவாழ்வைக் கொடுத்தனர். இவர் குருபூசைத்தினம் கார்த்திகைக் கார்த்திகை நட்சத்திரமேயாம், அறுபான் மும்மை யடியார்களுளொருவர்.

கணிதம் - எண்ணம்.

கணைக்கால் - சங்கம், சங்கு.

கணையம் - எழு, பரிகம்.

கண்-அக்கம்,அச்சி,அம்பகம்,உலோசனம், குவளை, கோ, சங்கு, தாரை, திட்டி,திருக்கு,திருட்டி, நயனம், நாட்டம், நேத்திரம், நோக்கம், நோக்கு, பார்வை, உலோசனம், விழி.

கண்குத்திப்பாம்பு - மாலுதானம், உதாசனன்.

கண்கூடுவரி - வரிப்பகுதியுளொன்று. அஃதாவது பிரியதரிசனம்.

கண்டசருக்கரை - அயிரம், கண்டம், பாளிதம், புலலகண்டம்.

கண்ணகி - காவிரிப்பூம்பட்டணத்திலே வைசியர்குலத்திலேபிறந்தவள், மாநாயகன் என்பவன் புத்திரி கோவலனுக்கு மனைவி. இவளது கற்பு நிலைமையை வெளிப்படுத்தற் பொருட்டேசிலப்பதிகாரஞ்செய்யப்பட்டது. இவளை மறக்கற்புடையாளென்பர், திருமாபத்தினி, பத்தினிக் கடவுள் மங்கலமடந்தை, வீரபத்தினியென்பன பரியாயநாமங்களாம். இவளை இலங்காபுரத்திலிருந்து அரசாண்ட கயவாகு என்னுமரசன் தன்னகரத்திலே பலிபீடஞ்செய்வித்துக் கோயில்கட்டுவித்து வருடந்தோறும் உற்சவம் நடத்திவந்தான். செங்குட்டுவனுகிய சேரனென்பவனுமிமய மலையிலிருந்து சிலைகொண்டுவந் திவள் வடிவஞ்செய்து பிரதிட்டைசெய்தான்.

கண்ணப்பநாயனர் - அறுபத்துமூன்று அடியார்களுளொருவர், இவர்பொத்தப்பி நாட்டிலேயுள்ள உடுப்பூரில் வேடர்குலத்திற் கதிபதியாகிய நாகனென்பவனது மனைவியாகிய தத்தையென்பவள்வயிற்றில் திருவவதாரஞ்செய்தார். இவர்முன்னர்அர்ச்சுனனயிருந்தவர். திண்ணனர் எனப்பெயர்பெற்று வளர்ந்த இவர் ஓர்நாள் நாணன் காடன் என்னு மிருவரோடும் சென்று வேட்டையாடினவர் திருக்காளத்தி மலையைக்கண்டு சென்றுஆங்குக்குடிமித்தேவரைக்கண்டு ஆராத காதல்கொண்டு இறைச்சி

முதிட்டைத்து அவர் விழிகளினின்றும் இரத்தம் வந்தமை கண்டு மனம் பதைபதைத்து வருந்தித் தமதுகண்ணைப்பிடுங்கியப்ப, மற்றைவிழியினின்றும்பாய, இவர்மற்றைக் கண்ணையும் பிடுங்குஞ்சமயத்தில் நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப நில்லு கண்ணப்ப எனத் திருவாய்மலர்ந்தருளிக் காளத்திநாதர்தந்திருக்கரத்தாற் பிடித்துத்தம் வலப்பாலில் நிற்கவென்று நிலைபெற்ற திருவருள் புரிந்தார். இவர் குருபூசைத்தினம் மார்கழிமாதத்து மிருகசிரிடநட்சத்திரமேயாம்.

கண்ணாடி - அத்தம், ஆடி, ஆதரிசனம், உருவங்காட்டி, ஒளிவட்டம், கஞ்சனம், கஞ்சனை, சுதரிசனம், தருப்பணம், படிமக்கலம், பளிங்கு புளகம் முகுரம்.

கண்ணாளர் - அக்கசாலையர், அற்புதர், ஒவர், கண்ணுள் வினைஞர், கம்மியர், கொல்லர், சிற்பியர், தபதியர், துவட்டர், புனைந்தோர், யவனர்.

கண்ணிமை-இதழ், இமை, ஏடு, நிமை, விளிம்பு.

கண்ணிவிடுமை - அஞ்சனம், கச்சளம்.

கண்ணுடையவள்ளலார் - சீகாழித்திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது திருவருள்பெற்ற மகான் வேதாகம சாஸ்திரக் கடல்கட்கு ஓர் தெப்பம் போன்ற இவர் செய்தநூல் ஒழிவிலொடுக்கம் இது பொதுவிலுபதேசம்முதல்நிலையியல்பு இறுதியாகப் பத்து அதிகாரங்களையும் உடை வெண்பாக்களையு முடைத்து இந்நூற்குத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் ஓர் சிறந்த உரை செய்தனர்.

கண்ணுறல் - காட்சி.

கண்ணேணி - மால்பு.

கண்ணோட்டம் - எண்ணிலயுடைமை கண்மை, கேண்மை, தாக்ஷிண்யம், நயப்புணர்வு, நலம், நாகரீகம்.

கண்ணோவுற்றோனவிஷயம் - கண்ணினின்றொழுகும்நீரை விரலாற்றெளித்தலும், வீளைந்தபுருவத்அடன்வாடியமுகமும், வெளியிடத்திற் பார்த்தால் பார்க்கக்கூடாத பயமும் உடையனும் என்ப.

கண்பார்வை - விழித்தல்.

கண்மணி - தாரை, உருத்திராக்கம்.

கண்மூடல் - சிமிழ்த்தல்.

கண்வரி - அரி, அலரி.

கதவு-அரணம், அரவம், கதவம், கவாடம், காப்பு, தோட்டி, புதவம், புதவு, வாரி.

கதறல்-அரற்றல், அழைத்தல், சத்தல், முரற்றல்.

கதிர் - அலகு, ஈனல், ஏனல், குரல்.

கதிர்காமம் - ஈழ்நாட்டிலேயுள்ள திருப்புகழ்பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று, இது கதிரை, கதிரைமலை, ஏமகூடம், முத்திநகர், குன்றுதோருடற்பதி ஆகாய குமாரக்ஷேத்திரம் எனவும் பெயர்பெறும். அருணகிரிநாதசுவாமிகள் ஆண்டுச்சென்று தரிசித்துத் திருப்புகழ் கூறியுள்ளார். சிவஸ்தலங்களுட் சிதம்பரம் எங்ஙனஞ் சிறந்ததோ அங்ஙனமே சுப்பிரமணிய ஸ்தலங்களுள் இது விசேடித்தது சூரபன்மன்மனைச்சங்கரிக்க அமர்ந்தருளியபாடிவீடு என்று கூறப்பட்ட ஏமகூடமிதுவே எவ்விடத்தும் எக்காலத்துங் கண்டிராத அத்தியற்புதத்திருச்செய்கைகள் இத்தலத்து இப்போதும் நடந்துவருகின்றன உக்கிரசோழமகாராசன், நாரசிங்கச்சோழன் முதலாயினோர்க்கு இராசதானியா யிருந்தது. சிவஞான வொளியால் பேரின்பத்தைக்கொடுப்பது என்பது காரணமாய்க் கதிர்காமம் எனவந்தது. இதன்விசேடத்தை க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் திருப்புகழ், கதிர்காமக்கலம்பகம், கந்தபுராணம், கதிர்காமமான்மியமென்பவற்றுட்காண்க இதுஇலங்கையின் தன்பாகத்திலே மகேந்திரகடலாயஇந்துசமுத்திரத்திற்கு வடக்கேயுள்ளகாலி என்னும் பட்டினத்துக்குச் சமீபமாயுள்ளது.

கதிர்காமக்கலம்பகம் - இஃது யாழ்ப்பணத்திற்பிறந்த சரஸ்வதிபீடம் கந்தப்பசுவாமிகள் என்னு நாமமுடைய வேளாளகுலதிலகராற் செய்தருளப்பட்டது. இதுமுடிந்தவுடன் அவர்க்குள்ள குஷ்டரோய்நீங்கியது, சொற்சுவை பொருட்சுவை நிறைந்துள்ள ஓர் பிரபந்தம்.

கதிர்த்தொகுதி - கற்றை.

கதுப்பு-அநுகபோலம்,கவுள், கன்னம், கொடிறு.

கதை - காரணச்சொல்.

கத்தரிகைக்கை - திரிபதாகைபோல வளைந்த பவித்திரவிரலின்பக்கத்தி அங்குலியாகிய நடுவிரலைச் சுட்டுவிரலொடு பொருந்த நிமிர்ப்பது.

கத்தரிச்செடி-பிரகதி,வங்கம்,வழுதலை, வழுதுணை.

கத்தரித்தல் - கொய்தல்.

கத்தூரி-நானம், மான்மதம், மிருகமதம்.

கத்தூரிமிருகம்-இரம்பம்,காசறை, துருக்கம், தரந்தரம், நாரசம், நாவி, நான்மா, நானம், மறுவல், மறுவி, மான்மதம், மிருகமதம்.

கந்தபுராணம் - ஓரிலக்கங் கிரந்தங்களையும் ஆறுசங்கிதைகளையு முடையது இதன் ஒவ்வோர்பாகங்கள் கந்தபுராணமெனவும்,உபதேசகாண்டம் எனவும், சூதசங்கிதையெனவுந் தமிழிற் செய்யப்பட்டுள்ளன.

கந்தவுருவானது - அகக்கூத்துக்குரிய உருவால் அடிவரையறை யுடைத்தாம் ஒருதாளத்தாற் புணர்ப்பது.

கந்தருவர்-காந்தருவர், கின்னரர், தந்திரர்,யாழ்வல்லோர், வீணைவல்லோர்.

கந்தித்தல் - மணம், முருகு, மன்றல், வாசம், விரை, வதுவை, நானம், வேரி, கடி,தேன்,வம்பு,கான், நறை, கந்தம்,மோதம்,நாற்றம்கமழல்வெறி.

கபிலநிறம் - குரால், புகர், புற்கு.

கமண்டலம் - கரகம், கரண்டம், காண்டம், குண்டிகை.

கமர்-கறு,நிலப்பிளப்பு, விடப்பு, விடம்பு, விடர், விடவு, விளவு.

கமுகு - கந்தி, கமுகம், கிரமுகம், முகம், பூகம், பூக்கம், இதளேலை, கூந்தல், மடல்,

கமுக்கட்டு - வாகுமூலம், கைமூலம்.

கம்பளி-கம்பலம், கம்பளம், சிம்புளி.

கம்பு - செந்தினை, கவலை.

கம்மாளர்-அக்காலையர், அறிவர், அற்புதர், ஓவர்,கண்ணாளர், கண்வினைஞர், கம்மியர், கொல்லர், சிற்பியர், தபதியர்,துவட்டா, புலவர், புனைவர், யவனர், வித்தகர், வித்தியர், வினைஞர்.

கயிலை - இரசதாசலம், கயிலாசம், விசயார்த்தம், வெண்மலை, வெள்ளிமலை, வேதண்டம்.

கயிறு - அக்கம்,இரச்சு, கச்சை, கடம், தாதம், தாம்பு, நாண், நாரம், நார், பழுதை, பாசம், புரி, வடம்.

கரகம்-கற்கரி, கன்னல், சிரகம், சிகரம், வற்கரி.

கரடி - உளியம், எண்கு, எலு, குடாவடி, பல்லம், வல்லூகம் - மிளிறு, இநணுண், ஒருத்தல்.

கரடிப்பறை - தட்டை.

கரடிப்பறைக்காரணம் - கரடிபோலக் கத்துவதனுல் அப்பெயர்த்து.

கரடு - மிசைத்திரள், காலடி, பரடு.

கரணக்கூத்து - படிந்தவாடல்.

கரண்டி - கரண்டம், கரண்டகம்.

கரத்தல் கிறுத்தல், மறுத்தல், மாற்றல்.

கரந்துவரவெழினி-மேற்கட்டுத் திரையாகவுஞ் செயற்பாட்டுடனே வகுக்கப்படுவது.

காந்துவரவெழினி - கட்டுதற்குக் காரணம்-ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க்கென்க.

கரந்துவரவெழினியினிலக்கணம் - ஒருமுகவெழினி, பொருமுகவெழினியிலுஞ் சிறப்புடைத்தாய், அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்றுசொல்லப்பட்டவச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசவரன் என்னு நால்வகைவருணப்பூதர்களையுஞ்சித்திரத்தாலமைக்கப்பட்டுஅரங்கிற்றூங்கவிடுவது இதனை "கூறியவாங்கிற்குறியொடுபுணர்த்தாங் - காடுநேரியற்றுமரங்கி னெற்றிமிசைவழுவில்பூதநான்குமுறைப்பட-வெழுதினரியற்றலியல் புணர்ந்தோரே" எனவும் "முன்னியவெழினிதான் மூன்று வகைப்படும்"எனவும் மதிவாணர் நாடகத்தமிழ் நூலினும், "அரிதரங்கிற் செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற்பூதரையு-மெய்தவெழுதியற்று" எனப்பாரதசேனபதியத்துங்கூறியவாற்ருனறிக இப்பூத நான்கின் உண்டியும் அணியும் ஆடையும் அணியும் !மாலையுஞ் சாந்தமும் பொழுதுஞ் செயலு முதலியவற்

றையெல்லாம் சிலப்பதிகாரம் அழற் படுகாதைக்கண் உரைத்த வற்றானு [ணர்க.
கரி - இருத்தை, கந்துள்.
கரிகாடுபொச்சை - சுரம்பொதி.
கரிக்குருவி - கஞ்சரீடம்,கஞ்சனம், கய வாய், காரி, கிகிணி, பாரத்துவாசம், பிள்ளை,வஞ்சுளன்,வயவன்,வயான், வலியான்.
கரியவன் - கள்வன்.
கரு - சினை, பீள், சூல்,வயா, கருப்பம்.
கருக்குவாளிமரம்-கத்திகை, முத்தகம்.
கருங்காலிமரம் - கதிரம்.
கருங்கிளி - கீரம், கிள்ளை.
கருங்குரங்கு - காருகம், யூகம்.
கருங்குவளை - பானல்.
கருடன்-இமையில், உவணன், ககபதி, ககேசுவரன், கலுழன், சிதமுகன், சிதாககன், சுபர்ணன், தார்க்கியன், நாகாசனன், நாகாந்தகன், பன்னக வயிரி,பன்னகாசனன், புதனுக்கிளை யோன், புள்ளரசு, மாலூர்தி, வயின தேயன், விஷ்ணுரதம்.
கருணைக்கிழங்கு - கந்தம், சூரணம்.
கருதல்-உன்னல், எண்ணுதல், கண்ணு தல், காணல், குறித்தல், சிந்தித்தல், சுட்டல், சூழல், நினைத்தல், நுதலு தல், புகறல், பேணல்.
கருத்து-இங்கிதம்,உளம், உள்ளம், உன் னம், ஊகம், எண்ணம், குறிப்பு, சிந் தனை, சிந்தை, சேத்து, தியானம், நன்னயம்,நாட்டியம், நினைவு, படர், மதம், முன்னம்.
கருநாரை - சிகரி.
கருநிறம்- அசிதம், அஞ்சனம், இருள், கருள், காரி, காழகம், ககளம், காளி மம், கார், நீலம், நல்லம், மால், மா.
கருநெய்தல் - நீலம், இந்தீவரம்.
கருநெய்தற்பேதம் - நீலொற்பலம்.
கருந்தினை - இறடி, கங்கு.
கருப்பம் பயிலிடம்-பைங்குழிபைசந்தி.
கருமணல் - அறல்.
கருப்பூரத்தின்வகை-மலைச்சரக்கு மலை அடைவுச்சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால் மார் ப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாறோசு, குடன், சினச்சூடன், என்பனவாம்.
கருவியிசைக்குமுறை-வங்கியத்தின் வ ழியேநிற்பது யாழ்ப்பாடல் எனவும் மிடற்றுவழியது யாழாகலான் மிட ற்றுவழிப்பாடலும் யாழ்வழித்தென வும், யாழ்ப்பாடலின் வழியே நிற்ப துதண்ணுமையென்னும் பெயரினை யுடைய மத்தளம் எனவும், மத்தளத் தின் வழித்தாய்நிற்பது குடமுழா எனவும்,முழவோடுகூடிநின்று வாச் சியக்கூறுகளை அமைப்பது ஆமந்திரி கைஎனவும் இவவாமந்திரிகையுடன் முற்கூடியகுயிலுவக் கருவிகள் எல் லாம் பருந்தும் நிழலும்போல ஒன் றாய் நிற்குமெனவுங்கொள்க.
கரும்பூமியியல்-உழவு,தொழில்வரைவு, வாணிகம்,விச்சை,சிற்பம் என, அறு வகைப்படுந் தொழிற் பாகுபாட்டி னையுடையது.
கரும்பு-இக்கு,கழை, கன்னல், வேழம்.
கரும்புறு - கபோதம், பாராவாரம்.
கருவழலை - இராசமாநாகம்.
கருவிளை - கன்னி, சாக்கணம், கிகிணி.
கருவூர் - வஞ்சி.
கரைப்பொது-அணை,ஆழிகூலம்,கோடு, தடம், தீரம், பாரம், வரை, வாரம் விளிம்பு, அன்றியும், செய்கரை - அ ணைகுரம்பு, குலை, சேது.
கர்க்கடகவிராசி - அலவன், கள்வன். குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு, நள்ளி, மதி.
கர்ப்பூரம் - கருப்பூரம், கனசாரம், சசி, சிதாப்பிரம், பளிதம், பாளிதம்.
கலக்கம்-கதனம், கவனம், அரிதம், தரு கம், பிரமம், மதன், வெறி.
கலங்கல் - கதுவுதல், கலுழல்.
கலங்கனீர் - ஆவிலம், கலுடம், கலுழி, விலங்கல்.
கலசப்பானை - கஞ்சனை.
கலத்தல் - அளாவல், கலவல், கலாவல், சார்தல், செவணல், துழாவல், தோய் தல்,படிதல், புணர்தல், பொருந்தல், வளாவல், விளாவல்.
கலப்பு-கலம்பகம், கலவை, களவம், சங் கிரணம் - விரவு.
கலப்புக்கட்டோசை - ஆகுலம், ஆர்ப்பு, அலப்பல், உலப்பல், உளறல், குமு றல், கோடணை,கோலாகலம்,தமரம்,

துவைத்தல், துவைவரல், தெழித்தல், பூசல்.
கலப்பை - அலம், இதை, இலாங்கலி, உழுபடை, கலனை, ஞாஞ்சில், தொடுப்பு, நாஞ்சில், படை, படைவாள்.
கலவை - களபம்.
கலித்துறை - காரிகை, திலசம், இதற்கிராகம் பைரவி. இது விருத்தக்கலித்துறை. கோவைக் கலித்துறையென விருவகைப்படும்.
கலிப்பா - முரட்கை. [காண்க.
கலியாணத்தின்பெயர் - விவாகத்தைக்
கலை - இரலை, கருமான், புல்வாய்வச்சயம்.
கலைவல்லோர் - கவிஞர்.
கல் - கிராவம், கிராவணம், சிலை, சையம், பாடாணம், அன்றியும் திரண்டகல். உபலம், உலம், குண்டு, பெருங்கல்லின்பெயர் கெளிதம். சிறுகல்லின் பெயர் உபலம், கற்பதித்த விடத்தின்பெயர் - குட்டிமம் சலதாரை முதலியவற்றையடைக்குங் கல்லின்பெயர் - துறுகல், பொறை.
கல்லுழுத்துங்குழி வட்டம் - சேவணம்.
கல்வி - உறுதி, ஊதியம், ஓதி, காணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை, வித்தை.
கல்வி பயிலுமிடம் கல்லூரி, கல்வியூரி கழகம், கலாசாலை, பாடசாலை, பள்ளிக்கூடம்.
கவசம் - அந்தளம், அபரம், அரணம், அரணி, ஆசு, கசை, கச்சை, கண்டம், கந்தளம், கருவி, சடாரி, சாலி, சாலிகை, சுடாரி, சுரிகை, தடை, தம்பம், பரணம்பரம், பருமம், பாசம் பாரம், பெய்புரை, மேழகம், வாரணம், அன்றியுங்கைக்கவசத்தின் பெயர் - கைப்புடை, கோதை.
கவண் - ஒடிஒடிசில், கவணை, குணில், குளிர், தடை, தழல்.
கவரிமா - அன்னம், எகினம், ஒதிமம், நானம், படகம், பட்டம், மானமா. இதனாண்-ஏறு. ஒருத்தல் இதன்பெண் - பிடி, பிணை இதன் குட்டி - கன்று.
கவர்வழி - கவலை.
கவற்றிற்றாயம் - ஆயம்.
கவிஞனமைதி - ஆரவாரத்தை யுடைய கடல்சூழ்ந்த நிலத்திலே வடக்குந் தெற்குங்குணக்குங் குடக்கும் வேங்கடங்குமரிதீம்புனற் பெளவமெனத் தமிழ்நாட்டிற்கு எல்லை கூறப்பட்ட தமிழ்த்தேசத்தாரறிய முத்தமிழும் போமென்னுந் தன்மையையுடையனாகி, வேத்தியலென்றும் பொதுவியலென்றுங் கூறப்பட்ட இரண்டுகூறுபாட்டினையுடைய நாடகநூலைநன்றாகக் கடைப்பிடித்து இசைப் புலவன் ஆளத்திவைத்த பண்ணீர்மையைமுதலும்முறையும்முடியும்நிறையும்குறையும்மழமையும் வலிவும்மெலிவும் சமனும்வரையறையும்நீர்மையுமென்னும் பதினொரு பாகு பாட்டினாலுமறிந்து அறிந்தவண்ணம் அவன் தாளநிலையில் வைத்தவைத்த கிரந்தன் கவியினிடத்தே தோன்றமைக்க வல்லவனாய், பகைவராற் செய்யப்பட்ட வகையின் அளவறிந்து அவைதோற்றுதபடியிலேவகையின் மொழிகளான நாடகக்கவி செய்யவல்ல நல்லநூலைவல்லபுலவன் என்க.
கவியரங்கேற்றியபாட்டுடைத் தலைவன் செய்யும்வழிபாடு - உருவகணி, உவமையணி, வழுநிலையணி, மடவகுதனவிற்சியணி தீவகவணி, வேற்றுமையணி, வெளிப்படையணி, கருத்துடையடையணி, குறிப்பு, நிலையணி, சுருங்கச்சொல்லலணி, மிகுதி நவிற்சியணி, சொற்பின்வருநிலையணி, தன்மையணி, வேற்றுப்பொருள் வைப்பணி, சிறப்பணி, சிலேடையணி, எதிர்மறுத்தலணி, உடனிலைக்கூட்டவணி, உவமானவுருவகவணி, பிறிதுநவிற்சியணி ஒப்பைக் கூட்டவணி, நிதரிசனவணி, புகழ்ச்சியணி, பலபொருட் சொற்றொடர் நிலையணி, ஐயவணி, உயர்வுநவிற்சியணி, கலவையணி, வாழ்த்தணியென்னும் இருபத்தெட்டலங்காரங்களாலும் எழுத்து சொல், பொருள், யாப்பு என்னும் நான்குவகையாலும் குற்றமறச்செய்யுள்பாடும்புலவனும் அவைக்களத்திலுள்ளாரும் அரசனும் வியக்கப்பாடுகின்றவனும், இயலிசை நாடகமென்னு முத்தமிழில்வல்லவனும், ஆசு-மதுரம்சித்திரம் - வித்தாரமென்னும்

பாக்களைப் பாடுகின்றவனும், உயர்குடியிற் பிறந்து மேம்பட்டவனும், எல்லா வுறுப்புகளுங் குறைவின்றி நிறைந்து நல்லொழுக்க முடையானும், முப்பது வயதிற்குமேற்பட்டு எழுபது வயது வரையினுட்பட்டவனுமாயுள்ள கவிஞனொருவன் தன்மேற்பாடுங்கவிதையை யாவருமாராய்ந்தறியத் தான் கொள்ளுங்கால் அவைக்களத்தில் தோரணத்தைக்கட்டித்துவசத்தைநாட்டி, மங்கல முரசியம்ப, அந்தணரொருபால் வாழ்த்த, இவ்வாறுமேன்மைமிக்க காலத்தோடு விரித்த அழகிய, கோசும் சிபீதகம், பச்சிலே, அரத்தம், நுண்டுகில், சுண்ணம்,வடகம்,பஞ்சு, இரட்டு,பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, காரியல்,பேடகம்,பரியட்டக்காசு, வேதங்கம், புங்சர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம்,தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு,தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, பணிப்பொத்தி யென்று சொல்லப்பட்டபலவகைத்தாகிய ஆடைத்தொகுதியு ளொன்றின்மேலமைத்த பலதானியங்களால் வாய்ந்த புகழ்ச்சியுள்ளமுளைப்பாலிகையுடன் தீபமும் நல்லபூரணகலசமும் நிறைந்த மேற்கட்டியையுடைய பந்தரின்கீழே அசைதலில்லாததூண்வரிசையினொருக்கத்தாலும், பலவகைப்பட்ட தமது உறவினர் நெருக்கத்தினாலும், பெண்கள் பாடும் பல்லாண்டினாலும், நிறைந்த அழகமைந்தசெல்வம்வாய்ந்த தன் கோயினடுவில்தான் வெள்ளாடையையுடுத்தி, வெள்ளிய புட்பங்களையணிந்து, தனது ஆசனத்தில் தன்மேற்பாடிய பண்டித சிரோமணியை யிருக்கச்செய்து, தான் பக்கத்திலிருந்து மங்கலமமைந்த செய்யுளை மகிழ்கூர்ந்து கேட்டு, பொன்னும் ஆபரணமுங் கடகமுமிவைபோன்றபிறவும் அக்கவிஞனுக்குக் கொடுத்து அவன்பின் எழுடிசென்று அவன் நிற்கவெனத் தான் நிற்றல்பாட்டுடைத் தலைவர்க்குரிய கடமையாம் எனப் பன்னிருர் புலவர்.

கவுதாரி - இதல், கோரசம், சிரவம், சிவல், பூழான்.

கவ்வாணம் - படுமலே.

கழலேக்கட்டி - அரலே.

கழற்காய் - கழங்கு, முரல். [முழல்.

கழற்கொடி - கர்சூரம், கழங்கு, கழல்,

கழாயர் - வேழம்பர்.

கழி-உப்பளம், காயல், கானல், முரம்பு.

கழிக்கரைச்சோலே - கானல்.

கழிநிலம் - உவளகம், அளக்கர், காயல்.

கழிபிறப்ப - உம்மை.

கழிமுகம்-அதோமுகம்,அருவி,கயவாய், கயவு, கூடல், புகார்.

கழியுடலின்முழுவெலும்பு - கங்காளம்.

கழிவுநாள் - வைகல், காலி.

கழுகு - உவணம், எருவை, சகுந்தம், கவலே, புண்டரம்,புண்டரீகம்.

கழுக்கடை - கழுமுள்.

கழுதை - அத்திரி, இராடம், கத்தை, கரம், கரோடிகை, கர்த்தபம், கார்த்தபம், காளவாய், கோகு, வாலேபம், வேசரி, இதன்பெண்-பெட்டை.

கழுத்தணி - கயில், கடை,சிறுபுறக்கோவைகொக்குவாம். அஃதாவது வீரச்சங்கிலியும்,கோர்ச்சங்கிலியும், பூணப்படுஞாணும் என்னுமிவற்ருேடு கைபுனேயப்பட்ட தொழில்களையுடைய கவடி, சரப்பளி முதலாயுள்ள அணிகட்கெல்லாந்தலேயொன்ருய்க் கொக்குவாய்ப்படுகண் தொடக்கிய பன்மணிக்கோவையால் தூக்கமாகச் செய்யப்பட்ட பின் ருலி முதலியனவுமாம்.

கழுத்தின்பின்குழி - சூறை,பளிச்சை.

கழுத்து-கண்டம்,கந்தரம், களம், கனரி, கிரீவம், கில்லம், மிடறு, கழுத்தடியின்பெயர்-கந்து.

கழுமரம் - கழுமுள்.

கழுவிதல்-பண்ணல். [பர்,வேழம்பர்.

கழைக்கூத்தாடிகள் - கழாயர், கோரம்

களர் - களம், களரி, காரி, முதுநிலம்.

களவு - கடுதல், கயவு, கரப்பு, கரவடம், கரவு, கள், கள்ளம், கள்ளல், சோரம், சோர்வு, தேயம், படிறு, பட்டிமை.

களாச்செடி - கள், களவு.
களித்தல்-உவத்தல், செருக்குதல், மகிழ்தல், மதர்த்தல்.
களித்தோனவிநயம் - இரகசியத்தை மறையாதவனாய் சொல்லுதலின்மையும், கவிழ்ந்துஞ்சோர்ந்தும்தாழ்ந்துந் தளர்ந்தும் விழ்ந்த சொற்களுடன் சாய்தலும், களிகவர்ந்த கண்ணோக்குடைமையுங் கொண்டவனென்க.
களிப்பு - அபிமானம், ஆமோதம், உவகை, உவப்பு, ஏமம், கடி, களி, செருக்கு, தருக்கு, நகை, நயன், பாடவம், பெருமிதம், மகிழ்ச்சி, மதம், மதர், மதர்ப்பு, மதர்வு, மத்தம், மலர்ச்சி, யௌவனம். அன்றியுமிரு களிப்பின்பெயர் இறுமாப்பு, எக்களிப்பு, எக்கழுத்தம், ஏமாப்பு, செம்மாப்பு, [பூரிப்பு.
களதல் - கட்டல்.
கள்-அம்மியம், அரி, அரிட்டம், அருகி, அருப்பம், அளி, அறிவழி, ஆசவம், ஆதவம், ஆம்பல், ஆம்பிலம், ஆலி, ஆலை, இக்கு, இரேயம், ஈழம், எலி, கஞ்சா, கல்லியம், கவ்வை, களி, காலி, குடு, குந்தி, கொங்கு, சாதி, சாயனம், சாலி, சாறு, சிக்கர், சுண்டி, சுமாலி, சுரை, சுலோகி, சுவிகை, சுழிகை, சேறு, சொல், சொல்விளம்பி, சோபம், ஞாளி, தணியல், தம்பி, தேசம், தேறல், தேன், தொண்டி, தொப்பி, நறவு, நனை, நாற்றம், படு, பாடலி, பாணி, பாலி, பானம், பிரசம், பிழி, பேதை, மகரந்தம், மட்டு, மது, மதுகரம், மதுரை மதுவம், மருட்டம், மறலி, மாதவம், மாரி, மாலி, முண்டகம், முருகு, மேதை, மௌலி, யானம், வடி, வாணிதம், வாருணி, விகுணி, விசளி, வெறி, வேரி.
கள்விற்போற்-சவுண்டியர், துவசர், படுவர், பழையர், பிழியர், இவர் வகைப்பெண், சாலினி.
கள்ளி-வச்சிரம்.
கறிகள் - நீடாணம். அன்றியும் தாளித்தகறியின்பெயர்-சாறு, குய். துவட்டற்கறியின்பெயர்-வறை. பொறிக்கறியின்பெயர்-கருனை. புளிக்கறியின்பெயர்-துவை, புளிங்கறி.
கறிவர்க்கம் - கூட்டமை.

கறுப்பு-அஞ்சனம், இருள், கருமை, கருள், களகம், களம், களரி, கறை, காரி, கார், காழகம், காளம், காளிமம், காமம், நல்லம், நீலம், நீலி, பரி, மா, மாசு, மாயம், மால்யை.
கறையான் - ஆழல், சிதலை, செல்.
கற்கடகக்கையாவது - தெரிகிலைக்கையிரண்டும் அங்குலிபிணைந்து வருவது.
கற்பகத்தருவிற்படர்கொடி-காமவல்லி.
கற்படி - ஆரோகணம், சோபனம்.
கற்படுத்ததலம் - குட்டிமம்.
கற்படை - சுருங்கை.
கற்பம் - கனகம் பத்துகொண்டது.
கற்பாழி - தாண்டை.
கற்பு - முல்லை.
கற்புடையாள் - சதி.
கற்போன் - படிப்போன், மாணாக்கன், வித்தியார்த்தி, மாணவன், பயில்வோன்.
கற்றல் - செழுமல், நவிலல், பயிலல்.
கற்றாழை - கன்னி, குமரி.
கற்றோர் - நாவலர்.
கனம் - அடை, ஞாட்பு.
கனவொழுங்கு - சுவாலை.
கன்றைவளர்க்கும்பசு - வற்சலம்.
கன்னல்வகை - அகாரத்தோற்றமாக இகரம் இன்பத்தையுண்டாக்கும், உகரம் அரசாகும், எகரம் உறங்கும், ஒகரம் மரணம்.
கன்னன்-அங்கர்கோமான், அதரித்திரன், கச்சைக்கொடியினன், கருணன், கவசகுண்டலன், கனகக்கொடியோன், கானீனன், குந்தி முதற் புதல்வன், சவுரியன், பராயணி. பாண்டவர்முன்பிறந்தோன் மிகுகொடையாளன்.
கன்னார் - கஞ்சகாரார், கன்னுவர்.
கன்னி - குமரி.
கன்னியாற்றிற்குத் தெற்குள நாடுகள் முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும். முரிஞ்சியூர்முடிநாகராயரும்நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்டநாலாயிரத்துநானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும்முதுகுருகும் கலரியா

விறைவு முன்னிட்டவற்றைப் புனைந்தெரிந்து நாலாயிரத்துநானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினர்காய்சினவழுதிமுதற் கடுங்கோனிறுயுள்ளார் எண்பத்தொன்பதின்மர் அவருட்கவியரங்கேறினர் எழுவர். பாண்டியருள் ஒருவனாகிய சயமாகீர்த்தியென்னும் நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினன். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னுமாற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும்இவற்றின் நீர்மலி வானத்தைப் போன்றமலிந்த எழ்தெங்கநாடும்எழ் மதுரைநாடும் எழ் முன்பாலைநாடும் எழ்பின்பாலைநாடும், எழ் குன்றநாடும், எழ்குணகாரைநாடும், எழ் குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும், குமரி, கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும்பதியும், நதியும், தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறுங் கடல்கொண்டொழிந்தது என்ப.

கன்னியிற்பெற்றபிள்ளை - கானீனன்.

கன்னியிராசி - பெண்பொதுப் பெயரெல்லாஞ் செல்லுக.

கா

காக்கணஞ்செடி - உபவை, கருவிளை, கன்னிகிகிணி, கிருட்டிணி.

காக்கை-அரிட்டம், உரண்டம், கரடம், கரவாகம், கரும்பிள்ளை, காகம், காரிகோண்டம், கொடி, துரோணம், நரந்தம், நராந்தம், பரபிருதம், புலிபுட்டம், புட்டம், வாயசம், அன்றியும், அண்டங்காக்கையின் பெயர் காலோலம்.

காங்கூலக்கை-அஃதாவது சுட்டுவிரலும்,நடுவிரலும் பெருவிரலும் ஆகியமூன்றுஞ்சேர்ந்துகுவிய, பவித்திரவிரல்வளைந்துசிறுவிரல் நிமிர்ந்தபெற்றியதாம்அதுகுவிகாங்கூலம் முகிழ்காங்கூலம் விரிகாங்கூலம் என மூவகைப்படும். "என்னை காங்கூலமே கருதுங்காலைச்சுட்டும்பேடும் பெருவிரல் மூன்று மொட்டிமுன்குவியவ நாமிகைமுடங்கிச் - சிறுவிர னிமிர்ந்த செய்கைத்தாகும், முகிழ்காங்கூலமுந்துறமொழிந்த - குவிகாங்கூலங்குவிவிழந்ததுவே, மலர்காங்கூலமதுமலர்ந்ததுவே" என்று பரத சேனுதிபதிய நூலிற்பகரப்பட்டதனுலெலன்க.

காசி - வாரணசி, வாராணசி.

காசிபன் - சுராசுரர்க்குப் பொதுத்தந்தை, இவர் மனைவிகள் திதி அதிதி. அசுரரெல்லாரும் திதிமைந்தர். சுரரெல்லாரும் அதிதிமைந்தர்.

காஞ்சிபுரம் - கச்சி, பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டிரபுரம், தண்டகபுரம் இவற்றுள் சாட்சிவிருட்சமானது தன்னிழல் பிரியாதிருத்தலால்காஞ்சி, பிரமதேவனது இரவினும் ஊழிக்காலத்தும் பிரளயவெள்ளம் அந்நகரெல்லைக்கண்போகாது சுற்றிநின்று ஒருசத்திகாத்தலால்பிரளயசித்து, திருக்கயிலை மலைக்கண் சிவபெருமானது திருக்கண்களை உமாதேவியார் மூடலும் இருளுலகை மூடியபாவத்தினுல் தேவியார் மரகிழற் கீழ்வந்துபூசைசெய்து ஏகம்பநாதனைத் தழுவக்குழைத்துஅருள்பெற்றமையாற சிவபுரம், மும்மூர்த்திகளுந் தத்தம்பதவிகள்போல் வீற்றிருப்பதினுல் திரிமூர்த்திவாசம், பிரமன் தனது மனம்புனிதமாம்படி கச்சபாலயத்திற் சிவபெருமானைப் பூசித்தமையால் பிரமபுரம்போகமூர்த்திகளை வழிபடுவோர் காமித்த வண்ணங் கொடுத்தலாற் காமபீடம், பிரமாதிதேவர்கள் வரத்தைநாடித் தவம்புரிதலால் தபோமயம், திரிலோகத்துமுள்ள புண்ணியக்ஷேத்திரங்களுள் தருமபலத்தைப் பார்க்கினும் ஈண்டுச்செய்யுந்தருமம் மிகுபலத்தைக் கொடுத்தலால் சகற்சாரம் அணிமாமுதலிய அட்டசித்திகளையுங் கொடுத்தலால் சகல சித்தி

சிவபெருமான்உமாதேவியாரையோர்காலத்து நீலியென்றுகூற, அவர் தனது கருநிறத்தைக்கழிக்க,அதுதீர்க்கையாகி இங்ஙகரத்தைக் காத்ததிற்றலால் கன்னிகாப்பு,கயிலையிலிருந்த சிவகணத்தொளொருவனான தண்டமரன்அரசனாய்ப்பிறந்தானாலால் தண்டமரபுரம். தண்டகாசனாதலால்தண்டகபுரம் என்பது காரணம்.

காஞ்சொறிச்செடி - கண்டூதி.

காடி - கிலாலம்.

காடு-அடவி, அத்தம், ஆரணியம், ககனம்,கடம், கடறு, கட்சி, கட்டம், கண்டம்,கவனம், கலை, கள்ரி, காண்டகம், காண்டம், காந்தாரம், கானகம், கானம், கானல், கான், குறும்பொறை,சங்கிரம், சிரணி, சுரம். தாவம், தில்லம், பழுவம், பாணி, புறவம், பொச்சை, முளரி, வனம், விடர்,விபினம், வியல், அன்றியும் குறுங்காட்டின்பெயர்-இறும்பு. பெருங்காட்டின்பெயர் - வல்லை. முதுகாட்டின் பெயர்-முதையல்.

காடுகாள் - கொற்றி, சூரி, சூலி, மாரி, மூதணங்கு, மோடி, வடுகன்றாய், வடுகி.

காடுபடுதிரவியம் - அரக்கு, இறால்,தேன்நாவி, மயிர்பீலி.

காடை - இதல், கபிஞ்சலம், குறும்பூழ்.

காட்சிவரி - அஃதாவது:-தன் வருத்தைப் பலருங்காணும்படி நடித்தல். என்னை:"காட்சிவரி யென்பதுகருதுங்காலைக் கெட்டமாக்கள் கிளைகண்டவர்முன்னர்ப்-பட்டதுகூறிப்பநிந்ததிற்பவே" என்றாராகலின்.

காட்டல் - சுட்டல், தோற்றுவித்தல்.

காட்டழல் - தாவம்.

காட்டா-ஆமா, கவயம், இதனாண்-போத்து, இதன்பிள்ளை-கன்று.

காட்டாளத்தி - அச்சுடனிகழ்வது.

காணல்-கண்ணுறல், காண்டல், தரிசித்தல், தெரிதல், நோக்கல், பார்த்தல்.

காண்வரியாவது-பாகைப்பொதிந்தபவளத்தைத்திறந்து ஒளியைத்தருகின்ற முத்தையொத்த நகைநலத்தைக்காட்டிவருகௌவந்து, வந்தபின்னர் மனமகிழ்வுறுவனதந்துபோகவெவப்போகுங் கூத்தாம்.

காதணிவகுப்பு - கடிப்பம், கடிப்பிணை, ககம்பி, கன்னப்பூ, கன்னாவதங்கம், குணுக்கு,குண்டலம், குழை, கொட்டை, செவிமலர், தடாகம், தூக்கம், தொங்கல், தோடு, மஞ்சிகை, வல்லிகை, வேடம்.

காதம் - காவதம்.

காதலன்-அன்பன், உரியோன், கணவன், கண்டன், காந்தன், கேள்வன், கொழுநன், தலைவன், தவன், பதி, நாயகன், மணவாளன், வல்லவன், வேட்டோன்,மணமகன், பத்தா.

காதலோர்கூட்டம் - ஆடல், கலவி, கிரீடைதல்,புணர்ச்சி,மைதுனம், விழைச்சு, விழைவு.

காது - அள், கன்னம், கேள்வி, சிரவணம், சிரவம், சுருதி, சுரோத்திரம், செவி, வள்.

காத்தல்-அளித்தல், தாங்கல், திதி, நிலைபெறுத்தல், நோக்கல், புரத்தல்.

காத்தளித்தோன்-பாலனன், புரவலன்.

காந்தம்-சலாகை, சும்பகம்.

காந்தள்-கோடை,தோன்றி,அன்றியும் வெண்காந்தளின்பெயர் - காந்துகம், கோடல், கோடை, செங்காந்தளின் பெயர்-இலாங்கலி,தோன்றி,பற்றை.

காந்தாரபஞ்சமம் - ஒருபண் கூறழ்ப்பு.

காந்தாரம் - சாரல்.

காப்புக்கடவுள் - காப்பாகநான்முகத்துரைக்கப்படுங் கடவுளாவான் மலர்களாற் கமழுந்தண்ணிய துழாய்மாலை சூடிய திருமாலேயாம். அத்திருமால் காத்தற்றொழிலுக்காகத் திருமகளைப்புணர்தலையுடையவனாதலாலும், இரீடமுங்கடகமும் நெருங்கிய மலர்மாலையுங்குண்டலமும் உபவீதமும் நிலந்தங்கியகௌத்துவ மணியுமாகிய இவையிற்றை அணியும் இறைவனாதலாலும்,நிலைபெற்ற பிரமனைப்படைத்தவனாகலானும் நான் முகத்துக் கூறுதற் குரியனென்று நூல்வல்லோர் கூறுவர்.

காமத்தின்பெயர் - ஆசைப்பெருக்கத்தைக்காண்க.

காமநூல்-சுரதநூல், மதனாகமம், கொக்கோகம், மதனசூடாமணி.

காமநோய்-காமக்கவலை, மதனம், மோகம், விகாரம், விரகம், அன்றியும், ஒருதலைக் காமத்தின்பெயர் - கைக்கிளை, இருவரிலொருவர்க்குப் பொருந்தாக்காமம் - பெருந்திணை.

காமரப்பாட்டு-இசை, இராகம், கந்தருவம், கானம், கீதம், கேயம், கொளை, நாதம், பண், பாணி, வரி.

காமவவிநயம் - அஃதாவது:—சுத்தமாகிய அலங்காரமுள்ளவடிவுந் தொழிலும், காரிகையைநோக்குங் கடைக்கண்ணும், பற்களு நகையுஞ் சந்திரனுநிலவும்போலத் தோன்றலும்,மலர்ந்த முகமும், இரந்த பெருமையாகிய சொற்களுமுடையதாம்.

காமனுடல் - பேடு.

காமன் - மான்மகன், மதனன், மகரக்கொடியோன், வேனிலாளி, வேள், வசந்தன், அங்கசன், அநங்கன், ஐங்கணைக்கிழவன்,திங்கட்குடையோன் தென்றற்றேரோன்,வில்லிவனசன் போகன், மலர்க்கணையோன், மதிசகன், இரதிகாந்தன், மாரன், மனோபவன், மனோசன், மனோபு, மன்மதன், திருமகண்மைந்தன், சம்பராருதனன், உருவிலி, கடன் முரசோன், கைதைச் சுரிகையன், கந்தர்ப்பன், சித்தசன், பூவாளி, பூமான், கருப்புவில்லி.

காமன்கணை - அசோகம், குவளை, தாமரை, மாம்பூ, முல்லை.

காமன்கணைச்செயல் - சந்தாபம், சித்தாகுலம்,புணர்ச்சிக்கிணங்குதல், பெருமயக்கு, மோகனம், வசீகரணம்.

காமன்கணையவத்தை - சுப்பிரயோகம், சோகம், மரணம், மோகம், விப்பிரயோகம், அவற்றுள் சுப்பிரயோகமாவது பேசாதொழியா வினைவசோகமாவது வெதும்பியுணவுவெறுத்தல் மரணமாவது உயிர் சோர்தல் மயங்குதல்,மோகமாவது அழுதல், பிதற்றல், விப்பிரயோகமாவது பெருமூச்செறிந்து வருந்துதலென்பனவாம்.

காமன்காலம் - வசந்தம்.

காமன்குடை - சந்திரன்.

காமன்குதிரை - கிளி.

காமன்கொடி - மீனக்கொடி.

காமன்சேனை - பெண்கள்.

காமன்தேர் - தென்றல்.

காமன்மனைவி - இரதி.

காமன்முரசு - கடலொலி.

காமன்யானை - இருள்.

காமன்வில் - கரும்பு.

காமன்வில்நாண் - வண்டு.

காமன்வாள் - தாழைமடல்.

காயா-அஞ்சனி,அல்லி, காசை, புன்காலி, பூவை, வச்சி.

காயாதமரம் - அவகேசி.

காய்-தியளி, பலன், நன்றியும், இளங்காயின்பெயர் -பிஞ்சு, வடு.

காய்தல்-உலரல், முதிர்ந்திடல், முனித்தல், வறத்தல்.

காய்மரம் - பலினம்.

காரணச்சொல் - கதை.

காரணம்-வது, நிறம், நிபம், நிமித்தம், பொருட், மூலம்,வழி, வாயில், அன்றியும்,ஆதிகாரணம், நிதானம், உபாதானம்முதல், மூலம்.

காராமணி-ஒருதானியம்,இதை, கூலம், முதிரை.

காராம்பி - அம்பி.

காரிப்பிள்ளை-வஞ்சுளன்,வயவன்,வயான்.

காரியம் - காகம்.

காரெலி - இரும்பன், கருப்பை.

காரெலிவருக்கம்-இரும்பன், கருப்பை.

கார்காலம்-கார்,சரற்காலம், நவம்,மாரிக்காலம்.

கார்த்தல்-உறைத்தல்,கடு,கடுகம், கரில், காயம், காரம், காழ்த்தல்.

கார்த்திகைநாள் - அங்கி, அளகு, அளக்கர்,அறுமீன்,அறுவாய், ஆரல், இருள், எரிநாள், தழல், நாடன், நாவிதன், வாணன்.

கார்த்திகைநாள்வடிவு - அறுமீன் கூட்டம்.

கார்த்திகைமாதம் - ஊர்ச்சம், பாகுலம், ஒருமாதம், தேட்டிங்கள், விருச்சிகரவி.

கார்ப்பு-கடு, கடுகம், கரில், காயம், காரம், காழ்ப்பு.

காலணிப்பொது-பாதசாலம்,இவற்றின் பேதப்பெயர் - காற்சரி, கிண்கிணிச் சதங்கை, சிலம்பு, பாடகம், இவற்றைத்தத்தம் வரியிற்காண்க, அன்றி

யும், ஆடவர்கொடைவீரத்தணிவது-கழல்.
காலநுட்பம் - கலை, துடி, விகலை.
காலநெடுமை - சிரம், நீட்டிப்பு, பரிதம், அமையம், எல்லை, காலை, கொன், செவ்வி, பதம், பாணி, பொழுது, போழ்து, வேலை.
காலவிரைவு-இலேசம், இறை, ஒல்லை, கணம்,சிறுவரை,மாத்திரை, வல்லை.
காலன் - கூற்று, சண்டன், பாசகரன், மறலி, மறல், யமன், மந்திரி.
காலாள் - பதாதி.
காலை - முழவு, துடி.
கால்-அங்கிரி,அடி,கழல்,சரணம்,தாள், பதம், பாதம்.
கால்விரலணி-மகரவாய்மோதிரம், பீலி கான்மோதிரம், காலாழி.
காவடி - கா, தோட்சுமை.
காவலர் - கஞ்சுகி, மெய்காப்பாளர்.
காவல் - அரண், ஏமம், ஓம்படை, கடி, கட்டு, கதவம், கதவு, சமுது, காப்பு, சிறை, செயல்,சேமம்,சேவல்தட்டி, பாராணம், பாது, வேலி.
காவற்காடு - அரணம், அரண், இளை, கணையம்.
காவிக்கல்-காரிகம், தாது, நற்செங்கல்.
காவேரி-சவேரசை,காவிரி, பொன்னி.
காவேரிப்பூம்பட்டினம் - புகார்.
காவேரிப்பூம்பட்டினத்துள்ள மன்றங்கள்-களவென்பதிளைமனத்தாற் கனவிலினைப்பினும் வினைப்போரை நடுக்குவிக்கும் வெளியான இடத்தையுடையமன்றம், கூனர்தொழு நோயர் முதலிய அழுகுமெய்யையுடையோரும் நல்லநிறம் பெறுகைக்குக் காரணமாயுள்ள பொய்கையை யுடைய மன்றம்,மருந்தூட்டவுண்டு பித்தேறினரும் நஞ்சையுண்டு நடுக்குந் துயரமேறினரும், பாம்புகடி யுண்டாரும் பேய்பிடிக்கப் பட்டாரும் ஒருகால் சுற்றிவரின் அத்துன்பங்கள் நீங்கும் கல்நாட்டப்பட்டமன்றம், பூதசதுக்கம், செங்கோன்மை கோடினுலும் நடுநிலைகுறையினும் காவார்கூறுது கண்ணீர் சொரிந்தழுதுகாட்டும் பாவைமன்றம் ஆகிய இவகை மன்றுமாம்.

காழ்த்தல் - கடுகம், கரில், காயம்.
காளம் - அம்மியம், காகளம், காளகம், சின்னம், தாரை.
காளான் - ஆம்பி.
காளி-ஐயை, அலகைக்கொடியாள், ஆரணி,எண்டோளி, கங்காளி, கவுரி, குண்டலி,குமரி,சண்டிகை,சாமுண்டி சூரி,சூலி, தாருகவிநாசனி, தாருகற் செற்றாள், நீலி, பதுமை, பத்திரி, பைரவி, மதுபதி, மாதங்கி, மாதரி, மாயை, மாயையுற்ருள், மாலினி, முக்கண்ணி, யாமளை, யாளியூர்தி, யோகினி,வல்லணங்கு, வீரி, வேதாளி.
காளிக்கொடி - அலகைக்கொடி.
காளியேவல்செய்மகளிர் - இடாகினி, மாயவள், வஞ்சனி, வலவை.
காளிவாகனம் - ஓரி.
காற்சரி - பரியகம்.
காற்பலம் - கஃசு.
காற்ருடி - கதலி, சறங்கு, சுழல்.
காற்றின்குணம்-போக்கு, வரவு,நோய், கும்பித்தல், பரிசம் எனவிவை.
காற்று-அம்போதி,அரி, அநிலம், ஆசுகம்,உயிர், உயிர்ப்பு, உலவை, ஊதல், ஊதை, ஒலி,கந்தவகன்,கந்தவாகன், கம்,காலசம்,காலிலி, கால், கோதை, சதாகதி,சமீரணன்,சமீரன்,சலனம் சுசனம், கிழலி, நீலம், நில், பவமானன், பவனம், பிரபஞ்சனன், மருத்து, மாருதம், மால், வங்கூழ்,வளி, வாதம், வாயு, விண்டு, வேற்றலம், அன்றியுங் காற்பருவத்தின் காற்று, வாடை,கூதிர்ப்பருவத்தின் காற்று, கூதிர், கூதை, முன்பனிப்பருவத்தின்காற்று - கொண்டல் பின்பனிப் பருவத்தின்காற்று-தென்றல் முதுவேனிற்பருவத்தின்காற்று கோடை அன்றியுங்கீழ்காற்று கொண்டல்மேல்காற்று-கோடைதென்காற்று - தென்கால்,தென்றல், வசந்தம், வடகாற்று - வடந்தை, வாடை.
கானல் - பிசாசரதம், பேய்த்தேர் மரீசிகை, வெண்டேர், வேனில்.
காணுங்கோழி - பூழ்.

கி

கிடைத்தல்-சிக்கல், பயத்தல், பெறல், வாய்த்தல்.
கிட்டல்-அணவல்,அணுகல், அண்டல், அருகுறல்,உறல்,குறுகல், சிவணல், சேரல்,துன்னல்,நணுகல், நண்ணல், நேர்தல், மருவுதல்.
கிணறு - அசும்பு, உறவி, குழி, கூபம், கூவல்துரவின்பெயர்-கேணி,பூவல்.
கிண்கிணி-நூபுரம், பரிபுரம், பரியகம்.
கிண்கிணி - மாலை, தார்.
கிண்டல்-கிளர்தல், கிளைத்தல், நோண்டல்.
கிம்புரி - கோளகை, தாங்கி, பூண்.
கிரணம் - கதிர்,கற்றை,காந்தி, பிரபை.
கிராமணி-சாணான், கிராமமுற்றோன், கிராமியன்.
கிராமமுற்றோன் - கிராமியன்.
கிருகரன்-முகத்திடைநிற்குமொருவாயு.
கிருகரன்குணம் - தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது.
கிருபை-அபயம்,அருள், இரக்கம்,ஈரம், கருணை, காருண்ணியம், தகவு, தயாளம், தயை, நிழல்.
கிருபையுடையோன்-காருணிகன்,காருணியகன்,கிருபாளு,தயாளன்,தயாளு.
கிலுகிலுப்பைச்செடி - பக்னறை.
கிழக்கு-இந்திரி, ஐந்திரம், கீழ், கீழ்த்திசை, குணக்கு, பிராசி, பூருவம்.
கிழங்கு-கந்தம், சகுனம், பலம்,மூலகம், மூலம்.
கிழமை - வாரம்.
கிழவி - மூத்தோள், விருத்தை.
கிழித்தல்-அவிர்தல், கீண்டல், கீழ்தல், கீனல், கீறல், பீறல்.
கிளப்புதல் - திமைத்தல்.
கிளர்வரி-நடுகின்றார். இருவருக்குஞ்சகந்துசொல்லக்கேட்டு நிற்பது என்னை! "கிளர்வரியென்பது கிளக்குங்காலை யொருவதுய்ப்பத் தோன்றியவர்வாயிருபுற மொழிப்பொருள் கேட்டு நிற்பதுவே" என்றாராகலின்.
கிளறுதல் - நோண்டல்.
கிளி - அரி, அவந்திகை, எகி, கிள்ளை, கீரம்,சாரு,சுகம்,சுவாகதம், தத்தை, வன்னி, கின்னரம், அன்றியுங் கருங்கிளியின்பெயர் - கிள்ளை, கீரம்.
கிளிகடிகருவி - தட்டை, தழல்.
கிளிஞ்சில் - எருந்து, ஏரல்.
கிளைத்தல்-கிண்டல், கெண்டல், பிளிறல்.

கீ

கீதாங்கம்-வாச்சியக்கூறினு ளொன்று. அஃதாவது கீதத்திற்கு வாசிப்பது.
கீரி-காத்திரம்,காத்திரி,தீர்வை, நகுலம் இதன்பிள்ளை-குட்டி,பறழ், பிள்ளை.
கீழறுத்தல் - அறைபோதல்.
கீழறை - பிலம்.
கீழுதடு - அதரம்.
கீழ் - கயம், கிழக்கு.
கீழ்காற்று - கொண்டல்.
கீழ்மக்கள்-அசடர்,அசீதர், அற்பர், இதரர்,இபவர், கண்டகர், கயவர், கலர், கல்லார், கனிட்டர்,கையர், சிதையர், சிறியர், சிறுமையர், சீத்தையர், சுமடர், திக்குணர், தீம்பர்,தீயோர், தேரார், நீசர், நெறியிலார், பதகர், புல்லர், புன்குணவர், பூரியர், பேதையர், பொறியிலார், மறையிலார், முசுடர், முசுண்டர், முறையிலார், மூடர், மூர்க்கர்.
கீழ்வாய்ப்புரம் - அணல்.
கீறல் - கிழித்திடல், கீண்டல், கீழ்தல், கீளல், கீன்றல், பிறல்.
கீற்று - கிழி.

கு

குகை - நிகுஞ்சம்.
குங்கிலியம் - குக்குலு, குங்குலு.
குங்குமமரம் - கொங்காரம்,ஞாழல்,அருக்கம், நறவம், மரவம், மாலம்.
குங்குமம் - செஞ்சாந்து.
குடக்கூத்து-கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்த கண்ணன் வாண

ணசரமாகிய சோணிதபுரத்து ஆடிய கூத்தொன்று இது ஐந்துறுப்பை யுடைத்து.
குடங்கை-அங்கை. நாடகவுறுப்புகளொன்று. அஃதாவது எல்லா விரலுங் கூட்டி யுட்குழிப்பது.
குடங்கையைக் குவித்துக் கொட்டல்-கொம்மை.
குடமுழா -மண்கனை, முழவம்.
குடம் - இடக்கர், இடங்கர், இறம்பை, இறங்கர், கடம், கலசம், குடங்கர், குடந்தம், குணம், கும்பம், தசம்பு, தாழி.
குடி - திணை.
தட்டார்-அக்கசாலையர், செங்கொல்லர், சொன்னகாரர், பொன்செய் கொல்லர், பொன்வினைமாக்கள்.
தணக்குமரம் - துணவை.
தணியாக்கோபம் - கனிதல், கொந்தல் கோம்பல், வெதும்பல், வெம்பல்.
தணியானிமூவு-சலம், சொற்றம், வைரம்.
தண்டனிடல் - வந்தனம், பணிதல், காணல், வழிபடல், பணிவு, இறைஞ்சல், வணங்கல், பார்த்தல், தாழ்தல்.
தண்டாரிதம்-எறும், கதை, சீர், மூளை,
தண்டை-காற்றண்டை, சீர், வயிரம்.
தண்ணீர்க்குடம் - கரனவாழை.
தண்ணிமை - உடுக்கை.
தண்ணுமையோனமைது-எல்லாக் கூத்தக்களும், எல்லா பாட்டுகளும் எல்லா விசைகளும், வடவெழுத் தொரீஇவந்த எழுத்துத்தானே கட்டப்பட்ட வாக்கியக்கடவுளைக் கூறுபாடுகளும், எல்லாப்பண்களும் இருவகைத் தானங்களும், எழுவகைத் தூக்குக்களும், இவற்றின் குற்றங்களும், இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களுமென்று சொல்லப்பட்டனவற்றை நுண்ணிதாக வுணர்ந்து ஒரோருருவை யிரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரப்பநிறுத்தவும் அவ்விடத்துப் பெறுமிரட்டியேயாய்ப் பாகவுருவானவழி நிற்குமான நிறுத்திக் கழியுமானக் கழிக்கவும் வல்லவனும். இப்படி நிகழ்ந்தவுருக்களில் யாழ்ப்பாடலுங் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்தகாரணத்தாற் குறியறிந்து சேர வாசித்து மற்றைக் கருவிகளிற் குறைநிறப்புதலும், மிகுதி யடக்குதலும், ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையில் இரந்திரன் தோன்றுதபடியே செய்தலும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகு பெறச்செய்து காட்டலும் வல்லவனுய், அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அறியதொழிலினையுமுடைய ஆசிரியனும்.
ததியுணவு - தயிரிற்றிமிரல்.
தந்திரம் - உபாயம், சூழ்ச்சி.
தந்திரிகரம் - செங்கோட்டியாழினது அறுவகையுறுப்பினுளொன்று. அஃதாவது நரம்பு தவக்குவதற்குத்

தகைப்பொழிய இருசாணால் விரல்கீளமாகக் குறுக்கிடத்துச் சேர்த்த ஐம்பத்தோருறுப்பு.
தந்திரியர் - அமாத்தியர், ஏனாதியர், விதியர்.
தந்தை - அத்தன், அப்பன், அம்மான், ஐயன், ஈன்றான், குரவன், சனகன், தகப்பன், தாதா, தாதை, பிதா.
தமிழ்-திரமிடம், திரவிடம், திராமிடம், திராவிடம், திரமிளம், தென்மொழி.
தமிழ்கூத்தர் - வாயிலோர்.
தமையன்-அண்ணல், அண்ணன், சேட்டன், தலைவன், முன்றோன்றல், முன்னவன், மூத்தோன், வரன்.
தம்பட்டம் - ஆனகம், திண்டி, படகம், பணவம்.
தம்பதி - இரட்டையாண்பெண்.
தம்பலப்பூச்சி - இந்திரகோபம், ஈயல், கோபம், மூதா.
தம்பலம் - தம்பல்.
தம்பி - அலரசன், அனுசன், இளவல், இளையோன், உவா, கனிட்டன், பின்னை, பின்றோன்றல், பின்னவன், பின்னோன்.
தயிர் - ததி, பெருகு, முகறு.
தயிர்கடைதரி - வெளில்.
தயிர்கடைதாழி - குடாரு, மந்தனி.
தரா - மதுமம்.
தரித்திரம்-அல்கல், இரப்பு, இலம்பாடு, இல்லாமை, இன்மை, உறுகண், ஒற்கம், குறுவாழ்க்கை, குறை, சிறுமை, நல்குரவு, நிரப்பு, மறல், மிசை, மிச்சை, மிடி, வறுமை.
தரித்திரன் - அற்றான், ஆதுலன், ஆற்றான், இலம்பாட்டோன், இல்லோன், ஒறுகணாளன், ஏழை, கிஞ்சன், தீனன், துயருறுவோன், நல்கூர்ந்தோன், பேதை, மிடியன், வறியோன்.
தருக்கம் - நியாயம், யூகம், வாதம்.
தருப்பை - குசம், குசை, கூர்ச்சம், பவித்திரி.
தருமதேவதை-மரகதவல்லி, பூநிழலுற்றவஞ்சி, பரமசுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனை, முடிதரித்தாள், அம்பிகை, அறத்தின்செல்வி, அம்பாலிகை.
தருமநூல் - மநு, அத்திரி, விட்டுணு, வாசிட்டம், யமம், ஆபத்தம்பம், யாஞ்ஞவற்கியம், பராசரம், ஆங்கிரசம், உசனம், காத்தியாயனம், சமவர்த்தம், வியாசம், பிருகற்பதி, சங்கலிதம், சாதான்மம், கௌதமம், தார்க்கம் என்னும் பதினெட்டுமாம்.
தருமம் - அறம், சீலம், சுகிர்தம், புண்ணியம்.
தருமராசன்-அறத்தின்மைந்தன், உதிட்டிரன், குந்திபுதல்வன், குவளைத்தாரான், பாண்டுமைந்தன், பொறையன், முரசக்கொடியோன், மெய்விரதன்.
தலை-உச்சி, உத்தமாங்கம், உவ்வி, கம், சிகரம், சிரம், சிரிடம், சென்னி, சோரம், நவிரம், மத்தகம், முடி, முண்டம், மூர்த்தம், மூர்த்தினி, தலையோனின்பெயர்-ஓடு, கபாலம், வெண்கலம், தலையோட்டுப் பொருத்து - கரே தலையிற்றரிப்பதின்பொது -சேகரம் தலைச்சாத்து.
தலைக்காவல் - இளை, உக்கிரம்.
தலைக்கோலம் - தலைசாத்து, பங்குசம், பிஞ்ஞகம்.
தலைச்சீரா - சீசகம், சித்தகம், சிரகம், தலைத்திராணம்.
தலைப்பாளை - தொப்யகம்.
தலைப்பெய்தமழை - ஆலி, தலையல், உறை, துளி.
தலைமயிர் - சிரோருகம்.
தலைமையன்-குரத்தி, பெருமாட்டி, ஆசாள், இறைவி, கோமகள், தலைவி, அடிகள், ஐயை, சாமி, அத்தை.
தலையணை - உபதானம், உபதை.
தலையிலாக்குருவி - மழைக்குயில்.
தலையோடு - கபாலம், வெண்டலை.
தலைவனைப்பிழைத்தின்ற சோரபுத்திரன் - குண்டகன்.
தலைவன்-அன்பன், ஆர்வலன், இறைவன், உரியோன், கணவன், கண்டன், காதலன், காந்தன், காவலன், கேள்வன், கொண்கன், கொழுநன், தலைமகன், தவன், துணைவன், நண்பன், நாயகன், பதி, பத்தர், பிரியன், புருடன், மணமகன், மணவாளன், வல்லவன், வேட்டோன்.
தலைவி-அடிகள், அத்தை, அரசி, ஆசாள், ஆட்டி, இறைமையாட்டி, இறைவி,

ஐயை,கிழத்தி, கோமாட்டி, கோமா ள், சாமி, சீமாட்டி, செல்வி, பிராட்டி, பெருமாட்டி, முதல்வி.
தலைவிரிபறை - கத்திரி.
தவத்தோரிருக்குமிடம் - கரண்டை, குகை,தாபதம், பள்ளி, பாழி, மடம்.
தவத்தோர்பீடம் - விட்டரம்.
தவப்பெண்-அம்மை, அவ்வை, ஐயை, கந்தி, கவுந்தி, கன்னி, பைமை.
தவம்-உளவு,தவசு, நன்னிலை, நோற்றிடல், நோன்பு, நோன்மை, படிவம், மாதவம், வாகை, விரதம்.
தவளை-அண்டசம், அரி, காலூரம், தேரை, நீகம், நுணலை, பேகம், மண்டூகம், மரை.
தவடு - முட்டை.
தவர்தல் - வாளா.
தவம்பு - அக்கிதம், கசடு, கச்சை, காய்ப்பு, சுவடு, வசி, வடு, வடுப்படலின் பெயர் - சுநுவாய்.
தழுவுதல் - அணைத்தல், ஆலிங்கனம், முயங்கல், விள்ளல்.
தழை உலவை.
தளர்வு-இட்டளம், உடைப்பு, எளிமை, எட்டை, சோர்வு.
தளிர்-அலங்கல்,உலவை, உல்லரி,கிசம், கிசலம்,கிசலயம், கிளை,குழை,தழை, பல்லவம், மஞ்சரி, முறி, வல்லரி.
தளிர்த்தல் - தளிர்தல், இழுக்கல், ஒல்கல், சேர்தல்.
தன்னல்-ஊன்றல், தூக்கல், நோன்றல்.
தறித்தல் - எற்றல், கண்டித்தல், காதல், தடிதல், துண்டித்தல், பகுத்திடல், பரிதல், வெட்டல்.
தற்பதம் - மகாவாக்கியத்தொன்று.
தனித்திருக்குமிடம்-ஏகாந்தம், ஒருவந்தம், வேறிடம்.
தனிமை-அந்தரம்,ஏகம், ஒருமை, கேவலம், புலம்பு, வீறு.
தனுவிராசி - காண்டீபம், கொடுமரம், சாபம், சிலை, துரோணம்.
தன்னையறிந்தவர்அறியாதவர் -தன்னையறிந்தவர் சாயுச்சியத்தர், தன்னையறியாதவர் பிறப்போர்.
தன் மேம்பாடுதானிசழ்த்தல் - நெடுமொழிகூறல்.

தா

௳

தாடி - கட்டம், கீழ்வாய், மோவாய்.
தாண்டல்-அதறல்,இகுத்தல், கடத்தல், தத்துதல்,தரணம், தாவுதல், நீடுதல், பாய்தல், பாவுதல்.
தாநின்றூள் - சுண்ணம், மகரந்தம்.
தாதுமாதுளை - தாடிமம்.
தாமதகுணம்-பேருண்டி, நீதிகேடு, உறக்கம்,மறதி,பொய், சோம்பு, ஒழுக்கம், வழுவுதல், கொலை, வஞ்சம்.
தாமதம் - ஆலசியம், பாணி, விளம்பம், விளம்பனம்.
தாமரை-அம்புயம், அம்போருகம், அரவிந்தம், ஆய்மலர்,இண்டை, கஞ்சம், கமலம், குசேயம், சதபத்ரி, சரோசம்,சரோருகம்,சலசம், சாரசம்,சூதி, திருமலர், திருமாலுந்தி, தோடகம், நளினம், நீரோருகம், பங்கசம், பங்கயம், பங்கேருகம், பதுமம், பற்பம், புட்கரம், முண்டகம், முளரி, வனசம், வாரிசம், அன்றியுஞ் செந்தாமரையின்பெயர் - கோகனகம், வெண்டாமரையின்பெயர் - சிதாம்புசம், புண்டரீகம்.
தாமரைக்காய் - வராடகம்.
தாமரைக்கொட்டை-கன்னிகை, பொகுட்டு.
தாமரைப்பூ - இராசீவம், இறும்பு.
தாமரையுட்சுருள் - பீசம், வளையம்.
தாம்பிரசூடமாவது - நடுவிரலுஞ் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொத்துக் கூடிவளைந்து சிறுவிரலு மணிவிரலு முடங்கி கிமிர்வது.
தாம்பு - கண்ணி, தாமணி.
தாய்-அம்மனை,அம்மை, அவ்வை, அன்னை,ஆயி,ஆய்,ஈன்றாள், சனனி, தம்மனை, தல்லி, தௌவை, பயந்தாள், மாதா, மொய்த்தாய், யாய்.
தாழி - அகளி, சாடி, தளம், பதலை.
தாழை-கண்டல்-கேதகை, கைதை,மடி, முசரி,முசலி, முடங்கல், முண்டகம்.
தாழ் - கடிகை, காழ், சிப்பு.
தாழ்தல் - இறைஞ்சல், குரங்கல்.
தாழ்த்தல்-ஆழ்த்தல், இகுத்தல், காலல்.

தாழ்வாரம்-ஆரோகணம், சோபானம்.
தாழ்வு-அகப்பு, அதம், இழிபு, குண்டு, சாய்வு, தஞ்சம், தண்மை, தூங்கல், வட்டம்.
தாளம் - கஞ்சம், கஞ்சனம், கிட்டி.
தாளம்போடல்-ஒத்தறுத்தல், தட்டல், வட்டித்தல்.
தாளவொத்து - சதி, சீர்.
தாளிக்கொடி - மஞ்சிகம், மஞ்சிகை.
தாள்-கடிகை, சீப்பு, தாழ், தாழ்ப்பாள்.
தானப்பொருத்த வகை - குற்றெழுத்தைந்தும் அவற்றிற் கினமாகிய நெட்டெழுத்துக்களேழும் பாட்டுடைத் தலைவனியற்பெயர் முதலெழுத்தெந்தவெழுத்தோ அவ்வெழுத்தே பாலத்தானமாகக்கொண்டு மற்றை யெழுத்துக்களைக் குமாரன், இராசன், மூப்பு, மரணமாக எண்ணுதலால் தன்னெழுத்தைப் பாலனுகவும், இரண்டாமெழுத்தைக் குமரனுகவும், மூன்றாமெழுத்தை யிராசனுகவும், நான்காமெழுத்தை மூப்பாகவும், ஐந்தாமெழுத்தை மரணமாகவும் காப்பியத்தின் முதற்செய்யுளின் முதற்சீரிற் கொள்க.
தான்றிமரம் - கலித்துருமம்.

தி

திசை - அம்பரம், அரிதம், ஆசை, உலகு, ககுபம், காட்டை, கோ, திகை, திக்கு, மாதிரம், வம்பல், விசும்பு.
திசைச்சொல் - தேசிகம், கிராமியம்.
திசைநாற்கோணம் - அந்தராளம்.
திட்டை-திடர், பதுக்கை, பாறை, முரம்பு அன்றியு மணற்றிட்டையின் பெயர் - புளினம்.
திண்ணியன்-அவணன், சமர்த்தன், திறலோன், பண்ணவன், பொருநன், மள்ளன், மிண்டன், மீளி, வண்டன், வயவன், வல்லான், வல்லுநன், வியவன், விறலோன், வீரன்.
திண்ணை - குறடு, திட்டை, மண்ணீடு, வேதி, வேதிகை.
திதி - பக்கம்.
தித்திப்பு - அமுதம், இமுது, இமுமு, இனிமை, கனி, சுவாது, சேறு, தமிழ், தீயம், தேக்கு, தேம், மதுகம். மதுரம்.
திப்பிலி-ஆர்கதி, கலினி, காமன், சிறுமூலம், திப்பிலி, மாகதி.
திமி - பெருமீன், யானைமீன்.
திமிங்கிலம்-யானைமீனை விழுங்குமீன்.
திமிங்கிலகிலம்-திமிங்கிலத்தை விழுங்குமீன்.
திமிர்தல்-தவர்தல்,தளும்பல்.
திமிலை - சல்லரி.
தியானம் - யோகம்.
திரட்கோரை-எருவை, சாய்,பஞ்சாய்.
திரட்சி-அவயல், இராசி, இனம், உண்டை, கணம், கணை, காண்டம், குந்தம், குப்பை, குவடு, குவி, குவலம், குவை, குழியம், கொம்மை, சமம், சேடு, சேர்வு, சோகம், தரவன்திரன், தறுமல், தொகுதி, தொழுபந்தம், பிண்டம், பிழம்பு, புஞ்சம், பூகம், மாழை, முடலை, முண்டம், முத்தை, வட்டு, வழி.
திரட்டோகை-அவறல், கூப்பிடல், உரப்பிடல், தெழித்தல், பிளிறல்.
திரண்டகல் - உலக்கு, உலம், குண்டு.
திரள் - உண்டை, கொம்மை, குழியம், குப்பை, மூத்தை, பூகம், சோகம், புஞ்சம், பந்தம், மாழை, வட்டு,பிண்டம், வழி, சேடு, சேர்வி.
திரிகடுகம் - சுக்கு, திப்பிலி, மிளகு.
திரிகை-தட்டு, பந்து, வட்டம்.
திரிசங்கு-சத்தியாதனன் எனவும் பெயர்பெறும். இச்சூரியகுலத்தோன்றலின் வரலாற்றை விளங்க வுரைப்பாம். அயோத்தியையாண்ட அரசர்களுள் அம்பரீடன்என்னும்அரசனிருந்தான். அவன் மகன் உவனுச்சுவன், அவன்புதல்வன் அரீதன்,அரீதன் புத்திரன் திரிதஙேச்சு, அவன் மகன் சம்பூதி, அவன் மகன் மால்விருத்தன்,அவன்மகன் அரண்ணியன், அவன் மகன் விடதச்சுவன், அவன் மகன்வசுமனு,அவன்மகன் திரிதனு, அவன்மகன் சூரியவண்ணன்ஆகும். இச்சூரியவண்ணன் என்னும் அரசனுக்குப் புத்திரனுகப் பிறந்து சத்தியாதனன் என்னும் பெயருடன் திரிச்சங்குமகாராஜன் உலகை யொரு

குடைகீழலில் இருந்து அரசாண்டு வந்தான். இவன்மனைவிபெயர்சத்தியவதி. இவ்விருவரும் புத்திரப்பேறின்மையால் தன்குலகுருவாகியவசிட்டமுனிவரை அடைந்து செய்வதென்னென்று பிரார்த்திக்க, வள்ளிமணாளனைக் குமரனையீன்ற புள்ளிமான் காத்தனை நினைத்து தவஞ் செய்கவென்ன, அங்ஙனங்கிடந்து அவன் திருவருளால் வாய்மை நிறுத்திய பெரும்புகழாகிய அரிச்சந்திரனைப் புத்திரனாகப் பெற்று மகிழ்ந்திருந்தனர். மூன்றுதோஷங்களையுடைமையால் திரிசங்குவென்ப. இவ்வரசன் பின்னரும் தனது குருவாகிய வசிட்டரையடைந்து உடலோடு சுவர்க்கமடைதற்கு ஓர் யாகஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். முனிவனார்கூடாதென்றுமறுத்தனர் அவர் புத்திரரிடஞ்சென்று கேட்கவே அவர்களுமவ்வாறு மறுத்தனர். அரசன் கோபங்கொண்டு பிறமுனிவரிடஞ்சென்று நினைத்தது முடிப்பனென்று அகல, அதனையறிந்த வசிட்டமுனிவர் குருநெறி பிறழ்ந்தமையால்நீசனாகக்கடவாய் எனச்சபித்தார். அதனால்புலையுருவேற்றவசிட்டமுனிவர்க்குப்பகைவர்யாரென்று ஆராய்ந்து, காதிமைந்தனெனக்கருதிஅவரிடஞ்சென்று நிகழ்ந்தவெல்லாம் வருந்தியுரைத்தான். முனிவர் சினமுற்று அபயங்கொடுத்து, மற்றமுனிவர்களை யாகஞ் செய்தற்காக அழைத்தனர். அவர்களை வசிட்டமுனிபுத்திரர்கள் தடுத்தார்கள். அதனை விசுவாமித்திர முனிவர் அறிந்து முனி புத்திரர்களையெல்லாம்வைது கொன்றனர். பின்னர்த் தாமே துணிந்து தனித்து யாகத்தைச்செய்து அவிசொரிய தேவர்கள் யாவரும் அவ்வவியையேற்கவாராதிருந்தனர். அதனால் விசுவாமித்திரர்க்கு அதிககோபமுண்டு, திரிசங்குவை நெய்யிறைக்குஞ்சுருவையினேற்றுச்சுவர்க்கம்போவென்னப் போனான். அது கண்ட தேவர்கள் நீசனே இவ்விடம் வாராதொழியென்று தலைகீழாய்த்தள்ளினர். உடனே திரிசகு விசுவாமித்திரரை நோக்கி யோலமிட்டனன். அவர்அரசனைத்தந்தவவலிமையினால் அவ்வந்தரத்தினிற்றுனேவீழாது நிற்கச்செய்துவேறோர்சுவர்க்கத்தைச் செய்வேனென்று, நட்சத்திரங்கள், தேவகணங்கள், சராசரங்கள் முதலிய சிலவற்றைப் படைத்தனர். தேவர்களும் இந்திரனும் இவற்றையெல்லாம் பார்த்துப் பயந்து விசுவாமித்திர முனிவரிடம் வந்து ஐயனே தேவரீர் இனிப் படைத்தலை விடுத்தருளும். இப்போ படைத்தவைகளும் திரிசங்குவும் நட்சத்திரமண்டலத்தின் அருகில் இருக்கட்டும் என வேண்டினார்கள். முனிவர் திரிசங்குவை அங்ஙனமென்நாளுமிருத்தியென்றுவரங்கொடுத்தனர். அதுவே திரிசங்கு சுவர்க்கம் எனப்பெயர்பெற்றுவழங்கப்படும். அரிச்சந்திரனே குலகுருவாகிய வசிட்டனாரையே யடுத்திருந்தான். இதனால் விசுவாமித்திரர்அரிச்சந்திரன்மீது அதிககோபமுடையவராயிருந்தார் பின்னர் அதுவேகாரணமாகவே யவனை யவ்வளவு துன்பத்துக் குட்படுத்தினர்.

திரிபலை - கடுக்காய், தான்றி, நெல்லி.

திருடர்-கரவடர், கரவர், கள்வர், கையர், சோரர், தேனர், பட்டிகள், பித்தர், புரையோர்.

திருடல் - கரத்தல், கவர்தல், வவ்வல்.

திருநீறு - விபூதி, பூதி, ஓமப்பொடி, காப்பு, புண்ணியசாந்தம், சாரம், வெண்டாது, பொடி.

திருநீறுவைக்கும் பாத்திரம் - சம்புடம் விபூதிக்குடுக்கை.

திருமகளாடல் - பாவை.

திருவாதிரைநாள் - ஆதிரை, ஈசனாள், செங்கை, மூதிரை, யாழ்.

திருவாரூர் - கமலை.

திருவிழா-உற்சவம், சாறு, சேறு, தீர்த்தம், துணங்கறல், முருகு.

திருவோணநாள் - உலக்கை, ஓணம், சிரவணம், சோனை, நள்ளு, மாயோனாள், முக்கோல், வயிரம்.

திரை-அலை, அறல், அறை, ஓதம், கல்லோலம், சீகரம், தரங்கம், வாரம்

திரைச்சீலை-அவிடி, எழினி, எமம், கஞ்சிகை, கஞ்சுகி, கண்டம், கவழிகை, கழனி, காண்டம், கைபடம், படகம், படால், பாரகம்.
திலகம் - சுடிகை, சுட்டி, திலதம்.
திரக்குதல் - அங்காந்திடல், திறத்தல்.
திறங்மென்பது - குறைநரம்புள்ளது.
தினவு - சண்டுதி, சொறி.
தினை - ஏனல், அன்றியுங் கருந்தினை இறடி, சங்கு, செந்தினையின்பெயர்-சம்புகவலை. பைந்தினையின்பெயர்-ஏனல்.
தினைத்தாள் - அருவி, இருவி.
தினைப்புனம் - ஏனல், வனாசம்.
தினைமா - இடி, நவணம், நவணை, பிண்டி.
தின்பன - திற்றி.

தீ

தீ - அக்கினி, அங்காரசன், அங்கி, அயவாகனன், அரி, அழல், அனல், ஆரல், உதகவன் உதாசனன், எரி, எழுநா, ஒளி, கருநெறி, கனலி, கனல், காலவம், காற்றின்சகாயன், சாதவேதா, சிகி, சித்திரபானு, சுசி, சுடர், சூரன், செஞ்சுடர், சேர்ந்தார்க் கொல்லி, ஞெகிழி, தகனன், தபனன், தழல், தனஞ்சயன், தூமகேது, தென்கீழ்த்திசையோன், தேயு, நெருப்பு, பாவகன், முளரி, வசு, வன்னி, அன்றியும் ஆருழித்தீயின் பெயர் - உத்தரம், உற்கம், கடையனல், தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை.
தீக்கடைக்கோல்-அரணி, ஞெலிகோல்.
தீக்கணத்தின்பெயர் - அந்தரகணம்வேறுதேசத்திற் செலுத்துதலும் வாயுகணம் செல்வத்தைப் போக்கலும், சூரியகணஞ் சூரியஞ் செய்தலும், தீக்கணம் நோய் செய்தலுமாகிய குற்றத்தைத் தருமென்று நூலினையாராய்ந்த புலவர் கூறுகிற்பர்.
தீக்கணவகை - தேயு, வாயு, அந்தரம், இயமானன், இந்திரன் குந் தீது.
தீது - திங்கு, கோள், அந்தராரம், விக்கினம், முட்டுப்பாடு, அலாபம், தட்டு, ஊறு, அந்தரம்.
தீத்திரள் - அனற்றிரள், உற்கம்.
தீத்தெய்வத்தின்பாரி - சுவாகாதேவி.
தீப்பொறி-சங்கம், ஞெகிழி, புலிங்கம். காட்டுத்தீயின்பெயர்-தாவம்.
தீமை-அந்தரம், அந்தராயம், அலாபம், இன்னல், இன்னா, ஊறு, கோள், தீ, திங்கு, தீது, தட்டு, மாயம், முட்டுப்பாடு, வலாபம், விக்கினம்.
தீர்தல்-ஒவல், நிவாரணம், நீங்குதல், மோக்கம், மோசனம், விடுதல், விமோச
தீர்த்தம்-காண்டம், புட்சரம். [னம்.
தீவினை - பவம், பாதகம், பாவம்.

து

துகில்-இடையல், எடகம்பட்டு, வேத
துடுப்பு-கசிதம், முழை, மூழி. [கம்.
துடைத்தல்-இகுத்தல், துவட்டல், நீவல்
துடைப்பம்-அலகு, வாருகோல், விளக்குமாறு.
துணிவு-தெளி, தேறல், தேற்றம், நிச்சயம், அன்றியுங் கருமமுடியுந்தனையும் விடாத்துணிவின்பெயர்-ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம்.
துணைக்காரணம் - உபகாரணம், வது, சாதனம், துப்பு.
துண்டம் - ‡கடிகை, சுண்டம், துணி.
துதித்தல் - ஏத்தல், துதி, தோத்திரம், துதி, பரசுதல், பரவல், பழிச்சல், புகழ்தல், போற்றல், மீக்கூறல், மெச்சல், வழுத்தல், வாழ்த்தல், வியத்தல்.
தும்பை - துரோணம்.
துரிஞ்சில் - சீக்கிரி, முன்னம்.
துரியோதனன்-அரவக் கொடியோன், காந்தாரி மைந்தன், குருடன், மைந்தன், சுயோதனன், திருதராட்டிரன் மைந்தன், நந்தியாவட்டத்தாமன், மன்னர்மன்னன், வணங்கா முடியினன்.
துரியோதனன்குலத்தோர் - குருகுலத்தோர், கௌரவர், பாரதர், பாரதர், பௌரவர்.

துரிஞ்சில் - ஆலாலம்.
துருத்தி-தோல், அன்றியும், உலைத்துருத்தி, அத்திரி, உதி, சிவை, பதித்திரி, பெருந்துருத்தியின்பெயர் - சிவிறி, பத்தம், மட்டத்துருத்தியின்பெயர்-பத்ர, நீரைவீசுந் துருத்தியின் பெயர்-சிவிறி, சிறுதாரை.
துரோணாசாரியன்-கும்பசம்பவன், பாரத்துவாசி, மெய்நூலன், வின்னூலாளன், வேதக்கொடியோன்.
துர்க்கந்தம் - பூதி.
துர்க்கை-அந்தரி, அமரி, அம்பணத்தி, அரியேறி, ஆளியூர்தி, எண்டோளி, ஐயை, தலையானத்தி, கலையூர்தி, கன்னி, காத்தியாயனி, கார்த்திகை, குமரி, கொற்றவை, கொற்றி, கௌரி, சக்கரபாணி, சக்கராயுதத்தி, சண்டிகை, சமரிசயமகள், சுந்தரி, சூலி, தேவிநாரணி, நாராயணி, நீலி, பகவதி, பாலைக்கிழத்தி, மகிடற்செற்றாள், மாலினுக்கிளையாள், மேதிச்சென்னிமித்திதாள், வாள்கைக்கொண்டாள், விசயை, விந்தை, விமலை, வீரச்செல்வி, வீ [ரி.
துர்க்கைகூத்தின்பெயர்-மரக்கால்.
துலாராசி-தட்டளைகோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிறை, வாணிகன்.
துவட்டல் - நடக்கல்.
துவரை - ஆடகம், ஆடகி, முதிரை.
துவரை - சுடலை முதலியன முதிரை.
துவர்ப்பு - கசாயம், துவாரம்.
துவளல் - அசைத்தல், உவளல், ஒல்கல், நிவளல், நடங்கல், நணக்கல்.
துழாவல்-அளாவல், கலம்பகம், கலவல், கலாவல், சங்கிரணம்.
துளசி-குல்லை, துழாய், துளவம், துளவு, பிருந்தை, வனம்.
துளி-ஆலி, உறை, சிதர், சீகரம், தளி, திவலை, தூவம்.
துளைத்தல் - குயிறல், துருவல், தெளிதல், தொள்ளல்.
துளையுடைப்பொருள் - குயில், குழல், குழை, கோகுலம், தண்டு, தொள்ளை, புழல், புழை.
துறப்பு-அச், கொல், பறலிகை, பூட்டு, வலிப்புற்று.
துறவு-சந்நியாசம், சார்பறுத்தல், அறுத்தல், நிவிர்த்தி, நீத்தல், நீப்பு, விரத்தி.

துருசல் - பொறை.
துன்பம் - அஞர், அரந்தை, அரித்தை, அலக்கண்-அலந்தலை, அலந்தை, அல்லசண்டம், அல்லல், இடர், இடுக்கண், இடும்பை, இட்டளம், இரக்கம், இன்னல், இன்னா, உறுகண், உறுவல், எவ்வம், ஏதம், கம்பலை, கலக்கம், கவலை, கவ்வை, கிலேசம், கேதம், கைதவம், கையாறு, கோட்டாலை, சிந்தை, சிலுகு, சிறுகு, சிறுமை, சூர், செல்லல், தாபம், துக்கம், துயர், துரால், துரிசு, துரிதம், துனி, தொய்யல், நடலை, நொ, நோய், படர், பரிவு, பழங்கண், பனி, பாசறை, பிணி, பீடை, பீழை, புன்கண், பைதல், பையுள், மம்மர், மிகை, யாதனைவாதை, விழுமம், வீரை, வெய்துறல், வெறுப்பு, வேதனை.
துன்னர் - பொல்லர்.

தூ

தூக்கங்கள்-அறை, உத்தி, சல்லி, துனி, துக்கு, தொங்கல், மதலிகை.
தூக்கணங்குருவி-சிதகன், சிந்தன், தூக்கு, தூதுணம்.
தூக்கிநிறை - தூறுபலம்.
தூக்கு - கா, துலாம்.
தூக்குக்கோல்-தட்டளை, கோ, துலை, நிட்பான், நிறை, வாணிகன்.
தூங்கல் - கனவு, துயில், கண்படை, அனந்தல், படல், நித்திரை, பள்ளி, உறக்கம், துஞ்சல், உறங்கல்.
தூண்-எழு, கந்து, கம்பம், கால், தம்பம், தாணு, தூணம், நிலைபேறு, மதலை.
தூண்டில் - கோல், படிசம், வெளிசம்.
தூதர் - ஒத்தபண்புரைப்போர், வழியுரைப்போர், வித்தகர், வினையுரைப் [போர்.
தூதுளை - தூதுளம்.
தூபக்கால்-இந்தளம், தடவுதூபமுட்டி.
தூபமணி - கைம்மணி.
தூரம்-சேண், சேய், சேய்மை, நீளம், அன்றியும் கூப்பிடுதூரத்தின்பெயர் எல்லை, குரோசம், பறவையளவு. தூரத்தின்பெயர்-கிரவுஞ்சம்.

தூர்த்தர்-இடங்கழியர், காமுகர், நாகரிச,படிறர்,பரத்தவர்,பல்லவர்,விடர்.
தூபமுட்டி - இந்தளம், தடவு.
தூம்புவாய் - அங்கணம்.
தூய்தாக்கல் - சீத்தல்.
தூவல் - சொரிதல், பொழிதல்.
தூறு - குன்மம், பஞ்சி, விடபம்.
தூறுதல் - கோள்.
தூற்றல்-பழிகூறல், புறங்கூறல், அன்றியுஞ்சிலரறிந்தபழிதூறலின்பெயர் அம்பல் பலரறிந்த தூறலின்பெயர்-அலர். வெறும்புறங்கூறலின்பெயர்-குச்சம், குறளை, கொடுவாய், தொண்டியம், தொடுப்பு, பிசினம்.

தெ

தெங்கு-இலாங்கலி, எடகம், கேளி, தாழை,தென்,நாரிகேளம், நாளிகேரம்.
தெப்பம்-அம்பி, உடுபம், கோலம், தொள்ளம், நாவாய், பகடு, படுவை, பட்டி, புணை, மிதவை, யாதனம், வள்ளம்.
தெய்வப்பசு - கபிலை, தேனு.
தெய்வப்பெண் - அணங்கு, சூர்.
தெய்வம் - அணங்கு, கடவுள், சூர், தெய்வதம், தே, புத்தேளிர்.
தெய்வவுணவு-அமுது, அவி, சரு, நைவேத்தியம், பலி.
தெரிதல்-ஆய்தல், தெள்ளுதல், தேர்தல்.
தெரு - ஆவணம், கோசம், ஞெள்ளல், கியமம், மறுகு, மார்க்கம், வீதி, அன்றியுநெடுந்தெருவின்பெயர் - கியமம், மன்றம், மார்க்கம், குறுந்தெருவின் பெயர்-கோணம்.
தெருப்பலகூடுமிடம்-கவலை, சந்தி, முத்தெருக்கூடு மிடத்தின்பெயர் - அந்திமுச்சந்தி, நாற்றெருக்கூடுமிடத்தின்பெயர்-கோடகம், சதுக்கம், சந்தி, சிருங்காடகம், நாற்சந்தி, வரிசந்தி.
தெளிந்தநீர் - சற்சலம்.
தெளிவு - உணர்வு, துணிவு, தெருள், தெள்ளுதல், தேர்ச்சி, தனவு, பிரசன்னம், மானவு.
தள்ளுதல் - வடண்டல்.

தெற்கு-அவாசி, சிவேதை, தக்கணம், தென்யாமம், யாமியம், யாமினியம்.
தென்றற்காற்று - சிறுகால், தென்றி, மலையக்கால், வசந்தன்.

தே

தேக்கமரம் - குமிழிகம், சாகம், சாதி.
தேசாந்தரி - தேசிகன்.
தேசியக்குரியகால்-கீற்று, கடிசரி, மண்டிலம், வர்த்தனை, மரணம், ஆலீடம், குஞ்சிப்பு, கட்டுப்புரியம், சாரியம், உன்னாளம், கட்டுதல், கம்பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மான்கால், இட்டுப்புகுதல், சுற்றி, வாங்குதல், உடற்பிரிவு என்னு மிருபத்துநான்குமாம்.
தேசிக்குரியகை-கைத்தொழில், மார்க்கம் வடுகு.
தேசிக்கூத்து - மண்டலவிலை என்னை? "கொண்ட தேசிப் பகுதியெல்லமாண்ட நிலையின் வருதக வுடைத்தே" என்றுராகலின்.
தேடல்-கூடல், கைபற்றிக்கொள்ளல், அருவல், தொடர்தல், நாடல், நேடல்.
தேமல் உத்தி, சுணங்கு, திதை,திதலை, திதனி, துத்தி, நுணங்கு, பொறி, வசந்திகை, வரி.
தேமா-ஆமிரம், சக்காரம், சேதாரம்.
தேயுவின்கணவகை - கிரை கோகிரை புளிமாக்கனி.
தேய்த்தல்-அராக்கல், அரைத்தல், உரைத்தல்.
தேருருளை-ஆழி,உந்தி, உருளி, உருள், கால்சக்கரம், சில்லி, திகிரி, நேமி பரிதி.
தேரை - பிலவங்கம்.
தேர்-அலி, இயந்திரம், எந்திரம், இரதம், கவரி,குயவு,கூவிரம், கூவிரி,கொடிஞ்சி, சரந்தனம், திகிரி, விமானம், வையம். இதனடுவின்பெயர்-தட்டு, காப்பண், இதன் பரப்பின் பெயர்-பார். இதன்மரசுற்றின்பெயர்-கிடுகு இதனுட் செறிந்த கதிரின் பெயர்

ஆர். இதன் மொட்டு-கூம்பு, கூவிரம், தொடிஞ்சி. இதன்முட்டி-பிரம்பு.

தேர்க்கொடி-இடக்கியம், கூவிரம், சத்தி, சருத்தி, சிதவல், சீதாரம், துணி.

தேர்ப்பாகன்-சாரதி, சூதன், வலவன்.

தேவப்பசு - கபிலை, தேனு.

தேவமாதர் - அரம்பையர், அரமகளிர், அமரர் மாதர்.

தேவராட்டி - சாலினி.

தேவருணவு-அமிழ்தம், அவி, சரு, பலி.

தேவர்-அண்டர், அநிநிமைந்தர், அநிதர், அமரர், அமுதர், ஐயர், ஆதித்தர், இமையவர், இலேகர், உம்பர், உயர்நிலத்தோர், கடவுளர், சுடர், மவுலியர், சுரர், சுவர்க்கத்தோர், தானவர், பகைவர், பட்டாரகர், பண்ணவர், புங்கவர், புத்தேளிர், புலவர், மேலோர்வரர், வானோர், விண்ணவர், விபுதர்.

தேவர்கோயில் - ஆலயம், கர்கி, கோட்டம், சினகரம், சேதிமம், தளி, தேவகிலம், தேவநகர், நிகேதனம், நியமம், நிலயம், பள்ளி, பாழி, பீடரம், மந்திரம், வானவருறையுள், விமானம்.

தேவலோகம்-அமரர்கற்பம், அமுப்புகம் ஆனுலகு, உம்பருலகம், உயர்நிலை, உவணைகற்பம், கோ, சுரரிடம், சுவர்க்கம், சுவவு, தானம், திறக்கம், நாகம், பதவி, பவனம், புத்தேளுநாடு, பொன்னாடு, மேலுலகம், வானுலகம், விசும்பு, விண்ணுலகு, விமானம், வியனுலகம்,

தேவி-இல், இல்லாள், இல்லவள், உரிமை, பன்னி, குடும்பினி, வல்லவை, கனம், தாரம், மனையாட்டி, மனை, விருத்தனை, பாரிவாழ்க்கைத்துணை, களத்திரம், காந்தை, காதலி, நாயகி.

தேவேந்திரன்-அரி, அமராவதியோன், அயிராவதப் பாகன், ஆகண்டலன், ஆயிரங்கண்ணன், இந்திரன், இமையவர், வேந்தன், கரியவன், காண்டாவனன், காரி, கோபதி, கௌசிகன், சக்கிரி, சங்கிரந்தனன், சசிமணாளன், சசிபதி, சதக்கிருதன், சதமகன், சிட்டுணு, சுத்ராமன், சுரேசிரன், சுரபதி, சுரேசன், சுரேந்திரன், துச்சவனன், நமுசிசூதனன், நாகநாதன், நான்மருப்பியானையூர்தி, பலசூதனன், பலாராதி, பலாரி, பாகசாதனன், புரந்தரன், புருகூதன், புரோகிதன், புலவன், புனிதன், பொன்னகர்க்கிறைவன், போகி, மகவான், மருதநிலத்திறைவன், மருத்துவன், மால், மேகவாகனன், வச்சரபாணி, வச்சிரி, வலாரி, வாசவன், வானோர்கோமான், விண்முழுதாளி, வெள்ளைவாரணன், வேந்தன், வேள்விவேந்தன், சுனாசிரன், காசிபமைந்தன், அகலிகை நயந்தோன், விருத்திராசுரற்காய்ந்தோன் கீழ்த்திசைக்கிறை (இதஅறுவாதம்)

தேவேந்திரன் மனைவி - இந்திராணி, சசி, புலோமசை. மகன்பெயர்-சயந்தன் குதிரையின்பெயர்-உச்சைச்சிரவம். யானையின்பெயர்- ஐராவதம். நகரின்பெயர்-அமராவதி. மாளிகையின்பெயர்-வசந்தம். மண்டபத்தின்பெயர் - சுதன்மம். நந்தவனத்தின்பெயர்-கற்பகச்சோலை. கொடியின்பெயர்-இடி ஆயுதத்தின்பெயர்-குலிசம், சதகோடி, சம்பவம், வச்சிரம், வயிரைப்படைசெய்தநூலின்பெயர் ஐந்திரம் (இதுவும் அறுவாதம்.)

தேள் - துட்டன், தெறுக்காள், நளி, பறப்பன், விருச்சிகம்.

தேற்றம் - தேற, மன்ற.

தேற்றுமரம் - இல்லம், கதலி, சில்லம், தேறு.

தேனீ - அலரி, சாகம், பிரசம்.

தேன்-நறவு, நறை, பிரசம், பிழி, மகரந்தம், மட்டு.

தேன்கூடு-இறால், கோற்றேன், பிரசம்.

தை

தைத்தல்-அத்து, தின்னம், பொல்லம்.

தைமாதம்-தைடம், பௌடம், மகரரவி.

தையற்காரர் - துன்னர், பொல்லர்.

தைவிகம் - தேவசம்பந்தம்.

தொ

தொகைநிலை-இயமம், நியமம், ஆசனம், வழுநிலை, தொகைநிலை, பொறைநிலை,

கினைதல் சமாதியென்னு மெண்வகை யோகப் பகுதிகளுளொன்று அஃதாவது பொறிகளினுணர்ச்சிகளைப் புலன்வழிப் போகாது ஒருவகைப் படுத்தலாம்.
தொடுதல்-ஊறுதிவளல், தீண்டல், துவளல், பரிசம்,சரிசனம்,பரிசித்தல்.
தொடை-ஊரு, கவான், குறங்கு, சோகம், வாமம்.
தொழில் - கருமம், கன்மம், செயல், பணி, விதி, வினை.
தொழில்செய்வோர்-கம்மியர், தொழுவர்.
தொழிற்கை - தொழிற்பெறக் காட்டுங்கை.
தொழுமரம் - தொழு.
தொழுவம் - தொழும்.

தோ

தோசை - அடை, இலட்டுகம், மோதகம்.
தோடு - தாடகம்.
தோட்டம் - திடலை, படப்பை.
தோட்டலகை - ஆரம், தொடு.
தோட்டி - அங்குசம், தணிச்சி, கரணம்.
தோணுமுகம் - சூழ்கழியிருக்கை.
தோணி - நாவாய் - ஓடம், மரக்கலம், பஃறி, அம்பி, கப்பல், சிலுப்பு, கடற்றேர், புணை.
தோண்டல் - அகழ்தல், சூறல், சூன்றல், தொடுதல், தொட்டல், நோண்டல்.
தோரணம் - மகரிகை.
தோரியமடந்தை - ஆடிமுதிர்ந்தவள்.
தோரை - இயவை.
தோரக்கை - இரண்டுகையும், பதாகையாக்கி யகம்புறமொன்றி முன்தாழ்ந்து கிற்பது.
தோல்-அதள், உரி, உரிவை, ஒலியல், கிருத்திமம், சருமம், துவக்கு, தொக்கு, பச்சை, புரணி, புனிறு, போர்வை, வதை, வடகம்.
தோல்வி-அஞ்சல், அபசயம், ஓட்டம், தொலைவு, தோல்வு, தோற்றல்,கிலையழிவு பின்னிடல்.
தோல்வினைஞர் - குயிலுவர், பறம்பர்.
தோழன்-எலுவன்,காதலன்,கேள்வன், சகாயன், சினேகிதன்,சிலதன், சேடன்,துணைவன், நண்பன்,பாங்கன்.
தோழன்முன்னிலை - எல்லை. எடா.
தோழி-அன்னை,இருளை, அணங்கி, காதலிசகி,சிலதி,சேடி,துணைவி,பாங்கி
தோழிமுன்னிலை-எல்லீ,எல்லே, ஏடி, ஏழா.
தோளணி - அங்கதம், கண்டிகை, கிம்புரி, கேயூரம், வாகுவலயம்.
தோளணிமாலை - தாமம், தொடையல்.
தோள்-புயம், மொய்ம்பு, பாகு, வாகு.
தோள்மேல்-எருத்தம், சுவல், செகில், கிகலம், பிடர்.
தோற்கருவி - பணி.
தோற்கருவிகள்-பேரிகை, படகம், இடக்கை,உடுக்கை, மத்தளம், சல்லிகை, காடிகை,திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவலையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, கிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம்,தகுணிச்சம்,விரலேறு, பாகம்,உபாங்கம், நாழிகைப்பறை, துடி பெரும்பறை என்பனவாம்.
தோற்கருவிமாக்கள்-இயவர்,குணுங்கர்.
தோற்பலகை-தட்டு, தோல், தோற்பாவம்.
தோற்பாய் - சருமம்.
தோற்பாவைக்கூத்து-தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது.
தோற்றமன்னரது குடைகொள்ளல் - பெரிய புகழையுடைய அரசர் பொருதுடைந்து புறங்கொடுத்த வழிய வரது வெண்கொற்றக்குடைக் காம்பைத் தலைக்கோலாகக் கொள்ளல்.
தோற்றுதல் - பிறத்தல், தோன்றல், சனித்தல், நாறல், வெளிப்படல், உருத்தல்.
தோற்றுவித்தலின்பேர் -உண்டாக்கலைக்காண்க.
தோற்றுன்னர் - செம்மார்.
தோன்றல்-உருத்தல், தோற்றல், நாறுதல், மலர்தல், வெளிப்படல்.

ந

நகம் - உகிர், கரோருகம், புணர்ப்பவம்.
நகரத்தின்பொது ஆலயம்-கிராயம், புரி ஆகாசம், தாமம், சாதனம், தாவளம், சரணம், மதி, பள்ளி, பாழி, பாடி, நிலயம், நிகேதனம், நியமம், நிசாதனம், உறையுள், வசதி,உசம், சம்வாசம், குடம், வேசனம், கோட்டம், அரம், புரம்.
நகரப்பதியோர் - சதுரர் - நாகரிகர்.
நகர்படுதிரவியம் - கண்ணடி, பித்தன், கருங்குரங்கு, பானை, வேக்தன்.
நகுதல் - மூரல், இளி, முறுவல்.
நகுலசகாதேவர்-மத்திரைமைந்தர்,அச்சுவினி, மதலையர், இரட்டையர்.
நகையின்விகயம்-மேற்பட்ட சிரிப்பினையுடைத்து பிறரெள்ளலை மேற்கொண்டதவனைத்தமுகமுடைத்து முரிபுருவத்துடன்விலா வுறப்புடையது செய்வதுபிறிதாய் வேறுசாதிப்பது.
நஞ்சு - அமரி, ஆலகாலம், ஆலம், கடு, கரம், காளம், காரி, காளம், சிங்கி, நிலம், அன்றியும்விடத்தைக்காண்க.
நஞ்சுண்டோனவிகயம் - கொஞ்சியமொழியிற் கூறெயிறு மடித்தலும், பஞ்சுபோல வாயினின்றும் நுரைகுவித்தலும், தனக்கும் பற்றுக்கோடான மனிதர் முகம்பார்த்து இனியசொற்களைச்சொல்லுவோனைப்போல் சொல்லாமையு முடையனும்.
நடத்தலின்பெயரும்வகுப்பும் - இகைத்தல், இயங்கல், இல்லல், இவர்தல், இறத்தல், ஏகல், ஒதுங்கல், கடத்தல், கமனம்,கழிதல், செல்லல், சேறல், தணத்தல், திரிதல், தீர்தல், நீங்கல், படர்தல், பிரிதல், பெயர்தல், போதல், மீளல், வயங்கல், வருகல், வருதல், வழங்கல், விடுதல்.
நடு-அகடு, அணவு, இடை, உந்தி, ஒத்தல், கூழை, சமன்,செப்பம், நள்ளு, நவந்தலை, நா, நாப்பண், பகல், பிரமம், மத்திமம், மத்தியம், தமையம்.
நடுக்கம்-அதிர்ப்பு, உலைவு, கம்பம், கம்பலை, கம்பனம், கம்பிதம், தளம்பல், நடலை,பனி,பனித்தல், பனிப்பு, பிறழ்தல், பொதிப்பு, விதலை, விதிர்ப்பு, வெதிர்ப்பு.
நடுச்சொல்வோன் - கரியன், கள்வன்.
நடுப்பகல் - நண்பகல், மத்தியானம்.
நடுப்பகல்வகை - உச்சி, உருமம்.
நடுவுநிலையவிகயம் - அலைதாவது கோட்டபாடறியாதகொள்கையு மாட்சியும், மறங்கொண்டமனமும், மாறியகண்களும் வேறுபட்ட காட்சிநீங்கிய நிலையும் குறிப்பிலதாகலும், நடுக்கமில்லாத பெருமை மிக வுடைமையும், தண்ணென வுடைமையும், அளந்தறிவருமையும்,அன்புடன்சேர்ந்திருத்தலும், கலக்கமொடு புணர்ந்த பார்வையும் கதிப்பும் விலக்கார் புலவர்.
நடை-ஒழுக்கம், கதி, சாரம், அன்றியுமாறுநடையின் பெயர் - சதாகதி.
நடையுளது-சரம், நடையிலது-அசாம் இரண்டுஞ் சராசரமெனப்படும்.
நட்டபாடை - நைவளம்.
நட்பு - கேண்மை, கேள், தொடர்பு.
நண்டு - அண்டசம், கவைத்தாள், கள்வன், கர்க்கடகம், குளிர், குளீரம், ஞெண்டு, களிர், கள்ளி, மதி, இநுரன் அலவன்.
நத்தை - குக்கம், கூன், சுரிமுகம், நத்தம், நந்து, நாகு.
நந்தி - எருது, விடை, ஏறு, இடபம்-புங்கவம், இறை-வாகனம், சிவகணமுதல். நந்தியாவட்டம்-நந்தியாவர்த்தம், வலம்பரி.
நமனாயுதம் - கணிச்சி, தண்டு, பாசம், அவன் வாகனம்-எருமைக்கடா.
நமன் - அந்தகன், அரி, இயமன், எருமை, யூர்தி, காலன், கால், கூற்றன், கூற்றுவன், சண்டன், சமன், செளரி, செங்கோற்கடவுள், ஞமன், தருமன், தென்றிசைக்கோன், நடுவன், பாசகரன்,பானுமைந்தன், மடங்கல், மறம், மறலி, மறல்.
நயச்சொல்-உபசாரம், சம்மானம், முகமன்.
நயம்-நறுமை,நன்னர்,விழுப்பம். [
நரகத்திற்கொல்லாது வருத்துநோய் - யாதனை.
நாகம்-அந்தகாரம், அழல், அளறு, அள்ளல்,ஆர்வம்,இருணிலம், இருள், ஒளழல்,கீழுலகம்,கும்பி,சுவப்பிரம்,செக

சு, திமிரம், தீ, துவாந்தம், நாலை, திரயம், பவர்க்கம், பாதாளம், புலவு, பூதி, வீழ்கதி.
நரம்பு - எசம், சன்னம், சங்கன்னம், சிரை, தாது, நாடி, மேதை.
நரம்புக்கருவி - குரல், கோல், தந்திரி.
நரம்புக்கருவிக்குரியோர் - குயிலுவர்.
நரம்புபிறத்தல் - தாரத்து உழைபிறக்கும் உழையிற் குரல்பிறக்கும், குரலுள் இளிபிறக்கும், இளியுள் துத்தம்பிறக்கும், துத்தத்துள் விளரிபிறக்கும், விளரியுட் கைக்கிளைபிறக்கும் எனக் கொள்க.
நரம்புமாத்திரை - குரலுந்துத்தமும் நான்குகிளைமூன்று, உழை, இரண்டு, இளிநான்கு, விளரிமூன்று, தாரம் இரண்டு மாத்திரைகளை யுடைத்தாம்.
நரி-இகலன், உள்ளன், ஒண்டன், குரோட்டம், கோணாய், கோமாயு, சம்பு, சிறுகாலன், சிவை, சூரி, பூரிமாயு, இதனாண்-ஓரி. இதன்பெண், பாட்டி இதன்பிள்ளை-குட்டிகுருளை, பறழ் அன்றியுங்கிழநரியின்பெயர்-ஓரி, செந்து.
நருமதைநதி- இரேவை, சோமன்புத்திரி.
நரை - சரை, பலிதம்.
நல்லாடை - நாகம், பாரி.
நல்லுணர்வு - சீலம், ஞானம்.
நல்வினை-தானம், அறம், தருமம், சீலம், அருள், மங்கலம், சுபம், சுகிர்தம், புண்ணியம், பாக்கியம்.
நவகண்டம்-வடபால், விதேகம், தென்பால்விதேகம், கீழ்பால்விதேகம், மேல்பால்விதேகம், வடபா லிரேவதம், தென்பாலிரேவதம், வடபாற்பரதம், தென்பாற்பரதம், மத்திமகண்டம்.
நவதாரணை - நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, சத்ததாரணை, வத்துதாரணை, சதுரங்கதாரணை, செய்யுட்டாரணை, கிறைவுகுறையாகிய வெண்பொருட்டாரணை.
நவதாளம்-சமதாளம், அருமதாளம், அட்டதாளம், மடிமதாளம், சயதாளம், பட்டியதாளம், விடதாளம், கிவர்த்ததாளம், துருவதாளம்.
நவபுண்ணியம்-எதிர்கொளல், பணிதல், இருத்தல், கால்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், அறுசுவையுண்டியமைந்தோர்க்குதவல், புகழ்தல்.
நவமணி - வைரம், முத்து, பவளம், மாணிக்கம், மரகதம், கோமேதகம், வைடூரியம், நீலம், புருடராகம்.
நவலோகம்-பொன், இரும்பு, தாமிரம், ஈயம், வெள்ளி, இரதி, மதகம், நாகம், கஞ்சம்.
நறுமணம் - சுகந்தம்.
நறும்புகை - குய், நறை, வெடி.
நறுவிலிமரம்-அலி, செலு, வலி, வெளிறு.
நற்கணத்தின்பயன்-இலக்கணம் பெருக்கஞ்செய்வதாலும், சந்திரகணம்வாழ்நாள்தருதலாலும், நீர்க்கணம் கீர்த்தியைத் தருதலாலும், இயமானன் கணஞ் செல்வத்தைத் தருதலாலும், அரசர்க்கும்பிறர்க்கும் இவைதக்கனவென்று நூலிற் கூறப்பட்டாலும் தலைவனியற்பெயரின் முதலெழுத்திற்கு இயைந்தசீர்க்குரியநட்சத்திரத்தோடு சென்மநட்சத்திரமாயினும் நாமநட்சத்திரமாயினும் பொருந்தாதவிடத்துக் கொள்ளத்தகா.
நற்குணவகை-கிலன், நீர், மதி, இயமானன் இந்நான்கும் முன் வரினன்று.
நற்பசு - பத்திரை.
நற்பணித்துசு - தேவாங்கம்.
நற்பொருள் - ஞாபகம், பிசி.
நற்றானந்தீத்தானமாவன - தானப்பொருத்தம்நன்று தீது என்றிருவகைப்படுதலால் தலைவனியற் பெயரின் முதலெழுத்துமுதல் மூன்றும் நற்றானமாகவும் ஏனையிரண்டுந் தீத்தானமாகவுங்கொள்க.
நன்கணந்திக்கணவகை - தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்கனி, கூவிளங்கனி இவை நான்கும் நற்கணமாம். தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், கூவிளங்காய் என்பன தீக்கணமாம்.
நன்மை- நணி, அவணி, ஆணு, உத்தமயம், உறுதி, ஒண்மை, கடவுள், சிவம், சீர், சுகம், சுபம், கேடு, நயம், நயன், நலம், நறுமை, நன்கு, நன்றி, நன்று, நன்னர், படு, மாசறல், யாணர், வண்ணம், விழுப்பம், விழுமம்.

நன்னாட்டமைதி-செல்வம், விளையுள், பல்வளம், செங்கோல், குறும்பின்மை, பிணியின்மை.
நன்னிமித்தம் - வாய்புள்விரிச்சி.

நா

நா - சிக்குளை. தாமம், தாரை, தாலம்-தாலு.
நாகணவாய்ப்புள் - குரகம், சாரிகை, பூவை.
நாகப்பாம்பு - மூர்க்கம்.
நாகப்பூச்சி - நாங்கூழ், பூநாகம்.
நாகரவண்டு - கொள்ளை.
நாகரிகர் - காமுகர், சதுரர்.
நாகலோகம் - பவனம்.
நாடகக்கணிகைபரிசுபெறுவழக்கு - முட்டில்லாத பாணர்கள்போல ஆடியமகளிரும் நாளொன்றுக்கு ஆயிரம் பொன் பரிசாகக்கொள்வது முற்காலத்து வழக்கு.
நாடகக்கணிகை யரங்கேறல் - முன்னர் அரக்குமுதலிய எல்லா முதன்மையும் பெறுவதற்குக் காரணமாகிய தலையரங்கேறல் வேண்டுமென்க.
நாடகசாலை - அரங்கம், அபிநயசாலை.
நாடகசாலைக்கணிகை - கூத்தி, நடி, கிருத்தமாது, மாதவி.
நாடகத்தரம்பையர் - உருப்பசி, மேனகை, அரம்பை, திலோத்தமை.
நாடகநவரசம் - சிங்காரம், வீரியம், பெருகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.
நாடகமாவது - தாளவொத்தின்றிறத்துக்கிசைய நடிப்பது.
நாடகர்-அவிநயர், கண்ணுளாளர், காரேகடியர், கூத்தர், கோடியர், நடர், நாடகியர், கிருத்தர், புலவர், பொருநர், வைரியர் அன்றியுந் தேவர்க்காடுவள்-சாலினி.
நாடா - துணுழி.
நாடு-அகலுள், அரசு, அழுவம், உலகு, உறையுள்-ஏணி, கோட்டம், சனபதம், சும்மை, தண்டம், தண்ணடை, தேயம், படப்பை, பாடி, பாண்டி, பைதிரம், பொழில், மண்டிலம்.
நாடுசார்ந்தநிலம் - மருதம்.
நாடுபடுதிரவியம்-செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, கரும்பு, வாழை.
நாட்பொருத்தவகை - உயிரும் உயிர்மெய்யும் இருபத்தேழு நட்சத்திரங்களாக வகுக்கப்பட்டிருத்தலால் தலைவனியற்பெயரின் முதலெழுத்துக்கமைந்த முதற்பாவின் முதற்சீரிலுள்ள எழுத்தை விதித்த அந்நட்சத்திரமாகக்கொண்டு பின்வரும் எழுத்திற்கமைந்த நட்சத்திரம் நன்மையாம். அந்த முதலெழுத்திற்கும் நான்காமெழுத்திற்கும் ஆறும் எழுத்திற்கும் எட்டாமெழுத்திற்கும் ஒன்பதாம் எழுத்திற்கும் உரிய நட்சத்திரங்களும் பகைவரை நட்பினராக்கும் நட்சத்திரங்கள் என்பர்.
நாட்டேழ்குற்றம் - விட்டில், கிளி, நாவால், ஏம் தோட்டியர், கள்வர், பெரும்புயல்.
நாணமுற்மூன்விநயம் - தாழ்ந்த தலையும், மறைந்தசெய்கையும், வாடியமுகமும், கோடியவுடம்பும், கெட்டவொளியுங் கீழ்க்கண்ணோக்கமு முடையதென்ப.
நாணம்-வெட்கம், இலச்சை, வெள்கல், சமழ்த்தல், வட்கல், இருளை, மானம், உட்கு.
நாணல் - காசை, சரம், சரவணம்.
நாணி - ஆயம், குணம், சிஞ்சினி, தொடை, நரம்பு, நாரி, பூட்டு, பூரி, வடம்.
நாணிஞெலி - மருகாஞ்சம்.
நாண் - பூரி, ஆவம், பூட்டு, தொடை, வடம், நாரி, நரம்பு, குணம்.
நாண்முடிவு - துடி.
நாமகளமிசமாக வவதரித்தவர்-நக்கீரர், பரணர், கபிலர், மாமூலனார், கல்லாடர், சீத்தலைச்சாத்தனார், மருத்துவன்றாமோதரனார், நாகன்றேவனார், அரிசிற்கிழார், பொன்முடியார், கோதமனார், நத்தத்தனார். முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் ஆசிரியர்நல்லுந்துவனார், கீரந்தையார், சிறுமேதாவியார் நல்கூர்வேள்வியார், தொடித்தலைவிழுத்தண்டினார், வெள்ளிவீதியார், மாங்குடிமருதனார், எறிச்சலூர்மலாடனார், போக்கியார், மோசிகீரனார், நா

விரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார், மதுரைத்தமிழ்நாயகனார், பாரதம்பாடிய பெருந்தேவனார், உருத்திரசன்மகண்ணார், பெருஞ்சித்தனார், நரிவெருத்தலையார், மதுரைத்தமிழாசிரியர், செங்குன்றூர்க்கிழார், மதுரையறுவை வாணிகர், இளவேட்டனார், கவிசாகரப்பெருந்தேவனார், மதுரைப் பெருமரிதனார், சோவூர்க்கிழார், உறையூர்முதுகூற்றனார், இழிகட்பெருங்கண்ணனார், செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார், செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார், வண்ணக்கஞ்சாத்தனார், களத்தூர்க்கிழார், நச்சமனார், அக்கார்க்கனி நச்சமனார், நப்பாலத்தனார், குலபதிநாயனார், தேவிக்குடிக்கிரனார், கொடிஞாழன்மாணி பூதனார்கவுணியனார், மதுரைப் பாலாசிரியனார், ஆலங்குடிவங்கனார்.

நாமகளூர்தி - பூரம்.

நாமகள் - பாரதி, ஐயாள், பனுவலாட்டி, வேதமுதல்வி, பிராமி, விமலை, வாணி. வெள்ளைநிறத்தினள், வாக்காள், நான்முகன் கிழத்தி, ஞானத்திரைவி, காயத்திரி, சாவித்திரி, பாமடந்தை, நான்மடந்தை, உலகமாதா, இசைமகள், கலைமகள், வெண்டாமரைமகள், கண்ணனள், உயிர்த்துணைவி, வெள்ளைமெய்யாள், கலையானத்தி.

நாயுருவி - சரமஞ்சரி.

நாய்-அத்தன், அசுழம், அற்பம், எகினம், எகின், குக்கன், கூரன், சாரமேயன், சுணங்கன், சுவா, சுனகன், சூரன், ஞமலி, ஞாளி, ததம், பாசி, புரோகதி, மண்டலி, முடுவல் அன்றியும் பெண்ணாயின் பெயர் - காட்டி, பிணு, பிணா, முடுவல் இதன்பிள்ளை குட்டி, குருளை, பறழ்.

நாரத்தை - கரந்தம், காரங்கம், நாரம்.

நாராசம் - சலாகை.

நாராயணசமயத்தார் - பாகவதர், வைணவர், பாஞ்சராத்திரிகள்.

நாரை-குருகு, கொய்யடி, நரை, வண்டானம் அன்றியும் கருநாரையின் பெயர்-சிகரி. வெண்ணாரையின்பெயர் - சாரசம், முந்து. பெருநாரையின் பெயர்-பிதா, போதா.

நாலறிவுயிர் - ஞெண்டு, வண்டு.

நால்வகைக்கேள்வி - கற்றல், கேட்டல், அவ்வழிநிற்றல், ஓதல்.

நால்வகைச்சாந்து-கலவை, புலி, பீதம், வட்டிகை.

நால்வகைச்சேனை-காலாள், தேர், பரி, யானை.

நால்வகைநிலை-ஆலீடம், பைசாசம், பிரத்தியாலீடம், மண்டிலம்.

நால்வகைப்புசிப்பு-உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன.

நால்வகைப்புண்ணியம் - தானம், கல்வி, தவம், ஒழுக்கம்.

நால்வகைப்புலமை-கவி, கமகன், வாதி, வாக்கி இவருள் கமகனவான். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னு நாற்கவிகளையும் பாடுவோனும், கமகனவான். அரும்பொருளைச் செம்பொருணடையாகக் காட்டிவிவகரிப்போனும். வாதியாவான் காரணமும் மேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறர்மதத்தை மறுத்துத் தன்மத நிறுத்துவோனும். வாக்கியாவான்-அறம் பொருளின்பம் வீடென்னு நான்குறுதிகளைக் கேட்கவும் விரும்பவும் இனியனவாக விரித்துக் கூறுவோனும்.

நால்வகைப்பூ-கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ.

நால்வகைப்பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாதருபம், சாம்பூநதம்.

நால்வகையுபாயம் - சாமம், பேதம், தானம், தண்டம்.

நால்வகையூறுபாடு-குத்தல், வெட்டல், எய்தல், எறிதல்.

நாவல்-ஆருகதம், சம்பு, நேரோடம், அன்றியுங் குழிநாவலின்பெயர்-சாதேவம்.

நாவி - மறுவி.

நாவிதன்-ஆசிதையன், எறுதி, மங்கலி, மஞ்சிகன், மயிர்வினையாளன், மாசுநீர்ப்போன்.

நாழி - குஞ்சம், படி.

நாழிகை-இருத்தை, கடிகை, கன்னல், நாழி, பதம், விகலை.

நாழிகைவட்டில்-கன்னல், கிண்ணம்.

நாள்-அல்கல், அளவை, ஆனியம், எல், எல்லை, எவ்வை, திவசம், திவா, தினம் பகல், வாசரம், வைகல், இதன்பாதி-அரைநாள், அர்த்தநாள், பானாள்.

நாற்கதி - தேவகதி, நரககதி, மக்கட்கதி, விலங்குகதி.

நாற்சந்தி - சோடகம், சதுக்கம், சிருங்காடகம், வரிசந்தி.

நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு.

நானிலம் - குறிஞ்சி, நெய்தல், மருதம்,

நான்கு - சது. [முல்லை.

நான்காம்பக்கம் - இருத்தை, அதாவது பூர்வபக்கம், அபரபக்கம் என்னும் இருபக்ஷங்களிலும் வரும் நான்காம் ஒன்பதாம் பதினான்காம் பக்கங்களாய் வரும் நாட்களாம்.

நான்காம்வேதம் - அதர்வணம்.

நி

நிகழ்காலம் - பவுடியம், வேலை.

நிகர்ப்புதம்-அற்புதம்பத்துக்கொண்டது.

நிச்சயம் - சாசுவதம், நிர்க்கம், துணிவு, தேறல், தேற்றல், நிகண்டு, நிதானம், நியமம், மன்றம்.

நிசானம் - தண்ணுமை.

நிடதக்கை - முட்டியாக இரண்டுகையுஞ் சமஞ்செய்வது.

நிணம்-இழுது, கொழுப்பு, செழுமை, நெய், மேதை, வழுக்கு, வழும்பு, விழுப்பு, விளர்.

நிதம்பம் - கடிதடம்.

நித்திரை - அனந்தர், அனங்கல், உறக்கம், கண்படை, கனு, சயனம், துஞ்சல், துயில், பள்ளி அன்றியும் நிரம்பாதூக்கம் - தூங்கல்.

நித்திரைசெய்தல்-உறங்கல், கண்படல், துஞ்சல், துயிலல், துயிறல், தூங்கல், பள்ளி, வீங்கல்.

நித்திரையொழித்தல்-சாகரம், துயிலெடை, விழித்தல். [ண்க.

நிந்தனையின்பெயர் - இகழ்ச்சியைக்கா

நிமித்தம்-சகுனம், சோதிடம், வாய்ப்புள் - விரிச்சி.

நிமித்தம்பார்ப்பவன் - சகுனி.

நியமாவது - தவம், சௌசம், தத்துவநூலோர்தல், பெற்றது கொண்டுமகிழ்தல், தெய்வம், வழிப்படல்.

நிரம்பாத்துயில் - தூங்கல்.

நிரம்பாமென்மொழி - குதலை, மழலை, கொஞ்சல், உலோபம், மிழலை.

நிருதர்-சாலகடங்கடர், நிசாசரர்.

நிருவாணி - திகம்பரன், நக்கன், நக்கி

நிலக்கு - பூழ். [னன்.

நிலத்தின்கணவகை - கிரை கிரைகிரை கருவினங்கனி.

நிலப்பிளப்பு - கமரைக்காண்க.

நிலம் - திணை, மா, வேலி.

நிலவறை - கீழ்நிலை, சுரங்கம்.

நிலவு - சந்திரிகை.

நிலாமுகிப்புள் - அஃபோதகம், சகோரம், சாரம், பேராந்தை.

நிலாமுற்றம் - அரமியம்.

நிலை-ஆதாரம், ஏண், ததல், தம்பம், தாணு தாபரம், திதி, திரம், நிற்றல், மன்னல்

நிலைநீங்காமை - ஆரூபம், ஆறுமை, தண்டாமை.

நிலைபெறுதல் - அற்கல், தாணு, திதி, துஞ்சல், நிலைத்தல், மன்னல்.

நிறுபேறு - திதி, துஞ்சல், மன்னல்.

நிலையின்மை - அற்காமை, வம்பு.

நிலையுடைமை - ஏண்.

நிறம் - அரி, இராகம், உரு, எழில், கருகறை, குணம், குரு, கெழுமை, கேழ், கொழுமை, சந்தம், சாயல், சாயை, பயப்பு, புகர், பை, மாமை, மேனி, வண்ணம், வருணம்.

நிறுத்தல் - தூக்கல்.

நிறுத்துதல் - தோன்றல்.

நிறை-கட்டளை துலாம், துலை, தூக்கு, பாரம்.

நிறைகல் - கட்டளைக்கல்.

நிறைதல் - ஆர்தல், கழுமல், இளர்தல், திளைத்தல், கெழுமல், கெழுவுதல், ததும்பல், திளைத்தல், துவன்றல், துற்றல், தெருளம், தெவிளல், தெவிட்டல், தேக்கல், தேங்கல், நிரம்பல், பிறங்குதல், புட்கலம், பெருகுதல், மலர்தல், மலிதல், மல்கல்.

நிறைபுனல்-பிராறு, வழாறு, வாரி.

நிறைவு - கமம், கனை, செறிவு, நிதி, நிரப்பு, பிரகாமியம், புட்டம், பூரணம்.

நிறைவேறல் - சபலம்.

நினைத்தல் - உணர்தல், உள்கல், உள்குதல், உன்னல், ஊழ்த்தல், சிந்தித்தல்,

தெவிட்டல், படர்தல், முன்னல், வலித்தல்.
நினைவின்பெயர் - கருத்தைக்காண்க.

நீ

நீக்கல் - வரைவு.
நீங்கல் - அகலல், உணர்வு, ஒருவுதல், ஒவல், தணத்தல், வரைதல், வல்வி, விலகல்.
நீதி - கடம், செங்கோல், தருமம், நடு, நயம், நியாயம், நீதம், நெறி, மறியாதம்.
நீந்துபுனல் - அகாதம்.
நீரின்கணவகை - நேர் நிரை நிரையென்னுஞ் சீர்க்குச் சதைய நட்சத்திரமாம்.
நீரோட்டம் - கோலம்.
நீர்-அப்பு, அமுதம், அம், அம்பணம், அம்பு, அம்புதம், அயம், அலர், அளகம், அரல், ஆருவம், ஆலம், உதகம், கஞ்சம், கமலம், கம், கயம், கவந்தம், கனரசம், கனவிரதம், காண்டம், கார், கீலாலம், குசம், கோ, சம்பரம், சலம், சவிலம், சிந்து, சீலம், சீவனம், சீவனீயம், தீர்த்தம், தோணி, தோயம், நாரம், நீரம், பயசு, பயம், பாணி, பானீயம், பிசிதம், புட்கரம், புவனம், புனல், மறை, மாரி, மை, வயம், வருணம், வனம், வாயம், வாரி, வார் அன்றியுந் தெளிந்தநீர் சற்சலம், தெண்ணீர் கலங்கனீரின் பெயர் - ஆவிலம், கலுடம், கலுழி, விலங்கல்.
நீர்க்காக்கை - அர்க்கம், காண்டம், காரண்டம்.
நீர்க்குமிழி-மொக்குள், கொப்புள், புற்புதம்.
நீர்க்குளிரி - கல்லகாரம்.
நீர்ச்சால் - இடங்கர், வட்டம்.
நீர்சிதறுங்கருத்தி - சிவிறி.
நீர்ச்சுண்டி - சுச்சு.
நீர்ச்சுழி - உந்தி, சுரியல்.
நீர்தகைகதவு - ஓ.
நீர்த்திரை - அலை, அறல், கல்லோலம், தரங்கம்.
நீர்நாய் - எதினம், எதின்.
நீர்நிலைவகை-இலஞ்சி, பண்ணை, ஏல்வை, குண்டம், அலந்தை, பொய்கை, வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகர், குட்டம், தாங்கல், கோட்டகம், ஏரி, உவளசம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, குழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்வளம், ஈளினி, உலந்தை, மூழி, குமுகுளம்.
நீர்ப்பந்தல் - அம்பணம்.
நீர்முள்ளி - முண்டகம்.
நீர்வஞ்சி - பிசின், வானீரம்.
நீர்வாழ்பறவைப்பொது - உற்குரோசம், உன்னம், கின்னரம், குரகம்.
நீலமணி - மணி.
நீலி - அவுரி, பத்தியம்.
நீளம்-ஆயதம், ஆயம், உறை, கொடி, சேண், சேய்மை, நிர்க்கம், நீர்தல், நீக்கம், நெடில், நெடுமை, நெட்டை, நேர், நேர்பாடு, நேர்பு, வரி, வார்.
நீளுதல்-ஒழுகல், ஓடல், நீக்கல், நேர்தல், போதல், வடிதல், வார்தல்.
நீள்விழி - அளகர்.

நு

நுறு - தணக்கு.
நுண்மணல் - அதர், அயிர், எக்கர்.
நுண்மை - அணு, அயிர், ஆய்தல், இம்மி, ஐ, கூர்மை, சாய்தல், நிவறல், நிழற்றல், நுட்பம், நுணுங்கல், நுணங்கு, நுணுக்கம், நுணுகல், நுணுங்கு, நுவனை, நுழை, நுனி, நூழை, நேர்மை, நொசி, நொய்தல், முனரி, முள்.
நுதலணி - இலம்பகம், சுட்டி, சூட்டு, புல்லகம்.
நுதலணிமாலை-இலம்பகம், சூட்டு.
நுதல் - அலிகம், அளிமம், இல்லாடம், குளம், சங்கம், நெற்றி, பாலம், மத்தகம், முண்டகம்.
நுதற்குறி - திலகம், புண்டரம்.
நுதன்மேலணி - உத்தி, திருவுறுப்பு.
நுரை-பே, பேவு, பேனம்.

நுழைவாயில் - சுருங்கை, நுழை.
நுனி - நுதி, நுனை.

நூ

நூல் - பனுவல், இலக்கண முதலாகிய நூல்கள்.
நூழில் - தன்மெய்க்கட் புதைபடை களைப்பிடுங்கி மாற்றார்மேலெறிதல்.
நூறுயிரம் - நியுதம்.
நூறு - சதம்.
நூறுபலம் - நிறை, படி.
நூற்கிறநூல்-இழை, சூத்திரம், தந்து தொடர், நவணம், நுவணை, பனுவல், பிசின்.
நூற்கும்பஞ்சிற்றெருடர்நுனி - நுய்.
நூற்பா - அகவல், சூத்திரம்.
நூற்றூர் - நோழிகை.

நெ

நெடுந்தெரு-நிகம், மன்றம்,மார்க்கம்.
நெடும்போழ்து - நீட்டித்தல், நெடித்தல், பாணித்தல்.
நெட்டி - சடை, கடைச்சி.
நெய்-ஆவி, ஆகாரம், ஆச்சியம்,இழுது, நிருதம், துப்பகம், துப்பு, நேயம் அன்றியும் வெண்ணெயின் பெயர்-ஐயங்கவீனம், நவநீதம், நுரை.
நெய்தனிலத்தலைவன் - கடற்சேர்ப்பன, கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன், மெல்லன்.
நெய்தனிலத்தியாழ் - விளரி.
நெய்தனிலத்திராகம் - செவ்வழி.
நெய்தனிலத்தூர்-பட்டினம், பாக்கம்.
நெய்தனிலப்பறை - கோட்பறை, சாப்பறைமீன்.
நெய்தனிலப்பெண்-கடற்பிணு, நுளைச்சி, பரத்தி, வலைச்சி.
நெய்தனிலமாக்கள் - கடலர், கழியர், சலவர், திமிலர், நுளையர், பரதர், பாதவர், வலையர்.
நெய்தனிலம்-கடற்சார்பு, சமப்பால்,
நெய்த்துடும்பு - சுருக்கு, சுருவை, துடுவை.
நெய்வார்-காருகர், தந்துவர்,பொருந்தர், வேதகாரர்.
நெறித்தல் - அவைத்தல், குத்தல், செறித்தல், நெறுத்தல்.
நெருக்கம்-அடர்ப்பு, அரி, அளம், அள், இடங்கழிமை, உறப்பு, ஐமை, ஒதி, கணை, வள்விறப்பு, சடிலம், சாந்திரம், செறிவு, சேத்து, துற்று, நளி, நனி, நிபிடம், நிறந்தம்,பிறப்பு, விரிப்பு.
நெருங்கல்-அடர்தல், அள்ளுதல், கஞறல், கழறல், கிளைத்தல், குயிறல், செறிதல், ததைதல், திணுங்கல், துதைதல், துவன்றல், துறுமல், துறுவல், துன்றல், நன்னல், பம்பல், பன்னல், பிணங்கல், புளித்தல், பொதுளல், மிடைதல், மிண்டுதல், மீதூர்தல், மொய்த்தல், வெறிதல், இவற்றுள், வெளிப்படாது - நெருக்கிநிற்றலின்பெயர்-ததைதல், துதைத்தல், மிடைதல்.
நெருப்பு-அரி,வசு,தகனன்,அங்கி, அனல், அயவாகனன், தீ, எரி, சுசி,சிகி, ஆரல் காற்றின் சகாயன், கருநெறி, கனலி, அங்காரகன், சித்திரபானு, தழல், உதாசனன், தனஞ்செயன், சாதவேதா,முளரி,தென்கீழ்த்திசையிறை, சேர்ந்தார்க் கொல்லி, எழுநா, வன்னி. பாகவன், தேயு, அழல் சுடர், ஞெகிழி.
நெருப்புநவிநரு - கொள்ளி, ஞெகிழி.
நெல்-சாலி, வரி, வீரீகி. அன்றியும்நன்னெல்லின்பெயர்-செஞ்சாலி, செந்நெல், சொல், தோரை, நெல்லின் பெயர் - இயவை, மலை, நெல்லின் பெயர் - ஐவனம். நாற்றுநெல்லின் பெயர் - பொங்கழி, பொலி,மூவருடநெல்லின்பெயர்-அசம்.
நெல்லிமரம் - ஆமலகம்.
நெல்லிஞற்று - நாறு.
நெல்லின்கதிர் - ஏனல், குரல், சொல்.
நெல்லின்போர் - சும்மை.
நெல்லின்மணி-அலகு. [சம்வாகம்.
நெல்லும்புல்லும்நிறைந்த மலையிஞூர் -
நெற்றிக்குறி - புண்டரம், திலகம்,

நெற்றிச்சுட்டி - கடிகை. [பொட்டு.
நெற்றித்திலகம் - சிந்தூரம், திலகம்,
நெற்றிப்பட்டம் - ஓடை.
நென்மணிபலகறை மகிழ்விதையென்
பன - அலகு.
நென்மா - இடி.

நே

நேரோடுதல் - ஆதி, வீதி.
நேர்த்திரம் - புறநீர்மைப்பண், பாலைப்
பண்ணின் றிறம்.
நேர்மை-கை,ஒழுங்கு,வரிசை,செவ்வி,
உறுதி.
நேற்றைத்தினம் - கழிநாள், நெருநல்,
நென்னல்.

நை

நைட்டிகன் - பிரமசாரியு ளொருவன்,
மரணாந்தம்விவாகமின் றியிருப்பவன்.
நைமிசாரணியம் - வதரிகாச்சிரமம்,
நைமிசம், நேமிவனம், முனிவர்வா
சம், இருடிகேத்திரம்.
நையமூதல் - மூக்கிலேயூதல், நசிய
மூதல்.
நையாயிகர் - நியாயநூலார்.
நையாயிகம்-நியாயசம்பந்தம், ஒருநூல்.
நையாயிகவழி - நியாயவழி.

நொ

நொச்சி-தாளி, வலிபஞ்சவில்வம், பத்
நொடி - பிதிர். [திரம்.
நொய் - நொறுங்கு.
நொய்மை-இலகு, இலேசம், நொய்வு.
நொறுங்கல்-தகர்தல், உடைதல், இடி
தல், நெருங்கல்.

நோ

நோக்குக்கூத்து-பாரமும் நன்மையும்
மாயமுமுதலாயினவற்றையுடையது.
நோயுற்றொழிந்தோன் - உல்லாபன்.
நோய் - அணங்கு, அருப்பம், அவலம்,
அழுங்கல், ஆமயம், உரோகம், உறு
கண், காண்டகம், குத்து, குத்தம், சி
தலை, சிறுமை, சூர், துனி, நடுங்கல்,
நிழல், நீழல், படர், பிணி, புன்கண்,
பைங்கூழ், பையுள், மடங்கல், மடி,
மாரி, முடங்கல், முடக்கு, வாதை,
வியாதி, வேதனை, அன்றியுந் தீரா
தநோயின்பெயர் - எவ்வம்.
நோய்த்தீர்க்குமருந்து - உறை.

ப

பகடு - எருமை, பெற்றம், யானையென்
னுமிவற்றிற்குப் பெயராம்.
பகண்டை - சில்லை.
பகல் - எல், திவா.
பகிரண்டம் - அண்டாண்டம்.
பகை-அரி, ஆரவம், இகல், இரிபு, உறழ்
வு, ஊழ், சத்துருத்துவம், தாவு, தப்
பு, தூறணம், தெவ், படர், படி, ம
றல், மற்கோல், மாற்றம், முரண்,
முனை, விரோதம்.
பகைமேற்சொல்லல் - ஊராண்மை.
பகைமேற்சென்றோருறைவிடம் - பா
டி, பாசறை.
பகைவரிடத்திற்செய்யு மரியசெயல்-
பேராண்மை.
பகைவர்-அகிதர், அடையலர், அண்டா
ர், அமரார், அமித்திரர், அரிகன், இ
கலோர், இகிஞர், இன்னார், உன்னா
ர், எண்ணவர், எதிர்ந்தோர், ஒட்டல
ர், ஒட்டார், ஒல்லார், ஒன்னார், கரு
தலர், கூடார், கொள்ளார், சார்பிலார்,
சினவர், செறுநர், செற்றார், சேயார்,
சேரலர், சேரார், தரியலர், திருந்த
லர், துன்னார், தெவ்வர், தெறுநர்,
நண்ணார், நள்ளார், நேரலர், நேனார்,

பார், பற்சர், பற்றார், புல்லார், பொருந்தலர், மருவர், மன்னர், மாறார், மாற்றலர், முனைந்தோர், மேலவர், வட்கார், பிட்டார், வேண்டார்.
பகைவர்நாடழித்தல்-கொற்ற வள்ளை.
பக்கம்-இடை, சிறை, ஞாங்கர், பாங்கர், பாங்கு, பாரிசம், பால், புடை, புறம், மருங்கு, மாடு.
பக்கவாதம் - ஓரம், வாரம்.
பங்கு - கந்தம், கூறு, கூறுபாடு, திரம், பாகம், பாகு, பாத்தி, பாத்து, பால், வாரம்.
பங்குசெய்யல்-காதுதல், பகிர்தல், பகுத்தல், பாகிடுதல், பார்த்தல், வகிர்தல்.
பங்குனிமாதம் - பாற்குநம். பார்க்குநிகம்.
பசலை - பீர்.
பசிரி - பாய்விரி.
பசு - ஆ, சபிலை, குரம், குரால், கூலம், கோவனம், சுரபி, சுரை, தேனு, அன்றியுநற்பசு, பத்திரை, குணமில்லாப் பசுவின்பெயர்-சுதை, கன்றுத்தாய். பசுவின்பெயர்-வற்சலம். ஈற்றாப்பசுவின்பெயர்-கிட்டி, கிருட்டி, மலட்டுப்பசுவின்பெயர் - வற்கை.
பசுக்கூட்டம் - கரம்பம், கதுப்பு, காலி, காலேயம், கோட்டம், தொறு, நிரை.
பசுக்கொட்டில் - ஆனிலை, கொட்டம், கோட்டம், தொழு, தொழுவம், படப்பை.
பசுவகை-நந்தை, பத்திரை, சுரபி, சிசிலை, சுமனை.
பசுங்காய் - நிவினை.
பசும்பயறு - பாசி, முற்கம்.
பசும்புல் - சட்பம்.
பசுவிற்குங்காளைக்கும்பொது-ஆ, ஆன் குடஞ்சட்டு, கோ, நிரை, பசு, பெற்றம்.
பசுவின்கன்று-கோதனம், தன்னம்வசு வற்சம், அன்றியுமினங்கன்றின்பெயர், கொற்றி.
பசுவின்மடி - ஆபீனம், செருத்தல்.
பசுவின்முலை - சுரை.
பச்சடி - அவி, துவையல்.
பச்சறுகு - தூர்வை, பதம்.
பச்சிலைமரம் - தமாலம், பசும்பிடி.
பச்சை - அரி, அரிதம், அரிது, சாமம், சாமலம், பசுமை, பலாசு, பாசு, பை, பைமை, மரகதம்,

பச்சோந்தி-காமரூபி, கோம்பி, தண்டு.
பஞ்சதத்தகருவி-தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி.
பஞ்சலோகப்பொது - சிருள், பொன்.
பஞ்சு - துலவம், தூலம்.
படகம் - ஆனவம், திண்டி, பணவம்.
படி - ஆரோகணம், சோபானம்.
படிக்கம் - படியகம்.
படித்தல் - ஓதல், கற்றல், செழுமல், நவிலல், பயிலல்.
படிப்பித்தல் - ஓதுவித்தல், கற்பித்தல், பயிற்றுதல்.
படுமலைத்தோற்றம் - தத்தமேகுரலாகிற் படுமலைப்பாலையாம்.
படை - அதிபம், அனீகம், ககனம், கவனம், சேனை, ஞாட்பு, தண்டம், தண்டு, தந்திரம், தளம், தார், தானை, பகுதி, பதாகினி, பதாதி, பலம், பாடி, யூகம், வாகினி, வானி, படைத்தலைவன், சேனாபதி, பொருநன்.
படைத்தொகை-தேரொன்று, களிறொன்று, பரிமூன்று, காலாளைந்துகொண்டது, பத்தி. பத்தி, மும்மடிகொண்டது, சேனாமுகம்-சேனாமுகமும்மடி கொண்டது குலுமம், குலுமமும்மடிகொண்டது - கணம், கணமும்மடிகொண்டது, அனீகம், அனீகம்பத்துகொண்டது-வாகினி, வாகினி மும்மடிகொண்டது-பிரதனை, பிரதனைமும்மடிகொண்டது-சமூ, சமூமும்படி கொண்டது - அக்ரோணி, ஆகையினு லக்ரோணி என்பது - தேர் ௨௧௮௭௦, களிறு ௨௧௮௭௦ - குதிரை ௬௫௬௧௦ காலாள் - ௧௦௯௩௫௦, ஆக ௨௧௮௭௦௦.
படையுறுப்பு-அணி, கூழை, கை, தூசி, நெற்றி.
படையுறை - கருவிப்புட்டில், தடறு.
படைவகுப்பு-அணி, ஆக்கம், உண்டை, ஒட்டுகூழை, கை, தார், தூசி, நிரை, நெற்றி, யூகம், இவற்றுப்படை முன்னணியின்பெயர் - ஆக்கம், கொடிப்படை, தார், தூசி, நிரை, படைப்பின்னணியின் பெயர் - கூழை.
படைவீரர்-அபயர், எறுழ்வர், கலவர், கலியர், கூளியர், சூரர், செருநர், தறுகண்ணாளர், படர், பொருநர், மள்ளர்,

மறவர்,மானவர், வயவர், வாளுழ
வர், விருதர், வில்லேருழவர், வீரர்,
படைவெள்ளவகை - அக்குரோணி
எட்டுப்பங்குகொண்டது ஏகம், ஏகம்
எட்டும்பங்கு கொண்டது கோடி,
கோடி எட்டுப்பங்கு கொண்டது
சங்கம், சங்கம் எட்டுப்பங்குகொண்
டது விந்தம், விந்தம் எட்டுப்பங்கு
கொண்டது குமுதம், குமுதம் எட்
டுப்பங்குகொண்டது பதுமம், பது
மம் எட்டுப்பங்குகொண்டது நாடு,
நாடு எட்டுப்பங்குகொண்டது சமுத்
திரம், சமுத்திரமெட்டுப்பங்கு
கொண்டது வெள்ளம்.
பட்டடை - அடைகல், அடைகுறடு.
பட்டம் - ஓடை.
பட்டிகைமரம் - பறிவை.
பட்டு - நேத்திரம்.
பட்டுவர்க்கம் - கோசிகம், பாளிதம்.
பட்டுவிகற்பம் - காம்பு.
பணித்தட்டார் - கலந்தருநர்.
பண்டசாலை - கலனிருக்கை.
பண்டாரம் - கோசம், தண்டம்.
பண்டி - உருள், சகடு, வையம், சகாடு,
ஒழுகை, சாடு, சகடம்.
பண்டிதர் - கலைஞர், மேதையர், மூத்
தோர்,கற்றவர், அவை, விற்பன்னர்,
கவிஞர், சங்கம், சாரதி, கிரி, சாடு,
புலவர், அறிஞர், புதர்.

பண்டியுள்ளிரும்பு - இருசு, கந்து.
பண்ணுங்கூடு - குலாயனம், பஞ்சரம்.
பண்ணுவார் - மாவலர், வதுவர், வாரு
பண்பு - குணம், கிரம். [வர்.
பதக்கம் - ஆரம், கண்டிகை, மதாணி.
பதக்கு - துரோணம்.
பதத்தனி - பாதசாலம்.
பதம் - உரை, பாழி.
பதர் - பதடி.

பசுவின்மடி - ஆபீனம், செருத்தல்.
பதனழிவு-ஊழ்த்தல், கன்றுதல், சிதம்
பு, சிதலம், சிறிதலம், சித்லைத, சா
ணம், செடி.

பதித்தல் - கசிதம், குயிற்றல்.
பதினாறுண்டிற்பெண்பெயர் - யுவதி.
பதுங்கல்-ஒடுங்கல், ஒதுங்கல், பாடுதல்.
பதுமராகம் - கௌத்துவம்.

பத்து - தகம், தசம்.
பந்தல்-காவணம், பந்தரன்றிவுந் தண்
ணீர்ப்பந்தலின் பெயர் - பிரபம், பிர
பந்து - கந்துகம். [பா.
பம்பைப்பறை - தடாரி.
பயங்கரம் - தாருணம், பீமம், பைரவம்,
வீமம், வெருவந்தம்.
பயறு - முதிரை, முற்கம்.
பயனின்மை-அல்லவை,அவம்,கொன்,
நிஷ்பலம், வறிது, விபலம், விருதா,
வீண்.
பயிர்-கூழ், பசும்புல், பைங்கூழ், இதன்
கதிரின்பெயர்-ஏனல், குரல், இளங்
கதிரின்பெயர் - இளஞ்சூல், பீட்
டை பீள்.
பயிறல் - செழுமல், நவிறல்,
பரணிநாள் - அடுப்பு, காடு, கிழவன்,
சோறு, தருமநாள், தாசி, தாழி, பல்
லவன், பாகு, பூதம், போதம், முக
கூட்டு.
பரணி - கோயம்.
பரண்-இதணம், சழுது, படசம், பண
வை.
பரத்தல்-அழுவம்,ஊர்தல், ஞெமிர்தல்,
பப்பு,பரப்பு,பரவை,பாய்தல், பாரித்
தல், விரியல்.
பரப்பு - தாவல், பப்பு, பரவை, பாய்
தல், விரியல்.
பரவடுத்துயர்நிலம்-பதுக்கை, முரப்பு.
பரவு - படர்ச்சி, படலை, பம்பல்.
பராய்மரம்-சுநா, புக்கு, விட்டில். [து.
பரார்த்தம் - மத்தியம், பத்துகொண்ட
பரிசில்பெறுவகை - தான்பாடியபாட்
டிற்குத்தலைவன் தனக்குப் பரிசுகொ
டானாகில்வேறொருவன் பெயரினை
த்தன்னூலிலமைத்து அவன் ஊரை
யும்பெயரையுமொருசேரவதினின்
றும் நீக்கிச் சிரினையுந் தலையையும்
பின்பு தன்னாற் பாடப்பட்டவன்பா
டுங்கவியை நாட்டுவானாயின் முன்
புள்ளதலைவன் செல்வமிழந்து துன்
பப்பட இலக்குமியும் பின்புள்ளவ
னைச் சேருவான்.
பரிகள்பூண்டேர்க்குமூர்த்தி - கஞ்சிகை,
பாண்டில், வையம். [க.
பாசையின்பெயர் - கேடகத்லைதக்காண்
பரிதியின்கிரணம் - காம், தீவிரம்.

பரிதியின்வட்டம் - விசயம்.
பரிந்துகொண்டாடல் - குலாவல், பாராட்டல், மெச்சல்.
பரிவாரம் - பரியாளம்.
பரிவேடம் - ஊர்கோள், வட்டம்.
பருக்கைக்கல் - அரி, காழ், பரல்.
பருத்தி - கார்ப்பாசம், பரி, பன்னல்.
பருத்திப்பஞ்சு - பரி, தூலம், பன்னல்.
பருந்து-உவணம், கங்கம், சேனம், பாரசிகை.
பருமை - காத்திரம், தடிப்பு, பணம், பணை, பருஉ, பார், பீனம்.
பருவம் - ஆனியம், இருது, கதி.
பலகணி - குறுங்கண், சாலகம், சாலம், சாலேகம், சாளரம், நுழைவாயில், வாதாயனம்.
பலகறை-அலகு, கவடி, சோகி, பட்டி, வராடி, வெள்வரி.
பலகை-கடகம்,கேடகம்,கிடுகு, தோல், சேடகம், தட்டி, வட்டி, வேதிகை.
பலபண்டம் - கூலம், பண்டாரம், பண்ணிகாரம், பரிகாரம், பாணி, வளம்.
பலபத்திரன்-எட்டாமவதாரத்தில் விட்டுணு, அச்சுதன் முன்வந்தோன், அலமுறுபடையான்,அலாயுதன், அனந்தன், இரேவதி கொண்கன், உரோசணிதநயன், கருந்துகிலோன், காமபாலன், குண்டலன், காஞ்சிற்படையோன், நீலாம்பரன், பலதேவன், பனைக்கொடியோன், பனைத்தாமன், முசலி, வெள்ளை.
பலமிலாமரம் - அவகேசி.
பலமுறை - பரியாயம்.
பலம்-தொடி, அதின்காற்பலம் - கஃசு.
பலவிதம் - நானாவிதம், விவிதம்.
பலாமரம்-பலவு, பலாசம், வனசம், பாகல், வருக்கை, அன்றியு மீரப்பலா. ஆசினி.
பல்-இரசனம், இரதனம், இருபிறப்பு, எயிறு,தசனம்,தட்டம், தந்தம்,நகை, முறுவல், மூரல்.
பல்கால்விளம்பல் - மீதுரை.
பல்பலமுறை - பரியாயம்.
பல்லக்கு - அணிகம், சிவிகை, தசம், தண்டிகை,பானம், வையம், அன்றியுமிரத்தினப்பல்லக்கின் பெயர்-கஞ்சிகை.
பல்லி-அண்டசம், கௌளி, கோகிலம், கௌளி, புள்ளி, முசலி.
பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயர் - முறுவல், மூரல்.
பவளமல்லிகை-சுரம், திராமரம், பாரிசாதம்.
பவளம்-அரத்தம், துகிர், துப்பு, துவர், பிரவாளம், வித்துருமம்.
பழகல் - உழத்தல், பயிலல்.
பழங்கொல்லை - முதைப்புனம்.
உபசாரம் - கச-தவிசளித்தல்கைகழுநீர்தரல், கால்கழுநீர்தல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடை சாத்தல், முப்புரிநூல்தரல்தேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திரமலரானருச்சித்தல்.

உபநிடதம்-க0அ-ஐதரேயம், கௌபீதகீநாதவிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அக்ஷமாலிகை, திரிபுரை, சௌபாக்கியம், வக்விருச்சாலை, இப்பத்தும் இருக்குவேத உபநிடதம், சடவுல்லி, தைத்திரீயம், பிரமம், கைவல்லியம், சுவேதாச்சுவதாரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்கினி, ருத்திரம் க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகசியம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தக்ஷிணமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாக்ஷரம், அட்சியம், அவதூதம், கரம், உருத்திர விருதயம், யோகருண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணக்கினி, தோத்திரம், வராகம், கலிசந்தரணம், சாசுவதி, ஈசாவாசியம், பிருகதாணியம், சாபாலம், அம்சம், பரமகம்சம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகி, மண்டலம், அத்

அவயதாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், அத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞவல்கியம், சாட்டியாயனி, முத்திகம்; இவ்வைம்பத்தொன்றும் யசுர்வேத உபநிடதங்கள். கேனம் சாந்தோக்கியம் ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிர சூசிகம், யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியத்தம், குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்கசாபாலம், தரிசனம், சாபாலம், இப்பதினாறுஞ் சாமவேத உபநிடதங்களாம். பிரசனம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகச்சாபாலம், நிருசிம்ஹ தாபனி, நாரத பரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்வீயமகாநாராயணம், இராமரகசியம், இராமதாபனி, சாண்டில்லியம், பரம கம்சபரி விராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம், திரிபுராதபினி, தேவி, பாவனை, பஸ்மசாபாலம், கணபதி, மகாவாக்கியம் கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்கிரீவம், தத்தாத்திரேயம், காருடம், என்னும்இம்முப்பத்தொன்றும் அதர்வணவேத உபநிடதங்களாம். இந்நான்குவேதங்களுக்கு ஆயிரத்து நூற்றெண்பது உபநிடதங்களிருப்பினும் அதிசாரமாயும் இரகசியமாயுமுள்ளனவிந்நூற்றெட்டும் பின்வரு முப்பத்திரண்டுமாம். இவற்றுள்ளே அதர்வசிரோபநிடதம், கைவல்யோபநிடதம், சுவேதாச்சுவரோபநிடதம், காலாக்கினிருத்திரோபநிடதம் என்னும் ஐந்தும் பஞ்சருத்திரமெனப்படும்.

உபநிடதம் - ௩௨ - சிருத்திரம், பிருகதாரண்ணியம் சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வார்சியாயநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம்.

உபபுராணம் - ௧௮ - சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, துருவாசம், சிவதருமம், நாரதீயம், காபிலம், மானவம், அவுசனம், வாசிட்டலைங்கம், வாருணம், காளிகம், சாம்பேசம், சௌமியம், சவுரம், பாராசரம், பார்க்கவம், இவையொவ்வொன்றும் அகத்தியம் தொல்காப்பியமென்றாற்போலக் கருத்தாவின் பெயரினையே வகிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் நந்திபுராணம், நந்தகேச்சுரம், நந்தம்எனவும், சாம்பேசபுராணம், சாம்பம்எனவும், சௌமியபுராணம், சோமம்எனவும், சவுரபுராணம் ஆதித்தியம்எனவும், பாராசரபுராணம், பாராசரீயம் எனவும், பார்க்கவபுராணம், விநாயகமான்மியம்எனவும்பெயர்பெறும் இவை பதினெட்டினுக்குங் கிரந்தத்தொகை ஓரிலக்ஷம்.

உபபுராணவிலக்கணம் - ௫ - உலகத்தோற்றம், ஒடுக்கம், மநுவந்தரம், முனிவர், அரசர்மரபு அவர்சரிதம்என்னும் ஐந்தும், இவற்றிற் குறைந்தவுமாம்.

உபாயம் - ௪ - சாமம், தானம், பேதம், தண்டம் அவையாவன சமாதானத்தோடாயினும், பொருள்கொடுத்தாயினும், பிறரைப் பிரித்தாயினும், படைகொண்டாயினுங் காரியங்கொள்ளல் இந்நான்கு மரசர்க்குரியனவாம்.

உம்மைத்தொகைவகை - ௪ - எண்ணலும்மைத்தொகை, எடுத்தலும்மைத்தொகை, முகத்தலும்மைத்தொகை, நீட்டலும்மைத்தொகை, இவற்றிற்கு முறையே உதாரணம் வருமாறு - ஒன்றேகால், கழஞ்சேகால்கலனே, தூணி, சாணங்குலம்.

உயிர்த்தீ - ௩ - உதரத்தீ, சினத்தீ, விக்கத்தீ.

உயிர்த்தோற்றம் - ௪ - கருப்பைமுட்டைநிலம், வியர்வை, இவற்றைசராயுசம், அண்டசம், உற்பீசம், சுவேதசம், என்பர் வடநூலார்.

உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு - ௩௨ - அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்

காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்று, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம்மறவியென்பனவாம்.

உயிர்ப்பொருள்களின்றொழில்பண்பு - ரு - துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல்.

உயிர்வேதனை-கஉ-அனல்சீதம், அசனி புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, மூளிவருமை.

உயிர்ப்பிறப்பு - சு-கரும்பிறப்பு, கருநீலப்பிறப்பு, பசும்பிறப்பு, செம்பிறப்பு, பொன்பிறப்பு, வெண்பிறப்பு, இவை ஆசீதவன்மதம்.

உரிச்சொல் ச-இசையுரிச்சொல், குறிப்புச்சொல், குணப்பண்புரிச்சொல், தொழிற்பண்புரிச்சொல்.

உருத்திரர் கக-மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன, விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன்.

உருத்திரர்-கoஅ-இந்திரதிக்கில், கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, அவ்வியன், சாத்தா, பினாகி, திரிசோதியன், அக்கினிதிக்கில் உருத்திரன், உதாசனன், பிங்கலன், காதகன், அயன், சுவலன், தகனன், வெப்புருபிரமாந்தகன், க்ஷயாந்தகன், இமயதிக்கில்யாமியன், மிருத்தியு, அரன்தாதா, விதாதா, கத்திரு, காலன், தன்மன், சங்யோத்தர், வியோகிருதன், நிருதிதிக்கில் - கிருதி, மாரணன்அரந்தர், குரூரதிருட்டி, பயாந்தகன், ஊர்த்துவகாயன், விருபாக்ஷன், தூமிரு, உலோகிதன், தெங்கிருட்டினன், வருணதிக்கில்-பலன், அதிபலன், பாகத்தன், மகாபலன், சுவேதாசெயபத்திரன், தீர்க்கவாகு, செலாந்தகன், வடவாமுகன், தீமான், வாயுதிக்கில் - சீக்கிரன், இலகு, வாயுவேகன், தக்ஷணன், சுக்குமன் க்ஷயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபத்திமேகவாகனன் குபேரதிக்கில்கிரீசன் ரூபவான், தன்னியன், சௌமியன், சௌமியதேகன், பிரமத்தனன் சப்பிரகடன், பிரகாசன், இலக்குமிவான், சோமேசன், ஈசானதிக்கில் வித்தியாதீபன், ஞானபுகன், சருவன், வேதபாரகன், மாத்திருவிருத்தன், பிங்கலாக்ஷன், பூதபாலன், பலிப்பிரியன், சருவவித்தியாதியாதிபன், தாதா. அண்டகடாக வோட்டுக்குக் கீழேவிஷ்ணுதிக்கில் அனந்தன், பாலகன்வீரன், பாதாலிரதிபதி, விபுஇடபத்துவசன், உக்கிரன், சப்பிரன், உலோகிதன், சருவன், அண்டகடாகத்தின்மேலே பிரமதிக்கில்-சம்பு, விபு, கெணத்தியக்ஷன், திரியக்ஷன், திரிதேசகவாதகன், சன்வாகன், விவாகன், நபன், லீ ப சு, விலட்சணன், என்பவர்களாம்.

உருத்திராக்கத்தின் பெயர்கள் - ச - அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணி.

உருத்திராக்கவருணம் - ச - வெண்மைநிறவுருத்திராக்கம் அந்தண சாதி, பொன்மைநிறவுருத்திராக்கமும், செங்கிறவுருத்திராக்கமும், க்ஷத்திரியசாதி, வெண்மை, செம்மை கலந்துள்ளமணி, வைசியசாதி, கருநிறமணி, சூத்திரசாதி.

உருத்திராக்கவகை - ரு - வெண்ணிறமணி, கபிலநிறமணி, செங்கிறமணி, பொன்னிறமணி, கருநிறமணி.

உருத்திராக்கவளவு - உ - எண்ணளவு, எல்லையளவு.

உருத்திராக்கந்தரிக்குங்காலங்கள் - கக- சிவமந்திரசெபம், சந்தியாவந்தனம், சிவபூசைசிவபுராணபடனம், சிவத்தியானம், சிவாலயதரிசனம், தேவாரதிருவாசக பாராயணம், அவைகேட்டல், தீர்த்தமாடல், விரதமனுட்டித்தல், சிராத்தஞ்செய்யல்.

உருத்திராக்கந் தரிக்கலாகாத காலங்கள் - சு - சயனம், மலசலமோசனம், புணர்ச்சி, நோய், சனனசௌசம், மரணசௌசம்.

உருத்திராக்கந்தரிக்குந்தானங்கள் - கo- குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள்.

உருத்திராக்கமணிமுகம் - கசு - ஒருமுகமணிமுதற் பதினாறுமுகமணிவரைக்கும் உள்ளனவாம்.

உருத்திராக்கதாரணபிரீதித் தேவதைகள்-அo-பிரமன், விட்டுணு, உருத்தி

ரன், பிரமாணி, நாராயணி, மாகேசுவரி, கௌரிநாராயணி, வராகி, உருத்திராணி, இந்திராணி, அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிபாதர், சிகண்டி, ஸ்ரீகண்டர், கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்துகாவேரி, கோதாவரி, சோணநதி, துங்கபத்திரை, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன், ஆதித்தர் பன்னிருவர், அச்சுவினிகள் இருவர், ஈசர்பதினொருவர், வசுக்கள் எண்மர்.

உருமப்பரமலோகம் - ௨௦ - பிரமகாயிகலோகம், பிரமபுரோகிதலோகம், காப்பிரமலோகம், பரீத்தாபலோகம், அப்பிரமாணுபலோகம் ஆபாஸ்வரலோகம், பரீத்தசுபலோகம், அப்பிரமாணசுபலோகம், சுபகிருஸ்நலோகம், அசஞ்ஞியாசத்துவ லோகம், அப்பிரகலோகம், அதபலோகம், சுதரிசலோகம், சுதர்லோகம், அகநிட்டலோகம், ஆகாசானந்தியாயதன லோகக்கணுன்கு இதன்கண், பின்னர்ச் சொல்லப்பட்டநான்குலகங்கள் அருப்பபிடமாலோகம் எஙபர் மணிமேகலையார்.

உருவப்பிரமர்-௧௧-சுரோபத்திஎன்னும் முதலாவது தியானத்திற்றேறியவர்கள் மூவர், கிருதாகாமி என்னும் இரண்டாவது தியானத்திற் றேறியவர்கள் மூவர், அநாகாமி யென்னும் மூன்றாவது தியானத்திற் றேறியவர்கள் மூவர்கள், அர்க்கத என்னு நான்காவது தியானத்திற் றேறியவர்கள் எழுவராம். இது புத்தமதம்.

உரை - ௪ - கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன செய்யுட் கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றொறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருடொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமு மிலக்கியமு மெடுத்துக்காட்டிப் பொருள் விரித்துரைத்தலே யகலவுரை.

உரைப்பொதுவிலக்கணம்-௧௪ - பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரியவசனம்.

உரையிலக்கணம் - ௫ - பதம், பதப்பொருள், உதாரணம், வினாவிடை.

உலகம் - ௩ - பூமி, அந்தரம், சுவர்க்கம், அன்றியும் பூலோகம், பரலோகம், பாதாளலோக மென்பாருமுளர்.

உலகம் - ௧௪ - மேலுலகேழுங் கீழுலகேழும்-மேலுலகாவன. பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம், கீழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

உலோகம் - ௯ - தமனியம், இரும்பு, தாமிரம், ஈயம், வெள்ளி, பஞ்சம், இரதி, நாகம், கஞ்சம்.

உலோகம்-௫ பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவையே பஞ்சலோகம்.

உலோகம் - ௭ - செம்பொன், வெண்பொன், கரும்பொன், செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவமைப்போலி-௧௮-சாத்திய விகலன், சாதகவிகலன், உபவிகலன், ஆசிரயவீனன், அவ்வியாத்திய பிதானன், விபரீதவியாத்தியபிதானன், சாதனவியாவிருத்தன், சாத்தியாவ்வியாவிருத்தன், உபயவியாவிருத்தன், ஆசிரயவிகினன், வியாவிருத்திய பிதானன், விபரீதவியாத்திய பிதானன், சந்தித்த சாத்தியன், சந்தித்தவுபயன், சந்தித்தவாசிரயன், சந்தித்த சாத்தியாவ்வியாவிருத்தன், சந்தித்தசாதனவ்வியாவிருத்தன் என்பனவாம். இவற்றுள்.

௧ - சாத்திய விகலனாவது மனம் அநித்தியம் என்கின்ற மூர்த்தமாகையினால் என்னும் ஏதுவிலே பரமாணுவைப்போல் என்கிற திருட்டாந்தமாம். அநித்தியத்துவம் என்னுஞ் சாத்தியமில்லாமையாலென்க.

௨ - சாதகவிகலனாவது மனம் அநித்தியமூர்த்த மாகையினாலே யென்னும்

வேதுவுக்குக் கன்மம்போல என்கிற திருட்டாந்தம் மூர்த்தத்துவம் என்னுஞ் சாதனமில்லையாம் என்க.

௫ - உபயவிகலனாவது - இந்தச் சாத்தியத்துக்கும், இந்த வேதுவுக்கும், ஆகாயம்போல என்னுந் திருட்டாந்தத்தினாலே சாத்தியமாயிருக்கிற அநித்தியமும், சாதனமாயிருக்கிற மூர்த்தத்துவமும் ஆக இரண்டு அல்லாமையாலெனவறிக.

௬ - ஆச்சிரய வீனனாவது - இந்த வேதுக்குத்தானே ஆகாயத்திற் பூப்போல என்கிற திருட்டாந்தமாயிருக்கிற ஆகாயபுட்பம் இல்லாதபடியினால் என்க.

௭ - அவ்வியாத்திய பிதானன் ஆவது இந்த வேதுவுக்குத் தானே கடம்போ லென்கிற திருட்டாந்தத்தினாலே யாதொன்று மூர்த்தம் அது கித்தியம். கடம்போலெனகிற தலத்திலே யொழியப் புறத்தில் வியாத்தி தோன்றாதபடியினால் எனவறிக.

௮ - விபரீதவியாத்தியபிதானன் - ஆவது இந்த வேது சாத்தியங்களுக்கே யாதொன்று மூர்த்தம் அது அநித்தியம் என்று வியாத்தி சொல்லாமல் இதற்கு விபரீதம் யாதொன்று அநித்தியம் அது மூர்த்தமென்று வியாத்தி சொல்லுகையினாலறிக.

௯ - சாதனாவ்வியாவிருத்தனாவது இந்தவேது சாத்தியங்களுக்குத் தானே யாதொன்று அநித்தியமல்ல அது மூர்த்தமுமல்ல, பரமாணுவைப்போல வென்னுந் திருட்டாந்தத்தினாலே சாதனமாயிருக்கிற மூர்த்தத்தத்துவம் வியாவிருத்தமாகாமல் அநிலையிருக்கையினாலெனவறிக.

௧௦ - சாத்தியாவ்வியா விருத்தனாவது இந்த வேது சாத்தியங்களுக்கே கன்மவத்தென்கிற திருட்டாந்தத்தினாலே இங்ஙனமுள்ள வெதிரேக வியாச்சியத்தினாலே சாத்தியமா யிருக்கின்ற அநித்தியத்துவம், வியாவிருத்தமாகாமலிருக்கையினாலெனவறிக.

௧௧ - உபயவியாவிருத்தனாவது இந்த வேது சாத்தியங்களுக்குக் கடாதியைப்போல வென்கிற திருட்டாந்தம் பொருந்துகையினாலென்க.

௧௨ - ஆச்சிரயவினைமாவது இந்த வேது சாத்தியங்களுக்கு ஆகாசத்திற் பூப்போல என்கிற திருட்டாந்தம் பொருந்துகையினாலென்க.

௧௩ - வியாவிருத்தியபிதானனாவது ஆச்சிரயம்போல என்கிற வியாத்தியுண்டாகையாலென்க.

௧௪ - விபரீத விருத்தியபிதானன் ஆவது இந்த வது சாத்தியங்களுக்கே விபரீதவியாத்தியிலே ஆகாயவத்தென்கிற திருட்டாந்தம் பொருந்துதலாலெனவறிக.

௧௫ - சந்தித்தசாத்தியன் ஆவது சிவன் மகாராஜனாவான், சோமவம்ச உற்பவனாகலால்இராச்சியபாரத்துக்குக் கர்த்தரான இராச புத்திரனைப்போல இந்த வது இவனிராச்சிய பாரத்துக்குக் கர்த்தனாகப்போகின்றானென்னுஞ் சாத்தியத்தோடே கூட வியாத்திக்குந் திருட்டாந்தம் நிச்சயித்து இராச்சிய பாரத்தை யுடையவனாகையாலெனவறிக.

௧௬ - சந்தித்த சாதனனாவது இவன் அசர்வஞ்ஞன், அஃதெக்காரணத்தாலெனின், இராகத் துவேஷாதிகளுடன், கூடினவனாகலால் தெருவிற் செல்லும் புருடனைப்போல இந்த வேதுவுக்குத் திருட்டாந்தமாவிருக்கிறதெருவிற்செல்லும் புருடனிச்சித சாதனனாகலானும், சாத்தியமாயிருக்கும் இந்தப் புருடனிடத்திலே அசர்வஞ்ஞ இலக்கணமுண்டோ வில்லையோ எனச் சங்கையுறுதலானும் இது திருட்டாந்த ஆபாசமாயிற்று.

௧௭-சந்தித்தோபயனாவது இவன் சுவர்க்கத்தையடையப்போகிறான்,முற்பிறப்பில் தேடப்பட்டிருக்கிற சற்கரும பலத்தை யுடையவனாகலால், தேவதத்தனைப்போல இந்தத் திருட்டாந்தத்திலே யேதுவாயிருக்கின்ற முன்பு அர்ச்சித்த சுத்த சருமத்துவமுஞ் சாத்தியமாயிருக்கிற சுவர்க்காநித்துவமுஞ் சந்தித்துவமாகல லென்க.

௧௮ - சந்தித்த வாசிரயனாவது இவன் சருவஞ்ஞனன்று, அஃதெக் காரணத்தாலாமெனில்,வெகுவத்தாவாயிருத்தலான், இனிப் பிறக்குந் தேவதத்த

னைப்போல என்னுந் திருட்டாந்தமாயி ருக்கிற தேவதத்தன் பிறக்கின்றதற்கே துவாய் பிரமாணமில்லாமையாலென்க.

கள - சந்தித்த சாத்தியாவ்வியாவி ருத்தனுவது யாதொருவன் மகத்தாயிரு க்கிற அரசாட்சியைச் செய்யவில்லை. அவன் சந்திர வமிசத்திற் பிறந்தவனு மன்று வேறேயொரு இராசபுருடனைப் போல என்கிற திருட்டாந்தத்திலே தி ருட்டாந்தமான இராச புத்திரனிடத்தி லே சாத்தியாவ்வியா விருத்தியமுண் டாய்ச் சந்தேசமுண்டாதலாமென்க.

கஅ - சந்தித்த சாதனுவ்வியாவிரு த்தன்ஆவது யாவனொருவன் சருவஞ் ஞன் அவனே இராகத்துவேட மில்லா தவன், சகல சாத்திரங்களினும் வல்லவ னைப்போல என்னுந் திருட்டாந்தத்தி லே யிருக்கிற சமத்த சாத்திரக்கியனுக் கு இராகாதியில்லையென்று பிரமாண மில்லாமையாலென்க.

உவமைத்தொகை – ச - வினையுவமம் ப யனுவமம், மெய்யுவமம், உருவுவமம்.

உவமையுருபு - ௫௨ - அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன் ன, உறழ, என்ன, ஏய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கதழ்வு, கேழ், சன்னியம், சேத்த, தூக்கு, நிகர, நேர, புரைய, போல, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, வெள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொற்ப, வெ ல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஒட, துளைப்ப, சுற்ற, காய்த்த.

உவர்ப்பு - க - ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குறகை, இவை மு றையே சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

உவா - உ – அமாவாசி, பௌர்ணிமை.

உழிஞைத்துறை - அ-கொள்ளார் தேஎங் குறித்தகொற்றம், உள்ளியது முடிக் கும் வேந்தன் சிறப்பு தொல்லெயிற் கவர்தல், தோலின்பெருக்கம், அகத் தோன்செல்வம், முரணியபுறத்தோ னணங்கிய பக்கம், திறமட வொரு தான் மண்டியகுறுமை உடன்றோர் வருபகை, பேணுரெயில்கூறல்.

உழிஞையிலக்கணம் - உ - வேற்றுவே ந்தனுடைய அரணைச்சென்ற வேந் தன் வளைத்தல், இருந்த வேந்தன் காத்தல்.

ஊழ்வகை - ௩ - பிராரத்துவம், சஞ்சி தம், ஆகாமியம்.

ஊ

ஊறு - அ - வெம்மை, தண்மை, மென் மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, கர்ச்சரை, இவையே தொ டப்படும் பொருட் கெண்குணம்.

ஊறுபாடு – ச - எறிதல், குத்தல், வெட் டல், எய்தல்.

எ

எச்சவகை – உ - பெயரெச்சம், வினை யெச்சம்.

எச்சத்தோற்றம் – அ – குறள், செவிடு, மூங்கை, கூன், மருள், குருடு, மா, உறுப்பில், பிண்டம். இதனை "சிறப்பி ல் சிதடுமுறுப்பில் பிண்டமுங்கூனுங் குறளு மூமுஞ்செவிடு - மாவுமருளு முளப்படவாழ்நர்க்-கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம் பேதைமை யல்லதுநியமில்லை" என்னும் புற நானூற்றுச் செய்யுளானறிக.

எச்சவிரி-௨௨ - செய்தவென்னும்வாய் ப்பாட்டிறந்தகாலத்தெரிநிலைவினைப் பெயரெச்சம், செய்கிற வென்னும் நிகழ்காலத் தெரிநிலை வினைப்பெய ரெச்சம், செய்யுமென்னும் வாய்ப்பா ட்டெதிர்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம், எதிர்மறை முக்காலத் தெரிநிலை வினைப்பெயரெச்சம், செ ய்தென்னும் வாய்பாட்டிறந்த காலத் தெரிநிலைவினையெச்சம், செய்யுவெ ன்னும் வாய்பாட்டிறந்தகாலத் தெரி நிலை வினையெச்சம், செய்யாவென் னும்வாய்பாட்டிறந்தகாலத்தெரிநிலை வினையெச்சம், செய்யூவென்னும்வா

ய்பாட்டிறந்தகாலத் தெரிநிலைவினையெச்சம்,செய்வதன் என்னும் வாய்பாட்டிறந்தகாலத்தெரிநிலையெச்சம், செயவென்னும் வாய்பாட்டு நிகழ்காலத்தெரிநிலைவினையெச்சம்,செயின் என்னும் வாய்பாட்டு எதிர்காலத்தெரிநிலைவினையெச்சம். வான், பான், பாக்கு, கடை, உம், முன், கால், வழி,இடத்தென்னுமீற்று எதிர்காலவினையெச்சம், குறிப்பு வினைப்பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் என்பனவாம்.

எண்ணலளவை - ௩௬ - ஒன்று, பத்து, நூறு, ஆயிரம்,பதினாயிரம், இலக்கம், பத்திலக்கம், கோடி, பத்துக்கோடி, நூறுகோடி, அற்புதம், நிற்புதம், கர்வம், மகாகர்வம், பதுமம், மகாபதுமம், க்ஷோணி, மகாக்ஷோணி, சங்கம், மகாசங்கம், கிதி, மகாகிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், நிதி,மகாநிதி, சாகரம், மகாசாகரம், அரி, மகாவரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது, மகாகிருது.

ஏழினி - ௩ - ஒருமுகடு ஏழினி,காந்தாரவெழினி, பொருமுகவெழுனி.

எழுத்திலக்கணம் - ௨ - அகத்திலக்கணம், புறத்திலக்கணம்.

எழுத்து - ௨ - முதலெழுத்து, சார்பெழுத்து,இவற்றுள்முதலெழுத்துமுப்பது, சார்பெழுத்து முந்நூற்றறுபத்தொன்பது முதலெழுத்துக்களாவன - உயிர்மெய்,சார்பெழுத்துக்களாவன-உயிர்மெய், உயிரளபெடை ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகார குறுக்கம் ஔகார குறுக்கம், மகரக்குறுக்கம்,முற்றாய்தம், ஆய்தக்குறுக்கம்.

எழுத்துத்தானம்-௫ - பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம், இவற்றிற்கு முறையே யெழுத்துக்களாவன, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஐ, ஒ, ஔ, எ, ஏ, ஒ, ஓ, பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தைப் பாலதானமாகக்கொண்டெண்ணப்படும். இவற்றுண் முன்னைய மூன்று நன்மைபயக்கும் பின்னையவிரண்டுந் தீமை பயக்கும்.

―――

ஏ

ஏகாதசிவகை - ௨௬ - ஆரம்ப ஏகாதசி, மோக்ஷவேகாதசி, புத்திரதாவேகாதசி, சபல ஏகாதசி, சயவேகாதசி, சட்டில ஏகாதசி, ஆமலகவேகாதசி, விசய ஏகாதசி, கமதாவேகாதசி, பாவமோசன ஏகாதசி, மோகினி யேகாதசி, வருதினி யேகாதசி, பாண்டவவேகாதசி, அபார யேகாதசி, பதும ஏகாதசி, யோகினி யேகாதசி, நந்தன ஏகாதசி, கர்மிக ஏகாதசி, வாமனேயவேகாதசி, அசாவேகாதசி, பாசாங்குசயேகாதசி, இந்திர ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி, இரமாவேகாதசி, பரமவேகாதசி - பதுமினி ஏகாதசி, கௌசிகவேகாதசி, கைசிகவேகாதசி, சர்வசிவே ஏகாதசி, தத்தவேகாதசி, என்பனவாம்.

ஏது - ௩-இயல்பு,காரியம், அநுபலப்தி, இவற்றுள் இயல்பு சகசவேதுவெனப்படும். அஃதாவது மாமுதலியசொற்கள் மாமுதலிய பொருள்களை யுணர்த்துதற்கண் வேறு காரணமின்றி அச்சொற்களினியல்பானுளதாகிய வாற்றல் காரியவேதாவது புகை முதலாகிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை உணர்த்துவதாம் அநுபலப்தியாவது குளிரில்லாமை முதலிய காரிய பாவங்கள் பனி இல்லாமை முதலிய காரண பாவங்களையுணர்த்துவதாம்.காரியவேதுவென்றமையால் ஒற்றுமைப்பற்றிக் காரணவேதுவுங் கொள்ளப்படும். அக்காரணவேதாவது இடித்து மின்னி, யிருண்டெழுந்த மேகம் மழை பெய்தலைக் காட்டுவதுபோல்வது.

ஏதுப்போலிவகை - ௩ - துணியப்படாதது, மறுதலைக்கட்படுவது, ஒருதலைப்படாதது.

ஏதுப்போலிவகை-௩ - அசித்தன்,விருத்தன், அநைகாந்திகன், இவற்றுள் அசித்தனாவது நிச்சயிக்கப்படாத பக்கவிருத்தியை யுடையது விருத்தனாவது பக்கத்திலும் விபக்கத்திலும் உடைத்தா யிருக்கை. அநைகாந்திக

னுவது பக்கத்திரயத்தினுலும் விருத்தி யிருத்தல் அசித்தபேதம் பன்னிரண்டாம். அவையாவன - சொரூபாசித்தன், வியாத்திகரணசித்தன், விசேடியாசித்தன், விசேடணசித்தன், பாகாசித்தன், ஆசித்யாசித்தன், ஆசிரய ஏகதேசாசித்தன் வியாத்த விசேடியாசித்தன் வியாத்த விசேடணசித்தன், சந்தேகாசித்தன் சந்தித்த விசேடியாசித்தன், சந்தித்தவிசேடணசித்தன், என்பனவாம். விருத்தபேதம் இரண்டாம்.

அவையர்வன:— பக்கவிபக்க வியாபக விருத்தன், பக்க விபக்க ஏகதேசவிருத்தன், அனைகாந்திகபேதம் ஏழாம் அவையாவன பக்கத்திரய விபகவிருத்தி, பக்கவியாபகசபக்க விபக்க ஏகதேச விருத்தி, பக்கவிபக்க வியாபக சபக்க ஏகதேச விருத்தி, பக்கத் திரய ஏகதேசவிருத்தி விபக்க வியாபகன், பக்கவிபக்க வேகதேசவிருத்திசபக்க வியாபகன் என்பனவாம்.

ஏதுப்போலிவிரி-உக-சார்பில்லதுசார்புண்மை யறியப்படாதது, சொரூபமில்லது சொரூபமுண்மை யறியப்படாதது சொரூபத்தின் விசேடணமில்லது இசாரூப விசேடண வுண்மை யறியப்படாதது, விசேடியமில்லது, விசேடிய முண்மையறியப்படாதது, ஒரு மருங்கில்லது, ஒரு மருங்குண்மையறியப்படாதது, பானுக்குடன் பாடில்லது, சாத்தியத்தோடு வியாத்தியுண்மை யறியப்படாதது, செயற்கைபற்றி வியாத்தியுடையது, மறுதலைப்பொருள்சாதிப்பது, மறுதலைப் பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவையுடன் கொண்டுவருவது காட்சியளவையான்மறுக்கப்பட்டு வருவதுபக்கசபக்கமாத்திரையினன்றிவிபக்கத்துஞ்சேறலுடையது, சபக்கத்திற்சேறலின்றிப் பக்கமாத்திரையினுள்ளது சபக்கவிபக்கவிலக்கணங்கள் கிடைக்கப்பெருதது கருதலளவையான் மறுக்கப்பட்டு வருவது, உரையளவையான் மறுக்கப்பட்டு வருவதுமாம்.

ஏவல்வினை-உ-முன்னிலையேவல்வினை ஏவல்வினை. இவற்றுள் முன்னிலையேவலாவது தன்மை வினைபடர்க்கைவினைகளுக்கினமாய் முன்னின்றான்ருெழிலையுணர்த்துவது, ஏவல்வினையாவதுஇனமின்றிமுன்னிலையொன்றற்கே உரியதாய் முன்னின்ருனைத் தொழிற்படுத்தும் வினை.

ஏவல்வினைமுற்று-உ-முன்னிலையேவலொருமைவினைமுற்று, முன்னிலையேவற் பன்மை வினைமுற்று.

ஏறு-ரு-அதிகாரநந்தி, திருமால் நந்தி, தருமநந்தி.

ஐ

ஐசுவரியம் - அ - இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐந்தாம்வேற்றுமைப் பொருள்கோள்-எல்லைப்பொருள், ஏதுப்பொருள், ஒப்புப்பொருள், நீக்கப்பொருள், முதற்காரணப் பொருள், வேற்றுமைக்கெதிர்ப்பொருள், இவற்றிற்கு முறையே உதாரணம் வருமாறு:— மதுரையின் வடக்குச் சிதம்பரம், கல்வியிற் பெரியன்கம்பன், காக்கையிற் கரிது களம்பழம், மலையின்வீழருவி, மாயையிற்றோன்றிய வுலகம், பாவத்தின் வெரூக்கின்றான், மண்ணுலகின் வேறு விண்ணுலகம்.

ஐந்தாம் வேற்றுமையுருபுகள்-ரு-இன் இல் நின்று, இருந்து, காட்டிலும், பார்க்கினும்.

ஐம்பலநுகர்ச்சியினிறப்பன -ரு-சுவையாலிறப்பதுமீன், நாற்றத்தால்வண்டு, பரிசத்தால் யானை, ஓசையால் அசுணம், ஒளியால் விட்டில்.

ஐயமுற்றோனவிநயக்குணம்-ரு-வாடிய வுறுப்பு, மயங்கியபார்வை. பீடழிபுலன், பேசாதிருத்தல், வேறுபட்டசெய்கை, ஆகாயத்தையுந் திசைகளையும் மாறிமாறிப்பார்த்தல்.

25 b

ஐபவவிஷயம்-௬-வாடிய வுறுப்பு,மயங்கியபார்வை, பீடழிபுலன், பேசாதிருத்தல், வேறுபட்டசெய்கை, திசைவெளிகளை மாறிமாறிப்பார்த்தல்.
ஐயனார்தேவிமார்-உ-புட்கலை, பூரணை.
ஐயனார்வாகனம் - உ - காரிக்குதிரை, வெள்ளையானை.

ஒ

ஒருமை - க - இறையுணர்வு.
ஒடுக்கம் - ௫ - நித்தியப்பிரளயம், நைமித்திகப்பிரளயம்,பிராகிருதப்பிரளயம், ஆதியந்தப் பிரளயம், மகாப்பிரளயம்.
ஒழிவு - ௩ - பரப்பாழ், சிவப்பாழ், மாயைப்பாழ்.
ஒழுக்கவகை - உ - இல்லறவொழுக்கம், துறவறவொழுக்கம்.
ஒற்றர் - ௩ - தலைத்தூதுவர், இடைத்தூதுவர், கடைத்தூதுவர்.
ஒற்றெழுத்துவகை - ௩ - வல்லினம், மெல்லினம், இடையினம்.
ஒற்றைக்கை - ௩௩ - பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, கிடங்கை, அலபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி,தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி, இவை பிண்டிவகை, இணையா வினைக்கைவகையெனவும் படும்.

ஓ

ஓடவகை - ௫ - கரிமுகவம்பி, பரிமுகவம்பி,அரிமுகவம்பி,தோணி,கப்பல்.
ஓமாலிகை - ௩௨ - இலவங்கம்,பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மாதவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி,இலாமிச்சம், தண்டில்வெண்ணெய்,கடுக்காய்,நெல்லி, தான்றி,குத்தம்,மரேணுகம்,மாஞ்சி,சயிலேகம், புழுகு, புன்னைத்தாது, புலிநகம், பூஞ்சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரி.
ஓலக்கஅரசர் - ௧௬ - அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், முசுகுந்தன், கார்த்தவீரியன், கயன், அம்பரீடன், சசிபிந்து, சிபிபிருது, மருத்துவான், பரதன், சகோத்திரன், இராமன், திலீபன், இரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அனங்கன்.
ஓலக்கவக்கணம் - ௫௫-அட்ட ஐசுவரியயுக்தம்,அட்டபோகசம்பன்னம், சப்தசந்தானம்,சதுர்விதசம்பந்தம்,அறுகுணமுடைமை,பஞ்சதந்திரப்பிரவீணமுடைமை, வருக்கத்திரயவிசிட்டமுடைமை,சதுரங்கபலம்,சபாசத்தாங்கபரிவேடிதருடைமை கவீச்சுரர்,காயகர்,தாதிகள், பாரங்கதர்,சதுர்விதமகாநாயகர், பிரமாண புருடர், இரதபரிணிதர், சதுர்வித போகசங்கரர், காயகாதி புருடர்கள், திரிவிதநாயகியர்,விசேடவனிதையர், சிமந்தியர், திரிவிதகோபப் பிரசாதலக்கணலக்ஷிதலலிகியர், பிரபுடைகன்னியர்,அலத்தராமியர், தசவிதகேளிபாலலீலாசதியர், காயஸ்திரீகள், பருணிதபிரமதேவர், இரதிபேதகாந்தியர், பன்னிருசத்துவிசதியர், நால்வகைப்பிரீதியர், நால்வகைமோகமயர், திதிக்கிரமலக்கணர், ஆலிங்கனம், எண்வகைத்தாடனலக்கணிகர், சத்தநகோபாதிவிதர், நாடிவருணமகிபர், அநேக கரண பரிணிதர், இரதிகலாகுசலர், வியோகசதுட்டயர், விப்பிரலம்பவித்தகர், அவததாத்திரயபரீட்சகர், பஞ்சமந்திரவன்னப்பிரதாபப்பிரவீணர், பஞ்சவிசுமாத்திரிகோபிதர்,பித்துவகையவத்தாவிசாரபரர் ஐவகைமகாவாத்தியகவீசுணர், வேத்தியர்,மத்தளிகர், ஆசியக்காரர்,நிருத்தநாயகியார், வாத்தியம்,நிருத்தம், வத்திரம், ஆபரணம், இராச்சியபாரம், விநயம்,சத்தககதர்.

க

கடல்-எ-உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடல்படுதிரவியம் - ரு - பவளம், முத்து, சங்கு, ஒக்கோலை, உப்பு.

கடற்றிரை - உ - உல்லோலம், கல்லோலம், அவற்றை யுலரக்கின் பெருந்திரை, சிறுதிரை எனக்கொள்க.

கடன் - ங - தேவர்கடன், பிதிரர்கடன், முனிவர்கடன்.

கடைவள்ளல் - எ - பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலயன், பேகன், ஓரி.

கடுகம் - ங - சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடுகமெனப்படும்.

கடைப்படுதானம் - எ - ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை - ச - தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம் - அ - நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம். இவற்றுண் முன்னர்நான்குநன்று, பின்னர்நான்குங்கலகம், நிரைநிரைநிரை நிலக்கணம், நேர், நிரை நிரை நீர்க்கணம், நிரை, நேர் நேர் மதிக்கணம், நேர் நேர் உயிர்க்கணம் நேர்நிரை நேர் சூரியகணம், நிரைநேர் நிரை தீக்கணம், நேர் நேர் நிரை வாயுக்கணம், நிரைநிரைநேர் ஆகாயகணம்.

கணம் - கஅ - அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

கணாக்கிரகண்ணியர் - கஉ - தண்டதரர், தண்டமாதர், தண்டவாகு, பிரசண்டர், பிரசண்டார்ச்சிதர், பிரசண்டகாவர், பலர், பலவிகரணர், சுமாலியர், சர்வபூதர், தமனர், மனோன்மனர்.

கணாதிபதிமூர்த்தம் - கச - வக்கிர துண்டர், சிந்தாமணி விநாயகர், விக்கினராசர், பாலசந்திரர், கசானனர், மல்லால ரெனவந்தமயூரேசர், கணேசர், கணபதி, மகவாகவக்த யூரேசர், தூமகேது, உடுண்டிவிநாயசர், துண்டிராஜர், மகோற்கடர், வல்லபை கணேசர்.

கணிகையர் - ச - தலைக்கோலரிவை, தோரியமடந்தை, தலைப்பாட்டுக் கூத்தி, இடைப்பாட்டுக் கூத்தி.

கணிதம் - அ - சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள் சங்கலிதம்-கூட்டல், விபகலிதம்-கழித்தல், குணனம்-பெருக்கல், பாகாரம் - பங்கிடல், வர்க்கம்-சமமாகியவிரெண்ணின் பெருக்கம். அஃதாவது நிலத்தைச்சமமாகநாற்கோணஞ்செய்தல், வர்க்கமூலம் அவ்வர்க்கத் தொகையினின்றதன் மூலமாகிய வரம்பறிதல், கனம்-சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், அஃதாவது-குழியைச்சமமாகப் பன்னிருகோணப்படுத்தல், கனமூலம்-அக்கனத்தொகையினின்றதன்மூலமாகிய வொருமூலையறிதல்.

கணேசுரர் - உஎ - நந்தியீசுரர், பிருங்கிமகாளர், கிரீடி, கண்டர், காலர், காலகண்டர், மண்டாசுருணர், சுபோடர், தண்டியீசானர், பிரமமுனி, காலாக்கினி, ருத்திரர், வீரபத்திரர், பிஞகி, காளர், முகசாளர், மேகத்திரகாளர், சோத்திரகாளர், சண்டர், மாலாதரர், திரிசூலி, விசுவமாலாபதி, அண்டாதிநாதர், காலாந்தகர், இலகுலீசர், மயூரானனர்.

கண் - உ - அகக்கண், புறக்கண்.

கண்டம் - கூ - கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபாதம், தென்பாதம், மத்திமகண்டம், இவையே நவகண்டம்.

கண்டவகை - கூ - பரதகண்டம், குருகண்டம், கிம்புருடகண்டம், இளாவிருதகண்டம், அருவருடகண்டம், கேதுமாலகண்டம், இரமியகண்டம், பத்திராசுவகண்டம், இரணியகண்டம்.

கண்ணன்மனைவியர் - அ - உருக்குமணி, இலக்குமணை, சத்தியபாமை, சாம்பவதி, நீளாதேவி, காளிந்தி, மித்திரவிந்தை, பத்திரை.

கண்ணேவுற்றோனவிநயம் - ச - கண்ணீர்த்துளியை விரலாற்றெறிதல் வளைந்த புருவமுடைமை, வாடியமுகம் வெளிநோக்கியஞ்சுதல்.
கதி-ச-தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.
கதிர்காமதலத்திருநாமங்கள் - கஉ - ஏமகூடம், பூலோககந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், வில்வகானனம்,சகலசித்திகரம்,அகத்தியப்பிரியம், பிரமசித்து, அவ்வியத்தமூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை.
கதிர்காமக்கடவுடிருநாமங்கள்-கூ-கதிர்காமசுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்கசுவாமி, கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான். பரஞ்சோதிப் பெருமான, நிராகாயநாதன், அவ்வியத்தமூர்த்தி.
கந்தம்-உ-நற்கந்தம், துர்க்கந்தம்.
கந்தபுராணசங்கிதை-௬-பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சனற்குமாரசங்கிதை, சூரசங்கிதை, சங்கரசங்கிதை, சூதசங்கிதை.
கமகபேதகம்-உஉ - சுவரிதம், பிரமதம், நீர்த்தம், இல்லிதோற்சாரம், கிருதம், நிதம், உல்லாதிதம், உல்லோசிதம், கம்பிதம், குக்குமிதம், நீர்க்கம், உலோலிதம், இலீலோதிர்க்கம், நிர்க்கலீதம், பிரத்துதம்,தாந்திகம், ஊர்ச்சிதம், சிட்டபதம், அடவி, மூலம், இரசிதம், கோமளம். [சித்தம்.
கரணம் - ச - மனம்,புத்தி,அலங்காரம்,
கரணம்-கக-பவம், பாலவம், கவுலவம், தைதூலே, கரசை, வணசை, பத்திரை, சகுனி, சதுர்ப்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம்.
கருங்கை- உ - கொன்றுவாழ், தொழிலிற் கன்றியகை, வன்பணித் தொழிலிற் கன்றியகை.
கரும்பூமிக்குறிமை-௬-வரைவுதொழில் வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.
கருமேந்திரியம் - ரு - வாக்கு, பாதம், பாணிபாயுரு, உபத்தம்.
கருவுளமைப்பு - ௬-பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.
கருவுள்வாதனை-ரு- கருப்பாசயப்பையுறுத்தல்,சலம்பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு மூறித்துத்தள்ளுதல், யோனித் துவாரத்தா னெருக்குண்ணல்.
கலம்பகவுறுப்பு-கஅ-புயவகுப்பு, மதங்கு, அம்மானை,காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல்.
கலித்துறைவகை-உ-காப்பியக் கலித்துறை, கோவைக்கலித்துறை.
கலிப்பாவினம் - ௩ - கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்.
கலைஞானம்-௬ச - அக்கர விலக்கணம், இலிகிதம்,கணிதம்,வேதம்,புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம்,சோதிடசாஸ்திரம்,தருமசாஸ்திரம்,யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம்,சிற்பசாத்திரம்,வைத்தியசாத்திரம், உருவசாத்திரம்,இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடணம்,நாடகம்,திருத்தம், சத்தப்பிரமம் வீணை,வேணு,மிருதங்கம், தானம்,அத்திரபரீட்சை,அசுவபரீட்சை,இரத்தினபரீட்சை, பூமிபரீக்ஷை,சங்கிராமவிலக்கணம்,மல்யுத்தம், ஆகருடணம்,உச்சாடணம், வித்துவேடணம், மதனசாத்திரம்,மோகனம், வசீகரணம்,இரசவாதம்,காந்தருவவாதம், பைபீலவாதம்,கவுத்திகவாதம், தாதுவாதம்,காருடம், நட்டம்,முட்டி, ஆகாயப்பிரவேசம்,ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம்.
கலைவகை - ரு - பிரதிட்டாகலை, நிவர்த்திகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை, வித்தியாகலை.
கவி-ச-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவற்றன்பொருளடிபாவணிமுதலியகொடுத்து மற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவோனாசுகவி, பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை,தொடைவிகற்பஞ்செறிய

வருவகமுதலியவலங்காரத்தோடின்னிசைத்தாயமுத முறப்பாடுவோன்மதுரகவி,மாலைமுற்று,சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்புகரந்துறை, தூசங்கொளல், வாவனஞாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி. ஒரெழுத்தினம் ஒற்றெழுத்துத் தீர்ந்தவொரு பொருட்பாட்டு,சித்திரப்பாவிசித்திரப்பா, வினாவுத்தரம்சருப்பதோபத்திரம் எழுத்துவர்த்தனமிவைமுதலிய மிறைக்கவி தெரித்துபாடுவோன், சித்திரக்கவி மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரிடை, இயல், இசைகூத்து, பாசண்டத்துறை இவை முதலிய விரித்துப்பாடுவோன வித்தாரகவி.

களித்தோனவிநயக்குணம் - ௮ - இரகசியத்தைமறையாமை,சொல்லுதலின்மை, கவிழ்தல், சோர்தல், தாழ்தல், தளர்தல், வீழ்ஞ்சொற்களுடைமை, களிகவர்ந்த கண்ணோக்குடைமை.

கற்பம் - ௨ - அகற்பம், சகற்பம்.

கற்பபேதம் - ௩ - ஆன்மகற்பம், சிவகற்பம், சத்திகற்பம்.

கற்பிதம் - ௨ - அத்தியாரோபம், அபவாதம்.

கன்மமலகாரியம் - ௬ - ஒவ்வோர் தலங்களைப் பற்றியிருத்தல், நோயாய்க்கிடத்தல், புண்ணிய பாவங்களைச்செய்தல், ஒவ்வொரு பற்றுக்களாய்நின்ற தொந்தனைகளைவிடுத்தல், சர்வரையும் நிந்தித்தல், இகழ்ந்தாருடன் பொருந்தல்.

கன்னிகை - ௫ - அகலிகை,திரௌபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காங்கூலக்கை - ௩ - குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரிகாங்கூலம்.

காஞ்சிபுரியின்திருநாமங்கள் - ௧௩ - கஞ்சிபிரளயசித்து, சிவபுரம், விண்டுமாபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம்.

காடுபடுதிரவியம் - ௫ - அரக்கு, இறால், தேன், மயிற்பீலி, நாவி.

காட்சி - ௬ - ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக்காட்சி, அந்நுவயக்காட்சி, வெதிரேகக்காட்சி, திருவுராட்சி.

காட்சியளவைவகை - ௪ - வாயிற்காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக்காட்சி, யோகக்காட்சி.

காதலர் - ௩ - புருடன், தோழன், மகன்.

காப்பியம் - ௫ - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி.

காப்பியலக்கணம் - ௩௮ - வாழ்த்து தெய்வவணக்கம், உரைக்கும் பொருளுணர்தல், சிறந்தநாயகனைக்கோடல், நாட்டு வருணனை, நகரவருணனை, மலைச்சிறப்பு, கடல்வருணனை, பருவச்சிறப்பு,உதயாத்தமயவலங்காரம், கல்யாணம் முடிகவித்தல், பொழில்விளையாட்டு, நீர்விளையாட்டு, மதுபானம், மக்கட்பேறு, கல்வியிற் களித்தல், புலவியிற் புலத்தல், மந்திரம், தூது, போர் மேற் செலவு, போர் புரிதல், வெற்றி, வழிநடைபவனி, கலவொழுக்கம், கற்பொழுக்கம், ஆற்றுச்சிறப்பு, தனைவளம், குதவிளையாட்டு, உறுதிகூறல், காண்ட, சருக்காதிகளின் பாகுபாடு, பொருட்டுறை, மெய்ப்பாடு, நவரசம், வனப்பு, உத்தி, மதம்.

காப்பியவகை - ௨ - பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.

காப்பியவமைப்புவகை - ௨ - இவை தருப்பநெறி, கௌடநெறி.

காமஅவிநயக்குணம் - ௭ - சுத்தமாகிய அலங்கார முன்னவடிவும் தொழில் காரிகையை நோக்குங் கடைக்கண்ணுடைமை, பற்களும் நகையுஞ் சந்திர னு நிலவும்போலத்தோன்றல், மலர்ந்த முகமுடைமை, இரந்த சொற்களுடைமை.

காயசாதிபுருடர் - ௪ - பூமான், சந்தனன், பத்திர சன்னியன், பாஞ்சசாலின்னியன்.

காரணம்-௩ - முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம், எனவே உலகிற்கு முதற்காரணம், மாயை, துணைக்காரணம் சிவசத்தி, நிமித்தகாரணம் சிவபெருமான், இவற்றோடு அவாந்தரகாரணமொன்றுங்கொள்வர்.
காருகத்தொல் - ௨ - ஆடையாக்கல், சுமத்தல்.
காலம் - ௩ - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.
காலம் - ௯ - பருவத்தைக்காண்க.
காலவகை-௨௩-நிமிடம், காட்டை, கலை முகூர்த்தம், சாமம், பகல், இரவு, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், வருடம், சந்தியம்சம், சந்தி, யுகம், சதுர்யுகம், மகாயுகம், பிரளயம், கற்பம், பரார்த்தம், பரம்.
காலவகை-௨-சூக்குமகாலம். தூலகாலம்
காவிரிப்பூம்பட்டினப் பெயர்கள் - ௧௧- இந்திரவிருத்தி, மூதூர், சம்பாபதி, பூம்புகார், பட்டினம், காகந்தி, முசுகுந்தநகரம், சோமப்பிரியம், சகலாகரம், காகந்தி, சங்கமுகநகர்.
காவிரிப்பூம்பட்டினப்பொய்கை - ௨ - சூரியகுண்டம், சோமகுண்டம்.
காற்றின்குணம் - ௫ - போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம்.

—

கி

கிரகம்-௯ - ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையே நவக்கிரகங்களெனப்படும்.
கிரகசமித்து - ௯ - எருக்கு, முருக்கு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அறுகு, தருப்பை.
கிரகதானியம்-௯ - கோதுமை, பச்சையரிசி, துவரை, பச்சைப்பயறு, கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்ளு, இவை முறையேகொள்க.
கிரகவகை - ௩ - ஆண், பெண், அலி.
கிரகத்துட்பெண் - ௩ - சந்திரன், சுக்கிரன், இராகு.
கிரகத்துளாண்-௩-சூரியன், செவ்வாய், [குரு.
கிரகத்துளலி - புதன், சனி, கேது.
கிரகவடிவம்-௩-நெடுமைகுறுமைசமம்.
கிரகத்துட்சமர்-௨-சூரியன், சுக்கிரன்.
கிரகத்துட்பிராமணர்-௨-குருசுக்கிரன்.
கிரகத்துக்ஷத்திரியர் - ௨ - சூரியன் செவ்வாய்.
கிரகத்துள்செட்டியர் - ௪ - புதன், குரு, இராகு, கேது.
கிரகத்துட்சூரியர் - ௩ - சந்திரன், செவ்வாய், சனி.
கிரகத்துள்வேளாளர் - ௨-சனி, கேது.
கிரகத்துள்வைசியர்-௨-சந்திரன்புதன்
கிரகபாஷைவகை-௫-ஆரியர், தெலுங்கு, தமிழ், வடுகு, அந்நியபாடை.
கிரகபுட்பங்கள்-௯-செந்தாமரை, வெள்ளாம்பல், சண்பகம், வெண்காந்தள், முல்லைவெண்டாமரை, கருங்குவளை மந்தாரை, செவ்வாம்பல், இவற்றை முறையேசூரியன் முதற்கேது இறுதியாகவுள்ள கிரகங்களுக்கொள்க.
கிரகரத்தினம் - ௯ மாணிக்கம், பவளம், புட்பராகம், நீலரத்தினம், வைடூரியம் முத்து, பச்சை, வைரம், கோமேதகம் இவை முறையே சூரியன், செவ்வாய், குரு, சனி, கேது, மதி, புதன், வெள்ளி, இராகுஎன்பவற்றிற்குக்கொள்க
கிரகலோகம் - ௯ - தம்பாக்கு, ஈயம், செம்பு, பித்தளை, பொன், வெள்ளி, இரும்பு, கருங்கல், துருக்கல்.
கிரகவாகனம் - ௯ - மயில், முத்துவிமானம், அன்னம், குதிரை, யானை, கருடன், காகம், ஆடு, சிங்கம்.
கிரகான்குணம்-௩-தும்மல் செய்வது, சினமூர்வது, வெம்மைவிளைப்பது.
கிரககாரகம்-௧௫-சூரியன், பிதுர், காரகன், சரீரகாரகனும், சந்திரன், மாதுர் காரகன், செவ்வாய் சகோதர காரகன், புதன் வித்தியாகாரகன், குரு- புத்திரகாரகன், சுக்கிரன் - களத்திர காரகன், வாகனகாரகன், சனி-ஆயுட்காரகன், இனி குரு பிதாமககாரகன், யோககாரகன், போககாரகன், கேது - மாதாமககாரகன், ஞானகாரகன், மோக்ககாரகன், எனக்கொள்க.
கிரகாங்கங்கள்-௯-செவ்வாய்க்குத்தலை, சுக்கிரனுக்குமுகம், புதனுக்குக்கழுத்து, சந்திரனுக்குத் தோள், சூரிய

னுக்குமார்பு, குருவுக்குவயிறு, சனிக்குத் தொடை, இராகுவிற்கு முழங்கால், கேதுவிற்கு உள்ளங்கால் ஆகுமென்ப.

கிரகாசனம்-௯-வட்டவடிவம், சதுரம், திரிகோண வடிவம், அம்பு, வடிவம், நீண்டசதுரம், ஐங்கோணம், வில்வடிவம், கொடிவடிவம் முச்சில்வடிவு.

கிரியைவகை - ௪-கிரியையிற்சரியைகிரியையிற்கிரியை, கிரியையில்யோகம்கிரியையில் ஞானம் இவற்றுள்கிரியையிற் சரிகையாவது சிவபூசைக்கு வேண்டும் உபகரணங்கள் செய்துகோடல், கிரியையிற்கிரியையாவது சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச் சுத்தி முன்னுகச் சிவலிங்க வடிவிற்செய்யும் பூசனையாய், கிரியையில் யோகமாவது அகத்தே பூசை ஓமம்தியானம் மூன்றற்கும்மூவிடம் வகுத்துக் கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞானமாவது அவ்வந்தரியாக வுறைப்பின் கணிகழும் ஓரநுபவவுணர்வு.

கிருகத்தர்வகை-௨-உதாசீனன், சாதகன்.

கீ

கீதவுரு - ௩-உக்கிரம், அருவம், ஆபேகம். அருவமென்பது அருமையெனவும், ஆபோகமென்பது ஆயோமெனவுஞ் சொல்லப்படுதலுமுள.

கீதவுறுப்பு - ௪ - உக்கிரம், அருவை, ஆபோகம், பிரகலை.

கீழுலகம் - ௭ - அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம்.

கு

குணம் - ௩ - தத்துவம், இராசதம், தாமதம் அவையாவன. ஞானம்அருள். தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கலென வெட்டுஞ்சத்துவம், மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டு மிராசதம், பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை, இவை தாமதம்.

குணம் - ௮ - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, இவற்றுள் முன்னைய நான்கும் ஆடூஉக்குணம் - பின்னைய நான்கும் மகடூஉக்குணமென்றறிக.

குதிரைக்குரற்குணம்-௫-கடல், முகில், சங்கம், இடபம், முழவம்.

குதிரைச்சுழி ௭-சந்திரச்சுழி, அண்டாவர்த்தம், செனவகம், காகாவர்த்தம், கேதாரி, தேசாவர்த்தம், பட்டடை.

குதிரைச்சுழியளவு - ௧௦-சிரத்தில் இரண்டு, காதில் நான்கு, மார்பில் இரண்டு, நெற்றியினிடத்து ஒன்று, குளம்பிலொன்றுமாகப் பத்துச்சுழிகள் குறையாதிருக்கவேண்டுக.

குதிரைநடை - ௫ - சவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம், இரேசிதம், புலிதம் இவற்றிற்கு முறையே மெல்லியநடை விரைவுநடை இருகாற்றூக்கியாடிவருநடை, சுற்றியோடல், முழுவோட்டம்.

குதிரைநிறக்குற்றம்-௮ புலி, கரடி, கழுதை, செந்நாய், பூஞை, நரி, காகம், புகையென்னு மிவைபோன்றநிறம்.

குதிரைநிறம் - ௭-முத்து, சந்திரன், தாமரைப்பூந்தாது, பொன், காயாமலர், செவ்வரத்தமலர், பசுங்கிளி யிவைபோன்ற நிறமுடைமை நன்மை.

குதிரைப்பெயர்கள் - ௧௫ - மங்காளன், சாரங்கன், கங்காநீலன், மௌவழகன், கொங்காளன், சன்னசம்பான், குங்குமச்சோரன், கரியான், நீலன், சாரன், மள்ளான் உரஞ்சிவந்தான், நல்லான், பொல்லான், கருங்காற்சம்பான்.

குதிரைவழுவிலக்கணம் - ௯ - கொம்புகன்னம், திருகுகன்னம், நஞ்சபாதம், கொள்ளிக்கால், வெள்ளிக்கண், சடைமுகம், கானகண்டம், அண்டமுன்மை, அண்டப்பெருக்கம்.

குதிரையின்பிறப்பிடம் - எ - பிரமன் விழிப்புனல், வசுக்கள், பாற்கடல், அக்கினி, சருப்பை, கோட்டான் முட்டை, அமிர்தம்.
குரவர் – ௫ - அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.
குருவிந்தமாணிக்கநிறம் - அ - மஞ்சாடி உலோத்திரம், செம்பருத்திப்பூ, முருக்கமலர், குன்றிமணி, முயலிரத்தம், சாதிலிங்கம், குக்கிற்கண்.
குறிக்கோள்-அ - இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம்.
குற்றம் - ௧0 - குன்றக்கூறல், மிகபடக்கூறல், கூறியதுகூறல், மாறுகோளக்கூறல், வெற்றெனத்தொடுத்தல், மற்றொன்றுவிரித்தல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல்சென்றுதேய்ந்திறுதல், நின்றுபயனின்மை.
குற்றம் - ௩ - காமம், வெகுளி, மயக்கம்.
குற்றம்-௫ - கொட்டாவி, கெட்டை, குறுகுறும்பு, கூன்கிடை, நட்டுவிழல்.
குற்றம் - அ-ஞானவாணியம், தரிசனவாணியம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்ரம், அந்தராயம்
குறிஞ்சி யாழ்த்திறன் - ௩௨-அந்தாளி, நட்டபாடை, மலகரி, விபஞ்சி, காந்தாரம், செருந்தி, கொடி, உதயகிரி, பஞ்சரம், பழம், பஞ்சுரம், மேகராகக்குறிஞ்சி, கேதாளி, குறுஞ்சி, கௌவாணம், பாடை, குர்தங்கராகம், நிவ்விபவாடி, மூநிர்ந்தலிந்தளம், அறுத்திரபஞ்சமம், தமிக்குச்சரி, அருட்புரி, நாராயணி, நட்டராகம், இராமக்கிரியை, வியாழக்குறிஞ்சி, பஞ்சமம், தக்கணுதி, சாவகக்குறிஞ்சி, ஆனந்தை.
குற்றெழுத்து - ௫-அ, இ, உ, எ, ஒ.

கூ

கூத்தின்விகற்பம் - க௫-அலைப்பு, இலயம், உள்ளானனம், கடகம், கரணம், குனிப்பு, கூடை, கொந்தளம், சிங்களம், தேசிகம், பவுரி, பிரமரி, மலைப்பு, மல், வீரட்டானம்.
கூந்தற்பால் - ௫-முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள், இவற்றுள், மயிரை யுச்சியின்முடித்தல், முடிசுருட்டிமுடித்தல் குழல், மயிரைமுடிந்து விடுதல் தொங்கல், பின்னி விடுதல் பனிச்சை, பின்னேசெருகல், சுருள்
கூத்துவகை - உ - தேசிகம், மார்க்கம்.
கூலம் - ௧௯ - நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்பர் கூத்தநூலாசிரியர்.
கூலம் - அ-நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கினெல், பதினெண்கூலமுமுழவர்க்குமிகுதளென்றூர் மதிவாணநாடகத்தமிழ்நூலாராகலின் பலசரகென்பாருமுளர்.
கூறைவிகற்பம் - ௧௭-கந்தை, விரிபம், கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், தூரியம், சிற்றில், நாகம், பாயு, பாளிதம், காப்பு, நேத்திரம், மயிரகம், வயிரியம்.

கே

கேந்திரம் - ௪ - உதயம், ௪, எ, பத்தாம் இராசிகள்.
கேள்வி – ௪ – அறம், பொருள், இன்பம், வீடு இந்நான்கும் கேட்டவர்.
கேள்வி – ௫ – அறம், பொருள், இன்பம், வீடு, இந்நாற்கேள்வியோடிவற்றின் வழிநிற்றல்.

கை

கை-௪அ-பதாகை, திரிபதாகை, கத்தரிக்கை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், கோங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம்,

பிண்டி, தெரிகிலை, மெங்கிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதமுகம், மகரமுகம், வலம்புரி, அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம்.

கைத்தொழில் - ரு - எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

கொ

கொடை - எ - வழக்கத்திற்கொடுத்தல், உரிமையிற் கொடுத்தல், அச்சத்திற் கொடுத்தல், பாவனையிற் கொடுத்தல், உவகையிற் கொடுத்தல், வெகுளியிற் கொடுத்தல், அவலத்திற் கொடுத்தல், உதாரணம் வருமாறு- மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் என்பது வழக்கத்திற்கொடுத்தல் மகனுக் கரசுகொடுத்தான் என்பது உரிமையிற்கொடுத்தல், அரசர்க்குத் திறைகொடுத்தா னென்பது அச்சத்திற் கொடுத்தல், தந்தை தாய்க்குத் திதி கொடுத்தானென்பது பாவனையிற் கொடுத்தல், அவனுக்குப் பரிசு கொடுத்தானென்பது உவகையிற் கொடுத்தல், வாய்க்கரிசி யிட்டான் என்பது அவலத்திற் கொடுத்தல்.

கொடைப்பயன் - உ - காமியம், நிட்காமியம்.

கொடைவகை-ங-வரைவின்றி யாவர்க்குங்கொடுத்தல், புகழ்வோர்க்குக்கொடுத்தல், இரப்போர்க்குக்கொடுத்தல்.

கோ

கோசம்-ரு-அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன-உடல் அன்னமயகோசம், கருமேந்திரியமும், பிராணனும் பிராணமய கோசம், கருமேந்திரியமும், மனமும் மனோமய கோசம், ஞானேந்திரியமும், புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தையானந்தமயகோசம்.

கோடல்வகை-கo கொளாதேற்றல் கேட்டேயேற்றல், ஈலாதேற்றல், ஈவோனேற்றல், உயர்ந்தோனேற்றல், இழிந்தோனேற்றல், ஒப்போனேற்றல், உணர்வின்றேற்றல், விருப்பாயேற்றல், வெறுப்பாயேற்றல், இவற்றிற்குமுறையே உதாரணம்-ஆவிற்கு நீர்விட்டான் வறியார்க்கீந்தான் மாணாக்கனுக் கறிவு கொடுத்தான், தனக்குச் சோறிட்டான், அரனுக்குக் கண்ணலர்கொடுத்தானரி, அரிக்குச் சக்கரங்கொடுத்தானரன், சோழனுக்கு விருந்திட்டான்சேரன், சோற்றிற்கு நெய்யிட்டான், மாணாக்கர்க்குக் கசையடி கொடுத்தானாசிரியன், கள்ளனுக்குக் கசையடிகொடுத்தானரசன்.

கோடிவகை - ஙக - கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு தேவாங்கு, பொன்னெழுத்து குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பாத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி.

கோவாங்குமணிதிரம்-ச-செங்கல், குராமலர், கோவை, மஞ்சள்.

கௌ

கௌடநெறி-கo-செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதியென்னும் பத்துக்குணங்களுக்கும் மாறாக வருவனவாம்.

கௌடம்-௫ - சுத்தகௌடம், கானகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.

கௌவியம் - ௫ - கோசலம், கோமயம், பால், தயிர், நெய்.

ச

சக்கிரவர்த்திகள் - ௬ - அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்கண் மற்றொருவனைப் பணியாது தரணியாண்டோர்.

சங்கு-௪-இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம்.

சடக்குணப்பண்பு-௫-பல்வகை வடிவு, இருகந்தம், ஐவ்வண்ணம், அறுசுவை, எட்டூறு.

சதுரங்கம் - அங்கக்காண்க.

சத்தம் - ௫ - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி, இவையே சத்தத்துக்கைந்து காரணம்.

சத்திகள்-௪௨ - அதிக்கிராந்த விந்துகபராசத்தி, அந்திக்கிராந்த விந்துகபராசத்தி, பராசத்தி, திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, சிவசத்தி, விந்துசத்தி, மனோன்மணி, மகேசுவரி, உமை, திருவாணி ஆரணி செனனி, உரோதயித்திரி, வித்தாரை, சுதாரை, போதினி, ஆப்பியாயிணி, தீத்தை, ரூக்குமை, சேயை, விபூதி, விமலை, அமோகை, வித்துதை, சருவதோமுகி, பத்திரை, பலப்பிரமதனி, பலவிகாணி, கலும்பிகை, காளி, துர்க்கை, திருமால், சர்வபூத்தமனி, இரௌத்திரி, வாமை.

சத்தி-௩-இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுள் இச்சாசத்தியுயிர்கருணைசம் ஞானசத்தி, கருமங்களை யறிந்தூட்டல், கிரியாசத்தி உலகங்களாக்கல்.

சத்தி-௫ சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, அவையாவன, உயிர்க்கொளியாக நிற்பது சிற்சத்தி, பிராணன் முதலிய வாயுவாக நிற்பது பராசத்தி, பஞ்சபூதயாக நிற்பது இச்சாசத்தி. ஐம்பொறியுணர்ச்சியாக நிற்பது ஞானசத்தி மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.

சத்திநிபாதம்-௪-மந்ததரம், மந்தம், தீவிரதரம், தீவிரம், இவை முறையே தீக்கைபெற்றவுடன் உரோமஞ்சிலிர்த்தலும், சரீரம் நடுங்குதலும், மூர்ச்சித்தலும், சரீரம் விழுதலுங் குறிகளாமென்று சித்தாந்த சாராவளியார் கூறுவர். அன்றியும் பதியின்றிருநாமங்கேட்ட மாத்திரையே இவை நிகழப்பெறுதல் என்பர்.

சத்துவம் - ௧௦ - மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்த்தல், நடுக்கமடுத்தல், வியத்தல், தேற்றல், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு எனப்படும்.

சந்தக - ௭ - காயத்திரி, பிருகத்தி, உட்டிணுர்குசத்தி, திருட்டிப்பு, அநுட்டிப்பு, பத்தி.

சந்தபேதம் - ௨௬ - உத்தம், அதியுத்தம், மதிமம், சலகிலை, நன்னிலை, காயத்திரி, உண்டி, அநுட்டிப்பு, பகுதி, பந்தி, வனுப்பு, சயதி, அதிசயதி, சக்குவரி, அதிசக்குவரி, ஆடி, அதியாடி, திருதி, அதிதிருதி, கிருதி, பிரகிருதி, விக்குருதி, சங்கிருதி, அபிகிருதி, உற்கிருதி.

சந்தானாசாரியர்-௪-மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியர்.

சந்தியாவந்தனம்-௪ - பிராதக்காலசந்தி, மத்தியான சந்தி, சாயங்கால சந்தி, அர்த்தயாமசந்தி, இவற்றுள் சமயதீக்ஷிதருக்குப் பிராதக்கால சந்தியொன்றேயுரியது, விசேட தீக்ஷிதருக்கு அதனோடு சாயங்கால சந்தியென்னுமிரண்டுமுரியன, நிருவாண தீக்ஷிதருக்கு அவ்விரண்டினோடு மத்தியான சந்தியுங்கூட்டி மூன்றுமுரியன, ஆசாரியருக்கு நான்கு சந்திகளுமுரியன.

சந்திரன்-௩-ஆதிதைவிகசந்திரன், ஆதியாத்மிக சந்திரன், ஆதி பௌதிக சந்திரன். [விளைவு, துய்த்தல்.

சந்தி - ௫ - முகம், பிரதிமுகம், கருப்பம்,

சபை - ௫ - இரத்தினசபை, கனகசபை, வெள்ளிச்சபை, தாமிரசபை, சித்திரசபை, திருவாலங்காட்டில் இரத்தினசபை, சிதம்பரத்தில் கனகசபை, மதுரையில் வெள்ளிசபை, திருநெல்வேலியில் தாமிரசபை, திருக்குற்றாலத்திற் சித்திரசபையுமாம்.

சமயகுரவர் - ௪ - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்.

சமயம் - ௬ - சைவம், வைஷ்ணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம், இவை வைதிகமதம் என்க.

சமயம் - ௬ - கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், வியாசமதம், ஜைமினிமதம், இவை வேதாந்த மதமெனப்படும்.

சமயம் - ௬ - பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூனியவாதம், இவை புறச்சமயமென்பர், வைதிகர்.

சமயம் - ௬ - வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம், அன்றியும் புறச்சமயமாவன:—௬ - உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், இது சைவர் கொள்கை.

சமயவகை - ௩௪ - உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்திமிகம், வைபாடிகம், நிகண்டாவாதம், ஆசீவகம், பட்டாசாரியம், பிரபாகரம், சத்தப்பிரமவாதம், மாயாவாதம், பாற்கரியம், கிரீச்சுரசாங்கியம், சிவசாங்கியம், விஷ்ணுசாங்கியம், பஞ்சராத்திரம், தருக்கம், மீமாஞ்சை, சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரம், பாடாண வாதசைவம், கிரியாகாரண பரிணாமவாதசைவம், சுத்தசைவம், பேதவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், அவிகாரவாதசைவம், ஐக்கியவாதம், சிவசமவாதம், கிரீடாப்பிரமவாதம்.

சம்பந்தம் - ௪ - தேகசம்பந்தம், ஆன்மசம்பந்தம், விடயசம்பந்தம், காரணசம்பந்தம்.

சரியைவகை - ௪ - சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில்யோகம், சரியையில் ஞானம், இவற்றுள் சரியையிற் சரியையாவது திருக்கோயிலிற்றிருவலகிடல், திருமெழுகிடல், திருவிளக்கிடல், தூபமேற்றல், நந்தவனம்வைத்தல், புட்பங்கொய்தல், மாலை, இண்டை, கண்ணி, தார் முதலிய மாலை சமைத்தல், விதானங்கட்டல், தோரண நாட்டல், யாத்திரை செய்தல், நதி மூழ்கல், திருவீதிப் பிரதக்கிணஞ்செய்தல், தோத்திரம்பாடல், புல்லுச் செதுக்குதல், திருக்குளமுதலியன சுத்தி செய்தலாகியவாம். சரியையிற் கிரியையாவது சந்திரசேகரர், இடபாரூடர், உமாமகேசர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிச்சாட்டனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கண்டோநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்கிணமூர்த்தி இலிங்கோற்பவர் என்னுமிருபத்தைந்து மூர்த்தங்களுளொன்றனையாதல் விநாயகர் முதலிய ஆவரண மூர்த்திகளி லொன்றனையாதல், வழிபடுதலாம். சரியையில் யோகமாவது இருதயத்தில் உருத்திரக்கடவுளைத் தியானஞ் செய்தலாம். சரியையில் ஞானமாவது அத்தியான பாவனையினால் ஓரநுபவவுணர்வு நிகழ்தலாம்.

சயனம் - ௫ - இலவம்பஞ்சி, செம்பஞ்சி, வெண்பஞ்சி, மயிர், அன்னத்தூவி, இவற்றாற் செய்யப்பட்டவமளி. இவையே பஞ்சசயனம்.

—

சா

சாதி - ௪ - ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகாராட்டிரம்.

சாதி - ௧௬ - குண்டகர், கோளகர், சுவர்ணர், நக்ஷத்திரசீவகர், அம்பட்டர், கும்பகாரர், பாரசவர், கிடாதர், போ

சர், நாவிதர், சூதர், கூவிரர், மாகிட்டியர், விசன்மர், உக்கிரர், சூலிக்கியர், மணிகாரர், புளிந்தர், க்ஷத்தர், மிலேச்சர், மாதகர், அத்தர், தௌட்டியந்தர், கடகாரர், மாலாசிதர், உற்பலர், சண்டாளர், பாகுதாயர், வைதேகர், பலதர், அயோகவர், சத்திரியர், ஆவந்தியர், மல்லர், சுதன்மர், வைத்தியர், பலகண்டர், இரசகர், புட்பதர், தக்ககர், சுவமசர், குகபர், கரணர், சருமகாரர், பாரகர், வேணுகர், கனகர், அத்திகர், வர்த்தனசாலிகர், கருமகாரர், தண்டகபோலர், யார்க்கவர், சல்லர், வந்திகர், வாடதானர், கண்டகர், கற்பர், சவுண்டிகர், சாத்துவதர், தசியவர், பைரவர், ஆசிரயிகர், கரண்டர், காமுத்திரர், மாலாகாரர், கைவர்த்தர், நீலகாரர், வருணைகரர், பிங்களர், நர்த்தகர், மாதங்கர், நடர், திரமிளர், கர்மசீவியர், நீலாதிவர்ண விக்கிரேதர் சுவபாகர், குக்குடர், வேணர், புலகசர், ஆவிரதர், ஆபீரர், திக்குவணர், கசர், சைரந்திரியர், மைத்திரேயர், பார்க்கவர், காருவாரர், பாண்டுசோபாகர், ஆகிண்டிகர், சோபாகர், அந்தியாவசாயிகர் இப்பஞ்சம சாதியாரின் வரலாறுவன, நான்கு வருணத்தவருள்ளும் உயர்குலத்தானும் இழிகுலப்பெண்ணுங் கூடிப்பிறந்தவர் அநுலோமர், இழிகுலத்தானும் உயர்குலப்பெண்ணுங் கூடிப்பிறந்தவர் பிரதிலோமர், அநுலோமத்தானுக்கும் பிரதிலோம பெண்ணுக்கும் பிறந்தவர் அந்தராளர், பிரதிலோமத்தானுக்கும் அநுலோமப் பெண்ணுக்கும் பிறந்தவர் விராத்தியர், பார்ப்பனக்கன்னி தன் குலத்துச் சோரநாயகனோடு கூடிப் பிறந்தவர் குண்டகர், பார்ப்பன விதவை அங்ஙனங்கூடிப் பிறந்தவர் கோளகர், பிராமணன் விவாக முறைப்படி க்ஷத்திரிய கன்னிகையுடன்சேரப்பிறந்தவர் சவர்ணர், இவர் கவசனர் எனவும் தெலுங்கர் எனவும் வழங்கப்படுவர், பிராமணன் க்ஷத்திரியகுல மகளிரைச் சோரத்தாற் சேரப்பிறந்தவர் நக்கத்திர சேவகர். இவர் யாவரும் விரும்புங் குடியாராதலின் வீழ்குடியார்எனவும், காணியாளர்எனவும், சிற்றரசராகலின்வேளாண் சாமந்தா எனவும் பெயர்பெறுவர், பிராமணன் வைசியக் குலக்கன்னியை விவாகஞ்செய்து பிறந்தவர் அம்பட்டர். வைசியகுலப் பெண்களைச் சோரத்தாற் கூடிப் பிறந்தவர் கும்பகாரர், இவர்க்குநாவிதர், குயவர் எனவும்பெயர். பிராமணன் சூத்திரகுலக் கன்னியை விவாகஞ் செய்து பிறந்தவர் பாரசவர், சோரத்தாற்கூடிப்பிறந்தவர் கிடாதர், இவர்க்குச் சித்தர் வேட்டைக்காரர் எனவும் பெயர், க்ஷத்திரிய கன்னியும் விதவையும் தங்குலத்துச் சோரபுருடரைக் கூடிப்பெற்றவர் முறையே போகர், நாவிதர் எனப்படுவர், க்ஷத்திரியன் பார்ப்பன மகளிரை விவாக முறையாகவுஞ் சோரத்தானுஞ் சேரப்பிறந்தவர் முறையே சூதர் கூவிரர் எனப்படுவர், அரசர்சபையில் நின்றேத்துவார் சூதர் எனப்படுவர், க்ஷத்திரியன் வைசிய சூத்திர குலமகளிரை விவாகத்தானுஞ் சோரத்தானுஞ் சேர்ந்து பெற்றவர் முறையே மாகிட்டியர் விசனமர், உக்கிரர் சூலிக்கியர் எனப்படுவர் வைசியக்குலக் கன்னியும் விதவையும் தங்குலத்துச் சோரபுருடரோடு சேர்ந்து பெற்றவர் முறையே மணிகாரர் புளிந்தர் எனப்படுவர். வைசியனானவன் பிர்மக்ஷத்திரியசூத்திர மகளிரை விவாகத்தினாலுஞ் சோரத்தினாலுஞ் சேரப்பிறந்தவர்முறையே க்ஷத்தர், மிலேச்சர், மாகதர், அத்தர், தௌட்டியந்தர், கடகாரர் எனப் பெயர்பெறுவர். இவருள் மாகதர் என்பவர், அரசசபையில் இருந்து புகழ்சொல்வோராம், தௌட்டியந்தர் குந்தவேளாளர் எனப் பெயர்பெறுவர். சூத்திரக் குலக்கன்னியும் விதவையுந் தன்குலத்துச் சோரபுருடரோடு கூடிப்பெற்றவர் முறையே மாலாசிதர், உற்பலர் எனப் பெயர்பெறுவர், சூத்திரனானவன் பிராமணர் முதலிய முக்குலமகளிரையும் முறையானுஞ் சோரத்தானுங்கூடிப் பிறந்தவர் முறையே சண்டாளர், பா

நட்சத்திரம்-உஎ-அசுவினி,பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம்,சித்திரை,சுவாதி,விசாகம்,அனுடம்,கேட்டை, மூலம்,பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி,இவற்றுள்ஒவ்வொன்றும் முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின்மூன்றுபாகமூமிருபது கலையுங் கொண்டவிடம்.

நதி - எ-கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, இவையே சத்த தீர்த்தமெனப்படும்.

நதி-௧௧-மேற்சொல்லிய வேழின்மேல் சிந்து தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டினியென்று கூட்டுக.

நரகம்-௭-அள்ளல், இரௌரவம், கும்பீபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவகை ௨௮ - கோரம், கீழ்க்கோரம், அதிகோரம், கோரதரம், கோரரூபம், தரளதரம், பயாநகம், காளராத்திரி, பயோற்கடம், சண்டம், மகாசண்டம், சண்டகோலர்லம், சண்டதரம், சரோருசம், சலசவதிவீமம், வீமவீடணம், கரளம், விகராளம், குலிசம், முக்கோணம், ஐந்துகோணம், தீர்க்கதரம், பரிவர்த்துளம், மகாரௌரவம், அதிதமம், அதிசீதம், அதிவெப்பம்.

நரகவட்டம்-௭- தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை, அவையாவன-இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு-௭-இசைகாண்க.

நரம்பு-௪-இணை, கிளை, பகை, நட்பு, இவற்றுள் இணையிரண்டு நரம்பு கிளையைந்து நரம்பு பகையாறு மூன்றுமாம். நட்பு நான்கு நரம்பினை யுடைத்தாய் நிற்குமென்ப.

நற்கணப்பயன்-௪ - இலக்கணம் பெருக்குஞ்செய்தல், சந்திரகணம், வாழ்நாள் தருதல் நீர்க்கணம் கீர்த்தியைத் தருதல், இயமானன் கணஞ்செல்வத்தைத் தருதலாம்.

நற்கணப்பெயர்-௪-நிலன், நீர், மதி, இயமானன்.

நற்குணம்-௧௦-மெய்யுரை நல்வார்த்தை இனியவைகூறல், பயன்படு சொல், இந்நான்கு வாக்கினற்குணம், கோயில்வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இம்மூன்றுங் காயநற்குணம் அருணினைவு ஆசையறுத்தல், தவப்பற்று இம்மூன்றும் மனநற்குணம்.

நன்றாட்டமைதி-௬—செல்வம், விளையுள், பல்வளம், செங்கோல், குறும்பின்மை, பிணியின்மை.

நா

நாகம்-௮—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்றைக் கடவுட்பாம்பென்ப இவைமுறையே கிழக்குமுதலெண்டிக்கிற் பூமியைத் தாங்குவதன்றி நடுவேயுள்ள சேடனென்னு நாகமும் பூமியைத்தாங்காநிற்கும். இந்நவநாகமுங் காசிபப்பிரமாவுக்கு மவன்மனைவிகள் பதின்மூவருட்கத்துருவைக்கும் பிறந்தன.

நாடகத்தரம்பையர்-௪-உருப்பசி, மேனகை, அரம்பை, திலோர்த்தமை.

நாடகநூலின் கூறுபாடு—வேத்தியல், பொதுவியல்.

நாடி-௧௦-சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி அவையாவன-சுழிமுனை யாதார மாறினுமூடுருவிநிற்பது, இடைபிங்கலை யிரண்டுங்கத்திரிகைகால்போற் பின்னிநிற்பன-காந்தாரி நாபியிற்றோன்றிச் சத்தமெழுக்கு மெழு நாடியாய்க்கண்டத்துறுவது, அத்திசிகுவை யிரண்டும் பத்துநாடியுற்றுக் கண்ணினிற்பன, அலம்புடை புருடனிரண்டுஞ் செவி னூற்றிருபது நரம்புற் றிருப்பன, குருநாபியுறைந்துய்யம்பற்றி நிற்பதுசங்கினி உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாடுபடுதிரவியம்-௫—செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, கரும்பு, வாழை.

நாட்டமைதி-௬ - செல்வம, விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம்-௭-தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டுக்குற்றம்-௮-விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

நாமகளமிசமாய கடைச் சங்கப்புலவர்கள்-௪௯-நக்கீரர், பாணர், கபிலர், மாமூலனார், பல்லாடர், சீத்தலைச்

சாத்தனார், மருத்துவன் றாமோதரனார், நாகன்றேவனார், அரிசிற்கிழார், பொன்முடியார், கோதமனார், நத்தத்தனார், மூலையலூர்ச்சிறுகருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார், சேரந்தையார், சிறுமேதாவியார், நக்கூர் வேள்வியார், தொடித்தலை விழுத்தண்டினார், வெள்ளிவீதியார், மாங்குடிமருதனார், எரிச்சலூர் மலாடனார், போக்கியார், மோசி கீரனார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரைத்தமிழ் நாயகனார், பாரதம்பாடிய பெருந்தேவனார், உருத்திர சன்ம கண்ணர், பெருஞ் சித்தனார், கரிவெருத்தலையார, மதுரைத்தமிழாசிரியர், செங்குன்றூர்க்கிழார், மதுரையறுவை வாணிகர், இளவேட்டனார், கவிசாகரப் பெருந்தேவனார், மதுரைப் பெருமருதனார், கோவூர்க்கிழார், உறையூர்முதுகூற்றனார், இழிகட்பெருங்கண்ணனார், செயிர்க்காவிரியார் மானார், சாத்தனார், செயலூர்க்கொடுங்கண்ணனார், வண்ணக்கஞ்சாத்தனார், களத்தூர்க்கிழார் நச்சமனார், அக்காரக்கனி நச்சனார், நப்பாலத்தனார், குலபதிநாயனார், தேனீக்குடிக்கீரனார், கொடிஞாழன்மாணிபூதனார், கவுணியனார், மதுரைப் பாலாசிரியனார், ஆலங்குடிவங்கனார், நாற்பத்தொன்பதின்மரே சங்கப்புலவரென்பது தொல்லோர் கருத்துந் துணிபுமாம்.

நி

நியமம்-க0-தவம், மனமுவந்திருத்தல், கடவுளுண்டென்னும்விசுவாசம், பாவத்துக்குப் பயந்துதேடியபொருளைச்சற்பாத்திரமா யுள்ளவருக்குக்கொடுத்தல், தன்னின்மூத்தோரை வழிபடுதல், உயிர்க்குறுதிபயக்கு முண்மை, நூல்களைக்கேட்டல்,குலம்செல்வம் அதிகாரம் முதலியவைகளினாலே கருவம் இன்றி யடங்கியொழுகுதல், தக்கனவுந் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம்,

நிருத்தக்கை ௩0 - சதுராச்சிரம், உத்துவீதம்,தலமுவம், சுவத்திகம், விப்பிரகீர்ணம், அருத்தரேசிதம், அராளகடமுகம், ஆவித்தவத்திரம், சூசிமுகம், இரேசிதம், உத்தானவஞ்சிதம், பல்லவம், நிதம்பம்,கசதந்தம்,இலதை, கரிக்கை, பக்கவஞ்சிதம், பக்கப்பிரத்தியோகம், கருடபக்கம், தண்டபக்கம், ஊர்த்துவமண்டலி, முட்டிகச்சுவத்திகம், நளினிபதும கோசிகம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிதை இவை சுத்தானந்தப் பிரகாச பரத்நூலிற் காணப்பட்டன.

நிலம் - ச - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலம்-ரு-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்.

நிலம் - எ - ச,ரி,க,ம,ப,த,நி. யென்னுமெழுவகைப்பட்ட வெழுத்தடியாக பிறக்கும்குரன் முதலாயவேழுமாம்.

நிலை-ச-பைசாசம், மண்டலம்,ஆலீடம், பிரத்தியாலீடம்,இவைநான்கும் விற்றொடுத்தம்பினை யெய்வார்க்குரியநிலை. இவற்றி லொருகாலி னின்றொருகான் முடக்கல் பைசாசநிலை இருகாலும் பக்கல்வளைய மண்டிலித்தலே மண்டலநிலை. வலக்கான் மண்டலித்திடக்கான் முந்துறலே யாலீடநிலை. வலக்கான்முந்துற்றிடக்கான் மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

நிலை-ரு-வைணவம், சமநிலை, வைசாதம், மண்டலம், ஆலீடம் பிரத்தியாலீடம்.

நின்றாடல்-ரு-அல்லியம், கொடி கொட்டி, குடை,குடம், பாண்டரங்கம்,மல், என்னை "அல்லியங்கொட்டி குடை குடம் பாண்டரங்க - மல்லுடனின்றாடலாறு" என்றாராகலின்.

நீ

நீர்நிலைவகை-௩௩ - நிலைஞ்சி, பண்ணை, ஏல்வை, குண்டம், அலந்தை, பொய்கை வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகர், குட்டம், தாங்கல், கோட்டகம், ஏரி, எரி, உவள

கம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, குழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்வலம், நளினி, இலந்தை, மூழி, குழிகுளம், நீலமணிச்சாதி - ௪ - வெள்ளை; பச்சை, சிவப்பு, கருமை.

நூ

நூல் ௩-முதனூல், வழிநூல், சார்புநூல். இவற்றுளொருவன் முன்கண்டுரைத்ததே முதனூல், முதனூல் வழியே விகற்பித் துரைத்தநூலே வழிநூல், அவ்விருநூற்பொருட் கூட்டித்திரிபு வேறுடைய நூலே, சார்புநூல்.

நூற்பயன் - ௪-அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பகைநரம்பு-௪-அதிர்வு, ஆர்ப்பு, கூடம், செம்பகை இவற்றுள் செம்பகையாவது தாழ்ந்தவிசையென்றால் இன்பமின்றி யிசைத்தல் ஆர்ப்பமாவது மாத்திரை யிறந்த சுருதி என்றால் ஓங்கவிசைத்தல். அதிர்வாவது நரம்பைச் சிதறவுந்தல், கூடமாவது இசைகிறவாதது, என்னின் தன் பகையாகிய ஆறு நரம்பினிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கலெனக்கொள்க. இதனை இன்னிசை வழியதன்றியிசைத்தல் செம்பகையதாகுஞ் சொன்ன மாத்திரையினோங்க விசைத்திடுஞ் சுருதியார்ப்பே மன்னிய விசைவராது, மழுங்குதல் கூடமாகு-நன்னூதால் சிதறவுந்த லதிர்வென நாட்டினரே, என்று பஞ்சபாரதீயங் கூறியதனாற் கொள்க.

பக்குவர் - ௩ - கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சபரமேட்டிகள் - ௫-அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்.

பஞ்சமூலம் - ௫-செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி, பேராத்தை, சுக்கு.

பசாசக்கை-௩-அசுகிலேப்பசாசம், முசுகிலேப்பசாசம், உகிர்கிலேப்பசாசம்.

பசு-௫-நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை.

படைவகுப்பு-௪ - அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி ௫-வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் இவற்றிற்கு முறையேயெழுத்து அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, துக்கம், சாவு, பிற்பக்கமாயின் உண்டி, சாவு, துக்கம், நடை, அரசு, சாவு துக்கமில்லாதபொழுதறிந்து செய்யுண்முதன்முதலிய செய்தனன்மை.

பட்டினத்திற்குரியன-௮௩-படகுநாவாய்கள், பிணிக்கும்பக்கம், இளமரக்கா, தோப்பு, படப்பை, உத்தியானம், வரி, அகழி, மதில், கோட்டை, அரணம், நால்வகைச் சேனைகளிருக்கை, ஆயுதசாலை, அறச்சாலை, பாகசாலை, பண்டகசாலை, பொதுசெற்றியம்பலம், நாற்குலத்தார் இருக்கை, அத்தாணி மண்டபம், பட்டிமண்டபம், மந்திரம், அந்தப்புரம், அரங்கம், பரதவிருப்பு, தூதனப்பொருட்சாலை, கலாசாலை, நாளங்காடி, அல்லங்காடி, தேவர் கோயில், அறவோர்பள்ளி, முனிவர் உறைவிடம், பசுக்கோட்டம், முரசமுழக்கம், அரசனரண்மனை, உவராசன், பிரதானி அமைச்சர், புரோகிதன், சேனாபதி, தௌவாரிகன், அந்தர்வம், சிகன், காராகா, ராதிக்கிருதன், அர்த்த சஞ்சயக்கிருது, காரியநியோசகன், பிராட்டு, விவாகனன், சேனாநாயகன், நகராத்தியக்கன், கருமாந்திகன், சப்பியன், தருமாத்தியக்கன், தண்டபாலன், துர்க்கபாலன், இராட்டிராந்தபாலன், சபிகர், தூதுவர், வித்துவாம்சர் - காயகர், கவிகள், பட்டர், பாரங்கதர், நிரோதித்தன், நிரோதப்பிதன், நிரலவிதன், நிரசாந்தன், இரதரபரிணிதர், சதுர்வித போகசங்காார், மோக்காயிதை, விரபோகலவிதை, இலீலை, கேலிகிஞ்சிதை, விசித்தை, விலாசை, விசித்தை, விப்பிரலம்பை, குட்டி

மை, தயை, இலவிதை என்னும் கேளிபாலலீலாசதியர், மோகமயர், காரணபரிணிதர், வித்தகர், அவத்தாத்திரய பரீக்ஷகர், அவத்தா விசாரபரர், சந்தவிசர், அடாவிசர், குடபாவிசரென்னும் ஆசியக்காரர், முதலினோர் இருக்கைகளுமாம்.

பண் - ௪ - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பண்-௧௦௩ - பன்னிருபாலையினுருதொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்று மூன்றுதற்குக் காரணமாமெனக்கொள். பெயர்களை - வந்துழிக்காண்க.

பதவி-௪ - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம். இவற்றுட் கடவுளுலகத்தில் வாழ்தலே சாலோகம். கடவுள் சமீபத்துவாழ்தலே சாமீபம். கடவுளுருப்பெற்று வாழ்தலே சாரூபம். கடவுளோ டத்துவித முற்றுவாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம்-௩-காலபரிச்சேதம், தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம், அவையாவன-ஒருகாலத் துண்டொருகாலத்தின்றென்பது காலபரிச்சேதம், ஒரு தேயத்துண் டொருதேயத்தின் றென்பதுதேய பரிச்சேதம் ஒருபொரு ளிதுவாகுமொரு பொருளிஃதன்றென்பது வத்துபரிசேதம்.

பருவகாலம் - ௬ - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில், இவையேயாவணிமுதலாகவிரண்டிரண்டிமாக வொவ்வொன்றும்.

பருவம் - ௪ - பால், தருணி, பிரவிடை, விருத்தம், இவை பெண்கட்குரிய பருவமாம்.

பருவம்-௭-பேதை, பெதும்பை-மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் இவர்க்கு முறையே வயதெல்லை, ஐந்து முதலேழளவும் பேதை, எட்டுமுதல் பதினொன்றளவும் பெதும்பை - பன்னிரண்டுமுதற்பதின்மூன்றளவும் மங்கை பதினான்குமுதற் பத்தொன்பதளவும் மடந்தை, இருபத்தாறு முதன் முப்பத்தொன்றளவுந் தெரிவை, - முப்பத்திரண்டு முதனாற்பதளவும் பேரிளம் பெண், ஆகையா லொவ்வொரு பருவங்கொண்டவருடம், ௩, ௰, ௨. ௬, ௬, ௬, ௬, இவை பெண்கட்குரிய பருவமாம்.

பாலை-௩-கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவையே திரிபலையென்ப.

பவளக்குணம்-௮-நிறம், உருட்சி, சிந்தூரம், மிக்கசெங்காய், முசுமுசுக்கைக் கனி, தூதுளை கொழுந்துணம்பழம்.

பவளக்குற்றம்-௩ - கருப்பத்திற்றுளைப்பட்டன, கல்விடுக்கிற்புக்கு முடங்குபட்டன, திருக்கு முருக்குண்டெழுந்தன.

பழம் ௩-பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம்.

பா

பா - ௪ - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டியைந்தென்பாருமுளர்.

பா - ௫ - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாடற்பா.

பாடை-௧௮-அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பாணிவிகற்பம் - ௧௧ - ஒன்றன், பாணி முதலாக எண்கூத்துப்பாணி, யீறாகவுள்ளனவாம்.

பாதகம்-௫-கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமாபாதகம்.

பாதகம்-௩-தூலம், சூக்குமம், அதிசூக்குமம், இவை முறையே பாதகம், அதிபாதகம் மகாபாதகமென்றுஞ் சொல்லப்படும்.

பாதகம்-௭-சித்தசமுன்னதி, அத்தலோபம், காமம், வைடம்பியம், அசனப்பிரியம், கோபம், அநுட்டணம், இவையே சத்தவிசனம், இவை முறையே அகங்காரம், உலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல்,

சோம்பல், இவை யேழுந் தலைமை யான பாதகமெனப்படும்.

பாயிரம்-௨ - பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம்.

பாலை-எ-இசையைக்காண்க.

பாலைவகை-௪ - ஆயப்பாலை, சதுரப்பாலை,திரிகோணப்பாலை,வட்டப்பாலை.

பாலைப்பண்ணின்றிறம்-௫ - தக்கராகம், நேர்திறம், காந்தாரபஞ்சமம், சோமராகம், காந்தாரம், என்னை "தக்கராக நேர்திறங் காந்தாரபஞ்சமமேது க்கழி, சோமராகமே-மிக்கதிறற் காந்தாரமென் றைந்தும் பாலைத்திறமென்றார்-பூந்தாரகத்தியனார் போந்து" என்றாராகலின்.

பாலையாழ்த்திறம்-௫-அராகம், ஆசான், உறுப்பு, குறுங்கலி, நேர்திறம், பாலையாழ்த்திறன்வகை-௨௧-அந்தாளி, தக்கராகம், பாடை, அந்தி, மன்றல், நேர்திறம், வராடி, பெரியவராடி, சாயரி, பஞ்சமம், திராடம், அழுங்குதகாசி, சோமராகம், மேகராகம், தக்கராகம், கொல்லிவராடி, காந்தாரம், சிகண்டி, தேசாக்கரி, சுருதி காந்தாரம்.

பால் - ௧௪ - கைக்கிளைத்திணை, முல்லை, குறிஞ்சி மருதம், நெய்தல்,பாலை,பெருந்திணை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை.

பால்-௫-ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பாவபுண்ணியவழக்கம் - ௩ - செய்தல், செய்வித்தல், உடன்படல்.

பாவனை-௩-பிராமிபாவனை, அவ்வியத்தபாவனை, உருவபாவனை. இவற்றின் விரிவுகளைக் கூர்மபுராண விருத்தியுரைக்கட் காண்க.

பாவினம்-௩-தாழிசை, துறை, விருத்தம்.

பி

பிணி-௩-வாதம், பித்தம், சிலேட்டுமம்.

பிரபந்தம்-௯௬-அவையாவன - சாதகம், திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை, இவ்வேழ்வகை யுறுப்புக் கணிநிலையையுஞ்,சோதிட நூலானன் குணர்ந்தவற்றை யமைத்த வற்றாற் றலைவர்க்குருவன கூறுவது, மற்றும் புகாதியாண்டு முதலியவுங் கொள்க. இப்பிரபந்தம் தொண்ணூற்றாறும் அகலக் கவியெனவும், வித்தாரக் கவியெனவும் பெயர்பெறும்.

௧. பிள்ளைக்கவி - இதனிலக்கணத்தைத்தெளிவுறக்கூறுங்கால், ஆண்பாற்பிள்ளைத்தமிழ் பெண்பாற்பிள்ளைத்தமிழ்,எனவிருவகைத்து. இவற்றுள் இரண்டாமாதத்திற் காப்புக்கூறுதலும், ஐந்தாமாதத்திற் செங்கீரை கூறுதலும், ஆறுமாதத்திற் சொற்பயில்வு கூறுதலும், ஏழாமாதத்தில்முதாட்டலும், எட்டாமாதத்திற்றலாட்டுக் கூறுதலும், ஒன்பதாமாதத்திற் சப்பாணி கூறுதலும், பத்தத்தொடொன்றின் முத்தமொழிதலும் பன்னிரண்டாமாதத்தில் வாரானைஎனத்தலும், பதினெட்டாமாதத்திற் சந்திரனையழைத்தலும், இரண்டாமாண்டிற் சிறுபறை கொட்டலும், மூன்றாமாண்டிற் சிற்றில்சிதைத்தலும், நான்காமாண்டிற் சிறுதேருருட்டலும், பத்தாமாண்டிற் பூணணிதலும், பன்னிரண்டாம் ஆண்டில் கச்சினோடு உடைவாளை விரும்பத்தரித்தலுமென்று சொல்லப் பட்டவும் பிறவுமுடைத்து பெண்பாற் பிள்ளைத்தமிழாவது அம்புலியொழிதியாய் நின்ற பருவங்களுடன் மூன்றும் ஆண்டிற்றன் விளையாடும் பாவைக்கு மணம்பேசுதலும், ஐந்தாம் ஆண்டுமுதல் ஒன்பதாம் ஆண்டுகாறும் மன்மதனை யொத்த புருடனைப் பெறத் தவஞ்செய்தலும், குளிர்ந்தநீராடலும், பதுமைவைத்து விளையாடலும், அம்மனையாடலும், கழங்காடலும், பந்தாடலும், சிறுசோறடுதலும், சிற்றிலிழைத்தலும், ஊசலாடலும் என்று சொல்லப்பட்ட இவற்றுள் ஏற்பனகூறப்படுமென்க. இஃதன்றி மூன்றுமாத முதலாகவு முறைக்கப் படுமென்பர் வெண்பாப்பாட்டியற்காரர்காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், இவற்

றை முறையே அசவல் விருத்தத்தாற் பப்பத்தாகக் கூறுவதாண்பாற் பிள்ளைக் கவி. இவ்வுறுப்பினுட்கடை மூன்றொழித்துக்கழங்கு, அம்மானை, ஊசல், என்பவற்றைக்கூட்டி மேற்சொல்லியவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக்கவியாம், இங்ஙனமே முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், திருப்போரூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், புதுச்சந்நிதிக் கந்தர் பிள்ளைத்தமிழ், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், முதலிய ஆண்பாற் பிள்ளைத்தமிழ், நூல்களினும், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகையம்மை பிள்ளைத்தமிழ், கொடியிடைநாயகி பிள்ளைத்தமிழ், வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பெண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்களிலுங் கூறப்பட்டமையறிக.

உ. பரணி-போர் முகத்தாயிரங் களிற்றியானையைக் கொன்ற வீரனைத் தலைமகனாகக்கொண்டு கடவுள் வாழ்த்துங் கடைதிறப்பும் பாலைநிலமுங் காளிகோயிலும், பேய்களோடு காளியுங் காளியோடு பேய்களுஞ் சொல்லத்தான் சொல்லக் கருதிய தலைவன் சீர்த்தி விளங்கலுமவன் வழியாகப் புறப்பொருடோன்ற வெம்போர் வழங்க விரும்பலுமென்றிவை யெல்லா மிருசீரடி முச்சீரடி யொழித்தொழிந்த மற்றைய வடியாக வீரடிப்பஃறொழிசையாற் பாடுவது. இவற்றைஇலக்கியங்களா வமைக்கப்பட்ட கலிங்கத்துப்பரணி, மோகவதைப்பரணி, அஞ்ஞவதைப்பரணி, அண்டத்துப்பரணி, வீரபத்திரப்பரணி முதலிய நூல்களாற்றெளிக.

ங. கலம்பகம் ஒருபோகும்,வெண்பாவும், கலித்துறையு முதற்கவியுறுப்பாக முற்கூறப்பெற்றுப் புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னுமிப்பதினெட்டுறுப்புக்களு மியைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை யென்னுமிவற்றுளிடையே வெண்பா, கலித்துறைவிரவவந்தாதித் தொடையான் முற்றுறக்கூறுங்காற்றேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது இவ்விலக்கணங்களமையத் தில்லைக்கலம்பகம், மறைசைக் கலம்பகம், மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், அருணைக்கலம்பகம், கதிர்காமக்கலம்பகம், கச்சிக்கலம்பகம், வெங்கைக்கலம்பகம், புள்ளிருக்குவேளூர் கலம்பகம், திருவாமாத்தூர்க்கலம்பகம், முதலிய செய்யப்பட்டிருத்தல் காண்க.

ச அகப்பொருட்கோவை - இருவகைப்பட்ட முதற்பொருளும் பதினன்குவகைப்பட்ட கருப்பொருளும் பத்துவகைப்பட்டவுருப்பொருளும் பொருந்திக்கைக்கிளை முதலூற்ற வன்புடைக்காமப்பகுதியவாங்கள வொழுக்கத்தினையுங் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலே யெல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றுற்றிணை முதலாகத் துறையீறுகக் கூறப்பட்ட பன்னிரண்டகப் பாட்டுறுப்பும் வழுவின்றித்தோன்றப்பாடுவது, இது வெண்பா, அகவல்,கலி,வஞ்சி,வண்ணம். இவற்றானும் வழங்கப்படும். இவற்றிற் குதாரணமாகத் திருக்கோவையார், தஞ்சை வாணன்கோவை, வெங்கைக்கோவை, கோடீசுரக்கோவை, ஒருதுறைக்கோவை, அம்பிகாபதிக்கோவை, திருவாரூர்க்கோவை, காழிக்கோவை முதலியன விருத்தில்காண்க.

ரு. ஐந்திணைச்செய்யுள்புணர்தன் முதலிய வைந்துருப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையினையுங்கூறுப.

சு. வருக்கக்கோவை அகாமுதலாகியவெழுத்து வருக்கமொழிக்கு முதலாமெழுத்து முறையே காரிகைத்துறைப்பாட்டாகப் பாடுவது.

எ. மும்மணிக்கோவை ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரிசையுகிரை

யசையுங் கொண்டெழுத் தெண்ணிப் பாடிக்கலித்துறைய முறையேதொகை முப்பது பெறவடுக்கி யந்தாதித் தொடையாற்பாடுவது. சிதம்பர மும்மணிக் கோவை, திருவொற்றியூர் மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, முதலியன - வமைந்திருத்தலறிக.

௮. அங்கமாலை - ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கு மிக்கனவெடுத்துக்கூறும் அவயவங்களை வெண்பாவாலாயினும் வெளி விருத்தத்தாலாயினும், பாதாதிகேசங் கேசாதிபாதமுறை பிறழாது தொடர்புறப்பாடுவது.

௯. அட்டமங்கலம், — கடவுளைப் பாடியக்கடவுள் காக்கவென வாசிரிய விருத்தமெட்டிலந்தாதித்துக்கூறுவது.

௧௦. அநுராகமாலை - தலைவன்கனவின்கணொருத்தியைக்கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றி னிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற் குறைத்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற்கூறுவது.

௧௧. இரட்டை மணிமாலை, — முறையானேவெண்பாவுங் கலித்துறையுமிருபஃதந்தாதி தொடையான் வருவது, நேரிசைவெண்பாப்பத்தும், ஆசிரியவிருத்தம் பத்துமந்தாதித் தொடையாற்பாடுவது, மூத்தநாயனார் இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை யிரட்டை மணிமாலை முதலியன விலக்கியமாயுள்ளன.

௧௨. இணைமணிமாலை, - வெண்பாவுமகவலும், வெண்பாவுங் கலித்துறையுமாக விரண்டிரண்டாக விணைத்து வெண்பா வகவலிணைமணிமாலை, வெண்பாகலித்துறை யிணைமணிமாலை என நூறுநூறு அந்தாதித்தொடை நான்காலும் பாடுவது.

௧௩. நவமணிமாலை, - வெண்பா முதலாக வேறுபட்டபாவும் பாவினமுமாக வொன்பதுசெய்யு ளந்தாதித்துப் பாடுவது. பிக்ஷாடன நவமணி மாலை யிதற்கிலக்கியமா யுள்ளது.

௧௪. நான்மணிமாலை, - வெண்பாவுங் கலித்துறையும் விருத்தமு மகவலுமந்தாதித் தொடையாக நாற்பது பாடுவது. கோயினான்மணிமாலை, நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை முதலியன விதற்கிலக்கியங்கள்.

௧௫. நாமமாலை, - அகவலடியுங் கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவலாண்மகனைப் புகழ்ந்துபாடுவது.

௧௬. பலசந்த மாலை, - பப்பத்துச் செய்யு ளொவ்வோர் சந்தமாக நூறு செய்யுட்கூறுவது.

௧௭. பன்மணிமாலை, -மேற்சொல்லிய கலம்பகத்துள் வருமொருபோகு மம்மானையு மூசலுமின்றி யேனையுறுப்புக்க ளெல்லாமமைய வவ்வாறு கூறுவது இதையே கலம்பகமாலையென்ப.

௧௮. மணிமாலை, - எப்பொருண் மேலும், வெண்பாவிருபதுங் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

௧௯. புகழ்ச்சிமாலை, - அகவலடியுங்கலியடியும்வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

௨௦. பெருமகிழ்ச்சிமாலை, - தலைவியினழகு குணமாக்கஞ் சிறப்பினைக் கூறுவது.

௨௧. வருக்கமாலை, - மொழிக்கு முதலாம் வருக்கவெழுத்தினுக் கொவ்வோர் செய்யுட்கூறுவது.

௨௨. மெய்கீர்த்திமாலை, - சொற்சீரடியென்னுங்கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற்செய்த கீர்த்தியைக்கூறுவது.

௨௩. காப்புமாலை, -தெய்வங் காத்தலாக மூன்றுசெய்யுளானும், ஐந்து செய்யுளானும், எழுச்செய்யுளானும் பாடுவது.

௨௪. வேனின்மாலை, - இளவேனிலையு முதிர்வேனிலையுஞ் சிறப்பித்துப்பாடுவது.

௨௫. வசந்தமாலை, - தென்றலைவருணித்துப்பாடுவது.

௨௬. தாரகைமாலை, - அருந்ததிக் கற்பின்மகளிர்க்குள்ள வியற்கை குணங்களை வகுப்பாற்கூறுவது. தூசிப் படையினணியைப்புகழ்ந்த வகுப்பென்பாருமுளர்.

௨௭. உற்பவமாலை, - திருமால் பிறப்புப்பத்தினையு மாசிரிய விருத்தத்தாற்கூறுவது.

௨௮. தானைமாலை, - அகவலோசையிற் பிறழாதாசிரியப்பாவான்முன்னரெடுத்துச்சொல்லுங் கொடிப்படையைக்கூறுவது.

௨௯. மும்மணிமாலை, - வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித்தொடையான் முப்பதுபாடுவது.

௩0. தண்டகமாலை, - வெண்பாவான் முந்நூறுசெய்யுட்கூறுவது இது வெண்புணர்ச்சி மாலையெனவும்படும்.

௩௧. வீரவெட்சிமாலை, - சுத்தவீரன், மாற்றாரூரிற்சென்று,பசுநிறைகோடற்குவெட்சிப்பூமாலை சூடியவண்ணம்போய் நிரைகவர்ந்து வரினவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய்வந்த வெற்றிபாடுவது.

௩௨. வெற்றிக்கரந்தைமஞ்சரி, - பகைவர்கொண்ட தந்நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப்போய் மீட்பதைக்கூறுவது.

௩௩. போர்க்கெழுவஞ்சி, - மாற்றார்மேற் போர்குறித்துப் போகின்றவயவேந்தர் வஞ்சிப்பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பையாசிரியப்பாவாற்கூறுவது.

௩௪. வரலாற்றுவஞ்சி, - குலமுறைபிறப்பு முதலியமேம்பாட்டின் பலசிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற்கூறுவது.

௩௫. செருக்களவஞ்சி, - போர்க்களத்திலே யட்டமனிதருடலையும் யானை குதிரையுடலையு நாயும்பேயும்பிசாசமுங்கழுகும், பருந்துங்காகமுந் தின்றுகளித்தாரவாரமாயிருக்க, பூதமும் பேயும்பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப் பாடுவது. இதையே பறந்தலைச்சிறப்புப் பாட்டு மென்ப.

௩௬. காஞ்சிமாலை, - மாற்றாரூர்ப்புறத்துக் காஞ்சிப் பூமாலைசூடி யூன்றலைக்கூறுவது.

௩௭. நொச்சிமாலை, - புறத்தூன்றிய மாற்றார்க்கோடலன்றி நொச்சிப் பூமாலைச்சூடித் தன்மதில்காக்குந்திறங் கூறுவது.

௩௮. உழிஞை மாலை, - மாற்றாரூர்ப்புறஞ்சூழ வுழிஞைப்பூமாலைசூடிப் படை வளைப்பதைக்கூறுவது.

௩௯. தும்பைமாலை, -மாற்றாரோடு தும்பைப் பூமாலைசூடிப் பொருதவதைக்கூறுவது.

௪0. வாகைமாலை, - மாற்றாரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதைக்கூறுவது.

௪௧. வாரணமஞ்சரி, - கொலைபுரி மதயானை வயப்படுத்தி யடக்கினவர்கட்குமெதிர் பொருகளிற்றை வெட்டியடக்கினவர்கட்கும், பற்றிப்பிடித்துச் சேர்ந்தவர்கட்கும் வீரப்பாட்டின் சிறப்பைவஞ்சிப்பாவாற்றொடுத்துப்பாடுவது

௪௨. எண்செய்யுள், - பாட்டுடைத்தலைவன் ஊரினையும் பெயரினையும் பத்துமுதலாயிரமளவும் பாடி யெண்ணாற் பெயர்பெறுவது.

௪௩. தொகை நிலைச்செய்யுள், - நெடிலடி செய்யுளாற் றொடுத்தது நெடுந்தொகையும், குறளடிச்செய்யுளாற்றொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவாற் றொகுத்தது, கலித்தொகையும் போல்வன.

௪௪. ஒலியலந்தாதி,-பதினாறுகலையோரடியாகவைத் திங்ஙன நாலடிக்கறுத்து நாலுகலைவகுத்துப் பலசந்தமாகவண்ணமுங் கலைவைப்புந் தவறுமலந்தாதித்து முப்பதுசெய்யுள்பாடுவது. சிறுபான்மை யெட்டுக் கலையாலும் வரப்பெறும் அன்றியும்வெண்பாவகவல்கலித்துறையாகியஇம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதித்துப் பாடுவதுமாம். ஒட்டக்கூத்தரால்இவ்விலக்கணங்களும் பெயருமமையைச்செய்யப்பட்டவந்தாதியிதற் குதாரணமாம்.

௪௫. பதிற்றந்தாதி, - பத்துவெண்பா பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற வந்தாதித்துப் பாடுவது.

௪௬. நூற்றந்தாதி, - நூறுவெண்பாவினாலேனும் நூறுகலித்துறையினாலேனு மந்தாதித் தொடையாற் கூறுவது. அருணகிரியந்தாதி, கந்தரந்தாதி, திருக்கருவைவெண்பா வந்தாதி, திருக்

சருவைக் கலித்துறை யந்தாதி, பொன்
வண்ணத்தந்தாதி,அற்புதத்திருவந்தாதி
பழமலையந்தாதி, அபிராமியந்தாதி,
மறைசையந்தாதி, கல்வளையந்தாதி,
கைலைபாதி, காளத்திபாதி, வெண்பா
வந்தாதி, கம்பரந்தாதி, மருதூரந்தாதி,
பந்தனந்தாதி முதலியன உதாரணங்க
ளாயுள்ளன.

௪௭. உலா, இளமைப் பருவமுற்
றதலைமகனைக் குலங்குடிப்பிறப்புமங்க
லம்பரம்பரை யிவற்றானின்றா னென்
பது தோன்றத்தலைமையாய் மாதர் நெ
ருங்கிய வீதியிடத்தவன்பவனிவரப்பே
தைமுதலிய வேழுபருவப் பெண்களுங்
கண்டு தொழுததாக நேரிசைக்கலி
வெண்பாவாற் கூறுவது திருக்கைலை
யுலா, கச்சியேகம்பருலா, காழியுலா
வைக் காண்க.

௪௮. உலாமடல் - கனவி லொரு
பெண்ணைக்கண்டு கலவியின்ப நுகர்ந்
தோன் விழித்தபின்னவன் பொருட்டு
மடலூர்வே னென்பதைக் கலிவெண்
பாவான் முற்றுவிப்பது.

௪௯. வளமடல்,அறம்பொருளின்
பமாகிய வம்முக்கூறுபாட்டின் பயனை
யெள்ளி மங்கையர் திறத்துறுங்காம
வின்பத்தினையே பயனெனக்கொண்டு
பாட்டுடைத் தலைமகளியற் பெயர்க்
குத் தக்கதை யெதுகையாக நாட்டியு
ரைத் தவ்வெதுகை படத்தனிச் சொ
லின்றியின்னிசைக் கலிவெண்பாவாற்
றலைமகனிறந்த குறைபெறுதும டலே
றுவதாரடி யெதுகைவரப்பாடுவது.

௫௦ ஒருபாவொருபஃது, -அகவ
லும் வெண்பாவுங் கலித்துறையு மாய
விவற்றி லொன்றனா லந்தாதித் தொ
டையாற் பத்துப்பாடுவது.

௫௧. இருபாவிருபஃது-பத்துவெ
ண்பாவும் பத்தகவலுமந்தாதித்தொடை
யானிருபதினைந்து வருவது சித்தாந்த
சாத்திரம் பதினான்கனு ளொன்றிதற்
கிலக்கியமாயுள்ளது.

௫௨. ஆற்றுப்படை, - அகவற்பா
வால் விறலி, பாணர், கூத்தர், பொரு
நரிந்நால்வருளொருவர் பரிசிற்குப்போ
வாரைப் பரிசுபெற்று வருவா ராற்றி
டைக்கண்டு தலைவன் கீர்த்தியுங் கொ
டையுங் கொற்றமுஞ் சொல்வது பத்
துப்பாட்டுள் முதலாவது பாட்டால்
நக்கீரனாற் சொல்லப்பட்டு முந்நூற்
றுப் பதினேழடிகளை யுடையதாய் மு
ருகவேளதுபடை வீடாறனையும் சிறப்
பப்பாராட்டிக்கூறுகிற்குந் திருமுருகா
ற்றுப்படை, இரண்டாவது பாட்டாய்
பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்
படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்த
ராற்றுப்படை, தணிகையாற்றுப்படை
முதலியன விதற்கிலக்கியங்களாம்.

௫௩. கண்படைநிலை,-அரசரு மர
சரைப் போல்வாரு மவைக்கணெடிது
வைகியவழிமருத்துவரு மமைச்சருமுத
லியோ ரவர்க்குக் கண்டுயில் கோடலைக்
கருதிக்கூறுவது.

௫௪. துயிலெடைநிலை, - தன்வலி
யாற்பாசறைக் கண்ணொரு மனக்கவற்
சியின்றித்துயின்ற வரசர்க்கு நல்லபுக
ழைக் கொடுத்தலைக்கருதிய சூதர் துயி
லெழுப்புதலாகப் பாடுவது.

௫௫. பெயரின்னிசை, - பாட்டு
டைத்தலைவன் பெயரினைச்சார, இன்
னிசைவெண்பாவாற்றொண்ணூறேனு
எழுபதேனு ஐம்பதேனும் பாடுவது.

௫௬. ஊரின்னிசை, பாட்டுடைத்
தலைவனூரினைச்சார், வின்னிசை வெ
ண்பாவாற் றொண்ணூற்றேனு மெழுப
தேனு மைம்பதேனும் பாடுவது.

௫௭. பெயர்நேரிசை,-பாட்டுடை
த்தலைவன் பெயரினைச்சார நேரிசை
வெண்பாவாற் றொண்ணூறேனுமெழு
பதேனு மைம்பதேனும் பாடுவது.

௫௮. ஊர்நேரிசை,- பாட்டுடைத்
தலைவனூரினைச்சார நேரிசை வெண்
பாவாற் றொண்ணூறேனு மெழுபதே
னு மைம்பதேனும் பாடுவது.

௫௯. ஊர்வெண்பா,-வெண்பாவா
லூரைச் சிறப்பித்துப் பத்துசெய்யுள்
கூறுவது.

௬௦. விளக்குநிலை, -வேலும்வேற்
றலையும் விலங்காதோங்கியவாறு போ
லக் கோலொடு விளக்கு மொன்றுபட்
டோங்குமாறோங்குவதாகக் கூறுவது.

௬௧. புறநிலை, நீவணங்குந் தெய்வ நின்னைப் பாதுகாப்ப நின்வழி வழிமிகு வதாகவெனக் கூறுவது.

௬௨. கடைநிலைசான்றோர்சேணி டைவருதலாற் பிறந்தவருத் தந்நீரவா யில்காக்கின்றவனுக்கென்வரவினைத் த லைவற்கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

௬௩. கையறுநிலை-கணவனொடும னைவிகழிந்துழியவர் கட்பட்டவழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித் தாமிறந்து படாதொழிந்த வாயத்தாரு ம்பரிசில்பெறும் விறலியருந்தனிப்பட ருழந்த செயலறுநிலையைக் கூறுவது.

௬௪. தசாங்கப்பத்து, - நேரிசை வெண்பாவா லரசன்படைத்த தசாங்க த்தினைப்பத்துச்செய்யுளாற் கூறுவது.

௬௫. தசாங்கத்தயல்-அரசன் தசா ங்கத்தினை யாசிரியவிருத்தம் பத்தினாற் பாடுவது.

௬௬. அரசன்விருத்தம், - பத்துக் கலித்துறையு முப்பது விருத்தமுங் கலி த்தாழிசையுமாகிய விவற்றுல்மலை, கட ல்நாட்டுவருணனையு நிலவருணனையும், வாண்மங்கலமுந்தோண் மங்கலமும் பா டிமுடிப்பது, இது முடிபுனைந்த வேந் தர்க்காம்.

௬௭. நயனப்பத்து, - மண்ணினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

௬௮. பயோதரப்பத்து, - முலையி னைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

௬௯. பாதாதிகேசம், - கலிவெண் பாவாலடிமுதன்முடியளவுங் கூறுவது.

௭0. கேசாதிபாதம்,-கலிவெண்பா வாலடிமுதன் முடியளவுங் கூறுவது.

௭௧. அலங்காரபஞ்சகம், - வெண் பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிரு த்தம், சந்தவிருத்த மிவற்றையே மாறி மாறி நூறு செய்யுளாக வந்தாதித்துப் பாடுவது.

௭௨. கைக்கிளை, - ஒருதலைக்காமத் தினை யைந்துவிருத்தத்தாற் கூறுவது அன்றி வெண்பா முப்பத்திரண்டுசெய் யுளாற் கூறுவதுமாம்.

௭௩. மங்கலவள்ளை,-உயர்குலத்து தித்த மடவாரை வெண்பா வொன்பா னும்வகுப்பொன்பானும்பாடுவது.

௭௪. தூது,-ஆண்பாலும் பெண் பாலுமவரவர்காதல்பாணன் முதலிய வு யர்திணையோடுங்கிள்ளை முதலிய வஃறி ணையோடுஞ்சொல்லித் தூதுபோய் வா வெனக்கலிவெண்பாவாற் கூறுவது நெ ஞ்சுவிடுதூதுகிள்ளைவிடுதூது, கச்சியா னந்தருத்தி ரேசர்வண்டுவிடுதூது முத லிய விலக்கியமாம்.

௭௫. நாற்பது,-காலமு மிடமும் பொருளுமாகிய விவற்று ளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது. கார் நாற்பது, களவழிநாற்பது, இன்னாநாற் பது, இனியவை நாற்பது முதலியவற் றைக் காண்க.

௭௬. குழமகன், - கலிவெண்பாவா ன் மாதர்சடங்கையிற்கண்ட விளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

௭௭. தாண்டகம்,-இருபத்தேழெ ழுத்து முதலாக வுயர்ந்த வெழுத்தடியி னவாயெழுத்துங்குருவுமிலகுவு மொத் துவந்தன அளவியற்றாண்டக மெனவு ம், எழுத்தொவ்வாதுமெழுத்தலகொவ் வாதும் வந்தன அளவழித்தாண்டகமெ னவும் படும்.

௭௮. பதிகம்,-ஒரு பொருளைக்கு றித்துப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

௭௯. சதகம்,-அகப்பொருளொன் றன்மேலாதல் புறப்பொருளொன்றன் மேலாதல்கற்பித்து நூறுசெய்யுள்கூறு வது அறப்பளீசுரசதகம், குமரேசர்சத கம், வைராக்கியசதகமுதலியனகாண்க.

அ0. செவியறிவுறூஉ, - பொங்கு தலின்றிப்புரையோர் நாப்பண் விறல் கடனெனவவையடக்கியற்பொருளுற வெண்பாமுதலுமாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

அக. வாயுறைவாழ்த்து,-வேம்புங் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற் கண்முன்னர்த்தாங்கக்கூடா வாயினும் பின்னர்ப்பெரிதும்பயன்றருமெனமெ ய்ப்பொருளுறவெண்பாமுதலுமாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

அஉ. புறநிலைவாழ்த்து, - வழிபடு தெய்வநிற்புறங்காப்பப் பழிதீர்செல்வ மோ டொருகாலைக்கொருகாற் சிறந்து

பொலிவாயென வெண்பாமுதலு மாசி
ரியமிறுதியுமானமருட்பாவாற்பாடுவது.

௮௩. பவனிக்காதல்,-உலாக்காட்சி
யாலெய்திய காம மிகுதியாலவை பிற
ரொடு முரைத்து வருந்துவது.

௮௪. குறத்திப்பாட்டு,- தலைவன்
பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகி
னிவரவு, உலாப்போந்ததலைவனைக்கண்
டுமயங்கல்,திங்கள்தென்றன் முதலியவு
பாலம்பனம், பாங்கியுற்றதென்னென
வினவல்,தலைவிபாங்கியோடுற்றதுகூற
ல், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறல்,
தலைவிதலைவனைப் புகழ்ந்துகூறல், தலை
விபாங்கியைத் தூதுவேண்டல், தலைவி
பாங்கியோடுதலைவனடையாளங்கூறல்,
குறத்திவரவு, தலைவி குறத்தியை மலை
வள முதலியவினவல், குறத்திமலைவள
நாட்டுவளமுதலியகூறல், தலைவன்றல
வளங்கிளைவளமுதலியகூறல், குறிசொ
ல்லிவந்தமைகூறல்தலைவிகுறிவினவல்
குறத்திதெய்வம்பராவல், குறிதேர்ந்து
நல்வரவுகூறல்,தலைவிபரிசிலுதவிவிடுத்
தல், குறவன் வரவு, புள்வரவு கூறல்,
கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தி
யைக்காமுற்றுத்தேடல், குறவன்பாங்க
னொடு குறத்தியடையாளக்கூறல், குற
வன்குறத்தியைக்கண்ணுறல், குறவனை
னிமுதலிய கண்டையுற்று வினவலுமா
ண்டாண்டு குறத்திவிடை கூறலுமாகக்
கூறல்,பெரும்பான்மையுமிவ்வகையுறு
ப்புக்களால் அகவல்,வெண்பாதரவுகொ
ச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்
தம், கலிவிருத்தம் இச்செயுளிடைக்
கிடைகூறிச் சிந்துமுதலிய நாடகத்தமி
ழாற்பாடுவது.

௮௫. உழத்திப்பாட்டு, - கடவுள்
வணக்கமுறையே மூத்தபள்ளி யிளைய
பள்ளி குடும்பன்வர வோடவன் பெரு
மைகூறல்,முறையேயவர்வரலாறுநாட்
டுவளம், குறியிற்கூக்கேட்டல்மழைவே
ண்டிக்கடவுட்பராவல், மழைக்குறியோர்
தல்,ஆற்றின்வரவு,அதன்சிறப்புக்காண்
டலிவற்றிற்கிடையிடையாகப் பொரு
ட்டுறையுங்கூறிப்பண்ணைத் தலைவன்வ
ரவுபள்ளிகளிருவர்முறையீடு, இளையா
ளையவனுரைப்பல்,பள்ளன்வெளிப்பட
ல், பண்ணைச்செயல்வினவல்,அவனது
கூறல்,ஆயரைவருவித்தல், அவர்வரல்
அவர்பெருமைகூறல், மூத்தபள்ளிமு
றையீடும்பன்கிடையிலிருந்தான்போ
ல்வரல், அவனைத்தொழுவின்மாட்டல்,
அவன் புலம்பல், மூத்தபள்ளியடிசில்
கொடுவரல்,அவனவளோடுகூறல், அவ
னவளைமன்னித்தல், கேட்கவேண்டல்,
அவன்மறுத்தல், அவன்சூளுறல், அவ
ளவனைமீட்கவேண்டிப்பண்ணைத்தலைவ
னைப்பரவல்,விழிமுதலியவளங் கூறல்,
உழவருழல், காளைவெருளல், அதுபள்
ளத்துப்பாய்தல், பள்ளிகள் புலம்பல்,
அவனெழுந்துவித்தல், அதைப் பண்
ணைத்தலைவர்க்கறிவித்தல்,நாறுநடல்வி
ளைந்தபின்செப்பஞ்செயல், நெல்லளத்
தல், மூத்தபள்ளிமுறையீடு, பள்ளிகளு
ளொருவர்க்கொருவரேசலென விவ்வு
றுப்புக்களுறப் பாட்டுடைத் தலைவன்
பெருமையாங்காங்குத் தோன்றச் சிந்து
ம்விருத்தமும்விரவிவர விவற்றாற்பாடு
வது.

௮௬. ஊசல்-ஆசிரியவிருத்தத்தா
னுதல் கலித்தாழிசையானுதல் சுற்றத்
தோடும்பொலிவதாக, ஆடீருசல்,ஆடா
மோ வூசலென்றிறக் கூறுவது.

௮௭. எழுகூற்றிருக்கை,-எழுவரை
யாக்கக்குறமக்கண்முன்னின்றும் புக்
கும் போக்தும்விளையாடும் பெற்றியால்
வழுவாமையாலொன்று முதலாகவேழி
றுதியாக முறையானே பாடுவது.

௮௮. கடிகைவெண்பா,-தேவரிட
த்துமாசரிடத்தும், நிகழுங்காரியங் கடி
கையளவிற் றோன்றிநடப்பதாகமுப்
பத்திரண்டு நேரிசை வெண்பாவாற்
கூறுவது.

௮௯. சின்னப்பூ,-நேரிசைவெண்
பாவாலரசனதுசின்னமாகிய தசாங்கத்
தினைச்சிறப்பித்துவிரித்துநூறு, தொ
ண்ணூறு,எழுபது, ஐம்பது, முப்பது
என்னு மெண்படக்கூறுவது.

௯௦. விருத்த விலக்கணம்,-வில்,
வாள்,வேல்,செங்கோல் யானைகுதிரை,
நாடு,ஊர்,கொடை, இவ்வொன்பதினை
யும் பப்பத்து விருத்தத்தா லொன்பது
வகையாற் பாடுவது.

௯௧. முதுகாஞ்சி, - இளமை கழிந்தறிவுமிக்கோரிளமைகழியாதவறிவின்மாக்கட்குக் கூறுவதாம்.

௯௨. இயன்மொழிவாழ்த்து,-இக்குடிப்பிறந்தோர்க்கெல்லாமிக்குணமியல்பென்றுமவற்றைநீயுமியல்பாகவுடையையென்றுமுன்னோர்போல்நீயுமியல்பாகவீயென்றுமுயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

௯௩. பெருமங்கலம், - நாடோறுந்தான் மேற்கொள்கின்ற சிறைசெய்தன் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதன் முதலிய சிறந்த தொழில்கள்பிறந்ததற்குக்காரணமானநாளிடத்து நிகழும் வெள்ளணியைக்கூறுவது.

௯௪. பெருங்காப்பியம், - தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளுமிவற்றிற்கிரியைவாழ்த்து முன்னுளதாய் அறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளும்பயக்குநெறியுடைத்தாய்நிகரில்லாத் தலைவனையுடைத்தாய், மலையுங்கடலுநாடுநகரும் பருவமு மிருசுடர்த்தோற்றமுமென்றிவற்றின் வளங்கூறுதலும் மணமும் முடிகவித்தலும் பொழில் விளையாட்டும் நீர்விளையாட்டும் உண்டாட்டும் மகப்பேறும்புலவியுங் கலவியுமென்றிவற்றைப்புகழ்தலும்,மந்திரமுந்தூதுஞ் செலவும் போரும் வென்றியுமென்றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய வினைமுறையேதொடர்வுறச்சருக்கமிலம்பம்பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய்,வீரமுதலிய சுவையமவற்றைவிளக்குங்கருத்து விளங்கக்கற்றோரானியற்றப்படுவதாம் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சூடாமணி, கந்தபுராணம், தணிகைப்புராணம், கூர்மபுராணம் முதலியன காண்க.

௯௫. சிறுகாப்பியம், - அறம்பொருளின்பம் வீடென்னு நான்கனுளொன்றும்பலவுங்குறைந்தேனைய வுறுப்புக்கண்மேற் கூறியவா றியல்வது. உலாமடல் முதலியனவாம்.

பிறப்பு-௭-தேவர்,மக்கள், விலங்கு புள்,ஊர்வன,நீர்வாழ்வன,தாவரம்,இவற்றின்யோனிபேதமெண்பத்து நான்குநூறாயிரம்,அவையாவன. தேவர்பதினான்கு நூறாயிரம், மக்களொன்பது நூறாயிரம், விலங்குபத்து நூறாயிரம்,புள்பத்து நூறாயிரம், ஊர்வனபதினொருநூறாயிரம், நீர்வாழ்வன பத்துநூறாயிரம்-தாவரமிருபது நூறாயிரம், அன்றி, தேவர் பதினாறு நூறாயிரமெனவுந் தாவரம்பதினெட்டுநூறாயிரமெனவுங்கூறுப.

பு

புண்ணியத்தோற்றம் - ௪ - தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம்-௭-புகங்கிருதி, தானம், விரதம், சிநேகம், நயபோசனம், கமை, உற்சாகம்.

புண்ணியம் - ௪ - தானம், கல்வி, தவம், ஒழுக்கம்.

புண்ணியம் ௯ எதிர்கொளல், பணிதல், ஆசனத் திருத்துதல், தாள்கழுவல், அருச்சித்தல்.தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல் இவை அறந்தோர்க்குசெய்வனவாம்.

புரம் - ௩ - இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில் இவையே முப்புரம்.

புராணம் - ௧௮-(௧)பிரமம் (௨) பதுமம் (௩)வைணவம் (௪)சைவம் (௫)பாகவதம் (௬) நாரதியம் (௭) மார்க்கண்டேயம்(௮)ஆக்கினேயம்(௯) பவிடியம் (௧௦)பிரமவைகவர்த்தம் (௧௧) இலிங்கம்(௧௨) வராகம் (௧௩) காந்தம் (௧௪) வாமனம் (௧௫) கூர்மம் (௧௬) மற்சம், (௧௭)காருடம்.(௧௮)வாயவியம்.

இவற்றுள்சைவம்.மார்க்கண்டேயம், பவிடியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், வாயவியம், என்னுமிப்பத்துஞ் சிவபுராணங்களாம். வைணவம், பாகவதம், நாரதியம், காருட்டம் என்னு மிந்நான்கும் விஷ்ணுபுராணங்களாம், பிரமம், பதுமம், என்னுமிரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம்,என்னும்ஒன்று அக்கினி புராணம்,பிரமகைவர்த்தம், என்னும் ஒன்று சூரியபுராணமாம். யோகிகளுக்கு

ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் தெளிபளிங்குவடிவினராயும் எக்குமுறங்காத பிராமணாதிபராயும் அருட்செய்கையுடையராயும் விளங்கலால் சிவபுராணங்கள் பத்தும் சுகஞானங்களுக்கு இடமாயதும் வெண்ணிறமுடையது, மாயசாத்துவிகக்குண புராணங்களாம். விட்டுணுசரியரும் சேஷசயனஞ்செய்வோரும் பத்தரைமோகிப்பவரும் பிரமாதமவஞ்சன முதலியவுடையரும் மருட்செய்கை யுடையருமாதலால் விட்டுணுபுராணங்கள் நான்கும் உதாசீனரூபமும்கூட கிருத்தியசமர்த்தமும், கித்திரை,சோம்புபிரமாத வஞ்சனங்களும் கருகிறமுமுடையதாமதகுண புராணங்களாம். பிரமாச்செங்கிறமுடையராய், சஞ்சலரூபியாய் விளங்களால் பிரமபுராணங்கள் இரண்டுஞ்சிவந்தநிறமுடையதும் துக்கத்துக்கிடமாயதும் சஞ்சலரூபமுடையதுமாகிய இராசதகுணபுராணங்களாம். அக்கினிதேவனுஞ் சூரியமூர்த்தியும் முக்குண வடிவினராய்த் தோன்றலால் அக்கினி புராணமுஞ் சூரியபுராணமும் திரிகுணயுத்தங்களாம். பிரமபுராணம்பிராமியம் எனவும் பெயர்பெறும் பதினாயிரக் கிரந்தங்களையுடைத்து,பதுமபுராணம் பாத்மம் என்றும் சொல்லப்படும் ஐம்பத்தையாயிரக் கிரந்தமுடையது, வைணவ புராணம். விஷ்ணுபுராணம், விண்டுபுராணம் எனவும் பெயர், ஆறாயிரக் கிரந்தங்களையுடையது. சைவபுராணம் வாயுபுராணம் எனவும் பெயர். இருபத்து நாலாயிரக் கிரந்தங்கள் கொண்டது பாகவதமானது இதிகாசபாகவதம், புராண பாகவதம், சங்கிதாபாகவதம், உபசங்கிதா பாகவதம், விட்டுணுரகசியபாகவதம், விட்டுணுயாமளபாகவதம், கௌதம சங்கிதா பாகவதம்,தேவிபாகவதம், என எண்பகுப்பினதாயிருத்தலான் அவற்றுள் சுகர் பாகவதமே புராணபாகவதமாம் சிலர் தேவிபாகவதமேயஃதென்றுங் கூறுவர் அது பதினெண்ணாயிரக் கிரந்தமுடைத்து. நாரதீயபுராணம் இருபத்தையாயிரங் கிரந்தமுடையது மார்க்கண்டேய புராணம் முப்பத்தீராயிரக் கிரந்தமுடையது. ஆக்கினேய புராணம் எண்ணாயிரங் கிரந்தமுடையது பவிடியபுராணம் பவிஷ்யத் எனவும் பெயர்பெறும் முப்பத்தோராயிரக் கிரந்தமுடையது பிரமகைவர்த்தபுராணம் பன்னீராயிரக் கிரந்தமுடையது இலிங்க புராணம் பதினோராயிரக்கிரந்தமுடையது. வராகபுராணம் இருபத்து நாலாயிரக் கிரந்தமுடையது, கந்தபுராணம் ஓரிலக்கமுடையது, வாமனபுராணம் பதினாலாயிரக்கிரந்தமுடையது கூர்மபுராணம்,கௌர்மம்,தத்துவசாகரம் எனவும் பெயர்பெறும். ஆறாயிரக் கிரந்தங்களையுடையது மற்சபுராணம் மத்ஸயம் என்றுஞ்சொல்லப்படும் பதினாலாயிரக்கிரந்தங்களையுடையது. காருடபுராணம் ஆறாயிரக்கிரந்தமுடையது. வாயவியபுராணம், பிராமம் பிரமாண்டம், எனவும் பெயர்பெறும். பன்னீராயிரக் கிரந்தமுடையது. இவைகள்வேதாகமங்களின் சாரங்கள் என்னவென்று கிபாயப்பிரமாணங்களால் தேற்றி விளக்குதலால் உபாங்கம் எனவும், உபப்பிருங்கணம், யாவராலுங் கொள்ளப்படுவதுடன் முதல்வனால் அருளப்பட்டமைபற்றிச் சுத்தவித்தையெனவும், பழையவரலாற்று முறைகளை புணர்த்தலால் புராணங்கள் எனவும் சொல்லப்படும். புராணம் பதினெட்டிற்குக் கிரந்தத்தொகை நாலிலக்கத்தெண்ணாயிரமாகும். இவைகளின் யேனைய வரலாற்றிலக்கணங்களையெல்லாங் கூர்மபுராணம் இந்திரத்துய்ம்மன் முத்தியடைந்த அத்தியாயத்தில் "பிரமநற்பதுமம்" என்னுந் திருவிருத்தத்து விசேடவுரைக்கண்கண்டு, தெளிக. உபபுராணங்கள் முன்காட்டப்பட்டன.

புராணலக்கணம்-௫- உலகத் தோற்றம், ஒடுக்கம், முனிவர், அரசர், மரபு, அவர்சரிதம், மநுவந்தரம்.

புராணலக்கணம் - ௧௦- சர்க்கம், விசுர்க்கம், விருத்தி, இரட்டை, மநுவந்தரம், வமிசம்,வமிசாநுசரிதம்,சங்கிதை, எது, ஆசிரயம்.

புரி-௭-அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புருடார்த்தம்-௪-அறம், பொருள், இன்பம், வீடு.

புலமையோர் - ச - கவி, கமகன், வாதி, வாக்கி, இவருள் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னு நாற்கவிகளைப் பாடுவோன் கவி, அரும் பொருளைச் செம்பொருணடையாகக்காட்டி விவகரிப்போன் கமகன், - காரணமுமேற் கோளு மெடுத்துக் காட்டி பிறன் கோண் மறுத்துத் தன்மத நிறுத்துபவன் வாதி - அறம்பொருள், இன்பம், வீடெனுநாற்றிறங்களைக்கேட்க வேட்க விரித்துக் கூறுவோன் வாக்கி.

புலன்-ரு-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

புறச்சமயம்-சு - தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம்.

புறத்திலக்கணம் - உ - பதம், புணர்ச்சி, இஃது எழுத்திலக்கண வகையினொன்று.

புறத்திலக்கணம்-கo - விபூதிருத்திராக்கம்என்னுஞ் சிவசின்னங்களைத்தரித்தல், குருவைவழிபடல், சிவபெருமானைத்தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை யுச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவ தருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத்தன்றிப்போசனம்பண்ணுமை, சிவனடியார்களுக்குக்கொடுத்தல், என்பனவாம். உபலிலக்கணமும் பத்து அவையாவன - சிவபெருமானுடைய பெருமையைப் பேசுந்தோறும் சிந்திக்குந்தோறும், கண்டம், விம்முதல், நாத்தடித்தல், உதடு அடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ்சிலிர்த்தல், குறுவேர்வைகொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல், என்பவைகளாம்.

புறப்புறச்சமயம்-சு-உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்திமிகம், வைபாடிகம், ஆருகதம்.

புறப்பொருள்வகை-அ - பசுக்கவர்தல், நிரைமீட்டல், பகைமேற் செல்லல், பகைமுன் னெதிருன்றல், தன்னரண்காத்தல், பகையரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல்.

பூ

பூ - ச - கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ, நிலப்பூ, என ஒன்றுகூட்டி ஐந்தென்பாருமுளர்.

பூதம் - ரு - நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பெ

பெண்கை-அ-கடகம், சதுண்டம், காங்கூலம், பிறைக்கை, அராளம், பக்கம், தாம்பிரசூடம், மான்றலை.

பெண்வகை - ச - பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு - எ - அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பெருங்கலவிலக்கணம் - எ - கோட்டினளவு பன்னிருசாண், வணரளவு சாண், பத்தரளவு, பன்னிருசாண் இப்பெற்றிக்கேட்ட ஆணி, திவவு, உந்தி ஆயிரங்கோற்றொடுப்பு.

பெருந்தானம் - அ - நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை.

பெரும்பண்ணின்வகை-பாலையாழ், செந்து, மண்டலியாழ், பௌளி, மருதயாழ், தேவதாளி, திருபதுங்காரகம், நாகராகம், குறிஞ்சியாழ், ஆசாரி, சாயவேளர், கொல்லி, கின்னராகம், செவ்வழி, மௌசாளி, சீராகம், சந்தி.

பே

பேடியிலக்கணவகை-உரு - நச்சுப்பேசல், நல்லிசையோர்தல், அச்சமாறல், ஆண்பெண்ணுதல், ஒருகைவீசிநடத்தல், தலையிலொருகைவைத்தல், எதிர்

ந்தோரைக்கண்டு விலகல்எதிர்ந்தோர்மேற்செல்லுதல் பார்வை வேறுபடுதல், பிறருக்கு நடுநடுங்கிச்சுழன்று திரிதல், பிறரைக்கண்டு நகைத்தல், நாணுதல், பலநாடகஞ்செய்தல், பக்கம் பார்த்தல், பதுங்கித்திரிதல், காரணமில்லாமற் பலவற்றைக் கோறங்கொண்டுபேசல், தலைமூலையைத்தானே வருத்தல், அசக்கல், அழுதல், சோர்ந்தருவருத்தல், குறுக்கிக்கூட்டிப்பார்த்தல், இடையிலொருகை வைத்தல், அதனை வாங்கல், இறங்கிப்பேசல், எல்லெல்லென்று பாடுதல்.

பேதம்-௩-சுகதபேதம், சசாதிபேதம், விசாதிபேதம், அவையாவன - மரத்துக்கிலையரும்பு பூ காய் கனி முதலிய சுகதபேதம், மரத்துக்குமறமரஞ் சுசாதிபேதம், மரத்துக்குக்கல் விசாதிபேதம்.

பேறு-௧௬-புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொதுப்பாயிரம்-௫-நூல்வரலாறு, ஆசிரியனிலக்கணம், நுவலுந்திறன், கொள்வோன்றிறன், கோடன்மரபு.

பொருள்கோள்-அ-யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று.

பொருணாராய்ச்சிவகை-அ-திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழுவழக்கு, இடம் இவற்றுள் திணையிரண்டு, பால் பதினன்கு, செய்யுளறுவகை நிலன், நால்வகை, காலம்பன்னிரண்டு, வழுபதினன்கு, வழக்கிருவகை.

பொருளின் பொதுத்தொழிற்பண்பு-௯-தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல்.

பொருள்-௨-கல்விப்பொருள் செல்வப்பொருள்.

பொருள்-௪-அறம், பொருள், இன்பம், வீடு.

பொருள்வகை-௪-நாடகம், பிரகரணப்பிரகரணம், பிரகரணம், அங்கம்.

பொழுது-௬-மாலை, யாமம், வைகறை விடியல், நண்பகல், எற்பாடு, இவையேயத்தமயகால முதலொவ்வொன்று பப்பத்து நாழிகையாக முறையே கொள்க, இவற்றைச் சிறுபொழுதென்பர், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், என்னுமாறுமாம் இவைபெரும்பொழுதாம்.

பொறி-௩-மனம், வாக்கு, காயம். [வி.

பொறி-௫-மெய், வாய், கண், மூக்கு, செ

பொறிக்காட்சிவகை-௬-சையோகம், சையுத்த சமவாயம் சையுத்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேடணவிசேடிய பாவம், இவற்றுள்.

௧-சையோகம் ஆவது யாதொருபொழுதுகடம் விடயமாயிருக்கிற ஞானமான துண்டாகின்றதப்பொழுது கண் இந்திரியம் கடம் விடயம் இந்த விரண்டினுடைய கூட்டுறவு இது பிரிந்திருக்கிற வத்துக்களினுடைய சம்பந்தமாகையாலே சையோகமெனப் பெயராயிற்று. சையுத்த சமவாயமாவது யாதொருபொழுது கண்ணாலே கடத்திலேயிருக்கிற உருவமானது அறியப்படுகின்றதோ அப்பொழுதே கண் இந்திரியம் கடத்தையடைந்திருக்கிற நீலாதிரூபம் விடயம் இவைகளினுடைய சம்பந்தம். சையுத்தசமவேதசமவாயமாவது யாதொருபொழுது கண்ணாலே கடத்தையடைந்திருக்கிற உருவத்திலே யிருக்கின்ற ரூபத்துவமானது அறியப்படுகின்றது. அப்பொழுது கண் இந்திரியம் உருவத்துவம்விடயம் இவைகளினுடைய சம்பந்தம். சமவாயமாவது - எக்காலத்திற் சோத்திரேந்திரியத்தினாலே சத்தமானது அறியப்படுகிறதோ அப்போது சோத்திரம்இந்திரியம்சத்தம்விடயம் இவைகளினுடைய சம்பந்தமாம். சமவேதசமவாயமாவது எக்காலத்தில்சோத்திரத்தி

லே சத்தத்தின்றன்மை காணப்படுகிறதோ அப்போது சோத்திரம் இந்திரியம், சத்தத்துவசாமானியம் விடயம் இவைகளினுடைய சம்பந்தஞ் சோத்திரத்திலே சமவேதமாயிருக்கிற சத்தத்திலே சத்தத்துவஞ் சமவாய சம்பந்தமாயிருக்கையினு லெனவறிக. விசேடணவிசேடிய பாவமானது எக்காலத்திற் கண்ணுடனே கூடியிருக்கிறபூமியிலே கடத்தினுடைய சுபாவமான தறியப்படுகின்றது. அஃதாவது இந்தப்பூமியிற் கடமில்லையென்றால் அப்போது கண்ணுடனே கூடியிருக்கிற பூமிவிசேடணம், கடாபாவம் விசேடியம். கடா பாவத்தையுடையது. பூதலம் என்றபோது கண்ணுடனேகூடின பூமி விசேடியம். கடாபாவம் விசேடணம்; இதன்விரிவையெல்லாம் பௌட்கராகமத்திற் காண்க.

பொன்வகை - ௪-ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போ

போககரணம்-௬௪-ஆலிங்கனம் - ௫, அதரபானம்-௧௧, அமிர்தநிலை-௧௫, நகக்குறி-அ, பற்குறி-அ, குரல்-அ, தாடனம்-அ, இதனை "ஆலிங்கனமைந்து மிதழ்ப்பானம் பதினொன்றும் மமிர்தம்பதினைந்தும் முகிரெழுத்துக்குறியெட்டுங், கோலம் புனைதந்தக்குறியெட்டுங் குரலெட்டுங் குவிதாடன மிருநான்கொடுகூடுங்கலவிக்கே" என்னுஞ்செய்யுளானறிக. விரிவுகள்மதனாகமத்தும், கந்தபுராணம், இந்திரபுரிப்படலத்தும், பார்க்கவபுராணம் இந்திரன்சாபம்பெற்றபடலத்தும்,பிறவற்றும் உரைக்கப்பட்டமை காண்க.

போகபூமி-௬-ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், மதவஞ்சம், எமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம்-அ-பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம்-௩-உத்தேசம், இலக்கணம், பரீட்சை, அவையாவன. தான்விவகரிக்கும் பொருளைப் பெயர்மாத்திரங் கூறலுத்தேசம், - அப்பொருளின் சிறப்புத்தன்மை கூறலிலக்கணம், - அப்பொருளி லிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப் பார்த்தல், பரீட்சை.

ம

மகளிரான்மலர்மரம் - ௧0, மகிழமரஞ் சொல்லவைக்க, ழிலம்பாலைமரம் நட்புற, பாதிரிமரம் சிந்திக்க, முல்லைக்கொடி நகைக்க, புன்னையாட,குராவணைக்க, அசோகு தைக்க, குருக்கத்தி பாட, மரா பார்க்க, சண்பக நிழல்படத் தளிர்த்துப் பூப்பனவாம்.

மங்கலச்சொல்-உஉ-திரு, யானை,தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ்,சீர், மதி, நீர், எழுத்து,பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம், இவற்றின் பரியாயப்பெயரும், பிறவுமாம்.

மங்கலம்-உ௧-முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம். யானை, கொடி, மதில், தோரணம்,நீர்குடம், பூமாலை, சங்கு, மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், சிங்காசனம், கடல் என்பன அரசர்க்குரிய மங்கலப் பொருள்களாம்.

மங்கலம்-அ-சாமரம், நிறைகுடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல், இவையே பட்ட சுபமெனவும் படும்.

மங்களாசரணை-௩-வாழ்த்து. வணக்கம் செயப்படுபொருள்.

மணம்-அ-பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்,காந்தருவம்,ஆசுரம்,இராக்கதம், பைசாசம்,இவற்றுட்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரமமணம்; தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தாருட் பட்டவளைத் தீ முன்னர்க் கொடுப்பது பிரசாபத்தியமணம். ஒன்றிரண்டு பசுவு மெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர் கொடுப்பதாரிடமணம், வேள்வியால்

வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வமணம் கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந் தனியிடத்தெதிர்பட்டுத் தாமே கூடுவது காந்தருவமணம்; பெண்ணுக்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வதசுரமணம்; பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற்கொள்வ திராக்கதமணம், துயின்றுழிச் சென்றுகூடுவது பைசாசமணம்.

மணி - கூ - கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம் ந - அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம் - எ - வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம், அக்கினிமண்டலம், திரிசங்குமண்டலம்.

மதம் எ - உடன்படல், மறுத்தல், தாஅனுட்டித் தனது சிறப்பு. பிறர்தம்மத மேற்கொண்டு களைவு. இருவர் மாறுகோளொருதலை துணிவு, பிறனூற்குற்றங்காட்டல், பிறிதொடுபடான்றன் மதங்கொளல்.

மத்திமதானவகை ஙி - ஆதுலர், அந்தகர், அவயவமிழந்தவர், பற்றுக்கோடில்லாதவர், பெண்கள் என்பார்க்குக் கொடுத்தல்.

மரகதக்குணம் - அ - நெய்த்தல், மயிற்கழுத்தொத்தல், பசுமைபாதல், பொன்மை, அதனுட்பசுத்தல், வக்கிபாய்தல், பொன்வண்டின் வயிறுபோலிருத்தல், தெளிதல்.

மரகதக்குற்றம் - கூ - கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பரிவு, தார், சாயை யிறுகல்.

மரபு - உ - தந்தைவழி, தாய்வழி.

மருதயாழ்த்திறன்வகை - கசு - தக்கேசி, கொல்லி, ஆரியகுச்சரி, நாகதொனி சாதாளி, இந்தளம், தமிழ்வேளாளர், கொல்லி, காந்தாரம், கூர்ந்த பஞ்சமம், பாக்கழி, தத்தளபஞ்சமம், மாதுங்கராகம், கௌசிகம், சீகா மரம், சாரல், சாங்கிமம்.

மருத்துக்கள் - எ - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மருந்து - ச - சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி.

மலம் - ந - ஆணவம், மாயை, காமியம்.

மலம் - எ - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, அன்றிக் கந்தமாதனக்கூட்டி, யெட்டெனவும்படும்.

மலைபடுதிரவியம் - ஞ - அகில், குங்குமம், கோட்டம், தக்கோலம், மிளகு.

மறத்துறைவகை - எ - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை.

மன்மதன்கணை - சு - வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவற்றின் பெயர் முறையே உன்மத்தம், மதனம், சம்போகம், சந்தாபம், வசீகரணம், இவைசெய்யுமவத்தை - சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம், அவையாவன - சுப்பிரயோகம், சொல்லுகினைவும், விப்பிரயோகம் வெய்துயிர்த் திரங்கல், சோகம் வெதுப்புந்துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலு மொழி பல பிதற்றலும், மரணம் அயர்ப்பு மயக்கமும்.

மன்னவர்சகாயர் - அ - கரணத்தியல்வோர் கடைகாப்போர், நகரமாக்கள், படைத்தலைவர், சுற்றத்தார், இவுளிமறவர், யானைவீரர், கருமவதிகாரர்.

மா

மாணிக்கசாதி - ச - பதுமம், நீலம், விந்தம், படிதம்.

மாதம் - உ - சைத்திரம், வைசாகம், சேட்டம், ஆஷாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குணம். இவை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி,

லே தை, மாசி, பங்குனி, இவற்றிற்கு முறையேயுரிய நட்சத்திரம் - சித்திரைவிசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள் - எ - அபிராமி, மகேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி, இவர்க்கு, முறையே வாகனம் - அன்னம், இடபம், மயில், கருடன், சீயம், யானை, பேய், முறையேயாயுதம் - மறை, பிநாசம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை-ங-சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை.

மாயை-ரு-தமம், மாயை, யோகம், அவித்தை, அசிர்தம், அவையாவன:— சீவசைதன்னியத்தை மறைக்கையாற்றமம், ஜகரூபமான வஸ்துதாத் தோற்றத்திற்குக் காரணமாகையான் மாயை, விபரீதஞான முண்டாக்குகையான் மோகம், உணர்வழிக்கையா லவித்தை, சத்தரூபத்துக்கந்நியமாகையா லசிர்தம்.

மாயைக்குணம்-எ-அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசாசுந்நியம், மாச்சரியம், பயம். இவற்றுள் அஞ்ஞானமாவது, பொய்யை மெய்யென்று பொல்லாங்குசெய்தல், பொய்யாவது உள்ளதை யில்லதாகவும் இல்லதை யுள்ளதாகவுஞ் சொல்லுதல், அயர்வாவது கண்டதை வழுந்திமயங்கல், மோகமாவது காமத்தான் மூர்ச்சித்தல், பைசாசுந்நியமாவது ஆசை யுண்டாயதனை யில்லையாக வொளித்தல், மாற்சரியமாவது பிறவுயிர்களைத் தாக்கவுங் கொல்லவு நினைத்தல் கேடுநினைத்தல், பயமாவது உயிர்க்கிறுதி வருமென்று அச்சமுற்றுத்திரிதல்.

மாயையிற்றோன்றுவன-௧0-காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், முதலாய் வித்தியாதத்துவ ஆன்மதத்துவங்களாம்.

மு

முகம்-கச-அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம். திரச்சினம்; இவற்றுள் வருத்தமாற்று-திருதோண்மேற்றலைசாய்த்த லஞ்சிதமுகம், தலைகுனிந்து பார்த்த லதோமுகம், சம்மதித்தற்குமேல்கீழ் தலையாட்டலாகம்பிதமுகம் அதிசயத்தாற் சிறிது தலையாட்டல்பிரகம்பிதமுகம், ஆசையான் மலர்ந்தமுகமா யொருவனை யழைத்தலா லோலிதமுகம், சிந்தையாலொருதோண்மேற் றலைசாய்த்த லுலோலிதமுகம், தலையண்ணாந்து பார்த்தலுத்துவாகிதமுகம். நியாளிப்பதுபோலத்தலைசையா திருத்தலே சமமுகம், பூரித்தமகிழ்ச்சியான் மலர்ந்த முகங்காட்டலே சௌந்தரமுகம், வேண்டாததற்கிடம் வலந் தலையாட்டலே துதமுகம், உணவுணி முதலிய வேண்டாமைக்குத் தலை நடுக்கலே விதுதமுகம், வேண்டாததற்கு முகந்திருப்பலே பராவிருத்தமுகம், மதத்தாலொருபுறஞ் சாய்ந்த தலையைச் சிறிதாகச் சுற்றியாட்டல் பரிவாகிதமுகம் - நாணத்தாற்றலையாட்டலே திரச்சினமுகம்.

முத்திவகை-உ-பரமுத்தி, அபரமுத்தி. பரமுத்தியாவது சிவசாயுச்சியம், அபரமுத்திகளாவன சிவசாரூப்யம், சிவசாமீப்பியம், சிவசாலோக்கியம்.

முத்திவிக்கினம் ங-அறியாமை, ஐயம், திரிபு.

முத்துக்குணம்-ச-தெளிந்தவொளி, சந்திரன்போன் றிருத்தல், வெள்ளிபோல் வெண்ணிறமுடைமை, அங்காரகன்போற் செந்நிறமுடைமை.

முத்துக்குற்றம் ச-காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை.

முத்துச்சனிக்குமிடம்-உ0-மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு,

கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக் கொம்பு, பன்றிக்கொம்பு, பசுவின் பல், நாகம், கொக்கு, நங்கையர்க ழுத்து.
மும்மை-ங-உம்மை, இம்மை, மறுமை.
முரசு-ங-வீரமுரசு, கொடைமுரசு, மணமுரசு.
முழவு-எ - அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, காலமுழவு, நாண்முழவு.
முனிவர்-எ-அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன், அன்றியும் அகத்தியன், ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பர்.
முனிவர் - ௩௧ - அகத்தியன், அத்திரி, ஆங்கீரசன், இரணியன் மாமுனி, உரோமமாமுனி, எரண்டமாமுனி, கலைக்கோட்டுமுனி, காசிபன், கௌதமன், சத்தகூன்முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனக்குமாரன், சுகன், ததிமகாமுனி, துருவாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பிஞகிமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மீகன், விசுவாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூ

மூர்த்தம்-அ-பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.
மூர்த்தவதிதேவதை-அ - பவன், கருவன், ஈசானன், பசுபதி, வீமன், மாதேவன், உக்கிரன், உருத்திரன்.
மூர்த்தவதி தேவதைகளின் மனைவியர்-அ-சுவர்ச்சலை, உரோகிணி, உமை, சுகேசி, சுவாகை, திசைசிவை, தீக்கை.
மூர்த்தவதிதேவதைகளின் மைந்தர்-அ-மந்தன், புதன், சுக்கிரன், செவ்வாய், குகன், சுவர்க்கன், மனோசிவன், சந்தானன்.
மூலம்-௧௦-கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், (இவ்வைந்துஞ் சிறுபஞ்ச மூலமென்ப.) வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர். இவ்வைந்தும் பெரும் பஞ்சமூலமென்ப.

மெ

மெய்க்கூத்து-ங-தேசி, வடுகு, சிங்களம். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க்கூத்தாயின. அகச்சுவைபற்றியெடுத்தலின் அகமார்க்கமெனவுங் கூறப்படுமென்னை? "குணத்தின்வழிய தகக்கூத்தெனப்படுமே" எனக் குணநூலுடையாரும், "அகத்தெழுசுவையா னகமெனப்படுமே" எனச்சயந்தநூலுடையாருங் கூறினாராகலின்.
மெய்ப்பரிசம் - அ - ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல், இவை மெய்ப்பொறியாற் செயப்படுந் தொழில்.
மெய்யெழுத்துவகை - ங - வல்லினம், மெல்லினம், இடையினம்.

மே

மேகம்-எ-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவை பொழிவன முறையேமணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.
மேடவீதி - ச - இடபம், சிங்கம், மிதுனம், கர்க்கடகம்.
மேலுலகம்-எ-பூலோகம், புவலோகம், சுவர்க்கலோகம், மகலோகம், தவலோகம்சனலோகம், சத்தியலோகம்.

மொ

மொழி-ங-மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

யா

யாகம்-ரு-பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம், இவற்றுள் வேதமோதல், பிரமயாகம், ஓமம் வளர்த்தலே தெய்வயாகம், பலியீதல் பூதயாகம் தர்ப்பணமுடித்தல் பிதிர்யாகம். இரப்போர்க்குணவு முதலிய வீதலே மானுடயாகம்.

யாகம்-உக-அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உத்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிருடபசுமந்தம், ஆக்குரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி. ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி.

யாகம்-கஅ-சோதிட்டோமம், அக்கிட்டோமம், உத்தியம், சோடசி, வாசபேயம், அத்திராத்திரம், சோமயாகம், சாதுர்மாசியம், மவுத்திரமேதம். சௌத்திராமணி, புண்டரீகம், அங்கிசயன், இராசசூயம், அச்சுவமேதம், விச்சுவதித்து, பிரமமேதம், பிரணவமேதம், டசுபந்தம்.

யாக்கைக்குறுகுற்றம்-கஅ-பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

யாழ்வகை-ச-பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

